

திருஅருட்பா

முதல் ஐந்து திருமுறை,
திவ்ய சரித்திரம் மற்றும் அகராதி



அருட்பா
பதிப்பகம்
சென்னை







திருவருட்பிரகாச வள்ளலார் தலை மாணாக்கர்
தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய உண்மைகள்

தென் இந்தியாவில் பிரசித்தி பெற்ற யோகி திரு அருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் சீடர்களில் நான் ஒருவன்.

இங்கு அடையாறு தத்துவ ஞான சங்கத்தைப்பற்றி எனது குருநாதன் எடுத்துக்காட்டிய சில உண்மைகளை மாத்திரம் வெளிப்படுத்த விரும்புகிறேன். (இது, ஆங்கிலேயரும் இந்துக்களில் சிலரும், மகாத்மாக்களைப் பற்றியும், மகாத்மாக்களின் ஆக்ஞையின்படி, தியசாபிகல் சங்கம் ஏற்பட்டதைப் பற்றியும், ஐயமுற்றிருப்பதை நீக்க, ஆசிரியர், இதுபோது அச்சிட்டுவரும் நூலில், மகாத்மாக்கள் இருக்கின்றார்களென்பதை நிரூபிக்க வேண்டி, மிகுந்த கஷ்டமெடுத்துக் கொண்டதைக் கேள்வியுற்று, அருளியதாகும்.) மற்றும் இது, ஜனங்கள் கொண்டிருக்கும் அவநம்பிக்கைகளை அடியோடே நீக்கி தியசாபி (தத்துவ ஞானம்) என்பது வெறும் மித்தையல்ல என்பதையும், 'தியசாபி சங்கம்' நிலையற்றதிலிருந்து ஏற்படவில்லை என்பதையும், நிருபிக்கும் என்று நம்புகிறேன். முதலில் எமது பெருமானாரைப் பற்றியும், - அவரது போதனைகளைப் பற்றியும் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

திரு. அருட்பிரகாச வள்ளலார்

இவர், சென்னை இராஜதானியில், தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் தாலுக்கா, 'திரு மருதூர்' என்னும் கிராமத்தில் அவதரித்தவர். அவர் தம் இளம்பிராயத்திலேயே சென்னைக்கு வந்து அங்கு வெகு காலம் வசித்திருந்தார். இவர் தம் ஒன்பதாம் வயதிலேயே, ஆரியர்களாலும், திராவிடர்களாலும், சரிசமானமாய் அபிமானித்தவர். அகத்தியர் முதலிய முனிவர்களால் எழுதப்பட்ட பாக்களை, ஓதாமலே மனப்பாடமாய்ப் பாடும் நாவளத்தைப் பெற்றிருந்ததாகவும் சொல்லக் கேள்வி. நான் 1849-ம் வருடம் இவரது சீடனானேன். இவர் எவ்விடமிருந்து? எவரால்? ஞானதீட்சை பெற்றார் என்பது எவருக்கும் தெரியமாட்டாது. என்றாலும், சில வருடங்களானதும், இவரை அநேக சீடர்களடுத்துச் சூழ்ந்து கொண்டிருந்தனர். இவர் சிறந்த ஒரு ஏமசித்தர். இவருக்கு, மாமிசம் உண்பவர்களை மாற்றும் அற்புத சித்தி இருந்த தென்பது அநேகருக்குக் கண்கூடாம். இவருடைய பார்வை ஒன்றே, மாமிச உணவில் விருப்பத்தை யொழிக்கப் போதுமானதா யிருந்தது. இவர், 1858ம் ஆண்டில் சென்னையை விட்டுச் சிதம்பரத்திற்குப் போனார். அங்கிருந்து வடலூர், கருங்குழி என்ற இடங்களுக்குச் சென்று, அங்கு நீண்டகாலமிருந்தார்.

அங்கிருக்கும்போது, இவர் அடிக்கடி தம் சீடர்கள் அறியா வண்ணம் மறைந்திருப்பதுண்டு. இவர் எங்குச் சென்றாரென்பதை அறிவோர் எவருமிலர். இப்படி வெகுநாள் மறைந்திருப்பார். இவர், உருவத்தில் சாதாரண உயரமுள்ளவர், மெலிந்த சரீரமுடையவர். எலும்புகள் தெரியும், ஆயினும் வீரிய பலமுள்ளவர். நிமிர்ந்த தேகம், தெளிந்த மாநிற (சாதாரண சிவப்பு) மேனியர், நீண்ட மெல்லிய நாசியுடையவர், பரந்த பொறி பறக்குங் கண்களை யுடையவர். இவருடைய முகத்தில், சதா சற்று விசனக்குறி காணப் பட்டிருந்தது. இவர், கடைசிக்-காலத்தில் முடியை நீளமாய் வளரவிட்டிருந்தார். இவர், யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாதரட்சையை (ஆற்காட்டு சோடு)த் தரித்திருந்தார். இவருடைய உடை, இரண்டு வெள்ளையாடையைவிட வேறில்லை (ஒரே ஆடையை உடுத்திருந்ததாகவும் கேள்வி) இவர் கடும் நிராகாரத் தபசிபோலிருந்தார். இவர் இளைப்பாறினதாக எவரும் அறியமாட்டார்.

இரண்டு அல்லது மூன்று நாளைக் கொருமுறையுண்பார். அப்பொழுதும் சில கவளத்தோடு திருப்தியடைவர். இரண்டு மூன்று மாதகாலம் வரை உபவாச விரதம் எடுப்பர். அப்போது கொஞ்சம் சர்க்கரை கலந்த பானத்தைத் தவிர வேறொன்றும் உட்கொள்ளார். இவர் சாதிவேற்றுமை பாராட்டலாகாது என்று போதித்ததால் ஜனங்கள் அதில் பிரியப்பட்டார்களிலர். எனினும், பல சாதியாரும் இவரைச் சுற்றிப் பெருங் கூட்டமாய்க் கூடினர். அவர்கள் இவருடைய போதனைக்காக வந்திலர்கள். ஆயினும், அவர் அற்புத சித்திகளைப் பெற்றவர் என்று கேள்வியுற்று, அவ் வற்புதங்களைப் பார்க்க வந்தவர்களாவர், இவர் அவர்களுக்கும் அவ்விதமானது ஒன்றும் இல்லையென்றும், (எமது கொள்கை) சுத்தமான, தத்துவ சாத்திர யுக்தமான சமயம் – ‘ சமரச சுத்த சன்மார்க்கம்’ – என்றும் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார்.

அங்கு இவர்கள் செய்த போதனைகளில் சில வருமாறு –

1. நான் கொடுத்த போதனைகளை, இந்துக்கள் செவியுற்றுக் கேளாத போதிலும், வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரங்கக் கருத்துக்களைப் பத்திரமாய் வைத்திருக்கும் மகாத்மாக்கள் அந்நிய நாட்டாருக்கு வெளிப்படுத்துவார்கள், அந்நிய நாட்டார் அவைகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வார்கள்.
2. தற்போது, உலகில் மேலிட்டிருக்கும் கலிபுருடனின் விபத்துக் கேதுவான செல்வாக்கு, இனி பத்து வருடத்திற்குள் (கலி 5000-த்துடன்) அடங்கிப்போகும்.
3. மாமிசம் உண்ணும் வழக்கம் நாளாவட்டத்தில் விட்டுப் போகும்.
4. சாதி வமிச முதலியவைகளால் ஏற்படும் வேற்றுமையானது அடைவினில் நீங்கிப்போய், அகிலமாம் சகோதரத்துவத்தின் மூலக்கருத்தின் சாரத்தை ஒத்துக்கொண்டு, இந்தியாவில் ‘ சகோதர அறம்’ நிலை நாட்டப்பெறும்.
5. உண்மையில் ‘கடவுள்’ எனப்படுவது ‘அகிலமாம் அன்பாம்’, அஃது உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும், சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது.

6. ஒவ்வொருவருக்குள்ளும் அடங்கியிருக்கும் தெய்வீக சத்தியை மானிடர்கள் தெரிந்து கொண்டதும், இயற்கைச் சத்திகளை மாற்றக்கூடிய அற்புத வல்லமைகளைப் பெறுவார்கள் என்பதாம்.

1865-ம் ஆண்டில், இவர் ' சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்னும் ஒரு இயக்கத்தை யுண்டாக்கினார். அகிலமாம் சகோதரத்வ மூலக் கருத்தை உலகில் நிலைநாட்டி, வேதத்தின் சத்திய போதனைகளைப் பரவச் செய்யும் சங்கம், என்பது அதன் கருத்து, இஃது தியசாபி (தத்துவ ஞான) சங்கத்தின் கருத்தோடும் ஒத்திருக்கின்றது, என்று நான் சொல்ல வேண்டியது அவசியமில்லை. எமது 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' ஐந்தாறு வருடந்தான் அங்கு இருந்தது. (பிறகு உலகமுழுவதும் பரவிக்கொண்டே யிருக்கிறது) அதுபோது, அநேக ஏழைகளுக்கும், தேகந் தளர்ந்த பலவீனர்களுக்கும் அன்னமும், உடையும் அளிக்கப்பட்டு வந்தது. இவர், ஐம்பத்தொரு வயதை யடைந்தபோது, தாம் உலகை விட்டுப் போவதாகச் சொல்லி, சீடர்களுடைய மனதை, ஒருவகை ஆறுதலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார். சமாதியி லிருக்கப் போவதாகத் தமது விருப்பைக் காட்டினார். இவர் 1873ம் ஆண்டில் ஆறுமாத காலமாக மன்பதை யுலகுக்குள்ள சகோதர ஒற்றுமையைப் பற்றி வெகு விமரிசையாகப் போதித்தார்.

பின்னர், அவ்வாண்டுக் கடைசியில், மூன்று மாதமாய் பிரசங்கஞ் செய்வதை நிறுத்திவிட்டு மௌனமாக யிருந்தார். 1874ம் ஆண்டில், ஜனவரி மாதக்கடைசியில் பேசத் தொடங்கி இனி நடக்கப்போகும் விஷயங்களை எச்சரிக்கையாகக் கொடுத்தார். பிறகு இவர் தமது சீடர்களுக்கு அன்பு நிறைந்த ஆசிகளைக் கூறி தாம் இருந்த அக் குடிசைக்குள் விரித்திருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டார் (1874 ஸ்ரீமுக வருடம், தை மாதம் 19ம் தேதி புனர் பூசமும், பூசமும் கூடிய இரவு 12 மணி) அவருடைய உத்திரவின்படி அதன் கதவு பூட்டப்பட்டது. பின்னர், ஒரு வருடத்திற்குப் பிறகு அரசாங்கத்தார் கதவைத் திறந்து பரிசோதித்ததில், அவ்வறை வெறும் அறையா யிருந்தது. அவர் மறையுங்கால், மறுபடியும் தாம் வருவதாகச் சொன்னாரே தவிர, வருங்காலம், சந்தர்ப்பம் என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரிவிக்கவில்லை. அதுவரையில், தாம் இந்தியாவில் மாத்திரமல்லாமல் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் உலக முன்னேற்றத்தைக் குறித்து வேலை செய்யப் போவதாய்த் தெரிவித்தார். இது ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கும் தெரிந்ததேயாம். இது இவருடைய சரித்திரத்தின் மிகச் சுருக்கமாம். இனி இவர், இந்து சரித்திரங்களிலுள்ள நல்லொழுக்கக் கருத்துக்களை பிரசங்கிப்பதிலும், அகிலமாம் சகோதர ஐக்கிய ஒற்றுமை, இரக்கம், தயவு முதலியவைகளின் கருத்தை, ஜனங்களின் மனதில் தைக்கும்படி, செய்வதிலும் ஊக்கமாயிருந்தார். என்றாலும்-அவர் கொடுத்த உந்நத, நல்லொழுக்கங்களை மதித்து, அபிமானித்தவர்கள் வெகுசிலரேயாவர். இதைப்பற்றிக் கடைசிக் காலத்தில் விசனமுற்று அடிக்கடி இவர் சொன்னதாவது;-

.....

(இவர் சொன்ன போதனைகளைச் ஆ.பா பதிப்பு 1931, 8 மஹா உபதேசம், பக். 130, அருட்பா பதிப்பகம் பக். 500, 13, உபதேசம் என்கின்ற பகுதியில் கண்டுக்கொள்ள, சன்மார்க்க சங்கப் பதிப்பு 6வது திருமுறையில் வசனபாகங்களில் கண்டு கொள்க).

அகில சகோதர ஒற்றுமையைப் பாராட்டும் இச்சங்கத்தில் அங்கத் தினராக வர நீங்கள் அருகரல்லர். இச்சங்கத்தின் உண்மையங்கத்தினர் இந்தியாவிற்கு வடக்கே வெகுதூரத்தில் வசிக்கிறார்கள். நீங்கள் நான் சொல்வதைக் கேட்பதில்லை எனது போதனையின் கருத்தின்படி நடக்கவில்லை. நான் சொல்வதைக் கவனிக்கமாட்டோம் என்று திடப்படுத்திக் கொண்டீர்கள் போலும் என்றாலும், காலம் நெருங்கிவிட்டது. ருஷியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் இன்னும் இதர நாடுகளிலிருந்தும் அறிவாளிகள் இந்தியாவிற்கு வந்து, இதே அகில சகோதர ஒற்றுமையின் கொள்கைகளைப் பிரசங்கிப்பார்கள். நான் இப்போது உங்களுக்கு வீணில் சொல்லும் சிறந்த உண்மைகளை அப்போது நீங்கள் தெரிந்து கொண்டு மதித்து நடப்பீர்கள்.

வடக்கே வெகு தூரத்தில் வசிக்கும் அம்பல சகோதரர்கள், இந்தியாவில், அநேக அற்புதங்களை நிகழ்த்தி, நமது தேசத்திற்கு அளவிடக்கூடாத நன்மைகளை விளைவிப்பதை சீக்கிரம் நீங்கள் காண்பீர்கள், என்பதாகும். இவர் ஞானதிருஷ்டியில் கண்டு சொன்ன விஷயங்கள் யாவும் தவறாமல் நிறைவேறின. மகாத்மாக்கள் வடக்கே இருக்கிறார்களென்பது இந்துக்களுக்கு நவீன கருத்தல்ல, ருஷியாவிலிருந்து, "பிளாவட்ஸ்கி அம்மையார்" என் பவரும், அமெரிக்காவிலிருந்து, " கர்னல் ஆல்காட்" என்பவரும் வருவதைப் பற்றி பல வருடங்களுக்கு முன்னரே அற்புதச் செய்தியாக வெளிப்படுத்தியதேயாகும். இந்த தியசாபிகல் சுசைட்டி" எவர்களுடைய ஆக்கினையின்படி ஏற்படுத்தப் பட்டதோ, அம் மகாத்மாக்களுடன் எமது குருவும் சேர்ந்தவரென்றும் எதிர்க்கமுடியாத அத்தாட்சியாக இருக்கின்றது. இதில் பல சான்றுகளிருக்கின்றன.

இங்ஙனம்

திரு அருட்பிரகாச வள்ளலார் அடிமை

தொழுவூர் வேலாயுதம் முதலியார் (4 ஏப்ரல் 1882)

***



அருட்பிரகாச வள்ளார் திருஉருத்தன்மை

(வே. நமசிவாய முதலியார் பதிப்பு 1896)

விண்ணப்பம்

எல்லாமான எல்லாம் வல்ல எங்குமுள்ள வுண்மையறிவானந்த வுருவாகி, சத்திய நித்யத்துவ அநாதிமுக்த அளவற்ற வருட் பெருஞ்ஜோதியாகிய சிவத்திற் கங்கமாகிய சிற்சத்தியின் சுபாவ விளக்க மகலாத ப்ரமரகீட ஞாயவுருவகசித்தி, கற்பூர ஜோதி ஞாய அருவசித்தி, லவணோதக ஞாயவுருவருவக சித்தியருளி சிந்தாந்த சாட்குண்ய பரிபூரண சிவாநுவ மூர்த்தமாகி பேரறிவாளனாகி திருநோக்கம் பரிசம் வாசகம் மூவகை தீக்கையால் மும்மலங்களை "அக்யான திமிராந்தஸ்ய க்யானாஞ்சனசலாகயா" என்பது போலும் முறை பிறழாது போக்கியருளுந் திருஞான சம்பந்தரது திருவருளாட்சி பெற்ற மருந் திருவருட் பிரகாசவள்ளலே

ஆளுடையபிள்ளையார் ஞானப் பாலுண்ணுமுன்னம் கடவுள் அம்மையப்பனென் றறிவிக்கவறிந்து அகமுக நிட்கள தரிசனஞ் செய்து ஒரு மலம் போய் அம்மையப் பாவென்றழைத்து வெளிமுக சகள தரிசனஞ்செய்து இருமலம் போய் ஆலயத்துள் திருவுருவைத் தரிசித்து, மும்மலம் போய் விளங்கிய விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்- அநுபவம் பெற்றேயமரும் பதிஞானமுடைய பிள்ளையார் ஞானப் பாலுண்ட வங்ஙனமே சிவனடியே சிந்திக்குந் திருப் பெருகுஞ்சிவ ஞானமாகிய உமையிலாக் கலைஞானமும் பவமதனையற மாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமாகிய வுணர்வரிய மெய்ஞ்ஞானமும் பெற்றார் போலும்.

அவ்வகண்ட ஞானம் பெற்ற வருமைக் குறிப்பை வெளிப்படுத்தும் பொருட்டு உத்தர ஞான சித்திவளாகத்தமர்ந்து ஒன்றாந் தெய்வம் சிவமேயென விளக்கிய வள்ளல் நீரே சுத்தம் பிரணவம் ஞானம், என்னும் மூன்று தேகங்களோடிருந்து சித்தியெலாம் இயற்றி முத்தேகமும் தேகியைப் போல ஆனந்தமயமாய்க் கரைந்தும் கரையாது நிற்பதென்றுணர்த்தி அச்சித்தியால் அற்புதம் விளங்கும் அத்தருணம் சமீப மென்பதற்கு "அப்பன் வருதருணமென" அருட்பாவில் உணர்த்தித் திருமணஞ் செய்த செம்மையான வருட்சத்தியுதயக் குறிப்பை, மஞ்சள், படம், மேற்பார்வை கொண்டுணர்த்தி கற்பூரமணக்கின்ற தென்னுடம்பு என்றருட்பாவிலுணர்த்திய வருட்குறிப்பால் பச்சைகற்பூரமணம் போலுமான வருண்மணமுடையோடு மென்பதுங்காட்டி, அரிய மெய்ஞ் ஞானத் தீயால வித்தையா முடனீறாக்கி பெரிய தூலமுங் காலத்தால் பிணமாகி விழு மவ்வுருவை அம்மெய்ஞ் ஞானத்தீயிற்கரைந்து போக வெந்தபடம் போலாக்கிச் சித்திவளாகத்தில் தேஜோன்மயமாகியமரும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளைத் திருநாம முடையாரே சமய வழக்குகளற்று சுத்த சன்மார்க்கம் விளங்குவது "இரண்டரை கடிகையாமென் றுணர்த்தி" .

அங்ஙனம் சகல சித்திகளும் ஷடாந்த சமரச வேதப்பொருளும் வெளிப்படுமெனவுணர்த்தி திருவுருக்கரந்த தெய்வமே அறிவிக்க அறியப்படும் ஒன்று நீயல்லை நீ அன்றியொன்றில்லையார் உனையறிய வல்லார் ஆதலின் அந்த அருமை நோக்கித் தேவரீர் திருவுளமிரங்கி இங்ஙனம் எம்போல்வாரெவரையுந் தடுத் தாட்கொளல் வேண்டுந்தயாநிதியே நின்சரணம் சரணம்.

என தாண்டவரே !

தேவீர் திருவாய் மலர்ந்தருளிய திருஅருட்பாதிருமுறைத் திரட்டை தொட்டாலும் கைமணக்குஞ்சொன்னாலும் வாய் மணக்கும் அம்மண மறியாத சிறியேன் நின்றிரு வருட்பாவை வாசித்து பூசித்து, களித்து, பொருளுரைத்து, கேட்டு, குதுகலித்து, கண்ணீர் ததும்பி, மெய்நடுக்கம் பெற்று, வார்த்தை நழுவிரோமஞ்சிலிர்த்து, குருதேட்டங்கொண்டு ஆத்ம நெகிழ்ச்சியுண்டாகி, அன்பு பெருகிநிற்குந் திறமறந்து உலகமுக மாயுலகாந்தம் பொருளாகக் கொண்ட அடியேன், அத்திருவருட்பா முறைத் திரட்டை, எடுத்தலோசை படுத்தலோசை இசையறுத்துச் சரிதல் வண்ணச் சந்தஞ்சிதையாவகை சந்தி நயம் பட வாசித்தலின்றி, கோழைமிடளுகி கவி கோளுமில்லவனாகிப் பாடுங்கருத்துடையேன் கருவிகரணங்களையெல்லாம் இயக்கவல்ல என்னையுடையானே! சூரியனைக் கண்ட புட் பாதிகள் போலும் நின் குருமுக சந்திதான விசேஷத்தால் எனையாட் கொள்ள வல்ல சாமர்த்தியனாகிய நீர் சிறியேனறிவிளை வறிந்து தறிவிக்கின்ற பேரறிவுடையனாகி அருளாட்சி பெற்று அருட் செங்கோல் செலுத் துஞ்சித்தி வளாகத்தரசே தேவீர் திருவருட்பாவின் எழுத்தாற்றல், சொல்லாற்றல் பொருளாற்றல், சொல்வைப்பு, பொருள் வைப்பு, அகப் பொருளடுக்கு

அனுபவவடுக்கு முதலிய விலக்கண நயந்தெரியாது தேவீர் திருமுறையை திரட்டிப் பரிசோதித்துப் பேரவாக் கொண்டு எழுதா வெழுத்திலேற்றி வெளியாக்கிய எனதறியாமையை யென் சொல்கேன் தற்போதம் போய் அருட்போத முடையார்க்கே அருளவல்ல அருளாளா! உன்னையறிவிக்க வந்த அருமறையாக மாதிகளுன்னையறியோ மென்றுரைக்கி லுன்னருட் பாட்டினருமை யறியவல்லனோ, நீ யறிவித்தாலன்றோவறிவேன் பார்வதி புரமென்னும் உத்தர ஞான சித்தி புரத்தில் பொற்சபையமைத்துச் சித்திவளாகத் தமர்ந்த வள்ளலே நின்றிருவருளைப் பெற்ற மெய்யன்பருக்கு மெய்யனாகி மெய்ப் பொருளுணர்த்தி மெய்யறிவை விளக்கி மெய்ப்பொருள் சிவம் பொய்ப் பொருளுலகம் என்றுணர்த்தி அம்மெய்மை பெற்றவரால் அடியேன் பொய்மை யாதிகளைப் போக்கி மெய்யருடன் கூட்டி ஆட் கொண்டருளும் ஆண்டவரே தேவீர் சித்தி வன்மையால் எனது சிற்றறிவகற்றிக் குற்றமெல்லாங் குணமெனக் கொண்டருளுந் திண்மையகலாத் தெய்வமே அருளுக அருளுக அன்புடனருளுக.

விருத்தம்

சித்தியாம் வளாக மெனும் புரமொன்றாந் தெய்வநல் லுத்தரஞானச்
சித்தியாம் புரநற் பொற்சபையான திரைவளர் சிதம்பர மினிமேற்
சித்தியால் விளங்குஞ் சமரஷடாந்த தெய்விக புத்தக மறையாச்
சத்தியமுறு சன்மார்க்க சங்கமுமேச திருடனாளுமே வாழி.

உபயகலாநிதி .தொழுவூர்.வேலாயுத முதலியாரவர்கள்
ஆசிரியர் விஷயமாயீயற்றிய
வாயுறைவாழ்த்து
ஙஎள (377)வது பக்கத்தில் காணலாம்.

***

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய

உ

திருவருட்பா வரலாறு

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

ஒருகோட்டுச்சிலகளிற்றையும்பர்சிறையொழித்தொளிர்வைஞ்ஞாங்கசேரந்தித்
திருகோட்டுநம்பியையாளுடையானையுடையானைச்செல்வக்காழி
வருகோட்டுமாமருந்தைவாகீசவமுதைவன்றொண்டவாழ்வை
மருகோட்டுவயல்வாதவூரரசைத்தண்டிதனைவழுத்தல்செய்வாம். 1

வேறு

பரபரங்கோதகலுமநாமயம்போதநிலைபகாநலம்வாதமறுசு டுகாதயம்பாதிதமி
னிராமயங்காரமதிலாதசஞ்சீவிதநனிராசைகொண்டாருடையநிகேதநஞ்சூதமுறல்
வராதலின்பாரவெனைமுனாளில்வந்தேயருளிமகாபலஞ்சேரவருள்விராவுசெம்பாதநம
விராமலிந்தார்மனதினிராதசந்தோடநமவிராமலிங்காயநமவிராமலின்காயநம

வேறு

தன்னிகரும்பெருங்கருணையருட்பிரகாசப்பெருமான்சந்நிதாந
மன்னருளைவிழையன்பர்சிலரருட்பாவரலாறுமற்றுமீண்டிந்
நன்னிதிதான்வெளிவந்தவாறுமுரைக்குதியென்னநகைநாணுதிங்
கென்னறியாமையையிரிப்பேனியைந்தனனுய்வுண்டாமென்னிச்சையாலே 3

தரவுக்கொச்சகக்கலிப்பா

மணிகொழிக்குங்கல்லோலமாக்கடலைமுகந்துண்டு
பிணிதவிர்க்கத்தலைப்பெயலும்பெய்யாதகாலத்துந்
தணிவில்வளந்தருபொன்னித்தடம்புனல்சூழ்ந்தகன்கடைவாய்
மணிமுழக்கங்கேட்டறியாவளநாடுசோணாட்டில் 1

நீர்பூத்துப்பிறைக்கொழுந்துநின்றவிர்செஞ்சடைக்காட்டி
னேர்பூத்தபவளமலையிமையமருள்பசுங்கொடியு
நார்பூத்தபன்னகமுமடுபுலியுநலனோங்கச்
சீர்பூத்தபொதுவுடைய திருத்தில்லைப்பதியொருசார்.

ஐந்திணைசேரகத்தமிழின்றுறைநுகர்ந்துபுறத்துறையின்
வந்தபொருளவைகொண்டுசெய்வனசெய்மாண்பினவா
நந்தலிலாவாக்கத்துநாற்குடியுந்தழைத்தோங்குங்
கொந்தவிழ்பூந்தண்மருதக்குலமருதூராமருதூர். 3

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய

இராமையன்மருவாமையிராமையனிராமைய
னராமுடிப்பூமணந்தபுகழருங்கருணீகக்குலத்தோன்
பராவுவடமீன்கற்பிற்சின்னம்மைசின்னம்மைப்
பொராவண்ணந்துணைகொண்டுபொதுநீக்கியறம்புரந்தான். 4

தூய்மையானுயர்தவத்தாற்றுதுருவமுறீஇயிருத்தலினான்
வாய்மையான்வடகைலையெனவோங்கிவாழ்நாளிற்
சேய்மையாத்தனைப்பிரிந்திங்கெமைத்தெரியாச்சிறியோமை
நோய்மையோவுறவண்மையின்பத்துநுழைவிப்பான். 5

மறைவிளங்கவாகமவாய்மைகள்விளங்கச்சைவநெறித்
துறைவிளங்கவடகலையுந்தென்றமிழுந்துணிபொருளி
னிறைவிளங்கநீடுயிர்கணெறிவிளங்கநிலைவிளங்கப்
பொறைவிளங்கப்பொய்புகுதாதேழையோம்புலம்விளங்க 6

விடையுகைக்குந்தான்றோன்றிவிரித்துக்காட்டியமெய்ம்மை
நடையுகக்காட்டியுங்காணார்காணநாலாம்பொய்க்
கடையுகத்திற்கண்கூடாய்நிலைகாட்டப்பெருங்கருணை
மடையுடைத்துமயற்காட்டின்மயங்காமேவெளிகாட்டி. 7

அறங்காட்டுந்துறைகாட்டியறுசமயத்தவரவர்க்குய்
திறங்காட்டிச்சிவங்காட்டிச்சித்திமுத்தித்திருக்காட்டிப்
புறங்காட்டிற்பொய்யுடலைவையாமெய்ப்புலங்காட்டி
மறங்காட்டென் மனக்காட்டைவளராமேமதிகாட்ட. 8

தவநெறியுந்தவப்பயனுஞ்சார்புஞ்சார்புணர்பொருளுஞ்
சிவனருளுமருட்பயனுந்தேர்ந்தனர்தேர்ந்ததுமுணரா
தவநெறியிற்புக்குழன்றங்கசதியாடுறுமறிவில்
பவநெறிநாத்திகருமுயப்பரிந்தருளினியல்காட்டி 9

சன்மார்க்கத்தவர்யாருந்தனிவிரும்புநிலைவிரும்பும்
பன்மார்க்கத்தவர்யாரும்பற்றுமொருபற்றாகி
யென்மார்க்கத்தவர்களுநாடரியபழம்பொருளெளியேன்
றுன்மார்க்கத்தவம்போக்கித்தவமாக்கத்துணிந்தருளி. 10

பொய்யோடப்பொய்யோடாப்புறநிலைகள்புலம்போட
மெய்யோடாவைதிகச்செம்மொழியொன்றன்வெய்யமல
மையோடமையோடுமனமோடமலிபிறவி
யையோடுமிறப்போடவருளோடுகண்ணோடி. 11

போக்குவரவில்லாதுபுறங்கீழ்மேலுண்ணடுசார்
பாக்குமிடையறவிருந்தவதிசூக்கத்தொருதனிமை
நோக்கருநோக்குணர்வருளானோக்குறவெட்டுருவாதி
தாக்கருதாக்குறவன்றுகொண்டதொருதகைமையென. 12

ஊரொடுபேருருவொன்றுமில்லாதவொப்பிலுணர்
வோருருவீருருமுக்கணாலிதோளைந்துமுகங்
காருறுகண்டமுமாறுகவர்சடையுமறைத்தருளி
யேருறவந்தெழுந்ததுவோவன்றியிமையவர்க்கன்று. 13

பொன்னாடுதனைவழங்கப்போர்காட்டியெஃகேந்தி
யெந்நாளுமென்னாளுமெந்தையாறிருதோளு
மன்னாறுமுகமுமொளித்துற்றதெனலலதுமற்றிங்
கென்னாவதன்னார்பாலிருஞ்சேய்மைதனைப்புனைந்து. 14

அறுமீனார் முன்களிப்பவனிலநாள்கொண்டதென
வுறுகன்னியறுவைமீன்கொண்டருளியுலகமெலாம்
பெறுகோலமதுகாட்டியுதயஞ்செய்பிள்ளையார்
வறியோம்பான்முளையுண்டார்மகிழ்ந்தனைபான்முலையுண்டார். 15

திருமுகங்கண்டவர்யாரேயாயினுங்கண்டளவே தீ
தொருவிமயக்கொழிந்தவர்தாஞ்செய்வனவுமுறுவனவுந்
தருமுணர்ச்சிமுக்குற்றத்தடையறவாங்குறலானு
மருளன் பின்புறலானுமல்லலெலாமறலானும் 16

பாதகசூதகங்களறப்பணலானும்பாவனையாய்க்
கோதறுபாவனைக்கெட்டாக்கொள்கைத்தாயுறலானு
மேதகுதன்னிலையாக்கிநிலைப்பயனாக்குறலாதி
வேதகத்தானும்பொருள்கோள்வெளிப்படையிற்புலப்படவே. 17

உருநாமமிராமலிங்கமெனக்கொண்டாரோங்கருளாற்
குருநாமமந்திரமாக்கொண்டுய்ந்ததாருயநினைந்தார்
பெருநாமமந்திரத்தைப்பெற்றியறியாரெல்லாந்
திருநாமமிதுபிள்ளைத்திருநாமமென்பாரே. 18

பாசமெனக்கிடந்தேனைப்பசுவாக்கிப்பருவம்பார்த்
தாசகலவுணர்த்தியருளூட்டம்மையப்பனுமாம்
பேசரியபெரியாரைப்பேயுணர்வேன்பேசறியேன்
றேசுவருமகவைசிறந்தாரெனவுஞ்சொலவியைந்தேன். 19

மீதானத்துயர்பள்ளிமேவவெமைவைக்குமெங்கண்
மேதாவைப்பள்ளிவிழைந்தருளிற்றென்றுரைப்பதெவ
னோதாமேயெமையெல்லாமுணர்த்துமுருவெளியையச்சோ
வோதாமேயுணர்ந்ததென்பாருணர்கிலாரொருவியப்போ. 20

அவ்வயினாருயிர்கண்முத்தியாருநெறியறிவிப்பான்
செவ்விதினல்லருள்வலித்ததோதெரியேஞ்சிறந்ததுயிர்க்க
ளுய்வகையுள்ளிருந்துமொளித்தொற்றிநின்றபடிகாட்டத்
தெய்வவொற்றிநின்றதனைத்திருவருளாற்றேற்றியதே. 21

அறவாழியந்தணனாயருள்பழுத்ததவக்கொழுந்தெவ்
வறமாவதெனிற்புலவீர்சந்நிதியையடைந்துள்ளா
ரறமாவதெல்லாமுமொருங்கடையப்பெற்றாறோ
லறமாவதெமக்கலாலடிகளுக்கென்னறஞ்சொலுமே. 22

ஆணவத்தினான்மாழாந்தறிவிழந்துவெம்பிறவிப்
பூவணத்தைப்பட்டுழலும்புன்கணறுத்துய்விப்பான்
மாணவத்தையருளுமறைவிரித்தமணிவாக்கதனாற்
பேணவத்தைச்சொரிதமிழ்ச்செம்பிரவாகம்பெருக்குவித்தே. 23

சிற்றடியேம்பிழைத்தொழும்பைத்திருவுள்ளங்கொண்டகந்தை
முற்றுமொழித்தருள்விரவவுபாசனாமுறைதெரித்தங்
கற்றமறவறிவுருவாயுருவெளியாயுருவாகிக்
குற்றமறுத்துணர்வூட்டிச்சேணினுமெய்க்குறிக்கொள்ள. 24

நல்லருளினியல்பெளியோம்பெறக்காட்டநன்னீராற்
செல்லலிருளறவிளக்கங்கெரிவித்துந்தீச்சனன
வல்லபிணியறுவிக்கும்வகைகாட்டும்படியுடலி
னல்லல்செயும்பிணியனைத்துமருண்மொழியானேயறுத்தும். 25

"தோடுடையசெவிய " னெனுந்தொடையான்முன்னாளெவர்க்கு
நாடுடையபொருட்சுட்டிநன்றுவிளக்கியதென்ன
வீடுடைய" வுலகமெலாமுதிக்கின்ற" வெனுந்தொடையாற்
பீடுடையபொருட்சுட்டிப்பேறெமக்கின்றீதென்றும். 26

வேதியாய்மலக்களிம்பைநீக்கியெமைப்பொன்னாக்கும்
வாதியாயருள்விழுங்கிமாயாவாதியனாகிச்
சோதியாய்விளையாடுந்தோன்றலுக்கோராயிரம்பே
ரோதினாருணர்வுடையதொண்டரெலாமொருசிலவர் 27

தனித்துரைத்தவிராமலிங்கத்தனிமறையாதரித்துய்ந்தா
ரினித்தவருட்பிரகாசவள்ளலெனவினிதேத்தி
யநித்தமற்றார்சிலவறவரந்தோவென்போன்மறந்து
மனித்தனெனக்கொண்டொழிந்தார்மலவாழ்விற்சிலமறவர். 28

முலையுண்ணிமோட்டெருமைப்பாற்கடன்மீனெனவாழு
நிலையுயிர்கடமையுடையபூரணத்துணின்றுமந்தோ
வலைவன்றாரிலர்துன்பத்தழுங்குகின்றாரறியாமைத்
தலையிருந்தாரினமென்றாலவர்க்குணர்த்துந்தரமன்றே. 29

என்பணங்காய்க்கற்றூணமிருங்கடனாவாயாகி
முன்புகராமுண்டமகச்சின்னாட்பின்முருகாய்வந்
தன்புறநன்னரிப்பரியேயாகவுமந்தோவறியார்
தன்பெருமைச்சலமின்றிச்சந்துரைப்பார்த்தடுப்பரிதே. 30

ஆருயிர்கள்லினைக்கீடாயவ்வவர்கட்கறிவொழுக்கஞ்
சீருறுதெய்வஞ்சமயஞ்சிக்கெனவேயாத்தருளாற்
றேருமொருசிவன்பருவந்தேற்றுவதாற்றிருவருளை
யோருமதல்லால்வேறென்னுரைப்பதியாமுயல்புலவீர். 31

வேறு

அமலனார்க்கீதோர்புகழ்கொலாமாடலரியதிற்கிளந்தனனறியே
னிமலசந்நிதிநேர்துரும்பொன்றேநேர்ந்தநேர்ச்சியிலளவறுசித்திக்
கமுறுபுத்திமுத்தியுற்றுயிர்கள்கனிவுறவிதஞ்செயுமென்றாற்
சமரசவேதசன்மார்க்கசங்கச்சாதுளார்பொறுப்பரென்பிழையே 32

வேறு

எந்தையருட்பிரகாசனின்னுயிர்கடமைத்தேற்றச்
சந்தமுறவினமாடுந்தண்ணருளாடலைப்போற்றச்
சுந்தரநல்லருளெடுத்துக்கைதருமேற்றொழுதிறைஞ்சிப்
பந்தவினைத்தொடக்குமயற்படருமறமொழிந்துய்வேன். 33

ஆயவருளிறையெங்களருட்பிரகாசப்பெருமான்
றூயவருளாற்பொழிந்தசொல்லமிழ்தாந்தமிழ்ப்பெருக்கு
நேயவருட்பற்றாகிநிறைமனத்துப்பெரியர்க்கு
மாயமயக்குழலென்போன்மறவர்க்குமுள்ளுருக்கி. 34

அளவாதபேரன்புசொரிந்தருளைவிளைவித்துத்
தளவாருநகைக்கயற்கட்டையலிடங்கொண்டபிரான்
வளமாருங்கழன்மலரோடிரண்டறுத்துவாழ்விக்கு
முளவாலேயருட்பாவென்றொருநாமம்பூண்டதுவே. 35

மருளாலேசிலரென்போன்மருளாலேமயங்கியுணர்ந்
தருளாலேயுரைத்ததெனவருட்பாவினுரைகொண்டார்
தெருளாதேன்சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கு
மருளாலேயுரைத்ததெனவருட்பாவினுரைகொண்டாம். 36

அத்தகையதிருவருட்பாவுபாசனைலீலைகண்முறைமை
யுய்த்தறியச்சோத்தமொடுசாத்திரமாயுறுதலினாற்
சுத்தமுறவெப்பொருளும்விளக்கெழுவாய்த்தொல்லெழுத்தை
வைத்தவெழுத்தைந்தினுண்மைமலர்விக்கும்வாய்மையினால் 37

அறுசமயத்துள்ளாருமயலாருமவரறியப்
பெறுபொருளுமளவாதபெரும்பொருங்காட்டலினா
லுறுதிபெறுமத்துவாவதன்மேலாயுறுபொருளை
மறுவறக்காட்டுகையாலுமற்றாறுமுறையாக 38

பிரிந்துபிரியாதருளின்பெற்றிமிக்கப்பிணக்கறுமா
தெரிந்துமுறைசெய்தருளுஞ்சிறப்பானேதிருவருட்பா
விரிந்தமுறையாறெனவேமெய்யருளினொடர்பாட்டாற்
பரிந்தன்பருலகமெலாம்பழிச்சுபுகழ்நிலவியதே. 39

பண்ணிறந்ததமிழ்வேதப்பழம்பனுவற்றொகையதன்சீ
ரெண்ணிறந்துநின்றனபோலெண்ணிறந்ததாங்கவற்று
ளுண்ணிறைந்தகருணையினாலுயிர்க்குறுதிபயப்பமுனங்
கண்ணிறைந்தசுவைமருந்தாமைந்துமுறைகண்டமட்டில் 40

திருநெறியதமிழாதித்தெய்வமுறைபன்னொன்று
மொருநெறியமனம்வைத்தாருறுகாறுந்திருத்தில்லைக்
கருநெறியங்ககல்விக்குங்கடப்பாளன்கைக்குறியாய்ப்
பெருநெறியர்சேமித்து வைத்ததொருபெற்றியென 41

அமலமருடிருவருட்பாவருண்மரபுதனைக்குறித்துக்
சுமையுறுமாசேமித்துவைத்திருந்ததென்பர்கண்டீ
ரெமையுடையானெல்லாமும்வல்லவருட்பிரகாசன்
சமரசவே தச்சன்மார்க் கச்சங்கச் சாதுக்கள். 42

தந்திருக்கூட்டத்துள்ளான்சதுரையான்பெரியசிவா
நந்தபுரவிழைவுடையானஞ்செல்வராயன்பா
லந்தியிளம்பிறையணிமணிமுடியைமறைத்தபிரான்
சுந்தரக்கைசாத்தியவத்திருவேடுதொகுத்தன்றே. 43

பண்ணீர்மைச்சுவைமுதிர்ந்ததிருப்பனுவலருட்பயனைத்
தண்ணீரொன்றொருவெண்பாச்சம்பந்தப்பிரான்வழியிற்
றெண்ணீர்த்தென்கூடல்வருஞ்சிதம்பரமாமுனிதொரித்தா
லுண்ணீர்மையொன்றுமிலேனுரைப்பதுமோர்புகழாமே. 44

வேறு

ஆறாவதுமுறையாரியனார்தம்மருளானே
வேறோர்சார்சேமுற்றன்றெம்வினைவிளைபாகம்
தேறாப்பருவந்தேர்ந்தென்றிசினோருதுநிற்க
வீறார்மற்றைமுறைவெளிவந்தமைவிரிசெய்வாம் 45

வேறு

ஆங்கவற்றைச்சிலரறிந்தாரறியாருமாகப்பி
னோங்கருளான்முத்துச்சாமிப்பெயரினோருரவன்
றீங்ககலமன்பதைக்குத்திருவொற்றிச்சிவபெருமான்
பாங்கருட்சந்நிதிமுன்னர்ப்பகர்ந்துபத்திவித்தினனே. 46

அப்பத்தியன்புமுளைச்சிறிதுபூத்தருள்விரவ
மெய்ப்பத்தியிற்சிலவர்விமலருட்பாவிழைந்து
செப்புற்றார்யாவரெனத்தேடுறுதேட்டங்கண்டு
துப்பற்றார்சிலரெழுதித்துரிசிற்றார்பரிசுற்றார். 47

ஈதுணர்ந்தங்கென்போல்வார்சிற்சிலவர்பொருள்விழைவாற்
கோதுறுவார்மரபிறந்துகோள்விராஅய்ச்சிறிதச்சிற்
பேதுறத்தாம்பொறித்தலுமப்பெற்றியுணர்ந்தாங்குரைத்த
தீதிறிருவருட்செல்வராய்ப்பேர்சேமத்தான். 48

மறுக்கத்தானமரரெலாநெர்ந்தழலும்வந்தழலும்
பொறுக்கத்தானருநஞ்சமுதுண்டுபொன்மிடறு
கறுக்கத்தானுளம்வைத்தகண்ணாளன்கழற்கன்பா
னிறுக்கத்தான்கற்றவனோரிரத்தினமென்பானோடு 49

வேறு

வில்லாருஞ்சிறுபிள்ளைமதிப்பிஞ்சணிவேணிப்
பொல்லார்மன்றாடியசேவடிசேர்புலமிக்கா
னல்லார்நம்பெருமக்கட்கினியானவையில்லான்
மல்லார்திண்டோணம்பியவன்றுணைவலியாலே 50

வேறு

சிவநேசச்சிவராசயோகியர்க்காந்திருச்சிறந்த
தவநேசன்வாசுதேவப்பெயர்கொடுதியனே
பவநேசமற்றார்கள்பற்றுபசுபதிக்கினிய
நவநேசனையாசாமிப்பெயரோனேயிருவர் 51

தங்களைமுன்னிட்டவரைத்தடுத்ததன்றியறநோக்கி
யங்குசிலபொருளீந்துமவர்தனியேகரந்துமீட்
டுங்கச்சிலிட்வெளியாக்குறக்கண்டுள்ளுடைந்து
மங்கலஞ்செய்நாயகர்க்குவழிமொழிவிண்ணப்பிதது 52

முறையுளித்தாமச்சியற்றவிரத்தினப்பேர்முதுக்குறைவ
னிறைணருளுக்கேற்றிரப்பவெந்தையருளிசைவின்றிக்
குறையிரந்தார்குறைக்கிரங்குங்கொள்கைகண்டவக்குணவான்
மிறையுள்ளார்மிகையறுக்கமேற்கொண்டங்குசாவுதலும் 53

பல்லவகோத்திரத்துவந்தசபாபதிமால்பயந்தருளு
நல்லவனெம்முயிர்த்துணையானாயனார்கழன்மறவாச்
செல்வமிகுகாரணத்தானுஞ்செல்வராயனென
வல்லபடிமுன்னுவன்றவண்மைப்பேர்ச்சேமநிதி 54

வேறு

தன்னடைந்தார்த்தானாகத்தாங்குபெருந்தயாளன்சற்குணங்களெல்லாம்
பொன்னுருவொன்றெடுத்ததெனும்புகழாளியுயிருமொருபொருளன்றாக
வென்னவர்க்குமீகைபயிற்றேந்தலுணர்வினுக்குறையுள்யார்க்குந்தத்த
முன்னமுணர்ந்துபகரிக்குமுதலியப்பாவண்ணலருண்முளைநன்மீளி. 55

வேறு

விற்புருவநெரித்தருளிவீறடங்கப்புரம்பொடித்த
பொற்புருவச்சிலையாளிபுண்ணியநீற்றன்புடையா
னற்புருவனருட்பிரகாசப்பெருமான்றிருவருட்குச்
சொற்புதுவைவேலையன்றனைத்துணையாத்துணைகொண்டு 56

வேறு

வேண்டுவனவுபகரிக்கக்கலிநாற்பத்தொன்பதுநூற்றறுபான்மேலெட்
டாண்டெழுதாவெழுத்தேற்றிநான்குமறையரசறியவெளியிட்டியார்க்கும்
பூண்டெழுபேரின்பமகிழ்வதுபெருகப்பணிபுரியும்பெற்றியானே
காண்டகுசீர்த்தேவநாயகனருளுமிரத்தினப்பேர்க்காத்திட்டானே 57

வேறு

மிக்கமறையேத்துமுக்கண்வித்தகனார்திருமயிலைத்
தொக்கவிளங்கோக்குடியில்வருந்தூயன்குணநிதியான்
சிக்கிட்டியருள்சோமசுந்தரன்செய்தாளாண்மை
தக்குலகுதிருவருட்பாவினிதுபெறத்தழைத்தன்றே 58

வேறு

நேசமெல்லாமுடையார்க்காயுள்ளமுருகிநிறையழிந்த
தேசனெங்கள்சடகோபன்றெய்வத்தமிழோர்வடிவாகிப்
பாசங்கழன்றுவடகலைப்பாற்கடற்கோர்பஃறியாஞ்சீனி
வாசவரதப்பெயர்கொளறங்கரையுநாவின்மறைக்கொழுந்து 59

வேறு

வேதனார்மாலார்காணருமுக்கண்விகிர்தனார்விளம்பருஞான
போதனாரளவாப்புனிதனார்நாயேன்புழுத்தலைக்கினிதிருத்தியசெம்
பாதனாரன்பருளம்பிரியாதபரமனாரருட்பிரகாச
நாதனார்கருணைக்குறையுளார்வீராசாமிப்பேர்நற்றவக்கொழுந்து 60

வேறு

தவமரசிருக்குமத்தாணிநெஞ்சர்தருமுயிர்க்கின்புசெய்தக்க
சிவமுணர்பெரியரருட்பிரகாசதேசனார்திருவடிக்கன்ப
ரவமறுதேவநாயகனப்பாசாமியேயாதியாரியர்க
ணவமுறுசென்னைக்கூடன்மற்றுள்ளநற்றலந்தொறுநங்கணாதன். 61

பொன்பழித்தலர்செந்தாமரைகுழைத்தபூங்கழற்கன்பராயுள்ளார்
தன்பொருஉஞ்சீர்த்திச்சமரசவேதசன்மார்க்கத்தனிப்பெருஞ்சங்கத்
தென்பவமறுக்குமெம்பெருமக்களின்செவிக்களம்புகுந்தெளியேன்
றுன்பறச்சென்னியரசிருத்தன்றித்தாயநல்லருள்வரலாறே. 62

வேறு

நடந்தசெயலருள்காட்டநான்வகுத்தபடியன்றி
மடம்படுமென்னறிவானேவகுத்ததன்றாமாதலினா
லிடம்படுதம்முணருணர்லினெம்பெருமக்கள்சவையு
முடம்படும்புன்மொழியெள்ளாதுலகமெலாமோங்குகலே. 63

திருச்சிற்றம்பலம்.

வரலாறு ஒருவாறு முற்றிற்று.

இவ்வரலாறு-ஆசிரியர் மாணாக்கர்

தொழுவூர் வேலாயுதமுதலியாரால் சொல்லப்பட்டது

***

திருஅருட்பா நூலகம் மற்றும்
திருஅருட்பா பழைய பதிப்பு பாதுகாப்பு பெட்டகம் 25-12-2017





அருட்பெருஞ்ஜோதி 1008 மகாமந்திரம் பாதுகாத்து வைக்கப்படும் இடம்
சித்தி வளாகம், திருவருள் விலாசம், மேட்டுக்குப்பம்
திருஅருட்பா செப்புத்தகடு மற்றும் கல்வெட்டுகள்

ஒன்று முதல் ஆறுதிருமுறைகளும் பொறித்தல்
திருஅருட்பா வள்ளலார் கோட்டம் டிரஸ்ட் மூலமாக

1867 ஆம் ஆண்டுபதிப்பு (நான்கு திருமுறை) திருஅருட்பிரகாச வள்ளலார் வெளியீடு. 1880 ஆம் ஆண்டு பதிப்பு (ஐந்தாம் திருமுறை) 1885-ம் பதிப்பு (ஆறாம் திருமுறை) ச.மு. கந்தசாமிப்பிள்ளை 1924 ஆம் ஆண்டு பதிப்பு, 1942 ஆம் ஆண்டு அருட்பெருஞ்ஜோதி சென்னை பதிப்பு, ஆகிய பதிப்புகளை செப்புத் தகடுகளில் ஏடு பொறித்து என்றென்றும் ஆயிரமாயிரம் கோடி ஆண்டு அழியாது பாதுகாத்து நிலைத்திருக்கச் செய்யும் முயற்சி மற்றும் 2019 ஆம் ஆண்டு அருட்பா பதிப்பகம் பதிப்பு கல்வெட்டுகளிலும், செப்புத் தகடுகளிலும் வைத்து வள்ளலார் கோட்டம் என்னும் பாடசாலை அமைத்து அதில் பாதுகாத்து வைக்கும் முயற்சியும் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

நன்றி – வள்ளல் பெருமானருக்கும், அவருக்கு எல்லா உண்மைகளையும் அறிவித்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கும் !

இங்ஙனம்

அருட்பா பதிப்பகம்.

அருள் M. A. **வெங்கட், சென்னை.**

அருட்பெருஞ்ஜோதி திருவருள் விலாசம்.

சித்திவளாகம் திருமாளிகை.

திருஅருட்பா முதல் ஐந்து திருமுறை பாடல்கள் ஒலிஒளி பதிவேடு 2019 முற்றுப்பெற்றுள்ளது

ஆறாம் திருமுறை பாடல்கள் ஒலிஒளி பதிவேடு 2020 / 2021 இல் முற்றுப்பெறும்

திருஅருட்பா பாடல்களை இணையதளத்தில் இலவசமாக பதிவு இரக்கம் செய்து கொள்ளலாம்

www.arutpaonline.com, www.arutpaoldedition.com, www.thiruarutpa.com

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பா

திரு அருட்பிரகாச வள்ளலார் திவ்ய சரித்திரம்

திருச்சிற்றம்பலம்

ஆரியனார் சீர்பாதந் தாங்க அமைசிரமும் ஆரியனார் சீர்பாட ஆம் நாவும் - ஆரியனார்
செம்மொழியே சிந்திக்கும் நெஞ்சுந் தருந்தவமே எம்மையினும் வாழ்க இனிது.

திருவிருந்திடும் தெய்வத்தாமரை மலர்ச் செய்ய
உருவிருந்திடும் பதமலர் உவப்பினென் றலைக்கே
பெருவிருந்திடும் அருட்பிர காசனார் பெருஞ்சீர்
வருவிருந்திடும் வாயதே வாழிநீ டுழி

- தொழுவூர், வேலாயுத முதலியார்

சீராளும் வாய்மைத் திருவருட்பிர காசவள்ளல்
பேராளும் ராமலிங்க பிள்ளைப்பே-ரோராளும்
மெய்ப்பசும்பால் வெண்ணெயுளே மேவுறுநெய் யின்பவர்தங்
கைப்புறாச் சொற்சரிதங் காண்.

- பொன்னோரி சுந்தரம் பிள்ளை

எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வகாருண் யரென்றும், சர்வவல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வில்லாத் தனிப் பெருந்தலைவராக விளங்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை இவ்வுலகினிடத்தே, ஜீவர்கள் அறிந்து, அன்பு செய்து, அருளையடைந்து, அழிவில்லாத சத்திய சுகபூர்ணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல் - பலவேறு கற்பனைகளாற் பல வேறு சமயங்களிலும் பலவேறு மதங்களிலும், பல வேறு மார்க்கங்களிலும், பலவேறு லட்சியங்களைக் கொண்டு, நெடுங்காலமும் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து, பலவேறு ஆபத்துக்களினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண்போகின்றார்கள். ஆதலால் ஜீவர்கள், அவ்வாறு இறந்து இறந்து வீண் போகாமல் உண்மை யறிவு, உண்மை யன்பு, உண்மை இரக்கம் முதலிய சுப குணங்களைப் பெற்று, நற்செய்கையுடையவராய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும், உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்த சன் மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்ப சித்திப் பெருவாழ்வில், பெருஞ்சுகத்தையும், பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு எல்லாம் வல்ல உண்மைக் கடவுள், தாமே திருவுள்ளங்கொண்டு சோணாட்டில், சிதம்பரம் தலத்திற்கு அணித்தாய திருமருதூர்ப்பதியில், திரு அவதாரஞ் செய்து, திருவருட்பா என்னும் தெய்வச் சமரச வேதத்தை இயற்றியருளி, இவ்வுலகின் கண்ணே சிதம்பரம் - இராமலிங்கம் பிள்ளை என்னும் பிள்ளைத் திருநாமம் பூண்டு, திரு. அருட்பிரகாச வள்ளலாய் விளங்கி, முத்தமிழ் வல்ல ஞானாசாரியர், சுத்த சன்மார்க்க போதகாசிரியர், சமரச வேத சன்மார்க்க சங்கத்தாபனாசிரியர், திருவருட் பெருஞ்சித்தர், ஓதாதுணர்ந்தார் என்னும் காரணப் பெயர்களைப் பெற்று ‘‘இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவு குறிக்கப் படாத அற்புத சித்திகளெல்லாம் யாமே இருந்து விளையாடுகின்றோம்’’ என்னும் திருக்குறிப்பை யுணர்த்தி ‘‘அருட்பெருஞ்ஜோதி சொரூபராய், ஈரேழுபதினான்கு உலகங்களிலும் உள்ளவர்கள் யாவரும் ஒருங்கே ‘‘இஃது என்னை! இஃது என்னை ! ’’ என்று அதிசயிக்கும்படி திருவுருக்கரந்து, இற்றைக்கும் நம்புமடியார்களுக்கு தோன்றாத் துணையாக அங்கை, நெல்லிக் கனிபோல் விளங்கிக்கொண்டு, உலக முழுதும் சன்மார்க்கத்தையும், சமரசத்தையும், ஜீவகாருண்யத்தையும் தமது ஞான சக்தியால் அருளரசாட்சி செய்து கொண்டிருக்கின்ற ஞானபானுவின் திவ்ய சரித்திரம் வருமாறு.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பா தோன்றிய சரித்திரம்

1. பரதகண்டத்தின் பண்பு

தொன்றுதொட்டு சீருஞ் சிறப்புஞ் சிறந்து விளங்கும் இந் நாவலந் தீவில் மண்ணாசை பொன்னாசை முதலான அநித்தியப்பொருள்கள் பல்வகையாகி மாயா மயமான நவ நவமாய பல்வகை யின்பங்கள் நிறைந்துள்ளதுவாகி, உலகியலுக் கொத்தவாறு வைதீக, இலௌகீக முதலாய கருமங்கட்கேற்ப அனுபவித்தற்கிடமாய் போக பூமியாகி, விண்ணவரும், மண்ணவரும் பல பிறவி யெடுத்தெடுத்து இளைத்திளைத்து இடர்கடல் நீந்தி முத்தியின்பக்கரையை யடைய அவதரித்தற்கிடமாகி, பர அபரஞானத்திற்குரிய பல ஞான சாத்திரங்களை வரைந்து யுக்தி புத்திக்குப் பொருந்தத் தார்க்கீக லட்சணத்துடன் தர்க்கித்து, ஞானவான்க ளென்று மற்றைய கண்டத்தவரால் மதிப்புற்ற மகான்கள் வதிதற்கிடமாகி ஒளிர்கின்றது இப்பரதகண்டம்.

2. சோழநாட்டுச் சீர்மை

இத்தகைய சிறப்பு வாய்ந்த இக்கண்டத்திலே, காட்டரண், மலையரண், நீரரண் முதலிய காப்புக்களுடன், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலிய ஐவகை நிலங்களும் மலிந்து செழித்திருப்பதும், தவத்தர், முனிவர், முதலியோர் வசிக்கும் இடங்கள் செறிந்து எக்காலத்தும் நீர் வளம், நிலவளம், குடிவளம் நிறைந்து, பார்ப்போர் கேட்போராய மக்கட்கு மனக்களிப்பை விளைத்துப் பூமகளுக்கோர் திலகம் போன்றதாய் எங்கும் சிவமணங் கமழ்ந்து, பக்தி, ஆசாரம், ஊக்கம் முதலியவற்றில் மேம்பட்டுக் குறையாச் செல்வத்தோடு கூடி விளங்குவதும்; மாரிக்காலத்தும், கோடைக்காலத்தும், செழுமை கலந்து கரைபுரண்டு முத்து, சந்தனம், யானை மருப்பு, கரும்பு, மூங்கில் முதலியவற்றை இருகையாலும் ஏற்றுக் கொள்வோர் தரத்திற்கேற்றவாறு பார்த்து, அளித்துக்கொண்டு இரு மருங்குந் தெய்வத்தலங்கள் சூழும் பெருமைபெற்று மிக்க புனிதத் தீர்த்தமாய் பொன்னி, காவிரி எனப் பல பெயர்கள் வாய்ந்த தெய்வ நதி பாய்ந்து வளம் பெருக்க விளங்குவதும் சோணாடு என்னும் சோழ நன்னாடாகும்.

3. தில்லைவனத்தின் சிறப்பு

அத்தகைய நாட்டில், ஆன்மாக்கள் உய்வான் வேண்டி எல்லாம் வல்ல முழுமுதற் செழும்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர், சிவபெருமான் உருவுடன் திருக்கோயில் கொண்டடெழுந்தருளி யிருக்கின்ற தலங்கள் பல உள. அப்பலவற்றுள்ளும் சிறப்புடைய திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என்னும் பஞ்ச பூதத் தலங்களில் காளத்தி, சிதம்பரம் என்னும் பஞ்ச பூதத் தலங்களினுள்ளும், சர்வ ஆன்மாக்களுக்கும் பொதுவாய், பூமிக்கு இருதய கமலமாய்க் காணுந்தோறும் காணுந்தோறும் புதுமை யுடையதாய்த், தன்னைத் தரிசித்தவர்களுக்கு ஞானானந்தத்தைத் தோற்றுவிக்கும் பெருமையுடையதாய்ச், சர்வத்திற்கும் இடங்கொடுப்பதாய், எப்பொழுதும் எல்லாப் பாதத்திலும் விளங்கும் ஞானமாகிய சபையாய், சிவசொரூபமாய், சத்தாகி சித்தாகி இன்பமாகிச் சதாநிலையாய் எவ்வுயிர்க்கும் சாக்ஷியாகித் தெய்வ முழுவயிரத் தனிமணியாய்ப் பிரகாசிக்கின்ற திருச்சிற்றம்பலமாய், மகாதேவனது ஆனந்தத் தாண்டவத்திற்கு அதிட்டானமாய் விளங்குவது தில்லைவனம் என்னும் சிதம்பரத் திருத்தலமாம்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

4. திரு மருதூர் மாண்பு

இத்தெய்வப்பதியின் வடமேற்கில், காததூரத்தில் ஐந்திணை சேரத் தமிழின் துறை நுகர்ந்து, புறத்துறையின் வந்த பொருளவை கொண்டு, செய்வன செய்மாக்கள் மலிந்து பலவளங்களுடன், சிறந்தோங்கும் திரு மருதூர் என்னும் ஓர் தெய்வத் திருப்பதி யுள்ளது.

5. இராமையபிள்ளை – சின்னம்மையார்

அத்திரு மருதூர்பதியின்கண் வசிப்பவராய், அன்பு, அறிவு, இரக்கம், ஈஸ்வரபக்தி முதலிய நற்குணங்களாற் சிறந்தவராய், கல்வி கேள்விகளில் வல்லவராய், கருணீக குல திலகராய்ச், சிவத்தொண்டும், சிவத்தியானமும் கனவிலும் மறவாத தூய சித்தமுடையவராய்ப், பல வகை அறங்களையும் வளர்ப்பவராய், நிராமயனை மறவாதவராய்த், தெளிந்த சித்தம் உடையவராய்ச், சிவனடியார்களுக்கும் ஆதரவற்ற ஏழைகளுக்கும் அமுதுபடைக்கும் அன்பு நிறைந்தவராய் இராமையபிள்ளை என்னும் பெயருடைய ஒரு பெரியாரிருந்தார். அவர் இல்லறம் நடத்திவரும் நாளில் மனைவியர் ஐவர் ஒருவர் பின்னொருவராக மணந்து அரனடி யடைந்தனர். எனினும், தமது அறவொழுக்கம் தவறாது நடக்கும் பொருட்டுப், பொன்னோரிக் கடுத்த சின்ன காவணம் என்னும் கிராமத்து நந்தாமணி விளக்காய், கற்பிற் சிறந்தாராய் பொறையில் பூமகளாய்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. - குறள்-55
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். -குறள்-56

என்னும், பொய்யாமொழிக்கு இலக்காகித் திருவாகுஞ் சின்னம்மையே உருவாக வந்து அத்திருநாமமே கொண்டாலன்ன சின்னம்மை யென்னும் பொன்னம்மையார் ஆறாம் தாரமாய் அமைய அவ்வம்மையாரும், இராமைய பிள்ளையாரும்.

இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. - குறள்-41
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை. -குறள்-43

என்னுந் திருவாக்குகளுக்கேற்ப உடலுயிர் போன்று இருவரும் பிரியா அன்பினராய், நல்லறமாகிய இல்லற வழியிலே தமது வாணாட்களை வீணாக்காது பல்லறங்களை வளர்த்து வந்தனர். அவ்வண்ணமாக அத்திரு மருதூரிலும், அதற்கயற் புறத்தும் உள்ளார்க்குக் கல்வி பயிற்றுவதும், மருதூர், கருங்குழி முதலான சில கிராமக் கணக்கு வரைவதும் முதலிய உத்தமத் தொழிலிலேயே ஊதியங்கள் கொண்டு இல்லறம் வழாது, அவமாயவெல்லாம் அன்றே அழியவும், தவமாய வெல்லாந் தமைவந்தடையவும் வாழ்ந்துவரும் நம் இராமைய பிள்ளையார்,

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற - குறள்-61 **(எனவும்)**
எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் - குறள்-62

எனவும், மக்கட்பேற்றைப் பற்றி பெரியோர் பெரிதும் புகழ்ந்து உரையாடுகின்றனர். ஆதலால் அந்நன் மகப்பேறு தமக்கும் கிடைக்க வேண்டுமென்னும் உள்ளக் கிடக்கையராய் தினமும்,

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருச்சிற்றம்பலமுடையானை அப்பேறு குறித்து வேண்டி வருவாராயினர். வருநாளில், அவர்க்கு ''எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் இரங்கி ஈந்தருளும் அம்பலவாணன், அருளால், மனைவியராகிய சின்னம்மையார் வயிற்றில் சபாபதி பிள்ளை, பரசுராம பிள்ளை என்னும் ஆண்மக்கள் இருவரும், சுந்தரம்மாள், உண்ணாமுலை யம்மாள் என்னும் பெண்மக்கள் இரு வரும் ஆக நால்வர் பிறந்தனர்.

6. சிவயோகியர் வருகை

அவ்வருஞ் செல்வரோடு பெருமிதமாக வாணாள் நடத்துங்காலை சுமார் பத்து வருடங்கள் கடந்தபின் ஒரு பகல், திருமேனி முழுதுத் திருநீறணிந்து, புலியுரி, யோகதண்டம், யோகப்பட்டிகை மேற்கொண்டு, சிரத்துங் கண்டத்துஞ் சிவனருட் கண்மணி யணிந்து, தண்டு கமண்டல கரத்தராய்ச் சிவயோகியார் ஒருவர் தமது இல்லத்திற்கு எழுந்தருளக்கண்ட சின்னம்மையார், அவ்வருளாளரை வரவேற்று ஆதனத்திருத்தி, ''புண்ணியநீறணிந்த புனிதரே! தேவரீர் சிறியேனுடைய இச்சிறு மனையிற்றானே திருவமுதுண்டு திருவருள் பாலித்தல் வேண்டும்'' எனச் சிரம் வணங்கி வேண்ட, அம்மெய்த் தவரும் அவ் வேண்டுகோட்கிணங்கி அறுசுவை நிறைந்த உண்டியினை அம்மையார் படைக்க, அன்போடு கலந்து உண்டு ஆனந்த நிறைவினையடைந்தார். அம்மெய்த்தவர் அம்மையாரின் அருங்குணங்களை அளவிலாது வியந்து கூறிப், பின்னர் அவர்க்குச் சிவபெருமானருள் போற்றித் திருநீறு கொடுத்து ''அருளம்மையே! இத்தெய்வத்திருநீற்றை யணிந்து உட்கொள்வீராக! நீர் இன்னுஞ் சில நாளில், சமரச சன்மார்க்கத்தை நிலைநிறுத்தவல்ல சற்புத்திரனைப் பெறுதற்குக் கருக்கொள்ளப் பெறுவீர் ! என்று கூறித் தம் உருவினைக் கரந்தார். அன்றே சின்னம்மையார் மணிவயிற்றில் அருட்சோதி புகுந்தது. உடனே, சின்னம்மையார் எல்லாந் திருவருட் செயலே என எண்ணியிருந்து தம் இன்னுயிர்த் துணைவர் வருதலும். அவர்பால், அடிகள் வந்ததும், அவ்வடிகட்குத் தாம் அன்னமளித்ததும், அவர் தனக்குத் திருநீறளித்துச் செப்பியதும், திருவுருக்கரந்ததும் தெரிவித்தார். அதைக் கேட்ட இராமையபிள்ளையும் பரமசிவப் பிரபுவே இங்ஙனம் வந்தாரென மகிழ்ந்தும், தாம் தரிசிக்கப் பெறாததைப் பற்றி வருத்தமும் கொண்டு திருவருளைச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

7. தெய்வத் தந்தையார் திரு அவதாரம்

அன்று முதல், அம்மையார் மணிவயிற்றில் கரு உண்டாயிற்று. முத்தரும் முனிவரும் முடிவணங்கும் நல் உத்தமக்கருவினை உதரந் தாங்கிய அவ்வுத்தமியாருக்கு ஒரொரு மாதங்களாகப் பத்து மாதங்களும் பரனருளதனால் கழிந்தன.

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத் திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற் கென்றே எனை யிந்த
யுகத்தே யிறைவன் வருவிக்க வுற்றே னருளைப் பெற்றேனேனே. - திருவருட்பா 4529

என்னும் அருள்வாக்கின்படி அதுசமயம், அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்துப் பொய்ந்நெறி நின்று புலம்புகின்ற இவ்வுலகினரை, இச்சகத்தே திருத்தி மெய்ந்நெறியாம் சன்மார்க்க நெறி மேவுவிக்கவும், மருட்பாடல் பாடி மயங்கித் திரியும் மாந்தர் தமக்கு அருட்பாடல் பாடி அருளமுதம் ஊட்டவும், - கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போகவும் - ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தவும்,

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள்வழி

கலி 4925- சுபானு வருடம், தட்சணாயனம், வருஷ ருது புரட்டாசி மாதம் 21-ந் தேதி, பூர்வ பக்ஷம், துதியை திதி, ஞாயிற்றுக்கிழமை, இளஞாயிறே போன்று உதயாதி $29^{3/4}$ நாழிகை, மீனலக்கினம், சித்திரை நட்சத்திரம் 4-ஆங்கில துலா ராசி, (5.10.1823) கூடிய சுபதினத்தன்று நம் தெய்வத் தந்தையார் திரு மருதூர்ப் பதியிலே திரு அவதா ரஞ் செய்தார். அப்பொழுது உலகமெங்கும் என்றுமிலாத ஓர் பிரகாசம் உண்டாகியது, தேவர்கள் பூமாரி பொழிந்தனர், அன்பர்கள் அனைவரும் ஆனந்தம் அடைந்தனர், இத்தினம் ஓர் சுபதினம் எனக் களித்தனர், பெரியார் அவதரித்தாரென ஆசி கூறினர்.

<table>
<tr><td>இலக்கினம்</td><td></td><td>சனி</td><td>குரு</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">இராசி</td><td>அங்காரகன்
கேது</td></tr>
<tr><td>இராகு</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>புதன்
சந்திரன்</td><td>சுக்கிரன்
சூரியன்</td></tr>
</table>

(இந்த ஜாதகத்தை ஓர் அன்பர் கணித்து அடியில் வருமாறு பலன் குறித்துள்ளார்.)

''இந்த ஜாதகமுடையோன் சிரஞ்சீவி; இவன் உயிர் போவதில்லை; உலகனைத்தும் வள்ளலாய் வாழ்வான்; தைரியவான்; கனதனங் கருதான்; சுழுத்தி நாட்டமுடையான்; உலகுயிர்பால் பேரிரக்கங்கொண்டவன்; பத்தாவது ஆண்டில் ஒன்றில் காதலனாவான்; கற்பமும், உலகத்தைத் திருத்தும் குணமும் சக்தியாலுணர்வான்; முப்பதாம் ஆண்டில் பிறப்பு இறப்பு அற்ற நிலையடைவான். நாற்பதாம் ஆண்டில் கைவல்யஞானம் பெறுவான்; ஞானசித்தியால் ஐம்பதில் பொன்னுடலாகி பொலிவான். இவன் ஞானவுடல் எடுத்த பெரியோன். மந்திரம், யோகம், வைத்தியம், வாதம், நூல் நுணுக்கம்- சிந்தையில் எண்ணியவுடனே எய்துவான்:

8. பிள்ளைப்பருவம்

இராமைய பிள்ளையும், அந்நாளில் பல நல்விழாக் கண்டு, அடியார்க்கும், அன்பர்க்கும், சுற்றத்தார்க்கும், ஏழைகட்கும் நல்விருந்திட்டு ஆன்றோர் பலரை வருவித்து அவர்தம் முன்னிலையில் எல்லாம்வல்ல ஆண்டவரின் அருள் நினைந்து அம்மகவிற்கு இராமலிங்கம் எனத் திருநாமமிட்டுத் தெய்வ இன்பத்திற் றிளைத்திருந்தார். அன்று முதல் அத்திரு மருதூர்ப் பதியில் பல அற்புத நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. நீர்வளஞ் சுருங்கியிருந்த அம்மருதூரிலே மழைபெருகி நெல் முதலிய தானிய விளைவுகள் அதிகரிக்கலாயின. நூறாண்டு வயதுடைய முதியவருங்கூட, ''என்ன இது? புதுமையாயிருக்கிறதே! இத்துணைக் காலமாக இவ்வருடம் பெய்த மழை போலப் பெய்ததில்லையே தானியங்கள் விளைந்தது போல் விளைந்ததில்லையே !'' என வியந்தனர். அப்பகுதியில் உள்ளார்க்கு நோய் முதலியன தலைகாட்டாது ஒழிந்தன.

மாடு கன்றுகள் யாவும் செழித்து ஓங்கின. சகல ஜீவராசிகளும் சந்தோஷமாக இருந்தன. இவ்வாறு அற நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன. திருமருதூர்ப்பதி முழுவதும் விளைவு பெருகி மனமகிழ்ந்த குடி மக்கள் அனைவரும் இவ்வாறானமைக்குக் காரணம் யாதெனத் தோன்றாராகிப் பின்னர்த் தெளிந்து, '' ஓ! இவை நம் இராமைய பிள்ளையார்க்குப் பிறந்த நன் மகவின் பொருட்டாக நிகழ்ந்த அற்புதங்களே!'' எனத் தெளிந்து ஒவ்வொருவரும் இராமைய பிள்ளையின் வீட்டிற்கு

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

வந்து அவ்விளங்குழந்தையைக் கண்டு வணங்கிச் செல்ல ஆரம்பித்தனர். அவர்களுக்கு ஆகாத காரியங்கள் எல்லாம் ஆகத் தொடங்கின. குழந்தையை பார்த்த ஊரார், குழந்தையாக நினையாது, இக்குழந்தை குழந்தையல்ல குழந்தை வடிவிற்றோன்றிய 'குமரவேளே' என குதூகலமுடையவராய்க் குழந்தையினிடத்துப் பெரிதும் அன்பும், பக்தியும் செய்து இராமைய பிள்ளையையும், சின்னம்மையாரையும், 'பெற்றாலும் இவர்களைப் போலல்லவோ பேறு பெறல் வேண்டும்! ' என வாயார வாழ்த்தி வரலாயினர்.

९. அருட்குழந்தையின் அம்பலக் காட்சி

இராமைய பிள்ளையானவர் ஒரு நாள் தமது அருமைமிக்க மனைவியாரோடும் மக்களோடும் எல்லாம் வல்ல இறைவராகிய திருச்சிற்றம்பலக் கடவுள், ஆனந்தத்தாண்டவம் பயிலும் அம்பலங்காணச் சிதம்பரஞ் சென்றார்; தமது அருமை இளங்குமாரர் இராமலிங்கரை கரத்திலேந்திக் கொண்டே அம்பலத்தரசை வணங்கினார். அவ்வேளை அப்பைய தீக்ஷிதரென்னும் வேதியர் நடராஜப் பெருமானுக்குக் கற்பூர ஆராதனை செய்தார். இராமைய பிள்ளையின் கரத்திலிருந்த இராமலிங்கராகிய குழந்தையோ, சிவகாமவல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்கக் கனகசபையின் கண்ணே ஆனந்த நடம் பயிலும் நடராஜப் பெருமானுடைய அருளமுதம் ஒழுகும் திருமுகத்தையும் கற்பூர ஜோதியையும் காந்தவிழியால் கண்ணிமை கொட்டாது பார்த்துக் கொண்டே யிருந்து காண்போர் அதிசயிக்கக் கலகலவென்று நகைசெய்தது. அதனைக் கண்ட அப்பைய தீக்ஷிதர், ''இக்குழந்தை அம்பலவாணரின் அருட் குழந்தையே'' என்று வாழ்த்தி – இராமைய பிள்ளையையும் அவர் மனைவி மக்களையும் தம் இல்லத்தில் இருத்தி உபசரித்தனுப்பினார்.

10. தந்தையார் பிரிவும் – தமயனார் வாழ்வும்

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய். - குறள் 69

எனுந் திருக்குறளுக்கிணங்க சின்னம்மையாரும், இராமையா பிள்ளையும் மகனைப் பெற்ற அன்றினும், இன்றே பெருமித மகிழ்வுடையராய்த் தம் ஆருயிரன்ன அருமை மகவினை அன்போடு வளர்த்து வந்தனர். இவ்வாறு சில பகல் கழியவும் அவரை ஆண்டவருடைய அருளழைப்ப, அவ்வருளமுதம் அருந்துதற் பொருட்டாக அவனி வாழ்வு நீத்து அமர வாழ்வு எய்தினார். தங்களை வையத்தில் முன்னிருக்க வைக்கும் தந்தையார் விட்டுப் பிரிந்தது பற்றிப் பெரிதும் மனங்கலங்கித் திருவருளால் பின்னர்த் தெளிவு கொண்டு மூத்த பிள்ளையாகிய சபாபதி பிள்ளை தம்முடைய தம்பிமாரோடும், தங்கையரோடும், தாயாரோடும், தமது அன்னையா ரவதரித்த அரும்பதியாகிய பொன்னேரிக்குச் சென்று அங்குள்ள தமது அன்னைக்கு, அன்னையாராய பாட்டியாருடைய பாதுகாப்பில் சில நாளிருந்து, அங்கிருந்தும் சென்னையம்பதியைச் சேர்ந்தார். சென்னையை அடைந்த சபாபதி பிள்ளை அந்நாளில் பிரபல வித்வானாக விளங்கிய உரையாசிரியர்; மகாவித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரிடம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி யதனைக் கற்று வந்தார். சிறிது காலத்திற் கெல்லாம் அவர் அப்பெருங்கல்வியிற் சிறந்தவராகி சில மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்தும், ஓய்ந்த சமயங்களில் புராணப் பிரசங்கஞ் செய்தும் பொருளீட்டிக் குடும்பத்தைப் பாதுகாத்து வந்தார்.

11. பெருமான் ஓதா துணர்தல்

சபாபதி பிள்ளை தமது அருமைத் தம்பியாராகிய நமது இராமலிங்கப் பெருமானுக்கு ஐந்தாவதாண்டில் கல்வி பயிற்ற வேண்டும் என்னும் கருத்துடையராய் முறைப்படி வித்தியாரம்பஞ் செய்து பின்னர் தாமே ஆசிரியராயமைந்து கற்பிக்க ஆரம்பித்தார். குழந்தைப் பருவமாயிருக்கும்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

இராமலிங்கப் பெருமானார் பயபக்தியுடன் தமயனிடம் பாடம் படித்துக்கொள்வது போல் நடித்தாரே தவிர உண்மையில் பாடம் படித்தாரில்லை; ஆயினும் தமது கருத்து முழுவதும் கந்தப் பெருமானிடமே செலுத்தி யிருந்தார். எனவே தம் தம்பியாரைத் தமது ஆசிரியரான காஞ்சீபுரம் மகாவித்வான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயில விடுத்தார். அவரிடமும் நம் பிள்ளைப் பெருமான் ஒழுங்காகப் பாடங் கேட்பதுமில்லை. படிப்பில் கருத்தைச் செலுத்துவதுமில்லை. ஆயினும் அவர் தம் கருத்தைக் கந்தப்பெருமானார் கழல்களில் பாமாலையாகிய பூமாலை சாத்திப் போற்றிப் புகழ்தலிலேயே செலுத்தினார். ஒவ்வொரு நாள் மாலையிலும் கந்தப் பெருமானார் ஆலயத்திற்குச் சென்று,

ஈயென்று நானொருவ ரிடம்நின்று கேளாத இயல்புமென் னிடமொ ருவர்ஈ
தீதுவென்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல் இடுகின்ற திறமும்

திருவருட்பா 3224 (தெய்வமணிமாலை)

முதலான பாமாலைகளைத் தொடுத்துப்பாடுவார். இச்செயல்களை யெல்லாம் மாணவர்கள் மூலமாகவும், நேரிலும் அறிந்த மகாவித்வான் சபாபதி முதலியார், '' என்ன இது ! இத்துணைப் பெரிய வித்வானாக விளங்கும் நம்மாலும் பாட முடியாத பாடல்களை இச் சிறுவன் பாடுவதென்றால் என்ன ஆச்சரியம்! இத்தகைய அருள் நிறைந்த குழந்தைக்கு நாமோ கல்வி பயிற்றுவது! எனக் கருதிப் பாடஞ் சொல்லுதலைக் கைவிட்டு விட்டார். இதைக் கேள்விப்பட்ட சபாபாதி பிள்ளை யவர்கட்கு ஆற்றொணாத் துயரம் உண்டாயிற்று. அருமைத் தம்பியார் தமது கருத்தின் வண்ணம் நடந்துகொள்ளாது வேறு வழியிற் செல்வது அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனால் அவர் தமது நண்பர்கள் பலரிடம் பிள்ளைப் பெருமானைப் பற்றிக் குறை கூறுவராயினர். என்ன குறை கூறியும் பிள்ளைப் பெருமான் தமது கருத்துப்படி பயில்வாரென்று தோன்றவில்லை. அதனால் அவருக்குச் சினம் பெரிதுமுண்டாக தம் மனைவியை யழைத்து ''நம்முடைய தம்பி இராமலிங்கம் நமது கருத்துக் கிணங்கக் கல்வி பயிலாது இந்த இளவயதில் காலத்தை வீணே போக்குகிறான். ஆதலால் அவனுக்கு இன்று முதலாக நம் வீட்டில் உணவும் உடையும் அளிக்க வேண்டாம்'' என்று கடிந்து கூறினார். பிள்ளைப் பெருமான் மீது மிக்க அன்புடைய அவ்வம்மையாருக்கோ கணவனாருடைய கட்டளையின் வண்ணம் மைத்துனாராகிய பிள்ளைப் பெருமானைப் பெயர்த்துவிடவுங் கருத்தில்லை. கணவனாருடைய சொல்லை தள்ளவும் மனமில்லை, இவ்விரண்டு தர்ம சங்கடங்களுக்கிடையில் அம்மையார் இடர்ப்பட நேர்ந்தது. ஆயினும் பிள்ளைப் பெருமானைக் கணவனார் கட்டளையின் வண்ணம் விட்டுவிட்டாரில்லை. கணவனாரில்லாத சமயங்களில் வீட்டின் பின்புறமாகப் பிள்ளைப் பெருமானை வரவழைத்து உண்டியருத்தி, உடையளித்து உபசரித்து அனுப்பிக்கொண்டிருந்தார். இவ்வாறாகப் பல நாட்கள் கழிந்துவந்தன.

ஒரு தினம் தந்தையாரின் திதி வந்தது; நண்பர்கள் உறவினர், அறிந்தோர், வறியார்கள் அனைவரும் வந்திருந்தனர். அவர்களுடனெல்லாம் அளவளாவுகின்ற சபாபதி பிள்ளைக்குத் தமது அருமைத் தம்பியார் மீது கருத்துச் சென்றது. தமது தம்பியார் இல்லாததைப் பற்றிப் பெரிதும் மனம் வருந்தினார். வருந்தியாவதென்? வந்திருப்போரெல்லாம் பசியோடிருக்கின்றனர் என அவர்கட்கெல்லாம் அறுசுவை யமைந்த உண்டியினை அன்போடும் ஆதரவோடும் அருத்தினார். தாமும் உண்டார்; மற்றைய எல்லோரும் உண்டு ஆயிற்று. ஆனால் சபாபாதி பிள்ளையாருடைய மனைவியார் மட்டும் உண்ணவில்லை. பகற்பொழுதும் சாய்வுற்றது; மாலைக் காலமும் வந்தெய்தியது; சுமார் மாலை நான்கு மணிக்குப் புறக்கடையின் வழியே வீட்டினுள் நுழைந்தார்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பிள்ளைப் பெருமான். அவர் வருகைக்காக உண்ணாது காத்திருந்த அவ்வம்மையார் அன்போடும் ஆதரவோடும் வரவேற்றுச் சில்லிட்டிருந்த உணவையிட்டார். பிள்ளைப் பெருமானும் அதை வெறுத்துத்தள்ளாது உட்கொள்ள ஆரம்பித்தார். அதைக்கண்ட அம்மையாரின் உள்ளமுருகியது; கண்களில் ஊற்றிருப்பதையொப்பக் கண்ணீர் பெருகிற்று. எல்லோரும் அறுசுவையோடு கூடிய உணவை சுடுகையோடு உண்டுகளிக்கத் தம் அருமை மைத்துனர் மட்டும் சில்லிட்ட உணவை உண்ணுவது தம்மாற் பொறுக்க முடியாது போகவே, அழத் தொடங்கினார்கள். அதைக் கண்டார் நம் பிள்ளைப் பெருமான், அவருக்கும் அழுகை வந்துவிட்டது. தம்மீது அவ்வம்மையாருக்கு இருக்கும் அளவுகடந்த அன்பினை நினைந்து தாமும் அழுதார். அப்பொழுது அவ்வம்மையார் " தாங்கள் தமயனார் சொற்படி கல்வி பயில்வதில் கருத்தைச் செலுத்தினால் இத்துணைத் துன்பங்களும் நேராவே; ஆகையால் இனியாவது தாங்கள் கல்வி பயிலுவதில் கருத்தைச் செலுத்த வேண்டும்" என அன்போடு மொழிந்தார். அடிகளும் அவ்வம்மையாரிடம் இனித் தாம் ஒழுங்காக கல்வி பயிலுவதாகவும், தமக்குத் தனியே ஒரு அறையினைக் கொடுக்க வேண்டுமெனவுங் கூறினார். பொழுது விடிந்ததும் அம்மையாருந் தம் கணவனாரிடம் எல்லாவற்றையும் கூறி மேல் மாடியிலுள்ள அறையினைப் பிள்ளைப் பெருமானார்க்குக் கொடுக்குமாறு செய்தார்கள்.

12. அறுமுகன் அற்புதக் காட்சி

அறையினை* அடைந்த நம் பிள்ளைப்பெருமானார் தெய்வ ஆராதனைக்கு வேண்டிய திருவிளக்கு, பழம், திருமலர், சாம்பிராணி வத்தி, கற்பூரம், கற்கண்டு முதலியவற்றைச் சேகரித்துக் கொண்டு அவ்வறையிலேயே திருவிளக்கை ஏற்றி, ஒரு கண்ணாடியைச் சுவரில் மாட்டி அக்கண்ணாடிக்கு மாலை சூட்டி, பழம் படைத்து, கற்பூரம், காட்டி கண் இமை கொட்டாது அதனையே உற்று நோக்கினார். அக் கண்ணாடியிற் சிறிது நேரத்திற் கெல்லாம் திருத்தணிகைக் கந்த பெருமானார் தெய்வத் திருவுருவம் தெரியலாயிற்று. அத்தருணத்தே,

சீர்கொண்ட தெய்வ வதனங்க ளாறுந் திகழ் கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களுந் தாமரைத் தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலுநற் கோழிக் கொடியும் அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே -திருவருட்பா 2724

எனப் பலவகையான பாமாலைகளைப் புனைந்து அன்று முதல், அத்திருவுருவத்தையே உபாசிக்கலாயினார். இச் செயல் நம் பிள்ளைப்பெருமானாருக்கு ஒன்பதாவது ஆண்டிலேயே நிகழ்ந்தது. நிகழ்ந்த அற்றை நாள் தொடங்கிப் பிள்ளைப் பெருமானுக்குத் தணிகைப் பெருமான் திருவருளால் சகல கலைகளுந் தாமாகவே விளங்கலாயின. அன்று முதல் அவ்வறையிலேயே தனித்திருந்து பாமாலைகளை இயற்றுவதும், பாடிப் பரவுவதும், யோக நிஷ்டையிலிருப்பதுவும் ஆகியவைகளில் பெருமானார் திளைத்திருந்தார். அக்காலை அண்ணியாராகிய பாப்பாத்தி அம்மையார் - தமது வீட்டு வேலையை முடித்துக் கொண்டு வந்து அவ்வறையின் கதவருகே இருந்து கொண்டு தாமும் அவ்வினிய பாக்களைச் செவிமடுத்துப் பேரின்பத்தில் பாகங் கொள்வது வழக்கம்.

13. பிரசங்க வைபவம்

சபாபதி பிள்ளையவர்கள் முத்தியாலுப் பேட்டையில், வாரந்தோறும் பிரசங்கஞ் செய்துவந்த சோமு செட்டியார் வீட்டில், ஒருதினம் நடராஜப் பெருமானார் திருவுருவம், பொன்னால் புதிதாக

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

எழுதப் பெற்று, அதனைப் பிரதிஷ்டை செய்து அன்று திருஞான சம்பந்தப் பெருமான் சரித்திரம் சொல்ல ஏற்பாடு செய்திருந்தார். ஏற்பாடு செய்திருந்த அத்தினமே, சபாபதி பிள்ளைக்குத் தேகம் சுகமில்லாது, தலைவலி நளிர் சுரமாக இருந்ததால், அவர் மிகவும் அயர்ந்து தமது மனைவியாரிடம் – ''நமக்கு அதிக ஊதியம் கிடைக்குமிட மாயிற்றே, அதோடு புதிதாக நம் பெருமான் திருவுருவம் தாபிக்கும் தினம்; இத்தினத்தில் போகாமல் நின்றால் அவர் மனம் எவ்வளவு புண்படும்!" எனப் பிரலாபித்தார். அம்மையாரும் மனமயர்ந்து, திடீரென, நம்பெருமானை நினைத்துக் கொண்டு '' இதோ வருகிறேன்'' என்று சொல்லி மாடிக்குச் சென்று திருவறையில் ஆனந்த நித்திரையில் இருந்த இளைய பெருமானைப் பணிவுடன், ''இன்று உமது தமையனார் உடல் நலமின்மையால் பிரசங்கம் செய்ய இயலாது பற்றி மிக வருந்துகிறார், தாங்கள் சென்று அந்தப் பிரசங்கத்தை நிறுத்தாது இரண்டொரு பாசுரங்களைப் படித்து விட்டு வந்தால் நலமென வேண்டுகிறேன்'' என்று கேட்டதும், அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டார் நம் பெருமானார். உடனே அம்மையார் தம் கணவரிடம் வந்து, '' கவலைப்பட வேண்டாம், உங்கள் தம்பியார் போவதாக ஒப்புக்கொண்டார், தாங்கள் வருந்தற்க'' என விண்ணப்பித்தார். உடனே சபாபதி பிள்ளை தம்பியை அழைத்து, '' அப்பா, நீ சென்று இரண்டொரு பாடல்களைப் பாடி, தீப ஆராதனை செய்துவிட்டு. செட்டியார் அவர்களிடம் விவரம் சொல்லி மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டு வந்துவிடு, சுகமே போய்வா'' என்று கட்டளையிட்டு அனுப்பினார்.

அக்கட்டளையைச் சிரமேற்றாங்கி, இளைய இராமலிங்கரும் கையில் பெரிய புராணத்தை எடுத்துக் கொண்டு, செட்டியார் வீட்டிற்குச் சென்று வணங்கி, தமயனார் உடல் நலமின்மையைப் பற்றித் தெரிவித்து அவருக்குப் பதிலாகத் தாம் இரண்டொரு பாடல்களைச் சொல்வதாகத் தெரிவித்தார். செட்டியார் வருந்தி 'சும்மா விட்டுவிடாமல் இதுவாகிலும் நடக்கிறதே' என ஒருவாறு தேறி ஆரம்பிக்கச் செய்தார். பெருமான் தொடங்கினார் பிரசங்கத்தை-இரவு ஒன்பது மணிக்கு முடிவுபெறும் பிரசங்கமானது பனிரெண்டாவது மணிக்கு இரண்டு வரிகளே முடிவுற்றன. பிள்ளைப் பெருமான் பிரசங்கமோ செவிக்கு இன்பமளிக்கும் அவ்வளவில்லை; ஊனுக்கும் இன்பமளித்தது. உயிருக்கும் இன்பமளித்தது. இவ்வளவு மதுரமான இப்பிரசங்கத்தைக் கேட்ட அவ்வவையினர் அளவிலாத ஆனந்தத்தை யடைந்தனர். அவருடைய இனிய குரலோசை எங்கும் ஒலித்து ஆங்காங்கு இருந்தவர்களும் ஆச்சரியத்துடன் ஓடி வந்து பெருங் கூட்டமாகக் கூடினர். ஆறறிவிற் குறைந்த கீழ்ப் பறவைச் சாதிகளும் அப்பிரசங்கத்தைக் கேட்டிருப்பின், வேட்டமுறும்-பொல்லாப் புலி, கரடி போன்ற விலங்கினங்களும்-மெய்ஞ்ஞான நாட்டமுறும் என்னில், அருட்குமரனருள் பெற்று விளங்கும் நம் அருட்பிரகாசனார் அமுத வாக்கைக் கேட்ட அவர்கள் அடைந்த ஆனந்தம் ஒரு வியப்போ!

14. தமையனார் உண்மை உணர்தல்

ஆனந்தங் கொண்ட அவ்வவையினர் பிள்ளைப் பெருமானாரே அப்புராணத்தை முடித்தருளல் வேண்டுமெனச் சபாபதிபிள்ளையை வேண்டினர். அதற்கு அவரும் இசைந்தார். எனினும் அவருக்கு ஜயந் தோன்றியது. ''என்ன இது? ஒரு புதுமையா யிருக்கிறதே! நம்முடைய தம்பியோ, நாம் கல்வி பயிலவிட்ட காலத்துக் கருத்தில்லாதவனாய் அதனைப் பயிலாது பொழுது போக்கினவனாயிற்றே; அவனுடைய பிரசங்கம் எவ்வாறு இனிமையுடையதாயிருக்கும்; இதனை நாமும் ஒரு நாள் ஆராய்ந்தறிதல் வேண்டும்'' என்று துணிந்து ஒரு நாள் பிள்ளைப் பெருமானார் பிரசங்கம் செய்யும் இடத்தில் ஒரு சார் மறைவாக வீற்றிருந்து பிரசங்கத்தைக் கேட்டார்; கேட்ட அவர்க்குப் பிரசங்கஞ்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

செய்பவர் ''தமது தம்பிதானா'' என்னும் ஐயமுண்டாயிற்று. உண்டான ஐயத்தால் மறுபடியும் உற்றுநோக்கி தம்பியார் தான் எனத் தீர்மானித்தார். அதன் பின்பு தெய்வத் தன்மை பொருந்திய அவரைத் 'தணிகாசலமாந் தலத்தமர்ந்த சைவமணியாம் சண்முகனே!-தம்பியல்ல,'- என்னும் முடிவுக்கு வந்தார். உடனே தமது மனைக்குச் சென்று அருமை மிக்க மனைவியாரை அழைத்தார். ''ஆருயிரனையாய்! நான் இதுவரை நமது இராமலிங்கத்தைத் தம்பியென நினைத்திருந்தேன்; அதனால் பல தவறுகளுமிழைத்தேன். தணிகைக் குமரனே தம்பியாய் அவதரித்திருக்கிறார். இன்றல்லவோ அவ்வுண்மையினை உள்ளவாறுணர்ந்தேன்; ஓதாதுணரவல்ல அவ்வுத்தமரை ஓதிவர விடுத்தேன்; ஓதாமையைக் கண்டு உள்ளங் கசந்தேன் ; உணவளிக்கவும் மறுத்தேன்; உடையளிக்கவும் வெறுத்தேன். ஐயோ! என்னுடைய அச்செய்கைகளெல்லாம் அவர் பெருமையை யறியாத உன்மத்தரின் செயல்களாக முடிந்தனவே'' என்று பற்பலவாக வியந்தும் வருந்தியும் கூறித் தமது தம்பியாரைத் தெய்வமாகக் கொண்டு சீர்பெற்றுய்யுமாறு அவருக்கும் பணித்தார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட அவ்வம்மையாரும் நம் பிள்ளைப் பெருமானாரிடத்து அன்று முதல் பெரும் பயபக்தியோடு நடந்து கொள்வாராயினார். ஆனால் அவர் செய்கை நம் பெருமானாருக்கு அருவருப்பாகவே யிருந்தது.

15. ஒற்றியூர் பெருமான் உபாசனை

செல்வ மிகுந்தோங்கும் சென்னைக்கு அணித்தாயும், ஆளுடைய நம்பி, ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசு எனும் மூவர்களின் பாடல் கொண்ட முதுமையுடைதாயும், - சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சங்கிலி நாச்சியார் மணவாளராகக் கொண்ட மாண்புடையதாயும், - மாணிக்கத் தியாகர், இளமை தந்த தியாகர், எழுத்தறி பெருமானார், வியாகரண ஈசுவரர் முதலாய மூர்த்திகளையுடைய தாயும், - விளங்குவது திருவொற்றியூர்த் திருத்தலம். அத்தகு திருப்பதியின் சிறப்பை யறிந்த நம் பிள்ளைப் பெருமான் நாள்தோறும் மகிழ்வோடு அத்தலத்திற்குச் சென்று, ஆங்கு எழுந்தருளியிருக்கும் எழுத்தறி பெருமானாம் தியாகப் பெருமானுக்கு அருட்பா வெள்ளத்தால் உள்ளங் குளிர இன்ப நீராட்டினார்.

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்து உன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தை நீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே. - திருவருட்பா 905

என்பனவாகிய பல அருமைப் பாடல்களைப் பாடி வருவாராயினார். (இரண்டாந் திருமுறை முழுதும் கவனிக்கவும்) ஆங்கு எழுத்தறி பெருமானாருடைய பிரகாரத்தில் எழுந்தருளி யிருக்கும் முருகப் பெருமானிடம் நின்று நெடுநேரம் தியானிப்பது வழக்கம்.

16. நூலாசிரியரானது

இங்ஙனமாகத் திருவொற்றியூர்த் தியாகராய வள்ளலைத் தினமுந்தொழுது திருவருளுடையாராய்த் திகழும் பிள்ளைப் பெருமானைச் சூழ்ந்திருந்த பல வித்வான்களுள் அந்நாளிலிருந்த காஞ்சீபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார் என்பவர், சுவாமிகளின் ஆற்றலை நன்கு அறிந்தவராதலால் 'அவர் திருவாக்கால் ஓர் உரை நடை வெளிவர வேண்டும்' என்னும் எண்ணங் கொண்டு, சிறுவர்கள் படித்தற்கு அரியதொரு நூலை ஆக்கிக் கொடுக்க வேண்டுமென வேண்ட, அவரின் வேண்டுகோட்கிணங்கி, நம் அருட்பிள்ளையாரும், பெரிய புராணத்துள்ள

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

மனுவெனும் வேந்தனுடைய அருமைச் சரிதத்தை 'மனுமுறை கண்ட வாசகம்' என்னும் பெயரோடு உரை நூலாகப் பண்டிதரும் பாமரரும் படித்துணர்ந்து, பயன்பெறத்தக்க நிலையில் மிக அழகாகச் செந்தமிழ்ச் சுவைசெறிய, நவரசம் ததும்ப, கல்லுங்கரைய, ஜீவதயவு விளங்க எழுதிக் கொடுத்தார். அந்நூலைப் படித்துப் பார்ப்போருக்கு அதன் அருமை மிக நன்றாக விளங்கும். காஞ்சி-மகாவித்வான் சபாபதி முதலியாரும் அந்நூலைப் பெரிதும் புகழ்ந்துரையாடி அதனைப் போற்றிப் படித்துப் புண்ணியம் பெறுமாறு மற்றையோருக்கும் அறிவுறுத்தி வந்தார். அந்நூலை வாங்கிப்படித்து அருட்பிள்ளையாரின் அருமையையும் பெருமையையும் உணர்ந்துகொண்டு அவர்களின் மீது அன்பு செலுத்தத் தலைப்பட்டவர்கள் அநேகர்.

17. தொண்ட மண்டலமா? தொண்டை மண்டலமா?

அவ்வநேகருள் சென்னைமா நகரிலிருந்த புலவர்களும் பலர். ஆதலால் அவர்களுள் நிகழ்ந்த ஓர் ஐயத்தினை, அருட்பிள்ளையாரிடத்துத் தீர்த்துக் கொள்ளுவதென அனைவரும் ஒருங்குகூடி முடிவு செய்துகொண்டு, பெருமானிடத்து வந்து தங்களின் ஐயத்தை அகற்றி உண்மையை விளக்க வேண்டுமென வேண்டினர். அதற்கவர்களும் இசைய, '' அருள்வலியுடைய ஐயா! அடியேங்கட்குத் தொண்ட மண்டலமா? தொண்டை மண்டலமா? என்னும் ஐயம் நேர்ந்திருக்கிறது. அதனைத் தாங்களே விளக்கியருளல் வேண்டும்'' என்று வினயத்தோடு வேண்டினர், அவர்கள் வேண்டியாங்கு, ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம் முதலாய பேரிலக்கண நூல்களின் சான்றுகளைக் கொண்டும் பிற இலக்கியங்களைக் கொண்டும் ''தொண்ட மண்டலம் '' எனவே வழங்கல் வேண்டுமென எவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் சென்னை, தங்கசாலை வீதி 361-வது எண்ணுள்ள தொண்ட மண்டலம் துளுவ வேளாளர் உயர்தரக் கலாசாலையில் நிரம்பிய அறிஞர்கள் அவையில் எடுத்துரைத்தனர்.

அப்புலவர்களும் அவ்வுண்மைச் சமாதானத்தை முகமலர்ச்சியோடு ஏற்று, அவ்வாறே அதனை வழங்கத் தொடங்கினர். தொண்டமண்டலம் துளுவ வேளாளர் இயற்றமிழ்ப் போதகசாலை இரட்சகக் கர்த்தவாகிய கொண்ணூர் ஐயாசாமி முதலியாரவர்கள் அவ்வாறு பிள்ளைப் பெருமான் - தொண்டமண்டலம் என்று வழங்குவதே முறை என்று நிறுவிய பேருரையைப் புத்தக வடிவமாக்கித் தரப் பெருமானை வேண்டினர். பெருமானும் வேண்டியபடியே அவ்வுரையினைப் புத்தகமாக்கித் தந்தார்கள். அதுவே 'தொண்டமண்டல சதகம்' என்னும் நூல். (இதனைத் திருவருட்பா - வசனபாகத்தில் காண்க). தொண்டமண்டல சதகமென்னும் அந்நூலிற்குக் காஞ்சீபுரம்-மகாவித்வான் சபாபதி முதலியாரும், புரசை-அஷ்டாவதானம் சபாபாதி முதலியாரும், விருத்தாஜலம்-தியாகராஜக்கவிராயரும், புதுவை-சுப்பராய முதலியாரும், மற்றுமுள்ள அக்காலத்திலிருந்த பெரும் புலவர்களும் சாற்றுகவி யளித்தார்கள்.

இந்நூல் வெளியீட்டிற்குப் பின், பிள்ளைப் பெருமான் ''ஒழிவிலொடுக்கம்'' என்னும் உயரிய நூலின் சிறப்புப் பாயிரமாகிய ஒரு பாட்டிற்கு மட்டும் ஒரு பெரிய பேருரை எழுதி அனைவரும் அந்நூலின் கருப் பொருளை உள்ளவாறுணருமாறு வெளியிட்டார்கள். (இதனையும் திருவருட்பா-வசன பாகத்தில் காண்க). இதுவரையில் பெருமான் சிவநேசவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவ மாலை, இங்கித மாலை முதலிய விழுமிய பொருள்களையுடைய பாமாலைகளையும் இரண்டாந் திருமுறையையும் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

18. மாணவர் தொழுவூர் வேலாயுத முதலியார்

இவ்வண்ணமாகப் பல அரும்பெரும் பாடல்களைக் கருணைமேலீட்டால் உலகோருய்யும் வண்ணம் திருவாய் மலர்ந்துவருகின்ற நம் பிள்ளைப் பெருமானுடைய பெருமையை யுணராதிருந்த, தொழுவூர் : வேலாயுத முதலியார் என்னும் செந்தமிழ் வித்வான் மிகக் கடினமான நடையில் நூறு சிலேடைப் பாட்டுகளைப் பாடி, " இப்பாடல்கள் பழைய ஏட்டுச்சுவடியிலிருந்து எனக்குக் கிடைத்தன" வென்றும், அவைகளைச் "சங்க காலத்துப் புலவர்கள் பாடினர் என அவ்வேட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றது" என்றும் நம் பிள்ளைப் பெருமானிடங் கொண்டு வந்து காட்டினார். மூன்று காலங்களையும் உணரவல்ல நம் பிள்ளைப் பெருமான், "இப்பாடல்களைப் பாடியவர் இவரேயாகல் வேண்டும்" என்பதை உணர்ந்து 'இவர்க்குள்ள முனைப்பை யொழித்துச் சன்மார்க்கத்தில் இவரைத் திருப்ப வேண்டும்' எனத் திருவுளத்தெண்ணியவராய், "அப்பா ! இப் பாடல்கள் பொருளிலக்கணந்தேறாக் கற்றுக்குட்டி பாடியவை; சங்கப் புலவர் பாடியவையல்ல; அவர்கள் பாடியிருப்பரேல் இவ்வளவு பெரும் பிழைகளிரா" என்று கூறினர்.

அவ்வுரைகளைக் கேட்ட தொழுவூர்: வேலாயுத முதலியார் பெருமானுடைய ஆற்றலைக்கண்டு உள்ளம் நடுங்கி தம்முடைய முனைப்பை இழந்து, அப்பொழுதே பிள்ளைப் பெருமானாரின் அடி பணிந்து, தம்மை மன்னித்து, ஆட்கொண்டருளல் வேண்டுமென வேண்டினர். பெருமானும், முதலியார் பரிபக்குவ நிலையையுணர்ந்து, 'புதியவனல்லன், பழையவன்றான் - நம் பிள்ளை நமக்கே கிடைத்தான்; எனத் தேறுதல் கூறி ஆட்கொண்டார்.

அன்று முதல் அவரைத் தலை மாணவராகக் கொண்டு, அவர்க்குத் தமிழ் மொழி நூல்களில் ஏற்பட்ட ஐயங்களை அடிக்கடி அகற்றியும் அவ்வவற்றின் உண்மைப் பொருள்களை உணர்த்தியும், ஆரியமொழி நூல்கள் பலவற்றைப் போதித்தும் வந்தார்கள். அடிகளின் திருவருளுக்கிலக்காகிய நாள் முதலாக அம் முதலியாருக்குக் கல்விப் பெருக்கம் முன்னையினும் பன்மடங்கு அதிகமாக, அதனால் அவருக்குப் பிரபலமான பேரும் புகழும் உண்டாயின. அதோடு நம் பிள்ளைப் பெருமானார், அம் முதலியாருக்குக் குமரவேள் திருவருள் உபாசனையையும் உபதேசித்தருளி, 'உபய கலாநிதிப் பெரும் புலவர்' என்னும் பட்டமு மளித்தார்கள்.பிறகு, சென்னை-நரசிங்கபுரம்-வீராசாமி முதலியார், பொன்னேரி சுந்தரம் பிள்ளை, ஸ்ரீநிவாச வரதாச்சாரியார், ஞானசுந்தர ஐயா, கிரியாயோக சாதகராய பண்டார ஆறுமுக ஐயா முதலியோரும் பெருமானாரின் சிறந்த மாணவர்களானார்கள்.

பின்னர் தமிழ் நாட்டில் எங்குமுள்ள பண்டிதர்களும் தம்பிரான் முதலியோரும், பெருமானாரின் பெருமையைக் கேட்டுத் தங்கட்கு ஏற்படும் ஐயங்களையும் வந்துகேட்டுத் தெளிந்து செல்வார்களானார்கள். இப்படியாகப் பெருமானார், சென்னையம்பதியிலும் பிற ஊர்களிலுமுள்ள அநேகருக்கு அவரவரின் பக்குவ நிலைக்கேற்றவாறு, அறிவுகொளுத்தி, அளவிலாப் புகழுடன் விளங்கிவந்தார். அந் நாளிலும் கூட நகரத்திலிருக்கும் அவ்வாழ்க்கை தமக்குப் பிடியாது, பல வேளைகளில் சென்னைக்கு வெளியிலே தனிமையாகச் சென்று விடுவார். சென்று ஆங்குள்ள மண்மேடுகளிலும், சிறு குன்றுகளிலும் அமர்ந்து, உள்ள நிறைவினை-உண்மைநெறியினை - ஒருமைப்பாட்டினைக் கடைப்பிடிப்பார். அவ்வளவோடு மட்டுமில்லை, இரவு வந்து விடின், அம்மண் மேடுகளிலேயும், குன்றுகளிலேயும் இருந்துவிடுவார்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

இதனை நம் பெருமானாரே. இப்பாடலை என்றெடுத் தோதுமாற்றாற் தெளியலாகும்.

தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தால் சிறுகுறும் என்றுளம் பயந்தே
நாட்டிலே சிறியவூர்ப் புறங் களிலே நண்ணினேன்
காட்டிலே கருக்கைக் கல்லிலே புன்செய்க் களத்திலே திரிந்துற்ற இளைப்பை
ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள் எந்தை நீ யறிந்தது தானே - திருவருட்பா 3525

19. பெருமானாரின் திருவிளையாடல்கள்

இவ்வாறிருந்து வரும் நாளில், ஒரு நாள் இரவு, சென்னை இலக்ஷ்மணப் பிள்ளையும், திருமழிசை கந்தசாமி முதலியாரும் தொடர்ந்து வரப் பெருமானார் திருவொற்றியூருக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது இடையில் ஒரு மோகினி வந்து பின்வந்த இருவரை மாத்திரம் வழிமடக்கியது. அது கண்ட நம் பெருமான் "பிச்" என்று கூற, உடனே அது அவ்விடத்தை விட்டு மறைந்து போயது. மற்றொரு நாள், தம்முடைய மாணவர்கள் பலரும் தம்மைச் சூழ்ந்துவரத் திருவொற்றியூருக்கு செல்லும்போது, இடைவழியில் மழை வந்தமையால் பெருமானார் குறுக்கு வழியாக ஒரு சந்து வழியில் நுழைந்து ஒரு கணத்தில் திருவொற்றித் தலத்தை அனைவரும் அடையும்படி செய்தார். அக்கூட்டத்தில் சோமு செட்டியார் முதலிய அன்பர்களும் இருந்தனர். அன்றிரவு தரிசனம் முடிந்தபின், மழையினால் வெளிவர முடியாமையால் வாகன மண்டபத்திலேயே தங்க நேர்ந்தது. அதனால் அனைவரும் பசியினால் வருந்த, வடிவாம்பிகை சன்னிதிக்குச் சென்று அம்மையார் திருவருளால் அனைவருக்கும் அன்னமளிக்கப்பட்டது. பெருமான் அன்னையார் கருணையை நினைத்து 'வடிவுடை மாணிக்க மாலை'யைத் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

தீதுசெய் தாலுநின் னன்பர்கள் தம்முன் செருக்கிநின்று
வாதுசெய் தாலுநின் றாண்மறந் தாலு மதியிலியேன்
ஏதுசெய் தாலும் பொருத்தருள் வாயொற்றி யின்னிடைப்பூ
மாதுசெய் தாழ்குழன் மானே வடிவுடை மாணிக்கமே. - திருவருட்பா 509

(அக்காலங்களில் ஒற்றியூருக்குச் செல்லும் வழி தகுந்த பாதையின்றி மணல் வெளியாகவே யிருந்ததால் தரிசனார்த்தமாகப் போய் வருவதே அருமையாகும்.)

பெருமான் ஒருநாள் ஒற்றியூர்ச் சென்று தரிசித்தபின் அன்றிரவு ஒரு சத்திரத்திலேயே தங்கி அயர்ந்தபோது, ஒருவர் குருக்கள் போல் வந்து அன்னமளித்துச் சென்றார். பின்னர் குருக்கள் தானா? என்று விசாரித்த போது அவர் வெளியூர் சென்று இரண்டு நாட்களாயிற்று எனத் தெரிந்தது, தியாகப் பெருமானே குருக்களாக வந்து அன்னமளித்தாகத் தெரிய வந்தது. பின்னொருநாள், ஒற்றியூர்ப் பெருமானைத் தரிசித்து விட்டுப் பெருமானார் ஓரிடத்தில் படுத்திருக்க, அதனை யறிந்த கள்வனொருவன், இவரருகில் வந்து வலது காதிலிருந்த கடுக்கனைக் கழற்றினான். அதனையறிந்துகொண்ட பெருமானார் அறியாதது போலவே யிருந்து தமது இடது காதினையும் திருப்பிக்காட்ட அக்கள்வன் இடக்காதிலுள்ள கடுக்கனையும் கழற்றிச் சென்றான்.

20. வைணவப் பிரசங்க வன்மை

இங்ஙனம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனார் அருளமுதமாந்தி-அருள் விளையாட்டயரும் நம்பெருமானை, ஒருகால் சில வைணவர்கள் தம்முடைய சமயச்சார்பாக ஏதாவது அரும்பொருள்களைப் பற்றிய உபந்நியாசமொன்றைச் செய்தருளித் தங்களை உய்விக்க வேண்டுமென வேண்டினர். பெருமானாரும் அவர்தம் விருப்பிற்கிணங்கி, அச்சமயச் சார்புடைய 'குரு பரம்பரை பிரபாவம்' என்னும் அரிய நூலினை விளக்கிப் பலவகை வைணவப் பிரபந்தங்களின்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

மேற்கோள்களுடன் எடுத்துரைத்து அவர்களுள்ளத்தைக் களிப்பித்தனர். அந்நாளிலிருந்து வைணவர்கள் அனைவரும் நம் பெருமான் சைவ சமய உண்மைகள் மட்டும் அறிந்தவர் என்று கொண்டிருந்த எண்ணத்தை அறவே விடுத்தார்கள்.

21. பொருள் நயவாமை

நம் பெருமானாருக்குப் பொருள் விருப்பு ஒரு சிறிதுங் கிடையாது. அதனிடத்திலிருக்கிற வெறுப்பு மிகுதியினால், அப்பொருளுடையார்பால் அணுகுவதையும் அவர்கள் வெறுத்திருந்தார்கள். அவ்வுண்மையினை,

பணத்திலே சிறிதும் ஆசையொன் றிலைநான் படைத்தஅப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே யெறிந்தேன் குளத்திலும் எறிந்தேன் கேணியி லெறிந்தனன் எந்தாய்! - திருவருட்பா 3424

என்னும் அருமைப் பாடல்கள் செல்வ நிலையாமையை மிக அழகாக விளக்கிக் காட்டுகின்றன. இவ்வண்ணம் பொருளிச்சையை வெறுத்திருக்கும் நம்பெருமானுக்குச் சென்னையிலிருந்த சோமு செட்டியாரும் இன்னும் பல பொருளாளர்களும் தங்கள் தங்கள் வீடுகளில், பெருமானார் பிரசங்கங்கள் புரிவதற்குப் பிரதியாகப் பொருள் கொடுப்பார்கள். அதை இவரும் வாங்குவார் போல வாங்கிச், சிறிது தூரம் வந்ததும் ஓட்டின் மேலும், தெருவிலுமாக எறிந்துவிடுவார். இந்நிகழ்ச்சியை அறிந்து கொண்ட அச்செல்வர்கள், பொருளைப் பெருமானாரிடங் கொடாது மூத்தவராகிய சபாபதி பிள்ளையினிடஞ் சேர்ப்பித்து விடுவார்கள். பெருமான் சிறுவயது முதல் உலக போகங்களைத் துச்சமாகச் கொண்ட பெரியார் என்றும், செம்பாகமாகப் பாடும் செந்நாப் புலவர் என்றும் அடக்கமே பொருளெனத் தேர்ந்த அருளாள ரென்றும் பலர் அதிசயித்த உணர்வினராய்ப் பழகிவந்தனர். பெருமான் சிறுவயதில் நடந்து கொண்ட முறைகளைக் கீழ்க்கண்ட பாடல்களே தெளிவாக விளக்கும்.

கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால் மெய்யெலா மையகோ மறைத்தேன் - திருவருட்பா

22. மக்களைப் பாடாத மாண்பு

கந்தசாமி முதலியாரென்பார் தாங்கொணா வறுமையினால் அடிகளிடமணுகி "எனது வறுமையை நீக்கிக் கொள்ளும் பொருட்டாகச் சுவாமிகள் சில பிரபுக்களுக்குச் சீட்டு கொடுத்தருள வேண்டும்" என வேண்டினார் வள்ளலாரோ, அவரை நோக்கி,

" ஏட்டாலுங் கேளையலென்பாரை நான்சிரித்து என்னை வெட்டிப்
போட்டாலும் வேறிடங்கேளேன் என்னாணைப் புறம் விடுத்துக்
கேட்டாலும் என்னையுடையா னிடஞ்சென்று கேட்ப னென்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்து வனே" - திருவருட்பா

என்னுந் திருப்பாடலைக் கூறி " நாம் எதற்கும் எல்லாம்வல்லவராகிய அருட்பெருஞ்ஜோதி இறைவரையே வேண்டுவமல்லது, இவ்வுலகமாந்தரை மதித்து ஏற்கமாட்டோம்; நீரும் அவ்வழியே பற்றி ஆண்டவரையே வேண்டினால் அவனருளால் உமது வறுமை, சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிடும்" என்று உபதேசித்தனுப்பினார்.

23. சாற்றுகவி யளித்தல்

திருமழிசை முத்துசாமி முதலியார் என்பார் நம் பெருமானாரிடத்துப் பெரிதும் அன்புடையவரும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்து நிறைந்த பக்தியுடையவரும், தமிழ்மொழி ஆராய்ச்சியில்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

மிக்க வல்லவரும் ஆவார். அதற்கு நல்லார் தாம் பாடிய பாடல்களுக்குப் பெருமானாரிடம் சாற்றுகவி வாங்குதல் வேண்டுமென்னும் விருப்பம் பல நாட்களாக இருந்துவர, அவர்கள் ஒருகால் சுவாமிகளை அணுகி " பெருமானே ! அடியனேன் பாடிய இவ்வருளில் பாடல்களைத் தேவரீர் கண்ணுற்று, அவைகள் அருட்பாடல்களாக ஆதற்பொருட்டு ஓர் அருட்கவி திருவாய் மலர்ந்து ஏழைமீது திருவருள் பாலிக்க வேண்டும்" என வேண்டினர். பிள்ளைப் பெருமானும் அப்பாடல்களைக் கண்ணுற்று அவைகள் ஆண்டவரின் திறங்களை எடுத்தோதுதலை யறிந்து அவற்றிற்கு, ' ஒருவகைப் பொருடெரித்' தென்னுந் தலைப்பினையுடைய சாற்றுகவி ஒன்றை அளித்தார்கள்.

24. பாம்பும் பணிந்த பண்பு

அதற்குப் பிறகு ஒருநாள் தம்முடைய நண்பர்கள் பலர்சூழச் சென்னையை யடுத்துள்ள வியாசர்பாடிக்குப் பெருமானார் பிரசங்கஞ் செய்யச் சென்று, பிரசங்கத்தை முடித்து இரவு நேரத்தில் ஆங்கிருந்து நண்பர்களோடுந் திரும்பி வரும்பொழுது, நடுவழியில் ஒரு பெரிய பாம்பு இவர்களை நோக்கி வர, எல்லோரும் பயந்து ஓடிவிட்டனர். அடிகளார் மட்டும் அவ்விடத்தைவிட்டு அகலாது அச்சமின்றி நின்று கொண்டிருந்தார்கள். அப்பாம்பும் அடிகளுடைய திருவடிகளில் சிறிதுநேரம் சுற்றிக் கொண்டிருந்து பின்னர் பெருமான் ஏகுமாறு கூற ஏகிவிட்டது.

25. திருமணம்

பிள்ளைப் பெருமானின் அருமைக்காலம் இவ்வாறாகக் கழிந்துவரும் நாளில், பெருமானாருக்குத் திருமணஞ் செய்து காணவேண்டுமென்று அன்னையார், அண்ணனார் முதலியாருக்கும் அவா அதிகரிக்க, அவர்களும் பலகால் நம்பெருமானை அதற்கு உடன்படும்படி வேண்டினர். எவ்வளவு வேண்டியும் பெருமானம் இசையவில்லை. பின்னர் ஒருகால் ஒற்றியூரில் நம்பெருமான் நேசித்துவந்த ஒரு சிவயோகியாரைக் கொண்டு அடிகளாரைத் திருமணஞ் செய்து கொள்ள வற்புறுத்த, அடிகளும் அதற்கு ஒப்புக்கொண்டார். ஆகவே பெருமானாரின் சிறிய தமக்கையாராகிய உண்ணாமுலையம்மாளின் அருமை மகளாகிய தனக்கோட்டியம்மாள் என்னும் சீரிய வொழுக்கமுடைய உத்தமியைத் திருமணஞ் செய்வித்தனர். நம்பெருமானாரின் கருத்தினை உணராத மற்றையர் பெருமானை உலக வாழ்வில் ஈடுபடும்படி எவ்வளவு முயன்றும் தம்முடைய அருளானந்தப் பொதுவாழ்விற்குச் சிறிதும் தடையின்றித் தம் எண்ணத்தின் வழியே நின்றார். பள்ளியறையில் திருவாசகமென்னுஞ் சீரியநூலைக் கரத்து ஏந்திக் கருங்கல்மனமுங் கரைந்துருகக், கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய, மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர் விதிர்ப்பெய்தி யாவரும் அன்பராகும் அந்நிலையில் அதனைப் பாடிக்கொண்டே பரமானந்தத்தி லிருந்துவிட்டார். அவ்வாறே பெருமான் ஒவ்வொரு நாளும் நடந்துகொண்டிருக்க, உறவினரும் மற்றவரும் தாம்செய்த தவறினை-அறியாமையை-உணர்ந்து வருந்தினர்.

26. மணலைச் சிவலிங்கமாக்கிய மாண்பு

இவ்வாறாக நம்முடைய வாழ்வின் பொருட்டாகத் திருக்கோலம்பூண்ட, கருணாநிதியாகிய தனிப்பெருஞ்செல்வர், சதா நிஷ்டை கூடிச் சகச வாழ்விலிருந்து வருநாளில், ஒரு நாள் திருவொற்றியூரிலுள்ள பட்டினத்தடிகள் ஆலயத்திற்கு அருகிலிருக்கும் குளத்தருகே சென்றார்கள். அங்குப் பல நாட்களாக பட்டினத்தடிகள் ஆலயத்தொண்டு புரிந்துவந்த ஒரு வயது சென்ற அம்மையார் நம்பெருமானாரை அடிபணிந்து, " ஐயனே! அடியே னுய்யுமாறு ஓர் அற்புதங் காட்டி

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

யருளல் வேண்டும்" என வேண்ட, உடனே எம்பெருமானாரும், அம் முதியவளின் அரிய பக்குவ நிலையை யுணர்ந்து ஒரு பிடி மணல் வாரி அவர் கையிலே கொடுத்து மூடிக்கொள்ளுமாறு பணித்தார்கள். அம்மையாரும் அவ்வாறே மூடிக்கொள்ளத் தாம் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டார். பின் அம்மையார் தமது கரத்தைத் திறந்துபார்க்க, அம்மணலெல்லாம் சிவலிங்கங்களாகத் தோன்றின. அவ்வம்மையாரும் அகமிக மகிழ்ந்தவராய் அன்று முதல் எம்பெருமானாரிடத்து அளவிலா அன்புடையவர்க ளானார்கள்.

27. குறை இறையினிடத்துக் கூறலாம்

மற்றொருகால், தமது தமயனார் - சபாபதிப்பிள்ளை மருகரும் தமது மாணவருமாகிய, புராணிகர்-பொன்னேரி-சுந்தரம்பிள்ளை தனது வறுமையைத் தீர்த்தருள வேண்டுமெனக் குறையிரந்தபொழுது, அடிகள் அவருக்கு,

"திருவோங்கு பொற்சபையுஞ் சிற்சபையு நம்பெருமான் செய்யா நின்ற
உருவோங்கும் ஆனந்தத் தாண்டவமுங் கண்டினிதாங்கு உறைக யானுந்
தருவோங்கு தில்லைநகர்க் கோரிரருபா னாள்வரைக்குட் சார்கின் றேன்நம்
இருவோங்கள் குறையுமிறைக் குரைத்தகற்றிக் கொளலாநீ யிளையேலையா. - திருவருட்பா 4921

என்னும் பாடலைக்கூறி அவரை அனுப்பி வைத்தனர்.

28. அடிப்பது கூடாதென்று

பின்னும் ஒருகால், அப்புராணிகர், பொன்னேரி சுந்தரம்பிள்ளை தமது தமையனார் குமாரராகிய வடிவேற்பிள்ளை * முதலாயினோருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும்பொழுது அடித்ததாகக் கேள்விப்பட்டு நம்பெருமானார் அவருக்கு.

"படிப்பதுநன் றெனத்தெரிந்த பாங்குடையாய் மன்றுள்வெளிப் பரம னன்பே
தடிப்பதுநன் றெனத்தெரிந்த சதுருடையாய் அறநவின்ற தவத்தாய் வீணில்
துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர் உடையாய் என் தோழ! கேள் நீ
அடிப்பதுமச் சிறுவர்களை யடிப்பதுநன் றலவென்மேல் ஆணை யாணை". - திருவருட்பா

என்னும் பாடலைக் கடித மூலமாக எழுதி விடுத்து அவரை அத்தவறினின்றும் உய்வித்தருளினார்.

29. சதுர்வேத சார சங்கிரகம்

சிறிது காலஞ்சென்ற பிறகு ஒருநாள் நம்பெருமான் திருவொற்றியூர் வடிவாம்பிகையம்மன் சன்னிதிமுன் நின்று தோத்திரஞ் செய்துகொண்டிருக்கிற வேளையில் ஓர் அன்பர் தோன்றி "சதுர்வேத சார சங்கிரகம்" என்னும் ஓர் ஏட்டுச் சுவடியைக் கொடுத்து மறைந்தார்.

30. ஆடம்பரங்களை யகற்றல்

சபாபதி முதலியார் என்ற செங்குந்த மரபினர் ஒருவர் வேண்டுகோட்கிணங்க, அவரில்லத்தில் நடைபெற்ற திருமணத்திற்குச் சென்று, ஆங்குள்ள அனைவரும் ஜோடு அணிதல், சொக்காயிடுதல், சரிகைத் தலைப்பாகையணிதல் முதலாய வீண் ஆடம்பரங்களில் கருத்தைச் செலுத்துவோராகவும், அம்மாதிரி ஆடம்பரங்களோடு வருவோருக்கே அதிக மரியாதை செலுத்துவோராகவும் இருத்தலையுணர்ந்து, தாம் அவ்வீட்டினுள் நுழையாது, எதிர் வீட்டுத் திண்ணையிலேயே அமர்ந்து கொண்டு அவருக்கு அறிவுகொளுத்தும் பொருட்டாக,

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

"சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காயிலைநல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப்பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறாப்புமில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்சமே ! யெந்தவா றினிநண் ணுவையே" - திருவருட்பா 1937

என்னும் பாடலைத் திருவாய்மலர்ந்து, அம் முதலியாருக்கும், அங்குள்ளோருக்கும் அவ்வவாடம்பரங்களிலிருந்த மயக்கினை யொழித்துச் சன்மார்க்கத் தெரித்தாட்கொண்டார்.

31. உத்தம மனிதன்

நம்பெருமான் எப்பொழுதும் திருவொற்றியூருக்குக் கீழ்ண்டை மாட வீதி வழியாக செல்லாது ஆங்குள்ள நெல்லிக்காய்ப் பண்டாரச் சந்து வழியாகச் செல்லுவது வழக்கம். ஒருநாள் மட்டும் வழக்கத்திற்கு மாறாகத்தேரடி வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அத்தெருவிலுள்ள திண்ணையொன்றிலிருந்த நிர்வாண சந்தியாசி ஒருவர், அப்பக்கம் போகிறவர்களையெல்லாம் 'கழுதை போகிறது' 'மாடு போகிறது' என்று சொல்லுவது வழக்கம். அச்சந்நியாசியும் அன்று தம் வழக்கத்திற்கு மாறாக நம்பெருமான் போவதைக் கண்டமாத்திரத்தில், "இதோ உத்தம மனிதன் போகிறான்" என்று உள்ளங் களிசிறக்க உரைத்தார். அதைக்கேட்ட நம்பெருமானார் அவர் பக்கலில் சென்று ஏதோ சில உரைகளைக் கூற, அன்றிரவே அச்சந்நியாசி அவ்விடத்தைவிட்டு அகன்றுவிட்டார்.

32. சங்கராச்சாரியாரின் சந்தேகம்

சங்கராச்சாரியார் ஒரு சமயம் சென்னைக்கு வந்திருக்கும் பொழுது " தமக்கு ஆரிய நூலில் ஏற்பட்ட ஐயங்களை நிவர்த்திக்க வல்ல ஆரியமொழி வல்ல புலவர்களுளரோ?" என வினவப் பக்கத்திலிருந்த பிராமணரொருவர் நம் பெருமானைச் சுட்டிக் காட்டினார். உடனே அச்சங்கராசாரியாரும் அந்நூலைப் பெருமானிடத்துக் கொடுத்துத் தமக்கு ஐயமேற்பட்ட இடத்தைக் காட்டவும், அதை நம்பெருமான் ஒருமுறை பார்த்துவிட்டுத் தம்முதல் மாணவராகிய, தொழுவூர் வேலாயுத முதலியாரைச் சந்தேக நிவர்த்தி செய்யுமாறு பணித்தார். பணியினைச் சிரமேற்கொண்ட முதலியாரும், சங்கராச்சாரியாரின் சந்தேகங்களின் நிவர்த்திகளைச் சாங்கோப சாங்கமாக எடுத்துரைத்து அமைந்தனர்.

33. வாதநோய் தீர்த்தமை

மற்றொருநாள், வித்வான் கண்ணாடி-சுப்பராய முதலியார் என்பார், பல ஆண்டுகளாகத் தம்மை வருத்தும் வாத நோயைத் தீர்த்தருள வேண்டும்மென நம்பெருமானை வந்தித்து வேண்ட, பொருமானாரும் அவ்வாறே அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள்வலங்கொண்டு, அப்பெருநோயினைத் தீர்த்து அவருக்கு உய்வு அளித்தார். அப்பொழுது அகமிக மகிழ்ந்த அவ்வித்வான் நம்பெருமான் மீது,

"அகத்தியனோ வான்மிகியோ ஆதிசேடன் றானோ மகத்துவமாஞ் சம்பந்த மாலோ - சகத்திலகுஞ்
சச்சிதா னந்தத்தின் தண்ணளியோ என்னென்பேன் மெச்சுமதி ராமலிங்க வேள் " ! - திருவருட்பா

என்னும் புகழ்ப் பாமாலையைப் பாடினர்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

34. சென்னை கந்தகோட்டம்

இது போலவே, சென்னை கந்தப்பெருமான் ஆலயஞ்சென்று, 31 பாடல்கள் கொண்ட தெய்வமணி மாலையைப் பாடிய பின்னர் ஸ்ரீ கந்தப்பெருமானார் ஆலயம் தென்னாடு முழுவதுமில்லாப் பெருஞ்சிறப்பு பெற்று விளங்கிவருகின்றது. நாமனைவரும் அறிந்ததேயாகும்.

" திருவோங்கு புண்ணியச் செயலோங்கி அன்பருள் திறலோங்கு செல்வம் ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பந் திகழ்ந் தோங்க அருள் கொடுத்து - திருவருட்பா 3216

35. அருளம்மை தந்த அன்னம்

ஒரு நாள் இரவு, நம் பெருமான் திருவொற்றியூருக்குச் சென்று சிறிதுகாலந் தாழ்த்தி வந்தமையினால், தமக்கையார் வீட்டினை * உள்தாளிட்டுக் கொண்டு உறங்கிவிடத் தாம் திண்ணையின்மீது பசியோடு படுத்துறங்கினார்கள். அடியவர் பசியோடு உறங்குவதையறிந்த அருளம்மையாகிய ஒற்றி வடிவுடைய நாயகியே, நம் பெருமானாரின் தமக்கையார் திருவுருவோடு அருகே வந்து தட்டி எழுப்பினர். எழுப்பலும் எழுந்த பெருமானை நோக்கி அவ்வம்மையார், தாமரையிலையில் பொங்கல் சோற்றினை அளித்து 'சாப்பிடு' என்று கூறினார். அடிகள் தமக்கையாரே என்றெண்ணியவராய் உணவையருந்திப் பின்னர் உறக்கங்கொண்டார்.

சிறிது நேரத்திற் கெல்லாம் உள்ளே உறங்கிக் கொண்டிருந்த தமக்கையார் திடுக்கிட்டு எழுந்து 'தம்பியார் இத்துணை நேரம் பசியோடு எங்கிருக்கின்றாரோ தெரியவில்லையே' என்று பலவாறாகக் கூறிக் கொண்டே கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து பார்த்து, உறங்குகின்றவரை உணவளிக்கலாமென எண்ணி எழுப்ப, அவர் 'ஏன் மீண்டும் எழுப்புகின்றீங்கள்?, இப்பொழுது தானே உணவளித்துச் சென்றீர்' என கூறினார்.

அம்மையாருக்கு அதிகமான வியப்புத் தோன்றவே "ஈதென்ன மாயமா யிருக்கின்றதே ; நான் இப்பொழுது தானே நின்னை உணவருந்துதற் பொருட்டாகத் தட்டி எழுப்பினேன் ; முன்னொருகால் வந்ததாகக் கூறுவது வியாப்பாக இருக்கிறதே" என்று கூறினார். அடிகளும் பெரிதும் வியப்படைந்து "ஓ ! நம் அருளம்மையின் அருள் விளையாட்டே" என உணர்ந்து கொண்டவராய், ஆனந்த பரவசமெய்தி அமர்ந்திருந்தார். இதனை நம் பெருமானார் நெஞ்சறிவுத்தலில் கூறியிருக்கின்றார்.

" அன்றொரு நாள் நம்பசிகண் டந்தோ தரியாது
நள்ளிரவில் சோறளித்த நற்றாய் காண்". - நெஞ்சறிவுறுத்தல்

36. அழுக்குக் கந்தைக்கு ஆற்றாதிரங்கினர்

சின்னாட்கள் கழிந்தபின் ஒருகால் பெருமானார், திருமுல்லைவாயில் முதலிய திருத்தலங்களை வணங்கிக்கொண்டு, பாடி என வழங்கும் திருவலிதாயத்திற்குச் சிவபெருமானைத் தரிசிக்கச் சென்றார். சென்றகாலத்து அச்சிவலிங்கத்திற்கு ஆங்குள்ளவர்களின் கவனக்குறைவினால், அக்கோயில் குருக்கள் ஒரு அழுக்குக் கந்தையைச் சுற்றி வைத்திருந்தனர். அதைக் கண்ணுற்ற அடிகட்கு மனம் தாங்காது மிக வருத்தத்தோடு,

"சிந்தை நின்ற சிவானந்தச் செல்வமே எந்தை யேயெமை யாட்கொண்ட தெய்வமே
தந்தை யேவலி தாயத் தலைவநீ கந்தை சுற்றுங் கணக்கது வென்கொலோ ! " - திருவருட்பா 846

என்னும் பல செந்தமிழ்ப் பாடல்களை பாடி மீண்டனர். தெய்வீகம் பொருந்திய இவர் திருவாக்கானது சில காலத்திற் கெல்லாம் அவ்வலிதாயத்திருத்தலம் மிகவுஞ் சீருஞ் சிறப்பும் பெற்று விளங்கத் தொடங்கி, இன்றும் பெருஞ் சிறப்போடு விளங்கி வருவது நாமறிந்ததே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

37. அன்னையார் பிரிவு

இத்தருவாயில் தன்னையீன்ற சின்னம்மையார் தம் வாணாள் நீக்கவும் பரசுராம பிள்ளை தேகம் மெலிவுற்றுப் பிணியால் வருந்துவதுணர்ந்து, அவர் விருப்பப்படி சிதம்பரத் தலத்திற்குக் கொண்டுசென்று, தில்லை நடராஜாவின் தரிசனஞ் செய்து வைக்க எண்ணாங்கொண்டனர்.

38. புதுவை அன்பர்கள் ஐயம்

அவ்வாறே தம் நண்பர்கள் பலர் தம்மைச் சூழ்ந்துவரக் கால்நடையாகவே வழியிலுள்ள பல திருத்தலங்களை வணங்கிச் செல்கின்றபோது புதுவை மாநகரில், ஒரு சில அடியார்களின் விருப்பினால் தங்கியிருந்த காலத்தில், அவ்வூரிலுள்ள பல பிரமுகர்களும் அடிகளிடத்து வந்து, தமக்கு ஏற்படும் ஐயங்களை யகற்றிச் செல்ல ஆரம்பிக்கலாயினர். அடிகளும் அவரவர் கொண்டுள்ள ஐயங்களை அடியோடு நீங்குமாறு, அழுத்தமான விடைகளை பசுமரத்தாணி போல் கூறிவரலாயினர். இவ்வாறு அவ்வூர் முழுவதும் அதற்கடுத்துள்ள பிறவூர்கள் முழுவதும் அடிகளுடைய புகழ் பகலவனொளிபோல் பரவியது.

39. தில்லை பெருமான் தரிசனம்

பின்னர்ச் சிலநாள், அங்கு தங்கி யிருந்த பிறகு, அப் பதியினையும் அணித்தேயுள்ள பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு அன்பர்களோடும் தம் தமயனார் பரசுராம பிள்ளையுடனும். அம்பலவாணன் ஆனந்தத் தாண்டவம் பயிலும் அம்பலத்தை யடைந்தார். ஆங்குச் சிற்சபேசனைத் தரித்து ஆனந்தக் கண்ணீர்வாரப் பற்பலவாகப் பாடியாடித் துதித்துப் பரவசமடைந்து, சுற்றுப் பக்கங்களிலுள்ள திவ்ய க்ஷேத்திரங்களையும் தரிசித்து, ஆங்காங்கும் பாமாலைகள் சாத்திப் பின்னும் சிதம்பரம் வந்து, ஆனந்தநடன தரிசனம் செய்தருளினார். அந்தத் தருணந்தாள் நான்காந் திருமுறை இயற்றியருளிய காலம்.

40. சுந்தர சுவாமிகள் தோழமை

பெருமான் அம்பலவாணரை அன்பர்கள் பலருஞ் சூழத் தரிசித்துப் பலவகையாகத் தோத்தரித்துவிட்டு, வடக்குச் சன்னதி வீதியிலெழுத்தருளியிருந்தார். அப்பொழுது ஆங்கு கிழக்குச் சன்னிதி வீதியில் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்பார் ஒருவர் தங்கியிருக்க-அவரைச் சென்று பார்க்க விருப்பமுடையவராய், நம் பெருமான் ஒரு சிலரை, அவரிருப்பிடத்திற்கு அனுப்பிச் சமயம் பார்த்து வரக் கட்டளையிட்டனர். அன்பர்களும் அவ்வாறே சென்று அச்சுவாமிகளை வினவ, அவர்கள் உடனே தம்முடைய அடியவர்கள் சூழ, "அவர்கள் சமயம் பார்த்து இங்கு வர வேண்டியதில்லை; நாமே வந்து அவர்களைக் காண்கின்றோம்" என்று அவ்வன்பர்களுடனேயே வந்தார்கள். சுந்தர சுவாமிகளோடு வள்ளலாரும் அளவளாவிக்கொண்டு, இருவருமாக மூன்று நாட்கள் வரை ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் ஆலய வழிபாடு முதலியன செய்த நேரம் போக, மீதி நேரங்களை யெல்லாம் பல வகையான ஞான விஷயங்களைப் பற்றி உரையாடுவதிலேயே செலவழித்தனர்.

இங்ஙனமாக உரையாடியதில் அச் சுவாமிகட்கு அடிகளார்மீது அளவுகடந்த அன்பும், பக்தியும் உண்டாயின. அதோடு அருகேயிருந்த அன்பரொருவர் அடிகள் அருளிச் செய்த "மகாதேவ மாலையில்" சில பாடல்களைக் கூறி, இப்பாடல்களையும், இவைபோன்ற இன்னும் அநேக பாடல்களையும் பெருமானார் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்" என்று கூற, அதைக்கேட்டவுடன்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அவர்கள் முன்னையினும் பன்மடங்கு மகிழ்ச்சியோடு " எங்களை ஆட்கொள்ள வந்த இன்னுருவே இவ்வுருவம்" என்று அடிகளைப் போற்றி புகழ்ந்து விடை கொண்டு பிரிந்தார். அவரை வழியனுப்பச் சென்ற அன்பர்களிற் சிலர், சுவாமிகள் எதிரேயிருந்து பேசவேண்டி இருக்கப் பக்கலிலேயே யிருந்து பேசியதன் காரணம் என்னையென வினவ, அதற்குச் சுந்தர சுவாமிகள், "எதிரே இருந்து பேசுவோர் ஆற்றலை இழுத்துக் கொள்ளும் சக்தியுடையவர்கள் அவர்கள். ஆதலினாலேயேயாம் பக்கலிலிருந்து பேசினோம்" என்று விடை பகர்ந்தார். சுவாமிகள் சென்றதும், நம்பெருமானார் கண்களிலிருந்து கண்ணீர் ததும்பலாயிற்று. அதைக் கண்ட அன்பர்கள் "என்ன காரணமோ?" என ஏக்கமுற்றவர்களாய், சுவாமிகள் வருந்துவது எதன் பொருட்டாக?" என்று வினவவும். பெருமானார், "இப்பொழது நம்மோடு அளவளாவிச் சென்ற சுவாமிகள் இன்னும் ஆறுமாதங்கட்குள் மறைந்து விடுவார்கள்" என்று கூறி மேலும் வருந்தினார்கள். அவ்வாறே முடிந்தது. அங்கிருந்து புறப்பட்டுச் சீர்காழிக்கு நம்பெருமானார் சென்று, அங்குள்ள அம்மன் சன்னிதியில் பல அன்பர்களின் வேண்டுதலுக்கிணங்கி, பிரசங்கத்தை அருண்மாரியாகப் பொழிந்தார், அதனைக் கேட்ட அன்பர்கள் உடல் குளிர. உயிர் தழைக்க உணர்ச்சி ஓங்கப் பெற்றவர்களாய் அடிகளினிடத்து நீங்கா அன்புடையவர்களானார்கள்.

41. குன்ம நோய் தீர்த்தல்

'கல்லையு முருக்கலாம் நாருரித் திடலாம் கனிந்தகனி யாச்செய் யலாம்
கடுவிடமு முண்ணலாம் அமுதாக்க லாங்கொடுங் கரடிபுலி சிங்க முதலா
வெல்லு மிரு கங்களையும் வசமாக்கலா அன்றி விந்தையும் கற்பிக்களால்
மிக்க வாழைத்தண்டை விறகாக்கலாம் மணலை மெவு தேர் வடமாக்கலாம்

- திருவருட்பா 5703

அங்கொரு நாள் பல வருடங்களாகக் குன்ம நோயினால் வருந்துகின்ற ஒருவர், அடிகளை வந்து வணங்கித் தம் நோய் நீங்கப் பெருங்கருணை புரிதல் வேண்டுமெனக் குறையிரந்து கொள்ள அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் அருள் வலத்தால் திருநீறு கொடுத்து அப்பெரு நோயை நொடிப் பொழுதில் தீர்த்தருளினார்கள். அங்கிருந்தும் வயித்தீச்சுவரன் கோயிலுக்குச் சென்ற பொழுது, அக்கோயிலின் தருமகர்த்தராகிய வித்வான் உலகநாதத் தம்பிரான் தம் பெயரும் வருமாறு வைத்தீச்சுவரன் பேரில் பதிகமொன்று திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென, அவ்வாறே, அடிகளும், என்று அப்பதிகத்தில் அவர் பெயரையும் அமைத்து 12 பாடல்கள் பாடி அவரைத் தீயநெறியினின்றும் உய்வித்தருளினார்.

பின்னர் பெருமானார், மதுரை முதலிய அரும் பதிகள் பலவற்றைத் தரிசித்துக் கொண்டு, தமது சிறிய தமயனாராகிய பரசுராம பிள்ளையிருந்த கருங்குழி என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். சில தினங்களுக்கெல்லாம், அப்பரசுராம பிள்ளை பரனடியடைய, அவ்வூரை விட்டுப் பிரிய நம் பெருமான் புறப்படும் பொழுது, அவ்வூரிலுள்ள வேங்கட ரெட்டியார் என்னும் அன்பர் ஒருவர் "எம்முடைய வீட்டிலேயே இருந்தருளல் வேண்டும், வேறெங்கும் செல்லுதல் வேண்டாம்" என்று அன்போடு வற்புறுத்த. அப்படியே அவருடைய வீட்டிலேயே தங்கியிருந்தார். அக்காலத்தில், சுவாமிகள் பக்திமார்க்கமே சிறந்ததென்றும் கொல்லாவிரதமே மேம்பட்டதென்றும், பலருக்கும் நன்கு போதித்து நல்வழியடையச் செய்து வந்தனர். இதுவுமின்றி இவர்களது மேம்பாட்டைக் கேள்வியுற்ற கற்றறிவாளர் பலரும் வெகுளி கொண்டு பிள்ளையவர்களிடம் வாதிடலும், அன்னவர்களை அருள் வலத்தால் வென்றும், அவர்களையும் நன்னெறியடைவித்தும் வந்தனர். அவ்வண்ணம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

நிகழு நாளில், சென்னைக்கு அடுத்த திருமயிலையென்னும் க்ஷேத்திரத்தில், தமது மூத்த சகோதர் சபாபதி பிள்ளை ஆண்டவர் திருவடியடைந்த செய்தியைப் பிறர் உணர்த்தா முன்னமே உணர்ந்து அவ்விஷயத்தில் நுழையாது சுவானுபூதியிலேயே தங்கியிருந்தார்.

42. தண்ணீர் விளக்கு எரிந்த தன்மை

அங்கிருக்கும் நாட்களில் ஒருநாள் இரவு ரெட்டியார் வீட்டினர் அனைவரும் வெளியூருக்குப் போக வேண்டிய நிமித்தமாக ஒரு விளக்கினை எண்ணெய் விட்டு ஏற்றி அருகில் ஒரு புதிய மண் பாத்திரத்தைப் பழக்குவதற்காக அதனுள் தண்ணீர் விட்டு வைத்துச் சென்றனர். பெருமான் வழக்கம் போல அவ்விளக்கக்கண்டை அமர்ந்துகொண்டு பாக்களை வரைந்து கொண்டிருந்தவர்கள் எண்ணெய் என எண்ணி அதை எடுத்து அவ்விளக்கில் ஊற்றினார்கள். அம்மாதிரியே அன்று இரவு முழுவதும் ஐயா அவர்கள் அந்நீரையே விட்டுக் கொண்டிருந்தார். அந்நீரிலேயே விளக்கும் எரிந்துக்கொண்டிருந்தது. (சுவாமிகள் தண்ணீரில் விளக்கெரித்த அந்த அறையினை இன்றும் தைப்பூசக் காலத்தில் அன்பர்கள் தரிசித்து வருவது யாவரும் அறிந்ததே). விடியற்காலையில் வீடு வந்து சேர்ந்த அம்மனைக் கிழத்தியாகிய முத்தாலம்மாள் விளக்கு நிறைய நீர் இருப்பதையும், அந்த விளக்கு எரிந்து கொண்டிருப்பதையும் நோக்கினார். அதன் பின்னர் அடிகளிடத்துப் பெரிதும் அன்பும் பக்தியும் ஏற்பட்டு அன்று முதல் சுவாமிகளைத் தெய்வமாகக் கொண்டாடத் தலைப்பட்டனர்.

43. ஞானியார் உபதேசம் பெற்றநிலை

திருச்சிற்றம்பல ஞானியார் என்பவர் ஒருவர் அடிகளின் அருமை பெருமைகளை யறிந்து அவர்களிடத்து அருளுபதேசம் பெறுதல் வேண்டுமென்னும் விருப்பமுடையவராய்க் கருங்குழிக்கு வந்து, ஆங்குள்ள நம்பெருமானை அடிவணங்கித் தமது கருத்தைத் தெரிவித்தார். அதற்குப் பெருமானார், "துறவுநிலை மேற்கொண்ட தங்கட்குக், கொள்ளா அடியேன் உபசேதஞ் செய்தல் ஒவ்வாது" என்று மறுத்தும் அவர் கேளாமை கண்டு.

" நின்னிலைமை என்னருளால் நீயுணர்ந்து நின்றடங்கில் இந்நிலையே யந்நிலையை யெய்துதிகாண்
முன்னிலையில் நிற்குருவி னாட்டாதே யென்றுரைத்தான் ஏரகம்வாழ் சற்குருவென் சாமிநாதன்.

- திருவருட்பா 1936

என்னும் வெண்பா வொன்றினை அவர்க்கு வரைந்து கொடுத்தனுப்பினர். அதனைப் பெற்றுக்கொண்டு அந்த ஞானியாரும் மதுரையிலுள்ள திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடத்திற்குச் சென்றுவிட்டனர். பின் ஒருகால், (கடந்த அக்ஷய வருடம்) கருங்குழி புருஷோத்தம ரெட்டியார் என்பவர், மதுரையிலுள்ள அச்சம்பந்த மூர்த்தி சுவாமிகளது மடத்திற்குப் போய்விட்டதை யறிந்த அவருடைய தாய் தந்தையர், நம் பெருமானிடத்து வந்து, தம் மகனை ஆங்கிருந்து அழைப்பித்தருள வேண்டுமெனக் குறையிரந்து கொண்டனர். அவர்களுடைய கருத்தை நிறைவேற்றி வைத்தற் பொருட்டாகப் பெருமானார் அம்மடத்திலுள்ள தம்முடைய மாணவராகிய திருச்சிற்றம்பல ஞானியாருக்கு எளிய நடையில் அந்தப் புருஷோத்தம ரெட்டியாரை அனுப்பிவைக்குமாறு கடித மொன்று எழுதினர். அக்கடிதமானது அந்த ஞானியாரும், கணக்கிலவதானி - தேவிபட்டினம் முத்துசாமி பிள்ளையுமாக உரையாடிக் கொண்டிருக்கின்ற வேளையில் போய்ச் சேர்ந்தது. அக்கடிதத்தை அம் முத்துசாமி பிள்ளையும் படித்துப் பார்த்தார். பார்த்ததும் " பெரிய மேதாவி யொருவர் எழுதிய கடிதம் இலக்கண இலக்கியச் செறிவின்றி இவ்வாறிருக்கின்றதே" என்று பதறி ஞானியாரைக் கேட்டார்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அதற்கு ஞானியார் "வள்ளலார் வார்த்தையாடியிருக்கும் காலங்களில் சிந்திய இலக்கணமே இந்த உலகில் பரவியிருக்கின்றது" என்று அவ்விடையை மறுக்க, அந்த அவதானியர், "அங்ஙனமாயின் அம்மாதிரி ஒரு கடிதம் அவரிடமிருந்து வரவழையுங்கள்" என்று கூறினர். உடனே ஞானியாரும், அவ்வாறே ஒரு கடிதமெழுதி யனுப்புமாறு நடந்த வரலாற்றையும் உடன் கூட்டி எழுதி அடிகட்கு அனுப்பி வைத்தனர். அக்கடிதத்தைக் கண்ட சுவாமிகள் வெறுப்புடன் அதனை "பிச்" என்று சொல்லி கீழே வைத்துவிட்டனர். ஆனால் அச்சமயம் உடனிருந்த தொழுவூர்-வேலாயுத முதலியாருக்கு ஆற்றாமையாயிருக்க அவர் சுவாமிகளிடத்து அதனை எழுதி முடிக்குமாறு விண்ணப்பம் செய்து கொள்ள, சுவாமிகள் இரண்டு வரி மாத்திரம் எழுதி அவரிடந் தந்து மீதத்தை "நீரே எழுதி விடும்" என்று கூறிவிட்டனர். அவ்வாறே அக்கடிதத்தைத் தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதி முடித்து அனுப்பினர். (அக்கடிதம் வருமாறு காண்க)

இலக்கண வியனடை

வழுக்கப்பாடுறுத்துவிக்கும் பத்திரிகை

உணர்ந்தோரானியில்வகையவின்னவென்றவற்றிற்பின்மொழிமதிக்குமுன்மொழிமறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின்மொழி யடைசார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு: பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ்செய்த ககன நீரெழிலென்றும், வான் வழங்கு பண்ணிகாரமென்றும், நாகச்சுட்டுமீனென்றும் வேறு குறிப்பதொன்று. அண்மைச் சுட்டுத்த வேழாதவன் பொருண்மை யும்மையடுத்த பல்லோர் வினாப் பெயர்ப் பொருள் குறிஞ்சி யிறைச்சிப் பொருளொன்றனோடு புணர்ப.

சேய்மை சுட்டடுத்த வத்திறத்தியல் யாது?

இரண்டனுரு பொடு புணர்ந்த தன்மைப் பண்மை யாறாவதன் பொருட்டாக்கினார்க் குய்த்த கற்பிய லதிகரிப்பின் வருந் தலைமகட் பெயர விரண்டனோ டிரண்டிரண்டீகக் கழிவிலைப் பெயரவு மாகார வீற்று முதனிலைத் தனிவினைச் செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சத்தனவாகக் கலம்பகச் செய்யுளுறுப்பாற் சிறத்தும். இருவகை முதற்பொரு ளொன்றன் பாகுபாட் டுறுப்பிற் குறித்த, வைம்பெரும் பூதத்தோர் விசேடணத் தெதிர் மறை நடுக்குறையியற்சொற் பெயரவுயிர்ப் பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது.

சில வினைச் சார்பான் விலங்கு சூடிய வரையில் வெளியாம்.
இதனோ டீரிருவகைப்பட்ட வோர்சார் புதுநிலஞ்செல வுய்த்தனம்
வேண்டுழி வேண்டியாங் குய்க்க, மற்றைய பின்னர் வரைதும்.
இற்றே விசும்பிற் கணைச்சலம்

பார்வதிபுரம் *இங்ஙனம்*
சுக்கில வருடம், துலா ரவி 27ம் நாள் *நங்கோச் சோழன்*
வீரமணிச் சூடியார் திருவாணைப்படிக்கு அடிமை,
தொழுவூர் - வேலாயுதம்

இப்பத்திரிகையை ஞானியார் அவ் வவதானியாரிடங் காட்டினர். அவர் அதைப் பன்முறை படித்துப் பார்த்தும் பொருள் விளங்காமை கண்டு "வேண்டுமென்றே ஒரு வித்வான் பூட்டுப் போட்டால் அந்த வித்வான் தான் அதைத் திறக்கவேண்டும்" என்று கூறினார். அதைக் கேட்ட ஞானியார் புன்னகையுடன் அங்ஙனமாயின் தாங்களும் "வேண்டுமென்றெ ஒரு பூட்டுப் போடுங்கள் பார்ப்போம்" என்றார்கள். அவ்வாறே அவதானியாரும்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

தகர வரிக்குழல்கா மாதியைந்திற் றங்கும் தகரவரி நாலைந்து சாடும் - தகரவரி
மூவொற்றி யூர்பதங்கள் மூன்றுமங்கை யேந்துமொரு சேவொற்றி யூர்பதத்தை சேர்

என்ற கவியினை எளிதில் பொருள் விளங்காவாறு எழுதித் தந்தனர். அக்கவியினை ஞானியார் நம்பெருமானாருக்கு அனுப்ப அவர்கள் அதற்குரிய உரையினையும், அவர் உணராத மற்றோர் தத்துவ உரையினையும் எழுதி அனுப்பினர். அந்த உரையினைக்கண்ட அவதானியார் புறப்பட்டு சுவாமிகள் வீற்றிரக்கும் கருங்குழி வந்து சேர்ந்து சுவாமிகள் இருக்குமிடத்தை விசாரித்துக்கொண்டு அவ்வீதிக் கோடியிலேயே கரங்களைச் சிரமேற்குவித்துக் கொண்டு ஆங்கு வந்து சுவாமிகளின் திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கி. "யாம் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்தருளல் வேண்டும், வித்வான் என மதித் திருந்தேன்-பரிபூரண ஞானியென உணர்ந்திலேன் " என்று அழுது அரற்ற, தாயினுந் தயவுடைய நம் பெருமான் அவரை மன்னித்து ஆட்கொண்டார்.

44. குஷ்டம், கண்மறைவு நீக்கினார்

மற்றொருகால் அக்கருங்குழியிலுள்ள பாலு ரெட்டியார் என்பார் குஷ்ட நோயினால் துன்பம் ஆற்றாராய்ச் சுவாமிகளையடுத்துத் தம் குறைகளைத் தீர்த்தருள வேண்டினர். சுவாமிகளும் அவர் வேண்டியாங்குத் திருநீறு கொடுத்துத் தீரா நோயைத் தீர்த்தருளினார். அப்படியே முத்து நாராயண ரெட்டியார் என்பவருக்குற்ற கண் மறைவினைத் தீர்த்தருளினார். அதனால் மனமிக மகிழ்ந்த அம் முத்து நாராயண ரெட்டியார் தம்முடைய நிறைந்த செல்வ முழுவதையும் சுவாமிகட்கு எழுதி வைப்பதாக விளம்ப, அடிகள் அதனை மறுத்து "வேண்டுமாயின், இவ்வூரிலுள்ள ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலுக்கு எழுதிவைத்து விடுங்கள்" என்று இயம்பினர். அங்ஙனமே அவரும் அக்கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டார். தைப்பூச காலங்களில் திருக்கூட்டம் வடலூரிலிருந்து சித்திவளாகம் செல்லும் மூன்றாம்நாள், மேற்படி ஸ்ரீநிவாஸப் பெருமாள் சன்னிதியில் தங்கி, பிரசாதங்கள் பெற்றுப்போவது இன்றும் நடந்துகொண்டு வருகிறது. கருங்குழியிற்றானே மற்றொரு நாள் மாலையில் ஐயா அவர்கள் தம்முடைய அன்பர்கள் பலருஞ் சூழ இயற்கைக் காட்சியைக் கண்ணுற, தெய்வீக மாமரத் தருகில் சென்றனர். அப்பொழுது இடைவழியில் மழை பொழிய எல்லோருடைய ஆடைகளும் நனைந்துபட்டன; ஆனால் ஐயா அவர்களுடைய ஆடை மட்டும் ஒரு சிறிதும் நனையவில்லை. அதைக்கண்ட அவ்வன்பர்கள் பெரிதும் வியப்படைந்தனர். இங்ஙனமாகச் சுமார் பதினாறு ஆண்டுகள் ஐயா அவர்கள் கருங்குழி என்னும் அக்கிராமத்திலேயேயிருந்து வந்தார்கள். அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமான் மீது,

நாவி னாலுனை நாடொறும் பாடுவார் நாடு வார்தம்மை நண்ணிப் புகழவும்
ஓவி லாதுனைப் பாடவுந் துன்பெலாம் ஓடவும்மகி ழோங்கவுஞ் செய்குவாய் - திருவருட்பா

45. கூடலூரில் குருவாயின நிலை

பின்னர் நம் பெருமானைக் கூடலூர் அப்பாசாமி செட்டியார் என்னும் அன்பர் ஒருவர் அழைக்க, அவ்வழைப்பினை மறுக்காது ஆங்குச் சென்றார்கள். சென்று அங்கு வந்து கூடிய அன்பர்கட்கு, உய்யும் அறநெறியினை எடுத்துரைத்து, அமைந்திருந்தனர், இது நிற்க, கூடலூர் தேவநாயகம் பிள்ளை என்றோரன்பர்க்கு சிலவருடங்கட்கு முன் இறந்துபோன அவருடைய தந்தையார் "அப்பா ! நான் இறந்து போன பிறகு ஒரு மனிதர், முக்காடிட்டுக் கொண்டுவந்து கைதனிலிருக்கும் பிரம்பினால் " இது தானோ உன் தகப்பன் வியோகஸ்தானம்" என்று தட்டிக்கேட்பார் ; அவ்வுத்தமரையே நீ ஞானாசிரியராகக் கொண்டு அருள்நெறியில் நிற்கக்கடவை " என்று கூறி தேக வியோகமாயினர்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அவர் கூறியபடியே, நம் பெருமானார் அத் தேவநாயகம் பிள்ளை, இல்லத்திற்குச் சென்று அவரை யழைத்துக் கையிலிருந்த பிரம்பினால் தட்டி வினவினார். வினவலும், அத் தேவநாயகம் பிள்ளை தமது தந்தையார் கூறிப் போன அடையாளங்கள் அனைத்தும் சரியாயிருப்பதைக் கண்டு அடிபணிந்து தமது தந்தையார் இறுதிகாலத்திற் கூறிப் போனதைச் சொல்லி தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். அப்படியே அவரைத் தமது மாணவராகக் கொண்ட நம் பெருமானார் அவர் இரசவாதத்தில் மயக்குற்றவராய்த் தம்முடைய செல்வத்தைச் சிதறடித்தவர், என்பது தெரிந்த மாத்திரத்தில் அவருடைய மயக்கையொழித்து அருள் நெறி காட்ட, இரும்பினைப் பதினாறு மாற்றுப் பொன்னாக மாற்றிக்காட்டி " இது இச்சையற்றவர்களுக்குச் சித்திக்கும், ஆதலால் இனி நீ இதில் மயங்காதே" என்று அதனை மறைத்து விட்டனர்.

46. செஞ்சிமலை வாசம்

மற்றொரு சமயம் பெருமான் செஞ்சிமலையில் சஞ்சரிக்குங்கால் அத்தேவநாயகம் பிள்ளை செஞ்சி மலைக்குப் பெருமானைப் பார்க்கப் போனபோது தம் மோடு வந்தவர் பசியினால் மிகவும் வருந்த அவர் பசி தீரும்பொருட்டாகச் சுவாமிகள் லட்டு ஒன்றும், செம்பு நிறைய நீரும் தீடீரென வரவழைத்துக் கொடுத்தார். அவர் அதை உண்டு அருந்திய பின்னர், அச்செம்பினைக் கொண்டுபோய்க் கொடுத்து வருவதாகக் கூறி சிறிது தூரம் சென்று மீண்டார்.

47. தீண்டிய பாம்பே மாண்டது

கூடலூர் அப்பாசாமி செட்டியார் வாழை தோட்டத்தினுள் நம் பெருமானார் ஒருகால் சென்றபொழுது. அத்தோட்டத்தில் ஒரு பேயன்வாழை மரத்தின் மீதிருந்த ஒரு பாம்பு தலையில் தீண்டிவிட்டது. அதனைக் கண்ட மற்றையோர், "சுவாமிகளைப் பாம்பு கடித்து விட்டதே" என்று பதறியவர்களாய்ச் சிகிச்சை செய்யவும், அப்பாம்பினைக் கொல்லவும் முயன்றார்கள். நம் பெருமானோ அவர்களை நோக்கி "அவ் விஷம் நம்மை ஒன்றும் செய்யாது, அப்பாம்பு இறந்து போவதற்காகவே நம்மைத் தீண்டியது, அதுவும் சிறிது நேரத்தில் தானாகவே மடிந்து விடும். ஆகவே அதனை நீங்கள் அடித்தலும் வேண்டாம்" என்று கூறினர். அடிகள் கூறியபடியே விஷம் அடிகளை ஒன்றுஞ் செய்யவில்லை.

அப்பாம்பும் சிறிது நேரத்திற்கெல்லாம் இறந்தது. அப்பொழுது கூடலூரில் முறையே ஒவ்வொரு நாள் இரவிலும் நம் வள்ளற்பெருமானார் பிரசங்கம் நடைபெற்று வந்தது. அப்பிரசங்கத்திற்கு நாள்தோறும் மஞ்சகுப்பத்திலிருந்து வந்துபோகும், இராமகிருஷ்ணப் பிள்ளைக்கு இடைவழியில் எங்காவது அச்சமேற்படின் உடனே அங்கு ஒரு மனிதன் ஒரு விளக்கைக் கரத்தேந்திக் கொண்டு நடப்பதும், பிள்ளைக்கு அச்ச மொழிந்ததும் மறைந்து போவதுமாகப் பல நாட்களாக நடந்து வந்தது. அங்ஙனமாகத் தோன்றுகிற மனிதனை எத்தனையோ முறை இராமகிருஷ்ணப் பிள்ளை பார்க்க முயன்றும் பார்க்க முடியவில்லை. ஆதலால் அவர் அம்மனிதர் வருவது போவதில் ஐயங்கொண்டு நம் அருளாளரிடத்து வந்து அதனைக் கூறினார். செவிமடுத்த அருட்செல்வரும் தெரியாதவரைப் போல் "எல்லாம் திருவருட் செயலே" என்று கூறிவிடுத்தனர்.

இக்கூடலூருக்கடுத்துள்ள திருப்பாதிரிப்புலியூரில் அப்பொழுது நடந்த ஆற்றுத்திருவிழாவில், "பிரம்ம சமாஜத்தார்" என்னும் ஒரு கூட்டத்தார் விக்கிரக ஆராதனை கூடாதென, அதனைக் கண்டித்து உரை நிகழ்த்தினர். அதனை யறிந்த நம் பெருமானார் அந்த சமாஜத்தினருக்குத்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

"தாங்கள் விக்கிரக ஆராதனையை மறுப்பது இன்னின்னவகைகளினால் தகுதியன்று" என்று ஒரு கடிதம் அனுப்பினர். அக்கடிதத்தைக் கண்ட சமாஜத்தினர், அடிகளுடைய கடிதம், உண்மையும், உறுதியுமுடையதா யிருப்பதைக்கண்டு அதை மறுக்க முடியாதவராய் அடிகளின் மீது போலி மறுப்பொன்றை அவர்களுள் ஒருவராகிய ஸ்ரீதர ஸ்வாமி நாயகரைக் கொண்டு எழுதுவித்தனர். இது சம்மந்தமான பிறவற்றைக் கீழ்க்காணும் பகுதியில் காண்க.

48. நடந்தவண்ணம் உரைத்தல் 1867 ஆம் ஆண்டு

கல்வி கேள்விகளால் சிறந்த அறிவுடையவர்களுக்கு வந்தனஞ் செய்து வெளிப்படுத்துகை அக்ஷய வருடம் தை மாதம் 5ஆம் தேதியில் கூடலூரைச் சார்ந்த திருப்பாதிரிப்புலியூருக்கடுத்த பெண்ணை நதித் தென்கரையில் உண்ணாமுலை செட்டிச் சாவடிக்குச் சமீபத்தில், ஓர் நைமித்தியத் திருவிழாவைப்பற்றி அறிவுடையோ ரனேகர் கூடினர். அவ்விடம் சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகளு மிருந்தனர். அப்போது பிரம்மசமாஜம் சம்பேடு ஸ்ரீதர ஸ்வாமி நாயக்கர் சிலருடன் வந்திருந்தார். அதற்குமுன் திருப்பாதிரிப்புலியூரில், ஸ்ரீதர ஸ்வாமி நாயக்கர் செய்த பிரசங்கத்தினால் சந்தேகத்தி லழுந்திய சிலர், தமது சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற் கீஃதோர் தருணமென்று கருதி, அக்கூட்டத்தில், சிதம்பரம் - ராமலிங்க சுவாமிகளை நோக்கி, "ஐயா ! பிரமத்தை நினைப்பது தகுதியென்றும், விக்கிரக ஆராதனை செய்வது தகுதியல்ல வென்றும், இங்கே வந்திருக்கின்ற ஸ்ரீதர ஸ்வாமி நாயக்கரவர்கள் எங்கள் முன்பாகப் பலமுறை பிரசங்கித்தார். அதனால் எங்களுக்குச் சந்தேக முண்டாயிருக்கிறது; அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்விக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். அப்போது, சிதம்பரம்-இராமலிங்க சுவாமிகள், "பிரம்மத்தையறியத் தொடங்கினோர் அறிதல் வேண்டும்; இவ்விருவகையும் அததற்குரிய பக்குவர்களுக்கு அடுத்த வகைகளென் றறிய வேண்டும்" என்று சொல்லினர். அப்போது அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து, "இது விஷயத்தில் தங்கள் கோட்பாட்டை வெளிப்படுத்தி, நிறுத்தல் வேண்டும்" என்றார்கள், நாயக்கர், "லிகித மூலமாய் வெளிப்படுத்துவேன்" என்றார்.

அது கேட்டு, "ஒரு சபையில் மாறுபட்ட இருவர், தங்கள் தங்கள் கோட்பாடுகளை அந்தச் சபையி லறிஞரறிய எடுத்துரைத்து, அதற்குத்தக்க காட்சி, அனுமானம், உவமானம், சத்தம் முதலிய பிரமாணங்களும்- உடன்படல், மறுத்தல்; -ஒரு சாருடன்பட்டு மற்றொரு சாருடன்படாமை;- முற்றும் உடன்படல் போன்று உடன்படாமை,- முதலிய கோட்பாடுகளுக்கமைந்த பலவகை யுக்திகளும், - அனுபவத்தோடு தர்க்க வுபதர்க்க, - லக்ஷண உபலக்ஷணங்களுக்குப் பொருந்த விவகரித்து - அந்த விவகாரத்தில் சந்தேக விபரீத மயக்கத்திற்கு இடங்கொடாமல், முடிந்த நிச்சயத்தைப் பின்னர் லிகிதமூ லமாய்ப் பிறரறிய வெளிப்படுத்தல் மரபே யல்லாது, - மாறுபட்டோர் இருவரும் வேறிடங்களிலிருந்து அறிஞர் சபாதிபத்தியமின்றித் தங்கள் தங்கள் மனஞ் சென்றவழி அளவை-யெல்லையைக் கடந்தெழுதிக் கொள்வதில் நியாயந் தோன்றாது" - என்றும், "ஒழியாத லிகிதச் சண்டையாக முடியும்" என்றும், "அது தர்க்க லக்ஷண மரபல்ல" என்றும், -சுவாமிகள் சொல்லினர்.

அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து, "ஐயா ! தங்கள் கோட்பாட்டை வெளியிட்டுப் பிரமாணத்தால் நிலைபெறச் செய்து, எங்களையும் அவ்வழியில் நடத்துவிப்பதற்கு அடுத்த தருண மிதுவாகவிருக்க இத்தருணத்தி லிப்படிச் சொல்வது தங்கள் கோட்பாட்டிற் கழகல்ல". உடனே நாயக்கர், "நித்திய-நிரஞ்சன-நிர்மல-நிராமய-நிராலம்ப-சொரூபமும்-அவாங் மனோ கோசரமுமான

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பிரமத்தை நினைப்பது தக்கதென்பதும், விக்கிரக ஆராதனை செய்வது தகாதென்பதும் எங்கள் பிரமசமாஜ வேதசமாஜ கோட்பாடு " என்று வெளியிட்டார். "அவாங் மனோகோசரமான பிரமம், மனதினாலெப்படி நினைக்கப்படும்? ஆகாயம் அடியாலும் படியாலும் அளக்கப்படும் - காற்று கையாற் பிடிக்கப்படும் - என்பவைபோல் வார்த்தை மாத்திரத்தாலன்றி, அர்த்த லக்ஷ்யானுபவங்களுக்கு இடம்பெற வில்லையே!" என்று சுவாமிகள் வினவினர். "மிதக்கியானமுள்ள நம்முடைய மனத்திற்குப் பரிமித வத்து வைப்போ லடங்காதென்று சொன்னதல்ல !" என்று நாயக்கர் உத்தரித்தனர். "மனத்திற்கு அகோசரமென்பது, மனத்திற்கு விஷயம் படாததென்று பொருள்படுமே யல்லது, சிறிது விஷயமாகிப் பெரிது விஷயமாகாதென்று பொருள் படாது" என்றும், - "அவ்வாறு பொருள் கொள்வது லக்ஷண வுபலக்ஷண விதியல்ல" என்றும், - ஒரு காலத்தில் ஒரு பொருள் சிறிது விஷயமானால், மற்றொரு காலத்திற் சிறிது விஷயமாகும்; பிறிதொரு காலத்திற் சிறிது விஷயமாகும், இவ்வாறு முழுவதும் விஷயமாகும்" என்றும்;- "அவாங் மனோ கோசரமென்றதில் மனத்திற்குச் சிறிது விஷயமானபடி வாக்குக்குஞ் சிறிது விஷயமாதல் வேண்டும்" என்றும் - "இங்ஙனம் மனவாக்குகளுக்குச் சிறிது விஷயமாகுமென்று கொண்டபோது, கண், காது, மூக்கு, மெய், வாய், கை முதலிய மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகுமென்பதும் தானே விளங்குதலால், பிரமலக்ஷணத்தோடு விரோதப்படும்" என்றும், - மனம் முதலான அந்தக் கரணங்களுக்கும், கண் முதலான இந்திரியங்களுக்கும், நாம ரூபக்கிரியைகள் விஷயமாகுமல்லது தத்துவா தீதமாகிய பிரமம் விஷயமாகு மென்பது விபரீதவுணர்ச்சி" என்றும், மனோலயங்கிடைத்த பின்னர் பிரமானுபவங் கிடைக்கும்" என்றும்- "மனஞ் சிறிது தோன்றினும் ஆத்மஞானம் விளங்காது" என்றும் - "மனம்; அசத்து, சடம், அநித்தியம், துக்கம், அசுத்தம் உடையது ; -பிரம்ம; சத்து, அறிவு, நித்தியம், இன்பம், சுத்தம் உடையது - ஆகலின், மனத்திற்குப் பிரமம் எவ்வகையிலும் விஷயமாகாது என்றும் - "இவ்வாறே வேத முதலிய கலைகளிலும், ஆப்த வாக்கியங்களிலும், ஆணையிட்டுள்ளது" என்றும், - பிரமம் மனத்திற்கு விஷயப்படாததென்பது அனுபவத்திற்கும் மற்ற ஹேதுக்களுக்கும் யுகங்களுக்கும் பொருந்துகின்றபக்ஷம்" என்றும், - சுவாமிகள் சொல்லினர்.

பின்னர், சிலபொழுது நாயக்கர் சும்மாவிருந்தனர். அங்கிருந்தவரிற் சிலர், நாயக்கரைப் பார்த்து, "சும்மாவிருக்கப்படாது, உத்தரிக்க வேண்டும்" என்றார்கள். நாயக்கர், சற்று நேரஞ் சென்று மீளவும் "மனத்தினால் பிரமத்தை நினைக்கக் கூடும்" என்று முன் சொல்லியதையே சொல்லினர். "தங்களிஷ்டப்படி விதியைக் கடந்த விவகாரமுந் தடைபடுகின்றது, பிரமம், மனத்திற்கு விஷயமாகுமானால் கண்ணுக்கும் விஷயமாகும்; இவைகளுக்கு விஷயமாகுமானால் மற்ற இந்திரியங்களுக்கும் விஷயமாகும் என்று நான் முன் சொல்லியதைத் தாங்கள் சிறிது உய்த்துணர வேண்டும்" என்று சுவாமிகள் சொல்லினர். நாயக்கர், சற்றுநேரஞ் சென்று "மனத்திற்கு விஷயமாவதெல்லாங்கண்ணுக்கு விஷயமாகுமோ?" என்றார். அதற்கு சுவாமிகள் "ஆகும்" என்றார்கள். நாயக்கர் " மற்ற இந்திரியங்களுக்கு விஷயமாகாமல் மனத்திற்கே விஷயமாகத் தக்கது ஒன்றுமில்லையோ! ஒன்றுமில்லையோ!" என்று பலமுறை வியந்து வினாவினர். "மனத்திற்கே விஷயமாகத் தக்கது யாது? அதனைந் தாங்களே வெளிப்படுத்தல் வேண்டும்" என்று சுவாமிகள் கேட்டனர். "ஆனந்தம் மனத்திற்கே விஷயமானது" என்று நாயக்கர் சொல்லினர். "ஒரு ரூப விஷயத்தைக் கண்கள் கண்டு அந்த ரூப விசேஷத்தால் ஆனந்த விருத்தி யடைந்து, பின்னர் அதன் வழியாக மனத்திற்கும் அவ்வானந்தத்தை யடைவிக்கும்", என்றும், - "கண்கள், முன்னர்

ஆனந்தத்தை யடைதற்கு அடையாளம், அக்கண்களி லிருந்து சிந்துகின்ற பாஷ்பங்களே" என்றும், – "அதை, யானந்த பாஷ்பமென்று வழங்குவதே போதுமான பிரமாணம்" என்றும், – "இஃதன்றி, நேத்திரானந்தம் சிரவணானந்தம் – என்று அறிவுடையோர் பிரயோகிப்பதை யூகிக்க வேண்டும்" என்றும் – இங்ஙனம் கண் முதலிய இந்திரியங்களும், மனம் முதலிய கரணங்களும் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிக ளாதலால், அவைகள் ஆனந்த மடைந்தன வென்பது உபசரிப்பு" என்றும், – "ஆனந்தம் பிரத்தியேக ஆன்மஞான விஷயமென்பது உண்மை" என்றும் – சுவாமிகள் சொல்லினர். பின்னர் சற்றுநேரஞ் சென்று "ஓரிந்திரியத்திற்கு விஷயமாவது வேறோ ரிந்திரியத்திற்கும் விஷயமாகு மென்றது எப்படி? காதுக்குப் புலப்படுவது மூக்குக்குப் புலப்படாது, கருத்துக்குப் புலப்படுவது கண்ணுக்குப் புலப்படாது" என்று நாயக்கர் சொல்லினர்.

"முன்னர் அவாங் மனோகோசர மென்றதற்குத் தாங்கள் கொண்ட கருத்தின்படி வாக்குக்கும் மனத்திற்கும் பிரமம் சிறிது விஷயமாகுமானால் கண்களுக்குங் கைகளுக்குஞ் சிறிது விஷயமாகுமென்று தாங்களே யூகித்தறியலாம்" என்றும் – "ஒரு பொருள் மனத்தினால் நினைக்கப்படுமானால் காதினாலுங் கேட்கப்படும்; காதினாற் கேட்கப்பட்டது கண்ணினாலுங் காணப்படும். கைகளாலும் பிடிக்கப்படு மென்பது உபதர்க்க-உபலக்கணம்" என்றும், – ஸ்தூல சூக்கும காரண பூதங்களால் உருவாகித் தோன்றுகின்ற பொருளினிடத்து, மன முதலான கரணங்களுக்கும், கண் முதலான இந்திரியங்களுக்கும் விஷயங்களாகத் தக்க பண்புகள் உண்டாயிருக்குமென்று அறிந்த பக்ஷத்தில், ஒருப் பொருள் ஒரு பண்பினால் ஓரிந்திரியத்திற்கு விஷயமாகுமானால் அந்தபொருள் மற்றொரு பண்பினால் மற்றோ ரிந்திரியத்திற்கும் விஷயமாகுமென்று சாதாரண ஜனங்களாலும் அறியப்படும்" என்றும், – "அக்ஷயோக ஞாயத்தாலும், இந்திரியங்களின் சொரூப சுபாவ வியத்தி விசேஷ சாமாநிய முதலியவைகளையும், மன முதலான கரணங்களின் சொரூப ரூப சுபாவ வியாபக வியத்தி விசேஷ சாமநிய முதலானவைகளையும் வெளிப்படுத்துகின்ற தத்துவ சாத்திரங்களாலும், பிரகிருதி சாத்திரங்களாலும் உய்த்துணர்ந்து தெளியப்படும்" என்றும் – கண்களும் மனமும், – அதிகரணோ பாதமான சம்பந்தமுடையது" என்றும் – "மத்திய, பூத, தூல, சூக்கும காரியம்" என்றும் "இதனால் மனத்திற்கு விஷயமாவது, கண்களுக்கும் விஷயமாகும், " என்றும் – "கண்களுக்கு விஷயமாவது, மனத்திற்கும் விஷயமாகும்" – என்றும் சுவாமிகள் சொல்லினர். அந்தச் சமயத்தி லிவைகளைக் கேட்டுச் சூழநின்ற திருவயிந்திரபுரம் வைஷ்ணவப் பிராமண பண்டிதர்களும், ஸ்மார்த்த பண்டிதர்களும் அந்தச் சபையினுட் புகுந்திருந்து சுவாமியை நோக்கி, "மனத்திற்குப் புலப்படுவது கண்களுக்கு எப்படிப் புலப்படும்? " என்று வினவினர்.

"ஒரு பொருளில் ஸ்தூலப் பிரகிருதி-சூக்குமப் பிரகிருதி காரணப் பிரகிருதி-மகா காரணப் பிரகிருதி-மூலப் பிரகிருதி என ஐவகைப் பிரகிருதி அங்கங்க ளுண்டு" என்றும், – "அவைகளில் காரணப் பிரகிருதி மகா காரண பிரகிருதி யங்கங்கள் மனத்திற்கு விஷயமாகும்" என்றும் – "ஸ்தூல சூக்குமப் பிரகிருதி அங்ஙங்கள் கண்களுக்கு விஷயமாகும்" என்றும்;– "இவைகளைச் சாதாரண லக்ஷணம்" என்றும் "அசாதாரண லக்ஷணத்தில் கண்ணறிவு பலமுறை சாதன லக்ஷியத்தால் நுட்பவறிவாகி மனத்திற்கு விஷயமாகின்ற காரண மகாகாரணப் பிரகிருதி யங்கங்களையும் அறியும்" என்றும் – "இவ்வா றறிவது, அசாத்தியமல்ல, சாத்தியமே" என்றும், – "இதனை அக்கயோகசாதனம் முதலிய வழிகளாலும், – தத்துவ சாத்திரங்களாலும் – அநுமான முதலிய பிரமாணங்களாலும், – அறிந்து கொள்ளலாம்" – என்றும் – "அன்றி, மனத்திற்குப் புலப்படுவது பிரபஞ்சம் அது

கண்களுக்கும் புலப்படும்" என்றும் சுவாமிகள் சொல்லினர். "மனத்திற்குப் பிரமம் புலப்படாதோ?" என்று பண்டிதர்கள் வினவினார்கள். "பிரமம் மாயாதீதமாதலால் மாயாகாரியமாகிய மனத்திற்குப் புலப்படாது" என்று சுவாமிகள் சொல்லினர். ஆனால் "பிரமத்தை யெப்படி யறியலாம்?" என்று பண்டிதர்கள் வினவினர்கள். "ஆன்ம ஞானத்தால் அறியலாம்" என்று சுவாமிகள் சொல்லினர் பின்னர் சம்மதித்தவர்களாக, பண்டிதர்கள் சும்மா விருந்தார்கள்.

அதன்மேல் அங்கிருந்தவர்களிற் சிலர் நாயக்கரைப்பார்த்து "சும்மா யிருக்கப்படாது. தருணம் நேரிட்டபோதே உத்தரிக்கவேண்டும்" என்றார்கள்; நாயக்கர், ஆரம்பத்தில் சொன்னது போலவே "லிகித மூலமாய் உத்தரிக்கின்றேன்" என்று சொல்லினர். அதுகேட்டு அந்தச் சபையிலிருந்தவர்களும், அதன் புறத்து நின்றவர்களுஞ் சிரித்தனர். அதுபொறாமல் நாயக்கர், "இன்னும் எட்டு தினத்திற்குள் இவ்விடத்தில் என்னைச் சிரித்தவர்களையெல்லாம் நான் சிரிப்பிக்கச் செய்கின்றேன்" என்று சபதங் கூறினர். அது கேட்டு அந்தச்சபையில் உணர்வுந் தயவுமுடைய வொருவர், "இதென்ன கெர்வித வார்த்தை ! " என்றனர். அது பொறாமல் நாயக்கர் அளவிறந்த கோபவேசத்தோடு கண்கள் சிவப்பத் தேகம் பதைப்ப, வாயாற் சில பழிபடு வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே திடீரென் றெழுந்து, இடி முழங்கினாற்போல் ஆரவாரித்தனர். இவருக்குச் சகாயமாய், பின்வந்தவர்களும், நெருப்பில் நெய்விட்டது போற் கோபமூண்டு கோஷித்தனர். அத்தருணத்தில் சுவாமிகள், நாயக்கருக்கும் மற்றவர்களுக்குங் கோபந் தணியத்தக்க நல்ல வார்த்தைகளைச் சொல்லி, எழுந்தவரை மீளவும் உட்காரவைத்து, "ஐயா நாயக்கரவர்களே! கெர்வித வார்த்தையென்ற சத்தத்தின் லக்ஷியத்தை நாம் உள்ளபடி யறிந்தால், இவ்வளவு தீவிரம் நேரிடுமென்று எனக்குத் தோன்றவில்லை.

ஆயினும் போனது போக, இனியாவது இச்சபையாரறிய பிரமம் மனத்திற்கு விஷயமாகாதென்று நான் தெரிவித்தபடி, தாங்களுஞ் சம்மதிக்கின்றபக்ஷத்தில் சம்மதமென்று சொல்லிச் சும்மா விருக்கவேண்டும், அவ்விதம் சம்மதியாத பக்ஷத்தில் பிரமாணத்தாலும், யுக்தியாலும், அனுபவத்தாலுந் தங்கள் கோட்பாட்டை நிறுத்துவீர்களாக என்று சொல்லினர். நாயக்கர், "இப்போது என்னை விட்டுவிட்டால், பின்பு லிகித மூலமாக வாதிக்கின்றேன்" என்று சொன்னார். "எதிர் நின்று வாதிப்பதற்குக் கூடாமையால், லிகித மூலமாய் வாதிப்பீர்களென்பதில் நம்பிகை யில்லை யென்றும், லிகித மூலமாய் வாதிப்பது தர்க்க லக்ஷண மரபல்லவென்றும் முன்னரே குறித்திருக்கின்றேன்" என்றுஞ் சொல்லி முடித்துப் பின்னர், அந்தச் சபையிலுள்ளோரை நோக்கி, "பிரம்மானுபவமானது விக்கரக ஆராதனை செய்தாலல்லது வாராது" என்றும், "விக்கிரகம் என்பது விசேட இடம் என்று பொருள்படும்" என்றும், "ஆன்மா இருப்பதற்குக் கிரகம் மனிதர் முதலிய ஜீவதேகங்கள்" என்றும், "பிரமப் பிரகாசமிருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவ தேகங்கள்" என்றம் "அத் தேவ தேகங்களாகிய விக்கிரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்கில் பிரமப்பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு அனுக்கிரகிக்கும்" என்றும் "அவ்வாறு விசேட இடமென்று சொல்லப்படுகின்ற விக்கிரகங்களில், பிரமப் பிரகாசம் வெளிப்பட்டு அனுக்கிரகித்ததற்கு அடையாளம், சில காலத்திற்குமுன் விக்கிரகாராதனஞ் செய்த பக்தர்கள், குஷ்டம், குன்மம் முதலான தீராத வியாதிகளைத் தீர்த்தும், இறந்தவர்களை எழுப்பியும் இன்னும் செயற்கரிய அநேக மகத்துவங்களை நடத்தியும் இருந்ததே போதுமானது" என்றும், "இப்போதும் விக்கிரகாராதனை செய்கின்ற பக்தர்கள் சில மகத்துவங்களைச் செய்து வருகின்றார்கள்" என்றும் "பிரம சமாஜத்தார் வேத சமாஜத்தார்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அந்த அடையாளங்களை யுடையவர்களாகத் தோன்றவில்லை" யென்றும், "நாமெல்லாம், நமது பக்குவத்திற்குத் தக்கபடி விக்கிரகாராதனை செய்து, அதனால் அருளைப்பெற்று, அதனால் அறிவுவிளங்கி, அதனால் பிரம சுகத்தை யனுபவிக்கலாம்" என்றும் - சுவாமிகள் சொல்லிக் கொண்டே எழுந்தனர். இவ்வண்ணமாக அவ்விவாதம் வெற்றியோடு முடிவுற்றது.

49. புலவர்களின் விவாதம்

பின்னொருகால், இரண்டு புலவர்கள் தங்களுக்குள்ள விவாதத்தை தீர்த்துக்கொள்ள அடிகளிடத்து வந்தனர். அவர்களை அடிகள் அமரச்செய்து "என்ன காரணம்?" என்று வினவினார், அதற்கவ்வித்வான்கள் "அருளாநந்தப் பொதுவாழ்வுடைய ஐய! உலக நிகழ்ச்சிகளனைத்தும் (நல்லவையும் கெட்டவையும்) ஆண்டவனாலேயே நடக்கின்றன. அவனன்றி ஓரணுவும் அசையாது" - என்பது எங்களுள் ஒருவருடைய வாதம்;

இந்தச் சீவனால் வரும் அறு பகையெலாம் இவன் செயல் என்னாமல்
அந்தத் தேவனால் வரும் என்ற மூடர்கள் அதோகதி அடைவார்கள்
இந்தச் சீவனால் வரும் அறு பகையெலாம் இவன் செயல் அல்லாமல்
அந்தத் தேவனால் அன்று எனும் விவேகிகள் அமலவீடு அடைவாரே

-கைவல்யம்-சந் 59ம் பாடல்

என்பது மற்றொருவருடைய வாதம், "ஆகவே, இவ்விரண்டு கொள்கைகளுள். எக்கொள்கை சிறந்தது? என்பதைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும். அதற்காகவே இங்கு வந்தோம்" என்று கூறினர். அதற்கு சுவாமிகள் "ஒரு நிர்வாண சந்நியாசி நடுத்தெருவில் போய்க் கொண்டிருக்கும் பொழுது அவரைக்கண்ட ஒருவன் 'மிகநல்லவர்' என்று எண்ணியவனாய் அவருக்கு ஒரு கனிந்த வாழைப்பழம் கொடுத்தான்; மற்றொருவன் 'பெண்கள் நடந்து செல்கின்ற வழியில் நிர்வாணத்தோடு செல்கின்ற இவன் மிகப்பொல்லாதவன்' என்று கல்லால் அடித்தான், இவ்விருவருடைய செய்கைகளையும் ஓரிடத்திலிருந்து பார்த்த மூன்றாவது மனிதனொருவன், உடனே அங்குவந்து சந்நியாசியையும், அவருக்கு வாழைப்பழங் கொடுத்தவனையும், கல்லாலடித்தவனையும் ஒருங்கே அழைத்துச்சென்று நியாயாதிபதியிடம் விடுத்து. "இச்சந்நியாசியை இத்துஷ்டன் இந்த மனிதர் கொடுத்த பழத்தை வாங்கும் பொழுது கல்லாலடித்தான்" என்று அடித்தவனைக்காட்டி அடுத்தவனைச் சாக்ஷியாகக் கூறினார். அப்பொழுது அந்நீதிபதி, சந்நியாசியாரை நோக்கி "யார் உம்மை அடித்தது" என்று கேட்டார். சந்நியாசியார் வாழைப்பழங் கொடுத்தவனைக்காட்டி, "அடித்தவன் இவன்" என்றார். கொண்டுவந்துவிட்டவர், "பழங்கொடுத்தவர் இவர். கல்லாலடித்தவன் இவன் " என்று அவ்விருவரையும் நீதிபதியிடம் காட்டிக் கூறி யிருக்கும் பொழுது சந்நியாசியார் இவ்வாறு பழங்கொடுத்தவனும் கல்லாலடித்தவனும் ஒருவனே என்று கூறுகின்றாரே. என்று தெளியாதவராய் மீளவுஞ் சந்நியாசியாரை நோக்கிப் "பழங்கொடுத்தவர் யார்"? என்று வினாவினார். கல்லாலடித்தவனை காட்டி "பழங்கொடுத்தவர் இவர்" என்றே அப்பொழுதுஞ் சந்நியாசியார் கூறினார். அப்பொழுதும் தெளிவுறாத நீதிபதி பின்னுஞ் சந்நியாசியாரை நோக்கிக், "கல்லாலடித்தவன் யார்?" என்று வினவ அதற்கவர் அழைத்துக்கொண்டு வந்தவனைக் காட்டி, "கல்லாலடித்தவன் இவன்" என்று பதிலளித்தார், நீதிபதி, உடனே உண்மைதெளிந்து கல்லாலடித்தவனைச் சிறைப்படுத்தி விட்டுச் சந்நியாசியாரையும், பழங்கொடுத்தவரையும், அழைத்து வந்த வரையும் அனுப்பிவைத்தார். கதை இவ்வளவே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

இக்கதையில் உள்ள சந்நியாசியை ஒத்தவர்கட்கு, 'எல்லாம் ஆண்டவன் செயல்களே ; அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னுங் கொள்கை ஏற்றது. ஏனெனில் அடித்தவன்–அடியாதவன் ஆகிய இருவரையும் வேறு பிரிக்கவில்லை. வேற்றுமை செய்யவில்லை. அதுபோல 'இது என்னுடைய செயல்' 'இது கடவுளுடைய செயல்' என்று பிரித்துக் காணாமல் எல்லாம் இறைவன் செயலே என்று, எல்லாவற்றையும்.

அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே யனையாய் எனையாட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ எண்டோண்முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே. - திருவருட்பா

என்று கூறியாங்கு ஒப்படைத்து உயிர் தாங்குபவர்கள் அவர்களாதலால் அவர்கள் செய்வினையும் ஆண்டவனுடைய வினையேயாகும். சந்நியாசியும் மற்றிருவரையும் நீதிபதியிடத்து அழைத்துச் சென்றவரை ஒத்தவருக்குக் கடவுள் செயல்கள் சில, ஜீவர்கள் செயல்கள் சில என்னும் கொள்கை ஏற்புடையது. ஏனெனில் அவர்கள் "வேற்றுமை மயக்கில் விழுந்து கிடப்பவர்கள்" என்று அவர்களைத் தேற்றி அனுப்பி வைத்தனர்.

50. சித்தரின் வருகை

மற்றொரு நாள் இரவு கூடலூர் அப்பாசாமி செட்டியார் வீட்டினுள்ளிருக்கும் அறையொன்றில் ஐயா அவர்கள் தனித்திருக்கிற காலத்தில் திடீரென யாரோ ஒரு மனிதர் தங்கு தடையின்றி அவ்வீட்டினுள் பிரவேசித்தார். அதனைக்கண்ட அவ்வீட்டுத் திண்ணையிலிருந்த சிலர் அப்புது மனிதரைப் பின்தொடர்ந்தனர். ஆனால் அவர்கள் உள்ளே சென்றதும் முன்னால் சென்ற அம்மனிதர் மாயமாய் மறைந்துவிட்டனர். ஆதலால் இவர்கள் 'அம்மனிதர் எங்கேயாவது ஒளித்துக் கொண்டாரோ ! என்னும் ஐயமுடையவர்களாய் அவ்வீட்டிலுள்ள ஒவ்வொரு அறைகளையும் பரிசோதிக்கத் தொடங்கி, ஐயா அவர்கள் இருக்கும் அறை நீங்கலாக மற்றைய அறைகளையும் இடங்களையும் பரிசோதித்தும் அம்மனிதர் புலப்படாது போகவே கடைசியாக ஐயா அவர்களிருக்கும் அறைக்குச் சென்று அவர்களிடத்து இந்நிகழ்ச்சி முழுவதையும் எடுத்துக்கூற, பெருமானார் புன்னகையோடு அவர்களை நோக்கி "வந்தவர் மனிதரல்ல அவர் ஒரு சித்தர் ; அவர் நம்மைக் காணவே இங்கு வந்தார். இந்நேரம் அவர் காசியிலிருப்பார், அவர் கொடுத்துப் போனதே இந்த லட்டு" என்று அவர்களுடைய சந்தேகத்தை விளக்கியருளினார். அவ்வருள் மொழிகளைக் கேட்ட அன்பர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

51. தாசில்தாரின் தருக்கு

மஞ்சகுப்பம் என்னும் ஊருக்கு தாசில்தாராக இருந்த வேங்கடசுப்பு ஐயர் என்பவர், இரக்கமின்றித் தாம் ஊர்திகளில் ஏறிக்கொண்டு செல்கின்ற இடங்களுக்கெல்லாம் ஊது கொம்பு வைத்து ஊதிக்கொண்டே வருவதற்கென ஒரு சக்கிலியை நியமித்துப் பல நாட்களாக அம்மாதிரியே நடத்தி வந்தார். இதனை யறிந்த நம் ஐயா அவர்கள் அவ்வேங்கடசுப்பு ஐயர் பிரசங்கத்திற்கு வந்தபொழுது அவரை யழைத்து, "நீர் வண்டியிலேறிச் செல்லும்பொழுது நும்போன்ற ஒரு மனிதன் பல மைல்கள் தூரம் நடந்து ஓடி வருவதென்றால் இதை விட வேறு ஜீவகாருண்யமற்ற செயல் என்னவிருக்கிறது! அல்லாமலும் இந்த வாழ்வு எத்தனை நாளைக்கு நிலைத்திருக்கப் போகிறது.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

ஆதலால் இனி அவ்வழக்கத்தை அறவே விட்டு விடுங்கள். இல்லையானாலும், தாங்கள் செல்ல வேண்டிய ஊருக்கு முன்னமேயே அவனை அனுப்பிவைத்து. அந்த ஊருக்கு அருகே நீங்கள் போனதும் அவன் ஊதுவதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்தினார்.

52. உண்ணாக்கும் கண்ணோயும்

ஒருகால் உண்ணாக்கு வளர்ந்து அதனால் பெருந்துன்புற்ற சேலம் வாசியாகிய ஒரு ஜவுளி வியாபாரி பெருமானை அடுக்க, பொருமானார் அத்துன்பத்தைத் திரு நீறு கொடுத்தே தீர்த்தருளினார்கள், அப்படியே, கண்ணோயினால் முகம் வீங்கித் துன்புற்ற ஒரு மனிதன், ஐயா அவர்கள் விவகாரஞ் செய்து கொண்டிருக்கும் வேளையில் அவ்வழியேபோக, அச்சமயம் பெருமானார் அம்மனிதனைப் பார்த்து சும்மா இருக்கச் சகிக்காமல் உடனே அவனை அழைத்துப் பார்த்து பக்கலிலிருந்த ஒரு வாழைப் பழத்தைக் கொடுத்து, "இதை வைத்துக்கட்டு; உன் நோய் தீர்ந்துவிடும்" என்று கூற அவனும் அவ்வாறே அப்பழத்தினைக்கட்டி குணமடைந்தான்.

53. வடலூர் சத்திய தருமச்சாலை 1867 ஆம் ஆண்டு

இங்ஙனம் எம்போல்வார் மயக்கொழித்து இன்னருள் சுரந்து வரும் ஏந்தலார்க்கு எல்லா உயிர்களும் பசியற்று இன்புற்று வாழவும் ஜீவகாருண்யமே கடவுள் வழியாடு என்பதையும்- ஜீவகாருண்யமே மோக்ஷ வீட்டின் திறவுகோல் என்பதையும், மக்கள் உணர்ந்து- பேரின்ப சித்திப் பெருவாழ்வடையும் பொருட்டும், ஒரு தருமச்சாலை இயற்றல் வேண்டுமென்னும் எண்ணமுடண்டாக, அதனைத்தம் அருமை மாணவர்களிடத்தும் அன்பர்களிடத்தும் அறிவித்தார்கள். அவர்களும் "அப்படியே செய்யக் காத்திருக்கின்றோம்" என்று கூறிப் பல இடங்களைக் குறிப்பிட்டு 'அங்கே ஏற்படுத்தலாம்-இங்கே ஏற்படுத்தலாம்' - என ஒவ்வொருவரும் ஒவ்வோரிடத்தைக் குறிப்பிட்டார்கள். வள்ளலார், ஒரு நாள் காலை, திடீரென தமது மெய்யன்பர்களுடன், புறப்பட்டு திருச்சிற்றம்பலம், திருக்கூடலையாற்றூர், திருமுதுகுன்றம், திருவதிகை, திருவிரும்பைமாகாளம், திருப்பாதிரிப்புலியூர், தியாகவல்லி ஆகிய இச்சிவ தலங்களுக்கு நடுவேயும், தென்பெண்ணை, திருக்கெடிலம், வெள்ளாறு, மணிமுத்தாநதி ஆகிய நதிகள் நாற்புறமுஞ் சூழப்பெற்றதாயும், வடற்பெரு வெளியாய், போவார் வருவார்க்குப் பசி தீர்க்கப் போதியதாயும், எவ்வகை விவகாரங்களுமில்லாது தனித்திருந்து, இன்புறுதற்கு ஏற்றதாயும், உள்ள வடலூர் என்னும் தெய்வத் திருப்பதியில் ஒரு பரந்த இடத்திலே-தற்போது தருமச்சாலையுள்ள இடத்தில்-வந்து நின்று, 'இதுவே தகுதியான ஞானபூமி' என்று தீர்மானித்தார்கள். அத்தீர்மானத்தைச் சிரமேற்கொண்ட அன்பர்கள், அவ்வாறு செய்ய முயற்சிக்க அதன் பயனாக அவ்வூரிலுள்ளவர்களே, ஐயா அவர்களது தருமச் சாலைக்கு எண்பது காணி நிலத்தைப் பட்டா செய்து கொடுத்தனர்.

தருமச்சாலை திருப்பணி நடந்துவரும் நாட்களில் ஒருநாள், ஐயா அவர்கள், பின்னலூர் சாலையில் போய்க் கொண்டிருக்கும் பொழுது, அம்பாள்புரம் வேம்பையர் என்னும் பாகவதர் யாரோவென அறியாதவராய், தூரத்திலிருந்துகொண்டே "போகிறது யார் ?" என்று கேட்க, அதற்கு நம் ஐயா அவர்கள் " நான் தான் நீல வியாபாரி" என்று கூறினார். நீலம் என்றால்-மாயை (அஞ்ஞானம்) என்றும், வியாபாரி யென்றால் வாங்க வருபவர் என்றும் பொருள் கொண்டால், அடிகளுடைய நிலைக்கு அது ஒருவாறு பொருந்தக் காணலாம். எனினும் ஐயா அவர்கள் எப்பொருள்பட அதனைக் கூறினரோ? அறியேம்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

54. வேட்டவலம் - ஜமீன்தார்

வேட்டவலம் என்னும் ஊருக்கு ஜமீன்தாராகிய அப்பாசாமி பண்டாரியாருக்கு மனைவிமார் இருவர். அவருள் ஒருவரை பிரம ராக்ஷஸம் என்கிற பேய் பிடித்துக்கொண்டது; மற்றொருவரை மகோதர நோய் அடுத்துவிட்டது. பிரம ராக்ஷஸம் என்னும் பேயும் நீங்காதபேய்; மகோதரம் என்னும் நோயும் தீராதநோய். தனது செல்வமெல்லாம் செலவழிந்தாலும் செலவழியட்டும், தம்முடைய இரு மனைவியரும் குணப்பட்டால் போதுமென ஜமீன்தார் ஏராளமான பொருட்செலவு செய்து பூசாரிகளையும், மந்திரவாதிகளையும், வைத்திய நிபுணர்களையும் கொண்டு பரிகாரஞ்செய்து பார்த்தார். அவர்கள் பேச்சைக் கேட்டு, ஊர்களிலுள்ள கிராமதேவதைகள் எனச் சொல்லுகின்ற சிறு தெய்வங்களனைத்திற்கும் அளவில்லாத ஆடு கோழிகளைப் பலி கொடுத்தார். ஐயோ! பாவம். ஜமீன்தாருடைய மனைவியர் இவ்வாறாக வேண்டுமென்று அந்த ஆடு கோழிகள் மனத்தினாலும் எண்ணியிருக்குமா? அதற்குப்பதிலாக அவருக்குப் பாவ மூட்டையே சேர்ந்தது. எனவே அவர் எண்ணம் எவ்வகையிலும் ஈடேறவில்லை. அப்படியிருக்கும்பொழுது, அவ்வூரிலுள்ள ஆடு கோழிகள் அழிந்து போக அழியாதிருப்பவை செய்த அருந்தவத்தாலோ, மருள்நெறி யொழிந்து அருள் நெறி ஓங்கும் அருமைக் காலம் அணுகியதாலோ-ஐயா அவர்களின் பெருமை விளங்க ஆண்டவர் திருவுள்ளத் தெண்ணியதாலோ அல்லது ஜமீன்தார் அடுத்தடுத்தெடுத்த அநேக முற்பிறப்புகளில் செய்த அருந்தவத்தின் பயனாலோ - நம் ஐயா அவர்களிடத்து அப்பெருந்துயரத்தை அகற்றிக் கொள்ளலாம் என்னும் அருமை எண்ணம் அந்த ஜமீன்தாரின் உள்ளத்தில் உண்டாயது. ஆகவே, அவர் தம் ஏவலாளர் சிலருடன் ஐயா அவர்களிடத்து வந்து அடிபணிந்து, "எம்மை யாட்கொள்ளவந்த அருளுருவே ! தேவரீர் பெரிதுந் தயை செய்து எம் இல்லத்திற்கு வந்து எம்மை ஆட்கொள்ளல் வேண்டும்" என வேண்டினார்.

ஐயா அவர்களும் ஆண்டவனின் திருவருள் தூண்டுதலால் அதற்கிசைந்தவராகி ஜமீன்தார் முன்னதாகச் செல்லவும்; அவர் தம் ஏவலாளருடன் அவருடைய அரண்மனைக்குச் சென்றார்கள். பெருமானார் வருகைக்காக ஜமீன்தார், நகரை அலங்கரித்து, அரண்மனையைச் சிங்காரித்து, பெருமான் வந்து அமர்வதற்கென இரண்டு நாற்காலிகளை அமைத்து வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். இரண்டு நாற்காலிகளை அமைத்ததன் காரணம் யாதெனில் - அவ்விரண்டில் ஒன்றைத் தாம் மனதிலே எண்ணிக்கொண்டு தாம் எண்ணியிருக்கிற அந்நாற்காலியிலேயே சுவாமிகள் அமர்வாராயின் அவரே நம்மை ஆட்கொள்ளவந்த பெரியார் என்பதைத் தீர்மானிக்கக்கூடும் என அந்த ஜமீன்தார் மனத்தில் எண்ணியதேயாம். இஃதிவ்வாறிருக்க, பெருமான், ஜமீன்தாரின் ஆட்கள் அழைத்துவர அப் பதியையடைந்து, அவர் மாளிகைக்குள் நுழைய ஆரம்பித்த அப்பொழுதே பிரமராக்ஷஸம் பிடித்திருந்த ஜமீன்தாரின் முதல் மனைவியார் வீட்டினுள்ளிருந்து வெளிவாயிலையடைந்து ஐயாவை வணங்கி, "ஐயா அவர்களே! நான் போய்வருகிறேன்; விடைகொடுத் தருளல் வேண்டும்" என்று திருநீறு வாங்கித் தரித்துக்கொண்டனர். அப்பொழுதே அவரைப் பற்றியிருந்த பிரம ராக்ஷஸம் அவரை விட்டுப் பிரிந்துபோனது. அதன்பின், ஐயா அவர்கள் உள்நுழைந்து ஜமீன்தார் மனத்தில் எண்ணங்கொண்டிருந்த நாற்காலியிலேயே அமர்ந்தருளினார்கள். இவ்விருநிகழ்ச்சிகளையுங் கண்ட ஜமீன்தார் ஆனந்தக்கடலில் மூழ்கினர். உடனே வள்ளலாரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்; எழுந்தார். இன்னது சொல்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பெருக "அடியனேன்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

குறைதவிர்த்தாண்டு கொண்ட ஆண்டவரே! அடியனேன் தங்கட்கு என்ன கைம்மாறியற்றப் போகின்றேன்? என்னுடைய செல்வ முழுவதும் எடுத்துக் கொடுத்தாலும் எம்பெருமானே! தாங்கள் எளியேற்குச் செய்த பேருதவிக்கு அது இணையாகாதே. ஆதலால் நானும் எனது வழிவழி வருபவர்களும் தேவரீர்க்கே அடிமை பூணுகின்றோம். அதுவே நாங்கள் செய்யுங் கைம்மாறாகும். இது நிற்க எனது இளைய மனையாளும் மகோதர நோயினால் பல வருடங்களாக வருந்துகிறாள். அவளையும் தேவரீர் ஆட்கொண்டு அவளுடைய அத்தீராப்பிணியையும் தீர்த்தருள வேண்டும்", என மேலுங் குறையிரந்து கொண்டார். இரக்கம் கொண்ட ஐயா அவர்கள். ஜமீன்தாருடைய இளைய மனைவியாரின் மகோதர நோயையும், மூன்றுவேளை திருநீறு கொடுத்துத் தீர்த்தருளினார்கள்.

55. பலி நிறுத்தம்

பின்னர், அவ்வூரிலுள்ள பாம்பு. தேள் முதலிய விஷஜந்துக்களை பிடித்து ஊருக்குப் புறத்தேயுள்ள காடுகளில் கொண்டுபோய் விடும்படி பிடாரனை நியமித்து அவனுக்கு ஊதியங்கொடுக்கச் செய்தனர். அவ்வாறே அவனும் அனேகமாக அவ்விஷ ஜந்துக்களை ஊருக்கு அப்புறப்படுத்தினான். அப்படியே அவ்வூரில் அதுவரை நடந்த பலியிடும் வழக்கத்தை அறவே மாற்றி எல்லோரும் பாற்பொங்கலிட்டுப் பரவிப் புகழும் புண்ணியமும் அடையச் செய்தனர்.

நலிதரு சிறிய தெய்வமென் றையொ நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய வுயிரைப் - திருவருட்பா 3530

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெல்லாம் பயந்தேன் கண்ணினா லையோ பிறவுயிர் பதைக்கக் கண்டகா லத்திலும் பதைத்தேன். பிறகு, ஆங்கிருந்தும் புறப்பட்டுத் தமது அன்பர்களாய கூடலூர் தேவநாயகம்பிள்ளை, தொழுவூர்; வேலாயுத முதலியார் முதலானோருடன் ஐயா அவர்கள் விருத்தாஜலத்தை யடைந்து ஆங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பரசிவத்தின் மீது பல பாடல்களைப் பாடி மகிழ்ந்து உறைவாராயினார்.

56. சத்திய தருமச்சாலை திறப்புவிழா

இஃதிவ்வாறாக, இதற்குள் சத்திய தருமச்சாலை கட்டி முடிவுபெறப் பிரபவ ஆண்டு, வைகாசித்திங்கள் 11-ம் நாள் வியாழக்கிழமை யன்று, அச்சாலையினுள் பிரவேசமாகி அப்பொழுதே சன்மார்க்க விளக்கத்தின் முதற் பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முதற் பாகத்தை வரைந்து முடித்தனர். முடித்து அப்பகுதிக்குச் சிதம்பரம் வேங்கடசுப்பு தீக்ஷீதர் அவர்களைக் கொண்டு வழிபாடு முதலியன செய்வித்து அதனை வாசிக்கச் செய்தார். செய்ததோடு சமரச வேத பாடசாலை ஒன்றையும் அதன் கண் ஸ்தாபித்தனர். ஸ்தாபித்த நாள் முதல் மூன்று நாட்கள் வரை ஒவ்வொரு நாளிலும் பதினாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கட்கு அன்னமளிக்கப்பட்டது. அத்துடன் நிற்காமல், எப்பொழுதும் அச்சத்திய தருமச்சாலையை நோக்கிப் பசியோடு வருவோருக்கு எவ்விதக் குறைவுமில்லாது ஐயா அவர்களுடைய கட்டளைப்படி நடந்தேறிவந்தது. "எப்போதும் அடுப்பு புகைந்து கொண்டே இருக்க வேண்டும்" என்ற ஐயா அவர்கள் வாக்கின்படி இன்றைக்கும் அவ்வாறே நடந்துவருவது எல்லோரும் அறிந்ததே.

57. ஜீவகாருண்ய ஒழுக்க விளம்பரம் 1867 ஆம் ஆண்டு

கல்வி கேள்விகளால் பகுத்தறியத்தக்க அறிவையுடைய உயர் பிறப்பாகிய மனிதப்பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அனைவர்க்கும் வந்தனஞ் செய்து அறிவிக்கை. உலகத்தில் மனிதப்பிறப்பைப்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க பிரயோஜனத்தைக் காலமுள்ளபோதே அறிந்து அடையவேண்டும். அந்தப் பிரயோஜனம் யாதோ? எனில் :

எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லாச் சீவர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லாப் பயன்களையும், தமது பரிபூரண இயற்கை விளக்கமாகிய அருட் சக்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கையுண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை யின்பத்தைப் பெற்று எக்காலத்தும் - எவ்விடத்தும், - எவ்வளவும் - தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை அடைவதே இந்த மனிதப் பிறப்பினால் அடையத்தக்க பிரயோஜனம் என்று அறியவேண்டும்.

இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதனால் அடையவேண்டும். எனில் :-

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக் கொண்டே அடைய வேண்டும் என்றறிய வேண்டும். கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனால் பெறக் கூடும்? எனில் :-

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் கடவுளருளைப் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக் கூடாதென்று உறுதியாக அறிதல் வேண்டும்.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவது எது? எனில் :-

எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குண்டாகின்ற பசியென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷியமென்றறிய வேண்டும். பசியின் கொடுமை:- உலக முழுவதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனுக்கும் - உலகமுழுவதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்த வீரனுக்கும் மூன்றாசைகளையும் ஒழித்து உண்மையறிந்து பிரமானுபவத்தைப் பெற்ற சீவன் முக்தர்களுக்கும் பசி நேரிட்டபோது மனமிளைத்தும் - வலிகுலைந்தும்-அனுபவந் தடைப்பட்டும்-வருந்துகின்றார்களென்றால் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி நேரிட்டால் என்னபாடு படார்கள்.

பசி அதிகரித்த காலத்தில் முகம் புலர்ந்துபோகின்றது - உச்சி வெதும்புகின்றது-பிரமரந்திரம் அடைபடுகின்றது-காது கும்மென்று செவிடுபடுகின்றது -கண் பஞ்சடைந்து எரிந்து நீருலர்ந்து குழிந்து போகின்றது. நாசி அழன்று கலைமாறி பெருமூச்சுவிடுகின்றது - நாக்கு நீருலர்ந்து தடிப்பேறுகின்றது - மெய் முழுதும் கருகி சத்தியற்று ஸ்மரணை கெடுகின்றது - வாக்குக் குழறித் தொனி மாறுகின்றது - கைகளும் கால்களும் தடதடத்துச் சோர்ந்து தடுமாறுகின்றன - மல சல வழி வெதும்பி வேறுபடுகின்றது - உரோமம் வெறிக்கின்றது - பற்கள் கருகித் தளர்கின்றன - இரத்தமும் சலமும் சுவறுகின்றது - சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது-எலும்புகள் குழைந்து நோக்காடுண்டாகிறது - நாடி நரம்புகள் வலியிழந்து மெலிந்து கட்டுவிடுகின்றது - வயிறு பகிரென் கின்றது - மனம் தளர்ந்து நினைவு மாறுகின்றது - புத்தி கெட்டு நிலை மாறுகின்றுது - சித்தம் கலங்கித் திகைப் பேறுகின்றது - அகங்காரம் குலைந்து அச்சமுண்டாகின்றது - பிரகிருதி சுருங்குகின்றது - கடவுள் விளக்கமும், ஆன்ம விளக்கமும் மறைபடுகின்றது - தாப சோபங்கள் மேன்மேலுண்டாகின்றன - இவ்வளவு அவத்தைகளும் ஏககாலத்திலுண்டாகின்றன.

இது எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவே யிருக்கின்றது. ஆகாரமுண்டு பசிநீங்கிய தருணத்தில் தத்துவங்களெல்லாந் தழைத்து கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் அகத்திலும் முகத்திலும் வெளிப்பட்டு திருப்தி இன்ப முண்டாகிறது. ஆதலில் நாமனைவரும் எந்தவகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்கு பசி நேரிட்டபோது மிகவும் கருணையுள்ளவர்களாகி நம்மாற் கூடிய மட்டில் அந்தப் பசியென்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாபமென்று அவசியம் அறியவேண்டும். ஆகலில், இந்த ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்தும்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பொருட்டு, கூடலூர் ஜில்லா, கூடலூர் தாலுக்காவைச் சார்ந்த வடலூரென்கிற பார்வதிபுரத்தில் சமரசவேத தருமசாலை யென்றொரு தருமசாலை யேற்படுத்த பட்டிருக்கின்றது, அது பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயையுடைய புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடியவரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தைப் பாகஞ் செய்து கொள்ள வேண்டு மென்பது எங்கள் கோரிக்கை.

பிரபவ ஆண்டு, வைகாசித் திங்கள் 11-ம் நாள் ஆண்டு 1867 *இப்படிக்கு*
சத்திய தருமசாலை, வடலூர் *சிதம்பரம் இராமலிங்கம்*

58. கல்பட்டு ஐயா

பின்னர், நம் ஐயா அவ்வூரில் உள்ள கல்பட்டு ஐயா (கல்பட்டு இராமலிங்க சுவாமிகள்) என்னும் உத்தம யோகியாருடைய விருப்பின்படி அவருக்குச் சட்சு தீக்ஷை செய்து அவரையும் அழைந்துக் கொண்டு வடலூர் வந்து சேர்ந்தார்கள். அக்கல்பட்டு ஐயாவுக்கு வடலூரிலேயே ஓர் ஆசிரமும் அமைத்துக் கொடுத்தார்கள். அவரும் ஐயா அவர்கள் சத்திய தருமச் சாலையில் பிரசங்கம் செய்யும் வேளைகளில் வந்து செவிமடுத்துச் செல்லுவார்.

59. வேம்பையரின் விஷமம்

இப்படியிருக்கிற காலத்தில் ஐயா அவர்கள் அன்பர்களின் வேண்டுகோளுக்கிரங்கி, செம்பு, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களைப் பொன், வெள்ளி முதலிய உயர்ந்த உலோகங்களாக மாற்றி காட்டி அவற்றை எவருக்கும் கிட்டாதபடி கேணிகளிலுங் குளங்களிலுமாக எறிந்துவிடுவார். ஐயா அவர்கள் அவைகளை மாற்றுவதற்குச் செய்த செய்கைகளையும், சேர்த்த பொருள்களையும் அங்கிருந்து பார்த்திருந்த வேம்பையர் என்பவர் அப்பொருள்களைச் சேகரித்துக் கொண்டு யாருமறியாவிடத்தில் தாமும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தார். அங்ஙனம் ஆரம்பிக்கவே திடீரென அவருடைய கண்களிரண்டும் ஒளி மயங்கிப் போயின. எவ்வளவோ சிகிச்சைகளைச் செய்தும் கண்ணொளி வராமையினால், கடைசியாக ஐயா அவர்களிடமே வந்து நடந்தவற்றை மறைக்காது கூறித் தம்முடைய பிழையை மன்னித்தருள வேண்டி நின்றார். ஐயா அவர்களும் புன்னகை புரிந்து தண்ணீரைக் கொண்டு கண்களில் ஒளி மேவுமாறு செய்தனுப்பினர்.

60. தரும சத்திரம்

ரெட்டிச் சாவடியில் அமீனா உத்தியோகம் பார்த்துவந்த மாயூரம் சிவராமய்யர் என்னும் மிகுந்த செல்வமுடைய ஒருவர் தமக்குப் பிள்ளைப்பேறு இல்லாமையால் வருந்தி வடலூருக்கு வந்து, ஐயா அவர்களை அடிபணிந்து தமக்கு மகப்பெறு கிட்டுமாறு திருவருள் பாலிக்க வேண்டுமென வேண்ட, அவரிச்சையின்படியே ஓர் ஆண் மகவு பிறக்க அருள் செய்து ,அவரைக்கொண்டு பண்ணுருட்டிக்கும் வடலூருக்கும் மத்தியில் பெண்ணை யாற்றின் கரையிலுள்ள கோட்டைப் புலவனூரில் ஒரு தரும சத்திரம் கட்டுவித்தனர்.

61. ஐயர் அடிமை பூண்டது

விருத்தாஜலத்திலிருந்து வக்கீல்: வேங்கடேசய்யர் என்பவர், ஒவ்வொரு சனிக்கிழமை இரவுகளிலும் வடலூருக்கு வந்து, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டுத் திரும்பிப்போவது வழக்கம், அவர், இரவு நேரங்களில் வடலூருக்கு வரும்பொழுது இடையிலே மூன்றுமைல் தூரமுள்ள காட்டைக் கடக்க நேரிடும். அப்படிக் கடக்க நேரிடும்பொழுது அவருக்கு

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

முன்னே இரண்டு தீவர்த்திகள் ஆள் உருவமோ பிறவோ தெரியாது போய்க் கொண்டிருக்கும். இந்நிகழ்ச்சியை இரண்டு மூன்று முறைகளில் பார்த்த அவ் வேங்கடேசய்யர், இவ்வாறு நிகழ்வது ஐயா அவர்களின் அற்புதமே யென்பதை உணர்ந்து தாமுந்தம்மனைவியாருமாக வடலூருக்கு வந்து, அங்கேயே தங்கி ஐயா அவர்கட்கு அடிமைபூண்டு அவர்களுடைய பூரண அருளுக்குப் பாத்திரரானார்கள்.

62. வினாவிற்குமுன் விடை

சாதாரணமாக நம்போல்வர் எத்துணைச் சிறந்த கல்வி கேள்விகளில் மிக்கவார யிருந்தாலும், மற்றவர்கள் தங்களை ஏதாவது கேட்டால் தான் அதற்குத் தக்க விடையளிப்பர்; சில வேளைகளில் பதிலளிக்கவும் ஆற்றலில்லாதவர்களாய்த் திகைப்பர். நம் ஐயா அவர்களோ, அவ்வளவு தூரம் வரை வைத்துக் கொள்வதில்லை. திரிகால முணர்ந்தவ ராதலால் பிறர் தம்மிடம் வந்து வினவுதற்கு முன்னரேயே, அவர்கள் மனத்தில் எண்ணி வருகின்ற கேள்விகட்குத் தகுந்த பதிலையே பிரசிங்கிப்பார்கள். இந்நிலையினை யுணராத சாஸ்திரிகள் நால்வர், ஐயா அவர்களைச் சாம வேதத்தில் பல கேள்விகளைக் கேட்கவேண்டுமென மனத்திலெண்ணியவர்களாய் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வருவதற்கு முன்னமேயே, அந்த சாமவேதப் பிரசங்கத்தை ஐயா ஆரம்பித்துவிட்டார்கள். அந்த நான்கு சாஸ்திரிமார்களும் ஐயா அவர்களிடம் அணுகுகின்ற தருணத்தில் அவர்கள் என்னென்ன கேட்கவேண்டு மென்று வந்தார்களோ அவைகளுக்கெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பதிலை ஐயா அவர்கள் கூறிக்கொண்டே யிருந்தார்கள். அவ்வற்புதப் பிரசங்கத்தைக் கேட்ட சாஸ்திரிமார்களுக்கு அளவு கடந்த வியப்புண்டாயிற்று. சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவர்களாய் "என்ன இது? நாம் கேட்க வேண்டுமென்று எண்ணி வந்த கேள்விகளுக்கெல்லாம் கேட்பதற்கு முன் தகுந்த விடையளிக்கின்றாரே! இவரல்லவோ ஞானி, இவரல்லவோ திருவருட் செல்வர் ; இவரல்லவோ எல்லாம் வல்ல சித்தர் ! " என்று வாயார வாழ்த்தி வணங்கிச் சென்றனர்.

63. திருவருட்பா வெளியிடுதல்

திருவருட்பிரகாச வள்ளலாராகிய நம் ஐயா அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாக்கள் முழுவதையும் அச்சிட வேண்டுமென்னுங் கருத்துடையவர்களாய் அன்பர்களான புதுவை வேலுமுதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் ; இரத்தின முதலியார் முதலானோர் ஐயாவை அப்பணிக்கு உத்தரவு கொடுத்தருள வேண்ட, அடிகளும் அன்பர்களின் உள்ளத்திலெழுந்த ஆசையினை-அன்பினைக் கெடுத்தல் ஆகாதென்னும் கருத்துடையவராய் ஒருவாறு உடன் பட்டார்கள். உடனே அவர்கள் உபய கலாநிதிப் பெரும் புலவராய தொழுவூர் வேலாயுத முதலியாரைக்கொண்டு அதுவரை பாடியருளிய பாக்கள் முழுவதையும் நான்கு திருமுறைகளாக வகுத்து 1867-ம் ஆண்டில் அச்சியற்றி வெளியிட்டனர்.

64. சங்க தோஷ நிவர்த்தி

ஐயா அவர்களின் அடியவருள் ஒருவராகிய நாயனா ரெட்டியார் என்பாருடைய மனைவியாருக் கிருந்த சங்க தோஷத்தை, ரெட்டியார் வேண்டுகோளின் வண்ணந் திருநீறு கொடுத்துத் தீர்த்தருளிய தோடு, அவருக்கிருந்த ரசவாத இச்சையினை அறிந்து; ஒரு குவளையில் தண்ணீரும் மணலுமிட்டுச் சிறிது நேரம் கையினால் மூடிப்பின் திறந்ததும், அம்மணலெல்லாம் பொன் துகளாயின, பின்னர் அந்த ரெட்டியாருக்கிருந்த அம் மயக்கொழிந்தது.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

65. சங்க நிதியோ! பதும நிதியோ!

வான நாட்டில் சங்கநிதி பதுமநிதி என இரண்டு நிதிகளுண்டு, அவை தம்முள்ளிருக்கும் பொருள்களைப் பிறர் எவ்வளவு எடுத்துக் கொள்ளினும் அவ்வளவையும் மீண்டும் உண்டாக்கிக் கொண்டு எப்பொழுதும் குறையா நிலையிலிருக்கும். அம்மாதிரி, ஐயா அவர்களின் சத்திய தருமச் சாலையும் ஒரு காலத்துத் தன்னிடத்து சமைத்து வைத்திருந்த உணவை எடுக்க எடுக்கக் குறையாது முன்போலிருக்கச் செய்தது; எவ்வாறெனில்; ஒரு நாள் இரவில் உணவு எல்லாம் சமைத்த பிறகு உண்ணப் போகின்ற வேளையில் சுமார் நூறுபேர் திடீரென வந்துவிட்டனர். அவர்களைக் கண்டவுடனே அடியவர்கட்கெல்லாம்,

"என்ன இது? இத்துணைப் பேர்கள் வந்து விட்டனரே! இங்கேயுள்ள உணவோ மிகச் சிலர்க்கே அளிக்கத் தகுந்தது; மற்றையோருக்குச் சமைத்துப்போடுவதென்றால் இவ்விரவு வேளையில் அது சாத்திய மில்லையே" என்று வருந்து வதை யறிந்த ஐயா அவர்கள், அவர்களை நோக்கி "பிச்" இலை போடுங்கள் எல்லோருக்கும் என்று கூறித் தாமே, அந்நூற்றுவருக்கும் பரிமாறத் தொடங்கினார்கள். தொடங்கவே அங்கு அட்டியிருந்த சிறு உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டும், அவ்வளவிற் குறையாது அப்படியேயிருந்தது. அனைவரும் வயிறு நிரம்ப உணவருந்தி மகிழ்ந்தனர்.

66. குன்ம நோய் தீர்த்தார்

மற்றொருகால், ஐயா அவர்கள் திருவாதிரை நாள் தெரிசனத்தின் பொருட்டுச் சிதம்பரம் செல்லுகையில் வழியில் ஒரு மனிதன் குன்ம நோயினால் பெரிதும் வருந்துவதைக்கண்டு ஆற்றாராய், அவனுடைய அப்பெரு நோயை அப்பொழுதே அருள் வலத்தால் நிவர்த்தித்து அருளினார்.

67. மழை பொழிய வைத்த மாட்சி

கடுவெயிலினாலும், மழையில்லாக் குறையினாலும், வடலூருக்கு வருவாரும், சுற்றுப் புறத்துள்ள ஊராரும் பெரிதும் வருந்த, ஐயா அவர்கள் உடனே தமது திருவருள் வலிவால் நான்கு செவி மழை பொழிய அனுக்கிரகஞ் செய்தார். இப்படியே, புதுப்பேட்டை நகரினர் வந்து ஐயாவை வணங்கித் தம் பதிக்கழைத்துச் சென்று, ஆங்குள்ள இரண்டு கிணறுகளில் நீரின்மையையும், சிறிது நீரிருந்தும் அதில் கைப்பு கலந்திருத்தலையும் காட்டி, அவ்விரண்டு குறைகளும் நீங்க அருள் புரியுமாறு வேண்ட, அவ்வூரார்ின் வேண்டுதலுக் கிசைந்து, அவ்வாறே அக்கிணறுகளில் நீர்பெருக்கமும், மதுரமும் உண்டாகத் திருவருள் பாலித்தார்கள். அக்கிணறுகளில் அன்றுதொட்டு இன்றுவரை எப்பொழுதும் நிறைந்த நீர்குறையவேயில்லை. அதை இன்றுங் காணலாம். அதோடு ஆற்று நீரைக்காட்டிலும் அக்கிணறுகளின் நீர் சுவை மிக்குடையதாய் விளங்குகின்றது.

68. பெரு நெருப்பு அணைத்த பெருமை

அந்நிகழ்ச்சி நடந்த பிறகு அவ்வூரிலேயே ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டு எவராலும் அணைக்க முடியாத அந்நிலையில் கொழுந்து விட்டெரிய, ஐயா அவர்கள் உடனே அப்பெரு நெருப்பினைத் தம்முடைய ஆடையால் வீசி அணைத்து அனைவரையுங் காத்து அருளினர்.

69. பதிற்றுப் பத்தந்தாதி பார்வையிட்டது

திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர் சிவசிதம்பர முதலியார் என்பார் தாம் பாடிய பதிற்றுப் பத்தந்தாதியைப் பார்வையிட்டு அதற்கோர் சாற்றுகவி அளித்தருளுமாறு ஐயா அவர்களை ஒருகால் வேண்ட, ஐயா அவர்களும் அதனைப் பார்வையிட இணங்கினார். பார்வையிட்ட பிறகு,

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

"இன்னின்ன பாக்களிலுள்ள இன்னின்ன சொற்கள் இன்னின்ன சொற்களாக இருக்குமேல் நன்றாக இருக்கும்" என்று ஒரு சில சொல்ல, அவற்றின்படியே அம் முதலியாரும் அச் சொற்களை மாற்றி ஐயாவின் அருளுக்குப் பாத்திரரானார். ஐயா அவர்கள் அந்நூலுக்குச் சாற்று கவியும் அளித்தார்கள்.

70. "புன்செய்" "நன்செய்" ஆகிய புதுமை

தாசில்தார் முருகேச பிள்ளை என்பாருடைய மாமனாராகிய மிராசுதார் மணலூர் நடராஜ பிள்ளையின் அன்பு, இரக்கம் முதலிய குணங்களையும், அடிமைத்திறத்தையுங் கண்டு மகிழ்ந்த நம் ஐயா அவர்கள் அவர்கட்கிருந்த "புன்செய்" நிலங்கள் முழுவதையும், 'நன்செய்' ஆகத் திருவருள் பாலித்தார்கள். அப்பிள்ளையும், தம்முடைய புன்செய் நிலங்களை யெல்லாம் நன்செய் ஆக்கிய நாதனார் திருவடிகளில் விழுந்து வணங்கி, அன்று முதலாக அந்நிலங்களிலிருந்துவரும் தானியங்களில் பெரும்பகுதியினை ஐயா அவர்களின் ஆணையின்படி பசியென வந்தோர்க்கும், பாவலர் நாவலர்கட்கும் பரிவுடன் அளித்துப் பண்பும் பயனும் பெறுவாரானார்.

71. கள்வர்க்கும் காட்டிய கருணை

ஒருநாள் இரவில் நம் ஐயா அவர்களும், மஞ்சகுப்பம் கோர்ட்டு சிரஸ்தாதார்-இராமச்சந்திர முதலியார் என்பாரும் ஒரு மாட்டுவண்டியில் ஏறிக்கொண்டு வடலூரிலிருந்து மஞ்சகுப்பம் போய்க் கொண்டிருக்கையில் இடை வழியில் கள்வர்கள் வந்து வண்டியை மறித்தனர். அப்பொழுதே வண்டிக்காரனும், உடன்வந்த சேவகனும் ஓடிவிட்டனர். வண்டியினுள் ஐயாவும், முதலியாருமே தனித்திருந்தனர். வண்டியை மறித்த கள்வர்கள் உடனே வண்டியின் பின்புறம் வந்து மிக அவரசமாக முதலியார் அணிந்திருந்த வைரமோதிரத்தைப் பார்த்து அதைக்கழற்றித் தருமாறு அதட்ட, ஐயா அவர்கள் அக்கள்வரை நோக்கி, "அவசரமோ?" என்று கூற, அக்கள்வர்கள் ஐயாவைத் தடியா லடிக்கக் கைகளைத் தூக்கினர்.

அக்கைகள் அப்படியே நின்றுவிட்டன; கண்களும் பார்வை இழந்தன. உடனே கள்வர்கள் நடுநடுங்கிப் பயந்து, தாங்கள் அறியாமல் வறுமையின் கொடுமையால் செய்த குற்றத்தை மன்னித்தருள வேண்டுமெனத் திருவடிகளில் விழுந்து வணங்கினர். ஐயா அவர்களும் மனமிரங்கி "பிச்" என்னும் மகாமந்திரத்தைக் கூறி அவர்கள் இழந்த பார்வையை மீளவும் அடையுமாறு திருவருள் பாலித்தார்கள். அன்று முதல் அக்கள்வர்களும் சன்மார்க்க நெறியில் நின்று சுவாமிகட்கு அன்பரானார்கள்.

72. விருந் தருந்திய வியப்பு

விருத்தாஜலத்திலிருந்த அன்பரொருவர் நம் ஐயா அவர்கட்கு அமுதளிக்க வேண்டுமெனப் பல நாட்களாக ஆசை கொண்டிருந்தார். அன்பருளாங் கோயில்கொண்ட அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருட் பிள்ளையாராகிய நம் ஐயா, அன்பர் எண்ணிய எண்ணத்தை அறிந்து கொண்டார்கள். ஆயினும், மனிதர் முக்குண வேறு பாட்டால் முரணுவர், அதனால். அவ்வன்பர் என்றும் ஒரே நிலையராய் அன்புளாங் கொண்டிருக்கின்றாரா? இல்லையோ? என்பதைப் பரிசோதிக்கவே சில நாட்கள் அவரெண்ணத்தை நிறைவேற்றாதிருந்தார். அவ்வன்பர் என்றும் அந்நிலையில் மாறுபடாதிருக்கவே திடீரென ஒருநாள் அவரில்லத்திற்கு ஐயா எழுந்தருளினார். அப்பொழுது அவர் வீட்டில் பருப்புத் துவையலும் ரசமுமேயிருந்தது. அவைகளே போதுமென அப்பொழுதே ஐயா அமுது கொண்டருளி அவ்வன்பருக்கு வாழ்வளித்து மீண்டனர்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

73. அரவம் ஆணைக்கு உட்பட்டது

குறிஞ்சிப்பாடியிலுள்ள வணிக மரபின ரொருவர் ஐயா அவர்களிடத்து மிகுந்த அன்பும் பக்தியும் உடையவர். அவரொருகால் வடலூர் வருதற் பொருட்டாக வந்து கொண்டிருக்கையில் ஜலங்கழிக்க, களாச்செடியின் மறைவில் உட்கார, அச்செடி அருகேயுள்ள புற்றரவு ஒன்று தீண்டிவிட்டது. அதையறிந்த செட்டியார் உடனே "இராமலிங்கத்தின் மேல் ஆணை" என்று கூற, அப்பாம்பும் புற்றினுள் நுழையாது வாய் திறந்தபடியே அசையாது நின்றுவிட்டது. செட்டியார் அதனைக் கவனியாது பயத்துடன் வீடுபோய் விட்டார். விஷம் ஒன்றும் செய்யவில்லை. செட்டியார் மிகவும் ஆச்சரியமும் சந்தோஷமுங் கொண்டு ஐயா அவர்களைத் தரிசிக்க வடலூர் வந்தார். அவரைக்கண்டதும், "பிச்" ஓர் உயிரை எத்தனை நாட்கள் பட்டினி போடுகிறது? மூன்று நாளாயிற்றே; உடனே போய் ஆணையை விடுதலை செய்யும்" என்று கூறினார்கள். மிக்க ஆச்சரியத்துடன் செட்டியார் பயந்து அப்படியே சென்று பார்க்க, அப்பாம்பு வாயைப் பிளந்துகொண்டு புற்றின் வாயிலில் படுத்துக்கொண்டிருந்தது. ஆணையை விடுதலை செய்ய, உடனே அப்பாம்பு புற்றினுள் நுழைந்து விட்டது.

74. இசைப் புலவரினுஞ் சிறந்தார்

நல்லிசை வாய்ந்த சிதம்பரம் ; கிருஷ்ணய்யர் என்பவர் ஒருகால் "மகாதேவ மாலை" யில் உள்ள பாடலொன்றை அபூரூப ராகத்தில் பாடிப் பழகி வடலூருக்கு வந்து, ஐயா அவர்களின் திருமுன்னர் பாடினர். அப்பாடலையே முழுதும் அன்போடு கேட்டிருந்த ஐயா அவர்கள், இறுதியில் அப்பாடலையே அவரினும் நயமாக நல்லிசையில் பாடி மகிழ்வித்தார்கள்.

75. சித்துருக் காட்டினமை

திருவதிகைக்கு ஐயா அவர்கள் ஒரு பகல் இறை வழிபாட்டிற்காகச் சென்ற காலத்துத் தம்மைப் பார்க்க விரும்பிய அன்பர்களது கூட்டம் அதிகமாகிவிட்டதை யுணர்ந்து, தம்முருவை இரண்டு மூன்று இடங்களில் அவ்வன்பர்கட்குக் காட்டி அருள் புரிந்தார்.

76. அரிசி வரவழைத்த அற்புதம்

பின்னர்ச் சில நாட்கள் கழிய, ஒரு பகல் சத்திய தருமச்சாலைக்கு உணவுப் பொருள்கள் எதுவும் இல்லையென உக்கிராணம் பார்த்த சண்முகம் பிள்ளை வந்து அடிகளிடத்து அணுகி முறையிட, அடிகளும் சிறிது தியானத்திலிருந்துவிட்டு, "நாளை யெல்லாம் வந்து விடும்" என்று கூறி அனுப்பினர். மறுநாள் அப்படியே மூன்று வண்டிகள் நிறைய அரிசியும் மற்றைய உணவுப் பொருள்களும் தருமச் சாலையின் வாயிலில் வந்து நின்றதைக் கண்ட சாலையிலுள்ளவர்கள் வியப்புடன் வந்து "எங்கிருந்து கொண்டு வருகிறீர்கள்? யாருடைய பொருள்கள் இவை? யார் கொடுத்து வரச் சொன்னது?" என்று பலவாறாகக் கேட்க, அவைகளைக் கொண்டு வந்த அன்பர், "சுவாமிகள் இரவு கனவில் எளியேற்குக் கட்டளையிட்டார்கள்; அக்கட்டளையைச் சிரமேற்றாங்கியே யான் கொண்டுவந்தேன்; யாணிருப்பது திருத்துறையூர்" என்று எல்லாவற்றையும் விவரமாகக்கூறினார். பிறகு அவரைச் சுவாமிகளிடம் அழைத்துக் கொண்டுபோய்விடுத்து அனைத்தையுங் கூற, அவர்களும் ஒன்று மறியாதவர்கள் போல அவற்றைக் கேட்டுக் கொண்டு அவ்வடியவர்க்குத் திருநீறு அளித்தார்கள்.

77. அங்கும் இங்கும் இருந்த அற்புதம்

சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்றவராகிய கூடலூர்-வேதநாயகம்பிள்ளை யென்பவர் ஒருகால், தம்முடைய ஒரே புதல்வராகிய ஐயாசாமி என்பவர், அவருடைய 20-ம் ஆண்டில், நோய்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

வாய்ப்பட்டு வைத்தியர்களால் கைவிடப்பட்ட அக்காலத்தில், நம் பெருமானை நினைத்துக்கொண்டு, "என் ஐயாவே! என் செய்வேன் எனக்கு வாய்த்த ஒரே மகனை எவ்வாறு பிரிவேன், ஆண்டவரே! இது தருணம் காக்கக் கருணையில்லையா?" என்று பிரார்த்தித்த அந் நள்ளிரவு 11 மணிக்கே நம் ஐயா அவர்கள், கூடலூரிலுள்ள அவ் வேதநாயகம் பிள்ளை இல்லத்திற்குச் சென்று, அவருக்கும் அவரருமை புதல்வருக்கும் திருநீறு வழங்கி "நாளை குணமாகும், பயப்படாதீர்கள் " என்று ஆறுதல் தேறுதல் கூறி மீண்டார்.

நிற்க எந்த இரவு கூடலூருக்குச் சென்று, வேதநாயகம் பிள்ளையவர்களின் குமாரரது தீராப் பிணியைத் தீர்த்து வந்தாரோ, அந்த இரவு முழுவதும் வடலூர் சத்திய தருமச்சாலையில் அன்பர்ளோடு நம்ஐயா அவர்கள் உபந்நியாசம் செய்திருக்கின்றார்கள். சாலையிலிருந்த அன்பர்களுக்கு சுவாமிகள் செய்த இவ்வற்புதம் தெரியாமலிருந்தது. பிறகு இதனைத் வேதநாயகம் பிள்ளையால் அறிந்து, அன்பர்கள் பெரிதும் வியப்புற்றனர்.

78. திரை மறைவில் திருச்சிற்றம்பலம்

இது நடந்த சிறிது நாட்களுக்குள் சிதம்பரத்தில் ஆனித் திருமஞ்சனத் திருவிழா நடைபெறும் நாள் நெருங்கியது. அவ்விழாவிற்கு ஐயா அவர்களோடு தொடர்ந்து போவதற்காகப் பல அன்பர்கள் வடலூருக்கு வந்தனர். "ஐயா வரமாட்டார்கள் போலும்" என்று எண்ணி சென்று விட்டனர். சிலர் மட்டும் எப்படி யிருந்தாலும், "ஐயா வராமற் போகார்" என்னுந் திடமான எண்ணத்துடன் அங்கேயே இருந்தார்கள். திருவிழா நாளும் வந்துவிட்டது. அப்பொழுதும் ஐயா புறப்படாதிருப்பதைக் கண்டு, அச்சிலரும், "சிதம்பர தரிசனங்கிட்டாது போயிற்றே" என வருந்தினர். அவர்தம் மனவருத்தத்தை அறிந்து கொண்ட ஐயா அவர்கள், சத்திய தருமச்சாலையில் ஓரிடத்தில் ஒரு திரையைத் தொங்கவிட்டு அவர்களை யழைத்து "இத்திரையினுட் சென்று பாருங்கள்" என்று கூற, அவர்களும் அவ்வாறே திரை யினுட் செல்லவும் - திருச்சிற்றம்பலக்காட்சி - அதாவது - சிதம்பரத்தில் எவ்வாறு அன்றைய திருவிழாவில் அம்பலவாணரின் விழாக்காட்சி யிருக்குமோ அவ்வாறே தோன்றியது. அவ்வன்பர்கள் அம்பலவாணனை அடிபணிந்தெழுந்து, திரைப்புறத்திலிருக்கும் ஐயா அவர்களின் திருவடிகளிலும் விழுந்து வணங்கி அருள்பெற்றுச் சென்றனர்.

77. ஆள் சுமை யகற்றுதல்

வடலூருக்கு மேற்கே கொங்கரபாளயத்திலிருந்து வந்த பிராமணரொருவர், தம்முடைய கழுத்தில் ஏதோ ஒரு ஆள் சுமையிருந்து அழுத்துவது போல் பல நாட்களாகத் தம்மைத் துன்புறுத்துவதாகக் கூற, ஐயா அவர்களும் மனமிரங்கி அச்சுமை யகலுமாறு அருள்புரிந்தார். இவ்வாறே அவ்வூரிலுள்ள வயது சென்ற கிழவியின் உடல் நடுக்கத்தையும் ஒழித்தருளினார்.

80. சத்திய ஞான சபை

அதன் பின்னர் அடிகளார் தமது மெய்யன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வடலூரில் எண்பது காணி நிலப்பரப்புள்ள ஓரிடத்திற்கு உத்தர ஞான சிதம்பரம் என்று திருவருளியலால் திருநாமஞ் சூட்டி, அவ்வெளியில் தமது உள்ளத்தில் கண்ட ஓர் ஞானசபையைக் கட்டத் திருவுளங் கொண்டார்கள்.

"சத்திய ஞான சபையென்னுட் கண்டனன் சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டனன் நித்திய ஞான நிறையமு துண்டனன் நிந்தை யுலகியற் சந்தையை விண்டனன்." -திருவருட்பா

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அச்சபை அமையவேண்டிய முறையினை ஓர் படமாக **(Plan)** எழுதி அன்பர்களிடங் காட்டிக் கொடுத்து இம்மாதிரி ஓர் ஞானசபையினை அட்ட கோணமாகத் - தாமரை மலரன்ன - கட்டுதல் வேண்டுமென உத்தரவிட்டனர். உத்தரவைச் சிரமேற்கொண்ட அன்பர்கள் கட்டட வேலையைத் தொடங்கினர். பின்னர் அடிகளார் அவ்வடலூருக்கு இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள மேட்டுக் குப்பம் என்னும் ஒருமேட்டில் குடிசை யொன்று கட்டுவித்துக்கொண்டு அக்குடிசையிலேயே மெய்யன்பர்கட்குச் சன்மார்க்க போதனை செய்து கொண்டிருந்தார்கள்.

81. கொடி மரம்

இவ்வாறிருக்கும் நாளில், ஞான சபையின் கொடிமரத்திற்கு மரம் வாங்கிவரச் சென்னைக்குச் சென்ற கண்ட்ராக்டர் ஆறுமுக முதலியார், மரவாடியில் தக்கமரம் கிடைக்கவில்லை யென்று மீண்டும் வந்து அடிகளிடத்துத் தெரிவிக்க, அடிகள் "அப்படியானால் நீர் முதலிலே போம், நான் இதோ வருகிறேன்" என்று கூறி யனுப்பினர். அவர் அவ்வாறே செல்ல அடிகளார் அவருக்கு முன்னே சென்னையிலுள்ள மரவாடியில் கொடிமரத்திற்கு வேண்டிய மரத்தின் மீது உலாவிக் கொண்டிருந்தார். அதைக்கண்ட அம்முதலியார் பெரிதும் வியப்படைந்தார். பின்னும் அடிகளார் அவ்வாறே அம்மரத்தைவாங்கி முதலியாரிடம் ஒப்புவித்து, "கொண்டுபோம்" என்று கூறினார்கள். முதலியார் புறப்பட்டு வடலூருக்கு செல்வதற்கு முன்னமே அடிகளார் வடலூரில் காணப்பட்டார்கள். அம்மட்டோ? அவ்வடலூரிலிருந்தவர்கள் எல்லோரும் அடிகளார் இன்று முழுவதும் இங்குதானே இருந்தார்கள் என்று கூறினர். ஆறுமுக முதலியாரோ "இல்லை, இல்லை என்னோடு மரவாடிக்கு வந்தாரே" என்று கூறினார். இவ்விரண்டையுமறிந்த எல்லோரும் என்றுமிலா மகிழ்வு எய்தி இன்புற்றிருந்தனர்.

82. புறவினத்தார் பலன்

அதன்பின் ஒருகால் ஞான சபையின் மேல்விதானங் கட்டும்போது, அதில் வேலை செய்து கொண்டிருந்த மூவரைத் தாங்கியிருந்த சாரம் முறிந்து, அவர்கள் கீழே விழுந்ததும், அவர்கட்கோ அல்லது அவர்களின் கீழே வேலைசெய்து கொண்டிருந்தவர்கட்கோ எவ்வித ஆபத்தும் நேரவில்லை. இவ்வாறே, மற்றுமோர் அற்புதமும் நிகழ்ந்தது. ஞான சபை கட்டி முடிந்தவுடன், அன்பர்களிற் சிலர் தஞ்சாவூர் மராட்டியர்களைக் கொண்டு அச்சபையினெதிரே பெரும் பொருட் செலவில் ஒரு பந்தல் அமைத்தனர். அதனையறிந்த அடிகளார், "இப்பந்தலை அமைத்தவர்கள் உறவினத்தாரல்லர்; புலைப் புசிப்பும் உயிர்க் கொலையுமுடைய புற வினத்தார், ஆதலில், இப்பந்தல் திருவருளாளருக்குச் சம்மதமில்லை" என்று கூறிய உடனே பெருமழை யுண்டாகி அம்மழையிடையே ஓர் இடிவிழுந்து அப்பந்தல் தீப்பற்றிக்கொண்டது. ஆயினும் அதனால் மற்றைய மனிதர்களுக்கோ பொருள்களுக்கோ எவ்விதச்சேதமுமில்லை.

83. திருக்கண்ணாடி - ஜோதிமணி விளக்கு

பின்னர் அடிகளார் சென்னையிலிருந்து ஒரு பெரிய நிலைக்கண்ணாடியினை வரவழைத்து, அதனைச் சித்திவளாகம் எனும் பெயர்புனைந்த மேட்டுக்குப்பத்திலுள்ள தம்முடைய சிறு குடிலில் ஒரு மண்டலம் வைத்து வழிபாடு செய்து பிறகு அக்கண்ணாடியையும் - ஒரு திருவிளக்கையும் - தம்மையடுத்து தமது கண்மூடி ஆசாரங்களை யெல்லாம் விடுத்து, சன்மார்க்க முறையையே கடைபிடித்துப் பூணூல் முதலியவற்றை நீக்கிச் சமபந்தியாகவும் உண்டு வந்த அன்பரான - சபாபதி சிவாசாரியாரைக் கொண்டு, ஞான சபையின் கண் ஸ்தாபிக்கும்படிக் கூறினார். அச்சிவாசாரியரும்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அப்படியே அவையிரண்டினையும் முறைப்படி ஸ்தாபித்து அடிகளார் கூறியாங்குப் பொதுவுஞ் சிறப்புமாகிய இருவகை வழிபாடுகளையும் செய்து வரலாயினர். சுவாமிகள் மட்டும் மேட்டுக் குப்பத்திலேயே தங்கியிருந்தார்கள். ஆயினும் அன்பர்கட்குத் தாம் கூறியபடி தைப்பூச தரிசன மட்டும் செய்வித்தார்.

84. ஆட்டு குட்டியின் அன்பு

மேட்டுக் குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் சன்மார்க்கப் போதனை நடைபெறுங் காலத்தில், ஒரு நொண்டி ஆட்டுக்குட்டியும் ஆங்கு வந்து செவிமடுப்பதும், பின்னர் எல்லோரும், அம் மாளிகையினை வலம் வரும் போது தானும் வலம் வருவதுமாக இருந்துவரும். அதற்காக சுவாமிகள் அந்த ஆட்டுக்குட்டிக்கு அன்பர்களைக் கொண்டு ஆகாரம் முதலியன கொடுக்கச் செய்வார்.

85. காயத்திரி மந்திரங் கழறுதல்

ஆடூர் என்னும் அருமைப் பதியில் வேத ஆகம புராண இதிகாச சாஸ்திரங்களாகிய நூல்க ளனைத்தும் அரிதிற் பயின்றவரும், அடக்கம் அன்பு பொறுமை, இரக்கம் முதலிய நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவரும், ஆகிய அன்பர் சபாபதி சிவாசாரியர் என்பவர் ஐயா அவர்களின் தரிசனத்தின் பொருட்டு வர, அவரோடு ஐயா அவர்கள் அளவளாவிக் கொண்டிருக்கும்பொழுது அச் சிவாசாரியார் 'காயத்திரி மந்திரத்தின்' உண்மைப் பொருள் விளக்கத்தினைச் சிறிது எடுத்துரைத்தல் வேண்டுமென்றிரக்க, ஐயா அவர்களும் அவ்வாறே அவர்களைத் தனியிடத்திருத்தி அதனை விளக்கி யருளினர்.

86. ஞான சபை விளக்கம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் பண்டைக் கொள்கைக் கேற்ப உலக மக்கள் அனைவரையும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைச் சகோதரர்களாக ஜாதி, மத, சமய, வருணாசிரம சங்கற்ப பேதமின்றி ஒரே குலமாகக் கொள்ளவேண்டும் என்று, வள்ளலார் வலியுறுத்தி வந்தார்கள். அதற்காக தமிழர், ஆரியர், மகம்மதியர், கிறிஸ்தவர், பௌத்தர், சமணர் முதலான பலவகை ஜாதியினரும் ஒருமிக்க எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி இறைவனை வணங்கும்படி ஏற்பாடு செய்தனர் மேலும்,

தெய்வங்கள் பலபல சிந்தை செய்வாரும் சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும் பொய்ச்சம யாதியை மெச்சுகின்றாரும்

என்றபடி எண்ணற்ற தெய்வங்களைக் கற்பனை செய்து வேற்றுமை மயக்கில் வீழ்ந்துழலும் வீணர்களுக்கெல்லாம் நல்லறிவு கொளுத்தி சன்மார்க்கப் பெருநெறியில் வாழும் பொருட்டாகத் தாம் நிறுவிய சத்திய ஞானசபைக் குள்ளே, திருவிளக்கே - அறிவாகிய அருட்பெருஞ் ஜோதி யாகவும், அதற்கு எதிரில் உள்ள கண்ணாடியே-மனமாகவும் அதற்குமுன் மனமாயையே - ஏழு திரைகளாகவும் அமைத்துள்ளார்கள். ஜீவகாருண்யம் தோத்திரங்கள் முதலான வழிபாடுகளாலும் மனமாகிய கருங்கற்பாறை கசிந்துருக உருக அம்மாயாதிரைகள் ஏழும் ஒன்றன் பின் ஒன்றாக நீக்கப்பட்டு, மனமானது தூய்மையான கண்ணாடிபோல் விளங்க, அதன் வழியே அறிவாகிய அருட்பெருஞ்ஜோதி தரிசனம் கண்டு மரணமிலாப் பெருவாழ்வடைந்து பேரின்ப லாபத்தை பெறுவதற்கு வழி காட்டியுள்ளார்கள்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

மேலும் ஞானசபையில் எவ்வகை உருவ வழிபாடும் அபிஷேகம் முதலானவைகளும், தவில், நாதஸ்வரம், டமாரம் முதலான வாத்திய கோஷங்களும் அதிர்வெடி முதலிய வேட்டுகளும் கூடாது என்று கட்டளையிட்டுள்ளார்கள். அத்துடன் ஜாதி, மத, சமய பேத மின்றி மண், பெண், பொன்னாசையை மறந்தவராய், தெய்வபக்தியில் சதா சிந்தனை செலுத்துபவராய், சன்மார்க்க ஒழுக்கமுடைய ஒருவரைக் கொண்டு ஞானசபையில் பூஜை செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள். உயிர்க் கொலையும் புலைப்புசிப்பும் உடைய புறவினத்தவர்கள் வணங்கத் தனியிடம் புறத்தே அமைத்து அங்குள்ள வாயிலின் மேல் "ஆடு, கோழி, மச்சம் முதலியவற்றின் புலாலுண்பவர்கள் இந்த வாயிலுக்குள் நுழையப்படாது" என்ற விளம்பரப் பலகை ஒன்றினைத் தொங்க விட்டிருந்தார்கள். ஏனைய அகவினத்தார்கள் அனைவரும் உள்ளே சென்று இறைவனை வணங்கும் உரிமை பெற்றிருந்தனர். ஆயின் புறவினத்தவரும் புலாலுணவை அறவே நீக்கி அகவினத்தாரகலாம் என்ற அனுமதி யுள்ளது. சுவாமிகள் வெளியிட்ட சத்தியஞானசபை விளக்கப் பத்திரிகையை ஆறாந்திருமுறை வசனபாகத்தில் கண்டுகொள்க.

87. அவதானியாருக்கு 'உண்மை நெறி'

பிறகு எப்பொழுதும் சுவாமிகள் மேட்டுக்குப்பத்திலுள்ள சித்திவளாக திருமாளிகையிலேயே தங்கி யிருப்பதும் சன்மார்க்கப் போதனை செய்வதுமாக இருந்தனர். அங்கே விவகாரம் பேசும்பொழுது அன்பர்கள் திரள் திரளாக வந்து கேட்டு ஆனந்தமுறுவார்கள். அங்ஙன மிருந்து வருங்கால் ஒருநாள் சுவாமிகள் பிரசங்கஞ் செய்யும் வேளையில், நூறு அவதானங்கள் செய்த ஐயங்கார் ஒருவர் அங்கு வந்து நின்றார். சுவாமிகள் தேனினு மினிய பிரசங்கத்தைத் தெவிட்டா துளங்கெண்டு திளைக்கும் அன்பர்களில் ஒருவரும் அவரைக் கவனித்திலர். அதனால் சினமூண்ட அவ் அவதானியார் சுவாமிகளை நோக்கி "சுவாமிகளே! தங்கட்கு எப்படி வித்தையிலும், ஞானத்திலும் பிறர்க்கு இடங்கொடுத்து விடுதல் கூடாது என்றெண்ண மிருக்கிறதோ அதுபோலவே தங்களுடைய இச்சபையும் எனக்கு இடங்கொடுக்கக்கூடாதென்றே எண்ணிவிட்டது" என்று குறும்பாகக் கூறினார். சுவாமிகள் அவருடைய பக்குவ மின்மையை யறிந்து அவரை அமரச்செய்து சிலவினாக்களை வினவ, அவர் விடை சொல்ல அறியாது விழிக்கவும் அவரைத் தனியே அழைத்துத் தாம் சுவரில் எழுதிவைத்துள்ள உண்மை நெறியினைக் காட்டி, "இதனைக் கைப்பற்றுங்கள்" என்று முன்னேறுவதற்கான வழியை யறிவுறுத்தினர். அதன்மேல் அவதானியார் சுவாமிகளிடத்து அடிமைபூண்டு அருள்பெற்றார்.

88. தீயினாலுந் துன்புறாத திருமேனி

சுவாமிகள் அக்குடிசையினுள் பிரமதண்டிகா யோகம் செய்வது வழக்கம். அதாவது இரு பக்கங்களிலும் நெருப்பு நிறைந்த இரும்புச் சட்டிகளை வைத்துக் கொண்டு இடையிலிருந்து செய்யும் யோகம். அதையறியாத சபாபதி குருக்கள் ஒருநாள் திடீரென நுழைய அவருடைய கால்கள்பட்டு ஒரு சட்டியிலிருந்த நெருப்பு சிதறிக் குருக்கள் மீதும் சுவாமிகள் மீதும்பட்டன. குருக்கள் உடம்பு வெந்து போயிற்று; சுவாமிகள் சுத்ததேகம் பெற்றவராகையில் சிறிதும் துன்பம் ஏற்படவில்லை.

89. பிநாகபாணியாரின் பிதற்றல்

பிநாகபாணி முதலியார் என்பவர் புதுச்சேரியிலுள்ள தந்தி ஆபிஸ் மானேஜர். அவருக்கு ஏழு பாஷைகள் வரை எழுதப் படிக்கத் தெரியும். அவ்வளவே யன்றி அம்மொழிகளிலெல்லாம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அவர் வல்லவரல்லர். அந்த நிலையிலேயே அவருக்கு அகங்கார முண்டாகி விட்டது. அதனால் அவர் சுவாமிகளையும், சாலையிலுள்ள மற்றவர்களையும் சோம்பேறிகளென்றும், வெற்றுக் கும்பலென்றும், இன்னும் பலவாறாகப் பலமொழிகளில் கேள்விகள்கேட்டு அடக்க வேண்டுமென மேட்டுக் குப்பத்திற்கு வந்தார். அவர் சபைக்கு வருவதற்கு முன்னமேயே சுவாமிகள். "நமக்கு ஒருவர் புத்தி புகட்ட வருகிறார்" என்று கூறினார்கள். பின்னர் பிநாகபாணியும் வந்து ஒன்றும் பேசாது மௌனமாக ஓரிடத்தில் அமர்ந்து கொண்டார். அதன்பிறகு சுவாமிகள், தம் அருகிலிருந்த தொழுவூர்-வேலாயுத முதலியார் மூத்த குமாரனுமாகிய திருநாகேச்சுவரம் என்னும் நான்கு வயதுடைய சிறுவனைப் பிநாகபாணி முதலியார் எதிரே நிறுத்தி, "உனக்கு எத்தனை பாஷைகள் தெரியும்" என்று வினவினார்கள். அதற்கப்பையன் "எனக்கு ஆறு பாஷைகளின் பாண்டித்திய முண்டு" என்று கூறினான். ஆகவே பிநாகபாணிக்கு அச்சம் அதிகரித்தது. அதனால் பெருங் கஷ்டதோடு அமர்ந்திருக்கும் அம்முதலியாரை நோக்கிப் பின்னும் சுவாமிகள் "நீங்கள் எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் இந்தப் பையனைக் கேள்விகள் கேளுங்கள்; பதில் சொல்லுவான்" என்றனர். பிநாகபாணி முதலியார் பேச வாய்திறக்க முயன்றும் முடியவில்லை. அவருக்கு அச்சமும் நாணமும் நடுக்கமும் உண்டாகி தம்முடைய அறியாமைக்கும் தாம் கூறித்திரிந்த பிதற்றலுரைகட்கும் வருந்திக் கொண்டு மௌனாயிருந்தனர். பின்னர், சுவாமிகளது கிருபையால் வாய்திறக்க அவரே சுவாமிகளை வணங்கி, "ஆண்டவரே ! அடியனேன் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்தருளல் வேண்டும்" என வேண்டி அருள்பெற்று விடைகொண்டேகினார்.

90. மந்திர வாதிகளும்-மகா காளியும்

மந்திரவாதிகள் நால்வர் வடலூரிலிருந்து சுவாமிகளைத் தரிசித்தற் பொருட்டாக மேட்டுக் குப்பத்திற்கு ஒருநாள் இரவு பதினைந்து நாழிகையளவில் வந்து கொண்டிருக்கும் பொழுது, இடையிலேயுள்ள ஒரு காளி அவர்கட்கு பயங் காட்டியது. அவர்கள் அதை நோக்கி "நாங்கள் திரும்பி வருங் காலத்தில் உனக்குப் பூட்டிடுகிறோம்" என்று கூறி வந்து விட்டனர். அவர்கள் சுவாமிகளைத் தரிசித்து மீளுங்காலை சுவாமிகளிடத்தில் காளியின் வரலாற்றைக் கூற, "அதற்குச் சுவாமிகள் பூட்டிட வேண்டாம்; நம்மிடத்திற்கு வந்து போவதாகக் கூறுங்கள்; போதுமானது" என்று கூற, அவர்களும் அவ்வாறே காளிக்குக் கூறப் பேருருவோடு வந்த அக்காளி தன்னுடைய உருவைக் குறைத்துக்கொண்டு அவர்களுடைய கட்புலனுக்கே புலனாகாது போயொழிந்தது.

91. வடலூரார் பெற்ற புண்ணியம்

மிகுந்த செல்வந்தர்களும், வடலூருக்குப் பெரியதனக்காரர்களுமாகிய அருணாசலபடையாட்சி, வேங்கடாசல படையாட்சி ஆகிய இருவரையும் சுவாமிகள் வரவழைத்து, "நீங்கள் இன்றே புலையுணவை விட்டு விடுங்கள்" உங்கட்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் திருவருளால் பல நன்மைகள் உண்டாகும்". என்று கூறினார்கள். அவர்களும் அவ்வாறே புலையுணவை விடுத்துப் புண்ணிய வழியில் நின்றார்கள். அதனால் அவர்களுடைய நிலங்களில் அவ்வருட முதல் ஒரு பங்குக்கு ஐந்து பங்கு விளைவு அதிகரிக்கலாயிற்று. அதைக்கண்ட அவர்கள் மற்றவர்களையும் புலையுணவை நீக்கிப் புண்ணியம் பெறுமாறு செய்தனர்.

92. உண்மை நெறியை உணர்த்தல்

பின்னொரு நாள் கண்ட்ராக்டர் ஆறுமுக முதலியார் என்பார் சுவாமிகளிடமிருந்து ஒரு குளிகை பெற விரும்பினர். அவர் விருப்பினை யறிந்த சுவாமிகள், அவருடைய கரத்தில்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

மிளகுப் பிரமாணமுள்ள இரு குளிகைகளை வைக்க, அவற்றையே அவர் தாங்கமுடியாது கீழே வைத்துவிட்டார், அதைக்கண்ட சுவாமிகள் அவரை நோக்கி " இந்த ஆசையை இனி நீர் விட்டுவிடும்; ஏனெனில் இது உண்மை நெறிக்கு ஏற்புடையதல்ல" என்று உரைத்தருளினார்கள்.

93. குருக்களும் குளிகையும்

அப்படியே குருக்க ளொருவருக்கும் சுவாமிகள் நல்லறிவு கொளுத்தினர், சுவாமிகளிடத்தில் அன்புடையவரா யொழுகி வந்த குருக்களொருவர் குளிகையைப் பெற்று செல்வந்தராகலா மென எண்ணி சுவாமிகளை வேண்ட, சுவாமிகள் குளிகை யொன்றினை ஒரு பெட்டியின் மீது வைத்து, 'இதை எடுத்துக் கொள்ளும்' என்றார்கள், அக்குருக்கள் அதை எடுக்க முயன்றபோது அக் குளிகை அவர் கரத்தை வலுவாகப் பிடித்துக் கொண்டது. பின்னர் அவரும் சுவாமிகளை வேண்டி அத்தீங்கிலிருந்தும் விடுபட்டு நல்லறிவு பெற்றார்.

94. 'ந'கரப் பொருள் விளக்கம்

மற்றொருநாள் மகா வித்வான்களிருவர் சுவாமிகளை யணுகி திருவாசகத்தின் முதல் அகவலுக்குப் பொருள் கூறுமாறு வேண்டினர். அதற்கிசைந்த சுவாமிகள், அம்முதல் அகவலில் முதலெழுத்தாகிய 'ந' என்னும் ஓர் எழுத்திற்கு மட்டும் இரண்டு மணிநேரம் 64- இலட்சணங்கள் வரை எடுத்தோதி வர, அவற்றை அவ் வித்வான்கள் உள்ளத்தமைத்துக் கொள்ள முடியாதவர்களாய்ச் சுவாமிகள் திருவடிகளை வணங்கி, "இனி கேட்பதற்கு எங்கட்கு ஆற்றலில்லை" என்று கூறி சென்றனர்.

95. வலைஞரை ஆட்கொண்ட வைபவம்

மேட்டுக் குப்பத்துக்கு அருகேயுள்ள செம்படவர் இருவர் வலைகளை கையிலேந்திக் கொண்டு சுவாமிகள் இருக்கும் வழியே போக அவர்களைச் சுவாமிகள் அருகழைத்து "உலகினிடத்தே பல தொழில்களிருக்கப் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிவதற்கு ஏதுவாகிய இத்தொழில் உங்கட்கு வேண்டுவதில்லை; ஆதலால், இக்கொடுந்தொழிலை இன்றே விட்டுவிடுங்கள் என்றும், இன்னும் பலவிதமான அறங்களையும் அவர்கட்கு இனிமையாக கூறினார்" அதைக் கேட்ட அவர்கள், இனி இச்செயல் செய்வதில்லையென்று சொல்லிவிட்டு, அவர்கள் சென்று பழையபடியே வலைவீசினர். வலைகள் அறுபட்டன. அறுந்துபட்ட அவைகளைச் சீர்ப்படுத்தி மீளவும் வீச, அப்பொழுதும் அவை அறுபட்டனவே யல்லாது பயனெதுவுமில்லை. இப்படியே பலமுறை அவர்கள் வீசும்பொழுதெல்லாம் வலைகள் அறுந்து போக அவர்கட்கு நல்லறிவு வந்து, "அச்சுவாமிகள் சொன்னவற்றை அசட்டை செய்ததனால் வந்தது இந்தக் கேடு " என்பதை உள்ளத்துட் கொண்டு அன்றிருந்து அப்பாவத் தொழிலை விடுத்து அறமேற் கொண்டு சுவாமிகளின் அருள் பெற்றனர்.

96. தொழுவூர் வேலாயுத முதலியார் துன்பம்

தொழுவூர் - வேலாயுத முதலியாருக்கு ஒரு கால், உடம்பு முழுவதும் சிரங்குண்டாகி அதனால் வீக்கமும் துன்பமுமுண்டாக, அதனை ஆற்றாராய் முதலியார் வள்ளலாரிடத்து வர வள்ளலாரும் அவருக்குத் திருநீறு கொடுத்து அப்பொழுதே அவருடம்பு குணமடைய அருள் செய்தார்.

97. வழி காட்டி மறைந்தமை

கூடலூர் சின்னதம்பி பிள்ளை ஒருநாள் வடலூரிலிருந்து மேட்டுக் குப்பம் வரும் வழியில் சென்று தடுமாற, அத்தருணத்தில் வள்ளலார் அவர் முன்னே தோன்றி வழியினைக் காட்டி மறைந்தார்கள்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

98. பசுவைப் போற்றல்

வேறொருநாள் திருவொற்றியூரிலுள்ள இராஜகோபாலப் பிள்ளை என்னும் யாதவ மரபைச் சேர்ந்த அன்பரொருவர் மேட்டுக்குப்பத்திற்கு வள்ளலாரைத் தரிசித்தற்பொருட்டுவர, அவரை அமரச் செய்து, அவர் பசுவினங்களை ஒழுங்கே காப்பாற்றுகிறதில்லை யென்பதை முன்னரே உணர்ந்திருந்த நம் வள்ளற் பெருமான் அவருக்குப் பசுவின் அருமை பெருமைகளைப் பற்பலவிதமாக எடுத்துக் கூறி, அவருக்கு நல்லறிவு கொளுத்தினார்கள். அவ் விராஜகோபாலப் பிள்ளையும் வள்ளலாரிடம் விடை பெற்றுக் கொண்டு வீடுவந்து சேர்ந்து, அன்று முதலாக வள்ளலார் கூறியாங்கு பசுக்களை ஒழுங்கே காப்பாற்றி வருவாராயினார்.அப்படியாக அவர் பசுவினங்கட் கெல்லாம் உபசாரங்கள் செய்து வரும் நாளில் ஒருபகல் அவரை ஒரு முரட்டுப்பசு முட்டித்தள்ளிவிட்டது. அதனாலடிபட்டு வருந்தும் போது அவருடைய கனவில் வள்ளலார் தோன்றி "நீர் கவலைப்பட வேண்டாம்; நாளைகாலையில் இரண்டு பேர் வந்து உம்முடைய உடல் நோயைக் குணப்படுத்துவர்" என்று உரைத்து மறைந்தார். அவ்வாறே மறுநாளிருவர் வந்து அவருடைய உடல் நோயைத் தீர்த்தார்கள்.

99. வெண் குஷ்டமும் – கருங்குஷ்டமும்

கொங்கண தேசத்தாரிருவர் வெண்குஷ்டத்தினால் ஒருவரும் கருங்குஷ்டத்தினால் ஒருவருமாகத் துன்புற, ஆற்றாதவர்களாய் வள்ளலாரின் பெருமையை யறிந்து, அவர்களிடமணுகிக் "குறை தவிர்த்தாண்டருளல் வேண்டும்; குணப்பெருங் குன்றே!" என்று குறையிரக்க, கருணைக் கடலான வள்ளலார் அவ்விருவரையும் பற்றியிருந்த அவ்விருவகைக் குஷ்டநோய்களையும் ஐந்து நாட்களில் விலக்கினார்.

100. மகமதியச் சிறுவன் வினை

இளவயதுள்ள மகம்மதியச் சிறுவ னொருவன் தன் உடம்பெல்லாம் எண்ணையைத் தடவி, அதன்மீது ஆங்காங்கு பஞ்சு ஒட்டவைத்துக் கொண்டு, வள்ளலாரிடம் வந்து விளையாட்டாக, "எனக்கு உடம்பெல்லாம் செரங்குங்க! நீங்க தீர்க்கணுங்க!" என்று கூறினான். வள்ளலாரும் "தீர்ந்து விடும் போ" என்று கூறி அனுப்பினார். வீட்டிற்குப் போவதற்குள் அவர் பஞ்சு ஒட்டிவைத்திருந்த இடமெல்லாம் பெருஞ் சிரங்குகள் உண்டாகித் துன்புறுத்தத் தலைப்பட்டன. துன்பம் பொறுக்கமாட்டாத அம்மகமதியச் சிறுவன், மீளவும் வள்ளலாரிடம் வந்து முறையிட சாலையிலுள்ள கிணற்றுத் தீர்த்தத்தில் அவனை முழுகும்படி ஐயா கூறினார். அவனும் அக்கிணற்றுத் தீர்த்தத்தில் முழுகித் தனது துன்பம் நீங்கிப் போயினான்.

101. ஒன்றுக்கு மூன்று

பின்னர் ஒருகால், ஒரு மகமதியர் வள்ளலாரிடமணுகி " இரச பஸ்பஞ் செய்வதற்கு உரிய மூலிகை இது" என்று ஒரு மூலிகையின் பெயரை மிகவும் இரகசியமாகக் கூறினார். அதனைக் கேட்ட வள்ளலார். "அப்படியா? இரசபஸ்பம் செய்வதற்கு நீர் சொன்ன மூலிகையைத் தவிர்த்து மூன்று மூலிகைகளுண்டு; அவை யின்னின்ன". என்று எல்லாருங் கேட்க உரத்த சப்தத்துடன் மொழிந்தனர். அம்மகமதியர் வெட்கித்தலைகுனிந்து போயினர்.

102. முதற்றே – முதல் "தே"

மற்றொருகால் புலவரொருவர் அடிகளிடம் வந்து "சுவாமி ! திருக்குறளில் முதற் குறளிலேயே முதற்றே யுலகு என்பதில் ஏகாரம் ஈற்றசையாயின் கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி.... என்று கூறியது எவ்வாறு பொருந்தும்?" என்று வினயத்தோடு வினவினார். அதற்கு நம் வள்ளலார் "புலவரே முதற்றே என்பதை ' முதல் தே' எனப்பிரித்துப் பாரும். ஒன்றுந் தோஷமிராது" என்று கூறினார்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

103. முருக தாசரின் முதிர்ந்த அன்பு

திருநெல்வேலி என்னும் திருப்பதியில், சைவவேளாண் மரபில் அவதரித்தவரும், ஒன்பது பிராயந்தொடங்கி ஒண்கடலமிழ்தெனத் தீஞ்சுவைக் கவிகளாம் - சிவகுமாரனைவழுத்தும் சீரிய ஒழுக்கமுடையவருமாகிய தண்டபாணி சுவாமிகள் என்னும் முருகதாசர் என்பார் நமது வள்ளலாரின் அருமை பெருமைகளைப் பிற அன்பர்கள் மூலம் அறிந்து அளவிலா மகிழ்வும் அன்பும் உடையவராய் வள்ளலாரைத் தரிசிக்கும் விருப்பங்கொண்டு வள்ளலாரிடம் வர, வள்ளலாரும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தனர். அது சமயம் அம் முருகதாசர் தாம் முருகன் மீது பாடிவைத்திருந்த அருமைப் பாக்களை வள்ளலாருக்குக் காட்டினர்.வள்ளலார் அப்பாக்களில் ஒரு சிலவற்றைப் பார்த்து உளமகிழ்ந்து "முருகதாசர் - அருணகிரிதாசரே" என்று வியந்து கூறினர். இம்முருகதாசரே வள்ளலார் மீது அனுபவப் பதிகமும் வினாப் பதிகமும், பாடியவர் (6-வது திருமுறை, வசன பாகத்தில் காண்க).

104. பிள்ளையவர்களின் பேரன்பு

கவிபாடுவதில் கம்பரெனப் பெயரும் புகழும் வாய்ந்தவரும், திருவாவடுதுறை ஆதீனத்து வித்வானாக இருந்தவரும், ஆகிய மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தம்முடைய மாணவராகிய மாயூரம்; வேதநாயகம் பிள்ளை இயற்றிய நூல்களுக்குச் சாற்றுகவி வாங்குதற்பொருட்டாக வள்ளலாரிடம் ஒருகால் வர, வள்ளலாரும் அவரை முகமலர்ச்சியோடு நல்வரவு கூறி வரவேற்றனர். பிள்ளையவர்களும், வள்ளலாரை வணங்கி அமர்ந்து தம் கருத்தை வெளியிட வள்ளலாரும் அவ்வாறே ஒரு சாற்று கவி அளித்தனர்.

அதன் பிறகு பிள்ளை அவர்கள் வள்ளலாரிடத்து இங்கிதமாலையைப் பற்றிச் சிறிது விளக்கியருளுமாறு வேண்டினர். வள்ளலார் இங்கித மாலையில் முதற் பாட்டிற்கு மட்டும் நான்கு மணி நேரம் வரை பலவகைப் பொருள்களை எடுத்தோதி, அதற்கு மேலும் அனுபவ உரை விரிக்கத்தொடங்கினர். அவ்வுரையைக் கிரகித்துக் கொள்ளக் கூடாமையால் பிள்ளையவர்களும், மற்றவர்களும் திகைத்துப் போயினர். வள்ளலார், அதுகண்டு உரையை நிறுத்திக்கொள்ள, மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் வள்ளலாரிடத்துப் பொங்கி வழியும் ஞான அமுதத்தைக் கண்டு அளவிலா வியப்பும். ஆனந்த முங் கொண்டவராய் அன்று முதல் வள்ளலாருடைய பேரன்பாலுஞ் சிறந்த பேரன்பராயினர்.

105. அங்கங்கள் வேறான அதிசயம்

ஒரு நாள் இரவு வெளியே போன ஐயா அவர்கள் அதிக நேரமாகியுந் திரும்பி வரவில்லையே யென்று, வேலூர் சண்முகம் பிள்ளை என்பார் சாலையை விட்டு வெளியே போய்ப்பார்க்க, அங்கே ஐயா அவர்களுடைய அங்கங்களெல்லாம் தனித்தனியாகக் கிடந்தன. அதைக்கண்ட அப்பிள்ளை உடல் நடுங்க உயிர் நடுங்க - "அந்தோ ! அடிகள் இவ்வாறு ஆயினரே இனி என் செய்வோம்" என்றின்ன பல மொழிந்து வருந்துகின்ற வேளையில் ஐயா அவர்கள் திடீரென அவருடைய கண் முன்னே தோன்றி, "நீர் இனி இம்மாதிரி வந்து பார்க்காதீர் ! " என்று எச்சரித்தனர். அவரும் மகிழ்வோடு ஐயா அவர்களுடைய ஆணையைச் சிரமேற் கொண்டு பின் தொடர்ந்துவர இருவரும் சத்திய தருமச்சாலையை அடைந்தனர்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

106. "அமாவாசை" அருள் பெறல்

வடலூர் சேரியிலுள்ள அமாவாசை என்னும் ஒருவன் சிறிது பக்குவமுடையவனாயிருப்பதைக் கண்டு, அடிகள் அழைத்துவரச் செய்து, "நீ இறந்துபோன மாடுகளைப் புதைத்துவிட வேண்டும்" என்று கூற, அவ்வாறே அவனும் புதைக்கின்ற பழக்கத்தைக் கைக்கொண்டான். அதையறிந்த அடிகள் மீண்டும் அவனை யழைப்பித்து, "மாட்டினைப் புதைத்து விடுவதோடு நீ இனிமேல் மாமிசமும் உண்ணாதே" என்று ஆணையிட்டனர். அதற்கும் அவ்வமவாசை இணங்கியவனமாய்த் தான் மிகவும் வறுமை நோய் வாய்ப் பட்டிருத்தலை எடுத்துரைத்து அதனை நீக்கியருளல் வேண்டுமென ஐயாவை வேண்டினன். ஐயாவும் அவனுடைய தீவிர பக்குவ நிலைக்கு மெச்சி நாள்தோறும் அவனுக்கு "ஓர் அரை ரூபாய்" சுலபமாகக் கிட்டுமாறு திருவருள் பாலித்தார்.

107. கள்வனுக்கும் காட்டிய கருணை

அதன் பிறகு ஒரு நாள் வடலூருக்கு அடுத்த குள்ளஞ்சாவடி என்னுமிடத்திற்கு ஐயா அவர்கள் சென்ற காலத்தில் அங்குள்ள அன்பராகிய ஒரு முகம்மதிய – போலிஸ் ஹெட்கான்ஸ்டபில் புது வஸ்திர மொன்றை அடிகளுக்குப் பாத காணிக்கையாக வைத்து வணங்கி, தான் வாழ்வு பெறுதற்பொருட்டாக அவ்வஸ்திரத்தை யணிந்து கொள்ளும்படி வேண்டினர். அவர் வேண்டுதலுக்காக அடிகள் அவ்வஸ்திரத்தை யணிந்து கொண்டு அன்றிரவு அங்கு தானே படுத்திருக்க, அவ்விரவில் ஒரு திருடன் வந்து அவ்வஸ்திரத்தை மெல்ல இழுத்தான். அதைக் கண்டதும் மகம்மதியர் அக்கள்வனைப் பிடித்துத் தண்டிக்க முயன்றார். ஐயா அவர்கள் அவரைத் தடுத்து, இழுத்த அவனுக்கே அவ்வஸ்த்திரத்தைக் கொடுத்தனுப்பினார்.

108. புகைப் படம்

பிறகொருநாள் சாலை அபிமானிகளாகிய அன்பர்கள் சிலர் நம் திருவருட் பிரகாச வள்ளலாரைப் (போட்டோ) புகைப்படமெடுக்க வேண்டுமென விருப்பங்கொண்டு சென்னை மாசிலாமணி முதலியார் என்பவரைக் கொண்டு எட்டு தரம் புகைப்படம் எடுத்தும் வள்ளலாருடைய திருவுருவம் படத்திலமையவில்லை. அகண்டாகார சச்சிதானந்த சொரூபராகிய தெய்வ உருவத்தைச் சிறுபடத்தில் அடக்க யாரால் முடியும்.

109. பொன்னான மேனி !

இங்ஙனம் நிகழ்ந்த சிறிது காலத்திற்குப் பிறகு, பண்ணுருட்டியிலுள்ள குயவரொருவர் வள்ளலார் திருவுருவத்தைப் பலகாலும் பார்த்த ஒரு பழக்கத்தின் மேல் அம்மாதிரியே ஓர் உருவம் அமைத்து அதற்குப் பலவகை நிறங்கள் கொடுத்துக் காண்போர் கண்ணைக் கவருந் தரத்ததாகச் செய்து வந்து வள்ளலாரிடம் காட்டினார். வள்ளலாரோ, அத்திருவுருவைக் கரத்தில் வாங்கிப் "பொன்னான மேனி மண்ணாயிற்றே" என்று அப்படியே கை நழுவ விட்டு விட்டார். அவ்வுருவமும் கீழே விழுந்து உடைந்தது.

110. ஜீவகாருண்யத்தின் முடிவு

வேறொருநாள், ஜீவகாருண்ய மென்றால் மக்களிடத்தும் மாக்களிடத்தும் கருணைகாட்டுவது என்ற அளவில் சில அன்பர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு வள்ளலார் அவ்வன்பர்களை அருகழைத்து அவர்களை நோக்கி, " நீங்கள் பேசிக் கொள்கிற அளவில் ஜீவகாருண்யம் முடிவுபெற்று விடாது, அது இன்னும் பரந்து செல்வது; உதாரணமாக ஒரு கதை சொல்கிறேன்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

கேளுங்கள்" என்று சொல்லத் தொடங்கினார். "அன்பர்களே ! இரு முதியவர்க ள்ஒரு வீதிவழியே சென்று கொண்டிருந்தனர்; அப்பொழுது அவருள் ஒருவரின் கால்பட்டு வீதியிற்கிடந்த ஒரு மண்கட்டி உடைந்து போயது. அதைக்கண்ட மற்றவர் உடனே மூர்ச்சையானார் மூர்ச்சை யடைந்த அவருக்கு உபசாரங்கள் செய்து மூர்ச்சைத் தெளிவித்த முன்னையவர் "தங்கள் மூர்ச்சியுற்றதற்குக் காரணம் என்ன"? என்று வினவ, அதற்கு அம்முதியவர் "உம்முடைய காலினால் அவ்வழகிய மண்கட்டி உடைந்து உருக்குலைந்து போனதே காரணம்" எனக் கூறினார். என்று கதையைச் சுருக்கமாக முடித்து, அவர்கட்கு ஜீவகாருண்யத்தின் முடிவினை உணர்த்தியருளினார்.

111. யோகத்தினுஞ் சிறந்தது தோத்திரமே

பிறகொருநாள் வள்ளலாரை அன்பர்கள் "யோகம் முதலியன செய்ய எங்களால் இயலாதனவாயிருக்கின்றன ; ஆதலால் யாங்கள் ஈடேறுதற் குரிய ஒரு இலகுவான மார்க்கத்தைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்" என்றிரக்க. வள்ளலாரும். "இக் கடையுமாகிய கலியுகத்தில் உங்களால் யோகம் முதலிய சாதனங்களை இயற்ற முடியாது. ஆதலால் நீங்கள் தோத்திரத்தையே ஈடேறும் மார்க்கமெனக் கொள்ளுங்கள்" என்றிசைத்தனர்.

நினைந்துநினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்துநனைந்து அருளமுதே!
நன்னிதியே! ஞான நடத்தரசே! என்னுரிமை நாயகனே! - திருவருட்பா 4786

112. சன்மார்க்கத்தில் – இன்னிசை

நிற்க வள்ளலாரிடம் சேர்ந்திருந்த கூட்டங்களில் ஒருசிலர், தோத்திரஞ்செய்யுங் காலத்தில் பிடில், மத்தளம் முதலியவற்றை வைத்துக்கொள்ளுதலும்; ஆராதனை செய்யுங் காலத்துப் பலவிதமான கோஷங்களுடன் கூச்சல் போடுதலும், பிரம்மதாளம், நகார், கண்டாமணி, நாதசுரம் முதலிய ஒலிக்கருவிகளை வைத்துக் கொள்ளுதலுஞ் செய்தனர். அவற்றைக்கண்ட நம் ஐயா அவர்கள் பெரிதும் மனம் வருந்தி அவர்களை அழைத்து நீங்கள் செய்யும் இக்காரியங்களெல்லாம் சன்மார்க்கத்திற்கு முற்றிலும் மாறானவை யென்பதை நீங்கள் அறியவேண்டும். மனநெகிழ்ச்சியோடு ஆண்டவருடைய தோத்திரங்களை அமைதியாக அன்போடு பாடுவது தான் சன்மார்க்கத்தின் முக்கியலக்ஷியத்திற்கு முற்றிலும் உடன்பாடானது என்பதையும் அறியவேண்டும். அறிந்து இவைகளை அறவே விட்டுவிட வேண்டுவதே உங்கள் கடமை" எனக் கண்டிப்பாகத் தெரிவித்தார்கள். அன்றிருந்து அவ்வீணாடம்பரங்களெல்லாம் அறவே ஒழிந்தன.

113. தேங்காய்கூட பலியிடுதல் கூடாது

தெய்வத்திற்குப் பலியிடும் கொடிய வழக்கத்தைச் சுவாமிகள் கண்டிப்பாக தடுத்து வந்தார்கள். அத்துடன் தேங்காயைக்கூட பலியிடுதல் கூடாது என்றும் அந்தத் தேங்காய்ப் பலியிடாமல் முன்னதாகவே உடைத்து திருத்தி அத்துடன், கற்கண்டு, திராட்சை முதலியன கலந்து ஆண்டவருக்கு இனிப்பாக நைவேத்தியம் வைக்கவேண்டுமென்றும் சொல்லிவந்தார்கள். அபிஷேகாதிகள், புஷ்ப அலங்காரங்கள் தீப அலங்காரங்கள், உலா வருதல் முதலிய ஆரவாரங்கள் சிறந்ததல்லவெனவும் அரிதிற்கிடைக்கும் பணத்தை ஏழைகளின் பசி நிவர்த்திக்கே உபயோகிக்க வேண்டுமென்றும், தம் மெய்யன்பர்கட்கு உபதேசித்து வந்தார்கள். ஒரு நாள், ஓரன்பர், நிறைய புஷ்பம் முதலியன வாங்கிவர அதனைக்கண்டு

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

"ஏன் காணும் இவ்வளவு புஷ்பம்?" ஆண்டவர் கேட்டாரா? இதனால் திருப்தியடைவாரா? தும்பை, அருகு முதலியனவற்றை நீரே போய் கொண்டுவரலாகாதா? இப்பணம் எத்தனை ஏழைகட்குப் பசியை நிவர்த்திக்கும் ! என்று கண்டித்தார். இத்துடன் ஞானசபையைத் ஸ்தாபித்து, அதைப் பூசிக்கும் முறையை, (ஞானசபை விளக்கப் பத்திரிகை 6-ந் திருமுறை வசனபாகம்) எழுதிக் கொடுத்தார்கள், அதன்படியே சில மாதங்கள் நடந்துவந்தது. பின்பு, சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொள்ளும் சில தினங்கட்கு முன்பு, அதனைப் பூட்டிச் சாவியை வாங்கிக்கொண்டு 'ஆண்டவர் வருங்காலத்தில், சபையானது தானே திறந்துகொள்ளும்; அப்போது அது அற்புதமான கட்டிடமாகத் தோன்றும், எல்லா அற்புத சித்திகளும் நடக்கும்' என்றார்கள்.

அவ்வண்ணமே சுவாமிகள் திருக்காப்பிட்டுக் கொண்டபின் மூன்று வருடம் வரையில் சபை மூடியிருந்தது. பின்னர் வெகுதானிய ஆண்டு சித்திரைத் திங்கள் முதல்நாள், சாலை அபிமானிகளும் சபாபதி சிவாசாரியரும் மொத்தம் ஆறுபேர்கூடி, அவர்களுக்குள் ஓர் பிரமாணம் செய்து கொண்டு, திரைக்குள்ளே ஒரு பீடத்தைவைத்து, அதன் பேரில் சரிகைகளால் அலங்கரித்த தலையணைகளையும் திண்டுகளையும் வைத்து அதனைக் குருபீடமாகச் சிந்தித்துப் பிரதிதினமும் தோத்திரமும், பிரதிமாத பூசத்திற்கு தீப அலங்காரத்தோடு தோத்திரமும், ஐயா அவர்கள் கட்டளையிட்ட வண்ணம் நடத்தி வந்தனர். அவ்வாறு நடந்துவந்த பூசையானது நாளடைவில் மாறுபட்டுச் சன்மார்த்தத்திற்கு விரோதமாக நடந்துவருவதை அந்தத் திருவுளந்தான் தடுத்து ஒழுங்கான முறையில் செய்விக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக. இதுவரை, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பரிபூரண அருளமுதருந்திப் பாருலகதனில் அப்பரம கிருபாநிதி யென்னக், கல்லார்களுங் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பாய்-காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்கும் கண்ணாய்- வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய்-மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய்-நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய்-நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமாய்-எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமாய்-எம்மரசாய்-நின்றொளிர்கின்ற தெய்வத் தந்தையராகிய திருவருட் பிரகாச வள்ளலார் தோன்றுந் துணையாயிருந்து உலகவர்க்குத் துணைபுரிந்த நிகழ்ச்சிகளைக் கண்டோம். இனி அப்பெருமான் உலகவர் சமரச சுத்த சன்மார்க்க சாதனம் இன்னதென்பதைத் தெரிந்துய்யத் திருக்காப்பிட்டுக் கொள்ளுதற்குப் பத்து நாட்கள் முன்னே திருவாய் மலர்ந்தருளிய சுத்த சன்மார்க்க விவகாரத்தைச் சிறிது சுருக்கமாகக் கூறுவோம்.

"ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைச் சகோதரர்கட்கு அறிவிப்பது : இதுவரையில் கர்மசித்தருடைய காலம்; அதனால் சமயங்களும் மதங்களும் பரவியிருந்தன; இப்போது வரப்போகிறது ஞானசித்தருடைய சுத்தசன்மார்க்க காலம்; இனி சாதி, சமயம் முதலான ஆசாரங்களெல்லாம் போய் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானாசாரம் ஒன்றே விளங்கும்; (பெருமான் புகன்றபடியே இக்காலத்தில் எங்கும் ஜாதி, சமயம் மதம் முதலான பேதம் குறைந்து சமரச நோக்கமே பெருகி வருவது கண்கூடாம்) சமய மதங்களில் சொல்லுகின்ற கருத்தர்கள், மூர்த்திகள், ஈசுரன், பிரமம், சிவம் முதலிய தத்துவங்கள் காலப்பிரமாண பரியந்தம் இருப்பதேயொழிய அதற்கு மேலிரா. சமய மதங்களில் சொல்லுகிற கர்த்தர்களுடைய சித்திகள் சர்வசித்திகளுடைய கடவுளின் சித்தியின் லேசங்கள்: அந்த சர்வ சித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள்: கோடிகோடிபங்கு தாழ்ந்த தரத்திலிருக்கிறார்கள். இப்போதிருக்கும் வேதாகம புராணங்களிலும் சமய மதங்களிலும் லட்சியம் வையாதீர்கள். வைத்தால் சமரச சுத்த சன்மார்க்கத்தில் உங்களுக்கு லட்சியம் வராது; வராவி ட்டால் நீங்கள் அடையப் போகிறது ஒன்றுமில்லை.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

ஆதலால் அவைகளையெல்லாம் பற்றறவிட்டு, சர்வ சித்தியையுடைய கடவுள் ஒருவருண்டென்றும், அவர் ஒருவரே யென்றும், அவரை உண்மை யன்பால் வழிபாடு செய்யவேண்டும். அப்படிப்பட்ட சமரச சுத்த சன்மார்க்கத்திற்குரிய கடவுளை வழிபாடு செய்வதற்குச் சாதனம் இருவகை; அவை பர உபகாரம் -சத்விசாரம். (1) பர உபகார மென்பது தேகத்தாலும், வாக்காலும், திரவியத்தாலும் உபகாரஞ்செய்வது (2) சத்விசார மென்பது நேரிட்டபக்ஷத்தில் ஆன்மநேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது. கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல். தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல், விசாரமென்பது சரியை முதலான நான்கில் நாலாவது ஞானத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானமென்கிற நான்குபடிகளில் மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகஞ் செய்கிறபடி (15-ஆவது படி) யாகும். விசாரஞ் செய்கிற உஷ்ணத்தால் ஜலத்திலிருக்கிறபாசியை நீக்குவதுபோல், ஆன்மாவைத் தெரிய ஒட்டாமல் மறைத்துக் கொண்டிருக்கும் பச்சைத் திரையை நீக்கிக்கொள்ளலாம். அது நீங்கின உடனே அதற்கு மேலிருக்கும் மற்ற ஆறு திரைகளும் அதிக விரைவில் நீங்கிப்போய்விடும். விசாரத்தைவிட ஆண்டவரை மன நெகிழ்ச்சியோடு தோத்திரஞ் செய்வதினாலும், சதா அவர் திருவடியை சிந்தித்துக்கொண்டிருப்பதனாலும், கோடிகோடி பங்கு அதிகமாக நல்ல உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ளலாம் என்றறிக." இதன் விரிவை ஆறாந் திருமுறை வசன பாகத்தில் கண்டு கொள்க.

114. திருக்காப்பிட்டுக் கொள்ளுதல்

இங்ஙனமாக எம்மனோரை வாழ்விக்க வந்த பெருமான் சென்ற கலியுகம் 4975 ஸ்ரீமுக வருடத்தில் மேட்டுக் குப்பத்திலுள்ள சித்திவளாகம் என்னும் அற்புத மாளிகையில் சிலநாள் கதவை மூடிக்கொண்டு வெளிவராதிருத்தலும், பின்னர் வெளி வருதலும் - வெளி வந்த நாட்களில் பிரசங்கஞ் செய்தலுமாகப் பல மாதங்களைக் கழித்தனர். இவ்வாறு சிலமாதங்கள் கழித்ததும் ஒரு நாள் அன்பர்களனைவரையும் நோக்கி "ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சகோதரர்களே! நாம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் ஆணைப்படி, கடையை விரித்தோம். கொள்வார் இல்லை. கட்டிவிட்டோம். ஆதலால், இனி இரண்டரை கடிகை நேரம் உங்களுடைய ஊனக் கண்களுக்குத் தோன்றமாட்டோம். நீங்கள் இந்தத் தீபத்தினைக் கடவுள் எனக்கொண்டு ஜீவகாருண்ய நெறியில் வழிபட்டுய்யுங்கள். பிறகு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வருவார்.

திருவருட்செங்கோலாட்சி செலுத்துவார்; அகவினத்தார்க்குச் சாகாவரமும், ஏனையோர்க்குப் பரிபாக நிலையையும் அளிப்பார்" என்று உபதேசித்தார்கள். தாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அரசாங்கத்தினர் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின் ஆண்டவர் அருள் செய்வார் என்று கட்டளையிட்டு, எல்லோருக்கும் மன அமைதியை உண்டுபண்ணி, ஸ்ரீமுக ஆண்டு, (ஆங்கிலம்) 1874 வருடம் தைத் திங்கள் 19-ம் நாள் புனர்பூசமும் பூசமும் கூடும் சமயம் வெள்ளிக்கிழமையன்று இரவு பன்னிரண்டு மணிக்கு மேட்டுக் குப்பத்திலுள்ள சித்திவளாகத் திருமாளிகையினுள் நுழைந்து திருக்காப்பிட்டுக் கொண்டார்கள்.

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ் செயல்க ளாலே - திருவருட்பா 4988

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

115. அரவந் தீண்டுதலை யறிவித்தல்

கோட்டகம் என்னும் ஊரிலுள்ள பள்ளிக்கூடத்தான் என்பவருடைய சொப்பனத்தில் வள்ளலார் தோன்றி, "அன்பனே! உன்னை இன்னும் மூன்று நாட்களில் அரவம் தீண்டும்; அதுபற்றி நீ ஒன்றும் அஞ்சவும் வேண்டாம்; ஔடதங்கள் உண்ணவும் வேண்டாம்; அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளால் அது தானே குணப்படும்" என்று கூறி மறைய பின்னர் அம்மாதிரியே அனைத்தும் நடந்தன.

116. அரசாங்கத்தார் உண்மையுணர்தல்

வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்டதன்பின் சில நாட்கள் கழித்து அரசாங்க உத்திரவின் கீழ் கலெக்டரும், டாக்டரும், தாசில்தாருடன் மேட்டுக்குப்பத்திற்கு வந்தனர். வந்நவர்களுள், கலெக்டரும், அவருடன் வந்த டாக்டரும் பேசாதிருந்தனர். ஆனால் தாசில்தார் வேங்கடராமய்யர் மட்டும் தமது அதிகார முறையில் ஆங்குள்ள அன்பர்களை பலவகையான இழிமொழிகளாற் கூறி, கதவைத் திறவுங்கள்; இல்லையானால் உங்கட்கு அபராதம் நேரிடும்; என்று அதட்டி மிரட்டினார். அத்துரைமகனாரிருவரும் சித்திவளாகத்தை இரண்டு மூன்று முறை சுற்றிப் பார்த்துவிட்டுப் "பெரியோர்களைப் பற்றி நாம் ஒன்றுங் குறைகூறுதல் கூடாது" என்னும் உயரிய நோக்கோடு, அன்பர்களை அழைத்து "நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு அவ்வன்பர்களும் "ஐயா அவர்கள் கூறியபடி அன்னதானஞ் செய்தலும், ஆண்டவரை வணங்குதலும் செய்கிறோம்" என்று பதில் கூறினர்.

அதனைக் கேட்ட துரைமகனாரிருவரும், மகிழ்வெய்தி அன்றைய தினம் ஆங்கு நடக்கவேண்டிய அன்னதானச் செலவுக்காக ரூபாய் இருபதும் கொடுத்துவிட்டுப் போயினர். தாசில்தார் தாம் வந்த குதிரை மீதேறிக்கொண்டு செல்ல ஒரு சிறிது தூரத்திற்கெல்லாம் குதிரை மிரண்டு ஐயரை முட்புதரில் தள்ளிவிட்டது. முன்னே சென்ற துரைமகனாரிருவரும் திரும்பிப் பார்க்க தாசில்தார் வாராமைகண்டு கொஞ்சதூரம் பின் வந்து பார்க்க, ஐயர் முள்ளில் விழுந்து பரிதபித்துக் கொண்டிருந்தார், 'இவர் அங்குப் பல இழிமொழிகளைப் பேசினாரே அதனுடைய பலந்தான் இது" என்று அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு ஐயரை வெளியேற்றிக் கட்டைவண்டியில் கொண்டு போயினர்.

117. "திரு மருதூர்" என்று மறைந்தார்

நாகூர் சுவாமிநாத செட்டியார் முதலிய சில அன்பர்கள் வடலூருக்கு வந்து தரிசனஞ் செய்து கொண்டு அன்றிரவே ஊருக்குப் புறப்பட வழியிலே கள்ளர் பயமிகுந்த விடத்தில் அவர்களுடைய வண்டிக்குப்பின் ஒரு சிறுவன் வந்து கொண்டிருந்தான். அதனைக் கண்ட அவர்கள் "வண்டியின் பின்னே தொடர்ந்துவரும் நீ எந்த ஊர் ?" என்று வினவுதலும் "நான் இருப்பது மருதூர்" என்று சொல்லி மறைந்தனர். மறைந்த பிறகுதான் அவர்கட்கு கூட வந்தவர் நம் வள்ளலார் என்பது புலனாயிற்று. இங்ஙனம் சுவாமிகள் இன்றும் தம்மை நம்பும் அன்பர்கட்குத் தோன்றாத் துணையாயிருந்து வேண்டுவன வேண்டியாங்கு அருள் செய்து வருகின்றார்கள்.

அருட்பெருஞ்ஜோதி

கருணையிலா ஆட்சி கடுகி யொழிக அருணயந்த நன்மார்க்க ராள்க-தெருணயந்த நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்து எல்லோரும் வாழ்க இசைந்து.

திருச்சிற்றம்பலம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அடிகள் வரலாற்றுக் குறிப்புகள்

காலம்	:	1823-1874
பிறப்பு	:	5-10-1823, சுபானு, புரட்டாச் 21, ஞாயிறு
சித்தி	:	30-01-1874, ஸ்ரீமுக, தை 19, வெள்ளி.
பிறந்த ஊர்	:	மருதூர், (சிதம்பரம் வட்டம், தென்னார்க்காடு மாவட்டம்) வடலூரிருந்து சுமார் 7 மைல்.
பெற்றோர்	:	இராமைய பிள்ளை சின்னம்மையார் (ஆறாவது மனைவி)
உடன் பிறந்தோர்	:	சபாபதி பிள்ளை, பரசுராம பிள்ளை சுந்தரம் அம்மையார், உண்ணாமுலை அம்மையார். (அடிகள் ஐந்தாவது பிள்ளை)
இயற்பெயர்	:	இராமங்கம்
சிறப்புப் பெயர்	:	**திருவருட்பிரகாச வள்ளலார்**
உறைந்த இடங்கள்	:	சென்னை (1825-1858) கருங்குழி (1858-1867) வடலூர் (1867-1870) மேட்டுக்குப்பம் (1870-1874)
இயற்றிய நூல்கள்	:	1. மனுமுறைகண்ட வாசகம். 2. ஜீவகாருண்ய ஒழுக்கம்.
பதிப்பித்த நூல்கள்	:	1. ஒழிவிலொடுக்கம் (1851) 2. தொண்டமண்டல சதகம் (1855) 3.சின்மய தீபிகை (1857)
அருளிய பாடல்கள்	:	**திருஅருட்பா (ஆறு திருமுறைகள்)** ஆறு திருமுறைகளிலும் சேராதவை.
நிறுவிய நிலையங்கள்	:	1. சன்மார்க்க சங்கம் (1865) 2. சத்தியதருமச்சாலை (1867) 3. சத்தியஞானசபை (1872) 4. சித்திவளாகம் (1870)
நிறுவத் திட்டமிட்டவை	:	1. வைத்தியசாலை 2. சாஸ்திரசாலை 3. உபகாரசாலை 4. விருத்திசாலை 5. உபாசனாசாலை 6. யோகசாலை 7. விவகாரசாலை

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

8. சன்மார்க்க போதினி 1867
9. சமரச வேத பாடசாலை 1872
10. சன்மார்க்க விவேகவிருத்தி 1867-திங்களிதழ்.

ஞானவாழ்க்கை : 9ஆம் அகவையில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பெற்றார்.
12ஆம் அகவை முதல் முறையான
ஞான வாழ்க்கையைத் தொடங்கினார்.

வழிபடு கடவுள் : முருகன்.
வழிபடு குரு : திருஞானசம்பந்தர்.
வழிபடு நூல் : திருவாசகம்.
(இஃது இளமையில் அமைத்துக்கொண்ட முறை)
முதல் **முருக உபாசகர்** (கந்தகோட்டம், திருத்தணிகை)
பின்னர் **சிவபக்தர்** (ஒற்றியூர்)
அதன் பின்னர் **நடராச அன்பர்** (தில்லை)
முடிவில் **அருட்பெருஞ்சோதி அடியர்** (வடலூர்)

அற்புதங்கள் : ஐந்து திங்கள் பருவத்திலேயே சிதம்பர ரகசியத்தை வெட்டவெளியாகக் காட்டப் பெற்றது. பிள்ளைப் பருவத்தே திண்ணையிலிருந்து விழாமல் காக்கப் பெற்றது. வடிவுடையம்மை அண்ணியார் வடிவில் தோன்றி உணவளித்தது தண்ணீர் விளக்கெரிந்தது. கனவிலும் நனவிலும் பல சமயங்களில் பல இடங்களில் இறைவன் தோன்றி அருள் செய்தது.

பெற்ற பேறுகள் :

- இறைவனால் பிள்ளைப்பட்டம் சூட்டப்பெற்றது.
- அடிமுடி காட்டப்பெற்றது.
- அடிமுடி சூட்டப்பெற்றது. (திருவடி தீக்கை)
- நயன, வாசக, பரிச, அத்தமத்தகசையோக தீக்கைகள் பெற்றது.
- சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் பெற்றது.
- கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி பெற்றது.
- பொன் செய்யும் ஆற்றல் பெற்றது.
- ஐந்தொழில் ஆற்றல் பெற்றது.
- இறைவனால் மணிமுடி சூட்டப்பெற்றது.
- செங்கோல் அளிக்கப் பெற்றது.
- கங்கணம் அணிவிக்கப் பெற்றது.
- ஆழி அளிக்கப் பெற்றது.
- அம்பலத் தரசாட்சி அளிக்கப் பெற்றது.
- நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு அணுகாது மரணமிலாப் பெருவாழ்வு பெற்றது.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயநம சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

- அடிகள் தம் உடம்பை மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாக்கவில்லை. எவ்வாறு மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் சிற்சபையில் (நடராசர் சந்நிதியில்) புகுந்து மறைந்தாரோ, **அவ்வாரே அடிகள் சித்திவளாகத் திருமாளிகையில் தமது திருவறைக்குட் புகுந்து ஒளி தேகமாக அரு, உரு, அருஉருவ நிலையில் திருக்காப்பிட்டுக் கொண்டு இரண்டர கலந்து சித்திப்பெற்றார் .**

கொள்கைகள் :

1. கடவுள் ஒருவரே
2. அவர் அருட்பெருஞ்சோதியர்
3. சிறுதெய்வ வழிபாடு கூடாது
4. அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது.
5. புலால் உண்ணலாகாது.
6. சாதி சமய முதலிய வேறுபாடுகள் கூடா.
7. எவ்வுயிரியயும் தம் உயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
8. ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருணிய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.
9. புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா.
10. மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவேண்டும்.
11. காதுகுத்துதல் மூக்குக்குத்துதல் வேண்டா.
12. கணவன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டா.
13. மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்ய வேண்டா.
14. இறந்தவரைப் புதைக்கவேண்டும். எரிக்கக்கூடாது.
15. கருமாதி, திதி முதலிய சடங்குகள் செய்ய வேண்டா.
16. எதிலும் பொது நோக்கம் வேண்டும்.

***

<u>அடிகள் வரலாற்றுக் காலக்குறிப்புகள்</u>

1823-10-05	(சுபானு, புரட்டாசி, 21, ஞாயிறு) பிறப்பு
1824	சிதம்பர தரிசனம், தந்தையார் இராமைய பிள்ளை இறப்பு.
1825	குடும்ப சென்னைக்குச் சென்றது.
1832	இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றது (அகவை 9).
1835	முறையான ஞானவாழ்க்கையைத் தொடங்கியது (அகவை 12)
1849	தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளின் மாணவரானது.
1850	திருமணம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1851	(விரோதிகிருது, ஐப்பசி) ஒழிவிலொடுக்கம் பதிப்பித்தது.
1854-6-	(ஆனந்த, ஆனி) மனுமுறைகண்டவாசகம் வெளிவந்தது.
1855	(இராக்ஷச, மார்கழி) தொண்டமண்டல சதகம் பதிப்பித்தது.
1857	(பிங்கள, கார்த்திகை) சின்மய தீபிகை பதிப்பித்தது.
1858	சென்னை வாழ்வை நீத்தது.கருங்குழியில் உறையத் தொடங்கியது.
1865	சன்மார்க்கம் சங்கம் நிறுவியது.
1867-1-16	(அக்ஷய, தை,5) திருப்பா திரிப்புயூர்க்கு அடுத்த உண்ணாமுலைச் செட்டிச் சாவடிக்கு அருகில் ஒரு திருவிழாக் கூட்டத்தில் பிரமசமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீதரஸ்வாமிநாயக்கருடன் விக்கிரக வழிபாடு பற்றி வாது.
1867-2-2	(அக்ஷய, தை, 22, சனி) தருமச்சாலை கட்டுவதற்கு வடலூர்க் குடிகள் இனாமாக நிலம் விட்டது.
1867-2-	(அக்ஷய, தை) திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற் பதிப்பு வெளி வந்தது.
1867-5-23	(பிரபவ, வைகாசி, 11, வியாழன்) சத்திய தருமச்சாலை தொடங்கியது சாலை விளம்பரம் வெளியிட்டது.
1867	(பிரபவ) சன்மார்க்க போதினி பாடசாலை பற்றிய அறிவிப்பு.
1869	(சுக்கில, வைகாசி) ஆ டூர் சபாபதி சிவாசாரியார் வடலூர் வந்து சேர்ந்தது.
1870	(பிரமோதூத)மேட்டுக்குப்பத்தில் உறையத் தொடங்கியது.
1870-4-27	(பிரமோதூத, சித்திரை, 16, புதன்) சன்மார்க்க சங்கம் விளங்கும்காலம் என்னும் பத்திரிக்கை
1870-10-26	(பிரமோதூத, ஐப்பசி, 11, புதன்) அன்பர்களுக்கு இட்ட சாலைக் கட்டளை
1871-3-30	(பிரமோதூத, பங்குனி, 18, வியாழன்) சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை.
1871-4-12	(பிரஜோற்பத்தி, சித்திரை,1, புதன்) சன்மார்க்கப் பெரும்பதி வருகை என்னும் பத்திரிக்கை.
1871	(பிரஜோற்பத்தி) சத்தியஞானசபை கட்டத் தொடங்கியது.
1872-1-11	(பிரஜோற்பத்தி, மார்கழி, 29, வியாழன்) சமரச வேத பாட சாலை பற்றிய அறிவிப்பு.
1872-1-25	(பிரஜோற்பத்தி, தை, 13, வியாழன்) ஞானசபையில் முதற் பூச விழா சபை விளம்பரம் வெளியிட்டது.
1872-3-9	(பிரஜோற்பத்தி, மாசி, 28, சனி) சாலையிலுள்ளவர்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளை.
1872-5-12	(ஆங்கிரச, வைகாசி, 1, ஞாயிறு) சன்மார்க்கப் பிரார்த்தனை (கல்பட்டு இராம-லிங்க சுவாமிகள் விண்ணப்பம். நிலையங்களுக்குப் பெயர் மாற்றம்
1872-7-18	(ஆங்கிரச, ஆடி, 5, வியாழன்)சபை வழிபாட்டு விதி வகுத்தது. நிலையங்களுக்குப் பெயர் மாற்றம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1872-11-25	(ஆங்கிரச, கார்த்திகை, 12, திங்கள்) சித்திவளாகத்திலும் தருமச் சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிக்கை
1873-9-8	(ஸ்ரீமுக, ஆவணி, 25,திங்கள்) சித்திவளாக விளம்பரம் (வதந்தி எச்சரிப்பு)
1873-10-22	(ஸ்ரீமுக, ஐப்பசி, 7, புதன், பகல் 8 மணி) முதன் முதலாகச் சன் மார்க்கக் கொடி கட்டியது.பேருபதேசம்.
1873-11-	(ஸ்ரீமுக, கார்த்திகை) சித்திவளாகத்தில் திருவிளக்கு வழிபாடு ஏற்படுத்தியது.
1874-1-30	(ஸ்ரீமுக, தை, 19, வெள்ளி) சித்திபெற்றது.

***

அடிகளின் சமகாலப் பெரியோர்களும் புலவர்களும்

(அடிகளோடு தொடர்புடையோர் மட்டும்)

பெரியோர்கள்:

1. தண்டபாணி சுவாமிகள் (28-11-1839 - 5-7-1898)
2. கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் (02-12-1831 - 1881)
3. முத்துகிருஷ்ண பிரம்மம் (1815)
4. திருச்சிற்றம்பல ஞானிகள்
5. ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள்
6. மதுரை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஆறுமுக சுவாமிகள்
7. மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள்
8. திருவாவடுதுறை ஆதீனம் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள்
9. தருமபுர ஆதீனம் வேளூர் கட்டளை விசாரணை உலகநாதத் தம்பிரான் சுவாமிகள்

புலவர்கள் :

1. திரிசிரபுரம் மகாவித்துவான் (மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்) 6-4-1815 - 1-2-1876
2. ஆறுமுக நாவலர் 18-12-1822 - 5-12-1879
3. தொழுவூர் வேலாயுத முதலியார் 1832- 22-2-1889
4. பூவை அட்டாவதானம் (கலியாண சுந்தர யதீந்திரர்) 10-5-1854 -1918
5. மகாவித்துவான் காஞ்சிபுரம் (சபாபதி முதலியார்) 1792 - 1871
6. புரசை அட்டாவதானம் (சபாபதி முதலியார்)1886
7. மாயூரம் முன்சீப் (வேதநாயகம் பிள்ளை) 11-10-1826 - 21-7-1889
8. மயிலை மகாவித்துவான் (தணிகாசல முதலியார்) 1918
9. நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் - - -

***

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அடிகளால் பாடப்பெற்ற பதிகங்கள் - திருவருட்பாப் பாடல் பெற்றவை

1. சென்னைக் கந்தகோட்டம்
2. திருவொற்றியூர்
3. திருத்தணிகை
4. திருவதாயம்
5. திருமுல்லைவாயில்
6. திருஎவ்வுள்
7. புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோயில்)
8. திருவாரூர்
9. திருக்கண்ணமங்கை
10. திருவதிகை
11. திருவண்ணாமலை
12. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
13. திருத்தில்லை (சிதம்பரம்)
14. வடலூர் (உத்தரஞான சிதம்பரம்)

இவற்றுள் கந்தகோட்டம், திருத்தணிகை இரண்டும் முருகத்தலங்கள், திருவொற்றியூர், திருவலிதாயம், திருமுல்லைவாயில், புள்ளிருக்குவேளூர், திருவாரூர், திருவதிகை, திருவண்ணாமலை, திருமுதுகுன்றம், சிதம்பரம் ஆகிய ஒன்பதும் சிவத்தலங்கள், திருஎவ்வுள் (திருவள்ளூர், சென்னை), திருக்கண்ணமங்கை இரண்டும் திருமால் தலங்கள், வடலூர் சோதித்தலம். இப்பதினாங்கும் திருவருட்பாப் பாடல்பெற்ற தலங்களாம். இவற்றைத் தவிர சென்னை ஏழுகிணறு துலுக்காணத்தம்மன் கோயில், குறிஞ்சிப்பாடிக்கு அருகே உள்ள சிங்கபுரிக் கந்தர் கோயில், கருங்குழி விநாயகர் கோயில் இம்மூன்றையும் பாடியிருக்கிறார்.

திருவருட்பா வைப்புத் தலங்கள்

திருவருட்பா மூன்றாம் திருமுறை விண்ணப்பக் கவெண்பாவில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கையுமே தலமுறையிற் குறிப்பிட்டு அவ்வத்தலங்களில் கோயில் கொண்டுள்ள பெருமானைத் தனித்தனியே விளித்து விண்ணப்பிக்கிறார். ஆதன் 274 தலங்களுள், திருவருட்பாப் பதிகங்கள் பெற்ற 9 தலங்கள் நீங்கலாக மற்ற 265 தலங்களும் திருவருட்பா வைப்புத் தலங்களாம்.

அடிகளால் பாடப்பெற்ற தெய்வங்கள்

விநாயகர்	:	கருங்குழி
முருகன்	:	கந்தகோட்டம், திருத்தணிகை, திருஒற்றியூர், புள்ளிருக்குவேளூர், சிங்கபுரி
சிவபெருமான்	:	திருஒற்றியூர், திருவிதாயம், திருமுல்லைவாயில்,புள்ளிருக்குவேளூர், திருஆரூர், திருஅண்ணாமலை, திருமு.து.குன்றம்
நடராசர்	:	தில்லை
அம்மையார்	:	சென்னை ஏழுகிணறு துலுக்காணத் திரேணுகை, திருஒற்றியூர் வடிவுடை யம்மை, தில்லைச் சிவகாமியம்மை, திருஅதிகைப் பெரியநாயகியம்மை.
திருமால்	:	திருஎவ்வுள் வீரராகவர் (திருவள்ளூர், சென்னை)
இராமர்	:	பொது
திருமகள்	:	திருக்கண்ணமங்கைத் தாயார்
கலைமகள்	:	பொது.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

இளமையில் முருக உபாசகராகவும் பின்பு சிவபக்தராகவும், பின்னர் நடராசர் மீது காதல்கொண்டவராகவும் திகழ்ந்த அடிகள் முடிவில் அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் அடியராயினார். இறைவனை ஒளி (சோதி) வடிவில் கண்டார். அடிகளின் முடிந்த முடிவான கொள்கை ஒளி-அருட்பெருஞ்சோதி-வழிபாடே.

***

அடிகளால் பாடப்பெற்ற ஞானிகள்

சமயகுரவர் நால்வர் திருவோத்தூர் சிவஞான தேசிக சுவாமிகள்

அடிகளின் அருளிச்செயல்களின் முழு தொகுப்பு

1. பாடல்கள் - திருஅருட்பா. ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றவை.
2. பாடல்கள் - ஆறு திருமுறைகளிலும் சேராதவை.
3. விண்ணப்பங்கள் - அடிகள் இறைவனிடத்துச் செய்து கொண்டவை (உரை நடை)
4. கடிதங்கள் (திருமுகங்கள்) - அடிகள் தம் கைப்பட எழுதியவை.
5. கட்டளைகள் - தாம் நிறுவிய நிலையங்களின் நடைமுறைகளைக் குறித்து எழுதியவை
6. பத்திரிகைகள் - சுற்றறிக்கைகளும், அழைப்பிதழ்களும்
7. உபதேசங்கள் - உடன்கூட்டத்தாராலும் கேட்டவர்களாலும் எழுதி வைக்கப்பெற்றுள்ள குறிப்புகள்.
8. உரைநடை நூல்கள் - 1. மனுமுறைகண்ட வாசகம்
   2. ஜீவகாருண்ய ஒழுக்கம்.
9. உரைகள் -
   1. தமிழ்' என்ற சொல்லுக்கு வரைந்த உரை.
   2. பெரியபுராணம் முதற் பாடல் முதற் சொல்லாகிய 'உலகெலாம்' என்பதற்கு வரைந்த விளக்க உரை.
   3. ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி.
   4. தொண்ட மண்டல சதகத்தின் நூற்பெய ரிலக் கணமும், கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் செய்த உரையும்.
   5. பொன்வண்ணத் தந்தாதியின் இருபத்திரண்டாம் பாடலுக்குச் செய்த உரை.
   6. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை.
10. பதிப்பித்த நூல்கள் -
    1. ஒழிவிலொடுக்கம் (1851)
    2. தொண்டமண்டல சதகம் (1855)
    3. சின்மய தீபிகை (1857)
11. பிற ஔஷதிகள் - மருந்துச் சரக்குகளின் குண அட்டவணை முதலியன.

***

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பா வரலாறும் ஆராய்ச்சிக் குறிப்புகளும்

(ஊரன் அடிகளால் பதிப்பு 1970 - 1972 குறிப்பு)

திருவருட்பா என்னும் பெயர்

திருவருட்பா என்பது திரு+அருள்+பா எனப்பிரிந்து, திருதெய்வத் தன்மை உடைய, அருள்-அருளால் பாடப்பெற்ற, பா-பாக்கள் எனப் பொருள்படும் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. பா என்பது பாக்களால் ஆன நூலுக்குப் பெயராயிற்று. திரு என்பது அழகு, செல்வம், திருமகள், மேன்மை, சிறப்பு, நல்வினை தெய்வத்தன்மை எனப் பொருள்படும்.ஈண்டு தெய்வத்தன்மை என்பதே பொருந்தும்.

அருள் நூல்களைத் திரு என்னும் அடைமொழி சார்ந்தி வழங்குதல் தமிழ் மரபு. திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருக்கோவையார், திருவாய்மொழி என வருவன காண்க. திருவென்பது, பொருளுடைமையும் பொருள்கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி'' என்பர் பேராசிரியர்.எனவே இன்பம் வரினும் துன்பம் வரினும் இரண்டையும் ஒப்பக்கருதும் மனச்செம்மையே திரு என்னும் சொல்லுக்குரிய பொருள் என்பது பேராசிரியர் கருத்தாதல் பெறப்படும்.

செல்வக்களிப்பால்மையலுறாதும்துன்பமிகுதியால்சோர்வுறாதும்இன்பதுன்பம்இரண்டையும் ஒப்பக் கருதுவோரே திருத்தகவிற்றாகிய உள்ளமுடையவராவர் திருத்தகவிற்றாகிய உள்ளமே திருவுள்ளம் அத்தகைய சான்றோர்களே கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்டோர் திருத்தகவிற்றாகிய உள்ளத்தையும் திருநின்றசெம்மையையும் தந்து சென்றடையாத திருவுடையானாகிய இறைவனது திருவருளின்பத்தைக் கொடுக்கும் நூல்களே திருவுடைய நூல்கள் அத்தகைய திருவுடைய நூல்களில் திருவருட்பாவும் ஒன்று.

அடிகளின் அருளிச் செயல்களுக்குத் திருவருட்பா எனப் பெயரிட்டவர் அவற்றைத் தொகுத்தவரும், திருமுறைகளாக வகுத்தவரும், முதன் முதற் பதிப்பித்தவரும் அடிகளின் மாணாக்கருமாகிய உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாராவர். அடிகளது அருட்பாடல்கள் திருவருட்பா எனப் பெயர் பெற்றமையை வேலாயுதனார் தாம் பாடிய திருவருட்பா வரலாற்றில் (பாடல் 34,35) அழகாகக் கூறுவர்.

பின்னிணைப்பிற் காண்க.மூவர் முதகளின் அருளிச்செயல்கள் தேவாரம் எனப் பெயர் பெற்றன.மாணிக்கவாசகரின் அருளிச்செயல்கள் திருவாசகம் எனப் பெயர் பெற்றன.அருண் கிரியாரின் அருட்பாடல்கள் திருப்புகழ் எனப் பெயர் பெற்றன.பட்டினத்தார், தாயுமானவர் அருளிய பாடல்கள் இவ்வாறு தனியாகச் சிறப்புப் பெயர் பெறாது அவற்றை அருளிய ஆசிரியர்களின் பெயர்களாலேயே பட்டினத்தார் பாடல் திரட்டு தாயுமானவர் பாடல் திரட்டு எனப் பெயர் பெற்றன.

பின்னாளில் குமரகுருபரர் சிவப்பிரகாசர் முதலியார் பாடல்களும் அவர்கள் பெயர்களாலேயே குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு சிவப்பிர்காச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு என வழாங்கலாயின. ஆனால் நம் அடிகள் திருவாய்மலர்ந் தருளிய பாடல்களின் திரட்டோ திருவருட்பா என்னும் ஒரு தனிச் சிறப்புப் பெயரைப் பெற்றது.

***

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அருளப்பெற்ற காலம்

அடிகள் தம் ஒன்பதாம் ஆண்டில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றார். [1]ஆண்டாறு மூன்றாண்டடில் ஆண்டு கொண்ட அருட் கடலே என் உள்ளத்து அமர்ந்த தேவே, ஆதியிலே எனை யாண்டென் அறிவகத்தே அமர்ந்த அப்பா - [2]தூண்டா விளக்கே திருப்பொதுவிற் சோதி மணியே ஆறொருடுமூன் றாண்டாவதிலே முன்னென்னை ஆண்டாய் என்றும்...

பன்னிராண்டாம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையை தொடங்கினார். [3]பன்னிரண்டாண்டு தொடங்கி நான் இற்றைப் பகல் வரை அடைந்தவை எல்லாம் உன்னிநின்றுரைத்தல் உலப்புறாது அதனால் ஒரு சில உரைத்தான் என்றும்.

[4]பன்னிராண்டு தொடங்டி இற்றை பகலின் வரையுமே படியில் பட்ட பாட்டை நினைக்கில் மலையும் தரையுமே துணியா தந்தப் பாடு முழுதும் சுகமதாயிற்றே துரையே நின்மெய் அருளிங்கெனக்குச் சொந்த மாயிற்றே என்றும்.

[5] ஈராண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே எளியேந் பட்ட பாட்டை நினைக்கில் இரும்பும் கரையு மே - ஏறாய் அந்தப் பாடு முழுவதும் இன்ப மாயிற் றே என்று சிறுகாலை பருவத்திலேயே அருட்பாடல்களை பாட தொடங்கினார்.

[6]உருவத்திலே சிறியேனாகி ஊகத்தில் ஒன்றுமின்றித் தெருவத்திலே சிறு கால்வீசி ஆடிடச் சென்ற அந்தப் பருவத்திலே நல் லறிவளித்தே உனைப் பாடச் செய்தாய் 'பாடும் வகை அணுத்துணையும், பரிந்தறியாச் சிறிய பருவத்தே கத்தெரிய அணிந்தணிந்து பாடும் வகை புரிந்து. [8]'ஐயறிவிற் சிறிதும் அறிந்தனுபவிக்கத்தெரிய தழுதுகளித் தாடுகின்ற அப்பருவத் தெளியேன் மெய்யறிவிற் சிறந்த வரும் களிக்க உனைப்பாடி விரும்பி அருள்நெறி நடக்க விடுத்தனை [9]ஏதும் ஒன்றறியாப் பேதையாம் பருவத் தென்னை ஆட்கொண்டெனை உவந்தே ஓதும் இன்மொழியால் பாடவே பணித்த ஒருவனே [10]'வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித்திரியும் மிகச்சிறிய பருவத்தே வியந்து நினை நமது பெம்மான் என்றடி குறித்துப் பாடும் வகை புரிந்த பெருமானே [11]வீதியிலே விளையாடித் திரிந்த பிள்ளைப் பருவம் மிகப் பெரிய பருவம் என வியந்தருளி அருளாம் சோதியிலே விழைவுறச்செய் தினிய மொழிமாலை தொடுத்திடச்செய் தணிந்துகொண்ட துரையே என்னும் அகச்சான்றுகளால் வீதியிலே விளையாடித் திரியும் பிள்ளைப் பருவத்திலேயே அடிகள் அருட்பாடல்களைப் பாடத்தொடங்கினார் என்பது விளங்கும், பாடிப்பணிந்து வழிபட்டதன் பின்பே ஒன்பதாம் ஆண்டில் ஆட்கொள்ளப் பெற்றனர்.

ஆதலின் பாடத் தொடங்கிய காலம் ஐந்தில் இருந்து, எட்டாம் ஆண்டு எனக்கொள்ளலாம். ஏழு, எட்டு ஆண்டில் பாடத்தொடங்கிய காலம், ஏழு, எட்டாம் ஆண்டு எனக்கொள்ளலாம்.ஏழு, எட்டு ஆண்டில் பாடத்தொடங்கிய பெருமான் ஐம்பத்தோராம் அகவையில் சித்தி பெறும் வரை பாடிக்கொண்டிருந்தார்.எனவே அடிகளது அருள் வாழ்வில் நாற்பத்து நான்கு ஆண்டு காலத்தில் (51-7=44) பற்பல சமயங்களில் பல்வேறு இடங்களில் அருளிச் செய்யப் பெற்றனவே திருவருட்பாவாம்.

***

.....

1. 1651 2. 3639 3. 3593 4. 5083 5. 5084 6. 261 7. 2461 8.2474 9. 3659 10.3867 11. 3885

*தொல்காப்பியம் பொருளாதிகாரம், மெய்ப்பாட்டியல் ''பிறப்பே குடிமை'' என்னும் சூத்திர உரை.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருமுறை வகுப்பு

திருமுறை என்னும் பெயர்

'திரு' என்பதன் பொருளை முன்னர்க் கண்டோம் 'முறை' என்பது நூல், பழைமை, நீதி, கூட்டு, கட்டு, முறைமை எனப் பொருள்படுமென பிங்கல நிகண்டு கூறும்[2] இவையேயன்றி இடைச்சொல்லாகவும் உறவு ஒழுக்கம் ஒழுங்கு வரிசை தரம் என்னும் பொருள்களிலும் வழங்கு. ஈண்டு முறை என்பது நூன் பகுதிக்குப் பெயராயிற்று.மூவர் தேவாரத்திற்கும் அடங்கன்முறை எனப்பெயர் சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் திருமுறைகள் எனப் பெயர்பெற்றன. பன்னிரு திருமுறை என்பது பெருவழக்கு.திருவருட்பாவில் திருமுறை என்பது அதன் பகுதிக்குப் பெயராயிற்று.

திருமுறைகள் வகுக்கப்பெற்ற காலம்

திருவருட்பா முதல் நான்கு திருமுறைகைள் முதற் பதிப்பை வேலாயுதனார் 1867 ஆம் ஆண்டிற் பதிப்பித்தார்.இப்பதிப்பை அவர் செம்மை செய்து அமைதிப்படுத்திய காலத்தில்தான் திருமுறைகள் வகுக்கக்பெற்றன. ஐந்தாம் திருமுறையும் அவராலேயே முறைப்படுத்தப்பெற்று 1880ஆம் ஆண்டில் அச்சிடப்பெற்றது.ஆறாம் திருமுறை வேலாயுதனாரால் முறைப்படுத்தப் பெறவில்லை.ஐந்து திருமுறைகளிலும் சேராத பாடல்களைத் தொகுத்து ஆறாம் திருமுறை 1885ஆம் ஆண்டில் சோடசாவாதானம் சுப்பராய செட்டியார் பார்வையில் வெளியிடப் பெற்றது.

திருமுறைகளின் தொகை

அடிகளின் அருட்பாடல்களைத் தொகுத்த வேலாயுதனார் அவற்றை ஆறு திருமுறைகளாக வகுத்தார்.திருமுறைகள் ஆறு எனக் கொண்டதற்கு அவர் மூன்று ஏதுக்களைக் கூறுகிறார். (1) திருவைந்தெழுத்தோடு ஓங்காரத்தைச் சேர்க்க **'ஓம் சிவாயநம'** என **ஓங்கார பஞ்சாக்கரத்தின் எழுத்து ஆறாகும்.** அவ்வோங்கார பஞ்சாக்கரத்தின் உண்மையை விளக்குவதாலும் (2) ஆறுசமயத்துள்ளாரும் பிறரும் அறியும் பொருளும் அவர் அறியாப் பொருளும் காட்டுவதாலும், (3) அறு அத்துவாக்களின்மேல் உறுபொருளைக் காட்டுவதாலும் ஆறு திருமுறைகளாக ஆயின எனக் கூறுகிறார். (திருவருட்பா வரலாறு 37,38,39) திருவெழுத்து ஆறு, சமயம் ஆறு, அத்துவா ஆறு என்பனவற்றை உட்கொண்டு திருமுறைகள் ஆறென வேலாயுதனார் வகுத்தார்.

திருமுறைகள் வகுக்கப்பெற்ற முறை

திருமுறைகளும் அவற்றின் பதிகங்களும் அவை பாடப்பெற்ற கால வரிசையில் வரலாற்று முறையில்-வகுக்கவும் அடைவு செய்யப் பெறவும் இல்லை பொருளமைதி கருதியும் வகுத்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. திருமுறைகளின் தொகை ஆறு என உள்ளத்தில் அமைத்துக்கொண்டு திருமுறைகளை வகுக்கத் தொடங்கினார். தமது பாடல்களை வெளியிட, முதலில் இசைவளிக்காது மறுத்து வந்த அடிகள் பின்பு ஒருவாறு இசைந்து ஒற்றியூர், சிதம்பரப் பாடல்களை வெளிப்படுத்த அனுமதி அளித்தருளினார். அண்மையிற் பாடியவற்றில் அதி தீவிரக் கருத்துகள் அடங்கியவற்றைப் பின்னொரு சமயம் வெளியிட்டுக்கொள்ளலாமெனவும், தற்போது வெளியிடாது நிறுத்திவைக்குமாறும் கட்டளையிட்டருளினார்.

.....

2. கோசமும் பழைமையும் ஊழும் கூட்டும்
ஆர்ப்பும் முறைமையும் முறை எனல் ஆகும்-பிங்கலந்தை 3983

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அடிகளது கட்டளையின் வண்ணமே அத்தகைய பாடல்களை நிறுத்தி அவற்றையும், இனி அடிகள் பாடக் கூடியவற்றை ஆறாம் திருமுறையின் பாற்படுத்தினார் (திருவருட்பா வரலாறு 45). ஆறாம் திருமுறையாக நிறுத்திக் கொண்டவை தவிர எஞ்சியவற்றை ஐந்து திருமுறைகளாக்கினார். இளமையில் சென்னையில் இருந்த காலத்திற் பாடப்பெற்ற திருத்தணிகைப் பதிகங்கள் கைக்குக் கிடைக்கப்பெறாது அச்சுக்குச் சித்தமாய் இன்மையின் அவற்றையும் பின்னர் வெளியிடக் கருதி ஐந்தாம் திருமுறையாகக் கொண்டார். இவ்வாறு நிறுத்தி வைத்த ஆறாம் திருமுறையும், சித்தமாகாத ஐந்தாம் திருமுறையும் நிற்க, எஞ்சியவற்றை முதல் நான்கு திருமுறைகளாக வகுத்தார்.

பலவாகிய அடிகளையும், பாக்களையும் கொண்டு காப்புச் செய்யுள்களைப் பெற்றுத் தனித்தனி நூல்களாகக் கொள்ளத்தக்க திருவடிப்புகழ்ச்சி விண்ணப்பக் கலிவெண்பா நெஞ்சறிவுறுத்தல் சிவநேச வெண்பா மகாதேவமாலை திரு வருண்முறையீடு வடிவுடை மாணிக்கமாலை இங்கித மாலை ஆகிய எட்டினையும் முதல் திருமுறையாக வகுத்தார். தில்லையைக் குறித்த எட்டு மாலைகள் நால்வரைப்பற்றிய நான்கு மாலைகள் ஆகிய பன்னிரு மாலைகளையும் நான்காம் திருமுறையாக்கினார்.ஒற்றியூரைக் குறித்த பத்தொன்பது அகப்பொருட் பதிகங்களையும் மூன்றாம் திருமுறையாகச் செய்தார்.எஞ்சிய அனைத்தையும் இரண்டாம் திருமுறையாகக் கொண்டார்.

<u>அச்சிற் போந்த வரலாறு முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பு-1867</u>

திருவருட்பா அச்சிற் போந்த வரலாறு மிகச் சுவையானது. அதனை அறிதற்கான ஆதாரங்கள் தொழுவூர் வேலாயுத முதலியார் பாடிய திருவருட்பா வரலாறும் (66 பாடல்கள்) அடிகள் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகங்கள் சிலவுமாம். 1858ஆம் ஆண்டில் அடிகள் சென்னை வாழ்வை நீத்து வடலூர்ப் பக்கம் வந்தபின் இறுக்கம் இரத்தின முதலியார்க்கு அடிகளின் பாடல்களைத் தொகுத்து நூலாக அச்சிட்டு வெளியிட வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. திருவருட்பா ஏடுகளைத் தொகுத்தல் அச்சிடுதல் சம்பந்தமாக இரத்தின முதலியார்க்கு அடிகட்கும் 1860 ஆம் ஆண்டு முதலே கடிதத்தொடர்பு தொடங்கிற்று.1867 ஆம் ஆண்டில் திருவருட்பா வெளியாயிற்று. திருவருட்பாவை வெளியிடுவதில் ஏழாண்டுகள் இரத்தின முதலியார் முயன்றார். அச்சிட அனுமதி வேண்டி அடிகளிடம் தவங்கிடந்தார். நாளும் ஒருவேளையே உண்பதென்று நோன்பு பூண்டார். இவ்வாறு வருந்தி வருந்தி அரிதின் முயன்று திருவருட்பாவை அச்சிட்டு வெளிக் கொணர்ந்த பெருமை இறுக்கம் இரத்தின முதலியாரையே சாரும். இம்முதற்பதிப்பின் மறுபதிப்பு திரு ஊரன் அடிகளளின் திருகரத்தால் 2015ம் ஆண்டு தைபூசத்தில் நற்கருங்குழியில் திருவருட்பா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

1860 ஆம் ஆண்டில் இறுக்கம் இரத்தின முதலியார் அடிகளின் பாடல் ஏடுகளைத் தொகுக்கும் முயற்சியைத் தொடங்கினார். இதற்கு இடையில் சென்னையிலிருந்த சிலர் அடிகளாரின் பாடல்களைச் சிறுசிறு நூல்களாக அச்சிடுவதில் முனைந்தனர் 'இரத்தின முதலியாரும் செல்வராய முதலியாரும் அவர்களை அணுகி முறையாகத் தாங்கள் அவற்றை அச்சிடவிருக்கையில் சிறுசிறு நூலாக அவர்கள் அச்சிடுவது தகாதெனத் தடுத்தனர். அவர்கள் அச்சிடத் தொடங்கி விட்டதால் அதனை நிறுத்துமாறு கூறிச் சிறிது பொருளும் அளித்தனர்.அதன் பின்னரும் அவர்கள் அச்சிடுவதை நிறுத்தினார்களில்லை.இந்நிலையில் இறுக்கம் இரத்தின முதலியார் பாடல் ஏடுகளைத் தொகுப்பதிலும் அருட்பாவை அச்சீடுவதற்கு அடிகளிடத்து இசைவு பெறுவதிலும் தீவிரமாக முனைந்தார்.இவை. தொ.வே.பாடிய திருவருட்பா வரலாற்றாலும் (பாடல்கள் 45-52) ச.மு.க சரித்திரக் குறிப்புகளில். பின் வருமாறு.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

''வள்ளலார் சென்னை, புதுச்சேரி, சிதம்பரம், கடலூர், கருங்குழி ஆகிய இவ்விடங்களில் விளங்கிய காலத்தில் பாடிய பிரபந்தங்களையும் பதிகங்களையும் சிலர் தனித்தனிச் சிறு புத்தகங்களாய் அச்சுப் பிழைகளோடு வழங்குவதைக்கண்டு சமரச வேத சன்மார்க்க சங்கத்தை யபிமானித்த புதுவை வேலு முதலியார் சிவானந்தபுரம் செல்வராய முதலியார் இறுக்கம் இரத்தின முதலியார் முதய அன்பர்கள் வள்ளலார் பாலடைந்து 'தேவர் திருவாக்கினின்று பொழிந்த அமுத வருஷமான பாக்களை அச்சிட உத்தரவாக வேண்டும் என்று மிகுதியும் வேண்ட சுவாமிகள் முதல் இசையாது பின்னர் இவர்கள் குறையிரக்க ஒருவாறு இசைந்தனர்.

எனக் கூறப்படுவதாலும் அறியப்பெறும்.

அடிகளிடமுள்ள பாடல் ஏடுகளைத் தம்மிடம் அனுப்பிவைக்குமாறு இறுக்கம் இரத்தின முதலியார் வேண்டினார். பலமுறை வேண்டியும் அடிகள் பராமுகமாக இருந்தனர். தமது பாடல்கள் அச்சாவதில் அடிகளுக்கு ஆர்வமோ, லக்ஷியமோ இல்லை. அடிகளிடமும் அவர்களை அடுத்துள்ளவர்களிடமும் உள்ள ஏடுகளை அனுப்பி வைக்கும்படியும் பாடல்கள் அடங்கிய தபால் கட்டு வந்துசேரும் வரை தாம் ஒரு வேளையே உணவு கொள்ளுவதென்று முடிவு செய்துள்ளதாகவும் இரத்தின முதலியார் அடிகட்குப் கடிதமெழுதினார். இக்கடிதம் கண்ட அடிகள் பாடல் ஏடுகளை இரண்டு திங்களில் அனுப்புவதாகவும் பாடல்களைப் பெறும் வரை ஒரு வேளையே உணவு கொள்வதென்ற நிர்ப்பந்த ஏற்பாட்டைத் தவிர்க்கும் படியும், அங்ஙனம் தவிர்த்துத் தமக்குத் தபால் தெரிவிக்கும் வரை தாமும் ஒரு வேளையே உணவு கொள்வதென்ற நிர்ப்பந்த ஏற்பாட்டைத் தவிர்க்கும் படியும், அங்ஙனம் தவிர்த்துத் தமக்குத் தபால் தெரிவிக்கும் வரை தாமும் ஒரு வேளையே உணவு கொள்வதாகவும் தம்மீது ஆணையிட்டுத் திருமுகம் ஒன்றை இரத்தின முதலியார்க்கு வரைந்தருளினார். 30.12.1860இல் வரையப் பெற்ற அத்திருமுகம் கீழேவருமாறு:

திருமுகம் 9

ஆரா அன்பு

உ

சிவமயம்

நற்குணங்களெல்லாவற்றிற்கும் இடனாகிய நன்மனக் கருவியொடு எனது இதயத் திடைவிடாது இருக்கின்ற சிரஞ்சீவி இரத்தின முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவஞானமும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாவதாக, நாளது வரையில் இவ்விடத்தில் யானும் நாயக்கரவர்களும் க்ஷேமம். தமது சுபசரித்திரங்களை கேட்க ஆசையுள்ளவனாக விருக்கின்றேன். எனக்கும் நாயக்கரவர்களுக்கும் தபால் மார்க்கமாகத் தாம் அனுப்பிய கடிதங்கள் வந்து சேர்ந்து சங்கதிகளை தெரிந்துகொண்டேன்.

நான் சென்னப்பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதி வைக்க வேண்டுமென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால் அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன. ஆயினும் அவைகளைச் சேர்ப்பிக்க சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆகலால் நான் பங்குனி மீ அவசியம் வருகிறேன். வரும்போது கொண்டு வருகிறேன்.இது உண்மை எவ்விதமாவது 2 மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன். குமாரசாமி பிள்ளை சண்முகப் பிள்ளை ரெட்டியார் இவர்ள் இடங்களில் தற்காலம் இருக்கின்ற பாடல்கள் சுமார் ரூய(50)-க்கு உட்பட்டதாகவே இருக்கும். வெளிப்பட்ட பாடல்கள் பல பல. ஆகலால் மன்னிக்க வேண்டும்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அன்புள்ள என் கண்மணி போன்ற தாம் இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்ய-பிரார்த்திக்கிறேன். அதாவது இந்தப் பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடஞ் சேர்கின்ற பரியந்தம் நான் ஒரு வேளை போசனந்தான் செய்வேன் என்று எழுதியதைப் பார்த்த பின்பு நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருந்தவில்லை பட்டினி கிடந்தவனை போல் இருக்கின்றோன். ஆகலால் என்னை நிம்மதியுள்ளவனாக்க எண்ணங் கொண்டு ஒரு வேளை போசனங் கொள்ளுகிற நிபந்தனை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பைத் தவிரேன். ஒரு வேளை போசனம் உள்ளவனாகவே யிருப்பேன். இது சத்தியம். என்மேல் ஆணை. தாம் மேற்குறித்த நிற்பந்த ஏற்பாட்டைத் தவிர்த்து உடனே யெனக்குத் தெரியப்படுத்த வேண்டும். உ (2) மாதத்திற்கு பின்பு பாடல்கள் அவசியம் சேரும்.

மார்கழி 18 வ 21ஆ
ய அ (18)

சிதம்பரம்
இராமலிங்கம்

இஃது
சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன் பேட்டை ஏழு
கிணத்துக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத் தெருவில்
கலெக்டர் கச்சேரி சுப்பராயப்பிள்ளை யவர்கள்
வீட்டிற்கு எதிர் வீட்டில் ரத்தின முதலியார் அவர்களுக்கு வருவது.

*****

திருமுகம் 26

விண்ணப்பக் கலிவெண்பா நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அங்கிருந்து இங்கு வந்திருந்து பிரயாணப்பட்டங்கு வருகின்ற பெரிய தமக்கையார் வசத்தில் சுமார் ஒரு மாதமாயிற்று கொடுத்தனுப்பினேன். அவாள் மத்தியில் கருங்களவால் கையில் மெய்யில் உள்ளவைக ளெல்லாம் இழந்து விட்டதாகக் கேள்விபட்டேன்.அவாள் இன்னு மத்தியில் பந்துக்களிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆகலின் அவர்கள் அவ்விடம் வந்தவுடன் மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பிப்பதும் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

20.03.1861 இல் வரைந்த ஒரு திருமுகத்தில் விண்ணப்பக் கலிவெண்பா நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அனுப்பி வைத்த செய்தி குறிப்பிடப்பெறுகிறது: விண்ணப்பக் கலிவெண்பாவும், நெஞ்சறிவுறுத்தலும் 1861 ஆம் ஆண்டுக்கு முன்னரே பாடப் பெற்றவை யென்பது இதனால் தெளிவு.

இறுக்கம் இரத்தின முதலியார் ஒருவாறு பாடல்களைத் திரட்டினார்.ஆண்டுகள் ஐந்து கடந்தன.1860 இல் நாளும் ஒரு வேளையே உணவு கொள்வதென நோன்பு கொண்டு திருவருட்பாத் திருப்பணியைத் தொடங்கிய பின் ஆண்டுகள் ஐந்தாகியும் பாடல்கள் அனைத்தும் ஒன்றுசேர வில்லை.அச்சிடுதற்கு அடிகளின் இசைவும் கிடைக்கவில்லை.இனித் தாமதிக்க இயலாதென்றும் அச்சிடுதற்கு இசைவளித்தே ஆகவேண்டுமென்றும் வற்புறுத்தி விண்ணப்பித்து 1865 நவம்பர் 13ஆம் நாள் பதிவுத் தபால் அடிகட்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தைப் பெற்ற அடிகள் தமது பாடல்களை அச்சிடுவது தமக்கு அத்துணை அவசியமின்றாயினும் இறைவன் தம்முள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் அச்சிட்டுக் கொள்ளலாம் என இசைவளித் தருளினர். அருளிய அத்திருமுகம் வருமாறு:

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருமுகம் 26

இறைவன் தம் உள்ளிருந்து பாடுவித்தவை

உ

சிவமயம்

அன்பறி வாசாரங்களிற் சிறந்து சிவபத்தியினுஞ் ஜீவகாருண்யத்தினுந் தலைநின் றெமதுள்ளத்திற் கலந்து விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத் தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேலுண்டாக. சத அசு ருளு (5 ஆண்டு) நவம்பர் மீ ய ங (18) உ ரிஜிஸ்டர் செய்தனுப்பிய தங்கள் கடிதத்தைக் கண்ணுற்றறிந்து கொண்டேன்.

அக்கடிதத்திற் குறித்த விஷயம் எனக் கத்துணை யவசிய மின்றாயினுந் தங்கள் கருத்தின்படி இறைவ னென்னுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும் ம-ஆ-அ செல்வராய முதலியாரவர்களாயினும் தாங்கள் வரைந்தபடி செய்துக் கொள்ளலாம் இனி எழுதுவதற்கு சமயமின்று ஆகலின் இங்ஙனம் அமைதி செய்தாம்.

சுமார் இருபதுதினஞ் சென்ற பின்னர் சமய முண்டாம்.
ஆண்டு வரைவன வரைதும் சிரஞ்சீவி சிரஞ்சீவி சிவ சிவ

இங்ஙனம்
சிதம்பரம் இராமலிங்கம்

***

திருமுகம் 27

திருவருட்பா அச்சேறுதல்

14.2.1866 இல் சிதம்பரத்தில் தபால் சேர்க்கப்பெற்ற ஒரு திருமுகத்தில் அன்றி ஒற்றியூர் பாடல்களையு மற்றவைகளையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப்படுகிறேன். அவைகளை தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடம் இவ்விடத்திருக்கின்ற இன்னுஞ் சில பாடல்களையுஞ் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். பின்பு தங்களிஷ்டம். நமது சிநேகிதர் மகா ஸ்ரீ வேலு முதலியாரவர்களுக்கு இதை தெரியப்படுத்துவீர்களாக என அடிகள் குறித்துள்ளார்.

***

திருமுகம் 28

உ

சிவமயம்

1866 மார்ச் திங்களில் இறுக்கம் இரத்தின முதலியார் அடிகட்கு எழுதிய கடிதமொன்றில் அச்சிடிருக்கும் திருவருட்பாவின் முகப்பேட்டில் அடிகளின் பெயரை இராமலிங்க சுவாமிகள் என்று குறிப்பிட அனுமதி வேண்டினார். சிதம்பரம் பொருளாக அண்மையிற் பாடிய பாடல்களை அச்சிடுவதற்கு அனுப்புமாறும் கேட்டார். சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளும் சாத்திர மாலைகளுமாக சுமார் இருநூறு மாலைகள் பாடப் பெற்றுள்ளனவென்றும் அவற்றைப் பின்னர் வெளிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் விடையிறுத்ததோடு இராமலிங்கசாமியென்று வழங்குவிப்பது என் சம்மத மன்று இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும் என்றும் அடிகள் ஆணையிட்டனர். அத்திருமுகத்தின் ஒரு பகுதி வருமாறு:

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

ஆரவாரத்திற்கு அடுத்த பெயர் - திருமுகம் 28

அன்புள்ள தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக. தாங்கள் வரைந்து விடுத்த கடிதமும் இப்பாடல்களும் இரண்டு தினத்திற்கு முன் என்னிடஞ் சேர்ந்தன. இன்று குறை நிரம்பப்பெற்றனகொள்க. அன்றி, நான் இத்திசைக்கண் வந்த பின் இங்ஙனமிருந்து தங்களிடத்திற்போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படாதிருத்தல் வேண்டும். என்னையெனில் நான் இங்ஙனம் வந்த பின்னர் சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாக சுமார் இருநூறுமாலைகள் பாடப் பெற்றுள்ளனவென்றும் அவற்றைப் பின்னர் வெளிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் விடையிருத்தலோடு, ;இராமலிங்கசாமியென்று வழங்குவிப்பது என் சம்மத மன்று, என்னை-ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதல் இனி ஆங்ஙனம் வழங்காமை வேண்டும்.

ஜீவகாருண்ணியமும் சிவானுபவமும் அன்றி மற்றவைகளை மனத்தின் கண் மதியாதிருத்தல் வேண்டும்.சிரஞ்சீவி சிரஞ்சீவி.

குரோதன ளு இங்ஙனம்

பங்குனி மீ யஎ உ சிதம்பரம் இராமலிங்கம்

***

திருமுகம் 29

பசித்தாரது பசி நீக்கலே பேர் பெருஞ் செயல்

பின்னர் 19-4-1866 இல் வரைந்த திருமுகமொன்றில் "குடும்ப கோடம் பொது வேதம் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக்கருதியபடிவரையாக் கடிதப் புத்தகம் மூன்றென்னிடத் திருக்கின்றன அவை அமையும். ஆகலில் அது விடயத்தி லுழத்தல் வேண்டர". எனக் குறித்திருக்கின்றார்.

***

திருமுகம் 33

சிதம்பர விஷயமான பாடல்களை அச்சிட்டுக் கொள்ளுங்கள் என அடிகள் 26-11-1866 இல் இசைவளித்தார். பாடலொன்றின் சரியான பாடத்தையும் அத்திருமுகத்தின் ஒரு பகுதி வருமாறு:

விண்படைத்த பொழில் தில்லை - திருமுகம் 33

"தங்கள் சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மகர-ஸ்ரீ அப்பாசாமி செட்டியா ரவர்கட்குத் தாங்கள் வரைந்த கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பர விஷயமான பாடல்களை தங்கள் கருத்தின்படி அச்சிட்டுக் கொள்ளுங்கள் அன்றியும் 'கண்டா யென் றொழி' எங்கிற பாடல்களை வைத்திருக்கின்றவர் தற்காலம் சமீபத்திவில்லை அவர் வந்தவுடன் வாங்கி யனுப்புகிறேன். விண்படைத்த பொழிற்றில்லை யம்பலத்தா னெவர்க்கு மேலான னன்பருள மேவு நடராஜன்' எனல் வேண்டும். இது நிற்க ....."

இங்கெடுத்துக் காட்டிய திருமுகங்கள் ஆறும் ஒரு கடிதம் வேலாயுத முதலியார் அடிகள் இறுக்கம் இரத்தின முதலியாரின் கடிதங்களுக்கு விடையாக எழுதியவைகளேயாம். இரத்தின முதலியார் அடிகட்கு எழுதிய கடிதங்கள் கிடைக்கவில்லை. எனினும் அடிகளது விடைக் கடிதங்களால் இரத்தின முதலியாரின் வேண்டுகோள் இன்னதாக இருக்குமென்று உய்த்துணரக் கிடக்கிறது. இங்ஙனம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1860 முதல் 1866 முடிய ஆறு ஆண்டுகள் ஓரிருமுறை நேரில் வந்து விண்ணப்பித்தும், பதிவுத் தபால் கடித மெழுதியும் நாளும் ஒரு வேளையே உண்ணும் நோன்பிருந்தும், பாடல் ஏடுகளையும் அவற்றை அச்சிடுவதற்கு இசைவையும் அரிதிற்பெற்று இறுக்கம் இரத்தின முதலியார் திருவருட்பா வெளியீட்டை 1867 பிப்ரவரியில் நிறைவேற்றினார்.

இம் முதற் பதிப்பின் முகப்பேட்டில்தான் முதன் முதலாக **'திருவருட் பிரகாச வள்ளலா ரென்னும் சிதம்பரம்**, இராமலிங்க பிள்ளை அவர்கள் என அடிகள் குறிப்பிடப்பெறுகிறார்.திருவருட் பிரகாச வள்ளலா ரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்கள் திருவாய் மலர்ந் தருளிய திருவருட்பா என அச்சிடப் பெற்றது. **திருவருட்பிரகாச வள்ளலார்** என்னும் சிறப்புப் பெயரைப் பெருமானுக்கு இட்டு இம்முகப்பேட்டில் அச்சிட்டவர் தொழுவூர் வேலாயுத முதலியாரேயாவார். முகப்பேட்டில் அங்ஙனம் குறித்ததோடன்றித் தாம் பாடிய திரு வருட்பா வரலாற்றிலும் பலமுறை (28,33,34,42,56,60,61) வழங்கினார்.

இராமலிங்க சுவாமிகள் என வழங்காமை வேண்டுமென அடிகள் தடுத்து விட்டனராதன் அங்ஙனம் வழங்க விரும்பியும் அஃதியலாது போயிற்று. அஃதிய லாதுபோன நிலையில் வேறு செயலறியாது எங்ஙனம் பெருமானைச் சிறப்பித்து வழங்குவோம் என்று சிந்தித்து இறுதியாகத் திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க பிள்ளை என வழங்கத் தொடங்கினார். நூல் வெளிவந்த பின் இதனைக் கண்ணுற்ற அடிகள் வருந்தினராம்.பின்னர் ஒருவாறு சமாதானப்பட்டுத் 'திருவருட் பிரகாச வள்ளல் ஆர் என்று கேட்கிற இராமலிங்கம் என்று வைத்துக் கொள்ளவேண்டுமா என்றளினராம். திருவருட்பா வெளிபோந்த பெருமை பெரிதும் இறுக்கம் இரத்தின முதலியாரையே சாரும். நூலுக்கு திருவருட்பா என்றும், அதன் பகுதிகளுக்குத் திருமுறை என்றும், ஆசிரியர் அடிகளாருக்குத் திருவருட்பிரகாச வள்ளலாரென்றும் பெயரிட்ட பெருமையும் புண்ணியமும் உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியாரவர்களையே சாரும். இதனுள் காணப்படும் அறிவிப்பொன்று பின்வருமாறு :

மதுரைஅஆதீனம் சிதம்பர சுவாமிகளும் பொன்னேரி சுந்தரம் பிள்ளையும் திருவருட்பாவுக்குச் சிறப்புப் பாயிரம் செய்தனர். **'தண்ணீர் விளக்கெரித்த'** என்று தொடங்கும் **சிதம்பரசுவாமிகள் பாயிரம்' 'திருவருட்பா மகிமை'** என்ற தலைப்புடனும் ''இது வேதாகம சுத்த சைவ சித்தாந்த சமயாசாரிய பீடமாய் விளங்குகின்ற மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகளா தீனம் சிதம்பரசுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது.

.....

''அறிவித்தல் - 1867ம் ஆண்டு முதல் பதிப்பு திருவருட்பா வெளியீடு

இப்புத்தகம் வேண்டியவர்கள் மயிலாப்பூரிருக்கும் ராயல் ஹோட்டல் (Royal Hotel) புதுவை வேலு முத-லியாரிடத்திலும், சென்னப்பட்டணத்தில் ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிபிள்ளை வீதியில்-ஙஅ-வது கதவிலக்கமுள்ள வீட்டில்-இ.இரத்தின முதலியாரிடத்திலும், கிருஷ்ணப்ப நாயக்கன் அக்கிரஹாரம் வண்ணாரச்சந்தில்-உ0-வது கதவில்லக்கமுள்ள வீட்டில் சி.செல்வராய முதலியாரிடத்திலும், கூடலூரில் முத்துகிருஷ்ண ராமசாமி செட்டியார் குமாரர்-மு.அப்பாசாமி செட்டியாரிடத்திலும் ராயவேலூரில் மண்டி அ-வேலு முதலியாரிடத்திலும் இதன் விலை ரூபா-ங (3)-கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். வெளிதேசத்தர்களுக்கு இப்புத்தகம் வேண்டுமானால் மேல்விலாசத்துடன் புத்தகக்கிரயத்தையும் தபால் செலவையும் - அணா தபால் முத்திரைத் தலையாக அனுப்புகிற தபால் செலவையும் - அணா தபால் முத்திரைத் தலையாக அனுப்புகிற பகூஷத்தில்-ரூபா க.இ.க அணா வட்டத்துடன் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.இப்புத்தகம் மயிலை சிக்கிட்டிச் செட்டியார் குமாரர் சோமசுந்தர செட்டியார் பேருதவியாற் பிரசுரஞ் செய்யப்பட்டது.முதற்பதிப்பு.''

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

என்ற கீழ்க்குறிப்புடனும், பொன்னேரி **சுந்தரம் பிள்ளை** செய்த **'தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனார்** என்னும் பாடல் ''**ஆசாரிய ஸ்துதி**'' என்ற தலைப்புடனும் ''**இது பொன்னேரி சுந்தரம் பிள்ளை**யவர்களால் செய்யப்பட்டது.என்ற கீழ்க்குறிப்புடனும் முறையே நூன் முன்னரும் இறுதியிலும் சேர்த்து அச்சிடப் பெற்றன. இவ்விரு பாயிரங்களையும் நூல் சேர்த்து அச்சிடுதற்கும் அடிகளது இசைவைப் பெறவேண்டிய தாயிற்று.பொன்னேரி சுந்தரம்பிள்ளை சென்னையிலிருந்து கருங்குழிக்கு வந்து அடிகளிடம் மன்றாடி இசைவு பெற்றார். அவரது மன்றாட்டுக்கு இரங்கிய அடிகள் புதுவைவேலூ முதலியார்க்கு கெழுதிய திருமுகத்தின் கீழ்

***

திருமுகம் - 6

<u>உலகநடை தெரிந்த விவகாரிகள்</u>

<u>புதுவை வேலு முதலியாருக்கு எழுதிய திருமுகங்கள் பகுதி</u>

''அன்புள்ள ஐயா,

நமது சுந்தரப் பிள்ளை எழுதின பாயிரம் நன்றாயிருக்கின்றது. அதை அச்சிடுவிப்பீர்களாக. அன்றி நமது சிதம்பர சாமிகள் பாயிரமும் நன்றாயிருக்கின்றது. அதையும் அப்படி செய்க. வந்தனம். எனக் குறிப்பெழுதிக் கொடுத்தனர். இப்குறிப்படங்கிய திருமுகத்தைப் பெற்றுக் கொண்டு சுந்தரம் பிள்ளை சென்னை சென்றார்.பாயிரங்கள் அச்சிடப்பெற்றன. அடிகளின் பிறப்பு, வளர்ப்பு, சிறப்பு திருவருட்பா அருளிச் செய்தது. பதிப்பு வரலாறு ஆகியவற்றை அறுபத்தாறு பாக்களில் தொழுவூர் வேலாயுதானார். பாடித் 'திருவருட்பா வரலாறு' என்னும் தலைப்புடன் நூறுதியிற் சேர்த்து அச்சிட்டார். மார்கழி -15

***

திருமுகம் - 34

<u>எஞ்சி நின்ற நூல்கள்</u>

திருவருட்பா அச்சாகிக் கொண்டிருக்கும் காலத்தில் ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை முதலிய நால்வர் தோத்திரங்களையும் இறுக்கம் இரத்தின முதலியார் கோரியவண்ணம் அனுப்பியபோது அவற்றின் தொடர்பாக எழுதியனுப்பிய திருமுகக் குறிப்பில் 'இதில் குறிக்கின்றவைகளை இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக என அடிகள் நாற்பத்து மூன்று தலைப்புகளைக் குறித்தனுப்பியருளினார்.

''அன்பறிவு முதலியவற்றிற் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் மேன்மேல் சுபம் உண்டாக. தாங்கள் குறித்தபடி வரைந்து அனுப்பினேன். இவை மிகவும் விரைவில் வரையப்பட்டன ஆகலால் மிகவும் மெதுவில் பார்க்க வேண்டும்.

சிதம்பரம் இராமலிங்கம்.

மற்றைச் சங்கதிகளைப் பின்னிட்டு தெரிவிக்கிறேன். அன்றி, இதில் குறிக்கின்றவைகளை இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக. அவை- நடராஜ நிபுணம்-நடராஜ ஆனந்த நாடகம்-சிதம்பரஉபதேசம்-சிற்றம்பல நடனம்-பொன்னம்பல நடனம்-பொது நடனம் - தத்துவ நடனம் - ஆனந்த நடனம் - அதீத நிலை-அருள் விளக்கம்-மெய்ப்பொருள் விளக்கம்- மெய்ம்மொழிப்பொருள் விளக்கம்-சன்மார்க்க விளக்கம்-சாதன விளக்கம்-கலாந்த விளக்கம்-யோகந்த விளக்கம்- நாதாந்த விளக்கம்-போதந்த விளக்கம்-வேதாந்த விளக்கம்-சித்தாந்த விளக்கம் - அண்ட விளக்கம் - பிண்ட விளக்கம் -

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பிரகிருதி விருத்தி-தத்துவ விருத்தி-சுத்த சிவராசியம்-பரசிவ ராசியம்-மந்திரக் கொத்து-மகா வாக்கிய வகை-பொதுவேதம்-குடும்ப கோஷம்-இயல் வகை-அளவை வகை- ஞாய வகை-இலக்கண விருத்தி- தர்க்க விருத்தி-தென்மொழி விளக்கம்-வடமொழி விளக்கம்-உலகியல் விளக்கம்-கலை மரபு. இந்த தபால் வந்தவுடன் சேர்ந்த செய்தி தெரிவிக்க வேண்டும்

இந்நாற்பத்து மூன்றுக்கும் முன் முதல் 'ஐந்தாவது திருமுறை திருத்தணிகைப்பதிகம் என்பதையும் சேர்த்து நாற்பத்து நான்காக்கி இனி அச்சிற்பதிப்பிக்கப்படுபவை என்ற தலைப்பில் நூல் இறுதியில் தொ.வே.குறிப்பிட்டார்.

ஐந்தாம் திருமுறை முதற்பதிப்பு- 1880

மேற்கூறியவாறு 1867 ஆம் ஆண்டில் முதல் நான்கு திருமுறைகள் வெளி வந்தன. இதற்கு ஏழாண்டுகளுக்குப் பின் 1874 ஆம் ஆண்டில் அடிகள் சித்தி பெற்றார்.அடிகள் சித்திபெற்ற ஆறு ஆண்டுகளுக்குபின்-முதல் நான்கு திருமுறைகள் வெளிவந்த பதின்மூன்று ஆண்டுகளுக்குப்பின்-1880 ஆம் ஆண்டில் ஐந்தாம் திருமுறை வெளிவந்தது. அடிகள் சென்னையி-லிருந்து வடலூர்ப்பக்கம் வந்தபின் கருங்குழியிலிருந்த காலத்திற் பாடிய மூத்த பிள்ளையார் திருப்பதிகங்கள் 4, சென்னையிருந்தபோது ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்திற் பாடிய திருத்தணிகைப் பதிகங்கள் 47, இளம்போதில் ஏழு, எட்டாண்டுப் பருவத்தில் முதன் முதற் பாடிய கந்தகோட்டப் பதிகங்கள் 2. ஆகியவற்றை ஐந்தாம் திருமுறையாகத் தொகுத்துத் தொழுவூர் வேலாயுத முதலியார் வெளியிட்டார். இவ்வைந்தாம் திருமுறை திருவருட்பா-திருத்தணிகைப் பதிகம்-இரண்டாம் புத்தகம் எனப் பெயரிடப் பெற்றது. இதன் முகப்பேட்டைப் பின்னிணைப்பிற் காண்க. முதற் புத்தகமாகிய முதல் நான்கு திருமுறை நூலை வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த மயிலை சிக்கிட்டி சோமசுந்தர செட்டியாரே இவ்விரண்டாம் புத்தகமாகிய திருத்தணிகைப் பதிகம் வெளிவரவும் உதவினார். இதனை வெளியிடுங் காலத்தில் வேலாயுதனார் சென்னை மாநிலக் கல்லூரியில் (பிரசிடென்சி காலேஜில்) தமிழாசிரியராக இருந்தார்.இவர் பாடிய வாயுறை இந்நூற் சேர்க்கப் பெற்றுள்ளது.

ஆறாம் திருமுறை முதற்பதிப்பு - 1885

ஆறாம் திருமுறை என்பது 1867 ஆம் ஆண்டில் முதல் நான்கு திருமுறைகளை அச்சிட்டபோது அடிகளின் கட்டளைக்கிணங்க நிறுத்தி வைக்கப் பெற்றவையும், அதன்பின் அடிகள் சித்தி பெற்ற 1874 ஆம் ஆண்டுவரை பாடப்பெற்றவையுமாம். ஐந்தாம் திருமுறையை 1880 ஆம் ஆண்டிலும், அதன் இரண்டாம் பதிப்பை 1882 ஆம் ஆண்டிலும் அச்சிட்டு வெளியிட்ட **வேலாயுதனார் ஆறாம் திருமுறையை அச்சிடும் முயற்சியில் ஈடுபடவில்லை.** இறுக்கம் இரத்தின முதலியார், புதுவை வேலு முதலியார், சிவானந்தபுரம் செல்வராய முதலியார், மயிலை சிக்கிட்டி சோமசுந்தர செட்டியார் ஆகியோர்ரும் ஆறாம் திருமுறையை அச்சிட்டு வெளிப்படுத்தத் தலைப்படவில்லை. இவர்கள் அனைவரும் அடிகளாரின் பாடல்களிற் பேரன்பு கொண்டவர்களேனும், ஆறாம் திருமுறையை வெளியிடுவதற்குரிய காலம் வரவில்லை எனக்கருதி வாளாவிருந்தனர்போலும், இந்நிலையில் அடிகள் சித்தி பெற்றுப் பதினோராண்டுகள் கழிந்தன.

இனியும் காலந் தாழ்த்தாது ஆறாம் திருமுறையை அச்சிடவேண்டும் என்ற எண்ணமுடையவராய் வேலூர் பத்மநாப முதலியார் அதனை அச்சிட முன் வந்தார். பெங்களூர் இராகவலு நாயகர் அவர்க்குத் துணை நின்றார். இவ்விருவர் வேண்டுகோளின்படி, சென்னைமாநகர்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அரசாங்க நார்மல் பாடசாலைத் தமிழ்ப்புலவர் சோடவாதானம் தி.க.சுப்பராய செட்டியாரால் பார்வையிடப்பெற்றுத் திரிசிரபுரம் ம.லோகநாத செட்டியாரின் பொருளுதவியால் 1885 ஆம் ஆண்டில் ஆறாம் திருமுறை அச்சிட்டு வெளியிடப்பெற்றது. (1867, 1880, முதல் ஐந்து திருமுறை அருட்பா பதிப்பகம் (சென்னை) மறுஅச்சு 2015லும். 1885 ஆறாம் திருமுறை மறுஅச்சு 2015ம் ஆண்டு திரு. ஊரன் அடிகளார் திருகரத்தால் திருநற்கருங்குழியில் வெளியிடப்பட்டுள்ளது).

ஆதாரப் பதிப்புகள்

ஆதாரப் பதிப்புகளாகவும் சிறந்த பதிப்புகளாகவும் ஏழு பதிப்புகளை ஆ.பாலகிருஷ்ண பிள்ளை கொண்டுள்ளார். அவை வருமாறு :

			[மறுபதிப்பு அருட்பா பதிப்பகம்]
1.	முதல் நான்கு திருமுறை முதற்பதிப்பு[3] தொழுவூர் வேலாயுத முதலியார்	- 1867	2015
2.	ஐந்தாம் திருமுறை முதற்பதிப்பு[4] தொழுவூர் வேலாயுத முதலியார்	- 1880	2015
3.	ஆறாம் திருமுறை முதற்பதிப்பு சோடசாவதானம் சுப்பராய செட்டியார்	- 1885	-
4.	குடும்ப கோஷம், பல்வகைய தனிப்பாடல்கள் ஆடூர் சபாபதி சிவாசாரியர்	- 1891	-
5.	ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பு பொன்னேரி சுந்தரம் பிள்ளை	- 1892	-
6.	பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பு[5]	- 1896	-
7.	சமரச பஜனை ச.மு.கந்தசாமி பிள்ளை பதிப்பு	- 1924	2014

*	சென்னை சன்மார்க சங்க பதிப்பு ஐந்தாம் திருமுறை	- 1932	2012 [மறுபதிப்பு அருட்பா பதிப்பகம்]
**	சென்னை சன்மார்க சங்க பதிப்பு அறாம் திருமுறை	- 1932	2015 [மறுபதிப்பு அருட்பா பதிப்பகம்]
***	அருட்பா பதிப்பகம் ஐந்தாம் மற்றும் ஆறாம் திருமுறை	- 2017	2022 2023 2024

3. முதல் நான்கு திருமுறையின் இரண்டாம் பதிப்பு 1887 இல் வேலாயுத முதலியாரலேயே வெளியிடப்பெற்றது.
4. ஐந்தாம் திருமுறையின் இரண்டாம் பதிப்பு 1882 இல் வேலாயுத முதலியாராலேயே வெளியிடப்பெற்றது .
5. பிருங்கிமாநகரம் என்பது, சென்னை பரங்கிமலை. ஆறாம் திருமுறையில் ஊரன் அடிகளின் பதிப்பில் பின்னிணைப்பிற் காண்க.

இன்று கிடைத்தற்கரிய இப்பழம் பதிப்புகள் ஏழும் வள்ளற்பெருமான் திருவருளால் திரு ஊரன் அடிகளாருக்கு கிடைக்கப்பெற்று இந்த பழைய பதிப்புக்களை அருட்பா பதிப்பகம் லேமினேஷன் செய்தும், தாமிர தகடுகளில் நகல் எடுத்தும் வடலூர் மேட்டுக்குப்பம், சித்திவளாகம், திருமாளிகை எதிர்புறத்தில் திருவருள் விலாசம் என்னும் இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட உள்ளது.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

குடும்பகோஷம், பல்வகைய தனிப்பாடல்கள்-1891

டெம்மியில் பாதி அளவு, 52 பக்கங்கள்-இதில் அடங்கியவை 2-26 பக்கங்கள் குடும்பகோஷம் படலம் 2-க்குப் பாயிரமுட்படத் திருவிருத்தம் 116 27ஆம் பக்கம் 'இனி இவைகள் வெளிப்படுத்தப்படும்' என்ற தலைப்பின் கீழ் 3-19 படலங்களின் பெயர்கள் 28 வெறும் பக்கம் 29-50 பக்கங்கள் பல்வகைய தனிப்பாடல்கள் அவற்றின் முதற்குறிப்பு வருமாறு:

ஆ,பா பதிப்பு 1931 - 1959 தனிப்பாசுர பகுதி பல்வகைய தனிப்பாடல்கள்				
எண்	தலைப்பு	பாடல் எண்ணிக்கை	பாடல் எண்	திருமுறை
1	திருமா லறியா	1	2077	2அ திருமுறை
2	ஐங்கர னடிமலர்	2	2076	2அ திருமுறை
3	அற்புதக் கணபதி	3	2080	2அ திருமுறை
4	அருளுருங் கயமுக	4	2079	2அ திருமுறை
5	துதிபெறு கணபதி	5	2078	2அ திருமுறை
6	மாதங்க முகத்தோன்	6	2081	2அ திருமுறை
7	கலைநிறை கணபதி	7	2082	2அ திருமுறை
சிற்சபை				
8.	அருட்சபை நடம்புரி	1	5820	6ஆம் திருமுறை
திருவதீகைத் திருவீரட்டாணம்				
9.	உரிய நாயகி	1	2051	2அ திருமுறை
10.	உலகந் தழைக்க	2	2052	2அ திருமுறை
11.	தன்னேரறியா	3	2053	2அ திருமுறை
வெண்பா (வெறிவிலக்கு)				
12.	இம்மையறையனைய	1	1950	2அ திருமுறை
13.	சோடில்லை	1	1937	2அ திருமுறை
14.	கூழுக்கழுவேனோ	2	1930	2அ திருமுறை
15.	சிந்தைக்கும் வழியில்லை	3	1931	2அ திருமுறை
16.	கறிபிடித்த ஊன்கடையில்	4	1932	2அ திருமுறை
17.	திருமாலாதியர்	5	1929	2அ திருமுறை
18.	இறகெடுத்த அமணர்குலம்	6	1947	2அ திருமுறை
19-33.	சண்முகர்கொம்மி	1-15	2083 - 2097	2அ திருமுறை
33- 45.	சண்முகர் காலைப்பாட்டு	1-12	2098-2109	2அ திருமுறை
கலைமகள் துதி - வெண்பா				
46.	அன்பர்பால் நீங்கா என்	1	2205	2அ திருமுறை
இங்கித மாலையின் தொடர்ச்சி				
47.	மையலழகீர்	1	713	1 ஆம் திருமுறை

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பந்து				
48.	பூவாமலே நிதம்	1	4994	6ஆம் திருமுறை
49.	வான்வேண்டு சிற்றம்பலத்தே	1	4918	6ஆம் திருமுறை
50.	தருவகை இத்தருணம்	2	4924	6ஆம் திருமுறை
51.	வினைத்தடை தீர்த்தெனை	3	4925	6ஆம் திருமுறை
52.	என் உடலும் என் உயிரும்	4	4982	6ஆம் திருமுறை
53.	கோதுகொடுத்த மனச்சிறியேன்	5	4910	6ஆம் திருமுறை
பேரன்புக் கண்ணிகள்				
54 - 67	கற்றதென்றும்	1-14	2190 - 2203	2அ திருமுறை
போற்றிச் சந்தவிருத்தம்				
68.	போற்றி நின்னருள்	1	4891	6ஆம் திருமுறை
69.	போற்றி நின்னிடம்	2	4892	6ஆம் திருமுறை
70.	போற்றுகின்ற என்	3	4893	6ஆம் திருமுறை
உண்மை விளக்கம் (இலக்கணப் பொருள்)				
71.	வருமுன் வந்ததா	1	4884	6ஆம் திருமுறை
72.	உருத்திரன் திருமாலயன்	1	2014	2அ திருமுறை
73.	களங்கா வக்குணங்கடந்	2	2015	2அ திருமுறை
74.	வெய்யனாய் உலகழித்தன்	3	2016	2அ திருமுறை
சமரச சித்தாந்தப் பரநெறி விளக்கம்				
75.	உய்வதாமிது நங்குருவாணை	1	2017	2அ திருமுறை
76.	முந்தைநாளயர்ந்தேன்	1	4868	6ஆம் திருமுறை
77.	வாய்க்குறும் புரைத்து	2	4869	6ஆம் திருமுறை
78.	பேரிடர் தவிர்த்து	3	4870	6ஆம் திருமுறை
வைத்தியநாதர் பதிகத்தின் தொடர்ச்சி (வைத்தியநாதன் பதிகம் 1885ம் ஆண்டு வெளியிட்ட பதிப்பில் 8 பாடல் மட்டுமே வெளியிடப்பட்டது. மீதம் உள்ள நான்கு பாக்கள் 1891ம் ஆண்டு பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.)				
79	ஓகைமடவார்	1	**5700**	6ஆம் திருமுறை
80	உண்டதே உணவு	1	**5701**	6ஆம் திருமுறை
81.	உம்பர்வான்	1	**5702**	6ஆம் திருமுறை
82.	கல்லையும் உருக்காலாம்	1	**5703**	6ஆம் திருமுறை
83.	படியளவு சாம்பலை	1	**5704**	6ஆம் திருமுறை
84.	பெண்கொண்ட சுகமதே	1	**5705**	6ஆம் திருமுறை
85.	திருத்தம் உடையோர்	1	**5706**	6ஆம் திருமுறை
86.	பேதை உலகீர்	1	**5707**	6ஆம் திருமுறை
87.	ஈனம் பழுத்த	1	**5708**	6ஆம் திருமுறை
88.	கற்பவை யெலாம்	1	**5709**	6ஆம் திருமுறை

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

89.	மெய்யோர் தினைத்தனையும்	1	5710	6ஆம் திருமுறை
90.	இளவேனின் மாலையாய்	1	5711	6ஆம் திருமுறை
திருவோத்தூர் ஞானசிகாமணி தோத்திரம்				
91.	அணிவாயுலகத்து	1	2072	2அ திருமுறை
92.	நின்பாலறியும்	2	2073	2அ திருமுறை
93.	அசையும் பரிசாம்	3	2074	2அ திருமுறை
94.	கண்மூன்றுடையான்	4	2075	2அ திருமுறை
95.	சத்தியஞ் செய்கின்றேன்	4	4764	6ஆம் திருமுறை
குறிஞ்சிப்பாடிக் கடுத்துள்ள சிங்கபுரிக் கந்தர் பதிகம்				
96-105.	பொன்மகள் வாழ் சிங்கபுரி	1-11	2019-2212	2அ திருமுறை
திருக்கண்ணமங்கை இலக்குமி தோத்திரம்				
106.	உலகம் புரக்கும்	1	2204	2அ திருமுறை
மங்களம்				
107-113	புங்கவர் புகழும்	1-7	2206-2212	2அ திருமுறை

குடும்ப கோஷம், பல்வகைய தனிப்பாடல்கள் 1891 ஆடூர் சபாபதி சிவாசாரியர் 51-ஆம் பக்கத்தில் 'இனி அச்சிடும் புத்தகங்கள்' என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்பு :

''திருவருட் பிரகாச வள்ளலா ரென்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளையவர்களால் திருவாய் மலர்ந்தருளிய சுத்த சன்மார்க்க விளக்கத்தின் இரண்டாம் பிரிவாகிய சீவகாருணிய வொழுக்கம். திருவருட்பா முதற்பதிப்பிற் பிரசுரஞ் செய்யப்பட்ட மெய்ம்மொழிப்பொருள் விளக்கத்தை வடமொழியிற் பெயர்த்துறை சத்திய பாதர்த்த தீபிகை. மூகா குணவகராதி.'' இதுவே குடும்பகோஷத்தில் முதல் அச்சு.பல்வகைய தனிப்பாடல்களில் சத்தியஞ் செய்கின்றேன் என்ற 86ஆம் பாடல் தவிர மற்ற 104 பாடல்களும் இப் பதிப்பில்தான் முதன்முதலாக வெளியாகின்றன.சத்தியஞ் செய்கின்றேன் என்ற பாடல் ஆறாம் திருமுறை சுத்தசிவஇலையில் இருபத்தாறாம் பாவாகும்.பல்வகைய தனிப் பாடல்கள் என்ற தலைப்பின் கீழ் இந்த 105 பாடல்களும் அப்படியே 1892 இல் வெளியான பொன்னோரி சுந்தரம் பிள்ளை பதிப்பிற் சேர்க்கப் பெற்றுள்ளன.

பொன்னோரி சுந்தரம் பிள்ளை பதிப்பு - ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பு - 1892

பொன்னோரி சுந்தரம் பிள்ளை பதிப்பு என்றும் இதைக் குறிக்கலாம்.இதன் முகப்பேட்டைப் பின்னிணைப்பிற் காண்க. ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பு இதுவே. முன் பதிப்புகளிற் சேராத பாடல்கள் சில இதிற்சேர்ந்துள்ளன. இது பொன்னோரி சுந்தரம் பிள்ளையால் திரட்டப் பெற்று, அட்டாவதானம் பூவை கல்யாணசுந்தர முதலியாரால் பார்வையிடப் பெற்று, பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியாரால் பதிப்பிக்கப் பெற்றது.

பொன்னோரி சுந்தரம் பிள்ளை, அடிகளாரின் தமையனார் சபாபதி பிள்ளையின் இளையமகள் வடிவுடைமாணிக்கம் அம்மையாரை மணந்தவர்; அடிகளிடம் கல்வி கற்றவர்; சிந்தாதிரிப் பேட்டையில் ஆசிரியராகப் பணியாற்றியவர்; புராணச் சொற்பொழி வாற்றியதால் புராணிகர் பொன்னோரி சுந்தரம் பிள்ளை என்று வழங்கப் பெற்றவர். அடிகள் இவருக்குப் பாடியளித்த

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

இருபாடல்களை 1142 ஆம் பக்கத்திற் காண்க. அவற்றுள் ஒன்றில் படிப்பது நன்றெனத் தெரிந்த பாங்குடையாய், மன்றுள் வெளிப்பரமன் அன்பே தடிப்பது நன்றெனத் தேர்ந்த சதுருடையாய், அறநவின்ற தவத்தாய், வீணில் துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர் உடையாய் என் தோழ எனப் பாராட்டப் பெற்றவர். ஆசிரிய வணக்கமாக அடிகளாரின் மீது இவர் ஒரு பிள்ளைத்தமிழ் (இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ்) பாடியிருக்கிறார். அது 1893 ஆம் ஆண்டில் பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியாரால் அச்சிடப் பெற்றது. ஆறு திருமுறைகளும் சேர்ந்த இம்முதற்பதிப்பில்தான் அடிகளின் திருவுருவப் படமும், வரலாறும் (இராமலிங்க பிள்ளையவர்கள் சரித்திரச் சுருக்கம்) முதன் முதலாக அச்சிடப் பெற்றன. சரித்திரச் சுருக்கத்தைப் பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியாரே எழுதியுள்ளார்.

இச்சரித்திரச் சுருக்கம் இவரால் பின்பு பதிப்பிக்கப் பெற்ற 1896 ஆம் ஆண்டுப் பதிப்பிலும் பின்னர் பல பதிப்புகளிலும் அச்சிடப்பெற்றுள்ளது. தொ.வே.பாடிய 'திருவருட்பா வரலாறு' ' சுந்தரம் பிள்ளை' அடிகளார் மீது பாடிய 'திருவருட் பிரகாச வள்ளல் ஞான சிங்காதன பீடத் திருவருட் செங்கோலாட்சி (64 பாடல்கள்) அடிகளாரைக் குறித்துத் தண்டபாணி சுவாமிகள் பாடிய 'அனுபவப் பதிகம்' 'வினாப் பதிகம்' 'பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் எழுதிய 'திருவருட்பிரகாச வள்ளல் திருவுருச் தன்மை விண்ணப்பம்' ஆகியவை அருட்பா பதிப்பகத்தில் ஐந்தாம் பக்கத்தில் சேர்க்கப் பெற்றன.

பிரிங்கிமாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பு-1896

பொன்னோரி சுந்தரம் பிள்ளை 1892இல் பதிப்பித்த பிருங்கிமா நகரம் இராமசாமி முதலியார் அடுத்த நான்கு ஆண்டுகளில் 1896 ஆம் ஆண்டில் தாமே ஒரு பதிப்பை வெளியிட்டார். அஃது அவரது அச்சகத்திலேயே அச்சிடப்பெற்றது. இவ்வளவு விரைவில் தனியாக ஒரு பதிப்பை வெளியிட்டதற்குக் காரணம் சொந்தத்தில் ஓர் அச்சகம் அமைந்ததும் ஆகலாம்.முன் பதிப்புகளில் சேராத பாடல்கள் சில இதனுள் சேர்க்கப் பெற்றுள்ளன.

ச.மு.கந்தசாமி பிள்ளை பதிப்பு-1924

சமரச பஜனை ச.மு.கந்தசாமி பிள்ளையைக் கொண்டு இப்பதிப்பை அச்சிட்டு இலவசமாக வழங்கியவர் புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் தீ.நா.முத்தையா செட்டியார் ஆவார்.சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார் ஆ.அ., பதிப்புப் பணிகல் உதவி செய்ததோடு முன்னுரையும் எழுதியுள்ளார்.

படிப்பதுநன் றென்தெரிந்த பாங்குடையாய் மன்றுள்வெளிப் பரம னன்பே
தடிப்பதுநன் றென்த்தேர்ந்த சதுருடையாய் அறநவின்ற தவத்தாய் வீணில்
துடிப்பதிலாத் தூயமனச் சுந்தரப்பேர் உடையாய்என் தோழ கேள்நீ
அடிப்பதுமச் சிறுவர்களை அடிப்பதுநன் றலஎன்மேல் ஆணை ஆணை

திருவோங்கு பொற்சபையும் சிற்சபையும் நம்பெருமான் செய்யா நின்ற
உருவோங்கும் ஆனந்தத் தாண்டவமும் கண்டினிதாங் குறைக யானும்
தருவோங்கு தில்லைநகர்க் கோரிருபால் நாள்வரைக்குட் சார்கின் றேன்நம்
இருவோங்கள் குறையும் இறைக் குரைத்தகற்றிக் கொளலாம்நீ இளையேல் ஐயா

1. படிக்கும் பிள்ளைகளை அடிக்க வேண்டா எனப் பொன்னோரி சுந்தரம் பிள்ளைக்கு எழுதி அனுப்பியது. பொன்னோரி சுந்தரம் பிள்ளை வறுமைதீர வழிகேட்டபோது பாடி அளித்தது. (ஊரன் அடிகளின் பதிப்பு - பக்கம் எண், 1142)

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

இதுகாறும் கூறிய பதிப்புகள் அனைத்திலும் அடிகளின் பெயர் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்கள் என்றே குறித்திருக்க இப்பதிப்பில் சிதம்பரம் இராமாங்க சுவாமிகள் என்று முதன் முதலாகக் குறிப்பிடப்பெறுகிறது. இப்பதிப்பில் வடலூர் சத்திய ஞான சபையின் படமும் சேர்க்கப்பெற்றுள்ளது. இதிலுள்ள இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் ச.மு.க பாடிய சரித்திரக் கீர்த்தனைகளை ஒட்டி உரைநடையாக எழுதப் பெற்றதாகும்.ஆறாம் திருமுறை முதற்பதிப்பில் (1885) நூன் முன்னர் சீவகாருணிய ஒழுக்கம் அச்சிடப்பெற்றது.பின்வந்த பதிப்புகளிலும் முதல் சீவகாருணிய ஒழுக்கம் அச்சிடப்பெற்றது. பின்வந்த பதிப்புகளிலும் முதய சீவகாருணிய ஒழுக்கத்தை வைப்பது வழக்கமாயிற்று. இப்பதிப்பில் சீவகாருண்ய ஒழுக்கத்துடன் மனுமுறை கண்ட வாசகம், ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி, தொண்டமண்டல சதகத்தின் நூற்பெயரிலக்கணம், வழிபடு கடவுள் வணக்கப்பாட்டுரை, 'தமிழ்' என்பதன் உரை, அடிகள் உபதேசித்தருளிய 'உண்மை நெறி' ஆகியனவும் நூல் முன்னர் சேர்க்கப்பெற்றன. வழிபடு கடவுள் வணக்கப்பாட்டுரை, 'தமிழ்' என்பதன் உரை, அடிகள் உபதேசித்தருளிய 'உண்மைநெறி' ஆகியனவும் நூல் முன்னர் சேர்க்கப்பெற்றன. நூலிறுதியில் 'சுத்த சன்மார்க்கத் திருநெறிக் குறிப்புகள்' என்னும் தலைப்பில் அடிகளின் உபதேசக் குறிப்புகள் சில சேர்க்கப்பெற்றன.முன்பதிப்புகளில் சேராது விடுபட்ட பாடல்கள் சிலவும், 'குடும்பகோரம்' 'ஓஷதி' யின் குணா நுபவம் முதயனவும் இப்பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பெற்றவை உண்டு.

'இதுகாறு மச்சிடாது பற்பல பதிகங்களும் நித்தியவிதியென்னும் உலகியலும் நாமாவளிகலும் நூதனமாகச் சேர்க்கப்பட்டு' எனப் பி.இரா.பதிப்பிலும் 'இதுகாறும் வெளிவராத பாடல்கள் குறிப்புகளுடன் எனச் ச.மு.க.பதிப்பிலும் முகப்பேட்டிற் காணப்படுகின்றன. தொ.வே.முதற்பதிப்பு முதல் ச.மு.க. பதிப்புவரை இவ்வேழு பதிப்புகளிலுமே சேராது விட்டுப் போய் பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பில் முதன்முதலாக அச்சிடப்பெற்றனவும் உண்டு.1867 முதல் 1924 வரை இவ்வேழு பதிப்புகளைத் தவிர வேறு சில பதிப்புகள் வெளிவந்துள்ளனவேனும் அவையெல்லாம் இவற்றில் ஏதாவது ஒன்றின் மறு அச்சுகளே யொழியப் பதிப்புகளாகா.இவ்வேழுமே ஆதாரப் பதிப்புக; சிறந்த பதிப்புகளும் ஆம்.

இதன்பின் வெளிவந்த பதிப்புகள்

இதன்பின் வெளிவந்த பதிப்புகளில் குறிப்பிடத்தக்கவை இரண்டே.

1. சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பு. 2. ஆ.பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு.

சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பு-1932,1942

சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கம் 14-3-1930இல் இராசமாணிக்கம் பிள்ளையால் தொடங்கப் பெற்றது. இராசமாணிக்கம் பிள்ளை அடிகளின் தமையனார் பரசுராம பிள்ளையின் வழிவந்தவர். முதல் ஐந்து திருமுறைகளை ஒரு புத்தகமாகவும் ஆறாம் திருமுறையை ஒரு புத்தகமாகவும் சங்கச் சார்பில் இவர் வெளியிட்டார்.இவற்றின் முதற் பதிப்பு 1-10-1932லும், இரண்டாம் பதிப்பு 11-10-1942லும், வெளிவந்தன. இவற்றின் மறுஅச்சுகள் பலமுறை வெளிவந்தன. திருஅருட்பாவைப் பெருநூல்களாகவும் சிறுநூல்களாகவும் அச்சிட்டு ஏழை எளிவயவர்களுக்கும் பயன்படுமாறு நாடெங்கும் பரப்பிய பெருமை இராச மாணிக்கம் பிள்ளைக்கு உண்டு.இவர் (சன்மார்க்க சங்கம்) வெளியிட்ட பாராயணத்திரட்டு அக்காலத்தில் ஒரு காசுக்கு விற்கப் பெற்றது. 100 படிகள் விலை எட்டணா. மக்களிடையே பெரிதும் வழங்கும் பதிப்பு சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு 1931-1958

இதுகாறும் வெளிவந்த பதிப்புகள் அனைத்திலும் சிறந்தது பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பே. இயவரது பதிப்பு 1.கீர்த்தனைப் பகுதி, 2.வசனப் பகுதி, 3.வியாக்கியானப் பகுதி[5] 4.உபதேசப் பகுதி 5.திருமுகப் பகுதி, 6.தனிப் பாசுரப் பகுதி, 7.முதல் திருமுறை அல்லது பெருநூல் பகுதி, 8.இரண்டாம் திருமுறையும் மூன்றாம் திருமுறையும் அல்லது திருஒற்றியூர்ப் பகுதி, 9.ஐந்தாம் திருமுறை அல்லது திருத்தணிகைப் பகுதி, 10.நான்காம் திருமுறையும் ஆறாம் திருமுறை முன்பகுதியும் அல்லது பூர்வஞான சிதம்பரப் பகுதி, 11. ஆறாம் திரு முறை இடைப்பகுதி அல்லது உத்தரஞான சிதம்பரப் பகுதி, 12.ஆறாம் திரு முறை முடிந்த பகுதி அல்லது சித்திவளாகப் பகுதி எனப் பன்னிரண்டு புத்தகங்களாகும். இவை வெளிவந்த காலங்களையும் பதிப்புகளின் எண்ணிக்கையையும் பின்னிணைப்பிற் காண்க.

பாலகிருஷ்ண பிள்ளை-பி-ஏ., எம், எல்., பட்டம் பெற்றவர்; வழக்கறிஞர்; சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தத்துவ நூல் ஆசிரியராகவும், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டநூல் ஆசிரியராகவும் இருந்தவர்; சென்னை இந்து சமய அற நிலையப் பாதுகாப்புக் கழகத்தில் செயலாளராகவும் ஆணையாளராகவும் பணியாற்றியவர். அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் வடலூர் நிலையங்களைப் பார்வையிட ஒரு முறை வடலூர் வந்தபோது அடிகளின் திருக்கரத்தால் எழுதப்பெற்ற திருவருட்பா மூல ஏடுகள், அன்பர்களால் எழுதி வைக்கப்பெற்ற படிஏடுகள் முதலியவை வடலூர் சத்தியஞானசபையின் பூசகர் உ.ப.பாலசுப்ரமணிய சிவாசாரியாரிடம் இருப்பதை அறிந்தார். அவரிடம் நட்புக் கொண்டும் உத்தியோக செல்வாக்கினாலும் அவற்றைச் சிவாசாரியரிடமிருந்து இரவலாகப் பெற்று ஆராய்ந்து பகுதி பகுதியாகப் பதிப்பிக்கத் தொடங்கினார். பாலகிருஷ்ண பிள்ளைக்குக் கிடைத்த மூலங்கள் அனைத்தும் (அடிகள் எழுதி கட்டளைகள், பத்திரிகைகள், இறுக்கம் இரத்தின முதலியாருக்கும் புதுவை வேலு முதலியாருக்கும் மற்றைய அன்பர்களுக்கும் எழுதிய கடிதங்கள், அன்பர்கள் எழுதிய வைத்திருந்த படிச்சுவடிகள் (ஓலை), காகித நோட்டுப் புத்தகங்கள், தனிக் காகித ஏடுகள், முதற் பதிப்புகள், பழம் பதிப்புகள், துண்டு வெளியீடுகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை) சிவாசாரியரிடமிருந்து இரவல் பெற்றவையே. இவ்வகையில் பாலகிருஷ்ண பிள்ளையும் பாலசுப்பிரமணிய சிவாசாரியரும் செய்துகொண்ட ஒப்பந்தம் (Agreement in 12 Annas stamp paper) ஒன்றும் உண்டு.

ஆயினும் பாலகிருஷ்ண பிள்ளை தமது பதிப்பில்- 12 புத்தகங்கள், 27- பதிப்புகளில்- ஓரிடத்திலாவது தானசிவா சாரியரிடமிருந்து தாம் மூலங்களைப் பெற்றதைக் குறிப்பிடவில்லை மேற்கூறியவாறு தமக்கு ஒரே இடத்திருந்து மிக எளிதில் கிடைத்த மூலங்களைப் பல்லாண்டு காலம் துருவித்துருவி எழுத்தெண்ணி அரிதின் ஆராய்ந்து தமது பதிப்பை வெளியிட்டார். இவரது பதிப்பின் முன்னுரைகளும் அடிக்குறிப்புகளும் ஆராய்ச்சியாளர்களுக்கும் வருங்காலப் பதிப்பாசிரியர்களுக்கும் மிகப் பயன்படுபவை. 'இவ்வளவு சீர்திருத்தத்துடன் அச்சிடப்பட்ட நூல் ஒன்றை நான் இது வரையும் கண்டதில்லை என்று தணிகைமணி வ.சு.செங்கல்வராய பிள்ளை தங்கள் முயற்சியின் பயனான இந்நூன் அமைப்பைக் கண்டபின் ''கருத்தழிக தாங்கள் ஒரு அவதார புருஷர். அருட்பாவின் பிழையற்ற வெளியீட்டுக்கென்றே அனைவரும் ஒப்பற்குரியதே.

5. இதன் முதற்பதிப்பு உரைப்பகுதி என்ற பெயருடன் வெளியாயிற்று, உரைப்பகுதி என்னும் பெயர் வசனப் பகுதி என்பதுடன் உறழ்ச்சி யுறா திருக்குமாறு இரண்டாம் பதிப்பில் வியாக்கியானப் பகுதி என்று மாற்றினார்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

தமிழ்நூற் பரப்பிலேயே தம் பதிப்புக்கு ஈடும் எடுப்பும் இல்லாதவாறு திருவருட்பாவைப் பதிப்பித்து வெளியிட்ட பாலகிருட்டினனார் மார்க்க சங்க நிகழ்ச்சிகளையும் எழுதி முடிக்குமுன்-எழுதத் தொடங்குமுன் இவ்வுலகவாழ்வை நீத்தமை ஈடு செய்யவொண்ணாத இழப்பேயாம்.

மூல ஏடுகள்

(அடிகளின் திருக்கரத்தால் எழுதப்பெற்றவை)

அடிகள் தாம் பாடியருளிய திருஅருட்பாக்களைத் தம் கரத்தாலேயே எழுதியும் அருளியுள்ளார். திருஅருட்பாப் பாடல்கள் 5818இல் பெரும்பாலனவற்றிற்கு அடிகளின் கையெழுத்து மூலங்களே கிடைத்துள்ளன. அவை ஓலைச் சுவடிகளாகவும், காகித ஏடுகளாகவும், நோட்டுப் புத்தகங்களாகவும் உள்ளன.1,2,3,5 திருமுறைகளின் மூலங்கள் பனை ஓலைச் சுவடிகள்; மிகச் சிறுபான்மை காகித ஏடுகள். 4,6 திருமுறைகள் முழுவதும் காகிதம்.

முதல் திருமுறை

1.	திருவடிப் புகழ்ச்சி	....	ஒரு தனிச் சுவடி.
2.	விண்ணப்பக் கலிவெண்பா	....	மூலங்கள் கிடைக்கவில்லை
3.	நெஞ்சறிவுறுத்தல்		
4.	சிவநேச வெண்பா	....	காப்புச் செய்யுள் இரண்டிற்கு மட்டும் மூலம் கிடைத்துள்ளது.
5.	மகாதேவ மாலை	....	33 ஏடுகள் கொண்ட ஒரு தனிச் சுவடி ஏட்டெண்கள் 1-33.
6.	திருவருண் முறையீடு	....	39 ஏடுகள் கொண்ட ஒரு தனிச் சுவடி ஏட்டெண்கள் 21-59
7.	வடிவுடைமாணிக்க மாலை	....	26 ஏடுகள் கொண்ட ஒரு தனிச் சுவடி. ஏட்டெண்கள் 1-26
8.	இங்கிதமாலை	....	தனிச் சுவடிகள்

இரண்டாம் திருமுறையும் மூன்றாம் திருமுறையும்

இரண்டாம் திருமுறை பெரும்பாலும் ஒற்றியூர்ப் பதிகங்கள்.மூன்றாம் திருமுறை முழுவதும் (19 பதிகங்களும்) ஒற்றியூர்ப் பதிகங்கள்.இவ்விரண்டிற்கும் மூலம் பெரிய சுவடி ஒன்றும் சிறிய சுவடிகள் சிலவுமாம். பெரிய சுவடி 202 ஏடுகளைக் கொண்டது. ஏட்டெண்கள் 1-202. தலைப்பேட்டில்; எனது குருவாகிய சிதம்பரம் இராமலிங்க தேசிகர் அருளிச் செய்த ஒற்றிப் பதிகம்' என வேறு ஒருவர் எழுத்தில் உள்ளது. முதல் ஏட்டின் வலது ஓரத்தில் 'செல்வராயன் புத்தகம்' என்றும் முதல் ஏட்டின் பின்புறம் வலது ஓரத்தில் 'செல்வராயன் புத்தகம் எனது குருவாகிய இராமலிங்கந் துணை' என்றும் எழுதப்பெற்றுள்ளது. இவை, அடிகள் எழுதிய இச்சுவடியை வைத்திருந்த செல்வராய முதலியார் குறித்த குறிப்புகள் ஆகும்.அடிகள் சுந்தரக்கை சாத்திய திருவேடுகளைத் தொகுத்து வைத்திருந்தவர் சிவானந்தபுரம் செல்வராய முதலியார் எனத் திருவருட்பா வரலாற்றிலும் (42) சொல்லப்பெற்றுள்ளது. சுவடியின் 1-52 ஏடுகளில் மூன்றாம் திருமுறைப் பதிகங்கள் பத்தொன்பதும் வேலாயுதனாரால்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பதிப்பிக்கப் பெற்ற வரிசையிலேயே எழுதப்பெற்றுள்ளன. 1-54 ஏடுகளுக்குள்ளும் 10,11 ஆம் ஏடுகளின் இங்கிதமாலையின் 2,3,4,5,10,11,12,13,8,9ஆம் பாடல்கள் பத்தும் சில பாட பேதங்களுடன் மேற்குறித்த வரிசையில் ஒரு பதிகமாக எழுதப்பெற்றுள்ளன. 37-42 ஏடுகளில் அருண்மொழி மாலை 31 பாடல்களும் உள்ளன. 53,54,55 ஏடுகள் இன்பமாலை 11 பாடல்கள். 56-202 ஏடுகளில் இரண்டாம் திருமுறைப் பதிகங்கள் இப்பதிப்பில் அச்சிடப்பெற்ற வரிசையில் உள்ளன. 56-202 ஏடுகளுக்கும் 64,65,75-77,79,80,87,88,99-102,132,133 ஆம் ஏடுகள் சுவடியில் இல்லை. இதைப்பற்றிய ஒரு குறிப்பு முதல் ஏட்டின் பின்புறம் 'குறைவு நம்பர் சுறு சுரு எரு எசு ஈ· எசு ஒள அஎ ஆ கக எனச் செல்வராய முதலியார் எழுத்தில் காணப்படுகிறது.குறைந்த ஏடுகளைப் பற்றிய இக்குறிப்பிலும் 132,133 ஆம் ஏடுகள் இடம் பெறவில்லை.இச் சுவடியைக் கீழ்வருமாறு அட்டவணைப் படுத்தின் தெளிவாக விளங்கும்.

<u>பெரிய சுவடி 1-202 ஏடுகள்</u>

ஏட்டெண்	
1-9	மூன்றாம் திருமுறை முதல் மூன்று பதிகங்கள்
10-11	இங்கிதமாலையின் 2,3,4,5,10,11,12,13,8,9 ஆம் பாடல்கள் (சில பாடபேதங்களுடன்)
12-21	மூன்றாம் திருமுறை 4-8 பதிகங்க ல். 21 ஆம் ஏட்டின் பின்புறம் இரண்டாம் திருமுறை முத்தி உபாயம் என்னும் பதிகம்.
22-36	மூன்றாம் திருமுறை 9-14 பதிகங்கள்
37-42	அருண்மொழிமாலை
43-52	மூன்றாம் திருமுறை 15-19 பதிகங்கள்
53-55	இன்பமாலை
56-202	இரண்டாம் திருமுறை அபராதத்தாற்றாமை முதலாக, கழிபகற் கிரங்கல் ஈறாக 62 பதிகங்கள்

இரண்டாம் திருமுறையின் ஏனைய பதிகங்களின் மூலங்கள் சில சிறு சுவடிகளாகவும் ஒற்றை ஏடுகளாகவும் பலவாறு எண்ணிடப் பெற்றும் எண்ணிடப் பெறாதும் உள்ளன. இவை இப்போது ஓர் ஒழுங்கான அடைவில் இல்லை. சுவடிக்குரியவர்களாலும், வேலாயுத முதலியாராலும், பாலாகிருஷ்ண பிள்ளையாலும் அவரவர்கள் கருத்தின்வண்ணம் முன்பின் மாற்றிக் கையாளப்பெற்றுப் பலவாறாகக் கலைந்துள்ளன.

<u>நான்காம் திருமுறை</u>

இத்திருமுறையின் 12 மாலைகளில் ஆளுடைய அரசுகல் அருண்மாலை தவிர ஏனைய 11 மாலைகளுக்கும் அடிகளின் கையெழுத்து மூலங்கள் கிடைத்துள்ளன.அனைத்தும் காகித ஏடுகள்.

<u>ஐந்தாம் திருமுறை</u>

ஐந்தாம் திருமுறை திருத்தணிகைப் பதிகங்களில் முதலாவது பிரார்த்தனை மாலை முதல் 36 வது தரிசனை வேட்கை ஈறாக 36 பதிகங்களும் ஒரு சுவடியில் வேலாயுதனாரால் பதிப்பிக்கப் பெற்ற வரிசையிலேயே எழுதப்பெற்றுள்ளன. இச்சுவடியின் ஏட்டெண்கள் 232-290ஆம் ஏடு

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சுவடியில் இல்லை.சுவடியின் முதல் ஏடே 232 என எண்ணிடப் பெற்றிருப்பது ஆய்வுக்குரியது. இத்திருமுறையின் ஏனைய பதிகங்களுக்கு மூலம் சில சிறிய சுவடிகளும், தனி ஏடுகளுமாம் புண்ணிய நீற்று மான்மியத்தின் பின் ஐந்து (6-10) பாடல்களும், செவியறிவுறுத்தன் முதல் ஆறு பாடல்களும், 48ஆம் பதியம் தனிப்பாசுரங்களின் முதல் மூன்று பாடல்களும் இறுக்கம் இரத்தின முதலியாரது காகித நோட்டுப் புத்தகத்தில் அடிகளால் எழுதப் பெற்றுள்ளன.

ஆறாம் திருமுறை

இத்திருமுறையின் மூலங்கள் காகித நோட்டுப் புத்தகங்களாகவும், தனித்தாள்களாகவும் உள்ளன.

மூல ஏடுகளைப்பற்றிய சில பொதுக் குறிப்புகள்

ஓலைச்சுவடிகள் காலத்தால் முற்பட்டவை.காகித ஏடுகள் பின்னாளில் எழுதப் பெற்றவை. சென்னையிருந்தவரை ஓலையையும் வடலூர் வந்தபின் காகிதத்தையும் அடிகள் பயன்படுத்தினார் என பொதுவாகக் கூறலாம்.சிறுபான்மை இதற்கு விலக்கும் உண்டு.அடிகள் கைப்பட எழுதிய மூல ஏடுகளை 'சுந்தரக்கை சாத்திய திருவேடு' என்பர் வேலாயுதனார் (43).இம் மூல ஏடுகளிற் பல அடிகளை அடுத்திருந்த அன்பர்களால் அவரவர்களுக்குக் கிடைத்தவரையில் பாதுகாக்கப் பெற்றும் இருந்தன.அடிகளிடம் வேண்டிப் பெற்றும் அன்பர்களிடமிருந்து பெற்றும் இம் மூல ஏடுகளையெல்லாம் இறுக்கம் இரத்தின முதலியார் தொகுத்து முதற் பதிப்பை அச்சிடப்செய்தார். முதல் நான்கு மக்களாகிய கணபதி, சண்முகம் இருவரும் தந்தையாரை இழந்த பின் வடலூர் வந்து ஆ.சபாபதி சிவாசாரியாரின் ஆதரவில் வாழ்ந்து ஒருவர் பின் ஒருவராக இளைமையிலேயே காலமாயினர். இறுக்கம் இரத்தின முதலியார் தொகுத்து வைத்திருந்த ஏடுகள் இவர்களிடமிருந்து சிவாசாரியாரிடம் வந்தன.மற்றும் பலரிடம் இருந்த மூல ஏடுகளையும் படி ஏடுகளையும் படி ஏடுகளையும் சிவாசாரியார் தொகுத்தார். அவரிடம் இருந்தனவும், அவரால் படிசெய்யப் பெற்றனவும் உண்டு.இவ்வாறு மூலங்களில் பெரும்பாலானவை சிவாசாரியாரிடம் சேர்ந்தன.சபாபதி சிவாசாரியருக்குப்பின் அவர் வழி வந்தோர் அவற்றைப் பாதுகாத்து வந்தனர். அவர்களுள் ஒருவராகிய பாலசுப்ரமணிய சிவாசாரியாரிடமிருந்து அவற்றுள் பெரும்பாலனவற்றை ஆ.பாலகிருஷ்ண பிள்ளை பெற்றுத் தம் பதிப்பை வெளியிட்டார் என்பது முன்னரே கூறப் பெற்றது. பாலகிருஷ்ண பிள்ளைக்குக் கிடைத்த மூல ஏடுகள் 3851 பாடல்களுக்கு அடிகள் திருக்கரஞ் சாத்திய மூல ஏடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக பாலகிருஷ்ண பிள்ளை தமது பதிப்புகளின் முன்னுரைகளிற் கூறியுள்ளார். பாலகிருஷ்ண பிள்ளைக்குக் கிடைக்காது இப்பதிப்பாசிரியருக்குக் கிடைத்த மூல ஏடுகள்.

1. நான்காம் திருமுறை, அபராத மன்னிப்பு மாலை (10 பாடல்கள்) காகித ஏடுகள்.

2. பின்வரும் முதற் குறிப்புகளையுடைய 29[6] பாடல்கள் எழுதப் பெற்றுள்ள காகித நோட்டுப் புத்தகம் ஒன்று, 'வான் வேண்டு சிற்றம்பலத்தே' தருவகை இத்தருணம் 'வினைத்தடை தீர்த்தெனை என் உடலும் என் உயிரும் 'கோது கொடுத்த மனச் சிறியேன் ஆகிய 5 தனிப்பாடல்கள் ஆறாம் திருமுறை தாய் கூறல் என்னும் பதிகத்தின் (இப்பதிப்பில் நற்றாய் கூறல்) மூன்றாம் பாடல் முதல் பத்தாம் பாடல் முடிய உள்ள 8 பாடல்கள். பேரன்புக்கண்ணி 14 கண்ணிகள் 'போற்றி நின்னருள்' 'போற்றி நின்னிடம் என்னும் 2 தனிப் பாடல்கல் ஆகப் பாடல்கள் 29.

6. இவ்விருபத்தொன்பது பாடல்களும் கொண்ட நோட்டுப் புத்தகம் எமதன்பர் வடலூர் துறவி கந்தசுவாமி அவர்களிடமிருந்து எமது பார்வைக்குக் கிடைத்தது.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

தருமச்சாலையில் வழிபாட்டில் உள்ள (கையெழுத்து) மூல ஏடுகள் திரு அகவல்

வடலூர் சத்திய தருமச்சாலையில் எழுந்தருளியிருக்கும் அடிகளார் திரு வுருவப் படத்தின் பக்கத்தில் அடிகளாரின் திருக்கரத்தால் எழுதப்பெற்ற அருட் பெருஞ்சோதி அகவல் மூலக் காகித நோட்டுப் புத்தகம் கண்ணாடிப் பேழையில் அனைவரும் கண்ணுறும் வண்ணம் வழிபாட்டில் வைக்கப்பெற்றுள்ளது. 58 பக்கங்களைக் கொண்ட அதனுள் 1-47 பக்கங்கள் அருட்பெருஞ்சோதி அகவல்.48ஆம் பக்கம் வெற்றேடு.49-53 பக்கங்கள் ஆறாம் திருமுறை தத்துவ வெற்றி 20 பாடல்கள். 54,55,56 ஆம் பக்கங்கள் வெற்றேடுகள். 57,58 ஆம் பக்கங்கள் அடிமைப்பேறு 10 பாடல்கள்.

மூல ஏடுகளில் அடிகளால் குறிப்பிடப்பெற்ற பதிகப்பெயர்கள்

திருமுறை	பதிகம் பெயர்	பதிக எண்
1	திருவடிப்புகழ்ச்சி	1
1	விண்ணப்பகலிவெண்பா	2
1	நெஞ்சறிவுறுத்தல்	3
1	சிவனேச வெண்பா	4
1	மகாதேவ மாலை	5
1	திருவண் முறையீடு	6
1	வடிவுடை மாணிக்க மாலை	7
1	இங்கித மாலை	8
4	அன்பு மாலை	1
4	அருட்பிரகாசமாலை	2
4	பிரசாத மாலை	3
4	ஆனந்த மாலை	4
4	பத்தி மாலை	5
4	சௌந்தர மாலை	6
4	அதிசய மாலை	7
4	அபராத மன்னிப்பு மாலை	8
5	பிரார்த்தனை மாலை	5
5	திருவருள் விழைதல்	31
5	உறுதி உணர்த்தல்	33
6	அருட்பெருஞ்ஜோதி அட்டகம்	3
6	பிள்ளைச் சிறுவிண்ணப்பம்	19
6	பிள்ளைப் பெரு விண்ணப்பம்	20
6	அருள்விளக்க மாலை	37
6	உத்தர ஞான சிதம்பரம் மாலை	84
6	நடராஜ பதிமாலை	97
6	சற்குரு மணிமாலை	98
6	சத்திய வார்த்தை	150
6	சத்திய அறிவிப்பு	151

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பதிக முதல் அடிகளால் குறிக்கப்பெற்ற ஊர்கள்			
பதிகத்தின் ஊர் பெயர்	திருமுறை	பதிகஎண்	பதிக பெயர்
ஒற்றியூர்	2	53	பொருள் விண்ணப்பம்
திருவொற்றியூர்	2	56	திருவண்ண விண்ணப்பம்
திருமுல்லைவாயில்	2	12	அருளியல் வினாவல்
இதுவுந் திருமுல்லைவாயில்	2	13	திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்
தில்லை - ஒற்றியூர்	2	25	ஆடலமுதப்பத்து
தில்லை - ஒற்றியூர்	2	48	வழிமொழி விண்ணப்பம்
திருவாரூர்	2	80	விண்ணப்ப பதிகம் (திருவாரூர்ப்பதிகம்)

பதிக முதலும், ஏட்டின் தலைப்பிலும், ஓரங்களிலும் அடிகளால் குறிக்கப் பெற்ற மாங்கலக் குறிப்புகள்.

உ சிவ சண்முக சிவ சிவ சிவ
உ சிவமயம் சண்முக நம சிநம
உ திருச்சிற்றம்பலம் சிவ சண்முக நம சிவ நம
உ நன்றாக சரவணபவ நம சிவனே
உ கணபதி துணை குமரநம நமசிவய
உ சிவ கணபதி துணை குருவேநம நமசிவாய
உ கணபதி நம சிவகுருவே நம நமச்சிவாய
உ முருகன் துணை வேலும் மயிலும் நமச்சிவாயம்
உ சண்முகன் றுணை சிவ சுந்தரீ நம
உ சண்முக பவ சிவசிவ சாமிநம
உ
உ வடிவுடைமாணிக்க மாலைச் சுவடியின் காப்பேட்டின் சிவ
உ வலது ஓரத்தில் 'சிவ' என்று 16 முறை எழுதியிருக்கிறார். சிவ
உ 6ஆம் ஏட்டின் முன்பக்கம் சிவ வடிவுடைமாணிக்க மாலை சிவ சிவ சிவ
உ முடிகிறது. ஏட்டின் பின்பக்கம் முழுவதும் மேலும் கீழுமாகப் பல சிவ சிவ சிவ சிவ சிவ
உ வரிசைகள் என்று எழுதிச் சிந்தித் பெரிய சுவடியின் இரண்டாவது சிவ சிவ சிவ
உ ஏட்டின் பின் புறம் இடது ஓரத்தில் 16 முறை பிள்ளையார் சிவ சிவ
உ சுழியிட்டிருக்கிறார். இதுபோல் சிவசமயம் பலமுறை எழுதிய சிவ
உ இடங்கள் உண்டு. பிற சிலவும் அன்ன. அனைத்தையும் சிவ
உ காட்டப்புகின் பெருகும்.

பதிகத் தொடக்கத்தில் இன்ன சுவாமிபேரில் என்று அடிகளால் குறிக்கப் பெற்ற குறிப்புகள்			
பதிகத்தின் ஊர் பெயர்	திரு முறை	பதிக எண்	பதிக பெயர்
வல்கேசர்பேரில்	2	14	காட்சிப்பெருமிதம்
ஒற்றியப்பர்	2	45	அருள்திறத்து அலைசல்
சிவகாமி அம்மன்	2	100	அம்மைதிருப்பதிகம்
திருஞானசம்பந்த சாமிகள்	4	9	ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை
சுந்தரமூர்த்தி சாமிகள்	4	11	ஆளுடைய நம்பிகள் அருண்மாலை
வா தவூரடிகள்	4	12	ஆளுடைய அடிகள் அருண்மாலை

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

பனையோலைச் சுவடி படி ஏடுகள்

தருமலிங்கம் பிள்ளை, இறுக்கம் இரத்தின முதலியார், வேட்டவலம் ஜமீந்தார் அப்பாசாமி பண்டாரியார், ஆ.சபாபதி சிவாசாரியார், சீ.சுப்பிரமணிய பிள்ளை, விசுவாத பிள்ளை, மகாதேவ முதலியார், வேங்கடேச ஐயர் ஆகிய அன்பரகள் அடிகளது மூல ஏடுகளைத் தத்தமக்குக் கிடைத்தவரை, தம்மால் இயன்றவரை, படி செய்து வைத்திருக்கிறார்கள். இப் படிஏடுகள் ஓலைச்சுவடிகளாகவும், காகிதநோட்டுப் புத்தகங்களாகவும், காகித ஏடுகளாகவும் உள்ளன.

பாடல் தொகை

திரு அருட்பாப் பதிப்புகளில் பாடல் தொகை கணக்கிட்டுக் காட்டியிருப்பது பின் வருமாறு.

தொ.வே முதல் நான்கு திருமுறை முதற்பதிப்பு 1867		
திருமுறை	பதிகங்கள்	பாடல் எண்ணிக்கை
முதல் திருமுறை	8 நூல்கள்	1829
இரண்டாம் திருமுறை	103 பதிகங்கள்	1203
மூன்றாம் திருமுறை	19	235
நான்காம் திருமுறை	12 மாலைகள்	238
மொத்தம்	**142**	**3505**

தொ.வே ஐந்தாம் திருமுறை முதற்பதிப்பு 1880		
திருமுறை	பதிகங்கள்	பாடல் எண்ணிக்கை
சித்தி விநாயகர் பதிகங்கள்	4	38
திருத்தணிகைப் பதிகங்கள்	49	528
மொத்தம்	**53**	**566**

பொ.சு ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பு 1892	
திருமுறை	பதிகங்கள்
முதல் திருமுறை	1829
இரண்டாம் திருமுறை	1203
மூன்றாம் திருமுறை	235
நான்காம் திருமுறை	238
ஐந்தாம் திருமுறை	528
ஆறாம் திருமுறை	2662
குடும்பகோஷம்	116
தனிப் பாடல்கள்	106
சித்திவிநாயகர் பதிகம்	38
மொத்தம்	**6955**

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

ச.மு கந்தசாமி பிள்ளை பதிப்பு 1924		
திருமுறை	பாடல் எண்ணிக்கை	பதிகம்
முதல் ஐந்து திருமுறைகள்	3978	
ஆறாம் திருமுறை	2746	
அருட்பெருஞ்ஜோதி அகவல் 1598 அடி பாடல்கள்	1	
மொத்தம்	**6725**	

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு 1931 - 1959			
திருமுறை	பதிகங்கள்	பாடல் எண்ணிக்கை	
முதல் திருமுறை	8 நூல்கள்	712	
இரண்டாம் திருமுறை	103 பதிகங்கள்	1085	
மூன்றாம் திருமுறை	19	235	
நான்காம் திருமுறை	12	238	
ஐந்தாம் திருமுறை			
மூத்த பிள்ளையார் பதிகங்கள்	4	38	
திருத்தணிகைத் திருப்பதிகங்கள்	50	539	
இசை உருப்படிகள்	2		
இசைக்கூறுகள்	27	238	
ஆறாம் திருமுறை			
முன்பகுதி	24	476	
இடைப்பகுதி	40	635	
முடிந்தபகுதி	44	688	
அருட்பெருஞ்ஜோதி அகவல் 1596 அடிகள்	1	1	
கீர்த்தனை பகுதி	***	1002	
தனிப்பாசுரப் பகுதி	***	319	
திருமுகப்பகுதி	***	16	
	மொத்தம்	**6011**	

ஆ.பா. பதிப்புகளில் இரண்டு இடங்களில் அச்சாகியுள்ள பாடல்கள்	
திருமுறை	பாடல் எண்ணிக்கை
சண்முக கொம்மி (ஐந்தாம் திருமுறையிலும் கீர்த்தனைப் பகுதியிலும்)	15
சண்முகர் வருகை (கீர்த்தனைப் பகுதியிலும் தனிப்பாசுரப் பகுதியிலும்)	12
மங்களம் (கீர்த்தனைப் பகுதியிலும் தனிப்பாசுரப் பகுதியிலும்)	7
முருகவேல் தனித்திருத்தொடை (இரண்டாம் திருமுறையிலும் தனிப்பாசுரப் பகுதியிலும்)	6
சோடில்லை மேல் வெள்ளைச் சொக்காயில்லை என்ற பாட்டு (இரண்டாம் திருமுறையிலும் தனிப்பாசுரப் பகுதியிலும்)	1
	41
ஆகப் பாடல்கள் 6011-41 = 5970	**5970**

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

ஊரன் அடிகளார் பதிப்பில் பாடல் தொகை = 1970-1972

திருமுறைகளில் சேர்க்காது தனிப்படுத்தப்பெற்றுப் பல்வகைய தனிப்பாடல்கள் என்ற பிரிவில் வைக்கப் பெற்றவை.

ஊரன் அடிகளார் பதிப்பு 1970 -1972		
திருமுறை	பதிகங்கள்	பாடல்கள்
முதல் திருமுறை	52	570
இரண்டாம் திருமுறை	103	1378
மூன்றாம் திருமுறை	27	612
நான்காம் திருமுறை	41	458
ஐந்தாம் திருமுறை	12	238
ஆறாம் திருமுறை	144	2542
ஆகப் பாடல்கள்	**379**	**5818**

திருமுறை (ஊரன் அடிகளார் பதிப்பு)	பதிகங்கள்
குடும்ப கோஷம்	116
குருட்டாட்டம்	19
திருமுகப்பகுதிப் பாடல்களில் 'மெய்விளக்கே விளக்கல்லால்' என்ற இரண்டாம் திருமுறைப் பாடல் நீங்கலாக	16
சாற்றுக்கவிகள்	11
உபதேச வெண்பா	1
கீர்த்தனைப் பகுதிப் பாடல்களில் பாலகிருஷ்ண பிள்ளை ஒரு பாடலாகக் காண்டவற்றை இரண்டு பாடலாகக் கொண்டவகையில் அதிகப்படி	11
ஆகப் பாடல்கள் = 5970-163+11=5818	163

அருட்பா பதிப்பகம், (சென்னை) பதிப்பு 2017-2024			
திருமுறை	பாடல் வரிசை	பதிகங்கள்	பாடல்கள்
முதல் திருமுறை	1 - 713	8	713
இரண்டாம் திருமுறை	714-1928	113	1215
2அ தனிப்பாசு பகுதி	1929-2212	29	284
மூன்றாம் திருமுறை	2213-2447	19	235
நான்காம் திருமுறை	2448-2685	12	238
ஐந்தாம் திருமுறை	2686- 3256	53	571
ஆறாம் திருமுறை	3257-5823	152	2567
ஆகப் பாடல்கள்		**389**	**5823**
திருமுறைகளில் சேர்க்காது தனிமைப்படத்தப்பெற்றுப் பல்வகைய தனிப்பாடல் என்ற தலைப்பில் வைக்கப் பெற்றவை			
குடும்ப கோஷம்	116		
குருட்டாட்டம்	19		
திருமுகப்பகுதி	16		
சாற்றுக்கவிகள்	11		
	162		

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பாப் பாடல் தொகை இதுகாறும் யாவராலும் சரியாகக் கணக்கிடப் பெறவில்லை. தொழுவூர் வேலாயுத முதலியாரும், பொன்னேரி சுந்தரம் பிள்ளையும், ச.மு.கந்தசாமி பிள்ளையும் தம் பதிப்புகளின் இறுதியில் பாடல் தொகைகளைக் கணக்கிட்டுக் காட்டியுள்ளனர். சோடசாவதானம் சுப்பராய செட்டியாரும் பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியாரும் பாடல் தொகையைக் குறிக்கவில்லை.இவர்கள் அனைவருமே பாடல் தொகை கணக்கிடுவதில் இடர்ப்பட்டனர்.இவ்விடர்ப்பாடே பாடல் தொகை குறிக்காமைக்குக் காரணம்.

பாடல் தொகை கணக்கிடுவதில் இவர்களுக்கு இடர்ப்பாடு நேர்ந்த இடங்கள் விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், அருட்பெருஞ்ஜோதி அகவல், இசைப்பாடல்கள் ஆகியனவாம்.

விண்ணப்பக் கலிவெண்பாவும் நெஞ்சறிவுறுத்தலும் கலிவெண்பாக்கள். பன்னிரண்டு அடிகளுக்குக் குறையாமல் அனைத்து அடியானும் வரலாம் என்பது கலிவெண்பாவின் இலக்கணம். கலிவெண்பாவில் இரண்டு அடிகள் சேர்ந்தது ஒரு கண்ணி எனப்படும். விண்ணப்பக் கலிவெண்பா 417 கண்ணிகளான் இயன்ற கலிவெண்பா நெஞ்சறிவுறுத்தலையும் 703 கண்ணிகளான் இயன்ற கலிவெண்பா விண்ணப்பக் கலிவெண்பாவையும், நெஞ்சறிவுறுத்தலையும் ஒவ்வொரு பாட்டாகக் கொள்ளலே இலக்கணம். அவ்வாறின்றி ஒவ்வொரு கண்ணியையும் ஒவ்வொரு பாட்டாகக் கருதி விண்ணப்பக் கவெண்பாவை 417 பாடல்களாகவும் நெஞ்சறிவுறுத்தலை 703 பாடல்களாகவும் தொ.வே.கணக்கிட்டார்.இரண்டு பாடல்களாகக்கொள்ள வேண்டியவற்றை 1120 பாடல்களாகக் கொண்டதால் முதல் திருமுறை பாடல் தொகைக் கணக்கில் 1118 எண்கள் மிகுந்தன.இப்பிழைபட்ட பாடல் தொகைக் கணக்கையே பின்வந்த பதிப்பாசிரியர்களும் பின்பற்றினர். பாலகிருஷ்ண பிள்ளையோ வேலாயுதனாரைப் பின்பற்றவும் மனமிலராய், அவர் கணக்கைத் தவிர்த்துச் சரியாகக் கணக்கிட்டுக் காட்டவும் துணிவிலராய் ஒன்றுமே குறிக்காதுவிட்டார்.

அருட்பெருஞ்ஜோதி அகவல் ஒரே பாட்டு 1596 அடிகளான் இயன்ற நிலை மண்டில ஆசிரியப்பா. ஆசிரியப்பா மூன்றடிச் சிறுமையும் ஆயிரம் அடிப் பெருமையும் பெற்று வரும்.''ஆசிரியப்பாட்டினளவிற் கெல்லை ஆயிர மாகும் இழிபு மூன்றடியே' என்பது தொல்காப்பியம் (பொருள், செய்யுளியல் 157). இதற்கு உரை செய்த பேராசிரியர் மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு அடியான் வந்த பாக்களை எடுத்துக் காட்டிப் பிறவும் அன்ன, ஆயிரம் அடியால் வருவனவும் உளவேற் கண்டுகொள்க என எழுதினர். ஆயிரம் அடியான் வந்த ஆசிரியப்பா அக்காலத்தில் இல்லை.

சங்க இலக்கியங்களுள் அடியான் மிகுத்து பாட்டு மதுரைக் காஞ்சியே (782 அடி).சங்க காலம் முதல் அடிகளது காலம்வரை இதனினும் மிகுத்து வந்த பாட்டு இல்லை.ஆயிரம் அடியினும் மிகுத்து வந்த பாட்டு இல்லை அகவலே.இனித் தொல்காப்பியத்தைப் பதிப்பிப்பாரும் அதற்குப் புத்துரை வரைவாரும் ஆயிரம் அடியினும் மிகுத்து வந்ததென அருட்பெருஞ்ஜோதி அகவலை எடுத்துக் காட்டலாம். இலக்கணம் இவ்வாறிருந்தும் நீண்ட இவ்வகவலை ஒரே பாடல் எனக்காட்ட மனம் வாராதவர்களாய் ச.மு.கந்தசாமி பிள்ளையும் பாலகிருஷ்ண பிள்ளையும் பாடல் கணக்கிட்டுக் காட்டும்போது முறையே அருட்பெருஞ்ஜோதி அகவல் 1598 அடிகள் என்றும் 1596 அடிகள் என்றும் தனியே குறிப்பிட்டுக் காட்டினர்.

மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்பது 3585 ஆம் பாடலிற் குறிப்பிடப் பெறும் மூன்று மெய்ம்மொழிப்பொருள்களையும்விளக்கும்நூல்முதல்மெய்மொழிப்பொருளாகியதிருவம்பலத்திலே அந்நாள் செப்பிய உலகெலாம் என்பதன் விளக்கத்தை அடிகள் செய்தருளியிருக்கிறார். இரண்டாம் மெய்ம் மொழிப் பொருளாகிய திருமந்திரத்திருமுறையால் உணர்த்திய தன் விளக்கமும் மூன்றாம் மெய்ம்மொழிப் பொருளாகிய உளத்தே நின்று காட்டிய தன் விளக்கமும் எழுதப் பெறாது தவிர்ந்தன. ஆதலின் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் முற்றுப் பெறாத நூலே.அதன் ஒரு பகுதியே செய்யப்பட்டிருக்கிறது.பாலகிருஷ்ண பிள்ளை இந்நூல் முற்றுப்பெற்றதாகக் கூறுவது (தனிப்பாசுரப் பகுதி. பாயிரம் பக்கம் 26) பொருந்தாது.மெய்ம்மொழிப் பொருள்களைக் கூறும் 3527 ஆம் பாடலை அவர் கவனித்திலர் போலும்.

சன்மார்க்க விளக்கத்தின் முதற் பிரிவே சீவகாருணிய ஒழுக்கம்.சீவ காருணிய ஒழுக்கத்தின் தலைப்பினாலேயே இதனை அறியலாம்.சீவகாருணிய ஒழுக்கம் முற்றுப்பெறாத நூல்.ஆதலின் சன்மார்க்க விளக்கமும் முற்றுப் பெறாத தென்பது வெள்ளிடை மலை.

இதுகாறும் திருவருட்பாப் பதிப்புகளிற் சேராத ஒரு பாடல்

திருவதிகை வீரட்டானம் பெரியநாயகியம்மையார் தோத்திரமாக வள்ளற் பெருமான் அருளிய மூன்று பாடல்கள் திருவருட்பாவில் உள்ளன.

1. உரியநாயகி - கலிவிருத்தம்
2. உலகந் தழைக்க - பன்னிரு சீர் விருத்தம்
3. தன்னேரறியா - ஷை

இப்போது நான்காவது பாட்டொன்று கிடைத்திருக்கிறது. அப்புதிய பாடல் வருமாறு:

சோதிக் கடவுட் பெருமணியெ துணைக்கண் மணியே பெண்மணியே
துரியங் கடந்த பரவெளியில் துலங்கு மோன சுகவடிவே
நீதிக் கருணைத் தனிக்கடலே நிமல நெறியே மறைநிலையே
ஞேய ஞானப் பெருநிதியே நிபிடா னந்தா நிறைநிறைவே
ஓதித் தவர் தம் உளத்துணர்வே உணர்வுக் குணர்வே பரநாத
ஒலியே ஒலிக்குள் ஒளியாகி ஓங்கும் வெளியாம் உமையவளே
ஆதிப் பரையே பரம்பரையே அதிகை விரும்ப்பும் அருமருந்தே
அரிய பெரிய நாயகிப்பெண் அரசே என்னை ஆண்டருளே.

''திருவதிகை வீரட்டானத் தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைத் திரட்டு'' என்னும் நூலின் இறுதியில் இப்பாடல் காணப் பெறுகிறது. திரட்டில் பன்னிருதிரு முறைப் பாடல்களுக்குப் பின் திருவதிகைக்குரிய திருப்புகழ்ப் பாடல்கள் இரண்டு 'திருப்புகழ்ப் பாடல்கள் இரண்டு 'திருப்புகழ்'

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

என்னும் தலைப்பின் கீழ் உள்ளன. அதன் பின்னர்த் திரட்டின் இறுதியாக இருப்பது பெரியநாயகி யம்மையார் திருப்பதிகம். இத்தலைப்பின் கீழ் 'உலகந் தழைக்க 'தன்னேரறியா என்ற பாடல்களின் பின்னர் 'சோதிக்கடவுட் பெருமணியே என்பது மூன்றாவது பாடலாக உள்ளது. 'உரிய நாயகி' என்ற பாடல் இல்லை நமது பார்வைக்குக் கிடைத்த பிரதியில் நூலின் முகப்பேடும் பதிப்புரையும் அறவே கிழிந்து அகன்று விட்டன:

ஆதலின் முகப்பேட்டிலிருக்கக் கூடிய குறிப்புகளும் பதிப்புரையிலிருக்கக்கூடிய செய்திகளும் அறியக் கூடவில்லை. எனினும் நூலைப் பார்த்தவுடனேயே அது சாது அச்சுக் கூடத்தில் அச்சிடப்பெற்ற தென்பது ஐயமின்றி நன்கு தெரிகிறது. புத்தகத்திற்குரியவர் தம் பெயரெழுதியுள்ள இடத்தில் 1-5-33 எனத் தேதி குறித்திருப்பதால் இந்நூல் 1933-ம் ஆண்டிலோ அல்லது அதற்கு முன்னரோ அச்சாகியிருக்க வேண்டுமென்பதது தெளிவு ''திருப்பாதிர்ப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானிபார் சுவாமிகள் திருமுன்னர் பண்ருட்டி சட்டநாத தனபாக்கிய அம்மாள் கோவை செய்தது என்று அச்சிடப் பெற்ற துண்டுத் தாளொன்று நூலின் முன்னுள்ள திருவதிகை இராசகோபுரப் படத்தின் பின் புறம் ஓட்டப் பெற்றுள்ளது. நூலின் பின் அட்டை வெளிப்புறத்தில் 'இந்நூல் கிடைக்கும் இடம் : தனபாக்கிய அம்மாள் சட்டநாத சைவசித்தாந்த வாசக சாலை, பக்கிரிபாளையம் வீதி, பண்ணுருட்டி என்று அச்சிடப்பெற்றுள்ளது.

1940-ல் வெளியிடப் பெற்ற திருவதிகை மகாகும்பாபிஷேக மலரிலும் உலகந் தழைக்க தன்னேரறியா சோதிக் கடவுட் பெருமணியே என்னும் மூன்று பாடல்களும் பெரியநாயகியம்மையார் திருப்பதிகம் என்ற தலைப்புடனும் திரு வருட் பிரகாச வள்ளலார் எனும் வடலூர் இராமலிங்க சுவாமிகள் என்ற கீழ்க்குறிப்புடனும் அச்சிடப் பெற்றுள்ளன. உரிய நாயகி என்ற கலிவிருத்தம் இதிலும் இடம் பெறவில்லை. திருவதிகை மகா கும்பாபிஷேக மலர், இக்கால மலர்களைப் போன்று கட்டுரைத் தொகுப்பன்று. திருவதிகைத் தேவாரப் பதிகங்கள், திருப்புகழ், பிறபாடல்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும். 23.06.1940 (விக்கிரம-ளுஅ ஆனி மீ 10உ)-ல் நிகழ்ந்த மகாகும்பாபிஷேக நினைவாகப் பண்ணுருட்டி, புதுப்பேட்டை ஆண்டிக்குப்பம் ஆ.அ.இராமலிங்கஞ் செட்டியார் இதனை வெளியிட்டார். சென்னை இராயப்பேட்டை சாது அச்சுக்கூடத்தில் அச்சிடப் பெற்றது.

பெரியநாயகி பெற்றியைப் பேசுவோம் என்று கலிவிருத்தத்தால் காப்புச் செய்யுள் போன்றதொன்றைப் பாடிப், பின்பு பன்னிருசீர் விருத்தங்கள் பாடத் தொடங்கும் பெருமான், ஒரு பதிகமாகப் பத்துப் பாடல்களே பாடியிருப்பினும் இருக்கலாம். வாக்கின் எடுப்பு அவ்வாறு எண்ணத் தோன்றுகிறது. எத்தனை பாடல்கள் பாடினார்களோ தெரியவில்லை. இதுகாறும் சன்மார்க்க உலகம் அறிந்தது இரண்டு விருத்தங்கள்; கல்விருத்தத்தையும் சேர்த்து மூன்று பாடல்கள். இப்போது நாம் அறிவது மூன்று விருத்தங்கள்; கலிவிருத்ததுடன் நான்கு பாடல்கள் ''சோதிக் கடவுட் பெருமணியே' என்னும் நான்காவது பாடல் இனி வரும் திருவருட்பாப் பதிப்புகளுட் சேரற்குரியது.

முடிவுரை

திருஅருட்பா வரலாறும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் என்னும் தலைப்பில் இதுகாறும் கூறப்பெற்றவை விரிவஞ்சிச் சுருங்கக் கூறப் பெற்றனவாம். இவற்றின் விரிவு தனி நூலாகப் பின்னர் வெளிவரும்.

1. தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களின் திருமுறை வகுப்பில் இஃது ஐந்தாம் திருமூறை; ஊரன் அடிகளார் பதிப்பு இதனை முதல் திருமுறையாகக் கொண்டுள்ளார்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

இம்முதல் திருமுறை முழுவதும் முருகனைப் பற்றியது.

2,3 இவ்விரண்டும் கந்தகோட்டப் பதிகங்கள். அடிகளால் முதன் முதலில் பாடப் பெற்றவை.1851க்கு முன்னரே தனி நூலாக முதன் முதலில் அச்சிடப் பெற்றவை.இவ்விரண்டிற்கும் அடிகளின் கையெழுத்து மூலமாவது அன்பர்களின் படிகளாவது கிடைக்கவில்லை.முற்கூறிய முதல் அச்சே ஆதாரம்.இவ்விரண்டையும் வேலாயுதனார் ஐந்தாம் திருமுறையின் ஈற்றில் திருத்தணிகைப் பதிகங்களின் பின்னர் வைத்தார். ஊரன் அடிகளபார் இம்முதல் திருமுறையின் முதலில் திருத்தணிகப் பதிகங்களின் முன்னர் வைத்துள்ளார். கந்த கோட்டத்தைப் பாடிய பின்னரே அடிகள் திருத்தணிகையைப் பாடினாராதலின்.

4. இதுமுதல் திருத்தணிகைப் பதிகங்கள். இப்பதிகம் முதல், 38. தரிசனை வேட்கை ஈறாக 36 பதிகங்களும் அடிகளின் கையெழுத்தில் ஓலைச் சுவடி ஒன்றில் உள்ளன. ஏட்டெண்கள் 232-298, 290 ஆம் ஏடு இல்லை.

5. மூல ஏட்டில் 28ஆம் பாட்டுக்குப் பின் 'மீளாத, 'வன்சொலினார்'என்று தொடங்கும் 12,13 ஆம் பாடல்கள் மீண்டும் எழுதப் பெற்று 29,30 என எண்ணிடப் பெற்றுள்ளன.

6. இப்பதிகத்தின் முதல் ஐந்து பாடல்கள் மட்டும் 286 ஆம் ஏட்டிலும், பின் ஐந்து பாடல்கள் (6-10) இறுக்கம் இரத்தின முதலியாரது காகித நோட்டுப் புத்தகத்திலும் அடிகளால் எழுதப் பெற்றுள்ளன. தொ.வே.முதற்பதிப்பில் (1880) முதல் ஐந்து பாடல்களே வெளியாயின. 6-10 பாடல்களை ஆ.பா.தனிப்பாசுரப்பகுதி முதற் பதிப்பில் (1993) முதன் முதலாக அச்சிட்டார்.

7. இப்பெயர் ஊரன் அடிகளின் பதிப்பு புதிதாக இடப்பெற்றது. பழைய பெயர், 'பொது'

8. அடிகள் எழுத்து இப்பதிக ஏடுகள் இரண்டிலும் எண் குறிக்கப் பெறவில்லை.

9. அடிகள் எழுத்து இப்பதிக ஏடுகள் இரண்டிலும் எண் குறிக்கப் பெறவில்லை

10. அடிகள் எழுத்து வேறு ஒரு சுவடி, ஏட்டெண் 294,295.

11. அடிகள் எழுத்து, வேறு ஒரு சுவடி ஏட்டெண் 21,22

12. அடிகள் எழுத்து, சுவடி விவரம் தெரியவில்லை. ஏட்டெண் 228,229

13. 1-6 பாடல்களுக்கு அடிகள் கையெழுத்து மூலம் உள்ளது. இ.இ. நோட்டில்

14. இப்பதிகத்திற்குக் கிடைக்கும் ஆதாரம் இ.இ.நோட்டுப் பிரதியும் மற்றொரு அன்பர் காகிதப் படியும், இதன் 4ஆம் பாடல் ''மருளு மங்கையர் தங்கள் கண் வலைக்கு'' என்று தொடங்குகிறது. ''இதைச் சார்ந்த மற்ற பாடல்களும் கை. சோர்ந்து போய்விட்டன. என்று இரண்டு படிகளிலும் குறித்திருக்கிறது.

15. அடிகள் எழுத்து, மற்றும் ஓர் சுவடி, ஏட்டெண் இல்லை.

16. ஊரன் அடிகளின் பதிப்பு மூன்று பாடல்களும் முதன் முதலாக ச.மு.க.பதிப்பில் (1924) நூலிறுதியில் 'நூதனமாக இப்பதிப்பில் சேர்க்கப்பெற்ற பாடல்களும் வசன பாகங்களும் என்ற தலைப்பின் கீழ் 'ஒரு கால் இராமலிங்க சுவாமிகள் திருத்தணிகைக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்யும் சமயத்தில் ஓரன்பர் வேண்டுகோளுக் கிணங்கித் திருவாய் மலர்ந்தருளிய பாக்கள் என்று தலைப்பில் குறிப்பெழுத பெற்றுத் திருப்பள்ளித்தாமம் தாங்கல் என்றபெயருடன் அச்சிடப் பெற்றுள்ளன. (ஆறாம் திருமுறை, 625ஆம் பக்கம்) சென்னை

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சன்மார்க்க சங்கப் பதிப்பில் (முதற்பதிப்பு 1932, 2ஆம் பதிப்பு 1942) ஐந்தாம் திருமுறையில் சேர்க்கப் பெற்றுள்ளன. ஆ.பா.தனிப் பாசுரப் பகுதியில் (முதற்பதிப்பு 1933 2ஆம் பதிப்பு 1959) சேர்த்தார். ஊரன் அடிகளார் பழைய ஐந்தாம் திருமுறையாகிய புதிய முதல் திருமுறையில் சேர்த்துள்ளார்.

17,18 இவ்விரண்டும் தொ.வே. ஐந்தாம்திருமுறைப் பதிப்பில் (1880) சேரவில்லை.பொ.சு.பதிப்பில் (1892) ஆறாம் திருமுறை இறுதியில் முதன் முதலாக அச்சிடப் பெற்றன.ச.மு.க.பதிப்பில் (1924) ஐந்தாம் திருமுறையில் சேர்க்கப் பெற்றன.

19. தொ.வே.முதற்பதிப்பில் இப்பதிகம் 14 பாடல்களே, இவற்றுடன் ஆ.ப.பதிப்பு 48, தனிப்பாசுரங்களின் முதல் ஐந்து பாடல்களையும், தனிப்பாசுரப் பகுதியிலிருந்து இரு பாடல்களையும் சேர்த்து இப்பதிப்பில் 21 பாடல்களாக ஆக்கப் பெற்றன. 1-9,11,15,16,17 ஆக 13 பாடல்களுக்கு அடிகள் கையெழுத்து மூலம் உள்ளது.

20. பழைய இரண்டாம் திருமுறையில் உள்ள ஒற்றியூர்ப் பதிகங்களும், வேறு தலப் பதிகங்கள் சிலவும், பழைய மூன்றாம் திருமுறை முழுவதும் சேர்ந்தது.

21. 1-6 பதிகங்களுக்குரிய ஏட்டெண்கள் முறையே 1-3,2,3,4,5 ஏடுகள் இரண்டிலும் எண் குறிக்கப்படவில்லை, 12,13,20,21 இவை வேறு ஒரு அல்லது ஸ்தல சுவடிகளைச் சார்ந்தவை.

22. இப்பதிகம் முதல் 69. கழிபகற்கிரங்கல் ஈறாக 63 பதிகங்களும் ஓலைச்சுவடி ஒன்றில் அடிகளாரால் இங்கு கொடுக்கபட்டிருக்கும் ஏட்டெண் வரிசையில் எழுதப் பெற்றுள்ளன. ஏட்டெண் 56-202, 64,65,75,76,77,79,80,87,88,99,100,101,102,132,133 ஆகிய எண்களையுடைய ஏடுகள் சுவடியில் இல்லை.இவ்வேடுகள் குறைவு என்று ஒரு குறிப்பு தலைபேட்டின் பின்புறம் செல்வராய முதலியார் எழுத்தில் உள்ளது.

23. ‘‘இப்பதிகத்தின் முதல் ஏழு பாக்கள் உள்ள ஏட்டெண்கள் க, உ, க-ஆம் ஏட்டில் ‘‘நெஞ்சோடு நெகிழ்தல் என்று இப்பதிகப் பெயர் காணப்படுகிறடு. அடிகளாரின் கையெழுத்திலுள்ள மற்றோர் சுவடியில் 8,13 ஆம் பாக்கள் இருக்கின்றன என்று ஆ.பா.அடிக்குறிப் பெழுதியுள்ளார். (திருஒற்றியூர்ப்பகுதி, இரண்டாம் திருமுறை, பக்கம் 239, அடிக்குறிப்பு 235) ஆனால் மூலச்சுவடியில் 101,102 ஆம் ஏடுகள் இல்லை.இவேடுகள் குறைவு என்ற குறிப்பும் தலைப்பேட்டின் பின்புறம் செல்வராய முதலியார் எழுத்தில் உள்ளது.மூலச்சுவடியிலிருந்து தவறிய இவ்விரு ஏடுகள் வேறு சுவடிகளுடன் கலந்தோ அல்லது தனித்தோ ஆ.பா. அவர்களுக்குக் கிடைத்திருக்கலாம்.

24. இப்பதிக ஏட்டெண் 149,150 என ஆ.பா குறிக்கிறார். 151 ஆம் ஏட்டின் முன் பக்கத்திலும் இப்பதிகப் பாக்கள் எழுதப் பெற்றுள்ளன.

25. இப்பதிக ஏட்டெண் 151 என்பது ஆ.பா.குறிப்பு. 151 பின்புறமும் 152 ஆம் ஏட்டிலும் இப்பதிகம் எழுதப் பெற்றுள்ளது.

26. இப்பதிக ஏட்டெண்கள் 226,227, சுவடி விவரம் விளங்கவில்லை.

27. திருஉலாத்திறம் பதிகம் 84 எழுதியுள்ள 21 ஆம் ஏட்டின் பின்புறம் இப் பதிகம் எழுதப் பெற்றுள்ளது.

28. இது முதல் 3 பதிகங்கள் அடிகள் எழுத்து, வேறு சுவடிகள், இப் பதிக ஏட்டெண் 1-3.

29. அடிகள் எழுதியருளிய தனி ஓலைச் சுவடி உள்ளது.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

30. இப்பதிகம் தனிப்பாடல்களைத் தொகுத்து இப்பதிப்பில் புதிதாக அமைக்கப் பெற்றது. 1,3-6 அடிகள் எழுத்து.

31. ஊரன் அடிகளின் பதிப்பு முதல், 95. காதல்மாட்சி ஈறாகப் பத்தொன்பது பதிகங்களும் வேலாயுத முதலியாரால் மூன்றாம் திருமுறையாகவகுக்கப் பெற்றவை. இவை இரண்டாம் திருமுறைச் சுவடியில் 1 முதல் 52 ஏடுகளில் 10,11,37-42 நீங்கலாக அடிகளாரால் எழுதப் பெற்றுள்ளன. 10,11 ஏடுகளில் இங்கிதமாலைப் பாடல்கள் (2,3,4,5,10,11,12,13,8,9) பத்தும், 37-42 ஏடுகளில் அருண்மொழி மாலை 31 பாடல்களும் எழுதப் பெற்றுள்ளன. 53-55 ஏடுகள் இன்பமாலை.56 ஆம் ஏட்டில் இரண்டாம் திருமுறை அபராதத்தாற்றாமை தொடங்கிகிறது. மேலே இரண்டாம் திருமுறைப் பதிகங்கள் தொடர்கின்றன.

32. இத்திருமுறை இப்பதிப்பில் புதிதாக வகுக்கப் பெற்றது. பழைய முதல் திருமுறையின் முதல் ஆறு நூல்களும், இரண்டாம் திருமுறைப் பதிகங்கள் நான்கும், பழைய ஐந்தாம் திருமுறை சித்தி விநாயகர் பதிகங்கள் நான்கும், தனிப் பாசுரப்பகுதிப் பதிகங்கள் பன்னிரண்டும், கீர்த்தனைப்பகுதிப் பதிகம் ஒன்றும் சேர்ந்தது.

33. ஊரன் அடிகளின் பதிப்பு இப்பதிப்பில் புதிதாக இடப்பெற்றது. பழைய பெயர் விண்ணப்பப் பதிகம்.

34. ஊரன் அடிகளின் பதிப்பு இப்பதிப்பில் புதிதாக இடப்பெற்றது. பழைய பெயர், திருஅருட் பதிகம்.

35. இத்திருமுறை இப்பதிப்பில் புதிதாக வகுக்கப்பெற்றது. பழைய இரண்டாம் திருமுறையிலுள்ள பொதுபதிகங்களும், தில்லையைக் குறித்த பதிகங்களும், கீர்த்தனைப் பகுதியின் இசைப்பாடல்கள் சிலவும், தனிப்பாசுரப் பகுதியின் ஆனந்தநடனப் பதிகமும் சேர்ந்தது.

36. ஊரன் அடிகளார் பதிப்பு புதிதாக இடப்பெற்றது. பழைய பெயர், திருவண்ணப் பதிகம்.

37-38 இவ்விரு பதிகங்களும் தொ.வே.இரண்டாம் திருமுறையில் உள்ளவை. இவற்றை ஆ.பா. ஆறாம் திருமுறை முன்பகுதியில் (பூர்வஞான சிதம்பரப் பகுதி) சேர்த்தார்.

39. தொழுவூர் வேலாயுத முதலியாரால் நான்காம் திருமுறையாக வகுக்கப் பெற்ற இப்பன்னிரு மாலைகளும் அப்படியே ஊரன் அடிகளார் பதிப்பு ஐந்தாம் திருமுறையாக வைக்கப் பெற்றுள்ளன.

இப்பன்னிரண்டுமாலைகளில், ஆளுடைய அரசுகள் அருண்மாலை ஒன்று தவிர, ஏனைய பதினொரு மாலைகளுக்கும் அடிகள் எழுதியருளிய மூலக் காகித எடுகள் உள்ளன. அபராத மன்னிப்பு மாலைக்கு ‘‘அடிகளார் கையெழுத்தாவது அன்பர்களுடைய படிகளாவது கிடைக்கவில்லை என்று ஆ.பா.குறிப்பிடுகிறார்.பாலகிருஷ்ண பிள்ளைக்குக் கிடைக்காத இதன் மூலம் (அடிகள் திருகரத்தால் எழுதப் பெற்ற காகித ஏடுகள்) எமது பார்வைக்குக் கிடைத்தன.‘‘அபராத மன்னிப்பு மாலை’’ என்று அடிகளே பெயரிட்டிருக்கிறார்.‘‘நான்காம் திருமுறையின் பதிகங்களை வரிசைப்படுத்தியவரும் தலைப்புப் பெயர்கள் இல்லாதனவற்றிற்குத் தலைப்புப் பெயர்கள் இட்டவரும் புலவர் பெருமகனாரான தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களே ஆவர்’’ என ஆ.பா. குறிப்பிடுவது (பூர்வஞான சிதம்பரப்பகுதி பக்.2 அடிக்குறிப்பு) சரியன்று.பதிகங்களைத் (மாலைகளை) தொ.வே.வரிசைப்படுத்தவில்லை. இப்போது உள்ள வரிசையிலேயே அடிகள் எழுதியிருக்கிறார். க, உ, ங, ச, ரு, சு, எ, அ என எண்ணும் இட்டிருக்கிறார். 1-8

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

மாலைகளின் தொடக்கத்தில் ''திருஞானசம்பந்த சாமிகள்'' என்றும் ஆளுடைய நம்பிகள் அருண்மாலையின் தொக்கத்தில் ''சுந்தரமூர்த்தி சாமிகள்'' என்றும் ஆளுடைய அடிகள் அருண்மாலையின் தொடக்கத்தில் ''வாதவூரடிகள்'' என்றும் எழுதியிருக்கிறார். இம்மூன்று மாலைகளும் இவ்வரிசையிலேயே எழுகளின் கையெழுத்து மூலம் கிடைக்கவில்லை. மற்ற மூவரது மாலைகளுக்கும் தலைப்பிட்டுள்ள அடிகள் இதற்கும் தலைப்பிட்டிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை, ஆளுடைய அரசுகள் அருண் மாலை, ஆளுடைய நம்பிகள் அருண்மாலை, ஆளுடைய அடிகள் அருண்மாலை என்ற பெயர்கள் தொ.வே அமைத்தவை. இது தவிர பெயரிடுதற்கு வேறு இடமில்லை, வரிசைப்படுத்தற்கு இடமேயில்லை.

இத்திருமுறையின் சிறப்பியல்புகள்:

1. இதன் 12 பதிகங்களும் ''மாலை'' கள்
2. 12-ம் அடிகள் எழுதியருளிய வரிசையிலேயே உள்ளன.
3. 12-இல் 11-க்கு அடிகள் கையெழுத்து மூலங்கள் (காகித ஏடுகள்) கிடைத்துள்ளன.
4. 12-இல் 9 மாலைகள் எண்சீர் விருத்தங்கள்.
5. 12-இல் 8 க்கு அடிகள் இட்ட பெயர்.
6. முதல் 8 மாலைகள் தில்லையைப் பற்றியவை.
7. அடுத்த 4 மாலைகள் நால்வரைப் பற்றியவை.
8. (பழைய) மூன்றாம் திருமுறையைவிட இதில் 3 பாடல்களே அதிகம்.

40. பழைய ஆறாம் திருமுறை அப்படியே வைக்கப் பெற்றுள்ளது. ஆ.பா.பதிப்பு பூர்வஞான சிதம்பரப் பகுதி, உத்தரஞான சிதம்பரப்பகுதி, சித்திவளாகப் பகுதி ஆகியவையும், கீர்த்தனைகளும் நாமாவளிகளும் சேர்ந்தது.

41. இப்பெயர் ச.மு.க.பதிப்பில் காணப்படுவது, திருவருட் புகழ்ச்சி என்பதினும் திருக்கதவந்திறத்தல் என்ற ச.மு.க. பதிப்புப் பெயரே மிகப்பொருத்தமுடையது.

42. ஊரன் பதிப்பு இப்பதிப்பில் புதிதாக இடப்பெற்றது. பழைய பெயர் திருவடிப் புகழ்ச்சி

43. இப்பெயர் ச.மு.க. பதிப்பில் காணப்படுவது ஆ.பா. அமைத்த வேண்டுவன இவை இயவை என விண்ணபித்தல் என்ற பெயர் அவ்வளவு சிறப்பன்று.

44. ஊரன் அடிகளார் பதிப்பு இப்பதிப்பில் புதிதாக இடப்பெற்றது. பழைய பெயர், 'வளர்பதி விளக்கம்'

45. ஊரன் அடிகளார் பதிப்பு புதிதாக இடப்பெற்றது. பழைய் பெயராகிய ஞான சரியை என்பது இது மிகப்பொருத்தமானது.

46. ஊரன் அடிகளின் பதிப்பு இப்பதிப்பில் புதிதாக இடப்பெற்றது. ஆ.பா.அமைத்த பெயர், பரன் அளிக்கும் தேகம் சுடுவது அபராதம் எனல். தவறு பழைய பதிப்பு சாமதி வலிறுத்தல் பொறுத்தமானது.

***

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திரு அருட்பா, திருமுறை, பதிகம், பாடல் அடைவு

ஊரான் அடிகளார் 1071 - முதற்பதிப்பின் உள்ள அட்டவணை

திருமுறை	பதிகம்	பாடல்	பாட்டு எண்	பக்கம்
1	52	570	1-570	1-103
2	103	1388	571-1958	107-316
3	27	612	1959-2570	319-474
4	41	458	2571-3028	477-544
5	12	238	3029-3266	547-599
6	144	2552	3267-5818	603-1067
	379	**5818**		

அருட்பா பதிப்பகம், சென்னை பதிப்பின்படி கல்வெட்டு, தாம்மிரம் தகடு மற்றும் நூல்களின் படி உள்ள அட்டவணை 2017, 2022, 2024

திருமுறை	பதிகம்	பாடல்	பாட்டு எண்	பக்கம்
1	8	713	1 - 713	1 - 163
2	113	1215	714 - 1928	164 - 359
2அ	29	284	1929 - 2212	360 - 402
3	19	235	2213 - 2447	403 - 431
4	12	238	2448 - 2685	432 - 485
5	53	571	2686 - 3256	486 - 587
6	152	2567	3257 - 5823	1 - 468
	389	**5823**		

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அருட்பா பதிப்பகம் பதிப்பாசிரியர் குறிப்பு

திருவருட்பா மூலப் பதிப்புகள் 1867 (1 மி 4 திருமுறைகள்), 1880 (5-ம் திருமுறை), 1885 (6ம் திருமுறை), தொடர்ந்து வெளியான மறுபதிப்புகள் (1891, 1892, 1896, 1924, 1932, 1942) இவற்றை ஆராய்ந்தும், 1931 - 1958 திரு ஆ.பாலகிருஷ்ண பிள்ளையின் 12 பதிப்புகளும், தனிப்பாசுரப் பகுதி - என்று ஒரு தனி நூலில் - 1867, 1885, 5 மற்றும் 6-ம் திருமுறைகளில் விடுபட்ட பாடல்களான 5700 - 5711 வரையுள்ள 12 பாடல்களும், 5712 மி 5714 வரையுள்ள 3 பாடல்களும், நூல் எண் 6 -தனிப்பாசுர பகுதி (1959) என்ற பதிப்பில் - 319 பாடல்களும், 1971 திரு. ஊரன் அடிகள் 5, 6 திருமுறைகளில் மாற்றம் செய்துள்ள பதிப்புகளை ஆராய்ந்தும், திரு. ஊரன் அடிகள் சிறப்பு அருட்பா வரலாற்றை ஆராய்ந்து அவர் பதிப்புகளை ஏன் மாற்றம் செய்துள்ளார்கள் (வள்ளல் பெருமான் வருவிக்கவுற்ற அகவை கணக்கிட்டு 9-வது அகவையில் முதல் பாடலான தெய்வமணி மாலை பாடப்பெற்றதால், தணிகைப் பதிகம் என்ற தலைப்பில் முதல் திருமுறை அமைக்கப்பட்டு, 6-ம் திருமுறை வரை அகவை அடிப்படையிலே திருமுறைகள் வகுக்கப்பட்டன) என்பதையும் ஒத்துபார்த்து, வடலூர் தெய்வ நிலைய பதிப்பையும் ஆராய்ந்து, குடும்பகோஷம், குருட்டாட்டம், சாற்றுகவிகள், சுவாமிகளுடைய பல்வகைய தனிப்பாடல்களையும் ஒத்து நோக்கி, அருட்பா பதிப்பகம் இவைகளில் - 235 பாடல்களை மி2 ஆம் திருமுறைக்கு அடுத்து 2. தனிப்பாசுரப்பகுதி என்று காலத்தை கருதி இணைத்துள்ளது.

1992 வடலூர் தெய்வநிலைய பதிப்பில் 1867, 1880, 1885 பதிப்புகளை பின்பற்றி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. 5-ம் திருமுறையில் மட்டும் - 53 பதிகங்களுக்கு பிறகு 30 பாடல்களை மி ஆ, பா பதிப்பை பின்பற்றி தனிப்பாசுர பகுதி பாடல்களை சேர்த்து 83 பதிகங்களாகவும் - குடும்பகோஷம், குருட்டாட்டம், தனிப்பாடல்கள் மற்றும் அணுக்கத் தொண்டர்கள் பாடல்களையும் 6-ம் திருமுறையில் இறுதியில் சேர்த்து -162- பாடல்களை தனிப்பகுதியாக இணைத்து உள்ளார்கள். இரண்டாம் திருமுறையில் முன்ன முடிவு.

7 பாடல்களை 113 பதிகத்தில் சேர்க்காமல், 5-ம் திருமுறையில் தனிப்பாடல் தனித்திருத் தொடைப் பதிகம் சேர்த்து தவறுதலாக இன்று வரையும் வெளியிடப் பட்டு வருகின்றது. பல பதிப்புகளிலும் பதிகங்கள் வரிசை வேறுபட்டு அமைந்து குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.

இதனால், அருட்பா பதிப்பகம் ஊரன் அடிகளார் பதிகத்தில் ஏற்பட்ட அகவை அடிப்படையை பின்பற்றாமலும், வடலூர் தெய்வநிலையம் 5-ம் திருமுறை- 83-பதிகங்களை 5-ம் திருமுறையில் 53 பதிகங்கள் (1880 தொ.வே. பதிப்பின் அடிப்படையிலும்) மீதமுள்ள 30 பதிகங்களில் 29 பதிகங்கள் 2.. தனிப்பாசுரப்பகுதியாக 2-ம் திருமுறைக்கு அடுத்த பகுதியாக சேர்த்தும், மீதமுள்ள 1-பதிகம் (பதிக எண்-148- வைத்தியநாத பதிகம்) 6- ம் திருமுறையில் சேர்த்தும், குடும்பகோஷம், அன்பர்கள் தனிப்பாடல்கள், திருமுக அகவல் மற்றவைகளை 6-ம் திருமுறை இறுதியிலும் சேர்த்து பதிக எண்ணிக்கை 5823 என கணக்கிட்டு முடித்துள்ளோம்.

அருட்பா பதிப்பகம், சென்னை

அருள் M.A. வெங்கட்

25-01-2024

"எழுவினும் வலிய மனத்தினேன்" எனத் தொடங்கும் பாடல் மி இரண்டு முறை அச்சிடப்பட்டுள்ளது (2-ம் திருமுறை-1572, 6-ம் திருமுறை 3291).

6-ம் திருமுறை பாடல் எண் ஜோதியுள் ஜோதி - ஆதி நீதி வேதனே ஒரு பாடல் வரிசை எண் விடுபட்டுள்ளது பதிகம் : 116 ஆடேடி பந்து தவறுதலாக காப்பிற்கு (5235, 5246) எண்ணிக்கை 2-முறைகொடுக்கப்பட்டுள்ளது. 126 அபயம் அபயம் பல்லவி வரிசை எண் எண்ணிக்கையில் விடுபட்டுள்ளது.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

அருட்பா பதிப்பகத்திற்கு கிடைக்கப் பெற்ற ஓலைச்சுவடிகள் ஓளசதிகள்
மூலிகைகள் அட்டவணை - 485.

ஓளசதிகள்படி (நகல்) ஓலைச்சுவடி எழுதியவர் பெயர் தெரியவில்லை மூலிகை அட்டவணையில் 472ல் இருந்து 485 வரை கிடைக்கப் பெறவில்லை.

முதல் திருமுறை			
பதிகம்	பதிகப் பெயர்	பாடல் எண்	எண்ணிக்கை
3	நெஞ்சறிவுருத்தல்	7	3
			1-703

தருமலிங்கப்பிள்ளை படி ஓலைச்சுவடி நகல் முழுமையான பாடல் கிடைக்கப்பெற்றது.

முதல் திருமுறை			
பதிகம்	பதிகப் பெயர்	பாடல் எண்	எண்ணிக்கை
8	இங்கிதமாலை	547	547-713

இங்கிதமாலை ஓலைச்சுவடி திருவருட்பிரகாசவல்லாற் அசல் கையெழுத்து ஓலைச்சுவடிக் கிடைக்கப் பெற்றுள்ளது. இங்கிதமாலையில் உள்ள 665,667,668,670 பாடல்கள் கிடைக்கப் பெறவில்லை.

இரண்டாம் திருமுறை

இரண்டாம் திருமுறையில் 110 பாடல்கள், 2அ தனிப்பாசுரப்பகுதி 1 பாடல் ஐந்தாம் திருமுறையில் 1 பாடல் மொத்தம் 112 பாடல்களின் ஓலைச்சுவடி திருவருட்பிரகாசவல்லாற் அசல் கையெழுத்து ஓலைச்சுவடிக் கிடைக்கப் பெற்றுள்ளது.

பதிகம்	பதிகப் பெயர்	பாடல் எண்	எண்ணிக்கை
74	திருப்புகற்பதிகம்	1524-1529	10
79	போற்றித்திருப்பதிகம்	1577-1586	10
82	அபராதவிண்ணப்பம்	1607-1628	22
83	கலிவிண்ணப்பம்	1629-1638	10
84	கருணைவிண்ணப்பம்	1639-1648	10
86	உள்ளப் பஞ்சகம்	1659-1663	5
88	நெஞ்சொடுநெகிழ்தல்	1675-1681	7
89	பொதுத்தனித்திருவெண்பா	1689-1694	7
90	திருக்குறிப்புநாட்டம்	1700-1703	4
91	தனித்திருப்புலம்பல்	1704-1707	4
94	தனித்திருவிருத்தம்	1717,1723,1729,1731-1739, 1744-1747, 1752, 1760	18
101	கலைமகள் திருப்பதிகம்	1784-1786	3

2அ-தனிப்பாசுரப் பகுதி

பதிகம்	பதிகப் பெயர்	பாடல் எண்	எண்ணிக்கை
2	தனித்திருமாலை	1937	1

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

மேல் சோடில்லை சொக்காயில்லை இங்கித மாலை 166-வது பாடலில் பின்பக்க ஓலைச்சுவடியில் மையலழகீ பாடல் உள்ளது.

ஐந்தாம் திருமுறை

பதிகம்	பதிகப் பெயர்	பாடல் எண்	எண்ணிக்கை
4	தனித்திருமாலை	2722	1

இறையருளாளர்கள் கிடைக்கப் பெற்ற திருமூலர் திருமந்திரம், திருக்குறள், தேவராம், திருவாசகம் போன்ற திருஅருள் நூல்களை ஓலைச்சுவடியில் வடித்தார்கள். அந்த ஓலைச்சுவடிகளில் தேவாரப் பதிகம் நமக்கு கிடைக்கப் பெற்றதற்கு முக்கிய காரணம் ஆயிரம் ஆண்டுகள் முன்பு ஒரு சிவதலத்தில் சிவ குருக்கள் திருப்பாடல்களை ஓதிக் கொண்டிருந்தார்கள். இராஜராஜசோழனின் தமக்கையார் குந்தவை நாச்சியார் அந்தப் ஓதுதலைக் கேட்டு எங்கிருந்து பெற்றுப் ஓதுகிறீர்கள் என்று கேட்டார்கள் அதற்கு, அவர் என்னுடைய மூதாதையர்கள் வழியாக வந்த பாடல்கள் என்று கூறினார்கள். குந்தவை நாச்சியார் தன்னுடைய தம்பி இராஜராஜனிடம் கூறி இந்த பாடல்கள் எங்கிருந்து ஏற்றப்பட்டது என்று தேடி கண்டுபிடிக்குமாறு ஆணையிட்டார். இராஜராஜசோழன் ஒரு சிவதலத்தில் இருந்து இதன் அசல் ஓலைச்சுவடிகளை பார்த்து அது தேவாரம் என்று தெரிந்து கொண்டு அதை தாமிரத்தகடுகளிலும், கல்வெட்டுகளிலும் பதித்தார். இதன் பயனாக இன்று நமது கையில் தேவாரம் கிடைக்கப் பெற்றது.

அதுபோல, திருவருட்பிரகாச வள்ளலார் இயற்றிய திருவருட்பாவின் முதல் நான்கு திருமுறை 1867 முதல் பதிப்புகள் முழுவதும் ஓலைச்சுவடிகள் மற்றும் காகித நோட்டுகள் அனைத்தும் இறுக்கம் இரத்தின முதலியாரிடம் இருந்தவைகளை அவர்களுடைய வாரிசான இரண்டு மகன்களும் வடலூரில் வந்து வசிக்கும் காலத்தில் சபாபதி சிவாச்சாரியாரிடம் ஒப்படைத்தார்கள். சபாபதி சிவாச்சாரியாரியின் வாரிசான உ.ப.பாலசுப்பிரமணி சிவாச்சாரியார் ஓலைச்சுவடிகளை பாதுகாத்து வைத்திருந்தார்.

திருவருட்பா ஓலைச்சுவடிகள் மற்றும் காகித நோட்டுகளை அ.பாலகிருஷ்ணபிள்ளை இந்து அறநிலையதுறையில் பணியாற்றிய காலத்தில் உ.ப.பாலசுப்பிரமணிய சிவாச்சாரியாரிடம் இருந்த ஓலைச்சுடிகள் மற்றும் அன்பருக்கு எழுதிய கடிதங்கள் படிச்சுவடிகள், காகித நோட்டுப் புத்தகத்தில் எழுதிய 4 மற்றும் 6-ம் திருமுறை பதிப்புகளும் கையெழுத்து பிரதிகளும் சிவாச்சாரியாரிடம் இருந்து இரவல் பெற்றவையே. இப்படியாக, உ.ப.பாலசுப்பிரமணிய சிவாச்சாரியாரிடம் இருந்த முழு ஆறுத்திருமுறைகளையும் அவர்களுடைய இல்லங்களில் வைத்து பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இறைவனுடைய பொது சொத்தாகும். இதை பொது இடங்களில் வைப்பதே சிறந்தது. இதை தனிப்பட்ட முறையில் வைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

ராஜமன்னார்குடியைச் சார்ந்த சண்முக சாமி துறவி அவர்களின் சிஷியனுமாகிய புலவர் ப.கோவிந்தசாமியின் பேரனும், அன்பரசு குமாரருமாகிய சிவஜோதியிடம் இருந்து கடந்த ஆண்டு 6/3/2022-ம் தேதியில் பாலசுப்பிரமணிய சிவாசாரியாரிருக்கு மன்னார்குடி பார்வதி ஈசன் ஒளி, தங்கை கணவர் 1986-ல் புலவர் ப.கோவிந்தசாமி, ராஜ மன்னார்குடியின் 35, ஆதிநாயக்க பாலையத்தெருவில் வசித்து வந்த ஒளியோடு அம்மா குடும்ப பழக்கத்தினால் பாதுகாப்புக் கருதி பெற்றார்கள் அந்த ஓலைச்சுவடியை அருட்பா பதிப்பகம் அமைக்கும் அருங்காட்சியகத்தில் சிவஜோதியிடம் இருந்து பெற்றுக் கொண்ட ஓலைச்சுவடிகளை பாதுகாப்பு செய்வதற்கு உடன்பட்டால் அந்த ஓலைச்சுவடிகளை பொதுமக்கள் பார்வைக்கும் வருங்கால இளைய தலைமுறைகள் வள்ளல் பெருமானுடைய அசல்.

ஓலைச்சுவடிகளை பார்வையிடுவதனால் வரக்கூடிய ஆன்ம லாபத்தை சிவஜோதியின் குடும்பம் ஆசிர்வதிக்கப்படுவார்கள். நெடுநாள் ஓலைச்சுவடிகள் நீடித்து இருப்பதற்கு சிவஜோதியின் குடும்பத்திடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. இதனால் கல்வெட்டு ஒன்று அவர்கள் பெயர்களில் கொடுத்துள்ளோம். ஏற்கனவே அவர்கள் குடும்பத்திற்கு அருட்பா வள்ளலார் கோட்டத்து தொண்டு நிறுவனத்தில் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட உள்ளது.

அருட்பா பதிப்பகம், சென்னை
வள்ளார் கோட்டம் டிரஸ்ட், வடலூர்
அருள் M.A. வெங்கட்

25.01.2024



சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பா

திரு அருட்பிரகாச வள்ளலார் ஒளி ஒலி சித்தி பெற்றமை

திருச்சிற்றம்பலம்



பதிக அட்டவணை

1. அகவைக் குறிப்புகள் (9ஆம் ஆண்டில் ஆட்கொள்ளப்பெற்றது) 141
2. வேண்டார் உளரோ நின்னருள்
   12 ஆம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கியது 141
3. சிறு பருவத்தில் ஆட்கொள்ளப் பெற்றது 141
4. சிறு வயதில் பாடும் வல்லமை பெற்றது 142
5. பள்ளி பயிற்றாது இறைவனே கல்வி பயிற்றியது 143
6. ஓதாதுணர்ந்தது 143
7. வலிந்தாட்கொளப் பெற்றது 144
8. தடுத்தாட்கொளப் பெற்றது 145
9. வழிதுறை காட்டியது 145
10. சமயநெறியில் செலுத்தாது சன்மார்க்கத்தில் செலுத்தியது 146
11. அடிகளின் உள்ள மெலிவும் உடல் மெலிவும் 146
12. உடல் பொருள் ஆவியை இறைவனுக்கு அர்ப்பணித்தல் 146
13. உடலுயிரை மாற்றிக் கொண்டது 147
14. பிள்ளை என அழைக்கப்பெற்றது 147
15. இறைவனால் மகனே என அழைக்கப் பெற்றது 149
16. அடிமுடி காட்டப் பெற்றது 152
17. திருவடி தீக்கை பெற்றது 152
18. பரிசதீக்கை பெற்றது 154
19. அத்தமத்தக சையோகதீக்கை பெற்றது 154
20. சிலம்பொலி கேட்டது 154
21. இறைவன் திருவாக்களித்து, உறுதியளித்தது 154
22. வேண்டிய பொருள் எல்லாம் ஒரு நாழிகையில் இறைவன் கிடைக்கச் செய்தது 154
23. பொன் செய்யும் ஆற்றல் பெற்றது 154
24. கங்கணம் அணிவிக்கப் பெற்றது 154
25. ஆழி அளிக்கப் பெற்றது 155
26. செங்கோல் அளிக்கப் பெற்றது 155
27. மணிமுடி சூட்டப்பெற்றது 155
28. ஐந்தொழில் ஆற்றல் பெற்றது 156
29. எல்லாம் வல்ல சித்தி பெற்றது 157
30. திருமாலாதியர் போற்றும் நிலை பெற்றது 157

31. மூவகை சித்தி (கரும, யோக, ஞான சித்திகள்).....158
32. நினது செயல் எனது செயல் 158
33. நின்வார்த்தை என்வார்த்தை.....158
34. தேக சித்தி.....158
35. பொன் உடம்பு.....159
36. ஒளி உடம்பு 159
37. அழியா உடம்பு 160
38. சுத்த தேகம் 161
39. பிரணவ தேகம்.....161
40. ஞான தேகம்.....161
41. சுத்தமாதி தேகம் மூன்று.....161
42. நித்திய தேகம்.....161
43. நரை திரை பிணி மூப்பு சாக்காடு அற்றது.....161
44. இறவா வரம் 162
45. சாகாவரம்.....162
46. சாகாக் கல்வி.....164
47. செத்தார் எழுதல் 165
48. செத்தாரை எழுப்புதல்.....165
49. மரணமில்லா பெருவாழ்வு.....166
50. நவந்தரு பேதம்.....166
51. நவ நிலை 167
52. சகல கேவலம்.....167
53. இரவு பகல் இடம் 167
54. வரவுபோக்கற்ற நிலை.....168
55. இருவினை ஒப்பு, மலப்பரிபாகம் சத்திநிபாதம் 168
56. தத்பதம், தொம்பதம், அசிபதம், தத்துவமசி 169
57. எட்டும் இரண்டும் 169
58. ஓங்காரம்.....169
59. ஐந்தெழுத்து - காரணபஞ்சாக்கரம்.....170
அ. தூலபஞ்சாக்கரம் 170
ஆ. சூக்கும பஞ்சாக்கரம்..... 171
இ. அதிசூக்கும பஞ்சாக்கரம் 171
ஈ. ஐந்தெழுத்து.....172

60. வெண்ணீறு 172
61. ஒருசொல் ஒருமொழி 175
62. சரியை, கிரியை, யோகம், ஞானம் 175
63. ஆனந்தம் 175
64. முத்தியும் சித்தியும் 176
65. திருக்கதவுந்திறத்தல் 176
66. திரைகள் 177
67. சாகாத்தலை, வேகாக்கால், போகப்புனல் 178
68. இரண்டரைக்கடிகை 178
69. புருவநடு 179
70. கற்பூரமணம் வீசும் 179
71. திருஞான சம்பந்தர் 179
72. திருநாவுக்கரசர் 180
73. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 181
74. மாணிக்க வாசகர் 182
75. தேவாரம் 182
76. திருமந்திரம் 183
77. திருக்குறள் 183
78. புலைகொலைதவிர்த்தல் - கொல்லாவிரதம் 183
79. தமிழ் 184
80. மூடபழக்க வழக்கங்களை கண்டித்தல் (கண்மூடிபழக்கமெல்லாம் மண்மூடிபோக) 186
81. சிறுதெய்வ வழிபாட்டைக் கண்டித்தல் 186
82. வேதம், ஆகமம், புராணம், சாத்திரம் 186
83. ஏகான்ம வாதத்தை கண்டித்தல் (நாம்பிரமம்) 187
84. கடவுள் ஒருவரே 187
85. அன்பே சிவம் 188
86. கருணையும் சிவமே 188
87. ஒருமைப்பாடு 188
88. சன்மார்க்க சங்கம் (சத்சங்கம்) 188
89. சுத்தசன்மார்க்க கழகம் 189
90. சன்மார்க்க சபை 189
91. சுத்தசன்மார்க்கமன்று 189
92. சமரசவேத சுத்தசன்மார்க்க கழகம் 189
93. சத்திய தருமசாலை 190
94. சத்திய ஞானசபை 190

95. வடலூர்திருச்சிற்றம்பலம் 191
96. சுத்தசன்மார்க்கம் 191
97. சத்திய ஞானசபை என்னுள் கண்டனன் 191
98. உத்திர சிற்சபை..... 192
99. சமரச சுத்தசன்மார்க்க திருச்சபை..... 192
100. வடலூர் பார்வதிபுரம் 192
101. வடலூர்..... 192
102. சித்திபுரம் 193
103. ஞான சித்திபுரம்..... 193
104. உத்தர ஞான சிதம்பரம்..... 193
105. ஜீவ காருண்யம்..... 194
106. அன்பு (சாதுக்கள்) 195
107. ஜம்புலன்..... 198
108. இருவர் (திரோதை-மாமாயை) மலம் (நான்கு, ஐந்து) 202
109. பொன் தம்பம்..... 204
110. உள்ளங்கை நெல்லி போல 205
111. பச்சை..... 206
112. சென்னியிடை..... 207
113. அஞ்செழுத்து ஓதி..... 208
114. உன்னுகின்றோர் 209
115. மனம் 210
116. ஏழ் வேதனை..... 214
117. விண்ணப்பம் 216
118. இறைவன் தன்னை பாடச் செய்தாய் 218
119. வினைய பற்றி..... 222
120. பதி பசு பாசம்..... 229
121. பசுபதி..... 230
122. அமுதம்..... 230
123. நால்வர் மற்றும் அருளாளர்கள் 237
124. சுந்தரனார்..... 240
125. சத்சங்கம்..... 243
126. தோன்றும் துணையாக தோன்றாத்துணையாக 252
127. நந்தி 252
128. நல்வர் தொடர்ச்சி..... 252

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திரு-முறை	பக்க எண்	பாடல் எண்	பாடல் தலைப்பு
1. அகவைக் குறிப்புகள் 9ஆம் ஆண்டில் ஆட்கொள்ளப்பெற்றது			
2	316	1651	வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும் தூண்டாத மணிவிளக்கே.... ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட அருட்கடலே என் உள்ளத் தமர்ந்த தேவே....
6	111	3639	வேண்டார் உளரோ நின்னருளை மேலோ ரன்றிக் கீழோரும் ஈண்டார் வதற்கு வேண்டினரால் இன்று புதிதோ யான்வேண்டல் தூண்டா விளக்கே திருப்பொதுவிற் சோதி மணியே ஆறொடுமூன் றாண்டா வதிலே முன்னென்னை ஆண்டாய் கருணை அளித்தருளே.
2. வேண்டார் உளரோ நின்னருள் 12 ஆம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கியது			
6	103	3593	பன்னிரண் டாண்டு தொடங்கிநான் இற்றைப் பகல்வரை அடைந்தவை எல்லாம் உன்னிநின் றுரைத்தால் உலப் புறாததனால் ஒருசில உரைத்தனன்
6	373	5083	பனிரண் டாண்டு தொடங்கி இற்றைப் பகன் வரையு மே படியில் பட்ட பாட்டை நினைக்கில் மலையும் கரையு மே
6	373	5084	ஈரா றாண்டு தொடங்கி இற்றைப் பகன் வரையு மே எளியேன் பட்ட பாட்டை நினைக்கில் இரும்பும் கரையு மே
3. சிறு பருவத்தில் ஆட்கொள்ளப் பெற்றது			
1	120	335	வேய்க்குப் பொரும்எழில் தோளுடைத் தேவி விளங்குமொங்கள் தாய்க்குக் கனிந்தொரு கூறளித் தோய்நின் தயவுமிந்த நாய்க்குக் கிடைக்கும் எனஒரு சோதிடம் நல்கில்அவர் வாய்க்குப் பழத்தொடு சர்க்கரை வாங்கி வழங்குவனே.
1	121	341	மாப்பிட்டு நேர்ந்துண்டு வந்தியை வாழ்வித்த வள்ளல்உன்வெண் காப்பிட்டு.... நாதனைக் கூடஇல்லாள் பூப்பிட்ட காலத்தில் கூப்பிட்ட போதினும் போவதுண்டே.
2	317	1652	என்னை அறியாப்பருவத் தாண்டு கொண்ட என்குருவே எனக்குரிய இன்பமே
2	318	1657	விழற்கிறைத்து மெகின்ற வீணனேன் இவ்வியன்உலகில் விளைத்திட்ட மிகைகள் எல்லாம் அழற்கிறைத்த பஞ்செனவே ஆக்கி நீயே ஆட்கொண்டால் தடுப்பவரிங் காரே ஐயா கழற்கடிமை எனஉலகம் அறிய ஒன்றும் கருதறியாச் சிறுபருவத் தென்னை ஆண்டு நிழற்கருணை அளித்தாயே
2	352	1891	சின்னஞ் சிறுவயதி லென்னை யடிமைகொண்ட சிவமே - சிவமே - சிவமேயென் றலறவும்
4	435	2460	என்னைஒன்றும் அறியாத இளம்பருவந் தனிலே என்உளத்தே அமர்ந்தருளி யான்மயங்கும் தோறும் அன்னைஎனப் பரிந்தருளி
5	561	3132	ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ தேறுமுகப் பெரியஅருட் குருவாய் என்னைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	561	3133	திண்ணியஎன் மனம்உருக்கிக் குருவாய் என்னைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	561	3134	சின்னம்அளித் தருட்குருவாய் என்னை முன்னே சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	561	3135	செல்வஅருட் குருவாகி நாயி னேனைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	561	3136	சிந்தைமகிழ்ந் தருட்குருவாய் என்னை முன்னே சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	562	3137	சீறாத வாழ்விடைநான் வாழ என்னைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

5	562	3138	சிற்றறிவை அகற்றிஅருட் குருவாய் என்னைச் சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	562	3139	சீலம்எலாம் உடையஅருட் குருவாய் வந்து சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	562	3140	சிற்பரசற் குருவாய்வந் தென்னை முன்னே சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
5	562	3141	சென்னியில்நின் அடிமலர்வைத் தென்னை முன்னே சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
6	10	3253 / 290	மாண்டுழ லாவகை வந்துஇளங் காலையே ஆண்டுகொண் டருளிய அருட்பெருஞ் ஜோதி
6	115	3659	பேதையாம் பருவத் தென்னைஆட் கொண்டெனை உவந்தே ஓதும்இன் மொழியால் பாடவே பணித்த ஒருவனே
6	112	3692	அறிவிலா தோடி ஆடிய சிறுபரு வத்தே குற்றமும் குணங்கொண் டென்னைஆட் கொண்ட
6	129	3729	தெருவிடத்தே விளையாடித் திரிந்தஎனை வந்தே சிவமலை அணிந்தனைச் அச் சிறுவயதில்.... கருவிடத்தே எனைக்காத்த காவலனே
6	157	3867	சிறுவரொடும் விளையாடித் திரியும் மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது பெம்மான் என் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த சிறியேனைச் சிறுநெறியில் சிறிதும் செலுத்தாமல் பெருநெறியில் செலுத்தியநற் றுணையே
6	161	3885	வீதியிலே விளையாடித் திரிந்தபிள்ளைப் பருவம் மிகப் பெரிய பருவம்என வியந்தருளி அருளாம் சோதியிலே விழைவுறச் செய் தினியமொழி மாலை தொடுத்திடச்செய் தணிந்துகொண்ட துரையே
6	207	4106	தெருவிற் கலந்து விளையாடுஞ் சிறியேன் தனக்கே மெய்ஞ்ஞான சித்தி அளித்த பொருங்கருணைத் தேவே
6	264	4440	சேர்த்தான் பதம்என் சிரத்தே திருவருட்கண் பார்த்தான்என் எண்ணமெலாம் பாத்தான்
6	298	4631	பாங்கியல் அளித்தென்னை அறியாத ஒருசிறிய பருவத்தில் ஆண்டபதியே.... தூக்கிவிழு சிறியனனத் தங்கிஎழு கென்றொனது தூக்கந் தொலைத்ததுணையே
6	387	5216	சிறுவயதில் எனைவிழைந்தீர் அணையவா ரீர்....உறுவயதிங் கிருதருணம் அணையவா ரீர்.... இறுதிதவிர்த தாண்டவரே அணையவா ரீர்
6	410	5391	சின்ன வயதில்என்னைச் சேர்ந்தார்புன் னகையோடு சென்றார் தயவால்இன்று வந்தார் இவர்க்கார்ஈடு
4. சிறு வயதில் பாடும் வல்லமை பெற்றது			
4	436	2461	பாடும் வகை அணுத்துணுாணுயும் பரிந்தறியாச் சிறிய பருவத்தே அணிந்தணிந்து பாடும்வகை புரிந்து
4	438	2474	ஐயறிவிற் சிறிதும்அறிந் தனுபவிக்கத் தெரியா தழுதுகளித் தாடுகின்ற அப்பருவத் தெளியேன் மெய்யறிவிற் சிறந்தவருங் களிக்க உனைப் பாடி விரும்பிஅருள் நெறிநடக்க விடுத்தனைநீ யன்றோ
6	115	3659	ஏதும்ஒன் றறியாப் பேதையாம் பருவத் தென்னைஆட் கொண்டெனை உவந்தே ஓதும்இன் மொழியால் பாடவே பணித்த ஒருவனே
6	157	3867	வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும் மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது பெம்மான்என் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே....
6	161	3885	வீதியிலே விளையாடித் திரிந்தபிள்ளைப் பருவம் மிகப்பெரிய பருவம்என வியந்தருளி அருளாம் சோதியிலே விழைவுறச்செய் தினியமொழி மாலை தொடுத்திடச்செய் தணிந்துகொண்ட துரையே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	229	4252	நீட என் உளத்தே கலந்துகொண் டென்றும் நீங்கிடா திருந்துநீ என்னோ டாடவும் எல்லாம் வல்ல சித்தியைப் பெற்றறிவுரு வாகிநான் உனையே பாடவும் பெற்றேன்
6	466	5814	அறியாத பருவத்தே என்னைவந் தழைத்தே ஆடல்செயும் திருவடிக்கே பாடல்செயப் பணித்தார்
5. பள்ளி பயிற்றாது இறைவனே கல்வி பயிற்றியது			
4	436	2463	கற்றதுநின் னிடத்தேபின் கேட்டதுநின் னிடத்தே கண்டதுநின் னிடத்தேஉட் கொண்டதுநின் னிடத்தே பெற்றதுநின் னிடத்தேஇன் புற்றதுநின் னிடத்தே பெரியதவம் புரிந்தேன்என் பெற்றிஅதி சயமே.
6	132	3742	காரண காரியக் கல்விகள் எல்லாம் கற்பித்தென் னுள்ளே கலந்துகொண் டென்னை நாரணர் நான்முகர் போற்றமேல் ஏற்றி.... ஆரண வீதியில் ஆடச்செய் தீரே அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.
6	197	4049	ஏடகத்தே எழுதாத மறைகளெலாம் களித்தே என்உளத்தே எழுதுவித்த என்உரிமைப் பதியே பாடகக்கால் மடந்தையரும் மைந்தரும்சன் மார்க்கப் பயன்பெறநல் அருளளித்த பரம்பரனே
6	218	4181	முனைப்பள்ளி பயிற்றாதென் தனைக்கல்வி பயிற்றி முழுதுணர் வித்துடல் பழுதெலாம் தவிர்த்தே எனைப்பள்ளி எழுப்பிய அருட்பெருஞ் சோதி என்னப்ப னேபள்ளி எழுந்தருள் வாயே.
6. ஓதாதுணர்ந்தது			
1	28	369	பேதமுற ஓதுவதென் பற்பலவாய் உற்றதவத் தோர்நீத்த தீதுகளெல் லாமெனது செல்வங்காண்
1	29	399	ஓதுமறை ஆத்த ரெனுமுன் அடியார் தமைக்கண்டு நாத்திகஞ்சொல் வார்க்கு நடுங்குகின்றேன்
2	334	1761	ஓதா துணர உணர்த்தி உள்ளே நின்றுளவு சொன்ன நீதா நினைமறந் தென்நினைக் கேன் இந்த நீணிலத்தே.
4	438	2472	ஓதுமறை முதற்கலைகள் ஓதாமல் உணர உணர்விருந் துணர்த்திஅருள் உண்மைநிலை காட்டித் தீதுசெறி சமயநெறி செல்லுதலைத்தவிர்த்துத் திருவருண்மெய்ப் பொதுநெறியில் செலுத்தியும்....
6	2	3259 /24	ஓதாது உணர்ந்திட ஒளிஅளித்து எனக்கே ஆதார மாகிய அருட்பெருஞ் ஜோதி
6	147	3814	ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான் ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும் தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே.
6	175	3949	நீதியை எல்லா நிலைகளும் கடந்த நிலையிலே நிறைந்தமா நிதியை ஓதியை ஓதா துணர்த்திய வொளியை ஒளிதனைக் கண்டுகொண் டேனே.
6	347	4894	ஓதா துணர்ந்தேன் மீதானம் உற்றேன் நம்பிடில் அணைக்கும் எம்பெரு மானை நாயகன் தன்னைத் தாயவன் தன்னைப் பம்புறப் பாடிப் படிக்கின்றேன் மேலும் படிப்பேன் எனக்குப் படிப்பித்த வாறே.
6	368	5046	ஓதி உணர்தற் கரிய பெரிய உணர்வை நண்ணி யே ஓதா தனைத்தும் உணர்கின் றேன்நின் அருளை எண்ணி யே
6	373	5088	ஓதா துணர உணரும் உணர்வை உதவும் அன்னை யே தெள்ளும் கருணைச் செங்கோல் செலுத்தச் செய்த அப்ப னே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

7. வலிந்தாட்கொளப் பெற்றது			
2	319	1669	என்னே இனும்நின் அருள்எய்தலன் ஏழையேனை முன்னே வலிந்தாட் கொண்டதின் றுமுனிந்த தேயோ
2	356	1913	என்மயம்நான் அறியாத இளம்பருவந் தனிலே என்னைமணம் புரிந்தனன்ஈ தெல்லாரும் அறிவார் இன்மயம்இல் லாதவர்போல் இன்றுமணந் தருளான் இறைஅளவும் பிழைபுரிந்தேன் இல்லை
2	356	1914	எண்குணத்தான் எல்லார்க்கும் இறைவன்எல்லாம் வல்லான் என்அகத்தும் புறத்தும்உளான் இன்பநட ராஜன் பெண்குணத்தை அறியாத இளம்பருவந் தனிலே பிச்சேற்றி மணம்புரிந்தான் பெரிதுகளித் திருந்தேன்
2	356	1915	கொய்யாத அரும்பனைய இளம்பருவந் தனிலே குறித்துமணம் புரிந்தனன் நான் மறித்தும்வரக் காணேன் செய்யாத செய்கை ஒன்றும் செய்தறியேன் சிறிதும் திருவுளமே அறியும்மற்றென் ஒருஉளத்தின் செயல்கள்
2	356	1916	கண்ணணையான் என்னுயிரில் கலந்துநின்ற கணவன் கணக்கறிவான் பிணக்கறியான் கருணைநட ராஜன் தண்ணனையாம் இளம்பருவத் தன்னில்எனைத் தனித்துத் தானேவந் தருள்புரிந்து தனிமாலை புனைந்தான்
2	356	1917	ஊன்மறந்த உயிரகத்தே ஒளிநிறைந்த ஒருவன் உலகமெலாம் உடையவன்என் னுடையநட ராஜன் பான்மறந்த சிறியஇளம் பருவமதின் மாலைப் பரிந்தணிந்தான் தெரிந்ததனிப் பருவமிதிற் பரியான்
2	357	1918	இனித்தசுகம் அறிந்துகொளா இளம்பருவந் தனிலே என்புருவ நடுஇருந்தான் பின்புகண்டேன் இல்லை அனித்தம்இலா இச்சரிதம் யார்க்குரைப்பேன் அந்தோ அவன்அறிவான் நான் அறிவேன் அயலறிவார் உளரோ
4	434	2454	கருநெறிசேர்ந் துழல்கின்ற கடையரினுங் கடையேன் கற்கின்றேன் சாகாத கல்விநிலை காணேன்....வருநெறியில் என்னைவலிந் தாட்கொண்ட மணியே மன்றுடைய பெருவாழ்வே வழங்குகநின் னருளே.
4	435	2458	அன்பர்உளக் கோயிலிலே அமர்ந்தருளும் பதியே....வன்பர்உளத் தேமறைந்து வழங்கும்ஒளி மணியே....என்பருவங் குறியாமல் என்னைவலிந் தாட்கொண் டின்பநிலை தனைஅளித்த என்னறிவுக் கறிவே
4	436	2462	சற்றும்அறி வில்லாத எனையும்வலிந் தாண்டு தமியேன்செய் குற்றமெலாஞ் சம்மதமாக் கொண்டு கற்றுமறிந் துங்கேட்டுந் தெளிந்தபெரி யவருங் கண்டுமகி ழப்புரிந்து பண்டைவினை அகற்றி
4	438	2472	ஏதும்அறி யாதிருளில் இருந்தசிறி யேனை எடுத்துவிடுத் தறிவுசிறி தேய்ந்திடவும் புரிந்து.... தீதுசெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத் திருவருண்மெய்ப் பொதுநெறியில் செலுத்தியும் நான்மருளும் போதுமயங் கேல்மகனே என்றுமயக் கெல்லாம் போக்கி
4	440	2482	ஒன்றுசிறி யேன்மறுப்ப மறித்தும்வலிந் தெனது ஒருகைதனிற் கொடுத்திங்கே உறைதிஎன்று மறைந்தாய் இன்றதுதான் அனுபவத்துக் கிசைந்ததுநா யடியேன் என்னதவம் புரிந்தேனோ இனித்துயரொன் றிலனே.
6	139	3778	உலவா நெறிநீ சொலவா அபயம் உறைவாய் உயிர்வாய் இறைவா அபயம் பலஆ குலம்நான் தரியேன் அபயம் பலவா பகவா பனவா அபயம்
6	139	3779	முடியேன் பிறவேன் எனநின் அடியே முயல்வேன் செயல்வே றறியேன் அபயம்.... அடியேன் இனிஓர் இறையும் தரியேன் அரசே அருள்வாய் அபயம் அபயம்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	139	3780	இடர்தீர் நெறியே அருள்வாய் அபயம் இனிநான் தரியேன் தரியேன் அபயம் விடர்போல் எனைநீ நினையேல் அபயம் விடுவேன் அலன்நான் அபயம் அபயம் உடலோ டுறுமா பொருள்ஆ வியும்இங் குனவே எனவே அலவே அபயம்
6	156	3860	மையல்சிறி துற்றிடத்தே மடந்தையர்கள் தாமே வந்துவரச் செய்வித்த மாண்புடைய நட்பே கையறவால் கலங்கியபோ தக்கணத்தே போந்து கையறவு தவிர்த்தருளிக் காத்தளித்த துரையே செல்வப் பிள்ளை யாக்கி என்னுள் சேர்ந்த அப்ப னே.
6	162	3891	தலைகால்இங் கறியாதே திரிந்தசிறி யேனைத் தான்வலிந்தாட் கொண்டருளித் தடைமுழுதுந் தவிர்த்தே மலைவறுமெய் அறிவளித்தே அருளமுதம் அருத்தி வல்லபசத் திகளெல்லாம் மருவியிடப் புரிந்து
6	277	4543	மாதவத்தால் நான்பெற்ற வானமுதே எனது வாழ்வேஎன் கண்ணமர்ந்த மணியேஎன் மகிழ்வே போதவத்தால் கழித்தேனை வலிந்துகலந் தாண்ட பொன்னே....
6	294	4622	நன்செய்வாய் இட்டவிளை வதுவிளைந் ததுகண்ட நல்குரவி னோன் அடைந்த நன்மகிழ்வின் ஒருகோடி பங்கதிகம் ஆகவே நான்கண்டு கொண்டமகிழ்வே வன்செய்வாய் வாதருக் கரியபொரு ளேஎன்னை வலியவந் தாண்டபரமே
6	324	4761	சிந்தா குலந்தவிர்த்துச் சிற்றம் பலப்பெருமான் வந்தான் எனைத்தான் வலிந்தழைத்தே - ஐந்தொழிலும் நீயேசெய் என்றெனக்கே நேர்ந்தளித்தான்
6	375	5102	நீயே வலிந்திங் கென்னை ஆண்ட நீதி ஜோதி யே.... தாயே எனவந் தென்னைக் காத்த தரும ஜோதி யே....
8. தடுத்தாட்கொளப் பெற்றது			
6	141	3785	தடுத்தெனை ஆட்கொண்ட தந்தைய ரேஎன் தனிப்பெருந் தலைவரே சபைநடத் தவரே தொடுத்தொன்று சொல்கிலேன் சொப்பனத் தேனும் தூயநும் திருவருள் நேயம்விட் டறியேன்.... தப்பா யினதீர்த் தென்னையும்முன் தடுத்தாட் கொண்ட தயாநிதியே எப்பா லவரும் புகழ்ந்தேத்தும் இறைவா எல்லாம் வல்லோனே....
6	270	4485	தாயே என்னைத் தடுத்தாண்டு வருண நிறைவில் சன்மார்க்கம் மருவப் புரிந்த வாழ்வேநல் அருண ஒளியே எனச்சிறிதே அழைத்தேன் அழைக்கும் முன்வந்தே கருணை கொடுத்தாய்....
6	273	4517	நாயெனவே திரிந்தேனை வலிந்தழைத்து நான்முகன்மால் தூயபெருந் தேவர்செயும் தொழில்புரியென் றமுதளித்தாய்....
6	322	4750	நானே தவம்புரிந்தேன் நானிலத்தீர் அம்பலவன் தானேவந் தென்னைத் தடுத்தாண்டான் - ஊனே புகுந்தான்என் உள்ளம் புகுந்தான் உயிரில் புகுந்தான் கருணை புரிந்து.
6	356	4963	சிறுநெறிக் கெனைத்தான் இழுத்ததோர் கொடிய தீமன மாயையைக் கணத்தே வெறுவிய தாக்கித் தடுத்தெனை ஆண்ட மெய்யநின் கருணைஎன் புகல்வேன்....
6	356	4964	புல்லிய நெறிக்கே இழுத்தெனை அலைத்த பொய்ம்மன மாயையைக் கணத்தே மெல்லிய தாக்கித் தடுத்தெனை ஆண்ட மெய்யநின் கருணைஎன் புகல்வேன்....
9. வழிதுறை காட்டியது			
6	38	3259 / 1170	துறையிது வழியிது துணிவிது நீசெயும் முறையிது எனவே மொழிந்தமெய்த் துணையே
6	300	4640	இதுபதி இதுபொருள் இதுசுகம் அடைவாய் இதுவழி எனஎனக் கியல்புற உரைத்தே விதுஅமு தொடுவசிவ அமுதமும் அளித்தே
6	133	3748	மருந்திது மணிஇது மந்திரம் இதுசெய் வகைஇது துறைஇது வழிஇது எனவே இருந்தெனுள் அறிவித்துத் தெள்ளமு தளித்தே என்னையும் தன்னையும் ஏகம தாக்கிப் பொருந்தி...

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

10. சமயநெறியில் செலுத்தாது சன்மார்க்கத்தில் செலுத்தியது			
4	438	2472	தீதுசெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத் திருவருண்மெய்ப் பொதுநெறியில் செலுத்தி
6	153	3844	இச்சை ஒன்றும் இல்லாதே இருந்தஎனக் கிங்கே இயலுறுசன் மார்க்கநிலைக் கிச்சையைஉண் டாக்கித் தச்சுறவே பிறமுயற்சி செயுந்தோறும் அவற்றைத் தடையாக்கி உலகறியத் தடைதீர்த்த குருவே....
6	157	3867	....செம்மாந்த சிறியேனைச் சிறுநெறியில் சிறிதும் செலுத்தாமல் பெருநெறியில் செலுத்தியநற் றுணையே அம்மானே என்ஆவிக் கானபெரும் பொருளே அம்பலத்தென் அரசேஎன் அலங்கல்அணிந் தருளே....
6	167	3912	....சிறுநெறிகள் அடையா தென்னைத் தடுத்தானைப் பெருநெறிக்குத் தடைதீர்த் தானைத் தன்னருளும் தன்பொருளும் தானே என்பால் கொடுத்தானைக்.... சமயமதக் குழிநின் றென்னை எடுத்தானை எல்லாஞ்செய் வல்ல சித்தே....
6	270	4484	மதியைக் கெடுத்து மரணம்எனும் வழக்கைப் பெருக்கி இடர்ப்படும்ஓர் விதியைக் குறித்த சமயநெறி மேவா தென்னைத் தடுத்தருளாம் பதியைக் கருதிச் சன்மார்க்கப் பயன்பெற் றிடஎன் உட்கலந்தோர்...
11. அடிகளின் உள்ள மெலிவும் உடல் மெலிவும்			
6	102	3582	....கருணைஎன் பதுதான் என்னையே நிலையாய் இருத்தஉள் வருந்தி இருக்கின்றேன் என்உள மெலிவும்மன்னும் என் உடம்பின் மெலிவும் நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும்.
6	102	3583	....கருணையங் கடலே தெய்வமே எனநான் நின்னையே கருதித் திருப்பணி புரிந்திருக் கின்றேன் மைபடா உள்ள மெலிவும் நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும்.
6	102	3584	....உன்னுதற் கினிய வொருவனே எனநான் உன்னையே நினைத்திருக்கின்றேன் மன்னும்என் உள்ள மெலிவும் நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும்.
12. உடல் பொருள் ஆவியை இறைவனுக்கு அர்ப்பணித்தல்			
6	79	3412	தூயபேர் உதவிக்கு நான்என் ஆற்றுவேன் ஆவி உடல்பொருள் எல்லாம் அப்பநின் சுதந்தரம் அன்றோ.
6	80	3413	சுதந்தரம் உனக்கே கொடுத்தனம் உனது தூயநல் உடம்பினில் புகுந்தேம்
6	80	3414	இப்பாரில் உடல்ஆவி பொருளும் உன்பாற் கொடுத்தேன்மற் றெனக்கென் றிங்கே எப்பாலும் சுதந்தரம்ஓர் இறையும்இலை
6	106	3612	உடல்பொருள் ஆவி உளஎலாம் ஆங்கவன் தனக்கே தெருஎலாம் அறியக் கொடுத்தனன்
6	110	3629	ஆவிஉடல் பொருளைஉன்பாற் கொடுத்தேன்உன் அருட்பே ராசைமய மாகிஉனை அடுத்துமுயல் கின்றேன்
6	141	3787	என்பொருள் என்உடல் என்உயிர் எல்லாம் ஈந்தனன் உம்மிடத் தெம்பெரு மானீர்
6	154	3851	என்உயிரும் என்உடலும் என்பொருளும் யானே இசைந்துகொடுத் திடவாங்கி இட்டதன்பின் மகிழ்ந்தே
6	183	3989	தன்னையும்தன் பொருளையும்தன் ஆவியையும் களித்தளித்த தலைவன் தன்னை
6	221	4206	உடல்பொருள் ஆவியை உவப்புடன் அளித்தேன் இத்தகை உலகிடை அவைக்கும்என் தனக்கும் ஏதுஞ் சுதந்தரம் இல்லை
6	221	4207	உடல்பொருள் ஆவியும் நுமக்கே கொடுத்தனன் இனிஎன்மேல் குறைசொல்ல வேண்டாம்
6	222	4208	உகத்தென துடல்பொருள் ஆவியை நுமக்கே ஒருமையின் அளித்தனன் இருமையும் பெற்றேன்
6	222	4209	திருச்சமு கத்தே இப்படி வான்முதல் எங்கணும் அறிய என்னுடல் ஆதியை ஈந்தனன் உமக்கே

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	222	4210	மாசமு கத்தென் வண்பொரு ளாதியை நண்பொடு கொடுத்தேன்
6	222	4211	ஆய்மட்டில் என்னுடல் ஆதியை நுமக்கே அன்புடன் கொடுத்தனன் ஆண்டவ ரேநீர்
6	222	4212	எத்திக்கும் அறியஎன் உடல்பொருள் ஆவி என்பவை மூன்றும்உள் அன்பொடு கொடுத்தேன்
6	223	4213	சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன் தன்மார்க்கத் தென்னுடல் ஆதியை நுமக்கே தந்தனன் திருவருட் சந்நிதி முன்னே
6	223	4214	என்னுடல் ஆதியை நுமக்கே நிச்சலும் தந்தனன் என்வசம் இன்றி நின்றனன்
6	223	4215	மூவகை யாம்உடல் ஆதியை நுமது பொன்செய்து கொண்ட பொதுவினில் ஆடும் பொன்னடி காணப் பொருந்திக் கொடுத்தேன்
6	234	4288	தேகாதி மூன்றும்உன் பாற்கொடுத் தேன்நின் திருவடிக்கே
6	325	4774	தன்உடலும் தன்பொருளும் தன்உயிரும் – என்னிடத்தே தந்தான் அருட்சிற் சபையப்பா என்றழைத்தேன்
6	360	4982	என்உடலும் என்உயிரும் என்பொருளும் நின்னஎன இசைந்தஞ் ஞான்றே உன்னிடைநான் கொடுத்தனன்
6	462	5797	யான்கொடுக்கும் பரிசிந்த மாலைமட்டோ தோழி என்ஆவி உடல்பொருளும் கொடுத்தனன்உள் இசைந்தே.
13. உடலுயிரை மாற்றிக் கொண்டது			
6	123	3723	உடல்உயிரா தியஎல்லாம் நீஎடுத்துத் கொண்டுன் உடல்உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
6	154	3851	தன்உயிரும் தன்உடலும் தன்பொருளும் எனக்கே தந்துகலந் தெனைப்புணர்ந்த தனித்தபெருஞ் சுடரே
6	312	4700	என் உடலாவி முதல்அனைத்தும் தானே பொறையுறக்கொண்டருட்ஜோதி தன்வடிவும் உயிரும் பொருளும்அளித் தெனைத்தானாப் புணர்த்தியது காணே
6	325	4774	என்உடலும் என்பொருளும் என்உயிரும் தான்கொண்டான் தன்உடலும் தன்பொருளும் தன்உயிரும் – என்னிடத்தே தந்தான் அருட்சிற் சபையப்பா
14. பிள்ளை என அழைக்கப்பெற்றது			
6	159	3875	காட்சிகளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம் பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே பிள்ளைஎனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே
6	173	3941	எனைஈன்ற தந்தையைஎன் தாயைப் பொருள்நிறைசிற் றம்பலத்தே விளங்குகின்ற பதியை... கடவுள் என் கண்ணில் கண்டுகொண்டேன்
6	214	4153	அருளே பழுத்த சிவதருவில் அளிந்த பழந்தந் தடியேனைத் தெருளே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	214	4154	ஒருவா தடியேன் எண்ணியவா றெல்லாம் அருளி உளங்களித்தே திருவார் சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	214	4155	அவமே புரிந்தேன் தனைமீட்டுன் அருளா ரமுதம் மிகப்புகட்டிச் சிவமே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	214	4156	பல்வா தனையும் தவிர்த்தெனக்கே பரமா னந்த அமுதளித்துச் செல்வா சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	214	4157	ஓவா இன்ப மயமாகி ஓங்கும் அமுதம் உதவிஎனைத் தேவா சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	214	4158	இளிவே தவிர்த்துச் சிறியேன்தன் எண்ணம் முழுதும் அளித்தருளித் தெளிவே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே

6	215	4159	மறப்பே தவிர்த்திங் கெனைஎன்றும் மாளா நிலையில் தனியமர்த்திச் சிறப்பே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	215	4160	ஊனே புகுந்தென் உளங்கனிவித் துயிரில் கலந்தே ஒன்றாகித் தேனே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	215	4161	ஆரா அமுதம் அளித்தருளி அன்பால் இன்ப நிலைக்கேற்றிச் சீரார் சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	215	4162	மெய்வைப் பழியா நிலைக்கேற்றி விளங்கும் அமுதம் மிகஅளித்தே தெய்வப் பதியே சிவமேநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	215	4164	பிறந்தேற் கென்றும் இறவாது பிறவா தோங்கும் பெருமைதந்து சிறந்தே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	227	4240	நினதுசெல்வப் பிள்ளைஎன எற்குப் பெயரிட்டாய் கெள்ளை என இன்பம் கொடுத்தாய்
6	231	4258	சாவையும் நோவையும் தவிர்ந்தேன் சிட்டமும் அடைந்தேன் சிற்சபை உடையான் செல்வமெய்ப் பிள்ளைஎன் றொருபேர்ப் பட்டமும் தரித்தேன்
6	265	4551	எல்லாமும் உடையோய் நின்இயலை அறிவேனோ அறிந்தவனே போல நிகழ்த்துகின்றேன் பிள்ளைஎன நிலைப்பெயர்பெற் றிருந்தேன்
6	295	4624	பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடா துயிர்கள்பல பேதமுற் றங்கும்இங்கும் போருற் றிறந்துவீண் போயினார்
6	304	4657	உருவமுமாய் அருவமுமாய் உபயமுமாய் அலவாய் ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி ஒருவனுண்டே அவன்றான் பெருமையினால் எனையீன்றான் நான்ஒருவன் தானே பிள்ளை அவன் பிள்ளைஎனப் பெரியரெலாம் அறிவார்
6	304	4658	மனம்எனும்ஓர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான் மற்றவர்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய்....நனவில்எனை அறியாயோ யார்எனஇங்கிருந்தாய் ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே.
6	304	4659	பன்முகஞ்சேர் மனம்எனும்ஓர் பரியாசப் பயலே பதையாதே சிதையாதே....பின்முன்என நினையேல்காண் சிற்சபையில் நடிக்கும் பெரியதனித் தலைவனுக்குப் பெரியபிள்ளை நானே
6	304	4660	விரிந்தமனம் எனும்சிறிய விளையாட்டுப் பயலே விரிந்துவிரிந் தலையாதே மெலியாதே....பரிந்தெனைநீ யார்என்று பார்த்தாய்சிற் சபைவாழ் பதிதனக்கே அருட்பட்டம் பலித்தபிள்ளை நானே.
6	304	4661	பாய்மனம்என் றுரைத்திடும்ஓர் பராய்முருட்டுப் பயலே பல்பொறியாம் படுக்காளிப் பயல்களொடும் கூடிச்.... பேய்மதியா நீஎனைத்தான் அறியாயோ எல்லாம் பெற்றவன்தன் செல்வாக்குப் பெற்றபிள்ளை நானே.
6	304	4662	மயங்குபுத்தி எனும்உலக வழக்காளிப் பயலே வழிதுறையீ தென்றறியாய் வகைசிறிதும் அறியாய்.... இயங்கஎன்னை அறியாயோ யார்எனஎண் ணினைனையோ எல்லாஞ்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே.
6	304	4663	கலையறியாச் சித்தம்எனும் கன யூசப் பயலே கால்அறியாய் தலைஅறியாய் காண்பனகண் டறியாய்....அலைவறிவாய் என்றனைநீ அறியாயோ நான்தான் ஆண்டவன்தன் தாண்டவங்கண் டமர்ந்தபிள்ளை காணே.
6	305	4664	அகங்காரம் எனும்பொல்லா அடவாதிப் பயலே அடுக்கடுக்காய் எடுக்கின்றாய் அடுத்துமுடுக் கின்றாய்....சுகங்காண வென்றனைநீ அறியாயோ நான்தான் சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றபிள்ளை காணே.
6	305	4665	மான்எனும்ஓர் சகச்சாலச் சிறுக்கிஇது கேள்உன் வஞ்சகக்கூத் தெல்லாம்ஓர் மூட்டைஎனக் கட்டி....ஏன்எனைநீ அறியாயோ சிற்சபையில் நடஞ்செய் இறைவன் அருட் பெருஞ்ஜோதிக் கினியபிள்ளை நானே.

6	306	4666	மாயைஎனும் படுதிருட்டுச் சிறுக்கிஇது கேள்உன் மாயைஎலாம் சுமைசுமையா வரிந்து கட்டிக் கொண்டுன்....ஆய்எனைநீ அறியாயோ எல்லாஞ்செய் வல்லார் அருள்அமுதுண் டருள்நிலைமேல் அமர்ந்தபிள்ளை நானே.
6	306	4667	மாமாயை எனும்பெரிய வஞ்சகிநீ இதுகேள் வரைந்தஉன்தன் பரிசனப்பெண் வகைதொகைகள் உடனே....ஆமாறு சிற்சபையில் அருள்நடனம் புரிவார் அருள்அமுதுண் டருள்நிலைமேல் அமர்ந்தபிள்ளை நானே.
6	306	4668	கன்மம்எனும் பெருஞ்சிலுகுக் கடுங்கலகப் பயலே கங்குகரை காணாத கடல்போலே வினைகள்....இன்மையுற மாய்த்திடுவேன் என்னையறி யாயோ எல்லாஞ்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே.
6	306	4669	எத்துணையும் காட்டாத ஆணவம்என் றிடும்ஓர் இருட்டறைக்கோர் அதிகாரிக் குருட்டுமுடப் பயலே....சத்தியஞ்சொன் னேன்எனைநீ அறியாயோ ஞான சபைத்தலைவன் தருதலைமைத் தனிப்பிள்ளை நானே.
6	307	4670	பெருமாயை என்னும்ஒரு பெண்பிள்ளை நீதான் பெற்றவுடம் பிதுசாகாச் சுத்தவுடம் பாக்கி ஒருஞானத் திருவமுதுண் டோங்குகின்றேன்....தெருளாய உலகிடை என் சரிதமுணர்ந் திலையோ சிற்சபைஎன் அப்பனுக்குச் சிறந்தபிள்ளை நானே.
6	307	4671	பேசுதிரோ தாயிஎனும் பெண்மடவாய் இதுகேள் பின்முன்அறி யாதெனைநீ என்முன்மறைக் காதே....மாசறும்என் சரிதம்ஒன்றும் தெரிந்திலையோ எல்லாம் வல்லஒரு சித்தருக்கே நல்லபிள்ளை நானே.
6	307	4672	தூக்கம்எனும் கடைப்பயலே சோம்பேறி இதுகேள் துணிந்துனது சுற்றமொடு சொல்லும்அரைக் கணத்தே....போக்கில்விரைந் தோடுகநீ பொற்சபைசிற் சபைவாழ் பூரணர்க்கிங் கன்பான பொருளன்என அறிந்தே.
6	307	4673	பயம்எனும்ஓர் கொடும்பாவிப் பயலேநீ இதுகேள் பற்றறஎன் தனைவிடுத்துப் பனிக்கடல்வீழ்ந் தொளிப்பாய்.....அயலிடைநேர்ந் தோடுகநீ என்னைஅறி யாயோ அம்பலத்தென் அப்பன்அருள் நம்புபிள்ளை நானே.
6	307	4674	கோபமெனும் புலைப்பயலே காமவலைப் பயலே கொடுமோகக் கடைப்பயலே குறும்புமதப் பயலே.... சாபமுறா முன்னம்அறிந் தோடுமினோ என்னைத் தான்அறியீர் தனித்தலைவன் தலைப்பிள்ளை நானே.
6	307	4675	பசிஎனும்ஓர் பெரும்பாவிப் பயலேதுன் பெனும்ஓர் படுபாவிப் பயலேஆ பத்தெனும்பொய்ப் பயலே....கசியுமனத் தெனை அறியீர் சிற்சபையில் விளங்கும் கடவுள்மகிழ்ந் தளித்ததனிக் கதிர்ப்பிள்ளை நானே.
6	307	4676	மரணம்எனும் பெருந்திருட்டு மாபாவிப் பயலே வையகமும் வானகமும் மற்றகமும் கடந்தே....அரணுறும்என் தனைவிடுத்தே ஓடுகநீ நான்தான் அருட்பெருஞ்ஜோ திப்பதியை அடைந்தபிள்ளை காணே.
6	405	5340	உய்பிள்ளை பற்பலர் ஆவல் - கொண்டே உலகத் திருப்பஇங் கென்னைத்தன் ஏவல் செய்பிள்ளை ஆக்கிற்றுப் பாரீர்
6	405	5343	பேருல கெல்லாம் மதிக்கத் - தன் பிள்ளைஎன் றென்னைப் பெயரிட் டழைத்தே
15. இறைவனால் மகனே என அழைக்கப் பெற்றது			
4	437	2466	அஞ்சாதே என்மகனே அனுக்கிரகம் புரிந்தாம் ஆடுகநீ வேண்டியவா றாடுகஇவ் வுலகில்
4	438	2472	நான்மருளும் போதுமயங் கேல்மகனே என்றுமயக் கெல்லாம் போக்கிஎனக் குள்ளிருந்த புனிதபரம் பொருளே
4	440	2482	தருண்மலர்ச்சே வடிவாயிற் படிப்புறத்தும் அகத்தும் மன்றவைத்துக் கொண்டென்னை வரவழைத்து மகனே வருந்தாதே இங்கிதனை வாங்கிக் கொள் ளென்ன
4	441	2483	தெனை அழைத்து மகனேநீ இவ்வுலகிற் சிறிதும் கரவிடைநெஞ் சயர்ந்திளைத்துக் கலங்காதே இதனைக் களிப்பொடுவாங் கென

4	441	2484	அங் கழைத்து மயங்காதே இங்கிதனை வாங்கிக் கொண்டுலகில் மகனேநீ விளையாடி வாழ்கஎன உரைத்தாய்
4	442	2488	அன்றகத்தே அடிவருந்த நடந்தென்னை அழைத்திங் கஞ்சாதே மகனேஎன் றளித்தனைஒன் றதனைத்
4	442	2490	காலநிலை கருதிமனங் கலங்குகின்ற மகனே கலங்காதே என்றெனது கையில்ஒன்று கொடுத்துச் சீலநிலை யுறவாழ்க
4	443	2493	என் மகனே இங்கிதனைத் தாங்குகஎன் றொன்றெனது தடங்கைதனிற் கொடுத்து மரணமற்று வாழ்கஎனத் திருவார்த்தை அளித்தாய்
4	444	2498	உள் ளன்பொடெனை அழைத்து வாளாநீ மயங்காதே மகனே இங் கிதனை வாங்கிக்கொள்
4	444	2499	என் செங்கையில்ஒன் றளித்து மத்தஉரு வாமனத்தால் மயக்கமுறேல் மகனே மகிழ்ந்துறைக எனத்திருவாய் மலர்ந்தகுண மலையே
4	446	2508	அன்னையினும் பரிந்தருளி அணிக்கதவந் திறப்பித் தங்கையில்ஒன் றளித்தெனையும் அன்பினொடு நோக்கி என்னைஇனி மயங்காதே என்மகனே மகிழ்வோ டிருத்திஎன உரைத்தாய்
4	447	2512	மணிக்கதவந் திறப்பித்து மகனேஎன்றழைத்து விந்துநிலை முடிமுதலாந் திருவுருவங் காட்டி என்கையில்ஒன் றளித்தின்பம் எய்துக என்றுரைத்தாய்
4	448	2515	எழிற்கதவந் திறப்பித்துள் எனை அழைத்து மகனே தேவருக்கும் அரிதிதனை வாங்கெனஎன் கரத்தே சித்தமகிழ்ந் தளித்தனைநின் திருவருள் என் னென்பேன்
4	448	2517	மணிக்கதவந் திறப்பித்து மகிழ்ந்தழைத்து மகனே பொருணிறையும் இதனை இங்கே வாங்கெனஎன் கரத்தே பொருந்தஅளித் தருளியநின் பொன்னருள்என் னென்பேன்
4	448	2518	சிறியேனை அழைத்தெனது செங்கையில் ஒன் றளித்து மருளுருவின் மற்றவர்போல் மயங்கேல்என் மகனே மகிழ்ந்துதிரு வருள்வழியே வாழ்க
4	449	2519	பழுதுபடா வண்ணம்எனைப் பரிந்தழைத்து மகனே பணிந்திதனை வாங்கெனஎன் பாணியுறக் கொடுத்துத் தொழுதெனைப்பா டுகஎன்று சொன்னபசு பதி
4	449	2520	பானினைத்த சிறியேன்நான் இருக்குமிடத் தடைந்து பணைக்கதவந் திறப்பித்துப் பரிந்தழைத்து மகனே நீநினைத்த வண்ணமெலாங் கைகூடும்இதுஓர் நின்மலம்
4	451	2532	இடையின் அது நான்மறுப்ப மறுக்கேல்என் மகனே என்றுபின்னுங் கொடுத்தாய்நின் இன்னருள்என் னென்பேன்
4	453	2538	என்னிறைந்த ஒருபொருள்என் கையில் அளித் தருளி என்மகனே வாழ்கஎன எழில்திருவாய் மலர்ந்தாய்
4	454	2544	காணுகின்ற கண்களுக்குக் காட்டுகின்ற ஒளியாய்க் காட்டுகின்ற ஒளிதனக்குக் காட்டுவிக்கும் ஒளியாய்ப் கோணுகின்ற மனத்தாலே நாணுவதேன் மகனே
6	79	3409	எடுத்தணைத் தஞ்சிடேல் மகனே பிறிந்திடேம் சிறிதும் பிறிந்திடேம் உலகில்
6	118	3674	தளர்ந்திடேல் மகனே என்றெனை எடுத்தோர் தாய்கையில் கொடுத்தனை
6	151	3837	வருந்தியபோ ததனைத் தன்வருத்தம் எனக்கொண்டு தரியாதக் கணத்தே பனிப்புறும்அவ் வருத்தமெலாம் தவிர்த்தருளி மகனே பயம் உனக்கென் என்றென்னைப் பரிந்தணைத்த குருவே
6	152	3842	ஏன்நினைத்தாய் இவ்வளவு சுதந்தரம்என் மகனே எனக்கிலையோ என்றருளி எனையாண்ட குருவே
6	155	3855	கைதவனேன் பொய்தவமும் கருத்தில்உவந் தருளி மலைக்குயர்மா தவிசேற்றி மணிமுடியுஞ் சூட்டிமகனேநீ வாழ்கஎன வாழ்த்தியஎன் குருவே
6	156	3860	கையறவால் கலங்கியபோ தக்கணத்தே போந்து கையறவு தவிர்த்தருளிக் காத்தளித்த துரையே ஜயமுறேல் என்றெனையாண் டமுதளித்த பதியே

6	157	3863	வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும் மரபினர்அன் றாதலினால் வகுத்தஅவர் அளவில் அன்புடைய என்மகனே பசிதவிர்த்தல் புரிக அன்றிஅருட் செயல்ஒன்றும் செயத்துணியேல்
6	159	3877	எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்குசிவம் ஒன்றே என்னாணை என்மகனே இரண்டில்லை ஆங்கே செவ்விடத்தே அருளொடுசேர்த் திரண்டெனக்கண் டறிநீ
6	160	3878	மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என அறிந்தார் மகனேநீ நூல்அனைத்தும் சாலம்என அறிக
6	160	3881	எவராலும் பிறிதொன்றால் கண்டறிதல் கூடா தென்ஆணை என்மகனே அருட்பெருஞ்சோ தியைத்தான் தவறாது பெற்றனைநீ வாழ்கஎன்ற பதியே
6	160	3882	ஜயமுறேல் என்மகனே இப்பிறப்பிற் றானே அடைவதெலாம் அடைந்தனைநீ அஞ்சலை
6	168	3914	நட்டானை நட்டஎனை நயந்து கொண்டே நம்மகன்நீ அஞ்சல்என நவின்றென் சென்னி தொட்டானை
6	176	3952	ஏங்கலை மகனே தூங்கலை எனவந் தெடுத்தெனை அணைத்தஎன் தாயை ஓங்கிய எனது தந்தையை
6	176	3953	துன்புறேல் மகனே தூங்கலை எனஎன் சோர்வெலாந் தவிர்த்தநற் றாயை அன்புளே கலந்த தந்தையை
6	225	4225	அருளமுதம் அளித்தென் தனைமெய் அருட்கரத்தால் எடுத்த கொடியேசித்திஎலாம் இந்தா மகனே என்றெனக்கே கொடுத்த கொடியே
6	275	4532	விதித்தனை என்னைநின் தன்மக னாக விதித்துளத்தே பதித்தனை என்னுட் பதிந்தனை சிற்றம் பலநடமும்
6	291	4615	மருவிஎனை ஆட்கொண்டு மகனாக்கி அழியா வரந்தந்த மெய்த்தந்தையே
6	294	4621	நாட்டமுறு வைகறையில் என்அரு கணைந்தென்னை நன்றுற எழுப்பிமகனே நல்யோக ஞானம்எனி னும்புரிதல்
6	296	4626	நின்வார்த்தை யாவும்நமது நீள்வார்த்தை யாகும்இது உண்மைமக னேசற்றும் நெஞ்சம்அஞ் சேல்
6	296	4627	அந்நாளில் அம்பலத் திருவாயி லிடைஉனக் கன்புடன் உரைத்தபடியே அற்புதமெ லாம்வல்ல நம்அருட் பேரொளி அளித்தனம்
6	297	4629	எல்லாஞ்செய் வல்லசித்தாய் என்கையில் அகப்பட்ட ஞானமணியே என்னை எழுமையும் விடாதநட்பே
6	297	4630	தூங்குதரு ணத்தென்றன் அருகிலுற் றன்பினால் தூயதிரு வாய்மலர்ந்தே என்றனை எடுத்தணைத் தாங்குமற் றோரிடத் தியலுற இருத்திமகிழ்வாய்
6	300	4642	காரண காரியக் கருவிது பலவாய் ஆரணம் ஆகமம் இவைவிரித் துரைத்தே அளந்திடும் நீஅவை அளந்திடன் மகனே.
6	301	4644	அடிஇது முடிஇது நடுநிலை இதுமேல் அடிநடு முடியிலா ததுவது மகனே
6	301	4645	மகனே புண்ணியம் உறுதிரு வருள்நெறி இதுவே பொதுநெறி எனஅறி வுறமுய லுதிநீ
6	301	4646	அஞ்சலை நீயொரு சிறிதும்என் மகனே அருட்பெருஞ் ஜோதியை அளித்தனம் உனக்கே
6	302	4649	எமன்எனும் அவன் இனி இலைஇலை மகனே எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே
6	308	4677	மணம்புரி கடிகை இரண்டரை எனும்ஓர் வரையுள தாதலான் மகனே எணம்புரிந் துழலேல் குணம்புரிந் தெமது மகன்எனும் குறிப்பைக் கோலத்தால் காட்டுக
6	309	4678	எம்பொருள் எனும்என் அன்புடை மகனே இரண்டரைக் கடிகையில் உனக்கே அம்புவி வானம் அறியமெய் அருளாம்.... உலகின் வெம்புறு துயர்தீர்ந்தணிந்து கொள் என்றார்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	309	4679	அன்புடை மகனே மெய்யருள் திருவை அண்டர்கள் வியப்புற நினக்கே இன்புடை உரிமை மணம்புரி விப்பாம் இரண்டரைக் கடிகையில்
6	309	4680	ஈதுகேள் மகனே மெய்யருள் திருவை இரண்டரைக் கடிகையில் நினக்கே ஊதியம் பெறவே மணம்புரி விப்பாம் உண்மை
6	309	4681	விரைந்துகேண் மகனே உலகெலாம் களிக்க மெய்யருள் திருவினை நினக்கே இரண்டரைக் கடிகை எல்லையுள் எழில்மணக் கோலம்
6	309	4682	களிப்பொடு மகனே அருள்ஒளித் திருவைக் கடிகைஓர் இரண்டரை அதனில் ஒளிப்பிலா துலகம் முழுவதும் அறிய உனக்கு மணம் புரிவப்பாம்
6	310	4683	கலங்கிடேல் மகனே அருள்ஒளித் திருவைக் களிப்பொடு மணம்புரி விப்பாம்
6	310	4684	ஐயுறேல் இதுநம் ஆணைநம் மகனே அருள்ஒளித் திருவைநின் தனக்கே மெய்யுறு மகிழ்வால் மணம்புரி விப்பாம்
6	310	4685	தூங்கலை மகனே எழுகநீ விரைந்தே தூயநீர் ஆடுக துணிந்தே கடிகை ஈங்கிரண் டரையில் அருள்ஒளித் திருவை எழில்உற மணம்புரி விப்பாம்
6	310	4686	மயங்கிடேல் மகனே அருள்ஒளித் திருவை மணம்புரி விக்கின்றாம் இரண்டரைக் கடிகை எல்லையுள் என்றுவாய் மலர்ந்தார்
6	322	4743	அய்யாஎன் றோர்கால் அழைக்கின்றேன் அப்பொழுதே எய்யேன் மகனேஎன் றெய்துகின்றான்
6	322	4744	அப்பாஎன் றோர்கால் அழைக்கின்றேன் அப்பொழுதே அப்பா மகனேஎன் றார்கின்றான்
6	330	4803	முகமறியார் போலிருந்தீர் என்னைஅறி யீரோ முத்தரெலாம் போற்றும்அருட் சித்தர்மகன் நானே.
6	344	4877	ஆணை அம்பலத் தரசையும் அளித்தனம் வாழ்கநீ மகனேஎன் றேணை பெற்றிட எனக்கருள் புரிந்தநின் இணைமலர்ப் பதம்போற்றி.
6	360	4981	தந்தை தன்மையே தனையன்தன் தன்மை மைந்தன் என்றெனை ஆண்டவன் எல்லாம் வல்ல நாயகன் நிறைந்துறப் புனைதி என்றுவாய் மலர்ந்தார்
6	406	5362	எச்சம்பெ றேல்மக னேஎன்றென் னுள்உற்ற அச்சம் தவிர்த்தவர் அம்பலத் திருக்கின்றார்
16 அடிமுடி காட்டப் பெற்றது			
4	435	2457	அந்தோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன் அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே இந்தோங்கு சடைமணிநின் அடிமுடியுங் காட்டி
6	9	3259 /262	படிமுடி கடந்தனை பார்இது பார்என அடிமுடி காட்டிய அருட்பெருஞ் ஜோதி
6	114	3656	பிரமன் விண்டுகண் டறியா முடிஅடி எனக்கே விளங்குறக் காட்டிய விமலா
6	143	3796	அனமுகத்தான் அரிமுதலோர் துருவிநிற்க எனக்கே அடிமுடிகள் காட்டுவித்தே அடிமைகொண்ட பதியே
6	421	5481	அடிமுடியைக் கண்டோம்என்று சின்னம் பிடி
6	459	5779	அன்புறுசித் தாந்தநடம் வேதாந்த நடமும் ஆதிநடு அந்தமிலாச் சோதிமன்றில் கண்டேன்
17 திருவடி தீக்கை பெற்றது			
4	456	2552	சென்னிமிசை மகிழ்ந்து தான்கொண்டு வைத்தஅந்நாள் சில்லென்றென் உடம்பும் தகஉயிருங் குளிர்வித்த தாண்மலர்கள் வருந்த வான்கொண்டு நடந்திங்கு வந்தெனக்கும் அளித்தாய்
4	460	2570	ஒருநாள் வஞ்சகனேன் புன்றலையில் வைத்திடவுஞ் சிவந்து எஞ்சலிலா இரவினிடை யானிருக்கும் இடஞ்சேர்ந் தெழிற்கதவந் திறப்பித்தங் கெனைஅழைத்தொன் றளித்தாய்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

4	461	2576	சென்னிமிசை அமர்ந்தருளும் திருவடிகள் வருந்தச் செறியிரவில் நடந்தணைந்து..... பிறிவிலதிங் கிதுதனைநீ பெறுகவெனப் பரிந்து பேசி ஒன்று கொடுத்தாய்
4	462	2577	சென்னிமிசை அமர்ந்தபதம் வருந்தப் படிநாளில் நடந்திரவில் அடைந்தருளித்..... பேரறஞ்செய் துறுகஎனப் பேசிஒன்று கொடுத்தாய்
4	462	2578	சென்னிமிசை அமர்ந்த திருவடிகள் வருந்தநடை செய்தருளி.....இனிதழைத்தொன் றளித்துமகிழ்ந் தின்னும்நெடுங் காலம் புலவர்தொழ வாழ்க என்றாய்
4	478	2640	பழுத்தலைநன் குணராதே பதியருளோ டிடிப்....கால்மலர்என் தலைமீது தான்மலர அளித்தாய்
5	562	3141	விரும்பும்அடி யார்காண மேவுந் தேவே சென்னியில்நின் அடிமலர்வைத் தென்னை முன்னே சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.
6	37	3259 /1128	இணையிலாக் களிப்புற்று இருந்திட எனக்கே துணைஅடி சென்னியில் சூட்டிய தந்தையே
6	117	3671	விரும்பிஎழுந் தருளிக் கழற்கிசைந்த பொன்அடிநம் தலைமேலே அமைத்துக் கருணைசெயப் பெற்றனம்
6	126	3717	வேதந் தலைமேற் கொளவிரும்பி வேண்டிப் பரவு நினதுமலர்ப் பாதந் தலைமேற் சூட்டிஎனைப் பணிசெய் திடவும் பணித்தனை
6	131	3739	கோள்அறிந்த பெருந்தவர்தம் குறிப்பறிந்தே உதவும் கொடையாளா .... ஆள்அறிந்திங் கெனைஆண்ட அரசே...அரும்பெருஞ் ஜோதியனே தாள்அறிந்தேன் நின்வரவு சத்தியம்சத் தியமே....அந்தத் தனித்ததிரு வரவின் நாள்அறிந்து கொளல்வேண்டும் நவிலுகநீ
6	137	3769	மலரடிஎன் தலைமேலே அமைத்தீர் புத்தமுதம் அளித்தீர்என் புன்மைஎலாம் பொறுத்தீர்
6	147	3815	மறைமுடிமேல் ஆகமத்தின் முடிமேல் பதிந்தபதம் என்முடிமேல் பதித்ததனிப் பதியே
6	151	3837	இனிப்புறுநன் மொழிபுகன்றென் முடிமிசையே மலர்க்கால் இணைஅமர்த்தி எனையாண்ட என்னுயிர்நற் றுணையே
6	152	3842	நினையே நேர்காண வந்தனம்என் றென்முடிமேல் மலர்க்கால் தான்நிலைக்க வைத்தருளிப் படுத்திட
6	161	3884	நற்பதம்என் முடிசூட்டிக் கற்பதெலாங் கணத்தே நான்அறிந்து தானாக நல்கியஎன் குருவே
6	185	3994	மலரடிஎன் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்...சேயாக எனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
6	185	3995	பொன்னடிஎன் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம்...சென்னிலையில் செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்
6	213	4148	சோதியேஎன் பாடானவை தீர்த்தருள் ஈந்துநின் பாதம்என்னும் வாடாமலர் என்முடி சூட்டினை வாழிநீயே.
6	220	4200	பூண்ட அடியை என்தலைமேல் பொருந்தப் பொருத்தி என்தன்னை ஆண்ட கருணைப் பெருங்கடலே
6	264	4440	சேர்த்தான் பதம்என் சிரத்தே திருவருட்கண் பார்த்தான்என் எண்ணமெலாம் பாலித்தான்
6	271	4500	பாதார விந்தம் எனதுசிர மேல்அமர்த்தி மெய்அளித்த எந்தைநட ராஜன் இசைந்து
6	299	4634	பொன்னினை அடிமலர் முடிமிசை பொருந்தப் பொருத்திய தயவுடைப் புண்ணியப் பொருளே
6	303	4652	அற்பனை யாண்டுகொண் டறிவளித் தழியா அருள்நிலை தனில்உற அருளிய அமுதே
6	361	4986	பொன்னடிஎன் சிரத்திருக்கப் புரிந்தபரம் பொருளே....செயுஞ்செய்கை அனைத்தும் நின்செயலோ என்செயலோ நிகழ்த்திடுக நீயே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	379	5137	இணைஒன்றும் இல்லா இணையடி என்தலை ஏறவைத் தீர்இங்கு வாரீர்
6	406	5360	உபய பதத்தைநம் உச்சிமேற் சூட்டிய அபயர் இதோதிரு அம்பலத் திருக்கின்றார்
18. பரிசதீக்கை பெற்றது			
2	333	1758	அருமைத் திருக்கையால் தடவித் திருமணி வாய்மலர்ந் தருகில் பொருளுற இருந்தோர் வாக்களித் தென்னுள் புகுந்தனன்
19. அத்தமத்தக சையோகதீக்கை பெற்றது			
6	79	3409	சித்திகள் எல்லாம் சிறந்திட உனக்கே தந்தனம் எனஎன் சென்னிதொட் டுரைத்தனை களித்தே
6	80	3914	சென்னி தொட்டானை எட்டிரண்டும் சொல்லி னானைத்..... என்னுள் உற்றானை... எட்டானை என்னளவில் எட்டி னானை எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே.
20. சிலம்பொலி கேட்டது			
6	102	3588	திருவடித் துணைகள் செலுத்திய திருச்சிலம் பொலிநான் கேட்டபோ திருந்த கிளர்ச்சியும் இந்நாள் கிலேசமுந் திருவுளம் அறியும்.
21. இறைவன் திருவாக்களித்து, உறுதியளித்தது			
6	295	4623	அன்பநீ பெறுகஉல வாதுநீ டூழிவிளை யாடுக அருட்ஜோதியாம் ஆட்சிதந் தோம்உனைக் கைவிடோம் கைவிடோம் ஆணைநம் ஆணைஎன்றே
6	295	4624	புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப் பொருளினை உணர்த்திஎல்லாம் ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ என்பிள்ளை ஆதலாலே இவ்வேலை புரிகஎன் றிட்டனம் மனத்தில்வே றெண்ணற்க என்றகுருவே
6	297	4627	எந்நாளும் உன்இச்சை வழிபெற்று வாழ்கயாம் எய்திநின் னுட்கலந்தேம் இனிஎந்த ஆற்றினும் பிரிவுறேம் உண்மைஈ தெம்மாணை என்றகுருவே
6	301	4643	புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான் புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத் தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
22. வேண்டிய பொருள் எல்லாம் ஒரு நாழிகையில் இறைவன் கிடைக்கச் செய்தது			
6	152	3841	நான்குறித்த பொருள்கள்எலாம் நாழிகைஒன் றதிலே கிடைக்கஎனக் களித்த..... உள்ளகத்தே அமர்ந்ததனிப் பதியே
23. பொன் செய்யும் ஆற்றல் பெற்றது			
6	175	3950	பொன்செயல் வகையை உணர்த்திஎன் உளத்தே பொருந்திய மருந்தையென் பொருளை வன்செயல் அகற்றி உலகெலாம் விளங்க வைத்தசன் மார்க்கசற் குரு
24. கங்கணம் அணிவிக்கப் பெற்றது			
6	152	3841	கடைப்படும்என் கரத்தில்ஒரு கங்கணமும் தரித்த ககனநடத் தரசேஎன் கருத்தும்அணிந் தருளே.
6	273	4513	ஐவர்செயும் தொழில்எனக்கே அளித்தாய்நின் அருளமுதென் கைவரச்செய் துண்ணுவித்தாய் கங்கணம்என் கரத்தணிந்தாய்
6	273	4514	முத்தொழிலோ ஐந்தொழிலும் முன்னிமகிழ்ந் தெனக்களித்தாய் புத்தமுதம் உண்ணுவித்தோர் பொன்னணிஎன் கரத்தணிந்தாய்
6	360	4985	சேய்க்கு நேரஎன் கையில்பொற் கங்கணம் திகழக் கட்டினை என்னைநின் செய்கையே.
6	394	5250	என்றன் கையிற்பொற் கங்கணம் கட்டு மருந்து....அதுவாகி மணிமன்றில் ஆடு மருந்து
6	452	5745	கையகத்தே ஒருபசும்பொற் கங்கணமும் புனைந்தார் கங்கணத்தின் தரத்தைஎன்னால் கண்டுரைக்கப் படுமோ
6	453	5748	சிற்சபையார் என்தனக்குத் திருமாலை கொடுத்தார் உருவாளர் அருவாகி ஒளியாகி வெளியாய் ஓங்குகின்றார்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	457	5771	அழியா வாழ்வுவந்த துன்தனக்கே ஏழுலகும் மதிக்கக் கருத்தலர்ந்து வாழியஎன் றாழிஅளித் தெனது கையினில்பொற் கங்கணமும் கட்டினர்காண் தோழி.
6	458	5773	நீ விளங்குகசன் மார்க்கநிலை விளக்குகஎன் றெனது கைஅகத்தே ஒருபசும்பொற் கங்கணமும் புனைந்தார்
25. ஆழி அளிக்கப் பெற்றது			
6	8	3259 /230	வாழிநீ டூழி வாழியென்று ஓங்குபேர் ஆழியை அளித்த அருட்பெருஞ் ஜோதி
6	50	3259 /1560	வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர் ஆழி ஒன்றளித்த அருட்பெருஞ் ஜோதி
6	263	4436	ஆழிஎன் றேதுதித் தேத்தப் புரிந்தனை அற்புதம்....நீ டூழிஅன் றேஎன்றும் சாகா வரமும் உவந்தளித்தாய்
6	293	4619	ஆழியோ டணிஅளித் துயிரெலாம் காத்துவிளை யாடென் றுரைத்தஅரசே
6	457	5771	ஏழுலகும் மதிக்கக் கருத்தலர்ந்து வாழியஎன் றாழிஅளித் தெனது கையினில்
26. செங்கோல் அளிக்கப் பெற்றது			
6	37	3259 /1134	தங்கோல் அளவது தந்து அருட்ஜோதிச் செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே
6	160	3878	ஆன்றதிரு வருட்செங்கோல் நினக்களித்தோம் நீயே ஆள்கஅருள் ஒளியால்என் றளித்ததனிச் சிவமே
6	284	4592	சாதல் ஒழித்தென்னைத் தானாக்கிப் - பூதலத்தில் ஐந்தொழில்செய் என்றே அருட்ஜோதிக் கோலளித்தான்
6	340	4861	அருட்பெருஞ் ஜோதித்தெள் ளாரமு தம்தந் தழிவற்றதோர் அருட்பெருஞ் ஜோதிச்செங் கோலும் கொடுத்தனன் அற்புதமே.
6	402	5318	சுத்த சமரச சத்திய சன்மார்க்க நீதிச் செங்கோல் அளித்தது பாரீர்
27. மணிமுடி சூட்டப்பெற்றது			
6	31	3259 / 953	புரைதவிர்த்து எனக்கே பொன்முடி சூட்டிச் சிரமுற நாட்டிய சிவமே சிவமே
6	37	3259 / 1130	ஆதியீறு அறியா அருளரசு ஆட்சியில் ஜோதிமா மகுடம் சூட்டிய தந்தையே
6	154	3852	மணிமுடியுஞ் சூட்டிப் பன்னுகின்ற தொழில்ஐந்துஞ் செய்திடவே பணித்துப் பண்புறஎன் அகம்புறமும் விளங்குகின்ற பதியே
6	154	3853	முடியும் தரித்தருளி ஐந்தொழில்செய் சதுர்அளித்த பதியே
6	154	3854	முடிசூட்டி ஐந்தொழில்செய் எனவே மொழிந்தருளி எனையாண்ட முதற்றனிப்பே ரொளியே
6	156	3858	முன்அரசும் பின்அரசும் நடுஅரசும் போற்ற..... எனக்குமுடி சூட்டி இன்பவடி வாக்கிஎன்றும் இலங்கவைத்த சிவமே என்அரசே
6	158	3868	மாணுறஎல் லாநலமும் கொடுத்துலகம் அறிய மணிமுடியும் சூட்டியஎன் வாழ்முதலாம் பதியே
6	160	3882	வையமிசைத் தனிஇருத்தி மணிமுடியும் சூட்டி வாழ்கஎன வாழ்த்தியஎன் வாழ்க்கைமுதற் பொருளே
6	161	3887	கதிர்முடியும் சூட்டிஎனைக் களித்தாண்ட பதியே.....மனம்வாக்குக் கடந்தபெரு வான்நடுவாம் ஒளியே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	162	3890	மணிமுடியும் சூட்டினனை வாழ்கனை வாழ்த்தித்.....நானும் தானும்ஒரு வடிவாகித் தழைத்தோங்கப் புரிந்தே அணவுறுபோர் அருட்சோதி அரசுகொடுத் தருளி
6	342	4869	தவிசிட் டொருமணி முடியும் நன்றுறச் சூட்டினை.....தாயின் தயவும்உன் தனிப்பெருந் தயவே.
6	360	4985	பொன் மாமுடி நன்று சூட்டினை.....மன்னருட் சத்தியாம் தாய்க்குக் காட்டிநல் தண்ணமு தூட்டி
6	375	5099	குற்றம் பலவும் தீர்த்தென் தனக்கோர் முடியும் சூட்டியே கோவே நீயும் என்னுள் கலந்து கொண்டாய் நாட்டி யே.
6	375	5103	தன்னோர் முடிஒன் றெனது முடியில் தரித்த ஜோதி யே..... எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த ஜோதி யே.
6	401	5313	என்னை ஜோதி மணிமுடி சூட்டிய ஜோதி சத்திய மாம்பெருஞ் ஜோதி
28. ஐந்தொழில் ஆற்றல் பெற்றது			
6	7	3259 / 167	சிந்தையில் துன்பொழி சிவம்பெறுக எனத்தொழில் ஐந்தையும் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
6	109	3627	செழித்துறுநற் பயன்எதுவோ திருவுளந்தான் இரங்கில் சிறுதுரும்போர் ஐந்தொழிலும் செய்திடல்சத் தியமே
6	152	3841	படைப்புமுதல் ஐந்தொழிலும் கொள்கனைக் குறித்தே பயந்தீர்த்தென் உள்ளகத்தே அமர்ந்ததனிப் பதியே
6	154	3852	பன்னுகின்ற தொழில்ஐந்துஞ் செய்திடவே பணித்துப் பண்புறஎன் அகம்புறமும் விளங்குகின்ற பதியே
6	155	3853	தவிசேற்றி முடியும் தரித்தருளி ஐந்தொழில்செய் சதுர்அளித்த பதியே
6	155	3854	ஐந்தொழில்செய் எனவே மொழிந்தருளி எனையாண்ட முதற்றனிப்பே ரொளியே
6	168	3916	ஐந்தொழில்நீ இயற்றென் றானை எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே.
6	207	4107	வகுக்குந் தொழிலே முதலைந்து நானே புரிகின் றேன்புரிதல் நானோ நீயோ நான்அறியேன்
6	265	4449	அணைஎன் றணைத்துக்கொண் டைந்தொழில் ஈந்த தருளுலகில் திணைஐந்து மாகியது உத்தர ஞான சிதம்பரமே.
6	272	4509	ஆக்கி அளித்தல்முத லாந்தொழில்ஓர் ஐந்தினையும் தேக்கி அமுதொருநீ செய்என்றான்
6	273	4510	சிருட்டிமுதல் ஐந்தொழில் நான் செய்யஎனக் கருள்புரிந்தாய்
6	273	4511	படைத்தல்முதல் ஐந்தொழில்செய் பணிஎனக்கே பணித்திட்டாய்
6	273	4512	அயன்முதலோர் ஐவர்செயும் தொழில்எனக்கே அளித்திட்டாய்
6	273	4513	ஐவர்செயும் தொழில்எனக்கே அளித்தாய்நின் அருளமுதென் கைவரச்செய் துண்ணுவித்தாய்
6	273	4514	முத்தொழிலோ ஐந்தொழிலும் முன்னிமகிழ்ந் தெனக்களித்தாய்
6	273	4515	ஐந்தொழில் நான் செயப்பணித்தாய் அருளமுதம் உணவளித்தாய்
6	273	4516	நான்முகன்நா ரணன்முதலாம் ஐவர்தொழில் நயந்தளித்தாய்
6	273	4517	தூயபெருந் தேவர்செயும் தொழில்புரியென் றமுதளித்தாய்
6	274	4518	சொல்வழங்கு தொழில்ஐந்தும் துணிந்துகொடுத் தமுதளித்தாய்
6	274	4519	அருளொளியால் ஐந்தொழிலும் செயப்பணித்தே அமுதளித்து....வைத்தழியாத் திருவளித்து வளர்க்கின்றாய்

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	274	4520	ஐவகைத் தொழிலும் என்பால் அளித்தனையது கொண்டிந்நாள்....மெய்வகை உரைத்தேன் இந்த விண்ணப்பம் காண்க நீயே.
6	275	4531	நீயே வருவித் திசைவுடனே தப்பாத தந்திரம் மந்திரம் யாவையும் தந்துலகில் வெப்பா னதுதவிர்த் தைந்தொழில் செய்ய விதித்தனையே.
6	284	4592	பூதலத்தில் ஐந்தொழில்செய் என்றே அருட்ஜோதிக் கோலளித்தான் வெந்தொழில்போய் நீங்க விரைந்து.
6	321	4738	திரணமும்ஓர் ஐந்தொழிலைச் செய்யஒளி வழங்கும் சித்திபுரம் எனஓங்கும் உத்தரசிற் சபையில் சரணம்எனக் களித்தெனையும் தானாக்க
6	324	4761	ஐந்தொழிலும் நீயேசெய் என்றெனக்கே நேர்ந்தளித்தான் என்னுடைய தாயே அனையான் தனித்து.
6	372	5076	சிருட்டி முதல்ஓர் ஐந்து தொழிலும் செய்யென் றென்னை யே செல்வப் பிள்ளை யாக்கி வளர்க்கின் றாய்
6	394	5248	அருட்பெருஞ் ஜோதி மருந்து - என்னை ஐந்தொழில் செய்தற் களித்த மருந்து
6	401	5309	என்னுள் நிறைந்தமெய் ஜோதி – என்னை ஈன்றைந் தொழில்செய்என் றேவிய ஜோதி.
3	402	5320	என்றும் விளங்கப் படைப்பாதி மெய்த்தொழில் நீதான் செய்யென்று தந்தது பாரீர்
29. எல்லாம் வல்ல சித்தி பெற்றது			
6	10	3259 / 297	எல்லாம் வல்லசித் தெனக்குஅளித்து எனக்குஉனை அல்லாது இலையெனும் அருட்பெருஞ் ஜோதி
6	132	3743	தேகம்எப் போதும் சிதையாத வண்ணம் செய்வித் தெலாம்வல்ல சித்தியும் தந்தே
6	173	3941	மருள்நெறிசேர் மலஉடம்பை அழியாத விமல வடிவாக்கி எல்லாஞ்செய் வல்லசித்தாம் பொருளைத்.....தானேவந் தளித்த தயாநிதியை
6	196	4047	இடுக்கியகைப் பிள்ளைஎன இருந்தசிறி யேனுக் கெல்லாஞ்செய் வல்லசித்தி ஈந்தபெருந் தகையே
6	208	4108	பொன்றா வடிவு கொடுத்தெல்லாம் புரிவல் லபந்தந் தருட்சோதி நிலைசார் இறைமை அளித்தனை
6	229	4252	என்னோ டாடவும் எல்லாம் வல்லசித் தியைப்பெற் றறிவுரு வாகிநான் உனையே பாடவும் பெற்றேன்
6	249	4363	ஒடிப்பற எல்லாம் வல்லதோர் சித்தாம் ஒளிஎனக் களித்தனன் என்றாள்
6	262	4428	மனமகிழ்ந் தேன்மன மாயையை நீக்கினன் மாநிலத்தே சினமொடும் காமமும் தீர்ந்தேன் எலாம்வல்ல சித்தும்பெற்றேன்
6	276	4537	தேட்டமெல் லாம்வல்ல சித்திபெற் றேன்இச் செகதலத்தே ஆட்டமெல் லாம்விளை யாடுகின் றேன்எனக் கார்சரியே.
6	354	4941	கனித்துணையாம் இன்னமுதம் தந்தெனக்கே எல்லாமும் வல்லசித்தி தன்னையுந்தந் துட்கலந்தான் றான்
6	375	5099	சிற்றம் பலத்தின் நடனம் காட்டிச் சிவத்தைக் காட்டி யே சிறப்பாய் எல்லாம் வல்ல சித்தித் திறத்தைக் காட்டி யே
6	375	5103	ஏகாக் கரப்பொற் பீடத் தென்னை ஏற்று ஜோதி யே எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த ஜோதி யே.
30. திருமாலாதியர் போற்றும் நிலை பெற்றது			
6	213	4145	அந்தாமரை யான்நெடு மாலவன் ஆதிவானோர் வந்தார்எனை வாழ்த்துகின் றார்இங்கு வாழ்கஎன்றே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	263	4436	வாழிஎன் றேஎனை மால்அயன் ஆதியர் வந்தருட்பேர் ஆழிஎன் றேதுதித் தேத்தப் புரிந்தனை அற்புதம்
6	265	4447	வான்செய்த தேவரெலாம் வந்தேவல் - தான்செய்து தம்பலம்என் றேமதிக்கத் தான்வந்தென் னுட்கலந்தான்
31. மூவகை சித்தி (கரும, யோக, ஞான சித்திகள்)			
6	9	3259 / 239	மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும் ஆவகை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
6	9	3259 / 240	கரும சித்திகளின் கலைபல கோடியும் அரசுற எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
6	9	3259 / 241	யோகசித்திகள் வகை உறுபல கோடியும் ஆகஎன்று எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
6	9	3259 / 242	ஞானசித் தியின்வகை நல்விரிவு அனைத்தும் ஆனியின்று எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
6	224	4221	தேடாக் கரும சித்திஎலாம் திகழத் தயவால் தெரிவித்த கோடாக் கொடியே சிவதருமக் கொடியே அடியேற் கருளுகவே
6	224	4222	கணங்கொள் யோக சித்திஎலாம் காட்டுங் கொடியே கலங்கா
6	224	4223	வலங்கொள் ஞான சித்திஎலாம் வயங்க விளங்க மணிமன்றில் குலங்கொள் கொடியே
32 நீனது செயல் எனது செயல்			
6	175	3950	என்செயல் அனைத்தும் தன்செயல் ஆக்கி என்னைவாழ் விக்கின்ற பதியை
6	37	3259 / 1148	தன்இயல் என்இயல் தன்செயல் என்செயல் என்ன இயற்றிய என்தனித் தந்தையே
33 நின்வார்த்தை என்வார்த்தை			
6	37	3259 / 1150	தன்உரு என் உரு தன்உரை என்உரை என்ன இயற்றிய என்தனித் தந்தையே
6	132	3741	என்மனனே நீதான் மதுவிழுமோர் ஈப்போலே மயங்காதே கயங்கி வாடாதே....எனக்குள் புணர்ந்துரைத்த திருவார்த்தை பொன்வார்த்தை இதுவே.
6	176	3951	சொன்னிகர் எனஎன் சொல்எலாங் கொண்டே தோளுறப் புனைந்தமெய்த் துணையை
6	296	4626	நீடுலகில் உற்றவர்கள் நன்குற உரைக்கின்ற நின்வார்த்தை யாவும்நமது நீள்வார்த்தை யாகும்இது உண்மைமக னே
6	323	4756	நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்சொல் வார்த்தைஅன்றி நான்உரைக்கும் வார்த்தைஅன்று நாட்டீர்
6	330	4804	நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்றன் வார்த்தை நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே
6	333	4814	வாய்உரைத்த வார்த்தைஎன்றன் வார்த்தைகள்என் கின்றார்இம் மனிதர் அந்தோ..... நீஉரைத்த திருவார்த்தை எனஅறியார் இவர்அறிவின் இகழ்ச்சி என்னே.
6	333	4815	அறந்தழைய உரைக்கின்ற வார்த்தைகள்என் வார்த்தைகள்என் றறைகின் றாரால்..... சிறந்ததிரு வார்த்தைஎனத் தெரிந்திலர்இம் மனிதர்மதித் திறமை என்னே.
34 தேக சித்தி			
6	74	3389	திரைந்தஎன் உடம்பைத் திரு உடம் பாக்கித் திகழ்வித்த சித்தனே சிவனே
6	84	3438	இறந்திறந்தே இளைத்தவெலாம் போதும்இந்த உடம்பே இயற்கைஉடம் பாகஅருள்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	162	3890	தணவிலிலா தென்னுளத்தே தான்கலந்து நானும் தானும்ஒரு வடிவாகித் தழைத்தோங்கப் புரிந்தே
6	162	3891	நிலையுறவே தானும்அடி யேனும்ஒரு வடிவாய் நிறையநிறை வித்துயர்ந்த நிலையதன்மேல் அமர்த்தி
6	196	4045	இறவாத வரமும் எல்லாஞ்செய் வல்லசித்தின் இயற்கையுந்தந் தனையே.
6	361	4988	வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும் மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
35. பொன் உடம்பு			
6	48	3259 / 1489	பொன்னுடம்பு எனக்குப் பொருந்திடும் பொருட்டா என்னுளம் கலந்த என்தனி அன்பே
6	74	3389	திரைந்தஎன் உடம்பைத் திரு உடம் பாக்கித் திகழ்வித்த சித்தனே சிவனே
6	143	3798	திரைந்தஉடல் விரைந்துடனே பொன்உடம்பே ஆகித் திகழ்ந்தழியா தோங்கஅருள் சித்தேமெய்ச் சத்தே
6	154	3852	மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம் வடிவும் வான்வடிவும் கொடுத்தெனக்கு
6	190	4018	என்புரி அழியாப் பொன்புரி ஆக்கி என்னைஆண் டருளிய நினையே.
6	275	4526	வரைந்து ஞான மணம்பொங்க மணிமன் றரசைக் கண்டுகொண்டேன் திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும் செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே.
6	281	4569	பூட்டும் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே.
6	281	4570	புடையின் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே.
6	282	4576	சேதித்தென் உள்ளம் திருக்கோயி லாக்கொண்டு சித்திஎலாம் போதித் துடம்பையும் பொன்னுடம் பாக்கி
6	282	4579	என்றழி யாதசெழும் பொன்னோர் வடிவும் அளித்தென் னுயிரில் புணர்ந்தனனே.
6	284	4596	ஏக்கமெலாம் நீங்கினேன் எண்ணம் நிரம்பினேன் பொன்வடிவம் தாங்கினேன் சத்தியமாத் தான்.
6	419	5472	பொன்னடி தந்தான்என்று ஊதூது சங்கே பொன்னம் பலத்தான்என்று ஊதூது சங்கே
6	419	5476	பொன்உருத் தந்தான்என்று ஊதூது சங்கே பொற்சபை அப்பன்என்று ஊதூது சங்கே
6	464	5805	மாணாகம் பொன்ஆகம் ஆகவரம் பெற்றேன் வள்ளல்அருள் நோக்கடைந்தேன் கண்டாய்என்தோழி.
6	465	5808	தான்பதித்த பொன்வடிவம் தனைஅடைந்து களித்தேன் சாற்றும்அகப் புணர்ச்சியின்ஆம் ஏற்றம் உரைப் பதுவே.
36. ஒளி உடம்பு			
6	209	4115	ஊன்செய்த தேகம் ஒளிவடி வாகநின் றோங்குகின்றேன் தேன்செய்த தெள்ளமு துண்டேன்கண் டேன்மெய்த் திருநிலையே.
6	234	4289	கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி உற்றேன்எக் காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம் பெற்றேன்
6	280	4563	உளாங்கொள் இவ்வடி விம்மையே மந்திர ஒளிவடி வாமாறே.
6	282	4580	மெய்ச்சோதி ஈந்தெனை மேனிலைக் கேற்றி விரைந்துடம்பை இச்சோதி ஆக்கிஅழியா நலந்தந்த விச்சையையே.
6	283	4587	ஊன உடம்பே ஒளிஉடம்பாய் ஓங்கிநிற்க ஞான அமுதெனக்கு நல்கியதே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	354	4946	ஊன்செய்த தேகம் ஒளிவடி வாகநின் றோங்குகின்றேன் கோன்செய்த விச்சை குணிக்கவல் லார்எவர் கூறுமினே.
37. அழியா உடம்பு			
6	132	3743	தேகம்எப் போதும் சிதையாத வண்ணம் செய்வித் தெலாம்வல்ல சித்தியும் தந்தே
6	143	3798	திரைந்தஉடல் விரைந்துடனே பொன்உடம்பே ஆகித் திகழ்ந்தழியா தோங்கஅருள் சித்தேமெய்ச் சத்தே
6	153	3847	கூகாஎன் றெனைக்கூடி எடுக்காதே என்றும் குலையாத வடிவெனக்கே கொடுத்ததனி அமுதே
6	173	3941	மருள்நெறிசேர் மலஉடம்பை அழியாத விமல வடிவாக்கி எல்லாஞ்செய் வல்லசித்தாம்
6	183	3988	இறைவன் தன்னை இம்மையில்என் தனக்கழியாத் திருவடிவம் தந்தானை
6	204	4108	பொன்றா வடிவு கொடுத்தெல்லாம் புரிவல் லபந்தந் தருட்சோதி நிலைசார் இறைமை அளித்தனை
6	209	4113	மெய்த் தவயோக ஆற்றை அடைந்தோர் எல்லோரும் அச்சோ என்றே அதிசயிப்ப அமுதுண் டழியாத் திருஉருவம் அடைந்தேன்
6	190	4018	என்புரி அழியாப் பொன்புரி ஆக்கி என்னைஆண் டருளிய நினையே.
6	228	4241	கொண்டேன் அழியாத் திருஉருவம் அச்சோஎஞ் ஞான்றும் அழியாச்சிற் றம்பலத்தே யான்.
6	231	4268	மருள்வடிவே எஞ்ஞான்றும் எவ்விடத்தும் எதனாலு மாய்வி லாத அருள்வடிவாய் இம்மையிலே அடைந்திடப்பெற் றாடுகின்றேன் அந்தோ அந்தோ.
6	248	4361	தெள்ளமு தருந்தி அழிவிலா உடம்பும் சித்தியும் பெற்றனன் என்றாள்
6	249	4364	ஊழிதோ றூழி உலவினும் உலவா உடம்பெனக் களித்தனன்
6	270	4490	அருளா ரமுதம் அளித்திங்கே உலந்த உடம்பை அழியாத உடம்பாப் புரிந்தென் உயிரினுளே கலந்த பதியே
6	280	4562	பவங்க னிந்தஇவ் வடிவமே அழிவுறாப் பதிவடி வாமாறே.
6	280	4564	துஞ்சும் இவ்வுடல் அழிவுறா தோங்குமெய்ச் சுகவடி வாமாறே.
6	280	4566	அலங்கும் இவ்வுடல் எற்றையும் அழிவுறா அருள்வடி வாமாறே.
6	281	4567	பிறந்த இவ்வுடல் என்றும்இங் கழிவுறாப் பெருமைபெற் றிடுமாறே.
6	281	4568	தயங்கும் இவ்வுடல் எற்றையும் அழிவுறாத் தனிவடி வாமாறே.
6	281	4569	பூட்டும் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே.
6	281	4570	புடையின் இவ்வுடல் எற்றையும் அழிவுறாப் பொன்வடி வாமாறே.
6	281	4571	செய்யும் இவ்வுடல் என்றுமிங் கழிவுறாச் சிவவடி வாமாறே.
6	287	4597	இன்புருவம் தாங்கினேன் சாகாத் தனிவடிவம் பெற்றொளியால் ஓங்கினேன் உண்மை உரை.
6	354	4941	தனித்துணையாய் என்றன்னைத் தாங்கிக்கொண் டென்றன் மனித்த உடம்பழியா வாறே
6	361	4988	கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்க ளாலே வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே
6	362	4992	ஆக்கமும் அருளும் அறிவும்மெய் அன்பும் அழிவுறா உடம்பும்மெய் இன்ப ஊக்கமும் எனையே

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	372	5074	மலமும் மாயைக் குலமும் வினையும் முழுதும் வெந்த தே.....இறவா தென்றும் ஓங்கும் வடிவம் எனக்கு வந்த தே.
6	381	5166	ஊக மிலேன்பெற்ற தேகம் அழியாத யோகம் கொடுத்தீரே வாரீர்
6	466	5813	தூயஒளி பெற்றழியா தோங்குவடி வானேன் சுகமயமாம் அகப்புணர்ச்சி சொல்லுவதெப் படியோ.
6	467	5817	இன்னமுதம் அளித்தென்னை ஏழுலகும் போற்ற மனித்தஉடம் பிதைஅழியா வாய்மைஉடம் பாக்கி மன்னியசித் தெல்லாம்செய் வல்லபமும் கொடுத்தே
38. சுத்த தேகம்			
6	214	4152	மெய்யேதிரு அம்பலத் தாடல்செய் வித்தகனே எய்யேன்இனி வெம்மலக் கூட்டில் இருந்தென்உள்ளம் நையேன்சுத்த நல்லுடம் பெய்தினன் நானிலத்தே.
39. பிரணவ தேகம்			
6	7	3259 / 169	ஓமயத் திருவுரு உவப்புடன் அளித்துஎனக்கு ஆமயத் தடைதவிர் அருட்பெருஞ் ஜோதி
6	154	3852	மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம் வடிவும் வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டிப்
6	280	4563	விளம்பி நின்றதோர் விண்ணப்பம் திருச்செவி வியந்தருள் புரிந்தாயே உளங்கொள் இவ்வடி விம்மையே மந்திர ஒளிவடி வாமாறே.
5	385	5205	ஓமத்தி லேநடுச் சாமத்தி லேஎனை ஓமத்தன் ஆக்கினீர் வாரீர்
40. ஞான தேகம்			
6	323	4755	சுத்தவடிவும் சுகவடிவாம் ஓங்கார நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனும்ஓர் ஞான வடிவுமிங்கே நான்பெற்றேன்
41. சுத்தமாதி தேகம் மூன்று			
6	9	3259 / 237	முத்திறல் வடிவமும் முன்னிஆங்கு எய்துறும் அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
6	74	3390	நரைதிரை முதலாம் துவந்துவம் தவிர்த்துச் சுத்தமா தியமுச் சுகவடி வம்பெறும் பேறும்
6	296	4627	என்றும்இற வாநிலையில் இன்பஅனு பவனாகி இயல்சுத்த மாதிமூன்றும் எந்நாளும் உன்இச்சை வழிபெற்று வாழ்க
6	323	4755	சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனும்ஓர் ஞான வடிவுமிங்கே நான்பெற்றேன்
6	325	4765	நானே அழியா வடிவம் அவைமூன்றும் பெற்றேன்
42. நித்திய தேகம்			
6	355	4950	பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான் சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினால் நித்திய மாகியே நிகழும் என்பது சத்தியம் சத்தியம் சகத்து ளீர்களே.
43. நரை திரை பிணி மூப்பு சாக்காடு அற்றது			
6	74	3389	திரைந்தஎன் உடம்பைத் திரு உடம் பாக்கித் திகழ்வித்த சித்தனே சிவனே
6	74	3390	நரைதிரை முதலாம் துவந்துவம் தவிர்த்துச் சுத்தமா தியமுச் சுகவடி வம்பெறும் பேறும்
6	143	3798	திரைந்தஉடல் விரைந்துடனே பொன்உடம்பே ஆகித் திகழ்ந்தழியா தோங்கஅருள் சித்தேமெய்ச் சத்தே
6	233	4284	திரையற்ற காட்சி அளித்தின் னமுகத் தெளிவருள நரையற்று மூப்பற் றிறப்பற் றிருக்கவும் நல்கியதே.
6	359	4976	திரையும் அற்றது நரையும் அற்றது திரையும் அற்றுவி ழுந்ததே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

44. இறவா வரம்			
1	30	402	மண்ணினிடைக் கொன்செய்கை கொண்டகொடுங் கூற்றன் குறுகிலதற் கென்செய்வோ மென்றெண்ணி எய்க்கின்றேன்
6	5	3259 / 125	என்னையும் பணிகொண்டு இறவா வரம்அளித்து அன்னையில் உவந்த அருட்பெருஞ் ஜோதி
6	5	3259 / 158	இறவா வரம் அளித்து என்னைமேல் ஏற்றிய அறவாழி யாம்தனி அருட்பெருஞ் ஜோதி
6	36	3259 / 1105	இன்னருள் அமுதளித்து இறவாத் திறல்புரிந்து என்னை வளர்த்திடும் இன்புடைத் தாயே
6	196	4045	இறவாத வரமும் எல்லாஞ்செய் வல்லசித்தின் இயற்கையுந்தந் தனையே.
6	275	4530	பெற்றேன் என்றும் இறவாமை பேதம் தவிர்ந்தே இறைவன்எனை உற்றே கலந்தான்
6	293	4620	ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங் கிசைந்தெடுத் துதவஎன்றும் இறவாத பெருநிலையில் இணைசொலா இன்புற்றிருக்க எனைவைத்தகுருவே
6	296	4627	மகிழ்ந்துன்உள்ளே இந்நாள் தொடுத்துநீ எண்ணிய படிக்கே இயற்றிவிளை யாடிமகிழ்க என்றும்இற வாநிலையில் இன்பஅனு பவனாகி
6	300	4639	எத்துவந் தனைகளும் நீக்கிமெய்ந் நிலைக்கே ஏற்றிநான் இறவாத இயல்அளித் தருளால்
6	302	4649	எமன்எனும் அவன் இனி இலைஇலை மகனே எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே
6	302	4650	என்மார்க்கம் எனக்களித் தெனையுமேல் ஏற்றி இறவாத பெருநலம் ஈந்தமெய்ப் பொருளே அந்த எழுத்துருவிற்கு மாற்றினால் தமிழுக்கு மாறும்
6	303	4655	இகபரம் அளித்தே இறவாத வரமுந்தந் தருளிய ஒளியே
6	340	4858	இந்நாள் அடைந்தின்பம் எய்திட ஓங்கினன் எண்ணியவா றெந்நாளும் இவ்வுடம் பேஇற வாத இயற்கைபெற்றேன்
6	362	4994	சாவா வரம்தந்து வாழ்வாயோ பந்தே சாவாமல் என்னொடு வீழ்வாயோ பந்தே.
6	392	5237	இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன் வசையாதும் இல்லாத மேற்றிசை நோக்கி வந்தேன்என் தோழிநீ வாழி
6	392	5238	இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன் தென்பாலே நோக்கினேன் சித்தாடு கின்ற திருநாள்
6	411	5405	எண்ணிய வாறே எனக்கருள் பாதம் இறவா நிலையில் இருத்திய பாதம்
6	414	5426	இத்தா ரணிமுதல் வானும் உடுத்தது இறவா வரந்தான் எனக்குக் கொடுத்தது
6	419	5479	இறவாமை ஈந்தான்என்று ஊதூது சங்கே எண்ணம் பலித்ததென்று ஊதூது சங்கே
6	464	5807	பெரியசிவ அனுபவத்தால் சமரசசன் மார்க்கம் பெற்றேன்இங் கிறவாமை உற்றேன்காண் தோழி.
45. சாகாவரம்			
6	8	3259 / 209	சாவா நிலைஇது தந்தனம் உனக்கே ஆவா எனஅருள் அருட்பெருஞ் ஜோதி
6	51	3259 /1568	சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச் சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்
2	319	1668	வாழ்த்து மெய் அன்பரை மாநிலத்தே இறவா வகை ஆட்கொண்டருளிய ஈசனே.....நான் பிறவா நெறி தந்தருள் என்பதென் பேசி டாயே.
4	435	2457	சாகாத நிலைகாட்டிச் சகசநிலை காட்டி வந்தோடு நிகர்மனம் போய்க் கரைந்தஇடங் காட்டி மகிழ்வித்தாய்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

4	475	2627	சிவாயநம எனப்புகலும் தெளிவுடையன் ஆக்கிச் சாவாத வரங்கொடுத்துத் தனக்கடிமை பணித்தான்
6	77	3401	சாகா வரத்தை வேண்டினேன் வந்துநிற் கின்றேன் வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
6	79	3410	உள்ளம் தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றும் தடைபடாச் சித்திகள் எல்லாம் அளித்தனை எனக்கே
6	137	3769	சாகாத வரமும் எதுநினைத்தேன் நினைத்தாங்கே அதுபுரியும் திறமும் இன்பஅனு பவநிலையும் எனக்கருளு வதற்கே
6	185	3998	சாகாத வரம்எனக்கே தந்ததனித் தெய்வம் சன்மார்க்க சபையில்எனைத் தனிக்கவைத்த தெய்வம்
6	195	4042	சாவாத வரம்எனக்குத் தந்தபெருந் தகையே தயாநிதியே சிற்சபையில் தனித்தபெரும் பதியே
6	207	4107	எல்லாச் சுதந்தரமும் தந்த கருணை வானே மதிக்கச் சாகாத வானாய் எல்லாம் வல்லசித்தே
6	208	4111	உடம்பு நோவா துளமடக்கா தோகோ நோன்பு கும்பிட்டே சாவா வரமும் சித்திஎலாம் தழைத்த நிலையும் சன்மார்க்க சங்க மதிப்பும் பெற்றேன்
6	409	4114	வரைசேர்த் தருளிச் சித்தியெலாம் வழங்கிச் சாகா வரங்கொடுத்து வலிந்தென் உளத்தில் அமர்ந்துயிரில் கலந்து மகிழ்ந்து வாழ்கின்றாய்
6	213	4144	சாகாவரம் தந்த தயாநிதித் தந்தையேநின் மாகாதலன் ஆகினன்
6	220	4193	தந்தையைக் கண்டேன்நான் சாகா வரம்பெற்றேன் சிந்தை களித்தேன்என்று உந்தீபற
6	230	4253	சாகா வரமும்என் தனக்கே வழங்கிடப் பெற்றனன் மரண பயத்தைவிட் டொழித்தேன்
6	227	4238	ஞாலமிசைச் சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேல்நடிக்கும் ஏகா நினக்கடிமை ஏய்ந்து.
6	233	4280	எஞ்ஞான்றும் சாவா வரம் எனைப்போல் சார்ந்தவரும் – தேவாநின் பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில் யார்உளார்நீ சற்றே அறை.
6	263	4436	நீ நிழிஅன் றேஎன்றும் சாகா வரமும் உவந்தளித்தாய் வாழிமன் றோங்கும் அருட்பெருஞ் ஜோதிநின் மன்னருளே.
6	270	4492	சாகா வரந்தந் தாட்கொண்ட கண்ணே மணியே நின்தனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே.
6	271	4497	சாதல் எனும்ஓர் சங்கடத்தைத் தவிர்த்தென் உயிரில் தான்கலந்த காதல் அரசே
6	276	4539	எல் லாம்விரைந் தேதவிர்த்துத் தனையான் புணர்ந்திடச் சாகா வரத்தையும் தந்தனனே.
6	276	4541	இன்றுகண் டேன்என்றும் சாகா வரத்தை எனக்கருள மன்றுகண் டார்க்கிந்த வாழ்வுள தென்று மகிழ்ந்தனனே.
6	284	4592	சாதல் ஒழித்தென்னைத் தானாக்கிப் – பூதலத்தில் ஐந்தொழில்செய் என்றே அருட்ஜோதிக் கோலளித்தான்
6	304	4659	ஏகாஅ னேகாஎன் றேத்திடு மறைக்கே எட்டாத நிலையேநான் எட்டிய மலையே..... சாகாத வரந்தந்திங் கெனைக்காத்த அரசே
6	324	4762	கூகா எனஅடுத்தோர் கூடி அழாதவண்ணம் சாகா வரம்எனக்கே தந்திட்டான்
6	356	4961	செத்தார் எழுந்தனர் சுத்தசன் மார்க்கம் சிறந்ததுநான்.....சித்தாடு கின்றனன் சாகா வரமும் சிறக்கப்பெற்றேன்
6	390	5229	சன்மார்க்க நெறிவைத்தீர் ஆடவா ரீர் சாகாத வரந்தந்தீர் ஆடவா ரீர்
6	392	5240	தப்பாலே சகத்தவர் சாவே துணிந்தார் தாமுளம் நாணநான் சாதலைத் தவிர்த்தே எப்பாலும் எக்காலும் இருத்தலே பெற்றேன்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	396	5272	என்றும் சாகாத நல்வரம் தந்த மருந்து பொன்னடி ஈந்த மருந்து
6	401	5312	சாகாத வரந்தந்த ஜோதி - என்னைத் தானாக்கிக் கொண்டதோர் சத்திய ஜோதி.
6	411	5400	சாகா வரந்தந்த தாரகப் பாதம் சச்சிதா னந்த சதோதய பாதம்
			46. சாகாக் கல்வி
2அ	400	2190	கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டுன் அற்புதச்சிற் றம்பலத்தி லன் புவைத்தேன் ஐயாவே.
4	434	2454	கற்கின்றேன் சாகாத கல்விநிலை காணேன்.....வருநெறியில் என்னைவலிந் தாட்கொண்ட மணியே
6	3	3259 / 51	சாகாக் கலைநிலை தழைத்திடு வெளிஎனும் ஆகாயத் தொளிர் அருட்பெருஞ் ஜோதி
6	31	3259 / 953	கல்வியும் சாகாக் கல்வியும் அழியாச் செல்வமும் அளித்த சிவமே சிவமே
6	35	3259 /1065	சாகாக் கல்வியின் தரமெலாம் கற்பித்து ஏகாக் கரப்பொருள் ஈந்தசற் குருவே
6	51	3259 /1565	சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச் சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்
6	132	3744	சாகாத கல்வியைத் தந்தெனக் குள்ளே.....தித்தித்துச் சித்தம் சிவமய மாக்கி
6	136	3763	சாகாத கல்வியிலே தலைகாட்டிக் கொடுத்தீர் தடையறியாக் கால்காட்டித் தரம்பெறவும் அளித்தீர்.....போகாத புனலாலே சுத்தஉடம் பினராம்
6	208	4108	கருணை மயமாய் விளங்குசிதா காய நடுவில் இயற்கையுண்மைத்.....சாகாக் கல்வி பயிற்றிஎன்னுட் சார்ந்து விளங்கும் சற்குருவே
6	270	4487	நீதிப் பொதுவில் நிருத்தமிடும் மலையைக் காட்டி அதனடியில் வயங்க இருத்திச் சாகாத கலையைக் கொடுத்தாய்
6	287	4603	சாகாத வித்தைக் கிலக்கண இலக்கியம் தானாய்இ ருந்தபரமே
6	495	4625	சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம் தான்என அறிந்தஅறிவே தகும்அறிவு
6	325	4769	சாகாத கல்வித் தரம்அறிதல் வேண்டுமென்றும்.....சாகாத் தலைஅறிதல் வேண்டும் தனிஅருளால் உண்மை நிலைஅடைதல் வேண்டும் நிலத்து.
6	375	5103	சாகாக் கல்வி எனக்குப் பயிற்றித் தந்த ஜோதி யே....எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த ஜோதி யே.
6	365	5019	ஞான அமுதம் அளித்தாய் நானும் உண்டு துன்ன வே சாகாக் கலையை எனக்குப் பயிற்றித் தந்த தயவை யே
6	367	5034	அமுதும் அளித்தாய் யார்செய் வார்கள் இந்த நன்றி யே.....செய்தாய் மேலும் தெரித்தாய் சாகாக் கல்வி கற்க வே.
6	375	5087	அச்சம் தீர்த்திங் கென்னை ஆட்கொண் டருளும் அமுத னே.....என்றும் இறவாக் கல்வி அடியேற் கீய்ந்த குரவ னே.
6	383	5184	ஏகாத கல்விதான் சாகாத கல்வியென் றேகாத லாற்சொன்னீர் வாரீர் வேகாத காலினீர் வாரீர்.
6	392	5239	சுத்தசன் மார்க்கத்தில் சாகா வித்தையைக் கற்றனன் உத்தரம் எனுமோர் பொதுவளர் திசைநோக்கி வந்தனன்
6	421	5492	சாகாத் தலைஅறிந்து சின்னம் பிடி சாகாத கல்விகற்றுச் சின்னம் பிடி.
6	463	5800	மதம்எனும்பேய் பிடித்தாட்ட ஆடுகின்றோர் எல்லாம்.....சதம்எனவே இருக்கின்றார் படுவதறிந் திலரே சாகாத கல்விகற்கும் தரம்இவர்க்கும் உளதோ

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	463	5801	இம்மதவா திகள்தாம் கவ்வைபெறு குருடர்கரி கண்டகதை போலே கதைக்கின்றார் சாகாத கல்விநிலை அறியார்
47. செத்தார் எழுதல்			
6	43	3259 /1325	இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும் சிறந்தவல் லபம்உறு திருவருள் மருந்தே
6	414	5426	செத்தார் எழுகின்ற திருநாள் அடுத்தது சிவநெறி ஒன்றே எங்கும்தலை எடுத்தது
6	421	5495	செத்தார் எழுவார்என்று சின்னம் பிடி இத்தா ரணியில்என்று சின்னம் பிடி
6	356	4961	செத்தார் எழுந்தனர் சுத்தசன் மார்க்கம் சிறந்ததுநான் சித்தாடு கின்றனன் சாகா வரமும் சிறக்கப்பெற்றேன்
6	326	4781	இந்நாளே கண்டீர் இறந்தார் எழுகின்ற நன்னாள்என் வார்த்தைதனை நம்புமினோ
6	336	4830	பிணங்கள் எலாம்உயிர் பெற்றெழுந் தோங்கின இணங்க அருட்பெருஞ் ஜோதியார் எய்தவே.
6	330	4802	துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம் தோன்றஎழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடும்
6	333	4815	இறந்தவர்கள் பலரும்இங்கே எழுகின்ற தருணம்இதே என்று வாய்மை அறந்தழைய உரைக்கின்ற வார்த்தைகள்
6	334	4822	பரன்அளிக்கும் தேகம்இது சுடுவதப ராதம்எனப் பகர்கின் றேன்நீர்.....செத்தவர்கள் பற்பலரும் சித்த சாமி
	335	4828	விடம்பெற்ற உயிர்எலாம் விடம்அற்று வாழ்ந்தன.....திடம்பெற்றே எழுகின்றார் செத்தவர் தினந்தினம்
	467	5818	நீஉரைத்த சொல்அனைத்தும் பலிக்கும் செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்துமகிழ்ந் திருப்பார்
48. செத்தாரை எழுப்புதல்			
6	8	3259 / 231	மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்துஇதை ஆய்ந்திடு என்றுரைத்த அருட்பெருஞ் ஜோதி
	28	3259 / 865	இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில் அறந்தலை அளித்த அருட்பெருஞ் ஜோதி
	29	3259 / 872	செத்தவர் எழுகெனச் செப்பிஆங் கெழுப்பிட அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி
	110	3632	சித்திஎலாம் வல்லசிவ சித்தன்உளம் கலந்தான் செத்தாரை எழுப்புகின்ற திருநாள்கள் அடுத்த இத்தினமே
	185	3997	இறந்தவர்கள் அனைவரையும் எழுப்புகின்ற தெய்வம் எச்சமயத் தெய்வமுந்தான் எனநிறைந்த தெய்வம்
	186	3999	தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்....மாண்டாரை எழுப்புகின்ற மருந்தான தெய்வம்
	229	4253	உயத்திடம் அறியா திறந்தவர் தமைஇவ் வுலகிலே உயிர்பெற்று மீள நயத்தொடு வருவித் திடும்
	232	4275	செத்தார்கள் எல்லாம் திரும்ப எழுந்துமனம் ஒத்தாராய் வாழ்க உவந்து.
	232	4276	செத்தார் எழுக சிவமே பொருள்என்றே இத்தா ரணியில் இருந்தொளிர்க
	232	4277	செத்தவர்கள் எல்லாம் திரும்ப எழுந்துவரச் சித்தம்வைத்துச் செய்கின்ற சித்தியனே
	282	4577	செத்தார் எழுகெனச் சிந்தைசெய் முன்னஞ் சிரித்தெழவே இத்தா ரணியில் அருட்பெருஞ் ஜோதி எனக்களித்தாய்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

	301	4646	துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே சூழ்ந்தசன் மார்க்கத்தில் செலுத்துக சுகமே
	312	4699	எவ்வுயிரும் எவ்வெவரும் ஏத்திமகிழ்ந் திடவே.....செத்தாரை எழுப்புதல்நாம் திண்ணம்உணர் மனனே.
	325	4775	செத்தாரை எல்லாம் திரும்ப எழுப்புதல்இங் கெத்தால் முடியுமெனில் எம்மவரே – சித்தாம் அருட்பெருஞ் ஜோதி அதனால் முடியும்
	325	4776	இவ்வுலகில் செத்தாரை எல்லாம் எழுகஎனில் எவ்வுலகும் போற்ற எழுந்திருப்பார்
	325	4777	இவ்வுலகில் செத்தாரை ஊன்புரிந்து மீள உயிர்ப்பித்தல்.....மேற்போர்த்த கம்பலத்தால் ஆகும் களித்து.
	325	4778	இறந்தார் எழுதல்மிக அன்னே அதிசயமென் றாடுகின்றார்.....திருநோக்கம் பெற்றார்க் குருவம் பலத்தேஎன்றுன்.
	326	4781	இறந்தார் எழுகின்ற நன்னாள்என் வார்த்தைதனை நம்புமினோ – இந்நாள் அருட்பெருஞ் ஜோதி அடைகின்ற நாள்
	328	4793	செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய.....வருகின்ற தருணம்இது வரம்பெறலாம் நீவிர்
	328	4794	செத்தவரை எழுப்புகின்ற திகழ்தருணம் உலகீர்.....அப்பன்அருள் பெறவே ஆசைஉண்டேல் வம்மின்இங்கே
	352	4925	செத்தவர்கள் எல்லாரும் திரும்பவரு கென்று நினைத்தவுடன் எதிர்வந்து நிற்பர்கண்டாய்
	393	5242	சிவமே பொருள்என் றறிவால் அறிந்தேன் செத்தாரை மீட்கின்ற திண்மையைப் பெற்றேன்
	393	5243	எஞ்சாத அருளாலே யான்பெற்றுக் கொண்டேன் இறந்தாரை எல்லாம் எழுப்புதல் வல்லேன்
	396	5266	இங்கே இறந்தாரை எல்லாம் எழுப்பு மருந்து துன்னுமெய்ச் ஜோதி மருந்து
	404	5336	செத்தாரை மீட்பது பாரீர் – திருச்சிற்றம் பலத்தே திருநட ஜோதி.
	400	5300	இங்கே இறந்தாரை எல்லாம் எழுப்புமோர் ஜோதி அன்னைக்கு மிக்கருட் ஜோதி
	422	5501	துரியமலை மேல்உளதோர் ஜோதிவள நாடு.....உயி ரோடு செத்தவர் எழுவார்என்று கைத்தாளம் போடு.
	422	5502	எல்லாம்செய் வல்லசித்தர் தம்மைஉறும் போது இறந்தார் எழுவாரென்று புறந்தாரை ஊது.
49. மரணமில்லா பெருவாழ்வு			
4	443	2493	மரணமற்று வாழ்கஎனத் திருவார்த்தை அளித்தாய் மன்றுடையாய் நின்அருளின் வண்மைஎவர்க் குளதே.
6	327	4786	நாம் வம்மின்உல கியலீர் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
6	331	4808	மரணமிலாப் பெருவாழ்வில் வாழவம்மின் இங்கே.....சுத்தசிவ சன்மார்க்க நிலையில்.....சிற் சபைஅமுதம் அருந்துமின்அன் புடனே
6	391	5236	மரணமில் லாவரம் நான்பெற்றுக் கொண்டேன் சூழியற் செஞ்சுடர்த் தோற்றுறு கீழ்பால் தூய்த்திசை நோக்கினேன்
6	392	5241	மரணத்தை விடுவித்து விட்டேன் விச்சைஎ லாம்கற்றென் இச்சையின் வண்ணம்
6	423	5507	அருளாட்சி பெற்றேன்என்று அறையப்பா முரசு.....மரணந்த விர்ந்தேன்என்று அறையப்பா முரசு.
50. நவந்தரு பேதம்			
1	33	43	நீரிடத்தில் தண்மைநிக ராதென்றும் சாந்தம் பழுத்துயர்ந்த ஒண்மையுடன் ஒன்றை உணர்ந்தவராய்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	33	44	வெண்மையிலா ஒன்றும் அறிவின் உதயாதி ஈறளவும் என்றும் இரண்டென்ப தில்லவராய்
1	34	45	மன்றவொளிர் அம்மூன்றி னுள்ளே அடுக்கிவரும் ஒன்றகன்ற மும்மூன்றின் மூன்றும் முனிந்தவராய்த்
1	34	46	தம்மூன்றி வீடாது நின்றும் விரிந்தும் விகற்பநடை நாடாது நான்கும் நசித்தவராய்
1	34	47	ஊடாக எஞ்சாமல் அஞ்சின் இடமாய் நடமாடும் அஞ்சாதி அஞ்சும் அறுத்தவராய்
1	34	48	எஞ்சாமல் ஈண்டாண் டருளும் இறையோர் தமையாறில் ஆண்டாண்டு கண்டா றகன்றவராய்
1	34	49	ஈண்டாது வாழியுற்ற வானோரும் வந்து தமக்கிரண்டோ டேழியற்ற ஏழும் இகந்தவராய்
1	34	50	ஊழியற்றக் கட்டிநின்றுட் சோதியொன்று காணத் தொடங்குகின்றோர் எட்டுகின்ற எட்டின்மேல் எய்தினராய்க்
1	34	51	கட்டுகின்ற தேன்தோய் கருணைச் சிவங்கலந்து தேக்குகின்ற சான்றோர்தம் உள்ளம் தணவாதாய்
2	97	169	உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற உருஅருவ மொன்றும்
2	232	1121	வன்ப தாகிய நீயும்என் னுடனே வருதி யோ.....ஒன்ப தாகிய உருவுடைப் பெருமான் ஒருவன் வாழ்கின்ற ஒற்றியூர்க் கின்றே
4	282	1439	வன்ப வத்தையும் மாய்த்திட நினைத்தேன்.....ஒன்ப தாகிய உருவுடைப் பெரியோய்
4	443	2493	மரணமற்று வாழ்கஎனத் திருவார்த்தை அளித்தாய் மன்றுடையாய் நின்அருளின் வண்மைஎவர்க் குளதே.
4	457	2558	உருவம்ஒரு நான்காகி அருவமும்அவ் வளவாய் உருஅருஒன் றாகிஇவை ஒன்பானுங் கடந்து
51. நவ நிலை			
1	87	116	நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின் நடுவாகி நவநிலைக்கு நண்ணா தாகி
1	95	158	கரியவறை விடுத்துநவ நிலைக்கு மேலே காணாமற் காண்கின்ற காட்சியே
4	447	2513	நவநிலைக்கும் அதிகாரம் நடத்துகின்ற அரசாய் நண்ணியநின் பொன்னடிகள் நடந்துவருந் திடவே
6	42	3259 / 1281	நவநிலை தரும்ஓர் நல்லதெள் அமுதேசிவநிலை தனிலே திரண்டஉள் அமுதே
6	74	3390	தெய்வம்ஒன் றேஎனும் திறமும் நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்
52. சகல கேவலம்			
2	338	1778	பதிநிலை அணைந்து வாழப் பகலான சகலமுடன் இரவான கேவலப் பகையுந் தடாத படிஓர் தவமான கலனில்
2அ	388	2070	இரவுபகல் அற்றஇடம் அதுசகல கேவலம் இரண்டின்நடு என்றபரமே
4	450	2527	சகலமொடு கேவலமுந் தாக்காத இடத்தே தற்பரமாய் விளங்குகின்ற தாள்மலர்கள் வருந்தப் பகலொழிய நடுவிரவில் நடந்தருளி
5	492	2695	கேவல சகல வாதனை அதனால் கீழ்ப்படும் அவக்கடல் மூழ்கி ஓவற மயங்கி உழலும்இச் சிறியேன்
5	575	3222	மனம்என்னும் நல்ஏவலும் வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று வாழ்கின்ற வாழ்வருளுவாய்
53. இரவு பகல் இடம்			
1	34	53	ஏக்கமுற வாய்க்கும் சுக மொழிந்து மண்ணொழிந்து விண்ணொழிந்து சாய்க்கும் இராப்பகலும் தானொழிந்து

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	105	205	செம்மையெலாம் தரும்மௌன அணைமேற் கொண்டு செறி இரவு பகலொன்றும் தெரியா வண்ணம்
2	227	1099	கள்வர் ஐவரைக் கைவிடுத் ததன்மேல் பாய ஆணவப் பகைகெட முருக்கிப் பகல்இ ராஇலாப் பாங்கரின் நின்றே
2	347	1847	இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலா வே – நானும் இருக்கவெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலா வே.
2அ	388	2070	இலகுபரி பூரண விலாசம்அல தலைஅண்டம் எங்கணும் எனச்சொல்பதியே இரவுபகல் அற்றஇடம்
2அ	392	2096	இராப்பகல் இல்லா இடத்தாண்டி – அன்பர் இன்ப உளங்கொள் நடத்தாண்டி
5	491	2689	நின் கருணை வெள்ளம் உண்டிரவு பகல்அறி யாத வீட்டினில் இருந்து நின் னோடும் விள்ளல்இல் லாமல் கலப்பனோ
6	292	4616	இரவுபகல் அற்றஒரு தருணத்தில் உற்றபேரின்பமே அன்பின் விளைவே
6	293	4619	ஏழினோ டேழுலகில் உள்ளவர்கள் எல்லாம்இதென்னைஎன் றதிசயிப்ப இரவுபகல் இல்லாத பெருநிலையில் ஏற்றி
6	323	4757	தாரணியில் கண்டேன் களிக்கின்றேன் கங்குல்பகல் அற்றவிடத் துண்டேன் அமுதம் உவந்து.
6 தனி	528	27 தனி	இரவொடு பகல்இலா திருக்கின் றோர்களும் வரவொடு போக்கிலா வழிநின் றோர்களும்
54. வரவுபோக்கற்ற நிலை			
5	74	3220	கரவொடு மாயையைக் கடிந்த சீலரும் உரவொடு மெய்ந்நிலை ஓங்கு வோர்களும்.
6	178	3965	மலைவில்மெய்ஞ் ஞானமயமாய் வரவுபோக் கற்றநிலை கூடும்என எனதுளே வந்துணர்வு தந்தகுருவே
6	193	4031	மெய் வாழ்வை வரவுபோக் கற்றசின் மயத்தை அலையறு கருணைத் தனிப்பெருங் கடலை
6	292	4616	வரவிலா வுரைக்கும் போக்கிலா நிலைக்கும் வயங்கிய வான்பொருள் என்கோ
6 தனி	528	27 தனி	வரவுசெல வற்றபரி பூரணா காரசுக வாழ்க்கைமுத லாஎனக்கு வாய்த்தபொரு ளே
55. இருவினை ஒப்பு, மலப்பரிபாகம் சத்திநிபாதம்			
1	1	01	துன்றுமல வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து சும்மா இருக்கும் சுகம்
1	95	155	எம் சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும் சற்குருவே சிவகுருவே
1	101	190	வன்கொடுமை மலநீக்கி அடியார் தம்மை வாழ்விக்குங் குருவே
1	103	198	தீவினைநல் வினையெனும்வன் கயிற்றால் இந்தச் சீவர்களை ஆட்டுகின்ற தேவே
4	453	2540	எனக்குநன்மை தீமையென்ப திரண்டுமொத்த இடத்தே இரண்டும்ஒத்துத் தோன்றுகின்ற எழிற்பதங்கள்
4	457	2555	இருவினைஒப் பாகிமல பரிபாகம் பொருந்தல்.....உருவினையுற் றுள்ளகத்தும் பிரணவமே வடிவாய்
4	458	2562	மானினொடு மோகினியும் மாமாயை யுடனே வைந்துவமும் ஒன்றினொன்று வதிந்தசைய அசைத்தே ஊனினொடும் உயிருணர்வுங் கலந்துகலப் புறுமா றுறுவித்துப் பின்கரும ஒப்புவருந் தருணம்
6	36	3259 / 1095	சத்தினி பாதந் தனையளித்து எனைமேல் வைத்தமு தளித்த மரபுடைத் தாயே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

56. தத்பதம், தொம்பதம், அசிபதம், தத்துவமசி			
1	86	119	அந்தமில்தொம் பதமாய்த்தற் பதமாய் ஒன்றும் அசிபதமாய் அதீதமாய் அமர்ந்த தேவே.
6	234	4292	தொம்பத உருவொடு தத்பத வெளியில் தோன்றசி பதநடம் நான்காணல் வேண்டும்
6	287	4603	தொம்பதமும் உடனுற்ற தற்பதமும் அசிபதச் சுகமும்ஒன் றானசிவமே
6	300	4639	தத்துவ மசிநிலை இதுஇது தானே சத்தியம் காண்எனத் தனித்துரைத் தெனக்கே
57. எட்டும் இரண்டும்			
6	9	3259 / 257	எட்டுஇரண்டு என்பன இயலும் முற்படியென அட்டநின்று அருளிய அருட்பெருஞ் ஜோதி
6	37	3259 / 1131	எட்டிரண்டு அறிவித்து எனைத்தனி ஏற்றிப் பட்டிமண் டபத்தில் பதித்தமெய்த் தந்தையே
6	130	3733	பெட்டிஇதில் உலவாத பெரும்பொருள்உண் டிதுநீ பெறுகஎன அதுதிறக்கும் பெருந்திறவுக் கோலும் எட்டிரண்டும் தெரியாதேன் என்கையிலே கொடுத்தீர்
6	146	3813	எட்டிரண்டும் என்என்றால் மயங்கியஎன் றனக்கே எட்டாத நிலைஎல்லாம் எட்டுவித்த குருவே
	168	3914	நம்மகன்நீ அஞ்சல்என நவின்றென் சென்னி தொட்டானை எட்டிரண்டும் சொல்லி னானைத்
6	221	4202	எட்டுக் கிசைந்த இரண்டும்எனக் கிசைவித் தெல்லா இன்னமுதும் அட்டுக் கொடுத்தே அருத்துகின்றோய்
	317	4719	எட்டோடே இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர் எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.
	369	5053	எட்டும் இரண்டும் இதுஎன் றெனக்குச் சுட்டிக் காட்டி யே எட்டா நிலையில் இருக்கப் புரிந்தாய் இட்டுக் கூட்டி யே
	382	5172	எட்டும் இரண்டுமென் றிட்டு வழங்குதல் எட்டும் படிசெய்தீர் வாரீர்
58. ஓங்காரம்			
4	443	2493	பிரணவத்தின் அடிமுடியின் நடுவினும்நின் றோங்கும் பெருங்கருணைத் திருவடிகள் பெயர்ந்துவருந் திடவே
4	457	4255	பிரணவமே வடிவாய் உற்றுவெளிப் புறத்தும்எழுந் துணர்த்திஉரைத் தருளும் திருவடிகள்
4	467	2595	உள்ளமுதம் ஊற்றுவிக்கும் உத்தமிஎன் அம்மை ஓங்கார பீடமிசைப் பாங்காக இருந்தாள்
4	482	2661	ஊனம்ஒன் றில்லா உத்தமர் உளத்தே ஓங்குசீர்ப் பிரணவ ஒளியே
5	492	2696	ஓங்காரத் தனிமொழியின் பயனைச் சற்றும் ஓர்கிலேன் சிறியேன்
5	575	3221	சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத் திறன்அருளி மலயமுனிவன்
5	583	3239	பிரணவா காரசின் மயவிமல சொரூபமே பேதமில் பரப்பிரமமே
6	20	3259 / 596	ஓங்கார சத்திகள் உற்ற அண்டங்களை ஆங்காங் அமைத்த அருட்பெருஞ் ஜோதி
6	35	3259 /1066	சாகாக் கல்வியின் தரமெலாம் கற்பித்து ஏகாக் கரப்பொருள் ஈந்தசற் குருவே
6	136	3764	சுத்தவடி வுடனே பகர்பிரண வாகாரப் பரிசும்எனக் களித்தீர் நாதாந்தத் தனிச்செங்கோல் நான்செலுத்தக் கொடுத்தீர்
6	149	3825	நாட்டியஓங் காரம்ஐந்தில் பரமுதல்ஓர் நான்கும் நந்நான்கு மாறிடத்தும் நயந்துநிறைந் தருளி
6	181	3980	பேசும்ஓங் காரம் ஈறதாப் பேசாப் பெரியஓங் காரமே முதலா ஏசறும் அங்கம் உபாங்கம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	196	4048	ஓங்கார நிலைகாட்டி அதன்மேல்உற் றொளிரும் ஒருநிலையும் காட்டிஅப்பால் உயர்ந்ததனி நிலையில்
6	359	4979	ஓங்கார அணைமீது நான்இருந்த தருணம்.....சிவந்தவடி வகன்றே ஈங்காரப் பளிக்குவடி வெடுத்தெதிரே நின்றார்
6	375	5103	ஏகாக் கரப்பொற் பீடத் தென்னை ஏற்று ஜோதி யே எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த ஜோதி யே.
	381	5165	ஊமை எழுத்தினுள் ஆமை எழுத்துண்டென் றோமை அறிவித்தீர் வாரீர்
	383	5186	ஏசாத தந்திரம் பேசாத மந்திரம் ஈசான மேலென்றீர் வாரீர்
	384	5198	ஓங்கார நாடகம் பாங்காகச் செய்கின்ற ஓங்கார நாடரே வாரீர்
	385	5206	ஓமென்ப தற்குமுன் ஆமென் றுரைத்துடன் ஊமென்று காட்டினீர் வாரீர்
	408	5378	ஓதிஎந்த விதத்தாலும் வேதியனும் தேர்வரியார் ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கின்றார்
	408	5379	சிற்பரர்எல் லாமும்வல்ல தற்பரர் விரைந்திங்குன்னைச் சேரவந்தார் வந்தார்என்றோங் காரநாதம் சொல்கின்றதே.
	411	5401	ஓங்கார பீடத் தொளிர்கின்ற பாதம் ஒன்றாய் இரண்டாகி ஓங்கிய பாதம்
59. ஐந்தெழுத்து - காரணபஞ்சாக்கரம்			
2	166	725	சித்தத்துள் ஊறி ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே.
2	166	726	பவம தோட்டிநல் ஆனந்த உருவாம்.....அடியார் உவகை ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே.
2	166	727	புயம்உடை யானும்..... பூஉடை யானும் உன்னும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	166	728	துன்று தீம்பலாச் சுளையினும் இனிப்பாய்த் தொண்டர் தங்கள்நாச் சுவைபெற ஊறி ஒன்றும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	167	729	கரைக்கும் தெள்ளிய அமுதமோ தேனோ.....உரைக்கும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	167	730	புணரி வைகிய பூமகள் கொழுநன் ஓதும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	167	731	பத்தர் நாள்தொறும் சித்தமுள் ளூற உண்ணும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	167	732	சனனம் என்னுமோர் சாகரம் நீந்தி உந்த ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	167	733	தற்பரம் பொருளை ஒட்டி ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	168	734	பத்தர் உள்ளகப் பதுமங்கள் தோறும் உலவும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சிவ வாய
அ. தூலபஞ்சாக்கரம்			
2	170	745	தில்லைச்சிற் றம்பலத் தாடும் நல்ல வாழ்வினை நான்மறைப் பொருளை நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	170	746	ஒளியை நட்டம் ஆடிய நடனநா யகத்தை நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	171	747	பரமசிற் சுகத்தை நம்பி னோர்களை வாழ்விக்கும் நலத்தை நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	171	748	வே தங்கள் நாலின் ஒற்றியூர் அமர்ந்திடும் சிவத்தை நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	171	749	இன்பத்தின் நிறைவை நண்ணி ஒற்றியூர் அமர்ந்தருள் சிவத்தை நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	171	750	வேதங்கள் உணரா நக்கன் எம்பிரான் அருள்திருப் பெயராம் நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	171	751	கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும் நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும் நமச்சி வாயத்தை நான்மற வேனே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

2	172	752	பொன்னை வைத்தஅப் புதைமறந்தாலும் நடைஅ டுத்தவர் வழிமறந் தாலும் நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	172	753	சான்ற மேலவர் தமைஅடைந் தாலும் நன்மை என்பன யாவையும் அளிக்கும் நமச்சி வாயத்தை நான்மற வேனே.
2	172	754	எம்பி ரான்எனக்கு யாதுசெய்தாலும் நன்னர் நெஞ்சகம் நாடிநின் றோங்கும் நமச்சி வாயத்தை நான்மற வேனே.
			ஆ. சூக்கும பஞ்சாக்கரம்
1	8	37	அஞ்சுகங்கள் நாடிக்காவுள்ளே நமச்சிவாயம் புகலும் கோடிக்கா மேவுங் குளிர்மதியே
2	173	755	நஞ்சை வேண்டிய நாதன்தன் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	173	756	நாவின் மன்னரைக் கரைதனில் சேர்த்த நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	173	757	நாட்டம் உற்றதோர் நாதன்தன் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	173	758	நம்மை ஆளுடை நாதன்தன் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	173	759	நாடு கின்றவர் நாதன்தன் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	174	760	நலங்கொள் செஞ்சடை நாதன்தன் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	174	761	நாலு மாமறைப் பரம்பொருள் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	174	762	நந்தம் வண்ணமாம் நாதன் தன் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	174	763	நார மார்மதிச் சடையவன் நாமம் நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	174	764	நலங்கொ ளும்துணை யாதெனில் கேட்டி நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே.
2	298	1533	கல்லா நடையேன் கருணையிலேன் ஆனாலும் நல்லார் புகழும் நமச்சிவா யப்பெயரே
2	323	1696	தாதாதா என்றுலகில் தான் அலைந்தோம் - போதாதா நந்தா மணியே நமச்சிவா யப்பொருளே
			இ. அதிசூக்கும பஞ்சாக்கரம்
1	117	303	நான்செய்த புண்ணிய மியாதோ சிவாய நமஎனவே ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்
1	120	328	நீரே எனினுந் தரற்கஞ்சு வாரொடு நீயுஞ்சென்று சேரேல் இறுகச் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே.
1	129	414	வான்போல் குளிர்ந்த சிவானந்த வாழ்க்கையின் வாழ்வுறச்செந் தேன்போல் இனிக்கும் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே.
1	132	442	செருக்கா துருகிச் சிவாய நமஎனத் தேர்ந்தன்பினால் ஒருக்கால் உரைக்கில் பெருக்காகும் நல்லின்பம் ஓங்கிடுமே.
2	165	714	தேடற் கினிய சீர் அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	715	திருமால் அயனும் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	716	செய்ய மலர்க்கண் மால்போற்றும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	717	சீலம் அளிக்கும் திருஅளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	718	செஞ்சொல் புலவர் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	719	திண்கொள் முனிவர் சுரர்புகழும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	720	சேய அயன்மால் நாடரிதாம் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	721	திண்ண மளிக்கும் திறம்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	166	722	செந்தா மரையோன் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	166	723	தெள்ளக் கடலான் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.

2	166	724	செற்றம் அகற்றித் திறல்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	218	1047	நாடும் சிவாய நமஎன்று நாடுகின்றோர்.....நெஞ்சமே ஓது.
2அ	371	1999	அரஹர சிவாயநம என்றுமறை ஓலமிட் டணுவளவும் அறிகிலாத அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும் ஆனந்த நடனமணியே.
4	475	2627	சிவாயநம எனப்புகலும் தெளிவுடையன் ஆக்கிச் சாவாத வரங்கொடுத்துத் தனக்கடிமை பணித்தான்
			ஈ. ஐந்தெழுத்து
1	81	77	ஆயிரமன் றேநூறும் அன்றோஈ ரைந்தன்றே ஆயிரம்பேர் எந்தைஎழுத் தைந்தேகாண்
1	120	332	அலையெழுத் துந்தெறும் ஐந்தெழுத் தாலுன்னை அர்ச்சிக்கின்றோர்.....எங்கள்புழுத் தலையெழுத் துஞ்சரி யாமோ நுதற்கண் தனிமுதலே.
1	122	348	பார்தரு பாவக் கடலிடை வீழ்த்திடப் பட்டுழன்றே ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின் றேன்கரை ஏற்றரசே.
1	128	404	பேரோங்கும் ஐந்தெழுத் தன்றோ படைப்பைப் பிரமனுக்கும் ஏரோங்கு காப்பைத் திருநெடு மாலுக்கும் ஈந்ததுவே.
2	299	1541	நின் ஐந்தெழுத்தை உன்னுநிலைக் கென்னை உரித்தாக்க வேண்டுதியேல்
2	306	1575	வந்தனைசெய் நீறெனும் கவசம் உண்டக்கமா மணியும் உண்டஞ் செழுத்தாம் மந்திரப் படைஉண்டு சிவகதி எனும் பெரிய வாழ்வுண்டு
2	308	1586	ஊன்செய்நா வால்உன் ஐந்தெழுத் தெளியேன் ஓதநீ உவந்தருள் போற்றி
2	331	1737	தேசுறுசீர் ஐந்தெழுத்தும் செப்புகின்ற நாயேனை ஆசகலும் வண்ணம் அருள்புரிந்தால் ஆகாதோ.
2	348	1861	ஓரெழுத்தி லைந்துண்டென்பார் வெண்ணிலா வே - அது ஊமையெழுத் தாவதென்ன வெண்ணிலா வே.
2அ	365	1951	ஆவியீ ரைந்தை அபரத்தே வைத்தோதில் ஆவியீ ரைந்தை அகற்றலாம்
6	7	3259 / 173	சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும் அகரமும் ஆகிய அருட்பெருஞ் ஜோதி
6	43	3259 / 1315	அகரமும் உகரமும் அழியாச் சிகரமும் வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே
6	158	3869	பான்மறுத்து விளையாடும் சிறுபருவத் திடையே பகரும்உல கீச்சைஒன்றும் பதியாதென் உளத்தே .....திரு ஐந்தெழுத்தே பதிய வைத்தபெரு வாழ்வே
6	339	4852	ஒருகடலோ எழுகடலோ உரைக்கவொணா துடையேன்.....திருஎழுத்தைந் தாணைஒரு துணைசிறிதிங் கிலனே.
6	383	5186	ஏசாத தந்திரம் பேசாத மந்திரம் ஈசான மேலென்றீர் வாரீர்
6	383	5188	ஐந்து மலங்களும் வெந்து விழஎழுத் தைந்துஞ் செயும்என்றீர் வாரீர்
6	528	26	அருள்நெறித் தனிஎழுத் தைந்தின் உட்பொருள் குருநெறித் தகவுறக் குறிக்கின் றோர்களும்.
			60. வெண்ணீறு
1	30	413	தப்பாய்ந்த மட்டுவிடேன் உன்தாள் மறக்கினும்வெண் ணீற்றுநெறி விட்டுவிடேன் என்றனைக்கை விட்டுவிடேல்
2	165	714	தேடற் கினிய சீர் அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	715	திருமால் அயனும் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	716	செய்ய மலர்க்கண் மால்போற்றும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	717	சீலம் அளிக்கும் திருஅளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.

2	165	718	செஞ்சொல் புலவர் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	719	திண்கொள் முனிவர் சுரர்புகழும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	720	சேய அயன்மால் நாடரிதாம் சிவாய நமஎன் றிடுநீறே.
2	165	721	திண்ண மளிக்கும் திறம்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	166	722	செந்தா மரையோன் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	166	723	தெள்ளக் கடலான் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	166	724	செற்றம் அகற்றித் திறல்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.
2	176	775	கடவுள் நீறிடாக் கடையரைக் கண்காள் கனவி லேனும்நீர் காணுதல் ஒழிக அடவுள் மாசுதீர்த் தருள்திரு நீற்றை அணியும் தொண்டரை அன்புடன் காண்க
2	176	776	போற்றி நீறிடாப் புலையரைக் கண்டால் போக போகநீர் புலமிழந் தவமே நீற்றின் மேனியர் தங்களைக் கண்டால் நிற்க நிற்கஅந் நிமலரைக் காண்க
2	176	777	தெய்வ நீறிடாச் சிறியரைக் கண்டால் சீறு பாம்புகண் டெனஒளித் தேக சைவ நீறிடும் தலைவரைக் கண்காள் சார்ந்து நின்றுநீர் தனிவிருந் துண்க
2	177	778	தூய நீறிடாப் பேயர்கள் ஒன்று சொல்லு வாரெனில் புல்லென அடைக்க தாய நீறிடும் நேயர்ஒன் றுரைத்தால் தழுவி யேஅதை முழுவதும் கேட்க
2	177	779	நல்ல நீறிடா நாய்களின் தேகம் நாற்றம் நேர்ந்திடில் நண்உயிர்ப் படக்க வல்ல நீறிடும் வல்லவர் எழின்மெய் வாசம் நேரிடில் மகிழ்வுடன் முகர்க
2	177	780	அருள்செய் நீறிடார் அமுதுனக் கிடினும் அம்ம லத்தினை அருந்துதல் ஒழிக தெருள்கொள் நீறிடும் செல்வர்கூழ் இடினும் சேர்ந்து வாழ்த்தி அத் திருஅமு துண்க
2	177	781	முத்தி நீறிடார் முன்கையால் தொடினும் முள்ளு றுத்தல்போல் முனிவுடன் நடுங்க பத்தி நீறிடும் பத்தர்கள் காலால் பாய்ந்து தைக்கினும் பரிந்ததை மகிழ்க
2	177	782	இனிய நீறிடா ஈனநாய்ப் புலையர்க் கெள்ளில் பாதியும் ஈகுதல் ஒழிக இனிய நீறிடும் சிவனடி யவர்கள் எம்மைக் கேட்கினும் எடுத்தவர்க் கீக
2	178	783	நாட நீறிடா மூடர்கள் கிடக்கும் நரக இல்லிடை நடப்பதை ஒழிக ஊடல் நீக்கும்வெண் நீறிடும் அவர்கள் உலவும் வீட்டிடை ஓடியும் நடக்க
2	178	784	நிலைகொள் நீறிடாப் புலையரை மறந்தும் நினைப்ப தென்பதை நெஞ்சமே ஒழிக கலைகொள் நீறிடும் கருத்தரை நாளும் கருதி நின்றுளே கனிந்துநெக் குருக
2	195	891	நிறவனே வெள்ளை நீறணி பவனே நெற்றிமேல் கண்ணுடை யவனே
2	246	1222	உன்னாசை கொண்டேஎன் ஒற்றியப்பா நான்மகிழ்ந்துன் மின்னாரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனோ.
5	522	2893	ஆறெழுத்தை ஒருமை..... திருவெண் ணீறிட்டால் இருமை வளனும் எய்தும்இடர் என்ப தொன்றும் எய்தாதே.
5	522	2894	ஆறெழுத்தை உய்தற்..... திருவெண் ணீறிட்டால் வைதற் கில்லாப் புகழ்ச்சிவரும் வன்கண் ஒன்றும் வாராதே.
5	522	2895	ஆறெழுத்தை ஓரா மனத்தின்..... திருவெண் ணீறிட்டால் ஏரார் செல்வப் பெருக்கிகவா இடும்பை ஒன்றும் இகந்திடுமே.
5	522	2896	ஆறெழுத்தை உகவா..... உச்சரித்திங்..... திருவெண் ணீறிட்டால் சுகவாழ் வின்பம் அதுதுன்னும் துன்பம் ஒன்றும் துன்னாதே.
5	522	2897	ஆறெழுத்தை உன்னி..... உச்சரித்திங்..... திருவெண் ணீறிட்டால் சென்னி அணியாய் அடிசேரும் தீமை ஒன்றும் சேராதே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

5	522	2898	ஆறெழுத்தை ஓரும் மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால் பாரும் விசும்பும் பதஞ்சாரும் பழங்கண் ஒன்றும் சாராதே.
5	523	2899	ஆறெழுத்தை ஓர்ந்து மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால் ஆர்ந்த ஞானம் உறும்அழியா அலக்கண் ஒன்றும் அழிந்திடுமே.
5	523	2900	ஆறெழுத்தை ஒழியா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால் பழியா இன்பம் அதுபதியும் பனிமை ஒன்றும் பதியாதே.
5	523	2901	ஆறெழுத்தை உதியோர் மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால் துதிஏர் நினது பதந்தோன்றும் துன்பம் ஒன்றும் தோன்றாதே.
5	523	2902	ஆறெழுத்தை ஊன்றா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால் ஈன்றாள் நிகரும் அருள்அடையும் இடுக்கண் ஒன்றும் அடையாதே.
5	544	3037	கவசங்கள்எ னச்சூழ்ந்துறு கண்ணேறது தவிரும் சிவசண்முக எனவேஅருள் திருநீறணிந் திடிலே.
5	544	3038	மேல்ஏந்திய வானாடர்கள் மெலியாவிதம் ஒருசெவ் வேல்ஏந்திய முருகாஎன வெண்ணீறணிந் திடிலே.
5	544	3039	பவனன்புனல் கனல்மண்வெளி பலவாகிய பொருளாம் சிவசண்முக எனவேஅருள் திருநீறணிந் திடிலே.
5	544	3040	குயில்ஏறிய பொழில்சூழ்திருக் குன்றேறி நடக்கும் மயில் ஏறிய மணியேஎன வளர்நீறணிந் திடிலே.
5	544	3041	வீறாப்பொடு வருசூர்முடி வேறாக்கிட வரும்ஓர் ஆறாக்கரப் பொருளேஎன அருள்நீறணிந் திடிலே.
5	544	3042	எமராஜனை வெல்லுந்திறல் எய்தும்புகழ் எய்தும் குமராசிவ குருவேஎனக் குளிர்நீறணிந் திடிலே.
5	544	3043	சீலாசிவ லீலாபர தேவாஉமை யவள் தன் பாலாகதிர் வேலாஎனப் பதிநீறணிந் திடிலே.
5	544	3044	சகமாறினும் உயர்வானிலை தாமாறினும் அழியார் முகமாறுடை முதல்வாஎன முதிர்நீறணிந் திடிலே.
5	545	3045	இந்தாஎனத் தருவார்தமை இரந்தார்களுக் கெல்லாம் கந்தாசிவன் மைந்தாஎனக் கனநீறணிந் திடிலே.
5	545	3046	பண்ணார்மொழி மலையாள் அருள் பாலாபனி ரண்டு கண்ணாஎம தண்ணாஎனக் கனநீறணிந் திடிலே.
5	566	3162	நெஞ்சமே இலகுசிற் பரகுக என்று நீறிடில் கலகமில் இன்பமாம் கதிகி டைக்குமே.
5	566	3163	நெஞ்சமே தெருளுறு நீற்றினைச் சிவஎன் றுட்கொளில் அருளுறு வாழ்க்கையில் அமர்தல் உண்மையே.
5	566	3164	நெஞ்சமே இல்வினைச் சண்முக என்று நீறிடில் நல்வினை பழுக்கும்ஓர் நாடு வாய்க்குமே
5	566	3165	நெஞ்சமே இடும்புகழ்ச் சண்முக என்று நீறிடில் நடுங்கும்அச் சம்நினை நண்ணற் கென்றுமே.
5	566	3166	நெஞ்சமே இன்பறாச் சண்முக என்று நீறிடில் துன்புறாத் தனிக்கதிச் சூழல் வாய்க்குமே.
5	567	3167	நெஞ்சமே எறிவிலாச் சண்முக என்று நீறிடில் மறிவிலாச் சிவகதி வாயில் வாய்க்குமே.
5	567	3168	நெஞ்சமே நெறிசிவ சண்முக என்று நீறிடில் முறிகொளீஇ நின்றஉன் மூடம் தீருமே.
5	567	3169	நெஞ்சமே நேயமாம் சண்முக என்று நீறிடில் தோயமாம் பெரும்பிணித் துன்பம் நீங்குமே.
5	567	3170	நெஞ்சமே நிதிசிவ சண்முக என்று நீறிடில் வதிதரும் உலகில்உன் வருத்தம் தீருமே.
5	567	3171	நெஞ்சமே இசைசிவ சண்முக என்று நீறிடில் சைபெற மதிப்பர்உன் சிறுமை நீங்குமே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

61. ஒருசொல் ஒருமொழி			
2அ	387	2069	அலகின்மறை மொழியும்ஒரு பொருளின்முடி பெனஎன தகந்தெளிய அருள்செய் தெருளே
2அ	389	2073	அன்பால் உன்பால் ஒருமொழி தந் தனம்இம் மொழியால் அறிந்தொருங்கி அளவா அறிவே உருவாக அமரென் றுணர்த்தும் அரும்பொருளே
4	486	2683	வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில் ஒருமொழியே என்னையும் உடையனையும் ஒன்றுவித்துத் தருமொழியாம்
6	383	5185	ஏடா யிரமென்னை கோடா மொழிஒன்றே ஏடாஎன் றீர்இங்கு வாரீர்
6	402	5317	சொல்வந்த அந்தங்கள் ஆறும் - ஒரு சொல்லாலே ஆமென்றச் சொல்லாலே வீறும்
62. சரியை, கிரியை, யோகம், ஞானம்			
1	95	158	கிரியைநெறி அகற்றிமறை முடிவில் நின்று கேளாமல் கேட்கின்ற கேள்வி யே
1	97	169	உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற உருஅருவ மொன்றும் இவை உடன்மேல் உற்ற
6	87	3457	சரியைஓர் நான்கும் கிரியைஓர் நான்கும் சாற்றிடும் யோகமோர் நான்கும்.....பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை பெற்றிலேன்
6	464	5807	சரியைநிலை நான்கும்ஒரு கிரியைநிலை நான்கும் தனியோக நிலைநான்கும் தனித்தனிகண் டறிந்தேன் உரியசிவ ஞானநிலை நான்கும்அருள் ஒளியால் ஒன்றொன்றா அறிந்தேன்
63. ஆனந்தம்			
1	87	116	வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின் மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின் நடுவாகி நவநிலைக்கு நண்ணா தாகி
4	447	2510	வேதாந்த சித்தாந்தம் என்னும் அந்தம் இரண்டும் விளங்க .....நாதாந்த வெளிதனிலே நடந்தருளும் அதுபோல் நடந்தருளி.....போதாந்த மிசைவிளங்குந் திருமேனி காட்டிப்
5	540	3017	வேதா நந்த னொடுபோற்றி மேவப் படும்நின் பதம்மறந்தே .....போதா னந்தப் பரசிவத்தில் போந்த பொருளே பூரணமே மூதா னந்த வாரிதியே
6	3	3259 / 33 / 44	தூயகலாந்த சுகந்தரு வெளிஎனும்.....ஞானயோகாந்த நடத்திரு வெளிஎனும்..... விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும்.....பெரிய நாதாந்தப் பெருநிலை வெளிஎனும்.....சுத்த வேதாந்தத் துரியமேல் வெளிஎனும்.....சுத்த சித்தாந்த சுகப்பெரு வெளிஎனும்
6	132	3744	சுத்தவே தாந்த ஆனந்த வீதியில் ஆடச்செய் தீரே
6	133	3749	சுத்தக லாந்த அதிகார வீதியில் ஆடச்செய் தீரே
6	144	3801	யோகாந்தப் பதிகள்பல கோடி.....போதாந்தப் பதிகள்பல கோடி.....கலாந்தநிலைப் பதிகள்பல கோடி.....நாதாந்தப் பதிகள்பல கோடி.....வேதாந்தப் பதிகள்பல கோடி..... சித்தாந்தப் பதிகள்பல கோடி எல்லாம்பே ரருட்சோதித் தனிச்செங்கோல் நடத்தும்
6	291	4614	நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த நண்ணுறு கலாந்தம்உடனே நவில்கின்ற சித்தாந்தம் என்னும்ஆ றந்தத்தின் ஞானமெய்க் கொடிநாட்டியே
6	343	4876	கலாந்தயோ காந்தம் புகன்றபோ தாந்த நாதாந்தம் தெருட்பெரு வேதாந் தம்திகழ் சித்தாந் தத்தினும் தித்திக்கும் தேனே
6	454	5757	நாதாந்த மட்டோ போதாந்த நிலையும்உயர் யோகாந்த நிலையும் புனிதகலாந் தப்பதியும் புகல்கின்றார் புகலும் வேதாந்த வெளியும்மிகு சித்தாந்த வெளியும் விளங்கும்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	459	5778	யோகாந்த நடந்திருக்க லாந்தத் திருநடம்நா தாந்தத்தே செயும்நடம்போ தாந்தப் பேர்உலவா நடங்கண்டேன்
6	459	5779	அன்புறுசித் தாந்தநடம் வேதாந்த நடமும் ஆதிநடு அந்தமிலாச் சோதிமன்றில் கண்டேன்
			64. முத்தியும் சித்தியும்
4	453	2539	முத்திஒன்று வியத்திஒன்று காண்மின்.....சித்திஒன்று திருமேனி காட்டிமனைக் கதவம் திறப்பித்து
4	471	2612	சித்தியெலாம் அளித்தசிவ சத்திஎனை யுடையாள்.....முத்தியெலாந் தரவிளங்கும் முன்னவநின் வடிவை
5	570	3196	முத்தியின் முதல்வ போற்றி மூவிரு முகத்த போற்றி.....சித்திதந் தருளும் தேவர் சிகாமணி போற்றி போற்றி
6	9	3259 / 247 - 252	புடைஉறு சித்தியின் பொருட்டே முத்தியை.....முத்திஎன்பது நிலை முன்உறு சாதனம்.....சித்திஎன்பது நிலை சேர்ந்த அநுபவம்.....ஏகசிற் சித்தியே இயல் உற அனேகம்.....இன்பசித்தியின் இயல் ஏகம் அனேகம்.....
6	82	3429	சித்திஎனும் பெண்ணரசி எத்திஎன்கை பிடித்தாள் கருப்பறியா தெனை அதன்முன் கலந்தபுத்தி எனும்ஓர் காரிகைதான் கண்டளவில் கனிந்துமகிழ்ந் திடுமோ
6	210	4120	முத்தியும் ஞானமெய்ச் சித்தியும் பெற்று முயங்கிடுவாய் சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியமே.
6	220	4194	முத்தியைப் பெற்றேன்அம் முத்தியினால் ஞான சித்தியை உற்றேன்என்று உந்தீபற சித்தனும் ஆனேன்என்று உந்தீபற
			65. திருக்கதவுந்திறத்தல்
6	83	3434	திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே திருவருளாம் பெருஞ்சோதித் திருஉருக்காட் டாயோ
6	84	3435	மணிக்கதவம் திறவாயோ மறைப்பையெலாம் தவிர்த்தே மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
6	84	3436	உரைகடந்த திருவருட்பே ரொளிவடிவைக் கலந்தே உவட்டாத பெரும்போகம் ஓங்கியுறும் பொருட்டே
6	84	3437	அன்புடையாய் என்றனைநீ அணைந்திடவே விழைந்தேன் அந்தோஎன் ஆசைவெள்ளம் அணைகடந்த தரசே
6	84	3438	பேதையர்போல் எனைநினையேல் பெரியதிருக் கதவம் திறந்தருளி அணைந்திடுவாய் சிற்சபைவாழ் அரசே
6	84	3439	மெய்யுடையாய் என்னொடுநீ விளையாட விழைந்தேன் விளையாட்டென் பதுஞானம் விளையும்விளை யாட்டே
6	85	3440	திருக் கதவுதிறந் தின்னமுதம் அளித்தே தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்திஉறப் புரிவாய்
6	85	3441	ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே
6	85	3442	கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும் கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போக
6	85	3443	திருக்கதவம் திறந்தே திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுதம் ஊட்டிக் கருத்துமகிழ்ந் தென்உடம்பில் கலந்துளத்தில் கலந்து
6	130	3732	திருக்கதவம் திறப்பித்துக் காட்டித் திரும்பவும்நீர் மூடுவித்தீர் திறந்திடுதல் வேண்டும்
6	170	3925	திருக்கோயில் வழிக்க பாடந் திறவானை என்னளவில் திறந்து காட்டிச் சிற்சபையும் பொற்சபையும் சேர்வித் தானை

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	279	4552	நிதிய நவநேய மாக்கும் நடராஜ னேயெஞ் சிவனே கதவைத் திற.
6	279	4553	எந்தாயே கோவே எனது குருவே எனையாண்ட தேவே கதவைத் திற.
6	279	4554	ஏகா பவனே பரனே பராபரனே எங்கள் சிவனே கதவைத் திற.
6	279	4555	பொருளாந் தவநேயர் போற்றும் தயாநிதியே எங்கள் சிவனே கதவைத் திற.
6	279	4556	ஆனாத் திறப்பா வலர்போற்றும் சிற்றம் பலவா சிறப்பா கதவைத் திற.
6	279	4557	நல்லார்க்கு நல்வாழ் வளிக்கும் நடராயா மன்றோங்கு செல்வா கதவைத் திற.
6	280	4558	கேழ்நிலைக்க ஆவாஎன் றென்னைஉவந் தாண்டதிரு அம்பலமா தேவா கதவைத் திற.
6	280	4559	ஞான உருவே உணர்வே ஒளியே வெளியே திருவே கதவைத் திற.
6	280	4560	உரைஒது வானேஎம் மானேபெம் மானே மணிமன்றில் தேனே கதவைத் திற.
6	280	4561	ஓதரிய ஏகா அனேகா எழிற்பொதுவில் வாழ்ஞான தேகா கதவைத் திற.
6	361	4987	கடல்கடந்தேன் கரையடைந்தேன் கண்டுகொண்டேன் கோயில் கதவுதிறந் திடப்பெற்றேன் காட்சியெலாம் கண்டேன்
6	385	5203	ஓலக் கபாடத்தைச் சாலத் திறந்தருள் ஓலக்கங் காட்டினீர் வாரீர் காலக் கணக்கில்லீர் வாரீர்
66. திரைகள்			
6	27	3259 /813	கரைவின்மா மாயைக் கரும்பெரும் திரையால் அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /815	பேருறு நீலப் பெருந்திரை அதனால் ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /817	பச்சைத் திரையால் பரவெளி அதனை அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /819	செம்மைத் திரையால் சித்துறு வெளியை அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /821	பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /823	வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /825	கலப்புத் திரையால் கருது அனுபவங்களை அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /827	விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால் அடர்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /829	தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால் அத்திறம் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
6	27	3259 /831	திரைமறைப் பெல்லாம் தீர்த்து ஆங்காங்கே அரசுறக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி
6	83	3434	திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே திருவருளாம் பெருஞ்சோதித் திருஉருக்காட் டாயோ
6	219	4190	திரையற்று விட்டது செஞ்சுடர் தோன்றிற்று பரைஒளி ஓங்கிற்றென்று உந்தீபற பலித்தது பூசையென்று உந்தீபற.
6	359	4976	உரையும் உற்றது ஒளியும் உற்றது உணர்வும் உற்றது உண்மையே திரையும் அற்றது நரையும் அற்றது திரையும் அற்றுவி ழுந்ததே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	403	5323	ஆதி பரைஇவர்க் கப்பால்அப் பால்என்று மேலே திரைதூக்கிக் காட்டுதல் பாரீர்
67. சாகாத்தலை, வேகாக்கால், போகப்புனல்			
6	68	3328	சாகாத தலைஅறியேன் வேகாத காலின் தரம்அறியேன் போகாத தண்ணீரை அறியேன்
6	136	3763	சாகாத கல்வியிலே தலைகாட்டிக் கொடுத்தீர் தடையறியாக் கால்காட்டித் தரம்பெறவும் அளித்தீர்.....போகாத புனலாலே சுத்தஉடம் பினராம்
6	153	3845	போகாத புனலேஉள் வேகாத காலே
6	153	3847	சாகாத கல்வியிலே தலையான நிலையே சலியாத காற்றிடைநின் றொலியாத கனலே ஏகாத புனலிடத்தே இடியாத புவியே ஏசாத மந்திரத்தே பேசாத பொருளே
6	170	3923	வேகாக் காலானைக் கலைசாகாத் தலையி னானைக் கால்என்றும் தலையென்றும் கருதற் கெய்தா மேலானை
6	219	4482	ஞான மெய்ந்நெறியில் கோலைத் தொலைத்துக் கண்விளக்கம் கொடுத்து மேலும் வேகாத காலைக் கொடுத்தாய்
6	295	4625	வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும் விளையவிளை வித்தொழிலே மெய்த்தொழில தாகும்
6	300	4638	சாகாத தலைஇது வேகாத காலாம் தரம்இது காண்எனத் தயவுசெய் துரைத்தே போகாத புனலையும் தெரிவித்தென் உளத்தே பொற்புற அமர்ந்ததோர்
6	322	4746	காலும் தலையும் அறியும் தரமும் கொடுத்தான் நிலையும் கொடுத்தான் நிறைந்து.
6	325	4769	வேகாத கால்உணர்தல் வேண்டுமுடன் - சாகாத் தலைஅறிதல் வேண்டும் தனிஅருளால் உண்மை நிலைஅடைதல் வேண்டும் நிலத்து.
6	383	5184	ஏகாத கல்விதான் சாகாத கல்வியென் றேகாத லாற்சொன்னீர் வாரீர் வேகாத காலினீர் வாரீர்.
6	421	5492	வேகாத கால்உணர்ந்து சின்னம் பிடி.....சாகாத் தலைஅறிந்து சின்னம் பிடி
68. இரண்டரைக்கடிகை			
6	308	4677	மணம்புரி கடிகை இரண்டரை எனும்ஓர் வரையுள தாதலான் மகனே.....சவுளம்ஆ தியசெய் தெழில்உறு மங்கலம் புனைந்தே
6	309	4678	இரண்டரைக் கடிகையில் உனக்கே அம்புவி வானம் அறியமெய் அருளாம்
6	309	4679	இரண்டரைக் கடிகையில் விரைந்தே துன்புடை யவைகண் முழுவதும் தவிர்ந்தே தூய்மைசேர்
6	309	4680	ஈதுகேள் மகனே மெய்யருள் திருவை இரண்டரைக் கடிகையில் நினக்கே ஊதியம் பெறவே மணம்புரி விப்பாம் உண்மை
6	309	4681	இரண்டரைக் கடிகை எல்லையுள் எழில்மணக் கோலம் நிரைந்துறப் புனைதி
6	309	4682	களிப்பொடு மகனே அருள்ஒளித் திருவைக் கடிகைஓர் இரண்டரை அதனில் ஒளிப்பிலா துலகம் முழுவதும் அறிய
6	310	4683	கலங்கிடேல் மகனே அருள்ஒளித் திருவைக் களிப்பொடு மணம்புரி விப்பாம்
6	310	4684	ஐயுறேல் இதுநம் ஆணைநம் மகனே அருள்ஒளித் திருவைநின் தனக்கே..... விரைந்திரண் டரைக்கடி கையிலே
6	310	4685	தூங்கலை மகனே எழுகநீ விரைந்தே தூயநீர் ஆடுக துணிந்தே.....ஈங்கிரண் டரையில் அருள்ஒளித் திருவை
6	310	4686	மயங்கிடேல் மகனே அருள்ஒளித் திருவை மணம்புரி விக்கின்றாம்.....இரண்டரைக் கடிகை எல்லையுள் என்றுவாய் மலர்ந்தார்
6	467	5819	இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது பேருடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்.....என்மொழிநின் தனக்கே வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

69. புருவநடு			
2	357	1918	இளம்பருவந் தனிலே என்புருவ நடுஇருந்தான் பின்புகண்டேன் இல்லை
6	146	3810	கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக் கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
6	296	4626	நாடுநடு நாட்டத்தில் உற்றஅனு பவஞானம் நான்இளங் காலைஅடைய நல்கிய பெருங்கருணை அப்பனே
6	422	5496	கையறவி லாதுநடுக் கண்புருவப் பூட்டு கண்டுகளி கொண்டுதிறந் துண்டுநடு நாட்டு
70. கற்பூரமணம் வீசும்			
2	351	1882	கற்பூர வாசம்வீசும் பொற்பாந்தி ருமுகத்தே கனிந்தபுன் னகையாடக் கருணைக்க டைக்கணாட
6	146	3810	கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக் கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
6	244	4342	கற்பூரம் மணக்கின்ற தென்மேனி முழுதும் கணவர்மணம் அதுவென்றேன்
6	245	4347	கற்பூரம் கொணர்ந்துவம்மின் என்கணவர் வந்தால் கண்ணைச்சில் கழிக்கஎன்றேன்
6	447	5724	கற்பூரம் மணக்கின்ற தென்னுடம்பு முழுதும் கணவர்திரு மேனியிலே கலந்தமணம் அதுதான்
6	449	5729	கற்பூரம் கொணர்ந்திடுக தனித்தோழி எனது கணவர்வரு தருணம்இது கண்ணேறு கழிப்பாம்
6	456	5765	விரசளங்கும் வீசுவது நாசிஉயிர்த் தறிக வீதிஎலாம் அருட்சோதி விளங்குவது காண்க.....கற்பூர விளக்குப் பரிந்தெடுத் தென்னுடன் வருக தெரிந்தடுத்து மகிழ்ந்தே.
6	396	5264	கற்பூர ஜோதி மருந்து - பசுங் கற்பூர நன்மணங் காட்டு மருந்து
71. திருஞான சம்பந்தர்			
1	78	50	அண்ணாஅச் சைவவடி வாஞான சம்பந்தர் சீருரைக்கில்
1	78	51	எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்
1	121	344	எங்கள் பிரான்வளஞ் சூழ்மயிலை இல்லமு தந்திகழ் பெண்ணாக என்பை எழுப்பியநாள்
1	128	404	தேரோங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானப் பாலுண்ட செம்மணியைச் சீரோங்கு முத்துச் சிவிகையின் மேல்வைத்த தேவ
2	175	768	ஏழியல் பண்பெற் றமுதோ டளாவி இலங்குதமிழ்க் கேழியல் சம்பந்தர்
2	335	1768	திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனால்.....பிழைபடாத் தெய்வமறை இதுவெனப்பின் புணர்ந்தேன்
2அ	388	2071	சம்பந்த வள்ளலாங் கடவுளே ஓத்தூரினில் கவினுற விளங்குநற் பணிகள்சிவ புண்ணியக் கதிஉல கறிந்துய்யவே.....சிவஞானியாம் கருதவரும் ஒரு திருப் பெயர்கொள்மணி யே
3	423	2380	எங்கள் காழிக் கவுணியரை எழிலார் சிவிகை ஏற்றிவைத்தோர்
4	433	2450	ஆண்பனைபெண் பனையாக்கி அங்கமதங் கனையாய் ஆக்கிஅருண் மணத்தில்ஒளி அனைவரையும் ஆக்கும்
4	466	2590	சண்பைமறைக் கொழுந்துமகிழ் தரஅமுதங் கொடுத்தாள் தயவுடையாள் எனையுடையாள் சர்வசத்தி யுடையாள்
4	479	2645	உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும் உற்றிலாச் சிறியஓர் பருவத் திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில் .....திலகநற்காழி ஞானசம் பந்தத் தெள்ளமு தாஞ்சிவ குருவே.
4	479	2646	ஞானப் பால்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம் பயிர்தழைந் துறவைத் தருளிய ஞான பந்தன்என் றோங்குசற் குருவே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

4	479	2647	தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித் தனிப்பர நாதமாந் தலத்தே.....சித்தநற் காழி ஞானசம் பந்தச் செல்வமே எனதுசற் குருவே.
4	480	2648	தனிப்பர நாத வெளியின்மேல் நினது தன்மயந் தன்மயம் ஆக்கிப்.....றெனக்கருள் புரிந்தாய் ஞானசம் பந்தன் என்னும்என் சற்குரு மணியே.
4	480	2649	உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல் உள்ளதாய் முற்றும் உள்ளதுவாய்.....என் றுள்ளுற அளித்த ஞானசம் பந்த உத்தம சுத்தசற் குருவே.
4	480	2650	பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும் பொருள்அரு ளனுபவம் அதற்குப் பத்தியம் உயிரின் அனுபவம்.....முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின் முதலர சியற்றிய துரையே.
4	480	2651	அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ அருட்சிவ மதற்கெனப் பலகால்.....என்றாய் வடிவிலாக் கருணை வாரியே மூன்று வயதினில் அருள்பெற்ற மணியே.
4	480	2652	செவ்வகை ஒருகால் படுமதி அளவே செறிபொறி மனம்அதன் முடிவில்.....தெவ்வகை அமண இருளற எழுந்த தீபமே சம்பந்தத் தேவே.
4	480	2653	முன்புறு நிலையும் பின்புறு நிலையும் முன்னிநின் றுளமயக் குறுங்கால்.....இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே என்னுயிர்க் குயிர்எனுங் குருவே.
4	480	2654	வருபகற் கற்பம் பலமுயன் றாலும் வரலருந் திறனெலாம் எனக்கே.....ஞான உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த உயர்தனிக் கவுணிய மணியே.
5	524	2910	சைவ நாயக சம்பந்தன் ஆகிய தமிழ்அருட் குன்றேஎன் தெய்வ மே
6	339	4851	திருமேனிப் புண்ணியனே ஞான போகரைச் சிவிகையின்மேல் பொருந்தவைத்த புனிதா
72. திருநாவுக்கரசர்			
1	78	52	திரு நாவுக் கரையரெனு நன்னாம – மேவுற்ற தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தாய்
1	121	345	சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியைநின் பொற்றுணை வார்கழற் கேற்றி .....கற்றுணை யாதிந்தக் கற்றுணை யாமென் கடைநெஞ்சமே.
1	122	348	சீர்தரு நாவுக் கரையரை..... பார்தரு பாவக் கடலிடை வீழ்த்திடப் பட்டுழன்றே ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின் றேன்கரை ஏற்றரசே.
1	124	364	நல் லூரில்நின் தூமலர்ப்பொன் அடிவைத்த போதெங்கள் அப்பர்தம் சென்னி யதுகுளிர்ந்தெப் படிவைத்த தோ
2	175	769	நாட்டில் புகழ்பெற்ற நாவுக் கரசர்முன் நாள்பதிகப் பாட்டிற் கிரக்கம்இல் லீர்எம் பிரான்எனப் பாடஅன்றே.....மறைக் காட்டில் கதவம் திறந்தன
4	481	2656	சைவ ஒளிவிளங்க நாவரசென் றொருபேர் பெற்றுப் பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட
4	481	2657	வாய்மையிலாச் சமணாதர் பலகாற் செய்த வஞ்சமெலாம் திருவருட்பேர் வலத்தால் நீந்தித்.....சைவ அணியேசொல் லரசெனும்பேர் அமைந்த தேவே.
4	481	2658	தேவரெலாம் தொழுந்தலைமைத் தேவர் பாதத் திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற நாவரசே
4	482	2659	விதிவிலக்கீ தென்றறியும் விளைவொன் றில்லா வினையினேன்.....பதியேசொல் லரசெனும்பேர் படைத்த தேவே
4	482	2660	சைவக் கனியேநா வரசேசெங் கரும்பே தேவப் பண்ணுளே விளைந்தஅருட் பயனே உண்மைப் பதியோங்கு நிதியே
4	482	2661	பாங்காய மெய்யடியர் தம்மைச் சற்றும் பரிந்திலேன் அருளடையும் பரிசொன் றுண்டோ.....என்ன செய்வேன்சொல் லரசே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

4	482	2662	உய்வகைஎவ் வகையாது செய்வேன் நீயே உறுதுணைஎன் றிருக்கின்றேன்.....சொல் வேந்தேஎன் உயிர்த்துணையாய் விளங்குங் கோவே.
4	483	2663	விளங்குமணி விளக்கெனநால் வேதத் துச்சி மேவியமெய்ப் பொருளை உள்ளே விரும்பி வைத்து.....வளங்கெழும்ஆ கமநெறியை வளர்க்க வந்த வள்ளலே நின்னருளை வழங்கு வாயே.
4	483	2664	அருள்வழங்குந் திலகவதி அம்மை யார்பின் அவதரித்த மணியேசொல் லரசே
4	483	2665	தேர்ந்தஉளத் திடைமிகவும் தித்தித் தூறும் செழுந்தேனே சொல்லரசாம் தேவே
73. சுந்தரமூர்த்தி சுவாமிகள்			
1	79	53	எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார் தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய்
1	79	61	முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல் இன்றும் ஒருமணஞ்செய் வேன்.
2	175	770	வன்தொண்டன் சுந்தரன் என்னுநம் வள்ளலுக்குக் கச்சூரில் சோறிரந் தூட்டின ரால்எம் கடவுளரே.
2	122	346	நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச் சற்றெனினும்.....அன்பர் இடைவரும் உன்றன் இரக்கத்தைத் தான்வெளி யிட்டதற்கே.
2	123	359	வன் தொண்டர் விரும்புறச்செங் கல்லைப்பொன் னாக்கிக் கொடுத்தோய்
2	124	365	யூரன் முடிமேல் மறுப்பவும் வந்ததவர் திருமுடி மேலென்ன ஆசைகண்டாய் நின் திருவடிக்கே.
2	263	1319	மாலை ஒன்றுதோள் சுந்தரப் பெருமான் மணத்தில் சென்றவண் வழக்கிட்ட தெனவே ஓலை ஒன்றுநீர் காட்டுதல் வேண்டாம்
2	322	1688	வெங்கரா வாய்நின்று பிள்ளை வரப்பாடும் வன்தொண்டர்க் காய்நின்று சந்துரைத்த தார்.
4	483	2666	விதியணிமா மறைநெறியும் மெய்ந்நிலைஆ கமநெறியும் வதியணிந்து விளங்கவைத்த வன்தொண்டப் பெருந்தகையே.
4	433	2667	ஏற்றிலிட்ட திருவடியை எண்ணிஅரும் பொன்னையெலாம் ஆற்றிலிட்டுக் குளத்தெடுத்த அருட்டலைமைப் பெருந்தகையே.
4	483	2668	இலைக்குளநீ ரழைத்ததனில் இடங்கர்உற அழைத்ததன்வாய்த் தலைக்குதலை மதலைஉயிர் தழைப்பஅழைத் தருளியநின்.....உறா வன்தொண்டப் பெருந்தகையே.
4	483	2669	பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேற் படப்புரிந்த மாதவம்யா துரைத்தருளாய் வன்தொண்டப் பெருந்தகையே.
4	484	2670	ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்..... உயர்கருணைப் பெருந்தகையே.
4	484	2671	இறைஅருளால் தனித்தவள யானையின்மேல் கோன்காண எழுந்தருளி.....பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே.
4	484	2672	தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்.....தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே.
4	484	2673	என்றென்பாட்டுக் கிசைப்பினும்என் இடும்பாட்டுக் கரணமெலாம் அன்பாட்டுக் கிசைவதுகாண் அருட்பாட்டுப் பெருந்தகையே.
4	484	2674	பரம்பரமாம் துரியமெனும் பதத்திருந்த பரம்பொருளை.....தரம்பெறஎன் புகல்வேன்நான் தனித்தலைமைப் பெருந்தகையே.
4	484	2675	ஓரிரவில் தூதன்எனத் தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய் ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

74. மாணிக்க வாசகர்			
1	79	55	வாதமுறு மாசகர்க்குள் நில்லா மணிச்சுடரே மாணிக்க வாசகர்க்கு நீஉரைத்த வாறு.
1	79	294	வாத வூரர்தம் தூயநெஞ்சம் என்பட்ட தோஇன்று கேட்டஎன் நெஞ்சம் இடிபட்டதே.
1	116	347	திருவாத வூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே.....கருவாத நீங்கிடக் காட்டுகண் டாய்என் கனவினிலே.
4	122	2676	தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க வாசகனே.....நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின் ஆசகன்ற அனுபவம்
4	485	2677	குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாத வூர்மணியே.
4	485	2678	அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர் இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூர்இறையே.
4	485	2679	திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த.....இருஎன்ற தனிஅகவல் எண்ணம்எனக் கியம்புதியே.
4	485	2680	தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்.....நாடுகின்ற வாதவூர் நாயகனே
4	485	2681	சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ் மாமணியே.....ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே.
4	485	2682	வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை.....ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.
4	486	2683	வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில் ஒருமொழியே.....குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே.
4	486	2684	ஓர் மாறன் பிரம்படியால் புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ புண்ணியனே.
4	486	2685	வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக் கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவை..... நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே
75. தேவாரம்			
1	59	470	இறையோன் புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை மாயா மலமொன்றி அந்தோ மறந்தாய்
1	63	525	சம்பந்தர் அற்றவருக் கற்றசிவ னாமெனுமப் பொன்மொழியை மற்றைமொழி போன்று மறந்தனையே
1	125	375	நால்வரும் செய்தமிழ் கேட்டுப் புறத்தில் நடக்கச்சற்றே கால்வரும் ஆயினும்.....பாற்பெண் களைவிட்டுப் பார்க்கினுமே.
2	175	769	நாவுக் கரசர்முன் நாள்பதிகப் பாட்டிற் கிரக்கம்இல் லீர்எம் பிரான்எனப் பாட
2	197	901	நாட நல்இசை நல்கிய மூவர்தம் பாடல் கேட்கும்ப டம்பக்க நாதரே
2	211	991	மூவர்தம் பதிகச் செய்ய தீந்தமிழ்த் தேறல்உண் டருளைத் தருந்தென் ஒற்றியூர்
2	335	1768	திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனால்.....பிழைபடாத் தெய்வமறை இதுவெனப்பின் புணர்ந்தேன்
4	480	2653	திருநெறித் தமிழ்கொண் டையநீத் தருளிய அரசே என்புபெண்ணுருவோ டின்னுயிரது கொண்டெழுந்திடப் புரிந்து
6	528	26	திருநெறித் தமிழ்மறை தேர்ந்து னோர்களும் அருள்நெறித் தனிஎழுத் தைந்தின் உட்பொருள் குருநெறித் தகவுறக் குறிக்கின் றோர்களும்.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

76. திருமந்திரம்			
6	102	3585	திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப் பொருளும் உருவளர் திருமந்திரத்திரு முறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும் கருவளர் அடியேன் உளத்திலே நின்று காட்டி மெய்ம்மொழிப் பொருளும் மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும்.
77. திருக்குறள்			
1	56	411	கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே
1	57	433	செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும் இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே
1	57	434	தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப் பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே
1	57	435	அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந் திகழ்வாய் மையும்நீ தெளியாய்
1	59	465	உறங்குவது போலுமென்ற ஒண்குறளின் வாய்மை மறங்கருதி அந்தோ மறந்தாய்
1	59	466	நெருநல் உளனொருவன் என்னும் நெடுஞ்சொல் மருவும் குறட்பா மறந்தாய்
1	59	470	புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை மாயா மலமொன்றி அந்தோ மறந்தாய்
2	230	1112	இரத்தல் ஈதலாம் எனல்உணர்ந் திலையோ கரக்கின் றோர்களைக் கனவினும் நினையேல்
78. புலைகொலைதவிர்த்தல் - கொல்லாவிரதம்			
2	334	1763	இரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்தனேல் எங் குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை ஞானிஎனக் கூறொ ணாதே.
6	65	3326	கொலைபுலைகள் விடுத்தறியேன் கோபமறுத் தறியேன் கொடுங்காமக் கடல்கடக்கும் குறிப்பறியேன் குணமாம் மலைமிசைநின் றிடஅறியேன்
6	88	3465	வன் புலைகொலை இரண்டும் ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க உஞற்றவும்
6	93	3508	வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு மயங்கிஉள் நடுங்கிஆற் றாமல் என்பெலாம் கருக இளைத்தனன் அந்த இளைப்பையும் ஐயநீ அறிவாய்.
6	96	3530	பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய உயிரைப் பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே புந்திநொந் துளநடுக் குற்றேன்
6	96	3531	துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெலாம் பயந்தேன் கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக் கண்டகா லத்திலும் பதைத்தேன்
6	105	3605	புரைசேரும் கொலைநெறியும் புலைநெறியும் சிறிதும் பொருந்தாமல் எவ்வுயிரும் புரிந்துவத்தல் வேண்டும்
6	156	3861	கொலைபுரிவார் தவிரமற்றை எல்லாரும் நினது குலத்தாரே நீஎனது குலத்துமுதல் மகனே
6	156	3862	உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார்
6	157	3863	வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும் மரபினர்அன் றாதலினால்..... பசிதவிர்த்தல் புரிக அன்றிஅருட் செயல்ஒன்றும் செயத்துணியேல்
6	157	3864	கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும் குறித்திடும்ஓர் ஆபத்தில் வருந்துகின்ற போது படியில்அதைப் பார்த்துகவேல் அவர்வருத்தம் துன்பம் பயந்தீர்த்து விடுக
6	356	4958	நல்லார் எவர்க்கும் உபகரிப் பான்இங்கு நண்ணுகின்றேன் கொல்லா விரதத்தில் என்னைக் குறிக்கொண்ட கோலத்தனே.
6	365	5021	புலையும் கொலையும் தவிர்ந்த நெறியில் புனிதர் மதிக்க வே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	407	5369	கொலையும் களவுமற்றைப் புலையும் அழிந்தது.
			79. தமிழ்
1	133	445	சீர்கொண்ட ஒற்றிப் பதியுடை யானிடம் சேர்ந்தமணி வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலரடிக்குத் தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கெ ஏர்கொண்ட நல்லருள் ஈயும் குணாலய ஏரம்பனே.
2	241	1178	நீர்மேல் எழுத்தினுக் கிடவே மைவடித் தெடுக்குநர் போல நொடிக்குளே மறையும் உடம்பினை வளர்க்க நொந்தன.....தனக்கருள் புரிவாய் வடிக்குறும் தமிழ்கொண் டன்பருக் கருளும் வள்ளலே
6	273	4515	நின் மெய்யடியார் சபைநடுவே எந்தைஉனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச் செந்தமிழின் வளர்க்கின்றாய்
6	527	19	கண்டவர் உளமெலாம் கட்டு கின்றது தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம் மிக்கது
1	11	98	பாடச்சீர் வல்ல தமிழ்புலவர் மன்னி வயங்குதிரு நல்லமகிழ் இன்ப நவவடிவே
1	24	303	பண்ணீர்மை கொண்டதமிழ்ப் பாமாலை யாற்றுதித்துக் கண்ணீர்கொண்டுன் பாற் கனிந்ததிலை
1	110	243	நடும்பாட்டை நாவலன் வாய்த்திருப் பாட்டை நயந்திட்டநீ.....என்தமிழ்ப் பாட்டையும் கொண்டெனுள்ளத் திடும்பாட்டை நீக்கிலை
1	175	375	நின் சீர்த்தியைச் சேர்த்தியந்த நால்வரும் செய்தமிழ் கேட்டுப் புறத்தில் நடக்கச் சற்றே கால்வரும்
1	133	445	சீர்கொண்ட ஒற்றிப் பதியுடை யானிடம் சேர்ந்தமணி வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலரடிக்குத் தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கெ ஏர்கொண்ட நல்லருள் ஈயும் குணாலய ஏரம்பனே.
1	142	529	அன்பர் புனைந்ததமிழ்ப் பாவாய் நிறைந்தபொற் பாவாய்செந் தேனிற் பகர் மொழியாய்
2	175	768	ஏழியல் பண்பெற்ற முதோடளாவி இலங்கு தமிழ்க் கேழியல் சம்பந்தர் அந்தணர் வேண்டக் கிளர்ந்தநற்சீர்
2	211	991	மூவர்தம் பதிகச் செய்ய தீந்தமிழ்த் தேறல்உண் டருளைத் தருந்தென் ஒற்றியூர் வாழுநம் செல்வத் தந்தை யார்அடிச் சரண்புக லாமே.
2	228	1100	மண்கொண் மாலைபோம் வண்ணம்நல் தமிழ்ப்பூ மாலை சூட்டும் வருதி என் மனனே.
2	228	1102	மருவின் நின்றநன் மணங்கொளும் மலர்ப்பூ மாலை சூட்டும் வருதிஎன் மனனே.
2	228	1103	வரும்பைஞ் சீர்த்தமிழ் மாலையோ டணிபூ மாலை சூட்டும் வருதிஎன் மனனே.
2	229	1104	மதன இன்தமிழ் மாலையோ டணிபூ மாலை சூட்டும் வருதிஎன் மனனே.
2	241	1178	மடிக்குறும் நீர்மேல் எழுத்தினுக் கிடவே மைவடித் தெடுக்குநர் போல நொடிக் குளேமறையும் உடம்பினை வளர்க்க நொந்தனன் .....தனக்கருள் புரிவாய் வடிக்குறும் தமிழ்கொண் டன்பருக் கருளும் வள்ளலே
2	255	1276	நித்தம் நின்னடி அன்றிஒன் றேத்தேன் நித்த னேஅது நீஅறி யாயோ புத்த ருந்தமிழ் ஒற்றியூர் அரசே
2	278	1405	பற்றும் செழுந்தமிழால் பாடுகின்றோர் செய்தபெருங் குற்றம் குணமாகக் கொள்ளும் குணக்கடலே
2	335	1768	திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனால்
2	341	1785	சங்கம்வளர்ந் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச் சரச்சுவதி தன்னை அன்பர் துங்கமுறக் கலைபயிற்றி....தொழுதுபுகழ் சாற்று கிற்பாம்.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

2அ	377	2018	திருத்தகுசீர்த் தமிழ்மறைக்கே முதலாய வாக்கதனால் திருப்பேர் கொண்டு ஒருகோடி தெண்டனிட்டே உரைக்கின்றேன் யன்பால் காக்கஅன்றே
2அ	377	2019	அறு மாமுகன்மேல் நன்மைமிகு செந்தமிழ்ப்பா நாம்உரைக்கச் - சின்மயத்தின் பொய்யகலப் போற்றுவம் இப்போது.
3	404	2225	வடிக்குந் தமிழ்த்தீந் தேன்என்ன வசனம் புகல்வார் ஒற்றிதனில் நொடிக்கும் படிக்கு மிகுங்காம நோயால் வருந்தி நோவதுவே.
4	480	2653	அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண் டையநீத் தருளிய அரசே
4	485	2676	தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க....மாசகன்ற நீதிருவாய் மலர்ந்த தமிழ் மாமறையின் ஆசகன்ற அனுபவம்
5	524	2910	சைவ நாயக சம்பந்தன் ஆகிய தமிழ் அருட் குன்றேஎன் தெய்வ
5	533	2973	அடுத்திலேன் நின்அடியர் அவைக்குட் சற்றும் அன்பிலேன் நின்தொழும் பன் ஆகேன்.... மதுரத் தமிழ்ச்சொல் மாலை தொடுத்திலேன்
5	572	3208	தமிழ்ப் பாவொடுநா யடியேன்சொற் பாவும் ஏற்றுப்....பெரிய யானைக் கோ டேந்தும் அணிநெடுந்தோட் குமாரகுரு வேபரம குருவே போற்றி.
6	273	4515	நின் மெய்யடியார் சபைநடுவே எந்தைஉனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத் தருளிச் செந்தமிழின் வளர்க்கின்றாய்
6	295	4624	பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம் பேய்ப்பிடிப் புற்றபிச்சுப் பிள்ளைவிளை யாட்..... போருற் றிறந்துவீண் போயினார் இன்னும்வீண் போகாத படிவிரைந்தே
6	301	4643	பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடும்ஓர் பவநெறி இதுவரை பரவிய திதனால் செந்நெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர் செறிஇருள் அடைந்தனர்
6	302	4651	சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே
6	303	4656	ஓகள மதங்களை முழுவதும் மாற்றி ஒருநிலை ஆக்கஎன் றுரைத்தமெய்ப் பரமே
6	312	4697	கதிஇ ருக்கின்ற திருச்சிற்றம் பலத்திலே கருணை நிதிஇ ருக்கின்ற தாதலால்..... விதியை நோமினோ போமினோ சமயவெப் பகத்தே.
6	319	4729	சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
6	320	4735	உயர் குலம்என்றும் தாழ்ந்தகுலம் என்றும் வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்காண் கின்றீர் புரையுறுநும் குலங்கள்எலாம் புழுக்குலம்
6	324	4760	சாதிகுலம் என்றும்சமயமதம் என்றுமுப நீதிஇயல் ஆச்சிரம நீட்டென்றும்
6	329	4796	உடைந்தசம யக்குழிநின் றெழுந்துணர்மின் அழியா ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற் றுவந்தே.
6	330	4802	முயன்றுலகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும் முடுகி அழிந் திடவும்ஒரு மோசமும்இல் லாதே இயன்றஒரு சன்மார்க்கம் எங்குநிலை பெறவும்
6	331	4805	பொறித்தமதம் சமயம்எலாம் பொய்பொய்யே அவற்றில் புகுதாதீர் சிவம்ஒன்றே பொருள்எனக்கண் டறிமின்
6	338	4847	சழக்குவெளுத் ததுசாதி ஆச்சிரமா சாரம் சமயமதா சாரம்எனச் சண்டையிட்ட கலக வழக்குவெளுத் தது
6	361	4990	சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே சத்தியச் சுத்தசன் மார்க்க வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
6	382	5174	எச்சம யங்களும் பொய்ச்சம யமென்றீர் இச்சம யம்இங்கு வாரீர் மெய்ச்சம யந்தந்தீர் வாரீர்.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	387	5217	சாதிமதந் தவிர்த்தவரே அணையவா ரீர்
6	407	5369	மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
6	463	5800	மதம்எனும்பேய் பிடித்தாட்ட ஆடுகின்றோர் எல்லாம் மன்றிடத்தே வள்ளல்செயும் மாநடம்காண் குவரோ
6	463	5801	எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ்சோ தியரே இறைவர்என்ப தறியாதே இம்மதவா திகள்தாம் கவ்வைபெறு குருடர்கரி கண்டகதை போலே கதைக்கின்றார்
6	464	5806	சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே ஆதியில்என் உளத்திருந்தே.....அறிவிக்க அறிந்தேன்
80. மூடபழக்க வழக்கங்களை கண்டித்தல் (கண்மூடிபழக்கமெல்லாம் மண்மூடிபோக)			
6	85	3440	கூறுகின்ற சமயம்எலாம் மதங்கள்எலாம் பிடித்துக் கூவுகின்றார் பலன்ஒன்றும் கொண்டறியார் வீணே நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல் நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ
6	85	3442	கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும் கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போக
6	133	3750	இருளான மலம்அறுத் திகபரங் கண்டே எல்லா உயிர்களும் இன்புற்று வாழ மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம் வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும் அருளான வீதியில் ஆடச்செய் தீரே அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.
6	134	3750	இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத் தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் னீதி சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும் அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.
81. சிறுதெய்வ வழிபாட்டைக் கண்டித்தல்			
6	96	3530	நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பலபெயர் நாட்டிப்.....கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகா லத்திலும் பயந்தேன்.
6	337	4338	இயங்காளி புலிகரடி எனப்பெயர்கேட் டுளம்நடுங்கி இருந்தேன் ஊரில் சயங்காளிக் கோயிலைக்கண் டஞ்சிமனம் தழுதழுத்துத் தளர்ந்தேன்
82. வேதம், ஆகமம், புராணம், சாத்திரம்			
6	85	3441	வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள் விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும் .....ஏதமற உணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர் எள்ளளவும் எண்ணம் இலேன்
6	106	3609	அறிவாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும் சித்தாந்த வேதாந்தப் பொதுசிறத்தல் வேண்டும்
6	134	3751	இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
6	160	3878	இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம் இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார் .....செயல்அனைத்தும் அருள்ஒளியால் காண்க
6	160	3879	தோன்றியவே தாகமத்தைச் சாலம்என உரைத்தேம் சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக்கண் டறியேல் ஊன்றியவே தாகமத்தின் உண்மை நினக்காகும் உலகறிவே தாகமத்தைப் பொய்எனக்கண் டுணர்வாய்
6	264	4439	ஆரணமும் ஆகமமும் ஆங்காங் குணர்த்துகின்ற காரணமும் காரியமும் காட்டுவித்தான்
6	323	4757	ஆரணமும் ஆகமமும் ஆங்காங் குரைக்கின்ற காரணமும் காரியமும் காட்டுவித்தான்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	324	4767	சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி நேத்திரங்கள் போற்காட்ட நேராவே
6	324	4768	வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர் வேதாக மத்தின் விளைவறியீர்
6	367	5037	வேதா கமங்கள் புகன்ற விரிவை ஒன்றொன் றாக வே விளங்க விரைந்து தெரித்தாய் பயிலும் ஆசை போக வே
6	372	5079	வேதா கமத்தின் அடியும் நடுவும் முடியு மற்று மேவெட்ட வெளிய தாகி விளங்கக் கண்டேன் முற்று மே
6	407	5370	குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று
83. ஏகான்ம வாதத்தை கண்டித்தல் (நாம்பிரமம்)			
1	69	636	நாமென்றும் நம்மையன்றி நண்ணும் பிரமமில்லை ஆமென்றும் சொல்பவர்பால் ஆர்ந்துறையேல்
5	577	3226	நாம்பிரமம் நமைஅன்றி ஆம்பிரமம் வேறில்லை நன்மை தீமைகளும் இல்லை
6	261	4420	நாமே பிரமம்எனப் பிறர்க்குரைத்துப் பொங்கிவழிந் தாங்கே பேசுகின்ற பெரியவர்தம் பெரியமதம் பிடியேல்
84. கடவுள் ஒருவரே			
1	126	390	ஒன்றேஎன் ஆருயிர்க் கோருற வேஎனக் கோரமுதே நன்றேமுக் கண்ணுடை நாயக மே
2	239	1163	ஒன்றுநின் தன்மை அறிந்தில மறைகள்.....நன்றுநின் தன்மை நான்அறிந் தேத்தல்
5	491	2692	ஒன்றல இரண்டும் அலஇரண் டொன்றோ டுருஅல அருஅல.....அகண்ட பூரண மாம்சிவம் ஒன்றே
6	56	3280	ஒன்றும்அலார் இரண்டும்அலார் ஒன்றிரண்டும் ஆனார் உருவும்அலார் அருவும்அலார் உருஅருவும் ஆனார் அன்றும்உளார் இன்றும்உளார் என்றும்உளார் தமக்கோர் ஆதியிலார் அந்தமிலார் அரும்பெருஞ்சோ தியினார்.....ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர்.
6	108	3620	ஒன்றெனக் காணும் உணர்ச்சிஎன் றுறுமோ ஊழிதோ றூழிசென் றிடினும் என்றும்இங் கிறவா இயற்கைஎன் றுறுமோ இயல்அருட் சித்திகள் எனைவந் தொன்றல்என் றுறுமோ
6	159	3877	எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்குசிவம் ஒன்றே என்னாணை என்மகனே இரண்டில்லை
6	179	3968	வித்தெலாம் அளித்த விமலனை எல்லா விளைவையும் விளைக்கவல் லவனை..... சித்தெலாம் வல்ல சித்தனை ஒன்றாந் தெய்வத்தைக் கண்டுகொண் டேனே.
6	209	4117	ஒன்றே சிவமென ஓங்குகின்ற பெருநிலை பெற்றனன் சுத்தசன் மார்க்கம் பிடித்துநின்றேன் இருநிலை முந்நிலை எல்லா நிலையும் எனக்குளவே.
6	223	4216	தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும் சேர்கதி பலபல செப்புகின் றாகும்.....மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
6	232	4271	ஒன்றே சிவம்என் றுணர்ந்திவ் வுலகமெலாம் நன்றே ஒருமையுற்று
6	261	4418	ஒளிஒன்றே அண்டபகி ரண்டமெலாம் விளங்கி ஓங்குகின்ற தன்றி..... தளிநின்ற ஒளிமயமே வேறிலைஎல் லாமும் தான்எனவே தாகமங்கள் சாற்றுதல்சத் தியமே.
6	276	4541	ஒன்றுகண் டேன்திரு அம்பலத் தேஒளி ஓங்குகின்ற நன்றுகண் டேன்உல கெல்லாம் தழைக்க நடம்புரிதல்
6	320	4733	எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர் கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
6	323	4751	ஒன்றே சிவம்என் றுணர்ந்தேன் உணர்ந்தாங்கு நின்றேமெய்ஞ் ஞான நிலைபெற்றேன்
6	344	4880	உருவ ராகியும் அருவின ராகியும் உருஅரு வினராயும் ஒருவ ரேஉளார் கடவுள்கண் டறிமினோ உலகுளீர்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	361	4989	சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடும் கேட்பீர் என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர் எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர் புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த் தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவம் ஒன்றே தன்ஆணை என்ஆணை சார்ந்தறிமின் ஈண்டே.
6	362	4993	ஒன்றுமுன் என்பால் எண்ணிடக் கிடைத்தே வுவைக்குமேற் றனைஅருள் ஒளியால் நன்றுகண் டாங்கே அருட்பெருஞ்ஜோதி நாதனை
6	463	5801	எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ்சோ தியரே இறைவர்என்ப தறியாதே இம்மதவா திகள்தாம் கவ்வைபெறு குருடர்கரி கண்டகதை போலே
6	464	5804	எம்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்.....மெய்ப்பொருளாம் சிவம்ஒன்றே என்றறிந்தேன் உனக்கும் விளம்புகின்றேன்.
85. அன்பே சிவம்			
2அ	387	2069	அன்பென்ப தேசிவம் உணர்ந்திடுக எனஎனக்கு அறிவித்த சுத்தஅறிவே
6	1	3258	அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே அன்பெனும் குழல்புகும் அரசே.....அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே அன்புரு வாம்பர சிவமே.!
86. கருணையும் சிவமே			
6	75	3391	கருணையும் சிவமே பொருள்எனக் கருதும் கருத்தும்உற் றெம்மனோர் களிப்பப்
6	99	3561	கருணையும் சிவமே பொருள்எனக் காணும் காட்சியும் பெருகமற்றெல்லாம் மருள்நெறி எனநீ எனக்கறி வித்த வண்ணமே பெற்றிருக் கின்றேன்
87. ஒருமைப்பாடு			
6	105	3604	ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமைஉளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்
6	105	3605	வரைசேர்எவ் வுலகமும்ஓர் ஒழுக்கமுறல் வேண்டும்
6	197	4051	தெவ் வுலகமும்ஓர் சன்மார்க்கம் அடைந்தே
6	342	4871	எவ்வுயிரும் பொதுஎனக்கண் டிரங்கிஉப கரிக்கின்றார் யாவர் அந்தச் செவ்வியர்தம் செயல்அனைத்தும் திருவருளின் செயல்
6	342	4872	எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும் தம்உயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்அவர் உளந்தான் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்
5	535	2984	சொல் அடங்காத் துயர் இயற்றும் துகள்சேர் சனனப் பெருவேரைக் கல் எறிந்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே.
5	535	2986	போதல் இருத்தல் எனநினையாய் புனிதர் சனனப் போரோடு சாதல் அகற்று..... தற்பரமே
5	536	2989	இலக்கம் அறியா இருவினையால் இம்மா னிடம்ஒன் றெடுத்தணூயேன் விலக்கம் அடையா வஞ்சகர்பால் வீணாட் போக்கி மேவிமனத் தலக்கண் இயற்றும் பொய்வாழவில் அலைந்தேன்
5	556	3101	அருள்குரு பரனை வருப்புறு பொருப்பனை வினையைத் தள்ளவத் தருள்செய் திடுந்தயா நிதியைத் தணிக்கையில் கண்டிறைஞ் சுவனே.
5	556	3104	எத்தனை நாள்செல்லும் இடர்க்கடல் விடுத்தே....ஊழை நீக்கிநல் அருள்தருந் தெய்வமே உத்தமச் சுகவாழ்வே.
5	563	3147	விளைப்பேன் பவமே அடிச்சிறியேன் வினையால் விளையும் வினைப்போகம் தளைப்பேன்.....எனக்கென் குறையுண் டெமதூதன் வளைப்பேன் எனவந் திடில் அவனை மடிப்பேன் கருணை வலத்தாலே.

5	565	3156	பிள்ளைப் பெருமான்.....வஞ்சச சமண வல்இருளை மாய்க்கும் ஞான மணிச் சுடரே.....ஆக்கல் அளித்தல் அழித்தல்எனும் அம்முத் தொழிலும் தருவோனே
5	566	3164	வல்வினைப் பகுதியால் மயங்கி வஞ்சர் தம் கொல்வினைக் குழியிடைக்குதிக் கும்நெஞ்சமே இல்வினைச் சண்முக என்று நீறிடில் நல்வினை பழுக்கும் ஓர் நாடு வாய்க்குமே
5	573	3217	பரம்எது வினைசெயும் பயன்ஏது பதிஏது பசுஏது பாசம்ஏது பத்திஏ தடைகின்ற முத்திஏ தருள்ஏது பாவபுண்யங்கள் ஏது
6	66	3332	பையார் பாம்பு கொடியதெனப் பகர்வார் அதற்கும் பரிந்துமுன்னாள் வல் வினையேன் நையா நின்றேன் ஐயோநான் பாம்பிற் கொடியன் ஆனேனே.
6	76	3396	ஊழ்வி டாமையில் அரைக்கணம் எனினும் உன்னை விட்டயல் ஒன்றும் உற்றறியேன் தாழ்வி லாதசீர் தருவடல் அரசே சத்தி யச்சபைத் தனிப் பெரும் பதியே.
6	91	3562	மலங்கிய மனத்தேன் புகல்வதென் வினையால் மாயையால் வரும்பிழை எல்லாம் அலங்கும்என் பிழைகள் அல்லஎன் றுன்னோ டடிக்கடி அறைந்தனன் ஆண்டே.
6	103	3596	வினையும் ஆணவமும் கயத்தவன் மயக்கும் மருட்சியும் எனது கருத்திலே இனிஒரு கணமும் வியத்திடத் தரியேன் இவையெலாந் தவிர்த்துன் மெய்யருள் அளித்திடல் வேண்டும்.....இலையேல் உயிர்விடு கின்றனன் இன்றே.
6	109	3626	முன்னுழைப்பால் உறும்எனவே மொழிகின்றார் மொழியின் முடிவறியேன் எல்லாம்செய் முன்னவனே நீஎன் தன்னுழைப்பார்த் தருள்வாயேல்
6	125	3709	ஒன்றியே உணவை உண்டுடல் பருத்த ஊத்தையேன் நாத்தழும் புறவே வென்றியே உரைத்து வினைகளே விளைத்த வீணனேன்
6	204	4114	புரைசேர் வினையும் கொடுமாயைப் புணர்ப்பும் இருளும் மறைப்பினொடு புகலும் பிறவாம் தடைகளெலாம் போக்கி ஞானப் பொருள்விளங்கும்
6	213	4147	தாழாதெனை ஆட்கொண் டருளிய தந்தையேநின் ..... ஊழால்வந்த துன்பங்கள் யாவும் ஒழிந்ததன்றே.
6	242	4332	படிற்றுவினை யாலோ இருவகைமா யையினாலோ ஆணவத்தி னாலோ என்னாலோ பிறராலோ எதனாலோ அறியேன்.....நிபுணர்எங்கள் நடராயர் நினைவைஅறிந் திலனே.
6	249	4364	ஊழிதோ றூழி உலவினும் உலவா உடம்பெனக் களித்தனன் ஏழியன் மாட மிசையுற வைத்தான் என்றனள் எனதுமெல் யலே.
6	251	4370	விதியுடையார் ஏத்தநின்ற துதிஉடையார் ஞான விளக்கனைய மெய்உடையார் வெய்யவினை அறுத்த மதிஉடையார்
6	282	4575	மனக்கேத மாற்றிவெம் மாயையை நீக்கி மந்தவினை தனக்கே விடை கொடுத் தாணவம் தீர்த்தருள்
6	282	4576	வாதித்த மாயை வினையா ணவம்எனும் வன்மலத்தைச் சேதித் ..... சாதித் தருளிய நின்னருட் கியான்செயத் தக்கதென்னே.
6	291	4613	எவ்வுலகும் எவ்வுயிரும் எப்பொருளும் உடையதாய் எல்லாஞ்செய் வெவ் வினை தவிர்த்தொரு விளக்கேற்றி என்னுளே வீற்றிருந் தருளும்அரசே
6	300	4641	இருநிலை களும்ஒரு நிலைஎன அறிவாய்..... முன்னிலை பின்னிலை முழு நிலை உளவாம் இந்நிலை அறிந்தவண் எழுநிலை கடந்தே இயனிலை அடைகஎன் றியம்பிய பரமே
6	313	4705	மாயைவினை ஆணவமா மலங்களெலாம் தவிர்த்து வாழ்வளிக்கும் பெருங்கருணை வள்ளல்வரு தருணம்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	317	4721	ஆயாமை யாலேநீர் ஆதிஅ னாதி ஆகிய சோதியை அறிந்துகொள் கில்லீர் மாயாமை பிறவாமை வழியொன்றும் உணரீர் மறவாமை நினையாமை வகைசிறி தறியீர் காயாமை பழுக்கின்ற கருத்தையும் கருதீர்
6	318	4725	வினை மூட்டைடையக் கட்டி மன்சொல்லும் மார்க்கத்தை மறந்துதுன் மார்க்க வழிநடக் கின்றீர் அம்மரணத்தீர்ப் புக்கே என்சொல்ல இருக்கின்றீர்
6	319	4731	ஆற்றுவெள்ளம் வருவதன்முன் அணைபோட அறியீர் கூற்றுவருங் கால் அதனுக் கெதுபுரிவீர் ஐயோ வேற்றுரைத்து வினைபெருக்கி மெகின்ற உலகீர்
6	322	4747	வெவ்வினையும் மாயை விளைவும் தவிர்ந்தனவே செவ்வைஅறி வின்பம் சிறந்தனவே
6	345	4885	மருட்பெரு மாயை முற்றும் மடிந்தன வினைக ளோடே இருட்பெருந் தடையை நீக்கி இரவியும் எழுந்த தன்றே.
6	349	4906	நல்வினை சிறிது நயந்திலேன் என்பாள் செல்வினை ஒன்றுந் தெரிந்திலன் ஐயோ தெய்வமே தெய்வமே என்பாள் வெல்வினை மன்றில் நடம்புரி கின்றார் வல்வினை உடையேன் என்றுளம் பதைப்பாள்
6	352	4925	வினைத்தடைதீர்த் தெனைஆண்ட மெய்யன்மணிப் பொதுவில் ..... தினை த்தனைபெற் றவரேனும் சாலுமுன்னே உலகில் செத்தவர்கள் எல்லாரும் திரும்பவரு கென்று நினைத்தவுடன் எதிர்வந்து நிற்பர்கண்டாய்
6	368	5041	தடையா தினிஉள் மூல மலத்தின் தடையும் போயிற் றே சமய விகற்பம் எல்லாம் நீங்கிச் சமம தாயிற் றே.
6	369	5053	துட்ட வினையைத் தீர்த்து ஞானச் சுடருள் ளேற்றி யே தூண்டா தென்றும் விளங்க வைத்தாய் உண்மை சாற்றி யே.
6	372	5074	மலமும் மாயைக் குலமும் வினையும் முழுதும் வெந்த தே எல்லா நலமும் ஆன அதனை உண்டு வந்த தே
6	407	5370	வெறித்தவெவ் வினைகளும் வெந்து குலைந்தது விந்தைசெய் கொடுமாயைச் சந்தையும் கலைந்தது.
6	410	5394	தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம் தெய்வங்கள் எல்லாந் தெரிசிக்கும் பாதம்
6	414	5427	ஈனந்த மாயை இருள்வினை சோர்ந்தது என்னருட் ஜோதிஎன் உள்ளத்தில் ஆர்ந்தது
6	414	5431	வெவ்வினைக் காடெலாம் வேரோடு வெந்தது வெய்ய மாமாயை விரிவற்று நொந்தது
6	426	5560	இருட்பெரு மாயையை விண்டே னே எல்லாம் செய் சித்தியைக் கொண்டேனே.
6	460	5785	விடிந்ததுபேர் ஆணவமாம் கார்இருள்நீங் கியது வெய்யவினைத் திரள் எல்லாம் வெந்ததுகாண்
120. பதி பசு பாசம்			
2	183	815	பச்சிலை இடுவார் பக்கமே மருவும் பரமனேஎம் பசு பதியே
	300	1549	மதியும் கல்வியும் வாய்மையும் வண்மையும் பதியும் ஈந்தெம்ப சுபதி மெய்ந் நெறிக் கதியின் வைப்பது நின்கடன்.
	307	1580	விதிமுதற் கிறையே போற்றி மெய்ஞ்ஞான வியன்நெறி விளக்கமே போற்றி பதிபசு பதியே போற்றி நின்பாதம் பாடஎற் கருளுக போற்றி.
	321	1683	மூவாத முதலாய்ச் சுத்த நன்னிலைக்கும் நிலையாய பசுபதியை மனனேநீ நவின்றி டாயே.
	325	1706	பெருமைக் கதியைப் பசுபதியைப் பெரியோர் எவர்க்கும் பெரியோனை இருமைப் பயனுந் தருவானை என்னே எண்ணா திருந்தேனே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

	373	2005	பவமான எழுவகைப் பரப்பான வேலையிற் பசுவான பாவி இன்னும் பற்றான குற்றமதை உற்றலை துரும்பெனப் படராது மறையனைத்தும்
	385	2061	மடந்தை மலையாண் மனமகிழ மருவும் பதியைப் பசுபதியை அடர்ந்த வினையின் தொடக்கைஅறுத் தருளும் அரசை
	415	2318	தேனோர் குதலை மகளேநீ செய்த தவந்தான் எத்தவமோ பானோர் நீற்றார் பசுபதியார் பவள வண்ணர் பல்சடைமேல்
	423	2383	நாக அணியார் நக்கர்எனும் நாமம்உடையார் நாரணன்ஓர் பாகம் உடையார் மலைமகள்ஓர் பாங்கர் உடையார் பசுபதியார்
	447	2513	பவநிலைக்கு கடைநாயேன் பயின்றதவம் அறியேன் பரம்பரமா மன்றில் நடம் பயின்றபசு பதியே
	448	2518	இருளுருவின் மனக்கொடியேன் யாதுதவம் புரிந்தேன் எல்லாம் வல்ல வனாகி இருந்தபசு பதியே
	449	2519	தொழுதெனைப் பாடுக என்று சொன்னபசுபதி நின் தூய அருட் பெருமைய என்சொல் வியக்கேனே
	455	2547	பாதியிலே ஒன்றான பசுபதிநின் கருணைப் பண்பை அறிந்தேன் ஒழியா நண்பை அடைந்தேனே
	458	2563	பசுபாச பந்தம் அறும் பாங்குதனைக் காட்டிப் பரமாகி உள்ளருந்து பற்றவும் புரிந்தே
	460	2568	வானது வாய்ப் பசுமலம் போய்த் தனித்து நின்குற்தருணம் வயங்கும் பரானந்த சுகம் வனைந்து கொள்ளுந் தருணம்
	465	2587	பண்விருப்பத் தருமறைகள் பலபலநின் றேத்தாப் பாமசிதம் பரநடனம் பயின்ற பசு பதியே
	499	2749	பசு பாசம் அற்றோர்க் கணியாக நின்ற அருட்செல்வமே தணிகாசலனே
	573	3217	பரம்ஏது வினைசெயும் பயன்ஏது பதிஏது பசுஏது பாசம்ஏது பத்திஏ தடைகின்ற முத்திஏது அருள் ஏது பாவபுண்ணியங்கள் ஏது
	109	3627	பழித்துரைப்பார் உரைக்கஎலாம் பசுபதிநின் செயலே பரிந்தெனையும் பாடு வித்துப் பரிசுமகிழ்ந் தருளே.
	172	3934	பாட்டுவந்து பரிசளித்த பதியைஅருட் பதியைப் பசுபதியைக் கனகசபா பதியை உமாபதியைத் கண்டுகொண்டேன்
	175	3947	பண்ணிய தவமும் பலமும்மெய்ப் பலஞ்செய் பதியுமாம் ஒருபசு பதியை நண்ணிஎன் உளத்தைத் தன்னுளம் ஆக்கி
	426	5563	கருணாநிதியே சபாபதியே கதிமா நிதியே பசுபதியே
121. பசுபதி			
	195	889	வேறோர் தேவரை அறியேன் கடவுள்நின் திருவடி அறிக படைமைசேர் கரத்தெம் பசுபதி நீயே
122. அமுதம்			
1	93	150	தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத் தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச எண்ணமுதப் பளிக்குநிலா முற்றத் தேஇன் இசைவீசத் தண்பனிநீர் எடுத்து வீசப் பெண்ணமுதம் அனையவர் விண்ணமுதம் ஊட்டப்
1	121	344	நல்லமு தம்சிவை தான்தரக் கொண்டுநின் நற்செவிக்குச் சொல்ல முதந்திகழ் பெண்ணாக வென்பை எழுப்பியநாள் சில்லமு தம்பெற்ற தேவரை வானஞ் சிரித்ததன்றே.
1	123	358	மங்கைக் கிடந்தந்த புத்தமுதே செங்கரும் பேநறுந் தேனே மதுரச் செழுங்கனியே
1	124	368	தண்மதி யோஅதன் தண்ணமு தோஎனச் சார்ந்திருணீத் துண்மதி யோர்க்கின் புதவுநின் பேரருள் உற்றிடவே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	125	379	சொல்லுகின் றோர்க்கமு தம்போல் சுவைதரும் தொல்புகழோய் மெல்லுகின் றோர்க்கொரு நெல்லவல் வாய்க்கில் விடுவரன்றே.
1	129	414	கான்போல் இருண்டஇவ் வஞ்சக வாழ்க்கையில் கன்னெஞ்சமே மான்போல் குதித்துக் கொண் டோடேல் அமுத மதிவிளங்கும்
1	134	452	பெண்ணே மலைபெறும் பெண்மணி யேதெய்வப் பெண்ணமுதே மண்நேயம் நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.
1	134	453	மலையான் தவஞ்செய்து பெற்றமுத் தேஒற்றி வாழ்கனகச் அலையான் மகடல் பள்ளிகொண் டான்தொழும் ஆரமுதே
1	136	470	கூர்ந்தே குலாவும்அக் கொள்கையைக் காணில் கொதிப்பளென்று தேர்ந்தே அக் கங்கையைச் செஞ்சடை மேல்சிறை செய்தனர்
1	136	472	ஒப்போ தருமலைப் பெண்ணமு தேஎன்று வந்துநினை எப்போதும் சிந்தித் திடர் நீங்கி வாழ எனக்கருள்வாய்
1	136	477	கரநோக்கி நல்லமு தாக்கிநிற் போற்றுங் கருத்தினர்ஆ தரநோக்கி உள்ளிருள் நீக்கிமெய்ஞ் ஞானத் தனிச்சுகந்தான் வரநோக்கி
1	137	478	துன்னும் உயிர்ப்பயிர் எல்லாந் தழைக்கச் சுகக்கருணை என்னும் திருவமு தோயாமல் ஊற்றி எமதுளத்தின்
1	137	479	உள்ளம் குளிரமெய் பூரிப்ப ஆனந்தம் ஊற்றெடுப்பத் தெள்ளம் குளிர்இன் அமுதே அளிக்கும்
1	137	480	மாமணிக்கன்று ஆநந்த இன்னமு தூற்றும் திருமுலை ஆரணங்கே
1	138	495	மனங்கடந் தோதும்அவ் வாக்கும் கடந்த மறைஅன்னமே தினங்கடந் தோர்புகழ் ஒற்றிஎம் மானிடம் சேரமுதே
1	139	498	சேய்க்குமகிழ்ந் தருட்பால் அளிக்கும் தனத்தனமே எம் அகங்கலந்த இருட்பால் அகற்றும் இருஞ்சுட
1	139	502	அடியருள் தித்திக்கும்செம் பாலே மதுரச்செம் பாகேசொல் வேதப் பனுவல்முடி மேலே விளங்கும் விளக்கே
1	141	522	சொற்றேன் நிறைமறைக் கொம்பேமெய்ஞ் ஞானச் சுடர்க்கொழுந்தே
1	143	538	அம்பலத் தாடுகின்ற முத்தனைச் சேர்ந்தஒண் முத்தே மதிய முகவமுதே
1	144	541	புணைநின் துணைப்பதமே கரும்பே கருணைக் கடலே அருண் முக்கனி நறவே
1	146	556	நேராய் விருந்துண் டோவென்றார் நீர்தான்.....வாயமுது மலர்க்கை யமுது மனையமுது மேரா யுளவே யென்கின்றா
1	146	558	வந்தார் பெண்ணே யமுதென்றார் வரையின் சுதையிங் குண்டென்றேனந்தார் குழலாய் பசிக்கினும்பெண் ணாசை விடுமோ வமுதின்றே லெந்தா ரந்தா வென்கின்றா ரிதுதான்
1	149	585	தவிசி னிலைகுறைத்தார் நன்றா ரமுது சிறிதுமிழ்ந்தார் நடித்தா ரியாவுமைய மென்றே னின்றா மரைக்கை யேந்துகின்றா ரிது
1	152	609	மடவா ரிரக்கும் வகையதுதான் முன்னி லொருதா வாமென்றேன்.....மென்றே னெமக்குந் தெரியு மெனத்திருவாயின்ன லமுத முகுக்கின்றாரிது
2	166	725	தேங்கு லாவுசெங் கரும்பினும் இனிதாய்த் தித்தித் தன்பர்தம் சித்தத்துள் ஊறி ஓங்கும்
2	177	728	துன்று தீம்பலாச் சுளையினும் இனிப்பாய்த் தொண்டர் தங்கள்நாச் சுவைபெற ஊறி ஒன்றும்
2	167	729	கரைக்கும் தெள்ளிய அமுதமோ தேனோ கனிகொலோ எனக் கனிவுடன் உயர்ந்தோர் உரைக்கும்

2	167	731	பண்ணும் இன்சுவை அமுதினும் இனிதாய்ப் பத்தர் நாள்தொறும் சித்தமுள் ளூற உண்ணும் ஓம்சிவ சண்முக சிவஓம் ஓம்சி வாய
2	196	893	நல்அமு தனையார் நின்திரு வடிக்கே நண்புவைத் துருகுகின் றனரால் சொல் அமு தனைய தோகைஓர் பாகம் துன்னிய தோன்றலே கனியாக் கல்அமு தாக்கும் கடன்உனக் கன்றோ
2	200	931	உண்ணமுடி யா அமுதாம் உன்னை அன்றி எவ்வெவர்க்கும் எண்ணமுடியாதே எழுத்தறியும் பெருமானே.
2	216	1020	உள்ளும் புறமும் நிறைந்தடியார் உள்ளம் மதுரித் தூறுகின்ற தெள்ளும் அமுதாம்..... ஒற்றியில்போய்க் கண்டேன் பசியைக் கண்டிலனே
2	224	1082	வந்தனை செய்பவர் கண்ட மருந்தை ஆலம் அமுதின் அருந்தல் செய்தானை ஆதியை ஆதியோ டந்தமி லானைக்
2	226	1094	தேன்நெய் ஆடிய செஞ்சடைக் கனியைத் தேனைமெய் அருள்திரு வினை அடியர் ஊனை நெக்கிட உருக்கிய ஒளியை உள்ளத் தோங்கிய உவப்பினை
2	246	1223	கள்உண்ட நாய்போல் கடுங்காம வெள்ளமுண்டு துள்உண்ட நெஞ்சத் துடுக்கடக்கி அன்பர்கள் தம் உள்உண்ட தெள்அமுதே
2	252	1259	அருட் கரும்பே கற்ற நெஞ்சகம் கனிந்திடும் கனியே எண்ணுள் உட்படா இன்பமே..... எனினும் மண்ணுள் மற்றியான் வழிவழி அடியேன் மாயமன்றிதுன் மனம்அறிந் ததுவே
2	261	1310	எண்ணிலா நினைப் புற்றதின் வழியே இன்ப துன்பங்கள் எய்தினன் நெஞ்சம் கண்ணிலாக் குரங்கென உழன்றதுகாண் பெண்நி லாவிய பாகத்தெம் அமுதே
2	262	1313	சொல்லும் சொல்லள வன்றுகாண் நெஞ்சத் துடுக்க னைத்தும்இங் கொடுக்குவ தெவனோ.....அல்லும் எல்லும்நின் றகங்குழைந் தேத்தும் அன்பருள் ஊறும் ஆனந்தப் பெருக்கே
2	262	1315	அன்ன ஊர்தியும் மாலும்நின் றலற அடியர் தங்களுள் அமர்ந்தருள் அமுதே
2	278	1409	முத்திக்கு வித்தே முழுமணியே முத்தர்உளம் தித்திக்கும் தேனே சிவமே செழுஞ்சுடரே
2	289	1471	என்றுநின் அருள்நீர் உண்டுவந் திடும்நாள் என்றுநின் உருவுகண்டிடும் நாள் என்றுநின் அடியர்க் கேவல்செய் திடும்நாள் என்றென தகத்துயர் அறும்நாள்
2	292	1488	அண்ணல் நின்திரு அருட்டுணை அடைந்தால் அமைந்து வாழ்குவன் அடை வகை அறியேன் உண்ண நல்அமு தனையஎம் பெருமான் உனை அலால்
2	302	1566	உண்ணும் அமுதே நீ அமர்ந்த ஒற்றியூர் கண்டென் மனமும் கண்ணுங்களிக்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன்
2	313	1628	தென்பால் நோக்கி இன்பநடம் செய்யும் இறைவா சிறுவனுக்கா முன்பால் அமுதக் கடல்அளித்த முதல்வா என்னை முன்னுதியே.
2	342	1774	உலகின் உயிர்வகை உவகையுற இனிய அருளமுதம் உதவும் ஆனந்த சிவையே கலகமுறு சகசமல இருளகல வெளியான காட்சியே கருணை
2	342	1792	நானது வாகு மருந்து – சீவன் முத்த ருளத்தே முடிக்கு மருந்து.
2	358	1922	இனந்திருத்தி எனையாட்கொண் டென்னுள்அமர்ந் தெனைத்தான் எவ்வுலகும் தொழநிலைமேல் ஏற்றியசற் குருவே கனந்தருசிற் சுகஅமுதம் களித்தளித்த நிறைவே
2அ	400	2203	நாசமிலா நின்னருளாம் ஞானமருந் துண்ணவுள்ளே ஆசைபொங்குகின்ற தெனக் கன்புடைய ஐயாவே.
3	412	2293	வருந்தேன் மகளீர் எனைஒவ்வார்.....தருந்தேன் அமுதம் உண்டென்றும்சய வாழ்வில் தருக்கிமகிழ்ந் திருந்தேன்

3	423	2378	ஆரா அமுதாய் அன்புடையோர் அகத்துள் இனிக்கும் அற்புதனார் தீராவினையும் தீர்த்தருளும் தெய்வ மருந்தார் சிற்சபையார்
4	451	2530	தொண்டனென எனையும் அழைத் தொன்கையிலென் றளித்தாய் உண்டவர்கள் உணுந்தோறும் உவட்டாத அமுதே
4	252	2535	பருவமுறு தருணத்தே சர்க்கரையுத்தேனும் பாலும்நெய்யும் அளித்த நறும்பழர சமும் போல மருவும்உளம் உயிர் உணர்வோ டெல்லாந் தித்திக்க வயங்கும்
4	458	2559	பக்குவத்தால் உயர்வாழைப் பழங்கணிந்தாற் போலும் பரங்கருணையாற் கணிந்த பத்தர்சித்தந் தணிலே பொக்கமில் அப்பழந்தனில் தெள்ள முதங்கலந்தாற் போற்கலந்து தித்திக்கும்
4	458	2561	எவ்வுலங்கும் எவ்வுயிரும் எச்செயலும் தோன்றி இயங்கும் இடமாகி எல்லாம் முயங்கும் இடமாகி தெவ்வுலகும் நண்புலகுஞ் சமனாகக் கண்ட சித்தர்கள் தம் சித்தத்தே தித்திக்கும் பதங்கள்
4	458	2562	ஊனினொடும் உயிருணர்வுங் கலந்து கலப்புறுமாறுறு வித்தப் பின்கரும் ஒப்புவருந் தருணம் தேனினொடு காலந்த அமுதென ருசிக்க இருந்த திருவடிகள் வருத்து
5	518	2873	மெய்யர் உள்ளகத்தின் விளங்கும் நின்பத்மாம்.....ஐயரும் இடல்ப்பால் அம்மையும் வருந்தி அளித்திடும் தெள்ளிய அமுதே
5	540	3019	அமுத கண்கள் நீர் ஆர்ந்திடும் அடியர் அகத்துள் ஊறிய ஆனந்த அமுதே
5	550	3075	சிவம் எனும் தருமக்கடல் அகத்தெழுந்த தெள்ளிய அமுதமே தேனே
5	551	3081	அன்பொடும் பரமன் உமைகையில் கொடுக்க அகமகிழுழ்ந் தணக்கும் ஆர் அமுதே
6	459	5766	ஆண்மகனாய் அறிந்திலையோ அவரைக் கேழ்வகையில் அகம்புணர்ந்தேன் அவர்கருணை அமுதம் கிடைத்ததுநான் ஆண்மகனா கின்றததி சயமோ.
1	45	229	எட்டிரண்டும் சித்திக்கும் யோகியர்தம் சிந்தைதனில் தேன்போன்று தித்திக்கும் சேவடியின் சீரழகும்
6	41	3259 /1255	கருமபுறு சாறும் கனிந்தமுக் கனியின் விரும்புறும் இரத்மும் மிக்கதீம் பாலும்
6	41	3259 /1255	குணாங்கொள் கோல்தேனும் கூட்டி ஒன்றாக்கி மணாங்கொளப் பதஞ்செய்வகை உற இயற்றிய
6	41	3259 /1256	உணவெனப் பால்கால் உரைக்கினும் நிகரா வணமுறும் இன்ப மயமே அதுவாய்க்
6	41	3259 /1257	கலந்து அறிவுருவாய்க் கருதுதற்கு அரிதாய் நலந்தரு விளக்கமும் நவிலரும் தண்மையும்
6	41	3259 /1258	உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள் உள்ளதாய் என்தன் உயிர் உளம் உடம்புடன்
6	41	3259 /1259	எல்லாம் இனிப்ப இயலுறு சுவையளித்து எல்லாம் வல்லசித்து இறைகைய தாகிச்
6	41	3259 /1260	கடந்தென தறிவாம் கனன்மேற் சபைநாடு நடந்திகழ் கின்றமெய்ஞ் ஞான ஆரமுதே
6	41	3259 /1261	சத்திய அமுதே தனித்திற்ரு அமுதே நித்திய அமுதே நிறைசிவ அமுதே
6	41	3259 /1262	சச்சி தானந்தத் தனிமுதல் அமுதே மெய்ச் சிதாகாச விளைவருள் அமுதே

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	41	3259 /1263	ஆனந்த அமுதே அருள்ஒளி அமுதே தானந்தம் இல்லாத் தத்துவ அமுதே
6	41	3259 /1264	நவநிலை தரும்ஓர் நல்லதெள் அமுதே சிவநிலை தனிலே திரண்டஉள் அமுதே
6	41	3259 /1265	பொய்படாக் கருணைப் புண்ணிய அமுதே கைப்படாக் பெருஞ்சீர்க் கடவுள் வான் அமுதே
6	41	3259 /1266	அகம்புறம் அகப்புறம் ஆகிய புறம்புறம் உதந்தநான்கு இடத்தும் ஓங்கிய அமுதே
6	41	3259 /1267	பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே தனிமுதல் ஆய சிதம்பரம் அமுதே
6	41	3259 /1268	உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே அலகிலாப் பெருந்திறல் அற்புத அமுதே
6	66	3330	திரையறுதண் கடலறியேன் அக்கடலைக் கடந்தே தெள்ளமுதம் உணவறியேன்
6	66	3336	அங்கே அடியார் தமக்கெல்லாம் அருளார் அமுதம் அளித்தையோ
6	86	3451	அடியேன் திருவருள் அமுதமே விழைந்தேன் எறிவிலாச் சுவைவேறெவற்றினும் விழைவோர் எட்டுணை யேனும்இன் றெந்தாய்.
6	108	3622	உன்னுதொறும் என்னுளத்தே ஊறுகின்ற அமுதே அருஉடைய பெருவெளியாய் அதுவிளங்கு வெளியாய் அப்பாலு மாய்நிறைந்த அருட்பெருஞ்சோ தியனே
6	110	3629	தேவிசிவ காமவல் மகிழுமண வாளா தெருள்நிறைவான் அமுதளிக்கும் தருணம்இது தானே.
6	126	3715	திண்ணம் பழுத்த சிந்தையிலே தித்தித் துலவாச் சுயஞ்சோதி தண்ணம் பழுத்த மதிஅமுதே தருவாய் இதுவே தருணம்என்றன்
6	131	3738	எதுதருணம் அதுதெரியேன் என்னினும்எம் மானே இதுதருணம் தவறும்எனில் என்உயிர்போய் விடும்இவ் வெளியேன்மேல் கருணைபுரிந் தெழுந்தருளல் வேண்டும் மதுதருண வாரிசமும் மலர்ந்ததருள் உதயம் ..... விதுதருண அமுதளித்தென் எண்ணம்எலாம் முடிக்கும் வேலை
6	132	3744	தேனந்தத் தெள்ளமு தூற்றிப் பெருக்கித் தித்தித்துச் சித்தம் சிவமய மாக்கி வானந்தம் ஆதியும் கண்டுகொண் டழியா
6	133	3748	மருந்திது மணிஇது மந்திரம் இதுசெய் வகைஇது துறைஇது வழிஇது எனவே இருந்தெனுள் அறிவித்துத் தெள்ளமு தளித்தே என்னையும் தன்னையும் ஏகம தாக்கிப்
6	145	3804	உண்ணஉண்ணத் தெவிட்டாதே தித்தித்தென் உடம்போ டுயிர்உணர்வும் கலந்துகலந் துள்ளகத்தும் புறத்தும் தண்ணியவண் ணம்பரவப் இலங்குகின்ற பேரருளாம் இன்னமுதத் திரளே
6	148	3826	துன்அபர சத்திஉல கபரசத்தி அண்டம் சுகம்பெறவே கதிர்பரப்பித் துலங்குகின்ற சுடரே உன்னும்அன்பர் உளங்களிக்கத் திருச்சிற்றம் பலத்தே ஓங்கும்நடத் தரசே
6	150	3832	பரைவெளிக்கப் பால்விளங்கு தனிவெளியில் பழுத்தே படைத்தஎன துளத் தினிக்கக் கிடைத்ததனிப் பழமே
6	153	3845	கையாத தீங்கனியே கயக்காத அமுதே கரையாத கற்கண்டே 1புரையாத கரும்பே பொய்யாத பெருவாழ்வே புகையாத கனலே போகாத புனலேஉள் வேகாத காலே
6	159	3874	நண்ணுகின்ற பெருங்கருணை அமுதளித்தென் உளத்தே நானாகித் தானாகி அமர்ந்தருளி நான்தான் எண்ணுகின்ற படிஎல்லாம் அருள்கின்ற சிவமே
6	174	3943	துன்பெலாம் தவிர்த்த துணையையென் உள்ளத் துரிசெலாந் தொலைத்த மெய்ச் சுகத்தை அன்பெலாம் அளித்த அம்பலத் தமுதை அருட்பெருஞ்ஜோதியை அடியேன் கண்டுகொண் டேனே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	176	3955	அரும்பெறல் அமுதை அறிவைஎன் அன்பை ஆவியை ஆவியுட் கலந்த பெருந்தனிப் பதியைப் விரும்பிஎன் உளத்தை இடங்கொண்டு விளங்கும் விளக்கினைக் கண்டுகொண் டேனே.
6	196	4044	ஆதிஅந்தம் தோற்றாத அரும்பெருஞ்சோ தியனே உள்ளபடி இயற்கையிலே உள்ளஒரு பொருளே இந்தச் சாதிஇந்த மதம்எனும்வாய்ச் சழக்கைஎலாம் தவிர்த்த சத்தியனே உண்கின்றேன் சத்தியத்தெள் ளமுதே.
6	209	4115	தேன்செய்த தெள்ளமு துண்டேன்கண் டேன்மெய்த் திருநிலையே.
6	209	4117	அருள் தெள்ளமுதுண் டுருநிலை பெற்றனன் ஒன்றே சிவமென ஓங்குகின்ற பெருநிலை பெற்றனன் . இருநிலை முந்நிலை எல்லா நிலையும் எனக்குளவே.
6	212	4142	மனித்தரும் அமுத உணவுகொண் டருந்தும் வானநாட் டவர்களும் வியக்கத் தனித்தமெய்ஞ்ஞான அமுதெனக் களித்த தனியவா இனியவாழ் வருளே.
6	214	4155	அருளா ரமுதம் மிகப்புகட்டிச் சிவமே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	215	4160	ஊனே புகுந்தென் உளங்கனிவித் துயிரில் கலந்தே ஒன்றாகித் தேனேசிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை ஆக்கினையே
6	221	4202	எட்டுக் கிசைந்த இரண்டும்எனக் கிசைவித் தெல்லா இன்னமுதும் அட்டுக் கொடுத்தே அருத்துகின்றோய் அடியேன் உன்றன் அடைக்கலமே.
6	225	4225	அருளமுதம் அளித்தென் தனைமெய் அருட்கரத்தால் எடுத்த கொடியே சித்தி எலாம் இந்தா மகனே என்றெனக்கே கொடுத்த கொடியே
6	228	4241	கண்டேன் களித்தேன் கருணைத் திருஅமுதம் உண்டேன் உயர்நிலைமேல் ஓங்குகின்றேன்
6	228	4245	கண்டேன் களித்தேன் கருணைத் திருஅமுதம் உண்டேன் அழியா உரம் பெற்றேன்
6	264	4442	தானேஅருள் ஆனான் தானேபொருள் ஆனான் தானேஎல்லாம் வல்லதான் ஆனான்
6	267	4466	விஞ்சிஅங்கு வந்தாய் எனைத்தூக்கி மற்றொருசார் வைத்தமுது தந்தாய்என் நான்செய் தவம்.
6	276	4538	ஊன்செய்த மெய்யும் உயிரும் உணர்வும் ஒளிமயமாக் கோன்செயவே பெற்றுக் கொண்டேன்உண் டேன்அருட் கோன்அமுதே.
6	282	4574	அக்கரை மேல்சர்க் கரைகலந்த உரைகண்ட தெள்ளமு துண்டேன் அருளொளி ஓங்குகின்ற வரைகண்ட தன்மிசை உற்றேன் உலகம் மதித்திடவே.
6	282	4576	என் உள்ளம் திருக்கோயி லாக்கொண்டு சித்திஎலாம் போதித் துடம்பையும் பொன்னுடம் பாக்கிநற் புத்தமுதும் சாதித் தருளிய
6	283	4587	ஊன உடம்பே ஒளிஉடம்பாய் ஓங்கிநிற்க ஞான அமுதெனக்கு நல்கியதே – வானப் பொருட்பெருஞ் ஜோதிப் பொதுவில் விளங்கும் அருட்பெருஞ் ஜோதி அது.
6	285	4599	தன்இயல்என் அறிவிலே அறிவினுக் கறிவிலே தானே கலந்துமுழுதும் தன் மயம தாக்கியே தித்தித்து மேன்மேல் ததும்பிநிறை கின்றஅமுதே
6	297	4628	காய்எலாம் கனிஎனக் கனிவிக்கும் ஒருபெருங் கருணைஅமு தேஎனக்குக் கண்கண்ட தெய்வமே. வாய்எலாந் தித்திக்கும் மனம்எலாந் தித்திக்கும் மதிஎலாந் தித்திக்கும்என் மன்னியவெ னறிவெலாந் தித்திக்கும் என்னில் அதில் வரும்இன்பம் என்புகலுவேன்
6	302	4648	சந்திர சூரியர் ஒளிபெற விளங்கும்.....வந்திர விடைஎனக் கருளமு தளித்தே வாழ்கஎன் றருளிய வாழ்முதற் பொருளே
6	320	4735	நரைமரண மூப்பறியா நல்லஉடம் பினரே.....புரையுறுநும் குலங்கள்எலாம் புழுக்குலம்என் றறிந்தே புத்தமுதம் உண்டோங்கும் புனிதகுலம் பெறவே

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	323	4757	தாரணியில் கண்டேன் களிக்கின்றேன் கங்குல்பகல் அற்றவிடத் துண்டேன் அமுதம் உவந்து.
6	354	4941	கனித்துணையாம் இன்னமுதம் தந்தெனக்கே எல்லாமும் வல்லசித்தி தன்னை யுந்தந் துட்கலந்தான் றான்.
6	367	5040	தலைவா எனக்குக் கருணை அமுதம் தரஇத் தலத்தி லே தவம்செய் தேன்அத்தவமும் உன்றன் அருள்வ லத்தி லே
6	375	5097	இறங்கா நிலையில் ஏற்றிய ஞான அமுதம்தர இத்தலத்தில் தவம் செய் தேன் அத்தவமும் உன்றன் அருள் வலத்திலே
6	410	5395	ஆரா அமுதாகி அண்ணிக்கும் பாதம் அன்பர் உளத்தே அமர்ந்தருள் பாதம்
6	417	5462	அத்திரு வாயில் ஆனந்த வல்என் அம்மை இருந்தாள டி - அம்மா
6	413	5463	அம்மையைக் கண்டேன் அவளருள் கொண்டேன் அமுதமும் உண்டேன டி - அம்மா
6	426	5559	அருட்பெருஞ் ஜோதியைக் கண்டேன்னே ஆனந்த தெள்ளமு துண்டே னே
6	447	5720	உன்னைநினைத் துண்டேன்என் உள்ளகத்தே வாழும் இன்னமுதில் என் னுடைஅன் பென்னும்நறுங் கனியின் கன்னல்உளே தனித்தெடுத்ததேம் பாகும் கலந்தே களித்துண்டேன்
6	447	5721	துதிபெறும் அத்திருவாளர் புன்னகையை நினைக்குந் தோறும்மனம் ஊறுகின்ற சுகஅமுதம் பெறுமே.
1	452	5744	ஈங்குசிலர் உண்ணுகஎன் றென்னைஅழைக் கின்றார்.....மண்டபத்தே என் கணவ ருடனே உவட்டாத தெள்ளமுதம் உண்டுபசி தீர்ந்தேன் தேங்குழல்இங்கினி எனக்குப் பசிவரில் அப்போது செப்புகின்றேன் இருந்தவரும் விருந்தவரும் இனிதுபுசித் திடற்கே.
1	459	5778	ஏர்உலவாத் திருப்படிக்கீழ் நின்றுவிழித் திருக்க எனைமேலே ஏற்றினார்நான் போற்றிஅங்கு நின்றேன் திருஅமுதம் உணவும் பெற்றேன்நான் செய்ததவம் பேருலகில் பெரிதே
1	468	5821	அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன் நிச்சலும்பே ரானந்த நித்திரைசெய் கின்றேனே.
1	157	654	விருப்பே துரைத்தாற் றருவலென்றேன் கொள்ளக் கிடையா வலர்கு முதங் கொண்ட வமுதங் கொணர்ந்தின்னு மெள்ளத் தனைதா வென்கின்றா
1	159	675	தம் முகநோக்கி யருந்தா வமுத மனையீரிங் கடுத்த பரிசே தறையுமென்றேன் வருந்தா திங்கே யருந்தமுத மனையா ளாக வாழ்வினொடு மிருந்தா யடைந்தே
1	159	677	ரீங்கடைந்தீ ரிற்றைப் பகலே நன்றென்றே னிற்றை யிரவே நன்றெமக்குப் பொற்றைத் தனத்தாய் கையமுதம் பொழியா தலர்வாய்ப் புத்தமுத மிற்றைக் களித்தா யென்கின்றாரிது
1	160	684	முக்கனியுங் கரும்பு மமுதுங் கயவாவோ மற்ற விடச்சீ ரென்னென்றேன் மற்றை யுபய விடமுமுத லெற்ற விடமே யென்கின்றா ரிது
1	160	685	யான்செய்தவத்தின்பெரும்பயனேயென்னாரமுதேமான்செய்விழிப்பெண்ணேநீயாண் வடிவா னதுகேட் டுள்ளம்வியந் தேன்கண் டிடவே
124 வரி	124 வரி	124 வரி	எழுமனம் உடைந்து யுடைந்து உருகி நெகிழ் பத்தர்கட்கு இன்ன முதமாகும் பதம் எண்ணுறிற் பால்நறு நெய்யொடு சருக்கரை இசைந்தென இனிக்கும் பதம் ஏற்ற முக்கனி பாகு கன்னல் கற்கண்டு தேனென்ன மதுரிக்கும்பதம்
1	7	180	எம் புயக் கனிஎன எண்ணுவார் இதய அம்புயத்து அமர்ந்த அருட்பெஞ்ஜோதி
1	45	229	எட்டிரண்டும் சித்திக்கும் யோகியர்தம் சிந்தைதனில் தேன்போன்று தித்திக்கும்சேவடியின் சீரழகும் - எந்நாளும் பன்னுமுள்ளத் துள்ளாம்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	45	237	பரசிவமே என்றொருகால் உன்னுமுன்னம் தீமையெலாம் ஓடிடுங்காண்
1	78	49	வெள்ளமுதும் தேனும் வியன்கரும்பும் முக்கனியின் உள்ளமுதும் தெள்ளமுதும் ஒவ்வாதால்
1	105	205	தம்மைமறந் தருளமுதம் உண்டு தேக்கும் தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து ..... செம்மையெலாம் தரும்மெளன அணைமேற் கொண்டு செறி இரவு பகலொன்றும் தெரியா வண்ணம் இம்மையிலே எம்மையினும் காணாச் சுத்த இன்ப நிலை அடைவேனோ
2	356	1912	தெருளமுதத் தனியோகர் சிந்தையிலும் ஞானச் செல்வர்அறி விடத்தும்நடஞ் செய்யும்நட ராஜன் அருளமுதம் அளிப்பன்என்றே அன்றுமணம் புணர்ந்தான்
123. நால்வர் மற்றும் அருளாளர்கள்			
1	3	80 வரி	மால்கொள் அவதாரங்கள் பத்தினும் வழிபட்டு வாய்மைபெற நிற்கும்பதம்
1	4	87	மணியுரகர் கருடர் காந்தருவர் விஞ்சையர் சித்தர் மாமுனிவர் ஏத்தும்பதம்
1	4	88	மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள் மதித்து வரமேற்கும்பதம்
1	4	89	மன்னு கின்னரர் பூதர் வித்தியாதரர் போகர் மற்றையர்கள் பற்றும்பதம்
1	4	90	வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கண் மனக்கோயில் வாழும்பதம்
1	4	92	மறையை உதைத்தருள் கழற்பதம் அரக்கனை மலைக்கீழ் அடர்க்கும்பதம்
1	4	98	எம்பந்தமற எமது சம்பந்த வள்ளல்மொழி இயன்மண மணக்கும்பதம்
1	4	99	ஈவரசர் எம்முடைய நாவரசர் சொற்பதிக இசை பரிமளிக்கும்பதம்
1	4	100	ஏவலார் புகழெமது நாவலாரூரர் புகழ் இசைதிருப் பாட்டுப்பதம்
1	4	101	ஏதவூர் தங்காத வாதவூர் எங்கோவின் இன்சொன்மணி அணியும்பதம்
1	4	102	எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர்முடி இடைவைகி அருண்மென்பதம்
1	4	103	ஏதவூர் தங்காத வாதவூர் எங்கோவின் இன்சொன்மணி அணியும்பதம்
1	4	104	எழில் பரவையிசைய ஆரூர் மறுகினருள் கொண்டு இராமுழுது முலவும்பதம்
1	4	105	இன்தொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறும் இரக்கநடை கொள்ளும்பதம்
1	4	106	இளைப்புறல் அறிந்து அன்பர் பொதிசோறு அருந்த முன்னிருந்து பின்னடக்கும்பதம்
1	4	107	எறிவிறகு விற்க வளர் கூடற் தெருத்தொறும் இயங்கிய இரக்கப்பதம்
1	4	108	இறுவைகை யங்கரையின் மண்படப் பல்கால் எழுந்து விளையாடும்பதம்
1	39	143	புங்கமிகும் அண்ணல் திருமலர்க்கை ஆழிபெறக் கண்ணிடந்த கண்ணற் கருளியமுக் கண்ணனெவன்
1	39	144	மண்ணிடத்தில் ஓயாது சூன்முதிர்ந்த ஓர்பெண் தனக்காகத் தாயாகி வந்த தயாளனெவன்
1	39	145	சேயாக வேல்பிடித்த கண்ணப்பன் மேவுமெச்சில் வேண்டுமிதத் தாற்பொசித்து நேர்ந்த தயாளனெவன்
1	40	146	பாற்குடத்தைத் தான்தந்தை என்றெறிந்தோன் தாளெறிந்த தண்டிக்குத்தான் தந்தை ஆன தயாளனெவன்
1	40	147	தான் கொண்டு சம்பு நறுங்கனியின் தன்விதையைத் தாள்பணிந்த சம்பு முனிக்கீயும் தயாளனெவன்
1	40	148	அம்புவியில் ஆண்டவனென் றேத்தப்பொன் னம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் செய்கின்ற தயாளனெவன்
1	40	149	காண்தகைய முத்துச் சிவிகையின்மேல் முன்காழி ஓங்குமுழு முத்தைத் தனிவைத்த முத்தனெவன்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	40	150	பத்திபெறு நாவொன் றரசர்க்கு நாம்தருவே நல்லூரில் வாஎன்று வாய் மலர்ந்த வள்ளலெவன்
1	40	151	பூவொன்று நன்றொண்டர் சுந்தரரை நாம்தடுக்க வந்தமையால் வன் றொண்டன் நீஎன்ற வள்ளலெவன்
1	40	152	நன்றொண்டின் காணிக்கை யாகக் கருத்தளித்தார் தம்மொழியை மாணிக்கம் என்றுரைத்த வள்ளலெவன்
1	53	372	எண்ணாமல் வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யஅரக் கன்தனக்கும் வாய்த்தவரமெல்லாம் வழங்கினையே
1	53	373	சாய்த்தமன வீம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும் பாம்பையெல்லாந்தோளிற் பரித்தனையே – நாம்பெரியர்
1	53	374	எஞ்சேமென் றாணவத்தா லேற்ற இருவரையும் அஞ்சேலென்றாட் கொண்டருளினையே – துஞ்சுபன்றித்
1	54	375	தோயாக் குருளைகளின் துன்பம் பொறாதன்று தாயாய் முலைப்பாலுந்தந்தனையே – வாயிசைக்குப்
1	54	376	பாண்டியன்முன் சொல்வந்த பாணன் பொருட்டடிமை வேண்டி விறகெடுத்து விற்றனையே – ஆண்டொருநாள்
1	54	377	வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித் தூய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே – ஆய்துயர
1	54	378	மாவகஞ்சேர் மாணிக்க வாசகருக் காய்க்குதிரைச் சேவகன்போல் வீதிதனில் சென்றனையே –மாவிசயன்
1	54	379	வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல் லால்எறிந்த கல்லடிக்கும் உள்ளங்களித்தனையே – மல்லலுறும்
1	54	380	வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச் செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே – சொல்லகன்
1	54	381	நீளுகின்ற நெய்யருந்த நேரெயை மூவுலகும் ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே – கோளகல
1	54	382	வாய்ச்சங்கு நூழைத்த வாய்ச்சிலம்பி தன்னை உயர்கோச் செங்கட் சோழ னெனக் கூட்டினையே – ஏச்சறுநல்
1	54	383	ஆறடுத்த வாகீசர்க் காம்பசியைக் கண்டுகட்டுச் சோறெடுத்துப் பின்னே சுமந்தனையே – கூறுகின்ற
1	54	384	தொன்மைபெருஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை நன்மனைக்குத் தூது நடந்தனையே – நன்மைபெற
1	54	385	இற்றென்ற இற்றென்னா எத்தனையோ பேர்கள்செய்த குற்றங் குணமாகக்கொண்டனையே
1	46	242	புண்ணியராம் சுந்தரர்க்குக் கச்சூரில் தோழமையைத் தான்தெரிக்க வந்திரப்புச் சோறளித்த வண்மைதனை
1	46	244	போதவும்நெய் அங்கோர் எதான் அருந்த அகல் தூண்டவதைச் செங்கோலன் ஆக்கியவச் சீர்த்திதனை
1	46	246	முந்தவரும் நற்றுணையென் றேத்துமந்த நாவரசர்க் கன்றுகடற் கற்றுணை யோர் தெப்பமெனக் காட்டியதை
1	46	248	தாவுநுதல் கண்சுமந்தான் அன்பன் கலங்கா வகைவைகை மண் சுமந்தான் என்றுரைக்கும் வாய்மைதனைப்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	46	254	நல்லதிருப் பாத மலர்வருந்தப் பாணன் தனக்காளாய்க் கோதில் விறகேற்று விலைகூறியதை
1	56	410	ஆய்ந்தோர்சொல் கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே
1	57	432	தாபமுறச் செல்லா விடத்துச் சினந்தீது செல்டத்தும் இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே
1	57	433	மல்லல்பெறத் தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப் பொன்னைப் போல் போற்றிப் புகழ்ந்திலையே
1	57	434	துன்னி அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந் திகழ்வாய் மையும் நீ தெளியாய்
1	59	465	உறங்குவது போலுமென்ற ஒண்குறளின் வாய்மை மறங்கருதி அந்தோ மறந்தாய்
1	63	524	சம்பந்தர் அற்றவருக் கற்றசிவ னாமெனுமப் பொன்மொழியை மற்றை மொழி போன்று மறந்தனையே
1	78	52	திரு நாவுக் கரையரெனு நன்னாம - மேவுற்ற தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தாய் என்றறிந்தோ தொண்டர்க்குத் தொண்டனென்பார் சொல்.
1	79	53	எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார் தம்பரவை வீட்டுத்தலைக்கடையாய்
1	79	54	நண்ணித் தலையால் நடக்கின்றோம்.....பண்ணிற்சொல் அம்மையார் வாமத் தோய் ஆயினுமுன் காரைக்கால் அம்மையார் போனடந்தார் ஆர்.
1	79	55	வாதமுறு மாசகர்க்குள் நில்லா மணிச்சுடரே மாணிக்க வாசகர்க்கு நீ உரைத்தவாறு.
1	79	56	ஆர்கொண்டார் சேய்க்கறியிட் டாரே சிறுத்தொண்டப் பேர்கொண்டார் ஆயிடிலெம்பெம்மானே
1	79	61	முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல் என்மணத்தில் நீவந்திடாவிடினும்
1	81	71	தாரம்விற்றுஞ் சேய்விற்றுந் தன்னைவிற்றும் பொய்யாத வாரம்வைத்தான் முன்னிங்கோர் மன்னனென்பர்
1	84	98	மாணிக்கு முன்பொற் கிழியளித்த முத்தேஎன் ஆருயிர்க்கு நின்பொற்கழலே நிலை.
1	85	108	கண்ணப்பன் ஏத்துநுதற் கண்ணப்ப மெய்ஞ்ஞான விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்பம்
1	39	142	போந்துயிர்கள் எங்கெங் கிருந்துமனத் தியாது விழைந்தாலும் அங்கங்கிருந் தளிக்கும் அண்ணலெவன்
1	40	153	தாணிற்கும் தன்னன்பர் தாம்வருந்தில் சற்றுந் தரியாது மன்னன் பருளளிக்கும் வள்ளலெவன்
1	40	154	முன்னன்பில் சால்புடைய நல்லோர்க்குத் தண்ணருள்தந் தாட்கொளவோர் மால்விடைமேல் வந்தருளும் வள்ளலெவன்
1	57	434	தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப் பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே
1	57	435	அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்திகழ் வாய்மையும் நீ தெளியாய்
1	59	466	உறங்குவதுபோலு மென்றஒண் குறளின் வாய்மை மறங்கருதி அந்தோ மறந்தாய்
1	107	220	அருட் பண்புடை யாய்பெண் பரவையின்பால் நடையுடை யாய்அருள் நாடுடை யாய்பதம் நல்குகவே.
1	110	239	பாணன் தனக்கடிமை ஆளே எனவிறகேற்று விற்றோய் நின்னருள் கிடைக்கும்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	110	240	சொற்பூத் தொடுத்தார் ஒருவர்க்குக் கச்சூரி லேபிச்சைச் சோறெடுத்துக் கொடுத்தாய்நின் பேரருள் என்சொல்லு கேன்
1	110	245	சீர்க்கின்ற கூடல் பாணனுக் காட்படச் சென்றஅந்நாள் வேர்க்கின்ற வெம் மணல் என்தலை மேல்வைக்கு மெல்லடிக்குப்
			124. சுந்தரனார்
1	111	251	சொற்கோட்டை யாயினும் கட்டுவர் நின்னைத் துணிந்தடுத்தேன் அற் கோட்டை நெஞ்சுடை யேனுக் கிரங்கிலை அன்றுலவா நெற்கோட்டை ஈந்தவன் நீயல்லை யோமுக்கண் நின்மலனே.
1	113	266	கருமுக நீக்கிய பாணனுக் கேகன கங்கொடுக்கத் திருமுகம் சேரற்களித்தோய் என் றுன்னைத் தெரிந்தடுத்தென்
1	113	267	மருப்பா வனத்துற்ற மாணிக்கு மன்னன் மனமறிந்தோர் திருப்பா சுரஞ்செய்து பொற்கிழி ஈந்தநின் சீர்நினைந்தே
1	116	294	பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவிநடையாம் துன்பட்ட வீரர் அந்தோ வாத வூரர்தம் தூயநெஞ்சம்
1	102	334	முன் மாறன் பிரம்படியால் புண்கொண்ட மேனிப் புறங்கண்டி லேன்அப் புறத்தைக்கண்டால் ஒண்கொண்ட கல்லும் உருகும்
1	121	337	மதுரை வியன்தெருவில் மாணிக்கம் விற்றசெம் மாணிக்க மேஎனை வாழ்வித்ததோர் ஆணிப்பொன்னே.....அடி மலர்க்குக் காணிக்கை யாக்கிக்கொண் டாள்வாய்
1	121	345	சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியை நற்றுணை யாக்கரை ஏறிய புண்ணிய நாவரசைக்
1	122	346	நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச் சற்றெனினும்.....கால்வருந்தி நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்திஅன்பர் இடைவரும் உன்றன் இரக் கத்தைத்தான் வெளி யிட்டதற்கே.
1	122	347	திருவாத வூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே கருவாத நீங்கிடக் காட்டுகண் டாய்என் கனவினிலே.
1	122	348	சீர்தரு நாவுக் கரையரைப் போச் சிறியனும்ஓர் கார்தரு மாயைச் சமணான் மனக்கருங் கல்தட்டிப் பார்தரு பாவக் கடடை வீழ்த்திடப் பட்டுழன்றே
1	123	359	வன் தொண்டர் விரும்புறச்செங் கல்லைப்பொன் னாக்கிக் கொடுத்தோய்
1	124	364	நல்லூரில்நின் தூமலர்ப்பொன் அடிவைத்த போதெங்கள் அப்பர்தம் சென்னியது குளிர்ந் தெப்படி வைத்ததோ
1	124	369	பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந் தாயென்பர் பித்தனென்ற திட்டுக்கும் சீரருள் செய்தளித் தாயென்பர்
1	124	372	அன்று வந்தியிட்ட பிட்டுண்ட பிச்சைப் பெருந்தகை இக் கன்மனமாம்திட்டுண்ட பேய்த்தலை வெட்டுண்ட நாளில்என் தீமையற்றே.
1	129	415	எங்கள் நம்பிக்குநல் தூதனென் கோஅவன் தோழனென் கோநினைத் தூய்மணியே.
1	133	462	இலையாற்று நீமலர்க் காலால் பணிக்குங்குற் றேவலெலாம் தலையால் செயும்பெண்கள் பல்லோரில் பூமகள் தன்னைத்தள்ளாய்
1	141	516	கண்ணப்பன் ஏத்துநற் காளத்தி யார்மங் கலங்கொள்ஒற்றி நண்ணப்பர் வேண்டும்
1	145	550	பிட்டி னதிமண் சுமந்தவொற்றிப் பிச்சைத் தேவ ரிவர்தமைநான் மட்டி னொருமூன் றுடனேழு மத்தர் தலையீ தென்றுசொ
1	174	566	கச் சூரிடஞ்சேர்ந் தீரென்றேனின்னடு நோக்காக் குடஞ்சேர்ந் ததுமாங் கஃ தென்றார் குடம்யா தென்றே னஃதறிதற் கிடங்கர் நடுநீக்கென்கின்றா ரிதுதான்

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

1	148	572	பண்ணின் மொழியாய் நின்பாலோர் பறவைப் பெயர்வேண் டினம் படைத்தான் மண்ணின் மிசையோர் பறவையதா வாழ்வாயென்றா
1	151	607	வொளிநா வரசை யைந்தெழுத்தா லுவரி கடத்தி னீரென்றேன் களிநா வலனை யீரெழுத்தாற் கடன் வீழ்த்தி னேமென்றே
1	160	680	கல்லா னைக்குக் கரும்பன்று தேவாய் மதுரை யிடத்தளித்த சித்த ரல வோ நீரென்றேன் பாவா யிருகல் லானைக்குப் பரிவிற் கரும்பிங் கிரண்டொருநீ யீவா யிதுசித் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.
1	160	683	திருவொற்றி யமர்ந்தீ ரிருவர்க் ககமகிழ்வான் வீழி யதனிற் படிக்காசு வேண்டி யளித்தீ ராமென்றேன் யேழி லகற்றி யென்கின்றா ரிதுதான் சேடி
1	173	756	நாவின் மன்னரைக் கரைதனில் சேர்த்த நமச்சி வாயம்காண் நாம் பெறும் துணையே.
1	173	758	ஆலக் கோயிலுள் அன்றுசுந் தரர்க்காய்ச் செம்மை மாமலர்ப் பதங்கள்நொந் திடவே சென்று சோறிரந் தளித்தருள் செய்தோன்
1	174	762	கைலையம் பதியை எந்த வண்ணம்நாம் காண்குவ தென்றே அந்த வண்ண வெள் ஆனைமேல் நம்பி அமர்ந்து சென்றதை அறிந்திலை போலும்
1	175	768	ஏழியல் பண்பெற் றமுதோ டளாவி இலங்குதமிழ்க் கேழியல் சம்பந்தர் அந்தணர் வேண்டக் கிளர்ந்தநற்சீர்
1	176	769	நாட்டில் புகழ்பெற்ற நாவுக் கரசர்முன் நாள்பதிகப் பாட்டிற் கிரக்கம்இல் லீர் எம் பிரான்எனப் பாட மறைக் காட்டில் கதவம் திறந்தன ரால்எம் கடவுளரே.
1	176	770	வன்தொண்டன் சுந்தரன் என்னுநம் வள்ளலுக்குக் கச்சூரில் சோறிரந் தூட்டின ரால்எம் கடவுளரே.
1	176	767	வில்எடுக் கும்கையர் சாக்கியர் அன்று விரைந்தெறிந்த கல்லடிக் கும்கதி காட்டினர் காண்எம் கடவுளரே.
2	175	771	சேணப் பரிகள் நடத்திடு கின்றநல் சேவகன்போல் மாணப் பரிபவம் நீக்கிய மாணிக்க வாசகர்க்காய்க் காணப் பரிமிசை வந்தன ரால்எம் கடவுளரே.
2	176	772	எல்லாம் செயவல்ல சித்தரின் மேவி எழில்மதுரை வல்லாரின் வல்லவர் என்றறியா முடிமன்னன் முன்னே எய்தப் பராக்கிரமித்துக்கல்லானை தின்னக் கரும்பளித் தார்எம் கடவுளரே.
2	186	827	கல் யாண சுந்தரா சுந்தரன் தூதா மைப்பொதி மிடற்றாய் வளர்திரு முல்லை வாயில்வாழ் மாசிலா மணியே
2	190	857	கள்ள மற்றவாக் கரசும்புத் திரரும் களிக்க வேபடிக் காசளித் தருளும் வள்ளல் என்றுமை வந்தடைந் தேற்றால்
2	191	858	கச்சூர் ஆலக் கோயில் சோறிரந் தளித்த வண்மை கேட்டிங்கு வந் தடைந் தேற்றால் வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
2	206	967	பண்ணார் இன்சொல் பதிகம் கொண்டு படிக்கா சளித்த பரமன்ஓர் பெண்ணார் பாகன் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே.
2	224	1083	சுந்தரர்க் காகமுன் தூதுசென்றானைத் தூயனை யாவரும் சொல்லரி யானைப் பந்தம் அறுக்கும் பராபரன் தன்னைப் பத்தர் உளங் கொள் பரஞ்சுட ரானை
2	227	1097	இன்று செய்திநீ நாளைஎன் பாயேல் இன்றி ருந்தவர் நாளைநின் றிலரே ஒன்று கேண்மதி சுகர்முதல் முனிவோர் உக்க அக்கணம் சிக்கெனத் துறந்தார்
2	243	1198	அன்றுநீ அடிமைச் சாதனம் காட்டி ஆண்டஆ ரூரனார் உன்னைச் சென்றுதூ தருள்என் றிரங்குதல் நோக்கிச் சென்றநின் கருணையைக் கருதி
2	244	1204	ஆறடுத்துச் சென்றளங்கள் அப்பருக்கா அன்றுகட்டுச் சோறெடுத்துச் சென்ற துணையே சுயஞ்சுடரே

2	246	1221	ஓதுமறை யோர்குலவும் ஒற்றியப்பா ஊரனுக்காத் தூதுசென்ற நின்தாள் துணைப்புகழைப் பாடேனோ.
2	249	1241	வன்மை பேசிய வன்தொண்டர் பொருட்டாய் வழக்குப் பேசிய வள்ளல்நீர் அன்றோ
2	263	1319	மாலை ஒன்றுதோள் சுந்தரப் பெருமான் மணத்தில் சென்றவண் வழக்கிட்ட தெனவே ஓலை ஒன்றுநீர் காட்டுதல் வேண்டாம்
2	268	1341	கண்ணப்பா என்றருளும் காளத்தி யப்பாமுன் வண்ணப்பால் வேண்டும் மதலையைப்பால் வாரிதியை
2	272	1367	அன்று நால்வர்க்கும் யோக முறைஅறந்தான் சொன்னவ னேசிவ னேஒற்றி மேவிய தூயவனே
2	309	1587	பெண்ணார் பாகப் பெருந்தகைதன் பெரிய கருணைக் குரியம்என்றே எண்ணா நின்று களிக்கின்றேன் ஆரூர் எந்தாய் இரங்காயே.
2	309	1588	உரங்கா தத்தோர் சிரிப்பார்நான் உலகத் துயரம் நடிக்கின்ற அரங்காக் கிடப்பேன் என்செய்வேன் ஆரூர் அமர்ந்த அருமணியே.
2	309	1589	அணியால் விளங்கும் திருஆரூர் ஆரா அமுதே அடிச்சிறியேன் தணியா உலகச் சழக்கிடையே தளர்ந்து கிடந்து தவிக்கின்றேன்
2	309	1590	துரியப் பொருளே அணிஆரூர்ச் சோதி மணிநீ தூயஅருள் புரியப் பெறு வேன் எனில்அவர்போல் யானும் சுகத்திற் பொவேனே.
2	309	1591	போதா னந்தக் கடல்ஆடி மவேன் இன்ப மயமாவேன் ஆரூர் மணிநீ வழங்காயேல் மெவேன்
2	309	1592	கருணைக் கடலே திருஆரூர்க் கடவுட் சுடரே நின்னுடைய அருணக் கமல மலரடிக்கே அடிமை விழைந்தேன்
2	309	1593	பொன்னார் கருணைக் கடல் இன்று புதிதோ பிறர்பால் போயிற்றோ என்நாயகனே திருஆரூர் எந்தாய் உள்ளம் இரங்கிலையே.
2	309	1594	கள்ளக் குரங்காய் உழல்கின்ற மனத்தேன் எனினும் கடையேனைத் தள்ளத் தகுமோ திருஆரூர் எந்தாய்
2	309	1595	செந்தா மரைத்தாள் இணை அன்றே சிக்கென் றிறுகப் பிடித்தேனேல் இந்தார் சடையாய் திருஆரூர் இறைவா துயரற் றிருப்பேனே.
2	309	1596	திருப்பில் சுழன்று நான் ஒருவன் திகைக்கின் றேன்ஓர் துணைகாணேன் விருப்பில் கருணை புரிவாயோ ஆரூர் தண்ணார் வியன் அமுதே.
2	322	1687	வந்திக்கும் மெய்யடியார் மாலற்ற ஓர்மனத்தில் சந்திக்கும் எங்கள் சயம்புவே
2	322	1688	வெங்கரா வாய்நின்று பிள்ளை வரப்பாடும் வன்தொண்டர்க் காய்நின்று சந்துரைத்த தார்.
2	351	1884	தோன்றுதலை மாலையணி தோள்விளங்க வருவார்க்குப் பிட்டுக்காசைப் பட்டுமாறன் பிரம்படி பட்டவர்க்குப் பிள்ளைக்கறிக் காசைகொண்ட கள்ளத்தவ வேடருக்கு
2	351	1887	பாட்டுக்காசைப் பட்டுமுன்னம் பரவைதன் வாயிற்போய்ப் பண்புரைத்துத் தூதனென்றே பட்டங்கட்டிக் கொண்டவர்க்கு
2	378	2027	முன்செய்த மாதவத்தால் அருணகிரி நாதர்முன்னே முறையிட் டேத்தும் புன் செயல்தீர் திருப்புகழை ஏற்றருளும் மெய்ஞ்ஞான புனிதன் என்றே
2	413	2296	உடுத்தார் முன்ஓர் மண்ணோட்டை ஒளித்தே தொண்ட னொடும்வழக்குத் தொடுத்தார்
2	413	2303	விறகுவிலை கூறித் திரிவார் குதிரையின்மேற் கொள்வார் பசுவிற் கோல் வளையோ டேறித் திரிவார்
2	418	2337	தொழுது வணங்கும் சுந்தரர்க்குத் தூது நடந்த சுந்தரனார்
3	420	2359	ஆலிற் றெளிய நால்வர்களுக் கருளுந் தெருளர் ஒற்றியினார்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

3	423	2379	துதிசெய் அடியர் தம்பசிக்குச் சோறும் இரப்பார் துய்யர்ஒரு
3	428	2419	என்னை உடையார் ஒருவேடன் எச்சில் உவந்தார் என்றாலும் அன்னை அனையார் ஒருமகனை அறுக்க உரைத்தார் என்றாலும் துன்னும் இறையார் தொண்டனுக்குத் தூதர் ஆனார் என்றாலும்
5	498	2744	நின்தாள் அடைந் தாரைக்கண்டே துடியேன் அருண கிரிபாடும் நின்அருள் தோய்புகழைப் படியேன்
5	524	2910	சைவ நாயக சம்பந்தன் ஆகிய தமிழ் அருட் குன்றேன்என் தெய்வ மேநினை அன்றி ஓர் துணையிலேன்
5	543	3030	அருணைகிரி தண்ணப்பா நற்றணிகை தன்னில் அமர்ந்தருளும் என்னப்பா இன்னும் இந்த ஏழைக் கிரங்காயோ
5	554	3095	ஒப்பிலா தோங்கிய ஒன்றைத் தரங்கிளர் அருண கிரிக்கருள் பவனைத் தணிகையில் கண்டிறைஞ் சுவனே.
5	13	134	செப்பமுடன் ஓங்குந் திருத்தொண்டர் உள்குளிர நல்லருளால் தாங்குங்கருக்குடி வாழ்சங்கரனே
2அ	388	2071	கண்டுபொழி அருள்முகில் சம்பந்த வள்ளலாங் கடவுளே ஒத்தூரினில் கவினுற விளங்குநற் பணிகள்சிவ புண்ணியக் கதிஉல கறிந்துய்யவே
1	131	421	மருமத்திலே பட்டவாளியைப் போன்று வருத்துவதே
1	131	430	இலங்கா புரத்தன் இராக்கதர் மன்னன் இராவணன்முன் மலங்காநின் வெள்ளி மலைக்கீ ழிருந்து வருந்திநின்சீர் கலங்காமல் பாடிடக் கேட்டே இரங்கிக் கருணை செய்த
125. சத்சங்கம்			
1	82	88	துற்சங்கத் தோர்கணமுந் தோயாது நின்னடியர் சற்சங்கத் தென்றனைநீ தான் கூட்டி - நற்சங்கக் காப்பான்
1	83	95	என்சிறுமை நோக்கா தெனக்கருளல் வேண்டுமென்றே நின்பெருமை நோக்கி இங்கு நிற்கின்றேன் - என்பெரும யாதோநின் சித்தம் அறியேன் அடியேற் கெப் போதோ அருள்வாய் புகல்.
1	85	107	உண்ணாடு நின்னடியார் கூட்டத்தில் நீரிவனைச் சேர்த்திடுமின் என்னடியான் என்பாய் எடுத்து.
1	85	111	இப்பாரில் நானினது தாணீழல் நண்ணுமட்டும் நின்னடியர் பானினது சீர் கேட்கப் பண்.
1		205	திருக்கூட்டம் சார்ந்து நாயேன் வெம்மையெலாம் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்
2	223	1078	என்னுடை வஞ்சக இயற்கை யாவையும் பொன்னுடை விடையினோய் பொறுத்துக் கொண்டுநின் தன்னுடை அன்பர்தம் சங்கம் சார்ந்துநான் நின்னுடைப் புகழ்தனை நிகழ்த்தச் செய்கவே.
2	223	1079	நிகழும்நின் திருவருள் நிலையைக் கொண்டவர் திகழும்நல் திருச்சபை அதனுட் சேர்க்கமுன் அகழுமால் ஏனமாய் அளவும் செம்மலர்ப்புகழுமாறருளுக பொறுக்க பொய்மையே.
2	239	1168	வாழ்வது நின்றன் அடியரோ டன்றி மற்றும்ஓர் வெற்றருள் வாழேன் தொண்டனேன் தன்னை ஆள்வது கருதின் அன்றிஎன் செய்கேன்
2	241	1183	ஒற்றி யூர்அமர்ந்த கனியே உன்தன் கழல்அடியை விரும்பேன் அடியார்அடித் தொண்டில் மேவேன்
2	248	1237	உய்யற் கருள்செய்யும் ஒற்றியப்பா உன்அடிசேர் மெய்யர்க் கடிமை செய்துன் மென்மலர்த்தாள் நண்ணேனோ.

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

2	259	1259	நின்றனை ஏத்திலன் எனினும் மண்ணுள் மற்றியான் வழிவழி அடியேன் மாய மன்றிதுன் மனம்அறிந் ததுவே
2	255	1276	சுத்த நெஞ்சருள் சேர்க்கினும் அலது சோம்பல் நெஞ்சருள் சேர்க்கினும் நினது சித்தம் என்னள வன்றது சிவனே
2	264	1324	புதியன் என்றெனைப் போக்குதி ரோநீர் பூரு வத்தினும் பொன்னடிக் கடிமைப் பதிய வைத்தனன் ஆயினும் அந்தப் பழங்க ணக்கினைப்பார்ப்பதில் என்னே
2	265	1328	சுத்தி யாகிய சொல்லுடை அணுக்கத் தொண்டர் தம்முடன் சூழ்த்திடீர் எனினும் புத்தி சேர்புறத் தொண்டர்தம் முடனே பொருந்த வைக்கினும் போதும்மற்றதுவே
2	275	1388	நாயகஎன் மேலே அருள்கூர்ந் தெனைநின்தாள் மேவு வோர்பால் சேர்த்தருளே.
2	278	1407	உள்ளும் திருத்தொண்டர் உள்ளத் தெழுங்களிப்பே……நள்ளும் புகழுடைய நல்லோர்கள் எல்லாரும்……இழிவொழித்தால் ஆகாதோ.
2	282	1438	அழியா வாழ்வை ஏழையேன் வசஞ்செயல் வேண்டும் ஊடி னாலும்மெய் அடியரை இகவா ஒற்றி மேவிய உத்தமப் பொருளே.
2	287	1459	பாடுந் தொண்டர்கள் இடர்ப்படில் தரியாப் பண்பென் மட்டும்நின் பால்இலை போலும் தேடும் பத்தர்தம் உளத்தமர் வோய்நின் சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.
2	287	1462	திரு முகங்கண்டு மகிழும் அன்பர் தம்பணி ஆற்றிமற் றுடலம் தேயி னும்மிக நன்றெனக் கருள்உன் சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.
2	288	1463	வானும் வையமும் அளிக்கினும் உன்பால் மனம்வைத் தோங்குவர் வள்ளல் நின் அடியார் நானும் அவ்வகை உலகியல் ஒழுக்கில் நாடி நின்னருள் நலம்பெற விழைதல்
2	288	1465	அகழ்ந்தென துளத்தைச் சூறைகொண் டலைக்கும் அஞரெலாம் அறுத்தருள் புரிவாய் புகழ்ந்திடும் தொண்டர் உளத்தினும் வெள்ளிப் பொருப்பினும் பொது வினும் நிறைந்து திகழ்ந்தருள்
2	293	1491	அடியர் தந்துயர் கண்டிடில் தரியார் ஐயர் என்பர்என் அளவஃ திலையோ ஒடிய மாதுயர் நீக்கிடாய் என்னில் உனைஅ லால்எனை உடையவர் எவரே.
2	312	1613	கண்ணி நலியப் படும்பறவைக் கால்போல் மனக்கால் கட்டுண்ணப் பண்ணி நலஞ்சேர் திருக்கூட்டம் புகுத எனினும் பரிந்தருளே.
2	312	1614	தொண்டர் பதப்பணியே புரியும் இனத்தா ரொடுங்கூடிப் புனிதனாக வேணடும் எனத் தரியும் அடிமைச் சிறியேனுக் கிரங்கா திருந்தால் சின்னாட்பின்எரியும் கொடுவாய் நரகத்துக் கென்செய் வேன்என் செய்வேனே.
2	315	1643	புதியேன் அல்லேன் நின்அடிமைப் பொருத்தம் இல்லேன் அல்லேன்யான் … நின்னை விடுவேனோ தொண்ட னேனை விடல்அழகோ
2	317	1655	சன்மார்க்க மேவும் மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழ வாழும் தகை அறியே…… நல்லோரைச் சலஞ்செய்கின்ற மிகைஅறிவேன் ……. எனைவிடுதி…..நின்மீதில் பழிவைத் திந்தப் பாவிஉயிர் விடத்துணிவேன்
2	319	1668	வாழ்த்து மெய் அன்பரை மாநிலத்தே இறவா வகை ஆட்கொண்டருளிய ஈசனே மெய்…….நான் பிறவா நெறி தந்தருள் என்பதென் பேசி டாயே.
2	320	1672	பொன்றாத மெய் அன்பருக்கன் புளம்பூண்டு நின்று நன்றாய் இரவும் பகலும் உனைநாடு மாறே.
2	323	1693	இன்னுமிந்தத் துன்பச் சுமையைச் சுமக்கமுடி யாதென்னால் அன்பர்க் கருள்வோய் அருள்.
2அ	330	1739	அடியார் களுக்கே இரங்கிமுனம் அடுத்த சுரநோய் தடுத்ததுபோல் படிமீ தடியேற் குறுபிணிபோம் படிநீ கடைக்கண் பார்த்தருளே.

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

2	358	1923	ஊடுதற்கோர் இடங்காணேன் உவக்கும்இடம் உளதோ உன்னிடமும் என்னிடமும் ஓர்இடம் ஆதலினால் ..... கூடுதற்கு வல்லவன் நீ கூட்டிஎனைக் கொண்டே குலம்பேச வேண்டாம்என் குறிப்பனைத்தும் அறிந்தாய்
2	358	1924	என்னுளம்நீ கலந்துகொண்டாய் உன்னுளம்நான் கலந்தேன் என்செயல்உன் செயல் உன்றன் இருஞ்செயல்என் செயலே
2அ	378	2022	வல்லானே எனதுபிணி நீநினைத்தால் ஒருகணத்தில் மாறி டாதோ .....நினதடியார் கழகங் கூட்டாய் செல்லாதார் வலிஅடக்கும் சிங்கபுரி தனில் அமர்ந்த தெய்வக் குன்றே.
3	413	2295	பத்தர் தமக்குப் பணிசெய்வார் பணியே பணியாப் பரிவுற்றார்
3	413	2301	நமது சொற்கேட்டே இங்கும் இருப்பார் அங்கிருப்பார் எல்லாம் இயல்பில் தாம் உணர்ந்தே எங்கும் இருப்பார்
3	418	2338	பாவம் அறுப்பார் பழிஅறுப்பார் பவமும் அறுப்பார் அவம்அறுப்பார் கோவம் அறுப்பார் ஒற்றியில்என் கொழுநர் இன்னும் கூடிலரே
3	429	2426	அடியாரைத் தம்போல் நினைப்பார் என்றாலும் ..... நான்அவர்மேல் காதல் ஒழியேன் கனவினுமே.
4	433	2448	வேதஆ கமமுடியின் விளங்கும்ஒளி விளக்கே பொற்புறவே இவ்வுலகில் பொருந்து சித்தன் ஆனேன் பொருத்தமும் நின்திருவருளின் பொருத்தமது தானே.
4	436	2463	தொண்டரெலாங் கற்கின்றார் பண்டுமின்றுங் காணார் .... கற்றதுநின்னிடத்தேபின் கேட்டதுநின் னிடத்தே கண்டதுநின் னிடத்தேஉட் கொண்டது நின்னிடத்தே
4	448	2517	கருணைவடி வாய்அடியார் உள்ளகத்தே அமர்ந்த கழலடிகள் வருந்தியிடக் கங்குலிலே நடந்து
4	456	2556	தம்மடியார் வருந்திலது சகியாதக் கணத்தே சார்ந்துவருத் தங்களெலாந் தயவினொடு தவிர்த்தே எம்மடியார் என்றுகொளும் இணையடிகள் வருந்த
5	495	2721	அடியார் உள்ளம் தித்தித் தூறும் அமுதென்கோ
5	498	2741	நான் உன் அன்பர் அவையே அணுகவும் ஆனந்த வாரியில் ஆடிடவும் இவையேஎன் எண்ணம் தணிகா சலத்துள் இருப்பவனே.
5	503	2779	என் ஐயாநின் அடியரொடு வாழ்கு வேன்இங்கார் உனைஅல்லால் எனக்கின்றருள்செய் வாயே.
5	520	2880	போற்றிடா தவர்பால் பொய்யனேன் புகுதல் பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய் ஆற்றல்கொள் நின்பொன் அடியருக் கடியன் ஆச்செயில் உய்குவன்
5	525	2915	நின்அடியைச் சேவித்தா னந்தவெள்ளம் திளைத்தா டேனோ சாரேனோ நின் அடியர் சமுகம்அதைச் சார்ந்தவர்தாள் தலைக்கொள் ளேனோ.
5	525	2922	கூடேனோ அடியருடன் கோவேஎம் குகனேஎம் குருவே என்று பாடேனோ ஆனந்தப் பரவசம்உற் றுன்கமலப் பதம்நண் ணேனோ
5	528	2941	பண்ணைக் காட்டி உருகும்அ டியர்தம் பத்திக் காட்டிமுத் திப்பொருள் ஈதென விண்ணைக் காட்டும் திருத்தணி காசல வேல னே
5	530	2949	நினைப்புகழும் அடியார்சபையின் அடையும்வகைக் குயில்மேல் குலவும் ..... நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.
5	530	2953	ஓகைப் பெறும்நின் திருத்தொண்டர் உடன்சேர்ந் துண்மை யுணர்ந்திடுவான் வாகைப் புயனே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.
5	532	2969	உன்றன் அடிஎண்ணி அங்கி இழுதென்ன நெஞ்சம் இளகேன் மறைஓதும் உன்றன் அருள்பெற்ற தொண்டர் வழிபட் டலங்கல் அணியேன்

5	546	3056	உன் பொன்னடிக் கென்நெஞ் சகம்இட மாக்கிமிக்க வெப்பான நஞ்சன வஞ்சகர் பாற்செலும் வெந்துயர்நீத் திப்பாரில் நின்அடி யார்க்கேவல் செய்ய எனக்கருளே.
6	62	3315	விடியு முன்னரே எழுந்திடா துறங்கும் வேட னேன்முழு மூடரில் பெரியேன் அடிய னாவதற் கென்செயக் கடவேன்
6	67	3345	அடியர்எலாம் இழியா தேறி யிருக்கின்றார்....விடுத்துலகில் ஆடிப் பாடி அடுத்தவினைத் துன்ப முடுகிச் சுடச்சுடவுஞ் சோறுண் டிருக்கத் துணிந்தேனே.
6	68	3348	அடுக்குந் தொண்டர் தமக்கெல்லாம் அருளீந் திங்கே என்னளவில் கொடுக்குந் தன்மை தனைஒளித்தால் ஒளிக்கப் படுமோ குணக்குன்றே தடுக்குந் தடையும்
6	80	3413	சுதந்தரம் உனக்கே கொடுத்தனம் உனது தூயநல் உடம்பினில் புகுந்தேம்
6	87	3459	சற்சபைக் குரியார் தம்மொடும் கூடித் தனித்தபே ரன்புமெய் அறிவும் நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
6	88	3462	விலகிய மாந்தர் அனைவரும் இங்கே மெய்யுறக் கூடிநின் றுனையே அலகில் பேர் அன்பில் போற்றிவாழ்ந் திடவும் அடியனேற் கிச்சைகாண் எந்தாய்.
6	88	3464	தங்கமே அனையார் கூடிய ஞான சமரச சுத்தசன் மார்க்கச் சங்கமே.....சங்கம் நீ டூழி துலங்கவும் சங்கத்தில் அடியேன் அங்கமே குளிர நின்றனைப்பாடி ஆடவும் இச்சைகாண் எந்தாய்.
6	89	3475	பலத்திலே சிற்றம் பலத்திலே பொன்னம் பலத்திலே அன்பர்தம் அறிவாம் தலத்திலே ஓங்கும் தலைவனே எனது தந்தையே கேட்கஎன் மொழியே.
6	89	3478	நரைத்தவர் இளையர் முதலினோர் எனையோர் நண்பன்என் றவரவர் குறைகள் உரைத்தபோ தெல்லாம் நடுங்கிஎன் னுள்ளம் உடைந்ததுன் உளம் அறி யாதோ.
6	106	3611	கமையாதி அடைந்துயிர்கள் எல்லாம்சன் மார்க்கம் காதலித்தே திருப்பொது வைக் களித்தேத்தல் வேண்டும்
6	110	3632	சத்தியமே பெருவாழ்வில் பெருங்களிப்புற் றிடுதல் சந்தேகித் தலையாதே சாற்றியஎன் மொழியை நித்தியவான் மொழிஎன்ன நினைந்துமகிழ்ந் தமைவாய்
6	113	3649	ஊனே புகுந்தென் உளங்கலந்த உடையாய் அடியேன் உவந்திடநீ தானே மகிழ்ந்து தந்தாய்இத் தருணம் கைம்மா றறியேனே.
6	113	3650	அருட்சோதிக் குறியே குணமேபெற என்னைக் குறிக்கொண்டளித்தாய் சன்மார்க்கநெறியே விளங்க எனைக்கலந்து நிறைந்தாய் இறவாமை பெற்றேன் உற்றேன்பெருஞ்சுகமே.
6	114	3656	தொண்டு கொண்டடியர்களிக்க நின்றாடும் தூயனேநேயனே கிதுதகு தருணம் கலந்தருள் கலந்தருள் எனையே.
6	129	3730	பெரியன்அருட் பெருஞ்சோதிப் பெருங்கருணைப் பெருமான் பெரும்புகழைப் பேசுதலே பெரும்பேறென் றுணர்ந்தே உரியஅருள் அமுதளித்தே நினைத்து திப்பித் தருள்வாய் உலகமெலாம் களித்தோங்க ஓங்குநடத் தரசே.
6	149	3824	தோற்றுகின்ற கலைஉலகம் கலைஅண்ட முழுதும் துலங்குகின்ற சுடர்பரப் பிச்சூழ்கின்ற சுடரே போற்றுகின்ற மெய்அடியர் களிப்பநடித் தருளும் பொது வில்நடத் தரசே
6	155	3853	தன்மைஎலாம் உடையபெருந் தவிசேற்றி முடியும் தரித்தருளி ஐந்தொழில் செய் சதுர்அளித்த பதியே இன்மைஎலாம் தவிர்ந்தடியார் இன்பமுறப்பொதுவில் இலங்குநடத் தரசே
6	171	3929	மூன்றானை இரண்டானை ஒன்றா னானை முன்னானைப் பின்னானை மூட நெஞ்சில் தோன்றானைத் தூயருளே தோன்றி னானைச் சுத்தசிவ சன்மார்க் கந்துலங்க என்னை ஈன்றானை

6	196	4046	துன்புடைய உலகரெலாம் சுகமுடையார் ஆகத் துன்மார்க்கம் தவிர்த்தருளிச் சன்மார்க்கம் வழங்க என்புடைநீ இருக்கின்றாய் உன்புடைநான் மகிழ்ந்தே இருக்கின்றேன் இவ்வொருமை யார்பெறுவார் ஈண்டே.
6	196	4048	எந்தப் பதத்தலைவ ராலும் படைக்கவொணாச் சித்தியைநான் படைக்கவைத்த பதியே தூங்காது பெருஞ்சுகமே சுகித்திடஇவ் வுலகைச் சுத்தசன்மார்க் வைத்தருள்க விரைந்தே.
6	212	4141	பங்கமோர் அணுவும் பற்றிடா அறிவால் பற்றிய பெற்றியார் உளத்தே சுத்தசன் மார்க்கச் சங்கநின் றேத்தும் சத்திய ஞான சபையவா அபயவாழ்வருளே.
6	223	4213	சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச் சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன் தன்மார்க்கத் தென்னுடல் ஆதியை நுமக்கே தந்தனன் திருவருட்சந்நிதிமுன்னே
6	223	4215	மன்செய்து கொண்டசன் மார்க்கத்தில் இங்கே வான்செய்து கொண்டது நான் செய்து கொண்டேன்
6	225	4226	பாட்டைப் புனைந்து பரிசளித்த பரம ஞானப் பதிக்கொடியே தேட்டைத் தனிப்பேர் அருட்செங்கோல் செலுத்தும்சுத்த சன்மார்க்கக் கோட்டைக் கொடியே ஆனந்தக் கொடியே அடியேற் கருளுகவே.
6	227	4240	நினதுசெல்வப் பிள்ளைஎன எற்குப் பெயரிட்டாய் - தெள்ளமுதம் தந்தாய் சமரசசன் மார்க்கசங்கத் தேவைத்தாய் எந்தாய் கருணை இது.
6	230	4255	அருளால் சுத்தசன் மார்க்க மன்றிலே வயங்கிய தலைமைப் பதிபதம் பெற்றேன் எனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே.
6	232	4276	சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே தழைக்க தயவறியாத் துன்மார்க்கம் போக தெலைந்து.
6	261	4420	உலகுயிர்கள் பரமிவைகா ரியத்தால் உள்ளனவே காரணத்தால் உள்ளன இல் லனவே தரமிகுபேர் அருள்ஒளியால் சிவமயமே எல்லாம் தாம்எனவே உணர்வதுசன் மார்க்கநெறி
6	261	4421	தோழிஇது கேள்நீ சமரசசன் மார்க்கநிலை சார்திஎனில் அறிவாய் திரமுறவாயினும்எல்லாம் ஆகிஅல்லா தாகும் திருவருளாம் வெளிவிளங்க விளங்குதனிப் பொருளாம் சிரமுறும்ஓர் பொதுஉண்மைச் சிவம்பிரம முடியே
6	273	4512	உயர்வுறுபே ரருட்சோதித் திருவமுதம் உவந்தளித்தாய் மயர்வறுநின் அடிய வர்தம் சபைநடுவே வைத்தருளிச் செயமுறவே வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்.
6		4515	நின் மெய்யடியார் சபைநடுவே எந்தைஉனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச் செந்தமிழின் வளர்க்கின்றாய்
6	273	4516	மேன்மைபெறும் அருட்ஜோதித் திருவமுதும் வியந்தளித்தாய் பான்மையுறு நின்னடியார் சபைநடுவே பதித்தருளித் தேன்மையொடு வளர்க்கின்றாய்
6	275	4532	விதித்தனை என்னைநின் தன்மக னாக விதித்துளத்தே பதித்தனை என்னுட்பதிந்தனை சிற்றம் பலநடமும்..... கதித்தழி யாமையும் இன்பமும் கைவரக் காட்டினையே.
6	279	4551	பிள்ளைஎன நிலைப்பெயர்பெற் றிருந்தேன் தன்இயலாம் தனிஞான சபைத் தலைமைப் பதியே சத்தியனே நித்தியனே தயாநிதியே உலகம் பின்இயல்மா னிடப்பிள்ளை பேச்சினும்ஓர் பறவைப் பிறப்பின்உறும் கிளிப்பிள்ளைப் பேச் சுவக்கின் றதுவே.
6	282	4581	வாழிஎம் மான்புகழ் வாழிஎன் நாதன் மலர்ப்பதங்கள் வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு வாழிஇவ் வையமும் வானமும் மற்றவும் வாழியவே.
6	284	4592	ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன் சாதல் ஒழித்தென்னைத் தானாக்கிப்..... வெந்தொழில்போய் நீங்க விரைந்து.
6	284	4593	ஒளவியந்தீர் உள்ளத் தறிஞரெலாம் கண்டுவக்கச் செவ்வியசன் மார்க்கம் சிறந்தோங்க
6	301	4643	இனி நீ புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான் புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத் தன்னெறி செலுத்துக

6	301	4643	பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடும்ஓர் பவநெறி இதுவரை பரவியதிதனால் செந்நெறி1 அறிந்திலர் இறந்திறந் துலகோர் செறிஇருள் அடைந் தனர் ஆதலின் இனி நீ புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான் புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத் தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே தனிநட ராஜஎன் சற்குரு மணியே.
6	301	4646	அஞ்சலை நீயொரு சிறிதும்என் மகனே அருட்பெருஞ் ஜோதியை அளித்தனம் உனக்கே துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே சூழ்ந்தசன் மார்க்கத்தில்செலுத்துக சுகமே
6	302	4650	நன்மார்க்கத் தவர்உளம் நண்ணிய ..... என்மார்க்கம் எனக்களித் தெனையுமேல் ஏற்றி இறவாத பெருநலம் ஈந்தமெய்ப் பொருளே சன்மார்க்க சங்கத் தார்தமு வியபதியே
6	302	4649	எமன்எனும் அவன் இனி இலைஇலை மகனே எய்ப்பற வாழ்க என்றியம் பிய அரசே சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே
6	318	4726	சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர் சாவையும் பிறப்பையும் தவிர்ந்திட விரும்பீர் பன்மார்க்கம் செல்கின்ற படிற்றுளம் அடக்கீர் பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர்
6	323	4758	சுத்தசிவ சன்மார்க்க சங்கம் தலைப்பட்டேன் – என்மார்க்கம் நன்மார்க்கம் என்றேவான் நாட்டார் புகழ்கின்றார்
6	323	4759	பன்மார்க்கம் எல்லாம் பசையற் றொழிந்தனவே சன்மார்க்கம் ஒன்றே தழைத்ததுவே எம்பெருமான் கொல்லா நெறிஅருளைக் கொண்டு.
6	324	4766	எவ்வுயிரும் சன்மார்க்க சங்கம் தனைஅடையச் செய்வித்தே என்மார்க்கம் காண்பேன் இனி.
6	325	4777	யான்புரிதல் வேண்டுங்கொல் இவ்வுலகில் செத்தாரை ஊன்புரிந்து மீள உயிர்ப்பித்தல் – வான்புரிந்த அம்பலத்தான் நல்லருளால் அந்தோநான் மேற்போர்த்த கம்பலத்தால் ஆகும் களித்து.
6	326	4779	ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை நாடாதீர் பொய்உலகை நம்பாதீர் – வாடாதீர் சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினிஇங் கென்மார்க்க மும்ஒன்றா மே.
6	326	4780	மார்க்கமெலாம் ஒன்றாகும் ஏக்கம்விட்டுச் சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடு மின் சத்தியம்நீர் நன்மார்க்கம் சேர்வீர்இந் நாள்.
6	353	4940	உலகமெலாம் போற்ற ஒளிவடிவ னாகி இலகஅருள் செய்தான் இசைந்தே – திலகன்என நானேசன் மார்க்கம் நடத்துகின்றேன் நம்பெருமான் தானே எனக்குத் தனித்து.
6	354	4943	உன்னைவிட மாட்டேன்நான் உன்ஆணை எம்பெருமான் என்னைவிட மாட்டாய் இருவருமாய் – மன்னிஎன்றும் வண்மை எலாம்வல்ல வாய்மை அருளால் உலகுக் குண்மைஇன்பம் செய்தும் உவந்து.
6	354	4949	ஓவுறாத் துயர்செயும் உடம்புதான் என்றும் சாவுறா தின்பமே சார்ந்து வாழலாம் மாவுறாச் சுத்தசன் மார்க்க நன்னெறி மேவுறார்
6	356	4959	எல்லாம்வல்ல சித்தனைக் கூடிக் குலவிஅமு துண்டேன் மெய்ஞ்ஞான உருஅடைந் தேன்பொய் உலகொழுக்கம் விண்டேன்சமரச சன்மார்க்கம் பெற்றவியப்பிதுவே.
6	360	4984	கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவு கின்றேன் பாடுகின்றேன் எந்தைபிரான் பதப்புகழை
6	361	4989	சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடும் கேட்பீர் என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
6	361	4990	சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே சத்திய சுத்தசன் மார்க்க வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை விளம்பினேன் வம்மினோ விரைந்தே.

6	372	5076	சிருட்டி முதல்ஓர் ஐந்து தொழிலும் செய்யென் றென்னை யே திகழ நடுவைத் தாய்சன் மார்க்க சங்கம் கூட்டி யே.
6	372	5077	அடியன் ஆக்கிப் பிள்ளை ஆக்கி நேயன் ஆக்கி யே அடிகள் ஆக்கிக் கொண்டாய் என்னை அவலம் நீக்கி யே
6	375	5101	அன்றே என்னை அடியன் ஆக்கி ஆண்ட ஜோதியே அதன்பின் பிள்ளை ஆக்கி அருள்இங் களித்த ஜோதியே நன்றே மீட்டும் நேயன் ஆக்கி நயந்த ஜோதியே நானும் நீயும் ஒன்றென் றுரைத்து நல்கு ஜோதி யே.
6	379	5140	ஈடறி யாதமெய் வீடுதந் தன்பரை இன்புறச் செய்கின்றீர் வாரீர் வன்பர்க் கரியீரே வாரீர்.
6	384	5192	ஒன்றே சிவம்அதை ஒன்றுசன் மார்க்கமும் ஒன்றேஎன் றீர் இங்கு வாரீர் நன்றேநின் றீர்இங்கு வாரீர்.
6	396	5265	சாலை விளக்கு மருந்து – சுத்த சமரச சன்மார்க்க சங்க மருந்து.
6	404	5332	தருநெறி எல்லாம்உள் வாங்கும் - சுத்த சன்மார்க்கம் என்றோர் தனிப்பேர் கொண் டோங்கும்
6	414	5429	வஞ்சகர் அஞ்சினர் வாய்மூடிச் சென்றனர் வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர் தஞ்சம் எமக்கருள் சாமிநீ என்றனர் சன்மார்க்க சங்கத் தவர்களே வென்றனர்
6	414	5428	சத்திய ஞான சபைஎன்னுள் கண்டனன் சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்
6	421	5494	பன்மார்க்க மும்கடந்து சின்னம் பிடி பன்னிரண்டின் மீதுநின்று சின்னம் பிடி சன்மார்க்கம் மார்க்கம்என்று சின்னம் பிடி
6	449	5732	தனித்தலைவர் வருகின்ற தருணம்இது தோழி தனிக்கஎனை விடுநீயும் தனித் தொருபால் இருத்தி.....திருவார்த்தை நீயும் இன்புறக்கேட் டுளங்களிப்பாய்
6	456	5763	உயிர்க்குத் துணைவர்வரு கின்றார் உரிமைபெறும் என்தோழி நீயும்இங்கே சின்ன ஒலிகேட்டுக் களித்திடுவாய் உளவாட்டம் அறவே.
6	456	5766	நீ ஆண்மகன் போல் நாணம் அச்சம் விடுத்தே
6	457	5770	வாழியநீ சமரசன் மார்க்கம் விளங்கஉல கத்திடையே விளக்குகஎன் றெனது கைபிடித்தார் நானும்அவர் கால்பிடித்துக் கொண்டேன் களித்திடுக இனியுனை நாம் கைவிடோம் என்றும்
6	458	5773	நீ விளங்குகசன் மார்க்கநிலை விளக்குகஎன் றெனது கைஅகத்தே ஒருபசும் பொற் கங்கணமும் புனைந்தார்
6	459	5779	ஒன்றாய் இரண்டாய்ஒன் றிரண்டும் இல்லதுவாய் எல்லாஞ்செய் வல்லதுவாய் விளங்கித் தன்பரமாம் பரங்கடந்த சமரசப்பே ரந்தத் தனிநடமும் கண்ணுற்றேன்
6	459	5782	இன்றருளாம் பெருஞ்சோதி உதயமுற்ற ததனால் இனிச்சிறிது புறத்திருநீ இறைவர்வந்த உடனே ஒன்றுடையேன் நான்அவரைக் கலந்தவரும் நானும் ஒன்றான பின்னர்உனை அழைக்கின்றேன் உவந்தே.
6	460	5786	காலையிலே கலப்பதற்கிங் கெனைப்புறம்போ என்றாய் கண்டிலன்ஈ· ததிசயம்என் றுரையேல்என் தோழி சாலையிலே சமரசன் மார்க்கசங்கந் தனிலே சற்றிருந்தாய் எனில்இதனை உற்றுணர்வாய் காணே.
6	463	5801	எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ்சோ தியரே ஞானநடம் கண்டேன் மெய்த் தேன்அமுதம் உண்டேன் செவ்வைபெறு சமரசன் மார்க்கசங்கந்தனிலே சேர்ந்தேன்அத் தீமொழியும் தேமொழி ஆயினவே.

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	464	5806	ஓதிஉணர்ந் தோர்புகழும் சமரசன் மார்க்கம் உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம் சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச் சுத்தசிவ நிறைவைஉள்ளே பெற்றுமகிழ்ந் தேனே.
6	464	5807	அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம் ஆறந்த நிலைஅறிந்தேன் அப்பால் நின் றோங்கும் பெரியசிவ அனுபவத்தால் சமரசன் மார்க்கம் பெற்றேன்இங்கிறவாமை உற்றேன்காண் தோழி.
6	465	5809	குருதுரியம் காண்கின்றேன் சமரசன் மார்க்கம் கூடினேன் பொதுவில்அருட் கூத்தாடும் கணவர் மருவிடப்பெற் றவர்வடிவம் நான்ஆனேன் களித்து வாழ்கின்றேன்
6	465	5811	இருட்சாதித் தத்துவங்கள் எல்லாம்போ யினவால் எங்கணும்பே ரொளிமயமாய் இருந்தனஆங் கவர்தாம் மருட்சாதி நீக்கிஎனைப் புணர்ந்தஒரு தருணம்..... சமரசன் மார்க்கத் திருச்சபைக்கண் உற்றேன்
6	467	5818	இத்தினமேஅருட்சோதிஎய்துகின்றதினமாம்இனிவரும்அத்தினங்கள்எலாம்இன்பம்உறு தினங்கள் சுத்தசிவ சன்மார்க்கம் துலங்கும்எலா உலகும்தூய்மைஉறும் நீஉரைத்த சொல்அனைத்தும் பலிக்கும்
2	333	1757	பன்னாள் ஆணாகப் பிறந்தடியேன் அருந்தவம்என் புரிந்தேனோ அறிகிலேன் முன் பேணாத பிறப்பெல்லாம் பிறப்பலஇப் பிறப்பே என் பிறப்பாம் அந்தோ.
2	333	1758	எங்குரு நாதன்எம் பெருமான் அருளெனும் வடிவங் காட்டி பொருளுற இருந்தோர் வாக்களித் தென்னுள் புகுந்தனன் புதுமை ஈதந்தோ.
2		1804	கோமளாங் கூடு மருந்து – நலாங் கொடுக்கத் துசாங்கட்டிக் கொண்ட மருந்து
2	358	1923	ஊடுதற்கோர் இடங்காணேன் உவக்கும்இடம் உளதோ உன்னிடமும் என்னிடமும் ஓர்இடம் ஆதலினால் கூடுதற்கு வல்லவன் நீ கூட்டிஎனைக் கொண்டே குலம்பேச வேண்டாம்என் குறிப்பனைத்தும் அறிந்தாய்
4	433	2448	வேதஆ கமமுடியின் விளங்கும்ஒளி விளக்கே பொற்புறவே இவ்வுலகில் பொருந்து சித்தன் ஆனேன் பொருத்தமும் நின்திருவருளின் பொருத்தமது தானே.
4	438	2470	இறைவநின தருளாலே எனைக்கண்டு கொண்டேன் எனக்குள் உனைக் கண்டேன்பின் இருவரும் ஒன்றாக உறைவதுகண் டதிசயித்தேன்
4	451	2528	நள்ளுலகில் உனக்கிதுநாம் நல்கினம்நீ மகிழ்ந்து நாளும் உயிர்க் கிதம்புரிந்து நடத்திஎன உரைத்தாய்
4	458	2560	உளவறிந்தோர் தமக்கெல்லாம் உபநிடதப் பொருளாய் உளவறியார்க் கிகபரமும் உறுவிக்கும் பொருளாய்
4	467	2594	பொதுவில் மாநடஞ்செய் துரையேநின் வண்மைதனை அடியேன் புறங்கவியப் பாடுகின்றேன் அகங்கவியப் பாடும் புண்ணியரெல் லாம்இவன்ஓர் புதியன்எனக்கொளவே.
5	535	2987	வீட்டைப் பெறுவோர் உள்அகத்து விளங்கும் விளக்கே சகஉலகில் கிடைத்த மாய வாழ்க்கைஎனும் காட்டைக் கடந்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே.
6	68	3348	அடுக்குந் தொண்டர் தமக்கெல்லாம் அருளீந் திங்கே என்னளவில் கொடுக்குந் தன்மை தனைஒளித்தால் ஒளிக்கப் படுமோ குணக்குன்றே தடுக்குந் தடையும்வேறில்லை
6	80	3413	சுதந்தரம் உனக்கே கொடுத்தனம் உனது தூயநல் உடம்பினில் புகுந்தேம் இதந்தரும் உளத்தில் இருந்தனம் உனையே இன்புறக் கலந்தனம்
6	85	3442	கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும் கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போக மலைவறுசன் மார்க்கம்ஒன்றே நிலைபெறவெவ்வுலகும் வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினைஎன் தனக்கே

சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	87	3453	எனக்குள் இருக்கின்ற நீஅறிந் ததுவே பிறிவதில் லாநின் அருட்பெரும் பொருளைப் பெற்றனன் பேசுவ தென்னே.
6	105	3606	அண்டமெலாம் பிண்டமெலாம் கண்டுகொளல் வேண்டும் துடிசேர்எவ்வுலக மும்எத் தேவரும்எவ் வுயிரும் சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டும்
6	130	3735	இருநிலத்தே பசித்தவர்க்கும் பசிநீக்க வல்லார் இவர்சிறியர் இவர்பெரியர் என்னல்வழக் கலவே
6	130	3736	கைகொடுத்தீர் உலகம்எலாம் களிக்கஉல வாத கால்இரண்டும் கொடுத்தீர் எக்காலும் அழியாத மெய்கொடுக்க வேண்டும்
6	131	3739	நின்வரவு சத்தியம்சத் தியமே சந்தேகம் இல்லைஅந்தத் தனித்ததிரு வரவின் நாள்அறிந்து கொளல்வேண்டும் நவிலுகநீ எனது நனவிடையா யினும் அன்றிக் கனவிடையா யினுமே.
6	134	3750	தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே சிறந்து விளங்கழர் சிற்சபை காட்டும் அருளான வீதியில் ஆடச்செய் தீரே
6	153	3844	சன் மார்க்கநிலைக் கிச்சையைஉண் டாக்கித் தச்சுறவே பிறமுயற்சி செயுந்தோறும் அவற்றைத் தடையாக்கி உலகறியத் தடைதீர்த்த குருவே
6	154	3850	திசையறிய மாட்டாதே திகைத்தசிறி யேனைத் தெளிவித்து மணிமாடத் திருத்தவிசில் ஏற்றி பசைஅறியா மனத்தவர்க்கும் பசைஅறிவித் தருளப் பரிந்தநடத்தரசேஎன் பாட்டும்அணிந் தருளே.
6	155	3856	மதம்என்றும் சமயம்என்றும் சாத்திரங்கள் என்றும் மன்னுகின்ற தேவர் என்றும்மற்றவர்கள் வாழும் பதம்என்றும்..... விதம்ஒன்றும் தெரியாதே மயங்கியஎன்தனக்கே வெட்டவெளி யாஅறிவித் திட்டஅருள் இறையே
6	156	3861	கொலைபுரிவார் தவிரமற்றை எல்லாரும் நினது குலத்தாரே நீஎனது குலத்து முதல் மகனே மலைவறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம் வளரவளர்ந் திருக்கஎன வாழ்த்தியஎன் குருவே
6	157	3865	தயைஉடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம் சார்ந்தவரே ஈங்கவர்கள்தம்மோடுங் கூடி நயமுறுநல் அருள்நெறியில் களித்துவிளை யாடி நண்ணுகஎன் றெனக்கிசைத்த நண்புறுசற் குருவே
6	163	3894	ஒருதனிப் பெரும்பதி உவந்தே புன்னிக ரில்லாப் புலையனேன் பிழைகள் பொறுத்தருட் பூரண வடிவாய் என்னுளம் புகுந்தே நிறைந்தனன்
6	175	3948	எல்லாம் வல்லஓர் சித்த சாமியைத் தயாநிதி தன்னை என் மதியிலே விளங்கும் உண்மையை என்றன் உயிரைஎன் உயிருள் ஒருவனைக் கண்டுகொண் டேனே.
6	178	3962	சார்கலாந் தாதிச் சடாந்தமுங் கலந்த சமரச சத்திய வெளியைச் சேர்குணாந் தத்திற் சிறந்ததோர் தலைமைத் தெய்வத்தைக் கண்டுகொண் டேனே.
6	186	3998	சாகாத வரம்எனக்கே தந்ததனித் தெய்வம் சன்மார்க்க சபையில்எனைத் தனிக்கவைத்த தெய்வம் எண்ணுதொறும் என்னுளத்தே இனிக்கின்ற தெய்வம்
6	192	4029	தத்துவம் அனைத்தும் தவிர்த்துநான் தனித்த தருணத்தில் கிடைத்ததொன் றென்கோ சத்துவ நிரம்பும் சுத்தசன் மார்க்கந் தனில்உறும் அனுபவம்என்கோ
6	216	4170	எம்மே தகவும் உடையவர்தம் இதயத் தமர்ந்த இறையவனே நம்மே லவர்க்கும் அறிவரிய நாதா என்னை நயந்தீன்ற அம்மே அப்பா
6	294	4621	மண்ணிற் கிடந்தருளை உன்னிஉல கியலினை மறந்துதுயில் கின்றபோது நாட்டமுறு வைகறையில் என்அரு கணைந்தென்னை நன்றுற எழுப்பிமகனே நல்யோக ஞானம்எனி னும்புரிதல்

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

6	322	4743	அய்யாஎன் றோர்கால் அழைக்கின்றேன் அப்பொழுதே எய்யேன் மகனேஎன்றெய்துகின்றான்
6	956	956	நள்ளுலகில் உனக்கிதுநாம் நல்கினம்நீ மகிழ்ந்து நாளும் உயிர்க் கிதம்புரிந்து நடத்திஎன உரைத்தாய்
6	956	956	வெண்ணீற் றுக்கும்
126. தோன்றும் துணையாக தோன்றாத்துணையாக			
6	154	3848	தோன்றுவெளி யாகித் தோற்றும்வெளி யாகிஅவை தோற்றுவிக்கும் வெளியாய் நித்தநிலை களின்நடுவே நிறைந்தவெளி யாகி நீயாகி நானாகி நின்றதனிப் பொருளே
6	194	4038	பூதலத்தார் வானகத்தார் போற்றிமதித் திடவே ஏற்றாத உயர்நிலைமேல் ஏற்றி எல்லாம் வல்ல இறைமையும்தந் தருளியஎன் இறையவனே எனக்கே தோற்றாத தோற்றுவித்த துரையேஎன் உளத்தே சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே.
4	452	2533	நான்தனிக்குந் தருணத்தே தோன்றுகின்ற துணையாய் நான்தனியா இடத் தெனக்குத் தோன்றாத துணையாய்
127. நந்தி			
1	4	90	வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கண் மனக்கோயில் வாழும்பதம்
1	34	57	வன்தீமை இல்லான் எவன்யார்க்கும் ஈசன் எவன்யாவும் வல்லான் எவனந்தி வண்ணனெவன்
2அ	372	2001	ஞானஅறி வாளர்தின மாடஉல கன்னையாம் நங்கைசிவ காமியாட நாகமுடன் ஊகமன நாடிஒரு புறமாட நந்திமறை யோர்களாட
3	416	2327	நந்திப் பரியார் திருஒற்றி நாதர் அயன்மால் நாடுகினும் சந்திப் பரியார் என் அருமைத் தலைவர்
3	420	2354	நந்தி மகிழ்வாய்த் தரிசிக்க நடனம் புரியும் நாயகனார் அந்தி நிறத்தார் திரு ஒற்றி அமர்ந்தார்
128. நல்வர் தொடர்ச்சி			
153	40	153	தாணிற்கும் தன்னன்பர் தாம்வருந்தில் சற்றுந் தரியாது மன்னன் பருளளிக்கும் வள்ளலெவன்
154	40	154	முன்னன்பில் சால்புடைய நல்லோர்க்குத் தண்ணருள்தந் தாட்கொள வோர்மால் விடைமேல் வந்தருளும் வள்ளலெவன்
		3505	தாமதப் பாவிவத் திடுமோ



சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பா விண்ணப்பக் கலிவெண்பா 276 சிவதலங்கள்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

ஓம் சிவமயம் ஓம் சிவாயநம

ஓம்நமசிவாய

திருச்சிற்றம்பலம்

விண்ணப்பக் கலிவெண்பா

திருவருட்பிரகாச வள்ளலார் திருவருட்துணையால் 1840களில் விண்ணப்பக்கலிவெண்பா என்கின்ற 413- பாடல்களை இயற்றியுள்ளார்கள். இந்தப் பாடல்களிள் தேவாரத் திருத்தலங்களில் குறிப்பிட்டுள்ள 276 சிவதலங்களைப்பற்றி குறிப்பிட்டுள்ளார், இந்த 276 சிவதலங்களையும் சேக்கிழார் பெருமானார் தொகுக்கும் போது தேவாரத் திருத்தலங்கள் என்ற வரிசையில் வரிசை எண் கொடுக்கப்பட்டு உள்ளது.

இந்த 276 சிவ தலங்களும் இறைவனால் கலியுகம், துவங்கியப் பிறகு தோன்றியதோ அல்லது கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் தோன்றியதாகவும் எண்ணவும்கூடும் ஏன் என்றால் ஒவ்வொரு தலங்களும் மானிடப் பிறவி தோன்றியப் பிறகு அவர்களுக்கு ஏற்படும் தோஷங்களும், ஊழ்வினைகளும் அவர் அவர்களின் செய்கைகளுக்கு ஏற்ப நடக்கின்றது.

இந்த ஊழ் வகையினாலும், தோஷங்களினாலும் பலப்பல பிறவிகள் உயிர்கள் தேகங்களை எடுத்துக் கொண்டே இருக்கின்றது. இதுவரை தோன்றிய நான்கு யுகங்களிலும் பிறவிகளுக்கும் தோஷங்களுக்கும் அளவே இல்லை. இதுவரை தோன்றிய இறைதூதுவர்களுக்கும் அளவே இல்லை. இறைதூவர்களை இறைவன் இந்த அண்டத்திலும் எண்ணற்ற அண்டங்களிலும் ஆளுமை செய்வதற்கு கோடி கோடிக்கணக்கான சித்தர்களை அனுப்பிக்கொண்டே இருக்கின்றார்கள்.

அவர்களில் எண்ணற்ற சித்தர்களை இந்த அண்டத்தில் இந்தியாவில் தமிழ்நாட்டில் நான்கு யுகங்களிலும் காரியப்பட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். இந்த சித்தர்களில் ஒரு சில சித்தர்களை சேக்கிழார் நாயனார் -63 பேர்களை வரிசைப்படுத்தியுள்ளார்கள். அந்த கணக்கில் சேர்க்கப்படாத எண்ணற்ற சித்தர்களும் இறைவனால் அனுப்பப்பட்ட இறை தூதுவர்களே ஆவார்கள்.

அப்படிபட்ட சித்தர்கள் காலத்திற்கு ஏற்ப அந்த அந்த யுகங்களிலும், ஏற்பட்டுள்ள, தோஷங்களையும், பிணிகளையும், ஊழ்வினைகளையும் நீக்கும் பொருட்டு இறைவனால் அனுப்பிவைக்கப்பட்ட இறைத்தூதுவர்கள். அந்த அந்த காலத்தின் ஆட்சி செய்த அரசர்களை நல்வழிபடுத்தியும், தர்மத்தை நிலை நாட்டியும், பெரிய திருத்தலங்களை கட்டுவித்தும் மக்களுக்கு நன்மை பயக்கும் பொருட்டு உருவாக்கிய தலங்கள் ஆகும்.

இந்த 18 சித்தர்களும், 63 நாயன்மார்களும் மற்றும் நால்வர் பாடல் பெற்றத் தலங்களை, இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள தலங்கள் 276 ஆகும். அதில் தமிழ்நாட்டில் -266 கேராளாவில் 1 தலம், இலங்கையில் 2 தலம், துளுவைநாடு 1 தலம், வடநாடு 6 தலம் ஆகும்.

திருஅருட்பா முதல் ஐந்து திருமுறைகள்

திருவருட்பிரகாச வள்ளலார் நமக்காக இந்த 276 தலங்களும் போய் வருகின்ற புண்ணியத்தையும், தோஷம் நீக்குதலையும் ஒரே ஒரு பாடலில் திருவருட்பாவில் முதல் திருமுறையில் 2ஆம் பதிகம் விண்ணப்ப கலிவெண்பாவில் தேவார தலங்களில் உள்ள வரிசையில் இல்லாமல், தில்லை சிதம்பரம் முதல் தலமாகக் கொண்டு காவிரியின் வடகரை, சோழநாட்டின் 64 தலங்களும், காவிரியின் தென்கரையில் 127 தலங்களும், ஈழநாடு 2 தலமும் பாண்டிநாடு 13 தலம், சேரநாடு 1 தலம், கொங்குநாடு 7 தலமும், நடுநாடு 23 தலமும் தொண்டை நாடு 35 தலமும், துளுவ நாடு 1 தலமும், வடநாடு 7 தலமும் ஆகிய 276 தலங்களையும் வரிசைப்படுத்தியும் நாம் அந்த தலங்களை ஓதி உணர்ந்து 281-வது பாடல்களில் ''தொண்டர் விழி உண்ணற் கெளியா உருத்திரன் மாலாதியர் தங் கண்ணிற் கனவிலுங் காண்பரியாய்'',

''மண்ணுலகில் என்போன்ற வர்க்கும் இருள்நீக்கி இன்புதவும் பொன்போன்ற மேனிப் புராதனனே'' என்று போற்றியும் தொண்டர் விழி உண்ணற் என்பது நித்திய தீபத்தை நம்முடைய புறக் கருவியான (கண்) நேத்திரத்தின் வழியாக உள்வாங்கி ஆன்மாவின் மேல் ஏற்பட்டுள்ள.

துரிசை நீக்குவதற்கு செய்யும் தீப வழிபாட்டை வழியுறுத்தியும் அதன் வழியாக, நம்முடைய தேகத்தில் ஏற்பட்டுள்ள தத்துவ குற்றங்களை நீக்கும் வலிமை கடவுள் ஒருவருக்கே உண்டு என்றும் அதை நம்முடைய அகவழிபாடு வழியாக நீக்கியும் -289-வது பாடல்களில் ''அந்தணவெண் நீறுடையா யாறுடைய நீண்முடியாய் நேடரிய வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம்'' என்று திருவருட் பிரகாச வள்ளலார் அருட்பெருஞ்சோதி ஆண்டவரிடத்தில் 276 தலங்களையும் ஓதி உணர்ந்த ஜீவனுக்கு கோடான கோடிப் பிறவிகளில் இருந்து கிடைத்த தோஷங்களையும், வினைப்பயனால் ஏற்பட்ட நல்வினை, தீவினையில் இருக்கும் பாவப் புண்ணியங்களில் இருந்து இந்த ஜீவன் இனி இறப்பு, பிறப்பு என்கிற சுழற்சியில் இருந்து விடுபட வேண்டி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் இந்த பிறவியிலேயே இவர்கள் ஆன்ம லாபம் பெற்று அடைய வேண்டி நமக்காக விண்ணப்பித்து ஏற்படுத்தியதே இந்த விண்ணப்பக் கலிவெண்பா பாடல்கள் ஆகும்.

மேலும் போன பிறவியில் செய்த தீமை இன்னதென்று, சொல்லத் தெரியாததால் நமக்கென்று ''மாறுபட எள்ள லடியேன் எனக்குள் ஒளியாமல் உள்ள படியே யுரைக்கின்றேன்'' என்று நம் மனத்தில் முன் கடந்த பிறவியில் உள்ள குற்றங்களை கூறச் சொல்லியும் ''விள்ளுறுமியான் வன்சொ லுடன்அன்றி வள்ளலுன தன்பர்தமக் கின்சொ லுடன் பணிந்தொன் றீந்ததில்லை'', புன்சொலெனும் பொய்யுரைக்க வென்றாற் புடையெழுவேன் அன்றியொரு மெய்யுரைக்க வென்றும் விழைந்ததிலை'', ''வையகத்தில் பொல்லா விரதத்தைப் போற்றியுவந் துண்பதல்லால் கொல்லா விரதத்தைக் கொண்டதிலை'',''பன்னுகின்ற செக்குற்ற எள்ளெனவே சிந்தைநசிந் தேனலது முக்குற்றந் தன்னை முறித்ததிலை'' செக்கில் அகப்பட்ட எள் வித்து போல இந்த பிறவியென்கின்ற துன்பத்தில் அகப்பட்டு ஆணவம், கன்மம், மாயை என்கின்ற முக்குற்றத்திலிருந்து விடுபட முயற்சிக்கவில்லையென்றும், ''துக்கமிகுந் தாவில் வலங்கொண்டு சஞ்சரித்தேன் அல்லதுநின் கோவில்வலங் கொள்ளக் குறித்ததிலை'' இந்த மானிடத் தேகத்தை கொடுத்த, தேகத்தை வைத்து கொண்டு இறைவனின் சந்நிதியில் வலம்வர எண்ணியதில்லை.

திருவருட்பா விண்ணப்பக் கலிவெண்பா 276 சிவதலங்கள்

''பூவுலகில் வன்னிதியோர் முன்கூப்பி வாழ்த்தினேன் அன்றியுன்றன் சன்னிதியிற் கைகூப்பித் தாழ்ந்ததிலை'' இந்த உலகியல் வாழ்வில் பணம் படைத்தவர்களைப் பார்த்து வணங்கினேனே தவிர நம்மைப் படைத்த இறைவனை கைக்கூப்பி வணங்குவதற்கு தவறினேன். ''பின்னெஞ்சாப் பண்ணீர்மை கொண்டதமிழ்ப் பாமாலை யாற்றுதித்துக் கண்ணீர்கொண் டுன்பாற் கனிந்ததிலை'' இந்த உயர்ந்த மானிட தேகத்தைக் கொடுத்த இறைவனை தமிழ் பாமாலையால் ஆனந்த கண்ணீர் கொண்டு தயவு பெற முயற்சிக்கவும் இல்லை. ''மன்னுகின்ற மானஞ் செயாது மனநொந் திரப்போக்குத் தானஞ்செய் வாரைத் தடுத்ததுண்டு'' பசி என்று வந்த ஏழைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் கொடுக்கும் பண்புள்ளவர்களை கொடுக்க விடாமல் தடுத்ததுண்டு. ''ஈரமிலா நெஞ்ச ருடன்கூடி நேசஞ்செய் தும்மடியே தஞ்சமெனத் தாழாது தாழ்ந்ததுண்டு'' ஜீவகாருண்யமும், இரக்கமும் இல்லாத நண்பர்களுடன் கூடி வீண் பொழுது போக்கி படைத்த இறைவனுக்கு நன்றி இல்லாது வாழ்ந்ததுண்டு.

''தீயவினை மாளாக் கொடிய மனச்செல்வர் வாயிலிற்போய்க் கேளாச் சிவநிந்தை கேட்டதுண்டு'' நல்ல எண்ணம் இல்லாதவர் நாத்திகர் வீட்டு வாசலில் சென்று இறைவனை கடுகடுத்து நிந்திப்பவர்களிடம் யாசகம் கேட்டு பல் இழிந்து வாழ்ந்ததுண்டு.''மீளாத பொல்லாப் புலையரைப்போற் புண்ணியரை வன்மதத்தால் சொல்லா வசையெல்லாஞ் சொன்னதுண்டு'', ''நல்லோரைப் போற்றாது பொய்யுடம்பைப் போற்றிச் சிவபூசை ஆற்றாது சோற்றுக் கலைந்ததுண்டு'' உயிர்கொலை செய்பவரைப் போலவும், மாமிசம் உண்பவரையும் போல் நன்மை செய்பவர்களையும் பரோபகாரம் செய்பவர்களையும் வீண் சொல்லால் அவமதித்து பேசி அவர்களின் அன்பைப் பாராமல் அவமானப் படுத்தியதுண்டு.

''தேற்றாமல் ஈபத்தா என்றிங் கிரப்போர் தமைக்கண்டு கோபத்தால் நாய்போற் குரைத்ததுண்டு'', ''பாபத்தால் சிந்தையொன்று வாக்கொன்று செய்கையொன்றாய்ப் போகவிட்டே எந்தைதினை யேத்தா திருந்ததுண்டு'' ஆபத்து என்றும் அவசர உதவியென்று வரும் ஏழைகளின் முகத்தைப் பாராமல் வீண் ஐம்பத்துக்கு கூடா நட்புடன் கூடி தருமம் செய்யாது வீண் பழக்கத்திற்கு செலவு செய்து சொல்வது ஒன்று செய்வது மற்றொன்றாகவும், மனத்தை தன் இஷ்டத்திற்கு போகவிட்டு இறைவனை சிந்திக்காமல் பாவத்தை பெருக்கிக் கொண்டது உண்டு.''புந்தியிந்த சொல்லைக்கல் லென்றுநல்லோர் சொன்னபுத்தி கேளாமல் எல்லைக்கல் லொத்தே யிருந்ததுண்டு'', ''தொல்லைவினை ஆழ்த்தா மயவுலகி அற்ப மகிழ்ச்சியினால் வாழ்த்தாம லுன்னை மறந்ததுண்டு'' இறைவன் கொடுத்த அறிவு இருந்தும் எல்லையில் வைத்துள்ள கல்லைப்போல் மனத்தை வைத்துக்கொண்டு சாதுக்கள் சொல்லும் நல்ல வார்த்தைகளைக் கேட்காமல் கல்லைப் போல் நின்றது உண்டு.

இதனால் ஏற்படும் உலகியலில் ஏற்படப் போகின்ற தீயவினைகளை உணராமல், மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பத்தை மகிழ்ச்சியாக இருந்து அவர்களுக்கு நன்மை செய்யாமல் ''இறைவா'' உன்னை படைத்த இறைவனை போற்றாமல் உன்னை மறந்தது உண்டு. ''அண்ணலுனை நாளுரையா தேத்துகின்ற நல்லோர்மேல் இல்லாத கோளுரையென் றாலெனக்குக் கொண்டாட்ட'',''நீளநினை நேசிக்கு நல்ல நெறியாஞ் சிவாகமநூல் வாசிக்க வென்றாலென்

வாய்நோகுங்'',''காசிக்கு நீடிக்கி லானாலு நேர்ந்தறிவ தல்லதுவீண் வேடிக்கை யென்றால் விடுவதிலை'', ''இறைவா'' ஒவ்வொரு நாளும் என்னை வாழவைக்கின்ற உன்னை நினைக்காமல் புண்ணியர்களைப் பற்றி கோள் சொல்லி மகிழ்ந்து கொண்டாடியது உண்டு. இறைவா உன்னை புகழ்ந்து பாடும் சிவ ஆகநூலை வாசிப்பவர்களையும், இறைத் தொண்டு செய்பவர்களையும் தனக்கு கொடுத்த வாயினால் சொற்புகழைச் சொல்லாமல் இருந்து வீண் பேச்சினால் வாய் வலிக்கும். காசிக்கு சென்று இறைவா உன்னை நினைக்கால் வீண் பொழுது கழித்து வேடிக்கை பார்ப்பதில் சந்தோஷம். ''அள்ளனெறி செல்லென்றால் அன்றிச் சிவசிவா வென்றொருகால் சொல்லென்றால் என்றனக்குத் துக்கம்வரும்'' நல்வழியில் புண்ணியத்தையும் பரோபகாரத்தை செய் என்றால் சிவசிவா இறைவன் புகழைச் சொல் என்றால் எனக்கு துக்கம் வரும். ''ஏம்பலுடன் எற்றோ இரக்கமென்ப தென்றனைக்கண் டஞ்சியெனை உற்றோ ரையுமுடன்விட் டோடுங்காண்'' நாம் செய்யும் தீய பாவக்காரியங்களைக் கண்டு தயவு நம்மைவிட்டு பயந்து நாம் செய்யும் செயல்களைக் கண்டு ஓடிவிடும். ''அஞ்செழுத்தை நேர்ந்தார்க் கருள்புரியு நின்னடியர் தாமேயுஞ் சார்ந்தா லதுபெரிய சங்கட்டம்'' சிவாய நம என்று ஐந்தெழுத்தை அன்பர்களுக்கு எடுத்துச் சொன்னால் கிடைக்கும் பிறப்பு, இறப்பு துன்பத்தில் இருந்து விடுபடலாம் என்று சொல்லிக் கொடுக்காமல் வீண் பேச்சு நமக்கு மகிழ்ச்சி உண்டாக்காது.''சொல்லவொணா வேடருக்குங் கிட்டாத வெங்குணத்தா லிங்குழலும் மூடருக்குள் யானே முதல்வன்காண்'',''வீடடுத்த மேதையர்கள் வேண்டா விலங்காய்த் திரிகின்ற பேதையென்ப தென்னுரிமைப் பேர்கண்டாய்'',

''ஆதலினால் பேயினையொத் திவ்வுலகில் பித்தாகி நின்றவிந்த நாயினைநீ ஆண்டிடுதல் நன்கன்றே'' இந்த ஐம்புலன்களை கட்டி ஆளும் வேடனை தன் வயப்படுத்துவதற்கு முயலாமல் இந்த உலகியல் ஆசையினால் கண்டதை நினைத்து ஆசைப்படும் புத்தி இல்லாதவனின் நான்தான் முதன்மையாக இருக்கின்றேன் விலங்கைப் போன்ற கண்ட படி தின்று வீணாகக் காலத்தை வீணாக்குவது என் உரிமை என்பது என்னுடைய விலாசம் ஆதலினால், பேயை போன்று பைத்தியம் பிடித்து அலையும் இந்த நாய்க்கும் அறிவு கொடுத்து இப்படி பட்டத் துன்பத்தில் இருந்து விடுபட இறைவா என் உள்ளத்தில் புகுந்து நன்மை செய்து என்னை உன்னுடன் சேர்த்து கொள்க. ''தங்கியஇப் பாரறியாத் தாயாகிப் பன்றிக் குருளைகட்கு ஊரறிய நன்முலைப்பால் ஊட்டியதைச்'',

''துஞ்சுபன்றித் தோயாக் குருளைகளின் துன்பம் பொறாதன்று தாயாய் முலைப்பாலுந் தந்தனையே'' துஞ்சுபன்றி தோயாக் குருளைகளின் துன்பம் பொறாதன்று மதுரை வீதிதனில் தாயாகி நடுவீதியில் எல்லோரும் பார்க்க முலைப்பாலும் தந்து உயிர்களைக் காத்தவனே. ''எண்ணாமல் வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யஅரக் கன்தனக்கும் வாய்த்தவர மெல்லாம் வழங்கினையே'', ''சாய்த்தமன

வீம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும் பாம்பையெல் லாந்தோளிற் பரித்தனையே'', ''நாம்பெரியர் எஞ்சேமென் றாணவத்தா லேற்ற இருவரையும் அஞ்சேலென் றாட்கொண் டருளினையே'', ''முத்திநெறி மாணா அரக்கன் மலைக்கீழ் இருந்தேத்த வாணாள் வழங்கியதோர் வண்மைதனை'' ,''நல்லதிருப் பாத மலர்வருந்தப் பாணன் தனக்காளாய்க் கோதில்விற கேற்றுவிலை கூறியதை'' வாயிசைக்கு ஆசைப்பட்டு பாணனை திருப்பாடல் கேட்பதற்க்காக தலையில் விறகு எடுத்து சுமந்து வீதிகளை உலவினையே.

திருவருட்பா விண்ணப்பக் கலிவெண்பா 276 சிவதலங்கள்

''ஆண்டொருநாள் வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித் தூய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே'', ''தாவுநுதல் கண்சுமந்தான் அன்பன் கலங்கா வகைவைகை மண்சுமந்தான் என்றுரைக்கும் வாய்மைதனைப்'',''பண்புடையோர் மாணவுரைப் பக்கேட்டும் வாய்ந்தேத்தாய் மெய்யன்பு பூணவென்றால் ஈதொன்றும் போதாதோ'',''மல்லலுறும் வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச் செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே'' முன்பிறவியில் வில்வ இலையால் சிவ அர்ச்சனை செய்த புண்ணியத்தினால் குரங்கிளிலிருந்து அடுத்த பிறவியில் கரூர் தேசத்தை ஆண்ட அரசனாக மாற்றிய இறைவனின் அன்பிற்கு எல்லை இல்லை.

''சொல்லகலின் நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும் ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினாயே'', ''போதவும்நெய் அங்கோர் எலிதான் அருந்து அகல் தூண்டவதைச் செங்கோலன் ஆக்கியவச் சீர்த்திதனை'' ,''இங்கோதச் சந்ததம்நீ கேட்டுமவன் தாள்நினையாய் அன்படையப் புந்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ'' வேதாரண்யம் ஈடின்மறைகாட்டில் சிவ தலத்தில் அகலில் இருந்த நெய்யை அருந்துவதற்காக இருந்த எலி அணைய இருந்த தீபத்தினை தூண்ட அந்த பிரகாசத்தினால் ஏற்பட்ட புண்ணியத்தினால் அடுத்த பிறவியில் மகாபலிசக்கரவர்த்தியை உண்டாக்கினார். இந்த அன்பிற்கு எல்லை இல்லை. ''கோளகல வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னைஉயர் கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே'', முன்பிறவியில் சிலந்தியாக அரசமரத்தின் அடியில் இருந்த சிவலிங்கத்தை காயந்த இலைகளை உதிர்ந்து சிவலிங்கத்தின் மேல் விழாமல் சிலந்தி வலையிட்டு தடுத்த புண்ணியத்தினால் மறுபிறவியில் செங்கட் சோழனாக பிறக்க வைத்து 92 சிவதலங்களை கட்டியுள்ளார்.

''நீதியுளோர் சாற்றிநின்றார் கேட்டுமவன் தாள்நினையாய் மெய்யன்பில் போற்றவென்றால் ஈதொன்றும் போதாதோ'',''போற்றுகின்ற ஆடும் கரியும் அணிலும் குரங்குமன்பு தேடுஞ் சிலம்பியொடு சிற்றெறும்பும்'',''நீடுகின்ற பாம்பும் சிவார்ச்சனைதான் பண்ணியதென் றால்பூசை ஓம்புவதற் கியார்தா னுவவாதார்'' எல்லா உயிர்களுக்கும் இறைவனை பூசை செய்வதற்கு ஆணை வழாங்கியுள்ளதால் பூசை செய்வதற்கு எல்லோரும் சமம். ''சோம்புறுநீ வன்பென்ப தெல்லாம் மறுத்தவன்தாள் பூசிக்கும் அன்பு என்பது பதி யாதோ அறியாயே'',

''அன்புடனே செஞ்சடைகொள் நம்பெருமான் சீர்கேட்டு இரை அருந்தா அஞ்சடக்கி யோகம் அமர்ந்துலகின்'' ''நன்மைபெற இற்றென்ற இற்றென்னா எத்தனையோ பேர்கள்செய்த குற்றங் குணமாகக் கொண்டனையே'', ''பற்றுலகில் அன்புடைய தாயர்கள் ஆயிரம் பேர் ஆனாலும் அன்புடையாய் நின்னைப்போல் ஆவாரோ'', ''இன்பமுடன் ஈண்டவரும் தந்தையர்கள் எண்ணிலரே ஆயினுமென் ஆண்டவனே நின்னைப்போல் ஆவாரோ'',

''பூண்டகைகொள் ஏணுடைய நின்னையன்றி எந்தை பிரானேஉன் ஆணைஎனக்கு உற்றதுணை யாருமில்லை'', ''நாணமுளன் ஆனேன் பிழைகள் அனைத்தினையும் ஐயாநீ தானே பொறுக்கத் தகுங்கண்டோய்'', ''மேல்நோற்ற மாற்றனுக்கு மெட்டா மலர்க்கழலோய் நீயென்னைக் கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க'', ''பாற்றவள நந்தக் கடற்புவியில் நானின்னும் வன்பிறவிப் பந்தக் கடலில் இருந்து என்னை மீட்டுக்கொடுக்க''

''மண்ணினிடைக் கொன்செய்கை கொண்டகொடுங் கூற்றன் இறப்பை ஏற்படுத்துவதற்கு முன் செய்வினையால் நோயால் அகப்படாமலும் தாமரையில் நீர் ஒட்டாது இருப்பது போல் இருக்கின்றேன் ''இறைவா'' உன் அருள் கொடுக்க வரவில்லை என்றால் ஆலையில் அகப்பட்ட கரும்பைப் போல அகப்பட்டு ஆற்றில் ஒரு காலும் அடங்கா சம்சாரம் என்கின்ற உலகியல் வாழ்வில் மாட்டிக் கொண்டு வருந்துகின்றேன்.மோகம், காமம், மாச்சரியம் எழுவகை இட்சையில்

அகப்பட்டு ஐம்புலன் பொறிகளால் பாம்பின் வாயில் அகப்பட்ட தேரையைப் போல வாடுகின்றேன். கான் போல வீற்றும் உலக பிரளையத்தில் தோற்றும் சுழியால் சுழன்கின்றேன். ஆற்றவும் நான் இப்பாரில் உன்மேல் அன்பு இருப்பது போல நடித்தாவது ஒப்பாரி உடையவனாக இருக்க முயற்ச்சிக்கின்றேன்.

தப்பாய்ந்து மட்டுவிடேல். உன் திருவடியை மறக்கினும் வெண்ணீற்று சைவ நெறியை விட்டுவிடேல். எந்தனை கைவிட்டு விடேல். துட்டன் என்று பிரம்மா, திருமால், சிவன், வானவரும் இந்த பூமியில் பிறக்க வைப்பது என்கடமை என்றும் பிரமனும், பொருளைக் கொடுத்து திருமாலும் வாழ வைப்பது என்கடமை என்றும், இறப்பு தொழிலை செய்யும் எமன் அடுத்த பிறவிக்கு தயார் செய்து இந்த பூவுலகத்தில் இருந்து மேலும் மேலும் பல பிறப்பு இறப்புகளில்இருந்து என்னை மீட்டு சாலுலகு வாதனை கொண்டு மற்று எவரானாலும் அவர்களிடம் இருந்து என்னை மீட்டு தங்களுடைய சாதுக்கள் சங்கத்தில் என்னை சேர்த்து அன்பு என்னும் தயவிடம் சேர்த்து அருள்க. வாழ்ந்திடுக நின்திருவடி தாள் மலர்.

என்று நமக்காக விண்ணப்ப கலிவெண்பாவில் ஒரு மரத்தின் அடிவோர் இருக்கும் வரை மரம் வாழந்து கொண்டே இருப்பது போலவும், இந்த பூமியில் வித்துக்கள் வழியாக பிறவி தோன்றிக் கொண்டே இருப்பது போலவும் நாம் இறப்பு பிறப்பு என்கின்ற சுழற்ச்சியில் இருந்து விடுபடவேண்டியும் இறைவனிடம் நமக்காக விண்ணப்பித்து நாம் சாக வரத்தை அடைவதற்கு திருவருட்பிரகாச வள்ளலார் நமக்கு பூமியில் இருந்தும் இந்த அண்டத்தில் இருந்தும் விடுப்பட்டு ஒளி, ஒலி பயணம் செய்வதற்கு அண்டப் பிரயாணத்தை ஏற்படுத்தி ஞானத்தை அறிவதற்கும் தன்னை அறிவதற்கும், தனித்தலைவனை அறிவதற்கும் (அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை அடைவதற்கு) இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்றென்று வருமோ அறியேன்.

எங்கோவே துன்றுமல வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து சும்மா இருக்கும் சுகத்தில் ஏற்கனவே சேர்ந்த அருளாளர்களுடன் நம்மை சேர்த்து இனி எப்பொழுதும் வாழ்ந்து கொண்டே இருக்கின்ற சுகத்தை அடையலாம்.

***

276 சிவதலங்களின் பட்டியல்
கடைசி பக்கத்தில் முழுவிவரம்காண்க

அருட்பா பதிப்பகம் சென்னை
அருள் எம்.ஏ வெங்கட்
12-01-2024

பதிப்புரை

திருஅருட்பிரகாச வள்ளலார் நற்கருங்குழியில் முதல் நான்கு திருமுறைகளை 1867 ஆம் ஆண்டு திருஅருட் செயலால் வெளியிட்டார். அத்திருமுறை வெளிவர நேர்ந்ததின் அபூர்வமான காரணங்களைத் திருமுகப் பகுதியைப் படித்துணர்ந்த அன்பர்கள் தெரிந்திருத்தல் கூடும். இறுக்கம் இரத்தினமுதலியார் அவர்களும் சிவாநந்தபுரம் செல்வராய முதலியார் அவர்களுமே அவற்றை அங்ஙனம் வெளியிடு வதற்கு வழிகாட்டியாக இருந்த பேரன்பர்கள் ஆவர். தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் 1880 ஆம் ஆண்டு ஐந்தாம் திருமுறையை வெளிப்படுத்திய போதும், 1882லும், 1887லும், முறையே ஐந்தாம் திருமுறையையும் முதல் நான்கு திருமுறைகளையும் இரண்டாம் முறை அச்சிட்ட போதும் அல்லது, ஆறாவது திருமுறைப் பாசுரங்களை அவர்கள் ஆராய்ந்து தொகுத்து வைப்பதற்கு மேற்கண்ட இவ்விரு அன்பர்களது இன்றியமையாத அருள் செயலேயாகும். ஆறாம் திருமுறை மட்டும் 1885 ஆம் ஆண்டு முதல் முறையாக வேலூர் ஸ்ரீ பத்மநாப முதலியார் அவர்களால் முதலில் வெளியிடப் பட்டது.

முதற்பதிப்பு ஆறாம் திருமுறை மட்டும் அடங்கிய ஒரே நூல் வடிவாக திருவருட்பா 1885 ஆம் ஆண்டு முதல்முறையாக வேலூர் பத்மநாப முதலியார் அவர்களாலும், பிறகு 1 முதல் 6 ஆம் திருமுறைகளாக 1891 ஆம் ஆண்டு ஆடூர் சபாபதி சிவாச்சாரியார் அவர்களாலும், 1892 ஆம் ஆண்டு பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்களாலும், 1896 ஆம் ஆண்டு பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் அவர்களாலும், 1924 ஆம் ஆண்டு ச.மு. கந்தசாமி பிள்ளை அவர்களாலும், ச.மு.க பதிப்பிற்கு பிறகு வெளிவந்த ஆ. பாலகிருஷ்ண பிள்ளைப் பதிப்பு 1931 லிருந்து 1958 ஆம் ஆண்டு வரை பன்னிரண்டு பதிப்புகளாக வெளிவந்தது. சென்னை சன்மார்க்க சங்கம் 1932ல் முதல் ஐந்து திருமுறைகளை 1942 ல் ஐந்து மற்றும் ஆறாம் திருமுறை அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் மூத்த அண்ணன் வழிப் பிள்ளைகள் வாயிலாக வெளியிடப் பட்டது. 1971 ல் ஊரனடிகளார் ஆ. பாலகிருஷ்ண பிள்ளைப் பதிப்பை பின்பற்றி ஒன்று முதல் ஆறு திருமுறைகளை உள்அடக்கி ஒரே நூலாக வெளியிட்டுள்ளார்.

1867, 1876, 1880, 1882, 1887 வரையிலுள்ள பதிப்பு ஐந்தாம் திருமுறையைப் பின்பற்றியே அருட்பா பதிப்பகம் சென்னை திருஅருட்பிரகாச வள்ளலார் 1867இல் நற்கருங்குழியில் வெளியிட்ட பாடல் சீர், பதிக வரிசையை, பின்பற்றியும் ஆறாம் திருமுறை 1885 ஆம் ஆண்டு வேலூர் பத்மநாப முதலியார் பதிப்பையும் பின்பு 1924 ஆம் ஆண்டு ச. மு. கந்தசாமி பிள்ளை பதிப்பையும் பின்பற்றியே அருட்பா பதிப்பகம், தற்போதைய பதிப்பு 2017, 5-10-2017 அன்று திருஅருட்பிரகாச வள்ளலார் வருகையுற்ற நாளில் சிவத்திரு. செ.இராஜேந்திரன் இ.ஆ.ப. சென்னை ஐயா அவர்களின் நன் முயற்சியால் சன்மார்க்க சங்கமாநாட்டில் வெளியிடப்படுகின்றது. ஆதலால், அவர்களுக்கும் பிரம்மரிஷிமலை இராஜ்குமார் குருஜி அவர்களுக்கும் **வடலூர் வள்ளலார் தெய்வநிலையத்திற்கும்** எங்களது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அருட்பா பதிப்பகம் பதிக அட்டவணை 2024
பதிப்பில் புதியதகா சேர்க்கப்பட்ட தலைப்புகள்

பதிக அட்டவணை

வ.எண்	பதிகம்	பக்கம்
1.	திருவருட்பிரகச வள்ளலார் தலை மாணக்கர் தெழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய உண்மைகள்	01-04
2.	வே.நமசிவாய முதலியார் பதிப்பு 1896 விண்ணப்பம்	05-06
3.	தெழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய திருவருட்ப வரலாறு	07-16
4	திருவருட்பிரகச வள்ளலார் திவ்ய சரித்திரம்	17-68
5	திருவருட்பிரகச வள்ளலார் வரலாற்று குறிப்புகள்	69-132
6	திருவருட்பிரகச வள்ளலார் ஒளி ஒலி சித்தி பெற்றமை	141-252

வ.எண்	நூலில் கடைசி பக்கத்தில் காண்க	பக்கம்
7	திருவடிப் புகழ்ச்சி அருஞ்சொற்பொருள்	01-38
8	இரண்டாம் திருமுறை அ தனிப்பசுராப் பகுதி அருஞ்சொற்பொருள்	01-22
9	திருவருட்பா முதல் ஐந்து திருமுறை அகராதி	01-191
10	விண்ணப்பக் கலிவெண்பா 276 சிவதலங்களை பற்றியது	01-138

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பாப் பாடல்கள் எண்ணிக்கை விவரம்

வ.எ.	திருமுறை	பாடல்வரிசை	பதிகங்கள்	பாடல்கள்
1.	முதல் திருமுறை	1 - 713	8	713
2.	இரண்டாவது திருமுறை	714 - 1928	113	1215
3.	தனிப்பாசுரப்பகுதி	1929 - 2212	29	284
4.	மூன்றாவது திருமுறை	2213 - 2447	19	235
5.	நான்காவது திருமுறை	2448 - 2685	12	238
6.	ஐந்தாவது திருமுறை	2686 - 3256	53	571
		கூடுதல்	237	3256
7.	ஆறாம் திருமுறை	3257 - 5823	152	2567
		கூடுதல்	389	5823

திருமுறைகளில் சேர்க்காது தனிமைப்படுத்தப்பெற்றுப் பல்வகைய தனிப்பாடல்கள் என்ற தலைப்பில் வைக்கப் பெற்றவை

		பாடல்கள்
1.	குடும்பகோஷம்	116
2.	குருட்டாட்டம்	19
3.	திருமுகப்பகுதி	16
4.	சாற்றுக்கவிகள்	11
	கூடுதல்	162

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா முதல் ஐந்து திருமுறைகள்

பதிக அட்டவணை

வ.எ.	பதிகம்	பாடல்	பக்கம்
	முதல் திருமுறை		
1	திருவடிப்புகழ்ச்சி	2	1
2	விண்ணப்பக்கலிவெண்பா	2	5
3	நெஞ்சறிவுறுத்தல்	3	31
4	சிவநேச வெண்பா	104	74
5	மகாதேவ மாலை	101	86
6	திருவருண் முறையீடு	232	107
7	வடிவுடை மாணிக்க மாலை	102	133
8	இங்கித மாலை	167	145
	இரண்டாம் திருமுறை		
1	புண்ணிய விளக்கம்	11	165
2	அருள் நாம விளக்கம்	10	166
3	ஸ்ரீ சிவசண்முகநாம சங்கீர்த்தனலகரி	10	169
4	நமச்சிவாய சங்கீர்த்தனலகரி	10	170
5	நற்றுணை விளக்கம்	10	173
6	திருவருள் வழக்க விளக்கம்	10	175
7	சிவபுண்ணியத் தேற்றம்	10	176
8	முத்தி உபாயம்	10	178
9	அவலத் தழுங்கல்	10	179
10	பழமொழிமேல் வைத்துப் பரிவுகூர்தல்	10	181
11	அபராதத் தாற்றாமை	10	183
12	அருளியல் வினாவல்	10	185
13	திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்	10	187
14	காட்சிப் பெருமிதம்	10	189
15	கொடைமடப் புகழ்ச்சி	10	190
16	திருவருள் வேட்கை	10	192
17	அபராத விண்ணப்பம்	10	193
18	அறிவரும் பெருமை	10	195
19	அருள்விடை வேட்கை	10	196

வ.எ.	பதிகம்	பாடல்	பக்கம்
20	எழுத்தறியும் பெருமான் மாலை	31	197
21	நெஞ்சொடு நேர்தல்	10	201
22	திருப்புகழ் விலாசம்	10	202
23	திருச்சாதனத் தெய்வத் திறம்	10	204
24	தியாகவண்ணப் பதிகம்	10	206
25	ஆடலமுதப் பத்து	10	207
26	திருவடிச் சரண்புகல்	10	210
27	சிவானந்தப் பத்து	10	212
28	சந்நிதி முறையீடு	11	214
29	தவத்திறம் போற்றல்	10	215
30	நெஞ்சுறுத்த திருநேரிசை	26	217
31	சிகாமணி மாலை	15	221
32	கலி முறையீடு	12	222
33	எதிர்கொள்பத்து	10	223
34	நெஞ்சொடு நேர்தல்	10	225
35	நெஞ்சறை கூவல்	10	228
36	நெஞ்சைத் தேற்றல்	10	230
37	நெஞ்சறிவுறூஉ	10	232
38	நெடுமொழி வஞ்சி	10	234
39	பற்றின் திறம் பகர்தல்	10	236
40	அடிமைத் திறத் தலைசல்	11	237
41	அவத்தொழிற் கலைசல்	10	239
42	நாள் அவத்து அலைசல்	10	240
43	அவல மதிக்கு அலைசல்	11	241
44	ஆனாவாழ்வின் அலைசல்	10	243
45	அருள் திறத்து அலைசல்	36	244
46	திருவிண்ணப்பம்	10	248
47	பிரசாதவிண்ணப்பம்	10	250
48	வழிமொழி விண்ணப்பம்	10	251
49	சிறுமை விண்ணப்பம்	11	254
50	ஆற்றா விண்ணப்பம்	10	256
51	இரங்கல் விண்ணப்பம்	10	257
52	காதல் விண்ணப்பம்	10	259
53	பொருள் விண்ணப்பம்	10	261
54	கொடி விண்ணப்பம்	11	263
55	நாடக விண்ணப்பம்	11	265
56	திருவண்ண விண்ணப்பம்	12	268
57	மருட்கை விண்ணப்பம்	10	269

வ.எ.	பதிகம்	பாடல்	பக்கம்
58	கொடைமட விண்ணப்பம்	10	271
59	சிறு விண்ணப்பம்	10	273
60	பெரு விண்ணப்பம்	10	275
61	திருக்காட்சிக் கிரங்கல்	10	276
62	திருஅருட் கிரங்கல்	10	277
63	எண்ணத் திரங்கல்	10	279
64	நெஞ்சு நிலைக் கிரங்கல்	11	280
65	தனிமைக் கிரங்கல்	10	281
66	கழிபகற் கிரங்கல்	10	283
67	அர்ப்பித் திரங்கல்	10	286
68	அச்சத் திரங்கல்	10	288
69	புறமொழிக் கிரங்கல்	10	290
70	கருணை பெறா திரங்கல்	10	291
71	திருவருட் பதிகம்	10	294
72	பிரசாதப் பதிகம்	10	295
73	பிரார்த்தனைப் பதிகம்	10	296
74	திருப்புகற் பதிகம்	10	297
75	சிந்தைத் திருப்பதிகம்	10	299
76	உய்கைத் திருப்பதிகம்	12	300
77	ஆனந்தப் பதிகம்	11	301
78	திருவண்ணப் பதிகம்	10	303
79	போற்றித் திருப்பதிகம்	10	307
80	விண்ணப்பப் பதிகம்	10	309
81	தரிசனப் பதிகம்	10	310
82	அபராத விண்ணப்பம்	22	311
83	கலி விண்ணப்பம்	10	314
84	கருணை விண்ணப்பம்	10	315
85	அடிமைப் பதிகம்	10	316
86	உள்ளப் பஞ்சகம்	5	318
87	சரணப் பதிகம்	11	319
88	நெஞ்சொடு நெகிழ்தல்	12	320
89	பொதுத் தனித் திருவெண்பா	13	322
90	திருக்குறிப்பு நாட்டம்	4	324
91	தனித் திருப்புலம்பல்	4	325
92	பரம ராசியம்	2	326
93	திருப்புகழ்ச்சி	3	327
94	தனித் திருவிருத்தம்	50	328
95	அறநிலை விளக்கம்	1	334

வ.எ.	பதிகம்	பாடல்	பக்கம்
96	அருள்நிலை விளக்கம்	1	334
97	திருமருந்தருள் நிலை	2	335
98	திருவருள் விலாசம்	2	335
99	சிவ சிதம்பர சங்கீர்த்தனம்	5	336
100	அம்மைதிருப்பதிகம்	10	337
101	கலைமகள் திருப்பதிகம்	3	341
102	நல்ல மருந்து	29	341
103	பாங்கிமார் கண்ணி	27	345
104	வெண்ணிலாக் கண்ணி	23	347
105	நடேசர் கொம்மி	5	349
106	சிலதாஸம் வாதம்	6	350
107	தெண்டனிட்டே னென்று சொல்ல டி	7	351
108	இன்னந் தயவு வரவிலையா	6	352
109	வினா விடை	2	353
110	நற்றாய் கவன்றது	9	353
111	சல்லாப லகரி	2	354
112	வேட்கைக் கொத்து	10	355
113	முன்ன முடிபு	10	357
	இரண்டாம் திருமுறை தனிப்பாசுரப் பகுதி		
1	தனிப் பாசுரங்கள்	8	361
2	தனித்திருமாலை	19	363
3	திருப்பள்ளித்தாமம் தாங்கல்	3	366
4	அருண்மொழி மாலை	31	366
5	இன்ப மாலை	11	370
6	ஆனந்த நடனப் பதிகம்	10	371
7	சிவகாமவல்லி துதி	5	375
8	சிவபரம்பொருள்	4	376
9	திருமுகப் பாசுரம்	1	377
10	சிங்கபுரிக் கந்தர் பதிகம்	10	377
11	இராமநாம சங்கீர்த்தனம்	1	379
12	இராமநாமப் பதிகம்	10	379
13	வீரராகவர் போற்றிப் பஞ்சகம்	5	381
14	இரேணுகை தோத்திரம்	5	382
15	பெரிய நாயகியார் தோத்திரம்	3	383
16	பழமலையோ கிழமலையோ	3	384
17	பழமலைப் பதிகம்	10	385

வ.எ.	பதிகம்	பாடல்	பக்கம்
18	அருணகிரி விளங்க வளர்ந்த சிவக்கொழுந்து	1	386
19	திருவோத்தூர் சிவஞான தேசிகன் தோத்திரம்	4	387
20	ஞானசிகாமணி திருச்சீர் அட்டகம்	4	389
21	தெய்வத் தனித் திருமாலை	7	390
22	சண்முகர் கொம்மி	15	391
23	சண்முகர் வருகை	12	393
24	திருவருள் முறையீட்டுக் கண்ணி	69	394
25	திருவடிக் கண்ணி	11	399
26	பேரன்புக் கண்ணி	14	400
27	இலக்ஷ்மி தோத்திரம்	1	401
28	சரஸ்வதி ஸ்தோத்திரம்	1	401
29	மங்களம்	7	402
	மூன்றாம் திருமுறை		
1	திருஉலாப் பேறு	10	403
2	நாரையும் கிளியும் நாட்டுறு தூது	10	404
3	இரங்கன் மாலை	31	405
4	திரு உலா வியப்பு	10	409
5	சல்லாப வியன்மொழி	10	410
6	இன்பக் கிளவி	10	411
7	இன்பப் புகழ்ச்சி	10	412
8	திருஉலாத் திறம்	10	414
9	வியப்பு மொழி	10	415
10	புணரா விரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்	30	416
11	குறி ஆராய்ச்சி	11	420
12	காட்சி அற்புதம்	10	421
13	ஆற்றாக் காதலின் இரங்கல்	11	422
14	திருக்கோலச் சிறப்பு	10	424
15	சோதிடம் நாடல்	10	425
16	திருஅருட் பெருமிதம்	10	426
17	காதர் சிறப்புக் கதுவா மாண்பு	12	428
18	ஆற்றா விரகம்	10	429
19	காதன் மாட்சி	10	430
	நான்காம் திருமுறை		
1	அன்புமாலை	31	433
2	அருட்பிரகாசமாலை	100	440
3	பிரசாதமாலை	10	463
4	ஆனந்தமாலை	10	466

வ.எ.	பதிகம்	பாடல்	பக்கம்
5	பக்திமாலை	10	468
6	சௌந்தரமாலை	12	471
7	அதிசய மாலை	14	474
8	அபராத மன்னிப்பு மாலை	10	477
9	ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை	11	479
10	ஆளுடைய அரசுகள் அருண்மாலை	10	481
11	ஆளுடைய நம்பிகள் அருண்மாலை	10	483
12	ஆளுடைய அடிகள் அருண்மாலை	10	485
	ஐந்தாம் திருமுறை		
1	வாயுறை வாழ்த்து	-	487
1	சித்தி விநாயகர் பதிகம்	10	491
2	வல்லபை கணேசர் பிரசாத மாலை	11	492
3	கணேசத் திருஅருள் மாலை	10	494
4	தனித் திருமாலை	5	495
5	பிரார்த்தனை மாலை	30	496
6	எண்ணப்பத்து	10	499
7	செழுஞ்சுடர் மாலை	11	501
8	குறைஇரந்த பத்து	10	502
9	ஜீவசாட்சி மாலை	28	504
10	ஆற்றா முறை	10	510
11	இரந்த விண்ணப்பம்	10	512
12	கருணை மாலை	30	514
13	மருண்மாலை விண்ணப்பம்	10	517
14	பொறுக்காப் பத்து	10	518
15	வேட்கை விண்ணப்பம்	10	521
16	ஆறெழுத் துண்மை	10	522
17	போக் குரையீடு	10	523
18	பணித்திறம் வேட்டல்	10	524
19	நெஞ்சொடு புலத்தல்	11	526
20	புன்மை நினைந் திரங்கல்	10	527
21	திருவடி சூட விழைதல்	10	529
22	ஆற்றா விரக்க ம்	10	530
23	ஏழைமையின் இரங்கல்	9	532
24	பணித்திறஞ் சாலாப் பாடிழிவு	10	533
25	காணாப் பத்து	10	535
26	பணித்திறஞ் சாலாமை	6	536
27	குறைநேர்ந்த பத்து	10	537

வ.எ.	பதிகம்	பாடல்	பக்கம்
28	முறையிட்ட பத்து	10	539
29	நெஞ்சவலங் கூறல்	10	540
30	ஆற்றாப் புலம்பல்	5	542
31	திருவருள் விழைதல்	3	543
32	புண்ணியநீற்று மான்மியம்	10	544
33	உறுதி உணர்த்தல்	3	545
34	எண்ணத் தேங்கல்	2	545
35	கையடை முட்டற் கிரங்கல்	4	546
36	அடியார் பணி அருள வேண்டல் (பொது)	6	546
37	நாள் அவம்படாமை வேண்டல்	10	547
38	அன்பிற் பேதுறல்	10	549
39	கூடல் விழைதல்	10	551
40	தரிசனை வேட்கை	10	554
41	நாள்எண்ணி வருந்தல்	10	556
42	ஏத்தாப் பிறவி இழிவு	10	557
43	பவனிச் செருக்கு	10	559
44	திருவருள் விலாசப் பத்து	10	561
45	திருவருட் பேற்று விழைவு	10	563
46	செல்வச் சீர்த்தி மாலை	10	564
47	செவி அறிவுறுத்தல்	10	566
48	தேவ ஆசிரியம்	3	567
49	இங்கிதப் பத்து	12	568
50	போற்றித் திருவிருத்தம்	15	569
51	தனித் திருத்தொடை	14	571
52	தெய்வமணி மாலை	31	573
53	கந்தர் சரணப் பத்து	10	585

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா

முதல் திருமுறை

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

ஆசிரிய வந்தனம்

வள்ளற்பெருமானாரின் மாணாக்கர்
புராணிகர் பொன்னேரி சுந்தரம் பிள்ளை
இயற்றியது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தாய்மலர்ந்த பெருங்கருணைத் தத்துவனார் எங்கள்
சனிப்பிறப்பை ஒறுத்துவினைத் தனித்தொடக்கை அறுக்க
ஏய்மலர்ந்த கருணைதிரு மேனிகொண்ட காலத்து
என்தோளோ இருதோளோ முக்கன்னோ இருமை
ஆய்மலர்ந்த அருட்கண்ணோ நாமம் எழுத்து ஐந்தோ
அன்றிஅருள் இராமலிங்க அற்புதப்பொற் பெயரோ
வாய்மலர்ந்தது ஈரிரண்டு மறையோமூ விரண்டு
மாமுறையோ வகுத்துறையீர் மயக்கொழிமா தவரே!

நூற்சிறப்பு

மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

சிதம்பர சுவாமிகள் அருளியது

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும் – கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட்பா பாமுறையைத்
துங்கமுற மாணா தொழு.

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை

1. திருவடிப் புகழ்ச்சி

காப்பு

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

1 இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்
றென்றுவரு மோஅறியேன் எங்கோவே – துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம். 1

நூற்றிருபத்தெட்டியான் மிகுத்து வந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்[1]
திருச்சிற்றம்பலம்

2 பரசிவம் சின்மயம் பூரணம் சிவபோக பாக்கியம் பரம நிதியம்
பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப் பரம ஏகாந்த நிலயம்
பரமஞா னம்பரம சத்துவம் மகத்துவம் பரம கைவல்ய நிமலம்
பரமதத் துவநிரதி சயநிட்க ளம்பூத பௌதிகா தார நிபுணம் 4

பவபந்த நிக்ரக வினோத சகளம் சிற்பரம் பரானந்த சொருபம்
பரிசயா தீதம் சுயம் சதோதயம் வரம் பரமார்த்த முக்தமெளனம்
படன வேதாந்தாந்த ஆகமாந் தாந்த நிருபாதிகம் பரமசாந்தம்
பரநாத தத்துவாந்தம் சகச தரிசனம் பகிரங்கம் அந்தரங்கம் 8

பரவியோமம் பரம ஜோதிமயம் விபுலம் பரம்பரம் அனந்தம் அசலம்
பரம லோகாதிக்க நித்திய சாம்பிராச்சியம் பரபதம் பரம சூட்சமம்
பரா பரம் அநாமயம் நிராதரம் அகோசரம் பரமதந்திரம் விசித்திரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடணம் பரசு கோதயம் அட்சயம் 12

பரிபவ விமோசனம் குணரகிதம் விசுவம் பதித்துவ பரோபரீணம்
பஞ்சகிர்த்திய சுத்த கர்த்தத்துவம் தற்பரம் சிதம்பர விலாசம்
பகர் சுபாவம் புனிதம் அதுலம் அதுலிதம் அம்பராம்பர நிராலம்பனம்
பரவு சாக்ஷாத்கார நிரவயவம் கற்பனாதீத நிருவிகாரம் 16

1. இது ஸ்ரீ சுவாமிகளின் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏட்டு மூலத்தில் உள்ளவாறு இங்கு அச்சிட்டிருக்கிறது. இதன் ஒவ்வொர் ஏட்டிலும் ஸ்ரீ சுவாமிகள் உ சிவாயநம என்னும் மறைமொழியை முதற்கண்வைத்தே தொடங்கியிருக்கிறார்கள்.
2. இந்த அரிய நூலில் ஸ்ரீ சுவாமிகள் வடமொழிச் செல்வங்கள் ஆகிய வேதோபநிஷதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றிலும், செந்தமிழ்க்கண் உள்ள தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவிளையாடற் பெரியபுராணம் முதலிய தெய்வநூல்களிலும் சிறந்து விளங்குவனவற்றையும், நமது புண்ணியபூமியில் நெடுங்காலந்தொட்டு வாழையடி வாழையாக அடியார்கள் வழி வழிவரும் கடவுட்காட்சிகளையும், பண்புகளையும், அருள்நிகழ்ச்சிகளையும், பேரின்ப உணர்ச்சிகளையும், தம்முடைய ஆன்மாநுபவங்களையும் ஒருங்கே வரன்முறையாகத் தெளிவுபடுத்தியிருப்பதை ஒருமையுடன் கூர்ந்து கண்டு அநுபவித்துணர்க.
3. ஸ்ரீ சுவாமிகளுக்கு ஆட்பட்ட அன்பர் ஸ்ரீ தருமலிங்கம் பிள்ளை அவர்கள் பிரதியின் தலைப்பேட்டில், "எனது சற்குருவாகிய சிதம்பரம் இராமலிங்க தேசிகர் திருவாய் மலர்ந்தருளிய திருவடிப் புகழ்ச்சி திருச்சிற்றம்பலம்" என்று குறித்திருக்கிறார்கள். குறிப்பு : ஆ. பா. 1932 பதிப்பு

பரதுரிய அநுபவம் குருதுரிய பதம் அம்பகம் பகா தீதவிமலம்
பரம கருணாம்பரம் தற்பதம் கன சொற்பதாதீதம் இன்பவடிவம்
பரோக்ஷ ஞானாதீதம் அபரோக்ஷ ஞானானுபவ விலாசப் பிரகாசம்
பாவனாதீதம் குணாதீதம் உபசாந்த பதமகா மௌனரூபம் 20

பரம போதம் போத ரகித சகிதம் சம்பவாதீதம் அப்ரமேயம்
பகரனந் தானந்தம் அமலம் உசிதம் சிற்பதம் சதானந்த சாரம்
பரையாதி கிரணாங்க சாங்க சௌபாங்க விம்பாகார நிருவிகற்பம்
பரசுகாரம்பம் பரம் பிரம வித்தம் பரானந்த புரணபோகம் 24

பரிமிதாதீதம் பரோதயம் பரகிதம் பரபரீணம் பராந்தம்
பரமாற்புதம் பரமசேதனம் பசுபாச பாவனம் பரம மோக்ஷம்
பரமானு குணநவாதீதம் சிதாகாச பாஸ்கரம் பரம போகம்
பரிபாக வேதன வரோ தயானந்த பதபாலனம் பரம யோகம் 28

பரமசாத்திய அதீதானந்த போக்கியம் பரிகதம் பரிவேத்தியம்
பரகேவலாத் விதானந்த அனுபவ சத்த பாதாக்ர சுத்தபலிதம்
பரமசுத் தாத்விதானந்த அனுபூதிகம் பரிபூத சிற்குணாந்தம்
பரமசித்தாந்த நிகமாந்த சமரச சுத்த பரமானுபவ விலாசம் 32

தரமிகும் சர்வ சாதிட்டான சத்தியம் சர்வ ஆனந்தபோகம்
சார்ந்த சர்வாதார சர்வமங்கள சர்வ சத்திதரம் என்றளவிலாச்
சகுண நிர்க்குணமுறு சலட்சண இலட்சணத் தன்மை பலவாகநாடித்
தம்மைநிகர் மறையெலாம் இன்னும் அளவிட நின்ற சங்கரன் அநாதியாதி 36

சாம கீதப்பிரியன் மணிகண்ட சீகண்ட சசிகண்ட சாமகண்ட
சயசய எனுந்தொண்டர் இதயமலர் மேவிய சடாமகுடன் மதனதகனன்
சந்திர சேகரன் இடபவாகனன் கங்காதரன் சூலபாணி இறைவன்
தனிமுதல் உமாபதி புராந்தகன் பசுபதி சயம்பு மாதேவன் அமலன் 40

தாண்டவன் தலைமாலை பூண்டவன் தொழும் அன்பர் தங்களுக்கு அருளாண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச் சைலமெனும் ஒருவில்லவன்
தக்ஷிணாமூர்த்தி அருண்மூர்த்தி புண்ணியமூர்த்தி தகும் அட்டமூர்த்தி ஆனோன்
தலைமைபெறு கணநாயகன் குழகன் அழகன் மெய்ச்சாமி நந்தேவ தேவன் 44

சம்பு வேதண்டன் பிறப்பிலான் முடிவிலான் தாணு முக்கண்களுடையான்
சதுரன் கடாசல உரிப் போர்வையான் செந்தழல் கரத்தேந்தி நின்றோன்
சர்வ காரணன் விறற் காலகாலன் சர்வ சம்பிரமன் சர்வேச்சுரன்
தகைகொள்பர மேச்சுரன் சிவபிரான் எம்பிரான் தம்பிரான் செம்பொற்பதம் 48

தகவுபெறு நிட்பேத நிட்கம்பமாம் பராசத்தி வடிவாம் பொற்பதம்
தக்கநிட் காடின்ய சம்வேத நாங்கசிற்சத்தி வடிவாம் பொற்பதம்
சாற்றரிய இச்சை ஞானம் கிரியை என்னு முச்சத்தி வடிவாம் பொற்பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவானந்த சத்திவடிவாம் பொற்பதம் 52

தகுவிந்தை மோகினியை மானை அசைவிக்கும் ஒரு சத்திவடிவாம் பொற்பதம்
தாழ்வில் ஈசானமுதன் மூர்த்திவரை ஐஞ்சத்தி தஞ்சத்தியாம் பொற்பதம்
சவிகற்ப நிருவிகற்பம் பெறும் அனந்த மாசத்தி சத்தாம் பொற்பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்திய திருவருட் சத்தியுருவாம் பொற்பதம் 56

தவாத சாந்தப்பதம் துவாத சாந்தப்பதம் தரும் இணை மலர்ப் பூம்பதம்
சகலர் விஞ்ஞானகலர் பிரளயாகலர் இதய சாக்ஷியாகிய பூம்பதம்
தணிவிலா அணுபக்ஷ சம்பு பக்ஷங்களில் சமரசமுறும் பூம்பதம்
தருபரஞ் சூக்குமம் தூலம் இவை நிலவிய தமக்குள் உயிராம் பூம்பதம் 60

சரஅசர அபரிமித விவித ஆன்மப் பகுதிதாங்குந் திருப் பூம்பதம்
தண்ட பிண்டாண்ட அகிலாண்ட பிரமாண்டந் தடிக்க அருளும் பூம்பதம்
தத்வ தாத்விக சகசிருட்டி திதிசங்கார சகல கர்த்துரு பூம்பதம்
சகசமல இருளகல நின்மல சுயம்ப்ரகாசங் குலவு நற்பூம்பதம் 64

மரபுறு மதாதீத வெளிநடுவில் ஆனந்த மா நடனமிடு பூம்பதம்
மன்னும் வினை ஒப்புமல பரிபாகம் வாய்க்க மா மாயையை மிதிக்கும்பதம்
மலிபிறவி மறலியின் அழுந்தும் உயிர்தமை அருளின் மருவுற எடுக்கும்பதம்
வளரூர்த்த வீரதாண்டவ முதல் பஞ்சக மகிழ்ந்திட இயற்றும்பதம் 68

வல்ல முயலகன் மீதினூன்றிய திருப்பதம் வளந்தரத் தூக்கும்பதம்
வல்வினை எலாந் தவிர்த்தழியாத சுத்தநிலை வாய்த்திட வழங்கும்பதம்
மறை துதிக்கும்பதம் மறைச்சிலம் பொளிர்பதம் மறைப்பாதுகைச் செம்பதம்
மறைமுடி மணிப்பதம் மறைக்கும் எட்டாப்பதம் மறைப்பரி யுகைக்கும்பதம் 72

மறையவன் உளங்கொண்ட பதம் அமித கோடியாம் மறையவர் சிரஞ்சூழ்பதம்
மறையவன் சிரசிகாமணி எனும்பத மலர்கொண் மறையவன் வாழ்த்தும்பதம்
மறையவன் செயவுலகம் ஆக்கின்ற அதிகார வாழ்வை யீந்தருளும்பதம்
மறையவன் கனவினுங் காணாத பதம் அந்த மறையவன் பரவும்பதம் 76

மால்விடை யிவர்ந்திடு மலர்ப்பதம் தெய்வநெடுமால் அருச்சிக்கும்பதம்
மால்பரவி நாடொறும் வணங்குபதம் மிக்க திருமால்விழி இலங்கும்பதம்
மால்தேட நின்றபதம் ஓரனந்தங் கோடி மாற்றலை அலங்கற்பதம்
மான்முடிப்பதம் நெடிய மாலுளப்பதம் அந்தமாலும் அறிவரிதாம்பதம் 80

மால்கொள் அவதாரங்கள் பத்தினும் வழிபட்டு வாய்மைபெற நிற்கும்பதம்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற்று அடிமையின் வதிந்திட அளிக்கும்பதம்
வரையுறும் உருத்திரர்கள் புகழ்பதம் பலகோடி வயவுருத்திரர் சூழ்பதம்
வாய்ந்திடும் உருத்திரற் கியல்கொண் முத்தொழில்செய்யும் வண்மைதந் தருளும்பதம் 84

வான இந்திரராதி எண்டிசைக் காவலர்கண் மாதவத் திறனாம்பதம்
மதியிரவி ஆதிசுரர் அசுரரந்தரர் வான வாசிகள் வழுத்தும்பதம்
மணியுரகர் கருடர் காந்தருவர் விஞ்சையர் சித்தர் மாமுனிவர் ஏத்தும்பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள் மதித்து வரமேற்கும்பதம் 88

மன்னு கின்னரர் பூதர் வித்தியாதரர் போகர் மற்றையர்கள் பற்றும்பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கண் மனக்கோயில் வாழும்பதம்
மாதேவி எங்கள் மலைமங்கை என்னம்மை மென் மலர்க்கையால் வருடும்பதம்
மறலியை உதைத்தருள் கழற்பதம் அரக்கனை மலைக்கீழ் அடர்க்கும்பதம் 92

வஞ்சமறு நெஞ்சினிடை எஞ்சலற விஞ்சுதிறன் மஞ்சுற விளங்கும்பதம்
வந்தனைசெய் புந்தியவர் தந்துயர் தவிர்ந்திட வுண்மந்தண நவிற்றும்பதம்
மாறிலொரு மாறனுள மீறின்மகிழ் வீறியிட மாறி நடமாடும்பதம்
மறக்கருணையுந் தனி அறக்கருணையுந் தந்து வாழ்விக்கும் ஒண்மைப்பதம் 96

இரவுறும் பகலடியர் இருமருங்கினும் உறுவரென வயங்கிய சீர்ப்பதம்
எம்பந்தமற எமது சம்பந்த வள்ளல்மொழி இயன்மண மணக்கும்பதம்
ஈவரசர் எம்முடைய நாவரசர் சொற்பதிக இசை பரிமளிக்கும்பதம்
ஏவலார் புகழெமது நாவலாரூரர் புகழ் இசைதிருப் பாட்டுப்பதம் 100

ஏதவூர் தங்காத வாதவூர் எங்கோவின் இன்சொன்மணி அணியும்பதம்
எல்லூரு மணிமாட நல்லூரின் அப்பர்முடி இடைவைகி அருண்மென்பதம்
எடுமேலெனத் தொண்டர் முடிமேன் மறுத்திடவும் இடைவலிந்து ஏறும்பதம்
எழில் பரவையிசைய ஆரூர் மறுகினருள் கொண்டு இராமுழுது முலவும்பதம் 104

இன்தொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறும் இரக்கநடை கொள்ளும்பதம்
இளைப்புறல் அறிந்து அன்பர் பொதிசோறு அருந்த முன்னிருந்து பின்னடக்கும்பதம்
எறிவிறகு விற்க வளர் கூடற் தெருத்தொறும் இயங்கிய இரக்கப்பதம்
இறுவைகை யங்கரையின் மண்படப் பல்கால் எழுந்து விளையாடும்பதம் 108

எங்கே மெய்அன்பர் உளர் அங்கே நலந்தர எழுந்தருளும் வண்மைப்பதம்
எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அன்றே இரங்கி யீந்தருளும்பதம்
என்போன்றவர்க்கு மிகுபொன்போன்ற கருணை தந்து இதயத் திருக்கும்பதம்
என்னுயிரை யன்னபதம் என்னுயிர்க் குயிராய் யிலங்கும் செம்பதுமப்பதம் 112

என் அறிவெனும் பதம் என்அறிவினுக் கறிவாயிருந்த செங்கமலப்பதம்
என் அன்பெனும் பதம் என்அன்பிற்கு வித்தாய் இசைந்தகோ கனகப்பதம்
என் தவமெனும் பதம் என்மெய்த் தவப் பயனாயியைந்த செஞ்சலசப்பதம்
என்னிரு கண்மணியான பதம் என்கண்மணிகளுக்கு இனியநல் விருந்தாம்பதம் 116

என் செல்வமாம் பதம் என்மெய்ச்செல்வ வருவாயெனுந் தாமரைப் பொற்பதம்
என் பெரிய வாழ்வான பதம் என் களிப்பாம் இரும்பதம் என் நிதியாம்பதம்
என் தந்தைதாயெனும் இணைப்பதம் என்னுறவாம் இயற்பதம் என் நட்பாம்பதம்
என் குருவெனும் பதம் என்இட்ட தெய்வப்பதம் எனதுகுல தெய்வப்பதம் 120

என்பொறிகளுக்கெலாம் நல்விடய மாம்பதம் என்எழுமையும் விடாப்பொற்பதம்
என்குறையெலாம் தவிர்த்து ஆட்கொண்ட பதம் எனக்கு எய்ப்பில் வைப்பாகும்பதம்
எல்லார்க்கும் நல்லபதம் எல்லாஞ்செய் வல்லபதம் இணையிலாத் துணையாம்பதம்
எழுமனம் உடைந்து யுடைந்து உருகி நெகிழ் பத்தர்கட்கு இன்ன முதமாகும்பதம் 124

எண்ணுறிற் பாலில்நறு நெய்யொடு சருக்கரை இசைந்தென இனிக்கும்பதம்
ஏற்ற முக்கனி பாகு கன்னல் கற்கண்டு தேனென்ன மதுரிக்கும்பதம்
எங்கள் பதம் எங்கள் பதம் என்று சமயத் தேவர் இசைவழக்கிடு நற்பதம்
ஈறிலாப்பதம் எலாந் தருதிருப்பதம் அழிவில் இன்புதுவுகின்ற பதமே. 128

திருச்சிற்றம்பலம்

2. விண்ணப்பக் கலிவெண்பா

காப்பு
நேரிசை வெண்பா
அருட்பெருஞ்ஜோதி

3 அவ்வவ் விடைவந் தகற்றி அருள்தரலால்
எவ்வெவ் விடையூறும் எய்தலிலம் – தெவ்வர்தமைக்
கன்றுமத மாமுகமுங் கண்மூன்றுங் கொண்டிருந்தது
ஒன்றதுநம் முள்ள முறைந்து. 1

1. சோழநாட்டுத் திருப்பதிகள் (காவிரியின் வடகரை)

கலிவெண்பா
திருச்சிற்றம்பலம்

4 சொற்பெறுமெய்ஞ் ஞானச் சுயஞ்சோதி யாந்தில்லைச்[1]
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே – நற்சிவையாந் 1

தாயி னுலகனைத்துந் தாங்குந் திருப்புலியூர்க்
கோயி லமர்ந்தகுணக் குன்றமே – மாயமிகும் 2

வாட்களமுற் றாங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்
வேட்களமுற் றோங்கும் விழுப்பொருளே – வாழ்க்கைமனை 3

நல்வாய லெங்கு நவமணிக்குன்றோங்குதிரு
நெல்வாய னின்றொளிரு நீளொளியே – செல்வாய்த் 4

1. இது முதல் 64 கண்ணிகள் சோழநாட்டில் காவிரி வடகரைத் தலங்கள்.

தெழிப்பாலை வேலைத் திரையொலிபோ லார்க்குங்
கழிப்பாலை யின்பக் களிப்பே – விழிப்பாலன் 5

கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக்கச் சோதிதரு
நல்லூர்ப் பெருமணம்வாழ் நன்னிலையே – சொல்லுந் 6

தயேந்திர ருள்ளத் தடம்போ லிலங்கும்
மயேந்திரப் பள்ளியின்ப வாழ்வே – கயேந்திரனைக் 7

காயலுறா தன்றுவந்து காத்தோன் புகழ்முல்லை
வாயிலி னோங்கு மணிவிளக்கே – மேய 8

பலிக்காவூர் தோறும் பதஞ்சேப்பச் சென்று
கலிக்காமூர் மேவுங் கரும்பே – வலிக்காலில் 9

பாய் [1]க்காடு கின்றவொரு பச்சை முகில்பரவுஞ்
சாய்க்காடு மேவுந் தடங்கடலே – வாய்க்கமையச் 10

சொல்லவ னீச்சரங்கு தோயவும்ப ராம்பெருமைப்
பல்லவ னீச்சரத்தெம் பாவனமே – நல்லவர்கள் 11

கண்காட்டு நெற்றிக் கடவுளே யென்றுதொழ
வெண்காட்டின் மேவுகின்ற மெய்ப்பொருளே – தண்காட்டிக் 12

கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள்சூழ்
சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே – பார்காட் 13

டுருகாவூ ரெல்லா மொளிநயக்க வோங்குங்
குருகாவூர் வெள்ளடையெங் கோவே – அருகாத 14

கார் [2]காழி னெஞ்சக் கவுணியர்க்குப் போதமருள்
சீர்காழி ஞானத் திரவியமே – ஓர்காழிப் 15

பாலற்கா வன்று பசும்பொற்றா ளங்கொடுத்த
கோலக்கா மேவுங் கொடையாளா – கோலக்கா 16

உள்ளிருக்கும் புள்ளிருக்கு மோதும் புகழ்வாய்ந்த
புள்ளிருக்கும் வேளூர்ப் புரிசடையாய் – கள்ளிருக்கும் 17

காவின் மருவுங் கனமுந் திசைமணக்கும்
கோவின் மருவுகண்ணார் கோயிலாய் – மாவின் 18

இடைமுடியின் றீங்கனியென் றெல்லின் முசுத்தாவும்
கடைமுடியின் மேவுங் கருத்தா – கொடைமுடியா 19

நன்றியூ ரென்றிந்த ஞாலமெலாம் வாழ்த்துகின்ற
நின்றியூர் மேவு நிலைமையனே – ஒன்றிக் 20

கருப்புன்கூ ருள்ளக் கயவர் நயவாத்
திருப்புன்கூர் மேவுஞ் சிவனே – உருப்பொலிந்தே 21

1. காலில்பாய் – சேஷசயநம். தொ. வே
2. காழ் – இல் – நெஞ்சம் என்று பிரித்துப் பொருள்கொள்க. தொ. வே.

ஈடூரி லாதுயர்ந்த ஏதுவினா லோங்குதிரு
நீடூ ரிலங்கு நிழற்றருவே – பீடுகொண்டு 22

மன்னியூ ரெல்லாம் வணங்க வளங்கொண்ட
வன்னியூர் மேவு மதிபதியே – மன்னர்சுக 23

வாழ்விக் குடிகளடி மண்பூச லாலென்னும்
வேழ்விக் குடியமர்ந்த வித்தகனே – சூழ்வுற்றோர் 24

விண்ணெதிர்கொண் டிந்திரன்போன் மேவிநெடு நாள்வாழப்
பண்ணெதிர்கொள் பாடிப் பரம்பொருளே – நண்ணும் 25

வணஞ்சே ரிறைவன் மகிழ்ந்து வணங்கும்
மணஞ்சேரி நீங்கா மகிழ்வே – மணஞ்சேர்ந்து 26

வாரட்ட கொங்கை மலையா ளொடுங் [1]கொறுக்கை
வீரட்ட மேவும் வியனிறைவே – ஓரட்ட 27

திக்குங் கதிநாட்டிச் சீர்கொள்திருத் தொண்டருளம்
ஒக்குங் கருப்பறிய லூரரசே – மிக்கதிரு 28

மாவளருஞ் செந்தா மரைவளருஞ் செய்குரக்குக்
காவளரு மின்பக் கனசுகமே – தாவுமயல் 29

காழ்கொ ளிருமனத்துக் காரிருணீத் தோர்மருவும்
வாழ்கொளி புத்தூர் [2]மணிச்சுடரே – தாழ்வகற்ற 30

நண்ணிப் படிக்கரையர் நாடோறும் வாழ்த்துகின்ற
மண்ணிப் படிக்கரைவாழ் மங்கலமே – விண்ணினிடை 31

வாமாம்[3] புலியூர் மலர்ச்சோலை சூழ்ந்திலங்கும்
ஓமாம் புலியூர்வாழ் உத்தமமே – நேமார்ந்த 32

வானாட்டு முள்ளூர் மருவுகின்றோர் போற்றுதிருக்
கானாட்டு முள்ளூர்க் கலைக்கடலே – மேனாட்டும் 33

தேரையூர்ச் செங்கதிர்போற் செம்மணிக ணின்றிலங்கும்
நாரையூர் மேவு நடுநிலையே – பாரில் 34

உடம்பூர் பவத்தை யொழித்தருளும் மேன்மைக்
கடம்பூர்வாழ் என்னிரண்டு கண்ணே – தடம்பொழிலில் 35

கொந்தணவுங் கார்க்குழலார் கோலமயிற் போலுலவும்
பந்தண நல்லூர்ப் பசுபதியே – கந்தமலர் 36

அஞ்சனூர் [4]செய்ததவத் தாலப் பெயர்கொண்ட
கஞ்சனூர் வாழுமென்றன் கண்மணியே – அஞ்சுகங்கள் 37

1. கொறுக்கை என்பது – யானை . அருட்பெருஞ்ஜோதி அச்சகம் 1942
2. வானொளிப் புற்றூர் – வாழ்வொளி புத்தூரென மருவியது. தொ. வே.
3. வாம அம்புலி ஊர் – அழகிய சந்திரன் தவழுகின்ற. தொ. வே.
4. அம்சன் – அஞ்சன் எனத் திரிந்தது. அன்னத்தை வாகனமாக உடைய பிரமன் எனப் பொருள். தொ. வே.

நாடிக்கா வுள்ளே நமச்சிவா யம்புகலும்
கோடிக்கா மேவுங் குளிர்மதியே – ஓடிக் 38

[1]கருமங்க லக்குடியிற் காண்டுமென வோதும்
திருமங்க லக்குடியில் தேனே – தருமம் 39

மனந்தாண் மலரை மருவுவிப்போர் வாழும்
பனந்தாளிற் பாலுகந்த பாகே – தினந்தாளிற் 40

சூழ்திருவாய்ப் பாடியங்கு சூழ்கினுமா மென்றுலகர்
வாழ்திருவாய்ப் பாடிஇன்ப வாரிதியே – ஏழ்புவிக்குள் 41

வாய்ஞ்ஞலூ ரீதே மருவவென வானவர்சேர்
சேய்ஞ்ஞலூர் இன்பச் செழுங்கனியே – வாஞ்சையுறும் 42

சீவன் குடியுறவிச் சீர்நகரொன் றேயெனுஞ்சீர்த்
தேவன் குடிமகிழ்ந்த தெள்ளமுதே – ஓவின் 43

மயலூர் மனம் போல் வயலிற் கயலூர்
வியலூர் சிவானந்த வெற்பே – அயலாம்பன் 44

மட்டையூர் வண்டினங்கள் வாய்ந்து விருந்துகொளும்
கொட்டையூ ருட்கிளருங் கோமளமே – இட்டமுடன் 45

என்னம்ப ரென்னம்ப ரென்றன்மால் வாதுகொள
இன்னம்பர் மேவிநின்ற என்னுறவே – முன்னம்பு 46

மாற்கும் புறம்பியலா வாய்மையருள் செய்யவுளம்
ஏற்கும் புறம்பியம்வாழ் என்னுயிரே – மாற்கருவின் 47

கண்விசைய மங்கைக் கனிபோற் பெறத்தொண்டர்
எண்விசைய மங்கையில்வாழ் என்குருவே – மண்ணுலகில் 48

வைகாவூர் நம்பொருட்டான் வைகியதென் றன்பர்தொழும்
வைகாவூர் மேவியவென் வாழ்முதலே – உய்யும்வகைக் 49

காத்தும் படைத்துங் கலைத்துநிற்போர் நாடோறும்
ஏத்துங் [2]குரங்காட்டின் என்னட்பே – மாத்தழைத்த 50

வண்பழனத் தின்குவிவெண் வாயிற்றேன் வாக்கியிட
உண்பழனத் தென்றன் உயிர்க்குயிரே – பண்பகன்ற 51

வெய்யாற்றி னின்றவரை மெய்யாற்றி னேற்றுதிரு
வையாற்றின் மேவியஎன் னாதரவே – பொய்யாற்றி 52

மெய்த்தான நின்றோர் வெளித்தான மேவுதிரு
நெய்த்தானத் துள்ளமர்ந்த நித்தியமே – மைத்த 53

கரும்புலியூர்க் காளையொடுங் கண்ணோட்டங் கொள்ளும்
பெரும்புலியூர் வாழ்கருணைப் பேறே – விரும்பிநிதம் 54

1. கரு – பிறப்பு, மங்கல் – ஒழிதல் அருட்பெருஞ்ஜோதி அச்சகம் 1942
2. குரங்காடு – வட குரங்காடு துறை. குரங்காட்டின் என நின்றது தொ. வே.

பொன்னுங் [1]கவுத்துவமும் பூண்டோன் புகழ்ந்தருளை
மன்னு மழபாடி வச்சிரமே – துன்னுகின்ற 55

நாய்க்குங் கடையேன் நவைதீர நற்கருணை
வாய்க்கும் பழுவூர் மரகதமே – [2]தேய்க்களங்கில் 56

வானூர் மதிபோன் மணியாற் குமுதமலர்
கானூ ருயர்தங்கக் கட்டியே – நானூறு 57

கோலந் துறை [3]கொண்ட கோவையருள் கோவைமகிழ்
ஆலந் துறை [4]யின் அணிமுத்தே – நீலங்கொள் 58

தேந்துறையி லன்னமகிழ் சேக்கை பலநிலவு
மாந்துறைவாழ் மாணிக்க மாமலையே – ஏந்தறிவாம் 59

நூற்றுறையில் நின்றவர்கள் நோக்கிமகிழ் வெய்துதிருப்
பாற்றுறையில் நின்ற பரஞ்சுடரே – நாற்றிசையுந் 60

தேனைக்கா வுண்மலர்கள் தேங்கடலென் றாக்குவிக்கும்
ஆனைக்கா மேவியமர் அற்புதமே – மானைப்போல் 61

மைஞ்ஞீல வாட்கண் மலராண் மருவுதிருப்
பைஞ்ஞீலி மேவும் பரம்பரமே – எஞ்ஞான்றும் 62

ஏச்சிரா மங்கலத்தோ டின்பந் தரும்பாச்சி
லாச்சிரா மஞ்சேர் அருள்நிலையே – நீச்சறியா 63

தாங்கோய் மலைப்பிறவி யார்கலிக்கோர் வார்கலமாம்
ஈங்கோய் மலைவாழ் இலஞ்சியமே – ஓங்காது 64

2. சோழநாட்டுத் திருப்பதிகள் (காவிரியின் தென்கரை)[5]

நாட்போக்கி நிற்கு நவையுடையார் நாடரிதாம்
வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே – கோட்போக்கி 65

நில்லுங் கடம்ப நெறிபோ லெனப்பூவை
சொல்லுங் கடம்பந் துறைநிறைவே – மல்லலொடு 66

வாழும் பராய்த்துறைவான் மன்னவரு மன்னவருஞ்
சூழும் பராய்த்துறைவாழ் தோன்றலே – கூழும்பல் 67

நற்குடியு மோங்கி நலம்பெருகு மேன்மைதிருக்
கற்குடியிற் சந்தான கற்பகமே – சிற்சுகத்தார் 68

பிற்சநந மில்லாப் பெருமை தருமுறையூர்ச்
சற்சனர்சேர் மூக்கீச் சரத்தணியே – மற்செய் 69

1. பொன் – இலக்குமி, தொ . வே
2. தே என்பது ஈண்டு விகுதி குன்றிய முதனிலைத் தொழிற்பெயர். தொ . வே
3. கோலத்துறை என்பது கோலந்துறை என விகாரமாயிற்று. தொ . வே
4. அன்பிலாலந்துறை யென்னுமோர் திருப்பதி. தொ . வே
5. 65 முதல் 191 வரை 127 கண்ணிகள் சோழநாட்டில் காவிரி தென்கரைத் தலங்கள்.

அராப்பள்ளி மேவு மவனின்று வாழ்த்தும்
சிராப்பள்ளி ஞானத் தெளிவே – இராப்பள்ளி 70

நின்றெழன்மெய் யன்றெனவே நேர்ந்துலகு வாழ்த்துகின்ற
நன்றெறும்பி யூரிலங்கு நன்னெறியே – துன்றுகயற் 71

கண்ணார் நெடுங்களத்தைக் கட்டழித்த மெய்த்தவர்சூழ்
தண்ணார் நெடுங்களமெய்த் தாரகமே – எண்ணார் 72

தருக்காட்டுப் பள்ளித் தகைகொண்டோர் சூழுந்
திருக்காட்டுப் பள்ளியில்வாழ் தேவே – மருக்காட்டு 73

நீலம் பொழிற்குள் நிறைதடங்கட் கேர்காட்டும்
ஆலம் பொழிற்சிவயோ கப்பயனே – சீலநிறை 74

வாந்துருத்தி கொண்டுள் ளனலெழுப்பு வோர்புகழும்
பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே – காந்துருவத் 75

தண்டியூர் போற்றுந் தகைகாசிக் கட்செய்து
கண்டியூர் வாழுங் களைகண்ணே – கொண்டியல்பின் 76

வேற்றுத் துறையுள் விரவா தவர்புகழும்
சோற்றுத் துறையுட் சுகவளமே – ஆற்றலிலாத் 77

தீதிக் குடியென்று செப்பப் படார்மருவும்
[1]வேதிக் குடி யின்ப வெள்ளமே – கோதியலும் 78

வன்குடித் திட்டை மருவார் மருவுதிருத்
தென்குடித் திட்டைச் சிவபதமே – நன்குடைய 79

உள்ளமங்கை மார்மே லுறுத்தா தவர்புகழும்
புள்ளமங்கை வாழ்பரம போகமே – கள்ளமிலஞ் 80

சக்கரப் பள்ளிதனிற் றாம்பயின்ற மைந்தர்கள்சூழ்
சக்கரப் பள்ளிதனில் தண்ணளியே – மிக்க 81

அருகாவூர் சூழ்ந்தே அழகுபெற வோங்கும்
கருகாவூர் இன்பக் கதியே – முருகார்ந்த 82

சோலைத் துறையிற் சுகஞ்சிவநூல் வாசிக்கும்
பாலைத் துறையிற் பரிமளமே – சீலத்தர் 83

சொல்லூ ரடியப்பர் தூயமுடி மேல்வைத்த
நல்லூ ரமர்ந்தநடு நாயகமே – மல்லார்ந்த 84

மாவூ ரிரவியின்பொன் வையமள வுஞ்சிகரி
ஆவூரி லுற்றவெங்கள் ஆண்டகையே – ஓவாது 85

சித்திமுற்ற யோகஞ் செழும்பொழிலிற் பூவைசெயும்
சத்திமுற்ற மேவுஞ் சதாசிவமே – பத்தியுற்றோர் 86

1. வேதிகுடி என்பது வேதிக்குடியென விரித்தல் விகாரமாயிற்று: தொ.வே.

முட்டீச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டீச் சரத்தெம் பராபரமே – துட்டமயல் 87

தீங்குவிழை யார் தமைவான் சென்றமரச் செய்விக்க
ஓங்குபழை யாறையிலென் னுள்ளுவப்பே – பாங்குபெற 88

ஆர்ந்த வடவிலையான் அன்னத்தான் போற்றிநிதம்
சார்ந்த வடதளிவாழ் தற்பரமே – சேர்ந்த 89

மலஞ்சுழி கின்ற மனத்தர்க் கரிதாம்
வலஞ்சுழி வாழ்பொன் மலையே – நிலஞ்சுழியா 90

தோணத்தில் வந்தோ னுடன்றுதித்து வாழ்கும்ப
கோணத்தில் தெய்வக் குலக்கொழுந்தே – மாணுற்றோர் 91

காழ்க்கோட்ட நீங்கக் கருதுங் குடமூக்கிற்
கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே – வாழ்க்கோட்டத் 92

தேரோண மட்டுந் திகழ்குடந்தை மட்டுமன்றிக்
[1]காரோண மட்டுங் கமழ்மலரே – சீரோங்கும் 93

யோகீச் சுரர்நின் றுவந்து வணங்குதிரு
நாகீச் சுரமோங்கு நங்கனிவே – ஓகையுளம் 94

தேக்கும் வரகுணனாந் தென்னவன்கண் சூழ்பழியைப்
போக்கும் இடைமருதிற் பூரணமே – நீக்கமிலா 95

நன்குரங் காணு நடையோ ரடைகின்ற
தென்குரங் காடுதுறைச் செம்மலே – புன்குரம்பை 96

ஏலக் குடிபுகுந்த எம்மனோர்க் குண்மைதரு
நீலக் குடியிலங்கு நிட்களமே – ஞாலத்து 97

நீடக்கோர் நாளும் நினைந்தேத் திடும்வைகன்
மாடக்கோ யிற்குண் மதுரமே – பாடச்சீர் 98

வல்ல தமிழ்புலவர் மன்னி வயங்குதிரு
நல்லமகிழ் இன்ப நவவடிவே – இல்லமயல் 99

ஆழம்பங் கென்ன வறிந்தோர் செறிந்தேத்தும்
கோழம்பம் வாழ்கருணைக் கொண்டலே – வீழும்பொய் 100

தீரா வடுவுடையார் சேர்தற் கருந்தெய்வச்
சீரா வடுதுறையெஞ் செல்வமே – பேராக் 101

கருத்திருத்தி யேத்துங் கருத்தர்க் கருள்செய்
திருத்துருத்தி இன்பச் செழிப்பே – வருத்துமயல் 102

நாளு மெழுந்தூர் நவையறுக்கு மன்பருள்ளம்
நீளும் அழுந்தூர் நிறைதடமே – வேளிமையோர் 103

1. காரோணம் என்பது – திருக்குடந்தைக் காரோணம். அருட்பெருஞ்ஜோதி அச்சகம் 1942

வாயூரத் தேமா மலர் [1]சொரிந்து வாழ்த்துகின்ற
மாயூரத் தன்பர் மனோரதமே – தேயா 104

வளநகரென் றெவ்வுலகும் வாழ்த்தப் படுஞ்சீர்
விளநகர்வா ழெங்கண் விருந்தே – இளமைச் 105

செறியலூர் கூந்தல் திருவனையா ராடும்
பறியலூர் வாழ்மெய்ப் பரமே – நெறிகொண்டே 106

அன்பள்ளி யோங்கு மறிவுடையோர் வாழ்த்துஞ்செம்
பொன்பள்ளி வாழ்ஞான போதமே – இன்புள்ளித் 107

தெள்ளியார் போற்றித் திகழுந் திருநன்னிப்
பள்ளியார்ந் தோங்கும் பரசிவமே – எள்ளுறுநோய் 108

ஏய வலம்புரத்தை யெண்ணாம லெண்ணுகின்றோர்
மேய வலம்புரத்து மேதகவே – தூயகொடி 109

அங்காடு கோபுரம்வா னாற்றாடு கின்றதலைச்
சங்காடு மேவுஞ் சயம்புவே – பொங்குமிருட் 110

கூறுதிரு வாக்கூர் கொடுப்பனபோற் சூழ்ந்துமதில்
வீறுதிரு வாக்கூர் விளக்கமே – மாறகற்றி 111

நன்கடையூர் பற்பலவு நன்றிமற வாதேத்தும்
[2]தென்கடையூர் ஆனந்தத் தேறலே – வன்மையிலாச் 112

சொற்கடவி மேலோர் துதித்தலொழி யாதோங்கு
நற்கடவூர் வீரட்ட நாயகனே – வற்கடத்தும் 113

வாட்டக் குடிசற்றும் வாய்ப்பதே யில்லையெனும்
வேட்டக் குடிமேவு மேலவனே – நாட்டமுற்ற 114

வாக்குந் தெளிச்சேரி மாதவத்தர்க் கின்பநலம்
ஆக்குந் தெளிச்சேரி அங்கணனே – நீக்கும் 115

கரும புரத்திற் கலவா தருள்செய்
தரும புரஞ்செய் தவமே – இருமையினும் 116

எள்ளாற்றின் மேவாத ஏற்புடையோர் சூழ்ந்திறைஞ்சு
நள்ளாற்றின் மேவியஎன் நற்றுணையே – தெள்ளாற்றின் 117

நீட்டாறு கொண்டரம்பை நின்று கவின்காட்டும்
கோட்டாறு மேவுங் குளிர்துறையே – கூட்டாக 118

கருவம்பர் தம்மைக் கலவாத மேன்மைத்
திருவம்பர் ஞானத் திரட்டே – ஒருவந்தர் 119

மாகாளங் கொள்ள மதனைத் துரத்துகின்ற
மாகாளத் தன்பர் மனோலயமே – யோகாளக் 120

1. தேமாமலர் – சிறந்த கற்பகமலர். தொ. வே.
2. கடவூர் – கடையூரென மரீ இயது. தொ. வே.

காயச்சூர் விட்டுக் கதிசேர வேட்டவர்சூழ்
மீயச்சூர் தண்ணென்னும் வெண்ணெருப்பே – மாயக் 121

களங்கோவில் நெஞ்சக் கயவர் மருவா
இளங்கோயின் ஞான இனிப்பே – வளங்கோவை 122

நாடுந் திலத நயப்புலவர் நாடோறும்
பாடுந் திலதைப் பதிநிதியே – ஆடுமயில் 123

காம்புரங்கொள் தோளியர்பொற் காவிற் பயில்கின்ற
பாம்புரங்கொள் உண்மைப் பரம்பொருளே – ஆம்புவனம் 124

துன்னும் பெருங்குடிகள் சூழ்ந்துவலஞ் செய்துவகை
மன்னுஞ் சிறுகுடியான் மார்த்தமே – முன்னரசும் 125

காழி மிழலையருங் கண்டுதொழக் காசளித்த
வீழி மிழலை விராட்டுருவே – ஊழிதொறும் 126

மன்னியூர் மால்விடையாய் வானவா வென்றுதொழ
வன்னியூர் வாழு மணிகண்டா – இந்நிமிடம் 127

சிந்துங் கருவலியின் திண்மையென்று தேர்ந்தவர்கள்
முந்துங் கருவிலிவாழ் முக்கண்ணா – மந்தணத்தைக் 128

காணு மருந்துறையிக் காமர்தல மென்றெவரும்
பேணு பெருந்துறையிற் பெம்மானே – ஏணுடன்கா 129

ஈட்டும் பெருநறையா றென்ன வயலோடி
நாட்டும் பெருநறையூர் நம்பனே – காட்டும் 130

பரிசிற் கரைப்புற்றோர் பாங்குபெற வோங்கும்
[1]அரிசிற் கரைப்புத்தூ ரானே – தரிசனத்தெக் 131

காலுஞ் சிவபுரத்தைக் காதலித்தோர் தங்கள்துதி
ஏலுஞ் சிவபுரத்தி லெம்மானே – மாலுங்கொள் 132

வெப்புங் கலையநல்லோர் மென்மதுரச் சொன்மாலை
செப்புங் கலையநல்லூர்ச் சின்மயனே – செப்பமுடன் 133

ஓங்குந் திருத்தொண்டர் உள்குளிர நல்லருளால்
தாங்குங் கருக்குடிவாழ் சங்கரனே – ஆங்ககனந் 134

தாஞ்[2]சியத்தை வேங்கைத் தலையாற் றடுக்கின்ற
வாஞ்சியத்தின் மேவு மறையோனே – ஆஞ்சியிலா 135

திந்நிலத்தும் வானாதி யெந்நிலத்து மோங்குபெரு
நன்னிலத்து வாழ்ஞான நாடகனே – மன்னுமலர் 136

வண்டீச் சுரம்பாடி வார்மதுவுண் டுள்களிக்குங்
கொண்டீச் சுரத்தமர்ந்த கோமானே – கண்டீச 137

1. அரிசொன்னதிக்கரை . அரிசிற்கரை யென மரீஇயது: தொ. வே.
2. சீயத்தை என்பது செய்யுள் விகாரத்தாற் குறுக்கும் வழி குறுக்கப்பட்டு சியத்தையென நின்றது : தொ. வே.

நண்பனையூ ரன்புகழும் நம்பவென உம்பர்தொழத்
தண்பனையூர் மேவுஞ் சடாதரனே - பண்புடனே 138

எற்குடியா னங்கொண் டிருக்க மகிழ்ந்தளித்த
விற்குடியின் வீரட்ட மேயவனே - சொற்கொடிய 139

வன்புகலா நெஞ்சின் மருவும் ஒருதகைமைத்
தென்புகலூர் வாழ்மகா தேவனே - இன்பமறை 140

அர்த்தமா நீக்கரிய வாதார மாகிநின்ற
வர்த்தமா நேச்சரத்து வாய்ந்தவனே - மித்தையுற்ற 141

[1]காமனதீ சங்கெடவே கண்பார்த் தருள்செய்த
[2]ராமனதீ சம்பெறுநி ராமயனே - தோமுண் 142

மயற்றூர் பறித்த மனத்தில் விளைந்த
பயற்றூர் திசையம் பரனே - இயற்றுஞ்சீர் 143

ஆச்சிரமே வுஞ்செங்காட் டங்குடியி னங்கணப
தீச்சரம்வா முஞ்சந்த்ர சேகரனே - ஏச்சகல 144

விண்மருவி னோனை விடநீக்க நல்லருள்செய்
வண்மருகல் மாணிக்க வண்ணனே - திண்மைகொண்ட 145

மாத்தமங்கை யுள்ளம் மருவிப் பிரியாத
சாத்தமங்கைக் கங்கைச் சடாமுடியோய் - தூத்தகைய 146

பாகைக்கா ரென்னும் பணிமொழியார் வாழ்த்தோவா
நாகைக்கா ரோண நயந்தோனே - ஓகையற 147

விக்கல் வருங்கால் விடாய்தீர்த் துலகிடைநீ
சிக்கலெனுஞ் சிக்கல் திறலோனே - மிக்கமினார் 148

வாளூர் தடங்கண் வயல்காட்டி யோங்குங்கீழ்
வேளூரிற் செங்கண் விடையோனே - நீளுவகைப் 149

பாவூ ரிசையிற் பயன்சுவையிற் பாங்குடைய
தேவூர் வளர்தேவ தேவனே - பூவினிடை 150

இக்கூடன் மைந்த வினிக்கூட லென்றுபள்ளி
முக்கூடன் மேவியமர் முன்னவனே - தக்கநெடுந் 151

தேரூ ரணிவீதிச் சீரூர் மணிமாட
ஆரூரி லெங்கள் அருமருந்தே - நீரூர்ந்த 152

காரூர் பொழிலுங் கனியீந் திளைப்பகற்றும்
ஆரூ ரரனெறிவே ளாண்மையே - ஏரார்ந்த 153

1. காமனது ஈசம் - தலைமை, 2. ராமனது ஈசம் - திரு இராமனந்தீச் சுரம் என்பது இது சோழநாட்டில் காவிரித் தென்கரையில் திருப்புகலூர் வர்த்த மானேச்சுரத்திற்குத் தென்கிழக்கில் ஒரு கடிகை தூரத்திலுள்ளது. பாண்டிய நாட்டிலுள்ள இராமேசுரம் அன்று, அதனை 200 வது கலிவெண்பாவில் காண்க. அருட்பெருஞ்ஜோதி அச்சகம் 1942

மண்மண் டலிகர் மருவுமா ரூர்ப்பரவை
உண்மண் டலி[1] எம் உடைமையே – திண்மைக் 154

களமர் மகிழக் கடைசியர் பாடும்
விளமர் கொளுமெம் விருப்பே – வளமை 155

எருக்கரவீ ரஞ்சே ரெழில்வேணி கொண்டு
திருக்கரவீ ரஞ்சேர் சிறப்பே – உருக்க 156

வருவேளூர் மாவெல்லா மாவேறுஞ் சோலைப்
பெருவேளூர் இன்பப் பெருக்கே – கருமை 157

மிலையாலங் காட்டு மிடற்றாயென் றேத்தும்
தலையாலங் காட்டுத் தகவே – நிலைகொள் 158

தடவாயில் வெண்மணிகள் சங்கங்க ளீனும்
குடவாயில் அன்பர் குறிப்பே – மடவாட்கோர் 159

கூறை [2]யுவந்தளித்த கோவேயென் றன்பர்தொழச்
சேறை யுவந்திருந்த சிற்பரமே – வேறுபடாப் 160

பாலூர் நிலவிற் பணிலங்கள் தண்கதிர்செய்
நாலூரில் அன்பர்பெறு நன்னயமே – மேலூரும் 161

நோய்க்கரையுட் செய்யாத நோன்மையோர் சூழ்ந்தகடு
வாய்க்கரையுண் மேவுகின்ற வண்மையே – வாய்த்த 162

பெரும்பூகந் தெங்கிற் பிறங்க வளங்கொள்ளும்
இரும்பூளை மேவி யிருந்தோய் – விரும்பும் 163

விரதப் பெரும்பாழி விண்ணவர்க ளேத்தும்
அரதைப் பெரும்பாழி ஆர்ந்தோய் – சரதத்தால் 164

ஏதும் அவணிவணென் றெண்ணா தவரிறைஞ்சி
ஓதும் அவளிவணல் லூருடையோய் – கோதகன்ற 165

நீட்டுங் கருதி நியமத்தோர்க் கின்னருளை
நீட்டும் பரிதி நியமத்தோய் – காட்டியநந் 166

தேவனூ ரென்று திசைமுகன்மால் வாழ்த்துகின்ற
பூவனூர் மேவும் புகழுடையோய் – பூவுலகாம் 167

ஈங்கும்பா தாளமுத லெவ்வுலகு மெஞ்ஞான்றுந்
தாங்கும்பா தாளேச் சரத்தமர்ந்தோய் – ஓங்குபுத்தி 168

மான்களரி லோட்டி மகிழ்வோ டிருந்தேத்தும்
வான்களரில் வாழு மறைமுடிபே – மேன்மைதரும் 169

முற்றேமம் வாய்ந்த முனிவர் தினம்பரவும்
சிற்றேமம் வாய்ந்த செழுங்கதிரே – கற்றவர்கள் 170

1. மண்டளி என்பது மண்டலி என ளகர லகர ஒற்றுமைத் திரிபு. தொ. வே
2. மடவாட்கோர் கூற்றை யெனற்பாலது கூறையென இரண்டாவதன் முடிபேற்று நின்றது. தொ. வே.

எங்குமுசாத் தான மிருங்கழக மன்றமுதல்
தங்குமுசாத் தானத் தனிமுதலே - பொங்குபவ 171

வல்லலிடும் பாவநத்த மட்டொளிசெய் கின்றதிரு
மல்லலிடும் பாவனத்து மாட்சிமையே - தொல்லைப் 172

படிக்குள் நோவாத பண்புடையோர் வாழ்த்தும்
கடிக்குளத் தன்பர் களிப்பே - கடிக்குளத்தின் 173

வண்டலைக்கத் தேனலரின் வார்ந்தோர் தடமாக்கும்
தண்டலைக்குள் நீணெறிச்சிந் தாமணியே - கொண்டலென 174

மன்கோட்டூர் சோலை வளர்கோட்டூர் தண்பழனத்
தென்கோட்டூர் தேவ சிகாமணியே - தென்கூட்டிப் 175

போய்வண் டுறைதடமும் பூம்பொழிலுஞ் சூழ்ந்தம
ராய்வெண் டுறைமாசி லாமணியே - தோய்வுண்ட 176

கள்ளம்பூ தாதிநிலை கண்டுணர்வு கொண்டவர்சூழ்
கொள்ளம்பூ தூர்வான் குலமணியே - வெள்ளிடைவான் 177

வாம்பே ரெயிற்சூழ்ந்த மாண்பாற் றிருநாமம்
ஆம்பே ரெயிலொப்பி லாமணியே - தாம்பேரா 178

வீட்டிலன்ப ரானந்தம் மேவச் செயுங்கொள்ளிக்
காட்டி லமர்ந்தஎன்கண் காட்சியே - நீட்டுமொளி 179

ஆங்கூ ரிலைவே லவனா தியர்சூழத்
தேங்கூரில் வாழ்தேவ சிங்கமே - ஓங்குமலை 180

வல்லிக்கா தார மணிப்புயவென் றன்பர்தொழ
நெல்லிக்கா வாழ்மெய்ந் நியமமே - எல்அலற்கண் 181

சேட்டியத் தானே தெரிந்துசுரர் வந்தேத்து
நாட்டியத் தான்குடிவாழ் நல்லினமே - நாட்டுமொரு 182

நூறாயி லன்பர்தமை நோக்கி யருள்செய்திருக்
காறாயின் மேலோர் கடைப்பிடியே - வீறாகும் 183

இன்றாப்பூர் வந்தொட் டிருந்ததிவ்வூ ரென்னவுயர்
கன்றாப்பூர் பஞ்சாக் கரப்பொருளே - துன்றாசை 184

வெய்ய வலிவலத்தை வீட்டியன்பர்க் கின்னருள்செய்
துய்ய வலிவலத்துச் சொன்முடிபே - நையுமன 185

மைச்சினத்தை விட்டோர் மனத்திற் சுவைகொடுத்துக்
கச்சினத்தி னுட்கரையாக் கற்கண்டே - நெற்சுமக்க 186

ஆளிலையென் றாரூர னார்துதிக்கத் தந்தருளும்
கோளிலியின் அன்பர்குலங் கொள்ளுவப்பே - நீளுலகம் 187

காய்மூர்க்க ரேனுங் கருதிற் கதிகொடுக்கும்
வாய்மூர்க் கமைந்த மறைக்கொழுந்தே – நேயமுணத் 188

தேடெலியை மூவுலகுந் தேர்ந்துதொழச் செய்தருளும்
ஈடின்மறைக் காட்டிலென்றன் எய்ப்பில்வைப்பே – நாடுமெனை 189

நின்னகத்தி யான்பள்ளி நேர்ந்தேனென் றாட்கொண்ட
தென்னகத்தி யான்பள்ளிச் செம்பொன்னே – தொன்னெறியோர் 190

நாடிக் குழக நலமருளென் றேத்துகின்ற
கோடிக் குழகரருட் கோலமே – நீடுலகில் 191

3. ஈழநாடு[1] (இலங்கை)

நாட்டும் புகழீழ நாட்டிற் பவவிருளை
வாட்டுந் திருக்கோண மாமலையாய் – வேட்டுலகின் 192

மூதீச் சரமென்று முன்னோர் வணங்குதிருக்
கேதீச் சரத்திற் கிளர்கின்றோய் – ஓதுகின்றோர் 193

4. பாண்டி நாடு

பாலவாய் நிற்கும் பரையோடு வாழ்மதுரை[2]
ஆலவாய்ச் சொக்கழகா னந்தமே – சீலர் தமைக் 194

காப்பனூ ரில்லாக் கருணையா லென்றுபுகும்
ஆப்பனூர் மேவுசதா னந்தமே – மாப்புலவர் 195

ஞானபரங் குன்றமென நண்ணிமகிழ் கூர்ந்தேத்த
வானபரங் குன்றலின்பா னந்தமே – வானவர்கோன் 196

தேமே டகத்தனொடு சீதரனும் வாழ்த்துஞ்சீ
ராமே டகத்தறிவா னந்தமே – பூமீதில் 197

நற்றவருங் கற்ற நவசித்த ரும்வாழ்த்தி
உற்றகொடுங் குன்றத்தெம் ஊதியமே – முற்றுகதி 198

இத்தூர மன்றி யினித்தூர மில்லையெனப்
புத்தூர் வருமடியார் பூரிப்பே – சித்தாய்ந்து 199

நாமீச ராகும் நலந்தருமென் றும்பர்தொழும்
ராமீசம் [3]வாழ்சீவ ரத்தினமே – பூமீது 200

நீடானை சூழும் நிலமன்னர் வாழ்த்துதிரு
வாடானை மேவுகரு ணாகரமே – சேடான 201

வானப்பே ராற்றை மதியை முடிசூடுங்
கானப்பேர் ஆனந்தக் காளையே – மோனருளே 202

பூவணமும் பூமணமும் போலவ மர்ந்ததிருப்
பூவணத்தில் ஆனந்தப் பொக்கிஷமே – தீவணத்தில் 203

1. 192, 193-ஆம் கண்ணிகள் ஈழநாட்டுத் தலங்கள்
2. 194 முதல் 206 வரை 13 கண்ணிகள் பாண்டி நாட்டுத் தலங்கள்.
3. தொழும் ராமீசம் என்பது வடநூன்முடிபு, இராமேசுரம்.

கண்சுழிய லென்று கருணையளித் தென்னுளஞ்சேர்
தண்சுழியல் வாழ்சீவ சாக்ஷியே - பண்செழிப்பக் 204

கற்றாலங் குண்மைக் கதிதருமென் றற்றவர்சூழ்
குற்றாலத் தன்பர் குதுகலிப்பே - பொற்றாம 205

நல்வேலி சூழ்ந்து நயன்பெறுமொண் செஞ்சாலி
நெல்வேலி உண்மை நிலயமே - வல்வேலை 206

5. சேர நாடு

நஞ்சைக் களத்துவைத்த நாதவெனத் தொண்டர்தொழ
அஞ்சைக் களஞ்சேர்[1] அருவுருவே - நெஞ்சடக்கி 207

6. கொங்கு நாடு

ஆன்று நிறைந்தோர்க் கருளளிக்கும் புக்கொளியூர்த்[2]
தோன்றுமவி நாசிச் சுயம்புவே - சான்றவர்கள் 208

தம்முருகன் பூணுட் டலம்போல வாழ்கின்ற
எம்முருகன் பூண்டி இருநிதியே - செம்மையுடன் 209

அங்குன்றா தோங்கு மணிகொள் கொடிமாடச்
செங்குன்றூர் வாழுஞ்சஞ் சீவியே - தங்குமன 210

வஞ்சமாக் கூடல் வரையா தவர்சூழும்
வெஞ்சமாக் கூடல் விரிசுடரே - துஞ்சலெனும் 211

இன்ன லகற்ற இலங்குபவா னிக்கூடல்
என்னு நணாவினிடை இன்னிசையே - துன்னியருள் 212

வேண்டிக் கொடுமுடியா மேன்மைபெறு மாதவர்சூழ்
பாண்டிக் கொடுமுடியிற் பண்மயமே - தீண்டரிய 213

வெங்கருவூர் வஞ்ச வினைதீர்த் தவர்சூழ்ந்த
நங்கருவூர்ச் செய்யு நவரசமே - தங்களற்றின் 214

7. நடு நாடு

தீங்கார் பிறதெய்வத் தீங்குழியில்[3] வீழ்ந்தவரைத்[4]
தாங்கா வரத்துறையில் தாணுவே - பூங்குழலார் 215

வீங்கானை மாடஞ்சேர் விண்ணென் றகல்கடந்தைத்
தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே - நீங்காது 216

நீடலை யாற்றூர் நிழன்மணிக்குன் றோங்குதிருக்
கூடலை யாற்றூர்க் குணநிதியே - நாடியவான் 217

அம்புலியூர் சோலை யணிவயல்க ளோங்கெருக்கத்
தம்புலியூர் வேத சமரசமே - நம்புவிடை 218

1. இஃது மலைநாட்டுத் தலம்.
2. 208 முதல் 214 வரை 7 கண்ணிகள் கொங்கு நாட்டுத் தலங்கள்.
3. தீக்குழி என்பது தீங்குழி யென்றாயது: தொ. வே.
4. 215 முதல் 236 வரை 22 கண்ணிகள் நடுநாட்டுத் தலங்கள்

ஆங்குந் தினையூர்ந் தருளாயென் றன்பர்தொழு
தோங்குந் தினையூர் உமாபதியே – தீங்குறுமொன் 219

[1]னார்புரத்தை வெண்ணகைத்தீ யாலழித்தா யென்றுதொழச்
[2]சோபுரத்தின் வாழ்ஞான தீவகமே – வார்கெடிலச் 220

சென்னதிகை யோங்கித் [3]திலதவதி யார்பரவும்
மன்னதிகை வீரட்ட மாதவமே – பன்னரிதாம் 221

ஆவலூ ரெங்களுடை ஆரூர னாரூராம்
நாவலூர் ஞானியருண் ஞாபகமே – தேவகமாம் 222

மன்ற மமர்ந்த வளம்போற் றிகழ்ந்தமுது
குன்ற மமர்ந்தஅருட் கொள்கையே – அன்றகத்தின் 223

நல்வெண்ணெ யுண்டொளித்த நாரணன்வந் தேத்துகின்ற
நெல்வெண்ணெய் மேவுசிவ நிட்டையே – சொல்வண்ணம் 224

நாவலர் போற்றி நலம்பெறவே யோங்குதிருக்
கோவலூர் வீரட்டங் கொள்பரிசே – ஆவலர்மா 225

தேவா இறைவா சிவனே யெனுமுழக்கம்
ஓவா அறையணிநல் லூருயர்வே – தாவாக் 226

கடையாற்றி னன்பர்தமைக் கல்லாற்றி னீக்கும்
இடையாற்றின் வாழ்நல் இயல்பே – இடையாது 227

சொல்லூரன் றன்னைத் தொழும்புகொளுஞ் சீர்வெண்ணெய்
நல்லூ ரருட்டுறையின் நற்பயனே – மல்லார்ந்து 228

மாசுந் துறையூர் மகிபன்முதல் [4]மூவருஞ்சீர்
பேசுந் துறையூர்ப் பிறைசூடீ – நேசமுற 229

வேற்றா வடுகூ ரிதயத்தி னார்க்கென்றுந்
தோற்றா வடுகூர்ச் சுயஞ்சுடரே – ஆற்றமயல் 230

காணிக் குழிவீழ் கடையர்க்குக் காண்பரிய
மாணிக் குழிவாழ் மகத்துவமே – மாணுற்ற 231

பூப்பா திரிகொன்றை புன்னைமுதற் சூழ்ந்திலங்கும்
[5]ஏர்ப்பா திரிப்புலியூர் ஏந்தலே – சீர்ப்பொலியப் 232

பண்டீச் சுரனிப் பதியே விழைந்ததெனும்
முண்டீச் சுரத்தின் முழுமுதலே – பெண்தகையார் 233

1. ஆசிடை யெதுகை: தொ. வே.
2. செந்தொடை: தொ. வே.
3. ஓங்கி - பரவெனும் வேறு சினை வினைக் குறைகள் மன்னென்னு முதல் வினையோடு முடிந்தன: தொ. வே.
4. சேர சோழ பாண்டியரெனும் முடியுடை வேந்தர்.
5. ஆசிடை யெதுகை. அப்பர் சுவாமிகளைக் கறையேற்றிய தலம்.

ஏர்ப்பனங்காட் டூரென் றிருநிலத்தோர் வாழ்த்துகின்ற
சீர்ப்பனங்காட் டூர்மகிழ்நி கேஷபமே - சூர்ப்புடைத்த 234

தாமாத்தூர் வீழத் தடிந்தோன் கணேசனொடும்
ஆமாத்தூர் வாழ்மெய் அருட்பிழம்பே - யாமேத்தும் 235

உண்ணா முலையாள் உமையோடு மேவுதிரு
அண்ணா மலைவாழ் [1]அருட்சுடரே - கண்ணார்ந்த 236

8. தொண்ட நாடு

நாகம்ப ராந்தொண்ட நாட்டி லுயர்காஞ்சி[2]
ஏகம்ப மேவும்பே ரின்பமே - ஆகுந்தென் 237

காற்றளிவண் பூமணத்தைக் காட்டும் பொழிற்கச்சி
மேற்றளிவாழ் ஆனந்த வீட்டுறவே - நாற்றமலர்ப் 238

பூந்தண் டளிவிரித்துப் புக்கிசைக்குஞ் சீரோண
காந்தன் றளிஅருட்ப்ர காசமே - சேர்ந்தவர்க்கே 239

இங்கா பதஞ்சற்று மில்லா தவனேக
தங்கா பதஞ்சேர் தயாநிதியே - மங்காது 240

மெச்சி நெறிக்கார்வ மேவிநின்றோர் சூழ்ந்ததிருக்
கச்சி நெறிக்காரைக் காட்டிறையே - முச்சகமும் 241

ஆயுங் குரங்கணின்முட் டப்பெயர்கொண் டோங்குபுகழ்
ஏயுந் தலம்வா ழியன்மொழியே - தோயுமன 242

[3]யோகறலி லாத்தவத்தோ ருன்ன விளங்குதிரு
மாகறலில் அன்பரபி மானமே - ஓகையிலா 243

[4]வீத்தூர மாவோட மெய்த்தவர்கள் சூழ்ந்ததிரு
ஒத்தூரில் வேதாந்த உண்மையே - பூத்தவிசின் 244

ஆர்த்தான் பனகத் தவனிந் திரன்புகழ்வன்
பார்த்தான் பனங்காட்டூர் பாக்கியமே - பார்த்துலகில் 245

இல்ல மெனச்சென் றிரவா தவர்வாழும்
வல்லமகி ழன்பர் வசித்துவமே - சொல்லரிக்குக் 246

காற்பேறு கச்சியின்முக் காற்பே றிவணென்னும்
மாற்பேற்றி னன்பர் மனோபலமே - ஏற்புடைவாய் 247

ஊற லடியா ருறத்தொழுது மேவுதிரு
ஊற லழியா உவகையே - மாறுபடு 248

தீது மிலம்பயங்கோட் டூரென் றடியர்புகழ்
ஓது மிலம்பயங்கோட் டூர்நலமே - தீதுடைய 249

1. அருட்சுடரே என்பது - அருட்பெருஞ்ஜோதி
2. 237 முதல் 271 வரை 35 கண்ணிகள் தொண்டநாட்டுத் தலங்கள்.
3. யோகம் என்பது - யோகென விகாரமாயிற்று: தொ. வே
4. வீ என்பது - மரணம். தொ. வே.

பொற்கோலமா மெயிற்குப் போர்க்கோலம் கொண்டதிரு
விற்கோலம் மேவுபர மேட்டிமையே – சொற்போரில் 250

ஓலங்காட் டும்பழைய னூர்நீலி வாதடக்கும்
ஆலங்காட் டிற்சூழ் அருண்மயமே – ஞாலம்சேர் 251

மாசூர் அகற்றும் மதியுடையோர் சூழ்ந்ததிருப்
பாசூரில் உண்மைப் பரத்துவமே – தேசூரன் 252

கண்பார்க்க வேண்டுமெனக் கண்டூன்று கோற்கொடுத்த
வெண்பாக்கத் தன்பர்பெறும் வீறாப்பே – பண்பார்க்கு 253

நள்ளிப் பதியே நலந்தருமென் றன்பர்புகுங்
கள்ளிற் பதிநங் கடப்பாடே – எள்ளலுறுங் 254

கோளத்தி நீக்குங் குணத்தோர்க் கருள்செய்திருக்
காளத்தி ஞானக் களஞ்சியமே – ஆள்அத்தா 255

வெற்றியூ ரென்ன வினையேன் வினைதவிர்த்த
ஒற்றியூர் மேவியஎன் உள்ளன்பே – தெற்றிகளில் 256

பொங்குமணிக் கால்கள் பொலஞ்செய்திரு வொற்றிநகர்
தங்குஞ் சிவபோக சாரமே – புங்கவர்கள் 257

சேர்ந்துவலங் கொள்ளுந் திருவொற்றி யூர்க்கோயிற்
சார்ந்து மகிழ்அமுத சாரமே – தேர்ந்துலகர் 258

போற்றுந் திருவொற்றிப் பூங்கோயிற் குட்பெரியோர்
சாற்றும் புகழ்வேத சாரமே – ஊற்றுறுமெய் 259

அன்புமிகுந் தொண்டர்குழு வாயும்வலி தாயத்தில்
இன்பமிகு ஞான இலக்கணமே – துன்பமற 260

எல்லைவாயற் குண்மட்டும் ஏகில்வினை யேகுமெனும்
முல்லைவாயிற் குள்வைத்த முத்திவித்தே – மல்லல்பெறு 261

வேற்காட்ட ரேத்துதிரு வேற்காட்டின் மேவியமுன்
நூற்காட் டுயர்வேத நுட்பமே – பாற்காட்டும் 262

ஆர்த்திபெற்ற மாதுமயி லாய்ப்பூசித் தார்மயிலைக்
கீர்த்திபெற்ற நல்வேத கீதமே – கார்த்திரண்டு 263

வாவுகின்ற சோலை வளர்வான்மி யூர்த்தலத்தில்
மேவுகின்ற ஞான விதரணமே – தூவிமயில் 264

ஆடும் பொழிற்கச்சூ ராலக்கோ யிற்குளன்பர்
நீடுங் கனதூய நேயமே – ஈடில்லை 265

என்னுந் திருத்தொண்ட ரேத்து மிடைச்சுரத்தின்
மன்னுஞ் சிவானந்த வண்ணமே – நன்னெறியோர் 266

துன்னுநெறிக் கோர்துணையாந் தூயகழுக் குன்றினிடை
முன்னுமறி வானந்த மூர்த்தமே - துன்னுபொழில் 267

அம்மதுரத் தேன்பொழியும் அச்சிறுபாக் கத்துலகர்
தம்மதநீக் குஞ்ஞான சம்மதமே - எம்மதமும் 268

சார்ந்தால் வினைநீக்கித் தாங்குதிரு வக்கரையுள்
நேர்ந்தார் உபநிடத நிச்சயமே - தேர்ந்தவர்கள் 269

தத்த மதுமதியாற் சாரும் அரசிலியூர்
உத்தமமெய்ஞ் ஞான ஒழுக்கமே - பத்தியுள்ளோர் 270

எண்ணும் புகழ்கொள் இரும்பைமா காளத்து
நண்ணுஞ் சிவயோக நாட்டமே - மண்ணகத்துள் 271

9. துளுவ நாடு

கோபலத்திற் காண்பரிய கோகரணங் கோயில்கொண்ட[1]
மாபலத்து மாபலமா மாபலமே - தாபமிலாப் 272

10. வட நாடு

பாகியற்சொன் மங்கையொடும் பாங்கார் பருப்பதத்தில்[2]
யோகியர்க ளேத்திடவாழ் ஒப்புரவே - போகிமுதல் 273

பாடியுற்ற நீலப் பருப்பதத்தில் நல்லோர்கள்
தேடிவைத்த தெய்வத் திலகமே - நீடுபவம் 274

தங்கா தவனேக தங்கா பதஞ்சேர்ந்த
நங்கா தலான நயப்புணர்வே - சிங்காது[3] 275

தண்ணிறைந்து நின்றவர்தாஞ் சார்திருக்கே தாரத்திற்
பண்ணிறைந்த கீதப் பனுவலே - எண்ணிறைந்த 276

சான்றோர் வணங்குநொடித் தான்மலையில் வாழ்கின்ற
தேன்றோய் அமுதச் செழுஞ்சுவையே - வான்தோய்ந்த 277

இந்திரரும் நாரணரும் எண்ணில் பிரமர்களும்
வந்திறைஞ்சும் வெள்ளி மலையானே - தந்திடுநல் 278

தாய்க்குங் கிடையாத தண்ணருள்கொண் டன்பருளம்
வாய்க்குங் கயிலை மலையானே - தூய்க்குமரன் 279

தந்தையே என்னருமைத் தந்தையே தாயேயென்
சிந்தையே கோயில்கொண்ட தீர்த்தனே - சந்தமிகும் 280

எண்டோ ளுடையாய் எனையுடையாய் மார்பகத்தில்
வண்டோ லிடுங்கொன்றை மாலையாய் - தொண்டர்விழி 281

உண்ணற் கெளியாய் உருத்திரன்மா லாதியர்தங்
கண்ணிற் கனவினிலுங் காண்பரியாய் - மண்ணுலகில் 282

1. இது துளுநாட்டுத்தலம்.
2. பருப்பதம் - ஸ்ரீசைலம்.
3. சிங்குதல் - குறைதல். தொ. வே.

என்போன் றவர்க்கும் இருள்நீக்கி இன்புதவும்
பொன்போன்ற மேனிப் புராதனனே – மின்போன்ற 283

செஞ்சடையாய் மூவருக்கும் தேவருக்கு மியாவருக்கும்
அஞ்சடையா வண்ணம் அளிப்போனே – விஞ்சுலகில் 284

எல்லார்க்கு நல்லவனே எல்லாஞ்செய் வல்லவனே
எல்லார்க்கும் ஒன்றா யிருப்போனே – தொல்லூழி 285

ஆர்ந்த சராசரங்க ளெல்லா மடிநிழலில்
சேர்ந்தொடுங்க மாநடனஞ் செய்வோனே – சார்ந்துலகில் 286

எத்தேவர் மெய்த்தேவ ரென்றுரைக்கப் பட்டவர்கள்
அத்தேவர்க் கெல்லாமுன் னானோனே – சத்தான 287

வெண்மைமுதல் ஐவணமு மேவிஐந்து தேவர்களாய்த்
திண்மைபெறும் ஐந்தொழிலுஞ் செய்வோனே – மண்முதலாம் 288

ஐந்தா யிருசுடரா யான்மாவாய் நாதமுடன்
விந்தா கியெங்கும் விரிந்தோனே – அந்தணவெண் 289

நீறுடையா யாறுடைய நீண்முடியாய் நேடரிய
வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம் – மாறுபட 290

எள்ள லடியேன் எனக்குள் ஒளியாமல்
உள்ள படியே யுரைக்கின்றேன் – விள்ளுறுமியான் 291

வன்சொ லுடன்அன்றி வள்ளலுன தன்பர்தமக்
கின்சொ லுடன்பணிந்தொன் றீந்ததிலை – புன்சொலெனும் 292

பொய்யுரைக்க வென்றாற் புடையெழுவேன் அன்றியொரு
மெய்யுரைக்க வென்றும் விழைந்ததிலை – வையகத்தில் 293

பொல்லா விரதத்தைப் போற்றியுவந் துண்பதல்லால்
கொல்லா விரதத்தைக் கொண்டதிலை – அல்லாதார் 294

வன்புகழைக் கேட்க மனங்கொண்ட தல்லாமல்
நின்புகழைக் கேட்க நினைந்ததிலை – வன்புகொண்டே 295

இன்னடிக்கு நுண்ணிடையார்க் கேவல்புரிந் தேனலதுன்
பொன்னடிக்குத் தொண்டு புரிந்ததிலை – பன்னுகின்ற 296

செக்குற்ற எள்ளெனவே சிந்தைநசிந் தேனலது
முக்குற்றந் தன்னை முறித்ததிலை – துக்கமிகுந் 297

தாவில் வலங்கொண்டு சஞ்சரித்தேன் அல்லதுநின்
கோவில்வலங் கொள்ளக் குறித்ததிலை – பூவுலகில் 298

வன்னிதியோர் முன்கூப்பி வாழ்த்தினேன் அன்றியுன்றன்
சன்னிதியிற் கைகூப்பித் தாழ்ந்ததிலை – புன்னெறிசேர் 299

மிண்டரொடு கூடி வியந்ததல்லா லையாநின்
தொண்ட ரொடுங்கூடிச் சூழ்ந்ததிலை – கண்டவரைக்

கன்றுமுகங் கொண்டு கடுகடுத்துப் பார்ப்பதல்லால்
என்று முகமலர்ச்சி யேற்றதிலை – நன்றுபெறும் 301

நன்னெஞ்ச ருன்சீர் நவில வதுகேட்டுக்
கன்னெஞ்சைச் சற்றுங் கரைத்ததிலை – பின்னெஞ்சாப் 302

பண்ணீர்மை கொண்டதமிழ்ப் பாமாலை யாற்றுதித்துக்
கண்ணீர்கொண் டுன்பாற் கனிந்ததிலை – தண்ணீர்போல் 303

நெஞ்சம் உருகி நினைக்குமன்பர் போலெனைநீ
அஞ்சலென நின்றாள் அடுத்ததிலை – விஞ்சுலகர் 304

மெய்யடிய னென்றுரைக்க வித்தகநின் பொன்னடிக்குப்
பொய்யடிமை வேடங்கள் பூண்டதுண்டு – நையமிகு 305

மையல் வினைக்குவந்த மாதர் புணர்ச்சியெனும்
வெய்ய வினைக்குழியில் வீழ்ந்ததுண்டு – துய்யர்தமை 306

என்னொன்று மில்லா தியல்பாகப் பின்னொன்று
முன்னொன்று மாக மொழிந்ததுண்டு – மன்னுகின்ற 307

மானஞ் செயாது மனநொந் திரப்போர்க்குத்
தானஞ்செய் வாரைத் தடுத்ததுண்டு – ஈனமிலா 308

வாரமுரை யாது வழக்கி னிடையோர
வார முரைத்தே மலைந்ததுண்டு – ஈரமிலா 309

நெஞ்ச ருடன்கூடி நேசஞ்செய் தும்மடியே
தஞ்சமெனத் தாழாது தாழ்ந்ததுண்டு – எஞ்சலிலாத் 310

தாயனையா யுன்றனது சந்நிதிநேர் வந்துமொரு
நேயமுமில் லாதொதி [1]போல் நின்றதுண்டு – தீயவினை 311

மாளாக் கொடிய மனச்செல்வர் வாயிலிற்போய்க்
கேளாச் சிவநிந்தை கேட்டதுண்டு – மீளாத 312

பொல்லாப் புலையரைப்போற் புண்ணியரை வன்மதத்தால்
சொல்லா வசையெல்லாஞ் சொன்னதுண்டு – நல்லோரைப் 313

போற்றாது பொய்யுடம்பைப் போற்றிச் சிவபூசை
ஆற்றாது சோற்றுக் கலைந்ததுண்டு – தேற்றாமல் 314

ஈபத்தா என்றிங் கிரப்போர் தமைக்கண்டு
கோபத்தால் நாய்போற் குரைத்ததுண்டு – பாபத்தால் 315

சிந்தையொன்று வாக்கொன்று செய்கையொன்றாய்ப் போகவிட்டே
எந்தைநினை யேத்தா திருந்ததுண்டு – புந்தியிந்த 316

சொல்லைக்கல் லென்றுநல்லோர் சொன்னபுத்தி கேளாமல்
எல்லைக்கல் லொத்தே யிருந்ததுண்டு – தொல்லைவினை 317

1. உதி – ஒதியென மரீ இயது. தொ. வே.

[1]ஆழ்த்தா மயவுலகி லற்ப மகிழ்ச்சியினால்
வாழ்த்தாம லுன்னை மறந்ததுண்டு – தாழ்த்தாமற் 318

பூணா வெலும்பணியாய்ப் பூண்டோய்நின் பொன்வடிவங்
காணாது வீழ்நாள் கழித்ததுண்டு – மாணாத 319

காடுபோன் ஞாலக் கடுநடையி லேயிருகான்
மாடுபோல் நின்றுழைத்து வாழ்ந்ததுண்டு – நாடகன்ற 320

கள்ளிவா யோங்குபெருங் காமக் கடுங்காட்டிற்
கொள்ளிவாய்ப் பேய்போற் குதித்ததுண்டு – ஒள்ளியரால் 321

எள்ளுண்ட மாயா இயல்புறுபுன் கல்வியெலாங்
கள்ளுண்ட பித்தனைப்போற் கற்றதுண்டு – நள்ளுலகில் 322

சீராசை யெங்குஞ்சொற் சென்றிடவே வேண்டுமெனும்
பேராசைப் பேய்தான் பிடித்ததுண்டு – தீராவென் 323

சாதகமோ தீவினையின் சாதனையோ நானறியேன்
பாதகமென் றாலெனக்குப் பாற்சோறு – தீதகன்ற 324

தூய்மைநன்றா மென்கின்ற தொன்மையினார் வாய்க்கினிய
வாய்மையென்றால் என்னுடைய வாய்குமட்டுங் – காய்மைதரும் 325

கற்கு நிகராங் கடுஞ்சொலன்றி நன்மதுரச்
சொற்கும் எனக்கும்வெகு தூரங்காண் – பொற்புமிக 326

நண்ணியுனைப் போற்றுகின்ற நல்லோர்க் கினியசிவ
புண்ணியமென் றாலெனக்குப் போராட்டம் – அண்ணலுனை 327

நாளுரையா தேத்துகின்ற நல்லோர்மேல் இல்லாத
கோளுரையென் றாலெனக்குக் கொண்டாட்ட – நீளநினை 328

நேசிக்கு நல்ல நெறியாஞ் சிவாகமநூல்
வாசிக்க வென்றாலென் வாய்நோகுங் – காசிக்கு 329

நீடிக்கி லானாலு நேர்ந்தறிவ தல்லதுவீண்
வேடிக்கை யென்றால் விடுவதிலை – நாடயலில் 330

வீறா முனது விழாச்செயினும் அவ்விடந்தான்
ஆறா யிரங்காத மாங்கண்டாய் – மாறான 331

போகமென்றா லுள்ளமிகப் பூரிக்கும் அன்றிசிவ
யோகமென்றா லென்னுடைய உண்ணடுங்கும் – சோகமுடன் 332

துள்ளலொழிந் தென்னெஞ்சஞ் சோர்ந்தழியுங் காலத்திற்
கள்ளமென்றா லுள்ளே களித்தெழும்பும் – அள்ளனெறி 333

செல்லென்றால் அன்றிச் சிவசிவா வென்றொருகால்
சொல்லென்றால் என்றனக்குத் துக்கம்வரும் – நல்லநெறி 334

1. ஆழ்த்து ஆமய உலகில் என்பது – அழுத்துகின்ற நோயுருவாகிய உலகில்.

வாம்பலன்கொண் டோர்கள் மறந்தும் பெறாக்கொடிய
சோம்பலென்ப தென்னுடைய சொந்தங்காண் - ஏம்பலுடன் 335

எற்றோ இரக்கமென்ப தென்றனைக்கண் டஞ்சியெனை
உற்றோ ரையுமுடன்விட் டோடுங்காண் - சற்றேனும் 336

ஆக்கமே சேரா தறத்துரத்து கின்றவெறுந்
தூக்கமே யென்றனக்குச் சோபனங்காண் - ஊக்கமிகும் 337

ஏறுடையாய் நீறணியா ஈனர்மனை யாயினும்வெண்
சோறுகிடைத் தாலதுவே சொர்க்கங்காண் - வீறுகின்ற 338

வாழ்வுரைக்கு நல்ல மனத்தர்தமை யெஞ்ஞான்றுந்
தாழ்வுரைத்தல் என்னுடைய சாதகங்காண் - வேள்விசெயுந் 339

தொண்டர் தமைத்துதியாத் துட்டரைப்போ லெப்பொழுதுஞ்
சண்டையென்ப தென்றனக்குத் தாய்தந்தை - கொண்டஎழு 340

தாதாட ஓங்கித் தலையாட வஞ்சரொடு
வாதாட என்றாலென் வாய்துடிக்குங் - கோதாடச் 341

சிந்தை திரிந்துழலுந் தீயரைப்போல் நற்றரும
நிந்தையென்ப தென்பழைய நேசங்காண் - முந்தநினை 342

எண்ணென்றால் அன்றி யிடர்செய் திடுங்கொடிய
பெண்ணென்றால் தூக்கம் பிடியாது - பெண்களுடன் 343

புல்லென்றால் தேகம் புளகிக்கும் அன்றிவிட்டு
நில்லென்றால் என்கண்ணி னீரும்பும் - புல்லரென்ற 344

பேர்க்கும்விருப் பெய்தாத பெண்பேய்கள் வெய்யசிறு
நீர்க்குழியே யான்குளிக்கு நீர்ப்பொய்கை - சீர்க்கரையின் 345

ஏறாப்பெண் மாத ரிடைக்கு ளளிந்தென்றும்
ஆறாப்புண் ணுக்கே யடிமைநான் - தேறாத 346

வெஞ்சலஞ்செய் மாயா விகாரத்தி னால்வரும்வீண்
சஞ்சலமெல்லா மெனது சம்பந்தம் - அஞ்செழுத்தை 347

நேர்ந்தார்க் கருள்புரியு நின்னடியர் தாமேயுஞ்
சார்ந்தா லதுபெரிய சங்கட்டம் - ஆர்ந்திடுமான் 348

காந்தும் விழிப்புலியைக் கண்டதுபோல் நல்லகுண
சாந்த மெனைக் கண்டால் தலைசாய்க்கும் - ஆந்தகையோர் 349

சேர மனத்திற் செறிவித் திடும்புருட
தீரமெனைக் கண்டாற் சிரிக்குங்காண் - கோரமதைக் 350

காணி லுலகிற் கருத்துடையோர் கொள்ளுகின்ற
நாண மெனைக்கண்டு நாணுங்காண் - ஏணுலகில் 351

ஞானங் கொளாவெனது நாமமுரைத் தாலுமபி
மானம் பயங்கொண்டு மாய்ந்துவிடும் – ஆனவுன்றன் 352

கேண்மைக் குலத்தொண்டர் கீர்த்தி பெறக்கொண்ட
ஆண்மைக்கு நானென்றா லாகாது – வாண்மைபெறும் 353

ஐயநின்றாட் பூசிக்கு மன்பருள்ளத் தன்பிற்கும்
பொய்ய னெனக்கும் பொருத்தமிலை – வையகத்தோர் 354

இல்லெனினுஞ் சும்மாநீ யீகின்றே னென்றொருசொல்
சொல்லெனினுஞ் சொல்லத் துணிவுகொளேன் – நல்லையெமக் 355

ஈயென்பா ரன்றியன்னை யென்பயத்தா னின்சோற்றில்
[1]ஈயென்ப தற்கு மிசையாள்காண் – ஈயென்பார்க் 356

கெண்ணுஞ் சிலர்மண் ணிடுவா ரெனக்கந்த
மண்ணுங் கொடுக்கமனம் வாராது – அண்ணுறுமென் 357

இல்லை யடைந்தே யிரப்பவருக் கெப்போதும்
இல்லையென்ப தென்வாய்க் கியல்புகாண் – தொல்லுலகை 358

ஆண்டாலு மன்றி அயலார்புன் கீரைமணிப்
பூண்டாலு மென்கண் பொறுக்காது – நீண்டஎழு 359

தீப முறுவோர் திசையோர்மற் றியாவர்க்குங்
கோப மதுநான் கொடுக்கிலுண்டு – ஆபத்தில் 360

வீசங் கொடுத்தெட்டு வீச மெனப்பிறரை
மோசஞ் செயநான் முதற்பாதம் – பாசமுளோர் 361

கைக்குடைய வேயெழுதிக் கட்டிவைத்த இவ்வுலகப்
பொய்க்கதையே யான்படிக்கும் புத்தகங்கள் – மெய்ப்படுநின் 362

மந்திரத்தை உச்சரியா வாயுடையேன் என்போலத்
தந்திரத்தில் கைதேர்ந் தவரில்லை – எந்தைஇனி 363

ஏதென் றுரைப்பே னிருங்கடல்சூழ் வையகத்தில்
சூதென்ப தெல்லாமென் சுற்றங்காண் – ஓதுகின்ற 364

நஞ்சமெலாங் கூட்டி நவின்றிடினும் ஒவ்வாத
வஞ்சமெலா மென்கை வசங்கண்டாய் – அஞ்சவரும் 365

வீணவமாம் வஞ்ச வினைக்குமுத லாகிநின்ற
ஆணவமே என்காணி ஆட்சியதாம் – மாணிறைந்த 366

நல்லறிவே என்னைநெடு நாட்பகைத்த தன்றிமற்றைப்
புல்லறிவே என்னுட் பொருள்கண்டாய் – சொல்லவொணா 367

வேடருக்குங் கிட்டாத வெங்குணத்தா லிங்குழலும்
மூடருக்குள் யானே முதல்வன்காண் – வீடடுத்த 368

1. சோற்றில் மொய்க்கும் ஈயைக்கண்டு தாய் தன் மகன் லோபகுணத்தால் ஈ என்பதற்குக் கொடு என்று பொருள் கொண்டு பயந்து விடுவானோவென்று கருதி அங்ஙனம் கூறாள்.

மேதையர்கள் வேண்டா விலங்காய்த் திரிகின்ற
பேதையென்ப தென்னுரிமைப் பேர்கண்டாய் - பேதமுற 369

ஓதுவதென் பற்பலவாய் உற்றதவத் தோர்நீத்த
தீதுகளெல் லாமெனது செல்வங்காண் - ஆதலினால் 370

பேயினையொத் திவ்வுலகில் பித்தாகி நின்றவிந்த
நாயினைநீ ஆண்டிடுதல் நன்கன்றே - ஆயினுமுன் 371

மண்ணா ருயிர்களுக்கும் வானவர்க்குந் தானிரங்கி
உண்ணாக் கொடுவிடமும் உண்டனையே - எண்ணாமல் 372

வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யஅரக் கன்தனக்கும்
வாய்த்தவர மெல்லாம் வழங்கினையே - சாய்த்தமன 373

வீம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும்
பாம்பையெல் லாந்தோளிற் பரித்தனையே - நாம்பெரியர் 374

எஞ்சேமென் றாணவத்தா லேற்ற இருவரையும்
அஞ்சேலென் றாட்கொண் டருளினையே - துஞ்சுபன்றித் 375

தோயாக் குருளைகளின் துன்பம் பொறாதன்று
தாயாய் முலைப்பாலுந் தந்தனையே - வாயிசைக்குப் 376

பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன் பொருட்டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே - ஆண்டொருநாள் 377

வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேல் மண்ணுஞ் சுமந்தனையே - ஆய்துயர 378

மாவகஞ்சேர் மாணிக்க வாசகருக் காய்க்குதிரைச்
சேவகன்போல் வீதிதனில் சென்றனையே -மாவிசயன் 379

வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல் லால்எறிந்த
கல்லடிக்கும் உள்ளங் களித்தனையே - மல்லலுறும் 380

வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச்
செல்வத் துரைமகனாய்ச் செய்தனையே - சொல்லகலின் 381

நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே - கோளகல 382

வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னைஉயர்
கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே - ஏச்சறுநல் 383

ஆறடுத்த [1]வாகீசர்க் காம்பசியைக் கண்டுகட்டுச்
சோறெடுத்துப் பின்னே சுமந்தனையே - கூறுகின்ற 384

தொன்மைபெருஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை
நன்மனைக்குத் தூது நடந்தனையே - நன்மைபெற 385

1. ஆறு - வழி. தொ. வே.

இற்றென்ற இற்றென்னா எத்தனையோ பேர்கள்செய்த
குற்றங் குணமாகக் கொண்டனையே – பற்றுலகில் 386

அன்புடைய தாயர்களோ ராயிரம்பே ரானாலும்
அன்புடையாய் நின்னைப்போ லாவாரோ – இன்பமுடன் 387

ஈண்டவரும் தந்தையர்கள் எண்ணிலரே ஆயினுமென்
ஆண்டவனே நின்னைப்போ லாவாரோ – பூண்டகைகொள் 388

ஏணுடைய நின்னையன்றி எந்தை பிரானேஉன்
ஆணைஎனக் குற்றதுணை யாருமில்லை – நாணமுளன் 389

ஆனேன் பிழைக ளனைத்தினையு மையாநீ
தானே பொறுக்கத் தகுங்கண்டாய் – மேல்நோற்ற 390

மாற்றனுக்கு மெட்டா மலர்க்கழலோய் நீயென்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க – பாற்றவள 391

நந்தக் கடற்புவியில் நானின்னும் வன்பிறவிப்
பந்தக் கடலழுந்தப் பண்ணற்க – முந்தைநெறி 392

நின்றேயுன் பொற்றாள் நினையாதார் பாழ்மனையில்
சென்றே உடலோம்பச் செய்யற்க – நன்றேநின் 393

றோங்கு நெறியோர் உளத்தமர்ந்தோய் என்றன்னைத்
தீங்கு நெறியில் செலுத்தற்க – வீங்கடங்கி 394

வாழி யெனத்தான் வழுத்தினுமென் சொற்கடங்கா
ஏழை மனத்தா லிளைக்கின்றேன் – வாழுமரக் 395

கோடேறும் பொல்லாக் குரங்கெனவே பொய்யுலகக்
காடேறு நெஞ்சாற் கலங்குகின்றேன் – பாடேறும் 396

உள்ளறியா மாயையெனு முட்பகையார் காமமெனுங்
கள்ளறியா துண்டு கவல்கின்றேன் – தெள்ளுறுமென் 397

கண்ணனையாய் நின்தாள் கமலங் களைவழுத்தா
மண்ணனையார் பாற்போய் மயங்குகின்றேன் – திண்ணமிலாக் 398

காதரவாந் துன்பக் கவலைக் கடல்வீழ்ந்தே
ஆதரவொன் றின்றி அலைகின்றேன் – ஓதுமறை 399

ஆத்த ரெனுமுன் அடியார் தமைக்கண்டு
நாத்திகஞ்சொல் வார்க்கு நடுங்குகின்றேன் – பாத்துண்டே 400

உய்வ தறியா உளத்தினே னுய்யும்வகை
செய்வ தறியேன் திகைக்கின்றேன் – சைவநெறி 401

உண்ணிரம்பு நின்கருணை உண்டோ இலையோஎன்
றெண்ணியெண்ணி உள்ளம் இளைக்கின்றேன் – மண்ணினிடைக் 402

கொன்செய்கை கொண்டகொடுங் கூற்றன் குறுகிலதற்
கென்செய்வோ மென்றெண்ணி எய்க்கின்றேன் - முன்செய்வினை 403

ஆமறையா நோயா லகமெலிவுற் றையோநான்
தாமரையி னீர்போல் தயங்குகின்றேன் - தாமமுடி 404

வள்ளல் அருள்கொடுக்க வந்திலனே இன்னுமென
உள்ளமது நீராய் உருகுகின்றேன் - எள்ளலுறு 405

மாலைபாய்ந் தின்னுமென்ன வந்திடுமோ என்றுநெஞ்சம்
ஆலைபாய்ந் துள்ளம் அழிகின்றேன் - ஞாலமிசைக் 406

கோட்பார வாழ்க்கைக் கொடுஞ்சிறையி னின்றென்னை
மீட்பா ரிலாது விழிக்கின்றேன் - மீட்பாகும் 407

ஆற்றி லொருகாலும் அடங்காச் சமுசாரச்
சேற்றிலொரு காலும்வைத்துத் தேய்கின்றேன் - தோற்றுமயற் 408

பாகமுறு வாழ்க்கையெனும் பாலைவனத் துன்னருள்நீர்த்
தாகமது கொண்டே தவிக்கின்றேன் - மோகமதில் 409

போய்ப்படுமோர் பஞ்சப் பொறிகளால் வெம்பாம்பின்
வாய்ப்படுமோர் தேரையைப்போல் வாடுகின்றேன் - மாய்ப்பவரு 410

மீன்போலு மாதர் விழியால் வலைப்பட்ட
மான்போலுஞ் சோர்ந்து மடங்குகின்றேன் - கான்போல 411

வீற்று முலக விகாரப் பிரளயத்தில்
தோற்றுஞ் சுழியுட் சுழல்கின்றேன் - ஆற்றவுநான் 412

இப்பாரில் உன்மேலன் பில்லெனினும் அன்பனென
ஒப்பாரி யேனும் உடையேன்காண் - தப்பாய்ந்த 413

மட்டுவிடேன் உன்தாள் மறக்கினும்வெண் ணீற்றுநெறி
விட்டுவிடேன் என்றனைக்கை விட்டுவிடேல் - துட்டனென 414

மாலுந் திசைமுகனும் வானவரும் வந்துதடுத்
தாலுஞ் சிறியேனைத் தள்ளிவிடேல் - சாலுலக 415

வாதனைகொண் டோனென்று மற்றெவரா னாலும்வந்து
போதனைசெய் தாலுமெனைப் போக்கிவிடேல் - நீதயவு 416

சூழ்ந்திடுக என்னையுநின் தொண்டருடன் சேர்த்தருள்க
வாழ்ந்திடுக நின்தாள் மலர். 417

திருச்சிற்றம்பலம்

3. நெஞ்சறிவுறுத்தல்

காப்பு
குறள் வெண்பா
அருட்பெருஞ்ஜோதி

5 சீர்சான்ற முக்கட் சிவகளிற்றைச் சேர்ந்திடலாம்
பேர்சான்ற இன்பம் பெரிது. 1

6 ஆறு முகத்தான் அருளடையின் ஆம்எல்லாப்
பேறு மிகத்தான் பெரிது. 2

கலிவெண்பா
திருச்சிற்றம்பலம்

7 பொன்னார் மலைபோல் பொலிவுற் றசையாமல்
எந்நாளும் வாழியநீ என்னெஞ்சே – பின்னான 1

இப்பிறப்பி னோடிங் கெழுபிறப்பும் அன்றியெனை
எப்பிறப்பும் விட்டகலா என்னெஞ்சே – செப்பமுடன் 2

செவ்வொருசார் நின்று சிறியேன் கிளக்கின்ற
இவ்வொருசொல் கேட்டிடுக என்னெஞ்சே – எவ்வெவ் 3

1. பதி சொரூபம்

உலகும் பரவும் ஒருமுதலாய் எங்கும்
இலகும் சிவமாய் இறையாய் – விலகும் 4

உருவாய் உருவில் உருவாய் உருவுள்
அருவாய் அருவில் அருவாய் – உருஅருவாய் 5

நித்தியமாய் நிர்க்குணமாய் நிற்சலமாய் நின்மலமாய்ச்
சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய் – முத்தியருள் 6

ஒன்றாய்ப் பலவாய் உயிராய் உயிர்க்குயிராய்
நன்றாய் நவமாய் நடுநிலையாய் – நின்றோங்கும் 7

வேதமாய் வேதாந்த வித்தாய் விளங்குபர
நாதமாய் நாதாந்த நாயகமாய் – ஓதும் 8

செறிவாய்த் திரமாய்ச் சிதாகாச மாய்ச்சொல்
அறிவாய் அறிவுள் அறிவாய் – நெறிமேவு 9

காலமாய்க் காலம் கடந்த கருத்தாய்நற்
சீலமாய்ச் சிற்பரமாய்ச் சின்மயமாய் – ஞாலம் 10

பொருந்தாப் பொருளாய்ப் பொருந்தும் பொருளாய்ப்
பெருந்தா ரகம்சூழ்ந்த பேறாய்த் – திருந்தாத 11

போக்கும் வரத்துமிலாப் பூரணமாய்ப் புண்ணியர்கள்
நோக்கும் திறத்தெழுந்த நுண்ணுணர்வாய் - நீக்கமிலா 12

ஆதியாய் ஆதிநடு அந்தமாய் ஆங்ககன்ற
சோதியாய்ச் சோதியாச் சொற்பயனாய் - நீதியாய் 13

ஆங்கார நீக்கும் அகார உகாரமதாய்
ஓங்கார மாய்அவற்றின் உட்பொருளாய்ப் - பாங்கான 14

சித்தமாய்ச் சித்தாந்த தேசாய்த் திகம்பரமாய்ச்
சத்தமாய்ச் சுத்த சதாநிலையாய் - வித்தமாய் 15

அண்டமாய் அண்டத் தணுவாய் அருளகண்டா
கண்டமாய் ஆனந்தா காரமதாய் - அண்டத்தின் 16

அப்பாலாய் இப்பாலாய் அண்மையாய்ச் சேய்மையதாய்
எப்பாலாய் எப்பாலும் இல்லதுமாய்ச் - செப்பாலும் 17

நெஞ்சாலும் காயநிலையாலும் அந்நிலைக்குள்
அஞ்சாலுங் காண்டற் கரும்பதமாய் - எஞ்சாப் 18

பரமாய்ப் பகாப்பொருளாய்ப் பாலாய்ச் சுவையின்
தரமாய்ப் பரப்பிரமம் தானாய் - வரமாய 19

ஒன்பான் வடிவாய் ஒளியெண் குணக்கடலாய்
அன்பாய் அகநிலையாய் அற்புதமாய் - இன்பாய் 20

அகமாய்ப் புறமாய் அகம்புறமாய் நீங்கும்
சகமாய்ச் சகமாயை தானாய் - சகமாயை 21

இல்லாதாய் என்றும் இருப்பதாய் யாதொன்றும்
கொல்லாதார்க் கின்பம் கொடுப்பதாய் - எல்லார்க்கும் 22

நண்ணுவதாய் நண்ணாதாய் நல்வினையாய் அல்வினையாய்
எண்ணுவதாய் எண்ணின் இயலாதாய் - எண்ணுகின்ற 23

வானாய் நிலனாய் வளியாய் அனலாய்நீர்
தானாய் வழிபடுநான் தான்தானாய் - வானாதி 24

ஒன்றிடத்தும் ஒன்றாதாய் ஒன்றுவதாய் ஆனந்தம்
மன்றிடத்தில் என்றும் வதிவதாய் - ஒன்றியதோர் 25

ஐந்நிறமாய் அந்நிறத்தின் ஆமொளியாய் அவ்வொளிக்குள்
எந்நிறமும் வேண்டா வியனிறமாய் - முந்நிறத்தில் 26

பூப்பதுவாய்க் காப்பதுவாய்ப் போக்குவதாய்த் தேக்குவதாய்
நீப்பதுவாய்த் தன்னுள் நிறுத்துவதாய்ப் - பூப்பதின்றி 27

வாளா திருப்பதுவாய் வாதனா தீதமதாய்
நீளாது நீண்ட நிலையினதாய் – மீளாப் 28

பெரிதாய்ச் சிறிதாய்ப் பெரிதும் சிறிதும்
அரிதாய் அரிதில் அரிதாய்த் – துரிய 29

வெளியாய்ப் பரவெளியாய் மேவுபர விந்தின்
ஒளியாய்ச் சிவானந்த ஊற்றாய்த் – தெளியாதி 30

கற்பமாய்க் காணுஞ்சங் கற்ப விகற்பமாய்
நிற்பதா கார நிருவிகற்பாய்ப் – பொற்புடைய 31

முச்சுடராய் முச்சுடர்க்கும் முன்னொளியாய்ப் பின்னொளியாய்
எச்சுடரும் போதா இயற்சுடராய் – அச்சில் 32

நிறைவாய்க் குறைவாய் நிறைகுறை வில்லாதாய்
மறைவாய் வெளியாய் மனுவாய் – மறையாத 33

சச்சிதா னந்தமதாய்த் தன்னிகரொன் றில்லாதாய்
விச்சையால் எல்லாம் விரிப்பதுவாய் – மெச்சுகின்ற 34

யோகமாய் யோகியர் யோகத் தெழுந்தசிவ
போகமாய்ப் போகியாய்ப் போகமருள் – ஏகமாய்க் 35

கேவலமாய்ச் சுத்த சகலமாய்க் கீழ்ச்சகல
கேவலங்கள் சற்றும் கிடையாதாய் – மாவலத்தில் 36

காட்சியாய்க் காண்பானாய்க் காணப் படுபொருளாய்ச்
சூட்சியாய்ச் சூட்சியால் தோய்வரிதாய் – மாட்சிபெறச் 37

செய்பவனாய்ச் செய்தொழிலாய்ச் செய்பொருளாய்ச் செய்தொழிலால்
உய்பவனாய் உய்விக்கும் உத்தமனாய் – மொய்கொள் 38

அதுவாய் அவளாய் அவனாய் அவையும்
கதுவாது நின்ற கணிப்பாய்க் – கதுவாமல் 39

ஐயம் திரிபோ டறியாமை விட்டகற்றிப்
பொய்யென்ப தொன்றும் பொருந்தாராய்ச் – செய்யென்ற 40

ஓர்வினையில் இன்பமுமற் றோர்வினையில் துன்பமுமாம்
சார்வினைவிட் டோங்கும் தகையினராய்ப் – பார்வினையில் 41

ஓர்பால் வெறுப்புமற்றை ஓர்பால் விருப்புமுறும்
சார்பால் மயங்காத் தகையினராய்ச் – சார்பாய 42

ஓரிடத்தில் தண்மையுமற் றோரிடத்தில் வெஞ்சினமும்
பாரிடத்தில் கொள்ளாப் பரிசினராய் – நீரிடத்தில் 43

தண்மைநிக ராதென்றும் சாந்தம் பழுத்துயர்ந்த
ஒண்மையுடன் ஒன்றை உணர்ந்தவராய் – வெண்மையிலா 44

ஒன்றும் அறிவின் உதயாதி ஈறளவும்
என்றும் இரண்டென்ப தில்லவராய் – மன்றவொளிர் 45

அம்மூன்றி னுள்ளே அடுக்கிவரும் ஒன்றகன்ற
மும்மூன்றின் மூன்றும் முனிந்தவராய்த் – தம்மூன்றி 46

வீடாது நின்றும் விரிந்தும் விகற்பநடை
நாடாது நான்கும் நசித்தவராய் – ஊடாக 47

எஞ்சாமல் அஞ்சின் இடமாய் நடமாடும்
அஞ்சாதி அஞ்சும் அறுத்தவராய் – எஞ்சாமல் 48

ஈண்டாண் டருளும் இறையோர் தமையாறில்
ஆண்டாண்டு கண்டா றகன்றவராய் – ஈண்டாது 49

வாழியுற்ற வானோரும் வந்து தமக்கிரண்டோ
டேழியற்ற ஏழும் இகந்தவராய் – ஊழியற்றக் 50

கட்டிநின்றுட் சோதியொன்று காணத் தொடங்குகின்றோர்
எட்டுகின்ற எட்டின்மேல் எய்தினராய்க் – கட்டுகின்ற 51

தேன்தோய் கருணைச் சிவங்கலந்து தேக்குகின்ற
சான்றோர்தம் உள்ளம் தணவாதாய் – மான்றமலத்[1] 52

தாக்கொழிந்து தத்துவத்தின் சார்பாம் – தனுவொழிந்து
வாக்கொழிந்து மாணா மனமொழிந்து – ஏக்கமுற 53

வாய்க்கும் சுகமொழிந்து மண்ணொழிந்து விண்ணொழிந்து
சாய்க்கும் இராப்பகலும் தானொழிந்து – நீக்கொழிந்து 54

நானுமொழி யாதொழிந்து ஞானமொழி யாதொழிந்து
தானும் ஒழியாமற் றானொழிந்து – மோனநிலை 55

நிற்கும் பிரம நிரதிசயா னந்தமதாய்
நிற்கும் பரம நிருத்தனெவன் – தற்பரமாய் 56

நின்றான் எவனன்பர் நேயமனத் தேவிரைந்து
சென்றான் எவன்சர்வ தீர்த்தனெவன் – வன்தீமை 57

இல்லான் எவன்யார்க்கும் ஈசன் எவன்யாவும்
வல்லான் எவனந்தி வண்ணனெவன் – கல்லாலில் 58

சுட்டகன்ற ஞான சுகாதீதம் காட்டிமுற்றும்
விட்டகன்ற யோக வினோதனெவன் – மட்டகன்ற 59

2. சித்தன்

அண்டங்கள் எல்லாம் அணுவில் அடைத்தருளித்
திண்டங்கு மாறிருத்தும் சித்தனெவன் – பண்டங்கு 60

வீயாச் சிறுபெண் விளையாட்டுள் அண்டமெலாம்
தேயாது கூட்டுவிக்கும் சித்தனெவன் – யாயாதும் 61

1. மான்றமலத்தாக்கு என்பது மயக்குதலைச் செய்கின்ற மலத்தினெதிரீடு எனக்கொள்க தொ. வே.

வேண்டாமை வேண்டுவது மேவாத சித்தர்தமைத்
தீண்டாது தீண்டுகின்ற சித்தனெவன் – ஈண்டோது 62

பற்றுருவாய்ப் பற்றாப் பரவணுவின் உள்விளங்கும்
சிற்றுருவாய் உள்ளொளிக்கும் சித்தனெவன் – மற்றுருவின் 63

வையாது வைத்துலகை மாவிந் திரசாலம்
செய்யாது செய்விக்கும் சித்தனெவன் – நையாமல் 64

அப்பிடைவைப் பாமுலகில் ஆருயிரை மாயையெனும்
செப்பிடைவைத் தாட்டுகின்ற சித்தனெவன் – ஒப்புறவே 65

நில்லாத காற்றை நிலையாக் கடத்தடைத்துச்
செல்லாது வைக்கின்ற சித்தனெவன் – பொல்லாத 66

வெம்பாம்பை மேலணிந்தோர் வெம்புற்றின் உள்ளிருந்தே
செம்பாம்பை ஆட்டுகின்ற சித்தனெவன் – தம்பாங்கர் 67

ஒண்கயிற்றான் ஒன்றின்றி உண்ணின் றுயிர்களையூழ்த்
திண்கயிற்றான் ஆட்டுகின்ற சித்தனெவன் – வண்கையுடைத் 68

தானசைந்தால் மற்றைச் சகமசையும் என்றுமறை
தேனசையச் சொல்கின்ற சித்தனெவன் – ஊனமின்றிப் 69

பேர்த்துயிர்க ளெல்லாம்ஓர் பெண்பிள்ளை யின்வசமாய்ச்
சேர்த்து வருவிக்கும் சித்தனெவன் – போர்த்துமிக 70

அல்விரவுங் காலை அகிலமெலாம் தன்பதத்தோர்
சில்விரலில் சேர்க்கின்ற சித்தனெவன் – பல்வகையாய்க் 71

கைகலந்த வண்மைக் கருப்பா சயப்பையுள்
செய்கருவுக் கூட்டுவிக்கும் சித்தனெவன் – உய்கருவை 72

மெய்வைத்த வேர்வையினும் வீழ்நிலத்தும் அண்டத்தும்
செய்வித்தங் கூட்டுவிக்கும் சித்தனெவன் – உய்விக்கும் 73

வித்தொன்றும் இன்றி விளைவித் தருளளிக்கும்
சித்தென்றும் வல்லவொரு சித்தனெவன் – சத்துடனே 74

உற்பத்தி யாயுலகில் ஒன்பதுவாய்ப் பாவைகள்செய்
சிற்பத்தொழில் வல்ல சித்தனெவன் – பற்பலவாம் 75

காரா ழிகளைக் கரையின்றி எல்லையிலாச்
சேரூழி நிற்கவைத்த சித்தனெவன் – பேராத 76

நீர்மேல் நெருப்பை நிலையுறவைத் தெவ்வுலகும்
சீர்மே வுறச்செய்யும் சித்தனெவன் – பாராதி 77

ஐந்திலைந்து நான்கொருமூன் றாமிரண்டொன் றாய்முறையே
சிந்தையுற நின்றருளும் சித்தனெவன் – பந்தமுற 78

ஆண்பெண்ணாயப் பெண்ணாணாய் அண்மை தனைவானின்
சேண்பண்ண வல்லவொரு சித்தனெவன் - மாண்பண்ணாப் 79

பேடாணாய்ப் பெண்ணாயப் பெண்ணாண் பெரும்பேடாய்ச்
சேடாகச் செய்யவல்ல சித்தனெவன் - சேடாய 80

வெண்மை கிழமாய் விருத்தமந்த வெண்மையதாய்த்
திண்மை பெறச்செய்யும் சித்தனெவன் - ஒண்மையிலா 81

ஓட்டினைச்செம் பொன்னா யுயர்செம்பொன் ஓடாகச்
சேட்டையறச் செய்கின்ற சித்தனெவன் - காட்டிலுறு 82

காஞ்சிரத்தைக் கற்பகமாய்க் கற்பகத்தைக் காஞ்சிரமாய்த்
தேஞ்சிவணச் செய்கின்ற சித்தனெவன் - வாஞ்சையுற 83

நாரணன்சேய் நான்முகனாய் நான்முகன்சேய் நாரணனாய்ச்
சீரணவச் செய்யவல்ல சித்தனெவன் - பேரணவக் 84

கொம்மை பெறுங்கோடா கோடியண்டம் எல்லாமோர்
செம்மயிர்க்கால் உட்புகுத்தும் சித்தனெவன் - செம்மையிலா 85

வெம்புலியை வெண்பால் விளைபசுவாய் அப்பசுவைச்
செம்புலியாய்ச் செய்யவல்ல சித்தனெவன் - அம்புலியை 86

அங்கதிரொண் செங்கதிராய் அம்புலியாய்ப் பம்புகின்ற
செங்கதிரைச் செய்யவல்ல சித்தனெவன் - துங்கமுறா 87

ஓரணுவோர் மாமலையாய் ஓர்மா மலையதுவோர்
சீரணுவாய்ச் செய்யவல்ல சித்தனெவன் - வீரமுடன் 88

முன்னகையா நின்றதொரு முப்புரத்தை அன்றொருகால்
சின்னகையால் தீமடுத்த சித்தனெவன் - முன்னயன்மால் 89

மற்றிருந்த வானவரும் வாய்ந்தசைக்கா வண்ணமொரு
சிற்றுரும்பை[1] நாட்டிநின்ற சித்தனெவன் - மற்றவர்போல் 90

அல்லா அயனும் அரியும் உருத்திரனும்
செல்லா நெறிநின்ற சித்தனெவன் - ஒல்லாத 91

கல்லிற் சுவையாய்க் கனியிற் சுவையிலதாய்ச்
செல்லப் பணிக்கவல்ல சித்தனெவன் - அல்லலறப் 92

பார்க்கின்ற யாவர்கட்கும் பாவனா தீதனெனச்
சீர்க்கின்ற மெய்ஞ்ஞானச் சித்தனெவன் - மார்க்கங்கள் 93

ஒன்றென்ற மேலவரை ஒன்றென் றுரைத்தவர்பால்
சென்றொன்றி நிற்கின்ற சித்தனெவன் - அன்றொருநாள் 94

கல்லானை தின்னக் கரும்பளித்துப் பாண்டியன்வீண்
செல்லா தளித்தமகா சித்தனெவன் - சொல்லாத 95

1. சிற்றுரும்பு - சில்துரும்பு - அற்பமாகிய துரும்பு. தொ. வே.

ஒன்றே இரண்டேமேல் ஒன்றிரண்டே என்பவற்றுள்
சென்றே நடுநின்ற சித்தனெவன் – சென்றேறும் 96

அத்திரத்தை மென்மலராய் அம்மலரை அத்திரமாய்ச்
சித்திரத்தைப் பேசுவிக்கும் சித்தனெவன் – எத்தலத்தும் 97

சங்கமதே[1] தாபரமாய்த் தாபரமே சங்கமதாய்ச்
செங்கையிடா தாற்றவல்ல சித்தனெவன் – தங்குகின்ற 98

சத்தெல்லாம் ஆகிச் சயம்புவாய் ஆனந்தச்
சித்தெல்லாம் வல்லசிவ சித்தனெவன் – தத்தெல்லாம் 99

3. கள்வன்

நீட்டாது நெஞ்சம் நிலைத்தவர்க்கும் தன்னுண்மை
காட்டாது காட்டிநிற்கும் கள்வனெவன் – பாட்டோடு 100

வண்டாலுங் கொன்றை மலரோய் எனமறைகள்
கண்டாலும் காணாத கள்வனெவன் – தொண்டாக 101

அள்ளம் செறியார்க்கே அன்றி அறிவார்க்குக்
கள்ளம் செறியாத கள்வனெவன் – எள்ளலறக் 102

கொண்டவெலாந் தன்பால் கொடுக்குமவர் தம்மிடத்தில்
கண்டவெலாம் கொள்ளைகொளுங் கள்வனெவன் – கொண்டுளத்தில் 103

தன்னையொளிக் கின்றோர்கள் தம்முளொளித் துள்ளவெலாம்
கன்னமிடக் கைவந்த கள்வனெவன் – மண்ணுலகைச் 104

சற்பனைசெய் கின்றதிரோ தானமெனும் சத்தியினால்
கற்பனைசெய் தேமயக்கும் கள்வனெவன் – முற்படுமித் 105

தொண்டுலகில் உள்ள உயிர் தோறுமொளித் தாற்றலெலாம்
கண்டுலவு கின்றதொரு கள்வனெவன் – விண்டகலா 106

மண்மயக்கும் பொன்மயக்கும் மாதர் மயக்குமெனும்
கண்மயக்கும் காட்டிநிற்கும் கள்வனெவன் – உண்மயக்கு 107

மாசு பறிக்கும் மதியுடையோர் தம்முடைய
காசு பறிக்கின்ற கள்வனெவன் – ஆசகன்ற 108

பெண்ணால் எவையும் பிறப்பித்து மற்றைநுதற்
கண்ணால் அழிக்கின்ற கள்வனெவன் – எண்ணாது 109

4. சதுரன்

நானென்று நிற்கின் நடுவேயந் நானாணத்
தானென்று நிற்கும் சதுரனெவன் – மானென்ற 110

மாயைதனைக் காட்டி மறைப்பித்தம் மாயையிற்றன்
சாயைதனைக் காட்டும் சதுரனெவன் – நேயமுடன் 111

1. சங்கமம் என்பது – சங்கம் என விகாரமாயிற்று. தொ. வே.

நான்மறையும் நான்முகனும் நாரணனும் நாடுதொறும்
தான்மறையும் மேன்மைச் சதுரனெவன் - வான்மறையாம் 112

முன்னை மறைக்கும் முடிப்பொருளென் றாய்பவர்க்கும்
தன்னை மறைக்கும் சதுரனெவன் - உன்னுகின்றோர் 113

சித்தத்திற் சுத்த சிதாகாசம் என்றொருசிற்
சத்தத்திற் காட்டும் சதுரனெவன் - முத்தரென 114

5. தலைமைத் தேவன்

யாவர் இருந்தார் அவர்காண வீற்றிருக்கும்
தேவர் புகழ்தலைமைத் தேவனெவன் - யாவர்களும் 115

இவ்வணத்தன் இவ்விடத்தன் இவ்வியலன் என்றறியாச்
செவ்வணத்தன் ஆம்தலைமைத் தேவனெவன் - மெய்வணத்தோர் 116

தாம்வாழ அண்ட சராசரங்கள் தாம்வாழ
நாம்வாழத் தன்னுரையா நான்மறைகள் - தாம்வாழத் 117

சாருருவின் நல்லருளே சத்தியாய் மெய்யறிவின்
சீருருவே ஓருருவாம் தேவனெவன் - ஈருருவும் 118

ஒன்றென் றுணர உணர்த்தி அடியருளம்
சென்றங் கமர்ந்தருளும் தேவனெவன் - என்றென்றும் 119

தற்சகசம் என்றே சமயம் சமரசமாம்
சிற்சபையில் வாழ்கின்ற தேவனெவன் - பிற்படுமோர் 120

6. பக்திநெறி

பொய்விட்டு மெய்ந்நெறியைப் போற்றித்தற் போதத்தைக்
கைவிட் டுணர்வே கடைப்பிடித்து - நெய்விட்ட 121

தீப்போற் கனலும் செருக்கறவே செங்கமலப்
பூப்போலும் தன்தாள் புணைபற்றிக் - காப்பாய 122

வெண்ணீ றணிந்து விதிர்விதிர்த்து மெய்பொடிப்பக்
கண்ணீர் அருவி கலந்தாடி - உண்ணீர்மை 123

என்புருகி உள்ளுருகி இன்பார் உயிருருகி
அன்புருகி அன்புருவம் ஆகிப்பின் - வன்பகன்று 124

புண்ணியா திங்கட் புரிசடையாய் பொன்னிதழிக்
கண்ணியா எங்கள் களைகண்ணே - எண்ணியாங் 125

கன்பர்க் கருளும் அரசே அமுதேபேர்
இன்பக் கடலே எமதுறவே - மன்பெற்று 126

மாற்றுரையாப் பொன்னே மணியேஎன் கண்மணியே
ஏற்றுவந்த மெய்ப்பொருளே என்றுநிதம் - போற்றிநின்றால் 127

உள்ளுறி உள்ளத் துணர்வூறி அவ்வுணர்வின்
அள்ளுறி அண்ணித் தமுதூறித் - தெள்ளுறும் 128

வான்போல் பரவி மதிபோல் குளிர்ந்துயர்கோல்
தேன்போல் மதுரிக்கும் தேவனெவன் – வான்போனார் 129

மாண்கொடுக்கும் தெய்வ மடந்தையர்க்கு மங்கலப்பொன்
நாண்கொடுக்க நஞ்சுவந்த நாதனெவன் – நாண்மலர்பெய் 130

தார்த்தியாய்த் தேவர் அரகரவென் றேத்தஅட்ட
மூர்த்தியாய் நின்ற முதல்வனெவன் – சீர்த்திபெற 131

7. கணேசர்

ஈண்டற் புதவடிவாய் எத்தேவ ரேனுநின்று
காண்டற் கரிதாம் கணேசனெவன் – வேண்டுற்றுப் 132

பூமியெங்கும் வாழ்த்திப் புகழ்வார் விரும்புமிட்ட
காமியங்கள் ஈயும் கணேசனெவன் – நாமியங்க 133

ஏண வருமிடையூ றெல்லாம் அகற்றியருள்
காண எமக்கீயும் கணேசனெவன் – மாணவரு 134

8. முருகர்

முந்த மறையின் முழுப்பொருளை நான்முகற்குத்
தந்த அருட்கடலாம் சாமியெவன் – தந்தமக்காம் 135

வாதகற்றி உண்மை மரபளித்து வஞ்சமலக்
கோதகற்றும் நெஞ்சக் குகேசனெவன் – தீதகற்றித் 136

9. பரமசிவம்

தங்கும் உலகங்கள் சாயாமற் செஞ்சடைமேல்
கங்கைதனைச் சேர்த்த கடவுளெவன் – எங்குறினும் 137

கூம்பா நிலைமைக் குணத்தோர் தொழுகின்ற
பாம்பா பரணப் பரமனெவன் – கூம்பாது 138

போற்றுரைத்து நிற்கும் புனிதன்மேல் வந்தகொடுங்
கூற்றுதைத்த செந்தாள் குழகனெவன் – ஆற்றலுறு 139

வையம் துதிக்கும் மகாலிங்க மூர்த்திமுதல்
ஐயைந்து மூர்த்தியெனும் ஐயனெவன் – ஐயந்தீர் 140

வல்லார்சொல் வண்ணமெந்த வண்ணமந்த வண்ணங்கள்
எல்லாம் உடைய விதத்தனெவன் – எல்லார்க்கும் 141

தாம்தலைவ ராகத்தம் தாள்தொழுமெத் தேவர்க்கும்
ஆந்தலைமை ஈந்தபர மார்த்தனெவன் – போந்துயிர்கள் 142

எங்கெங் கிருந்துமனத் தியாது விழைந்தாலும்
அங்கங் கிருந்தளிக்கும் அண்ணலெவன் – புங்கமிகும் 143

அண்ணல் திருமலர்க்கை ஆழிபெறக் கண்ணிடந்த
கண்ணற் கருளியமுக் கண்ணனெவன் – மண்ணிடத்தில் 144

ஓயாது சூன்முதிர்ந்த ஓர்பெண் தனக்காகத்
தாயாகி வந்த தயாளனெவன் – சேயாக

வேல்பிடித்த கண்ணப்பன் மேவுமெச்சில் வேண்டுமிதத்
தாற்பொசித்து நேர்ந்த தயாளனெவன் - பாற்குடத்தைத் 146

தான்தந்தை என்றெறிந்தோன் தாளெறிந்த தண்டிக்குத்
தான் தந்தை ஆன தயாளனெவன் - தான் கொண்டு 147

சம்பு நறுங்கனியின் தன்விதையைத் தாள்பணிந்த
சம்பு முனிக்கீயும் தயாளனெவன் - அம்புவியில் 148

ஆண்டவனென் றேத்தப்பொன் னம்பலத்தில் ஆனந்தத்
தாண்டவம்செய் கின்ற தயாளனெவன் - காண்தகைய 149

முத்துச் சிவிகையின்மேல் முன்காழி ஓங்குமுழு
முத்தைத் தனிவைத்த முத்தனெவன் - பத்திபெறு 150

நாவொன் றரசர்க்கு நாம்தருவே நல்லூரில்
வாஎன்று வாய்மலர்ந்த வள்ளலெவன் - பூவொன்று 151

நன்றொண்டர் சுந்தரரை நாம்தடுக்க வந்தமையால்
வன்றொண்டன் நீஎன்ற வள்ளலெவன் - நன்றொண்டின் 152

காணிக்கை யாகக் கருத்தளித்தார் தம்மொழியை
மாணிக்கம் என்றுரைத்த வள்ளலெவன் - தாணிற்கும் 153

தன்னன்பர் தாம்வருந்தில் சற்றுந் தரியாது
மன்னன் பருளளிக்கும் வள்ளலெவன் - முன்னன்பில் 154

சால்புடைய நல்லோர்க்குத் தண்ணருள்தந் தாட்கொளவோர்
மால்விடைமேல் வந்தருளும் வள்ளலெவன் - மான்முதலோர் 155

தாமலையா வண்ணம் தகையருளி ஓங்குவெள்ளி
மாமலைவாழ் கின்றஅருள் வள்ளலெவன் - ஆமவனே 156

நம்மைப் பணிகொண்டு நாரணனும் நாடரிதாம்
செம்மைக் கதியருள்நம் தெய்வங்காண் - எம்மையினும் 157

நாடக் கிடைத்தல் நமக்கன்றி நான்முகற்கும்
தேடக் கிடையாநம் தெய்வங்காண் - நீடச்சீர் 158

நல்வந் தனைசெய்யும் நம்போல்வார்க் கோர்ஞானச்
செல்வந் தருநமது தெய்வம்காண் - சொல்வந்த 159

எண்மைபெறும் நாமுலகில் என்றும் பிறந்திறவாத்
திண்மை அளித்தருள்நம் தெய்வம்காண் - வண்மையுற 160

முப்பாழ் கடந்த முழுப்பாழுக் கப்பாலைச்
செப்பாது செப்புறுநம் தேசிகன்காண் - தப்பாது 161

தீரா இடும்பைத் திரிபென்பதி யாதொன்றும்
சேரா நெறியருள்நம் தேசிகன்காண் - ஆராது 162

நித்தம் தெரியா நிலைமே வியநமது
சித்தம் தெளிவிக்கும் தேசிகன்காண் - பித்தரென

யாதொன்றும் தேரா திருந்தநமக் கிவ்வுலகம்
தீதென் றறிவித்த தேசிகன்காண் – கோதின்றி 164

ஓசை பெறுகடல்சூ ழுற்ற வுலகினம்மை
ஆசை யுடனீன்ற அப்பன்காண் – மாசுறவே 165

வன்பாய் வளர்க்கின்ற மற்றையர்போ லல்லாமல்
அன்பாய் நமைவளர்க்கும் அப்பன்காண் – இன்பாக 166

இப்பாரில் சேயார் இதயம் மலர்ந்தம்மை
அப்பா எனும்நங்கள் அப்பன்காண் – செப்பாமல் 167

எள்ளித் திரிந்தாலும் இந்தா[1] என் றின்னமுதம்
அள்ளிக் கொடுக்குநம தப்பன்காண் – உள்ளிக்கொண்டு 168

இன்றே அருள்வாய் எனத்துதிக்கில் ஆங்குநமக்
கன்றே அருளுநம தப்பன்காண் – நன்றேமுன் 169

காதரவு செய்து[2] நலம் கற்பித்துப் பின்பெரிய
ஆதரவு செய்யுநங்கள் அப்பன்காண் – கோதுறுமா 170

வஞ்சமலத் தால்வருந்தி வாடுகின்ற நந்தமையே
அஞ்சலஞ்ச லென்றருளும் அப்பன்காண் – துஞ்சலெனும் 171

நச்சென்ற வாதனையை நாளுமெண்ணி நாமஞ்சும்
அச்சம் கெடுத்தாண்ட அப்பன்காண் – நிச்சலுமிங்[3] 172

கேயிரவும் எல்லும் எளியேம் பிழைத்தபிழை
ஆயிரமும் தான்பொறுக்கும் அப்பன்காண் – சேயிரங்கா 173

முன்னம் எடுத்தணைத்து முத்தமிட்டுப் பாலருத்தும்
அன்னையினும் அன்புடைய அப்பன்காண் – மன்னுலகில் 174

வன்மை யறப்பத்து மாதம் சுமந்துநமை
நன்மை தரப்பெற்ற நற்றாய்காண் – இம்மைதனில் 175

[4]அன்றொருநாள் நம்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவில் சோறளித்த நற்றாய்காண் – என்றுமருட் 176

1. இந்தா என்பது மரூஉச்சொல் அது இதனைத் தரப்பெற்றுக்கொள் என்னும் பொருட்டு அல்லதூஉம் இங்கு வா என்னும் எளிமை கண்ணிய ஏவலுமாம். தொ. வே

2. காதரவு செய்தல் என்பது – அச்சுறுத்தல். தொ. வே.

3. நிச்சல் என்பது – நாடோறும். தொ. வே.

4. வள்ளலார், பிரதி, வெள்ளிக்கிழமை, அமாவாசைகளில் ஒற்றியூர் போவது வழக்கம். ஒருநாள் வழக்கப்படி போய் தரிசனம் செய்துவிட்டு அவர்கள் வசந்த மண்டபத்தில் தனியே நிஷ்டை கூடியிருந்து கண்விழிக்கப் பசி நோயால் வருந்திய போது, பரமசிவம் கோயில் குருக்கள் போல் வந்து பிரசாதம் தந்து பசியாற்றியதாக, அக்காலத்தில் வள்ளலாருடன் கூடியிருந்தவர்களால் சொல்லக் கேட்டது.

செம்மை இலாச்சிறிய தேவர்கள்பால் சேர்க்காது
நம்மை வளர்க்கின்ற நற்றாய்காண் - சும்மையென 177

மூளும் பெருங்குற்றம் முன்னிமேல் மேற்செயினும்
நாளும் பொறுத்தருளும் நற்றாய்காண் - மூளுகின்ற 178

வன்னெறியிற் சென்றாலும் வாவென் றழைத்துநமை
நன்னெறியிற் சேர்க்கின்ற நற்றாய்காண் - செந்நெறியின் 179

நாம்தேடா முன்னம் நமைத்தேடிப் பின்புதனை
நாம்தேடச் செய்கின்ற நற்றாய்காண் - ஆம்தோறும் 180

காலம் அறிந்தே கனிவோடு நல்லருட்பால்
ஞாலம் மிசையளிக்கும் நற்றாய்காண் - சாலவுறு 181

வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கை யும்துயரும்
நம்பசியும் தீர்த்தருளும் நற்றாய்காண் - அம்புவியில் 182

வெந்நீரில் ஆட்டிடிலெம் மெய்நோகும் என்றருளாம்
நன்னீரில் ஆட்டுகின்ற நற்றாய்காண் - எந்நீரின் 183

மேலாய் நமக்கு வியனுலகில் அன்புடைய
நாலா யிரம்தாயில் நற்றாய்காண் - ஏலாது 184

வாடியழு தாலெம் வருத்தம் தரியாது
நாடிஎடுத் தணைக்கும் நற்றாய்காண் - நீடுலகில் 185

தான்பாடக் கேட்டுத் தமியேன் களிக்குமுன்னம்
நான்பாடக் கேட்டுவக்கும் நற்றாய்காண் - வான்பாடும் 186

ஞானமணம் செய்யருளாம் நங்கைதனைத் தந்துநமக்
கானமணம் செய்விக்கும் அம்மான்காண் - தேனினொடும் 187

இன்பால் அமுதாகி ஏக்கமுற இன்னருள்கொண்
டன்பால் விருந்தளிக்கும் அம்மான்காண் - வன்பாவ 188

ஆழ்கடல்வீழ்ந் துள்ளம் அழுந்தும் நமையெடுத்துச்
சூழ்கரையில் ஏற்றும் துணைவன்காண் - வீழ்குணத்தால் 189

இன்பம் எனைத்தும் இதுவென் றறியாநம்
துன்பம் துடைக்கும் துணைவன்காண் - வன்பவமாம் 190

தீநெறியிற் சென்று தியங்குகின்ற நந்தமக்குத்
தூநெறியைக் காட்டும் துணைவன்காண் - மாநிலத்தில் 191

இன்றுதொட்ட தன்றி யியற்கையாய் நந்தமக்குத்
தொன்றுதொட்டு வந்தவருட் சுற்றங்காண் – தொன்றுதொட்டே 192

ஆயுமுடற் கன்புடைத்தாம் ஆருயிரிற் றான்சிறந்த
நேயம்வைத்த நம்முடைய நேசன்காண் – பேயரென 193

வாங்காது நாமே மறந்தாலும் நம்மைவிட்டு
நீங்காத நம்முடைய நேசன்காண் – தீங்காக 194

ஈட்டுகின்ற ஆபத்தில் இந்தா எனஅருளை
நீட்டுகின்ற நம்முடைய நேசன்காண் – கூட்டுலகில் 195

புல்லென்ற மாயையிடைப் போந்தோறும் நம்மையிங்கு
நில்லென் றிருத்துகின்ற நேசன்காண் – சில்லென்றென் 196

உட்டுவும் தன்னைமறந் துண்டாலும் மற்றதற்கு
நிட்டூரம் செய்யாத நேசன்காண் – நட்டூர்ந்து[1] 197

வஞ்சமது நாமெண்ணி வாழ்ந்தாலும் தான்சிறிதும்
நெஞ்சிலது வையாத நேசன்காண் – எஞ்சலிலாப் 198

பார்நின்ற நாம்கிடையாப் பண்டமெது வேண்டிடினும்
நேர்நின் றளித்துவரு நேசன்காண் – ஆர்வமுடன் 199

ஆர்ந்தநமக் கிவ்விடத்தும் அவ்விடத்தும் எவ்விடத்தும்
நேர்ந்தஉயிர் போற்கிடைத்த நேசன்காண் – சேர்ந்துமிகத் 200

தாபஞ்செய் குற்றம் தரினும் பொறுப்பதன்றிக்
கோபஞ் செயாநமது கோமான்காண் – பாபமற 201

விள்ளுமிறை நாமன்பு மேவலன்றி வேற்றரசர்
கொள்ளுமிறை வாங்காநம் கோமான்காண் – உள்ளமுற 202

உண்டளிக்கும் ஊணுடைபூண் ஊரா திகள்தானே
கொண்டுநமக் கிங்களிக்கும் கோமான்காண் – மண்டலத்தில் 203

ஒன்றாலும் நீங்கா துகங்கள் பலபலவாய்ச்
சென்றாலும் செல்லாநம் செல்வம்காண் – முன்தாவி 204

நாடிவைக்கும் நல்லறிவோர் நாளும் தவம்புரிந்து
தேடிவைத்த நம்முடைய செல்வம்காண் – மாடிருந்து 205

நாமெத் தனைநாளும் நல்கிடினும் தானுலவாச்
சேமித்த வைப்பின் திரவியம்காண் – பூமிக்கண் 206

ஈங்குறினும் வானாதி யாங்குறினும் விட்டகலா
தோங்கருளால் நம்மை உடையவன்காண் – ஆங்கவன்தன் 207

1. நட்டு ஊர்ந்து எனப்பிரித்து நேசித்துச் சென்று எனப்பொருள் கொள்க. தொ. வே.

10. வடிவழகு

கங்கைச் சடையழகும் காதன்மிகும் அச்சடைமேல்
திங்கட் கொழுந்தின் திருவழகும் – திங்கள்தன்மேல் 208

சார்ந்திலங்கும் கொன்றைமலர்த் தாரழகும் அத்தார்மேல்
ஆர்ந்திலங்கும் வண்டின் அணியழகும் – தேர்ந்தவர்க்கும் 209

நோக்கரிய நோக்கழகும் நோக்கார் நுதலழகும்
போக்கரிய நன்னுதலில் பொட்டழகும் – தேக்குதிரி 210

புண்டரத்தின் நல்லழகும் பொன்னருள்தான் தன்னெழிலைக்
கண்டவர்பால் ஊற்றுகின்ற கண்ணழகும் – தொண்டர்கள்தம் 211

நேசித்த நெஞ்சமலர் நீடு மணமுகந்த
நாசித் திருக்குமிழின் நல்லழகும் – தேசுற்ற 212

முல்லை முகையாம் முறுவலழ கும்பவள
எல்லை வளர்செவ் விதழழகும் – நல்லவரைத் 213

தேவென்ற தீம்பாலில் தேன்கலந்தாற் போலினிக்க
வாவென் றருளுமலர் வாயழகும் – பூவொன்றும் 214

கோன்பரவும் சங்கக் குழையழகும் அன்பர்மொழித்
தேன்பரவும் வள்ளைச் செவியழகும் – நான்பரவி 215

வேட்டவையை நின்றாங்கு விண்ணப்பம் செய்யவது
கேட்டருளும் வார்செவியின் கேழழகும் – நாட்டிலுயர் 216

சைவம் முதலாய்த் தழைக்க அருள்சுரக்கும்
தெய்வ முகத்தின் திருவழகும் – தெய்வமுகத் 217

துள்ளம் குளிர உயிர்குளிர மெய்குளிரக்
கொள்ளும் கருணைக் குறிப்பழகும் – உள்ளறிவின் 218

எள்ளாத மேன்மையுல கெல்லாம் தழைப்பவொளிர்
தெள்ளார் அமுதச் சிரிப்பழகும் – உள்ளோங்கும் 219

சீல அருளின் திறத்துக் கிலச்சினையாம்
நீல மணிமிடற்றின் நீடழகும் – மாலகற்றி 220

வாழ்ந்தொளிரும் அன்பர் மனம்போலும் வெண்ணீறு
சூழ்ந்தொளிகொண் டோங்குதிருத் தோளழகும் – தாழ்ந்திலவாய்த் 221

தானோங்கும் அண்டமெலாம் சத்தமுறக் கூவுமொரு
மானோங்கும் செங்கை மலரழகும் – ஊனோங்கும் 222

ஆணவத்தின் கூற்றை அழிக்க ஒளிர்மழுவைக்
காணவைத்த செங்கமலர்க் கையழகும் – நாணமுற்றே 223

ஏங்கும் பரிசுடைய எம்போல்வார் அச்சமெலாம்
வாங்கும் அபய மலரழகும் – தீங்கடையாச் 224

சீர்வரவும் எல்லாச் சிறப்பும் பெறவுமருள்
சார்வரத வொண்கைத் தலத்தழகும் – பேரரவப் 225

பூணிலங்க வெண்பொற் பொடியிலங்க என்பணித்தார்
மாணிலங்க மேவுதிரு மார்பழகும் – சேணிலத்தர் 226

மேலுடுத்த ஆடையெலாம் வெஃக வியாக்கிரமத்
தோலுடுத்த ஒண்மருங்கில் துன்னழகும் – பாலடுத்த 227

கேழ்க்கோல மேவுதிருக் கீளழகும் அக்கீளின்
கீழ்க்கோ வணத்தின் கிளரழகும் – கீட்கோலம் 228

ஒட்டிநின்ற மெய்யன்பர் உள்ள மெலாஞ்சேர்த்துக்
கட்டிநின்ற வீரக் கழலழகும் – எட்டிரண்டும் 229

சித்திக்கும் யோகியர்தம் சிந்தைதனில் தேன்போன்று
தித்திக்கும் சேவடியின் சீரழகும் – சத்தித்து 230

மல்வைத்த மாமறையும் மாலயனும் காண்பரிய
செல்வத் திருவடியின் சீரழகும் – சொல்வைத்த 231

செம்மை மணிமலையைச் சேர்ந்த மரகதம்போல்
அம்மையொரு பால்வாழ்ந் தருளழகும் – அம்மமிகச் 232

சீர்த்திநிகழ் செம்பவளச் செம்மே னியினழகும்
பார்த்திருந்தால் நம்முட் பசிபோங்காண் – தீர்த்தருளம் 233

கொண்டிருந்தான் பொன்மேனிக் கோலமதை நாம்தினமுங்
கண்டிருந்தால் அல்லலெலாம் கட்டறுங்காண் – தொண்டடைந்து 234

பாட்டால் அவன்புகழைப் பாடுகின்றோர் பக்கநின்று
கேட்டால் வினைகள்விடை கேட்கும்காண் – நீட்டாமல் 235

ஒன்னார் புரம்பொடித்த உத்தமனே என்றொருகால்
சொன்னா லுலகத் துயரறுங்காண் – எந்நாளும் 236

பன்னுமுள்ளத் துள்ளாம் பரசிவமே என்றொருகால்
உன்னுமுன்னம் தீமையெலாம் ஓடிடுங்காண் – அன்னவன்றன் 237

11. அறிவுறுத்தல் : சிவசரிதம்

ஆட்டியல்காற் பூமாட் டடையென்றால் அந்தோமுன்
நீட்டியகால் பின்வாங்கி நிற்கின்றாய் – ஊட்டுமவன் 238

[1]மாற்கடவு ளாமோர் மகவலறக் கண்டுதிருப்
பாற்கடலை யீந்தவருட் பான்மைதனை – நூற்கடலின் 239

மத்தியில்நீ கேட்டும் வணங்குகிலாய் அன்படையப்
புத்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ – முத்திநெறி 240

மாணா அரக்கன் மலைக்கீழ் இருந்தேத்த
வாணாள்[2] வழங்கியதோர் வண்மைதனை – நாணாளும் 241

1. உபமந்யு. 2. வாழ்நாள் – வாணாள் என மரீ இயது. தொ. வே.

நண்ணி உரைத்தும் நயந்திலைநீ அன்புகொளப்
புண்ணியருக் கீதொன்றும் போதாதோ - புண்ணியராம் 242

சுந்தரர்க்குக் கச்சூரில் தோழமையைத் தான்தெரிக்க
வந்திரப்புச் சோறளித்த வண்மைதனை - முந்தகத்தில் 243

பேதமறக் கேட்டும் பிறழ்ந்தனையே அன்படையப்
போதமுளோர்க் கீதொன்றும் போதாதோ - போதவும்நெய் 244

அங்கோர் எலிதான் அருந்த அகல் தூண்டவதைச்
செங்கோலன் ஆக்கியவச் சீர்த்திதனை - இங்கோதச் 245

சந்ததம்நீ கேட்டுமவன் தாள்நினையாய் அன்படையப்
புந்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ - முந்தவரும் 246

[1]நற்றுணையென் றேத்துமந்த நாவரசர்க் கன்றுகடற்
கற்றுணை[2] யோர் தெப்பமெனக் காட்டியதை - இற்றெனநீ 247

மாவுலகில் கேட்டும் வணங்குகிலாய் அன்படையப்
பூவுலகர்க் கீதொன்றும் போதாதோ - தாவுநுதல் 248

கண்சுமந்தான் அன்பன் கலங்கா வகைவைகை
மண்சுமந்தான் என்றுரைக்கும் வாய்மைதனைப் - பண்புடையோர் 249

மாணவுரைப் பக்கேட்டும் வாய்ந்தேத்தாய் மெய்யன்பு
பூணவென்றால் ஈதொன்றும் போதாதோ - நீணரகத் 250

தீங்குறுமா பாதகத்தைத் தீர்த்தோர் மறையவனைப்
பாங்கடையச் செய்தஅருட் பண்பதனை - ஈங்குலகர் 251

துங்கம் உறஉரைத்துஞ் சூழ்கின் றிலையன்பு
பொங்கவென்றால் ஈதொன்றும் போதாதோ - தங்கியஇப் 252

பாரறியாத் தாயாகிப் பன்றிக் குருளைகட்கு
ஊரறிய நன்முலைப்பால் ஊட்டியதைச் - சீரறிவோர் 253

சொல்லிநின்றார் கேட்டும் துதிக்கின் றிலையன்பு
புல்லைஎன்றால் ஈதொன்றும் போதாதோ -நல்லதிருப் 254

பாத மலர்வருந்தப் பாணன் தனக்காளாய்க்
கோதில்விற கேற்றுவிலை கூறியதை - நீதியுளோர் 255

சாற்றிநின்றார் கேட்டுமவன் தாள்நினையாய் மெய்யன்பில்
போற்றவென்றால் ஈதொன்றும் போதாதோ - போற்றுகின்ற 256

ஆடும் கரியும் அணிலும் குரங்குமன்பு
தேடுஞ் சிலம்பியொடு சிற்றெறும்பும் - நீடுகின்ற 257

பாம்பும் சிவார்ச்சனைதான் பண்ணியதென் றால்பூசை
ஓம்புவதற் கியார்தா னுவவாதார் - சோம்புறுநீ 258

1. தேவாரம் 4-வது திருமுறை, நமச்சிவாயப்பதிகம். ①

2. கற்றூணை என்பது - கற்றுணையெனக் குறுகிநின்றது.

வன்பென்ப தெல்லாம் மறுத்தவன்தாள் பூசிக்கும்
அன்பென்பதி யாதோ அறியாயே – அன்புடனே 259

செஞ்சடைகொள் நம்பெருமான் சீர்கேட் டிரையருந்தா
தஞ்சடக்கி யோகம் அமர்ந்துலகின் – வஞ்சமற 260

நாரையே முத்தியின்பம் நாடியதென் றால்மற்றை
யாரையே நாடாதார் என்றுரைப்பேன் – ஈரமிலாய் 261

நீயோ சிறிதும் நினைந்திலைஅவ் வின்பமென்னை
யேயோநின் தன்மை இருந்தவிதம் – ஓயாத 262

அன்புடையார் யாரினும்பேர் அன்புடையான் நம்பெருமான்
நின்புடையான் நித்தம் நிகழ்த்துகின்றேன் – உன்புடையோர் 263

அன்பவன்மேல் கொண்ட தறியேன் புறச்சமயத்
தின்புடையா ரேனும் இணங்குவரே – அன்புடனே 264

தாவென்றால் நல்லருள்இந் தாவென்பான் நம்பெருமான்
[1]ஆஉன்பால் ஓதி அலுக்கின்றேன் – நீவன்பால் 265

நின்றாய் அலதவனை நேர்ந்துநினை யாய்பித்தர்
என்றாலும் என்சொற் கிணங்குவரே – குன்றாது 266

பித்தா எனினும் பிறப்பறுப்பான் நம்முடையான்
[2]அத்தோ உனக்கீ தறைகின்றேன் – சற்றேனும் 267

கேள்வியிலார் போலதனைக் கேளாய் கெடுகின்றாய்
வேள்வியிலார் கூட்டம் விழைகின்றாய் – வேள்வியென்ற 268

வேலைவருங் காலொளித்து மேவுகின்றாய் நின்தலைக்கங்
கோலைவருங் காலிங் கொளிப்பாயே – மாலையுறும் 269

12. உலக ஆசை

இப்பார் வெறும்பூ இதுநயவேல் என்றுனக்குச்
செப்பா முனம்விரைந்து செல்கின்றாய் – அப்பாழில் 270

செல்லாதே சைவநெறி செல்லென்றால் என்னுடனும்
சொல்லாது போய்மயக்கம் தோய்கின்றாய் – பொல்லாத 271

[3]அஞ்சருந்தென் றலாமுதி னார்கின்றாய் விட்டிடென்றால்
நஞ்சருந்தென் றாற்போல் நலிகின்றாய் – வஞ்சகத்தில் 272

ஓடுகின்றாய் மீளாமல் உன்னிச்சை யின்வழியே
ஆடுகின்றாய் மற்றங் கயர்கின்றாய் – நீடுலகைச் 273

சூழ்கின்றாய் வேறொன்றில் சுற்றுகின்றாய் மற்றொன்றில்
வீழ்கின்றாய் மேலொன்றில் மீள்கின்றாய் – தாழ்வொன்றே 274

1. ஆ – வியப்பிடைச் சொல்.
2. அந்தோ என்பது – அத்தோ என வலிக்கும்வழி வலித்தது. தொ. வே.
3. ஐந்து என்பது – அஞ்சு என மருவிற்று. அஃது ஈண்டு ஆகுபெயராய்ச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தாசைகளைக் குறித்து நின்றது. தொ. வே.

ஈகின்றாய் வன்னெறியில் என்னை வலதழிக்கப்
போகின்றாய் மீட்டும் புகுகின்றாய் - யோகின்றி 275

ஒன்றைமறைக் கின்றாய்மற் றொன்றைநினைக் கின்றாயென்
நன்றைமறைக் கின்றாய் நலிகின்றாய் - வென்றிபெறும் 276

சேவிற் பரமன்தாள் சேரென்றால் மற்றொருசார்
மேவிப் பலவாய் விரிகின்றாய் - பாவித்துக் 277

குன்றும் உனக்கனந்தம் கோடிதெண்ட னிட்டாலும்
ஒன்றும் இரங்காய் உழல்கின்றாய் - நன்றுருகாக் 278

கல்லென்பேன் உன்னைக் கரணம் கலந்தறியாக்
கல்லென்றால் என்சொல் கடவாதே - புல்லநினை 279

வல்லிரும்பென் பேன்அந்த வல்லிரும்பேல் கூடத்தில்
கொல்லன்குறிப் பைவிட்டுக் கோணாதே - அல்லலெலாம் 280

கூட்டுகின்ற வன்மைக் குரங்கென்பேன் அக்குரங்கேல்
ஆட்டுகின்றோன் சொல்வழிவிட் டாடாதே - நீட்டுலகர் 281

ஏசுகின்ற பேயென்பேன் எப்பேயும் அஞ்செழுத்தைப்
பேசுகின்றோர் தம்மைப் பிடியாதே - கூசுகிற்பக் 282

கண்டோரைக் கவ்வுங் கடுஞ்சுணங்கன் என்பனது
கொண்டோரைக் கண்டால் குலையாதே - அண்டார்க்கும் 283

பூவில் அடங்காப் புலியென்பேன் எப்புலியும்
மேவில் வயப்பட்டால் எதிராதே - நோவியற்றி 284

வீறுகின்ற மும்மதமால் வெற்பென்பேன் ஆங்கதுவும்
ஏறுகின்றோன்[1] சொல்வழிவிட் டேறாதே - சீறுகின்ற 285

வென்னடைசேர்[2] மற்றை விலங்கென்பேன் எவ்விலங்கும்
மன்னவன்சேர் நாட்டில் வழங்காதே - நின்னையினி 286

என்னென்பேன் என்மொழியை ஏற்றனையேல் மாற்றுயர்ந்த
பொன்னென்பேன் என்வழியில் போந்திலையே - கொன்னுறநீ 287

போம்வழியும் பொய்நீ புரிவதுவும் பொய்அதனால்
ஆம்விளைவும் பொய்நின் னறிவும்பொய் - தோம்விளைக்கும் 288

நின்னுடலும் பொய்யிங்கு நின்தவமும் பொய்நிலையா
நின்னிலையும் பொய்யன்றி நீயும்பொய் - என்னிலிவண் 289

ஏதும் உணர்ந்திலையே இம்மாய வாழ்க்கையெனும்
வாதிலிழுத் தென்னை மயக்கினையே - தீதுறுநீ 290

வன்னோர் விடங்காணின் வன்பெயரின் முன்பொருகீற்[3]
றென்னே அறியாமல் இட்டழைத்தேன் - கொன்னேநீ 291

1. ஏறுதல் என்பது ஈண்டொழுக்கத்தின் மேனின்றது. தொ. வே.
2. வெல் நடை எனப் பிரித்துக் கொள்க. அற்றேல் கொடு நடை எனப் பொருள் கொள்ளின் வெந்நடை எனப் பொது நகரமாக்கிக் கொள்க. தொ. வே.
3. நெஞ்சு எனும் மொழிக்கு முன்னுள்ள கீற்று (ி) நீங்கின் நஞ்சு என்றாகும். ச.மு.க.

நோவ தொழியா நொறிற்[1] காம வெப்பினிடை
ஆவ தறியா தழுந்தினையே – மேவுமதில் 292

உள்ளெரிய மேலாம் உணர்வும் கருகவுடல்
நள்ளெரிய நட்பின் நலம்வெதும்ப – விள்வதின்றி 293

வாடிப் பிலஞ்சென்று வான்சென் றொளித்தாலும்
தேடிச் சுடுங்கொடிய தீக்கண்டாய் – ஓடிஅங்கு 294

பேர்ந்தால் அலது பெருங்காமத் தீநின்னைச்
சேர்ந்தா ரையுஞ்சுடும்செந் தீக்கண்டாய் – சார்ந்தாங்கு 295

சந்தீ யெனவருவார் தம்மைச் சுடுங்காமஞ்
செந்தீ யையுஞ் சுடுமோர் தீக்கண்டாய் – வந்தீங்கு 296

மண்ணில் தனைக்காணா வண்ணம் நினைத்தாலும்
நண்ணித் தலைக்கேறு நஞ்சங்காண் – எண்ணற்ற 297

போருறுமுட் காமப் புதுமயக்கம் நின்னுடைய
பேரறிவைக் கொள்ளைகொளும் பித்தங்காண் – சோரறிவில் 298

கள்ளடைக்கும் காமக் கடுமயக்கம் மெய்ந்நெறிக்கோர்
முள்ளடைக்கும் பொல்லா முரண்கண்டாய் – அள்ளலுற 299

ஏதமெலாம் தன்னுள் இடுங்காமம் பாதகத்தின்
பேதமெலாம் ஒன்றிப் பிறப்பிடங்காண் – ஆதலினால் 300

வெம்மால் மடந்தையரை மேவவொணா தாங்கவர்கள்
தம்மாசை இன்னும் தவிர்ந்திலையே – இம்மாய 301

மன்ற [2]வணங்கினர் [3]செவ் வாய்மடவார் [4]பேதையர்கள்
என்றகொடுஞ் சொற்பொருளை எண்ணிலையே – தொன்றுலகில் 302

பெண்ணென் றுரைப்பிற் பிறப்பேழும் ஆந்துயரம்
எண்ணென்ற நல்லோர்சொல் எண்ணிலையே – பெண்ணிங்கு 303

மாமாத் திரையின் வருத்தனமென் றெண்ணினை அந்[5]
நாமார்த்தம் ஆசையென நாடிலையே – யாமார்த்தம் 304

மந்திரத்தும் பூசை மரபினுமற் றெவ்விதமாம்
தந்திரத்தும் சாயாச் சழக்கன்றோ – மந்திரத்தில் 305

பேய்பிடித்தால் தீர்ந்திடுமிப் பெண்பேய் விடாதேசெந்
நாய்பிடித்தால் போலுமென்று நாடிலையே – ஆய்விலுன்றன் 306

ஏழமைஎன் னென்பேன் இவர்மயக்கம் வல்நரகின்
தோழமையென் றந்தோ துணிந்திலையே – ஊழமைந்த 307

1. நொறில் – விரைவு. 2. அணங்கினர் – நோயுடையார்.
3. செவ்வாய் மடவார் – சிவந்த வாயினையுடைய பெண்கள்
4. பேதையர் – அறிவில்லார்.
5. பெண்ணிங்கு மாமாத்திரையின் வருத்தனமென் றெண்ணினை என்பதற்குப் பேண் என்று பொருள் கொண்டனை என்பது பொருள். தொ. வே

காரிருளில் செல்லக் கலங்குகின்றாய் மாதர்குழல்
பேரிருளில் செல்வதனைப் பேர்த்திலையே - பாரிடையோர் 308

எண்வாள் எனிலஞ்சி ஏகுகின்றாய் ஏந்திழையார்
கண்வாள் அறுப்பக் கனிந்தனையே - மண்வாழும் 309

ஓரானை யைக்கண்டால் ஓடுகின்றாய் மாதர்முலை
ஈரானை யைக்கண் டிசைந்தனையே - சீரான 310

வெற்பென்றால் ஏற விரைந்தறியாய் மாதர்முலை
வெற்பென்றால் ஏற விரைந்தனையே - பொற்பொன்றும் 311

சிங்கமென்றால் வாடித் தியங்குகின்றாய் மாதரிடைச்
சிங்கமெனில் காணத் திரும்பினையே - இங்குசிறு 312

பாம்பென்றால் ஓடிப் பதுங்குகின்றாய் மாதரல்குல்
பாம்பென்றால் சற்றும் பயந்திலையே - ஆம்பண்டைக் 313

கீழ்க்கடலில் ஆடென்றால் கேட்கிலைநீ மாதரல்குல்
பாழ்க்கடலில் கேளாது பாய்ந்தனையே - கீழ்க்கதுவும் 314

கல்லென்றால் பின்னிடுவாய் காரிகையார் காற்சிலம்பு
கல்லென்றால் மேலெழும்பக் கற்றனையே - அல்அளகம் 315

மையோ கருமென் மணலோஎன் பாய்மாறி
ஐயோ நரைப்ப தறிந்திலையோ - பொய்யோதி 316

ஒண்பிறையே ஒண்ணுதலென் றுன்னுகின்றாய் உள்ளெலும்பாம்
வெண்பிறையன் றேயதனை விண்டிலையே - கண்புருவம் 317

வில்லென்றாய் வெண்மயிராய் மேவி உதிர்ந்திடுங்கால்
சொல்லென்றால் சொல்லத் துணியாயே - வல்லம்பில் 318

கட்கு வளைஎன்றாய்க் கண்ணீர் உலர்ந்துமிக
உட்குழியும் போதில் உரைப்பாயே - கட்குலவு 319

மெய்க்குமிழே நாசியென வெஃகினையால் வெண்மலத்தால்
உய்க்குமிழுஞ் சீந்த லுளதேயோ - எய்த்தலிலா 320

வள்ளையென்றாய் வார்காது வள்ளைதனக் குட்புழையோ
டுள்ளுநரம் பின்புனைவும் உண்டேயோ - வெள்ளைநகை 321

முல்லையென்றாய் முல்லை முறித்தொருகோல் கொண்டுநிதம்
ஒல்லை அழுக்கெடுப்ப துண்டேயோ - நல்லதொரு 322

கொவ்வை யெனஇதழைக் கொள்கின்றாய் மேல்குழம்பும்
செவ்வை இரத்தமெனத் தேர்ந்திலையே - செவ்வியகண் 323

ணாடி யெனக்கவுட்கே[1] ஆசைவைத்தாய் மேல்செழுந்தோல்
வாடியக்கால் என்னுரைக்க மாட்டுவையே - கூடியதோர் 324

1. கவுள் - கன்னம்.

அந்த மதிமுகமென் றாடுகின்றாய் ஏழ்துளைகள்
எந்தமதிக் குண்டதனை எண்ணிலையே – [1]நந்தெனவே 325

கண்டமட்டும் கூறினைஅக் கண்டமட்டும் அன்றியுடல்
கொண்டமட்டும் மற்றதன்மெய்க் கூறன்றோ – விண்டவற்றைக் 326

தோளென் றுரைத்துத் துடிக்கின்றாய் அவ்வேய்க்கு
மூளொன்று வெள்ளெலும்பின் மூட்டுண்டே – நாளொன்றும் 327

செங்காந்தள் அங்கையெனச் செப்புகின்றாய் அம்மலர்க்குப்
பொங்காப் பலவிரலின் பூட்டுண்டே – மங்காத 328

செவ்விளநீர் கொங்கையெனச் செப்பினைவல் ஊன்றடிப்பிங்
கெவ்விளநீர்க் குண்டதனை எண்ணிலையே – செவ்வைபெறும் 329

செப்பென் றனைமுலையைச் சீசீ சிலந்தி[2] யது
துப்பென் றவர்க்கியாது சொல்லுதியே – வப்பிறுகச்[3] 330

சூழ்ந்தமுலை மொட்டென்றே துள்ளுகின்றாய் கீழ்த்துவண்டு
வீழ்ந்தமுலைக் கென்ன விளம்புதியே – தாழ்ந்தஅவை 331

மண்கட்டும் பந்தெனவே வாழ்ந்தாய் முதிர்ந்துடையாப்
புண்கட்டி என்பவர்வாய்ப் பொத்துவையே[4] திண்கட்டும் 332

அந்நீர்க் குரும்பை அவையென்றாய் மேலெழும்பும்
செந்நீர்ப் புடைப்பென்பார் தேர்ந்திலையே – அந்நீரார் 333

கண்ணீர் தரும்பருவாய்க் கட்டுரைப்பார் சான்றாக
வெண்ணீர் வரல்கண்டும் வெட்கிலையே – தண்ணீர்மைச் 334

சாடியென்பாய் நீஅயலோர் தாதுக் கடத்திடுமேன்
மூடியென்பார் மற்றவர்வாய் மூடுதியோ – மேடதனை[5] 335

ஆலிலையே என்பாய் அடர்குடரோ டீருளொடும்[6]
தோலிலையே ஆலிலைக்கென் சொல்லுதியே – நூலிடைதான் 336

உண்டோ இலையோஎன் றுட்புகழ்வாய் கைதொட்டுக்
கண்டோர்பூட்[7] டுண்டென்பார் கண்டிலையே – விண்டோங்கும் 337

ஆழ்ங்கடலென் பாய்மடவார் அல்குலினைச் சிற்சிலர்கள்
பாழ்ங்கிணறென் பாரதனைப் பார்த்திலையே – தாழ்ங்கொடிஞ்சித் 338

தேராழி என்பாயச் சீக்குழியை அன்றுசிறு
நீராழி யென்பவர்க்கென் நேருதியே[8] – ஆராப்புன் 339

நீர்வழியை ஆசை நிலையென்றாய் வன்மலம்தான்
சோர்வழியை என்னென்று சொல்லுதியே – சார்முடைதான் 340

1. நந்து – சங்கு. 2. சிலந்தி – புண்கட்டி. 3. வம்பு – வப்பென விகாரமாயிற்று.
4. பொத்துதல் என்பது – மூடுதல். 5. மேடு – வயிறு. 6. ஈருள் என்பது – ஈரல் என மருவி வழங்கியது. 7. பூட்டு என்பது – ஈண்டு உடற்பொருத்து. தொ. வே.
8. நேர்தல் என்பது – விடை கொடுத்தல் என்னும் பொருட்டு. தொ. வே.

ஆறாச் சிலைநீர்கான் ஆறாய் ஒழுக்கிடவும்
வீறாப்புண் என்று விடுத்திலையே – ஊறாக்கி 341

மூலை எறும்புடன்ஈ மொய்ப்பதஞ்சி மற்றதன்மேல்
சீலையிடக் கண்டும் தெரிந்திலையே – மேலையுறு 342

மேநரகம் என்றால் விதிர்ப்புறுநீ மாதரல்குல்
கோநரகம் என்றால் குலைந்திலையே – ஊனமிதைக் 343

கண்டால் நமதாசை கைவிடுவார் என்றதனைத்
தண்டா தொளித்திடவும் சார்ந்தனையே – அண்டாது 344

போதவிடா யாகிப் புலம்புகின்றாய் மற்றதன்பால்
மாதவிடாய் உண்டால் மதித்திலையே – மாதரவர் 345

தங்குறங்கை மெல்லரம்பைத் தண்டென்றாய் தண்டூன்றி
வெங்குரங்கின் மேவுங்கால் விள்ளுதியே – நன்கிலவாய் 346

ஏய்ந்த முழந்தாளைவரால் என்றாய் புலாற்சிறிதே
வாய்ந்து வராற்றோற்கு மதித்திலையே – சேந்தவடி 347

தண்டா மரையென்றாய் தன்மை விளர்ப்படைந்தால்
வெண்டா மரையென்று மேவுதியோ – வண்டாரா 348

மேனாட்டுஞ் சண்பகமே மேனியென்றாய் தீயிடுங்கால்
தீநாற்றம் சண்பகத்தில் தேர்ந்தனையோ – வானாட்டு 349

மின்றேர் வடிவென்றாய் மேல்நீ உரைத்தவுளீ
தொன்றே ஒருபுடையாய் ஒத்ததுகாண்[1] – ஒன்றாச்சொல் 350

வேள்வா கனமென்றாய் வெய்யநமன் விட்டிடுந்தூ
தாள்வா கனமென்றால் ஆகாதோ – வேளானோன் 351

காகளமாய்[2] இன்குரலைக் கட்டுரைத்தாய் காலனென்போன்
காகளமென் பார்க்கென் கழறுதியே – நாகளவும் 352

சாயைமயில் என்றே தருக்குகின்றாய் சார்பிரம
சாயை[3] யஃதென்பார்க்கென் சாற்றுதியே – சேயமலர் 353

அன்ன நடைஎன்பாய் அஃதன் றருந்துகின்ற
அன்னநடை என்பார்க்கென் ஆற்றுதியே – அன்னவரை 354

ஓரோ வியமென்பாய் ஓவியமேல் ஆங்கெழுபத்
தீரா யிரநாடி யாண்டுடைத்தே – பாராரந்த 355

முன்னுமலர்க் கொம்பென்பாய் மூன்றொடரைக் கோடியெனத்
துன்னு முரோமத் துவாரமுண்டே – இன்னமுதால் 356

செய்தவடி வென்பாயச் செய்கைமெய்யேல் நீயவர்கள்
வைதிடினும் மற்றதனை வையாயே – பொய்தவிராய் 357

1. ஈண்டொரு புடை ஒத்தமை தோற்றியாங் கழியு நிலையின்மையால் என்று கொள்க. தொ. வே.
2. வேளானோன்காகளம் – குயில். தொ. வே. 3. பிரமசாயை என்பது – பிரமகத்தி. தொ. வே.

ஒள்ளிழையார் தம்முருவோர் உண்கரும்பென் றாய்சிறிது
கிள்ளியெடுத் தால்இரத்தங் கீழ்வருமே – கொள்ளுமவர் 358

ஈடில்பெயர் நல்லார் எனநயந்தாய் நாய்ப்பெயர் தான்
கேடில்பெருஞ் சூரனென்பர் கேட்டிலையோ – நாடிலவர் 359

மெல்லியலார் என்பாய் மிகுகருப்ப வேதனையை
வல்லியலார் யார்பொறுக்க வல்லார்காண் – வில்லியல்பூண் 360

வேய்ந்தால் அவர்மேல் விழுகின்றாய் வெந்தீயில்
பாய்ந்தாலும் அங்கோர் பலனுண்டே – வேய்ந்தாங்கு 361

சென்றால் அவர்பின்னர்ச் செல்கின்றாய் வெம்புலிப்பின்
சென்றாலும் அங்கோர் திறனுண்டே – சென்றாங்கு 362

நின்றால் அவர்பின்னர் நிற்கின்றார் கண்மூடி
நின்றாலும் அங்கோர் நிலையுண்டே – ஒன்றாது 363

கண்டால் அவருடம்பைக் கட்டுகின்றாய்[1] கல்லணைத்துக்
கொண்டாலும் அங்கோர் குணமுண்டே – பெண்டானார் 364

வைதாலும் தொண்டு வலித்தாய் பிணத்தொண்டு
செய்தாலும் அங்கோர் சிறப்புளதே – கைதாவி 365

மெய்த்தாவும் செந்தோல் மினுக்கால் மயங்கினைநீ
செத்தாலும் அங்கோர் சிறப்புளதே – வைத்தாடும் 366

மஞ்சள் மினுக்கால் மயங்கினைநீ மற்றொழிந்து
துஞ்சுகினும் அங்கோர் சுகமுளதே – வஞ்சியரைப் 367

பார்த்தாடி ஓடிப் படர்கின்றாய் வெந்நரகைப்
பார்த்தாலும் அங்கோர் பலனுண்டே – சேர்த்தார்கைத் 368

தொட்டால் களித்துச் சுகிக்கின்றாய் வன்பூதம்
தொட்டாலும் அங்கோர் துணையுண்டே – நட்டாலும் 369

தெவ்வின்மட வாரைத் திளைக்கின்றாய் தீவிடத்தை
வவ்வுகினும் அங்கோர் மதியுண்டே – செவ்விதழ்நீர் 370

உண்டால் மகிழ்வாய்நீ ஒண்சிறுவர் தம்சிறுநீர்
உண்டாலும் அங்கோ ருரனுண்டே – கண்டாகக் 371

கவ்வுகின்றாய் அவ்விதழைக் கார்[2]மதுகம் வேம்பிவற்றைக்
கவ்வுகினும் அங்கோர் கதியுண்டே – அவ்விளையர் 372

மென்றீயும் மிச்சில் விழைகின்றாய் நீவெறும்வாய்
மென்றாலும் அங்கோர் விளைவுண்டே – முன்றானை 373

பட்டால் மகிழ்வு பதிந்தாய் பதைக்கவம்பு
பட்டாலும் அங்கோர் பலனுண்டே – கிட்டாமெய்த் 374

1. கட்டுதல் என்பது – ஈண்டுத் தழுவுதல் என்னும் பொருட்டு. தொ. வே.

2. மதுகம் என்பது – எட்டிமரம்.

தீண்டிடிலுள் ளோங்கிச் சிரிக்கின்றாய் செந்தேள்முன்
தீண்டிடினும் அங்கோர் திறனுண்டே - வேண்டியவர் 375

வாய்க்கிடயா தானுமொன்று வாங்குகின்றாய் மற்றதையோர்
நாய்க்கிடினும் அங்கோர் நலனுண்டே - தாக்கவர்க்காய்த் 376

தேட்டாண்மை செய்வாயத் தேட்டாண்மை யைத்தெருவில்
போட்டாலும் அங்கோர் புகழுண்டே - வாட்டாரைக் 377

கொண்டா ருடனுணவு கொள்கின்றாய் குக்கலுடன்
உண்டாலும் அங்கோர் உறவுண்டே - மிண்டாகும் 378

இங்கிவர்வாய்ப் பாகிலையை ஏற்கின்றாய் புன்மலத்தை
நுங்கினுமங் கோர்நல் நொறிலுண்டே[1] - மங்கையர்தம் 379

ஏத்தா மனைகாத் திருக்கின்றாய் ஈமமது
காத்தாலும் அங்கோர் கனமுண்டே - பூத்தாழ்வோர் 380

காட்டாக் குரல்கேட்பாய் கர்த்தபத்தின் பாழ்ங்குரலைக்
கேட்டாலும் அங்கோர் கிளருண்டே - கோட்டாவி 381

ஆழ்ந்தா ருடன்வாழ ஆதரித்தாய் ஆழ்ங்கடலில்
வீழ்ந்தாலும் அங்கோர் விரகுண்டே - வீழ்ந்தாருள் 382

வீட்டால் முலையுமெதிர் வீட்டால் முகமுமுறக்
காட்டாநின் றார்கண்டும் காய்ந்திலையே - கூட்டாட்குச் 383

செய்கை யிடும்படிதன் சீமான் தனதுபணப்
பைகையிடல் கண்டும் பயந்திலையே - சைகையது 384

கையால் ஒருசிலர்க்கும் கண்ணால் ஒருசிலர்க்கும்
செய்யா மயக்குகின்றார் தேர்ந்திலையே - எய்யாமல் 385

ஈறிகந்த இவ்வகையாய் இம்மடவார் செய்கையெலாம்
கூறுவனேல் அம்ம குடர்குழம்பும் - கூறுமிவர் 386

வாயொருபால் பேச மனமொருபால் செல்லவுடல்
ஆயொருபால் செய்ய அழிவார்காண் - ஆயஇவர் 387

நன்றறியார் தீதே நயப்பார் சிவதலத்தில்
சென்றறியார் பேய்க்கே சிறப்பெடுப்பார் - இன்றிவரை 388

வஞ்சமென்கோ வெவ்வினையாம் வல்லியமென் கோபவத்தின்
புஞ்சமென்கோ மாநரக பூமியென்கோ - அஞ்சுறுமீர் 389

வாளென்கோ வாய்க்கடங்கா மாயமென்கோ மண்முடிவு
நாளென்கோ வெய்ய நமனென்கோ - கோளென்கோ 390

சாலமென்கோ வானிந்திர சாலமென்கோ வீறால
காலமென்கோ நின்பொல்லாக் காலமென்கோ - ஞாலமதில் 391

1. நொறில் - அடக்கம். தொ. வே.

பெண்என்றால் யோகப் பெரியோர் நடுங்குவரேல்
மண்நின்றார் யார்நடுங்க மாட்டார்காண் – பெண்என்றால் 392

பேயும் இரங்குமென்பாய் பேய்ஒன்றோ தாம்பயந்த
சேயும் இரங்குமவர் தீமைக்கே – ஆயுஞ்செம் 393

பொன்னால் துகிலால் புனையா விடிலவர்மெய்
என்னாகும் மற்றிதைநீ எண்ணிலையே – இன்னாமைக் 394

கொத்தென்ற அம்மடவார் கூட்டம் எழுமைக்கும்
வித்தென் றறிந்துமதை விட்டிலையே – தொத்தென்று 395

பாச வினைக்குட் படுத்துறும்அப் பாவையர்மேல்
ஆசையுனக் கெவ்வா றடைந்ததுவே – நேசமிலாய் 396

14. பொன்னாசை

நின்னாசை என்னென்பேன் நெய்வீழ் நெருப்பெனவே
பொன்னாசை மேன்மேலும் பொங்கினையே – பொன்னாசை 397

வைத்திழந்து வீணே வயிறெரிந்து மண்ணுலகில்
எத்தனைபேர் நின்கண் எதிர்நின்றார் – தத்துகின்ற 398

பொன்னுடையார் துன்பப் புணரியொன்றே அல்லதுமற்
றென்னுடையார் கண்டிங் கிருந்தனையே – பொன்னிருந்தால் 399

ஆற்றன்மிகு தாயுமறி யாவகையால் வைத்திடவோர்
ஏற்றவிடம் வேண்டுமதற் கென்செய்வாய் – ஏற்றவிடம் 400

வாய்த்தாலும் அங்கதனை வைத்தவிடம் காட்டாமல்
ஏய்த்தால் சிவசிவமற் றென்செய்வாய் – ஏய்க்காது 401

நின்றாலும் பின்னதுதான் நீடும் கரியான
தென்றால் அரகரமற் றென்செய்வாய் – நன்றாக 402

ஒன்றொருசார் நில்லென்றால் ஓடுகின்ற நீஅதனை
என்றும் புரப்பதனுக் கென்செய்வாய் – வென்றியொடு 403

பேர்த்துப் புரட்டிப் பெருஞ்சினத்தால் மாற்றலர்கள்
ஈர்த்துப் பறிக்கிலதற் கென்செய்வாய் – பேர்த்தெடுக்கக் 404

கைபுகுத்தும் காலுட் கருங்குளவி செங்குளவி
எய்புகுத்தக் கொட்டிடின்மற் றென்செய்வாய் – பொய்புகுத்தும் 405

பொன்காவல் பூதமது போயெடுக்கும் போதுமறித்
தென்காவல் என்றால்மற் றென் செய்வாய் – பொன்காவல் 406

வீறுங்கால் ஆணவமாம் வெங்கூளி நின்தலைமேல்
ஏறுங்கால் மற்றதனுக் கென்செய்வாய் – மாறும்சீர் 407

உன்நேயம் வேண்டி உலோபம் எனும்குறும்பன்
இன்னே வருவனதற் கென்செய்வாய் – முன்னேதும் 408

இல்லா நமக்குண்டோ இல்லையோ என்னுநலம்
எல்லாம் அழியுமதற் கென்செய்வாய் - நில்லாமல் 409

ஆய்ந்தோர் சிலநாளில் ஆயிரம்பேர் பக்கலது
பாய்ந்தோடிப் போவதுநீ பார்த்திலையே - ஆய்ந்தோர்சொல் 410

கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற
சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே[1] - பேர்த்தோடும் 411

நாட்கொல்லி என்றால் நடுங்குகின்றாய் நாளறியா
ஆட்கொல்லி என்பரிதை ஆய்ந்திலையே - கீழ்க்கொல்லைப் 412

பச்சிலையால் பொன்னைப் படைப்பாரேல் மற்றதன்மேல்
இச்சையுனக் கெவ்வா றிருந்ததுவே - இச்சையிலார் 413

இட்டமலம் பட்டவிடம் எல்லாம்பொன் னாம்என்றால்
இட்டமதை விட்டற்[2] கிசைந்திலையே - முட்டகற்றப் 414

பொன்னடப்ப தன்றியது போனகமே யாதியவாய்
என்னடுத்த தொன்றுமிஃ தெண்ணிலையே - இந்நிலத்தில் 415

நீண்மயக்கம் பொன்முன் நிலையாய் உலகியலாம்
வீண்மயக்கம் என்றதனை விட்டிலையே - நீண்வலயத் 416

திச்செல்வ மின்றி இயலாதேல் சிற்றுயிர்கள்
எச்செல்வம் கொண்டிங் கிருந்தனவே - வெச்சென்ற 417

15. மண்ணாசை

மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளும் மன்னரெலாம்
மண்ணால் அழிதல் மதித்திலையே - எண்ணாது 418

மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல் வைக்கவயல்
மண்கொண்டார் தம்மிருப்பில் வைத்திலரே - திண்கொண்ட 419

விண்ணேகுங் காலங்கு வேண்டுமென ஈண்டுபிடி
மண்ணேனுங் கொண்டேக வல்லாரோ - மண்நேயம் 420

என்னதென்றான் முன்னொருவன் என்னதென்றான் பின்னொருவன்
இன்னதுநீ கேட்டிங் கிருந்திலையோ - மன்னுலகில் 421

கண்காணி யாய்நீயே காணியல்லாய் நீயிருந்த
மண்காணி என்று மதித்தனையே - கண்காண 422

மண்காணி வேண்டி வருந்துகின்றாய் நீமேலை
விண்காணி வேண்டல் வியப்பன்றே - எண்காண 423

அந்தரத்தில் நின்றாய்நீ அந்தோ நினைவிடமண்
அந்தரத்தில் நின்ற தறிந்திலையே - தந்திரத்தில் 424

மண்கொடுப்பேன் என்றுரைக்கில் வைவார் சிறுவர்களும்
மண்கொடுக்கில் நீதான் மகிழ்ந்தனையே - வண்கொடுக்கும் 425

1. திருக்குறள், அதிகாரம் - 34, (2) 2. விடற்கு என்பது - விட்டற்கு என விகாரமாயிற்று. தொ. வே.

வீடென்றேன் மற்றதைமண் வீடென்றே நீநினைந்தாய்
[1]வீடென்ற சொற்பொருளை விண்டிலையே – நாடொன்றும் 426

மண்ணால் மரத்தால் வனைகின்ற வீடனைத்தும்
கண்ணாரக் கட்டழிதல் கண்டிலையோ – மண்ணான 427

மேல்வீடும் அங்குடைய வேந்தர்களும் மேல்வீட்டப்
பால்வீடும் பாழாதல் பார்த்திலையோ – மேல்வீட்டில் 428

ஏறுவனே என்பாய் இயமன் கடாமிசைவந்
தேறுவனேல் உன்னாசை என்னாமோ – கூறிடும்இம் 429

மண்ணளித்த வேதியனும் மண்விருப்பம் கொள்ளானேல்
எண்ணமுனக் கெவ்வா றிருந்ததுவே – மண்ணிடத்தில் 430

ஆகாத் துரும்பிடத்தும் ஆசைவைத்தாய் என்னிலுன்றன்
ஏகாப் பெருங்காமம் என்சொல்கேன் – போகாத 431

16. கோபம்

பாபக் கடற்கோர் படுகடலாம் பாழ்வெகுளிக்
கோபக் கடலில் குளித்தனையே – தாபமுறச் 432

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையே[2] – மல்லல்பெறத் 433

தன்னைத்தான் காக்கில் சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே[3] – துன்னி 434

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னுந்
திகழ்வாய் மையும்நீ தெளியாய்[4] – இகழ்வாரை 435

எவ்வண்ணம் நம்மை இகழ்வார் அறிவோமென்
றிவ்வண்ணம் என்னைவெளி யிட்டனையே – தெவ்வென்ன 436

ஓரா வெகுளி யுடையான் தவமடையான்
தீராயென் பாரதுவும் தேர்ந்திலையே – பேராநின் 437

வெவ்வினைக்கீ டாகஅரன் வெம்மைபுரி வானென்றால்
இவ்வெகுளி யார்மாட் டிருத்துவதே – செவ்வையிலாய் 438

ஏய்ந்தனையன் போரிடத்தில் இன்னாமை செய்தவரைக்
காய்ந்தனைமற் றென்னபலன் கண்டனையே – வாய்ந்தறிவோர் 439

எல்லா நலமும் இஃதேயென் றேத்துகின்ற
கொல்லா நலம்சிறிதுங் கொண்டிலையே – பொல்லாத 440

வன்போ டிருக்கு மதியிலிநீ மன்னுயிர்க்கண்
அன்போ டிரக்கம் அடைந்திலையே – இன்போங்கு 441

1. வீடு – பற்றுக்களினின்றும் விடுபட்டது.
2. செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற. திருக்குறள் 302 (31 வெகுளாமை 2)
3. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். திருக்குறள் 305 (31 வெகுளாமை 5)
4. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. திருக்குறள் 151 (16 பொறையுடைமை 1)

தூய்மையென்ப தெல்லாம் துணையாய் அணைவதுதான்
வாய்மையென்ப தொன்றே மதித்திலையே – தூய்மையிலாய் 442

மானொருகை ஏந்திநின்ற வள்ளலன்பர் தங்களுளே
நானொருவன் என்று நடித்தனையே – ஆனமற்றைப் 443

பாதகங்க ளெல்லாம் பழகிப் பழகியதில்
சாதகஞ்செய் வோரில் தலைநின்றாய் – பாதகத்தில் 444

ஓயா விகார உணர்ச்சியினால் இவ்வுலக
மாயா விகாரம் மகிழ்ந்தனையே – சாயாது 445

17. இளமை

நீஇளமை மெய்யாய் நினைந்தாய் நினைப்பெற்ற
தாயிளமை எத்தனைநாள் தங்கியதே – ஆயிளமை 446

மெய்கொடுத்த தென்பாய் விருத்தர்கட்கு நின்போல்வார்
கைகொடுத்துப் போவதனைக் கண்டிலையே – மெய்கொடுத்த 447

கூனொடும்கைக் கோலூன்றிக் குந்தி நடைதளர்ந்து
கானடுங்க நிற்பவரைக் கண்டிலையோ – ஊனொடுங்க 448

ஐயநட வென்றே அரும்புதல்வர் முன்செலப்பின்
பைய நடப்பவரைப் பார்த்திலையோ – வெய்யநமன் 449

நாடழைக்கச் சேனநரி நாயழைக்க நாறுசுடு
காடழைக்க மூத்துநின்றார் கண்டிலையோ – பீடடைந்த 450

மெய்யுலர்ந்து நீரின் விழியுலர்ந்து வாயுலர்ந்து
கையுலர்ந்து நிற்பவரைக் கண்டிலையோ – மெய்யுலர்ந்தும் 451

சாகான் கிழவன் தளர்கின்றான் என்றிவண்நீ
ஓகாளம் செய்வதனை ஓர்ந்திலையோ – ஆகாத 452

கண்டமிது பொல்லாக் கடுநோய் எனுங்குமர
கண்டமிஃ தென்பவரைக் கண்டிலையோ – கொண்டவுடல் 453

குட்டமுறக் கைகால் குறுக்குமிது பொல்லாத
குட்டமென நோவார் குறித்திலையோ – துட்டவினை 454

மாலையினும் காலையினும் மத்தியினும் குத்துமிது
சூலையென நோவாரைச் சூழ்ந்திலையோ – சாலவுமித் 455

தேக மதுநலியச் செய்யுங்காண் உய்வரிதாம்
மேகமிஃ தென்பாரை மேவிலையோ – தாகமுறச் 456

சித்தநோய் செய்கின்ற சீதநோய் வாதமொடு
பித்தநோய் கொண்டவர்பால் பேர்ந்திலையோ – மெத்தரிய 457

கைப்பிணியும் காற்பிணியும் கட்பிணியோ டெண்ணரிய
மெய்ப்பிணியும் கொண்டவரை விண்டிலையோ – எய்ப்புடைய 458

முட்டுறும் கைகால் முடங்கூன் முதலாய
எட்டுறுங் கொண்டவரை எண்ணிலையோ – தட்டுறிங் 459

கெண்ணற்ற துண்டேல் இளமை ஒருபொருளாய்
எண்ணப் படுமோவென் றெண்ணிலையே – எண்ணத்தில் 460

18. உடம்பு

பொய்யென் றறவோர் புலம்புறவும் இவ்வுடம்பை
மெய்யென்று பொய்ம்மயக்கம் மேவினையே – கைநின்று 461

கூகா எனமடவார் கூடி அழல்கண்டும்
நீகாதல் வைத்து நிகழ்ந்தனையே – மாகாதல் 462

பெண்டிருந்து மாழ்கப் பிணங்கொண்டு செல்வாரைக்
கண்டிருந்தும் அந்தோ கலங்கிலையே – பண்டிருந்த 463

ஊரார் பிணத்தின் உடன்சென்று நாம்மீண்டு
நீராடல் சற்றும் நினைந்திலையே – சீராக 464

இன்றிருந்தார் நாளைக் கிருப்பதுபொய் என்றறவோர்
நன்றிருந்த வார்த்தையும்நீ நாடிலையே – ஒன்றி 465

உறங்குவது போலுமென்ற ஒண்குறளின் வாய்மை
மறங்கருதி அந்தோ மறந்தாய்[1] – கறங்கின் 466

நெருநல்[2] உளனொருவன் என்னும் நெடுஞ்சொல்
மருவும் குறட்பா மறந்தாய் – தெருவில் 467

இறந்தார் பிறந்தா ரிறந்தா ரெனுஞ்சொல்
மறந்தாய் மறந்தாய் மறந்தாய் – இறந்தார் 468

பறையோசை அண்டம் படீரென் றொலிக்க
மறையோசை அன்றே மறந்தாய் – இறையோன் 469

புலனைந்தும்[3] என்றருளும் பொன்மொழியை மாயா
மலமொன்றி அந்தோ மறந்தாய் – நிலனொன்றி 470

விக்குள் எழநீர் விடுமி னெனஅயலோர்
நெக்குருகல் அந்தோ நினைந்திலையே – மிக்கனலில் 471

நெய்விடல்போல் உற்றவர்கண் ணீர்விட் டழவுயிர்பல்
மெய்விடலும் கண்டனைநீ விண்டிலையே – செய்வினையின் 472

வாள்கழியச் செங்கதிரோன் வான்கழிய நம்முடைய
நாள்கழிதற் கந்தோ நடுங்கிலையே – கோள்கழியும் 473

நாழிகையோர் நாளாக நாடினையே நாளைஒரு
நாழிகையாய் எண்ணி நலிந்திலையே – நாழிகைமுன் 474

1. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு. திருக்குறள் 339 (34 நிலையாமை 9)
2. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு.
3. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்று) அருள் செய்வான் அமரும்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட உழவதிர மழைஎன் றஞ்சிச்
சிலமந்தி அமைந்து மரமேறிமுகில் பார்க்கும் திருவையாறே. ஞானசம்பந்தர் தேவாரம் 1394 (1 – 130 – 1)

நின்றார் இருந்தார் நிலைகுலைய வீழ்ந்துயிர்தான்
சென்றார் எனக்கேட்டும் தேர்ந்திலையே – பின்றாது 475

தொட்டார் உணவுடனே தும்மினார் அம்மஉயிர்
விட்டார் எனக்கேட்டும் வெட்கிலையே – தட்டாமல் 476

உண்டார் படுத்தார் உறங்கினார் பேருறக்கம்
கொண்டார் எனக்கேட்டும் கூசிலையே – வண்தாரார் 477

நேற்று மணம்புரிந்தார் நீறானார் இன்றென்று
சாற்றுவது கேட்டும் தணந்திலையே – வீற்றுறுதேர் 478

ஊர்ந்தார் தெருவில் உலாப்போந்தார் வானுலகம்
சேர்ந்தார் எனக்கேட்டும் தேர்ந்திலையே – சேர்ந்தாங்கு 479

என்னே இருந்தார் இருமினார் ஈண்டிறந்தார்
அன்னே எனக்கேட்டும் ஆய்ந்திலையே – கொன்னே 480

மருவும் கருப்பைக்குள் வாய்ந்தே முதிராக்
கருவும் பிதிர்ந்துதிரக் கண்டாய் – கருவொன் 481

றொடுதிங்கள் ஐயைந்தில்[1] ஒவ்வொன்றில் அந்தோ
கெடுகின்ற தென்றதுவும் கேட்டாய் – படுமிந் 482

நிலைமுற்ற யோனி நெருக்கில் உயிர்போய்ப்
பலனற்று வீழ்ந்ததுவும் பார்த்தாய் – பலனுற்றே 483

காவென்று வீழ்ந்தக் கணமே பிணமாகக்
கோவென் றழுவார் குறித்திலையோ – நோவின்றிப் 484

பாலனென்றே அன்னைமுலைப் பாலருந்தும் காலையிலே
காலன் உயிர்குடிக்கக் கண்டிலையோ – மேலுவந்து 485

பெற்றார் மகிழ்வெய்தப் பேசிவிளை யாடுங்கால்
அற்றாவி போவ தறிந்திலையோ – கற்றாயப் 486

பள்ளியிடுங் காலவனைப் பார நமன்வாயில்
அள்ளியிடுந் தீமை அறிந்திலையோ – பள்ளிவிடும் 487

காளைப் பருவமதில் கண்டார் இரங்கிட அவ்
ஆளைச் சமன்கொள்வ தாய்ந்திலையோ – வேளைமண 488

மாப்பிள்ளை ஆகி மணமுடிக்கும் அன்றவனே
சாப்பிள்ளை யாதலெண்ணிச் சார்ந்திலையே – மேற்பிள்ளை 489

மாடையேர்ப் பெண்டுடனில் வாழுங்கால் பற்பலர்தாம்
பாடைமேல் சேர்தலினைப் பார்த்திலையோ – வீடலிஃது 490

இக்கணமோ மேல்வந் திடுங்கணமோ அன்றிமற்றை
எக்கணமோ என்றார்நீ எண்ணிலையே – தொக்குறுதோல் 491

1. ஐயைந்து என்பதனை – ஐந்து மைந்துமென உம்மைத்தொகையாகக் கொள்க. தொ. வே.

கூடென்கோ இவ்வுடம்பைக் கோள்வினை நீர் ஓட்டில்விட்ட
ஏடென்கோ நீர்மேல் எழுத்தென்கோ – காடென்கோ 492

பாழென்கோ ஒன்பதுவாய்ப் பாவையென்கோ வன்பிறவி
ஏழென்கோ கன்மமதற் கீடென்கோ – தாழ்மண்ணின் 493

பாண்டமென்கோ வெஞ்சரக்குப் பையென்கோ பாழ்ங்கரும
காண்டமென்கோ ஆணவத்தின் கட்டென்கோ – கோண்தகையார் 494

மெய்யென்கோ மாய விளைவென்கோ மின்னென்கோ
பொய்யென்கோ மாயப் பொடியென்கோ – [1]மெய்யென்ற 495

[2]மங்கலத்தை மங்கலத்தால் வாஞ்சித் தனருலகர்
அங்கவற்றை எண்ணா தலைந்தனையே – தங்குலகில் 496

மற்றிதனை ஓம்பி வளர்க்க உழன்றனைநீ
கற்றதனை எங்கே கவிழ்த்தனையே – அற்றவரை 497

இக்கட் டவிழ்த்திங் கெரிமூட் டெனக்கேட்டும்
முக்கட்டும் தேட முயன்றனையே – இக்கட்டு 498

மண்பட்டு வெந்தீ மரம்பட் டிடக்கண்டும்
வெண்பட் டுடுக்க விரைந்தனையே – பண்பட்ட 499

ஐயா அரைநாண் அவிழுமெனக் கேட்டுநின்றும்
மெய்யா பரணத்தின் மேவினையே – எய்யாமல் 500

காதிற் கடுக்கண் கழற்றுமெனக் கேட்டுநின்றும்
ஏதிற் பணியினிடத் தெய்தினையே – தாதிற்குத் 501

துற்கந்த மாகச் சுடுங்கால் முகர்ந்திருந்தும்
நற்கந்தத் தின்பால் நடந்தனையே – புற்கென்ற 502

வன்சுவைத்தீ நாற்ற மலமாய் வரல்கண்டும்
இன்சுவைப்பால் எய்தி யிருந்தனையே – முன்சுவைத்துப் 503

[3]பாறுண்ட காட்டில் பலர்வெந் திடக்கண்டும்
சோறுண் டிருக்கத் துணிந்தனையே – மாறுண்டு 504

கூம்புலகம் பொய்யெனநான் கூவுகின்றேன் கேட்டுமிகு
சோம்பலுடன் தூக்கந் தொடர்ந்தனையே – ஆம்பலனோர் 505

நல்வாழ்வை எண்ணி நயந்தோர் நயவாத
இல்வாழ்வை மெய்யென் றிருந்தனையே – சொல்லாவி 506

ஈன்றோன் தனைநாளும் எண்ணாமல் இவ்வுடம்பை
ஈன்றோரை ஈன்றோரென் றெண்ணினையே – ஈன்றோர்கள் 507

நொந்தால் உடனின்று நோவார் வினைப்பகைதான்
வந்தால் அதுநீக்க வல்லாரோ – வந்தாடல் 508

1, 2. மெய்யென்று + அமங்கலத்தை. 3. பாறு உண்ட என்பது – பருந்துகள் உண்ட

உற்றசிறார் நம்மடையா தோட்டுகிற்பார் தென்றிசைவாழ்
மற்றவன்வந் தால்தடுக்க வல்லாரோ - சிற்றுணவை 509

ஈங்கென்றால் வாங்கி யிடுவார் அருளமுதம்
வாங்கென்றால் வாங்கியிட வல்லாரோ - தீங்ககற்றத் 510

தூண்டா மனையாதிச் சுற்றமெலாம் சுற்றியிட
நீண்டாய் அவர்நன் னெறித்துணையோ - மாண்டார்பின் 511

கூடி அழத்துணையாய்க் கூடுவார் வன்னரகில்
வாடியழும் போது வருவாரோ - நீடியநீ 512

இச்சீவர் தன்துணையோ ஈங்கிவர்கள் நின்துணையோ
சீச்சீ இதென்ன திறங்கண்டாய் - இச்சீவர் 513

நின்னைவைத்து முன்சென்றால் நீசெய்வ தென்னவர்முன்
இந்நிலத்தில் நீசென்றால் என்செய்வர் - நின்னியல்பின் 514

19. பல பிறப்பு

எத்தனைதாய் எத்தனைபேர் எத்தனையூர் எத்தனைவாழ்
வெத்தனையோ தேகம் எடுத்தனையே - அத்தனைக்கும் 515

அவ்வவ் விடங்கடொறும் அவ்வவரை ஆண்டாண்டிங்
கெவ்வெவ் விதத்தால் இழந்தனையோ - அவ்விதத்தில் 516

ஒன்றேனும் நன்றாய் உணர்ந்திருத்தி யேலிவரை
இன்றே துறத்தற் கிசையாயோ - நின்றோரில் 517

தாயார் மனையார் தனயரார் தம்மவரார்
நீயார் இதனை நினைந்திலையே - சேயேகில் 518

ஏங்குவரே என்றாய் இயமன்வரின் நின்னுயிரை
வாங்கிமுடி யிட்டகத்தில் வைப்பாரோ - நீங்கியிவண் 519

உன்தந்தை தன்றனக்கிங் கோர்தந்தை நாடுவனீ
என்தந்தை என்றுரைப்ப தெவ்வாறே - சென்றுபின்னின் 520

தன்மனையாள் மற்றொருவன் தன்மனையாள் ஆவளெனில்
என்மனையாள் என்பதுநீ எவ்வணமே - நன்மைபெறும் 521

20. அஞ்ஞானம்

நட்பமைந்த நன்னெறிநீ நாடா வகைதடுக்கும்
உட்பகைவர் என்றிவரை ஓர்ந்திலையே - நட்புடையாய் 522

எம்மான் படைத்தஉயிர் இத்தனைக்குட் சில்லுயிர்பால்
இம்மால் அடைந்ததுநீ என்னினைந்தோ - வம்மாறில் 523

எம்பந்த மேநினக்கிங் கில்லையென்றால் மற்றையவர்
தம்பந்தம் எவ்வாறு தங்கியதே - சம்பந்தர் 524

அற்றவருக் கற்றசிவ னாமெனுமப் பொன்மொழியை[1]
மற்றைமொழி போன்று மறந்தனையே – சிற்றுயிர்க்குக் 525

கற்பனையில் காய்ப்புளதாய்க் காட்டும் பிரபஞ்சக்
கற்பனையே மெய்யென்று கண்டனையே – பற்பலவாம் 526

தூரியத்தில்[2] தோன்றொலிபோல் தோன்றிக் கெடுமாயா
காரியத்தை மெய்யெனநீ கண்டனையே – சீரியற்றும் 527

ஆடகத்தில் பித்தளையை ஆலித் திடுங்கபட
நாடகத்தை மெய்யென்று நம்பினையே – நீடகத்தில் 528

காயவித்தை யாலக் கடவுள் இயற்றுமிந்த
மாயவித்தை மெய்யெனநீ வாழ்ந்தனையே – [3]வாயவித்தை 529

இப்படக மாயை யிருள் தமமே என்னுமொரு
[4]முப்படகத் துள்ளே முயங்கினையே – ஒப்பிறைவன் 530

ஆனவொளி யிற்பரையாம் ஆதபத்தி னால்தோன்றும்
கானலினை நீராய்க் களித்தனையே – ஆனகிரி 531

யாசத்தி யென்றிடுமோர் அம்மைவிளை யாட்டெனுமிப்
பாசத்தி னுள்ளே படர்ந்தனையே – நேசத்தின் 532

பொய்யொன்றுண் மெய்யிற் புகும்பால லீலைதனை
மெய்யென்று வீணில் விரிந்தனையே – பொய்யென்று 533

மீட்டுநின்ற லீலா வினோத மெனுங்கதையைக்
கேட்டுநின்றும் அந்தோ கிளர்ந்தனையே – ஈட்டிநின்ற 534

காலத்தை வீணில் கழிக்கும் படிமேக
சாலத்தை மெய்யாய்த் தருக்கினையே – சாலத்தில் 535

கண்மையகன் றோங்குமந்த காரத்தில் செம்மாப்புற்
றுண்மையொன்றுங் காணா துழன்றனையே – வண்மையிலாய் 536

இங்குநினைப் பெரியோர் என்னினைப்பார் ஏமாப்பில்
கங்குலினைப் பகலாய்க் கண்டனையே – தங்குறுமித் 537

தேகாதி பொய்யெனவே தேர்ந்தார் உரைக்கவும்நீ
மோகாதிக் குள்ளே முயல்கின்றாய் – ஓகோநும் 538

[5]கோமுடிக்கண் தீப்பற்றிக் கொண்டதென்றால் மற்றதற்குப்
பூமுடிக்கத் தேடுகின்றார் போன்றனையே – மாமுடிக்கும் 539

1. வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியும் கொற்றவன் தனக்கு மந்திரியாய குலச்சிறை குலாவிநின் றேத்தும் ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன் உலகினில் இயற்கையை ஒழித்திட்டு அற்றவர்க்கு அற்ற சிவன்உறை கின்ற ஆலவாய் ஆவதும் இதுவே.

ஞானசம்பந்தர் தேவாரம் – 4091 (3-120-2)

2. தூரியம் – பறை. தொ. வே. 3. வாய் அவித்தை – பொருந்தின அஞ்ஞானம்
4. முப்படகம் என்பது – மூன்று மறைப்பு ; அவை மான், ஆங்காரம் மூலப்பகுதி.
5. கோமுடி என்பது – குடுமி

வாழ்வுநிலை யன்றிமைப்பில் மாறுகின்ற தென்றுரைத்தும்
[1]வீழ்வுகொடு வாளா விழுகின்றாய் - தாழ்வுறநும் 540

விண்டுறுங் [2]கை வீடனலால் வேகின்ற தென்னவுட்போய்
உண்டுறங்கு கின்றோரை ஒத்தனையே - தொண்டுலகங் 541

கானமுயற் கொம்பாய்க் கழிகின்ற தென்கின்றேன்
நீநயமுற் றந்தோ நிகழ்கின்றாய் - ஆனநும்மூர் 542

வெள்ளத்தி னால்முழுகி விட்டதென்றால் சென்றுகடை
கொள்ளத் திரிபவர்போல் கூடினையே - கொள்ளவிங்கு 543

கண்டனவெல் லாம்நிலையாக் கைதவமென் கின்றேன்நீ
கொண்டவைமுற் சேரக் குறிக்கின்றாய் - உண்டழிக்க 544

[3]ஊழிவெள்ளம் வந்ததென்றால் உண்பதற்கும் ஆடுதற்கும்
ஊழிநன்னீ ரோவென்பார் ஒத்தனையே - ஏழியற்றும் 545

தற்புவனம் போகம் தனுகரணம் என்கின்ற
சொற்பனத்தில் அந்தோ துவன்றினையே - பற்பகலும் 546

உண்டனவே உண்கின்றாய் ஓர்ந்தனவே ஓர்கின்றாய்
கண்டனவே கண்டு களிக்கின்றாய் - கொண்டனவே 547

கொண்டியங்கு கின்றாய் குறித்தனவே பிற்குறித்துப்
பண்டறியார் போலப் படர்கின்றாய் - பண்டறிந்து 548

சொல்லாடி நின்றனவே சொல்கின்றாய் மற்றிதனை
நல்லோர்கள் கண்டால் நகையாரோ - செல்லான 549

காலம்போல் இங்குநிகழ் காலமும்காண் கின்றியெதிர்
காலமற்றும் அத்திறம்மேற் காண்குவையேல் - சாலவுமுன் 550

போதுசெலா முன்னமனு பூதியைநீ நாடாமல்
யாதுபயன் எண்ணி இனைகின்றாய் - தீதுசெயும் 551

21. ஆணவம்

வீணவத்தை யெல்லாம் விளைக்கும் திறல்மூல
ஆணவத்தி னாலே அழிந்தனையே - ஆணவத்தில் 552

நீயார் எனஅறியாய் நின்னெதிரில் நின்றவரை
நீயார் எனவினவி நீண்டனையே - ஓயாமல் 553

ஊனின்ற ஒன்றின் உளவறியாய் அந்தோநீ
நானென்று சொல்லி நலிந்தனையே - நானென்று 554

சொல்லுதியோ சொல்லாயோ துவ்வாமை பெற்றொருநீ
அல்லலுறுங் காலத் தறைகண்டாய் - அல்லவெலாம் 555

நீஇங்கே நான்அங்கே நிற்கநடு வேகுதித்தால்
நீஎங்கே நான்எங்கே நின்றறிகாண் - நீ இங்கு 556

1. வீழ்வு - விருப்பம்
2. கை என்பது - தாழ்வாரத்து வாரைகள் 3. ஊழி என்பது - கடல்

ஒன்றெடுக்கச் சென்றுமற்றை ஒன்றெடுக்கக் காண்கின்றேன்
இன்றடுத்த நீளங் கிருந்தனையே – மன்றடுத்த 557

தாளா தரித்தேநின் றன்னைமறந் துய்யாது
வாளா மதத்தின் மலிகின்றாய் – கேளாயிச் 558

சார்பிலொன்று விட்டொழிந்தால் சாலமகிழ் கிற்பேனான்
சோர்புகொண்டு நீதான் துயர்கின்றாய் – சார்புபெருந் 559

[1]தூவென்று நானிவணஞ் சும்மா இருந்தாலும்
வாவென் றெனையும் வலிக்கின்றாய் – ஓவுன்றன் 560

சூழ்ச்சியறி யேன்நீ சுழல்கின்ற போதெல்லாம்
சூழ்ச்சியிலே நானும் சுழல்கின்றேன் – நீட்சியில்நீ 561

காலசைத்தால் யானும் கடிதில் தலையசைப்பேன்
மாலசைத்த நின்புணர்ப்பின் வாறெதுவோ – வாலுமண்டக் 562

[2]கூவத்தில் யானோர் குடநீ கயிற்றோடும்
ஏவல் கொளுமேழை என்கேனோ – பாவத்தில் 563

சுற்றுண்ட நீகடலில் தோன்றுசுழி யாகஅதில்
எற்றுண்ட நான்திரணம் என்கேனோ – பற்றிடுநீ 564

சங்கற்ப மாஞ்சூறை தானாக நானாடும்
அங்கட் சருகென் றறைகேனோ – பொங்குற்ற 565

சேலைவிரா யோர்தறியில் செல்குழைநீ பின்தொடரும்
நூலிழைநான் என்று நுவல்கேனோ – மாலிடுநீ 566

துள்ளுறுப்பின் மட்பகைஞன் சுற்றாழி யாகவதின்
உள்ளுறுப்பே நானென் றுரைக்கேனோ – எள்ளுறுநீ 567

பாழலைவா னேகும் பருந்தாக அப்பருந்தின்
நீழலைநான் என்று நினைகேனோ – நீழலுறா 568

நின்வசம்நான் என்றுலகு நிந்தைமொழி கின்றதலால்
என்வசம்நீ என்ப திலைகண்டாய் – என்வசம்நீ 569

ஆனால் எளியேனுக் காகாப் பொருளுளவோ
வானாடர் வந்து வணங்காரோ – ஆனாமல்[3] 570

எண்ணுதற்கும் பேசுதற்கும் எட்டாப் பரஞ்சோதி
கண்ணுதலும் அங்கைக் கனியன்றோ – என்னுமிடத் 571

தென்செய்வே னோர்கணமும் என்சொல்வழி நில்லாமல்
கொன்செய்வேன் என்று குதிக்கின்றாய் – வன்செய்யும் 572

சிந்தோடும்[4] ஓர்வடவைத் தீயும் கரத்தடைப்பர்
அந்தோ உனையார் அடக்குவரே – வந்தோடும் 573

1. தூ என்று என்பது – ஆதரவென்று. 2. அண்டக்கூவம் என்பது – உலகமாகிய கிணறு.
3. ஆனாமை என்பது – விட்டு நீங்காமை. தொ. வே. 4. சிந்து என்பது – கடல். தொ. வே.

கச்சோதம்[1] என்னக் கதிரோன் தனையெடுப்பர்
அச்சோ உனையார் அடக்குவரே – வைச்சோங்கு 574

மூவுலகும் சேர்த்தொருதம் முன்றானை யின்முடிவர்
ஆவுனையும் இங்கார் அடக்குவரே – மேவுபல 575

தேசமென்றும் காலமென்றும் திக்கென்றும் பற்பலவாம்
வாசமென்றும் அவ்வவ் வழக்கென்றும் – மாசுடைய 576

போகமென்றும் மற்றைப் புலனென்றும் பொய்அகலா
யோகமென்றும் பற்பலவாம் யூகமென்றும் – மேகமென்றும் 577

வானென்றும் முந்நீர் மலையென்றும் மண்ணென்றும்
ஊனென்றும் மற்றை உறவென்றும் – மேல்நின்ற 578

சாதியென்றும் வாழ்வென்றும் தாழ்வென்றும் இவ்வுலக
நீதியென்றும் கன்ம நெறியென்றும் – ஓதரிய 579

அண்டமென்றும் அண்டத் தசைவும் அசைவுமலாப்
பண்டமென்றும் சொல்பவெலாம் பன்முகங்கள் – கொண்டிருந்த 580

உன்நினைவி னுள்ளே உதித்திட் டுலவிநிற்ப
எந்நினைவு கொண்டோமற் றிவ்வுலகர் – எந்நவையும் 581

தந்தோன் எவனோ சதுமுகனுண் டென்பார்கள்
அந்தோநின் செய்கை அறியாரே – அந்தோநான் 582

ஆமென்றால் மற்றதனை அல்லவென்பாய் அல்லவென்றால்
ஆமென்பாய் என்னை அலைக்கின்றாய் – நாம்அன்பாய் 583

என்றும் பிறந்திறவா இன்பம் அடைதுமென்றால்
நன்றென் றொருப்படுவாய் நண்ணுங்கால் – தொன்றெனவே[2] 584

செல்கிற்பாய் செல்லாச் சிறுநடையில் தீமையெலாம்
நல்கிற்பாய் என்னேநின் நட்புடைமை – சொல்கிற்பில் 585

ஆவதுவும் நின்னால் அழிவதும்நின் னாலெனையான்
நோவதுவும் கண்டயலில் நோக்கினையே – தாவுமெனக் 586

காணவலம் பெண்ணவலம் ஆகும் பொருளவலம்
ஊணவலம் உற்றாரோ டூரவலம் – பூணவலம் 587

ஊன்அவலம் அன்றியும்என் உற்றதுணை யாம்நீயும்
தான்அவலம் என்றாலென் சாற்றுவதே – நான்இவணம் 588

இன்பமெது கண்டேமால் இச்சையெலாம் துன்பமதில்
துன்பம் பிறப்பென்றே சோர்கின்றேன் – வன்புடைய 589

இப்பிறவித் துன்பத்தி னும்திதியில் துன்பமது
செப்பரிதாம் என்றே திகைக்கின்றேன் – செப்பிறப்பின் 590

1. கச்சோதம் – மின்மினிப்பூச்சி. தொ. வே. 2. தொன்று – பழமை. தொ. வே.

ஓயாத துன்பம் உரைக்க உடம்பெல்லாம்
வாயாகி னும்போத மாட்டாதேல் – ஏயேநாம் 591

செய்வதென்னோ என்று தியங்குகின்றேன் இவ்வணம்நான்
நைவதெல்லாம் கண்டு நடந்தனையே – கைவருமிவ் 592

இல்லிக் குடமுடைந்தால் யாதாமென் றுன்னுடன்யான்
சொல்லித் திரிந்துமெனைச் சூழ்ந்திலையே – வல்இயமன் 593

நாளையோ இன்றோ நடக்கின்ற நாட்களிலெவ்
வேளையோ தூது விடில்அவர்கள் – கேளையோ 594

நல்லோம் எனினும் நடவார் நடவார்நாம்
செல்லோம் எனினுமது செல்லாதே – வல்லீர்யாம் 595

இன்சொலினோம் இன்றிங் கிருந்துவரு வோம்எனயாம்
என்சொலினும் அச்சொலெலாம் ஏலாதே – மன்சொலுடைத் 596

தாமரையோன் மான்முதலோர் தாம்அறையா ராயிலன்று
நாமறைவோம் என்றல் நடவாதே – நாமிவணம் 597

அந்நாள் வருமுன்னர் ஆதி அருளடையும்
நன்னாள் அடைதற்கு நாடுதுங்காண் – என்னாநின் 598

றோதுகின்றேன் கேட்டும் உறார்போன் றுலகியலில்
போதுகின்றாய் யாது புரிகிற்பேன் – தீதுநன்றோடு 599

22. முக்குணம்

ஏற்றவடி நாள்உறவாம் என்னைவிட்டுத் தாமதமா
நேற்றையுற வோடுறவு நேர்ந்தனையே – சாற்றுமந்த 600

தாமதமே ஓரவித்தை தாமதமே ஆவரணம்[1]
தாமதமே மோக சமுத்திரம்காண் – தாமதமென் 601

றையோ ஒருநீ அதனோடு கூடினையால்
பொய்யோநாம் என்று புகன்றதுவே – கையாமல் 602

ஒன்னலர்போல் கூடுவா ரோடொருநீ கூடுங்கால்
என்னைநினை யாயென்சொ லெண்ணுதியோ – பன்னுறுநின் 603

தீதெல்லாம் நானாதி சேடர்பல ராய்ப்பிரமன்
போதெல்லாம் சொல்லிடினும் போதாதே – ஆதலினால் 604

வைகின்றேன் வாழ்த்தாய் மதித்தொருநீ செய்வதெல்லாம்
செய்கின்றாய் ஈதோர் திறமன்றே – உய்கிற்பான் 605

வாடுகின்றேன் நின்னை மதித்தொருநான் நீமலத்தை
நாடுகின்றாய் ஈதோர் நலமன்றே – கூடுகின்ற 606

ஈண்டோர் அணுவாய் இருந்தநீ எண்டிசைபோல்
நீண்டாய் இஃதோர் நெறியன்றே – வேண்டாநீ

1. ஆவரணம் என்பது – மறைப்பு

மற்றவர் போல் அன்றே மனனேநின் வண்புகழை
முற்றுமிவண் ஆர்தான் மொழிவாரே - சுற்றிமனம் 608

தானடங்கின் எல்லாச் சகமும் அடங்குமொரு
மானடங்கொள் பாத மலர்வாய்க்கும் - வானடங்க 609

எல்லா நலமும் இதனால் எனமறைகள்
எல்லாம் நின்சீரே எடுத்தியம்பும் - எல்லார்க்கும் 610

மாகமங்கொண் டுற்ற மனோலயமே வான்கதியென்
றாகமங்கள் நின்சீர் அறைந்திடுங்காண் - ஆகுமிந்த 611

நன்மை பெறுமேன்மை நண்ணியநீ நின்னுடைய
தன்மைவிடல் அந்தோ சதுரலஇப் - புன்மையெலாம் 612

23. பன்மத சுகம்

விட்டொழித்து நான்மொழியும் மெய்ச்சுகத்தை நண்ணுதிநீ
இட்டிழைத்த அச்சுகந்தான் யாதென்னில் - கட்டழித்த 613

வேடம் சுகமென்றும் மெய்யுணர்வை யின்றிநின்ற
மூடம் சுகமென்றும் முன்பலவாம் - தோடம்செய் 614

போகம் சுகமென்றும் போகம் தரும்கரும
யோகம் சுகமென்றும் உண்டிலையென் - றாகஞ்செய் 615

போதம் சுகமென்றும் பொன்றல்சுகம் என்றும்விந்து
நாதம் சுகமென்றும் நாம்பொருளென் - றோதலஃ 616

தொன்றே சுகமென்றும் உட்கண் டிருக்குமந்த
நன்றே சுகமென்றும் நாம்புறத்தில் - சென்றேகண் 617

டாற்றல் சுகமென்றும் அன்பறியாச் சூனியமே
ஏற்ற சுகமென்றும் இவ்வண்ணம் - ஏற்றபடி 618

வெல்லுகின்றோர் போன்று விரிநீர் உலகிடையே
சொல்லுகின்றோர் சொல்லும் சுகமன்று - சொல்லுகின்ற 619

24. சித்தாந்தம்

வானாதி தத்துவங்கள் மாய்த்தாண் டுறுகின்ற
நானாதி மூன்றிலொன்று நாடாமல் - ஆனாமை 620

எள்ளும் பகலும் இரவுமிலா ஓரிடத்தில்
உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் - வள்ளலென 621

வாழும் பரசிவத்தின் வன்னிவெப்பம் போலமுற்றும்
சூழும் சுகமே சுகம்கண்டாய் - சூழ்வதனுக் 622

கெவ்வா றிருந்தால் இயலும் எனிலம்ம
இவ்வா றிருந்தால் இயலாதால் - செவ்வாற்றில் 623

25. உபதேசம்

பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டுமது
பற்றற்றால் அன்றிப் பலியாதால் – பற்றற்றல் 624

வேதனையால் ஈங்கு விரியும் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால் – வாதனையும் 625

ஈனமந்தோ இவ்வுலகம் என்றருளை நாடுகின்ற
ஞானம்வந்தால் அன்றி நலியாதான் – ஞானமது 626

போகமுற்றும் பொய்யெனவே போதும் அனித்தியவி
வேகமுற்றால் அன்றி விளங்காதால் – ஆகவஃ 627

துண்ணவந்தால் போலுமிவண் உற்றுவிசா ரித்திடுமோர்
எண்ணம்வந்தால் அன்றி இசையாதால் – எண்ணமது 628

பங்கமடைந் தார்அவையைப் பாராது சாதுக்கள்
சங்கமடைந் தாலன்றிச் சாராதால் – இங்கதனால் 629

26. அசாதுக்கள்

வீழ்முகத்த ராகிநிதம் வெண்ணீ றணிந்தறியாப்
பாழ்முகத்தோர் தம்பால் படர்ந்துறையேல் – பாழ்முகத்தில் 630

பேயாட உள்ளறியாப் பித்தாட நின்னுடனே
வாயாடு வோர்பால் மருவிநில்லேல் – நீயாடிப் 631

பேதித் திடவும் பிறழ்ந்திடவும் நின்னுடனே
வாதித் திடுவோர்பால் வாய்ந்துறையேல் – சாதித்துச் 632

சைவமெங்கே வெண்ணீற்றின் சார்பெங்கே மெய்யான
தெய்வமெங்கே என்பவரைச் சேர்ந்துறையேல் – உய்வதெங்கே 633

தீராச் சிவசிந்தை செய்துசிறு தேவர்களை
நேராய்ப் பிதற்றுவர்பால் நேர்ந்துறையேல் – ஓராமல் 634

எள்ளென்றும் தெய்வமென்ப தில்லை இதுதெளிந்து
கொள்ளென்றும் துள்ளுகின்றோர் கூட்டமுறேல் – நள்ளொன்று 635

நாமென்றும் நம்மையன்றி நண்ணும் பிரமமில்லை
ஆமென்றும் சொல்பவர்பால் ஆர்ந்துறையேல்–தாமொன்ற 636

எல்லா அறிவும் எமதறிவே என்றுரைக்கும்
பொல்லா வலக்காரர் பொய்உகவேல் – புல்லாக 637

அற்பமே மற்றவெலாம் ஆயிலழி[1] யாக்காய
கற்பமே வத்துவென்பார் கண்ணடையேல் – சிற்சிலவாம் 638

சித்திகளே வத்துவென்போர்ச் சேர்ந்துறையேல் பன்மாயா
சத்திகளே வத்துவென்போர் சார்படையேல் – பொத்தியஇச் 639

சன்மமே தோற்றும் தரமாம் திரமணித்த
கன்மமே வத்துவென்போர் கண்ணுறையேல் – கன்மமிகு

1. ஆயில் என்பது – ஆராயுங்கால் எனக் கொள்க.

மாகம் கதியென்பார் மாட்டுறையேல் பல்போக
யோகம் பொருளென்பா ரூடுறையேல் – ஏகம்கொள் 641

மண்ணென்பார் வானென்பார் வாய்முச் சுடரென்பார்
பெண்ணென்பார் மற்றவர்தம் பேருரையேல் – மண்ணின்பால் 642

மன்னுரையாச் சில்லோர் மரந்தெய்வம் என்பார்மற்
றென்னுரையார் ஈண்டவர்பால் எய்தியிடேல் – மன்நலங்கள் 643

பூத்தால் சிறுவர்களும் பூசா பலம்என்பர்
தேற்றார் சிவபூசை செய்யாராய்ப் – பூத்தாவி 644

வீறுகின்ற பூசையிலென் வீண்என்று வீண்பாழ்வாய்க்
கூறுகின்ற பேயர்கள்பால் கூடியுறேன் – மாறுகின்ற 645

நீட்கோல வாழ்க்கையெலாம் நீத்திடுவோன் பொன்அறைக்குத்
தாட்கோல் இடுவாரைச் சார்ந்துரையேல் – நீட்கோல 646

மெய்யொழுக்கத் தார்போல் வெளிநின் றகத்தொழியாப்
பொய்யொழுக்கத் தார்பால் பொருந்தியுறேல் – பொய்யொழுக்கில் 647

பொய்ந்நூல் பதறிப் புலம்புகின்ற பித்தர்கள்பால்
அந்நூல் விரும்பி அடைந்தலையேல் – கைந்நேர்ந்து 648

கோடாது கோடி கொடுத்தாலும் சைவநெறி
நாடா தவரவையை நண்ணியிடேல் – கோடாது 649

கொல்லா விரதமது கொள்ளாரைக் காணிலொரு
புல்லாக எண்ணிப் புறம்பொழிக – எல்லாமும் 650

ஆகநவில் கின்றதென்நம் ஐயனுக்கன் பில்லாரை
நீகனவி லேனும் நினையற்க – ஏகனடிக்கு 651

27. சாதுக்கள்

அன்பே வடிவாய் அருளே உயிராய்ப்பேர்
இன்பே உணர்வாய் இசைந்தாரும் – அன்பாகிக் 652

கண்டிகையே பூணிற் கலவையே வெண்ணீறாய்க்
கொண்டிகவாச் சார்பு குறித்தாரும் – தொண்டுடனே 653

வாய்மலரால் மாலை வகுத்தலொடு நம்மிறைக்குத்
தூய்மலரால் மாலை தொடுப்பாரும் – சார்மலரோன் 654

ஏர்[1]நந்த னப்பணிகண் டிச்சையுற நம்மிறைக்குச்
சீர்நந்த னப்பணிகள் செய்வோரும் – நார்நந்தாத் 655

தீயின்மெழு காச்சிந்தை சேர்ந்துருகி நம்மிறைவாழ்
கோயில்மெழு காநின்ற கொள்கையரும் – மேயினரைத் 656

தாயில் வளர்க்கும் தயவுடைய நம்பெருமான்
கோயில் விளக்கும் குணத்தோரும் – தூயஅருள் 657

1. நந்தன் என்பது – நந்து (சங்கு) உடையவன் – விஷ்ணு.

இன்புடனே தீபமுதல் எல்லாச் சரியைகளும்
அன்புடனே செய்தங் கமர்வாரும் – அன்புடனே 658

அண்ணியமேல் அன்பர்க் கமுதீத லாதிசிவ
புண்ணியமே நாளும் புரிவோரும் – புண்ணியமாம் 659

தேனே அமுதே சிவமே சிவமேஎம்
மானேஎன் றேத்தி மகிழ்வாரும் – வானான 660

மன்னே அருட்கடலே மாணிக்க மேஎங்கள்
அன்னேஎன் றுன்னி அமர்வோரும் – நன்னேயப் 661

பண்ணீர் மொழியால் பரிந்தேத்தி ஆனந்தக்
கண்ணீர்கொண் டுள்ளம் களிப்போரும் – உண்ணீரில் 662

பண்டுகண்டும் காணாப் பரிசினராய்ப் பொன்மேனி
கண்டுகண்டு நாளும் களிப்போரும் – தொண்டடையும் 663

பொற்பதிகம் என்றெண்ணிப் போற்றிஒரு மூவர்களின்
சொற்பதிகம் கொண்டு துதிப்போரும் – சொற்பனத்தும் 664

மாசகத்தில் சேர்க்காத மாணிக்கம் என்றதிரு
வாசகத்தை வாயால் மலர்வோரும் – வாசகத்தின் 665

மன்னிசைப்பால் மேலோர் வகுத்தேத்தி நின்றதிரு
இன்னிசைப்பா ஆதி இசைப்போரும் – மன்னிசைப்பின் 666

நல்வாழ் வருளுகின்ற நம்பெருமான் மான்மியங்கள்
சொல்வோரும் கேட்டுத் தொழுவோரும் – சொல்வாய்ந்த 667

தாதாவென் றன்புடனே சாமகீ தங்கள்முதல்
வேதாக மங்கள் விரிப்போரும் – வேதாந்தம் 668

சேர்ந்தோர்க் கருளும் சிவமே பொருளென்று
தேர்ந்தே சிவபூசை செய்வோரும் – ஆர்ந்தேத்தி 669

நன்னெஞ்சே கோயிலென நம்பெருமான் தன்னைவைத்து
மன்னும் சிவநேயம் வாய்ந்தோரும் – முன்அயன்றன் 670

அஞ்செழுத்தெல் லாம்கேட்கில் அஞ்செழுத்தாம் எம்பெருமான்
அஞ்செழுத்தால் அர்ச்சித் தமர்வோரும் – அஞ்சனவே 671

விஞ்சும் பொறியின் விடயமெலாம் நம்பெருமான்
செஞ்சுந் தரப்பதத்தில் சேர்ந்தோரும் – வஞ்சம்செய் 672

பொய்வே தனைநீக்கும் புண்ணியன்பால் தம்முயிரை
நைவே தனமாக்கும் நல்லோரும் – செய்வேலை 673

நீட நடத்தலொடு நிற்றல்முதல் நம்பெருமான்
ஆடல் அடித்தியானம் ஆர்ந்தோரும் – வாடலறத் 674

தூய நனவிற் சுழுத்தியொடு நம்பெருமான்
நேயம் நிகழ்த்தும் நெறியோரும் – மாயமுறு

மானதுவாய் நின்ற வயம்நீக்கித் தானற்றுத்
தானதுவாய் நிற்கும் தகையோரும் - வானமதில் 676

வானங்கண் டாடும் மயில்போன்று நம்பெருமான்
தானங்கண் டாடும் தவத்தோரும் - மோனமொடு 677

தாழ்சடையும் நீறும் சரிகோவ ணக்கீளும்
வாழ்சிவமும் கொண்டு வதிவோரும் - ஆழ்நிலைய 678

வாரியலை போன்றசுத்த மாயையினால் ஆம்பூத
காரியங்க ளாதியெலாம் கண்டொழித்து - ஊர்இயங்கத் 679

28. சிவயோகம்

தஞ்சம் தருமலரோன் தத்துவமாம் பூதங்கள்
ஐஞ்சும் பொறியஞ்சும் அஞ்சறிவும் - அஞ்செனுமோர் 680

வாக்குமுதல் ஐஞ்சுமற்று மாலோன்தன் தத்துவமாம்
ஊக்கும் கலைமுதலாம் ஓரேழும் - நீக்கி அப்பால் 681

மேவி விளங்குசுத்த வித்தைமுதல் நாதமட்டும்
தாவி வயங்குசுத்த தத்துவத்தில் - மேவிஅகன் 682

றப்பால் அருள்கண் டருளால் தமைத்தாம்கண்
டப்பால் பரவெளிகண் டப்பாலுக் - கப்பாலும் 683

தீராச் சுயமாய்ச் சிதானந்த மாம்ஒளியைப்
பாரா இருந்த படியிருந்து - பேராது 684

கண்டதுவென் றொன்றும் கலவாது தாம்கலந்து
கொண்டசிவ யோகியராம் கொற்றவரும் - அண்டரிய 685

சத்துவத்தில் சத்துவமே தம்முருவாய்க் கொண்டுபர
தத்துவத்தின் நிற்கும் தகவோரும் - அத்துவத்தில் 686

தீதும் சுகமும் சிவன்செயலென் றெண்ணிவந்த
யாதும் சமமா இருப்போரும் - கோதுபடக் 687

கூறும் குறியும் குணமும் குலமுமடி
ஈறும் கடையும் இகந்தோரும் - வீறுகின்ற 688

சேந்தி னடைந்தவெலாஞ் சீரணிக்கச் சேர்சித்த
சாந்தி யுடனே சரிப்போரும் - சாந்திபெறத் 689

தம்மையுறும் சித்தெவையும் தாமுவத்தல் செய்யாமல்
செம்மையுடன் வாழும் திறலோரும் - எம்மையினும் 690

ஆராமை ஓங்கும் அவாக்கடல்நீர் மான்குளம்பின்
நீராக நீந்தி நிலைத்தோரும் - சேராது 691

தம்பொருளைக் கண்டே சதானந்த வீட்டினிடைச்
செம்பொருளைச் சார்ந்த திறத்தோரும் - மண்பொருள்போய்த் 692

தாயர் எனமாதர் தம்மையெண்ணிப் பாலர்பித்தர்
பேயரென நண்ணும் பெரியோரு – மீயதனின் 693

எய்ப்பரிசாம் ஓர்திரணம் எவ்வுலகும் செய்தளிக்க
மெய்ப்பரிசஞ் செய்யவல்ல வித்தகரும் – மெய்ப்படவே 694

யாவும் அறிந்தும் அறியார்போன் றெப்பொழுதும்
சாவும் பிறப்பும் தவிர்ந்தோரும் – ஓவலின்றி 695

வைதிடினும் வாழ்கஎன வாழ்த்தி உபசாரம்
செய்திடினும் தன்மை திறம்பாரும் – மெய்வகையில் 696

தேறா வுலகம் சிவமயமாய்க் கண்டெங்கும்
ஏறா திழியா திருப்போரும் – மாறாது 697

மோனந்தான் கொண்டு முடிந்தவிடத் தோங்குபர
மானந்தா தீதத் தமர்ந்தோரும் – தாம்நந்தாச் 698

சாதுக்கள் ஆமவர்தம் சங்க மகத்துவத்தைச்
சாதுக்க ளன்றியெவர் தாமறிவார் – நீதுக்கம் 699

நீங்கி அன்னோர் சங்கத்தில் நின்றுமகிழ்ந் தேத்திநிதம்
ஆங்கவர்தாட் குற்றேவல் ஆய்ந்தியற்றி – ஓங்குசிவ 700

பஞ்சாட் சரத்தைப் பகரருளே நாவாக
எஞ்சாப் பரிவுடனே எண்ணியருள் – செஞ்சோதித் 701

தாதொன்று தும்பைமுடித் தாணுஅடி யொன்றிமற்றை
யாதொன்றும் நோக்கா தமைந்திடுக – தீதென்ற 702

பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வில் எஞ்ஞான்றும்
வாழ்வாய்என் னோடும் மகிழ்ந்து. 703

திருச்சிற்றம்பலம்

1. மண்ணாசை பொன்னாசைகளை முற்றுந் துறந்தவர்களும் பசிப்பிணியால் மெலிகின்ற ஓரோர் காலத்து, மாதரும் உணவு கொடுத்தற்குரிய ராகலின், தாயரென மாதர் தம்மை யெண்ணும் பெரியோர் என்று காட்டியவாறு காண்க. அன்றியும், மூவாசைகளில் மண்ணாசையும், பொன்னாசையும் அறவே ஒழித்தவர்களுக்கும், பெண்ணாசை ஒழிவது அருமையாதலால், மாதரைத் தாயரென எண்ண வேண்டும் என்னும் உபாயவகையை உணர்த்திய வாறுமாம்.

4. சிவநேச வெண்பா

காப்பு
நேரிசை வெண்பா
அருட்பெருஞ்ஜோதி

8 முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே - மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண். 1

9 வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடையாய்
நீறுடையாய் நேயர்கடந் நெஞ்சுடையாய் - கூறு
முதல்வாஓர் ஆறு முகவா முக் கண்ணன்
புதல்வாநின் தாளென் புகல். 2

10 சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருபப்
பேர்சான்ற உண்மைப் பிரமமே - நேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக் கன்புநின்பால்
நீடும் படிநீ நிகழ்த்து. 1

11 நினைப்பித்தா நித்தா நிமலா எனநீ
நினைப்பித்தால் ஏழை நினைப்பேன் - நினைப்பின்
மறப்பித்தாலி யானும் மறப்பேன் எவையும்
பிறப்பித்தாய் என்னாலென் பேசு. 2

12 உருவாய் உருவில் உருவாகி ஓங்கி
அருவாய் அருவில் அருவாய் - ஒருவாமல்
நின்றாயே நின்ற நினைக்காண்ப தெவ்வாறோ
என்தாயே என்தந்தை யே. 3

13 வெஞ்சஞ் சலமா விகாரம் எனும்பேய்க்கு
நெஞ்சம் பறிகொடுத்து நிற்கின்றேன் - அஞ்சலென
எண்தோள் இறையே எனையடிமை கொள்ளமனம்
உண்டோ இலையோ உரை. 4

14 அப்பாலுன் சித்தம் அறியேன் எனக்கம்மை
அப்பாநின் தாளன்றி யார்கண்டாய் - இப்பாரில்
சாதிஉரு வாக்குந் தளை அவிழ்த்துத் தன்மயமாம்
சோதிஉரு வாக்குந் துணை. 5

15 பேரறிவால் கண்டும் பெரியோர் அறியாரேல்
யாரறிவார் யானோ அறிகிற்பேன் - சீர்கொள்
வெளியாய் வெளிக்குள் வெளியாய் ஒளிக்குள்
ஒளியாகி நின்ற உனை. 6

16 வந்தித்தேன்[1] பிட்டுகந்த வள்ளலே நின்னடியான்
சிந்தித்தேன் என்றல் சிரிப்பன்றோ - பந்தத்தாஞ்
சிந்துசிந்திப் பித்தெனது சிந்தையுள் நின் பொன்னருளே
வந்துசிந்திப் பித்தல் மறந்து. 7

1. வந்திதேன் எனற்பாலது - வந்தித்தேன் என விரித்தல் விகாரமாயிற்று. ஈண்டு தேன் என்பது இனிமை. தொ. வே.

17 தேனென்ற இன்சொல் தெரிந்துநினைப் பாடுகின்றேன்
நானென் றுரைத்தல் நகைஅன்றோ – வானின்ற
ஒண்பொருள்நீ உள்ளம் உவந்தருளால் இன்சொல்லும்
வண்பொருளும் ஈதல் மறந்து. 8

18 அண்டங்க ளோஅவற்றின் அப்பாலோ இப்பாலோ
பண்டங்க ளோசிற் பரவெளியோ – கண்தங்க
வெம்பெருமால் நீத்தவர் தம் மெய்யுளமோ தையலொடும்
எம்பெருமான் நீவாழ் இடம். 9

19 பூதமெங்கே மற்றைப் புலனெங்கே பல்லுயிரின்
பேதமெங்கே அண்டமெனும் பேரெங்கே – நாதமெங்கே
மன்வடிவ மெங்கே மறையெங்கே வான்பொருள்நீ
பொன்வடிவம் கொள்ளாத போது. 10

20 பேருருவோ சோதிப் பிழம்பாகும் சின்மயத்தின்
சீருருவோ தேவர் திருவுருவம் – நேருருவில்
சால்புறச்சேர் அண்ட சராசரங்கள் எல்லாம்நும்
கால்விரற்பால் நின்றொடுங்குங் கால். 11

21 இன்றோ பகலோ இரவோ வருநாளில்
என்றோ அறியேன் எளியேனே – மன்றோங்கும்
தாயனையாய் நின்னருளாம் தண்ணமுதம் உண்டுவந்து
நாயனையேன் வாழ்கின்ற நாள். 12

22 மண்ணாசை வெற்பே மறிகடலே பொன்னாசை
பெண்ணாசை ஒன்றேஎன் பேராசை – நண்ணாசை
விட்டார் புகழும் விடையாய்நான் பொய்யாசைப்
பட்டால் வருமே பதம். 13

23 தந்தையாய் என்னுடைய தாயாய்த் தகைசான்ற
சிந்தையாய் என்னருமைத் தேசிகனாய் – முந்தையாய்
நீடு மறைமுதலாய் நின்றாயென் னேநெஞ்சம்
வாடுமெனை ஆட்கொள்ளா வாறு. 14

24 ஊட்டுகின்ற வல்வினையாம் உட்கயிற்றால் உள்ளிருந்தே
ஆட்டுகின்ற நீதான் அறிந்திலையோ – வாட்டுகின்ற
அஞ்சுபுல வேடர்க் கறிவைப் பறிகொடுத்தென்
நெஞ்சுபுலர்ந் தேங்கு நிலை. 15

25 ஆமோ அலவோ அறியேன் சிறியேனான்
தாமோ தரனும் சதுமுகனும் – தாமே
அடியா தரிக்கும் அரசேநின் ஏவல்
அடியார்குற் றேவலடி யன். 16

26 உன்னால் எனக்காவ துண்டதுநீ கண்டதுவே
என்னால் உனக்காவ தேதுளது - சொன்னால்யான்
தந்தார்வத் தோடும் தலைமேற்கொண் டுய்கிற்பேன்
எந்தாயிங் கொன்றுமறி யேன். 17

27 சென்றுரைப்பார் சொல்லில் சிறியான் பயமறியான்
என்றுரைப்பார் ஆங்கதுமற் றென்னளவே - மன்றகத்தோய்
அஞ்சேல் விழியாரை அந்தகனென் பார்மொழியை
அஞ்சேன் சிறிதும் அறிந்து. 18

28 எந்தாய்நின் அன்பர்தமக் கின்னமுதம் இட்டேத்திச்
சிந்தா நலமொன்றுஞ் செய்தறியேன் - நந்தாச்
சுவருண்ட மண்போலும் சோறுண்டேன் மண்ணில்
எவருண் டெனைப்போல் இயம்பு. 19

29 உப்பிருந்த ஓடோ ஒதியோ உலாப்பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச்சுமையோ - செப்பறியேன்
கண்ணப்ப ருக்குக் கனியனையாய் நிற்பணியா
துண்ணப் பருக்கும் உடம்பு. 20

30 ஏலார் மனைதொறும்போய் ஏற்றெலும்புந் தேயநெடுங்
காலாய்த் திரிந்துழலுங் கால்கண்டாய் - மாலாகித்
தொண்டே வலஞ்செய்கழல் தோன்றலே நின்கோயில்
கண்டே வலஞ்செய்யாக் கால். 21

31 ஏசும் பிறர்மனையில் ஏங்கஅவர் ஈயுமரைக்
காசும் பெறவிரிக்கும் கைகண்டாய் - மாசுந்த
விண்டுஞ் சிரங்குனிக்கும் வித்தகனே நின்தலத்தைக்
கண்டுஞ் சிரங்குவியாக் கை. 22

32 வெங்கோடை ஆதபத்தின் வீழ்நீர் வறந்துலர்ந்து
மங்கோடை யாதல் வழக்கன்றோ - எங்கோநின்
சீர்சிந்தாச் சேவடியின் சீர்கேட்டும் ஆனந்த
நீர்சிந்தா வன்கண் நிலை. 23

33 வாயன்றேல் வெம்மலஞ்செல் வாய்அன்றேல் மாநரக
வாயன்றேல் வல்வெறிநாய் வாயென்பாம் - தாயென்றே
[1]ஊழ்த்தாதா ஏத்தும் உடையாய் சிவஎன்றே
வாழ்த்தாதார் நாற்றப்பாழ் வாய். 24

34 வீட்டார் இறைநீ விடைமேல் வரும்பவனி
காட்டா தடைத்த கதவன்றோ - நாட்டாதி
நல்லத் துளையா நதிச்சடையாய் என்னுஞ்சீர்ச்
செல்லத் துளையாச் செவி. 25

1. ஊழ்த்தாதா - பிரமன்.

35 புல்லங் கணநீர்ப் புழையென்கோ புற்றென்கோ
சொல்லும் பசுமட் டுளையென்கோ – சொல்லுஞ்சீர்
வீயாத [1]பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தின் நல்லிசை தான்
தோயாத நாசித் துளை. 26

36 தோற்றமிலாக் கண்ணுஞ் சுவையுணரா நாவுநிகழ்
நாற்றம் அறியாத நாசியுமோர் – மாற்றமுந்தான்
கேளாச் செவியுங்கொள் கீழ்முகமே நீற்றணிதான்
மூளாது பாழ்த்த முகம். 27

37 மான்றாம் உலக வழக்கின் படிமதித்து
மூன்றா வகிர்ந்தே முடைநாற – ஊன்றா
மலக்கூடை ஏற்றுகினு மாணாதே தென்பால்
தலக்கூடல் தாழாத் தலை. 28

38 கல்லென்கோ நீரடைக்குங் கல்லென்கோ கான்கொள்கருங்
கல்லென்கோ காழ்வயிரக் கல்லென்கோ – சொல்லென்கோ
இன்றா லெனிலோ எடுத்தாளெம் மீன்றாணோர்
நின்தாள் நினையாத நெஞ்சு. 29

39 சொல்லுகின்ற உள்ளுயிரைச் சோர்வுற் றிடக்குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சில் கொடிதன்றோ – ஒல்லுமன்றத்
தெம்மானின் தாட்கமல மெண்ணாது பாழ்வயிற்றில்
சும்மா அடைக்கின்ற சோறு. 30

40 சோர்படைத்துச் சோறென்றால் தொண்டைவிக்கிக் கொண்டுநடு
மார்படைத்துச் சாவுகினும் மாநன்றே – சீர்படைக்க
எண்ணுவார் எண்ணும் இறைவாநின் தாளேத்தா
துண்ணுவார் உண்ணும் இடத்து. 31

41 ஓகோ கொடிதே உறும்புலையர் இல்லினிடத்
தேகோ வதைத்துண் செயலன்றோ – வாகோர்தம்
வாழ்மனையில் செல்லாது வள்ளனினை ஏத்தாதார்
பாழ்மனையில் சென்றுண் பது. 32

42 வீயுமிடு காட்டகத்துள் வேம்பிணத்தின் வெந்தசையைப்
பேயுமுடன் உண்ணஉண்ணும் பேறன்றோ – தோயுமயல்
நீங்கஅருள் செய்வோய்வெண் ணீறணியார் தீமனையில்
ஆங்கவரோ டுண்ணு மது. 33

43 கண்குழைந்து வாடும் கடுநரகின் பேருரைக்கில்
ஒண்குழந்தை யேனுமுலை உண்ணாதால் – தண்குழைய
பூண்டாதார்க் கொன்றைப் புரிசடையோய் நின்புகழை
வேண்டாதார் வீழ்ந்து விரைந்து. 34

1. பிஞ்ஞகன்–சிவபிரானது திருநாமங்களுள் ஒன்று, மெல்லின எழுத்துக்களை உச்சரிப்பதற்கு இடங்களாகிய நாசியைப் பெற்றதின் பயன் எழுத்துக்களாலாகிய பிஞ்ஞகன் முதலிய திருநாமங்களை ஓதுதலேயாம்.

44 கண்ணுதலே நின்தாள் கருதாரை நேசிக்க
எண்ணுதலே செய்யேன்மற் றெண்ணுவனேல் - மண்ணுலகில்
ஆமிடத்து நின்னடியார்க் காசையுரைத் தில்லையென்பார்
போமிடத்திற் போவேன் புலர்ந்து. 35

45 அங்கணனே நின்னடிக்கோர் அன்பிலரைச் சார்ந்தோர் தம்
வங்கணமே[1] வைப்பதினான் வைத்தேனேல் - அங்கணத்தில்
நீர்போல் எனது நிலைகெடுக நிற்பழிசொற்
றார்போ லழிக தளர்ந்து. 36

46 பூவைவிட்டுப் புல்லெடுப்பார் போலுன் திருப்பாதத்
தேவைவிட்டு வெம்பிறவித் தேவர்களைக் - கோவையிட்டுக்
கூவுவார் மற்றவரைக் கூடியிடேன் கூடுவனேல்
ஓவுவா ராவ்[2] லுனை. 37

47 யாதோ கனற்கண் யமதூதர் காய்ச்சு[3]கருந்
தாதோ தழற்பிழம்போ தானறியேன் - மீதோங்கு
நாட்டாதார்க் கொன்றை நதிச்சடையோய் அஞ்செழுத்தை
நாட்டாதார் வாய்க்கு நலம். 38

48 என்னெஞ்சோர் கோயில் எனக்கொண்டோய் நின்நினையார்
தன்னெஞ்சோ கல்லாமச் சாம்பிணத்தார் - வன்நெஞ்சில்
சார்ந்தவர்க்கும் மற்றவரைத் தானோக்கி வார்த்தைசொல
நேர்ந்தவர்க்கும் கல்லாகும் நெஞ்சு. 39

49 வெள்ளமுதும் தேனும் வியன்கரும்பும் முக்கனியின்
உள்ளமுதும் தெள்ளமுதும் ஒவ்வாதால் - கள்ளமிலா
நின்னன்பர் தம்புகழின் நீள்மதுரந் தன்னைஇனி
என்னென்ப தையா இயம்பு. 40

50 பண்ணாலுன் சீரினைச்சம் பந்தர்சொல வெள்ளெலும்பு
பெண்ணான தென்பார் பெரிதன்றே - அண்ணாஅச்
சைவவடி வாஞான சம்பந்தர் சீருரைக்கில்
தெய்வவடி வாஞ்சாம்பர் சேர்ந்து. 41

51 எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்
அங்கோர் பொருட்சுமையாள் ஆனேனேல் - இங்கேநின்
தாள்வருந்த வேண்டேன் தடைபட்டேன் ஆதலினிந்
நாள்வருந்த வேண்டுகின்றேன் நான். 42

52 பூவுக் கரையரும்வான் புங்கவரும் போற்றுதிரு
நாவுக் கரையரெனு நன்னாம - மேவுற்ற
தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தாய் என்றறிந்தோ
தொண்டர்க்குத் தொண்டனென்பார் சொல். 43

1. வங்கணம் - நட்பு. தொ. வே.
2. ஆவலென்பதனை எதிர்காலத் தன்மை ஒருமைவினை முற்றாகக் கொள்க. தொ. வே.
3. கருந்தாது - இரும்பு

53 எம்பரவை[1] யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார்
தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய் – வெம்பனையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப்பெயர் நீண்ட மால். 44

54 நண்ணித் தலையால் நடக்கின்றோம் என்பதெங்கள்
மண்ணில் பழைய வழக்கங்காண் – பண்ணிற்சொல்
அம்மையார் வாமத்தோய் ஆயினுமுன் காரைக்கால்
அம்மையார் போனடந்தார் ஆர். 45

55 வேத முடிவோ விளங்கா கமமுடிவோ
நாத முடிவோ நவில்கண்டாய் – வாதமுறு
மாசகர்க்குள் நில்லா மணிச்சுடரே மாணிக்க
வாசகர்க்கு நீஉரைத்த வாறு. 46

56 ஆர்கொண்டார் சேய்க்கறியிட் டாரே [2]சிறுத்தொண்டப்
பேர்கொண்டார் ஆயிடிலெம் பெம்மானே – ஓர்தொண்டே
நாய்க்குங் கடைப்பட்ட நாங்களென்பேம் எங்கள்முடை
வாய்க்கிங் கிஃதோர் வழக்கு. 47

57 கோள்கொண்ட நஞ்சங் குடியேனோ கூர்கொண்ட
வாள்கொண்டு வீசி மடியேனோ – கீள்கொண்ட
அங்கோவ ணத்தழகா அம்பலவா நின்புகழை
இங்கோதி வாழ்த்தாத யான். 48

58 ஆயாக் கொடியேனுக் கன்புடையாய் நீஅருளிங்
கீயாக் குறையே இலைகண்டாய் – மாயாற்கும்[3]
விள்ளாத் திருவடிக்கீழ் விண்ணப்பம் யான்செய்து
கொள்ளாக் குறையே குறை. 49

59 பெற்றிடுதாய் போல்வதுநின் பெற்றியென்பேன் பிள்ளையது
மற்றழுதால் கேட்டும் வராதங்கே – சற்றிருக்கப்
பெற்றாள் பொறுப்பள் பிரானீ பொறுக்கினுநின்
பொற்றாள் பொறாஎம் புலம்பு. 50

60 பொன்போல் பொறுமையுளார் புந்திவிடாய் நீஎன்பார்
என்போல் பொறுமையுளார் யார்கண்டாய் – புன்போக
அல்லாம் படிசினங்கொண் டாணவஞ்செய் இன்னாமை
எல்லாம் பொறுக்கின்றேன் யான். 51

61 முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல்
என்மணத்தில் நீவந் திடாவிடினும் – நின்கணத்தில்
ஒன்றும் ஒருகணம்வந் துற்றழைக்கில் செய்ததன்றி
இன்றும் ஒருமணஞ்செய் வேன். 52

1. எம்பர என்பது - அண்மை விளி, இறை முன்னிலை. தொ. வே.
2. செயற்கரிய செய்த பெரியோர்க்கு சிறுத்தொண்டர் எனப் பெயர்அமைவதாயின், தொண்டர் என்னும் பெயர்க்கு உரியார் யாரோ? என்பதாம்.
3. மாயற்கு என்பது - மாயாற்கென நீட்டல் விகாரமாயிற்று. தொ. வே.

62 செய்யார் அழலேநின் செம்மேனி என்னினும்என்
அய்யாநின் கால்பிடித்தற் கஞ்சேன்காண் - மெய்யா இஞ்
ஞான்றுகண்டு நான்மகிழ நந்தொண்டன் என்றெனையும்
ஏன்றுகொண் டால்போதும் எனக்கு. 53

63 என்பாலோ என்பால் இராதோடு கின்றமனத்
தின்பாலோ அம்மனத்தைச் சேர்மாயை - தன்பாலோ
யார்பால் பிழையுளதோ யானறியேன் என்னம்மை
ஓர்பால் கொளநின்றோய் ஓது. 54

64 நாணவத்தி னேன்றனையோ நாயேனை மூடிநின்ற
ஆணவத்தை யோநான் அறியேனே - வீணவத்தில்
தீங்குடையாய் என்ன இவண் செய்பிழையை நோக்கிஅருட்
பாங்குடையாய் தண்டிப் பது. 55

65 எச்சம் பெறுமுலகோர் எட்டிமர மானாலும்
பச்சென் றிருக்கப் பகர்வார்காண் - வெச்சென்ற
நஞ்சனையேன் குற்றமெலாம் நாடாது நாதஎனை
அஞ்சனையேல் என்பாய் அமர்ந்து. 56

66 கற்றறியேன் நின்னடிச்சீர் கற்றார் கழகத்தில்
உற்றறியேன் உண்மை உணர்ந்தறியேன் - சிற்றறிவேன்
வன்செய்வேல் நேர்விழியார் மையலினேன் மாதேவா
என்செய்வேன் நின்னருளின் றேல். 57

67 மெய்தான் உடையோர் விரும்புகின்ற நின்அருளென்
செய்தால் வருமோ தெரியேனே - பொய்தாவு
நெஞ்சினேன் மன்றுள் நிருத்தா நினைக்கேட்க
அஞ்சினேன் அன்பின்மை யால். 58

68 மாதேவா ஓவா மருந்தேவா மாமணிஇப்
போதேவா என்றே புலம்புற்றேன் - நீதாவா
யானாலுன் சித்த மறியேன் உடம்பொழிந்து
போனாலென் செய்வேன் புகல். 59

69 கொன்செய்தாற் கேற்றிடுமென் குற்றமெலாம் ஐயனை
என்செய்தால் தீர்ந்திடுமோ யானறியேன் - முன்செய்தோய்
நின்பால் எனைக்கொடுத்தேன் நீசெய்க அன்றிஇனி
என்பால் செயலொன் றிலை. 60

70 எண்ணிலெளி யேன்தவிர எல்லா உயிர்களுநின்
தண்ணிலகுந் தாணீழல் சார்ந்திடுங்காண் - மண்ணில்வருந்
தீங்கென்ற எல்லாமென் சிந்தையிசைந் துற்றனமற்
றாங்கொன்றும் இல்லாமை யால். 61

71 தாரம்விற்றுஞ் சேய்விற்றுந் தன்னைவிற்றும் பொய்யாத
வாரம்வைத்தான் முன்னிங்கோர் மன்னனென்பர் – நாரம்வைத்த
வேணிப் பிரானதுதான் மெய்யாமேல் அன்றெனைநீ
ஏணிற் பிறப்பித்த தில். 62

72 உள்ளொன்ற நின்னடிக்கன் புற்றறியேன் என்னுளத்தின்
வெள்ளென்ற வன்மை விளங்காதோ – நள்ளொன்ற
அச்சங்கொண் டேனைநினக் கன்பனென்பர் வேழத்தின்
எச்சங்கண் டாற்போல வே. 63

73 நீத்தாடுஞ்[1] செஞ்சடையாய் நீள்வேடங் கட்டிவஞ்சக்
கூத்தாடு கின்றேனைக் கொண்டுசிலர் – கூத்தாநின்
பத்தனென்பர் என்னோ பகல்வேடத் தார்க்குமிங்கு
வித்தமிலா[2] நாயேற்கும் வேறு. 64

74 அன்புடையார் இன்சொல் அமுதேறு நின்செவிக்கே
இன்புடையாய் என்பொய்யும் ஏற்குங்கொல் – துன்புடையேன்
பொய்யுடையேன் ஆயினுநின் பொன்னருளை வேண்டுமொரு
மெய்யுடையேன் என்கோ விரைந்து. 65

75 என்னா ருயிர்க்குயிராம் எம்பெருமான் நின்பதத்தை
உன்னார் உயிர்க்குறுதி உண்டோதான் – பொன்னாகத்
தார்க்கும் சதுமுகர்க்கும் தானத்த[3] வர்க்குமற்றை
யார்க்கும் புகலுன் அருள். 66

76 வெள்ளைப் பிறைஅணிந்த வேணிப் பிரானேநான்
பிள்ளைப் பிராயத்தில் பெற்றாளை – எள்ளப்
பொறுத்தாள்அத் தாயில் பொறுப்புடையோய் நீதான்
வெறுத்தால் இனிஎன்செய் வேன். 67

77 ஆயிரமன் றேநூறும் அன்றோஈ ரைந்தன்றே
ஆயிரம்பேர் எந்தைஎழுத் தைந்தேகாண் – நீ இரவும்
எல்லு நினைத்தியென ஏத்துகினும் எந்தாய்வீண்
செல்லுமனம் என்செய்கேன் செப்பு. 68

78 வஞ்சந் தருங்காம வாழ்க்கையிடைச் சிக்கியஎன்
நெஞ்சந் திருத்தி நிலைத்திலையே – எஞ்சங்
கரனே மழுக்கொள் கரனே அரனே
வரனே சிதம்பரனே வந்து. 69

79 தாழ்விக்கும் வஞ்சச் சகமால் ஒழித்தென்னை
வாழ்விக்கும் நல்ல மருந்தென்கோ – வீழ்விக்கும்
ஈங்கான மாயை இகந்தோர்க் கருள்வோய்நின்
பாங்கான செம்பொற் பதம். 70

1. நீத்தம் என்பது – நீத்தெனக் குறைந்து நின்றது. தொ. வே.
2. வித்தம் என்பது – அறிவு. தொ. வே.
3. தானம் என்பது – சுவர்க்கம். தொ. வே.

80 ஏசொலிக்கு மானிடனாய் ஏன்பிறந்தேன் தொண்டர்கடந்
தூசொலிப்பான் கல்லாகத் தோன்றிலனே - தூசொலிப்பான்
கல்லாகத் தோன்றுவனேல் காளகண்டா நாயேனுக்
கெல்லா நலமுமுள தே. 71

81 குற்றம் பலசெயினுங் கோபஞ் செயாதவருள்
சிற்றம் பலமுறையுஞ் சிற்பரனே - வெற்றம்பல்
பொய்விட்டால் அன்றிப் புரந்தருளேன் என்றெனைநீ
கைவிட்டால் என்செய்கேன் காண். 72

82 தீக்குணத்தார் யாவருமென் சீடரெனில் என்னுடைய
தீக்குணத்தின் எல்லைஎவர் தேர்கிற்பார் - ஊக்குமிகு
நல்லோர்க் களிக்கு நதிச்சடையோய் எற்கருளில்
எல்லோர்க்கும் ஐயுறவா மே. 73

83 இன்படையான் றன்புடையான் என்றேழை யேன்தலைமேல்
அன்புடையாய் நீயமைப்பித் தாயிதற்கு - வன்படையா
தெவ்வண்ணம் நின்னெஞ் சிசைந்ததோ அந்நாளில்
இவ்வண்ணம் என்றறிகி லேன். 74

84 ஏய்ப்பிறப்பொன் றில்லாதோய் என்பிறப்பின் ஏழ்மடங்கோர்
பேய்ப்பிறப்பே நல்ல பிறப்பந்தோ - வாய்ப்புலகம்
வஞ்சமெனத் தேக மறைத்தடிமண் வையாமல்
அஞ்சிநின்னோ டாடும் அது. 75

85 கோடும் பிறைச்சடையோய் கோளுங் குறும்புஞ்சாக்
காடும் பிணிமூப்புங் காணார்காண் - நீடுநினைக்
கண்டார் அடிப்பொடியைக் கண்டார் திருவடியைக்
கண்டார் வடிவுகண்டார் கள். 76

86 மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே இந்திரன்செங்
கோலெங்கே வானோர் குடியெங்கே - கோலஞ்சேர்
அண்டமெங்கே அவ்வவ் வரும்பொருளெங் கேநினது
கண்டமங்கே நீலமுறாக் கால். 77

87 எவ்வேளை யோவருங்கூற் றெம்பாலென் றெண்ணுகின்ற
அவ்வேளை தோறும் அழுங்குற்றேன் - செவ்வேளை
மிக்களித்தோய் நின்கழற்கால் வீரத்தை எண்ணுதொறும்
எக்களித்து வாழ்கின்றேன் யான். 78

88 துற்சங்கத் தோர்கணமுந் தோயாது நின்னடியர்
சற்சங்கத் தென்றனைநீ தான்கூட்டி - நற்சங்கக்
காப்பான் புகழுன் கழற்புகழைக் கேட்பித்துக்
காப்பாய் இஃதென் கருத்து. 79

89 என்னமுதே முக்கண் இறையே நிறைஞான
இன்னமுதே நின்னடியை ஏத்துகின்றோர் – பொன்னடிக்கே
காதலுற்றுத் தொண்டுசெயக் காதல்கொண்டேன் எற்கருணீ
காதலுற்றுச் செய்தல் கடன். 80

90 ஆரா அமுதே அருட்கடலே நாயேன்றன்
பேராத வஞ்சப் பிழைநோக்கி – யாரேனு
நின்போல்வார் இல்லாதோய் நீயே புறம்பழித்தால்
என்போல்வார் என்சொல்லார் ஈங்கு. 81

91 மெய்யாக நின்னைவிட வேறோர் துணையில்லேன்
ஐயா அதுநீ அறிந்ததுகாண் – பொய்யான
தீதுசெய்வேன் தன்பிழையைச் சித்தங் குறித்திடில்யான்
யாதுசெய்வேன் அந்தோ இனி. 82

92 திண்ணம் அறியாச் சிறியேன் உளத்திருக்கும்
எண்ணம் அறிந்தாய் இரங்குகிலாய் – அண்ணலுன்பால்
நித்தம் இரங்காஎன் நெஞ்சமர்ந்த தாலோநின்
சித்தம் இரங்காச் செயல். 83

93 கொன்னஞ்சேன் தன்பிழையைக் கூர்ந்துற்று நானினைக்கில்
என்நெஞ்சே என்னை எரிக்குங்காண் – மன்னுஞ்சீர்
எந்தாய்நின் சித்தத்திற் கேதாமோ நானறியேன்
சிந்தா குலனென்செய் வேன். 84

94 நின்னன்பர் தம்பால் நிறுத்துதியோ அன்றிஎனைப்
பொன்னன்பர் தம்பால் புணர்த்துதியோ – பொன்னன்பர்[1]
வைவமே என்னும் வறியேன் அறியேனென்
தெய்வமே நின்றன் செயல். 85

95 என்சிறுமை நோக்கா தெனக்கருளல் வேண்டுமென்றே
நின்பெருமை நோக்கி இங்கு நிற்கின்றேன் – என்பெரும
யாதோநின் சித்தம் அறியேன் அடியேற்கெப்
போதோ அருள்வாய் புகல். 86

96 எந்தாயென் குற்றமெலாம் எண்ணுங்கால் உள்நடுங்கி
நொந்தா குலத்தின் நுழைகின்றேன் – சிந்தாத
காள மகிழ்நின் களக்கருணை எண்ணுதொறும்
மீளமகிழ் கின்றேன் விரைந்து. 87

97 எள்ளலே என்னினுமோர் ஏத்துதலாய்க் கொண்டருளெம்
வள்ளலே என்றனைநீ வாழ்வித்தால் – தள்ளலே
வேண்டுமென யாரே விளம்புவார் நின்னடியர்
காண்டுமெனச் சூழ்வார் களித்து.

1. பொன்னன்பர் என்பது – செல்வர்.

98 வேணிக்க மேவைத்த வெற்பே விலையில்லா
மாணிக்க மேகருணை மாகடலே – மாணிக்கு
முன்பொற் கிழியளித்த முத்தேஎன் ஆருயிர்க்கு
நின்பொற் கழலே நிலை. 89

99 முத்தேவர் போற்று முதற்றேவ நின்னையன்றி
எத்தேவர் சற்றே எடுத்துரைநீ – பித்தேன்செய்
குற்றமெலாம் இங்கோர் குணமாகக் கொண்டென்னை
அற்றமிலா தாள்கின் றவர். 90

100 கங்கைச் சடையாய்முக் கண்ணுடையாய் கட்செவியாம்
அங்கச் சடையாய் அருளுடையாய் – மங்கைக்
கொருகூ றளித்தாய் உனைத்தொழுமிந் நாயேன்
இருகூ றளித்தேன் இடர்க்கு. 91

101 பேசத் தெரியேன் பிழையறியேன் பேதுறினும்
கூசத் தெரியேன் குணமறியேன் – நேசத்தில்
கொள்ளுவார் உன்னடிமைக் கூட்டத்தார் அல்லாதார்
எள்ளுவார் கண்டாய் எனை. 92

102 ஊணே உடையேஎன் றுட்கருதி வெட்கமிலேன்
வீணேநன் னாளை விடுகின்றேன் – காணேனின்
செம்பாத மேஎன்றுந் தீராப் பொருளென்று
நம்பாத நாயடியேன் நான். 93

103 சிவமே சிவஞானச் செல்வமே அன்பர்
நவமே தவமே நலமே – நவமாம்
வடிவுற்ற தேவேநின் மாக்கருணை யன்றோ
படிவுற்ற என்னுட் பயன். 94

104 கோளாக்கிக் கொள்ளுங் கொடியே னையுநினக்கோர்
ஆளாக்கிக் கொள்ளற் கமைவாயேல் – நீளாக்குஞ்
செங்கேச வேணிச் சிவனேஎன் ஆணவத்திற்
கெங்கே இடங்காண் இயம்பு. 95

105 திண்ணஞ்சற் றீந்திடநின் சித்தம் திரும்பாத
வண்ணஞ்சற் றேதெரிய வந்ததுகாண் – எண்ணெஞ்சில்
இத்தனையு மென்வினைகள் நீங்கில் இருக்கஅண்டம்
எத்தனையும் போதாமை என்று. 96

106 இண்டைச் சடையோய் எனக்கருள எண்ணுதியேல்
தொண்டைப் பெறுமென் துயரெல்லாம் – சண்டைக்கிங்
குய்ஞ்சே[1] மெனஓடும் ஓட்டத்திற் கென்னுடைய
நெஞ்சே பிறகிடுங்காண் நின்று. 97

1. உய்ந்தேம் என்பது – உய்ஞ்சேம் எனத் திரிந்தது. தொ. வே.

107 கண்ணா ணிழுதைகள்பாற் காட்டிக் கொடுக்கிலெனை
அண்ணா அருளுக் கழகன்றே – உண்ணாடு
நின்னடியார் கூட்டத்தில் நீரிவனைச் சேர்த்திடுமின்
என்னடியான் என்பாய் எடுத்து. 98

108 கண்ணப்பன் ஏத்துநுதற் கண்ணப்ப மெய்ஞ்ஞான
விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்பம் – மண்ணிற்சில்
வானவரைப் போற்றும் மதத்தோர் பலருண்டு
நானவரைச் சேராமல் நாட்டு. 99

109 பொன்னின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி – என்னை
அடித்தாலு நீயே அணைத்தாலு நீயே
பிடித்தேனுன் பொற்பாதப் பேறு. 100

110 துற்குணத்தில் வேறு தொடர்வேன் எனினுமற்றை
நற்குணத்தில் உன்சீர் நயப்பேன்காண் – சிற்குணத்தோய்
கூற்றுதைத்த நின்பொற் குரைகழற்பூந் தாளறிக
வேற்றுரைத்தே னில்லை விரித்து. 101

111 இப்பாரில் என்பிழைகள் எல்லாம் பொறுத்தருளென்
அப்பாநின் தாட்கே அடைக்கலங்காண் – இப்பாரில்
நானினது தாணீழல் நண்ணுமட்டும் நின்னடியர்
பானினது சீர்கேட்கப் பண். 102

திருச்சிற்றம்பலம்

5. மகாதேவமாலை

காப்பு
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

112 கருணைநிறைந் தகம்புறமும் துளும்பிவழிந்
துயிர்க்கெல்லாம் களைகண் ஆகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் சிதையா ஞானப்
பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய் பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையும்உட்
கசிந்துருக்கும் வடிவத் தோயே. 1

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

113 உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள
உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதான் ஆகிக்
கலகநிலை அறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
இயல்பாகி இணையொன்றும் இல்லா தாகி
அலகில்அறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி அமர்ந்த தேவே. 1

114 உலகமெலாந் தனிநிறைந்த உண்மை யாகி
யோகியர் தம் அநுபவத்தின் உவப்பாய் என்றும்
கலகமுறா உபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற அருண்ஞானக் காட்சி யாகி
விலகலுறா நிபிடஆ னந்த மாகி
மீதானத் தொளிர்கின்ற விளக்க மாகி
இலகுபரா பரமாய்ச்சிற் பரமாய் அன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே. 2

115 வித்தாகி முளையாகி விளைவ தாகி
விளைவிக்கும் பொருளாகி மேலு மாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத
சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்
சதாநிலையாய் எவ்வுயிர்க்குஞ் சாட்சி யாகி
முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே. 3

116 வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணா தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மௌனவியோ மத்தினிடை வயங்குந் தேவே. 4

117 தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்று மிலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளுந் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய்த் தெய்வதமாய் இலங்குந் தேவே. 5

118 பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப்
பரமார்த்த நிலையாகிப் பதத்தின் மேலாம்
சிரமாகித் திருவருளாம் வெளியாய் ஆன்ம
சிற்சத்தி யாய்ப்பரையின் செம்மை யாகித்
திரமாகித் தற்போத நிவிர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவாநுபவச் செல்வ மாகி
அரமாகி ஆனந்த போத மாகி
ஆனந்தா தீதமதாய் அமர்ந்த தேவே. 6

119 இந்தியமாய்க் கரணாதி அனைத்து மாகி
இயல்புருட னாய்க்கால பரமு மாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமாய் அப்பால்
பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி
வந்தஉப சாந்தமதாய் மௌன மாகி
மகாமௌன நிலையாகி வயங்கா நின்ற
அந்தமில்தொம் பதமாய்த்தற் பதமாய் ஒன்றும்
அசிபதமாய் அதீதமாய் அமர்ந்த தேவே. 7

120 நின்மயமாய் என்மயமாய் ஒன்றுங் காட்டா
நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாம்
தன்மயமாய்த் தற்பரமாய் விமல மாகித்
தடத்தமாய்ச் சொரூபமாய்ச் சகச மாகிச்
சின்மயமாய்ச் சிற்பரமாய் அசல மாகிச்
சிற்சொலித மாய்அகண்ட சிவமாய் எங்கும்
மன்மயமாய் வாசகா தீத மாகி
மனாதீத மாய்அமர்ந்த மௌனத் தேவே.

121 அளவிறந்த நெடுங்காலம் சித்தர் யோகர்
அறிஞர்மலர் அயன்முதலோர் அனந்த வேதங்
களவிறந்தும் கரணாதி இறந்தும் செய்யும்
கடுந்தவத்தும் காண்பரிதாம் கடவு ளாகி
உளவிறந்த எம்போல்வார் உள்ளத் துள்ளே
ஊறுகின்ற தெள்ளமுத ஊற லாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந் தானாய்ப்
பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே. 9

122 வாயாகி வாயிறந்த மெவுன மாகி
மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்
கருவிகர ணாதிகளின் கலப்பாய்ப் பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்
தானாகி நானாகிச் சகல மாகி
ஓயாத சத்தியெலாம் உடைய தாகி
ஒன்றாகிப் பலவாகி ஓங்குந் தேவே. 10

123 அண்டங்கள் பலவாகி அவற்றின் மேலும்
அளவாகி அளவாத அதீத மாகிப்
பிண்டங்கள் அனந்தவகை யாகிப் பிண்டம்
பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்
பண்டங்கள் பலவாகி இவற்றைக் காக்கும்
பதியாகி ஆனந்தம் பழுத்துச் சாந்தம்
கொண்டெங்கும் நிழல்பரப்பித் தழைந்த ஞானக்
கொழுங்கடவுள் தருவாகிக் குலவுந் தேவே. 11

124 பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி அகமாகிப் புனித மாகி
மன்னாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி எங்கும்
மின்னாகிப் பரவி இன்ப வெள்ளந் தேக்க
வியன் கருணை பொழிமுகிலாய் விளங்குந் தேவே. 12

125 அரிதாகி அரியதினும் அரிய தாகி
அநாதியாய் ஆதியாய் அருள தாகிப்
பெரிதாகிப் பெரியதினும் பெரிய தாகிப்
பேதமாய் அபேதமாய்ப் பிறங்கா நின்ற
கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகிக்
கலைகடந்த பொருளாகிக் கரணா தீதத்
தெரிதான வெளிநடுவில் அருளாம் வண்மைச்
செழுங்கிரணச் சுடராகித் திகழுந் தேவே.

126 உருவாகி உருவினில்உள் உருவமாகி
உருவத்தில் உருவாகி உருவுள் ஒன்றாய்
அருவாகி அருவினில்உள் அருவ மாகி
அருவத்தில் அருவாகி அருவுள் ஒன்றாய்க்
குருவாகிச் சத்துவசிற் குணத்த தாகிக்
குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற
மருவாகி மலராகி வல்லி யாகி
மகத்துவமாய் அணுத்துவமாய் வயங்குந் தேவே. 14

127 சகலமாய்க் கேவலமாய்ச் சுத்த மாகிச்
சராசரமாய் அல்லவாய்த் தானே தானாய்
அகலமாய்க் குறுக்கமாய் நெடுமை யாகி
அவையனைத்தும் அணுகாத அசல மாகி
இகலுறாத் துணையாகித் தனிய தாகி
எண்குணமாய் எண்குணத்தெம் இறையாய் என்றும்
உகலிலாத் தண்ணருள்கொண் டுயிரை யெல்லாம்
ஊட்டிவளர்த் திடுங்கருணை ஓவாத் தேவே. 15

128 வாசகமாய் வாச்சியமாய் நடுவாய் அந்த
வாசகவாச் சியங்கடந்த மவுன மாகித்
தேசகமாய் இருளகமாய் இரண்டுங் காட்டாச்
சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த
பாசமுறாப் பதியாகிப் பசுவு மாகிப்
பாசநிலை யாகிஒன்றும் பகரா தாகி
நாசமிலா வெளியாகி ஒளிதா னாகி
நாதாந்த முடிவில்நடம் நவிற்றும் தேவே. 16

129 சகமாகிச் சீவனாய் ஈச னாகிச்
சதுமுகனாய்த் திருமாலாய் அரன்றா னாகி
மகமாயை முதலாய்க்கூ டத்த னாகி
வான்பிரம மாகி அல்லா வழக்கு மாகி
இகமாகிப் பரமாகிச் சமய கோடி
எத்தனையு மாகிஅவை எட்டா வான்கற்
பகமாகிப் பரமாகிப் பரம மாகிப்
பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியும் தேவே. 17

130 விதியாகி அரியாகிக் கிரீச னாகி
விளங்குமகேச் சுரனாகி விமல மான
நிதியாகுஞ் சதாசிவனாய் விந்து வாகி
நிகழ்நாத மாய்ப்பரையாய் நிமலா னந்தப்
பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப்
பக்கமிரண் டாயிரண்டும் பகரா தாகிக்
கதியாகி அளவிறந்த கதிக ளெல்லாம்
கடந்துநின்று நிறைந்தபெருங் கருணைத் தேவே.

131 மானாகி மோகினியாய் விந்து வாகி
மற்றவையால் காணாத வான மாகி
நானாகி நானல்ல னாகி நானே
நானாகும் பதமாகி நான்றான் கண்ட
தானாகித் தானல்ல னாகித் தானே
தானாகும் பதமாகிச் சகச ஞான
வானாகி வான்நடுவில் வயங்கு கின்ற
மௌன நிலை யாகியெங்கும் வளருந் தேவே. 19

132 மந்திரமாய்ப் பதமாகி வன்ன மாகி
வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகிச்
சந்திரனாய் இந்திரனாய் இரவி யாகித்
தானவராய் வானவராய்த் தயங்கா நின்ற
தந்திரமாய் இவையொன்றும் அல்ல வாகித்
தானாகித் தனதாகித் தானான் காட்டா
அந்தரமாய் அப்பாலாய் அதற்கப் பாலாய்
அப்பாலுக் கப்பாலாய் அமர்ந்த தேவே. 20

133 மலைமேலும் கடன்மேலும் மலரின் மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்கும் கோவே
நிலைமேலும் நெறிமேலும் நிறுத்து கின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலும் நிகழ்த்தும் வேதக்
கலைமேலும் எம்போல்வார் உளத்தின் மேலும்
கண்மேலும் தோள்மேலும் கருத்தின் மேலும்
தலைமேலும் உயிர்மேலும் உணர்வின் மேலும்
தகுமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே. 21

134 பொற்குன்றே அகம்புறமும் பொலிந்து நின்ற
பூரணமே ஆரணத்துட் பொருளே என்றும்
கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பே தான
கற்பகமே கற்பகத்தீங் கனியே வாய்மைச்
சொற்குன்றா நாவகத்துள் மாறா இன்பம்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதி யேவிண்
நிற்கின்ற சுடரேஅச் சுடருள் ஓங்கும்
நீளொளியே அவ்வொளிக்குள் நிறைந்த தேவே. 22

135 தேசுவிரித் திருளகற்றி என்றும் ஓங்கித்
திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்த வாழ்க்கை
மாசுவிரித் திடுமனத்தில் பயிலாத் தெய்வ
மணிவிளக்கே ஆனந்த வாழ்வே எங்கும்
காசுவிரித் திடுமொளிபோல் கலந்து நின்ற
காரணமே சாந்தமெனக் கருதா நின்ற 23
தூசுவிரித் துடுக்கின்றோர் தம்மை நீங்காச்
சுகமயமே அருட்கருணை துலங்கும் தேவே.

136 கோவேஎண் குணக்குன்றே குன்றா ஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக்
காவேமெய் அறிவின்ப மயமே என்றன்
கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத்
தேவேஅத் தேவுக்குந் தெளிய ஒண்ணாத்
தெய்வமே வாடாமல் திகழ்சிற் போதப்
பூவேஅப் பூவிலுறு மணமே எங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே. 24

137 வானேஅவ் வானுலவும் காற்றே காற்றின்
வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரில்
தானேயும் புவியேஅப் புவியில் தங்கும்
தாபரமே சங்கமமே சாற்று கின்ற
ஊனேநல் உயிரேஉள் ஒளியே உள்ளத்
துணர்வேஅவ் வுணர்வுகலந் தூறு கின்ற
தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின்
தீஞ்சுவையே சுவையனைத்தும் திரண்ட தேவே. 25

138 விண்ணேவிண் உருவேவிண் முதலே விண்ணுள்
வெளியேஅவ் வெளிவிளங்கு வெளியே என்றன்
கண்ணேகண் மணியேகண் ஒளியே கண்ணுட்
கலந்துநின்ற கதிரேஅக் கதிரின் வித்தே
தண்ணேதண் மதியேஅம் மதியில் பூத்த
தண்ணமுதே தண்ணமுத சார மேசொல்
பண்ணேபண் ணிசையேபண் மயமே பண்ணின்
பயனே மெய்த் தவர்வாழ்த்திப் பரவும் தேவே. 26

139 மாணேயத் தவருளத்தே மலர்ந்த செந்தா
மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப்
பூணேமெய்ப் பொருளே அற்புதமே மோனப்
புத்தமுதே ஆனந்தம் பொலிந்த பொற்பே
ஆணேபெண் உருவமே அலியே ஒன்றும்
அல்லாத பேரொளியே அனைத்துந் தாங்குந்
தூணேசிற் சுகமேஅச் சுகமேல் பொங்குஞ்
சொரூபானந் தக்கடலே சோதித் தேவே. 27

140 பூதமே அவைதோன்றிப் புகுந்தொ டுங்கும்
புகலிடமே இடம்புரிந்த பொருளே போற்றும்
வேதமே வேதத்தின் விளைவே வேத
வியன்முடிவே அம்முடிவின் விளங்கும் கோவே
நாதமே நாதாந்த நடமே அந்த
நடத்தினையுள் நடத்துகின்ற நலமே ஞான 28
போதமே போதமெலாம் கடந்து நின்ற
பூரணமே யோகியருள் பொலிந்த தேவே.

141 ஞாலமே ஞாலமெலாம் விளங்க வைத்த
நாயகமே கற்பமுதல் நவிலா நின்ற
காலமே காலமெல்லாம் கடந்த ஞானக்
கதியேமெய்க் கதியளிக்குங் கடவு ளேசிற்
கோலமே குணமேஉட் குறியே கோலங்
குணங்குறிகள் கடந்துநின்ற குருவே அன்பர்
சீலமே மாலறியா மனத்திற் கண்ட
செம்பொருளே உம்பர்பதஞ் செழிக்கும் தேவே. 29

142 தத்துவமே தத்துவா தீத மேசிற்
சயம்புவே எங்குநிறை சாட்சி யேமெய்ச்
சத்துவமே சத்துவத்தின் பயனாம் இன்பம்
தந்தருளும் பெருவாழ்வாம் சாமி யேஎம்
சித்தநிலை தெளிவிக்கும் ஒளியே சற்றும்
தெவிட்டாத தெள்ளமுதே தேனே என்றும்
சுத்தநெறி திறம்பாதார் அறிவில் தோய்ந்த
சுகப்பொருளே மெய்ஞ்ஞானம் துலங்கும் தேவே. 30

143 யோகமே யோகத்தின் பயனே யோகத்
தொருமுதலே யோகத்தின் ஓங்குந் தூய
போகமே போகத்தின் பொலிவே போகம்
புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான
யாகமே யாகத்தின் விளைவே யாகத்
திறையேஅவ் விறைபுரியும் இன்பே அன்பர்
மோகமே மோகமெலாம் அழித்து வீறு
மோனமே மோனத்தின் முளைத்த தேவே. 31

144 காட்சியே காண்பதுவே ஞேய மேஉள்
கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே ஓங்கும்
மாட்சியே உண்மைஅறி வின்ப மென்ன
வயங்குகின்ற வாழ்வேமா மௌனக் காணி
ஆட்சியே ஆட்சிசெயும் அரசே சுத்த
அறிவேமெய் அன்பேதெள் ளமுதே நல்ல
சூட்சியே[1] சூட்சியெலாம் கடந்து நின்ற
துரியமே துரியமுடிச் சோதித் தேவே. 32

145 மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியே ஞான
வாரிதியே அன்பர்கள் தம் மனத்தே நின்ற
குறைமுடிக்கும் குணக்குன்றே குன்றா மோனக்
கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவ மாலைப்
பெம்மானே செங்கமலப் பிரானே இந்த 33
இறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற
இறையேஇவ் வுருவுமின்றி இருந்த தேவே.

1. எதுகை நயம் பற்றி நின்றது. தொ. வே.

146 கோதகன்றே யோகர்மனக் குகையில் வாழும்
குருவேசண் முகங்கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியில் ஊறும்
வானமுதே ஆனந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கு ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த
செல்வமே எல்லையிலாச் சீர்மைத் தேவே. 34

147 அருளருவி வழிந்துவழிந் தொழுக ஓங்கும்
ஆனந்தத் தனிமலையே அமல வேதப்
பொருளளவு நிறைந்தவற்றின் மேலும் ஓங்கிப்
பொலிகின்ற பரம்பொருளே புரண மாகி
இருளறுசிற் பிரகாச மயமாஞ் சுத்த
ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே
தெருளளவும் உளமுழுதுங் கலந்து கொண்டு
தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே. 35

148 அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை
அறிவையெலாங் கடந்துகடந் தமல யோகர்
உளவையெலாங் கடந்துபதங் கடந்து மேலை
ஒன்றுகடந் திரண்டுகடந் துணரச் சூழ்ந்த
களவையெலாங் கடந்தண்ட பிண்ட மெல்லாம்
கடந்துநிறை வானசுகக் கடலே அன்பர்
வளவையெலாம் இருளகற்றும் ஒளியே மோன
வாழ்வேஎன் உயிர்க்குயிராய் வதியும் தேவே. 36

149 வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந் தூன்கலந்து புலன்க ளோடும்
இந்திரிய மவைகலந்துள் இயங்கு கின்ற
அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்
ஆன்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி
இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே. 37

150 தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச
எண்ணமுதப் பளிக்குநிலா முற்றத் தேஇன்
இசைவீசத் தண்பனிநீர் எடுத்து வீசப்
பெண்ணமுதம் அனையவர்விண் ணமுதம் ஊட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக் 38
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்தும் இன்பங்
கலந்துகொளத் தருங்கணைக் கடவுள் தேவே.

151 சுழியாத அருட்கருணைப் பெருக்கே என்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதி யேவான்
ஒழியாது கதிர்பரப்புஞ் சுடரே அன்பர்க்
கோவாத இன்பருளும் ஒன்றே விண்ணோர்
விழியாலும் மொழியாலும் மனத்தி னாலும்
விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பும் எந்த
வழியாலும் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த
மவுனவெளி யூடிருந்து வயங்கும் தேவே. 39

152 சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாம்
சோர்ந்தொழிய உணர்வொழியத் துளங்கா நின்ற
அல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற
ஆனந்த அநுபவமே அதீத வாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போல இன்ப
நிறைவொழியக் குறைகொண்மத நெறியோர் நெஞ்சக்
கல்லொழிய மெய்யடியர் இதய மெல்லாங்
கலந்துகலந் தினிக்கின்ற கருணைத் தேவே. 40

153 அலைகடலும் புவிவரையும் அனல்கால் நீரும்
அந்தரமும் மற்றைஅகி லாண்டம் யாவும்
நிலைகுலையா வண்ணம் அருள் வெளியி னூடு
நிரைநிரையா நிறுத்திஉயிர் நிகழும் வண்ணம்
தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னும்
தனியாணை நடத்திஅருள் தலத்தில் என்றும்
மலைவறவீற் றிருந்தருளும் அரசே முத்தி
வழித்துணையே விழித்துணையுள் மணியாம் தேவே. 41

154 வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியில் இன்ப
வளம்பழுத்த பெருவாழ்வே வானோர் தங்கள்
சிரம்பழுத்த பதப்பொருளே அறிவா னந்தச்
சிவம்பழுத்த அநுபவமே சிதாகா சத்தில்
பரம்பழுத்த நடத்தரசே கருணை என்னும்
பழம்பழுத்த வான்தருவே பரம ஞானத்
திரம்பழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே
தினம்பழுத்துக் கனிந்தஅருட் செல்வத் தேவே. 42

155 அண்டமெலாம் கண்ணாகக் கொளினும் காண்டற்
கணுத்துணையும் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கும் ஒன்றே
கண்டவடி வாய்அகண்ட மயமாய் எங்கும் 43
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேஎம்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே.

156 பேதமுறா மெய்ப்போத வடிவ மாகிப்
பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்
சீதமிகுந் தருள்கனிந்து கனிந்து மாறாச்
சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா
ஆதரவோ டியன்மௌனச் சுவைமேன் மேற்கொண்
டானந்த ரசமொழுக்கி அன்பால் என்றும்
சேதமுறா தறிஞருளந் தித்தித் தோங்கும்
செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே. 44

157 உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடலனைய பேரின்பம் துளும்ப நாளும்
கருணைமலர்த் தேன்பொழியும் கடவுட் காவே
விடலரிய எம்போல்வார் இதயந் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதம்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே. 45

158 கிரியைநெறி அகற்றிமறை முடிவில் நின்று
கேளாமல் கேட்கின்ற கேள்வி யேசொற்
கரியவறை விடுத்துநவ நிலைக்கு மேலே
காணாமற் காண்கின்ற காட்சியே உள்
அரியநிலை ஒன்றிரண்டின் நடுவே சற்றும்
அறியாமல் அறிகின்ற அறிவே என்றும்
உரியசதா நிலைநின்ற உணர்ச்சி மேலோர்
உன்னாமல் உன்னுகின்ற ஒளியாம் தேவே, 46

159 சொற்போதற் கரும்பெரிய மறைகள் நாடித்
தொடர்ந்துதொடர்ந் தயர்ந்திளைத்துத் துளாங்கி ஏங்கிப்
பிற்போத விரைந்தன்பர் உளத்தே சென்ற
பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றும்
தற்போத ஒழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானே யாகிச்
சிற்போதத் தகம்புறமும் கோத்து நின்ற
சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத் தேவே. 47

160 பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாந்
தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச் 48
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே.

161 வான்காணா மறைகாணா மலரோன் காணான்
மால்காணான் உருத்திரனும் மதித்துக் காணான்
நான்காணா இடத்ததனைக் காண்பேம் என்று
நல்லோர்கள் நவில்கின்ற நலமே வேட்கை
மான்காணா உளக்கமல மலர்த்தா நின்ற
வான்சுடரே ஆனந்த மயமே ஈன்ற
ஆன்காணா இளங்கன்றாய் அலமந் தேங்கும்
அன்பர் தமைக் கலந்துகொளும் அமலத் தேவே. 49

162 மெய்ஞ்ஞான விருப்பத்தில் ஏறிக் கேள்வி
மீதேறித் தெளிந்திச்சை விடுதல் ஏறி
அஞ்ஞான மற்றபடி ஏறி உண்மை
அறிந்தபடி நிலைஏறி அதுநான் என்னும்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்ற எல்லாம்
கடந்தேறி மௌனவியற் கதியில் ஏறி
எஞ்ஞானம் அறத்தெளிந்தோர் கண்டுங் காணேம்
என்கின்ற அநுபவமே இன்பத் தேவே. 50

163 பற்றறியா முத்தர்தமை எல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே ஆனந்தப் பேற்றின் வாழ்வே
உற்றறியா தின்னுமின்னும் மறைக ளெல்லாம்
ஓலமிட்டுத் தேடநின்ற ஒன்றே ஒன்றும்
கற்றறியாப் பேதையேன் தனக்கும் இன்பம்
கனிந்தளித்த அருட்கடலே கருணைத் தேவே. 51

164 மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்
பொய்யுணர்ந்த எமைப்போல்வார் தமக்கும் இன்பம்
புரிந்தருளும் கருணைவெள்ளப் பொற்பே அன்பர்
கையுறைந்து வளர்நெல்லிக் கனியே உள்ளம்
கரைந்துகரைந் துருக அவர் கருத்தி னூடே
உய்யுநெறி ஒளிகாட்டி வெளியும் உள்ளும்
ஓங்குகின்ற சுயஞ்சுடரே உண்மைத் தேவே. 52

165 ஒலிவடிவு நிறஞ்சுவைகள் நாற்றம் ஊற்றம்
உறுதொழில்கள் பயன்பலவே றுளவாய் எங்கும்
மலிவகையாய் எவ்வகையும் ஒன்றாய் ஒன்றும்
மாட்டாதாய் எல்லாமும் வல்ல தாகிச்
சலிவகையில் லாதமுதற் பொருளே எல்லாம் 53
தன்மயமாய் விளங்குகின்ற தனியே ஆண்பெண்
அலிவகையல் லாதவகை கடந்து நின்ற
அருட்சிவமே சிவபோகத் தமைந்த தேவே.

166 பேராய அண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்
வாராய பலபொருளும் கடலும் மண்ணும்
மலையுளவும் கடலுளவும் மணலும் வானும்
ஊராத வான்மீனும் அணுவும் மற்றை
உள்ளனவும் அளந்திடலாம் ஓகோ உன்னை
ஆராலும் அளப்பரிதென் றனந்த வேதம்
அறைந்திளைக்க அதிதூர மாகுந் தேவே. 54

167 கற்பங்கள் பலகோடி செல்லத் தீய
கனலினடு ஊசியின்மேல் காலை ஊன்றிப்
பொற்பறமெய் உணவின்றி உறக்க மின்றிப்
புலர்ந்து எலும்பு புலப்படஐம் பொறியை ஓம்பி
நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்து யோக
நீண்முனிவர்க் கொளித்து அமரர்க் கொளித்து மேலாம்
சிற்பதத்தில் சின்மயமாய் நிறைந்து ஞானத்
திருவாளர் உட்கலந்த தேவ தேவே. 55

168 மட்டகன்ற நெடுங்காலம் மனத்தால் வாக்கால்
மதித்திடினும் புலம்பிடினும் வாரா தென்றே
கட்டகன்ற மெய்யறிவோர் கரணம் நீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாம் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
விடுத்தொழித்துச் சகசமல வீக்கம் நீக்கிச்
சுட்டகன்று நிற்க அவர் தம்மை முற்றும்
சூழ்ந்துகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே. 56

169 உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற
உருஅருவ மொன்றும் இவை உடன்மேல் உற்ற
ஒருநான்கும் இவை கடந்த ஒன்று மாய்அவ்
வொன்றிநடு வாய்நடுவுள் ஒன்றாய் நின்றே
இருநான்கும் அமைந்தவரை நான்கி னோடும்
எண்ணான்கின் மேலிருந்தும் இறையே மாயைக்
கருநான்கும் பொருணான்கும் காட்டு முக்கட்
கடவுளே கடவுளர்கள் கருதுந் தேவே. 57

170 பாங்குளநாம் தெரிதுமெனத் துணிந்து கோடிப்
பழமறைகள் தனித்தனியே பாடிப் பாடி
ஈங்குளதென் றாங்குளதென் றோடி யோடி
இளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந் தோறும்
வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு
மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே எங்கும் 58
தேங்குபர மானந்த வெள்ளமே சச்
சிதானந்த அருட்சிவமே தேவ தேவே.

171 எழுத்தறிந்து தமையுணர்ந்த யோகர் உள்ளத்
தியலறிவாம் தருவினில்அன் பெனுமோர் உச்சி
பழுத்தளிந்து மெவுனநறுஞ் சுவைமேற் பொங்கிப்
பதம்பொருந்த அநுபவிக்கும் பழமே மாயைக்
கழுத்தரிந்து கருமமலத் தலையை வீசும்
கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்டி
விழுத்துணையாய் அமர்ந்தருளும் பொருளே மோன
வெளியினிறை ஆனந்த விளைவாந் தேவே. 59

172 உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்தர்
உறுகருடர் காந்தருவர் இயக்கர் பூதர்
மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை
வானவர்கள் முதலோர்தம் மனத்தால் தேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்
களைவினவ மற்றவையுங் காணேம் என்று
வருத்தமுற்றாங் கவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளி யேஇன்ப மயமாம் தேவே. 60

173 பாயிரமா மறைஅனந்தம் அனந்தம் இன்னும்
பார்த்தளந்து காண்டும்எனப் பல்கான் மேவி
ஆயிரமா யிரமுகங்க ளாலும் பன்னாள்
அளந்தளந்தோர் அணுத்துணையும் அளவு காணா
தேயிரங்கி அழுதுசிவ சிவவென் றேங்கித்
திரும்ப அருட் பரவெளிவாழ் சிவமே ஈன்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோல் எம்போல் வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றும் தாங்குந் தேவே. 61

174 அந்தரமிங் கறிவோமற் றதனில் அண்டம்
அடுக்கடுக்காய் அமைந்தஉள வறிவோம் ஆங்கே
உந்துறும்பல் பிண்டநிலை அறிவோஞ் சீவன்
உற்றநிலை அறிவோமற் றனைத்து நாட்டும்
எந்தைநின தருள்விளையாட் டந்தோ அந்தோ
எள்ளளவும் அறிந்திலோம் என்னே என்று
முந்தனந்த மறைகளெலாம் வழுத்த நின்ற
முழுமுதலே அன்பர்குறை முடிக்கும் தேவே. 62

175 தோன்றுபர சாக்கிரமும் கண்டோம் அந்தச்
சொப்பனமும் கண்டோம்மேல் சுழுத்தி கண்டோம்
ஆன்றபர துரியநிலை கண்டோம் அப்பால்
அதுகண்டோம் அப்பாலாம் அதுவும் கண்டோம்
ஏன்றஉப சாந்தநிலை கண்டோம் அப்பால்
இருந்தநினைக் காண்கிலோம் என்னே என்று 63
சான்றவுப நிடங்களெலாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே.

176 பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோம் மேலைப்
பரவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாசம்
எரிக்கும்இயற் பரநாத நிலைக்கண் மெல்ல
எய்தினோம் அப்பாலும் எட்டிப் போனோம்
தெரிக்கரிய வெளிமூன்றும் தெரிந்தோம் எங்கும்
சிவமேநின் சின்மயம்ஓர் சிறிதும் தேறோம்
தரிக்கரிதென் றாகமங்க ளெல்லாம் போற்றத்
தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே. 64

177 மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல
வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோர் எல்லாம்
இணக்கமுறக் கலந்துகலந் ததீத மாதற்
கியற்கைநிலை யாததுதான் எம்மாற் கூறும்
கணக்குவழக் கனைத்தினையும் கடந்த தந்தோ
காண்பரிதிங் கெவர்க்கும்எனக் கலைக ளெல்லாம்
பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற
பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே. 65

178 பொதுவென்றும் பொதுவில்நடம் புரியா நின்ற
பூரணசிற் சிவமென்றும் போதா னந்த
மதுவென்றும் பிரமமென்றும் பரம மென்றும்
வகுக்கின்றோர் வகுத்திடுக அது தான் என்றும்
இதுவென்றும் சுட்டவொணா ததனால் சும்மா
இருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின் றோரை
விதுவென்ற[1] தண்ணளியால் கலந்து கொண்டு
விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே. 66

179 அருமறையா கமங்கள் முதல் நடுவீ றெல்லாம்
அமைந்தமைந்து மற்றவைக்கும் அப்பா லாகிக்
கருமறைந்த உயிர்கள்தொறுங் கலந்து மேவிக்
கலவாமல் பன்னெறியும் கடந்து ஞானத்
திருமணிமன் றகத்தின்ப உருவாய் என்றும்
திகழ்கருணை நடம்புரியும் சிவமே மோனப்
பெருமலையே பரமஇன்ப நிலையே முக்கட்
பெருமானே எத்திறத்தும் பெரிய தேவே. 67

180 என்னுயிர்நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீஎன்
இன்னுயிர்க்குத் துணைவனீ என்னை ஈன்ற
அன்னைநீ என்னுடைய அப்ப னீஎன்
அரும்பொருள்நீ என்னிதயத் தன்பு நீஎன்
நன்னெறிநீ எனக்குரிய உறவு நீஎன்
நற்குருநீ எனைக்கலந்த நட்பு நீஎன்
தன்னுடைய வாழ்வுநீ என்னைக் காக்குந்
தலைவன்நீ கண்மூன்று தழைத்த தேவே. 68

1. விது என்பது – சந்திரன். ஈண்டு இரண்டன் உருபு விரிக்க. தொ. வே.

181 தானாகித் தானல்ல தொன்று மில்லாத்
தன்மையனாய் எவ்வெவைக்குத் தலைவ னாகி
வானாகி வளியனலாய் நீரு மாகி
மலர்தலைய உலகாகி மற்று மாகித்
தேனாகித் தேனினறுஞ் சுவைய தாகித்
தீஞ்சுவையின் பயனாகித் தேடு கின்ற
நானாகி என்னிறையாய் நின்றோய் நின்னை
நாயடியேன் எவ்வாறு நவிற்று மாறே. 69

182 ஆனேறும் பெருமானே அரசே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அமுதே கொன்றைத்
தேனேறு மலர்ச்சடைஎஞ் சிவனே தில்லைச்
செழுஞ்சுடரே ஆனந்தத் தெய்வ மேஎன்
ஊனேறும் உயிர்க்குள்நிறை ஒளியே எல்லாம்
உடையானே நின்னடிச்சீர் உன்னி அன்பர்
வானேறு கின்றார்நான் ஒருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே. 70

183 செஞ்சடைஎம் பெருமானே சிறுமான் ஏற்ற
செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து
மஞ்சடையும் மதிற்றில்லை மணியே ஒற்றி
வளர்மருந்தே என்னுடைய வாழ்வே வேட்கை
அஞ்சடைய வஞ்சியர்மால் அடைய வஞ்சம்
அடையநெடுந் துயரடைய அகன்ற பாவி
நெஞ்சடைய நினைதியோ நினைதி யேல்மெய்ந்
நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே. 71

184 அன்னையினும் பெரிதினிய கருணை ஊட்டும்
ஆரமுதே என்னுறவே அரசே இந்த
மன்னுலகில் அடியேனை என்னே துன்ப
வலையிலகப் படஇயற்றி மறைந்தாய் அந்தோ
பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்தல் ஆற்றேன்
என்னைஉளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ
என்செய்வேன் என்செய்வேன் என்செய் வேனே. 72

185 படித்தேன்பொய் உலகியல்னூல் எந்தாய் நீயே
படிப்பித்தாய் அன்றியும்அப் படிப்பில் இச்சை
ஒடித்தேன்நான் ஒடித்தேனோ ஒடிப்பித் தாய்பின்
உன்னடியே துணையெனநான் உறுதி யாகப்
பிடித்தேன்மற் றதுவும்நீ பிடிப்பித் தாய்இப்
பேதையேன் நின்னருளைப் பெற்றோர் போல 73
நடித்தேன் எம் பெருமான்ஈ தொன்றும் நானே
நடித்தேனோ அல்லதுநீ நடிப்பித் தாயோ.

186 மத்தேறி அலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தி னோடு
பித்தேறி உழல்கின்ற மனத்தால் அந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறி விளைவேறி மகிழ்கின் றோர்போல்
மேலேறி அன்பரெலாம் விளங்கு கின்றார்
ஒத்தேறி உயிர்க்குயிராய் நிறைந்த எங்கள்
உடையானே இதுதகுமோ உணர்கி லேனே. 74

187 மதியணிந்த முடிக்கனியே மணியே எல்லாம்
வல்லஅருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தார் அன்பரெலாம் அடியேன் ஒன்றும்
கண்டறியேன் கருமத்தால் கலங்கி அந்தோ
பொதியணிந்து திரிந்துழலும் ஏறு போலப்
பொய்யுலகில் பொய்சுமந்து புலம்பா நின்றேன்
துதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ
இன்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே. 75

188 என்னரசே என்னுயிரே என்னை ஈன்ற
என்தாயே என்குருவே எளியேன் இங்கே
தன்னரசே செலுத்தி எங்கும் உழலா நின்ற
சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி அந்தோ
மின்னரசே பெண்ணமுதே என்று மாதர்
வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே எண்ணி
கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே
குப்புறுகின் றேன்மயலில் கொடிய னேனே. 76

189 அல்விலங்கு செழுஞ்சுடராய் அடியார் உள்ளத்
தமர்ந்தருளும் சிவகுருவே அடியேன் இங்கே
இல்விலங்கு மடந்தையென்றே எந்தாய் அந்த
இருப்புவிலங் கினைஒழித்தும் என்னே பின்னும்
மல்விலங்கு பரத்தையர் தம் ஆசை என்னும்
வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன்
புல்விலங்கும் இதுசெய்யா ஓகோ இந்தப்
புலைநாயேன் பிழைபொறுக்கில் புதிதே அன்றோ. 77

190 வன்கொடுமை மலநீக்கி அடியார் தம்மை
வாழ்விக்குங் குருவேநின் மலர்த்தாள் எண்ண
முன்கொடுசென் றிடுமடியேன் தன்னை இந்த
மூடமனம் இவ்வுலக முயற்சி நாடிப்

பின்கொடுசென் றலைத்திழுக்கு[1] தந்தோ நாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போல் பிதற்றா நின்றேன்
என்கொடுமை என்பாவம் எந்தாய் எந்தாய்
என்னுரைப்பேன் எங்குறுவேன் என்செய் வேனே. 78

191 உய்குவித்து[2] மெய்யடியார் தம்மை எல்லாம்
உண்மைநிலை பெறஅருளும் உடையாய் இங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கில் ஆழ்ந்து
வருந்துகின்றேன் அல்லால்உன் மலர்த்தாள் எண்ணிக்
கைகுவித்துக் கண்களில்நீர் பொழிந்து நானோர்
கணமேனும் கருதிநினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ
திருவுளத்தை அறியேன்என் செய்கு வேனே. 79

192 அருள்வெளியில் ஆனந்த வடிவி னால்நின்
றாடுகின்ற பெருவாழ்வே அரசே இந்த
மருள்வலையில் அகப்பட்ட மனத்தால் அந்தோ
மதிகலங்கி மெய்ந்நிலைக்கோர் வழிகா ணாதே
இருள்நெறியில் கோலிழந்த குருட்டு மன்போல்
எண்ணாதெல் லாம்எண்ணி ஏங்கி ஏங்கி
உருள்சகடக் கால்போலுஞ் சுழலா நின்றேன்
உய்யும்வகை அறியேனிவ் வொதிய னேனே. 80

193 கற்றவளை தனக்கும்உண வளிக்கும் உன்றன்
கருணைநிலை தனைஅறியேன் கடையேன் இங்கே
எற்றவளை எறும்பேபோல் திரிந்து நாளும்
இளைத்துநின தருள்காணா தெந்தாய் அந்தோ
பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி
இற்றவளைக்[3] கேள்விடல்போல் விடுதி யேல்யான்
என்செய்வேன் எங்குறுவேன் என்சொல் வேனே. 81

194 அடிமைசெயப் புகுந்திடும் எம்போல்வார் குற்றம்
ஆயிரமும் பொறுத்தருளும் அரசே நாயேன்
கொடுமைசெயு மனத்தாலே வருந்தி அந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்

1. இழுக்குது என்பது மரூஉ வழக்கு. அல்லதூஉம் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய கடிசொல்லில்லை என்பதனால் கோடலுமாம். இங்ஙனமாதல், இனியே தெ த ம க் கு ன ரு ள் வருமோ எனக்கருதி ஏங்குதே நெஞ்சம் எனத் தாயுமானார் முதலிய பிற சான்றோர் செய்யுட்களாலும் உணர்க என்க. தொ. வே.

2. உய்குவித்து என்பதனுள் - கு - சாரியை, தொ. வே.

3. இற்றவள் - மனையறங் காப்போள். தொ. வே.

கடுமைசெயப் பிறர் துணிந்தால் அடிமை தன்னைக்
கண்டிருத்தல் அழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனேன் என்செய் வேன்நின்
திருவுளத்தை அறிந்திலேன் திகைக்கின் றேனே. 82

195 கூம்பாத மெய்ந்நெறியோர் உளத்தே என்றும்
குறையாத இன்பளிக்கும் குருவே ஆசைத்
தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன்
தையலார் மையலெனும் சலதி ஆழ்ந்து
ஓம்பாமல் உவர்நீருண் டுயங்கு கின்றேன்
உன்னடியர் அக்கரைமேல் உவந்து நின்றே
தீம்பாலுஞ் சருக்கரையுந் தேனும் நெய்யும்
தேக்குகின்றார் இதுதகுமோ தேவ தேவே. 83

196 வெள்ளமணி சடைக்கனியே மூவ ராகி
விரிந்தருளும் ஒருதனியே விழல னேனைக்
கள்ளமனக் குரங்காட்டும் ஆட்ட மெல்லாம்
கண்டிருந்தும் இரங்கிலையேல் கவலை யாலே
உள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்னர்
உய்யும்வகை எவ்வகையீ துன்னுந் தோறும்
பொள்ளெனமெய் வியர்க்கஉளம் பதைக்கச் சோபம்
பொங்கிவழி கின்றதுநான் பொறுக்கி லேனே. 84

197 எனையறியாப் பருவத்தே ஆண்டு கொண்ட
என்னரசே என்குருவே இறையே இன்று
மனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல
மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே
தனையறியா முகத்தவர் போல் இருந்தாய் எந்தாய்
தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டாய்
அனையறியாச் சிறுகுழவி யாகி இங்கே
அடிநாயேன் அரற்றுகின்றேன் அந்தோ அந்தோ. 85

198 தீவினைநல் வினையெனும்வன் கயிற்றால் இந்தச்
சீவர்களை ஆட்டுகின்ற தேவே நாயேன்
ஏவினைநேர் கண்மடவார் மையற் பேயால்
இடருழந்தும் சலிப்பின்றி என்னே இன்னும்[1]
நாவினைஎன் பால்வருந்திக் கறண்டு கின்ற
நாய்க்கும் நகை தோன்றநின்று நயக்கின் றேனான்
ஆவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லும்
அறிவிலிக்கும் அறிவிலியேன் ஆன வாறே. 86

199 எம்பெருமான் நின்விளையாட் டென்சொல் கேன்நான்
ஏதுமறி யாச்சிறியேன் எனைத்தான் இங்கே
செம்புனலால் குழைத்தபுலால் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையில் சிறைசெய் தந்தோ

1. பின்னும் - முதற்பதிப்பு 1867, இன்னும் - ச.மு.க பதிப்பு, 1932 பதிப்பு

கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த அந்தக்
கரணமுதல் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி அரட்டர் எல்லாம்
மடிபிடித்து வருத்தவென்றோ வளர்த்தாய் எந்தாய். 87

200 அம்பரத்தே ஆனந்த வடிவால் என்றும்
ஆடுகின்ற மாமணியே அரசே நாயேன்
இம்பரத்தம் எனும்உலக நடையில் அந்தோ
இடருழந்தேன் பன்னெறியில் எனைஇ முத்தே
பம்பரத்தின் ஆடியலைப் படுத்தும் இந்தப்
பாவிமனம் எனக்குவயப் படுவ தில்லை
கொம்பரற்ற இளங்கொடிபோல் தளர்ந்தேன் என்னைக்
குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ. 88

201 கண்ணுடைய நுதற்கரும்பே மன்றில் ஆடும்
காரணகா ரியங்கடந்த கடவு ளேநின்
தண்ணுடைய மலரடிக்கோர் சிறிதும் அன்பு
சார்ந்தேனோ செம்மரம்போல் தணிந்த நெஞ்சேன்
பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேன்என்
பேதைமையை என்புகல்வேன் பேய னேனைப்
புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென் கேனோ.
புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே. 89

202 பொன்னுடையார் இடம்புகவோ அவர்கட் கேற்கப்
பொய்ம்மொழிகள் புகன்றிடவோ பொதிபோல் இந்தக்
கொன்னுடையா உடல்பருக்கப் பசிக்குச் சோறு
கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச
மின்னிடையார் முடைச்சிறுநீர்க் குழிக்கண் அந்தோ
வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதான்
என்னுடையாய் என்னுடையாய் என்னை இங்கே
எடுத்துவளர்த் தனைஅறியேன் என்சொல் வேனே. 90

203 வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த
மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டும்
அருகணைத்துக் கொளப்பெண்பேய் எங்கே மேட்டுக்
கடைத்திடவெண் சோறெங்கே ஆடை யெங்கே
இருகணுக்கு வியப்பெங்கே வசதி யான
இடமெங்கே என்றுதிரிந் திளைத்தேன் அல்லால்
ஒருகணத்தும் உனைநினைந்த துண்டோ என்னை
உடையானே எவ்வகைநான் உய்யு மாறே. 91

204 பொன்மலையோ சிறிதெனப்பே ராசை பொங்கிப்
புவிநடையில் பற்பலகால் போந்து போந்து
நென்மலையோ நிதிமலையோ என்று தேடி
நிலைகுலைந்த தன்றிஉனை நினைந்து நேடி
மன்மலையோ மாமணியோ மருந்தோ என்று
வழுத்தியதே இல்லைஇந்த வஞ்ச நெஞ்சம்
கன்மலையோ இரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ 92

205 தம்மைமறந் தருளமுதம் உண்டு தேக்கும்
தகையுடையார் திருக்கூட்டம் சார்ந்து நாயேன்
வெம்மையெலாம் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டில் என்றும்
செம்மையெலாம் தரும்மௌன அணைமேற் கொண்டு
செறி இரவு பகலொன்றும் தெரியா வண்ணம்
இம்மையிலே எம்மையினும் காணாச் சுத்த
இன்பநிலை அடைவேனோ ஏழை யேனே. 93

206 அடியனேன் பிழையனைத்தும் பொறுத்தாட் கொண்ட
அருட்கடலே மன்றோங்கும் அரசே இந்நாள்
கொடியனேன் செய்பிழையைத் திருவுள் ளத்தே
கொள்ளுதியோ கொண்டுகுலங் குறிப்ப துண்டோ
நெடியனே முதற்கடவுட் சமுகத் தோர்தம்
நெடும்பிழைகள் ஆயிரமும் பொறுத்த மாயை
ஒடியநேர் நின்றபெருங் கருணை வள்ளல்
என மறைகள் ஓதுவதிங் குனைத்தா னன்றே. 94

207 கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதில்
கருத்தறியாச் சிறுவனைஓர் கடுங்கா னத்தே
உண்மயக்கம் கொளவிடுத்தே ஒருவன் பின்போம்
ஒருதாய்போல் மாயைஇருள் ஓங்கும் போதின்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டில் அந்தோ
மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பின் என்னை விட்டே
மறைந்தனையே பரமேநின் வண்மை என்னே. 95

208 நற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோம் இந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்றாயும் அவர் தமைநாம் பற்றோம் பற்றில்
பற்றாத பற்றுடையார் பற்றி உள்ளே
உற்றாயுஞ் சிவபெருமான் கருணை ஒன்றே
உறுபிழைகள் எத்துணையும் பொறுப்ப தென்றுன் 96
பொற்றாளை விரும்பியது மன்று ளாடும்
பொருளேஎன் பிழையனைத்தும் பொறுக்க வன்றே.

209 எண்ணியநம் எண்ணமெலாம் முடிப்பான் மன்றுள்
எம்பெருமான் என்றுமகிழ்ந் திறுமாந் திங்கே
நண்ணியமற் றையர் தம்மை உறாமை பேசி
நன்குமதி யாதிருந்த நாயி னேனைத்
தண்ணியநல் அருட்கடலே மன்றில் இன்பத்
தாண்டவஞ்செய் கின்றபெருந் தகையே எங்கள்
புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயில்
பொய்யனேன் எங்குற்றென் புரிவேன் அந்தோ. 97

210 அன்பர்திரு வுளங்கோயி லாகக்கொண்டே
அற்புதச்சிற் சபையோங்கும் அரசே இங்கு
வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து
மறைந்தனையே ஆனந்த வடிவோய் நின்னைத்
துன்பவடி வுடைப்பிறரில் பிரித்து மேலோர்
துரியவடி வினனென்று சொன்ன வெல்லாம்
இன்பவடி வடைந்தன்றே எந்தாய் அந்தோ
என்னளவென் சொல்கேனிவ் வேழை யேனே. 98

211 புற்றோங்கும் அரவமெல்லாம் பணியாக் கொண்டு
பொன்மேனி தனில்அணிந்த பொருளே மாயை
உற்றோங்கு வஞ்சமனக் கள்வ னேனை
உளங்கொண்டு பணிகொள்வ துனக்கே ஒக்கும்
மற்றோங்கும் அவரெல்லாம் பெருமை வேண்டும்
வன்மனத்தர் எனைவேண்டார் வள்ள லேநான்
கற்றோங்கும் அறிவறியேன் பலவாச் சொல்லும்
கருத்தறியேன் எனக்கருளக் கருது வாயே. 99

212 அருளுடைய பரம்பொருளே மன்றி லாடும்
ஆனந்தப் பெருவாழ்வே அன்பு ளோர்தம்
தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட
சிவமேமெய் அறிவுருவாம் தெய்வ மேஇம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை
ஏற்றுவதற் கெண்ணுகஎன் இன்பத் தேவே. 100

6. திருவருண் முறையீடு

கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

213 [1]அருள்அர சேஅருட் குன்றேமன் றாடும் அருளிறையே
அருள்அமு தேஅருட் பேறே நிறைந்த அருட்கடலே
அருள்அணி யேஅருட் கண்ணேவிண் ணோங்கும் அருள்ஒளியே
அருள்அற மே அருட் பண்பேமுக் கண்கொள் அருட்சிவமே. 1

214 துனியால் உளந்தளர்ந் தந்தோ துரும்பில் சுழலுகின்றேன்
இனியா யினும்இரங் காதோநின் சித்தம்எந் தாய்இதென்ன
அனியாய மோஎன் னளவில்நின் பால்தண் ணருளிலையோ
சனியாம் என் வல்வினைப் போதனை யோஎன்கொல் சாற்றுவதே. 2

215 என்னே முறையுண் டெனில்கேள்வி உண்டென்பர் என்னளவில்
இன்னே சிறிதும் இலையேநின் பால்இதற் கென்செய்குவேன்
மன்னேமுக் கண்ணுடை மாமணி யேஇடை வைப்பரிதாம்
பொன்னேமின் னேர்சடைத் தன்னே ரிலாப்பரி பூரணனே. 3

216 தண்டாத சஞ்சலங் கொண்டேன் நிலையைஇத் தாரணியில்
கண்டார் இரங்குவர் கேட்டார் உருகுவர் கங்கைதிங்கள்
துண்டார் மலர்ச்சடை எந்தாய் இரங்கிலை தூய்மையிலா
அண்டார் பிழையும் பொறுப்போய் இதுநின் அருட்கழகே. 4

217 பொய்யாம் உலக நடைநின்று சஞ்சலம் பொங்கமுக்கண்
ஐயாஎன் உள்ளம் அழலார் மெழுகொத் தழிகின்றதால்
பையார் அரவ மதிச்சடை யாய்செம் பவளநிறச்
செய்யாய் எனக்கருள் செய்யாய் எனில்என்ன செய்குவனே. 5

218 விடமிலை யேர்மணி கண்டாநின் சைவ விரதஞ்செய்யத்
திடமிலை யேஉட் செறிவிலை யேஎன்றன் சித்தத்துநின்
நடமிலை யேஉன்றன் நண்பிலை யேஉனை நாடுதற்கோர்
இடமிலை யேஇதை எண்ணிலை யேசற் றிரங்கிலையே. 6

219 விண்ணுடை யாய்வெள்ளி வெற்புடை யாய்மதி மேவுசடைக்
கண்ணுடை யாய்நெற்றிக் கண்ணுடை யாய்அருட் கண்ணுடையாய்
பண்ணுடை யாய்திசைப் பட்டுடை யாய்இடப் பாலில்அருட்
பெண்ணுடை யாய்வந்திப் பிட்டுடை யாய்என் பெருஞ்செல்வமே. 7

220 விடையுடை யாய்மறை மேலுடை யாய்நதி மேவியசெஞ்
சடையுடை யாய்கொன்றைத் தாருடை யாய்கரம் தாங்குமழுப்
படையுடை யாய்அருட் பண்புடை யாய்பெண் பரவையின்பால்
நடையுடை யாய்அருள் நாடுடை யாய்பதம் நல்குகவே. 8

1. ச.மு.க பதிப்பில் முதல் பாடலாக அருள் அரசே உள்ளது மற்றைய பதிப்பில் தெய்வநிலையம். ஆ. பா. தொ. வே. 219 வது பாடலாக உள்ளது.

221 கீளுடை யாய்பிறைக் கீற்றுடை யாய்எங் கிளைத்தலைமேல்
தாளுடை யாய்செஞ் சடையுடை யாய்என் தனையுடையாய்
வாளுடை யாய்மலை மானுடை யாய்கலை மானுடையாய்
ஆளுடை யாய்மன்றுள் ஆட்டுடை யாய்என்னை ஆண்டருளே. 9

222 நான்படும் பாடு சிவனே உலகர் நவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோஎண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மான்படு மாறுகலங்கிநின்றேன்
ஏன்படு கின்றனை என்றிரங் காய்என்னில் என்செய்வனே. 10

223 பொய்யோ அடிமை உரைத்தல்எந் தாய்என்னுட் போந்திருந்தாய்
ஐயோநின் உள்ளத் தறிந்ததன் றோஎன் அவலமெல்லாம்
கையோட வல்லவர் ஓர்பதி னாயிரங் கற்பநின்று
மெய்யோ டெழுதினுந் தான்அடங் காத வியப்புடைத்தே. 11

224 தேன்சொல்லும் வாயுமை பாகாநின் தன்னைத் தெரிந்தடுத்தோர்
தான்சொல்லுங் குற்றங் குணமாகக் கொள்ளுந் தயாளுவென்றே
நான்சொல்வ தென்னைபொன் நாண்சொல்லும் வாணிதன் நாண்சொல்லும்அவ்
வான்சொல்லும் எம்மலை மான்சொல்லும் கைம்மலை மான்சொல்லுமே. 12

225 வென்றே முதலையும் மூர்க்கரும் கொண்டது மீளவிடார்
என்றே உரைப்பரிங் கென்போன்ற மூடர்மற் றில்லைநின்பேர்
நன்றே உரைத்துநின் றன்றே விடுத்தனன் நாணில்என்மட்
டின்றேயக் கட்டுரை இன்றேஎன் சொல்வ திறையவனே. 13

226 கைக்கின்ற காயும் இனிப்பாம் விடமும் கனஅமுதாம்
பொய்க்கின்ற கானலும் நீராம்வன் பாவமும் புண்ணியமாம்
வைக்கின்ற ஓடுஞ்செம் பொன்னாம்என் கெட்ட மனதுநின்சீர்
துய்க்கின்ற நல்ல மனதாவ தில்லைஎன் சொல்லுவனே. 14

227 வீணே பொழுது கழிக்கின்ற நான்உன் விரைமலர்த்தாள்
காணேன்கண் டாரையுங் காண்கின்றி லேன்சற்றும் காணற்கன்பும்
பூணேன் தவமும் புரியேன் அறமும் புகல்கின்றிலேன்
நாணேன் விலங்கிழி யாணே யெனுங்கடை நாயினனே. 15

228 நானோர் எளிமை அடிமையென் றோநல்லன் அல்லனென்று
தானோநின் அன்பர் தகாதென்பர் ஈதென்று தானினைத்தோ
ஏனோநின் உள்ளம் இரங்கிலை இன்னு மிரங்கிலையேல்
கானோடு வேன்கொல் கடல்விழு வேன்கொல்முக் கண்ணவனே. 16

229 மின்போலுஞ் செஞ்சடை வித்தக னேஒளி மேவியசெம்
பொன்போலு மேனிஎம் புண்ணிய னேஎனைப் போற்றிப்பெற்ற
தன்போலுந் தாய்தந்தை ஆயிரம் பேரிருந் தாலும்அந்தோ
நின்போலும் அன்புடை யார்எனக் கார்இந்த நீணிலத்தே. 17

230 அன்பாலென் தன்னைஇங் காளுடை யாய்இவ் வடியவனேன்
நின்பாலென் துன்ப நெறிப்பால் அகற்றென்று நின்றதல்லால்
துன்பால் இடரைப் பிறர்பால் அடுத்தொன்று சொன்னதுண்டோ
என்பால் இரங்கிலை என்பாற் கடல்பிள்ளைக் கீந்தவனே. 18

231 என்போல் மனிதரை ஏன்அடுப் பேன்எனக் கெய்ப்பில்வைப்பாம்
பொன்போல் விளங்கும் புரிசடை யான்றனைப் போயடுத்தேன்
துன்போர் அணுவும் பெறேன் இனி யான்என்று சொல்லிவந்தேன்
முன்போல் பராமுகஞ் செய்யேல் அருளுக முக்கணனே. 19

232 பொன்னுடை யார்தமைப் போய்அடுப் பாய்என்ற புன்மையினோர்க்
கென்னுடை யான்றனை யேஅடுப் பேன்இதற் கெள்ளளவும்
பின்னிடை யேன்அவர் முன்னடை யேன்எனப் பேசிவந்தேன்
மின்னிடை மாதுமை பாகாஎன் சோகம் விலக்குகவே. 20

233 சாதகத் தோர்கட்குத் தானருள் வேனெனில் தாழ்ந்திடுமா
பாதகத் தோனுக்கு முன்னருள் ஈந்ததெப் பான்மைகொண்டோ
தீதகத் தேன்எளி யேன் ஆயினும்உன் திருவடியாம்
போதகத் தேநினைக் கின்றேன் கருணை புரிந்தருளே. 21

234 அருளறி யாச்சிறு தேவருந் தம்மை அடுத்தவர்கட்
கிருளறி யாவிளக் கென்றாலும் நெஞ்சம் இரங்குகின்றார்
மருளறி யாப்பெருந் தேவேநின் தன்னடி வந்தடுத்தேன்
தெருளறி யாச்சிறி யேன்ஆயி னுஞ்செய்க சீரருளே. 22

235 அரும்பொரு ளேஎன் அரசேஎன் ஆருயிர்க் காகவந்த
பெரும்பொரு ளேஅருட் பேறே சிவானந்தம் பெற்றவர்பால்
வரும்பொரு ளேமுக்கண் மாமணி யேநின் வழியருளால்
தரும்பொரு ளேபொருள் என்றுவந்தேன் எனைத் தாங்கிக்கொள்ளே. 23

236 சரங்கார் முகந்தொடுத் தெய்வது போலென் றனையுலகத்
துரங்கா ரிருட்பெரு வாதனை யால்இடர் ஊட்டுநெஞ்சக்
குரங்கால் மெலிந்துநின் நாமந் துணையெனக் கூறுகின்றேன்
இரங்கார் தமக்கும் இரங்குகின் றோய்எற் கிரங்குகவே. 24

237 கூறுற்ற குற்றமுந் தானே மகிழ்வில் குணமெனவே
ஆறுற்ற செஞ்சடை அண்ணல்கொள் வான்என்பர் ஆங்கதற்கு
வேறுற்ற தோர்கரி வேண்டுங்கொ லோஎன்னுள் மேவிஎன்றும்
வீறுற்ற பாதத் தவன்மிடற் றேகரி மேவியுமே. 25

238 சூற்படு மேக நிறத்தோனும் நான்முகத் தோனும்என்னைப்
போற்படும் பாடுநல் லோர்சொலக் கேட்கும் பொழுதுமனம்
வேற்படும் புண்ணில் கலங்கி அந் தோநம் விடையவன்பூங்
காற்படுந் தூளிநம் மேற்படு மோஒரு கால்என்னுமே. 26

239 வாளேய் நெடுங்கண்ணி எம்பெரு மாட்டி வருடுமலர்த்
தாளே வருந்த மணிக்கூடற் பாணன் தனக்கடிமை
ஆளே எனவிற கேற்றுவிற் றோய்நின் னருள்கிடைக்கும்
நாளேநன் னாள் அந்த நாட்கா யிரந்தெண்டன் நான்செய்வனே. 27

240 அடுத்தார் தமைஎன்றும் மேலோர் விடார்கள் அவர்க்குப்பிச்சை
எடுத்தா யினும்இடு வார்கள்என் பார்அதற் கேற்கச்சொற்பூத்
தொடுத்தார் ஒருவர்க்குக் கச்சூரி லேபிச்சைச் சோறெடுத்துக்
கொடுத்தாய்நின் பேரருள் என்சொல்லு கேன்எண் குணக்குன்றமே. 28

241 நாடிநின் றேநினை நான்கேட்டுக் கொள்வது நண்ணும்பத்துக்
கோடியன் றேஒரு கோடியின் நூற்றொரு கூறுமன்றே
தேடிநின் றேபுதைப் போருந் தருவர்நின் சீர்நினைந்துட்
பாடியந் தோமனம் வாடிநின் றேன்முகம் பார்த்தருளே. 29

242 தாயாகி னுஞ்சற்று நேரந் தரிப்பள்நந் தந்தையைநாம்
வாயார வாழ்த்தினும் வையினும் தன்னிடை வந்திதுநீ
ஈயாய் எனில்அருள் வான்என் றுனையடுத் தேன்உமையாள்
நேயா மனமிரங் காயாஎன் எண்ணம் நெறிப்படவே. 30

243 நடும்பாட்டை நாவலன் வாய்த்திருப் பாட்டை நயந்திட்டநீ
குடும்பாட்டை மேற்கொண்ட என்தமிழ்ப் பாட்டையும் கொண்டெனுள்ளத்
திடும்பாட்டை நீக்கிலை என்னினுந் துன்பத் திழுக்குற்றுநான்
படும்பாட்டை யாயினும் பார்த்திரங் காய்எம் பரஞ்சுடரே. 31

244 ஏட்டாலுங் கேளயல் என்பாரை நான்சிரித் தென்னைவெட்டிப்
போட்டாலும் வேறிடம் கேளேன் என் நாணைப் புறம்விடுத்துக்
கேட்டாலும் என்னை உடையா னிடஞ்சென்று கேட்பனென்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலுஞ் சொல்லி நிறுத்துவனே. 32

245 சீர்க்கின்ற கூடலில் பாணனுக் காட்படச் சென்றஅந்நாள்
வேர்க்கின்ற வெம்மணல் என்தலை மேல்வைக்கு மெல்லடிக்குப்
பேர்க்கின்ற தோறும் உறுத்திய தோஎனப் பேசிஎண்ணிப்
பார்க்கின்ற தோறும் என்கண்ணே என்உள்ளம் பதைக்கின்றதே. 33

246 நீயேஎன் தந்தை அருளுடை யாய்எனை நேர்ந்துபெற்ற
தாயேநின் பாலிடத் தெம்பெரு மாட்டிஇத் தன்மையினால்
நாயேன் சிறிதுங் குணமிலன் ஆயினும் நானும்உங்கள்
சேயே எனைப்புறம் விட்டால் உலகஞ் சிரித்திடுமே. 34

247 தெருளும் பொருளும்நின் சீரரு ளேஎனத் தேர்ந்தபின்யான்
மருளும் புவனத் தொருவரை யேனு மதித்ததுண்டோ
வெருளும் புவியில் துயரால் கலங்கி வெதும்புகின்றேன்
இருளும் கருமணி கண்டா அறிந்தும் இரங்கிலையே. 35

248 பெண்ணான் மயங்கும் எளியேனை ஆளப் பெருங்கருணை
அண்ணாநின் உள்ளம் இரங்காத வண்ணம் அறிந்து கொண்டேன்
கண்ணார் உலகில்என் துன்பமெல் லாம்வெளி காணிலிந்த
மண்ணா பிலத்தொடு விண்ணாடுங் கொள்ளை வழங்குமென்றே. 36

249 நெறிகொண்ட நின்னடித் தாமரைக் காட்பட்டு நின்றஎன்னைக்
குறிகொண்ட வாழ்க்கைத் துயராம் பெரிய கொடுங்கலிப்பேய்
முறிகொண் டலைக்க வழக்கோ வளர்த்த முடக்கிழநாய்
வெறி கொண்ட தேனும் விடத்துணி யார்இவ் வியனிலத்தே. 37

250 மதியாமல் ஆரையும் நான்இறு மாந்து மகிழ்கின்றதெம்
பதியாம் உனது திருவருட் சீருரம் பற்றியன்றோ
எதியார் படினும் இடர்ப்பட் டலையஇவ் வேழைக்கென்ன
விதியா இனிப்பட மாட்டேன் அருள்செய் விடையவனே. 38

251 கற்கோட்டை நெஞ்சருந் தம்பால் அடுத்தவர் கட்குச்சும்மாச்
சொற்கோட்டை யாயினும் கட்டுவர் நின்னைத் துணிந்தடுத்தேன்
அற்கோட்டை நெஞ்சுடை யேனுக் கிரங்கிலை அன்றுலவா
நெற்கோட்டை ஈந்தவன் நீயல்லை யோமுக்கண் நின்மலனே. 39

252 ஆதிக்க மாயை மனத்தேன் கவலை அடுத்தடுத்து
வாதிக்க நொந்து வருந்துகின் றேன்நின் வழக்கம்எண்ணிச்
சோதிக்க என்னைத் தொடங்கேல் அருளத் தொடங்குகண்டாய்
போதிக்க வல்லநற் சேய்உமை யோடென்னுள் புக்கவனே. 40

253 பிறைமுடித் தாண்டொரு பெண்முடித் தோர்பிள்ளைப் பேர்[1]முடித்த
நிறைமுடித் தாண்டவஞ் செவ்வேணி செய்திட நித்தமன்றின்
மறைமுடித் தாண்டவஞ் செய்வோய்என் பாலருள் வைத்தெளியேன்
குறைமுடித் தாண்டுகொள் என்னே பலமுறை கூறுவதே. 41

254 நடங்கொண்ட பொன்னடி நீழலில் நான்வந்து நண்ணுமட்டும்
திடங்கொண்ட நின்புகழ் அல்லால் பிறர்புகழ் செப்பவையேல்
விடங்கொண்ட கண்டத் தருட்குன்ற மேஇம வெற்புடையாள்
இடங்கொண்ட தெய்வத் தனிமுத லேஎம் இறையவனே. 42

255 விழிக்கஞ்ச னந்தரும் மின்னார்தம் வாழ்க்கையில் வீழ்ந்தயலோர்
மொழிக்கஞ்சி உள்ளம் பொறாதுநின் நாம மொழிந்தெளியேன்
குழிக்கஞ்சி போன்மயங் கின்றேன்[2] அருளக் குறித்திலையேல்
பழிக்கஞ்சி னோய்இன்னும் என்பழிக் கஞ்சப் படுமுனக்கே. 43

256 சேல்வைக்கும் கண்ணுமை பாகாநின் சித்தம் திருவருள்என்
பால்வைக்கு மேல்இடர் எல்லாம் எனைவிட்டப் பால்நடக்கக்
கால்வைக்கு மேநற் சுகவாழ்வென் மீதினில் கண்வைக்குமே
மால்வைக்கு மாயைகள் மண்வைக்கு மேதங்கள் வாய்தனிலே. 44

1. ஓர்பிள்ளைப்பேர் - மதலை - சரக்கொன்றை. ச. மு. க.
2. மயங்குகின்றேன், மயங்கின்றேன் என விகாரமாயிற்று. தொ. வே.

257 ஒருமாது பெற்ற மகன்பொருட் டாக உவந்துமுன்னம்
வருமாம னாகி வழக்குரைத் தோய்என் வழக்குரைத்தற்
கிருமா நிலத்தது போல்வேடங் கட்ட இருத்திகொலோ
திருமால் வணங்கும் பதத்தவ யானுன் சிறுவனன்றே. 45

258 முன்னஞ்ச முண்ட மிடற்றர சேநின் முழுக்கருணை
அன்னஞ் சுகம்பெற உண்டும்உன் பால்அன் படைந்திலதால்
கன்னெஞ்ச மோகட்டை வன்னெஞ்ச மோளட்டிக் காய்நெஞ்சமோ
என்னெஞ்சம் என்னெஞ்ச மோதெரி யேன் இதற் கென்செய்வதே. 46

259 வானம் விடாதுறு கால்போல்என் தன்னை வளைந்துகொண்ட
மானம் விடாதிதற் கென்செய்கு வேன்நின்னை வந்தடுத்தேன்
ஊனம் விடாதுழல் நாயேன் பிழையை உளங்கொண்டிடேல்[1]
ஞானம் விடாத நடத்தோய்நின் தண்ணருள் நல்குகவே. 47

260 நாயுஞ் செயாத நடையுடை யேனுக்கு நாணமும்உள்
நோயுஞ் செயாநின்ற வன்மிடி நீக்கிநன் நோன்பளித்தாய்
பேயுஞ் செயாத கொடுந்தவத் தால்பெற்ற பிள்ளைக்குநல்
தாயும் செயாள் இந்த நன்றிகண் டாய்செஞ் சடையவனே. 48

261 உருவத்தி லேசிறி யேனாகி யூகத்தி லொன்றுமின்றித்
தெருவத்தி லேசிறு கால்வீசி யாடிடச் சென்றஅந்தப்
பருவத்தி லேநல் அறிவளித் தேஉனைப் பாடச்செய்தாய்
அருவத்தி லேஉரு வானோய்நின் தண்ணளி யார்க்குளதே. 49

262 மானெழுந் தாடுங் கரத்தோய்நின் சாந்த மனத்தில்சினந்
தானெழுந் தாலும் எழுகஎன் றேஎன் தளர்வைஎல்லாம்
ஊனெழுந் தார்க்கநின் பால்உரைப் பேன்அன்றி ஊர்க்குரைக்க
நானெழுந் தாலும்என் நாஎழு மோமொழி நல்கிடவே. 50

263 வனமெழுந் தாடுஞ் சடையோய்நின் சித்த மகிழ்தலன்றிச்
சினமெழுந் தாலும் எழுகஎன் றேஎன் சிறுமையைநின்
முனமெழுந் தாற்றுவ தல்லால் பிறர்க்கு மொழிந்திடஎன்
மனமெழுந் தாலும்என் வாய்எழு மோஉள்ள வாறிதுவே. 51

264 சிற்பர மேஎஞ் சிவமே திருவருள் சீர்மிகுந்த
கற்பக மேஉனைச் சார்ந்தோர்க் களிக்குநின் கைவழக்கம்
அற்பமன் றேபல அண்டங் களின் அடங் காததென்றே
நற்பர ஞானிகள் வாசகத் தால்கண்டு நாடினனே. 52

265 வருஞ்செல்லுள்[2] நீர்மறுத் தாலும் கருணை மறாதஎங்கள்
பெருஞ்செல்வ மேஎஞ் சிவமே நினைத்தொழப் பெற்றும்இங்கே
தருஞ்செல் அரிக்கு மரம்போல் சிறுமைத் தளர்நடையால்
அருஞ்செல்லல் மூழ்கிநிற் கின்றேன் இதுநின் அருட்கழகே. 53

1. கொண்டிடேல் என முன்னிலை எதிர்மறை ஏவன் முற்றாகக் கொள்க. தொ. வே.
2. செல் - மேகம். தொ. வே.

266 கருமுக நீக்கிய பாணனுக் கேகன கங்கொடுக்கத்
திருமுகம் சேரற் களித்தோய்என் றுன்னைத் தெரிந்தடுத்தென்
ஒருமுகம் பார்த்தருள் என்கின்ற ஏழைக் குதவிலையேல்
உருமுக[1] வார்க்கும் விடையோய் எவர்மற் றுதவுவரே. 54

267 மருப்பா வனத்துற்ற மாணிக்கு மன்னன் மனமறிந்தோர்
திருப்பா சுரஞ்செய்து பொற்கிழி ஈந்தநின் சீர்நினைந்தே
விருப்பா நினையடுத் தேன்எனக் கீந்திட வேஇன்றென்னை
கருப்பாநின் சித்தம் திருப்பாய்என் மீது கறைக்கண்டனே. 55

268 பீழையை மேவும்இவ் வாழ்க்கையி லேமனம் பேதுற்றஇவ்
ஏழையை நீவிட லாமோ அடிமைக் கிரங்குகண்டாய்
மாழையைப்[2] போன்முன்னர்த் தாங்கொண்டு வைத்து வளர்த்தஇள
வாழையைத் தாம்பின்னர் நீர்விட லின்றி மறுப்பதுண்டே. 56

269 கருத்தறி யாச்சிறி யேன்படுந் துன்பக் கலக்கமெல்லாம்
உருத்தறி யாமை பொறுத்தருள் ஈபவர் உன்னையன்றித்
திருத்தறி யார்பிறர் அன்றேமென் கன்றின் சிறுமைஒன்றும்
எருத்தறி யாதுநற் சேதா அறியும் இரங்குகவே. 57

270 வான்வேண்டிக் கொண்ட மருந்தோமுக் கண்கொண்ட வள்ளலுன்னை
நான்வேண்டிக் கொண்டது நின்னடி யார்க்கு நகைதருமீ
தேன்வேண்டிக் கொண்டனை என்பார் இதற்கின்னும் ஏனிரங்காய்
தான்வேண்டிக் கொண்ட அடிமைக்குக் கூழிடத் தாழ்ப்பதுண்டே. 58

271 பையுரைத் தாடும் பணிப்புயத் தோய்தமைப் பாடுகின்றோர்
உய்யுரைத் தாவுள்ள தில்லதென் றில்லதை உள்ளதென்றே
பொய்யுரைத் தாலும் தருவார் பிறர்அது போலன்றிநான்
மெய்யுரைத் தாலும் இரங்காமை நின்னருள் மெய்க்கழகே. 59

272 மடல்வற்றி னாலும் மணம்வற்று றாத மலரெனஎன்
உடல்வற்றி னாலும்என் உள்வற்று மோதுயர் உள்ளவெல்லாம்
அடல்வற்று றாதநின் தாட்கன்றி ஈங்கய லார்க்குரையேன்
கடல்வற்றி னாலும் கருணைவற் றாதமுக் கண்ணவனே. 60

273 எள்ளிருக் கின்றதற் கேனுஞ் சிறிதிட மின்றிஎன்பான்
முள்ளிருக் கின்றது போலுற்ற துன்ப முயக்கமெல்லாம்
வெள்ளிருக் கின்றவர் தாமுங்கண் டார்எனில் மேவிஎன்றன்
உள்ளிருக் கின்றநின் தாட்கோதல் என்எம் உடையவனே. 61

274 பொன்கின்று[3] பூத்த சடையாய்இவ் வேழைக்குன் பொன்னருளாம்
நன்கின்று நீதரல் வேண்டும் அந்தோதுயர் நண்ணிஎன்னைத்
தின்கின்ற தேகொடும் பாம்பையும் பாலுணச் செய்துகொலார்
என்கின்ற ஞாலம் இழுக்குரை யாதெற் கிரங்கிடினே. 62

1. உரும் – இடி. தொ. வே.
2. மாழை – பொன். தொ. வே. 3. பொன்கின்று பூத்த சடை – கொன்றை பூத்த சடை. தொ. வே.

275 வாய்மூடிக் கொல்பவர் போலேஎன் உள்ளத்தை வன்துயராம்
பேய்மூடிக் கொண்டதென் செய்கேன் முகத்தில் பிறங்குகையைச்
சேய்மூடிக் கொண்டுநற் பாற்கழக் கண்டுந் திகழ்முலையைத்
தாய்மூடிக் கொள்ளுவ துண்டோ அருளுக சங்கரனே. 63

276 கோள்வேண்டும் ஏழை மனத்தினை வேறுற்றுக் கொட்டக்கொள்ளித்
தேள்வேண்டு மோசுடத் தீவேண்டு மோவதை செய்திட ஓர்
வாள்வேண்டு மோகொடுந் துன்பே அதில்எண் மடங்குகண்டாய்
ஆள் வேண்டு மேல் என்னை ஆள்வேண்டும் என்னுள் அஞர்ஒழித்தே. 64

277 விடையிலை யோஅதன் மேலேறி என்முன் விரைந்துவரப்
படையிலை யோதுயர் எல்லாம் துணிக்கப் பதங்கொளருட்
கொடையிலை யோஎன் குறைதீர நல்கக் குலவும்என்தாய்
புடையிலை யோஎன் தனக்காகப் பேசஎம் புண்ணியனே. 65

278 நறையுள தேமலர்க் கொன்றைகொண் டாடிய நற்சடைமேல்
பிறையுள தேகங்கைப் பெண்ணுள தேபிறங் குங்கழுத்தில்
கறையுள தேஅருள் எங்குள தேஇக் கடையவனேன்
குறையுள தேஎன் றரற்றவும் சற்றுங் குறித்திலதே. 66

279 சினத்தாலும் காமத்தி னாலும்என் தன்னைத் திகைப்பிக்கும்இம்
மனத்தால் உறுந்துயர் போதாமை என்று மதித்துச்சுற்றும்
இனத்தாலும் வாழ்க்கை இடும்பையினாலும் இளைக்கவைத்தாய்
அனத்தான் புகழும் பதத்தோய் இதுநின் அருட்கழகே. 67

280 புல்லள வாயினும் ஈயார்தம் வாயில் புகுந்துபுகழ்ச்
சொல்லள வாநின் றிரப்போர் இரக்கநற் [1]சொன்னங்களைக்
கல்லள[2] வாத்தரு கின்றோர்தம் பாலுங் கருதிச்சென்றோர்
நெல்லள வாயினும் கேளேன்நின் பாலன்றி நின்மலனே. 68

281 பிறைசூழ்ந்த வேணி முடிக்கனி யேஎம் பெருஞ்செல்வமே
கறைசூழ்ந்த கண்டத்தெம் கற்பக மேநுதற் கட்கரும்பே
மறைசூழ்ந்த மன்றொளிர் மாமணி யேஎன் மனமுழுதும்
குறைசூழ்ந்து கொண்டதென் செய்கேன் அகற்றக் குறித்தருளே. 69

282 கண்கட்டி ஆடும் பருவத்தி லேமுலை கண்டஒரு
பெண்கட்டி யாள நினைக்கின்ற ஓர்சிறு பிள்ளையைப்போல்
எண்கட்டி யானுன் அருள்விழைந் தேன்சிவ னேஎன் நெஞ்சம்
புண்கட்டி யாய்அலைக் கின்றது மண்கட்டிப் போலுதிர்ந்தே. 70

283 மெய்விட்ட வஞ்சக நெஞ்சால் படுந்துயர் வெந்நெருப்பில்
நெய்விட்ட வாறிந்த வாழ்க்கையின் வாதனை நேரிட்டதால்
பொய்விட்ட நெஞ்சுறும் பொற்பதத் தையஇப் பொய்யனைநீ
கைவிட் டிடநினை யேல்அருள் வாய்கருணைக்கடலே. 71

1. சொன்னம் - சொர்னம் - பொன் 2. கல் என்பது - மலை. தொ. வே.

284 அருட்கட லேஅக் கடலமு தேஅவ் வமுதத்துற்ற
தெருட்சுவை யேஅச் சுவைப்பய னேமறைச் சென்னிநின்ற
பொருட்பத மேஅப் பதத்தர சேநின் புகழ்நினையா
இருட்குண மாயை மனத்தே னையும்உவந் தேன்றுகொள்ளே. 72

285 அண்டங்கண் டானும் அளந்தானும் காண்டற் கரியவநின்
கண்டங்கண் டார்க்குஞ் சடைமேல் குறைந்த கலைமதியின்
துண்டங்கண் டார்க்கும் பயமுள தோஎனச் சூழ்ந்தடைந்தேன்
தொண்டன்கண் டாள்பல தெண்டன்கண் டாய்நின் துணையடிக்கே. 73

286 தேட்டக்கண் டேர்மொழிப் பாகா உலகில் சிலர்குரங்கை
ஆட்டக்கண் டேன்அன்றி அக்குரங் கால்அவர் ஆடச்சற்றும்
கேட்டுக்கண் டேனிலை நானேழை நெஞ்சக் கிழக்குரங்கால்
வேட்டுக்கொண் டாடுகின் றேன்இது சான்ற வியப்புடைத்தே. 74

287 போகங்கொண் டார்த்த அருளார் அமுதப் புணர்முலையைப்
பாகங்கொண் டார்த்த பரம்பொரு ளேநின் பதநினையா
வேகங்கொண் டார்த்த மனத்தால்இவ் வேழை மெலிந்துமிகச்
சோகங்கொண் டார்த்துநிற் கின்றேன் அருளத் தொடங்குகவே. 75

288 இன்றல வேநெடு நாளாக ஏழைக் கெதிர்த்ததுன்பம்
ஒன்றல வேபல எண்ணில வேஉற் றுரைத்ததயல்
மன்றல வேபிறர் நன்றல வேயென வந்தகயக்
கன்றல வேபசுங் கன்றடி யேன்றனைக் காத்தருளே. 76

289 படிபட்ட மாயையின் பாற்பட்ட சாலப் பரப்பிற்பட்டே
மிடிபட்ட வாழ்க்கையின் மேற்பட்ட துன்ப விசாரத்தினால்
அடிபட்ட நானுனக் காட்பட்டும் இன்னும் அலைதல்நன்றோ
பிடிபட்ட நேரிடைப் பெண்பட்ட பாகப் பெருந்தகையே. 77

290 உடையாய்என் விண்ணப்பம் ஒன்றுண்டு கேட்டருள் உன்னடிச்சீர்
தடையாதும் இன்றிப் புகல்வதல் லால்இச் சகத்திடைநான்
நடையால் சிறுமைகொண் டந்தோ பிறரை நவின்றவர்பால்
அடையா மையுநெஞ் சுடையாமை யுந்தந் தருளுகவே. 78

291 தஞ்சமென் றேநின்ற நாயேன் குறையைத் தவிர்உனக்கோர்
பஞ்சமின் றேஉல கெல்லாநின் சீரருட் பாங்குகண்டாய்
எஞ்சநின் றேற்குனை யல்லால் துணைபிறி தில்லைஇது
வஞ்சமன் றேநின் பதங்காண்க முக்கண் மணிச்சுடரே. 79

292 பொறுத்தாலும் நான்செயும் குற்றங்கள் யாவும் பொறாதெனைநீ
ஒறுத்தாலும் நன்றினிக் கைவிட்டி டேல்என் னுடையவன் நீ
வெறுத்தாலும் வேறிலை வேற்றோர் இடத்தை விரும்பி என்னை
அறுத்தாலுஞ் சென்றிட மாட்டேன் எனக்குன் அருளிடமே. 80

293 சேல்வரும் ஏர்விழி மங்கைபங் காஎன் சிறுமைகண்டால்
மேல்வரு நீவரத் தாழ்த்தாலும் உன்றன் வியன்அருட்பொற்
கால்வரு மேஇளங் கன்றழத் தாய்ப்பசுக் காணின்மடிப்
பால்வரு மேமுலைப் பால்வரு மேபெற்ற பாவைக்குமே. 81

294 வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்
பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவிநடையாம்
துன்பட்ட வீரர்அந் தோவாத வூரர்தம் தூயநெஞ்சம்
என்பட்ட தோஇன்று கேட்டஎன் நெஞ்சம் இடிபட்டதே. 82

295 நீர்சிந்தும் கண்ணும் நிலைசிந்தும் நெஞ்சமும் நீணடையில்
சீர்சிந்து வாழ்க்கையும் தேன்சிந்தி வாடிய செம்மலர்போல்
கூர்சிந்து புந்தியும் கொண்டுநின் றேன்உட் குறைசிந்தும்வா
றோர்சிந்து போலருள் நேர்சிந்தன் ஏத்தும் உடையவனே. 83

296 கொடிகொண்ட ஏற்றின் நடையும் சடையும் குளிர்முகமும்
துடிகொண்ட கையும் பொடிகொண்ட மேனியும் தோலுடையும்
பிடிகொண்ட பாகமும் பேரருள் நோக்கமும் பெய்கழலும்
குடிகொண்ட நன்மனம் என்மனம் போற்குறை கொள்வதின்றே. 84

297 விதிக்கும் பதிக்கும் பதிநதி ஆர்மதி வேணிப்பதி
திதிக்கும் பதிக்கும் பதிமேற் கதிக்குந் திகழ்பதிவான்
துதிக்கும் பதிக்கும் பதிஓங்கு மாபதி சொற்கடந்த
பதிக்கும் பதிசிற் பதியெம் பதிநம் பசுபதியே. 85

298 எனையடைந் தாழ்த்திய துன்பச் சுமையை இறக்கெனவே
நினையடைந் தேன்அடி நாயேற் கருள நினைதிகண்டாய்
வினையடைந் தேமன வீறுடைந் தேநின்று வேற்றவர்தம்
மனையடைந் தேமனம் வாடல்உன் தொண்டர் மரபல்லவே. 86

299 வனம்போய் வருவது போலேவன் செல்வர் மனையிடத்தே
தினம்போய் வருமிச் சிறியேன், சிறுமைச் செயலது போய்ச்
சினம்போய்க் கொடும்பகைக் காமமும் போய்நின் திறநிகழ்த்தா
இனம்போய்க் கொடிய மனம்போய் இருப்பதென் றென்னரசே. 87

300 பெற்றா ளெனையநின் குற்றேவல் செய்து பிழைக்கறியாச்
சிற்றாள் பலரினும் சிற்றா ளெனுமென் சிறுமைதவிர்த்
துற்றாள் கிலைஎனின் மற்றார் துணைஎனக் குன்கமலப்
பொற்றாள் அருட்புகழ்க் கற்றாய்ந்து பாடப் புரிந்தருளே. 88

301 அந்நாணை யாதுநஞ் சேற்றயன் மால்மனை யாதியர்தம்
பொன்னாணைக் காத்த அருட்கட லேபிறர் புன்மனைபோய்
இந்நாணை யாவகை என்னாணைக் காத்தருள் ஏழைக்குநின்
தன்னாணை ஐயநின் தாளாணை வேறு சரணில்லையே.

302 பவசாத னம்பெறும் பாதகர் மேவும்இப் பாரிடைநல்
சிவசாத னத்தரை ஏன்படைத் தாய்அத் திருவிலிகள்
அவசாத னங்களைக் கண்டிவ ருள்ளம் அழுங்கஎன்றோ
கவசா தனமெனக் கைம்மா னுரியைக் களித்தவனே. 90

303 நான்செய்த புண்ணிய மியாதோ சிவாய நமஎனவே
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவரார்
வான்செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே. 91

304 உற்றா யினுமறைக் கோர்வரி யோய்எனை உற்றுப்பெற்ற
நற்றா யினும்இனி யானேநின் நல்லருள் நல்கில்என்னை
விற்றா யினுங்கொள வேண்டுகின் றேன்என் விருப்பறிந்தும்
சற்றா யினும்இரங் காதோநின் சித்தம் தயாநிதியே. 92

305 வான்மா றினுமொழி மாறாத மாறன் மனங்களிக்கக்
கான்மாறி யாடிய கற்பக மேநின் கருணையென்மேல்
தான்மா றினும்விட்டு நான்மாறி டேன்பெற்ற தாய்க்குமுலைப்
பான்மாறி னும்பிள்ளை பான்மாறு மோஅதில் பல்லிடுமே. 93

306 அன்பரி தாமனத் தேழையன் யான்துய ரால்மெலிந்தே
இன்பரி தாமிச் சிறுநடை வாழ்க்கையில் ஏங்குகின்றேன்
என்பரி தாப நிலைநீ அறிந்தும் இரங்கிலையேல்
வன்பரி தாந்தண் அருட்கட லேஎன்னை வாழ்வெனக்கே. 94

307 மைகண்ட கண்டமும் மான்கண்ட வாமமும் வைத்தருளில்
கைகண்ட நீளங்கும் கண்கண்ட தெய்வம் கருதிலென்றே
மெய்கண்ட நான்மற்றைப் பொய்கண்ட தெய்வங்கள் மேவுவனோ
நெய்கண்ட ஊண்விட்டு நீர்கண்ட கூழுக்கென் நேடுவதே. 95

308 வேணிக்கு மேலொரு வேணி[1] வைத்தோய்முன் விரும்பிஒரு
மாணிக்கு வேதம் வகுத்தே கிழிஒன்று வாங்கித்தந்த
காணிக்குத் தானரைக் காணிமட் டாயினும் காட்டுகண்டாய்
பாணிக்கு மோ[2]தரும் பாணி[3] வந்தேற்றவர் பான்மைகண்டே. 96

309 மறைக்கொளித் தாய்நெடு மாற்கொளித் தாய்திசை மாமுகங்கொள்
இறைக்கொளித் தாய்இங் கதிலோர் பழியிலை என்றன்மனக்
குறைக்கொளித் தாலும் குறைதீர்த் தருளெனக் கூவிடும்என்
முறைக்கொளித் தாலும் அரசேநின் பால்பழி மூடிடுமே. 97

1. வேணி என்பது – நதி. தொ. வே.
2. பாணிக்குமோ என்பது – தாமதிக்குமோ. ச. மு. க.
3. பாணி என்பது – கை – நீர். ச. மு. க.

310 முன்மழை வேண்டும் பருவப் பயிர்வெயில் மூடிக்கெட்ட
பின்மழை பேய்ந்தென்னை பேறுகண் டாய்அந்தப் பெற்றியைப்போல்
நின்மழை போற்கொடை இன்றன்றி மூப்பு நெருங்கியக்கால்
பொன்மழை பேய்ந்தென்னை கன்மழை பேய்ந்தென்ன பூரணனே. 98

311 நீளா தரவுகொண் டென்குறை யாவும் நிகழ்த்தவும்நீ
கேளா தவன்என வாளா இருக்கின்ற கேண்மைஎன்னோ
சூளாத முக்கண் மணியே விடேல்உனைச் சூழ்ந்தஎன்னை
ஆளாகக் கொள்ளினும் மீளா நரகத் தழுத்தினுமே. 99

312 வளங்கன்று மாவனத் தீன்றதன் தாயின்றி வாடுகின்ற
இளங்கன்று போல்சிறு வாழ்க்கையில் நின்அருள் இன்றிஅந்தோ
உளங்கன்று நான்செய்வ தென்னே கருணை உதவுகண்டாய்
களங்கன்று பேரருட் காரென்று கூறும் களத்தவனே. 100

313 காற்றுக்கு மேல்விட்ட பஞ்சாகி உள்ளம் கறங்கச்சென்றே
சோற்றுக்கு மேற்கதி இன்றென வேற்றகந் தோறும்உண்போர்
தூற்றுக்கு மேல்பெருந் தூறிலை ஆங்கென் துயரமெனும்
சேற்றுக்கு மேல்பெருஞ் சேறிலை காண்அருட் செவ்வண்ணனே. 101

314 அந்தோ துயரில் சுழன்றாடும் ஏழை அவலநெஞ்சம்
சிந்தோத நீரில் சுழியோ இளையவர் செங்கைதொட்ட
பந்தோ சிறுவர்தம் பம்பர மோகொட்டும் பஞ்சுகொலோ
வந்தோ டுழலும் துரும்போஎன் சொல்வதெம் மாமணியே. 102

315 பொன்வச மோபெண்க ளின்வச மோகடற் பூவசமோ
மின்வச மோஎனும் மெய்வச மோஎன் விதிவசமோ
தன்வச மோமலந் தன்வச மோஎன் சவலைநெஞ்சம்
என்வச மோஇல்லை நின்வசம் நான்எனை ஏன்றுகொள்ளே. 103

316 நானடங் காதொரு நாட்செயும் குற்ற நடக்கைஎல்லாம்
வானடங் காதிந்த மண்ணடங் காது மதிக்குமண்டம்
தானடங் காதெங்குந் தானடங் காதெனத் தானறிந்தும்
மானடங் காட்டு மணிஎனை ஆண்டது மாவியப்பே. 104

317 பாம்பாயினும் உணப்பால் கொடுப்பார் வளர்ப் பார்மனைப்பால்
வேம்பாயி னும்வெட்டல் செய்யார் வளர்த்த வெருட்சிக்கடாத்
தாம்பா யினும்[1] ஒரு தாம்பாயி னுங்கொடு தாம்பின்செல்வார்
தேம்பாய் மலர்க்குழற் காம்பாக என்னையும் சேர்த்துக்கொள்ளே. 105

318 நெருப்புக்கு முட்டையும் கூழ்க்கிட உப்பையும் நேடிச்செல்வோர்
பருப்புக்கு நெய்யும்ஒண் பாலுக்கு வாழைப் பழமுங்கொள்ளத்
தெருப்புக்கு வாரொடு சேர்கிலென் னாம்இச் சிறுநடையாம் 106
இருப்புக்கு வேண்டிய நான்சிவ யோகர்பின் எய்திலென்னே.

1. கடா, தாம், பாயினும் - பாய்ந்தாலும், தாம்பு - கயிறு. ச. மு. க.

319 எம்மத மாட்டு மரியோய்என் பாவி இடும்பைநெஞ்சை
மும்மத யானையின் காலிட் டிடறினும் மொய்அனற்கண்
விம்மத மாக்கினும் வெட்டினும் நன்றுன்னை விட்டஅதன்
வெம்மத நீங்கலென் சம்மதங் காண்எவ் விதத்தினுமே. 107

320 கல்லாத புந்தியும் அந்தோநின் தாளில் கணப்பொழுதும்
நில்லாத நெஞ்சமும் பொல்லாத மாயையும் நீண்மதமும்
கொல்லாமல் கொன்றெனைத் தின்னாமல் தின்கின்ற கொள்கையைஇங்
கெல்லாம் அறிந்த உனக்கெளி யேனின் றிசைப்பதென்னே. 108

321 தெவ்வழி ஓடும் மனத்தேனுக் குன்றன் திருவுளந்தான்
இவ்வழி ஏகென் றிருவழிக் குள்விட்ட தெவ்வழியோ
அவ்வழி யேவழி செவ்வழி பாடநின் றாடுகின்றோய்
வெவ்வழி நீர்ப்புணைக் கென்னே செயல்இவ் வியனிலத்தே. 109

322 கண்ணார் நுதற்செங் கரும்பேநின் பொன்னருட் கான்மலரை
எண்ணாத பாவிஇங் கேன்பிறந் தேன்நினை ஏத்துகின்றோர்
உண்ணாத ஊணும் உடுக்கா உடையும் உணர்ச்சிசற்றும்
நண்ணாத நெஞ்சமும் கொண்டுல கோர்முன்னர் நாணுறவே. 110

323 அம்மா வயிற்றெரிக் காற்றேன் எனநின் றழுதலறச்
சும்மாஅச் சேய்முகந் தாய்பார்த் திருக்கத் துணிவள்கொலோ
இம்மா நிலத்தமு தேற்றாயி னுந்தந் திடுவள்முக்கண்
எம்மான்இங் கேழை அழுமுகம் பார்த்தும் இரங்கிலையே. 111

324 ஓயாக் கருணை முகிலே நுதற்கண் ஒருவநின்பால்
தோயாக் கொடியவெந் நெஞ்சத்தை நான்சுடு சொல்லைச்சொல்லி
வாயால் சுடினுந் தெரிந்தில தேஇனி வல்வடவைத்
தீயால் சுடினுமென் அந்தோ சிறிதுந் தெரிவதன்றே. 112

325 மாலறி யான்மல ரோன்அறி யான்மக வான்அறியான்
காலறி யான்மற்றை வானோர் கனவினுங் கண்டறியார்
சேலறி யாவிழி மங்கைபங் காநின் திறத்தைமறை
நாலறி யாஎனில் நானறி வேன்எனல் நாணுடைத்தே. 113

326 ஆறிட்ட வேணியும் ஆட்டிட்ட பாதமும் அம்மைஒரு
கூறிட்ட பாகமும் கோத்திட்ட கொன்றையும் கோலமிக்க
நீறிட்ட மேனியும் நான்காணும் நாள்என் னிலைத்தலைமேல்
ஏறிட்ட கைகள்கண் டாணவப் பேய்கள் இறங்கிடுமே. 114

327 அல்லுண்ட கண்டத் தரசேநின் சீர்த்தி அமுதமுண்டோர்
கொல்லுண்ட தேவர்தங்க கோளுண்ட சீரெனும் கூழுண்பரோ
சொல்லுண்ட[1] வாயினர் புல்லுண்ப ரோஇன் சுவைக்கண்டெனும்
கல்லுண்ட பேர்கருங் கல்லுண்ப ரோஇக் கடலிடத்தே.

1. சொல் என்பது – நெல். தொ. வே.

328 காரே எனுமணி கண்டத்தி னான்பொற் கழலையன்றி
யாரே துணைநமக் கேழைநெஞ் சேஇங் கிருந்துகழு
நீரே எனினுந் தரற்கஞ்சு வாரொடு நீயுஞ்சென்று
சேரேல் இறுகச் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே. 116

329 வலைப்பட்ட மானென வாட்பட்ட கண்ணியர் மையலென்னும்
புலைப்பட்ட பேய்க்கு விலைப்பட்ட நான்மதி போய்ப்புலம்ப
விலைப்பட்ட இம்மனம் அந்தோ இவ்வேழைக்கென் றெங்கிருந்து
தலைப்பட்ட தோஇதற் கென்செய்கு வேன்முக்கட் சங்கரனே. 117

330 குருந்தாமென் சோக மனமான பிள்ளைக் குரங்குக்கிங்கே
வருந்தா ணவமென்னு மானிடப் பேயொன்று மாத்திரமோ
பெருந்தா மதமென் றிராக்கதப் பேயும் பிடித்ததெந்தாய்
திருந்தா அதன்குதிப் பென்ஒரு வாய்கொண்டு செப்பரிதே. 118

331 பெண்மணி பாகப் பெருமணி யேஅருட் பெற்றிகொண்ட
விண்மணி யான விழிமணி யேஎன் விருப்புறுநல்
கண்மணி நேர்கட வுண்மணி யேஒரு கால்மணியைத்
திண்மணிக் கூடலில் விற்றோங்கு தெய்வ சிகாமணியே. 119

332 அலையெழுத் துந்தெறும் ஐந்தெழுத் தாலுன்னை அர்ச்சிக்கின்றோர்
கலையெழுத் தும்புகழ் காலெழுத் திற்குக் கனிவிரக்கம்
இலையெழுத் தும்பிறப் பீடெழுத் துங்கொண்ட எங்கள்புழுத்
தலையெழுத் துஞ்சரி யாமோ நுதற்கண் தனிமுதலே. 120

333 ஆட்சிகண் டார்க்குற்ற துன்பத்தைத் தான்கொண் டருளளிக்கும்
மாட்சிகண் டாய்எந்தை வள்ளற் குணமென்பர் மற்றதற்குக்
காட்சிகண் டேனிலை ஆயினும் உன்னருட் கண்டத்திலோர்
சாட்சிகண் டேன்களி கொண்டேன் கருணைத் தடங்கடலே. 121

334 கண்கொண்ட நெற்றியும் கார்கொண்ட கண்டமும் கற்பளிக்கும்
பெண்கொண்ட பாகமும் கண்டேன்முன் மாறன் பிரம்படியால்
புண்கொண்ட மேனிப் புறங்கண்டி லேன்அப் புறத்தைக்கண்டால்
ஒண்கொண்ட கல்லும் உருகும்என் றோஇங் கொளித்தனையே. 122

335 வேய்க்குப் பொரும்எழில் தோளுடைத் தேவி விளங்குமெங்கள்
தாய்க்குக் கனிந்தொரு கூறளித் தோய்நின் தயவுமிந்த
நாய்க்குக் கிடைக்கும் எனஒரு சோதிடம் நல்கில்அவர்
வாய்க்குப் பழத்தொடு சர்க்கரை வாங்கி வழங்குவனே. 123

336 காண்டத்தின் மேவும் உலகீர்இத் தேகம் கரும்பனைபோல்
நீண்டத்தி லென்ன நிலையல வேஇது நிற்றல்பசும்
பாண்டத்தில் நீர்நிற்றல் அன்றோ நமைநம் பசுபதிதான்
ஆண்டத்தில் என்ன குறையோநம் மேற்குறை ஆயிரமே. 124

337 வேணிக்கண் நீர்வைத்த தேவே மதுரை வியன்தெருவில்
மாணிக்கம் விற்றசெம் மாணிக்க மேஎனை வாழ்வித்ததோர்
ஆணிப்பொன் னேதெள் ளமுதேநின் செய்ய அடிமலர்க்குக்
காணிக்கை யாக்கிக்கொண் டாள்வாய் எனது கருத்தினையே. 125

338 மாகலை வாணர் பிறன்பால் எமக்கும் மனைக்கும்கட்ட
நீகலை தாஒரு மேகலை தாஉண நென்மலைதா
போகலை யாஎனப் பின்தொடர் வார்அவர் போல்மனனீ
ஏகலை ஈகலர் ஏகம்ப வாண ரிடஞ்செல்கவே. 126

339 ஊர்தரு வார்நல்ல ஊண்தரு வார்உடை யுந்தருவார்
பார்தரு வார்உழற் கேர்தரு வார்பொன் பணந்தருவார்
சோர்தரு வார்உள் ளறிவுகெ டாமல் சுகிப்பதற்கிங்
கார்தரு வார்அம்மை யார்தரு பாகனை யன்றிநெஞ்சே. 127

340 பண்செய்த சொன்மங்கை பாகாவெண் பாற்கடல் பள்ளிகொண்டோன்
திண்செய்த சக்கரங் கொள்வான் அருச்சனை செய்திட்டநாள்
விண்செய்த நின்னருட் சேவடி மேற்பட வேண்டியவன்
கண்செய்த நற்றவம் யாதோ கருத்தில் கணிப்பரிதே. 128

341 மாப்பிட்டு நேர்ந்துண்டு வந்தியை வாழ்வித்த வள்ளல்உன்வெண்
காப்பிட்டு மேற்பல பாப்பிட்ட மேனியைக் கண்டுதொழக்
கூப்பிட்டு நானிற்க வந்திலை நாதனைக் கூடஇல்லாள்
பூப்பிட்ட காலத்தில் கூப்பிட்ட போதினும் போவதுண்டே. 129

342 என்மேற் பிழையிலை யானென்செய் கேன்என் இடத்திருந்தென்
சொன்மேற் கொளாதெனை இன்மேல் துரும்பெனச் சுற்றுநெஞ்சத்
தின்மேற் பிழையது புன்மேற் பனியெனச் செய்தொழிக்க
நின்மேற் பரம்விடை தன்மேற்கொண் டன்பர்முன் நிற்பவனே. 130

343 மைவிட்டி டாமணி கண்டாநின் தன்னை வழுத்தும்என்னை
நெய்விட்டி டாஉண்டி போல்இன்பி லான்மெய்ந் நெறியறியான்
பொய்விட்டி டான்வெம் புலைவிட்டி டான்மயல் போகமெலாம்
கைவிட்டி டான்எனக் கைவிட்டி டேல்வந்து காத்தருளே. 131

344 நல்லமு தம்சிவை தான்தரக் கொண்டுநின் நற்செவிக்குச்
சொல்லமு தந்தந்த எங்கள் பிரான்வளஞ் சூழ்மயிலை
இல்லமு தந்திகழ் பெண்ணாக வென்பை எழுப்பியநாள்
சில்லமு தம்பெற்ற தேவரை வானஞ் சிரித்ததன்றே. 132

345 சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியைநின்
பொற்றுணை வார்கழற் கேற்றியப் பொன்னடிப் போதினையே 133
நற்றுணை யாக்கரை ஏறிய புண்ணிய நாவரசைக்
கற்றுணை யாதிந்தக் கற்றுணை யாமென் கடைநெஞ்சமே.

346 சடையவ நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச் சற்றெனினும்
கடையவ னேன்செயுங் கைம்மா றறிந்திலன் கால்வருந்தி
நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்திஅன்பர்
இடைவரும் உன்றன் இரக்கத்தைத் தான்வெளி யிட்டதற்கே. 134

347 திருவாத வூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே
வெருவாத வைதிகப் பாய்பரி மேற்கொண்டு மேவிநின்ற
ஒருவாத கோலத் தொருவாஅக் கோலத்தை உள்குளிர்ந்தே
கருவாத நீங்கிடக் காட்டுகண் டாய்என் கனவினிலே. 135

348 சீர்தரு நாவுக் கரையரைப் போலிச் சிறியனும்ஓர்
கார்தரு மாயைச் சமணான் மனக்கருங் கல்லிற்கட்டிப்
பார்தரு பாவக் கடலிடை வீழ்த்திடப் பட்டுழன்றே
ஏர்தரும் ஐந்தெழுத் தோதுகின் றேன்கரை ஏற்றரசே. 136

349 தூக்கமும் சோம்பலும் துக்கமும் வாழ்க்கையைத் தொட்டுவரும்
ஏக்கமும் நோயும் இடையூறும் மற்றை இடரும்விட்ட
நீக்கமும் நின்மல நெஞ்சமும் சாந்த நிறைவும்அருள்
ஆக்கமும் நின்பதத் தன்பும் தருக அருட்சிவமே. 137

350 பொய்வந்த வாயும் புலைவந்த செய்கையும் புன்மையெல்லாம்
கைவந்த நெஞ்சமும் கண்டேன் இனிநற் கனிவுடன்யான்
மெய்வந்த வாயும் விதிவந்த செய்கையும் வீறன்பினால்
தைவந்த நெஞ்சமும் காண்பதென் றோசெஞ் சடைக்கனியே. 138

351 கங்கைகொண் டாய்மலர் வேணியி லேஅருட் கண்ணிமலை
மங்கைகொண் டாய்இடப் பாகத்தி லேஐய மற்றுமொரு
நங்கைகொண் டால்எங்கு கொண்டருள் வாயென்று நண்ணுமன்பர்
சங்கைகொண் டால்அதற் கென்சொல்லு வாய்முக்கட் சங்கரனே. 139

352 வாட்கொண்ட கண்ணியர் மாயா விகார வலைபிழைத்துன்
தாட்கொண்ட நீழலில் சார்ந்திடு மாறென் றனக்கருள்வாய்
கீட்கொண்ட கோவணப் பேரழ காஎனைக் கேதமற
ஆட்கொண்ட நீஇன்று வாளா இருப்ப தழகல்லவே. 140

353 வீட்டுத் தலைவநின் தாள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை
ஆட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பின் அடுந்தலைகற்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே. 141

354 தெண்ணீர் முடியனைக் காணார்தங் கண்இருள் சேர்குருட்டுக்
கண்ணீர் சொரிந்தகண் காசக்கண் புன்முலைக் கண்நகக்கண் 142
புண்ணீர் ஒழுகுங் கொடுங்கண் பொறாமைக்கண் புன்கண்வன்கண்
மண்ணீர்மை யுற்றகண் மாமணி நீத்தகண் மாலைக்கண்ணே.

355 கண்ணுத லான்புகழ் கேளார் செவிபொய்க் கதைஒலியும்
அண்ணுற மாதரு மைந்தருங் கூடி அழுமொலியும்
துண்ணெனுந் தீச்சொல் ஒலியும்அவ் வந்தகன் தூதர்கண்மொத்
துண்ணுற வாவென் றுரப்பொலி யும்புகும் ஊன்செவியே. 143

356 மணிகொண்ட கண்டனை வாழ்த்தார்தம் வாய்த்தெரு மண்ணுண்டவாய்
பிணிகொண்ட வாய்விடப் பிச்சுண்ட வாய்வரும் பேச்சற்றவாய்
துணிகொண்ட வாயனற் சூடுண்ட வாய்மலஞ் சோர்ந்திழிவாய்
குணிகொண்ட உப்பிலிக் கூழுண்ட வாய்எனக் கூறுபவே. 144

357 சகமிலை யேஎன் றுடையானை எண்ணலர் தங்கள்நெஞ்சம்
சுகமிலை யேஉணச் சோறிலை யேகட்டத் தூசிலையே
அகமிலை யேபொரு ளாவிலை யேவள்ள லாரிலையே.
இகமிலை யேஒன்றும் இங்கிலை யேஎன் றிரங்குநெஞ்சே. 145

358 பொங்கரும் பேர்முலை மங்கைக் கிடந்தந்த புத்தமுதே
செங்கரும் பேநறுந் தேனே மதுரச் செழுங்கனியே
திங்களுங் கங்கையுஞ் சேர்ந்தொளிர் வேணிச் சிவக்கொழுந்தே
எங்களை ஆட்கொண்டும் என்னே துயரில் இருத்துவதே. 146

359 வில்லைப்பொன் னாக்கரங் கொண்டோய்வன் தொண்டர் விரும்புறச்செங்
கல்லைப்பொன் னாக்கிக் கொடுத்தோய்நின் பாதங் கருத்தில்வையார்
புல்லைப்பொன் னாக்கொளும் புல்லர்கள் பாற்சென்று பொன்னளிக்க
வல்லைப்பொன் னார்புய என்பார் இஃதென்சொல் வாணர்களே. 147

360 கூத்துடை யாய்என் னுடையாய்முத் தேவரும் கூறுகின்ற
ஏத்துடை யாய்அன்பர் ஏத்துடை யாய்என்றன் எண்மைமொழிச்
சத்துடை யாய்நின் தனக்கே பரம்எனைத் தாங்குதற்கோர்
வேத்துடை யார்மற் றிலைஅருள் ஈதென்றன் விண்ணப்பமே. 148

361 வெப்பிலை யேஎனும் தண்விளக் கேமுக்கண் வித்தகநின்
ஒப்பிலை யேஎனும் சீர்புக லார்புற்கை உண்ணுதற்கோர்
உப்பிலை யேபொரு ளொன்றிலை யேஎன் றுழல்பவர்மேல்
தப்பிலை யேஅவர் புன்தலை ஏட்டில் தவமிலையே. 149

362 எனைப் பெற்ற தாயினும் அன்புடை யாய்எனக் கின்பநல்கும்
உனைப்பெற்ற உள்ளத் தவர்மலர்ச் சேவடிக் கோங்கும்அன்பு
தனைப்பெற்ற நன்மனம் தாம்பெற்ற மேலவர் சார்பைப்பெற்றால்
வினைப்பெற்ற வாழ்வின் மனைப்பெற்றம் போல மெலிவதின்றே. 150

363 நிறைமதி யாளர் புகழ்வோய் சடையுடை நீண்முடிமேல்
குறைமதி தானொன்று கொண்டனை யேஅக் குறிப்பெனவே
பொறைமதி யேன்றன் குறைமதி தன்னையும் பொன்னடிக்கீழ்
உறைமதி யாக்கொண் டருள்வாய் உலகம் உவப்புறவே.

364 துடிவைத்த செங்கை அரசேநல் லூரில்நின் தூமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்கள் அப்பர்தம் சென்னி யதுகுளிர்ந்தெப்
படிவைத்த தோ இன்ப மியான்எணுந் தோறும்இப் பாவிக்குமால்
குடிவைத்த புன்தலை ஒன்றோ மனமும் குளிர்கின்றதே. 152

365 ஒருமுடி மேல்பிறை வைத்தோய் அரிஅயன் ஒண்மறைதம்
பெருமுடி மேலுற வேண்ட வராதுனைப் பித்தனென்ற
மருமுடி யூரன் முடிமேல் மறுப்பவும் வந்ததவர்
திருமுடி மேலென்ன ஆசைகண்டாய் நின் திருவடிக்கே. 153

366 வேல்கொண்ட கையுமுந் நூல்கொண்ட மார்பமும் மென்பலர்ப்பொற்
கால்கொண்ட ஒண்கழற் காட்சியும் பன்னிரு கண்ணும்விடை
மேல்கொண்ட செஞ்சுடர் மேனியும் சண்முக வீறுங்கண்டு
மால்கொண்ட நெஞ்சம் மகிழ்வதெந் நாள்என்கண் மாமணியே. 154

367 விண்பூத்த கங்கையும் மின்பூத்த வேணியும் மென்முகமும்
கண்பூத்த நெற்றியும் பெண்பூத்த பாகமும் கார்மிடறும்
தண்பூத்த பாதமும் பொன்பூத்த மேனியும் சார்ந்துகண்டே
மண்பூத்த வாழ்க்கையை விண்பூத்த பூவின் மதிப்பதென்றே. 155

368 தண்மதி யோஅதன் தண்ணமு தோஎனச் சார்ந்திருணீத்
துண்மதி யோர்க்கின் புதவுநின் பேரருள் உற்றிடவே
எண்மதி யோடிச்சை எய்தா தலையுமென் ஏழைமதி
பெண்மதி யோஅன்றிப் பேய்மதி யோஎன்னை பேசுவதே. 156

369 பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந் தாயென்பர் பித்தனென்ற
திட்டுக்கும் சீரருள் செய்தளித் தாயென்பர் தீவிறகுக்
கட்டுக்கும் பொன்முடி காட்டிநின் றாயென்பர் கண்டிடஎன்
மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமென் கோமுக்கண் மாணிக்கமே. 157

370 மையிட்ட கண்ணியர் பொய்யிட்ட வாழ்வின் மதிமயங்கிக்
கையிட்ட நானும்உன் மெய்யிட்ட சீரருள் காண்குவனோ
பையிட்ட பாம்பணி யையிட்ட மேனியும் பத்தருள்ள
மொய்யிட்ட காலுஞ்செவ் வையிட்ட வேலுங்கொள் முன்னவனே. 158

371 தவமே புரியும் பருவமி லேன்பொய்ச் சகநடைக்கண்
அவமே புரியும் அறிவிலி யேனுக் கருளுமுண்டோ
உவமேய மென்னப்ப டாதெங்கு மாகிஒளிர் ஒளியாம்
சிவமேமுக் கண்ணுடைத் தேவேநின் சித்தந் தெரிந்திலனே. 159

372 மட்டுண்ட கொன்றைச் சடையர சேஅன்று வந்தியிட்ட
பிட்டுண்ட பிச்சைப் பெருந்தகை யேகொடும் பெண்மயலால் 160
கட்டுண்ட நான்சுகப் பட்டுண்டு வாழ்வன்இக் கன்மனமாம்
திட்டுண்ட பேய்த்தலை வெட்டுண்ட நாளில்என் தீமையற்றே.

373 ஆட்டுக்குக் காலெடுத் தாய்நினைப் பாடலர் ஆங்கியற்றும்
பாட்டுக்குப் பேரென்கொல் பண்ணென்கொல் நீட்டியப் பாட்டெழுதும்
ஏட்டுக்கு மையென்கொல் சேற்றில் உறங்க இறங்குங்கடா
மாட்டுக்கு வீடென்கொல் பஞ்சணை என்கொல் மதித்திடினே. 161

374 ஒப்பற்ற முக்கட் சுடரேநின் சீர்த்தி உறாதவெறும்
துப்பற்ற பாட்டில் சுவையுள தோஅதைச் சூழ்ந்துகற்றுச்
செப்பற்ற வாய்க்குத் திருவுள தோசிறி தேனும்உண்டேல்
உப்பற்ற புன்கறிஉண்டோர் தந் நாவுக் குவப்புளதே. 162

375 சேல்வருங் கண்ணி இடத்தோய்நின் சீர்த்தியைச் சேர்த்தியந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப் புறத்தில் நடக்கச்சற்றே
கால்வரும் ஆயினும் இன்புரு வாகிக் கனிமனம்அப்
பால்வரு மோஅதன் பாற்பெண் களைவிட்டுப் பார்க்கினுமே. 163

376 கார்முக மாகப்பொற் கல்வளைத்தோய் இக் கடையவனேன்
சோர்முக மாகநின் சீர்முகம் பார்த்துத் துவளுகின்றேன்
போர்முக மாகநின் றோரையும் காத்தநின் பொன்னருள் இப்
பார்முக மாகஎன் ஓர்முகம் பார்க்கப் பரிந்திலதே. 164

377 வான்வளர்த் தாய்இந்த மண்வளர்த் தாய்எங்கும் மன்னுயிர்கள்
தான்வளர்த் தாய்நின் தகைஅறி யாஎன் றனைஅரசே
ஏன்வளர்த் தாய்கொடும் பாம்பையெல் லாந்தள் எிலைவளர்த்தாய்
மான்வளர்த் தாய்கரத் தார்நினைப் போல வளர்ப்பவரே. 165

378 அற்கண்டம் ஓங்கும் அரசேநின் றன்அடி யார்மதுரச்
சொற்கண்ட போதும்என் புற்கண்ட நெஞ்சம் துணிந்துநில்லா
திற்கண்ட மெய்த்தவர் போலோடு கின்ற தெறிந்ததுதீங்
கற்கண் டெனினும்அக் கற்கண்ட காக்கைநிற் காதென்பரே. 166

379 சொல்லுகின் றோர்க்கமு தம்போல் சுவைதரும் தொல்புகழோய்
வெல்லுகின் றோரின்றிச் சும்மா அலையுமென் வேடநெஞ்சம்
புல்லுகின் றோர்தமைக் கண்டால்என் னாங்கொல் புகல்வெறும்வாய்
மெல்லுகின் றோர்க்கொரு நெல்லவல் வாய்க்கில் விடுவரன்றே. 167

380 சீரிடு வார்பொருட் செல்வர்க்க லாமல்இத் தீனர்கட்கிங்
காரிடு வார்பிச்சை ஆயினும் பிச்சன் அசடன்என்றே
பேரிடு வார்வம்புப் பேச்சிடு வார் இந்தப் பெற்றிகண்டும்
போரிடு வார்நினைப் போற்றார்என் முக்கட் புண்ணியனே. 168

381 சேலுக்கு நேர்விழி மங்கைபங் காஎன் சிறுமதிதான்
மேலுக்கு நெஞ்சையுட் காப்பது போல்நின்று வெவ்விடய
மாலுக்கு வாங்கி வழங்கவுந் தான்சம் மதித்ததுகாண்
பாலுக்குங் காவல்வெம் பூனைக்குந் தோழன்என் பார்இதுவே.

382 இணையேதும் இன்றிய தேவே [1]கனல்இனன் இந்தெனுமுக்
கணையே கொளும்செங் கரும்பே பிறவிக் கடல்கடத்தும்
புணையே திருவருட் பூரண மேமெய்ப் புலமளிக்கும்
துணையேஎன் துன்பந் துடைத்தாண்டு கொள்ளத் துணிந்தருளே. 169

383 நிலைகாட்டி ஆண்டநின் தாட்கன்பி லாதன்பில் நீண்டவன்போல்
புலைகாட் டியமனத் தேன்கொண்ட வேடம் புனைஇடைமேல்
கலைகாட்டிக் கட்டு மயிர்த்தலை காட்டிப்புன் கந்தைசுற்றி
முலைகாட்டி ஆண்மகன் பெண்வேடம் காட்டு முறைமையன்றே. 170

384 விடநாகப் பூணணி மேலோய்என் நெஞ்சம் விரிதல்விட்டென்
உடனாக மெய்அன்பு ளூற்றாக நின்னரு ளூற்றிடுதற்
கிடனாக மெய்ந்நெறிக் கீடாகச் செய்குவ திங்குனக்கே
கடனாக நிற்பது கண்டேன்பின் துன்பொன்றுங் கண்டிலனே. 171

385 நயப்படும் ஓர்நின் அருளெனக் கின்றெனில் நாய்மனமென்
வயப்படு மோதுயர் மண்படு மோநல்ல வாழ்வைஎன்னால்
செயப்படு மோகுணம் சீர்ப்படு மோபவம் சேரச்சற்றும்
பயப்படு மோமலம் பாழ்படு மோஎம் பசுபதியே. 172

386 சோபங்கண் டார்க்கருள் செய்வோய் மதிக்கன்றிச் சூழ்ந்திடுவெந்
தீபங்கண் டாலும் இருள்போம்இவ் வேழை தியங்கும்பரி
தாபங்கண் டாய்அருள் செய்யாதென் குற்றந் தனைக்குறித்துக்
கோபங்கண் டாலுநன் றையாஎன் துன்பக் கொதிப்பறுமே. 173

387 எல்லா முடைய இறையவ னேநினை ஏத்துகின்ற
நல்லார் தமக்கொரு நாளேனும் பூசை நயந்தியற்றிச்
சொல்லால் அவர்புகழ் சொல்லாதிவ் வண்ணம் துயர்வதற்கென்
கல்லாமை ஒன்றுமற் றில்லாமை ஒன்றிரு காரணமே. 174

388 பிறையாறு கொண்டசெவ் வேணிப் பிரான்பதப் பேறடைவான்
மறையாறு காட்டுநின் தண்ணரு ளேயன்றி மாயைஎன்னும்
நிறையாறு சூழுந் துரும்பாய்ச் சுழலும்என் நெஞ்சினுள்ள
குறையாறு தற்கிடம் வேறில்லை காண்இக் குவலையத்தே. 175

389 மாலறி யாதவன் அன்றேஅத் தெய்வ வரதனுநின்
காலறி யாதவன் என்றால்அக் காலைஎக் காலைஎமைப்
போலறி யாதவர் காண்பார்முற் கண்டமெய்ப் புண்ணியர்தம்
பாலறி யாதவன் நானிது கேட்டுணர் பாலனன்றே. 176

390 ஒன்றேஎன் ஆருயிர்க் கோருற வேஎனக் கோரமுதே
நன்றேமுக் கண்ணுடை நாயக மேமிக்க நல்லகுணக்
குன்றே நிறைஅருட் கோவே எனது குலதெய்வமே
மன்றே ஒளிர்முழு மாணிக்க மேஎனை வாழ்விக்கவே. 177

1. கனல் - அக்கினி; இனன் - சூரியன்; இந்து - சந்திரன்;

391 தாழ்வேதும் இன்றிய கோவே எனக்குத் தனித்தபெரு
வாழ்வே நுதற்கண் மணியே உள்ள மணிவிளக்கே
ஏழ்வேலை என்னினும் போதா இடும்பை இடுங்குடும்பப்
பாழ்வே தனைப்பட மாட்டேன் எனக்குன் பதமருளே. 179

392 வண்டுகொண் டார்நறுங் கொன்றையி னான்றன் மலரடிக்குத்
தொண்டுகொண் டார்தஞ் சுகத்துக்கும் வாழ்க்கைச் சுழலிற்றள்ளும்
பெண்டுகொண் டார்தம் துயருக்கும் ஒப்பின்று பேசில்என்றே
கண்டுகொண் டாய்இனி நெஞ்சேநின் உள்ளக் கருத்தெதுவே. 180

393 மலங்கவிழ்ந் தார்மனம் வான்கவிழ்ந் தாலும்அவ் வான்புறமாம்
சலங்கவிழ்ந் தாலும் சலியாதென் புன்மனந் தான்கடலில்
கலங்கவிழ்ந் தார்மனம் போலே சலிப்பது காண்குடும்ப
விலங்கவிழ்ந் தாலன்றி நில்லாதென் செய்வல் விடையவனே. 181

394 மைகொடுத் தார்நெடுங் கண்மலை மானுக்கு வாய்ந்தொருபால்
மெய்கொடுத் தாய்தவர் விட்டவெம் மானுக்கு மேவுறஓர்
கைகொடுத் தாய்மயல் கண்ணியில் வீழ்ந்துட் கலங்குறும்என்
கொய்கொடுத் தாழ்மன மானுக்குக் காலைக் கொடுத்தருளே. 182

395 உடம்பார் உறுமயிர்க் கால்புழை தோறனல் ஊட்டிவெய்ய
விடம்பாச் சியஇருப் பூசிகள் பாய்ச்சினும் மெத்தென்னும்இத்
தடம்பார் சிறுநடைத் துன்பஞ்செய் வேதனைத் தாங்கரிதென்
கடம்பாநற் பன்னிரு கண்ணா இனிஎனைக் காத்தருளே. 183

396 மண்ணாலும் மண்ணுற்ற வாழ்க்கையி னாலும்அவ் வாழ்க்கைக்குற்ற
பெண்ணாலும் நொந்துவந் தாரை எலாம்அருட் பேறெனுமுக்
கண்ணாலும் பார்த்தைந்து கையாலும் ஈயும் கணபதிநின்
பண்ணாலும் மாமறை மேற்றாளை என்னுட் பதித்தருளே. 184

397 வானாள மாலயன் வாழ்வாள அன்றிஇம் மண்முழுதும்
தானாள நின்பதம் தாழ்பவர் தாழ்கஒண் சங்கையங்கை
மானாள மெய்யிடந் தந்தோய்துன் பற்ற மனமதொன்றே
நானாள எண்ணிநின் தாளேத்து கின்றனன் நல்குகவே. 185

398 ஈடறி யாதமுக் கண்ணாநின் அன்பர் இயல்பினைஇந்
நாடறி யாதுன் அருளன்றி ஊண்சுவை நாவையன்றி
மேடறி யாதுநற் பாட்டைக்கற் றோரன்றி மேற்சுமந்த
ஏடறி யாதவை யேனறி யாஎன் றிகழ்வரன்றே. 186

399 சூடுண்ட பூனைக்குச் சோறுண்ட வாய்பின் துடிப்பதன்றி
ஊடுண்ட பாலிட்ட ஊண்கண்ட தேனும் உணத்துணியா
தீடுண்ட என்மனம் அந்தோ துயரில் இடியுண்டும்இவ்
வீடுண்ட வாழ்க்கையில் வீழுண்ட தால்எம் விடையவனே.

400 கரங்காட்டி மையிட்ட கண்காட்டி என்பெருங் கன்மநெஞ்சக்
குரங்காட்டிச் சேய்மையில் நிற்கின்ற மாதரைக் கொண்டுகல்லார்
உரங்காட்டிக் கோலொன் றுடனீட்டிக் காட்டி உரப்பிஒரு
மரங்காட் டியகுரங் காட்டுகின் றோரென் மணிகண்டனே. 188

401 களங்கனி போல்மணி கண்டாநின் பொற்கழல் காணற்கென்சிற்
றுளங்கனி யாதுநின் சீர்கேட் கினும்அன் புறஉருகா
வளங்கனி காமஞ் சிறவாமல் சிற்றில் வகுத்துழலும்
இளங்கனி போல்நின்ற தென்செய்கு வேன்எம் இறையவனே. 189

402 மாமத்தி னால்சுழல் வெண்தயிர் போன்று மடந்தையர் தம்
காமத்தி னால்சுழல் என்றன்நெஞ் சோஉன்றன் காலைஅன்பாம்
தாமத்தி னால்தளை யிட்டநெஞ் சோஇத் தகைஇரண்டின்
நாமத்தி னால்பித்தன் என்போய் நினக்கெது நல்லநெஞ்சே. 190

403 ஏற்றிலிட் டார்கொடி கொண்டோய் விளக்கினை ஏற்றபெருங்
காற்றிலிட் டாலும் இடலாம்நெல் மாவைக் கலித்திடுநீர்
ஆற்றிலிட் டாலும் பெறலாம்உட் காலை அடுங்குடும்பச்
சேற்றிலிட் டால்பின் பரிதாம் எவர்க்கும் திருப்புவதே. 191

404 தேரோங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானப் பாலுண்ட செம்மணியைச்
சீரோங்கு முத்துச் சிவிகையின் மேல்வைத்த தேவஉன்றன்
பேரோங்கும் ஐந்தெழுத் தன்றோ படைப்பைப் பிரமனுக்கும்
ஏரோங்கு காப்பைத் திருநெடு மாலுக்கும் ஈந்ததுவே. 192

405 வேதனை யாமது சூதனை யாஎன்று வேதனையால்
போதனை யாநின் றுனைக்கூவு மேழையைப் போதனைகேள்
வாதனை யாதிங்கு வாதனை யாவென்றுன் வாய்மலரச்
சோதனை யாயினுஞ் சோதனை யாசிற் சுகப்பொருளே. 193

406 இன்பற்ற இச்சிறு வாழ்க்கையி லேவெயி லேறவெம்பும்
என்பற்ற புன்புழுப் போல்தளர் ஏழை எனினுமிவன்
அன்பற்ற பாவிஎன் றந்தோ எனைவிடில் ஐயவையத்
தென்பற்ற தாகமற் றில்லைகண் டாய்எனை ஏன்றுகொள்ளே. 194

407 களங்கொண்ட ஓர்மணிக் காட்சியும் முச்சுடர்க் கண்அருளும்
வளங்கொண்ட தெய்வத் திருமுக மாட்சியும் வாய்ந்தபரி
மளங்கொண்ட கொன்றைச் சடையும்பொற் சேவடி மாண்பும்ஒன்ற
உளங்கொண்ட புண்ணியர் அன்றோஎன் தன்னை உடையவரே. 195

408 காவிக்கு நேர்மணி கண்டாவண் டார்குழல் கற்பருளும்
தேவிக்கு வாமங் கொடுத்தோய்நின் மாமலர்ச் சேவடிப்பால் 196
சேவிக்கும் சேவகஞ் செய்வோரை ஆயினுஞ் சேவிக்கஇப்
பாவிக்கு வாய்க்கில்என் ஆவிக்கு நீண்ட பயனதுவே.

409 கொங்கிட்ட கொன்றைச் சடையும்நின் னோர்பசுங் கோமளப்பெண்
பங்கிட்ட வெண்திரு நீற்றொளி மேனியும் பார்த்திடில்பின்
இங்கிட்ட மாயையை எங்கிட்ட வாஎன் றிசைப்பினும்போய்ச்
சங்கிட்ட ஓசையில் பொங்கிட்ட வாய்கொடு தாண்டிடுமே. 197

410 வெம்பெரு மானுக்குக் கைகொடுத் தாண்ட மிகுங்கருணை
எம்பெரு மானுக்கு விண்ணப்பம் தேவர் இளம்பிடியார்
தம்பெரு மானுக்கும் சார்மலை மானுக்கும் சாற்றுமைங்கைச்
செம்பெரு மானுக்கும் எந்தாய்க்கும் நான்பணி செய்யச்செய்யே. 198

411 சாற்றவ னேகநன் னாவுள்ள தாயினும் சாற்றரிதாம்
வீற்றவ னேவெள்ளி வெற்பவ னேஅருள் மேவியவெண்
நீற்றவ னேநின் னருள்தர வேண்டும் நெடுமுடிவெள்
ஏற்றவ னேபலி ஏற்றவனே அன்பர்க் கேற்றவனே. 199

412 பதியே சரணம் பரமே சரணம் பரம்பரமாம்
திதியே சரணம் சிவமே சரணம் சிவமுணர்ந்தோர்
கதியே சரணம்என் கண்ணே சரணம்முக் கட்கருணா
நிதியே சரணம் சரணம்என் பால்மெய்ந் நிலையருளே. 200

413 என்னுற வேஎன் குருவேஎன் உள்ளத் தெழும்இன்பமே
என்னுயி ரேஎன்றன் அன்பே நிலைபெற்ற என்செல்வமே
என்னறி வேஎன்றன் வாழ்வேஎன் வாழ்வுக் கிடுமுதலே
என்னர சேஎன் குலதெய்வ மேஎனை ஏன்றுகொள்ளே. 201

414 கான்போல் இருண்டஇவ் வஞ்சக வாழ்க்கையில் கன்னெஞ்சமே
மான்போல் குதித்துக்கொண் டோடேல் அமுத மதிவிளங்கும்
வான்போல் குளிர்ந்த சிவானந்த வாழ்க்கையின் வாழ்வுறச்செந்
தேன்போல் இனிக்கும் சிவாய நமஎனச் சிந்தைசெய்யே. 202

415 வேதனென் கோதற வேண்டுமென் கோஎன விண்ணப்பஞ்செய்
பாதனென் கோகடற் பள்ளிகொண் டான்தொழும் பண்பன்என்கோ
நாதனென் கோபர நாதனென் கோளங்கள் நம்பிக்குநல்
தூதனென் கோஅவன் தோழனென் கோநினைத் தூய்மணியே. 203

416 இயங்கா மனமும் கயங்கா நிலையும் இகபரத்தே
மயங்கா அறிவும் தியங்கா நெறியும் மகிழ்ந்தருள்வாய்
வயங்கா நிலத்தின் முயங்கா உயர்தவர் வாழ்த்துகின்ற
புயங்கா துதித்தற் குயங்கா தவருட் புகுந்தவனே. 204

417 சிவசங்க ராசிவ யோகா சிவகதிச் சீரளிக்கும்
சிவசம்பு வேசிவ லோகா சிவாநந்தச் செல்வநல்கும்
சிவசுந்த ராசிவ போகா சிவாகமச் செந்நெறிசொல்
சிவபுங்க வாசிவ ஞானிகள் வாழ்த்தும் சிவகுருவே.

418 மதிதத்து வாந்த அருட்சிவ மேசின் மயசிவமே
துதிசித் தெலாம்வல்ல மெய்ச்சிவ மேசிற் சுகசிவமே
கதிநித்த சுத்தச் சிவமே விளங்குமுக் கட்சிவமே
பதிசச்சி தாநந்த சிற்சிவ மேஎம் பரசிவமே. 206

419 கடும்புல வேடர்கள் ஓரைவர் இந்தியக் கள்வரைவர்
கொடுங்கர ணத்துட்டர் நால்வர்கள் வன்மலக் கோளரைவர்
அடும்படை கோடிகொண் டுற்றார்மற் றேழையன் யானொருவன்
இடும்படை யாதுமி லேன்வெல்வ தெங்ஙன் இறையவனே. 207

420 இடைக்கொடி வாமத் திறைவாமெய்ஞ் ஞானிகட் கின்பநல்கும்
விடைக்கொடி ஏந்தும் வலத்தாய்நின் நாமம் வியந்துரையார்
கடைக்கொடி போலக் கதறுகின் றார்பொய்க் கதையவர்தாம்
புடைக்கொடி யாலன்றிப் புல்லால் எயிலைப் புனைபவரே. 208

421 உருமத்தி லேபட்ட புன்புழுப் போல்இவ் உலகநடைக்
கருமத்தி லேபட்ட என்மனந் தான்நின் கழலடையும்
தருமத்தி லேபட்ட தின்றேஎன் றெண்ணுந் தனையுமந்தோ
மருமத்தி லேபட்ட வாளியைப் போன்று வருத்துவதே. 209

422 என்னிறை வாஇமை யோரிறை வாமறை யின்முடிபின்
முன்னிறை வாமலை மின்னிறை வாமலர் முண்டகத்தோன்
தன்னிறை வாதித்த் தானிறை வாமெய்த் தபோதனருள்
மன்னிறை வாஇங்கு வாஎன் றெனக்குநல் வாழ்வருளே. 210

423 போற்றிஎன் ஆவித் துணையேஎன் அன்பில் புகுஞ்சிவமே
போற்றிஎன் வாழ்வின் பயனேஎன் இன்பப் புதுநறவே
போற்றிஎன் கண்ணுண் மணியேஎன் உள்ளம் புனைஅணியே
போற்றிஎன் ஓர்பெருந் தேவே கருணை புரிந்தருளே. 211

424 கஞ்சத்தி லேர்முக மஞ்சத்தி லேர்நடைக் கன்னியர்கண்
நஞ்சத்தி லேஅவர் வஞ்சத்தி லேபட்டு நாணுறும்புன்
நெஞ்சத்தி லேஅதன் தஞ்சத்தி லேமுக் கணித்த என்போல்
பஞ்சத்தி லேபிர பஞ்சத்தி லேஉழப் பார்எவரே. 212

425 நான்முகத் தோனும் திருநெடு மாலுமெய்ஞ் ஞானமென்னும்
வான்முகக் கண்கொண்டு காணாமல் தம்உரு மாறியும்நின்
தேன்முகக் கொன்றை முடியும்செந் தாமரைச் சேவடியும்
ஊன்முகக் கண்கொண்டு தேடிநின் றார்சற் றுணர்விலரே. 213

426 இருவர்க் கறியப் படாதெழுந் தோங்கிநின் றேத்துகின்றோர்
கருவர்க்க நீக்கும் கருணைவெற் பேஎன் கவலையைஇங்
கொருவர்க்கு நான்சொல மாட்டேன் அவரென் னுடையவரோ
வெருவற்க என்றெனை ஆண்டருள் ஈதென்றன் விண்ணப்பமே.

427 ஒண்ணுதல் ஏழை மடவார்தம் வாழ்க்கையின் உற்றிடினும்
பண்ணுத லேர்மறை ஆயிரஞ் சூழுநின் பாதத்தையான்
எண்ணுத லேதொழி லாகச்செய் வித்தென்னை ஏன்றுகொள்வாய்
கண்ணுத லேகரு ணைக்கட லேஎன் கருத்திதுவே. 215

428 தளைக்கின்ற மாயக் குடும்பப் பெருந்துயர் தாங்கிஅந்தோ
இளைக்கின்ற ஏழைக் கிரங்குகண் டாய்சிறி தேஇறகு
முளைக்கின்ற போதறுப் பார்போல்நின் னாம மொழிந்திடுங்கால்
வளைக்கின்ற மாயைக்கிங் காற்றேன்முக் கண்ணுடை மாமணியே. 216

429 மஞ்சடை வான நிறத்தோன் அயன்முதல் வானவர்க்கா
நஞ்சடை யாள மிடுமிடற் றோய்கங்கை நண்ணுகின்ற
செஞ்சடை யாய்நின் திருப்பெய ராகச் சிறந்தஎழுத்
தஞ்சடை யார்கண்கள் பஞ்சடை யாமுன் னறிவிலரே. 217

430 இலங்கா புரத்தன் இராக்கதர் மன்னன் இராவணன்முன்
மலங்காநின் வெள்ளி மலைக்கீ ழிருந்து வருந்திநின்சீர்
கலங்காமல் பாடிடக் கேட்டே இரங்கிக் கருணைசெய்த
நலங்காணின் தன்மைஇன் றென்னள வியாண்டையின் நண்ணியதே. 218

431 உடையென்றும் பூணென்றும் ஊனென்றும் நாடி உழன்றிடும் இந்
நடையென்றும் சஞ்சலஞ் சஞ்சலங் காணிதி னான்சிறியேன்
புடையென்று வெய்ய லுறும்புழுப் போன்று புழுங்குகின்றேன்
விடையென்று மாலறங் கொண்டோயென் துன்பம் விலக்குகவே. 219

432 நிலையறி யாத குடும்பத் துயரென்னும் நீத்தத்திலே
தலையறி யாது விழுந்தேனை ஆண்டருள் தானளிப்பாய்
அலையறி யாத கடலேமுக் கண்கொண்ட ஆரமுதே
விலையறி யாத மணியே விடேலிதென் விண்ணப்பமே. 220

433 மெய்யகத் தேகணப் போதும் விடாது விரும்புகின்றோர்
கையகத் தேநின் றொளிர்கனி யேநுதற் கட்கரும்பே
வையகத் தேநினை அல்லாமல் நற்றுணை மற்றிலைஇப்
பொய்யகத் தேன்செயும் தீங்கா யிரமும் பொறுத்தருளே. 221

434 முலைக்கலங் கார மிடுமட வார்மயல் மூடிஅவர்
தலைக்கலங் கார மலர்சூடு வார்நின் றனைவழுத்தார்
இலைக்கலங் காரவ் வியமன்வந் தாலென் இசைப்பர்வெள்ளி
மலைக்கலங் கார மணியேமுக் கண்கொண்ட மாமருந்தே. 222

435 புரிகின்ற வீட்டகம் போந்தடி பட்டுப் புறங்கடையில்
திரிகின்ற நாய்க்கும் சிரிப்பாம்என் பாவிச் சிறுபிழைப்பைச்
சொரிகின்ற புண்ணில் கனலிடல் போலெணுந் தோறுநெஞ்சம்
எரிகின்ற தென்செய்கு வேன்பிறை வார்சடைய என்னமுதே.

436 மனக்கேத மாற்று மருந்தே பொதுஒளிர் மாணிக்கமே
கனக்கே துறஎன் கருத்தறி யாமல் கழறுகின்ற
தனக்கேளர் பாற்சென் றடியேன் இதயம் தளர்வதெல்லாம்
நினக்கே தெரிந்த தெனக்கே அருள் நினைந்தருளே. 224

437 மோகங் கலந்த மனத்தேன் துயரங்கள் முற்றுமற்றுத்
தேகங் கலந்த பவந்தீர்க்கும் நின்பதம் சிந்திக்கும்நாள்
போகங் கலந்த திருநாள் மலையற் புதப்பசுந்தேன்
பாகங் கலந்தசெம் பாலே நுதற்கட் பரஞ்சுடரே. 225

438 கோலொன்று கண்ட இறைமகன் வாழ்வினும் கோடிபங்கு
மேலொன்று கண்டனம் நெஞ்சேஎன் சொல்லை விரும்பினியஞ்
சேலொன்று கண்ட மணியான் வரைப்பசுந் தேன்கலந்த
பாலொன்று கண்டகண் கொண்டுயர் வாழ்வு பலித்ததுவே. 226

439 புலையள வோஎனும் நெஞ்சக னேன்துயர்ப் போகமெட்டு
மலையள வோஇந்த மண்ணள வோவந்த வானளவோ
அலையள வோவன்று மன்றுணின் றோங்கும் அருமருந்தே
இலையள வோஎனுந் தேவே அறிந்தும் இரங்கிலையே. 227

440 கல்லென்று வல்லென்று மின்னார் புளகக் கனதனத்தைச்
சொல்லென்று சொல்லுமுன் சொல்லுமந் தோநின் துணையடிக்கண்
நில்லென்று பல்ல நிகழ்த்தினும் என்மனம் நிற்பதன்றே
அல்லென்று வெல்களங் கொண்டோய்என் செய்வ தறிந்திலனே. 228

441 கள்ளா டியகொன்றைச் செஞ்சடை யோய்நற் கனகமன்றின்
உள்ளா டியமலர்ச் சேவடி யோய்இவ் வுலகியற்கண்
எள்ளா டியசெக் கிடைப்படல் போல்துன் பிடைஇளைத்துத்
தள்ளா டியநடை கொண்டேற்கு நன்னடை தந்தருளே. 229

442 மருக்கா மலர்க்குழல் மின்னார் மயல்சண்ட மாருதத்தால்
இருக்கா துழலுமென் ஏழைநெஞ் சேஇவ் விடும்பையிலே
செருக்கா துருகிச் சிவாய நமஎனத் தேர்ந்தன்பினால்
ஒருக்கால் உரைக்கில் பெருக்காகும் நல்லின்பம் ஓங்கிடுமே. 230

443 மதிக்கண்ணி வேணிப் பெருந்தகை யேநின் மலரடிக்குத்
துதிக்கண்ணி சூட்டுமெய்த் தொண்டரில் சேர்ந்துநின் தூயஒற்றிப்
பதிக்கண்ணி நின்னைப் பணிந்தேத்தி உள்ளம் பரவசமாக்
கதிக்கண்ணி வாழும் படிஅரு ளாயென் கருத்திதுவே. 231

444 இரையேற்று துன்பக் குடும்ப விகார இருட்கடலில்
புரையேற்று நெஞ்சம் புலர்ந்துநின் றேனைப் பொருட்படுத்திக்
கரையேற்ற வேண்டுமென் கண்ணே பவத்தைக் கடிமருந்தே
திரையேற்று செஞ்சடைத் தேவே அமரர் சிகாமணியே.

1. ச.மு.க பதிப்பில் முதல் பாடலாக அருள் அரசே உள்ளது மற்றைய பதிப்பில் தெய்வநிலையம்.
ஆ. பா. தொ. வே. 219 வது பாடலாக உள்ளது. ச.மு.க அடி ஒற்றிய அருட்பா பதிப்பகம் பதிப்பித்துள்ளது.

7. வடிவுடை மாணிக்க மாலை

காப்பு
கட்டளைக் கலித்துறை
திருச்சிற்றம்பலம்

445 சீர்கொண்ட ஒற்றிப் பதியுடை யானிடம் சேர்ந்தமணி
வார்கொண்ட கொங்கை வடிவாம் பிகைதன் மலரடிக்குத்
தார்கொண்ட செந்தமிழ்ப் பாமாலை சாத்தத் தமியனுக்கெ
ஏர்கொண்ட நல்லருள் ஈயும் குணாலய ஏரம்பனே. 1

கட்டளைக் கலித்துறை
திருச்சிற்றம்பலம்

446 கடலமு தேசெங் கரும்பே அருட்கற்ப கக்கனியே
உடல்உயி ரேஉயிர்க் குள்உணர் வேஉணர் வுள்ஒளியே
அடல்விடை யார்ஒற்றி யார்இடங் கொண்ட அருமருந்தே
மடலவிழ் ஞான மலரே வடிவுடை மாணிக்கமே. 1

447 அணியே அணிபெறும் ஒற்றித் தியாகர்தம் அன்புறுசற்
குணியேஎம் வாழ்க்கைக் குலதெய்வ மேமலைக் கோன்தவமே
பணியேன் பிழைபொறுத் தாட்கொண்ட தெய்வப் பதிகொள்சிந்தா
மணியேஎன் கண்ணுண் மணியே வடிவுடை மாணிக்கமே. 2

448 மானேர் விழிமலை மானேஎம் மானிடம் வாழ்மயிலே
கானேர் அளகப் பசுங்குயி லேஅருட் கட்கரும்பே
தேனே திருவொற்றி மாநகர் வாழும் சிவசத்தியே
வானே கருணை வடிவே வடிவுடை மாணிக்கமே. 3

449 பொருளே அடியர் புகலிட மேஒற்றிப் பூரணன்தண்
அருளேஎம் ஆருயிர்க் காந்துணை யேவிண் ணவர்புகழும்
தெருளேமெய்ஞ் ஞானத் தெளிவே மறைமுடிச் செம்பொருளே
மருளேத நீக்கும் ஒளியே வடிவுடை மாணிக்கமே. 4

450 திருமாலும் நான்முகத் தேவுமுன் னாள்மிகத் தேடிமனத்
தருமா லுழக்க அனலுரு வாகி அமர்ந்தருளும்
பெருமான்எம் மான்ஒற்றிப் பெம்மான்கைம் மான்கொளும் பித்தன்மலை
மருமான் இடங்கொள்பெண் மானே வடிவுடை மாணிக்கமே. 5

451 உன்னேர் அருள்தெய்வம் காணேன் மனத்தும் உரைக்கப்படாப்
பொன்னேஅப் பொன்னற் புதஒளி யேமலர்ப் பொன்வணங்கும்
அன்னே எம்ஆருயிர்க் கோர்உயி ரேஒற்றி யம்பதிவாழ்
மன்னே ரிடம்வளர் மின்னே வடிவுடை மாணிக்கமே. 6

452 கண்ணேஅக் கண்ணின் மணியே மணியில் கலந்தொளி செய்
விண்ணே வியன்ஒற்றி யூர்அண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே மலைபெறும் பெண்மணி யேதெய்வப் பெண்ணமுதே
மண்நேயம் நீத்தவர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 7

453 மலையான் தவஞ்செய்து பெற்றமுத் தேஒற்றி வாழ்கனகச்
சிலையான் மணக்க மணக்குந்தெய் வீகத் திருமலரே
அலையான் மலிகடல் பள்ளிகொண் டான்தொழும் ஆரமுதே
வலையான் அருமை மகளே வடிவுடை மாணிக்கமே. 8

454 காமம் படர்நெஞ் சுடையோர் கனவினும் காணப்படாச்
சேமம் படர்செல்வப் பொன்னே மதுரச் செழுங்கனியே
தாமம் படர்ஒற்றி யூர்வாழ் பவளத் தனிமலையின்
வாமம் படர்பைங் கொடியே வடிவுடை மாணிக்கமே. 9

455 கோடா அருட்குணக் குன்றே சிவத்தில் குறிப்பிலரை
நாடாத ஆனந்த நட்பேமெய் யன்பர் நயக்கும் இன்பே
பீடார் திருவொற்றிப் பெம்மான் இடஞ்செய் பெருந்தவமே
வாடா மணிமலர்க் கொம்பே வடிவுடை மாணிக்கமே. 10

456 நாலே எனுமறை அந்தங்கள் இன்னமும் நாடியெனைப்
போலே வருந்த வெளிஒளி யாய்ஒற்றிப் புண்ணியர்தம்
பாலே இருந்த நினைத்தங்கை யாகப் பகரப்பெற்ற
மாலே தவத்தில் பெரியோன் வடிவுடை மாணிக்கமே. 11

457 கங்கைகொண் டோன்ஒற்றி யூர்அண்ணல் வாமம் கலந்தருள்செய்
நங்கைஎல் லாஉல குந்தந்த நின்னைஅந் நாரணற்குத்
தங்கைஎன் கோஅன்றித் தாயர்என் கோசொல் தழைக்குமலை
மங்கையங் கோமள மானே வடிவுடை மாணிக்கமே. 12

458 சோலையிட் டார்வயல் ஊரொற்றி வைத்துத்தன் தொண்டரன்பின்
வேலையிட் டால்செயும் பித்தனை மெய்யிடை மேவுகரித்
தோலையிட் டாடும் தொழிலுடை யோனைத் துணிந்துமுன்னாண்
மாலையிட் டாய்இஃதென்னே வடிவுடை மாணிக்கமே. 13

459 தனையாள் பவரின்றி நிற்கும் பரமன் தனிஅருளாய்
வினையாள் உயிர்மல நீக்கிமெய் விட்டின் விடுத்திடுநீ
எனையாள் அருளொற்றி யூர்வா ழவன்றன் னிடத்துமொரு
மனையாள் எனநின்ற தென்னே வடிவுடை மாணிக்கமே. 14

460 பின்னீன்ற பிள்ளையின் மேலார்வம் தாய்க்கெனப் பேசுவர்நீ
முன்னீன்ற பிள்ளையின் மேலாசை யுள்ளவர் மொய்யசுரர் 15
கொன்னீன்ற போர்க்கிளம் பிள்ளையை ஏவக் கொடுத்ததென்னே
மன்னீன்ற ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே.

461 பையாளும் அல்குல் சுரர்மட வார்கள் பலருளும்இச்
செய்யாளும் வெண்ணிற மெய்யாளும் எத்தவம் செய்தனரோ
கையாளும் நின்னடிக் குற்றேவல் செய்யக் கடைக்கணித்தாய்
மையாளும் கண்ணொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 16

462 இலையாற்று நீமலர்க் காலால் பணிக்குங்குற் றேவலெலாம்
தலையால் செயும்பெண்கள் பல்லோரில் பூமகள் தன்னைத்தள்ளாய்
நிலையால் பெரியநின் தொண்டர்தம் பக்க நிலாமையினான்
மலையாற் கருளொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 17

463 கலைமக ளோநின் பணியைஅன் போடும் கடைப்பிடித்தாள்
அலைமக ளோஅன் பொடுபிடித் தாள்எற் கறைதிகண்டாய்
தலைமக ளேஅருட் டாயேசெவ் வாய்க்கருந் தாழ்குழற்பொன்
மலைமக ளேஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 18

464 பொன்னோடு வாணிஎன் போரிரு வோரும் பொருணற்கல்வி
தன்னோ டருளுந் திறநின்குற் றேவலைத் தாங்கிநின்ற
பின்னோ அலததன் முன்னோ தெளிந்திடப் பேசுகநீ
மன்னோ டெழிலொற்றி யூர்வாழ் வடிவுடை மாணிக்கமே. 19

465 காமட் டலர்திரு வொற்றிநின் னாயகன் கந்தைசுற்றி
யேமட் டரையொடு நிற்பது கண்டும் இரங்கலர்போல்
நீமட்டு மேபட் டுடுக்கின் றனைஉன்றன் நேயம்என்னோ
மாமட் டலர்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. 20

466 வீற்றார்நின் றன்மணத் தம்மியின் மேல்சிறு மெல்லனிச்சம்
ஆற்றாநின் சிற்றடிப் போதினைத் தூக்கிவைத் தாரெனின்மால்
ஏற்றார் திருவொற்றி யூரார் களக்கறுப் பேற்றவரே
மாற்றா இயல்கொண் மயிலே வடிவுடை மாணிக்கமே. 21

467 பொருப்புறு நீலியென் பார்நின்னை மெய்அது போலும்ஒற்றி
விருப்புறு நாயகன் பாம்பா பரணமும் வெண்தலையும்
நெருப்புறு கையும் கனல்மேனி யும்கண்டு நெஞ்சம்அஞ்சாய்
மருப்புறு கொங்கை மயிலே வடிவுடை மாணிக்கமே. 22

468 அனம்பொறுத் தான்புகழ் ஒற்றிநின் நாயகன் அங்குமிழித்
தனம்பொறுத் தாள்ஒரு மாற்றாளைத் தன்முடி தன்னில்வைத்தே
தினம்பொறுத் தான்அது கண்டும் சினமின்றிச் சேர்ந்தநின்போல்
மனம்பொறுத் தார்எவர் கண்டாய் வடிவுடை மாணிக்கமே. 23

469 ஓருரு வாய்ஒற்றி யூர்அமர்ந் தார்நின் னுடையவர்பெண்
சீருரு வாகுநின் மாற்றாளை நீதெளி யாத்திறத்தில்
நீருரு வாக்கிச் சுமந்தார் அதனை நினைந்திலையே
வாருரு வார்கொங்கை நங்காய் வடிவுடை மாணிக்கமே.

470 சார்ந்தேநின் பால்ஒற்றி யூர்வாழு நாயகர் தாமகிழ்வு
கூர்ந்தே குலாவும்அக் கொள்கையைக் காணில் கொதிப்பளென்று
தேர்ந்தேஅக் கங்கையைச் செஞ்சடை மேல்சிறை செய்தனர்ஒண்
வார்ந்தே குழைகொள் விழியாய் வடிவுடை மாணிக்கமே. 25

471 நீயே எனது பிழைகுறிப் பாயெனில் நின்னடிமைப்
பேயேன் செயும்வண்ணம் எவ்வண்ண மோஎனைப் பெற்றளிக்கும்
தாயே கருணைத் தடங்கட லேஒற்றிச் சார்குமுத
வாயோர் சவுந்தர[1] மானே வடிவுடை மாணிக்கமே. 26

472 முப்போதும் அன்பர்கள் வாழ்த்தொற்றி யூர்எம் முதல்வர்மகிழ்
ஒப்போ தருமலைப் பெண்ணமு தேஎன்று வந்துநினை
எப்போதும் சிந்தித் திடர்நீங்கி வாழ எனக்கருள்வாய்
மைப்போ தனையகண் மானே வடிவுடை மாணிக்கமே. 27

473 மீதலத் தோர்களுள் யார்வணங் காதவர் மேவுநடுப்
பூதலத் தோர்களுள் யார்புக ழாதவர் போற்றிநிதம்
பாதலத் தோர்களுள் யார்பணி யாதவர் பற்றிநின்றாள்
மாதலத் தோங்கொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 28

474 சேய்க்குற்றம் தாய்பொறுத் தேடா வருகெனச் செப்புவள்இந்
நாய்க்குற்றம் நீபொறுத் தாளுதல் வேண்டும் நவின்மதியின்
தேய்க்குற்ற மாற்றும் திருவொற்றி நாதர்தந் தேவிஅன்பர்
வாய்க்குற்றம் நீக்கும் மயிலே வடிவுடை மாணிக்கமே. 29

475 செங்கம லாசனன் தேவிபொன் நாணும் திருமுதலோர்
சங்கம தாமிடற் றோங்குபொன் நாணும் தலைகுனித்துத்
துங்கமு றாதுளம் நாணத் திருவொற்றித் தோன்றல்புனை
மங்கல நாணுடை யாளே வடிவுடை மாணிக்கமே. 30

476 சேடா ரியன்மணம் வீசச் செயன்மணம் சேர்ந்துபொங்க
ஏடார் பொழிலொற்றி யூரண்ணல் நெஞ்சம் இருந்துவக்க
வீடா இருளும் முகிலும்பின் னிட்டு வெருவவைத்த
வாடா மலர்க்குழ லாளே வடிவுடை மாணிக்கமே. 31

477 புரநோக்கி னால்பொடி தேக்கிய ஒற்றிப் புனிதர்களக்
கரநோக்கி[2] நல்லமு தாக்கிநிற் போற்றுங் கருத்தினர்ஆ
தரநோக்கி உள்ளிருள் நீக்கிமெய்ஞ் ஞானத் தனிச்சுகந்தான்
வரநோக்கி ஆள்விழி மானே வடிவுடை மாணிக்கமே. 32

1. சௌந்தரம் என்பது சவுந்தரம் எனப் போலியாயிற்று. தொ. வே.
2. கரம் – விடம். தொ. வே.

478 உன்னும் திருவொற்றி யூருடை யார்நெஞ் சுவப்பளழில்
துன்னும் உயிர்ப்பயிர் எல்லாந் தழைக்கச் சுகக்கருணை
என்னும் திருவமு தோயாமல் ஊற்றி எமதுளத்தின்
மன்னும் கடைக்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே. 33

479 வெள்ளம் குளிரும் சடைமுடி யோன்ஒற்றி வித்தகன்தன்
உள்ளம் குளிரமெய் பூரிப்ப ஆனந்தம் ஊற்றெடுப்பத்
தெள்ளம் குளிர்இன் அமுதே அளிக்கும்செவ் வாய்க்குமுத
வள்ளம் குளிர்முத்த மானே வடிவுடை மாணிக்கமே. 34

480 மாநந்த மார்வயல் காழிக் கவுணியர் மாமணிக்கன்று
ஆநந்த இன்னமு தூற்றும் திருமுலை ஆரணங்கே
காநந்த வோங்கும் எழிலொற்றி யார்உட் களித்தியலும்
வாநந் தருமிடை மானே வடிவுடை மாணிக்கமே. 35

481 வான்தேட நான்கு மறைதேட மாலுடன் வாரிசமே
லான்தேட மற்றை அருந்தவர் தேடஎன் அன்பின்மையால்
யான்தேட என்னுளம் சேர்ஒற்றி யூர்எம் இருநிதியே
மான்தேடும் வாட்கண் மயிலே வடிவுடை மாணிக்கமே. 36

482 முத்தேவர் விண்ணன்[1] முதல்தேவர் சித்தர் முனிவர்மற்றை
எத்தே வருநின் அடிநினை வார்நினைக் கின்றிலர்தான்
செத்தே பிறக்கும் சிறியர்அன் றோஒற்றித் தேவர்நற்றா
மத்தேவர் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே. 37

483 திருநாள் நினைத்தொழும் நன்னாள் தொழாமல் செலுத்தியநாள்
கருநாள் எனமறை எல்லாம் புகலும் கருத்தறிந்தே
ஒருநா ளினுநின் றனைமற வார்அன்பர் ஒற்றியில்வாழ்
மருநாண் மலர்க்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. 38

484 வாணாள் அடைவர் வறுமை யுறார்நன் மனைமக்கள்பொன்
பூணாள் இடம்புகழ் போதம் பெறுவர்பின் புன்மைஒன்றும்
காணார்நின் நாமம் கருதுகின் றோர்ஒற்றிக் கண்ணுதல்பால்
மாணார்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே. 39

485 சீரறி வாய்த்திரு வொற்றிப் பரம சிவத்தைநினைப்
போரறி வாய்அவ் அறிவாம் வெளிக்கப் புறத்துநின்றாய்
யாரறி வார்நின்னை நாயேன்அறிவ தழகுடைத்தே
வாரெறி பூண்முலை மானே வடிவுடை மாணிக்கமே. 40

486 போற்றிடு வோர்தம் பிழைஆ யிரமும் பொறுத்தருள்செய்
வீற்றொளிர் ஞான விளக்கே மரகத மென்கரும்பே
ஏற்றொளிர் ஒற்றி யிடத்தார் இடத்தில் இலங்கும்உயர்
மாற்றொளி ரும்பசும் பொன்னே வடிவுடை மாணிக்கமே.

1. விண்ணன் – இந்திரன். தொ. வே.

487 ஆசைஉள் ளார்அயன் மால்ஆதி தேவர்கள் யாரும்நின்தாள்
பூசையுள் ளார்எனில் எங்கே உலகர்செய் பூசைகொள்வார்
தேசையுள் ளார்ஒற்றி யூருடை யார்இடஞ் சேர்மயிலே
மாசையுள் [1]ளார்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே. 42

488 அண்டாரை வென்றுல காண்டுமெய்ஞ் ஞானம் அடைந்துவிண்ணில்
பண்டாரை சூழ்மதி போலிருப் போர்கள்நின் பத்தர்பதம்
கண்டாரைக் கண்டவர் அன்றோ திருவொற்றிக் கண்ணுதல்சேர்
வண்டாரை வேலன்ன மானே வடிவுடை மாணிக்கமே. 43

489 அடியார் தொழுநின் அடிப்பொடி தான்சற் றணியப்பெற்ற
முடியால் அடிக்குப் பெருமைபெற் றார்அம் முகுந்தன்சந்தக்
கடியார் மலர்அயன் முன்னோர்தென் ஒற்றிக் கடவுட்செம்பால்
வடியாக் கருணைக் கடலே வடிவுடை மாணிக்கமே. 44

490 ஓவா தயன்முத லோர்முடி கோடி உறழ்ந்துபடில்
ஆவா அனிச்சம் பொறாமலர்ச் சிற்றடி ஆற்றுங்கொலோ
காவாய் இமயப்பொற் பாவாய் அருளொற்றிக் காமர்வல்லி
வாவா எனும்அன்பர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 45

491 இட்டார் மறைக்கும் உபநிட தத்திற்கும் இன்னுஞ்சற்றும்
எட்டாநின் பொன்னடிப் போதெளி யேன்தலைக் கெட்டுங்கொலோ
கட்டார் சடைமுடி ஒற்றிஎம் மான்நெஞ்ச கத்தமர்ந்த
மட்டார் குழன்மட மானே வடிவுடை மாணிக்கமே. 46

492 வெளியாய் வெளிக்குள் வெறுவெளி யாய்ச்சிவ மேநிறைந்த
ஒளியாய் ஒளிக்குள் ஒளியாம் பரைநினை ஒப்பவரார்
எளியார்க் கெளியர் திருவொற்றி யார்மெய் இனிதுபரி
மளியாநின் றோங்கு மருவே வடிவுடை மாணிக்கமே. 47

493 விணங்காத லன்பர்தம் அன்பிற்கும் நின்புல விக்கும்அன்றி
வணங்கா மதிமுடி எங்கள் பிரான்ஒற்றி வாணனும்நின்
குணங்கா தலித்துமெய்க் கூறுதந் தான்எனக் கூறுவர்உன்
மணங்கா தலித்த தறியார் வடிவுடை மாணிக்கமே. 48

494 பன்னும்பல் வேறண்டம் எல்லாம்அவ் அண்டப் பரப்பினின்று
துன்னும் சராசரம் யாவையும் ஈன்றது சூழ்ந்தும்உன்னை
இன்னும் இளந்தை அழியாத கன்னிகை என்பதென்னே
மன்னும் சுகாநந்த வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 49

495 சினங்கடந் தோர்உள்ளச் செந்தா மரையில் செழித்துமற்றை
மனங்கடந் தோதும்அவ் வாக்கும் கடந்த மறைஅன்னமே
தினங்கடந் தோர்புகழ் ஒற்றிஎம் மானிடம் சேரமுதே
வனங்கடந் தோன்புகழ் மானே வடிவுடை மாணிக்கமே.

1. மாசை - பொன். தொ. வே.

496 வல்லாரும் வல்லவர் அல்லாரும் மற்றை மனிதர்முதல்
எல்லாரும் நின்செயல் அல்லா தணுவும் இயக்கிலரேல்
இல்லாமை யால்உழல் புல்லேன்செய் குற்றங்கள் ஏதுகண்டாய்
மல்லார் வயல்ஒற்றி நல்லாய் வடிவுடை மாணிக்கமே. 51

497 எழுதா எழில்உயிர்ச் சித்திர மேஇன் இசைப்பயனே
தொழுதாடும் அன்பர்தம் உட்களிப் பேசிற் சுகக்கடலே
செழுவார் மலர்ப்பொழில் ஒற்றிஎம் மான்தன் திருத்துணையே
வழுவா மறையின் பொருளே வடிவுடை மாணிக்கமே. 52

498 தெருட்பா லுறும்ஐங்கைச் செல்வர்க்கும் நல்லிளஞ் சேய்க்குமகிழ்ந்
தருட்பால் அளிக்கும் தனத்தன மேஎம் அகங்கலந்த
இருட்பால் அகற்றும் இருஞ்சுட ரேஒற்றி எந்தைஉள்ளம்
மருட்பால் பயிலு மயிலே வடிவுடை மாணிக்கமே. 53

499 அயிலேந்தும் பிள்ளைநற் றாயே திருவொற்றி ஐயர்மலர்க்
கயிலேந்[1] தரும்பெறல் முத்தே இசையில் கனிந்தகுரல்
குயிலே குயின்மென் குழற்பிடி யேமலைக் கோன்பயந்த
மயிலே மதிமுக மானே வடிவுடை மாணிக்கமே. 54

500 செய்யகம் ஓங்கும் திருவொற்றி யூரில் சிவபெருமான்
மெய்யகம் ஓங்குநல் அன்பேநின் பால்அன்பு மேவுகின்றோர்
கையகம் ஓங்கும் கனியே தனிமெய்க் கதிநெறியே
வையகம் ஓங்கு மருந்தே வடிவுடை மாணிக்கமே. 55

501 தரும்பேர் அருளொற்றி யூருடை யான்இடஞ் சார்ந்தபசுங்
கரும்பே இனியகற் கண்டே மதுரக் கனிநறவே
இரும்பேய் மனத்தினர் பால்இசை யாத இளங்கிளியே
வரும்பேர் ஒளிச்செஞ் சுடரே வடிவுடை மாணிக்கமே. 56

502 சேலேர் விழியருள் தேனே அடியருள் தித்திக்கும்செம்
பாலே மதுரச்செம் பாகேசொல் வேதப் பனுவல்முடி
மேலே விளங்கும் விளக்கே அருளொற்றி வித்தகனார்
மாலே கொளும்எழில் மானே வடிவுடை மாணிக்கமே. 57

503 எம்பால் அருள்வைத் தெழிலொற்றி யூர்கொண் டிருக்கும்இறைச்
செம்பால் கலந்தபைந் தேனே கதலிச் செழுங்கனியே
வெம்பாலை நெஞ்சருள் மேவா மலர்ப்பத மென்கொடியே
வம்பால் அணிமுலை மானே வடிவுடை மாணிக்கமே. 58

504 ஏமமுய்ப் போர்எமக் கென்றே இளைக்கில் எடுக்கவைத்த
சேமவைப் பேஅன்பர் தேடுமெய்ஞ் ஞானத் திரவியமே
தாமமைக் கார்மலர்க் கூந்தல் பிடிமென் தனிநடையாய்
வாமநற் சீர்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே.

1. கேயிலேந்து எனற்பாலது கயிலேந்து எனப் போலியாயிற்று தொ. வே.

505 மன்னேர் மலையன் மனையும்நற் காஞ்சன மாலையும்நீ
அன்னே எனத்திரு வாயால் அழைக்கப்பெற் றார்அவர்தாம்
முன்னே அருந்தவம் என்னே முயன்றனர் முன்னும்ஒற்றி
வன்னேர் இளமுலை மின்னே வடிவுடை மாணிக்கமே. 60

506 கணமொன்றி லேனும் என் உள்ளக் கவலைக் கடல்கடந்தே
குணமொன்றி லேன்எது செய்கேன்நின் உள்ளக் குறிப்பறியேன்
பணமொன்று பாம்பணி ஒற்றிஎம் மானிடப் பாலில்தெய்வ
மணமொன்று பச்சைக் கொடியே வடிவுடை மாணிக்கமே. 61

507 கருவே தனையற என்னெஞ் சகத்தில் களிப்பொடொற்றிக்
குருவே எனும்நின் கணவனும் நீயும் குலவும்அந்தத்
திருவே அருள்செந் திருவே முதற்பணி செய்யத்தந்த
மருவே மருவு மலரே வடிவுடை மாணிக்கமே. 62

508 எண்ணிய எண்ணங்கள் எல்லாம் பலிக்க எனக்குன்அருள்
பண்ணிய உள்ளங்கொள் உள்ளும் புறம்பும் பரிமளிக்கும்
புண்ணிய மல்லிகைப் போதே எழில்ஒற்றிப் பூரணர்பால்
மண்ணிய பச்சை மணியே வடிவுடை மாணிக்கமே. 63

509 தீதுசெய் தாலும்நின் அன்பர்கள் தம்முன் செருக்கிநின்று
வாதுசெய் தாலும்நின் தாள்மறந் தாலும் மதியிலியேன்
ஏதுசெய் தாலும் பொறுத்தருள் வாய்ஒற்றி யின்னிடைப்பூ
மாதுசெய் தாழ்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. 64

510 மருந்தினின் றான்ஒற்றி யூர்வாழு நின்றன் மகிழ்நன்முன்னும்
திருந்திநின் றார்புகழ் நின்முன்னு நல்லருள் தேன்விழைந்தே
விருந்தினின் றேன்சற்றும் உள்ளிரங் காத விதத்தைக்கண்டு
வருந்திநின் றேன்இது நன்றோ வடிவுடை மாணிக்கமே. 65

511 என்போல் குணத்தில் இழிந்தவர் இல்லைஎப் போதும்எங்கும்
நின்போல் அருளில் சிறந்தவர் இல்லைஇந் நீர்மையினால்
பொன்போலும் நின்னருள் அன்னே எனக்கும் புரிதிகண்டாய்
மன்போல் உயர்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 66

512 துன்பே மிகும்இவ் அடியேன் மனத்தில்நின் துய்யஅருள்
இன்பே மிகுவதெந் நாளோ எழிலொற்றி எந்தைஉயிர்க்
கன்பேமெய்த் தொண்டர் அறிவே சிவநெறிக் கன்பிலர்பால்
வன்பேமெய்ப் போத வடிவே வடிவுடை மாணிக்கமே. 67

513 சற்றே யெனினும்என் நெஞ்சத் துயரம் தவிரவும்நின்
பொற்றே மலர்ப்பதம் போற்றவும் உள்ளம் புரிதிகண்டாய்
சொற்றேர் அறிஞர் புகழ்ஒற்றி மேவும் துணைவர்தஞ்செம்
மற்றேர் புயத்தணை மானே வடிவுடை மாணிக்கமே.

514 சந்தோட மாப்பிறர் எல்லாம் இருக்கவும் சஞ்சலத்தால்
அந்தோ ஒருதமி யேன்மட்டும் வாடல் அருட்கழகோ
நந்தோட நீக்கிய நங்காய் எனத்திரு நான்முகன்மால்
வந்தோதும் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. 69

515 அடியேன் மிசைஎப் பிழையிருந் தாலும் அவைபொறுத்துச்
செடியேதம் நீக்கிநற் சீரருள் வாய்திகழ் தெய்வமறைக்
கொடியே மரகதக் கொம்பே எழில்ஒற்றிக் கோமளமே
வடியேர் அயில்விழி மானே வடிவுடை மாணிக்கமே. 70

516 கண்ணப்பன் ஏத்துநற் காளத்தி யார்மங் கலங்கொள்ஒற்றி
நண்ணப்பர் வேண்டும் நலமே பரானந்த நன்னறவே
எண்ணப் படாஎழில் ஓவிய மேஎமை ஏன்றுகொண்ட
வண்ணப் பசும்பொன் வடிவே வடிவுடை மாணிக்கமே. 71

517 கற்பே விகற்பம் கடியும்ஒன் றேஎங்கள் கண்நிறைந்த
பொற்பேமெய்த் தொண்டர் தம் புண்ணிய மேஅருட் போதஇன்பே
சொற்பேர் அறிவுட் சுகப்பொரு ளேமெய்ச் சுயஞ்சுடரே
மற்பேர் பெறும்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே. 72

518 மிகவே துயர்க்கடல் வீழ்ந்தேனை நீகை விடுதலருள்
தகவே எனக்குநற் றாயே அகில சராசரமும்
சுகவேலை மூழ்கத் திருவொற்றி யூரிடந் துன்னிப்பெற்ற
மகவே எனப்புரக் கின்றோய் வடிவுடை மாணிக்கமே. 73

519 வேதங்க ளாய்ஒற்றி மேவும் சிவத்தின் விளைவருளாய்ப்
பூதங்க ளாய்ப்பொறி யாய்ப்புல னாகிப் புகல்கரண
பேதங்க ளாய்உயிர் ஆகிய நின்னைஇப் பேதைஎன்வாய்
வாதங்க ளால்அறி வேனோ வடிவுடை மாணிக்கமே. 74

520 மதியே மதிமுக மானே அடியர் மனத்துவைத்த
நிதியே கருணை நிறைவே சுகாநந்த நீள்நிலையே
கதியே கதிவழி காட்டுங்கண் ணேஒற்றிக் காவலர்பால்
வதியேர் இளமட மானே வடிவுடை மாணிக்கமே. 75

521 ஆறாத் துயரத் தழுந்துகின் றேனைஇங் கஞ்சல்என்றே
கூறாக் குறைஎன் குறையே இனிநின் குறிப்பறியேன்
தேறாச் சிறியர்க் கரிதாம் திருவொற்றித் தேவர்மகிழ்
மாறாக் கருணை மழையே வடிவுடை மாணிக்கமே. 76

522 எற்றே நிலைஒன்றும் இல்லா துயங்கும் எனக்கருளச்
சற்றேநின் உள்ளம் திரும்பிலை யான்செயத் தக்கதென்னே
சொற்றேன் நிறைமறைக் கொம்பேமெய்ஞ் ஞானச் சுடர்க்கொழுந்தே
மற்றேர் அணியொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

523 செவ்வேலை வென்றகண் மின்னேநின் சித்தம் திரும்பிஎனக்
கெவ்வேலை செய்என் றிடினும்அவ் வேலை இயற்றுவல்காண்
தெவ்வேலை வற்றச்செய் அவ்வேலை யீன்றொற்றித் தேவர்நெஞ்சை
வவ்வேல வார்குழல் மானே வடிவுடை மாணிக்கமே. 78

524 தாயே மிகவும் தயவுடை யாள்எனச் சாற்றுவர்இச்
சேயேன் படுந்துயர் நீக்கஎன் னேஉளம் செய்திலையே
நாயேன் பிழைஇனி நாடாது நல்லருள் நல்கவரு
வாயேஎம் ஒற்றி மயிலே வடிவுடை மாணிக்கமே. 79

525 நானே நினக்கடி யேன்என் பிழைகளை நாடியநீ
தானே எனைவிடில் அந்தோ இனிஎவர் தாங்குகின்றோர்
தேனேநல் வேதத் தெளிவே கதிக்குச் செலுநெறியே
வானோர் பொழில்ஒற்றி மானே வடிவுடை மாணிக்கமே. 80

526 கல்லா ரிடத்தில்என் இல்லாமை சொல்லிக் கலங்கிஇடர்
நல்லாண்மை உண்டருள் வல்லாண்மை உண்டெனின் நல்குவையோ
வல்லார் எவர்க்கட்கும் வல்லார் திருவொற்றி வாணரொடு
மல்லார் பொழில்ஒற்றி வாழ்வோய் வடிவுடை மாணிக்கமே. 81

527 சுந்தர வாண்முகத் தோகாய் மறைகள் சொலும்பைங்கிள்ளாய்
கந்தர வார்குழற் பூவாய் கருணைக் கடைக்கண்நங்காய்
அந்தர நேரிடைப் பாவாய் அருள்ஒற்றி அண்ணல்மகிழ்
மந்தர நேர்கொங்கை மங்காய் வடிவுடை மாணிக்கமே. 82

528 பத்தர் தம் உள்ளத் திருக்கோயில் மேவும் பரம்பரையே
சுத்தமெய்ஞ் ஞான ஒளிப்பிழம் பேசிற் சுகாநந்தமே
நித்தநின் சீர்சொல எற்கருள் வாய்ஒற்றி நின்மலர்உன்
மத்தர் தம் வாம மயிலே வடிவுடை மாணிக்கமே. 83

529 பூவாய் மலர்க்குழல் பூவாய்மெய் அன்பர் புனைந்ததமிழ்ப்
பாவாய் நிறைந்தபொற் பாவாய்செந் தேனிற் பகர்மொழியாய்
காவாய் எனஅயன் காவாய் பவனும் கருதுமலர்
மாவாய் எழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 84

530 தாதா உணவுடை தாதா எனப்புல்லர் தம்மிடைப்போய்
மாதாகம் உற்றவர் வன்நெஞ்சில் நின்அடி வைகுங்கொலோ
காதார் நெடுங்கட் கரும்பேநல் ஒற்றிக் கருத்தர்நட
வாதா ரிடம்வளர் மாதே வடிவுடை மாணிக்கமே. 85

531 களந்திரும் பாஇக் கடையேனை ஆளக் கருணைகொண்டுன்
உளந்திரும் பாமைக்கென் செய்கேன் துயர்க்கட லூடலைந்தேன்
குளந்திரும் பாவிழிக் கோமா னொடுந்தொண்டர் கூட்டமுற
வளந்திரும் பாஒற்றி வாழ்வோய் வடிவுடை மாணிக்கமே.

532 ஆரணம் பூத்த அருட்கோ மளக்கொடி அந்தரிபூந்
தோரணம் பூத்த எழில்ஒற்றி யூர்மகிழ் சுந்தரிசற்
காரணம் பூத்த சிவைபார்ப் பதிநங் கவுரிஎன்னும்
வாரணம் பூத்த தனத்தாய் வடிவுடை மாணிக்கமே. 87

533 திருவல்லி ஏத்தும் அபிடேக வல்லிஎஞ் சென்னியிடை
வருவல்லி கற்பக வல்லிஒண் பச்சை மணிவல்லிஎம்
கருவல்லி நீக்கும் கருணாம் பகவல்லி கண்கொள்ஒற்றி
மருவல்லி என்று மறைதேர் வடிவுடை மாணிக்கமே. 88

534 உடையென்ன ஒண்புலித் தோல்உடை யார்கண் டுவக்குமிள
நடையன்ன மேமலர்ப் பொன்முத லாம்பெண்கள் நாயகமே
படையன்ன நீள்விழி மின்னோர் இடைப்பொற் பசுங்கிளியே
மடைமன்னு நீர்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 89

535 கற்பதும் கேட்பதும் எல்லாம்நின் அற்புதக் கஞ்சமலர்ப்
பொற்பதம் காணும் பொருட்டென எண்ணுவர் புண்ணியரே
சொற்பத மாய்அவைக் கப்புற மாய்நின்ற தூய்ச்சுடரே
மற்பதம் சேரொற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 90

536 நின்னால் எனக்குள எல்லா நலனும் நினை அடைந்த
என்னால் உனக்குள தென்னைகண் டாய்எமை ஈன்றவளே
முன்னால் வருக்கருள் ஒற்றிஎம் மான்கண் முழுமணியே
மன்னான் மறையின் முடிவே வடிவுடை மாணிக்கமே. 91

537 நன்றே சிவநெறி நாடுமெய்த் தொண்டர்க்கு நன்மைசெய்து
நின்றேநின் சேவடிக் குற்றேவல் செய்ய நினைத்தனன்ஈ
தென்றே முடிகுவ தின்றே முடியில் இனிதுகண்டாய்
மன்றேர் எழில்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 92

538 அத்தனை ஒற்றிக் கிறைவனை அம்பலத் தாடுகின்ற
முத்தனைச் சேர்ந்தஒண் முத்தே மதிய முகவமுதே
இத்தனை என்றள வேலாத குற்றம் இழைத்திடும்இம்
மத்தனை ஆளல் வழக்கோ வடிவுடை மாணிக்கமே. 93

539 கூறாத வாழ்க்கைச் சிறுமையை நோக்கிக் குறித்திடும்என்
தேறாத விண்ணப்பம் சற்றேனும் நின்றன் திருச்செவியில்
ஏறாத வண்ணம்என் ஒற்றித் தியாகர் இடப்புறத்தின்
மாறா தமர்ந்த மயிலே வடிவுடை மாணிக்கமே. 94

540 ஓயா இடர்கொண் டுலைவேனுக் கன்பர்க் குதவுதல்போல்
ஈயா விடினும்ஓர் எள்ளள வேனும் இரங்குகண்டாய்
சாயா அருள்தரும் தாயே எழில்ஒற்றித் தற்பரையே
மாயா நலம்அருள் வாழ்வே வடிவுடை மாணிக்கமே.

541 பெரும்பேதை யேன்சிறு வாழ்க்கைத் துயர்எனும் பேரலையில்
துரும்பே எனஅலை கின்றேன் புணைநின் துணைப்பதமே
கரும்பே கருணைக் கடலே அருண்முக் கனிநறவே
வரும்பேர் அருள்ஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 96

542 காதர வால்உட் கலங்கிநின் றேன்நின் கடைக்கண்அருள்
ஆதர வால்மகிழ் கின்றேன் இனிஉன் அடைக்கலமே
சீதரன் ஏத்தும் திருவொற்றி நாதர்தம் தேவிஎழில்
மாதர சேஒற்றி வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 97

543 பொன்னுடை யார்அன்றிப் போற்றுநற் கல்விப் பொருளுடையார்
என்னுடை யார்என ஏசுகின் றார்இஃ தென்னை அன்னே
மின்னுடை யாய்மின்னில் துன்னிடை யாய்ஒற்றி மேவுமுக்கண்
மன்னுடை யாய்என் னுடையாய் வடிவுடை மாணிக்கமே. 98

544 பொய்விட்டி டாதவன் நெஞ்சகத் தேனைப் புலம்பும்வண்ணம்
கைவிட்டி டாதின்னும் காப்பாய் அதுநின் கடன்கரும்பே
மெய்விட்டி டாருள் விளைஇன்ப மேஒற்றி வித்தகமே
மைவிட்டி டாவிழி மானே வடிவுடை மாணிக்கமே. 99

545 நேயானு கூல மனமுடை யாய்இனி நீயும்என்றன்
தாயாகில் யான்உன் தனையனும் ஆகில்என் தன்உளத்தில்
ஓயா துறுந்துயர் எல்லாம் தவிர்த்தருள் ஒற்றியில்செவ்
வாயார் அமுத வடிவே வடிவுடை மாணிக்கமே. 100

546 வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் தாண்மலர் போற்றிநின் தண்ணளி வாழிநின்சீர்
வாழிஎன் உள்ளத்தில் நீயுநின் ஒற்றி மகிழ்நரும்நீ
வாழிஎன் ஆருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. 101

08. இங்கித மாலை

நேரிசை வெண்பா
அருட்பெருஞ்ஜோதி

காப்பு
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

547 ஒருமா முகனை யொருமாவை யூர்வா கனமா யுறநோக்கித்
திருமான் முதலோர் சிறுமையெலாந் தீர்த்தெம் மிருகண் மணியாகிக்
கருமா லகற்றுங் கணபதியாங் கடவு ளடியுங் களித்தவர்பின்
வருமா கருணைக் கடற்குமர வள்ள லடியும் வணங்குவாம் 1

பாடாண் திணை
கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் (வினா உத்தரம்)
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

548 திருவார் கமலத் தடம்பணைசூழ் செல்வப் பெருஞ்சீ ரொற்றியில்வாழ்
மருவார் கொன்றைச் சடைமுடிகொள் வள்ள லிவர்க்குப் பலிகொடுநா
னொருவா தடைந்தே னினிநமக்கிங் குதவ வருந்தோ றுன்முலைமே
லிருவா ரிடுநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 1

549 தண்ணார் மலரை மதிநதியைத் தாங்குஞ் சடையா ரிவர்தமைநா
னண்ணா லொற்றி யிருந்தவரே யைய ரேநீர் யாரென்றே
னண்ணா ரிடத்து மம்பலத்து நடவா தவர்நா மென்றுசொலி
யெண்ணா தருகே வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 2

550 பிட்டி னதிமண் சுமந்தவொற்றிப் பிச்சைத் தேவ ரிவர்தமைநான்
றட்டின் மலர்க்கை யிடத்தெதுவோ தனத்தைப் பிடியு மென்றுரைத்தேன்
மட்டி னொருமூன் றுடனேழு மத்தர் தலையீ தென்றுசொலி
யெட்டி முலையைப் பிடிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 3

551 மடையிற் கயல்பா யொற்றிநகர் வள்ள லாகு மிவர்தமைநா
னடையிற் கனிவாற் பணியென்றே யருளீ ருரியீ ருடையென்றேன்
கடையிற் படுமோர் பணியென்றே கருதி யுரைத்தே மென்றுரைத்தென்
னிடையிற் கலையை யுரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 4

552 மன்றன் மணக்கு மொற்றிநகர் வாண ராகு மிவர்தமைநா
னின்றன் பொடுங்கை யேந்தனத்தை யேற்றார் கலத்திற் கொளுமென்றே
னன்றன் புடையா யெண்கலத்தி னாங்கொண் டிடுவே மென்றுசொலி
யென்றன் முலையைத் தொடுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 5

553 கோமாற் கருளுந் திருவொற்றிக் கோயி லுடையா ரிவரைமத
மாமாற் றியநீ ரேகலவி மகிழ்ந்தின் றடியேன் மனையினிடைத்
தாமாற் றிடக்கொண் டேகுமென்றேன் றாவென் றார்தந் தாலென்னை
யேமாற் றினையே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

554 அம்மா லயனுங் காண்பரியீர்க் கமரும் பதிதான் யாதென்றே
னிம்மா லுடையா யொற்றுதற்கோ ரெச்ச மதுகண் டறியென்றார்
செம்மா லிஃதொன் றென்னென்றேன் றிருவே புரிமேற் சேர்கின்ற
வெம்மான் மற்றொன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 7

555 கண்கள் களிப்ப வீண்டுநிற்குங் கள்வ ரிவரூ ரொற்றியதாம்
பண்க ளியன்ற திருவாயாற் பலிதா வென்றார் கொடுவந்தேன்
பெண்க டரலீ தன்றென்றார் பேசப் பலியா தென்றேனின்
னெண்கண் பலித்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 8

556 ஆரா மகிழ்வு தருமொருபே ரழக ரிவரூ ரொற்றியதா
நேராய் விருந்துண் டோவென்றார் நீர்தான் வேறிங் கிலையென்றேன்
வாரார் முலையாய் வாயமுது மலர்க்கை யமுது மனையமுது
மேரா யுளவே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 9

557 அடுத்தார்க் கருளு மொற்றிநக ரைய ரிவர்தா மிகத்தாகங்
கடுத்தா மென்றார் கடிதடநீர் கண்டீ ரையங் கொளுமென்றேன்
கொடுத்தாய் கண்ட திலையையங் கொள்ளு மிடஞ்சூழ்ந் திடுங்கலையை
யெடுத்தாற் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 10

558 இந்தா ரிதழி யிலங்குசடை யேந்த லிவரூ ரொற்றியதாம்
வந்தார் பெண்ணே யமுதென்றார் வரையின் சுதையிங் குண்டென்றே
னந்தார் குழலாய் பசிக்கினும்பெண் ணாசை விடுமோ வமுதின்றே
லெந்தா ரந்தா வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 11

559 தன்னந் தனியா யிங்குநிற்குஞ் சாமி யிவரூ ரொற்றியதா
மன்னந் தருவீ ரென்றார்நா னழைத்தே னின்னை யன்னமிட
முன்னம் பசிபோ யிற்றென்றார் முன்னின் றகன்றே னிவ்வன்ன
மின்னந் தருவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 12

560 மாறா வழகோ டிங்குநிற்கும் வள்ள லிவரூ ரொற்றியதாம்
வீறா முணவீ யென்றார்நீர் மேவா வுணவிங் குண்டென்றேன்
கூறா மகிழ்வே கொடுவென்றார் கொடுத்தா லிதுதா னன்றென்றே
யேறா வழக்குத் தொடுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 13

561 வண்மை யுடையார் திருவொற்றி வாண ரிவர்தாம் பலியென்றா
ருண்மை யறிவீர் பலியெண்மை யுணர்கி லீரென் னுழையென்றேன்
பெண்மை சிறந்தாய் நின்மனையிற் பேசும் பலிக்கென் றடைந்ததுநா
மெண்மை யுணர்ந்தே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 14

562 திருவை யளிக்குந் திருவொற்றித் தேவ ரீர்க்கென் விழைவென்றேன்
வெருவ லுனது பெயரிடையோர் மெய்நீக் கியநின் முகமென்றார்
தருவ லதனை வெளிப்படையாற் சாற்று மென்றேன் சாற்றுவனே
லிருவை மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

563 முந்தை மறையோன் புகழொற்றி முதல்வ ரிவர்தம் முகநோக்கிக்
கந்தை யுடையீ ரென்னென்றேன் கழியா வுன்றன் மொழியாலே
யிந்து முகத்தா யெமக்கொன்றே யிருநான் குனக்குக் கந்தையுள
திந்த வியப்பென் யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 16

564 துன்ன லுடையா ரிவர்தமைநீர் துன்னும் பதிதான் யாதென்றே
னென்ன லிரவி லெமைத்தெளிவா னின்ற நினது பெயரென்றா
ருன்ன லுறுவீர் வெளிப்படவீ துரைப்பீ ரென்றே னுரைப்பேனே
லின்ன லடைவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 17

565 சிமைக்கொள் சூலத் திருமலர்க்கைத் தேவர் நீரெங் கிருந்ததென்றே
னெமைக்கண் டளவின் மாதேநீ யிருந்த தெனயா மிருந்ததென்றா
ரமைக்கு மொழியிங் கிதமென்றே னாமுன் மொழியிங் கிதமன்றோ
விமைக்கு மிழையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 18

566 நடங்கொள் பதத்தீர் திருவொற்றி நங்கள் பெருமா னீரன்றோ
திடங்கொள் புகழ்க்கச் சூரிடஞ்சேர்ந் தீரென் றேனின் னடுநோக்காக்
குடஞ்சேர்ந் ததுமாங் கஃதென்றார் குடம்யா தென்றே னஃதறிதற்
கிடங்கர் நடுநீக் கென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 19

567 சங்க மருவு மொற்றியுளீர் சடைமே லிருந்த தென்னென்றேன்
மங்கை நினது முன்பருவ மருவு முதனீத் திருந்ததென்றார்
கங்கை யிருந்த தேயென்றேன் கமலை யனையாய் கழுக்கடையு
மெங்கை யிருந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 20

568 துதிசே ரொற்றி வளர்தரும துரையே நீர்முன் னாடலுறும்
பதியா தென்றே னம்பெயர்முற் பகரீ ரெழுத்தைப் பறித்ததென்றார்
நிதிசேர்ந் திடுமப் பெயர்யாது நிகழ்த்து மென்றே னீயிட்ட
தெதுவோ வதுகா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 21

569 உடற்கச் சுயிரா மொற்றியுளீ ருமது திருப்பேர் யாதென்றேன்
குடக்குச் சிவந்த பொழுதினைமுன் கொண்ட வண்ண ராமென்றார்
விடைக்குக் கருத்தா வாநீர்தாம் விளம்பன் மிகக்கற் றவரென்றே
னிடக்குப் புகன்றா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 22

570 மணங்கே தகைவான் செயுமொற்றி வள்ளலிவரை வல்விரைவேன்
பிணங்கேஞ் சிறிது நில்லுமென்றேன் பிணங்கா விடினு நென்னலென
வணங்கே நினக்கொன் றினிற்பாதி யதிலோர் பாதி யாகுமிதற்
கிணங்கேஞ் சிறிது மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 23

571 ஒற்றி நகரா ரிவர்தமைநீ ருவந்தே றுவதிங்கி யாதென்றேன்
மற்றுன் பருவத் தொருபங்கே மடவா யென்றார் மறைவிடையீ
திற்றென் றறிதற் கரிதென்றே னெம்மை யறிவா ரன்றியஃ
தெற்றென் றறிவா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

572 கண்ணின் மணிபோ லிங்குநிற்குங் கள்வ ரிவரூ ரொற்றியதாம்
பண்ணின் மொழியாய் நின்பாலோர் பறவைப் பெயர்வேண் டினம்படைத்தான்
மண்ணின் மிசையோர் பறவையதா வாழ்வாயென்றா ரென்னென்றே
னெண்ணி யறிநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 25

573 சேடார் வளஞ்சூ ழொற்றிநகர் செல்வப் பெருமா னிவர்தமைநா
னோடார் கரத்தீ ரெண்டோள்க ளுடையீ ரென்னென் றுரைத்தேனீ
கோடா கோடி முகநூறு கோடா கோடிக் களமென்னே
யீடா யுடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 26

574 துருமஞ் செழிக்கும் பொழிலொற்றித் தோன்றா லிங்கு நீர்வந்த
கருமஞ் சொலுமென் றேனிவண்ணாங் கடாதற் குன்பா லெம்முடைமைத்
தருமம் பெறக்கண் டாமென்றார் தருவ லிருந்தா லென்றேனில்
லிருமந் தரமோ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 27

575 ஒருகை முகத்தோர்க் கையரெனு மொற்றித் தேவ ரிவர்தமைநான்
வருகை யுவந்தீ ரென்றனைநீர் மருவி யணைதல் வேண்டுமென்றேன்
றருகை யுடனே யகங்காரந் தனையெம் மடியார் தமைமயக்கை
யிருகை வளைசிந் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 28

576 திருத்த மிகுஞ்சீ ரொற்றியில்வாழ் தேவ ரேயிங் கெதுவேண்டி
வருத்த மலர்க்கா லுறநடந்து வந்தீ ரென்றேன் மாதேநீ
யருத்தந் தெளிந்தே நிருவாண மாகவுன்ற னகத்தருட்க
ணிருத்த வடைந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 29

577 வளஞ்சே ரொற்றி மாணிக்க வண்ண ராகு மிவர்தமைநான்
குளஞ்சேர்ந் திருந்த துமக்கொருகண் கோலச் சடையீ ரழகிதென்றேன்
களஞ்சேர் குளத்தி னெழின்முலைக்கண் காண வோரைந் துனக்கழகீ
திளஞ்சேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 30

578 பலஞ்சே ரொற்றிப் பதியுடையீர் பதிவே றுண்டோ நுமக்கென்றே
னுலஞ்சேர் வெண்பொன் மலையென்றா ருண்டோ நீண்டமலையென்றேன்
வலஞ்சே ரிடைத்தவ் வருவித்த மலைகா ணதனின் மம்முதல்சென்
றிலஞ்சேர்ந் ததுவு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 31

579 வயலா ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் வாய்திறவார்
செயலார் விரல்கண் முடக்கியடி சேர்த்தீ ரிதழ்கள் விரிவித்தார்
மயலா ருளத்தோ டென்னென்றேன் மறித்தோர் விரலா லென்னுடைய
வியலார் வடிவிற் சுட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 32

580 பேர்வா ழொற்றி வாணரிவர் பேசா மௌன யோகியராய்ச்
சீர்வாழ் நமது மனையினிடைச் சேர்ந்தார் விழைவென் செப்புமென்றே
னோர்வா ழடியுங் குழலணியு மொருநல் விரலாற் சுட்டியுந்தம்
மேர்வா ழொருகை பார்க்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

581 பெருஞ்சீ ரொற்றி வாணரிவர் பேசா மௌனம் பிடித்திங்கே
விரிஞ்சீர் தரநின் றுடன்கீழு மேலு நோக்கி விரைந்தார்யான்
வருஞ்சீ ருடையீர் மணிவார்த்தை வகுக்க வென்றேன் மார்பிடைக்கா
ழிருஞ்சீர் மணியைக் காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 34

582 வலந்தங் கியசீ ரொற்றிநகர் வள்ள லிவர் தாம் மௌனமொடு
கலந்திங் கிருந்த வண்டசத்தைக் காட்டி மூன்று விரனீட்டி
நலந்தங் குறப்பின் னடுமுடக்கி நண்ணு மிந்த நகத்தொடுவா
யிலந்தங் கரத்தாற் குறிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 35

583 தேனார் பொழிலா ரொற்றியில்வாழ் தேவ ரிவர்வாய் திறவாராய்
மானார் கரத்தோர் நகந்தெரித்து வாளா நின்றார் நீளார்வந்
தானா ருளத்தோ டியாதென்றேன் றங்கைத் தலத்திற் றலையையடி
யேனா டுறவே காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 36

584 செச்சை யழகர் திருவொற்றித் தேவ ரிவர்வாய் திறவாராய்
மெச்சு மொருகாற் கரந்தொட்டு மீண்டு மிடற்றக் கரம்வைத்தார்
பிச்ச ரடிகேள் வேண்டுவது பேசீ ரென்றேன் றமைக்காட்டி
யிச்சை யெனையுங் குறிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 37

585 மன்றார் நிலையார் திருவொற்றி வாண ரிவர்தா மௌனமொடு
நின்றா ரிருகை யொலியிசைத்தார் நிமிர்ந்தார் தவிசி னிலைகுறைத்தார்
நன்றா ரமுது சிறிதுமிழ்ந்தார் நடித்தா ரியாவு மையமென்றே
னின்றா மரைக்கை யேந்துகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 38

586 வாரா விருந்தாய் வள்ளலிவர் வந்தார் மௌன மொடுநின்றார்
நீரா ரெங்கே யிருப்பதென்றே னீண்ட சடையைக் குறிப்பித்தா
ரூரா வைத்த தெதுவென்றே னொண்கை யோடென் னிடத்தினில்வைத்
தேரார் கரத்தாற் சுட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 39

587 செங்கேழ் கங்கைச் சடையார்வாய் திறவா ராக வீண்டடைந்தா
ரெங்கே யிருந்தெங் கணைந்ததுகா ணெங்கள் பெருமா னென்றேனென்
னங்கே ழருகி னகன்றுபோ யங்கே யிறைப்போ தமர்ந்தெழுந்தே
யிங்கே நடந்து வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 40

588 கொடையா ரொற்றி வாணரிவர் கூறா மௌன ராகிநின்றார்
தொடையா ரிதழி மதிச்சடையென் துரையே விழைவே துமக்கென்றே
னுடையார் துன்னற் கந்தைதனை யுற்று நோக்கி நகைசெய்தே
யிடையாக் கழுமுட் காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 41

589 பொன்னைக் கொடுத்தும் புணர்வரிய புனித ரிவரூ ரொற்றியதா
முன்னைத் தவத்தா லியாங்காண முன்னே நின்றார் முகமலர்ந்து
மின்னிற் பொலியுஞ் சடையீரென் வேண்டு மென்றே னுணச்செய்யா
ளின்னச் சினங்கா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

590 வயலார் சோலை யெழிலொற்றி வாண ராகு மிவர்தமைநான்
செயலா ரடியர்க் கருள்வீர் நுஞ் சிரத்து முரத்துந் திகழ்கரத்தும்
வியலாய்க் கொண்ட தென்னென்றேன் விளங்கும் பிநாக மவைமூன்று
மியலாற் காண்டி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 43

591 பொதுநின் றருள்வீ ரொற்றியுளீர் பூவுந் தியதென் விழியென்றே
னிதுவென் றறிநா மேறுகின்ற தென்றா ரேறு கின்றதுதா
னெதுவென் றுரைத்தே னெதுநடுவோ ரெழுத்திட் டறிநீ யென்றுசொலி
யெதிர்நின் றுவந்து நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 44

592 இட்டங் களித்த தொற்றியுளீ ரீண்டிவ் வேளை யெவனென்றேன்
சுட்டுஞ் சுதனே யென்றார்நான் சுட்டி யறியச் சொலுமென்றேன்
பட்டுண் மருங்குற் பாவாய்நீ பரித்த தன்றே பாரென்றே
யெட்டுங் களிப்பா லுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 45

593 பாற்றக் கணத்தா ரிவர்காட்டுப் பள்ளித் தலைவ ரொற்றியினின்
றாற்றப் பசித்து வந்தாரா மன்ன மிடுமி னென்றுரைத்தேன்
சோற்றுக் கிளைத்தோ மாயினும்யாஞ் சொல்லுக் கிளையேங் கீழ்ப்பள்ளி
யேற்றுக் கிடந்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 46

594 குருகா ரொற்றி வாணர்பலி கொள்ள வகையுண் டோவென்றே
னொருகா லெடுத்தீண் டுரையென்றா ரொருகா லெடுத்துக் காட்டுமென்றேன்
வருகா விரிப்பொன் னம்பலத்தே வந்தாற் காட்டு கின்றாம்வீ
ழிருகா லுடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 47

595 வேலை ஞாலம் புகழொற்றி விளங்குந் தேவ ரணிகின்ற
மாலை யாதென் றேனயன்மான் மாலை யகற்று மாலையென்றார்
சோலை மலரன் றேயென்றேன் சோலை யேநாந் தொடுப்பதென
வேல முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 48

596 உயிரு ளுறைவீர் திருவொற்றி யுடையீர் நீரென் மேற்பிடித்த
வயிர மதனை விடுமென்றேன் வயிரி யலநீ மாதேயாஞ்
செயிர தகற்றுன் முலையிடங்கொள் செல்வ னலகாண் டெளியென்றே
யியல்கொண் முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 49

597 தண்கா வளஞ்சூழ் திருவொற்றித் தலத்தி லமர்ந்த சாமிநுங்கை
யென்கார் முகமாப் பொன் னென்றே னிடையிட் டறித லரிதென்றார்
மண்கா தலிக்கு மாடென்றேன் மதிக்குங் கணைவி லன்றென்றே
யெண்கா ணகைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 50

598 செய்காண் வளஞ்சூ ழொற்றியுளீர் திருமான் முதன்முத் தேவர்கட்கு
மைகா ணீரென் றேனிதன்மே லணங்கே நீயே ழுடைதி யென்றார்
மெய்கா ணதுதா னென்னென்றேன் விளங்குஞ் சுட்டுப் பெயரென்றே
யெய்கா ணுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

599 விண்டு வணங்கு மொற்றியுளீர் மென்பூ விருந்தும் வன்பூவில்
வண்டு விழுந்த தென்றேனெம் மலர்க்கை வண்டும் விழந்ததென்றார்
தொண்டர்க் கருள்வீர் மிகவென்றேன் றோகாய் நாமே தொண்டனென
வெண்டங் குறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 52

600 மட்டார் மலர்க்கா வொற்றியுளீர் மதிக்குங் கலைமேல் விழுமென்றே
னெட்டா மெழுத்தை யெடுத்ததுநா மிசைத்தே மென்றா ரெட்டாக
வுட்டா வுறுமவ் வெழுத்தறிய வுரைப்பீ ரென்றே னந்தணரூர்க்
கிட்டார் நாம மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 53

601 ஒற்றி நகரீர் மனவசிதா னுடையார்க் கருள்வீர் நீரென்றேன்
பற்றி யிறுதி தொடங்கியது பயிலு மவர்க்கே யருள்வதென்றார்
மற்றி துணர்கி லேனென்றேன் வருந்தே லுள்ள வன்மையெலா
மெற்றி லுணர்தி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 54

602 வான்றோய் பொழில்சூ ழொற்றியுளீர் வருந்தா தணைவே னோவென்றே
னூன்றோ யுடற்கென் றார்தெரிய வுரைப்பீ ரென்றே னோவிதுதான்
சான்றோ ருமது மரபோர்ந்து தரித்த பெயர்க்குத் தகாதென்றே
யேன்றோர் மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 55

603 தீது தவிர்க்கு மொற்றியுளீர் செல்ல லறுப்ப தென்றென்றே
னீது நமக்குத் தெரிந்ததென்றா ரிறையா மோவிங் கிதுவென்றே
னோது மடியார் மனக்கங்கு லோட்டு நாமே யுணரன்றி
யேது மிறையன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 56

604 ஒண்கை மழுவோ டனலுடையீ ரொற்றி நகர்வா ழுத்தமர்நீர்
வண்கை யொருமை நாதரென்றேன் வண்கைப் பன்மை நாதரென்றா
ரென்கணடங்கா வதிசயங்கா ணென்றேன் பொருளன் றிவையதற்கென்
றெண்சொன் மணிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 57

605 ஒருவ ரெனவா ழொற்றியுளீ ருமக்கம் மனையுண் டோவென்றே
னிருவ ரொருபே ருடையவர்கா ணென்றா ரென்னென்றே னெம்பேர்
மருவு மீறற் றயலகரம் வயங்கு மிகர மானதென்றே
யிருவு மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 58

606 பேரா ரொற்றி யீரும்மைப் பெற்றா ரெவரென் றேனவர் தம்
மேரார் பெயரின் முன்பினிரண் டிரண்டா மெழுத்தா ரென்றாரென்
னேரா யுரைப்பீ ரென்றேனீ நெஞ்ச நெகிழ்ந்தா லுரைப்பாமென்
றேரா யுரைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 59

607 தளிநான் மறையீ ரொற்றிநகர் தழைக்க வாழ்வீர் தனிஞான
வொளிநா வரசை யைந்தெழுத்தா லுவரி கடத்தி னீரென்றேன்
களிநா வலனை யீரெழுத்தாற் கடலின் வீழ்த்தி னேமென்றே
யெளியேற் குவப்பின் மொழிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

608 ஓமூன் றுளத்தீ ரொற்றியுளீ ருற்றோர்க் களிப்பீ ரோவென்றேன்
றாமூன் றென்பார்க் கயன்மூன்றுந் தருவே மென்றா ரம்மமிகத்
தேமூன் றினநும் மொழியென்றேன் செவ்வா யுறுமுன் னகையென்றே
யேமூன் றுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 61

609 மன்னி விளங்கு மொற்றியுளீர் மடவா ரிரக்கும் வகையதுதான்
முன்னி லொருதா வாமென்றேன் முத்தா வெனலே முறையென்றா
ரென்னி லிதுதா னையமென்றே னெமக்குந் தெரியு மெனத்திருவா
யின்ன லமுத முகுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 62

610 வளஞ்சே ரொற்றி யீரெனக்கு மாலை யணிவீ ரோவென்றேன்
குளஞ்சேர் மொழிப்பெண் பாவாய்நின் கோலமனைக்க ணாமகிழ்வா
லுளஞ்சேர்ந் தடைந்த போதேநின் னுளத்தி லணிந்தே முணரென்றே
யிளஞ்சீர் நகைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 63

611 வீற்றா ரொற்றி நகரமர்ந்தீர் விளங்கு மலரே விளம்புநெடு
மாற்றா ரென்றே னிலைகாணெம் மாலை முடிமேற் பாரென்றார்
சாற்றாச் சலமே யீதென்றேன் சடையின் முடிமே லன்றென்றே
யேற்றா தரவான் மொழிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 64

612 புயப்பா லொற்றி யீரச்சம் போமோ வென்றே னாமென்றார்
வயப்பா வலருக் கிறையானீர் வஞ்சிப் பாவிங் குரைத்ததென்றேன்
வியப்பா நகையப் பாவெனும்பா வெண்பா கலிப்பா வுரைத்துமென்றே
யியற்பான் மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 65

613 தண்ணம் பொழில்சூ ழொற்றியுளீர் சங்கங் கையிற்சேர்த் திடுமென்றேன்
றிண்ணம் பலமெல் வருங்கையிற் சேர்த்தோ முன்னர் தெரியென்றார்
வண்ணம் பலவிம் மொழிக்கென்றேன் மடவா யுனது மொழிக்கென்றே
யெண்ணங் கொளநின் றுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 66

614 உகஞ்சே ரொற்றி யூருடையீ ரொருமா தவரோ நீரென்றேன்
முகஞ்சேர் வடிவே லிரண்டுடையாய் மும்மா தவர்நா மென்றுரைத்தார்
சுகஞ்சேர்ந் திடுநும் மொழிக்கென்றேன் றோகா யுனது மொழிக்கென்றே
யிகஞ்சேர் நயப்பா லுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 67

615 ஊரா மொற்றி யீராசை யுடையே னென்றே னெமக்கலது
நேரா வழக்குத் தொடுக்கின்றாய் நினக்கே தென்றார் நீரெனக்குச்
சேரா வணமீ தென்றேன்முன் சேர்த்தீ தெழுதித் தந்தவர்தாம்
யாரார் மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 68

616 வருத்தந் தவிரீ ரொற்றியுளீர் மனத்தி லகாத முண்டென்றே
னிருத்தந் தொழுநம் மடியவரை நினைக்கின் றோரைக் காணினது
வுருத்தன் பெயர்முன் னெழுத்திலக்க முற்றே மற்ற வெல்லையகன்
றிருத்த லறியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

617 மைய லகற்றீ ரொற்றியுளீர் வாவென் றுரைப்பீ ரோவென்றேன்
செய்ய வதன்மேற் சிகரம்வைத்துச் செவ்வ னுரைத்தா லிருவாவென்
றுய்ய வுரைப்பே மென்றார்நும் முரையென் னுரையென் றேனிங்கே
யெய்யுன் னுரையை யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 70

618 தாவென் றருளு மொற்றியுளீர் தமியேன் மோக தாகமற
வாவென் றருள்வீ ரென்றேனவ் வாவின் பின்னர் வருமெழுத்தை
மேவென் றதனிற் சேர்த்ததிங்கே மேவி னன்றோ வாவென்பே
னேவென் றிடுகண் ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 71

619 என்மே லருள்கூர்ந் தொற்றியுளீ ரென்னை யணைவா னினைவீரேற்
பொன்மேல் வெள்ளி யாமென்றேன் பொன்மேற் பச்சை யாங்கதன்மே
லன்மேற் குழலாய் சேயதன்மே லலவ னதன்மேன் ஞாயிறஃ
தின்மே லொன்றின் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 72

620 வயலா ரொற்றி மேவுபிடி வாதர் நாம மியாதென்றேன்
மயலா யிடுமிப் பெயர்ப்பின்னர் வந்த விளைய நாமமென்றார்
செயலார் கால மறிந்தென்னைச் சேர்வீ ரென்றேன் சிரித்துனக்கிங்
கியலா ரயலா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 73

621 நாலா ரணஞ்சூ ழொற்றியுளீர் நாகம் வாங்க லென்னென்றேன்
காலாங் கிரண்டிற் கட்டவென்றார் கலைத்தோல் வல்லீர் நீரென்றேன்
வேலார் விழிமாப் புலித்தோலும் வேழத் தோலும் வல்லேமென்
றேலா வமுத முகுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 74

622 முடியா வளஞ்சூ ழொற்றியுளீர் முடிமே லிருந்த தென்னென்றேன்
கடியா வுள்ளங் கையின் முதலைக் கடிந்த தென்றார் கமலமென
வடிவார் கரத்தி லென்னென்றேன் வரைந்த வதனீ றகன்றதென்றே
யிடியா நயத்தி னகைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 75

623 ஒன்றும் பெருஞ்சீ ரொற்றிநக ருடையீர் யார்க்கு முணர்வரியீ
ரென்றும் பெரியீர் நீர்வருதற் கென்ன நிமித்த மென்றேன்யான்
றுன்றும் விசும்பே காணென்றார் சூதா முமது சொல்லென்றே
னின்றுன் முலைதா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 76

624 வானார் வணங்கு மொற்றியுளீர் மதிவாழ் சடையீர் மரபிடைநீர்
தானா ரென்றே னனிப்பள்ளித் தலைவ ரெனவே சாற்றினர்கா
ணானா லொற்றி யிருமென்றே னாண்டே யிருந்து வந்தனஞ்சே
யீனா தவணீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 77

625 பற்று முடித்தோர் புகழொற்றிப் பதியீர் நுமது பசுவினிடைக்
கற்று முடித்த தென்னிருகைக் கன்று முழுதுங் காணென்றேன்
மற்று முடித்த மாலையொடுன் மருங்குற் கலையுங் கற்றுமுடிந்
திற்று முடித்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

626 வானங் கொடுப்பீர் திருவொற்றி வாழ்வீ ரன்று வந்தெனது
மானங் கெடுத்தீ ரென்றுரைத்தேன் மாநன் றிஃதுன் மானன்றே
யூனங் கலிக்குந் தவர்விட்டா ருலக மறியுங் கேட்டறிந்தே
யீனந் தவிர்ப்பா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 79

627 ஞானம் படைத்த யோகியர்வாழ் நகரா மொற்றி நலத்தீர்மா
லேனம் புடைத்தீ ரணையென்பீ ரென்னை யுவந்திப் பொழுதென்றே
னூனந் தவிர்த்த மலர்வாயி னுள்ளே நகைசெய் திஃதுரைக்கே
மீனம் புகன்றா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 80

628 கருமை யளவும் பொழிலொற்றிக் கணத்தீர் முனிவர் கலக்கமறப்
பெருமை நடத்தி னீரென்றேன் பிள்ளை நடத்தி னானென்றார்
தரும மலவிவ் விடையென்றேன் றரும விடையு முண்டென்பா
லிருமை விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 81

629 ஒசிய விடுகு மிடையாரை யொற்றி யிருந்தே மயக்குகின்ற
வசியர் மிகநீ ரென்றேனெம் மகன்கா ணென்றார் வளர்காமப்
பசிய தொடையுற் றேனென்றேன் பட்ட மவிழ்த்துக் காட்டுதியே
லிசையக் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 82

630 கலையா ளுடையீ ரொற்றிநின்றீர் காம மளித்தீர் களித்தணைவீர்
மலையா ளுமது மனையென்றேன் மருவின் மலையா ளல்லளென்றா
ரலையாண் மற்றை யவளென்றே னறியி னலையா ளல்லளுனை
யிலையா மணைவ தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 83

631 சீலம் படைத்தீர் திருவொற்றித் தியாக ரேநீர் திண்மையிலோர்
சூலம் படைத்தீ ரென்னென்றேன் றோன்று முலகுய்ந் திடவென்றா
ராலங் களத்தீ ரென்றேனீ யாலம் வயிற்றா யன்றோநல்
லேலங் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 84

632 ஞால நிகழும் புகழொற்றி நடத்தீர் நீர்தா னாட்டமுறும்
பால ரலவோ வென்றேனைம் பாலர் பாலைப் பருவத்திற்
சால மயல்கொண் டிடவருமோர் தனிமைப் பால ரியாமென்றே
யேல முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 85

633 வண்மை தருவீ ரொற்றிநகர் வாழ்வீ ரென்னை மருவீரென்
னுண்மை யறியீ ரென்றேன்யா முணர்ந்தே யகல நின்றதென்றார்
கண்மை யிலரோ நீரென்றேன் களமை யுடையேங் கண்மையுற
லெண்மை நீயே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 86

634 தவந்தங் கியசீ ரொற்றிநகர் தனைப்போ னினைத்தென் மனையடைந்தீ
ருவந்தென் மீதிற் றேவர்திரு வுள்ளந் திரும்பிற் றோவென்றேன்
சிவந்தங் கிடநின் னுள்ளமெம்மேற் றிரும்பிற் றதனைத் தேர்ந்தன்றே
யிவர்ந்திங் கணைந்தா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

635 ஒன்னார் புரமூன் றெரிசெய்தீ ரொற்றி யுடையீ ரும்முடைய
பொன்னார் சடைமேல் வெள்ளெருக்கம் பூவை மிலைந்தீ ரென்னென்றே
னின்னா ரளகத் தணங்கேநீ நெட்டி மிலைந்தா யிதிலதுகீ
ழென்னா ருலக ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 88

636 கனிமா னிதழி முலைச்சுவடு களித்தீ ரொற்றிக் காதலர்நீர்
தனிமா னேந்தி யாமென்றேன் றடங்கண் மடந்தாய் நின்முகமும்
பனிமா னேந்தி யாமென்றார் பரைமான் மருவி னீரென்றே
னினிமான் மருவி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 89

637 சிறியேன் றவமோ வெனைப்பெற்றார் செய்த தவமோ வீண்டடைந்தீ
ரறியே னொற்றி யடிகேளிங் கடைந்த வாறென் னினைத்தென்றேன்
பொறிநே ருனது பொற்கலையைப் பூவார் கலையாக் குறநினைத்தே
யெறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 90

638 அளிக்குங் குணத்தீர் திருவொற்றி யழக ரேநீ ரணிவேணி
வெளிக்கொண் முடிமே லணிந்ததுதான் விளியா விளம்பத் திரமென்றேன்
விளிக்கு மிளம்பத் திரமுமுடி மேலே மிலைந்தாம் விளங்கிழைநீ
யெளிக்கொண் டுரையே லென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 91

639 வாசங் கமழு மலர்ப்பூங்கா வனஞ்சூ ழொற்றி மாநகரீர்
நேசங் குறிப்ப தென்னென்றே னீயோ நாமோ வுரையென்றார்
தேசம் புகழ்வீர் யானென்றேன் றிகழ்தைத் திரிதித் திரியேயா
மேசங் குறிப்ப தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 92

640 பேசுங் கமலப் பெண்புகழும் பெண்மை யுடைய பெண்களெலாங்
கூசும் படியிப் படியொற்றிக் கோவே வந்த தென்னென்றேன்
மாசுந் தரிநீ யிப்படிக்கு மயங்கும் படிக்கு மாதருனை
யேசும் படிக்கு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 93

641 கொடியா லெயில்சூ ழொற்றியிடங் கொண்டீ ரடிகள் குருவுருவாம்
படியா லடியி லிருந்தமறைப் பண்பை யுரைப்பீ ரென்றேனின்
மடியா லடியி லிருந்தமறை மாண்பை வகுத்தா யெனிலதுநா
மிடியா துரைப்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 94

642 என்னே ருளத்தி னமர்ந்தீர்நல் லெழிலா ரொற்றி யிடையிருந்தீ
ரென்னே யடிகள் பலியேற்ற லேழ்மை யுடையீர் போலுமென்றே
னின்னே கடலி னிடைநீபத் தேழ்மை யுடையாய் போலுமென
வின்னே யங்கொண் டுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 95

643 நல்லார் மதிக்கு மொற்றியுளீர் நண்ணு முயிர்க டொறுநின்றீ
ரெல்லா மறிவீ ரென்னுடைய விச்சை யறியீர் போலுமென்றேன்
வல்லா யறிவின் மட்டொன்று மனமட் டொன்று வாய்மட்டொன்
றெல்லா மறிந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

644 மறிநீர்ச் சடையீர் சித்தெல்லாம் வல்லீ ரொற்றி மாநகரீர்
பொறிசே ருமது புகழ்பலவிற் பொருந்துங் குணமே வேண்டுமென்றேன்
குறிநே ரெமது விற்குணத்தின் குணத்தா யதனால் வேண்டுற்றா
யெறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 97

645 ஊரூ ரிருப்பீ ரொற்றிவைத்தீ ரூர்தான் வேறுண் டோவென்றே
னோரூர் வழக்கிற் கரியையிறை யுன்னி வினவு மூரொன்றோ
பேரூர் தினையூர் பெரும்புலியூர் விடவூர் கடவூர் முதலாக
வேரூ ரனந்த மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 98

646 விழியொண் ணுதலீ ரொற்றியுளீர் வேதம் பிறவி யிலரென்றே
மொழியு நுமைத்தான் வேயீன்ற முத்த ரெனலிங் கென்னென்றேன்
பழியன் றணங்கே யவ்வேய்க்குப் படுமுத் தொருவித் தன்றதனா
விலியும் பிறப்போ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 99

647 விண்ணார் பொழில்சூ ழொற்றியுளீர் விளங்குந் தாம மிகுவாசத்
தண்ணார் மலர்வே தனையொழிக்கத் தருதல் வேண்டு மெனக்கென்றேன்
பண்ணார் மொழியா யுபகாரம் பண்ணாப் பகைவ ரேனுமிதை
யெண்ணா ரெண்ணா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 100

648 செம்பான் மொழியார் முன்னரெனைச் சேர்வீரென்கோ திருவொற்றி
யம்பார் சடையீ ருமதாட லறியே னருளல் வேண்டுமென்றேன்
வம்பார் முலையாய் காட்டுகின்றா மன்னும் பொன்னா ரம்பலத்தே
யெம்பால் வாவென் றுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 101

649 மைக்கொண் மிடற்றீ ரூரொற்றி வைத்தீ ருண்டோ மனையென்றேன்
கைக்க ணிறைந்த தனத்தினுந்தங் கண்ணி னிறைந்த கணவனையே
துய்க்கு மடவார் விழைவரெனச் சொல்லும் வழக்கீ தறிந்திலையோ
வெய்க்கு மிடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 102

650 ஆறு முகத்தார் தமையீன்ற வைந்து முகத்தா ரிவர்தமைநான்
மாறு முகத்தார் போலொற்றி வைத்தீர் பதியை யென்னென்றே
னாறு மலர்ப்பூங் குழனீயோ நாமோ வைத்த துன்மொழிமன்
றேறு மொழியன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 103

651 வள்ளன் மதியோர் புகழொற்றி வள்ளா லுமது மணிச்சடையின்
வெள்ள மகண்மேற் பிள்ளைமதி விளங்க லழகீ தென்றேனின்
னுள்ள முகத்தும் பிள்ளைமதி யொளிகொண் முகத்தும் பிள்ளைமதி
யெள்ள லுடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 104

652 உள்ளத் தனையே போலன்ப ருவக்குந் திருவா ழொற்றியுளீர்
கள்ளத் தவர்போ லிவணிற்குங் கரும மென்னீ ரின்றென்றேன்
மெள்ளக் கரவு செயவோநாம் வேட மெடுத்தோ நின்சொனினை
யெள்ளப் புரிந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

653 அச்சை யடுக்குந் திருவொற்றி யவர்க்கோர் பிச்சை கொடுமென்றேன்
விச்சை யடுக்கும் படிநம்பான் மேவினோர்க்கிவ் வகில நடைப்
பிச்சை யெடுப்பே மலதுன்போற் பிச்சை கொடுப்பே மலவென்றே
யிச்சை யெடுப்பா யுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 106

654 அள்ளற் பழனத் திருவொற்றி யழக ரிவர் தம் முகநோக்கி
வெள்ளச் சடையீ ருள்ளத்தே விருப்பே துரைத்தாற் றருவலென்றேன்
கொள்ளக் கிடையா வலர்குமுதங் கொண்ட வமுதங் கொணர்ந்தின்னு
மெள்ளத் தனைதா வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 107

655 விஞ்சு நெறியீ ரொற்றியுளீர் வியந்தீர் வியப்பென் னிவணென்றேன்
கஞ்ச மிரண்டு நமையங்கே கண்டு குவிந்த விரிந்திங்கே
வஞ்ச விருதா மரைமுகையை மறைகின் றனநின் பால்வியந்தா
மெஞ்ச லறநா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 108

656 அளியா ரொற்றி யுடையாருக் கன்ன நிரம்ப விடுமென்றே
னளியார் குழலாய் பிடியன்ன மளித்தாற் போது மாங்கதுநின்
னொளியார் சிலம்பு சூழ்கமலத் துளதாற் கடகஞ் சூழ்கமலத்
தெளியார்க் கிடுநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 109

657 விச்சைப் பெருமா னெனுமொற்றி விடங்கப் பெருமா னீர்முன்னம்
பிச்சைப் பெருமா னின்றுமணப் பிள்ளைப் பெருமா னாமென்றே
னச்சைப் பெறுநீ யம்மணப்பெண் ணாகி யிடையி லையங்கொள்
ளிச்சைப் பெரும்பெண் ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 110

658 படையம் புயத்தோன் புகழொற்றிப் பதியீ ரரவப் பணிசுமந்தீர்
புடையம் புயத்தி லென்றேன்செம் பொன்னே கொடையம் புயத்தினுநன்
னடையம் புயத்துஞ் சுமந்தனைநீ நானா வரவப் பணிமற்று
மிடையம் பகத்து மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 111

659 கூம்பா வொற்றி யூருடையீர் கொடும்பாம் பணிந்தீ ரென்னென்றே
னோம்பா துரைக்கிற் பார்த்திடினுள் ளுன்னில் விடமேற் றுன்னிடைக்கீழ்ப்
பாம்பா வதுவே கொடும்பாம்பெம் பணிப்பாம் பதுபோற் பாம்பலவென்
றேம்பா நிற்ப விசைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 112

660 புயல்சூ ழொற்றி யுடையீரென் புடையென் குறித்தோ போந்ததென்றேன்
கயல்சூழ் விழியாய் தனத்தவரைக் காண லிரப்போ ரெதற்கென்றார்
மயல்சூழ் தனமிங் கிலையென்றேன் மறையா தெதிர்வைத் திலையென்ற
லியல்சூ ழறமன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 113

661 நடவாழ் வொற்றி யுடையீர்நீர் நாக மணிந்த தழகென்றேன்
மடவா யதுநீர் நாகமென மதியே லயன்மான் மனனடுங்க
விடவா யுமிழும் படநாகம் வேண்டிற்காண்டி யென்றேயென்
னிடவா யருகே வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

662 கோடா வொற்றி யுடையீர்நுங் குலந்தான் யாதோ கூறுமென்றேன்
வீடார் பிரம குலந்தேவர் வேந்தர் குலநல் வினைவசியப்
பாடார் குலமோர் சக்கரத்தான் பள்ளிக் குலமெல் லாமுடையே
மேடார் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 115

663 நலமா மொற்றி யுடையீர்நீர் நல்ல வழக ரானாலுங்
குலமே துமக்கு மாலையிடக் கூடா தென்றே னின்குலம்போ
லுலகோ துறுநங் குலமொன்றோ வோரா யிரத்தெட் டுயர்குலமிங்
கிலகா நின்ற தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 116

664 மதிலொற் றியினீர் நும்மனையாண் மலையின் குலநும் மைந்தருளோர்
புதல்வர்க் கானைப் பெருங்குலமோர் புதல்வர்க் கிசையம் புலிக்குலமா
மெதிரற் றருள்வீர் நுங்குலமிங் கெதுவோ வென்றேன் மனைவியருள்
ளிதுமற் றொருத்திக் கென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 117

665 தேமாம் பொழில்சூ ழொற்றியுளீர் திகழுந் தகரக் காற்குலத்தைப்
பூமா னிலத்தில் விழைந்துற்றீர் புதுமை யிஃதும் புகழென்றே
னாமா குலத்தி லரைக்குலத்துள் ளணைந்தே புறமற் றரைக்குலங்கொண்
டேமாந் தனைநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 118

666 அனஞ்சூ ழொற்றிப் பதியுடையீ ரகில மறிய மன்றகத்தே
மனஞ்சூழ் தகரக் கால்கொண்டீர் வனப்பா மென்றே னுலகறியத்
தனஞ்சூ ழகத்தே யணங்கேநீ தானுந் தகரத் தலைகொண்டா
யினஞ்சூ ழழகா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 119

667 பங்கே ருகப்பூம் பணையொற்றிப் பதியீர் நடுவம் பரமென்னு
மங்கே யாட்டுக் காலெடுத்தீ ரழகன் றேனவ் வம்பரமே
லிங்கே யாட்டுத் தோலெடுத்தா யாமொன் றிரண்டு நீயென்றா
லெங்கே நின்சொல் லென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 120

668 மாணப் புகழ்சே ரொற்றியுளீர் மன்றார் தகர வித்தைதனைக்
காணற் கினிநான் செயலென்னே கருதி யுரைத்தல் வேண்டுமென்றேன்
வேணச் சுறுமெல் லியலேயாம் விளம்பு மொழியவ் வித்தையுனக்
கேணப் புகலு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 121

669 நல்லா ரொற்றி யுடையீர்யா னடக்கோ வெறும்பூ வணையணைய
வல்லா லவணும் முடன்வருகோ வணையா தவலத் துயர்துய்க்கோ
செல்லா வென்சொன் நடவாதோ திருக்கூத் தெதுவோ வெனவிடைக
ளெல்லா நடவா தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 122

670 ஆட்டுத் தலைவர் நீரொற்றி யழகீ ரதனாற் சிறுவிதிக்கோ
ராட்டுத் தலைதந் தீரென்றே னன்றா லறவோ ரறம்புகல
வாட்டுத் தலைமுன் கொண்டதனா லஃதே பின்ன ரளித்தாமென்
றீட்டுத் தரமீந் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

671 ஒற்றிப் பெருமா னுமைவிழைந்தா ரூரில் வியப்பொன் றுண்டிரவிற்
கொற்றக் கமலம் விரிந்தொருகீழ்க் குளத்தே குமுதங் குவிந்ததென்றேன்
பொற்றைத் தனத்தீர் நுமைவிழைந்தார் புரத்தே மதியந் தேய்கின்ற
தெற்றைத் தினத்து மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 124

672 இடஞ்சே ரொற்றி யுடையீர்நீ ரென்ன சாதி யினரென்றேன்
தடஞ்சேர் முலையாய் நாந்திறலாண் சாதி நீபெண் சாதியென்றார்
விடஞ்சேர் களத்தீர் நும்மொழிதான் வியப்பா மென்றே னயப்பானின்
னிடஞ்சேர் மொழிதா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 125

673 உடையா ரென்பா ருமையொற்றி யுடையீர் பணந்தா னுடையீரோ
நடையா யேற்கின் றீரென்றே னங்காய் நின்போ லொருபணத்தைக்
கடையா ரெனக்கீழ் வைத்தருமை காட்டேம் பணிகொள் பணங்கோடி
யிடையா துடையே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 126

674 என்னா ருயிர்க்குப் பெருந்துணையா மெங்கள் பெருமா னீரிருக்கு
நன்னா டொற்றி யன்றோதா னவில வேண்டு மென்றுரைத்தேன்
முன்னா ளொற்றி யெனினுமது மொழித லழகோ தாழ்தலுயர்
விந்நா னிலத்துண் டென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 127

675 பெருந்தா ரணியோர் புகழொற்றிப் பெருமா னிவர்தம் முகநோக்கி
யருந்தா வமுத மனையீரிங் கடுத்த பரிசே தறையுமென்றேன்
வருந்தா திங்கே யருந்தமுத மனையா ளாக வாழ்வினொடு
மிருந்தா யடைந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 128

676 செம்மை வளஞ்சூ ழொற்றியுளீர் திகழாக் கரித்தோ லுடுத்தீரே
யும்மை விழைந்த மடவார்க ளுடுக்கக் கலையுண் டோவென்றே
னெம்மை யறியா யொருகலையோ விரண்டோ வனந்தங் கலைமெய்யி
லிம்மை யுடையே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 129

677 கற்றைச் சடையீர் திருவொற்றிக் காவ லுடையீ ரீங்கடைந்தீ
ரிற்றைப் பகலே நன்றென்றே னிற்றை யிரவே நன்றெமக்குப்
பொற்றைத் தனத்தாய் கையமுதம் பொழியா தலர்வாய்ப் புத்தமுத
மிற்றைக் களித்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 130

678 கற்றீ ரொற்றீர் முன்பொருவான் காட்டிற் கவர்ந்தோர் நாட்டில்வளை
விற்றீ ரின்றென் வளைகொண்டீர் விற்கத் துணிந்தீ ரோவென்றேன்
மற்றீர்ங் குழலாய் நீயெம்மோர் மனையின் வளையைக் கவர்ந்துகளத்
திற்றீ தணிந்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 131

679 உடுக்கும் புகழா ரொற்றியுளா ருடைதா வென்றார் திகையெட்டு
முடுக்கும் பெரியீ ரெதுகண்டோ வுரைத்தீ ரென்றேன் றிகைமுழுது
முடுக்கும் பெரிய வரைச்சிறிய வொருமுன் றானை யான்மூடி
யெடுக்குந் திறங்கண் டென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

680 காவா யொற்றிப் பதியுடையீர் கல்லா னைக்குக் கரும்பன்று
தேவாய் மதுரை யிடத்தளித்த சித்த ரலவோ நீரென்றேன்
பாவா யிருகல் லானைக்குப் பரிவிற் கரும்பிங் கிரண்டொருநீ
யீவா யிதுசித் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 133

681 ஊட்டுந் திருவா ழொற்றியுளீ ருயிரை யுடலாஞ் செப்பிடைவைத்
தாட்டுந் திறத்தீர் நீரென்றே னணங்கே யிருசெப் பிடையாட்டுந்
தீட்டும் புகழன் றியுமுலகைச் சிறிதோர் செப்பி லாட்டுகின்றா
யீட்டுந் திறத்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 134

682 கந்த வனஞ்சூ ழொற்றியுளீர் கண்மூன் றுடையீர் வியப்பென்றேன்
வந்த வெமைத்தான் பிரிபோது மற்றை யவரைக் காண்போதுஞ்
சந்த மிகுங்கண் ணிருமூன்றுந் தகுநான் கொன்றுந் தானடைந்தா
யிந்த வியப்பென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 135

683 ஆழி விடையீர் திருவொற்றி யமர்ந்தீ ரிருவர்க் ககமகிழ்வான்
வீழி யதனிற் படிக்காசு வேண்டி யளித்தீ ராமென்றேன்
வீழி யதனிற் படிக்காசு வேண்டா தளித்தா யளவொன்றை
யேழி லகற்றி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 136

684 உற்ற விடத்தே பெருந்துணையா மொற்றிப் பெருமா னும்புகழைக்
கற்ற விடத்தே முக்கனியுங் கரும்பு மமுதுங் கயவாவோ
மற்ற விடச்சீ ரென்னென்றேன் மற்றை யுபய விடமுமுத
லெற்ற விடமே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 137

685 யான்செய் தவத்தின் பெரும்பயனே யென்னா ரமுதே யென்றுணையே
வான்செ யரசே திருவொற்றி வள்ளால் வந்த தென்னென்றேன்
மான்செய் விழிப்பெண் ணேநீயாண் வடிவா னதுகேட் டுள்ளம்வியந்
தேன்கண் டிடவே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 138

686 கருணைக் கடலே யென்னிரண்டு கண்ணே முக்கட் கரும்பேசெவ்
வருணப் பொருப்பே வளரொற்றி வள்ளன் மணியே மகிழ்ந்தணையத்
தருணப் பருவ மிஃதென்றேன் றவிரன் றெனக்காட் டியதுன்ற
னிருணச் சளக மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 139

687 காவிக் களங்கொள் கனியேயென் கண்ணுண் மணியே யணியேயென்
னாவித் துணையே திருவொற்றி யரசே யடைந்த தென்னென்றேன்
பூவிற் பொலியுங் குழலாய்நீ பொன்னி னுயர்ந்தா யெனக்கேட்டுன்
னீவைக் கருதி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 140

688 கண்ணும் மனமுங் களிக்குமெழிற் கண்மூன் றுடையீர் கலையுடையீர்
நண்ணுந் திருவா ழொற்றியுளீர் நடஞ்செய் வல்லீர் நீரென்றேன்
வண்ண முடையாய் நின்றனைப்போன் மலர்வாய் நடஞ்செய் வல்லோமோ
வெண்ண வியப்பா மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

689 தாங்கும் விடைமே லழகீரென் றன்னைக் கலந்துந் திருவொற்றி
யோங்குந் தளியி லொளித்தீர்நீ ரொளிப்பில் வல்ல ராமென்றேன்
வாங்கு நுதலாய் நீயுமெனை மருவிக் கலந்து மலர்த்தளியி
லீங்கின் றொளித்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 142

690 அம்மை யடுத்த திருமேனி யழகீ ரொற்றி யணிநகரீ
ரும்மை யடுத்தோர் மிகவாட்ட முறுத லழகோ வென்றுரைத்தேன்
நம்மை யடுத்தாய் நமையடுத்தோர் நம்போ லுறுவ ரன்றெனிலே
தெம்மை யடுத்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 143

691 உண்கண் மகிழ்வா லளிமிழற்று மொற்றி நகரீ ரொருமூன்று
கண்க ளுடையீ ரென்காதல் கண்டு மிரங்கீ ரென்னென்றேன்
பண்கொண் மொழியாய் நின்காதல் பன்னாண் சுவைசெய் பழம்போலு
மெண்கொண் டிருந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 144

692 வணங்கே ழிலங்குஞ் செஞ்சடையீர் வளஞ்சே ரொற்றி மாநகரீர்
குணங்கேழ் மிடற்றோர் பாலிருளைக் கொண்டீர் கொள்கை யென்னென்றே
னணங்கே யொருபா லன்றிநின்போ லைம்பா லிருள்கொண் டிடச்சற்று
மிணங்கே மிணங்கே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 145

693 கரும்பி லினியீ ரென்னிரண்டு கண்க ளனையீர் கறைமிடற்றீர்
பெரும்பை யணியீர் திருவொற்றிப் பெரியீ ரெதுநும் பெயரென்றே
னரும்பண் முலையாய் பிறர்கேட்க வறைந்தா லளிப்பீ ரெனச்சூழ்வ
ரிரும்பொ னிலையே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 146

694 நிலையைத் தவறார் தொழுமொற்றி நிமலப் பெருமா னீர்முன்ன
மலையைச் சிலையாக் கொண்டீர்நும் மாவல் லபமற் புதமென்றேன்
வலையத் தறியாச் சிறுவர்களு மலையைச் சிலையாக் கொள்வர்களீ
திலையற் புதந்தா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 147

695 உதயச் சுடரே யனையீர்நல் லொற்றி யுடையீ ரென்னுடைய
விதயத் தமர்ந்தீ ரென்னேயென் னெண்ண மறியீ ரோவென்றேன்
சுதையிற் றிகழ்வா யறிந்தன்றோ துறந்து வெளிப்பட் டெதிரடைந்தா
மிதையுற் றறிநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 148

696 புரக்குங் குணத்தீர் திருவொற்றிப் புனித ரேநீர் போர்க்களிற்றை
யுரக்குங் கலக்கம் பெறவுரித்தி ருள்ளத் திரக்க மென்னென்றேன்
கரக்கு மிடையாய் நீகளிற்றின் கன்றைக் கலக்கம் புரிந்தனைநின்
னிரக்க மிதுவோ வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 149

697 பதங்கூ றொற்றிப் பதியீர்நீர் பசுவி லேறும் பரிசதுதான்
விதங்கூ றறத்தின் விதிதானோ விலக்கோ விளம்பல் வேண்டுமென்றே
னிதங்கூ றிடுநற் பசுங் கன்றை நீயுமேறி யிடுகின்றா
யிதங்கூ றிடுக வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

698 யோக முடையார் புகழொற்றி யூரிற் பரம யோகியராந்
தாக முடையா ரிவர்தமக்குத் தண்ணீர் தரநின் றனையழைத்தேன்
போக முடையாய் புறத்தண்ணீர் புரிந்து விரும்பா மகத்தண்ணீ
ரீக மகிழ்வி னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 151

699 வளநீ ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் மாதேநா
முளநீர்த் தாக மாற்றுறுநீ ருதவ வேண்டு மென்றார்நான்
குளநீ ரொன்றே யுளதென்றேன் கொள்ளே மிடைமேற் கொளுமிந்த
விளநீர் தருக வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 152

700 மெய்ந்நீ ரொற்றி வாணரிவர் வெம்மை யுளநீர் வேண்டுமென்றா
ரந்நீ ரிலைநீர் தண்ணீர்தா னருந்தி லாகா தோவென்றேன்
முந்நீர் தனையை யனையீரிம் முதுநீ ருண்டு தலைக்கேறிற்
றிந்நீர் காண்டி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 153

701 சீலஞ் சேர்ந்த வொற்றியுளீர் சிறிதாம் பஞ்ச காலத்துங்
கோலஞ் சார்ந்து பிச்சைகொளக் குறித்து வருவீ ரென்னென்றேன்
காலம் போகும் வார்த்தைநிற்குங் கண்டா யிதுசொற் கடனாமோ
வேலங் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 154

702 ஊற்றார் சடையீ ரொற்றியுளீ ரூரூ ரிரக்கத் துணிவுற்றீர்
நீற்றால் விளங்குந் திருமேனி நேர்ந்திங் கிளைத்தீர் நீரென்றேன்
சோற்றா லிளைத்தே மன்றுமது சொல்லா லிளைத்தே மின்றினிநா
மேற்றா லிகழ்வே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 155

703 நீரை விழுங்குஞ் சடையுடையீ ருளது நுமக்கு நீரூருந்
தேரை விழுங்கும் பசுவென்றேன் செறிநின் கலைக்கு ளொன்றுளது
காரை விழுங்கு மெமதுபசுக் கன்றின் றேரை நீர்த்தேரை
யீர விழுங்கு மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 156

704 பொன்னேர் மணிமன் றுடையீர்நீர் புரிந்த தெதுவெம் புடையென்றே
னின்னே யுரைத்தற் கஞ்சுதுமென் றாரென் னென்றே னியம்புதுமேன்
மின்னே நினது நடைப்பகையா மிருகம் பறவை தமைக்குறிக்கு
மென்னே யுரைப்ப தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 157

705 அடையார் புரஞ்செற் றம்பலத்தே யாடு மழகீ ரெண்பதிற்றுக்
கடையா முடலின் றலைகொண்டீர் கரமொன் றினிலற் புதமென்றே
னுடையாத் தலைமேற் றலையாக வுன்கை யீரைஞ் ஞாறுகொண்ட
திடையா வளைக்கே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 158

706 தேவர்க் கரிய வானந்தத் திருத்தாண் டவஞ்செய் பெருமானீர்
மேவக் குகுகு குகுகுவணி வேணி யுடையீ ராமென்றேன்
தாவக் குகுகு குகுகுகுகுத் தாமே யைந்து விளங்கவணி
யேவற் குணத்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

707 கொன்றைச் சடையீர் கொடுங்கோளூர் குறித்தீர் வருதற் கஞ்சுவல்யா
னொன்றப் பெருங்கோ ளென்மீது முரைப்பா ருண்டென் றுணர்ந்தென்றேன்
நன்றப் படியேற் கோளிலையா நகரு முடையே நங்காய்நீ
யின்றச் சுறலென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 160

708 புரியுஞ் சடையீ ரமர்ந்திடுமூர் புலியூ ரெனிலெம் போல்வார்க்கு
முரியும் புலித்தோ லுடையீர்போ லுறுதற் கியலு மோவென்றேன்
றிரியும் புலியூ ரன்றுநின்போற் றெரிவை யரைக்கண் டிடிற்பயந்தே
யிரியும் புலியூ ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 161

709 தெவ்வூர் பொடிக்குஞ் சிறுநகையித் தேவர் தமைநா னீரிருத்த
லெவ்வு ரென்றே னகைத்தணங்கே யேழூர் நாலூ ரென்றார்பின்
னவ்வூர்த் தொகையி னிருத்தலரி தாமென் றேன்மற் றதிலொவ்வூ
ரிவ்வூ ரெடுத்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 162

710 மணங்கொ ளிதழிச் சடையீர்நீர் வாழும் பதியா தென்றேனின்
குணங்கொண் மொழிகேட் டோரளவு குறைந்த குயிலாம் பதியென்றா
ரணங்கின் மறையூ ராமென்றே னஃதன் றருளோத் தூரிஃது
மிணங்க வுடையே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 163

711 ஆற்றுச் சடையா ரிவர்பலியென் றடைந்தார் நுமதூரியா தென்றேன்
சோற்றுத் துறையென் றார்நுமக்குச் சோற்றுக் கருப்பேன் சொலுமென்றேன்
றோற்றுத் திரிவே மன்றுநின்போற் சொல்லுங் கருப்பென் றுலகியம்ப
வேற்றுத் திரியே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 164

712 ஓங்குஞ் சடையீர் நெல்வாயி லுடையே மென்றீ ருடையீரேற்
றாங்கும் புகழ்நும் மிடைச்சிறுமை சார்ந்த தெவனீர் சாற்றுமென்றே
னேங்கும் படிநும் மிடைச்சிறுமை யெய்திற் றலதீண் டெமக்கின்றா
லீங்குங் காண்டி ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ. 165

713 மைய லழகீ ரூரொற்றி வைத்தீ ருளவோ மனையென்றேன்
கையி னிறைந்த தனத்தினுந்தங் கண்ணி னிறைந்த கணவனையே
மெய்யின் விழைவா ரொருமனையோ விளம்பின் மனையும் மிகப்பலவாம்
எய்யி லிடையா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடி. [1] 166

திருச்சிற்றம்பலம்

1. ஆ. பா. இதனைத் தனிப்பாசுரப் பகுதியில் சேர்த்திருக்கிறார். இது ஒற்றியூர்ப் பதிகங்கள் சிற்சில கொண்ட ஒரு சுவடியில் 2-ஆம் திருமுறை உள்ளப்பஞ்சகத்தில் பிறவாநெறியது என்ற பாடலை அடுத்து ஓர் தனிப்பாசுரமாகச் சுவாமிகளால் எழுதப்பட்டிருக்கிறது என்பது ஆ. பா. குறிப்பு. பொன்னேரி சுந்தரம் பிள்ளை திரட்டிய ஆறு திருமுறைகளும் சேர்ந்த முதற்பதிப்பில் (1892) ஆறாந் திருமுறையில் பல்வகைய தனிப்பாடல்கள் என்ற தொகுப்பில் இங்கிதமாலையின் தொடர்ச்சி என்ற தலைப்புடன் இது முதன்முதலாக அச்சிடப்பெற்றிருக்கிறது. ச.மு.க. பதிப்பில் இது இங்கிதமாலையுடனேயே 166ஆம் பாவாகச் சேர்க்கப் பெற்றுள்ளது.

முதல் திருமுறை முற்றிற்று

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா

இரண்டாம் திருமுறை

இரண்டாம் திருமுறை

1. புண்ணிய விளக்கம்

பொது
எழுசீர்க்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

714 பாடற் கினிய வாக்களிக்கும் பாலும் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர் தம் கூட்டம் அளிக்கும் குணம்அளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தேடற் கினிய சீர் அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே. 1

715 கருமால் அகற்றும் இறப்பதனைக் களையு நெறியும் காட்டுவிக்கும்
பெருமால் அதனால் மயக்குகின்ற பேதை மடவார் நசைஅறுக்கும்
அருமால் உழந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
திருமால் அயனும் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. 2

716 வெய்ய வினையின் வேர்அறுக்கும் மெய்ம்மை ஞான வீட்டிலடைந்
துய்ய அமல நெறிகாட்டும் உன்னற் கரிய உணர்வளிக்கும்
ஐயம் அடைந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செய்ய மலர்க்கண் மால்போற்றும் சிவாய நமஎன் றிடுநீறே. 3

717 கோல மலர்த்தாள் துணைவழுத்தும் குலத்தொண் டடையக் கூட்டுவிக்கும்
நீல மணிகண் டப்பெருமான் நிலையை அறிவித் தருளளிக்கும்
ஆல வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
சீலம் அளிக்கும் திருஅளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே. 4

718 வஞ்சப் புலக்கா டெறியஅருள் வாளும் அளிக்கும் மகிழ்வளிக்கும்
கஞ்சத் தவனும் கரியவனும் காணற் கரிய கழல்அளிக்கும்
அஞ்சில் புகுந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செஞ்சொல் புலவர் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. 5

719 கண்கொள் மணியை முக்கனியைக் கரும்பைக் கரும்பின் கட்டிதனை
விண்கொள் அமுதை நம்அரசை விடைமேல் நமக்குத் தோற்றுவிக்கும்
அண்கொள் வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
திண்கொள் முனிவர் சுரர்புகழும் சிவாய நமஎன் றிடுநீறே. 6

720 நோயை அறுக்கும் பெருமருந்தை நோக்கற் கரிய நுண்மைதனைத்
தூய விடைமேல் வரும்நமது சொந்தத் துணையைத் தோற்றுவிக்கும்
ஆய வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
சேய அயன்மால் நாடரிதாம் சிவாய நமஎன் றிடுநீறே. 7

721 எண்ண இனிய இன்னமுதை இன்பக் கருணைப் பெருங்கடலை
உண்ண முடியாச் செழுந்தேனை ஒருமால் விடைமேல் காட்டுவிக்கும்
அண்ண வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
திண்ண மளிக்கும் திறம்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே. 8

1. எழுசீர். தொ. வே. 1, 2 பொ. சூ., பி. இரா. அறுசீர். ச. மு. க. ஆ. பா.

722 சிந்தா மணியை நாம்பலநாள் தேடி எடுத்த செல்வமதை
இந்தார் வேணி முடிக்கனியை இன்றே விடைமேல் வரச்செயும் காண்
அந்தோ வினையால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செந்தா மரையோன் தொழுதேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. 9

723 உள்ளத் தெழுந்த மகிழ்வைநமக் குற்ற துணையை உள்உறவைக்
கொள்ளக் கிடையா மாணிக்கக் கொழுந்தை விடைமேல் கூட்டுவிக்கும்
அள்ளல் துயரால் நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தெள்ளக் கடலான் புகழ்ந்தேத்தும் சிவாய நமஎன் றிடுநீறே. 10

724 உற்ற இடத்தில் உதவநமக் குடையோர் வைத்த வைப்பதனைக்
கற்ற மனத்தில் புகுங்கருணைக் கனியை விடைமேல் காட்டுவிக்கும்
அற்றம் அடைந்த நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
செற்றம் அகற்றித் திறல்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே. 11

2. அருள் நாம விளக்கம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

725 வாங்கு வில்நுதல் மங்கையர் விழியால்
மயங்கி வஞ்சர்பால் வருந்திநாள் தோறும்
ஏங்கு கின்றதில் என்பயன் கண்டாய்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
தேங்கு லாவுசெங் கரும்பினும் இனிதாய்த்
தித்தித் தன்பர்தம் சித்தத்துள் ஊறி
ஓங்கும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 1

726 தவம தின்றிவன் மங்கையர் முயக்கால்
தருமம் இன்றுவஞ் சகர்கடுஞ் சார்வால்
இவகை யால்மிக வருந்துறில் என்னாம்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பவம தோட்டிநல் ஆனந்த உருவாம்
பாங்கு காட்டிநல்பதந்தரும் அடியார்
உவகை ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 2

727 மின்னும் நுண்ணிடைப் பெண்பெரும் பேய்கள்
வெய்ய நீர்க்குழி விழுந்தது போக
இன்னும் வீழ்கலை உனக்கொன்று சொல்வேன்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பொன்உ லாவிய புயம்உடை யானும்
புகழ்உ லாவிய பூஉடை யானும்
உன்னும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 3

728 பொன்றும் வாழ்க்கையை நிலைஎன நினைந்தே
புலைய மங்கையர் புழுநெளி அளற்றில்
என்றும் வீழ்ந்துழல் மடமையை விடுத்தே
எழிலகொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து

துன்று தீம்பலாச் சுளையினும் இனிப்பாய்த்
தொண்டர் தங்கள்நாச் சுவைபெற ஊறி
ஒன்றும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 4

729 வரைக்கு நேர்முலை மங்கையர் மயலால்
மயங்கி வஞ்சரால் வருத்தமுற் றஞராம்
இரைக்கும் மாக்கடல் இடைவிழுந் தயரேல்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
கரைக்கும் தெள்ளிய அமுதமோ தேனோ
கனிகொ லோஎனக் கனிவுடன் உயர்ந்தோர்
உரைக்கும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 5

730 வாது செய்ம்மட வார்தமை விழைந்தாய்
மறலி வந்துனை வாஎன அழைக்கில்
ஏது செய்வையோ ஏழைநீ அந்தோ
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
போது வைகிய நான்முகன் மகவான்
புணரி வைகிய பூமகள் கொழுநன்
ஓதும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 6

731 நண்ணும் மங்கையர் புழுமலக் குழியில்
நாளும் வீழ்வுற்று நலிந்திடேல் நிதமாய்
எண்ணும் என்மொழி குருமொழி ஆக
எண்ணி ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பண்ணும் இன்சுவை அமுதினும் இனிதாய்ப்
பத்தர் நாள்தொறும் சித்தமுள் ளூற
உண்ணும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 7

732 பந்த வண்ணமாம் மடந்தையர் மயக்கால்
பசையில் நெஞ்சரால் பரிவுறு கின்றாய்
எந்த வண்ணநீ உய்வணம் அந்தோ
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
சந்த மாம்புகழ் அடியரில் கூடிச்
சனனம் என்னுமோர் சாகரம் நீந்தி
உந்த ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 8

733 மட்டின் மங்கையர் கொங்கையை விழைந்தாய்
மட்டி லாததோர் வன்துயர் அடைந்தாய்
எட்டி அன்னர்பால் இரந்தலை கின்றாய்
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
தட்டி லாதநல் தவத்தவர் வானோர்
சார்ந்தும் காண்கிலாத் தற்பரம் பொருளை
ஒட்டி ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சி வாயஎன் றுன்னுதி மனனே. 9

734 நிலவும் ஒண்மதி முகத்தியர்க் குழன்றாய்
நீச நெஞ்சர்தம் நெடுங்கடை தனிற்போய்
இலவு காத்தனை என்னைநின் மதியோ
எழில்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் போந்து
பலவும் ஆய்ந்துநன் குண்மையை உணர்ந்த
பத்தர் உள்ளகப் பதுமங்கள் தோறும்
உலவும் ஓம்சிவ சண்முக சிவஓம்
ஓம்சிவ வாயஎன் றுன்னுதி மனனே. 10

திருச்சிற்றம்பலம்

3. ஸ்ரீ சிவசண்முகநாம சங்கீர்த்தனலகரி

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

735 பழுது நேர்கின்ற வஞ்சகர் கடைவாய்ப்
பற்றி நின்றதில் பயன்எது கண்டாய்
பொழுது போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
பொழில்கொள் ஒற்றியம் புரிதனக் கேகித்
தொழுது சண்முக சிவசிவ எனநம்
தோன்ற லார்தமைத் துதித்தவர் திருமுன்
பழுது சொல்லுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 1

736 சூது நேர்கின்ற முலைச்சியர் பொருட்டாச்
சுற்றி நின்றதில் சுகம்எது கண்டாய்
போது போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
பொழில்கொள் ஒற்றியம் புரிதனக் கேகி
ஓது சண்முக சிவசிவ எனவே
உன்னி நெக்குவிட் டுருகிநம் துயராம்
ஆது சொல்லுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 2

737 ஞாலம் செல்கின்ற வஞ்சகர் கடைவாய்
நண்ணி நின்றதில் நலம்எது கண்டாய்
காலம் செல்கின்ற தெழுதிஎன் நெஞ்சே
கருதும் ஒற்றியம் கடிநகர்க் கேகிக்
கோலம் செய்அருள் சண்முக சிவஓம்
குழக வோஎனக் கூவிநம் துயராம்
ஆலம் சொல்லுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 3

738 மருட்டி வஞ்சகம் மதித்திடும் கொடியார்
வாயல் காத்தின்னும் வருந்தில்என் பயனோ
இருட்டிப் போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகித்

தெருட்டி றஞ்செயும் சண்முக சிவஓம்
சிவந மாஎனச் செப்பிநம் துயராம்
அரிட்டை ஓதுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 4

739 இல்லை என்பதே பொருள்எனக் கொண்டோர்
ஈன வாயிலில் இடர்ப்படு கின்றாய்
எல்லை செல்கின்ற தெழுதிஎன் நெஞ்சே
எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகித்
தொல்லை ஓம்சிவ சண்முக சிவஓம்
தூய என்றடி தொழுதுநாம் உற்ற
அல்லல் ஓதுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 5

740 கரவு நெஞ்சினர் கடைத்தலைக் குழன்றாய்
கலங்கி இன்னும்நீ கலுழ்ந்திடில் கடிதே
இரவு போந்திடும் எழுதிஎன் நெஞ்சே
எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகிப்
பரவு சண்முக சிவசிவ சிவஓம்
பரசு யம்புசங் கரசம்பு நமஓம்
அரஎன் றேத்துதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 6

741 ஏய்ந்து வஞ்சகர் கடைத்தலை வருந்தி
இருக்கின் றாய்இனி இச்சிறு பொழுதும்
சாய்ந்து போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
தகைகொள் ஒற்றியம் தலத்தினுக் கேகி
வாய்ந்து சண்முக நமசிவ சிவஓம்
வரசு யம்புசங் கரசம்பு எனவே
ஆய்ந்து போற்றுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 7

742 ஈர்ந்த நெஞ்சினர் இடந்தனில் இருந்தே
இடர்கொண் டாய் இனி இச்சிறு பொழுதும்
பேர்ந்து போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
பிறங்கும் ஒற்றியம் பெருநகர்க் கேகி
ஓர்ந்து சண்முக சரவண பவஓம்
ஓம்சு யம்புசங் கரசம்பு எனவே
ஆர்ந்து போற்றுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 8

743 கமைப்பின் ஈகிலா வஞ்சகர் கடையைக்
காத்தி ருக்கலை கடுகிஇப் பொழுதும்
இமைப்பில் போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
எழில்கொள் ஒற்றியூர் எனும்தலத் தேகி
எமைப்பு ரந்தசண் முகசிவ சிவஓம்
இறைவ சங்கர அரகர எனவே
அமைப்பின் ஏத்துதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 9

744 உறைந்து வஞ்சர்பால் குறையிரந் தவமே
உழல்கின் றாய்இனி உரைக்கும்இப் பொழுதும்
குறைந்து போகின்ற தெழுதிஎன் நெஞ்சே
குலவும் ஒற்றியம் கோநகர்க் கேகி
நிறைந்த சண்முக குருநம சிவஓம்
நிமல சிற்பர அரகர எனவே
அறைந்து போற்றுதும் ஐயுறல் என்மேல்
ஆணை காண்அவர் அருள்பெறல் ஆமே. 10

திருச்சிற்றம்பலம்

4. நமச்சிவாய சங்கீர்த்தனலகரி

திருவொற்றியூரும் திருத்தில்லையும்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

745 சொல்அ வாவிய தொண்டர்தம் மனத்தில்
சுதந்த ரங்கொடு தோன்றிய துணையைக்
கல்அ வாவிய ஏழையேன் நெஞ்சும்
கரைந்து வந்திடக் கலந்திடும் களிப்பைச்
செல்அ வாவிய பொழில்திரு வொற்றித்
தேனைத் தில்லைச்சிற் றம்பலத் தாடும்
நல்ல வாழ்வினை நான்மறைப் பொருளை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 1

746 அட்ட மூர்த்தம தாகிய பொருளை
அண்டர் ஆதியோர் அறிகிலாத் திறத்தை
விட்ட வேட்கையர்க் கங்கையில் கனியை
வேத மூலத்தை வித்தக விளைவை
எட்ட ரும்பர மானந்த நிறைவை
எங்கும் ஆகிநின் றிலங்கிய ஒளியை
நட்டம் ஆடிய நடனநா யகத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 2

747 உம்பர் வான்துயர் ஒழித்தருள் சிவத்தை
உலகெ லாம்புகழ் உத்தமப் பொருளைத்
தம்ப மாய்அகி லாண்டமும் தாங்கும்
சம்பு வைச்சிவ தருமத்தின் பயனைப்
பம்பு சீரருள் பொழிதரு முகிலைப்
பரம ஞானத்தைப் பரமசிற் சுகத்தை
நம்பி னோர்களை வாழ்விக்கும் நலத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 3

748 மாலின் உச்சிமேல் வதிந்தமா மணியை
வழுத்தும் நாஅகம் மணக்கும்நன் மலரைப்
பாலின் உள்இனித் தோங்கிய சுவையைப்
பத்தர் தம்உளம் பரிசிக்கும் பழத்தை
ஆலின் ஓங்கிய ஆனந்தக் கடலை
அம்ப லத்தில்ஆம் அமுதைவே தங்கள்
நாலின் ஒற்றியூர் அமர்ந்திடும் சிவத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 4

749 உண்ணி றைந்தெனை ஒளித்திடும் ஒளியை
உண்ண உண்ணமேல் உவட்டுறா நறவைக்
கண்ணி றைந்ததோர் காட்சியை யாவும்
கடந்த மேலவர் கலந்திடும் உறவை
எண்ணி றைந்தமால் அயன்முதல் தேவர்
யாரும் காண்கிலா இன்பத்தின் நிறைவை
நண்ணி ஒற்றியூர் அமர்ந்தருள் சிவத்தை
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 5

750 திக்கு மாறினும் எழுகடல் புவிமேல்
சென்று மாறினும் சேண்விளங் கொளிகள்
உக்கு மாறினும் பெயல்இன்றி உலகில்
உணவு மாறினும் புவிகளோர் ஏழும்
மிக்கு மாறினும் அண்டங்கள் எல்லாம்
விழுந்து மாறினும் வேதங்கள் உணரா
நக்கன் எம்பிரான் அருள்திருப் பெயராம்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 6

751 பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்

கற்ற நெஞ்சகம் கலைமறந்தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 7

752 உடைஉ டுத்திட இடைமறந் தாலும்
உலகு ளோர்பசிக் குணமறந் தாலும்
படையெ டுத்தவர் படைமறந் தாலும்
பரவை தான் அலைப் பதுமறந் தாலும்
புடைஅ டுத்தவர் தமைமறந் தாலும்
பொன்னை வைத்தஅப் புதைமறந்தாலும்
நடைஅ டுத்தவர் வழிமறந் தாலும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 8

753 வன்மை செய்திடும் வறுமைவந் தாலும்
மகிழ்வு செய்பெரு வாழ்வுவந் தாலும்
புன்மை மங்கையர் புணர்ச்சிநேர்ந் தாலும்
பொருந்தி னாலும் நின் றாலும்சென் றாலும்
தன்மை இல்லவர் சார்பிருந் தாலும்
சான்ற மேலவர் தமைஅடைந் தாலும்
நன்மை என்பன யாவையும் அளிக்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 9

754 இன்னும் பற்பல நாளிருந் தாலும்
இக்க ணந்தனி லேஇறந் தாலும்
துன்னும் வான்கதிக் கேபுகுந் தாலும்
சோர்ந்து மாநர கத்துழன் றாலும்
என்ன மேலும்இங் கெனக்குவந் தாலும்
எம்பி ரான்எனக்கு யாதுசெய்தாலும்
நன்னர் நெஞ்சகம் நாடிநின் றோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே. 10

திருச்சிற்றம்பலம்

5. நற்றுணை விளக்கம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

755 எஞ்ச வேண்டிய ஐம்புலப் பகையால்
இடர்கொண் டோய்ந்தனை என்னினும் இனிநீ
அஞ்ச வேண்டிய தென்னைஎன் நெஞ்சே
அஞ்சல் அஞ்சல்காண் அருமறை நான்கும்
விஞ்ச வேண்டியும் மாலவன் மலரோன்
விளங்க வேண்டியும் மிடற்றின்கண் அமுதா
நஞ்சை வேண்டிய நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 1

756 காவின் மன்னவன் எதிர்க்கினும் காமன்
கணைகள் ஏவினும் காலனே வரினும்
பூவின் மன்னவன் சீறினும் திருமால்
போர்க்கு நேரினும் பொருளல நெஞ்சே
ஓவில் மாதுயர் எற்றினுக் கடைந்தாய்
ஒன்றும் அஞ்சல்நீ உளவறிந் திலையோ
நாவின் மன்னரைக் கரைதனில் சேர்த்த
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 2

757 நீட்டம் உற்றதோர் வஞ்சக மடவார்
நெடுங்கண் வேல்பட நிலையது கலங்கி
வாட்டம் உற்றனை ஆயினும் அஞ்சேல்
வாழி நெஞ்சமே மலர்க்கணை தொடுப்பான்
கோட்டம் உற்றதோர் நிலையொடு நின்ற
கொடிய காமனைக் கொளுவிய நுதல்தீ
நாட்டம் உற்றதோர் நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 3

758 எம்மை வாட்டும்இப் பசியினுக் கெவர்பால்
ஏகு வோம்என எண்ணலை நெஞ்சே
அம்ம ஒன்றுநீ அறிந்திலை போலும்
ஆலக் கோயிலுள் அன்றுசுந் தரர்க்காய்ச்
செம்மை மாமலர்ப் பதங்கள்நொந் திடவே
சென்று சோறிரந் தளித்தருள் செய்தோன்
நம்மை ஆளுடை நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 4

759 ஓடு கின்றனன் கதிரவன் அவன்பின்
ஓடு கின்றன ஒவ்வொரு நாளாய்
வீடு கின்றன என்செய்வோம் இனிஅவ்
வெய்ய கூற்றுவன் வெகுண்டிடில் என்றே

வாடு கின்றனை அஞ்சலை நெஞ்சே
மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடு கின்றவர் நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 5

760 மலங்கும் மால்உடல் பிணிகளை நீக்க
மருந்து வேண்டினை வாழிஎன் நெஞ்சே
கலங்கு றேல்அருள் திருவெண்ணீ றெனது
கரத்தி ருந்தது கண்டிலை போலும்
விலங்கு றாப்பெரும் காமநோய் தவிர்க்க
விரும்பி ஏங்கினை வெம்புறேல் அழியா
நலங்கொள் செஞ்சடை நாதன்தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 6

761 மாலும் துஞ்சுவான் மலரவன் இறப்பான்
மற்றை வானவர் முற்றிலும் அழிவார்
ஏலும் நற்றுணை யார்நமக் கென்றே
எண்ணி நிற்றியோ ஏழைநீ நெஞ்சே
கோலும் ஆயிரம் கோடிஅண் டங்கள்
குலைய நீக்கியும் ஆக்கியும் அளிக்கும்
நாலு மாமறைப் பரம்பொருள் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 7

762 கந்த வண்ணமாம் கமலன்மால் முதலோர்
கண்டி லார்எனில் கைலையம் பதியை
எந்த வண்ணம்நாம் காண்குவ தென்றே
எண்ணி எண்ணிநீ ஏங்கினை நெஞ்சே
அந்த வண்ணவெள் ஆனைமேல் நம்பி
அமர்ந்து சென்றதை அறிந்திலை போலும்
நந்தம் வண்ணமாம் நாதன் தன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 8

763 வீர மாந்தரும் முனிவரும் சுரரும்
மேவு தற்கொணா வெள்ளியங் கிரியைச்
சேர நாம்சென்று வணங்கும்வா றெதுவோ
செப்பென் றேஎனை நச்சிய நெஞ்சே
ஊர னாருடன் சேரனார் துரங்கம்
ஊர்ந்து சென்றஅவ் உளவறிந் திலையோ
நார மார்மதிச் சடையவன் நாமம்
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 9

764 தலங்கள் தோறும்சென் றவ்விடை அமர்ந்த
தம்பி ரான்திருத் தாளினை வணங்கி
வலங்கொ ளும்படி என்னையும் கூட
வாஎன் கின்றனை வாழிஎன் நெஞ்சே

இலங்கள் தோறும்சென் றிரந்திடும் அவனே
என்னை உன்னையும் ஈர்க்குவன் அதற்கு
நலங்கொ ளும்துணை யாதெனில் கேட்டி
நமச்சி வாயம்காண் நாம்பெறும் துணையே. 10

திருச்சிற்றம்பலம்

6. திருவருள் வழக்க விளக்கம்

திருவொற்றியூர்
கட்டளைக்கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

765 தோடுடை யார்புலித் தோலுடை யார்கடல் தூங்கும்ஒரு
மாடுடை யார்மழு மான்உடை யார்பிர மன்தலையாம்
ஓடுடை யார்ஒற்றி யூர்உடை யார்புகழ் ஓங்கியவெண்
காடுடை யார்நெற்றிக் கண்உடை யார்எம் கடவுளரே. 1

766 வண்ணப்பல் மாமலர் மாற்றும் படிக்கு மகிழ்ந்தெமது
திண்ணப்பர் சாத்தும் செருப்படி மேற்கொண்டு தீஞ்சுவைத்தாய்
உண்ணப் பரிந்துநல் ஊன்தர உண்டுகண் ஒத்தக்கண்டே
கண்ணப்ப நிற்க எனக்கைதொட் டார்எம் கடவுளரே. 2

767 செல்இடிக் கும்குரல் கார்மத வேழச் சினஉரியார்
வல்அடுக் கும்கொங்கை மாதொரு பாகர் வடப்பொன்வெற்பாம்
வில்எடுக் கும்கையர் சாக்கியர் அன்று விரைந்தெதிர்ந்த
கல்லடிக் கும்கதி காட்டினர் காண்எம் கடவுளரே. 3

768 ஏழியல் பண்பெற் றமுதோ டளாவி இலங்குதமிழ்க்
கேழியல் சம்பந்தர் அந்தணர் வேண்டக் கிளர்ந்தநற்சீர்
வீழியில் தம்பதிக் கேவிடை கேட்கவெற் பாள்உடனே
காழியில் தன்னுருக் காட்டின ரால்எம் கடவுளரே. 4

769 நாட்டில் புகழ்பெற்ற நாவுக் கரசர்முன் நாள்பதிகப்
பாட்டிற் கிரக்கம்இல் லீர்எம் பிரான்எனப் பாடஅன்றே
ஆட்டிற் கிசைந்த மலர்வாழ்த்தி வேதம் அமைத்தமறைக்
காட்டில் கதவம் திறந்தன ரால்எம் கடவுளரே. 5

770 பைச்சூர் அரவப் படநடத் தான்அயன் பற்பலநாள்
எய்ச்சூர் தவஞ்செய் யினும்கிடை யாப்பதம் ஏய்ந்துமண்மேல்
வைச்சூரன் வன்தொண்டன் சுந்தரன் என்னுநம் வள்ளலுக்குக்
கச்சூரில் சோறிரந் தூட்டின ரால்எம் கடவுளரே. 6

771 ஏணப் பரிசெஞ் சடைமுத லானஎல் லாம்மறைத்துச்
சேணப் பரிகள் நடத்திடு கின்றநல் சேவகன்போல்
மாணப் பரிபவம் நீக்கிய மாணிக்க வாசகர்க்காய்க்
காணப் பரிமிசை வந்தன ரால்எம் கடவுளரே. 7

772 எல்லாம் செயவல்ல சித்தரின் மேவி எழில்மதுரை
வல்லாரின் வல்லவர் என்றறி யாமுடி மன்னன்முன்னே
பல்லா யிரஅண்ட மும்பயம் எய்தப் பராக்கிரமித்துக்
கல்லானை தின்னக் கரும்பளித் தார்எம் கடவுளரே. 8

773 மால்எடுத் தோங்கிய மால்அயன் ஆதிய வானவரும்
ஆல்அடுத் தோங்கிய அந்தண னேஎன் றடைந்திரண்டு
பால்எடுத் தேத்தநம் பார்ப்பதி காணப் பகர்செய்மன்றில்
கால்எடுத் தாடும் கருத்தர்கண் டீர்எம் கடவுளரே. 9

774 மாற்பதம் சென்றபின் இந்திரர் நான்முகர் வாமனர்மான்
மேற்பதம் கொண்ட உருத்திரர் விண்ணவர் மேல் மற்றுள்ளோர்
ஆற்பதம் கொண்டபல் ஆயிரம் கோடிஅண் டங்கள் எல்லாம்
காற்பதம் ஒன்றில் ஒடுக்கிநிற் பார்எம் கடவுளரே. 10

திருச்சிற்றம்பலம்

7. சிவபுண்ணியத் தேற்றம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

775 கடவுள் நீறிடாக் கடையரைக் கண்காள்
கனவி லேனும்நீர் காணுதல் ஒழிக
அடவுள் மாசுதீர்த் தருள்திரு நீற்றை
அணியும் தொண்டரை அன்புடன் காண்க
தடவும் இன்னிசை வீணைகேட் டரக்கன்
தனக்கு வாளொடு நாள்கொடுத் தவனை
நடவும் மால்விடை ஒற்றியூர் உடைய
நாதன் தன்னைநாம் நண்ணுதற் பொருட்டே 1

776 போற்றி நீறிடாப் புலையரைக் கண்டால்
போக போகநீர் புலமிழந் தவமே
நீற்றின் மேனியர் தங்களைக் கண்டால்
நிற்க நிற்கஅந் நிமலரைக் காண்க
சாற்றின் நன்னெறி ஈதுகாண் கண்காள்
தமனி யப்பெரும் தனுஎடுத் தெயிலைக்
காற்றி நின்றநம் கண்நுதற் கரும்பைக்
கைலை ஆளனைக் காணுதற் பொருட்டே. 2

777 தெய்வ நீறிடாச் சிறியரைக் கண்டால்
சீறு பாம்புகண் டெனஒளித் தேக
சைவ நீறிடும் தலைவரைக் கண்காள்
சார்ந்து நின்றுநீர் தனிவிருந் துண்க
செய்ப வன்செய லும்அவை உடனே
செய்விப் பானுமாய்த் தில்லைஅம் பலத்துள் 3
உய்வ தேதரக் கூத்துகந் தாடும்
ஒருவன் நம்முளம் உற்றிடற் பொருட்டே.

778 தூய நீறிடாப் பேயர்கள் ஒன்று
சொல்லு வாரெனில் புல்லென அடைக்க
தாய நீறிடும் நேயர்ஒன் றுரைத்தால்
தழுவி யேஅதை முழுவதும் கேட்க
சேய நன்னெறி அணித்தது செவிகாள்
சேர மானிடைத் திருமுகம் கொடுத்து
ஆய பாணற்குப் பொன்பெற அருளும்
ஐயர் சேவடி அடைகுதற் பொருட்டே. 4

779 நல்ல நீறிடா நாய்களின் தேகம்
நாற்றம் நேர்ந்திடில் நண்உயிர்ப் படக்க
வல்ல நீறிடும் வல்லவர் எழின்மெய்
வாசம் நேரிடில் மகிழ்வுடன் முகர்க
சொல்ல ரும்பரி மளந்தரும் மூக்கே
சொல்லும் வண்ணம்இத் தூய்நெறி ஒன்றாம்
அல்லல் நீக்கிநல் அருட்கடல் ஆடி
ஐயர் சேவடி அடைகுதற் பொருட்டே. 5

780 அருள்செய் நீறிடார் அமுதுனக் கிடினும்
அம்ம லத்தினை அருந்துதல் ஒழிக
தெருள்கொள் நீறிடும் செல்வர்கூழ் இடினும்
சேர்ந்து வாழ்த்திஅத் திருஅமு துண்க
இருள்செய் துன்பநீத் தென்னுடை நாவே
இன்ப நல்அமு தினிதிருந் தருந்தி
மருள்செய் யானையின் தோலுடுத் தென்னுள்
வதியும் ஈசன்பால் வாழுதற் பொருட்டே. 6

781 முத்தி நீறிடார் முன்கையால் தொடினும்
முள்ளு றுத்தல்போல் முனிவுடன் நடுங்க
பத்தி நீறிடும் பத்தர்கள் காலால்
பாய்ந்து தைக்கினும் பரிந்ததை மகிழ்க
புத்தி ஈதுகாண் என்னுடை உடம்பே
போற்ற லார்புரம் பொடிபட நகைத்தோன்
சத்தி வேற்கரத் தனயனை மகிழ்வோன்
தன்னை நாம்என்றும் சார்ந்திடற் பொருட்டே. 7

782 இனிய நீறிடா ஈனநாய்ப் புலையர்க்
கெள்ளில் பாதியும் ஈகுதல் ஒழிக
இனிய நீறிடும் சிவனடி யவர்கள்
எம்மைக் கேட்கினும் எடுத்தவர்க் கீக
இனிய நன்னெறி ஈதுகாண் கரங்காள்
ஈசன் நம்முடை இறையவன் துதிப்போர்க் 8
கினிய மால்விடை ஏறிவந் தருள்வோன்
இடங்கொண் டெம்முளே இசைகுதற் பொருட்டே.

783 நாட நீறிடா மூடர்கள் கிடக்கும்
நரக இல்லிடை நடப்பதை ஒழிக
ஊடல் நீக்கும்வெண் நீறிடும் அவர்கள்
உலவும் வீட்டிடை ஓடியும் நடக்க
கூட நன்னெறி ஈதுகாண் கால்காள்
குமரன்தந்தைஎம் குடிமுழு தாள்வோன்
ஆட அம்பலத் தமர்ந்தவன் அவன்தன்
அருட்க டல்படிந் தாடுதற் பொருட்டே. 9

784 நிலைகொள் நீறிடாப் புலையரை மறந்தும்
நினைப்ப தென்பதை நெஞ்சமே ஒழிக
கலைகொள் நீறிடும் கருத்தரை நாளும்
கருதி நின்றுளே கனிந்துநெக் குருக
மலைகொள் வில்லினான் மால்விடை உடையான்
மலர்அ யன் தலை மன்னிய கரத்தான்
அலைகொள் நஞ்சமு தாக்கிய மிடற்றான்
அவனை நாம்மகிழ்ந் தடைகுதற் பொருட்டே. 10

திருச்சிற்றம்பலம்

8. முத்தி உபாயம்

திருவொற்றியூர்
வஞ்சித்துறை
அருட்பெருஞ்ஜோதி

785 ஒற்றி ஊரனைப்
பற்றி நெஞ்சமே
நிற்றி நீஅருள்
பெற்றி சேரவே. 1

786 சேர நெஞ்சமே
தூரம் அன்றுகாண்
வாரம் வைத்தியேல்
சாரும் முத்தியே. 2

787 முத்தி வேண்டுமேல்
பத்தி வேண்டுமால்
சத்தியம்இது
புத்தி நெஞ்சமே. 3

788 நெஞ்ச மேஇது
வஞ்ச மேஅல
பிஞ்ச கன்பதம்
தஞ்சம் என்பதே. 4

789 என்ப தேற்றவன்
அன்ப தேற்றுநீ
வன்பு மாற்றுதி
இன்பம் ஊற்றவே. 5

790 ஊற்றம் உற்றுவெண்
நீற்றன் ஒற்றியூர்
போற்ற நீங்குமால்
ஆற்ற நோய்களே. 6

791 நோய்கள் கொண்டிடும்
பேய்கள் பற்பலர்
தூய்தன் ஒற்றியூர்க்
கேய்தல் இல்லையே. 7

792 இல்லை இல்லைகாண்
ஒல்லை ஒற்றியூர்
எல்லை சேரவே
அல்லல் என்பதே. 8

793 அல்லல் என்பதேன்
தொல்லை நெஞ்சமே
மல்லல் ஒற்றியூர்
எல்லை சென்றுமே. 9

794 சென்று வாழ்த்துதி
நன்று நெஞ்சமே
என்றும் நல்வளம்
ஒன்றும் ஒற்றியே. 10

9. அவலத் தழுங்கல்

திருவொற்றியூர்

எண்சீர்க்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

795 ஊதி யம்பெறா ஒதியனேன் மதிபோய்
உழலும் பாவியேன் உண்மைஒன் றறியேன்
வாதி யம்புறும் வஞ்சகர் உடனே
வாய்இ முக்குற வன்மைகள் பேசி
ஆதி எம்பெரு மான்உனை மறந்தேன்
அன்பி லாதஎன் வன்பினை நினைக்கில்
தீதி யம்பிய நஞ்சமும் கலங்கும்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. 1

796 கல்இ கந்தவன் நெஞ்சகக் கொடியேன்
கயவர் தங்களுள் கலந்துநாள் தோறும்
மல்இ கந்தவாய் வாதமிட் டுலறி
வருந்து கின்றதுன் மார்க்கத்தை நினைக்கில்
இல்இ கந்தஎன் மீதெனக் கேதான்
இகலும் கோபமும் இருக்கின்ற தானால்
தில்லை யாய்உன்தன் உளத்துக்கென் னாமோ
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. 2

797 கைத வத்தர்தம் களிப்பினில் களித்தே
காலம் போக்கினேன் களைகண்மற் றறியேன்
செய்த வத்தர்தம் திறம்சிறி துணரேன்
செய்வ தென்னைநின் திருவருள் பெறவே
எய்த வத்திரு அருளெனக் கிரங்கி
ஈயில் உண்டுமற் றின்றெனில் இன்றே
செய்த வத்திரு மடந்தையர் நடனம்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. 3

798 அழுத பிள்ளைக்கே பால்உண வளிப்பாள்
அன்னை என்பர்கள் அழவலி இல்லாக்
கொழுது நேர்சிறு குழவிக்கும் கொடுப்பாள்
குற்றம் அன்றது மற்றவள் செயலே
தொழுது நின்னடி துதிக்கின்றோர்க் கெனவே
துட்ட னேனுக்கும் சூழ்ந்தருள் செயலாம்
செழுது மாதவி மலர்திசை மணக்கத்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. 4

1. அறுசீர். தொ. வே. 1, 2. எண்சீர். ச. மு. க. ஆ. பா.

799 உள்ளி யோஎன அலறிநின் றேத்தி
உருகி நெக்கிலா உளத்தான்யான் எனினும்
வள்ளி யோய்உனை மறக்கவும் மாட்டேன்
மற்றைத் தேவரை மதிக்கவும் மாட்டேன்
வெள்ளி யோவெனப் பொன்மகிழ் சிறக்க
விரைந்து மும்மதில் வில்வளைத் தெரித்தோய்
தெள்ளி யோர்புகழ்ந் தரகர என்னத்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. 5

800 விருப்பி லேன்திரு மால்அயன் பதவி
வேண்டிக் கொள்கென விளம்பினும் கொள்ளேன்
மருப்பின் மாஉரி யாய்உன் தன் அடியார்
மதிக்கும் வாழ்வையே மனங்கொடு நின்றேன்
ஒருப்ப டாதஇவ் வென்னள வினிஉன்
உள்ளம் எப்படி அப்படி அறியேன்
திருப்பு யாசல மன்னர்மா தவத்தோர் 6
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே.

801 நிலையி லாஉல கியல்படும் மனத்தை
நிறுத்தி லேன்ஒரு நியமமும் அறியேன்
விலையி லாமணி யேஉனை வாழ்த்தி
வீட்டு நன்னெறிக் கூட்டென விளம்பேன்
அலையில் ஆர்ந்தெழும் துரும்பென அலைந்தேன்
அற்ப னேன்திரு அருளடை வேனே
சிலையில் ஆர்அழல் கணைதொடுத் தவனே
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. 7

802 காயம் என்பதா காயம்என் றறியேன்
கலங்கி னேன்ஒரு களைகணும் இல்லேன்
சேய நன்னெறி அணித்தெனக் காட்டும்
தெய்வ நின்அருள் திறம்சிறி தடையேன்
தூய நின்அடி யவருடன் கூடித்
தொழும்பு செய்வதே சுகம்எனத் துணியேன்
தீய னேன்தனை ஆள்வதெவ் வாறோ
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே. 8

803 புன்னு னிப்படும் துளியினும் சிறிய
போகம் வேட்டுநின் பொன்அடி மறந்தேன்
என்னி னிப்படும் வண்ணம் அஃதறியேன்
என்செய் கேன்எனை என்செயப் புகுகேன்
மின்னி னில்பொலி வேணியம் பெருமான்
வேற லேன்எனை விரும்பல்உன் கடனே 9
தென்ன னிப்படும் சோலைசூழ்ந் தோங்கித்
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே.

804 அடிய னேன்அலன் என்னினும் அடியேன்
ஆக நின்றனன் அம்மைஇம் மையினும்
கடிய னேன்பிழை யாவையும் பொறுக்கக்
கடன்உ னக்கலால் கண்டிலன் ஐயா
பொடிகொள் மேனிஎம் புண்ணிய முதலே
புன்னை யஞ்சடைப் புங்கவர் ஏறே
செடியர் தேடுறாத் திவ்விய ஒளியே
திகழும் ஒற்றியூர்த் தியாகமா மணியே 10

திருச்சிற்றம்பலம்

10. பழமொழிமேல் வைத்துப் பரிவுகூர்தல்

திருவொற்றியூர்
எண்சீர்க்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

805 வானை நோக்கிமண் வழிநடப் பவன்போல்
வயங்கு நின்அருள் வழியிடை நடப்பான்
ஊனை நோக்கினேன் ஆயினும் அடியேன்
உய்யும் வண்ணம்நீ உவந்தருள் புரிவாய்
மானை நோக்கிய நோக்குடை மலையாள்
மகிழ மன்றிடை மாநடம் புரிவோய்
தேனை நோக்கிய கொன்றையஞ் சடையோய்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 1

806 வாயி லான்பெரு வழக்குரைப் பதுபோல்
வள்ளல் உன்னடி மலர்களுக் கன்பாம்
தூயி லாதுநின் அருள்பெற விழைந்தேன்
துட்ட னேன்அருள் சுகம்பெற நினைவாய்
கோயி லாகநல் அன்பர்தம் உளத்தைக்
கொண்ட மர்ந்திடும் குணப்பெருங் குன்றே
தேயி லாதபல் வளஞ்செறிந் தோங்கித்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 2

807 வித்தை இன்றியே விளைத்திடு பவன்போல்
மெய்ய நின்இரு மென்மலர்ப் பதத்தில்
பத்தி இன்றியே முத்தியை விழைந்தேன்
பாவி யேன் அருள் பண்புற நினைவாய்
மித்தை இன்றியே விளங்கிய அடியார்
விழைந்த யாவையும் தழைந்திட அருள்வோய்
சித்தி வேண்டிய முனிவரர் பரவித்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 3

1. அறுசீர். தொ. வே. 1, 2 எண்சீர். ச.மு.க., ஆ. பா

808 கலம்இ லாதுவான் கடல்கடப் பவன்போல்
கடவுள் நின்அடிக் கமலங்கள் வழுத்தும்
நலம்இ லாதுநின் அருள்பெற விழைந்த
நாயி னேன்செயும் நவைபொறுத் தருள்வாய்
மலம்இ லாதநல் வழியிடை நடப்போர்
மனத்துள் மேவிய மாமணிச் சுடரே
சிலமிலாஞ் சமாதிய தருப் பொழில்க
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 4

809 போர்க்கும் வெள்ளத்தில் பொன்புதைப் பவன்போல்
புலைய நெஞ்சிடைப் புனிதநின் அடியைச்
சேர்க்கும் வண்ணமே நினைக்கின்றேன் எனினும்
சிறிய னேனுக்குன் திருவருள் புரிவாய்
கூர்க்கும் நெட்டிலை வேற்படைக் கரங்கொள்
குமரன் தந்தையே கொடியதீ வினையைத்
தீர்க்கும் தெய்வமே சைவவை திகங்கள்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 5

810 ஓட உன்னியே உறங்குகின் றவன்போல்
ஓங்கும் உத்தம உன்அருட் கடலில்
ஆட உன்னியே மங்கையர் மயலில்
அழுந்து கின்றஎற் கருள்செய நினைவாய்
நாட உன்னியே மால்அயன் ஏங்க
நாயி னேன்உளம் நண்ணிய பொருளே
தேட உன்னிய மாதவ முனிவர்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 6

811 முதல்இ லாமல்ஊ தியம்பெற விழையும்
மூடன் என்னநின் மொய்கழல் பதமேத்
துதல்இ லாதுநின் அருள்பெற விழைந்தேன்
துட்ட னேன்அருட் சுகம்பெறு வேனோ
நுதலில் ஆர்அழல் கண்ணுடை யவனே
நோக்கும் அன்பர்கள் தேக்கும்இன் அமுதே
சிதல்இ லாவளம் ஓங்கிளந் நாளும்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 7

812 கல்லை உந்திவான் நதிகடப் பவர்போல்
காமம் உந்திய நாமநெஞ் சகத்தால்
எல்லை உந்திய பவக்கடல் கடப்பான்
எண்ணு கின்றனன் எனக்கருள் வாயோ
அல்லை உந்திய ஒண்சுடர்க் குன்றே 8
அகில கோடிகட் கருள்செயும் ஒன்றே
தில்லை நின்றொளிர் மன்றிடை அமுதே
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே.

813 நெய்யி னால்சுடு நெருப்பவிப் பவன்போல்
நெடிய துன்பமாம் கொடியவை நிறைந்த
பொய்யி னால்பவம் போக்கிட நினைத்தேன்
புல்ல னேனுக்குன் நல்அருள் வருமோ
கையி னால்தொழும் அன்பர் தம் உள்ளக்
கமலம் மேவிய விமலவித் தகனே
செய்யி னால்பொலிந் தோங்கிநல் வளங்கள்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 9

814 நீர்சொ ரிந்தொளி விளக்கெரிப் பவன்போல்
நித்தம் நின்னிடை நேசம்வைத் திடுவான்
பார்சொ ரிந்திடும் பவநெறி முயன்றேன்
பாவி யேன் தனைக் கூவிநின் றாள்வாய்
கார்சொ ரிந்தெனக் கருணைஈந் தன்பர்
களித்த நெஞ்சிடை ஒளித்திருப் பவனே
தேர்சொ ரிந்தமா மணித்திரு வீதித்
திகழும் ஒற்றியூர்த் தியாகநா யகனே. 10

திருச்சிற்றம்பலம்

11. அபராதத் தாற்றாமை

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

815 துச்சிலை விரும்பித் துயர்கொளும் கொடியேன்
துட்டனேன் தூய்மைஒன் றில்லா
எச்சிலை அனையேன் பாவியேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
பச்சிலை இடுவார் பக்கமே மருவும்
பரமனேஎம் பசு பதியே
அச்சிலை விரும்பும் அவருளத் தமுதே
ஐயனே ஒற்றியூர் அரைசே. 1

816 தூங்கினேன் சோம்பற் குறைவிட மானேன்
தோகையர் மயக்கிடை அழுந்தி
ஏங்கினேன் அவமே இருந்தனன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
வாங்கிமே ருவினை வளைத்திடும் பவள
மாமணிக் குன்றமே மருந்தே
ஓங்கிவான் அளவும் பொழில்செறி ஒற்றி
யூர்வரும் என்னுடை உயிரே. 2

817 கரப்பவர்க் கெல்லாம் முற்படும் கொடிய
கடையனேன் விடையமே உடையேன்
இரப்பவர்க் கணுவும் ஈந்திலேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்

திரப்படும் கருணைச் செல்வமே சிவமே
தெய்வமே தெய்வநா யகமே
உரப்படும் அன்பர் உள்ஒளி விளக்கே
ஒற்றியூர் வாழும்என் உவப்பே. 3

818 இல்லைஎன் பதனுக் கஞ்சிடேன் நாய்க்கும்
இணையிலேன் இழிவினேன் துயர்க்கோர்
எல்லைமற் றறியேன் ஒதியனேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
கல்லைவில் ஆக்கும் கருணைவா ரிதியே
கண்ணுதல் உடையசெங் கனியே
தில்லைவாழ் அரசே தெய்வமா மணியே
திருவொற்றி யூர்வரும் தேவே. 4

819 மண்ணிலே மயங்கும் மனத்தினை மீட்டுன்
மலரடி வழுத்திடச் சிறிதும்
எண்ணிலேன் கொடிய ஏழையேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
விண்ணிலே விளங்கும் ஒளியினுள் ஒளியே
விடையில்வந் தருள்விழி விருந்தே
கண்ணிலே விளங்கும் அரும்பெறல் மணியே
காட்சியே ஒற்றியங் கரும்பே. 5

820 முட்டியே மடவார் முலைத்தலை உழக்கும்
மூடனேன் முழுப்புலை முறியேன்
எட்டியே அனையேன் பாவியேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
ஒட்டியே அன்பர் உளத்தெழும் களிப்பே
ஒளிக்குளாம் சோதியே கரும்பின்
கட்டியே தேனே சடையுடைக் கனியே
காலமும் கடந்தவர் கருத்தே. 6

821 கருதென அடியார் காட்டியும் தேறாக்
கன்மனக் குரங்கனேன் உதவா
எருதென நின்றேன் பாவியேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
மருதிடை நின்ற மாணிக்க மணியே
வன்பவம் தீர்த்திடும் மருந்தே
ஒருதிறம் உடையோர் உள்ளத்துள் ஒளியே
ஒற்றியூர் மேவும்என் உறவே. 7

822 வைதிலேன் வணங்கா திகழ்பவர் தம்மை
வஞ்சனேன் நின்னடி யவர்பால்
எய்திலேன் பேயேன் ஏழையேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
கொய்துமா மலரிட் டருச்சனை புரிவோர்
கோலநெஞ் சொளிர் குணக் குன்றே
உய்திறம் உடையோர் பரவுநல் ஒற்றி
யூர் அகத் தமர்ந்தருள் ஒன்றே. 8

823 தெவ்வண மடவார் சீக்குழி விழுந்தேன்
தீயனேன் பேயனேன் சிறியேன்
எவ்வணம் உய்வேன் என்செய்வேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
எவ்வணப் பொருப்பே என்னிரு கண்ணே
இடையிடாப் பசியசெம் பொன்னே
செவ்வண மணியே திகழ்குணக் கடலே
திருவொற்றி யூர்ச்செழுந் தேனே. 9

824 வாதமே புரிவேன் கொடும்புலி அனையேன்
வஞ்சக மனத்தினேன் பொல்லா
ஏதமே உடையேன் என்செய்வேன் என்னை
என்செய்தால் தீருமோ அறியேன்
போதமே ஐந்தாம் பூதமே ஒழியாப்
புனிதமே புதுமணப் பூவே
பாதமே சரணம் சரணம்என் தன்னைப்
பாதுகாத் தளிப்பதுன் பரமே. 10

திருச்சிற்றம்பலம்

12. அருளியல் வினாவல்

திருமுல்லைவாயில்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

825 தேன்என இனிக்கும் திருவருட் கடலே
தெள்ளிய அமுதமே சிவமே
வான்என நிற்கும் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
ஊன்என நின்ற உணர்விலேன் எனினும்
உன்திருக் கோயில்வந் தடைந்தால்
ஏன்எனக் கேளா திருந்தனை ஐயா
ஈதுநின் திருவருட் கியல்போ. 1

826 பூங்கொடி இடையைப் புணர்ந்தசெந் தேனே
புத்தமு தேமறைப் பொருளே
வாங்கொடி விடைகொள் அண்ணலே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

தீங்கொடி யாத வினையனேன் எனினும்
செல்வநின் கோயில்வந் தடைந்தால்
ஈங்கொடி யாத அருட்கணால் நோக்கி
ஏன்எனா திருப்பதும் இயல்போ. 2

827 துப்புநேர் இதழி மகிழ்ந்தகல் யாண
சுந்தரா சுந்தரன் தூதா
மைப்பொதி மிடற்றாய் வளர்திரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
அப்பனே உன்னை விடுவனோ அடியேன்
அறிவிலேன் எனினுநின் கோயிற்
கெய்ப்புடன் வந்தால் வாஎன உரையா
திருப்பதுன் திருவருட் கியல்போ. 3

828 கங்கைஅஞ் சடைகொண் டோங்குசெங் கனியே
கண்கள்மூன் றோங்குசெங் கரும்பே
மங்கல்இல் லாத வண்மையே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
துங்கநின் அடியைத் துதித்திடேன் எனினும்
தொண்டனேன் கோயில்வந் தடைந்தால்
எங்குவந் தாய்நீ யார்என வேனும்
இயம்பிடா திருப்பதும் இயல்போ. 4

829 நன்றுவந் தருளும் நம்பனே யார்க்கும்
நல்லவ னேதிருத் தில்லை
மன்றுவந் தாடும் வள்ளலே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
துன்றுநின் அடியைத் துதித்திடேன் எனினும்
தொண்டனேன் கோயில்வந் தடைந்தால்
என்றுவந் தாய்என் றொருசொலும் சொல்லா
திருப்பதுன் திருவருட் கியல்போ. 5

830 பண்ணினுள் இசையே பாலினுள் சுவையே
பத்தர்கட் கருள்செயும் பரமே
மண்ணினில் ஓங்கி வளம்பெறும் முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
பெண்ணினும் பேதை மதியினேன் எனினும்
பெருமநின் அருள்பெற லாம்என்
றெண்ணிவந் தடைந்தால் கேள்வியில் லாமல்
இருப்பதுன் திருவருட் கியல்போ. 6

831 முன்னிய மறையின் முடிவின்உட் பொருளே
முக்கணா மூவர்க்கும் முதல்வா
மன்னிய கருணை வாரியே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

அன்னியன் அல்லேன் தொண்டனேன் உன்தன்
அருட்பெரும் கோயில்வந் தடைந்தால்
என்இது சிவனே பகைவரைப் போல்பார்த்
திருப்பதுன் திருவருட் கியல்போ. 7

832 நல்லவர் பெறும்நற் செல்வமே மன்றுள்
ஞானநா டகம்புரி நலமே
வல்லவர் மதிக்கும் தெய்வமே முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
புல்லவன் எனினும் அடியனேன் ஐயா
பொய்யல உலகறிந் ததுநீ
இல்லையென் றாலும் விடுவனோ சும்மா
இருப்பதுன் திருவருட் கியல்போ 8

833 பொதுவினின் றருளும் முதல்தனிப் பொருளே
புண்ணியம் விளைகின்ற புலமே
மதுவினின் றோங்கும் பொழில்திரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
புதுமையன் அல்லேன் தொன்றுதொட் டுனது
பூங்கழற் கன்புபூண் டவன்காண்
எதுநினைந் தடைந்தாய் என்றுகே ளாமல்
இருப்பதுன் திருவருட் கியல்போ. 9

834 பொன்னையுற் றவனும் அயனும்நின் றறியாப்
புண்ணியா கண்ணுதல் கரும்பே
மன்னனே மருந்தே வளர்திரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே
உன்னைநான் கனவின் இடத்தும்விட் டொழியேன்
உன்திரு அடித்துணை அறிய
என்னைஈன் றவனே முகமறி யார்போல்
இருப்பதுன் திருவருட் கியல்போ 10

திருச்சிற்றம்பலம்

13. திருமுல்லைவாயில் திருவிண்ணப்பம்

கலிவிருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

835 தாயின் மேவிய தற்பர மேமுல்லை
வாயின் மேவிய மாமணி யேஉன்தன்
கோயின் மேவிநின் கோமலர்த் தாள்தொழா
தேயின் மேவி இருந்தனன் என்னையே. 1

836 தில்லை வாய்ந்த செழுங்கனி யேதிரு
முல்லை வாயில் முதல்சிவ மூர்த்தியே
தொல்லை யேன்உன்தன் தூய்திருக் கோயிலின்
எல்லை சேரஇன் றெத்தவம் செய்ததே.

837 வளங்கொ ளும்முல்லை வாயிலில் மேவிய
குளங்கொ ளும்கண் குருமணி யேஉனை
உளம்கொ ளும்படி உன்திருக் கோயில்இக்
களங்கொள் நெஞ்சினன் கண்டதும் கண்டதே. 3

838 மலைவி லாமுல்லை வாயிலில் மேவிய
விலையி லாமணி யேவிளக் கேசற்றும்
கொலையி லாதவர் கூடும்நின் கோயிலில்
தலைநி லாவத்த வம்என்கொல் செய்ததே. 4

839 சீர்சி றக்கும் திருமுல்லை வாயிலில்
ஏர்சி றக்கும் இயன்மணி யேகொன்றைத்
தார்சி றக்கும் சடைக்கனி யேஉன்தன்
ஊர்சி றக்க உறுவதெவ் வண்ணமே. 5

840 சேல்கொள் பொய்கைத் திருமுல்லை வாயிலில்
பால்கொள் வண்ணப் பரஞ்சுட ரேவிடை
மேல்கொள் சங்கர னேவிம லாஉன்தன்
கால்கொள் அன்பர் கலங்குதல் நன்றதோ. 6

841 வண்ண மாமுல்லை வாயிலின் மேவிய
அண்ண லேஅமு தேஅரை சேநுதல்
கண்ண னேஉனைக் காணவந் தோர்க்கெலாம்
நண்ண ருந்துயர் நல்குதல் நன்றதோ. 7

842 மண்ணின் ஓங்கி வளர்முல்லை வாயில்வாழ்
கண்ணுண் மாமணி யேகரும் பேஉனை
எண்ணும் அன்பர் இழிவடைந் தால்அது
பண்ணும் நின் அருள் பாரிடை வாழ்கவே. 8

843 தீதி லாததி ருமுல்லை வாயில்வாழ்
கோதி லாதகு ணப்பெரும் குன்றமே
வாதி லாதுனை வாழ்த்தவந் தோர் தமை
ஏதி லார்என்றி ருப்பதும் என்கொலோ. 9

844 தேசு லாவிய சீர்முல்லை வாயில்வாழ்
மாசி லாமணி யேமருந் தேசற்றும்
கூசி டாமல்நின் கோயில்வந் துன்புகழ்
பேசி டாத பிழைபொறுத் தாள்வையே. 10

14. காட்சிப் பெருமிதம்

திருவலிதாயம்
கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

845 திரைப டாதசெ ழுங்கட லேசற்றும்
உரைப டாமல்ஒ ளிசெய்பொன் னேபுகழ்
வரைப டாதுவ ளர்வல்லி கேசநீ
தரைப டாக்கந்தை சாத்திய தென்கொலோ. 1

846 சிந்தை நின்றசி வாநந்தச் செல்வமே
எந்தை யேஎமை ஆட்கொண்ட தெய்வமே
தந்தை யேவலி தாயத்த லைவநீ
கந்தை சுற்றும்க ணக்கது என்கொலோ. 2

847 வேலை கொண்ட விடம்உண்ட கண்டனே
மாலை கொண்ட வளர்வல்லி கேசனே
பாலை கொண்ட பராபர நீபழஞ்
சேலை கொண்ட திறம்இது என்கொலோ. 3

848 பன்னு வார்க்கரு ளும்பர மேட்டியே
மன்னும் மாமணி யேவல்லி கேசனே
உன்ன நீஇங்கு டுத்திய கந்தையைத்
துன்னு வார்இல்லை யோபரஞ் ஜோதியே. 4

849 கடுத்த தும்பிய கண்டஅ கண்டனே
மடுத்த நற்புகழ் வாழ்வல்லி கேசநீ
தொடுத்த கந்தையை நீக்கித்து ணிந்தொன்றை
உடுத்து வார்இலை யோஇவ்வு லகிலே. 5

850 ஆல்அ டுத்தஅ ரும்பொரு ளேதிரு
மால்அ டுத்தும கிழ்வல்லி கேசநீ
பால்உ டுத்தப ழங்கந்தை யைவிடத்
தோல்உ டுப்பது வேமிகத் தூய்மையே. 6

851 துன்னும் மாமருந் தேசுட ரேஅருள்
மன்னும் மாணிக்க மேவல்லி கேசரே
துன்னு கந்தையைச் சுற்றிநிற் பீர்எனில்
என்ன நீர்எமக் கீயும்ப ரிசதே. 7

852 மாசில் சோதிம ணிவிளக் கேமறை
வாசி மேவிவ ரும்வல்லி கேசநீர்
தூசில் கந்தையைச் சுற்றிஐ யோபர
தேசி போல்இருந் தீர்என்கொல் செய்வனே. 8

853 தேரும் நற்றவர் சிந்தைஎ னுந்தலம்
சாரும் நற்பொரு ளாம்வலி தாயநீர்
பாரும் மற்றிப்ப ழங்கந்தை சாத்தினீர்
யாரும் அற்றவ ரோசொலும் ஐயரே. 9

854 மெல்லி தாயவி ரைமலர்ப் பாதனே
வல்லி தாயம ருவிய நாதனே
புல்லி தாயஇக் கந்தையைப் போர்த்தினால்
கல்லி தாயநெஞ் சம்கரை கின்றதே. 10

திருச்சிற்றம்பலம்

15. கொடைமடப் புகழ்ச்சி

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

855 திரப்ப டும்திரு மால்அயன் வாழ்த்தத்
தியாகர் என்னும்ஓர் திருப்பெயர் அடைந்தீர்
வரப்ப டுந்திறத் தீர்உமை அடைந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
இரப்ப வர்க்கொன்றும் ஈகிலீர் ஆனால்
யாதுக் கையநீர் இப்பெயர் எடுத்தீர்
உரப்ப டும்தவத் தோர்துதித் தோங்க
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடையீரே. 1

856 வெள்ளி மாமலை வீடென உடையீர்
விளங்கும் பொன்மலை வில்எனக் கொண்டீர்
வள்ளி யீர்என நும்மைவந் தடைந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
எள்ளில் எண்ணெய்போல் எங்கணும் நின்றீர்
ஏழை யேன்குறை ஏன்அறி யீரோ
ஒள்ளி யீர்உமை அன்றிஒன் றறியேன்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 2

857 கள்ள மற்றவாக் கரசும்புத் திரரும்
களிக்க வேபடிக் காசளித் தருளும்
வள்ளல் என்றுமை வந்தடைந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
எள்ள ரும்புகழ்த் தியாகர்என் றொருபேர்
ஏன்கொண் டீர்இரப் போர்க்கிட அன்றோ
உள்ளம் இங்கறி வீர்எனை ஆள்வீர்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 3

858 அண்மை யாகும்சுந் தரர்க்கன்று கச்சூர்
ஆலக் கோயிலில் சோறிரந் தளித்த
வண்மை கேட்டிங்கு வந்தடைந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
திண்மை சேர்திரு மால்விடை ஊர்வீர்
தேவ ரீருக்குச் சிறுமையும் உண்டோ
உண்மை யான்உமை அன்றிமற் றறியேன்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 4

859 சிந்தை நொந்துல கில்பிறர் தம்மைச்
சேர்ந்தி டாதுநும் திருப்பெயர் கேட்டு
வந்த டைந்தஎற் குண்டிலை எனவே
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
இந்த வண்ணம்நீர் இருந்திடு வீரேல்
என்சொ லார்உமை இவ்வுல கத்தார்
உந்தி வந்தவ னோடரி ஏத்த
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 5

860 கல்லை யும்பசும் பொன்எனப் புரிந்த
கருணை கேட்டுமைக் காதலித் திங்கு
வல்லை வந்துநின் றேற்றிடில் சிறிதும்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
இல்லை நீர்பிச்சை எடுக்கின்றீ ரேனும்
இரக்கின் றோர்களும் இட்டுண்பர் கண்டீர்
ஒல்லை இங்கென துளங்கொண்ட தறிவீர்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 6

861 துளிக்கும் கண்ணுடன் சோர்வுற நெஞ்சம்
தோன்ற லேஉமைத் துணைஎன நம்பி
வளிக்குள் பஞ்சனை யேன்அடைந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
அளிக்கும் தன்மையீர் வாழ்ந்திவண் இருக்க
அடிய னேன்அலை கின்றதும் அழகோ
ஒளிக்கும் தன்மைதான் உமக்கும்உண் டேயோ
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 7

862 குற்றம் எத்தனை அத்தனை எல்லாம்
குணம்எ னக்கொளும் குணக்கடல் என்றே
மற்றும் நான்நம்பி ஈங்குவந் தேற்றால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
கற்ற நற்றவர்க் கேஅருள் வீரேல் 8
கடைய னேன்எந்தக் கடைத்தலைச் செல்கேன்
உற்ற நற்றுணை உமைஅன்றி அறியேன்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே.

863 பொய்யி லார்க்குமுன் பொற்கிழி அளித்த
புலவர் ஏறெனப் புகழ்ந்திடக் கேட்டு
மையல் கொண்டிடும் மனத்தொடும் வந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
ஐய நும்அடி அன்றிஓர் துணையும்
அறிந்தி லேன் இஃத றிந்தரு ளீரேல்
உய்யும் வண்ணம்எவ் வண்ணம்என் செய்கேன்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 9

864 தாயி லார்என நெஞ்சகம் தளர்ந்தேன்
தந்தை உம்திருச் சந்நிதி அடைந்தேன்
வாயி லார்என இருக்கின்றீர் அல்லால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
கோயி லாகஎன் நெஞ்சகத் தமர்ந்த
குணத்தி னீர்என்தன் குறைஅறி யீரோ
ஓயி லாதுநல் தொண்டருக் கருள்வான்
ஓங்கு சீர்ஒற்றி யூர்உடை யீரே. 10

திருச்சிற்றம்பலம்

16. திருவருள் வேட்கை

திருவொற்றியூர்
கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

865 மன்அமுதாம் உன்தாள் வழுத்துகின்ற நல்லோர்க்கே
இன்அமுதம் ஓர்பொழுதும் இட்டறியேன் ஆயிடினும்
முன்அமுதா உண்டகளம் முன்னிமுன்னி வாடுகின்றேன்
என்அமுதே இன்னும் இரக்கந்தான் தோன்றாதோ. 1

866 தோன்றாத் துணையாகும் சோதியே நின்அடிக்கே
ஆன்றார்த்த அன்போ டகங்குழையேன் ஆயிடினும்
ஊன்றார்த் தரித்ததனை உன்னிஉன்னி வாடுகின்றேன்
தேன்றார்ச் சடையாய்உன் சித்தம் இரங்காதோ 2

867 காதார் கடுவிழியார் காமவலைக் குள்ளாகி
ஆதாரம் இன்றி அலைதந்தேன் ஆயிடினும்
போதார் நினதுகழல் பொன்அடியே போற்றுகின்றேன்
நீதாவோ உன்னுடைய நெஞ்சம் இரங்காதோ 3

868 இலைவேட்ட மாதர்தம தீனநல மேவிழைந்து
கொலைவேட் டுழலும் கொடியனேன் ஆயிடினும்
நிலைவேட்ட நின்அருட்கே நின்றுநின்று வாடுகின்றேன்
கலைவேட்ட வேணியனே கருணைசற்றும் கொண்டிலையே. 4

869 கொண்டல்நிறத் தோனும் குணிக்கரிய நின் அடிக்கே
தொண்டறிந்து செய்யாத துட்டனேன் ஆயிடினும்
எண்டகநின் பொன்அருளை எண்ணிஎண்ணி வாடுகின்றேன்
தண்டலைசூழ் ஒற்றியுளாய் தயவுசற்றும் சார்ந்திலையே. 5

870 சாரா வறுஞ்சார்பில் சார்ந்தரைசே உன்னுடைய
தாரார் மலரடியைத் தாழ்ந்தேத்தேன் ஆயிடினும்
நேராய்நின் சந்நிதிக்கண் நின்றுநின்று வாடுகின்றேன்
ஓராயோ சற்றேனும் ஒற்றியூர் உத்தமனே. 6

871 ஊர்மதிக்க வீணில் உளறுகின்ற தல்லதுநின்
சீர்மதிக்க நின்அடியைத் தேர்ந்தேத்தேன் ஆயிடினும்
கார்மதிக்கும் நஞ்சம்உண்ட கண்டநினைந் துள்குகின்றேன்
ஏர்மதிக்கும் ஒற்றியூர் எந்தையளி எய்தாயோ. 7

872 தாய்க்கும்இனி தாகும்உன் தன் தாள்மலரை ஏத்தாது
நாய்க்கும் கடையாய் நலிகின்றேன் ஆயிடினும்
வாய்க்கும்உன் தன் சந்நிதிக்கண் வந்துவந்து வாடுகின்றேன்
தூய்க்குமரன் தந்தாய்என் சோர்வறிந்து தீராயோ. 8

873 அறியாப் பருவத் தடியேனை ஆட்கொண்ட
நெறியாம் கருணை நினைந்துருகேன் ஆயிடினும்
குறியாப் பொருளேஉன் கோயிலிடை வந்துநின்றும்
பறியாப் பிணியேன் பரதவிப்பைப் பார்த்திலையே. 9

874 பார்நடையாம் கானில் பரிந்துழல்வ தல்லதுநின்
சீர்நடையாம் நன்னெறியில் சேர்ந்திலேன் ஆயிடினும்
நேர்நடையாம் நின்கோயில் நின்றுநின்று வாடுகின்றேன்
வார்நடையார் காணா வளர்ஒற்றி மன்அமுதே. 10

திருச்சிற்றம்பலம்

17. அபராத விண்ணப்பம்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

875 தேவியல் அறியாச் சிறியனேன் பிழையைத் திருவுளத் தெண்ணிநீ கோபம்
மேவிஇங் கையோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
மூவிரு முகம்சேர் முத்தினை அளித்த முழுச்சுவை முதிர்ந்தசெங் கரும்பே
சேவின்மேல் ஓங்கும் செழுமணிக் குன்றே திருவொற்றி யூர்மகிழ் தேவே. 1

876 உய்யஒன் றறியா ஒதியனேன் பிழையை உன்திரு உள்ளத்தில் கொண்டே
வெய்யன்என் றையோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
செய்யநெட் டிலைவேல் சேய்தனை அளித்த தெய்வமே ஆநந்தத் திரட்டே
மையலற் றவர்தம் மனத்தொளிர் விளக்கே வளம்பெறும் ஒற்றியூர் மணியே.

877 கழல்கொள்உன் அருமைத் திருவடிமலரைக் கருதிடாப்பிழை தனைக்குறித்தே
விழலன்என் றையோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
அழல்அயில் கரத்தெம் ஐயனை ஈன்ற அப்பனே அயனுமால் அறியாத்
தழல்நிறப் பவளக் குன்றமே ஒற்றித் தனிநகர் அமர்ந்தருள் தகையே. 3

878 வாடனக் குறமும் வடுக்கணார்க் குருகும் வஞ்சனேன் பிழைதனைக் குறித்தே
வேடன்என் றையோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
நீடயில் படைசேர் கரத்தனை அளித்த நிருத்தனே நித்தனே நிமலா
ஏடகத் தமர்ந்த ஈசனே தில்லை எந்தையே ஒற்றியூர் இறையே. 4

879 நாணம்ஒன் றில்லா நாயினேன் பிழையை நாடிநின் திருவுளத் தடைத்தே
வீணன்என் றையோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
காணநின் றடியார்க் கருள்தரும் பொருளே கடிமதில் ஒற்றியூர்க் கரசே
பூணயில் கரத்தோர் புத்தமு தெழுந்த புண்ணியப் புனிதவா ரிதியே. 5

880 அஞ்செழுத் தோதி உய்ந்திடாப் பிழையை ஐயநின் திருவுளத் தெண்ணி
வெஞ்சன்என் றையோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
கஞ்சன்மால் முதலோர் உயிர்பெற விடத்தைக் களத்திருத் தியஅருட்கடலே
சஞ்சித மறுக்கும் சண்முகம் உடையோன் தந்தையே ஒற்றிஎம் தவமே. 6

881 நம்பினேன் நின்றன் திருவடி மலரை நாயினேன் பிழைதனைக் குறியேல்
வெம்பினேன் ஐயோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
தும்பிமா முகனை வேலனை ஈன்ற தோன்றலே வச்சிரத் தூணே
அம்பிகா பதியே அண்ணலே முக்கண் அத்தனே ஒற்றியூர் அமுதே. 7

882 சூழ்ந்தவஞ் சகனேன் பிழைதனைக் குறியேல் துன்பசா கரந்தனில் அழுந்தி
வீழ்ந்தனன் ஐயோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
வாழ்ந்தமா தவர்கள் மனத்தொளிர் ஒளியே வள்ளலே மழவிடை யவனே
போழ்ந்தவேல் படைகொள் புனிதனை அளித்த பூரணா ஒற்றியூர்ப் பொருளே. 8

883 துரும்பினேன் பிழையைத் திருவுளத் தடையேல் துய்யநின் அருட்கடல் ஆட
விரும்பினேன் ஐயோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
கரும்பின்நேர் மொழியார் இருவரை மணக்கும் கனிதனை அளித்தகற் பகமே
இரும்பின்நேர் நெஞ்சர் எனினும் என் போல்வார்க் கின்அருள் தரும்ஒற்றி இறையே.

884 கட்டினேன் பாபக்கொடுஞ்சுமை எடுப்பேன் கடும் பிழை கருதிடேல் நின்னை
விட்டிலேன் ஐயோ கைவிடில் சிவனே வேறுநான் யாதுசெய் வேனே
சுட்டிலாப் பொருளே சுகப்பெருங் கடலே தூய்த்திரு ஒற்றியூர்த் துணையே
தட்டிலாக் குணத்தோர் புகழ்செயும் குகனைத் தந்தருள் தருந்தயாநிதியே. 10

18. அறிவரும் பெருமை

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

885 நாயினும் கடையேன் என்செய்வேன் பிணியால்நலிகின்றநலிவினை அறிந்தும்
தாயினும் இனியாய் இன்னும்நீ வரவு தாழ்த்தனை என்கொலென் றறியேன்
மாயினும் அல்லால் வாழினும் நினது மலரடி அன்றிஒன் றேத்தேன்
காயினும் என்னைக் கனியினும் நின்னைக் கனவினும் விட்டிடேன் காணே. 1

886 காண்பது கருதி மாலொடு மலர்வாழ் கடவுளர் இருவரும் தங்கள்
மாண்பது மாறி வேறுரு எடுத்தும் வள்ளல்நின் உருஅறிந் திலரே
கோண்பதர் நெஞ்சக் கொடியனேன் எந்தக்கொள்கை கொண் டறிகுவதையா
பூண்பது பணியாய் பொதுவில்நின் றாடும் புனிதநின் அருளலா தின்றே. 2

887 இன்றுவந் தெனைநீ அடிமைகொள் ளாயேல் எவ்வுல கத்தரும் தூற்ற
நன்றுநின் றன்மேல் பழிவரும் என்மேல் பழியிலை நவின்றனன் ஐயா
அன்றுவந் தொருசேய்க் கருள்புரிந் தாண்ட அண்ணலே ஒற்றியூர் அரசே
நின்றுசிற் சபைக்குள் நடம்செயும் கருணா நிலயமே நின்மலச் சுடரே. 3

888 சுடர்கொளும் மணிப்பூண் முலைமடவியர்தம் தொடக்கினில் பட்டுழன்றோயா
இடர்கொளும் எனைநீ ஆட்கொளும் நாள்தான் எந்தநாள் அந்தநாள் உரையாய்
படர்கொளும் வானோர் அமுதுண நஞ்சைப் பரிந்துண்ட கருணைஅம்பரமே
குடர்கொளும் சூலப் படைஉடைய வனே கோதையோர் கூறுடையவனே. 4

889 உடைமைவைத் தெனக்கின் றருள்செயா விடினும் ஒப்பிலாய் நின்னடிக் கெனையே
அடைமைவைத் தேனும் நின்அருட் பொருள்இங் களித்திட வேண்டும் இன்றெவைக்கும்
கடைமையேன் வேறோர் தேவரை அறியேன் கடவுள்நின் திருவடி அறிக
படைமைசேர் கரத்தெம் பசுபதி நீயே என்உளம் பார்த்துநின் றாயே. 5

890 பார்த்துநிற் கின்றாய் யாவையும் எளியேன் பரதவித் துறுகணால் நெஞ்சம்
வேர்த்துநிற் கின்றேன் கண்டிலைகொல்லோ விடம்உண்டகண்டன் நீஅன்றோ
ஆர்த்துநிற் கின்றார் ஐம்புல வேடர் அவர்க்கிலக் காவனோ தமியேன்
ஓர்த்துநிற் கின்றார் பரவுநல் ஒற்றி யூரில்வாழ் என்உற வினனே. 6

891 உறவனே உன்னை உள்கிநெஞ் சழலின் உறும்இழு தெனக்கசிந் துருகா
மறவனேன் தன்னை ஆட்கொளாவிடில்யான் வருந்துவதன்றிஎன் செய்கேன்
நிறவனே வெள்ளை நீறணி பவனே நெற்றிமேல் கண்ணுடை யவனே
அறவனே தில்லை அம்பலத் தாடும் அப்பனே ஒற்றியூர்க் கரைசே. 7

892 கரைபடா வஞ்சப் பவக்கடல் உழக்கும் கடையனேன் நின்திரு வடிக்கு
விரைபடாமலர் போல் இருந்துழல்கின்றேன் வெற்றனேன் என் செயவிரைகேன்
திரைபடாக் கருணைச் செல்வவா ரிதியே திருவொற்றி யூர்வளர் தேனே
உரைபடாப் பொன்னே புரைபடா மணியே உண்ணுதற் கினியநல் அமுதே.

893 நல்அமு தனையார் நின்திரு வடிக்கே நண்புவைத் துருகுகின் றனரால்
புல்அமு தனையேன் என்செய்வான் பிறந்தேன் புண்ணியம் என்பதொன் றறியேன்
சொல்அமு தனைய தோகைஓர் பாகம் துன்னிய தோன்றலே கனியாக்
கல்அமு தாக்கும் கடன்உனக் கன்றோ கடையனேன் கழறுவ தென்னே. 9

894 என்னைநின் னவனாக் கொண்டுநின் கருணை என்னும்நன் னீரினால் ஆட்டி
அன்னைஅப் பனுமாய்ப் பரிவுகொண் டாண்ட அண்ணலே நண்ணரும் பொருளே
உன்னருந் தெய்வ நாயக மணியே ஒற்றியூர் மேவும்என் உறவே
நன்னர்செய் கின்றோய் என்செய்வேன் இதற்கு நன்குகைம் மாறுநா யேனே 10

திருச்சிற்றம்பலம்

19. அருள்விடை வேட்கை

திருவொற்றியூர்
கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

895 போகம் கொண்ட புணர்முலை மாதொரு
பாகம் கொண்ட படம்பக்க நாதரே
மாகம் கொண்ட வளம்பொழில் ஒற்றியின்
மோகம் கொண்டஎம் முன்நின் றருளிரோ. 1

896 தவள நீற்றுமெய்ச் சாந்தவி னோதரே
பவள மேனிப் படம்பக்க நாதரே
கவள வீற்றுக் கரிஉரி போர்த்தநீர்
இவளை ஒற்றிவிட் டெங்ஙனம் சென்றிரோ. 2

897 சீல மேவித் திகழ்அனல் கண்ஒன்று
பால மேவும் படம்பக்க நாதரே
ஞால மேவும் நவையைஅ கற்றமுன்
ஆலம் உண்டவர் அல்லிர்கொல் ஐயரே. 3

898 உடைகொள் கோவணத் துற்றஅ ழகரே
படைகொள் சூலப் படம்பக்க நாதரே
கடைகொள் நஞ்சுண்டு கண்டம்க றுத்தநீர்
இடையில் ஒற்றிவிட் டெங்ஙனம் சென்றிரோ. 4

899 நிறைய வாழ்தொண்டர் நீடுற வன்பவம்
பறைய நின்றப டம்பக்க நாதரே
உறைய மாணிக்கு யிர்அளித் திட்டநீர்
குறையி லாஒற்றிக் கோயிற்கண் உள்ளிரோ. 5

900 வணங்கொள் நாகம ணித்தலை ஐந்துடைப்
பணங்கொள் செல்வப்ப டம்பக்க நாதரே
கணங்கொள் காமனைக் காய்ந்துயிர் ஈந்தநீர்
வணங்கு வார்க்கென்கொல் வாய்திற வாததே.

901 நாட நல்இசை நல்கிய மூவர்தம்
பாடல் கேட்கும்ப டம்பக்க நாதரே
வாடல் என்றொரு மாணிக் களித்தநீர்
ஈடில் என்னள வெங்கொளித் திட்டிரோ. 7

902 சுலவு காற்றனல் தூயமண் விண்புனல்
பலவு மாகும்ப டம்பக்க நாதரே
நிலவு தண்மதி நீள்முடி வைத்தநீர்
குலவும் என்றன்கு றைதவிர்க் கீர்கொலோ. 8

903 அடியர் நெஞ்சத்து அருட் பெருஞ் ஜோதிஓர்
படிவ மாகும்ப டம்பக்க நாதரே
நெடிய மாலுக்கு நேமி அளித்தநீர்
மிடிய னேன்அருள் மேவ விரும்பிரோ. 9

904 மதிகொள் அன்பர்ம னமெனும் திவ்வியப்
பதிகொள் செல்வப்ப டம்பக்க நாதரே
விதிகொள் துன்பத்தை வீட்டி அளித்தநீர்
துதிகொள் வீர்என்று யரைத்து ரத்துமே. 10

திருச்சிற்றம்பலம்

20. எழுத்தறியும் பெருமான் மாலை

திருவொற்றியூர்
கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

905 சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்காள் ஆக்காதே
நிந்தைஉறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ
எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 1

906 மத்தனைவன் நெஞ்சகனை வஞ்சகனை வன்பிணிகொள்
பித்தனைவீண் நாள்போக்கும் பேயேனை நாயேனை
முத்தனையாய் உன்றன் முளரித்தாட் காளாக்க
எத்தனைநாள் செல்லும் எழுத்தறியும் பெருமானே. 2

907 நன்னெறிசேர் அன்பர்தமை நாடிடவும் நின்புகழின்
சென்னெறியைச் சேர்ந்திடவும் செய்தாய் எனக்குனக்கு
முன்அறியேன் பின்அறியேன் மூடனேன் கைம்மாறிங்
கென் அறிவேன் ஐயா எழுத்தறியும் பெருமானே. 3

908 மைப்படியும் கண்ணார் மயல்உழக்கச் செய்வாயோ
கைப்படிய உன்றன் கழல்கருதச் செய்வாயோ 4
இப்படிஎன் றப்படிஎன் றென்னறிவேன் உன்சித்தம்
எப்படியோ ஐயா எழுத்தறியும் பெருமானே.

909 நில்லா உடம்பை நிலைஎன்றே நேசிக்கும்
பொல்லாத நெஞ்சப் புலையனேன் இவ்வுலகில்
சொல்லா மனநோயால் சோர்வுற் றலையும்அல்லல்
எல்லாம் அறிவாய் எழுத்தறியும் பெருமானே. 5

910 தீ தறிவேன் நன்கணுவும் செய்யேன்வீண் நாள்போக்கும்
வாதறிவேன் வஞ்சகனேன் வல்வினையேன் வாய்மையிலேன்
சூதறிவேன் மால்அயனும் சொல்லறிய நின்பெருமை
யாதறிவேன் ஐயா எழுத்தறியும் பெருமானே. 6

911 மாறாத வன்பிணியால் மாழாந்து நெஞ்சயர்ந்தே
கூறாத துன்பக் கொடுங்கடற்குள் வீழ்ந்தடியேன்
ஆறா தரற்றி அழுகின்றேன் நின்செவியில்
ஏறாதோ ஐயா எழுத்தறியும் பெருமானே. 7

912 உண்ணாடும் வல்வினையால் ஓயாப் பிணி உழந்து
புண்ணாக நெஞ்சம் புழுங்குகின்றேன் புண்ணியனே
கண்ணாளா உன்றன் கருணை எனக்களிக்க
எண்ணாயோ ஐயா எழுத்தறியும் பெருமானே. 8

913 புன்செய்கை மாறாப் புலையமட மங்கையர் தம்
வன்செய்கை யாலே மயங்குகின்ற வஞ்சகனேன்
கொன்செய்கை மாறாத கூற்றன் வருவானேல்
என்செய்வேன் ஐயா எழுத்தறியும் பெருமானே. 9

914 சங்குடையான் தாமரையான் தாள்முடியும் காண்பரிதாம்
கொங்குடைய கொன்றைக் குளிர்சடையாய் கோதைஒரு
பங்குடையாய் ஏழைமுகம் பாராது தள்ளிவிட்டால்
எங்கடைவேன் ஐயா எழுத்தறியும் பெருமானே. 10

915 மன்றி னிடைநடஞ்செய் மாணிக்க மாமலையே
வென்றிமழுக் கையுடைய வித்தகனே என்றென்று
கன்றின் அயர்ந்தழும்என் கண்ணீர் துடைத்தருள
என்று வருவாய் எழுத்தறியும் பெருமானே. 11

916 மன்னளவில் சோதி மணிபோல்வாய் மாதவத்தோர்
தென்னளவும் வேணிச் சிவனே எனஒருகால்
சொன்னளவில் சொன்னவர் தம் துன்பொழிப்பாய் என்பர்அது
என்னளவில் காணேன் எழுத்தறியும் பெருமானே. 12

917 மின்போல்வார் இச்சையினால் வெம்புகின்றேன் ஆனாலும்
தன்போல்வாய் என்ஈன்ற தாய்போல்வாய் சார்ந்துரையாப் 13
பொன் போல்வாய் நின்அருள் இப் போதடியேன் பெற்றேனேல்
என்போல்வார் இல்லை எழுத்தறியும் பெருமானே.

918 பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்துநின்றார் ஐயோநான்
காமாந்த காரம்எனும் கள்ளுண்டு கண்மூடி
ஏமாந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 14

919 பன்னரும்இப் பார்நடையில் பாடுழன்ற பாதகனேன்
துன்னியநின் பொன்னடியைச் சூழாதேன் ஆயிடினும்
புன்னிகரேன் குற்றம் பொறுக்கப் பொறுப்புனக்கே
என்னருமைத் தாய்நீ எழுத்தறியும் பெருமானே. 15

920 வீட்டுக் கடங்கா விளையாட்டுப் பிள்ளைஎனத்
தேட்டுக் கடங்காத தீமனத்தால் ஆந்துயரம்
பாட்டுக் கடங்காநின் பத்தர் அடிப்புகழ்போல்
ஏட்டுக் கடங்கா தெழுத்தறியும் பெருமானே. 16

921 பன்னு மனத்தால் பரிசிழந்த பாதகனேன்
துன்னுமல வெங்கதிரோன் சூழ்கின்ற சோடையினால்
நின்னருள்நீர் வேட்டு நிலைகலங்கி வாடுகின்றேன்
இன்னும்அறி யாயோ எழுத்தறியும் பெருமானே. 17

922 கல்லை நிகராம் கடைமனம்போம் கான்நெறியில்
புல்லை மதித் தையோபைம் பூஇழந்த பொய்யடியேன்
ஒல்லைபடு கின்ற ஒறுவே தனைதனக்கோர்
எல்லை அறியேன் எழுத்தறியும் பெருமானே. 18

923 பொன்னைமதித் தையாநின் பொன்னடியைப் போற்றாத
கன்னிகரும் நெஞ்சால் கலங்குகின்ற கைதவனேன்
இன்னல் உழக்கின்ற ஏழைகட்கும் ஏழைகண்டாய்
என்னை விடாதே எழுத்தறியும் பெருமானே. 19

924 மாசுவரே என்னும் மலக்கடலில் வீழ்ந்துலகோர்
ஆசுவரே என்ன அலைவேனை ஆளாயேல்
கூசுவரே கைகொட்டிக் கூடிச் சிரித்தடியார்
ஏசுவரே ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 20

925 ஊர்சொல்வேன் பேர்சொல்வேன் உத்தமனே நின்திருத்தாள்
சீர்சொல்வேன் என்றனைநீ சேர்க்கா தகற்றுவையேல்
நேர்சொல்வாய் உன்றனக்கு நீதியீ தல்லஎன்றே
யார்சொல்வார் ஐயா எழுத்தறியும் பெருமானே. 21

926 நீக்கமிலா மெய்யடியர் நேசமிலாப் பொய்யடியேன்
ஊக்கமிலா நெஞ்சத்தின் ஓட்டகலச் செய்வாயேல் 22
தூக்கமிலா ஆனந்தத் தூக்கம்அன்றி மற்றும்இங்கோர்
ஏக்கமிலேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே.

927 போகின்ற வஞ்சகரைப் போக்கிஉன்றன் பொன்அடிக்காள்
ஆகின்ற மேலோர் அடிவழுத்தா நாயேற்குப்
பாகின் தனிச்சுவையிற் பாங்காகும் நின்அருளை
ஈகின்ற தென்றோ எழுத்தறியும் பெருமானே. 23

928 ஊழை அகற்ற உளவறியாப் பொய்யன் இவன்
பீழைமனம் நம்மைப் பெறாதம் மனங்கொடிய
தாழைஎன எண்ணிஎன்னைத் தள்ளிவிட்டால் என்செய்வேன்
ஏழைநான் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 24

929 மடுக்க முடியா மலஇருட்டில் சென்றுமனம்
கடுக்கமுடி யாப்புலனால் கட்டிச் சுமக்கவைத்த
தொடுக்க முடியாத துன்பச் சுமையை இனி
எடுக்கமுடி யாதே எழுத்தறியும் பெருமானே. 25

930 முள்ளளவு நெஞ்ச முழுப்புலைய மாதர்களாம்
கள்ளளவு நாயில் கடைப்பட்ட என்றனக்கு
உள்ளளவும் அன்பர்க் குதவும்உன் தாட் கன்பொருசிற்
றெள்ளளவும் உண்டோ எழுத்தறியும் பெருமானே. 26

931 பண்ண முடியாப் பரிபவங்கொண் டிவ்வுலகில்
நண்ண முடியா நலங்கருதி வாடுகின்றேன்
உண்ணமுடி யா அமுதாம் உன்னை அன்றி எவ்வெவர்க்கும்
எண்ணமுடி யாதே எழுத்தறியும் பெருமானே. 27

932 வெங்கொளித்தேள் போன்ற வினையால் வெதும்பிமனம்
அங்கொளிக்கா துன்னை அழைத்தழுது வாடுகின்றேன்
இங்கொளிக்கா நஞ்சமுண்ட என்அருமை அப்பாநீ
எங்கொளித்தாய் ஒற்றி எழுத்தறியும் பெருமானே. 28

933 பித்தளைக்கும் காமப் பெரும்பேய் மயக்குமயல்
வித்தனைத்தாம் ஆணவம்பொய் வீறும்அழுக் காறுசினம்
கொத்தனைத்தாம் வஞ்சம் கொலைமுதலாம் பாவங்கள்
இத்தனைக்கும் நான்காண் எழுத்தறியும் பெருமானே. 29

934 ஒல்லையே நஞ்சனைத்தும் உண்ட தயாநிதிநீ
அல்லையோ நின்றிங் கயர்வேன்முன் வந்தொருசொல்
சொல்லையோ ஒற்றியூர்த் தூயதிருக் கோயிலுள்நீ
இல்லையோ ஐயா எழுத்தறியும் பெருமானே. 30

935 நினையுடையாய் நீஅன்றி நேடில்எங்கும் இல்லாதாய்
மனையுடையார் மக்கள்எனும் வாழ்க்கையிடைப் பட்டவமே 31
இனையுடையான் என்றிங் கெனையாள்வ துன்கடனே
எனையுடையாய் ஒற்றி எழுத்தறியும் பெருமானே.

21. நெஞ்சொடு நேர்தல்

திருவொற்றியூர்
கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

936 ஒக்க நெஞ்சமே ஒற்றி யூர்ப்படம்
பக்க நாதனைப் பணிந்து வாழ்த்தினால்
மிக்க காமத்தின் வெம்மை யால்வரும்
துக்க மியாவையும் தூர ஓடுமே. 1

937 ஓடும் நெஞ்சகமே ஒன்று கேட்டிநீ
நீடும் ஒற்றியூர் நிமலன் மூவர்கள்
பாடும் எம்படம் பக்க நாதன் தாள்
நாடு நாடிடில் நாடு நம்மதே. 2

938 நம்பு நெஞ்சமே நன்மை எய்துமால்
அம்பு யன்புகழ் அண்ணல் ஒற்றியூர்ப்
பம்பு சீர்ப்படம் பக்கன் ஒன்னலார்
தம்பு ரஞ்சுடும் தம்பி ரானையே. 3

939 தம்ப லம்பெறும் தைய லார்கணால்
வெம்ப லந்தரும் வெய்ய நெஞ்சமே
அம்ப லத்தினில் அமுதை ஒற்றியூர்ச்
செம்ப லத்தைநீ சிந்தை செய்வையே. 4

940 செய்யும் வண்ணம்நீ தேறி நெஞ்சமே
உய்யும் வண்ணமாம் ஒற்றி யூர்க்குளே
மெய்யும் வண்ணமா ணிக்க வெற்பருள்
பெய்யும் வண்ணமே பெறுதல் வேண்டுமே. 5

941 வேண்டும் நெஞ்சமே மேவி ஒற்றியூர்
ஆண்டு நின்றருள் அரசின் பொற்பதம்
பூண்டு கொண்டுளே போற்றி நிற்பையேல்
யாண்டும் துன்பம்நீ அடைதல் இல்லையே. 6

942 இல்லை உண்டென எய்தி ஐயுறும்
கல்லை யொத்தஎன் கன்ம நெஞ்சமே
ஒல்லை ஒற்றியூர் உற்று வாழ்தியேல்
நல்லை நல்லைநீ நட்பின் மேலையே. 7

943 மேலை அந்தகன் வெய்ய தூதுவர்
ஓலை காட்டுமுன் ஒற்றி யூரில்வாழ்
பாலை சேர்படம் பக்க நாதர்தம்
காலை நாடிநற் கதியின் நிற்பையே.

944 நிற்ப தென்றுநீ நீல நெஞ்சமே
அற்ப மாதர் தம் அவலம் நீங்கியே
சிற்ப ரன்திருத் தில்லை அம்பலப்
பொற்பன் ஒற்றியில் புகுந்து போற்றியே. 9

945 போற்றி ஒற்றியூர்ப் புண்ணி யன்திரு
நீற்றி னான் தனை நினைந்து நிற்பையேல்
தோற்ற ரும்பரஞ் சோதி நல்அருள்
ஊற்றெ ழும்கடல் ஒக்க நெஞ்சமே. 10

திருச்சிற்றம்பலம்

22. திருப்புகழ் விலாசம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

946 துங்க வெண்பொடி அணிந்துநின் கோயில்
தொழும்பு செய்துநின் துணைப்பதம் ஏத்திச்
செங்கண் மால்அயன் தேடியும் காணாச்
செல்வ நின்அருள் சேர்குவ தென்றோ
எங்கள் உள்ளுவந் தூறிய அமுதே
இன்ப மேஇமை யான்மகட் கரசே
திங்கள் தங்கிய சடையுடை மருந்தே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 1

947 கண்ண னோடயன் காண்பரும் சுடரே
கந்தன் என்னும்ஓர் கனிதரும் தருவே
எண்ண மேதகும் அன்பர்தம் துணையே
இலங்கும் திவ்விய எண்குணப் பொருப்பே
அண்ண லேதிரு ஆலங்காட் டுறையும்
அம்மை அப்பனே அடியனேன் தன்னைத்
திண்ண மேஅடித் தொழும்பனாய்ச் செய்வாய்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 2

948 விடங்க லந்தருள் மிடறுடை யவனே
வேதன் மால்புகழ் விடையுடை யவனே
கடங்க லந்தமா உரியுடை யவனே
கந்த னைத்தரும் கனிவுடை யவனே
இடங்க லந்தபெண் கூறுடை யவனே
எழில்கொள் சாமத்தின் இசையுடை யவனே
திடங்க லந்தகூர் மழுவுடை யவனே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 3

949 கஞ்ச னோர்தலை நகத்தடர்த் தவனே
காமன் வெந்திடக் கண்விழித் தவனே
தஞ்ச மானவர்க் கருள்செயும் பரனே
சாமிக் கோர்திருத் தந்தையா னவனே
நஞ்சம் ஆர் மணி கண்டனே எவைக்கும்
நாத னேசிவ ஞானிகட் கரசே
செஞ்சொல் மாமறை ஏத்துறும் பதனே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 4

950 ஏல வார்குழ லாள்இடத் தவனே
என்னை ஆண்டவ னேஎன தரசே
கோல மாகமால் உருக்கொண்டும் காணாக்
குரைக ழற்பதக் கோமளக் கொழுந்தே
ஞால மீதில்எம் போல்பவர் பிழையை
நாடி டாதருள் நற்குணக் குன்றே
சீல மேவிய தவத்தினர் போற்றத்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 5

951 ஆறு வாண்முகத் தமுதெழும் கடலே
அயனும் மாலும்நின் றறிவரும் பொருளே
ஏறு மீதுவந் தேறும்எம் அரசே
எந்தை யேஎமை ஏன்றுகொள் இறையே
வீறு கொன்றையம் சடையுடைக் கனியே
வேதம் நாறிய மென்மலர்ப் பதனே
தேறு நெஞ்சினர் நாள்தொறும் வாழ்த்தத்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 6

952 மாறு பூத்தஎன் நெஞ்சினைத் திருத்தி
மயக்கம் நீக்கிட வருகுவ தென்றோ
ஏறு பூத்தஎன் இன்னுயிர்க் குயிரே
யாவு மாகிநின் றிலங்கிய பொருளே
நீறு பூத்தொளி நிறைந்தவெண் நெருப்பே
நித்தி யானந்தர்க் குற்றநல் உறவே
சேறு பூத்தசெந் தாமரை முத்தம்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 7

953 மாலின் கண்மலர் மலர்திருப் பதனே
மயிலின் மேல்வரு மகவுடை யவனே
ஆலின் கீழ்அறம் அருள்புரிந் தவனே
அரஎன் போர்களை அடிமைகொள் பவனே
காலில் கூற்றுதைத் தருள்செயும் சிவனே 8
கடவு ளேநெற்றிக் கண்ணுடை யவனே
சேலின் நீள்வயல் செறிந்தெழில் ஓங்கித்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே.

954 நாட்டும் முப்புரம் நகைத்தெரித் தவனே
நண்ணி அம்பலம் நடஞ்செயும் பதனே
வேட்டு வெண்தலைத் தார்புனைந் தவனே
வேடன் எச்சிலை விரும்பிஉண் டவனே
கோட்டு மேருவைக் கோட்டிய புயனே
குற்ற முங்குண மாக்குறிப் பவனே
தீட்டும் மெய்ப்புகழ்த் திசைபரந் தோங்கத்
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 9

955 அம்ப லத்துள்நின் றாடவல் லானே
ஆன்இ வர்ந்துவந் தருள்புரி பவனே
சம்பு சங்கர சிவசிவ என்போர்
தங்கள் உள்ளகம் சார்ந்திருப் பவனே
தும்பை வன்னியம் சடைமுடி யவனே
தூய னேபரஞ் சோதியே எங்கள்
செம்பொ னேசெழும் பவளமா மலையே
திகழும் ஒற்றியூர்ச் சிவபெரு மானே. 10

திருச்சிற்றம்பலம்

23. திருச்சாதனத் தெய்வத் திறம்

பொது
எண்சீர்க்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

956 உடையாய்உன் அடியவர்க்கும் அவர்மேல் பூண்ட
ஒண்மணியாம் கண்மணிக்கும் ஓங்கு சைவ
அடையாளம் என்னஒளிர் வெண்ணீற் றுக்கும்
அன்பிலேன் அஞ்சாமல் அந்தோ அந்தோ
நடையாய உடல் முழுதும் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்பாவி நாவைச் சற்றும்
இடையாத கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 1

957 கண்ணுதலே நின்அடியார் தமையும் நோக்கேன்
கண்மணிமா லைக்கெனினும் கனிந்து நில்லேன்
பண்ணுதல்சேர் திருநீற்றுக் கோலம் தன்னைப்
பார்த்தேனும் அஞ்சுகிலேன் பயனி லாமே
நண்ணுதல்சேர் உடம்பெல்லாம் நாவாய் நின்று
நவில்கின்றேன் என்கொடிய நாவை அந்தோ
எண்ணுதல்சேர் கொடுந்தீயால் சுடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 2

958 வஞ்சமிலார் நெஞ்சகத்தே மருவும் முக்கண்
மாமணியே உனைநினையேன் வாளா நாளைக்
கஞ்சமலர் முகத்தியர்க்கும் வாதில் தோன்றும்
களிப்பினுக்கும் கழிக்கின்றேன் கடைய னேனை

1. எண்சீர். ச.மு.க., ஆ. பா. 2. எழுசீர். தொ. வே.

நஞ்சமுணக் கொடுத்துமடித் திடினும் வாளால்
நசிப்புறவே துணித்திடினும் நலியத் தீயால்
எஞ்சலுறச் சுடினும்அன்றி அந்தோ இன்னும்
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 3

959 அருள்பழுக்கும் கற்பகமே அரசே முக்கண்
ஆரமுதே நினைப்புகழேன் அந்தோ வஞ்ச
மருள்பழுக்கும் நெஞ்சகத்தேன் வாளா நாளை
வாதமிட்டுக் கழிக்கின்றேன் மதியி லேனை
வெருள்பழுக்கும் கடுங்காட்டில் விடினும் ஆற்று
வெள்ளத்தில் அடித்தேக விடினும் பொல்லா
இருள்பழுக்கும் பிலஞ்சேர விடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 4

960 பெருங்கருணைக் கடலேஎன் குருவே முக்கண்
பெருமானே நினைப்புகழேன் பேயேன் அந்தோ
கருங்கல்மனக் குரங்காட்டி வாளா நாளைக்
கழிக்கின்றேன் பயன்அறியாக் கடைய னேனை
ஒருங்குருள உடல்பதைப்ப உறுங்குன் றேற்றி
உருட்டுகினும் உயிர்நடுங்க உள்ளம் ஏங்க
இருங்கழுவில் ஏற்றுகினும் அன்றி இன்னும்
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 5

961 தொழுகின்றோர் உளத்தமர்ந்த சுடரே முக்கண்
சுடர்க்கொழுந்தே நின்பதத்தைத் துதியேன் வாதில்
விழுகின்றேன் நல்லோர்கள் வெறுப்பப் பேசி
வெறித்துழலும் நாயனையேன் விழல னேனை
உழுகின்ற நுகப்படைகொண் டுலையத் தள்ளி
உழக்கினும்நெட் டுடல்நடுங்க உறுக்கி மேன்மேல்
எழுகின்ற கடலிடைவீழ்த் திடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 6

962 விருப்பாகும் மதிச்சடையாய் விடையாய் என்றே
மெய்யன்போ டுனைத்துதியேன் விரைந்து வஞ்சக்
கருப்பாயும் விலங்கெனவே வளர்ந்தே நாளைக்
கழிக்கின்றேன் கருநெஞ்சக் கள்வ னேனைப்
பொருப்பாய யானையின்கால் இடினும் பொல்லாப்
புழுத்தலையில் சோரிபுறம் பொழிய நீண்ட
இருப்பாணி ஏற்றுகினும் அன்றி இன்னும்
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 7

963 அக்கநுதல் பிறைச்சடையாய் நின்தாள் ஏத்தேன்
ஆண்பனைபோல் மிகநீண்டேன் அறிவொன் றில்லேன்
மிக்கஒதி போல்பருத்தேன் கருங்க டாப்போல்
வீண்கருமத் துழல்கின்றேன் விழல னேனைச்

செக்கிடைவைத் துடல்குழம்பிச் சிதைய அந்தோ
திருப்பிடினும் இருப்பறைமுட் சேரச் சேர்த்து
எக்கரிடை உருட்டுகினும் அன்றி இன்னும்
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 8

964 அன்புடன்நின் பதம்புகழாப் பாவி நாவை
அறத்துணியேன் நின்அழகை அமர்ந்து காணாத்
துன்புறுகண் இரண்டினையும் சூன்றேன் நின்னைத்
தொழாக்கையை வாளதனால் துண்ட மாக்கேன்
வன்பறநின் தனைவணங்காத் தலையை அந்தோ
மடித்திலேன் ஒதியேபோல் வளர்ந்தேன் என்னை
இன்பறுவல் எரியிடைவீழ்த் திடினும் அன்றி
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 9

965 தேவேநின் அடிநினையா வஞ்ச நெஞ்சைத்
திமூட்டிச் சிதைக்கறியேன் செதுக்கு கில்லேன்
கோவேநின் அடியர்தமைக் கூடாப் பொய்மைக்
குடிகொண்டேன் புலைகொண்ட கொடியேன் அந்தோ
நாவேற நினைத்துதியேன் நலமொன் றில்லேன்
நாய்க்கடைக்கும் கடைப்பட்டேன் நண்ணு கின்றோர்க்
கீவேதும் அறியேன்இங் கென்னை யந்தோ
என்செயினும் போதாதே எந்தாய் எந்தாய். 10

திருச்சிற்றம்பலம்

24. தியாகவண்ணப் பதிகம்

திருவொற்றியூர்
கலித்துறை கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

966 காரார் குழலாள் உமையோ டயில்வேல் காளையொ டுந்தான் அமர்கின்ற
ஏரார் கோலம் கண்டு களிப்பான் எண்ணும் எமக்கொன் றருளானேல்
நீரார் சடைமேல் பிறையொன் றுடையான் நிதிக்கோன் தோழன் என நின்றான்
பேரார் ஒற்றி யூரான் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 1

967 தண்ணார் நீபத் தாரா னொடும்எம் தாயோ டும்தான் அமர்கின்ற
கண்ணார் கோலம் கண்டு களிப்பான் கருதும் எமக்கொன் றருளானேல்
பண்ணார் இன்சொல் பதிகம் கொண்டு படிக்கா சளித்த பரமன்ஓர்
பெண்ணார் பாகன் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 2

968 பத்தர்க் கருளும் பாவையொ டும்வேல் பாலனொ டும்தான் அமர்கின்ற
நித்தக் கோலம் கண்டு களிப்பான் நினைக்கும் எமக்கொன் றருளானேல்
சித்தப் பெருமான் தில்லைப் பெருமான் தெய்வப்பெருமான் சிவபெருமான்
பித்தப் பெருமான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 3

969 மன்னும் கதிர்வேல் மகனா ரோடும் மலையா ளொடும்தான் வதிகின்ற
துன்னும் கோலம் கண்டு களிப்பான் துதிக்கும் எமக்கொன் றருளானேல்
மின்னும் சூலப் படையான் விடையான் வெள்ளி மலையொன் றதுஉடையான்
பின்னும் சடையான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 4

1. கலித்துறை - தொ .வே. முதற்பதிப்பு, இரண்டாம் பதிப்பு. எழுசீர் - ச. மு. க. ஆ. பா.

970 அணிவேல் படைகொள் மகனா ரொடும்எம் அம்மை யொடுந்தான் அமர்கின்ற
தணியாக் கோலம்கண்டு களிக்கத் தகையா தெமக்கொன் றருளானேல்
மணிசேர் கண்டன் எண்தோள் உடையான் வடபால் கனக மலைவில்லான்
பிணிபோக் கிடுவான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 5

971 சூத மெறிவேல் தோன்ற லொடும்தன் துணைவி யொடும்தான் அமர்கின்ற
காதல் கோலம் கண்டு களிப்பான் கருதும் எமக்கொன் றருளானேல்
ஈதல் வல்லான் எல்லாம் உடையான் இமையோர் அயன்மாற் கிறையானான்
பேதம் இல்லான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 6

972 வெற்றிப் படைவேல் பிள்ளை யோடும் வெற்பா லொடும்தான் அமர்கின்ற
மற்றிக் கோலம் கண்டு களிப்பான் வருந்தும் எமக்கொன் றருளானேல்
கற்றைச் சடையான் கண்மூன் றுடையான் கரியோன் அயனும் காணாதான்
பெற்றத் திவர்வான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 7

973 வரமன் றலினார் குழலா லொடும்வேல் மகனா ரொடும்தான் அமர்கின்ற
திரமன் றவுநின் றெழில்கண் டிடுவான் சிறக்க எமக்கொன் றருளானேல்
பரமன் தனிமால் விடைஒன் றுடையான் பணியே பணியாப் பரிவுற்றான்
பிரமன் தலையான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 8

974 அறங்கொள் உமையோ டயிலேந் தியஎம் ஐய னொடுந்தான் அமர்கின்ற
திறங்கொள் கோலம் கண்டுக ளிப்பான் சிறக்க எமக்கொன் றருளானேல்
மறங்கொள் எயில்மூன் றெரித்தான் கனகமலையான் அடியார் மயல்தீர்ப்பான்
பிறங்கும் சடையான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 9

975 தேசார் அயில்வேல் மகனா ரொடும்தன் தேவி யொடும்தான் அமர்கோலம்
ஈசா எனநின் றேத்திக் காண எண்ணும் எமக்கொன் றருளானேல்
காசார் அரவக் கச்சேர் இடையான் கண்ணார் நுதலான் கனிவுற்றுப்
பேசார்க் கருளான் ஒற்றித் தியாகப் பெருமான் பிச்சைப் பெருமானே. 10

திருச்சிற்றம்பலம்

25. ஆடலமுதப் பத்து

திருவொற்றியூரும் திருத்தில்லையும்
எண்சீர்க்' கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

976 சிந்தை நொந்துநொந் தயர்கின்றேன் சிவனே
செய்வ தோர்ந்திலேன் தீக்குண முடையேன்
வந்து நின்னடிக் காட்செய என்றால்
வஞ்ச நெஞ்சம்என் வசம்நின்ற திலையே
எந்தை நின்னருள் உண்டெனில் உய்வேன்
இல்லை என்னில்நான் இல்லைஉய்ந் திடலே
அந்தி வான்நிறத் தொற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 1

1. எழுசீர் – தொ. வே. 1, 2 எண்சீர். ச.மு.க. ஆ.பா.

977 மாய நெஞ்சமோ நின்னடி வழுத்தா
வண்ண மென் தனை வலிக்கின்ற தனால்
தீயன் ஆயினேன் என்செய்வேன் சிவனே
திருவ ருட்குநான் சேயனும் ஆனேன்
காய வாழ்க்கையில் காமமுண் டுள்ளம்
கலங்கு கின்றனன் களைகண்மற் றறியேன்
ஆய ஒற்றியூர் அண்ணலே தில்லை
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 2

978 உன்னை உன்னிநெக் குருகிநின் றேத்த
உள்ளம் என்வசம் உற்றதின் றேனும்
என்னை ஆளுதல் உன்கடன் அன்றேல்
இரக்கம் என்பதுன் னிடத்திலை அன்றோ
முன்னை வல்வினை முடித்திடில் சிவனே
மூட னேனுக்கு முன்னிற்ப தெவனோ
அன்னை அப்பனே ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 3

979 என்ன நான்சொலி நிறுத்தினும் நில்லா
தேகு கின்றதிவ் ஏழையேன் மனந்தான்
உன்ன தின்னருள் ஒருசிறி துண்டேல்
ஒடுக்கி நிற்பனால் உண்மைமற் றின்றேல்
இன்ன தென்றறி யாமல இருளில்
இடர்கொள் வேன்அன்றி என்செய்வேன் சிவனே
அன்ன துன்செயல் ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 4

980 பாவி நெஞ்சம்என் பால்இரா தோடிப்
பாவை யார்மயல் படிந்துழைப் பதனால்
சேவி யாதஎன் பிழைபொறுத் தாளும்
செய்கை நின்னதே செப்பலென் சிவனே
காவி நேர்விழி மலைமகள் காணக்
கடலின் நஞ்சுண்டு கண்ணன்ஆ தியர்கள்
ஆவி ஈந்தருள் ஒற்றிஎம் இறையே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 5

981 மூட நெஞ்சம்என் மொழிவழி நில்லா
மோக வாரியின் முழுகுகின் றதுகாண்
தேட என்வசம் அன்றது சிவனே
திருவ ருட்கடல் திவலைஒன் றுறுமேல்
நாட நாடிய நலம்பெறும் அதனால்
நானும் உய்குவேன் நல்கிடல் வேண்டும் 6
ஆடல் ஒற்றியாய் பெரும்பற்றப் புலியூர்
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே.

982 கலங்கு கின்றஎன் கண்உன தருள்ஓர்
கடுகின் எல்லைதான் கலந்திடு மானால்
விலங்கு கின்றஎன் நெஞ்சம்நின் றிடுமால்
வேறு நான்பெறும் வேட்கையும் இன்றான்
மலங்கு கின்றதை மாற்றுவன் உனது
மலர்ப்பொன் தாளலால் மற்றிலன் சிவனே
அலங்கு கின்றசீர் ஒற்றியூர் இறையே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 7

983 மறைவ தென்னையும் மறைப்பது பொல்லா
வஞ்ச நெஞ்சமென் வசப்படல் இலைகாண்
இறைவ நின்னருட் கென்செய்வோம் எனவே
எண்ணி எண்ணிநான் ஏங்குகின் றனனால்
உறைவ துன்னடி மலர்அன்றி மற்றொன்
றுணர்த்தி லேன்இஃதுண்மைநீ அறிதி
அறைவ தென்னநான் ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 8

984 ஒருக ணப்பொழு தேனுநின் அடியை
உள்கி டாதுளம் ஓடுகின் றதனால்
திருக ணப்பெறும் தீயனேன் செய்யும்
திறம்அ றிந்திலேன் செப்பலென் சிவனே
வருக ணத்துடல் நிற்குமோ விழுமோ
மாயு மோஎன மயங்குவேன் தன்னை
அருக ணைத்தருள் ஒற்றியூர் இறையே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 9

985 யாது நின்கருத் தறிந்திலேன் மனமோ
என்வ சப்படா திருத்தலை உரைத்தேன்
தீது செய்யினும் பொறுத்தெனைச் சிவனே
தீய வல்வினைச் சேர்ந்திடா வண்ணம்
பாது காப்பதுன் பரம்இன்றேல் பலவாய்ப்
பகர்தல் என்னகாண் பழிவரும் உனக்கே
ஆது காண்டிஎம் ஒற்றியூர் அரசே
அம்ப லத்தினின் றாடல்செய் அமுதே. 10

திருச்சிற்றம்பலம்

26. திருவடிச் சரண்புகல்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

986 ஓடல் எங்கணும் நமக்கென்ன குறைகாண்
உற்ற நற்றுணை ஒன்றும்இல் லார்போல்
வாடல் நெஞ்சமே வருதிஎன் னுடனே
மகிழ்ந்து நாம்இரு வரும்சென்று மகிழ்வாய்க்
கூடல் நேர்திரு ஒற்றியூர் அகத்துக்
கோயில் மேவிநம் குடிமுழு தாளத்
தாட லந்தரும் நமதருள் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. 1

987 ஏங்கி நோகின்ற தெற்றினுக் கோநீ
எண்ணி வேண்டிய தியாவையும் உனக்கு
வாங்கி ஈகுவன் ஒன்றுக்கும் அஞ்சேல்
மகிழ்ந்து நெஞ்சமே வருதிஎன் னுடனே
ஓங்கி வாழ்ஒற்றி யூர்இடை அரவும்
ஒளிகொள் திங்களும் கங்கையும் சடைமேல்
தாங்கி வாழும் நம் தாணுவாம் செல்வத் 2
தந்தை யார்அடிச் சரண்புக லாமே.

988 கயவர் இல்லிடைக் கலங்கலை நெஞ்சே
காம ஐம்புலக் கள்வரை வீட்டி
வயம்அ ளிக்குவன் காண்டிஎன் மொழியை
மறுத்தி டேல்இன்று வருதிஎன் னுடனே
உயவ ளிக்குநல் ஒற்றியூர் அமர்ந்தங்
குற்று வாழ்த்திநின் றுன்னுகின் றவர்க்குத்
தயவ ளிக்குநம் தனிமுதல் செல்வத் 3
தந்தை யார்அடிச் சரண்புக லாமே.

989 சண்ட வெம்பவப் பிணியினால் தந்தை
தாயி லார்எனத் தயங்குகின் றாயே
மண்ட லத்துழல் நெஞ்சமே சுகமா
வாழ வேண்டிடில் வருதிஎன் னுடனே
ஒண்ட லத்திரு ஒற்றியூர் இடத்தும்
உன்னு கின்றவர் உள்ளகம் எனும்ஓர்
தண்ட லத்தினும் சார்ந்தநம் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. 4

1. எழுசீர் - தொ. வே. முதற்பதிப்பு, இரண்டாம் பதிப்பு. எண்சீர் - ச. மு. க. ஆ. பா.

990 விடங்கொள் கண்ணினார் அடிவிழுந் தையோ
வெட்கி னாய்இந்த விதிஉனக் கேனோ
மடங்கொள் நெஞ்சமே நினக்கின்று நல்ல
வாழ்வு வந்தது வருதிஎன் னுடனே
இடங்கொள் பாரிடை நமக்கினி ஒப்பா
ரியார்கண் டாய்ஒன்றும் எண்ணலை கமலத்
தடங்கொள் ஒற்றியூர் அமர்ந்தநம் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. 5

991 பொருந்தி ஈனருள் புகுந்துவீண் காலம்
போக்கி நின்றனை போனது போக
வருந்தி இன்னும்இங் குழன்றிடேல் நெஞ்சே
வாழ்க வாழ்கநீ வருதிஎன் னுடனே
திருந்தி நின்றநம் மூவர்தம் பதிகச்
செய்ய தீந்தமிழ்த் தேறல்உண் டருளைத்
தருந்தென் ஒற்றியூர் வாழுநம் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. 6

992 நாட்டம் உற்றெனை எழுமையும் பிரியா
நல்ல நெஞ்சமே நங்கையர் மயலால்
வாட்டம் உற்றிவண் மயங்கினை ஐயோ
வாழ வேண்டிடில் வருதிஎன் னுடனே
கோட்டம் அற்றிரு மலர்க்கரம் கூப்பிக்
கும்பி டும்பெரும் குணத்தவர் தமக்குத்
தாட்ட லந்தரும் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. 7

993 உடுக்க வேண்டிமுன் உடைஇழந் தார்போல்
உள்ள வாகும்என் றுன்னிடா தின்பம்
மடுக்க வேண்டிமுன் வாழ்விழந் தாயே
வாழ வேண்டிடில் வருதிஎன் னுடனே
அடுக்க வேண்டிநின் றழுதழு தேத்தி
அருந்த வத்தினர் அழிவுறாப் பவத்தைத்
தடுக்க வேண்டிநல் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. 8

994 மோக மாதியால் வெல்லும்ஐம் புலனாம்
மூட வேடரை முதலற எறிந்து
வாகை ஈகுவன் வருதிஎன் னுடனே
வஞ்ச வாழ்க்கையின் மயங்கும்என் நெஞ்சே
போக நீக்கிநல் புண்ணியம் புரிந்து
போற்றி நாள்தொறும் புகழ்ந்திடும் அவர்க்குச் 9
சாகை நீத்தருள் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே.

995 பசிஎ டுக்குமுன் அழுதுசே கரிப்பார்
பாரி னோர்கள்அப் பண்பறிந் திலையோ
வசிஎ டுக்குமுன் பிறப்பதை மாற்றா
மதியில் நெஞ்சமே வருதிஎன் னுடனே
நிசிஎ டுக்கும்நல் சங்கவை ஈன்ற
நித்தி லக்குவை நெறிப்பட ஓங்கிச்
சசிஎ டுக்குநல் ஒற்றியூர்ச் செல்வத்
தந்தை யார்அடிச் சரண்புக லாமே. 10

திருச்சிற்றம்பலம்

27. சிவானந்தப் பத்து

திருவொற்றியூரும் திருத்தில்லையும்
எண்சீர்க்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

996 இச்சை உண்டெனக் குன்திரு மலர்த்தாள்
எய்தும் வண்ணம்இங் கென்செய வல்லேன்
கொச்சை நெஞ்சம்என் குறிப்பில்நில் லாது
குதிப்பில் நின்றது மதிப்பின்இவ் வுலகில்
பிச்சை உண்டெனிற் பிச்சரிற் சீறும்
பேய ருண்மனை நாயென உழைத்தேன்
செச்சை மேனிஎம் திருவொற்றி அரசே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 1

997 ஐய நின்னுடை அன்பர்கள் எல்லாம்
அழிவில் இன்பமுற் றருகிருக் கின்றார்
வெய்ய நெஞ்சகப் பாவியேன் கொடிய
வீண னேன் இங்கு வீழ்கதிக் கிடமாய்
வைய வாழ்க்கையின் மயங்குகின் றனன்மேல்
வருவ தோர்ந்திலன் வாழ்வடை வேனோ
செய்ய வண்ணனே ஒற்றியம் பொருளே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 2

998 மடிகொள் நெஞ்சினால் வள்ளல்உன் மலர்த்தாள்
மறந்து வஞ்சக வாழ்க்கையை மதித்தேன்
துடிகொள் நேர்இடை மடவியர்க் குருகிச்
சுழல்கின் றேன்அருள் சுகம்பெறு வேனோ
வடிகொள் வேல்கரத் தண்ணலை ஈன்ற
வள்ள லேஎன வாழ்த்துகின் றவர்தம்
செடிகள் நீக்கிய ஒற்றியம் பரனே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 3

1. எழுசீர். தொ. வே. 1. 2 எண்சீர் ச. மு. க., ஆ.பா.

999 இருக்க வாவுற உலகெலாம் உய்ய
எடுத்த சேவடிக் கெள்ளள வேனும்
உருக்கம் ஒன்றிலேன் ஒதியினில் பெரியேன்
ஒண்மை எய்துதல் வெண்மைமற் றன்றே
தருக்க நின்றஎன் தன்மையை நினைக்கில்
தமிய னேனுக்கே தலைநடுக் குறுங்காண்
திருக்கண் மூன்றுடை ஒற்றிஎம் பொருளே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 4

1000 எண்பெ றாவினைக் கேதுசெய் உடலை
எடுத்த நாள்முதல் இந்தநாள் வரைக்கும்
நண்பு றாப்பவம் இயற்றினன் அல்லால்
நன்மை என்பதோர் நாளினும் அறியேன்
வண்பெ றாவெனக் குன்திரு அருளாம்
வாழ்வு நேர்ந்திடும் வகைஎந்த வகையோ
திண்பெ றாநிற்க அருள்ஒற்றி அமுதே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 5

1001 பேதை நெஞ்சினேன் செய்பிழை எல்லாம்
பேசி னால்பெரும் பிணக்கினுக் கிடமாம்
தாதை நீஅவை எண்ணலை எளியேன்
தனக்கு நின்திருத் தண்அளி புரிவாய்
கோதை நீக்கிய முனிவர்கள் காணக்
கூத்து கந்தருள் குணப்பெருங் குன்றே
தீதை நீக்கிய ஒற்றிஎம் பெருமான்
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 6

1002 வஞ்ச நெஞ்சர்தம் சேர்க்கையைத் துறந்து
வள்ளல் உன்திரு மலரடி ஏத்தி
விஞ்சு நெஞ்சர்தம் அடித்துணைக் கேவல்
விரும்பி நிற்கும்அப் பெரும்பயன் பெறவே
தஞ்சம் என்றருள் நின்திருக் கோயில்
சார்ந்து நின்றனன் தருதல்மற் றின்றோ
செஞ்சொல் ஓங்கிய ஒற்றிஎம் பெருமான்
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 7

1003 புல்ல னேன்புவி நடையிடை அலையும்
புலைய நெஞ்சினால் பொருந்திடும் கொடிய
அல்லல் என்பதற் கெல்லைஒன் றறியேன்
அருந்து கின்றனன் விருந்தினன் ஆகி
ஒல்லை உன்திருக் கோயில்முன் அடுத்தேன்
உத்த மாஉன்தன் உள்ளம்இங் கறியேன் 8
செல்லல் நீக்கிய ஒற்றியம் பொருளே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே.

1004 எளிய னேன்பிழை இயற்றிய எல்லாம்
எண்ணி னுட்படா வேனும்மற் றவையை
அளிய நல்லருள் ஈந்திடும் பொருட்டால்
ஆய்தல் நன்றல ஆதலின் ஈண்டே
களிய நெஞ்சமாம் கருங்கலைக் கரைத்துக்
கருணை ஈகுதல் கடன்உனக் கையா
தெளிய ஓங்கிய ஒற்றிஎன் அமுதே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 9

1005 வெறிபி டிக்கினும் மகன்தனைப் பெற்றோர்
விடுத்தி டார்அந்த வெறியது தீரும்
நெறிபி டித்துநின் றாய்வரென் அரசே
நீயும் அப்படி நீசனேன் தனக்குப்
பொறிபி டித்தநல் போதகம் அருளிப்
புன்மை யாவையும் போக்கிடல் வேண்டும்
செறிபி டித்தவான் பொழில்ஒற்றி அமுதே
தில்லை ஓங்கிய சிவானந்தத் தேனே. 10

திருச்சிற்றம்பலம்

28. சந்நிதி முறையீடு

திருவொற்றியூரும் திருத்தில்லையும்
கலி விருத்தம்'
அருட்பெருஞ்ஜோதி

1006 ஒற்றி மேவிய உத்தம னேமணித்
தெற்றி மேவிய தில்லையப் பாவிழி
நெற்றி மேவிய நின்மல னேஉனைப்
பற்றி மேவிய நெஞ்சம்உன் பாலதே. 1

1007 பாலின் நீற்றுப் பரஞ்சுட ரேமலர்க்
காலின் ஈற்றுக் கதிபெற ஏழையேன்
மாலின் ஈற்று மயக்கறல் என்றுகல்
ஆலின் ஈற்றுப் பொருள்அருள் ஆதியே. 2

1008 ஆதி யேதில்லை அம்பலத் தாடல்செய்
சோதி யேதிருத் தோணிபு ரத்தனே
ஓதி யேதரும் ஒற்றியப் பாஇது
நீதி யேஎனை நீமரு வாததே. 3

1009 வாதம் ஓதிய வஞ்சரைக் காணில்ஓர்
காதம் ஓடும் கடியனை ஆள்வது
நீத மோஅன்றி நேரும்அ நீதமோ
ஓதம் ஓதொலி ஒற்றித்த லத்தனே. 4

1010 தலத்த னேதில்லைச் சங்கர னேதலைக்
கலத்த னேநெற்றிக் கண்ணுடை யாளனே
நலத்த னேஒற்றி நாயக னேஇந்த
மலத்த னேனையும் வாழ்வித்தல் மாண்பதே. 5

1011 மாண்கொள் அம்பல மாணிக்க மேவிடம்
ஊண்கொள் கண்டத்தெம் ஒற்றியப் பாஉன்தன்
ஏண்கொள் சேவடி இன்புகழ் ஏத்திடாக்
கோண்கொள் நெஞ்சக் கொடியனும் உய்வனே. 6

1012 உய்யும் வண்ணம்இங் குன்அருள் எய்தநான்
செய்யும் வண்ணம்தெ ரிந்திலன் செல்வமே
பெய்யும் வண்ணப்பெ ருமுகி லேபுரம்
எய்யும் வண்ணம்எ ரித்தருள் எந்தையே. 7

1013 எந்தை யேதில்லை எம்இறை யேகுகன்
தந்தை யேஒற்றித் தண்அமு தேஎன் தன்
முந்தை ஏழ்பவ மூடம யக்கறச்
சிந்தை ஏதம்தி ருந்தஅ ருள்வையே. 8

1014 திருந்த நான்மறைத் தில்லைச்சிற் றம்பலத்
திருந்த ஞானஇ யல்ஒளி யேஒற்றிப்
பொருந்த நின்றருள் புண்ணிய மேஇங்கு
வருந்த என்தனை வைத்தத ழகதோ. 9

1015 வைத்த நின்அருள் வாழிய வாழிய
மெய்த்த தில்லையின் மேவிய இன்பமே
உய்த்த நல்அருள் ஒற்றியப் பாஎனைப்
பொய்த்த சிந்தைவிட் டுன்தனைப் போற்றவே. 10

1016 போற்ற வைத்தனை புண்ணிய னேஎனைச்
சாற்ற வைத்தனை நின்புகழ்த் தன்மையைத்
தேற்ற வைத்தனை நெஞ்சைசத்தெ ளிந்தன்பை
ஊற்ற வைத்தனை உன்ஒற்றி மேவியே. 11

திருச்சிற்றம்பலம்

29. தவத்திறம் போற்றல்

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1017 வில்வத் தொடும்பொன் கொன்றைஅணி வேணிப் பெருமான் ஒற்றிநகர்
செல்வப் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருஅழகைக்
கல்வைப் புடைய மனம்களிக்கக் கண்கள் களிக்கக் கண்டுநின்றேன்.
இல்வைப் புடையேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ.

1018 கூடும் படிமுன் திருமாலும் கோல மாகிப் புவிஇடந்து
தேடும் திருத்தாள் சிவபெருமான் தியாகப் பெருமான் திருப்பவனி
நாடும் புகழ்சேர் ஒற்றிநகர் நாடிப் புகுந்து கண்டேனால்
ஈடும் அகன்றேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 2

1019 ஆர்க்கும் கடற்கண் அன்றெழுந்த ஆல காலம் அத்தனையும்
சேர்க்கும் களத்தான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருநடத்தைக்
கார்க்கண் பொழில்சூழ் ஒற்றியில்போய்க் கண்டேன் பிறவி கண்டிலனே
யார்க்கென் றுரைப்பேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 3

1020 உள்ளும் புறமும் நிறைந்தடியார் உள்ளம் மதுரித் தூறுகின்ற
தெள்ளும் அமுதாம் சிவபெருமான் தியாகப் பெருமான் திருமுகத்தைக்
கள்ளம் தவிர்க்கும் ஒற்றியில்போய்க் கண்டேன் பசியைக் கண்டிலனே
எள்ளல் இகந்தேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 4

1021 ஆவல் உடையார் உள்ளுடையார் அயன்மால் மகவான் ஆதியராம்
தேவர் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருவடிவைக்
காவம் பொழில்சூழ் ஒற்றியில்போய்க் கண்டேன் கண்ட காட்சிதனை
யாவர் பெறுவார் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 5

1022 மறப்பை அகன்ற மனத்துரவோர் வாழ்த்த அவர்க்கு வான்கதியின்
சிறப்பை அளிக்கும் சிவபெருமான் தியாகப் பெருமான் திருநடத்தைப்
பிறப்பை அகற்றும் ஒற்றியில்போய்ப் பேரா னந்தம் பெறக்கண்டேன்
இறப்பைத் தவிர்த்தேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 6

1023 வில்லாம் படிப்பொன் மேருவினை விரைய வாங்கும் வெற்றியினான்
செல்லாம் கருணைச் சிவபெருமான் தியாகப் பெருமான் திருக்கூத்தைக்
கல்லாம் கொடிய மனம்கரையக் கண்டேன் பண்டு காணாத
எல்லாம் கண்டேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 7

1024 ஒல்லை எயில்மூன் றெரிகொளுவ உற்று நகைத்தோன் ஒற்றியுளான்
தில்லை நகரான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருப்பவனி
கல்லை அளியும் கனியாக்கக் கண்டேன் கொண்ட களிப்பினுக்கோர்
எல்லை அறியேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 8

1025 துன்னும் சோம சுந்தரனார் தூய மதுரை நகர் அளித்த
தென்னர் பெருமான் சிவபெருமான் தியாகப் பெருமான் திருஅழகைப்
பன்னும் ஒற்றி நகர்தன்னில் பார்த்தேன் வினைபோம் வழிபார்த்த
என்னை மறந்தேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ. 9

1026 முன்னம் காழி வள்ளலுக்கு முத்துச் சிவிகை குடையொடுபொன்
சின்னம் அளித்தோன் சிவபெருமான் தியாகப் பெருமான் திருவடியைக் 10
கன்னின் றுருகா நெஞ்சுருகக் கண்டேன் கண்ட காட்சிதனை
என்என் றுரைப்பேன் அம்மாநான் என்ன தவந்தான் செய்தேனோ.

30. நெஞ்சுறுத்த திருநேரிசை

திருவொற்றியூர்
நேரிசை வெண்பா
திருச்சிற்றம்பலம்

1027 பொன்னார் விடைக்கொடிஎம் புண்ணியனைப் புங்கவனை
ஒன்னார் புரம்எரித்த உத்தமனை – மன்னாய
அத்தனைநம் ஒற்றியூர் அப்பனைஎல் லாம்வல்ல
சித்தனைநீ வாழ்த்துதிநெஞ் சே. 1

1028 நெஞ்சே உலக நெறிநின்று நீமயலால்
அஞ்சேல்என் பின்வந் தருள்கண்டாய் – எஞ்சாத்
தவக்கொழுந்தாம் சற்குணவர் தாழ்ந்தேத்தும் ஒற்றிச்
சிவக்கொழுந்தை வாழ்த்துதும்நாம் சென்று. 2

1029 சென்றுசென்று நல்காத செல்வர்தலை வாயிலிலே
நின்றுநின்று வாடுகின்ற நெஞ்சமே – இன்றுதிரு
ஒற்றியப்பன் தாண்மலரை உன்னுதியேல் காதலித்து
மற்றிசைப்ப தெல்லாம் வரும். 3

1030 வருநாள் உயிர்வாழும் மாண்பறியோம் நெஞ்சே
ஒருநாளும் நீவேறொன் றுன்னேல் – திருநாளைப்
போவான் தொழுமன்றில் புண்ணியனை ஒற்றியில்தாய்
ஆவான் திருவடிஅல் லால். 4

1031 அல்லாலம் உண்டமிடற் றாரமுதை அற்புதத்தைக்
கல்லால நீழல்அமர் கற்பகத்தைச் –சொல்ஆர்ந்த
விண்மணியை என்உயிரை மெய்ப்பொருளை ஒற்றியில்என்
கண்மணியை நெஞ்சே கருது. 5

1032 கருதாயோ நெஞ்சே கதிகிடைக்க எங்கண்
மருதா எழில்தில்லை மன்னா – எருதேறும்
என்அருமைத் தெய்வதமே என் அருமைச் சற்குருவே
என் அருமை அப்பாவே என்று. 6

1033 என்றும்உனக் காளாவேன் என்நெஞ்சே வன்நெஞ்சர்
ஒன்றும்இடம் சென்றங் குழலாதே – நன்றுதரும்
ஒற்றியப்பன் பொன் அடியை உன்னுகின்றோர் தம்பதத்தைப்
பற்றிநிற்பை யாகில் பரிந்து. 7

1034 பரிந்துனக்குச் சொல்கின்றேன் பாவங்கள் எல்லாம்
எரிந்துவிழ நாம்கதியில் ஏறத் – தெரிந்து
விடையானை ஒற்றியூர் வித்தகனை மாதோர்
புடையானை நெஞ்சமே போற்று.

1035 போற்றுதிஎன் நெஞ்சே புரம்நகையால் சுட்டவனை
ஏற்றுகந்த பெம்மானை எம்மவனை - நீற்றொளிசேர்
அவ்வண்ணத் தானை அணிபொழில்சூழ் ஒற்றியூர்ச்
செவ்வண்ணத் தானைத் தெரிந்து. 9

1036 தெரிந்து நினக்கனந்தம் தெண்டன்இடு கின்றேன்
விரிந்தநெஞ்சே ஒற்றியிடை மேவும் - பரிந்தநெற்றிக்
கண்ணானை மாலயனும் காணப் படாதானை
எண்ணாரை எண்ணாதே என்று. 10

1037 என்றென் றழுதாய் இலையேஎன் நெஞ்சமே
ஒன்றென்று நின்ற உயர்வுடையான் - நன்றென்ற
செம்மைத் தொழும்பர்தொழும் சீர்ஒற்றி யூர்அண்ணல்
நம்மைத் தொழும்புகொள்ளும் நாள். 11

1038 நாளாகு முன்எனது நன்நெஞ்சே ஒற்றியப்பன்
தாளாகும் தாமரைப்பொன் தண்மலர்க்கே - ஆளாகும்
தீர்த்தர் தமக்கடிமை செய்தவர்தம் சீர்ச்சமுகம்
பார்த்துமகிழ் வாய்அதுவே பாங்கு. 12

1039 பாங்குடையார் மெய்யில் பலித்ததிரு நீறணியாத்
தீங்குடையார் தீமனையில் செல்லாதே - ஓங்குடையாள்
உற்றமர்ந்த பாகத்தெம் ஒற்றியப்பன் பொன் அருளைப்
பெற்றமர்தி நெஞ்சே பெரிது. 13

1040 பெரியானை மாதர்ப் பிறைக்கண்ணி யானை
அரியானை அங்கணனை ஆர்க்கும் - கரியானைத்
தோலானைச் சீர்ஒற்றிச் சுண்ணவெண் நீற்றானை
மேலானை நெஞ்சே விரும்பு. 14

1041 விரும்பித் திருமால் விலங்காய் நெடுநாள்
அரும்பித் தளைந்துள் அயர்ந்தே - திரும்பிவிழி
நீர்கொண்டும் காணாத நித்தன்ஒற்றி யூரன்அடிச்
சீர்கொண்டு நெஞ்சே திகழ். 15

1042 திகழ்கின்ற ஞானச் செழுஞ்சுடரை வானோர்
புகழ்கின்ற தெய்வத்தைப் போதம் - நிகழ்கின்ற
ஒற்றிக் கனியை உலகுடைய நாயகத்தை
வெற்றித் துணையைநெஞ்சே வேண்டு. 16

1043 வேண்டாமை வேண்டுவது மேவாத் தவமுடையோர்
தீண்டாமை யாததுநீ தீண்டாதே - ஈண்டாமை
ஒன்றுவபோல் நெஞ்சேநீ ஒன்றிஒற்றி யூரன்பால்
சென்றுதொழு கண்டாய் தினம்.

1044 தினந்தோறும் உள்ளுருகிச் சீர்பாடும் அன்பர்
மனந்தோறும் ஓங்கும் மணியை – இனந்தோறும்
வேதமலர் கின்ற வியன்பொழில்சூழ் ஒற்றிநகர்ப்
போத மலரைநெஞ்சே போற்று. 18

1045 போற்றார் புரம்பொடித்த புண்ணியனை விண்ணவர்கள்
ஆற்றாத நஞ்சமுண்ட ஆண்தகையைக் – கூற்றாவி
கொள்ளும் கழற்கால் குருமணியை ஒற்றியிடம்
கொள்ளும் பொருளைநெஞ்சே கூறு. 19

1046 கூறுமையாட் கீந்தருளும் கோமானைச் செஞ்சடையில்
ஆறுமலர்க் கொன்றை அணிவோனைத் – தேறுமனம்
உள்ளவர்கட் குள்ளபடி உள்ளவனை ஒற்றிஅமர்
நள்ளவனை நெஞ்சமே நாடு. 20

1047 நாடும் சிவாய நமஎன்று நாடுகின்றோர்
கூடும் தவநெறியில் கூடியே – நீடும்அன்பர்
சித்தமனைத் தீபகமாம் சிற்பரனை ஒற்றியூர்
உத்தமனை நெஞ்சமே ஓது. 21

1048 ஓதுநெறி ஒன்றுளதென் உள்ளமே ஓர்தி அது
தீதுநெறி சேராச் சிவநெறியில் – போதுநெறி
ஓதம் பிடிக்கும்வயல் ஒற்றியப்பன் தொண்டர்திருப்
பாதம் பிடிக்கும் பயன். 22

1049 பயன் அறியாய் நெஞ்சே பவஞ்சார்தி மாலோ
டயன்அறியாச் சீருடைய அம்மான் – நயனறியார்
உள்ளத் தடையான் உயர்ஒற்றி யூரவன்வாழ்
உள்ளத் தவரை உறும். 23

1050 தவராயி னும்தேவர் தாமாயி னும்மற்
றெவரா யினும்நமக்கிங் கென்னாம் – கவராத
நிந்தை அகன்றிடஎன் நெஞ்சமே ஒற்றியில்வாழ்
எந்தை அடிவணங்கா ரேல். 24

1051 ஏலக் குழலார் இடைக்கீழ்ப் படுங்கொடிய
ஞாலக் கிடங்கரினை நம்பாதே – நீல
மணிகண்டா என்றுவந்து வாழ்த்திநெஞ்சே நாளும்
பணிகண்டாய் அன்னோன் பதம். 25

1052 பதந்தருவான் செல்வப் பயன்தருவான் மன்னும்
சதந்தருவான் யாவும் தருவான் – இதம்தரும்என்
நெஞ்சம்என்கொல் வாடுகின்றாய் நின்மலா நின்அடியே
தஞ்சமென்றால் ஒற்றியப்பன் தான்.

31. சிகாமணி மாலை

புள்ளிருக்குவேளூர்
கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

1053 வல்வினை யேனைஇவ் வாழ்க்கைக் கடல்நின்றும் வள்ளல்உன்தன்
நல்வினை வாழ்க்கைக் கரைஏற்றி மெய்அருள் நல்குகண்டாய்
கொல்வினை யானை உரித்தோய் வயித்திய நாதகுன்றாச்
செல்வினை மேலவர் வாழ்வே அமரர் சிகாமணியே. 1

1054 பொய்யே புலம்பிப் புழுத்தலை நாயின் புறத்திலுற்றேன்
மெய்யே உரைக்கும்நின் அன்பர்தம் சார்பை விரும்புகிலேன்
பையேல் அரவனை யேன்பிழை நோக்கிப் பராமுகம் நீ
செய்யேல் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 2

1055 கல்லேன் மனக்கருங் கல்லேன் சிறிதும் கருத்தறியாப்
பொல்லேன்பொய் வாஞ்சித்த புல்லேன் இரக்கம் பொறைசிறிதும்
இல்லேன் எனினும்நின் பால்அன்றி மற்றை இடத்தில்சற்றும்
செல்லேன் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 3

1056 ஆர்ப்பார் கடல்நஞ் சமுதுசெய் தாய்நின் அடிக்கன்பின்றி
வேர்ப்பார் தமக்கும் விருந்தளித் தாய்வெள்ளி வெற்பெடுத்த
கார்ப்பாள னுக்கும் கருணைசெய் தாய்கடை யேன்துயரும்
தீர்ப்பாய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 4

1057 நானே நினக்குப் பணிசெயல் வேண்டுநின் நாண்மலர்த்தாள்
தானே எனக்குத் துணைசெயல் வேண்டும் தயாநிதியே
கோனே கரும்பின் சுவையேசெம் பாலொடு கூட்டுநறுந்
தேனே வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 5

1058 மருவார் குழலியர் மையல் கடல்விழும் வஞ்சநெஞ்சால்
வெருவா உயங்கும் அடியேன் பிணியை விலக்குகண்டாய்
உருவாய் அருவும் ஒளியும் வெளியும்என் றோதநின்ற
திருவார் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 6

1059 தவநேய மாகும்நின் தாள்நேய மின்றித் தடமுலையார்
அவநேய மேற்கொண் டலைகின்ற பேதைக் கருள்புரிவாய்
நவநேய மாகி மனவாக் கிறந்த நடுஒளியாம்
சிவனே வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 7

1060 ஐவாய் அரவில் துயில்கின்ற மாலும் அயனும்தங்கள்
கைவாய் புதைத்துப் பணிகேட்க மேவும்முக் கண்அரசே
பொய்வாய் விடாஇப் புலையேன் பிழையைப் பொறுத்தருள்நீ
செய்வாய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 8

1061 புல்வாயின் முன்னர்ப் புலிப்போத் தெனஎன்முன் போந்துநின்ற
கல்வாய் மனத்தரைக் கண்டஞ்சி னேனைக் கடைக்கணிப்பாய்
அல்வாய் மணிமிடற் றாரமு தேஅருள் ஆன்றபெரும்
செல்வா வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 9

1062 ஆர்த்தார் கடல்நஞ் சமுதுசெய் தாய்என்னை அன்பர்கள்பால்
சேர்த்தாய்என் துன்பம் அனைத்தையும் தீர்த்துத் திருஅருட்கண்
பார்த்தாய் பரம குருவாகி என்னுள் பரிந்தமர்ந்த
தீர்த்தா வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 10

1063 அறத்தாயை ஓர்புடை கொண்டோர் புடைமண் அளந்தமுகில்
நிறத்தாயை வைத்துல கெல்லாம் நடத்தும் நிருத்தஅண்டப்
புறத்தாய்என் துன்பம் துடைத்தாண்டு மெய்அருட் போதந்தந்த
திறத்தாய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 11

1064 அலைஓய் கடலில் சிவயோகம் மேவிய அந்தணர்தம்
நிலைஓர் சிறிதும் அறியேன் எனக்குன் நிமலஅருண்
மலைஓங்கு வாழ்க்கையும் வாய்க்குங் கொலோபொன் மலைஎன்கின்ற
சிலையோய் வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 12

1065 ஊன்கொண்ட தேகத்தும் உள்ளத்தும் மேவி உறும்பிணியால்
நான்கொண்ட துன்பம் தவிர்ப்பாய் வயித்திய நாதஎன்றே
வான்கொண்ட நின்அருள் சீரேத்து கின்ற வகைஅறியேன்
தேன்கொண்ட கொன்றைச் சடையாய் அமரர் சிகாமணியே. 13

1066 களிவே தனும் அந்தக் காலனும் என்னைக் கருதஒட்டா
ஒளிவே தரத்திரு வுள்ளஞ்செய் வாய்அன்பர் உள்ளம்என்னும்
தளிவே தனத்துறும் தற்பர மேஅருள் தண்ணமுதத்
தெளிவே வயித்திய நாதா அமரர் சிகாமணியே. 14

1067 மால்விடை மேற்கொண்டு வந்தெளி யேனுடை வல்வினைக்கு
மேல்விடை ஈந்திட வேண்டுங்கண் டாய்இது வேசமயம்
நீல்விட முண்ட மிடற்றாய் வயித்திய நாதநின்பால்
சேல்விடு வாட்கண் உமையொடும் தேவர் சிகாமணியே. 15

திருச்சிற்றம்பலம்

32. கலி முறையீடு

கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1068 பொய்விடு கின்றிலன் என்றெம் புண்ணியா
கைவிடு கின்றியோ கடைய னேன் தனைப்
பைவிடம் உடையவெம் பாம்பும் ஏற்றநீ
பெய்விடம் அனையஎன் பிழைபொ றுக்கவே. 1

1069 பொறுக்கினும் அன்றிஎன் பொய்மை நோக்கியே
வெறுக்கினும் நின்அலால் வேறு காண்கிலேன்
மறுக்கினும் தொண்டரை வலிய ஆண்டுபின்
சிறுக்கினும் பெருக்கமே செய்யும் செல்வமே. 2

1070 செல்லலும் சிறுமையும் சினமும் புல்லரைப்
புல்லலும் கொண்டஎன் பொய்மை கண்டுநீ
கொல்லலும் தகும்எனைக் கொன்றி டாதருள்
மல்லலும் தகும்சடா மகுட வள்ளலே. 3

1071 வள்ளலே நின்அடி மலரை நண்ணிய
உள்ளலேன் பொய்மையை உன்னி என்னையாட்
கொள்ளலே இன்றெனில் கொடிய என்தனை
எள்ளலே அன்றிமற் றென்செய் கிற்பனே. 4

1072 செய்யநன் றறிகிலாச் சிறிய னேன்தனைப்
பொய்யன்என் றெண்ணிநீ புறம்பொ ழிப்பையேல்
வையநின் றையவோ மயங்கல் அன்றியான்
உய்யநின் றுணர்குவ தொன்றும் இல்லையே. 5

வேறு

1073 இல்லை என்ப திலா அருள் வெள்ளமே
தில்லை மன்றில் சிவபரஞ் சோதியே
வல்லை யான்செயும் வஞ்சமெ லாம்பொறுத்
தொல்லை இன்பம் உதவுதல் வேண்டுமே. 6

வேறு

1074 இல்லையே என்பதிங் கில்லை என்றருள்
நல்லையே நீஅருள் நயந்து நல்கினால்
கல்லையே அனையஎன் கன்ம நெஞ்சகம்
ஒல்லையே வஞ்சம்விட் டுவக்கும் உண்மையே. 7

1075 உண்மையே அறிகிலா ஒதிய னேன்படும்
எண்மையே கண்டும்உள் இரக்கம் வைத்திலை
அண்மையே அம்பலத் தாடும் ஐயநீ
வண்மையே அருட்பெரு வாரி அல்லையோ.

1076 அல்லலங் கடலிடை ஆழ்ந்த நாயினேன்
சொல்லலங் கடல்விடைத் தோன்றல் நின்அருள்
மல்லலங் கடலிடை மகிழ்ந்து மூழ்கினால்
கல்லலங் கடல்மனம் கனிதல் மெய்மையே. 9

1077 மெய்மையே அறிகிலா வீண னேன்இவன்
உய்மையே பெறஉனை உன்னி ஏத்திடாக்
கைமையே அனையர்தம் கடையில் செல்லவும்
பொய்மையே உரைக்கவும் புணர்த்த தென்கொலோ. 10

1078 என்னுடை வஞ்சக இயற்கை யாவையும்
பொன்னுடை விடையினோய் பொறுத்துக் கொண்டுநின்
தன்னுடை அன்பர்தம் சங்கம் சார்ந்துநான்
நின்னுடைப் புகழ்தனை நிகழ்த்தச் செய்கவே. 11

1079 நிகழும்நின் திருவருள் நிலையைக் கொண்டவர்
திகழும்நல் திருச்சபை அதனுட் சேர்க்கமுன்
அகழுமால் ஏனமாய் அளவும் செம்மலர்ப்
புகழுமா றருளுக பொறுக்க பொய்மையே. 12

திருச்சிற்றம்பலம்

33. எதிர்கொள்பத்து

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்[1]

அருட்பெருஞ்ஜோதி

1080 ஆனந்தக் கூத்தனை அம்பலத் தானை
அற்புதத் தேனைஎம் ஆதிப்பி ரானைத்
தேனந்தக் கொன்றை அம்செஞ்சடை யானைச்
செங்கண் விடையனை எங்கண் மணியை
மோனந்தத் தார்பெறும் தானந்தத் தானை
முத்தனை முத்தியின் வித்தனை முத்தை
ஈனந்தக் காதெனை ஏன்று கொண்டானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 1

1081 அடுத்தவர்க் கெல்லாம் அருள்புரி வானை
அம்பலக் கூத்தனை எம்பெரு மானைத்
தடுத்தெமை ஆண்டுகொண் டன்பளித் தானைச்
சங்கரன் தன்னை என் தந்தையைத் தாயைக்
கடுத்ததும் பும்மணி கண்டத்தி னானைக்
கண்ணுத லானைஎம் கண்ணக லானை
எடுத்தெனைத் துன்பம்விட் டேறவைத் தானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 2

1. எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்தம். தொ. வே. 1. ச.மு.க. ஆ. பா.
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம். தொ. வே. 2.

1082 மாலயன் தேடியும் காணா மலையை
வந்தனை செய்பவர் கண்ட மருந்தை
ஆலம் அமுதின் அருந்தல் செய்தானை
ஆதியை ஆதியோ டந்தமி லானைக்
காலன் வருந்தி விழவுதைத் தானைக்
கருணைக் கடலை என் கண்ணனை யானை
ஏலமணி குழலாள் இடத்தானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 3

1083 சுந்தரர்க் காகமுன் தூதுசென்றானைத்
தூயனை யாவரும் சொல்லரி யானைப்
பந்தம் அறுக்கும் பராபரன் தன்னைப்
பத்தர் உளங் கொள் பரஞ்சுட ரானை
மந்தர வெற்பின் மகிழ்ந்தமர்ந் தானை
வானவர் எல்லாம் வணங்க நின்றானை
எந்தமை ஆண்டுநல் இன்பளித் தானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 4

1084 அன்பர்கள் வேண்டும் அவை அளிப் பானை
அம்பலத்தே நடம் ஆடுகின்றானை
வன்பர்கள் நெஞ்சில் மருவல் இல்லானை
வானவர் கோனை எம் வாழ் முதலானைத்
துன்பம் தவிர்த்துச் சுகங்கொடுப்பானைச்
சோதியைத் சோதியுள் சோதியை நாளும்
என்பணி கொண்டெனை ஏன்று கொண்டானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 5

1085 கண்ணுத லானைஎன் கண்ணமர்ந் தானைக்
கருணா நிதியைக்க றைமிடற் றானை
ஒண்ணுதலாள் உமை வாழ் இடத்தானை
ஒருவனை ஒப்பிலா உத்தமன் தன்னை
நண்ணுதல் யார்க்கும் அருமையி னானை
நாதனை எல்லார்க்கும் நல்லவன் தன்னை
எண்ணுதல் செய்தெனக் கின்பளித் தானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 6

1086 வெள்விடை மேல்வரும் வீறுடை யானை
வேத முடிவினில் வீற்றிருந் தானைக்
கள்விரை யார்மலர்க் கொன்றையி னானைக்
கற்பகந் தன்னைமுக் கண்கொள் கரும்பை
உள்வினை நீக்கி என் உள்ளமர்ந்தானை
உலகுடை யானை என் உற்றது ணையை 7
எள்வினை ஒன்றும் இலாதவன் தன்னை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே.

1087 பெண்ணமர் பாகனைப் பேரரு ளோனைப்
பெரியவர்க் கெல்லாம் பெரியவன் தன்னைக்
கண்ணமர் நெற்றிக் கடவுள் பிரானைக்
கண்ணனை ஆண்டமுக் கண்ணனை எங்கள்
பண்ணமர் பாடல் பரிசளித் தானைப்
பார்முதல் அண்டம் படைத்தளிப் பானை
எண் அமராத எழிலுடை யானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 8

1088 வளங்கொளும் தில்லைப்பொன் மன்றுடை யானை
வானவர் சென்னியின் மாணிக்கம் தன்னைக்
களங்கம் இலாத கருத்துடை யானைக்
கற்பனை முற்றும் கடந்து நின்றானை
உளங்கொளும் என்தன் உயிர்த்துணை யானை
உண்மையை எல்லாம் உடையவன் தன்னை
இளம்பிறை சூடிய செஞ்சடை யானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 9

1089 குற்றமெல்லாம் குணமாகக்கொள் வானைக்
கூத்துடை யானைப்பெண் கூறுடை யானை
மற்றவர் யார்க்கும் அரியவன் தன்னை
வந்திப்பவர்க்கு மிக எளியானைப்
பெற்றம தேறும் பெரிய பிரானைப்
பிறைமுடி யோனைப்பெம் மானை எம்மானை
எற்றி என் துன்பம் எலாம் ஒழித் தானை
இன்றை இரவில் எதிர்ந்து கொள்வேனே. 10

திருச்சிற்றம்பலம்

34. நெஞ்சொடு நேர்தல்

கோயில்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1090 அணிகொள் கோவணக் கந்தையே நமக்கிங்
கடுத்த ஆடைஎன் றறிமட நெஞ்சே
கணிகொள் மாமணிக் கலன்கணங் கடவுள்
கண்ணுண் மாமணிக் கண்டிகை கண்டாய்
பிணிகொள் வன்பவம் நீக்கும்வெண் ணீறே
பெருமைச் சாந்தமாம் பிறங்கொளி மன்றில்
திணிகொள் சங்கர சிவசிவ என்று
சென்று வாழ்த்தலே செய்தொழி லாமே. 1

1091 செய்த நன்றிமேல் தீங்கிழைப் பாரில்
திருப்பும் என்தனைத் திருப்புகின் றனைநீ
பெய்த பாலினைக் கமரிடைக் கவிழ்க்கும்
பேதை யாதலில் பிறழ்ந்தனை உனைநான்

வைத போதினும் வாழ்த்தென நினைத்து
மறுத்து நீக்கிஅவ் வழிநடக் கின்றாய்
கொய்த கோட்டினை நட்டனை வளர்ப்பாய்
கொடிய நெஞ்சமே மடியகிற் றிலையே. 2

1092 இலைஎ னாதணு வளவும்ஒன் றீய
எண்ணு கின்றிலை என்பெறு வாயோ
கொலைஇ னாதென அறிந்திலை நெஞ்சே
கொல்லு கின்றஅக் கூற்றினும் கொடியாய்
தலையின் மாலைதாழ் சடையுடைப் பெருமான்
தாள்நி னைந்திலை ஊண்நினைந் துலகில்
புலையி னார்கள்பால் போதியோ வீணில்
போகப் போகஇப் போக்கினில் அழிந்தே. 3

1093 அழிந்த வாழ்க்கையின் அவலமிங் கனைத்தும்
ஐயம் இன்றிநீ அறிந்தனை நெஞ்சே
கழிந்த எச்சிலை விழைந்திடு வார்போல்
கலந்து மீட்டுநீ கலங்குகின் றனையே
மொழிந்த முன்னையோர் பெறும்சிவ கதிக்கே
முன்னு றாவகை என்னுறும் உன்னால்
இழிந்த நாயினும் கடையனாய் நின்றேன்
என்செய் வேன்உனை ஏன்அடுத் தேனே. 4

1094 தேன்நெய் ஆடிய செஞ்சடைக் கனியைத்
தேனை மெய்அருள் திருவினை அடியர்
ஊனை நெக்கிட உருக்கிய ஒளியை
உள்ளத் தோங்கிய உவப்பினை மூவர்
கோனை ஆனந்தக் கொழுங்கடல் அமுதைக்
கோம ளத்தினைக் குன்றவில் லியைஎம்
மானை அம்பல வாணனை நினையாய்
வஞ்ச நெஞ்சமே மாய்ந்திலை இனுமே. 5

1095 இன்னும் எங்ஙனம் ஏகுகின் றனையோ
ஏழை நெஞ்சமே இங்குமங் குந்தான்
முன்னை நாம்பிறந் துழன்றஅத் துயரை
முன்னில் என்குலை முறுக்குகின் றனகாண்
என்னை நீஎனக் குறுதுணை அந்தோ
என்சொல் ஏற்றிலை எழில்கொளும் பொதுவில்
மன்னு நம்முடை வள்ளலை நினைத்தால்
மற்று நாம்பிற வாவகை வருமே. 6

1096 பிறந்து முன்னர்இவ் வுலகினாம் பெண்டு
பிள்ளை ஆதிய பெருந்தொடக் குழந்தே
இறந்து வீழ்கதி இடைவிழுந் துழன்றே
இருந்த சேடத்தின் இத்தனை எல்லாம்
மறந்து விட்டனை நெஞ்சமே நீதான்
மதியி லாய்அது மறந்திலன் எளியேன்
துறந்து நாம்பெறும் சுகத்தினை அடையச்
சொல்லும் வண்ணம்நீ தொடங்கிடில் நன்றே. 7

1097 நன்று செய்வதற் குடன்படு வாயேல்
நல்ல நெஞ்சமே வல்லஇவ் வண்ணம்
இன்று செய்திநீ நாளைஎன் பாயேல்
இன்றி ருந்தவர் நாளைநின் றிலரே
ஒன்று கேண்மதி சுகர்முதல் முனிவோர்
உக்க அக்கணம் சிக்கெனத் துறந்தார்
அன்று முன்னரே கடந்தனர் அன்றி
அதற்கு முன்னரே அகன்றனர் அன்றே. 8

1098 அன்றி னேர்கிலை நம்முடைப் பெருமான்
அஞ்செ முத்தையும் அடிக்கடி மறந்தாய்
ஒன்றி மேற்கதி உறவகை அந்தோ
உணர்கி லாய்வயிற் றூண்பொருட் டயலோர்
முன்றில் காத்தனை அவ்வள வேனும்
முயன்று காத்திலை முன்னவன் கோயில்
துன்றி நின்றநல் தொண்டர்தம் தொழும்பு
தொடங்கு வானவர் தூயமுன் றிலையே. 9

1099 தூய நெஞ்சமே சுகம்பெற வேண்டில்
சொல்லு வாம்அது சொல்லள வன்றால்
காய மாயமாம் கான்செறிந் துலவும்
கள்வர் ஐவரைக் கைவிடுத் ததன்மேல்
பாய ஆணவப் பகைகெட முருக்கிப்
பகல்இ ராஇலாப் பாங்கரின் நின்றே
ஆய வானந்தக் கூத்துடைப் பரமா
காய சோதிகண் டமருதல் அணியே. 10

திருச்சிற்றம்பலம்

35. நெஞ்சறை கூவல்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1100 கண்கள் மூன்றினார் கறைமணி மிடற்றார்
கங்கை நாயகர் மங்கைபங் குடையார்
பண்கள் நீடிய பாடலார் மன்றில்
பாத நீடிய பங்கயப் பதத்தார்
ஒண்கண் மாதரார் நடம்பயில் ஒற்றி
யூர் அமர்ந்து வாழ் வுற்றவர்க் கேநம்
மண்கொண் மாலைபோம் வண்ணம்நல் தமிழ்ப்பூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. 1

1101 கரிய மாலன்று கரியமா வாகிக்
கலங்க நின்றபொன் கழல்புனை பதத்தார்
பெரிய அண்டங்கள் யாவையும் படைத்தும்
பித்தர் என்னும்அப் பேர்தனை அகலார்
உரிய சீர்கொளும் ஒற்றியூர் அமர்ந்தார்
உம்பர் நாயகர் தம்புயம் புனைய
வரிய கன்றநன் மலர்கொடு தெரிந்து
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. 2

1102 திருவின் நாயகன் கைப்படை பெறுவான்
திருக்கண் சாத்திய திருமலர்ப் பதத்தார்
கருவின் நின்றஎம் போல்பவர் தம்மைக்
காத்த ளிப்பதே கடன்எனக் கொண்டார்
உருவின் நின்றவர் அருஎன நின்றோர்
ஒற்றி யூரிடை உற்றனர் அவர்க்கு
மருவின் நின்றநன் மணங்கொளும் மலர்ப்பூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. 3

1103 கரும்பைந் நாகணைக் கடவுள்நான் முகன்வான்
கடவுள் ஆதியர் கலகங்கள் தவிர்ப்பான்
துரும்பை நாட்டிஓர் விஞ்சையன் போலத்
தோன்றி நின்றவர் துரிசறுத் திட்டோன்
தரும்பைம் பூம்பொழில் ஒற்றியூர் இடத்துத்
தலங்கொண் டார்அவர் தமக்குநாம் மகிழ்ந்து
வரும்பைஞ் சீர்த்தமிழ் மாலையோ டணிபூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. 4

1104 வதன நான்குடை மலரவன் சிரத்தை
வாங்கி ஓர்கையில் வைத்தநம் பெருமான்
நிதன [1]நெஞ்சகர்க் கருள் தரும் கருணா
நிதிய மாகிய நின்மலப் பெருமான்

1. நிதன - உருகுகின்ற ச. மு. க.

சுதன மங்கையர் நடம்செயும் ஒற்றித்
தூய னால்அவர் துணைத்திருத் தோட்கு
மதன இன்தமிழ் மாலையோ டணிபூ
மாலை சூட்டுதும் வருதிஎன் மனனே. 5

1105 கஞ்சன் அங்கொரு விஞ்சனம் ஆகிக்
காலில் போந்துமுன் காணரு முடியார்
அஞ்ச னம்கொளும் நெடுங்கணாள் எங்கள்
அம்மை காணநின் றாடிய பதத்தார்
செஞ்சொன் மாதவர் புகழ்திரு வொற்றித்
தேவர் காண்அவர் திருமுடிக் காட்ட
மஞ்ச னங்கொடு வருதும்என் மொழியை
மறாது நீஉடன் வருதிஎன் மனனே. 6

1106 சூழ மாலயன் பெண்ணுரு எடுத்துத்
தொழும்பு செய்திடத் தோன்றிநின் றவனைப்
போழும் வண்ணமே வடுகனுக் கருளும்
பூத நாதர்நற் பூரணா னந்தர்
தாழும் தன்மையோர் உயர்வுறச் செய்யும்
தகையர் ஒற்றியூர்த் தலத்தினர் அவர்தாம்
வாழும் கோயிற்குத் திருவல கிடுவோம்
மகிழ்வு கொண்டுடன் வருதிஎன் மனனே. 7

1107 விதியும் மாலுமுன் வேறுரு எடுத்து
மேலும் கீழுமாய் விரும்புற நின்றோர்
நதியும் கொன்றையும் நாகமும் பிறையும்
நண்ணி ஓங்கிய புண்ணியச் சடையார்
பதியு நாமங்கள் அனந்தமுற் றுடையார்
பணைகொள் ஒற்றியூர்ப் பரமர்கா ணவர் தாம்
வதியும் கோயிற்குத் திருவிளக் கிடுவோம்
வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே. 8

1108 குளங்கொள் கண்ணினார் குற்றமே செயினும்
குணமென் றேஅதைக் கொண்டருள் புரிவோர்
உளங்கொள் அன்பர் தம் உள்ளகத் திருப்போர்
ஒற்றி யூரிடம் பற்றிய புனிதர்
களங்கொள் கண்டரெண் தோளர்கங் காளர்
கல்லை வில்எனக் கண்டவர் அவர்தம்
வளங்கொள் கோயிற்குத் திருமெழுக் கிடுவோம்
வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே. 9

1109 பணிகொள் மார்பினர் பாகன மொழியாள்
பாகர் காலனைப் பாற்றிய பதத்தார்
திணிகொள் வன்மத மலைஉரி போர்த்தோர்
தேவர் நாயகர் திங்களம் சடையார்
அணிகொள் ஒற்றியூர் அமர்ந்திடும் தியாகர் 10
அழகர் அங்கவர் அமைந்துவீற் றிருக்கும்
மணிகொள் கோயிற்குத் திருப்பணி செய்தும்
வாழ்க நீஉடன் வருதிஎன் மனனே.

36. நெஞ்சைத் தேற்றல்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1110 சென்று வஞ்சர் தம் புறங்கடை நின்று
திகைக்க எண்ணும்என் திறன்இலா நெஞ்சே
ஒன்றும் அஞ்சலை என்னுடன் கூடி
ஒற்றி யூர்க்கின்று வருதியேல் அங்கு
மன்றுள் மேவிய வள்ளலார் மகிழ்ந்து
வாழ்கின் றார்அவர் மலரடி வணங்கி
நன்று வேண்டிய யாவையும் வாங்கி
நல்கு வேன்எனை நம்புதி மிகவே. 1

1111 தீது வேண்டிய சிறியர் தம் மனையில்
சென்று நின்றுநீ திகைத்திடல் நெஞ்சே
யாது வேண்டுதி வருதிஎன் னுடனே
யாணர் மேவிய ஒற்றியூர் அகத்து
மாது வேண்டிய நடனநா யகனார்
வள்ள லார்அங்கு வாழ்கின்றார் கண்டாய்
ஈது வேண்டிய தென்னுமுன் அளிப்பார்
ஏற்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே. 2

1112 இரக்கின் றோர்களுக் கில்லைஎன் னார்பால்
இரத்தல் ஈதலாம் எனல்உணர்ந் திலையோ[1]
கரக்கின் றோர்களைக் கனவினும் நினையேல்
கருதி வந்தவர் கடியவர் எனினும்
புரக்கின் றோர்மலர்ப் புரிசடை உடையார்
பூத நாயகர் பொன்மலைச் சிலையார்
உரக்குன் றோர்திரு வொற்றியூர்க் கேகி
உன்னி ஏற்குதும் உறுதிஎன் நெஞ்சே. 3

1113 கல்லின் நெஞ்சர்பால் கலங்கல்என் நெஞ்சே
கருதி வேண்டிய தியாதது கேண்மோ
சொல்லின் ஓங்கிய சுந்தரப் பெருமான்
சோலைசூழ் ஒற்றித் தொன்னகர்ப் பெருமான்
அல்லின் ஓங்கிய கண்டத்தெம் பெருமான்
அயனும் மாலும்நின் றறிவரும் பெருமான்
வல்லை ஈகுவான் ஈகுவ தெல்லாம்
வாங்கி ஈகுவேன் வருதிஎன் னுடனே. 4

1114 இலவு காக்கின்ற கிள்ளைபோல் உழன்றாய்
என்னை நின்மதி ஏழைநீ நெஞ்சே
பலவு வாழைமாக் கனிகனிந் திழியும்
பணைகொள் ஒற்றியூர்க் கென்னுடன் வருதி

[1] ஈண்டு மேற்கொண்ட குறட்பா
இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. 1054 (106 - இரவு - 4)

நிலவு வெண்மதிச் சடையுடை அழகர்
நிறைய மேனியில் நிகழ்ந்தநீற் றழகர்
குலவு கின்றனர் வேண்டிய எல்லாம்
கொடுப்பர் வாங்கிநான் கொடுப்பன்உன் தனக்கே. 5

1115 மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டினையோ
மால வன்பெறும் வாழ்வுவேண் டினையோ
அன்ன ஊர்திபோல் ஆகவேண் டினையோ
அமையும் இந்திரன் ஆகவேண் டினையோ
என்ன வேண்டினும் தடையிலை நெஞ்சே
இன்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே
வன்னி அஞ்சடை எம்பிரான் ஒற்றி
வளங்கொள் ஊரிடை வருதிஎன் னுடனே. 6

1116 மறப்பி லாச்சிவ யோகம்வேண் டுகினும்
வழுத்த ரும்பெரு வாழ்வுவேண் டுகினும்
இறப்பி லா தின்னும் இருக்கவேண் டுகினும்
யாது வேண்டினும் ஈகுவன் உனக்கே
பிறப்பி லான்எங்கள் பரசிவ பெருமான்
பித்தன் என்றுநீ பெயர்ந்திடல் நெஞ்சே
வறப்பி லான்அருட் கடல்அவன் அமர்ந்து
வாழும் ஒற்றியின் வருதிஎன் னுடனே. 7

1117 காலம் செல்கின்ற தறிந்திலை போலும்
காலன் வந்திடில் காரியம் இலைகாண்
நீலம் செல்கின்ற மிடற்றினார் கரத்தில்
நிமிர்ந்த வெண்நெருப் பேந்திய நிமலர்
ஏலம் செல்கின்ற குழலிஓர் புடையார்
இருக்கும் ஒற்றியூர்க் கென்னுடன் வருதி
ஞாலம் செல்கின்ற துயர்கெட வரங்கள்
நல்கு வார்அவை நல்குவன் உனக்கே. 8

1118 சென்று நீபுகும் வழியெலாம் உன்னைத்
தேட என்வசம் அல்லஎன் நெஞ்சே
இன்ற ரைக்கணம் எங்கும்நேர்ந் தோடா
தியல்கொள் ஒற்றியூர்க் கென்னுடன் வருதி
அன்று வானவர் உயிர்பெற நஞ்சம்
அருந்தி நின்றஎம் அண்ணலார் இடத்தே
நின்று வேண்டிய யாவையும் உனக்கு
நிகழ வாங்கிநான் ஈகுவன் அன்றே. 9

1119 கெடுக்கும் வண்ணமே பலர்உனக் குறுதி
கிளத்து வார்அவர் கெடுமொழி கேளேல்
அடுக்கும் வண்ணமே சொல்கின்றேன் எனைநீ
அம்மை இம்மையும் அகன்றிடா மையினால்
தடுக்கும் வண்ணமே செய்திடேல் ஒற்றித்
தலத்தி னுக்கின்றென் றன்னுடன் வருதி
மடுக்கும் வண்ணமே வேண்டிய எல்லாம்
வாங்கி ஈகுவன் வாழ்திஎன் நெஞ்சே. 10

திருச்சிற்றம்பலம்

37. நெஞ்சறிவுறூஉ

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1120 என்ன தன்றுகாண் வாழ்க்கையுட் சார்ந்த
இன்ப துன்பங்கள் இருவினைப் பயனால்
மன்னும் மும்மல மடஞ்செறி மனனே
வாழ்தி யோஇங்கு வல்வினைக் கிடமாய்
உன்ன நல்அமு தாம்சிவ பெருமான்
உற்று வாழ்ந்திடும் ஒற்றியூர்க் கின்றே
இன்னல் அற்றிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 1

1121 துன்ப வாழ்வினைச் சுகம்என மனனே
சூழ்ந்து மாயையுள் ஆழ்ந்துநிற் கின்றாய்
வன்ப தாகிய நீயும்என் னுடனே
வருதி யோஅன்றி நிற்றியோ அறியேன்
ஒன்ப தாகிய உருவுடைப் பெருமான்
ஒருவன் வாழ்கின்ற ஒற்றியூர்க் கின்றே
இன்ப வாழ்வுறச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 2

1122 ஆட்டு கின்றதற் காகஅம் பலத்துள்
ஆடு கின்றசே வடிமலர் நினையாய்
வாட்டு கின்றனை வல்வினை மனனே
வாழ்ந்து நீசுக மாய்இரு கண்டாய்
கூட்டு கின்றநம் பரசிவன் மகிழ்வில்
குலவும் ஒற்றியூர்க் கோயில்சூழ்ந் தின்பம்
ஈட்டு கின்றதற் கேகின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 3

1123 வஞ்ச வாழ்க்கையை விடுத்தனன் நீயே
வாரிக் கொண்டிங்கு வாழ்ந்திரு மனனே
நஞ்சம் ஆயினும் உண்குவை நீதான்
நானும் அங்கதை நயப்பது நன்றோ

தஞ்சம் என்றவர்க் கருள்தரும் பெருமான்
தங்கும் ஒற்றியூர்த் தலத்தினுக் கின்றே
எஞ்சல் இன்றிநான் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 4

1124 உண்மை ஓதினும் ஓர்ந்திலை மனனே
உப்பி லிக்குவந் துண்ணுகின் றவர்போல்
வெண்மை வாழ்க்கையின் நுகர்வினை விரும்பி
வெளுக்கின் றாய்உனை வெறுப்பதில் என்னே
தண்மை மேவிய சடையுடைப் பெருமான்
சார்ந்த ஒற்றியந் தலத்தினுக் கின்றே
எண்மை நீங்கிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 5

1125 நீடும் ஐம்பொறி நெறி நடந் துலக
நெறியில் கூடிநீ நினைப்பொடு மறப்பும்
நாடும் மாயையில் கிடந்துழைக் கின்றாய்
நன்று நின்செயல் நின்றிடு மனனே
ஆடும் அம்பலக் கூத்தன்எம் பெருமான்
அமர்ந்த ஒற்றியூர் ஆலயத் தின்றே
ஈடு நீங்கிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 6

1126 கூறும் ஓர்கணத் தெண்ணுறும் நினைவு
கோடி கோடியாய்க் கொண்டதை மறந்து
மாறு மாயையால் மயங்கிய மனனே
வருதி அன்றெனில் நிற்றிஇவ் வளவில்
ஆறு மேவிய வேணிஎம் பெருமான்
அமர்ந்த ஒற்றியூர் ஆலயம்அதன்பால்
ஈறில் இன்புறச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 7

1127 யாது கண்டனை அதனிடத் தெல்லாம்
அணைகின் றாய்அவ மாகநிற் கீந்த
போது போக்கினை யேஇனி மனனே
போதி போதிநீ போம்வழி எல்லாம்
கோது நீக்கிநல் அருள்தரும் பெருமான்
குலவும் ஒற்றியூர்க் கோயிலுக் கின்றே
ஏதம் ஓடநான் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 8

1128 விச்சை வேண்டினை வினையுடை மனனே
மேலை நாள்பட்ட வேதனை அறியாய்
துச்சை நீபடும் துயர்உனக் கல்லால்
சொல்லி றந்தநல் சுகம்பலித் திடுமோ

பிச்சை எம்பெரு மான்என நினையேல்
பிறங்கும் ஒற்றியம் பெருந்தகை அவன்பால்
இச்சை கொண்டுநான் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 9

1129 தூக்கம் உற்றிடும் சோம்புடை மனனே
சொல்வ தென்னைஓர் சுகம்இது என்றே
ஆக்கம் உற்றுநான் வாழநீ நரகில்
ஆழ நேர்ந்திடும் அன்றுகண் டறிகாண்
நீக்கம் உற்றிடா நின்மலன் அமர்ந்து
நிகழும் ஒற்றியூர் நியமத்திற் கின்றே
ஏக்கம் அற்றிடச் செல்கின்றேன் உனக்கும்
இயம்பி னேன்பழி இல்லைஎன் மீதே. 10

திருச்சிற்றம்பலம்

38. நெடுமொழி வஞ்சி

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1130 வார்க்கொண் மங்கையர் முலைமலைக் கேற்றி
மறித்தும் அங்கவர் மடுவினில் தள்ளப்
பார்க்கின் றாய்எனைக் கெடுப்பதில் உனக்குப்
பாவ மேஅலால் பலன்சிறி துளதோ
ஈர்க்கின் றாய்கடுங் காமமாம் புலையா
இன்று சென்றுநான் ஏர்பெறும் ஒற்றி
ஊர்க்குள் மேவிய சிவன் அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 1

1131 கொடிய மாதர்கள் இடையுறும் நரகக்
குழியில் என்தனைக் கொண்டுசென் றமுத்திக்
கடிய வஞ்சனை யால்எனைக் கலக்கம்
கண்ட பாவியே காமவேட் டுவனே
இடிய நெஞ்சகம் இடர்உழந் திருந்தேன்
இன்னும் என்னைநீ ஏன்இழுக் கின்றாய்
ஒடிவில் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 2

1132 பேதை மாதர்தம் மருங்கிடை ஆழ்ந்த
பிலத்தில் என்தனைப் பிடித்தழ வீழ்த்தி
வாதை உற்றிட வைத்தனை ஐயோ
மதியில் காமமாம் வஞ்சக முறியா
ஏதம் நீத்தருள் அடியர்தம் சார்வால்
எழுகின் றேன்எனை இன்னும்நீ இழுக்கில் 3
ஓதும் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே.

1133 கோவம் என்னும்ஓர் கொலைப்புலைத் தலைமைக்
கொடிய னேஎனைக் கூடிநீ நின்ற
பாவ வன்மையால் பகைஅடுத் துயிர்மேல்
பரிவி லாமலே பயன்இழந் தனன்காண்
சாவ நீயில தேல்எனை விடுக
சலஞ்செய் வாய்எனில் சதுர்மறை முழக்கம்
ஓவில் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 4

1134 சார்ந்த லோபமாம் தயையிலி ஏடா
தாழ்ந்தி ரப்பவர் தமக்கணு அதனுள்
ஈர்ந்த ஒன்றினை ஈயவும் ஒட்டாய்
இரக்கின் றோர்தரின் அதுகொளற் கிசைவாய்
சோர்ந்தி டாதுநான் துய்ப்பவும் செய்யாய்
சுகமி லாதநீ தூரநில் இன்றேல்
ஓர்ந்த ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 5

1135 மோகம் என்னும்ஓர் மூடரில் சிறந்தோய்
முடிவி லாத்துயர் மூலஇல் ஒழுக்கில்
போகம் என்னும்ஓர் அளற்றிடை விழவும்
போற்று மக்கள்பெண் டன்னைதந் தையராம்
சோக வாரியில் அழுந்தவும் இயற்றிச்
சூழ்கின் றாய்எனைத் தொடர்ந்திடேல் தொடரில்
ஓகை ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 6

1136 மதம்எ னும்பெரு மத்தனே எனைநீ
வருத்தல் ஓதினால் வாயினுக் கடங்கா
சிதமெ னும்பரன் செயலினை அறியாய்
தீங்கு செய்தனர் நன்மையாம் செய்தோம்
இதம றிந்தனம் எமக்கினி ஒப்பார்
யாவர் என்றெனை இழிச்சினை அடியார்க்
குதவும் ஒற்றியூர்ச் சிவன் அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 7

1137 அமைவ றிந்திடா ஆணவப் பயலே
அகில கோடியும் ஆட்டுகின் றவன்காண்
எமைந டத்துவோன் ஈதுண ராமல்
இன்று நாம்பரன் இணையடி தொழுதோம்
கமைவின் ஏத்தினோம் அடியரும் ஆனோம்
கனிகின் றோம்எனக் கருதிட மயக்கேல் 8
உமையன் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே.

1138 கருமை யாம்அகங் காரமர்க் கடவா
கடைய னேஉனைக் கலந்தத னாலே
அருமை யாகநாம் பாடினோம் கல்வி
அறஅ றிந்தனம் அருளையும் அடைந்தோம்
இருமை இன்பமும் பெற்றனம் என்றே
எனைம தித்துநான் இழிவடைந் தனன்காண்
ஒருமை ஒற்றியூர்ச் சிவன் அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 9

1139 வெண்மை சேர்அகங் காரமாம் வீணா
விடுவி டென்றனை வித்தகம் உணராய்
தண்மை இன்றிதற் கிதுஎனத் துணிந்தென்
தனையும் சாய்ப்பது தகவென நினைத்தாய்
அண்மை நின்றிடேல் சேய்மைசென் றழிநீ
அன்றி நிற்றியேல் அரிமுதல் ஏத்தும்
உண்மை ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மைஎன் றுணரே. 10

திருச்சிற்றம்பலம்

39. பற்றின் திறம் பகர்தல்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1140 வாணரை விடையூர் வரதனை ஒற்றி வாணனை மலிகடல் விடமாம்
ஊணனை அடியேம் உளத்தனை எல்லாம் உடையனை உள்கிநின் றேத்தா
வீணரை மடமை விழலரை மரட்ட வேடரை மூடரை நெஞ்சக்
கோணரை முருட்டுக் குறும்பரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே. 1

1141 மூவரை அளித்த முதல்வனை முக்கண் மூர்த்தியைத் தீர்த்தனைப் பெரிய
தேவரைக் காத்த செல்வனை ஒற்றித் தியாகனை நினைந்துநின் றேத்தாப்
பாவரை வரையாப் படிற்றரை வாதப் பதடரைச் சிதடரைப் பகைசேர்
கோவரைக் கொடிய குணத்தரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே. 2

1142 அண்டனை எண்தோள் அத்தனை ஒற்றி அப்பனை ஐயனை நீல
கண்டனை அடியர் கருத்தனைப் பூத கணத்தனைக் கருதிநின் றேத்தா
மிண்டரைப் பின்றா வெளிற்றரை வலிய வேற்றரைச் சீற்றரைப் பாபக்
குண்டரை வஞ்சக் குடியரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே. 3

1143 நாதனைப் பொதுவில் நடத்தனை எவர்க்கும் நல்லனை வல்லனைச் சாம
கீதனை ஒற்றிக் கிறைவனை எங்கள் கேள்வனைக் கிளர்ந்துநின் றேத்தாத்
தீ தரை நரகச் செக்கரை வஞ்சத் திருட்டரை மருட்டரைத் தொலையாக்
கோதரைக் கொலைசெய் கோட்டரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே. 4

1144 நம்பனை அழியா நலத்தனை எங்கள் நாதனை நீதனைக் கச்சிக்
கம்பனை ஒற்றிக் கங்கைவே ணியனைக் கருத்தனைக் கருதிநின் றேத்தா
வம்பரை ஊத்தை வாயரைக் கபட மாயரைப் பேயரை எட்டிக்
கொம்பரைப் பொல்லாக் கோளரைக் கண்டால் கூசுவ கூசுவ விழியே. 5

1145 சடையனை எவர்க்கும் தலைவனைக் கொன்றைத் தாரனைச் சராசர சடத்துள்
உடையனை ஒற்றி ஊரனை மூவர் உச்சனை உள்கிநின் றேத்தாக்
கடையரைப் பழைய கயவரைப் புரட்டுக் கடியரைக் கடியரைக் கலக
நடையரை உலக நசையரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 6

1146 கஞ்சனைச் சிரங்கொய் கரத்தனை மூன்று கண்ணனைக் கண்ணனைக் காத்த
தஞ்சனை ஒற்றித் தலத்தனைச் சைவத் தலைவனைத் தாழ்ந்துநின் றேத்தா
வஞ்சரைக் கடைய மடையரைக் காம மனத்தரைச் சினத்தரை வலிய
நஞ்சரை இழிந்த நரகரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 7

1147 தாமனை மழுமான் தரித்தசெங் கரனைத் தகையனைச் சங்கரன் தன்னைச்
சேமனை ஒற்றித் தியாகனைச் சிவனைத் தேவனைத் தேர்ந்துநின் றேத்தா
ஊமரை நீண்ட ஒதியரைப் புதிய ஒட்டரைத் துட்டரைப் பகைகொள்
நாமரை நரக நாடரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 8

1148 ஈசனைத் தாயில் இனியனை ஒற்றி இன்பனை அன்பனை அழியாத
தேசனைத் தலைமைத் தேவனை ஞானச் சிறப்பனைச் சேர்ந்து நின் றேத்தா
நீசரை நாண்இல் நெட்டரை நரக நேயரைத் தீயரைத் தரும
நாசரை ஒழியா நட்டரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 9

1149 நித்தனைத் தூய நிமலனைப் புலியூர் நிருத்தனை ஒருத்தனை வாய்மைச்
சுத்தனை ஒற்றித் தலம்வளர் ஞான சுகத்தனைச் சூழ்ந்துநின் றேத்தா
மத்தரைச் சமண வாதரைத் தேர வறியரை முறியரை வைண
நத்தரைச் சுணங்க நாவரைக் கண்டால் நடுங்குவ நடுங்குவ மனமே. 10

திருச்சிற்றம்பலம்

40. அடிமைத் திறத் தலைசல்

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1150 தேவர் அறியார் மால்அறியான் திசைமா முகத்தோன் தான்அறியான்
யாவர் அறியார் திருஒற்றி யப்பா அடியேன் யாதறிவேன்
மூவர் திருப்பாட் டினுக்கிசைந்தே முதிர்தீம் பாலும் முக்கனியும்
காவல் அமுதும் நறுந்தேனும் கைப்ப இனிக்கும் நின்புகழே. 1

1151 புகழே விரும்பிப் புலன் இழந்தேன் போந்துன் பதத்தைப் போற்றுகிலேன்
இகழேன் எனைநான் ஒற்றியப்பா என்னை மதித்தேன் இருள்மனத்தேன்
திகழ்ஏழ் உலகில் எனைப்போல்ஓர் சிறியர் அறியேன் தீவினையை
அகழேன் எனினும் எனையாளா தகற்றல் அருளுக் கழகன்றே. 2

1152 அன்றும் அறியார் மாதவரும் அயனும் மாலும் நின்நிலையை
இன்றும் அறியார் அன்றியவர் என்றும் அறியார் என்னில்ஒரு
நன்றும் அறியேன் நாயடியேன் நான்எப்படிதான் அறிவேனோ
ஒன்றும் நெறிஏ தொற்றியப்பா ஒப்பார் இல்லா உத்தமனே. 3

1153 ஒப்பார் இல்லா ஒற்றியப்பா உன்னை மறந்தேன் மாதர்கள் தம்
வெப்பார் குழியில் கண்மூடி விழுந்தேன் எழுந்தும் விரைகின்றேன்
இப்பார் நடையில் களித்தவரை ஈர்த்துக் கொடுபோய்ச் செக்கிலிடு
விப்பார் நமனார் என்பதைநான் நினையா தறிவை விடுத்தேனே. 4

1154 விடுத்தேன் தவத்தோர் நெறிதன்னை வியந்தேன் உலக வெந்நெறியை
மடுத்தேன் துன்ப வாரிதனை வஞ்ச மனத்தர் மாட்டுறவை
அடுத்தேன் ஒற்றி யப்பாஉன் அடியை நினையேன் அலமந்தேன்
படுத்தே நமன்செக் கிடும்போது படிறேன் யாது படுவேனோ. 5

1155 படுவேன் அல்லேன் நமன்தமரால் பரிவேன் அல்லேன் பரமநினை
விடுவேன் அல்லேன் என்னையும்நீ விடுவாய் அல்லை இனிச்சிறிதும்
கெடுவேன் அல்லேன் சிறியார்சொல் கேட்பேன் அல்லேன் தருமநெறி
அடுவேன் அல்லேன் திருஒற்றி யப்பா உன்றன் அருள்உண்டே. 6

1156 உண்டோ எனைப்போல் மதிஇழந்தோர் ஒற்றி யப்பா உன்னுடைய
திண்டோள் இலங்கும் திருநீற்றைக் காண விரும்பேன் சேர்ந்தேத்தேன்
எண்டோள் உடையாய் என்றிரங்கேன் இறையும் திரும்பேன் இவ்வறிவைக்
கொண்டே உனைநான் கூடுவன் நின் குறிப்பே தொன்றும் அறியேனே. 7

1157 அறியேன் உன்தன் புகழ்ப்பெருமை அண்ணா ஒற்றி அப்பாநான்
சிறியேன் எனினும் நினைஅன்றித் தெளியேன் மற்றோர் தேவர்தமை
வெறியேன் பிழையைக் குறித்தெனைக் கைவிட்டால் என்செய்வேன் அடியேன்
நெறியே தருதல் நின்கடன்காண் நின்னைப் பணிதல் என்கடனே. 8

1158 கடனே அடியர் தமைக்காத்தல் என்றால் கடையேன் அடியன் அன்றோ
உடன்நேர் பிணியும் ஒழித்திலைஎன் உள்ளத் துயரும் தவிர்த்திலையே
விடன்நேர் கண்டத் தின்னமுதே வேத முடியில் விளங்கொளியே
அடன்ஏர் விடையாய் திருஒற்றி யப்பா உனைநான் அயர்ந்திலனே[1]. 9

1159 இலனே மற்றோர் துணைசிறிதும் என்னே காமம் எனும்கடலில்
மலனேன் வருந்தக் கண்டிருத்தல் மணியே அருளின் மரபன்றே
அலனே அயலான் அடியேன்நான் ஐயாஒற்றி யப்பாநல்
நலனேர் தில்லை அம்பலத்தில் நடிக்கும் பதமே நாடினனே. 10

1160 நாடி அலுத்தேன் என்அளவோ நம்பா மன்றுள் நன்குநடம்
ஆடி மகிழும் திருஒற்றி அப்பா உன்தன் அருட்புகழைக்
கோடி அளவில் ஒருகூறும் குணித்தார் இன்றி ஆங்காங்கும்
தேடி அளந்தும் தெளிந்திலரே திருமால் முதலாம் தேவர்களே. 11

திருச்சிற்றம்பலம்

1. அயர்ந்திலனே 1867, ச. மு. க.

41. அவத்தொழிற் கலைசல்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1161 அணங்கனார் களபத் தனமலைக் கிவரும் அறிவிலேன் என்புகாத் துழலும்
சுணங்கனேன் தனக்குன் திருவருள் கிடைக்கும் சுகமும்உண் டாங்கொலோ அறியேன்
கணங்கள்நேர் காட்டில் எரிஉகந் தாடும் கடவுளே கடவுளர்க் கிறையே
உணங்குவெண் தலைத்தார் புனைதிருப் புயனே ஒற்றியூர் உத்தம தேவே. 1

1162 தேவரே அயனே திருநெடு மாலே சித்தரே முனிவரே முதலா
யாவரே எனினும் ஐயநின் தன்மை அறிந்திலர் யான்உனை அறிதல்
தாவில்வான் சுடரைக் கண்ணிலி அறியும் தன்மையன் றோபெருந்தவத்தோர்
ஓவில்மா தவம்செய் தோங்குசீர் ஒற்றியூர் அமர்ந் தருள்செயும் ஒன்றே. 2

1163 ஒன்றுநின் தன்மை அறிந்தில மறைகள்[1] உள்ளம்நொந் திளைக்கின்றதின்னும்
நன்றுநின் தன்மை நான்அறிந் தேத்தல் நாயர சாளல்போல் அன்றோ
சென்றுநின் றடியர் உள்ளகத் தூறும் தெள்ளிய அமுதத்தின் திரட்டே
மன்றுள்நின் றாடும் மாணிக்க மலையே வளங்கொளும் ஒற்றியூர் மணியே 3

1164 மணித்தலை நாகம் அனையவெங் கொடியார் வஞ்சக விழியினால்மயங்கிப்
பிணித்தலைக் கொண்டு வருந்திநின் றுழலும் பேதையே ற்குன்னருள் உளதோ
கணித்தலை அறியாப் பேர்ஒளிக் குன்றே கண்கள்மூன் றுடையஎன் கண்ணே
அணித்தலை அடியர்க் கருள்திரு வொற்றி அப்பனே செப்பரும்பொருளே. 4

1165 ஒப்பிலாய் உனது திருவருள் பெறுவான் உன்னினை கின்றனன் மனமோ
வெப்பில் ஆழ்ந்தெனது மொழிவழி அடையா வேதனைக்கிடங்கொடுத்துழன்ற
இப்பரி சானால் என்செய்வேன் எளியேன் எவ்வணம் நின்அருள்கிடைக்கும்
துப்புர வொழிந்தோர் உள்ளகத்தோங்கும் சோதியே ஒற்றியூர்த் துணையே. 5

1166 துணையிலேன் நினது திருவடி அல்லால் துட்டனேன் எனினும்என் தன்னை
இணையிலாய் உனது தொண்டர் தம் தொண்டன் எனச்செயல் நின்அருள் இயல்பே
அணையிலா தன்பர் உள்ளகத் தோங்கும் ஆனந்த வெள்ளமே அரசே
பணையில்வா ளைகள்பாய் ஒற்றியம் பதியில் பரிந்தமர்ந் தருள் செயும் பரமே. 6

1167 பரிந்துநின் றுலக வாழ்க்கையில் உழலும் பரிசொழிந் தென்மலக் கங்குல்
இரிந்திட நினது திருவருள் புரியா திருத்தியேல் என்செய்வேன் எளியேன்
எரிந்திட எயில்மூன் றழற்றிய நுதற்கண் எந்தையே எனக்குறுந் துணையே
விரிந்தபூம் பொழில்சூழ் ஒற்றியம் பதியில் மேவிய வித்தக வாழ்வே. 7

1168 வாழ்வது நின்றன் அடியரோ டன்றி மற்றும்ஓர் வெற்றருள் வாழேன்
தாழ்வது நினது தாட்கலான் மற்றைத் தாட்கெலாம் சரண்எனத் தாழேன்
சூழ்வது நினது திருத்தளி அல்லால் சூழ்கிலேன் தொண்டனேன் தன்னை 8
ஆள்வது கருதின் அன்றிஎன் செய்கேன் ஐயனே ஒற்றியூர் அரசே.

1. மறைகள் இளைக்கின்றது – என்பது மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டாது என்றார் போலும் வந்த பன்மை ஒருமை மயக்கம்

1169 ஐயனே மாலும் அயனும்நின் றறியா அப்பனே ஒற்றியூர் அரசே
மெய்யனே நினது திருவருள் விழைந்தேன் விழைவினை முடிப்பையோஅன்றிப்
பொய்யனேன் தன்மைக் கடாதது கருதிப் பொன் அருள் செயாதிருப் பாயோ
கையனேன் ஒன்றும் அறிந்திலேன் என்னைக் காத்தருள் செய்வதுன் கடனே. 9

1170 செய்வதுன் கடன்காண் சிவபெரு மானே திருவொற்றி யூர்வருந் தேனே
உய்வதென் கடன்காண் அன்றிஒன் றில்லை உலகெலாம் உடையநா யகனே
நைவதென் நெஞ்சம் என்செய்கேன் நினது நல்அருள் பெறாவிடில் என்னை
வைவதுன் அடியர் அன்றிஇவ் வுலக வாழ்க்கையில் வரும்பொலா அணங்கே. 10

திருச்சிற்றம்பலம்

42. நாள் அவத்து அலைசல்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1171 இன்றிருந் தவரை நாளை இவ் வுலகில் இருந்திடக் கண்டிலேம் ஆஆ
என்றிருந் தவத்தோர் அரற்றுகின் றனரால் ஏழையேன் உண்டுடுத் தவமே
சென்றிருந் துறங்கி விழிப்பதே அல்லால் செய்வன செய்கிலேன் அந்தோ
மன்றிருந் தோங்கும் மணிச்சுடர் ஒளியே வள்ளலே ஒற்றியூர் வாழ்வே. 1

1172 தாவியே இயமன் தமர்வரும் அந்நாள் சம்புநின் திருவருள் அடையாப்
பாவியேன் செய்வ தென்என நெஞ்சம் பதைபதைத் துருகுகின் றனன்காண்
கூவியே எனக்குன் அருள்தரின் அல்லால் கொடியனேன் உய்வகை அறியேன்
வாவிஏர் பெறப்பூஞ் சோலைசூழ்ந் தோங்கி வளம்பெறும் ஒற்றியூர் வாழ்வே. 2

1173 நீரின்மேல் எழுதும் எழுத்தினும் விரைந்து நிலைபடா உடம்பினை ஓம்பிப்
பாரின்மேல் அலையும் பாவியேன் தனக்குப் பரிந்தருள் பாலியாய் என்னில்
காரின்மேல் வரல்போல் கடாமிசை வரும்அக் காலன்வந் திடில்எது செய்வேன்
வாரின்மேல் வளரும் திருமுலை மலையாள் மணாளனேஒற்றியூர் வாழ்வே. 3

1174 கருங்கணம் சூழக் கசியும்இவ் வுடலம் கருதும்இக் கணமிருந் ததுதான்
வருங்கணம் ஏதாய் முடியுமோ ஐயோ வஞ்சனேன் என்செய வல்லேன்
பெருங்கணம் சூழ வடவனத் தாடும் பித்தனே உத்தம தவத்தோர்
மருங்கண வுறநின் றரகர எனுஞ்சொல் வான்புகும் ஒற்றியூர் வாழ்வே. 4

1175 கன்னியர் அளகக் காட்டிடை உழன்ற கல்மனக் குரங்கினேன் தனைநீ
அன்னியன் என்றே கழித்திடில் உனக்கிங் கார்சொல வல்லவர் ஐயா
என்னியல் அறியேன் நமன்தமர் வருநாள் என்செய்வேன் என்செய்வேன் அந்தோ
மன்னிய வன்னி மலர்ச்சடை மருந்தே வளங்கொளும் ஒற்றியூர் வாழ்வே. 5

1176 பசிக்குண வுழன்றுன் பாததா மரையைப் பாடுதல் ஒழிந்து நீர்ப் பொறிபோல்
நசிக்கும் இவ்வுடலை நம்பினேன் என்னை நமன்தமர் வருத்தில் என்செய்கேன்
விசிக்கும்நல் அரவக் கச்சினோய் நினதுமெய் அருள் அலதொன்றும் விரும்பேன்
வசிக்கும்நல் தவத்தோர்க் கருள்செய ஓங்கிவளம்பெறும் ஒற்றியூர் வாழ்வே.

1177 கான்றசோ றருந்தும் சுணங்கனின் பலநாள் கண்டபுன் சுகத்தையே விரும்பும்
நான்றநெஞ் சகனேன் நமன்தமர் வருநாள் நாணுவ தன்றிஎன் செய்கேன்
சான்றவர் மதிக்கும் நின்திரு வருள்தான் சார்ந்திடில் தருக்குவன் ஐயா
மான்தனிக் கரத்தெம் வள்ளலே என்னை வாழ்விக்கும் ஒற்றியூர் வாழ்வே. 7

1178 மடிக்குறும் நீர்மேல் எழுத்தினுக் கிடவே மைவடித் தெடுக்குநர் போல
நொடிக்குளே மறையும் உடம்பினை வளர்க்க நொந்தனன் நொந்ததும் அல்லால்
படிக்குளே மனத்தால் பரிவுறு கின்றேன் பாவியேன் தனக்கருள் புரிவாய்
வடிக்குறும் தமிழ்கொண் டன்பருக் கருளும் வள்ளலே ஒற்றியூர் வாழ்வே. 8

1179 அங்கையில் புண்போல் உலகவாழ் வனைத்தும் அழிதரக் கண்டுநெஞ் சயர்ந்தே
பங்கமுற் றலைவ தன்றிநின் கமல பாதத்தைப் பற்றிலேன் அந்தோ
இங்கெனை நிகரும் ஏழையார் எனக்குன் இன்னருள் எவ்வணம் அருள்வாய்
மங்கையோர் புடைகொள் வள்ளலே அழியா வளங்கொளும் ஒற்றியூர் வாழ்வே. 9

1180 கணத்தினில் உலகம் அழிதரக் கண்டும் கண்ணிலார் போல்கிடந் துழைக்கும்
குணத்தினில் கொடியேன் தனக்குநின் அருள்தான் கூடுவ தெவ்வணம் அறியேன்
பணத்தினில் பொலியும் பாம்பரை ஆர்த்த பரமனே பிரமன்மால் அறியா
வணத்தினால் நின்ற மாணிக்கச் சுடரே வள்ளலே ஒற்றியூர் வாழ்வே. 10

திருச்சிற்றம்பலம்

43. அவல மதிக்கு அலைசல்

திருவொற்றியூர்
அறுசீர்க்' கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1181 மண்ணை மனத்துப் பாவியன்யான் மடவார் உள்ளே வதிந்தளிந்த
புண்ணை மதித்துப் புகுகின்றேன் போதம் இழந்தேன் புண்ணியனே
எண்ண இனிய நின்புகழை ஏத்தேன் ஒதிபோல் இருக்கின்றேன்
தண்நல் அமுதே நீஎன்னைத் தடுத்திங் காளத் தக்கதுவே. 1

1182 தக்க தறியேன் வெறியேன்நான் சண்ட மடவார் தம்முலைதோய்
துக்கம் அதனைச் சுகம்என்றே துணிந்தேன் என்னைத் தொழும்பன்எனில்
மிக்க அடியார் என்சொல்லார் விண்ணோர் மண்ணோர் என்புகலார்
செக்கர் நிறத்துப் பொன்மேனித் திருநீற் றொளிசேர் செங்கரும்பே. 2

1183 கரும்பே ஒற்றி யூர்அமர்ந்த கனியே உன்தன் கழல்அடியை
விரும்பேன் அடியார் அடித்தொண்டில் மேவேன் பொல்லா விடமனைய
பெரும்பேய் மாதர் பிணக்குழியில் பேதை மனம்போந் திடச்சூறைத்
துரும்பே என்னச் சுழல்கின்றேன் துணையொன் றறியேன் துனியேனே. 3

1184 துனியே பிறத்தற் கேதுஎனும் துட்ட மடவார் உள்ததும்பும்
பனிஏய் மலம்சூழ் முடைநாற்றப் பாழும் குழிக்கே வீழ்ந்திளைத்தேன்
இனிஏ துறுமோ என்செய்கேன் எளியேன் தனைநீ ஏன்றுகொளாய்
கனியே கருணைக் கடலேஎன் கண்ணே ஒற்றிக் காவலனே. 4

1185 வலமே உடையார் நின்கருணை வாய்ந்து வாழ்ந்தார் வஞ்சகனேன்
மலமே உடையேன் ஆதலினால் மாதர் எனும்பேய் வாக்கும் உவர்ச்
சலமே ஒழுக்குப் பொத்தரிடைச் சாய்ந்து தளர்ந்தேன் சார்பறியேன்
நலமே ஒற்றி நாடுடையாய் நாயேன் உய்யும் நாள்என்றோ 5

1186 நாளை வருவ தறியேன்நான் நஞ்சம் அனைய நங்கையர் தம்
ஆளை அழுத்தும் நீர்க்குழியில் அழுந்தி அழுந்தி எழுந்தலைந்தேன்
கோளை அகற்றி நின்அடிக்கே கூடும் வண்ணம் குறிப்பாயோ
வேளை எரித்த மெய்ஞ்ஞான விளக்கே முத்தி வித்தகமே. 6

1187 முத்தி முதலே முக்கணுடை மூரிக் கரும்பே நின்பதத்தில்
பத்தி முதலே இல்லாதேன் பரம சுகத்தில் படிவேனோ
எத்தி அழைக்கும் கருங்கண்ணார் இடைக்குள் பிளந்த வெடிப்பதனில்
தத்தி விழுந்தேன் எழுவேனேல் தள்ளா நின்ற தென்மனமே. 7

1188 மனமே முன்னர் வழிகாட்டப் பின்னே சென்று மங்கையர் தம்
தனமே என்னும் மலைஏறிப் பார்த்தேன் இருண்ட சலதிஒன்று
முனமே தோன்ற மதிமயங்கி விழுந்தேன் எழுவான் முயலுகின்றேன்
இனமே என்னை நீஅன்றி எடுப்பார் இல்லை என் அரசே. 8

1189 என்னைக் கொடுத்தேன் பெண்பேய்கட் கின்பம் எனவே எனக்கவர்நோய்
தன்னைக் கொடுத்தார் நான்அந்தோ தளர்ந்து நின்றேன் அல்லதுசெம்
பொன்னைக் கொடுத்தும் பெறஅரிய பொருளே உன்னைப் போற்றுகிலேன்
இன்னல் கொடுத்த பவமுடையேன் எற்றுக் கிவண்நிற் கின்றேனே. 9

1190 எற்றுக் கடியர் நின்றதுநின் இணைத்தாள் மலரை ஏத்தஅன்றோ
மற்றிக் கொடியேன் அஃதின்றி மடவார் இடைவாய் மணிப்பாம்பின்
புற்றுக் குழன்றேன் என்னேஎன் புந்தி எவர்க்குப் புகல்வேனே
கற்றுத் தெளிந்தோர் புகழ்ஒற்றிக் கண்ணார்ந் தோங்கும் கற்பகமே. 10

1191 ஓங்கும் பொருளே திருஒற்றி யூர்வாழ் அரசே உனைத்துதியேன்
தீங்கும் புழுவும் சிலைநீரும் சீழும் வழும்பும் சேர்ந்தலைக்கத்
தூங்கும் மடவார் புலைநாற்றத் தூம்பில் நுழையும் சூதகனேன்
வாங்கும் பவம்தீர்த் தருள்வதுநின் கடன்காண் இந்த மண்ணிடத்தே. 11

திருச்சிற்றம்பலம்

44. ஆனாவாழ்வின் அலைசல்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1192 துள்ளிவாய் மடுக்கும் காளையர் ஆட்டத் துடுக்கினை ஒடுக்குறும் காமக்
கொள்ளிவாய்ப் பேய்கள் எனுமட வியர்தம் கூட்டத்துள் நாட்டம்வைத் துழன்றேன்
உள்ளிவாய் மடுத்துள் உருகிஆ னந்த உததிபோல் கண்கள் நீர் உகுப்பார்
அள்ளிவாய் மடுக்கும் அமுதமே எங்கள் அண்ணலே ஒற்றியூர் அரசே. 1

1193 ஒற்றியூர் அமரும் ஒளிகெழு மணியே உன்அடி உள்கிநின் றேத்தேன்
முற்றியூர் மலினக் குழிஇருள் மடவார் முலைஎனும் மலநிறைக் குவையைச்
சுற்றிஊர் நாயின் சுழன்றனன் வறிதே சுகம்எனச் சூழ்ந்தழி உடலைப்
பற்றியூர் நகைக்கத் திரிதரு கின்றேன் பாவியேன் உய்திறம் அரிதே. 2

1194 அரியது நினது திருவருள் ஒன்றே அவ்வருள் அடைதலே எவைக்கும்
பெரியதோர் பேறென் றுணர்ந்திலேன் முருட்டுப் பேய்களை ஆயிரம்கூட்டிச்
சரிஎனச் சொலினும் போ துறா மடமைத் தையலார் மையலில் அழுந்திப்
பிரியமுற் றலைந்தேன் ஏழைநான் ஒற்றிப் பெருமநின் அருளெனக் குண்டே. 3

1195 பெருமநின் அருளே அன்றிஇவ் வுலகில் பேதையர் புழுமலப் பிலமாம்
கருமவாழ் வெனைத்தும் வேண்டிலேன் மற்றைக் கடவுளர் வாழ்வையும் விரும்பேன்
தருமவா ரிதியே தடம்பணை ஒற்றித் தலத்தமர் தனிமுதல் பொருளே
துருமவான் அமுதே அடியனேன் தன்னைச் சோதியா தருள்வதுன் பரமே. 4

1196 அருள்வதுன் இயற்கை உலகெலாம் அறியும் ஐயவோ நான்அதை அறிந்தும்
மருள்வதென் இயற்கை என்செய்வேன் இதனை மனங்கொளா தருள்அரு ளாயேல்
தெருள்வதொன் றின்றி மங்கையர் கொங்கைத் திடர்மலைச் சிகரத்தில் ஏறி
உருள்வதும் அல்குல் படுகுழி விழுந்தங் குலைவதும் அன்றிஒன் றுண்டோ. 5

1197 உண்டுநஞ் சமரர் உயிர்பெறக் காத்த ஒற்றியூர் அண்ணலே நின்னைக்
கண்டுநெஞ் சுருகிக் கண்கள்நீர் சோரக் கைகுவித் திணையடி இறைஞ்சேன்
வண்டுநின் றலைக்கும் குழல்பிறை நுதலார் வஞ்சக விழியினால் மயங்கிக்
குண்டுநீர் ஞாலத் திடைஅலை கின்றேன் கொடியனேன் அடியனேன் அன்றே. 6

1198 அன்றுநீ அடிமைச் சாதனம் காட்டி ஆண்டஆ ரூரனார் உன்னைச்
சென்றுதூ தருள்என் றிரங்குதல் நோக்கிச் சென்றநின் கருணையைக் கருதி
ஒன்றுதோ றுள்ளம் உருகுகின் றனன்காண் ஒற்றியூர் அண்ணலே உலகத்
தென்றுமால் உழந்தேன் எனினும் நின்அடியேன் என் தனைக் கைவிடேல் இனியே 7

1199 இனியநின் திருத்தாள் இணைமலர் ஏத்தேன் இளமுலை மங்கையர்க் குள்ளம்
கனியஅக் கொடியார்க் கேவல்செய் துழன்றேன் கடையனேன் விடயவாழ் வுடையேன்
துனியஇவ் வுடற்கண் உயிர்பிரிந் திடுங்கால் துணைநினை அன்றி ஒன் றறியேன் 8
தனியமெய்ப் போத வேதநா யகனே தடம்பொழில் ஒற்றியூர் இறையே.

1200 இறையும்நின் திருத்தாள் கமலங்கள் ஏத்தேன் எழில்பெற உடம்பினை ஓம்பிக்
குறையும்வெண் மதிபோல் காலங்கள் ஒழித்துக் கோதையர் குறுங்குழி அளற்றில்
பொறையும் நல் நிறையும் நீத்துழன் றலைந்தேன் பொய்யனேன் தனக்குவெண் சோதி
நிறையும் வெள் நீற்றுக் கோலனே ஒற்றி நிமலனே அருளுதல் நெறியே. 9

1201 நெறியிலேன் கொடிய மங்கையர் மையல் நெறியிலே நின்றனன் எனினும்
பொறியிலேன் பிழையைப் பொறுப்பதுன் கடனே பொறுப்பதும் அன்றிஇவ் வுலக
வெறியிலே இன்னும் மயங்கிடா துன்தன் விரைமலர் அடித்துணை ஏத்தும்
அறிவுளே அருள்வாய் ஒற்றியூர் அரசே அன்றினார் துள்ளறுத் தவனே. 10

திருச்சிற்றம்பலம்

45. அருள் திறத்து அலைசல்

திருவொற்றியூர்
கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

1202 நறைமணக்கும் கொன்றை நதிச்சடில நாயகனே
கறைமணக்கும் திருநீல கண்டப் பெருமானே
உறைமணக்கும் பூம்பொழில்சூழ் ஒற்றியப்பா உன்னுடைய
மறைமணக்கும் திருஅடியை வாய்நிரம்ப வாழ்த்தேனோ. 1

1203 அலைவளைக்கும் பாற்கடலான் அம்புயத்தான் வாழ்த்திநிதம்
தலைவளைக்கும் செங்கமலத் தாளுடையாய் ஆளுடையாய்
உலைவளைக்கா முத்தலைவேல் ஒற்றியப்பா உன்னுடைய
மலைவளைக்கும் கைம்மலரின் வண்மைதனை வாழ்த்தேனோ. 2

1204 ஆறடுத்துச் சென்றளங்கள் அப்பருக்கா அன்றுகட்டுச்
சோறெடுத்துச் சென்ற துணையே சுயஞ்சுடரே
ஊறெடுத்தோர் காணரிய ஒற்றியப்பா உன்னுடைய
நீறடுத்த எண்தோள் நிலைமைதனைப் பாரேனோ. 3

1205 சைவத் தலைவர் தவத்தோர்கள் தம்பெருமான்
மெய்வைத்த உள்ளம் விரவிநின்ற வித்தகனே
உய்வைத்த உத்தமனே ஒற்றியப்பா உன்னுடைய
தெய்வப் புகழ்என் செவிநிறையக் கேளேனோ. 4

1206 பாடுகின்றோர் பாடப் பரிசளிக்கும் புண்ணியனே
தேடுகின்றோர் தேடநிற்கும் தியாகப் பெருமானே
ஊடுகின்றோர் இல்லாத ஒற்றியப்பா அம்பலத்துள்
ஆடுகின்ற சேவடிகண் டல்லல்எலாம் தீரேனோ. 5

1207 பூணாக மாடப் பொதுநடிக்கும் புண்ணியனே
சேணாகம் வாங்கும் சிவனே கடல்விடத்தை
ஊணாக உள்ளுவந்த ஒற்றியப்பா மால்அயனும்
காணாத நின்உருவைக் கண்டு களியேனோ. 6

1208 கொள்ளுவார் கொள்ளும் குலமணியே மால்அயனும்
துள்ளுவார் துள் அடக்கும் தோன்றலே சூழ்ந்துநிதம்
உள்ளுவார் உள்உறையும் ஒற்றியப்பா உன்னுடைய
தெள்ளுவார் பூங்கழற்கென் சிந்தைவைத்து நில்லேனோ. 7

1209 செவ்வண்ண மேனித் திருநீற்றுப் பேரழகா
எவ்வண்ணம் நின்வண்ணம் என்றறிதற் கொண்ணாதாய்
உவ்வண்ணன் ஏத்துகின்ற ஒற்றியப்பா உன்வடிவம்
இவ்வண்ணம் என்றென் இதயத் தெழுதேனோ. 8

1210 மன்றுடையாய் மால்அயனும் மற்றும்உள வானவரும்
குன்றுடையாய் என்னக் குறைதவிர்த்த கோமானே
ஒன்றுடையாய் ஊர்விடையாய் ஒற்றியப்பா என்னுடைய
வன்றுடையாய் என்றுன் மலரடியைப் போற்றேனோ. 9

1211 குற்றம் செயினும் குணமாகக் கொண்டருளும்
நற்றவர் தம் உள்ளம் நடுநின்ற நம்பரனே
உற்றவர்தம் நற்றுணைவா ஒற்றியப்பா என்கருத்து
முற்றிடநின் சந்நிதியின் முன்நின்று வாழ்த்தேனோ. 10

1212 வஞ்ச மடவார் மயக்கும் மயக்கொழிய
நஞ்சம்அணி கண்டத்து நாதனே என்றென்று
உஞ்சவர்கள் வாழ்த்துகின்ற ஒற்றியப்பா உன்னுடைய
கஞ்ச மலர்அடிக்கே காதலுற்றுப் போற்றேனோ. 11

1213 இன்னல் உலக இருள்நடையில் நாள்தோறும்
துன்னவரும் நெஞ்சத் துடுக்கழிய நல்லோர்கள்
உன்னல்உறும் தெள்ளமுதே ஒற்றியப்பா என்வாய்உன்
தன் அடைவே பாடித் தழும்பேறக் காணேனோ. 12

1214 பெண்மணியே என்றுலகில் பேதையரைப் பேசாதென்
கண்மணியே கற்பகமே கண்ணுதலில் கொள்கரும்பே
ஒண்மணியே தேனேஎன் றொற்றியப்பா உன்தனைநான்
பண்மணஞ்செய் பாட்டில் பரவித் துதியேனோ. 13

1215 மானமிலார் நின்தாள் வழுத்தாத வன்மனத்தார்
ஈனர்அவர் பால்போய் இளைத்தேன் இளைப்பாற
ஊனமிலார் போற்றுகின்ற ஒற்றியப்பா உன்னுடைய
ஞான அடியின்நிழல் நண்ணி மகிழேனோ. 14

1216 கல்லார்க் கிதங்கூறிக் கற்பழிந்து நில்லாமல்
எல்லார்க்கும் நல்லவனே என்அரசே நல்தருமம்
ஒல்லார் புரமெரித்த ஒற்றியப்பா உன்அடிக்கே
சொல்லால் மலர்தொடுத்துச் சூழ்ந்தணிந்து வாழேனோ.

1217 கற்பவற்றைக் கல்லாக் கடையரிடம் சென்றவர் முன்
அற்பஅற்றைக் கூலிக் கலையும் அலைப்பொழிய
உற்பவத்தை நீக்குகின்ற ஒற்றியப்பா உன்னுடைய
நற்பதத்தை ஏத்திஅருள் நன்னநலந்தான் நண்ணேனோ. 16

1218 தந்தைதாய் மக்கள்மனை தாரம்எனும் சங்கடத்தில்
சிந்தைதான் சென்று தியங்கி மயங்காமே
உந்தைஎன்போர் இல்லாத ஒற்றியப்பா உன்அடிக்கீழ்
முந்தையோர் போன்று முயங்கி மகிழேனோ. 17

1219 பொய்ஒன்றே அன்றிப் புறம்பொன்றும் பேசாத
வையொன்றும் தீநாற்ற வாயார்க்கு மேலானேன்
உய்என் றருள்ஈயும் ஒற்றியப்பா உன்னுடைய
மெய்ஒன்று நீற்றின் விளக்கமது பாரேனோ. 18

1220 தூக்கமும்முன் தூங்கியபின் சோறிலையே என்னும்அந்த
ஏக்கமுமே அன்றிமற்றோர் ஏக்கமிலா ஏழையனேன்
ஊக்கமுளோர் போற்றுகின்ற ஒற்றியப்பா நின்அடிக்கீழ்
நீக்கமிலா ஆனந்த நித்திரைதான் கொள்ளேனோ. 19

1221 வாதுபுரிந் தீன மடவார் மதித்திடுவான்
போதுநிதம் போக்கிப் புலம்பும் புலைநாயேன்
ஓதுமறை யோர்குலவும் ஒற்றியப்பா ஊரனுக்காத்
தூதுசென்ற நின்தாள் துணைப்புகழைப் பாடேனோ. 20

1222 பொன்னாசை யோடும் புலைச்சியர்தம் பேராசை
மன்னாசை மன்னுகின்ற மண்ணாசைப் பற்றறுத்தே
உன்னாசை கொண்டேஎன் ஒற்றியப்பா நான்மகிழ்ந்துன்
மின்னாரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனோ. 21

1223 கள்உண்ட நாய்போல் கடுங்காம வெள்ளமுண்டு
துள்உண்ட நெஞ்சத் துடுக்கடக்கி அன்பர்கள் தம்
உள்உண்ட தெள்அமுதே ஒற்றியப்பா உன்தனைநான்
வெள்உண்ட நந்தி விடைமீதில் காணேனோ. 22

1224 பேராத காமப் பிணிகொண்ட நெஞ்சகனேன்
வாராத ஆனந்த வாழ்வுவந்து வாழ்ந்திடவே
ஓராதார்க் கெட்டாத ஒற்றியப்பா உன்னுடைய
நீரார் சடைமேல் நிலவொளியைக் காணேனோ 23

1225 வன்னெஞ்சப் பேதை மடவார்க் கழிந்தலையும்
கன்னெஞ்சப் பாவியன்யான் காதலித்து நெக்குருகி
உன்னெஞ்சத் துள்உறையும் ஒற்றியப்பா உன்னுடைய
வென்னஞ் சணிமிடற்றை மிக்குவந்து வாழ்த்தேனோ.

1226 புண்ணியமோர் போதும் புரிந்தறியாப் பொய்யவனேன்
எண்ணியதோர் எண்ணம் இடர்இன்றி முற்றியிட
உண்ணிலவு நல்ஒளியே ஒற்றியப்பா உன்னுடைய
தண்ணிலவு தாமரைப்பொன் தாள்முடியில் கொள்ளேனோ 25

1227 நன்றிதுஎன் றோர்ந்தும்அதை நாடாது நல்நெறியைக்
கொன்றிதுநன் றென்னக் குறிக்கும் கொடியவன்யான்
ஒன்றுமனத் துள்ஒளியே ஒற்றியப்பா உன்னுடைய
வென்றி மழுப்படையின் மேன்மைதனைப் பாடேனோ. 26

1228 மண்கிடந்த வாழ்வின் மதிமயக்கும் மங்கையரால்
புண்கிடந்த நெஞ்சப் புலையேன் புழுக்கம்அற
ஒண்கிடந்த முத்தலைவேல் ஒற்றியப்பா நாரணன் தன்
கண்கிடந்த சேவடியின் காட்சிதனைக் காணேனோ. 27

1229 கூட்டுவிக்குள் மேல்எழவே கூற்றுவன்வந் தாவிதனை
வாட்டுவிக்கும் காலம் வருமுன்னே எவ்வுயிர்க்கும்
ஊட்டுவிக்கும் தாயாகும் ஒற்றியப்பா நீஉலகை
ஆட்டுவிக்கும் அம்பலத்துன் ஆட்டமதைப் பாரேனோ. 28

1230 மின்ஒப்பாம் வாழ்வை வியந்திடருள் வீழ்ந்தலைந்தேன்
பொன்ஒப்பாய் தெய்வமணப் பூஒப்பாய் என்னினுமே
உன்ஒப்பார் இல்லாத ஒற்றியப்பா உன்னுடைய
தன்ஒப்பாம் வேணியின்மேல் சார்பிறையைப் பாரேனோ. 29

1231 சீலம்அற நிற்கும் சிறியார் உறவிடைநல்
காலம்அறப் பேசிக் கழிக்கின்றேன் வானவர்தம்
ஓலம்அற நஞ்சருந்தும் ஒற்றியப்பா உன்னுடைய
நீல மணிமிடற்றின் நேர்மைதனைப் பாரேனோ. 30

1232 சீர்புகழும் மால்புகழும் தேவர்அயன் தன்புகழும்
யார்புகழும் வேண்டேன் அடியேன் அடிநாயேன்
ஊர்புகழும் நல்வளங்கொள் ஒற்றியப்பா உன்இதழித்
தார்புகழும் நல்தொழும்பு சார்ந்துன்பால் நண்ணேனோ. 31

1233 ஆதவன் தன் பல்இறுத்த ஐயற் கருள்புரிந்த
நாதவர னேஎன்று நாத்தழும்பு கொண்டேத்தி
ஓதவள மிக்கஎழில் ஒற்றியப்பா மண்ணிடந்தும்
மாதவன்முன் காணா மலர் அடிக்கண் வைகேனோ. 32

1234 கல்லைப் புறங்கண்ட காய்மனத்துக் கைதவனேன்
தொல்லைப் பழவினையின் தோய்வகன்று வாய்ந்திடவே
ஒல்லைத் திருவருள்கொண் டொற்றியப்பா உன்னுடைய
தில்லைப் பொதுவில் திருநடனம் காணேனோ.

1235 கடையவனேன் கன்மனத்தேன் கைதவனேன் வஞ்ச
நடையவனேன் நாணிலியேன் நாய்க்கிணையேன் துன்பொழிய
உடையவனே உலகேத்தும் ஒற்றியப்பா நின்பால்வந்
தடையநின்று மெய்குளிர்ந்தே ஆனந்தம் கூடேனோ. 34

1236 வாதை மயல்காட்டும் மடவார் மலக்குழியில்
பேதை எனவீழ்ந்தே பிணிஉழந்த பேயடியேன்
ஓதை கடற்கரைவாய் ஒற்றியப்பா வாழ்த்துகின்றோர்
தீதை அகற்றும்உன்றன் சீர்அருளைச் சேரேனோ. 35

1237 பொய்யர்க் குதவுகின்ற புன்மையினேன் வன்மைசெயும்
வெய்யற் கிரிமியென மெய்சோர்ந் திளைத்தலைந்தேன்
உய்யற் கருள்செய்யும் ஒற்றியப்பா உன்அடிசேர்
மெய்யர்க் கடிமை செய்துன் மென்மலர்த்தாள் நண்ணேனோ. 36

திருச்சிற்றம்பலம்

46. திருவிண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க்' கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1238 சழக்கி ருந்ததென் னிடத்தில்ஆ யினும்நீர்
தந்தை ஆதலின் சார்ந்தநல் நெறியில்
பழக்கி வைப்பது தேவரீர்க் குரிய
பண்பன் றோஎனைப் பரிந்திலீர் ஆனால்
வழக்கி ருப்பதிங் குமக்குமென் றனக்கும்
வகுத்துக் கூறுதல் மரபுமற் றன்றால்
புழைக்கை மாவுரி யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ 1

1239 அழுது நெஞ்சயர்ந் துமைநினைக் கின்றேன்
ஐய நீர்அறி யாததும் அன்றே
கழுது துன்றிய காட்டகத் தாடும்
கதியி லீர்எனக் கழறினன் அல்லால்
பழுது பேசின தொன்றிலை ஒற்றிப்
பதியில் வாழ்படம் பக்கநா யகரே
பொழுது போகின்ற தென்செய்கேன் எனைநீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 2

1240 முன்னை மாதவ முயற்சிஒன் றில்லா
மூட னேன்தனை முன்வர வழைத்துப்
பின்னை ஒன்றும்வாய்ப் பேச்சிலீ ரானால்
பித்தர் என்றுமைப் பேசிடலாமே

1. எழுசீர் - தொ. வே. 1, 2 எண்சீர். ச.மு.க. ஆ.பா.

என்னை நான்பழித் திடுகின்ற தல்லால்
இகழ்கி லேன்உமை எழில்ஒற்றி உடையீர்
புன்னை அஞ்சடை யீர்எனை உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 3

1241 வன்மை பேசிய வன்தொண்டர் பொருட்டாய்
வழக்குப் பேசிய வள்ளல்நீர் அன்றோ
இன்மை யாளர்போல் வலியவந் திடினும்
ஏழை யாம்இவன் என்றொழித் திட்டால்
தன்மை அன்றது தருமமும் அன்றால்
தமிய னேன்இன்னும் சாற்றுவ தென்னே
பொன்மை அஞ்சடை யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 4

1242 உறங்கு கின்றதும் விழிப்பதும் மகிழ்வாய்
உண்ணு கின்றதும் உடுப்பதும் மயக்குள்
இறங்கு கின்றதும் ஏறுகின் றதுமாய்
எய்க்கின் றேன்மனம் என்னினும் அடியேன்
அறங்கொள் நும்அடி அரண்என அடைந்தேன்
அயர்வு தீர்த்தெனை ஆட்கொள நினையீர்
புறங்கொள் காட்டகத் தீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 5

1243 கரும்பின் கட்டியும் கனியையும் கொடுத்தால்
கயவர் ஆயினும் கசக்கும்என் றுரையார்
அரும்பின் கட்டிள முலைஉமை மகிழும்
ஐய நீர்உம தருள்எனக் களிக்க
இரும்பின் கட்டிநேர் நெஞ்சினேன் எனினும்
ஏற்று வாங்கிடா திருந்ததுண் டேயோ
பொரும்பின் கட்டுரி யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 6

1244 விருப்பு நின்றதும் பதமலர் மிசைஅவ்
விருப்பை மாற்றுதல் விரகுமற் றன்றால்
கருப்பு நேரினும் வள்ளியோர் கொடுக்கும்
கடமை நீங்குறார் உடமையின் றேனும்
நெருப்பு நும்உரு ஆயினும் அருகில்
நிற்க அஞ்சுறேன் நீலனும் அன்றால்
பொருப்பு வில்லுடை யீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 7

1245 கொடிய நஞ்சமு தாக்கிய உமக்கிக்
கொடிய னேனைஆட் கொள்ளுதல் அரிதோ
அடியர் தம்பொருட் டடிபடு வீர்எம்
ஐய நும்மடிக் காட்பட விரைந்தேன்

நெடிய மால்அயன் காண்கில ரேனும்
நின்று காண்குவல் என்றுளம் துணிந்தேன்
பொடிய நீறணி வீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 8

1246 வினையி னால்உடல் எடுத்தன னேனும்
மேலை நாள்உமை விரும்பிய அடியேன்
தினைஇன் னான்என அறிந்தலி ரோநீர்
எழுமைச் செய்கையும் இற்றென அறிவீர்
மனையி னால்வரும் துயர்கெட உமது
மரபு வேண்டியே வந்துநிற் கின்றேன்
புனையி னால்அமர்ந் தீர்ஒற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 9

1247 பிழைபு ரிந்தனன் ஆகிலும் உமது
பெருமை நோக்கில்அப் பிழைசிறி தன்றோ
மழைபு ரிந்திடும் வண்கையை மாற்ற
மதிக்கின் றோர்எவர் மற்றிலை அதுபோல்
உழைபு ரிந்தருள் வீர்எனில் தடுப்பார்
உம்பர் இம்பரில் ஒருவரும் இலைகாண்
புழைபு ரிந்தகை உலவொற்றி உடையீர்
பொய்யன் என்னில்யான் போம்வழி எதுவோ. 10

திருச்சிற்றம்பலம்

47. பிரசாதவிண்ணப்பம்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1248 பசைஇலாக் கருங்கல் பாறைநேர் மனத்துப் பதகனேன் படிற்றுரு வகனேன்
வசைஇலார்க் கருளும் மாணிக்க மணியே வள்ளலே நினைத்தொழல் மறந்து
நசைஇலா மலம்உண் டோடுறும் கொடிய நாய்என உணவுகொண் டுற்றேன்
தசைஎலாம் நடுங்க ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 1

1249 அன்னைபோன் றடியர்க் கருத்தியில் அருத்தும் அப்பநின் அடியினை காணா
தென்னையோ மலம்உண் டுழன்றிடும் பன்றி என்னஉண்டுற்றனன் அதனால்
புன்னைஅம் சடைஎம் புண்ணிய ஒளியே பூதநா யகஎன்றன் உடலம்
தன்னை நீ அமர்ந்த ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 2

1250 கண்ணினால் உனது கழற்பதம் காணும் கருத்தினை மறந்துபாழ் வயிற்றை
மண்ணினால் நிறைத்தல் எனஉணவருந்தி மலம்பெற வந்தனன் அதனால்
எண்ணினால் அடங்கா எண்குணக் குன்றே இறைவனே நீஅமர்ந் தருளும்
தண்ணினால் ஓங்கும் ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 3

1251 நின்முனம் நீல கண்டம்என் றோதும் நெறிமறந் துணவுகொண் டந்தோ
பொன்முனம் நின்ற இரும்பென நின்றேன் புலையனேன் ஆதலால் இன்று
மின்முனம் இலங்கும் வேணிஅம் கனியே விரிகடல் தானைசூழ் உலகம்
தன்முனம் இலங்கும் ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 4

1252 குழிக்குமண் அடைக்கும் கொள்கைபோல் பாழும் கும்பியை ஓம்பினன் அல்லால்
செழிக்கும்உன் திருமுன் நீலகண் டந்தான் செப்புதல் மறந்தனன் அதனால்
விழிக்குள்நின் றிலங்கும் விளங்கொளி மணியே மென்கரும் பீன்றவெண் முத்தம்
தழிக்கொளும் வயல்சூழ் ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 5

1253 கமரிடை மலநீர் கவிழ்த்தல்போல் வயிற்றுக் கடன்கழித் திட்டனன் அல்லால்
அமரிடைப் புரமூன் றெரித்தருள் புரிந்த ஐயனே நினைத்தொழல் மறந்தேன்
சமரிடை மனத்தேன் ஆதலால் முனிவர் சங்கர சிவசிவ என்றே
தமரிடை ஓங்கும் ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 6

1254 அருமருந் தனையாய் நின்திரு முன்போந் தரகர எனத்தொழல் மறந்தே
இருளுறும் மனத்தேன் மலத்தினும் இழிந்த இயல்புற உண்டனன் அதனால்
கருமருந் தனைய அஞ்செழுத் தோதும் கருத்தர்போல் திருத்தம தாகத்
தருமநின் றோங்கும் ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 7

1255 கண்நுதல் கரும்பே நின்முனம் நீல கண்டம்என் றோதுதல் மறந்தே
உண்ணுதற் கிசைந்தே உண்டுபின் ஒதிபோல் உன்முனம் நின்றனன் அதனால்
நண்ணுதல் பொருட்டோர் நான்முகன் மாயோன் நாடிட அடியர் தம்உள்ளத்
தண்ணுதல் கலந்த ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 8

1256 கற்றவர்க் கினிதாம் கதியருள் நீல கண்டம்என் றுன்திரு முன்னர்
சொற்றிடல் மறந்தேன் சோற்றினை ஊத்தைத் துருத்தியில் அடைத்தனன் அதனால்
செற்றமற் றுயர்ந்தோர் சிவசிவ சிவமா தேவஓம் அரகர எனும்சொல்
சற்றும்விட் டகலா ஒற்றியில் உன்னால் தண்டிக்கப் பட்டனன் அன்றே. 9

1257 முறைப்படி நினது முன்புநின் றேத்தி முன்னிய பின்னர்உண் ணாமல்
சிறைப்படி வயிற்றில் பொறைப்பட ஒதிபோல் சென்றுநின் முன்னர் உற் றதனால்
கறைப்பட ஓங்கும் கண்டனே எவர்க்கும் கருத்தனே ஒருத்தனே மிகுசீர்
தறைப்படர்ந் தோங்கும் ஒற்றியில் உன்னால் தண்டிக்கப்பட்டனன் அன்றே. 10

திருச்சிற்றம்பலம்

48. வழிமொழி விண்ணப்பம்

திருவொற்றியூரும் திருத்தில்லையும்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1258 நீல னேன்கொடும் பொய்யல துரையா
நீசன் என்பதென் நெஞ்சறிந் ததுகாண்
சால ஆயினும் நின்கழல் அடிக்கே
சரண்பு குந்திடில் தள்ளுதல் வழக்கோ

ஆலம் உண்டநின் தன்மைமா றுவதேல்
அகில கோடியும் அழிந்திடும் அன்றே
சீல மேவிய ஒற்றியம் பரனே
தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே. 1

1259 கண்ணுண் மாமணி யேஅருட் கரும்பே
கற்ற நெஞ்சகம் கனிந்திடும் கனியே
எண்ணுள் உட்படா இன்பமே என்றென்
றெந்தை நின்றனை ஏத்திலன் எனினும்
மண்ணுள் மற்றியான் வழிவழி அடியேன்
மாய மன்றிதுன் மனம்அறிந் ததுவே
திண்ணம் ஈந்தருள் ஒற்றியூர் அரசே
தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே. 2

1260 நல்லன் அல்லனான் ஆயினும் சிறியேன்
நான்அ றிந்ததோ நாடறிந் ததுகாண்
சொல்ல வாயிலை ஆயினும் எனைநீ
தொழும்பு கொண்டிடில் துய்யனும் ஆவேன்
வல்ல உன்கருத் தறிந்திலேன் மனமோ
மயங்கு கின்றதியான் வாடுகின் றனன்காண்
செல்லல் நீக்கிய ஒற்றியூர் அரசே
தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே. 3

1261 இரக்கம் என்பதென் னிடத்திலை எனநீ
இகழ்தி யேல்அஃ தியல்புமற் றடியேன்
பரக்க நின்அருட் கிரக்கமே அடைந்தேன்
பார்த்தி லாய்கொலோ பார்த்தனை எனில்நீ
கரப்ப துன்றனக் கழகன்று கண்டாய்
காள கண்டனே கங்கைநா யகனே
திரக்கண் நெற்றியாய் ஒற்றியாய்த் தில்லைத்
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. 4

1262 யாது நான்பிழை செய்யினும் பொறுப்பான்
எந்தை எம்மிறை என்றுவந் தடைந்தேன்
தீது நோக்கிநீ செயிர்த்திடில் அடியேன்
செய்வ தென்னைநின் சித்தமிங் கறியேன்
போது போகின்ற தன்றிஎன் மாயப்
புணர்ச்சி யாதொன்றும் போகின்ற திலைகாண்
சீத வார்பொழில் ஒற்றியம் பரனே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. 5

1263 தாய்க்கும் தந்தைக்கும் நிகரும்நின் இருதாள்
சார்ந்த மேலவர் தமைத்தொழு தேத்தா
நாய்க்கும் நாய்எனும் பாவியேன் பிழையை
நாடி நல்லருள் நல்கிடா திருந்தால்

ஏய்க்கும் மால்நிறக் காலன்வந் திடும்போ
தென்கொ லாம்இந்த எண்ணம்என் மனத்தைத்
தீய்க்கு தென்செய்வேன் ஒற்றியம் சிவனே
தில்லை அம்பலம் திகழ்ஒளி விளக்கே. 6

1264 ஆட்டு கின்றநீ அறிந்திலை போலும்
ஐவர் பக்கம்நான் ஆடுகின் றதனைக்
காட்டு கின்றவான் கடலிடை எழுந்த
காள முண்டஅக் கருணையை உலகில்
நாட்டு கின்றனை ஆயில்இக் கொடிய
நாய்க்கும் உன்னருள் நல்கிட வேண்டும்
தீட்டு கின்றநல் புகழ்ஒற்றி அரசே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. 7

1265 உய்ய ஒன்றிலேன் பொய்யன்என் பதனை
ஒளித்தி லேன் இந்த ஒதியனுக் கருள்நீ
செய்ய வேண்டுவ தின்றெனில் சிவனே
செய்வ தென்னைநான் திகைப்பதை அன்றி
மையல் நெஞ்சினேன் ஆயினும் உன்னை
மறந்தி லேன் இது வஞ்சமும் அன்றே
செய்ய மேனிஎம் ஒற்றியூர் வாழ்வே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. 8

1266 வாடு கின்றனன் என்றனை இன்னும்
வருந்த வைக்கினும் மறந்திடேன் உன்னைப்
பாடு கின்றனன் பாவியேன் என்னைப்
பாது காப்பதுன் பரம்அது கண்டாய்
தேடு கின்றமால் நான்முகன் முதலாம்
தேவர் யாவரும் தெரிவரும் பொருளே
சேடு நின்றநல் ஒற்றியூர் வாழ்வே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. 9

1267 சிறியர் செய்பிழை பெரியவர் பொறுக்கும்
சீல மென்பதுன் திருமொழி அன்றே
வறிய னேன்பிழை யாவையும் உனது
மனத்தில் கொள்ளுதல் வழக்கல இனிநீ
இறையும் தாழ்க்கலை அடியனேன் தன்னை
ஏன்று கொண்டருள் ஈந்திடல் வேண்டும்
செறிய ஓங்கிய ஒற்றியம் பரமே
திருச்சிற் றம்பலம் திகழ்ஒளி விளக்கே. 10

49. சிறுமை விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க்' கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1268 இன்று நின்றவர் நாளைநின் றிலரே
என்செய் வோம்இதற் கென்றுளம் பதைத்துச்
சென்று நின்றுசோர் கின்றனன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
நன்று நின்துணை நாடக மலர்த்தாள்
நண்ண என்றுநீ நயந்தருள் வாயோ
பொன்றல் இன்றிய எழில்ஒற்றி அரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 1

1269 மறுமை இம்மையும் வளம்பெற வேண்டேன்
மருவும் நின்அருள் வாழ்வுற அடையாச்
சிறுமை எண்ணியே திகைக்கின்றேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
வறுமை யாளனேன் வாட்டம்நீ அறியா
வண்ணம் உண்டுகொல் மாணிக்க மலையே
பொறுமை யாளனே ஒற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 2

1270 உய்ய வல்லனேல் உன்திரு அருளாம்
உடைமை வேண்டும்அவ் உடைமையைத் தேடல்
செய்ய வல்லனோ அல்லகாண் சிவனே
செய்ய தென்னைநான் சிறியருள் சிறியேன்
பெய்ய வல்லநின் திருவருள் நோக்கம்
பெறவி ழைந்தனன் பிறஒன்றும் விரும்பேன்
பொய்யி தல்லஎம் ஒற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 3

1271 வெல்லு கின்றனர் வினைப்புல வேடர்
மெலிகின் றேன் இங்கு வீணினில் காலம்
செல்லு கின்றன ஐயவோ சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
சொல்லு கின்றனன் கேட்கின்றாய் கேட்டும்
தூர நின்றனை ஈரமில் லார்போல்
புல்லு கின்றசீர் ஒற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 4

1. எண்சீர் - தொ. வே. 1, எழுசீர். தொ. வே. 2, எண்சீர். ச.மு.க. ஆ.பா.

1272 ஏறு கின்றிலேன் இழிகிலேன் நடுநின்
றெய்க்கின் றேன்பவம் என்னும்அக் குழியில்
தேறு கின்றிலேன் சிக்கெனச் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
கூறு கின்றதென் கடவுள்நீ அறியாக்
கொள்கை ஒன்றிலை குன்றவில் லோனே
பூறு வங்கொளும் ஒற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 5

1273 கந்த மும்மல ரும்என நின்றாய்
கண்டு கொண்டிலேன் காமவாழ் வதனால்
சிந்தை நொந்தயர் கின்றனன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
எந்த நல்வழி யால்உனை அடைவேன்
யாதுந் தேர்ந்திலேன் போதுபோ வதுகாண்
புந்தி இன்பமே ஒற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 6

1274 அல்லல் என்னைவிட் டகன்றிட ஒற்றி
அடுத்து நிற்கவோ அன்றிநற் புலியூர்த்
தில்லை மேவவோ அறிந்திலேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
ஒல்லை இங்குவா என்றருள் புரியா
தொழிதி யேல்உனை உறுவதெவ் வணமோ
புல்லர் மேவிடா ஒற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 7

1275 ஞால வாழ்க்கையை நம்பிநின் றுழலும்
நாய்க ளுக்கெலாம் நாயர சானேன்
சீலம் ஒன்றிலேன் திகைக்கின்றேன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
ஏல நின்அருள் ஈதியேல் உய்வேன்
இல்லை யேல்எனக் கில்லைஉய் திறமே
போல என்றுரை யாஒற்றி அரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 8

1276 சுத்த நெஞ்சருள் சேர்க்கினும் அலது
சோம்பல் நெஞ்சருள் சேர்க்கினும் நினது
சித்தம் என்னள வன்றது சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
நித்தம் நின்னடி அன்றிஒன் றேத்தேன்
நித்த னேஅது நீஅறி யாயோ 9
புத்த ருந்தமிழ் ஒற்றியூர் அரசே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே.

1277 தத்து மத்திடைத் தயிரென வினையால்
தளர்ந்து மூப்பினில் தண்டுகொண் டுழன்றே
செத்து மீளவும் பிறப்பெனில் சிவனே
செய்வ தென்னை நான் சிறியருள் சிறியேன்
தொத்து வேண்டும்நின் திருவடிக் கெனையே
துட்டன் என்றியேல் துணைபிறி தறியேன்
புத்தை நீக்கிய ஒற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 10

1278 பரிந்தி லேன்அருட் பாங்குறும் பொருட்டாய்ப்
பந்த பாசத்தைப் பறித்திடும் வழியைத்
தெரிந்தி லேன்திகைப் புண்டனன் சிவனே
செய்வ தென்னைநான் சிறியருள் சிறியேன்
விரிந்த நெஞ்சமும் குவிந்தில இன்னும்
வெய்ய மாயையில் கையற வடைந்தே
புரிந்து சார்கின்ற தொற்றியம் பரனே
போற்றும் யாவர்க்கும் பொதுவில்நின் றவனே. 11

திருச்சிற்றம்பலம்

50. ஆற்றா விண்ணப்பம்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1279 அன்னையில் பெரிதும் இனியஎன் அரசே அம்பலத் தாடல்செய் அமுதே
பொன்னைஒத் தொளிரும் புரிசடைக் கனியே போதமே ஒற்றிஎம் பொருளே
உன்னைவிட் டயலார் உறவுகொண் டடையேன் உண்மைஎன் உள்ளம்நீ அறிவாய்
என்னைவிட் டிடில்நான் என்செய்வேன் ஒதிபோல் இருக்கின்ற இவ்வெளி யேனே. 1

1280 எளியனேன் மையல் மனத்தினால் உழன்றேன் என்செய்வேன் என்செய்வேன் பொல்லாக்
களியனேன் வாட்டம் கண்டனை இன்னும் கருணைசெய் திலைஅருட் கரும்பே
அளியனே திருச்சிற் றம்பலத் தொளியே அருமருந் தேவட வனத்துத்
தளியனே ஒற்றித் தலத்தமர் மணியே தயையிலி போல்இருந் தனையே. 2

1281 இருந்தனை எனது நெஞ்சினுள் எந்தாய் என்துயர் அறிந்திலை போலும்
முருந்தனை முறுவல் மங்கையர் மலைநேர் முலைத்தலை உருண்டன னேனும்
மருந்தனை யாய்உன் திருவடி மலரை மறந்திலேன் வழுத்துகின் றனன்காண்
வருந்தனை யேல்என் றுரைத்திலை ஐயா வஞ்சகம் உனக்கும் உண் டேயோ. 3

1282 உண்டநஞ் சின்னும் கண்டம்விட் டகலா துறைந்தது நாடொறும் அடியேன்
கண்டனன் கருணைக் கடல்எனும் குறிப்பைக் கண்டுகண் டுளமது நெகவே
விண்டனன் என்னைக் கைவிடில் சிவனே விடத்தினும் கொடியன் நான் அன்றோ
அண்டர்கட் கரசே அம்பலத் தமுதே அலைகின்றேன் அறிந்திருந் தனையே. 4

1283 தனையர்செய் பிழையைத் தந்தையர் குறித்துத் தள்ளுதல் வழக்கல என்பார்
வினையனேன் பிழையை வினையிலி நீதான் விவகரித் தெண்ணுதல் அழகோ
உனையலா திறந்தும் பிறந்தும்இவ் வுலகில் உழன்றிடுந் தேவரை மதியேன்
எனையலா துனக்கிங் காளிலையோ உண்டென்னினும் ஏன்றுகொண்டருளே.

1284 ஏன்றுகொண் டருள வேண்டும்இவ் எளியேன் இருக்கினும் இறக்கினும் பொதுவுள்
ஊன்றுகொண்டருளும் நின்னடி யல்லால் உரைக்கும்மால் அயன்முதல்தேவர்
நான்றுகொண்டிடுவ ரேனும்மற் றவர்மேல் நாஎழா துண்மையீ திதற்குச்
சான்றுகொண் டருள நினைத்தியேல் என்னுள் சார்ந்தநின் சரணஇரண் டன்றே. 6

1285 சரணவா ரிசம்என் தலைமிசை இன்னும் தரித்திலை தாழ்த்தனை அடியேன்
கரணவா தனையும் கந்தவா தனையும் கலங்கிடக் கபமிழுத் துந்தும்
மரணவா தனைக்கென் செய்குவம் என்றே வருந்துகின் றனன்மனம் மாழாந்
தரணமூன் றெரிய நகைத்தஎம் இறையே அடியனை ஆள்வதுன் கடனே. 7

1286 கடம்பொழி ஓங்கல் உரிஉடை உடுக்கும் கடவுளே கடவுளர் கோவே
மடம்பொழி மனத்தேன் மலஞ்செறிந் தூறும் வாயில்ஓர் ஒன்பதில் வரும்இவ்
வுடம்பொழிந் திடுமேல் மீண்டுமீண டெந்தஉடம்புகொண்டுழல்வனோ என்று
நடம்பொழி பதத்தாய் நடுங்குகின் றனன்காண் நான்செயும் வகைஎதுநவிலே. 8

1287 வகைஎது தெரிந்தேன் ஏழையேன் உய்வான் வள்ளலே வலிந்தெனை ஆளும்
தகைஅது இன்றேல் என்செய்வேன் உலகர் சழக்குடைத் தமியன்நீ நின்ற
திகைஎது என்றால் சொலஅறி யாது திகைத்திடும் சிறியனேன் தன்னைப்
பகைஅது கருதா தாள்வதுன் பரங்காண் பவளமா நிறத்தகற் பகமே. 9

1288 கற்பன அறிந்து கற்கிலேன் சழக்குக் கல்விகற் றுழன்றனன் கருணைச்
சொற்பன மதிலும் காண்கிலேன் பொல்லாச் சூகரம் எனமலம் துய்த்தேன்
விற்பனன் எனவே நிற்பது விழைந்தேன் வீணனேன் விரகிலா வெறியேன்
அற்பனேன் தன்னை ஆண்டநின் அருளை ஆய்ந்திடில் அன்னையின் பெரிதே. 10

திருச்சிற்றம்பலம்

51. இரங்கல் விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1289 பற்று நோக்கிய பாவியேன் தனக்குப்
பரிந்து நீஅருட் பதம்அளித் திலையே
மற்று நோக்கிய வல்வினை அதனால்
வஞ்ச மாயையின் வாழ்க்கையின் மனத்தின்
அற்று நோக்கிய நோய்களின் மூப்பின்
அலைதந் திவ்வுல கம்படும் பாட்டை
உற்று நோக்கினால் உருகுதென் உள்ளம்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 1

1290 கொடிய நெஞ்சினேன் கோபமே அடைந்தேன்
கோடி கோடியாம் குணப்பழு துடையேன்
கடிய வஞ்சகக் கள்வனேன் தனக்குன்
கருணை ஈந்திடா திருந்திடில் கடையேன்
அடியன் ஆகுவ தெவ்வணம் என்றே
ஐய ஐயநான் அலறிடு கின்றேன் 2
ஒடிய மும்மலம் ஒருங்கறுத் தவர்சேர்
ஒற்றி மேவிய உலகுடை யோனே.

1291 காமம் என்பதோர் உருக்கொடிவ் வுலகில்
கலங்கு கின்றஇக் கடையனேன் தனக்குச்
சேமம் என்பதாம் நின்அருள் கிடையாச்
சிறுமை யேஇன்னும் செறிந்திடு மானால்
ஏம நெஞ்சினர் என்றனை நோக்கி
ஏட நீகடை என்றிடில் அவர்முன்
ஊமன் ஆகுவ தன்றிஎன் செய்வேன்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 3

1292 மண்ணில் நின்றவர் வாழ்வதும் கணத்தில்
வருந்தி மாய்வதும் மற்றிவை எல்லாம்
கண்ணின் நேர்ந்திதங் கண்டும்இவ் வாழ்வில்
காதல் நீங்கிலாக் கல்மனக் கொடியேன்
எண்ணி நின்றஓர் எண்ணமும் முடியா
தென்செய் கேன்வரும் இருவினைக் கயிற்றால்
உண்ணி ரம்பநின் றாட்டுகின் றனைநீ
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 4

1293 வெருட்சி யேதரும் மலஇரா இன்னும்
விடியக் கண்டிலேன் வினையினேன் உள்ளம்
மருட்சி மேவிய தென்செய்கேன் உன்பால்
வருவ தற்கொரு வழியும்இங் கறியேன்
தெருட்சி யேதரும் நின்அருள் ஒளிதான்
சேரில் உய்குவேன் சேர்ந்தில தானால்
உருட்சி ஆழிஒத் துழல்வது மெய்காண்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 5

1294 யாதும் உன்செய லாம்என அறிந்தும்
ஐய வையமேல் அவர்இவர் ஒழியாத்
தீது செய்தனர் நன்மைசெய் தனர்நாம்
தெரிந்து செய்வதே திறம்என நினைத்துக்
கோது செய்மலக் கோட்டையைக் காவல்
கொண்டு வாழ்கின்றேன் கண்டிட இனிநீ
ஓது செய்வதொன் றென்னுயிர்த் துணையே
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 6

1295 பந்த மட்டின்ஆம் பாவிநெஞ் சகத்தால்
பவப்பெ ருங்கடல் படிந்துழன் றயர்ந்தேன்
இந்த மட்டில்நான் உழன்றதே அமையும்
ஏற வேண்டும்உன் எண்ணமே தறியேன்
அந்த மட்டினில் இருத்தியோ அன்றி
அடிமை வேண்டிநின் அருட்பெரும் புணையை 7
உந்த மட்டினால் தருதியோ உரையாய்
ஒற்றி மேவிய உலகுடை யோனே.

1296 ஞான மென்பதின் உறுபொருள் அறியேன்
ஞானி அல்லன்நான் ஆயினும் கடையேன்
ஆன போதிலும் எனக்குநின் அருள்ஓர்
அணுவில் பாதியே ஆயினும் அடைந்தால்
வான மேவிய அமரரும் அயனும்
மாலும் என்முனம் வலியிலர் அன்றே
ஊனம் நீக்கிநல் அருள்தரும் பொருளே
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 8

1297 அளிய நெஞ்சம்ஓர் அறிவுரு வாகும்
அன்பர் தம்புடை அணுகிய அருள்போல்
எளிய நெஞ்சினேற் கெய்திடா தேனும்
எள்ளில் பாதிமட் டீந்தருள் வாயேல்
களிய மாமயல் காடற எறிந்தாங்
கார வேரினைக் களைந்துமெய்ப் போத
ஒளிய வித்தினால் போகமும் விளைப்பேன்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 9

1298 நாக நாட்டதின் நலம்பெற வேண்டேன்
நரகில் ஏகென நவிலினும் அமைவேன்
ஆகம் நாட்டிடை விடுகெனில் விடுவேன்
அல்லல் ஆம்பவம் அடைஎனில் அடைவேன்
தாகம் நாட்டிய மயல்அற அருள்நீர்
தருதல் இல்எனச் சாற்றிடில் தரியேன்
ஓகை நாட்டிய யோகியர் பரவும்
ஒற்றி மேவிய உலகுடை யோனே. 10

திருச்சிற்றம்பலம்

52. காதல் விண்ணப்பம்

திருவொற்றியூர்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1299 வஞ்சக வினைக்கோர் கொள்கலம் அனைய மனத்தினேன் அனைத்தினும் கொடியேன்
தஞ்சம்என் றடைந்தே நின்திருக் கோயில் சந்நிதி முன்னர்நிற் கின்றேன்
எஞ்சலில் அடங்காப் பாவிஎன் றெனைநீ இகழ்ந்திடில்என் செய்வேன் சிவனே
கஞ்சன்மால் புகழும் ஒற்றியங் கரும்பே கதிதரும் கருணையங் கடலே. 1

1300 நிற்பது போன்று நிலைபடா உடலை நேசம்வைத் தோம்புறும் பொருட்டாய்ப்
பொற்பது தவிரும் புலையர் தம் மனைவாய்ப் புந்திநொந் தயர்ந்தழு திளைத்தேன்
சொற்பதங் கடந்த நின்திரு வடிக்குத் தொண்டுசெய் நாளும்ஒன் றுளதோ
கற்பது கற்றோர் புகழ்திரு வொற்றிக் காவல்கொள் கருணையங் கடலே. 2

1301 முன்னைவல் வினையால் வஞ்சக மடவார் முழுப்புலைக் குழிவிழுந் திளைத்தேன்
என்னையோ கொடியேன் நின்திரு வருள்தான் எய்தில னேல்உயிர்க் குறுதிப்
பின்னைஎவ் வணந்தான் எய்துவ தறியேன்பேதையில் பேதைநான் அன்றோ
கன்னலே தேனே ஒற்றிஎம் அமுதே கடவுளே கருணையங் கடலே. 3

1302 மண்ணினுள் மயங்கி வஞ்சக வினையால் மனந்தளர்ந் தழுங்கிநாள் தோறும்
எண்ணினுள் அடங்காத் துயரொடும் புலையர் இல்லிடை மல்லிடு கின்றேன்
விண்ணினுள் இலங்கும் சுடர்நிகர் உனது மெல்அடிக் கடிமைசெய் வேனோ
கண்ணினுள் மணியே ஒற்றியங் கனியே கடவுளே கருணையங் கடலே. 4

1303 அளவிலா உலகத் தனந்தகோ டிகளாம் ஆருயிர்த் தொகைக்குளும் எனைப்போல்
இளகிலா வஞ்ச நெஞ்சகப் பாவி ஏழைகள் உண்டுகொல் இலைகாண்
தளர்விலா துனது திருவடி எனும்பொற் றாமரைக் கணியனா குவனோ
களவிலார்க் கினிய ஒற்றிஎம் மருந்தே கனந்தரும் கருணையங் கடலே. 5

1304 ஞானம்என் பதிலோர் அணுத்துணை யேனும் நண்ணிலேன் புண்ணியம் அறியேன்
ஈனம்என் பதனுக் கிறைஎனல் ஆனேன் எவ்வணம் உய்குவ தறியேன்
வானநா டவரும் பெறற்கரு நினது மலரடித் தொழும்புசெய் வேனோ
கானவேட் டுருவாம் ஒருவனே ஒற்றிக் கடவுளே கருணையங் கடலே. 6

1305 ஞாலவாழ் வனைத்தும் கானல்நீர் எனவே நன்கறிந் துன்திரு அருளாம்
சீலவாழ் வடையும் செல்வம்இப் பொல்லாச் சிறியனும் பெறுகுவ தேயோ
நீலமா மிடற்றுப் பவளமா மலையே நின்மல ஆனந்த நிலையே
காலன்நாண் அவிழ்க்கும் காலனே ஒற்றிக் கடவுளே கருணையங் கடலே. 7

1306 மாலொடு நான்கு வதனனும் காணா மலரடிக் கடிமைசெய் தினிப்பாம்
பாலொடு கலந்த தேன்என உன்சீர் பாடும்நாள் எந்தநாள் அறியேன்
வேலொடு மயிலும் கொண்டிடுஞ் சுடரை விளைவித்த வித்தக விளக்கே
காலொடு பூதம் ஐந்துமாம் ஒற்றிக் கடவுளே கருணையங் கடலே. 8

1307 சற்றும்நற் குணந்தான் சார்ந்திடாக்கொடியார் தந்தலை வாயிலுள் குரைக்கும்
வெற்றுநாய் தனக்கும் வேறுநா யாக மெலிகின்றேன் ஐம்புலச் சேட்டை
அற்றுநின் றவர்க்கும் அரியநின் திருத்தாட் கடிமைசெய் தொழுகுவ னேயோ
கற்றுமுற் றுணர்ந்தோர்க் கருள்தரும் ஒற்றிக் கடவுளே கருணையங்கடலே. 9

1308 மறைகளும் இன்னும் தலைத்தலை மயங்க மறைந்துல குயிர்தொறும் ஒளித்த
இறைவநின் திருத்தாட் கன்பிலாக் கொடியன் என்னினும் ஏழையேன் தனக்கு
நிறைதரும் நினது திருவருள் அளிக்க நினைத்தலே நின்கடன் கண்டாய்
கறைமணி மிடற்றுத் தெய்வமே ஒற்றிக் காவல்கொள் கருணையங் கடலே. 10

53. பொருள் விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1309 உலக வாழ்க்கையின் உழலும்என் நெஞ்சம்
ஒன்று கோடியாய்ச் சென்றுசென் றுலைந்தே
கலக மாயையில் கவிழ்க்கின்ற தெளியேன்
கலுழ்கின் றேன்செயக் கடவதொன் றறியேன்
இலகும் அன்பர் தம் எய்ப்பினில் வைப்பே
இன்ப வெள்ளமே என்னுடை உயிரே
திலக மேதிரு ஒற்றிஎம் உறவே
செல்வ மேபர சிவபரம்பொருளே. 1

1310 எண்ணி லாநினைப் புற்றதின் வழியே
இன்ப துன்பங்கள் எய்திஎன் நெஞ்சம்
கண்ணி லாக்குரங் கெனஉழன் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
பெண்நி லாவிய பாகத்தெம் அமுதே
பிரமன் ஆதியர் பேசரும் திறனே
தெண்நி லாமுடி ஒற்றியங் கனியே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 2

1311 ஊண்உ றக்கமே பொருள்என நினைத்த
ஒதிய னேன்மனம் ஒன்றிய தின்றாய்க்
காணு றக்கருங் காமஞ்சான் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
மாணு றக்களங் கறுத்தசெம் மணியே
வள்ள லேஎனை வாழ்விக்கும் மருந்தே
சேணு றத்தரும் ஒற்றிநா யகமே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 3

1312 யாது சொல்லினும் கேட்பதின் றந்தோ
யான்செய் தேன்என தென்னும்இவ் இருளில்
காது கின்றதென் வஞ்சக நெஞ்சம்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
ஓது மாமறை உபநிட தத்தின்
உச்சி மேவிய வச்சிர மணியே
தீது நீக்கிய ஒற்றியந் தேனே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 4

1313 சொல்லும் சொல்லள வன்றுகாண் நெஞ்சத்
துடுக்க னைத்தும்இங் கொடுக்குவ தெவனோ
கல்லும் பிற்படும் இரும்பினும் பெரிதால்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
அல்லும் எல்லும்நின் றகங்குழைந் தேத்தும்
அன்பருள் ஊறும் ஆனந்தப் பெருக்கே
செல்லு லாம்பொழில் ஒற்றியங் கரும்பே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 5

1314 இம்மை இன்பமே வீடெனக் கருதி
ஈனர் இல்லிடை இடர்மிக உழந்தே
கைம்மை நெஞ்சம்என் றனைவலிப் பதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
மும்மை யாகிய தேவர்தம் தேவே
முக்கண் மூர்த்தியே முத்தியின் முதலே
செம்மை மேனிஎம் ஒற்றியூர் அரசே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 6

1315 நின்ன டிக்கண்ஓர் கணப்பொழு தேனும்
நிற்ப தின்றியே நீசமங் கையர்தம்
கன்ன வில்தனம் விழைந்தது மனம்காண்
கடைய னேன் செயக் கடவதொன் றறியேன்
அன்ன ஊர்தியும் மாலும்நின் றலற
அடியர் தங்களுள் அமர்ந்தருள் அமுதே
தென்இ சைப்பொழில் ஒற்றிஎம் வாழ்வே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 7

1316 புலைய மங்கையர் புணர்முலைக் குவட்டில்
போந்து ருண்டெனைப் புலன்வழிப் படுத்திக்
கலைய நின்றதிக் கல்லுறழ் மனந்தான்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
விலையி லாஉயர் மாணிக்க மணியே
வேத உச்சியில் விளங்கொளி விளக்கே
சிலைவி லாக்கொளும் ஒற்றிஎம் மருந்தே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 8

1317 தந்தை தாய்மனை மக்கள்என் றுலகச்
சழக்கி லேஇடர் உழக்கும்என் மனந்தான்
கந்த வாதனை இயற்றுகின் றதுகாண்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
எந்தை யேஎனை எழுமையும் தொடர்ந்த
இன்ப வெள்ளமே என்உயிர்க் குயிரே 9
சிந்தை ஓங்கிய ஒற்றிஎந் தேவே
செல்வ மேபர சிவபரம் பொருளே.

1318 கொடிய வஞ்சக நெஞ்சகம் எனும்ஓர்
குரங்கிற் கென்உறு குறைபல உரைத்தும்
கடிய தாதலின் கசிந்தில தினிஇக்
கடைய னேன்செயக் கடவதொன் றறியேன்
அடிய னேன்பிழை உளத்திடை நினையேல்
அருளல் வேண்டும்என் ஆருயிர்த் துணையே
செடிகள் நீக்கிய ஒற்றிஎம் உறவே
செல்வ மேபர சிவபரம் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

54. கொடி விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1319 மாலை ஒன்றுதோள் சுந்தரப் பெருமான்
மணத்தில் சென்றவண் வழக்கிட்ட தெனவே
ஓலை ஒன்றுநீர் காட்டுதல் வேண்டாம்
உவந்து தொண்டன்என் றுரைப்பிரேல் என்னை
வேலை ஒன்றல மிகப்பல எனினும்
வெறுப்பி லாதுளம் வியந்துசெய் குவன்காண்
சோலை ஒன்றுசீர் ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 1

1320 பூதம் நும்படை எனினும்நான் அஞ்சேன்
புதிய பாம்பின்பூண் பூட்டவும் வெருவேன்
பேதம் இன்றிஅம் பலந்தனில் தூக்கும்
பெருமைச் சேவடி பிடிக்கவும் தளரேன்
ஏதம் எண்ணிடா தென்னையும் தொழும்பன்
என்று கொள்விரேல் எனக்கது சாலும்
சூத ஒண்பொழில் ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 2

1321 உப்பி டாதகூழ் இடுகினும் உண்பேன்
உவந்திவ் வேலையை உணர்ந்துசெய் எனநீர்
செப்பி டாமுனம் தலையினால் நடந்து
செய்ய வல்லன்யான் செய்யும்அப் பணிகள்
தப்பி டாததில் தப்பிருந் தென்னைத்
தண்டிப் பீர்எனில் சலித்துளம் வெருவேன்
துப்பி டாஎனக் கருள்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 3

1322 கூலி என்பதோர் அணுத்துணை யேனும்
குறித்தி லேன் அது கொடுக்கினும் கொள்ளேன்
மாலி னோடயன் முதலியர்க் கேவல்
மறந்தும் செய்திடேன் மன்உயிர்ப் பயிர்க்கே

ஆலி அன்னதாம் தேவரீர் கடைக்கண்
அருளை வேண்டினேன் அடிமைகொள் கிற்பீர்
சூலி ஓர்புடை மகிழ்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 4

1323 தேர்ந்து தேடினும் தேவர்போல் தலைமைத்
தேவர் இல்லைஅத் தெளிவுகொண் டடியேன்
ஆர்ந்து நும்அடிக் கடிமைசெய் திடப்பேர்
ஆசை வைத்துமை அடுத்தனன் அடிகேள்
ஓர்ந்திங் கென்றனைத் தொழும்புகொள் ளீரேல்
உய்கி லேன்இஃ தும்பதம் காண்க
சோர்ந்தி டார்புகழ் ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 5

1324 புதியன் என்றெனைப் போக்குதி ரோநீர்
பூரு வத்தினும் பொன்னடிக் கடிமைப்
பதிய வைத்தனன் ஆயினும் அந்தப்
பழங்க ணக்கினைப் பார்ப்பதில் என்னே
முதியன் அல்லன்யான் எப்பணி விடையும்
முயன்று செய்குவேன் மூர்க்கனும் அல்லேன்
துதிய தோங்கிய ஒற்றியூர் உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 6

1325 ஒழுக்கம் இல்லவன் ஓர்இடத் தடிமைக்
குதவு வான்கொல்என் றுன்னுகிற் பீரேல்
புழுக்க நெஞ்சினேன் உம்முடைச் சமுகம்
போந்து நிற்பனேல் புண்ணியக் கனிகள்
பழுக்க நின்றிடும் குணத்தரு வாவேன்
பார்த்த பேரும்அப் பரிசினர் ஆவர்
தொழுக்கன் என்னையாள் வீர்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 7

1326 பிச்சை ஏற்றுணும் பித்தர்என் றும்மைப்
பேசு கின்றவர் பேச்சினைக் கேட்டும்
இச்சை நிற்கின்ற தும்மடிக் கேவல்
இயற்று வான்அந்த இச்சையை முடிப்பீர்
செச்சை மேனியீர் திருவுளம் அறியேன்
சிறிய னேன்மிகத் தியங்குகின் றனன்காண்
துச்சை நீக்கினோர்க் கருள்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 8

1327 ஆலம் உண்டநீர் இன்னும்அவ் வானோர்க்
கமுது வேண்டிமா லக்கடல் கடைய
ஓல வெவ்விடம் வரில்அதை நீயே
உண்கென் றாலும்நும் உரைப்படி உண்கேன்

சாலம் செய்வது தகைஅன்று தருமத்
தனிப்பொற் குன்றனீர் சராசரம் நடத்தும்
கூல பாணியீர் திருவொற்றி நகரீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 9

1328 முத்தி நேர்கிலாத் தேவர்கள் தமைநான்
முந்து றேன்அவர் முற்பட வரினும்
சுத்தி யாகிய சொல்லுடை அணுக்கத்
தொண்டர் தம்முடன் சூழ்த்திடீர் எனினும்
புத்தி சேர்புறத் தொண்டர்தம் முடனே
பொருந்த வைக்கினும் போதும்மற் றதுவே
துத்தி யார்பணி யீர்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 10

1329 என்ன நான்அடி யேன்பல பலகால்
இயம்பி நிற்பதிங் கெம்பரு மானீர்
இன்னும் என்னைஓர் தொண்டன்என் றுளத்தில்
ஏன்று கொள்ளிரேல் இருங்கடற் புவியோர்
பன்ன என்உயிர் நும்பொருட் டாகப்
பாற்றி நும்மிசைப் பழிசுமத் துவல்காண்
துன்னு மாதவர் புகழ்ஒற்றி உடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. 11

திருச்சிற்றம்பலம்

55. நாடக விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1330 மடுக்கும் நீர்உடைப் பாழ்ங்கிண றதனுள்
வழுக்கி வீழ்ந்தவன் வருந்துறா வண்ணம்
எடுக்கின் றோர்என இடையிற்கை விடுதல்
இரக்க முள்ளவர்க் கியல்பன்று கண்டீர்
தடுக்கி லாதெனைச் சஞ்சல வாழ்வில்
தாழ்த்து கின்றது தருமம்அன் றுமக்கு
நடுக்கி லார்தொழும் ஒற்றியூர் உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 1

1331 வெண்மை நெஞ்சினேன் மெய்என்ப தறியேன்
விமல நும்மிடை வேட்கையும் உடையேன்
உண்மை ஓதினேன் வஞ்சக வாழ்க்கை
உவரி வீழ்வனேல் உறுதிமற் றறியேன்
கண்மை உள்ளவர் பாழ்ங்குழி வீழக்
கண்டி ருப்பது கற்றவர்க் கழகோ
நண்மை ஒற்றியீர் திருச்சிற்றம் பலத்துள்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 2

1332 குற்ற மேபல இயற்றினும் எனைநீர்
கொடியன் என்பது குறிப்பல உமது
பொற்றை நேர்புயத் தொளிர்திரு நீற்றைப்
பூசு கின்றனன் புனிதநும் அடிக்கண்
உற்ற தோர்சிறி தன்பும்இவ் வகையால்
உறுதி ஈவதிங் குமக்கொரு கடன்காண்
நற்ற வத்தர்வாழ் ஒற்றியூர் உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 3

1333 உள்ள தோதினால் ஒறுக்கிலேம் என்பர்
உலகு ளோர்இந்த உறுதிகொண் டடியேன்
கள்ளம் ஓதிலேன் நும்மடி அறியக்
காம வேட்கையில் கடலினும் பெரியேன்
வள்ள லேஉம தருள்பெறச் சிறிது
வைத்த சிந்தையேன் மயக்கற அருள்வீர்
நள்ளல் உற்றவர் வாழ்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 4

1334 அரந்தை யோடொரு வழிச்செல்வோன் தனைஓர்
ஆற்று வெள்ளம்ஈர்த் தலைத்திட அவனும்
பரந்த நீரிடை நின்றழு வானேல்
பகைவர் ஆயினும் பார்த்திருப் பாரோ
கரந்தை அஞ்சடை அண்ணல்நீர் அடியேன்
கலங்கக் கண்டிருக் கின்றது கடனோ
நரந்த மார்பொழில் ஒற்றியூர் உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 5

1335 பிறவிக் கண்ணிலான் கைக்கொளும் கோலைப்
பிடுங்கி வீசுதல் பெரியவர்க் கறமோ
மறவிக் கையறை மனத்தினேன் உம்மேல்
வைக்கும் அன்பைநீர் மாற்றுதல் அழகோ
உறஇக் கொள்கையை உள்ளிரேல் இதனை
ஓதிக் கொள்ளிடம் ஒன்றிலை கண்டீர்
நறவிக் கோங்கிய ஒற்றியம் பதியீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 6

1336 வலிய வந்திடு விருந்தினை ஒழிக்கார்
வண்கை உள்ளவர் மற்றது போலக்
கலிய நெஞ்சினேன் வஞ்சக வாழ்வில்
கலங்கி ஐயநுங் கருணையாம் அமுதை
மலிய உண்டிட வருகின்றேன் வருமுன்
மாற்று கிற்பிரேல் வள்ளல்நீர் அன்றோ 7
நலியல் நீக்கிடும் ஒற்றியம் பதியீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே.

1337 பொய்யன் ஆகிலும் போக்கிடம் அறியாப்
புலையன் ஆண்டவன் புகழ்உரைப் பானேல்
உய்ய வைப்பன்ஈ துண்மைஇவ் வுலகில்
ஒதிய னேன்புகல் ஓரிடம் அறியேன்
ஐய நும்மடிக் காட்செயல் உடையேன்
ஆண்ட நீர்எனை அகற்றுதல் அழகோ
நையல் அற்றிட அருள்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 8

1338 தந்தை ஆயவர் தனையரைக் கெடுக்கச்
சமைவர் என்பது சற்றும்இன் றுலகில்
எந்தை நீர்எனை வஞ்சக வாழ்வில்
இருத்து வீர்எனில் யார்க்கிது புகல்வேன்
பந்த மேலிட என்பரி தாபம்
பார்ப்பி ரோஅருட் பங்கய விழியீர்
நந்த வொண்பணை ஒற்றியூர் உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 9

1339 கல்வி வேண்டிய மகன்தனைப் பெற்றோர்
கடுத்தல் ஓர்சிறு கதையிலும் இலைகாண்
செல்வம் வேண்டிலேன் திருவருள் விழைந்தேன்
சிறிய னேனைநீர் தியக்குதல் அழகோ
பல்வி தங்களால் பணிசெயும் உரிமைப்
பாங்கு நல்கும்அப் பரம்உமக் கன்றே
நல்வி தத்தினர் புகழ்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 10

1340 மண்ணில் நல்லவன் நல்லவர் இடத்தோர்
வணக்கம் இன்மையன் வணங்குவன் ஆனால்
எண்ணி நம்புடை இருஎன உரைப்பர்
ஏன்வ ணங்கினை என்றுரைப் பாரோ
கண்ணின் நல்லநும் கழல்தொழ இசைந்தால்
கலக்கம் காண்பது கடன்அன்று கண்டீர்
நண்ணி மாதவன் தொழும்ஒற்றி உடையீர்
ஞான நாடகம் நவிற்றுகின் றீரே. 11

திருச்சிற்றம்பலம்

56. திருவண்ண விண்ணப்பம்

திருவொற்றியூர்
கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

1341 கண்ணப்பா என்றருளும் காளத்தி யப்பாமுன்
வண்ணப்பால் வேண்டும் மதலையைப்பால் வாரிதியை
உண்ணப்பா என்றுரைத்த ஒற்றியப்பா வந்தருள
எண்ணப்பா என்றழும்இவ் ஏழைமுகம் பாராயோ. 1

1342 மஞ்சுபடும் செஞ்சடில வள்ளலே உள்ளுகின்றோர்
உஞ்சுபடும் வண்ணம்அருள் ஒற்றியூர் உத்தமனே
நஞ்சுபடும் கண்டம்உடை நம்பரனே வன்துயரால்
பஞ்சுபடும் பாடுபடும் பாவிமுகம் பாராயோ. 2

1343 கண்ணார் அமுதே கரும்பேஎன் கண்ணேஎன்
அண்ணாஉன் பொன்னருள்தான் ஆர்ந்திடுமோ அல்லதென்றும்
நண்ணாதோ யாது நணுகுமோ என்றுருகி
எண்ணாதும் எண்ணும் இந்த ஏழைமுகம் பாராயோ. 3

1344 நாடியசீர் ஒற்றி நகர்உடையாய் நின்கோயில்
நீடியநற் சந்நிதியில் நின்றுநின்று மால்அயனும்
தேடிஅறி ஒண்ணாத் திருஉருவைக் கண்டுருகிப்
பாடிஅழு தேங்கும்இந்தப் பாவிமுகம் பாராயோ. 4

1345 வாங்கிமலை வில்லாக்கும் மன்னவனே என்அரசே
ஓங்கி வளந்தழுவும் ஒற்றியூர் உத்தமனே
தூங்கிய துன்பச் சுமைசுமைக்க மாட்டாது
ஏங்கிஅழு கின்ற இந்த ஏழைமுகம் பாராயோ. 5

1346 தொண்டர்க் கருளும் துணையே இணையில்விடம்
உண்டச் சுதற்கருளும் ஒற்றியூர் உத்தமனே
சண்டப் பவநோயால் தாயிலாப் பிள்ளையெனப்
பண்டைத் துயர்கொளும்இப் பாவிமுகம் பாராயோ. 6

1347 உட்டிகழ்ந்த மேலவனே ஒற்றியூர் உத்தமனே
மட்டிலங்கும் உன்றன் மலரடியைப் போற்றாது
தட்டிலங்கு நெஞ்சத்தால் சஞ்சலித்துன் சந்நிதிக்கண்
எட்டிநின்று பார்க்கும்இந்த ஏழைமுகம் பாராயோ. 7

1348 நச்சை மிடற்றணிந்த நாயகனே ஓர்பாகம்
பச்சை நிறம்கொண்ட பவளத் தனிமலையே
மிச்சை தவிர்க்கும்ஒற்றி வித்தகனே நின்அருட்கே
இச்சைகொடு வாடும்இந்த ஏழைமுகம் பாராயோ.

1349 மால்அயர்ந்தும் காணா மலரடியாய் வஞ்சவினைக்
கால்அயர்ந்து வாடஅருட் கண்ணுடையாய் விண்ணுடையாய்
சேல்அயர்ந்த கண்ணார் தியக்கத்தி னால்உன் அருட்
பால்அயர்ந்து வாடும்இந்தப் பாவிமுகம் பாராயோ. 9

1350 சொந்தமுற எண்ணித் தொழுகின்ற மெய்யடியர்
சந்தமுறும் நெஞ்சத் தலத்தமர்ந்த தத்துவனே
நந்தவனஞ் சூழ்ஒற்றி நாயகனே வாழ்க்கைஎனும்
பந்தமதில் வாடும்இந்தப் பாவிமுகம் பாராயோ. 10

1351 தில்லையிடை மேவும்எங்கள் செல்வப் பெருவாழ்வே.
ஒல்லைஅடி யார்க்கருளும் ஒற்றியூர் உத்தமனே
அல்லை நிகர்க்கும் அளகத்தார் ஆசைதனக்
கெல்லைஅறி யாதஇந்த ஏழைமுகம் பாராயோ. 11

1352 விதிஇழந்த வெண்தலைகொள் வித்தகனே வேதியனே
மதிஇழந்தோர்க் கேலா வளர்ஒற்றி வானவனே
நிதிஇழந்தோர் போல்அயர்ந்து நின்னுடைய வாழ்க்கைப்
பதிவிரும்பி வாடும்இந்தப் பாவிமுகம் பாராயோ. 12

திருச்சிற்றம்பலம்

57. மருட்கை விண்ணப்பம்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1353 யாது செய்குவன் போதுபோ கின்ற
தண்ண லேஉம தன்பருக் கடியேன்
கோது செய்யினும் பொறுத்தருள் புரியும்
கொள்கை யீர்எனைக் குறுகிய குறும்பர்
வாதுசெய்கின்றார் மனந்தளர் கின்றேன்
வலியி லேன்செயும் வகைஒன்றும் அறியேன்
மாதர் செய்பொழில் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 1

1354 எனக்கு நீர்இங்கோர் ஆண்டைஅல் லீரோ
என்னை வஞ்சகர் யாவருங் கூடிக்
கனக்கும் வன்பவக் கடலிடை வீழ்த்தக்
கண்டி ருத்தலோ கடன்உமக் கெளியேன்
தனக்கு மற்றொரு சார்பிருந் திடுமேல்
தயவு செய்திடத் தக்கதன் றிலைகாண்
மனக்கு நல்லவர் வாழ்ஒற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 2

1355 எஞ்சல் இல்லதோர் காமமாம் கடல்ஆழ்ந்
திளைக்கின் றேன் இனி என்செய்வேன் அடியேன்
தஞ்சம் என்றும தணைமலர் அடிக்கே
சரண்பு குந்தனன் தயவுசெய் யீரேல்
வஞ்ச வாழ்க்கையாம் திமிங்கிலம் எனுமீன்
வாரிக் கொண்டெனை வாய்மடுத் திடுங்காண்
மஞ்ச ளாவிய பொழில்ஒற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 3

1356 என்பி றப்பினை யார்க்கெடுத் துரைப்பேன்
என்செய் வேன்எனை என்செய நினைக்கேன்
முன்பி றப்பிடை இருந்தசே டத்தால்
மூட வாழ்க்கையாம் காடகத் தடைந்தே
அன்பி றந்தவெங் காமவேட் டுவனால்
அலைப்புண் டேன்உம தருள்பெற விழைந்தேன்
வன்பி றந்தவர் புகழ்ஒற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 4

1357 காமம் என்னும்ஓர் காவலில் உழன்றே
கலுழ்கின் றேன்ஒரு களைகணும் அறியேன்
சேம நல்லருட் பதம்பெருந் தொண்டர்
சேர்ந்த நாட்டகம் சேர்வுற விழைந்தேன்
ஏமம் உற்றிடும் எனைவிடு விப்பார்
இல்லை என்செய்வன் யாரினும் சிறியேன்
வாம மாதராண் மருவொற்றி உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 5

1358 இன்பம் என்பது விழைந்திடர் உழந்தேன்
என்னை ஒத்தஓர் ஏழைஇங் கறியேன்
துன்பம் என்பது பெருஞ்சுமை ஆகச்
சுமக்கின் றேன்அருள் துணைசிறி தில்லேன்
அன்பர் உள்ளகத் தமர்ந்திடுந் தேவர்
அடிக்குற் றேவலுக் காட்படு வேனோ
வன்பர் நாடுறா ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 6

1359 ஊழ்வி னைப்படி எப்படி அறியேன்
உளுற்று கின்றனன் உமதருள் பெறவே
தாழ்வினைத்தரும் காமமோ எனைக்கீழ்த்
தள்ளு கின்றதே உள்ளுகின் றதுகாண்
பாழ்வி னைக்கொளும் பாவியேன் செய்யும்
பாங்க றிந்திலேன் ஏங்குகின் றனனால் 7
வாழ்வி னைத்தரும் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே.

1360 இறப்பி லார்தொழும் தேவரீர் பதத்தை
எவ்வ நீக்கியே எவ்விதத் தானும்
மறப்பி லாதுளம் நினைத்திடில் காமம்
வழிம றித்ததை மயக்குகின் றதுகாண்
குறிப்பி லாதென்னால் கூடிய மட்டும்
குறைத்தும் அங்கது குறைகில தந்தோ
வறிப்பி லாவயல் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 8

1361 சஞ்சி தந்தரும் காமம்என் றிடும்ஓர்
சலதி வீழ்ந்ததில் தலைமயக் குற்றே
அஞ்சி அஞ்சிநான் அலைகின்றேன் என்னை
அஞ்சல் என்பவர் யாரையும் அறியேன்
துஞ்சி னால்பின்பு சுகம்பலித் திடுமோ
துணையி லார்க்கொரு துணைஎன இருப்பீர்
மஞ்சின் நீள்பொழில் ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 9

1362 அல்ல ஓதியர் இடைப்படும் கமருக்
காசை வைத்தஎன் அறிவின்மை அளவைச்
சொல்ல வோமுடி யாதெனை ஆளத்
துணிவு கொள்விரோ தூயரை ஆளல்
அல்ல வோஉம தியற்கைஆ யினும்நல்
அருட்க ணீர்எனை ஆளலும் தகுங்காண்
மல்லல் ஓங்கிய ஒற்றியூர் உடையீர்
வண்கை யீர்என்கண் மணிஅனை யீரே. 10

திருச்சிற்றம்பலம்

58. கொடைமட விண்ணப்பம்

திருவொற்றியூர்
கட்டளைக் கலித்துறை
திருச்சிற்றம்பலம்

1363 நின்போன்ற தெய்வம்ஒன் றின்றென வேதம் நிகழ்த்தவும்நின்
பொன்போன்ற ஞானப் புதுமலர்த் தாள் துணைப் போற்றுகிலேன்
என் போன்ற ஏழையர் யாண்டுளார் அம்பலத் தேநடஞ்செய்
மின்போன்ற வேணிய னேஒற்றி மேவிய வேதியனே. 1

1364 வேதிய னேவெள்ளி வெற்பிடை மேவிய வித்தகனே
நீதிய னேமன்றில் நிட்கள ஆனந்த நிர்த்தமிடும்
ஆதிய னேஎமை ஆண்டவ னேமலை யாள்மகிழும்
பாதிய னேஎம் பராபர னேமுக்கட் பண்ணவனே. 2

1365 பண்ணவ னேபசு பாசத்தை நீக்கும் பரம்பரனே
மண்ணவ னேனை மகிழ்ந்தவ னேமலம் மாற்றுகின்ற
விண்ணவ னேவெள் விடையவ னேவெற்றி மேவுநெற்றிக்
கண்ணவ னேஎனைக் காத்தவ னேஒற்றிக் காவலனே.

1366 காவல னேஅன்று மாணிக்குப் பொற்கிழிக் கட்டவிழ்த்த
பாவல னேதொழும் பாணன் பரிசுறப் பாட்டளித்த
நாவல னேதில்லை நாயக னேகடல் நஞ்சைஉண்ட
மாவல னேமுக்கண் வானவ னேஒற்றி மன்னவனே. 4

1367 மன்னவ னேகொன்றை மாலைய னேதிரு மாலயற்கு
முன்னவ னேஅன்று நால்வர்க்கும் யோக முறைஅறந்தான்
சொன்னவ னேசிவ னேஒற்றி மேவிய தூயவனே
என்னவ னேஜயம் ஏற்பவ னேஎனை ஈன்றவனே. 5

1368 ஈன்றவ னேஅன்பர் இன்னுயிர்க் கின்புறும் இன்னமுதம்
போன்றவ னேசிவ ஞானிகள் உள்ளுறும் புண்ணியனே
ஆன்றவ னேஎம துள்ளும் புறம்பும் அறிந்துநின்ற
சான்றவ னேசிவ னேஒற்றி மேவிய சங்கரனே. 6

1369 சங்கரனே அர னேபர னேநற் சராசரனே
கங்கர னேமதிக் கண்ணிய னேநுதல் கண்ணினனே
நங்கர மேவிய அங்கனி போன்றருள் நாயகனே
செங்கர னேர்வண னேஒற்றி மேவிய சின்மயனே. 7

1370 சின்மய னேஅனல் செங்கையில் ஏந்திய சேவகனே
நன்மைய னேமறை நான்முகன் மாலுக்கு நாடரிதாம்
தன்மைய னேசிவ சங்கர னேஎஞ் சதாசிவனே
பொன்மய னேமுப் புராந்தக னேஒற்றிப் புண்ணியனே. 8

1371 புண்ணிய னேஎமைப் போல்வார்க்கும் இன்பப் பொருள் அளிக்கும்
திண்ணிய னேநற் சிவஞான நெஞ்சில் தெளிந்தஅருள்
அண்ணிய னேகங்கை ஆறமர் வேணியில் ஆர்ந்தமதிக்
கண்ணிய னேபற் பலவாகும் அண்டங்கள் கண்டவனே. 9

1372 கண்டவ னேசற்றும் நெஞ்சுரு காக்கொடுங் கள்வர்தமை
விண்டவ னேகடல் வேம்படி பொங்கும் விடம்அனைத்தும்
உண்டவ னேமற்றும் ஒப்பொன் றிலாத உயர்வுதனைக்
கொண்டவ னேஒற்றிக் கோயிலின் மேவும் குருபரனே. 10

திருச்சிற்றம்பலம்

59. சிறு விண்ணப்பம்

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1373 பண்ணால்உன் அருட்புகழைப் பாடு கின்றார்
பணிகின்றார் நின்அழகைப் பார்த்துப் பார்த்துக்
கண்ணார உளங்குளிரக் களித்தா னந்தக்
கண்ணீர்கொண் டாடுகின்றார் கருணை வாழ்வை
எண்ணாநின் றுனைஎந்தாய் எந்தாய் எந்தாய்
என்கின்றார் நின்அன்பர் எல்லாம் என்றன்
அண்ணாநான் ஒருபாவி வஞ்ச நெஞ்சால்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 1

1374 எப்பாலும் நின்அன்பர் எல்லாம் கூடி
ஏத்துகின்றார் நின்பதத்தை ஏழை யேன்நான்
வெப்பாய மடவியர் தம் கலவி வேட்டு
விழுகின்றேன் கண்கெட்ட விலங்கே போல
இப்பாரில் மயங்குகின்றேன் நன்மை ஒன்றும்
எண்ணுகிலேன் முக்கணுடை இறைவா என்றன்
அப்பாஎன் ஆருயிர்க்கோர் துணைவா வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 2

1375 இன்புடையார் நின்அன்பர் எல்லாம் நின்சீர்
இசைக்கின்றார் நான்ஒருவன் ஏழை இங்கே
வன்புடையார் தமைக்கூடி அவமே நச்சு
மாமரம்போல் நிற்கின்றேன் வஞ்ச வாழ்க்கைத்
துன்புடையார் அனைவர்க்கும் தலைமை பூண்டேன்
தூய்மைஎன்ப தறிந்திலேன் சூழ்ந்தோர்க் கெல்லாம்
அன்புடையாய் எனைஉடையாய் விடையாய் வீணே
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 3

1376 விஞ்சுடையாய் நின்அன்பர் எல்லாம் நின்சீர்
மெய்ப்புளகம் எழத்துதித்து விளங்கு கின்றார்
நஞ்சுடையார் வஞ்சகர் தம் சார்பில் இங்கே
நான்ஒருவன் பெரும்பாவி நண்ணி மூட
நெஞ்சுடையார் தமக்கெல்லாம் தலைமை பூண்டு
நிற்கின்றேன் கருணைமுக நிமலக் கஞ்சம்
அஞ்சுடையாய் ஆறுடைய சடையாய் வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 4

1377 பொய்யாத நின்அடியார் எல்லாம் நல்ல
புண்ணியமே செய்துநினைப் போற்று கின்றார்
நையாநின் றுலைகின்ற மனத்தால் இங்கே
நான்ஒருவன் பெரும்பாவி நாயேன் தீமை
செய்யாநின் றுழைக்கின்றேன் சிறிதும் நின்னைச்
சிந்தியேன் வந்திக்கும் திறமும் நாடேன்
ஐயாஎன் அப்பாஎன் அரசே வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 5

1378 தெருளுடையார் நின்அன்பர் எல்லாம் நின்றாள்
சிந்தையில்வைத் தானந்தம் தேக்கு கின்றார்
மருளுடையேன் நான்ஒருவன் பாவி வஞ்ச
மனத்தாலே இளைத்திளைத்து மயங்கு கின்றேன்
இருளுடையேன் ஏர்பூட்டும் பகடு போல்இங்
கில்உழப்பில் உழைக்கின்றேன் எல்லாம் வல்ல
அருளுடையாய் ஆளுடையாய் உடையாய் வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 6

1379 வாரமுளார் நின்அடியார் எல்லாம் நின்னை
வாழ்த்துகின்றார் தலைகுளிர வணங்கு கின்றார்
தீரமிலேன் நானொருவன் பாவி வஞ்சச்
செயல்விளைக்கும் மனத்தாலே திகைத்தேன் சைவ
சாரமிலேன் ஆசார மில்லேன் சித்த
சாந்தமிலேன் இரக்கமிலேன் தகவும் இல்லேன்
ஆரமுதே முக்கணுடை அரசே வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 7

1380 வண்மைபெறு நின்அன்பர் எல்லாம் நின்னை
வந்தனைசெய் தானந்த வயத்தே நின்றார்
பெண்மையுறும் மனத்தாலே திகைத்தேன் நின்சீர்
பேசுகிலேன் கூசுகிலேன் பேதை நானோர்
ஒண்மையிலேன் ஒழுக்கமிலேன் நன்மை என்ப
தொன்றுமிலேன் ஒதியேபோல் உற்றேன் மிக்க
அண்மையில்வந் தருள்புரிவோய் என்னே வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 8

1381 உம்பர்தமக் கரிதாம்உன் பதத்தை அன்றி
ஒன்றுமறி யார்உன்னை உற்றோர் எல்லாம்
இம்பர்வினை யுடையேன்நான் ஒருவன் பாவி
எட்டுணையும் நினைந்தறியேன் என்றும் எங்கும்
வம்பவிழ்பூங் குழல்மடவார் மையல் ஒன்றே
மனம்உடையேன் உழைத்திளைத்த மாடு போல்வேன் 9
அம்பலத்தெம் அரசே இவ் வாழ்க்கைத் துன்பில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ.

1382 கொலைஅறியாக் குணத்தோர்நின் அன்பர் எல்லாம்
குணமேசெய் துன்னருள் தான் கூடு கின்றார்
புலைஅறிவேன் நான்ஒருவன் பிழையே செய்து
புலங்கெட்ட விலங்கேபோல் கலங்கு கின்றேன்
நிலைஅறியேன் நெறியொன்றும் அறியேன் எங்கும்
நினை அன்றித் துணையொன்றும் அறியேன் சற்றும்
அலைஅறியா அருட்கடல்நீ ஆள்க வீணில்
அலைகின்றேன் என்செய்கேன் அந்தோ அந்தோ. 10

திருச்சிற்றம்பலம்

60. பெரு விண்ணப்பம்

பொது
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1383 இருளார் மனத்தேன் இழுக்குடையேன் எளியேன் நின்னை ஏத்தாத
மருளார் நெஞ்சப் புலையரிடம் வாய்ந்து வருந்தி மாழ்கின்றேன்
அருளார் அமுதப் பெருக்கேஎன் அரசே அதுநீ அறிந்தன்றோ
தெருளார் அன்பர் திருச்சபையில் சேர்க்கா தலைக்கும் திறம்அந்தோ. 1

1384 உண்மை அறியேன் எனினும்எனை உடையாய் உனையே ஒவ்வொருகால்
எண்மை உடையேன் நினைக்கின்றேன் என்னே உன்னை ஏத்தாத
வெண்மை உடையார் சார்பாக விட்டாய் அந்தோ வினையேனை
வண்மை உடையாய் என்செய்கேன் மற்றோர் துணைஇங் கறியேனே. 2

1385 எளியேன் இழைத்த பெறும்பிழைகள் எல்லாம் பொறுத்திங் கின்பளித்தாய்
களியேன் தனைநீ இனிஅந்தோ கைவிட் டிடில்என் கடவேனே
ஒளியே முக்கட் செழுங்கரும்பே ஒன்றே அன்பர் உறவேநல்
அளியே பரம வெளியே என் ஐயா அரசே ஆரமுதே. 3

1386 காமக் கடலில் படிந்தஞராம் கடலில் விழுந்தேன் கரைகாணேன்
ஏமக் கொடுங்கூற் றெனும்மகரம் யாது செயுமோ என்செய்கேன்
நாமக் கவலை ஒழித்துன்றாள் நண்ணும் அவர்பால் நண்ணுவித்தே
தாமக் கடிப்பூஞ் சடையாய்உன் தன்சீர் பாடத் தருவாயே. 4

1387 எண்ணா தெளியேன் செயும்பிழைகள் எல்லாம் பொறுத்திங் கெனையாள்வ
தண்ணா நினது கடன்கண்டாய் அடியேன் பலகால் அறைவதென்னே
கண்ணார் நுதற்செங் கரும்பேமுக் கனியே கருணைக் கடலேசெவ்
வண்ணா வெள்ளை மால்விடையாய் மன்றா டியமா மணிச்சுடரே. 5

1388 பாலே அமுதே பழமேசெம் பாகே எனும்நின் பதப்புகழை
மாலே அயனே இந்திரனே மற்றைத் தேவ ரேமறைகள்
நாலே அறியா தெனில்சிறியேன் நானோ அறிவேன் நாயகஎன்
மேலே அருள்கூர்ந் தெனைநின்தாள் மேவு வோர்பால் சேர்த்தருளே. 6

1389 கண்ணார் நுதலோய் பெருங்கருணைக் கடலோய் கங்கை மதிச்சடையோய்
பெண்ணார் இடத்தோய் யாவர்கட்கும் பெரியோய் கரியோன் பிரமனொடும்
அண்ணா எனநின் றேத்தெடுப்ப அமர்ந்தோய் நின்றன் அடிமலரை
எண்ணா துழல்வோர் சார்பாக இருக்கத் தரியேன் எளியேனே. 7

1390 பொய்யோர் அணியா அணிந்துழலும் புலையேன் எனினும் புகல்இடந்தான்
ஐயோ நினது பதம்அன்றி அறியேன் இதுநீ அறியாயோ
கைஓர் அனல்வைத் தாடுகின்ற கருணா நிதியே கண்ணுதலே
மெய்யோர் விரும்பும் அருமருந்தே வேத முடிவின் விழுப்பொருளே. 8

1391 இன்னே எளியேன் பொய்யுடையேன் எனினும் அடியன் அலவோநான்
என்னே நின்னைத் துதியாதார் இடத்தில் என்னை இருத்தினையே
அன்னே என்றன் அப்பாஎன் ஐயா என்றன் அரசேசெம்
பொன்னே முக்கட் பொருளேநின் புணர்ப்பை அறியேன் புலையேனே. 9

1392 வஞ்ச மடவார் மயலொருபால் மணியே நின்னை வழுத்தாத
நஞ்சம் அனையார் சார்பொருபால் நலியும் வாழ்க்கைத் துயர்ஒருபால்
விஞ்சும் நினது திருவருளை மேவா துழலும் மிடிஒருபால்
எஞ்சல் இலவாய் அலைக்கின்ற தென்செய் கேன்இவ் எளியேனே. 10

திருச்சிற்றம்பலம்

61. திருக்காட்சிக் கிரங்கல்

திருவொற்றியூர்
தரவு கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

1393 மண்ணேயும் வாழ்க்கையிடை மாழாந்து வன்பிணியால்
புண்ணேயும் நெஞ்சம் புழுங்குகின்ற பொய்யவனேன்
பண்ணேயும் இன்பப் பரஞ்சுடரே என் இரண்டு
கண்ணேஉன் பொன் முகத்தைக் காணக் கிடைத்திலனே. 1

1394 மருள்ஆர்ந்த வல்வினையால் வன்பிணியால் வன்துயரால்
இருள்ஆர்ந்த நெஞ்சால் இடியுண்ட ஏழையனேன்
தெருள்ஆர்ந்த மெய்ஞ்ஞானச் செல்வச் சிவமேநின்
அருள்ஆர்ந்த முக்கண் அழகுதனைக் கண்டிலனே. 2

1395 வல்லார் முலையார் மயல்உழந்த வஞ்சகனேன்
பொல்லார் புரம்எரித்த புண்ணியனே பொய்மறுத்த
நல்லார் தொழுந்தில்லை நாயகனே நன்றளித்த
அல்லார் களத்தின் அழகுதனைக் கண்டிலனே. 3

1396 நோயால் மெலிந்துனருள் நோக்குகின்ற நொய்யவனேன்
தாயா னவனேஎன் தந்தையே அன்பர்தமைச்
சேயாய் வளர்க்கும் சிவனே சிவனேஎம்
தூயாநின் பொற்றோளின் சுந்தரத்தைக் கண்டிலனே.

1397 வன்னேர் முலையார் மயல்உழந்த வன்மனத்தேன்
அன்னேஎன் அப்பாஎன் ஐயாஎன் ஆரமுதே
மன்னே மணியே மலையாள் மகிழ்உனது
பொன்னேர் இதழிப் புயங்காணப் பெற்றிலனே. 5

1398 நண்ணும் வினையால் நலிகின்ற நாயடியேன்
எண்ணும் சுகாதீத இன்பமே அன்புடையோர்
கண்ணும் கருத்தும் களிக்கவரும் கற்பகமே
பெண்ஒருபால் வாழும்உருப் பெற்றிதனைக் கண்டிலனே. 6

1399 தெவ்வண்ண மாயையிடைச் செம்மாந்த சிற்றடியேன்
இவ்வண்ணம் என்றறிதற் கெட்டாத வான்பொருளே
அவ்வண்ண மான அரசே அமுதேநின்
செவ்வண்ண மேனித் திறங்காணப் பெற்றிலனே. 7

1400 அல்வைத்த நெஞ்சால் அழுங்குகின்ற நாயடியேன்
சொல்வைத்த உண்மைத் துணையே இணைத்தோள்மேல்
வில்வத் தொடைஅணிந்த வித்தகனே நின்னுடைய
செல்வத் திருவடியின் சீர்காணப் பெற்றிலனே. 8

1401 பொத்தேர் மயலால் புழுங்குகின்ற பொய்யடியேன்
கொத்தேர் செழுங்கொன்றைக் குன்றமே கோவாத
முத்தே எவர்க்கும் முழுமுதலே முத்திக்கு
வித்தேநின் பொன்னடிக்கீழ் மேவிநிற்கக் கண்டிலனே. 9

1402 நீதியிலார் வாயிலிடை நின்றலைந்த நெஞ்சகனேன்
சோதிஎலாம் சூழ்ந்தபரஞ் சோதியே செஞ்சடைமேல்
பாதிநிலா ஓங்கும் பரமேநீ ஒற்றிநகர்
வீதிஉலா வந்தஎழில் மெய்குளிரக் கண்டிலனே. 10

திருச்சிற்றம்பலம்

62. திருஅருட் கிரங்கல்

திருவொற்றியூர்
கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

1403 ஒப்பாரும் இல்லாத உத்தமனே ஒற்றியில்என்
அப்பாஉன் பொன்னடிக்கே அன்பிலேன் ஆனாலும்
தப்பா தகமெலியச் சஞ்சலத்தால் ஏங்குகின்ற
இப்பா தகத்தேற் கிரங்கினால் ஆகாதோ. 1

1404 எஞ்சா இடரால் இரும்பிணியால் ஏங்கிமனம்
பஞ்சாக நொந்து பரதவிக்கும் நாயேனைச்
செஞ்சாலி ஓங்கும் திருவொற்றி யப்பாநீ
அஞ்சாதே என்றுன் அருள்கொடுத்தால் ஆகாதோ.

1405 பற்றும் செழுந்தமிழால் பாடுகின்றோர் செய்தபெருங்
குற்றம் குணமாகக் கொள்ளும் குணக்கடலே
மற்றங்கும் எண்தோள் மலையே மரகதமே
பெற்றிங் கடியேன் பிணிகெடுத்தால் ஆகாதோ. 3

1406 எந்தையே என்பவர்தம் இன்னமுதே என் உரிமைத்
தந்தையே தாயே தமரேஎன் சற்குருவே
சிந்தையே ஓங்கும் திருவொற்றி ஐயாஎன்
நிந்தையே நீங்க நிழல்அளித்தால் ஆகாதோ. 4

1407 உள்ளும் திருத்தொண்டர் உள்ளத் தெழுங்களிப்பே
கொள்ளும் சிவானந்தக் கூத்தாஉன் சேவடியை
நள்ளும் புகழுடைய நல்லோர்கள் எல்லாரும்
எள்ளும் புலையேன் இழிவொழித்தால் ஆகாதோ. 5

1408 கோதைஓர் கூறுடைய குன்றமே மன்றமர்ந்த
தாதையே ஒற்றித் தலத்தமர்ந்த சங்கரனே
தீதையே நாள்தோறும் செய்தலைந்து வாடுமிந்தப்
பேதையேன் செய்த பிழைபொறுத்தால் ஆகாதோ. 6

1409 முத்திக்கு வித்தே முழுமணியே முத்தர்உளம்
தித்திக்கும் தேனே சிவமே செழுஞ்சுடரே
சத்திக்கும் நாதத் தலங்கடந்த தத்துவனே
எத்திக்கும் இல்லேன் இளைப்பொழித்தால் ஆகாதோ. 7

1410 வஞ்சமிலார் உள்ளம் மருவுகின்ற வான்சுடரே
கஞ்சமுளான் போற்றும் கருணைப் பெருங்கடலே
நஞ்சமுதாக் கொண்டருளும் நல்லவனே நின்அலதோர்
தஞ்சமிலேன் துன்பச் சழக்கொழித்தால் ஆகாதோ. 8

1411 சேய்பிழையைத் தாய்அறிந்தும் சீறாள் பொறுப்பாள்இந்
நாய்பிழையை நீபொறுக்க ஞாயமும்உண் டையாவே
தேய்மதிபோல் நெஞ்சம் தியக்கம்உறச் சஞ்சலத்தால்
வாய்அலறி வாடும்எனை வாஎன்றால் ஆகாதோ. 9

1412 கண்ணுள் மணிபோல் கருதுகின்ற நல்லோரை
எண்ணும் கணமும்விடுத் தேகாத இன்னமுதே
உண்ணும் உணவுக்கும் உடைக்கும்முயன் றோடுகின்ற
மண்ணுலகத் தென்றன் மயக்கறுத்தால் ஆகாதோ. 10

63. எண்ணத் திரங்கல்

திருவொற்றியூர்
சொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

1413 எளியேன் நின் திருமுன்பே என்உரைக்கேன் பொல்லாத
களியேன் கொடுங்காமக் கன்மனத்தேன் நன்மையிலா
வெளியேன் வெறியேன் தன் மெய்ப்பிணியை ஒற்றியில்வாழ்
அளியோய்நீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 1

1414 முன்னேசெய் வெவ்வினை தான் மூண்டதுவோ அல்லதுநான்
இன்னே பிழைதான் இயற்றியதுண் டோஅறியேன்
பொன்னேர் புரிசடைஎம் புண்ணியனே என்நோயை
அன்னேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 2

1415 இப்பா ரிடைஉனையே ஏத்துகின்ற நாயேனை
வெப்பார் உளத்தினர்போல் வெம்மைசெயும் வெம்பிணியை
எப்பா லவர்க்கும் இறைவனாம் என்அருமை
அப்பாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 3

1416 ஓவா மயல்செய் உலகநடைக் குள்துயரம்
மேவா உழல்கின்ற வெண்மையேன் மெய்ந்நோயைச்
சேவார் கொடிஎம் சிவனே சிவனேயோ
ஆவாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 4

1417 பொய்யாம் மலஇருட்டுப் பொத்தரிடை வீழ்ந்துழலும்
கையாம் நெறியேன் கலங்கவந்த வெம்பிணியை
மையார் மிடற்றெம் மருந்தே மணியேஎன்
ஐயாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 5

1418 இம்மா நிலத்தில் இடருழத்தல் போதாதே
விம்மா அழுங்களன்றன் மெய்உடற்றும் வெம்பிணியைச்
செம்மான் மழுக்கரங்கொள் செல்வச் சிவமேஎன்
அம்மாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 6

1419 புரைசேரும் நெஞ்சப் புலையனேன் வன்காமத்
தரைசேரும் துன்பத் தடங்கடலேன் வெம்பிணியை
விரைசேரும் கொன்றை விரிசடையாய் விண்ணவர்தம்
அரைசேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 7

1420 இத்தா ரணியில் எளியோரைக் கண்டுமிக
வித்தாரம் பேசும் வெறியேன்தன் மெய்ப்பிணியைக்
கொத்தார் குழலிஒரு கூறுடைய கோவேஎன்
அத்தாநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 8

1421 மறியேர் விழியார் மயக்கினிடை மாழாந்த
சிறியேன் அடியேன் தியங்கவந்த வல்நோயைச்
செறிவே பெறுந்தொண்டர் சிந்தை தனில்ஓங்கும்
அறிவேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 9

1422 துன்பே சுமையாச் சுமக்கின்ற நாயேனை
வன்பேசெய் துள்ள மயக்கிநின்ற வன்நோயை
இன்பே அருள்கின்ற என்ஆ ருயிரேஎன்
அன்பேநீ நீக்காயேல் ஆர்நீக்க வல்லாரே. 10

திருச்சிற்றம்பலம்

64. நெஞ்சு நிலைக் கிரங்கல்

திருவொற்றியூர்
கட்டளைக்கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

1423 ஆளாக நின்பொன் அடிக்கன்பு செய்திட ஐயநெடு
நாளாக இச்சைஉண் டென்னைசெய் கேன்கொடு நங்கையர் தம்
மாளா மயல்சண்ட மாருதத் தால்மன வாசிஎன்சொல்
கேளா தலைகின்ற தால்ஒற்றி மேவும் கிளர்ஒளியே. 1

1424 ஒளியாய் ஒளிக்குள் ஒளிர்ஒளி யேஒற்றி உத்தமநீ
அளியா விடில்இதற் கென்னைசெய் கேன்அணங் கன்னவர் தம்
களியால் களித்துத் தலைதெரி யாது [1]கயன்றுலவா
வளியாய்ச் சுழன்றிவண் மாயா மனம்எனை வாதிப்பதே. 2

1425 மாயா மனம்எவ் வகைஉரைத் தாலும் மடந்தையர்பால்
ஓயாது செல்கின்ற தென்னைசெய் கேன்தமை உற்றதொரு
நாயாகி னும்கை விடார்உல கோர்உனை நான் அடுத்தேன்
நீயாகி லுஞ்சற் றிரங்குகண் டாய்ஒற்றி நின்மலனே. 3

1426 மலஞ்சான்ற மங்கையர் கொங்கையி லேநசை வாய்த்துமனம்
சலஞ்சான்ற தால்இதற் கென்னைசெய் கேன்நின் சரண்அன்றியே
வலஞ்சான்ற நற்றுணை மற்றறி யேன்ஒற்றி வானவனே
நலஞ்சான்ற ஞானத் தனிமுத லேதெய்வ நாயகனே. 4

1427 நாயினும் கீழ்ப்பட்ட என்நெஞ்சம் நன்கற்ற நங்கையர்பால்
ஏயினும் செல்கின்ற தென்னைசெய் கேன்உனை ஏத்தியிடேன்
ஆயினும் இங்கெனை ஆட்கொளல் வேண்டும்ஐ யாஉவந்த
தாயினும் நல்லவ னேஒற்றி மேவும் தயாநிதியே. 5

1428 நிதியேநின் பொன்னடி ஏத்தாது நெஞ்சம் நிறைமயலாம்
சதியே புரிகின்ற தென்னைசெய் கேன் உனைத் தாழலர் தம்
விதியே எனக்கும் விதித்ததன் றோஅவ் விதியும்இள
மதியோர் சடை அண்ண லேஒற்றி யூர்ஒளி மாணிக்கமே.

1. கயன்று : என்பது - மெலிந்து, இக்காலத்தில் இச்சொல் கசங்குதல் என்று வழங்கிற்று. ச.மு.க பதிப்பு 1924

1429 மாணாத என்நெஞ்சம் வன்னஞ் சனைய மடந்தையர்பால்
நாணாது செல்கின்ற தென்னைசெய் கேன்சிவ ஞானியர்தம்
கோணாத உள்ளத் திருக்கோயில் மேவிக் குலவும்ஒற்றி
வாணாஎன் கண்ணினுண் மாமணி யேஎன்றன் வாழ்முதலே. 7

1430 வாழாத நெஞ்சம் எனை அலைத் தோடி மடந்தையர்பால்
வீழாத நாளில்லை என்னைசெய் கேன்உன் விரைமலர்த்தாள்
தாழாத குற்றம் பொறுத்தடி யேன் தனைத் தாங்கிக்கொள்வாய்
சூழா தவரிடம் சூழாத ஒற்றிச் சுடர்க்குன்றமே. 8

1431 குன்றேர் முலைச்சியர் வன்மல ஊத்தைக் குழியில்மனம்
சென்றே விழுகின்ற தென்னைசெய் கேன்எம் சிவக்கொழுந்தே
நன்றே சதானந்த நாயக மேமறை நான்கினுக்கும்
ஒன்றே உயர்ஒளி யேஒற்றி யூர்எம் உயிர்த்துணையே. 9

1432 துணையாம்உன் பொன்னடி ஏத்தா மனமது தோகையர்கண்
கணையால் இளைக்கின்ற தென்னைசெய் கேன்என்றன் கண்இரண்டின்
இணையாம் பரஞ்சுட ரேஅழி யாநல மேஇன்பமே
பணையார் திருவொற்றி யூர்அர சேஎம் பரம்பொருளே. 10

1433 பொருளேநின் பொன்னடி உன்னாதென் வன்மனம் பூவையர்தம்
இருளே புரிகின்ற தென்னைசெய் கேன்அடி யேன்மயங்கும்
மருளே தவிர்ந்துனை வாழ்த்தி வணங்கி மகிழ்ந்திடநீ
அருளே அருட்கட லேஒற்றி மாநகர் ஆள்பவனே. 11

திருச்சிற்றம்பலம்

65. தனிமைக் கிரங்கல்

திருவொற்றியூர்
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1434 ஆக்கல் ஆதிய ஐந்தொழில் நடத்த
அயன்முன் ஆகிய ஐவரை அளித்து
நீக்கம் இன்றிஎவ் விடத்தினும் நிறைந்த
நித்த நீஎனும் நிச்சயம் அதனைத்
தாக்க எண்ணியே தாமதப் பாவி
தலைப்பட் டான்அவன் தனைஅகற் றுதற்கே
ஊக்கம் உற்றநின் திருவருள் வேண்டும்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 1

1435 கணத்தில் என்னைவிட் டேகுகின் றவன்போல்
காட்டு கின்றனன் மீட்டும்வந் தடுத்துப்
பணத்தும் மண்ணினும் பாவைய ரிடத்தும்
பரவ நெஞ்சினை விரவுகின் றனன்காண்

குணத்தி னில்கொடுந் தாமதன் எனும்இக்
கொடிய வஞ்சகன் ஒடியமெய்ப் போதம்
உணர்த்து வார்இலை என்செய்கேன் எளியேன்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 2

1436 இமைக்கும் அவ்வள வேனும்நெஞ் சொடுங்கி
இருக்கக் கண்டிலேன் இழிவுகொள் மலத்தின்
சுமைக்கு நொந்துநொந் தையவோ நாளும்
துயர்கின் றேன்அயர் கின்றஎன் துயரைக்
குமைக்கும் வண்ணம்நின் திருவருள் இன்னும்
கூடப் பெற்றிலேன் கூறுவ தென்னே
உமைக்கு நல்வரம் உதவிய தேவே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 3

1437 சென்ற நாளில்ஓர் இறைப்பொழு தேனும்
சிந்தை ஓர்வகை தெளிந்ததன் றதுபோய்
நின்ற நாளினும் நிற்கின்ற திலைகாண்
நெடிய பாவியேன் நிகழ்த்துவ தென்னே
என்றன் ஆருயிர்க் கொருபெருந் துணையாம்
எந்தை யேஎனை எழுமையும் காத்த
உன்ற னால்இன்னும் உவகைகொள் கின்றேன்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 4

1438 கோடி நாவினும் கூறிட அடங்காக்
கொடிய மாயையின் நெடியவாழ்க் கையினை
நாடி நெஞ்சகம் நலிகின்றேன் உனையோர்
நாளும் எண்ணிலேன் நன்கடை வேனே
வாடி னேன்பிழை மனங்கொளல் அழியா
வாழ்வை ஏழையேன் வசஞ்செயல் வேண்டும்
ஊடி னாலும்மெய் அடியரை இகவா
ஒற்றி மேவிய உத்தமப் பொருளே. 5

1439 அன்ப தென்பதைக் கனவினும் காணேன்
ஆடு கின்றனன் அன்பரைப் போல
வன்ப வத்தையும் மாய்த்திட நினைத்தேன்
வஞ்ச நெஞ்சினை வசப்படுக் கில்லேன்
துன்ப வாழ்க்கையில் சுழல்கின்றேன் நின்னைத்
தொழுது வாழ்த்திநல் சுகம்பெறு வேனே.
ஒன்ப தாகிய உருவுடைப் பெரியோய்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 6

1440 முன்னை நான்செய்த வல்வினை இரண்டின்
முடிவு தேர்ந்திலன் வடிவெடுத் துலகில்
என்னை நான்கண்ட தந்தநாள் தொடங்கி
இந்த நாள்மட்டும் இருள்என்ப தல்லால்

பின்னை யாதொன்றும் பெற்றிலேன் இதனைப்
பேச என்னுளம் கூசுகின் றதுகாண்
உன்னை நம்பினேன் நின்குறிப் புணரேன்
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 7

1441 கண்ணி லான்சுடர் காணிய விழைந்த
கருத்தை ஒத்தஎன் கருத்தினை முடிப்பத்
தெண்ணி லாமுடிச் சிவபரம் பொருள்நின்
சித்தம் எப்படி தெரிந்திலன் எளியேன்
பண்ணி லாவிய பாடலந் தொடைநின்
பாத பங்கயம் பதிவுறப் புனைவோர்
உண்ணி லாவிய ஆனந்தப் பெருக்கே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 8

1442 உண்மை நின்அருட் சுகம்பிற எல்லாம்
உண்மை அன்றென உணர்த்தியும் எனது
பெண்மை நெஞ்சகம் வெண்மைகொண் டுலகப்
பித்தி லேஇன்னும் தொத்துகின் றதுகாண்
வண்மை ஒன்றிலேன் எண்மையின் அந்தோ
வருந்து கின்றனன் வாழ்வடை வேனோ
ஒண்மை அம்பலத் தொளிசெயும் சுடரே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 9

1443 நையு மாறெனைக் காமமா திகள்தாம்
நணுகி வஞ்சகம் நாட்டுகின் றதுநான்
செய்யு மாறிதற் கறிந்திலன் எந்தாய்
திகைக்கின் றேன்அருள் திறம்பெறு வேனே
வையு மாறிலா வண்கையர் உளத்தின்
மன்னி வாழ்கின்ற மாமணிக் குன்றே
உய்யு மாறருள் அம்பலத் தமுதே
ஒற்றி ஓங்கிய உத்தமப் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

66. கழிபகற் கிரங்கல்

பொது

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1444 ஆண்ட துண்டுநீ என்றனை அடியேன்
ஆக்கை ஒன்றுமே அசைமடற் பனைபோல்
நீண்ட துண்டுமற் றுன்னடிக் கன்பே
நீண்ட தில்லைவல் நெறிசெலும் ஒழுக்கம்
பூண்ட துண்டுநின் புனிதநல் ஒழுக்கே
பூண்ட தில்லைஎன் புன்மையை நோக்கி
ஈண்ட வந்தரு ளாய்எனில் அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே.

1445 ஊழை யேமிக நொந்திடு வேனோ
உளத்தை நோவனோ உலகிடை மயக்கும்
பாழை யேபலன் தருவதென் றெண்ணிப்
பாவி யேன்பெரும் படர்உழக் கின்றேன்
மாழை யேர்திரு மேனிஎம் பெருமான்
மனம்இ ரங்கிஎன் வல்வினை கெடவந்
தேழை யேற்கரு ளாய்எனில் அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 2

1446 ஈன்று கொண்டஎன் தந்தையும் தாயும்
யாவும் நீஎன எண்ணிய நாயேன்
மான்று கொண்டஇவ் வஞ்சக வாழ்வின்
மயக்கி னால்மிக வன்மைகள் செய்தேன்
சான்று கொண்டது கண்டனை யேனும்
தமிய னேன்மிசைத் தயவுகொண் டென்னை
ஏன்று கொண்டரு ளாய்எனில் அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 3

1447 அம்மை அப்பன்என் ஆருயிர்த் துணைவன்
அரசன் தேசிகன் அன்புடைத் தேவன்
இம்மை யிற்பயன் அம்மையிற் பயன்மற்
றியாவு நீஎன எண்ணிநிற் கின்றேன்
செம்மை யிற்பெறும் அன்பருள் ளகஞ்சேர்
செல்வ மேஎனைச் சேர்த்தரு ளாயேல்
எம்மை யிற்பெறு வேன்சிறு நாயேன்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 4

1448 தாய ராதியர் சலிப்புறு கிற்பார்
தமரும் என்றனைத் தழுவுதல் ஒழிவார்
நேய ராதியர் நேயம்விட் டகல்வார்
நின்னை நம்பிஎன் நெஞ்சுவக் கின்றேன்
தீய ராதியில் தீயன்என் றெனைநின்
திருவு ளத்திடைச் சேர்த்திடா தொழித்தால்
ஏயர் கோனுக்கன் றருளும்எம் பெருமான்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 5

1449 முன்னை நான்செய்த வல்வினைச் சிமிழ்ப்பான்
மோக வாரியின் மூழ்கின னேனும்
அன்னை போலும்என் ஆருயிர்த் துணையாம்
அப்ப நின்அருள் அம்பியை நம்பி
தன்னை நேர்சிவ ஞானமென் கரையைச்
சார்கு வேம்எனும் தருக்குடன் உழன்றேன்
இன்னும் நின்அருள் ஈந்திலை அந்தோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 6

1450 உண்ணு கின்றதும் உறங்குகின் றதும்மேல்
உடுத்து கின்றதும் உலவுகின் றதும்மால்
நண்ணு கின்றதும் நங்கையர் வாழ்க்கை
நாடு கின்றதும் நவையுடைத் தொழில்கள்
பண்ணு கின்றதும் ஆனபின் உடலைப்
பாடை மேலுறப் படுத்துகின் றதும்என்
றெண்ணு கின்றதோ றுளம்பதைக் கின்றேன்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 7

1451 கல்லை வெல்லவும் வல்லஎன் மனந்தான்
கடவுள் நின்அடிக் கமலங்கள் நினைத்தல்
இல்லை நல்லைநின் அருள்எனக் கதனால்
இல்லை இல்லைநீ இரக்கம்இல் லாதான்
அல்லை இல்லையால் அருள்தரா திருத்தல்
அடிய னேன்அள வாயின்இங் கிடர்க்கே
எல்லை இல்லைஎன் றுளம்பதைக் கின்றேன்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 8

1452 பொங்கு மாயையின் புணர்ப்பினுக் குள்ளம்
போக்கி நின்றதும் புலப்பகை வர்களால்
இங்கு மால்அரி ஏற்றின்முன் கரிபோல்
ஏங்கு கின்றதும் இடர்ப்பெருங் கடலில்
தங்கும் ஆசையங் கராப்பிடித் தீர்க்கத்
தவிப்பில் நின்றதும் தமியனேன் தனையும்
எங்கும் ஆகிநின் றாய்அறிந் திலையோ
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 9

1453 அரக்கன் அல்லன்யான் அரக்கனே எனினும்
அரக்க னுக்கும்முன் அருள்அளித் தனையே
புரக்க என்னைநின் அருட்கடன் என்றே
போற்று கின்றனன் புலையரிற் புலையேன்
உரக்க இங்கிழைத் திடும்பிழை எல்லாம்
உன்னல் ஐயநீ உன்னிஎன் அளவில்
இரக்கம் நின்திரு உளத்திலை யானால்
என்செய் கேன்நர கிடைஇடும் போதே. 10

திருச்சிற்றம்பலம்

67. அர்ப்பித் திரங்கல்

பொது
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1454 தம்பி ரான்தய விருக்கஇங் கெனக்கோர்
தாழ்வுண் டோஎனத் தருக்கொடும் இருந்தேன்
எம்பி ரான்நினக் கேழையேன் அளவில்
இரக்கம் ஒன்றிலை என்என்ப தின்னும்
நம்பி ரான்என நம்பிநிற் கின்றேன்
நம்பும் என்றனை வெம்பிடச் செயினும்
செம்பி ரான்அருள் அளிக்கினும் உனது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 1

1455 துட்ட நெஞ்சக வஞ்சகக் கொடியேன்
சொல்வ தென்னைஎன் தொல்வினை வசத்தால்
இட்ட நல்வழி அல்வழி எனவே
எண்ணும் இவ்வழி இரண்டிடை எனைநீ
விட்ட தெவ்வழி அவ்வழி அகன்றே
வேறும் ஓர்வழி மேவிடப் படுமோ
சிட்டர் உள்ளுறும் சிவபெரு மான்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 2

1456 ஊட்டு கின்றனை உண்ணுகின் றனன்மேல்
உறக்கு கின்றனை உறங்குகின் றனன்பின்
காட்டு கின்றனை காணுகின் றனன்நீ
களிப்பிக் கின்றனை களிப்புறு கின்றேன்
ஆட்டு கின்றனை ஆடுகின் றனன்இவ்
அகில கோடியும் அவ்வகை யானால்
தீட்டும் அன்பருக் கன்பநின் தனது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 3

1457 கண்ணி லான்சுடர் காணஉன் னுதல்போல்
கருத்தி லேனும்நின் கருணையை விழைந்தேன்
எண்ணி லாஇடை யூறடுத் ததனால்
இளைக்கின் றேன்எனை ஏன்றுகொள் வதற்கென்
உண்ணி லாவிய உயிர்க்குயிர் அனையாய்
உன்னை ஒத்ததோர் முன்னவர் இலைகாண்
தெண்ணி லாமுடிச் சிவபரம் பொருள் நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 4

1458 மெச்சு கின்றவர் வேண்டிய எல்லாம்
விழிஇ மைக்குமுன் மேவல்கண் டுனைநான்
நச்சு கின்றனன் நச்சினும் கொடியேன்
நன்மை எய்தவோ வன்மையுற் றிடவோ
இச்சை நன்றறி வாய்அருள் செய்யா
திருக்கின் றாய்உனக் கியான்செய்த தென்னே
செச்சை மேனிஎம் சிவபரஞ் சுடர்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 5

1459 நாடுந் தாயினும் நல்லவன் நமது
நாதன் என்றுனை நாடும்அப் பொழுதே
வாடு நெஞ்சகம் தளிர்க்கின்றேன் மற்றை
வைகற் போதெலாம் வாடுகின் றனன்காண்
பாடுந் தொண்டர்கள் இடர்ப்படில் தரியாப்
பண்பென் மட்டும்நின் பால்இலை போலும்
தேடும் பத்தர்தம் உளத்தமர் வோய்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 6

1460 மருள்அ ளித்தெனை மயக்கிஇவ் உலகில்
வருத்து கின்றனை மற்றெனக் குன்றன்
அருள்அ ளிக்கிலை ஆயினும் நினக்கே
அடிமை யாக்கிலை ஆயினும் வேற்றுப்
பொருள்அ ளிக்கிலை ஆயினும் ஒருநின்
பொன்மு கத்தைஓர் போதுகண் டிடவே
தெருள்அ ளித்திடில் போதும்இங் குனது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 7

1461 மாறு கின்றனன் நெஞ்சகம் அஞ்சி
வள்ளல் இத்துணை வந்திலன் இனிமேல்
கூறு கின்றதென் என்றயர் கின்றேன்
குலவித் தேற்றும்அக் கொள்கையர் இன்றி
ஏறு கின்றனன் இரக்கமுள் ளவன்நம்
இறைவன் இன்றருள் ஈகுவன் என்றே
தேறு கின்றனன் என்செய்கேன் நினது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 8

1462 தாயி னும்பெருந் தயவுடை யவன்நந்
தலைவன் என்றுநான் தருக்கொடும் திரிந்தேன்
நாயி னும்கடை யேன்படும் இடரை
நாளும் கண்டனை நல்அருள் செய்யாய்
ஆயி னும்திரு முகங்கண்டு மகிழும்
அன்பர் தம்பணி ஆற்றிமற் றுடலம் 9
தேயி னும்மிக நன்றெனக் கருள்உன்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

1463 வானும் வையமும் அளிக்கினும் உன்பால்
மனம்வைத் தோங்குவர் வள்ளல்நின் அடியார்
நானும் அவ்வகை உலகியல் ஒழுக்கில்
நாடி நின்னருள் நலம்பெற விழைதல்
கூனும் ஓர்முடக் கண்ணிலி வானில்
குலவும் ஒண்சுடர் குறித்திடல் போலும்
தேனும் கைக்கும்நின் அருளுண்டேல் உண்டுன்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே. 10

திருச்சிற்றம்பலம்

68. அச்சத் திரங்கல்

கோயில்
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1464 துறையிடும் கங்கைச் செழுஞ்சடைக் கனியே
சுயம்பிர காசமே அமுதில்
கறையிடும் கண்டத் தொருபெருங் கருணைக்
கடவுளே கண்ணுதற் கரும்பே
குறையிடும் குணத்தால் கொடியனேன் எனினும்
கொடுந்துய ரால்அலைந் தையா
முறையிடு கின்றேன் அருள்தரா தென்னை
மூடன்என் றிகழ்வது முறையோ. 1

1465 இகழ்ந்திடேல் எளியேன் தன்னைநீ அன்றி
ஏன்றுகொள் பவரிலை அந்தோ
அகழ்ந்தென துளத்தைச் சூறைகொண் டலைக்கும்
அஞரெலாம் அறுத்தருள் புரிவாய்
புகழ்ந்திடும் தொண்டர் உளத்தினும் வெள்ளிப்
பொருப்பினும் பொதுவினும் நிறைந்து
திகழ்ந்தருள் பழுக்கும் தெய்வதத் தருவே
செல்வமே சிவபரம் பொருளே. 2

1466 பொருள்எலாம் புணர்க்கும் புண்ணியப் பொருளே
புத்தமு தேகுணப் பொருப்பே
இருள்எலாம் அறுக்கும் பேரொளிப் பிழம்பே
இன்பமே என்பெருந் துணையே
அருள்எலாம் திரண்ட ஒருசிவ மூர்த்தி
அண்ணலே நின்அடிக் கபயம்
மருள்எலாம் கொண்ட மனத்தினேன் துன்ப
மயக்கெலாம் மாற்றிஆண் டருளே. 3

1467 ஆண்டநின் கருணைக் கடலிடை ஒருசிற்
றணுத்துணைத் திவலையே எனினும்
ஈண்டஎன் றன்மேல் தெறித்தியேல் உய்வேன்
இல்லையேல் என்செய்கேன் எளியேன்

நீண்டவன் அயன்மற் றேனைவா னவர்கள்
நினைப்பரும் நிலைமையை அன்பர்
வேண்டினும் வேண்டா விடினும்ஆங் களிக்கும்
விமலனே விடைப்பெரு மானே. 4

1468 பெருமையில் பிறங்கும் பெரியநற் குணத்தோர்
பெற்றதோர் பெருந்தனிப் பொருளே
அருமையில் பிரமன் ஆதிய தேவர்
அடைந்தநற் செல்வமே அமுதே
இருமையிற் பயனும் நின்திரு அருளே
என்றுநின் அடைக்கலம் ஆனேன்
கருமையிற் பொலியும் விடநிகர் துன்பக்
களைகளைந் தெனைவிளைத் தருளே. 5

1469 விளைத்தனன் பவநோய்க் கேதுவாம் விடய
விருப்பினை நெருப்புறழ் துன்பின்
இளைத்தனன் அந்தோ ஏழைமை அதனால்
என்செய்கேன் என்பிழை பொறுத்துத்
தளைத்தவன் துயர்நீத் தாளவல் லவர்நின்
தனைஅன்றி அறிந்திலன் தமியேன்
கிளைத்தவான் கங்கை நதிச்சடை யவனே
கிளர்தரும் சிற்பர சிவனே. 6

1470 சிற்பர சிவனே தேவர்தம் தலைமைத்
தேவனே தில்லைஅம் பலத்தே
தற்பர நடஞ்செய் தாணுவே அகில
சராசர காரணப் பொருளே
அற்பர்தம் இடஞ்செல் பற்பல துயரால்
அலைதரு கின்றனன் எளியேன்
கற்பகம் அனையநின் திருவருட் கடலில்
களிப்புடன் ஆடுவ தென்றோ. 7

1471 என்றுநின் அருள்நீர் உண்டுவந் திடும்நாள்
என்றுநின் உருவுகண் டிடும்நாள்
என்றுநின் அடியர்க் கேவல்செய் திடும்நாள்
என்றென தகத்துயர் அறும்நாள்
மன்றுள்நின் றாடும் பரஞ்சுடர்க் குன்றே
வானவர் கனவினும் தோன்றா
தொன்றுறும் ஒன்றே அருண்மய மான
உத்தம வித்தக மணியே. 8

1472 வித்தகம் அறியேன் வினையினேன் துன்ப
விரிகடல் ஆழ்ந்தனன் அந்தோ
அத்தக வேனை எடுப்பவர் நின்னை
அன்றிஎங் கணும்இலை ஐயா

மத்தகக் கரியின் உரிபுனை பவள
வண்ணனே விண்ணவர் அரசே
புத்தக நிறைவின் அடியவர் வேண்டும்
பொருள்எலாம் புரிந்தருள் பவனே. 9

1473 அருள்பவன் நின்னை அல்லதை இங்கும்
அங்கும்மற் றெங்கும் இன் றதுபோல்
மருள்பவன் என்னை அல்லதை மண்ணும்
வானமும் தேடினும் இன்றே
இருள்பவம் உடையேன் என்செய்கேன் நின்தாள்
இணைதுணை எனநினைந் துற்றேன்
மருள்பவத் தொடும்என் துயர் அறுத் தாள்வாய்
வாழிய அருட்பெருந் துறையே. 10

திருச்சிற்றம்பலம்

69. புறமொழிக் கிரங்கல்

கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

1474 கேளனந் தான்ஒரு போதுண் டனைமனக் கேதம்அற
நீளனம் தேடு முடியான் எதுநினக் கீந்ததென்றே
வேளனம் போல்நடை மின்னாரும் மைந்தரும் வேடிக்கையாய்
ஏளனம் செய்குவர் நீஅருளாவிடில் என் அப்பனே. 1

1475 அப்பாநின் பொன்னருள் என்மேல் தயைசெய் தளித்திலையேல்
துப்பானவும் ஒரு போது துவ்வாது சுழன்றனையே
இப்பாரில் ஈசன் திருவருள் நீபெற்ற தெங்ஙனமோ
செப்பாய் எனவரிப் பார்சிரிப் பார்இச் செகத்தவரே. 2

1476 தீதுசெய் தேற்கருள் செய்வான்நின் சித்தம் திரும்பிலையேல்
தாதுசெய் தேகத்துணா ஒரு போது தவிர்ந்தநினக்
கேதுசெய் தான்சிவன் என்றே உலகர் இழிவுரைத்தால்
யாது செய்வேன் தெய்வமே எளியேன் உயிர்க் கின்னமுதே. 3

1477 தெரியாமையால் சிறியேன் செய்குற்றத்தை நின் சித்தமதில்
பிரியாமை வைத்தருள் செய்திலையேல் எனைப் பெற்றவளும்
பெரியாசை கொண்டபிள்ளாய் அரன் என்தரப் பெற்றதென்றே
பரியாசை செய்குவளால் அயலார்என் பகவருதே. 4

1478 எண்ணாமல் நாயடி யேன் செய்த குற்றங்கள் யாவும் எண்ணி
அண்ணாநின் சித்தம் இரங்காய் எனில் இங்கயலவர் தாம்
பெண்ஆர் இடத்தவன் பேரருள் சற்றும் பெறாதநினக்
கொண்ணாதிவ் வண்மை விரதம் என்றால் என் உரைப்பதுவே. 5

1479 பொய்யான வஞ்சகனேன் பிழை யாவும் பொறுத்துனருள்
செய்யாய் எனில்எது செய்குவன் யான்இச் செகதலத்தோர்
எய்யா விரதத்தில் யாதுபெற்றாய் என்றிகழ்வர் கண்டாய்
அய்யாஎன் இன்னமுதே அரசே என தாண்டவனே. 6

1480 உன்உள்ளம் கொண்டேற் கருளாய் எனில் இவ்உலகர் பொய்யாம்
என்உள்ளம் கொண்ட களவறி யாதுநின் றேடவிங்கே
நின்உள்ளம் கொள்விர தப்பயன் யாது நிகழ்த்தெனவே
முன்உள்ளம் கொண்டு மொழிவர் கண்டாய் எம்முதலவனே. 7

1481 முந்தோகை கொண்டுநின் தண்ணருள் வாரியின் மூழ்குதற்கிங்
கந்தோ என் துன்பம் துடைத்தருளாய் எனில் ஆங்குலகர்
வந்தோ சிவவிரதா எது பெற்றனை வாய்திறஎன்
றிந்தோர் தருசடையாய் விடையாய் என்னை ஏசுவரே. 8

1482 ஆசும் படியில் அகங்காரமும் உடையான் என்றெண்ணிப்
பேசும் படியில் எனக்கருளாய் எனில் பேருலகோர்
ஏசும் படிவரும் பொய்வேடன் என்றதை எண்ணிஎண்ணிக்
கூசும் படிவருமே என்செய்கேன் என்குலதெய்வமே. 9

1483 ஜதட் டிடும்நெஞ் சகத்தேன் பிழைகளை ஆய்ந்துவெறும்
பொய்தட் டிகல்உடை யேற்குன் கருணை புரிந்தலையேல்
வெய்தட்டி உண்ட விரதாநின் நோன்பு விருத்தம் என்றே
கைதட்டி வெண்ணகை செய்வர் கண்டாய் அருட் கற்பகமே. 10

திருச்சிற்றம்பலம்

70. கருணை பெறா திரங்கல்

பொது
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1484 நன்றி ஒன்றிய நின்னடி யவர்க்கே
நானும் இங்கொரு நாயடி யவன்காண்
குன்றின் ஒன்றிய இடர்மிக உடையேன்
குற்றம் நீக்கும்நல் குணமிலேன் எனினும்
என்றின் ஒன்றிய சிவபரஞ் சுடரே
இன்ப வாரியே என்னுயிர்த் துணையே
ஒன்றின் ஒன்றிய உத்தமப் பொருளே
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 1

1485 தீது செய்தனன் செய்கின்றேன் செய்வேன்
தீய னேன்கொடுந் தீக்குண இயல்பே
ஏது செய்தன னேனும்என் தன்னை
ஏன்று கொள்வதெம் இறைவநின் இயல்பே

ஈது செய்தனை என்னைவிட் டுலகில்
இடர்கொண் டேங்கென இயம்பிடில் அடியேன்
ஓது செய்வதொன் றென்னுயிர்த் துணையே
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 2

1486 சென்ற நாளினும் செல்கின்ற நாளில்
சிறிய னேன்மிகத் தியங்குறு கின்றேன்
மன்ற நான்இவண் இவ்வகை ஆனால்
வள்ள லேநினை வழுத்துமா றெதுவோ
என்ற னால்இனி ஆவதொன் றிலைஉன்
எண்ணம் எப்படி அப்படி இசைக
உன்ற னால்களித் துவகைகொள் கின்றேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 3

1487 மையல் வாழ்க்கையில் நாள்தொறும் அடியேன்
வருந்தி நெஞ்சகம் மாழ்குவ தெல்லாம்
ஐய ஐயவோ கண்டிடா தவர்போல்
அடம்பி டிப்பதுன் அருளினுக் கழகோ
செய்ய மேல்ஒன்றும் அறிந்திலன் சிவனே
தில்லை மன்றிடைத் தென்முக நோக்கி
உய்ய வைத்ததாள் நம்பிநிற் கின்றேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 4

1488 மண்ண கச்சிறு வாழ்க்கையின் பொருட்டால்
வருந்தி மற்றதன் வன்மைகள் எல்லாம்
எண்ண எண்ணஎன் நெஞ்சகம் பதைப்புற்
றேங்கி ஏங்கிநான் இளைப்புறு கின்றேன்
அண்ணல் நின்திரு அருட்டுணை அடைந்தால்
அமைந்து வாழ்குவன் அடைவகை அறியேன்
உண்ண நல்அமு தனையஎம் பெருமான்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 5

1489 அன்னை அப்பனும் நீஎன மகிழ்ந்தே
அகங்கு ளிர்ந்துநான் ஆதரித் திருந்தேன்
என்னை இப்படி இடர்கொள விடுத்தால்
என்செய் கேன்இதை யாரொடு புகல்கேன்
பொன்னை ஒத்தநின் அடித்துணை மலரைப்
போற்று வார்க்குநீ புரிகுவ திதுவோ
உன்னை எப்படி ஆயினும் மறவேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 6

1490 நீலம் இட்டகண் மடவியர் மயக்கால்
நெஞ்சம் ஓர்வழி நான்ஒரு வழியாய்
ஞாலம் இட்டஇவ் வாழ்க்கையில் அடியேன்
நடுங்கி உள்ளகம் நலியும்என் தன்மை
ஆலம் இட்டருள் களத்தநீ அறிந்தும்
அருள்அ ளித்திலை ஆகமற் றிதனை
ஓலம் இட்டழு தரற்றிஎங் குரைப்பேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 7

1491 கொடிய பாவியேன் படும்பரி தாபம்
குறித்துக் கண்டும்என் குறைஅகற் றாது
நெடிய காலமும் தாழ்த்தனை நினது
நெஞ்சும் வஞ்சகம் நேர்ந்ததுண் டேயோ
அடியர் தந்துயர் கண்டிடில் தரியார்
ஐயர் என்பர்என் அளவஃ திலையோ
ஒடிய மாதுயர் நீக்கிடாய் என்னில்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 8

1492 என்என் றேழையேன் நாணம்விட் டுரைப்பேன்
இறைவ நின்றனை இறைப்பொழு தேனும்
உன்என் றால்என துரைமறுத் தெதிராய்
உலக மாயையில் திலகமென் றுரைக்கும்
மின்என் றால்இடை மடவியர் மயக்கில்
வீழ்ந்தென் நெஞ்சகம் ஆழ்ந்துவிட் டதனால்
உன்அன் பென்பதென் னிடத்திலை யேனும்
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 9

1493 அடிய னேன்மிசை ஆண்டவ நினக்கோர்
அன்பி ருந்ததென் றகங்கரித் திருந்தேன்
கொடிய னேன்படும் இடர்முழு தறிந்தும்
கூலி யாளனைப் போல்எனை நினைத்தே
நெடிய இத்துணைப் போதும்ஓர் சிறிதும்
நெஞ்சி ரங்கிலை சஞ்சலத் தறிவும்
ஒடிய நின்றனன் என்செய்கேன் சிவனே
உனைஅ லால்எனை உடையவர் எவரே. 10

திருச்சிற்றம்பலம்

71. திருவருட் பதிகம்

திருவண்ணாமலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

1494 வளங்கிளர் சடையும் விளங்கிய இதழி மாலையும் மால்அயன் வழுத்தும்
குளங்கிளர் நுதலும் களங்கிளர் மணியும் குலவுதிண் புயமும்அம் புயத்தின்
தளங்கிளர் பதமும் இளங்கதிர் வடிவும் தழைக்கநீ இருத்தல்கண் டுவத்தல்
உளங்கிளர் அமுதே துளங்குநெஞ் சகனேன் உற்றருணையில் பெற அருளே. 1

1495 அன்பர் தம் மனத்தே இன்பமுற் றவைகள் அளித்தவர் களித்திடப் புரியும்
பொன்பொலி மேனிக் கருணையங் கடலே பொய்யனேன் பொய்மைகண் டின்னும்
துன்பமுற்றலையச் செய்திடேல் அருணைத் தொல்நக ரிடத்துன தெழில்கண்
டென்புளம் உருகத் துதித்திடல் வேண்டும் இவ்வரம் எனக்கிவண் அருளே. 2

1496 பூத்திடும் அவனும் காத்திடு பவனும் புள்விலங் குருக்கொடு நேடி
ஏத்திடும் முடியும் கூத்திடும் அடியும் இன்னமும் காண்கிலர் என்றும்
கோத்திடும் அடியர் மாலையின் அளவில் குலவினை என்றுநல் லோர்கள்
சாற்றிடும் அதுகேட்டுவந்தனன் நினது சந்நிதி உறஎனக் கருளே. 3

1497 அருள்பழுத் தோங்கும் ஆனந்தத் தருவே அற்புத அமலநித் தியமே
தெருள்பழுத் தோங்கும் சித்தர்தம் உரிமைச் செல்வமே அருணையந் தேவே
இருள்பழுத் தோங்கும் நெஞ்சினேன் எனினும் என்பிழை பொறுத்துநின் கோயில்
பொருள் பழுத்தோங்கும் சந்நிதி முன்னர்ப் போந்துனைப் போற்றுமாறருளே. 4

1498 மறையும்அம் மறையின் வாய்மையும் ஆகி மன்னிய வள்ளலே மலர்மேல்
இறையும்மா தவனும் இறையும்இன் னவன்என் றெய்திடா இறைவனே அடியேன்
பொறையும்நன் னிறையும் அறிவும்நற் செறிவும் பொருந்திடாப் பொய்யனேன் எனினும்
அறையும் நற் புகழ்சேர் அருணையை விழைந்தேன் அங்கெனை அடைகுவித் தருளே. 5

1499 தேடுவார் தேடும் செல்வமே சிவமே திருஅரு ணாபுரித் தேவே
ஏடுவார் இதழிக் கண்ணிஎங் கோவே எந்தையே எம்பெரு மானே
பாடுவார்க் களிக்கும் பரம்பரப் பொருளே பாவியேன் பொய்யெலாம் பொறுத்து
நாடுவார் புகழும் நின்திருக் கோயில் நண்ணுமா எனக்கிவண் அருளே. 6

1500 உலகுயிர் தொறும்நின் றூட்டுவித் தாட்டும் ஒருவனே உத்தம னேநின்
இலகுமுக் கண்ணும் காளகண் டமும்மெய் இலங்குவெண் ணீற்றணி எழிலும்
திலகஒள் நுதல்உண் ணாமுலை உமையாள் சேரிடப் பாலுங்கண் டடியேன்
கலகஐம் புலன்செய் துயரமும் மற்றைக் கலக்கமும் நீக்குமா அருளே. 7

1501 அருட்பெருங் கடலே ஆனந்த நறவே அடிநடு அந்தமுங் கடந்த
தெருட்பெரு மலையே திருஅணா மலையில் திகழ்சுயஞ் சோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின் றேன் மயக்கெலாம் ஒழிந்துவன் பிறவி
இருட்பெருங் கடல்விட் டேறநின் கோயிற் கெளியனேன் வரவரம் அருளே.

1502 கருணையங் கடலே கண்கள்மூன் றுடைய கடவுளே கமலன்மால் அறியா
அருணைஎங் கோவே பரசிவா னந்த அமுதமே அற்புத நிலையே
இருள்நிலம் புகுதா தெனைஎடுத் தாண்ட இன்பமே அன்பர்தம் அன்பே
பொருள்நலம் பெறநின் சந்நிதிக் கெளியேன் போந்துனைப் போற்றும்வா றருளே. 9

1503 ஏதுசெய் திடினும் பொறுத்தருள் புரியும் என்உயிர்க்கொருபெருந் துணையே
தீதுசெய் மனத்தார் தம்முடன் சேராச் செயல்எனக் களித்தஎன் தேவே
வாதுசெய் புலனால் வருந்தல்செய் கின்றேன் வருந்துறா வண்ணம்எற் கருளித்
தாதுசெய் பவன்ஏத் தருணையங் கோயில் சந்நிதிக் கியான்வர அருளே. 10

திருச்சிற்றம்பலம்

72. பிரசாதப் பதிகம்

புள்ளிருக்குவேளூர்
கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1504 சரதத் தால்அன்பர் சார்ந்திடும் நின்திரு
விரதத் தால்அன்றி வேறொன்றில் தீருமோ
பரதத் தாண்டவ னேபரி திப்புரி
வரதத் தாண்டவ னேஇவ்வ ருத்தமே. 1

1505 வேத னேனும்வி லக்குதற் பாலனோ
தீத னேன்துயர் தீர்க்கும்வ யித்திய
நாத னேஉன்றன் நல்லருள் இல்லையேல்
நோதல் நேரும்வன் நோயில்சி றிதுமே. 2

1506 அருந்தி னால்அன்ப கங்குளிர் ஆனந்த
விருந்தி னால்மகிழ் வித்தருள் அண்ணலே
வருந்தி நாடவ ரும்பிணி நின்அருள்
மருந்தி னால்அன்றி மற்றொன்றில் தீருமோ. 3

1507 மாலும் நான்குவ தனனும் மாமறை
நாலும் நாடரு நம்பர னேஎவ
ராலும் நீக்கஅ ரிதிவ்வ ருத்தம்நின்
ஏலும் நல்லருள் இன்றெனில் சற்றுமே. 4

1508 தேவர் ஆயினும் தேவர்வ ணங்கும்ஓர்
மூவர் ஆயினும் முக்கண நின்அருள்
மேவு றாதுவி லக்கிடற் பாலரோ
ஓவு றாதஉ டற்பிணி தன்னையே. 5

1509 வைய நாயக வானவர் நாயக
தையல் நாயகி சார்ந்திடும் நாயக
உய்ய நின்னருள் ஒன்றுவ தில்லையேல்
வெய்ய நோய்கள்வி லகுவ தில்லையே.

1510 கல்லை வில்லில்க ணித்தருள் செய்ததோர்
எல்லை இன்றிஎ ழும்இன்ப வெள்ளமே
இல்லை இல்லைநின் இன்னருள் இல்லையேல்
தொல்லை நோயின்தொ டக்கது நீங்கலே. 7

1511 நீதி மாதவர் நெஞ்சிடை நின்றொளிர்
சோதி யேமுத்தொ ழிலுடை மூவர்க்கும்
ஆதி யேநின்அ ருள்ஒன்றும் இல்லையேல்
வாதி யாநிற்கும் வன்பிணி யாவுமே. 8

1512 பத்தர் நித்தம்ப யில்பரி திப்புரி
உத்த மப்பொரு ளேஉன்அ ருள்தனைப்
பெத்தம் அற்றிடப் பெற்றவர்க் கல்லது
நித்தம் உற்றநெ டும்பிணி நீங்குமோ. 9

1513 சைவ சிற்குணர் தம்முளம் மன்னிய
தெய்வ தற்பர னேசிவ னேஇங்கு
உய்வ தற்குன்அ ருள்ஒன்றும் இல்லையேல்
நைவ தற்குந ணுகுவ நோய்களே. 10

திருச்சிற்றம்பலம்

73. பிரார்த்தனைப் பதிகம்

திருவொற்றியூரும் திருத்தில்லையும்
கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

1514 அப்பார் மலர்ச்சடை ஆரமு தேஎன் அருட்டுணையே
துப்பார் பவள மணிக்குன்ற மேசிற் சுகக்கடலே
வெப்பார் தருதுய ரால்மெலி கின்றனன் வெற்றடியேன்
இப்பார் தனில்என்னை அப்பாஅஞ் சேல்என ஏன்றுகொள்ளே. 1

1515 ஏன்றுகொள் வான்நம தின்னுயிர் போல்முக்கண் எந்தைஎன்றே
சான்றுகொள் வாய்நினை நம்பிநின் றேன்இத் தமிஅடியேன்
மான்றுகொள் வான்வரும் துன்பங்கள் நீக்க மதித்திலையேல்
ஞான்றுகொள் வேன்அன்றி யாதுசெய் வேன் இந்த நானிலத்தே. 2

1516 நிலத்தே சிறுவர்செய் குற்றங்கள் யாவும் நினைத்தறவோர்
சலத்தே உளத்தை விடார்என்பர் ஆதலின் தாதையென்றே
குலத்தேவர் போற்றும் குணக்குன்ற மேஎங் குலதெய்வமே
புலத்தே இழிதகை யேன்பிழை யாவும் பொறுத்தருளே. 3

1517 அருளார் அமுதப் பெருங்கட லேதில்லை அம்பலத்தில்
பொருளார் நடம்புரி புண்ணிய னேநினைப் போற்றுகிலேன்
இருளார் மனத்தின் இடர்உழந் தேன்இனி யாதுசெய்கேன்
மருளார் மலக்குடில் மாய்ந்திடில் உன்அருள் வாய்ப்பதற்கே.

1518 வாயார நின்பொன் மலர்த்தாள் துணையே வழுத்துகிலேன்
ஓயா இடர்உழந் துள்நலி கின்றனன் ஓகெடுவேன்
பேயாய்ப் பிறந்திலன் பேயும்ஒவ் வேன்புலைப் பேறுவக்கும்
நாயாய்ப் பிறந்திலன் நாய்க்கும் கடைப்பட்ட நான் இங்ஙனே. 5

1519 நான் செய்த குற்றங்கள் எல்லாம் பொறுத்துநின் நல்லருள்நீ
தான்செய் தனைஎனில் ஐயாமுக் கட்பெருஞ் சாமிஅவற்
கேன்செய் தனைஎன நிற்றடுப் பார்இலை என்அரசே
வான்செய்த நன்றியை யார்தடுத் தார்இந்த வையகத்தே. 6

1520 வையகத் தேஇடர் மாக்கடல் மூழ்கி வருந்துகின்ற
பொய்யகத் தேனைப் புரந்தரு ளாமல் புறம்பொழித்தால்
நையகத் தேன்எது செய்வேன்அந் தோஉள் நலிகுவன்காண்
மெய்யகத் தேநின் றொளிர்தரும் ஞான விரிசுடரே. 7

1521 விரிதுய ராற்தடு மாறுகின் றேன்இந்த வெவ்வினையேன்
பெரிதுய ராநின்ற நல்லோர் அடையும்நின் பேரருள்தான்
அரிதுகண் டாய் அடை வேன்எனல் ஆயினும் ஐயமணிப்
புரிதுவர் வார்சடை யாய்நீ உவப்பில் புரியில்உண்டே. 8

1522 உண்டோஎன் போல்துய ரால்அலை கின்றவர் உத்தமநீ
கண்டோர் சிறிதும் இரங்குகி லாய்இக் கடையவனேன்
பண்டோர் துணைஅறி யேன்நின்னை யன்றிநிற் பற்றிநின்றேன்
எண்டோள் மணிமிடற் றெந்தாய் கருணை இருங்கடலே. 9

1523 கடலே அனைய துயர்மிகை யால்உட் கலங்கும்என்னை
விடலே அருளன் றெடுத்தாளல் வேண்டும்என் விண்ணப்பமீ
தடல்ஏ றுவந்த அருட்கட லேஅணி அம்பலத்துள்
உடலே மருவும் உயிர்போல் நிறைஒற்றி யூரப்பனே. 10

திருச்சிற்றம்பலம்

74. திருப்புகற் பதிகம்

கொச்சகக் கலிப்பா[1]

அருட்பெருஞ்ஜோதி

1524 வேகமுறு நெஞ்ச மெலிவும் எளியேன்றன்
தேக மெலிவும் தெரிந்தும் இரங்காயேல்
மாக நதியும் மதியும் வளர்சடைஎம்
ஏக இனிமற் றெனக்கார் இரங்குவரே. 1

1525 கள்ள மனத்துக் கடையோர்பால் நாணுறும்என்
உள்ள மெலிவும் உடல் மெலிவும் கண்டிருந்தும்
எள்ளின் அளவும் இரங்கி அருளாயேல்
எள்ளும் உலகில் எனக்கார் இரங்குவரே.

1526 பொன்னை வளர்ப்பாரைப் போற்றாமல் எம்பெருமான்
உன்னைமதித் துன்னுறும்என் உள்ளம் அறிந்திருந்தும்
அன்னையினும் சால அருள்வோய் அருளாயேல்
என்னை முகம்பார்த் தெனக்கார் இரங்குவரே. 3

1527 துன்னுடைய வியாக்கிரமத் தோலுடையான் தானிருக்கப்
பொன்னுடையார் பக்கம் புகுவானேன் என்றிருப்பேன்
தன்னுடைய துன்பம் தவிர்த்திங் கருளாயேல்
என்னுடையாய் மற்றிங் கெனக்கார் இரங்குவரே. 4

1528 வன்கண்ணர் தம்மை மதியாதுன் பொன்னடியின்
தன்கண் அடியேன் தன் சஞ்சலவன் நெஞ்சகத்தின்
புண்கண் உழல்வைப் புகல்கின்றேன் காத்திலையேல்
என்கண் அனையாய் எனக்கார் இரங்குவரே. 5

1529 தோன்றுவதும் மாய்வதும் ஆம் சூழ்ச்சியிடைப் பட்டலைந்து
மான்றுகொளும் தேவர் மரபை மதியாமே
சான்றுகொளும் நின்னைச் சரணடைந்தேன் நாயேனை
ஏன்றுகொளாய் என்னில் எனக்கார் இரங்குவரே. 6

1530 தீதுமுற்றும் நாளும் செயினும் பொறுத்தருளும்
சாதுமுற்றும் சூழ்ந்த தயாநிதிநீ என்றடைந்தேன்
கோதுமுற்றும் தீரக் குறியாயேல் நன்மைஎன்ப
தேதும் அற்ற பாவிக் கெவர் தான் இரங்குவரே. 7

1531 துன்றியமா பாதகத்தோன் சூழ்வினையை ஓர்கணத்தில்
அன்றுதவிர்த் தாண்ட அருட்கடல்நீ என்றடுத்தேன்
கன்றுறும் என் கண்கலக்கம் கண்டும் இரங்காயேல்
என்றும் உளாய் மற்றிங் கெவர் தான் இரங்குவரே. 8

1532 கோடாமே பன்றிதரும் குட்டிகட்குத் தாயாகி
வாடா முலைகொடுத்த வள்ளல்என நான்அடுத்தேன்
வாடாஎன்றுன் அருளில் வாழ்வான் அருளிலையேல்
ஈடாரும் இல்லாய் எனக்கார் இரங்குவரே. 9

1533 கல்லா நடையேன் கருணையிலேன் ஆனாலும்
நல்லார் புகழும் நமச்சிவா யப்பெயரே
அல்லாது பற்றொன் றறியேன் அருளாயேல்
எல்லாம் உடையாய் எனக்கார் இரங்குவரே. 10

75. சிந்தைத் திருப்பதிகம்

கொச்சகக் கலிப்பா

அருட்பெருஞ்ஜோதி

1534 விடை ஆர்க்கும் கொடி உடைய வித்தகஎன்றுன் அடியில்
இடை ஆர்த்து நின்றழும் இவ் ஏழைமுகம் பாராமே
நடை ஆர்க்கும் வாழ்க்கையிலே நல்குரவோர்க் கீயாத
உடையார்க்கோ என்னை உடையாய் உதவுவதே. 1

1535 கற்றே அறியாக் கடைப்புலையேன் ஆனாலும்
உற்றேநின் தன்னைநினைந் தோதுகின்றேன் அல்லாமே
மற்றேதும் தேறேன் என் வன்துயர்தீர்ந்துள் குளிரச்
சற்றே இரங்கித் தயவுசெய்தால் ஆகாதோ. 2

1536 கல்லா ரொடும் திரிந்தென் கண்ணேநின் தாள்வழுத்தும்
நல்லார் தமைக்காண நாணுகின்றேன் ஆனாலும்
வல்லாய்நின் தன்னை அன்றி மற்றொன்றறியேன் நான்
எல்லாம் அறிவாய்க் கிதனை இயம் பல்என்னே. 3

1537 கள்ளநெறி கொள்ளும் கடைநாயேன் என்னினும்நின்
வள்ளல் மலர்த்தாளே வழுத்துகின்றேன் என்னுடைய
உள்ள மெலிவோ டுடல்மெலிவும் கண்டும் அந்தோ
எள்ளளவும் எந்தாய் இரங்கா திருந்தனையே. 4

1538 சீர்துணையார் தேடும் சிவனேநின் தன்னைஅன்றி
ஓர்துணையும் இல்லேன் நின் ஒண்பொற் பதம் அறிய
கார்துணையா நாடும் கலாபிஎன நாடுகின்றேன்
ஆர்துணைஎன் றையா அகல இருந்தனையே. 5

1539 பேய்அனையா ரோடும் பிழைபுரிந்தேன் ஆனாலும்
நாய்அனையேன் நின்னுடைய நாமம் நவிற்றுகின்றேன்
தீயனைய துன்பில் திகைக்கின்றேன் கண்டிருந்தும்
தாய்அனையாய் சற்றும் தயவு புரிந்திலையே. 6

1540 வெள்ள மருவும் விரிசடையாய் என்னுடைய
உள்ள விரிவும் உடல்மெலிவும் கண்டிருந்தும்
தள்ளரிய நின்னருள் ஓர் சற்றும் புரியாமே
கள்ளவினைக் கென் உளத்தைக் கைகாட்டி நின்றனையே. 7

1541 என்னுரிமைத் தாய்க்கும் இனியாய்நின் ஐந்தெழுத்தை
உன்னுநிலைக் கென்னை உரித்தாக்க வேண்டுதியேல்
மன்னுலகில் பொன்னுடையார் வாயில்தனைக் காத்தயர்ந்தேன்
தன்னுடைய எண்ணந் தனைமுடிக்க வேண்டுவதே.

1542 குற்றம்எலாம் நல்ல குணமாகக் கொண்டருளும்
உற்றதுணை நீயேமற் றோர்துணையும் இல்லைஎன்றே
நற்றலைமை யாம்உனது நாமம் நவில்கின்றேன்
கற்றவனே என்றனை நீகைவிடில் என்செய்வேனே. 9

1543 அறியாப் பருவத் தறிவுறுத்தி ஆட்கொண்ட
நெறியானே நின்ஆணை நின்ஆணை நின்ஆணை
பொறியார்நின் நாமம் புகலுவதே அன்றிமற்றை
வெறியார்வன் நாமமொன்றும் வேண்டேன் நான் வேண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்

76. உய்கைத் திருப்பதிகம்

கலிவிருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1544 திருவும் சீரும் சிறப்பும் திறலும் சற்
குருவும் கல்வியும் குற்றமில் கேள்வியும்
பொருவில் அன்னையும் போக்கறு தந்தையும்
தரும வெள்விடைச் சாமிநின் நாமமே. 1

1545 பொய்ய னேன்பிழை யாவும் பொறுத்தருள்
செய்ய வேண்டும் நின்செம்பொற்ப தமலால்
அய்ய னேமுக்க ணாஇவ் அடியனேற்
குய்ய வேறு புகல் இலை உண்மையே. 2

1546 கள்ள நெஞ்சக னேனும் கடையனேன்
வள்ளல் நின்மலர் வார்கழற் பாதமே
உள்ளு வேன்மற்றை ஓர்தெய்வ நேயமும்
கொள்ள லேன்என்கு றிப்பறிந் தாள்கவே. 3

1547 வஞ்ச மாதர் மயக்கம் கனவினும்
எஞ்சுறாதிதற் கென்செய்கு வேன் என்றன்
நெஞ்சம் அம்மயல் நீங்கிட வந்தெனைத்
தஞ்சம் என்றுன் சரண்தந்து காக்கவே. 4

1548 பற்று நெஞ்சகப் பாதகனேன் செயும்
குற்றம் யாவும் குணம் எனக் கொண்டருள்
உற்ற [1]வெட்டுணை யேனும் உதவுவாய்
கற்ற நற்றவர் ஏத்தும் முக்கண்ணனே. 5

1549 மதியும் கல்வியும் வாய்மையும் வண்மையும்
பதியும் ஈந்தெம்ப சுபதி மெய்ந்நெறிக்
கதியின் வைப்பது நின்கடன் வன்கடல்
வதியும் நஞ்சம் அணிமணி கண்டனே.

1. உற்ற எள்துணை - ஊரனடிகள் பதிப்பு, உற்ற வெட்டுணை - ச.மு.க பதிப்பு, 1932 பதிப்பு

1550 நீடு வாழ்க்கை நெறிவரு துன்பினால்
வாடும் என்னை வருந்தல் என்றுன் பதம்
பாடும் வண்ணம் நற்பாங்கருள் வாய்மன்றுள்
ஆடும் முக்கண் அருட்பெரு வெள்ளமே. 7

1551 சிந்தை நொந்திச்சிறிய அடியனேன்
எந்தை என்றுனை எண்ணி நிற்கின்றனன்
இந்து சேகரனே உன்றன் இன்னருள்
தந்து காப்பதுன் தன்கடன் ஆகுமே. 8

1552 உன்னை நாடும் என் உள்ளம் பிறரிடைப்
பொன்னை நாடும் புதுமை இதென் கொலோ
மின்னை நாடும் நல்வேணிப் பிரான் இங்கே
என்னை நாடி எனக்கருள் செய்கவே. 9

1553 இழை பொறுத்தமு லையவர்க் கேற்ற என்
பிழை பொறுப்பதுன் பேரருட் கேதகும்
மழைபொறுக்கும் வடிவுடை யோன் புகழ்
தழை பொறுக்கும் சடை முடித் தந்தையே. 10

1554 மூடனேன் பிழை முற்றும் பொறுத்துனைப்
பாடவே அருட் பாங்கெனக் கீதியேல்
நாட வேறுமனை யிடை நண்ணிநான்
வாட வேண்டுவ தென்னை எம் வள்ளலே. 11

1555 மின்னொப் பாகி விளங்கும் விரிசடை
என்னப்பா எனக் கின்னருள் ஈந்துநின்
பொன்னொப் பாந்துணைப் பூம்பதம் போற்றியே
உன்னப் பாங்கின் உயர்நெறி உய்க்கவே. 12

திருச்சிற்றம்பலம்

77. ஆனந்தப் பதிகம்

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1556 குடிகொள் மலஞ்சூழ் நவவாயிற் கூட்டைக் காத்துக் குணமிலியாய்ப்
படிகொள் நடையில் பரதவிக்கும் பாவி யேனைப் பரிந்தருளிப்
பொடிகொள் வெள்ளைப் பூச்சணிந்த பொன்னே உன்னைப் போற்றி ஒற்றிக்
கடிகொள் நகர்க்கு வரச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. 1

1557 சாதல் பிறத்தல் எனும்கடலில் தாழ்ந்து கரைகா ணாதழுந்தி
ஈதல் இரக்கம் எள்அளவும் இல்லா தலையும் என்றனைநீ
ஓதல் அறிவித் துணர்வறிவித் தொற்றி யூர்ச்சென் றுனைப்பாடக்
காதல் அறிவித் தாண்டதற்கோர் கைம்மா றறியேன் கடையேனே.

1558 அற்ப அளவும் நிச்சயிக்கல் ஆகா உடம்பை அருமைசெய்து
நிற்ப தலதுன் பொன் அடியை நினையாக் கொடிய நீலன்எனைச்
சற்ப அணியாய் நின்றன் ஒற்றித் தலத்தைச் சார்ந்து நின்புகழைக்
கற்ப அருள்செய் தனைஅதற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 3

1559 உண்டு வறிய ஒதிபோல உடம்பை வளர்த்தூன் ஊதியமே
கொண்டு காக்கைக் கிரையாகக் கொடுக்க நினைக்கும் கொடியன்எனை
விண்டு அறியா நின்புகழை விரும்பி ஒற்றி யூரில் நினைக்
கண்டு வணங்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 4

1560 நாய்க்கும் எனக்கும் ஒப்பாரி நாடி அதற்கு விருந்திடுவான்
வாய்க்கும் ஒதிபோல் பொய்உடலை வளர்க்க நினைக்கும் வஞ்சன்எனை
ஆய்க்கும் இனிய அப்பாஉன் ஒற்றி யூரை அடைந்திருளைக்
காய்க்கும் வண்ணம் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 5

1561 குருதி நிறைந்த குறுங்குடத்தைக் கொண்டோன் வழியில் சென்றிடவா
யெருதின் மனத்தேன் சுமந்துநலம் இழந்து திரியும் எய்ப்பொழிய
வருதி எனவே வழிஅருளி ஒற்றி யூர்க்கு வந்துன்னைக்
கருதி வணங்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 6

1562 பாவம் எனும்ஓர் பெருஞ்சரக்குப் பையை எடுத்துப் பண்பறியாக்
கோவம் எனும்ஓர் குரங்காட்டும் கொடியேன் தன்னைப் பொருட்படுத்தித்
தேவர் அமுதே சிவனே நின் திருத்தாள் ஏத்த ஒற்றி எனும்
காவல் நகரம் வரச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. 7

1563 பொள்ளற் குடத்தின் புலால்உடம்பைப் போற்றி வளர்த்துப் புலன்இழந்தே
துள்ளற் கெழுந்த மனத்துடனே துள்ளி அலைந்த துட்டன்எனை
உள்ளற் கறிவு தந்துன்றன் ஒற்றி யூர்க்கு வந்துவினைக்
கள்ளப் பகைநீக் கிடச்செய்தாய் கைம்மா றறியேன் கடையேனே. 8

1564 கூட்டும் எலும்பால் தசையதனால் கோலும் பொல்லாக் கூரைதனை
நாட்டும் பரம வீடெனவே நண்ணி மகிழ்ந்த நாயேனை
ஊட்டுந் தாய்போல் உவந்துன்றன் ஒற்றி யூர்வந் துறநினைவு
காட்டுங் கருணை செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 9

1565 ஊணத் துயர்ந்த பழுமரம்போல் ஒதிபோல் துன்பைத் தாங்குகின்ற
தூணத் தலம்போல் சோரிமிகும் தோலை வளர்த்த சுணங்கன் எனை
மாணப் பரிவால் அருட்சிந்தா மணியே உன்றன் ஒற்றிநகர்
காணப் பணித்த அருளினுக்கோர் கைம்மா றறியேன் கடையேனே. 10

1566 புண்ணும் வழும்பும் புலால்நீரும் புழுவும் பொதிந்த பொதிபோல
நண்ணுங் கொடிய நடைமனையை நான்என் றுளறும் நாயேனை 11
உண்ணும் அமுதே நீஅமர்ந்த ஒற்றி யூர்கண் டென்மனமும்
கண்ணுங் களிக்கச் செய்ததற்கோர் கைம்மா றறியேன் கடையேனே.

78. திருவண்ணப் பதிகம்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1567 திருவண்ண நதியும்வளை ஒருவண்ண மதியும்வளர்
செவ்வண்ணம் நண்ணுசடையும்
தெருள்வண்ண நுதல்விழியும் அருள்வண்ண வதனமும்
திகழ்வண்ண வெண்ணகையும் ஓர்
[1]மருவண்ண மணிகுவளை மலர்வண்ண மிடறும்மலை
மகள்வண்ண மருவும் இடமும்
மன்வண்ண மிகுதுணைப் பொன்வண்ண அடிமலரும்
மாணிக்க வண்ணவடிவும்
[2]இருவண்ண வெனதுமன தொருவண்ண மாகியே
இடைவிடா தேத்தும் வண்ணம்
எவ்வண்ணம் அவ்வண்ணம் இவ்வண்ணம் என்றிவண்
இயம்பல்உன் கருணைவண்ணம்
கருவண்ணம் அறஉளம் பெருவண்ணம் உறநின்று
கடல்வண்ணன் எண்ணும் அமுதே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 1

1568 எண்ணுறு விருப்பாதி வல்விலங் கினமெலாம்
இடைவிடா துழலஒளிஓர்
எள்அளவும் இன்றி அஞ்ஞான இருள் மூடிட
இருண்டுயிர் மருண்டுமாழ்க
நண்ணுமன மாயையாம் காட்டைக் கடந்துநின்
ஞான அருள் நாட்டை அடையும்
நாள்எந்த நாள் அந்தநாள் இந்தநாள் என்று
நாயினேற் கருள் செய் கண்டாய்
விண்ணுறுசு டர்க்கெலாம் சுடர்அளித் தொருபெரு
வெளிக்குள்வளர் கின்றசுடரே
வித்தொன்றும் இன்றியே விளைவெலாம் தருகின்ற
விஞ்ஞான மழைசெய்முகிலே
கண்ணுறுநு தற்பெருங் கடவுளே மன்றினில்
கருணைநடம் இடுதெய்வமே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 2

1569 பூதநெறி யாதிவரு நாதநெறி வரையுமாப்
புகலுமூ வுலகுநீத்துப்
புரையுற்ற மூடம்எனும் இருள்நிலம் அகன்று மேல்
போய் அருள்ஒளித் துணையினால்
வேதநெறி புகல்சகல கேவலம் இலாதபர
வெளிகண்டு கொண்டு கண்ட
விளைவின்றி நான் இன்றி வெளி இன்றி வெளியாய்
விளங்குநாள் என்றருளுவாய்

1. மருள்வண்ண ச.மு.க பதிப்பு, 1932 பதிப்பு 2. இருவண்ண வெனதுமன - முதற்பதிப்பு 1885, ச.மு.க 1924 பதிப்பு

வாதநெறி நடவாத போதநெறி யாளர்நிறை
மதிநெறி உலாவும் மதியே
மணிமிடற் றரசேஎம் வாழ்வின் முதலே அரு
மருந்தேபெருந் தெய்வமே
காதநெறி மணம்வீசு கனிதருபொழிற் குலவு
கடிமதிற் றில்லை நகர்வாழ்
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 3

1570 கூர்கொண்ட வாள்கொண்டு கொலை கொண்ட வேட்டுவக்
குடிகொண்ட சேரிநடுவில்
குவைகொண்ட ஒருசெல்வன் அருமை கொண்டீன்றிடு
குலங்கொண்ட சிறுவன்ஒருவன்
நேர்கொண்டு சென்றவர்கள் கைகொண்டுறக் கண்கள்
நீர்கொண்டு வாடல் எனவே
நிலைகொண்ட நீஅருட் கலைகொண் டளித்தயான்
நெறிகொண்ட குறிதவறியே
போர்கொண்ட பொறிமுதல் புலைகொண்ட தத்துவப்
புரைகொண்ட மறவர் குடியாம்
பொய்கொண்ட மெய்என்னும் மைகொண்ட சேரியில்
போந்துநின்றவர் அலைக்கக்
கார்கொண்ட இடிஒலிக் கண்கொண்ட பார்ப்பில்
கலங்கினேன் அருள்புரிகுவாய்
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 4

1571 படமெடுத் தாடுமொரு பாம்பாக என்மனம்
பாம்பாட்டி யாகமாயைப்
பார்த்துக் களித்துதவு பரிசுடையர் விடயம்
படர்ந்தபிர பஞ்சமாகத்
திடமடுத் துறுபாம்பின் ஆட்டமது கண்டஞ்சு
சிறுவன்யா னாகநின்றேன்
தீரத்து ரந்தந்த அச்சந்த விர்த்திடு
திறத்தன் நீ ஆகல் வேண்டும்
விடமடுத் தணிகொண்ட மணிகண்ட னேவிமல
விஞ்ஞான மாம்அகண்ட
வீடளித் தருள் கருணை வெற்பனே அற்புத
விராட்டுருவ வேதார்த்தனே
கடமடுத் திடுகளிற் றுரிகொண்ட ணிந்தமெய்க்
கடவுளே சடைகொள் அரசே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத 5
கமலகுஞ் சிதபாதனே.

1572 எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும்
எய்துக பிறப்பில் இனிநான்
எய்தாமை எய்துகினும் எய்திடுக இருமையினும்
இன்பம்எய் தினும் எய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும்வருக
வறுமைவரு கினும்வருக மதிவரினும் வருகஅவ
மதிவரினும் வருக உயர்வோடு
இழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகஅல
தெதுபோ கினும்போகநின்
இணையடிகள் மறவாத மனம்ஒன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும் அரசே
கழிவகைப் பவரோக நீக்கும்நல்லருள் எனும்
கதிமருந் துதவுநிதியே
கனகஅம்பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 6

1573 பற்றுவது பந்தம்அப் பற்றறுதல் வீடஃது
பரமவே தார்த்தம் எனவே
பண்புளோர் நண்பினொடு பகருவது கேட்டும்என்
பாவிமனம் விடயநடையே
எற்றுவது செய்யாமல் எழுவதொடு விழுவதும்
இறங்குவதும் ஏறுவதும்வீண்
எண்ணுவதும் நண்ணுவதும் இப்புவன போகங்கள்
யாவினும் சென்றுசென்றே
சுற்றுவதும் ஆகிஓர் சற்றுமறி வில்லாது
சுழல்கின்ற தென்செய்குவேன்
தூயநின் திருவருளின் அன்றி இவ்வேழை அச்
சுழல்மனம் அடக்கவருமோ
கற்றுவழு வற்றவர் கருத்தமர் கருத்தனே
கண்ணுதற் கடவுள்மணியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 7

1574 எளியனேன் சிறியன்யான் செய்பிழைகள் சிறியவோ
எழுகடலி னும்பெரியவே
என்செய்கேன் என்செய்கேன் இனிஆயினும் செயா
தெந்தைநினை ஏத்தஎன்றால்
வளியின்வான் சுழல்கின்ற பஞ்சாக நெஞ்சால்
மயங்குகின் றேன் அடியனேன்
மனம்எனது வசமாக நினதுவசம் நானாக
வந்தறிவு தந்தருளுவாய்

ஒளியின்ஒளி யேநாத வெளியின் வெளியேவிடய
உருவின்உருவே உருவினாம்
உயிரின் உயிரே உயர்கொள் உணர்வின் உணர்வே உணர்வின்
உறவினுற வேஎம் இறையே
களியின் நிறைவே அளிகொள் கருணைநிதி யேமணிகொள்
கண்டஎண் தோள் கடவுளே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 8

1575 சந்ததம் எனக்கு மகிழ் தந்தை நீஉண்டுநின்
தன்னிடத் தேமவல்லி
தாயுண்டு நின்அடியர் என்னும்நல் தமர்உண்டு
சாந்தம் எனும் நேயர் உண்டு
புந்திகொள் நிராசையாம் மனைவி உண்டறிவெனும்
புதல்வன் உண்டிரவு பகலும்
போனவிட முண்டருட் பொருளுமுண் டானந்த
போகபோக் கியமும் உண்டு
வந்தனைசெய் நீறெனும் கவசம் உண்டக்கமா
மணியும் உண்டஞ் செழுத்தாம்
மந்திரப் படைஉண்டு சிவகதி எனும் பெரிய
வாழ்வுண்டு தாழ்வும் உண்டோ
கந்தமிகு கொன்றையொடு கங்கைவளர் செஞ்சடைக்
கடவுளே கருணை மலையே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத 9
கமலகுஞ் சிதபாதனே.

1576 நான்முகனும் மாலும் அடிமுடியும்அறி வரியபர
நாதமிசை ஓங்குமலையே
ஞானமய மான ஒரு வானநடு ஆனந்த
நடனமிடு கின்றஒளியே
மான்முகம்வி டாதுழலும் எனையும் உயர் நெறிமருவ
வைத்தவண் வளர்த்தபதியே
மறைமுடிவில் நிறைபரப் பிரமமே ஆகம
மதிக்கும் முடிவுற்ற சிவமே
ஊன்முகச் செயல்விடுத் துண்முகப் பார்வையின்
உறுந்தவர் பெறுஞ் செல்வமே
ஒழியாத உவகையே அழியாத இன்பமே
ஒன்றிரண் டற்றநிலையே
கான்முகக் கடகளிற்றுரி கொண்ட கடவுளே
கண்கொண்ட நுதல் அண்ணலே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே. 10

79. போற்றித் திருப்பதிகம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1577 அருள் தரல் வேண்டும் போற்றிஎன் அரசே
அடியனேன் மனத்தகத் தெழுந்த
இருள்கெடல் வேண்டும் போற்றி எந்தாயே
ஏழையேன் நின்றனைப் பாடும்
தெருள்உறல் வேண்டும் போற்றி என்அறிவே
சிந்தைதைநந் துலகிடை மயங்கும்
மருள் அறல் வேண்டும் போற்றி என்குருவே
மதிநதி வளர்சடை மணியே. 1

1578 மணிமிடற் றமுதே போற்றி என் தன்னை
வாழ்விக்க வேண்டுவல் போற்றி
அணிமதி முடியோய் போற்றி இவ்வேழைக்
கருளமு தருளுக போற்றி
பணிஅணி புயத்தோய் போற்றி நின்சீரே
பாடுதல் வேண்டும்நான் போற்றி
தணிவில்பே ரொளியே போற்றி என்தன்னைத்
தாங்குக போற்றி நின்பதமே. 2

1579 நின்பதம் பாடல் வேண்டும் நான் போற்றி
நீறுபூத் தொளிர்குளிர் நெருப்பே
நின்புகழ் கேட்டல் வேண்டும் நான்போற்றி
நெற்றியங் கண்கொளும் நிறைவே
நின்வச மாதல் வேண்டும்நான் போற்றி
நெடியமால் புகழ்தனி நிலையே
நின்பணி புரிதல் வேண்டும் நான்போற்றி
நெடுஞ்சடை முடித்தயா நிதியே. 3

1580 நிதிதரு நிறைவே போற்றிஎன் உயிர்க்கோர்
நெறிதரு நிமலமே போற்றி
மதிமுடிக் கனியே போற்றி என் தன்னை
வாழ்வித்த வள்ளலே போற்றி
விதிமுதற் கிறையே போற்றி மெய்ஞ்ஞான
வியன்நெறி விளக்கமே போற்றி
பதிபசு பதியே போற்றி நின்பாதம்
பாடஎற் கருளுக போற்றி. 4

1581 போற்றிஎன் உயிர்க்கோர் இன்பமே அன்பர்
புரிதவக் காட்சியே போற்றி
போற்றிஎன் அன்பாம் தெய்வமே சைவம்
புகல்சிவ போகமே போற்றி

போற்றிஎன் பெரிதாஞ் செல்வமே கருணைப்
பூரண வெள்ளமே போற்றி
போற்றிஎன் வாழ்வுக் கொருபெரு முதலே
போற்றிநின் சேவடிப் போதே. 5

1582 போத ஆனந்த போகமே என்னைப்
புறம்பிட நினைத்திடேல் போற்றி
சீதவான் பிறைசேர் செஞ்சடை யாய்என்
சிறுமைதீர்த் தருளுக போற்றி
பேதம்ஒன் றில்லா அருட்கடலே என்
பிழைஎலாம் பொறுத்தருள் போற்றி
வேதமெய்ப் பொருளே போற்றி நின் அல்லால்
வேறெனக் கிலைஅருள் போற்றி. 6

1583 போற்றுவார் உள்ளம் புகுந்தொளிர் ஒளியே
போற்றிநின் பூம்பதம் போற்றி
ஆற்றுவார் சடைஎன் அப்பனே போற்றி
அமலநின் அடிமலர் போற்றி
ஏற்றுவார் கொடிகொள் எந்தையே போற்றி
இறைவநின் இருங்கழல் போற்றி
சாற்றுமா றரிய பெருமையே போற்றி
தலைவநின் தாட்டுணை போற்றி. 7

1584 துணைமுலை மடந்தை எம்பெரு மாட்டி
துணைவநின் துணையடி போற்றி
புணைஎன இடரின் கடலினின் றேற்றும்
புனிதநின் பொன்னடி போற்றி
இணையில்பே ரின்ப அமுதருள் கருணை
இறைவநின் இணையடி போற்றி
கணைஎனக் கண்ணன் தனைக்கொளும் ஒருமுக்
கண்ணநின் கழலடி போற்றி. 8

1585 அடியனேன் பிழைகள் பொறுத்தருள் போற்றி
அயல்எனை விட்டிடேல் போற்றி
கொடியனேற் கின்பந் தந்தருள் போற்றி
குணப்பெருங் குன்றமே போற்றி
நெடியஎன் துன்பந் துடைத்தருள் போற்றி
நினைஅலால் பிறிதிலேன் போற்றி
படிமிசைப் பிறர்பால் செலுத்திடேல் எங்கள்
பரமநின் அடைக்கலம் நானே. 9

1586 நான் செயும் பிழைகள் பலவும் நீ பொறுத்து
நலந்தரல் வேண்டுவன் போற்றி
ஏன்செய்தாய் என்பார் இல்லைமற் றெனக்குன்
இன்னருள் நோக்கஞ்செய் போற்றி
ஊன்செய்நா வால்உன் ஐந்தெழுத் தெளியேன்
ஓதநீ உவந்தருள் போற்றி
மான்செயும் நெடுங்கண் மலைமகள் இடங்கொள்
வள்ளலே போற்றிநின் அருளே. 10

80. விண்ணப்பப் பதிகம்

திருவாரூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1587 தண்ணார் மதிபோல் சீதளவெண் தரளக் கவிகைத் தனிநிழற்கீழ்க்
கண்ணார் செல்வச் செருக்கினர் தம் களிப்பில் சிறிய கடைநாயேன்
பெண்ணார் பாகப் பெருந்தகைதன் பெரிய கருணைக் குரியம்என்றே
எண்ணா நின்று களிக்கின்றேன் ஆரூர் எந்தாய் இரங்காயே. 1

1588 இரங்கா திருந்தால் சிறியேனை யாரே மதிப்பார் இழிந்தமனக்
குரங்கால் அலைப்புண் டலைகின்ற கொடிய பாவி இவன்என்றே
உரங்கா தலித்தோர் சிரிப்பார்நான் உலகத் துயரம் நடிக்கின்ற
அரங்காக் கிடப்பேன் என்செய்வேன் ஆரூர் அமர்ந்த அருமணியே. 2

1589 மணியார் கண்டத் தெண்டோள்செவ் வண்ணப் பவள மாமலையே
அணியால் விளங்கும் திருஆரூர் ஆரா அமுதே அடிச்சிறியேன்
தணியா உலகச் சழக்கிடையே தளர்ந்து கிடந்து தவிக்கின்றேன்
திணியார் முருட்டுக் கடைமனத்தேன் செய்வ தொன்றும் தெரியேனே. 3

1590 தெரியத் தெரியும் தெரிவுடையார் சிவாநு பவத்தில் சிறக்கின்றார்
பிரியப் பிரியும் பெரும்பாவி அடியேன் பிழையில் பிழைக்கின்றேன்
துரியப் பொருளே அணிஆரூர்ச் சோதி மணிநீ தூயஅருள்
புரியப் பெறுவேன் எனில்அவர்போல் யானும் சுகத்திற் பொலிவேனே. 4

1591 பொலிவேன் கருணை புரிந்தாயேல் போதா னந்தக் கடல்ஆடி
மலிவேன் இன்ப மயமாவேன் ஆரூர் மணிநீ வழங்காயேல்
மெலிவேன் துன்பக் கடல்மூழ்கி மேவி எடுப்பார் இல்லாமல்
நலிவேன் அந்தோ அந்தோநின் நல்ல கருணைக் கழகன்றே. 5

1592 கருணைக் கடலே திருஆரூர்க் கடவுட் சுடரே நின்னுடைய
அருணக் கமல மலரடிக்கே அடிமை விழைந்தேன் அருளாயேல்
வருணக் கொலைமா பாதகனாம் மறையோன் தனக்கு மகிழ்ந்தன்று
தருணக் கருணை அளித்தபுகழ் என்னாம் இந்நாள் சாற்றுகவே. 6

1593 இந்நாள் அடியேன் பிழைத்தபிழை எண்ணி இரங்காய் எனில்அந்தோ
அந்நாள் அடிமை கொண்டனையே பிழையா தொன்றும் அறிந்திலையோ
பொன்னார் கருணைக் கடல் இன்று புதிதோ பிறர்பால் போயிற்றோ
என்நா யகனே திருஆரூர் எந்தாய் உள்ளம் இரங்கிலையே. 7

1594 உள்ளக் கவலை ஒருசிறிதும் ஒருநா ளேனும் ஒழிந்திடவும்
வெள்ளக் கருணை இறையேனும் மேவி யிடவும் பெற்றறியேன்
கள்ளக் குரங்காய் உழல்கின்ற மனத்தேன் எனினும் கடையேனைத்
தள்ளத் தகுமோ திருஆரூர் எந்தாய் எந்தாய் தமியேனே.

1595 எந்தாய் ஒருநாள் அருள்வடிவின் எளியேன் கண்டு களிப்படைய
வந்தாய் அந்தோ கடைநாயேன் மறந்து விடுத்தேன் மதிகெட்டேன்
செந்தா மரைத்தாள் இணை அன்றே சிக்கென் றிறுகப் பிடித்தேனேல்
இந்தார் சடையாய் திருஆரூர் இறைவா துயரற் றிருப்பேனே. 9

1596 இருப்பு மனத்துக் கடைநாயேன் என்செய் வேன்நின் திருவருளாம்
பொருப்பில் அமர்ந்தார் அடியர்எலாம் அந்தோ உலகப் புலைஒழுக்காம்
திருப்பில் சுழன்று நான் ஒருவன் திகைக்கின் றேன்ஓர் துணைகாணேன்
விருப்பில் கருணை புரிவாயோ ஆரூர் தண்ணார் வியன் அமுதே. 10

திருச்சிற்றம்பலம்

81. தரிசனப் பதிகம்

கோயில்
அறுசீர்க்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1597 திருவார் பொன்னம் பலநடுவே தெள்ளார் அமுதத் திரள்அனைய
உருவார் அறிவா னந்தநடம் உடையார் அடியார்க் குவகைநிலை
தருவார் அவர்தம் திருமுகத்தே ததும்பும் இளவெண் ணகைகண்டேன்
இருவா தனைஅற் றந்தோநான் இன்னும் ஒருகால் காண்பேனோ. 1

1598 பொன்நா யகனும் புரந்தரனும் பூவாழ் பவனும் புகழ்ந்தேத்த
மின்னார் பொன்னம் பலநடுவே விளங்கும் கருணை விழிவழங்கும்
அன்னார் அறிவா னந்தநடம் ஆடும் கழல்கண் டகங்குளிர்ந்தேன்
என்நா யகனார் அவர்கழலை இன்னும் ஒருகால் காண்பேனோ. 2

1599 தாயிற் பெரிய கருணையினார் தலைமா லையினார் தாழ்சடையார்
வாயிற் கினிய புகழுடைய வள்ளல் அவர்தந் திருஅழகைக்
கோயிற் கருகே சென்றுமனம் குளிரக் கண்டேன் பிரிவுற்றேன்
ஈயில் சிறியேன் அவர்அழகை இன்னும் ஒருகால் காண்பேனோ. 3

1600 புன்கண் அகற்றும் மெய்யடியார் போற்றும் பொன்னம் பலநடுவே
வன்கண் அறியார் திருநடஞ்செய் வரதர் அமுதத் திருமுகத்தை
முன்கண் உலகில் சிறியேன்செய் முழுமா தவத்தால் கண்டேன்நான்
என்கண் அனையார் அவர்முகத்தை இன்னும் ஒருகால் காண்பேனோ. 4

1601 அன்புற் றடியார் தொழுதேத்த அணியார் மணிப்பொன் அம்பலத்தே
வன்புற் றழியாப் பெருங்கருணை மலையார் தலையார் மாலையினார்
மன்புற் றரவார் கச்சிடையின் வயங்க நடஞ்செய் வதுகண்டேன்
இன்புற் றடியேன் அவர்நடத்தை இன்னும் ஒருகால் காண்பேனோ. 5

1602 இம்மா நிலத்தில் சிவபதமீ தென்னும் பொன்னம் பலநடுவே
அம்மால் அறியா அடிகள்அடி அசைய நடஞ்செய் வதுகண்டேன்
எம்மால் அறியப் படுவதல எனஎன் றுரைப்பேன் ஏழையன்யான்
எம்மான் அவர்தந் திருநடத்தை இன்னும் ஒருகால் காண்பேனோ. 6

1. எழுசீர். தொ. வே. 1, 2 அறுசீர். ச.மு.க., ஆ. பா.

1603 சிறியேன் தவமோ எனைஈன்றாள் செய்த தவமோ யான் அறியேன்
மறியேர் கரத்தார் அம்பலத்தே வாழும் சிவனார் தமைக்கண்டேன்
பிறியேன் எனினும் பிரிந்தேன்நான் பேயேன் அந்தப் பிரிவினைக்கீழ்
எறியேன் அந்தோ அவர்தம்மை இன்னும் ஒருகால் காண்பேனோ. 7

1604 அருளே வடிவாய் அம்பலத்தே ஆடும் பெருமான் அடிகள்தமைத்
தெருளே வடிவாம் அடியவர்போல் சிறியேன் கண்டேன் சீர்உற்றேன்
மருளே வடிவேன் ஆதலினால் மறந்தே பிரிந்தே மதிகெட்டேன்
இருளோர் மனத்தேன் அவர் தமைநான் இன்னும் ஒருகால் காண்பேனோ. 8

1605 அன்னோ திருஅம் பலத்தேஎம் ஐயர் உருக்கண் டேன்அதுதான்
பொன்னோ பவளப் பொருப்பதுவோ புதுமா ணிக்க மணித்திரளோ
மின்னோ விளக்கோ விரிசுடரோ மேலை ஒளியோ என் உரைப்பேன்
என்னோ அவர்தந் திருஉருவை இன்னும் ஒருகால் காண்பேனோ. 9

1606 பொன்என் றுரைக்கும் அம்பலத்தே புனித னார்தம் அழகியலை
உன்என் றுரைப்பேன் என்னேஎன் உள்ளம் சிறிதும் உணர்ந்ததிலை
மின்என் றுரைக்கும் படிமூன்று விளக்கும் மழுங்கும் எனில்அடியேன்
என்என் றுரைப்பேன் அவர்அழகை இன்னும் ஒருகால் காண்பேனோ. 10

திருச்சிற்றம்பலம்

82. அபராத விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1607 உலகம் பரவும் பொருளேஎன் உறவே என்றன் உயிர்க்குயிரே
இலகம் பரத்தே பரம்பரமாய் இன்ப நடஞ்செய் எம்இறையே
கலகம் பரவும் மனத்தேனைக் கைவிட்டிடநீ கருதுதியோ
திலகம் பரவும் நுதற்பாகன் என்ப தருளின் திறத்தன்றே. 1

1608 அன்றோர் பொருளாய் அடியேனை ஆட்கொண்டருளி அறிவளித்தாய்
இன்றோ சிறியேன் பிழைகருதி இரங்கா தகற்ற எண்ணுதியோ
குன்றோர் அனைய குறைசெயினும் கொண்டு குலம்பே சுதல்எந்தாய்
நன்றோ கருணைப் பெருங்கடலே ஆளாய் இந்த நாயினையே. 2

1609 நாய்க்குங் கடையேன் பிழை அனைத்தும் நாடில் தவத்தால் நல்கியநல்
தாய்க்கும் கோபம் உறும்என்னில் யாரேயென்பால் சலியாதார்
வாய்க்கும் கருணைக் கடல் உடையாய் உன்பால் அடுத்தேன் வலிந்தெளிய
பேய்க்கும் தயவு புரிகின்றோய் ஆள வேண்டும் பேதையையே. 3

1610 பேதைப் பருவத் தெனைவலியப் பிடித்தாட் கொண்ட பெருமானே
போதைக் கழிப்பான் வீண்புரியும் புலையேன் பிழையைப் பொறுக்கிலையேல்
வாதைப் படும்என் உயிரை உன்றன் மலர்த்தாள் முன்னர் மடிவித்தே
ஓதைக் கடல்சூழ் உலகத்தே பழிசூழ் விப்பேன் உரைத்தேனே. 4

1611 உரைத்தார் சிலர்சின்னாள் கழிய உறுவேம் என்ன உரைத்தவரே
நரைத்தார் இறந்தார் அவர்தம்மை நான் கண்டிருந்தும் நாணாமே
விரைத்தாள் மலரைப் பெறலாம் என்றெண்ணி வீணே இளைக்கின்றேன்
திரைத்தாழ் கடலிற் பெரும் பிழையை செய்தேன் என்ன செய்வேனே. 5

1612 செய்வேன் தீமை நலம்ஒன்றும் தெரியேன் தெரிந்து தெளிந்தோரை
வைவேன் அன்றி வாழ்த்தேன் என்வண்ணம் இந்த வண்ணம் எனில்
உய்வேன் என்ப தெவ்வாறென் உடையாய் உய்வேன் உய்வித்தால்
நைவேன் அலதிங் கென்செய்வேன் அந்தோ எண்ணி நலிவேனே. 6

1613 எண்ணி நலிவேன் நின்பாதம் எந்நாள் அடைவோம் எனஎன்பால்
நண்ணி நலிவைத் தவிராயேல் என்செய் திடுவேன் நாயகனே
கண்ணி நலியப் படும்பறவைக் கால்போல் மனக்கால் கட்டுண்ணப்
பண்ணி நலஞ்சேர் திருக்கூட்டம் புகுத எனினும் பரிந்தருளே. 7

1614 பரியும் மனத்தால் கருணை நடம் பரவுந் தொண்டர் பதப்பணியே
புரியும் இனத்தா ரொடுங்கூடிப் புனிதனாக வேணடும் எனத்
திரியும் அடிமைச் சிறியேனுக் கிரங்கா திருந்தால் சின்னாட்பின்
எரியும் கொடுவாய் நரகத்துக் கென்செய் வேன்என் செய்வேனே. 8

1615 என்செய் திடுவேன் புலைநாயேன் இயற்றும் பிழைகள் எல்லாம்நின்
பொன்செய் மலர்த்தாள் துணைஅந்தோ பொறுத்துக் கருணை புரியாதேல்
புன்செய் விளவிப் பயனிலியாய்ப் புறத்திற் கிடத்தி எனஅடியார்
வன்செய் உரையில் சிரிப்பார் மற்றது கண்டெங்ஙன் வாழ்வேனே. 9

1616 வாழா மனத்தின் வழிசென்று வாளா நாளைக் கழிக்கின்ற
பாழாம் உலகச் சிறுநடையில் பாவி யேனைப் பதிவித்தாய்
ஊழாம் எனில்எம் பெருமானே இன்னும் வினையால் ஒதிஅனையேன்
ஏழாம் நரகுக் காளாவேன் அல்லால் புகல்என் எளியேற்கே. 10

1617 எளியேன் கருணைத் திருநடஞ்செய் இணைத்தாள் மலர்கண் டிதயமெலாம்
களியேன் கருங்கற் பாறைஎனக் கிடக்கின்றேன் இக் கடையேனை
அளியே பெருக ஆளுதியோ ஆள்கி லாயோ யாதொன்றும்
தெளியேன் அந்தோ அந்தோ என்செய்வேன் விலங்கிற் சிறியேனே. 11

1618 சிறியேன் பிழையைத் திருவுளத்தே தேர்ந்திங் கென்னைச் சீறுதியோ
எறியேம் எனக்கொண்டிரங்குதியோ இவ்வா றவ்வா றெனஒன்றும்
அறியேன் அவலக் கடல்அழுந்தி அந்தோ அழுங்கி அயர்கின்றேன்
பிறியேன் என்னைப் பிரிக்கினும் பின் துணையும் காணேன் பெருமானே. 12

1619 காணேன் நினது திருவருளைக் கண்டார் தமது கழல்தலைமேல்
பூணேன் உலகச் சிறுநடையில் போந்து பொய்யே புகன்றந்தோ
வீணே சுழன்று மெலிகின்றேன் என்னே இன்னல் மிகச்சுமக்கும்
தூணே எனஇங் கெனைவிதித்தாய் எந்தாய் யாது சூழ்வேனே.

1620 சூழ்வேன் நினது கருணைநடம் சூழும் பெரியார் தமைச்சூழ்ந்து
வாழ்வேன் எளியேன் குறிப்பிந்த வண்ணம் எனது மனக்குரங்கோ
தாழ்வேன் நினையும் தாழ்விப்பேன் அவலக்கடலில் சலியாமே
வீழ்வேன் என்றால் எம்பெருமான் இதற்கென் செய்கேன் வினையேனே. 14

1621 வினையே பெருக்கிக் கடைநாயேன் விடயச் செருக்கால் மிகநீண்ட
பனையே எனநின் றுலர்கின்றேன் பாவி யேனுக் கருளுதியோ
நினையே நினையாப் பிழைகருதி நெகிழ விடவே நினைதியோ
அனையே அனையாய் திருக்குறிப்பை அறியேன் ஈதென் றடியேனே. 15

1622 அடியேன் முடுகிச் செயும்பிழைகள் அனந்தம் அவற்றை அந்தோஇக்
கொடியேன் நினைக்குந் தொறும் உள்ளம் குமைந்து நடுங்கிக் குலைகின்றேன்
செடியேன் மனமோ வினையோநின் செயலோ செய்கை தெரியேன் வெண்
பொடியே திகழும் வடிவுடையாய் யாது புரிவேன் புலையேனே. 16

1623 புலையே புரியும் மனம்போன போக்கே அல்லால் புண்ணியநல்
நிலையே அறியேன் சிறியேனுக் கருளல் அழகோ நிறைந்தகுண
மலையே மணியே மருந்தே என்வாழ்வே எல்லாம் வல்லோனே
கலையே கருதும் கழலுடையாய் அருளா மையும்நின் கடன்அன்றே. 17

1624 கடந்தாழ் கயம்போல் செருக்கிமயற் கடலில் அழுந்திக் கடுவினையேன்
மடந்தாழ் மனத்தோ டுலைகின்றேன் கரைகண் டேறும் வகைஅறியேன்
தொடர்ந்தார் எடுப்பார் எனையெடுக்கும் துணைநின் மலர்த்தாள் துணைகண்டாய்
அடர்ந்தார் தமக்கும் அருள்கின்றோய் ஆணை ஆணை அடியேனே. 18

1625 அடியார் இன்பம் அடைகின்றார் அடியேன் ஒருவன் அயர்கின்றேன்
படியார் பலரும் பலபேசிச் சிரியா நின்றார் பரந்திரவும்
விடியா நின்ற தென்புரிவேன் இன்னுங் கருணை விளைத்திலையே
கொடியார் பிழையும் குணமாகக் கொண்டு மகிழும் குணக்குன்றே. 19

1626 குன்றா நிலைநின்றருள் அடைந்தார் அன்பர் எல்லாம் கொடியேன்நான்
நன்றாம் நெறிசென் றறியாதே மனஞ்செல் வழியே நடக்கின்றேன்
பொன்றா மணியே அவர்க்கருளி என்னை விடுத்தல் புகழன்றே
என்றால் எனக்கே நகைதோன்றும் எந்தாய் உளத்துக் கென்னாமே. 20

1627 என் ஆருயிருக்குயிர் அனையாய் என்னைப் பொருளாய் எண்ணிமகிழ்ந்
தந்நாள் அடிமை கொண்டளித்தாய் யார்க்கோ வந்த விருந்தெனவே
இந்நாள் இரங்கா திருக்கின்றாய் எங்கே புகுவேன் என்புரிவேன்
நின்னால் அன்றிப் பிறர் தம்மால் வேண்டேன் ஒன்றும் நின்மலனே. 21

1628 நின்பால் அடைந்தார் அன்பாலே அடியார் எல்லாம் நெடுவினையேன்
வன்பால் மனப்பேய் தன்பாலே வருந்திச் சுழன்று மயர்கின்றேன் 22
தென்பால் நோக்கி இன்பநடம் செய்யும் இறைவா சிறுவனுக்கா
முன்பால் அமுதக் கடல்அளித்த முதல்வா என்னை முன்னுதியே.

83. கலி விண்ணப்பம்

கட்டளைக் கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

1629 செறியாத நெஞ்சக வஞ்சக னேன்இச் சிறுதலத்தே
அறியா தறிந்தவன் போற்சில செய்திடல் ஐயநின்தாள்
குறியா தரித்தல் தாணைமற் றில்லைஎங் கொற்றவனே
முறியா தருள்செய்தி யோதெரி யேன்எந்தை முன்னியதே. 1

1630 தீதொன்று மேகண் டறிந்ததல்லால் பலன் சேரநலம்
யாதொன்றும் நான் கண்டறியேன் அறிந்தவன் என்ன இங்கே
போதொன்று போக்குகின்றேன் பிழை யாவும் பொறுத்தருள்வாய்
மாதொன்று பாகத் துணை அன்றி நற்றுணை மற்றிலையே. 2

1631 எல்லாம் தெரிந்த இறைவாநின் தண்ணருள் எய்துகிலாப்
பொல்லாத பாவிப் புலையேன் பிழையைப் பொறுத்தருள்வாய்
கல்லா மனக்கடை யாலே கடைவைத்துக் கண்டதுதுன்
பல்லால் அணுத்துணையும் அறியேன் இன்பம் ஆவதுவே. 3

1632 மண்ணுடை யாரிடை வாளா மனஞ்செல வைத்ததலால்
எண்ணுடை யாரிடை எய்திநின் தாண்மலர் ஏத்துகிலேன்
புண்ணுடை யாரிற் புலம்புகின்றேனைப் பொறுத்தருள்முக்
கண்ணுடை யாய்கழற் காலுடை யாய்மணி கண்டத்தனே. 4

1633 தாழாத துன்பச் சமுத்திரத்தே இத்தனி அடியேன்
வீழாத வண்ணம் கருணை செய்வாய் என்னை வேண்டி அந்நாள்
ஊழாம் வினை தவிர்த் தாண்டனையே என் உடையவனே
வாழா வகைஎனை இந்நாள் விடுத்தல் வழக்கலவே. 5

1634 ஊன்செய்த வெம்புலைக் கூட்டின் பொருட்டிங் குனைமறந்து
நான்செய்த தீமையை நானே நினைக்க நடுங்குகின்றேன்
ஏன்செய் தனைஎனக் கேளாது மேலும் இரங்குகின்றாய்
வான்செய்த நாதநின் தண்ணருள் வண்ணம் என் வாழ்த்துவனே. 6

1635 ஆயாது நான்செயும் குற்றங் களைக்கண்டறியில் பெற்ற
தாயாயினும் பொறுப் பாளல ஆங்கவை சற்றலவே
ஓயாது செய்யுந் தொறும்பொறுத் தாளும் உனை எளியேன்
வாயால் உரைக்கவும் மாட்டேன் அந்தோ என்ன வன்மைஇதே. 7

1636 ஒன்றுந் தெரிந்திட மாட்டாப் பருவத் துணர்வுதந்தாய்
இன்றுந் தருதற் கிறைவா நின்உள்ளம் இயைதிகொலோ
கன்றுங் கருத்தொடு மாழ்குகின்றேன் உன்கழல் அடிக்கே
துன்றுங் கருத்தறி யேன்சிறியேன் என் துணிவதுவே.

1637 ஆவா எனஎனை ஆட்கொள வேண்டும் அடிமைகொண்ட
தேவாஎன் குற்றம் திருவுளத் தெண்ணில் என்செய்திடுவேன்
வாவா எனஅழைப் பார்பிறர் இல்லை மறந்தும் என்றன்
நாவால் உரைக்கவும் மாட்டேன் சிறுதெய்வ நாமங்களே. 9

1638 பள்ளத்தி லேசெலும் நீர்போல் என்உள்ளம் பரப்பதலால்
எள்ளத்திலேசிறி தாயினும் நான்செல்வ தில்லை எந்தாய்
கள்ளத்திலே சொல்லு கின்றேன் அலநின் கழலிணைஎன்
உள்ளத்தி லேநின்ற ஆங்கவை காண்க உடையவனே. 10

திருச்சிற்றம்பலம்

84. கருணை விண்ணப்பம்

பொது
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1639 நல்லார்க் கெல்லாம் நல்லவன்நீ ஒருவன் யாண்டும் நாயடியேன்
பொல்லார்க் கெல்லாம் பொல்லவன்நான் ஒருவன் இந்தப் புணர்ப்பதனால்
எல்லாம் உடையாய் நினக்கெதிரென் றெண்ணேல் உறவென் றெண்ணுகஈ
தல்லால் வழக்கென் இருமைக்கும் பொதுமை அன்றோ அருளிடமே. 1

1640 இடமே பொருளே ஏவலே என்றென் றெண்ணி இடர்ப்படுமோர்
மடமே உடையேன் தனக்கருள்நீ வழங்கல் அழகோ ஆநந்த
நடமே உடையோய் நினைஅன்றி வேற்றுத் தெய்வம் நயவேற்குத்
திடமே அருள்தான் வழங்காது தீர்த்தல் அழகோ தெரிப்பாயே. 2

1641 தெரித்தால் அன்றிச் சிறிதேனும் தெரிவொன் றில்லாச் சிறியேனைப்
பிரித்தாய் கூடும் வகைஅறியும் பெற்றி என்னே பிறைமுடிமேல்
தரித்தாய் அடியேன் பிழைபொறுக்கத் தகுங்காண் துன்பம் தமியனை
அரித்தால் கண்டிங் கிரங்காமை அந்தோ அருளுக் கழகேயோ. 3

1642 அருள்ஓர் சிறிதும் உதவுகிலாய் அதனைப் பெறுதற் கடியேன்பால்
தெருள்ஓர் சிறிதும் இலையேஎன் செய்கேன் எங்கள் சிவனேயோ
மருளோர் எனினும் தமைநோக்கி வந்தார்க் களித்தல் வழக்கன்றோ
பொருளோர் இடத்தே மிடிகொண்டோர் புகுதல் இன்று புதிதன்றே. 4

1643 புதியேன் அல்லேன் நின்அடிமைப் பொருத்தம் இல்லேன் அல்லேன்யான்
மதியேன் வேற்றுத் தேவர்தமை வந்தங் கவர்தாம் எதிர்ப்படினும்
துதியேன் நின்னை விடுவேனோ தொண்ட னேனை விடல்அழகோ
நதியேர் சடையோய் இன்னருள்நீ நல்கல் வேண்டும் நாயேற்கே. 5

1644 நாயேன் துன்பக் கடல்வீழ்ந்து நலிதல் அழகோ நல்லோர்க்கிங்
கீயேன் ஒன்றும் இல்லேன்நான் என்செய் கேனோ என்னுடைய
தாயே அனையாய் சிறிதென்மேல் தயவு புரிந்தால் ஆகாதோ 6
சேயேன் தன்னை விடுப்பாயோ விடுத்தால் உலகஞ் சிரியாதோ.

1645 சிரிப்பார் நின்பேர் அருள்பெற்றோர் சிவனே சிவனே சிவனேயோ
விரிப்பார் பழிச்சொல் அன்றிஎனை விட்டால் வெள்ளை விடையோனே
தரிப்பாய் இவனை அருளிடத்தே என்று நின்று தகும்வண்ணம்
தெரிப்பார் நினக்கும் எவர்கண்டாய் தேவர் தேடற் கரியானே. 7

1646 அரிய பெருமான் எளியோமை ஆளும் பெருமான் யாவர்கட்கும்
பெரிய பெருமான் சிவபெருமான் பித்தப் பெருமான் என்றுன்னை
உரிய பெருமா தவர்பழிச்சல் உண்மை எனில்என் உடையானே
கரிய பெருமால் உடையேற்கும் அருளல் உன்றன் கடன்அன்றே. 8

1647 அன்றும் சிறியேன் அறிவறியேன் அதுநீ அறிந்தும் அருள்செய்தாய்
இன்றும் சிறியேன் அறிவறியேன் இதுநீ அறிந்தும் அருளாயேல்
என்றும் ஒருதன் மையன்எங்கள் இறைவன் எனமா மறைகள்எலாம்
தொன்று மொழிந்த தூமொழிதான் சூது மொழியோ சொல்லாயே. 9

1648 சொல்லற் கரிய பெரியபரஞ் சுடரே முக்கட் சுடர்க்கொழுந்தே
மல்லற் கருமால் அயன்முதலோர் வழுத்தும் பெருஞ்சீர் மணிக்குன்றே
புல்லற் கரிதாம் எளியேன்றன் பிழைகள் யாவும் பொறுத்திந்த
அல்லற் கடல்நின் றெனைஎடுத்தே அருள்வாய் உன்றன் அருள்நலமே. 10

திருச்சிற்றம்பலம்

85. அடிமைப் பதிகம்

எண்சீர்க்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1649 ஆள்வினையால் பயன் உறுவார் அசதியாட
அந்தோ இப்புலை நாயேன் அன்பால் நின்பால்
வேள்விசெயும் பெருந்தவர்க்கே வேள்வி செய்ய
வேண்டும் இதற்கெம் பெருமான் கருணை செய்யும்
நாள்விளைவில் சின்னாளே இதுதான் உண்மை
நம்பும்என நவின்றுனையே நம்பி நின்றேன்
கேள்வியிலாத் துரைத்தனமோ அலது நாயேன்
கிளக்குமுறை கிளக்கிலனோ கேட்டி லாயே. 1

1650 கேட்டிலாய் அடியேன்செய் முறையை அந்தோ
கேடிலாக் குணத்தவர்பால் கிட்டு கின்றோய்
ஏட்டில் ஆயிரங்கோடி எனினும் சற்றும்
எழுதமுடி யாக்குறைகொண் டிளைக்கின்றேன் நான்
சேட்டியா விடினும் எனைச் சேட்டித் தீர்க்கும்
சிறுமனத்தால் செய்பிழையைத் தேர்தியாயில்
நாட்டில்ஆர் காக்கவல்லார் என்னை எந்தாய்
நாள்கழியா வண்ணம் இனி நல்கல்வேண்டும். 2

1651 வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை
வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும்
தூண்டாத மணிவிளக்கே பொதுவிலாடும்
சுடர்க்கொழுந்தே என்னுயிர்க்குத் துணையே என்னை

1. எழுசீர். தொ. வே. 1867

ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட
அருட்கடலே என் உள்ளத் தமர்ந்த தேவே
ஈண்டாவ எனச்சிறிய அடியேன் உள்ளத்
தெண்ணம்அறிந் தருளாயேல் என்செய் கேனே. 3

1652 என்னை அறியாப்பருவத் தாண்டு கொண்ட
என்குருவே எனக்குரிய இன்பமே என்
தன்னைஇன்று விடத்துணிந்தாய் போலும் அந்தோ
தகுமோநின் பெருங்கருணைத் தகவுக் கெந்தாய்
உன்னைஅலா தொருவர்தம்பால் செல்லேன் என்னை
உடையானே என்னுள்ளத் துள்ளே நின்று
முன்னைவினைப் பயன்ஊட்ட நினைப்பிக் கின்றாய்
முடிப்பிக்கத் துணிந்திலையேல் மொழிவ தென்னே. 4

1653 என்நாணை அறிந்தும் என்னை அந்தோ அந்தோ
இவ்வகைசெய் திடத்துணிந்தாய் என்னே எந்தாய்
நின்ஆணை நின்னையலா தொன்றும் வேண்டேன்
நீ இதனை அறிந்திலையோ நினைப்பிக்கின்ற
மன்னாஎன் ஆருயிர்க்கு வாழ்வே என்கண்
மணியேஎன் குருவே என்மருந்தே இன்னும்
உன்னால் இங்குயிர் தரித்து வாழ்கின்றேன் என்
உள்ளம் அறிந் துதவுதியோ உணர்கிலேனே. 5

1654 உள்ளமறிந் துதவுவன்நம் உடையான் எல்லாம்
உடையான்மற் றொருகுறை இங்குண்டோ என்னக்
கள்ளமனத்தேன் அந்தோ களித்திருந்தேன்
கைவிடுவார் போல் இருந்தாய் கருணைக் குன்றே
எள்ளலுறப் படுவேன் இங்கேது செய்வேன்
எங்கெழுகேன் யார்க்குரைப்பேன் இன்னும் உன்றன்
வள்ளலருள் திறநோக்கி நிற்கின்றேன் என்
மனத்துயர்போம் வகை அருள மதித்திடாயே. 6

1655 வகைஅறியேன் சிறியேன் சன்மார்க்க மேவும்
மாண்புடைய பெருந்தவத்தோர் மகிழ வாழும்
தகைஅறியேன் நலம் ஒன்றும் அறியேன் பொய்ம்மை
தான்அறிவேன் நல்லோரைச் சலஞ்செய்கின்ற
மிகைஅறிவேன் தீங்கென்ப எல்லாம் இங்கே
மிகஅறிவேன் எனினும் எனைவிடுதி யாயில்
பகைஅறிவேன் நின்மீதில் பழிவைத் திந்தப்
பாவிஉயிர் விடத்துணிவேன் பகர்ந்திட் டேனே. 7

1656 இட்டவகை வாழ்கின்றேன் எந்தாய் நானே
எண்ணுகிலேன் எண்ணுவித்தால் என்செய் வேன்நின்
மட்டலர்ச்சே வடிஆணை நினைத்த வண்ணம்
வாழ்விக்க வேண்டும் இந்த வண்ணம் அல்லால்

துட்டன் எனவிடத்துணிதி யாயில் அந்தோ
சூறையுறு துரும்பெனவும் சுழன்று வானில்
விட்டசிலை எனப்பவத்தில் விழுவேன் அன்றி
வேறெதுசெய் வேன் இந்த விழல னேனே. 8

1657 விழற்கிறைத்து மெலிகின்ற வீணனேன் இவ்
வியன்உலகில் விளைத்திட்ட மிகைகள் எல்லாம்
அழற்கிறைத்த பஞ்செனவே ஆக்கி நீயே
ஆட்கொண்டால் தடுப்பவரிங் காரே ஐயா
கழற்கடிமை எனஉலகம் அறிய ஒன்றும்
கருதறியாச் சிறுபருவத் தென்னை ஆண்டு
நிழற்கருணை அளித்தாயே இந்நாள் நீகை
நெகிழவிட்டால் என்செய்வேன் நிலையி லேனே. 9

1658 நிலை அறியேன் நிலை அறிந்து பெற்ற நல்லோர்
நெறிஅறியேன் எனினும் உன்றன் நேச மன்றி
இலை அறியேன் மற்றவரைக் கனவிலேனும்
எட்டுணை ஓர் துணைஎனவும் எண்ணு றேன்நல்
கலைஅறியேன் கருத்திலிருந் தறிவித் தாய்நான்
கண்டறிந்தேன் எனினும் [1]அவை காட்ட வேண்டும்
அலைஅறியா அருட்கடலே அமுதே தேனே
அம்பலத்தென் குருவேநான் அடிமை ஆளே. 10

திருச்சிற்றம்பலம்

86. உள்ளப் பஞ்சகம்[2]

பொது
கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

1659 நீரார் சடையது நீண்மால் விடையது நேர்கொள்கொன்றைத்
தாரார் முடியது சீரார் அடியது தாழ்வகற்றும்
பேரா யிரத்தது பேரா வரத்தது பேருலகம்
ஓரா வளத்ததொன் றுண்டேமுக் கண்ணொடென் உள்ளகத்தே. 1

1660 மட்டுப் படாதது மாமறை யாலும் மலப்பகையால்
கட்டுப் படாதது மாலா தியர்தம் கருத்தினுக்கும்
தட்டுப் படாதது பார்முதல் பூதத் தடைகளினால்
ஒட்டுப் படாததொன் றுண்டேமுக் கண்ணொடென் உள்ளகத்தே. 2

1661 பேதப் படாதது பற்பல கற்பங்கள் பேர்ந்திடினும்
சேதப் படாதது நன்றிது தீதெனச் செய்கைகளால்
ஏதப் படாததுள் எட்டப் படாததிங் கியாவர்கட்கும்
ஓதப் படாததொன் றுண்டேமுக் கண்ணொடென் உள்ளகத்தே. 3

1. அவை போல் காட்ட வேண்டும் - 1932 பதிப்பு 2. உள்ளப் பதிகம் - முதற்பதிப்பு 1885,

1662 தண்ணார் அளியது விண்ணோர் ஒளியது சாற்றுமறைப்
பண்ணார் முடிவது பெண்ணார் வடிவது பண்புயர் தீக்
கண்ணார் நுதலது கண்ணார் மணியது கண்டுகொள்ள
ஒண்ணா நிலையதொன் றுண்டேமுக் கண்ணொடென் உள்ளகத்தே. 4

1663 பிறவா நெறியது பேசா நிலையது பேசில்என்றும்
இறவா உருவதுள் ஏற்றால் வருவ திருள்அகன்றோர்
மறவா துடையது மாதோர் புடையது வாழ்த்துகின்றோர்
உறவாய் இருப்பதொன் றுண்டேமுக் கண்ணொடென் உள்ளகத்தே. 5

திருச்சிற்றம்பலம்

87. சரணப் பதிகம்

கலிநிலைத்துறை

அருட்பெருஞ்ஜோதி

1664 மதிவார் சடைமா மணியே அருள்வள்ளலே நன்
நிதியே திருஅம் பலத்தாடல் செய்நித் தனேநின்
துதியேன் எனினும் உனைஅன் றித்துணையி லேன் என்
பதியே எனதெண்ணம் பலிக்கும்படிக் கருளே. 1

1665 படிமேல் அடியேன் உனைஅன்றி ஓர் பற்றிலேன் என்
முடிமேல் அடிவைத் தருள்செய் திடமுன்னு கண்டாய்
கொடிமேல் விடைநாட்டிய எண் குணக்குன்றமே
பொடிமேல் விளங்குந் திருமேனி எம்புண்ணியனே. 2

1666 புண்ணாம் மனம் சஞ்சலித்துள்ளம் புலர்ந்து நின்றேன்
அண்ணா எனை ஆட்கொள வேண்டும் அகற்று வாயேல்
கண்ணார் களைகண் பிறிதொன் றிலைகள்ள னேனை
எண்ணா வினை என்செயுமோ இதற்கென் செய்வேனே. 3

1667 செய்வேன் அவம்அன் றித்தவம் ஒன்றும்செய் தறியேன்
நைவேன் பிழையாவும் பொறுத்தருள் நல்கு வாயேல்
உய்வேன் அலதுய் வகைஇன்றுமன் றோங்கு கின்றாய்
வைவேன் துதிப்பேன் உனைஎன்றும் மறந்தி லேனே. 4

1668 மறவா துனைவாழ்த்து மெய் அன்பரை மாநிலத்தே
இறவா வகை ஆட்கொண்டருளிய ஈசனே மெய்
உறவாகிய நின்பதம் அன்றி ஒன்றோர்கிலேன் நான்
பிறவா நெறி தந்தருள் என்பதென் பேசி டாயே. 5

1669 என்னே இனும்நின் அருள்எய்திலன் ஏழையேனை
முன்னே வலிந்தாட் கொண்டதின் றுமுனிந்த தேயோ
பொன்னோர் அணிஅம் பலத்தா டியபுண்ணி யாஎன்
அன்னே அரசே அமுதே அருள் ஆண்டவனே. 6

1670 ஆண்டாய் எனை ஏழ்பிறப்பும் உனை அன்றி ஒன்றும்
தீண்டா தெனதுள்ளம் என்றால் என்சிறுமை தீர்க்க
வேண்டா தயலார் எனக்காண் பதென்மெய்ய னேபொன்
ஆண்டான் திருஎய் தநஞ்சைக் களநாட்டி னோயே. 7

1671 நாட்டார் நகைசெய் வர்என்றோ அருள்நல்கி லாய்நீ
வீட்டார் நினைஎன்னினைப்பார் எனைமேவி லாயேல்
தாட்டா மரை அன்றித்துணை ஒன்றும் சார்ந்திலேன் என்
மாட்டாமை அறிந் தருள்வாய் மணிமன்றுளானே. 8

1672 மன்றா டியமா மணியே தனிவான வாழ்வே
மின்றாழ் சடைவே தியனே நினைவேண்டு கின்றேன்
பொன்றாத மெய் அன்பருக்கன் புளம்பூண்டு நின்று
நன்றாய் இரவும் பகலும் உனைநாடு மாறே. 9

1673 மாறா மனமா யையினால் மதிமாழ்கி மாழ்கி
ஏறாமல் இறங்குகின்றேன் இதற்கென் செய்வேன்
தேறா வுளத்தேன் றனை ஏறிடச்செய்தி கண்டாய்
பேறா மணிஅம் பலமே வியபெற்றி யானே. 10

1674 ஆனே றிவந்தன் பரைஆட் கொளும்ஐய னேஎம்
மானே மணிமன் றில்நடம் புரிவள்ள லேசெந்
தேனே அமுதே முதலாகிய தெய்வமேநீ
தானே எனை ஆண்டருள்வாய் நின்சரண் சரணே. 11

திருச்சிற்றம்பலம்

88. நெஞ்சொடு நெகிழ்தல்

கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

1675 சீர்தரு வார்புகழ்ப் பேர்தரு வார்அருள் தேன்தருவார்
ஊர்தரு வார்மதி யுந்தரு வார்கதி யுந்தருவார்
ஏர்தரு வார்தரு வார்ஒற்றி யூர்எம் இறைவர் அன்றி
யார்தரு வார்நெஞ்ச மேஇங்கும் அங்கும் இயம்புகவே. 1

1676 வாடக்கற் றாய்இஃதென்னைநெஞ் சேயிசை வாய்ந்தசிந்து
பாடக்கற் றாய்இலை பொய்வேடம் கட்டிப் படிமிசைக்கூத்
தாடக்கற் றாய் இலை அந்தோ பொருள்உனக் கார்தருவார்
நீடக்கற் றார்புகழ் ஒற்றிஎம் மானை நினைஇனியே. 2

சென்னைச் சபாபதி முதலியார் வீட்டுத் திருமண அழைப்புத் தொடர்பாகச் செய்த பாடல் என இது ஒரு தனிப்பாடலாகவும் வழங்குகிறது.

தொ. வே 1, 2, ச. மு. க., பொ. சு., பி. இரா., சென்னை பதிப்புகளில் இது இப்பதிகத்தில் சேரவில்லை. ஆ. பா. பதிப்பில் மட்டும் சேர்ந்திருக்கிறது.

1677 நேரா அழுக்குத் துணியாகில் உன்றனை நேரில்கண்டும்
பாரா தவர்என நிற்பார் உடுத்தது பட்டெனிலோ
வாரா திருப்பதென் வாரும்என் பார்இந்த வஞ்சகர்பால்
சேராது நன்னெஞ்ச மேஒற்றி யூரனைச் சேர்விரைந்தே. 3

1678 பொய்விரிப் பார்க்குப் பொருள்விரிப் பார்நற் பொருட்பயனாம்
மெய்விரிப் பார்க்கிரு கைவிரிப் பார்பெட்டி மேவுபணப்
பைவிரிப் பார்அல்குற் பைவிரிப் பார்க்கவர் பாற்பரவி
மைவிரிப் பாய்மன மேஎன்கொ லோநின் மதியின்மையே. 4

1679 வாழைக் கனிஉண மாட்டாது வானின் வளர்ந்துயர்ந்த
தாழைக் கனிஉணத் தாவுகின் றோரில் சயிலம் பெற்ற
மாழைக் கனிதிகழ் வாமத்தெம் மான்தொண்டர் மாட்டகன்றே
ஏழைக் கனிகர் உளத்தினர் பாற்சென்ற தென்னைநெஞ்சே. 5

1680 காயார் சரிகைக் கலிங்கம்உண் டேல்இக் கலிங்கங்கண்டால்
நீயார்நின் பேர்எது நின்ஊர் எதுநின் நிலையெதுநின்
தாயார்நின் தந்தை எவன்குலம் ஏதென்பர் சாற்றும்அவ்வல்
வாயார் இடஞ்செலல் நெஞ்சே விடைதர வல்லைஅன்றே. 6

எண்சீர்க் [1]கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1681 துட்ட வஞ்சக நெஞ்சக மேஒன்று சொல்லக் கேள்கடல் சூழ்உல கத்திலே
இட்டம் என்கொல் இறையள வேனும்ஓர் இன்பம் இல்லை இடைக்கிடை இன்னலால்
நட்ட மிக்குறல் கண்டுகண் டேங்கினை நாணு கின்றிலை நாய்க்குங் கடையைநீ
பட்ட வன்மைகள் எண்ணில் எனக்குடல் பதைக்கும் உள்ளம் பகீல்என ஏங்குமே. 7

அறுசீர்க் [2]கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1682 பெரியபொருள் எவைக்கும்முதற் பெரும்பொருளாம் அரும்பொருளைப் பேசற் கொண்ணாத்
துரியநிலை அநுபவத்தைச்சுகமயமாய் எங்குமுள்ளதொன்மை தன்னை
அரியபரம் பரமான சிதம்பரத்தே நடம்புரியும் அமுதை அந்தோ
உரியபர கதிஅடைதற் குன்னினையேன் மனனேநீ உய்கு வாயே. 8

1683 சொன்னிலைக்கும் பொருணிலைக்கும் தூரியதாய் ஆனந்தச் சுடராய் அன்பர்
தன்னிலைக்கும் சென்னிலைக்கும் அண்மையதாய் அருள்பழுக்கும் தருவாய் என்றும்
முன்னிலைக்கும் நின்னிலைக்கும் காண்பதரிதாய் மூவாத முதலாய்ச் சுத்த
நன்னிலைக்கும் நிலையாய பசுபதியை மனனேநீ நவின்றி டாயே. 9

1684 மண்முகத்தில் பல்விடய வாதனையால் மனனேநீ வருந்தி அந்தோ
புண்முகத்தில் சுவைவிரும்பும் எறும்பெனவா ளாநாளைப் போக்கு கின்றாய்
சண்முகத்தெம் பெருமானை ஐங்கரனை நடராஜத் தம்பி ரானை
உண்முகத்தில் கருதிஅநு பவமயமாய் இருக்கிலைநின் உணர்ச்சி என்னே. 10

1. அறுசீர். தொ. வே. 1, 2. பொ. சு., பி. இரா. எண்சீர். ச. மு. க. ஆ. பா.
2. எழுசீர். தொ. வே. 1, 2. பொ. சு., பி. இரா. எழுசீர். ச. மு. க. ஆ. பா.

1685 மால்எடுத்துக் கொண்டுகரு மால்ஆகித் திரிந்தும்உளம் மாலாய்ப்பின்னும்
வால்எடுத்துக் கொண்டுநடந் தணிவிடையாய்ச் சுமக்கின்றான் மனனேநீஅக்
கால்எடுத்துக் கொண்டுசுமந் திடவிரும்பு கிலைஅந்தோ கருதும் வேதம்
நால்எடுத்துக் கொண்டுமுடி சுமப்பதையும் அறிகிலைநின் நலந்தான்என்னே 11

ஆசிரியத்துறை[1]

1686 உலகம் ஏத்திநின் றோங்க ஓங்கிய ஒளிகொள் மன்றிடை அளிகொள்மாநடம்
இலகு சேவடிக்கே அன்பு கூர்ந்திலை ஏழை நெஞ்சே
திலக வாணுத லார்க்கு ழன்றனை தீமை யேபுரிந் தாய்வி ரிந்தனை
கலக மேகனிந்தாய் என்னை காண்நின் கடைக்க ருத்தே. 12

திருச்சிற்றம்பலம்

89. பொதுத் தனித் திருவெண்பா

நேரிசை வெண்பா
அருட்பெருஞ்ஜோதி

1687 வந்திக்கும் மெய்யடியார் மாலற்ற ஓர்மனத்தில்
சந்திக்கும் எங்கள் சயம்புவே - பந்திக்கும்
வன்மலக்கட் டெல்லாம் வலிகெட் டறநினது
நின்மலக்கண் தண்ணருள் தான் நேர். 1

1688 சங்கரா முக்கட் சயம்புவே தாழ்சடைமேல்
பொங்கராத் திங்கள் பொலிந்தோனே - வெங்கரா
வாய்நின்று பிள்ளை வரப்பாடும் வன்தொண்டர்க்
காய்நின்று சந்துரைத்த தார். 2

1689 நீலக் களங்கொண்ட நீடொளியே நீள்கங்கை
கோலச் சடைக்கணிந்த கோமளமே - ஞாலத்தில்
அந்தோ சிறியேன் அருளின்றி வாடுவது
சந்தோட மோநின் றனக்கு. 3

1690 நான்சிறியேன் என்னினும் இந்நானிலத்தில் நான் செய்பிழை
தான்சிறிதோ அன்றுலகில் தான்பெரிதே - மான்கரத்தோய்
அங்ஙனமே னும்உன் அருட்பெருமைக் கிப்பெருமை
எங்ஙனம் என்றுள்ளம் எழும். 4

1691 ஆவித் துணையேஎன் ஆரமுதே நின்வடிவைப்
பாவித்துள் நையேன் இப் பாவியேன் - சேவித்து
வாழ்த்தேன் நின் பொன்னடியில் வந்தென் தலைகுனித்துத்
தாழ்த்தேன் என் செய்தேன் தவம். 5

1692 உன்னைநினைந் திங்கே உலாவுகின்றேன் அன்றி எந்தாய்
பின்னை நினைப்பொன்றும் பெற்றிலேன் - என்னை
விடாதேநின் பொன்னடியை மேவார்சேர் துன்பம்
கொடாதே எனை ஏன்று கொள்.

1. ஆசிரியத்தாழிசை. தொ. வே, 1, 2. ச. மு. க.

1693 என்னரசே நின்னடிக்கீழ் என்னிடரை நீக்கெனநான்
சொன்னதலால் தாயுடனும் சொன்னேனோ – இன்னுமிந்தத்
துன்பச் சுமையைச் சுமக்கமுடி யாதென்னால்
அன்பர்க் கருள்வோய் அருள். 7

1694 அன்னேஎன் அப்பாஎன் ஆருயிர்க்கோர் ஆதரவே
என்னேநின் உள்ளம் இரங்கிலையே – பொன்னே
உடையா ரிடைஎன் உளநொந்து வாடிக்
கடையேன் படுந்துயரைக் கண்டு. 8

1695 [1]பகுதி தகுதி விகுதி எனும் பாட்டில்
இகலில் இடையை இரட்டித் – தகவின்
அருச்சித்தால் முன்னாம் அதுகடையாம் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து. 9

1696 [2]தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாம்
தாதாதா என்றுலகில் தான் அலைந்தோம் – போதாதா
நந்தா மணியே நமச்சிவா யப்பொருளே
எந்தாய் எனப்புகழ வே. 10

1697 பொய்கண்டாய் காமப் புதுமயக்கிற் போய்உழலக்
கைகண்டாய் என்னபலன் கண்டாயே – மெய்கண்ட
பொன்னே அனையார்பால் போய்வணங்கக் கற்றிலையோ
என்னேநின் தன்மைமன மே. 11

1698 இவ்வழியில் செல்லாதே என்னுடையான் தன்னடிசேர்
அவ்வழியில் செல்என் றடிக்கடிக்குச் – செவ்வழியில்
சொன்னாலும் கேட்கிலைநீ துட்டமன மேஉனக்கிங்
கென்னால் உறவே தினி. 12

1699 கால்வாங் கியஉட் கதவம் கொளும் அகத்தின்
பால்வாங் கியகால் பரம்பரனே – மால்வாங்
கரிதாரம் ஊணாதி யாம்மயல்கொண் டேழைப்
பெரிதார ஓர்மொழியைப் பேசு. 13

திருச்சிற்றம்பலம்

1. இதன் பொருள் : பகுதி, தகுதி, விகுதி என்னும் மூன்று சொற்களின் இடையெழுத்தை இரட்டித்து அருச்சித்தால் அவற்றின் கடையெழுத்துகள் சேர்ந்த முன்னெழுத்துகள் கிடைக்கும். ஈன்று சொற்களிலும் இடையெழுத்து கு. 3கு 2=6கு. அறுகு (அறுகம் புல்). முதலெழுத்துகள் சேரின் : ப,த,வி, – பதவி. கடையெழுத்துகள் சேரின் : தி, தி, தி – மூன்று தி, முத்தி. சிற்சபையானை அறுகால் அருச்சித்தால் முத்திப் பதவி பெறலாம்.

2. தா தா தா தா தா தா தாக்குறை என்பதில் தா என்னும் எழுத்து எழுமுறை அடுக்கி வந்தது. அதனை எழுதாக்குறை என்று படிக்க. ஏழு தா எழுதா. எழுதாக்குறைக்கு என் செய்குதும் – எமது தலையில் எழுதாத குறைக்கு என்ன செய்வோம்.

இரண்டாவது அடியில் தா தா தா என மும்முறை அடுக்கி வந்ததை தா தா தா எனப்பிரித்துப் பொருள் கொள்க. தா தா – வள்ளலே, தா – கொடு.

ஆம் பாடல் காண்க. முதல் அடியில் எழுதாக்குறை. இரண்டாவது அடியில் ததிதி –ஒலிக்குறிப்பு, மூன்றாம் அடியில் திதிதி – முத்தி.

இங்கிதமாலையிலும் இவ்வாறு ஒருபாடல் உண்டு. பாடல்

குகுகுகுகுகு அணிவேணி – அறுகு அணிந்த சடை.

குகுகுகுகுகுகுகு தொங்கும் இருண்ட கூந்தல் எனப் பொருள் கொள்ள வேண்டும். விரிக்கிற் பெருகும். (ஊரனடிகள் பதிப்பு 1972)

90. திருக்குறிப்பு நாட்டம்

ஆசிரியத் துறை[1]

அருட்பெருஞ்ஜோதி

1700 ஆற்றுக் கேபிறைக் கீற்றுக் கேசடை
ஆக்கிச் சேவடி தூக்கி ஆருயிர்ப்
பேற்றுக்கே நடிப்பாய் மணிமன்றில் பெருந்தகையே
சோற்றுக்கே இதஞ் சொல்லிப் பேதையர்
சூழல் வாய்த்துயர் சூழ்ந்து மேற்றிசைக்
காற்றுக்கே கறங்காய்ச் சுழன்றேனைக் கருதுதியோ. 1

1701 ஞாலத் தார்தமைப் போலத் தாம்இங்கு
நண்ணு வார்நின்னை எண்ணு வார்மிகு
சீலத்தார் சிவமே எவையும்எனத் தேர்ந்தனரால்
சாலத் தான்கொடுஞ் சாலத் தாலத்தைத்
தாவி நான்பெரும் பாவி ஆயினன்
ஏலத்தார் குழலா ளிடத்தாய்எனை எண்ணுதியோ. 2

1702 அண்ண லேநின்னை எண்ணலேன் என்னை
ஆண்டு கொண்டனை மீண்டும் விண்டனன்
நண்ணலே அறியேன் கடையேன்சிறு நாயனையேன்
பெண்ண லேன்இயல் ஆணலேன் அலிப்
பேய னேன்கொடும் பேதை யேன்பிழை
கண்ணிலே[2] புரியா தினும்மீட்கக் கருதுதியோ. 3

1703 வல்லி ஆனந்த வல்லி சேர்மண
வாளனே அருளாள னேமலை
வில்லியாய் நகைத்தே புரம்வீழ்த்த விடையவனே
புல்லி யான்புலைப் போகம் வேட்டுநின்
பொன்ன டித்துணைப் போகம் போக்கினேன்[3]
இல்லிஆர் கடம்போ லிருந்தேன் எனை எண்ணுதியோ. 4

திருச்சிற்றம்பலம்

1. ஆசிரியத் தாழிசை. தொ. வே. ஆசிரியத்துறை. ச. மு. க. ஆ. பா. 2. கண்ணலே - ச.மு.க பதிப்பு ஆ. பா
3. போக்கினன் - ச.மு.க பதிப்பு ஆ. பா

91. தனித் திருப்புலம்பல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1704 திங்கள் விளங்கும் சடைத்தருவைத் தீம்பாற் சுவையைச் செந்தேனைச்
செங்கை மருவும் செழுங்கனியைச் சீரார் முக்கட் செங்கரும்பை
மங்கை மலையாள் மணந்தபெரு வாழ்வைப் பவள மலைதன்னை
எங்கள் பெருமான் தனை அந்தோ என்னே எண்ணா திருந்தேனே. 1

1705 அன்பர் இதய மலர்க்கோயில் அமர்ந்த பரமா னந்தத்தைத்
துன்பம் அகலச் சுகமளிக்கும் தூய துணையைச் சுயஞ்சுடரை
வன்ப ரிடத்தின் மருவாத மணியை மணியார் மிடற்றானை
இன்ப நிறைவை இறையோனை என்னே எண்ணா திருந்தேனே. 2

1706 ஒருமைப் பயனை ஒருமைநெறி உணர்ந்தார் உணர்வின் உள்ளுணர்வைப்
பெருமைக் கதியைப் பசுபதியைப் பெரியோர் எவர்க்கும் பெரியோனை
அருமைக் களத்தில் கருமைஅணி அம்மான் தன்னை எம்மானை
இருமைப் பயனுந் தருவானை என்னே எண்ணா திருந்தேனே. 3

1707 கறையோர் கண்டத் தணிந்தருளும் கருணா நிதியைக் கண்ணுதலை
மறையோன் நெடுமாற் கரியசிவ மலையை அலையில் வாரிதியைப்
பொறையோர் உள்ளம் புகுந்தொளிரும் புனித ஒளியைப் பூரணனாம்
இறையோன் தன்னை அந்தோநான் என்னே எண்ணா திருந்தேனே. 4

திருச்சிற்றம்பலம்

92. பரம ராசியம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1708 விதி எலாம்விலக் கெனவிலக் கிடுவேன்
விலக்கெ லாங்கொண்டு விதிஎன விதிப்பேன்
நிதி எலாம்பெற நினைத்தெழு கின்றேன்
நிலமெ லாங்கொளும் நினைப்புறு கின்றேன்
எதிஎலாம் வெறுத் திட்டசிற் றூழை
இன்பெ லாங்கொள எண்ணிநின் றயர்வேன்
பதி எலாங்கடந் தெவ்வணம் உய்வேன்
பரம ராசியப் பரம்பரப் பொருளே. 1

1709 செடிய னேன்கடுந் தீமையே புரிவேன்
தெளிவி லேன்மனச் செறிவென்ப தறியேன்
கொடிய னேன்கொடுங் கொலைபயில் இனத்தேன்
கோள னேன்நெடு நீளவஞ் சகனேன்
அடிய னேன் பிழை அனைத்தையும் பொறுத்துன்
அன்பர் தங்களோ டின்புற அருள்வாய்
படி அனேகமுங் கடந்தசிற் சபையில்
பரம ராசியப் பரம்பரப் பொருளே. 2

திருச்சிற்றம்பலம்

93. திருப்புகழ்ச்சி

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1710 திருவுளந் தெரியேன் திகைப்புறு கின்றேன்
சிறியரிற் சிறியனேன் வஞ்சக்
கருவுளக் கடையேன் பாவியேன் கொடிய
கன்மனக் குரங்கனேன் அந்தோ
வெருவுறு கின்றேன் அஞ்சல்என் றின்னே
விரும்பிஆட் கொள்ளுதல் வேண்டும்
மருவுமா கருணைப் பெருங்கடல் அமுதே
வள்ளலே என்பெரு வாழ்வே. 1

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1711 தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயும் இன்பமும் அன்பும்மெய் அறிவும்
அனைத்தும் நீ என ஆதரித் திருந்தேன்
ஏயும் என்னள விரக்கம்ஒன் றிலையேல்
என்செய் வேன் இதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயும் நின்னருள் நசை உறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழ்ஒளி விளக்கே. 2

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1712 அருள்பழுத் தோங்கும் கற்பகத் தருவே
அருண்மருந் தொளிர்குணக் குன்றே
அருள்எனும் அமுதந் தரும் ஒருகடலே
அருட்கிர ணங்கொளும் சுடரே
அருள்ஒளி வீசும் அரும்பெறன் மணியே
அருட்சுவை கனிந்தசெம் பாகே
அருள்மணம் வீசும் ஒருதனி மலரே
அருண்மய மாம்பர சிவமே. 3

திருச்சிற்றம்பலம்

94. தனித் திருவிருத்தம்

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

1713 நீர்பூத்த வேணியும் ஆனந்தம் பூத்து நிறைமதியின்
சீர்பூத்தமுத இளநகை பூத்த திருமுகமும்
பார்பூத்த பச்சைப் பசுங்கொடி பூத்தசெம் பாகமும்ஓர்
கார்பூத்த கண்டமும் கண்பூத்த காலும்என் கண்விருந்தே. 1

1714 வீழாக ஞான்றசெவ் வேணிப் பிரான்என் வினைஇரண்டும்
கீழாக நான்அதன் மேலாக நெஞ்சக் கிலேசமெல்லாம்
பாழாக இன்பம் பயிராக வாய்க்கில் அப்பாற் பிறவி
ஏழாக அன்றிமற் றெட்டாக இங்கென்னை என்செயுமே. 2

1715 ஆயிரங் கார்முகில் நீர்விழி நீர்தர ஐயநின்பால்
சேயிரங் கார்எனக் கென்றேநின் பொற்பதம் சிந்திக்கின்றேன்
நீஇரங் காய்எனில் என்செய்குவேன் இந்நிலத்திற்பெற்ற
தாய்இரங் காள்என்ப துண்டோ தன் பிள்ளை தளர்ச்சிகண்டே. 3

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1716 செம்பவளத் தனிக்குன்றே அருளானந்தச்
செழுங்கனியே முக்கணுடைத் தேவே மூவா
அம்புவிநீர் அனல்வளிவான் ஆதி யாய
அரசேஎன் ஆருயிர்க்கோர் அரண மாகும்
சம்புசிவ சயம்புவே சங்க ராவெண்
சைலம்வளர் தெய்வதவான் தருவே மிக்க
வம்பவிழ்மென் குழல்ஒருபால் விளங்க ஓங்கும்
மழவிடைமேல் வருங்காட்சி வழங்கு வாயே. 4

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1717 நீடுகின்ற மாமறையும் நெடுமாலும் திசைமுகனும் நிமல வாழ்க்கை
நாடுகின்ற முனிவரரும் உருத்திரரும் தேடஅருள் நாட்டங் கொண்டு
பாடுகின்ற மெய்யடியர் உளம்விரும்பி ஆநந்தப் படிவ மாகி
ஆடுகின்ற மாமணியை ஆரமுதை நினைந்துநினைந் தன்பு செய்வாம். 5

ஷ வேறு

1718 மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே போற்றி
கறைமணி கண்ட போற்றி கண்ணுதற் கரும்பே போற்றி
பிறைமுடிச் சடைகொண் டோங்கும் பேரருட் குன்றே போற்றி
சிறைதவிர்த் தெனையாட் கொண்ட சிவசிவ போற்றி போற்றி. 6

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1719 செய்வகை அறியேன் மன்றுண்மா மணிநின்
திருவுளக் குறிப்பையுந் தெரியேன்
உய்வகை அறியேன் உணர்விலேன் அந்தோ
உறுகண்மேல் உறுங்கொல்என் றுலைந்தேன்
மெய்வகை அடையேன் வேறெவர்க் குரைப்பேன்
வினையனேன் என்செய விரைகேன்
பொய்வகை உடையேன் எங்ஙனம் புகுகேன்
புலையனேன் புகல்அறி யேனே. 7

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1720 நிதியைநினைந் துனைமறந்த மதியைநினைந் தழுகேனோ நிமலா னந்தக்
கதியை இகழ்ந் திருள்விழைந்த விதியைநினைந் தழுகேனோ கண்போல் வாய்ந்த
பதியைஉனைப் பாடாத பாட்டைநினைந் தழுகேனோ படிற்று நெஞ்சச்
சதியைநினைந் தழுகேனோ யாதுகுறித் தழுகேன் இத் தமிய னேனே. 8

ஷ வேறு

1721 தாய்தடை என்றேன் பின்னர்த் தாரமே தடை என்றேன் நான்
சேய்தடை என்றேன் இந்தச் சிறுதடை எல்லாந் தீர்ந்தும்
தோய்தடைச் சிறியேன் இன்னுந் துறந்திலேன் எனைத் தடுக்க
ஏய்தடை யாதோ எந்தாய் என்செய்கேன் என்செய் கேனே. 9

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1722 எண்கடந்த உயிர்கள்தொறும் ஒளியாய் மேவி
இருந்தருளும் பெருவாழ்வே இறையே நின்றன்
விண்கடந்த பெரும்பதத்தை விரும்பேன் தூய்மை
விரும்புகிலேன் நின்அருளை விழைந்தி லேன்நான்
பெண்கடந்த மயல்எனும் ஓர் முருட்டுப் பேயாற்
பிடிஉண்டேன் அடிஉண்ட பிஞ்சு போன்றேன்
கண்கடந்த குருட்டுமர் கதைபோல் நின்சீர்
கண்டுரைப்பல் என்கேனோ கடைய னேனே. 10

ஷ வேறு

1723 மின்னைப் போல் இடை மெல்இய லார்என்றே
விடத்தைப் போல்வரும் வெம்மனப் பேய்களைப்
பொன்னைப் போல்மிகப் போற்றி இடைநடுப்
புழையி லேவிரல் போதப்பு குத்திஈத்
தன்னைப் போல்முடை நாற்றச் சலத்தையே
சந்தனச்சலந் தான்எனக் கொள்கின்றேன்
என்னைப் போல்வது நாய்க்குலம் தன்னிலும்
இல்லை அல்ல தெவற்றினும் இல்லையே. 11

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1724 கள்உருகும் மலர்மணம்போல் கலந்தெங்கும் நிறைந்தோய்நின் கருணைக் கந்தோ
முள் உருகும் வலியபராய் முருடுருகும் உருகாத முறைசேர் கல்லும்
வள்உருகும் மலைஉருகும் மண்உருகும் மரம்உருகும் மதியி லேன்றன்
உள்உருகும் வகையிலைஎன் செய்கேன் நான் ஏன்பிறந்தேன் ஒதிய னேனே. 12

1725 மன்உயிர்க்குத் தாய்தந்தை குருதெய்வம் உறவுமுதல் மற்றும் நீயே
பின்உயிர்க்கோர் துணைவேறு பிறிதிலைஎன் றியான் அறிந்த பின்பொய்யான
மின்உடற்குத் தாய்தந்தை யாதியரை மதித்தேனோ விரும்பி னேனோ
என்உயிர்க்குத் துணைவாநின் ஆணைஒன்றும் அறியேன் நான் இரங்கி டாயே. 13

1726 மாற்றரிய பசும்பொன்னே மணியேஎன் கண்ணேகண் மணியே யார்க்குந்
தோற்றரிய சுயஞ்சுடரே ஆனந்தச் செழுந்தேனே சோதி யேநீ
போற்றரிய சிறியேனைப் புறம்விடினும் வேற்றவர்பாற் போகேன் வேதம்
தேற்றரிய திருவடிக்கண் பழிவிளைப்பேன் நின் ஆணைச் சிறிய னேனே. 14

1727 உள்உணர்வோர் உளத்துநிறைந் தூற்றெழுந்த தெள்ளமுதே உடையாய் வஞ்ச
நள்உணர்வேன் சிறிதேனும் நலமறியேன் வெறித்துழலும் நாயிற் பொல்லேன்
வெள்உணர்வேன் எனினும்என்னை விடுதியோ விடுதியேல் வேறென் செய்கேன்
தள்உணர்வோன் எனினும்மகன் தனைஈன்றோர் புறம்பாகத் தள்ளார் அன்றே. 15

1728 கலைபயின்று நெறிஒழுகும் கருத்துடையேன் அலன்நின்னைக் கனவி லேனும்
மலைபயின்ற பெருங்குணத்தெம் வள்ளலே எனத்துதியேன் வஞ்ச மில்லா
நிலைபயின்ற நல்லோர் தம் நேசமிலேன் கைதவமே நினைப்பேன் அந்தோ
உலைபயின்ற அரக்கெனநெஞ் சுருகேன்நான் ஏன்பிறந்தேன் ஒதிய னேனே. 16

1729 இரும்புன்னை மலர்ச்சடையாய் இவ்வுலகில் சிலர்தங்கட் கென்று வாய்த்த
அரும்பின்னை மார்பகத்தோன் அயனாதி சிறுதெய்வ மரபென் றோதும்
கரும்பொன்னைச் செம்பொன்னில் கைவிடா திருக்கின்றார் கடையனேற்கே
தரும்பொன்னை மாற்றழிக்கும் அரும்பொன்நீ கிடைத்தும் உனைத் தழுவிலேனே. 17

1730 கஞ்சமலர்த் தவிசிருந்த நான் முகனும் நெடுமாலும் கருதிப் போற்ற
அஞ்சநடை அம்மைகண்டு களிக்கப்பொன் அம்பலத்தில் ஆடுகின்ற
எஞ்சல் இலாப் பரம்பொருளே என்குருவே ஏழையினே னிடத்து நீயும்
வஞ்சம்நினைத் தனையாயில் என்செய்வேன் என்செய்வேன் மதியிலேனே. 18

கட்டளைக் கலித்துறை

1731 வேம்புக்கும் தண்ணிய நீர்விடு கின்றனர் வெவ்விடஞ்சேர்
பாம்புக்கும் பாலுண வீகின்றனர் இப்படிமிசையான்
வீம்புக்கும் தீம்புக்கும் ஆனேன் எனினும் விடேல்எனைநீ
தேம்புக்கும் வார்சடைத் தேவே கருணைச் சிவக்கொழுந்தே. 19

1732 அடமுடி யாதுபல் ஆற்றாலும் ஏழைக் கடுத்ததுன்பம்
படமுடி யாதென்னை செய்கேஎன் தன்முகம் பார்த்திரங்காய் 20
திடமுடி யால்அயன் மால்வணங் குந்துணைச் சேவடியாய்
தடமுடி யாய்செஞ் சடைமுடி யாய்நந் தயாநிதியே.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1733 பொல்லா வாழ்க்கைத் துயரம்எனும் புணரிப் பெருக்கில் வீழ்ந்தழுந்திப்
பல்லார் நகைக்கப் பாவிபடும் பாட்டை முழுதும் பார்த்திருந்தும்
கல்லால் அமர்ந்தீர் என்னிரண்டு கண்கள் அனையீர் கறைமிடற்றீர்
எல்லாம் உடையீர் மால்விடையீர் என்னே இரங்கி அருளீரே. 21

1734 பொன்னை உடையார் மிகுங்கல்விப் பொருளை உடையார் இவர்முன்னே
இன்னல்எனும் ஓர் கடல்வீழ்ந்திவ் வேழை படும்பா டறிந்திருந்தும்
மின்னை நிகரும் சடைமுடியீர் விடங்கொள் மிடற்றீர் வினைதவிர்ப்பீர்
என்னை உடையீர் வெள்விடையீர் என்னே இரங்கி அருளீரே. 22

கலித்துறை

1735 ஆயும் வஞ்சக நெஞ்சன்இவ் அடியனேன் ஐயா
நீயும் வஞ்சக நெஞ்சன் என்றால் இந்த நிலத்தே
ஏயும் இங்கிதற் கென்செய்வேன் என்செய்வேன் எவைக்கும்
தாயும் தந்தையும் ஆகிஉள் நிற்கின்றோய் சாற்றாய். 23

1736 நானும் பொய்யன்நின் அடியனேன் தண்ணருள் நிதிநீ
தானும் பொய்யன் என்றால் இதற் கென்செய்வேன் தலைவா
தேனும் பாலுந்தீங் கட்டியும் ஆகிநிற் றெளிந்தோர்
ஊனும் உள்ளமும் உயிரும் அண்ணிக்கின்ற உரவோய். 24

நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா

1737 நேசனும்நீ சுற்றமும் நீநேர்நின் றளித்துவரும்
ஈசனும்நீ ஈன்றாளும் எந்தையும்நீ என்றேநின்
தேசுறுசீர் ஐந்தெழுத்தும் செப்புகின்ற நாயேனை 25
ஆசகலும் வண்ணம் அருள்புரிந்தால் ஆகாதோ.

கட்டளைக் கலித்துறை

1738 ஆற்றால் விளங்கும் சடையோய் இவ்வேழை அடியனும்பல்
ஆற்றால் வருந்தும் வருத்தம் எல்லாம் முற்றறிந்தும் இன்னம்
ஆற்றா திருத்தல்நின் பேரருள் ஆற்றுக் கழகுகொலோ 26
ஆற்றாமை மேற்கொண் டழுதால் எவர்எனை ஆற்றுவரே.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1739 படியே அளந்த மாலவனும் பழைய மறைசொற் பண்ணவனும்
முடியீ றறியா முதற்பொருளே மொழியும் ஒற்றி நகர்க்கிறையே
அடியார் களுக்கே இரங்கிமுனம் அடுத்த சுரநோய் தடுத்ததுபோல்
படிமீ தடியேற் குறுபிணிபோம் படிநீ கடைக்கண் பார்த்தருளே. 27

ஷ வேறு

1740 அருளார் அமுதே அரசேநின் அடியேன் கொடியேன் முறையேயோ
இருள்சேர் மனனோ டிடர்உழந்தேன் எந்தாய் இதுதான் முறையேயோ
மருள்சேர் மடவார் மயலாலே மாழ்கின் றேன்நான் முறையேயோ
தெருளோர் சிறிதும் அறியாதே திகையா நின்றேன் முறையேயோ. 28

1741 ஒழியாக் கவலை உறுகின்றேன் உடையாய் முறையோ முறையேயோ
அழியாக் கருணைக் கடலேஎன் அரசே முறையோ முறையேயோ
பொழியாப் புயலே அனையார்பால் புகுவித் தனையே முறையேயோ
இழியாத் திரிதந் துழல்கின்றேன் இறைவா முறையோ முறையேயோ.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1742 மதிஒளிர் கங்கைச் சடைப்பெருங் கருணை வள்ளலே தெள்ளிய அமுதே
நிதிஒளிர் வாழ்க்கை இந்திரன் முதலோர் நிலைத்தவான் செல்வமும் மண்ணில்
பதிஒளிர் வாழ்க்கை மணிமுடி அரசர் படைத்திடும் செல்வமும் வேண்டேன்
கதிஒளிர் நினது திருவருட் செல்வக் களிப்பையே கருதுகின் றனனே. 30

1743 மன்றாடும் மாமணியே நின்பொற் பாத
மலர்த்துணையே துணையாக வாழ்கின் றோர்க்கு
ஒன்றாலும் குறைவில்லை ஏழை யேன்யான்
ஒன்றுமிலேன் இவ்வுலகில் உழலா நின்றேன்
இன்றாக நாட்கழியில் என்னே செய்கேன்
இணைமுலையார் மையலினால் இளைத்து நின்றேன்
என்றாலும் சிறிதெளியேற் கிரங்கல் வேண்டும்
எழில்ஆரும் ஒற்றியூர் இன்பவாழ்வே. 31

கட்டளைக் கலித்துறை

1744 வெள்ளங்கொண் டோங்கும் விரிசடை யாய்மிகு மேட்டினின்றும்
பள்ளங்கொண் டோங்கும் புனல்போல்நின் தண்ணருட் பண்புநல்லோர்
உள்ளங்கொண் டோங்கும் அவமே பருத்த ஒதிஅனையேன்
கள்ளங்கொண் டோங்கும் மனத்துறு மோஉறிற் காண்குவனே. 32

1745 ஐயாமுக் கண்கொண்ட ஆரமு தேஅருளார்பவள
மெய்யாமெய்ஞ் ஞான விளக்கே கருணை விளங்கவைத்த
மையார் மிடற்று மணியே அன் றென்னை மகிழ்ந்ததந்தோ
பொய்யாஎன் செய்வல் அருளா யெனில்எங்குப் போதுவனே. 33

1746 நாரா யணன்திசை நான்முகன் ஆதியர் நண்ணிநின்று
பாரா யணஞ்செயப் பட்டநின் சேவடிப் பங்கயமேல்
சீரா யணம்பெறப் பாடுந் திறம்ஓர் சிறிதும் இலேன்
ஆரா யணங்குற நின்றேன் பொன் மன்றத் தமர்ந்தவனே. 34

1747 பேய்கொண்ட நெஞ்சகப் பாழால் வரும்என் பெருந்துயரை
வாய்கொண் டனந்தர் அனந்தர்க்கும் சொல்ல வராதெனில்இந்
நாய்கொண்டுரைக்க வருமோஎன் செய்குவன் நச்சுமரக்
காய்கொண்டு வாழைக் கனியைக்கை விட்ட கடையவனே. 35

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1748 வன்மானங் கரத்தேந்தும் மாமணியே மணிகண்ட மணியே அன்பர்
நன்மானங் காத்தருளும் அருட்கடலே ஆனந்த நடஞ்செய் வாழ்வே
பொன்மானம் பினைப்பொருந்தும் அம்பினைவைத் தாண்டருளும் பொருளேநீஇங்
கென்மானங் காத்தருள வேண்டுதியோ வேண்டாயேல் என்செய்வேனே. 36

கலிநிலைத் துறை

1749 வைவ மென்றெழு கின்றவர் தமக்கும்நல் வாழ்வு
செய்வம் என்றெழு கின்றமெய்த் திருவருட் செயலும்
சைவ மென்பதும் சைவத்திற் சாற்றிடுந் தலைமைத்
தெய்வ மென்பதும் என்னள வில்லை என்செய்வேன்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1750 ஐய ரேஉம தடியன்நான் ஆகில் அடிகள் நீர்என தாண்டவர் ஆகில்
பொய்யனேன் உளத் தவலமும் பயமும் புன்கணும் தவிர்த் தருளுதல் வேண்டும்
தைய லோர்புறம் நின்றுளங் களிப்பச் சச்சி தானந்தத் தனிநடம் புரியும்
மெய்ய ரேமிகு துய்யரே தரும விடைய ரேஎன்றன் விழிஅமர்ந் தவரே. 38

ஷ வேறு

1751 எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார் ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினுஞ் சிறியேன் பொய்விழைந் துழல்வேன் புன்மையேன் புலைத் தொழிற் கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன் மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியேன் அம்பலக் கூத்தன் குறிப்பினுக் கென்கட வேனே. 39

கலிவிருத்தம்

1752 பொன் அளிக்கும் நற்புத்தியுந் தந்துநின்
தன்ன ருட்டுணைத் தாண்மலர்த் தியானமே
மன்ன வைத்திட வேண்டும் எம் வள்ளலே
என்னை நான்பல கால்இயங்கி யம்பலே. 40

1753 தாயும் தந்தையும் சற்குரு நாதனும்
ஆயும் தெய்வமும் நீஎன் றறிந்தனன்
பாயும் மால்விடை ஏறும் பரமனே
நீயும் கைவிட என்னை நினைத்தியோ. 41

ஷ வேறு

1754 ஒழியா மயல்கொண் டுழல்வேன் அவமே
அழியா வகையே அருள்வாய் அருள்வாய்
பொழியா மறையின் முதலே நுதல்ஏய்
விழியாய் விழியாய் வினைதூள் படவே. 42

ஆசிரியத்தாழிசை

1755 உலகெ லாம்நிறைந் தோங்கு பேரருள் உருவமாகி எவ்வுயிரும் உய்ந்திட
இலகு வானொளி யாம்மணி மன்றிடை என்றும்நின்றே
அலகில் ஆனந்த நாடகஞ் செய்யும் அம்பொற் சேவடிக் கபயம் என்னையும்
திலக நீவிழை வாய்நட ராசசி காமணியே. 43

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1756 என்னிருகண் காள்உமது பெருந்தவம்எப் புவனத்தில் யார்தான் செய்வர்
முன்னிருவர் காணாமல் அலைந்தனரால் இனுங்காண முயலா நின்றார்
நன்னிருபர் தொழுதேத்தும் அம்பலத்தே ஓரிடத்தோர் நாள் ஆதித்தர்
பன்னிருவர் ஒளிமாற்றும் பரஒளியைப் பார்த்துயர்ந்தீர் பண்பினீரே. 44

1757 சேணாடர் முனிவர்உயர் திசைமுகன்மால் உருத்திரன் அத் திரளோர் சற்றும்
காணாத காட்சியைநான் கண்டேன்சிற் றம்பலத்தின் கண்ணே பன்னாள்
ஆணாகப் பிறந்தடியேன் அருந்தவம்என் புரிந்தேனோ அறிகிலேன் முன்
பேணாத பிறப்பெல்லாம் பிறப்பலஇப் பிறப்பே என் பிறப்பாம் அந்தோ. 45

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1758 இருளற ஓங்கும் பொதுவிலே நடஞ்செய் எங்குரு நாதன்எம் பெருமான்
அருளெனும் வடிவங் காட்டிஒண் முகத்தே அழகுறும் புன்னகை காட்டித்
தெருளுற அருமைத் திருக்கையால் தடவித் திருமணி வாய்மலர்ந் தருகில்
பொருளுற இருந்தோர் வாக்களித் தென்னுள் புகுந்தனன் புதுமை ஈதந்தோ.

ஷ வேறு

1759 பொன்என்கோ மணிஎன்கோ புனிதஒளித் திரள்என்கோ பொற்பின் ஓங்கும்
மின்என்கோ விளக்கென்கோ விரிசுடர்க்கோர் சுடர்என்கோ வினைய னேன்யான்
என்என்கோ என்என்கோ எம்பெருமான் திருமேனி இருந்த வண்ணம்
முன்என்கோ தறுதவத்தால் கண்டுகளித் திடப்பெற்றேன் முக்கண்மூர்த்தி. 47

1760 வஞ்சகர்க்கெல் லாம் முதலாய் அறக்கடையாய் மறத்தொழிலே வலிக்கும்பாவி
நெஞ்சகத்துன் மார்க்கனைமா பாதகனைக் கொடியேனை நீச னேனை
அஞ்சல் எனக் கருணைபுரிந் தாண்டு கொண்ட அருட்கடலை அமுதைத் தெய்வக்
கஞ்சமல ரவன்நெடுமாற் கரும்பொருளைப் பொதுவினில்யான் கண்டுய்ந்தேனே. 48

கட்டளைக் கலித்துறை

1761 நாதாபொன் அம்பலத் தேஅறி வானந்த நாடகஞ்செய்
பாதா துரும்பினும் பற்றாத என்னைப் பணிகொண்டெல்லாம்
ஓதா துணர உணர்த்தி உள்ளே நின்றுளவு சொன்ன
நீதா நினைமறந் தென்நினைக் கேன் இந்த நீணிலத்தே. 49

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1762 கந்த நாண்மலர்க் கழலிணை உளத்துறக் கருதுகின்ற றவர்க்கெல்லாம்
பந்த நாண்வலை அவிழ்த்தருள் சிதம்பரை பரம்பரையுடன் ஆடும்
அந்த நாள் மகிழ் வடைபவர் உளர்சிலர் அவர்எவர் எனில் இங்கே
இந்த நாள்முறை திறம்பலராய் உயிர்க் கிதம்செயும் அவர்அன்றே. 50

திருச்சிற்றம்பலம்

95. அறநிலை விளக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

1763 மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில் கண்விழித்து வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி இறந்தவரை எழுப்புகின்ற உறுவ னேனும்
கருவாணை யுறஇரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங் கருத்தனேல் எங்
குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை ஞானிஎனக் கூறொ ணாதே.[1]

96. அருள்நிலை விளக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1764 மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக் கில்லை என்றார் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனஉட் பொங்கிவழி கின்றேன்ஓர் புதுமை அன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னநகர் நண்பர்களே செப்பக் கேளீர்
நெய்விளக்கே போன்றொரு தண்ணீர் விளக்கும் எரிந்ததுசந் நிதியின் முன்னே.[2]

1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு வரைந்த திருமுகமொன்றின் தொடக்கத்தில் பெருமான் இப்பாடலை எழுதியருளியுள்ளார்.

2. கருங்குழியில் பெருமான் திருவறையில் தண்ணீரால் விளக்கெரிந்த அற்புதத்தைக் குறிக்கும் இப்பாடல் பெருமான் சென்னை நண்பர்களுக்கு எழுதிய திருமுகமொன்றன்பாற்பட்டது போலும். பெருமான் கையெழுத்திலுள்ள ஏட்டுச் சுவடியொன்றிலும் காணப்படுவதாக ஆ.பா. குறிக்கிறார். தொ. வே. 1867 பதிப்பு இதனையும் மருவாணைப் பெண்ணாக்கி என்னும் பாடலையும் இரண்டாந் திருமுறையில் சேர்த்துப் பதிப்பித்துள்ளார்.

97. திருமருந்தருள் நிலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1765 பனகஅணைத் திருநெடுமால் அயன்போற்றப் புலவரெலாம் பரவ ஓங்கும்
கனகமணி அம்பலத்தே பெரியமருந் தொன்றிருக்கக் கண்டேன் கண்டேன்
அனகநடத் ததுசச்சி தானந்த வடிவதுபே ரருள்வாய்ந் துள்ள
தெனகமமர்ந் திருப்பதெல்லாம் வல்லதுபேர் நடராசன் என்ப தம்மா. 1

1766 திருநெடுமால் அயன்தேடத் துரியநடு ஒளித்ததெனத் தெளிந்தோர்சொல்லும்
ஒருகருணை மருந்துதிரு அம்பலத்தே இருந்திடக்கண் டுவந்தேன் அந்தோ
அருவுருவங் கடந்ததுபே ரானந்த வடிவது நல்லருள் வாய்ந் துள்ள
திருமையும்நன் களிப்பதெல்லாம் வல்லதுபேர் நடராசன் என்ப தம்மா. 2

திருச்சிற்றம்பலம்

98. திருவருள் விலாசம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1767 ஆண்டவன் நீயாகில் உனக் கடியனும்நா னாகில்
அருளுடையாய் இன்றிரவில் அருள் இறையாய் வந்து
நீண்டவனே முதலியரும் தீண்டரிதாம் பொருளின்
நிலைகாட்டி அடிமுடியின் நெறிமுழுதும் காட்டி
வீண்டவளே காலையில்நீ விழித்தவுடன் எழுந்து
விதிமுடித்துப் புரிதிஇது விளங்கும்எனப் புகல்வாய்
தாண்டவனே அருட்பொதுவில் தனிமுதலே கருணைத்
தடங்கடலே நெடுந்தகையே சங்கரனே சிவனே. 1

1768 திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக்காப் பதனால்
திருவுளங்காட் டியநாளில் தெரிந்திலன் இச்சிறியேன்
பெருநெறி என் உளத்திருந்து காட்டிய நாள் அறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை இதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியில் எனதுகரத் துவந்தளித்த நாளில்
உணராத உளவைஎலாம் ஒருங்குணர்ந்து தெளிந்தேன்
தெருணெறிதந் தருளும்மறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிமகிழ் திருநடத்தெள் ளமுதே. 2

திருச்சிற்றம்பலம்

99. சிவ சிதம்பர சங்கீர்த்தனம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்[1]

அருட்பெருஞ்ஜோதி

1769 உலக முஞ்சரா சரமும் நின்றுநின்
றுலவு கின்றபே ருலகம் என்பதும்
கலகம் இன்றி எங்கணு நிறைந்த சிற்
கனம்விளங்குசிற் ககனம் என்பதும்
இலக ஒன்றிரண் டெனல் அகன்றதோர்
இணையில் இன்பமாம் இதயம் என்பதும்
திலகம் என்றநங் குருசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். 1

1770 வரமு றுஞ்சுதந் தரசு கந்தரும்
மன மடங்குசிற் கனநடந்தரும்
உரமு றும்பதம் பெற வழங்குபே
ரொளி நடந்தரும் வெளி விடந்தரும்
பரமு றுங்குணங் குறிக டந்தசிற்
பரம மாகியே பரவு மாமறைச்
சிரமு றும்பரம் பரசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். 2

1771 நித்தி யம்பரா பரநி ராதரம்
நிர்க்கு ணஞ்சதா நிலய நிட்களம்
சத்தி யம்கனா கனமி குந்ததோர்
தற்ப ரம்சிவம் சமர சத்துவம்
வித்தி யஞ்சுகோ தயநி கேதனம்
விமலம் என்றுநால் வேத முந்தொழும்
சித்தி யங்குசிற் கனசி தம்பரம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். 3

1772 அருள் அளித்து மெய்யன்பர் தம்மை உள்
ளங்கை நெல்லிபோல் ஆக்கு கின்றதும்
பொருள் அளித்து நான் மறையின் அந்தமே
புகலு கின்றதோர் புகல் அளிப்பதும்
வெருள் அளித்திடா விமல ஞானவான்
வெளியி லேவெளி விரவி நிற்பதாம்
தெருள் அளிப்பதும் இருள் கெடுப்பதும்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். 4

1. கட்டளைக் கலிப்பா. தொ. வே. 1, 2. ச.மு.க. எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்தம். ஆ. பா.

1773 பெத்த முஞ்சதா முத்தியும் பெரும்
பேத மாயதோர் போத வாதமும்
சுத்த முந்தெறா வித்த முந்தரும்
சொரூப இன்பமே துய்க்கும் வாழ்க்கையும்
நித்த முந்தெரிந் துற்ற யோகர் தம்
நிமல மாகிமெய்ந் நிறைவு கொண்டசிற்
சித்த முஞ்செலாப் பரம ராசியம்
சிவசி தம்பரம் சிவசி தம்பரம். 5

திருச்சிற்றம்பலம்

100. அம்மைதிருப்பதிகம்

பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1774 உலகின் உயிர் வகைஉவகை யுறஇனிய அருளமுதம்
உதவும் ஆனந்த சிவையே
உவமைசொல அரியஒரு பெரியசிவ நெறிதனை
உணர்த்துபே ரின்ப நிதியே
இலகுபர அபரநிலை இசையும் அவரவர் பருவம்
இயலுறு உளங்கொள் பரையே
இருமைநெறி ஒருமையுற அருமைபெறு பெருமைதனை
ஈந்தெனை அளித்த அறிவே
கலகமுறு சகசமல இருளகல வெளியான
காட்சியே கருணை நிறைவே
கடகரட விமலகய முகஅமுதும் அறுமுகக்
கநஅமுதும் உதவு கடலே
அலகில்வளம் நிறையும் ஒரு தில்லையம் பதிமேவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே. 1

1775 கற்பவை எலாங்கற்றுள் உணர்பவை எலாமனக்
கரிசற உணர்ந்து கேட்டுக்
காண்பவை எலாங்கண்டு செய்பவை எலாஞ்செய்து
கருநெறி அகன்ற பெரியோர்
பொற்பவை எலாஞ்சென்று புகல்பவை எலாங்கொண்டு
புரிபவை எலாம் புரிந்துன்
புகழவை எலாம் புகழ்ந் துறுமவை எலாம் உறும்
போதவை எலாம் அருளுவாய்
நிற்பவை எலாம் நிற்ப அசைபவை எலாம் அசைய
நிறைபவை எலாஞ்செய் நிலையே
நினைபவை எலாம் நெகிழ நெறி அவை எலாம் ஓங்கும்
நித்தியா னந்த வடிவே
அற்புடைய அடியர் புகழ் தில்லையம் பதிமருவும் 2
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே.

1776 இக்கணம் இருந்த இம்மெய்யென்ற பொய்க்கூரை
இனிவரு கணப்போ திலே
இடியா திருக்குமோ இடியுமோ என்செய்கோம்
என்செய்கோம் இடியும் எனில்யாம்
தெக்கணம் நடக்கவரும் அக்கணம் பொல்லாத
தீக்கணம் இருப்ப தென்றே
சிந்தைநைந் தயராத வண்ணம் நல்அருள் தந்த
திகழ் பரம சிவசத்தியே
எக்கணமும் ஏத்தும் ஒரு முக்கணி பரம்பரை
இமாசல குமாரி விமலை
இறைவிபை ரவிஅமலை எனமறைகள் ஏத்திட
இருந்தருள் தருந் தேவியே
அக்கணுதல் எம்பிரான் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 3

1777 பொய்யாத மொழியும் மயல் செய்யாத செயலும் வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும்உட் பிரியாத சாந்தமும்
புந்திதள ராத நிலையும்
எய்யாத வாழ்வும் வேறெண்ணாத நிறைவும் நினை
என்றும் மறவாத நெறியும்
இறவாத தகவும் மேற் பிறவாத கதியும் இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது குவியாது குமையாது மணம்வீசு
கோமளத் தெய்வ மலரே
கோவாத முத்தமே குறையாத மதியமே
கோடாத மணி விளக்கே
ஐயான னம்கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 4

1778 பவமான எழுகடல் கடந்துமேற் கதியான
பதிநிலை அணைந்து வாழப்
பகலான சகலமுடன் இரவான கேவலப்
பகையுந் தடாத படிஓர்
தவமான கலனில் அருள் மீகாமனால் அலது
தமியேன் நடத்த வருமோ
தானா நடக்குமோ என்செய்கேன் நின்திருச்
சரணமே சரணம் அருள்வாய்

உவமான மற்றபர சிவமான சுத்தவெளி
உறவான முத்தர் உறவே
உருவான அருவான ஒருவான ஞானமே
உயிரான ஒளியின் உணர்வே
அவமான நீக்கிஅருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 5

1779 சூரிட்ட நடையில் என் போரிட்ட மனதை நான்
சொல்லிட்ட முடன் அணைத்துத்
துன்றிட்ட மோனம் எனும் நன்றிட்ட அமுதுண்டு
சும்மா இருத்தி என்றால்
காரிட்டி தற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலேன் அம்மம் மஓர்
கணமேனும் நில்லாது பொல்லாது புவியில்
கறங்கெ னச்சுழல் கின்றதே.
தாரிட்ட நீஅருள் சீரிட்டி டாய்எனில்
தாழ்பிறவி தன்னில் அதுதான்
தன்னைவீழ்த் துவதன்றி என்னையும் வீழ்த்தும்இத்
தமியனேன் என் செய்குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 6

1780 மாயை எனும் இரவில்என் மனையகத் தேவிடய
வாதனை எனுங்கள் வர்தாம்
வந்துமன அடிமையை எழுப்பி அவனைத்தமது
வசமாக உளவு கண்டு
மேயமதி எனும் ஒரு விளக்கினை அவித்தெனது
மெய்ந்நிலைச் சாளி கைஎலாம்
வேறுற உடைத்துள்ள பொருள் எலாம் கொள்ளைகொள
மிகநடுக் குற்று நினையே
நேயம்உற ஓவாது கூவுகின் றேன் சற்றும்
நின்செவிக் கேற இலையோ
நீதிஇலை யோதரும நெறியும் இலை யோஅருளின்
நிறைவும் இலையோ என் செய்கேன்
ஆயமறை முடிகின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 7

1781 வெவ்வினைக் கீடான காயம்இது மாயம்என
வேத முதல் ஆகமம் எலாம்
மிகுபறை அறைந்தும் இதுவெயில் மஞ்சள் நிறம்எனும்
விவேகர் சொற் கேட்டறிந்தும்
கவ்வைபெறு கடலுலகில் வைரமலை ஒத்தவர்
கணத்திடை இறத்தல் பலகால்
கண்ணுறக் கண்டும் இப்புலை உடலின் மானம்ஓர்
கடு அளவும் விடுவ தறியேன்
எவ்வம் உறுசிறியனேன் ஏழைமதி என்னமதி
இன்னமதி என்றுணர் கிலேன்
இந்தமதி கொண்டுநான் எந்தவகை அழியாத
இன்பநிலை கண்டு மகிழ்வேன்
அவ்வியம் அகற்றி அருள் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 8

1782 ஒளிமருவும் உனது திருவருள் அணுத் துணையேனும்
உற்றிடில் சிறுதுரும்பும்
உலகம் படைத்தல் முதல் முத்தொழில் இயற்றும் என
உயர்மறைகள் ஓர் அனந்தம்
தெளிவுற முழக்க அது கேட்டுநின் திருவடித்
தியானம் இல்லா மல்அவமே
சிறுதெய்வ நெறிசெல்லும் மானிடப் பேய்கள்பால்
சேராமை எற்க ருளுவாய்
களிமருவும் இமயவரை அரையன் மகள் எனவருங்
கருணைதரு கலப மயிலே
கருதும் அடியவர் இதய கமலமலர் மிசைஅருட்
கலைகி ளரவளர் அன்னமே
அளிநறைகொள் இதழிவனை தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 9

1783 நீறணிந் தொளிர்அக்க மணிதரித் துயர்சைவ
நெறி நின்றுனக்கு உரியஓர்
நிமலமுறும் ஐந்தெழுத் துள்நிலையு றக்கொண்டு
நின்னடிப் பூசை செய்து
வீறணிந் தென்றும் ஒரு தன்மைபெறு சிவஞான
வித்தகர்ப தம்பரவும் ஓர்
மெய்ச்செல்வ வாழ்க்கையில் விருப்பமுடை யேன்இது
விரைந்தருள வேண்டும் அமுதே

பேறணிந் தயன்மாலும் இந்திரனும் அறிவரிய
பெருமையை அணிந்த அமுதே
பிரசமலர் மகள் கலைசொல் மகள்விசய மகள்முதல்
பெண்கள் சிரம் மேவும் மணியே
ஆறணிந் திடுசடையர் தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே. 10

திருச்சிற்றம்பலம்

101. கலைமகள் திருப்பதிகம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1784 தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கும் அம்மனையைச் சாந்தம் பூத்த
குவளைமலர்க் கண்ணாளைப் பெண்ணாளும் பெண்ணமுதைக் கோதி லாத
பவள இதழ்ப் பசுங்கொடியை நான்முகனார் நாஓங்கும் பாவை தன்னைக்
கவளமத கயக்கொம்பின் முலையாளைக் கலைமாதைக் கருது வோமே. 1

1785 சங்கம்வளர்ந் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச் சரச்சுவதி தன்னை அன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி உணர்வளிக்கும் கலைஞானத் தோகை தன்னைத்
திங்கணுதல் திருவைஅருட் குருவைமலர் ஓங்கியபெண் தெய்வந் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத் தொழுதுபுகழ் சாற்று கிற்பாம். 2

1786 கலைபயின்ற உளத்தினிக்குங் கரும்பினைமுக் கனியைஅருட் கடலைஓங்கும்
நிலைபயின்ற முனிவரரும் தொழுதேத்த நான்முகனார் நீண்ட நாவின்
தலைபயின்ற மறைபயின்று மூவுலகும் காக்கின்ற தாயை வாகைச்
சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி அம்மையைநாம் சிந்திப் போமே. 3

திருச்சிற்றம்பலம்

(ஆனந்தக் களிப்பு)

102. நல்ல மருந்து

சிந்து
திருச்சிற்றம்பலம்
பல்லவி

1787 நல்ல மருந்திம் மருந்து – சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து.

கண்ணிகள்

1788 அருள்வடி வான மருந்து – நம்முள்
அற்புத மாக அமர்ந்த மருந்து
இருளற வோங்கும் மருந்து – அன்பர்க்
கின்புரு வாக இருந்த மருந்து. நல்ல 1

1789 சஞ்சலந் தீர்க்கும் மருந்து – எங்குந்
தானேதா னாகித் தழைக்கும் மருந்து
அஞ்சலென் றாளும் மருந்து – சச்சி
தானந்த மாக அமர்ந்த மருந்து. நல்ல 2

1790 வித்தக மான மருந்து - சதுர்
வேத முடிவில் விளங்கு மருந்து
தத்துவா தீத மருந்து - என்னைத்
தானாக்கிக் கொண்ட தயாள மருந்து. நல்ல 3

1791 பிறப்பை யொழிக்கு மருந்து - யார்க்கும்
பேசப் படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கும் மருந்து - என்னுள்
என்று மதுரித் தினிக்கு மருந்து. நல்ல 4

1792 நானது வாகு மருந்து - பர
ஞான வெளியில் நடிக்கு மருந்து
மோந வடிவா மருந்து - சீவன்
முத்த ருளத்தே முடிக்கு மருந்து. நல்ல 5

1793 புத்தமு தாகு மருந்து - பார்த்த
போதே பிணிகளைப் போக்கு மருந்து
பத்த ரருந்து மருந்து - அநு
பானமுந் தானாம் பரம மருந்து. நல்ல 6

1794 மாலயன் தேடு மருந்து - முன்ன
மார்க்கண்ட ரைக்காக்க வந்த மருந்து
காலனைச் சாய்த்த மருந்து - தேவர்
காணுங் கனவினுங் காணா மருந்து. நல்ல 7

1795 தற்பர யோக மருந்து - உப
சாந்த ருளத்திடைச் சார்ந்த மருந்து
சிற்பர யோக மருந்து - உயர்
தேவரெல் லாந்தொழுந் தெய்வ மருந்து. நல்ல 8

1796 அம்பலத்தாடு மருந்து - பர
மாநந்த வெள்ளத் தழுத்து மருந்து
எம்பல மாகு மருந்து - வேளூர்
என்னுந் தலத்தி லிருக்கு மருந்து. நல்ல 9

1797 சேதப்ப டாத மருந்து - உண்டால்
தேன்போ லினிக்குந் தெவிட்டா மருந்து
பேதப்ப டாத மருந்து - மலைப்
பெண்ணிடங் கொண்ட பெரிய மருந்து. நல்ல 10

1798 ஆர்க்கு மரிதா மருந்து - தானே
ஆதி யனாதியு மான மருந்து
சேர்க்கும் புநித மருந்து - தன்னைத்
தேடுவோர் தங்களை நாடு மருந்து.

1799 புண்ணியர்க் கான மருந்து – பரி
பூரண மாகப் பொருந்து மருந்து
எண்ணிய வின்ப மருந்து – எம
தெண்ணமெல் லாமுடித் திட்ட மருந்து. நல்ல 12

1800 பால்வண்ண மாகு மருந்து – அதில்
பச்சை நிறமும் படர்ந்த மருந்து
நூல்வண்ண நாடு மருந்து – உள்ளே
நோக்குகின் றோர்களை நோக்கு மருந்து. நல்ல 13

1801 பார்க்கப் பசிபோ மருந்து – தன்னைப்
பாராத வர்களைச் சேரா மருந்து
கூர்க்கத் தெரிந்த மருந்து – அநு
கூல மருந்தென்று கொண்ட மருந்து. நல்ல 14

1802 கோதிலா தோங்கு மருந்து – அன்பர்
கொள்ளைகொண் டுண்ணக் குலாவு மருந்து
மாதொரு பாக மருந்து – என்னை
வாழ்வித்த என்கண் மணியா மருந்து. நல்ல 15

1803 ஏக வுருவா மருந்து – மிக்க
ஏழைக ளுக்கும் இரங்கு மருந்து
சோகந் தவிர்க்கு மருந்து – பரஞ்
சோதியென் றன்பர் துதிக்கு மருந்து. நல்ல 16

1804 கோமளங் கூடு மருந்து – நலங்
கொடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மருந்து
நாமள வாத மருந்து – நம்மை
நாமறி யும்படி நண்ணு மருந்து. நல்ல 17

1805 செல்வந் தழைக்கு மருந்து – என்றுந்
தீரா வினையெலாந் தீர்த்த மருந்து
நல்வந் தனைகொள் மருந்து – பர
நாதாந்த வீட்டினுள் நண்ணு மருந்து. நல்ல 18

1806 வாய்பிடி யாத மருந்து – மத
வாதமும் பித்தமு மாய்க்கு மருந்து
நோய்பொடி யாக்கு மருந்து – அன்பர்
நோக்கிய நோக்கினுள் நோக்கு மருந்து. நல்ல 19

1807 பெண்ணாசை தீர்க்கு மருந்து – பொருட்
பேராசை யெல்லாம் பிளக்கு மருந்து
மண்ணாசை தீர்க்கு மருந்து – எல்லாம்
வல்ல மருந்தென்று வாழ்த்து மருந்து.

1808 என்றுங் கெடாத மருந்து - வரும்
எல்லாப் பிணிக்கு மிதுவே மருந்து
துன்றுஞ் சிவோக மருந்து - நம்மைச்
சூழ்ந்திரு மைக்குந் துணையா மருந்து. நல்ல 21

1809 கண்ணொளி காட்டு மருந்து - அம்மை
கண்டு கலந்து களிக்கு மருந்து
விண்ணொளி யாகு மருந்து - பர
வீடு தருங்கங்கை வேணி மருந்து. நல்ல 22

1810 காயாம்பூ வண்ண மருந்து - ஒரு
கஞ்ச மலர்மிசைக் காணு மருந்து
தாயாங் கருணை மருந்து - சிற்
சதாசிவ மானமெய்ஞ் ஞான மருந்து. நல்ல 23

1811 அளவைக் கடந்த மருந்து - யார்க்கும்
அருமை யருமை யருமை மருந்து
உளவிற் கிடைக்கு மருந்து - ஒன்றும்
ஒப்புயர் வில்லா துயர்ந்த மருந்து. நல்ல 24

1812 தன்மய மாகு மருந்து - சிவ
சாதனர் நெஞ்சில் தழைக்கு மருந்து
சின்மய ஜோதி மருந்து - அட்ட
சித்தியு முத்தியுஞ் சேர்க்கு மருந்து. நல்ல 25

1813 மறந்தா லொளிக்கு மருந்து - தன்னை
மறவா தவருள் வழங்கு மருந்து
இறந்தா லெழுப்பு மருந்து - எனக்
கென்றுந் துணையா யிருக்கு மருந்து. நல்ல 26

1814 கரும்பி லினிக்கு மருந்து - கடுங்
கண்டகர்க் கெல்லாங் கசக்கு மருந்து
இரும்பைக் குழைக்கு மருந்து - பே
ரின்ப வெள்ளத்தே யிழுக்கு மருந்து. நல்ல 27

1815 அணிமணி கண்ட மருந்து - அருள்
ஆநந்த சுத்த வகண்ட மருந்து
பிணிதவி ரின்ப மருந்து - யார்க்கும்
பேசா மருந்தென்று பேசு மருந்து. நல்ல 28

1816 மூவர்க் கரிய மருந்து - செல்வ
முத்துக் குமாரனை யீன்ற மருந்து
நாவிற் கினிய மருந்து - தையல்
நாயகி கண்டு தழுவு மருந்து. நல்ல 29

நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து.

103. பாங்கிமார் கண்ணி

சிந்து
அருட்பெருஞ்ஜோதி

1817 அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமா ரே – அவர்
ஆட்டங்கண்டு நாட்டங் கொண்டேன் பாங்கிமா ரே. 1

1818 ஆடுகின்ற சேவடிமேற் பாங்கிமா ரே – மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமா ரே. 2

1819 இன்பவடி வாய்ச்சபையிற் பாங்கிமா ரே – நட
மிட்டவர்மே லிட்டம் வைத்தேன் பாங்கிமா ரே. 3

1820 ஈனவுடற் கிச்சைவையேன் பாங்கிமா ரே – நட
நேசர்தமை யெய்தும்வண்ணம் பாங்கிமா ரே. 4

1821 உத்தமர்பொன் னம்பலத்தே பாங்கிமா ரே – இன்ப
உருவாகி ஓங்குகின்றார் பாங்கிமா ரே. 5

1822 ஊனவுல கைக்கருதேன் பாங்கிமா ரே – மன்றில்
உத்தமருக் குறவாவேன் பாங்கிமா ரே. 6

1823 கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமா ரே – என்றன்
கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமா ரே. 7

1824 கண்டிலர்நான் படும்பாடு பாங்கிமா ரே – மூன்று
கண்ணுடையா ரென்பாரையோ பாங்கிமா ரே. 8

1825 கன்மனமெல் லாங்கரைப்பார் பாங்கிமா ரே – மனங்
கரையாரென் னளவிலே பாங்கிமா ரே. 9

1826 கள்ளமொன்று மறியேனான் பாங்கிமா ரே – என்னைக்
கைவிடவுந் துணிவாரோ பாங்கிமா ரே. 10

1827 கற்பழித்துக் கலந்தாரே பாங்கிமா ரே – இன்று
கைநழுவ விடுவாரோ பாங்கிமா ரே. 11

1828 கண்டவரெல் லாம்பழிக்கப் பாங்கிமா ரே – என்றன்
கன்னியழித் தேயொளித்தார் பாங்கிமா ரே. 12

1829 காமனைக்கண் ணாலெரித்தார் பாங்கிமா ரே – என்றன்
காதலைக்கண் டறிவாரோ பாங்கிமா ரே. 13

1830 காவலையெல் லாங்கடந்து பாங்கிமா ரே – என்னைக்
கைகலந்த கள்ளரவர் பாங்கிமா ரே. 14

1831 காணவிழைந் தேனவரைப் பாங்கிமா ரே – கொண்டு
காட்டுவாரை யறிந்திலேன் பாங்கிமா ரே. 15

1832 கிட்டவர வேண்டுமென்றார் பாங்கிமா ரே – நான்
கிட்டுமுன்னே யெட்ட நின்றார் பாங்கிமா ரே. 16

1833 கின்னரங்கே ளென்றிசைத்தார் பாங்கிமா ரே – நான்
கேட்பதன்முன் சேட்படுத்தார் பாங்கிமா ரே. 17

1834 கிள்ளையைத்தூ தாவிடுத்தேன் பாங்கிமா ரே – அது
கேட்டுவரக் காணேனையோ பாங்கிமா ரே. 18

1835 கீதவகை பாடிநின்றார் பாங்கிமா ரே – அது
கேட்டுமதி மயங்கினேன் பாங்கிமா ரே. 19

1836 கீழ்மைகுறி யாமலென்னைப் பாங்கிமா ரே – மனக்
கேண்மைகுறித் தாரேயன்று பாங்கிமா ரே. 20

1837 கீடமனை யேனெனையும் பாங்கிமா ரே – அடிக்
கேயடிமை கொண்டாரன்று பாங்கிமா ரே. 21

1838 குற்றமெல்லாங் குணமாகப் பாங்கிமா ரே – கொள்ளுங்
கொற்றவரென் கொழுநர்காண் பாங்கிமா ரே. 22

1839 குற்றமொன்றுஞ் செய்தறியேன் பாங்கிமா ரே – என்னைக்
கொண்டுகுலம் பேசுவாரோ பாங்கிமா ரே. 23

1840 குஞ்சிதப்பொற் பாதங்கண்டாற் பாங்கிமா ரே – உள்ள
குறையெல்லாந் தீருங்கண்டீர் பாங்கிமா ரே. 24

1841 கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமா ரே – நங்கள்
குடிக்கெல்லாங் குலதெய்வம் பாங்கிமா ரே. 25

1842 கூறரிய பதங்கண்டு பாங்கிமா ரே – களி
கொண்டுநிற்க விழைந்தேநான் பாங்கிமா ரே. 26

1843 கூடல்விழைந் தேனவரைப் பாங்கிமா ரே – அது
கூடும்வண்ணம் கூட்டிடுவீர் பாங்கிமா ரே. 27

104. வெண்ணிலாக் கண்ணி

சிந்து
அருட்பெருஞ்ஜோதி

1844 தன்னையறிந் தின்பமுற வெண்ணிலா வே – ஒரு
தந்திரநீ சொல்ல வேண்டும் வெண்ணிலா வே.. 1

1845 நாதமுடி மேலிருந்த வெண்ணிலா வே – அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலா வே. 2

1846 சச்சிதானந் தக்கடலில் வெண்ணிலா வே – நானுந்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலா வே. 3

1847 இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலா வே – நானும்
இருக்கவெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலா வே. 4

1848 தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலா வே – நானுஞ்
சிவமயம தாய்விழைந்தேன் வெண்ணிலா வே. 5

1849 போதநடு வூடிருந்த வெண்ணிலா வே – மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலா வே. 6

1850 ஆருமறி யாமலிங்கே வெண்ணிலா வே – அரு
ளாளர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலா வே. 7

1851 அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலா வே – யெங்கள்
ஐயர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலா வே. 8

1852 வேதமுடி மேலிருந்த வெண்ணிலா வே – மல
வேதையுள வேதுசொல்லாய் வெண்ணிலா வே. 9

1853 குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலா வே – அந்தக்
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலா வே. 10

1854 ஆதியந்த மென்றுரைத்தார் வெண்ணிலா வே – அந்த
ஆதியந்த மாவதென்ன வெண்ணிலா வே. 11

1855 வித்திலாம லேவிளைந்த வெண்ணிலா வே – நீ தான்
விளைந்தவண்ண மேதுசொல்லாய் வெண்ணிலா வே. 12

1856 முப்பொருளு மொன்றதென்பார் வெண்ணிலா வே – அந்த
மூன்றுமொன்றாய் முடிந்ததென்ன வெண்ணிலா வே. 13

1857 நானதுவாய் நிற்கும் வண்ணம் வெண்ணிலா வே – ஒரு
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலா வே. 14

1858 ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலா வே – என்னை
நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலா வே. 15

1859 வாசிவாசி யென்றுரைத்தார் வெண்ணிலா வே – அந்த
வாசியென்ன பேசுகண்டாய் வெண்ணிலா வே. 16

1860 ஐந்தலைப்பாம் பாட்டுகின்றார் வெண்ணிலா வே – அவர்
அம்பலத்தில் நின்றதென்ன வெண்ணிலா வே. 17

1861 ஓரெழுத்தி லைந்துண்டென்பார் வெண்ணிலா வே – அது
ஊமையெழுத் தாவதென்ன வெண்ணிலா வே. 18

1862 அம்பலத்தில் ஆடுகின்றார் வெண்ணிலா வே – அவர்
ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலா வே. 19

1863 அந்தரத்தில் ஆடுகின்றார் வெண்ணிலா வே – அவர்
ஆடும்வகை எப்படியோ வெண்ணிலா வே. 20

1864 அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலா வே – எங்கும்
ஆகிநின்ற வண்ணமென்ன வெண்ணிலா வே. 21

1865 அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலா வே – ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலா வே. 22

1866 அம்பரத்தி லாடுகின்றார் வெண்ணிலா வே – என்னை
ஆட்டுகின்றார் இம்பரத்தே வெண்ணிலா வே. 23

105. நடேசர் கொம்மி

சிந்து
அருட்பெருஞ்ஜோதி
பல்லவி

1867 கொம்மிய டிப்பெண்கள் கொம்மி யடி – இரு
கொங்கை குலுங்கவே கொம்மி யடி. 1

பல்லவி எடுப்பு

1868 நம்மை யாளும் பொன்னம்பல வாணனை
நாடிக் கொம்மிய டியுங்க டி – பதம்
பாடிக் கொம்மிய டியுங்க டி. கொம்மி 1

கண்ணிகள்

1869 காம மகற்றிய தூய னடி – சிவ
காம சவுந்தரி நேய னடி
மாமறை யோதுசெவ் வாய னடி – மணி
மன்றெனு ஞானவா காய னடி. கொம்மி 1

1870 ஆனந்தத் தாண்டவ ராஜ னடி – நமை
ஆட்கொண்டருளிய தேஜ னடி
வானந்த மாமலை மங்கை மகிழ் – வடி
வாளன டிமண வாள னடி. கொம்மி 2

1871 கல்லைக் கனிவிக்குஞ் சுத்த னடி – முடி
கங்கைக் கருளிய கர்த்த னடி
தில்லைச்சி தம்பர சித்த னடி – தேவ
சிங்கம டியுயர் தங்க மடி. கொம்மி 3

1872 பெண்ணொரு பால்வைத்த மத்த னடி – சிறு
பிள்ளைக் கறிகொண்ட பித்த னடி
நண்ணி நமக்கரு ளத்த னடி – மிக
நல்லன டியெல்லாம் வல்ல னடி. கொம்மி 4

1873 அம்பலத் தாடல்செய் ஐய னடி – அன்பர்
அன்புக் கெளிதரு மெய்ய னடி
தும்பை முடிக்கணி தூய னடி – சுயஞ்
சோதிய டிபரஞ் சோதி யடி. கொம்மி 5

106. சிலதாஸம் வாதம்

(தோழியர் உரையாடல்)

சிந்து

அருட்பெருஞ்ஜோதி

1874 தண்மதி யொண்முகப் பெண்மணியே – உன்னைத்
தான்கொண்ட நாயக ராரே டி
அண்மையிற் பொன்னணி யம்பலத் தாடல்செய்
ஐய ரமுத ரழக ரடி. 1

1875 செங்கயற் கண்மட மங்கைநல் லாய் – உன்றன்
செங்கை பிடித்தவ ராரே டி
அங்கய லாரன்று பொன்னம்ப லத்தெங்கள்
ஆனந்தத் தாண்டவ ராஜ னடி. 2

1876 கன்னற் சுவைமொழி மின்னிடை யாய் – உன்னைக்
கன்னி யழித்தவ ராரே டி
உன்னற் கரியபொன் னம்பலத் தாடல்செய்
உத்தம ரானந்த சித்த ரடி. 3

1877 தீமையி லாதபெண் மாமயி லே – உன்னைச்
சேர்ந்து கலந்தவ ராரே டி
தாமமு டிக்கணிந் தம்பலத் தேயின்பத்
தாண்டவஞ் செய்யுஞ் சதுர ரடி. 4

1878 அன்னந டைப்பெண்க ளாரமு தே – உன்னை
அன்பிற் புணர்ந்தவ ராரே டி
துன்ன லுடையின ரம்பலத் தேநின்ற
தூய திருநட ராய ரடி. 5

1879 காரள கப்பெண் சிகாமணி யே – உன்றன்
கற்பை யழித்தவ ராரே டி
பேரள வைக்கடந் தம்பலத் தேநின்ற
பித்தர் பரானந்த நித்த ரடி. 6

திருச்சிற்றம்பலம்

107. தெண்டனிட்டே னென்று சொல்ல டி

(நடேசர்கீர்த்தனை - 1)

சிந்து

பல்லவி

அருட்பெருஞ்ஜோதி

1880 தெண்டனிட்டே னென்று சொல்ல டி – சு வாமிக்குநான்
தெண்டனிட்டே னென்று சொல்ல டி. 1

பல்லவி எடுப்பு

1881 தண்டலை விளங்குந் தில்லைத் தலத்திற்பொன் னம்பலத்தே
கண்டவர் மயங்கவேடங் கட்டியாடு கின்றவர்க்கு தெண்ட 1

கண்ணிகள்

1882 கற்பூர வாசம்வீசும் பொற்பாந்தி ருமுகத்தே
கனிந்தபுன் னகையாடக் கருணைக்க டைக்கணாட
அற்பார்பொன் னம்பலத்தே ஆனந்தத் தாண்டவம்
ஆடிக்கொண் டேயென்னை ஆட்டங்கண் டாருக்கு தெண்ட 1

1883 இழிந்தாலு நம்மையிங்கே யேற்றுவா ரென்றடைந்தால்
ஏற்றுவார் போலேபின்னு மிழியவைப் பாருக்குப்
பழந்தான் நழுவிமெல்லப் பாலில் விழுந்ததென்னப்
பசப்பிப் பசப்பியன்பர் பண்டம் பறிப்பவர்க்கு தெண்ட 2

1884 சுட்டதிரு நீறுபூசித் தொந்தோமென் றாடுவார்க்குத்
தோன்றுதலை மாலையணி தோள்விளங்க வருவார்க்குப்
பிட்டுக்காசைப் பட்டுமாறன் பிரம்படி பட்டவர்க்குப்
பிள்ளைக்கறிக் காசைகொண்ட கள்ளத்தவ வேடருக்கு தெண்ட 3

1885 வாழ்ந்தாரை மேன்மேலும் வாழச்செய் பவருக்கு
மாசுபறித் தவர்கையிற் காசுபறிக் கின்றவர்க்குத்
தாழ்ந்தாரை யடிக்கடி தாழக்காண் பவருக்குத்
தானாகி நானாகித் தனியே நின்றவருக்கு தெண்ட 4

1886 ஆதியந்த நடுவில்லா ஆனந்த நாடருக்கு
அணடருயிர் காத்தமணி கண்டசசி கண்டருக்குச்
சோதிமய மாய்விளங்குந் தூயவடி வாளருக்குத்
தொண்டர்குடி கெடுக்கவே துஜங்கட்டிக் கொண்டவர்க்கு தெண்ட 5

1887 பாட்டுக்காசைப் பட்டுமுன்னம் பரவைதன் வாயிலிற்போய்ப்
பண்புரைத்துத் தூதனென்றே பட்டங்கட்டிக் கொண்டவர்க்கு
வீட்டுக்காசைப் படுவாரை வீட்டைவிட்டுத் துரத்தியே
வேட்டாண்டி யாயுலகில் ஓட்டாண்டி யாக்குவார்க்கு தெண்ட 6

1888 தாய்வயிற்றிற் பிறவாது தானே முளைத்தவர்க்குச்
சாதிகுல மறியாது தாண்டவஞ்செய் கின்றவர்க்கு
ஏய தொழிலருளு மென்பிராண நாயகர்க்கு
ஏமாந்த வரையெல்லாம் ஏமாத்து மீசருக்கு

தெண்டனிட்டே னென்று சொல்ல டி – சு வாமிக்குநான்
தெண்டனிட்டே னென்று சொல்ல டி.

திருச்சிற்றம்பலம்

108. இன்னந் தயவு வரவிலையா

(நடேசர்கீர்த்தனை - 2)

சிந்து

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

1889 இன்னந் தயவுவர விலையா உனக்கென்மீதில்
என்ன வர்மஞ் சொலையா. 1

கண்ணிகள்

1890 அன்னம் பாலிக்குந்தில்லைப் பொன்னம் பலத்திலாடும்
அரசே - அரசே - அரசேயென் றலறவும் இன்னந் 1

1891 சின்னஞ் சிறுவயதி லென்னை யடிமைகொண்ட
சிவமே - சிவமே - சிவமேயென் றலறவும் இன்னந் 2

1892 முன்னம் பிழைபொறுத்தா யின்னம் பொறாதுவிட்டால்
முறையோ - முறையோ முறையோவென் றலறவும் இன்னந் 3

1893 தன்னை யறியாவென்னை யின்ன லுறச்செய்தாயே
தகுமோ - தகுமோ - தகுமோவென் றலறவும் இன்னந் 4

1894 பண்டு மகிழ்ந்தெனையாட் கொண்டு கருணைசெய்த
பரமே - பரமே - பரமேயென் றலறவும் இன்னந் 5

1895 கொண்டு குலம்பேசுவா ருண்டோ வுலகிலெங்கள்
குருவே - குருவே - குருவேயென் றலறவும் இன்னந் 6

இன்னந் தயவுவர விலையா - உனக்கென்மீதில்
என்ன வர்மஞ் சொலையா.

திருச்சிற்றம்பலம்

109. வினா விடை

கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

1896 [1]ஆகமமு மாரணமு மரும்பொருளென் றொருங்குரைத்த
ஏகவுரு வாகிநின்றா ரிவரார்சொல் தோழி

1897 [2]மாகநதி முடிக்கணிந்து மணிமன்று ளனவரத 1
நாகமணி மிளிரநட நவில்வார் காண் பெண்ணே.

திருச்சிற்றம்பலம்

110. நற்றாய் கவன்றது

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1898 திருவருட் புனிதை மகிழநின் றாடும் தில்லைமன் றழகனே என்பாள்
மருவருட் கடலே மாணிக்க மலையே மதிச்சடை வள்ளலே என்பாள்
இருவருக் கரிய ஒருவனே எனக்கிங் கியார்துணை நின்னலா தென்பாள்
வெருவிஉட் குழைவாள் விழிகணீர் துளிப்பாள் வெய்துயிர்ப் பாள்என்றன் மின்னே. 1

தாழிசை

1899 ஓடுவாள் தில்லைத் திருச்சிற்றம் பலம்என் றுருகுவாள் உணர்விலள் ஆகித்
தேடுவாள் திகைப்பாள் தியங்குவாள் ஐயோ தெய்வமே தெய்வமே என்பாள்
பாடுவாள் பதைப்பாள் பதறுவாள் நான்பெண் பாவி காண்பாவிகாண் என்பாள்
வாடுவாள் மயங்கி வருந்துவாள் இருந்து வல்வினை யேன்பெற்ற மகளே. 2

1900 உலகெலாந் தழைப்பப் பொதுவினில் ஓங்கும் ஒருதனித் தெய்வம் என்கின்றாள்
இலகுபே ரின்ப வாரிஎன் கின்றாள் என்னுயிர்க் கிறைவன்என் கின்றாள்
அலகிலாக் கருணை அமுதன்என் கின்றாள் அன்பர்கட் கன்பன் என்கின்றாள்
திலகவா ணுதலாள் இவ்வணம் புலம்பித் தியக்கமுற் றழுங்குகின் றாளே. 3

1901 திருஎலாம் அளிக்கும் தெய்வம் என்கின்றாள் திருச்சிற்றம் பலவன் என்கின்றாள்
உருஎலாம் உடைய ஒருவன் என்கின்றாள் உச்சிமேல் கரங்குவிக் கின்றாள்
கருஎலாங் கடந்தாங் கவன் திருமேனி காண்பதெந் நாள்கொல்என் கின்றாள்
மருஎலாம் மயங்கும் மலர்க்குழல் முடியாள் வருந்துகின்றாள் என்றன் மகளே. 4

1902 மின்இணைச் சடில விடங்கன்என் கின்றாள் விடைக்கொடி விமலன்என் கின்றாள்
பொன்இணை மலர்த்தாள் புனிதன்என் கின்றாள் பொதுவிலே நடிப்பன்என் கின்றாள்
என்இணை விழிகள் அவன்திரு அழகை என்றுகொல் காண்பதென் கின்றாள்
துன்இணை முலைகள் விம்முற விடைபோல் துவள்கின்றாள் பசியபொற் றொடியே. 5

1903 கருங்களிற் றுரிபோர்த் தம்பலத் தாடும் கருணைஎங் கடவுள் என் கின்றாள்
பெருங்களி துளும்ப வடவனத் தோங்கும் பித்தரில் பித்தன்என் கின்றாள்
ஒருங்களி மிழற்றும் குழலினார் என்போல் உறுவரோ அவனைஎன் கின்றாள்
தருங்களி உண்டாள் போல்கின்றாள் நாணும் தவிர்க்கின்றாள் என்அருந் தவளே.

1. ஆகமமு 2. மாகநதி இந்த 2 பாடல் தொ.வே. 1867 பதிப்பு பாடல் எண்ணிக்கை இரண்டாக உள்ளது.

1904 மன்றிடை நடிக்கும் மணாளனை அல்லால் மதிப்பனோ பிறரைஎன் கின்றாள்
வன்துயர் நீக்கும் அவன்திரு வடியை[1] மறப்பனோ கணமும்என் கின்றாள்
ஒன்றுமில் லவன்என் றுரைக்கினும் எல்லாம் உடையவன் ஆகும் என் கின்றாள்
பொன்றுதல் பிறழ்தல் இனியுறேன் என்றே பொற்றொடி பொங்குகின்றாளே. 7

1905 திருத்தகு தில்லைத் திருச்சிற்றம் பலத்தே தெய்வம்ஒன் றுண்டெமக்கென்பாள்
பெருத்தகுங் குமப்பொற் கலசவாண் முலையார் பேசுக பலபல என்பாள்
மருத்தகு குழலாள் மனமொழி உடலம் மற்றவும் அவன்கழற் கென்பாள்
குருத்தகு குவளைக் கண்ணின்நீர் கொழிப்பாள் குதுகுலிப் பாள்பசுங் கொடியே. 8

1906 அம்பலத்தாடும் அழகனைக் காணா தருந்தவும் பொருந்துமோ என்பாள்
கம்பமுற் றிடுவாள் கண்கள்நீர் உகுப்பாள் கைகுவிப்பாள் உளங் கனிவாள்
வம்பணி முலைகள் இரண்டும்நோக் கிடுவாள் வள்ளலைப் பரிகிலீர் என்பாள்
உம்பரன் தவஞ்செய் திடுமினீர் என்பாள் உயங்குவாள் மயங்குவாள் உணர்வே. 9

திருச்சிற்றம்பலம்

111. சல்லாப லகரி

கலிநிலைத்துறை[1]

திருச்சிற்றம்பலம்

1907 சுந்தர நீறணி சுந்தரர் நடனத் தொழில்வல்லார்
வந்தனர் இங்கே வந்தனம் என்றேன் மாதேநீ
மந்தணம் இதுகேள் அந்தனம் இலநம் வாழ்வெல்லாம்
அந்தரம் என்றார் என்னடி அம்மா அவர்சூதே. 1

1908 நம்பல மாம்என நன்மனை புக்கார் நடராஜர்
எம்பல மாவீர் எம்பெரு மானீ ரேஎன்றேன்
வம்பல மடவாய் எம்முடை இன்ப வாழ்வெல்லாம்
அம்பலம் என்றார் என்னடி அம்மா அவர்சூதே. 2

திருச்சிற்றம்பலம்

1. வடிவை - ஊரனடிகள் 1971 பதிப்பு, ஆ. பா பதிப்பு 1933

112. வேட்கைக் கொத்து

தலைமகள் பாங்கியொடு கூறல்
எண்சீர்க் கழிநெடிலடிச் சந்த விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1909 விண்படைத்த பொழிற்றில்லை[1] அம்பலத்தான் எவர்க்கும்
மேலானான் அன்பருளம் மேவுநட ராஜன்
பண்படைத்த எனைஅறியா இளம்பருவந் தனிலே
பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்களெல்லாம் அவமதித்தே வலது
பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சிஎனல் ஆனேன்
கண்படைத்தும் குழியில்விழக் கணக்கும் உண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழீ.[2] 1

1910 சீத்தமணி அம்பலத்தான் என்பிராண நாதன்
சிவபெருமான் எம்பெருமான் செல்வநட ராஜன்
வாய்த்தஎன்னை அறியாத இளம்பருவந் தனிலே
மகிழ்ந்துவந்து மாலையிட்டான் மறித்தும்முகம் பாரான்
ஆய்த்தகலை கற்றுணர்ந்த அணங்கனையார் தமக்குள்
ஆர்செய்த போதனையோ ஆனாலும் இதுகேள்
காய்த்தமரம் வளையாத கணக்கும்உண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழீ. 2

1911 என்னுயிரில் கலந்துகலந் தினிக்கின்ற பெருமான்
என்இறைவன் பொதுவில்நடம் இயற்றும் நடராஜன்
தன்னைஅறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான்
தனை அறிந்த பருவத்தே எனை அறிய விரும்பான்
பின்னை அன்றி முன்னும் ஒரு பிழைபுரிந்தேன் இல்லை
பெண்பரிதா பங்காணல் பெருந்தகைக்கும் அழகோ
கன்னல்என்றால் கைக்கின்ற கணக்கும்உண்டோ அவன்றன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழீ. 3

1. இறுக்கம் இரத்தின முதலியார்க்கு 26-11-1866இல் வரைந்த திருமுகத்தில் விண்படைத்த பொழிற்றில்லை அம்பலத்தான் எவர்க்கு மேலானன் அன்பருள மேவு நடராஜன் எனல் வேண்டும் என வள்ளற்பெருமான் திருத்தமொன்றை அருளியுள்ளார்கள். திரு அருட்பா உரைநடைப்பகுதி, எனினும் 1867 தொ. வே. முதற் பதிப்பில் விண்படைத்த புகழ்த்தில்லை என்றே அச்சாகியுள்ளது. பின்வந்த பதிப்புகளிலும் அவ்வாறே. ஆ. பா. மட்டும் பெருமானின் திருத்தத்தைப் பின்பற்றி விண் படைத்த பொழிற்றில்லை எனப் பதிப்பித்துள்ளார்.

2. தோழி - ச.மு.க பதிப்பு

1912 தெருளமுதத் தனியோகர் சிந்தையிலும் ஞானச்
செல்வர்அறி விடத்தும்நடஞ் செய்யும்நட ராஜன்
அருளமுதம் அளிப்பன்என்றே அன்றுமணம் புணர்ந்தான்
அளித்தறியான் அணுத்துணையும் அனுபவித்தும் அறியேன்
மருளுடையான் அல்லன் ஒரு வஞ்சகனும் அல்லன்
மனம்இரக்கம் மிகஉடையான் வல்வினையேன் அளவில்
இருளுடையார் போலிருக்கும் இயல்பென்னை அவன்றன்
இயல்பறிந்தும் விடுவேனோ இனித்தான்என் தோழீ. 4

1913 சின்மயமாம் பொதுவினிலே தன்மயமாய் நின்று
திருநடஞ்செய் பெருங்கருணைச் செல்வநட ராஜன்
என்மயம்நான் அறியாத இளம்பருவந் தனிலே
என்னைமணம் புரிந்தனன்ஈ தெல்லாரும் அறிவார்
இன்மயம்இல் லாதவர்போல் இன்றுமணந் தருளான்
இறைஅளவும் பிழைபுரிந்தேன் இல்லைஅவன் இதயம்
கன்மயமோ அன்றுசுவைக் கனிமயமே என்னும்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழீ. 5

1914 எண்குணத்தான் எல்லார்க்கும் இறைவன்எல்லாம் வல்லான்
என்அகத்தும் புறத்தும்உளான் இன்பநட ராஜன்
பெண்குணத்தை அறியாத இளம்பருவந் தனிலே
பிச்சேற்றி மணம்புரிந்தான் பெரிதுகளித் திருந்தேன்
வண்குணத்தால் அனுபவம்நான் அறியநின்ற பொழுதில்
வந்தறியான் இன்பம் ஒன்றும் தந்தறியான் அவனும்
வெண்குணத்தான் அல்லன்மிகு நல்லன்எனப் பலகால்
விழித்தறிந்தும் விடுவேனோ விளம்பாய்என் தோழீ. 6

1915 பொய்யாத புகழுடையான் பொதுவில்நடம் புரிவான்
புண்ணியர்பால் நண்ணியநற் புனிதநட ராஜன்
கொய்யாத அரும்பனைய இளம்பருவந் தனிலே
குறித்துமணம் புரிந்தனன் நான் மறித்தும்வரக் காணேன்
செய்யாத செய்கைஒன்றும் செய்தறியேன் சிறிதும்
திருவுளமே அறியும்மற்றென் ஒருஉளத்தின் செயல்கள்
நையாத என்றன்உயிர் நாதன் அருட்பெருமை
நானறிந்தும் விடுவேனோ நவிலாய்என் தோழீ. 7

1916 கண்ணணையான் என்னுயிரில் கலந்துநின்ற கணவன்
கணக்கறிவான் பிணக்கறியான் கருணைநட ராஜன்
தண்ணனையாம் இளம்பருவத் தன்னில்எனைத் தனித்துத்
தானேவந் தருள்புரிந்து தனிமாலை புனைந்தான்
பெண்ணனையார் கண்டபடி பேசவும்நான் கூசாப்
பெருமையொடும் இருந்தேன்என் அருமைஎலாம் அறிந்தான்
உண்ணனையா வகைவரவு தாழ்த்தனன் இன் றவன்றன்
உளம்அறிந்தும் விடுவேனோ உரையாய்என் தோழீ.

1917 ஊன்மறந்த உயிரகத்தே ஒளிநிறைந்த ஒருவன்
உலகமெலாம் உடையவன்என் னுடையநட ராஜன்
பான்மறந்த சிறியஇளம் பருவமதின் மாலைப்
பரிந்தணிந்தான் தெரிந்ததனிப் பருவமிதிற் பரியான்
தான்மறந்தான் எனினும்இங்கு நான்மறக்க மாட்டேன்
தவத்தேறி அவத்திழியச் சம்மதமும் வருமோ
கோன்மறந்த குடியேபோல் மிடியேன்நான் அவன்றன்
குணம் அறிந்தும் விடுவேனோ கூறாய்என் தோழீ. 9

1918 தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே
தலைவரெலாம் வணங்கநின்ற தலைவன்நட ராசன்
இனித்தசுகம் அறிந்துகொளா இளம்பருவந் தனிலே
என்புருவ நடுஇருந்தான் பின்புகண்டேன் இல்லை
அனித்தம்இலா இச்சரிதம் யார்க்குரைப்பேன் அந்தோ
அவன்அறிவான் நான் அறிவேன் அயலறிவார் உளரோ
துனித்தநிலை விடுத்தொருகால் சுத்தநிலை அதனில்
சுகங்கண்டும் விடுவேனோ சொல்லாய்என் தோழீ. 10

திருச்சிற்றம்பலம்

113. முன்ன முடிபு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1919 வெறுத்துரைத்தேன் பிழைகளெலாம் பொறுத்தருளல் வேண்டும்
விளங்கறிவுக் கறிவாகி மெய்ப்பொதுவில் நடிப்போய்
கறுத்துரைத்தார் தமக்கும் அருள் கனிந்துரைக்கும் பெரிய
கருணைநெடுங் கடலேமுக் கண்ணோங்கு கரும்பே
மறுத்துரைப்ப தெவன்அருள்நீ வழங்குகினும் அன்றி
மறுத்திடினும் உன்னையலால் மற்றொருசார் பறியேன்
செறுத்துரைத்த உரைகளெலாம் திருவருளே என்று
சிந்திப்ப தல்லாமல் செய்வகைஒன் றிலனே. 1

1920 மிகுத்துரைத்தேன் பிழைகளெலாம் சகித்தருளல் வேண்டும்
மெய்யறிவின் புருவாகி வியன்பொதுவில் நடிப்போய்
தொகுத்துரைத்த மறைகளும்பின் விரித்துரைத்தும் காணாத்
துரியநடு வேஇருந்த பெரியபரம் பொருளே
பகுத்துரைத்த பயன்உரைக்கோர் பொருளாகி விளங்கும்
பரஞ்சுடரே பரம்பரனே பசுபதியே அடியேன்
வகுத்துரைப்ப தெவன்அருள்நீ வழங்குகினும் அன்றி
மறுத்திடினும் உன்னையலால் மற்றொருசார் பிலனே. 2

1921 முன்னவனே சிறியேன்நான் சிறிதும்அறி யாதே
முனிந்துரைத்த பிழைபொறுத்துக் கனிந்தருளல் வேண்டும்
என்னவனே என்துணையே என்உறவே என்னை
ஈன்றவனே என்தாயே என்குருவே எனது

மன்னவனே என்னுடைய வாழ்முதலே என்கண்
மாமணியே மணிமிடற்றோர் மாணிக்க மலையே
அன்னவனே அம்பலத்துள் ஆடுகின்ற அமுதே
ஆறணிந்த சடையாய்யான் வேறுதுணை இலனே. 3

1922 சினந்துரைத்தேன் பிழைகளெலாம் மனம்பொறுத்தல் வேண்டும்
தீனதயா நிதியேமெய்ஞ் ஞானசபா பதியே
புனைந்துரைப்பார் அகத்தொன்றும் புறத்தொன்றும் நினைத்தே
பொய்யுலகர் ஆங்கவர்போல் புனைந்துரைத்தேன் அலன்நான்
இனந்திருத்தி எனையாட்கொண் டென்னுள்அமர்ந் தெனைத்தான்
எவ்வுலகும் தொழநிலைமேல் ஏற்றியசற் குருவே
கனந்தருசிற் சுகஅமுதம் களித்தளித்த நிறைவே
கருணைநடத் தரசேஎன் கண்ணிலங்கு மணியே. 4

1923 ஊடுதற்கோர் இடங்காணேன் உவக்கும்இடம் உளதோ
உன்னிடமும் என்னிடமும் ஓர்இடம் ஆதலினால்
வாடுதற்கு நேர்ந்திடிலோ மாட்டாமை யாலும்
மனம்பிடியா மையினாலும் சினந்துரைத்தேன் சிலவே
கூடுதற்கு வல்லவன் நீ கூட்டிஎனைக் கொண்டே
குலம்பேச வேண்டாம்என் குறிப்பனைத்தும் அறிந்தாய்
நாடுதற்கிங் கென்னாலே முடியாது நீயே
நாடுவித்துக் கொண்டருள்வாய் ஞானசபா பதியே. 5

1924 என்னுளம்நீ கலந்துகொண்டாய் உன்னுளம்நான் கலந்தேன்
என்செயல்உன் செயல் உன்றன் இருஞ்செயல்என் செயலே
பின்னுளநான் பிதற்றல்எலாம் வேறுகுறித் தெனைநீ
பிழைஏற்ற நினைத்திடிலோ பெருவழக்கிட் டிடுவேன்
அன்னையினும் தயவுடையாய் அப்பன்எனக் கானாய்
அன்றியும்என் ஆருயிருக் காருயிராய் நிறைந்தாய்
மன்னுமணிப் பொதுநடஞ்செய் மன்னவனே கருணை
மாநிதியே எனக்கருள்வாய் மனக்கலக்கந் தவிர்த்தே. 6

1925 எணங்குறியேன் இயல்குறியேன் ஏதுநினை யாதே
என்பாட்டுக் கிருந்தேன் இங் கெனைவலிந்து நீயே
மணங்குறித்துக் கொண்டாய்நீ கொண்டதுதொட் டெனது
மனம்வேறு பட்டதிலை மாட்டாமை யாலே
கணங்குறித்துச் சிலபுகன்றேன் புகன்றமொழி எனது
கருத்தில் இலை உன்னுடைய கருத்தில்உண்டோ உண்டேல்
குணங்குறிப்பான் குற்றம்ஒன்றுங் குறியான்என்ற றவோர்
கூறிடும்அவ் வார்த்தை இன்று மாறிடுமே அரசே. 7

1926 மனம்பிடியா மையினாலோ மாட்டாமை யாலோ
மறதியினா லோஎனது வருத்தமத னாலோ
தினம்பிடியா மயக்காலோ திகைப்பாலோ பிறர்மேல்
சினத்தாலோ எதனாலோ சிலபுகன்றேன் இதனைச்

சினம்பிடியாத் தேவர்திரு வுளம்பிடியா தெனவே
சிந்தைகளித் திருக்கின்றேன் திருவுளத்தை அறியேன்
இனம்பிடியா மையும் உண்டோ உண்டெனில் அன்புடையார்
ஏசல்புகழ் பேசல்என இயம்புதல்என் உலகே. 8

1927 நாயகரே உமதுவசம் நான் இருக்கின்ற றதுபோல்
நாடியதத் துவத்தோழி நங்கையர் என் வசத்தே
மேயவர் ஆகாமையினால் அவர்மேல்அங் கெழுந்த
வெகுளியினால் சிலபுகன்றேன் வேறுநினைத் தறியேன்
தூயவரே வெறுப்புவரில் விதிவெறுக்க என்றார்
சூழவிதித் தாரைவெறுத் திடுதல் அவர் துணிவே
தீயவர் ஆயினும் குற்றம் குறியாது புகன்றால்
தீமொழி அன்றெனத்தேவர் செப்பியதும் உளதே. 9

1928 குற்றம்ஒரு சிறிதெனினும் குறித்தறியேன் வேறோர்
குறைஅதனால் சிலபுகன்றேன் குறித்தறியேன் மீட்டும்
சற்றுமனம் வேறுபட்ட தில்லைகண்டீர் எனது
சாமிஉம்மேல் ஆணைஒரு சதுரும்நினைத் தறியேன்
பெற்றவளும் உற்றவரும் சுற்றமும்நீர் என்றே
பிடித்திருக்கின் றேன்பிறிதோர் வெடிப்பும்உரைத் தறியேன்
இற்றைதொடுத் தென் அளவில் வேறுநினை யாதீர்
என்னுடைய நாயகரே என்ஆசை இதுவே. 10

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் திருமுறை முற்றிற்று

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா

தனிப் பாசுரங்கள் பகுதி

குறிப்பு : இத்தனிப்பாசுரப்பகுதி திரு. ஆ. பாலகிருஷ்ணப்பிள்ளை தூயபதிப்பாளர் அவர்களின் 1933 ம் வருடம் – எண் – 6 புத்தகத்தில் தனிப்பாசுரப்பகுதி என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. இதனை அடியொற்றியே கலை முறை வரிசைப்படி இப்பதிப்பு வெளியிடப்படுகிறது.

திரு அருட்பா
தனிப்பாசுரப் பகுதி

ஆ. பாலகிருஷ்ணன் பிள்ளைப் பதிப்பில் தனிப்பாசுரப் பகுதியின் முன்னுரை

இப்பகுதியில் தொகுத்திருக்கும் பாசுரங்கள் பலதிறப்பட்டவை. முதலாவது, என்று சுட்டிக் காட்டியிருக்கும் ஆறாவது திருமுறையில் சேர்க்கக் கூடாதவை ; வைத்தியநாதர் பதிகம் போல்வன. இரண்டாவது, முதல் ஐந்து திருமறைகள் வகுக்கப்பட்ட போது அவற்றில் சேராது தவறியவை ; சண்முகர் கொம்மி போல்வன. மூன்றாவது, முதல் ஐந்து திருமுறைகளில்கூட சேர்க்கக் கூடாதவை ; குடும்பகோஷம் போல்வன. இப்பாசுரங்களில் சில 1876 – ஆம் ஆண்டு புதுவை ஸ்ரீ அவோக்கா கோவிந்தசாமி நாயக்கர் அவர்களாலும், சில 1885 – ஆம் ஆண்டு வேலூர் ஸ்ரீ பத்மநாப முதலியார் அவர்களாலும், சில 1891 – ஆம் ஆண்டு ஆடூர் ஸ்ரீ சபாபதி சிவாசாரியர் அவர்களாலும், சில 1892 – ஆம் ஆண்டு பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்களாலும், சில 1896 – ஆம் ஆண்டு பிருங்கிமாநகரம் இராமசாமி முதலியார் அவர்களாலும், சில 1924 – ஆம் ஆண்டு ஸ்ரீ ச.மு. கந்தசாமி பிள்ளை அவர்களாலும் வந்தவையாகும். மற்றவை இப்பகுதியின் மூலமாக முதல் முதல் இப்போது தான் வெளியாகின்றன.

முதல் நான்கு திருமுறைகள் 1867–ஆம் ஆண்டு வெளிவர நேர்ந்ததின் அபூர்வமான காரணங்களைத் திருமுகப் பகுதியைப் படித்துணர்ந்த அன்பர்கள் தெரிந்திருத்தல் கூடும். இறுக்கம் ஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களும் சிவாநந்தபுரம் ஸ்ரீ செல்வராய முதலியார் அவர்களுமே அவற்றை அங்ஙனம் வெளியிடுவதற்கு வழிகாட்டியாக இருந்த பேரன்பர்கள் ஆவர். தொழுவூர் ஸ்ரீ வேலாயுத முதலியார் அவர்கள் 1880 – ஆம் ஆண்டு ஐந்தாம் திருமுறையை வெளிப்படுத்திய போதும், 1882–ஆம் ஆண்டிலும், 1887–ஆம்ஆண்டிலும் முறையே ஐந்தாம் திருமுறையையும் முதல் நான்கு திருமுறைகளையும் இரண்டாம் முறை அச்சிட்ட போதும்–அல்லது, ஆறாவது திருமுறைப் பாசுரங்களை அவர்கள் ஆராய்ந்து தொகுத்து வைப்பதற்காவது – மேற்கண்ட இவ்விரு அன்பர்களது இன்றியமையாத துணை அவர்களுக்குக் கிடைத்திருந்தால், அவர்கள் இப் பகுதியில் கண்ட பாசுரங்களை ஏதோ ஒரு நல்ல வகையில் சீர் செய்யா திருந்திருக்க மாட்டார்கள். ஆனால், இப்போது இவற்றை ஆறாவது திருமுறையின் பாற் படுத்தலாவது, அல்லது முதல் ஐந்து திருமுறைகளிலும், மேலே எடுத்துக் காட்டியாறு அவர்கள் விளக்கியிருக்கும் ஆறாவது திருமுறையிலும் முறை பிறழ்ச்சியை உண்டாக்கும் என்றஞ்சியே, இப் பதிப்பில் இவை தனிப் பாசுரங்கள் என்ற ஓர் பகுதியாகத் தொகுக்கப் பட்டிருக்கின்றன.

இப் பகுதியிலுள்ள பாசுரங்களில் அநேகம் சுவாமிகளால் பிறர் பொருட்டு அல்லது பிறர் வேண்டுகோட் கிணங்கி இயற்றப் பட்டனவாகும். ஆதலால், இவற்றை அவர்களது அகப்புற அநுபவமாகிய திவ்விய மங்கள ரூபத்தின் வரம்பற்ற அழகைத் தெரிவிக்கும் சாயல்கள் எனக்கொண்டு ஓதுபவர்கள், அவர்களது அகமுகப்பட்ட ஆன்மாநுபவமாகிய ஆனந்த சாகரத்தின் திவலைகளாகும் திருமுறைப் பாசுரங்களை ஓதி உணர்வதற்குரிய பக்குவம் அடைவார்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

ஆ. பாலகிருஷ்ணன் பிள்ளைப் பதிப்பு
2 / 2 / 1933 ஆம் ஆண்டு

திரு. ஆ. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்களின் எச்சரிக்கை

எதிர்காலத் திரு அருட்பாப் பதிப்பாசிரியர்களுக்கு ஓர் எச்சரிக்கை

அடிகளாரின் ஆக்கங்கள் பெரிதும் எளிய சொற்களால் ஆகி இருப்பதால், அவற்றைப் பார்க்கும் சிலர், அவற்றைப்போல் தாமும் செய்தல் கூடும் என்று கருதியிருக்கிறார்கள். இங்ஙனம் முன்னி முயன்றவர்களில் தலைமை தாங்கி நிற்பவர் வடலூரில் சிலகாலம் தங்கியிருந்த ஆதிநாராயணயதி என்பவர் ஆவர். அவர் அடிகளாரது மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் என்னும் உலகெலாம் என்னும் பெரிய புராணச் சொல் தொடர்க்கு உரிய நீண்ட, ஒப்புயர்வற்ற, முன் கண்டறியாத, வடமொழிச் சொற்கள் நிரம்பிய தத்துவ உரை முழுவதையும், வட மொழிச் சொற்களை வடமொழி எழுத்துக்களிலும் தென்மொழிச் சொற்களை அவ்வவற்றிற்கு நேரான வடமொழிச் சொற்களிலும், அப்படி அப்படியே எழுதி வைத்திருக்கிறார். வள்ளலாரது குடும்ப கோஷம் என்னும் சன்மார்க்க சாதன நூல் ஒன்று 19 படலங்களில் எழுத எண்ணியது இரண்டு படலங்கள் மட்டுமே எழுதப்பட்டிருக்கிறது என்பது தெரிந்தோம். எஞ்சி நிற்கும் 17 படலங்களையும் தாம் எழுதி முடிப்பதாக இந்த ஆதிநாராயணயதி முயன்று சுமார் 100 பாடல்கள் வரன் முறையின்றிப் பாடி வைத்திருக்கிறார், தவிர, கீர்த்தனைப் பகுதியில் உள்ள அடிகளாருடைய ஆடவாரீர் அணைய வாரீர் முதலிய ஆடற்பாக்களைப் பின்பற்றி, அந்தந்த மெட்டில் பாடி வைத்தும் இருக்கிறார். இவர் வடலூரில் வசிந்த போது, அங்கிருந்த அடிகளார் தொண்டர் ஆடூர் சபாபதி சிவாசாரியரை நேசித்து, அன்னாரிடம் இருந்த திருஅருட்பாப்படி ஏடுகளைப் பார்த்து, அவ்வேடுகளிலேயே மேற் சொன்னவற்றை எழுதியும் வைத்திருக்கிறார். ஆதலால், இப்படி ஏடுகளைப் பார்க்க நேரும் பிற்காலத்தவர் ஒருவர், இவர் எழுத்துக்களையும் பாடல்களையும், எச்சரிக்கை இன்மையான், திருஅருட்பாக்களோடு ஒருகால் சேர்க்கவும் கூடும் என்று அஞ்சி, இது எழுதத் துணிந்தேன். இவை போன்று, பிறர் செய்த பிற ஆக்கங்களும் எங்கேயாவது இக்காலம் ஒளிந்து கொண்டிருந்து, பின் ஒரு காலம் தலைகாட்டலாம்.

எனக்குத் தெரிந்த முதியோர் ஒருவர் இருந்தார். அவர் அருட்பா அன்பர். அவர் அருட்பாவைப் பாடிக் களிப்பதோடு நில்லாமல், தாமே கண்ணே பொன்னே மணியே என்று வாய் ஓயாது பலநாழிகை பாடிக்கொண்டிருக்கக் கண்டிருக்கின்றேன். அப்பாட்டினைக் கேட்ட பொது மக்களில் சிலர் அன்னார் பாடுவது அடிகளாரது அருட்பா என்றே ஏமாந்து, எளியேனிடமும் சொல்லி இருக்கிறார்கள். அங்ஙனம் பாடப்பட்டவைகளை அவரே எழுதி வைத்திருக்கிறாரோ யென்னவோ மேலும், வடலூர்ப் பக்கம் உள்ள ஊர் ஒன்றில் பெரியார் ஒருவர் வடலூர் சாலையோடு எதுகை கொள்ளும் சோலை ஒன்று ஒரு நிலையம் அமைத்து, அதன் சார்பாக எளிய பாக்கள் பலப்பல அமைத்திருக்கிறார் போலும். அவற்றில் சில அச்சிடப்பட்டு அடியேன் பார்வைக்குச்சில ஆண்டுகட்குமுன் வந்தன. இதுகாலை அப்படி தென்படவில்லை. அவற்றையும் அருட்பா என்று இரண்டொருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இவையும் இவைபோல்வன பிறவும், இனி ஒரு காலத்தில், அருட்பா என்ற பெயரில் அடிகளாரது நூலொடு கலந்து, அதன் தூய்மையையும் நேர்மையையும் தெளிவையும் சிதைக்க நேரிடுமோ என்று பெரும்பேர் அச்சங் கொள்கிறேன். எளியேனுக்குப் பின்வர இருக்கும் இவ்வருட்பாப் பதிப்பின் பதிப்பாசிரியர்கள், இவ்வகையான பாடல்களை, இப்பதிப்பில் கண்ட அடிகளாருடைய-செம் பொருள் சிறப்பினவாய-தெய்வத் திரு அருட்பாக்களோடு, எக்காரணத்தை முன்னிட்டும் கலந்து, முறை பிறழ்ச்சியை உண்டாக்கிவிட மாட்டார்கள் என்று திருஅருள் துணைமையை நம்பி வாழ்கிறேன். அங்ஙனம் கலத்தல் எக்காரணத்தைக் கொண்டும் எவர் பதிப்பிலும் நேர்ந்து விடக் கூடாது என்றும் திருஅருளை வழுத்துகிறேன்.

இவை தவிர்த்து, அடிகளாருடைய சிறு விண்ணப்பத்தை ஏறக்குறைய அறுபது ஆண்டுகட்கு முன் அச்சிட்டவர் ஒருவர், அவற்றில் தாமாக சில வாக்கியங்களையும் சொற்களையும் சேர்த்து அவர் கோரிய பொய்ப் பொருளை அவ்விண்ணப்பம் தெரிப்பது போல் எண்பித்திருக்கிறார். இந்தப் பொய்ம்மையால் அருட்பா அன்பர்கள் ஏமாறாதிருக்கும் பொருட்டு இந்த அரிய விண்ணப்பம் முழுவதையும் - அடிகளார் தெய்வத் திரு எழுத்தில் உள்ளதை போட்டோ எடுத்து, இப்பதிப்பின் 2-ஆம் புத்தகமாகிய வசனப் பகுதியில் 160 சேர்த்திருக்கிறேன். இவ்வகையான பொய்ம்மைகளால் அடிகளார் கருத்தும் சொல்லும் வேறுபடாமல் இருக்கும் படி, இப் பதிப்பின் கறந்தபால் அன்ன தூய்மையும் வாய்மையும் பாதுகாப்பது, அடியேனுக்குப் பின்வரும் இப்பதிப்பின் பதிப்பாசிரியர்களின் முடிமணிக் கடமையாகும். திருஅருள் அவர்களுக்குத் துணை நின்று உதவுமாக.

இந்த நான்கு விண்ணப்ப நகலை அருட்பா பதிப்பகம் தாமிரத்தகடில் நகல் எடுத்து சித்தி வளாகம் நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு

1. தனிப் பாசுரங்கள்[1]

(அருட்பெருஞ்ஜோதி அச்சகம் 1932 பதிப்பு 48 வது அதிகாரம்)
வண்ண விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1929 திருமால் ஆதியர் உள்ளம் கொள்ளும்ஓர் செவ்விய வேலோனே
குருமா மணியே குணமணி யேசுரர் கோவே மேலோனே
கருமா மலம்அறு வண்ணம் தண்அளி கண்டே கொண்டேனே
கதியே பதியே கனநிதி யேகற் கண்டே தண்தேனே
அருமா தவர்உயர் நெஞ்சம் விஞ்சிய அண்ணா விண்ணவனே
அரசே அமுதே அறிவுரு வேமுரு கையா மெய்யவனே
உருவா கியபவ பந்தம் சிந்திட ஓதிய வேதியனே
ஒளியே வெளியே உலகமெ லாம்உடை யோனே வானவனே. 1

1930 கூழுக் கழுவேனோ கோத்தணிகைக் கோவேஎன்
ஊழுக் கழுவேனோ ஓயாத் துயர்ப்பிறவி
ஏழுக் கழுவேனோ என்செய்கேன் என்செய்கேன்
பாழுக் கிறைத்தேன் ஈதுன் செயலோ பார்க்கும்இடம். 2

கட்டளைக் கலிப்பா

1931 சிந்தைக் கும்வழி இல்லைஉன் தன்மையைத்
தெரிதற் கென்னும் திருத்தணி கேசனே
உந்தைக் கும்வழி இல்லைஎன் றால்இந்த
உலகில் யாவர் உனைஅன்றி நீர்மொள்ள
மொந்தைக் கும்வழி இல்லை வரத்திரு
முண்டைக் கும்வழி இல்லை அரையில்சாண்
கந்தைக் கும்வழி இல்லை அரகர
கஞ்சிக் கும்வழி இல்லைஇங் கையனே. 3

இப்பதிகத்தின் முதல் மூன்று பாக்களும் அடிகளாரது கைஎழுத்தில் பேரன்பர் இறுக்கம் இரத்தின முதலியாருடைய திருத்தணிகைப் பதிகக் காகிதப் படியில் காண்கின்றன. இவை மற்ற அன்பரது காகிதப் படியிலும் இருக்கின்றன. நான்காம் பாவிற்கு அடிகளாரது கைஎழுத்தாவது அன்பர்கள் தம் படியாவது கிடைக்கவில்லை. ஆனால் இது நம்பெருமான் அவர்களின் பல்வகைய தனிப்பாடல்கள் என்ற தலைப்பின் கீழ் திரு ஆ. சபாபதி சிவாச்சாரியாரால் 1891 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டிருக்கிறது. ஐந்தாம் பாவானது பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியாரது 1892 ஆம் ஆண்டு திருஅருட்பா பதிப்பில் ஆறாம் திருமுறையில் இறுதியில் மற்று நான்கு பாக்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பதிப்பின் விவரம் இந்நூலில் பின் இணைப்பில் காண்க. ஆறாம் பாவோ எனில், பழைய காகிதப்படி ஒன்றில் "**வள்ளலார் வாக்கு**" என்ற தலைப்போடு பிற்காலத்தில் சேர்த்து இருக்கிறது. இந்த ஆறு பாக்களும் இப்பதிப்பில் ஆறாம் புத்தகமாகிய தனிப் பாசுரப் பகுதியில் "முருகவேல் தனித்திருத் தொண்ட" என்ற தலைப்பில் தொகுத்து 1932 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆ. பா பதிப்பு. அவற்றையும் அவற்றைச் சார்ந்த குறிப்பு களையும் அப்பகுதியின் 44, 45. 46, 47 ஆம் பக்கங்களில் மேலும் பார்த்து அறிக.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1932 கறிபிடித்த ஊன்கடையில் கண்டவர்தம் கால்பிடித்துக் கவ்வும் பொல்லா
வெறிபிடித்த நாய்க்கேனும் வித்தைபயிற் றிடலாகும் வேண்டி வேண்டி
மறிபிடித்த சிறுவனைப்போல் வாத்தியார் [1]மனமறுகி வருந்தத் தங்கள்
குறிபிடித்துக் காட்டுவோர்க் கியாவர்படிப் பிக்கவலார் குமர வேளே. 4

நேரிசை வெண்பா

1933 தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதுமியாம்
ஓதா தவமே யுழனெஞ்சே - மீதாத்
ததிதி யெனமயிலிற் றானாடி நாளுந்
திதிதி தருந்தணிகைத் தே. 5

1934 ஓரிரண்டா நற்றணிகை உத்தமன்றன் ஓங்கற்றோள்
தாரிரண்டார் போனின்ற தையன்மீர்-வாரிரண்டாத்
தொய்யி லழிக்குந் துணைமுலையா ளுள்ளகத்தா
மைய லழிக்கு மருந்து. 6

1935 ஏலுந் தயங்கென்னு மேவற் கெதிர்மறைதான்
ஆலுந் தொழிற்கேவ லாகுமோ-மாலுந்தி
மாற்றுந் தணிகையர்க்கு மாமயின்மேல் நாடோறுந்
தோற்றுந் தணிகையன்பொற் றோள். 7

1936 நின்னிலையை[2] என்னருளால் நீயுணர்ந்து நின்றடங்கில்
இந்நிலையை அந்நிலையே எய்துதிகாண் - முன்னிலையி
னிற்குருவி னாட்டாதே என்றுரைத்தான் ஏரகம் வாழ்
சற்குருவென் சாமிநா தன். 8

1. மனமுறுகி - ஊரனடிகள் பதிப்பு, மற்ற ஏனைய பதிப்பு மனமறுகி - ச.மு.க பதிப்பு

2. ஒருகால் திருச்சிற்றம்பல ஞானியார் வள்ளலாரிடம் மிகுந்த அன்பு பாராட்டித் தமக்கு உபதேசஞ் செய்யும்படி வேண்டினர். துறவறம் பூண்ட ஞானியார்க்கு வெள்ளை வேட்டிக்காரராகிய பிள்ளைப் பெருமான் தாம் உபதேசம் செய்தல் கூடாது. எனத் தடுத்தும் மீண்டும் மீண்டும் ஞானியார் வற்புறுத்தவே இதைப் பாடிக் கொடுத்தனர் என்று ஸ்ரீ ச. மு. கந்தசாமி பிள்ளை அவர்களால் இதன் வரலாறு குறிக்கப்பட்டிருக்கிறது. - திருவருட்பா, 1924-ஆம் ஆண்டுப் பதிப்பு, இராமலிங்க சுவாமிகள் சரித்திரக் குறிப்புகள் பக்கம் 17. குறிப்பு : 1932 ஆ. பா. பதிப்பு பக்கம் : 37

தனித்திருத் தொடை கீழ் உள்ள 1,2,3,4,5,6,7,8 - ஆம் திருப்பாசுரங்கள், திரு அருட்பா - திருத் தணிகைப் பகுதியிலும், அப் பகுதியின் முமுமையை ஒருவாறு கருதி, 1957 - ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதியின் 1933-ஆம் ஆண்டு முதற் பதிப்புப்படி அவற்றின் அடிக் குறிப்புகளோடு அத் தனிப் பாசுரங்கள் இங்கு இடம் பெற்றிருக்கின்றன.

1932 அருட்பெருஞ்ஜோதி அச்சகம் சென்னை முதற்பதிப்பு (பாடல் : தனித்திருத் தொடையில் சேர்க்கப்பட்டுள்ளது) 15, 16, 17, 18 பக்கம் - 182

1972 ஊரனடிகள் பதிப்பில் 52 தனித்திருத் தொடை என்ற பதிகத்தில் பக்கம் 100ல் 7 பாடல் இணைக்கப்பட்டுள்ளது.

2007 தெய்வநிலையம் பதிப்பில் பக்கம் 571 ல் பதிகம் 57 பொது (தனித்திருமாலை) 5ம் திருமுறையில் இந்த 8 பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளது.

2. தனித்திருமாலை

கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

1937 சோடில்லை[1] மேல்வெள்ளைச் சொக்காய் இலைநல்ல சோமன்இல்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப் பருமன்இல்லை
வீடில்லை யாதொரு வீறாப்பும் இல்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்ச மேஎந்த ஆற்றினில் நண்ணினையே. 1

1938 வன்மூட்டைப் பூச்சியும் புன்சீலைப் பேனும்தம் வாய்க்கொள்ளியால்
என்மூட்டைத் தேகம் சுறுக்கிட வேசுட் டிராமுழுதும்
தொன்மூட் டையினும் துணியினும் பாயினும் சூழ்கின்றதோர்
பொன்மூட்டை வேண்டிஎன் செய்கேன் அருள்முக்கட் புண்ணியனே. 2

நேரிசை வெண்பா

1939 மான்முடிமே லும்கமலத் தான்முடிமே லும்தேவர்
கோன்முடிமே லும்போய்க் குலாவுமே – வான்முடிநீர்
ஊர்ந்துவலம் செய்தொழுகும் ஒற்றியூர்த் தியாகரைநாம்
சார்ந்துவலம் செய்கால்கள் தாம். 3

குறள் வெண் செந்துறை[1]

1940 சத்திமான் என்பர்நின் தன்னை ஐயனே
பத்திமான் தனக்கலால் கார்வ தெங்ஙனே. 4

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1941 சோறு வேண்டினும் துகிலணி முதலாம்
சுகங்கள் வேண்டினும் சுகமலாச் சுகமாம்
வேறு வேண்டினும் நினை அடைந் தன்றி
மேவொ ணாதெனும் மேலவர் உரைக்கோர்
மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே உன்றன் மனக்குறிப் பறியேன்
சேறு வேண்டிய கயப்பணைக் கடற்சார்
திகழும் ஒற்றியூர்ச் சிவபரஞ் சுடரே. 5

சோடில்லை மேல்வெள்ளைச் சொக்காயிலை நல்ல சோமனில்லைப்
பாடில்லை கையிற் பணமில்லை தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறாப்பு மில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்சமே யெந்தவா றினி நண்ணுவையே.

ச.மு.க. 1924 சரித்திரக் குறிப்புகள் பக் : 12

1. இந்தப் பாசுரம் திருவொற்றியூர்ப் பதிகச் சுவடிகள் இரண்டில் 2-ஆம் திருமுறை நெஞ்சொடு நெகிழ்தல் என்ற பதிகத்தில், வாடக் கற்றாய் நேராவமுக்குத் துணியாகில் என்ற தொடக்கங்களுடைய பாசுரங்களுக்கு இடையே, பதிகத்தின் மூன்றாவது செய்யுளாக எழுதியிருக்கிறது. இவற்றுள் ஒரு சுவடி அடிகளார் திருக்கை சாத்தியருளியது.
1867, 1887 – ஆம் ஆண்டுத் திரு அருட்பாப் பதிப்புகளில் இப் பா எதனாலேயோ விடுபட்டு, 1892-ஆம் ஆண்டுப் பதிப்பின் இறுதியில் இது ஒரு தனிப்பாசுரமாக முதல் முதல் அச்சாயிருக்கிறது. சென்னைச் சபாபதி முதலியார் வீட்டுத் திருமண அழைப்பிற்கு விடையாக இஃது எழுதப்பட்டது. என்று ச.மு. கந்தசாமிபிள்ளை அவர்களின் 1924-ஆம் ஆண்டுப் பதிப்பில் அடிகளார் சரித்திரச் சுருக்கத்தில் கண்டிருக்கிறது.

மேலே கண்ட விவரங்களை முன்னிட்டு, 1932, 1933-இல் அச்சான இப்பதிப்பின் 5, 6-ஆம் பகுதிகளில் சேர்க்கப்பட்டிருக்கும். இப்பா 1956-இல் அச்சான திருஒற்றியூர்ப் பகுதியிலும் இடம் பெற்றிருக்கிறது. இங்ஙனம் ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளில் அப்போதப் போது கிடைத்த தகவல்களைக் கொண்டு இடம் பெற்றிருப்பவை மிக மிகச் சிறு இனங்களே ஆகும்.

1942 திருமால் வணங்கத் திசைமுகன் போற்றச் சிவமுணர்ந்த
இருமா தவர்தொழ மன்றகத் தாடு மிறைவடிவாக்
குருமா மலர்ப்பிறை வேணியு முக்கணுங் கூறுமைந்து
வருமா முகமுங்கொள் வல்லபை பாகனை வாழ்த்துதுமே. 6

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1943 வெட்டை மாட்டி விடாப்பெருந் துன்பநோய்
விளைவ தெண்ணிலர் வேண்டிச்சென் றேதொழுக்
கட்டை மாட்டிக் கொள்வார்என வேண்டிப்பெண்
கட்டை மாட்டிக் கொள்வார்தங் கழுத்திலே
துட்டை மாட்டின் கழுத்தடிக் கட்டையோ
துணிக்கும் கட்டைய தாம்இந்தக் கட்டைதான்
எட்டை மாட்டி உயிர்விடக் கட்டைமேல்
ஏறும் போதும் இழுக்கின்ற கட்டையே. 7

1944 புண்ணைக் கட்டிக்கொண்டே அதன்மேல்ஒரு
புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும்
பெண்ணைக் கட்டிக்கொள் வார்இவர் கொள்ளிவாய்ப்
பேயைக் கட்டிக் கொண்டாலும் பிழைப்பர்காண்
மண்ணைக் கட்டிக்கொண் டேஅழு கின்றஇம்
மடையப் பிள்ளைகள் வாழ்வினை நோக்குங்கால்
கண்ணைக் கட்டிக்கொண் டூர்வழி போம்கிழக்
கழுதை வாழ்வில் கடைஎனல் ஆகுமே. 8

கட்டளைக் கலிப்பா

1945 உடுக்கவோ ஒரு கந்தைக்கு மேலிலை
உண்ண வோ உணவுக்கும் வழியிலை
படுக்க வோபழம் பாய்க்கும் கதியிலை
பாரில் நல்லவர் பால்சென்று பிச்சைதான்
எடுக்க வோதிடம் இல்லைஎன் பால்உனக்
கிரக்கம் என்பதும் இல்லை உயிரைத்தான்
விடுக்க வோமனம் இல்லைஎன் செய்குவேன்
வெண்பி றைச்சடை வித்தக வள்ளலே. 9

1946 தொடுக்க வோநல்ல சொன்மலர் இல்லைநான்
துதிக்கவோ பத்தி சுத்தமும் இல்லைஉள்
ஒடுக்க வோமனம் என்வசம் இல்லைஊழ்
உற்ற ஆணவ மாதிம லங்களைத்
தடுக்க வோதிடம் இல்லைஎன் மட்டிலே
தயவு தான்நினக் கில்லை உயிரையும்
விடுக்க வோமனம் இல்லைஎன் செய்குவேன்
விளங்கு மன்றில் விளங்கிய வள்ளலே. 10

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

1947 இறகெடுத்த வமணர்குலம் வேரறுத்த சொக்கோ தென்ன ஞாயம்
அறுகெடுத்த[1] சடைமுடிமேல் மண்ணெடுக்க மாட்டாமல் அடிபட் டையோ
பிறகெடுத்தீர் வளையல் விற்றீர் சொற்கேளாப் பிள்ளைகளைப் பெற்றதோஷம்
விறகெடுத்தீர் என்செய்வீர் விதிவசந்தான் யாவரையும் விடாது தானே.

1. அறுகடுத்த சடைமுடிமேல் – ஊரனடிகள் பதிப்பு, ஆ. பா பதிப்பு

கலிவிருத்தம்

1948 சச்சிதா நந்தசிற் சபையில் நாடகம்
பச்சிதாந் திருவுருப் பாவை நோக்கிட
மெச்சிதா காரமா விளைப்பர் மெல்லடி
உச்சிதாழ் குவர்நமக் குடையர் நெஞ்சமே. 12

கட்டளைக் கலித்துறை

1949 தத்தா[1] தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனிநடிப்பா
தத்தா தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனிநடிப்பா
தத்தா தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனிநடிப்பா
தத்தா தனத்தத்தைத் தாவென் றரங்கன் றனஞ்சொல்லுமே. 13

நேரிசை வெண்பா

1950 இம்மை யறையனைய வேசூர மாதருமா
இம்மையுமை யிம்மையையோ என்செய்த – தம்மைமதன்
மாமாமா மாமாமா மாமாமா மாமாமா
மாமாமா மாமாமா மா. 14

1951 ஆவியீ[2] ரைந்தை அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை அகற்றலாம் – ஆவியீர்
ஐந்துறலா மாவியீ ரைந்தறலா மாவியீ
ரைந்திடலா மோரிரண்டோ டாய்ந்து 15

தாழிசை

1952 அருளாலே அருளிறை அருள்கின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
தெருளாலே மருளாலே தெரியாது தெரியும்
திருநட இன்பம்என் றறியாயோ மகளே. 16

1953 அறிவாலே அறிவினை அறிகின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
செறிவாலே பிறிவாலே தெரியாது தெரியும்
திருவருள் உருவம்என் றறியாயோ மகளே. 17

திருச்சிற்றம்பலம்

1. **தத்தா தனத்தைத் தாவென்ற ரங்கன் றனிநடித்தாய்**
தத்தா தனத்தைத் தாவென்ற ரங்கன் றனிநடித்தாய்
தத்தா தனத்தைத் தாவென்ற ரங்கன் றனிநடித்தாய்
தத்தா தனத்தைத் தாவென்ற ரங்கன் றனஞ்சொல்லுமே

ச.மு.க. பதிப்பு 1924 பக் : 625

2. இதன் பொருள் : ஆவி – ஆன்மவக்கரமென்றும், ஈரைந்து – பத்தாகிய அகரத்தை, ஐ – சிவத்திற்கு, அபரத்தே – பின்னாக, வைத்து – பொருந்தி, ஓதில் – ஜெபிக்கில், ஆவியீரந்தை – ஆ என்னும் ஆபத்துகளையும் வி என்னும் விபத்துகளையும், அகற்றலாம் – நீக்கிக் கொள்ளலாம். ஆவி – ஆன்மவியற்கையை, ஈர் – கெடுக்கும், ஐந்து – பஞ்சமலங்களையும், அறலாம் – களைந்து விடலாம், ஆவி – ஆன்மாவுக்குறுதியாய், ஈரைந்து – பத்தியை, உறலாம் – பொருந்தலாம், ஆய்ந்து – சேர்க்கும் வகை தெரிந்து, ஆவி – பிராணனது கலைகள், ஈரைந்து – பத்துடன், ஓர் – ஒரு, இரண்டோடு – இரண்டையுங் கழியாமல், இடலாம் – சேர்த்துக் கட்டிக் கொள்ளலாம்.

ஆறாம் திருமுறை முதற்பதிப்பு 1885

பொழிப்புரை :
ஆன்ம அக்கர மென்னும் பத்தாகிய ய கரத்தை சிவத்திற்குப் பின்னாகப் பொருத்தி செபிக்கில், ஆபத்துக்களையும் விபத்துக்களையும் நீக்கிக் கொள்ளலாம். ஆன்ம இயற்கையைக் கெடுக்கும்பஞ்ச மலங்களையும் களைந்து விடலாம். ஆன்மாவுக்கு உறுதியாய் பத்தியைப் பொருந்தலாம். சேர்க்கும் வகை தெரிந்து பிராணனது கலைகள் பத்துடன் ஒரு இரண்டையுங் கழியாமல் சேர்த்துக் கட்டிக் கொள்ளலாம்.

3. திருப்பள்ளித்தாமம் தாங்கல்

(அருட்பெருஞ்ஜோதி அச்சகம் 1932 பதிப்பு 47 வது அதிகாரம்)
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1954 வெம்பு முயிருக் கோருறவாய் வேளை நமனும் வருவானேல்
தம்பி தமையன் துணையாமோ தனையர் மனைவி வருவாரோ
உம்பர் பரவுந் திருத்தணிகை உயர்மா மலைமே லிருப்பவர்க்குத்
தும்பைக் குடலை எடுக்காமல் துக்க வுடலை எடுத்தேனே. 1

1955 தொல்லைக் குடும்பத் துயரதனில் தொலைத்தே னந்தோ காலமெலாம்
அல்ல லகற்றிப் பெரியோரை யடுத்து மறியேன் அரும்பாவி
செல்வத் தணிகைத் திருமலைவாழ் தேவா உன்றன் சந்நிதிக்கு
வில்வக் குடலை எடுக்காமல் வீணுக் குடலை எடுத்தேனே. 2

1956 அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் அதினினைவாய்க்
கவலைப் படுவ தன்றிசிவ கனியைச் சேரக் கருதுகிலேன்
திவலை யொழிக்குந் திருத்தணிகைத் திருமால் மருகன் திருத்தாட்குக்
குவளைக் குடலை எடுக்காமற் கொழுத்த வுடலை எடுத்தேனே. 3

திருச்சிற்றம்பலம்

4. அருண்மொழி மாலை[1]

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1957 பொதுநின் றருள்வீ ரொற்றியுளீர் பூவுந் தியதென் முலையென்றேன்
இதுவென் றறிநா மேறுகின்ற தென்றா ரேறு கின்றதுதான்
எதுவென் றுரைத்தே னெதுநடுவோ ரெழுத்திட் டறிநீ யென்றுரைத்தார்
அதுவின் றணங்கே யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 1

1958 மருகா வொற்றி வாணர்பலி வாங்க வகையுண் டேயென்றேன்
ஒருகா லெடுத்தேன் காணென்றா ரொருகா லெடுத்துக் காட்டுமென்றேன்
வருகா விரிப்பொன் னம்பலத்துள் வந்தாற் காட்டு வேமென்றார்
அருகா வியப்பா மென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 2

1959 விட்டொற் றியில்வாழ் வீரெவனிவ் வேளை யருள நின்றதென்றேன்
சுட்டுஞ் சுதனே யென்றார்நான் சுட்டி யறியச் சொல்லுமென்றேன்
பட்டுண் மருங்கே நீகுழந்தைப் பருவ மதனின் முடிந்ததென்றார்
அட்டுண் டறியா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 3

1960 வேலை ஞாலம் புகழொற்றி விளங்குந் தேவர் நீரணியும்
மாலை யாதென் றேனையன்மால் மாலை யகற்று மாலையென்றார்
சோலை மலரன் றேயென்றேன் சோலை யேநாந் தொடுத்ததென்றார்
ஆலு மிடையா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 4

1. ஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் மூன்றாந் திருமுறையாக வகுக்கப்பட்டிருக்கும். சுவாமிகளுடைய திருவொற்றியூர்ப் பதிகங்கள் கொண்ட இரண்டு எட்டுப் பிரதிகளில் பாசுரங்கள் கொண்ட இவ் அருண்மொழி மாலை ஓர் தனிப் பதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆ. பா. 1932 பதிப்பு

1961 உயிரு ளுறைவீர் திருவொற்றி யுள்ளீர் நீரென் மேற்பிடித்த
வயிர மதனை விடுமென்றேன் மாற்றா ளலநீ மாதேயாஞ்
செயிர தகற்றுன் முலைப்பதிவாழ் தேவ னலவே டெளியென்றார்
அயிர மொழியா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 5

1962 தண்கா வளஞ்சூழ் திருவொற்றித் தலத்தி லமர்ந்த சாமிநுங்கை
யெண்கார் முகமாப் பொன்னென்றே னிடையிட் டறித லரிதென்றார்
மண்கா தலிக்கு மாடென்றேன் மதிக்குங் கணைவில் லன்றென்றார்
அண்கார்க் குழலா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 6

1963 அலங்கும் புனற்செய் யொற்றியுளீ ரயன்மா லாதி யாவர்கட்கும்
இலங்கு மைகா ணீரென்றே னிதன்முன் னேழ்நீ கொண்டதென்றார்
துலங்கு மதுதா னென்னென்றேன் சுட்டென் றுரைத்தா ராகெட்டேன்
அலங்கற் குழலா யென்னடிவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 7

1964 விண்டு வணங்கு மொற்றியுளீர் மென்பூ விருந்தும் வன்பூவில்
வண்டு விழுந்த தென்றேனெம் மலர்க்கை வண்டும் விழுந்ததென்றார்
தொண்டர்க் கருள்வீர் நீரென்றேன் றோகாய் நாமே தொண்டரென்றார்
அண்டர்க் கரியா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 8

1965 மட்டார் மலர்க்கா வொற்றியுளீர் மதிக்குங் கலைமேல் விழுமென்றேன்
எட்டா மெழுத்தை யெடுக்குமென்றா ரெட்டா மெழுத்திங் கெதுவென்றேன்
உட்டா வகற்று மந்தணர்க ளுறையூர் மாதே யுணரென்றார்
அட்டார் புரங்க ளென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 9

1966 ஒற்றி நகரீர் மனவாசி யுடையார்க் கருள்வீர் நீரென்றேன்
பற்றி யிறுதி தொடங்கியது பயிலு மவர்க்கே யருள்வதென்றார்
மற்றி துணர்கி லேனென்றேன் வருந்தே லுணரும் வகைநான்கும்
அற்றி டென்றா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 10

1967 வான்றோய் பொழிற்கு ழொற்றியுளீர் வருந்தா தணைவே னோவென்றேன்
ஊன்றோ யுடற்கென் றார்தெரிய வுரைப்பீ ரென்றே னோவிதுதான்
சான்றோ ருங்கண் மரபோர்ந்து தரித்த பெயர்க்குத் தகாதென்றார்
ஆன்றோய் விடங்க ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 11

1968 தீது தவிர்க்கு மொற்றியுளீர் செல்ல லறுப்ப தென்றென்றேன்
ஈது நமக்குந் தெரியுமென்றா ரிறையா மோவிங் கிதுவென்றேன்
ஓது மடியர் மனக்கங்கு லோட்டு மியாமே யுணரென்றார்
ஆது தெரியே ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 12

1969 ஒண்கை மழுவோ டனலுடையீ ரொற்றி நகர்வா முத்தமர்நீர்
வண்கை யொருமை நாதரென்றேன் வண்கைப் பன்மை நாதரென்றார்
எண்க ணடங்கா வதிசயங்கா ணென்றேன் பொருளன் றிதற்கென்றார்
அண்கொ ளணங்கே யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே.

1970 ஒருவ ரெனவா ழொற்றியுளீ ருமக்கம் மனையுண் டேயென்றேன்
இருவ ரொருபே ருடையவர்காண் என்றா ரென்னென் றேனென்பேர்
மருவு மீறற் றயலகரம் வயங்கு மிகர மானதென்றார்
அருவு மிடையா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 14

1971 பேரா ரொற்றி யீரும்மைப் பெற்றா ரெவரென் றேனவர்தம்
ஏரார் பெயரின் முன்பினிரண் டிரண்ட கத்தா ரென்றாரென்
நேரா வுரைப்பீ ரென்றேனீ நெஞ்ச நெகிழ்ந்தா லாமென்றார்
ஆரார் சடைய ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 15

1972 தளிநான் மறையீ ரொற்றிநகர் தழைத்து வாழ்வீர் தனிஞான
வொளிநா வரைசை யைந்தெழுத்தா லுவரி கடத்தி னீரென்றேன்
களிநா வலனை யீரெழுத்தாற் கடலில் வீழ்த்தி னேமென்றார்
அளிநாண் குழலா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 16

1973 ஓமூன் றெழிலீ ரொற்றியுளீ ருற்றோர்க் களிப்பீ ரோவென்றேன்
தாமூன் றென்பார்க் கயன்மூன்றுந் தருவே மென்றா ரம்மமிகத்
தேமூன் றினநும் மொழியென்றேன் செவ்வா யுறுமுன் முறுவலென்றார்
ஆமூன் றறுப்பா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 17

1974 மன்னி வளரு மொற்றியுளீர் மடவா ரிரக்கும் வகையதுதான்
முன்னி லொருதா வாமென்றேன் முத்தா வெனலே முறையென்றார்
என்னி லிதுதா னையமென்றே னெவர்க்குந் தெரியு மென்றுரைத்தார்
அன்னி லோதி யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 18

1975 வளஞ்சே ரொற்றி யீருமது மாலை கொடுப்பீ ரோவென்றேன்
குளஞ்சேர் மொழியா யுனக்கதுமுன் கொடுத்தே மென்றா ரிலையென்றேன்
உளஞ்சேர்ந் ததுகா ணிலையன்றோ ருருவு மன்றங் கருவென்றார்
அளஞ்சேர் வடிவா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 19

1976 வீற்றா ரொற்றி யூரமர்ந்தீர் விளங்கு மதனன் மென்மலரே
மாற்றா ரென்றே னிலைகாணெம் மாலை முடிமேற் காணென்றார்
சாற்றாச் சலமே யீதென்றேன் சடையின் முடிமே லன்றென்றார்
ஆற்றா விடையா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 20

1977 புயப்பா லொற்றி யீரச்சம் போமோ வென்றே னாமென்றார்
வயப்பா வலருக் கிறையானீர் வஞ்சிப் பாவிங் குரைப்பதென்றேன்
வியப்பா நகையப் பாவெனும்பா வெண்பா கலிப்பா வுடனென்றார்
அயப்பா லிடையா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 21

1978 தண்ணம் பொழிற்சூ ழொற்றியுளீர் சங்கங் கையிற்சேர்த் திடுமென்றேன்
திண்ணம் பலமேல் வருங்கையிற் சேர்த்தோ முன்னர் தெரியென்றார்
வண்ணம் பலவிம் மொழிக்கென்றேன் வாய்ந்தொன் றெனக்குக் காட்டென்றார்
அண்ணஞ் சுகமே யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே.

1979 உகஞ்சே ரொற்றி யூருடையீ ரொருமா தவரோ நீரென்றேன்
முகஞ்சேர் வடிவே லிரண்டுடையாய் மும்மா தவர்நா மென்றுரைத்தார்
சுகஞ்சேர்ந் தனவும் மொழிக்கென்றேன் றோகா யுனது மொழிக்கென்றார்
அகஞ்சேர் விழியா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 23

1980 ஊரா மொற்றி யீராசை யுடையே னென்றே னெமக்கலது
நேரா வழக்குத் தொடுக்கின்றாய் நினக்கே தென்றார் நீரெனக்குச்
சேரா வணமீ தென்றேன்முன் சேர்த்தீ தெழுதித் தந்தவர்தாம்
ஆரா ரென்றா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 24

1981 வருத்தந் தவரீ ரொற்றியுளீர் மனத்த காத முண்டென்றேன்
நிருத்தந் தருநம் மடியாரை நினைக்கின் றோரைக் கண்டதுதன்
றிருத்தந் தருமுன் னெழுத்திலக்கஞ் சேருந் தூர மோடுமென்றார்
அருத்தந் தெரியே னென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 25

1982 மைய லகற்றீ ரொற்றியுளீர் வாவென் றுரைப்பீ ரோவென்றேன்
துய்ய வதன்மேற் றலைவைத்துச் சொன்னாற் சொல்வே மிரண்டென்றார்
உய்ய வுரைத்தீ ரெனக்கென்றே னுலகி லெவர்க்கு மாமென்றார்
ஐய விடையா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 26

1983 தாவென் றருளு மொற்றியுளீர் தமியேன் மோக தாகமற
வாவென் றுரைப்பீ ரென்றேன்பின் வருமவ் வெழுத்திங் கிலையென்றார்
ஓவென் றுயர்தீர்த் தருளுவதீ தோவென் றேன்பொய் யுரைக்கின்றாய்
ஆவென் றுரைத்தா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 27

1984 வயலா ரொற்றி மேவுபிடி வாதர் நும்பே ரியாதென்றேன்
இயலா யிட்ட நாமமதற் கிளைய நாம மேயென்றார்
செயலார் கால மறிந்தென்னைச் சேர்வீ ரென்றேன் சிரித்துனக்கிங்
கயலா ரென்றா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 28

1985 என்மே லருள்கூர்ந் தொற்றியுளீ ரென்னை யணைய நினைவீரேற்
பொன்மேல் வெள்ளி யாமென்றேன் பொன்மேற் பச்சை யறியென்றார்
மின்மேற் சடையீ ரீதெல்லாம் விளையாட் டென்றே னன்றென்றார்
அன்மேற் குழலா யென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 29

1986 நாலா ரணஞ்சூ ழொற்றியுளீர் நாகம் வாங்கி யென்னென்றேன்
காலாங் கிரண்டிற் கட்டவென்றார் கலைத்தோல் வல்லீர் நீரென்றேன்
வேலார் விழிமாத் தோலோடு வியாளத் தோலு முண்டென்றார்
ஆலார் களத்த ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே. 30

1987 முடியா வளஞ்சூ ழொற்றியுளீர் முடிமே லிருந்த தென்னென்றேன்
கடியா வுள்ளங் கையின்முதலைக் கடிந்த தென்றார் கமலமென
வடிவார் கரத்தி லென்னென்றேன் வரைந்த வதனீ றற்றதென்றார்
அடியார்க் கெளியா ரென்னடியவ் வையர் மொழிந்த வருண்மொழியே.

5. இன்ப மாலை

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

1988 ஒன்றும் பெருஞ்சீ ரொற்றிநக ருள்ளா ருவந்தின் றுற்றனர்யான்
என்றும் பெரியீர் நீர்வருதற் கென்ன நிமித்த மென்றுரைத்தேன்
துன்றும் விசும்பே யென்றனர்நான் சூதா முமது சொல்லென்றேன்
குன்றுங் குடமு மிடையுனது கொங்கை யெனவே கூறினரே. 1

1989 கானார் சடையீ ரென்னிருக்கைக் கன்றும் பசுப்போற் கற்றதென்றேன்
மானார் விழியாய் கற்றதுநின் மருங்குற் கலையு மென்றார்நீர்
தானா ரென்றே னனிப்பள்ளித் தலைவ ரெனவே சாற்றினர்நான்
ஆனா லொற்றி யிருமென்றே னங்கு மிருந்தே னென்றாரே. 2

1990 வானங் கொடுப்பீர் திருவொற்றி வாழ்வீ ரன்று வந்தீரென்
மானங் கெடுத்தீ ரென்றேன்முன் வனத்தார் விடுத்தா ரென்றார்நீர்
ஊனந் தடுக்கு மிறையென்றே னுலவா தடுக்கு மென்றார்மால்
ஏனம் புடைத்தீ ரணையென்பீ ரென்றே னகலா ரென்றாரே. 3

1991 இருமை யளவும் பொழிலொற்றி யிடத்தீர் முனிவ ரிடரறநீர்
பெருமை நடத்தீ ரென்றேனென் பிள்ளை நடத்தி னானென்றார்
தரும மலவிவ் விடையென்றேன் றரும விடையு முண்டென்றார்
கரும மெவன்யான் செயவென்றேன் கருதாண் பாலன் றென்றாரே. 4

1992 ஒசிய விடுகு மிடையாரை யொற்றி யிருந்தே வுருக்குகின்ற
வசியர் மிகநீ ரென்றேனென் மகனே யென்றார் வளர்காமப்
பசிய துடையே னென்றேனுட் பணியல் குலுமப் படியென்றார்
நிசிய மிடற்றீ ராமென்றேன் நீகண் டதுவே யென்றாரே. 5

1993 கலையா ளுடையீ ரொற்றிநின்றீர் காம மளித்தீர் களித்தணையீர்
மலையா ளுமது மனைவியென்றேன் மலைவா ளுனைநான் மருவினென்றார்
அலையாண் மற்றை யவளென்றே னலைவா ளவளு மறியென்றார்
நிலையாண் மையினீ ராவென்றே னீயா வென்று நின்றாரே. 6

1994 சீலம் படைத்தீர் திருவொற்றித் தியாக ரேநீர் திண்மைமிகுஞ்
சூலம் படைத்தீ ரென்னென்றேன் றொல்லை யுலக முணவென்றார்
ஆலம் படுத்த களத்தீரென் றறைந்தே னவளிவ் வானென்றார்
சாலம் பெடுத்தீ ருமையென்றேன் றார மிரண்டா மென்றாரே. 7

1995 ஞால ராதி வணங்குமொற்றி நாதர் நீரே நாட்டமுறும்
பால ராமென் றுரைத்தேனாம் பால ரலநீ பாரென்றார்
மேல ராவந் திடுமென்றேன் விளம்பேல் மகவு மறியுமென்றார்
கோல ராமென் றுரைத்தேன்யாங் கொண்டோ முக்க ணென்றாரே. 8

1. ஸ்ரீ தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால் மூன்றாந் திருமுறையாக வகுக்கப்பட்டிருக்கும். சுவாமிகளுடைய திருவொற்றியூர்ப் பதிகங்கள் கொண்ட இரண்டு எட்டுப் பிரதிகளில் பாசுரங்கள் கொண்ட இவ் இன்ப மாலை ஓர் தனிப் பதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆ. பா. 1932 பதிப்பு

1996 வண்மை தருவீ ரொற்றிநின்று வருவீ ரென்னை மருவீர்நீர்
உண்மை யுடையீ ரென்றேனா முடைப்பேம் வணங்கி னோர்க்கென்றார்
கண்மை யுடையீ ரென்றேனீ களமை யுடையேம் யாமென்றார்
தண்மை யருளீ ரென்றேனாந் தகையே யருள்வ தென்றாரே. 9

1997 ஒன்னார் புரமூன் றெரிசெய்தீ ரொற்றி யுடையீ ருவப்புடனே
யென்னா குலத்தை யோட்டுமென்றே னிடைய ரலநா மென்றுரைத்தார்
பொன்னாற் சடையீ ரென்றேனென் புதிய தேவி மனைவியென்றார்
சொன்னாற் கேள்வி வியப்பென்றேன் சுத்த வியப்பொன் றென்றாரே. 10

1998 கனிமா னிதழி முலைச்சுவடு களித்தீ ரொற்றிக் கடிநகரீர்
தனிமா னேந்தி யென்றேனென் றலைமே லொருமா னேந்தியென்றார்
துனிமாற் றுகிலீ ரெரன்றேனற் றுகில்கோ வணங்கா ணென்றாரென்
பனிமால் வரையீ ரென்றேனென் பனிமால் வரைகா ணென்றாரே. 11

திருச்சிற்றம்பலம்

6. ஆனந்த நடனப் பதிகம்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

1999 பரசிவா னந்தபரி பூரண சதானந்த
பாவனா தீதமுக்த
பரமகை வல்யசை தன்யநிஷ் களபூத
பௌதிகா தாரயுக்த
சர்வமங் களசச்சி தானந்த சௌபாக்ய
சாம்பவ விநாசரகித
சாஸ்வத புராதர நிராதர அபேதவா
சாமகோ சரநிரூபா
துருவகரு ணாகர நிரந்தர துரந்தர
சுகோதய பதித்வநிமல
சுத்தநித் தியபரோ க்ஷாநுபவ அபரோக்ஷ
சோமசே கரசொரூபா
அரஹர சிவாயநம என்றுமறை ஓலமிட்
டணுவளவும் அறிகிலாத
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 1

2000 ஜோதிமணி யேஅகண் டானந்த சைதன்ய
சுத்தமணியே அரியநல்
துரியமணி யேதுரிய முங்கடந் தப்பால்
துலங்குமணி யேஉயர்ந்த
ஜாதிமணி யேசைவ சமயமணி யேசச்சி
தானந்த மானமணியே
சகஜநிலை காட்டிவினை யோட்டி அருள் நீட்டிஉயர்
சமரச சுபாவமணியே

நீதிமணி யேநிரு விகற்பமணி யேஅன்பர்
நினைவிலமர் கடவுண்மணியே
நின்மல சுயம்பிர காசங்குலவும் அத்வைத
நித்ய ஆனந்த மணியே
ஆதிமணி யேஎழில் அநாதிமணி யேஎனக்
கன்புதவும் இன்பமணியே
அற்புத சிதாகாச ஞான அம்பலமாடும்
ஆனந்த நடனமணியே. 2

2001 தேனமர் பசுங்கொன்றை மாலையா டக்கவின்
செய்யுமதி வேணியாட
செய்யுமுப் புரிநூலு மாடநடு வரியுரி
சிறந்தாட வேகரத்தில்
மானிமிர்ந் தாடஒளிர் மழுவெழுந் தாடமக
வானாதி தேவராட
மாமுனிவர் உரகர்கின் னரர்விஞ்சை யருமாட
மால்பிரம னாடஉண்மை
ஞானஅறி வாளர்தின மாடஉல கன்னையாம்
நங்கைசிவ காமியாட
நாகமுடன் ஊகமன நாடிஒரு புறமாட
நந்திமறை யோர்களாட
ஆனைமுக னாடமயி லேறிவினை யாடுமுயர்
ஆறுமுக னாடமகிழ்வாய்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 3

2002 பொய்யான வாழ்க்கையினை மெய்யாக நம்பிவீண்
போக்கிநன் னாளைமடவார்
போகமே பெரிதெனக் கொண்டறி வழிந்துநின்
பொன்னடிக் கானபணியைச்
செய்யாத பாவியேன் என்னை நீ கைவிடில்
செய்வதறி யேன் ஏழையேன்
சேய்செய்த பிழையெலாம் தாய்பொறுப் பதுபோல
சிந்தைதனில் எண்ணிடாயோ
மெய்யான நிலைபெறக் கையா லணைத்தருள
வேண்டுமறை யாகமத்தின்
மேலான சுத்தசன் மார்க்க அனுபவசாந்த
மேதையர்கள் பரவிவாழ்த்தும்
ஐயானனங் கொண்ட தெய்வமே கங்கைஅர 4
வம்புலியு மாடமுடிமேல்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே.

2003 (போதாரு நான்முகப்) புத்தேளி னாற்பெரிய
பூமியிடை வந்துநமனாற்
போகுமுயிர் கள்வினையை ஒழிமின்என் றேகுரவர்
போதிக்கும் உண்மைமொழியைக்
காதார வேபல தரங்கேட்டும் நூற்களிற்
கற்றும்அறி வற்றிரண்டு
கண்கெட்ட குண்டையென வீணே யலைந்திடும்
கடையனேன் உய்வதெந்நாள்
மாதாவு மாய்ஞான வுருவுமாய் அருள்செயும்
வள்ளலே உள்ளமுதலே
மாலாதி தேவர்முனி வோர்பரவி யேதொழுது
வாழ்த்திமுடி தாழ்த்துமுன்றன்
ஆதார மானஅம் போருகத் தைக்காட்டி
யாண்டருள வேண்டும் அணிசீர்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 5

2004 பண்ணாரு மூவர்சொற் பாவேறு கேள்வியிற்
பண்படா ஏழையின்சொற்
பாவையும் இகழ்ந்திடா தேற்றுமறை முடிவான
பரமார்ந்த ஞானநிலையை
கண்ணார நெல்லியங் கனியெனக் காட்டிநற்
கருணைசெய் தாளாவிடில்
கடையனேன் ஈடேறும் வகைகளந்த நாள்அருட்
கடவுளே கருணைசெய்வாய்
தண்ணா ரிளம்பிறை தங்குமுடி மேன்மேனி
தந்தஒரு சுந்தரியையும்
தக்கவா மத்தினிடை பச்சைமயிலாம் அரிய
சத்தியையும் வைத்துமகிழ் என்
அண்ணாஎன் அப்பாஎன் அறிவேஎன் அன்பேஎன்
றன்பர் (எப்பொழுதும்) வாழ்த்தும்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 6

2005 பவமான எழுவகைப் பரப்பான வேலையிற்
பசுவான பாவி இன்னும்
பற்றான குற்றமதை உற்றலை துரும்பெனப்
படராது மறையனைத்தும்
உவமான முரைசெய்ய அரிதான சிவநிலையை
உற்றதனை யொன்றிவாழும்
உளவான வழியீ தெனக்காட்டி அருள்செய்யில்
உய்குவேன் முடிவானநல்

தவமான நெறிபற்றி ரண்டற்ற சுகவாரி
தன்னில்நினை நாடியெல்லாம்
தானான சுத்தசன் மார்க்க அனுபவசாந்த
தற்பரர்க ளக நிறைந்தே
அவமான கருணைப்பிரகாச நின்னருள் தனை
அடியனுக் கருள் செய்குவாய்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 7

2006 சந்ததமும் அழியாமல் ஒருபடித் தாயிலகு
சாமிசிவ காமியிடமார்
சம்புவா மென்னுமறை ஆகமத் துணிவான
சத்யமொழி தன்னை நம்பி
எந்தையே என்றறிஞர் யாவரும் நின்புகழை
ஏத்திவினை தனைமாற்றியே
இன்பமய மாயினது வாழ்ந்திடப் புவியினிடை
ஏழையேன் ஒருவன் அந்தோ
சிந்தையர்னது கலக்கங் கொண்டு வாடலென்
செப்புவாய் வேதனாதி
தேவர்முனி வர்கருடர் காந்தருவர் விஞ்சையர்
சித்தர்களும் ஏவல்புரிய
அந்தணர்கள் பலகோடி முகமனா டப்பிறங்
கருண்முக விலாசத்துடன்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 8

2007 நீறணிந் தொளிர்அக்க மணிபூண்டு சன்மார்க்க
நெறிநிற்கும் அன்பர்மனமாம்
நிலமீது வளர்தேவ தாருவே நிலையான
நிறைவே (மெய் யருட்சத்தியாம்)[1]
வீறணிந் தழியாத நிதியமே ஒழியாத
விண்ணே அகண்ட சுத்த
வெளியே விளங்குபர ஒளியே வரைந்திடா
வேதமே வேதமுடிவே
தூறணிந் தலைகின்ற பாவியேன் நின்திருத்
துணைமலர்த் தாட்குரியனாய்த்
துயர்தீர்ந் திளைப்பாறும் இன்ப அம்போதியில்
தோயஅருள் புரிதிகண்டாய்
ஆறணிந் திடுவேணி அண்ணலே அணிகுலவும்
அம்மைசிவ காமியுடனே
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 9

1. மெய்யருட்சத்தியாம்

2008 மணிகொண்ட நெடிய உலகாய் அதில் தங்கும்ஆன்
மாக்களாய் ஆன்மாக்களின்
மலமொழித் தழியாத பெருவாழ் வினைத்தரும்
வள்ளலாய் மாறாமிகத்
திணிகொண்ட முப்புரா திகளெரிய நகைகொண்ட
தேவாய் அகண்டஞானச்
செல்வமாய் வேலேந்து சேயாய் கஜானனச்
செம்மலாய் அணையாகவெம்
பணிகொண்ட கடவுளாய்க் கடவுள ரெலாம்தொழும்
பரமபதி யாய் எங்கள் தம்
பரமேட்டி யாய்ப்பரம போதமாய் நாதமாய்
பரமமோ க்ஷாதிக்கமாய்
அணிகொண்ட சுத்தஅனு பூதியாய்ச் சோதியாய்
ஆர்ந்துமங் களவடிவமாய்
அற்புத சிதாகாச ஞானஅம் பலமாடும்
ஆனந்த நடனமணியே. 10

திருச்சிற்றம்பலம்

7. சிவகாமவல்லி துதி

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2009 அரங்காய மனமாயை அளக்கர் ஆழம்
அறியாமல் காலிட்டிங் கழுந்து கின்றேன்
இரங்காயோ சிறிதும் உயிர் இரக்கம் இல்லா
என்மனமோ நின்மனமும் இறைவி உன்றன்
உரங்காணும் அரசியற்கோல் கொடுங்கோல் ஆனால்
ஓடிளங்கே புகுந்தெவருக் குரைப்ப தம்மா
திரங்காணாப் பிள்ளைஎனத் தாய்வி டாளே
சிவகாம வல்லிஎனும் தெய்வத் தாயே. 1

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2010 தனத்தால் இயன்ற தனிச்சபையில் நடிக்கும் பெருமான் தனக்கன்றே
இனத்தால் உயர்ந்த மணமாலை இட்டுக் களித்த துரைப்பெண்ணே
மனத்தான் விளங்கும் சிவகாம வல்லிக் கனியே மாலொடும்ஓர்
அனத்தான் புகழும் அம்மே இவ்வடியேன் உனக்கே அடைக்கலமே. 2

2011 திருவே திகழுங் கலைமகளே திருவே மலையான் திருமகளே
உருவே இச்சை மயமேமெய் உணர்வின் வணமே உயர்இன்பக்
குருவே ஆதித் தனித்தாயே குலவும் பரையாம் பெருந்தாயே
மருவே மலரே சிவகாம வல்லி மணியே வந்தருளே. 3

2012 அருளே அறிவே அன்பேதெள் ளமுதே மாதர் அரசேமெய்ப்
பொருளே தெருளே மாற்றறியாப் பொன்னே மின்னே பூங்கிளியே
இருளேய் மனத்தில் எய்தாத இன்பப் பெருக்கே இவ்வடியேன்
மருளே தவிர்த்த சிவகாம வல்லி நினக்கே வந்தனமே. 4

கட்டளைக் கலித்துறை

2013 தருவாய் இதுநல் தருணங்கண் டாய்என்னைத் தாங்கிக்கொண்ட
குருவாய் விளங்கு மணிமன்ற வாணனைக் கூடிஇன்ப
உருவாய்என் உள்ளத்தின் உள்ளே அமர்ந்துள்ள உண்மைஎல்லாம்
திருவாய் மலர்ந்த சிவகாம வல்லிநின் சீர்அருளே. 5

திருச்சிற்றம்பலம்

8. சிவபரம்பொருள்

கலிநிலைத் துறை
அருட்பெருஞ்ஜோதி

2014 உருத்தி ரன்திரு மால்அயன் ஒப்பமுக் குணமாய்
இருத்தல் இன்றிஅக் குணங்களை என்றும் ஆண்டருளுங்
கருத்தன் ஆகையிற் குணேசன் அக்குணவிகா ரத்திற்
பொருத்த மின்மையன் ஆகையால் புகல்குண ரகிதன். 1

2015 களங்க அக்குணம் கடந்திருத் தலில்குணா தீதன்
வளங்கொ ளத்தகும் உலகெலாம் மருவிநிற் றலினால்
விளங்கு விச்சுவ வியாபி இவ்விசுவத்தை யாண்டு
துளங்குறா நலந் தோற்றலின் விச்சுவ கருத்தன். 2

2016 வெய்யனாய் உல கழித்தலின் விசுவசங் காரி
பைய மேலெனப் படுவன பலவற்றின் மேலாம்
ஐயன் ஆதலிற் பராபர னாம்எனப் பட்ட
செய்ய னாகிய சிவபிரான் ஒருவனுண் டமரீர். 3

2017 உய்வ தாம்இது நம்குரு வாணையொன் றுரைப்பேன்
சைவ மாதிசித் தாந்தத்து மறைமுடித் தலத்தும்
நைவ தின்றிஆங் கதுவது வாயது நமது
தெய்வ மாகிய சிவபரம் பொருளெனத் தெளிவீர். 4

திருச்சிற்றம்பலம்

9. திருமுகப் பாசுரம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2018 திருத்தகுசீர்த் தமிழ்மறைக்கே முதலாய வாக்கதனால் திருப்பேர் கொண்டு
கருத்தர்நம தேகம்பக் கடவுளையுட் புறங்கண்டு களிக்கின் றோய்நின்
உருத்தகுசே வடிக்கடியேன் ஒருகோடி தெண்டனிட்டே உரைக்கின்றேன்உன்
கருத்தறியேன் எனினு (முனைக்) கொடு (முயல்வேன்றனை)
யன்பால் காக்கஅன்றே[1]

திருச்சிற்றம்பலம்

10. சிங்கபுரிக் கந்தர் பதிகம்[2]

காப்பு
நேரிசை வெண்பா
அருட்பெருஞ்ஜோதி

2019 பொன்மகள்வாழ் சிங்கபுரி போதன் அறு மாமுகன்மேல்
நன்மைமிகு செந்தமிழ்ப்பா நாம்உரைக்கச் – சின்மயத்தின்
மெய்வடிவாம் நங்குருதாள் வேழமுகன் தன்னிருதாள்
பொய்யகலப் போற்றுவம் இப்போது. 1

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2020 சீராரு மறையொழுக்கந் தவிராது நான்மரபு சிறக்க வாழும்
ஏராரு நிதிபதிஇந் திரன்புரமும் மிகநாணும் எழிலின் மிக்க
வாராருங் கொங்கையர்கள் மணவாளர் உடன்கூடி வாழ்த்த நாளும்
தேராரு நெடுவீதிச் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 1

2021 உம்பர்துயர் கயிலையாற் கோதிடவே அப்பொழுதே உவந்து நாதன்
தம்பொருவில் முகமாறு கொண்டுநுதல் ஈன்றபொறி சரவ ணத்தில்
நம்புமவர் உயவிடுத்து வந்தருளும் நம்குகனே நலிவு தீர்ப்பாய்
திங்கள் தவழ் மதில்சூழும் சிங்கபுரி தனில் அமர்ந்த தெய்வக்குன்றே. 2

1. அடைப்புக்குள் உள்ளவை மூலத்தில் எழுத்து விளங்கா இடங்களில் ஆ. பா. ஊகித்து அமைத்த சொற்கள்.
2. இப்பதிக வரலாறு பின்குறித்தபடி ஓர் நோட்டுப் பிரதியில் காணப்படுகிறது.
இஃது ரக்தாக்ஷிஸூ சித்திரைமீ சுக்கிரவாரம் கார்த்திகை நக்ஷத்திரம் சோதரர் சபாபதி பிள்ளையின் ரோக நிவாரணார்த்தம் சிதம்பரம் இராமலிங்கபிள்ளையவர் களாலியற்றியது * 6 - 5 - 1864

2022 பொல்லாத சூர்க்கிளையைத் தடிந்தமரர் படுந்துயரப் புன்மை நீக்கும்
வல்லானே எனதுபிணி நீநினைத்தால் ஒருகணத்தில் மாறி டாதோ
கல்லாதேன் எனினும்எனை இகழாதே நினதடியார் கழகங் கூட்டாய்
செல்லாதார் வலிஅடக்கும் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 3

2023 பண்டுறுசங் கப்புலவர் அருஞ்சிறையைத் தவிர்த்தருளும் பகவ னேஎன்
புண்தருஇந் நோய் தணிக்கப் புரையிலியோய் யான்செய்யும் புன்மை தானோ
தண்டைஎழில் கிண்கிணிசேர் சரணமலர்க் கனுதினமும் தமியேன் அன்பாய்த்
தெண்டனிடச் செய்தருள்வாய் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 4

2024 தாவாத வசியர்குலப் பெண்ணினுக்கோர் கரமளித்த சதுரன் அன்றே
மூவாத மறைபுகலும் மொழிகேட்டுன் முண்டகத்தாள் முறையில் தாழ்ந்து
தேவாதி தேவன்எனப் பலராலும் துதிபுரிந்து சிறப்பின் மிக்க
தீவாய்இப் பிணிதொலைப்பாய் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 5

2025 வானவர்கோன் மேனாளில் தரமறியா திகழ்ந்துவிட விரைவில் சென்று
மானமதில் வீற்றிருந்தே அவன்புரிந்த கொடுமைதனை மாற்றும் எங்கள்
தானவர்தம் குலம் அடர்த்த சண்முகனே இப்பிணியைத் தணிப்பாய் வாசத்
தேனவிழும் பொழில்சூழும் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 6

2026 மட்டாரும் பொழில்சேரும் பரங்கிரிசெந் தூர்பழனி மருவு சாமி
நட்டாரும் பணிபுரியும் மாறுதலை மலைமுதலாய் நணுகி எங்கள்
ஒட்டாதார் வலிஅடக்கி அன்பர்துதி ஏற்றருளும் ஒருவ காவாய்
தெட்டாதார்க் கருள்புரியும் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 7

2027 முன்செய்த மாதவத்தால் அருணகிரி நாதர்முன்னே முறையிட் டேத்தும்
புன்செயல்தீர் திருப்புகழை ஏற்றருளும் மெய்ஞ்ஞான புனிதன் என்றே
என்செயலில் இரவுபகல் ஒழியாமல் போற்றியிட இரங்கா தென்னே
தென்திசைசேர்ந் தருள்புரியும் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 8

2028 விண்ணவர்கோன் அருந்துயர நீங்கிடவும் மாதுதவ விளைவு நல்கும்
கண்ணகன்ற பேரருளின் கருணையினால் குஞ்சரியைக் காத லோடு
மண்ணுலகோர் முதல்உயிர்கள் மகிழ்ந்திடவும் மணம்புரிந்த வள்ளலேஎன்
திண்ணியதீ வினைஒழிப்பாய் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 9

2029 மாசகன்ற சிவமுனிவர் அருளாலே மானிடமாய் வந்த மாதின்
ஆசில்தவப் பேறளிக்க வள்ளிமலை தனைச்சார்ந்தே அங்குக் கூடி
நேசமிகு மணம்புரிந்த நின்மலனே சிறியேனை நீயே காப்பாய்
தேசுலவு பொழில்சூழும் சிங்கபுரி தனில்அமர்ந்த தெய்வக் குன்றே. 10

11. இராமநாம சங்கீர்த்தனம்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2030 காராய வண்ண மணிவண்ண கண்ண கனசங்கு சக்ர தரநீள்
சீராய தூய மலர்வாய நேய ஸ்ரீராம ராம வெனவே
தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க தாமோத ராய நமவோம்
நாராய ணாய நமவாம னாய நமகேச வாய நமவே. 1

திருச்சிற்றம்பலம்

12. இராமநாமப் பதிகம் [1]

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2031 திருமகள்எம் பெருமாட்டி மகிழும் வண்ணச்
செழுங்கனியே கொழும்பாகே தேனே தெய்வத்
தருமகனைக் காத்தருளக் கரத்தே வென்றித்
தனுஎடுத்த ஒருமுதலே தருமப் பேறே
இருமையும்என் னுளத்தமர்ந்த ராம நாமத்
தென்அரசே என்அமுதே என்தா யேநின்
மருமலர்ப்பொன் அடிவழுத்தும் சிறியேன் அந்தோ
மனந்தளர்ந்தேன் அறிந்தும்அருள் வழங்கி லாயே. 1

2032 கலைக்கடலே கருணைநெடுங் கடலே கானங்
கடந்ததடங் கடலேஎன் கருத்தே ஞான
மலைக்கண்எழுஞ் சுடரேவான் சுடரே அன்பர்
மனத்தொளிரும் சுயஞ்சுடரே மணியே வானோர்
தலைக்கண்உறு மகுடசிகா மணியே வாய்மைத்
தசரதன்தன் குலமணியே தமியேன் உள்ள
நிலைக்கண்உறும் ஸ்ரீராம வள்ள லேஎன்
நிலைஅறிந்தும் அருளஇன்னும் நினைந்தி லாயே. 2

2033 மண்ணாளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போல் பற்றடைந்து மாள வேண்டேன்
விண்ணாளா நின்றஒரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் திருவருளே வேண்டி நின்றேன்
புண்ணாளா நின்றமன முடையேன் செய்த
பொய்அனைத்தும் திருவுளத்தே பொறுப்பாய் அன்றிக்
கண்ணாளா சுடர்க்கமலக் கண்ணா என்னைக்
கைவிடில்என் செய்வேனே கடைய னேனே. 3

1. இப்பதிகம் ஸ்ரீமத் அருட்பிரகாசப் பெருமான் சென்னையிற் கொந்தமூர் ஸ்ரீநிவாச வரதாசாரிய சுவாமிகள் கேட்டுக் கொண்டதின் மீது செய்த ஸ்ரீராம தசகம் என்ற விவரத்தோடு ஓர் பழைய நோட்டிலும், திருத்தணிகைப் பதிகங்கள் கொண்ட ஓர் பழைய சுவடியிலும் காணப்படுகிறது. முதல் அச்சுப் பிரதியின் முறைப்படி இங்கு அச்சிட்டிருக்கிறது. கொந்தமூர் வரதசாரிய சுவாமிகளைப் பற்றி வேறு நல்ல விவரம் ஒன்றைத் திருவருட்பா, திருமுகப் பகுதி, 2-ஆம் பதிப்பு 41, 42-ஆம் பக்கங்களில் காண்க. குறிப்பு : ஆ. பா. 1932 பதிப்பு

2034 தெவ்வினையார் அரக்கர்குலம் செற்ற வெற்றிச்
சிங்கமே எங்கள்குல தெய்வ மேயோ
வெவ்வினைதீர்த் தருள்கின்ற ராமநாம
வியன்சுடரே இவ்வுலக விடயக் காட்டில்
இவ்வினையேன் அகப்பட்டேன் புலனாம் கள்வர்க்
கிலக்கானேன் துணைஒன்றும் இல்லேன் அந்தோ
செய்வினைஒன் றறியேன்இங் கென்னை எந்தாய்
திருவுளத்தில் சேர்த்திலையேல் செய்வ தென்னே. 4

2035 வான்வண்ணக் கருமுகிலே மழையே நீல
மணிவண்ணக் கொழுஞ்சுடரே மருந்தே வானத்
தேன்வண்ணச் செழுஞ்சுவையே ராம நாமத்
தெய்வமே நின்புகழைத் தெளிந்தே ஓதா
ஊன்வண்ணப் புலைவாயார் இடத்தே சென்றாங்
குழைக்கின்றேன் செய்வகைஒன் றுணரேன் அந்தோ
கான்வண்ணக் குடும்பத்திற் கிலக்கா என்னைக்
காட்டினையே என்னேநின் கருணை ஈதோ. 5

2036 பொன்னுடையார் வாயிலில்போய் வீணே காலம்
போக்குகின்றேன் இவ்வுலகப் புணர்ப்பை வேண்டி
என்னுடையாய் நின்னடியை மறந்தேன் அந்தோ
என்செய்கேன் என்செய்கேன் ஏழை யேன்நான்
பின்னுடையேன் பிழைஉடையேன் அல்லால் உன்றன்
பேரருளும் உடையேனோ பிறந்தேன் வாளா
உன்னுடைய திருவுளத்தென் நினைதி யோஎன்
ஒருமுதல்வா ஸ்ரீராமா உணர்கி லேனே. 6

2037 அறம்பழுக்கும் தருவேஎன் குருவே என்றன்
ஆருயிருக் கொருதுணையே அரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கைஇரா வணனைப் பண்டோர்
[1]வாளினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்கும் ஸ்ரீராம வள்ள லேநின்
திருவருளே அன்றிமற்றோர் செயலி லேனே. 7

2038 கல்லாய வன்மனத்தார் தம்பால் சென்றே
கண்கலக்கங் கொள்கின்றேன் கவலை வாழ்வை
எல்லாம்உள் இருந்தறிந்தாய் அன்றோ சற்றும்
இரங்கிலைஎம் பெருமானே என்னே என்னே
பொல்லாத வெவ்வினையேன் எனினும் என்னைப்
புண்ணியனே புரப்பதருட் புகழ்ச்சி அன்றோ
அல்ஆர்ந்த துயர்க்கடல்நின் றெடுத்தி டாயேல்
ஆற்றேனான் பழிநின்பால் ஆக்கு வேனே. 8

1. வாளியினால் - ஆ. பா. பதிப்பு

2039 மையான நெஞ்சகத்தோர் வாயில் சார்ந்தே
மனம் தளர்ந்தேன் வருந்துகின்ற வருத்தம் எல்லாம்
ஐயாஎன் உளத்தமர்ந்தாய் நீதான் சற்றும்
அறியாயோ அறியாயேல் அறிவா ர்யாரே
பொய்யான தன்மையினேன் எனினும் என்னைப்
புறம்விடுத்தல் அழகேயோ பொருளா எண்ணி
மெய்யாஎன் றனைஅந்நாள் ஆண்டாய் இந்நாள்
வெறுத்தனையேல் எங்கேயான் மேவு வேனே. 9

2040 கூறுவதோர் குணமில்லாக் கொடிதாம் செல்வக்
குருட்டறிவோர் இடைப்படும்என் குறைகள் எல்லாம்
ஆறுவதோர் வழிகாணேன் அந்தோ அந்தோ
அவலமெனும் கருங்கடலில் அழுந்து கின்றேன்
ஏறுவதோர் வகைஅறியேன் எந்தாய் எந்தாய்
ஏற்றுகின்றோர் நின்னைஅன்றி இலலேன் என்னைச்
சீறுவதோ இரங்குவதோ யாதோ உன்றன்
திருவுளத்தைத் தெரியேனே சிறிய னேனே. 10

திருச்சிற்றம்பலம்

13. வீரராகவர் போற்றிப் பஞ்சகம்

திருஎவ்வுளூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2041 தண்ணமர் மதிபோல் சாந்தந் தழைத்தசத் துவனே போற்றி
வண்ணமா மணியே போற்றி மணிவண்ணத் தேவா போற்றி
அண்ணலே எவ்வு ளூரில் அமர்ந்தருள் ஆதி போற்றி
விண்ணவர் முதல்வா போற்றி வீரரா கவனே போற்றி. 1

2042 பாண்டவர் தூத னாகப் பலித்தருள் பரனே போற்றி
நீண்டவன் என்ன வேதம் நிகழ்த்துமா நிதியே போற்றி
தூண்டலில் லாமல் ஓங்குஞ் ஜோதிநல் விளக்கே போற்றி
வேண்டவர் எவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 2

2043 மேதினி புரக்கும் வேந்தர் வீறெலாம் நினதே போற்றி
கோதிலா மனத்தே நின்று குலாவிய கோவே போற்றி
ஓதிய எவ்வு ளூரில் உறைந்தருள் புரிவாய் போற்றி
வேதியன் தன்னை ஈன்ற வீரரா கவனே போற்றி. 3

2044 இளங்கொடி தனைக்கொண் டேகும் இராவணன் தனைய ழித்தே
களங்கமில் விபீட ணர்க்குக் கனவர சளித்தாய் போற்றி
துளங்குமா தவத்தோர் உற்ற துயரெலாம் தவிர்த்தாய் போற்றி
விளங்குநல் எவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 4

2045 அற்புதத் திருவை மார்பில் அணைத்தபே ரழகா போற்றி
பொற்புறு திகிரி சங்கு பொருந்துகைப் புனிதா போற்றி
வற்புறு பிணிதீர்த் தென்னை மகிழ்வித்த வரதா போற்றி
வெற்புயர் எவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 5

இப்பதிகம் திருவளூர் (சென்னை பூந்தமல்லி அருகில்) வீரராகவப் பெருமாள்பேரில் போற்றிப் பஞ்சகம் என்ற தலைப்போடு ஆ. பா. குறிப்பு 1932

14. இரேணுகை தோத்திரம்

துலுக்காணத்து அம்மன் பஞ்சகம்

சென்னை ஏழுகிணறு[1]
எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2046 சீர்வளர் மதியும் திருவளர் வாழ்க்கைச் செல்வமும் கல்வியும் பொறையும்
பார்வளர் திறனும் பயன்வளர் பரிசும் பத்தியும் எனக்கருள் பரிந்தே
வார்வளர் தனத்தாய் மருவளர் குழலாய் மணிவளர் அணிமலர் முகத்தாய்
ஏர்வளர் குணத்தாய் இசைதுலுக் காணத் திரேணுகை எனும்ஒரு திருவே. 1

2047 உவந்தொரு காசும் உதவிடாக் கொடிய உலுத்தர்தம் கடைதொறும்ஓடி
அவந்தனில் அலையா வகைஎனக் குன்தன் அகமலர்ந் தருளுதல் வேண்டும்
நவந்தரு மதிய நிவந்தபூங் கொடியே நலந்தரு நசைமணிக் கோவை
இவந்தொளிர் பசுந்தோள் இசைதுலுக் காணத் திரேணுகை எனும்ஒரு திருவே. 2

2048 விருந்தினர் தம்மை உபசரித் திடவும் விரவுறும் உறவினர் மகிழத்
திருந்திய மனத்தால் நன்றிசெய் திடவும் சிறியனேற் கருளுதல் வேண்டும்
வருந்திவந் தடைந்தோர்க் கருள்செயும் கருணை வாரியே வடிவுறு மயிலே
இருந்திசை புகழும் இசைதுலுக் காணத் திரேணுகை எனும்ஒரு திருவே. 3

2049 புண்ணியம் புரியும் புனிதர்தம் சார்பும் புத்திரர் மனைவியே முதலாய்
நண்ணிய குடும்ப நலம்பெறப் புரியும் நன்குமென்ற னக்கருள் புரிவாய்
விண்ணிய கதிரின் ஒளிசெயும் இழையாய் விளங்கருள் ஒழுகிய விழியாய்
எண்ணிய அடியர்க் கிசைதுலுக் காணத் திரேணுகை எனும்ஒரு திருவே. 4

2050 மனமெலி யாமல் பிணியடை யாமல் வஞ்சகர் தமைமரு வாமல்
சினநிலை யாமல் உடல்சலியாமல் சிறியனேன் உறமகிழ்ந் தருள்வாய்
அனமகிழ் நடையாய் அணிதுடி இடையாய் அழகுசெய் காஞ்சன உடையாய்
இனமகிழ் சென்னை இசைதுலுக் காணத் திரேணுகை எனும்ஒரு திருவே. 5

திருச்சிற்றம்பலம்

1. இராமலிங்க சுவாமிகள் சென்னை ஏழுகிணறு பகுதியில் உள்ள துலுக்காணத்தம்மன் கோவிலில் பலி இடுவதை தடுப்பதற்காக அன்பர் ஒருவரின் வேண்டுகோளுக் கிணங்க அருளிச் செய்தது.

15. பெரிய நாயகியார் தோத்திரம்[1]

திருவதிகை வீரட்டாணம்
கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2051 உரிய நாயகி யோங்கதி கைப்பதித்
துரிய நாயகி தூயவீ ரட்டற்கே
பிரிய நாயகி பேரருள் நாயகி
பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம் 1

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2052 உலகந் தழைக்க உயிர்தழைக்க உணர்வு தழைக்க ஒளிதழைக்க
உருவந் தழைத்த பசுங்கொடியே உள்ளத் தினிக்கும் தெள்ளமுதே
திலகந் தழைத்த நுதற்கரும்பே செல்வத் திருவே கலைக்குருவே
சிறக்கும் மலைப்பெண் மணியேமா தேவி இச்சை ஞானமொடு
வலகந் தழைக்குங் கிரியை இன்பம் வழங்கும் ஆதி பரைஎன்ன
வயங்கும் ஒருபே ரருளேஎம் மதியை விளக்கும் மணிவிளக்கே
அலகந் தழைக்குந் திருவதிகை ஐயர் விரும்பும் மெய்யுறவே
அரிய பெரிய நாயகிப்பெண் ணரசே என்னை ஆண்டருளே. 2

2053 தன்னேர் அறியாப் பரவெளியில் சத்தாம் சுத்த அநுபவத்தைச்
சார்ந்து நின்ற பெரியவர்க்கும் தாயே எமக்குத் தனித்தாயே
மின்னே மின்னேர் இடைப்பிடியே விளங்கும் இதய மலர்அனமே
வேதம் புகலும் பசுங்கிளியே விமலக் குயிலே இளமயிலே
பொன்னே எல்லாம் வல்லதிரி புரையே பரையே பூரணமே
புனித மான புண்ணியமே பொற்பே கற்ப கப்பூவே
அன்னே முன்னே என்னேயத் தமர்ந்த அதிகை அருட்சிவையே 3
அரிய பெரிய நாயகிப்பெண் ணரசே என்னை ஆண்டருளே.

திருச்சிற்றம்பலம்

1. இது ஆறாந்திருமுறைப் பாடல்கள் கொண்ட சிற்சில நோட்டுப் பிரதிகளில் காணப்படுகிறது.

இவையே இங்கு மேற்கொண்ட மூலமாகும். 1892-ஆம் ஆண்டுத் திரு அருட்பாவில் இது முதல் முதல் அச்சாயிருக்கிறது. ஆ. பா. குறிப்பு 1932

16. பழமலையோ கிழமலையோ

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

நேரிசை வெண்பா

2054 ஆறு விளங்க[1] அணிகிளர்தேர் ஊர்ந்தஉலாப்
பேறு விளங்கஉளம் பெற்றதுமன் - கூறுகின்ற
ஒன்றிரண்டு தாறுபுடை ஓங்கும் பழமலையார்
மின்றிரண்டு நின்றசடை மேல். 1

2055 ஆதிமலை[2] அனாதிமலை அன்புமலை எங்கும்
ஆனமலை ஞானமலை ஆனந்த மலைவான்
ஜோதிமலை துரியமலை துரியமுடிக் கப்பால்
தோன்றுமலை தோன்றாத சூதான மலைவெண்
பூதிமலை சுத்தஅனு பூதிமலை எல்லாம்
பூத்தமலை வல்லியெனப் புகழுமலை தனையோர்
பாதிமலை முத்தரெலாம் பற்றுமலை என்னும்
பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே. 2

2056 சாக்கியனார் எறிந்தசிலை சகித்தமலை சித்த
சாந்தர்உளஞ் சார்ந்தோங்கித் தனித்தமலை சபையில்
தூக்கியகா லொடுவிளங்கும் தூயமலை வேதம்
சொன்னமலை சொல்லிறந்த துரியநடு மலைவான்
ஆக்கியளித் தழிக்குமலை அழியாத மலைநல்
அன்பருக்கின் பந்தருமோர் அற்புதப்பொன் மலைநற்
பாக்கியங்க ளெல்லாமும் பழுத்தமலை என்னும்
பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே. 3

திருச்சிற்றம்பலம்

1. இதற்காகக் கிடைத்த அன்பர் படிகள் மூன்று. இவையே இங்கு மேற்கொண்ட முதல்களாகும். 1885-ஆம் ஆண்டுத் திரு அருட்பாப்பதிப்பில் இது முதல் முதல் அச்சாயிருக்கிறது.

2. இவ்விரண்டு பாசுரங்களும் திருமுதுகுன்றத் தனிப்பாடல்களாக ஆறாந்திருமுறை நோட்டுக்கள் நான்கிலும் ஒரு சுவடியிலும் காணப்படுகின்றன. இவையே இங்கு மேற்கொண்ட மூலம். 1885-ஆம் ஆண்டுத் திரு அருட்பாப் பதிப்பில் இவை முதல் முதல் அச்சாயிருக்கின்றன. குறிப்பு : ஆ. பா. 1932 பதிப்பு

17. பழமலைப் பதிகம்[1]

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2057 திருமால் கமலத் திருக்கண்மலர் திகழு மலர்த்தாட் சிவக்கொழுந்தைக்
கருமா லகற்றுந் தனிமருந்தைக் கனக சபையிற் கலந்த ஒன்றை
அருமா மணியை ஆரமுதை அன்பை அறிவை அருட்பெருக்கைக்
குருமா மலையைப் பழமலையிற் குலவி யோங்கக் கண்டேனே. 1

2058 வான நடுவே வயங்குகின்ற மவுன மதியை மதிஅமுதைத்
தேனை அளிந்த பழச்சுவையைத் தெய்வ மணியைச் சிவபதத்தை
ஊனம் அறியார் உளத்தொளிரும் ஒளியை ஒளிக்கும் ஒருபொருளை
ஞான மலையைப் பழமலைமேல் நண்ணி விளங்கக் கண்டேனே. 2

2059 தவள நிறத்துத் திருநீறு தாங்கு மணித்தோள்[2] தாணுவைநம்
குவளை விழித்தாய் ஒருபுறத்தே குலவ விளங்கும் குருமணியைக்
கவள மதமா கரியுரிவைக் களித்த மேனிக் கற்பகத்தைப்
பவள மலையைப் பழமலையிற் பரவி ஏத்திக் கண்டேனே. 3

2060 இளைத்த இடத்தில் உதவிஅன்பர் இடத்தே இருந்த ஏமவைப்பை
வளைத்த மதின்மூன் றெரித்தருளை வளர்த்த கருணை வாரிதியைத்
திளைத்த யோகர் உளத்தோங்கித் திகழுந் துரியா தீதமட்டுங்
கிளைத்த மலையைப் பழமலையிற் கிளர்ந்து வயங்கக் கண்டேனே. 4

2061 மடந்தை மலையாண் மனமகிழ மருவும் பதியைப் பசுபதியை
அடர்ந்த வினையின் தொடக்கைஅறுத் தருளும் அரசை அலைகடன்மேல்
கிடந்த பச்சைப் பெருமலைக்குக் கேடில் அருள்தந் தகம்புறமும்
கடந்த மலையைப் பழமலைமேற் கண்கள் களிக்கக் கண்டேனே. 5

2062 துனியும் பிறவித் தொடுவழக்குஞ் சேர்ந்து விடவுந் துரியவெளிக்
கினியும் பருக்குங் கிடையாத இன்பம் அடைந்தே இருந்திடவும்
பனியுந் திமய மலைப்பச்சைப் படர்ந்த பவளப் பருப்பதத்தைக்
கனியுஞ் சிலையுங் கலந்தஇடம்[3] எங்கே அங்கே கண்டேனே. 6

2063 கருணைக் கடலை அக்கடலிற் கலந்த அமுதை அவ்வமுதத்
தருணச் சுவையை அச்சுவையிற் சார்ந்த பயனைத் தனிச்சுகத்தை
வருணப் பவளப் பெருமலையை மலையிற் பச்சை மருந்தொருபால்
பொருணச் சுறவே பழமலையிற் பொருந்தி யோங்கக் கண்டேனே. 7

1. நம்பெருமாள் திருக்கை சாத்தியருளிய தெய்வத் திருஏடுகளே இப்பதிகத்திற்கு இங்கு மேற்கொண்ட முதல்களாகும். இது 1885-ஆம் ஆண்டில் வெளிவந்த திரு அருட்பாப் பதிப்பில் முதல் முதல் அச்சிடப் பட்டிருக்கிறது. இதற்காகக் கிடைத்த அன்பர்கள் படிகள் மூன்று.

2. மணித் தோட்டாணு வைநங் ச.மு.க பதிப்பு, ஆ.பா பதிப்பு

3. கனியும் சிலையும் கலந்த இடம் – பழமலை (கனி – பழம், சிலை – மலை)

2064 என்னார் ருயிரிற் கலந்துகலந் தினிக்கும் கரும்பின் கட்டிதனைப்
பொன்னார் வேணிக் கொழுங்கனியைப் புனிதர் உளத்தில் புகுங் களிப்பைக்
கன்னார் உரித்துப் பணிகொண்ட கருணைப் பெருக்கைக் கலைத்தெளிவைப்
பன்னா கப்பூண் அணிமலையைப் பழைய மலையிற் கண்டேனே. 8

2065 நல்ல மனத்தே தித்திக்க நண்ணும் கனியை நலம்புரிந்தென்
அல்லல் அகற்றும் பெருவாழ்வை அன்பால் இயன்ற அருமருந்தைச்
சொல்ல முடியாத் தனிச்சுகத்தைத் துரிய நடுவே தோன்றுகின்ற
வல்ல மலையைப் பழமலையில் வயங்கி யோங்கக் கண்டேனே. 9

2066 ஆதி நடுவு முடிவுமிலா அருளா னந்தப் பெருங்கடலை
ஓதி உணர்தற் கரியசிவ யோகத் தெழுந்த ஒருசுகத்தைப்
பாதி யாகி ஒன்றாகிப் படர்ந்த வடிவைப் பரம்பரத்தைச்
சோதி மலையைப் பழமலையிற் சூழ்ந்து வணங்கிக் கண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்

18. அருணகிரி விளங்க வளர்ந்த சிவக்கொழுந்து[1]

திருவண்ணாமலை
எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2067 திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவாநுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கஒளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருளுதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்கு அருணகிரி விளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிகளின் கையெழுத்தில் கண்டபடி இத் தனிப் பாசுரம் இங்கு அச்சிட்டிருக்கிறது. இது வயங்குமணிப் பொது விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே என்ற முடிவோடு வழங்கும் பூர்வஞான சிதம்பரப் பகுதிப் பாசுரத்தின் பூர்வ வடிவம் போலும்.
இப் பகுதியின் 1933-ஆம் ஆண்டு ஆ. பா. முதல் பதிப்பில் தான் இது முதன் முதல் அச்சாயிருக்கிறது.
ஊரனடிகள் பதிப்பு 1972 பாடல் எண் 2500 பக்கம் : 463 அருணகிரி விளங்க என்று பதிப்பித்துள்ளார்.

19. திருவோத்தூர் சிவஞான தேசிகன் தோத்திரம்[1]

நாற்பத்தெண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்[2]

அருட்பெருஞ்ஜோதி

2068 உலகியலின் உறுமயலின் அடைவுபெறும் எனதிதயம்
ஒளிபெற விளங்குசுடரே
உதயநிறை மதிஅமுத உணவுபெற நிலவுசிவ
யோகநிலை அருளுமலையே
உனதுசெயல் எனதுசெயல் உனதுடைமை எனதுடைமை
உணர்என உணர்த்துநிறைவே
உளஎனவும் இலஎனவும் உரைஉபய வசனம்அற
ஒருமொழியை உதவுநிதியே
ஒன்றுடன் இரண்டெனவி தண்டைஇடும் மிண்டரொடும்
ஒன்றல்அற நின்றநிலையே
உன்னல்அற உன்னுநிலை இன்னதென என்னுடைய
உள்உணர உள்ளுமதியே
உன்நிலையும் என்நிலையும் அன்னியம்இ லைச்சிறிதும்
உற்றறிதி என்றபொருளே
உண்மைநெறி அண்மைதனில் உண்டுளம் ஒருங்கில் என
ஓதுமெய்ப் போதநெறியே. 1

2069 அலகின்மறை மொழியும்ஒரு பொருளின்முடி பெனஎன
தகந்தெளிய அருள்செய் தெருளே
ஐம்பூதம் ஆதிநீ அல்லைஅத் தத்துவ
அதீதஅறி வென்றஒன்றே
அத்துகவா ஆறையும் அகன்றநிலை யாதஃது
அதீதநிலை என்றநன்றே
ஆணைஎம தாணைஎமை அன்றிஒன்றில்லைநீ
அறிதிஎன அருளுமுதலே
அன்பென்ப தேசிவம் உணர்ந்திடுக எனஎனக்கு
அறிவித்த சுத்தஅறிவே
அத்துவித நிலைதுவித நிலைநின்ற பின்னலது
அடைந்திடா தென்றஇறையே
ஆனந்த மதுசச்சி தானந்த மேஇஃது
அறிந்தடைதி என்றநலமே
அட்டசித் திகளும்நின தேவல்செயும் நீஅவை
அவாவிஇடல் என்றமணியே 2

1. முற்பதிப்புகள் அனைத்திலும் முப்பத்திரண்டடித் தனி ஆசிரிய விருத்தம் எனக் குறித்திருப்பது பிழை

2. இதன் கீழ்வரும் தெய்வத் திருப்பாசுரமானது சுவாமிகளின் தனிப் பாடல்கள் கொண்ட ஒருசுவடியிலும் திருத் தணிகைப் பதிகங்கள் உடைய மற்றொன்றிலும், இஃது வேதாந்த சித்தாந்த சமர சாநுபவாநுக்ரக அருட்குரு ஸ்தோத்திரம் என்ற தலைப்போடு ஆறாந் திருமுறைப் பதிகங்கள் கொண்ட மூன்று நோட்டுப் பிரதிகளிலும் காணப்படுகிறது. 1885 – ஆம் ஆண்டு அச்சான திரு அருட்பாவில் ஒரு தனிப் பாசுரமாக இது முதல் முதல் அச்சாயிருக்கிறது.

2070 இலகுபரி பூரண விலாசம்அல திலைஅண்டம்
எங்கணும் எனச்சொல்பதியே
இரவுபகல் அற்றஇடம் அதுசகல கேவலம்
இரண்டின்நடு என்றபரமே
இச்சைமன மாயையே கண்டன எலாம்அவை
இருந்துகாண் என்றதவமே
யான்பிறர் எனும்பேத நடைவிடுத் தென்னோடு
இருத்திஎன உரைசெய் அரைசே
என்களைக ணேஎனது கண்ணேஎன் இருகண்
இலங்குமணி யேஎன் உயிரே
என்உயிர்க் குயிரேஎன் அறிவேஎன் அறிவூடு
இருந்தசிவ மேஎன் அன்பே
என்தெய்வ மேஎனது தந்தையே எனைஈன்று
எடுத்ததா யேஎன் உறவே
என்செல்வ மேஎனது வாழ்வேஎன் இன்பமே
என்அருட் குருவடிவமே 3

2071 கலகமனம் உடையஎன் பிழைபொறுத் தாட்கொண்ட
கருணையங் கடல்அமுதமே
காழிதனில் அன்றுசுரர் முனிவர்சித் தர்கள்யோகர்
கருதுசம யாதிபர்களும்
கைகுவித் தருகில்நின் றேத்தமூ வாண்டில்
களித்துமெய்ப் போதம்உண்டு
கனிமதுரம் ஒழுகுசெம் பதிகச்செ ழும்சொன்மழை
கண்ணுதல் பவளமலையில்
கண்டுபொழி அருள்முகில் சம்பந்த வள்ளலாங்
கடவுளே ஓத்தூரினில்
கவினுற விளங்குநற் பணிகள்சிவ புண்ணியக்
கதிஉல கறிந்துய்யவே
கரைஅற்ற மகிழ்வினொடு செய்தருள் புரிந்திடும்
காட்சியே சிவஞானியாம்
கருதவரும் ஒருதிருப் பெயர்கொள்மணி யேஎமைக்
காப்பதுன் கடன்என்றுமே. 4

20. ஞானசிகாமணி திருச்சீர் அட்டகம்[1]

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

2072 அணிவா யுலகத் தம்புயனும் அளிக்குந் தொழிற்பொன் அம்புயனும்
அறியா அருமைத் திருவடியை அடியேந் தரிசித் தகங்குளிர
மணிவாய் மலர்ந்தெம் போல்வார்க்கு மறையுண் முடிபை வகுத்தருள
வயங்குங் கருணை வடிவெடுத்து வந்து விளங்கு மணிச்சுடரே
பிணிவாய் பிறவிக் கொருமருந்தே பேரா னந்தப் பெருவிருந்தே
பிறங்கு கதியின் அருளாறே பெரியோர் மகிழ்விற் பெரும்பேறே
திணிவாய் எயிற்சூழ் திருவோத்தூர் திகழ அமர்ந்த சிவநெறியே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 1

2073 நின்பால் அறிவும் நின்செயலும் நீயும் பிறிதன் றெமதருளே
நெடிய விகற்ப உணர்ச்சிகொடு நின்றாய் அதனால் நேர்ந்திலைகாண்
அன்பால் உன்பால் ஒருமொழி தந்தனம்இம் மொழியால் அறிந்தொருங்கி
அளவா அறிவே உருவாக அமரென் றுணர்த்தும் அரும்பொருளே
இன்பால் என்பால் தருதாயில் இனிய கருணை இருங்கடலே
இகத்தும் பரத்தும் துணையாகி என்னுள் இருந்த வியனிறைவே
தென்பால் விளங்குந் திருவோத்தூர் திகழும் மதுரச் செழுங்கனியே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 2

2074 அசையும் பரிசாந் தத்துவமன் றவத்தை அகன்ற அறிவேநீ
ஆகும் அதனை எமதருளால் அலவாம் என்றே உலவாமல்
இசையும் விகற்ப நிலையையொழித் திருந்த படியே இருந்தறிகாண்
என்றென் உணர்வைத் தெளித்தநினக் கென்னே கைம்மா றறியேனே
நசையும் வெறுப்பும் தவிர்ந்தவர்பால் நண்ணும் துணையே நன்னெறியே
நான்தான் என்னல் அறத்திகழ்ந்து நாளும் ஓங்கு நடுநிலையே
திசையும் புவியும் புகழோத்தூர்ச் சீர்கொள் மதுரச் செழும்பாகே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 3

2075 கண்மூன் றுடையான் எவன்அவனே கடவுள் அவன்தன் கருணைஒன்றே
கருணை அதனைக் கருதுகின்ற கருத்தே கருத்தாம் அக்கருத்தை
மண்மூன் றறக்கொண் டிருந்தவரே வானோர் வணங்கும் அருந்தவராம்
... ...

1. ஞான சிகாமணி திருச்சீர் அட்டகம் என்ற தலைப்போடு அடியில் வரும் பாசுரங்கள் சுவாமிகளின் தனிப்பாடல்கள் கொண்ட ஓர் எட்டுப் பிரதியில் காணப்படுகின்றன. 4-ஆவது பாசுரத்தில் மற்ற 2½ அடிகளும் 5, 6, 7, 8,ஆம் பாசுரங்களும் கொண்ட ஏடுகள் கைசோர்ந்து போயின போலும். நோட்டுப் பிரதி ஒன்றில் முதல் மூன்று பாசுரங்களே எழுதப்பட்டிருக்கின்றன.
இவையே இங்கு மேற்கொண்ட முதல்கள் ஆகும். 1896-ஆம் ஆண்டுத் திரு அருட்பாவில் முதல் மூன்று பாக்களே முதல் முதல் அச்சாயிருக்கின்றன. நான்காவது பாவின் முதல் ஒன்றரை அடி இப்பகுதியின் 1933 - ஆம் ஆண்டு முதல் பதிப்பில் தான் முதன் முதல் வெளிவந்திருக்கிறது.
குறிப்பு : ஆ. பா. பதிப்பு 1932

21. தெய்வத் தனித் திருமாலை[1]

அருட்பெருஞ்ஜோதி
வஞ்சித்துறை

2076 ஐங்கரன் அடிமலர்
இங்குற நினைதிநின்
பொங்குறு துயரறும்
மங்கலின் மனனே. 1

குறள் வெண்செந்துறை

2077 திருமால் அறியாச் சேவடி யாலென்
கருமால் அறுக்குங் கணபதி சரணம். 2

கலிவிருத்தம்

2078 துதிபெறு கணபதி இணையடி மலரும்
பதிதரு சரவண பவன்மல ரடியுங்
கதிதரு பரசிவன் இயலணி கழலும்
மதியுற மனனிடை மருவுது மிகவே. 3

2079 அருளுறுங் கயமுகத் தண்ணல் பாதமும்
பொருளுறு சண்முகப் புனிதன் தாள்களும்
தெருளுறு சிவபிரான் செம்பொற் கஞ்சமும்
மருளற நாடொறும் வணங்கி வாழ்த்துவாம். 4

2080 அற்புதக் கணபதி அமல போற்றியே
தற்பர சண்முக சாமி போற்றியே
சிற்பர சிவமகா தேவ போற்றியே
பொற்பமர் கௌரிநிற் போற்றி போற்றியே. 5

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2081 மாதங்க முகத்தோன்நங் கணபதி தன் செங்கமல மலர்த்தாள் போற்றி
ஏதங்கள் அறுத்தருளுங் குமரகுரு பரன்பாத இணைகள் போற்றி
தாதங்க மலர்க்கொன்றைச் சடையுடைய சிவபெருமான் சரணம் போற்றி
சீதங்கொள் மலர்க்குழலாள் சிவகாம சவுந்தரியின் திருத்தாள் போற்றி. 6

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2082 கலைநிறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலைவநின் இணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்
உலைவறும் ஒருபரை சரணஞ் சரணம்
உமைசிவை அம்பிகை சரணஞ் சரணம். 7

திருச்சிற்றம்பலம்

1. இத்தலைப்பின் கீழ் உள்ள முதல் ஏழு பாசுரங்களும் அன்பர் பொன்னேரி சுந்தரம் பிள்ளை அவர்களது 1892-ஆம் ஆண்டு அருட்பாப் பதிப்பில் முதல் முதல் அச்சாகி யிருக்கின்றன. இதோடு 15-ஆம் அடிக் குறிப்பினையும் பார்க்க

22. சண்முகர் கொம்மி

தாழிசை

அருட்பெருஞ்ஜோதி

2083 குறவர் குடிசை நுழைந்தாண்டி – அந்தக்
கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும் புகழாண்டி – அவன்
தோற்றத்தைப் பாடி அடியுங்கடி. 1

2084 மாமயில் ஏறி வருவாண்டி – அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி
தீமையி லாத புகழாண்டி – அவன் 2
சீர்த்தியைப் பாடி அடியுங்கடி.

2085 பன்னிரு தோள்கள் உடையாண்டி – கொடும்
பாவிகள் தம்மை அடையாண்டி
என்னிரு கண்கள் அனையாண்டி – அவன்
ஏற்றத்தைப் பாடி அடியுங்கடி. 3

2086 வேங்கை மரமாகி நின்றாண்டி – வந்த
வேடர் தமைஎலாம் வென்றாண்டி
தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி – அந்தத்
தீரனைப் பாடி அடியுங்கடி. 4

2087 சீர்திகழ் தோகை மயில்மேலே – இளஞ்
செஞ்சுடர் தோன்றுந் திறம்போலே
கூர்வடி வேல்கொண்டு நம்பெருமான் – வருங்
கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள். 5

2088 ஆறு முகங்களில் புன்சிரிப்பும் – இரண்
டாறு புயந்திகழ் அற்புதமும்
வீறு பரஞ்சுடர் வண்ணமும்ஓர் – திரு
மேனியும் பாருங்கள் வெள்வளைகாள். 6

2089 ஆனந்த மான அமுதனடி – பர
மானந்த நாட்டுக் கரசனடி
தானந்த மில்லாச் சதுரனடி – சிவ
சண்முகன் நங்குரு சாமியடி. 7

2090 வேதமுடி சொல்லும் நாதனடி – சதுர்
வேதமுடி திகழ் பாதனடி
நாத வடிவுகொள் நீதனடி – பர 8
நாதங் கடந்த நலத்தனடி.

2091 தத்துவத் துள்ளே அடங்காண்டி - பர
தத்துவம் அன்றித் துடங்காண்டி
சத்துவ ஞான வடிவாண்டி - சிவ
சண்முக நாதனைப் பாடுங்கடி. 9

2092 சச்சிதா னந்த உருவாண்டி - பர
தற்பர போகந் தருவாண்டி
உச்சிதாழ் அன்பர்க் குறவாண்டி - அந்த
உத்தம தேவனைப் பாடுங்கடி. 10

2093 அற்புத மான அழகனடி - துதி
அன்பர்க் கருள்செய் குழகனடி
சிற்பர யோகத் திறத்தனடி - அந்தச்
சேவகன் கீர்த்தியைப் பாடுங்கடி. 11

2094 சைவந் தழைக்கத் தழைத்தாண்டி - ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி
பொய்வந்த உள்ளத்தில் போகாண்டி - அந்தப்
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி. 12

2095 வாசி நடத்தித் தருவாண்டி - ஒரு
வாசியில் இங்கே வருவாண்டி
ஆசில் கருணை உருவாண்டி - அவன்
அற்புதத் தாள்மலர் ஏத்துங்கடி. 13

2096 இராப்பகல் இல்லா இடத்தாண்டி - அன்பர்
இன்ப உளங்கொள் நடத்தாண்டி
அராப்பளி ஈந்த திடத்தாண்டி - அந்த
அண்ணலைப் பாடி அடியுங்கடி. 14

2097 ஒன்றிரண் டான உளவாண்டி - அந்த
ஒன்றிரண் டாகா அளவாண்டி
மின்திரண் டன்ன வடிவாண்டி - அந்த
மேலவன் சீர்த்தியைப் பாடுங்கடி. 15

திருச்சிற்றம்பலம்

23. சண்முகர் வருகை

சிந்து

அருட்பெருஞ்ஜோதி

2098 வாரும் வாரும்தெய்வ வடிவேல் முருகரே
வள்ளி மணாளரே வாரும்
புள்ளி மயிலோரே வாரும். 1

2099 சங்கம் ஒலித்தது தாழ்கடல் விம்மிற்று
சண்முக நாதரே வாரும்
உண்மை வினோதரே வாரும். 2

2100 பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்று
பொன்னான வேலரே வாரும்
மின்னார்முந் நூலரே வாரும். 3

2101 காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கண்ணுதல் சேயரே வாரும்
ஒண்ணுதல் நேயரே வாரும். 4

2102 செங்கதிர் தோன்றிற்றுத் தேவர்கள் சூழ்ந்தனர்
செங்கல்வ ராயரே வாரும்
எங்குரு நாதரே வாரும். 5

2103 அருணன் உதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்
ஆறுமுகத் தோரே வாரும்
மாறில்அகத் தோரே வாரும். 6

2104 சூரியன் தோன்றினன் தொண்டர்கள் சூழ்ந்தனர்
சூரசங் காரரே வாரும்
வீரசிங் காரரே வாரும். 7

2105 வீணை முரன்றது வேதியர் சூழ்ந்தனர்
வேலாயுதத் தோரே வாரும்
காலாயுதத் தோரே வாரும். 8

2106 சேவல் ஒலித்தது சின்னம் பிடித்தனர்
தேவர்கள் தேவரே வாரும்
மூவர் முதல்வரே வாரும். 9

2107 பத்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்
பன்னிரு தோளரே வாரும்
பொன்மலர்த் தாளரே வாரும். 10

2108 மாலை கொணர்ந்தனர் மஞ்சனம் போந்தது
மாமயில் வீரரே வாரும்
தீமையில் தீரரே வாரும். 11

தொண்டர்கள் நாடினர் தோத்திரம் பாடினர்
சுப்பிர மணியரே வாரும்
வைப்பின் அணியரே வாரும்.

24. திருவருள் முறையீட்டுக் கண்ணி

தாழிசை

அருட்பெருஞ்ஜோதி

2110 பற்று நினைத்தெழுமிப் பாவிமனத் தீமையெலாம்
உற்று நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 1

2111 எள்ளேத நின்னிடத்தே எண்ணுகின்ற தோறுமதை
உள்ளே நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 2

2112 துன்னுகின்ற தீமைநின்பாற் சூழ்ந்துரைக்குந் தோறுமதை
உன்னுகின்ற போதிலெனக் கூடுருவிப் போகுதடா. 3

2113 எள்ளுகின்ற தீமைநின்பா லெண்ணுகின்ற தோறுமதை
உள்ளுகின்ற போதிலெனக் கூடுருவிப் போகுதடா. 4

2114 மிக்கநிலை நிற்க விரும்பேன் பிழைகளெலாம்
ஒக்க நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 5

2115 கோகோ வெனுங்கொடியேன் கூறியகுற் றங்களெலாம்
ஓகோ நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 6

2116 பித்து மனக்கொடியேன் பேசியவன் சொல்லையெலாம்
ஒத்து நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 7

2117 தேர்ந்து தெளியாச் சிறியவனேன் தீமையெலாம்
ஓர்ந்து நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 8

2118 நிறுத்தி யறியே நிகழ்த்தியவென் சொல்லை
உறுத்தி நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 9

2119 தோன்றி விரியுமனத் துட்டனேன் வன்பிழையை
ஊன்றி நினைக்கிலெனக் கூடுருவிப் போகுதடா. 10

2120 எண்ணினைப்ப தின்றிநினை யெள்ளி யுரைத்ததனை
உண்ணினைக்குந் தோறுமெனக் குள்ள முருகுதடா. 11

2121 கடையவனேன் வைதகடுஞ் சொன்னினைக்குந் தோறும்
உடையவனே யென்னுடைய வுள்ள முருகுதடா. 12

2122 பித்தனெனத் தீமை பிதற்றியதெண் ணுந்தோறும்
உத்தமனே யென்னுடைய வுள்ள முருகுதடா. 13

2123 மன்றுடையாய் நின்னருளை வைதகொடுஞ் சொற்பொருளில்
ஒன்றை நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 14

2124 வெருவாம லையோ விளம்பியசொல் லெல்லாம்
ஒருவா நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 15

2125 புலைக்கொடியேன் புன்சொற் புகன்றதெண்ணுந் தோறும்
உலைக்கண்மெழு காகவென்ற னுள்ள முருகுதடா. 16

2126 ஈடில்பெருந் தாயி லினியாய்நின் றண்ணருட்பால்
ஊடியசொல் லன்னிலெனக் குள்ள முருகுதடா. 17

2127 புரைத்தமன வஞ்சப் புலையேன் [1]றிருவருளை
உரைத்தபிழை யெண்ணிலெனக் குள்ள முருகுதடா. 18

2128 நாடி நினையா நவையுடையேன் புன்சொலெலாம்
ஓடி நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 19

2129 வெப்பில் கருணை விளக்கனையா யென்பிழையை
ஒப்பி நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 20

2130 அஞ்சலென்றாய் நின்பால் அடாதமொழி பேசியதை
அஞ்சி நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 21

2131 மெய்யோர் சிறிதுமிலேன் வீண்மொழியா லூடியதை
ஐயோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 22

2132 இத்தா ரணிக்குளெங்கு மில்லாத தீமைசெய்தேன்
அத்தா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 23

2133 பொய்யால் விரிந்த புலைமனத்தேன் செய்பிழையை
ஐயா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 24

2134 இப்பாவி நெஞ்சா லிழுக்குரைத்தே னாங்கதனை
அப்பா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 25

2135 எண்ணாக் கொடுமையெலா மெண்ணியுரைத் தேனதனை
அண்ணா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 26

2136 வெம்மான் மனத்து வினையேன் புகன்றதெலாம்
அம்மா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 27

1. புலையேன் அருளை – ச.மு.க பதிப்பு

2137 எச்சோடு மில்லா திழிந்தேன் பிழைகளெல்லாம்
அச்சோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 28

2138 வந்தோடி நைமனத்து வஞ்சகனேன் வஞ்சமெலாம்
அந்தோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 29

2139 ஓவாக் கொடியே னுரைத்த பிழைகளெலாம்
ஆவா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 30

2140 கரைசேர வெண்ணாக் கடையேன் பிழையை
அரைசே நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 31

2141 மருளுடையேன் வஞ்ச மனத்தீமை யெல்லாம்
அருளுடையா யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 32

2142 ஈண்டவனேன் வன்சொல் இயம்பியதை யென்னுடைய
ஆண்டவனே யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 33

2143 வற்புதனேன் வஞ்ச மனப்பிழையை மன்றாடும்
அற்புதனே யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 34

2144 துன்புடையேன் புன்மொழிகள் தூற்றியதை யெவ்வுயிர்க்கும்
அன்புடையா யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 35

2145 கொதிக்கின்ற வன்மொழியாற் கூறியதை யையோ
மதிக்கின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 36

2146 சினங்கொண்ட போதெல்லாஞ் செப்பிய வன்சொல்லை
மனங்கொள்ளுந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 37

2147 செய்தநன்றி யெண்ணாச் சிறியவனே னின்னருளை
வைத்தெண்ணுந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 38

2148 பொய்த்த மனத்தேன் புகன்றகொடுஞ் சொற்களெலாம்
வைத்துநினைக் குந்தோறும் வாளிட் டறுக்குதடா. 39

2149 பொங்குகின்ற தீமை புகன்றதெலா மெண்ணியெண்ணி
மங்குகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 40

2150 ஊடுகின்ற சொல்லா லுரைத்ததனை யெண்ணியெண்ணி
வாடுகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 41

உயங்குகின்றேன் வன்சொல் லுரைத்ததனை யெண்ணி
மயங்குகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா.

2152 சொல்விளைவு நோக்காதே சொன்னதெலா மெண்ணுதொறும்
வல்வினையே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா. 43

2153 மேல்விளைவு நோக்காதே வேறுசொன்ன தெண்ணுதொறும்
மால்வினையே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா. 44

2154 விஞ்சகத்தா லந்தோ விளம்பியதை யெண்ணுதொறும்
வஞ்சகத்தே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா. 45

2155 விலங்குகின்ற நெஞ்ச விளைவையெண் ணுந்தோறும்
மலங்குகின்றே னுள்ளிடத்தே வாளிட் டறுக்குதடா. 46

2156 தூய்மையிலா வன்மொழியாற் சொன்னவெலா மெண்ணுதொறும்
வாய்மையிலே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா. 47

2157 கலிக்கின்ற வஞ்சகக் கருத்தைக் கருதி
வலிக்கின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 48

2158 நீட்டுகின்ற வஞ்ச நெடுஞ்சொலெலா நெஞ்சகத்தே
மாட்டுகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 49

2159 பொருந்துகின்ற வஞ்சப் புதுமையெண்ணி யையோ
வருந்துகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 50

2160 வெருவிக்கும் வஞ்ச வெறுஞ்சொலெலாம் நெஞ்சில்
வருவிக்குந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 51

2161 ஊடும்போ துன்னை யுரைத்தவெலா நாயடியேன்
நாடும்போ தெல்லாமென் னாடி நடுங்குதடா. 52

2162 வாய்க்கடையா வன்சொல் வழங்கியவென் வன்மனத்தை
நாய்க்கடையே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா. 53

2163 கன்றி யுரைத்த கடுஞ்சொற் கடுவையெலாம்
நன்றியிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா. 54

2164 புன்மையினால் வன்சொற் புகன்றபுலைத் தன்மையெலாம்
நன்மையிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா. 55

2165 ஊனெண்ணும் வஞ்ச வுளத்தா லுரைத்தவெலாம்
நானெண்ணுந் தோறுமென்ற னாடி நடுங்குதடா. 56

வஞ்சனையா லஞ்சாது வன்சொல் புகன்றவெலாம்
நஞ்சனையே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா.

2167 கோணநெடு நெஞ்சக் குரங்காற் குதித்தவெலாம்
நாணமிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா. 58

2168 ஊனமிலா நின்னை யுரைத்தகொடுஞ் சொல்லையெலாம்
ஞானமிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா. 59

2169 எற்றே மதியிலியே னெண்ணா துரைத்ததனைச்
சற்றே நினைத்திடினுந் தாது கலங்குதடா. 60

2170 இனியேது செய்வே னிகழ்ந்துரைத்த சொல்லைத்
தனியே நினைத்திடினுந் தாது கலங்குதடா. 61

2171 நாயனையே னெண்ணாம னலங்கியவன் சொல்லையெலாம்
தாயனையா யெண்ணுதொறுந் தாது கலங்குதடா. 62

2172 நிற்குருகா வஞ்ச நினைவால் நினைத்தவெலாஞ்
சற்குருவே யெண்ணுதொறுந் தாது கலங்குதடா. 63

2173 வெந்நரகில் வீழும் விளைவால் விளம்பியதை
என்னரசே யெண்ணுதொறு மென்னை விழுங்குதடா. 64

2174 நன்கறியேன் வாளா நவின்ற நவையனைத்தும்
என்குருவே யெண்ணுதொறு மென்னை விழுங்குதடா. 65

2175 ஆவ தறியா தடியே னிகழ்ந்தகொடும்
பாவ நினைக்கிற் பகீரென் றலைக்குதடா. 66

2176 வந்திப் பறியேன் வழங்கியவன் சொல்லையெலாம்
சிந்திக்கி லுள்ளே திடுக்கிட் டழுங்குதடா. 67

2177 குற்ற நினைத்த கொடுஞ்சொலெலா மென்னுளத்தே
பற்ற நினைக்கிற் பயமா யிருக்குதடா. 68

2178 எள்ளுகின்ற தீமை யெடுத்துரைத்தே னாங்கதனை
விள்ளுகின்ற தோறுமுள்ளம் வெந்து வெதும்புதடா. 69

25. திருவடிக் கண்ணி

தாழிசை

அருட்பெருஞ்ஜோதி

2179 மின்னிடையாள் காண விளங்குமன்றி லாடுகின்றாய்
என்னுடையா யுன்ற னிணையடிதான் நோவாதா. 1

2180 வன்னமுதே யின்ப மலியமன்றி லாடுகின்றாய்
என்னமுதே யுன்ற னிணையடிதான் நோவாதா. 2

2181 நண்ணியமெய் யன்பர் நயக்கமன்றி லாடுகின்றாய்
புண்ணியனே யுன்றனது பொன்னடிதான் நோவாதா. 3

2182 அன்பரின்பங் கொள்ளநட மம்பலத்தே யாடுகின்றாய்
இன்புருவா முன்ற னிணையடிதான் நோவாதா. 4

2183 நூலுணர்வா நுண்ணுணர்வி னோக்கநட மாடுகின்றாய்
மாலறியா வுன்றன் மலர்ப்பாதம் நோவாதா. 5

2184 எள்ளலற வம்பலத்தே யின்பநட மாடுகின்றாய்
வள்ளலே யுன்றன் மலரடிதான் நோவாதா. 6

2185 சைவ நிலைத்துத் தழைத்தோங்க வாடுகின்றாய்
தெய்வ மணியே திருவடிதான் நோவாதா. 7

2186 எல்லாரு மின்புற் றிருக்கநட மாடுகின்றாய்
வல்லாரின் வல்லாய் மலர்ப்பாதம் நோவாதா. 8

2187 அவமே கழிந்தின்ப மன்பர்கொள வாடுகின்றாய்
சிவமே நினது திருவடிதான் நோவாதா. 9

2188 தற்பரமா மன்றிற் றனிநடன மாடுகின்றாய்
சிற்பரமே யுன்றன் திருமேனி நோவாதா. 10

2189 வில்வவேர் மாலை மிளிர்ந்தசைய வாடுகின்றாய்
செல்வமே யுன்றன் திருமேனி நோவாதா. 11

திருச்சிற்றம்பலம்

26. பேரன்புக் கண்ணி

தாழிசை

அருட்பெருஞ்ஜோதி

2190 கற்றதென்றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டுன்
அற்புதச்சிற் றம்பலத்தி லன் புவைத்தேன் ஐயாவே. 1

2191 ஈடணைகள் நீக்கிநமக் கின்பளிக்கு மென்றுமன்றில்
ஆடுந் திருவடிக்கே ஆசைவைத்தேன் ஐயாவே. 2

2192 நானந்த மெய்தா நலம்பெறவே யெண்ணிமன்றில்
ஆனந்த நாடகத்துக் கன்புவைத்தேன் ஐயாவே. 3

2193 வாடலறச் சாகா வரங்கொடுக்கு மென்றுமன்றில்
ஆடலடிப் பொன்மலர்க்கே அன்புவைத்தேன் ஐயாவே. 4

2194 பொற்புறவே பொன்றாப் பொருளளிக்கு மென்றுமன்றில்
அற்புதப்பொற் சேவடிக்கே அன்புவைத்தேன் ஐயாவே. 5

2195 ஈனமறுத் தென்றும் இறவாமை நல்குமென்றே
ஞானமணி மன்றிடத்தே நண்புவைத்தேன் ஐயாவே. 6

2196 ஓர்துணைநின் பொன்னடியென் றுன்னுகின்றே னுன்னையன்றி
ஆர்துணையும் வேண்டேனென் அன்புடைய ஐயாவே. 7

2197 பூசைசெய்து பெற்றவுன்றன் பொன்னடிமே லன்றியயல்
ஆசையொன்று மில்லையெனக் கன்புடைய ஐயாவே. 8

2198 இச்சைநின்மே லன்றியெனக் கெள்ளளவும் வேறுமொன்றில்
இச்சையிலை நின்னாணை யென்னருமை ஐயாவே. 9

2199 எப்படிநின் னுள்ள மிருக்கின்ற தென்னளவில்
அப்படிநீ செய்கவெனக் கன்புடைய ஐயாவே. 10

2200 எவ்வண்ணம் நின்கருத்திங் கென்னளவி லெண்ணியதோ
அவ்வண்ணஞ் செய்கவெனக் கன்புடைய ஐயாவே. 11

2201 தேசுறுநின் றண்ணருளாந் தெள்ளமுதங் கொள்ளவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே. 12

2202 மாசறுநின் பொன்னருளா மாமணிபெற் றாடவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே. 13

2203 நாசமிலா நின்னருளாம் ஞானமருந் துண்ணவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே.

திருச்சிற்றம்பலம்

27. இலக்ஷ்மி தோத்திரம்[1]

பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருக்கண்ண மங்கை தாயார் துதி

2204 உலகம் புரக்கும் பெருமான்றன் உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை யளிக்கும் பேரின்ப வுருவே யெல்லாம் உடையாளே
திலகஞ் செறிவா ணுதற்கரும்பே தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே தித்தித் தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற் கருளளித்த வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவே ஞான மணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணைபொழி தடங்கண் திருவே கண்ணமங்கைத்
தாயே சரணஞ் சரணமிது தருணங் கருணை தருவாயே.

28. சரஸ்வதி ஸ்தோத்திரம்[2]

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

2205 அன்பர்பா நீங்காஎன் அம்மையே தாமரைமேற்
பொன்பொருவு மேனி அயன்பூவின் – மன்பெரிய
வாக்கிறைவி நின்தாள் மலர்ச்சரணம் போன்றேனைக்
காக்கக் கடனுனக்கே காண்.

திருச்சிற்றம்பலம்

1. இஃது ஆறாந்திருமுறைப் பாடல்கள் கொண்ட அன்பர்களின் நான்கு பழைய நோட்டுப் பிரதிகளில் காணப்படுகிறது. இவையே இங்கு மேற்கொண்ட மூலம் ஆகும். 1896 – ஆம் ஆண்டுத் திருஅருட்பாவில் இது முதல் அச்சாகியிருக்கிறது. ஆ. பா. பதிப்பு ஆதாரம் தனிப்பாசுரப் பகுதி பக்கம் : 80

2. இஃது அடிகளாரால் இங்கிதமாலை எழுதியுள்ள பழைய சுவடியின் தலைப்பேட்டில் காணப்படுகிறது. அடிகளாரின் திருக்கை சாத்தியருளிய இத்திரு ஏடே இங்கு மேற்கொண்ட முதல் ஆகும். இது 1892 ஆம் ஆண்டுத் திருஅருட்பாவில் ஒரு தனிப்பாசுரமாக முதல் முறையாக அச்சாயிருக்கிறது. ஆ. பா. பதிப்பு ஆதாரம் தனிப்பாசுரப் பகுதி பக்கம் : 81

29. மங்களம்[1]

சிந்து
அருட்பெருஞ்ஜோதி

2206 புங்கவர் புகழுமா தங்கமு கந்திகழ்
எங்கள் கணேசராந் துங்கற்கு - மங்களம். 1

2207 போதந் திகழ்பர நாதந் தனில் நின்ற
நீதராஞ் சண்முக நாதற்கு - மங்களம். 2

2208 பூசைசெய் வாருளம் ஆசைசெய் வார்தில்லை
ஈசர் எமதுநட ராஜற்கு - மங்களம். 3

2209 பூமி புகழ்குரு சாமி தனைஈன்ற
வாமி எனுஞ்சிவ காமிக்கு - மங்களம். 4

2210 புங்கமி குஞ்செல்வந் துங்கமு றத்தரும்
செங்க மலத்திரு மங்கைக்கு - மங்களம். 5

2211 பூணி லங்குந்தன வாணி பரம்பர
வாணி கலைஞர்கொள் வாணிக்கு - மங்களம். 6

2212 புண்ணிய ராகிய கண்ணிய ராய்த்தவம்
பண்ணிய பத்தர்க்கு முத்தர்க்கு - மங்களம். 7

இரண்டாம் திருமுறை
தனிப்பாசுரங்கள் பகுதி முற்றிற்று

1. இம் மங்களம் இரண்டு நோட்டுப் பிரதிகளில் ஓர் தனிப் பாட்டாக எழுதப்பட்டிருக்கிறது. அவையே இங்கு மேற்கொண்ட மூலம், 1892-ஆண்டு அருட்பாப் பதிப்பில் தான் இது முதல் முதல் அச்சாகியிருக்கிறது.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா

மூன்றாம் திருமுறை

மூன்றாம் திருமுறை

1. திருஉலாப் பேறு

தலைவி பாங்கியொடு கிளத்தல்
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2213 சீரார் வளஞ்சேர் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிதனை
ஊரா ருடன்சென் றெனதுநெஞ்சம் உவகை ஓங்கப் பார்த்தனன்காண்
வாரார் முலைகண் மலைகளென வளர்ந்த வளைகள் தளர்ந்தனவால்
ஏரார் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 1

2214 சீர்த்தேன் பொழிலார் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரப்
பார்த்தேன் கண்கள் இமைத்திலகாண் பைம்பொன் வளைகள் அமைத்தில காண்
தார்த்தேன் குழலும் சரிந்தனகாண் தானை இடையிற் பிரிந்தனகாண்
ஈர்த்தேன் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 2

2215 சீதப் புனல்சூழ் வயல்ஒற்றித் தியாகப் பெருமான் திருமாட
வீதிப் பவனி வரக்கண்டேன் மென்பூந் துகில்வீழ்ந் ததுகாணேன்
போதிற் றெனவும் உணர்ந்திலேன் பொன்ன னார்பின் போதுகிலேன்
ஈதற் புதுமே என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 3

2216 தென்னார் சோலைத் திருஒற்றித் தியாகப் பெருமான் பவனிவரப்
பொன்னார் வீதி தனிற்பார்த்தேன் புளகம் போர்த்தேன் மயல்பூத்தேன்
மின்னார் பலர்க்கும் முன்னாக மேவி அவன்றன் எழில்வேட்டு
என்னார் அணங்கே என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 4

2217 சீலக் குணத்தோர் புகழ்ஒற்றித் தியாகப் பெருமான் பவனிஇராக்
காலத் தடைந்து கண்டேன்என் கண்கள் இரண்டோ ஆயிரமோ
ஞாலத் தவர்கள் அலர்தூற்ற நற்றூ சிடையில் நழுவிவிழ
ஏலக் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 5

2218 சேயை அருளுந் திருஒற்றித் தியாகப் பெருமான் வீதிதனில்
தூய பவனி வரக்கண்டேன் சூழ்ந்த மகளிர் தமைக்காணேன்
தாயை மறந்தேன் அன்றியும்என் தனையும் மறந்தேன் தனிப்பட்டேன்
ஏயென் தோழி என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 6

2219 திங்கள் உலவும் பொழில்ஒற்றித் தியாகப் பெருமான் திருவீதி
அங்கண் களிக்கப் பவனிவந்தான் அதுபோய்க் கண்டேன் தாயரெலாம்
தங்கள் குலத்துக் கடாதென்றார் தம்மை விடுத்தேன் தனியாகி
எங்கண் அனையாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 7

2220 தேசார் மணிசூழ் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரக்
கூசா தோடிக் கண்டரையில் கூறை இழந்தேன் கைவளைகள்
வீசா நின்றேன் தாயரெலாம் வீட்டுக் கடங்காப் பெண்ணெனவே
ஏசா நிற்க என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 8

2221 தேடார்க் கரியான் ஒற்றிநகர்த் தியாகப் பெருமான் பவனிவரத்
தோடார் பணைத்தோட் பெண்களொடும் சூழ்ந்து மகிழ்ந்து கண்டதன்றி
வாடாக் காதல் கொண்டறியேன் வளையும் துகிலும் [1]சேர்ந்ததுடன்
ஏடார் கோதை என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 9

2222 திருமாற் கரியான் ஒற்றிநகர்த் தியாகப்பெருமான் பவனிவரப்
பெருமான் மனமு நானும்முன்னும் பின்னும் சென்று கண்டேமால்
பொருமா நின்றேன் தாயரெலாம் போஎன் றீர்க்கப் போதுகிலேன்
இருண்மாண் குழலாய் என்னடிநான் இச்சை மயமாய் நின்றதுவே. 10

திருச்சிற்றம்பலம்

2. நாரையும் கிளியும் நாட்டுறு தூது

தலைவி பறவைமேல் வைத்துப் பையுளெய்தல்
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2223 கண்ணன் நெடுநாள் மண்ணிடந்தும் காணக் கிடையாக் கழலுடையார்
நண்ணும் ஒற்றி நகரார்க்கு நாராய் சென்று நவிற்றாயோ
அண்ணல் உமது பவனிகண்ட அன்று முதலாய் இன்றளவும்
உண்ணும் உணவோ டுறக்கமுநீத் துற்றாள் என்றிவ் வொருமொழியே. 1

2224 மன்னுங் கருணை வழிவிழியார் மதுர மொழியார் ஒற்றிநகர்த்
துன்னும் அவர்தந் திருமுன்போய்ச் சுகங்காள் நின்று சொல்லீரோ
மின்னுந் தேவர் திருமுடிமேல் விளங்குஞ் சடையைக் கண்டவள்தன்
பின்னுஞ் சடையை அவிழ்த்தொன்றும் பேசாள் எம்மைப் பிரிந்தென்றே. 2

2225 வடிக்குந் தமிழ்த்தீந் தேன்என்ன வசனம் புகல்வார் ஒற்றிதனில்
நடிக்குந் தியாகர் திருமுன்போய் நாராய் நின்று நவிற்றாயோ
பிடிக்குங் கிடையா நடைஉடைய பெண்க ளெல்லாம் பிச்சிஎன
நொடிக்கும் படிக்கு மிகுங்காம நோயால் வருந்தி நோவதுவே. 3

2226 மாய மொழியார்க் கறிவரியார் வண்கை உடையார் மறைமணக்கும்
தூய மொழியார் ஒற்றியிர்போய்ச் சுகங்காள் நின்று சொல்லீரோ
நேய மொழியாள் பந்தாடாள் நில்லாள் வாச நீராடாள்
ஏய மொழியாள் பாலனமும் ஏலாள் உம்மை எண்ணிஎன்றே. 4

2227 ஒல்லார் புரமூன் றெரிசெய்தார் ஒற்றி அமர்ந்தார் எல்லார்க்கும்
நல்லார் வல்லார் அவர்முன்போய் நாராய் நின்று நவிற்றுதியே
அல்லார் குழலாள் கண்ணீராம் ஆற்றில் அலைந்தாள் அணங்கனையார்
பல்லார் சூழ்ந்து பழிதூற்றப் படுத்தாள் விடுத்தாள் பாயல்என்றே.

1. சோர்ந்ததுடன் : ச.மு.க., ஆ. பா.

2228 ஓவா நிலையார் பொற்சிலையார் ஒற்றி நகரார் உண்மைசொலும்
தூவாய் மொழியார் அவர்முன்போய்ச் சுகங்காள் நின்று சொல்லீரோ
பூவார் முடியாள் பூமுடியாள் போவாள் வருவாள் பொருந்துகிலாள்
ஆவா என்பாள் மகளிரொடும் ஆடாள் தேடாள் அனம்என்றே. 6

2229 வட்ட மதிபோல் அழகொழுகும் வதன விடங்கர் ஒற்றிதனில்
நட்ட நவில்வார் அவர்முன்போய் நாராய் நின்று நவிற்றாயோ
கட்ட அவிழ்ந்த குழல்முடியாள் கடுகி விழுந்த கலைபுனையாள்
முட்ட விலங்கு முலையினையும் மூடாள் மதனை முனிந்தென்றே. 7

2230 வேலை விடத்தை மிடற்றணிந்த வெண்ணீற் றழகர் விண்ணளவும்
சோலை மருவும் ஒற்றியிற்போய்ச் சுகங்காள் அவர்முன் சொல்லீரோ
மாலை மனத்தாள் கற்பகப்பூ மாலை தரினும் வாங்குகிலாள்
காலை அறியாள் பகல்அறியாள் கங்குல் அறியாள் கனிந்தென்றே. 8

2231 மாண்காத் தளிர்க்கும் ஒற்றியினார் வான மகளிர் மங்கலப்பொன்
நாண்காத் தளித்தார் அவர்முன்போய் நாராய் நின்று நவிற்றுதியோ
பூண்காத் தளியாள் புலம்பிநின்றாள் புரண்டாள் அயன்மால் ஆதியராம்
சேண்காத் தளிப்போர் தேற்றுகினும் தேறாள் மனது திறன்என்றே. 9

2232 தேசு பூத்த வடிவழகர் திருவாழ் ஒற்றித் தேவர் புலித்
தூசு பூத்த கீளுடையார் சுகங்காள் அவர்முன் சொல்லீரோ
மாசு பூத்த மணிபோல வருந்தா நின்றாள் மங்கையர்வாய்
ஏசு பூத்த அலர்க்கொடியாய் இளைத்தாள் உம்மை எண்ணிஎன்றே. 10

திருச்சிற்றம்பலம்

3. இரங்கன் மாலை

தலைவி இரங்கல்
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2233 நன்று புரிவார் திருவொற்றி நாதர் எனது நாயகனார்
மன்றுள் அமர்வார் மால்விடைமேல் வருவார் அவரை மாலையிட்ட
அன்று முதலாய் இன்றளவும் அந்தோ சற்றும் அணைந்தறியேன்
குன்று நிகர்பூண் முலையாய் என் குறையை எவர்க்குக் கூறுவனே. 1

2234 தகைசேர் ஒற்றித் தலத்தமர்ந்தார் தரியார் புரங்கள் தழலாக்க
நகைசேர்ந் தவரை மாலையிட்ட நாளே முதல்இந் நாள்அளவும்
பகைசேர் மதன்பூச் சூடல்அன்றிப் பதப்பூச் சூடப் பார்த்தறியேன்
குகைசேர் இருட்பூங் குழலாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 2

2235 தோடார் குழையார் ஒற்றியினார் தூயர்க் கலது சுகம்அருள
நாடார் அவர்க்கு மாலையிட்ட நாளே முதல்இந் நாள்அளவும்
சூடா மலர்போல் இருந்ததல்லால் சுகமோர் அணுவுந் துய்த்தறியேன்
கோடா ஒல்குங் கொடியேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே.

2236 அண்டர் எவர்க்கும் அறிவொண்ணார் அணியார் ஒற்றி யார்நீல
கண்டர் அவர்க்கு மாலையிட்ட கடனே அன்றி மற்றவரால்
பண்டம் அறியேன் பலன்அறியேன் பரிவோ டணையப் பார்த்தறியேன்
கொண்டன் மணக்குங் கோதாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 4

2237 பாடல் கமழும் பதம்உடையார் பணைசேர் ஒற்றிப் பதிஉடையார்
வாடல் எனவே மாலையிட்ட மாண்பே அன்றி மற்றவரால்
ஆடல் அளிசூழ் குழலாய்உன் ஆணை ஒன்றும் அறியனடி
கூடல் பெறவே வருந்துகின்றேன் குறையை எவர்க்குக் கூறுவனே. 5

2238 துடிசேர் கரத்தார் ஒற்றியில்வாழ் சோதி வெண்ணீற் றழகர்அவர்
கடிசேர்ந் தென்னை மாலையிட்ட கடனே அன்றி மற்றவரால்
பிடிசேர் நடைநேர் பெண்களைப்போல் பின்னை யாதும் பெற்றறியேன்
கொடிநேர் இடையாய் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 6

2239 ஒற்றி நகர்வாழ் உத்தமனார் உயர்மால் விடையார் உடையார்தாம்
பற்றி என்னை மாலையிட்ட பரிசே அன்றிப் பகைதெரிந்து
வெற்றி மதனன் வீறடங்க மேவி அணைந்தார் அல்லரடி
குற்றம் அணுவும் செய்தறியேன் குறையை எவர்க்குக் கூறுவனே. 7

2240 வானும் புவியும் புகழ்ஒற்றி வாணர் மலர்க்கை மழுவினொடு
மானும் உடையார் என்றனக்கு மாலை யிட்ட தொன்றல்லால்
நானும் அவருங் கூடியொரு நாளும் கலந்த தில்லையடி
கோனுந் தியவேற் கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 8

2241 தெறித்து மணிகள் அலைசிறக்கும் திருவாழ் ஒற்றித் தேவர்எனை
வறித்திங் கெளியேன் வருந்தாமல் மாலை யிட்ட நாள்அலது
மறித்தும் ஒருநாள் வந்தென்னை மருவி அணைய நானறியேன்
குறித்திங் குழன்றேன் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 9

2242 மின்னோ டொக்கும் வேணியினார் விமலர் ஒற்றி வாணர்எனைத்
தென்னோ டொக்க மாலையிட்டுச் சென்றார் பின்பு சேர்ந்தறியார்
என்னோ டொத்த பெண்களெலாம் ஏசி நகைக்க இடருழந்தேன்
கொன்னோ டொத்த கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 10

2243 உடுத்தும் அதளார் ஒற்றியினார் உலகம் புகழும் உத்தமனார்
தொடுத்திங் கெனக்கு மாலையிட்ட சுகமே அன்றி என்னுடனே
படுத்தும் அறியார் எனக்குரிய பரிவிற் பொருள்ஓர் எள்ளளவும்
கொடுத்தும் அறியார் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 11

2244 உழைஒன் றணிகைத் தலம்உடையார் ஒற்றி உடையார் என்றனக்கு
மழைஒன் றலர்பூ மாலையிட்டார் மறித்தும் வந்தார் அல்லரடி
பிழைஒன் றறியேன் பெண்களெலாம் பேசி நகைக்கப் பெற்றேன்காண்
குழைஒன் றியகண் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே.

2245 ஏடார் பொழில்சூழ் ஒற்றியினார் என்கண் அனையார் என்தலைவர்
பீடார் மாலை இட்டதன்றிப் பின்னோர் சுகமும் பெற்றறியேன்
வாடாக் காதற் பெண்களெலாம் வலது பேச நின்றனடி
கோடார் கொங்கை மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 13

2246 கஞ்சன் அறியார் ஒற்றியினார் கண்மூன் றுடையார்கனவினிலும்
வஞ்சம் அறியார் என்றனக்கு மாலைஇட்ட தொன்றல்லால்
மஞ்சம் அதனில் என்னோடு மருவி இருக்க நான்அறியேன்
கொஞ்சம் மதிநேர் நுதலாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 14

2247 ஆலம் இருந்த களத்தழகர் அணிசேர் ஒற்றி ஆலயத்தார்
சால எனக்கு மாலையிட்ட தன்மை ஒன்றே அல்லாது
கால நிரம்ப அவர்புயத்தைக் கட்டி அணைந்த தில்லையடி
கோல மதிவாண் முகத்தாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 15

2248 நெய்தல் பணைசூழ் ஒற்றியினார் நிருத்தம் பயில்வார் மால்அயனும்
எய்தற் கரியார் மாலையிட்டார் எனக்கென் றுரைக்கும் பெருமைஅல்லால்
உய்தற் கடியேன் மனையின்கண் ஒருநா ளேனும் உற்றறியார்
கொய்தற் கரிதாங் கொடியேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 16

2249 போர்க்கும் உரியார் மால்பிரமன் போகி முதலாம் புங்கவர்கள்
யார்க்கும் அரியார் எனக்கெளியர் ஆகி என்னை மாலையிட்டார்
ஈர்க்கும் புகுதா முலைமதத்தை இன்னுந் தவிர்த்தார் அல்லரடி
கூர்க்கும் நெடுவேற் கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 17

2250 இறையார் ஒற்றி யூரினிடை இருந்தார் இனியார் என்கணவர்
மறையார் எனக்கு மாலையிட்டார் மருவார் என்னை வஞ்சனையோ
பொறையார் இரக்கம் மிகவுடையார் பொய்ஒன் றுரையார் பொய்யலடி
குறையா மதிவாண் முகத்தாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 18

2251 உடுப்பார் கரித்தோல் ஒற்றிஎனும் ஊரார் என்னை உடையவனார்
மடுப்பார் இன்ப மாலையிட்டார் மருவார் எனது பிழைஉரைத்துக்
கெடுப்பார் இல்லை என்சொலினும் கேளார் எனது கேள்வர்அவர்
கொடுப்பார் என்றோ மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 19

2252 எருதில் வருவார் ஒற்றியுளார் என்நா யகனார் எனக்கினியார்
வருதி எனவே மாலையிட்டார் வந்தால் ஒன்றும் வாய்திறவார்
கருதி அவர்தங் கட்டளையைக் கடந்து நடந்தேன் அல்லவடி
குருகுண் கரத்தாய் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 20

2253 மாவென் றுரித்தார் மாலையிட்ட மணாளர் என்றே வந்தடைந்தால்
வாவென் றுரையார் போஎன்னார் மௌனஞ் சாதித் திருந்தனர்காண்
ஆவென் றலறிக் கண்ணீர்விட் டழுதால் துயரம் ஆறுமடி
கோவென் றிருவேல் கொண்டாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே.

2254 நாட்டும் புகழார் திருஒற்றி நகர்வாழ் சிவனார் நன்மையெலாம்
காட்டும் படிக்கு மாலையிட்ட கணவர் எனஓர் காசளவில்
கேட்டும் அறியேன் தந்தறியார் கேட்டால் என்ன விளையுமடி
கோட்டு மணிப்பூண் முலையாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 22

2255 வெற்பை வளைத்தார் திருஒற்றி மேவி அமர்ந்தார் அவர்எனது
கற்பை அழித்தார் மாலையிட்டுக் கணவர் ஆனார் என்பதல்லால்
சிற்ப மணிமே டையில்என்னைச் சேர்ந்தார் என்ப தில்லையடி
கொற்பை அரவின் இடையாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 23

2256 என்ன கொடுத்தும் கிடைப்பரியார் எழிலார் ஒற்றி நாதர்எனைச்
சின்ன வயதில் மாலையிட்டுச் சென்றார் சென்ற திறன் அல்லால்
இன்னும் மருவ வந்திலர்காண் யாதோ அவர்தம் எண்ணமது
கொன்னுண் வடிவேற் கண்ணாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 24

2257 கரும்பின் இனியார் கண்ணுதலார் கடிசேர் ஒற்றிக் காவலனார்
இரும்பின் [1]மனத்தேன் தனைமாலை இட்டார் இட்ட அன்றலது
திரும்பி ஒருகால் வந்தென்னைச் சேர்ந்து மகிழ்ந்த தில்லையடி
குரும்பை அனைய முலையாய்என் குறையை எவர்க்குக் கூறுவனே. 25

2258 தீது தவிர்ப்பார் திருவொற்றித் தியாகர் அழியாத் திறத்தர்அவர்
மாது மகிழ்தி எனஎன்னை மாலை யிட்டார் மாலையிட்ட
போது கண்ட திருமுகத்தைப் போற்றி மறித்தும் கண்டறியேன்
கோது கண்டேன் மாதேஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 26

2259 வென்றிக் கொடிமேல் விடைஉயர்த்தார் மேலார் ஒற்றி யூரர்என்பால்
சென்றிக் குளிர்பூ மாலையிட்டார் சேர்ந்தார் அல்லர் யான்அவரை
அன்றிப் பிறரை நாடினனோ அம்மா ஒன்றும் அறியனடி
குன்றிற் றுயர்கொண் டழும்எனது குறையை எவர்க்குக் கூறுவனே. 27

2260 தோளா மணிநேர் வடிவழகர் சோலை சூழ்ந்த ஒற்றியினார்
மாளா நிலையர் என்றனக்கு மாலை இட்டார் மருவிலர்காண்
கேளாய் மாதே என்னிடையே கெடுதி இருந்த தெனினும்அதைக்
கோளார் உரைப்பார் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 28

2261 வாடா திருந்தேன் மழைபொழியும் மலர்க்கா வனஞ்சூழ் ஒற்றியினார்
ஏடார் அணிபூ மாலைஎனக் கிட்டார் அவர்க்கு மாலையிட்டேன்
தேடா திருந்தேன் அல்லடியான் தேடி அருகிற் சேர்ந்தும்எனைக்
கூடா திருந்தார் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 29

2262 நலத்திற் சிறந்த ஒற்றிநகர் நண்ணும் எனது நாயகனார்
வலத்திற் சிறந்தார் மாலையிட்டு மறித்தும் மருவார் வாராரேல்
நிலத்திற் சிறந்த உறவினர்கள் நிந்தித் தையோ எனைத்தமது
குலத்திற் சேரார் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே.

1. மனத்தென் றனைமாலை – ச.மு.க 1932 பதிப்பு

2263 ஈர்ந்தேன் அளிசூழ் ஒற்றிஉளார் என்கண் மணியார் என்கணவர்
வார்ந்தேன் சடையார் மாலையிட்டும் வாழா தலைந்து மனமெலிந்து
சோர்ந்தேன் பதைத்துத் துயர்க்கடலைச் சூழ்ந்தேன் இன்னும் துடிக்கின்றேன்
கூர்ந்தேன் குழலாய் என்னடிஎன் குறையை எவர்க்குக் கூறுவனே. 31

திருச்சிற்றம்பலம்

4. திரு உலா வியப்பு

திருவொற்றியூர்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2264 வெள்ளச் சடையார் விடையார்செவ் வேலார் நூலார் மேலார்தம்
உள்ளத் துறைவார் நிறைவார்நல் ஒற்றித் தியாகப் பெருமானார்
வள்ளற் குணத்தார் திருப்பவனி வந்தார் என்றார் அம்மொழியை
விள்ளற் குள்ளே மனம்என்னை விட்டங் கவர்முன் சென்றதுவே. 1

2265 அந்தார் அணியும் செஞ்சடை யார் அடையார் புரமூன் றவைஅனலின்
உந்தா நின்ற வெண்ணகையார் ஒற்றித் தியாகர் பவனிஇங்கு
வந்தார் என்றார் அந்தோநான் மகிழ்ந்து காண வருமுன்னம்
மந்தா கினிபோல் மனம்என்னை வஞ்சித் தவர்முன் சென்றதுவே. 2

2266 பொன்னேர் சடையார் கீள்உடையார் பூவை தனைஓர் புடைஉடையார்
தென்னேர் பொழில்சூழ் ஒற்றியூர்த் திகழுந் தியாகர் திருப்பவனி
இன்னே வந்தார் என்றார்நான் எழுந்தேன் நான்அங் கெழுவதற்கு
முன்னே மனம்என் தனைவிடுத்து முந்தி அவர்முன் சென்றதுவே. 3

2267 காண இனியார் என்இரண்டு கண்கள் அனையார் கடல்விடத்தை
ஊணின் நுகர்ந்தார் உயர்ந்தார்நல் ஒற்றித் தியாகப் பெருமானார்
மாண வீதி வருகின்றார் என்றார் காண வருமுன்நான்
நாண எனைவிட் டென்மனந்தான் நயந்தங் கவர்முன் சென்றதுவே. 4

2268 செழுந்தெண் கடற்றெள் அமுதனையார் தியாகர் எனும்ஓர் திருப்பெயரார்
கொழுந்தண் பொழில்சூழ் ஒற்றியினார் கோலப் பவனி என்றார்நான்
எழுந்திங் கவிழ்ந்த கலைபுனைந்தங் கேகு முன்னர் எனைவிடுத்தே
அழுந்து நெஞ்சம் விழுந்துகூத் தாடி அவர்முன் சென்றதுவே. 5

2269 சால மாலும் மேலும்இடந் தாலும் அறியாத் தழல்உருவார்
சேலும் புனலும் சூழ்ஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
பாலுந் தேனுங் கலந்ததெனப் பவனி வந்தார் என்றனர்யான்
மேலும் கேட்கு முன்னமனம் விட்டங் கவர்முன் சென்றதுவே. 6

2270 பின்தாழ் சடையார் தியாகர்எனப் பேசும் அருமைப் பெருமானார்
மன்றார் நடத்தார் ஒற்றிதனில் வந்தார் பவனி என்றார்நான்
நன்றாத் துகிலைத் திருத்துமுனம் நலஞ்சேர் கொன்றை நளிர்ப்பூவின்
மென்தார் வாங்க மனம்என்னை விட்டங் கவர்முன் சென்றதுவே. 7

2271 கண்ணார் நுதலார் மணிகண்டர் கனக வரையாங் கனசிலையார்
பெண்ணார் பாகர் தியாகர் எனப்பேசும் அருமைப் பெருமானார்
தண்ணார் பொழில்சூழ் ஒற்றிதனில் சார்ந்தார் பவனி என்றனர்நான்
நண்ணா முன்னம் என்மனந்தான் நாடி அவர்முன் சென்றதுவே. 8

2272 ஈமப் புறங்காட் டெரியாடும் எழிலார் தில்லை இனிதமர்வார்
சேமப் புலவர் தொழும்ஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
வாமப் பாவை யொடும்பவனி வந்தார் என்றார் அதுகாண்பான்
காமப் பறவை போல்என் மனம் கடுகி அவர்முன் சென்றதுவே. 9

2273 சூலப் படையார் பூதங்கள் சுற்றும் படையார் துதிப்பவர்தம்
சீலப் பதியார் திருஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
நீலக் களத்தார் திருப்பவனி நேர்ந்தார் என்றார் அதுகாண்பான்
சாலப் பசித்தார் போல்மனந்தான் தாவி அவர்முன் சென்றதுவே. 10

திருச்சிற்றம்பலம்

5. சல்லாப வியன்மொழி

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2274 காது நடந்த கண்மடவாள் கடிமா மனைக்குக் கால்வருந்தத்
தூது நடந்த பெரியவர்சிற் சுகத்தா ரொற்றித் தொன்னகரார்
வாது நடந்தான் செய்கின்றோர் மாது நடந்து வாவென்றார்
போது நடந்த தென்றேனெப் போது நடந்த தென்றாரே. 1

2275 கச்சை யிடுவார் படவரவைக் கண்மூன் றுடையார் வாமத்திற்
பச்சை யிடுவா ரொற்றியுள்ளார் பரிந்தென் மனையிற் பலிக்குற்றார்
இச்சை யிடுவா ருண்டியென்றா ருண்டே னென்றே னெனக்கின்று
பிச்சை யிடுவா யென்றார்நான் பிச்சை யடுவே னென்றேனே. 2

2276 கருதற் கரியார் கரியார்முன் காணக் கிடையாக் கழலடியார்
மருதத் துறைவார் திருவொற்றி வாண ரின்றென் மனைக்குற்றார்
தருதற் கென்பா லின்றுவந்தீ ரென்றே னதுநீ தானென்றார்
வருதற் குரியீர் வாருமென்றேன் வந்தே னென்று மறைந்தாரே. 3

2277 கல்லை வளைக்கும் பெருமானார் கழிசூ ழொற்றிக் கடிநகரார்
எல்லை வளைக்குந் தில்லையுள்ளா ரென்றன் மனைக்குப் பலிக்குற்றார்
அல்லை வளைக்குங் குழலன்ன மன்பி னுதவா விடிலோபம்
இல்லை வளைக்கு மென்றார்நா னில்லை வளைக்கு மென்றேனே. 4

2278 வெற்றி யிருந்த மழுப்படையார் விடையார் மேரு வில்லுடையார்
பெற்றி யிருந்த மனத்தர்தமுட் பிறங்குந் தியாகப் பெருமானார் 5
சுற்றி யிருந்த பெண்களெல்லாஞ் சொல்லி நகைக்க வருகணைந்தார்
ஒற்றி யிருமென் றுரைத்தேனா னொற்றி யிருந்தே னென்றாரே

2279 விண்டங் கமரர் துயர்தவிர்க்கும் வேற்கை மகனை விரும்பிநின்றோர்
வண்டங் கிசைக்கும் பொழிலொற்றி வதிவா ரென்றன் மனையடைந்தார்
தண்டங் கழற்கு நிகரானீர் தண்டங் கழற்கென் றேன்மொழியாற்
கண்டங் கறுத்தா யென்றார்நீர் கண்டங் கறுத்தீ ரென்றேனே. 6

2280 விற்கண் டாத நுதன்மடவாள் வேட்ட நடன வித்தகனார்
சொற்கண் டாத புகழொற்றித் தூய ரின்றென் மனைபுகுந்தார்
நிற்கண் டார்கண் மயலடைவா ரென்றார் நீர்தா நிகழ்த்தியசொற்
கற்கண் டாமென் றுரைத்தேனான் கற்கண் டாமென் றுரைத்தாரே. 7

2281 விடையார் கொடிமே லுயர்த்தருளும் வேத கீதப் பெருமானார்
உடையா ரொற்றி யூரமர்ந்தா ருவந்தென் மனையி லின்றடைந்தார்
இடையா வைய மென்றார்நா னிடைதா னைய மென்றேனாற்
கடையா ரளியா ரென்றார்கட் கடையா ரளியா ரென்றேனே. 8

2282 நாடொன் றியசீர்த் திருவொற்றி நகரத் தமர்ந்த நாயகனார்
ஈடொன் றில்லா ரென்மனையுற் றிருந்தார் பூவுண் டெழில்கொண்ட
மாடொன் றெங்கே யென்றேனுன் மனத்தி லென்றார் மகிழ்ந்தமர்வெண்
காடொன் றுடையீ ரென்றேன்சொங் காடொன் றுடையே னென்றாரே. 9

2283 சொல்லா லியன்ற தொடைபுனைவார் தூயா ரொற்றித் தொன்னகரார்
அல்லா லியன்ற மனத்தார்பா லணுகா ரென்றன் மனைபுகுந்தார்
வல்லா லியன்ற முலையென்றார் வல்லார் நீரென் றேனுன்சொற்
கல்லா லியன்ற தென்றார்முன் கல்லா லியன்ற தென்றேனே. 10

திருச்சிற்றம்பலம்

6. இன்பக் கிளவி

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2284 தில்லை வளத்தார் அம்பலத்தார் திருவேட் களத்தார் செவ்வணத்தார்
கல்லை வளைத்தார் என்றன்மனக் கல்லைக் குழைத்தார் கங்கணத்தால்
எல்லை வளைத்தார் தியாகர்தமை எழிலார் ஒற்றி எனும்நகரில்
ஒல்லை வளைத்துக் கண்டேன்நான் ஒன்றும் உரையா திருந்தாரே. 1

2285 இருந்தார் திருவா ரூரகத்தில் எண்ணாக் கொடியார் இதயத்தில்
பொருந்தார் கொன்றைப் பொலன்பூந்தார் புனைந்தார் தம்மைப் புகழ்ந்தார்கண்
விருந்தார் திருந்தார் புரமுன்தீ விளைத்தார் ஒற்றி நகர்கிளைத்தார்
தருந்தார் காம மருந்தார்இத் தரணி இடத்தே தருவாரே. 2

2286 தருவார் தருவார் செல்வமுதல் தருவார் ஒற்றித் தலம்அமர்வார்
மருவார் தமது மனமருவார் மருவார் கொன்றை மலர்புனைவார் 3
திருவார் புயனும் மலரோனும் தேடும் தியாகப் பெருமானார்
வருவார் வருவார் எனநின்று வழிபார்த் திருத்தேன் வந்திலரே.

2287 வந்தார் அல்லர் மாதேநீ வருந்தேல் என்று மார்பிலங்கும்
தந்தார் அல்லல் தவிர்ந்தோங்கத் தந்தார் அல்லர் தயை உடையார்
சந்தார் சோலை வளர்ஒற்றித் தலத்தார் தியாகப் பெருமானார்
பந்தார் முலையார்க் கவர்கொடுக்கும் பரிசே தொன்றும் பார்த்திலமே. 4

2288 இலமே செறித்தார் தாயர்இனி என்செய் குவதென் றிருந்தேற்கு
நலமே தருவார் போல்வந்தென் நலமே கொண்டு நழுவினர்காண்
உலமே அனைய திருத்தோளார் ஒற்றித் தியாகப் பெருமானார்
வலமே வலம்என் அவலம் மாதே இனிஎன் வழுத்துவதே. 5

2289 வழுத்தார் புரத்தை எரித்தார்நல் வலத்தார் நடன மலரடியார்
செழுத்தார் மார்பர் திருஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
கழுத்தார் விடத்தார் தமதழகைக் கண்டு கனிந்து பெருங்காமம்
பழுத்தார் தம்மைக் கலந்திடநற் பதத்தார் என்றும் பார்த்திலரே. 6

2290 பாரா திருந்தார் தமதுமுகம் பார்த்து வருந்தும் பாவைதனைச்
சேரா திருந்தார் திருஒற்றித் திகழுந் தியாகப் பெருமானார்
வாரா திருந்தார் இன்னும்இவள் வருத்தங் கேட்டும் மாலைதனைத்
தாரா திருந்தார் சலமகளைத் தாழ்ந்த சடையில் தரித்தாரே. 7

2291 சடையில் தரித்தார் ஒருத்திதனைத் தழுவி மகிழ்மற் றொருபெண்ணைப்
புடையில் தரித்தார் மகளேநீ போனால் எங்கே தரிப்பாரோ
கடையில் தரித்த விடம்அதனைக் களத்தில் தரித்தார் கரித்தோலை
இடையில் தரித்தார் ஒற்றியூர் இருந்தார் இருந்தார் என்னுளத்தே. 8

2292 உளத்தே இருந்தார் திருஒற்றி யூரில் இருந்தார் உவர்விடத்தைக்
களத்தே வதிந்தார் அவர்என்றன் கண்ணுள் வதிந்தார் கடல்அமுதாம்
இளத்தே மொழியாய் ஆதலினால் இமையேன் இமைத்தல் இயல்பன்றே
வளத்தே மனத்தும் புகுகின்றார் வருந்தேன் சற்றும் வருந்தேனே. 9

2293 வருந்தேன் மகளீர் எனைஒவ்வார் வளஞ்சேர் ஒற்றி மன்னவனார்
தருந்தேன் அமுதம் உண்டென்றும் சலிய வாழ்வில் தருக்கிமகிழ்ந்
திருந்தேன் மணாளர் எனைப்பிரியார் என்றும் புணர்ச்சிக் கேதுவிதாம்
மருந்தேன் மையற் பெருநோயை மறந்தேன் அவரை மறந்திலனே. 10

திருச்சிற்றம்பலம்

7. இன்பப் புகழ்ச்சி

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2294 மாடொன் றுடையார் உணவின்றி மண்ணுண் டதுகாண் மலரோன்றன்
ஓடொன் றுடையார் ஒற்றிவைத்தார் ஊரை மகிழ்வோ டுவந்தாலங்
காடொன் றுடையார் கண்டமட்டுங் கறுத்தார் பூத கணத்தோடும்
ஈடொன் றுடையார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே.

2295 பித்தர் எனும்பேர் பிறங்கநின்றார் பேயோ டாடிப் பவுரிகொண்டார்
பத்தர் தமக்குப் பணிசெய்வார் பணியே பணியாப் பரிவுற்றார்
சித்தர் திருவாழ் ஒற்றியினார் தியாகர் என்றுன் கலைகவர்ந்த
எத்தர் அன்றோ மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 2

2296 கடுத்தாழ் களத்தார் கரித்தோலார் கண்ணால் மதனைக் கரிசெய்தார்
உடுத்தார் முன்னூர் மண்ணோட்டை ஒளித்தே தொண்ட னொடும்வழக்குத்
தொடுத்தார் பாம்பும் புலியும்மெச்சித் துதிக்க ஒருகால் அம்பலத்தில்
எடுத்தார் அன்றோ மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 3

2297 உரப்பார் மிசையில் பூச்சூட ஒட்டார் சடைமேல் ஒருபெண்ணைக்
கரப்பார் மலர்தூ வியமதனைக் கண்ணால் சுட்டார் கல்எறிந்தோன்
வரப்பார் மிசைக்கண் வாழ்ந்திருக்க வைத்தார் பலிக்கு மனைதொறும்போய்
இரப்பார் அன்றோ மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 4

2298 கருதும் அவரை வெளிக்கிழுப்பார் காணா தெல்லாங் காட்டிநிற்பார்
மருதில் உறைவார் ஒற்றிதனில் வதிவார் புரத்தை மலைவில்லால்
பொருது முடிப்பார் போல்நகைப்பார் பூவுண் டுறங்கும் புதுவெள்ளை
எருதில் வருவார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 5

2299 ஆக்கம் இல்லார் வறுமையிலார் அருவம் இல்லார் உருவமிலார்
தூக்கம் இல்லார் சுகம்இல்லார் துன்பம் இல்லார் தோன்றுமல
வீக்கம் இல்லார் குடும்பமது விருத்தி யாக வேண்டுமெனும்
ஏக்கம் இல்லார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 6

2300 ஊரும் இல்லார் ஒற்றிவைத்தார் உறவொன் றில்லார் பகைஇல்லார்
பேரும் இல்லார் எவ்விடத்தும் பிறவார் இறவார் பேச்சில்லார்
நேரும் இல்லார் தாய்தந்தை நேயர் தம்மோ டுடன்பிறந்தோர்
யாரும் இல்லார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 7

2301 தங்கு மருப்பார் கண்மணியைத் தரிப்பார் என்பின் தார்புனைவார்
துங்கும் அருட்கார் முகில் அணையார் சொல்லும் நமது சொற்கேட்டே
இங்கும் இருப்பார் அங்கிருப்பார் எல்லாம் இயல்பில் தாம்உணர்ந்தே
எங்கும் இருப்பார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 8

2302 துத்திப் படத்தார் சடைத்தலையார் தொலையாப் பலிதேர் தொன்மையினார்
முத்திக் குடையார் மண்எடுப்பார் மொத்துண் டுழல்வார் மொய்கழற்காம்
புத்திக் குரிய பத்தர்கள்தம் பொருளை உடலை யாவையுமே
எத்திப் பறிப்பார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே. 9

2303 மாறித் திரிவார் மனம்அடையார் வணங்கும் அடியார் மனந்தோறும்
வீறித் திரிவார் வெறுவெளியின் மேவா நிற்பார் விறகுவிலை
கூறித் திரிவார் குதிரையின்மேற் கொள்வார் பசுவிற் கோல்வளையோ
டேறித் திரிவார் மகளேநீ ஏதுக் கவரை விழைந்தனையே.

8. திருஉலாத் திறம்

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2304 தேனார் கமலத் தடஞ்சூழும் திருவாழ் ஒற்றித் தியாகர்அவர்
வானார் அமரர் முனிவர்தொழ மண்ணோர் வணங்க வரும்பவனி
தானார் வங்கொண் டகமலரத் தாழ்ந்து சூழ்ந்து கண்டலது
கானார் அலங்கற் பெண்ணேநான் கண்கள் உறக்கங் கொள்ளேனே. 1

2305 திருமால் வணங்கும் ஒற்றிநகர் செழிக்கும் செல்வத் தியாகர்அவர்
கருமால் அகற்றுந் தொண்டர்குழாம் கண்டு களிக்க வரும்பவனி
மருமாண் புடைய மனமகிழ்ந்து மலர்க்கை கூப்பிக் கண்டலது
பெருமான் வடுக்கண் பெண்ணே நான் பெற்றா லோடும் பேசேனே. 2

2306 சேல்ஆர் தடஞ்சூழ் ஒற்றிநகர் சேருஞ் செல்வத் தியாகர்அவர்
ஆல்ஆர் களமேல் விளங்குமுகம் அழகு ததும்ப வரும்பவனி
நால்ஆ ரணஞ்சூழ் வீதியிடை நாடிப் புகுந்து கண்டலது
பால்ஆர் குதலைப் பெண்ணேநான் பாயிற் படுக்கை பொருந்தேனே. 3

2307 செல்வந் துறழும் பொழில்ஒற்றித் தெய்வத் தலங்கொள் தியாகர்அவர்
வில்வந் திகழும் செஞ்சடைமின் விழுங்கி விளங்க வரும்பவனி
சொல்வந் தோங்கக் கண்டுநின்று தொழுது துதித்த பின்அலது
அல்வந் தளகப் பெண்ணேநான் அவிழ்ந்த குழலும் முடியேனே. 4

2308 சேவார் கொடியார் ஒற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகர்அவர்
பூவார் கொன்றைப் புயங்கள்மனம் புணரப் புணர வரும்பவனி
ஓவாக் களிப்போ டகங்குளிர உடலங் குளிரக் கண்டலது
பாவார் குதலைப் பெண்ணேநான் பரிந்து நீரும் பருகேனே. 5

2309 சிற்றம் பலத்தார் ஒற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகர்அவர்
உற்றங் குவந்தோர் வினைகளெலாம் ஓட நாடி வரும்பவனி
சுற்றுங் கண்கள் களிகூரத் தொழுது கண்ட பின்அலது
முற்றுங் கனிவாய்ப் பெண்ணேநான் முடிக்கோர் மலரும் முடியேனே. 6

2310 சிந்தைக் கினியார் ஒற்றிநகர் திகழுஞ் செல்வத் தியாகர்அவர்
சந்தத் தடந்தோள் கண்டவர்கள் தம்மை விழுங்க வரும்பவனி
முந்தப் புகுந்து புளகமுடன் மூடிக் குளிரக் கண்டலது
கந்தக் குழல்வாய்ப் பெண்ணேநான் கண்ணீர் ஒழியக் காணேனே. 7

2311 தென்னஞ் சோலை வளர்ஒற்றி யூர்வாழ் செல்வத் தியாகர்அவர்
பின்னுஞ் சடைமேல் பிறைவிளங்கிப் பிறங்கா நிற்க வரும்பவனி
மன்னுங் கரங்கள் தலைகுவித்து வணங்கி வாழ்த்திக் கண்டலது 8
துன்னுந் துவர்வாய்ப் பெண்ணேநான் சோறெள் ளளவும் உண்ணேனே.

2312 சிந்தா குலந்தீர்த் தருள்ஒற்றி யூர்வாழ் செல்வத் தியாகர்அவர்
வந்தார் கண்டார் அவர்மனத்தை வாங்கிப் போக வரும்பவனி
நந்தா மகிழ்வு தலைசிறப்ப நாடி ஓடிக் கண்டலது
பந்தார் மலர்க்கைப் பெண்ணேநான் பாடல்ஆடல் பயிலேனே. 9

2313 செக்கர்ச் சடையார் ஒற்றிநகர்ச் சேருஞ் செல்வத் தியாகர்அவர்
மிக்கற் புதவாண் முகத்தினகை விளங்க விரும்பி வரும்பவனி
மக்கட் பிறவி எடுத்தபயன் வசிக்க வணங்கிக் கண்டலது
நக்கற் கியைந்த பெண்ணேநான் ஞாலத் தெவையும் நயவேனே. 10

திருச்சிற்றம்பலம்

9. வியப்பு மொழி

நற்றாய் நயத்தல்
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2314 மாதர் மணியே மகளேநீ வாய்த்த தவந்தான் யாதறியேன்
வேதர் அனந்தர் மால்அனந்தர் மேவி வணங்கக் காண்பரியார்
நாதர் நடன நாயகனார் நல்லோர் உளத்துள் நண்ணுகின்றோர்
கோதர் அறியாத் தியாகர்தமைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 1

2315 திருவில் தோன்றும் மகளேநீ செய்த தவந்தான் யார்அறிவார்
மருவில் தோன்றும் கொன்றையந்தார் மார்பர் ஒற்றி மாநகரார்
கருவில் தோன்றும் எங்கள்உயிர் காக்க நினைத்த கருணையினார்
குருவிற் றோன்றும் தியாகர்தமைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 2

2316 என்னா ருயிர்போல் மகளேநீ என்ன தவந்தான் இயற்றினையோ
பொன்னார் புயனும் மலரோனும் போற்றி வணங்கும் பொற்பதத்தார்
தென்னார் ஒற்றித் திருநகரார் தியாகர் எனும்ஓர் திருப்பெயரார்
கொன்னார் சூலப் படையவரைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 3

2317 சேலை நிகர்கண் மகளேநீ செய்த தவந்தான் செப்பரிதால்
மாலை அயனை வானவரை வருத்தும் படிக்கு மதித்தெழுந்த
வேலை விடத்தை மிடற்றணிந்தார் வீட்டு நெறியாம் அரசியற்செங்
கோலை அளித்தார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 4

2318 தேனேர் குதலை மகளேநீ செய்த தவந்தான் எத்தவமோ
மானேர் கரத்தார் மழவிடைமேல் வருவார் மருவார் கொன்றையினார்
பானேர் நீற்றார் பசுபதியார் பவள வண்ணர் பல்சடைமேல்
கோனேர் பிறையார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 5

2319 வில்லார் நுதலாய் மகளேநீ மேலை நாட்செய் தவம்எதுவோ
கல்லார் உள்ளம் கலவாதார் காமன் எரியக் கண்விழித்தார்
வில்லார் விசையற் கருள்புரிந்தார் விளங்கும் ஒற்றி மேவிநின்றார்
கொல்லா நெறியார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே.

2320 அஞ்சொற் கிளியே மகளேநீ அரிய தவமே தாற்றினையோ
வெஞ்சொற் புகலார் வஞ்சர் தமை மேவார் பூவார் கொன்றையினார்
கஞ்சற் கரியார் திருஒற்றிக் காவல் உடையார் இன்மொழியால்
கொஞ்சத் தருவார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 7

2321 பூவாய் வாட்கண் மகளேநீ புரிந்த தவந்தான் எத்தவமோ
சேவாய் விடங்கப் பெருமானார் திருமால் அறியாச் சேவடியார்
காவாய்ந் தோங்கும் திருஒற்றிக் காவல் உடையார் எவ்வெவர்க்கும்
கோவாய் நின்றார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 8

2322 மலைநேர் முலையாய் மகளேநீ மதிக்கும் தவமே தாற்றினையோ
தலைநேர் அலங்கல் தாழ்சடையார் சாதி அறியாச் சங்கரனார்
இலைநேர் தலைமுன் றொளிர்படையார் எல்லாம் உடையார் எருக்கின்மலர்க்
குலைநேர் சடையார் அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 9

2323 மயிலின் இயல்சேர் மகளேநீ மகிழ்ந்து புரிந்த தெத்தவமோ
வெயிலின் இயல்சேர் மேனியினார் வெண்ணீ றுடையார் வெள்விடையார்
பயிலின் மொழியாள் பாங்குடையார் பணைசூழ் ஒற்றிப் பதிஅமர்ந்தார்
குயிலிற் குலவி அவர்தம்மைக் கூடி உடலம் குளிர்ந்தனையே. 10

திருச்சிற்றம்பலம்

10. புணரா விரகு பொருந்துறு வேட்கையின் இரங்கல்

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
திருச்சிற்றம்பலம்

2324 உள்ளார் புறத்தார் ஒற்றிஎனும் ஊரார் ஒப்பென் றொன்றுமிலார்
வள்ளால் என்று மறைதுதிக்க வருவார் இன்னும் வந்திலரே
எள்ளா திருந்த பெண்களெலாம் இகழா நின்றார் இனியமொழித்
தெள்ளார் அமுதே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 1

2325 மாலே றுடைத்தாங் கொடிஉடையார் வளஞ்சேர் ஒற்றி மாநகரார்
பாலே றணிநீற் றழகர்அவர் பாவி யேனைப் பரிந்திலரே
கோலே றுண்ட மதன்கரும்பைக் குனித்தான் அம்புங் கோத்தனன் காண்
சேலே றுண்கண் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 2

2326 பொய்யர் உளத்துப் புகுந்தறியார் போத னொடுமால் காண்பரிதாம்
ஐயர் திருவாழ் ஒற்றிநகர் அமர்ந்தார் இன்னும் அணைந்திலரே
வைய மடவார் நகைக்கின்றார் மாரன் கணையால் திகைக்கின்றேன்
செய்ய முகத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 3

2327 நந்திப் பரியார் திருஒற்றி நாதர் அயன்மால் நாடுகினும்
சந்திப் பரியார் என்அருமைத் தலைவர் இன்னுஞ் சார்ந்திலரே
அந்திப் பொழுதோ வந்ததினி அந்தோ மதியம் அனல்சொரியும்
சிந்திப் புடையேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.

2328 என்ஆ ருயிர்க்கோர் துணையானார் என்ஆண் டவனார் என்னுடையார்
பொன்னார் ஒற்றி நகர்அமர்ந்தார் புணர்வான் இன்னும் போந்திலரே
ஒன்னார் எனவே தாயும்எனை ஒறுத்தாள் நானும் உயிர்பொறுத்தேன்
தென்னார் குழலாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 5

2329 மாணி உயிர்காத் தந்தகனை மறுத்தார் ஒற்றி மாநகரார்
காணி உடையார் உலகுடையார் கனிவாய் இன்னுங் கலந்திலரே
பேணி வாழாப் பெண்எனவே பெண்க ளெல்லாம் பேசுகின்றார்
சேணின் றிழிந்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 6

2330 வன்சொற் புகலார் ஓர்உயிரும் வருந்த நினையார் மனமகிழ
இன்சொற் புகல்வார் ஒற்றியுளார் என்நா யகனார் வந்திலரே
புன்சொற் செவிகள் புகத்துயரம் பொறுத்து முடியேன் புலம்பிநின்றேன்
தென்சொற் கிளியே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 7

2331 எட்டிக் கனியும் மாங்கனிபோல் இனிக்க உரைக்கும் இன்சொலினார்
தட்டிற் பொருந்தார் ஒற்றியில்வாழ் தலைவர் இன்னும் சார்ந்திலரே
மட்டிற் பொலியும் மலர்க்கணைசெல் வழியே பழிசெல் வழிஅன்றோ
தெட்டிற் பொலியும் விழியாய்நான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 8

2332 காலை மலர்ந்த கமலம்போல் கவின்செய் முகத்தார் கண்நுதலார்
சோலை மலர்ந்த ஒற்றியினார் சோகந் தீர்க்க வந்திலரே
மாலை மலர்ந்த மையல்நோய் வசந்தம் அதனால் வளர்ந்ததையோ
சேலை விழியாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 9

2333 உலகம் உடையார் என்னுடைய உள்ளம் உடையார் ஒற்றியினார்
அலகில் புகழார் என்தலைவர் அந்தோ இன்னும் அணைந்திலரே
கலகம் உடையார் மாதர்எலாம் கல்நெஞ் சுடையார் தூதர்எலாம்
திலக முகத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 10

2334 மாலும் அறியான் அயன்அறியான் மறையும் அறியா வானவர்எக்
காலும் அறியார் ஒற்றிநிற்குங் கள்வர் அவரைக் கண்டிலனே
கோலும் மகளிர் அலர்ஒன்றோ கோடா கோடி என்பதல்லால்
சேலுண் விழியாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 11

2335 உந்து மருத்தோ டைம்பூதம் ஆனார் ஒற்றி யூர் அமர்ந்தார்
இந்து மிருத்தும் சடைத்தலையார் என்பால் இன்னும் எய்திலரே
சந்து பொறுத்து வார்அறியேன் தமிய னாகத் தளர்கின்றேன்
சிந்துற் பவத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 12

2336 ஆடல் அழகர் அம்பலத்தார் ஐயா றுடையார் அன்பர்களோடு
ஊடல் அறியார் ஒற்றியினார் உவகை ஓங்க உற்றிலரே
வாடல் எனவே எனைத்தேற்று வாரை அறியேன் வாய்ந்தவரைத்
தேடல் அறியேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.

2337 தொழுது வணங்கும் சுந்தரர்க்குத் தூது நடந்த சுந்தரனார்
அழுது வணங்கும் அவர்க்குமிக அருள்ஒற் றியினார் அணைந்திலரே
பொழுது வணங்கும் இருண்மாலைப் பொழுது முடுகிப் புகுந்ததுகாண்
செழுமை விழியாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 14

2338 பாவம் அறுப்பார் பழிஅறுப்பார் பவமும் அறுப்பார் அவம்அறுப்பார்
கோவம் அறுப்பார் ஒற்றியில்என் கொழுநர் இன்னும் கூடிலரே
தூவ மதன்ஐங் கணைமாதர் தூறு தூவத் துயர்கின்றேன்
தேவ மடவாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 15

2339 உயிர்க்குள் உயிராய் உறைகின்றோர் ஒற்றி நகரார் பற்றிலரைச்
செயிர்க்குள் அழுத்தார் மணிகண்டத் தேவர் இன்னும் சேர்ந்திலரே
வெயிற்கு மெலிந்த செந்தளிர்போல் வேளம் பதனால் மெலிகின்றேன்
செயற்கை மடவாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 16

2340 ஊனம் அடையார் ஒற்றியினார் உரைப்பார் உள்ளத் துறைகின்றோர்
கானம் உடையார் நாடுடையார் கனிவாய் இன்னும் கலந்திலரே
மானம் உடையார் எம்முறவோர் வாழா மைக்கே வருந்துகின்றார்
தீனம் அடையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 17

2341 மலையை வளைத்தார் மால்விடைமேல் வந்தார் வந்தென் வளையினொடு
கலையை வளைத்தார் ஒற்றியில்என் கணவர் என்னைக் கலந்திலரே
சிலையை வளைத்தான் மதன்அம்பு தெரிந்தான் விடுக்கச் சினைக்கின்றான்
திலக நுதலாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 18

2342 பிரமன் தலையில் பலிகொள்ளும் பித்தர் அருமைப் பெருமானார்
உரமன் னியசீர் ஒற்றிநகர் உள்ளார் இன்னும் உற்றிலரே
அரமன் னியவேற் படையன்றோ அம்மா அயலார் அலர்மொழிதான்
திரமன் னுகிலேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 19

2343 பவள நிறத்தார் திருஒற்றிப் பதியில் அமர்ந்தார் பரசிவனார்
தவள நிறநீற் றணிஅழகர் தமியேன் தன்னைச் சார்ந்திலரே
துவளும் இடைதான் இறமுலைகள் துள்ளா நின்ற தென்னளவோ
திவளும் இழையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 20

2344 வண்டார் கொன்றை வளர்ச்சடையார் மதிக்க எழுந்த வல்விடத்தை
உண்டார் ஒற்றி யூர்அமர்ந்தார் உடையார் என்பால் உற்றிலரே
கண்டார் கண்ட படிபேசக் கலங்கிப் புலம்பல் அல்லாது
செண்டார் முலையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 21

2345 உணவை இழந்தும் தேவர்எலாம் உணரா ஒருவர் ஒற்றியில்என்
கணவர் அடியேன் கண்அகலாக் கள்வர் இன்னும் கலந்திலரே
குணவர் எனினும் தாய்முதலோர் கூறா தெல்லாம் கூறுகின்றார்
திணிகொள் முலையாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே.

2346 வாக்குக் கடங்காப் புகழுடையார் வல்லார் ஒற்றி மாநகரார்
நோக்குக் கடங்கா அழகுடையார் நோக்கி என்னை அணைந்திலரே
ஊக்க மிகும்ஆர் கலிஒலி என்உயிர்மேல் மாறேற் றுரப்பொலிகாண்
தேக்கங் குழலாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 23

2347 தரையிற் கீறிச் சலந்தரனைச் சாய்த்தார் அந்தச் சக்கரமால்
வரையற் களித்தார் திருஒற்றி வாணர் இன்னும் வந்திலரே
கரையிற் புணர்ந்த நாரைகளைக் கண்டேன் கண்ட வுடன்காதல்
திரையிற் புணர்ந்தேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 24

2348 பெற்றம் இவரும் பெருமானார் பிரமன் அறியாப் பேர்ஒளியாய்
உற்ற சிவனார் திருஒற்றி யூர்வாழ் வுடையார் உற்றிலரே
எற்றென் றுரைப்பேன் செவிலி அவள் ஏறாமட்டும் ஏறுகின்றாள்
செற்றம் ஒழியாள் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 25

2349 போக முடையார் பெரும்பற்றப் புலியூர் உடையார் போதசிவ
யோக முடையார் வளர்ஒற்றி யூர்வாழ் வுடையார் உற்றிலரே
சோகம் உடையேன் சிறிதேனும் துயிலோ அணையா குயில்ஒழியா
தேகம் அயர்ந்தேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 26

2350 தாமப் புயனார் சங்கரனார் தாயில் இனியார் தற்பரனார்
ஓமப் புகைவான் உறும்ஒற்றி யூர்வாழ் வுடையார் உற்றிலரே
காமப் பயலோ கணைஎடுத்தான் கண்ட மகளீர் பழிதொடுத்தார்
சேமக் குயிலே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 27

2351 ஆரூர் உடையார் அம்பலத்தார் ஆலங் காட்டார் அரசிலியார்
ஊரூர் புகழும் திருஒற்றி யூரார் இன்னும் உற்றிலரே
வாரூர் முலைகள் இடைவருத்த மனநொந் தயர்வ தன்றிஇனிச்
சீரூர் அணங்கே என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 28

2352 காலங் கடந்தார் மால்அயன்தன் கருத்துங் கடந்தார் கதிகடந்தார்
ஞாலங் கடந்த திருஒற்றி நாதர் இன்னும் நண்ணிலரே
சாலங் கடந்த மனந்துணையாய்த் தனியே நின்று வருந்தல்அல்லால்
சீலங் கடந்தேன் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 29

2353 சங்கக் குழையார் சடைமுடியார் சதுரர் மறையின் தலைநடிப்பார்
செங்கட் பணியார் திருஒற்றித் தேவர் இன்னும் சேர்ந்திலரே
மங்கைப் பருவம் மணமில்லா மலர்போல் ஒழிய வாடுகின்றேன்
திங்கள் முகத்தாய் என்னடிநான் செய்வ தொன்றும் தெரிந்திலனே. 30

11. குறி ஆராய்ச்சி

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2354 நந்தி மகிழ்வாய்த் தரிசிக்க நடனம் புரியும் நாயகனார்
அந்தி நிறத்தார் திருஒற்றி அமர்ந்தார் என்னை அணைவாரோ
புந்தி இலள்என் றணையாரோ யாதுந் தெரியேன் புலம்புகின்றேன்
சிந்தை மகிழக் குறமடவாய் தெரிந்தோர் குறிதான் செப்புவையே. 1

2355 தரும விடையார் சங்கரனார் தகைசேர் ஒற்றித் தனிநகரார்
ஒருமை அளிப்பார் தியாகர்எனை உடையார் இன்று வருவாரோ
மருவ நாளை வருவாரோ வாராதென்னை மறப்பாரோ
கருமம் அறிந்த குறமடவாய் கணித்தோர் குறிதான் கண்டுரையே. 2

2356 ஆழி விடையார் அருளுடையார் அளவிட் டறியா அழகுடையார்
ஊழி வரினும் அழியாத ஒற்றித் தலம்வாழ் உத்தமனார்
வாழி என்பால் வருவாரோ வறியேன் வருந்த வாராரோ
தோழி அனைய குறமடவாய் துணிந்தோர் குறிநீ சொல்லுவையே. 3

2357 அணியார் அடியார்க் கயன்முதலாம் அமரர்க் கெல்லாம் அரியர்என்பாம்
பணியார் ஒற்றிப் பதிஉடையார் பரிந்தென் முகந்தான் பார்ப்பாரோ
தணியாக் காதல் தவிர்ப்பாரோ சார்ந்து வரவு தாழ்ப்பாரோ
குணியா எழில்சேர் குறமடவாய் குறிதான் ஒன்றும் கூறுவையே. 4

2358 பொன்னார் புயத்துப் போர்விடையார் புல்லர் மனத்துட் போகாதார்
ஒன்னார் புரந்தீ உறநகைத்தார் ஒற்றி எனும்ஓர் ஊர்அமர்ந்தார்
என்னா யகனார் எனைமருவல் இன்றோ நாளை யோஅறியேன்
மின்னார் மருங்குல் குறமடவாய் விரைந்தோர் குறிநீ விளம்புவையே. 5

2359 பாலிற் றெளிந்த திருநீற்றர் பாவ நாசர் பண்டரங்கர்
ஆலிற் றெளிய நால்வர்களுக் கருளுந் தெருளர் ஒற்றியினார்
மாலிற் றெளியா நெஞ்சகத்தேன் மருவிக் கலக்க வருவாரோ
சேலிற் றெளிகட் குறப்பாவாய் தெரிந்தோர் குறிநீ செப்புகவே. 6

2360 நிருத்தம் பயின்றார் நித்தியனார் நேச மனத்தார் நீலகண்டர்
ஒருத்தர் திருவாழ் ஒற்றியினார் உம்பர் அறியா என்கணவர்
பொருத்தம் அறிந்தே புணர்வாரோ பொருத்தம் பாரா தணைவாரோ
வருத்தந் தவிரக் குறப்பாவாய் மகிழ்ந்தோர் குறிதான் வழுத்துவையே. 7

2361 கமலன் திருமால் ஆதியர்கள் கனவி னிடத்துங் காண்பரியார்
விமலர் திருவாழ் ஒற்றியிடை மேவும் பெருமை வித்தகனார்
அமலர் அவர்தாம் என்மனைக்கின் றணைகு வாரோ அணையாரோ
தமல மகன்ற குறப்பாவாய் தனித்தோர் குறிதான் சாற்றுவையே.

2362 வன்னி இதழி மலர்ச்சடையார் வன்னி எனஓர் வடிவுடையார்
உன்னி உருகும் அவர்க்கெளியார் ஒற்றி நகர்வாழ் உத்தமனார்
கன்னி அழித்தார் தமைநானுங் கலப்பேன் கொல்லோ கலவேனோ
துன்னி மலைவாழ் குறமடவாய் துணிந்தோர் குறிநீ சொல்லுவையே. 9

2363 கற்றைச் சடைமேல் கங்கைதனைக் கலந்தார் கொன்றைக் கண்ணியினார்
பொற்றைப் பெருவிற் படைஉடையார் பொழில்சூழ் ஒற்றிப் புண்ணியனார்
இற்றைக் கடியேன் பள்ளியறைக் கெய்து வாரோ எய்தாரோ
சுற்றுங் கருங்கட் குறமடவாய் சூழ்ந்தோர் குறிநீ சொல்லுவையே. 10

2364 அரவக் கழலார் கருங்களத்தார் அஞ்சைக் களத்தார் அரிபிரமர்
பரவப் படுவார் திருஒற்றிப் பதியில் அமர்ந்தார் பாசுபதர்
இரவு வருமுன் வருவாரோ என்னை அணைதற் கிசைவாரோ
குரவ மணக்குங் குறமடவாய் குறிநீ ஒன்று கூறுவையே. 11

திருச்சிற்றம்பலம்

12. காட்சி அற்புதம்

தலைவி இரங்கல்[1]
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2365 பூணா அணிபூண் புயமுடையார் பொன்னம் பலத்தார் பொங்குவிடம்
ஊணா உவந்தார் திருஒற்றி யூர்வாழ் வுடையார் உண்மைசொலி
நீணால் இருந்தார் அவர்இங்கே நின்றார் மீட்டும் நின்றிடவே
காணா தயர்ந்தேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 1

2366 ஓட்டில் இரந்துண் டொற்றியிடை உற்றார் உலகத் துயிரைஎலாம்
ஆட்டி நடிப்பார் ஆலயத்தின் அருகே எளிய ளாம்எனவே
ஏட்டில் அடங்காக் கையறவால் இருந்தேன் இருந்த என்முன்உருக்
காட்டி மறைத்தார் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 2

2367 ஈதல் ஒழியா வண்கையினார் எல்லாம் வல்ல சித்தர்அவர்
ஓதல் ஒழியா ஒற்றியில்என் உள்ளம் உவக்க உலகம்எலாம்
ஆதல் ஒழியா எழில்உருக்கொண் டடைந்தார் கண்டேன் உடன்காணேன்
காதல் ஒழியா தென்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 3

2368 தொண்டு புரிவோர் தங்களுக்கோர் துணைவர் ஆவார் சூழ்ந்துவரி
வண்டு புரியுங் கொன்றைமலர் மாலை அழகர் வல்விடத்தை
உண்டு புரியுங் கருணையினார் ஒற்றி யூரர் ஒண்பதத்தைக்
கண்டுங் காணேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 4

1. இரங்கல் : தொ. வே., ச.மு.க., ஆ. பா.

2369 அடியர் வருந்த உடன்வருந்தும் ஆண்டை அவர்தாம் அன்றயனும்
நெடிய மாலுங் காணாத நிமல உருவோ டென்எதிரே
வடியல் அறியா அருள்காட்டி மறைத்தார் மருண்டேன் மங்கைநல்லார்
கடிய அயர்ந்தேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 5

2370 கொற்றம் உடையார் திருஒற்றிக் கோயில்உடையார் என்எதிரே
பொற்றை மணித்தோட் புயங்காட்டிப் போனார் என்னைப் புலம்பவைத்துக்
குற்றம் அறியேன் மனநடுக்கங் கொண்டேன் உடலங் குழைகின்றேன்
கற்றிண் முலையாய் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 6

2371 ஆல நிழற்கீழ் அன்றமர்ந்தார் ஆதி நடுவீ றாகிநின்றார்
நீல மிடற்றார் திருஒற்றி நியமத் தெதிரே நீற்றுருவக்
கோல நிகழக் கண்டேன்பின் குறிக்கக் காணேன் கூட்டுவிக்கும்
காலம் அறியேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 7

2372 சலங்கா தலிக்கும் தாழ்சடையார் தாமே தமக்குத் தாதையனார்
நிலங்கா தலிக்கும் திருஒற்றி நியமத் தெதிரே நின்றனர்காண்
விலங்கா தவரைத் தரிசித்தேன் மீட்டுங் காணேன் மெய்மறந்தேன்
கலங்கா நின்றேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 8

2373 நிரந்தார் கங்கை நீள்சடையார் நெற்றி விழியார் நித்தியனார்
சிரந்தார் ஆகப் புயத்தணிவார் திருவாழ் ஒற்றித் தியாகர்அவர்
பரந்தார் கோயிற் கெதிர்நிற்கப் பார்த்தேன் மீட்டும் பார்ப்பதன்முன்
கரந்தார் கலுழ்ந்தேன் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 9

2374 அளித்தார் உலகை அம்பலத்தில் ஆடி வினையால் ஆட்டிநின்றார்
தளித்தார் சோலை ஒற்றியிடைத் தமது வடிவம் காட்டியுடன்
ஒளித்தார் நானும் மனம்மயங்கி உழலா நின்றேன் ஒண்தொடிக்கைக்
களித்தார் குழலாய் என்னடிநான் கனவோ நனவோ கண்டதுவே. 10

திருச்சிற்றம்பலம்

13. ஆற்றாக் காதலின் இரங்கல்

திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2375 மந்தா கினிவான் மதிமத்தம் மருவும் சடையார் மாசடையார்
நுந்தா விளக்கின் சுடர்அனையார் நோவ நுதலார் கண்நுதலார்
உந்தா ஒலிக்கும் ஓதமலி ஒற்றி யூரில் உற்றெனக்குத்
தந்தார் மையல் என்னோஎன் சகியே இனிநான் சகியேனே. 1

2376 பூமேல் அவனும் மால்அவனும் போற்றி வழுத்தும் பூங்கழலார்
சேமேல் வருவார் திருஒற்றித் தியாகர் அவர்தம் திருப்புயத்தைத்
தேமேல் அலங்கல் முலைஅழுந்தச் சேர்ந்தால் அன்றிச் சித்தசன்கைத்
தாமேல் அழற்பூத் தாழாதென் சகியே இனிநான் சகியேனே.

2377 கருணைக் கொருநேர் இல்லாதார் கல்லைக் கரைக்கும் கழலடியார்
அருணைப் பதியார் ஆமாத்தூர் அமர்ந்தார் திருவா வடுதுறையார்
இருணச் சியமா மணிகண்டர் எழிலார் ஒற்றி இறைவர் இந்தத்
தருணத் தின்னும் சேர்ந்திலர்என் சகியே இனிநான் சகியேனே. 3

2378 ஆரா அமுதாய் அன்புடையோர் அகத்துள் இனிக்கும் அற்புதனார்
தீரா வினையும் தீர்த்தருளும் தெய்வ மருந்தார் சிற்சபையார்
பாரார் புகழும் திருஒற்றிப் பரமர் தமது தோள்அணையத்
தாரார் இன்னும் என்செய்கேன் சகியே இனிநான் சகியேனே. 4

2379 துதிசெய் அடியர் தம்பசிக்குச் சோறும் இரப்பார் துய்யர்ஒரு
நதிசெய் சடையார் திருஒற்றி நண்ணும் எனது நாயகனார்
மதிசெய் துயரும் மதன்வலியும் மாற்ற இன்னும் வந்திலரே
சதிசெய் தனரோ என்னடிஎன் சகியே இனிநான் சகியேனே. 5

2380 எங்கள் காழிக் கவுணியரை எழிலார் சிவிகை ஏற்றிவைத்தோர்
திங்கள் அணியும் செஞ்சடையார் தியாகர் திருவாழ் ஒற்றியினார்
அங்கள் அணிபூந் தார்ப்புயத்தில் அணைத்தார் அல்லர் எனைமடவார்
தங்கள் அலரோ தாழாதென் சகியே இனிநான் சகியேனே. 6

2381 காவி மணந்த கருங்களத்தார் கருத்தர் எனது கண்அனையார்
ஆவி அனையார் தாய்அனையார் அணிசேர் ஒற்றி ஆண்தகையார்
பூவின் அலங்கல் புயத்தில்எனைப் புல்லார் அந்திப் பொழுதில்மதி
தாவி வருமே என்செயுமோ சகியே இனிநான் சகியேனே. 7

2382 மலஞ்சா திக்கும் மக்கள்தமை மருவார் மருவார் மதில்அழித்தார்
வலஞ்சா திக்கும் பாரிடத்தார் மாலும் அறியா மலர்ப்பதத்தார்
நிலஞ்சா திக்கும் ஒற்றியினார் நினையார் என்னை அணையாமல்
சலஞ்சா தித்தார் என்னடிஎன் சகியே இனிநான் சகியேனே. 8

2383 நாக அணியார் நக்கர்எனும் நாமம்உடையார் நாரணன்ஓர்
பாகம் உடையார் மலைமகள்ஓர் பாங்கர் உடையார் பசுபதியார்
யோகம் உடையார் ஒற்றியுளார் உற்றார் அல்லர் உறுமோக
தாகம் ஒழியா தென்செய்கேன் சகியே இனிநான் சகியேனே. 9

2384 தீர்ந்தார் தலையே கலனாகச் செறித்து நடிக்கும் திருக்கூத்தர்
தேர்ந்தார் தம்மைப் பித்தடையச் செய்வார் ஒற்றித் தியாகர்அவர்
சேர்ந்தார் அல்லர் இன்னும்எனைத் தேடி வரும்அத் தீமதியம்
சார்ந்தால் அதுதான் என்செயுமோ சகியே இனிநான் சகியேனே. 10

2385 ஆயும் படிவத் தந்தணனாய் ஆரூ ரன்தன் அணிமுடிமேல்
தோயும் கமலத் திருவடிகள் சூட்டும் அதிகைத் தொன்னகரார்
ஏயும் பெருமை ஒற்றியுளார் இன்னும் அணையார் எனைஅளித்த
தாயும் தமரும் நொடிக்கின்றார் சகியே இனிநான் சகியேனே.

14. திருக்கோலச் சிறப்பு

தலைவி வியத்தல்
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2386 பொன்னென் றொளிரும் புரிசடையார் புனைநூல் இடையார் புடைஉடையார்
மன்னென் றுலகம் புகழ்ஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
மின்னென் றிலங்கு மாதரெலாம் வேட்கை அடைய விளங்கிநின்றது)
இன்னென் றறியேன் அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 1

2387 அள்ளிக் கொடுக்கும் கருணையினார் அணிசேர் ஒற்றி ஆலயத்தார்
வள்ளிக் குவந்தோன் தனைஈன்ற வள்ளல் பவனி வரக்கண்டேன்
துள்ளிக் குதித்தென் மனம்அவரைச் சூழ்ந்த தின்னும் வந்ததிலை
எள்ளிக் கணியா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 2

2388 அனத்துப் படிவம் கொண்டயனும் அளவா முடியார் வடியாத
வனத்துச் சடையார் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
மனத்துக் கடங்கா தாகில் அதை வாய்கொண் டுரைக்க வசமாமோ
இனத்துக் குவப்பாம் அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 3

2389 கொழுதி அளிதேன் உழுதுண்ணும் கொன்றைச் சடையார் கூடலுடை
வழுதி மருகர் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
பழுதில் அவனாந் திருமாலும் படைக்குங் கமலப் பண்ணவனும்
எழுதி முடியா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 4

2390 புன்னை இதழிப் பொலிசடையார் போக யோகம் புரிந்துடையார்
மன்னும் விடையார் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
உன்னும் உடலம் குளிர்ந்தோங்க உவகை பெருக உற்றுநின்ற
என்னை விழுங்கும் அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 5

2391 சொல்லுள் நிறைந்த பொருளானார் துய்யர் உளத்தே துன்னிநின்றார்
மல்லல் வயற்சூழ் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
கல்லும் மரமும் ஆனந்தக் கண்ணீர் கொண்டு கண்டதெனில்
எல்லை யில்லா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 6

2392 நீர்க்கும் மதிக்கும் நிலையாக நீண்ட சடையார் நின்றுநறா
ஆர்க்கும் பொழில்சூழ் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
பார்க்கும் அரிக்கும் பங்கயற்கும் பன்மா தவர்க்கும் பண்ணவர்க்கும்
யார்க்கும் அடங்கா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 7

2393 கலக அமணக் கைதவரைக் கழுவி லேற்றுங் கழுமலத்தோன்
வலகை குவித்துப் பாடும்ஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
உலக நிகழ்வைக் காணேன்என் உள்ளம் ஒன்றே அறியுமடி
இலகும் அவர்தந் திருஅழகை என்னென் றுரைப்ப தேந்திழையே.

2394 கண்ணன் அறியாக் கழற்பதத்தார் கண்ணார் நெற்றிக் கடவுள்அருள்
வண்ணம் உடையார் திருஒற்றி வாணர் பவனி வரக்கண்டேன்
நண்ண இமையார் எனஇமையா நாட்டம் அடைந்து நின்றனடி
எண்ண முடியா அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 9

2395 மாழை மணித்தோள் எட்டுடையார் மழுமான் ஏந்தும் மலர்க்கரத்தார்
வாழை வளஞ்சூழ் ஒற்றியூர் வாணர் பவனி வரக்கண்டேன்
யாழை மலைக்கும் மொழிமடவார் யாரும் மயங்கிக் கலைஅவிழ்ந்தார்
ஏழை யேன்நான் அவரழகை என்னென் றுரைப்ப தேந்திழையே. 10

திருச்சிற்றம்பலம்

15. சோதிடம் நாடல்

தலைவி கழிமிகு காதல்
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2396 பொன்னஞ் சிலையால் புரம்எரித்தார் பொழில்சூழ் ஒற்றிப் புண்ணியனார்
முன்நஞ் சருந்தும் முக்கணனார் மூவர் அறியா முதல்வர்அவர்
இன்னஞ் சிலநாள் சென்றிடுமோ இலதேல் இன்று வருவாரோ
உன்னஞ் சிறந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 1

2397 பெற்றி அறியாப் பிரமனுக்கும் பெரிய மாற்கும் பெறஅறியார்
புற்றின் அரவார் கச்சைஉடைப் புனிதர் என்னைப் புணரும்இடம்
தெற்றி மணிக்கால் விளங்குதில்லைச் சிற்றம் பலமோ அன்றிஇந்த
ஒற்றி நகரோ சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 2

2398 அளித்து மூன்று பிள்ளைகளால் அகிலம் நடக்க ஆட்டுவிப்பார்
தெளித்து நதியைச் சடைஇருத்தும் தேவர் திருவாழ் ஒற்றியுளார்
களித்து மாலை கொடுப்பாரோ கள்ளி எனவே விடுப்பாரோ
ஒளித்தொன் றுரையீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 3

2399 எண்தோள் இலங்கும் நீற்றணிய ரியார்க்கும் இறைவர் எனைஉடையார்
வண்டோ லிடும்பூங் கொன்றைஅணி மாலை மார்பர் வஞ்சமிலார்
தண்தோய் பொழில்சூழ் ஒற்றியினார் தமக்கும்எனக்கும் மணப்பொருத்தம்
உண்டோ இலையோ சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 4

2400 தவர்தாம் வணங்கும் தாளுடையார் தாய்போல் அடியர் தமைப்புரப்பார்
பவர்தாம் அறியாப் பண்புடையார் பணைசூழ் ஒற்றிப் பதிஅமர்ந்தார்
அவர்தாம் மீண்டுற் றணைவாரோ அன்றி நான்போய் அணைவேனோ
உவர்தாம் அகற்றும் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 5

2401 பைத்த அரவப் பணிஅணிவார் பணைசூழ் ஒற்றிப் பதிமகிழ்வார்
மைத்த மிடற்றார் அவர்தமக்கு மாலை இடவே நான்உளத்தில்
வைத்த கருத்து முடிந்திடுமோ வறிதே முடியா தழிந்திடுமோ
உய்த்த மதியால் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 6

2402 தக்க விதியின் மகத்தோடும் தலையும் அழித்தார் தண்அளியார்
மிக்க வளஞ்சேர் திருவொற்றி மேவும் பரமர் வினையேதன்
துக்கம் அகலச் சுகம்அளிக்கும் தொடர்பும் உண்டோ இலையோதான்
ஒக்க அறிந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 7

2403 வெண்மை நீற்றர் வெள்ளேற்றர் வேத கீதர் மெய்உவப்பார்
வண்மை உடையார் ஒற்றியினார் மருவ மருவி மனமகிழ்ந்து
வண்மை அகலா தருட்கடல்நீ ராடு வேனோ ஆடேனோ
உண்மை அறிந்தீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 8

2404 ஆர்த்து மலிநீர் வயல்ஒற்றி அமர்ந்தார் மதியோ டரவைமுடிச்
சேர்த்து நடிப்பார் அவர்தமைநான் தேடி வலியச் சென்றிடினும்
பார்த்தும் பாரா திருப்பாரோ பரிந்து வாஎன் றுரைப்பாரோ
ஓர்த்து மதிப்பீர் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 9

2405 அள்ள மிகும்பேர் அழகுடையார் ஆனை உரியார் அரிக்கரியார்
வெள்ள மிகும்பொன் வேணியினார் வியன்சேர் ஒற்றி விகிர்தர்அவர்
கள்ள முடனே புணர்வாரோ காத லுடனே கலப்பாரோ
உள்ளம் அறியேன் சோதிடம்பார்த் துரைப்பீர் புரிநூல் உத்தமரே. 10

திருச்சிற்றம்பலம்

16. திருஅருட் பெருமிதம்

செவிலி கழறல்
திருவொற்றியூர்
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2406 விடையார் விடங்கப் பெருமானார் வெள்ளச் சடையார் வெண்ணகையால்
அடையார் புரங்கள் எரித்தழித்தார் அவரே இந்த அகிலமெலாம்
உடையார் என்று நினைத்தனைஊர் ஒற்றி அவர்க்கென் றுணர்ந்திலையோ
இடையா மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. 1

2407 கருவாழ் வகற்றும் கண்நுதலார் கண்ணன் அயனும் காண்பரியார்
திருவாழ் ஒற்றித் தேவர்எனும் செல்வர் அவரே செல்வமதில்
பெருவாழ் வுடையார் எனநினைத்தாய் பிச்சை எடுத்த தறிந்திலையோ
இருவா மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. 2

2408 மட்டுக் கடங்கா வண்கையினார் வளஞ்சேர் ஒற்றி வாணர்அவர்
பட்டுத் துகிலே திசைகளெலாம் படர்ந்த தென்னப் பரிந்தனையோ
கட்டத் துகிலும் கிடையாது கந்தை உடுத்த தறிந்திலையோ
இட்டுப் புணர்ந்திங் கெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. 3

2409 நடங்கொள் கமலச் சேவடியார் நலஞ்சேர் ஒற்றி நாதர்அவர்
தடங்கொள் மார்பின் மணிப்பணியைத் தரிப்பார் நமக்கென்றெண்ணினையால்
படங்கொள் பாம்பே பாம்பென்றால் படையும் நடுங்கும் பார்த்திலையோ
இடங்கொள் மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. 4

2410 திருக்கண் நுதலால் திருமகனைத் தீர்த்தார் ஒற்றித் தேவர்அவர்
எருக்க மலரே சூடுவர்நீ எழில்மல் லிகைஎன் றெண்ணினையால்
உருக்கும் நெருப்பே அவர்உருவம் உனக்கும் அவர்க்கும் உறவாமோ
இருக்க மயல்கொண் டெதுபெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. 5

2411 மேலை வினையைத் தவிர்த்தருளும் விடையார் ஒற்றி விகிர்தர்அவர்
மாலை கொடுப்பார் உணங்குதலை மாலை அதுதான் வாங்குவையே
ஆல மிடற்றார் காபாலி ஆகித் திரிவார் அணைவிலரே
ஏல மயல்கொண் டென்பெறுவாய் ஏழை அடிநீ என்மகளே. 6

2412 மாகம் பயிலும் பொழிற்பணைகொள் வளஞ்சேர் ஒற்றி வாணர்அவர்
யோகம் பயில்வார் மோகமிலார் என்னே உனக்கிங் கிணங்குவரே
வருந்தியசே வடிபின்னும் வருந்தநடந் தருளி
எஞ்சலிலா இரவினிடை யானிருக்கும் இடஞ்சேர்ந்
தெழிற்கதவந் திறப்பித்தங் கெனைஅழைத்தொன் றளித்தாய்
விஞ்சுபரா னந்தநடம் வியன்பொதுவிற் புரியும்
மேலவநின் அருட்பெருமை விளம்பலெவன் வியந்தே. 92

2571 எழுத்தினொடு பதமாகி மந்திரமாய்ப் புவனம்
எல்லாமாய்த் தத்துவமாய் இயம்புகலை யாகி
வழுத்துமிவைக் குள்ளாகிப் புறமாகி நடத்தும்
வழியாகி நடத்துவிக்கும் மன்னிறையு மாகி
அழுத்துறுமிங் கிவையெல்லாம் அல்லனவாய் அப்பால்
ஆகியதற் கப்பாலும் ஆனபதம் வருந்த
இழைத்துநடந் திரவில்என்பால் அடைந்தொன்று கொடுத்தாய்
எம்பெருமான் நின்பெருமை என்னுரைப்பேன் வியந்தே. 93

2572 மாவின்மணப் போர்விடைமேல் நந்திவிடை மேலும்
வயங்கிஅன்பர் குறைதவிர்த்து வாழ்வளிப்ப தன்றிப்
பூவின்மணம் போல்உயிருக் குயிராகி நிறைந்து
போகம்அளித் தருள்கின்ற பொன்னடிகள் வருந்தத்

தாவிநடந் திரவின்மனைக் கதவுதிறப் பித்தே
தயவுடன்அங் கெனை அழைத்துத் தக்கதொன்று கொடுத்தாய்
நாவின்மணந் துறப்புலவர் வியந்தேத்தும் பொதுவில்
நடம்புரியும் நாயகநின் நற்கருணை இதுவே. 94

2573 மணப்போது வீற்றிருந்தான் மாலவன்மற் றவரும்
மனஅழுக்கா றுறச்சிறியேன் வருந்தியநாள் அந்தோ
கணப்போதுந் தரியாமற் கருணைஅடி வருந்தக்
கங்குலிலே நடந்தென்னைக் கருதிஒன்று கொடுத்தாய்
உணப்போது போக்கினன்முன் உளவறியா மையினால்
உளவறிந்தேன் இந்நாள்என் உள்ளமகிழ் வுற்றேன்
தணப்போது மறைகளெலாந் தனித்தனிநின் றேத்தத்
தனிமன்றில் ஆனந்தத் தாண்டவஞ்செய் அரசே. 95

2574 நடுங்கமலக் கண்குறுகி நெடுங்கமலக் கண்விளங்கும்[1]
நல்லதிரு வடிவருந்த வல் இரவில் நடந்து
தொடுங்கதவந் திறப்பித்துத் துணிந்தெனையங் கழைத்துத்
துயரமெலாம் விடுகஇது தொடுகஎனக் கொடுத்தாய்
கொடுங்குணத்தேன் அளவினில்என் குற்றமெலாங் குணமாக்
கொண்டகுணக் குன்றேநின் குறிப்பினைஎன் புகல்வேன்
இடுங்கடுக என்றுணர்த்தி ஏற்றுகின்ற அறிவோர்
ஏத்தமணிப் பொதுவில் அருட் கூத்துடைய பொருளே. 96

2575 வெய்யபவக் கோடையிலே மிகஇளைத்து மெலிந்த
மெய்யடியர் தமக்கெல்லாம் விரும்புகுளிர் சோலைத்
துய்யநிழ லாய் அமுதாய் மெலிவனைத்துந் தவிர்க்கும்
துணையடிகள் மிகவருந்தத் துணிந்துநடந் தடியேன்
உய்யநடு இரவினில்யான் இருக்குமிடத் தடைந்தே
உயர்கதவந் திறப்பித்தங் குவந்தழைத்தொன் றளித்தாய்
வையகமும் வானகமும் வாழமணிப் பொதுவில்
மாநடஞ்செய் அரசேநின் வண்மைஎவர்க் குளதே. 97

2576 சிறியவனேன் சிறுமையெலாம் திருவுளங்கொள் ளாதென்
சென்னிமிசை அமர்ந்தருளும் திருவடிகள் வருந்தச்
செறியிரவில் நடந்தணைந்து நானிருக்கு மிடத்தே
தெருக்கதவந் திறப்பித்துச் சிறப்பின்எனை அழைத்துப்

1. அடிகளாரின் எழுத்து பாவில் உள்ளபடி தோன்றுகிறது. தொ. வே அவர்களும் அப்படியே பதிப்பித்திருக்கிறார்கள். சீர் அமைவு கருதி நெடுங்கமலம் விளங்கும் எனக்கொள்வார் கொள்க. ஆ. பா.

பிறிவிலதிங் கிதுதனைநீ பெறுகவெனப் பரிந்து
பேசிஒன்று கொடுத்தாய்நின் பெருமையைஎன் னென்பேன்
பொறியினற வோர்துதிக்கப் பொதுவில்நடம் புரியும்
பொருளேநின் அருளேமெய்ப் பொருள்எனத்தேர்ந் தனனே. 98

2577 அடிநாளில் அடியேனை அறிவுகுறிக் கொள்ளா
தாட்கொண்டென் சென்னிமிசை அமர்ந்தபதம் வருந்தப்
படிநாளில் நடந்திரவில் அடைந்தருளித் தெருவில்
படர்கதவந் திறப்பித்துப் பரிந்தெனை அங் கழைத்துப்
பிடிநாளு மகிழ்ந்துனது மனங்கொண்ட படியே
பேரறஞ்செய் துறுகஎனப் பேசிஒன்று கொடுத்தாய்
பொடிநாளும் அணிந்துமணிப் பொதுவில்நடம் புரியும்
பொருளேநின் அருளேமெய்ப் பொருள்எனத்தேர்ந் தனனே. 99

2578 உலகியலோ டருளியலும் ஒருங்கறியச் சிறியேன்
உணர்விலிருந் துணர்த்திஎன துயிர்க்குயிராய் விளங்கித்
திலகமெனத் திகழ்ந்தெனது சென்னிமிசை அமர்ந்த
திருவடிகள் வருந்தநடை செய்தருளி அடியேன்
இலகுமனைக் கதவிரவில் திறப்பித்தங் கென்னை
இனிதழைத்தொன் றளித்துமகிழ்ந் தின்னும்நெடுங் காலம்
புலவர்தொழ வாழ்க என்றாய் பொதுவில்நடம் புரியும்
பொருளேநின் அருளேமெய்ப் பொருள்எனத்தேர்ந் தனனே. 100

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

3. பிரசாதமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2579 திருவுருக்கொண் டெழுந்தருளிச் சிறியேன்முன் அடைந்து
திருநீற்றுப் பைஅவிழ்த்துச் செஞ்சுடர்ப்பூ அளிக்கத்
தருவுருக்கொண் டெதிர் வணங்கி வாங்கியநான் மீட்டும்
தயாநிதியே திருநீறும் தருகஎனக் கேட்ப
மருவுருக்கொண் டன்றளித்தாம் திருநீறின் றுனக்கு
மகிழ்ந்தளித்தாம் இவைஎன்று வாய்மலர்ந்து நின்றாய்
குருஉருக்கொண் டம்பலத்தே அருள் நடனம் புரியும்
குருமணியே என்னை முன்னாட் கொண்டகுணக் குன்றே. 1

2580 என்வடிவந் தழைப்பஒரு பொன்வடிவந் தரித்தே
என்முன்அடைந் தெனைநோக்கி இளநகைசெய் தருளித்
தன்வடிவத் திருநீற்றுத் தனிப்பை அவிழ்த் தெனக்குத்
தகுசுடர்ப்பூ அளிக்கவும்நான் தான் வாங்கிக் களித்து
மின்வடிவப் பெருந்தகையே திருநீறும் தருதல்
வேண்டுமென முன்னரது விரும்பியளித் தனம்நாம்
உன்வடிவிற் காண்டியென உரைத்தருளி நின்றாய்
ஒளிநடஞ்செய் அம்பலத்தே வெளிநடஞ்செய் அரசே. 2

2581 அழகுநிறைந் திலகஒரு திருமேனி தரித்தே
அடியேன்முன் எழுந்தருளி அருள்நகைகொண் டடியார்
கழகநடு எனை இருத்தி அவர்க்கெல்லாம் நீறு
களித்தருளி என்னளவிற் கருணைமுக மலர்ந்து
குழகியற்செஞ் சுடர்ப்பூவைப் பொக்கணத்தில் எடுத்துக்
கொடுத்தருளி நின்றனைநின் குறிப்பறியேன் குருவே
மழகளிற்றின் உரிவிளங்க மணிப்பொதுவிற் சோதி
மயவடிவோ டின்பநடம் வாய்ந்தியற்றும் பதியே. 3

2582 விலைகடந்த மணிஎனஓர் திருமேனி தரித்து
வினையேன்முன் எழுந்தருளி மெய்யடியர் விரும்பக்
கலைகடந்த பொருட்கெல்லாங் கரைகடந்து நாதக்
கதிகடந்த பெருங்கருணைக் கடைக்கண்மலர்ந் தருளி
அலைகடந்த கடல்மலர்ந்த மணச்செழும்பூ அடியேன்
அங்கைதனில் அளித்தனைநின் அருட்குறிப்பே தறியேன்
மலைகடந்த நெடுந்தோளில் இதழிஅசைந் தாட
மன்றில்நடம் புரிகின்ற வள்ளல்அருட் குருவே. 4

2583 உலர்ந்தமரந் தழைக்கும்ஒரு திருவுருவந் தாங்கி
உணர்விலியேன் முன்னர்உவந் துறுகருணை துளும்ப
மலர்ந்தமுகம் காட்டிநின்று திருநீற்றுப் பையை
மலர்க்கரத்தால் அவிழ்த்தங்கு வதிந்தவர்கட் கெல்லாம்
அலர்ந்ததிரு நீறளித்துப் பின்னர்என்றன் கரத்தில்
அருள்மணப்பூ அளித்தனைநின் அருட்குறிப்பே தறியேன்
கலந்தவரைக் கலந்துமணிக் கனகமன்றில் நடஞ்செய்
கருணைநெடுங் கடலேஎன் கண்ணமர்ந்த ஒளியே. 5

2584 பிழைஅலதொன் றறியாத சிறியேன்முன் புரிந்த
பெருந்தவமோ திருவருளின் பெருமையிதோ அறியேன்
மழைஎனநின் றிலகுதிரு மணிமிடற்றில் படிக
வடந்திகழ நடந்துகுரு வடிவதுகொண் டடைந்து
விழைவினொடென் எதிர்நின்று திருநீற்றுக் கோயில்
விரித்தருளி அருண்மணப்பூ விளக்கம்ஒன்று கொடுத்தாய்
குழைஅசையச் சடைஅசையக் குலவுபொன்னம் பலத்தே
கூத்தியற்றி என்னைமுன்னாட் கொண்டசிவக் கொழுந்தே. 6

2585 முத்தேவர் அழுக்காற்றின் மூழ்கியிடத் தனித்த
முழுமணிபோன் றொருவடிவெண் முன்கொடுவந் தருளி
எத்தேவர் தமக்குமிக அரியஎனும் மணப்பூ
என்கரத்தே கொடுத்தனைநின் எண்ணம்இதென் றறியேன்
சித்தேஎன் பவரும்ஒரு சத்தேஎன் பவரும்
தேறியபின் ஒன்றாகத் தெரிந்துகொள்ளும் பொதுவில்
அத்தேவர் வழுத்தஇன்ப உருவாகி நடஞ்செய்
ஆரமுதே என்னுயிருக் கானபெருந் துணையே. 7

2586 தெள்ளமுதம் அனையஒரு திருவுருவந் தாங்கிச்
சிறியேன்முன் எழுந்தருளிச் செழுமணப்பூ அளித்தாய்
உள்ளமுதம் ஆகியநின் திருக்குறிப்பே துணரேன்
உடையவளை உடையவனே உலகுணரா ஒளியே
கள்ளமிலா அறிவாகி அவ்வறிவுக் கறிவாய்க்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடலேஎன் கண்ணே
கொள்ளுதொறும் கரணமெலாங் கரைந்துகனிந் தினிக்கும்
கொழுங்கனியே கோற்றேனே பொதுவிளங்குங் குருவே. 8

2587 கண்விருப்பங் கொளக்கரணங் கனிந்துகனிந் துருகக்
கருணைவடி வெடுத்தருளிக் கடையேன்முன் கலந்து
மண்விருப்பங் கொளுமணப்பூ மகிழ்ந்தெனக்குக் கொடுத்து
வாழ்கஎன நின்றனைநின் மனக்குறிப்பே தறியேன்

பெண்விருப்பந் தவிர்க்கும்ஒரு சிவகாம வல்லிப்
பெண்விருப்பம் பெறஇருவர் பெரியர்[1] உளங் களிப்பப்
பண்விருப்பந் தருமறைகள் பலபலநின் றேத்தப்
பரமசிதம் பரநடனம் பயின்றபசு பதியே. 9

2588 உன்னுதற்கும் உணர்வதற்கும் உவட்டாத வடிவம்
ஒன்றெடுத்து மெய்யன்பர் உவக்களழுந் தருளி
முன்னுதற்கோர் அணுத்துணையுந் தரமில்லாச் சிறியேன்
முகநோக்கிச் செழுமணப்பூ முகமலர்ந்து கொடுத்தாய்
துன்னுதற்கிங் கரிதாம்நின் திருவுள்ளக் குறிப்பைத்
துணிந்தறியேன் என்னினும்ஓர் துணிவின்உவக் கின்றேன்
பொன்னுதற்குத் திலகமெனுஞ் சிவகாம வல்லிப்
பூவைஒரு புறங்களிப்பப் பொதுநடஞ்செய் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

1. இருவர் பெரியர் – பதஞ்சலி, வியாக்கிரபாதர், ச. மு. க.

4. ஆனந்தமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2589 திருவருடுந் திருவடிப்பொற் சிலம்பசைய நடந்தென்
சிந்தையிலே புகுந்துநின்பாற் சேர்ந்துகலந் திருந்தாள்
தெருமரலற் றுயர்ந்தமறைச் சிரத்தமர்ந்த புனிதை
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பப்
பொருவருமெய் யன்புடையார் இருவருங்கண் டுவந்து
போற்றமணிப் பொதுவில்நடம் புரிகின்ற துரையே
பருவரலற் றடிச்சிறியேன் பெருவரம்பெற் றுனையே
பாடுகின்றேன் பெரியஅருட் பருவமடைந் தனனே. 1

2590 சண்பைமறைக் கொழுந்துமகிழ் தரஅமுதங் கொடுத்தாள்
தயவுடையாள் எனையுடையாள் சர்வசத்தி யுடையாள்
செண்பகப்பொன் மேனியினாள் செய்யமலர்ப் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பப்
பண்பகர்பொன் னம்பலத்தே ஆனந்த நடஞ்செய்
பரம்பரநின் திருவருளைப் பாடுகின்றேன் மகிழ்ந்து
எண்பகர்குற் றங்களெலாங் குணமாகக் கொள்ளும்
எந்துரைஎன் றெண்ணுகின்ற எண்ணமத னாலே. 2

2591 அருளுடைய நாயகிஎன் அம்மைஅடி யார்மேல்
அன்புடையாள் அமுதனையாள் அற்புதப்பெண் ணரசி
தெருளுடைய சிந்தையிலே தித்திக்கும் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மருளுடைய மாயையெலாந் தேயமணி மன்றின்
மாநடஞ்செய் துரையேநின் மன்னருளின் திறத்தை
இருளுடைய மனச்சிறியேன் பாடுகின்றேன் பருவம்
எய்தினன்என் றறிஞரெலாம் எண்ணிமதித் திடவே. 3

2592 மாசுடையேன் பிழைஅனைத்தும் பொறுத்துவர மளித்தாள்
மங்கையர்கள் நாயகிநான் மறைஅணிந்த பதத்தாள்
தேசுடையாள் ஆனந்தத் தெள்ளமுத வடிவாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பக்
காசுடைய பவக்கோடைக் கொருநிழலாம் பொதுவில்
கனநடஞ்செய் துரையேநின் கருணையையே கருதி
ஆசுடையேன் பாடுகின்றேன் துயரமெலாந் தவிர்ந்தேன்
அன்பர்பெறும் இன்பநிலை அனுபவிக்கின் றேனே. 4

2593 பொய்யாத வரம்எனக்குப் புரிந்தபரம் பரைவான்
பூதமுதற் கருவியெலாம் பூட்டுவிக்குந் திறத்தாள்
செய்யாளுங் கலையவளும் உருத்திரையும் வணங்கும்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பக்
கையாத இன்பநடங் கனகமணிப் பொதுவில்
களித்தியற்றுந் துரையேநின் கருணையைநான் கருதி
நையாத வண்ணமெலாம் பாடுகின்றேன் பருவம்
நண்ணியபுண் ணியரெல்லாம் நயந்துமகிழ்ந் திடவே. 5

2594 அறங்கனிந்த அருட்கொடிஎன் அம்மைஅமு தளித்தாள்
அகிலாண்ட வல்லிசிவா னந்திசௌந் தரிசீர்த்
திறங்கலந்த நாதமணிச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மறங்கனிந்தார் மயக்கமெலாந் தெளியமணிப் பொதுவில்
மாநடஞ்செய் துரையேநின் வண்மைதனை அடியேன்
புறங்கவியப் பாடுகின்றேன் அகங்கவியப் பாடும்
புண்ணியரெல் லாம்இவன்ஓர் புதியன்எனக் கொளவே. 6

2595 உள்ளமுதம் ஊற்றுவிக்கும் உத்தமிஎன் அம்மை
ஓங்கார பீடமிசைப் பாங்காக இருந்தாள்
தெள்ளமுத வடிவுடையாள் செல்வநல்கும் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பக்
கள்ளமறுத் தருள்விளக்கும் வள்ளன்மணிப் பொதுவில்
கால்நிறுத்திக் கால்எடுத்துக் களித்தாடுந் துரையே
எள்ளலறப் பாடுகின்றேன் நின்னருளை அருளால்
இப்பாட்டிற் பிழைகுறித்தல் எங்ஙனம்இங் ஙனமே. 7

2596 பார்பூத்த பசுங்கொடிபொற் பாவையர்கள் அரசி
பரம்பரைசிற் பரைபரா பரைநிமலை யாதி
சீர்பூத்த தெய்வமறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
ஏர்பூத்த மணிமன்றில் இன்பநடம் புரியும்
என்னருமைத் துரையேநின் இன்னருளை நினைந்து
கார்பூத்த கனைமழைபோல் கண்களின்நீர் சொரிந்து
கனிந்துமிகப் பாடுகின்ற களிப்பைஅடைந் தனனே. 8

2597 பூரணிசிற் போதைசிவ போகிசிவ யோகி
பூவையர்கள் நாயகிஐம் பூதமுந்தா னானாள்
தேரணியும் நெடுவீதித் தில்லைநக ருடையாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப

ஏரணியும் மணிமன்றில் இன்பவடி வாகி
இன்பநடம் புரிகின்ற எம்முடைய துரையே
தாரணியில் உனைப்பாடுந் தரத்தைஅடைந் தனன்என்
தன்மையெலாம் நன்மைஎனச் சம்மதித்த வாறே. 9

2598 தன்னொளியில் உலகமெலாந் தாங்குகின்ற விமலை
தற்பரைஅம் பரைமாசி தம்பரைசிற் சத்தி
சின்னவய தினில்என்னை ஆளநினக் கிசைத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மன்னியபொன் மணிப்பொதுவில் இன்பநடம் புரிந்து
வயங்குகின்ற துரையேநின் மாகருணைத் திறத்தை
உன்னிஉவந் துணர்ந்துருகிப் பாடுகின்றேன் எங்கள்
உடையானே நின்னருளின் அடையாளம் இதுவே. 10

திருச்சிற்றம்பலம்

5. பக்திமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2599 அருளுடையாய் அடியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
மருளுடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்
தெருளுடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
தெரிகின்ற தாயினும்என் சிந்தைஉரு கிலதே
இருளுடைய சிலையும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 1

2600 அன்புடையாய் அடியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வன்புடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்
இன்புடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
விளங்குகின்ற தாயினும்என் வெய்யமனம் உருகா
என்புடைய உடலும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 2

2601 ஆளுடையாய் சிறியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வாளுடையேன்[1] தனை அழைத்துத் திரும்பவும்என் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்

1. வாள் - ஒளி, பட்டயம். ச. மு. க.

நீளுடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
நிகழ்கின்ற தாயினும்என் நெஞ்சம்உரு கிலதே
ஏளுடைய மலையும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 3

2602 ஆரமுதே அடியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வாரமுற எனையழைத்துத் திரும்பவும்என் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்
சீருடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
தெரிகின்ற தாயினும்என் சிந்தைஉரு கிலதே
ஈரமிலா மரமும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 4

2603 அற்புதநின் அருளருமை அறியேன்நான் சிறிதும்
அறியாதே மறுத்தபிழை ஆயிரமும் பொறுத்து
வற்புறுவேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணம் என்றன் மனமும்
கற்புடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
காண்கின்ற தென்னினும்என் கன்மனமோ உருகா
இற்புடைய இரும்பும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 5

2604 ஆண்டவநின் அருளருமை அறியாதே திரிந்தேன்
அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வேண்டிஎனை அருகழைத்துத் திரும்பவும்என் கரத்தே
மிகஅளித்த அருள்வண்ணம் வினையுடையேன் மனமும்
காண்தகைய கண்களும் விட்டகலாதே இன்னும்
காண்கின்ற தாயினும்என் கருத்துருகக் காணேன்
ஈண்டுருகாக் கரடும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 6

2605 அரசேநின் திருவருளின் அருமைஒன்றும் அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
விரவும்அன்பில் எனைஅழைத்து வலியவும்என் கரத்தே
வியந்தளித்த பெருங்கருணை விளக்கம்என்றன் மனமும்
உரவுமலர்க் கண்களும்விட் டகலாதே இன்னும்
ஒளிர்கின்ற தாயினும்என் உள்ளம்உரு கிலதே
இரவுநிறத் தவரும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 7

2606 ஐயாநின் அருட்பெருமை அருமைஒன்றும் அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
மெய்யாஅன் றெனை அழைத்து வலியவுமென் கரத்தே
வியந்தளித்த பெருங்கருணை விளக்கம்என்றன் மனமும்
கையாது கண்களும்விட் டகலாதே இன்னும்
காண்கின்ற தாயினும்என் கருத்துருகக் காணேன்
எய்யாவன் பரலும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 8

2607 அப்பாநின் திருவருட்பே ரமுதருமை அறியேன்
அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
இப்பாரில் எனைஅழைத்து வலியவும்என் கரத்தே
இனிதளித்த பெருங்கருணை இன்பமென்றன் மனமும்
துப்பாய கண்களும்விட் டகலாதே இன்னும்
தோன்றுகின்ற தாயினும்இத் துட்டநெஞ்சம் உருகா
எப்பாவி நெஞ்சுமிதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 9

2608 அம்மான்நின் அருட்சத்தி அருமைஒன்றும் அறியேன்
அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வெம்மாயை அகற்றிஎனை அருகழைத்தென் கரத்தே
மிகஅளித்த பெருங்கருணை விளக்கம்என்றன் மனமும்
கைம்மாழை விழிகளும்விட் டகலாதே இன்னும்
வதிகின்ற தாயினும்என் வஞ்சநெஞ்சம் உருகா
எம்மாய நெஞ்சுமிதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே. 10

6. சௌந்தரமாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2609 சேலோடும் இணைந்தவிழிச் செல்விபெருந் தேவி
சிவகாம வல்லியோடு சிவபோக வடிவாய்
மேலோடு கீழ்நடுவுங் கடந்தோங்கு வெளியில்
விளங்கியநின் திருவுருவை உளங்கொளும்போ தெல்லாம்
பாலோடு பழம்பிழிந்து தேன்கலந்து பாகும்
பசுநெய்யுங் கூட்டிஉண்ட படிஇருப்ப தென்றால்
மாலோடு காண்கின்ற கண்களுக்கங் கிருந்த
வண்ணம்இந்த வண்ணம்என எண்ணவும்ஒண் ணாதே. 1

2610 இன்பருளும் பெருந்தாய்என் இதயத்தே இருந்தாள்
இறைவியொடும் அம்பலத்தே இலங்கியநின் வடிவை
வன்புறுகன் மனக்கொடியேன் நினைக்கும்இடத் தெல்லாம்
மனங்கரைந்து சுகமயமாய் வயங்கும்எனில் அந்தோ
அன்புடையார் நின்றுநின்று கண்டுகொண்ட காலம்
ஆங்கவர்கட் கிருந்தவண்ணம் ஈங்கெவர்கள் புகல்வார்
துன்புறுதல் இல்லாத சுத்தநிலை உடையார்
தொழுகின்ற தோறுமகிழ்ந் தெழுகின்ற துரையே. 2

2611 சிவயோக சந்திதரும் தேவிஉல குடையாள்
சிவகாம வல்லியொடுஞ் செம்பொன்மணிப் பொதுவில்
நவயோக உருமுடிக்கண் விளங்கியநின் வடிவை
நாய்க்கடையேன் நான்நினைத்த நாள்எனக்கே மனமும்
பவயோக இந்தியமும் இன்பமய மான
படிஎன்றால் மெய்யறிவிற் பழுத்தபெருங் குணத்துத்
தவயோகர் கண்டவிடத் தவர்க்கிருந்த வண்ணம்
தன்னைஇந்த வண்ணம்என என்னை உரைப்பதுவே. 3

2612 சித்தியெலாம் அளித்தசிவ சத்திஎனை யுடையாள்
சிவகாம வல்லியொடு சிவஞானப் பொதுவில்
முத்தியெலாந் தரவிளங்கும் முன்னவநின் வடிவை
மூடமனச் சிறியேன்நான் நாடவரும் பொழுது
புத்தியெலாம் ஒன்றாகிப் புத்தமுதம் உண்டாற்
போலும்இருப் பதுஅதற்கு மேலும் இருப்பதுவேல்
பத்திஎலாம் உடையவர்கள் காணுமிடத் திருக்கும்
படிதான் எப்படியோ இப்படி என்ப தரிதே. 4

2613 தெய்வமெலாம் வணங்குகின்ற தேவிஎனை அளித்தாள்
சிவகாம வல்லியொடு திருமலிஅம் பலத்தே
சைவமெலாந் தரவிளங்கு நின்வடிவைக் கொடியேன்
தான்நினைத்த போதெனையே நான்நினைத்த திலையேல்
ஐவகைஇந் தியங்கடந்தார் கண்டவிடத் திருந்த
அனுபவத்தின் வண்ணமதை யார்புகல வல்லார்
உய்வகைஅந் நாள் உரைத்த தன்றியும் இந்நாளில்
உந்திரவில் வந்துணர்வு தந்தசிவ குருவே. 5

2614 தேன்மொழிப்பெண் ணரசிஅருட் செல்வம்எனக் களித்தாள்
சிவகாம வல்லியொடு செம்பொன்மணிப் பொதுவில்
வான்மொழிய நின்றிலங்கு நின்வடிவைச் சிறியேன்
மனங்கொண்ட காலத்தே வாய்த்தஅனு பவத்தை
நான்மொழிய முடியாதேல் அன்பர்கண்ட காலம்
நண்ணியமெய் வண்ணமதை எண்ணிஎவர் புகல்வார்
நூன்மொழிக்கும் பொருட்கும்மிக நுண்ணியதாய் ஞான
நோக்குடையார் நோக்கினிலே நோக்கியமெய்ப் பொருளே. 6

2615 சிற்றிடைஎம் பெருமாட்டி தேவர்தொழும் பதத்தாள்
சிவகாம வல்லியொடு சிறந்தமணிப் பொதுவில்
உற்றிடைநின் றிலங்குகின்ற நின்வடிவைக் கொடியேன்
உன்னுதொறும் உளம் இளகித் தளதளஎன் றுருகி
மற்றிடையில் வலியாமல் ஆடுகின்ற தென்றால்
வழியடியர் விழிகளினால் மகிழ்ந்துகண்ட காலம்
பற்றிடையா தாங்கவர்கட் கிருந்தவண்ணந் தனையார்
பகர்வாரே பகர்வாரேல் பகவன்நிகர் வாரே. 7

2616 ஆரமுதம் அனையவள்என் அம்மைஅபி ராமி
ஆனந்த வல்லியொடும் அம்பலத்தே விளங்கும்
[1]பேரமுதே மயமாம்உன் திருவடிவைக் குறித்துப்
பேசுகின்ற போதுமணம் வீசுகின்ற தொன்றோ
சீரமுத மாகிஎல்லாந் தித்திப்ப தன்போர்
சிறிதுமிலாக் கடைப்புலையேன் திறத்துக்கிங் கென்றால்
ஊரமுதப் பேரன்பர் பேசுமிடத் தவர்பால்
உற்றவண்ணம் இற்றிதென்ன உன்னமுடியாதே. 8

1. பேரமுத மயமாம் : ச.மு.க.,

2617 பொற்பதத்தாள் என்னளவிற் பொன்னாசை தவிர்த்தாள்
பூரணி ஆனந்தசிவ போகவல்லி யோடு
சொற்பதமுங் கடந்தமன்றில் விளங்கியநின் வடிவைத்
தூய்மையிலேன் நான்எண்ணுந் தோறும்மனம் இளகிச்
சிற்பதத்திற் பரஞான மயமாகும் என்றால்
தெளிவுடையார் காண்கின்ற திறத்தில்அவர்க் கிருக்கும்
நற்பதம்எத் தன்மையதோ உரைப்பரிது மிகவும்
நாதமுடி தனிற்புரியும் ஞானநடத் தரசே. 9

2618 என்பிழையா வையும்பொறுத்தாள் என்னைமுன்னே அளித்தாள்
இறைவிசிவ காமவல்லி என்னம்மை யுடனே
இன்பவடி வாய்ப்பொதுவில் இலங்கியநின் வண்ணம்
இற்றெனநான் நினைத்திடுங்கால் எற்றெனவும் மொழிவேன்
அன்புருவாய் அதுஅதுவாய் அளிந்தபழம் ஆகி
அப்பழச்சா றாகி அதன் அருஞ்சுவையும் ஆகி
என்புருக மனஞான மயமாகும் என்றால்
எற்றோமெய் யன்புடையார் இயைந்துகண்ட இடத்தே. 10

2619 கரும்பனையாள் என்னிரண்டு கண்களிலே இருந்தாள்
கற்பகப்பொன் வல்லிசிவ காமவல்லி யுடனே
விரும்புமணிப் பொதுவினிலே விளங்கியநின் வடிவை
வினையுடையேன் நினைக்கின்ற வேளையில்என் புகல்வேன்
இரும்பனைய மனம்நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி ஒருபே
ரின்பமய மாகும்எனில் அன்பர்கண்ட காலம்
அரும்பிமலர்ந் திட்டசிவா னந்தஅனு பவத்தை
யாரறிவார் நீஅறிவாய் அம்பலத்தெம் அரசே. 11

2620 காமசத்தி யுடன்களிக்குங் காலையிலே அடியேன்
கனஞான சத்தியையுங் கலந்துகொளப் புரிந்தாள்
வாமசத்தி சிவகாம வல்லியொடும் பொதுவில்
வயங்கியநின் திருவடியை மனங்கொளும்போ தெல்லாம்
ஆமசத்தன் எனும்எனக்கே ஆனந்த வெள்ள
மதுததும்பிப் பொங்கிவழிந் தாடும்எனில் அந்தோ
ஏமசத்தர் எனும்அறிஞர் கண்டவிடத் திருந்த
இன்பஅனு பவப்பெருமை யாவர்புகல் வாரே. 12

7. அதிசய மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2621 அக்கோஈ தசியம்ஈ தசியம்என் புகல்வேன்
அயன்முதலோர் நெடுங்காலம் மயன்முதல்நீத் திருந்து
மிக்கோல மிடவும்அவர்க் கருளாமல் இருளால்
மிகமருண்டு மதியிலியாய் வினைவிரிய விரித்து
இக்கோலத் துடனிருந்தேன் அன்பறியேன் சிறியேன்
எனைக்கருதி என்னிடத்தே எழுந்தருளி எனையும்
தக்கோன்என் றுலகிசைப்பத் தன்வணம்ஒன் றளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 1

2622 அச்சோஈ தசியம்ஈ தசியம்என் புகல்வேன்
அரிமுதலோர் நெடுங்காலம் புரிமுதல்நீத் திருந்து
நச்சோல மிடவும்அவர்க் கருளாமல் மருளால்
நாள்கழித்துக் கோள்கொழிக்கும் நடைநாயிற் கடையேன்
எச்சோடும் இழிவினுக்கொன் றில்லேன்நான் பொல்லேன்
எனைக்கருதி யானிருக்கும் இடத்திலெழுந் தருளித்
தச்சோதி வணப்பொருள்ஒன் றெனக்களித்துக் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 2

2623 அத்தோஈ தசியம்ஈ தசியம்என் புகல்வேன்
அந்தணரெல் லாரும்மறை மந்தணமே புகன்று
ஒத்தோல மிடவும்அவர்க் கொருசிறிதும் அருளான்
ஒதியனையேன் விதியறியேன் ஒருங்கேன்வன் குரங்கேன்
இத்தோட மிகவுடையேன் கடைநாய்க்குங் கடையேன்
எனைக்கருதி யானிருக்கும் இடந்தேடி நடந்து
சத்தோட முறஎனக்கும் சித்தியொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 3

2624 அந்தோஈ தசியம்ஈ தசியம்என் புகல்வேன்
அறிவுடையார் ஐம்புலனும் செறிவுடையார் ஆகி
வந்தோல மிடவும்அவர்க் கருளாமல் மருளால்
மனஞ்சென்ற வழியெல்லாந் தினஞ்சென்ற மதியேன்
எந்தோஎன் றுலகியம்ப விழிவழியே உழல்வேன்
எனைக்கருதி எளியேன் நான்இருக்குமிடத் தடைந்து
சந்தோட முறஎனக்கும் தன்வணம்ஒன் றளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 4

2625 அப்பாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அருந்தவர்கள் விரும்பிமிக வருந்திஉளம் முயன்று
இப்பாரில் இருந்திடவும் அவர்க்கருளான் மருளால்
இவ்வுலக நடைவிழைந்து வெவ்வினையே புரிந்து
எப்பாலும் இழிந்துமனத் திச்சைபுரி கின்றேன்
எனைக்கருதி யானிருக்கும் இடந்தேடி அடைந்து
தப்பாத ஒளிவண்ணந் தந்தென்னை அளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 5

2626 அம்மாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அன்பரெலாம் முயன்றுமுயன் றின்படைவான் வருந்தி
எம்மானென் றேத்திடவும் அவர்க்கருளான் மருளால்
இதுநன்மை இதுதீமை என்றுநினை யாமே
மைம்மாலிற் களிசிறந்து வல்வினையே புரியும்
வஞ்சகனேன் தனைக்கருதி வந்துமகிழ்ந் தெனக்கும்
தம்மான முறவியந்து சம்மான மளித்தான் 6
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

2627 ஆவாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அடியரெலாம் நினைந்துநினைந் தவிழ்ந்தகநெக் குருகி
ஓவாமல் அரற்றிடவும் அவர்க்கருளான் மாயை
உலகவிட யானந்தம் உவந்துவந்து முயன்று
தீவாய நரகினிடை விழக்கடவேன் எனைத்தான்
சிவாயநம எனப்புகலும் தெளிவுடையன் ஆக்கிச்
சாவாத வரங்கொடுத்துத் தனக்கடிமை பணித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 7

2628 அண்ணாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அறங்கரைந்த நாவினர்கள் அகங்கரைந்து கரைந்து
கண்ணார நீர்பெருக்கி வருந்தவும்அங் கருளான்
கடைநாயிற் கடையேன்மெய்க் கதியைஒரு சிறிதும்
எண்ணாத கொடும்பாவிப் புலைமனத்துச் சிறியேன்
எனைக்கருதி வலியவும்நான் இருக்குமிடத் தடைந்து
தண்ணார்வெண் மதியமுதம் உணவொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 8

2629 ஐயாஈ ததிசயம்ஈ ததிசயம்ஈஎன் புகல்வேன்
அருமைஅறிந் தருள்விரும்பி உரிமைபல இயற்றிப்
பொய்யாத நிலைநின்ற புண்ணியர்கள் இருக்கப்
புலைமனத்துச் சிறியேன்ஓர் புல்லுநிகர் இல்லேன்

செய்யாத சிறுதொழிலே செய்துழலுங் கடையேன்
செருக்குடையேன் எனைத்தனது திருவுளத்தில் அடைத்தே
சையாதி அந்தநடுக் காட்டிஒன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 9

2630 அன்னோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அருளருமை அறிந்தவர்கள் அருளமுதம் விரும்பி
என்னோஇங் கருளாமை என்றுகவன் றிருப்ப
யாதுமொரு நன்றியிலேன் தீதுநெறி நடப்பேன்
முன்னோபின் னும்அறியா மூடமனப் புலையேன்
முழுக்கொடியேன் எனைக்கருதி முன்னர்எழுந் தருளித்
தன்னோடும் இணைந்தவண்ணம் ஒன்றெனக்குக் கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 10

2631 ஐயோஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அருவினைகள் அணுகாமல் அறநெறியே நடந்து
மெய்யோதும் அறிஞரெலாம் விரும்பியிருந் திடவும்
வெய்யவினைக் கடல்குளித்து விழற்கிறைத்துக் களித்துப்
பொய்யோதிப் புலைபெருக்கி நிலைசுருக்கி உழலும்
புரைமனத்தேன் எனைக்கருதிப் புகுந்தருளிக் கருணைச்
சையோக முறஎனக்கும் வலிந்தொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 11

2632 எற்றேஈ ததிசயம்ஈ ததிசயம்என் இசைப்பேன்
இச்சையெலாம் விடுத்துவனத் திடத்தும்மலை யிடத்தும்
உற்றேமெய்த் தவம்புரிவார் உன்னிவிழித் திருப்ப
உலகவிட யங்களையே விலகவிட மாட்டேன்
கற்றேதும் அறிகிலேன் கடையரினுங் கடையேன்
கருணையிலாக் கல்மனத்துக் கள்வன்எனைக் கருதிச்
சற்றேயும் அன்றுமிகப் பெரிதெனக்கிங் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 12

2633 என்னோஈ ததிசயம்ஈ ததிசயம்என் இசைப்பேன்
இரவுபகல் அறியாமல் இருந்தஇடத் திருந்து
முன்னேமெய்த் தவம்புரிந்தார் இன்னேயும் இருப்ப
மூடர்களில் தலைநின்ற வேடமனக் கொடியேன்
பொன்னேயம் மிகப்புரிந்த புலைக்கடையேன் இழிந்த
புழுவினும்இங் கிழிந்திழிந்து புகுந்தஎனைக் கருதித்
தன்னேய முறஎனக்கும் ஒன்றளித்துக் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 13

2634 ஓகோஈ ததிசயம்ஈ ததிசயம்என் னுரைப்பேன்
உள்ளபடி உள்ளஒன்றை உள்ளமுற விரும்பிப்
பாகோமுப் பழரசமோ எனருசிக்கப் பாடிப்
பத்திசெய்வார் இருக்கவும்ஓர் பத்தியும்இல் லாதே
கோகோஎன் றுலகுரைப்பத் திரிகின்ற கொடியேன்
குற்றமன்றிக் குணமறியாப் பெத்தன்எனைக் கருதித்
தாகோத ரங்குளிர்ந்த தன்மைஒன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே. 14

திருச்சிற்றம்பலம்

8. அபராத மன்னிப்பு மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2635 செய்வகைநன் கறியாதே திருவருளோ நீடிச்
சிலபுகன்றேன் அறிவறியாச் சிறியரினுஞ் சிறியேன்
பொய்வகையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புண்ணியனே மதியணிந்த புரிசடையாய் விடையாய்
மெய்வகையோர் விழித்திருப்ப விரும்பிஎனை அன்றே
மிகவலிந்தாட் கொண்டருளி வினைதவிர்த்த விமலா
ஐவகைய கடவுளரும் அந்தணரும் பரவ
ஆனந்தத் திருநடஞ்செய் அம்பலத்தெம் அரசே. 1

2636 நிலைநாடி அறியாதே நின்னருளோ நீடி
நீர்மையல புகன்றேன்நன் னெறிஒழுகாக் கடையேன்
புலைநாயேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதகணஞ் சூழநடம் புரிகின்ற புனிதா
கலைநாடு மதியணிந்த கனபவளச் சடையாய்
கருத்தறியாக் காலையிலே கருணைஅளித் தவனே
தலைஞான முனிவர்கள்தந் தலைமீது விளங்கும்
தாளுடையாய் ஆளுடைய சற்குருஎன் அரசே. 2

2637 கலைக்கடைநன் கறியாதே கனஅருளோ நீடிக்
கரிசுபுகன் றேன்கவலைக் கடற்புனைஎன் றுணரேன்
புலைக்கடையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
போற்றிசிவ போற்றிசிவ போற்றிசிவ போற்றி
தலைக்கடைவாய் அன்றிரவில் தாள்மலரொன் றமர்த்தித்
தனிப்பொருள்என் கையிலளித்த தயவுடைய பெருமான்
கொலைக்கடையார்க் கெய்தரிய குணமலையே பொதுவில்
கூத்தாடிக் கொண்டுலகைக் காத்தாளுங் குருவே. 3

2638 நின்புகழ்நன் கறியாதே நின்னருளோ நீடி
நெறியலவே புகன்றேன்நன் னிலைவிரும்பி நில்லேன்
புன்புலையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூரணசிற் சிவனேமெய்ப் பொருள்அருளும் புனிதா

என்புடைஅந் நாளிரவில் எழுந்தருளி அளித்த
என்குருவே என்னிருகண் இலங்கியநன் மணியே
அன்புடையார் இன்படையும் அழகியஅம் பலத்தே
ஆத்தாளும் அப்பனுமாய்க் கூத்தாடும் பதியே. 4

2639 துலைக்கொடிநன் கறியாதே துணைஅருளோ டீடித்
துரிசுபுகன் றேன்கருணைப் பரிசுபுகன் றறியேன்
புலைக்கொடியேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பொங்குதிரைக் கங்கைமதி தங்கியசெஞ் சடையாய்
மலைக்கொடிஎன் னம்மைஅருள் மாதுசிவ காம
வல்லிமறை வல்லிதுதி சொல்லிநின்று காணக்
கலைக்கொடிநன் குணர்முனிவர் கண்டுபுகழ்ந் தேத்தக்
கனகசபை தனில்நடிக்குங் காரணசற் குருவே. 5

2640 பழுத்தலைநன் குணராதே பதியருளோ டீடிப்
பழுதுபுகன் றேன்கருணைப் பாங்கறியாப் படிறேன்
புழுத்தலையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புண்ணியர்தம் உள்ளகத்தே நண்ணியமெய்ப் பொருளே
கழுத்தலைநஞ் சணிந்தருளுங் கருணைநெடுங் கடலே
கால்மலர்என் தலைமீது தான்மலர அளித்தாய்
விழுத்தலைவர் போற்றமணி மன்றில்நடம் புரியும்
மெய்ம்மைஅறி வின்புருவாய் விளங்கியசற் குருவே. 6

2641 கையடைநன் கறியாதே கனஅருளோ டீடிக்
காசுபுகன் றேன்கருணைத் தேசறியாக் கடையேன்
பொய்யடியேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புத்தமுதே சுத்தசுக பூரணசிற் சிவமே
ஐயடிகள் காடவர்கோன் அகமகிழ்ந்து போற்றும்
அம்பலத்தே அருள்நடஞ்செய் செம்பவள மலையே
மெய்யடியர் உள்ளகத்தில் விளங்குகின்ற விளக்கே
வேதமுடி மீதிருந்த மேதகுசற் குருவே. 7

2642 திறகப்படநன் குணராதே திருவருளோ டீடித்
தீமைபுகன் றேன்கருணைத் திறஞ்சிறிதுந் தெளியேன்
புறப்படிறேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதமுதல் நாதவரைப் புணருவித்த புனிதா
உறப்படுமெய் உணர்வுடையார் உள்ளகத்தே விளங்கும்
உண்மையறி வானந்த உருவுடைய குருவே
சிறப்படைமா தவர்போற்றச் செம்பொன்மணிப் பொதுவில்
திருத்தொழில்ஐந் தியற்றுவிக்குந் திருநடநா யகனே. 8

2643 தேர்ந்துணர்ந்து தெளியாதே திருவருளோ டுடிச்
சிலபுகன்றேன் திருக்கருணைத் திறஞ்சிறிதுந் தெரியேன்
போந்தகனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
போதாந்த மிசைவிளங்கு நாதாந்த விளக்கே
ஊர்ந்தபணக் கங்கணமே முதற்பணிகள் ஒளிர
உயர்பொதுவில் நடிக்கின்ற செயலுடைய பெருமான்
சார்ந்தவரை எவ்வகையுந் தாங்கிஅளிக் கின்ற
தயவுடைய பெருந்தலைமைத் தனிமுதல்எந் தாயே. 9

2644 ஒல்லும்வகை அறியாதே உன்னருளோ டுடி
ஊறுபுகன் றேன்துயரம் ஆறும்வகை உணரேன்
புல்லியனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதியணிந் தொளிர்கின்ற பொன்மேனிப் பெருமான்
சொல்லியலும் பொருளியலும் கடந்தபர நாதத்
துரியவெளிப் பொருளான பெரியநிலைப் பதியே
மெல்லியல்நற் சிவகாம வல்லிகண்டு மகிழ
விரியுமறை ஏத்தநடம் புரியும்அருள் இறையே. 10

திருச்சிற்றம்பலம்

9. ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2645 உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும் உற்றிலாச் சிறியஓர் பருவத்
திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில் ஏற்றவுந் தரமிலா மையினான்
விலகுறுங் காலத் தடிக்கடி ஏற விடுத்துப்பின் விலகுறா தளித்தாய்
அலகிலா உணர்ச்சி அளித்தனை உன்றன் அருட்கடற் பெருமைஎன் புகல்வேன்
திலகநற்காழி ஞானசம் பந்தத் தெள்ளமு தாஞ்சிவ குருவே.[1] 1

2646 உயிர்அனு பவம்உற் றிடில்அதனிடத்தே ஓங்கருள் அனுபவம் உறும்அச்
செயிரில்நல் லனுப வத்திலே சுத்த சிவஅனு பவம்உறும் என்றாய்
பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞானப் பால்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம்
பயிர்தழைந் துறவைத் தருளிய ஞான பந்தன்என் றோங்குசற் குருவே. 2

2647 தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித் தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்ததன் மயமாம் நின்னைநீ இன்றி உற்றிடல் உயிரனு பவம்என்
றித்துணை வெளியின் என்னைஎன் னிடத்தே இருந்தவா றளித்தனை அன்றோ
சித்தநற் காழி ஞானசம் பந்தச் செல்வமே எனதுசற் குருவே. 3

1. பெருமானின் கையெழுத்து மூலத்தில் இவ்விருத்தம் இவ்வாறு ஐந்து அடிகளுடன் காணப் பெறுவதாகக் கூறிப் பி.இரா., ஆ.பா. இருவரும் இங்ஙனமே பதிப்பித்துள்ளனர். தொ. வே.

2648 தனிப்பர நாத வெளியின்மேல் நினது தன்மயந் தன்மயம் ஆக்கிப்
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப் பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற ஒன்றும் இயம்புறா இயல்பாய் இருந்ததே அருளனு பவம்என்
றெனக்கருள் புரிந்தாய் ஞானசம் பந்தன் என்னும்என் சற்குரு மணியே. 4

2649 உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல் உள்ளதாய் முற்றும் உள்ளதுவாய்
நள்ளதாய் எனதாய் நானதாய்த் தனதாய் நவிற்றருந் தானதாய் இன்ன
விள்ளொணா அப்பால் அப்படிக் கப்பால் வெறுவெளி சிவஅனு பவம்என்
றுள்ளுற அளித்த ஞானசம் பந்த உத்தம சுத்தசற் குருவே. 5

2650 பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும் பொருள்அரு ளனுபவம் அதற்குப்
பத்தியம் உயிரின் அனுபவம் இதனைப் பற்றறப் பற்றுதி இதுவே
சத்தியம் எனஎன் தனக்கருள் புரிந்த தனிப்பெருங் கருணைஎன் புகல்வேன்
முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின் முதலர சியற்றிய துரையே. 6

2651 அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ அருட்சிவ மதற்கெனப் பலகால்
படியுற வருந்தி இருந்தஎன் வருத்தம் பார்த்தரு ளால்எழுந் தருளி
மிடியற எனைத்தான் கடைக்கணித் துனக்குள் விளங்குவ அடிமுடி என்றாய்
வடிவிலாக் கருணை வாரியே மூன்று வயதினில் அருள்பெற்ற மணியே. 7

2652 செவ்வகை ஒருகால் படுமதி அளவே செறிபொறி மனம்அதன் முடிவில்
எவ்வகை நிலையும் தோற்றும்நீ நினக்குள் எண்ணிய படிஎலாம் எய்தும்
இவ்வகை ஒன்றே வருத்தமில் வகைஎன் றெனக்கருள் புரிந்தசற் குருவே
தெவ்வகை அமண இருளற எழுந்த தீபமே சம்பந்தத் தேவே. 8

2653 முன்புறு நிலையும் பின்புறு நிலையும் முன்னிநின் றுளமயக் குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண் டையநீத் தருளிய அரசே
என்புபெண் ணுருவோ டின்னுயிரது கொண்டெழுந்திடப் புரிந்துலகெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே என்னுயிர்க் குயிர்எனுங் குருவே. 9

2654 வருபகற் கற்பம் பலமுயன் றாலும் வரலருந் திறனெலாம் எனக்கே
ஒருபகற் பொழுதில் உறஅளித் தனைநின் உறுபெருங்கருணைஎன் உரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணங் காணப்பெற்றவர் தமையெலாம் ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த உயர்தனிக் கவுணிய மணியே. 10

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2655 சீரார் சண்பைக் கவுணியர் தம் தெய்வ மரபில் திகழ்விளக்கே
தெவிட்டா துளத்தில் தித்திக்கும் தேனே அழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே என் இரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவம் மூன்றில்உமை இனிய முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே என்ஆ ருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமா னேநின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்தில் பிறங்குவரே[1] 11

திருச்சிற்றம்பலம்

10. ஆளுடைய அரசுகள் அருண்மாலை

[2]எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2656 திருத்தகுசீர் அதிகைஅருள் தலத்தின் ஓங்கும்
சிவக்கொழுந்தின் அருட்பெருமைத் திறத்தால் வாய்மை
உருத்தகுமெய் உணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளங்க நாவரசென் றொருபேர் பெற்றுப்
பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனித னேஎன்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருது வாயே. 1

2657 வாய்மையிலாச் சமணாதர் பலகாற் செய்த
வஞ்சமெலாம் திருவருட்பேர் வலத்தால் நீந்தித்
தூய்மைபெறும் சிவநெறியே விளங்க ஓங்கும்
சோதிமணி விளக்கேஎன் துணையே எம்மைச்
சேய்மைவிடா தணிமையிடத் தாள வந்த
செல்வமே எல்லையிலாச் சிறப்பு வாய்ந்துள்
ஆய்மையுறு பெருந்தகையே அமுதே சைவ
அணியேசொல் லரசெனும்பேர் அமைந்த தேவே. 2

2658 தேவரெலாம் தொழுந்தலைமைத் தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே நான்முகனும் விரும்பும் ஞான
நாயகனே நல்லவர்க்கு நண்ப னேஎம்
பாவமெலாம் அகற்றிஅருட் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே பணிந்து நின்பால்
மேவவிருப் புறும்அடியர்க் கன்பு செய்ய
வேண்டினேன் அவ்வகைநீ விதித்தி டாயே. 3

1. இக்தோர் தனிப்பாடல். இதனை இவ்விடத்தில் சேர்த்துத் தொ. வே. பதிப்பித்துள்ளார்.
2. எழுசீர் தொ.வே 1867 பதிப்பு

2659 விதிவிலக்கீ தென்றறியும் விளைவொன் றில்லா
வினையினேன் எனினும்என்னை விரும்பி என்னுள்
மதிவிளக்கை ஏற்றி அருள் மனையின் ஞான
வாழ்வடையச் செயல்வேண்டும் வள்ள லேநற்
பதிமலர்த்தாள் நிழலடைந்த தவத்தோர்க் கெல்லாம்
பதியேசொல் லரசெனும்பேர் படைத்த தேவே
கதிதருகற் பகமேமுக் கனியே ஞானக்
கடலேஎன் கருத்தேஎன் கண்ணு ளானே. 4

2660 கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்
கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்
பண்ணுளே விளைந்தஅருட் பயனே உண்மைப்
பதியோங்கு நிதியேநின் பாதம் அன்றி
விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்
விரும்பேன்என் றனையாள வேண்டுங் கண்டாய்
ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற
உத்தமனே சித்தமகிழ்ந் துதவு வோனே. 5

2661 ஓங்காரத் தனிமொழியின் பயனைச் சற்றும்
ஓர்கிலேன் சிறியேன்இவ் வுலக வாழ்வில்
ஆங்காரப் பெருமதமால் யானை போல
அகம்பாவ மயனாகி அலைகின் றேன்உன்
பாங்காய மெய்யடியர் தம்மைச் சற்றும்
பரிந்திலேன் அருளடையும் பரிசொன் றுண்டோ
தீங்காய செயலனைத்தும் உடையேன் என்ன
செய்வேன்சொல் லரசேஎன் செய்கு வேனே. 6

2662 செய்வகைஒன் றறியாத சிறியேன் இந்தச்
சிற்றுலக வாழ்க்கையிடைச் சிக்கி அந்தோ
பொய்வகையே புரிகின்றேன் புண்ணி யாநின்
பொன்னடியைப் போற்றிலேன் புனித னேநான்
உய்வகைஎவ் வகையாது செய்வேன் நீயே
உறுதுணைஎன் றிருக்கின்றேன் உணர்வி லேனை
மெய்வகையிற் செலுத்தநினைத் திடுதி யோசொல்
வேந்தேஎன் உயிர்த்துணையாய் விளங்குங் கோவே. 7

2663 விளங்குமணி விளக்கெனநால் வேதத் துச்சி
மேவியமெய்ப் பொருளை உள்ளே விரும்பி வைத்துக்
களங்கறுமெய் யன்பரெல்லாங் களிப்ப அன்றோர்
கற்றுணையாற் கடல்கடந்து கரையிற் போந்து
துளங்குபெருஞ் சிவநெறியைச் சார்ந்த ஞானத் 8
துணையேநந் துரையேநற் சுகமே என்றும்
வளங்கெழும்ஆ கமநெறியை வளர்க்க வந்த
வள்ளலே நின்னருளை வழங்கு வாயே.

2664 அருள்வழங்குந் திலகவதி அம்மை யார்பின்
அவதரித்த மணியேசொல் லரசே ஞானத்
தெருள்வழங்கும் சிவநெறியை விளக்க வந்த
செழுஞ்சுடர்மா மணிவிளக்கே சிறிய னேனை
இருள்வழங்கும் உலகியல்நின் றெடுத்து ஞான
இன்னருள்தந் தாண்டருள்வாய் இன்றேல் அந்தோ
மருள்வழங்கும் பவநெறியிற் சுழல்வேன் உய்யும்
வகைஅறியேன் நின்னருட்கு மரபன் றீதே. 9

2665 தேர்ந்தஉளத் திடைமிகவும் தித்தித் தூறும்
செழுந்தேனே சொல்லரசாம் தேவே மெய்ம்மை
சார்ந்துதிகழ் அப்பூதி அடிகட் கின்பம்
தந்தபெருந் தகையேஎம் தந்தை யேஉள்
கூர்ந்தமதி நிறைவேஎன் குருவே எங்கள்
குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பம்
தீர்ந்தபெரு நெறித்துணையே ஒப்பி லாத
செல்வமே அப்பனெனத் திகழ்கின் றோனே. 10

திருச்சிற்றம்பலம்

11. ஆளுடைய நம்பிகள் அருண்மாலை

கொச்சகக் கலிப்பா
திருச்சிற்றம்பலம்

2666 மதியணிசெஞ் சடைக்கனியை மன்றுள்நடம் புரிமருந்தைத்
துதியணிசெஞ் சுவைப்பொருளில் சொன்மாலை தொடுத்தருளி
விதியணிமா மறைநெறியும் மெய்ந்நிலைஆ கமநெறியும்
வதியணிந்து விளங்கவைத்த வன்தொண்டப் பெருந்தகையே. 1

2667 நீற்றிலிட்ட நிலையாப்புன் னெறியுடையார் தமைக்கூடிச்
சேற்றிலிட்ட கம்பமெனத் தியங்குற்றேன் தனைஆளாய்
ஏற்றிலிட்ட திருவடியை எண்ணிஅரும் பொன்னையெலாம்
ஆற்றிலிட்டுக் குளத்தெடுத்த அருட்டலைமைப் பெருந்தகையே. 2

2668 இலைக்குளநீ ரழைத்ததனில் இடங்கர்உற அழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர் தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்கும்உறு கணக்குயர்பொன்
மலைக்கும்அணு நிலைக்கும்உறா வன்தொண்டப் பெருந்தகையே. 3

2669 வேதமுதற் கலைகளெலாம் விரைந்துவிரைந் தனந்தமுறை
ஓதஅவைக் கணுத்துணையும் உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேற் படப்புரிந்த
மாதவம்யா துரைத்தருளாய் வன்தொண்டப் பெருந்தகையே. 4

2670 ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைத் திடில்அடியேன் அருங்கரணம் கரைந்துகரைந்
தூழியல்இன் புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே. 5

2671 வான்காண இந்திரனும் மாலயனும் மாதவரும்
தான்காண இறைஅருளால் தனித்தவள யானையின்மேல்
கோன்காண எழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே. 6

2672 தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே. 7

2673 இன்பாட்டுத் தொழிற்பொதுவில் இயற்றுகின்ற எம்பெருமான்
உன்பாட்டுக் குவப்புறல்போல் ஊர்பாட்டுக் குவந்திலர்என்
றென்பாட்டுக் கிசைப்பினும்என் இடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக் கிசைவதுகாண் அருட்பாட்டுப் பெருந்தகையே. 8

2674 பரம்பரமாம் துரியமெனும் பதத்திருந்த பரம்பொருளை
உரம்பெறத்தோ ழமைகொண்ட உன்பெருமை தனைமதித்து
வரம்பெறநற் றெய்வமெலாம் வந்திக்கும் என்றால்என்
தரம்பெறஎன் புகல்வேன்நான் தனித்தலைமைப் பெருந்தகையே. 9

2675 பேரூரும் பரவைமனப் பிணக்கறஎம் பெருமானை
ஊரூரும் பலபுகல ஓரிரவில் தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே. 10

திருச்சிற்றம்பலம்

12. ஆளுடைய அடிகள் அருண்மாலை

தரவு கொச்சகக் கலிப்பா

அருட்பெருஞ்ஜோதி

2676 தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம்நான் அனுபவிக்க அருளுதியே. 1

2677 கருவெளிக்குட் புறனாகிக் கரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாத வூர்மணியே. 2

2678 மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூர்இறையே. 3

2679 உருஅண்டப் பெருமறைஎன் றுலகமெலாம் புகழ்கின்ற
திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனிஅகவல் எண்ணம்எனக் கியம்புதியே. 4

2680 தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே. 5

2681 சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே. 6

2682 வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே. 7

2683 வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும் என்உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே. 8

2684 பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ புண்ணியனே. 9

2685 வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே 10

திருச்சிற்றம்பலம்

நான்காம் திருமுறை முற்றிற்று

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருஅருட்பா

ஐந்தாம் திருமுறை

வாயுறை வாழ்த்து

திரு அருட்பா ஐந்தாம் திருமுறை
1880-ஆம் ஆண்டு முதற் பதிப்பின்
வாயுறை வாழ்த்து

தொழுவூர் - வேலாயுத முதலியாரவர்களால்
இயற்றப்பட்டது

புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே
மண்ணகத் துயரிய மக்கட் பிறப்புப்
புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே
பண்ணப் பழுத்த புண்ணிய நுகர்தரு
விண்ணத் துயரிய வியன்குடிப் பிறப்பினும்
புண்ணிய முடைத்தே புண்ணிய முடைத்தே
அதனால்,
மாசறு காட்சி மயன்றவான் றவமுடை
ஆணவத் தக்கனார் வேள்விபுக் கொடுங்கிய
வானவக் குழாத்து மாலரில் கழிப்பிய
காசிப னளித்த தேசுடை யாக்கை
மாயா வரத்தொரு மாச்சூ ராசற
மூவெயின் முருக்கிய முரட்டழன் முறுவல்
வழங்கிய வாலமர் மறைமுதல் யோகி
கண்ணுதல் வழியே தண்ணருள் பழுத்த
தேவுய ருலகெலா நாவுயர் புகழ்ச்சுவை
மூவிரு முகத்துச் செங்கனி யாவையு
மளித்தமூ தாதை செருக்க துகைப்ப
வெண்வகை வடிவத் தொருவன் றிசைச்செவி
பருகிய பிரணவ விரதச் செங்கனி
முல்லை யாற்று முருந்தெயிற் றரிவையர்
ஆதரம் பெருக வோம்பருட் கற்பின்
வயாவறுத் தீன்ற வையவாய் மறுப்படா
தொருபய லனைத்துப் போக மார்த்த
பூண்முலை யிமயப் பொலம்பூங் கொம்பு
முச்சிமோந் தின்ப முற்று செங்கனி
மாக்கடன் மதிபெறு வாலுண வருந்திய
பல்பெரு மகத்து நோன்பினு நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ராய்வற
நண்ணிய மராஅடித் தண்ணறு நிழல்வயின்
அண்ணல்வெள் யானை மண்ணுறுத் துப்புரந்த
குலக்கோ மாட்டி குறக்கோ மாட்டி
மெய்யுறச் சுவைத்த தெய்வச் செங்கனி

விட்பட ரொழுக்கறு மட்படர் புதைக்குடில்
ஓவா வாழ்க்கை யுணர்ச்சிவலி யருகுபு
சிறுத்த காலத்துப் பெருத்தநோ யுழந்து
தலைப்பெ யொன்றுடை யிரண்டிற் றிகழ்ந்த
மலக்குறும் பாசு மரீஇய வெமரம்
புண்ணுறு நெஞ்சப் புலம்பு தபவிரு
கண்ணுகர் செங்கனி யாகுறு பாக்கு
நனியதர் சிறப்ப நாட்டிய நாடித்
தயாமூல தன்ம தத்துவம் புலப்படத்
தன்னேர் தயாவிற் றான்வலித் ததனால்
கொலைபுண ரரக்கர் கொடும்பாட்டுக் காசற
வலைபுணர் பள்ளி யாண்டகை யண்ணல்
அரசிளங் குமரனிற் பரசினர் பழிச்சக்
கொடுமரங் குனித்து நெடுநீர் நீந்திக்
கவித்தொகை தைவரக் கைவரத் தேவி
சென்றுபே ராவம் பொன்றுறப் பின்றை
நின்றவெம் பவப்பழி யொன்ற வொன்றா
மனனக னெகிழ்ந்து மன்னிய
வினனகஞ் செழிப்ப வியைபழி துரப்ப
மெய்ப்பிறப் பில்லான் கப்பறு
மொருகுறி கண்டு பெருவரம் படைத்திவ்
வகனிலக் கரிசறத் தன்பெயர் நிலைஇய
வேதுவி னப்பெயர் காதலிற் புனைஇ
அடர்முளி கானம் படரொரி போலத்
தம்மையுந் தஞ்சார் தவத்தையுந் தவம்புணர்
மெய்ம்மலி யுறுநர் மேதகு குழுஉவையுஞ்
சுட்டற வொழியுந் தோற்றஞ் சான்ற
உயிர்க்கொலை பழகிப் புழுக்குடர் பெருக்கி
மலவுடல் வளர்க்கும் பழியூ னுணவினர்
நினைப்பருங் கூட்ட நேர்பா தகமறத்
திருவுரு சிறந்த பேரரு டன்னியல்
தேற்றிய
திருவருட் பிரகா சச்செழுங் கனியாய்
எம்மையு மெம்முடைத் தம்மையுந் தம்முறு
திறத்தையுங் காட்டியெஞ் சித்தந் தழைப்பத்
திருவாய் மலர்ந்த செந்தேன் பொதிந்து
பெருகருட் பாவாந் தேத்தடை கிடந்த
கருவார் மையற் கவல்கட் டழிக்கும்
திருவார் தணிகைச் செந்தமிழ்ப் பெருக்கு

வருவா ரிதிமலிந் தாடி வாழிய
வாழிய வுலகே வாழிய வுலகே
வாழிய வறனே வாழிய நலனே
வாழிய மறையே வாழிய துறையே
வாழிய தவமே வாழிய வாழ்த்திய
வூழிய லுடம்பே வேழிய னாவே
வாழிய வாழிய வாழிய நாவே
வாழிய வருளே வாழிய வருளே
வாழிய வருளே வாழி வருளே.

நேரிசை வெண்பா

ஆரியனார் சீர்பாதந் தாங்க வமைசிரமும்
ஆரியனார் சீர்பாட வாநாவும் – ஆரியனார்
செம்மொழியே சிந்திக்கு நெஞ்சுந் தருந்தவமே
யெம்மையினும் வாழ்க வினிது.

வாயுறை வாழ்த்து முற்றிற்று

அச்சிற் பதிப்பித்தவர் சிறப்பு
நேரிசை வெண்பா

பொய்க்கிட்டு வையம் புலம்பல்அற நன்மயிலைச்
சிக்கிட்டி எம்சோம சுந்தரன்சீர் – மெய்க்கிட்டிச்
சைவத் தணிகைத் தமிழ்ப்பா வெளியிட்டான்
தெய்வப் பயன்கொழிக்கத் தேர்ந்து.

திருச்சிற்றம்பலம்

1. திருத்தணிகைப் பகுதியில் அடங்கியுள்ள திருப் பதிகங்கள், முதல் முதல், நம் இராமலிங்க அடிகளாரின் முதல் மாணாக்கராகிய உபய கலாநிதிப் பெரும்புலவர், தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களால், 1880 – ஆம் ஆண்டில், திருத்தணிகைப் பதிகம் என்ற தலைப்பின் கீழ், திருஅருட்பாவின் ஐந்தாம் திருமுறையாக வகுத்துப் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றன. இத்திருமுறையின்கண், வேண்டிய போது பதிகங்களை முன் பின் வரிசைப்படுத்தியவரும் அவற்றிற்குத் தலைப்புக்கள் கொடுத்தவரும் தொ. வே. முதலியார் அவர்களே ஆவர்.
அடிக்குறிப்பு : ஆ. பாலகிருஷ்ணன் பதிப்பு. 1957

ஐந்தாம் திருமுறை

திருத்தணிகைப் பதிகங்கள்

1. சித்தி விநாயகர் பதிகம்

நேரிசை வெண்பா

சிவசண்முக சிவஞான தேசிகன் திருவடி வாழ்க !

2686 அஞ்சுமுகத் தான்மகன்மால் அஞ்சுமுகத் தான் அருள்வான்
அஞ்சுமுகத் தான்அஞ் சணிகரத்தான் – அஞ்சுமுக
வஞ்சரையான் காணா வகைவதைத்தான் ஓர்அரையோ
டஞ்சரையான் கண்கள் அவை. 1

2687 வாதாகா வண்ண மணியேஎம் வல்லபைதன்
நாதாகா வண்ண நலங்கொள்வான் – போதார்
வனங்காத்து நீர்அளித்த வள்ளலே அன்பால்
இனங்காத் தருளாய் எனை. 2

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2688 உலகெலாம் தழைப்ப அருள்மத அருவி ஒழுகுமா முகமும்ஐங் கரமும்
இலகுசெம் மேனிக் காட்சியும் இரண்டோ டிரண்டென ஓங்குதிண் தோளும்
திலகவாள் நுதலார் சித்திபுத் திகளைச் சேர்த்தணைத் திடும்இரு மருங்கும்
விலகுறா தெளியேன் விழைந்தனன் சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 1

2689 உள்ளமும் உயிரும் உணர்ச்சியும் உடம்பும் உறுபொருள் யாவும்நின் தனக்கே
கள்ளமும் கரிசும் நினைந்திடா துதவிக் கழல்இணை நினைந்துநின் கருணை
வெள்ளம் உண்டிரவு பகல்அறி யாத வீட்டினில் இருந்து நின் னோடும்
விள்ளல்இல் லாமல் கலப்பனோ சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 2

2690 நாதமும் கடந்து நிறைந்துநின் மயமே நான்என அறிந்துநான் தானாம்
பேதமும் கடந்த மௌனராச் சியத்தைப் பேதையேன் பிடிப்பதெந் நாளோ
ஏதமும் சமய வாதமும் விடுத்தோர் இதயமும் ஏழையேன் சிரமும்
வேதமும் தாங்கும் பாதனே சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 3

2691 சச்சிதா னந்த வடிவம்நம் வடிவம் தகும்அதிட் டானம்மற் றிரண்டும்
பொய்ச்சிதா பாசக் கற்பனை இவற்றைப் போக்கியாங் கவ்வடி வாகி
அச்சிதா கார போதமும் அதன்மேல் ஆனந்த போதமும் விடுத்தல்
மெய்ச்சிதாம் வீடென் றுரைத்தனை சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 4

2692 ஒன்றல இரண்டும் அலஇரண் டொன்றோ டுருஅல அருஅல உவட்ட
நன்றல நன்றல் லாதல விந்து நாதமும் அலஇவை அனைத்தும்
பொன்றல்என் றறிந்துட் புறத்தினும் அகண்ட பூரண மாம்சிவம் ஒன்றே
வென்றல்என் றறிநீ என்றனை சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 5

2693 சத்தசத் தியல்மற் றறிந்துமெய்ப் போதத் தத்துவ நிலைபெற விழைவோர்
சித்தமுற் றகலா தொளித்தநின் கமலச் சேவடி தொழஎனக் கருள்வாய்
சுத்தசற் குணத்தெள் அமுதெழு கடலே சுகபரி பூரணப் பொருளே
வித்தக முக்கண் அத்தனே சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 6

2694 மருள்உறு மனமும் கொடியவெங் குணமும் மதித்தறி யாததுன் மதியும்
இருள்உறு நிலையும் நீங்கிநின் அடியை எந்தநாள் அடைகுவன் எளியேன்
அருள்உறும் ஒளியாய் அவ்வெளிக் குள்ளே அமர்ந்தசிற் பரஒளி நிறைவே
வெருள்உறு சமயத்தறியொணாச் சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 7

2695 கேவல சகல வாதனை அதனால் கீழ்ப்படும் அவக்கடல் மூழ்கி
ஓவற மயங்கி உழலும்இச் சிறியேன் உன்அருள் அடையும்நாள் உளதோ
பாவலர் உளத்தில் பரவிய நிறைவே பரமசிற் சுகபரம் பரனே
மேவுறும் அடியார்க் கருளிய சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 8

2696 கானல்நீர் விழைந்த மான்என உலகக் கட்டினை நட்டுழன் றலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை ஏன்றுகொண் டருளும் நாள் உளதோ
ஊனம்ஒன் றில்லா உத்தமர் உளத்தே ஓங்குசீர்ப் பிரணவ ஒளியே
வேல்நவில் கரத்தோர்க் கினியவா சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 9

2697 பெரும்பொருட் கிடனாம் பிரணவ வடிவில் பிறங்கிய ஒருதனிப் பேறே
அரும்பொருள் ஆகி மறைமுடிக் கண்ணே அமர்ந்தபேர் ஆனந்த நிறைவே
தரும்பர போக சித்தியும் சுத்த தருமமும் முத்தியும் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி விநாயக விக்கினேச் சுரனே. 10

சிவசண்முக சிவஞான தேசிகன் திருவடி வாழ்க !

2. வல்லபை கணேசர் பிரசாத மாலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சிவசண்முக சிவஞான தேசிகன் திருவடி வாழ்க !

2698 திருநெடு மால்அன் றால் இடை நினது சேவடித் துணைமலர்த் துகளான்
பெருநெடு மேனி தளிர்படப் பாம்பின் பேருரு அகன்றமை மறவேன்
கருநெடுங் கடலைக் கடற்று நற்றுணையே கண்கள் மூன் றுடையசெங் கரும்பே
வருநெடு மருப்பொன் றிலகுவா ரணமே வல்லபைக் கணேசமா மணியே. 1

2699 நளினமா மலர்வாழ் நான்முகத் தொருவன் நண்ணிநின் துணை அடிவழுத்திக்
களிநலன் உடன்இவ்வுலகெலாம் படைக்கக்கடைக் கணித்ததை உளம்மறவேன்
அளிநலன் உறுபே ரானந்தக் கடலே அருமருந் தேஅருள் அமுதே
வளிநிறை உலகுக்கொருபெருந் துணையே வல்லபைக் கணேசமா மணியே. 2

2700 சீர்உருத் திரமூர்த் திகட்குமுத் தொழிலும் செய்தருள் இறைமைதந் தருளில்
பேர்உருத் திரங்கொண் டிடச்செயும் நினது பெருமையை நாள்தொறும் மறவேன்
ஆர்உருத் திடினும் அஞ்சுதல் செய்யா ஆண்மைஎற் கருளிய அரசே
வார்உருத் திடுபூண் மணிமுகக் கொங்கை வல்லபைக் கணேசமா மணியே.

2701 விண்ணவர் புகழும் மெய்கண்ட நாதன் வித்தகக் கபிலன்ஆ தியர்க்கே
கண்அருள் செயும்நின் பெருமையை அடியேன் கனவிலும் நனவிலும் மறவேன்
தண்அருட் கடலே அருட்சிவ போக சாரமே சராசர நிறைவே
வண்ணமா மேனிப் பரசிவ களிறே வல்லபைக் கணேசமா மணியே. 4

2702 நாரையூர் நம்பி அமுதுகொண் டூட்ட நற்றிரு வாய்மலர்ந் தருளிச்
சீரைமே வுறச்செய் தளித்திடும் நினது திருவருள் நாள்தொறும் மறவேன்
தேரைஊர் வாழ்வும் திரம்அல எனும்நற் றிடம்எனக் கருளிய வாழ்வே
வாரைஊர் முலையாள் மங்கை நாயகி எம் வல்லபைக் கணேசமா மணியே. 5

2703 கும்பமா முனியின் கரகநீர் கவிழ்த்துக் குளிர்மலர் நந்தனம் காத்துச்
செம்பொன் நாட்டிறைவற் கருளிய நினது திருவருட் பெருமையை மறவேன்
நம்பனார்க் கினிய அருள்மகப் பேறே நற்குணத் தோர்பெரு வாழ்வே
வம்பறா மலர்த்தார் மழைமுகில் கூந்தல் வல்லபைக் கணேசமா மணியே. 6

2704 அயன்தவத் தீன்ற சித்திபுத் திகள்ஆம் அம்மையர் இருவரை மணந்தே
இயன்ற அண்டங்கள் வாழ்வுறச் செயும்நின் எழில்மணக் கோலத்தை மறவேன்
பயன்தரும் கருணைக் கற்பகத் தருவே பரசிவத் தெழுபரம் பரமே
வயன்தரு நிமல நித்தியப் பொருளே வல்லபைக் கணேசமா மணியே. 7

2705 முன்அருந் தவத்தோன் முற்கலன் முதலா முனிவர்கள் இனிதுவீடடைய
இன்னருள் புரியும் நின்அருட் பெருமை இரவினும் பகலினும் மறவேன்
என்அரும் பொருளே என்உயிர்க் குயிரே என்அரசே யெனதுறவே
மன்அரு நெறியில் மன்னிய அறிவே வல்லபைக் கணேசமா மணியே. 8

2706 துதிபெரும் காசி நகரிடத் தனந்தம் தூயநல் உருவுகொண்டாங்கண்
விதிபெறும் மனைகள் தொறும் விருந்தினனாய் மேவிய கருணையை மறவேன்
நதிபெறும் சடிலப் பவளநற் குன்றே நான்மறை நாடரு நலமே
மதிபெறும் உளத்தில் பதிபெறும் சிவமே வல்லபைக் கணேசமா மணியே. 9

2707 தடக்கைமா முகமும் முக்கணும் பவளச் சடிலமும் சதுர்ப்புயங் களும்கை
இடக்கை அங்குசமும் பாசமும் பதமும் இறைப்பொழு தேனும்யான் மறவேன்
விடக்களம் உடைய வித்தகப் பெருமான் மிகமகிழ்ந்திட அருட்பேறே
மடக்கொடி நங்கை மங்கை நாயகி எம் வல்லபைக் கணேசமா மணியே. 10

2708 பெருவயல் ஆறு முகன்நகல் அமர்ந்துன் பெருமைகள் பேசிடத் தினமும்
திருவளர் மேன்மைத் திறமுறச் சூழும் திருவருட் பெருமையை மறவேன்
மருவளர் தெய்வக் கற்பக மலரே மனமொழி கடந்தவான் பொருளே
வருமலை வல்லிக் கொருமுதற் பேறே வல்லபைக் கணேசமா மணியே. 11

திருச்சிற்றம்பலம்

1. தளிர்பட – தொ. வே. 2. கடற்று – தொ. வே.

3. கணேசத் திருஅருள் மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2709 திருவும் கல்வியும் சீரும் சிறப்பும் உன்திருவடிப்புகழ் பாடுந் திறமும்நல்
உருவும் சீலமும் ஊக்கமும் தாழ்வுறா உணர்வும் தந்தென துள்ளத்த மர்ந்தவா
குருவும் தெய்வமும் ஆகி அன்பாளர் தம் குறை தவிர்க்கும் குணப்பெருங்குன்றமே
வெருவும் சிந்தை விலகக் கஜானனம் விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 1

2710 சீதநாள் மலர்ச் செல்வனும் மாமலர்ச் செல்வி மார்பகச் செல்வனும் காண்கிலாப்
பாதம் நாடொறும் பற்றறப் பற்றுவோர் பாதம் நாடப் பரிந்தருள் பாலிப்பாய்
நாதம் நாடிய அந்தத்தில் ஓங்கும்மெய்ஞ் ஞான நாடக நாயக நான்கெனும்
வேதம் நாடிய மெய்ப்பொருளே அருள் விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 2

2711 என்னை வேண்டி எனக்கருள் செய்தியேல் இன்னல் நீங்கும் நல் இன்பமும் ஓங்கும் நின்
தன்னை வேண்டிச் சரண் புகுந்தேன் என்னைத் தாங்கிக் கொள்ளும் சரண் பிறிதில்லைகாண்
அன்னை வேண்டி அழும்மகப் போல்கின்றேன் அறிகிலேன் நின் திருவுளம் ஐயனே
மின்னை வேண்டிய செஞ்சடையாளனே விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 3

2712 நீண்ட மால் அரவாகிக் கிடந்து நின் நேயத் தால்கலி நீங்கியவாறு கேட்
டாண்ட வாநின் அடைக்கலம் ஆயினேன் அடியனேன் பிழை ஆயிர மும்பொறுத்
தீண்ட வாவின் படி கொடுத் தென்னை நீஏன்று கொள்வதற்கெண்ணுதியாவரும்
வேண்டு வாழ்வு தரும் பெருந் தெய்வமே விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 4

2713 தஞ்சம் என்றுனைச் சார்ந்தனன் எந்தை நீதானும் இந்தச்சகத்தவர் போலவே
வஞ்சம் எண்ணி இருந்திடில் என்செய்வேன் வஞ்சம் அற்றமனத்துறை அண்ணலே
பஞ்ச பாதகம் தீர்த்தனை என்று நின் பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 5

2714 கள்ள நெஞ்சகன் ஆயினும் ஐயநான் கள்ளம் இன்றிக் கழறுகின்றேன் எனது
உள்ளம் நின்திரு உள்ளம் அறியுமே ஓதுகின்ற தென் போது கழித்திடேல்
வள்ள மாமலர்ப் பாதப் பெரும்புகழ் வாழ்த்தி நாத்தழும் பேற வழங்குவாய்
வெள்ள வேணிப் பெருந்தகையே அருள் விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 6

2715 மண்ணில் ஆசை மயக்கற வேண்டிய மாதவர்க்கும் மதிப்பரி யாய்உனை
எண்ணி லாச்சிறி யேனையும் முன்நின்றே ஏன்று கொண்டனை இன்று விடுத்தியோ
உண்ணி லாவிய நின்திரு உள்ளமும் உவகை[1] யோடுவர்ப்பும்கொள ஒண்ணுமோ
வெண்ணிலாமுடிப் புண்ணிய மூர்த்தியே விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 7

2716 ஆணிலே அன்றி ஆருயிர்ப் பெண்ணிலே அலியிலே இவ்வடியனைப் போலவே
காணி லேன் ஒருபாவியை இப்பெருங் கள்ள நெஞ்சக்க டையனை [2]மாயையாம்
ஏணிலே இடர் எய்தவி டுத்தியேல் என்செய் கேன் இனி இவ்வுல கத்திலே
வீணி லே உழைப்பேன் அருள் ஐயனே விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 8

1. ஆசை - தொ. வே. பதிப்பு. 2. ஆளையா - தொ. வே. பதிப்பு

2717 வாளிலே விழி மங்கையர் கொங்கையாம் மலையி லேமுக மாயத்திலே அவர்
தோளிலே இடைச் சூழலிலே உந்திச் சுழியிலே நிதம் சுற்றும் என்நெஞ்சம்நின்
தாளிலே நின் தனித்த புகழிலே தங்கும் வண்ணம் தரஉளம் செய்தியோ
வேளிலே அழகான செவ்வேளின் முன் விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 9

2718 நாவினால் உனை நாள்தொறும் பாடுவார் நாடுவார் தமை நண்ணிப்பு கழவும்
ஓவிலாதுனைப் பாடவும் துன்பெலாம் ஓடவும்மகிழ் ஓங்கவும் செய்குவாய்
காவி நேர்களத் தான்மகிழ் ஐங்கரக் கடவுளே நற்கருங்குழி என்னும் ஊர்
மேவி அன்பர்க்கருள் கணநாதனே விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. 10

திருச்சிற்றம்பலம்

4. தனித் திருமாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2719 திங்கள் அம்கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கை வல்லபைக்கு வாய்த்த மகிழ்நநின் மலர்த்தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண் அருட்சிவ களிறே போற்றி
கங்கையை மகிழும் செல்வக் கணேசநின் கழல்கள் போற்றி. 1

கலிவண்ணத் துறை

2720 உலகம் பரவும் பொருள் என்கோ என்உறவென்கோ
கலகம் பெறும்ஐம்புலன்வென் றுயரும் கதிஎன்கோ
திலகம் பெறுநெய் எனநின் றிலகும் சிவம்என்கோ
இலகைங் கரஅம் பரநின் தனைஎன் என்கேனே. 2

2721 அடியார் உள்ளம் தித்தித் தூறும் அமுதென்கோ
கடியார் கொன்றைச் செஞ்சடை யானைக் கன்றென்கோ
பொடியார் மேனிப் புண்ணியர் புகழும் பொருள்என்கோ
அடிகேள் சித்தி விநாயக என்என் றறைகேனே. 3

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

2722 கமலமலர் அயன்நயனன் முதல்அமரர் இதயம் உறு கரிசகல அருள்செய்பசு பதியாம்
நிமலநிறை மதியின் ஒளிர் நிரதிசய பரமசுக நிலையை அருள் புரியும் அதிபதியாம்
விமல பிரணவ வடிவ விகடதட கடகரட விபுலகய முகசுகுண பதியாம்
அமலபர சிவஒளியின் உதயசய விசயசய அபயஎனும் எமதுகண பதியே. 4

கட்டளைக் கலித்துறை

2723 அம்பொன்று செஞ்சடை அப்பரைப் போல்தன் அடியர்தம்துக்
கம்பொன்றும் வண்ணம் கருணைசெய் தாளும் கருதுமினோ
வம்பொன்று பூங்குழல் வல்லபை யோடு வயங்கியவெண்
கொம்பொன்று கொண்டெமை ஆட்கொண் டருளிய குஞ்சரமே. 5

திருச்சிற்றம்பலம்

திருத்தணிகைப் பதிகங்கள்

5. பிரார்த்தனை மாலை

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

2724 சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும்அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் [1]கண்ணுற்றதே. 1

2725 கண்மூன் றுறுசெங் கரும்பின்முத் தேபதம் கண்டிடுவான்
மண்மூன் றுலகும் வழுத்தும் பவள மணிக்குன்றமே
திண்மூன்று நான்கு புயங்கொண் டொளிர்வச் சிரமணியே
வண்மூன் றலர்மலை வாழ்மயில் ஏறிய மாணிக்கமே. 2

2726 மாணித்த ஞான மருந்தேஎன் கண்ணின்உண் மாமணியே
ஆணிப்பொன் னேஎன தாருயி ரேதணி காசலனே
தாணிற்கி லேன்நினைத் தாழாத வஞ்சர் தமதிடம்போய்ப்
பேணித் திரிந்தனன் அந்தோஎன் செய்வன்இப் பேதையனே. 3

2727 அன்னே எனைத்தந்த அப்பாஎன் றேங்கி அலறுகின்றேன்
என்னே இவ் வேழைக் கிரங்காது நீட்டித் திருத்தல்எந்தாய்
பொன்னே சுகுணப் பொருப்பே தணிகைப் பொருப்பமர்ந்த
மன்னே கலப மயில்மேல் அழகிய மாமணியே. 4

2728 மணியே தினைப்புன வல்லியை வேண்டி வளர்மறைவான்
கணியே எனநின்ற கண்ணே என்உள்ளக் களிநறவே
பணியேன் எனினும் எனைவலிந் தாண்டுன் பதந்தரவே
நணியே தணிகைக்கு வாஎன ஓர்மொழி நல்குவையே. 5

2729 நல்காத ஈனர்தம் பாற்சென் றிரந்து நவைப்படுதல்
மல்காத வண்ணம் அருள்செய்கண் டாய்மயில் வாகனனே
பல்காதல் நீக்கிய நல்லோர்க் கருளும் பரஞ்சுடரே
அல்காத வண்மைத் தணிகா சலத்தில் அமர்ந்தவனே. 6

2730 அமரா வதிஇறைக் காருயிர் ஈந்த அருட்குன்றமே
சமரா புரிக்கர சேதணி காசலத் தற்பரனே
குமரா பரம குருவே குகாஎனக் கூவிநிற்பேன்
எமராஜன் வந்திடுங் கால்ஜய னேஎனை ஏன்றுகொள்ளே. 7

1. கண்ணுற்ற தென்பது ஒருமை பன்மை மயக்கம். தொ. வே.

2731 கொள்உண்ட வஞ்சர் தம் கூட்டுண்டு வாழ்க்கையில் குட்டுண்டுமேல்
துள்உண்ட நோயினில் கூடுண்டு மங்கையர் தோய்வெனும்ஓர்
கள்உண்ட நாய்க்குன் கருணைஉண் டோநற் கடல்அமுதத்
தெள்உண்ட தேவர் புகழ்த்தணி காசலச் சிற்பரனே. 8

2732 சிற்பகல் மேவும்இத் தேகத்தை ஓம்பித் திருஅனையார்
தற்பக [1]மேவிழைந் தாழ்ந்தேன் தணிகை தனில்அமர்ந்த
கற்பக மேநின் கழல்கரு தேன்இக் கடைப்படும்என்
பொற்பகம் மேவிய நின்அருள் என்என்று போற்றுவதே. 9

2733 போற்றேன் எனினும் பொறுத்திடல் வேண்டும் புவிநடையாம்
சேற்றே விழுந்து தியங்குகின் றேனைச் சிறிதும்இனி
ஆற்றேன் எனதர சேஅமு தேஎன் அருட்செல்வமே
மேற்றேன் பெருகு பொழில்தணி காசல வேலவனே. 10

2734 வேல்கொண்ட கையும் விறல்கொண்ட தோளும் விளங்குமயில்
மேல்கொண்ட வீறும் மலர்முகம் ஆறும் விரைக்கமலக்
கால்கொண்ட வீரக் கழலும்கண் டால்அன்றிக் காமன்எய்யும்
கோல்கொண்ட வன்மை அறுமோ தணிகைக் குருபரனே. 11

2735 குருவே அயன்அரி ஆதியர் போற்றக் குறைதவிர்ப்பான்
வருவேல் பிடித்து மகிழ்வள்ள லேகுண மாமலையே
தருவே தணிகைத் தயாநிதி யேதுன்பச் சாகரமாம்
கருவோர் அறுத்திக் கடையனைக் காக்கக் கடன்உனக்கே. 12

2736 உனக்கே விழைவுகொண் டோலமிட் டோங்கி உலறுகின்றேன்
எனக்கே அருள் இத் தமியேன் பிழைஉளத் தெண்ணியிடேல்
புனக்கேழ் மணிவல்லி யைப்புணர்ந் தாண்டருள் புண்ணியனே
மனக்கேத மாற்றும் தணிகா சலத்தமர் வானவனே. 13

2737 வானோர் குடிகளை வாழ்வித்த தெய்வ மணிச்சுடரே
நானோர் எளியன்என் துன்பறுத் தாள்என நண்ணிநின்றேன்
ஏனோநின் நெஞ்சம் இரங்காத வண்ணம் இருங்கணிப்பூந்
தேனோ டருவி பயிலும் தணிகைச் சிவகுருவே. 14

2738 கையாத துன்பக் கடல்மூழ்கி நெஞ்சம் கலங்கிஎன்றன்
ஐயாநின் பொன்அடிக் கோலமிட் டேன்என்னை ஆண்டுகொளாய்
மையார் தடங்கண் மலைமகள் கண்டு மகிழ்ச்செல்வமே
செய்யார் தணிகை மலைஅர சேயயிற் செங்கையனே. 15

2739 செங்கைஅம் காந்தள் அனையமின் னார்தம் திறத்துழன்றே
வெங்கயம் உண்ட விளவாயி னேன்விறல் வேலினைஓர்
அங்கையில் ஏந்திய ஐயா குறவர் அரிதில்பெற்ற
மங்கை மகிழும் தணிகேச னேஅருள் வந்தெனக்கே. 16

1. தன் – அசைநிலை. தொ. வே. பாடல் – 50

2740 கேளாது போல்இருக் கின்றனை ஏழைஇக் கீழ்நடையில்
வாளா இடர்கொண் டலறிடும் ஓலத்தை மாமருந்தே
தோளா மணிச்சுட ரேதணி காசலத் தூய்ப்பொருளே
நாளாயின் என்செய்கு வேன் இறப் பாய நவைவருமே. 17

2741 நவையே தருவஞ்ச நெஞ்சகம் மாயவும் நான்உன் அன்பர்
அவையே அணுகவும் ஆனந்த வாரியில் ஆடிடவும்
சுவையே அமுதன்ன நின்திரு நாமம் துதிக்கவும்ஆம்
இவையேஎன் எண்ணம் தணிகா சலத்துள் இருப்பவனே. 18

2742 இருப்பாய மாய மனத்தால் வருந்தி இளைத்துநின்றேன்
பொருப்பாய கன்மப் புதுவாழ்வில் ஆழ்ந்தது போதும்இன்றே
கருப்பாழ் செயும்உன் கழல்அடிக் கேஇக் கடையவனைத்
திருப்பாய் எனில்என்செய் கேன்தணி காசலத் தெள்ளமுதே. 19

2743 தெள்அகத் தோங்கிய செஞ்சுட ரேசிவ தேசிகனே
கள்அகத் தேமலர்க் காஆர் தணிகைஎங் கண்மணியே
எள்அகத் தேஉழன் றென்நின் றலைத்தெழுந் திங்கும்அங்கும்
துள்அகத் தேன்சிரம் சேரும்கொ லோநின் துணைஅடியே. 20

2744 அடியேன் எனச்சொல்வ தல்லால்நின் தாள்அடைந் தாரைக்கண்டே
துடியேன் அருண கிரிபாடும் நின்அருள் தோய்புகழைப்
படியேன் பதைத்துரு கேன்பணி யேன்மனப் பந்தம்எலாம்
கடியேன் தணிகையைக் காணேன்என் செய்வேன்எம் காதலனே. 21

2745 தலனே அடியர் தனிமன மாம்புகழ் சார்தணிகா
சலனே அயன்அரி ஆதியர் வாழ்ந்திடத் தாங்கயில்வேல்
வலனே நின் பொன் அருள் வாரியின் மூழ்க மனோலயம்வாய்ந்
திலனேல் சனன மரணம்என் னும்கடற் கென்செய்வனே. 22

2746 என்செய்கை என்செய்கை எந்தாய்நின் பொன்அடிக் கேஅலங்கல்
வன்செய்கை நீங்க மகிழ்ந்தணி யேன்துதி வாய்உரைக்க
மென்செய்கை கூப்ப விழிநீர் துளித்திட மெய்சிலிர்க்கத்
தன்செய்கை என்பதற் றேதணி காசலம் சார்ந்திலனே. 23

2747 சாரும் தணிகையில் சார்ந்தோய்நின் தாமரைத் தாள்துணையைச்
சேரும் தொழும்பர் திருப்பதம் அன்றிஇச் சிற்றடியேன்
ஊரும் தனமும் உறவும் புகழும் உரைமடவார்
வாருந் தணிமுலைப் போகமும் வேண்டிலன் மண்விண்ணிலே. 24

2748 மண்நீர் அனல்வளி வான்ஆகி நின்றருள் வத்துஎன்றேன்
தெண்நீர்மை யால்புகழ் மால்அய னேமுதல் தேவர்கள் தம்
கண்நீர் துடைத்தருள் கற்பக மேஉனைக் கண்டுகொண்டேன்
தண்நீர் பொழிற்கண் மதிவந் துலாவும் தணிகையிலே.

2749 தணியாத துன்பத் தடங்கடல் நீங்கநின் தன்மலர்த்தாள்
பணியாத பாவிக் கருளும்உண் டோபசு பாசம் அற்றோர்க்
கணியாக நின்ற அருட்செல்வ மேதணி காசலனே
அணிஆ தவன்முத லாம்அட்ட மூர்த்தம் அடைந்தவனே. 26

2750 அடையாத வஞ்சகர் பால்சென் றிரந்திங் கலைந்தலைந்தே
கடையான நாய்க்குன் கருணைஉண் டோதணி கைக்குள்நின்றே
உடையாத நல்நெஞ்சர்க் குண்மையைக் காண்பிக்கும் உத்தமனே
படையாத தேவர் சிறைமீட் டளித்தருள் பண்ணவனே. 27

2751 பண்ணவ னேநின் பதமலர் ஏத்தும் பயன்உடையோர்
கண்ணவ னேதணி காசல னேஅயில் கையவனே
விண்ணவர் ஏத்திய மேலவ னேமயல் மேவுமனம்
புண்ணவ னேனையும் சேர்ந்தாய்என் னேஉன்றன் பொன்அருளே. 28

2752 பொன்ஆர் புயத்தனும் பூஉடை யோனும் புகழ்மணியே
என்ஆவி யின் துணை யேதணி காசலத் தேஅமர்ந்த
மன்னாநின் பொன்அடி வாழ்த்தாது வீணில் வருந்துறுவேன்
இன்னா இயற்றும் இயமன்வந் தால்அவற் கென்சொல்வனே. 29

2753 சொல்லார் மலர்புனை அன்பகத் தோர்க்கருள் சொல்லும்எல்லாம்
வல்லாய்என் றேத்த அறிந்தேன் இனிஎன்றன் வல்வினைகள்
எல்லாம் விடைகொண் டிரியும்என் மேல்இய மன்சினமும்
செல்லாது காண்ஐய னேதணி காசலச் சீர் அரைசே. 30

திருச்சிற்றம்பலம்

6. எண்ணப்பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2754 அணிகொள் வேல்உடை அண்ணலே நின்திரு அடிகளை அன்போடும்
பணிகி லேன்அகம் உருகிநின் றாடிலேன் பாடிலேன் மனமாயைத்
தணிகி லேன்திருத் தணிகையை நினைகிலேன் சாமிநின் வழிபோகத்
துணிகி லேன் இருந் தென்செய்தேன் பாவியேன் துன்பமும் எஞ்சேனே. 1

2755 சேல்பி டித்தவன் தந்தைஆ தியர்தொழும் தெய்வமே சிவப்பேறே
மால்பி டித்தவர் அறியொணாத் தணிகைமா மலை அமர்ந் திடுவாழ்வே
வேல்பி டித்தருள் வள்ளலே யான்சதுர் வேதமும் காணாநின்
கால்பி டிக்கவும் கருணைநீ செய்யவும் கண்டுகண் களிப்பேனோ. 2

2756 களித்து நின்திருக் கழலிணை ஏழையேன் காண்பனோ அலதன்பை
ஒளித்து வன்துயர் உழப்பனோ இன்னதென் றுணர்ந்திலேன் அருட்போதம்
தெளித்து நின்றிடும் தேசிக வடிவமே தேவர்கள் பணிதேவே
தளிர்த்த தண்பொழில் தணிகையில் வளர்சிவ தாருவே மயிலோனே.

2757 மயிலின் மீதுவந் தருள் தரும் நின் திரு வரவினுக் கெதிர்பார்க்கும்
செயலி னேன்கருத் தெவ்வணம் முடியுமோ தெரிகிலேன் என்செய்கேன்
அயிலின் மாமுதல் தடிந்திடும் ஐயனே ஆறுமா முகத்தேவே
கயிலை நேர்திருத் தணிகைஅம் பதிதனில் கந்தன்என் றிருப்போனே. 4

2758 இருப்பு நெஞ்சகக் கொடியனேன் பிழைதனை எண்ணுறேல் இனிவஞ்சக்
கருப்பு காவணம் காத்தருள் ஐயனே கருணைஅம் கடலேஎன்
விருப்புள் ஊறிநின் றோங்கிய அமுதமே வேல்உடை எம்மானே
தருப்பு காஇனன் விலகுறும் தணிகைவாழ் சாந்தசற் குணக்குன்றே. 5

2759 குன்று நேர்பிணித் துயரினால் வருந்திநின் குரைகழல் கருதாத
துன்று வஞ்சகக் கள்ளனேன் நெஞ்சகத் துயர்அறுத் தருள்செய்வான்
இன்று மாமயில் மீதினில் ஏறிஇவ் வேழைமுன் வருவாயேல்
நன்று நன்றதற் கென்சொல்வார் தணிகைவாழ் நாதநின் அடியாரே. 6

2760 யாரை யுந்துணை கொண்டிலேன் நின்அடி இணைதுணை அல்லால்நின்
பேரை உன்னிவாழ்ந் திடும்படி செய்வையோ பேதுறச் செய்வாயோ
பாரை யும்உயிர்ப் பரப்பையும் படைத்தருள் பகவனே உலகேத்தும்
சீரை உற்றிடும் தணிகைஅம் கடவுள்நின் திருவுளம் அறியேனே. 7

2761 உளங்கொள் வஞ்சக நெஞ்சர்தம் இடம்இடர் உழந்தகம் உலைவுற்றேன்
வளங்கொள் நின்பத மலர்களை நாள்தொறும் வாழ்த்திலேன் என்செய்கேன்
குளங்கொள் கண்ணனும் கண்ணனும் பிரமனும் குறிக்கரும் பெருவாழ்வே
தளங்கொள் பொய்கைசூழ் தணிகைஅம் பதியில்வாழ் தனிப்பெரும் புகழ்த்தேவே. 8

2762 தேவர் நாயகன் ஆகியே என்மனச் சிலைதனில் அமர்ந்தோனே
மூவர் நாயகன் எனமறை வாழ்த்திடும் முத்தியின் வித்தேஇங்
கேவ ராயினும் நின்திருத் தணிகைசென் றிறைஞ்சிடில் அவரேஎன்
பாவ நாசம்செய் தென்றனை ஆட்கொளும் பரஞ்சுடர் கண்டாயே. 9

2763 கண்ட னேகவா னவர்தொழும் நின்திருக் கழல்இணை தனக்காசை
கொண்ட னேகமாய்த் தெண்டன்இட் டானந்தக் கூத்தினை உகந்தாடித்
தொண்ட னேனும்நின் அடியரில் செறிவனோ துயர்உழந் தலைவேனோ
அண்ட னேதிருத் தணிகைவாழ் அண்ணலே அணிகொள்வேல் கரத்தோனே. 10

திருச்சிற்றம்பலம்

7. செழுஞ்சுடர் மாலை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2764 ஊணே உடையே பொருளேஎன் றுருகி மனது தடுமாறி
வீணே துயரத் தழுந்துகின்றேன் வேறோர் துணைநின் அடிஅன்றிக்
காணேன் அமுதே பெருங்கருணைக் கடலே கனியே கரும்பேநல்
சேணேர் தணிகை மலைமருந்தே தேனே ஞானச் செழுஞ்சுடரே. 1

2765 பாரும் விசும்பும் அறியஎனைப் பயந்த தாயும் தந்தையும் நீ
ஓரும் போதிங் கெனில்எளியேன் ஓயாத் துயருற் றிடல்நன்றோ
யாரும் காண உனைவாதுக் கிழுப்பேன் அன்றி என்செய்கேன்
சேரும் தணிகை மலைமருந்தே தேனே ஞானச் செழுஞ்சுடரே. 2

2766 கஞ்சன் துதிக்கும் பொருளேஎன் கண்ணே நின்னைக் கருதாத
வஞ்சர் கொடிய முகம்பார்க்க மாட்டேன் இனிஎன் வருத்தம்அறுத்
தஞ்சல் எனவந் தருளாயேல் ஆற்றேன் கண்டாய் அடியேனே
செஞ்சந் தனம்சேர் தணிகைமலைத் தேனே ஞானச் செழுஞ்சுடரே. 3

2767 மின்நேர் உலக நடை அதனால் மேவும் துயருக் காளாகிக்
கல்நேர் மனத்தேன் நினைமறந்தென் கண்டேன் கண்டாய் கற்பகமே
பொன்னே கடவுள் மாமணியே போதப் பொருளே பூரணமே
தென்னேர் தணிகை மலைஅரசே தேவே ஞானச் செழுஞ்சுடரே. 4

2768 வளைத்தே வருத்தும் பெருந்துயரால் வாடிச் சவலை மகவாகி
இளைத்தேன் தேற்றும் துணைகாணேன் என்செய் துய்கேன் எந்தாயே
விளைத்தேன் ஒழுகும் மலர்த்தருவே விண்ணே விழிக்கு விருந்தேசீர்
திளைத்தோர் பரவும் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 5

2769 அடுத்தே வருத்தும் துயர்க்கடலில் அறியா தந்தோ விழுந்திட்டேன்
எடுத்தே விடுவார் தமைக்காணேன் எந்தாய் எளியேன் என்செய்கேன்
கடுத்தேர் கண்டத் தெம்மான் தன் கண்ணே தருமக் கடலேஎன்
செடித்தீர் தணிகை மலைப்பொருளே தேனே ஞானச் செழுஞ்சுடரே. 6

2770 உண்டால் குறையும் எனப்பசிக்கும் உலுத்தர் அசுத்த முகத்தைஎதிர்
கண்டால் நடுங்கி ஒதுங்காது கடைகாத் திரந்து கழிக்கின்றேன்
கொண்டார் அடியர் நின்அருளை யானோ ஒருவன் குறைபட்டேன்
திண்டார் அணிவேல் தணிகைமலைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 7

2771 வேட்டேன் நினது திருஅருளை வினையேன் இனிஇத் துயர்பொறுக்க
மாட்டேன் மணியே அன்னேஎன் மன்னே வாழ்க்கை மாட்டுமனம்
நாட்டேன் அயன்மால் எதிர்வரினும் நயக்கேன் எனக்கு நல்காயோ 8
சேட்டேன் அலரும் பொழில்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே.

2772 கல்லா நாயேன் எனினும்எனைக் காக்கும் தாய்நீ என்றுலகம்
எல்லாம் அறியும் ஆதலினால் எந்தாய் அருளா திருத்திஎனில்
பொல்லாப் பழிவந் தடையும்உனக் கரசே இனியான் புகல்வதென்னே
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 9

2773 அன்னே அப்பா என [1]நின்அருட் கார்வம் கூர்ந்திங் கலைகின்றேன்
என்னே சற்றும் இரங்கிலைநீ என்நெஞ் சோநின் நல்நெஞ்சம்
மன்னே ஒளிகொள் மாணிக்க மணியே குணப்பொன் மலையேநல்
தென்னேர் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 10

2774 நடைஏய் துயரால் மெலிந்துநினை நாடா துழலும் நான்நாயில்
கடையேன் எனினும் காத்தல்என்றன் கண்ணே நினது கடன் அன்றோ
தடையேன் வருவாய் வந்துன்அருள் தருவாய் இதுவே சமயம்காண்
செடிதீர்த் தருளும் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே. 11

திருச்சிற்றம்பலம்

8. குறைஇரந்த பத்து

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2775 சீர்பூத்த அருட்கடலே கரும்பே தேனே
செம்பாகே எனதுகுலத் தெய்வ மேநல்
கூர்பூத்த வேல்மலர்க்கை அரசே சாந்த
குணக்குன்றே தணிகைமலைக் கோவே ஞானப்
பேர்பூத்த நின்புகழைக் கருதி ஏழை
பிழைக்கஅருள் செய்வாயோ பிழையை நோக்கிப்
பார்பூத்த பவத்தில்உற விடில்என் செய்கேன்
பாவியேன் அந்தோவன் பயம்தீ ரேனே. 1

2776 தீராத துயர்க்கடலில் அழுந்தி நாளும்
தியங்கிஅழு தேங்கும்இந்தச் சேய்க்கு நீகண்
பாராத செயல்என்னே எந்தாய் எந்தாய்
பாவிஎன விட்டனையோ பன்னா ளாக
ஏராய அருள் தருவாய் என்றே ஏமாந்
திருந்தேனே என்செய்கேன் யாரும் இல்லேன்
சீராருந் தணிகைவரை அமுதே ஆதி
தெய்வமே நின்கருத்தைத் தெளிந்தி லேனே. 2

2777 தெளிக்குமறைப் பொருளேஎன் அன்பே என்றன்
செல்வமே திருத்தணிகைத் தேவே அன்பர்
களிக்கும்மறைக் கருத்தேமெய்ஞ் ஞான நீதிக்
கடவுளே நின்அருளைக் காணேன் இன்னும்

1. நின் அருட்கார்வம். தொ.வே., பொ.சு., பி. இரா., ச.மு.க., சென்னை பதிப்புகள். பாடல் 91

சுளிக்கும்மிடித் துயரும்யமன் கயிறும்மீனத்
தொடர்பும்மலத் தடர்பும்மனச் சோர்வும் அந்தோ
அளிக்கும்எனை என்செயுமோ அறியேன் நின்றன்
அடித்துணையே உறுதுணைமற் றன்றி உண்டோ. 3

2778 உண்டாய உலகுயிர்கள் தம்மைக் காக்க
ஒளித்திருந்தவ் வுயிர்வினைகள் ஒருங்கே நாளும்
கண்டாயே இவ்வேழை கலங்கும் தன்மை
காணாயோ பன்னிரண்டு கண்கள் கொண்டோய்
தண்டாத நின் அருட்குத் தகுமோ விட்டால்
தருமமோ தணிகைவரைத் தலத்தின் வாழ்வே
விண்டாதி தேவர்தொழும் முதலே முத்தி
வித்தேசொற் பதம்கடந்த வேற்கை யானே. 4

2779 கையாத அன்புடையார் அங்கை மேவும்
கனியேஎன் உயிரேஎன் கண்ணே என்றும்
பொய்யாத பூரணமே தணிகை ஞானப்
பொருளே நின் பொன் அருள்இப் போதியான் பெற்றால்
உய்யாத குறைஉண்டோ துயர்சொல் லாமல்
ஓடுமே யமன்பாசம் ஓய்ந்து போம்என்
ஐயாநின் அடியரொடு வாழ்கு வேன்இங்
கார்உனைஅல் லால்எனக்கின் றருள்செய் வாயே. 5

2780 வாய்க்கும்உன தருள்என்றே அந்தோ நாளும்
வழிபார்த்திங் கிளைக்கின்றேன் வருத்தும் பொல்லா
நோய்க்கும்உறு துயர்க்கும்இலக் கானேன் மாழ்கி
நொந்தேன்நின் அருள்காணேன் நுவலும் பாசத்
தேய்க்கும்அவன் வரில்அவனுக் கியாது சொல்வேன்
என்செய்கேன் துணைஅறியா ஏழை யேனே
தூய்க்குமர குருவேதென் தணிகை மேவும்
ஜோதியே இரங்காயோ தொழும்பா ளர்க்கே. 6

2781 ஆளாயோ துயர்அளக்கர் வீழ்ந்து மாழ்கி
ஐயாவோ எனும் முறையை அந்தோ சற்றும்
கேளாயோ என்செய்கேன் எந்தாய் அன்பர்
கிளத்தும்உன தருள்எனக்குக் கிடையா தாகில்
நாளாய்ஓர் நடுவன்வரில் என்செய் வானோ
நாயினேன் என்சொல்வேன் நாணு வேனோ
தோளாஓர் மணியேதென் தணிகை மேவும்
சுடரேஎன் அறிவேசிற் சுகங்கொள் வாழ்வே. 7

2782 வாழ்வேநற் பொருளேநல் மருந்தே ஞான
வாரிதியே தணிகைமலை வள்ள லேயான்
பாழ்வேலை எனுங்கொடிய துயருள் மாழ்கிப்
பதைத்தையா முறையோ நின் பதத்துக் கென்றே
தாழ்வேன்ஈ தறிந்திலையே நாயேன் மட்டும்
தயவிலையோ நான்பாவி தானோ பார்க்குள்
ஆழ்வேன்என் றயல்விட்டால் நீதி யேயோ
அச்சோ இங் கென்செய்கேன் அண்ணால் அண்ணால். 8

2783 அண்ணாவே நின் அடியை அன்றி வேறோர்
ஆதரவிங் கறியேன்நெஞ் சழிந்து துன்பால்
புண்ணாவேன் தன்னைஇன்னும் வஞ்சர் பாற்போய்ப்
புலந்துமுக வாட்டம்உடன் புலம்பி நிற்கப்
பண்ணாதே யாவன்இவன் பாவிக் குள்ளும்
படுபாவி என்றென்னைப் பரிந்து தள்ள
எண்ணாதே யான் மிகவும் ஏழை கண்டாய்
இசைக்கரிய தணிகையில்வீற் றிருக்கும் கோவே. 9

2784 கோவேநல் தணிகைவரை அமர்ந்த ஞான
குலமணியே குகனேசற் குருவே யார்க்கும்
தேவேஎன் விண்ணப்பம் ஒன்று கேண்மோ
சிந்தைதனில் நினைக்கஅருள் செய்வாய் நாளும்
பூவேயும் அயன் திருமால் புலவர் முற்றும்
போற்றும்எழில் புரந்தரன்எப் புவியும் ஓங்கச்
சேவேறும் பெருமான் இங் கிவர்கள் வாழ்த்தல்
செய்துவக்கும் நின் இரண்டு திருத்தாள் சீரே. 10

திருச்சிற்றம்பலம்

9. ஜீவசாட்சி மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2785 பண்ஏறும் மொழிஅடியர் பரவி வாழ்த்தும்
பாதமலர் அழகினை இப் பாவி பார்க்கில்
கண்ஏறு படும்என்றோ கனவி லேனும்
காட்டென்றால் காட்டுகிலாய் கருணை ஈதோ
விண்ஏறும் அரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கேஎன் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ஏறு பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 1

2786 பண்டுமன துவந்துகுணம் சிறிதும் இல்லாப்
பாவியேன் தனைஆண்டாய் பரிவால் இன்று
கொண்டுகுலம் பேசுதல்போல் எளியேன் குற்றம்
குறித்துவிடில் என்செய்கேன் கொடிய னேனைக்

கண்டுதிருத் தொண்டர்நகை செய்வார் எந்தாய்
கைவிடேல் உன்ஆணை காண்முக் காலும்
தண்துளவன் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 2

2787 புன்புலைய வஞ்சகர்பால் சென்று வீணே
புகழ்ந்துமனம் அயர்ந்துறுகண் பொருந்திப் பொய்யாம்
வன்புலைய வயிறோம்பிப் பிறவி நோய்க்கு
மருந்தாய நின்அடியை மறந்தேன் அந்தோ
இன்புலைய உயிர்கொள்வான் வரில்என் பால்அவ்
வியமனுக்கிங் கென்சொல்கேன் என்செய் கேனே
தன்புகழ்காண் அருந்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 3

2788 பெருங்களப முலைமடவார் என்னும் பொல்லாப்
பேய்க்கோட்பட் டாடுகின்ற பித்த னேனுக்
கிரும்புலவர்க் கரியதிரு அருள்ஈ வாயேல்
என்[1]சொல்வார் அடியர்அதற் கெந்தாய் எந்தாய்
கரும்பின்இழிந் தொழுகும்அருள் சுவையே முக்கண்
கனிகனிந்த தேனேஎன் கண்ணே ஞானம்
தரும்புனிதர் புகழ்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 4

2789 கல்அளவாம் நெஞ்சம்என வஞ்ச மாதர்
கண்மாயம் எனும்கயிற்றால் கட்டு வித்துச்
சொல்அளவாத் துன்பம்எனும் கடலில் வீழ்த்தச்
சோர்கின்றேன் அந்தோநல் துணைஒன் றில்லேன்
மல்அளவாய்ப் பவம்மாய்க்கும் மருந்தாம் உன்றன்
மலர்ப்பாதப் புணைதந்தால் மயங்கேன் எந்தாய்
[2]சல்லம் உலாத் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 5

2790 அன்னைமுத லாம்பந்தத் தழுங்கி நாளும்
அலைந்துவயி றோம்பிமனம் அயர்ந்து நாயேன்
முன்னைவினை யாற்படும்பா டெல்லாம் சொல்லி
முடியேன்செய் பிழைகருதி முனியேல் ஐயா
பொன்னைநிகர் அருட்குன்றே ஒன்றே முக்கட்
பூமணமே நறவேநற் புலவர் போற்றத்
தன்னைநிகர் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 6

1. சொல்வார். தொ. வே., முதற்பதிப்பு. பி. இரா., ச.மு.க. பதிப்புகள். பாடல் 04
2. சல்லம் – பன்றிக்கோடு. தொ. வே. பாடல் 05

2791 பன்னரும்வன் துயரால்நெஞ் சழிந்து நாளும்
பதைத்துருகி நின்அருட்பால் பருகக் கிட்டா
துன்னரும்பொய் வாழ்க்கைஎனும் கானத் திந்த
ஊர்நகைக்கப் பாவிஅழல் உணர்ந்தி லாயோ
என்னருமை அப்பாஎன் ஐயா என்றன்
இன்னுயிர்க்குத் தலைவா இங் கெவர்க்கும் தேவா
தன்னியல்சீர் வளர் தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 7

2792 கோவேநின் பதம்துதியா வஞ்ச நெஞ்சக்
கொடியோர்பால் மனவருத்தம் கொண்டாழ் கின்றேன்
சாவேனும் அல்லன்நின்பொன் அருளைக் காணேன்
தமியேனை உய்யும்வண்ணம் தருவ தென்றோ
சேவேறும் சிவபெருமான் அரிதின் ஈன்ற
செல்வமே அருள்ஞானத் தேனே அன்பர்
தாவேதம் தெறும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 8

2793 ஓயாது வரும்மிடியான் வஞ்சர் பால்சென்
றுளங்கலங்கி நாணிஇரந் துழன்றெந் நாளும்
மாயாத துயரடைந்து வருந்தித் தெய்வ
மருந்தாய நின்அடியை மறந்திட் டேனே
தாயாகித் தந்தையாய்த் தமராய் ஞான
சற்குருவாய்த் தேவாகித் தழைத்த ஒன்றே
சாயாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 9

2794 மின்னாளும் இடைமடவார் அல்கு லாய
வெங்குழியில் வீழ்ந்தாழ்ந்து மெலிந்தேன் அல்லால்
எந்நாளும் உனைப்போற்றி அறியேன் என்னே
ஏழைமதி கொண்டேன் இங் கென்செய் கேனே
அன்னாய்என் அப்பாஎன் றரற்றும் அன்பர்க்
காரமுதே அருட்கடலே அமரர் கோவே
தன்னார்வத் தமர்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 10

2795 வன்சொலினார் இடைஅடைந்து மாழ்கும் இந்த
மாபாவி யேன்குறையை வகுத்து நாளும்
என்சொலினும் இரங்காமல் அந்தோ வாளா
இருக்கின்றாய் என்னேநின் இரக்கம் எந்தாய்
இன்சொல்அடி யவர்மகிழும் இன்ப மேஉள்
இருள்அகற்றும் செழுஞ்சுடரே எவர்க்கும் கோவே 11
தன்சொல்வளர் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.

2796 மீளாத வன்துயர்கொண் டீனர் தம்மால்
மெலிந்துநினை அழைத்தலறி விம்மா நின்றேன்
கேளாத கேள்விஎலாம் கேட்பிப் பாய்நீ
கேட்கிலையோ என்அளவில் கேள்வி இன்றோ
மாளாத தொண்டர்அக இருளை நீக்கும்
மதியேசிற் சுகஞான மழைபெய் விண்ணே
தாளாளர் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 12

2797 மண்ணினால் மங்கையரால் பொருளால் அந்தோ
வருந்திமனம் மயங்கிமிக வாடி நின்றேன்
புண்ணியா நின்அருளை இன்னும் காணேன்
பொறுத்துமுடி யேன்துயரம் புகல்வ தென்னே
எண்ணினால் அளப்பரிய பெரிய மோன
இன்பமே அன்பர் தம திதயத் தோங்கும்
தண்ணினால் பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 13

2798 வஞ்சகராம் கானின்இடை அடைந்தே நெஞ்சம்
வருந்திஉறு கண்வெயிலால் மாழாந் தந்தோ
தஞ்சம்என்பார் இன்றிஒரு பாவி நானே
தனித்தருள்நீர்த் தாகம்உற்றேன் தயைசெய் வாயோ
செஞ்சொல்மறை முடிவிளக்கே உண்மை ஞானத்
தேறலே முத்தொழில்செய் தேவர் தேவே
சஞ்சலம்நீத் தருள் தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 14

2799 வாழாத வண்ணம்எனைக் கெடுக்கும் பொல்லா
வஞ்சகநெஞ் சால்உலகில் மாழாந் தந்தோ
பாழான மடந்தையர்பால் சிந்தை வைக்கும்
பாவியேன் முகம்பார்க்கப் படுவ தேயோ
ஏழாய வன்பவத்தை நீக்கும் ஞான
இன்பமே என்அரசே இறையே சற்றும்
தாழாத புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 15

2800 உளந்தளர விழிச்சுருக்கும் வஞ்சர் பால்சென்
றுத்தமநின் அடியைமறந் தோயா வெய்யில்
இளந்தளிர்போல் நலிந்திரந்திங் குழலும் இந்த
ஏழைமுகம் பார்த்திரங்காய் என்னே என்னே
வளந்தருசற் குணமலையே முக்கட் ஜோதி 16
மணியின் இருந் தொளிர்ஒளியே மயிலூர் மன்னே
தளந்தரும்பூம் பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.

2801 கல்லாத வஞ்சகர்பால் சென்று வீணாள்
கழித்துநிற்கும் கடையன்இவன் கருணை இல்லாப்
பொல்லாத பாவிஎன எண்ணி என்னைப்
புறம்போக்கில் ஐயாயான் புரிவ தென்னே
எல்லாம்செய் வல்லவனே தேவர் யார்க்கும்
இறைவனே மயில்ஏறும் எம்பி ரானே
சல்லாப வளத்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 17

2802 கன்னேய நெஞ்சகர்மாட் டணுகி ஐயோ
கரைந்துருகி எந்தாய்நின் கருணை காணா
தென்னேஎன் றேங்கிஅழும் பாவி யேனுக்கு
இருக்கஇடம் இலையோ நின் இதயங் கல்லோ
பொன்னேஎன் உயிர்க்குயிராய்ப் பொருந்து ஞான
பூரணமே புண்ணியமே புனித வைப்பே
தன்னேரில் தென் தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 18

2803 பாவவினைக் கோர் இடமாம் மடவார் தங்கள்
பாழ்ங்குழிக்கண் வீழமனம் பற்றி அந்தோ
மாவல்வினை யுடன்மெலிந்திங் குழல்கின் றேன்நின்
மலர்அடியைப் போற்றேன்என் மதிதான் என்னே
தேவர்தொழும் பொருளேஎன் குலத்துக் கெல்லாம்
தெய்வமே அடியர்உளம் செழிக்கும் தேனே
தாவகன்றோர் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 19

2804 கன்னியர் தம் மார்பிடங்கொண் டலைக்கும் புன்சீழ்க்
கட்டிகளைக் கருதிமனம் கலங்கி வீணே
அன்னியனாய் அலைகின்றேன் மயக்கம் நீக்கி
அடிமைகொளல் ஆகாதோ அருட்பொற் குன்றே
சென்னிமிசைக் கங்கைவைத்தோன் அரிதில் பெற்ற
செல்வமே என்புருக்கும் தேனே எங்கும்
தன்னியல்கொண் டுறும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 20

2805 உள்ளமனக் குரங்காட்டித் திரியும் என்றன்
உளவறிந்தோ ஐயாநீ உன்னைப் போற்றார்
கள்ளமனக் குரங்குகளை ஆட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன் கண்டாய்
தெள்ளமுதப் பெருங்கடலே தேனே ஞானத் 21
தெளிவேஎன் தெய்வமே தேவர் கோவே
தள்ளரிய புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.

2806 வந்தாள்வாய் ஐயாவோ வஞ்சர் தம்பால்
வருந்துகின்றேன் என்றலறும் மாற்றம் கேட்டும்
எந்தாய்நீ இரங்காமல் இருக்கின் றாயால்
என்மனம்போல் நின்மனமும் இருந்த தேயோ
கந்தாஎன் றுரைப்பவர் தம் கருத்துள் ஊறும்
கனிரசமே கரும்பேகற் கண்டே நற்சீர்
தந்தாளும் திருத்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 22

2807 ஊர்ஆதி இகழ்மாயக் கயிற்றால் கட்டுண்
டோய்ந்தலறி மனம்குழைந்திங் குழலு கின்றேன்
பார்ஆதி அண்டம்எலாம் கணத்தில் காண்போய்
பாவியேன் முகவாட்டம் பார்த்தி லாயோ
சீர்ஆதி பகவன்அருட் செல்வமே என்
சிந்தைமலர்ந் திடஊறுந் தேனே இன்பம்
சார்ஆதி மலைத்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 23

2808 வாஎன்பார் இன்றிஉன தன்பர் என்னை
வஞ்சகன்என் றேமறுத்து வன்க ணாநீ
போஎன்பார் ஆகில்எங்குப் போவேன் அந்தோ
பொய்யனேன் துணைஇன்றிப் புலம்பு வேனே
கோஎன்பார்க் கருள் தருமக் குன்றே ஒன்றே
குணங்குறிஅற் றிடஅருளும் குருவே வாழ்க்கைத்
தாஎன்பார் புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 24

2809 மாயைநெறி யாம்உலக வாழ்க்கை தன்னில்
வருந்திநினை அழைத்தலறி மாழ்கா நின்றேன்
தாயைஅறி யாதுவரும் சூல்உண் டோஎன்
சாமிநீ அறியாயோ தயைஇல் லாயோ
பேயைநிகர் பாவிஎன நினைந்து விட்டால்
பேதையேன் என்செய்கேன் பெருஞ்சீர்க் குன்றே
சாயைகடல் செறிதணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 25

2810 மின்னைநிகர்ந் தழிவாழ்க்கைத் துயரால் நெஞ்சம்
மெலிந்துநின தருள்பருக வேட்டுநின்றேன்
என்னைஇவன் பெரும்பாவி என்றே தள்ளில்
என்செய்கேன் தான்பெறும்சேய் இயற்றும் குற்றம்
அன்னைபொறுத் திடல்நீதி அல்ல வோஎன்
ஐயாவே நீபொறுக்கல் ஆகா தோதான் 26
தன்னைநிகர் தரும்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.

2811 முந்தைவினை யால்நினது வழியில் செல்லா
மூடனேன் தனைஅன்பர் முனிந்து பெற்ற
தந்தைவழி நில்லாத பாவி என்றே
தள்ளிவிடில் தலைசாய்த்துத் தயங்கு வேனே
எந்தைநின தருள்சற்றே அளித்தால் வேறோர்
எண்ணமிலேன் ஏகாந்தத் திருந்து வாழ்வேன்
சந்தனவான் பொழில்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 27

2812 பன்னகநொந் துறுவஞ்ச உலகில் நின்று
பரதவித்துன் அருட்கெதிர்போய்ப் பார்க்கின் றேன்நின்
பொன்னருளைப் புணர்ந்துமன மகிழ்ந்து வாழப்
புண்ணியனே நாயேற்குப் பொருத்தம் இன்றோ
பின்னைஒரு துணை அறியேன் தனியே விட்டால்
பெருமநினக் கழகேயோ பேதை யாம்என்
தன்னைஅளித் தருள் தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே. 28

திருச்சிற்றம்பலம்

10. ஆற்றா முறை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2813 விண்அ றாதுவாழ் வேந்தன் ஆதியர்
வேண்டி ஏங்கவும் விட்டென் நெஞ்சகக்
கண்அ றாதுநீ கலந்து நிற்பதைக்
கள்ள நாயினேன் கண்டு கொண்டிலேன்
எண்அ றாத்துயர்க் கடலுள் மூழ்கியே
இயங்கி மாழ்குவேன் யாது செய்குவேன்
தண்அ றாப்பொழில் குலவும் போரி [1]வாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 1

2814 வாட்கண் ஏழையர் மயலில் பட்டகம்
மயங்கி மால்அயன் வழுத்தும் நின்திருத்
தாட்கண் நேயம்அற் றுலக வாழ்க்கையில்
சஞ்ச ரித்துழல் வஞ்ச னேன் இடம்
ஆட்க ணேசுழல் அந்த கன்வரில்
அஞ்சு வேன்அலால் யாது செய்குவேன்
நாட்க ணேர்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
நாய காதிருத் தணிகை நாதனே. 2

2815 எண்ணில் புன்தொழில் எய்தி ஐயவோ
இயல்பின் வாழ்க்கையில் இயங்கி மாழ்கியே
கண்ணின் உண்மணி யாய நின்தனைக்
கருதி டாதுழல் கபட னேற்கருள்

1. போரி - திருப்போரூர் பாடல் 01

நண்ணி வந்திவன் ஏழை யாம்என
நல்கி ஆண்டிடல் நியாய மேசொலாய்
தண்இ ரும்பொழில் சூழும் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 3

2816 கூவி ஏழையர் குறைகள் தீரஆட்
கொள்ளும் வள்ளலே குறுகும் வாழ்க்கையில்
பாவி யேன்படும் பாட னைத்தையும்
பார்த்தி ருந்தும்நீ பரிந்து வந்திலாய்
சேவி யேன்எனில் தள்ளல் நீதியோ
திருவ ருட்கொரு சிந்து வல்லையோ
தாவி ஏர்வளைப் பயில்செய் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 4

2817 சந்தை நேர்நடை தன்னில் ஏங்குவேன்
சாமி நின்திருத் தாளுக் கன்பிலேன்
எந்தை நீமகிழ்ந் தென்னை ஆள்வையேல்
என்னை அன்பர்கள் என்சொல் வார்களோ
நிந்தை ஏற்பினும் கருணை செய்திடல்
நித்த நின்அருள் நீதி ஆகுமால்
தந்தை தாய்என வந்து சீர்தரும்
தலைவ னேதிருத் தணிகை நாதனே. 5

2818 செல்லும் வாழ்க்கையில் தியங்க விட்டுநின்
செய்ய தாள்துதி செய்தி டாதுழல்
கல்லும் வெந்நிடக் கண்டு மிண்டுசெய்
கள்ள நெஞ்சினேன் கவலை தீர்ப்பையோ
சொல்லும் இன்பவான் ஜோதி யேஅருள்
தோற்ற மேசுக சொருப வள்ளலே
சல்லி யங்கெட அருள்செய் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 6

2819 ஏது செய்குவ னேனும் என்றனை
ஈன்ற நீபொறுத் திடுதல் அல்லதை
ஈது செய்தவன் என்றிவ் வேழையை
எந்த வண்ணம்நீ எண்ணி நீக்குவாய்
வாது செய்வன்இப் போது வள்ளலே
வறிய னேன்என மதித்து நின்றிடேல்
தாது செய்மலர்ப் பொழில்கொள் போரிவாழ்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 7

2820 பேயும் அஞ்சுறும் பேதை யார்களைப்
பேணும் இப்பெரும் பேய னேற்கொரு
தாயும் அப்பனும் தமரும் நட்பும்ஆய்த்
தண்அ ருட்கடல் தந்த வள்ளலே

நீயும் நானும்ஓர் பாலும் நீருமாய்
நிற்க வேண்டினேன் நீதி ஆகுமோ
சாயும் வன்பவம் தன்னை நீக்கிடும்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 8

2821 பொய்யர் தம்மனம் புகுதல் இன்றெனப்
புனித நூலெலாம் புகல்வ தாதலால்
ஐய நின்திரு அருட்கி ரப்பஇங்
கஞ்சி நின்றென்இவ் விஞ்சு வஞ்சனேன்
மெய்யர் உள்ளுளே விளங்கும் ஜோதியே
வித்தி லாதவான் விளைந்த இன்பமே
தைய லார்இரு வோரும் மேவுதோள்
சாமி யேதிருத் தணிகை நாதனே. 9

2822 மாலின் வாழ்க்கையின் மயங்கி நின்பதம்
மறந்து ழன்றிடும் வஞ்ச நெஞ்சினேன்
பாலின் நீர்என நின்அ டிக்கணே
பற்றி வாழ்ந்திடப் பண்ணு வாய்கொலோ
சேலின் வாட்கணார் தீய மாயையில்
தியங்கி நின்றிடச் செய்கு வாய்கொலோ
சால நின்உளம் தான்எவ் வண்ணமோ
சாற்றி டாய்திருத் தணிகை நாதனே. 10

திருச்சிற்றம்பலம்

11. இரந்த விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2823 நாளை ஏகியே வணங்குதும் எனத்தினம் நாளையே கழிக்கின்றோம்
ஊளை நெஞ்சமே என்னையோ என்னையோ உயர்திருத் தணிகேசன்
தாளை உன்னியே வாழ்ந்திலம் உயிர்உடல் தணந்திடல் தனை இந்த
வேளை என்றறி வுற்றிலம் என்செய்வோம் விளம்பரும் விடையோமே. 1

2824 விடைய வாழ்க்கையை விரும்பினன் நின்திரு விரைமலர்ப் பதம்போற்றேன்
கடைய நாயினேன் எவ்வணம் நின்திருக் கருணைபெற் றுய்வேனே
விடையில் ஏறிய சிவபரஞ் சுடர்உளே விளங்கிய ஒளிக்குன்றே
தடையி லாதபேர் ஆனந்த வெள்ளமே தணிகைஎம் பெருமானே. 2

2825 பெருமை வேண்டிய பேதையில் பேதையேன் பெருந்துயர் உழக்கின்றேன்
ஒருமை ஈயும்நின் திருப்பதம் இறைஞ்சிலேன் உய்வதெப் படியேயோ
அருமை யாம்தவத் தம்மையும் அப்பனும் அளித்திடும் பெருவாழ்வே
தரும வள்ளலே குணப்பெருங் குன்றமே தணிகைமா மலையானே. 3

2826 மலையும் வேற்கணார் மையலில் அழுந்தியே வள்ளல்நின் பதம்போற்றா
தலையும் இப்பெருங் குறையினை ஐயகோ யாவரோ டுரைசெய்கேன்
நிலைகொள் ஆனந்த நிருத்தனுக் கொருபொருள் நிகழ்த்திய பெருவாழ்வே
தலைமை மேவிய சற்குரு நாதனே தணிகையம் பதியானே. 4

2827 பதியும் அப்பனும் அன்னையும் குருவும்நற் பயன்தரு பொருளாய
கதியும் நின்திருக் கழல்அடி அல்லது கண்டிலன் எளியேனே
விதியும் மாலும்நின் றேத்திடும் தெய்வமே விண்ணவர் பெருமானே
வதியும் சின்மய வடிவமே தணிகைமா மலைஅமர்ந் திடுவாழ்வே. 5

2828 வாழும் நின்திருத் தொண்டர்கள் திருப்பதம் வழுத்திடா துலகத்தே
தாழும் வஞ்சர்பால் தாழும்என் தன்மைஎன் தன்மைவன் பிறப்பாய
ஏழும் என்னதே ஆகிய தையனே எவர்எனைப் பொருகின்றோர்
ஊழும் நீக்குறும் தணிகைஎம் அண்ணலே உயர்திரு வருள்தேனே. 6

2829 தேனும் தெள்ளிய அமுதமும் கைக்கும்நின் திருவருள் தேன்உண்டே
யானும் நீயுமாய்க் கலந்துற வாடும்நாள் எந்தநாள் அறியேனே
வானும் பூமியும் வழுத்திடும் தணிகைமா மலைஅமர்ந் திடுதேவே
கோனும் தற்பர குருவுமாய் விளங்கிய குமாரசற் குணக்குன்றே 7

2830 குன்று பொய்உடல் வாழ்வினை மெய்எனக் குறித்திவண் அலைகின்றேன்
இன்று நின்திரு வருள்அடைந் துய்வனோ இல்லைஇவ் வுலகத்தே
என்றும் இப்படிப் பிறந்திறந் துழல்வனோ யாதும்இங் கறிகில்லேன்
நன்று நின்திருச் சித்தம்என் பாக்கியம் நல்தணி கையில்தேவே. 8

2831 தேவ ரும்தவ முனிவரும் சித்தரும் சிவன் அரி அயன் ஆகும்
மூவ ரும்பணி முதல்வநின் அடியில்என் முடிஉற வைப்பாயேல்
ஏவ ரும்எனக் கெதிர் இலை முத்திவீ டென்னுடை யதுகண்டாய்
தாவ ரும்பொழில் தணிகையம் கடவுளே சரவண பவகோவே. 9

2832 வேயை வென்றதோள் பாவையர் படுகுழி விழுந்தலைந் திடும்இந்த
நாயை எப்படி ஆட்கொளல் ஆயினும் நாதநின் செயல்அன்றே
தாயை அப்பனைத் தமரினை விட்டுனைச் சார்ந்தவர்க் கருள்கின்றோய்
மாயை நீக்கிநல் அருள்புரி தணிகைய வந்தருள் இந்நாளே. 10

திருச்சிற்றம்பலம்

12. கருணை மாலை

கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2833 சங்க பாணியைச் சதுமு கத்தனைச்
செங்கண் ஆயிரத் தேவர் நாதனை
மங்க லம்பெற வைத்த வள்ளலே
தங்க ருள் திருத் தணிகை ஐயனே. 1

2834 ஐய னேநினை அன்றி எங்கணும்
பொய்ய னேற்கொரு புகல்இ லாமையால்
வெய்ய னேன்என வெறுத்து விட்டிடேல்
மெய்ய னேதிருத் தணிகை வேலனே. 2

2835 வேலன் மாதவன் வேதன் ஏத்திடும்
மேலன் மாமயில் மேலன் அன்பர்உள்
சால நின்றவன் தணிகை நாயகன்
வால நற்பதம் வைப்பென் நெஞ்சமே. 3

2836 நெஞ்ச மேஇஃ தென்னை நின்மதி
வஞ்ச வாழ்வினில் மயங்கு கின்றனை
தஞ்சம் என்றருள் தணிகை சார்தியேல்
கஞ்ச மாமலர்க் கழல்கி டைக்குமே. 4

2837 கிடைக்குள் மாழ்கியே கிலம்செய் அந்தகன்
படைக்குள் பட்டிடும் பான்மை எய்திடேன்
தடைக்குள் பட்டிடாத் தணிகை யான்பதத்
தடைக்க லம்புகுந் தருள்செ ழிப்பனே. 5

2838 செழிக்கும் சீர்திருத் தணிகைத் தேவநின்
கொழிக்கும் நல்லருள் கொள்ளை கொள்ளவே
தழிக்கொண் டன்பரைச் சார்ந்தி லேன் இவண்
பழிக்குள் ஆகும்என் பான்மை என்னையோ 6

2839 என்னை என்னைஈ தென்றன் மாதவம்
முன்னை நன்னெறி முயன்றி லேனைநின்
பொன்னை அன்னதாள் போற்ற வைத்தனை
அன்னை என்னும்நல் தணிகை அண்ணலே. 7

2840 அண்ணி லேன்நினை ஐய நின்அடி
எண்ணி லேன்இதற் கியாது செய்குவேன்
புண்ணி னேன்பிழை பொறுத்துக் கோடியால்
தண்ணின் நீள்பொழில் தணிகை அப்பனே. 8

2841 அப்பன் என்னுடை அன்னை தேசிகன்
செப்பன் என்குலத் தெய்வம் ஆனவன்
துப்பன் என்உயிர்த் துணைவன் யாதும்ஓர்
தப்பில் அன்பர்சேர் தணிகை வள்ளலே. 9

2842 வள்ளல் உன்அடி வணங்கிப் போற்றஎன்
உள்ளம் என்வசத் துற்ற தில்லையால்
எள்ளல் ஐயவோ ஏழைஎன் செய்கேன்
தள்ள ரும்பொழில் தணிகை வெற்பனே. 10

2843 வெற்ப னேதிருத் தணிகை வேலனே
பொற்ப னேதிருப் போரி நாதனே
கற்ப மேல்பல காலம் செல்லுமால்
அற்ப னேன் துயர்க் களவு சாற்றவே. 11

2844 சாறு சேர்திருத் தணிகை எந்தைநின்
ஆறு மாமுகத் தழகை மொண்டுகொண்
டூறில் கண்களால் உண்ண எண்ணினேன்
ஈறில் என்னுடை எண்ணம் முற்றுமோ. 12

2845 முற்று மோமனம் முன்னி நின்பதம்
பற்று மோவினைப் பகுதி என்பவை
வற்று மோசுக வாழ்வு வாய்க்குமோ
சற்றும் ஓர்கிலேன் தணிகை அத்தனே. 13

2846 அத்த னேதணி காச லத்தருள்
வித்த னேமயில் மேற்கொள் வேலனே
பித்த னேன்பெரும் பிழைபொ றுத்திடில்
சுத்த அன்பர்கள் சொல்வர் ஏதமே. 14

2847 ஏதி லார்என எண்ணிக் கைவிடில்
நீதி யோஎனை நிலைக்க வைத்தவா
சாதி வான்பொழில் தணிகை நாதனே
ஈதி நின்அருள் என்னும் பிச்சையே. 15

2848 பிச்சை ஏற்றவன் பிள்ளை நீஎனில்
இச்சை ஏற்றவர்க் கியாது செய்குவாய்
பச்சை மாமயில் பரம நாதனே
கச்சி நேர் தணி கைக்க டம்பனே. 16

2849 கடப்ப மாமலர்க் கண்ணி மார்பனே
தடப்பெ ரும்பொழில் தணிகைத் தேவனே
இடப்ப டாச்சிறி யேனை அன்பர்கள்
தொடப்ப டாதெனில் சொல்வ தென்கொலோ.

2850 என்சொல் கேன் இதை எண்ணில் அற்புதம்
வன்சொ லேன்பிழை மதித்தி டாதுவந்
தின்சொ லால்இவண் இருத்தி என்றனன்
தன்சொல் செப்பரும் தணிகைத் தேவனே. 18

2851 தேவ நேசனே சிறக்கும் ஈசனே
பாவ நாசனே பரம தேசனே
சாவ காசனே தணிகை வாசனே
கோவ பாசனே குறிக்கொள் என்னையே. 19

2852 குறிக்கொள் அன்பரைக் கூடு றாதஇவ்
வெறிக்கொள் நாயினை வேண்டி ஐயநீ
முறிக்கொள் வாய்கொலோ முனிகொள் வாய்கொலோ
நெறிக்கொள் வோர்புகழ் தணிகை நித்தனே. 20

2853 தணிகை மேவிய சாமி யேநினை
எணிகை விட்டிடேல் என்று தோத்திரம்
அணிகை நின்அடிக் கயர்ந்து நின்றுவீண்
கணிகை போல்எனைக் கலக்கிற் றுள்ளமே. 21

2854 உள்ளம் நெக்குவிட் டுருகும் அன்பர்தம்
நள்அ கத்தினில் நடிக்கும் ஜோதியே
தள்அ ருந்திறல் தணிகை ஆனந்த
வெள்ள மேமனம் விள்ளச் செய்வையே. 22

2855 செய்வ தன்றவன் சிறிய னேன் றனை
வைவர் அன்பர்கள் என்னில் மத்தனேன்
உய்வ தெவ்வணம் உரைசெய் அத்தனே
சைவ நாதனே தணிகை மன்னனே. 23

2856 மன்னும் நின்அருள் வாய்ப்ப தின்றியே
இன்னும் இத்துயர் ஏய்க்கில் என்செய்கேன்
பொன்னின் அம்புயன் போற்றும் பாதனே
தன்னில் நின்றிடும் தணிகை மேலனே. 24

2857 மேலை வானவர் வேண்டும் நின்திருக்
காலை என்சிரம் களிக்க வைப்பையோ
சாலை ஓங்கிய தணிகை வெற்பனே
வேலை ஏந்துகை விமல நாதனே. 25

2858 வேத மாமுடி விளங்கும் நின்திருப்
பாதம் ஏத்திடாப் பாவி யேன்தனக்
கீதல் இன்றுபோ என்னில் என்செய்கேன்
சாதல் போக்கும்நல் தணிகை நேயனே.

2859 நேயம் நின்புடை நின்றி டாதஎன்
மாய நெஞ்சினுள் வந்தி ருப்பையோ
பேய னேன்பெரும் பிழைபொ றுத்திடத்
தாய நின்கடன் தணிகை வாணனே. 27

2860 வாணு தல்பெரு மாட்டி மாரொடு
காணு தற்குனைக் காதல் கொண்டனன்
ஏணு தற்கென தெண்ணம் முற்றுமோ
மாணு தற்புகழ்த் தணிகை வண்ணனே. 28

2861 வண்ண னேஅருள் வழங்கும் பன்னிரு
கண்ண னேஅயில் கரங்கொள் ஐயனே
தண்ண னேர்திருத் தணிகை வேலனே
திண்ணம் ஈதருள் செய்யும் காலமே. 29

2862 கால்கு றித்தஎன் கருத்து முற்றியே
சால்வ ளத்திருத் தணிகை சார்வன்என்
மால்ப கைப்பிணி மாறி ஓடவே
மேல்கு றிப்பனால் வெற்றிச் சங்கமே. 30

திருச்சிற்றம்பலம்

13. மருண்மாலை விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2863 சொல்லும் பொருளு மாய்நிறைந்த சுகமே அன்பர் துதிதுணையே
புல்லும் புகழ்சேர் நல்தணிகைப் பொருப்பின் மருந்தே பூரணமே
அல்லும் பகலும் நின்நாமம் அந்தோ நினைந்துன் ஆளாகேன்
கல்லும் பொருவா வன்மனத்தால் கலங்கா நின்றேன் கடையேனே. 1

2864 கடையேன் வஞ்ச நெஞ்சகத்தால் கலுழ்கின் றேன்நின் திருக்கருணை
அடையேன் அவமே தீரிகின்றேன் அந்தோ சிறிதும் அறிவில்லேன்
விடையே றீசன் புயம்படும்உன் விரைத்தாள் கமலம் பெறுவேனோ
கொடைஏர் அருளைத் தருமுகிலே கோவே தணிகைக் குலமணியே. 2

2865 மணியே அடியேன் கண்மணியே மருந்தே அன்பர் மகிழ்ந்தணியும்
அணியே தணிகை அரசேதெள் அமுதே என்றன் ஆருயிரே
பிணிஏய் துயரால் வருந்திமனப் பேயால் அலைந்து பிறழ்கின்றேன்
தணியேன் தாகம் நின் அருளைத் தருதல் இலையேல் தாழ்வேனே. 3

2866 தாழ்வேன் வஞ்ச நெஞ்சகர்பால் சார்வேன் தனக்குன் அருள்தந்தால்
வாழ்வேன் இலையேல் என்செய்கேன் வருத்தம் பொறுக்க மாட்டேனே
ஏழ்வே தனையும் கடந்தவர் தம் இன்பப் பெருக்கே என்உயிரே
போழ்வேல் கரங்கொள் புண்ணியனே புகழ்சேர் தணிகைப் பொருப்பரசே. 4

2867 அரைசே அடியர்க் கருள்குகனே அண்ணா தணிகை ஐயாவே
விரைசேர் கடம்ப மலர்ப்புயனே வேலா யுதக்கை மேலோனே
புரைசேர் மனத்தால் வருந்திஉன்றன் பூம்பொற் பதத்தைப் புகழ்கில்லேன்
தரைசேர் வாழ்வில் தயங்குகின்றேன் அந்தோ நின்று தனியேனே. 5

2868 தனியே துயரில் வருந்திமனம் சாம்பி வாழ்க்கைத் தளைப்பட்டிங்
கினிஏ துறுமோ என்செய்கேன் என்றே நின்றேற் கிரங்காயோ
கனியே பாகே கரும்பேஎன் கண்ணே தணிகைக் கற்பகமே
துனிஏய் பிறவி தனைஅகற்றும் துணையே ஜோதிச் சுகக்குன்றே. 6

2869 குன்றே மகிழ்ந்த குணக்குன்றே கோவே தணிகைக் குருபரனே
நன்றே தெய்வ நாயகமே நவிலற் கரிய நல்உறவே
என்றே வருவாய் அருள் தருவாய் என்றே புலம்பி ஏங்குற்றேன்
இன்றே காணப் பெறில் எந்தாய் இறவேன் பிறவேன் இருப்பேனே. 7

2870 இருப்பேன் துயர்வாழ் வினில்எனினும் எந்தாய் நினது பதங்காணும்
விருப்பேன் அயன்மால் முதலோரை வேண்டேன் அருள வேண்டாயோ
திருப்பேர் ஒளியே அருட்கடலே தெள்ளார் அமுதே திருத்தணிகைப்
பொருப்பே மகிழ்ந்த புண்ணியமே புனித ஞான போதகமே. 8

2871 போதா நந்த அருட்கனியே புகலற் கரிய பொருளேஎன்
நாதா தணிகை மலைஅரசே நல்லோர் புகழும் நாயகனே
ஓதா தவமே வருந்துயரால் உழன்றே பிணியில் உலைகின்றேன்
ஏதாம் உனதின் அருள்ஈயா திருந்தால் அந்தோ எளியேற்கே. 9

2872 எளியேன் நினது திருவருளுக் கெதிர்நோக் குற்றே இரங்குகின்ற
களியேன் எனைநீ கைவிட்டால் கருணைக் கியல்போ கற்பகமே
அளியே தணிகை அருட்சுடரே அடியர் உறவே அருள்ஞானத்
துளியே அமையும் எனக்கெந்தாய் வாஎன் றொருசொல் சொல்லாயே. 10

திருச்சிற்றம்பலம்

14. பொறுக்காப் பத்து

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2873 மெய்யர்உள் ளகத்தின் விளங்கும்நின் பதமாம்
விரைமலர்த் துணைதமை விரும்பாப்
பொய்யர்தம் இடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஐயரும் இடப்பால் அம்மையும் வருந்தி
அளித்திடும் தெள்ளிய அமுதே
தையலர் மயக்கற் றவர்க்கருள் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 1

2874 நன்மைய எல்லாம் அளித்திடும் உனது
நளினமா மலர்அடி வழுத்தாப்
புன்மையர் இடத்திவ் வடியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
சின்மயப் பொருள்நின் தொண்டர்பால் நாயேன்
சேர்ந்திடத் திருவருள் புரியாய்
தன்மயக் கற்றோர்க் கருள் தரும் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 2

2875 மருள்இலா தவர்கள் வழுத்தும்நின் அடியை
மனமுற நினைந்தகத் தன்பாம்
பொருள்இலா தவர்பால் ஏழையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
அருள்எலாம் திரண்ட ஆனந்த உருவே
அன்பர்பால் இருந்திட அருளாய்
தரளவான் மழைபெய் திடும்திருப் பொழில்சூழ்
தணிகைவாழ் சரவண பவனே. 3

2876 நிலைஅருள் நினது மலர்அடிக் கன்பு
நிகழ்ந்திட நாள்தொறும் நினையாப்
புலையர்தம் இடம்இப் புன்மையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
மலைஅர சளித்த மரகதக் கொம்பர்
வருந்திஈன் றெடுத்தமா மணியே
தலைஅர சளிக்க இந்திரன் புகழும்
தணிகைவாழ் சரவண பவனே. 4

2877 வல்இருள் பவம்தீர் மருந்தெனும் நினது
மலர்அடி மனம்உற வழுத்தாப்
புல்லர்தம் இடம்இப் பொய்யனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஒல்லையின் எனைமீட் டுன்அடி யவர்பால்
உற்றுவாழ்ந் திடச்செயின் உய்வேன்
சல்லமற் றவர்கட் கருள் தரும் பொருளே
தணிகைவாழ் சரவண பவனே. 5

2878 கற்பிலார் எனினும் நினைந்திடில் அருள்நின்
கருணைஅம் கழல்அடிக் கன்பாம்
பொற்பிலா தவர்பால் ஏழையேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்

அற்பிலேன் [1]எனினும் என்பிழை பொறுத்துன்
அடியர்பால் சேர்த்திடில் உய்வேன்
தற்பரா பரமே சற்குண மலையே
தணிகைவாழ் சரவண பவனே. 6

2879 பத்திகொண் டவருள் பரவிய ஒளியாம்
பரஞ்சுடர் நின்அடி பணியும்
புத்திகொள் ளலர்பால் எளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
நித்திய அடியர் தம்முடன் கூட்ட
நினைந்திடில் உய்குவன் அரசே
சத்திசெங் கரத்தில் தரித்திடும் அமுதே
தணிகைவாழ் சரவண பவனே. 7

2880 நீற்றணி விளங்கும் அவர்க்கருள் புரியும்
நின்அடிக் கமலங்கள் நினைந்தே
போற்றிடா தவர்பால் பொய்யனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
ஆற்றல்கொள் நின்பொன் அடியருக் கடியன்
ஆச்செயில் உய்குவன் அமுதே
சாற்றிடும் பெருமைக் களவிலா தோங்கும்
தணிகைவாழ் சரவண பவனே. 8

2881 பரிந்திடும் மனத்தோர்க் கருள்செயும் நினது
பாததா மரைகளுக் கன்பு
புரிந்திடா தவர்பால் எளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
தெரிந்திடும் அன்பர் இடம்உறில் உய்வேன்
திருவுளம் அறிகிலன் தேனே
சரிந்திடும் கருத்தோர்க் கரியநற் புகழ்கொள்
தணிகைவாழ் சரவண பவனே. 9

2882 எண்உறும் அவர்கட் கருளும்நின் அடியை
ஏத்திடா தழிதரும் செல்வப்
புண்உறும் அவர்பால் எளியனேன் புகுதல்
பொறுக்கிலன் பொறுக்கிலன் கண்டாய்
கண்உறு மணியாம் நின்அடி யவர்பால்
கலந்திடில் உய்குவன் கரும்பே
தண்உறும் கருணைத் தனிப்பெருங் கடலே
தணிகைவாழ் சரவண பவனே. 10

திருச்சிற்றம்பலம்

1. அற்பு - அன்பு ச.மு.க. பாடல் 06

15. வேட்கை விண்ணப்பம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2883 மன்னே என்றன் உயிர்க்குயிரே மணியே தணிகை மலைமருந்தே
அன்னே என்னை ஆட்கொண்ட அரசே தணிகை ஐயாவே
பொன்னே ஞானப் பொங்கொளியே புனித அருளே பூரணமே
என்னே எளியேன் துயர்உழத்தல் எண்ணி இரங்கா திருப்பதுவே. 1

2884 இரங்கா நின்றிங் கலைதரும்இவ் வெளியேன் கனவின் இடத்தேனும்
அரங்கா அரவின் நடித்தேனும் அயனும் காண்டற் கரிதாய
உரங்கா முறும்மா மயில்மேல்நின் உருவம் தரிசித் துவப்படையும்
வரங்கா தலித்தேன் தணிகைமலை வாழ்வே இன்று வருவாயோ. 2

2885 வருவாய் என்று நாள்தோறும் வழிபார்த் திரங்கி மனந்தளர்ந்தேன்
கருவாய் பவன்என் றெனைத்தள்ளக் கருது வாயோ அன்றிஅருள்
உருவாய் வந்து தருவாயோ தணிகா சலத்துள் உற்றமர்ந்த
ஒருவா உன்றன் திருவுளத்தை உணரேன் என்செய் துய்கேனே. 3

2886 உய்யும் பொருட்டுன் திருப்புகழை உரையேன் அந்தோ உரைக்கடங்காப்
பொய்யும் களவும் அழுக்காறும் பொருளாக் கொண்டேன் புலையேனை
எய்யும் படிவந் தடர்ந்தியமன் இழுத்துப் பறிக்கில் என்னேயான்
செய்யும் வகைஒன் றறியேனே தென்பால் தணிகைச் செஞ்சுடரே. 4

2887 செஞ்சொல் சுவையே மெஞ்ஞானச் செல்வப் பெருக்கே தெள்ளமுதே
விஞ்சைப் புலவர் புகழ் தணிகை விளக்கே துளக்கில் வேலோனே
வெஞ்சொல் புகலும் வஞ்சகர்பால் மேவி நின்தாள் மலர்மறந்தே
பஞ்சில் தமியேன் படும்பாட்டைப் பார்த்தும் அருட்கண் பார்த்திலையே. 5

2888 பார்க்கின் றிலையே பன்னிருகண் படைத்தும் எளியேன் பாடனைத்தும்
தீர்க்கின் றிலையே என்னேயான் செய்வேன் சிறியேன் சீமானே
போர்க்குன் றொடுசூர் புயக்குன்றும் பொடிசெய் வேற்கைப் புண்ணியனே
சீர்க்குன் றெனும்நல் வளத்தணிகைத் தேவே மயில்ஊர் சேவகனே. 6

2889 சேவற் கொடிகொள் குணக்குன்றே சிந்தா மணியே யாவர்கட்கும்
காவற் பதியே தணிகைவளர் கரும்பே கனியே கற்பகமே
மூவர்க் கிறையே வேய்ஈன்ற முத்தன் அளித்த முத்தேநல்
தேவர்க் கருள்நின் சேவடிக்கே விழைந்தேன் யாதும்தெரியேனே. 7

2890 தெரியேன் உனது திருப்புகழைத் தேவே உன்றன் சேவடிக்கே
பரியேன் பணியேன் கூத்தாடேன் பாடேன் புகழைப் பரவசமாய்த்
தரியேன் தணிகை தனைக்காணேன் சாகேன் நோகேன் கும்பிக்கே
உரியேன் அந்தோ எதுகொண்டிங் குய்கேன் யாதுசெய்கேனே.

2891 செய்வ துனது திருவடிக்காம் திறனே சிந்தை நின்பாலே
வைவ துன்னை நினையாத வஞ்ச கரையே வழுத்திநிதம்
உய்வ துனது திருநாமம் ஒன்றைப் பிடித்தே மற்றொன்றால்
எய்வ தறியேன் திருத்தணிகை எந்தாய் எந்தாய் எளியேனே. 9

2892 எளியேன் நினது சேவடியாம் இன்ப நறவை எண்ணிஎண்ணி
அளியேன் நெஞ்சம் சற்றேனும் அன்பொன் றில்லேன் அதுசிறிதும்
ஒளியேன் எந்தாய் என் உள்ளத் தொளித்தே எவையும் உணர்கின்றாய்
வளியே முதலாய் நின்றருளும் மணியே தணிகை வாழ்மன்னே. 10

திருச்சிற்றம்பலம்

16. ஆறெழுத் துண்மை

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2893 பெருமை நிதியே மால்விடைகொள் பெம்மான் வருந்திப் பெறும்பேறே
அருமை மணியே தணிகைமலை அமுதே உன்றன் ஆறெழுத்தை
ஒருமை மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
இருமை வளனும் எய்தும்இடர் என்ப தொன்றும் எய்தாதே. 1

2894 எய்தற் கரிய அருட்சுடரே எல்லாம் வல்ல இறையோனே
செய்தற் கரிய வளத்தணிகைத் தேவே உன்றன் ஆறெழுத்தை
உய்தற் பொருட்டிங் குச்சரித்தே உயர்ந்த திருவெண் ணீறிட்டால்
வைதற் கில்லாப் புகழ்ச்சிவரும் வன்கண் ஒன்றும் வாராதே. 2

2895 வாரா இருந்த அடியவர் தம் மனத்தில் ஒளிரும் மாமணியே
ஆரா அமுதே தணிகைமலை அரசே உன்றன் ஆறெழுத்தை
ஓரா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஏரார் செல்வப் பெருக்கிகவா இடும்பை ஒன்றும் இகந்திடுமே. 3

2896 இகவா அடியர் மனத்தூறும் இன்பச் சுவையே எம்மானே
அகவா மயில்ஊர் திருத்தணிகை அரசே உன்றன் ஆறெழுத்தை
உகவா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
சுகவாழ் வின்பம் அதுதுன்னும் துன்பம் ஒன்றும் துன்னாதே. 4

2897 துன்னும் மறையின் முடிவில்ஒளிர் தூய விளக்கே சுகப்பெருக்கே
அன்னை அனையாய் தணிகைமலை அண்ணா உன்றன் ஆறெழுத்தை
உன்னி மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
சென்னி அணியாய் அடிசேரும் தீமை ஒன்றும் சேராதே. 5

2898 சேரும் முக்கண் கனிகனிந்த தேனே ஞானச் செழுமணியே
யாரும் புகழும் தணிகைஎம தன்பே உன்றன் ஆறெழுத்தை
ஓரும் மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
பாரும் விசும்பும் பதஞ்சாரும் பழங்கண் ஒன்றும் சாராதே.

2899 சார்ந்த அடியார்க் கருள் அளிக்கும் தருமக் கடலே தற்பரமே
வார்ந்த பொழில்சூழ் திருத்தணிகை மணியே உன்றன் ஆறெழுத்தை
ஓர்ந்து மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஆர்ந்த ஞானம் உறும்அழியா அலக்கண் ஒன்றும் அழிந்திடுமே. 7

2900 அழியாப் பொருளே என்உயிரே அயில்செங் கரங்கொள் ஐயாவே
கழியாப் புகழ்சேர் தணிகைஅமர் கந்தா உன்றன் ஆறெழுத்தை
ஒழியா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
பழியா இன்பம் அதுபதியும் பனிமை ஒன்றும் பதியாதே. 8

2901 பதியே எங்கும் நிறைந்தருளும் பரம சுகமே பரஞ்சுடரே
கதியே அளிக்கும் தணிகைஅமர் கடம்பா உன்றன் ஆறெழுத்தை
உதியேர் மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
துதிஏர் நினது பதந்தோன்றும் துன்பம் ஒன்றும் தோன்றாதே. 9

2902 தோன்றா ஞானச் சின்மயமே தூய சுகமே சுயஞ்சுடரே
ஆன்றார் புகழும் தணிகைமலை அரசே உன்றன் ஆறெழுத்தை
ஊன்றா மனத்தின் உச்சரித்திங் குயர்ந்த திருவெண் ணீறிட்டால்
ஈன்றாள் நிகரும் அருள்அடையும் இடுக்கண் ஒன்றும் அடையாதே. 10

திருச்சிற்றம்பலம்

17. போக் குரையீடு

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2903 கற்கி லேன்உன தருட்பெயர் ஆம்குக கந்தஎன் பவைநாளும்
நிற்கி லேன்உன தாகம நெறிதனில் நீசனேன் உய்வேனோ
சொற்கி லேசமில் அடியவர் அன்பினுள் தோய்தரு பசுந்தேனே
அற்கி லேர்தரும் தணிகைஆர் அமுதமே ஆனந்த அருட்குன்றே. 1

2904 பாவ வாழ்க்கையில் பாவியேன் செய்திடும் பண்பிலாப் பிழைநோக்கித்
தேவ ரீர்மன திரக்கமுற் றேஅருள் செய்திடா திருப்பீரேல்
காவ லாகிய கடும்பிணித் துயரம்இக் கடையனேன் தனக்கின்னும்
யாவ தாகுமோ என்செய்கோ என்செய்கோ இயலும்வேல் கரத்தீரே. 2

2905 சேவி யாதஎன் பிழைகளை என்னுளே சிறிதறி தரும்போதோ
பாவி யேன்மனம் பகீலென வெதும்பியுள் பதைத்திடக் காண்கின்றேன்
ஆவி யேஅருள் அமுதமே நின்திரு வருள்தனக் கென்னாமோ
பூவில் நாயகன் போற்றிடும் தணிகையம் பொருப்பமர்ந் திடுவாழ்வே. 3

2906 துன்பி னால்அகம் வெதும்பிநைந் தயர்ந்துநின் துணைஅடி மலர்ஏத்தும்
அன்பி லாதஇப் பாவியேன் செய்பிழை அனைத்தையும் பொறுப்பாயேல்
வன்பி லாதநின் அடியவர் தம்திரு மனத்தினுக் கென்னாமோ
இன்பி னால்சுரர் போற்றிடும் தணிகைவாழ் இறைவனே எம்மானே.

2907 என்செய் கேன்இனும் திருவருள் காண்கிலேன் எடுக்கரும் துயர்உண்டேன்
கன்செய் பேய்மனக் கடையனேன் என்னினும் காப்பதுன் கடன்அன்றோ
பொன்செய் குன்றமே பூரண ஞானமே புராதனப் பொருள்வைப்பே
மன்செய் மாணிக்க விளக்கமே தணிகைவாழ் வள்ளலே மயிலோனே. 5

2908 மண்ணில் நண்ணிய வஞ்சகர் பால்கொடு வயிற்றினால் அலைப்பட்டேன்
கண்ணில் நண்ணரும் காட்சியே நின்திருக் கடைக்கண்ணோக் கருள்நோக்கி
எண்ணி எண்ணிநெஞ் சழிந்துகண் ணீர்கொளும் ஏழையேன் தனக்கின்னும்
புண்ணில் நண்ணிய வேல்எனத் துயர்உறில் புலையன்என் செய்கேனே. 6

2909 மலங்கி வஞ்சகர் மாட்டிரந் தையகோ வருந்திநெஞ் சயர்வுற்றே
கலங்கி நின்திருக் கருணையை விழையும்என் கண்அருள் செய்யாயோ
இலங்கி எங்கணும் நிறைந்தருள் இன்பமே எந்தையே எந்தாயே
நலங்கி ளர்ந்திடும் தணிகையம் பதியமர் நாயக மணிக்குன்றே. 7

2910 சைவ நாயக சம்பந்தன் ஆகிய தமிழ்அருட் குன்றேஎன்
தெய்வ மேநினை அன்றிஓர் துணையிலேன் திருவருள் அறியாதோ
வைவ தேகொளும் வஞ்சகர் தம்இடை வருந்திநெஞ் சழிகின்றேன்
செய்வ தோர்கிலேன் கைவிடில் என்செய்கேன் தெளிவிலாச் சிறியேனே. 8

2911 வாழ்வில் ஆம்சிறு களிப்பினால் உன்றனை மறந்திறு மாக்கின்றேன்
தாழ்வி லேசிறி தெண்ணிநொந் தயர்வன்என் தன்மைநன் றருள்ஆளா
கேழ்வி மேவிய அடியவர் மகிழ்வுறக் கிடைத்தருள் பெருவாழ்வே
வேழ்வி [1]ஓங்கிய தணிகைமா மலைதனில் விளங்கிவீற் றிருப்போனே. 9

2912 என்றும் மாதர்மேல் இச்சைவைத் துன்றனை எண்ணுவேன் துயருற்றால்
கன்று நெஞ்சகக் கள்வனேன் அன்பினைக் கருத்திடை எணில்சால
நன்று நன்றெனக் கெவ்வணம் பொன்அருள் நல்குவை அறிகில்லேன்
துன்று மாதவர் போற்றிடும் தணிகைவாழ் ஜோதியே சுகவாழ்வே. 10

திருச்சிற்றம்பலம்

18. பணித்திறம் வேட்டல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2913 நண்ணேனோ மகிழ்வினொடும் திருத்தணிகை மலைஅதனை நண்ணி என்றன்
கண்ணேநீ அமர்ந்தஎழில் கண்குளிரக் காணேனோ கண்டு வாரி
உண்ணேனோ ஆனந்தக் கண்ணீர்கொண் டாடிஉனக் குகப்பாத்தொண்டு
பண்ணேனோ நின்புகழைப் பாடேனோ வாயாரப் பாவி யேனே. 1

2914 பாவியேன் படுந்துயருக் கிரங்கிஅருள் தணிகையில்என் பால்வா என்று
கூவிநீ ஆட்கொளஓர் கனவேனும் காணேனோ குணப்பொற் குன்றே
ஆவியே அறிவேஎன் அன்பேஎன் அரசேநின் அடியைச் சற்றும்
சேவியேன் எனினும்எனைக் கைவிடேல் அன்பர்பழி செப்பு வாரே.

1. கேழ்வி வேள்வி என்பன எதுகை நோக்கித் திரிந்தவாறு. தொ. வே., பாடல் 09

2915 வாரேனோ திருத்தணிகை வழிநோக்கி வந்தென்கண் மணியே நின்று
பாரேனோ நின் அழகைப் பார்த்துலக வாழ்க்கைதனில் படும்இச் சோபம்
தீரேனோ நின்அடியைச் சேவித்தா னந்தவெள்ளம் திளைத்தா டேனோ
சாரேனோ நின்அடியர் சமுகம்அதைச் சார்ந்தவர்தாள் தலைக்கொள் ளேனோ. 3

2916 கொள்ளேனோ நீஅமர்ந்த தணிகைமலைக் குறஎண்ணம் கோவே வந்தே
அள்ளேனோ நின்அருளை அள்ளிஉண்டே ஆனந்தத் தழுந்தி ஆடித்
துள்ளேனோ நின்தாளைத் துதியேனோ துதித்துலகத் தொடர்பைஎல்லாம்
தள்ளேனோ நின்அடிக்கீழ்ச் சாரேனோ துணைஇல்லாத் தனிய னேனே. 4

2917 தனியே இங் குழல்கின்ற பாவியேன் திருத்தணிகா சலம்வாழ் ஞானக்
கனியேநின் சேவடியைக் கண் ஆரக் கண்டுமனம் களிப்பு றேனோ
துனியேசெய் வாழ்வில்அலைந் தென்எண்ணம் முடியாது சுழல்வேன் ஆகில்
இனிஏது செய்வேன்மற் றொருதுணையும் காணேன் இவ் வேழை யேனே 5

2918 இவ்வேளை அருள்தணிகை அமர்ந்தருளும் தேவைஎன திருகண் ஆய
செவ்வேளை மனங்களிப்பச் சென்றுபுகழ்ந் தானந்தத் தெளிதேன் உண்டே
எவ்வேளை யும்பரவி ஏத்தேனோ அவன்பணிகள் இயற்றி டேனோ
தெவ்வேளை அடர்க்கவகை தெரியாமல் உழல்தருமிச் சிறிய னேனே. 6

2919 சிறியேன்இப் போதேகித் திருத்தணிகை மலைஅமர்ந்த தேவின் பாதம்
குறியேனோ ஆனந்தக் கூத்தாடி அன்பர்கள்தம் குழாத்துள் சென்றே
அறியேனோ பொருள்நிலையை அறிந்தெனதென் பதைவிடுத்திவ் வகில மாயை
முறியேனோ உடல்புளகம் மூடேனோ நன்னெறியை முன்னி இன்றே. 7

2920 முன்னேனோ திருத்தணிகை அடைந்திடநின் சந்நிதியின் முன்னே நின்று
மன்னேனோ அடியருடன் வாழேனோ நின் அடியை வாழ்த்தி டேனோ
உன்னேனோ நன்னிலையை உலகத்தோர் எல்லீரும் உங்கே வாரும்
என்னேனோ நின்பெயரை யார்கூறி னாலும் அவர்க் கிதங்கூ றேனோ. 8

2921 கூறேனோ திருத்தணிகைக் குற்றுன் அடிப் புகழதனைக் கூறி நெஞ்சம்
தேறேனோ நின்அடியர் திருச்சமுகம் சேரேனோ தீராத் துன்பம்
ஆறேனோ நின்அடியன் ஆகேனோ பவக்கடல்விட் டகன்றே அப்பால்
ஏறேனோ அருட்கடலில் இழியேனோ ஒழியாத இன்பம் ஆர்ந்தே. 9

2922 தேடேனோ என்நாதன் எங்குற்றான் எனஓடித் தேடிச் சென்றே
நாடேனோ தணிகைதனில் நாயகனே நின்அழகை நாடி நாடிக்
கூடேனோ அடியருடன் கோவேஎம் குகனேஎம் குருவே என்று
பாடேனோ ஆனந்தப் பரவசம்உற் றுன்கமலப் பதம்நண் ணேனோ 10

19. நெஞ்சொடு புலத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2923 வாவா என்ன அருள் தணிகை மருந்தை என்கண் மாமணியைப்
பூவாய் நறவை மறந்தவநாள் போக்கின் றதுவும் போதாமல்
மூவா முதலின் அருட்கேலா மூட நினைவும் இன்றெண்ணி
ஆவா நெஞ்சே எனைக்கெடுத்தாய் அந்தோ நீதான் ஆவாயோ 1

2924 வாயாத் துரிசற் றிடும்புலவோர் வழுத்தும் தணிகை மலை அமுதைக்
காயாக் கனியை மறந்தவநாள் கழிக்கின் றதுவும் போதாமல்
ஈயாக் கொடியர் தமக்கன்றி ஏலா நினைவும் இன்றெண்ணி
மாயா என்றன் வாழ்வழித்தாய் மனமே நீதான் வாழ்வாயோ. 2

2925 வாழும் படிநல் அருள்புரியும் மருவுந் தணிகை மலைத்தேனைச்
சூழும் கலப மயில்அரசைத் துதியாப் பவமும் போதாமல்
வீழும் கொடியர் தமக்கன்றி மேவா நினைவும் மேவிஇன்று
தாழும் படிஎன் தனைஅலைத்தாய் சவலை மனம்நீ சாகாயோ. 3

2926 காயோம் எனநின் றவர்க்கினிய கனியாம் தணிகைக் கற்பகத்தைப்
போய்ஓர் கணமும் போற்றுகிலாய் புன்மை புரிந்தாய் புலங்கெட்டாய்
பேயோ எங்கும் திரிந்தோடிப் பேணா என்பைப் பேணுகின்ற
நாயோ மனமே நீஉனைநான் நம்பி வாளா நலிந்தேனே. 4

2927 தேனும் கடமும் திகழ்தணிகைத் தேவை நினையாய் தீநரகம்
மானும் நடையில் உழல்கின்றாய் மனமே உன்றன் வஞ்சகத்தால்
நானும் இழந்தேன் பெருவாழ்வை நாய்போல் நலிந்திங் கவமே [1]நீ
தானும் இழந்தாய் என்னேஉன் தன்மை இழிவாம் தன்மையதே. 5

2928 தன்னால் உலகை நடத்தும் அருட் சாமி தணிகை சாராமல்
பொன்னால் மண்ணால் பூவையரால் புலம்பி வருந்தும் புல்நெஞ்சே
உன்னால் என்றன் உயர்விழந்தேன் உற்றார் இழந்தேன் உன்செயலைச்
சொன்னால் நகைப்பர் எனைவிட்டும் தொலையாய் இங்கு நிலையாயே. 6

2929 நிலைக்கும் தணிகை என்அரசை நீயும் நினையாய் நினைப்பதையும்
கலைக்கும் தொழில்கொண் டெனைக்கலக்கம் கண்டாய் பலன்என் கண்டாயே
முலைக்கும் கலைக்கும் விழைந்தவமே முயங்கும் மூட முழுநெஞ்சே
அலைக்கும் கொடிய விடம்நீஎன் றறிந்தேன் முன்னர் அறிந்திலனே. 7

2930 இலதை நினைப்பாய் பித்தர்கள்போல் ஏங்கா நிற்பாய் தணிகையில்என்
குலதெய் வமுமாய்க் கோவாய்ச்சற் குருவாய் நின்ற குகன்அருளே
நலதென் றறியாய் யான்செய்த நன்றி மறந்தாய் நாணாதென் 8
வலதை அழித்தாய் வலதொடுநீ வாழ்வாய் கொல்லோ வல்நெஞ்சே.

1. நலிந்திங்கவமே. தொ. வே., பொ. சு. பி. இரா., ச.மு.க., சென்னை பதிப்புகள். பாடல் 05

2931 நெஞ்சே உகந்த துணைஎனக்கு நீஎன் றறிந்தே நேசித்தேன்
மஞ்சேர் தணிகை மலைஅமுதை வாரிக் கொளும்போ தென்னுள்ளே
நஞ்சே கலந்தாய் உன்உறவு நன்றே இனிஉன் நட்பகன்றால்
உய்ஞ்சேன் இலையேல் வன்னரகத் துள்ளேன் கொள்ளேன் ஒன்றையுமே. 9

2932 கொள்ளும் பொழில்சூழ் தணிகைமலைக் கோவை நினையா தெனைநரகில்
தள்ளும் படிக்கோ தலைப்பட்டாய் சகத்தின் மடவார் தம்மயலாம்
கள்ளுண் டந்தோ வெறிகொண்டாய் கலைத்தாய் என்னைக் கடந்தோர்கள்
எள்ளும் படிவந் தலைக்கின்றாய் எனக்கென் றெங்கே இருந்தாயோ. 10

2933 இருந்தாய் இங்கு கண்டவிடத் தேகா நின்றாய் அவ்விடத்தும்
பொருந்தாய் மீண்டும் புகுவாய்பின் போவாய் வருவாய் புகழ்த்தணிகை
மருந்தாய் நின்ற குகன்அடியை வழுத்தாய் எனையும் வலிக்கின்றாய்
திருந்தாய் நெஞ்சே நின்செயலைச் செப்ப எனக்குத் திடுக்கிடுமே. 11

திருச்சிற்றம்பலம்

20. புன்மை நினைந் திரங்கல்

கட்டளைக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

2934 மஞ்சட் பூச்சின் மினுக்கில்இ ளைஞர்கள்
மயங்க வேசெயும் வாள்விழி மாதர்பால்
கெஞ்சிக் கொஞ்சி நிறைஅழிந் துன்அருட்
கிச்சை நீத்துக் கிடந்தனன் ஆயினேன்
மஞ்சுற் றோங்கும் பொழில்தணி காசல
வள்ளல் என்வினை மாற்றுதல் நீதியே
தஞ்சத் தால்வந் தடைந்திடும் அன்பர்கள்
தம்மைக் காக்கும் தனிஅருட் குன்றமே. 1

2935 முலையைக் காட்டி மயக்கிஎன் ஆருயிர்
முற்றும் வாங்குறும் முண்டைகள் நன்மதி
குலையக் காட்டும் கலவிக்கி சைந்துநின்
கோலங் காணக் குறிப்பிலன் ஆயினேன்
நிலையைக் காட்டும்நல் ஆனந்த வெள்ளமே
நேச நெஞ்சகம் நின்றொளிர் தீபமே
கலையைக் காட்டும் மதிதவழ் நற்றணி
காச லத்தமர்ந் தோங்கதி காரனே. 2

2936 வஞ்ச மேகுடி கொண்டு விளங்கிய
மங்கை யர்க்கு மயல்உழந் தேஅவர்
நஞ்சம் மேவு நயனத்தில் சிக்கிய
நாயி னேன்உனை நாடுவ தென்றுகாண்
கஞ்சம் மேவும் அயன்புகழ் ஜோதியே 3
கடப்ப மாமலர்க் கந்தசு கந்தனே
தஞ்ச மேஎன வந்தவர் தம்மைஆள்
தணிகை மாமலைச் சற்குரு நாதனே.

2937 பாவம் ஓர்உரு வாகிய பாவையர்
பன்னு கண்வலைப் பட்டும யங்கியே
கோவை வாய்இதழ்க் கிச்சைய தாகிநின்
குரைக ழற்கன்பு கொண்டிலன் ஆயினேன்
மேவு வார்வினை நீக்கிஅ ளித்திடும்
வேல னேதணி காசல மேலனே
தேவர் தேடரும் சீர்அருட் செல்வனே
தெய்வ யானை திருமண வாளனே. 4

2938 கரத்தைக் காட்டியே கண்களை நீட்டியே
கடைய னேன்உயிர் வாட்டிய கன்னியர்
உரத்தைக் காட்டி மயக்கம யங்கினேன்
உன்றன் பாத உபயத்தைப் போற்றிலேன்
புரத்தைக் காட்டு நகையின்எ ரித்ததோர்
புண்ணி யற்குப் புகல்குரு நாதனே
வரத்தைக் காட்டும் மலைத்தணி கேசனே
வஞ்ச னேற்கருள் வாழ்வுகி டைக்குமோ. 5

2939 காசம் மேகம் கடும்பிணி சூலைமோ
காதி யால்தந்து கண்கலக் கம்செயும்
மோச மேநிசம் என்றுபெண் பேய்களை
முன்னி னேன்நினை முன்னிலன் ஆயினேன்
பாசம் நீக்கிடும் அன்பர்கள் போல்எனைப்
பாது காக்கும் பரம்உனக் கையனே
தேசம் யாவும் புகழ்தணி காசலச்
செல்வ மேஅருட் சிற்சுக வாரியே. 6

2940 ஐயம் ஏற்றுத் திரிபவர் ஆயினும்
ஆசை ஆம்பொருள் ஈந்திட வல்லரேல்
குய்யம் காட்டும்ம டந்தையர் வாய்ப்பட்டுன்
கோல மாமலர்ப் பாதம்கு றித்திலேன்
மைஉ லாம்பொழில் சூழும்த ணிகைவாழ்
வள்ள லேவள்ளி நாயக னேபுவிச்
சைய றும்பர ஞானிகள் போற்றிடும்
சாமி யேஎனைக் காப்பதுன் தன்மையே. 7

2941 கண்ணைக் காட்டி இருமுலை காட்டிமோ
கத்தைக் காட்டி அகத்தைக்கொண் டேஅழி
மண்ணைக் காட்டிடும் மாய வனிதைமார்
மாலைப் போக்கிநின் காலைப் பணிவனோ
பண்ணைக் காட்டி உருகும்அ டியர்தம் 8
பத்திக் காட்டிமுத் திப்பொருள் ஈதென
விண்ணைக் காட்டும் திருத்தணி காசல
வேல னேஉமை யாள்அருள் பாலனே.

2942 படியின் மாக்களை வீழ்த்தும் படுகுழி
பாவம் யாவும் பழகுறும் பாழ்ங்குழி
குடிகொள் நாற்றக் குழிசிறு நீர்தரும்
கொடிய ஊற்றுக் குழிபுழுக் கொள்குழி
கடிம லக்குழி ஆகும் கருக்குழிக்
கள்ள மாதரைக் கண்டுமை யங்கினேன்
ஒடிவில் சீர்த்தணி காசல நின்புகழ்
ஓதி லேன்எனக் குண்டுகொல் உண்மையே.

2943 கச்சுக் கட்டி மணங்கட்டிக் காமுகர்
கண்ணைக் கட்டி மனங்கட்டி வஞ்சகம்
வச்சுக் கட்டிய வன்கழற் கட்டியும்
மண்ணின் கட்டியும் மானும்மு லைக்கட்டிக்
கிச்சைக் கட்டிஇ டும்பைஎ னும்சுமை
ஏறக் கட்டிய எற்கருள் வாய்கொலோ
பிச்சைக் கட்டிய பித்தன் புதல்வனே
பெருமை கட்டும் பெருந்தணி கேசனே.

திருச்சிற்றம்பலம்

21. திருவடி சூட விழைதல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2944 தேனார் அலங்கல் குழல்மடவார் திறத்தின் மயங்காத் திறல்அடைதற்
கானார் கொடிஎம் பெருமான் தன் அருட்கண் மணியே அற்புதமே
கானார் பொழில்சூழ் திருத்தணிகைக் கரும்பே கருணைப் பெருங்கடலே
வானார் அமுதே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

2945 தாழும் கொடிய மடவியர் தம் சழக்கால் உழலாத் தகைஅடைந்தே
ஆழும் பரமா னந்தவெள்ளத் தழுந்திக் களிக்கும் படிவாய்ப்ப
ஊழ்உந் தியசீர் அன்பர்மனத் தொளிரும் சுடரே உயர்தணிகை
வாழும் பொருளே நின் திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

2946 மின்னுண் மருங்குல் பேதையர் தம் வெளிற்று மயக்குள் மேவாமே
உன்னும் பரம யோகியர் தம் உடனே மருவி உனைப்புகழ்வான்
பின்னும் சடைஎம் பெருமாற்கோர் பேறே தணிகைப் பிறங்கலின்மேல்
மன்னும் சுடரே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

2947 ஆறாத் துயரம் தருங்கொடியார்க் காளாய் உழன்றிங் கலையாதே
கூறாப் பெருமை நின் அடியார் கூட்டத் துடன்போய்க் குலாவும்வண்ணம்
தேறாப் பொருளாம் சிவத்தொழுகும் தேனே தணிகைத் திருமலைவாழ்
மாறாச் சுகமே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே.

2948 விரதம் அழிக்கும் கொடியார் தம் விழியால் மெலியா துனைப்புகழும்
சரதர் அவையில் சென்றுநின்சீர் தனையே வழுத்தும் தகைஅடைவான்
பரதம் மயில்மேல் செயும்தணிகைப் பரனே வெள்ளிப் பருப்பதம்வாழ்
வரதன் மகனே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே. 5

2949 வெயில்மேல் கீடம் எனமடவார் வெய்ய மயற்கண் வீழாமே
அயில்மேல் கரங்கொள் நினைப்புகழும் அடியார்சபையின் அடையும்வகைக்
குயில்மேல் குலவும் திருத்தணிகைக் குணப்பொற் குன்றே கொள்கலப
மயில்மேல் மணியே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே. 6

2950 தனமும் கடந்தே நாரியர்மால் தனையும் கடந்தே தவம்அழிக்கும்
சினமும் கடந்தே நினைச்சேர்ந்தோர் தெய்வச் சபையில் சேர்ந்திடவே
வனமும் கடமும் திகழ்தணிகை மலையின் மருந்தே வாக்கினொடு
மனமும் கடந்தோய் நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே. 7

2951 கல்லாக் கொடிய மடவார் தம் காமக் குழிக்கண் வீழாமே
நல்லார்க் கெல்லாம் நல்லவநின் நாமம் துதிக்கும் நலம்பெறவே
சொல்லாற் புனைந்த மாலையொடும் தொழுது தணிகை தனைத்துதிக்க
வல்லார்க் கருளும் நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே. 8

2952 கள்ளக் கயற்கண் மடவார்தம் காமத் துழலா துனை நினைக்கும்
உள்ளத் தவர்பால் சேர்ந்துமகிழ்ந் துண்மை உணர்ந்தங் குற்றிடுவான்
அள்ளற் பழனத் திருத்தணிகை அரசே ஞான அமுதளிக்கும்
வள்ளற் பெருமான் நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே. 9

2953 பாகைப் பொருவும் மொழியுடையீர் என்று மடவார்ப் பழிச்சாமல்
ஓகைப் பெறும்நின் திருத்தொண்டர் உடன்சேர்ந் துண்மை யுணர்ந்திடுவான்
தோகைப் பரிமேல் வருந்தெய்வ சூளா மணியே திருத்தணிகை
வாகைப் புயனே நின்திருத்தாள் அடியேன் முடிமேல் வைப்பாயே. 10

திருச்சிற்றம்பலம்

22. ஆற்றா விரக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2954 தணிகை மலையைச் சாரேனோ சாமி அழகைப் பாரேனோ
பிணிகை யறையைப் பேரேனோ பேரா அன்பு கூரேனோ
அணிசெய் அருள்நீர் ஆரேனோ ஆறாத் தாகம் தீரேனோ
பணிசெய் தொழும்பில் சேரேனோ பார்மீ திரங்கும் நீரேனே. 1

2955 எளியேன் என்ன இருப்பாரோ ஏழைக் கிரங்கும் விருப்பாரோ
அளியேன் பேர்நெஞ் சிருப்பாரோ அழியாக் காமம் திருப்பாரோ
களியேன் என்ன உருப்பாரோ கருதும் அருட்குக் கருப்பாரோ 2
தெளியேன் யான்என் செய்கேனே தென்பால் தணிகைப் பொருப்பாரே.

2956 செய்கொள் தணிகை நாடேனோ செவ்வேள் புகழைப் பாடேனோ
கைகள் கூப்பி ஆடேனோ கருணைக் கடலில் நீடேனோ
மெய்கொள் புளகம் மூடேனோ மெய்அன் பர்கள்பால் கூடேனோ
பொய்கொள் உலகோ டுடேனோ புவிமீ திருகால் மாடேனே. 3

2957 வந்தென் எதிரில் நில்லாரோ மகிழ ஒருசொல் சொல்லாரோ
முந்தம் மதனை வெல்லாரோ மோகம் தீரப் புல்லாரோ
கந்தன் எனும்பேர் அல்லாரோ கருணை நெஞ்சம் கல்லாரோ
சந்தத் தணிகை இல்லாரோ சகத்தில் எல்லாம் வல்லாரே. 4

2958 நாட்டும் தணிகை நண்ணேனோ நாதன் புகழை எண்ணேனோ
கூட்டும் தொழும்பு பண்ணேனோ குறையா அருள்நீர் உண்ணேனோ
சூட்டும் மயக்கை மண்ணேனோ தொழும்பர் இடத்தை அண்ணேனோ
காட்டும் அவர்தாள் கண்ணேனோ கழியா வாழ்க்கைப் புண்ணேனே. 5

2959 காமப் பயலைத் தடுப்பாரோ கடப்ப மலர்த்தார் கொடுப்பாரோ
ஏமத் தனத்தைக் கடுப்பாரோ என்மேல் அன்பை விடுப்பாரோ
மாமற் றொருவீ டடுப்பாரோ மனத்தில் கோபம் தொடுப்பாரோ
தாமத் தாழ்வைக் கெடுப்பாரோ தணிகை தனில்வேல் எடுப்பாரோ. 6

2960 காவி மலைக்கண் வதியேனோ கண்ணுள் மணியைத் துதியேனோ
பாவி மயலை மிதியேனோ பரமா னந்தத் துதியேனோ
ஓவில் அருளைப் பதியேனோ உயர்ந்த தொழும்பில் கதியேனோ
தாவில் சுகத்தை மதியேனோ சற்றும் பயனில் ஒதியேனே. 7

2961 வருந்தும் தனிமுன் மன்னாரோ வருத்தம் உனக்கேன் என்னாரோ
இருந்தென் இடத்தே துன்னாரோ இணைத்தாள் ஈய உன்னாரோ
பொருந்திங் கயலார் அன்னாரோ பொருள்ஈ தென்று பன்னாரோ
செருந்தி மலரும் திருத்தணிகைத் தேவர் எவர்க்கும் முன்னாரே. 8

2962 தணிகா சலம்போய்த் தழையேனோ சாமி திருத்தாள் விழையேனோ
பணிகா தலித்துப் பிழையேனோ பாடி மனது குழையேனோ
திணிகாண் உலகை அழையேனோ சேர்ந்தவ் வீட்டுள் நுழையேனோ
பிணிகாண் உலகில் பிறந்துழன்றே பேதுற் றலையும் பழையேனே. 9

2963 மன்னும் குவளை ஈயாரோ மதவேள் மதத்தைக் காயாரோ
இன்னும் கோபம் ஓயாரோ என்தாய் தனக்குத் தாயாரோ
துன்னும் இரக்கம் தோயாரோ துகளேன் துயரை ஆயாரோ
பன்னும் வளங்கள் செறிந்தோங்கும் பணைகொள் தணிகைத் தூயாரே. 10

23. ஏழைமையின் இரங்கல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2964 தேனே உளங்கொள் தெளிவே அகண்ட சிதம்மேவி நின்ற சிவமே
கோனே கனிந்த சிவபோத ஞான குருவே விளங்கு குகனே
தானே தனக்கு நிகராய் விளங்கு தணிகா சலத்தெம் அரசே
நானே ழைஇங்கு மனம்நொந்து நொந்து நலிகின்ற செய்கை நலமோ. 1

2965 நலமேவு தொண்டர் அயன்ஆதி தேவர் நவைஏக நல்கு தணிகா
சலமேவி உன்றன் இருதாள் புகழ்ந்து தரிசிப்ப தென்று புகலாய்
நிலமேவு கின்ற சிவயோகர் உள்ளம் நிகழ்கின்ற ஞான நிறைவே
வலமேவு வேல்கை ஒளிர்சேர் கலாப மயில்ஏறி நின்ற மணியே. 2

2966 மணியே கலாப மலைமேல் அமர்ந்த மதியே நினைச்சொல் மலரால்
அணியேன் நல்அன்பும் அமையேன் மனத்தில் அடியார் அடிக்கண் மகிழ்வாய்ப்
பணியேன் நினைந்து பதையேன் இருந்து பருகேன் உவந்த படியே
எணியே நினைக்கில் அவமாம்இவ் வேழை எதுபற்றி உய்வ தரசே. 3

2967 உய்வண்ணம் இன்றி உலகா தரத்தில் உழல்கின்ற மாய மடவார்
பொய்வண்ணம் ஒன்றின் மனமாழ்கி அன்மை புரிதந்து நின்ற புலையேன்
மெய்வண்ணம் ஒன்று தணிகா சலத்து மிளிர்கின்ற தேவ விறல்வேல்
கைவண்ண உன்றன் அருள்வண்ணம் ஆன கழல்வண்ணம் நண்ணல் உளதோ. 4

2968 நண்ணாத வஞ்சர் இடம்நாடி நெஞ்சம் நனிநொந்து நைந்து நவையாம்
புண்ணாகி நின்ற எளியேனை அஞ்சல் புரியாது நம்பொன் அடியை
எண்ணாத பாவி இவன்என்று தள்ளின் என்செய்வ துய்வ தறியேன்
தண்ணார் பொழிற்கண் மதிவந் துலாவு தணிகா சலத்தி றைவனே. 5

2969 இறையேனும் உன்றன் அடிஎண்ணி அங்கி இழுதென்ன நெஞ்சம் இளகேன்
மறைஓதும் உன்றன் அருள்பெற்ற தொண்டர் வழிபட் டலங்கல் அணியேன்
குறையோடும் இங்கு மயல்கொண்டு நின்ற கொடியேனை ஆளல் உளதோ
நிறையோர் வணங்கு தணிகா சலத்தில் நிலைபெற் றிருக்கும் அவனே. 6

2970 அவம்நாள் கழிக்க அறிவேன் அலாதுன் அடிபேணி நிற்க அறியேன்
தவம்நாடும் அன்ப ரொடுசேர வந்து தணிகா சலத்தை அடையேன்
எவன்நான் எனக்கும் அவண்நீ இருக்கும் இடம்ஈயில் உன்றன் அடியார்
இவன்ஆர் இவன்றன் இயல்பென்ன என்னில் எவன்என் றுரைப்பை எனையே. 7

2971 எனையான் அறிந்துன் அடிசேர உன்னை இறையேனும் நெஞ்சி னிதமாய்
நினையேன் அயர்ந்து நிலையற்ற தேகம் நிசம்என் றுழன்று துயர்வேன்
தனையேன் நின்அன்பன் எனவோதி லியாவர் தகும்என் றுரைப்பர் அரசே
வனைஏர் கொளுஞ்செய் தணிகா சலத்து மகிழ்வோ டமர்ந்த அமுதே.

2972 முதுவோர் வணங்கு தணிகா சலத்து முதலேஇவ் வேழை முறியேன்
மதுவால் மயங்கும் அளிபோல் மயங்கி மதியாது நின்ற பிழையால்
விதுவாகி அன்பர் உளம்மேவும் நீகை விடில்ஏழை எங்கு மெலிவேன்
இதுநீதி அல்ல எனஉன் றனக்கும் எவர்சொல்ல வல்லர் அரசே. 9

திருச்சிற்றம்பலம்

24. பணித்திறஞ் சாலாப் பாடிழிவு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2973 அடுத்திலேன் நின்அடியர் அவைக்குட் சற்றும்
அன்பிலேன் நின்தொழும்பன் ஆகேன் வஞ்சம்
தடுத்திலேன் தணிகைதனில் சென்று நின்னைத்
தரிசனம்செய் தேமதுரத் தமிழ்ச்சொல் மாலை
தொடுத்திலேன் அழுதுநின தருளை வேண்டித்
தொழுது தொழு தானந்தத் தூய்நீர் ஆடேன்
எடுத்திலேன் நல்லன்எனும் பெயரை அந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 1

2974 திரப்படுவேன் மையல்புரி மாய வாழ்வில்
தியங்குவேன் சிறிதேனும் தெளிவொன் றில்லேன்
மரப்படுவேன் சிதடருடன் திரிவேன் வீணே
மங்கையர் தம் கண்கள்எனும் வலைக்குள் வீழ்வேன்
கரப்பவர்க்கு முற்படுவேன் கருணை இல்லேன்
கண்அனையாய் நின் தணிகை மலையைக் காணேன்
இரப்பவர்க்கோர் அணுவளவும் ஈயேன் பேயேன்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 2

2975 செய்திலேன் நின்தொண்டர் அடிக்குற் றேவல்
திருத்தணிகை மலையைவலஞ் செய்து கண்ணீர்ப்
பெய்திலேன் புலன்ஐந்தும் ஒடுக்கி வீதல்
பிறத்தல்எனும் கடல்நீந்தேன் பெண்கள் தம்மை
வைதிலேன் மலர்கொய்யேன் மாலை சூட்டேன்
மணியே நின் திருப்புகழை வழுத்தேன் நின்பால்
எய்திலேன் இவ்வுடல்கொண் டேழை யேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 3

2976 சீர்கொண்டார் புகழ்தணிகை மலையிற் சேரேன்
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேநின்
பேர்கொண்டார் தமைவணங்கி மகிழேன் பித்தேன்
பெற்றதே அமையும்எனப் பிறங்கேன் மாதர்
வார்கொண்டார் முலைமலைவீழ்ந் துருள்வேன் நாளும் 4
வஞ்சமே செய்திடுவேன் மதிஒன் றில்லேன்
ஏர்கொண்டார் இகழ்ந்திடஇங் கேழை யேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே.

2977 காமாந்த காரியாய் மாதர் அல்குல்
கடல்வீழ்ந்தேன் மதிதாழ்ந்தேன் கவலை சூழ்ந்தேன்
நாமாந்த கனைஉதைத்த நாதன் ஈன்ற
நாயகமா மணியேநல் நலமே உன்றன்
பூமாந்தண் சேவடியைப் போற்றேன் ஓங்கும்
பொழில்கொள் தணி காசலத்தைப் புகழ்ந்து பாடேன்
ஏமாந்த பாவியேன் அந்தோ அந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 5

2978 நன்றறியேன் தீங்கனைத்தும் பறியேன் பொல்லா
நங்கையர் தம் கண்மாய நவையைச் சற்றும்
வென்றறியேன் கொன்றறிவார் தம்மைக் கூடும்
வேடனேன் திருத்தணிகை வெற்பின் நின்பால்
சென்றறியேன் இலையென்ப தறிவேன் ஒன்றும்
செய்தறியேன் சிவதருமம் செய்வோர் நல்லோர்
என்றறியேன் வெறியேன்இங் கந்தோ அந்தோ
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 6

2979 அல்லார்க்கும் குழலார்மேல் ஆசை வைப்பேன்
ஐயாநின் திருத்தாள்மேல் அன்பு வையேன்
செல்லார்க்கும் பொழில் தணிகை எங்கே என்று
தேடிடேன் நின்புகழைச் சிந்தை செய்யேன்
கல்லார்க்கும் கடுமனத்தேன் வன்க ணேன்புன்
கண்ணினேன் உதவாத கையேன் பொய்யேன்
எல்லார்க்கும் பொல்லாத பாவி யேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 7

2980 அரும்பாய நகைமடவார்க் காளாய் வாளா
அலைகின்றேன் அறிவென்ப தறியேன் நின்பால்
திரும்பாத பாதகனேன் திருஒன் றில்லேன்
திருத்தணிகை மலைக்கேகச் சிந்தை செய்யேன்
கரும்பாய வெறுத்துவேம் பருந்தும் பொல்லாக்
காக்கைஒத்தேன் சற்றேனும் கனிதல் இல்லா
இரும்பாய வன்நெஞ்சக் கள்வ னேன்யான்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 8

2981 அம்பாதல் நெடுங்கண்ணார்க் கிச்சை கொள்வேன்
அகமலர முகமலர்வோ டருள்செய் உன்றன்
செம்பாத மலர்ஏத்தேன் இலவு காத்தேன்
திருத்தணிகை யேநமது செல்வம் என்றே
நம்பாத கொடியேன்நல் லோரைக் கண்டால் 9
நாணிலேன் நடுங்கிலேன் நாயிற் பொல்லேன்
எம்பாத கத்தைஎடுத் தியார்க்குச் சொல்வேன்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே.

2982 பண்ணேன்நின் புகழ்சொல்வோர் தமக்குப் பூசை
பாடேன்நின் திருச்சீரைப் பரமன் ஈன்ற
கண்ணேநின் தணிகைதனைக் கண்டு போற்றேன்
கைகுவியேன் மெய்குளிரேன் கண்ணீர் பாயேன்
உண்ணேன் நல் ஆனந்த அமுதை அன்பர்
உடன் ஆகேன் ஏகாந்தத் துறஓர் எண்ணம்
எண்ணேன்வன் துயர்மண்ணேன் மனஞ்செம் புண்ணேன்
ஏன்பிறந்தேன் புவிச்சுமையாய் இருக்கின் றேனே. 10

திருச்சிற்றம்பலம்

25. காணாப் பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2983 வரங்கொள் அடியர் மனமலரில் மகிழ்வுற் றமர்ந்த மாமணியே
திரங்கொள் தணிகை மலைவாழும் செல்வப் பெருக்கே சிற்பரமே
தரங்கொள் உலக மயல்அகலத் தாழ்ந்துள் உருக அழுதழுது
கரங்கொள் சிரத்தோ டியான்உன்னைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 1

2984 வல்லி ஒருபால் வானவர் தம் மகளாண் டொருபால் வரமயில்மேல்
எல்லின் இலங்கு நெட்டிலைவேல் ஏந்தி வரும்என் இறையவனே
சொல்லி அடங்காத் துயர் இயற்றும் துகள்சேர் சனனப் பெருவேரைக்
கல்லி எறிந்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 2

2985 உருத்துள் இகலும் சூர்முதலை ஒழித்து வானத் தொண்பதியைத்
திருத்தும் அரைசே தென் தணிகைத் தெய்வ மணியே சிவஞானம்
அருத்தும் நினது திருவருள்கொண் டாடிப் பாடி அன்பதனால்
கருத்துள் உருகி நின் உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 3

2986 போதல் இருத்தல் எனநினையாப் புனிதர் சனனப் போரோடு
சாதல் அகற்றும் திருத்தணிகைச் சைவக் கனியே தற்பரமே
ஓதல் அறியா வஞ்சகர்பால் உழன்றே மாதர்க் குள்ளுருகும்
காதல் அகற்றி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 4

2987 வீட்டைப் பெறுவோர் உள்அகத்து விளங்கும் விளக்கே விண்ணோர்தம்
நாட்டை நலஞ்செய் திருத்தணிகை நகத்தில் அமர்ந்த நாயகமே
கேட்டைத் தருவஞ் சகஉலகில் கிடைத்த மாய வாழ்க்கைஎனும்
காட்டைக் கடந்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 5

2988 மட்டித் தளறு படக்கடலை மலைக்கும் கொடிய மாஉருவைச்
சட்டித் தருளும் தணிகையில்எந் தாயே தமரே சற்குருவே
எட்டிக் கனியாம் இவ்வுலகத் திடர்விட் டகல நின்பதத்தைக்
கட்டித் தழுவி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 6

2989 இலக்கம் அறியா இருவினையால் இம்மா னிடம்ஒன் றெடுத்தடியேன்
விலக்கம் அடையா வஞ்சகர்பால் வீணாட் போக்கி மேவிமனத்
தலக்கண் இயற்றும் பொய்வாழ்வில் அலைந்தேன் தணிகை அரசேஅக்
கலக்கம் அகன்று நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 7

2990 விரைவாய் கடப்பந் தார்அணிந்து விளங்கும் புயனே வேலோனே
தரைவாய் தவத்தால் தணிகைஅமர் தருமக் கடலே தனிஅடியேன்
திரைவாய் சனனக் கடற்படிந்தே தியங்கி அலைந்தேன் சிவஞானக்
கரைவாய் ஏறி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 8

2991 பள்ள உலகப் படுகுழியில் பரிந்தங் குழலா தானந்த
வெள்ளத் தழுந்தும் அன்பர்விழி விருந்தே தணிகை வெற்பரசே
உள்ளம் அகல அங்கும்இங்கும் ஓடி அலையும் வஞ்சநெஞ்சக்
கள்ளம் அகற்றி நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 9

2992 அடலை அணிந்தோர் புறங்காட்டில் ஆடும் பெருமான் அளித்தருளும்
விடலை எனமூ வரும்புகழும் வேலோய் தணிகை மேலோயே
நடலை உலக நடை அளற்றை நண்ணா தோங்கும் ஆனந்தக்
கடலை அடுத்து நின்உருவைக் கண்கள் ஆரக் கண்டிலனே. 10

திருச்சிற்றம்பலம்

26. பணித்திறஞ் சாலாமை

கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

2993 வஞ்சகப் பேதையர் மயக்கில் ஆழ்ந்துழல்
நெஞ்சகப் பாவியேன் நினைந்தி லேன்ஐயோ
வெஞ்சகப் போரினை விட்டு ளோர்புகழ்
தஞ்சகத் தணிகைவாழ் தரும வானையே. 1

2994 வான்நிகர் கூந்தலார் வன்க ணால்மிக
மால்நிகழ் பேதையேன் மதித்தி லேன்ஐயோ
தான்இரும் புகழ்கொளும் தணிகை மேல்அருள்
தேன்இருந் தொழுகிய செங்க ரும்பையே. 2

2995 கருங்கடு நிகர்நெடுங் கண்ணி னார்மயல்
ஒருங்குறு மனத்தினேன் உன்னி லேன் ஐயோ
தரும்புகழ் மிகுந்திடுந் தணிகை மாமலை
மருங்கமர்ந் தன்பருள் மன்னும் வாழ்வையே. 3

2996 வைவளர் வாட்கணார் மயக்கில் வீழ்ந்தறாப்
பொய்வளர் நெஞ்சினேன் போற்றி லேன்ஐயோ
மெய்வளர் அன்பர்கள் மேவி ஏத்துறும்
செய்வளர் தணிகையில் செழிக்கும் தேனையே. 4

2997 செழிப்படும் மங்கையர் தீய மாயையில்
பழிப்படும் நெஞ்சினேன் பரவி லேன்ஐயோ
வழிப்படும் அன்பர்கள் வறுமை நீக்கியே
பொழிற்படும் தணிகையில் பொதிந்த பொன்னையே. 5

2998 பொதிதரும் மங்கையர் புளகக் கொங்கைமேல்
வதிதரும் நெஞ்சினேன் மதித்தி லேன்ஐயோ
மதிதரும் அன்பர்தம் மனத்தில் எண்ணிய
கதிதரும் தணிகைவாழ் கற்ப கத்தையே. 6

திருச்சிற்றம்பலம்

27. குறைநேர்ந்த பத்து

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

2999 வான்பிறந்தார் புகழ்த்தணிகை மலையைக் கண்டு
வள்ளலே நின்புகழை மகிழ்ந்து கூறேன்
தேன்பிறந்த மலர்க்குழலார்க் காளா வாளா
திரிகின்றேன் புரிகின்றேன் தீமை நாளும்
ஊன்பிறந்த உடல்ஓம்பி அவமே வாழ்நாள்
ஒழிக்கின்றேன் பழிக்காளாய் உற்றேன் அந்தோ
ஏன்பிறந்தேன் ஏன்பிறந்தேன் பாவி யேன்யான்
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 1

3000 மெய்யாவோ நற்றணிகை மலையைச் சார்ந்து
மேன்மையுறும் நின்புகழை விரும்பி ஏத்தேன்
உய்யாவோ வல்நெறியேன் பயன்ப டாத
ஒதிஅனையேன் எட்டிதனை ஒத்தேன் அன்பர்
பொய்யாஓ டெனமடவார் போகம் வேட்டேன்
புலையனேன் சற்றேனும் புனிதம் இல்லேன்
ஐயாவோ நாணாமல் பாவி யேன்யான்
யார்க்கெடுத்தென் குறைதன்னை அறைகு வேனே. 2

3001 வாட்செல்லா நெடுங்கண்ணார் மயலில் வீழ்ந்து
மனம்போன வழிசென்று வருந்தா நின்றேன்
சேட்செல்லார் வரைத்தணிகைத் தேவ தேவே
சிவபெருமான் பெற்றபெருஞ் செல்வ மேநான்
நாட்செல்லா நின்றதினி என்செய் கேனோ
நாயினேன் பிழைதன்னை நாடி நின்பால்
கோட்சொல்லா நிற்பர்எனில் என்னா மோஎன்
குறையைஎடுத் தெவர்க்கெளியேன் கூறு கேனே. 3

3002 பொல்லாத மங்கையர்தம் மயற்குள் ஆகும்
புலையமனத் தால்வாடிப் புலம்பு கின்றேன்
கல்லாத பாவிஎன்று கைவிட் டாயோ
கருணைஉரு வாகியசெங் கரும்பே மேரு
வில்லான்தன் செல்வமே தணிகை மேவும்
மெய்ஞ்ஞான ஒளியேஇவ் வினையேன் துன்பம்
எல்லாம்நீ அறிவாயே அறிந்தும் வாரா
திருந்தால்என் குறையையெவர்க் கியம்பு கேனே. 4

3003 முன்அறியேன் பின்அறியேன் மாதர் பால்என்
மூடமனம் இழுத்தோடப் பின்சென் றெய்த்தேன்
புன்னெறியேன் பொய்யரொடும் பயின்றேன் நின்றன்
புனிதஅருட் கடலாடேன் புளகம் மூடேன்
பொன் அரையன் தொழும்சடிலப் புனிதன் ஈன்ற
புண்ணியமே தணிகைவளர் போத வாழ்வே
என்அரைசே என்அமுதே நின்பால் அன்றி
எவர்க்கெடுத்தென் குறைதன்னை இயம்பு கேனே. 5

3004 விடுமாட்டில் திரிந்துமட மாத ரார்தம்
வெய்யநீர்க் குழிவீழ்ந்து மீளா நெஞ்சத்
தடுமாற்றத் தொடும்புலைய உடலை ஓம்பிச்
சார்ந்தவர்க்கோர் அணுஅளவும் தான்ஈ யாது
படுகாட்டில் பலன்உதவாப் பனைபோல் நின்றேன்
பாவியேன் உடற்சுமையைப் பலரும் கூடி
இடுகாட்டில் வைக்குங்கால் என்செய் வேனோ
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 6

3005 மின்னைநேர் இடைமடவார் மயல்செய் கின்ற
வெங்குழியில் வீழ்ந்தழுந்தி வெறுத்தேன் போலப்
பின்னையே எழுந்தெழுந்து மீட்டும் மீட்டும்
பேய்போல வீழ்ந்தாடி மயற்குள் மூழ்கிப்
பொன்னையே ஒத்தஉன தருளை வேண்டிப்
போற்றாது வீணேநாள் போக்கு கின்ற
என்னையே யான் சிரிப்பேன் ஆகில் அந்தோ
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 7

3006 முலைஒருபால் முகம்ஒருபால் காட்டும் பொல்லா
மூடமட வார்கள்தமை முயங்கி நின்றேன்
இலைஒருபால் அனம்ஒருபால் மலஞ்சேர்த் துண்ணும்
ஏழைமதி யேன்தணிகை ஏந்த லேபொன்
மலைஒருபால் வாங்கியசெவ் வண்ண மேனி 8
வள்ளல்தரு மருந்தேநின் மலர்த்தாள் ஏத்தேன்
புலைஉருவா வஞ்சகநெஞ் சுடையேன் என்றன்
புன்மைதனை எவர்க்கெடுத்துப் புகலு வேனே.

3007 வேய்ப்பால்மென் தோள்மடவார் மறைக்கும் மாய
வெம்புழுச்சேர் வெடிப்பினிடை வீழ்ந்து நின்றேன்
தாய்ப்பாலை உண்ணாது நாய்ப்பால் உண்ணும்
தகையனேன் திருத்தணிகை தன்னைச் சார்ந்து
ஆய்ப்பாலை ஒருமருங்கான் ஈன்ற செல்வத்
தாரமுதே நின் அருளை அடையேன் கண்டாய்
ஏய்ப்பாலை நடுங்கருங்கல் போல்நின் றெய்த்தேன்
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 9

3008 வஞ்சமட மாதரார் போகம் என்னும்
மலத்தினிடைக் கிருமிஎன வாளா வீழ்ந்தேன்
கஞ்சமலர் மனையானும் மாலும் தேடக்
காணாத செங்கனியில் கனிந்த தேனே
தஞ்சம் என்போர்க் கருள்புரியும் வள்ளலேநல்
தணிகைஅரை சேஉனது தாளைப் போற்றேன்
எஞ்சல்இலா வினைச்சேம இடமாய் உற்றேன்
என்குறையை எவர்க்கெடுத்திங் கியம்பு கேனே. 10

திருச்சிற்றம்பலம்

28. முறையிட்ட பத்து

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3009 பொன்னைப் பொருளா நினைப்போர்பால் போந்து மிடியால் இரந்தலுத்தேன்
நின்னைப் பொருள்என் றுணராத நீசன் இனிஓர் நிலைகாணேன்
மின்னைப் பொருவும் சடைப்பவள வெற்பில் விளைந்த வியன்கரும்பே
முன்னைப் பொருளே தணிகையனே முறையோ முறையோ முறையேயோ 1

3010 மக்கட் பிறவி எடுத்தும்உனை வழுத்தாக் கொடிய மரம்அனையேன்
துக்கக் கடலில் வீழ்ந்துமனம் சோர்கின் றேன்ஓர் துணைகாணேன்
செக்கர்ப் பொருவு வடிவேற்கைத் தேவே தெவிட்டாத் தெள்ளமுதே
முக்கட் கரும்பின் முழுமுத்தே முறையோ முறையோ முறையேயோ. 2

3011 அன்பின் உனது திருஅடிக்கே ஆளாய்த் தொண்டொன் றாற்றாதே
துன்பின் உடையோர் பால்அணுகிச் சோர்ந்தேன் இனிஓர் துணைகாணேன்
என்பில் மலிந்த மாலைபுனை எம்மான் தந்த பெம்மானே
முன்பின் நடுவாய் முளைத்தோனே முறையோ முறையோ முறையேயோ. 3

3012 அருகா மலத்தின் அலைந்திரக்கம் அறியா வஞ்ச நெஞ்சகர்பால்
உருகா வருந்தி உழன்றலைந்தேன் உன்தாள் அன்றித் துணைகாணேன்
பெருகா தரவில் சிவன்பெறுநற் பேறே தணிகைப் பெருவாழ்வே
முருகா முகம்மூ விரண்டுடையாய் முறையோ முறையோ முறையேயோ. 4

3013 பொன்னின் றொளிரும் மார்பன்அயன் போற்றும் உன்தாள் புகழ்மறந்தே
கன்னின் றணங்கும் மனத்தார்பால் கனிந்தேன் இனிஓர் துணைகாணேன்
மின்னின் றிலங்கு சடைக்கனியுள் விளைந்த நறவே மெய்அடியார்
முன்னின் றருளும் தணிகையனே முறையோ முறையோ முறையேயோ.

3014 வெதிர்உள் ளவரின் மொழிகேளா வீண ரிடம்போய் மிகமெலிந்தே
அதிரும் கழற்சே வடிமறந்தேன் அந்தோ இனிஓர் துணைகாணேன்
எதிரும் குயில்மேல் தவழ்தணிகை இறையே முக்கண் இயற்கனியின்
முதிரும் சுவையே முதற்பொருளே முறையோ முறையோ முறையேயோ. 6

3015 ஈனத் திவறும் மனக்கொடியோர் இடம்போய் மெலிந்து நாள்தோறும்
ஞானத் திருத்தாள் துணைசிறிதும் நாடேன் இனிஓர் துணைகாணேன்
தானத் தறுகண் மலைஉரியின் சட்டை புனைந்தோன் தரும்பேறே
மோனத் தவர்தம் அகவிளக்கே முறையோ முறையோ முறையேயோ. 7

3016 தேவே எனநிற் போற்றாத சிறிய ரிடம்போய்த் தியங்கிஎன்றன்
கோவே நின்றன் திருத்தாளைக் குறிக்க மறந்தேன் துணைகாணேன்
மாவே ழத்தின் உரிபுனைந்த வள்ளற் கினிய மகப்பேறே
மூவே தனையை அறுத்தருள்வோய் முறையோ முறையோ முறையேயோ. 8

3017 வேதா நந்த னொடுபோற்றி மேவப் படும்நின் பதம்மறந்தே
ஈதா னம்தந் திடுவீர்என் றீன ரிடம்போய் இரந்தலைந்தேன்
போதா னந்தப் பரசிவத்தில் போந்த பொருளே பூரணமே
மூதா னந்த வாரிதியே முறையோ முறையோ முறையேயோ. 9

3018 வடியாக் கருணை வாரிதியாம் வள்ளல் உன்தாள் மலர்மறந்தே
கொடியா ரிடம்போய்க் குறையிரந்தேன் கொடியேன் இனிஓர்துணை காணேன்
அடியார்க் கெளிய முக்கணுடை அம்மான் அளித்த அருமருந்தே
முடியா முதன்மைப் பெரும்பொருளே முறையோ முறையோ முறையேயோ. 10

திருச்சிற்றம்பலம்

29. நெஞ்சவலங் கூறல்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3019 இழுதை நெஞ்சினேன் என்செய்வான் பிறந்தேன்
ஏழை மார்முலைக் கேவிழைந் துழன்றேன்
பழுதை பாம்பென மயங்கினன் கொடியேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
அழுது கண்கள் நீர் ஆர்ந்திடும் அடியர்
அகத்துள் ஊறிய ஆனந்த அமுதே
தொழுது மால்புகழ் தணிகைஎன் அரசே
தோன்ற லேபரஞ் சுடர்தரும் ஒளியே. 1

3020 வஞ்ச நெஞ்சினேன் வல்விலங் கனையேன்
மங்கை மார்முலை மலைதனில் உருள்வேன்
பஞ்ச பாதகம் ஓர்உரு எடுத்தேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்

கஞ்சன் மால்புகழ் கருணையங் கடலே
கண்கள் மூன்றுடைக் கரும்பொளிர் முத்தே
அஞ்சல் அஞ்சல்என் றன்பரைக் காக்கும்
அண்ண லேதணி காசலத் தரசே. 2

3021 மையல் நெஞ்சினேன் மதியிலேன் கொடிய
வாட்க ணார் முலை மலைக்குப சரித்தேன்
பைய பாம்பினை நிகர்த்தவெங் கொடிய
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
மெய்யர் உள்ளகம் விளங்கொளி விளக்கே
மேலை யோர்களும் விளம்பரும் பொருளே
செய்ய மேனிஎம் சிவபிரான் அளித்த
செல்வ மேதிருத் தணிகையந் தேவே. 3

3022 மதியில் நெஞ்சினேன் ஒதியினை அனையேன்
மாதர் கண்எனும் வலையிடைப் பட்டேன்
பதியில் ஏழையேன் படிற்றுவஞ் சகனேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
பொதியில் ஆடிய சிவபிரான் அளித்த
புண்ணி யாஅருட் போதக நாதா
துதிஇ ராமனுக் கருள் செயும் தணிகைத்
தூய னேபசுந் தோகைவா கனனே. 4

3023 துட்ட நெஞ்சினேன் எட்டியை அனையேன்
துயர்செய் மாதர்கள் சூழலுள் தினமும்
பட்ட வஞ்சனேன் என்செய உதித்தேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
நட்டம் ஆடிய நாயகன் அளித்த
நல்ல மாணிக்க நாயக மணியே
மட்ட றாப்பொழில் சூழ்திருத் தணிகை
வள்ள லேமயில் வாகனத் தேவே. 5

3024 காயும் நெஞ்சினேன் பேயினை அனையேன்
கடிகொள் கோதையர் கண்வலைப் பட்டேன்
பாயும் வெம்புலி நிகர்த்தவெஞ் சினத்தேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
தாயும் தந்தையும் சாமியும் எனது
சார்பும் ஆகிய தணிகையங் குகனே
ஆயும் கொன்றைசெஞ் சடைக்கணிந் தாடும்
ஐயர் தந்தருள் ஆனந்தப் பேறே. 6

3025 தீங்கு நெஞ்சினேன் வேங்கையை அனையேன்
தீய மாதர்தம் திறத்துழல் கின்றேன்
பாங்கி லாரொடும் பழகிய வெறியேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
தேங்கு கங்கையைச் செஞ்சடை இருத்தும்
சிவபி ரான்செல்வத் திருஅருட் பேறே
ஓங்கு நல்தணி காசலத் தமர்ந்த
உண்மை யேஎனக் குற்றிடும் துணையே. 7

3026 கள்ள நெஞ்சினேன் நஞ்சினை அனையேன்
கடிய மாதர்தம் கருக்குழி எனும்ஓர்
பள்ளம் ஆழ்ந்திடு புலையனேன் கொலையேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
வெள்ள வார்சடை வித்தகப் பெருமான்
வேண்ட நற்பொருள் விரித்துரைத் தோனே
புள் அ லம்புதண் வாவிசூழ் தணிகைப்
பொருப்ப மர்ந்திடும் புனிதபூ ரணனே. 8

3027 மத்த நெஞ்சினேன் பித்தரில் திரிவேன்
மாதர் கண்களின் மயங்கிநின் றலைந்தேன்
பத்தி என்பதோர் அணுவும்உற் றில்லேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
பித்த நாயகன் அருள்திருப் பேறே
பிரமன் மாலுக்கும் பேசரும் பொருளே
தத்தை பாடுறும் பொழிற்செறி தணிகா
சலத்தின் மேவிய தற்பர ஒளியே. 9

3028 அழுக்கு நெஞ்சினேன் பொய்யல தறியேன்
அணங்க னார்மயல் ஆழத்தில் விழுந்தேன்
பழுக்கும் மூடருள் சேர்ந்திடுங் கொடியேன்
பாவி யேன்எந்தப் பரிசுகொண் டடைவேன்
மழுக்கை ஏந்திய மாசிலா மணிக்குள்
மன்னி ஓங்கிய வளர்ஒளிப் பிழம்பே
வழுக்கி லார்புகழ் தணிகைஎன் அரசே
வள்ள லேஎன்னை வாழ்விக்கும் பொருளே. 10

திருச்சிற்றம்பலம்

30. ஆற்றாப் புலம்பல்

கொச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

3029 அண்ணாவோ என்அருமை ஐயாவோ பன்னிரண்டு
கண்ணாவோ வேல்பிடித்த கையாவோ செம்பவள
வண்ணாவோ நற்றணிகை மன்னாவோ என்றென்றே
எண்ணாவோ துன்பத் திருங்கடற்குள் மன்னினனே.

3030 மன்னப்பார் போற்று மணியேநின் பொன்னருளைத்
துன்னப்பா ராது சுழன்றேன் அருணைகிரி
தன்னப்பா நற்றணிகை தன்னில் அமர்ந்தருளும்
என்னப்பா இன்னும் இந்த ஏழைக் கிரங்காயோ 2

3031 காய்நின்ற நெஞ்சக் கடையேன் திருத்தணிகை
வாய்நின் றுனதுபுகழ் வாய்பாடக் கைகுவித்துத்
தூய்நின்றே தாளைத் தொழுதாடித் துன்பம்எலாம்
போய்நின் றடைவேனோ புண்ணியநின் பொன்னருளே. 3

3032 பொன்பிணிக்கும் நெஞ்சப் புலையேனை இவ்வுலகில்
வன்பிணிக்கோ பெற்று வளர்த்தாய் அறியேனே
என்பிணைத்தார் வள்ளற் கினிமை பெறும்மணியே
அன்பிணைத்தோர் போற்றும் அருட்டணிகை மன்னவனே 4

3033 வன்நோயும் வஞ்சகர்தம் வன்சார்பும் வன்துயரும்
என்னோயுங் கொண்டதனை எண்ணி இடிவேனோ
அன்னோ முறைபோகி ஐயா முறையேயோ
மன்னோ முறைதணிகை வாழ்வே முறையேயோ. 5

திருச்சிற்றம்பலம்

31. திருவருள் விழைதல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3034 தாணு ஈன்றருள் செல்வமே தணிகையில் சாமியே நினைஏத்திக்
காணு வேன்இலை அருள்இவண் புன்மையில் காலங்கள் கழிக்கின்றேன்
மாணும் அன்பர்கள் என்சொலார் ஐயநீ வந்தெனக் கருள்வாயேல்
நாணு வேன்அலன் நடுங்கலன் ஒடுங்கலன் நாயினும் கடையேனே. 1

3035 கடைப்பட் டேங்கும்இந் நாயினுக் கருள் தரக் கடவுள் நீ வருவாயேல்
மடைப்பட் டோங்கிய அன்பகத் தொண்டர்கள் வந்துனைத் தடுப்பாரேல்
தடைப்பட் டாய்எனில் என்செய்வேன் என்செய்வேன் தளர்வது தவிரேனே
அடைப்பட் டோங்கிய வயல்திருத் தணிகையம் பதிஅமர்ந் திடுதேவே. 2

3036 தேவ ரேமுதல் உலகங்கள் யாவையும் சிருட்டிஆ தியசெய்யும்
மூவ ரேஎதிர் வருகினும் மதித்திடேன் முருகநின் பெயர்சொல்வோர்
யாவ ரேனும்என் குடிமுழு தாண்டெனை அளித்தவர் அவரேகாண்
தாவ நாடொணாத் தணிகையம் பதியில்வாழ் சண்முகப் பெருமானே. 3

திருச்சிற்றம்பலம்

32. புண்ணியநீற்று மான்மியம்[1]

வண்ணக் கலிவிருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

3037 திவசங்கள் தொறும்கொண்டிடு தீமைப்பிணி தீரும்
பவசங்கடம் அறும் இவ்விக பரமும்புகழ் பரவும்
கவசங்கள்ள னச்சூழ்ந்துறு கண்ணேறது தவிரும்
சிவசண்முக எனவேஅருள் திருநீறணிந் திடிலே. 1

3038 மால்ஏந்திய குழலார் தரு மயல்போம்இடர் அயல்போம்
கோல்ஏந்திய அரசாட்சியும் கூடும்புகழ் நீடும்
மேல்ஏந்திய வானாடர்கள் மெலியாவிதம் ஒருசெவ்
வேல்ஏந்திய முருகாஎன வெண்ணீறணிந் திடிலே. 2

3039 தவம்உண்மையொ டுறும்வஞ்சகர் தம்சார்வது தவறும்
நவம்அண்மிய அடியாரிடம் நல்கும்திறன் மல்கும்
பவனன்புனல் கனல்மண்வெளி பலவாகிய பொருளாம்
சிவசண்முக எனவேஅருள் திருநீறணிந் திடிலே. 3

3040 துயில்ஏறிய சோர்வும்கெடும் துயரம் கெடும் நடுவன்
கையில்ஏறிய பாசம்துணி கண்டேமுறித் திடுமால்
குயில்ஏறிய பொழில்சூழ்திருக் குன்றேறி நடக்கும்
மயில் ஏறிய மணியேஎன வளர்நீறணிந் திடிலே. 4

3041 தேறாப்பெரு மனமானது தேறுந்துயர் மாறும்
மாறாப்பிணி மாயும்திரு மருவும்கரு ஒருவும்
வீறாப்பொடு வருசூர்முடி வேறாக்கிட வரும்ஓர்
ஆறாக்கரப்[2] பொருளேஎன அருள்நீறணிந் திடிலே. 5

3042 அமராவதி இறையோடுநல் அயனுந்திரு மாலும்
தமராகுவர் சிவஞானமுந் தழைக்குங்கதி சாரும்
எமராஜனை வெல்லுந்திறல் எய்தும்புகழ் எய்தும்
குமராசிவ குருவேஎனக் குளிர்நீறணிந் திடிலே. 6

3043 மேலாகிய உலகத்தவர் மேவித்தொழும் வண்ணம்
மாலாகிய இருள்நீங்கிநல் வாழ்வைப்பெறு வார்காண்
சீலாசிவ லீலாபர தேவாஉமை யவள் தன்
பாலாகதிர் வேலாஎனப் பதிநீறணிந் திடிலே. 7

3044 அகமாறிய நெறிசார்குவர் அறிவாம்உரு அடைவார்
மிகமாறிய பொறியின்வழி மேவாநல மிகுவார்
சகமாறினும் உயர்வானிலை தாமாறினும் அழியார்
முகமாறுடை முதல்வாஎன முதிர்நீறணிந் திடிலே. 8

1. புண்ணியநீற்று மான்மியம் தொ. வே., 1867 முதற்பதிப்பு. 1 முதல் 5 பாடல், ச. மு. க. 1924 பதிப்பு 1 முதல் 5 பாடல், ஊரன் அடிகள் பதிப்பு 1971 - 6 முதல் 10 பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளது.

2. ஆறக்கரம் என்பது ஆறாக்கரம் என நீட்டும் வழி நீட்டல். தொ.வே.

3045 சிந்தாமணி நிதிஐந்தரு செழிக்கும்புவ னமும்ஓர்
நந்தாஎழில் உருவும்பெரு நலனும்கதி நலனும்
இந்தாஎனத் தருவார்தமை இரந்தார்களுக் கெல்லாம்
கந்தாசிவன் மைந்தாஎனக் கனநீறணிந் திடிலே. 9

3046 எண்ணார்புரம் எரித்தார்அருள் எய்தும்திரு நெடுமால்
நண்ணாததோர் அடிநீழலில் நண்ணும்படி பண்ணும்
பண்ணார்மொழி மலையாள் அருள் பாலாபனி ரண்டு
கண்ணாஎம தண்ணாஎனக் கனநீறணிந் திடிலே. 10

திருச்சிற்றம்பலம்

33. உறுதி உணர்த்தல்

கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

3047 மஞ்சேர் பிணிமிடி யாதியை நோக்கி வருந்துறும்என்
நெஞ்சே தணிகையன் ஆறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
எஞ்சேல் இரவும் பகலும் துதிசெய் திடுதிகண்டாய்
அஞ்சேல் இதுசத் தியம்ஆம்என் சொல்லை அறிந்துகொண்டே 1

3048 அறியாத நம்பிணி ஆதியை நீக்கும் அருள்மருந்தின்
நெறியாம் தணிகையன் ஆறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
எறியா திரவும் பகலும் துதிசெய் திடுதிகண்டாய்
குறியா திருக்கலை என்ஆணை என்றன் குணநெஞ்சமே 2

3049 என்றே பிணிகள் ஒழியும்என் றேதுயர் எய்தியிடேல்
நின்றே தணிகையன் ஆறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
இன்றே இரவும் பகலும் துதிசெய் திடுதிகண்டாய்
நன்றேஎக் காலமும் வாழிய வாழிய நன்னெஞ்சமே 3

திருச்சிற்றம்பலம்

34. எண்ணத் தேங்கல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3050 போதுகொண் டவனும் மாலும்நின் றேத்தும்
புண்ணிய நின்திரு அடிக்கே
யாதுகொண் டடைகேன் யாதுமேற் செய்கேன்
யாதுநின் திருஉளம் அறியேன்
தீதுகொண் டவன்என் றெனக்கருள் சிறிதும்
செய்திடா திருப்பையோ சிறியோன்
ஏதிவன் செயல்ஒன் றிலைஎனக் கருதி
ஈவையோ தணிகைவாழ் இறையே. 1

3051 வாழ்வனோ நின்பொன் அடிநிழல் கிடைத்தே
வயங்கும்ஆ னந்தவெள் ளத்துள்
ஆழ்வனோ எளியேன் அல்லதிவ் வுலகில்
அறஞ்செயாக் கொடியர்பாற் சென்றே
தாழ்வனோ தாழ்ந்த பணிபுரிந் தவமே
சஞ்சரித் துழன்றுவெந் நரகில்
வீழ்வனோ இஃதென் றறிகிலேன் தணிகை
வெற்பினுள் ஒளிர்அருள் விளக்கே. 2

திருச்சிற்றம்பலம்

35. கையடை முட்டற் கிரங்கல்

கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

3052 கார்பூத்த கண்டத் தொடுமேவு முக்கட் கனிகனிந்து
சீர்பூத் தொழுகுசெந் தேனே தணிகையில் தெள் அமுதே
பேர்பூத்த ஒற்றியில் நின்முன்னர் ஏற்றிடப் பேதையனேன்
ஏர்பூத்த ஒண்பளி தம் [1]காண் கிலன் அதற் கென்செய்வனே. 1

3053 கருமருந் தாய மணிகண்ட நாயகன் கண்மணியாம்
அருமருந் தேதணி காசலம் மேவும்என் ஆருயிரே
திருமருங் கார்ஒற்றி யூர்மே வியநின் திருமுன்னராய்
ஒருமருங் கேற்றஎன் செய்கேன் கற்பூர ஒளியினுக்கே. 2

3054 பால்எடுத் தேத்தும்நற் பாம்பொடு வேங்கையும் பார்த்திடஓர்
கால்எடுத் தம்பலத் தாடும் பிரான்திருக் கண்மணியே
வேல்எடுத் தோய்தென் தணிகா சலத்தமர் வித்தகநின்
பால்எடுத் தேற்றக் கிடைக்குங் கொலோவெண் பளிதம்எற்கே. 3

3055 கண்ணப்பன் என்னும் திருப்பெய ரால்உல கம்புகழும்
திண்ணப்பன் ஏத்தும் சிவனார் மகனுக்குத் தெண்டன்இட்ட
விண்ணப்பம் ஒன்றிந்த மேதினி மாயையில் வீழ்வதறுத்
தெண்ணப் படும்நின் திருவருள் ஈகஇவ் வேழையற்கே. 4

திருச்சிற்றம்பலம்

36. அடியார் பணி அருள வேண்டல் (பொது)

கட்டளைக் கலித்துறை
அருட்பெருஞ்ஜோதி

3056 எப்பா லவரும் இறைஞ்சும் தணிகை இருந்தருள்என்
அப்பாஉன் பொன்னடிக் கென்நெஞ் சகம்இட மாக்கிமிக்க
வெப்பான நஞ்சன வஞ்சகர் பாற்செலும் வெந்துயர்நீத்
திப்பாரில் நின்அடி யார்க்கேவல் செய்ய எனக்கருளே. 1

1. பளிதம் - கற்பூரம். தொ. வே., பாடல் 01

3057 எய்யா தருள்தணி காசலம் மேவிய என்அருமை
ஐயா நினது திருவடி ஏத்திஅன் றோஅயனும்
செய்யாள் மருவும் புயனுடைத் தேவனும் சேணவனும்
நையாத ஆயுளும் செல்வமும் வண்மையும் நண்ணினரே. 2

3058 வாளாருங் கண்ணியர் மாயையை நீக்கி மலிகரணக்
கோளாகும் வாதனை நீத்துமெய்ஞ் ஞானக் குறிகொடுநின்
தாளாகும் நீழல் அதுசார்ந்து நிற்கத் தகுந்ததிரு
நாளாகும் நாள்எந்த நாள்அறி யேன்தணி காசலனே. 3

3059 ஊன்பார்க்கும் இவ்வுடற் பொய்மையைத் தேர்தல் ஒழிந்தவமே
மான்பார்க்கும் கண்ணியர் மையலில் வீழும் மயக்கம்அற்றே
தேன்பார்க்கும் சோலைத் தணிகா சலத்துன் திருஅழகை
நான்பார்க்கும் நாள்எந்த நாள்மயில் ஏறிய நாயகனே. 4

3060 என்னே குறைநமக் கேழைநெஞ் சேமயில் ஏறிவரும்
மன்னே எனநெடு மாலும் பிரமனும் வாழ்த்திநிற்கும்
தன்னேர் தணிகைத் தடமலை வாழும்நற் றந்தை அருள்
பொன்னேர் திருவடிப் போதுகண் டாய்நம் புகலிடமே. 5

3061 பேதைநெஞ் சேஎன்றன் பின்போந் திடுதிஇப் பேயுலக
வாதைஅஞ் சேல்பொறி வாய்க்கலங் கேல்இறை யும்மயங்கேல்
போதையெஞ் சேல்தணி காசலம் போய்அப் பொருப்பமர்ந்த
தாதைஅஞ் சேவடிக் கீழ்க்குடி யாகத் தயங்குவமே. 6

திருச்சிற்றம்பலம்

37. நாள் அவம்படாமை வேண்டல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3062 குன்றமொத் திலங்கு பணைமுலை நெடுங்கண்
கோதையர் பால்விரைந் தோடிச்
சென்றஇப் புலையேன் மனத்தினை மீட்டுன்
திருவடிக் காக்கும்நாள் உளதோ
என்தனி உயிரே என்னுடைப் பொருளே
என்உளத் தினிதெழும் இன்பே
மன்றலம் பொழில்சூழ் தணிகையம் பொருப்பில்
வந்தமர்ந் தருள்செயும் மணியே. 1

3063 மணிக்குழை அடர்த்து மதர்த்தவேற் கண்ணார்
வஞ்சக மயக்கினில் ஆழ்ந்து
கணிக்கரும் துயர்கொள் மனத்தினை மீட்டுன்
கழலடிக் காக்கும்நாள் உளதோ
குணிக்கரும் பொருளே குணப்பெருங் குன்றே
குறிகுணங் கடந்ததோர் நெறியை
எணிக்கரும் மாலும் அயனும்நின் றேத்தும்
எந்தையே தணிகைஎம் இறையே. 2

3064 இறைக்குளே உலகம் அடங்கலும் மருட்டும்
இலைநெடு வேற்கணார் அளகச்
சிறைக்குளே வருந்தும் மனத்தினை மீட்டுன்
திருவடிக் காக்கும்நாள் உளதோ
மறைக்குளே மறைந்தம் மறைக்கரி தாய
வள்ளலே உள்ளகப் பொருளே
அறைக்குளே மடவார்க் கனநடை பயிற்றும்
அணிதிருத் தணிகைவாழ் அரைசே. 3

3065 அரைமதிக் குறழும் ஒண்ணுதல் வாட்கண்
அலர்முலை அணங்கனார் அல்குல்
புரைமதித் துழலும் மனத்தினை மீட்டுன்
பொன்னடிக் காக்கும்நாள் உளதோ
பரைமதித் திடஞ்சேர் பராபரற் கருமைப்
பாலனே வேலுடை யவனே
விரைமதித் தோங்கும் மலர்ப்பொழில் தணிகை
வெற்பினில் ஒளிரும்மெய் விளக்கே. 4

3066 விளக்குறழ் மணிப்பூண் மேல்அணிந் தோங்கி
விம்முறும் இளமுலை மடவார்
களக்கினில் ஆழ்ந்த மனத்தினை மீட்டுன்
கழல்அடிக் காக்கும்நாள் உளதோ
அளக்கருங் கருணை வாரியே ஞான
அமுதமே ஆனந்தப் பெருக்கே
கிளக்கரும் புகழ்கொள் தணிகையம் பொருப்பில்
கிளர்ந்தருள் புரியும்என் கிளையே. 5

3067 கிளைக்குறும் பிணிக்கோர் உறையுளாம் மடவார்
கீழுறும் அல்குல்என் குழிவீழ்ந்
திளைக்கும்வன் கொடிய மனத்தினை மீட்டுன்
இணைஅடிக் காக்கும்நாள் உளதோ
விளைக்கும்ஆ னந்த வியன் தனி வித்தே
மெய்அடி யவர்உள விருப்பே
திளைக்குமா தவத்தோர்க் கருள்செயுந் தணிகைத்
தெய்வமே அருட்செழுந் தேனே. 6

3068 தேன்வழி மலர்ப்பூங் குழல்துடி இடைவேல்
திறல்விழி மாதரார் புணர்ப்பாம்
கான்வழி நடக்கும் மனத்தினை மீட்டுன்
கழல்வழி நடத்தும்நாள் உளதோ
மான்வழி வரும்என் அம்மையை வேண்டி
வண்புனத் தடைந்திட்ட மணியே
வான்வழி அடைக்கும் சிகரிசூழ் தணிகை
மாமலை அமர்ந்தருள் மருந்தே. 7

3069 மருந்தென மயக்கும் குதலைஅந் தீஞ்சொல்
வாணுதல் மங்கையர் இடத்தில்
பொருந்தென வலிக்கும் மனத்தினை மீட்டுன்
பொன்னடிக் காக்கும்நாள் உளதோ
அருந்திடா தருந்த அடியருள் ஓங்கும்
ஆனந்தத் தேறலே அமுதே
இருந்தரு முனிவர் புகழ்செயும் தணிகை
இனிதமர்ந் தருளிய இன்பே. 8

3070 இன்பமற் றுறுகண் விளைவிழி நிலமாம்
ஏந்திழை யவர்புழுக் குழியில்
துன்பமுற் றுழலும் மனத்தினை மீட்டுன்
துணையடிக் காக்கும்நாள் உளதோ
அன்பர்முற் றுணர அருள்செயும் தேவே
அரிஅயன் பணிபெரி யவனே
வன்பதை அகற்றி மன்பதைக் கருள்வான்
மகிழ்ந்துறும் தணிகையின் வாழ்வே. 9

3071 வாழும்இவ் வுலக வாழ்க்கையை மிகவும்
வலித்திடும் மங்கையர் தம்பால்
தாழும்என் கொடிய மனத்தினை மீட்டுன்
தாள்மலர்க் காக்கும்நாள் உளதோ
சூழும்நெஞ் சிருளைப் போழும்மெய் ஒளியே
தோற்றம்ஈ றற்றசிற் சுகமே
ஊழும்உற் பவம்ஓர் ஏழும்விட் டகல
உதவுசீர் அருட்பெருங் குன்றே. 10

திருச்சிற்றம்பலம்

38. அன்பிற் பேதுறல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3072 மூடர்கள் தமக்குள் முற்படுங் கொடிய
முறியனேன் தனக்குநின் அடியாம்
ஏடவிழ் கமலத் திருநற வருந்த
என்றுகொல் அருள்புரிந் திடுவாய்
ஆடர வணிந்தே அம்பலத் தாடும்
ஐயருக் கொருதவப் பேறே
கோடணி தருக்கள் குலவும்நற் றணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 1

3073 கற்றவர் புகழ்நின் திருவடி மலரைக்
கடையனேன் முடிமிசை அமர்த்தி
உற்றஇவ் வுலக மயக்கற மெய்மை
உணர்த்தும்நாள் எந்தநாள் அறியேன்

நற்றவர் உணரும் பரசிவத் தெழுந்த
நல்அருட் சோதியே நவைதீர்
கொற்றவேல் உகந்த குமரனே தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 2

3074 ஞாலவாழ் வெனும்புன் மலமிசைந் துழலும்
நாயினும் கடையஇந் நாய்க்குன்
சீலவாழ் வளிக்கும் திருவடிக் கமலத்
தேன்தரு நாளும்ஒன் றுண்டோ
ஆலவாய் உகந்த ஒருசிவ தருவில்
அருள்பழுத் தளிந்த செங் கனியே
கோலவா னவர்கள் புகழ்திருத் தணிகைக் 3
குன்றமர்ந் திடுகுணக் குன்றே.

3075 பவம்எனுங் கடற்குள் வீழ்ந்துழன் றேங்கும்
பாவியேன் தன்முகம் பார்த்திங்
கெவையும்நா டாமல் என்னடி நிழற்கீழ்
இருந்திடென் றுரைப்பதெந் நாளோ
சிவம்எனும் தருமக் கடல்அகத் தெழுந்த
தெள்ளிய அமுதமே தேனே
குவிமுலை வல்லிக் கொடியொடுந் தணிகைக் 4
குன்றமர்ந் திடுகுணக் குன்றே.

3076 முலைமுகங் காட்டி மயக்கிடும் கொடியார்
முன்புழன் றேங்கும்இவ் எளியேன்
நிலைமுகங் காட்டும் நின்திருப் பாத
நீழல்வந் தடையும்நாள் என்றோ
மலைமுகம் குழைய வளைத்திடும் தெய்வ
மணிமகிழ் கண்ணினுள் மணியே
கொலைமுகம் செல்லார்க் கருள்தருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 5

3077 வருபயன் அறியா துழன்றிடும் ஏழை
மதியினேன் உய்ந்திடும் வண்ணம்
ஒருவரும் நினது திருவடிப் புகழை
உன்னும்நாள் எந்தநாள் அறியேன்
அருவுரு ஆகும் சிவபிரான் அளித்த
அரும்பெறல் செல்வமே அமுதே
குருவுரு ஆகி அருள்தரும் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 6

3078 அழிதரும் உலக வாழ்வினை மெய்யென்
றலைந்திடும் பாவியேன் இயற்றும்
பழிதரும் பிழையை எண்ணுறேல் இன்று
பாதுகாத் தளிப்பதுன் கடனே

மொழிதரும் முக்கட் செங்கரும் பீன்ற
முத்தமே முத்தியின் முதலே
கொழிதரும் அருவி பொழிதருந் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 7

3079 நின்நிலை அறியா வஞ்சகர் இடத்தில்
நின்றுநின் றலை தரும் எளியேன்
தன்நிலை அறிந்தும் ஐயகோ இன்னும்
தயைஇலா திருந்தனை என்னே
பொன் நிலைப் பொதுவில் நடஞ்செயும் பவளப்
பொருப்பினுள் மலர்ந்திடும் பூவே
கொல்நிலை வேல்கைக் கொளும்திருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 8

3080 பாடிநின் திருச்சீர் புகழ்ந்திடாக் கொடிய
பதகர்பால் நாள்தொறும் சென்றே
வாடிநின் றேங்கும் ஏழையேன் நெஞ்ச
வாட்டம்இங் கறிந்திலை என்னே
ஆடிநீ றாடி அருள்செயும் பரமன்
அகம்மகிழ் அரும்பெறல் மருந்தே
கோடிலங் குயர்வான் அணிதிருத் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 9

3081 வன்பொடு செருக்கும் வஞ்சர்பால் அலையா
வண்ணம்இன் றருள்செயாய் என்னில்
துன்பொடு மெலிவேன் நின்திரு மலர்த்தாள்
துணைஅன்றித் துணைஒன்றும் காணேன்
அன்பொடும் பரமன் உமைகையில் கொடுக்க
அகமகிழ்ந் தணைக்கும்ஆர் அமுதே
கொன்பெறும் இலைவேல் கரத்தொடும் தணிகைக்
குன்றமர்ந் திடுகுணக் குன்றே. 10

திருச்சிற்றம்பலம்

39. கூடல் விழைதல்

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3082 சகம்ஆ றுடையார் அடையா நெறியார்
சடையார் விடையார் தனிஆனார்
உகமா ருடையார் உமைஓர் புடையார்
உதவும் உரிமைத் திருமகனார்
முகம்ஆ றுடையார் முகம்மா றுடையார்
எனவே எனது முன்வந்தார்
அகமா ருடையேன் பதியா தென்றேன்
அலைவாய் என்றார் அஃதென்னே.

3083 விதுவாழ் சடையார் விடைமேல் வருவார்
விதிமால் அறியா விமலனார்
மதுவாழ் குழலாள் புடைவாழ் உடையார்
மகனார் குகனார் மயில்ஊர்வார்
முதுவாழ் வடையா தவமே அலைவேன்
முன்வந் திடயான் அறியாதே
புதுவாழ் வுடையார் எனவே மதிபோய்
நின்றேன் அந்தோ பொல்லேனே. 2

3084 காயோ டுடனாய்க் கனல்கை ஏந்திக்
காடே இடமாக் கணங்கொண்ட
பேயோ டாடிப் பலிதேர் தரும்ஓர்
பித்தப் பெருமான் திருமகனார்
தாயோ டுறழும் தணிகா சலனார்
தகைசேர் மயிலார் தனிவேலார்
வேயோ டுறழ்தோள் பாவையர் முன்என்
வெள்வளை கொண்டார் வினவாமே. 3

3085 பொன்னார் புயனார் புகழும் புகழார்
புலியின் அதளார் புயம்நாலார்
தென்னார் சடையார் கொடிமேல் விடையார்
சிவனார் அருமைத் திருமகனார்
என்நா யகனார் என்னுயிர் போல்வார்
எழின்மா மயிலார் இமையோர்கள்
தந்நா யகனார் தணிகா சலனார்
தனிவந் திவண்மால் தந்தாரே. 4

3086 கல்லால் அடியார் கல்லடி உண்டார்
கண்டார் உலகங் களைவேதம்
செல்லா நெறியார் செல்லுறும் முடியார்
சிவனார் அருமைத் திருமகனார்
எல்லாம் உடையார் தணிகா சலனார்
என்நா யகனார் இயல்வேலார்
நல்லார் இடைஎன் வெள்வளை கொடுபின்
நண்ணார் மயில்மேல் நடந்தாரே. 5

3087 காரூர் சடையார் கனலார் மழுவார்
கலவார் புரமூன் றெரிசெய்தார்
ஆரூர் உடையார் பலிதேர்ந் திடும்எம்
அரனார் அருமைத் திருமகனார்
போரூர் உறைவார் தணிகா சலனார்
புதியார் எனஎன் முனம் வந்தார் 6
ஏரூர் எமதூ ரினில்வா என்றார்
எளியேன் ஏமாந் திருந்தேனே.

3088 கண்ணார் நுதலார் விடமார் களனார்
கரமார் மழுவார் களைகண்ணார்
பெண்ணார் புயனார் அயன்மாற் கரியார்
பெரியார் கைலைப் பெருமானார்
தண்ணார் சடையார் தருமா மகனார்
தணிகா சலனார் தனிவேலார்
எண்ணார் எளியாள் இவள்என் றெனையான்
என்செய் கேனோ இடர்கொண்டே. 7

3089 மழுவார் தருகைப் பெருமான் மகனார்
மயில்வா கனனார் அயில்வேலார்
தழுவார் வினையைத் தணியார் அணியார்
தணிகா சலனார் தம்பாதம்
தொழுவார் அழுவார் விழுவார் எழுவார்
துதியா நிற்பார் அவர்நிற்கப்
புழுவார் உடலோம் பிடும்என் முனர்வந்
தருள்தந் தருளிப் போனாரே. 8

3090 நிருத்தம் பயின்றார் கடல்நஞ் சயின்றார்
நினைவார் தங்கள் நெறிக்கேற்க
அருத்தம் பகர்வார் அருமைப் புதல்வர்
அறுமா முகனார் அயில்வேலார்
திருத்தம் பெறுவார் புகழும் தணிகைத்
திருமா மலையார் ஒருமாதின்
வருத்தம் பாரார் வளையும் தாரார்
வாரார் அவர்தம் மனம்என்னே. 9

3091 பிரமன் தலையில் பலிகொண் டெருதில்
பெயரும் பிச்சைப் பெருமானார்
திரமன் றினிலே நடனம் புரிவார்
சிவனார் மகனார் திறல்வேலார்
தரமன் றலைவான் பொழில்சார் எழில்சேர்
தணிகா சலனார் தமியேன் முன்
வரமன் றவுமால் கொளநின் றனனால்
மடவார் அலரால் மனநொந்தே. 10

40. தரிசனை வேட்கை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3092 வேல்கொளும் கமலக் கையனை எனையாள்
மெய்யனை ஐயனை உலக
மால்கொளும் மனத்தர் அறிவரும் மருந்தை
மாணிக்க மணியினை மயில்மேல்
கால்கொளும் குகனை எந்தையை எனது
கருத்தனை அயன்அரி அறியாச்
சால்கொளும் கடவுள் தனிஅருள் மகனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 1

3093 கண்ணனை அயனை விண்ணவர் கோனைக்
காக்கவைத் திட்டவேற் கரனைப்
பண்ணனை அடியர் பாடலுக் கருளும்
பதியினை மதிகொள்தண் அருளாம்
வண்ணனை எல்லா வண்ணமும் உடைய
வரதன்ஈன் றெடுத்தருள் மகனைத்
தண்ணனை எனது கண்ணனை யவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 2

3094 என்னுடை உயிரை யான் பெறும் பேற்றை
என்னுடைப் பொருளினை எளியேன்
மன்னுடைக் குருவின் வடிவினை என்கண்
மணியினை அணியினை வரத்தே
மின்னுடைப் பவள வெற்பினில் உதித்த
மிளிர்அருள் தருவினை அடியேன்
தன்னுடைத் தேவைத் தந்தையைத் தாயைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 3

3095 பரங்கிரி அமருங் கற்பகத் தருவைப்
பராபரஞ் சுடரினை எளியேற்
கிரங்கிவந் தருளும் ஏரகத் திறையை
எண்ணுதற் கரியபேர் இன்பை
உரங்கிளர் வானோர்க் கொருதனி முதலை
ஒப்பிலா தோங்கிய ஒன்றைத்
தரங்கிளர் அருண கிரிக்கருள் பவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 4

3096 அரும்பெறல் மணியை அமுதினை அன்பர்
அன்பினுக் கெளிவரும் அரசை
விரும்புமா தவத்தோர் உள்ளகத் தொளிரும்
விளக்கினை அளக்கரும் பொருளைக்

கரும்பினை என்னுட் கனிந்திடும் கனியை
முனிந்திடா தருள்அருட் கடலைத்
தரும்பர சிவத்துள் கிளர்ந்தொளிர் ஒளியைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 5

3097 மாரனை எரித்தோன் மகிழ்திரு மகனை
வாகையம் புயத்தனை வடிவேல்
தீரனை அழியாச் சீரனை ஞானச்
செல்வனை வல்வினை நெஞ்சச்
சூரனைத் தடிந்த வீரனை அழியாச்
சுகத்தனைத் தேன்துளி கடப்பந்
தாரனைக் குகன்என் பேருடை யவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 6

3098 வேதனைச் சிறைக்குள் வேதனை படச்செய்
விமலனை அமலனை அற்பர்
போதனைக் கடங்காப் போதனை ஐந்தாம்
பூதனை மாதவர் புகழும்
பாதனை உமையாள் பாலனை எங்கள்
பரமனை மகிழ்விக்கும் பரனைத்
தாதனை உயிர்க்குள் உயிரனை யவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 7

3099 குழகனை அழியாக் குமரனை அட்ட
குணத்தனைக் குறித்திடல் அறிதாம்
அழகனைச் செந்தில் அப்பனை மலைதோ
றாடல்வாழ் அண்ணலைத் தேவர்
கழகனைத் தண்டைக் காலனைப் பிணிக்கோர்
காலனை வேலனை மனதில்
சழகிலார்க் கருளும் சாமிநா தனைத்தென்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 8

3100 முத்தனை முத்திக் கொருதனி வித்தை
முதல்வனை முருகனை முக்கண்
பித்தனை அத்தன் எனக்கொளும் செல்வப்
பிள்ளையைப் பெரியவர் உளஞ்சேர்
சுத்தனைப் பத்தி வலைப்படும் அவனைத்
துரியனைத் துரியமும் கடந்த
சத்தனை நித்த நின்மலச் சுடரைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 9

3101 வள்அயில் கரங்கொள் வள்ளலை இரவில்
வள்ளிநா யகிதனைக் கவர்ந்த
கள்ளனை அடியர் உள்ளகத் தவனைக்
கருத்தனைக் கருதும்ஆ னந்த
வெள்ளம்நின் றாட அருள்குரு பரனை
விருப்புறு பொருப்பனை வினையைத்
தள்ளவந் தருள்செய் திடுந்தயா நிதியைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே. 10

திருச்சிற்றம்பலம்

41. நாள்எண்ணி வருந்தல்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3102 இன்னும் எத்தனை நாள்செலும் ஏழையேன் இடர்க்கடல் விடுத்தேற
மின்னும் வேற்படை மிளிர் தரும் கைத்தல வித்தகப் பெருமானே
துன்னும் நற்றணி காசலத் தமர்ந்தருள் தோன்றலே மயில்ஏறி
மன்னும் உத்தம வள்ளலே நின்திரு மனக்கருத் தறியேனே. 1

3103 ஈறி லாதநின் அருள்பெற எனக்கினும் எத்தனை நாட்செல்லும்
மாறி லாதவர் மனத்தொளிர் ஜோதியே மயில்மிசை வரும்வாழ்வே
தூறி லாவளச் சோலைசூழ் தணிகைவாழ் சுத்தசின் மயத்தேவே
ஊறி லாப்பெரு நிலையஆ னந்தமே ஒப்பிலான் அருட்பேறே. 2

3104 கூழை மாமுகில் அனையவர் முலைத்தலைக் குளித்துழன் றலைகின்ற
ஏழை நெஞ்சினேன் எத்தனை நாள்செல்லும் இடர்க்கடல் விடுத்தேற
மாழை மேனியன் வழுத்துமா ணிக்கமே வாழ்த்துவா ரவர்பொல்லா
ஊழை நீக்கிநல் அருள்தருந் தெய்வமே உத்தமச் சுகவாழ்வே. 3

3105 ஐய இன்னும்நான் எத்தனை நாள்செலும் அல்லல்விட் டருள்மேவத்
துய்ய நன்னெறி மன்னிய அடியர்தம் துயர்தவிர்த் தருள்வோனே
வெய்ய நெஞ்சினர் எட்டொணா மெய்யனே வேல்கொளும் கரத்தோனே
செய்ய மேனிஎஞ் சிவபிரான் பெற்றநற் செல்வனே திறலோனே. 4

3106 பாவி யேன் இன்னும் எத்தனை நாள்செலும் பருவரல் விடுத்துய்யக்
கூவி யேஅன்பர்க் கருள்தரும் வள்ளலே குணப்பெருங் குன்றேஎன்
ஆவி யேஎனை ஆள்குரு வடிவமே ஆனந்தப் பெருவாழ்வே
வாவி ஏர்தரும் தணிகைமா மலைமிசை மன்னிய அருள்தேனே. 5

3107 எளிய னேன் இன்னும் எத்தனை நாள்செலும் இடர்க்கடல் விடுத்தேற
ஒளிஅ னேகமாய்த் திரண்டிடும் சிற்பர உருவமே உருவில்லா
வெளிய தாகிய வத்துவே முத்தியின் மெய்ப்பயன் தருவித்தே
அளிய தாகிய நெஞ்சினர்க் கருள் தரும் ஆறுமா முகத்தேவே. 6

3108 தொண்ட னேன்இன்னும் எத்தனை நாள்செலும் துயர்க்கடல் விடுத்தேற
அண்ட னேஅண்டர்க் கருள்தரும் பரசிவன் அருளிய பெருவாழ்வே
கண்ட னேகர்வந் தனைசெய அசுரனைக் களைந்தருள் களைகண்ணே
விண்ட னேர்புகுஞ் சிகரிசூழ் தணிகையில் விளங்கிய வேலோனே. 7

3109 வீண னேன் இன்னும் எத்தனை நாள்செல்லும் வெந்துயர்க் கடல்நீந்தக்
காண வானவர்க் கரும்பெருந் தலைவனே கருணையங் கண்ணானே
தூண நேர்புயச் சுந்தர வடிவனே துளக்கிலார்க் கருள்ஈயும்
ஏண னேஎனை ஏன்றுகொள் தேசிக இறைவனே இயலோனே. 8

3110 கடைய னேன் இன்னும் எத்தனை நாள்செலும் கடுந்துயர்க் கடல்நீந்த
விடையின் ஏறிய சிவபிரான் பெற்றருள் வியன்திரு மகப்பேறே
உடைய நாயகிக் கொருபெருஞ் செல்வமே உலகெலாம் அளிப்போனே
அடைய நின்றவர்க் கருள்செயுந் தணிகைவாழ் ஆனந்தத் தெளிதேனே. 9

3111 பேய னேன்இன்னும் எத்தனை நாள்செலும் பெருந்துயர்க் கடல்நீந்த
மாய னேமுதல் வானவர் தமக்கருள் மணிமிடற் றிறையோர்க்குச்
சேய னேஅகந் தெளிந்தவர்க் கினியனே செல்வனே எனைக்காக்குந்
தாய னேஎன்றன் சற்குரு நாதனே தணிகைமா மலையானே. 10

திருச்சிற்றம்பலம்

42. ஏத்தாப் பிறவி இழிவு

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3112 கல்லை ஒத்தஎன் நெஞ்சினை உருக்கேன்
கடவுள் நின்அடி கண்டிட விழையேன்
அல்லை ஒத்தகோ தையர்க்குளங் குழைவேன்
அன்பி லாரொடும் அமர்ந்தவம் உழல்வேன்
தில்லை அப்பன்என் றுலகெடுத் தேத்தும்
சிவபி ரான்தருஞ் செல்வநின் தணிகை
எல்லை உற்றுனை ஏத்திநின் றாடேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 1

3113 மையல் நெஞ்சினேன் மதிசிறி தில்லேன்
மாத ரார்முலை மலைஇவர்ந் துருள்வேன்
ஐய நின்திரு அடித்துணை மறவா
அன்பர் தங்களை அடுத்துளம் மகிழேன்
உய்ய நின்திருத் தணிகையை அடையேன்
உடைய நாயகன் உதவிய பேறே
எய்ய இவ்வெறும் வாழ்க்கையில் உழல்வேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 2

3114 புலைய மாதர்தம் போகத்தை விழைந்தேன்
புன்மை யாவைக்கும் புகலிடம் ஆனேன்
நிலைய மாம்திருத் தணிகையை அடையேன்
நிருத்தன் ஈன்றருள் நின்மலக் கொழுந்தே
விலையி லாதநின் திருவருள் விழையேன்
வீணர் தங்களை விரும்பிநின் றலைந்தேன்
இலைஎ னாதணு வளவும் ஒன்றீயேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 3

3115 மருட்டு மங்கையர் புழுக்குழி ஆழ்ந்து
வருந்தி நாள்தொறும் மனம்இளைக் கின்றேன்
தெருட்டும் நின்திருத் தணிகையை அடையேன்
சிவபி ரான்பெற்ற செல்வமே நினது
அருட்டி றத்தினை நினைந்துநெக் குருகி
அழுது கண்கள்நீர் ஆர்ந்திட நில்லேன்
இருட்டு வாழ்க்கையில் இடறிவீழ் கின்றேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 4

3116 நச்சி லேபழ கியகருங் கண்ணார்
நலத்தை வேட்டுநற் புலத்தினை இழந்தேன்
பிச்சி லேமிக மயங்கிய மனத்தேன்
பேதை யேன்கொடும் பேயனேன் பொய்யேன்
சச்சி [1]லேசிவன் அளித்திடும் மணியே
தங்கமே உன்றன் தணிகையை விழையேன்
எச்சி லேவிழைந் திடர்உறு கின்றேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 5

3117 மின்னை அன்னநுண் இடைஇள மடவார்
வெய்ய நீர்க்குழி விழுந்திளைத் துழன்றேன்
புன்னை யஞ்சடை முன்னவன் அளித்த
பொன்னை அன்னநின் பூங்கழல் புகழேன்
அன்னை என்னநல் அருள்தரும் தணிகை
அடைந்து நின்றுநெஞ் சகம்மகிழ்ந் தாடேன்
என்னை என்னை இங் கென்செயல் [2]அன்னோ
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 6

3118 பட்டி மாடெனத் திரிதரும் மடவார்
பாழ்ங்கு ழிக்குள்வீழ்ந் தாழ்ந்திளைக் கின்றேன்
தட்டி லார்புகழ் தணிகையை அடையேன்
சம்பு என்னும்ஓர் தருஒளிர் கனியே

1. வித்து - விச்சு, என்றாற்போல, சத்து - சச்சு எனப் போலியாயிற்று. தொ. வே. பாடல் 05
2. அந்தோ - ஆ. பா, 1932, அன்னோ - ச.மு.க

ஒட்டி லேன்நினை உளத்திடை நினையேன்
உதவு றாதுநச் சுறுமரம் ஆனேன்
எட்டி என்முனம் இனிப்புறும் அந்தோ
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 7

3119 ஓங்கி நீண்டவாள் உறழ்கருங் கண்ணார்
உவர்ப்புக் கேணியில் உழைத்தகம் இளைத்தேன்
வீங்கி நீண்டதோர் ஒதிஎன நின்றேன்
விழலுக் கேஇறைத் தலைந்தனன் வீணே
தாங்கி னேன் உடற் சுமைதனைச் சிவனார்
தனய நின்திருத் தணிகையை அடையேன்
ஏங்கி னேன்சுழற் படுதுரும் பெனவே
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 8

3120 பண்அ ளாவிய மொழியினால் மயக்கும்
படிற்று மங்கையர் பால்விழை வுற்றேன்
தண்அ ளாவிய சோலைசூழ் தணிகைத்
தடத்த ளாவிய தருமநல் தேவே
பெண்அ ளாவிய புடையுடைப் பெருமான்
பெற்ற செல்வமே அற்றவர்க் கமுதே
எண்அ ளாவிய வஞ்சக நெஞ்சோ
டென்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 9

3121 கான்அ றாஅள கத்தியர் அளக்கர்
காமத் தாழ்ந்தகங் கலங்குற நின்றேன்
வான மேவுறும் பொழில்திருத் தணிகை
மலையை நாடிநின் மலர்ப்பதம் புகழேன்
ஞான நாயகி ஒருபுடை அமர்ந்த
நம்ப னார்க்கொரு நல்தவப் பேறே
ஈனன் ஆகிஇங் கிடர்ப்படு கின்றேன்
என்செய் வான்பிறந் தேன்எளி யேனே. 10

திருச்சிற்றம்பலம்

43. பவனிச் செருக்கு

கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3122 பூவுண்டவெள் விடைஏறிய புனிதன்தரு மகனார்
பாவுண்டதோர்[1] அமுதன்னவர் பசுமாமயில் மேல்வந்
தாவுண்டனர் எனதின்னலம் அறியார்என இருந்தால்
நாவுண்டவர் திருமுன்பிது நலம்அன்றுமக் கெனவே. 1

3123 ஒன்றார்புரம் எரிசெய்தவர் ஒற்றித்திரு நகரார்
மன்றார்நடம் உடையார்தரு மகனார்பசு மயில்மேல் 2
நின்றார்அது கண்டேன்கலை நில்லாது கழன்ற
தென்றாரொடு சொல்வேன்எனை யானேமறந் தேனே.

1. பாவுண்டதோர் – ச.மு.க, பாவுண்டதொர் – 1932, ஆ. பா

3124 வாரார்முலை உமையாள் திரு மணவாளர் தம் மகனார்
ஆராஅமு தனையார் உயிர் அனையார்அயில் அவனார்
நேரார்பணி மயிலின்மிசை நின்றார்அது கண்டேன்
நீரார்விழி இமைநீங்கின நிறைநீங்கிய தன்றே. 3

3125 ஒன்றோடிரண் டெனுங்கண்ணினர் உதவுந்திரு மகனார்
என்றோடிகல் எழிலார்மயில் ஏறிஅங் குற்றார்
நன்றோடினன் மகிழ்கூர்ந்தவர் நகைமாமுகங் கண்டேன்
கன்றோடின பசுவாடின கலைஊடின அன்றே. 4

3126 மலைவாங்குவில் அரனார்திரு மகனார்பசு மயிலின்
நிலைதாங்குற நின்றார்அவர் நிற்கும்நிலை கண்டேன்
அலைதீங்கின குழல்தூங்கின அகம்ஏங்கின அரைமேல்
கலைநீங்கின முலைவீங்கின களிஓங்கின அன்றே. 5

3127 மான்கண்டகை உடையார்தரு மகனார் தமை மயில்மேல்
நான்கண்டனன் அவர்கண்டனர் நகைகொண்டனம் உடனே
மீன்கண்டன விழியார்அது பழியாக விளைத்தார்
ஏன்கண்டனை என்றாள்அனை என்என்றுரைக் கேனே. 6

3128 செங்கண்விடை தனில்ஏறிய சிவனார்திரு மகனார்
எங்கண்மணி அனையார்மயி லின்மீதுவந் திட்டார்
அங்கண்மிக மகிழ்வோடுசென் றவர்நின்றது கண்டேன்
இங்கண்வளை இழந்தேன்மயல் உழந்தேன்கலை எனவே. 7

3129 தண்தேன்பொழி இதழிப்பொலி சடையார் தருமகனார்
பண்தேன்புரி தொடையார்தமைப் பசுமாமயில் மீதில்
கண்டேன்வளை காணேன்கலை காணேன்மிகு காமம்
கொண்டேன்துயில் விண்டேன்ஒன்றும் கூறேன்வரு மாறே. 8

3130 மாவீழ்ந்திடு விடையார்திரு மகனார்பசு மயில்மேல்
நீவீழ்ந்திட நின்றார் அது கண்டேன்என்றன் நெஞ்சே
பூவீழ்ந்தது வண்டேமதி போய்வீழ்ந்தது வண்டே
நாவீழ்ந்தது மலரேகழை நாண்வீழ்ந்தது மலரே. 9

3131 வெற்றார்புரம் எரித்தார்தரும் மேலார்மயில் மேலே
உற்றார் அவர் எழில்மாமுகத் துள்ளேநகை கண்டேன்
பொற்றார்புயங் கண்டேன் துயர் விண்டேன்எனைப் போல
மற்றார்பெறு வாரோஇனி வாழ்வேன்மனம் மகிழ்ந்தே. 10

44. திருவருள் விலாசப் பத்து

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3132 ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே அரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்
வீறுமுகப் பெருங்குணத்தோர் இதயத் தோங்கும்
விளக்கமே ஆனந்த வெள்ள மேமுன்
தேறுமுகப் பெரியஅருட் குருவாய் என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 1

3133 கண்ணிமதி புனைந்தசடைக் கனியே முக்கட்
கரும்பேஎன் கண்ணேமெய்க் கருணை வாழ்வே
புண்ணியநல் நிலைஉடையோர் உளத்தில் வாய்க்கும்
புத்தமுதே ஆனந்த போக மேசீர்
எண்ணியமெய்த் தவர்க்கெல்லாம் எளிதில் ஈந்த
என்அரசே ஆறுமுகத் திறையாம் வித்தே
திண்ணியஎன் மனம்உருக்கிக் குருவாய் என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 2

3134 நின்னிருதாள் துணைபிடித்தே வாழ்கின் றேன்நான்
நின்னைஅலால் பின்னைஒரு நேயம் காணேன்
என்னை இனித் திருவுளத்தில் நினைதி யோநான்
ஏழையினும் ஏழைகண்டாய் எந்தாய் எந்தாய்
பொன்னைஅன்றி விரும்பாத புல்லர் தம்பால்
போகல்ஒழிந் துன்பதமே போற்றும் வண்ணம்
சின்னம்அளித் தருட்குருவாய் என்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 3

3135 கல்விஎலாம் கற்பித்தாய் நின்பால் நேயம்
காணவைத்தாய் இவ்வுலகம் கானல் என்றே
ஒல்லும்வகை அறிவித்தாய் உள்ளே நின்றென்
உடையானே நின்அருளும் உதவு கின்றாய்
இல்லைஎனப் பிறர்பால்சென் றிரவா வண்ணம்
ஏற்றம்அளித் தாய்இரக்கம் என்னே என்னே
செல்வஅருட் குருவாகி நாயி னேனைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 4

3136 எந்தைபிரான் என்இறைவன் இருக்க இங்கே
என்னகுறை நமக்கென்றே இறுமாப் புற்றேன்
மந்தஉல கினில்பிறரை ஒருகா சுக்கும்
மதியாமல் நின்அடியே மதிக்கின் றேன்யான்
இந்தஅடி யேனிடத்துன் திருவு ளந்தான் 5
எவ்வாறோ அறிகிலேன் ஏழை யேனால்
சிந்தைமகிழ்ந் தருட்குருவாய் என்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.

3137 மாறாத பெருஞ்செல்வ யோகர் போற்றும்
மாமணியே ஆறுமுக மணியே நின்சீர்
கூறாத புலைவாய்மை உடையார் தம்மைக்
கூடாத வண்ணம்அருட் குருவாய் வந்து
தேறாத நிலைஎல்லாம் தேற்றி ஓங்கும்
சிவஞானச் சிறப்படைந்து திகைப்பு நீங்கிச்
சீறாத வாழ்விடைநான் வாழ என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 6

3138 கற்றறிந்த மெய்உணர்ச்சி உடையோர் உள்ளக்
கமலத்தே ஓங்குபெருங் கடவு ளேநின்
பொற்றகைமா மலரடிச்சீர் வழுத்து கின்ற
புண்ணியர்தங் குழுவில்எனைப் புகுத்தி என்றும்
உற்றவருள் சிந்தனைதந் தின்ப மேவி
உடையாய்உன் அடியவன்என் றோங்கும் வண்ணம்
சிற்றறிவை அகற்றிஅருட் குருவாய் என்னைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 7

3139 ஞாலம்எல்லாம் படைத்தவனைப் படைத்த முக்கண்
நாயகனே வடிவேற்கை நாத னேநான்
கோலம்எலாம் கொடியேன்நற் குணம்ஒன் றில்லேன்
குற்றமே விழைந்தேன் இக் கோது ளேனைச்
சாலம்எலாம் செயும்மடவார் மயக்கின் நீக்கிச்
சன்மார்க்கம் அடையஅருள் தருவாய் ஞானச்
சீலம்எலாம் உடையஅருட் குருவாய் வந்து
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 8

3140 கற்பனையே எனும்உலகச் சழக்கில் அந்தோ
கால்ஊன்றி மயங்குகின்ற கடைய னேனைச்
சொற்பனம்இவ் வுலகியற்கை என்று நெஞ்சம்
துணிவுகொளச் செய்வித்துன் துணைப்பொற் றாளை
அற்பகலும் நினைந்துகனிந் துருகி ஞான
ஆனந்த போகம்உற அருளல் வேண்டும்
சிற்பரசற் குருவாய்வந் தென்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே. 9

3141 பன்னிருகண் மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே ஆறுமுகம் படைத்த கோவே
என்னிருகண் மணியேஎந் தாயே என்னை
ஈன்றானே என்அரசே என்றன் வாழ்வே
மின்னிருவர் புடைவிளங்க மயில்மீ தேறி
விரும்பும்அடி யார்காண மேவுந் தேவே 10
சென்னியில்நின் அடிமலர்வைத் தென்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.

45. திருவருட் பேற்று விழைவு

எழுசீர்[1] கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3142 உலகம் பரவும் பரஞ்சோதி உருவாம் குருவே உம்பரிடைக்
கலகம் தருசூர்க் கிளைகளைந்த கதிர்வேல் அரசே கவின்தருசீர்த்
திலகம் திகழ்வாள் நுதற்பரையின் செல்வப் புதல்வா திறல்அதனால்
இலகும் கலப மயிற்பரிமேல் ஏறும் பரிசென் இயம்புகவே. 1

3143 புகுவா னவர்தம் இடர்முழுதும் போக்கும் கதிர்வேல் புண்ணியனே
மிகுவான் முதலாம் பூதம்எலாம் விதித்தே நடத்தும் விளைவனைத்தும்
தகுவான் பொருளாம் உனதருளே என்றால் அடியேன் தனை இங்கே
நகுவான் வருவித் திருள்நெறிக்கே நடத்தல் அழகோ நவிலாயே. 2

3144 அழகா அமலா அருளாளா அறிவா அறிவார் அகம்மேவும்
குழகா குமரா எனைஆண்ட கோவே நின்சீர் குறியாரைப்
பழகா வண்ணம் எனக்கருளிப் பரனே நின்னைப் பணிகின்றோர்க் 3
கழகா தரவாம் பணிபுரிவார் அடியார்க் கடிமை ஆக்குகவே.

3145 ஆக்கும் தொழிலால் களித்தானை அடக்குந் தொழிலால் அடக்கிப்பின்
காக்கும் தொழிலால் அருள்புரிந்த கருணைக் கடலே கடைநோக்கால்
நோக்கும் தொழில்ஓர் சிறிதுன்பால் உளதேல் மாயா நொடிப்பெல்லாம்
போக்கும் தொழில்என் பால்உண்டாம் இதற்கென் புரிவேன் புண்ணியனே. 4

3146 புரிவேன் விரதம் தவந்தானம் புரியா தொழிவேன் புண்ணியமே
பரிவேன் பாவம் பரிவேன்இப் பரிசால் ஒன்றும் பயன்காணேன்
திரிவேன் நினது புகழ்பாடிச் சிறியேன் இதனைத் தீர்வேனேல்
எரிவேன் எரிவாய் நரகத்தே இருப்பேன் இளைப்பேன் விளைப்பேனே. 5

3147 விளைப்பேன் பவமே அடிச்சிறியேன் வினையால் விளையும் வினைப்போகம்
திளைப்பேன் எனினும் கதிர்வடிவேல் தேவே என்னும் திருமொழியால்
இளைப்பேன் அலன்இங் கியம்புகிற்பேன் எனக்கென் குறையுண் டெமதூதன்
வளைப்பேன் எனவந் திடில்அவனை மடிப்பேன் கருணை வலத்தாலே. 6

3148 வலத்தால் வடிவேல் கரத்தேந்தும் மணியே நின்னை வழுத்துகின்ற
நலத்தால் உயர்ந்த பெருந்தவர்பால் நண்ணும் பரிசு நல்கினையேல்
தலத்தால் உயர்ந்த வானவரும் தமியேற் கிணையோ சடமான
மலத்தால் வருந்தாப் பெருவாழ்வால் மகிழ்வேன் இன்பம் வளர்வேனே. 7

3149 இன்பப் பெருக்கே அருட்கடலே இறையே அழியா இரும்பொருளே
அன்பர்க் கருளும் பெருங்கருணை அரசே உணர்வால் ஆம்பயனே
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி வடிவேல் மணியே அணியேஎன்
துன்பத் திடரைப் பொடியாக்கிச் சுகந்தந் தருளத் துணியாயே 8

1. எழுசீர். தொ. வே. அறுசீர். ச.மு.க., ஆ. பா.

3150 சுகமே அடியர் உளத்தோங்கும் சுடரே அழியாத் துணையேஎன்
அகமே புகுந்த அருள்தேவே அருமா மணியே ஆரமுதே
இகமே பரத்தும் உனக்கன்றி எத்தே வருக்கும் எமக்கருள
முகமே திலைஎம் பெருமானே நினக்குண் டாறு முகமலரே. 9

3151 ஆறு முகமும் திணிதோள்ஈ ராறும் கருணை அடித்துணையும்
வீறு மயிலும் தனிக்கடவுள் வேலும் துணைஉண் டெமக்கிங்கே
சீறும் பிணியும் கொடுங்கோளும் தீய வினையும் செறியாவே
நாறும் பகட்டான் அதிகாரம் நடவா துலகம் பரவுறுமே. 10

திருச்சிற்றம்பலம்

46. செல்வச் சீர்த்தி மாலை

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3152 அடியார்க் கெளியர் எனும்முக்கண் ஐயர் தமக்கும் உலகீன்ற
அம்மை தனக்கும் திருவாய்முத் தளித்துக் களிக்கும் அருமருந்தே
கடியார் கடப்ப மலர்மலர்ந்த கருணைப் பொருப்பே கற்பகமே
கண்ணுள் மணியே அன்பர்மனக் கமலம் விரிக்கும் கதிரொளியே
படியார் வளிவான் தீ முதல்ஐம் பகுதி யாய பரம்பொருளே
பகர்தற் கரிய மெய்ஞ்ஞானப் பாகே அசுரப் படைமுழுதும்
தடிவாய் என்னச் சுரர்வேண்டத் தடிந்த வேற்கைத் தனிமுதலே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 1

3153 காயா தளியக் கனிந்தன்பால் கல்லால் அடிநின் றருள்ஒழுகும்
கனியுட் சுவையே அடியர்மனக் கவலை அகற்றும் கற்பகமே
ஓயா துயிர்க்குள் ஒளித்தெவையும் உணர்த்தி அருளும் ஒன்றேஎன்
உள்ளக் களிப்பே ஐம்பொறியும் ஒடுக்கும் பெரியோர்க் கோர்உறவே
தேயாக் கருணைப் பாற்கடலே தெளியா அசுரப் போர்க்கடலே
தெய்வப் பதியே முதற்கதியே திருச்செந் தூரில் திகழ்மதியே
தாயாய் என்னைக் காக்கவரும் தனியே பரம சற்குருவே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 2

3154 நாணும் அயன்மால் இந்திரன்பொன் நாட்டுப் புலவர் மணம்வேட்ட
நங்கை மார்கள் மங்கலப்பொன் நாண்காத் தளித்த நாயகமே
சேணும் புவியும் பாதலமும் தித்தித் தொழுகும் செந்தேனே
செஞ்சொற் சுவையே பொருட்சுவையே சிவன்கைப் பொருளே செங்கழுநீர்ப்
பூணும் தடந்தோட்பெருந் தகையே பொய்யர் அறியாப் புண்ணியமே
போகங் கடந்த யோகியர்முப் போகம் விளைக்கும் பொற்புலமே
தாணு என்ன உலகமெலாம் தாங்கும் தலைமைத் தயாநிதியே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 3

3155 முன்னைப் பொருட்கு முதற்பொருளே முடியா தோங்கும் முதுமுறையே
முக்கட் கரும்பீன் றெடுத்தமுழு முத்தே முதிர்ந்த முக்கனியே
பொன்னைப் புயங்கொண் டவன்போற்றும் பொன்னே புனித பூரணமே
போத மணக்கும் புதுமலரே புலவர் எவரும் புகும்பதியே
மின்னைப் பொருவும் உலகமயல் வெறுத்தோர் உள்ள விளக்கொளியே
மேலும் கீழும் நடுவும்என விளங்கி நிறைந்த மெய்த்தேவே
தன்னைப் பொருவும் சிவயோகம் தன்னை உடையோர் தம்பயனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 4

3156 பித்தப் பெருமான் சிவபெருமான் பெரிய பெருமான் தனக்கருமைப்
பிள்ளைப் பெருமான் எனப்புலவர் பேசிக் களிக்கும் பெருவாழ்வே
மத்தப் பெருமால் நீக்கும்ஒரு மருந்தே எல்லாம் வல்லோனே
வஞ்சச் சமண வல்இருளை மாய்க்கும் ஞான மணிச்சுடரே
அத்தக் கமலத் தயிற்படைகொள்அரசே மூவர்க் கருள்செய்தே
ஆக்கல் அளித்தல் அழித்தல்எனும் அம்முத் தொழிலும் தருவோனே
சத்த உலக சராசரமும் தாளில் ஒடுக்கும் தனிப்பொருளே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 5

3157 ஏதம் அகற்றும் என்அரசே என்ஆ ருயிரே என்அறிவே
என்கண் ஒளியே என்பொருளே என்சற் குருவே என்தாயே
காத மணக்கும் மலர் கடப்பங் கண்ணிப் புயனே காங்கெயனே
கருணைக் கடலே பன்னிருகண் கரும்பே இருவர் காதலனே
சீத மதியை முடித்தசடைச் சிவனார் செல்வத் திருமகனே
திருமா லுடன்நான் முகன்மகவான் தேடிப் பணியும் சீமானே
சாதல் பிறத்தல் தவிர்த்தருளும் சரணாம் புயனே சத்தியனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 6

3158 வன்பிற் பொதிந்த மனத்தினர்பால் வருந்தி உழல்வேன் அல்லால்உன்
மலர்த்தாள் நினையேன் என்னேஇம் மதியி லேனும் உய்வேனோ
அன்பிற் கிரங்கி விடமுண்டோன் அருமை மகனே ஆரமுதே
அகிலம் படைத்தோன் காத்தோன்நின் றழித்தோன் ஏத்த அளித்தோனே
துன்பிற் கிடனாம் வன்பிறப்பைத் தொலைக்கும் துணையே சுகோதயமே
தோகை மயில்மேல் தோன்றுபெருஞ்சுடரே இடராற் சோர்வுற்றே
தன்பிற் படும்அச் சுரர்ஆவி தரிக்க வேலைத் தரித்தோனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 7

3159 மாலும் அயனும் உருத்திரனும் வானத் தவரும் மானிடரும்
மாவும் புள்ளும் ஊர்வனவும் மலையும் கடலும் மற்றவையும்
ஆலும் கதியும் சதகோடி அண்டப் பரப்புந் தானாக
அன்றோர் வடிவம் மேருவிற்கொண்ட ருளுந் தூய அற்புதமே
வேலும் மயிலும் கொண்டுருவாய் விளையாட்டி யற்றும் வித்தகமே 8
வேதப் பொருளே மதிச்சடைசேர் விமலன் தனக்கோர் மெய்ப்பொருளே
சாலும் சுகுணத் திருமலையே தவத்தோர் புகழும் தற்பரனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே.

3160 ஏதம் நிறுத்தும் இவ்வுலகத் தியல்பின் வாழ்க்கை யிடத்தெளியேன்
எண்ணி அடங்காப் பெருந்துயர்கொண் டெந்தாய் அந்தோ இளைக்கின்றேன்
வேதம் நிறுத்தும் நின்கமல மென்தாள் துணையே துணைஅல்லால்
வேறொன் றறியேன் அஃதறிந்திவ் வினையேற் கருள வேண்டாவோ
போத நிறுத்தும் சற்குருவே புனித ஞானத் தறிவுருவே
பொய்யர் அறியாப் பரவெளியே புரம்மூன் றெரித்தோன் தரும்ஒளியே
சாதல் நிறுத்தும் அவருள்ளத் தலம்தாள் நிறுத்தும் தயாநிதியே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 9

3161 முருகா எனநின் றேத்தாத மூட ரிடம்போய் மதிமயங்கி
முன்னும் மடவார் முலைமுகட்டின் முயங்கி அலைந்தே நினைமறந்தேன்
உருகா வஞ்ச மனத்தேனை உருத்தீர்த் தியமன் ஒருபாசத்
துடலம் நடுங்க விசிக்கில்அவர்க் குரைப்ப தறியேன் உத்தமனே
பருகா துள்ளத் தினித்திருக்கும் பாலே தேனே பகர்அருட்செம்
பாகே தோகை மயில்நடத்தும் பரமே யாவும் படைத்தோனே
தருகா தலித்தோன் முடிகொடுத்த தரும துரையே தற்பரனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே. 10

திருச்சிற்றம்பலம்

47. செவி அறிவுறுத்தல்

கலிவிருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3162 உலகியற் கடுஞ்சுரத் துழன்று நாள்தொறும்
அலகில்வெந் துயர்கிளைத் தழுங்கு நெஞ்சமே
இலகுசிற் பரகுக என்று நீறிடில்
கலகமில் இன்பமாம் கதிகி டைக்குமே. 1

3163 மருளுறும் உலகிலாம் வாழ்க்கை வேண்டியே
இருளுறு துயர்க்கடல் இழியும் நெஞ்சமே
தெருளுறு நீற்றினைச் சிவஎன் றுட்கொளில்
அருளுறு வாழ்க்கையில் அமர்தல் உண்மையே. 2

3164 வல்வினைப் பகுதியால் மயங்கி வஞ்சர் தம்
கொல்வினைக் குழியிடைக் குதிக்கும் நெஞ்சமே
இல்வினைச் சண்முக என்று நீறிடில்
நல்வினை பழுக்கும்ஓர் நாடு வாய்க்குமே 3

3165 கடும்புலைக் கருத்தர்தம் கருத்தின் வண்ணமே
விடும்புனல் எனத்துயர் விளைக்கும் நெஞ்சமே
இடும்புகழ்ச் சண்முக என்று நீறிடில்
நடுங்கும்அச் சம்நினை நண்ணற் கென்றுமே. 4

3166 அன்பிலா வஞ்சர்தம் அவலச் சூழலில்
என்பிலாப் புழுஎன இரங்கு நெஞ்சமே
இன்பறாச் சண்முக என்று நீறிடில்
துன்புறாத் தனிக்கதிச் சூழல் வாய்க்குமே.

3167 செறிவிலா வஞ்சகச் செல்வர் வாயிலில்
அறிவிலா துழலும்என் அவல நெஞ்சமே
எறிவிலாச் சண்முக என்று நீறிடில்
மறிவிலாச் சிவகதி வாயில் வாய்க்குமே. 6

3168 மறிதரு கண்ணினார் மயக்கத் தாழ்ந்துவீண்
வெறியொடு மலைந்திடர் விளைக்கும் நெஞ்சமே
நெறிசிவ சண்முக என்று நீறிடில்
முறிகொளீஇ நின்றஉன் மூடம் தீருமே. 7

3169 காயமாம் கானலைக் கருதி நாள்தொறும்
மாயமாம் கானிடை வருந்தும் நெஞ்சமே
நேயமாம் சண்முக என்று நீறிடில்
தோயமாம் பெரும்பிணித் துன்பம் நீங்குமே. 8

3170 சதிசெயும் மங்கையர் தமது கண்வலை
மதிகெட அழுந்தியே வணங்கும் நெஞ்சமே
நிதிசிவ சண்முக என்று நீறிடில்
வதிதரும் உலகில்உன் வருத்தம் தீருமே. 9

3171 பசையறு வஞ்சகர் பாற்சென் றேங்கியே
வசைபெற நாள்தொறும் வருந்து நெஞ்சமே
இசைசிவ சண்முக என்று நீறிடில்
திசைபெற மதிப்பர்உன் சிறுமை நீங்குமே. 10

திருச்சிற்றம்பலம்

48. தேவ ஆசிரியம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3172 யாரை யுங்கடு விழியினால் மயக்குறும் ஏந்திழை அவர்வெந்நீர்த்
தாரை தன்னையும் விரும்பிவீழ்த் தாழ்ந்த என் தனக்கருள் உண்டேயோ
காரை முட்டிஅப் புறம்செலும் செஞ்சுடர்க் கதிரவன் இவர்ஆழித்
தேரை எட்டுறும் பொழில்செறி தணிகையில் தேவர்கள் தொழும்தேவே. 1

3173 மறிக்கும் வேற்கணார் மலக்குழி ஆழ்ந்துழல் வன்தசை அறும்என்பைக்
கறிக்கும் நாயினும் கடையநாய்க் குன்திருக் கருணையும் உண்டேயோ
குறிக்கும் வேய்மணி களைக்கதிர் இரதவான் குதிரையைப் புடைத்தெங்கும்
தெறிக்கும் நல்வளம் செறிதிருத் தணிகையில் தேவர்கள் தொழும்தேவே. 2

3174 பிரியம் மேயவன் மடந்தையர் தங்களைப் பிடித்தலைத் திடுவஞ்சக்
கரிய பேயினும் பெரியபேய்க் குன்திருக் கருணையும் உண்டேயோ 3
அரிய மால்அயன் இந்திரன் முதலினோர் அமர்உல கறிந்தப்பால்
தெரிய ஓங்கிய சிகரிசூழ் தணிகையில் தேவர்கள் தொழும்தேவே.

திருச்சிற்றம்பலம்

49. இங்கிதப் பத்து

கலிநிலை வண்ணத்துறை
அருட்பெருஞ்ஜோதி

3175 சீர்வளர் குவளைத் தார்வளர் புயனார் சிவனார் தம்
பேர்வளர் மகனார் கார்வளர் தணிகைப் பெருமானார்
ஏர்வளர் மயில்மேல் ஊர்வளர் நியமத் திடைவந்தால்
வார்வளர் முலையார் ஆர்வளர் கில்லார் மயல்அம்மா. 1

3176 மந்தா ரம்சேர் பைம்பொழி லின்கண் மயிலேறி
வந்தார் அந்தோ கண்டனன் அங்கை வளைகாணேன்
சந்தா ரம்சூழ் தண்கிளர் சாரல் தணிகேசர்
தந்தார் என்பால் தந்தார் என்னைத் தந்தாரே. 2

3177 நதியும் மதியும் பொதியும் சடையார் நவின்மாலும்
விதியுந் துதிஜம் முகனார் மகனார் மிகுசீரும்
நிதியும் பதியும் கதியும் தருவார் நெடுவேலார்
வதியும் மயின்மேல் வருவார் மலரே வருமாறே. 3

3178 சந்தார் வரையுள் சிந்தா மணிநேர் தணிகேசர்
மந்தா நிலம்மே வுந்தார் மறுகில் மயிலேறி
வந்தார் நிலவோர் செந்தா மரையின் மலர்வாசக்
கொந்தார் குழல்என் நிலையுங் கலையுங் கொண்டாரே. 4

3179 தந்தே நயமாம் மாதவர் புகழும் தணிகேசர்
சந்தே னொழிவாய் அந்தேன் மொழியாய் தனிஇன்று
வந்தேன் இனிமேல் வாரேன் என்றார் மனமாழ்கி
நொந்தேன் முலைமீ தவ்வுரை என்றார் நுவல்என்னே. 5

3180 தண்தணி காந்தள்ஓர் [1]சண்பக மலரின் தளர்வெய்தத்
தெண்டணி நீலம்ஓர் [1]செங்குவ ளையினிற் றிகழ்வேன்பால்
வண்டணி கேசரும் வந்தருள் வாரோ வாராரோ
தொண்டணி வீர்ஒரு சோதிட மேனும் சொல்லீரே. 6

3181 காமலர் நறவுக் கேமலர் மூவிரு காலேநீ
தேமலர் தணிகைத் தேவர் மருங்கில் சேர்வாயேல்
ஆமல ருடையாட் கென்பெயர் பலவாம் அவையுள்ளே
ஓமலர் அடிகேள் ஒன்றினை ஒன்றென் றுரையாயே. 7

3182 தேடுங் கிளிநீ நின்னை விளம்பித் திருஅன்னார்
ஆடுந் தணிகையில் என்உயிர் அன்னார் அருகேபோய்க்
கூடும் தனமிசை என்பெயர் வைத்தக் கோதைக்கே
ஈடும் கெடஇன் றென்னையும் ஈந்தருள் என்பாயே. 8

1. காந்தளோர், நீலமோர், திகழ்வென்பால். தொ. வே. முதற்பதிப்பு

3183 பொன்னை இருத்தும் பொன்மலர் எகினப் புள்ளேநீ
அன்னை இகழ்ந்தே அங்கலர் செய்வான் அனுராகம்
தன்னை அளிக்குந் தண்டணி கேசர் தம்பாற்போய்
என்னை இகழ்ந்தாள் என்செயல் கொண்டாள் என்பாயே. 9

3184 வதியும் தணிகையில் வாழ்வுறும் என்கண் மணிஅன்னார்
மதியுந் தழல்கெட மாமயின் மீதிவண் வருவாரேல்
திதியும் புவிபுகல் நின்பெயர் நெறியைத் தெரிவிப்பான்
நதியுந் துணவுத வுவனங் கொடிநீ நடவாயே. 10

3185 மன்றேர் தணிகையி னின்றீர் கதிதர வந்தீரோ
என்றே னசைதரு மின்றேன் மொழியாய் யானுன்பால்
இன்றே சுரருல கெய்திட வந்தே னென்றார்காண்
குன்றேர் முலையா யென்னடி யவர்சொற் குறிதானே. 11

3186 சேதன நந்தார் சென்று வணங்குந் திறல்வேலார்
தாதன வண்ணத் துள்ளொளிர் கின்ற தணிகேசர்
மாதன முந்தா வந்தென வந்தே வாதாதா
ஆதன மென்றா ரென்னடி யம்மா வவர்சூதே 12

திருச்சிற்றம்பலம்

50. போற்றித் திருவிருத்தம்

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

3187 கங்கையஞ் சடைசேர் முக்கட் கரும்பருள் மணியே போற்றி
அங்கையங் கனியே போற்றி அருட்பெருங் கடலே போற்றி
பங்கையன் முதலோர் போற்றும் பரம்பரஞ் சுடரே போற்றி
சங்கைதீர்த் தருளும் தெய்வச் சரவண பவனே போற்றி. 1

3188 பனிப்பற அருளும் முக்கட் பரஞ்சுடர் ஒளியே போற்றி
இனிப்புறு கருணை வான்தேன் எனக்கருள் புரிந்தாய் போற்றி
துனிப்பெரும் பவந்தீர்த் தென்னைச் சுகம்பெற வைத்தோய் போற்றி
தனிப்பெருந் தவமே போற்றி சண்முகத் தரசே போற்றி. 2

3189 மணப்புது மலரே தெய்வ வான்சுவைக் கனியே போற்றி
தணப்பற அடியர்க் கின்பம் தரும்ஒரு தருவே போற்றி
கணப்பெருந் தலைவர் ஏத்தும் கழற்பதத் தரசே போற்றி
குணப்பெருங் குன்றே போற்றி குமரசற் குருவே போற்றி. 3

3190 தவம்பெறு முனிவருள்ளத் தாமரை அமர்ந்தோய் போற்றி
பவம்பெறுஞ் சிறியேன் தன்னைப் பாதுகாத் தளித்தோய் போற்றி
நவம்பெறு நிலைக்கும் மேலாம் நண்ணிய நலமே போற்றி 4
சிவம்பெறும் பயனே போற்றி செங்கதிர் வேலோய் போற்றி.

3191 மூவடி வாகி நின்ற முழுமுதற் பரமே போற்றி
மாவடி அமர்ந்த முக்கண் மலைதரு மணியே போற்றி
சேவடி வழுத்தும் தொண்டர் சிறுமைதீர்த் தருள்வோய் போற்றி
தூவடி வேல்கைக் கொண்ட சுந்தர வடிவே போற்றி. 5

3192 விண்ணுறு சுடரே என்னுள் விளங்கிய விளக்கே போற்றி
கண்ணுறு மணியே என்னைக் கலந்தநற் களிப்பே போற்றி
பண்ணுறு பயனே என்னைப் பணிவித்த மணியே போற்றி
எண்ணுறும் அடியார் தங்கட் கினியதெள் அமுதே போற்றி. 6

3193 மறைஎலாம் பரவ நின்ற மாணிக்க மலையே போற்றி
சிறைஎலாம் தவிர்ந்து வானோர் திருவுறச் செய்தோய் போற்றி
குறைஎலாம் அறுத்தே இன்பம் கொடுத்தஎன் குருவே போற்றி
துறைஎலாம் விளங்கு ஞானச் ஜோதியே போற்றி போற்றி. 7

3194 தாருகப் பதகன் தன்னைத் தடிந்தருள் செய்தோய் போற்றி
வேருகச் சூர மாவை வீட்டிய வேலோய் போற்றி
ஆருகச் சமயக் காட்டை அழித்தவெங் கனலே போற்றி
போருகத் தகரை ஊர்ந்த புண்ணிய மூர்த்தி போற்றி. 8

3195 சிங்கமா முகனைக் கொன்ற திறலுடைச் சிம்புள் போற்றி
துங்கவா ரணத்தோன் கொண்ட துயர்தவிர்த் தளித்தோய் போற்றி
செங்கண்மால் மருக போற்றி சிவபிரான் செல்வ போற்றி
எங்கள் ஆர் அமுதே போற்றி யாவர்க்கும் இறைவ போற்றி. 9

3196 முத்தியின் முதல்வ போற்றி மூவிரு முகத்த போற்றி
சத்திவேற் கரத்த போற்றி சங்கரி புதல்வ போற்றி
சித்திதந் தருளும் தேவர் சிகாமணி போற்றி போற்றி
பத்தியின் விளைந்த இன்பப் பரம்பர போற்றி போற்றி. 10

3197 தெருளுடை யோர்க்கு வாய்த்த சிவானந்தத் தேனே போற்றி
பொருளுடை மறையோர் உள்ளம் புகுந்தபுண் ணியமே போற்றி
மருளுடை மனத்தி னேனை வாழ்வித்த வாழ்வே போற்றி
அருளுடை அரசே எங்கள் அறுமுகத் தமுதே போற்றி. 11

3198 பொய்யனேன் பிழைகள் எல்லாம் பொறுத்திடல் வேண்டும் போற்றி
கையனேன் தன்னை இன்னும் காத்திடல் வேண்டும் போற்றி
மெய்யனே மெய்யர் உள்ளம் மேவிய விளைவே போற்றி
ஐயனே அப்ப னேஎம் அரசனே போற்றி போற்றி. 12

3199 முருகநின் பாதம் போற்றி முளரியங் கண்ணற் கன்பாம்
மருகநின் கழல்கள் போற்றி வானவர் முதல்வ போற்றி
பெருகருள் வாரி போற்றி பெருங்குணப் பொருப்பே போற்றி
தருகநின் கருணை போற்றி சாமிநின் அடிகள் போற்றி.

3200 கோதிலாக் குணத்தோய் போற்றி குகேசநின் பாதம் போற்றி
தீதிலாச் சிந்தை மேவும் சிவபரஞ் சோதி போற்றி
போதில்நான் முகனும் காணாப் பூரண வடிவ போற்றி
ஆதிநின் தாள்கள் போற்றி அநாதிநின் அடிகள் போற்றி. 14

3201 வேதமும் கலைகள் யாவும் விளம்பிய புலவ போற்றி
நாதமும் கடந்து நின்ற நாதநின் கருணை போற்றி
போதமும் பொருளும் ஆகும் புனிதநின் பாதம் போற்றி
ஆதரம் ஆகி என்னுள் அமர்ந்தஎன் அரசே போற்றி. 15

திருச்சிற்றம்பலம்

51. தனித் திருத்தொடை

அருட்பெருஞ்ஜோதி
அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3202 என்னிரு கண்ணின் மேவும் இலங்கொளி மணியே போற்றி
பன்னிரு படைகொண் டோங்கும் பன்னிரு கரத்தோய் போற்றி
மின்னிரு நங்கை மாருள் மேவிய மணாள போற்றி
நின்னிரு பாதம் போற்றி நீள்வடி வேல போற்றி. 1

கலிநிலைத்துறை

3203 மதிவளர் சடைமுடி மணிதரு சுரர்முடி மணிஎன்கோ
பதிவளர் சரவண பவநவ சிவகுரு பதிஎன்கோ
துதிவளர் துணைஅடி தொழும்அடி யவர்பெறு துணைஎன்கோ
நிதிவளர் பரசுக நிலைபெறும் நெறிதரு நினையானே. 2

கட்டளைக் கலித்துறை

3204 முருகா சரணம் சரணம்என் றுன்பதம் முன்னிஉள்ளம்
உருகாத நாயனை யேற்குநின் தண்ணருள் உண்டுகொலோ
அருகாத பாற்கடல் மீதே அனந்தல் அமர்ந்தவன்றன்
மருகாமுக் கண்ணவன் மைந்தா எழில்மயில் வாகனனே. 3

வெண்பா

3205 உலகம் பரவும் ஒருமுதல்வா தெய்வத்
திலகம் திகழிடத்துத் தேவே–இலகுதிருப்
புள்ளிருக்கு வேளூர்ப் புனிதா அடியேன்றன்
உள்ளிருக்கும் துன்பை ஒழி. 4

3206 செக்கச் சிவந்தே திகழ்ஒருபால் பச்சையதாய்
அக்கட் பரிதிபுரத் தார்ந்தோங்கும் – முக்கண்
குழைக்கரும்பீன் முத்துக் குமார மணியேஎன்
பிழைக்கிரங்கி ஆளுதியோ பேசு. 5

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3207 திருமாலைப் பணிகொண்டு திகிரிகொண்ட தாருகனைச் செறித்து வாகைப்
பெருமாலை அணிதிணிதோள் பெருமானே ஒருமான்றன் பெண்மேற் காமர்
வருமாலை உடையவர் போல் மணமாலை புனைந்தமுழு மணியே முக்கட்
குருமாலைப் பொருள்உரைத்த குமாரகுரு வேபரம குருவே போற்றி. 6

3208 தோடேந்து கடப்பமலர்த் தொடையொடு செங்குவளை மலர்த்தொடையும் வேய்ந்து
பாடேந்தும் அறிஞர் தமிழ்ப் பாவொடுநா யடியேன்சொற் பாவும் ஏற்றுப்
பீடேந்தும் இருமடவார் பெட்பொடும்ஆங் கவர் கண்முலைப் பெரிய யானைக்
கோடேந்தும் அணிநெடுந்தோட் குமாரகுரு வேபரம குருவே போற்றி. 7

3209 நீர்வேய்ந்த சடைமுடித்துத் தோலுடுத்து நீறணிந்து நிலவுங் கொன்றைத்
தார்வேய்ந்து விடங்கலந்த களங்காட்டி நுதலிடைஓர் தழற்கண் காட்டிப்
பேர் வேய்ந்த மணிமன்றில் ஆடுகின்ற பெரும்பித்தப் பெருமான் ஈன்ற
கூர்வேய்ந்த வேல்அணிதோள் குமாரகுரு வேபரம குருவே போற்றி. 8

3210 பெண் குணத்தில் கடைப்படும்ஓர் பேய்க்குணங்கொள்
நாயேன்றன் பிழைகள் எல்லாம்
எண்குணப்பொற் குன்றேநின் திருஉளத்தில்
சிறிதேனும் எண்ணேல் கண்டாய்
பண்குணத்தில் சிறந்திடும்நின் பத்தர்தமைப்
புரப்பதுபோல் பாவி யேனை
வண்குணத்தில் புரத்தியிலை யேனும்எனைக்
கைவிடேல் வடிவே லோனே. 9

கலிவிருத்தம்

3211 சத்திவேல் கரத்தநின் சரணம் போற்றிமெய்ப்
பத்தியோ டருச்சனை பயிலும் பண்பினால்
முத்திசார் குவர்என மொழிதல் கேட்டுநல்
புத்தியோ டுன்பதம் புகழ்வர் புண்ணியர். 10

3212 தேனே அமுதே சிவமே தவமே தெளிவேஎங்
கோனே குருவே குலமே குணமே குகனேயோ
வானே வளியே அனலே புனலே மலையேஎன்
ஊனே உயிரே உணர்வே எனதுள் உறைவானே. 11

கட்டளைக் கலித்துறை

3213 ஆறுமு கங்கொண்ட ஐயாஎன் துன்பம் அனைத்தும் இன்னும்
ஏறுமு கங்கொண்ட தல்லால் இறங்குமு கம்இலையால்
வீறுமு கங்கொண்ட கைவேலின் வீரம் விளங்க என்னைச்
சீறுமு கங்கொண்ட அத்துன்பம் ஓடச் செலுத்துகவே. 12

3214 பண்கொண்ட சண்முகத் தையா அருள்மிகும் பன்னிரண்டு
கண்கொண்ட நீசற்றுங் கண்டிலை யோஎன் கவலைவெள்ளம்
திண்கொண்ட எட்டுத் திசைகொண்டு நீள்சத்த தீவுங்கொண்டு
மண்கொண்டு விண்கொண்டு பாதாளங் கொண்டு வளர்கின்றதே. 13

3215 வன்குலஞ் சேர்கடன் மாமுதல் வேர்அற மாட்டிவண்மை
நன்குலஞ் சேர்விண் நகர்அளித் தோய்அன்று நண்ணிஎன்னை 14
நின்குலஞ் சேர்த்தனை இன்றுவி டேல்உளம் நேர்ந்துகொண்டு
பின்குலம் பேசுகின் றாரும்உண் டோஇப் பெருநிலத்தே.

52. தெய்வமணி மாலை

சென்னைக் கந்தகோட்டம்

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

3216 திருஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்
திறலோங்கு செல்வம்ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள்கொடுத்து
மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கிஓர்
வரம்ஓங்கு தெள்அமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கிஞான
உருஓங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கு நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நாள்எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 1

3217 பரம்ஏது வினைசெயும் பயன்ஏது பதிஏது
பசுஏது பாசம்ஏது
பத்திஏ தடைகின்ற முத்திஏ தருள்ஏது
பாவபுண் யங்கள்ஏது
வரம்ஏது தவம்ஏது விரதம்ஏ தொன்றும்இலை
மனம்விரும் புணவுண்டுநல்
வத்திரம் அணிந்துமட மாதர்தமை நாடிநறு
மலர்சூடி விளையாடிமேல்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு
கலந்துமகிழ் கின்றசுகமே
கண்கண்ட சுகம்இதே கைகண்ட பலன்எனும்
கயவரைக் கூடாதருள்
தரமேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 2

3218 துடிஎன்னும் இடைஅனம் பிடிஎன்னும் நடைமுகில்
துணைஎனும் பிணையல்அளகம்
சூதென்னும் முலைசெழுந் தாதென்னும் அலைபுனல்
சுழிஎன்ன மொழிசெய்உந்தி
வடிஎன்னும் விழிநிறையும் மதிஎன்னும் வதனம்என
மங்கையர் தம் அங்கம்உற்றே
மனம்என்னும் ஒருபாவி மயல்என்னும் அதுமேவி
மாழ்கநான் வாழ்கஇந்தப்
படிஎன்னும் ஆசையைக் கடிஎன்ன என்சொல்இப்
படிஎன்ன அறியாதுநின்
படிஎன்ன என்மொழிப் படிஇன்ன வித்தைநீ
படிஎன்னும் என்செய்குவேன்
தடிதுன்னும் மதில்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 3

3219 வள்ளல்உனை உள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றிமற்றை
வானவரை மதிஎன்னில் நான் அவரை ஒருகனவின்
மாட்டினும் மறந்தும்மதியேன்
கள்ளம்அறும் உள்ளம்உறும் நின்பதம்அ லால்வேறு
கடவுளர் பதத்தைஅவர்என்
கண்எதிர் அடுத்தைய நண்என அளிப்பினும்
கடுஎன வெறுத்துநிற்பேன்
எள்ளளவும் இம்மொழியி லேசுமொழி அன்றுண்மை
என்னைஆண் டருள்புரிகுவாய்
என்தந்தை யேஎனது தாயேஎன் இன்பமே
என்றன்அறி வேஎன் அன்பே
தள்ளரிய சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 4

3220 பதிபூசை முதலநற் கிரியையால் மனம்எனும்
பசுகரணம் ஈங்கசுத்த
பாவனை அறச்சுத்த பாவனையில் நிற்கும்மெய்ப்
பதியோக நிலைமைஅதனான்
மதிபாசம் அற்றதின் அடங்கிடும் அடங்கவே
மலைவில்மெய்ஞ் ஞானமயமாய்
வரவுபோக் கற்றநிலை கூடும்என எனதுளே
வந்துணர்வு தந்தகுருவே

துதிவாய்மை பெறுசாந்த பதம்மேவு மதியமே
துரிசறு சுயஞ்சோதியே
தோகைவா கனமீ திலங்கவரு தோன்றலே
சொல்லரிய நல்லதுணையே
ததிபெறும் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 5

3221 காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழுமூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமம்அறு மாச்சரிய விழலனும் கொலைஎன்
றியம்புபா தகனுமாம்இவ்
வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல்அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன்அருளி மலயமுனிவன்
சிந்தனையின் வந்தனைஉ வந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகாரத்தனமே
தாமம்ஒளிர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 6

3222 நிலைஉறும் நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடும்
நிகழ்சாந்த மாம்புதல்வனும்
நெறிபெறும் உதாரகுணம் என்னும்நற் பொருளும்மருள்
நீக்கும்அறி வாம்துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம்என்னும் நல்ஏவலும்
வருசகல கேவலம்இ லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வருளுவாய்
அலைஇலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுதமலர்வாய்
அணிகொள்பொற் கொடிபசுங் கொடிஇரு புறம்படர்ந்
தழகுபெற வருபொன்மலையே
தலைவர்புகழ் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 7

3223 ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 8

3224 ஈஎன்று நான்ஒருவர் இடம் நின்று கேளாத
இயல்பும் என்னிடம் ஒருவர் ஈ
திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்
இடுகின்ற திறமும் இறையாம்
நீஎன்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உள்
நினைவிடா நெறியும் அயலார்
நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும்உலகில்
சீஎன்று பேய்என்று நாய்என்று பிறர்தமைத்
தீங்குசொல் லாததெளிவும்
திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாய்ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 9

3225 கரையில்வீண் கதைஎலாம் உதிர்கருங் காக்கைபோல்
கதறுவார் கள்ளுண்டதீக்
கந்தம்நா றிடஊத்தை காதம்நா றிடஉறு
கடும்பொய்இரு காதம்நாற
வரையில்வாய் கொடுதர்க்க வாதம்இடு வார்சிவ
மணங்கமழ் மலர்ப்பொன்வாய்க்கு
மவுனம்இடு வார் இவரை மூடர்என ஓதுறு
வழக்குநல் வழக்கெனினும்நான்

உரையிலவர் தமையுறா துனதுபுகழ் பேசும்அவ
ரோடுறவு பெறஅருளுவாய்
உயர்தெய்வ யானையொடு குறவர்மட மானும்உள்
உவப்புறு குணக்குன்றமே
தரையில்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 10

3226 நாம்பிரமம் நமைஅன்றி ஆம்பிரமம் வேறில்லை
நன்மை தீமைகளும் இல்லை
நவில்கின்ற வாகிஆந் தரம் இரண்டினும் ஒன்ற
நடுநின்ற தென்றுவீணாள்
போம்பிரம நீதிகேட் போர்பிரமை யாகவே
போதிப்பர் சாதிப்பர் தாம்
புன்மைநெறி கைவிடார் தம்பிரமம் வினை ஒன்று
போந்திடில் போகவிடுவார்
சாம்பிரம மாம்இவர்கள் தாம்பிரமம் எனும் அறிவு
தாம்புபாம் பெனும் அறிவுகாண்
சத்துவ அகண்டபரி பூரணா காரஉப
சாந்தசிவ சிற்பிரமநீ
தாம்பிரிவில் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 11

3227 பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்திரங்கும்
பண்பும்நின் திருவடிக் கன்பும்நிறை ஆயுளும்
பதியும்நல் நிதியும் உணர்வும்
சீர்கொண்ட நிறையும்உட் பொறையும்மெய்ப் புகழும்நோய்த்
தீமைஒரு சற்றும் அணுகாத்
திறமும்மெய்த் திடமும்நல் இடமும் நின் அடியர்புகழ்
செப்புகின் றோர் அடைவர்காண்
கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலும்ஒரு
கோழியங் கொடியும்விண்ணோர்
கோமான் தன் மகளும்ஒரு மாமான்தன் மகளும்மால்
கொண்டநின் கோலமறவேன்
தார்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 12

3228 வன்பெரு நெருப்பினைப் புன்புழுப் பற்றுமோ
வானைஒரு மான்தாவுமோ
வலியுள்ள புலியைஓர் எலிசீறு மோபெரிய
மலையை ஓர் ஈச்சிறகினால்
துன்புற அசைக்குமோ வச்சிரத் தூண்ஒரு
துரும்பினால் துண்டமாமோ
சூரியனை இருள் வந்து சூழுமோ காற்றில்மழை
தோயுமோ இல்லை அதுபோல்
அன்புடைய நின்அடியர் பொன் அடியை உன்னும்அவர்
அடிமலர் முடிக்கணிந்தோர்க்
கவலமுறு மோகாமம் வெகுளிஉறு மோமனத்
தற்பமும்வி கற்பம் உறுமோ
தன்புகழ்செய் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 13

3229 கானலிடை நீரும்ஒரு கட்டையில் கள்வனும்
காண்உறு கயிற்றில் அரவும்
கடிதரு கிளிஞ்சிலிடை வெள்ளியும் பொன்னைக்
கதித்தபித் தளையின் இடையும்
மானலில் கண்டுள மயங்கல்போல் கற்பனையை
மாயையில் கண்டுவீணே
மனைஎன்றும் மகவென்றும் உறவென்றும் நிதிஎன்றும்
வாழ்வென்றும் மானம் என்றும்
ஊனலின் உடம்பென்றும் உயிரென்றும் உளம்என்றும்
உள்என்றும் வெளிஎன்றும்வான்
உலகென்றும் அளவறுவி காரம்உற நின்றஎனை
உண்மைஅறி வித்தகுருவே
தானமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 14

3230 கற்றொளிகொள் உணர்வினோர் வேண்டாத இப்பெருங்
கன்மவுட லில்பருவம்நேர்
கண்டழியும் இளமை தான் பகல்வேட மோபுரைக்
கடல்நீர்கொ லோகபடமோ
உற்றொளியின் வெயில்இட்ட மஞ்சளோ வான்இட்ட
ஒருவிலோ நீர்க்குமிழியோ
உலைஅனல் பெறக்காற்றுள் ஊதும் துருத்தியோ
ஒன்றும்அறி யேன் இதனைநான்
.

பற்றுறுதி யாக்கொண்டு வனிதையர்கண் வலையினில்
பட்டுமதி கெட்டுழன்றே
பாவமே பயில்கின்ற தல்லாது நின்அடிப்
பற்றணுவும் உற்றறிகிலேன்
சற்றைஅகல் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 15

3231 சடமாகி இன்பம் தராதாகி மிகுபெருஞ்
சஞ்சலா காரமாகிச்
சற்றாகி வெளிமயல் பற்றாகி ஓடும்இத்
தன்மைபெறு செல்வமந்தோ
விடமாகி ஒருகபட நடமாகி யாற்றிடை
விரைந்துசெலும் வெள்ளம்ஆகி
வேலைஅலை யாகிஆங் காரவலை யாகிமுதிர்
வேனில்உறு மேகம் ஆகிக்
கடமாய சகடமுறு காலாகி நீடுவாய்க்
காலோடும் நீராகியே
கற்பிலா மகளிர்போல் பொற்பிலா துழலும்இது
கருதாத வகை அருளுவாய்
தடமேவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே 16

3232 உப்புற்ற பாண்டம்என ஒன்பது துவாரத்துள்
உற்றசும் பொழுகும் உடலை
உயர்கின்ற வானிடை எறிந்தகல் என்றும்மலை
உற்றிழியும் அருவிஎன்றும்
வெப்புற்ற காற்றிடை விளக்கென்றும் மேகம்உறு
மின்என்றும் வீசுகாற்றின்
மேற்பட்ட பஞ்சென்றும் மஞ்சென்றும் வினைதந்த
வெறுமாய வேடம் என்றும்
கப்புற்ற பறவைக் குடம்பைஎன் றும்பொய்த்த
கனவென்றும் நீரில்எழுதும்
கைஎழுத் தென்றும்உட் கண்டுகொண் டதிலாசை
கைவிடேன் என்செய்குவேன்
தப்பற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 17

3233 எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற்றி ருக்கும்வெறுவாய்
எங்கள்பெரு மான்உனை வணங்காத மூடர்தலை
இகழ்விற கெடுக்கும் தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்தஅழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்கும்செவி
பந்தம்அற நினைஎணாப் பாவிகள் தம்நெஞ்சம்
பகீர்என நடுங்கும்நெஞ்சம்
பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர்கை
பலிஏற்க நீள்கொடுங்கை
சந்தமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 18

3234 ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
அமுதுண்டு வந்த திருவாய்
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந் தலை
மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கஒளி மேவுகண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும்செவி
துய்யநின் பதம்எண்ணும் மேலோர்கள் நெஞ்சம்மெய்ச்
சுகரூப மானநெஞ்சம்
தோன்றல்உன் திருமுன் குவித்தபெரி யோர்கைகள்
சுவர்ன்னமிடு கின்றகைகள்
சையம்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 19

3235 உழல்உற்ற உழவுமுதல் உறுதொழில் இயற்றிமலம்
ஒத்தபல பொருள்ஈட்டிவீண்
உறுவயிறு நிறையவெண் சோறடைத் திவ்வுடலை
ஒதிபோல் வளர்த்துநாளும்
விழல்உற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐயஇவ்
வெய்யஉடல் பொய்என்கிலேன்
வெளிமயக் கோமாய விடமயக் கோஎனது
விதிமயக் கோஅறிகிலேன்

கழல்உற்ற நின்துணைக் கால்மலர் வணங்கிநின்
கருணையை விழைந்துகொண்டெம்
களைகணே ஈராறு கண்கொண்ட என்றன்இரு
கண்ணேஎ னப்புகழ்கிலேன்
தழைவுற்ற சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 20

3236 வானம்எங் கேஅமுத பானம்எங்கே அமரர்
வாழ்க்கைஅபி மானம் எங்கே
மாட்சிஎங் கேஅவர்கள் சூழ்ச்சிஎங் கேதேவ
மன்னன் அரசாட்சி எங்கே
ஞானம்எங் கேமுனிவர் மோனம் எங்கே அந்த
நான்முகன் செய்கை எங்கே
நாரணன் காத்தலை நடத்தல்எங் கேமறை
நவின்றிடும் ஒழுக்கம் எங்கே
ஈனம்அங் கேசெய்த தாருகனை ஆயிர
இலக்கம் உறு சிங்கமுகனை
எண்அரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்துபணி கொண்டிலைஎனில்
தானமிங் கேர்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 21

3237 மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்
மதித்திடான் நின்அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மாஇ ரான்காம
மடுவினிடை வீழ்ந்துசுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவன் உலோபமாம்
சிறுகுகையி னூடுபுகுவான்
செறுமோக இருளிடைச் செல்குவான் மதம்எனும்
செய்குன்றில் ஏறிவிழுவான்
இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும் அந்தோ
என்சொல்கே ளான் எனது கைப்படான் மற்றிதற்
கேழையேன் என்செய்குவேன்
தனநீடு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 22

3238 வாய்கொண் டுரைத்தல்அரி தென்செய்கேன் என்செய்கேன்
வள்ளல்உன் சேவடிக்கண்
மன்னாது பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை
வாய்ந்துழலும் எனதுமனது
பேய்கொண்டு கள்உண்டு கோலினால் மொத்துண்டு
பித்துண்ட வன்குரங்கோ
பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ
பேதைவிளை யாடுபந்தோ
காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங் கோபெருங்
காற்றினாற் சுழல்கறங்கோ
காலவடி வோ இந்திர ஜாலவடி வோஎனது
கர்மவடி வோ அறிகிலேன்
தாய்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 23

3239 கற்றமே லவரொடும் கூடிநில் லேன்கல்வி
கற்கும்நெறி தேர்ந்துகல்லேன்
கனிவுகொண் டுனதுதிரு அடியையொரு கனவினும்
கருதிலேன் நல்லன் அல்லேன்
குற்றமே செய்வதென் குணமாகும் அப்பெருங்
குற்றம்எல் லாம்குணம் எனக்
கொள்ளுவது நின்அருட் குணமாகும் என்னில்என்
குறைதவிர்த் தருள்புரிகுவாய்
பெற்றமேல் வரும்ஒரு பெருந்தகையின் அருள்உருப்
பெற்றெழுந் தோங்குசுடரே
பிரணவா காரசின் மயவிமல சொரூபமே
பேதமில் பரப்பிரமமே
தற்றகைய சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 24

3240 பாய்ப்பட்ட புலிஅன்ன நாய்ப்பட்ட கயவர்தம்
பாழ்ப்பட்ட மனையில்நெடுநாள்
பண்பட்ட கழுநீரும் விண்பட்ட இன்னமுது
பட்டபா டாகும்அன்றிப்
போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடும்நற்
பூண்பட்ட பாடுதவிடும்
புன்பட்ட உமியும்உயர் பொன்பட்ட பாடவர்கள்
போகம்ஒரு போகமாமோ

ஆய்ப்பட்ட மறைமுடிச் சேய்ப்பட்ட நின்அடிக்
காட்பட்ட பெருவாழ்விலே
அருள்பட்ட நெறியும்மெய்ப் பொருள்பட்ட நிலையும்உற
அமர்போக மேபோகமாம்
தாய்ப்பட்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 25

3241 சேவலம் கொடிகொண்ட நினைஅன்றி வேறுசிறு
தேவரைச் சிந்தைசெய்வோர்
செங்கனியை விட்டுவேப் பங்கனியை உண்ணும்ஒரு
சிறுகருங் காக்கைநிகர்வார்
நாவலங் காரம்அற வேறுபுகழ் பேசிநின்
நற்புகழ் வழுத்தாதபேர்
நாய்ப்பால் விரும்பிஆன் தூய்ப்பாலை நயவாத
நவையுடைப் பேயர் ஆவார்
நீவலந் தரநினது குற்றேவல் புரியாது
நின்றுமற் றேவல்புரிவோர்
நெல்லுக் கிறைக்காது புல்லுக் கிறைக்கின்ற
நெடியவெறு வீணராவார்
தாவலம் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 26

3242 பிரமன்இனி என்னைப் பிறப்பிக்க வல்லனோ
பெய்சிறையில் இன்னும்ஒருகால்
பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டில்
பெறுந்துயர் மறந்துவிடுமோ
இரவுநிறம் உடைஇயமன் இனிஎனைக் கனவினும்
இறப்பிக்க எண்ணம்உறுமோ
எண்ணுறான் உதைஉண்டு சிதைஉண்ட தன்உடல்
இருந்தவடு எண்ணுறானோ
கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனைஒரு
காசுக்கும் மதியேன்எலாம்
கற்றவர்கள் பற்றும்நின் திருஅருளை யானும்
கலந்திடப் பெற்றுநின்றேன்
தரமருவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 27

3243 நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும் உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில்அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 28

3244 உளம்எனது வசம்நின்ற தில்லைஎன் தொல்லைவினை
ஒல்லைவிட் டிடவுமில்லை
உன்பதத் தன்பில்லை என்றனக் குற்றதுணை
உனை அன்றி வேறும்இல்லை
இளையன் அவ னுக்கருள வேண்டும்என் றுன்பால்
இசைக்கின்ற பேரும்இல்லை
ஏழையவ னுக்கருள்வ தேன்என்றுன் எதிர்நின்
றியம்புகின் றோரும் இல்லை
வளமருவும் உனதுதிரு அருள்குறைவ தில்லைமேல்
மற்றொரு வழக்கும்இல்லை
வந்திரப் போர்களுக் கிலைஎன்ப தில்லைநீ
வன்மனத் தவனும்அல்லை
தளர்விலாச் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 29

3245 எத்திக்கும் என்உளம் தித்திக்கும் இன்பமே
என்உயிர்க் குயிராகும்ஓர்
ஏகமே ஆனந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வமேநன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவிலாத
முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமைமகனே

பத்திக் குவந்தருள் பரிந்தருளும் நின்அடிப்
பற்றருளி என்னை இந்தப்
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனாப்
பண்ணாமல் ஆண்டருளுவாய்
சத்திக்கும் நீர்ச்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 30

3246 நான்கொண்ட விரதம்நின் அடிஅலால் பிறர் தம்மை
நாடாமை ஆகும்இந்த
நல்விரத மாம்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய்வந்து கவ்விஅந்தோ
தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்
தளராமை என்னும்ஒருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்அமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே என்இருகண் மணியேஎன் இன்பமே
மயில்ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 31

திருச்சிற்றம்பலம்

53. கந்தர் சரணப் பத்து

சென்னைக் கந்தகோட்டம்

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

3247 அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனைஆள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்
மயில்வா கனனே சரணம் சரணம்
கருணா லயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 1

3248 பண்ணேர் மறையின் பயனே சரணம்
பதியே பரமே சரணம் சரணம்
விண்ணேர் ஒளியே வெளியே சரணம்
வெளியின் விளைவே சரணம் சரணம்

உண்ணேர் உயிரே உணர்வே சரணம்
உருவே அருவே உறவே சரணம்
கண்ணே மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 2

3249 முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம் 3
கந்தா சரணம் சரணம் சரணம்.

3250 பூவே மணமே சரணம் சரணம்
பொருளே அருளே சரணம் சரணம்
கோவே குகனே சரணம் சரணம்
குருவே திருவே சரணம் சரணம்
தேவே தெளிவே சரணம் சரணம்
சிவசண் முகனே சரணம் சரணம்
காவேர் தருவே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 4

3251 நடவும் தனிமா மயிலோய் சரணம்
நல்லார் புகழும் வல்லோய் சரணம்
திடமும் திருவும் தருவோய் சரணம்
தேவர்க் கரியாய் சரணம் சரணம்
தடவண் புயனே சரணம் சரணம்
தனிமா முதலே சரணம் சரணம்
கடவுள் மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 5

3252 கோலக் குறமான் கணவா சரணம்
குலமா மணியே சரணம் சரணம்
சீலத் தவருக் கருள்வோய் சரணம்
சிவனார் புதல்வா சரணம் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
நடுவா கியநல் ஒளியே சரணம்
காலன் தெறுவோய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 6

3253 நங்கட் கினியாய் சரணம் சரணம்
நந்தா உயர்சம் பந்தா சரணம்
திங்கட் சடையான் மகனே சரணம்
சிவைதந் தருளும் புதல்வா சரணம்
துங்கச் சுகம்நன் றருள்வோய் சரணம்
சுரர்வாழ்த் திடுநம் துரையே சரணம்
கங்கைக் கொருமா முதலாய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 7

3254 ஒளியுள் ஒளியே சரணம் சரணம்
ஒன்றே பலவே சரணம் சரணம்
தெளியும் தெருளே சரணம் சரணம்
சிவமே தவமே சரணம் சரணம்
அளியும் கனியே சரணம் சரணம்
அமுதே அறிவே சரணம் சரணம்
களியொன் றருள்வோய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 8

3255 மன்னே எனைஆள் வரதா சரணம்
மதியே அடியேன் வாழ்வே சரணம்
பொன்னே புனிதா சரணம் சரணம்
புகழ்வார் இதயம் புகுவாய் சரணம்
அன்னே வடிவேல் அரசே சரணம்
அறுமா முகனே சரணம் சரணம்
கன்னேர் புயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 9

3256 வேதப் பொருளே சரணம் சரணம்
விண்ணோர் பெருமான் சரணம் சரணம்
போதத் திறனே சரணம் சரணம்
புனைமா மயிலோய் சரணம் சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
நவைஇல் லவனே சரணம் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம். 10

திருச்சிற்றம்பலம்

ஐந்தாம் திருமுறை முற்றிற்று

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

பாட்டு முதற்குறிப்பு அகராதி – பாட்டு எண்கள்

திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்	திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்
		அ		2	34	அணிகொள் கோவண	1090
5	32	அகமாறிய நெறிசார்	3044	5	6	அணிகொள் வேல்	2754
2	23	அக்கநுதல் பிறை	963	3	11	அணியார் அடியார்க்	2357
4	7	அக்கோ ஈததிசயம்	2621	1	7	அணியே அணிபெறும்	447
1	4	அங்கணனே நின்னடி	45	2த	20த	அணிவா யுலகத் தம்புயனும்	2072
2	42	அங்கையில் புண்போல்	1179	2	24	அணிவேல் படைகொள்	970
3	17	அசையா தமர்ந்தும்	2435	1	6	அண்டங் கண்டானும்	285
2த	20த	அசையும் பரிசாந்	2074	1	4	அண்டங்களோ அவற்றின்	18
1	8	அச்சை யடுக்குந்	653	1	5	அண்டங்கள் பலவாகி	123
4	7	அச்சோ ஈததிசயம்	2622	1	5	அண்டமெலாங் கண்ணாகக்	155
4	1	அஞ்சாதே என்மகனே	2466	4	2	அண்டவகை பிண்டவகை	2530
5	1	அஞ்சு முகத்தான்	2686	3	3	அண்டர் எவர்க்கும்	2236
2	17	அஞ்செழுத் தோதி	880	2	39	அண்டனை எண்தோள்	1142
3	9	அஞ்சொற் கிளியே	2320	1	7	அண்டாரை வென்று	488
2	94	அட முடியாது	1732	2	90	அண்ணலே நின்னை	1702
5	25	அடலை அணிந்தோர்	2992	4	7	அண்ணா ஈததிசயம்	2628
4	2	அடிநாளில் அடியேனை	2577	5	8	அண்ணாவே நின்அடியை	2783
1	5	அடிமைசெயப் புகுந்திடும்	194	5	29	அண்ணாவோ என்அருமை	3029
2	19	அடியர் நெஞ்சத் தருட்	903	5	12	அண்ணிலேன் நினை ஐய	2840
3	12	அடியர் வருந்த உடன்	2369	2	15	அண்மையாகும் சுந்தரர்க்	858
2	9	அடியனேன் அலன்	804	5	12	அத்தனே தணிகாசலத்	2846
2	79	அடியனேன் பிழைகள்	1585	1	7	அத்தனை ஒற்றிக் கிறைவனை	538
1	5	அடியனேன் பிழையனைத்தும்	206	4	7	அத்தோ ஈததிசயம்	2623
2	70	அடியனேன் மிசை	1493	1	5	அந்தரமிங் கறிவோ மற்	174
2	82	அடியார் இன்பம் அடைகின்றார்	1625	3	4	அந்தார் அணியும்	2265
5	4	அடியார் உள்ளம்	2721	4	1	அந்தோ ஈததிசயம்	2457
5	46	அடியார்க் கெளியர்	3152	4	7	அந்தோ ஈததிசயம்	2624
1	7	அடியார் தொழுநின்	489	1	6	அந்தோ துயரில்	314
4	9	அடியெனல் எதுவோ	2651	1	6	அந்நாணை யாதுநஞ்	301
5	5	அடியேன் எனச்சொல்	2744	5	12	அப்பன் என்னுடை	2841
1	7	அடியேன் மிசை	515	4	7	அப்பா ஈததிசயம்	2625
2	82	அடியேன் முடுகிச் செயும்	1622	4	5	அப்பா நின்திருவருட்	2607
2	33	அடுத்தவர்க்கெல்லாம்	1081	2	69	அப்பா நின்பொன்அருள்	1475
1	8	அடுத்தார்க் கருளு மொற்றி	557	2	73	அப்பார் மலர்ச்சடை	1514
1	6	அடுத்தார்தமை என்றும்	240	1	4	அப்பாலுன் சித்தம்	14
5	24	அடுத்திலேன் நின் அடியர்	2973	5	5	அமராவதி இறைக்காருயிர்	2730
5	7	அடுத்தே வருத்தும்	2769	5	32	அமராவதி இறையோடுநல்	3042
5	5	அடையாத வஞ்சகர்	2750	2	38	அமைவறிந்திடா ஆணவப்பயலே	1137
1	8	அடையார் புரஞ் செற்ற	705	1	5	அம்பரத்தே ஆனந்த	200
2	4	அட்ட மூர்த்தம தாகிய	746	2	110	அம்பலத்தாடும் அழகனைக்	1906
2	41	அணங்கனார் களபத் தன	1161				

பாட்டு முதற்குறிப்பு அகராதி – பாட்டு எண்கள்

திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்	திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்
2	103	அம்பலத்தில் ஆடுகின்றார்	1817	4	2	அருளுருவாய் ஐந்தொழிலும்	2518
2	22	அம்பலத்துள் நின்றாட	955	2த	21த	அருளுருங் கயமுகத்	2079
5	24	அம்பாதல் நெடுங்கண்ணார்	2981	2த	7த	அருளே அறிவே	2012
5	4	அம்பொன்று செஞ்சடை	2723	2	81	அருளே வடிவாய்	1604
4	7	அம்மா ஈததிசயம்	2626	1	6	அருள் அரசே அருட்	213
1	8	அம்மாலயனுங் காண்பரியீர்	554	2	99	அருள் அளித்து மெய்	1772
1	6	அம்மா வயிற்றெரிக் காற்றேன்	323	2	84	அருள் ஓர் சிறிதும்	1642
4	5	அம்மான் நின் அருட்சத்தி	2608	2	7	அருள்செய் நீறிடார்	780
2	66	அம்மை அப்பன் என்	1447	2	79	அருள் தரல் வேண்டும்	1577
1	8	அம்மை யடுத்த திருமேனி	690	4	1	அருள் நிறைந்த பெருந்	2475
5	2	அயன் தவத்தீன்ற	2704	2	68	அருள்பவன் நின்னை	1473
1	7	அயிலேந்தும் பிள்ளை	499	2	23	அருள்பழுக்கும் கற்பக	959
2	66	அரக்கன் அல்லன் யான்	1453	2	71	அருள்பழுத்தோங்கும் ஆனந்த	1497
2த	7த	அரங்காய மனமாயை	2009	2	93	அருள்பழுத்தோங்கும் கற்பக	1712
4	5	அரசே நின்திருவருளின்	2605	2	44	அருள்வதுன் இயற்கை	1196
2	55	அரந்தையோ டொரு	1334	4	10	அருள்வழங்கும் திலகவதி	2664
3	11	அரவக் கழலார்	2364	4	2	அருள் விளங்கும் உள்ளகத்தே	2534
1	5	அரிதாகி அரியதினும்	125	1	5	அருள்வெளியில் ஆனந்த	192
4	2	அரிபிரமாதிய ரெல்லாம்	2495	5	13	அரைசே அடியார்க்கருள்	2867
2	44	அரியது நினது திருவருள்	1194	5	37	அரைமதிக் குறழும்	3065
2	84	அரிய பெருமான் எளியோமை	1646	2த	41த	அலங்கும் புனற்செய்	1963
5	28	அருகா மலத்தின்	3012	2த	19த	அலகின் மறை மொழியும்	2069
1	6	அருட்கடலே அக்கடலமுதே	284	2	31	அலைஓய் கடலில்	1064
2	71	அருட்பெருங்கடலே ஆனந்த	1501	1	5	அலைகடலும் புவிவரையும்	153
2	72	அருந்தினால் அன்பகங்	1506	1	6	அலையெழுத் துந்தெறும்	332
2	47	அருமருந் தனையாய்	1254	2	45	அலைவளைக்கும் பாற்கடலான்	1203
1	5	அருமறை யாகமங்கள்	179	2	57	அல்லஓதியர் இடைப்	1362
5	24	அரும்பாய நகைமடவார்	2980	2	32	அல்லலங் கடலிடை	1076
5	40	அரும்பெறல் மணியை	3096	2	8	அல்லல் என்பதேன்	793
1	6	அரும்பொருளே என்	235	2	49	அல்லல் என்னைவிட் டகன்றிட	1274
1	5	அருளருவி வழிந்து	147	5	24	அல்லார்க்கும் குழலார்	2979
1	16	அருளறியாச் சிறு	234	2	30	அல்லாலம் உண்ட	1031
2	73	அருளார் அமுதப் பெருங்கடலே	1517	1	6	அல்லுண்ட கண்டத்	327
2	94	அருளார் அமுதே அரசே	1740	1	5	அவ்விலங்கு செழுஞ்சுடராய்	189
5	53	அருளார் அமுதே சரணம்	3247	2	61	அல்வைத்த நெஞ்சால்	1400
2த	2த	அருளாலே அருளிறை	1952	5	23	அவம் நாள் கழிக்க	2970
4	4	அருளுடைய நாயகி	2591	2த	3த	அவல வயிற்றை	1956
1	5	அருளுடைய பரம்பொருளே	212	1	2	அவ்வவ்விடை வந்	3
4	5	அருளுடையாய் அடியேன்	2599	5	45	அழகா அமலா அருளா	3144
4	2	அருளுதிக்குந் தருணத்தே	2551	4	3	அழகு நிறைந்திலக ஒரு	2581
				5	38	அழிதரும் உலக வாழ்வினை	3078
				2	70	அழிவிடையார்	2356

பாட்டு முதற்குறிப்பு அகராதி - பாட்டு எண்கள்

திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்	திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்
2	34	அழிந்த வாழ்க்கையின்	1093	1	5	அன்பர் திருஉளங் கோயிலாகக்	210
5	16	அழியாப் பொருளே	2900	2த	28த	அன்பர்பால் நீங்காஎன்	2205
3	19	அழியா வளத்தார்	2443	4	2	அன்பர் மனக் கோயிலிலே	2489
5	29	அழுக்கு நெஞ்சினேன்	3028	4	2	அன்பளிப்ப தொன்று	2542
2	9	அழுத பிள்ளைக்கே பால்	798	1	6	அன்பாலென் தன்னை	230
2	46	அழுது நெஞ்சயர்ந்து	1239	5	47	அன்பிலா வஞ்சர்தம்	3166
2	52	அளவிலா உலகத்	1303	5	28	அன்பின் உனது திருஅடிக்கே	3011
1	5	அளவிறந்த நெடுங்காலம்	121	2	23	அன்புடன் நின்பதம் புகழா	964
1	5	அளவையெலாங் கடந்து	128	4	5	அன்புடையாய் அடியேன்	2600
1	8	அளிக்குங் குணத்தீர்	638	1	4	அன்புடையார் இன்சொல்	74
3	12	அளித்தார் உலகை	2374	2	81	அன்புற் றடியார் தொழுதேத்த	1601
3	15	அளித்து மூன்று பிள்ளை	2398	4	2	அன்றகத்தே அடிவருந்த	2488
2	51	அளிய நெஞ்சம் ஓர்	1297	2	34	அன்றி னேர்கிலை நம்	1098
1	8	அளியா ரொற்றி	656	2	44	அன்றுநீ அடிமைச் சாதனம்	1198
3	15	அள்ள மிகும்பேர்	2405	2	40	அன்றும் அறியார்	1152
1	8	அள்ளற் பழனத்	654	2	84	அன்றும் சிறியேன்	1647
3	14	அள்ளிக் கொடுக்கும்	2387	4	2	அன்றொருநாள் இரவிடை	2482
4	4	அறங்கனிந்த அருட்கொடி	2594	2	82	அன்றோர் பொருளாய்	1608
2	24	அறங்கொள் உமை	974	5	7	அன்னே அப்பா	2773
2	31	அறத்தாயை ஓர்புடை	1063	5	5	அன்னே எனைத்தந்த	2727
2த	12த	அறம் பழுக்கும் தருவே	2037	2	89	அன்னே என் அப்பா	1694
5	33	அறியாத நம்பிணி	3048	2	70	அன்னை அப்பனும் நீ	1489
2	16	அறியாப் பருவத் தடியேனை	873	2	47	அன்னைபோன் றடியர்க்	1249
2	75	அறியாப் பருவத் தறிவு	1543	5	9	அன்னை முதலாம்	2790
2	40	அறியேன் உன்தன்	1157	2	50	அன்னையில் பெரிதும் இனிய	1279
2த	2த	அறிவாலே அறிவினை	1953	1	5	அன்னையினும் பெரிதினிய	184
4	2	அறிவுடையார் உள்ளகப்	2531	4	7	அன்னோ ஈததிசயம்	2630
1	6	அற்கண்டம் ஓங்கும்	378	2	81	அன்னோ திருஅம்பலத்	1605
2	77	அற்ப அளவும் நிச்சயிக்கல்	1558			ஆ	
2த	21த	அற்புதக் கணபதி	2080	2	109	ஆகமமு மாரணமு	1896
2த	3த	அற்புதத் திருவை	2045	3	7	ஆக்கம் இல்லார்	2299
4	5	அற்புத நின் அருளருமை	2603	2	65	ஆக்கல் ஆதிய	1434
4	1	அற்புதப் பொன்னம்பலத்தே	2448	5	45	ஆக்கும் தொழிலால்	3145
1	8	அனஞ்சூ ழொற்றிப்	666	2	69	ஆகம்படியில் அகங்கார	1482
3	14	அனத்துப் படிவம்	2388	1	7	ஆசைஉள்ளார் அயன்	487
1	7	அனம் பொறுத்தான்	468	3	10	ஆடல்அழகர் அம்பலத்	2336
2	65	அன்ப தென்பதைக்	1439			ஆடுங்கருணைத் திருநடத்தீர்	
1	6	அன்பரிதா மனத் தேழையன்	306	1	6	ஆட்சிக்கண்டார்க்குற்ற	333
2	91	அன்பர்இதய மலர்க்	1705	2	37	ஆட்டுகின்றதற்காக	1122
4	1	அன்பர் உளக் கோயிலிலே	2458	2	48	ஆட்டுகின்ற நீஅறிந்தில்லை	1264
2	33	அன்பர்கள் வேண்டும்	1084	1	6	ஆட்டுக்குக் காலெடுத்தாய்	373
2	71	அன்பர் தம் மனத்தே	1495	1	8	ஆட்டுத் தலைவர்	670

பாட்டு முதற்குறிப்பு அகராதி - பாட்டு எண்கள்

திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்	திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்
5	3	ஆணிலே அன்றி	2716	2த	2த	ஆவி யீரைந்தை	1951
2	66	ஆண்டதுண்டு நீ	1444	3	11	ஆழிவிடையார் அருளுடையார்	2356
2	68	ஆண்டநின் கருணைக்	1467	1	8	ஆழிவிடையீர் திருவொற்றி	683
4	5	ஆண்டவ நின் அருளருமை	2604	2	64	ஆளாக நின்பொன்	1423
2	98	ஆண்டவன் நீயாகில்	1767	5	8	ஆளாயோ துயர்	2781
2	87	ஆண்டாய் எனை ஏழ்பிறப்பும்	1670	4	5	ஆளுடையாய் சிறியேன்	2601
4	1	ஆண்பனை பெண்பனை ஆக்கி	2450	2	85	ஆள்வினையால் பயன்	1649
2	45	ஆதவன் தன் பல் இறுத்த	1233	2	45	ஆறடுத்துச் சென்ற	1204
1	6	ஆதிக்கமாயை மனத்தேன்	252	1	7	ஆறாத் துயரத் தழுந்து	521
2த	17த	ஆதி நடுவு முடிவுமிலா	2066	5	21	ஆறாத் துயரம் தருங்	2947
2த	16த	ஆதிமலை அனாதிமலை	2055	4	2	ஆறாறு தத்துவத்தின்	2545
4	2	ஆதியிலே கலப்பொழிய	2547	1	6	ஆறிட்ட வேணியும்	326
4	2	ஆதியுமாய் அந்தமுமாய்	2564	5	51	ஆறுமுகங்கொண்ட	3213
2	28	ஆதியே தில்லை அம்பத்	1008	1	8	ஆறுமுகத்தார்தமை	650
1	4	ஆமோ அலவோ	25	1	3	ஆறுமுகத்தான்	6
1	4	ஆயாக்கொடியேனுக்	58	5	44	ஆறுமுகப்பெருங் கருணைக்	3132
2	83	ஆயாது நான் செயும்	1635	5	45	ஆறுமுகமும் திணிதோள்	3151
2	94	ஆயிரங் கார்முகில்	1715	2	22	ஆறுவாண்முகத்	951
1	4	ஆயிரமன்றே நூறும் அன்றே	77	2த	16த	ஆறுவிளங்க அணிகிளர்	2054
3	13	ஆயும்படிவத் தந்தணனாய்	2385	2	94	ஆற்றால் விளங்கும்	1738
2	94	ஆயும் வஞ்சக நெஞ்சன்	1735	2	90	ஆற்றுக்கே பிறைக்	1700
4	1	ஆரணமும் ஆகமமும் எது	2469	1	8	ஆற்றுச்சடையாரிவர்	711
1	7	ஆரணம் பூத்த அருட்	532	2	33	ஆனந்தக் கூத்தனை	1080
4	6	ஆரமுதம் அனையவள்	2616	4	1	ஆனந்தவெளியினிடை	2468
4	5	ஆரமுதே அடியேன்	2602	8	87	ஆனேறிவந் தன்பரை	1674
3	13	ஆரா அமுதாய் அன்புடை	2378	1	5	ஆனேறும் பெருமானே	182
1	4	ஆரா அமுதே அருட்கடலே	90			இ	
1	8	ஆரா மகிழ்வு தருமொரு	556	5	16	இகவா அடியர் மனத்	2896
3	10	ஆரூர் உடையார்	2351	2	68	இகழ்ந்திடேல் எளியேன்	1465
1	4	ஆர்கொண்டார் சேய்க்கறி	56	2	100	இக்கணம் இருந்த	1776
2	29	ஆர்க்கும் கடற்கண்	1014	2	27	இச்சை உண்டெனக்கு	996
2	31	ஆர்த்தார் கடல்நஞ்	1062	1	8	இடஞ்சே ரொற்றி	672
3	15	ஆர்த்து மலிநீர் வயல்	2404	2	84	இடமே பொருளே	1640
2	31	ஆர்ப்பார் கடல்நஞ்	1062	1	6	இடைக்கொடி வாமத்	420
3	12	ஆல நிழற்கீழ்	2371	1	8	இட்டங் களித்த	592
3	3	ஆலம் இருந்த களத்தழகர்	2247	2	85	இட்டவகை வாழ்கின்றேன்	1656
2	54	ஆலம் உண்ட நீர்	1327	1	7	இட்டார் மறைக்கும்	491
2	14	ஆல் அடுத்த அரும்பொருளே	850	1	6	இணையேதும் இன்றி	382
2	29	ஆவல் உடையார்	1021	1	4	இண்டைச் சடையோய்	106
4	7	ஆவா ஈததிசயம்	2627	2	63	இத்தாரணியில் எளியோரை	1420
2	83	ஆவா எனஎனை	1637	1	8	இந்தாரிதழி யிலங்கு	558
2	89	ஆவித் துணையே	1691	1	5	இந்தியமாய்க் கரணாதி	119

பாட்டு முதற்குறிப்பு அகராதி - பாட்டு எண்கள்

திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்
2	80	இந்நாள் அடியேன்	1593
2	63	இப்பாரிடை உனையே	1415
1	4	இப்பாரில் என்பிழை	111
2	65	இமைக்கும் அவ்வளவே	1436
2	63	இம்மாநிலத்தில் இடருழத்தல்	1418
2	81	இம்மாநிலத்தில் சிவபத	1602
2	53	இம்மை இன்பமே	1314
2த	2த	இம்மையறையனைய	1950
4	2	இம்மையினோ டம்மையினும்	2541
4	2	இயங்காத இரவிடை	2484
1	6	இயங்கா மனமும்	416
2	48	இரக்கம் என்ப தென்னிடத்	1261
2	36	இரக்கின்றோர்களுக்	1112
2	80	இரங்கா திருத்தால்	1588
5	5	இரங்கா நின்றிங்	2884
4	2	இரவில் அடிவருந்த	2483
2	27	இருக்கவாவுற உலகெலாம்	999
4	2	இருட்டாய மலச்சிறையில்	2548
2	50	இருந்தனை எனது நெஞ்	1281
5	19	இருந்தாய் இங்கு கண்ட	2933
3	6	இருந்தார் திருவாரூரகத்	2285
5	5	இருப்பாய மாய மனத்	2742
5	6	இருப்பு நெஞ்சகக் கொடிய	2758
2	80	இருப்பு மனத்துக் கடை	1596
5	13	இருப்பேன் துயர் வாழ்வினில்	2870
2த	5த	இருமை யளவும் பொழி	1991
2	94	இரும்புன்னை மலர்ச்	1729
4	2	இருவினை ஒப்பாகி	2555
2	94	இருளற ஓங்கும் பொதுவிலே	1758
2	60	இருள் ஆர் மனத்தேன்	1383
1	6	இருவர்க் கறியப்படா	426
4	6	இருள் நிறைந்த இரவில்	2491
1	6	இரையேற்று துன்பக்	444
5	25	இலக்கம் அறியா	2989
2த	19த	இலகு பரிபூரண	2070
1	6	இலங்காபுரத்தன்	430
5	19	இலதை நினைப்பாய்	2930
3	6	இலமே செறித்தார்	2288
2	36	இலவு காக்கின்ற கிள்ளை	1114
2	40	இலனே மற்றோர் துணை	1159
2	34	இலைஎனா தணுவளவும்	1092
4	11	இலைக்குள நீரழைத்	2668
1	7	இலையாற்று நீ மலர்க்	462
2	16	இலைவேட்ட மாதர்	868
2	8	இல்லை இல்லை காண்	792
2	21	இல்லை உண்டென	942
2	11	இல்லை என்பதனுக்	818
2	32	இல்லை என்பதிலா அருள்	1073
2	3	இல்லை என்பதே பொருள்	739
2	32	இல்லையே என்பதிங் கில்லை	1074
2	89	இவ்வழியில் செல்லாதே	1698
5	18	இவ்வேளை அருள் தணிகை	2918
5	29	இழுதை நெஞ்சினேன்	3019
2	76	இழைபொறுத்த முலை	1553
2த	13த	இளங்கொடிதனைக்	2044
2த	17த	இளைத்த இடத்தில்	2060
2த	2த	இறகெடுத்த அமணர்	1947
2	57	இறப்பிலார் தொழும்	1360
5	37	இறைக்குள்ளே உலகம்	3064
3	3	இறையார் ஒற்றி	2250
2	44	இறையும் நின் திருத்தாள்	1200
5	23	இறையேனும் உன்தன்	2969
4	1	இறைவ நினதருளாலே	2470
2	44	இனியநின் திருத்தாள்	1199
2	7	இனியநீறிடா ஈனநாய்	782
1	4	இன்படையான் றன்புடையான்	83
5	37	இன்பமற் றுறுகண்	3070
5	45	இன்பப் பெருக்கே	3149
2	57	இன்பம் என்பது விழை	1358
4	6	இன்பருளும் பெருந்தாய்	2610
1	6	இன்பற்ற இச்சிறு	406
4	11	இன்பாட்டுத் தொழிற்	2673
2	59	இன்புடையார் நின்	1375
1	6	இன்றலவே நெடுநாளாக	288
2	42	இன்றிருந்தவரை நாளை	1171
2	49	இன்று நின்றவர் நாளை	1268
2	18	இன்ற வந்தெனை நீ	887
1	1	இன்று வருமோ நாளைக்கே	1
1	4	இன்றோ பகலோ இரவோ	21
2	108	இன்னந் தயவு வரவிலையா	1889
2	45	இன்னல் உலக இருள்	1213
2	34	இன்னும் எங்ஙனம்	1095
5	41	இன்னும் எத்தனை நாள்	3102

பாட்டு முதற்குறிப்பு அகராதி - பாட்டு எண்கள்

திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்
2	4	இன்னும் பற்பல நாளிருந்	754
2	60	இன்னே எளியேன்	1391
		ஈ	
5	52	ஈ என்று நான் ஒருவர்	3224
2	39	ஈசனைத் தாயில் இனியனை	1148
1	6	ஈடறியாத முக்கண்ணா	398
3	12	ஈதல்ஒழியா வண்மை	2367
3	4	ஈனப் புறங்காட் டெரியாடும்	2272
2	3	ஈர்ந்த நெஞ்சினர்	742
3	3	ஈர்ந்தேன் அளிசூழ்	2263
5	41	ஈறிலாத நின் அருள்	3103
5	28	ஈனத்திவறும் மனக்	3015
2	58	ஈன்றவனே அன்பர்	1368
2	66	ஈன்றுகொண்ட	1446
		உ	
2த	4த	உகஞ்சே ரொற்றி	1979
1	8	உகஞ்சே ரொற்றி	614
1	6	உடம்பார் உறுமயிர்க்கால்	395
1	5	உடல்குளிர உயிர்தழைக்க	157
1	8	உடற்கச் சுயிரா	569
2	26	உடுக்க வேண்டி	993
2த	2த	உடுக்கவோ ஒரு கந்தைக்கு	1945
1	8	உடுக்கும் புகழாரொற்றி	679
3	3	உடுத்தும் அதளார்	2243
3	3	உடுப்பார் கரித்தோல்	2251
2	4	உடை உடுத்திட	752
2	19	உடைகொள் கோவண	898
2	18	உடைமை வைத்தெனக்	889
2	23	உடையாய் உன் அடியவர்க்	956
1	6	உடையாய் என் விண்ணப்பம்	290
1	8	உடையா ரென்பாருமை	673
3	17	உடையார் உலகிற்	2427
1	6	உடையென்றும் பூணென்றும்	431
1	7	உடையென்ன ஒண்புலித்தோல்	534
2	56	உட்டிகழ்ந்த மேலவனே	1347
3	10	உணவை இழந்தும்	2345
1	8	உண்கண் மகிழ்வா லளி	691
2	50	உண்ட நஞ்சின்னும்	1282
5	8	உண்டாய உலகுயிர்கள்	2778
5	7	உண்டால் குறையும்	2770
2	44	உண்டு நஞ்சமரர்	1197
2	77	உண்டு வறிய ஓதிபோல	1559
2	40	உண்டோ எனைப்போல்	1156
2	73	உண்டோ என்போல்	1522
2	20	உண்ணாடும் வல்வினை	912
2	4	உண்ணிறைந் தெனை	749
2	66	உண்ணுகின்றதும்	1450
2	60	உண்மை அறியேன்	1384
2	37	உண்மை ஓதினும்	1124
2	65	உண்மை நின் அருட்	1442
2	32	உண்மையே அறிகிலா	1075
1	8	உதயச் சுடரே யனையீர்	695
3	10	உந்து மருத்தோ டைம்பூதம்	2335
2	54	உப்பிடாத கூழ் இடுகினும்	1321
1	4	உப்பிருந்த ஓடோ	29
5	52	உப்புற்ற பாண்டம் என	3232
4	2	உம்பருக்குங் கிடைப்பரிதாம்	255
2	59	உம்பர் தமக் கரிதாம்	1381
2த	10த	உம்பர் துயர் கயிலை அரற்	2021
2	4	உம்பர்வான் துயர்	747
1	8	உயிரு ளுறைவீர் திருவொற்றி	596
2த	4த	உயிரு ளுறைவீர் திருவொற்றி	1961
4	9	உயிர் அனுபவம் உற்றிடில்	2646
3	10	உயிர்க்குள் உயிராய்	2339
1	5	உய்குவித்து மெய்யடியார்	191
2	17	உய்ய ஒன்றறியா	876
2	48	உய்ய ஒன்றிலேன்	1265
2	49	உய்ய வல்லனேல்	1270
5	15	உய்யும் பொருட்டுன்	2886
2	28	உய்யும் வண்ணம்	1012
5	23	உய்வண்ணம் இன்றி	2967
2த	8த	உய்வதாம் இது நம்குருவாணை	2017
3	7	உரப்பார் மிசையில்	2297
2த	15த	உரிய நாயகி	2051
4	12	உருஅண்டப் பெருமறை	2679
7	5	உருத்திரர் நாரணர்	172
2த	8த	உருத்திரன் திருமால்	2014
5	25	உருத்துள் இகலும்	2985
1	5	உருநான்கும் அருநான்கம	169
1	6	உருமத்திலே பட்ட	421
1	6	உருவத்திலே சிறியேனாகி	261

பாட்டு முதற்குறிப்பு அகராதி - பாட்டு எண்கள்

திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்	திரு முறை	பதி எண்	பாடல் முதல்வரி	பாடல்எண்
4	2	உருவம் ஒரு நான்காகி	2558	2	85	உள்ளமறிந் துதவுவன்	1654
1	5	உருவாகி உருவினில்	126	5	9	உள்ளமனக் குரங்காட்டித்	2805
1	4	உருவாய் உருவில்	12	4	4	உள்ளமுதம் ஊற்றுவிக்கும்	2595
2	82	உரைத்தார் சிலர்	1611	5	1	உள்ளமும் உயிரும்	2689
1	5	உலகநிலை முழுதாகி	113	5	12	உள்ளம் நெக்குவிட்டுருகும்	2854
2த	15த	உலகந் தழைக்க	2052	3	10	உள்ளார் புறத்தார்	2324
2	99	உலகமுஞ் சராசரமும்	1769	3	16	உள்ளி உருகும் அவர்க்	2415
1	5	உலகமெலாந் தனி நிறைந்த	114	2	9	உள்ளியோ என அலறி	799
4	2	உலகமெலாம் உதிக்கின்ற	2479	4	2	உள்ளிரவி மதியாய் நின்	2502
3	10	உலகம் உடையார் என்னுடை	2333	2	62	உள்ளும் திருத்தொண்டர்	1407
3	17	உலகம் உடையார் தம்ஊரை	2416	2	29	உள்ளும் புறமும்	1020
2	88	உலகம் ஏத்திநின் றோங்க	1686	4	2	உள்ளுருகுந் தருணத்தே	2528
5	51	உலகம் பரவும் ஒருமுதல்வா	3205	1	4	உள்ளொன்ற நின்னடி	72
5	45	உலகம் பரவும் பரஞ்சோதி	3142	2	46	உறங்கு கின்றதும்	1242
2	82	உலகம் பரவும் பொருளே என்	1607	2	18	உறவனே உன்னை	891
5	4	உலகம் பரவும் பொருள் என்கோ	2720	2	3	உறைந்து வஞ்சர்பால்	744
2த	27த	உலகம் புரக்கும்	2204	2	1	உற்ற இடத்தில் உதவ	724
2	53	உலக வாழ்க்கையின்	1309	1	8	உற்ற விடத்தே	684
2த	19த	உலகியலின் உறுமயலின்	2068	1	6	உற்றாயினு மறைக்	304
4	2	உலகியலோ டருளியலும்	2578	5	5	உனக்கே விழைவுகொண்	2736
4	9	உலகியல் உணர்வோர்	2645	2	69	உன் உள்ளம் கொண்டேற்	1480
5	47	உலகியற் கடுஞ்சுரத்	3162	4	2	உன் மணியின் உள்ளகத்தே	2549
2	100	உலகின் உயிர்வகை	1774	1	4	உன்னால் எனக்காவது	26
2	71	உலகுயிர்தொறும்நின்	1500	4	3	உன்னுதற்கும் உணர்வதற்கும்	2588
2	110	உலகெலாந் தழைப்பப் பொதுவினில்	1900	1	7	உன்னுந் திருவொற்றி	478
5	1	உலகெலாம் தழைப்ப அருள்	2688	1	7	உன்னேர் அருள்	451
2	94	உலகெலாம் நிறைந்தோங்கு	1755	2	25	உன்னை உன்னி	978
4	3	உலர்ந்தமரம் தழைக்கும்	2583	2	76	உன்னை நாடும் என்	1552
2த	14த	உவந்தொரு காகம்	2047	2	89	உன்னை நினைத்திங்கே	1892
068	1995	ஞாலலராதி	உலகத்தவர், உலகநடை
		பாலராமென்று	குமரன், என்று பதினாறு வயது உடைய பாலர்

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவபயம் சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவபயம் சிவசிவ

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
069	1996	வண்மை	கொடைத்தன்மை, வள்ளல் குணம்
		மருவீர் நீர்	தழுவி, கலந்திடும், பொருந்தும்
		கண்மை யுடையீர்	பரிவு; கண்ணோட்டம்
		தண்மை யருளீர்	ஈரம், இரக்கம் யுடையவர், இன்பமீகின்ற
070	1997	ஒன்னார் புரமூன்றெரி செய்தீர்	சுத்த சிவாதீதமான மும்மலமான பகைவரை பகைவர், எரித்தவர், பகைவரது முப்புரத்தையும் நீக்கினீர்
071	1998	தனி மானேந்தி யென்றேன்	அசுத்த மாயாசக்தி, ஆதிமூலப்பகுதி, ஆதிபுரிமானாகிய விலக்கு இடக்கையில் ஏந்திய படை, பிரகிருதிமாயை மூலப்பிரக்கிருதி.
		தலைமேலொரு மானேந்தியென்றார்	முடிமேல், சுத்தமாயாசத்தி, ஆதிமூலப்பகுதி ஆதிபரை
072	1999	துருவ கருணாகர	தேடிக்கிடைத்த, தெளிவுடைய, கருணாலயனே ஆய்ந்து துரிசு அகற்ற செய்பவன், கற்பக அமுது
073	2000	சைதன்ய சுத்தமணியே	வையகம், உலகம் காக்குமலை
		துரிய மணியே	நனவுக்கு அப்பாற்பட்ட ஒருமைநிலை
		ஜாதி மணியே	பலவகைச் சாலங்கள்
		நிருவிகற்ப மணியே	வேறுபாடு இல்லாத ஒருமை உணர்வு நிலையாய்
		அத்வைத நித்ய ஆனந்தமணியே	ஒருமை, பொருள் நித்தியம் இரண்டும் ஒன்றாய் இருக்கும் நிலையில்
		ஆதிமணியே	முதலானவர், ஆதிமூலவர், அருட்பெருஞ்சோதி
		அநாதி மணியே	தோற்றமற்றவன், அருவுரு
074	2001	ஊகமன நாடி	எழுச்சியிலே, குரங்கும்மை
		போகுமுயிர்கள் வினையை ஒழிமின்	இறக்கபோகும் உயிர்களின் ஊழ்வினைகள் அழிப்பது
		அம்போருகத்தைக் காட்டி	விண்ணுலக இன்பம், தாமரை அடிகுடி காட்டி
075	2002	பொய்யான	பொய்யே கலந்து
		மடவார்	இளமையுடையவள், இளமகளிர்
		மறை ஆகமத்தின்	வேதங்கள்
		ஐயானனங்	தலைவர்
076	2003	போதாரு	பிரமனும், திருமானும்
		நான்முகப்	மாலும், நாரணனும்
		நமனாற	எமன், இயமன்
		போகுமுயிர் கள்வினையை ஒழிமின்	இறக்க போகும் உயிர்களில் ஊழ்வினைகள் ஒழிப்பது, (நீக்குவது)
		குரவர்போதிக்கும்	சான்றோர் போதிக்கும்
		கண்கெட்ட குண்டையென	இருகண்ணும் கெட்ட கும்மை எருது
		மாதாவு மாய்	பெருங்கருணையுடைய அண்ணையுமாய்
		அம் போருகத்தைக்காட்டி	அழுகு நிரம்பிய ஒளிவடிவை காட்டி, விண்ணுலக இன்பம், தாமரை திருவடிகாட்டி
		அணிசீர்	அணிகளங்கள் கூடி பெற்று பொருந்திய சோதியே

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவபயம் சிவசிவ

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
077	2004	பண்ணாரு	இளசமிகு சொற் பொருளாய்
		பச்சை மயிலாம்	மரகதமே, பச்சை நிறத்து உமையவளே
078	2005	பவமான எழுவகை	பிறவியான எழுவகை தோற்றம் இந்தப்பிறப்பு பாவப்பிறப்பு, பிறவிதுன்பம் பிறவி வல்லபம்.
		பசுவான பாவி	உயிர்நிலை, சீவனாகிய மும்மலம்
		உவமான	விரும்பி செய்யும், மகிழும்படி
		சந்ததமும்	எப்பொழுதும்
		சம்புவாம்	சுயஞ்சோதியே
		காந்தருவர்	தேவகணத்தில் ஒருவர், பதினெட்டுத் தேவ கூட்டத்துள் ஒருவர்
079	2006	விஞ்ஞசையர்	பதினெட்டுத் தேவ கூட்டத்துள் ஒருவர்
080	2007	நீறணி ஒளிர், அக்கமணிபூண்டு	விபூதி தரித்து பூசிய அழகிய முகம், உத்திராக்கமாலை அணிந்து
081	2008	ஆன் மாக்களாய்	சுத்த சிவம், பரிபூரண சோதியின் தோன்றிய உட்பொருள் (ஆன்மாக்கள்) சத்துவ பொருள்
		ஆனமாக்களின் மலமொழித்து	(ஆன்மா உய்வதற்குரிய பெரும் பொருளே) இயற்கையான (ஐந்து மலம்) ஆணவம், கன்மம், மாயை, திரோதை, மாமாயை கழித்து, சுத்த ஆமை நிலைப்பாடு
		அழியாத பெருவாழ்வினை தரும்	ஆத்மாவின் மகிழ்வுதரும் எல்லையை தரும் வாழ்வு அளிப்பது.
		வள்ளலாய்	பரோபகாரி, அருட்பெருஞ்சோதியாய்
		முப்புராதிகள் எரிய	திரிபுரம், ஆனவ, கன்ம, மாயை மும்மலம் நீங்க
		கஜானனச் செம்மாலாய்	யானை முகத்தினை
		கடவுளரெலாம் தொழும் பரமபதியாய்	ஆகம மெய்ப்பொருள், திருவடியாகிய, அருட்பெருஞ் ஜோதியாய்
082	2009	அரங்காய மனமாயை	மனமென்னு மேடை அமைத்து
		அரசியற் கோல்	வீற்றிருக்கும்
		கொடுங்கோல் ஆனால்	இழிந்த கொடுங்கோல் ஆட்சிபுரிபவன் இழிந்த கைகளை யுடையவன் இழிந்த துன்புறுத்தும் ஆட்சி
083	2010	தனத்தால்	பொன்னம்பலம், செல்வம் நிறைந்த
		தனிச்சபையில்	ஒப்பற்ற மெய்ப்பொருள்
		இனத்தால்	சத்சங்க கூட்டத்தார்
		மணமாலை	திருமணமாலை சூடிய
		மனத்தான்	அன்னத்தின் மேல் ஏறிவரும் பிரமன்
084	2011	மலையான்	மலையை உடையவனே, உமை கணவனே
		திருமகளே	திருவுடைய மகளிர்
		பரையாம்	பராசத்தியால், சத்திதத்துவத்தால்
085	2012	மாற்றறியாய் பொன்னே	உறை மாற்று இவ்வளவு என்று அறிய சொல்லமுடியாத அளவு - பொன்
		மருளே தவிர்த்த	மறைப்பை தவிர்த்த, அறியாமை தவிர்த்த

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
086	2013	தருவாய்	மரம் போன்ற நிழல் தருவாய்
		மணி மன்ற வாணனை	பொன்னம் பலம் அம்பலவாணர்
087	2014	அயன் ஒப்ப முக்குணமாய்	பிரமன் ஒப்ப, மூன்று சத்துவம், இராஜசம், தாமசகுணம் இருத்தல்ன்றி அக்குணங்களை ஆளும் தன்மையன்
088	2015	விச்சுவ வியாபி	எங்கும் நீக்கமற கலந்த வல்லவன்
		விச்சுவ கருத்தன்	எங்கும் நீக்கமற நிரம்பிய தனித்தலைமைப் பெரும் பதி (அருட்பெருஞ்ஜோதியார்)
		சைவமாதி சித்தாந்தத்து மறை	ஆகமத்தின் முடிவு சிவத்தின் கோட்பாடு,
		முடித்தலத்தும் நைவதன்றி	நீ அதுவானாய் என்னும் ஆன்ம அனுபவம்
089	2016	விசுவசங்காரி	எங்கும் நீக்கமற நிரம்பிய அடக்குதல் நன்மை செய்யும் தன்மை, ஞான நிறைவு
		அருஞ்சிறை	தேவர்கள் சூர்கள் மூலம் வைக்கப்பட்ட சிறை
		பகவனே	கடவுளே, முழுமுதற்பொருளே
090	2017	உய்வதாம்	உய்யும் பொருட்டு.
		சைவமாதி	இறைவனின் தனிப்பெருங்கருணை
		சித்தாந்தத்து	ஞானத்திருக்கூத்து ஆடுகின்ற சித்தாந்திகள் காணும் நிலை
		மறைமுடித்தலத்தும்	வேதமுடிவாம் நிலை
		நைவதின்றி	வருந்துகிறேன், வருந்துவது
091	2018	உருத்தகு	உன்திருவடியை வணங்கி
092	2019	சின்மயம்	பேரறிவேயான அருள், ஞான சொரூபம் ஞானநிறைவு
093	2020	சீராரு மறை	சீர்வளர்க்கும் வேதங்கள்
		ஏராரு நிதிபதி	எழுச்சி, அழகு, பெருமை
		தேராரு	தேர் அணியும் நெடும் வீதி தேர்ந்து கொள்ளுதல்
094	2021	உம்பர்	தேவர்கள், விண்ணவர்கள்
		உவந்து	மகிழ்ந்து
		முகமாறு	ஆறுமுகம்
		உயவிடுத்து	உய்யும் நெறி
095	2023	அருஞ்சிறையைத்	தேவர்கள், அசுரர்கள் முலம் வைக்கப்பட்ட சிறைதவிர்த்தவனே
		பகவனே	அருட்பெருஞ்சோதியனே, கடவுளே
096	2024	புன்மை நீக்கும்	இழிவு நீக்கும்
		வசியர் குலப்பெண்	வயப்படுத்தும் பெண்களுக்கு கைகொடுத்து உதவி செய்தவனே
097	2025	புன்மை நீக்கும்	இழிவு நீக்கும்
		வசியர் குலப்பெண்	வயப்படுத்தும் பெண்களுக்கு கைகொடுத்து உதவி செய்தவனே
		வரனவர்	தேவர், அந்தரத்தில் உயர்வு வோர்
		தானவர்தம்	தேவலோக இசைகலைஞர்

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவபயம் சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவபயம் சிவசிவ

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
098	2026	மட்டாரும்	மலர்த்தேன் குறையாத சோலை
		நட்டாரும்	நட்பு செய்தவர்க்கு கூத்து ஆடுபவன்
		நணுகி	கிட்டிய (கிடைத்திட) அடைவதற்கு சேர்கின்ற வரையில்
		ஒட்டாதார்வ அடக்கி	கூடி நில்லாதார் துன்பத்தை பொறுத்து
099	2027	முன்செய்த	மேல்நாள், முன்பு ஒருநாள் செய்த புண்ணியத்தால்
		மாதவத்தால்	பெரியதவசிகள்
		புன்செயல்தீர்	இழிந்தசெயல் தீர்க்கும்
100	2028	குஞ் சரியை (தெய்வயானையை)	இறைவனை அடையமுயலும் முதல்மார்க்கம் போற்றுவது, தோத்திரம் செய்தல் முதயன வழிபடல்
		திண்ணிய தீவினை	கருங்கல் போல அழுந்திருப்பது போல வமையுடைய தீவினை ஒழிப்பாய்
101	2029	மாசகன்ற	குற்றம் நீங்கிய, குற்றம் அற்று, துரிசு அகன்று
		ஆசில்தவப்பேறளிக்க	குறையற்ற தவம்
		தேசுலவு	ஒளிவழங்கி, ஒளிபொருந்திய, ஞான ஒளி, ஒளிவிளங்குகின்ற
102	2030	தரநீள்	கொடுக்கும் அருள் தடையில்லாத அருள் வழங்குதல்
		தாராய	ஆதாரமாகிய பொருளே
		வாமனாயநம	உமை ஒரு பாகனே, ஒற்றியூர், வாமளனுக்கு வணக்கம்
103	2031	தனு எடுத்த	உடம்பு, வில்லேந்திய மூலப்பொருளே இராமர்
		மருமலர்	மாறாநெறிபோன்ற மலரே
104	2032	கானங்கடந்த கடலே	காட்டுவழி, காட்டுதளமான எல்லை கடந்த கடலே
105	2033	வித்தக நின்	எல்லா வல்லமையும் வாய்ந்த ஞானமணியே
		புண்ணாளா	உலகை ஆள்பவனே
		சுடர்க்கமலக்	ஒளிபொருந்திய தாமரை மலர் போன்றவனே
106	2034	தெவ்வினையார்	பகையாள், தீவினை அரக்கரை வென்றவர்
		வெவ்வினை தீர்த்தருளுகின்ற	மூவகையானவினைப்பயன்களை தீர்த்தருளுகின்றவன்
107	2035	கருமுகிலே	வினையினை, உட்பொருளை நீக்கிய மேகமே
		கான்வண்ணக்	குடும்பம் என்கிற சம்சார காட்டை கடந்தவனே
108	2036	பிறந்தேன் வாளா	வீணுக்கு பிறந்து சும்மா இருந்தேன்
109	2037	அறம் பழுக்கும் தருவே	ஜீவகாருண்யம் நிறைந்ததருவே, அன்பு, தயவு பொருந்தும் கருணையே
110	2038	கல்லாய வன்மனத்தார்	கல்வி அறிவில்லாத இரக்கமில்லாத மனமுடையவர்
111	2039	மையான	குற்றமுள்ளவர் மனம் இருள் நெஞ்சினர்
112	2040	அவலமெனும் கருங்கடல்	துன்பமென்னும் எழுபிறவி நீண்ட கடல் அழுந்துகின்றேன்
113	2041	எவ்வளூர்	திருவள்ளூர் (சென்னைக்கு பக்கமுள்ளது) தற்போதிய பெயர்
114	2042	பத்தருள்	விரைந்தருளியவன்
		நீண்டவன்	திருமால் தோற்றமுடைய மூலப்பொருள்

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
115	2043	மேதினி	உலகில்
		வேதியன்	வேதங்களின் தலைவன், அருட்பெருஞ்சோதியன்
116	2044	கனவர சளித்தாய்	நினைத்தைத அளிப்பவனே
		துளங்குமா தவத்தோர்	கெடும் உடம்பை தடுக்கும் மாதவத்தோன்
117	2045	பொற்புறு	அழகும் இன்பம்
		திகிரி சங்கு	சக்கரப்படையும் சங்கும்
		வற்புறு	வமை மிகு மாயை
		வெற்பயர்	(ஆஞ்சைஎனும்) மலை, மலைமகள்
118	2046	பொறையும்	அடக்கமுடைய கல்வி
119	2047	உலுத்தர்தம்	வீணர்கள்தம்
		நசைமணிக்கோவை	விருப்பப்படும் தேக சித்தியை தரும் நவமணி அரசனே
120	2048	விரவுறும்	கலந்துறவாடும் சுற்றத்தார்
		இருந்திசை	மறைத்தல், அருளல் எனும்
121	2049	நண்ணிய	சென்றடைந்து
		நன்கு	நன்மை நன்றாக
122	2050	உடல் சயாமல்	தேகம் வெறுக்காதவர்
		அனமகிழ்	அன்ன நடையாய், உள்ளம் மகிழ்ச்சி
		காஞ்சன உடையாய்	அழகு பொருந்திய மலைவாச உடை
123	2051	கைப்பதித்	திருக்கயிலாயம் அமர்ந்த சிவனே
		துரிய நாயகி	சிவயோகத்தில், துரிய நிலையில்
124	2052	ஆதிபரை	மூலகாரண பராசக்தி, சிவகாமவல் பரவிந்துநிலை, பராசத்திநிலை
125	2053	அருட்சிவையே	சுத்த சினவயே, கருணையே வடிவான உமையம்மையே
126	2054	ஆறுவிளங்க	அறுவகை சத்தி பற்று அறுக்கின்றவர்
		அணிகிளர்	எழில் ஓங்குகின்ற
		உலாப்பேறு	பவனிவருதல், அது பாட்டுடைத்தலைவன், உலாவந்ததாக நேரிசைக் கவெண்பாவால் கூறி அவனது குல முதய மகிமையை விளக்குவது
		உளம் பெற்றதுமன்	உள்ளத்தில், மனத்துள் வைத்து
		மின்றிரண்டு	மின்னல் ஒத்த மின்னல்போல் ஒளிரும் தெய்வயானை வள்ளி
127	2055	வெண்பூதிமலை	திருநீறு நிரம்பிய மலையே
		அனுபூதிமலை	சிவானுபவம், அனுபவஞானம்தரும் குன்றே
128	2056	எறிந்தசிலை	வெட்டிய, வெட்டிய, வீசி அழிய குற்றமொன்று அடையாதவர்
129	2057	கருமாலகற்றுந் தனி மருந்து	மலமாயை நீக்கும் மருந்து
		ஆரமுதை	தெவிட்டாத அமுதை, அகம், புறம், அகப்புறம் புறப்புறம் ஆகிய நால் வகை அமுதம்

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
130	2058	மவுனமதியை	ஞானமதி – மனம் அமைதியாக பேசாமருப்பது,
		மதி அமுதை	சிரசில் இருக்கும் அமுது அறிவாகிய அமுது, அருள் நிலவு, சந்திரன்
		ஊனம் அறியார்	குற்றம் குணம் ஏதும் பொருட்படுத்தாதவர் குறையேதும் காணார் (குற்றமொன்றும் அடையாது)
		நண்ணி விளங்க	சிந்திக்கும் மனத்திற்கு மேற்பட்ட புத்திதரும் அமுதம் அடைந்து அருளுவது
131	2059	தவள நிறத்துத்	வெண்மை, வெண்ணீறு பூசி
		மணித்தோள்	அழகிய தோள்
		தாணுவை	அடிமுடிகாண இயலாதபடி (தூண்) வடிவமாய் நின்றவன்
		நம்குவளை	கருங்குவளை விழிபோன்ற மலர்
		தனையோர் பாதிமலை	உமையொரு பாகமாகிய குன்றமே (சிவ சக்தி)
132	2060	ஏமவைப்பை	பொன்நிதியை பாதுகாப்பு அளிப்பவன்
		வளைத்த மதின் மூன்றெரித்த	சூழ்ந்த திரிபுராந்தகம், காமம், வெகுளி, மயக்கம் மும்மல அரக்கர்கள்
		துரியாதீத மட்டுங்	பர அறிதுயில், மேல் நிலைப்பாடு பர துரியத்துக் மேற்பட்டநிலை, அறிதுயில்
133	2061	மடந்தை மலையாண்	பெண் மகள்
		அடர்ந்தவினையின் தொடக்கை	நிறைந்த வினை
		அலைகடன் மேல் கிடந்த பச்சைப்பெருமலை	மனம் எனும் ஓயாது வீசும் அலைகடல் போல் கிடந்த – ஏழு திரையின், அடிப்பச்சை: அசுத்த மாயதிரை நீங்கிய உடன் மேல்கச்சை நீங்குவது சுத்த மாயா திரை
134	2062	பருக்குங் கிடையாத இன்பம் அடைந்தே	இம்மி அளவு கடுகளவும் குறையாத இன்பம் அடையும் பொருள்
135	2063	பச்சைப்மருந்தொருபால்	உமையவன், கரிசலாங்கன்னி, பொற்றாலைகையாந்த கரை கீரை ஞான மருந்து துரிசுநீக்கும்
136	2064	புனிதர் உளத்தில் புகுங்களிப்பை	தூயர் உளத்தில் புகுந்த அருட்பெருஞ்சோதி சிவானந்த சுகம்
137	2065	நல்ல மனத்தே தித்திக்க நண்ணும் கனியை	உத்தமர் மனத்தில் சுரக்கும் அமுததேன் சுவைப்பர் சாகாவரம் பெறுவர்
		அருமருந்தைச்சொல்ல முடியாத தனிச்சுகம் வல்ல மலையே	உத்தம யோகியர் உளத்தில் தோன்றும் ஐந்து அமுதம் இறப்பை நீக்கும் தனிச்சுகம் பெறுவர்
138	2066	ஆதி நடுவு முடிவுமிலா	அடி முடியின் தன்மை முதல், இடை, இறுதி
		ஓதி உணர்த்தற்கரிய சிவயோகந்	சொல்லமுடியாத சுத்தசிவ நிலையை, ஒருமைறிலை மெய் உயர்வை
		பாதியாகி ஒன்றாகிப்படர்ந்த வடிவு	சிவசத்தியாய் (அர்த்தநாரீசுவரர்) அர்த்தநாரீசுவரர் பாதி உருவம் (சிவசத்தி)
		பரம்பரத்தை	சிவதுரியத்துவம், பரம்பொருள் விளங்கும் இடம் தேவ போக நிலைகளைத் தற்சுதந்திரத்தில் நடத்தும் தெய்வம்
139	2067	திருவிளங்க	அருள் தீபமே
		சிவயோக சித்தி	ஒருமைநிலை, மெய்யுணர்வு, ஏமசித்தி முதலாகத் தற்சுதந்திரத்திற் ஆற்றல், உடலை பொன்போன்று ஜோதிவடிவாக மாற்றுவது
		சிவாநுபவம்	சுத்தசிவ துரியாதீத அனுபவம் சச்சிதானந்த சுகஅனுபவம்
		தெருவிளங்கு	பக்குவம், தெளிவு, பக்குவமிக்க
		திருக்கூத்து	ஆனந்த திருக்கூத்து, சிற்சபைநடம்
		மருவிளங்கு	இயற்கை நன்மணம் வீசும்

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவபயம் சிவசிவ

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
140	2068	உறுமயன்	உலகியல் வரும் மயக்கத்தில்.துன்பங்கள்
		அடைவுபெறும்	பலன்கிட்டும் பொருந்து உலகியல் இன்பம், அருள்பெற முயல்பவர்
		உதயநிறை	தோன்றும் பிரகாசம் அறிவு, தோன்றிய அறிவுடைய
		மதிஅமுத உணவு	அமுதம் தேவாமிர்தம், புறப்புறம், புறம், அகம், அகப்புற நான்கு இடத்தில் மனிததேகத்தில், ஐந்து வகையான அமுதஉணவு உடற்பசிநீங்கி சாகவரம் கிடைக்கும்.
		உனதுடைமை எனதுடைமை	இப்பாரில் உடல் ஆவி பொருளும் உன்பாற் கொடுத்தல் அதனால் அருட்சோதி இயற்கை என்னும் துப்பாய உடல் பொருள் ஆவி எனது உடைமை ஆகும்.
		ஒன்றுடன் இரண்டென விதண்டை இடும் மிட்டார்ஒன்றல் அற நின்ற நிலையே	இறைவன் ஒன்று இரண்டு எனபலவாறு கூறும் வீணாகப் பேசும் மறுப்பு நோக்கமில்லாதவன் இறைவன் ஒன்றுதான் என்று உரைப்பது நிலையே
		உன்னல் அற	எண்ணும் எண்ணம் தோற்றும் நிலையே
		உன்னுநிலை	கருதுவதும், நினைந்து போற்றும் நிலையே
		போத நெறியே	மெய்ஞ்ஞான நிலையே
141	2069	அலகின் மறைமொழி	அளவிட முடியாத வேத ஆகம இரகசியம்
		தத்துவ அதீத அறிவென்ற ஒன்றே	சுத்த ஆன்ம அறிவு ஒன்றே
		அல்லை அத்தத்துவஅதீத அறிவென்ற ஒன்றே	அந்த இருள் அகன்று 96 தத்துவங்களையும் சுத்த அனுபவ அதீதநிலை (பரசிவநிலை) முடிவுக்கு முடிவான (ஒன்றே) முதல்வனே
		ஐம்பூத ஆதி நீ	ஐம்பூதத்தை தோற்றுவித்த முழுமுதலான மூலபிரகாச சோதி நீயே
		அத்துகவா ஆறையும் அகன்றநிலை	சிற்றொளி துரிசு அகன்று ஆறு+ஆறு=முப்பத்தியாறு தத்துவங்களும் அகன்ற நிலையே இரண்டும் ஒன்றாய் இருக்கும் நிலை
		அத்துவிதநிலை	மேலாம் ஒன்றாம் தன்மை (பரமான்மா, ஜீவான்மா) ஒளிமயமாகும்
		துவிதநிலை	ஜீவன், பரம் ஒன்று படல் அடையும் நிலை
		அட்டசித்திகளும் நினது ஏவல்	1.அணிமா 2. மகிமா 3. கரிமா 4. லகிமா 5.பிரர்ப்த்தி 6. ஈசத்துவம் 7. பிரகாமியம் 8. வசித்துவம் என்னும் 8. சித்திகளும் தற்சுதந்திரந் அவர்களுக்கு பணிசெய்யும்
		அவாவி இடல்	விரும்பியபடி பணிசெய்தல்
142	2070	இலகுபரி பூரண விலாசம்	முழுமை யாவையும் அருள்பூரணத்தால் விளங்கும்
		இரவு பகல் அற்ற இடம்	நினைப்பு மறைப்பு நீங்கி செயல்படும் இடம்
		சகல கேவலம்	நினைவு: ஜன்னம் மன அசைவு ஒன்றைநினைத்தல் சகலகாலம் மறைப்பு: மரணம், துக்கம் மனமொன்றை உடனே மறைத்தல் கேவலகாலம் மேற்படி நினைப்பு, மறைப்பற்று நிரதிசயானந்தமாய் அருள்வடிவமாவதே சுத்தசன் மார்க்க சாதனம் (ஜீவசாக்கிரம், ஜீவசொப்பனம் ஜீவ சுழுத்தி
		இரண்டின்நடு	சுடர், கனல் (நடு) ஆன்மா
143	2071	கலகமனம்	மூடமனம்
		காழிதனில்	உறுதிமிகும் (சீர்காழியில்)
		சமயாதிபர்களும்	ஜீவகாருண்யத்தின் வாச்சியானுபவ நிலையுள்ளவர் சைவ, வைணவ முதய அறு சமயம் சார்ந்த அதிபர்கள் (எப் பொருளுக்கும் பொது வாகிய)
		கவினுறவிளங்கு	பாடல், பண்இயற்ற ஆசைவைத்தாய்

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
144	2072	அணிவாயுலகத் தம்புயனும் அளிக்குந் தொழிற் பொன் அம்புயனும் திணிவாய்	ஆபரணசூடிய தோளில் அணிந்த நான்முகன் பிரமன் அழகிய மார்பினன், இலக்குமியை உடைய திருமாலும்
145	2073	நெடிய விகற்பம்	நீண்ட வேறுபாடு
		இகத்தும் பரத்தும்	இம்மை, மறுமை, உலகியனும், அருளியனும்
		வியனிறைவே	உயிர்க்குயிராக, பரந்தநிலை, பரிசுத்தநிலையே
146	2074	அசையும் பரிசாற் தத்துவமன்ற அவத்தை	ஜாக்கிரம் கனவு : (பித்தம் கூடி லலாட ஸ்தானத்தில் நிற்பது ஜாக்கிரம் சொப்பனம் நனவு : உள்ளம் வாத நாடியோடு கூடிக்கண்ட ஸ்தானத்தில் இருப்பது சொப்பனம் அழுத்தி : உள்ளம் சிலேத்தும் நாடியோடு கூடி மார்பு ஸ்தானத்தில் நிற்பது சுழுத்தி – 96 தத்துவகள் – அவத்தை தேகம் நசையும் வெறுப்பும் – விரும்பப்படும் (அருவருப்பு துன்பம்) தவிர்த்தவர் பால் கிட்டிய நிதியே
147	2075	கண்மூன்றுடையான்	சிற்சபை வழிபாட்டினால் மூன்றாவது நெற்றியில் உள்ள ஞானகண் ஒளிரும்.
		கருமால்	திருமான் கண்ணாகிய மலர் அம்புகொண்டு
		அறுக்குங்	பிறவி நீக்குபவனே
		மண்மூன்றறக் கொண்டிருந்தவர்	கனவிலும், நனவிலும், மண்ணாசை, பெண்ணாசை பொன் ஆசை அற்றவர்
148	2076	ஐங்கரன் அடிமலர்	கணபதியே, விநாயகர்
		மங்கன் மனனே	நன்மை உள்ளம்
		செம்பொற் கஞ்சமும்	தாமரைமலர், சிவந்த பொன் போன்ற திருவடி தாமரைமலர்
149	2078	துதிபெறு	வழிபடச்செய்து
		இணையடி	திருவடிகள்
		கதிதரு	அடையதக்க முடிவுநிலை சிவசக்தி தரும்
		மதியுற	அறிவு பெறுவதற்கு, அறிவொளி பொருந்துவதற்கு
150	2079	அருளுறுந்	அருளால், அருள் விளங்க
		பொருளுறுந்	ஞான பொருளை பெறுவது
		தாள்களும்	திருவடி இணையடி திருவடித்தாமரை
		தெருளுறு	தெளியும் ஞானம், தாமரை திருவடி
		மருளற	அறியாமை அற்று அறியாமை இருள் நீக்கி
151	2080	அமல	தூயவனே, மலமற்றதன்மையர்
		தற்பர	தானேயாகிய பதப்பொருள் தனக்கு தானே பரம் (தலைமை)
		சிற்பர	சிற்பரனே, ஞானவடிவம்
		பொற்பமர்	அழகுற, அழகிய ஞானசம்பந்த பெறுபவர்
152	2081	மாதங்க	யானைமுக கணபதி
		ஏதங்கள் அறுத்தருளும்	துன்பங்கள் நீக்கும்
		தாதங்க மலர்க் கொன்றையுடைய	அன்பர்க்கு வய பொன்மலர் கொன்றை அளிப்பவன்
		சீதங்கொள்	குளிர்ந்த தாமரை மலர்போன்ற விழியுடையாய்

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
153	2082	கலைநிறை	கலைகள் கொண் நிலவு
		கஜமுக	யானை முகத்தலைவன் ஆனைமுகம்
		உலைவறும்	தீயிட்ட பொன் போல் மிளிருபவன்
154	2083	குறவர் குடிசை நூழைந்தாண்டி	அன்பர் உள்ளம் என்னும் குடில் நுழைந்தாண்டி
		கோமாஊட்டி எச்சில் விழைந்தாண்டி	கண்ணப்பனாயனார் ஊட்டிய இறைச்சி ஊன் உணவை விரும்பி ஏற்றார்
		வேடர் தமை எலாம் வென்றாண்டி	ஐம்புலானகிய (மெய், கண், மூக்கு, வாய், செவி) என்கிற வேடரை அடக்கி வென்றான்
		சீர்த்தியை	கீர்த்திபுகழ்
155	2084	மாமயில்	மயில், இலக்குமி, மாமரம் வடிவு கொண்ட
		சீர்த்தியை	புகழ் செயலை
156	2085	பன்னிரு தோள்கள்	மயில், இலக்குமி, மாமரம் வடிவு கொண்ட
		ஏற்றத்தைப் பாடி	உயர்வு, பெருமை
157	2086	வேடர் தமை எலாம் வென்றாண்டி	இந்திரிய புலன் ஐந்தும், கண், மூக்கு, வாய் செவி, மெய் ஆகிய ஐந்தும் அடக்கி வென்றவன்
158	2087	சீர்திகழ்	புகழ்ச்சி
		கோதையர்கள்	மாலையுடைய பெண்கள் இள மகளிர்கள்
159	2088	வீறு பரஞ்சுடர்	வேறொனறிற்கு இல்லாத சிறப்பு (ஒளி) சோதியே
		வெள்வளைகாள் (தூயநெருப்பு)	அருள் ஒளியும் புகும் காற்று ஆன்ம ஒளியும் புகும் காற்று வாளையுடையாரே
160	2089	தானந்த	பதம், உயர்நிலை
		சதுரனடி	வல்லமை மிக்கவன் வித்தக முடையவனடி
161	2090	சதுர்வேதமுடி	நான்கு வேத முடிவு
		நீதனடி	நீதியுடையவனடி
162	2091	தத்துவத்துள்ளே அடங்காணடி	96 தத்துவங்களை அகன்றவர்
		சச்சிதானந்த உருவாண்டி	சிவானந்த உருவம், சத், சித், ஆனந்தம் சுத்த சிவ பூரணம், சுத்தசிவ ஒளி சுத்தசிவ போகம்.
163	2092	சச்சிதானந்த உருவாண்டி	சத்து, சிந்து, ஆனந்தமும் ஆன சுத்த சிவன்
		உச்சிதாழ்	தலை வணங்கும் அன்பர்
		துதி	வழிபாட்டால், வணங்கப்படும் தலைவன்
		சேவகன்	அடியார் காவலனே, ஊழியன் குதிரை ஓட்டி
164	2095	சைவந் தழைக்க	தாவர உணவு உயிர் கொலை அற்று தவிர்த்து நீக்குதல்
		வாசி நடத்தித் தருவாண்டி	**யோகப்பயிற்சி, சுவாசப்பயிற்சி உட்சுவாசம் செய்யும் காலத்துக்குள்ளே**
		வாசியில் இங்கே வருவாண்டி பிராணக்கலை யோகம்	உட்சுவாசம் செய்யும் காலத்துக்குள்ளே
165	2096	அராப்பளி	திருமாலுக்கான பாம்பனை

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
166	2097	ஒன்றிரண்டான	சிவமாகிய ஒன்று சிவம் சக்தி என இரண்டாகி
		உளவானடி	ஒன்றின் உண்மை
		மின் திரண்டன்ன	மின்னலை ஒத்த ஒளி வடிவானடி
167	2103	அருணன் உதித்தனன்	கதிரவன் தோன்றினான்
168	2110	கூடுருவிப் போகுதடா	தீமையான எண்ணங்கள் மனதில் பதிந்து சஞ்சல படுகின்றேன்
169	2111	எள்ளேத	பழிபாவம்
170	2119	தோன்றி விரியுமனம்	உலகியல் வாழ்க்கையில் அலையும் அறிவு
171	2120	(எள்ளி)யெள்ளி யுரைத்தனை	இழிவதிலே, இழிவு சொல்லை உரைக்கும் போது
172	2121	வுள்ள முருகுதடா	எண்ணுதற்கும் கருதுதற்கும் மனம் கரைகின்றது
173	2125	புன்சொற்	இழிவு வார்த்தை
		உலைகண் மெழுகு	தீயில் இட்ட மெழுகு போல உருகுகின்றேன்
		புரைத்தமனம்	குற்றமே உடைய எண்ணம்
174	2129	வெப்பில்	உள்ளம் புழுங்குதடா
175	2130	அஞ்சலென்றாய்	அஞ்சலென்றாய்
		அஞ்சி	பயந்து
176	2132	அஞ்சுங் கலங்குதடா	இந்திரியங்கள் ஐம்புலனும், மெய், வாய், கண், மூக்கு, செவி பொறிகளும் அவத்தைபடுகிறது
177	2136	வெம்மான் மனத்து	வெவ்விய அசுத்தமாயை
178	2137	எச்சோடு மில்லா	எஞ்சிய எந்தபொருளையும் தடையம் இல்லாம, எத்தகைய விதிவிலக்கும்
179	2141	மருளுடையேன்	அறியாமை, உலகமயக்கம் உடையவன் மயக்கமாகிய பகை, மாயை
180	2143	வற்புதனேன்	வம்பு புரிதல், தீமை செய்தல்
181	2149	வாளிட்டறுக்குதடா	கூர்மையான எண்ணத்தை சிதைக்கின்றது
182	2150	ஊடுகின்ற சொல்	இடையில் அகப்பட்டு அலையப் பெற்ற வார்த்தையினால், நடுவில் பாய்ந்து, கரும்பு ஆலையில் இடப்பட்ட நசிதல், இன்ப துன்பத்தை மிகும் படியான சொல்
183	2152	வல்வினையேன்	தொன்மையான தீவினை, நல்வினை இடையில் அகப்பட்டு பிறவி துன்பத்தை எய்துவது
184	2154	விஞ்சகத்தா	மேம்பட்ட வித்தையில் வல்லவன்
		மலங்குகின்ற	துன்பம் அடைகின்ற
		கக்கின்ற	ஆரவாரிக்கின்ற
		வெருவிக்கும்	அச்சமுறச் செய்யும்
		கன்றியுரைத்த	சிதைந்து, பழுத்து உரைத்த வார்த்தை
		கடுவையெலாம்	வசவு சொற்களெல்லாம்
		ஊனெண்ணும் வஞ்சவுளத்தால்	உடம்பு, உடல்தசை, உடல்நிலை, உடன் உணவு தசையில், துட்ட குணம் உள்ளம் நெஞ்சத்தில் வைத்த ஈனவுடம்பு

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவபதம் சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவபதம் சிவசிவ

திருவருட்பா – இரண்டாம் திருமுறை அ தனிப்பாசுரப் பகுதி
பாடல் பொருள் விளக்க உறை அகராதி

வ எண்	பாடல் எண்	பொருள்	பொருள் விளக்க உறை
185	2167	கோண நெடுநெஞ்ச	கோணலான நீண்ட சொல், கோணிய மனம்
		நாடி நடுங்குதடா	பத்து நாடிகள்: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன் தநஞ்சயன் என பத்த நாடிகளும் திடுக்கிடுகின்றது.
186	2169	தாது கலங்குதடா	எலும்பு முதயவகை, தசை, ரத்தம், நரம்பு, நாடி போன்றவை திடுக்கின்றது.
187	2173	விழுங்குதடா	தத்துவங்கள் எல்லாம் நிலைகுலைந்து முழ்குகின்றது
188	2175	பகீரென்றலைக்குதடா	திடுக்கென உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்வு குலைந்து தடுமாறுகின்றது.
189	2176	திடுக்கிட்டழுங்குதடா	அச்சத்தோடு அழுங்குகின்றேன்
190	2177	பயமாயிருக்கதடா	உள்ளம் வெந்து, அசதியாகி வேகின்றது
191	2178	உள்ளம் வெந்து வெதும்புதடா	நெஞ்சு வெந்து அயர்கின்றது வேகின்றது
192	2183	நூலுணர்வால்	கல்வி ஞானத்தால்
193	2184	எள்ளலற	பழிநீங்க
194	2191	ஈடணைகள்	விருப்பமான பற்று
195	2193	வாடலறச்	வாட்டமே இல்லாத, வாடுதல் இல்லாத
196	2195	ஈனமறுத்து	இழிவு, துன்பம் நீங்கி, அற்று
197	2202	மாசறு	குற்றம் நீக்கிய
198	2203	ஞான மருந்துண்ண வுள்ளே	5 அமுதம், மெய்ஞான அமுதம், புறப்புற, புற, அகப்புற, அக அமுதம் யாவும்
199	2204	மலகஞ் சுகத்தேற்கு அருளளித்த	சலகந்தரம் போற்கருணை, வஞ்சனை ஒழித்து அருள் வழங்கும், வெறுப்பு அற்றவர்
200	2205	அயன் பூவின்	பிரமன்
201	2206	புங்கவர்	தூயவர்கள் புனிதனை
202	2207	நீதராஞ்	அருள் நியதி உடையோன்
203	2209	வாமி எனுஞ் சிவகாமி	இடபாக அன்னை (சிவகாம வல்)
204	2210	புங்கமிகுஞ் செல்வந் துங்கமுற	புனித திருமால் விளங்கும் இலக்குமி
205	2211	பூணிலங்குந் தனவாணி	பூமிதாய், கலைமகள், சரசுவதி
206	2212	மங்கலம்	சுபிட்சம், முகப்பெவு, வாழ்த்து சுபம்,

திருஅருட்பா அகராதி

பதிப்பாளர் உரை:

அன்பர்கள் பயன்பெரும் பொருட்டு அருட்பா பாடல்கள் பொருளுடன் ஓதி உணர உதவும் வகையில், வள்ளற் பெருமானாரின் வழிவழித் தொண்டர், பிறையாறு சிதம்பர சுவாமிகளின் மாணவர் **சீனி. சட்டையப்பரின்** பெருமுயற்சியால் உருவான அரும்பொருள் அகராதி இந்நூலில் இணைக்கப் படுகிறது. ஐயா அவர்களுக்கு எங்களது உளம் நிறைந்த நன்றியை சமர்ப்பிக்கிறோம். இவ்வரிய அகராதியை இந்நூலின் இணைப்பாக வெளியிட அனுமதி தந்து, நூலினைக் கொடுத்து உதவிய "வடலூர் - **வள்ளலார் இளைஞர் மன்றம்**" ஆசிரியக் குழுவினருக்கு அருட்பா பதிப்பகத்தாரின் நன்றி உரித்தாகுக.

தொகுப்பும் பதிப்பும்

வள்ளற்பெருமானின் வழிவழித் தொண்டர்
பிறையாறு சிதம்பர சுவாமிகளின் மாணவர்

புலவர் சீனி. சட்டையப்பன்

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

அறிமுகம்

சமயநூல் அகராதியின் இணைப்புக் கண்ணி

தமிழில் அச்சுப் புத்தகங்கள் வெளிவராத காலகட்டத்தில் கற்போருக்கும் கற்பிப்போருக்கும் மிக முக்கியமான கருவி நூலாக விளங்கியவை "நிகண்டுகள்." இன்றைய அகராதியின் முன்வடிவமாகக் கொள்ளத் தக்கவை இவை. "உரைநடை" என்னும் வடிவம் பழக்கத்தில் இல்லாத காலகட்டத்தில் அனைத்தும் செய்யுள் வடிவில் இருந்ததனால் நிகண்டுகளும் செய்யுள் வடிவத்தில் இருந்தன. எனவேதான் நிகண்டுகளைச் "செய்யுள் வடிவிலான அகராதி" என்பர். மொழிப் பயிற்சிக்கு இன்றியமையாது விளங்கிய இந்த நிகண்டுகள் மனப்பாடம் செய்து நினைவில் இறுத்திக் கொள்ளும் வகையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியர்கள் வருகைக்குப் பின் அச்சுப் புத்தகங்கள் பல்கிப் பெருகியதனால் மனப்பாடம் செய்யும் பயிற்சி மறைந்து, நூலைப் பார்த்துக் குறிப்பெடுத்துப் படிக்கும் பழக்கம் உருவாயிற்று. இதனால் தேவைப்படும் போது உடனடியாகக் குறிப்பெடுப்பதற்கான "நோக்கு நூல்கள்" அவசியமாயின. எனவே, நிகண்டை, மனப்பாடம் செய்யும் பழக்கம் ஒழிந்து நூற்பொருளைக் கண்டறிவதற்கான அகராதிகள் மலர்ந்தன. இவ்வகராதிகள் அருஞ்சொற்களுக்கு மட்டும் பொருள் விளக்கம் செய்யும் மரபிலிருந்து விலகி, "அகர நிரல்" என்னும் முறையில் படிப்படியாக வளர்ந்தன.

இந்தப் பின்புலத்தில் உருவானதுதான் "தமிழில் அச்சேறிய முதல் அகராதி" என்னும் பெருமைக்குரியதும் "புரோயன்சா" என்பவர் தொகுத்து அம்பலக்காட்டில் அச்சேற்றியதுமான "தமிழ் - போர்ச்சுகீசிய அகராதி" (1679). இதனைத் தொடர்ந்து வேறு சில அகராதிகள் வெளிவந்தாலும் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்த "அகராதிகளுக்கெல்லாம் வழிகாட்டி" என்று போற்றப்படும் பெஸ்கியின் - வீரமாமுனிவர் - சதுர் அகராதி (1824) வெளிவந்தது.

* * *

கடந்த ஒரு தசாப்தத்திற்கு முன்புவரை வெளிவந்த அகராதிகளை எல்லாம் தொகுத்துப் பார்த்தால் கிறித்தவ பாதிரிமார்கள் தங்கள் சமயப் பரப்பலுக்கு ஏதுவாகவும் இலகுவாகவும் உள்ள வட்டார மொழிகளை அறியும் நோக்கிலேயே அகராதிகளை உருவாக்கியிருப்பது தெரிகிறது. அவற்றுள்ளும் தனிப்பட்ட ஒரு பொருள் சார்ந்த / துறை சார்ந்த அகராதிகள் (பழமொழி அகராதிகள் போன்று) 19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்ததாகத் தெரியவில்லை. குறிப்பாகச் சமய இலக்கியங்களுக்கென அகராதிகள் உருவாக்கப்படவில்லை. எனினும், மணிப்பிரவாள நடையில் அமைந்த வைணவ உரைகளில் கண்ட அருஞ்சொற்களை அகர வரிசையில் அமைத்துப் பொருள் கூறும் "வைணவ விளக்கவுரை அருஞ்சொல் அகராதி" ஒன்று சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் அச்சிடப்படாமல் உள்ளது என்பர்.

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், அஷ்டப் பிரபந்தம், பன்னிரு திருமுறைகள் போன்றவற்றிற்கான அகராதிகள் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நடுக்கூறுகளிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிவரத் தொடங்கின. (திருவாசகத்திற்குச் சைவ சித்தாந்தப் பெருமன்றம் அட்டவணைகளுடன் வெளியிட்ட அகராதி குறிப்பிடத்தக்கது.)

இந்த வரிசையில் வள்ளற்பெருமான் அருளிய "திருஅருட்பா"விற்கும் முதன்முதலில் அகராதி ஒன்று அண்மைக் காலத்தில் வெளிவந்தது. ஆக்கியோர் திரு. புலவர் மணியன் அவர்கள். "திருஅருட்பாச் சொல்லகராதி" (இராமலிங்கக் களஞ்சியம்), "திருஅருட்பாத் தொடரகராதி" (திருஅருட்பாச் செல்வம்) என்னும் இரு நூல்களை மணியன் வெளியிட்டுள்ளார். இதன் வேறொரு வடிவம்தான் உங்கள் கைகளில் தவழும் இந்தத் "திருஅருட்பா அகராதி." முந்தைய நூல்களோடு இது தொடர்புடையதாயினும், முற்றிலும் வேறொரு அடையாளம் கொண்டது என்பதை அன்பர்களுக்கு முதலிலேயே தெரிவிக்க விரும்புகின்றோம்.

* * *

இறைவன் திருவருளால் வள்ளற்பெருமானின் உள்ளத்திலிருந்து வெளிப்படுத்தபபட்ட திருஅருட்பாவை முதன்முதலில் பதிப்பித்த தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள், "அரிய சொற்கள்" எனக் கருதியவற்றுக்குப் பொருள் எழுதியுள்ளார். பின்வந்த பதிப்பாசிரியர்கள் சிலரும் அவரைப் பின்பற்றி மேலும் சிலவற்றிற்குப் பொருள் குறித்தனர். எனினும் திருஅருட்பாவிற்கு அரும்பொருள் காணுங்கால் மற்ற நூலகளுக்குக் காண்பது போல் கண்டுவிட இயலாது... பெரும்பாலான சொற்களுக்கு அருட்பாவிலிருந்து பொருள் காண்பதே வழிவழியாகப் பின்பற்றப்படும் முறை என்பதும் அம்முறையை வள்ளற்பெருமானின் வழிவழித் தொண்டராக விளங்கிய "பிறையாறு சிதம்பர சுவாமிகள்" தான் வழிகாட்டினார் என்பதும் சன்மார்க்க அன்பர்கள் அறிந்த ஒன்று. அவ்வழியிலேயே இந்த அரும்பொருள் அகராதியும் விளங்குகிறது.

திருவருளையே நம்பி வாழும் சன்மார்க்கிகள் திருவருட்பாவை ஓதி உணரத் தலைப்படுவது உண்மையே. ஆயினும், அவர்களுக்குச் சில சொற்கள் விளக்கமாவதில்லை. அவற்றைத் தெரிந்து கொள்ள வேறு வழிவகையும் இல்லை. சான்றாக, "ஆமயம்" என்னும் சொல்லுக்குப் "பாசத்தடை", "மாயைத் தன்மை" என்றெல்லாம் பொருள் உண்டு. சன்மார்க்க அன்பர்கள் இச்சொல்லை அறிந்திருப்பினும் அதன் பொருளை அறிய முடியவில்லை. இது போன்ற சமயங்களில் எல்லாம் அவர்கள் சன்மார்க்கப் பெரும் புலவர் திருவமை சீனி. சட்டையப்பனார் அவர்களை அணுகி விளக்கம் கேட்டுத் தெளிந்தனர். அப்பொழுது அவருக்கு உதித்ததுதான் திருஅருட்பா முழுமைக்கும் அரும்பொருள் சொற்களைக் கண்டறிந்துத் தொகுக்கும் பணி. தொழுவூராரின் பதிப்பைக் கைக்கொண்டு திருமுறைவாரியாகச் சொற்களைத் தொகுத்துப் பொருள் குறித்தார். இதைத்

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

தலைப்பு வாரியாகக் கூட அமைக்கலாமா என்றும் அவர் கருதியதுண்டு. அகராதி நெறிமுறைக்கு அது புறம்பானது என்பதனால் அவர் அதைத் தவிர்த்தார்.

பல்லாண்டு கால உழைப்பில் உருவான தொகுப்பு இது. ஆனால் தொகுத்து வைத்ததை உடனடியாக அச்சேற்ற ஐயா அவர்கள் முனைந்தாரில்லை. இதனை அறிந்த அவரது மாணவர் முனைவர் ப. சரவணன். அவர்கள் ஐயாவை அணுகி வெளியிடக் கேட்டபோது, "இன்னும் தொகுக்க வேண்டிய சொற்கள் பல உள்ளன; வேண்டுமானால் நீர் கொண்டு போய் வெளியிட்டுக் கொள்": என்றார். விடுபடல்களை ஐயாவின் வழிகாட்டுதலில் தொகுத்த சரவணன் நூலை இருவரின் பெயரில் வெளியிட விரும்பிய போது ஐயாவும் அதை அனுமதித்தார்கள். இதற்குமுன் ஐயா அவர்கள் எழுதி வெளியிட்ட "அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை", "திருக்குறள் சன்மார்க்க உரை" ஆகியன சரவணனின் முன்முயற்சியால் வெளிவந்ததனால் ஐயா அவர்கள் இதற்கும் அன்போடு இசைந்தார்கள்.

வள்ளலாரின் 195வது அவதார தினத்தை முன்னிட்டு 5.10.2017 அன்று வடலூரில் நடைபெற்ற சன்மார்க்க மாநாட்டின் போது, இந்நூல் வெளியிடப்படுவது கூடுதல் சிறப்பு.

அருட்பாவின் அருஞ்சொற்களை விளங்கிக் கொள்வதில் விருப்பமுடைய அனைவருக்கும் இவ்வகராதி ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்வதோடு, சமய நூல் அகராதியில் ஒரு இணைப்புக் கண்ணியாகவும் திகழும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

வடலூர்
5.10.2017

மன்ற ஆசிரியக் குழுவினர்
வள்ளலார் இளைஞர் மன்றம்

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

பொருளடக்கம்

திருமுறை	பக்கம்	பாடல்
முதல் திருமுறை	7 - 83	0001 - 4543
இரண்டாம் திருமுறை	85 - 123	4544 - 6975
மூன்றாம் திருமுறை	127 - 139	6976 - 7637
நான்காம் திருமுறை	141 - 162	7638 - 8921
ஐந்தாம் திருமுறை	165 - 189	8922 - 10551

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

இராமலிங்கர் துணை

அறிமுகம்

தமிழ் அருளிய இலக்கிய வரலாற்றில் திருவருட்பா ஓர் இன்றியமையாத இடம்பெற்றுள்ளது.

இறைவன் திருவருளே வள்ளற்பெருமானின் உள்ளத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டது இது. இதனை முதலில் பதிப்பித்த முதல் மாணவன் தொழுவூர் வேலாயுதனார், அரிய சொற்கள் என்று கருதியவற்றுக்குப் பொருள் எழுதியுள்ளார். பின்னர் வந்த பதிப்பாசிரியர்களும் அவரைப் பின்பற்றி மேலும் சிலவற்றிற்குப் பொருள் குறித்தனர்.

திருவருட்பாவுக்கு உரை எழுதவும் பலர் முற்பட்டனர். அவர்களுள் முழு நூலுக்கும் ஒளவை துரைசாமி பிள்ளை எழுதிய உரையை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. திண்டுக்கல் சரவணானந்தாவும் உரை எழுதியுள்ளார். பகுதி உரையாக அருட்பெருஞ்ஜோதி அகவலுக்கும் பலர் உரை எழுதியுள்ளனர்.

இவ்வுரைகளை எல்லாம் வைத்துக்கொண்டு சன்மார்க்க அன்பர்கள் திருவருட்பா ஓதுகிறார்களா என்று ஆராய்ந்து பார்த்தால் இல்லை என்றே தோன்றுகிறது. முழுமையாக முற்றோதல் செய்கிறவர்களும் இருப்பதாகத் தெரியவில்லை.

திருவருட்பாவுக்கு அரும்பொருள் காணுங்கால் மற்ற நூல்களுக்குக் காண்பதுபோல் கண்டுவிட இயலாது. பெரும்பாலான சொற்களுக்கு அருட்பாவிலிருந்தே பொருள் காண்பதே வழிவழியாகப் பின்பற்றப்படும் முறை. அம்முறையை வள்ளற் பெருமானின் வழிவழித் தொண்டராக விளங்கிய பிறையாறு சிதம்பர சுவாமிகள் வழிகாட்டினார். அவ்வழியில் தான் இவ்வரும்பொருள் விளங்குகிறது.

திருவருளையே நம்பி வாழும் சன்மார்க்க அன்பர்கள் திருவருட்பாவை ஓதி உரைத் தலைப்படுவது உண்மையே. அவர்களுக்குச் சில சொற்கள் விளக்கமாவதில்லை. அவற்றைத் தெரிந்துகொள்ள எந்த ஏற்பாடும் இல்லை. சான்றாக 'மத்தணம்' என்ற சொல் இருக்கிறது. இதற்கு, கமுக்கம், இரக்கியம் என்றெல்லாம் பொருள் உண்டு. இது எல்லோர்க்கும் தெரிந்த சொல் இல்லை. இது போன்ற சொற்களை அறிந்துகொள்ள முற்பட்டவர்கள் வந்து விளக்கம் கேட்டனர். அப்பொழுதுதான் திருவருட்பா முழுமைக்கும் அரும்பொருள் சொறக்ளைக் கண்டுபிடித்துத் தொகுக்கும் பணியில் அண்ணா ஈடுபட்டார்.

பல ஆண்டுகள் இதனைத் தொகுத்தார்கள். இதனை கண்டகண்படி எழுதி அச்சிட்டால் போதாது அகர வரிசையில் இருந்தால்தான் எளிதில் வேண்டிய சொற்களுக்கு கண்டுகொள்ளலாம். எனவே அதற்கு உரிய முறையில் தொகுக்கப்பட்டது.

இதனை வெளியிட விரும்பி அண்ணாவின் மாணவரான திரு. ப. சரவணன் முறைப்படுத்தி அச்சிடும் அளவுக்கு முன்னேற்பாடுகளைச் செய்து வைத்திருந்தார். அதற்காக அவருக்கு நன்றி. அண்ணா வெளிப்படுத்திய எண்ணற்ற வெளியீடுகளை அவர்கள் சொந்தப்பொறுப்பிலேயே வெளியிட்டு வந்தார்கள். பிறர் உதவியை அவர்கள் எப்பொழுதும் எதிர்பார்த்ததில்லை.

பலர்க்கும் பயன்தருவதாக உள்ள இதனை வள்ளலார் இளைஞர் மன்றமே முன்னெடுத்து வெளியிடுகிறது. இதன் வாயிலாகவே முன்னர் வெளியிடப்பட்ட அனைத்து வெளியீடுகளும் வெளிவந்தன. இப்பதிப்பகம் கையடக்கச் சிறுசிறு வெளியீடுகளால் அன்பர்கள் விளங்கும் விளக்க வெளியீடுகளை இதுகாறும் வெளியிட்டது. இப்பொழுது, தமிழண்ணா சீனி. சட்டையப்பனாரின் திருமகன் தணிகை அருள், அன்பு மருமகள் அம்பிகை தணிகை அருள் ஆகியோரின் உள்ளார்ந்த விருப்ப முயற்சியால் இவ்வகராதி வெளியீடு காண்கிறது.

அருட்பாவின் அருஞ்சொற்களை விளங்கிக் கொள்வதில் விருப்பம் உடைய அனைவர்க்கும் இவ்வகராதி ஒரு கலங்கரை விளக்காக விளங்கும் என்பதை மனதுள்கொண்டு இதனை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறது வள்ளலார் இளைஞர் மன்றம்.

உறவுடன்
ஆசிரியர் குழுவினர்

வடலூர்
25.01.17

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

திருவருட்பா அகராதி

முதல் திருமுறை

பக்கம் எண் : 7 - 83

பாடல் எண் : 0001 - 4543

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

அ

0001 **அஃது எற்றாதென்று அறிவார்** - அதனை என்னவென்று அறிவார்

0002 **அகண்டம்** - நிட்களநிலை

0003 **அகண்டாகண்டம்** - அளவுபட்டதும் அளவுபடாததும்.

0004 **அகத்தியான் பள்ளி** - அகத்தீசுவரர் - பாகம்பிரியாள். அகத்தியர் இறைவனின் திருமணக்கோலங்காணத் தவஞ்செய்த தலம். இறைவன் இமவான் மகளின்திருமணத்தை, இங்குக் காட்டினார். வேதாரண்யத்திற்குத் தெற்கே 2 கி.மீ. தொலைவிலே உள்ளது இப்பள்ளி.

0005 **அகத்தில் வைப்பாரோ** - வீட்டில் வைப்பார்களா.

0006 **அகத்து** - இடத்து; உள்ளத்து

0007 **அகந்தோறும்** - வீடுகள் தோறும்

0008 **அகநிலை** - உள்நிலை; உள்ளத்தின் நிலை.

0009 **அகம்** - உள்; உயிர்; ஆன்மா.

0010 **அகம் இலையோ** - வீடில்லையோ

0011 **அகம்காரம்தனை** - தன்முனைப்பினை

0012 **அகமகிழ்வாள்** - உள்ள மகிழ்ச்சியால்

0013 **அகலநில்** - விலகி நில்

0014 **அகலம்** - மார்பு

0015 **அகலா** - நீங்காத

0016 **அகழ்வார்** - தோண்டுவார்

0017 **அகற்ற** - நீக்க

0018 **அகற்றி** - நீக்கி

0019 **அகன்றவர்** - அப்பாற்பட்டவர்.

0020 **அகூழயம்** - அழியா அருள் ஈவது.

0021 **அகிலநடை** - உலகியல் நடை

0022 **அகிலம்** - உலகம்

0023 **அகிலாண்டம்** - நிலத்தைச் சூழ்ந்த வெளிக்கு ஆதாரமானது.

0024 **அகோசரம்** - வாக்கு, மனங்களால் அறியவொண்ணாமை.

0025 **அங்கச்சுடையாய்** - அழகிய கோவணத்தை அணிந்தவனே

0026 **அங்கண நீர்** - சாக்கடை நீர்

0027 **அங்கணணே** - அழகிய விழிகளை உடையவனே

0028 **அங்கணம்** - நீர் கழியும் துவாரம்; சாக்கடை

0029 **அங்கணமே** - நட்பாகிய கூட்டம்

0030 **அங்குமிழ்** - அழகிய நீர்க்குமிழி

0031 **அங்கைக் கனி** - உள்ளங்கை நெல்லிக்கனி.

0032 **அங்கையில்** - உள்ளங்கையில்

0033 **அச்சிறுபாக்கம்** - பார்க்கபுரேசர் - சுந்தரநாயகி. கணபதிக்கே முதல்வணக்கம் என எச்சரிக்கும் அச்சு இறுபாக்கம். மதுராந்தகத்தின் தெற்கே 10 கி.மீ.

0034 **அச்சு** - உடல்; ஆன்ம நிலை ; உயிர்; உடல்.

0035 **அச்சுறல்** - அஞ்சுதல்

0036 **அசடன்** - கீழ்மகன்

0037 **அசரம்** - அசையா உயிர்கள்.

0038 **அசலம்** - அசையாப் பொருள்; அசைவற்றது; எதனாலும் அசைவிக்க முடியாதது.

0039 **அசலமாகி** - சலன மற்றதாகி

0040 **அசாதம்** - எல்லையற்ற இன்பம்

0041 **அசிபதமாய்** - இறை நிலையாகி

0042 **அசுரர்** - அரக்கர்.

0043 **அசைவிக்கும் ஒரு சக்தி** - அருட்சக்தி (அ) பராசக்தி.

0044 **அஞ்சடக்கி** - ஐம்பொறிகளை அடக்கி.

0045 **அஞ்சடைய** - ஐம்பொறிகளால் தாக்கமடைய

0046 **அஞ்சல்** - அஞ்சாதே

0047 **அஞ்சனம்** - கண்மை

0048 **அஞ்சனூர்** - அன்னத்தை வாகனமாக உடைய பிரமதேவனின் ஊர். (அஞ்சம் - அன்னம்), (அஞ்சனூர் கஞ்சனூராயிற்று, காண்க. கஞ்சனூர்)

0049 **அஞ்சனையேல் (அஞ்சல்+நையேல்)** - அஞ்சி வருந்தாதே

0050 **அஞ்சாதிஅஞ்சும்** - சுவை,ஒளி முதலிய ஐம்புலன்கள்.

0051 **அஞ்சின்இடம்** - ஐம்பொறிகளின் வாயிலாக.

0052 **அஞ்சு** - ஐந்து

0053 **அஞ்சு அருந்து என்றால்** - சுவை முதலிய ஐந்தினையும் அனுபவிக்க வேண்டுமெனச் சொன்னால்.

0054 **அஞ்செழுத்து** - நமசிவாய என்னும் பஞ்சாட்சரம்.

0055 **அஞ்செழுத்தை நேர்ந்தார்க் கருள்புரிதல்** - பஞ்சாட்சரத்தைத் தம்மை அடைந்தவர்க்கு அருள் செய்தல்.

0056 **அஞ்செனவே** - ஐம்பொறிகளின் விடயங்கள் முதலியன.

0057 **அஞ்சேல்** - அழகிய சேல் மீன்களை ஒத்த

0058 **அஞ்சைக்களம்** - அஞ்சைக்கள ஈசர் - உமையம்மை. சேரமான் பெருமாளோடு சுந்தரர் கைலை செல்ல ஐராவதம் வந்த ஊர். சென்னை கொச்சின் ரயில் பாதையில் திருச்சூர் தாண்டி 32 கி.மீ.

0059 **அட்டத்திக்கு** - எட்டுத் திசைகள்.

0060 **அட்டமூர்த்தி** - எண்வகை வடிவினன் (ஐம்பூதம், சந்திரன், சூரியன், ஆன்மா).

0061 **அடல்வற்றாத** - அருள் வல்லபம் குறையாத

0062 **அடல்விடையார்** - வீறுடைய காளை வாகனமுடைய

0063 **அடி** - காலடி

0064 **அடிகேள்** - தலைவரே

0065 **அடிசில்** - உணவு

0066 **அடித்தாமரை** - திருவடியாகிய தாமரை

0067 **அடிநாள்உறவு** - ஆதிநாள் உறவு.

0068 **அடிப்பொடி** - பாததூளிகை

0069 **அடிப்போது** - திருவடிமலர்

0070 **அடிமையின் வதிந்திட** - குற்றேவலாளின் வாய்ந்திட.

0071 **அடியர்பால்** - அடியவர்களிடம்; அன்பர்களிடம்

0072 **அடியருளம்** - அடியார்களின் உள்ளத்திலும்.

0073 **அடியன்** - தொண்டன்

0074 **அடிவைத்தபோது** - திருவடி தலையில் சூட்டிய போது

0075 **அடுக்கி** - தொடர்ந்து.

0076 **அடுக்கும்** - சேர்ந்தருளும்

0077 **அடுஞ்செல்லல்** - பெரிய துன்பத்தில் செல்லல்

0078 **அடுத்த பரிசு** - வந்ததின் நோக்கம்

0079 **அடுத்தாய்** - அணுகினாய்

0080 **அடுந்தலை** - விடத்தை உடைய

0081 **அடும்படைகோடி** - கொடிய ஆயுதங்கள் தாங்கி

0082 **அடைதி** - இன்பம் அடைவாய்

0083 **அடைந்தவாறு** - வந்து சேர்ந்த நிலை

0084 **அடைந்திட** - போட்டு மூடிட

0085 **அடைந்தேம்** - கூடினோம்

0086 **அடையாமை** - சேராமை

0087 **அடையார்** - பகைவர்

0088 **அடையில்** - அருகில் சென்று

0089 **அடைவாய்** - வழியினை மூடிவை

0090 **அண் ஆர் இடத்தும்** - விரும்பி நெருங்குபவர் இடத்தும்

0091 **அணங்கு** - இன்ப வருத்தம் உண்டாக்கும் பெண்

0092 **அண்டக்கூவம்** - உலகமாகிய கிணறு.

0093 **அண்டங்கண்டானும்** - நான்முகனும்

0094 **அண்டம்** - உலகம்; ஆகாயம்.

0095 **அண்டரிய** - கிட்டுவதற்கு அரிய.

0096 **அண்டார்** - தீநெறி உடையார்; பகைவர்.

0097 **அண்ணல்** - அருட்பெருமை உடையவரே; கடவுளே; தலைவனே.

0098 **அண்ணித்தல்** - தித்தித்தல்

0099 **அண்ணிய** - வந்தடைந்த.

0100 **அண்மை** - சமீபம்.

0101 **அணி** - சூடிய

0102 **அனித்த கன்மம்** - நிலையில்லாத கருமம்.

0103 **அணிந்தாய்** - பெற்று இருக்கின்றாய்

0104 **அணி** - ஆபரணம்

0105 **அணியீர்** - அணியமாட்டீர்

0106 **அணு** - நுண்பொருள்.

0107 **அணை** - சேர்வாயாக

0108 **அணைய** - சேர

0109 **அணையாது** - சேர்ந்திடாமல்

0110 **அணைவது** - சேர்வது; கலப்பது

0111 **அணைவான்** - தழுவுதற்கு

0112 **அணைவேனோ** - இன்பம் மிகப் பொருந்துவேனோ

0113 **அனையீர்** - ஒத்தவரே

0114 **அத்தனை** - அருட்தந்தையை

0115 **அத்திரம்** - அந்த இரகசியத்தை; அம்பு.

0116 **அத்திறம்** - நிலையாமை.

0117 **அத்துவத்தில்** - இரண்டும் ஒன்றாய்இருக்கும் நிலையில்.

0118 **அத்தோ** - அந்தோ.

0119 **அத்விதானந்தம்** - மேலாம் ஒன்றாம் தன்மை. (பரமான்மா, ஜீவான்மா இரண்டு அறும் நிலைமை)

0120 **அதீதானந்த போக்கியம்** - மேலாம் பேரின்ப அனுபவத்திற்குரியது.

0121 **அதிதூரம்** - எட்டாத நிலை

0122 **அதிலோர் பாதி** - கால்பகுதி

0123 **அதீதம்** - அப்பாற்பட்ட நிலை

0124 **அதீதமாய்** - உயிர் அனுபவத்தின் உயர்ந்ததாகி

0125 **அதுபயிலும்** - அதனைப் பழகிய

0126 **அதுலம்** - ஒப்பில்லாமை.

0127 **அதுலிதம்** - மேலாம் நம்பகமானது; அசைவின்மை.

0128 **அந்தக்கரணம்** - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

0129 **அந்தகன்** - இயமன்

0130 **அந்தங்கள்** - முடிபுகள்

0131 **அந்தணருக்கு** - அழகிய மகளிருக்கு

0132 **அந்தரம்** - ஆதாரமற்று நிற்பது

0133 **அந்தரங்கம்** - மறைபொருள்.

0134 **அந்தரம்** - ஆகாயத்தை; ஆகாயம்

0135 **அந்தரர்கள்** - மேலுலகவாசிகள்.

0136 **அந்தரி** - விண்ணை ஆள்பவள்

0137 **அந்திவண்ணன்** - செந்நிறமுடையவன்.

0138 **அநாதி** - தோற்றமற்றவன்.

0139 **அநாதியாய்** - தோற்றம் இல்லாததாய்

0140 **அநாமயம்** - மலமற்றது; மலநோய்அற்றது.

0141 **அப்பால்** - புறமாக

0142 **அப்பாலாய்** - கடந்ததாய்

0143 **அப்பாலை** - அப்பாலுள்ள பிரம்மப் பொருளை.

0144 **அப்பு இடைவைப்பாம் உலகு** - கடல் சூழ்ந்துள்ள உலகம்.

0145 **அப்புறமாய்** - மேற்பட்ட நிலையில்

0146 **அபயமலர்** - அஞ்சாதே என்று காட்டும் தாமரைபோன்ற கை

0147 **அப்ரமேயம்** - அளவிட முடியாதது.

0148 **அபரோக்ஷ ஞானானுபவ விலாசப் பிரகாசம்** - அருளறிவாம் கண்ணுக்கு விளக்கமாவது; அழகு அனுபவமுடைய வெளிச்சம்.

0149 **அபிடேகவல்லி** - திருமுடியுடையவளே,மஞ்சனம் கொள்ளும் தெய்வப் பெண்ணே

0150 **அபரிமிதம்** - மிகுதி.

0151 **அபேதமாய்** - வேறுபாடு அற்றதாகி

0152 **அம்** - அழகிய

0153 **அம் மணப்பெண் ஆகி** - மங்கைப் பருவம் உடைய வளாகி

0154 **அம்கதிர்** - அழகிய சந்திரன்.

0155 **அம்சுகம்** - நல்லின்பம்

0156 **அம்சேகரனே** - சடைமுடி உடையவனே

0157 **அம்சொலும்** - அழகுடன் கூறுவீராக

0158 **அம்தார்** - அழகிய மாலை

0159 **அம்பகம்** - எழுச்சி தன்மையுடையது.

0160 **அம்பர் திருக்கோயில்** - பிரம்மபுரீசர் - பூங்குழலி. ஆதிசக்தி பூசை செய்த கோயில்,அமிர்தவாவி தீர்த்த பிரம்ம ஈசன். பூந்தோட்டத்திலிருந்து தென் கிழக்கே 4 கி.மீ.

0161 **அம்பர் மாகாளம்** - மாகாளநாதர் - பட்சநாயகி. இத்தல மூலவரான பாணலிங்கரை பத்ரகாளி வழிபட்டுச் சக்தி பெற்றாள். அம்பர் திருக்கோயிலிருந்து மேற்கே 2 கி.மீ. மாகாளம். (கோயில் திருமாளம்)

0162 **அம்பரத்தே** - சிதாகாசத்திலே

0163 **அம்பரம்** - கங்கை சூழ்ந்த

0164 **அம்பராம்பரம்** - வெளிகளுக்கெல்லாம் (சுத்தசிவ) வெளியானது.

0165 **அம்பலத்தும்** - கூடும் தானத்திலும்

0166 **அம்புயத்தோன்** - நான்முகன்; அழகிய மார்பினன்

0167 **அம்புலி** - சந்திரன்.

0168 **அம்புலிக்கும்** - சந்திர மரபிற்கும்

0169 **அம்ம** - மயக்கம்; விருப்பம்; ஆசை.

0170 **அம்மனை** - அழகிய வீடு

0171 **அம்மால்** - அழகிய திருமால்

0172 **அம்மாறுதல்** - அழகு நீங்குதல்இல்லாத.

0173 **அம்மான்** - தாய்மாமன்.

0174 **அம்மூன்றினுள்** - சங்கற்பித்தல்,சிந்தித்தல்,மறத்தல் என்னும் மூன்று.

0175 **அம்மை** - உமாதேவி; உமையவள்

0176 **அம்மையார்** - உமாதேவியார்

0177 **அம்மையார் தருபாகன்** - உமையாள் சேருகின்ற சிவன்

0178 **அமர்உம்பதி** - நிலைபெற்றிருக்கும் உமது சீரிடம்

0179 **அமர்ந்ததாலோ** - இருந்ததாலோ

0180 **அமர்ந்தீர்** - வீற்றிருந்தீர்

0181 **அமரர்** - தேவர்

0182 **அமரர்க்கும்** - தேவர்க்கும்

0183 **அமலம்** - மலமற்றது.

0184 **அமலயோகம்** - மும்மலம் நீங்கிய ஒருமை நிலை

0185 **அமிதகோடியாம் மறையவர்** - அளவிறந்த கோடிக் கணக்கான நான்முகர்கள்.

0186 **அமுதசாரமே** - அமிர்தக் கடலே.

0187 **அமுதம் கொண்ட** - இன்பப் பெருக்குடைய

0188 **அமுதின்** - அமிர்தம்போல.

0189 **அமுதுஇன்றேல்** - உணவு இல்லாவிட்டால்

0190 **அமுதுஈதல்ஆதி** - உணவு கொடுத்தல் முதலிய.

0191 **அமுதுசிறிதுமிழ்ந்தார்** - தாம்பூல எச்சம் உமிழ்ந்தார்

0192 **அமுதென்றார்** - உணவாம் என்று கேட்டார்

0193 **அமைக்கும்மொழி** - கூறியமொழி

0194 **அமைப்பித்தால்** - விதியை எழுதினால்

0195 **அமைவாயேல்** - திருவுளம் செய்வாயானால்

0196 **அயலார்** - அயலவர், அயலவர்யார்

0197 **அயன்** - பிரமன்

0198 **அயன்மால் வாதுகொளல்** - பிரம்மனும் திருமாலும் வாது செய்தல்.

0199 **அயன்மூன்று** - தா என்னும் எழுத்திற்கு அடுத்த எழுத்து தி முத்தி (இங்கித மாலை பாடல். 61)

0200 **அயில்** - வேல்

0201 **அயில் ஏந்தும்** - வேல் தாங்கிய

0202 **அரக்கனை மலைக்கீழ் அடர்த்தல்** - இராவணனைக் கயிலை மலையின் கீழே நெருக்கிய திருவடி.

0203 **அரசிலி** - அரசிலிநாதர் - பெரியநாயகி. அரசிலித் தீர்த்தமும்,சம்பந்தர் பாடலும் வருவோர் துயர் தீர்ப்பது. புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் சாலையில் 13 கி.மீ.

0204 **அரதைப் பெரும்பாழி** - பாதாளேச்சுரர் - பேரழகு நாயகி. ஆதிவராக மூர்த்தியோடு சிவம் அளவளாவிய திருக்கோயில். நீடாமங்கலம் தாண்டி,சாலியமங்கலம் அடுத்த 12 கி.மீ.இப்பாழி உள்ளது. (அரித்துவாரமங்கலம்)

0205 **அரம்பை** - வாழை மரம்.

0206 **அரம்பைத் தண்டு** - வாழைத்தண்டு.

0207 **அரமாகி** - நிலையாகி

0208 **அரன்** - உருத்திரன்

0209 **அராப்பள்ளி மேவும் அவன்** - பாம்பு படுக்கையுடைய திருமால்.

0210 **அரி** - திருமால்

0211 **அரிசிற்கரைப் புத்தூர்** - படிக்காசுநாதர் - அழகம்மை. பக்தர்க்குப் பொற்காசு தந்து விளையாடும் பரமசிவன்தியானாலயம். கும்பகோணத்திலிருந்து 7 கி.மீ. தொலைவிலே இந்தப் புத்தூர் உள்ளது.

0212 **அரியாம்** - கூட்டம் விரும்பும் ஆண்சிங்கம்.

0213 **அருட்கண்ணி** - அருள்கண்ணை உடையவள்

0214 **அருட்சுடரே** - அருள்விளக்கே.

0215 **அருட்பண்பு** - அருட்குணம்.

0216 **அருட்பிரகாசமே** - அருட்ஜோதியே.

0217 **அருட்பிழம்பே** - அருட்செறிவே.

0218 **அருத்தம்** - பொருள்

0219 **அருந்தல்** - பருகிடல்

0220 **அருந்தா** - உண்ணாத

0221 **அருநான்கு** - விந்து,நாதம்,பரவிந்து,பரநாதம்

0222 **அரும்பண்** - மார்பகம் நெருங்க

0223 **அருமருந்தே** - உயிரிய அமுதமே; தேவாமிர்தமே

0224 **அருமறை** - அரிய வேதங்கள்

0225 **அருமைகாட்டோம்** - பெருமை காட்டிக்கொண்டு இருக்க மாட்டோம், அருளல்வேண்டும், எமக்கு ஈந்து மகிழ்வித்தல் வேண்டும்.

0226 **அருவத்துள் அருவாகி** - விந்துவுள் நாதமும் நாதத்திற்குள் பரவிந்துவும் பரவிந்துக்குள் பரதநாதமும்

0227 **அருவாகி** - விந்துவாகி

0228 **அருவினுள்** - அவ்விந்துக்குள்

0229 **அருவு** - அருவம்.

0230 **அருவுருவே** - அருவுருவாயிருப்பவனே.

0231 **அருவுள் ஒன்றாய்** - பரமநாதமாகி

0232 **அருள் அறமே** - ஜீவகாருண்ய இன்பமே

0233 **அருள்தகவே** - அருளுக்குத் தகுதியாகுமோ

0234 **அருள்போதம்** - அருள்ஞானம்

0235 **அருள்மயம்** - அருளுருவே.

0236 **அருள்மூர்த்தி** - திருவருள் வழங்கும் மூர்த்தி.

0237 **அரைநாண்அவிழும்** - அரைநாண்கயிற்றை அவிழுங்கள்.

0238 **அல்** - இரவு; இருள்.

0239 **அலகில்** - அளவிடமுடியாத

0240 **அலது** - அல்லது

0241 **அலமந்து** - சுழற்சி அடைந்து

0242 **அல்மேல்** - இருளைவிடக் கரிய

0243 **அலர்** - பழி திருவாய்

0244 **அலர்வாய்** - குமுதம் போன்று அலர்ந்த,

0245 **அல்லல்** - துன்பம்.

0246 **அல்லாதார்** - அன்பற்றவர்

0247 **அல்லாம்** - இருள்மூடும்படி

0248 **அல்லால்** - அல்லாமல்

0249 **அல்லுண்ட** - இருள் நிறமுடைய

0250 **அல்லென்று** - இருட்டு என்று

0251 **அலவன்** - திங்கள்

0252 **அல்விரவும் காலை** - இருள் மூடும் காலம்.

0253 **அல்விலங்கும்** - அஞ்ஞான இருள் நீக்குகின்ற

0254 **அல்வினை** - அல்லாத வினை; தீவினை.

0255 **அலவே** - அல்லவே

0256 **அலன்** - அல்லேன்

0257 **அலைந்தான்** - அலைபட்ட திருமால்

0258 **அலைய** - வீழும் புனலாக

0259 **அலையளவோ** - கடலின் அளவுடையதோ

0260 **அலையாக** - கங்கையாக

0261 **அலையாள்** - இலக்குமி; இன்பப் பெருக்கினைத் தருபவள்

0262 **அலையான** - அலைகளினால் ஆன

0263 **அலையெழுத்து** - விதிப்பயனைத் தரும் பிரமன் எழுதிய எழுத்து

0264 **அவ்ஆளை** - அந்த ஆளை.

0265 **அவண்உம்உடன்** - அவ்விடம் உம்முடனே

0266 **அவமே புரியும்** - இழிவே செய்யும்

0267 **அவர்தம் பந்தம்** - அவர்களது பாசம்.

0268 **அவர்விட்ட** - தாருகாவனத்து இருடிகள் ஏவிய

0269 **அவலத்து** - துன்பத்தில்

0270 **அவலம்** - வீண்.

0271 **அவ்வவ்** - அங்கங்கே

0272 **அவ்வழி** - இறைவன் விட்ட வழி

0273 **அவ்விளையர்** - அந்த இளம் பெண்கள்.

0274 **அவ்வேலை** - அத்தகைய அலுவல்

0275 **அவளிவணல்லூர்** - சாட்சிநாதர் - சுந்தரநாயகி. நீதிகாக்க சாட்சிக் கூண்டில் ஏறிநின்ற சர்வேச்சுர லீலைத்தலம். சாலியமங்கலம் ரயிலடியிலிருந்து 10 கி.மீ. அவளிவ நல்லூர் உள்ளது.

0276 **அவாக்கடல்** - ஆசையாகிய கடல்.

0277 **அவி** - காமத்தீயை அணைக்கும் நெய்பொழிந்து

0278 **அவித்தை** - அஞ்ஞானம்.

0279 **அவிநாசி** - அவிநாசியப்பர் - கருணாம்பிகை. தெய்வத்தமிழால் முதலை வாய்பிள்ளையை சுந்தரர் மீட்ட தலமிது. திருப்பூரிலிருந்து 13 கி.மீ. அவிநாசித் திருத்தலம் உள்ளது.

0280 **அவிவர்த்த** - மாறுபாடு இல்லாதது.

0281 **அவிழ்தல்** - திறத்தல்

0282 **அழகுடைத்தே** - சரியானதா

0283 **அழல்** - நெருப்பு

0284 **அழியாத சுத்த நிலை** - சாகாத பேரின்ப நிலை.

0285 **அழிவில்இன்புதவல்** - பேரின்பம் ஈகின்ற.

0286 **அழுங்க என்றோ** - வருந்த என்றோ

0287 **அழுங்குற்றேன்** - வருந்தினேன்

0288 **அழுந்துகின்றேன்** - மூழ்குகின்றேன்

0289 **அளகம்** - கூந்தல்

0290 **அளந்தானும்** - திருமாலும்

0291 **அளந்தான்** - நான்முகன்

0292 **அளவும்** - கலக்கும்; கலந்திடும்

0293 **அள்ளம் செறியார்க்கு** - ஐம்பொறிகளை வெல்லாத வர்க்கு.

0294 **அள்ளல்** - சேறு; நரகம்.

0295 **அளி** - வண்டுகள்; தேனீக்கள்

0296 **அளி மிழற்றும்** - வண்டுகள் ஒலிக்கும்

0297 **அளிக்கும்** - அருள் செய்யும்

0298 **அளித்தல்** - கொடுத்தல்.

0299 **அளித்தாய்** - இன்பம் கொடுத்தாய்

0300 **அளித்தீர்ஆம்** - கொடுத்தீராம்

0301 **அளித்து** - கொடுத்து.

0302 **அளியார்** - இரக்கம் உடையவர்

0303 **அறக்கருணையும்** - இன்பம் அருளியும்.

0304 **அற்கண்டம்** - விடம் உண்ட இருண்ட கழுத்து

0305 **அற்கோட்டை** - வலுவில்லாத

0306 **அறத்தின் வழி** - முப்பத்திரண்டு விதி முறைகள்

0307 **அறத்தெளிதல்** - முற்றும் தெளிந்திடல்

0308 **அற்பமன்றே** - குறைவானதில்லை

0309 **அற்புதம்** - ஆச்சரியம்.

0310 **அற்புதவடிவு** - வினோதரூபம்.

0311 **அறம் அன்று** - தருமம் அல்ல

0312 **அறவோர்** - துறவியர்; நெறியுடையோர்

0313 **அற்றமிலாது** - சோர்வில்லாது; அழிவில்லாமல்

0314 **அற்றவர்** - பற்றற்றவர்.

0315 **அற்றவரை** - இறந்தவரை.

0316 **அற்று** - நீங்கி.

0317 **அறிகிற்பேன்** - அறிந்திடுவேன்

0318 **அறியேன்** - எப்படி இருக்கும் என்பதை அறியேன்

0319 **அறிவானந்தமே** - ஞானானந்தமே.

0320 **அறுத்தவர்** - இல்லாதபடி செய்தவர்.

0321 **அறுத்தாலும்** - வெட்டினாலும்

0322 **அறுப்பது** - நீக்குவது

0323 **அறை** - சொல்.

0324 **அறைதி** - சொல்லுக

0325 **அறைந்து இளைக்க** - சொல்லிச் சோர்வடைய

0326 **அறையணிநல்லூர்** - ஒப்பிலா ஈசன் - பொன்னம்மை. வனவாச பாண்டவர் வந்திருந்து, நலமான புதுவாழ்வு கண்ட நல்லூர் 'அறகண்டநல்லூர்'என வழங்கும் இவ்வூர், திருக்கோவிலூர் அருகே உள்ளது.

0327 **அறையார்** - சொல்வார்.

0328 **அனங்கே** - பெண்ணே

0329 **அனந்த மா சித்தி சத்தாம்** - எண்ணிறந்த சத்தி சத்தர்கள்

0330 **அனந்த வகையது** - அளவற்ற இன்பம் உடையதாய்

0331 **அனந்த வேதம்** - கணக்கற்ற மறைகள்

0332 **அனந்தம்** - முடிவற்ற பேருள் உடையது.

0333 **அனந்தம் அனந்தம்** - அளவற்ற கோடியாக

0334 **அன்பர் அபிமானமே** - அன்பர் மீது அபிமான முள்ளவனே.

0335 **அன்பர் உவக்கும்** - அடியார் மகிழும்

0336 **அன்பன்** - மாணிக்கவாசகன்.

0337 **அன்பில் ஆலந்துறை** - சத்யவாகீசர் - சௌந்தர்ய நாயகி. ஈசனை நடேசனாய் வாகீசர் கண்ட கொள்ளிடக்கரைக் கோயிலிது. லால்குடியிலிருந்து கிழக்கே 5 கி.மீ. ஆலந்துறை உள்ளது.

0338 **அன்பில் நீண்டவன்** - அன்பில்சிறந்தவன்

0339 **அன்பு ஏலாத** - அன்பு சொல்ல முடியாத

0340 **அன்போரிடத்தில்** - அன்புடையோரிடத்தில்.

0341 **அனம்** - அன்னப்பறவை; அன்னம்

0342 **அனல்** - நெருப்பு.

0343 **அன்னத்தான்** - அன்னவாகனத்தை உடையவனாகிய பிரமன்.

0344 **அன்னம்** - தெய்வ அன்னமே

0345 **அன்னவர்** - அத் தன்மையர்.

0346 **அன்னியூர்** - ஆபத்சகாயர் - பெரியநாயகி. எலுமிச்சை - தல விருக்ஷம், பங்குனி கடைசிவார சூர்ய ஒளி பூஜை. திருநீடுருக்கு மேற்றிசையில் 5 கி.மீ. திருத்தலம் அன்னியூர். (பொன்னூர்)

0347 **அன்னே** - தாயே

0348 **அனிச்சம்** - அனிச்ச மென்மலர்

0349 **அனித்திய விவேகம்** - எதுவும் நிலையல்ல என்னும் அறிவு.

0350 **அனுகூலம்** - காரிய சித்தியுடைய

0351 **அனுபூதி** - சிவானுபவம்.

0352 **அனேகதங்காபதம்** - அருண் மன்னேச்சுரர் - மனோன் மணி. இங்கு உமாதேவி தவம் செய்தபடியால் கௌரி குண்டம் என்று குறிப்பிடப்படுகிறது. 'கௌரி குண்டம்'எனும் புனித தீர்த்த இமயம் ரிஷிகேஷ்மேலே, திருக்கேதாரத்திற்கு 14 கி.மீ.க்கு முன் உள்ளது.

ஆ

0353 **ஆக்கமே சேராது அறந் துரத்துகின்ற வெறுந்தூக்கம்** - செல்வஞ் சேராமல் மிகவும் துரத்துகின்ற வெறுமை யாகிய நித்திரை.

0354 **ஆக்கூர்** - சுயம்புநாதர் - வாள்நெடுங்கண்ணி. சமபந்தி போஜனத்தில் சிவமே வந்து,சாப்பிட்ட அற்புதப் பேராலயம். மாயூரம் தரங்கம் பாடிப் பாதையிலே 16கி.மீட்டர் இந்த ஆக்கூர் உள்ளது.

0355 **ஆகமம்** - சிவஞான சாத்திரம்

0356 **ஆகமாந்தாந்தம்** - சித்தாந்த முடிவுக்கும் முடிவானது.

0357 **ஆகாதோ** - தகுதி இல்லையோ

0358 **ஆகுலத்தின்** - துன்பத்தில்

0359 **ஆங்கு ஒன்றும்** - அங்குஎதுவும்

0360 **ஆசு** - குற்றம்

0361 **ஆசைஉரைத்து** - தருவதாகச்சொல்லி

0362 **ஆடகத்தில்** - பொன்னிடத்தில்.

0363 **ஆட்கொண்டது** - தடுத்து ஆட்கொண்டது

0364 **ஆட்கொல்லி** - பொன்.

0365 **ஆட்கொளாவாறு** - ஆட்கொள்ளாத பட்சத்தில்

0366 **ஆட்சிகண்டார்க்கு** - மக்களுக்கு,ஆளும்படி உட்பட்டவர்

0367 **ஆட்டம்** - தடுமாற்றம்

0368 **ஆட்டியல் கால் பூமாட்டு** - நடன இயல்பினையுடைய திருவடித் தாமரை.

0369 **ஆட்டுக்கால்** - ஆடும் திருவடி

0370 **ஆட்டுக்கு** - கூத்திற்கு

0371 **ஆட்டுகின்ற** - ஆடச்செய்கின்ற

0372 **ஆட்டுத்தலை** - ஆட்டின் தலை

0373 **ஆட்டும்** - இன்பம் ஊட்டும்

0374 **ஆடல்** - இன்பம்,விளையாடல்

0375 **ஆடல்அடி** - நடனபாதம்.

0376 **ஆடல்உற்ற சீரார்** - விளையாடக் கூடிய சிறுவர்கள்.

0377 **ஆடலுறும்** - திருவிளையாடல் செய்யும்

0378 **ஆடுதற்கும்** - மூழ்குதற்கும்.

0379 **ஆண்டத்தில்** - அடிமை கொண்டதில்

0380 **ஆண்டு உறுகின்ற நான்** - அவ்விடத்தே விளங்கும் ஆன்மா.

0381 **ஆண்டே** - அவ்விடத்தில் இருந்தே

0382 **ஆண்மைக்கு** - ஆண்தன்மைக்கு.

0383 **ஆணவத்தால் ஏற்ற இருவரை ஆளுதல்** - அகங்காரத்தால் எதிர்த்த பிரம்ம விட்டுணுக்கள் இருவரையும் பயப் படாதீர்களென்று ஆட்கொண்டருளியது.

0384 **ஆணவத்தின் கூறு** - அகங்காரத்தின் பகுதி.

0385 **ஆணவமே என் காணி ஆட்சி** - அகங்காரமே என் காணி ஆட்சியாகும்.

0386 **ஆணில்** - ஆண்மக்கள்

0387 **ஆதபத்தின்** - வெப்பத்தின்

0388 **ஆதபத்தினால்** - ஒளியால்; வெளியால்.

0389 **ஆதரம்** - அன்புடைமை

0390 **ஆதரவால்** - அன்புப் பிணைப்பால்

0391 **ஆதரிக்கும்** - உடன் நிலையில்

0392 **ஆதரித்தல்** - உதவி செய்தல்; விரும்புதல்.

0393 **ஆதி** - மூலகாரணன்.

0394 **ஆதி நடு அந்தம்** - முதல்,இடை,கடை.

0395 **ஆதி மூன்றில் ஒன்று** - மும்பொருளில் ஒன்று; (பதி, பசு, பாசம் என்னும் மும்பொருளில் ஒன்று ஆன்மா).

0396 **ஆதியாய்** - தோற்றம் உடையதாகி

0397 **ஆப்பனூர்** - திருவாப்புடையார் - குரவம்கமழ் குழலி. வைகையைத் தாண்ட பாண்டியன் வேண்ட,ஆப்பிலே தோன்றிய அரன். மதுரை மீனாட்சி ஆலயத்திலிருந்து வடக்கே வைகை வடகரையில் சிறிது தூரத்தில் ஆப்பனூர்.

0398 **ஆப்புண்டு** - கட்டுப்பட்டு

0399 **ஆம்ஆற்றிய** - பஞ்ச பாதகங்களை வென்ற

0400 **ஆமாத்தூர்** - அழகிய நாயனார் - முத்தாம்பிகை. வன்னிமரமான பிருங்கி ரிஷிக்கு,மானுட வடிவம் மீண்ட தலம். விழுப்புரத்தின் வடமேற்கே 7 கி.மீ. ஆமாத்தூர் உள்ளது.

0401 **ஆமோ** - உண்டாகும்

0402 **ஆய வித்தையால்** - எண்ணிய சங்கற்பமாய்.

0403 **ஆயாத** - நன்மை அறியாத

0404 **ஆயிடில்** - ஆனால்

0405 **ஆயிரத்தெட்டு உயர் குலம்** - ஆயிரத்தெட்டு இதழ் உடைய தாமரை

0406 **ஆயில்** - ஆராயுங்கால்.

0407 **ஆர்அமுதவடிவே** - பொருந்திய இன்ப உருவமே

0408 **ஆர்க்கின்றாய்** - அனுபவிக்கின்றாய்.

0409 **ஆர்கரத்து** - பொருந்திய கையில்

0410 **ஆர்கொண்டார்** - யார் உண்டிட்டார்

0411 **ஆரணம்** - வேதம்

0412 **ஆரணம்** - வேதமறை

0413 **ஆர்த்தி** - அன்பு.

0414 **ஆர்த்துநின்றேன்** - அலைவுபட நின்றேன்

0415 **ஆர்ந்துறையேல்** - கூடி நில்லாதே.

0416 **ஆர்பதி** - உமையாள் கணவன்

0417 **ஆர்புரம்** - நிறைவிடம்

0418 **ஆர்வத்தோடு** - ஊக்கத்தோடு

0419 **ஆர்வம்** - அன்பு

0420 **ஆர்வம்தான் ஆர்** - நிறைந்த காதல் ஆர்வத்துடன்

0421 **ஆரா** - தெவிட்டாத

0422 **ஆராமை** - தெவிட்டாமை.

0423 **ஆருயிர்** - அருமையாகிய உயிர்.

0424 **ஆரூர் அரநெறி** - அரநெறியப்பர் - வண்டார் குழலி. ஆராய்ச்சிமணி கட்டி ஊராண்ட சோழர்களைப் பாரோர் புகழ்ந்த பேரூர். திருவாரூர்க் கோயிலின் தெற்குப் பிரகார மேற்கு சந்நிதியே அரநெறி.

0425 **ஆரூர் பரவையுண் மண்டளி** - தூவாயநாதர் - பஞ்சின் மெல்லடி. பொய்யான சத்தியத்தால் குருடான சுந்தரரின் கண்களுள் ஒன்று ஒளி கண்டதிங்கே. குளம் , ஐந்துவேலி எனத் திகழும் ஆரூரின், தேரருகே 'மண்டளி'.

0426 **ஆரூர் மறுகு** - திருவாரூரின் வீதிகள்.

0427 **ஆலம்** - நஞ்சு

0428 **ஆலம் காட்டும் மிடற்றாய்** - விடத்தைக் காட்டுகின்ற கண்டத்தையுடையவனே.

0429 **ஆலித்திடும்** - பொருந்தவைக்கும்

0430 **ஆலும்** - அசைகின்ற.

0431 **ஆவரணம்** - மறைப்பு.

0432 **ஆவா** - ஆ ஆ, ஆகா

0433 **ஆவிபோவது** - உயிர்போவது.

0434 **ஆவினை விட்டு** - பசுவினை விட்டுவிட்டு

0435 **ஆவூர் பசுபதீசுவரம்** - பசுபதீசுவரர் - மங்களாம்பிகை. பாவப்பட்ட காமதேனுவுக்குச் சாபவிமோசனம் தந்த திருத்தலம். பட்டீச்சுரத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலே பசுபதீசுவரம் உள்ளது.

0436 **ஆழ்நிலை** - ஆழ்ந்த நிலை.

0437 **ஆழி** - சக்கரம்; திருமால் தாங்கிய சக்கரப்படை

0438 **ஆள்** - அடிமைகள்

0439 **ஆள்கின்றவர்** - ஏற்றுக்கொள்கின்றவர்

0440 **ஆள்பவர்** - ஆட்சி புரிபவர்

0441 **ஆளல்** - அடிமையாகச் செய்தல்

0442 **ஆள்வடிவு** - ஆளான நிலை

0443 **ஆள்வேண்டுமேல்** - ஆட்கொள்ளவேண்டும் என்றால்

0444 **ஆளாக்கிகொள்வதற்கு** - அடிமையாக ஏற்றுக் கொள்வதற்கு

0445 **ஆற்றல்** - செய்கை; செய்தல்.

0446 **ஆற்றா** - தாங்காத

0447 **ஆற்றில் ஒரு கால்** - சேற்றில் ஒரு கால் - நன்னெறியிலும் தீநெறியிலும் மனம் தடுமாறிச் செல்லுதல்

0448 **ஆற்றுங்கொலோ** - தாங்கிடுமோ

0449 **ஆற்றுச்சடையீர்** - கங்கை தாங்கிய முடி உடையீர்

0450 **ஆற்றும்** - வெல்லும்

0451 **ஆற்றுவது** - கூறுவதன்றி

0452 **ஆறு** - 6 ஆதாரங்கள்; மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை)

0453 **ஆறுதற்கு** - நீங்குதற்கு

0454 **ஆறுமுகத்தார்** - ஆறுதல் அடைவிக்கும் இடம் உடையார்

0455 **ஆன்** - தாய்ப்பசு

0456 **ஆனந்தக் காளையே** - இன்பக் காளையே.

0457 **ஆனந்த பதபாலனம்** - இயற்கை இன்பம் தரும் ஆட்சியுடையது.

0458 **ஆனந்த பொக்கிசமே** - இன்பக் களஞ்சியமே.

0459 **ஆனந்த போகமாகி** - பேரின்பச் சுகமாகி

0460 **ஆனந்த விளைவு** - பூரணமாகும் இன்பநிலை

0461 **ஆனந்த வீட்டுறவே** - இன்பவீட்டைத் தருகிற சுற்றமே.

0462 **ஆனந்தப்பேறு** - ஆன்மலாபம்

0463 **ஆனந்தாகாரம்** - இன்பஉரு.

0464 **ஆன்மசிற்சக்தியாய்** - ஆன்மா தலைவியாகி

0465 **ஆன்மார்த்தமே** - ஆத்மார்த்த லிங்கமே.

0466 **ஆன்ற** - பெருமைக்குரிய

0467 **ஆனாமல்** - நீங்காமல்.

0468 **ஆனாமை** - நீங்காமை.

0469 **ஆனேறும்** - காளை மீது ஊர்கின்ற

0470 **ஆனேனேல்** - ஆகியிருந்தால்

0471 **ஆனைப் பெருங்குலம்** - யானை மரபு

இ

0472 **இஃது என்னே** - இது என்ன

0473 **இஃது ஒன்று** - ஈதுஒன்று

0474 **இக் கட்டவிழ்த்து** - இந்தக் கட்டினை அவிழ்த்து.

0475 **இக் கட்டு** - இந்த மூன்று கட்டுகளும்.

0476 **இகந்தோர்** - கடந்தவர்

0477 **இகந்தோரும்** - கடந்தோரும்.

0478 **இகபரத்தே** - இம்மை மறுமை இன்பத்தில்

0479 **இகம்** - இவ்வுலகம்

0480 **இகம்சேர்** - இன்பம் பொருந்திய

0481 **இகரம்** - 'இ' என்னும் எழுத்து, கீழ்நிலை, மண்ணுலகம்

0482 **இகல்** - மாறுபாடு

0483 **இகவா** - எல்லை கடவாத.

0484 **இங்கிதம்** - மனக்குறிப்பை வெளிப்படுத்தும் இன்பமொழி

0485 **இங்கு இலை** - இங்கு இல்லை

0486 **இங்குஎன** - வழக்கு எதற்காக என

0487 **இங்குஓதி** - இங்கே புகழ்ந்து

0488 **இச்சை** - உலகப்பற்று, விருப்பம்

0489 **இச்சை எய்தா** - விரும்பாத

0490 **இச்சை ஒடித்தேன்** - ஆசையை அறுத்தேன்

0491 **இச்சைசக்தி** - வடிவினைத் தூண்டும் சக்தி.

0492 **இச்சையுற** - விரும்ப.

0493 **இசை வழக்கிடல்** - புகழின் மேன்மை பற்றி வாதிடல்.

0494 **இசைந்ததோ** - விரும்பியதோ

0495 **இசைந்துஉற்றன** - பொருந்தி நின்றன

0496 **இசைந்தென** - பொருந்தியதாக.

0497 **இசைப்பதென்னே** - சொல்வது என்ன?

0498 **இசை பரிமளிக்கும்** - (அருள்) இசை மணக்கும்.

0499 **இஞ்ஞான்று** - இந்தநாள்

0500 **இடக்கு** - ஏறுமாறு

0501 **இடங்கர்** - முதலை ; நீர்க்குழி

0502 **இடஞ்சேர்** - இன்பநிலை தருகின்ற

0503 **இட்டாள்** - உபதேசித்திட்டாள்

0504 **இட்டு** - படைத்து

0505 **இட்டு அங்கு அளித்த** - அன்பர்க்கு அருள் ஈந்திட்ட

0506 **இட்டுஆர்** - பொறித்துவைத்த

0507 **இடப்பாலில்** - இடது பக்கத்தில்

0508 **இடபவாகனன்** - (தயவு எனும்) காளை ஊர்தியோன்.

0509 **இடம்** - இன்பநிலை

0510 **இடம்கொள** - இடப்பாகம் உடைய

0511 **இடர் ஊட்டும்** - துன்பத்தினைத் தரும்

0512 **இடர்க்கு** - துன்பத்திற்கு

0513 **இடரை** - துன்பங்களை

0514 **இடியா** - கலங்கா(து)

0515 **இடுகாட்டகத்து** - பிணம் புதைக்கும் இடத்தில்

0516 **இடும்** - மதத்தைவிடும், தாரும்

0517 **இடும்படையேதுமிலேன்** - எதிரிகள் மீது விடும் ஆயுதம் ஏது மில்லாதவன்

0518 **இடும்பாவனம்** - சற்குணநாதர் - மங்களநாயகி. அகத்தியர் தன் சீடரான இடும்பனோடு ஆண்டவனைக் கண்ட கோயில். திருத்துறைப்பூண்டியிலிருந்து தென் மேற்கே 16 கி.மீட்டர் இடும்பாவனம் உள்ளது.

0519 **இடும்பை** - துன்பம்.

0520 **இடுமுதலே** - சேமித்த வைப்பே

0521 **இடை** - இடையில், இடுப்பு

0522 **இடை வலிந்து ஏறும் பதம்** - மிக விரும்பி தரிக்கும் பதம்.

0523 **இடைக்கொடி** - கொடிபோலும் இடுப்பை உடையவள்

0524 **இடைச்சுரம்** - இடைச்சுரநாதர் - இமையமடக்கொடி. இடைச்சுரநாதர் மரகதலிங்கம், சனற்குமாரர் பூசித்த கோயில். செங்கையிலிருந்து திருப்போரூர் செல்லும் வழியிலே 9 கி.மீ.

0525 **இடைமேற்கொளும்** - இடுப்பின் மேல் உள்ள

0526 **இடையா** - பின்னடையாத; திரளுதலுடைய; இடைப் பகுதியில்

0527 **இடையாது** - குறையாமல்

0528 **இடையார்** - இன மகளிர்

0529 **இடையாறு** - இடையாற்றீசர் - சிற்றிடைநாயகி. சைவாகம அருள்நந்திசிவத்தின் சீடர் மறைஞான சம்பந்தர் பிறந்த ஊர். திருவெண்ணை நல்லூருக்கு வடமேற்கே 5 கி.மீ. இடையாறு.

0530 **இணக்க முறல்** - பொருந்தும்படி

0531 **இணங்க** - சேர, புரை

0532 **இணங்கேம்** - சம்மதியோம்

0533 **இணங்கேல்** - விரும்பேல்

0534 **இண்டைச்சடை** - கொன்றை மாலைச் சூடும் சடை

0535 **இணைமலர்** - இருமலர்.

0536 **இணையிலா** - ஒப்புமை இலாத.

0537 **இத்தகை** - இவ்வகைப்பட்ட

0538 **இதம்** - தினமும், இங்கிதம்

0539 **இதயம்** - கொன்றை

0540 **இதழ்** - அதரம், உதடு

0541 **இதழிக் கண்ணியான்** - கொன்றைமலர் தரித்தவனே.

0542 **இது என்றும்** - இத்தகையது என்றும்

0543 **இதுசொற்கடன்** - இதனை சொல்லியே நாம் இன்பம் தருவோம்.

0544 **இதென்** - இதுஎனது, இது என்ன

0545 **இந்தாஎன்று** - இதனைப் பெற்றுக்கொள் என்று.

0546 **இந்திர நீலப்பருப்பதம்** - நீலாசலநாதர் - நீலாம்பிகை. இமயத்தின் நீலப்பாறை சுயம்புலிங்கம்,பச்சைமலை அம்பாளாகும் பத்ரிநாதத்திற்கு அருகில் உள்ளது.

0547 **இந்திரர் ஆதி** - இந்திரர் முதலாக.

0548 **இந்திரரும் நாரணரும் எண்ணில்பிரமர்களும் வந்து இறைஞ்சும்** - இந்திரர்களும்,நாரணர்களும்,அளவற்ற பிரமர்களும் வந்து வணங்குகின்ற.

0549 **இந்திரியக்கள்வர்** - மெய்முதலிய ஐம்பொறிகளாகிய கள்வர்

0550 **இந்திரியம்** - பொறிபுலன்கள்

0551 **இந்து** - மூன்றாம் பிறை நிலவு

0552 **இந்துமுகத்தாய்** - சந்திர முகத்துடையவனே

0553 **இந்நடை** - இந்த இயல்பு

0554 **இந்நிலத்தும் வானாதி எந்நிலத்தும்** - இவ்வுலகத்திலும் சுவர்க்கலோக முதலிய எவ்வுலகத்திலும்.

0555 **இந்நிலை முற்ற** - இந்த நிலையானது முடிவடைய.

0556 **இப்படி** - இவ்விடத்தில்

0557 **இப்பாரில்** - இந்தப் பூமியினது

0558 **இப்பொழுது** - இத்தருணத்தில்

0559 **இம் மால்** - இம்மயக்கத்தை.

0560 **இம்பரத்தம்** - உலகியல் நடை

0561 **இம்மத்தனை** - இந்தப் பித்தனை

0562 **இம்மை** - இக்காலத்தில்

0563 **இம்மவெற்புடையாள்** - இமவான் மகள்உமை

0564 **இமைகொள்** - கூர்மைகொண்ட

0565 **இமைப்பால்** - கண்சிமிட்டும் குறியால்

0566 **இமைப்பில்** - நடுப்பொழுதில்; நொடிப்பொழுதில்.

0567 **இமையினும்** - இம்மை மறுமையிலும்.

0568 **இயக்கர்** - தேவ கணத்தில் ஒருவர்

0569 **இயக்கிலர்** - செய்யமுடியாதவர்

0570 **இயங்க** - வாழ்ந்திட.

0571 **இயங்கா** - உலவாத (அலையாத)

0572 **இயம்ப** - சொல்லி; குறைபேச

0573 **இயம்பு** - கூறுக; அருளுக; சொல்லுக

0574 **இயல்சூழ்** - நல்லியல்பான

0575 **இயல்மணம்** - இயற்கை மணம், இயற்றமிழ்ப் பாடல் மணம்.

0576 **இயல்மொழியே** - இலக்கணம் அமைந்த மொழியே.

0577 **இயலறிவும்** - சிவயோகியர் ஞானநிலையும்

0578 **இயலாது** - பொருந்தாது.

0579 **இயலார்** - இயல்பில்லாதவர்; இயல்புடையவர்

0580 **இயற்சுடர்** - இயற்கை ஒளி.

0581 **இயற்பால்** - இயல்புமொழி

0582 **இயற்றுவன்** - செய்திடச் சித்தப்படுபவன்.

0583 **இரக்கம்** - காருணியம்

0584 **இரங்கல்** - அழுதல், வருந்தல்

0585 **இரங்கலர்** - பகைவர்

0586 **இரங்கி** - கூவி

0587 **இரங்குகிலர்** - தயவு செய்திலார்

0588 **இரங்குநெஞ்சே** - வருந்தும் நெஞ்சம்

0589 **இரண்டு என்பது இல்லவராய்** - தனக்கு வேறாக மற்றொரு பொருள்இல்லாதவராகி.

0590 **இரண்டோடு ஏழு** - ஒன்பது (நவவகைப் பக்தியுடைமை).

0591 **இரப்பவர்** - யாசிப்பவர்

0592 **இரப்புச் சோறு** - யாசித்த சோறு.

0593 **இரவி** - கதிரவன்

0594 **இரவுறும் பகலடியர்** - இரவும் பகலும் பிரிவடையாத அடியவர்கள்.

0595 **இராக்கதர்** - அரக்கர்

0596 **இராது** - நில்லாது

0597 **இராமநந்தீசுவரம்** - நந்தீசுவரர் - சூடிகாம்பாள். நந்தியம்பெருமானும் ஸ்ரீ ராமசந்திரனும் வந்து நலம் பெற்ற தலமாம். நன்னிலத்திலிருந்து கிழக்கே 11 கி.மீ. ராமநந்தீச்சுரம். (திருச்சண்ணபுரம்)

0598 **இராமேசுவரம்** - இராமநாதர் - மலைவளர் காதலி. சேது முதல்இமயம் வரை சிவராமபக்திச் சிந்தனையின் வடிவாலயம். முப்பத்து ஆறு தீர்த்த தென்கடல் கொண்ட தீவுத்திருத்தலம் ராமேசுவரம்.

0599 **இரியும் புலியூர்** - விலகும் அம்பரம்,ஆடைக்குறியிடம்

0600 **இரு கல் ஆனைக்கு** - பெரிய காம மோகங்கொண்ட ஆண் யானைக்கு

0601 **இருக்காது** - நிலை கொள்ளாது

0602 **இருக்கு** - இருக்கு வேதம்.

0603 **இருகணுக்கு** - இரண்டு விழிகளுக்கு

0604 **இருசூறு** - இரண்டுபங்கு

0605 **இருகைஒலி** - கைகள் தட்டிய ஓசை

0606 **இருகைவளை** - பெரிய கைவளையல்

0607 **இருணச்சு அளகம்** - இருள்போன்ற மயிர்

0608 **இருத்தல்** - வாழ்தல்

0609 **இருத்தல் அரிது** - பொருந்துதல் இயலாதது

0610 **இருத்துவதே** - அழுத்துவது

0611 **இருநான்கு** - ஜீவ குணங்கள் எட்டு

0612 **இருநிதி** - பெருஞ்செல்வம்.

0613 **இரும்பதம்** - மேன்மையான திருவடி.

0614 **இரும்பூசிகள்** - இரும்பாலான ஊசிகள்

0615 **இரும்பூளை** - ஆப்தசகாயர் - ஏலவார் குழலி. சத்திரியரான விசுவாமித்திரர் பிரம்மரிஷியான சிவாலயம். நீடாமங்கலம் ஊரிலிருந்து வடக்கே 7 கி.மீ. (ஆலங்குடி)

0616 **இரும்பேய்** - இரும்பினை ஒத்த

0617 **இரும்பைமாகாளம்** - மாகாளேச்சுரர் - குயில்மொழி. அத்ரிமகரிஷி வாழ்ந்த ஊர். மாகாளர் பூசித்த மகத்துவக் கோயில். புதுச்சேரியிலிருந்து வடமேற்கே 8 கி.மீ. உள்ள தலம்.

0618 **இரும்பொன்நிலை** - அகன்ற குறியின்இன்பநிலையை

0619 **இருமருங்கு** - அகமும் புறமும்.

0620 இருமனத்து காரிருள் நீத்தோர் - மனம் இரண்டுபட்டு அறியாமை இருளால் பேதுணுதலை அறவே நீக்கியவர்கள் (சிவஞானிகள்)

0621 **இருமாநிலத்து** - பெரிய உலகில்

0622 **இருவர்** - சிவன் சக்தி

0623 **இருவர்க்கு** - திருநாவுக்கரசுக்கும் ஞானசம்பந்தருக்கும்

0624 **இருவாத** - தளராத,வந்து தங்கு

0625 **இருவும்** - மறைமொழி; இன்பமொழி

0626 **இருள் நீலம்** - கண் மலர்

0627 **இருள்கொண்டிட** - மயிர்ச்சுருளின்இருள்

0628 **இருள்தமம்** - மிக்க இருள்.

0629 **இருளும்** - கரியநிறமுடைய

0630 **இரை** - உணவு

0631 **இல்** - இடம்

0632 **இல்ஐ** - வீட்டிற்குத் தலைவனை

0633 **இல்கண்ட** - உலகியலைஉடைய

0634 **இல்விலங்கு** - இல்லறத்துத் தளை

0635 **இலகு** - விளங்கும்

0636 **இலங்காபுரம்** - இலங்கை

0637 **இலங்கிழை** - ஒளி பொருந்திய அணிகலன் அணிந்த பெண்

0638 **இலங்கு** - விளங்கும்

0639 **இலங்கு(ம்)** - விளங்கும்.

0640 **இலச்சினை** - அடையாளம்.

0641 **இலஞ்சியம்** - சுகுண மேரு.

0642 **இலட்சணம்** - அழகு இலக்கணத்திற்கு உட்பட்டது.

0643 **இலம்பையங்கோட்டூர்** - சந்திரசேகரர் - திரிபுராந்தகி. தேரின் கூவம் (ஏர்கால்) ஒடிந்து, விற்கோல வீர சிவம் நின்றதலம். ஸ்ரீபெரும்பூதூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது. (எலுமியன்கோட்டூர்)

0644 **இலரோ** - இல்லாதவரோ

0645 **இல்லாமை** - அறிவில் ஏழ்மை

0646 **இல்லாமை** - ஏழ்மை; எளிமை

0647 **இல்லிக்குடம்** - ஓட்டைகளையுடைய குடம்.

0648 **இல்லினிடத்து** - வீட்டினிடத்து

0649 **இலை** - இல்லை என்று கூறுதல்; தளிரை

0650 **இலை நிலை** - இல்லை,இறைவடிவின் தகைமையை இன்ப இடத்தில்

0651 **இலைக்கு** - திரிசூலத்திற்கு

0652 **இலைகண்டாய்** - இல்லை என்பதறிவாய்

0653 **இலையளவோ** - அளந்திட முடியாத

0654 **இலையோ** - இல்லையோ

0655 **இவண்** - இங்கு; இவ்விடத்தில்

0656 **இவணம்** - இப்படி.

0657 **இவர்ந்து** - மேல் தழுவி

0658 **இவ்வண்ணம்** - இப்படியாக

0659 **இவ்வணத்தன்** - இவ்வுருவமுடையவன்.

0660 **இழுக்கு உரையாது** - பழிபேசாது,தூற்றாது.

0661 **இழைத்திடும்** - செய்திடும்

0662 **இழையார்** - மகளிர்

0663 **இழையிற்று** - இந்நிலை இன்பத்தைப் பொருந்தி புணர்ந்து

0664 **இளநடை** - எழில்நடை

0665 **இளந்தை** - இளமை

0666 **இளம்** - இளமையான

0667 **இளம் சேய்** - திருமுருகன்

0668 **இளம்கன்று** - இளம் குழந்தை; இளம் கன்றுக்குட்டி

0669 **இளம்கனி** - இளம் கன்னி; பெண்

0670 **இளம்சேல்** - இளைய சேல் மீன்போல்

0671 **இளமடமானே** - இளம் பருவத்து மான் போன்றவளே

0672 **இளம்பிடி** - இளமையாகிய பெண் யானை

0673 **இளைக்கில்** - தளர்ந்த காலத்தில்

0674 **இளைத்தோம்** - தாழ்வோம்

0675 **இறந்தும்** - கடந்தும்

0676 **இற்றவளை** - இல்லத்து மனைவியை

0677 **இற்று** - கொய்து

0678 **இற்றை** - இன்றை

0679 **இற்றைக்கு** - இன்றைக்கு

0680 **இறுக** - இடைவிடாது; உறுதியுடன்

0681 **இறுதிதொடங்கிய** - வாசி என்பதனை மாற்றி

0682 **இறுமாந்து** - செருக்கடைந்து

0683 **இறுவைகையங் கரை** - கரைந்து கெடும் வைகைக் கரை.

0684 **இறை மகன்** - அரசன்

0685 **இறையாமோ** - பதிலாகுமோ

0686 **இறையும்** - கடவுளரும், சிறிதும் ; விடையும்

0687 **இறையோர்** - கணபதி முதலிய தெய்வங்கள்.

0688 **இன் குழலாய்** - குளிர்ந்த கூந்தலை உடையவளே

0689 **இன்சொல் அமுது** - துதிப்பாடல்

0690 **இன்சொல்லும்** - இனியவார்த்தையும்

0691 **இன்நல்** - இந்த நல்ல

0692 **இன்நல் அமுது** - இனிய நன்மொழி

0693 **இன்பு ஓங்கும்** - இன்பம் மிகும்.

0694 **இன்றாய்** - இல்லாவிட்டால்

0695 **இன்று என்று** - இன்ன என்று

0696 **இன்னம்** - இவ்வாறு

0697 **இன்னம்பர்** - எழுத்தறிநாதர் - கொந்தார் பூங்குழலி. அரசர்க்குக் கணக்கும் முனிவர்க்கு ஞானமும் தந்தவர் இந்த நாதர். கும்பகோணத்திலிருந்து ஆறு கி.மீ. தூரத்தில் உள்ளது இன்னம்பர்.

0698 **இன்னாமை** - தீமை; துன்பம்.

0699 **இன்னிசையே** - இனிய இசை உருவாயிருப்பவனே.

0700 **இன்னே** - இவ்விடத்தே

0701 **இனைகின்றாய்**- வருந்துகின்றாய்.

ஈ

0702 **ஈ யதனில்** - ஈயைப் பார்க்கிலும்.

0703 **ஈங்கு** - இவ்விடத்து

0704 **ஈங்குஆன** - இங்கே பொருந்திய

0705 **ஈங்கோய்மலை** - மரகதநாதர் - மரகதவல்லி. ஒன்பது தீர்த்த "இரத்னகிரி"யிலே,காவிரி நீரே தின நீராட்டும். முசிறிக்கு வடமேற்கே 7 கி.மீ.

0706 **ஈசன்** - இறைவன்

0707 **ஈசான முதல் மூர்த்தி வரை** - ஈசானம், தத்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் ஆகிய ஐந்து.

0708 **ஈட்டி** - சம்பாதித்து.

0709 **ஈட்டுதல்** - சேர்த்தல்.

0710 **ஈட்டும் தரம்** - ஏற்கும் நிலை

0711 **ஈட்டும் திறந்தாய்** - ஆக்கும் பெருமையால்

0712 **ஈடறியாத** - குறை ஏதுமில்லாத

0713 **ஈடாக** - சரியாக; தகுதியாக.

0714 **ஈடாய்** - ஒப்பாக

0715 **ஈடுஉண்ட** - மாயைக்கு இணையாகிய

0716 **ஈண்டடைந்தார்** - இவ்விடம் வந்து சேர்ந்தார்

0717 **ஈண்டாது** - குறையாது.

0718 **ஈண்டு** - இவ்விடத்து,இங்கே

0719 **ஈதல்** - தருதல்

0720 **ஈதவர்** - கொடுக்கமாட்டார்கள்

0721 **ஈது** - சங்கு

0722 **ஈமம்** - மயானம்; சுடுகாடு.

0723 **ஈயாக்குறை** - கொடுக்காத குறை

0724 **ஈர்அரவிப்பணி** - குளிர்மையுடைய பாம்பு ஆபரணம்

0725 **ஈர்ஒற்றி** - இரக்கம் மிகுந்தோர் வாழும் திருவொற்றியூர்

0726 **ஈர்த்து** - இழுத்து.

0727 **ஈரம்** - அன்பு.

0728 **ஈரமிலா நெஞ்சருடன் கூடி நேசம் செய்து** - அன்பில்லாத மனம் உடையவரோடு சேர்ந்து கொண்டு.

0729 **ஈராசை** - இகபர இன்பம்

0730 **ஈரானை** - இரண்டு யானைகள்.

0731 **ஈருருவம்** - இரண்டு உருவம் (ஜீவன்,பரம்).

0732 **ஈருள்** - ஈரல்.

0733 **ஈரெழுத்தை** - முன்புள்ள இரண்டெழுத்தை (சிவ).

0734 **ஈறில்** - அளவற்ற.

0735 **ஈறிலாப்பதம்** - அழிவற்ற நிலைபேறுடைய திருவடி.

0736 **ஈறு** - முடிவு.

0737 **ஈறு அற்ற** - ஈற்றெழுத்தினை நீக்கிய

0738 **ஈறுஇகந்த** - முடிவில்லாத.

0739 **ஈறெழுத்தால்** - மாது என்னும் பெண்ணினால்

0740 **ஈனம்** - இழிவு; சிற்றின்பம்,அனுபவிக்காத குறைபாடு

0741 **ஈன்ற** - பெற்றெடுத்த

0742 **ஈன்றோரை** - பெற்றவர்களை; தாய்தந்தையரை.

0743 **ஈன்றோன்தனை** - படைத்தவனாகிய நான்முகக் கடவுளை.

0744 **ஈனாதவன்** - பிள்ளை பெறாதவன்

உ

0745 **உகம்** - யுகம்

0746 **உகலிலா** - அழிவில்லாத; ஒழியாத

0747 **உகவேல்** - விரும்பாதே.

0748 **உசிதம்** - விரும்பியபடி (விருப்பத்திற்குரியது)

0749 **உட்கருதி** - உள்ளத்தில் எண்ணி

0750 **உட்குறை** - மனக்குறை

0751 **உட்பகையார் காமமெனுங் கள்ளறியாதுண்டு கவல் கின்றேன்** - உட்பகையினால் காமமென்கிற கள்ளை அறியாமல் குடித்துக் கவலைப்படா நின்றேன்.

0752 **உட்பகைவர்** - உயிருக்குப் பகைமை உடையவர்.

0753 **உடற்குழும்பும்** - உடல்கள் கலங்கும்.

0754 **உடை என்ன** - என்ன ஆடையோ; ஆடை போன்ற

0755 **உடையவரோ** - உரியவரோ

0756 **உடையா** - ஆடையாக

0757 **உடையாமை** - வருந்தாத தன்மை

0758 **உடையார்** - அருட் செல்வம் உடையார்

0759 **உடையேம்** - பெற்று உள்ளோம்

0760 **உடையேன்** - ஆசை மாறேன்,திசை ஆடையேன்

0761 **உண்கண்** - கண்கள் உண்பதால்

0762 **உண்செயல்அன்றோ** - உண்ணும் காரியம் அல்லவா

0763 **உண்டழிக்க** - மூடி அழிக்க.

0764 **உண்டிபோல்** - உயிர் போன்ற; சோறுபோல

0765 **உண்ணாடும் (உள்நாடும்)** - உள்ளம் விரும்பும்

0766 **உண்ணாமுலை உமை** - உண்ணாமுலையாகிய உமாதேவியோடு.

0767 **உண்மணி** - கண்மணிக்குள் மணி

0768 **உண்மை நிலயமே** - உண்மையாகிய இடமே.

0769 **உணர்ந்தேன்** - கண்டுஉணர்ந்தேன்

0770 **உத்தம மெய்ஞ்ஞான ஒழுக்கமே** - மேலான மெய்ஞ்ஞான நெறியே.

0771 **உதயாதி ஈறு** - சங்கற்பித்தல்; சிந்தித்தல்; மறத்தல்.

0772 **உந்துறும்** - அமைத்து இயக்கப்பெற்றும்

0773 **உபகாரம்** - உடன் உதவி

0774 **உபசாந்த நிலை** - துரியநிலை,தவாதசாந்த நிலை, புருவநடுவுக்கு 12 அங்குலம் மேலே விளங்கும் நிலை, காரிய-காரண வாதனை ஒடுங்கிய நிலை

0775 **உபசாந்த நிலையாகி** - அலைவற்றத் தவாதசாந்தம், துவாதசாந்தம்

0776 **உபசாந்த மதாய்** - தவாதசாந்தம்,துவாதசாந்தம்

0777 **உபசாந்தபதம்** - தவாத சாந்தம்,துவாத சாந்தம் என்னும் இரு நிலைகள்.

0778 **உபநிடதங்கள்** - வேத முடிவு நூல்கள்

0779 **உபநிடதம்** - வேத முடிவு

0780 **உம் தகரக்கால்** - உடம்பின் நிலை

0781 **உம்கருமம்** - உமது காரியம்

0782 **உம்பர்** - மேன்மை

0783 **உமாபதி** - சிவையின் கணவன்.

0784 **உய்உரைத்து** - பொருந்தியதைப் பேசி

0785 **உய்கிற்பான்** - உய்யும் பொருட்டு.

0786 **உய்கிற்பேன்** - மேம்படுவேன்

0787 **உயங்குகின்றேன்** - வருந்துகின்றேன்

0788 **உயங்கும்** - சுழலும்

0789 **உய்ஞ்சேன்** - தப்பிப் பிழைத்தேன்

0790 **உய்யாது** - பிழைக்காமல்.

0791 **உய்யும் நெறி** - மேம்படும் வழி

0792 **உயர்தவர்** - தவத்தில் சிறந்தவர்

0793 **உய்வுவந்து** - மேம்படச் செய்து

0794 **உயிர்கள் தொறும்** - உயிர்கள் ஒவ்வொன்றிலும்

0795 **உரக்கம் கலக்கம்** - பொருந்திய மயக்கம்

0796 **உரக்கில்** - சொன்னாலும்

0797 **உரங்கள்** - அறியாமை; இருள் வலிமை

0798 **உரத்துநாகம்** - மலையாகிய மார்பில்

0799 **உரத்தும்** - மார்பிடத்தும்

0800 **உரப்பொலியும்** - அதட்டல் மிரட்டல் ஓசையும்

0801 **உரம்** - வலிமை

0802 **உரன்** - வலி.

0803 **உரி** - தோல்.

0804 **உரி** - புள்ளிமான்தோல்

0805 **உரியீர் உடை** - யானைத் தோலாடையீர் ஆடையை அவிழ்ப்பீர்

0806 **உருஅருவம்** - சதாசிவம்

0807 **உருக்கும்** - நெகிழ்ந்திடவைக்கும்

0808 **உருத்திரர்** - படைத்தல், காத்தல், அழித்தல் தொழில் ஏற்கும் மூர்த்தி

0809 **உருத்திரர்கள்** - படைத்தல்,காத்தல்,அழித்தல் எனும் முத்தொழிலுடையோர்.

0810 **உருத்து** - சினந்து

0811 **உருநான்கு** - பிரமன்,திருமால்,உருத்திரன்,மகேசுவரன்

0812 **உரும்உக ஆர்க்கும்** - இடியும் விழ ஒலிக்கும்

0813 **உருமாறி** - பன்றியாய்மாறி

0814 **உருவத்தில் உருவாகி** - நான்முகனுக்கு மேலாம் திருமாலாகி

0815 **உருவினுள் உருவாகி** - திருமால் நிலைக்குமேல் உருத்திரனாகி

0816 **உருவு** - உருவம்.

0817 **உரை** - அருளுவாயாக

0818 **உரைக்கேம்** - சொன்னோம்

0819 **உரையேல்** - பேசாதே

0820 **உலகமுயற்சி** - மண், பொன், பெண் முதலிய உலக இச்சை

0821 **உலக விகாரப் பிரளயம்**- அறிவை மறைத்துக் கலக்கும் பலவிதமான பெரிய விகாரக் காட்சிகளையுடைய உலகம்.

0822 **உலகியல்** - உலகநடை.

0823 **உலகு** - உலக மக்கள்

0824 **உலம்** - வலிமைபொருந்திய

0825 **உலவா** - கெடாத.

0826 **உலவா நெற்கோட்டை** - குறையாத நெற்களஞ்சியம்

0827 **உலாப்பிணமே** - சுய அறிவின்றி நடக்கும் பிணமே

0828 **உலைஊட்டி** - தீமூட்டி

0829 **உலைவேனுக்கு** - அலைபடுபவனுக்கு

0830 **உவத்து** - மெய்ப்பொருள்.

0831 **உவந்து** - மகிழ்ந்து

0832 **உவப்புளதே** - திருப்தி உளதாகுமே

0833 **உவர்நீர்** - உப்பு நீர்

0834 **உவவாதார்** - விரும்பாதவர்.

0835 **உழப்பார்** - துன்பப்படுவார்

0836 **உழல்நாயேன்** - சுழலும் நாயடியேன்

0837 **உழலாய்** - வருந்தாதே

0838 **உள் அரிய நிலை** - உள்ளத்தால் எண்ணுதற்கும் இயலாநிலை

0839 **உள்அஞர்ஒழித்தே** - உள்ளத் துன்பத்தை நீக்கி

0840 **உள்கயிற்றால்** - உள்ளம் என்னும் கயிறால்

0841 **உளநீர்த்தாகம்** - உள்ளத்தின் மோகப்பெருக்கம்

0842 **உள்போது செலா முன்னம்** - உள்ளபோது போவதற்கு முன்னே.

0843 **உளம்** - உள்ளம்

0844 **உளம் நாண** - உள்ளம் வெட்கப்பட

0845 **உளம்கன்றும்** - மனம் கருகிடும்

0846 **உள்மதியோர்க்கு** - உள்ளம் விரும்புபவர்க்கு

0847 **உள்முகத்தும்** - உன்இடைஇடத்தும்

0848 **உள்வீட்டான்** - உள் வீட்டுக்காரனுக்கு.

0849 **உளவு** - இரகசியம்; சூது

0850 **உள்ள வன்மை** - மனவலி

0851 **உள்ளத்துணர்வு** - சுத்த ஆன்ம அறிவின் உணர்ச்சி

0852 **உள்ளமுதும்** - பிழிந்திட்ட சாறும்

0853 **உள்ளாமை** - எண்ணாமல்

0854 **உள்ளொன்ற** - உள்ளத்தில் பொருந்த

0855 **உறநோக்கி** - அருள் செய்து

0856 **உற்றநிலை** - பொருந்திய நிலை

0857 **உற்றவர்** - பொருந்தியவர்

0858 **உற்றவிடத்தே** - துன்புற்ற இடத்தில்

0859 **உற்றழைக்கில்** - பொருந்தும்படி அழைத்தால்

0860 **உற்றறி** - அனுபவித்து அறிவாயாக

0861 **உற்றறிதல்** - அடைந்தறிதல்

0862 **உற்றறியேன்** - பொருந்திப் பழகிலேன்

0863 **உற்றாயும்** - குணங்களை ஆய்கின்ற

0864 **உற்று ஆள்கிலை எனில்** - வந்து ஆட்கொள்ளவில்லை யானால்

0865 **உற்றேன்** - அடைந்தேன்

0866 **உறா** - பொருந்தாத

0867 **உறாமைபேசி** - பகைமை பேசி, எதிர்ப்பு;ரீபேசி

0868 **உறுகருடர்** - தேவகணத்தில் ஒருவர்

0869 **உறுத்தியதோ** - துன்புறுத்தியதோ

0870 **உறுதற்கு** - கூடுதற்கு

0871 **உறுதொழில்கள்** - பொருந்தும் கருமங்கள்

0872 **உறுப்பின்** - கருவினையுடைய.

0873 **உறும்** - பொருந்தும்

0874 **உறும்புலையர்** - மாமிசம் உண்பவர்

0875 **உறுவரென** - பொருந்துபவரென. (உறுவர் - முனிவர்)

0876 **உறுவீர்** - வாழ்கின்றவர்

0877 **உறைமதியா** - விளங்கும் நிலவாக

0878 **உன்மத்தர்** - பித்தர்

0879 **உன்னல்** - எண்ணுதற்கு

0880 **உன்னார்** - நினையாதவர்

0881 **உன்னி** - எண்ணி; நினைந்து

0882 **உன்னில்** - நினைத்தால்

0883 **உன்னுகின்ற** - தியானிக்கின்ற

0884 **உன்னுகின்றாய்** - நினைக்கின்றாய்.

0885 **உன்னுகின்றோர்** - நினைகின்றோர்.

0886 **உன்னாமல்** - தியானிக்காமல்,எண்ணாமல்

0887 **உன்னுந்தோறும்** - நினைக்கும்பொழுதும்

0888 **உன்னுதல்** - எண்ணுதல்.

0889 **உன்னும்** - எண்ணும்

0890 **உன்னுமுன்னம்** - நினைக்கும் முன்னே.

ஊ

0891 **ஊக்கமிகும்** - இரக்கவுணர்வு மிகும்படியான

0892 **ஊட்டுகின்ற** - இன்பதுன்பத்தை உண்டாக்குகின்ற

0893 **ஊட்டும்** - தந்திடும்

0894 **ஊட்டுமவன்** - உண்பிக்கும் அவன்.

0895 **ஊடு அலைந்தேன்** - இடையில் அகப்பட்டு அலையப் பெற்றேன்

0896 **ஊடுஉண்ட** - இளமையிலேயே உண்டிட்ட

0897 **ஊடே** - சிந்தையின்இடையில்

0898 **ஊண்** - உணவு

0899 **ஊண்தலை** - உணவின் சுவையை

0900 **ஊமன்போல** - ஊமையன் போல

0901 **ஊர்ஊர்** - காளை ஊர்தியாகிய இடம்

0902 **ஊர்ஊர் இரக்கும்** - ஊர்தோறும் பிச்சை எடுக்கும்

0903 **ஊர்த்துவதாண்டவம்** - காலைத் தலைக்குமேல் உயர்த்தி ஆடும் நடனம்.

0904 **ஊர்தான்** - ஊர்திதான்

0905 **ஊர்ந்தார்** - நடந்தார்.

0906 **ஊர்வாகனமா** - பெருச்சாளியாக,மயிலாக

0907 **ஊரன்** - திருநாவலூராராகிய சுந்தரமூர்த்திநாயனார்; திருநாவலூரன்

0908 **ஊரன் கண்பார்க்க வேண்டுமெனக் கண்டுன்று கோற்கொடுத்த** - ஒளியையுடைய சுந்தரர் கண்நோக்கம் வேண்டுமென்று சொல்லக்கண்டு ஊன்றுகோலைக் கொடுத்தருளின.

0909 **ஊரா** - இருக்குமிடமாக

0910 **ஊராத** - இடம்விட்டு நகராத

0911 **ஊழ்த் தாதா** - விதிப்படி செய்யும் பிரமன்

0912 **ஊழி** - யுகமுடிவு.

0913 ஊழி நடனம் - உலக முடிவில் சர அசர உயிர்கள் அனைத்தும் தம் திருவடி நிழலில் சேருமாறு இறைவன் இயற்றும் மாநடனம்.

0914 **ஊற்றம்** - பரிசம்

0915 **ஊற்றி** - ஊறச் செய்து

0916 **ஊன்** - உடம்பு; மாமிசம்; சரீரம்;

0917 **ஊன் செறி** - இழிந்த உடலாகி

0918 **ஊன் தசைப்பிண்டம்** - மல உடல்

0919 **ஊன் நின்ற ஒன்றின்** - உடம்பின் நிலைபெற்ற ஒரு பொருளினது.

0920 **ஊன்எழுந்து** - உடல் துடித்து

0921 **ஊன்தோய்** - தசை மிகுந்த

0922 **ஊனம்** - குறைபாடு

0923 **ஊன்முகக்கண்** - அஞ்ஞானக்கண் கொண்டு

0924 **ஊன்று** - பொருந்து

0925 **ஊனேறும்** - உடலில் ஓங்கும்

எ

0926 **எக்களித்து** - மிகவும் மகிழ்ந்து

0927 **எக்காலை** - எக்காலத்தில்

0928 **எங்கண** - எமது

0929 **எங்கள் நம்பிக்கு** - எங்கள் சுந்தரருக்கு

0930 **எங்கள்பிரான்** - திருஞானசம்பந்தர்

0931 **எங்கு அணைந்தது** - எங்கு வந்தது

0932 **எங்கும்** - எவ்வுலகும்.

0933 **எங்குறுவேன்** - எங்கு அடைக்கலம் புகுவேன்

0934 **எங்கேற** - எவ்விடம்

0935 **எங்கோவே** - எமது கடவுளே

0936 **எச்சம்** - கீழ்மை சந்ததி (சிவநேச வெண்பா. 6)

0937 **எச்சில் விழைகின்றாய்** - எச்சிலை விரும்புகின்றாய்.

0938 **எஞ்சங்கரனே** - சுகம் தருபவனே

0939 **எஞ்சநின்றேற்கு** - தீமையே மிதமாகக் கொண்டதற்கு

0940 **எஞ்சல்** - குறைதல்; குறைவு.

0941 **எஞ்சலற** - குறைவின்றி

0942 **எஞ்ஞாமல்** - குறையாமல்.

0943 **எஞ்ஞான்றும்** - எந்நாளும்.

0944 **எட்டிரண்டு** - அகர,உகரங்கள்.

0945 **எட்டு** - இயமம் முதலா சமாதி ஈறாகவுள்ள எட்டு வகை யோக நிலைகள். அவை: 1. இயம் (தீதகற்றல்), 2. நியமம் (நன்றாற்றல்), 3. ஆதனம் (இருக்கை), 4. பிராணாயமம் (வளி நிலை), 5. பிரத்தியாகாரம் (தொகைநிலை - பொறிகளை புலன்வழிச் செல்லாது ஒரு வழிப் படுப்பது.) 6. தாரணை (பொறைநிலை-மனத்தை ஒருவழி நிறுத்துவது), 7. தியானம் (நினைதல் - புருவமத்தியில் உள்ள ஒளியினை நினைத்தல்), 8. சமாதி (நொசிப்பு - செயலறல் - திருவருள் வெளிப்படுதல் அனுபவத்தால் அறிதல்)

0946 **எடுத்தால்** - அவிழ்த்தால்

0947 **எடுத்தாள்** - எடுத்துவளர்ப்பாய்

0948 **எடுப்பாய்** - மேம்படுமாறு

0949 **எடுமேலென** - திருவடியைத் தலையை விட்டு எடுப்பீரென.

0950 **எண்ஓர்** - எப்போதும் கருதப்படும்

0951 **எண்கலம்** - எண்ணும் காலத்தில்

0952 **எண்கா** - கேலியாக

0953 **எண்குணம்** - எட்டுக் குணம் (தன் வயத்தான் முதல் வரம்பில் இன்பம் ஈறாக).

0954 **எண்கூட்டி** - எண்ணிஅடைந்து

0955 எண்கை - கரடியை

0956 **எண்சொல்** - போற்றும்மொழி

0957 **எண்ண** - நினைத்துப் பார்க்க

0958 **எண்ணம்** - நினைவு

0959 **எண்ணார்** - எண்ணம் நிறைந்த

0960 **எண்ணில்** - நினைத்தால்

0961 **எண்ணிறைந்த சான்றோர் வணங்குதல்** - மனோ பீஷ்டங்கள் நிரம்பின பெரியோர் வணங்குகின்ற.

0962 **எண்ணெஞ்சில்** - எண்ணுகின்ற மனத்தில்

0963 **எண்தங்குற** - காதல் நினைவு பதியுமாறு

0964 **எண்திசைக் காவலர்கள்** - எட்டுத் திசையைக் காப்பவர்கள் (இந்திரன் - கிழக்கு; அக்னி - தென்கிழக்கு; எமன் - தெற்கு; நிருதி - தென்மேற்கு; வருணன் - மேற்கு; வாயு - வடமேற்கு; குபேரன் -
0965 வடக்கு; ஈசானன் - வடகிழக்கு).

0966 **எண்தோள்** - எட்டுக் கைகள்

0967 **எண்நான்கு** - நிலம்முதலான 32 தத்துவங்கள்

0968 **எண்பது** - எளிமையானது

0969 **எண்மடங்கு** - எட்டு மடங்கு

0970 **எண்மதியோடு** - எண்ணுகின்ற புத்தியுடன்

0971 **எண்மை** - எளிய சொல்; பலி

0972 **எத்திறத்தும்** - எவ்வித ஆற்றலினாலும்

0973 **எதியார்படினும்** - யார் எத்துன்பம் அடையினும்

0974 **எதிர்கொள்பாடி** - வெள்ளானைநாதர் - மலர்குழல் நாயகி. மணமுடித்த அனைவருக்கும் உறவினராய்ஆகும் பரமேசுவரன். தஞ்சைமாவட்டம் குத்தாலத்திற்கு வடக்கே 6 கி.மீ. (மேலைத் திருமணஞ்சேரி)

0975 **எதிர்வீட்டான்** - எதிர் வீட்டுக்காரனுக்கு.

0976 **எதிர்வைத்து** - எதிரில் தோன்றும்படி

0977 **எதிரற்று** - நிகரில்லாமல்

0978 **எது** - எது என்னும் சொல்லின்

0979 **எந்தாய்** - என் தந்தையே

0980 **எந்தை** - எம்உயிர்த் தந்தையே

0981 **எந்நாவையும்** - எந்தப் பொருளையும்.

0982 **எப்பான்மை** - எத்தன்மை

0983 **எப்போதோ** - எப்பொழுதோ

0984 **எம்அடிஆர்தம் ஐயர்க்கு ஐ** - கூடுவதில் உள்ள தளர்வினையும், இறைவன் பற்றிய ஐயப்பாட்டினையும்

0985 **எம்ஈன்றாள்** - எம்மைப் பெற்றெடுத்த தெய்வப்பெண் (உமை)

0986 **எம்ஓர்** - எம்மால் ஏற்கப்பட்ட

0987 **எம்சங்கரனே** - சுகம் தருபவனே

0988 **எம்சென்னியிடை** - எமது தலைமீது

0989 **எம்பந்தம்** - எமது பந்தம்.

0990 **எம்பரம** - எமது தலைவனே

0991 **எம்பெருமான்** - திருஞான சம்பந்தர்

0992 **எம்போல்வர்** - என்னைஒத்தவர்

0993 **எம்மதமாட்டும்** - எவ்வகை மதங்களிலும்

0994 **எம்மால்** - எங்களால்

0995 **எம்மாலை** - எமது காதல் உணர்வை

0996 **எம்மான்** - எமது இறைவன்; எமது தலைவன்

0997 **எம்மான்கண்** - எமது தலைவனிடம் விளங்கும்

0998 **எம்முடைமை** - எமது அங்கங்கள்

0999 **எம்மை** - எளிமை.

1000 **எம்மை அடுத்தது என்** - எம்மைச் சேர்ந்தது எதனால்

1001 **எம்மையிலும்** - எந்தப் பிறப்பிலும்.

1002 **எமை** - எம்மை, எங்களை

1003 **எய்** - அமைவாய்,அறிவாய்

1004 **எய்காண்** - கூர்ந்து நோக்கும்

1005 **எய்தினோம்** - அடைந்தோம்

1006 **எய்ப்பரிசாம்** - ஈயினுடைய கூரிய கொடுக்களவான

1007 **எய்ப்பில்** - முதுமையில்.

1008 **எய்ப்பில்வைப்பு** - முதுமைக்குச் சேமித்த செல்வம்

1009 **எய்ப்புடைய** - இளைத்தலையுடைய.

1010 **எய்புகுந்த** - கடுகடுக்க.

1011 **எய்யாமல்** - இளைக்காமல்.

1012 **எயில்** - மதில்கள்

1013 **எயிலை** - கூரையை, மதிலை

1014 **எரிமூட்டு** - தீயைமூட்டு.

1015 **எருக்கத்தம்புலியூர்** - நீலகண்டர் - நீலமலர்க்கண்ணி. வெள்ளெருக்குத் தலவிருட்சம். இத்தலத்தே வேண்டுதலால் ஊனம் மாறும். விருத்தாசலத்திலிருந்து தெற்கே 12 கி.மீ. இந்தப் புலியூர் (இராசேந்திரப் பட்டணம்)

1016 **எருக்கர்** - எருக்கமலர்

1017 **எருது** - காளை

1018 **எல்** - பகல்.

1019 **எல்லாச் சரியைகளும்** - எல்லாத் தொழில்களும்.

1020 **எல்லாப்பேறும்** - எல்லாப் பாக்கியங்களும்; எல்லா இன்பங்களும்.

1021 **எல்லும்** - பகலும்

1022 **எலும்பணியாய்ப்பூண்டவன்** - எலும்பை ஆபரணமாகப் பூண்டவன்.

1023 **எவ்வண்ணம்** - எவ்வாறு

1024 **எவ்வேலை** - எத்தகைய வேலை

1025 **எவன்** - எப்படி

1026 **எவையும்** - எல்லா உயிர்களையும்

1027 **எழில்வேணி** - அழகாகிய சடைமுடி

1028 **எழுத்தறிதல்** - அகரவுகரம் இன்னதென உணர்தல்

1029 **எழுத்து அஞ்சடையார்** - **சிவயநம**த்தை நினையாதவர்

1030 **எழுதாது இரதம்** - இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்னும் சப்த தாதுக்கள்.

1031 **எழுதீபம்** - நாவல், இறலி, இசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்னும் சப்த தீவுகள்.

1032 **எழுமனம்** - உலகியல் நடைமுறைகளில் சுழலும் மனம்.

1033 **எழுமை** - ஏழ் வகை பிறப்பு.

1034 **எள் என்றும்** - இகழ்ச்சி என்றும்.

1035 **எள்ஆடிய** - எள்ளினை ஆட்டிய

1036 **எள்ள** - இகழ்ந்திட

1037 **எள்ளல்** - இகழுதல்.

1038 **எள்ளல் உடையாய்** - குறையுடையாய்

1039 **எள்ளலேன்** - இகழ்ந்திலேன்

1040 **எள்ளாத** - இகழாத.

1041 **எள்ளுவார்** - பழிப்பார்; இகழ்வார்

1042 **எள்ளுறும்** - இகழப்பட்ட.

1043 **எளிகொண்டு** - எளியதாக நினைத்து

1044 **எற்கு** - எதற்கு; எனக்கு; எளியேனாகிய எனக்கு

1045 **எற்குஅருள்வாய்** - எனக்குக் கருணை புரிவாய்

1046 **எற்குஅருளி** - எனக்குக் கருணை செய்து

1047 **எற்றவளை** - மண்ணை எற்றித் தள்ளிய எறும்புவளை

1048 **எற்றுண்** - எறியப்பட்ட.

1049 **எற்றே** - என்ன ஆச்சரியம்?

1050 **எற்றைத் தினத்து** - எந்நாளில்

1051 **எறிந்து** - வீசி

1052 **எறிவேல்** - எறிகின்றவேல்

1053 **எறும்பியூர்** - எறும்பீசுவரர் - நறுங்குழல் நாயகி. அசுர பயத்தால் எறும்பு வடிவாகி தேவர்கள் அடைக்கலம் ஆன தலம். சிறு மலைக்கோவில். திருவெறும்பூர் திருச்சிக்குக் கிழக்கே 7 கி.மீ.

1054 **என்** - என்னவாம்?

1055 **என்** - சரிதானா

1056 **என்இறையாய்** - என்ஆண்டவனாய்

1057 **என்உடையாய்** - எனது அருட்செல்வமே

1058 **என்என்பது** - என்ன என்று கூறுவது?

1059 **என்ஓர்முகம்** - எனது ஒருமுகம்

1060 **எனக்கு ஈந்திட** - ஆன்மானுபவம் பெற்றிட

1061 **என்குறித்தோ** - யாது கருதியோ

1062 **என்கோ** - என்று கூறலாமோ; என்று கூறவோ

1063 **என்செய்கேன்** - என்ன செய்வேன்

1064 **என்நெஞ்சில்** - எண்ணுகின்ற மனத்தினில்

1065 **என்பணித்தார்** - எலும்பினால் ஆன மாலை.

1066 **என்பற்ற** - எலும்பு இல்லாத

1067 **என்பற்றதாக** - என்பிடிப்புக்கான

1068 **என்பால்** - என்னிடம்

1069 **என்பாலோ** - என்னிடத்திலோ

1070 **என்பீர்** - எலும்பு மாலை அணிந்தவரே

1071 **என்பு** - எலும்பு

1072 **என்புகல்** - எனக்குத் தஞ்சமாகும்

1073 **என்புடை** - என்னிடம்,எமது இடத்தில்

1074 **என்மயம்** - தற்போதநிலை

1075 **எனல்** - என்று கூறும்

1076 **என்றாய்** - என்தாய்

1077 **என்றும் முகமலர்ச்சி ஏற்றல்** - எந்நாளும் முகமலர்ச்சி கொள்ளல்.

1078 **என்றே** - என்றைக்கு

1079 **என்றேன்** - என்ன இனிமை

1080 **என்றேன் நில்** - என்று கூறினேனாக நில் என்கின்றார்.

1081 **என்ன** - எப்படிப்பட்ட

1082 **என்னில்** - என்னிடத்தில்

1083 **என்னுடையார்** - என்ன பயனைத் தருபவர்கள்

1084 **என்னே** - என்ன பயன்

1085 **என்னே செயல்** - என்ன செயலோ

1086 **என்னேடி** - என்ன வியப்பு,எத்தகையதோ

1087 **என்னோர்** - எனது நேர்மையான

1088 **என்னை** - ஆன்மாவாகிய என்னை; என்னிடத்தில்

1089 **என்னையே மாற்றினாயே** - என்னையே உன் சாயலில் மயக்கினாயே

1090 **என்னோ** - என்ன அதியம்; என்னவாம்

1091 **எனை** - என்னை

ஏ

1092 **ஏ** - அம்பு

1093 **ஏ ஐந்து** - ஐம்புல இன்பம்

1094 **ஏகம்** - ஒன்று.

1095 **ஏகம்கொள்** - ஒன்று என்னும் எண்ணிக்கைக் கொண்ட.

1096 **ஏகம்பவாணனை** - காஞ்சிக்கடவுளை

1097 **ஏகலை** - பின்தொடராதே

1098 **ஏகன்அடிக்கு** - இறைவன்திருவடிக்கு.

1099 **ஏகாந்தம்** - தத்தத்துவாதீதத் தனிநிலை

1100 **ஏகும்** - திரும்புவீர்

1101 **ஏங்கும்படி** - மேலும் விரும்பும்படி

1102 **ஏங்குவர்** - அழிவார்.

1103 **ஏசுஒலிக்கும்** - இழிந்த போக்கு; ஏசும்பேச்சினுக்கு

1104 **ஏசும்** - இழித்துப் பேசும்

1105 **ஏசும்படி** - இகழும்படி

1106 **ஏட்டுக்கு** - ஓலைக்கு

1107 **ஏடா** - அழைக்கும் சொல்

1108 **ஏடார்** - பசுமை நிறைந்த

1109 **ஏடார்** - மேன்மையுடைய

1110 **ஏணப் புகலும்** - மிகவும் புகழப்படுகின்ற

1111 **ஏத்தா திருத்தல்** - துதியாது (அ) வணங்காது இருத்தல்.

1112 **ஏத்தாதார்** - துதியாதார்

1113 **ஏத்துகின்றனன்** - புகழ்கின்றனன்

1114 **ஏத்துகின்றோர்** - துதிக்கின்றோர்

1115 **ஏத்துகினும்** - புகழ்ந்தாலும்

1116 **ஏத்துடையாய்** - துதியைஉடையவனே

1117 **ஏத்துகிலாய்** - துதித்திலாய்

1118 **ஏத்தும்** - போற்றும்

1119 **ஏதம்** - குற்றம்.

1120 **ஏதம் நீக்கும்** - குறைகள் நீக்கும்

1121 **ஏதவூர்** - இறப்புக்கு இடம் கொடுக்கும் மண்ணுலகம்.

1122 **ஏதில் பணி** - அழகாகிய ஆபரணம்.

1123 **ஏதுசெய்தாலும்** - எது செய்யினும்

1124 **ஏதும்** - எவ்விதமானதும்

1125 **ஏதுளது** - யாதுமில்லை

1126 **ஏந்தல்** - பெருமையும் பீடும் உடைய

1127 **ஏந்திநின்ற** - தாங்கி நின்ற.

1128 **ஏமட்டரையொடு** - பைத்தியம் ஆனவருடன்

1129 **ஏம்பா நிற்ப** - ஏங்கும்படியாக,வருந்தும் படியாக

1130 **ஏமம் உய்ப்போய்** - பாதுகாவலை விரும்பிச் செய்வோய்

1131 **ஏமாந்தனை** - ஏமாற்றம் அடைந்தனை

1132 **ஏமாப்பு** - இருமாப்பு.

1133 **ஏமூர்** - விழியூர்

1134 **ஏமூன்று** - கண்மலர் மூன்று, ஊன்றிப்பார்த்து

1135 **ஏய்க்கு** - பொருந்தும் தலைவருக்கு

1136 **ஏய்கின்றது** - அடைகின்றது

1137 **ஏய்ப்பிறப்பு** - பொருந்திய பிறப்பு

1138 **ஏயும்** - பொருந்தும்

1139 **ஏர்** - அழகு; அழகுடைய

1140 **ஏர்ஆய்உளவே** - அழகுடன் நிறைந்து பொருந்தி யுள்ளதே

1141 **ஏர்ஏந்தன்** - அழகிய சங்குடைய திருமால்.

1142 **ஏர்கொண்ட** - அழகுடைய

1143 **ஏர்தங்கு** - சீருடன் விளங்கும்

1144 **ஏர்தரும்** - வலிமை யூட்டும்

1145 **ஏரதார் கரத்தால் காட்டுகின்றார்** - அழகிய கரத்தால் சேர்ந்திடக் குறிக்கின்றார்

1146 **ஏரம்பனே** - ஒற்றைத் தந்தம் உடையவனே

1147 **ஏர்முலை** - அழகிய கொங்கை

1148 **ஏரா** - தகுதியற்ற

1149 **ஏல்** - ஏற்றுக்கொள்க

1150 **ஏலம்** - நறுமணப் புன்சிரிப்பு, மணம், இயற்கை மணம்; மயிர்ச்சாந்து

1151 **ஏலா** - கிட்டாத

1152 **ஏலார்** - தகுதியற்றவர்

1153 **ஏவ** - போரிட

1154 **ஏவலார்** - அம்பு எய்துவதில் வல்ல பேரரசர்கள்; இசை பாடுவதில் நிறைவுடையோர்.

1155 **ஏவினை** - அம்பினது தொழில்

1156 **ஏழ்** - எழுவாயில்

1157 **ஏழ்மை** - எளிதாக இன்பம் தரும் நிலை

1158 **ஏழ்வேதனை** - எழு வகை அறிவு மறைப்புகள்; இச்சாவரணம், ஞானவரணம், கிரியா வரணம், பராசக்தி ஆவரணம், ஆதிசத்தியாவரணம்

1159 **ஏழ்வேலை** - ஏழ்கடல்

1160 **ஏழியற்றும்** - ஏழாகச் செய்யப்பட்ட.

1161 **ஏழை** - அறிவிலி.

1162 **ஏழைமடவார்** - எளிமைக்குரிய மாதர்

1163 **ஏழையன்** - ஜீவனாகிய நான்

1164 **ஏற்கின்றீர்** - பிச்சை எடுக்கின்றீர்

1165 **ஏற்கும்கொல்** - ஏற்றிடுமோ

1166 **ஏற்றால்** - பிச்சை எடுத்தால்

1167 **ஏற்றிடும்** - பொருந்துகின்ற

1168 **ஏற்றின்** - காளையின்

1169 **ஏற்று** - அழகுபெற்று; பஞ்சம் அடையமாட்டோம், யாசித்து

1170 **ஏற்றுஒளிர்** - காளை மீது ஊர்ந்து ஒளிர்கின்ற

1171 **ஏறாது இழியாது** - ஏறாமல்இறங்காமல்.

1172 **ஏறிட்டகைகள்** - கூப்பிய கைகள்

1173 **ஏறுஉண்டோ** - காளையாகிய வலிமை உடைய வாகனம் உளதோ

1174 **ஏறுபோல்** - எருதைப்போல்

1175 **ஏறுமொழி** - மிஞ்சிய சொல்,இன்பம் நிறைந்த சொல்

1176 **ஏறுவது** - ஊர்வது

1177 **ஏனம்** - பன்றி

1178 **ஏன்றுகொண்ட** - ஏற்று ஆட்கொண்ட

1179 **ஏன்றுகொண்டால்** - ஏற்றுக்கொண்டால்

1180 **ஏன்றுகொண்டானை** - ஏற்றுக்கொண்டாய்

1181 **ஏன்றுகொள்** - அடிமையாக ஏற்றுக்கொள்

ஐ

1182 **ஐ** - தலைவர்

1183 **ஐஈரைந்து** - ஐம்பது

1184 **ஐங்கரனே** - ஐந்து கைகளை உடையவனே

1185 **ஐங்கைச் செல்வர்** - ஐந்து கரத்தவர் (கணபதி)

1186 **ஐஞ்சத்தி** - இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, ஆதிசக்தி, பராசக்தி.

1187 **ஐந்தில் ஐந்து, நான்கு, ஒரு மூன்றாம், இரண்டு, ஒன்று** - பாரதி ஐந்தில்; ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்பனவற்றை முறையே ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என குணம் கூறும்.

1188 **ஐந்து முகத்தார்** - அழகிய இடங்களைக்கொண்டவர்

1189 **ஐந்தெழுத்து** - பஞ்சாட்சரம்

1190 **ஐந்தொழில்** - படைத்தல் முதல் அருளல் வரை.

1191 **ஐநிறம்** - பஞ்சவர்ணம்.

1192 **ஐமதம்** - ஐந்துவகை மலம், (ஆணவம், கன்மம், மாயை, திரோதானம், மாமாயை)

1193 **ஐம்பாலர்** - ஐந்து வகையாகும் கூந்தலை

1194 **ஐய** - அப்பா.

1195 **ஐய** - ஐயா

1196 **ஐயம்** - சந்தேகம்.

1197 **ஐயர்** - இன்பம் ஈயும் தலைவர்

1198 **ஐயுறவாம்** - சந்தேகமாம்

1199 **ஐவணம்** - ஐந்துதேவர்கள் - ஐந்துதொழில்.

ஒ

1200 **ஒசிதல்** - தளருதல்

1201 **ஒண்ஆர்த்தே** - சிறப்பு வாய்ந்த

1202 **ஒண்கழல்** - ஒளிவீசும் திருவடி

1203 **ஒண்குழந்தையேனும்** - நல்ல குழந்தை கூட

1204 **ஒண்கொண்டகல்லும்** - வலிபொருந்திய கல்லும்

1205 **ஒண்ணுதல்** - அழகு நெற்றி.

1206 **ஒண்ணுதலீர்** - ஒளி பொருந்திய நெற்றியுடையீர்

1207 **ஒண்புலித் தோல்** - வலிய புலியின்தோல்

1208 **ஒண்பொருள்** - மேலான மெய்ப்பொருள்

1209 **ஒண்மை** - மனவொருமை; தொழில்; வலிமை பொருந்திய

1210 **ஒண்மைப்பதம்** - மேன்மையாகிய அழகொளிரும் திருவடி.

1211 **ஒத்தேறி** - சமமாக நிறைந்து

1212 **ஒதியனேனே** - ஒதிய மரமனையேன்

1213 **ஒப்பாரி** - ஒப்புமை

1214 **ஒப்பில்லையே** - இணைஇல்லையே

1215 **ஒப்பு** - சமன்

1216 **ஒப்புஒதரும்** - சரிசொல்ல முடியாத

1217 **ஒப்புரவே** - உபகார சீலனே.

1218 **ஓர்தல்** - ஆய்தல்,தீர்மானித்தல்

1219 **ஓர்முகம்** - அழகு முகமுடைய

1220 **ஒரு நான்கு** - திக்கிராந்தம்,அதிக்கிராந்தம்,சக்தி,சிவம் என்னும் நான்கு

1221 **ஒரு புடையாய்ஒத்தல்** - ஒரு வகையில் ஒத்திருத்தல்;

1222 **ஒரு பேர்** - மாதொருபாகன் என்னும் திருப்பெயர்

1223 **ஒருகண்மணியே** - ஒருமாணிக்கத்தை

1224 **ஒருகால்** - இடதுகால்; ஒருதடவையேனும்

1225 **ஒருகால் கரம் தொட்டு** - ஒரு காலைக் கையால் தொட்டு

1226 **ஒருசூறு** - ஒருபங்கு

1227 **ஒருகை** - துதிக்கை,துதிபாடும் அடியவர்களுக்கு

1228 **ஒருசார்** - ஒரு பக்கம்.

1229 **ஒருத்தி** - தலைவி

1230 **ஒருதமியேன்** - தனிஒருவன்

1231 **ஒருப்படுதல்** - சம்மதித்தல்.

1232 **ஒருபால்** - இடப்பாகத்து

1233 **ஒருமாது** - செட்டிமகள்

1234 **ஒருமாமுகன்** - யானைமுகன்

1235 **ஒருமுகன்** - பத்மா சூரன்

1236 **ஒருமை** - பேரின்பம்

1237 **ஒருவாத கோலத்தை** - அருள்வடிவத்தை

1238 **ஒருவாது** - விலகாமல்

1239 **ஒருவாமல்** - நீங்காமல்

1240 **ஒருவித்தது அன்று** - குறைந்தன அல்ல

1241 **ஒல்லாத** - கூடாத.

1242 **ஒல்லும் மன்றத்து** - அருள் கூடும் சிற்றம்பலத்து

1243 **ஒல்லை** - விரைவு.

1244 **ஒவ்வாது** - ஒப்புமை ஆகாது

1245 **ஒழியாய்** - ஈந்திடமாட்டாய்

1246 **ஒளியார்** - வெளிப்படையாகக் காண்பிப்பவர்

1247 **ஒளியில்** - சூரியனில்.

1248 **ஒற்றி** - பார்வை ஒன்றாலே நிலை தடுமாறச் செய்து

1249 **ஒற்றி இருந்தவரே** - விலகி இருந்தவரே

1250 **ஒற்றி உயிராய்உளீர்** - பொருத்திய அங்கத்தை உடையவரே

1251 **ஒற்றி நடம்** - ஆனந்த நடம்

1252 **ஒற்றி நின்றீர்** - விலகி நின்றீர்

1253 **ஒற்றித்தேவர்** - அணைந்து மகிழ்ச்சி ஈயும் தெய்வமானவர்

1254 **ஒற்றிப் பூங்கோயில்** - திருவொற்றியூரிலுள்ள அழகிய கோயில்.

1255 **ஒற்றியார்** - திருஒற்றியூர் இறைவர்

1256 **ஒற்றியாரை** -ஒற்றியூரில் திகழ்பவரை

1257 **ஒற்றியிரும்** - விலகி நில்லும்

1258 **ஒற்றிவாணன்** - திருஒற்றியூர் சிவபெருமான்

1259 **ஒற்று** - சேர்ந்திடு

1260 **ஒற்றுதற்கோர்** - ஒற்று என்னும் முற்றுச்சொல்லின் எச்சம் ஆகிய ஒற்றி

1261 **ஒறுத்தாலும்** - தண்டித்தாலும்

1262 **ஒன்பதுவாய்** - நவ துவாரங்கள்.

1263 **ஒன்பதுவாய்ப்பாவை** - நவ துளைகளையுடைய பாவை.

1264 **ஒன்பான்** - ஒன்பது.

1265 **ஒன்ற** - பொருந்த

1266 **ஒன்றாது** - பொருந்தாது.

1267 **ஒன்றி** - அடைந்து.

1268 **ஒன்றி நிற்கின்ற** - பொருந்தி நிற்கின்ற.

1269 **ஒன்றியது** - பொருந்தியது.

1270 **ஒன்றிரண்டின் நடு** - சிவசக்திக்கு நடுநிலை

1271 **ஒன்றின்நடு** - அருளின்இடையில்

1272 **ஒன்று அகன்ற மும்மூன்று** - ஒன்று நீங்கிய ஒன்பது.

1273 **ஒன்றுவது** - பொருந்துவது.

1274 **ஒன்றை** - தத்துவ ஞானத்தை.

1275 **ஒன்னலர்** - பகைவர்.

1276 **ஒன்னார்** - பகைவர்

1277 **ஒன்னார் பரத்தை** - பகைவரது முப்புரத்தை

ஓ

1278 **ஓகாளம் செய்வதனை** - இகழ்வது, அருவருப்புக் கொள்வது

1279 **ஓங்காரம்** - பிரணவம்.

1280 **ஓடும் ஓட்டத்திற்கு** - பயந்து ஓடும் ஓட்டத்திற்கு

1281 **ஓடோ** - மண்பாத்திரமோ

1282 **ஓணகாந்தன்தளி** - ஓணகாந்தேஸ்வரர் - காமாட்சி. வாணாசுர சேனாபதியார். ஓணனும் காந்தனும் மாவீரம் பெற்றது. காஞ்சிநகர் மேற்கு சர்வதீர்த்த வடதிசையிலே ஓணகாந்தன்தளி அமைந்துள்ளது.

1283 **ஓணத்தில் வந்தோன்** - திருவோண நட்சத்திரத்தில் அவதரித்தவனாகிய திருமால்.

1284 **ஓதநீரில்** - நனைக்கும் கடல்நீரில்

1285 **ஓதல்** - சொல்லி விண்ணப்பம் செய்தல்

1286 **ஓதனம்** - சிறந்த உணவு, மார்பகம்

1287 **ஓதியோ** - ஓதிய மரமோ

1288 **ஓதும்** - புகழும்

1289 **ஓதுவது** - புகழ்ந்து கூறுவது

1290 **ஓதுறும் குலம்** - பேசப்படுகின்ற கூட்டம்

1291 **ஓம்பாது** - ஆராயாமல்; விரும்பிடாமல், விலக்காது

1292 **ஓம்பி** - காப்பாற்று.

1293 **ஓமாம்புலியூர்** - துயர்தீர்த்தநாதர் - பூங்கொடிநாயகி. புலிக்குப் பயந்து வில்வமரம் ஏறிய வேடன்திருவருள் பெற்றதலம். சிதம்பரத்தை அடுத்த காட்டுமன்னார் குடி ஊரிலிருந்து 7 கி.மீ.

1294 **ஓமூன்று** - இம்மை,மறுமை,பேரின்பம் என மூன்று

1295 **ஓர்** - தேர்ந்தெடுத்த

1296 **ஓர் அனந்தங்கோடி மால்** - அளவற்ற கோடிகளாய் வாழும் திருமால்கள்.

1297 **ஓர்ஊர்** - அழகிய ஊர்,சிந்தனைக்கு உரிய நல்லூர்

1298 **ஓர்ஐந்து** - ஐந்து துளைகள்

1299 **ஓர்பணி** - ஒருபாம்பின் படம் போன்ற குறி

1300 **ஓர்பால்** - ஒருபக்கம்; ஒருபாகம்

1301 **ஓர்பெண்பிள்ளை** - சக்தி.

1302 **ஓர்வரியோய்** - உணர்வதற்கு இயலாதவனே

1303 **ஓரவாரம் உரைத்தல்** - நடுநிலையின்றி ஒருபக்கமாக சொல்லுதல்.

1304 **ஓராமல்** - ஆராயாமல்.

1305 **ஓராவெகுளி** - ஆராயப்படாத கோபம்.

1306 **ஓலமிடல்** - கூக்குரலிடல்,முறையிடல்

1307 **ஓலை** - எமன்ஓலை.

1308 **ஓவல்இன்றி** - நீங்குதல்இல்லாமல்.

1309 **ஓவா** - நீங்காத

1310 **ஓவாத** - ஒழியாத; விலகாத

1311 **ஓவாது** - இடைவிடாமல்

1312 **ஓவியம்** - சித்திரம்.

1313 **ஓவுவாராவல்** - விலகிச்செல்பவர்

க

1314 **கங்காதரன்** - கங்கையைத் தரித்தவன்.

1315 **கங்குகரை** - ஒரு வரம்பின் எல்லை

1316 **கங்கை சடாமுடியோய்** - கங்கையணிந்த சடைமுடியை உடையவன்.

1317 **கச்சி ஏகம்பம்** - ஏகாம்பரநாதர் - ஏலவார் குழலி. முத்தி நகர் ஏழினுள் ஒன்று. தழுவக் குழைந்த லிங்க - ஏகம்பர். சென்னையிலிருந்து 60 கி.மீ. திருக்கச்சி.

1318 **கச்சி மேல்தளி** - மேற்றளிநாதர் - காமாட்சி. சிவ பெருமானின் இரு சந்நதிகள், 'ஓதவுருகீசர்' திருமால் அம்சம். காஞ்சிநகர் மேற்கு, பிள்ளையார் பாளையத்திலே உள்ள பெருங்கோயில்.

1319 **கச்சூர்** - ஓர் சிவத்தலம்; திருக்கச்சூர்.

1320 **கச்சோதம்** - மின்மினிப்பூச்சி.

1321 **கஞ்சத்திலே** - தாமரையிலே

1322 **கஞ்சம்** - தாமரை

1323 **கஞ்சமலர்** - தாமரை மலர்

1324 **கஞ்சனூர்** - அக்னீச்சுவரர் - கற்பகநாயகி. பழுக்கக் காய்ந்த இரும்பு மேடையில் அமர்ந்து 'சிவமே பரம்பொருள்' என்ற ஒழுக்கச் சைவப் பேரொளி அரதத்தர் அவதரித்த தலம். ஆடுதுறைக்கு வடகிழக்கே 4 கி.மீ. கஞ்சனூர் கோயில் ஒருமைல்.

1325 **கடகஞ்சூழ்** - வளையல் நிறைந்த

1326 **கட்சிநெறிக் காரைக்காடு** - காரைநாதேச்சுவரர் - காமாட்சி. இந்திரனும் புதனும் வந்திருந்து பூசித்த சத்தியவிரதம் இதுவாகும். காஞ்சியின்வடகிழக்கே காரைச்செடி நிறைந்த ஊரெல்லைக் கோயில். (திருக்காலிமேடு)

1327 **கட்செவியாம்** - கண்களே காதாக உடைய பாம்பு

1328 **கட்டகன்ற** - பாசபந்தம் நீங்கிய

1329 **கட்டழித்த** - கட்டுக் குலைந்த.

1330 **கட்டழித்தல்** - கட்டுக் குலைதல்.

1331 **கட்டார்** - கட்டி முடித்து நிறைந்த

1332 **கட்டுச்சோறு** - வழிநடை உணவு

1333 **கட்டுண்ட** - கட்டப்பெற்ற

1334 **கட்டுதல்** - தழுவுதல்.

1335 **கட்டுமயிர்** - இருமுடி

1336 **கடத்தீ** - சுடலை நெருப்பு

1337 **கடந்தஒன்று** - தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட அருள் நிலை

1338 **கடப்பாடு** - (எமது) நேர்மை.

1339 **கட்பிணி** - கண்நோவு.

1340 **கடம்நெறி** - திருக்கடம்பந்துறை என்னும் திருப்பதியில் எழுந்தருளிய ஈசன்.

1341 **கடம்பந்துறை** - கடம்பவன நாதர் - முற்றிலா முலையாள். கண்வ ரிஷிக்கும் தேவர்களுக்கும் கடம்ப மரத்தில் ஈசன் தரிசனம் தந்த இடம். கரூர் - திருச்சி சாலையில் உள்ள கடம்பர்கோயிலே இன்றைய குழித்தலை.

1342 **கடம்பூர்** - அமிர்தகடேசர் - மின்னம்மை. அமிர்தம் ஊறிய பூமித்தலம். அமராவதிஇந்திரவிமான சிவாலயம். காட்டுமன்னார்குடிக்குத் தென்மேற்கில் 5 கி.மீ. திருத்தலம்.

1343 **கடலுளவும்** - கடலிலுள்ள வளங்களும்

1344 **கடவுள்மாட்டு** - இறைவனிடம்

1345 **கடற்பூ** - கடல் சூழ்ந்த மண்

1346 **கடன்** - கடமை

1347 **கடாசலம்** - மதம் பொழியும் யானை.

1348 **கடாதற்கு** - எறிவதற்கு,மதம் செலுத்துவதற்கு

1349 **கடிக்குளம்** - கற்பகநாதர் சுந்தரநாயகி. கற்பகவிநாயகரின் அற்புத மாம்பழக் கதை வரலாற்று ஆலயமாம். இடும்பாவனத்துத் திருத்தலம் தாண்டி கிழக்கே 2 கி.மீ. சென்றால் கடிக்குளம்.

1350 **கடிதில்** - விரைவில்.

1351 **கடிமருந்தே** - நீக்கும் அமுதனே

1352 **கடியாத** - நீக்க முடியாத

1353 **கடியார்** - புதுமை பொருந்திய

1354 **கடியும்** - நீக்கும்

1355 **கடுத்தாம்** - மிக அடைந்தோம்

1356 **கடுந்தொழிலோர்** - தீவிரதரமுடையவர்

1357 **கடுநரகின்** - கொடிய நரகத்தின்

1358 **கடுவாய்க் கரைப்புத்தூர்** - சொர்ணபுரீசர் - சிவாம்பிகை. காசியப ரிஷி பூசித்த, சாப தோஷ மாபாவ நிவர்த்தித் திருத்தலம். குடவாயிலுக்கு மேற்கே 6 கி.மீ. கரைப்புத்தூர்.

1359 **கடைக்கணித்தாய்** - கருணை புரிந்தாய்

1360 **கடைகொள்ள** - வியாபாரம் செய்ய.

1361 **கடைப்பிடித்தல்** - உறுதியாகப் பற்றுதல்.

1362 **கடையார்** - முடிவான இன்பம் தாரார்

1363 **கணக்கு வழக்கு** - ஒருவருக்கு ஒருவர் ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடு

1364 **கண்காட்டு நெற்றிக்கடவுள்** - கண்ணுள்ள நெற்றியை யுடைய கடவுள்.

1365 **கண்காணி** - மேல் விசாரணைக்காரன்.

1366 **கண்குழைந்து** - பார்வை ஒடுங்கி

1367 **கண்டம்** - ஆபத்து; கழுத்து

1368 **கண்டவடிவம்** - சகநிலை ஏகதேசம், தனித்தனி வடிவம்

1369 **கண்டாய்என்னை** - என்ன நன்மை கண்டாய்?

1370 **கண்டிகை** - உருத்திராக்கமாலை.

1371 **கண்டு** - கற்கண்டு

1372 **கண்டெனும் கல்** - கற்கண்டு

1373 **கண்டோம்** - அறிகின்றோம்

1374 **கண்ணடையேல்** - கண்ணுக்கு எதிர்ப்படாமல்.

1375 **கண்ணமுதம்** - கடைக்கண்பார்வை

1376 **கண்ணன்** - கிருஷ்ணன்.

1377 **கண்டாக** - கற்கண்டாக.

1378 **கண்ணார் இழுதை** - கண் கூசுகின்ற இழுதை தன்பால்; பேய்கள்இடம்.

1379 **கண்ணார் கோயில்** - கண்ணாயிரநாதர் - முருகுவளர் கோதை. தேவரெலாம் தொழுததாலே இந்திரனுக்குச் சாபம் தீர்த்த சர்வேசர் குருமாணக்குடி. இவ்வூர் வைத்தீசுவரன் கோயிலிலிருந்து 3 கி.மீ.

1380 **கண்ணி** - மாலை

1381 **கண்ணிடந்த** - கண்ணை அகழ்ந்த.

1382 **கண்ணுதல்** - நெற்றிக்கண்

1383 **கண்ணுதலும்** - சிவபெருமானும்.

1384 **கண்ணுதலே** - நெற்றிக்கண்ணுடையவனே

1385 **கணத்தில்** - சிவகணத்தில்

1386 **கணத்தீர்** - பூதக்கணங்களுக்குத் தலைவரே,ஒற்றி ஊரிடத்தில் வாழ்பவரே

1387 **கணநாயகம்** - தேவர்களின் தலைவன்.

1388 **கண்டீர்** - பார்த்தீர்

1389 **கண்பார்த்தல்**- அழியும்படி நெற்றிக்கண்ணினால் நோக்கியருளினன்.

1390 **கணம்** - நொடி

1391 **கண்மை** - நற்காட்சி

1392 **கண்ணேறு** - திருஷ்டி.

1393 **கணிப்பரிதே** - அளவிடமுடியாதது

1394 **கணிப்பு** - மதிப்பு.

1395 **கணேசன்** - இதயத் தாமரையில் வாழும் திருமுருகன்.

1396 **கதலி** - உயர்வாழைப்பழம்

1397 **கதவுதல்** - பற்றுதல்.

1398 **கதி** - மோட்சம்

1399 **கதிக்குநண்ணி** - நல்நிலை அடைந்து

1400 **கதித்த** - அழியாத பேரின்ப நிலைக்குரிய

1401 **கதியணிந்தார்** - வீடுபேறு பெற்றவர்கள்

1402 **கதியாகி** - அரும்பதமாகி, முடிநிலைக்காட்சியாகி

1403 **கதியே** - மெய்ஞ்ஞான நடையே

1404 **கதிரே** - ஞானசூரியனே

1405 **கந்தல்** - கிழிந்த துணி

1406 **கந்தவனம்** - நறுமலர்,சோலை

1407 **கந்தை உடையீர்** - கிழிந்த ஆடை உடுத்தியவரே, கட்டுத்தறி உடையவரே

1408 **கபடநாடகத்தை** - வஞ்சக நாடகத்தை.

1409 **கம்பமுற** - நடுக்கம் உண்டாக

1410 **கமலத்தடம்** - தாமரைக் குளங்கள்

1411 **கமலத்து** - மார்பகத்து

1412 **கமலப்பெண்** - திருமகள்,கலைமகள்

1413 **கமலம்** - தாமரை

1414 **கமலை** - திருமகள்

1415 **கயக்கன்று** - யானைக்குட்டி

1416 **கயங்கா** - தளரா

1417 **கயல்** - கயல்மீன்கள்

1418 **கயிலேந்தி** - கரத்தில் தாங்கும்

1419 **கயேந்திரனைக் காத்தோன்** - கஜேந்திரன் என்னும் யானையை அந்நாளில் வந்து காப்பாற்றினவனாகிய திருமால்.

1420 **கரண பேதங்களாய்** - அறிவின் வேறுபாடுகளாய்

1421 **கரணம்** - அகக் கருவிகள்; மனம் முதலிய கருவிகள்; அந்தக் கரணங்கள்.

1422 **கரணாதி** - மனம் முதலிய உட்கருவிகள்

1423 **கரணாதீதம்** - மனநிலைகளுக்கு அப்பாற்பட்ட

1424 **கர்த்தபம்** - கழுதை.

1425 **கரத்துப்பி நாகம்** - கைவில்

1426 **கரந்தாங்கு** - கையில் ஏந்திய

1427 **கரம்** - விஷம்

1428 **கரம் காட்டி**- கையால் சைகை செய்து

1429 **கரம் ஒன்றினை**- ஒளிப்பொருள் ஒன்றினை

1430 **கரவீரம்** - கரவீரநாதர் - மின்னம்மை. நான்முகனோடு கௌதம ரிஷியும் நல்லருள் பெற்ற கோயிலிது. திருவாரூருக்கு 3 கி.மீ. மேற்கே, ஓடம்போக்கி நதிக்கரையில் உள்ளது.

1431 **கரனே** - கரத்தை யுடையவனே.

1432 **கரி** - சான்று, சாட்சி

1433 **கரித்தோல்** - யானைத்தோல்

1434 **கரு** - உட்பொருள்

1435 **கருஒன்றொரு** - ஒரு மாத கற்பம்.

1436 **கருக்குடி** - கருக்குடிநாதர் - அத்வைத நாயகி. தாயைப் பெண்டாள வந்த சண்டாளன் பக்தனாகி சித்தனான கோயில். கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 7 கி.மீ. தூரத்தில் உள்ளது.

1437 **கருடர்** - பதினெட்டுத் தேவ கூட்டத்துள் ஒருவர்.

1438 **கருணாகரம்** - கருணைக்கு ஆலயமாக இருப்பவன்.

1439 **கருணாகம்பகவல்லி**- அருள்நிலை தரும் தகுதியுடையவளே

1440 **கருணைக்கடல்**- அருட்கடல்

1441 **கருணைநடம்** - திருவருள் நடம்

1442 **கருத்தழிதல்** - எண்ணமழிதல்

1443 **கருதுகின்றோர்** - ஓதுபவர்

1444 **கருந்தாதோ** - இரும்புக் குழம்போ

1445 **கருந்தாழ்குழல்** - கரியநீண்ட கூந்தல்

1446 **கருநாள்** - கெட்டநாள்,பாவ நாள்

1447 **கருப்பறியலூர்** - குற்றம் பொறுத்த நாதர் - கோல்வளைநாயகி. அறியாமல்செய்திட்ட பாவங்களுக்குச் சரியான மன்னிப்பு இங்கே கிடைக்கும். வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து தலைஞாயிறு 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

1448 **கருப்பா** - அரிதாய்; பஞ்சமாய்

1449 **கருப்பாசயப்பை** - கருப்பை.

1450 **கருப்பு** - பஞ்சம்,கரும்பு

1451 **கருப்பை** - கருப்பமாகிய பை.

1452 **கருமத்திலே** - செயற்பாட்டிலே

1453 **கருமமல போதம்** - ஆகாமியம்,சஞ்சிதம்,நல்வினை தீவினை பற்றிய அறிவு

1454 **கருமமலம்** - சஞ்சிதம்,ஆகாமியம்,கன்மம் ஆகிய வினைகள்

1455 **கருமயோகம்** - கிரியாயோகம்.

1456 **கருமறைதல்** - பிறப்பதற்குக் காரணமாகும் கருவின் உள்ளே

1457 **கருமால்** - பிறவி மயக்கம்

1458 **கருமுகம்** - பிறந்து துன்பமுறும் நிலையை

1459 **கருமை** - பசுமை நிறம்

1460 **கருவர்க்கம்** - பிறவி அல்லல்கள்

1461 **கருவாதம்** - பிறவித்துன்பம்

1462 **கருவி** - ஞானம் எழுப்பும் தத்துவங்கள்

1463 **கருவி கரணங்கள்** - உட்கருவிகள்

1464 **கருவிலி** - சற்குணநாதர் - சர்வாங்கசுந்தரி. தவயோக சிவருத்ரர் பூசித்தது. 'கொட்டிட்டை'என்பது கோயிலின்பெயர். திருவீழிமிழலைக்கு மேற்கே 6 கி.மீ. (கருவேலி)

1465 **கருவூர்** - கரூர் பசுபதீச்சுவரர் - கிருபாநாயகி. சிருஷ்டியை மேற்கொள காமதேனுக்குச் சிவனருள் தந்த 'ஆ-நிலை'. கருவூர்த்தேவர் பிறந்த இவ்வூர் திருச்சி ஈரோடு தொடர்வண்டித் தடத்தில் உள்ளது.

1466 **கருவேதனை** - பிறவித்துன்பம்

1467 **கல்அளவா** - மலைபோல

1468 **கல்என்றால்** - (க)ல் என்று ஒலித்து.

1469 **கலக்கமற** - அலைவு நீங்க,கூட்ட விருப்பம் நிறைவுபெற

1470 **கலத்தில்** - பாத்திரம் ஒன்றில்

1471 **கல்நெஞ்சை கரைத்திடல்** - என் கல்மனத்தை சிறிதுக் கரையச் செய்தல்.

1472 **கலம் கவிழ்த்தார்** - கப்பல் கவிழ்ந்தாலும்

1473 **கலயநல்லூர்** - அமுதகடேசர் - அமுதநாயகி. ஊழியில் உயிர்களைச் சேமித்திருந்த கலம் கவிழாமல் நின்ற தலமாம். குடந்தையின் கிழக்கே வலங்கைமான் வழியிலே கலயநல்லூர் உள்ளது.

1474 **கல்லாமை** - கல்வி பயிலாமை

1475 **கல்லாற்றில் நீக்கும்** - கல்வழி (எமலோகத்திற்குப் போகும் வழி)யினின்று நீக்குதல்.

1476 **கல்லானை** - மதுரையில் கல்லால் ஆன யானை

1477 **கல்லூர் பெருமணம்** - கல்லூர் பெருமணம் என்னும் முதற் குறிப்பினையுடைய தேவாரத் திருப்பதிகம்.

1478 **கல்விப்பொருள் உடையார்** - கல்விச் செல்வம் உடையவர்

1479 **கலிக்காமூர்** - சுந்தரேச்சுரர் - அழகம்மை. பராசர முனிவரின் தபோநிலை பூர்த்தியான மகத்துவத் திருத்தலம். திருவெண்காட்டிற்கு வடகிழக்கே 5 கி.மீ.

1480 **கலிக்கும்** - போக்கும்

1481 **கலிப்பா** - பாவகையுள் ஒன்று

1482 **கலிப்பேய்ஒட்டுகின்ற** - துன்பம் என்னும் பேய்

1483 **கலை எழுதுதும்** - கலைநூல் புகழ்ந்து எழுதுதும்

1484 **கலைகண்** - ஆதரவு.

1485 **கலைகள்** - நிவர்த்தி முதலிய ஐந்து கலைகள்; மெய்ஞ்ஞானக் கலைகள்

1486 **கலைத்தோல்** - மான்தோல்

1487 **கலைமதியின்** - மூன்றாம் பிறையின்

1488 **கலையுடையீர்** - மான்தோல் ஆடையீர்

1489 **கவச ஆதனம்** - பாதுகாப்பு

1490 **கவிழ்ந்தார்** - நீக்கியவர்

1491 **கவிழ்ந்தாலும்** - சாய்ந்தாலும்

1492 **கவுரி** - உமை,இறைவி

1493 **கழகம்** - கூட்டம்

1494 **கழல்** - கால் காப்பு

1495 **கழல் அடையும்** - திருவடியைச் சார்ந்திடும்

1496 **கழல்புகழ்** - திருவடிப்பெருமை

1497 **கழலையன்றி** - பாதம் அல்லாமல்

1498 **கழற்கால்** - சிலம்பு அணிந்த கால்

1499 **கழற்பதம்** - காலில் அணியும் வீரத்திற்குரிய பூண்.

1500 **கழறுதல்** - சொல்லுதல்.

1501 **கழன்று** - நீங்கி,மேல்ஏறி

1502 **கழியா** - விலக்கமுடியாத,பேரின்பக்கடலைத் தரும் நின் சொல்லை

1503 **கழுக்கடை** - சூலம்

1504 **கழுநீர்** - அரிசி களைந்த நீர்

1505 **கள்** - தேன்

1506 **களக்கறுப்பு** - கழுத்தில் கரியவிடம்

1507 **களங்குஅன்று** - கருப்பு இல்லை

1508 **களங்கொண்ட** - நீலநிறம் கொண்ட

1509 **களத்தவனே** - கழுத்தை உடையவனே

1510 **களத்தில்** - கழுத்தில்

1511 **களம்** - கண்டம், கழுத்து, (சங்குக்) கழுத்து

1512 **களம் திரும்பாத** - மனத்தீமைகளை அகற்றாத

1513 **களம்கனி** - நாவல்பழம்

1514 **களம்கொண்டோய்** - கருமைஏற்றவனே

1515 **களமர் மகிழக் கடைசியர் பாடும்** - கடைஞர் மகிழ கடைசியர் பாடுகின்ற.

1516 **களமை** - சபை, மனைவி

1517 **கள்ளம் செரியாத** - ஒலிக்காத.

1518 **களைகணாகி** - புகலிடமாகி

1519 **கற்குடி** - உய்யக்கொண்டார் - விழியம்மை. அருந்தவம் செய்த கரன்,திரிசரன்ஆயுள்பலத்தைப் பெற்ற தலம். திருச்சிராப்பள்ளியின் தென்மேற்கில்இரண்டரை மைலில் உள்ளது.

1520 **கறங்க** - சுழல

1521 **கறங்கின்** - காற்றாடிப்போல.

1522 **கற்பகத் தேவனும்** - இந்திரனும்

1523 **கற்பகம்** - தேவலோகத்திலுள்ள வேண்டியது தரும் ஒருமரம்

1524 **கற்பகவல்லி** - கற்பகம் போன்ற பெண்ணே

1525 **கற்பங்கள்** - தேவ வருடங்கள்

1526 **கற்பம்** - பிரம காலம் முதலியன; அளவு நீண்ட காலம்

1527 **கற்பம் நின்று** - அளவு கடந்த காலமிருந்து

1528 **கற்பருளும்** - அடியார்க்குக் கற்புநெறி ஈயும்

1529 **கற்பனாதீதம்** - கற்பித்துச் சொல்வதற்கு அப்பாற்பட்டது.

1530 **கற்பனை** - பொய்.

1531 **கற்பூட்டுத்தலை** - கருங்கல் சுமக்கும் தலை

1532 **கற்ற இடத்தே** - பயின்ற நிலையில்

1533 **கற்றவர்கள் எங்கு முசாத்தான இருங்கழக மன்ற முதல் தங்கும்** - கற்றோர்கள் உலவுகின்ற இடங்களும் பெரிய ஆயுதம் பயிலிடங்களும் பொதுவிடங்களும் முதலானவை பொருந்தியிருக்கின்ற.

1534 **கற்றவளை** - கல்லினுள் வாழும் தவளை

1535 **கற்றாய** - கல்வி கற்று ஆராய்ந்திட.

1536 **கற்றுணையாது** - பயின்று உள்ளம் நெகிழாமல்

1537 **கற்றுணையாம்** - கல்மனமாகிய எனது நெஞ்சம்

1538 **கற்றுமுடித்தது** - உணர்ந்துகொண்டது

1539 **கற்றுணை** - இரண்டு அடுக்குக் கருங்கல்.

1540 **கற்றை** - கூட்டான; கூடிய

1541 **கறைமிடற்றீர்** - விடம் உண்ட கழுத்தை உடையவரே

1542 **கனஅமுதாம்** - சிறந்த அமுதமாகும்

1543 **கனகம்** - பொன்,பொருள்

1544 **கனசொற்பதாதீதம்** - மிகுபுகழ் மொழிகளுக்கு அப்பாற்பட்டது.

1545 **கன்ம நெஞ்சு** - தீவினையான மனம்

1546 **கன்மலை** - கல்மலை

1547 **கனல்இனன்இந்து** - அக்னி சூரியன் சந்திரன்

1548 **கனலின்** - நெருப்பின்

1549 **கனலின் நடு** - நெருப்பின்இடையில்

1550 **கனலும்** - சுடுகின்ற.

1551 **கனற்கண்** - நெருப்பு உமிழும் கண்கள்

1552 **கன்றாப்பூர்** - நடுதறிநாதர் - மாமலைநாயகி. கன்றைப் பிணிக்கும் கட்டுத்தறியில் நின்றருள் புரிந்த பரமசிவம். காரைக்குடி மாயூரம் தொடர்வண்டித்தடத்தில் மாவூரிலிருந்து 10 கி.மீ.

1553 **கன்னல்** - கரும்பு.

1554 **கனி** - மகிழ்வுடைய; பழம்

கா

1555 **கா** - சோலை

1556 **காக்கும் பதியாகி** - காப்பாற்றும்திருமாலாகி

1557 **காசக்கண்** - படலம் மறைந்தகண்

1558 **காசி** - ஒளி; காசித்தலம்

1559 **காசிக்கு நீடிக்கில்** - காசியைப் பார்க்கிலும் வெகுதூரமாகிய திசைகளில்.

1560 **காசு** - பொன்

1561 **காஞ்சனமாலை** - மலையத்துவச பாண்டியன் மனைவி

1562 **காஞ்சிரம்** - எட்டிமரம்.

1563 **காட்சி** - ஞானம்.

1564 **காட்டுகின்றோம்** - தெரியப்படுத்துகின்றோம்

1565 **காட்டுப்பள்ளி** - திருக்காட்டுப்பள்ளி எனும் தலம்

1566 **காண்கிலோம்** - தரிசிக்கிலோம்

1567 **காண்டத்தின்** - இடுகாட்டிற்கு

1568 **காண்டும்** - பார்த்தறியும்

1569 **காணப்படுபொருள்** - ஞேயம்.

1570 **காண்பான்** - ஞாதுரு, அறிகிறவன்.

1571 **காண்போதும்** - காணும் போதும்

1572 **காணிக்கு** - அளவுக்கு

1573 **காணிக்கையாகக் கருத்தளித்தார்** - மாணிக்கவாசகர்.

1574 **காணிக்கையாக்கி** - நிவேதனமாக்கி

1575 **காத்தும் படைத்தும் கலைத்தும் நிற்போர் ஏத்துதல்** - இரட்சித்தும், சிருட்டி செய்தும்,சங்கரித்தும் நிற்பவர்களாகிய திருமால்,பிரமன், உருத்திரன் என்பவர்கள் தினந்தோறும் துதித்தல்.

1576 **காதரவால்** - அச்சத்தால்

1577 **காதரவு செய்தல்** - அச்சுறுத்தல்.

1578 **காதலான நயப்புணர்வே** - எமது விருப்பத்து வடிவே.

1579 **காதலுற்று** - ஆசையுடையவனாய்ப் பொருந்தி

1580 **காதார்** - காதில் பொருந்திய

1581 **காந்தருவம்** - ஒளி வீசுகின்ற உருவத்தையுடையவன்.

1582 **காந்தருவர்** - தேவ கணத்தில் ஒருவர்; பதினெட்டுத் தேவ கூட்டத்துள் ஒருவர்.

1583 **காநந்த** - எழில்சூழ்ந்த

1584 **காப்பது** - காப்பாற்றுவது.

1585 **காப்பு** - தெய்வ வணக்கப் பாடல்.

1586 **காப்பை** - காத்தல் தொழிலை

1587 **காமம்** - காம இன்பத்திற்கு

1588 **காமலர்** - சோலையில் பூத்தமலர்

1589 **காமாதி அரட்டர்** - காம வெகுளி மயக்கம் முதலிய குறும்பர்கள்

1590 **காயகற்பம்** - உடலை நீண்ட நாள்இருக்க வைக்கும் மருந்து.

1591 **காய்ச்சு** - உருக்கிக் காய்ச்சுதல்

1592 **காய்ந்தனை** - கோபித்தாய்.

1593 **காயம்** - உடம்பு.

1594 **கார்தரு** - இருள் சூழ்ந்த

1595 **கார்மிடறும்** - கரியகழுத்தும்

1596 **கார்முகமாக** - அருள்ஈயும் தன்மை கருதி

1597 **காராழிகளை** - கரும்கடல்களை.

1598 **காரை** - கருமையை

1599 **கால்** - காற்று

1600 **கால பரமுமாகி** - ஆயுள்,அனுபவம் நியதி செய்யும் தெய்வமாகி

1601 **கால்எழுத்திற்கு** - தூக்கிய திருவடிக்கு

1602 **கால்போல்** - பொருந்திய காற்றுபோல

1603 **காலம்** - முக்காலம்.

1604 **காலாங்கு** - கால் கைகளில்

1605 **காலை** - காலம்; திருவடியை

1606 **காவாய்** - காப்பாற்றுவாயாக

1607 **காவாய்பவன்** - இந்திரன்

1608 **காவி** - கருங்குவளை

1609 **காவிக்கு** - நீலமலர்க்கு,குவளை மலர்க்கு

1610 **காவிரி** - சோலை விளங்கிய

1611 **காவே** - கற்பகச் சோலையே

1612 **காழ்** - வயிரம் பாய்தல்

1613 **காழி ஓங்கும் முழுமுத்து** - திருஞானசம்பந்த சுவாமிகள்.

1614 **காழி கவுணியருக்குப் போதமருளுதல்** - சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலை அருளிச் செய்தல்

1615 **காழிப்பாலன் பொற்றாளம் கொடுத்தல்** - சீர்காழியில் அவதரித்த பாலகனாகிய திருஞானசம்பந்தருக்குப் பசிய பொன்னினால் செய்யப்பட்ட தாளத்தைக் கொடுத்தருளல்.

1616 **காளகண்டா** - விடம் அணிந்த கழுத்து உடையவனே

1617 **காளம்** - கடலில் எழுந்தவிடம்

1618 **காளைப்பருவம்** - வாலிபப் பருவம்.

1619 **காற்பிணி** - கால்நோவு.

1620 **காற்பேறு கச்சி** - காஞ்சியில் திருவடிப்பேறு கிடைக்கப் பெற்றது

1621 **கான்** - வனம்

1622 **கான்ஓடுவேன்** - காட்டிற்கு ஓடுவேனோ

1623 **கான்கொள்** - காட்டில் கிடைக்கின்ற

1624 **கான்படுகண்ணியின்** - காட்டில் விரித்த வலையில்

1625 **கான்போல்** - காடுபோல

1626 **கான்மாறி ஆடிய** - வலது காலைத் தூக்கி ஆடிய

1627 **கானாட்டு முள்ளூர்** - பதஞ்சலிநாதர் - கானார் குழலி. பதஞ்சலிமுனிவர் செய்த மாதவத்தின் பலனாகச் சிவனருள் வந்தது. சிதம்பரத்திற்கு தென்மேற்கே 34 கி.மீ. தொலைவில் உள்ளது.

1628 **கானாறு** - காட்டாறு.

1629 **கானேர்** - கானகத்தை ஒத்த

கி

1630 **கிட்டார்** - கிடைக்கமாட்டார்

1631 **கிடந்தாய்** - சயனம் கொண்டுள்ளாய்

1632 **கிம்புருடர்** - பதினெட்டுத் தேவகூட்டத்துள் ஒருவர்.

1633 **கிரணாங்க(ம்)** - விளக்கக் கூறுகள்.

1634 **கிரியா சத்தி** - எல்லாம் செய்யவல்ல சத்தி.

1635 **கிரியை சத்தி** - பஞ்ச சத்திகளுள் ஒன்று; ஞானசத்தியின் ஒருகூறு; ஐந்தொழிலை நடத்திடும் சிவசத்தி.

1636 **கிரியை நெறி** - நற்செயலாற்றி வழிபடும் முறை

1637 **கிரீசன்** - உருத்திரன்

1638 **கிழி** - பொன் முடி

1639 **கிளத்தல்** - சொல்லுதல்.

1640 **கிளர்** - உற்சாகம்.

1641 **கின்னரர்** - மானிட உருவும் குதிரை முகமும் கொண்ட தேவ கூட்டத்தினர்.

கீ

1642 **கீட்கோலம்** - கோவணத்தின் அழகு.

1643 **கீதப்பனுவல்** - கீதரூபமாகிய நூல்.

1644 **கீரைமணி பூணுதல்** - கீரைமணியைப் பூண்டிருத்தல்.

1645 **கீழ்** - கோவணம்.

1646 **கீழ்வேளூர்** - கேடிலியப்பர் - வனமுலைநாயகி. தலம்,பூசை,பக்தர்க்கெல்லாம்நலக்காவல் அஞ்சுவட்ட அம்மனாகும். திருவாரூர்க்குக் கிழக்கே 2 கி.மீ. கீழ்வேளூர் மாடக்கோயில்.

1647 **கீழைத் திருக்காட்டுப்பள்ளி** - ஆரண்யசுந்தரர் - அகிலாண்டநாயகி. தட்சிணாமூர்த்தி சந்நிதிச் சுவரிலே கடல்பாடும் பஞ்சாட்சர ஒலி. திருவெண்காட்டிலிருந்து மேற்கே 2 கி.மீ. காட்டுப்பள்ளி.

1648 **கீள்** - கோவணம்

1649 **கீள்கொண்ட** - சிற்றாடை தரித்த; கோவணம் அணிந்து

1650 **கீளுடையாய்** - கோவண ஆடை உடையவரே

கு

1651 **குக்கன்** - நாய்.

1652 **குகேசன்** - இதயத்தாமரையில் வாழும் திருமுருகன்.

1653 **குட்டம்** - தொழுநோய்.

1654 **குடந்தை கீழ்க் கோட்டம்** - நாகேசுவரர் - பெரியநாயகி. ஒவ்வொரு சித்திரை இரண்டாம் வாரமும் ஒளியால் சூரிய சிவபூசை. கும்பேசர் கோயிலிலிருந்து கூப்பிடு தூரத்தில் கீழ்க்கோட்டம்.

1655 **குடந்தைக் காரோணம்** - காசி விசுவநாதர் - விசாலாட்சி. கங்கை முதலான ஒன்பது நதிகளும், தன்வினை தீர்க்கும் திருக்குளம். பன்னிரு ஆண்டுக்கு ஒருமுறை தான் கும்பகோணத்தில் மகாமகம்.

1656 **குடம்** - மேற்கு

1657 **குடமூக்கு (கும்பகோணம்)** - கும்பேசர் - மங்கலநாயகி. ஊழியிலே அமிர்த கும்பம் வந்தது. ஓம் நமசிவாய லிங்கம் ஆனது. 'குடந்தை' எனப்படும் கும்பகோண நகரின் மையம் குடமூக்கு.

1658 **குடவாயில்** - கோணேசர் - பெரியநாயகி. ஆதிச்சோழர்களின் தலைநகரம். மாடக்கோயில்களுள் மிக உயரம். குடந்தை - ஆரூர்சாலையில் கொரடாச் சேரி யிலிருந்து 5 கி.மீ.

1659 **குணநிதி** - குண வைப்பு; குணமாகிய செல்வம்.

1660 **குணம்** - தன்மை

1661 **குணம்** - முத்தொழில்.

1662 **குணரகித பொருளாகி** - குணமற்ற பொருளாகி

1663 **குணரகிதம்** - குணம் அற்றது; நிர்குணமானது.

1664 **குணாதீதம்** - குணங்கட்கு மேம்பட்டது.

1665 **குணாலயன்** - சத்துவக் குணத்தையே ஆலயமாகக் கொண்ட கணபதி

1666 **குணிகொண்ட** - புளிப்புடைய

1667 **குப்புறுகின்றேன்** - கவிழ்கின்றேன்

1668 **குமரகண்டம்** - ஒருநோய்.

1669 **குமரவள்ளல்** - முருகப்பெருமான்

1670 **குமரன் தந்தை** - இயல்பிலே தூயனாகிய முருகனின் தந்தை

1671 **குமுதவள்ளம்** - அல்லி மலராகிய கிண்ணம், அல்லி இலை

1672 **குமுதவாய்** - அல்லிமலர் போன்ற வாய்

1673 **குயிலாம் பதி** - ஊர் இல்லை,வாழிடம் இல்லை

1674 **குரக்குக்கா** - குந்தளேச்சுரர் - குந்தளநாயகி. ஆஞ்ச நேயர் தொழுத சிவன்கோயில். அன்பு பண்பு தியாகம் வீரம் சேரும் கருப்பறியலூருக்கு 2 கி.மீ. தொலைவில் உள்ள தலம்.

1675 **குரங்கணில்முட்டம்** - வாலீசர் - வளையம்மை. வாலியின் சந்ததி வணங்குவது. காக்கை அணில்களுக்கும் கதி மோட்சம். காஞ்சியிலிருந்து 10 கி.மீ. பாலாற்றுத் தென்கரைத் திருத்தலம்.

1676 **குருகார்** - யாரும் நெருங்காத

1677 **குருதுரியபதம்** - சிவதுரிய அனுபவ நிலை; மிகு மேன்மையும் மிகு தூய்மையும் உடைய ஆன்மா,பரமாத்மா நிலையில் தன்மயமாய் நிற்கும் உயர்நிலைப்பேறு.

1678 **குருந்தாம்** - குருத்து ஆகி முளைக்கும்

1679 **குரும்பை** - தென்னங் குரும்பை.

1680 **குருவாகி** - சதாசிவமூர்த்தி

1681 **குரைகழல்** - ஒலிக்கும் வீரக்கழல்

1682 **குலத்தொண்டர்** - மேன்மையாகிய அடியார்.

1683 **குலையாநின்றேன்** - சீர்குலைந்து போனேன்

1684 **குவளை** - நீலமலர்.

1685 **குழகன்** - இளமைத் தன்மையன்; கட்டழகன்.

1686 **குழல்** - கூந்தல்

1687 **குழலாய்** - அழகிய கூந்தலை உடையவளே

1688 **குழலாளே** - கூந்தலை உடையவளே

1689 **குழலியை** - கூந்தலுடையவளை

1690 **குழற்கு ஆம்** - கூந்தலுக்குப் பொருந்தும்

1691 **குழாம்** - கூட்டம்.

1692 **குழிக்கஞ்சி** - குழியில் ஊற்றி கஞ்சி மண்ணில் உறைந்து நிற்றல்

1693 **குழை** - குழாய்.

1694 **குழைகொள்** - காதணிவரை நீண்ட

1695 **குளத்தின்** - நெற்றிக்கண்ணைவிடப் பிரகாசிக்கின்ற

1696 **குளம்** - நெற்றி, சருக்கரை

1697 **குளம் திரும்ப** - நெற்றிக்கண், மூல மெய்ஞ் ஞானம், தவத்தில் மாறுபட

1698 **குளிர்ந்து** - சன்னி கண்டு

1699 **குறங்கு** - தொடை.

1700 **குறட்பா** - திருக்குறளின் பாடல்கள்.

1701 **குறளின்வாய்மை** - திருக்குறளின் உண்மை.

1702 **குற்றேவல்** - அடிமைத் தொண்டு

1703 **குற்றேவல்** - சிறுதொண்டு.

1704 **குற்றேவல்** - பணிவிடை

1705 **குறிக்கொண்ட** - நோக்கம்உடைய

1706 **குறிக்கொள்ள** - குறித்து ஏற்றுக்கொள்ள

1707 **குறித்தருளே** - எண்ணியருளே

1708 **குறித்தல்** - மூழ்குதல்.

1709 **குறித்திலதே** - கருதவில்லையே

1710 **குறித்திலை** - நினைத்தாய்இல்லை.

1711 **குறித்திடில்** - கருத்தினால்

1712 **குறிப்பது** - முடிஇருப்பது

1713 **குறிப்பிலரை** - நம்பிக்கை இல்லாதவர்களை

1714 **குறும்பன்** - சிற்றரசன்.

1715 **குறும்பும்** - தீமையும்

1716 **குறைந்த** - தேய்ந்த

1717 **குறைமதி** - மூன்றாம் பிறைநிலவு

1718 **குனிக்கும்** - வணங்கும்

கூ

1719 **கூசத்தெரியேன்** - வெட்கப்படுகிலேன்

1720 **கூட்டம்** - சேர்க்கை.

1721 **கூடத்தன்** - சாட்சியாகும் ஞான ஆத்மா

1722 **கூடம்** - சம்மட்டி.

1723 **கூடல்** - கூடல் நகர்,(மதுரை).

1724 **கூடலையாற்றூர்** - நெறிகாட்டு நாயகர் - பராசத்தி. சுந்தரர்க்கு வழிகாட்டி பாட்டுப்பெற்ற சொற்றுணை ஈசன் கோயில். விருத்தாசலத்திலிருந்து 30 கி.மீ. மணிமுத்தாறு வெள்ளாறு சங்கமத்தில்.

1725 **கூத்தாடுஅவை** - கூத்தாடுகிற சபை.

1726 **கூம்பா** - வளம் குன்றாத

1727 **கூம்பாத** - சுருங்கி வாடிப் போகாத

1728 **கூம்பாநிலை** - குவியாத நிலைமை.

1729 **கூம்புலகம்** - அழிகின்ற உலகம்.

1730 **கூர்சிந்து** - நுட்பம் இழந்து

1731 **கூர்ந்து** - சுட்டுப்பொசுக்கும்

1732 **கூறளித்தோய்** - இடப்பாகம் அளித்தவனே

1733 **கூற்று** - எமன்

1734 **கூறா** - சொல்லி முடிப்பதற்குள்ளேயே

1735 **கூறா மௌனராகி** - பேசாத மௌனியாகி

1736 **கூறாத** - வெளிப்படச் சொல்லாத

1737 **கூறுஉகந்தாள்** - இடப்பாகத்தில்இருக்க விரும்பினாள்

1738 **கூறும்** - புகழ்ந்து பேசும்

கே

1739 **கேட்பித்து** - கேட்கும்படிச் செய்து

1740 **கேண்மை** - உரிமை

1741 **கேதகை** - தாழம்பூ

1742 **கேவலம்** - மறப்பு.

1743 **கேவலமாய்** - மறைப்புடையதாய்

1744 **கேவலாத்துவிதம்** - சீவத்துவம் கெட்டு ஒன்றுபடும் நிலை

1745 **கேழ்** - செவ்விய நிறம்,செந்நிறம்; நிறம்.

1746 **கேள்** - ஒலி.

1747 **கேள்வி** - கேட்டல்

1748 **கேள்வி விருந்து** - மெய்ஞானச் செவிவிருந்து

1749 **கேள்விடல்** - கணவன் கைவிடுதல்

கை

1750 **கை புகுத்துங்கால்** - கை நுழைக்கும்போது.

1751 **கைக்கண்** - கைகளின்இடத்து நிறைந்த

1752 **கைக்கன்று** - கைவளையல்கள்

1753 **கைச்சினம்** - கைச்சினநாதர்- வெள்வளையம்மை. எல்லாம் கடவுள் என்பதைக் காட்டும் இந்திரபிரதிட்டை மணல்லிங்கம். திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 17 கி.மீ. (கச்சினம்)

1754 **கைஞானம்** - சீவ அறிவு,சிற்றறிவு

1755 **கைதவம்** - பொய்.

1756 **கைநின்று** - வரிசையாக நின்று.

1757 **கைப்பிணி** - கைநோவு.

1758 **கைம்மலைமான்** - கையில் ஏந்திய மான் என்னும் விலங்கு

1759 **கைம்மாறு** - நன்றி

1760 **கைம்மான் கொளும்** - இடக்கையில் மான் ஏந்திய

1761 **கையகத்தே** - அங்கைக் கனியாக

1762 **கையகம்** - கையினிடத்தும்

1763 **கையமுதம்** - பிடி உணவு

1764 **கையாமல்** - வெறுக்காமல்.

1765 **கையாளும்** - பயனுடைய

1766 **கையுறைந்து** - கையில் அமைந்து

1767 **கைவந்த நெஞ்சம்** - கைவரப்பெற்ற மனமும்

1768 **கைவரும்** - கைவசமான.

1769 **கைவிடுதல்** - விட்டு விடுதல்

கொ

1770 **கொங்கிட்ட** - தேன்இருக்கும்

1771 **கொங்கை** - மார்பு

1772 **கொட்டும்** - அடிக்கும்

1773 **கொட்டையூர்** - கோடீசுவரர் - பந்தாடுநாயகி. ஏக லிங்கமானது சோழனுக்குக் கோடிலிங்க ரூப தரிசனம் தந்தது. சுவாமிமலைக்குக் கிழக்கே 3 கி.மீ. கொட்டையூர்.

1774 **கொடி** - கொடிகள்

1775 **கொடி கொண்டோய்** - இடபக் கொடியினை உடையவரே

1776 **கொடு** - கொண்டு, ஒட்டிக்கொண்டு

1777 **கொடுங்குன்றம்** - கொடுங்குன்றீசர் - குயிலமிர்தநாயகி. கொடுங்குன்றம் சென்று கண்டால் நெடுங்காலக் குறைகள் தீரும். பாரியின் 'பிரான்மலை'யான இது திருப்புத்தூரிலிருந்து வடமேற்கே 24 கி.மீ. தொலைவில் உள்ளது.

1778 **கொடும்** - கொடுப்பீர்

1779 **கொடும் கரணத்துட்டர் நால்வர்** - கொடுமையாகிய மன முதலிய கருவிகள்

1780 **கொடும்பாம்பு** - கொடிய விடமுடைய பாம்பு

1781 **கொடுவந்தேன்** - கொண்டு வந்தேன்

1782 **கொடுவிடமும் உண்டனை** - கொடிய நஞ்சையும் புசித்தனை.

1783 **கொண்டிருக்கின்றோர்** - உறுதியாக நம்பிஇருப்பவர்

1784 **கொதிப்பு** - குறிப்பு,கொட்டம்

1785 **கொம்பற்ற** - கொழுக் கொம்பில்லாத

1786 **கொம்மை** - திரட்சி.

1787 **கொய்கொடு** - கொய்து எடுத்துக் கொண்டு

1788 **கொல் நரைசேர்** - பயனில்லாத நரைமயிர் நிறைந்த

1789 **கொல்நஞ்சேன்** - கொல்லுகின்றவிடம் போன்றவன்

1790 **கொல்லாதார்** - கொலை செய்யாத ஜீவகாருண்ய சீலர்.

1791 **கொல்லாநலம்** - கொல்லாமை என்னும் புண்ணியம்.

1792 **கொல்லாவிரதம்** - சீவகாருண்ய நோன்பு.

1793 **கொல்லாவிரதம் கொள்ளுதல்** - கொல்லாமையாகிய விரதத்தைக் கைக்கொள்ளுதல்.

1794 **கொல்லுண்ட தேவர்** - கொலைவிரும்பும் சிறு தேவர்கள்

1795 **கொலார்** - கொல்லமாட்டார்

1796 **கொளநின்றோய்** - விளங்கும்படி நின்றவனே

1797 **கொள்ளக்கிடையா** - பெறுதற்கு இயலாத

1798 **கொள்ளம்பூதூர்** - வில்வவனேசர்- சுந்தராம்பிகை. கங்கை யாடிய புனிதப் பலனைக் கைமேல் தருவது கூவிளம் பூதூர். கொடராச்சேரியிலிருந்து 5 கி.மீ. இப் பூதூர். (கூவிளம் - வில்வம்)

1799 **கொள்ளுதியோ** - ஏற்று கொள்ளாயோ

1800 **கொள்ளும்கொடியேன்** - துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் தீயவன்

1801 **கொள்ளேம்** - அது மட்டும் ஏற்றிடேம்

1802 **கொள்ளை வழங்கும்** - கொள்ளைஇடும்

1803 **கொளாது** - கொள்ளாது

1804 **கொளுந்த** - பற்றிஎரிய

1805 **கொற்றை** - குன்று

1806 **கொன்** - அச்சம்.

1807 **கொன்செய்தார்** - உயிர்க்கொலை செய்தார்

1808 **கொன்றை மாலையோன்** - கொன்றைமலர் மாலையை அணிந்த திருமுடியை உடையஉதாரசீலனாகிய சிவபெருமான்.

1809 **கொன்னீன்ற** - வீணாக உண்டான

1810 **கொன்னுடைய** - பயனற்ற

கோ

1811 **கோகர்ணம்** - மகாபலநாதர் - கோகர்ண நாயகி. இலங்காதிபதிக்குத் தந்த லிங்கம் இங்கே நிலைத்தது. (பிள்ளையாரால்) ஹுப்ளியிலிருந்து 160 கி.மீ.

1812 **கோகனகப்பதம்** - செந்தாமரைப் பொற்பாதம்.

1813 **கோட்டாவி (கோள் தாவி)** - துன்பத்தை விரும்பி.

1814 **கோட்டாறு** - ஐராவதேச்சுரர் - வண்டார் பூங்குழலி. ஐராவதம்செய்த 'வாஞ்சியாறு'எனும் அபிடேக நதியின் ஆலயம். திருநள்ளாற்றுக்கு வடமேற்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

1815 **கோட்டூர்** - கொழுந்தீசர் - தேன்மொழியம்மை. தேவார திருவிசைப்பா பாடல்பெற்றது. கோட்டூர்,கீழ்கோட்டூர் எனத் தலமிரண்டு. மன்னார்குடியிலிருந்து 16 கி.மீ. தென்கிழக்கிலே இரு கோட்டூர்.

1816 **கோட்பார வாழ்க்கை** - பாரமான வாழ்க்கை

1817 **கோடா** - குறையாத

1818 **கோடாது** - கோணாமல்.

1819 **கோடார்** - குன்றாத

1820 **கோடி** - அமிர்த கடேசர் - மையார் தடங்கண்ணி. பூமியில்சிதறிய அமிர்தத்துளிகள் ஒன்று திரண்ட உருவமூலவர். அகத்தியான்பள்ளியிலிருந்து 12 கி.மீ. தொலைவிலே உள்ளது.

1821 **கோடும்** - விளைந்த

1822 **கோத்திட்ட** - மாலையாகக் கட்டிய

1823 **கோது** - குற்றம்

1824 **கோதுஅற** - துன்பம்அழிய

1825 **கோமளம்** - இளங்கொடி

1826 **கோமளமே** - அழகுப் பொருளே; மென்மையாகிய கொடியே

1827 **கோமாற்கு** - மாந்தாதமன்னனுக்கு

1828 **கோமான்** - அரசன்; சிவபெருமான்

1829 **கோமுடி** - சிறந்தமுடி.

1830 **கோல்** - கொம்பு; செங்கோல்

1831 **கோல்எங்கே** - செங்கோல் எங்கே?

1832 **கோலச்சடையை** - அழகுச்சடையை

1833 **கோலம்** - அழகு; அழகிய வாழ்வு.

1834 **கோலம் சார்ந்து** - அழகுபொருந்தி

1835 **கோலம் சேர்** - அழகுபொருந்திய

1836 **கோவில் வலம் கொள்ளுதல்** - திருக்கோயிலை வலம் வருதல்.

1837 **கோவே** - மன்னரே

1838 **கோவையிட்டு** - கோஷமிட்டு; முழக்கமிட்டு

1839 **கோழம்பம்** - கோகிலேசர் - சுந்தரநாயகி. கோமாதா கால்பட்ட சுயம்புலிங்கம். கும்பிட்டால் சாபங்கள் தீரும். திருவாவடுதுறையிலிருந்து தெற்கே 3 கி.மீ. (திருக்குறும்பியம்)

1840 **கோள்** - துன்பம்.

1841 **கோள் அத்தி நீக்குதல்** - இல்லாத பொய்கூறுதலையும் கொள்ளையையும் கொலையையும் ஒழித்த குணவான் களுக்கு.

1842 **கோள்கொண்ட** - கொலை செய்யும் செயலுடைய

1843 **கோள்வினை** - துன்பவினை.

1844 **கோள்வேண்டும்** - கோள்சொல்லுதல்,புறம் பேசுதல்

1845 **கோளாக்கி** - தீமையை உண்டாக்கி

1846 **கோளிலி** - பழியில்லாதவர்

1847 **கோளுண்ட** - பொய்மையுடைய சொல்

1848 **கோளும்** - துன்பமுடைய

1849 **கோற்றேன்** - கொம்புத்தேன்.

கௌ

1850 **கௌவுள்** - கன்னம்.

ச

1851 **சக்கரம் கொள்வான்** - சக்கராயுதம் பெற

1852 **சக்கரப்பள்ளி** - சக்கரவாகீசர் - தேவநாயகி. திருமால் சக்கரம் பெற்ற தலம். சப்ததேவியர்சான்னித்யம். ஐயம் பேட்டைக்கு மேற்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது.

1853 **சகசஞானம்** - இயற்கை ஞானம்

1854 **சகசதரிசனம்** - இயல்பாகக் காட்சியளிப்பது.

1855 **சகசமலம்** - ஆணவமலம்.

1856 **சகசமலவீக்கம்** - ஆணவமலத்தின் வலிவு

1857 **சகசமலை** - இயல்பாகிய சிவன்

1858 **சகசமாகி** - இயல்பாகி

1859 **சகடக்கால்** - வண்டிச் சக்கரக் கால்

1860 **சகத்திடை** - உலகத்தின்இடையில்

1861 **சகநடைக்கண்** - உலக நடையில்

1862 **சகம்** - உலகம்; பிரபஞ்சம்.

1863 **சகம் இலையே** - உலக வாழ்வு சீரிலையே

1864 **சகமால்** - பிரபஞ்ச மயக்கம்

1865 **சகலகர்த்துரு** - ஐந்தொழில்கள் உடைய.

1866 **சகலம்** - நினைப்பு

1867 **சகலர்** - மும்மலம் உடைய ஆன்மாவினர். 0(ஆணவம், கன்மம், மாயை)

1868 **சகிதம்** - அறிவுடன் கூடியது.

1869 **சங்கம்** - கூட்டம்; புணர்தல்

1870 **சங்கமது** - சங்கினை ஒத்த

1871 **சங்கமம்** - இயங்கும் உயிர்

1872 **சங்கரன்** - நன்மை செய்பவன்; சிவன்.

1873 **சங்கற்பம்** - எண்ணம்.

1874 **சங்காரம்** - அடக்குதல்.

1875 **சங்கை** - சங்கினைப் போன்ற

1876 **சச்சிதானந்த** - மெய்,அறிவு இன்பம் உடையாய்

1877 **சசிகண்டன்** - மழைநிறக் கழுத்துடையவன்; முகில் வண்ணக் கழுத்துடையவன்.

1878 **சஞ்சலம்** - துன்பம்,துக்கம்

1879 **சஞ்சீவி** - சஞ்சீவியாய்இருப்பவன்.

1880 **சடாதரன்** - சடைமுடியைத் தரித்தோன்.

1881 **சடாமகுடன்** - சடைமுடியன்.

1882 **சடைக்கனியே** - சடைமுடியுடைய சிவனே

1883 **சண்டமாருதத்தால்** - பெரும்புயல் காற்றால்

1884 **சண்டவினை** - கொடுமையாகிய தீவினை

1885 **சத்தபாதாக்ரம்** - ஒளிநிலை தோன்றும் இடம்; மேலாம் ஒளிவடிவம் பிறக்குமிடம்.

1886 **சத்தாகி** - இயற்கை உண்மைப் பொருளாகி

1887 **சத்தியம்** - உண்மை.

1888 **சத்து** - ஆபத்து.

1889 **சத்துவம்** - திடம்.

1890 **சத்துவமாய்** - சாந்தமுடையதாய்

1891 **சதாசிவன்** - சதாசிவமூர்த்தி

1892 **சதாநிலை** - எப்பொழுதும் உள்ள நிலை; சாசுவதநிலை

1893 **சதானந்த வீட்டின்இடை** - இடையறாத மோட்ச வீட்டின் நிலை.

1894 **சதானந்தசாரம்** - இடைவிடா இன்பப் பேற்றின் முடிந்த தகுதி (அ) சாராம்சம்.

1895 **சதானந்தம்** - இடையறாத இன்பம்.

1896 **சதுமுகர்** - நான்முகர்

1897 **சதுமுகன்** - பிரமன்

1898 **சதுரல** - சாதுர்யம் அன்று.

1899 **சதுரன்** - ஆற்றல் உடையவன்; விவேகம் உடையவன்.

1900 **சதோதயம்** - நித்திய ஒளித் தோற்றமுடையது.

1901 **சந்தம்** - அழகு,மணம் மிகுந்த

1902 **சந்திரசேகரன்** - சந்திர கண்டத்தை அணிந்த திருமுடியை உடையவன்.

1903 **சந்து** - தூது.

1904 **சந்நிதிநேர் வந்துமொரு நேயமில்லா தொதிபோல் நிற்றல்** - சந்நிதிக்கு எதிரே வந்தும் சிறிதும் அன்பில்லாமல் ஓதியமரம்போல் நின்றதுண்டு.

1905 **சமணான்** - சமணராகிய

1906 **சமரச சுத்த பரமானுபவ விலாசம்** - சமரச சுத்த வேதாந்த சித்தாந்த ஒருமையாம் சுத்த மேலாம் நிலை அனுபவப்படும் விளக்க இடம்.

1907 **சமரசாத்துவிதம்** - மலமாயை அகன்று ஒருமை உணர்வினால் ஒன்றுதல்

1908 **சம்பந்தவள்ளல்** - திருஞானசம்பந்த வள்ளலார்.

1909 **சம்பவாதீதம்** - நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது.

1910 **சம்பு** - நலன் தருபவன்; நாவல்மரம்.

1911 **சம்வேதநாங்க** - அறிவொளி தருகின்ற.

1912 **சயம்பு** - தானே தோன்றியவன்.

1913 **சரங்கார்** - வில்லில் அம்பு எய்வதுபோல

1914 **சரண்** - அடைக்கலம்

1915 **சரம்** - அசையும் உயிர்க்கூட்டம்.

1916 **சர்வகாரணன்** - எல்லாச் செயல்களுக்கும் மூலமானவன்.

1917 **சர்வசம்பிரமன்** - மகிழ்வளிப்பவன்.

1918 **சர்வசாதிட்டான சத்தியம்** - சர்வ உயர்வும் உடைய மெய்ப்பொருள்.

1919 **சர்வதீர்த்தன்** - எல்லா வகையாலும் புனிதமானவன்.

1920 **சர்வேச்சுரன்** - கடவுளர்களுக்குக் கடவுளானவன்; தெய்வங்களுக்குத் தெய்வமானவன்.

1921 **சராசரங்கள்** - இயங்கும் பொருள்; இயங்காப் பொருள்கள்.

1922 **சராசரம்** - இயங்கும் இயங்கா உயிர்கள்; இயங்கும் இயங்கா உயிர்த்தொகுதி; இயங்கும் உயிர்கள்

1923 **சரிப்போரும்** - சஞ்சரிப்போரும்.

1924 **சலட்சணம்** - அழகு இலக்கணத்திற்கு உட்பட்டது.

1925 **சலதி** - சமுத்திரம்

1926 **சலியாது** - தளராது

1927 **சலிவகை** - தளரும் வழி

1928 **சவலைநெஞ்சம்** - ஏக்கமுறும் நோஞ்சான் மனது

1929 **சவிகற்ப(ம்)** - ஒரு பொருளின் எல்லாத் தன்மைகளும் புலப்படும் நிலை.

1930 **சவுந்தர** - அழகிய

1931 **சழக்கு** - குற்றம்.

1932 **சற்காரணம்** - மெய்ஞ்ஞானத்தின் நிலைப்பாடு

1933 **சற்குணியே** - தெய்வப்பெண்ணே

1934 **சற்சங்கம்** - சன்மார்க்கர் கூட்டம்

1935 **சற்சனர்** - சாதுக்கள்; ஜனங்கள்.

1936 **சற்பனை** - வஞ்சனை.

1937 **சற்றிருக்க** - சிறிது காலம் கடக்க

1938 **சன்னதியில் கைகூப்பி தாழ்தல்** - உனது சந்நிதியில் கைகுவித்து பணிந்தது இல்லை.

1939 **சனியாம்** - தீவினையாம்

சா

1940 **சாகூழி** - அத்தாட்சி; சான்று.

1941 **சாங்க(ம்)** - முழுமைக் கூறு.

1942 **சாட்சியே** - சான்றானவனே

1943 **சாதகத்தோர்க்கு** - சன்மார்க்கப் பயிற்சியாளருக்கு

1944 **சாதகம் செய்வோர்** - பயிற்சி செய்வோர்; பழகுவோர்.

1945 **சாத்த** - சூட்ட

1946 **சாத்தமங்கை** - அயவந்தீச்சுரர் - மலர்க்கண்ணம்மை. சிவபத்தியால் உடலோடு கைலாயம் சென்றவர் மகரிஷி புண்டரீகர். திருமருகலுக்குக் கிழக்கே 2 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது.

1947 **சாத்துடையாய்** - மாலையாக ஏற்பவனே

1948 **சாதம்** - மாறுபாடு

1949 **சாதி உருவாக்கும்** - வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும்

1950 **சாதுக்கள்** - சாந்தகுணம் உடையவர்கள்.

1951 **சாந்தம்** - சத்துள்ள குணம்.

1952 **சாப்பிள்ளையாதல்** - செத்தபிள்ளையாதல்.

1953 **சாமகண்டன்** - இரவு நிறக் கழுத்துடையவன்; கருமை வண்ணக் கழுத்தினன்.

1954 **சாமகீதப்பிரியன்** - சாமம் என்னும் தெய்வ வேத இசையில் விருப்பமுடையவன்.

1955 **சாம்பர் சேர்ந்து** - சாம்பல் ஒன்றுபட்டு

1956 **சாம்பிணத்தார்** - சாகும் பிணங்கள்

1957 **சாமர்த்தியம்** - அருளாற்றல்; ஆற்றல் உடைமை.

1958 **சாய்க்காடு** - சாயாவனேசர் - குயில்மொழி. ஐராவத தீர்த்த சாயாவனம். காசிக்குச் சமமான ஆறிலே ஒன்று. பூம்புகார் பகுதியிது. சீர்காழியிலிருந்து 15 கி.மீ. உள்ளது.

1959 **சாயல்** - பிரம்மசாயை; பிரமகத்தி.

1960 **சாயாஅருள்** - குறைவில்லா அருள்

1961 **சாயை** - ஒளி (பிரதிபலிப்பு)

1962 **சார்ந்திடும்** - அடைந்திடும்

1963 **சார்பு** - சம்பந்தம்.

1964 **சார்மலரோன்** - பிரமன்.

1965 **சால** - மிகவும்

1966 **சால்புற** - மேன்மை அடைய

1967 **சாலம்** - மிகுதியாகி

1968 **சாற்றரிய** - புகழ்ச்சிக்கு மேலான.

1969 **சாற்றா** - தெரிவித்திடாத

1970 **சாற்றி** - சொல்ல

1971 **சாற்றினர்** - உரைத்தனர்

1972 **சாற்றும்** - கூறி அருள்வீர்,சொல்லும்

1973 **சாற்றுவது** - சொல்லுவது.

1974 **சான்ற** - மிகவும் சரியான; மேன்மையுடைய

1975 **சான்று** - சாட்சி.

1976 **சான்றோர்** - நிறைஞானம் உடையவர்; பெரியோர்

சி

1977 **சிக்கல்** - வெண்ணெய்பிரான் - வேல்நெடுங்கண்ணி. மாமுனிவர் வசிட்டர் பூசித்தது. காமதேனுப்பால் வெண்ணெய்லிங்கம். வேலனுக்கும் புகழ்க் கோயில்சிக்கல். நாகையிலிருந்து மேற்கே 5 கி.மீ.

1978 **சிகாமணி** - முடிநாயக மாணிக்கமே

1979 **சித்தகமாய்** - சித்தெனும் ஒளியாய்

1980 **சித்தநோய்** - மனக்கலக்கம்

1981 **சித்தம்** - ஆயத்தம்; உள்ளம்; கருத்து; எண்ணம்

1982 **சித்தர்** - பதினெட்டுத் தேவ கூட்டத்துள் ஒருவர்.

1983 **சித்தாகி** - இயற்கை அறிவுப் பொருளாகி

1984 **சித்தி முற்ற யோகச் செயல்** - அட்டமாசித்திகளும் கைகூடும்படி செழுமையாகிய சோலைகளில் நாகணவாய்ப்புள் யோகத்தைச் செய்கின்ற.

1985 **சித்திகள்** - அட்டமாசித்திகள்.

1986 **சித்து** - அற்புத ஆற்றல்; அற்புதம்.

1987 **சித்து எலாம் வல்லவன்** - சித்திகள் யாவற்றிலும் முதன்மையானவன்.

1988 **சிதம்பரவிலாசம்** - சிற்றம்பல ச் சுகமளிப்பது.

1989 **சிதாகாச பாஸ்கரம்** - சிற்றம்பலப் பிரகாசமுடையது.

1990 **சிதாகாசம்** - ஞானாகாயம்; ஞானாகாசம்.

1991 **சிதாகாசமதாய்** - ஞானாகாசமதாய்

1992 **சிதாகாரம்** - மெய்யறிவு நிலை

1993 **சிந்தன்** - வாமனனாகிய திருமால்

1994 **சிந்தாகுலம்** - மனத்துன்பம்

1995 **சிந்தாத** - குறையாத

1996 **சிந்தாநலம்** - மனவளம்

1997 **சிந்திப்பித்து** - நீக்குவித்து

1998 **சிந்து** - கடல்; நினைவு

1999 **சிந்துப்பித்தல்** - நினைக்கும்படி செய்தல்

2000 **சிந்துபோல** - கடல்போல

2001 **சிந்தையே கோயில் கொள்ளல்** - தூய மனத்தையே கோயிலாகக் கொண்டு எழுந்தருள்பவர்

2002 **சிரசிகாமணி** - தலைமாமணி.

2003 **சிரத்துகம்** - சிரத்தின் கங்கை

2004 **சிரம்** - தலைமை

2005 **சிரமாகி** - ஆன்மாவாகி

2006 **சிருட்டி** - படைத்தல்.

2007 **சில்உயிர்கள்பால்** - சில உயிர்களிடத்து.

2008 **சிலந்தி** - பருமன்.

2009 **சிலம்பிதன்னை உயர்கோச்செங்கண் சோழனெனக் கூட்டினையே** - சிலம்பிப் பூச்சியை உயர்ந்த அரசனாகிய செங்கட் சோழனென்று யாவரும் சொல்லும்படி செய்தாயே.

2010 **சிலம்புசூழ்** - காலணி தழுவிய

2011 **சில்லமுதம்** - எளியதாய புற அமுதம்

2012 **சில்வானவரை** - சிறுதெய்வங்களை

2013 **சிலை** - வில்

2014 **சிவகணத்தலைவர்கள்** - நந்தி, பிங்கிருடி, சண்டன், பிரசண்டன், சங்கு கண்ணன், வாகன், அந்தணன், கும்போதரன், விருதாட்சன் முதலியோர்.

2015 **சிவகளிற்றை** - சிவஞான கணபதியை.

2016 **சிவசம்புவே** - தானே ஒளிரும் சிவனே

2017 **சிவசாதனத்தாரை** - சிவநெறியைப் பயில்பவரை

2018 **சிவத்தில்** - கடவுளிடத்தில்

2019 **சிவந்தபொழுது** - அந்திக்காலம்,முன் கொண்ட இன்ப நிலை

2020 **சிவநிட்டையே** - சிவத்தியானமே.

2021 **சிவநிந்தை கேட்டிடல்** - சிவநிந்தையைக் கேட்டல்.

2022 **சிவநூல்** - சிவ ஞானம் நல்கும் நூல்

2023 **சிவபதம்** - பரசிவபதவி.

2024 **சிவபுங்க** - சீரிய சிவன் என்னும் கடவுளே

2025 **சிவபுண்ணியம்** - சிவபுண்ணிய வாழ்வு.

2026 **சிவபுரம்** - சிவபுரநாதர் - பெரியநாயகி. வராக அவதார வைகுந்தவாசன்,வந்து மகிழ்ந்த கயிலையான் கோயில். கும்பகோணத்தின் தென்திசையில் 5 கி.மீட்டர் இந்தத் தலம் உள்ளது.

2027 **சிவபூசை ஆற்றாது** - சிவபூசை செய்யாமல்.

2028 **சிவபோக சாரமே** - சிவாநுபவக் கடலே.

2029 **சிவபோகபாக்கியம்** - இறைவனுடன் ஒன்றுபடுத்த வைக்கும் செல்வச்சீர்மை.

2030 **சிவபோகம்** - சிவானுபவம்.

2031 **சிவயோக நாட்டமே** - சிவயோகக் காட்சிப் பொருளாகிய இறைவனே

2032 **சிவயோகப் பயன்** - சிவயோகத்தின் பயனாயிருப்பவன்.

2033 **சிவயோகா** - சிவானந்தனே

2034 **சிவாகமநூல் வாசிக்க வாய்நோகும்** - சிவாகமங்களாகிய சாத்திரங்களைப் படிக்கவென்றால் என்வாய் நோகின்றது.

2035 **சிவாகமம்** - சைவ சித்தாந்தம்

2036 **சிவானந்த வண்ணம்** - சிவானந்த வடிவே.

2037 **சிவானந்தசத்தி** - பரமானந்த சத்தி.

2038 **சிவை** - உமை; உமையவள்

2039 **சிற்குணத்ததாகி** - தெளிவும் ஞானமும் உடையதாகி

2040 **சிற்குணத்தோய்** - மெய்ஞ்ஞானம் உடையவனே

2041 **சிற்குணம்** - அருட்பண்பு.

2042 **சிற்கோலமே** - ஞானவடிவே

2043 **சிற்சக்தி** - அறிவொளி தருகின்ற ஆன்ம சிற்சத்தி.

2044 **சிற்சத்தம்** - ஞானச்சொல்.

2045 **சிற்சபை** - ஞானசபை.

2046 **சிற்சயம்புவே** - மெய்ஞான இயல்பே

2047 **சிற்சுகத்தான்** - ஞான சுகத்தைத் தருபவன்.

2048 **சிற்சுகம்** - மெய்ஞ்ஞான இன்பம்; மெய்ஞ்ஞானச் சுகம்

2049 **சிற்சொருபம்** - மெய்ஞ்ஞானத் தோற்றம்

2050 **சிற்சொலிதம்** - சிற்சொலிதம் என்னும் கலாசத்தி

2051 **சிற்பத்தொழில்** - சித்திரவேலை.

2052 **சிற்பதம்** - மெய்ஞ்ஞானத் திருவடி. (மெய்ஞ்ஞான மேன்மைத் திருவடி); மெய்யறிவு நிலை

2053 **சிற்பரம்** - ஞானவடிவம், அறிவுருவம் சிற்றம்பலக் கடவுள்; பிரமம்; மெய்ஞான மேன்மையுடையது. (கடவுள்,பிரமம்)

2054 **சிற்பரனே** - மேலான மெய்ஞ்ஞானியே

2055 **சிற்பிரகாசம்** - சிற்சோதி மயம்

2056 **சிற்போதம்** - அருள்ஞானநிலை; மெய்ஞான அறிவு

2057 **சிறவா** - தகுதி பெறாத

2058 **சிற்றடிப்போது** - சிறிய பாதமலர்கள்

2059 **சிற்றாள்** - அடிமை, குறுகிய பாதம்

2060 **சிற்றுரு** - சிறியவடிவம்.

2061 **சிற்றுரும்பு** - சிறுதுரும்பு.

2062 **சிற்றுளம்** - சிறிய மனது

2063 **சிற்றேமம்** - பொன் வைத்தநாதர் - அகிலாண்டநாயகி. திக்கற்ற அபலைக்குப் பொன் தந்தது. தேனீக்களாய்ச் சித்தர் பூசித்தது. திருத்துறைப்பூண்டி ரயில்தடத்தில். ஆலத்தம்பாடியிலிருந்து 8 கி.மீ.

2064 **சிறுகுடி** - கல்யாண சுந்தரர் - மங்கலநாயகி. ஜீவாத்ம பரமாத்ம சீலம். சிவசக்தி ஆலிங்கன கோலம். திருப்பாம்புரத்திற்கு மேற்கே 2 கி.மீ. உள்ளது இவ்வூர்.

2065 **சிறுத்தொண்டப்பேர்** - பெரியதியாகம் செய்த சிறிய அடிகளார் என்பவரை

2066 **சிறுநடை** - இன்பமில்லா உலகியல்

2067 **சிறுமை** - இழிவு; தாழ்மை; கீழ்மை; தாழ்வு; துன்பம்

2068 **சிறுமைஎய்தற்றில** - பேரின்பம்,ஈவதில்பின்னடைய வில்லை

2069 **சிறுமைகொண்டு** - இழிவு அடைந்து

2070 **சிறுவிதி** - தக்கன் எனும் சூரன்

2071 **சிறைசெய்தனர்** - முடித்துக் கொண்டனர்

2072 **சின்நகை** - புன்சிரிப்பு.

2073 **சினம்** - கோபம்.

2074 **சின்மய சிவமே** - அறிவுமயமாகிய மெய்க் கடவுளே

2075 **சின்மயம்** - அறிவுமயம்; ஞானவடிவு; மெய்ஞ்ஞான நிறைவு; மெய்ஞானமாம் தன்மை.

சீ

2076 **சீகண்டன்** - (அருள்) ஒளிக்கழுத்தினன்.

2077 **சீதம்** - குளிர்ச்சி

2078 **சீதரன்** - திருமகள் நாயகன்

2079 **சீமான்** - தனது நாயகன்.

2080 **சீர்** - அருள்மேன்மை; புகழ்; மேன்மை

2081 **சீர்அமை** - சிறப்பு பொருந்த.

2082 **சீர்காழி** - பிரம்மபுரீஸ்வரர் - திருநிலைநாயகி. பன்னிரு திருப்பெயர்த் திருவூராம். இருபத்திரண்டு தீர்த்தங்களாம். "அம்மையப்பா" என்ற சம்பந்தர் சீர்காழி. தஞ்சையின் சிவராஜதானி.

2083 **சீர்க்கின்ற** - சிறக்கின்ற.

2084 **சீர்கொண்ட** - அருட்செல்வம் உடைய

2085 **சீரணிக்க** - சமிக்க.

2086 **சீர்சொல** - புகழினை ஓத

2087 **சீர்த்தி** - புகழ்; பெருமை.

2088 **சீர்படைக்க** - மேன்மை அடைய

2089 **சீரினை** - பெருமையை

2090 **சீருருவோ** - சிறந்தவடிவமோ

2091 **சீலநிறைவாந் துருத்தி கொண்டுள்ளன லெழுப்புவோர்** - ஒழுக்க நிறைவாகிய துருத்தியினால் உள்ளே இருக்கின்ற மூலாக்கினியை எழுப்புவோராகிய யோகிகள்.

2092 **சீலம்** - ஒழுக்கம்; மேன்மைஇன்பம், பெருமை

2093 **சீலமே** - ஒழுக்கமே

2094 **சீவசாட்சியே** - சீவசாட்சியாயிருப்பவன்.

2095 **சீவன்** - உயிர்

சு

2096 **சுகந்தம்ஆர** - நறுமணம் பொருந்திய

2097 **சுகந்தவனே** - சுகம் தருபவனே

2098 **சுகம்** - கிளி

2099 **சுகவேலை** - இன்பக்கடல்

2100 **சுட்டஒணாத** - குறித்துரைக்க முடியாத

2101 **சுட்டகன்ற** - புறமுகத்தில் மனம் குவியாமல் அகமுகத்தால் மனம் குவிதல்

2102 **சுட்டு** - சுட்டிக்காட்டுதல்.

2103 **சுட்டுஞ்சுதனே** - குமரவேளே,காமஇன்பம் நல்கும் மன்மதனே

2104 **சுடுங்கால்** - சுடுகிற காலத்தில்.

2105 **சுணங்கன்** - நாய்.

2106 **சுத்தாத்துவிதம்** - மலமகன்று ஒன்றுபடல்

2107 **சுத்தநெறி** - புனித மார்க்கம்

2108 **சுத்தவித்தை** - சிவதத்துவம் ஐந்தில் ஒன்று.

2109 **சுத்தவெளி** - மெய்ஞானவெளி

2110 **சுதை** - அமுதம்

2111 **சுந்தரம்** - அழகு

2112 **சுந்தரனார்** - சுந்தரமூர்த்தி அடிகளார்

2113 **சும்மாட்டுத் தலை** - வீண்சுமை தூக்கும் தலை

2114 **சும்மாயிரு** - அலைவற்றிரு; மவுனமாக இருப்பது

2115 **சும்மை** - சுவை.

2116 **சுயஞ்சுடர்** - சுயஞ்ஜோதி.

2117 **சுயம்பிரகாசம்** - தற்சோதி; சுயஜோதி; இயற்கை ஜோதி.

2118 **சுயம்பு** - தானே உண்டானவன்.

2119 **சுயம்புவே** - தானேயுண்டானவனே.

2120 **சுரர்** - தேவர்

2121 **சுருதி நியமத்தோர்** - நினைவின் நியமத்தை உடையவர்.

2122 **சுவை** - உருசி.

2123 **சுழியாத** - சுழித்தல்இல்லா; அலைவு இல்லாத

2124 **சுழுத்தி** - அவத்தை; (பிராணவாயு சித்தம் என்பதோடு சேர்ந்து ஆன்மா இருதயத்தில் அமைந்திருக்கும் நிலை.)

சூ

2125 **சூக்குமம்** - நுண்ணுடல்.

2126 **சூக்குமமாகி** - அந்தக்கரணமாகி

2127 **சூட்சியே** - உளவு நிலையே

2128 **சூது** - சூதாட்டம்,சூதாடும் கருவிபு

2129 **சூர்புடைத்தல்** - சூரனானவன் புடைத்ததாகிய.

2130 **சூல் முதிர்ந்த ஓர் பெண்** - திரிசிரபுரத்தில் சிவபக்தியில் சிறந்த ஓர் மாது.

2131 **சூலபாணி** - மூவிலை வேல் கையில் தரித்தவன்.

2132 **சூலம்** - நித்திய இன்பம்

2133 **சூலை** - ஒரு நோய்.

2134 **சூழ்ச்சி** - உபாயம்.

2135 **சூழ்வார்** - கூடுவார்

2136 **சூறை** - சுழல் காற்று.

2137 **சூனியம்** - பாழ்; ஏதுமற்றவெளி

செ

2138 **செங்கண் விடையோன்** - சிவந்த கண்களையுடைய இடபவாகனத்தை உடையவன்.

2139 **செங்கதிர்** - சூரியன்; ஞானக் கதிரவன்

2140 **செங்கதிரோன்** - சிவந்த கிரணங்களையுடையவன்.

2141 **செங்கமலாசனன்** - செந்தாமரையில் இருப்பவன், நான்முகன்

2142 **செங்கல்லைப் பொன்னாக்கிக் கொடுத்தாய்** - திருப்புகலூரில் சுந்தரருக்கு நடந்த அற்புதம்

2143 **செங்காந்தள்பூ** - ஒரு வகை மலர். (மருதாணியிட்ட பெண்ணின் கைவிரல்களுக்கு இதை உவமையாகக் கூறுவர்).

2144 **செங்குமுதம்** - செங்குவளை, செவ்வல்லி

2145 **செங்கேச வேணி** - சிவந்த சடைமுடி

2146 **செங்கேழ்** - சிவந்த நிறம்

2147 **செச்சை** - திருநீற்றுக்காப்பு

2148 **செஞ்சடைஅம்சேகரனே** - சிவந்த அழகிய சடைமுடி உடையவனே

2149 **செஞ்சலசப்பதம்** - செந்தாமரைப் பொற்பாதம்.

2150 **செஞ்சாலி** - ஒருவகை உயர்ந்த நெல். வேள்விக்குப் பயன்படுவது.

2151 **செடிமை உள்ளம்** - பாவம் செய்த உள்ளம்

2152 **செடியேதம்** - துன்பமாகிய குற்றம்

2153 **செந்தேனிற்** - சிறந்த தேனைவிட

2154 **செந்நீர்ப்புடைப்பு** - இரத்தக்குமிழி.

2155 **செப்பம்** - சீர்.

2156 **செப்பற்ற** - பேசும் திறமையற்ற

2157 **செப்பறியேன்** - சொல்லஅறியேன்

2158 **செப்பாது செப்பல்** - சொல்லாது சொல்லுதல் (கையால் குறித்துக் காட்டல்).

2159 **செப்பு** - குங்குமம் இருக்கும் ஓர் கலன்

2160 **செம்பதுமப்பதம்** - செந்தாமரைப் பாதம்.

2161 **செம்பாம்பு** - பிராணசத்தி.

2162 **செம்பால்** - இனிக்கும் தீம்பால்; சரிபாதி,சிறந்த இடப்பக்கம்

2163 **செம்பால் தேர்புயத்து அணை** - அண்ணலின் சிறந்த வலிமை பூண்ட தோள்களில் சேர்ந்த

2164 **செம்பாலே** - இனிக்கும் பால் சுவையே; ஒருபக்கமாக

2165 **செம்பொருள்** - மெய்ப்பொருள்.

2166 **செம்பொன்பள்ளி** - சொர்ணபுரீசர் - மருவார் குழலி. குபேரன் வந்து கும்பிட்டதாலே செம்பொன் மலையாய்த் திகழ்ந்தது. மாயூரத்தின் கிழக்கே 12 கி.மீ. செம்பொனார் கோயில்.

2167 **செம்பொனே** - திருமகள் போன்றவளே

2168 **செம்மணியை** - திருஞானசம்பந்தரை

2169 **செம்மரமோ** - பருத்த வயிரம்பாய்ந்த மரமோ

2170 **செம்மாப்பு** - இருமாப்பு.

2171 **செம்மால்** - மேலான இன்பம்

2172 **செம்மேனி** - சிவந்த உடல்

2173 **செம்மை** - உயர்வான; பெருமை

2174 **செம்மைமணி** - மாணிக்கம்.

2175 **செய உலகம் ஆக்கின்ற அதிகாரம்** - பெருமை கொள்ளும் உலகத்தைப் படைக்கின்ற அதிகாரம்.

2176 **செய்** - பணிசெய்யும்

2177 **செய்அரசே** - ஆட்சி செய்யும் அரசரே

2178 **செய்குவித்து** - அடியவனாகச் செய்து

2179 **செய்கை** - வேலை.

2180 **செயத்தக்கது என்னே** - செயத்தகுந்தது யாது

2181 **செய்தல்** - பாதுகாத்தல்

2182 **செய்தளிக்க** - படைத்துக்காக்க.

2183 **செய்திலையே** - இரங்கவில்லையே

2184 **செய்தொழில்** - கிரியை.

2185 **செய்பவன்** - கர்த்துரு, கருத்தா

2186 **செய்பொருள்** - கருமம்.

2187 **செய்ய** - சரியான; செப்பாகிச் சிவந்த

2188 **செய்யகம்** - நல்ல உள்ளம்

2189 **செய்யவல்ல மெய்ப்பரிசம்** - உண்மையாக ஸ்பரிசிக்க வல்ல; உண்மையாகத் தடவவல்ல.

2190 **செய்யா** - செய்து.

2191 **செய்யார்** - செந்நிறம்

2192 **செய்யாள்** - இலக்குமி

2193 **செய்யுள் நவரசமே** - பாடல்களில் அமைந்த ஒன்பான் சுவையே. (நவரசம் - காமம், சிருங்காரம், வீரியம், பெருநகை, கருணை, ரவுத்ரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்).

2194 **செய்வினை** - செய்யப்பட்ட கருமங்கள்.

2195 **செய்வேல்** - வடித்தெடுத்தவேல்; அடித்தெடுத்தவேல்

2196 **செயன்மணம்** - செயற்கைமணம்

2197 **செயிர்** - நடுக்கம்

2198 **செருக்காது** - இறுமாப்பு கொள்ளாமல்

2199 **செல்** - வயல்

2200 **செல்லான காலம்** - கழிந்த காலம்.

2201 **செல்லுள்** - மேகத்தில்

2202 **செல்வருண** - சிவந்த நிறமுடைய

2203 **செல்வன்** - திருமகன், முறையாக நடப்பவன்

2204 **செல்வேலை** - சிறந்த வேலாயுதத்தை

2205 **செல்வைத்த** - புகழ் பொருந்திய.

2206 **செலுநெறியே** - செல்லும் நீர்வழியே

2207 **செவ்வணத்தன்** - சிவந்த உருவமுடையவன்.

2208 **செவ்வழி** - ஒருவகைப் பண், ராகம்

2209 **செவ்வாய்** - சிவந்த வாய்; பவழஇதழ்

2210 **செவ்வாற்றில்** - செந்நெறியில்.

2211 **செவ்விதழ்நீர்** - சிவந்த இதழினது நீர்.

2212 **செவ்வேளை** - முருகப்பெருமானை

2213 **செவ்வை** - செந்நிறம்.

2214 **செவ்வையிட்ட** - நேரிய

2215 **செழும்பொருள்** - பரப்பிரமம்

2216 **செழுவார்** - செழிப்புடைய

2217 **செற்று** - அழித்து

2218 **செறி** - அடர்ந்த

2219 **செறிவிலை** - மன அடக்கமில்லை

2220 **செறிவு** - அடைவு.

2221 **சென்னிநின்ற** - முடிவில் நின்ற

2222 **சென்னியது** - தலையானது

சே

2223 **சேட்டை** - தொழில்.

2224 **சேடார்** - அழகமைந்து

2225 **சேடி** - தோழியே

2226 **சேடு** - அழகு.

2227 **சேடுஆர்** - பெருமை நிறைந்த

2228 **சேணிலத்தர்** - விண்ணுலகினர்.

2229 **சேதம் உறாமை** - நாசம் அடையாமை

2230 **சேந்த** - சிவந்த.

2231 **சேந்தின்** - செந்நெறியால்.

2232 **சேமம்படர்** - பாதுகாவலுடைய

2233 **சேமவைப்பே** - சேமித்த செல்வமே

2234 **சேமித்த** - பத்திரப்படுத்தின.

2235 **சேய்** - குழந்தை; ஞானப் பண்டித இள முருகன்

2236 **சேய்** - பிள்ளை

2237 **சேய்க்கறி** - பிள்ளைக்கறி

2238 **சேயது** - சிவந்தது,செவ்வாய்

2239 **சேய்மை** - தூரம்.

2240 **சேய்மையின்** - தூரத்தில்

2241 **சேயார்** - குழந்தைகள்.

2242 **சேயேன்** - மகன்

2243 **சேர்த்து** - நானும் நீயும் ஒன்றுகூடி

2244 **சேர்ந்த** - சிவந்த.

2245 **சேர்ந்திடில்** - அடைந்தால்.

2246 **சேர்ந்து** - பொருந்தி

2247 **சேரற்கு** - சேரமான் பெருமாளுக்கு

2248 **சேரா** - பொருந்தாத

2249 **சேல்** - தூரம்.

2250 **சேல் வைக்கும்** - சேல் மீனைத் தோற்க வைக்கும்

2251 **சேல்வரும்** - சேல்மீனைப் போல அழகுடைய

2252 **சேலுக்கு** - சேல் மீனுக்கு

2253 **சேலேர்** - அழகிய மீன் போலும்

2254 **சேலைவிராய்** - புடவை நெய்கிற.

2255 **சேவடி** - உயரிய கருணைத் திருவடிகள்

2256 **சேவிக்க** - தரிசிக்க

2257 **சேவில் பரமன்** - காளையில் ஊர்கின்ற சிவன்.

2258 **சேற்று** - சகதிக்கு

2259 **சேனம்** - பருந்து.

2260 **சோபுரம்** - திருச்சோபுரம் எனும் தலம்

சை

2261 **சைவநெறி கருணை** - இறைவனின் தனிப்பெருங்கருணை

சொ

2262 **சொப்பனம்** - உயிர் கனவில்இயங்கும் நிலை

2263 **சொருபம்** - ஆன்ம இன்ப நிலை

2264 **சொருபமாய்** - தோற்றப் பொலிவுடையதாய்

2265 **சொல்** - புகழ்கின்ற

2266 **சொல்லமுதம்** - தேவாரப் பாசுரங்கள்

2267 **சொல்லாவி** - சொல்லப்பட்ட உயிர்களை.

2268 **சொல்லுகின்றோர்க்கு** - துதிப்பவர்க்கு

2269 **சொல்லூரன் தன்னைத் தொழும்பு கொளல்** - (பின்னிடாமல் எதிர்த்துப் பேசின) சுந்தரரை அடிமை கொண்ட.

2270 **சொல்வாணர்களே** - புலவர்களே

2271 **சொலும்** - சொல்லும்

2272 **சொற்கு அரியவரை** - சொல்பதம் சுட்டா உயர் எல்லை

2273 **சொற்பதமாய்** - சொல்லும் பொருளுமாய்

2274 **சொற்பதிகம்** - தேவாரத் திருப்பதிகம்.

2275 **சொற்பேரறிவினை** - புகழும் பேரறிவினை

2276 **சொற்போதற்கு** - சொல்லால் விளக்கி அறிவதற்கு

2277 **சொற்றுணை வேதியன் என்னும்** - அப்பர் அருளிய தேவாரத் தொடர்

2278 **சொற்றேர்** - தேர்ந்தசொல்

2279 **சொற்றேன்** - சொல்லாகியதேன்

2280 **சொன்னங்களை** - சொர்ணமாகிய பொன்னை

சோ

2281 **சோகம்** - துன்பம்

2282 **சோபம்** - துன்பம்

2283 **சோர்தருவார்** - தளர்ச்சி அடைபவர்

2284 **சோர்பு அடைந்து** - தளர்ச்சி அடைந்து

2285 **சோற்றல்** - இன்பம் தரும் நிலையால்

2286 **சோற்றுக்கு** - இன்பநிலைக்கு

2287 **சோற்றுத்துறை** - திருச்சோற்றுத்துறை

2288 **சோற்றுத்துறை** - தொலையாச் செல்வர் - ஒப்பிலா அம்மை. பஞ்சகாலத்தில் பாமரர் பசிதீர வயலிலே சோறாய்விளைந்த தலம். தஞ்சையிலிருந்து திருவையாற்றுப் பெருவழியிலே 10 கி.மீ.

சௌ

2289 **சௌபாங்கம்** - ஒழுங்குபாடுகள்.

ஞா

2290 **ஞாயிறு** - சூரியன், ஞாயிற்றுக்கிழமை

2291 **ஞாலம்** - உலகம்; உலகு; நிலவுலகம்

2292 **ஞான போதகமே** - மெய்ஞானநிலையே

2293 **ஞானக் களஞ்சியம்** - அறிவுப் பொக்கிஷம்.

2294 **ஞானசத்தி** - பஞ்ச சத்திகளுள் ஒன்று; மெய்யறிவினைத் தூண்டும் ஆற்றல்.

2295 **ஞானசம்பந்தமே** - ஞானநெறியில் நின்று நோக்குவார்க்கு எல்லா சமய உண்மைகளும் (கொள்கைகளும்) சம்மதமே

2296 **ஞானத்திட்டே** - ஞானக் கூட்டமே.

2297 **ஞானத்தீவகம்** - அறிவு விளக்கு

2298 **ஞானநாடகனே** - ஞான நாடகத்தை உடையவனே.

2299 **ஞானப்பூணே** - மெய்ஞ்ஞான அணிகலனே

2300 **ஞானம் படைத்த** - மெய்ஞ்ஞானம் விளங்கிய

2301 **ஞானம் விடாத** - மெய்ஞானம் அகலாத; மெய்ஞானம் இல்லாத

2302 **ஞானயாகமே** - மெய்ஞ்ஞான வேள்வியே

2303 **ஞானஜோதி** - ஞானப் பிரகாசம்

2304 **ஞானியருள்ஞாபகமே** - ஞானியர் நினைக்கின்ற நினைப்பே.

த

2305 **தகரக்கால்** - ஆட்டுக்கால்,ஆட்டம் உடைய கால்

2306 **தகரத்து** - இன்பம் கூடுவதற்கு எடுத்துக்கொள்

2307 **தகரவித்தை** - உடம்பைப் பொன்னாக்கும் ஆற்றல்

2308 **தகவுபெறு** - பெருந்தகைமை சான்ற.

2309 **தகுவிந்து** - பொருத்தமுடைய சுத்தமாயையின் ஒளிநிலை.

2310 **தகைகொள்** - மேன்மைபெறும்.

2311 **தகைசான்ற** - பெருமை உடைய

2312 **தகையினர்** - பெருமையுடையவர்.

2313 **தகையுடையர்** - பெருந்தகைமை உடையார்

2314 **தங்களற்றின் தீங்கார் பிறதெய்வத் தீங்குழியில்** - பொருந்திய சேற்றைப்போல தீமையுள்ள அந்நிய தெய்வங்களாகிய நெருப்புக்குழியில்.

2315 **தஞ்சத்திலே** - அடைக்கலமாகி

2316 **தஞ்சம் தரும்** - ஆதரவை உண்டாக்குகிற.

2317 **தடங்கடலே** - பெரிய சமுத்திரமே; பெரும் சமுத்திரமே

2318 **தடங்கண்** - அகன்ற கண்

2319 **தடங்கருணை** - பெருங்கருணை

2320 **தட்சணாமூர்த்தி** - தென்முகக் கடவுள்; சனகர் முதல் நால்வர்க்கும் அறம் கூறிய கடவுள்; அறம் கூறும் கடவுள்.

2321 **தட்டாமல்** - தடைபடாமல்.

2322 **தட்டின்** - தாமரைப்போன்ற

2323 **தடநிருப** - அருள்வெளிப் பண்புடைமை.

2324 **தடம்** - அரிய,பெரிய

2325 **தடிக்கஅருளும்** - தோன்றி விளங்கக் கருணை செய்யும்.

2326 **தடிந்தோன்** - வெட்டியோன்

2327 **தடிப்பு** - பருமன்.

2328 **தடுத்தாண்டநம்பி** - சுந்தரர்

2329 **தண்கா** - குளிர்ந்த சோலை

2330 **தண்குழைய** - குளிர்மை ததும்ப

2331 **தண்டம்** - பெருமை.

2332 **தண்டலை நீள்நெறி** - நீணெறிநாதர் - ஞானாம்பிகை. அரிவட்டாய நாயனார்க்காக மாவடு கடித்த நீள் நெறி லிங்கம். திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 5 கி.மீ.

2333 **தண்டாத** - அளவில்லாத

2334 **தண்ணம்** - குளிர்ந்த

2335 **தண்ணமுதம்** - குளிர்ந்த தேவ அமுதம்; காய கல்பம்

2336 **தண்ணளி** - அருட்கருணை; அருளும் தன்மை; குளிர்ந்த அருள்நிலை

2337 **தண்ணார்** - குளிர்மை நிறைந்த

2338 **தண்ணார் மலர்** - குளிர்ச்சி நிறைந்த மலர்

2339 **தண்ணிய** - குளிர்ந்த

2340 **தண்ணிலகும்** - குளிர்ச்சி பொருந்திய

2341 **தண்ணீர்போல் நெஞ்சம் உருகி நினைக்குமன்பர்** - தண்ணீரைப்போல் மனமுருகி எண்ணுகின்ற அன்பர்.

2342 **தண்ணுடைய** - குளிர்மையுடைய

2343 **தண்ணென்னும் வெண்ணெருப்பு** - குளர்ச்சியைத் தருகிற வெள்ளை நெருப்பு.

2344 **தண்ணே** - குளுமையானவனே

2345 **தணத்தல்** - நீங்குதல்.

2346 **தணந்திலை** - நீங்காமல் நின்றாய்.

2347 **தண்பூத்த** - குளிர்ச்சி

2348 **தண்மதியே** - குளிர்ந்த நிலவே

2349 **தண்மை** - கிருபை; குளிர்ச்சி.

2350 **தண்விளக்கே** - அருள்ஒளியே

2351 **தணிந்த** - தழைத்துள்ள

2352 **தத்துவசகம்** - ஆன்ம, வித்தியா, சுத்த தத்துவ உலகங்கள்; தூல, சூக்கும, காரண தத்துவ உலகங்கள்; பூத உலகம் முதலாகப் பரநாத உலகம் ஈறாக உள்ளவை.

2353 **தத்துவம்** - சுபாவம்; சூக்குமம், காரணம் ஆகிய தத்துவங்கள்

2354 **தத்துவமே** - மூன்று வகை தத்துவ நிலைகளே

2355 **தத்துவாதீதமே** - தத்துவம் கடந்த பொருளே

2356 **தம்பரவை** - பரவை நாச்சியார் என்னும் தமது மனைவியின்

2357 **தம்பிரான்** - ஆணைபுரிபவன்.

2358 **தம்மவர்** - உறவினர்.

2359 **தமியேனுக்கு** - தனிமையில்இருப்பவனுக்கு

2360 **தமிழ்ப்பாமாலையால் துதித்துக் கண்ணீர் உன்பால் கரைந்ததில்லை** - தமிழ்ப்பாடலாகிய மாலைகளால் தோத்திரம் செய்து கண்களில் நீர்பெருக்கி உன்னிடத்துக் கனிவு செய்ததில்லை.

2361 **தமை உணர்ந்த** - ஆன்ம ஞானம் அடைந்த

2362 **தமையனும் ஆகில்** - பிள்ளை என்றால்

2363 **தயாநிதியே** - தயைக்குப் பிறப்பிடமே.

2364 **தயாளு** - தயவுடையவன்

2365 **தரம்பழுத்த** - பரஞானமிக்க

2366 **தாமூன்று** - முத்தா எனும் சொல்

2367 **தரமோதரு** - துதிப்பாடாம் உணர்வு நிலை அடைந்துள்ளதோ

2368 **தரல் ஈது** - தரக்கூடியது

2369 **தரிக்கரிது** - வாழ்தல் அரிது

2370 **தரு** - மரம்

2371 **தருண** - ஆதரவுடன்

2372 **தரும நிந்தை** - தருமத்தை செய்யாதவாறு பழித்தல்

2373 **தருமபுரம்** - யாழ்மூரிநாதர் - தேனமுதவல்லி. பாசக் கயிற்றை ஈசன் மேலே வீசிய காலன் பூசித்துஉயர்ந்த ஆலயம், காரைக்காலிலிருந்து மேற்கே 10 கி.மீ. இவ்வூர் உள்ளது.

2374 **தரும்பேர்** - புகழ் உண்டாக்கும்

2375 **தருமம் பெற** - சுகிர்தம் இன்பம் பெற

2376 **தலைக்கடை** - முன் வாயிற்படி

2377 **தலைக்கேறிற்று** - மயக்கம் கொண்டது

2378 **தலைக்கொண்டீர்** - கபாலத்தை வைத்துள்ளீர்

2379 **தலைகுலையா** - நிலை மாறுபடாத

2380 **தலைகுனிந்து** - வெட்கப்பட்டு

2381 **தலைச்சங்காடு** - சங்குவனேசர் - சுந்தரநாயகி. கிருஷ்ணர் திருக்கரத்து பாஞ்சசன்யம் சிவனருளால் தோன்றியது. தரங்கம்பாடி ஆக்கூர் தாண்டி 17.6ஆவது கி.மீ. உள்ளது சங்(குக்)காடு.

2382 **தலைநின்றாய்** - முதல்வனாகி நின்றாய்.

2383 **தலைப்பட்டதோ** - வந்து அகப்பட்டதோ

2384 **தலைமாலைபூண்டவன்** - இறந்தவர் தம் கபாலங்களை மாலையாக அணிந்தவன்.

2385 **தலைமேல்** - முடிமேல்

2386 **தலைமைத் தெய்வமே** - முதன்மையையுடைய கடவுளே.

2387 **தலையாலங்காடு** - ஆடல்வல்லார் - திருமடந்தை. முனிவர்கள் சினந்து அனுப்பிய முயலகன்சிவனடி சேர்ந்த திருத்தலம். 8 கி.மீ. இவ்வூர் உள்ளது.

2388 **தவத்தோர் நீத்த தீதுகள்** - தவத்தோர் வெறுத்து நீக்கின தீமைகள்.

2389 **தவம்** - உயிர்களுக்குத் துன்பம் செய்யாது இருத்தல்

2390 **தவர்** - தவமுனிவர்கள்

2391 **தவாதசாந்தப்பதம்** - அமைதிநிலை குலையாத பேறு.

2392 **தவிர்த்த** - விலக்கிய

2393 **தவிர்ப்பாய்** - விலக்குவாய்

2394 **தழற்பிழம்போ** - தீவட்டிப் பிழம்போ

2395 **தள்ளலே** - தள்ளவேண்டுமே

2396 **தள்ளாய்** - விட்டு விடுக.

2397 **தள்ளிலை** - தள்ளவில்லை

2398 **தளை** - மலம்; மாயை

2399 **தளைக்கின்ற** - கட்டுகின்ற

2400 **தளையிட்ட** - கட்டிவிட்ட

2401 **தற்பதம்** - தன்னை அறியும்படி (உணரும்படி) செய்வது.

2402 **தற்பதமாய்** - அருள்நிலையாய்

2403 **தற்பரம்** - சிவமாம் தன்மையது.

2404 **தற்பரனே** - மென்மை உள்ளமுடைய தெய்வமே

2405 **தற்பரையே** - சிற்பரையின் மேலாம் தெய்வத்தாய்

2406 **தற்போத ஒழிவு** - ஜீவபோதம் இல்லாத நிலை

2407 **தற்போத நிவர்த்தியாகி** - சீவ முனைப்பில்லாதாகி

2408 **தற்போதம்** - தான் என்னும் உணர்வு; ஜீவபோதம் முனைப்பு

2409 **தனக்கேளர்** - செல்வந்தர்

2410 **தனத்தனம்** - திருமுலையுடையாளே

2411 **தனத்தாய்** - இரக்க மார்பினை உடையவளே

2412 **தன்பதத்து** - தன்திருவடியை.

2413 **தன்புடை** - தன்னிடத்தில்

2414 **தனம்** - மார்பு

2415 **தன்மயமே** - இயற்கை உண்மை நிறைவே

2416 **தன்மை திறம்பார்** - குணம் கெடாதவர்.

2417 **தன்னை ஒளிக்கின்றவர்கள்** - தற்போதம் (முனைப்பு) ஒழிக்காதவர்கள்.

2418 **தனிமலை** - சிவபெருமான்

2419 **தனு** - உடம்பு.

2420 **தனையர்** - புத்திரர்.

தா

2421 **தா** - ஓசைக்குறிப்பு

2422 **தா(மா)த்தூர் வீழ்தல்** - மாமரமானது வேரொடு அற்று வீழும்படி.

2423 **தாக்கு** - சார்பு.

2424 **தாகம் உடையார்** - பேரின்ப தாகம் உடையார்

2425 **தாட்கன்றி** - திருவடிகளுக்கு அல்லாமல்

2426 **தாட்கு** - திருவடிக்கு

2427 **தாட்கோல்** - தாழ்ப்பாள்.

2428 **தாண்ஏத்தாது** - திருவடிகளை வணங்காமல்

2429 **தாண்டவன்** - ஆனந்தக் கூத்தன்; அருள் கூத்தன்.

2430 **தாண்டிடும்** - விரைந்து ஓடிவிடும்

2431 **தாண்மலர்** - திருவடிமலர்கள்

2432 **தாணு** - சிவபெருமான்; பற்றுக்கோடானவன்; நிலை பேறுடையன்.

2433 **தாணுவே** - பிரபுவே.

2434 **தாத்விக சகம்** - பதமுத்தி உலகங்கள்.

2435 **தாதா** - வள்ளல்

2436 **தாதிற்கு** - நாசிக்கு; மூக்கிற்கு.

2437 **தாது** - சுக்கிலம்

2438 **தாது ஒன்று** - மகரந்தம் பொருந்திய. 2437

2439 **தாதுக்கடம்** - இருப்புக்கூடம்.

2440 **தாபம்** - வெப்பம்.

2441 **தாபம்செய்தல்** - சுடுதல்.

2442 **தாமத்தினால்** - மாலையினால்

2443 **தாமதம்** - சோம்பல்

2444 **தாம்நந்தா** - தாம் அழியாத.

2445 **தாம்பாலே** - கயிற்றினாலே

2446 **தாம்பாயினும்** - மேல்பாய்ந்தாலும்

2447 **தாமம்** - மாலை

2448 **தாமம் ஆற்றிட** - தாம்தாம் இன்பம்பெற்றிட

2449 **தாமம்படர்** - மாலைகள் அணிந்த

2450 **தாமரையோன்** - பிரமன்.

2451 **தாமோதரன்** - திருமால்

2452 **தாரகம்** - ஆதரவு.

2453 **தார்கொண்ட** - மாலைஅணிந்த

2454 **தாரம்** - மனைவி

2455 **தார்மாலை** - நோக்கு; பார்வை.

2456 **தாருடையாய்** - மாலைஉடையவனே

2457 **தாவ** - பொருந்த

2458 **தாவரம்** - இயங்கா உயிர்.

2459 **தாவாக் கடையாற்றுதல்** - கெடாத கடைவிழியில்; அதாவது மரணகாலத்தில் போகும் வழி.

2460 **தாழ் குழல்** - நீண்டு தாழ்ந்த கூந்தல்

2461 **தாழ்சடை** - நீண்ட முடி.

2462 **தாழா** - வணங்காத

2463 **தாள்** - திருவடி; தெய்வத்திருவடி

2464 **தாள் எரிந்த தண்டி** - காலை வெட்டிய சண்டேசுவர நாயனார்.

2465 **தாள் நீழல்** - திருவடியின் நிழல்

2466 **தாள்கமலம்** - திருவடித்தாமரை

2467 **தாள்நினையாதார் பாழ்மனையில் சென்றே உடலோம்பச் செய்யற்க** - பொன்போலும் அழகிய திருவடிகளை நினைக்காதவர்களுடைய பாழ்வீடுகளில் போய் உடம்பு வளர்க்கச் செய்யாதே.

2468 **தாள்வருந்த** - திருவடிகள் துன்பமடைய

2469 **தாளுடையாய்** - திருவடி சூட்டியவரே

2470 **தான்** - சிவதுரியப் பொருள்; கடவுள்

2471 **தானத்தவர்** - சுவர்க்கத்தில் வாழ்பவர்

2472 **தானத்து** - மேல் நிலையில்

2473 **தான்நோக்கி** - தம்மைப்பார்த்து

2474 **தானம்** - கடவுளினது கோயில்; சுவர்க்கம்

2475 **தானம் செய்வாரைத் தடுத்திடல்** - தானம் பண்ணுகிறவர் களைத் தடை செய்தல்.

2476 **தானவர்** - சுரர், தேவர்

2477 **தானற்று** - தானதுவாய்;ஆன்மா இறையனுபவமாக.

தி

2478 **திகழா** - விளக்கம்

2479 **திகை** - திசை

2480 **திங்கள்** - மாதம்.

2481 **திங்கள் கொழுந்து** - பிறைசந்திரன்.

2482 **திங்கள் புரிசடையாய்** - பிறைசூடிய முடியனே.

2483 **திசைப்பட்டு உடையாய்** - திசைகளையே ஆடையாகத் தரித்தவனே

2484 **திசைமுகன்மால்** - பிரமனும்,திருமாலும்

2485 **திசையம்பரன்** - திசைகளாகிய அம்பரன்.

2486 **திண்செய்த** - வலிமை வாய்ந்த

2487 **திண்ணம்** - உறுதிப்பேறு,உறுதி

2488 **திண்தங்குமாறு (திண்டங்குமாறு)** - உறுதி பெறும்படி.

2489 **திண்மணிக்கூடலில்** - அழகு நிறைந்த மதுரையில்

2490 **திண்மை** - உறுதி; வலிமை

2491 **திண்மையில்** - வலிமையில்லாத

2492 **திதிக்கும் பதிக்கும்** - திருமாலாம் தெய்வத்திற்கும்

2493 **திதி** - காத்தல்; வாழும்காலம்.

2494 **திதியே** - நிலைபேறு உடையவனே

2495 **தியங்கா** - மயக்கமில்லாத

2496 **தியங்கும்** - மயங்கும்

2497 **தியாகர்** - கருணையாளர்

2498 **திரணம்** - துரும்பு.

2499 **திரம்** - உறுதி.

2500 **திரமாகி** - நிலைபேறு உடையதாகி

2501 **திரார்பொருள்** - அழியாத மெய்ப்பொருள்

2502 **திரி** - இன்பம் ஈகின்ற; வினை இன்பம் ஈகின்ற

2503 **திரியும் புலியூர்** - வலுவுடைய இடம்

2504 **திரு** - இலக்குமி

2505 **திருஅதிகை** - வீரட்டேசுவரர் - திரிபுரசுந்தரி. ஒழுக்கத்தால் உயர்ந்து மேம்பட்ட திலகவதியார் சிவத்தொண்டு செய்து பரவிய தலம். திரிபுரமெரித்த திருஅதிகை பண்ருட்டி யினின்று 1.6 கி.மீ.

2506 **திருஅழுந்தூர்** - வேதபுரீசர் - சௌந்தரநாயகி. ஊர்த்துவர தனாம் ஆணவ மன்னன் தேர் அழுந்தத் திருந்தினான். குத்தாலத்தின் தெற்கே 4 கி.மீ திருக்கோயில்.

2507 **திருஆடானை** - ஆடானைநாதர் - சினேகவல்லி. பாவமன்னிப்பு,சாபவிமோசனம் பரிந்தருள்புரியும் சிவத்தலம். காரைக்குடியிலிருந்து 50 கி.மீ. தொலைவில்இவ்வூர் உள்ளது.

2508 **திருஆப்பாடி(திருவாய்பாடி)** - பாலுகந்த நாதர் - பெரியநாயகி. பால பிடேகம் சுயம்பு மூலவரோடு சண்டேசுவரர்க்கும் முதல் பூசை. திருப்பனந்தாள் ஊருக்குத் தென்மேற்கே இரண்டு கி.மீ.

2509 **திருஆலங்காடு** - தேவர் சிங்கப்பெருமான் - வண்டார் குழலி. ஐந்து சபைகளில் ரத்தின சபை. காளியோடு கூத்தனாடிய தாண்டவம் இத்தலத்தில்தான். சென்னை அரக்கோணம் தொடர்வண்டிப் பாதையில் திருவாலங்காடு உள்ளது.

2510 **திருஆலம்பொழில்** - ஆத்மநாதர் - ஞானாம்பிகை. ஆதிசேடனும் அட்டவசுக்களும் (தேவரிஷிகள்) பூசை செய்த தலம். தஞ்சாவூருக்கு வடதிசையில் எட்டு கி.மீ.

2511 **திருஆலவாய்** - மீனாட்சியம்மன் - சுந்தரேஸ்வரர். 64 திருவிளையாடலின் மாமதுரைச் சொக்கலிங்கம். பாண்டியர் ஆண்டது. பலயுகம் கண்டது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த ஊர் (மதுரை).

2512 **திருஇடைமருதூர்** - மகாலிங்கம் - பெருநலநாயகி. தைப்பூசத்தில் திருவிடைமருதூர் காவிரி நீராடல் பூர்வ புண்ணியம். குடந்தைக்கு வடகிழக்கே 8 கி.மீட்டரில் இந்த "மத்யார் ஜுனம்" எனும் இடை மருது உள்ளது.

2513 **திருஉசாத்தானம்** - மந்திரபுரீசர் - பெரியநாயகி. இராம லட்சுமண, அநும, சுக்ரீவர்கள் சிவனருள் பெற்ற தலமாம். முத்துப்பேட்டைக்கு வடக்கே இரண்டு கி.மீ. இவ்வூர் உள்ளது.

2514 **திருஊறல்** - உமாபதி - உமையம்மை. மலையூற்று, தீர்த்தமாய்நந்தி வழி வந்து குளமாகும் கோயில்இது. கர்ஞ்சிபுரம் அரக்கோணம் தடம். தக்கோலத்தி லிருந்து 5 கி.மீ.

2515 **திருஏடகம்** - ஏடகநாதர் - ஏலவார் குழலி. வைகை நதியை எதிர்த்து நீந்திய பொய்யாத் தமிழின் புனிதத்தலம். மதுரையை அடுத்த சோழவந்தானின் தெற்கே ஐந்தாம் கி.மீட்டரில் திருவேடகம் உள்ளது.

2516 **திருஒற்றியூர்** - ஆதிபுரீசுவரர்- வடிவுடையம்மை. புற்றிடலிங்கம், மகிழடி, வட்டப்பாறை, பட்டினத்தார் முத்தித்தலம். சென்னைக்கு வடக்கே 10 கி.மீ. தொலைவில் திருஒற்றியூர் உள்ளது.

2517 **திருஒத்தூர்** - வேதநாதர் - பாலகுசலாம்பிகை. ஆல மரத்தடி சிவமூர்த்தி. அருமறை சாத்திரப்பெரும் கீர்த்தி சேயாற்றுக் கரைக்கோயில். காஞ்சிக்குத் தென்மேற்கில் 30 கி.மீ. இவ்வூர் உள்ளது.

2518 **திருக்கச்சூர்** - விருந்திட்ட ஈசர் - உமையம்மை. கச்சபம் (ஆமை) வடிவிலே ஸ்ரீஹரி பூசை செய்த தலம். சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து மேற்கே 4 கி.மீ.

2519 **திருக்கடவூர்** - அமுதலிங்கம் - அபிராமி. மார்க்கண்டேயர், குங்கிலியர் எல்லாம் சீர்கண்டு உயர்ந்த சிவாலயம். 'அபிராமி அந்தாதி' தந்தவர் பிறந்த கடவூர், மாயூரத்திலிருந்து தென்கிழக்கே 22 கி.மீ.

2520 **திருக்கடவூர் மயானம்** - பிரம்மபுரீசர் - மின்னம்மை. நான் முகனை நீறாக்கி மீண்டும் ஆக்கி நல்லருள் தந்த கோயில். திருக்கடவூர் கோயிலுக்குக் கிழக்கே இரு கி.மீ இம்மயானம்.

2521 **திருக்கடைமுடி** - கடைமுடிநாதர் - அபிராமி. யுக பிரம்ம தேவனுக்குக் குலதெய்வக் கோயில். 'கீழையூர்'என்றான கடைமுடி மயிலாடுதுறை செம்பனார் கோயிலை அடுத்துள்ளது.

2522 **திருக்கண்டியூர்** - வீரட்டானர் - மங்கல நாயகி. ஐந்தலையில் ஒன்று கொய்து பிரம்மனை ஆட்கொண்ட வீரட்டானம், திருவையாற்றுக்குத் தெற்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

2523 **திருக்கருகாவூர்** - முல்லைவனேசர் - கர்பரட்சகி. அம்மையே அம்மாவாகி அபலையின் கருவைக்காத்த திருத்தலம். தஞ்சாவூர் பாபநாசத்தின் தெற்கே திருக்கரு காவூர் ஆறு கி.மீ.

2524 **திருக்கழிப்பாலை** - பால்வண்ணநாதர் - வேதநாயகி. கோயிலின் தீர்த்தம் பால்வண்ணம். வான்மீகர் பூசித்த சிவாலயம். சிதம்பரத்தின் தென்கிழக்கே 5 கி.மீ. திருத்தலம்.

2525 **திருக்கழுக்குன்றம்** - வேதகிரீசுவரர் - சொக்கநாயகி. சூரியர், இந்திரர், ருத்திரரெல்லாம் வந்து வணங்கிய பறவை தீர்த்தம். கழுக்குன்றத்திலே இரு சன்னிதிகள். செங்கல்பட்டிலிருந்து 16 கி.மீ..

2526 **திருக்களர்** - களர்முளைநாதர் - அமுதேசுவரி. ஆனந்தத் தாண்டவத்தால் மாமுனி துர்வாசருக்கு அருள் தந்த நாதர். திருத்துறைப்பூண்டி மன்னார்குடி பாதையிலே உள்ள தலம் இந்தக் களர்.

2527 **திருக்கள்ளில்** - சிவானந்தர் - ஆனந்தவல்லி. மாதவப் பிருகுமுனி ஈசனருளால் கோபத்தை இழந்த தலம். சென்னையிலிருந்து காளத்தி செல்லும் வழியில் 36 கி.மீ. தூரத்தில்இவ்வூர் உள்ளது. (திருக்கண்டலம்)

2528 **திருக்காட்டுப்பள்ளி (மேலை)** - தீயாடியப்பர் - சுந்தர நாயகி. சோழமா தேவியின்சிவபத்தியால் மண்மாரி நின்றது. உறையூரிலே திருவையாற்றிலிருந்து 16 கி.மீ. மேற்கே திருக்காட்டுப்பள்ளி.

2529 **திருக்காராயில்** - கண்ணாயிரநாதர் - கயிலைநாயகி. ஆதி விடங்கரின் குக்குட நடனம்,நீதி வழிபட நடந்த ஊரிது. திருவாரூர் திருத்துறைப்பூண்டி பெருவழிச்சாலையில் 14 கி.மீ.

2530 **திருக்காளத்தி** - காளத்திநாதர் - ஞானப்பூங்கோதை. ஈசனுக்கே கண்கொடுத்த கண்ணப்ப நாயனார் கண்ட திருமலை. பொன்முகலியாற்று தீர்த்தத்தலம். ரேணிகுண்டாவிலிருந்து 30 கி.மீ.

2531 **திருக்கானப்பேர்** - கானேசர் - சொர்ணவல்லி. காளீசர், சோமேசர், சொக்கேசர் என மூவீசர் அருள் தரும் ஆலயம். மருதுபாண்டியரின்'காளையார் கோயில்' சிவகங்கை யிலிருந்து 18 கி.மீ.

2532 **திருக்கானூர்** - செம்மேனிநாதர் - சிவயோகநாயகி. உமையவள் முன் பரமேசுவரன் செந்தழலாய்வந்தருளி லிங்கமானார். கொள்ளிடக்கரைத் தலத் திருக்கானூர், பூதலூரிலிருந்து 12 கி.மீ.

2533 **திருக்குற்றாலம்** - குறும்பலாநாதர் - குழல் வாய்மொழி. மும்மூர்த்தி அம்சனாம் குறும்பலாநாதனின் சத்தியச் சித்திர சபையாம் ஐந்தருவி குற்றால ஆரோக்கியத் திருவூர். தென்காசியிலிருந்து தென்மேற்கே 6 கி.மீ.

2534 **திருக்குறுக்கை** - வீரட்டானார் - பூரணாம்பாள். மன்மதனை ஆட்கொண்ட வீரட்டானம். மதன சம்ஹார மூர்த்தி வரப்ரசாதர். மயிலாடுதுறைக்கு வடமேற்கே 16 கி.மீட்டரில் இவ்வூர் உள்ளது.

2535 **திருக்கூட்டம்** - சத்சங்கம்

2536 **திருக்கேதாரம்** - கேதாரநாதர் - கேதாரகௌரி. மந்தாகினி நதிதீர ஆலயச் சிவனை நாமே தொட்டு வணங்கலாமே. கயிலையின் கீழ்ப்பகுதி 11750 அடி உயரத்திலே உள்ள பனிக்கோயில்.

2537 **திருக்கேதீஸ்வரம்** - கேதீசுவரர் - கௌரியம்பிகை. போர்த்துகீசியரால் அழிக்கப்பட்ட மண்ணாகி புண்ணியர் கட்டிய புதுக்கோயில். மாதோட்ட பாலாவி நதிக்கரைக் கோயில். தலைமன்னாரிலிருந்து 46 கி.மீ.

2538 **திருக்கொண்டீஸ்வரம்** - பசுபதீசுவரர் - சாந்தநாயகி. எல்லாம் தரும் காமதேனுவாய்உமாமகேசுவரி ஈசனைக் கண்ட தலம். நன்னிலம் தாண்டி தூத்துக்குடி முடி கொண்டான் நதியோர ஆலயம்.

2539 **திருக்கொள்ளிக்காடு** - அக்னீசுவரர் - மென்மைநாயகி. அக்னியும்,சனியும் உள்ள தலம். ஆடி அடங்கும் நிலை தெளிவு தரும். காரைக்குடி, மாயூரம் ரயில்தடம். நெல்லிக்காவிலிருந்து 4 கி.மீ.

2540 **திருக்கோணமலை** - கோணேசர் - மாதுமையாள். கடற்கரையில் இருந்தது. கண்ணியார் இடித்தது. பாறையே மூலவர். "தட்சிண கயிலை" சம்பந்தர் பாட்டு. தலை மன்னாரிலிருந்து 350 கி.மீ.

2541 **திருக்கோலக்கா** - சப்தபுரீசர் - ஓசை தந்த நாயகி. சம்பந்தருக்கு சிவசத்தியர் தாளமும் ஓசையும் தந்தனர். சீர்காழி கோயிலுக்கு மேற்கிலே 2 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

2542 **திருக்கோவிலூர்** - வீரட்டேசுவரர் - சிவானந்தவல்லி. அந்தகாசுரனை ஆட்கொண்டது. மெய்ப்பொருள் நாயனார் உய்வுற்றது. "மேல் கீழ்" என்று இரு கோவலூர். விழுப்புரம் திருவண்ணாமலைச் சாலையிலே உள்ளது.

2543 **திருக்கோளிலி** - சுந்தரேசுவரர் - மீனாட்சி. நவ கோள் களுமே தவறு களைந்து நமசிவாயனருள் பெற்ற தலம். திருவாரூர்க்குத் தென்கிழக்கே 19 கி.மீட்டரில் கோளிலி உள்ளது.

2544 **திருகோடிகா** - கோடீசுவரர் - வடிவாம்பிகை. மூன்று கோடி ஞான முனிவர் முழுத் தவத்தால் கண்ட திருத்தலம். கஞ்சனூருக்குக் கிழக்கே 3 கி.மீ. கோடிக்காத் திருத்தலம்.

2545 **திருச்சத்திமுற்றம்** - சிவக்கொழுந்து - பெரியநாயகி. யம தீர்த்த பத்ரகாளி, காவல் தெய்வ எல்லையில் ஐயனாரும் இருக்கிறார். தாராசுரத்தின் தென்மேற்கே 4 கி.மீட்டரில் உள்ளது.

2546 **திருச்சிராப்பள்ளி** - தாயுமானவர் - மட்டுவார் குழலி. அப்பனே அம்மையாகி அபலைக்கும் பிள்ளைப்பேறு பார்த்த தலம். மலையுச்சிப் பிள்ளையார்தான்திருவரங்கத் தல காரணகர்த்தர்.

2547 **திருச்சுழியல்** - பூமிநாதர் - சகாயமாதா. சிவத்தை நாடிய ஜீவசக்தியின், மகத்துவ விளக்கத் திருத்தலம். மதுரையி லிருந்து விருதுநகர் தாண்டி 48 கி.மீ.

2548 **திருச்செங்காட்டங்குடி** - கணபதீசுவரர் - திருக்குழல் நாயகி. பிள்ளைக்கறி கேட்டு சிறுத்தொண்டர் மனதைக் கொள்ளையடித்த சிவன். நன்னிலத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

2549 **திருச்செங்கோடு** - அர்த்தநாரீசுவரர் - பாகம்பிரியாள். 'கொடிமாடச் செங்குன்னூர்' கருவறைக்குள் சரிபாதி உரு அம்மையப்பர். ஈரோட்டுக்குக் கிழக்கே 18 கி.மீ..

2550 **திருச்சேய்ஞலூர்** - சத்யகிரீசர் - சகிதேவியம்மை. சத்ருசங்கார வேற்படையைதந்தையிடமிருந்து முருகன் பெற்ற தலம். திருஆப்பாடியிலிருந்து தென்கிழக்கே 2 கி.மீட்டர்.

2551 **திருச்சேறை** - செந்நெறியப்பர் - ஞானவல்லி. திவ்யபிரபந்த மும், தேவாரமும் கொண்ட ஹரி, ஹரன் இருவர் ஆலயம். குடந்தைக்குத் தென்கிழக்கே 15 கி.மீட்டரில் 'உடையார் கோயில்'.

2552 **திருச்சோபுரம்** - சோபுரநாதர் - சத்தியத்தாய். மண் மூடிப்போன இடம். தம்பிரான் தோழரால் கிடைத்த தலம். சிதம்பரம், கடலூர் தடத்தில் ஆலம்பாக்கத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ.

2553 **திருத்தினைநகர்** - சிவக்கொழுந்தீசர் - ஒப்பிலா நாயகி. சேரிக்கு வந்து தினையை விதைத்து ஊருக்கு உழைத்த ஈசுவரன். ஆலப்பாக்கத்திலிருந்து தென்மேற்கே 6 கி.மீ.

2554 **திருத்துருத்தி** - வேதநாதன் - முகிழாம்பிகை. தீவுக்குள் இருந்த இக் கோயிலின் தலவிருட்சம் குத்தால மரம். மயிலாடுதுறையின் மேற்கே 10 கி.மீ. (குத்தாலம்)

2555 **திருத்தெளிச்சேரி** - பார்வதீஸ்வரர் - சக்தியம்மை. பங்குனி மாதம் மூன்றாம் வாரம் மூலவர்க்கு ஒளி சூர்ய வழிபாடு. காரைக்கால் நகரின் ஒரு பகுதி (கோவில் பத்து)

2556 **திருநணா** - கூடுதுறைநாதர் - வேதாம்பிகை. மூன்று நதிகள் சேருமிடம். தீமை நண்ணா, அதனால் 'நணாயீ. பவானி என வழங்கும் திருநணா ஈரோட்டுக்கு வடக்கே 16 கி.மீ.

2557 **திருந்தி நின்றார்** - மலம் அகன்ற அடியவர்கள்

2558 **திருந்து தேவன்குடி** - கற்கடகநாதர் - அருமருந்தம்மை. அரசனுக்குக் கிழவனாகவும்,நண்டுக்குச் சிவனாகவும் வந்ததலம். கும்பகோணத்திலிருந்து கிழக்கே 8 கி.மீ. தொலைவு தேவன்குடி.

2559 **திருநல்லம்** - உமாமகேசர் - மங்கலநாயகி. திருவிசைப்பா தந்த கண்டராதித்தற்குப் பெருவாழ்வு தந்த தலம். கோனேரி ராஜபுரம் என்னும் திருநல்லம் இடைமருதூர்க்குத் தெற்கே 10 கி.மீ.

2560 **திருநல்லூர்** - கல்யாண சுந்தரர் - கல்யாண சுந்தரி. அமர்நீதி நாயனார் முத்திபெற்ற ஐந்து வண்ண மூலவர் கோயில். குடந்தையை அடுத்த சுந்தரபெருமாள் கோயிலிலிருந்து 3 கி.மீ.

2561 **திருநள்ளாறு** - தர்ப்பாரண்யர் - அத்திரநயனி. தர்ப்பாரண்ய ஈஸ்வரனருளால் கலியை வென்றான் நள மகாராஜன். சனிச்சுர மகத்துவ திருநள்ளாறு காரைக்காலிலிருந்து 5 கி.மீ.

2562 **திருநனிபள்ளி** - நற்றுணையப்பர் - மலை மடந்தை. ஞானசம்பந்தர் திருப்பாட்டால் பாலைவனத்தில் தானியம் விளைந்தது. செம்பனார் கோயிலுக்கு வடகிழக்கே 6 கி.மீ.

2563 **திருநாகேஸ்வரம்** - நாகநாதர் - மலைமகள். பன்னிரு தீர்த்த நாகேஸ்வரம். சேக்கிழார் போற்றிய திருத்தலம். குடந்தையி லிருந்து கிழக்குத்திசையில்5 கி.மீ.

2564 **திருநாரையூர்** - சுந்தரேசர் - திரிபுரசுந்தரி. ஈசனை வழிபட்ட நாரை. இத் தலப் பிள்ளையார் 'பொள்ளாதயீசர். தில்லைச் சிதம்பரத்தின் தென்மேற்கே 17 கி.மீ. இவ்வூர்.

2565 **திருநாவலூர்** - நாவலேசுவரர் - மனோன்மணி. சுந்தரர் பிறந்த ஊர். சண்டேசர் கண்ட ஊர். கருடனும் கும்பிட்ட ஊர். பண்ருட்டியின் மேற்கே 16 கி.மீ.

2566 **திருநின்றியூர்** - பரிகேசுவரர் - உலகநாயகி. காமதேனு இங்கு பூஜை செய்தது. மூவுலக வளமனைத்தும் கொண்டது. மாயூரம்,வைத்தீசுவரன் கோயில் ஆகிய இருவூர் நடுவே உள்ளதலம்.

2567 **திருநீடூர்** - சோமநாதர் - வேயுறுதோளி. ஊழியிலும் அழியாத மூங்கில் போல் வளர்ந்து பசுமையும் வழவழப்பும் உடைய தோள்களைப் பெற்றவள் வேயுறுதோளி. இந்திர தீர்த்தம் உள்ளதிந்த நாலுயுக கூஷேத்திரம். மயிலாடுதுறையின் வடக்கே 5 கி.மீட்டரில் உள்ளது ஆலயம்.

2568 **திருநீலக்குடி** - நீலகண்டர் - உமையம்மை. 'நற்றுணை யாவது' நமசிவாயமே; நாவுக்கரசர் பாடிய ஊர். ஆடுதுறை யிலிருந்து தென்கிழக்கே 4 கி.மீ. நீலக்குடி.

2569 **திருநெய்த்தானம்** - நெய்யாடியப்பர் - பாலாம்பிகை. சப்த ஸ்தான தில்லைத்தானம். ஞான சரஸ்வதியான நெய்த் தானம். தியாகராஜ ஆராதனைத் திருவையாறுக்கு மேற்கே 2 கி.மீ.

2570 **திருநெல்லிக்கா** - நெல்லிவனநாதர் - மங்கலநாயகி. காலம் காலமாய் சோழ மாமன்னர் கட்டிக்காத்த திருத்தலமாம். திருவாரூருக்குத் தென்திசையில் 14 கி.மீ. திருநெல்லிக்கா.

2571 **திருநெல்வாயில்** - உச்சி நாதேசுவரர் - கனகாம்பிகை. சம்பாவயலில் தோன்றிய லிங்கம். 'சிவபுரி' என்பதும் இவ்வூர் தான். தில்லைச் சிதம்பரத்தை அடுத்தநான்கு கி.மீ. தூரத்தே நெல்வாயில்.

2572 **திருநெல்வேலி** - நெல்லையப்பர் - காந்திமதி. தாமிரபரணி கேஷத்திரம். ஏழிசைத் தூண்கள். மாமழை வேலியூர். தெய்வீகத் தேசிய சைவர்கள் நகரம். திருநெல்வேலி உலகப் புகழ்பெற்றது.

2573 **திருப்பயற்றூர்** - பயற்றூர்நாதர் - கயற்கண்ணி. பைரவ முனிவர் தொழுதது. பயறு போன்றவர் மூலவர். நன்னிலத்தின் தென்கிழக்கே 14 கி.மீ.

2574 **திருப்பரங்குன்றம்** - பரங்கிரிநாதர் - ஆவுடைநாயகி. சிவமெனத் தெரிந்தும் குற்றமே என்ற தெய்வத்தமிழ் நக்கீரர் ஊர். சிவமகிமையோடுள்ள முருகனின் படைவீடு. மதுரையிலிருந்து தென்மேற்கே 10 கி.மீ.

2575 **திருப்பராய்த்துறை** - பராய்த்துறைநாதர் - பசும்பொன் நாயகி. அகண்ட காவிரித் தலமிதிலே முன்னோர் நீர்க்க அதிக பலன் சப்தரிஷி கேஷத்திர பராய்த்துறை, திருச்சியிலிருந்து 16 கி.மீ.

2576 **திருப்பருப்பதம்** - பருப்பதநாதர் - பருப்பதநாயகி. நந்தியே திருமலையான ஆந்திரமாநிலத்தின் அற்புதச் சிவாலயம். 1200 அடி உயர மலை ஸ்ரீசைலம். சென்னையிலிருந்து 480 கி.மீ.

2577 **திருப்பழனம்** - ஆப்தசகாயர் - பெரியநாயகி. அப்பரின் சைவத் தெய்வத்தமிழ். அப்பூதி மகனுக்கு உயிர்தந்த ஊர். திருவையாற்றுக்கு கிழக்கே 3 கி.மீ.இவ்வூர்.

2578 **திருப்பழுவூர்** - வடமூலநாதர் - மாதவநாயகி. பழு எனும் ஆல்இங்கே தலவிருக்ஷம். பரசுராமர் பாவம் தீர்த்த கேஷத்திரம். அரியலூருக்குத் தெற்கே 12 கி.மீ. திருப்பழுவூர்.

2579 **திருப்பறியலூர்** - தட்சபுரீசர் - வாலாம்பிகை. அட்டவீரட்டத் தலங்களிலே தட்சனின் வேள்வி தகர்ந்த தலம். செம்பனார் கோயிலிலிருந்து 2 கி.மீ. பறியலூர்.

2580 **திருப்பனந்தாள்** - சடையப்பர் - பெரியநாயகி. யானையால் சாய்ந்த லிங்கம், குங்கிலியர் பக்தியால் நிமிர்ந்தது. கும்பகோணத்திலிருந்து வடக்கே 16 கி.மீ. உள்ள திருத்தலம்.

2581 **திருப்பனையூர்** - அழகிய நாதர் - பெரிய நாயகி. பனைமரத்தடியில் தோன்றிய பரமன். பராசரமுனிவர் போற்றியவர். திருவாரூருக்கு வடகிழக்கே 12 கி.மீ.திருப்பனையூர்.

2582 **திருப்பாசூர்** - பாசூர்நாதர் - பசுபதிநாயகி. பாம்புப் பிடாரனாய் வந்த சிவம். பாம்பால் தீமையை அழித்த தலம். திருவள்ளூர்க்கு மேற்கே 5 கி.மீ.

2583 **திருப்பாதனை** - திருவடிகளை உடையவனை

2584 **திருப்பாதிரிப்புலியூர்** - தோன்றாத் துணைநாதர் - தோகை நாயகி. பாறையில் கட்டி ஆழியுள் வீசிய அப்பரைக் காத்தது இப்புலியூர். கடற்கரையோரத் திருத்தலம் புலியூர், (கடலூர்)

2585 **திருப்பாம்புரம்** - பாம்புரநாதர் - பூங்குழலம்மை. கார்கோடன் பூசித்தது. கயிலைநாதன் பக்தர்க்கு விஷம் ஏறாது பேரளத்திலிருந்து மேற்கே 7 கி.மீ.

2586 **திருப்பாலைத்துறை** - பால் வண்ணர் - தவள வெண்ணகை. ஆவேச ரிஷிகள் ஏவிய புலியின் தோலை இடையுடுத்திய சூலாயுதன். பாபநாசத்தின் வடகிழக்கே 1,6 கி.மீ. தொலைவு.

2587 **திருப்பாற்றுறை** - மூலநாதர் - மேகலாம்பிகை. பாலபிஷேக மும் நாமார்ச்சனையும் இங்கு பரமன் திருவருள் வர உதவும். திருவானைக்காவிலிருந்து 8 கி.மீ.

2588 **திருப்புகலூர்** - அக்னீசுவரர் - கருந்தாழ்குழலி. பாணாசுரன் செய்த அகழிசூழ் ஆலயம். பதினெட்டு சித்தரும் கும்பிட்டது. நன்னிலத்திலிருந்து கிழக்கே 10 கி.மீ.

2589 **திருப்புகலூர் வர்த்தமானீஸ்வரம்** - ஈசுவரன் - ஈசுவரி. நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவரான முருகநாயனாரின் முத்தித்தலம். திருப்புகலூர் ஆலய வளாகத்துள்ளேயே வர்த்தமானேஸ்வரர் சந்நிதி உள்ளது.

2590 **திருப்புத்தூர்** - திருத்தளிநாதர் - சிவகாமியம்மை. இந்தக் கோயிலின் லட்சுமி தீர்த்த ஈசன்திருவருள் நவநிதி சேர்க்கும். காரைக்குடி நகரிலிருந்து மேற்கே 20 கி.மீ. தூரத்திலே திருப்புத்தூர்.

2591 **திருப்புள்ளமங்கை** - வடதீர்த்தநாதர் - அல்லியங் கோதை. காலகாலசிவன் ஆலகாலம் உண்ட 'ஆலந்துறைத் தலமிதுவே. திருவையாற்றிலிருந்து ஐயம்பேட்டை ரோட்டில் 4 கி.மீ.

2592 **திருப்புறம்பயம்** - சாட்சி நாதர் - இன்மொழியம்மை. அபலையின் வாழ்வுக்காக மதுரைபோய்நீதிசொன்ன சாட்சிநாதர். கும்பகோணத்திலிருந்து வடமேற்கே 10 கி.மீ. இந்தக் கோயில்.

2593 **திருப்புன்கூர்** - சிவலோகநாதர் - சொக்க நாயகி. நந்தனார் வேண்ட நாதனார் கட்டளையிட்டது. நந்தி விலகி வழிவிட்ட தலம். வைதீஸ்வரன் கோயில் ரயிலடிக்கு மேற்கே புன்கூர் 5 கி.மீ.

2594 **திருப்புனவாயில்** - பழம்பதிநாதர் - கருணைநாயகி. கடற்கரைத் திருத்தலம். மிகப்பெரும் மூலவர். வேதாதி நாதவிமலேஸ்வர். புதுவை பதிநாலில் ஒன்று திருப்புன வாயில். ஆவுடையார் கோவிலுக்குத் தெற்கே 25 கி.மீ.

2595 **திருப்பூந்துருத்தி** - பொய்யிலிநாதர் - உருவுடையம்மை. சம்பந்தர் அப்பரைச் சந்தித்தது. சமுதாயச் சேவையைச் சிந்தித்தது. அப்பரின்திருமடப் பூந்துருத்தி, கண்டியூர் தாண்டி 3 கி.மீ.

2596 **திருப்பூவணம்** - பூவணநாதர் - அன்னபூரணி. முடிமன்னர் மூவரும் சித்தர் பதினெண்மரும் தொழுத கோயில். மதுரைக்குக் கிழக்கே திருப்பூவணம் 19 கி.மீ.

2597 **திருப்பூவனூர்** - புஷ்பவனேசர் - கற்பகவல்லி. காந்திமதி யெனும் வித்யாகர்வ பக்தையை திருத்தி அருளிய சிவம். நீடாமங்கலத்திலிருந்து தென்மேற்கே 3 கி.மீ.

2598 **திருப்பைஞ்ஞீலி** - நீலகண்டர் - விசாலாட்சி. வாழைமரம் பூஜித்த ஆலயத்துள் கோள் ஒன்பதுமே தீபங்கள். திருச்சியை அடுத்த மண்ணச்சநல்லூருக்கு வடமேற்கே 8 கி.மீ.

2599 **திருபாசுரம்** - சிவன் எழுதிய கடிதப் பாடல்

2600 **திருமங்கலக்குடி** - பிரணவதேசுவரர் - மங்களநாயகி. மாகாளி, சூரியன், அகத்தியர், பிரம்மனுடன் ஸ்ரீஹரியும் பூசித்தது. ஆடுதுறையின் வடக்கே 3 கி.மீ.

2601 **திருமணஞ்சேரி** - அருள்வள்ளநாதர் - யாழ்மொழிநாயகி. மன்மதன் பூசித்த இத்தலத்தில் கல்யாண கோலத்தில் பரமேஸ்வரி. எதிர்கொள்பாடிக்குக் கிழக்கே கூப்பிடு தூரத்தில்திருமணஞ்சேரி.

2602 **திருமணி மன்று** - அழகிய ஞானசபை

2603 திரும்பாமைக்கு - இரங்காதிருப்பதற்கு

2604 **திரும்பிலை** - தயவு புரியவில்லை

2605 **திரும்பிற்று** - திரும்பியது

2606 **திரும்பிற்றே** - திரும்பியதோ

2607 **திருமயேந்திரபள்ளி** - திருமேனியழகர் - வடிவாம்பிகை. சந்திரன்,சூரியர்,பிரம்மன் வழிபட்டது. நடராஜ திருநடனம் நடைபெற்றது. ஆச்சாள்புரத்திலிருந்து 7 கி.மீ. தூரத்தில் உள்ளது.

2608 **திருமருகல்** - மாணிக்கவண்ணர் - வண்டார் குழலி. உடற்பிணியும் மனத்துயரும் தீர்வதற்கு வருக திருமருகல் கோயிலுக்கு. திருப்புகலூரிலிருந்து தென்கிழக்கே 7 கி.மீ.

2609 **திருமழபாடி** - வைரத்தூண்ஈசர் - அழகம்மை. புருஷாமிருகம் ஸ்தாபிதம் செய்த வைரத்தூண் (லிங்கம்) நாதர். திருவையாற்றிலிருந்து வடமேற்கே 7 கி.மீ.

2610 **திருமறைக்காடு** - மறைக்காடர் - யாழ்மொழியாள். மூடிக்கிடந்த ஆலயக் கதவைத் தமிழ் பாடித் திறந்தனர் அப்பரும், ஞானசம்பந்தரும். திருத்துறைப்பூண்டியினின்று 'வேதாரண்யம் 35 கி.மீ.

2611 **திருமாணிக்குழி** - வாமனேஸ்வரர் - பங்கயற்கண்ணி. மூவடி அளந்த தோஷம் நீங்கவே வாமனர் பூசித்த மகேஸ்வரலிங்கம். கடலூருக்கு மேற்கே 10 கி.மீட்டரில் சுவேத தீர்த்தமான 'மாணிக்குழி'.

2612 **திருமாந்துறை** - ஆம்ரவனேசர் - அழகிலுயர் நாயகி. கண்வ மகரிஷி ஹரி ஹரர் இருவரையும் ஏகலிங்கமாய்க் கண்ட தலம். லால்குடியிலிருந்து கிழக்கே இ3 கி.மீ.

2613 **திருமாகறல்** - அகத்தீசுவரர் - புவனேசுவரி. மாகறல்க்ஷேத்திர அக்னிதீர்த்தம். ஆரோக்கியத்தை தினம் சேர்க்கும். காஞ்சிக்குத் தென்திசை, வேகவதி பாலாறு கடந்ததும் 16 கி.மீ.தொலைவில் உள்ளது.

2614 **திருமாற்பேறு** - மணிகண்டேசர் - கருணைநாயகி. பத்து அவதாரர்க்குச் சக்ராயுதம் தந்த பரமசிவ கருணைத்தலம். 'ஹரிச்சக்ரபுரம்'எனும் இந்த ஊர் காஞ்சியிலிருந்து வடமேற்கே 12 கி.மீ.

2615 **திருமீயச்சூர்** - திருமேனிநாதர் - லலிதாம்பிகை. கருவறையிலே சூரிய ஒளியால்இறையருள் மின்னும் சித்திரை (21-28)யில். பேரளத்திலிருந்து மேற்கே இவ்வூர் 2 கி.மீ.

2616 **திருமீயச்சூர் இளங்கோயில்** - புவனேசுவரர் - மேகலாம்பாள். 'பாலாலயம்'எனும் இளங்கோயில். திருமீயச்சூர் கோயில் வளாகம் உள்ளேயே இந்த இளங்கோயில்.

2617 **திருமுகம்** - கடிதம்

2618 **திருமுண்டீச்சுரம்** - சிவலோகநாதர் - செல்வநாயகி. இந்திரராதி தேவர்கள்பிரம்மதேவனொடு வந்தருள் பெற்ற திருத்தலம். திருவெண்ணெய்நல்லூருக்குக் கிழக்கே 5 கி.மீ. (கிராமம்)

2619 **திருமுதுகுன்றம்** - பழமலைநாதர் - விருத்தாம்பிகை. ஆயிரத்தெட்டு சிவஸ்தலத்தில் முக்கியம் நான்கு. நான்கிலே இது முதல். மணிமுத்தா நதிக்கோயில். (விருத்தாச்சலம்)

2620 **திருமுருகன் பூண்டி** - கந்தனீஸ்வரர் - ஆவுடைநாயகி. முருகப்பெருமான் ஸ்தாபித்தலிங்கம். வருபவர்க்கெல்லாம் பெருவாழ்வு தருவது. ஈரோடு கோவை சாலையில் அவிநாசிக்குத் தென்கிழக்கே 5 கி.மீ.

2621 **திருவக்கரை** - சந்திரசேகர் - வடிவாம்பிகை. வக்ராசுரனை திருமால் ஜெயிக்க ஈசன்உதவிய திருத்தலம். பேருருவக் காளியுள்ள திருவக்கரை மயிலத்திலிருந்து 15 கி.மீ..

2622 **திருவண்ணாமலை** - அண்ணாமலையார் உண்ணா முலையாள். ஆதிக்கும் ஆதியூர் ஐம்முகச் சிவஸ்வரூப தீ மலையே அண்ணாமலை. பொங்கழல் வடிவம் இத் திருத்தலம்.

2623 **திருவருட்சக்தி** - சுத்த சிவசக்தி.

2624 **திருவலஞ்சுழி** - கற்பகநாதர் - பெரியநாயகி. ஹேரண்ட முனிவர் மாதவத்தாலே காவிரி பூமிக்கு மீண்டதலம். காவிரி ஓடும் இந்த ஊர் சுவாமி மலையிலிருந்து தெற்கே 2 கி.மீ.

2625 **திருவலம்புரம்** - வலம்புரிநாதர் - வடுவகிர்கண்ணி. அப்பரைத்தேடிஅழைத்து வந்து அருள்தந்த சிவனார் திருக்கோயில். சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் பாதையில் ஒன்பதாம் மைல்.

2626 **திருவல்லம்** - வல்லநாதர் - எல்லாம் வல்ல நாயகி. காசிக்கும் மேம்பட்ட க்ஷேத்ர தீர்த்த மூர்த்தியரின் திருத்தலம். காட்பாடிக்குக் கிழக்கே 6 கி.மீ.

2627 **திருவல்லி** - இலக்குமி

2628 **திருவலிதாயம்** - வலிதாயநாதர் - தாயம்மை. சிவாம்ச ஆஞ்சநேயர் பூசித்தது. அநுமதீர்த்தம் இங்கு மகா விசேஷம். சென்னையிலிருந்து 16 கி.மீ. வில்லி வாக்கத்தை அடுத்தது.

2629 **திருவன்னியூர்** - அக்னீஸ்வரர் - பார்வதி தேவி. பொங்கழல் சிவனை பூதநாயகனை தீக்கடவுள் கும்பிட்ட திருக்கோயில். திருவீழிமிழலையிலிருந்து வடமேற்கே 4 கி.மீ. திருவன்னியூர். (அன்னியூர்)

2630 **திருவாஞ்சியம்** - வாஞ்சிநாதர் - மங்கலநாயகி. இங்குள்ள தீர்த்தத்தில் ஆடி இமயத்து கங்கையே புனிதமானாள். நன்னிலத்திலிருந்து தென்மேற்கே 9 கி.மீ.இவ்வூர்.

2631 **திருவாய்மூர்** - வாய்மூர்நாதர் - பால்மொழியம்மை. அப்பர் பெருமானை நேரில் அழைத்து ஆடல் அருளிய மூலவராம். திருக்குவளைக்குத் தெற்கே 3 கி.மீ.

2632 **திருவார்** - இலக்குமி வாழ்கின்ற

2633 **திருவாரூர்** - வன்மிகநாதர் - அல்லியங்கோதை. தேரழகுத் திருவாரூர். தில்லைக்கும் மூத்த திருத்தலம். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றனுக்கும் ஆரூர்தான் முதன்மைத் தலம்.

2634 **திருவாவடுதுறை** - மாசிலாமணீசர் - ஒப்பிலாள். மூவாயிரம் ஆண்டு யோகத்தால்திருமந்திரம் தந்த திரு மூலத் தலம். மயிலாடுதுறை என்னும்மாயூரத்தி லிருந்து18 கி.மீ.

2635 **திருவாழ்** - இன்பம் நிலைபெற்ற

2636 **திருவான்மியூர்** - மருந்தீசர் - சொக்கநாயகி. வான்மீகி பூசித்த மருந்தீசர் பால்வண்ண அமுதாபிஷேகர். 'ஔஷத புரியான திருவான்மியூர், அடையாறு தாண்டி 3 கி.மீ.

2637 **திருவானைக்கா** - சம்புகேசுவரர் - அகிலாண்டேசுவரி. மாடக்கோயில் 70 ஏற்படக் காரணம். யானையும் சிலந்தி யும் முத்தி பெற்ற தலம். ரெங்கநாதனின் ஸ்ரீரங்கத்தின் கிழக்கில் உள்ளது.

2638 **திருவிசயமங்கை** - விசயநாதர் - மங்கைநாயகி. அருச்சுனன் தவம் கனிந்து பாசுபத மந்திர பரிபூரணம் கண்டது இங்கு தான். திருப்புறம்பயம் ஊரிலிருந்து 5 கி.மீ.

2639 **திருவிசைப்பா எனும் திருமுறை** - மான்மிகங்கள் (மகத்துவ சரித்திரங்கள்)

2640 **திருவியலூர்** - சிவயோகிநாதர் - சாந்தநாயகி. சிவராத்ரி தோறும் அகத்தியர் பூசிக்கும் கலியுகத்தலம். கும்பகோணத்திலிருந்து கிழக்கே 8 கி.மீ. இவ்வூர்.

2641 **திருவிலிகள்** - தகுதியில்லாதார்

2642 **திருவிற்குடி** - வீரட்டானேஸ்வரர் - ஏலவார் குழலி. சலந்தா சுரனை ஆட்கொண்ட துளசிமாடமுள்ள சிவாலயம். நன்னிலத்தின் தென்கிழக்கே 8 கி.மீ.

2643 **திருவிற்கோலம்** - திரிபுராந்தகர் - திரிபுராந்தகி. தேரின் கூவம் (ஏர்கால்) ஒடிந்து விற்கோல வீரசிவம் நின்ற தலம். திருவள்ளூருக்குத் தென்மேற்கே 16 கி.மீ. (கூவம்)

2644 **திருவீழிமிழலை** - பரமேசுவரர் - மலைமடந்தை. கண் மலரை மால் கொடுக்க காலகாலன் கலிநடத்த ஆழி தந்தான். பூந்தோட்டத்திலிருந்து 10 கி.மீ. திருவீழிமிழலை.

2645 **திருவெண்காடு** - வெண்காட்டுநாதர் - பிரம்மவித்யா. ஆதி சிதம்பர ரகசியத் தலமிது. வாரிசு உருவாக வரங்களைத் தருவது. சீர்காழிக்குத் தென்கிழக்கே 10 கி.மீ.

2646 **திருநெல்வெண்ணெய்** - வெண்ணெயப்பர் - நீலமலர்க்கண்ணி. சனகர், சனகாதிமுனிவர்களோடு சத்தியச் சித்தர்கள் பூஜைத்தலம். உளுந்தூர்பேட்டையிலிருந்து வடமேற்கே 15 கி.மீ.

2647 **திருவெண்ணெய்நல்லூர்** - சர்வேச்சுரன் - வேற்கண்ணி. கிழவனாய்வந்த சிவம் சுந்தரரை அடிமையாய் ஆட்கொண்ட திருவூரிது. விழுப்புரம் திருச்சி குறுக்கு ரயில் பாதையிலே திருவெண்ணெய்நல்லூர்.

2648 **திருவெண்துறை** - வெண்துறைநாதர் - வேல்நெடுங் கண்ணி. பிருங்கி முனிவர் வண்டாகி ஈசனைப் பூசித்த 'திருவண்டு துறை', மன்னார்குடிக்குக் கிழக்கில் 10 கி.மீ.

2649 **திருவெண்பாக்கம்** - கயிலாயநாதர் - கனிவாய்மொழி. புராதனப் பழைய கோயில். பூண்டி ஏரியுள் மூழ்கிப் போனது. ஏரிக்கரையிலே புதிய கோயில். திருவள்ளூரி லிருந்து வடமேற்கில் 10 கி.மீ. (பூண்டி)

2650 **திருவேட்களம்** - பாசுபதேஸ்வரர் - நல்ல நாயகி. வேடனாக வந்த ஈசன் விசயனுக்குப் பாசுபதம் தந்தது இத்தலம். தில்லையிலிருந்து கிழக்கே 2 கி.மீ. அண்ணாமலைப் பல்கலைவளாகம் அருகில்.

2651 **திருவேட்டக்குடி** - மேனியழகர் - சாந்தநாயகி. அர்ஜுனனின் தவம் காண வேடனாக வந்த சிவம் அடிபட்ட தியாகத்தலம். காரைக்காலுக்கு வடகிழக்கே 10 கி.மீ. தொலைவில் வேட்டக்குடி.

2652 **திருவேதிகுடி** - வேதபுரீசர் - மங்கையர்க்கரசி. ஆகம வேதங்கள் பிரம்மனோடு ஈசனின் பேரருள் பெற்ற கோயில். திருக்கண்டியூரிலிருந்து தென்கிழக்கே 2 கி.மீ. வேதிக்குடி.

2653 **திருவேற்காடு** - வேற்காட்டீசர் - பாலாம்பிகை. அகத்தியருக்கு மணக்கோலம்,சித்ரா பௌர்ணமி ஏழு மூர்த்திகள். கருமாரியம்மனின் திருவேற்காடு சென்னையி லிருந்து 30 கி.மீ.

2654 **திருவை** - கல்வியை செல்வத்தை இன்பத்தை

2655 **திருவைகாவூர்** - வில்வவனேசர் - வளைக்கைநாயகி. சாபத்தால் போன சத்திகளை சப்தமாதர்கள் மீண்டும் பெற்ற தலம். தஞ்சாவூர் மாவட்ட பாபநாசத்தின் வடக்கே 12 கி.மீ.

2656 **திருவையாறு** - பஞ்சநதீசுரர் - அறம் வளர்த்த நாயகி. அப்பருக்குக் கயிலையைக் காட்டிய ஆதிநாத இசையூர். தஞ்சாவூருக்கு வடக்கே 12 கி.மீ.

2657 **திரையேற்று** - கங்கை தாங்கிய

2658 **திரோதானம் எனும் சக்தி** - உயிர்களை மயக்குகிற ஒரு மாயாசக்தி.

2659 **திரோதை** - முதற் காரணமான பெருமாயை

2660 **திலகவதியார் பரவுதல்** - திலகவதியாரால் துதிக்கப்பட்டு.

2661 **திலதைப்பதி** - முத்தீசுவரர் - மரகதவல்லி. மூதாதையர்க்கு நினைவுக் கடன் தீர்க்க ஆதாரத்தல 'தர்ப்பணபுரி'. பூந்தோட்டத்திலிருந்து மேற்கே 3 கி.மீ. திலதைப்பதி.

2662 **தில்லை** (சிதம்பரம்) - நடராசர் - சிவகாமியம்மை. மார்கழித் திருவாதிரையும்,ஆனித்திருமஞ்சனமும் காணக் கண் கோடி வேண்டும்.

2663 **தில்லைச் சிற்சபை** - தில்லையிலுள்ள ஞானசபை.

2664 **திளைத்தல்** - அனுபவித்தல்.

2665 **திறம் நிகழ்த்தா** - புகழ் பேசாத

2666 **திறம்பாதார்** - மாறுபடாதார்

2667 **திறல்** - வலிமை

2668 **திறலோரும்** - மனவலிமை உடையவர்களும்

தீ

2669 **தீங்கற்கண்டு** - இனிய கற்கண்டு

2670 **தீஞ்சுவை** - இன்பச்சுவை

2671 **தீட்டும்** - பொறித்து வைக்கும்

2672 **தீமடுத்த** - நெருப்புக்கு இரையாக்கிய.

2673 **தீமனையில்** - தீயதான வீட்டில், நன்னெறி இல்லாத வீட்டில்

2674 **தீர்த்தர்** - பரிசுத்தர்.

2675 **தீனர்கட்கு** - திக்கற்ற ஏழைகட்கு

து

2676 **துகில்** - ஆடை.

2677 **துங்கம்** - உயர்வு.

2678 **துங்கமுறாது** - தூய்மை பெறாமல்

2679 **துஞ்சல்** - இறத்தல்.

2680 **துஞ்சலெனும் இன்னல்** - இறப்பு என்கின்ற துன்பத்தை ஒழிக்கின்ற.

2681 **துஞ்சுகினும்** - இறந்தாலும்.

2682 **துடி** - உடுக்கை

2683 **துண்டம்** - கீற்று

2684 **துண்டுஆர்** - பிறைசூடிய

2685 **துணிகொண்ட** - வெட்டுப்பட்ட வாய்

2686 **துணிவு** - உறுதி

2687 **துணைப்பதமே** - இரண்டு பாதங்களே

2688 **துதி** - பாடல் பெறுதல்

2689 **துதிக்குங்கண்ணி** - பாமாலை

2690 **துதிசித்து எலாம்** - போற்றிடும் எல்லாம் வல்ல ஆற்றல்

2691 **துதியணிந்த** - பிரார்த்தனை ஏற்ற

2692 **தும்பு** - வலிவான முறுக்கு

2693 **தும்பை** - தும்பை மலர்.

2694 **துய்க்கின்ற** - அனுபவிக்கின்ற

2695 **துய்க்கும்** - அனுபவிக்கும்

2696 **துய்க்கோ** - அனுபவிக்கவா

2697 **துய்ச்சுடரே** - புனித ஒளியே

2698 **துய்ய** - இன்பம் சேர; புனிதமான

2699 **துயர்போகம்** - துன்பமான வாழ்வு

2700 **துர்கந்தம்** - கெட்டவாடை.

2701 **துரியபதம்** - அறிதுயில் நிலை.

2702 **துரியம்** - அறிதுயில்.

2703 **துரியமே** - மேன்மையான ஞான உறக்கமே

2704 **துரியவடிவினர்** - மேன்மையான ஞான உருவினர்

2705 **துருஅம் செழிக்கும்** - மறைவுச் செயல்களை அழகுடன் ஆற்றும்

2706 **துலங்கும்** - விளங்கும்

2707 **துவ்வாமை** - அனுபவிக்காமை.

2708 **துவன்றினை** - அகப்பட்டாய்.

2709 **துவாத சாந்தப்பதம்** - உச்சிக்கு மேல் பன்னிரண்டு அங்குலத்தில் விளங்கும் அமைதிநிலை; திருவடிப்பேறு.

2710 **துவிதாத்துவிதம்** - ஜீவன் பரமாகி ஒன்று படல்

2711 **துளங்குதல்** - ஒளிர்தல்,அஞ்சுதல்

2712 **துளவம்** - திருத்துழாய்,துளசி

2713 **துளும்புதல்** - ததும்புதல்

2714 **துளையா** - பள்ளம் நோக்கி ஒடிச்செல்லும்

2715 **துற்சங்கம்** - துன்மார்க்கர் கூட்டம்

2716 **துறத்தற்கு** - விடுதற்கு.

2717 **துறையூர்** - பசுபதீசுவரர் - பூங்கோதைநாயகி. திருமால், சூரியன், நாரதர், பீமன், குறுமுனிவரெல்லாம் தொழுத தலம். பண்ருட்டியிலிருந்து வடமேற்கே 10 கி.மீ 'திருத்தளூர்'எனும் இவ்வூர்.

2718 **துன்பநெறியால்** - துன்பம் வரும் வகையால்

2719 **துன்பால்** - துன்பம் உண்டாவதால்

2720 **துன்பு** - துன்பம்

2721 **துன்புஅட்ட** - துன்பத்தை ஒழித்த

2722 **துன்புடையேன்** - துன்பம் உடையவன்

2723 **துன்றுதல்** - நெருங்குதல்

2724 **துன்றுமலம்** - ஆணவம், கன்மம், மாயை ஆகிய ஏதேனும் ஒரு மலத்தால் மறையும் ஆற்றல்.

2725 **துன்னம்** - பொருந்திய; நெருங்கிய

2726 **துன்னல்** - தைக்கப்பட்ட, நெருங்குவதற்கு

2727 **துன்னி** - நெருங்கி; வேண்டி, விரும்பி

2728 **துன்னிடையாய்** - அழகிய இடுப்பு உடையவளே

2729 **துனியால்** - துன்பத்தால்

தூ

2730 **தூஎன்று** - ஆதரவு என்று.

2731 **தூசு** - ஆடை

2732 **தூசு இல்லை** - உடையில்லை

2733 **தூசுஒலிப்பான்** - ஆடை துவைக்கின்ற

2734 **தூய்மணியே** - தூய்மணி போன்றவனே

2735 **தூய்மெய்** - சுத்த உண்மை

2736 **தூய்மை** - பரிசுத்தம்.

2737 **தூரியத்தில்** - பறை வாச்சியத்தில்.

2738 **தூலமாகி** - தேகமாகி

2739 **தூளி** - தூசு

2740 **தூற்றுக்கு** - இழிவுக்கு

2741 **தூறிலை** - இழிவில்லை

தெ

2742 **தெங்கூர்** - வெள்ளிமலைநாதர் - இமயநாயகி. பிரகாரத்தில் நவகோள் இயக்க ஒன்பது லிங்கச் சந்நிதிகள். திருநெல்லிக்கா ஊரிலிருந்து மேற்கே 2 கி.மீ. தெங்கூர்த்தலம்.

2743 **தெண்டன்** - வந்தனம்,வணக்கம்

2744 **தெண்ணீர் முடியனை** - கங்கை சூடிய சிவனை

2745 **தெய்வ வடிவாம்** - மரணமிலா வடிவம்

2746 **தெய்வ வரதன்** - திருமால்

2747 **தெய்வதமாய்** - கடவுளாகி

2748 **தெரிக்கரிய** - தெரிவிப்பதற்கரிய

2749 **தெரிக்கவந்து** - தெரிவிக்க வந்து.

2750 **தெரிதும்** - அறிவோம்

2751 **தெரியவந்தது** - தெரிந்து கொள்ள நேர்ந்தது

2752 **தெரிவையர்** - பெண்டீர்

2753 **தெருட்பால்** - ஞானத்தெளிவு

2754 **தெருப்புக்குவாரோடு** - வீதிக்குச் செல்பவருடன்

2755 **தெருவத்திலே** - தெருமீது

2756 **தெருள்** - தெளிவு, பக்குவம்; பக்குவமிக்க

2757 **தெருள்நிறைந்த** - மிகவும் பக்குவம் நிறைந்த

2758 **தெருளுடைய** - பக்குவமுடைய

2759 **தெவ்(வன்)** - பகைவன்.

2760 **தெவ்வழி** - தீய பாதையில்

2761 **தெவ்வின் மடவார்** - பகைவரின் மனைவியர்.

2762 **தெவ்வீர்** - அரக்கரின் திரிபுரம்

2763 **தெவ்வேலை** - மாயையின் ஆதிக்கம்

2764 **தெள்ளம்** - தெளிவு

2765 **தெள்ளமுதம்** - தேவாமிர்தம்

2766 **தெளி** - தெளிவாயாக

2767 **தெளிய ஒண்ணார்** - தெரிந்து உணர்தற்கு இயலாதார்

2768 **தெளியாத்திறத்தில்** - அறிய முடியாத தன்மையில்

2769 **தெளிவான்** - மிகவும் அனுபவிக்கும்

2770 **தெளிவு** - பிரமிப்பு.

2771 **தெறும்** - அழிக்கும்

2772 **தென்குடித்திட்டை** - பசுபதிநாதர் - உலகநாயகி. ஆதிசேட மகாவிஷ்ணு பூசித்தது. வேதங்கள் சிவஞானம் யாசித்தது. தஞ்சையின் வடகிழக்கே 10 கி.மீ.

2773 **தென்குரங்காடுதுறை** - ஆப்தசகாயர் - பவளக்கொடி. ஆஞ்சனேயர், சுக்ரீவர் இருவர்க்கும் இந்தச் சகாயர் திருவருள் கிடைத்தது. திருவிடைமருதூர்க்குக் கீழ்திசையில் 4 கி.மீ.

2774 **தென்திசை வாழ் மன்றவன்** - தென்திசையில் வாழ்கின்ற எமன்.

2775 **தென்திருமுல்லைவாயில்** - முல்லைவனநாதர் - கோதையம்மை. பார்வதி கண்ட பஞ்சாட்சர மகிமை. கார்கோடகனின் பூசைத்தலம். சீர்காழிக்குக் கிழக்கே15 கி.மீ. கடற்கரையோரக் கோயிலிது.

2776 **தென்னவன்கண் சூழ்பழி** - வரகுணபாண்டியன் வளைந்து கொண்ட பாவத்தை.

தே

2777 **தேக்குகின்றார்** - மிகவும் அனுபவிக்கின்றார்

2778 **தேக்குதல்** - நிறைதல்; பரவி விளங்குதல்

2779 **தேக்குவது** - நிறைவிப்பது.

2780 **தேசகம்** - ஒளிஉணர்வு

2781 **தேசம்** - உலகம்

2782 **தேசிகனாய்** - சற்குருவாய்

2783 **தேசு** - ஒளி; ஞானஒளி

2784 **தேசை** - அருள் ஒளியை

2785 **தேட்ட** - விரும்பக்கூடிய

2786 **தேட்டாண்மை** - பொருள் சம்பாதிக்கும் திறமை.

2787 **தேடி** - ஆராய்ந்து

2788 **தேடிநின்ற** - செல்வத்தைத் தேடி வருந்தி

2789 **தேமாம் பொழில்** - தேமாமரங்கள் நிறைந்த சோலை

2790 **தேமூன்றின்** - முத்தே போன்று

2791 **தேய்க்குற்றம்** - ஒளிர் கலைகள் குறையும் நிலை

2792 **தேயம்** - நாடு

2793 **தேர்** - திரிபுர தகனம் செய்ய ஏறிவந்த தேர்

2794 **தேராழி** - தேர்ச்சக்கரம்.

2795 **தேவகமாம் மன்றம் அமர்ந்த** - தெய்வங்களுக்கிடமாகிய பொதுவிடங்க ளமைந்த.

2796 **தேவர் வேந்தர்குலம்** - கூத்திரிய குலம், இன்பத்தைக் குன்றாமல் காக்கும் குலம்

2797 **தேவி** - உமையாள்

2798 **தேவு** - கடவுள்

2799 **தேவூர்** - தேவபுரீசர் - மதுரமொழியம்மை. தேவ குருபிரகஸ்பதிக்குத் தேவாதிதேவன் குருவான கோயில். நாகை மாவட்டம் கீழ்வேளூரிலிருந்து தென்திசையில் 5 கி.மீ.

2800 **தேவை** - தெய்வத்தை

2801 **தேறா** - தெளியாத.

2802 **தேறா(த)** - தெளிவு பெறாத; பக்குவமற்ற

2803 **தேறோம்** - தெளிந்திடோம்

2804 **தேன்சிவண** - அழகு பொருந்த.

தை

2805 **தைவந்த நெஞ்சம்** - ஆதரவுற்ற மனம்

தொ

2806 **தொகை** - எண்ணிக்கை

2807 **தொடக்கு** - மூலக் கட்டு, பிணிப்பு

2808 **தொட்டார் உண்ண** - தொட்டு உண்ண.

2809 **தொடர்வேன்** - ஆழ்ந்திடுவேன்

2810 **தொடலரிய வெளி** - தீண்டுவதற்கு எட்டாத வானவெளி

2811 **தொடுப்பது** - எய்துவது

2812 **தொடையார் இதழி** - பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை

2813 **தொண்ட நாட்டில்** - பல்வகை போகங்களும் நிறைந்த நாட்டில்

2814 **தொண்டர்கடம்** - தொண்டர்கள் தம்

2815 **தொண்டரன்** - சுந்தரமூர்த்தி சுவாமிகள்

2816 **தொண்டரோடு கூடிச் சூழ்தல்** - அடியார்களோடும் சேர்ந்து அவர்களைச் சூழ்தல்.

2817 **தொண்டன்** - காதல்புரிபவன்

2818 **தொண்டு** - அடிமைத்தொழில்.

2819 **தொண்டைப்பெறும்** - திருவடித் தொண்டினைச்செய்யும் பாக்கியம் கிட்டும்.

2820 **தொத்து** - தொற்றுவியாதி.

2821 **தொம்பதமாய்** - ஆன்மானுபவமாய்

2822 **தொல்புகழோய்** - பழம்பெருமை உடையவனே

2823 **தொழும்புகொளல்** - அடிமை கொள்ளுதல்.

2824 **தொன்றது** - பழமையானது.

2825 **தொன்றெனவே** - பழையபடியே.

தோ

2826 **தோகாய்** - மயில் போன்ற சாயலுடைய பெண்ணே

2827 **தோகை** - மயில்

2828 **தோம்** - குற்றம்.

2829 **தோய்** - ஓங்கி வளர்ந்த; தெரியப்படுத்து

2830 **தோய்வு** - பொருந்துதல்.

2831 **தோயாது** - பழகாமல்

2832 **தோயும் மயல்** - சேரும் மாயை

2833 **தோல்கூடு** - தோலால் செய்தவை.

2834 **தோலுடை** - புலித்தோலாடை

2835 **தோழமை** - நட்பு.

2836 **தோற்று** - தோல்வி அடைந்து

2837 **தோன்றல்** - சுவாமியே

2838 **தோன்றல்புனை** - கடவுள்சிறந்து அணிவித்த

ந

2839 **நகை** - சிரிப்பு; புன்னகை; சிரிப்புக்கு இடமாக

2840 **நகைப்பா** - ஆசிரியப்பா

2841 **நகையா நின்றது** - சிரிக்காமல் நின்றது.

2842 **நசித்தவர்** - கெடச் செய்தவர்.

2843 **நஞ்சம்** - விடம்

2844 **நஞ்சுவந்து** - விடம் உண்ட.

2845 **நட்டாலும்** - நட்பு செய்தாலும்.

2846 **நட்டுஊர்ந்து** - நேசித்துச் சென்று.

2847 **நடம்வாது அலர்** - இன்ப நடமாகிய பேருணர்ச்சியை உண்டாக்குபவர்

2848 **நடவாதார்** - அற்புத நடனம் புரிபவர்

2849 **நடவாது** - நடக்காது, அற்புதம் புரிக

2850 **நடவாழ்வு** - நடன வாழ்க்கை

2851 **நடித்தார்** - நாகரிகம் பண்ணினார்

2852 **நடிப்பித்தாயோ** - நடித்திடச் செய்தாயோ

2853 **நடு** - நடுவில், இடையில்

2854 **நடுநிலை** - சமநிலை.

2855 **நடுவுள் ஒன்று** - அருட்பெருஞ்சோதி

2856 **நடை** - ஒழுக்கம்

2857 **நடையாய்** - காலால் நடந்து

2858 **நடையுடையாய்** - தூதுசென்றவரே

2859 **நடையுற** - தெருவில் நடக்கும்படி

2860 **நண்ணப்பர்** - பொருந்திய சிவன்

2861 **நண்ணாசை** - வந்துபொருந்தும் பற்று

2862 **நண்ணாத** - பொருந்தாத

2863 **நண்ணி** - பொருந்த எண்ணி

2864 **நண்ணியதோ** - சென்றதோ

2865 **நண்ணியிடேல்** - அடையாதே.

2866 **நண்ணு மட்டும்** - சேர்கின்ற வரையில்

2867 **நண்ணும்** - பொருந்தும்

2868 **நண்ணுவது** - அடையத் தகுந்தது.

2869 **நதி** - வைகைநதி, மிகுதியும்

2870 **நந்தனப் பணி** - திரு நந்தவனத் தொண்டு.

2871 **நந்தா** - குன்றா

2872 **நந்தி** - சிவகணத் தலைவர்களுள் ஒருவர்.

2873 **நந்து** - சங்கு.

2874 **நந்தோடம்** - பொருந்திய மாக்குற்றம்

2875 **நமச்சிவாயம்** (அஞ்சுகங்கள் புகலல்) - பஞ்சாட்சரத்தைப் புகலுகின்ற, உச்சரிக்கின்ற.

2876 **நம்பால்** - நம்மிடம்

2877 **நம்மடையாது** - நம்மைச் சேராமல்.

2878 **நயக்கும்** - விரும்பும்

2879 **நயந்தபக்கம்** - காதல் கொண்டு பேசி மகிழும் பகுதி

2880 **நயந்திலை** - விரும்பினாய் இல்லை.

2881 **நயந்தோர்** - விரும்பிய ஞானிகள்.

2882 **நயப்படும்** - விரும்பப்படும்

2883 **நயப்பார்** - விரும்புவார்.

2884 **நயப்பேன்** - விரும்புவேன்

2885 **நயவாத** - விரும்பாத.

2886 **நயவேல்** - விரும்பாதே.

2887 **நல்என்ற** - தொடர்பு பொருந்த; நட்பு பொருந்த

2888 **நல்குகவே** - அருளுகவே; ஈந்திடுகவே

2889 **நல்குதல்** - கொடுத்தல்.

2890 **நல்குவையோ** - கொடுப்பாயோ

2891 **நலத்தீர்** - இன்ப முடையீர்

2892 **நல்நேயம்** - சிறந்த அன்பு.

2893 **நலம்** - புதுமை.

2894 **நல்லாண்மை** - நற்செயல்திறம்

2895 **நல்லார்** - உயிர்நேயம் உடையவர், நல்அருள் பாங்கு பெற்றவர்

2896 **நல்லிசை** - நல்ல புகழ்

2897 **நல்லூர்** - தஞ்சை மாவட்டத்திலுள்ள ஓர் சிவத்தலம்.

2898 **நல்லூர் பெருமணம்** - தியாகேசர் - உமையம்மை. ஜமதக்னி முனிவர்க்குக் கயிலைக்காட்சி. சாமகான, சம்பந்தர் மாட்சி. கொள்ளிடத்திலிருந்து கிழக்கே 5 கி.மீ. இவ்வூர்.

2899 **நல்லூரில்** - திருநல்லூரில்

2900 **நல்லோர்** - உயிரிரக்க முள்ளோர்

2901 **நல்விடயமாம் பதம்** - நன்றாக அறியப்படும் பதம்.

2902 **நல்வெண்ணெய்உண்டு ஒளித்த நாரணன்** - நல்லவெண்ணெயைத் திருடியுண்டு ஒளித்துக்கொண்ட கிருஷ்ணமூர்த்தி.

2903 **நலிதல்** - வருந்துதல்.

2904 **நலிந்திலை** - வருந்தினாய் இல்லை.

2905 **நவசித்தரும்** - ஒன்பது சித்தர்களும். (சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்க நாதர் என்னும் ஒன்பதின்மர்).

2906 **நவநிலை** - பிரமநிலை முதல் பரநாத நிலை வரை

2907 **நவமாம் வடிவு** - ஒன்பது வகை மூர்த்திகள்

2908 **நவமே** - புதுமை

2909 **நவாதீதம்** - பிரமம் முதலிய நவநிலைக்கு அப்பாற்பட்டது.

2910 **நவில்** - சொல்லு

2911 **நவில் மதியின்** - பேசும் நிலவின்

2912 **நவில்கின்ற** - சொல்லுகின்ற

2913 **நவில்கின்றது** - சொல்லுகின்றது.

2914 **நவிலல்** - சொல்லுதல்

2915 **நள்** - நடு.

2916 **நள்ளொன்று** - நடுவே பொருந்திய.

2917 **நற்கந்தம்** - நல்ல வாசனை.

2918 **நற்சங்கக்காப்பால்** - சத்சங்கச் சேர்க்கையால்

2919 **நற்சிவையாம் தாய்** - நன்மையைத் தருகின்ற உமா தேவியாகிய தாயோடு கூடி.

2920 **நற்சேதா** - நல்ல காராம் பசு

2921 **நற்றாமம்** - நன் மாலை

2922 **நறுங்கனி** - நல்லபழம்.

2923 **நறை** - தேன்

2924 **நறையூர் சித்தீசுவரம்** - சித்தநாதர் - அழகம்மை. அட்டமா சித்தி கற்றுப் பேரானந்த முத்திபெற்ற சித்தர்களின் ஆலயம். குடந்தையிலிருந்து 8கி.மீ.

2925 **நன்கின்று** - நன்மையை இன்று

2926 **நன்நறவே** - நல்ல தேனே

2927 **நனவில்** - சாக்கிர அவத்தை.

2928 **நன்னடை** - நல்வாழ்வு

2929 **நன்னபாடு** - உயர்ந்தவிடம்

2930 **நன்னாமம்** - தெய்வப்பெயர்

2931 **நன்னாளை** - நல்ல வாழ்நாளை

2932 **நன்னெறி** - சன்மார்க்க நெறி

2933 **நனிப்பள்ளி** - திருநனிப்பள்ளி

நா

2934 **நா ஒன்று அரசர்** - திருநாவுக்கரசர்.

2935 **நாகம் அணிந்தது** - பாம்பணியைச் சூழ்ந்தது

2936 **நாகு** - இளமை.

2937 **நாகைக் காரோணம்** - நாகப்பட்டினத்து சிவத்தலம்.

2938 **நாட்கொல்லி** - எமன்.

2939 **நாட்டம்** - திருப்பெயர்

2940 **நாட்டாதார்** - முடிந்திடா மாலை, எண்ணாதவர்

2941 **நாட்டியத்தான்குடி** - மாணிக்கவண்ணர் - மலைமங்கை. உழவின் பெருமையை சிவனும் உமையும் வந்து உணர்த்திய திருத்தலம். திருவாரூருக்குத் தென் திசையில் 10 கி.மீட்டரில் உள்ள தலம்.

2942 **நாட்டு** - நிலை பெறச்செய்க

2943 **நாடாத** - விரும்பாத

2944 **நாடாது** - எண்ணாமல்; எண்ணிடாமல், நினைக்காமல்; கருதாது.

2945 **நாடாமல்** - எதிரிட்டுப் பார்க்காமல், கருதாமல்

2946 **நாடி** - விரும்பி

2947 **நாடிய** - எண்ணுகின்ற

2948 **நாணவத்திலேன்** - அவத்தை வசத்தினால் வெட்கப்படு கிலேன்

2949 **நாணுறவே** - வெட்கம் அடையும்படி

2950 **நாணேன்** - வெட்கப்படேன்

2951 **நாத** - தலைவனே

2952 **நாத்திகருக்கு நடுங்குதல்** - கடவுள் நம்பிக்கை அற்றவர்கட்கு அஞ்சுதல்; தீமைக்குப் பயப்படுதல்.

2953 **நாதம்** - நாத தத்துவம்; பக்கம்; சப்தம்.

2954 **நாதமாகி** - இறை விளக்க உணர்வாகி

2955 **நாதமுள** - ஓசை உண்டாக

2956 **நாதாந்த நடமே** - ஆன்மத் திருக்கூத்து

2957 **நாதாந்த நாயகம்** - பரநாத முடிவின் தலைமை.

2958 **நாதாந்தம்** - நாத தத்துவ முடிவு

2959 **நாமத்தினால்** - பெயரினால்

2960 **நாமம்** - திருப்பெயர்

2961 **நாமார்த்தம்** - பெயரின் அர்த்தம்.

2962 **நாயகம்** - தலைமையானவனே

2963 **நாயகமே** - தலைவியே

2964 **நாரணர்** - காத்தல் தொழிலியற்றும் திருமால்

2965 **நார்நந்தா** - அன்பு குறையாத.

2966 **நாரம்** - கங்கை

2967 **நாலாரணம்** - நான்கு வேதங்கள்

2968 **நாலூர் மயானம்** - பலாசவனேசர் - ஞானாம்பிகை. கலியுகத்திலும் மூலவர் மேலே நாகம் தவழும் சிவாலயம். குடவாயில் தாண்டி 5 கி.மீ. நாலூர் மயானம்.

2969 **நாலே** - நான்கே

2970 **நாவரசர்** - அப்பர்பெருமான்.

2971 **நாவல்ஆரூரர்** - சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2972 **நாவலன்** - சுந்தரர்

2973 **நாவலனை** - சுந்தரனை; வலிமை உடையவனை

2974 **நாள்** - ஆயுள்.

2975 **நாள்மலர்** - புதுப்பூ, அன்று மலர்ந்த மலர்.

2976 **நாறும்** - மணக்கும்

2977 **நான்கும்** - மனம்,சித்தம்,புத்தி,அகங்காரம் நான்கும்.

2978 **நானூறு கோலந்துறை கொண்ட கோவை** - நானூறு அழகிய துறைகளைக் கொண்ட கோவை எனும் பாடல் வகை.

2979 **நானென்று நிற்றல்** - அகங்கரித்து நிற்றல்; ஆணவத்துடன் நிற்றல்.

நி

2980 **நிகமாந்தம்** - மேலான வேத முடிவுடையது; மேலான மறை முடிவுடையது.

2981 **நிகழ்ந்து** - செய்திடுவாயாக

2982 **நிட்கம்பம்** - இயக்கமுடைய.

2983 **நிட்களம்** - நிட்களப்பொருளே.

2984 **நிட்காடின்யம்** - வள்ளல் தன்மை உடைய.

2985 **நிட்பேதம்** - வேறுபாடற்றது.

2986 **நித்தம்** - தினந்தோறும்

2987 **நித்தா** - அழியாதவனே

2988 **நித்திய சாம்பிராச்சியம்** - அழியாத அருளாட்சி தகைமை.

2989 **நிபிடஆனந்தமாகி** - பேரின்பமாகி

2990 **நிமலம்** - கூர்த்த பேரறிவுடையது.

2991 **நிமலா** - மலமற்றவனே

2992 **நிமாலநந்தம்** - பரிசுத்தமான இன்பம்

2993 **நிமித்தம்** - காரணம்

2994 **நியதியின்** - ஊழ்வினையின்

2995 **நிர்அவயவம்** - மண், பெண், பொன் என்னும் மூவாசை இல்லாதது.

2996 **நிர்ஆமயமாய்** - மலமற்ற ஆன்ம நிலையதாகி

2997 **நிரதிசயம்** - வியப்பில்லாமை

2998 **நிராகரம்** - உருவமற்ற வெளித்தன்மையது. (அருவ வெளியானது).

2999 **நிராதரம்** - ஆதாரம் வேண்டாதது.

3000 **நிராலம்பனம்** - பற்றுக்கோடு இல்லாதது.

3001 **நிருத்தம்** - ஆடல், கூத்து

3002 **நிருத்தா** - கூத்தாடுபவனே

3003 **நிருந்த** - கண்பார்வையினால் இன்ப நிலையை நிற்கச் செய்ய

3004 **நிருவிகற்பநிலையாய்** - ஒருமை உணர்வு நிலையாய்

3005 **நிருவிகற்பம்** - வேறுபாடு இல்லாதது.

3006 **நிருவிகாரம்** - வேறுபாடற்றது.

3007 **நிரை நிரையாய்** - அடுக்கடுக்காய்

3008 **நிலாமுற்றம்** - உப்பரிகை

3009 **நிலை** - நிலைபேறு, அடைக்கலம்; ஒழுக்கம்; தகுதிப் பாடு

3010 **நிலைத்திலையே** - நிலைக்கும்படிச் செய்யவில்லையே

3011 **நிலையைத் தவறார்** - ஆன்மா விரும்பும் நிலையை மறந்திடார்

3012 **நிறுத்தவனே** - உறுதி செய்வேன்

3013 **நிறுத்துதியோ** - சேர்ப்பாயோ

3014 **நிறைந்த கண்** - சேர்ந்த விடத்தே

3015 **நிறையாறு** - பெருக்கெடுக்கும் நதி

3016 **நிறைவும்** - பண்பின்திறம்

3017 **நின் முன்னும்** - நின்திரு முன்பும்

3018 **நின்கடன்** - நினது கடமை

3019 **நின்தகை அறியா** - நின்பெருமை அறியாத

3020 **நின்தாட்கே** - திருவடிக்கு

3021 **நின்தாள்** - நினது திருவடி

3022 **நினது சீர்கேட்கப்பண்** - நினது புகழைக்கேட்கும் படி செய்

3023 **நின்பால்** - நின்இடம்

3024 **நின்மயம்** - சிவமயம்

3025 **நின்மல நெஞ்சம்** - மலத்தில் அழுந்தாத மனம்

3026 **நின்மலம்** - மலமின்மை.

3027 **நின்மலர்** - மலம் மாயைத் தாக்கம் இல்லாதவர்

3028 **நின்முகம்** - கனிமுகம்

3029 **நின்றனக்கோர் விண்ணப்பம்** - உனக்கு ஓர் வேண்டுகோள்

3030 **நின்றான்** - ஈந்தருள்கின்றான்

3031 **நின்னார் அளகம்** - கூந்தல்

3032 **நினைத்தி** - நினைப்பாயாக,எண்ணுவாயாக

3033 **நினைப்பித்தால்** - நினைக்கும்படிசெய்தால்

3034 **நினைவீரேல்** - எண்ணினால்

3035 **நிஷேபமே** - புதையல்.

நீ

3036 **நீட்டாலும்** - வசனத்தாலும்

3037 **நீடு** - எப்பொழுதும்

3038 **நீடு அகத்தில்** - பெரிய தம் உள்ளத்தில்.

3039 **நீத்தத்திலே** - துன்பவெள்ளத்திலே

3040 **நீத்தவர்** - நீங்கியவர்

3041 **நீத்தாடும்** - கங்கைசூடி ஆடுகின்ற

3042 **நீதாவாய்ஆனால்** - நீ விரும்பாவிட்டால்

3043 **நீதன்** - நீதிஉடையவன்

3044 **நீபத்து** - காரணத்திற்கு

3045 **நீப்பது** - நீக்குவது.

3046 **நீர்** - சலம்,நீவீர்

3047 **நீர்செல்லல்** - நீர் செல்லல் வேண்டாம்

3048 **நீர்நாகம்** - தண்ணீர்ப்பாம்பு

3049 **நீர்ப்புணை** - நீரில் மிதக்கும் தெப்பக்கட்டை

3050 **நீர்மேவா** - நீர் இதுவரை அனுபவித்தறியாத

3051 **நீர்மையினால்** - தன்மையால்

3052 **நீருரு** - கங்கை உருவம்

3053 **நீரை** - கங்கையை

3054 **நீரோட்டில்** - நீரோட்டத்தில்.

3055 **நீலமுறாக்கால்** - விடத்தை அணியாவிட்டால்

3056 **நீலி** - பெண் அணங்கு

3057 **நீழலில்** - நிழலில்

3058 **நீள்மதுரம்** - மிகுந்த இனிப்பு

3059 **நீள்வளையம்** - பெரிய பூமி.

3060 **நீளாக்கும்** - நீளத்தை உடையாகிய

3061 **நீறணியா ஈனர்மனை** - திருவெண்ணீறு தரிக்காத இழிந்தோர் வீடாகினும்.

3062 **நீற்றணி** - விபூதி பூசிய அழகிய முகம்

3063 **நீறுஆனார்** - சாம்பலானார்.

3064 **நீறுடையாய்** - திருநீறு அணிந்தவனே

நு

3065 **நுங்கினும்** - விழுங்கினாலும்.

3066 **நுண்ணுணர்வு** - நுட்பமாகிய அறிவு.

3067 **நுதல்** - நெற்றி.

3068 **நுதல்கண்ணப்பா** - நெற்றிக்கண்ணை உடையவனே

3069 **நுதற்கண் சுமந்தான்** - நெற்றிக்கண் உடைய சிவ பெருமான்.

3070 **நுதற்கரும்பே** - நெற்றிக்கண் உடைய சிவன் எனும் கரும்பே

3071 **நுவல்கேனோ** - செல்லேனோ.

3072 **நுழைகின்றேன்** - சேர்கின்றேன்

நூ

3073 **நூல்துறையில் நின்றவர்கள் நோக்கி மகிழ்தல்** - சாத்திர வழியில் நின்றவர்களாகிய ஞானிகள் தரிசித்து மகிழ்ச்சி யடைகின்ற.

நெ

3074 **நெஞ்சடக்கி ஆன்று நிறைந்தோர்** - மனத்தைத் தடுத்து நற்குணங்களெல்லாம் நிறைந்திருப்பவர்க்கு.

3075 **நெஞ்சு** - மனம்.

3076 **நெட்டி** - நெட்டிப்பூ

3077 **நெடியனே** - திருமாலே

3078 **நெடுங்கண் மலைமானுக்கு** - நீண்ட கண்களை உடைய உமையவளுக்கு

3079 **நெடுங்களம்** - நித்ய சுந்தரர் - ஒப்பிலா நாயகி. இதய பூர்வமாக வரும் பக்தர்கட்கு உதயமாகி உதவுகின்ற ஈஸ்வரன். திருவெறும்பூறுக்கு வடகிழக்கே 13 கி.மீ. நெடுங்களம்.

3080 **நெடுங்காலாய்** - சுழலும் காற்றாய்

3081 **நெடுந்தேரூரணிவீதிச் சீரூர் மணிமாட ஆரூர்** - நெடிய தேர்கள் நடக்கின்ற அழகிய தெருக்களையும் கோயில்களையுமுடைய திருவாரூர்.

3082 **நெய்விட்டவாறு** - நெய்வார்த்ததுபோல

3083 **நெருநல்** - நேற்று.

3084 **நெல்வாயில்** - திருநெல்வாயில்

3085 **நெல்வாயில் அரத்துறை** - அரத்துறைநாதர் - அநந்த நாயகி. சீர்காழிப் பிள்ளையிடம் பாடல்பெறவே முத்துக் குடை தந்த சத்யநாதர். பெண்ணாகடத்தின் மேற்கே 5 கி.மீ.

3086 **நெறியும்** - மார்க்கமும்

3087 **நென்மாலை** - அரிசி மாலை

3088 **நென்னல்** - முந்தையநாள்

3089 **நென்னல்என** - நேற்றுப் போலவே

நே

3090 **நேசத்தில்** - அன்பினால்

3091 **நேசம்** - நேயம், அன்பு

3092 **நேசிக்க** - எண்ணி அன்பு காட்ட

3093 **நேடி** - தேடி

3094 **நேயம்** - சிநேகம்.

3095 **நேயம் என்னோ** - அன்பு எத்தகையதோ

3096 **நேயமே** - அன்பே

3097 **நேயர்கள்தம்** - அன்பர்கள்தம்

3098 **நேயா** - அன்புடையாளே

3099 **நேயா** - கணவனே

3100 **நேர்** - நிகர்

3101 **நேர** - பொருந்த,போல

3102 **நேர்சான்றோர்** - உள்ளத்தூய்மை உடையோர்

3103 **நேர்தல்** - விடை சொல்லுதல்.

3104 **நேர்விழியார்** - ஒத்த கண்களை உடையவர்

3105 **நேராய்** - வெளிப்படையாக

3106 **நேரிடைப்பெண்** - நிகரான இடையை உடைய உமை

3107 **நேருருவில்** - சரியான வடிவில்

நை

3108 **நையாது** - வருந்தாது

3109 **நையாமல்** - வருந்தாமல்.

3110 **நைவேதனம்** - தியாகம்.

நொ

3111 **நொந்து** - வருந்தி

3112 **நொறில்** - விரைவு; அடக்கம்.

நோ

3113 **நோக்காது** - நினைக்காமல்

3114 **நோக்கினால்** - பார்த்தால்

3115 **நோவதே** - வருந்துவதாம்

ப

3116 **பக்கம்** - அணுபட்சம் ,சம்பு பட்சம்

3117 **பக்தன்** - பக்திஉடையவன்

3118 **பகர்(தல்)** - புகழ்தல்

3119 **பகர்அனந்தாஅனந்தம்** - புகழ்ந்து கூறும் மெய்ப்பொருள் முடிவுகளுக்கும் முடிவானது.

3120 **பகர்சுகாரம்பம்** - மேலான பேரின்பம் தோன்றும் இடம்.

3121 **பகர்சுபாவம்** - ஒளிரும் தத்துவ குண இயல்பு.

3122 **பகர்வார்** - சொல்லுவார்

3123 **பகரப்பெற்ற** - சொல்லப்பட்ட

3124 **பகராதாகி** - சொல்லமுடியாததாகி

3125 **பகல்** - பகல் நேரம்; வெளிச்சம்

3126 **பகாதீதம்** - பகுத்தறிய இயலாதது; அவாவற்றது.

3127 **பகாப்பொருள்** - பிரிக்கப்படாத பொருள்.

3128 **பகிரங்கம்** - வெளிப்படையானது.

3129 **பகைத்தவன்** - பாம்பின் மீது சயனித்திருப்பவனாகிய விஷ்ணு.

3130 **பங்கம்** - தாழ்வு.

3131 **பங்கேருகம்** - தாமரை

3132 **பச்சை** - புதன் கிழமை

3133 **பச்சைக்கொடி** - உமாதேவி

3134 **பச்சைமணி** - உமாதேவி

3135 **பச்சைமுகில்** - ஒப்பற்ற பச்சை நிறமுள்ள மேகம்.

3136 **பசித்தழலும்** - பசி நெருப்பும்

3137 **பசியதொடை** - புதிய மாலை

3138 **பசுங்குயிலே** - இளம் குயில் போன்ற வடிவாம்பிகையே

3139 **பசுந்தேன்** - பசுந்தேன் போன்ற உமையவள்

3140 **பசுபதி** - உயிர்களுக்கு நாயகன்; சகல ஆன்மாக் களுக்கும் தலைவன்.

3141 **பசுபாச பாவனம்** - உயிரும் மாயையும் தோன்றும் சான்றிடம் (அ) அத்தாட்சியிடம்; நியாய இடம்; சுத்த இடம்.

3142 **பசும்கோமளப்பெண்** - பசுமை நிறமுடைய உமையவள்

3143 **பசுமண்** - பசுமண்பாண்டம்

3144 **பசும்பாண்டம்** - பசுமண்பாண்டம்

3145 **பசுவாகி** - சீவனாகி

3146 **பசுவில்** - காளையில்

3147 **பஞ்சகம்** - பிற தாண்டவங்கள்; அற்புத அனவரத ஆனந்த பிரளய சங்கார தாண்டவங்கள்.

3148 **பஞ்சடையா** - பார்வை போவதற்கு முன்

3149 **பஞ்சத்திலே** - பஞ்சுபோல

3150 **பஞ்சப் பொறிகளால் வாடுதல்** - ஐம்புலன்களினால் துன்புறுதல்.

3151 **பட்டம்** - பருவம், பருவஅழகு

3152 **பட்டி மாட்டுத்தலை** - பட்டியில் கட்டிய ஊர் மேயும் மாட்டின் தலை

3153 **பட்டீசுவரம்** - பட்டீசுவரர் - பல்வளைநாயகி. காமதேனுவின் கன்றாகிய பட்டி வழிபட்ட திருத்தலம். குடந்தையின் தென்மேற்கே 10 கி.மீ.

3154 **பட்டுள்** - பட்டுக்கு,உடுத்தும்

3155 **படகம்** - திரை

3156 **படர்ந்து உறையேல்** - போய்தங்காதே.

3157 **படர்நெஞ்சு** - சூழ்ந்தமனம்

3158 **படனம்** - பாராயணம் செய்யக் கூடியது; படித்து உணரக்கூடியது.

3159 **படிக்காசு** - பொற்காசு,குற்றமாகும்படி

3160 **படிபட்டமாயை** - உலகமாயை

3161 **படிவுற்ற** - மானிடதேகம் பெற்ற

3162 **படை** - சிருட்டி, ஆயுதம்

3163 **படைஇலையோ** - பரிவாரம், கருவி இல்லையோ

3164 **படைத்தீர்** - உடையவரே

3165 **படைப்பை** - சிருட்டித்தல் தொழிலை

3166 **படையன்ன** - வேல்போன்ற

3167 **பண்** - சொல்லப்பட்ட

3168 **பணங்கோடி** - மாணிக்கங்கள் பல கோடி

3169 **பண்செய்த சொல்** - கீதம் இனியமொழி

3170 **பண்டங்கள்** - பொருள்கள்

3171 **பண்டாரை** - புகழும்நிலவு

3172 **பண்ணால்** - தேவார இசையால்

3173 **பண்ணீர்மைகொண்ட தமிழ்ப் பாமாலை** - பண்ணின் குணத்தைக் கொண்ட தமிழ்ப்பாடல்கள்.

3174 **பண்ணீர்மொழியால்** - பாடும் சொற்களால்.

3175 **பண்ணுதல்** - துதிசெய்தல்

3176 **பண்ணுறும்** - சொல்லுதற்குரிய.

3177 **பணம்** - செல்வம்,பாம்பின் படம்

3178 **பணம்ஒன்று** - பாம்பின்படம் என்று சொல்லும்

3179 **பண்மயமே** - பண் உருவே.

3180 **பண்ணார்** - நற்குணம் நிறைந்த; பாம்பு

3181 **பணிந்து ஒன்று ஈதல்** - வணங்கி ஒரு பொருளைக் கொடுத்ததேயில்லை.

3182 **பணியாக்கொண்டு** - அணிகலனாகத் தரித்து

3183 **பணியாது** - வணங்காது

3184 **பத்திரம்** - பச்சிலை,இலைப்போன்ற குறி

3185 **பதப்பேறு** - திருவடி நிழல்

3186 **பதம்** - புகழ்; வேத வார்த்தை; உயிரின் நிலைப்பாடு

3187 **பதம்கொள்** - இதமுடைய

3188 **பதம்பொருந்த** - பக்குவமடைய

3189 **பதி** - தலைவன்; முதற்பொருள்

3190 **பதி வாழ்வு** - சிவபெருமான்இடமாகிய சிவபோக வாழ்வு.

3191 **பதிக்குஅண்ணி** - ஊருக்கு அணுகி

3192 **பதிகச்சுருதி** - தேவாரப் பாடல் சுவை

3193 **பதித்தருளே** - உளத்தில் சூட்டி அருள்க

3194 **பதித்துவம்** - தலைமை தாங்குவது; முதன்மை உடையது; மேலாம் தன்மையது.

3195 **பதியாம்** - தலைவனாகிய

3196 **பதியும்** - நிலைபேறு அடையும்

3197 **பதிவேடு** - இன்பம்பதியும் இடம்

3198 **பந்தணை நல்லூர்** - பசுபதீசர் - வேயுறுதோளி. பசுவும் கன்றுமாய்ப் பார்வதி, முருகன் வந்தருள் தந்தது. திருப்பனந்தாளின் வடகிழக்கே 12 கி.மீ.

3199 **பந்தத்தால்** - மாயையால் உண்டாகும்

3200 **பந்தபாசம்** - கட்டாகிய பாசம்

3201 **பந்தமற்ற** - மலக்கட்டுப்பாடற்ற

3202 **பம்புகின்ற** - நெருங்குகின்ற.

3203 **பயந்த** - பெற்ற.

3204 **பயன்பல** - பல்வகைப் பயன்கள்; பலவகைப் பலன்

3205 **பரகிதம்** - நுட்பமாக நின்று நன்மை தருவது.

3206 **பரகேவலம்** - மேலான உறுதிப்பொருள்.

3207 **பரசாக்கிரம்** - மேலான உயிர்நிலை விழிப்பு

3208 **பரசிவம்** - இறைவன்திருவடியில் விளங்கும் பெரிய பதத்தலைவர்; பரசிவ பரம்பொருள்

3209 **பரசிவமே** - ஆகம நெறிக் கடவுளே; பரா சத்தியுடன் விளங்கும் பரசிவக்கடவுள்

3210 **பரஞ்சுடர்** - பேரொளியே.

3211 **பரதுரியஅனுபவம்** - சுத்த பரரூப தரிசன நிலை அனுபவம்.

3212 **பரதுரியநிலை** - உயிர்நிலை; இயற்கை அருள் அறிதுயில், ஜீவதுரியத்திற்கு மேம்பட்ட நிலை

3213 **பரநாத தத்துவாந்தம்** - பிரமன் முதலிய கீழ் நவநிலைகளின் முடிவு இடம்; தன்னை உணரும் நிலைக்கு முடிவான இடம்; இறைவன்திருவடி விளங்கும் இடம்; கோடி சூரிய பிரகாசமுடைய தன்மைக்கும் மேம்பட்ட இடம்.

3214 **பரநாத நிலை** - தன்னையும் இறைவன்திருவடியையும் தரிசிக்கும் இடம்

3215 **பரநாதன்** - மேலான தலைவன்,ஆன்மாவின் தலைவன்

3216 **பரபதம்** - பேரின்ப நிலையானது.

3217 **பரப்பில்பட்டே** - உலகியலில் அடிபட்டு

3218 **பரபரீணம்** - நித்தியமாம் மேன்மையுடையது; மேன்மை முடிவுடையது.

3219 **பரம்** - தேகம்; காரணஉடம்பு; பாரம், நினது கடமை; பேரின்பத் தகைமையது; மகாதேவன்; பரத்துவப் பொருள்; மேலான பொருள்.

3220 **பரம இன்பம்** - மேலான தேவரின்பம்

3221 **பரம சுத்தாத்விதானந்த அனுபூதிகம்** - மேலானதும் தூயது மான ஒருமையாம் அனுபவ நிலைக்கு அப்பாற்பட்டது.

3222 **பரமகருணாம்பரம்** - மேலான அருள்வெளி நிலை.

3223 **பரமகைவல்யம்** - ஒப்பற்ற சக்தியை அளிப்பது.

3224 **பரமசாத்தியம்** - மேலாம் அனுபவத்திற்குரியது.

3225 **பரமசித்தாந்தம்** - மேலான அறிவின் முடிவானது; மேலான கொள்கை முடிவானது; மேலான விளக்க முடிவானது.

3226 **பரமசிவமே** - மேலான சிவமே.

3227 **பரமசூட்சமம்** - மேலான ஆதி நுண்மையானது.

3228 **பரமசேதனம்** - மேன்மையாம் அறிவுடையது.

3229 **பரமநிதியம்** - மேலான அருட்செல்வம்.

3230 **பரமநிருத்தன்** - மேலான நடனம் புரிபவன்.

3231 **பரம்பரம்** - காரண சிவ நிலை; சிற்சொரிதை; பரைக்கும் மேம்பட்ட அதிகார நிலையம்.

3232 **பரம்பரமாய்** - சிவசாக்கிர நிலை

3233 **பரம்பரை** - பரைக்கும் மேற்பட்ட சக்திநிலை

3234 **பரமபோகம்** - மேலான போக போக்கியத்தை உடையது.

3235 **பரமபோகமே** - மேலான விளைவே.

3236 **பரமபோதம்** - மேலான மெய்யறிவுடையது.

3237 **பரமபோதாதிக்கம்** - விண்ணுலகங்களை ஆட்சி செய்வது

3238 **பரமம்** - ஆகமமெய்ப்பொருள்

3239 **பரமமோட்சம்** - மேலாம் வீடுபேறுடையது.

3240 **பரமயோகம்** - மேலாம் ஒருமையுடையது.

3241 **பரமயோகி** - மேலான தவசி

3242 **பரமாகாச இயல்பாகி** - இயற்கை உண்மைப் பெருவெளி முன்னிலையாகி

3243 **பரமாகி** - உள்ளமாகி

3244 **பரமாநந்தம்** - உயிர்இன்பம்

3245 **பரமார்த்த நிலையாகி** - உள்ளத்துக்கு மேற்பட்ட பீடமாகி; இயற்கை உண்மைப் பெருவெளி நிலையாகி

3246 **பரமார்த்தம்** - மேலான உறுதிப்பொருளானது.

3247 **பரமார்த்தன்** - மேலாய்உள்ள பொருளானவன்.

3248 **பரமாற்புதம்** - மேலாம் அற்புதம் பொருந்தியது.

3249 **பரமானந்த அதீதம்** - மேலாய இன்பத்தின் முடிபு.

3250 **பரமானுகுணம்** - மேலாம் ஒழுங்குடையது.

3251 **பரமே** - மகாதேவனே

3252 **பரமேச்சுரன்** - மேலான கடவுள்; கடவுள்.

3253 **பரமேட்டிமையே** - மேலான பெருமையே.

3254 **பரவெளி** - மெய்ஞ்ஞான வெளி

3255 **பரவிந்து** - பரநாத நிலைக்குக் கீழ்நிலை

3256 **பரவியோமம்** - மேலான வெளிநிலை; பரசுழுத்தி (உறக்கத்து)க்கு உரிய பரப்பிரம்மம்.

3257 **பரவு அநர்த்தம் அட்டும் ஒளிசெய்தல்** - பரவிய அநர்த்தங்களைத் தொலைத்து ஒளியைச் செய்கிற.

3258 **பரவுசாக்ஷாத்காரம்** - வழிபடக் கண்கூடானது.

3259 **பரவுதல்** - வணங்குதல், வழிபடுதல்

3260 **பரவெளி** - பரமாகாசம்

3261 **பரவெளி** - பூதவெளிக்கு மேம்பட்ட ஆகாயம் (சிதாகாயம்).

3262 **பரவை** - சுந்தரரின் மனைவி

3263 **பரவைக்குத் தூது நிற்றல்** - பரவை நாச்சியாரது அழகிய வீட்டுக்குத் தூதாகிச் சென்றனையே.

3264 **பராஅமுதம்** - பேரின்ப அமுதம்.

3265 **பராசக்தி** - பரசிவத்துடன் கூடி செயலாற்றும் சக்தி.

3266 **பராபரம்** - பரசிவத்திற்கும் மேம்பட்ட தெய்வப் பேறுடையது; பரசிவம்; பரத்தின் மேற்பட்ட சிவநிலை

3267 **பராபரமே** - எல்லாமாகி இருப்பவர்

3268 **பராமுகம்** - பாராதிருத்தல்

3269 **பரானந்த புரணபோகம்** - பேரின்பம் தரும்

3270 **பரிக்கிரகநிலை** - சுத்தமாயை நிலை

3271 **பரிகதம்** - நல்லறிவு விசாரணை உடையது.

3272 **பரிசது** - தன்மை அதுதான்

3273 **பரிசயாதீதம்** - தொட்டு அறிவதற்கு அப்பாற்பட்டது; பரிசித்து அறிவதற்கு மேம்பட்டது.

3274 **பரிசினர்** - தன்மையுடையவர்.

3275 **பரிசினராய்** - நன்மையுடையவர்களாகி.

3276 **பரிசு** - தன்மை.

3277 **பரிதிநியமம்** - பரிதியப்பர் - மங்கலநாயகி. ஏகசக்ர ஏழுவண்ணக் குதிரைத் தேரன். பங்குனியில் பாதிநாள் இங்குப் பூஜை நடைபெறும். தஞ்சாவூருக்குத் தென்கிழக்கே 10 கி.மீ.

3278 **பரிந்திலதே** - இரங்கவில்லையே

3279 **பரிந்து ஏத்தி** - விரும்பித் துதித்து.

3280 **பரிபவ விமோசனம்** - அவலக் கவலை நீக்கியது.

3281 **பரிபாக(ம்)** - பக்குவத் தன்மையுடையது; முதிர்ச்சி யுடையது.

3282 **பரிபூத சிற்குணாந்தம்** - சுத்த பூத குணஅறிவின் முடிவிடம்.

3283 **பரிமிதாதீதம்** - அளவுக்கு உட்படாதது; அப்பாற்பட்டது.

3284 **பரிவில்** - இரக்கத்தோடு

3285 **பரிவேத்தியம்** - மேலாம் சம்பாதியத்தைத் தருவது.

3286 **பரிமளியா** - மணம் வீசும்

3287 **பருக்கும்** - பெரியதாகும்

3288 **பரை** - பராசக்தி

3289 **பரையாதி** - ஆதிபரை - பரை - பரம்பரை - பராபரை- சிதம்பரை முதலிய சிவசக்திகளின் ஐவகை ஒளிக்கிரணங்கள். (ஒளிமயமான திருமேனியை உடையவர்கள்)

3290 **பரையின் செம்மையாகி** - பராசக்தியின் சீரிய நடைமுறை யாகி

3291 **பரோக்ஷஞானாதீதம்** - கட்புலன் ஆகாதது; அறிவு நிலைக்கு அப்பாற்பட்டது; அறிவுக் கண்ணுக்கும் எட்டாதது; கருணைக் கண்ணுக்கு எட்டக்கூடியது.

3292 **பரோதயம்** - பேரின்பப் பிரகாசம் தோன்றும் இடம்.

3293 **பல்கால்** - பலமுறை

3294 **பலகோடி வய உருத்திரர்** - பலகோடியாய்பொருந்தும் சிவமூர்த்தியர்.

3295 **பல்நற்குடி** - பலவாகிய நல்லகுடிகளும்.

3296 **பல்நாள்** - பலகாலம்

3297 **பல்பிண்டம்** - பல்வகைத் தேகநிலை

3298 **பலம்** - பழம் தரும் பயன் மரங்கள்,வலிமை

3299 **பல்ல** - பலவாறு

3300 **பல்லவனீசுவரம்** - பல்லவனேசுவரர் - சுந்தரநாயகி. பல்லவன் கட்டிய கோயிலிது. பூம்புகார்ப் பட்டின வரலாற்று வாயில். சீர்காழிக்குத் தென்கிழக்கே 16 கி.மீ. தூரத்திலே காவிரி கடல் கூடும் சங்கமம்.

3301 **பலி** - பிச்சை

3302 **பலிஏற்றவனே** - பிரமன் தலையில்பிச்சைச் சோறு ஏற்றவனே

3303 **பலிக்க** - நடக்க

3304 **பலிக்கு ..... செல்லல்** - பிச்சையின் பொருட்டு திருவடிகள் சிவக்கும்படி நடந்துபோய்

3305 **பவக்கடல்** - பிறவிக்கடல்

3306 **பவசாதனம்** - பிறவியில் வீழும் பழக்கம்

3307 **பவபந்தநிக்ரகம்** - பிறவித்தளைகளை அழிப்பது.

3308 **பவம்** - பிறப்பு

3309 **பவம்சேர** - பிறப்பில் சேர்ந்திட

3310 **பழமறைகள்** - பழமையாகிய வேதங்கள்

3311 **பழனம்** - வயல்

3312 **பழிக்கஞ்சினாய்** - வேடன் அம்பு எய்தி தன் மனைவியைக் கொன்றான் என்னும் பழியைப் போக்கியவனே

3313 **பழிசொற்றார்** - பழி பேசினவர்

3314 **பழியின்று** - குறையல்ல

3315 **பழுத்து** - முதிர்ச்சியடைந்து.

3316 **பழையனூர் நீலி வாதடக்கும்** - பழையனூர் நீலியாகிய காளியின் வாதை ஊர்த்துவ நடனம் செய்து அடக்கின.

3317 **பழையாறை வடதளி** - சோமேசர் - சபாநாயகி. ஒரே இடம்,இரு கோயில். கௌரி தீர்த்தம்,சோமதீர்த்தம். பட்டீசுவரத்திலிருந்து தென்கிழக்கிலே 2 கி.மீ.

3318 **பள்ளி** - படுக்கை அறை

3319 **பள்ளிகொண்டான்** - திருமால்

3320 **பள்ளியிடுங்கால்** - கல்விச் சாலையில் சேருங்காலத்தில்.

3321 **பள்ளியின் முக்கூடல்** - முக்கோணநாதர் - மைமேவுக் கண்ணி. ஆலயம் பதிமூன்று உள்ள ஊர். அனைவர்க்கும் அருள் தரும் நல்ல ஊர். திருவாரூருக்கு வடகிழக்கே 5ஆவது கி.மீஇல் இவ்வூர்.

3322 **பளிக்கு** - படிகநிறம்

3323 **பற்பலகால்** - கணக்கற்ற தடவை

3324 **பறவைப்பெயர்** - தூக்கணாங்குருவி

3325 **பறவையதாம்** - அஞ்சுகம்,கிளி

3326 **பற்றறியா** - பிரபஞ்சப்பற்று அறியாத

3327 **பற்றாநின்று அருள்** - சேர்ந்து ஆட்கொள்ளும்

3328 **பற்றி** - விரும்பி

3329 **பற்று** - அகம் புறம் ஆகிய ஆசைகள்

3330 **பறிகொடுத்து** - இழந்துவிட்டு

3329 **பறித்தது** - நீக்கியதை

3330 **பறையோசை** - பிணப் பறையின் ஒலி.

3331 **பனங்காட்டூர் -** பனங்காட்டீசர்- அமிர்தவல்லி. பனங் காட்டின் ஆலயத்துள் சிவசத்தியரின்இரு சந்நிதிகள். காஞ்சிக்குத் தெற்கே ஆர்க்காடு சாலையிலே 14 கி.மீ. (திருப்பனங்காடு)

3332 **பன்றிக் குட்டிக்கு முலைப்பால் ஈதல்** - பன்றியின் முதிராத குட்டிகளுடைய துன்பத்தைக் கண்டு பொறுக்காமல் அக்காலத்தில் தாயாகி முலைப்பாலையும் ஊட்டினையே.

3333 **பன்னிருக்கண்ணா** - முருகனே

3334 **பன்னும்** - சொல்லப்படும்

3335 **பனிக்கவல்ல** - நியமிக்கவல்ல.

3336 **பனிநீர்** - பன்னீர்.

3337 **பனுவல்** - நூல்

பா

3338 **பாக** - உமையாள் பங்கனே

3339 **பாகம் கலந்து** - இடது பாகத்தில் கலந்து

3340 **பாகனை** - பக்கம் உடையவனை

3341 **பாகுஇலை** - பாக்கு,வெற்றிலை.

3342 **பாங்கர்** - பக்கம்; பரவை வீட்டிற்கு

3343 **பாங்குள** - பக்கத்தில் உள்ள

3344 **பாசம்** - மலக்கட்டு

3345 **பாச்சிலாச்சிராமம் -** மாற்றறிவரதர் - பலசௌந்தரி எக்காலத்தும் பழித்தற்குரிய குற்றம் சிறிதும் இன்றி மங்கலமே சிறந்து விளங்கும் தலம். இவ்வூர் திருவாசி என மருவி வழங்குகிறது.

3346 **பாடாண்திணை** - கடவுளாகிய ஆண்மகனின் வீரம், தீரம், கொடை, புகழ், அறிவு முதலியவற்றைப் புகழ்ந்து பாடுவது

3347 **பாடை** - பிணம் தூக்கும் கருவி.

3348 **பாண்டிக் கொடுமுடி** - மகுடபதி - சௌந்தர்ய நாயகி. குறுமுனி அகத்தியர் லிங்கம் வைத்துக் கும்பிட்ட கயிலைக் கோயிலிது. ஈரோடுக்கு தென்கிழக்கே 39 கி.மீ. இவ்வூர்.

3349 **பாணனுக்கு விறகு விற்றல் -** பாணன் பொருட்டாக அடிமைத் தொழிலை விரும்பி விறகெடுத்து விற்றாயே.

3350 **பாணி** - திருக்கரங்கள்

3351 **பாணிக்குமோ** - பின்படுமோ

3352 **பாத்துண்டே** - படுத்து உண்டே

3353 **பாதகம்** - பாவம்.

3354 **பாதகனேன்** - பாவியேன்

3355 **பாதமலர் வாய்க்கும்** - திருவடிப்பேறு கிடைக்கும்.

3356 **பாதலத்தோர்** - கீழ்உலகத்தவர்

3357 **பாதன்என்கோ** - திருவடியை உடையான் என்று கூறவோ

3358 **பாப்பட்ட** - பாம்பரணம் பூண்ட

3359 **பாம்பணியை** - பாம்பாபரணத்தை

3360 **பாம்பு** - பாம்பு போன்றது

3361 **பாம்பு அணிந்த நாமம்** - படம்

3362 **பாய்ச்சினும்** - குத்தினாலும்

3363 **பாயிரம்** - முகவுரை

3364 **பார் சிறு நடை** - உலகியல்இழிந்த நடை

3365 **பார்த்திடினும்** - பார்த்தால்

3366 **பார்தருவார்** - காணிநிலம் தருவார்

3367 **பாரநமன்** - பெரிய எமன்.

3368 **பார்ப்பதி** - பார்வதி

3369 **பராய்முருட்டுக் கட்டையேயோ** - வடிவம் ஒழுங்கு இல்லாத உறுதியானபராய் என்னும் மரத்தின் கட்டையோ

3370 **பாருஉண்ட காட்டில்** - பருந்துகள் உண்ட சுடுகாட்டில்.

3371 **பால்** - பரிசுத்தம்.

3372 **பால் ஒன்று** - இடப்பாகத்தில் பொருந்திய

3373 **பாலர்** - இளையவர்,வாலிபர்

3374 **பாலலீலை** - இளம்பருவ விளையாட்டு.

3375 **பாலறியாதவன்** - சென்று அறியாதவன்

3376 **பாலே** - இடப்பாகத்தில்

3377 **பாலைப்பருவம்** - இளம்பருவம்

3378 **பாவலர்க்கு** - பாடகர்கட்கு

3379 **பாவனாதீதம்** - நினைவிற்கு எட்டாதது; பாவனைக்கு அப்பாற்பட்டது போலக் கருதுதல்; ஒன்று ஒன்றாகப் பாவித்தல்.

3380 **பாவாய்** - பாவை போன்றவளே; பாடலாகி; பெண்ணே

3381 **பாவை** - பிரதிமை.

3382 **பாழ்அலைவான்** - பாழாய்அலையும் பொருட்டு.

3383 **பாழ்த்த** - பாழடைந்து

3384 **பாழ்வயிறு** - மலவயிறு

3385 **பாற்றக்கணத்தார்** - கழுகுக் கூட்டத்தை உடையவர், பேய்க்கூட்டத்தார்

பி

3386 **பிச்சன்** - பிச்சைக்காரன்

3387 **பிச்சார்** - பித்தேறினார்

3388 **பிச்சை** - பிடிசோறு, அளவு குறைவாக தரும் உணவு; மதி மயக்கம்

3389 **பிச்சை எடுப்போம்** - காம மயக்கத்தை நீக்கித்தருவோம்

3390 **பிச்சை பெருந்தகையே** - பிச்சையேற்கும் பெரும் கடவுளே

3391 **பிச்சைப்பெருமான்** - பிச்சை எடுக்கும் தலைவர்

3392 **பிட்டின்** - வந்தியின் உலர்ந்த பிட்டிற்காக

3393 **பிடி** - உமையாள்

3394 **பிடிபட்ட** - அன்பின்பிடியில் அகப்பட்ட

3395 **பிடியே** - தெய்வயானையே

3396 **பிடிவாதம்** - பிடிவாதம் உடையவர்; செம்பைப் பொன்னாக்குபவர்

3397 **பிணக்கற** - மாறுபாடில்லாமல்

3398 **பிணங்கேம்** - மாறுபடமாட்டோம்

3399 **பிண்டங்கள்** - உயிர்வகைகள்

3400 **பிண்டபேதங்கள்** - உடல் வேறுபாடுகள்

3401 **பித்தா** - இறைவா

3402 **பித்தேன்** - பைத்தியக்காரன்

3403 **பிதிர்ந்து உதிர** - சிதைந்து வெளிப்பட.

3404 **பிரமகுலம்** - அந்தணகுலம்

3405 **பிரமம்** - சகாரணன்

3406 **பிரமமே** - வேதநெறிக்கடவுளே

3407 **பிரமவித்தம்** - பிரமம்,பரப்பிரம்மம்,கூடஸ்த பிரம்மம், (உரோம சாட்சிபிரமம், சர்வ பிரமம்) தோன்றும் வித்தின்இடம்.

3408 **பிரமாண்டம்** - அக்னி, சூரியன், சந்திரன், விண்மீன் விளங்கும் பேரிடம்; நான்முகனின் ஆட்சிஇடம்.

3409 **பிரான் நீ** - பெருமானே நீயோ

3410 **பிரிபோதும்** - பிரியும் போதும்,விரியும் போதும்

3411 **பிலத்தோடு** - பாதாளத்துடன்

3412 **பிலம்** - பாதாளம்.

3413 **பிழம்பு** - ஒளித்திரட்சி

3414 **பிளவிறந்து** - பிளவின்றி

3415 **பிள்ளை** - இளமை அழகு

3416 **பிள்ளைப் பேர்முடித்த** - பிள்ளை என்னும் பேருடைய கொன்றை மலர்சூடிய

3417 **பிள்ளை மதி** - இளம்பிறை ,குறைந்த ஒளி உள்ள நிலவு

3418 **பிள்ளைக்கு** - புலிக்கால் முனிவர் குழந்தை, உபமன்யுவுக்கு

3419 **பிள்ளைபால்** - பெற்றெடுத்த குழந்தைக்குப்பால்

3420 **பிறங்கா நின்ற** - விளங்கா நின்ற

3421 **பிறங்கிடும்** - பின்னடையும்; பிற்பட்டு நிற்கும்

3422 **பிறங்கு கையை** - வளரும் கரத்தை

3423 **பிறங்குகின்ற** - விளங்குகின்ற

3424 **பிற்சநந மில்லாப் பெருமை** - பின்னே உண்டாவதாகிய பிறவியில்லாத பெருமையைக் கொடுக்கின்ற.

3425 **பிறப்பித்தது** - தோற்றுவித்தது

3426 **பிற்போதல்** - பின்படுதல்

3427 **பிறர்கேட்க** - மற்றவர்கேட்க

3428 **பிறவிஇலர்** - எப்பிறப்பும் இல்லாதவர்

3429 **பிறை முடித்து** - மூன்றாம் பிறையைச் சூடி

3430 **பிறைசூடி** - பிறைச்சந்திரனை முடியில் தரித்தவனே.

3431 **பின்ஈன்ற** - பின்பு பெற்ற

3432 **பின்கொடு** - பிற்படுத்தி

3433 **பின்பு அரிதாம்** - பின்னர் கடினமாகும்

3434 **பின்றாது** - பின்னிடாது.

3435 **பின்னிட்டு** - தோல்விகண்டு

பீ

3436 **பீடு** - பெருமை.

3437 **பீடுஆர்** - பெருமை நிறைந்த

3438 **பீழையை** - குற்றத்தை

பு

3439 **புகல்** - அடைக்கலம் கூறு; சொல்லப்படும்

3440 **புகல்கின்றிலேன்** - தருமத்தை எடுத்துச் சொல்லவில்லை

3441 **புகலி** - சீர்காழி என்னும் ஊர்

3442 **புகலிடம்** - அடைக்கலமாகும் இடம்

3443 **புகலிடமே** - அடைக்கலப்பொருளே

3444 **புகன்றிடவோ** - சொல்லவோ

3445 **புஞ்சம்** - திரட்சி.

3446 **புடை அம்புயம்** - பருத்து அழகிய தோள்கள்

3447 **புடைத்தீர்** - வலியை அழித்தீர்,பெற்று இருக்கின்றீர்

3448 **புடையிலையோ** - இடப்பக்கத்தில்இல்லையோ

3449 **புண் கட்டியாய்** - புண்ணுடைய கட்டியின் துன்பம் போல

3450 **புண்ணியமூர்த்தி** - ஜீவகாருணியமூர்த்தி

3451 **புண்ணியர்** - புண்ணியனே.

3452 **புண்ணியன்** - சிவபெருமான்.

3453 **புணர்த்துதியோ** - சேர்ப்பாயோ

3454 **புணர்ப்பு** - உபாயம்.

3455 **புணர்வு அரிய** - கூடுதற்குக் கடினமான

3456 **புணரி** - கடல்.

3457 **புண்வராகத் தலை** - இழிவான பன்றியின் தலை

3458 **புணை** - தெப்பம்.

3459 **புணையே** - தெப்பமே

3460 **புத்திமான் களரிலோட்டி** - அறிவுடையோர் குற்றத்தை ஓட்டி.

3461 **புது நறவே** - புத்தம்புதிய தேனே

3462 **புதைப்போரும்** - பதுக்கிவைப்போரும்

3463 **புந்தி** - புத்தி

3464 **புயங்கா** - எண் தோள்கள் உடையவனே

3465 **புயப்பால்** - மார்பிடமாக

3466 **புயல்** - முகில்

3467 **புரக்கின்றோய்** - பாதுகாக்கின்ற

3468 **புரக்கும்** - பாதுகாவல் செய்யும்

3469 **புரந்தருள்** - பாதுகாத்தருளுக

3470 **புரப்பது** - காப்பாற்றுவது.

3471 **புரம்** - முப்புரம்.

3472 **புராந்தகன்** - தாரகாசுரன் பிள்ளைகளாகிய வித்துன்மாலி (பொன்), தாரகாட்சன் (வெள்ளி) கமலாட்சன் (இரும்புக்) கோட்டைகளை எரித்தவன்.

3473 **புரி** - நீயே ஈந்திடுக

3474 **புரிசடையன்** - பிறையையுடைய நீண்ட சடையன்

3475 **புரிசடையாய்** - கட்டப்பட்டசடையுடையோனே.

3476 **புரிசடையோய்** - மூன்றாகப் பிரிந்த முடியுடையவனே;

3477 **புரிந்ததுஎது** - விரும்பிவந்தது எதற்கு

3478 **புரிந்திட** - அருள்செய்திட

3479 **புரியின்சடையீர்** - விரிந்து விளங்கும் சடையீர்

3480 **புருடனாய்** - சீவனாகி

3481 **புரையேற்று** - குற்றம் அடைந்து

3482 **புல்** - இழிந்த

3483 **புலம்பல்** - கதறுதல்

3484 **புலம்பு** - புலம்பல்

3485 **புலம்பு உற்றேன்** - புலம்புகின்றேன்

3486 **புலர்ந்து** - துன்பமடைந்து; வாடி; வெதும்பி; வாட்ட மடைந்து

3487 **புல்லர்** - இழிவுடையவர்; ஈந்திடாதவர்

3488 **புல்லுகின்றோர்** - உலகியல் வாதனையைச் சேர்கின்றவர்

3489 **புலவி** - சினம்

3490 **புலவேடர்கள் ஓர் ஐவர்** - சுவை முதலிய ஐம்புலவேடர்

3491 **புலன்** - ஐந்துபொறிகள்,உறுப்பு

3492 **புலனைந்தும்** - ஐம்புலன்களும்.

3493 **புலை வந்த** - புலால் உண்கின்ற

3494 **புலைகட்டிய** - இழிவினைத் தழுவும்

3495 **புலையலவோ** - புலைத்தன்மை அலவோ

3496 **புவனம்** - உலகம்

3497 **புவி** - பூமி

3498 **புவிநடையில்** - உலக நடையில்

3499 **புழை** - துவாரம்

3500 **புழை தோறும்** - துளைதோறும்

3501 **புளகம்** - மயிர்சிலிர்ப்புடைய

3502 **புள்ளிருக்கு வேளூர்** - வைத்தியநாதர் - தையல்நாயகி. சம்பாதி சடாயுவுடன் சண்முகனும் தொழுத இங்கே, மண்ணுருண்டையே மாமருந்து. 'வைதீசுவரன் கோயில்' எனும் வேளூர் சீர்காழியிலிருந்து தெற்கே 7 கி.மீ.

3503 **புற்கண்ட** - கீழான

3504 **புற்கென்ற** - தாழ்வான.

3505 **புற்கை** - உணவு, கூழ் உணவு

3506 **புறங்கடையில்** - தெருவில்

3507 **புறத்தில்** - அப்பால்

3508 **புறம்** - திரிபுரம், முப்புரம், வெளி

3509 **புறம் விடுத்து** - வெளி உலகில் அலைவு பட விட்டாலும்

3510 **புறம்பழித்தால்** - புறம் கூறினால்; பழி கூறினால்

3511 **புறம்பும்** - வெளியும்

3512 **புறவார் பனங்காட்டூர்** - பனங்காட்டீசர் - மெய்யம்மை. சித்திரை முதல்வாரம் சூர்யபூசை. சிபிச்சக்ரவர்த்திக்கு பரமசிவ ஆசி. 'பனையபுரம்'என வழங்கும் இவ்வூர் விக்கிரவாண்டிக்கு மேற்கே 6 கி.மீ.

3513 **புற்று** - கறையான் புற்று

3514 **புன் தலை** - இழிந்த தலை

3515 **புன்தலை ஏட்டில்** - புல்லிய தலை எழுத்தில்

3516 **புன்போகம்** - அற்ப இன்பம்; சிற்றின்பம்

3517 **புன்மை** - இழிவு; தாழ்வு.

3518 **புணை** - தெப்பம்

3519 **புனைபவரே** - கட்டுபவர்

3520 **புனையாவிடில்** - அலங்கரிக்காவிட்டால்.

3521 **புனைவு** - சம்பந்தம்.

பூ

3522 **பூஞைக்கு** - பூனைக்கு

3523 **பூங்காவனம்** - மலர்கள் நிறைந்த சோலைக்காடு

3524 **பூசாபலம்** - பூசை செய்வதனால் உண்டாகும் பலம்.

3525 **பூசைஓம்பல்** - பூசை செய்தல்.

3526 **பூட்டு** - உடலின் பொருத்து (உடலின் எலும்புப் பூட்டு)

3527 **பூண்** - அணிமணிகள்,ஆபரணங்கள்

3528 **பூண்ட** - அணிகலன் அணிந்த

3529 **பூத்தாவி** - மலர்களைப் பறித்து.

3530 **பூத்தாழ்வோர்** - பூமியில் தாழ்ந்தவர்.

3531 **பூதர்** - தேவ கணத்தில் ஒருவர்; தேவ வகுப்பினர்.

3532 **பூதாகாரியங்கள்** - பூதம் முதலாய தத்துவங்கள்.

3533 **பூந்தடமே** - மலர்த்தடாகமே

3534 **பூந்தாள்** - மென்மையாகிய

3535 **பூப்பது** - சிருட்டிப்பது.

3536 **பூப்பிட்ட காலத்தில்** - தீட்டு நேரிட்ட காலத்தில்

3537 **பூம்குழல்** - மெல்லிய கூந்தலை உடைய பெண்

3538 **பூமாது** - திருமகள்

3539 **பூரணம்** - நிறைவு.

3540 **பூரணமாகி** - நிறைவுடைய மெய்ப் பொருளாகி

3541 **பூவாய்** - மலர்போன்ற பெண்ணே

3542 **பூவார்** - பூவாடை

3543 **பூவில்** - பூமியில்.

3544 **பூவினை** - மலரினை

3545 **பூவுக்கரையர்** - பிரமதேவனும்

3546 **பூவுந்தியது** - தாமரையை வென்றது

3547 **பூவை** - பெண்ணினை; மலரினை

3548 **பூவொன்றும்கோன்** - பிரமன்.

பெ

3549 **பெண் பூத்த பாகமும்** - உமையாள் விளங்கும் இடப் பாகமும்

3550 **பெண்சாதி** - பெண்மகள், மனைவி

3551 **பெண்டுடன்** - மனையாளுடன்.

3552 **பெண்ணாக** - பூம்பாவையாக

3553 **பெண்ணாகடம்** - சுடர்க்கொழுந்தீசர் - கடந்தை நாயகி. செங்கட்சோழனின் 'தூங்கானைமாடம்' சிவலிங்கத்தின் தங்கஒளி. விருத்தாசலத்திலிருந்து தென்மேற்கே 18 கி.மீ. பெண்ணாகடம்.

3554 **பெண்முடித்து** - கங்கையைத் தரித்து

3555 **பெண்மை** - ஒருமை,உணர்வு

3556 **பெம்மான்** - இறைவன்; திருமால்

3557 **பெய்து** - அர்ச்சித்து.

3558 **பெயர்** - சூடிய பெயர்

3559 **பெரு மணியானே** - மேலான மணியானே

3560 **பெருக்கே** - வெள்ளமே

3561 **பெருங்கோள்** - பெரிய பழி

3562 **பெருஞ்சீர்** - பெரும்புகழுடைய

3563 **பெருந்தாரணி** - பெரிய உலகம்

3564 **பெருந்துணையாம்** - பெரிய உதவியாளராம்

3565 **பெரும** - பெருமானே

3566 **பெரும்தாரகம்** - பெரிய ஆதாரம்.

3567 **பெரும்பதம்** - உயரிய இன்ப நிலை

3568 **பெரும்புலியூர்** - வியாக்ரபுரீசர் - சுந்தர நாயகி. மாலுமொரு பாகனாய்உள்ள ஈசன் வியாக்கிரருக்கு மௌன ஆசான். திருவையாற்றுக்கு வடமேற்கே 4 கி.மீ. பெரும்புலியூர்.

3569 **பெரும்பேதையேன்** - பெரியஅறியாமை உடையேன்

3570 **பெரும்பை** - பாம்பின் விஷப்பை, ஆடை

3571 **பெருமை** - பெருந்தன்மை, பேரழகு உடையவராக (பிச்சாடனர்)

3572 **பெருவேளூர்** - பிரியாதநாதர் - பாகம்பிரியாள். மகா விஷ்ணுவின் மோகினி அம்சம் முற்றும் மாறிய திருத்தலமாம். கரவீர ஊருக்கு வடமேற்கே 1.5 மைலில் இவ்வூர்.நன்னிலத்துக்கு தென்மேற்கே 10 கி.மீ.

3573 **பெற்றபாவைக்கும்** - பெற்றெடுத்த அன்னைக்கும்

3574 **பெற்றாள்** - தாய்

3575 **பெற்றி** - நின்தன்மை

3576 **பெற்றிடுதாய்** - பெற்றெடுத்த தாய்.

3577 **பெற்றியைப்போல** - தன்மைபோல

பே

3578 **பேசும்** - புகழும்

3579 **பேடு** - அலி.

3580 **பேணுபெருந்துறை** - சிவானந்தர் - மலையரசி. பிரம்மனைக் குட்டியதால் ஊமையான முருகன் பேசிய கோயிலிது. கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 12 கி.மீ. பேணுபெருந்துறை.

3581 **பேதம்** - பிறப்பு வேறுபாடு; வேறுபாடுகள்; வேற்றுமை

3582 **பேதுற்ற** - தடுமாறி நின்ற

3583 **பேதுறினும்** - மதி மயங்கினாலும்

3584 **பேதை** - அறிவற்றபெண்

3585 **பேதையேன்** - அறிவிலியேன்; அறிவற்றவன்

3586 **பேயே** - பேதையே.

3587 **பேர் அருட்கார்** - பெரும் கருணை மழை

3588 **பேர்க்கின்ற தோறும்** - திருவடிகள் வருந்த நடக்கும் போதும்

3589 **பேர்சான்ற** - பெருமையுடைய.

3590 **பேரவை** - பெருமை பொருந்த.

3591 **பேரவையில்** - பெரியஅவையில்

3592 **பேராத** - விலகாத

3593 **பேராய** - பேர்பெற்ற

3594 **பேருருவோ** - விசுவரூபமோ

3595 **பேருரைக்கில்** - பெயர் சொன்னால்

3596 **பேருறக்கம் கொண்டார்** - பெருந்தூக்கம் கொண்டவர்; இறந்தவர்.

3597 **பேரெங்கே** - பெயர்எங்கு

3598 **பேரெயில்** - ஜகதீசுவரர் - ஜகதீசுவரி. பாடல்பெற்ற சிறுகோயில். பராமரித்துக் காப்பது இன்றும் நகரத்தார். மன்னார்க்குடிக்கு வடகிழக்கே 16 கி.மீ. (ஓகைப் பேரையூர்)

3599 **பேறன்றோ** - தகுதியுற்ற செயல் அல்லவா

3600 **பேறுகண்டாய்** - என்ன நன்மை உண்டாவது அறிவாய்

3601 **பேறே** - பாக்கியமே

பை

3602 **பை ஆர்** - விஷப்பை தாங்கிய

3603 **பைங்கிள்ளாய்** - பசுங்கிளியே

3604 **பைசாசர்** - பதினெட்டுத் தேவகூட்டத்துள் ஒருவர்.

3605 **பைஞ்ஞீல வாட்கண் மலராள்** - மையெழுதப்பெற்று நீல மலர் போன்ற ஒளியுள்ள கண்களையுடைய கமல நாயகியாகிய இலக்குமி.

3606 **பையிட்ட** - விஷப்பையைத் தாங்கிய

பொ

3607 **பொங்குதல்** - மிகுதல்.

3608 **பொடி தேக்கிய** - எரிந்து பொடியாகும்படிச் செய்த

3609 **பொடிக்கும்** - சாம்பலாக்கும்

3610 **பொடித்தல்** - நீறாக்குதல்.

3611 **பொத்துதல்** - மூடுதல்.

3612 **பொதிசோறு** - கட்டுச்சோறு.

3613 **பொதிபோல்** - மூட்டையைப் போல்

3614 **பொதியணிந்து** - மூட்டை சுமந்து

3615 **பொது** - அம்பலம்; திருச்சிற்றம்பலம்

3616 **பொய்உறவும்** - பொய்க்கூட்டுறவும்

3617 **பொய்ஓதி** - பொய்சொல்லி.

3618 **பொய்க்கதை** - பொய்யான கதை.

3619 **பொய்தாவு** - பொய்யை விரும்புகின்ற

3620 **பொருந்தல்** - சேருதல்

3621 **பொருப்பு** - மலை

3622 **பொருப்புறம்** - மலையில் தோன்றிய

3623 **பொரும்** - ஒக்கும்

3624 **பொருள் நான்கு** - தனு கரன புவன போகம்

3625 **பொருள்சுமை ஆள்** - மூட்டைதூக்கும் ஆள்

3626 **பொருளாகி** - உடலங்களாகி

3627 **பொலிவுற்று** - பிரகாசித்து.

3628 **பொழில்** - சோலை

3629 **பொள்ளென** - விரைவாகப் பெருகி

3630 **பொற்கல்** - இமயப் பொன் மலை

3631 **பொற்கலை** - பொன்னாடை

3632 **பொற்கிழி** - பொன் முடிப்பு

3633 **பொற்பதம்** - பொன்னடி

3634 **பொற்பற** - அழகு நீங்க

3635 **பொற்பாதப் பேறு** - பொன்னடியே பாக்கியமான

3636 **பொற்பாவாய்** - பொன்னால் செய்த அழகு உருவமே

3637 **பொற்பு** - அழகு.

3638 **பொற்பே** - அழகே

3639 **பொற்றாள்** - பொன்னடி

3640 **பொற்றாளை** - பொன் போலும் திருவடிகளை

3641 **பொற்றுணை** - பொன்போன்ற திருவடிகட்கு

3642 **பொற்றைத்தனத்தீர்** - மலைபோலும் மார்பகத்தை உடையவளே

3643 **பொறா(து)** - சகியாது

3644 **பொறி** - வேலைப்பாடு வெளிப்பட்டு விளங்கும்

3645 **பொறுத்தான்** - ஊர்ந்தான், பிரமன்

3646 **பொன்** - தலைவி, வியாழன்; தாமரை மலரில் தோன்றிய இலக்குமி

3647 **பொன் அடித்தொண்டு புரிதல்** - அழகிய திருவடிக்குத் தொண்டு செய்தல்

3648 **பொன் அம்பலம்** - இன்பம் ஈயும் இடம்

3649 **பொன்கின்று** - கொன்றைமலர்

3650 **பொன்நாண்** - இலக்குமியின் மாங்கல்யம்; பொன் தாலி

3651 **பொன்நாணும்** - மாங்கலியமும், மங்கலநாணும்

3652 **பொன்மலையே** - மேரு மலையே

3653 **பொன்முடி** - தலை

3654 **பொன்மொழி** - திருமொழி; திருவார்த்தை.

3655 **பொன்றல்** - இறத்தல்.

3656 **பொன்றுதல்** - பொருந்துதல்.

3657 **பொன்னறை** - பொக்கிஷம்.

3658 **பொன்னன்பர்** - பொன்னாசை யுடையவர்

3659 **பொன்னாகத்தார்** - திருமகளை மார்பில் தாங்கிய திருமால்

3660 **பொன்னார் அம்பலம்** - அழகு நிறைந்த அம்பலம்; அழகு கூடும் இடம்.

3661 **பொன்னார்ப்ப** - பொன் போல ஒளிரும் புயன்

3662 **பொன்னார்மலை** - பொன்மலை(மேருமலை).

3663 **பொன்னின்று** - பொன்போல் ஒளிர்ந்து

3664 **பொன்னுங் கௌத்துவமும் பூண்டோன்** - இலக்குமியையும் கௌத்துவமணியையும் அணிந்தவனாகிய திருமால்.

3665 **பொன்னுடையார்** - செல்வந்தர்

3666 **பொன்னேர்** - பொன்னுக்கு நிகராகி

போ

3667 **போக்குவது** - அழிப்பது.

3668 **போகம்** - இன்பம்; உலக அனுபவங்கள்.

3669 **போகமாகி** - இன்ப அனுபவமாகி

3670 **போகமுடையாய்** - இன்பம் தருபவனே

3671 **போகர்** - பதினெண் சித்தர்களில் ஒருவர்.

3672 **போகலையா** - இன்னும் போகவில்லையா

3673 **போகி** - அனுபவிப்பவன்.

3674 **போத** - மிகுதியாக.

3675 **போத மாட்டாது** - வற்றாமல்.

3676 **போதம்** - அறிவு; மெய்யறிவு

3677 **போதரகிதசகிதம்** - அறிவு நிலைக்கு அப்பாற்பட்டது.

3678 **போதவும்** - மிகவும்.

3679 **போதனைகேள்** - விண்ணப்பத்தைக் கேள்

3680 **போதா இடும்பை** - துன்பத்திற்கு இடம் போதாது

3681 **போதாமை** - போதுமான இடம் இல்லாமை

3682 **போதானந்தம்** - அறிவானந்த நிலை

3683 **போதிக்க வல்ல** - உபதேசிக்க வல்ல

3684 **போது** - ஆயுள்; மலர்

3685 **போதுஎல்லாம்** - ஆயுள் முழுவதும்.

3686 **போந்தது** - வந்தது

3687 **போந்து போந்து** - சென்று சென்று

3688 **போர் முகமாக** - விரோதிகளிடமாக

3689 **போரிடுவார்** - வம்பு பேசுவார்

3690 **போல்வது** - போன்றது

3691 **போற்றுரைத்து நிற்கும் புனிதன்** - போற்றியுரைத்து நிற்கும் மார்க்கண்டன்.

3692 **போனகம்** - சோறு.

பௌ

3693 **பௌதிகம்** - காரண அக்னியை உள்ளடக்கிய பொருளுக்கு அடிப்படையானது.

ம

3694 **மகத்துவமாய்** - மேன்மையுடையதாய்

3695 **மகமாயை** - மூலப்பிரகிருதி

3696 **மகவான்** - இந்திரன்

3697 **மகவு** - குழந்தை (உபமன்யு).

3698 **மகவே** - பிள்ளையே

3699 **மகாதேவன்** - தேவர்களுக்கெல்லாம் தேவனே.

3700 **மகிழ்நரும்** - கணவரும்

3701 **மகிழ்நன்** - கணவன்

3702 **மகிழ்வீறியிட** - இன்பம் பொங்கிட (அ) துளம்ப.

3703 **மகிழ்வு** - இன்பம்

3704 **மகேசுவரன்** - மகேச்சுரசிவன்

3705 **மங்கலத்தை** - மங்கலச் சொல்லை.

3706 **மங்கலநாண்** - மாங்கல்யம்

3707 **மங்கலப் பொன்னாண்** - தாலிக்கயிறு.

3708 **மங்காய்** - மங்கைப் பெண்ணே

3709 **மங்கையொடு..... ஏத்துதல்** - மாதேவியோடும் அழகு பொருந்திய.....பருப்பத மாலையில் யோகியர் பரவி வணங்க வீற்றிருக்கின்ற பெருமான்

3710 **மங்கோடை** - வளம் குறையும் வேனில்காலம்

3711 **மஞ்சடையும்** - மேகங்கள் சூழ்கின்ற

3712 **மஞ்சு** - மேகம்

3713 **மட்டகன்ற** - அளவு கடந்த

3714 **மட்டின்** - அந்தமட்டில்

3715 **மட்டு** - அளவு.

3716 **மட்டு அலர்** - தேனுடைய மலர்

3717 **மட்டுவூர்** - தேன் நிறைந்த ஊர்

3718 **மட்பகைஞன்** - குயவன்.

3719 **மடல்** - இதழ்கள்

3720 **மடலவிழ்** - இதழ்பிரிந்த

3721 **மடவாட்கோர் கூறை யுவந்தளித்த** - உமாதேவியாகிய பெண்ணுக்கு ஓர் பாகத்தை மகிழ்ந்தருளிச் செய்த.

3722 **மடவாய்** - தலைவியே, பெண்ணே

3723 **மடவார்** - மகளிர்

3724 **மடைமன்னும்** - வயல்களில் சூழ்ந்த

3725 **மடையில்** - வயலில் நீர்பாயும் முன்னிடத்தில்

3726 **மண்** - உலகம்

3727 **மண் அளித்த வேதியன்** - பிரமன்.

3728 **மண்ணி** - சேர்ந்த; அணைந்த

3729 **மண்ணிடந்து** - பூமியை அகழ்ந்து

3730 **மண்ணிப்படிக்கரை** - முத்தீசர் - மங்கலநாயகி. ஆதிகால மண்ணியாற்று ஆலயம். ஆனைமுக வேலவனின் லீலைகள். வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே 16 கி.மீ தொலைவில் உள்ள தலம்.

3731 **மண்ணின்பாண்டம்** - மண்ணினால் செய்த பாண்டம்.

3732 **மண்ணேறி** - உலக ஆசை ஓங்கி

3733 **மண்நேயம்** - மண் ஆசை

3734 **மண்பட்டு** - மண் உண்டு.

3735 **மண்படுமோ** - மண் மூடுமோ

3736 **மண்பூத்த** - இவ்வுலக வாழ்க்கையை உடைய

3737 **மணம்** - திருமணம்

3738 **மண்மயக்கம்** - பிரபஞ்சமயக்கம்

3739 **மண்முடிவு நாள்** - யுகம் முடியும் காலம்.

3740 **மண்வையாமல்** - மண்மீது வைக்காமல்

3741 **மணிகண்ட(ன்)** - நீலமணிபோலும் கண்டத்தையுடையவனே.

3742 **மணிகண்டன்** - நீலமணிக் கழுத்துடையன்.

3743 **மணிச்சடை** - அழகிய முடி

3744 **மணியுரகர்** - அழகிய நாகர்கள்.

3745 **மணிவார்கொண்ட** - அழகிய கச்சு பூண்ட

3746 **மத்தியினும்** - மத்தியான காலத்திலும்.

3747 **மதனதகனன்** - காமனை எரித்தவன்.

3748 **மதாதீதம்** - மதங்களுக்கு எட்டாநிலை

3749 **மதி** - சிந்திக்கும்; மனத்திற்கும் மேற்பட்ட புத்தி; நிலவு.

3750 **மதிக்கன்றி** - சந்திரப் பிரகாசத்திற்கு அல்லாமல்

3751 **மதித்தலை** - எண்ணிலை.

3752 **மதித்திடல்** - வரையறை செய்தல்

3753 **மதியோடு** - புத்தியுடன்

3754 **மதுகம்** - எட்டி மரம்.

3755 **மதுரிக்கும் பதம்** - இனிமையளிக்கும் பதம்.

3756 **மந்தரநேர்** - மலையைப் போன்ற

3757 **மந்திரத்தை உச்சரியா** - மந்திரமாகிய ஸ்ரீபஞ்சாட்சரத்தை உச்சரிக்காத.

3758 **மந்திரம்** - மறைஎழுத்து

3759 **மயக்கேறும்** - மூவாசை ஓங்கிடும்

3760 **மயங்கா** - குலையாத

3761 **மயல்** - பெண்ணாசை; மயக்கம்,காதல்

3762 **மயல்ஏறி** - மயக்கம் சூழ்ந்திட

3763 **மயல்கின்றேன்** - மயங்குகின்றேன்

3764 **மயல்சூழ்** - மயல் ஊட்டும்

3765 **மயல்போகம்** - மயக்கும் சிற்றின்பம்

3766 **மயலாய்** - ஆசையுடைய பெண்ணே

3767 **மயலூர் மனம்** - காம மயக்கத்தையுடைய மனத்தைப் போல.

3768 **மயற்கண்ணியில்** - மயக்கவலையில்

3769 **மயற்சோடை** - சனன, மரண வாட்டம்

3770 **மயன்மூடி** - பெண் ஆசையில் மூழ்கி

3771 **மயிர்க்கால்** - மயிர்த்துளை

3772 **மயிலாடுதுறை** - மயூரநாதர் - அபயாம்பிகை. மாயூரக் காவிரியில் ஐப்பசியில் நீராட தீராத வினையாவும் தீரும். 'தென் மயிலை'எனச் சைவர்கள் போற்றும் திருமயிலாடு துறை.

3773 **மயிலாப்பூர்** - கபாலீசுவரர் - கற்பகாம்பிகை. எலும்பு பெண்ணான தலம். இணையிலா அறுபத்து மூவர் திருவிழா. கடல்அலை தழுவிய கபாலி கோயில்.

3774 **மரகதக்கொம்பே** - பசுங்கொடியான உமையே

3775 **மரபு** - குலம், இனம்

3776 **மரபுஓர்ந்து** - குலம்தெரிந்து

3777 **மரபுறும் மதாதீதவெளி** - வரன்முறையுடைய நிர்க்குண உயர் ஞானவெளி

3778 **மரு** - மணம்

3779 **மருங்கு** - இடுப்பு.

3780 **மருங்குல்** - இடை,இடுப்பு

3781 **மருப்பா வனத்துற்ற** - வறுமையால் வாடும்

3782 **மருட்பால் பயிலும்** - இடது பாகம் விளங்கும்

3783 **மருத்துவர்** - தேவகணத்தில் ஒருவர்

3784 **மருந்து** - அமுதம்

3785 **மருந்தே வா** - தேவாமுதே வருக

3786 **மருந்தோ** - சாவாமருந்தோ

3787 **மருநாண்மலர்** - மணம்பொருந்திய புதுமலர்

3788 **மருப்புறு** - யானைத் தந்தம் போலும்

3789 **மருமத்திலே** - மார்பிலே

3790 **மருமான்** - மருமகன்

3791 **மருமுடி** - மணம் வீசும் தலை

3792 **மருவல்லி** - தெய்வ மணப்பெண்ணே

3793 **மருவாகி** - மணமாகி

3794 **மருவார்** - மணம் நிறைந்த

3795 **மருவும்** - நிகழும்,ஊர்ந்திடும்,தழுவும்.

3796 **மருவுற** - பொலிவுற; பொலிவுடைய.

3797 **மருவே** - தெய்வ மணமே

3798 **மருள்** - மயக்கம்; மாயைக்குற்றம்

3799 **மலக்கூடு** - அழுக்குகள் நிரம்பிய உடல்

3800 **மலஞ்சுழிகின்ற மனம்** - மலப்பெருக்குச் சுழல்கின்ற மனத்தினை உடையார்க்கு.

3801 **மலபரிபாகம்** - மறைப்பு நீக்கிய பக்குவநிலை.

3802 **மலம்** - ஆணவம், கன்மம், மாயை என்னும் இருள்நிலை; மும்மலம்.

3803 **மலர்** - மாலை,அலர்

3804 **மலர்க்கை** - மலர் போன்ற கரங்கள்

3805 **மலர்க்கொம்பு** - பூங்கொடி.

3806 **மலர்தலைய** - விளங்குகின்ற இடமுடைய

3807 **மலரை** - கொன்றை முதலிய மலரை

3808 **மலரோன் தத்துவம்** - ஆன்மதத்துவம் (பிரம்ம தத்துவம்).

3809 **மல்லல்** - வளம்.

3810 **மல்லார்** - வளம் நிறைந்த

3811 **மல்லேர்** - அருட்பெயர்

3812 **மல்விலங்கு** - மாறுதலை உடைய

3813 **மல்வைத்த** - வளம்பொருந்திய.

3814 **மலிபிறவி** - மிகுதியான பிறவிகள்; மிகும் பிறப்புகள்; அநேக பிறப்பு; பல்வகைப் பிறப்பு.

3815 **மலிவகை** - நிரம்பிய தொகுதியாகி

3816 **மலை** - கயிலைமலை.

3817 **மலை அற்புத** - இயமலையில் தோன்றிய அற்புதமான

3818 **மலைக்கோன்** - மலை அரசன்

3819 **மலைந்தாம்** - சூட்டினோம்

3820 **மலைந்தீர்** - சூடினீர்

3821 **மலைமங்கை** - மலையரசன் மகள்.

3822 **மலைமான்** - உமையவள்

3823 **மலைமின்** - ஒளிரும் உமையவள்

3824 **மலையளவும்** - மலையில் உள்ள வளங்களும்

3825 **மலையாள்** - திகைப்பு அடையாள்

3826 **மலையான்** - மலையரசன்

3827 **மலையின்** - ஒளிரும் மலையைவிட

3828 **மலையின் குலம்** - மலையரசன் புதல்வி

3829 **மலையைச் சிலையா** - கயிலை மலையை வில்லாக

3830 **மலைவுறுதல்** - ஐயம் நீங்காமல் செய்தல்

3831 **மவுன வெளி** - மவுனாகாசம்

3832 **மவுனவிம்பாகரம்** - மவுன வெளியதாகி

3833 **மழு** - கோடரி வகையுள் ஒன்று

3834 **மழு** - மழு ஆயுதம்

3835 **மழுப்படை** - மழு என்னும் ஆயுதம்

3836 **மறக்கருணையும்** - தண்டனை அருளியும்.

3837 **மற்பதம்** - அருள்வளம் சூழ் திருவடி

3838 **மறம்** - பாவம்.

3839 **மறலி** - எமன்.

3840 **மற்றேர்** - மல் தேர் மாயையை வென்று

3841 **மறி** - தடுத்தல்

3842 **மறிகடலே** - அலைகின்ற கடல்

3843 **மறை** - வேதங்கள்.

3844 **மறைக்கு** - வேதத்திற்கு

3845 **மறைக்கொம்பே** - வேதமாகிய கொடியே

3846 **மறைச்சிலம்பு** - வேதங்களாகிய (மகளிர்) காலில் அணியும் நூபுரம் என்னும் அணிகலன்.

3847 **மறைத்தேர்** - வேதங்கள் போற்றும்

3848 **மறைப்பரி** - வேதங்களாகிய குதிரை.

3849 **மறைப்பாதுகை** - வேதங்களாகிய காலணி.

3850 **மறைமுடிப்பொருள்** - வேதத்தின்சிரத்திலுள்ள மெய்ப் பொருள் (வேதாந்தப் பொருள்).

3851 **மறையவன்** - நான்முகன்.

3852 **மன் இசைப்பால்** - மிகுதியாகிய இசைப்பாங்கினால்.

3853 **மன்உடையாய்** - மன்னரைக் கணவனாகப் பெற்றவளே

3854 **மனக்கங்குல்** - மனத்தின் அறியாமை

3855 **மனக்கேதம்** - மனக்குறை

3856 **மன்நான்மறையின்** - நிலைபேறுடைய நான்கு வேதங்களின்

3857 **மன்போல்** - மன்னவர் போல்

3858 **மனம்சூழ்** - எண்ணம் நிறைந்த

3859 **மன்மயம்** - நிலைபேறுடைய நிலையதாகி

3860 **மன்மலையோ** - நிலைபெற்ற அருள்மலையோ

3861 **மனமானுக்கு** - மனமாகிய மாயைக்கு

3862 **மன்வடிவம்** - நிலையான உரு

3863 **மன்ற ஒளிர்** - நிச்சயமாக விளங்கும்.

3864 **மன்றல் மணக்கும்** - மலர்மணம் வீசும்

3865 **மன்று** - சபை; திருச்சபை

3866 **மன்று அடுத்தாள்** - பொன்னம்பலத்தில் பொருந்திய திருவடி.

3867 **மன்றுஏர்** - திருக்கைலையில் விளங்குகின்ற

3868 **மனாதீதம்** - மனநிலைக்கும் மேம்பட்ட

3869 **மன்னி** - நிலைபேறுள்ளதாய்

3870 **மன்னீன்ற** - மலையரசன் பெற்றெடுத்த

3871 **மன்னும்** - நிலைபேறுடைய; நிலைபெறும்

3872 **மன்னும்சீர்** - நிலைபெற்ற புகழ்

3873 **மன்னேர்** - அழகிய அரசர், நிலையான அழகு

3874 **மன்னேரிடம்** - மன்னவரின் இடப்பாகத்தில்

3875 **மன்னோடு** - இறைவனுடன்

3876 **மனாதீதம்** - மன நினைவிற்கு அப்பாற்பட்டது

3877 **மனு** - மந்திரம்.

3878 **மனை** - மனைவி

3879 **மனைப்பெற்றம்** - வீட்டுப் பசுவைப்போல

3880 **மனையாள்** - மனைவி

3881 **மனோபலமே** - மனவலிவே.

3882 **மனோலயம்** - மன அடக்கம்.

3883 **மனோலயமே** - மனம் லயிக்குமிடமே.

மா

3884 **மா** - வலிமையான

3885 **மாகம்** - விண்ணுலகம்.

3886 **மாகமம்கொண்டு** - பொறுமையைக் கொண்டு.

3887 **மாகாதல்** - பேராசை.

3888 **மாசகத்தில்** - பிரபஞ்ச வாதனையில்.

3889 **மாசகர்க்குள்** - குற்றமுடையவருள்

3890 **மாசு** - காம வெகுளி மயக்கம்

3891 **மாசு பறிக்கும்** - குற்றத்தைக் கெடுக்கின்ற.

3892 **மாசுந்தரி** - உயர்ந்த அழகுடையவளே

3893 **மாசுந்துறையூர் மகிபன் முதல் மூவர்** - குற்றத்தைக் கெடுக்கின்ற உறையூர்க்கரசனாகிய சோழன் முதலான சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவரசர்களும்.

3894 **மாசை** - பொன்

3895 **மாட்சி** - மேன்மை; பெருமை.

3896 **மாட்டாதாய்** - பொருந்தாததாய்

3897 **மாடு** - செல்வம்; பக்கம்.

3898 **மாடை** - பொன்னும் பொருளுமாகிய செல்வம்

3899 **மாண்** - மாண்புடைய

3900 **மாண்புஅண்ணா** - மாட்சிமை பொருந்தாத.

3901 **மாணாஅரக்கன்** - பெருமை இல்லாத இராவணன்.

3902 **மாணாதே** - போதாதே

3903 **மாணார்வம்** - சிறந்த ஊக்கம்

3904 **மாணிக்கவண்ணன்** - மாணிக்கநிறத்தையுடையோனே.

3905 **மாணிக்கவாசகருக்குக் குதிரைச் சேவகனாதல்** - மாணிக்கவாசகர் பொருட்டுக் குதிரைச் சேவகன்போல் மதுரைநகரத் தெருவில் போயினையே.

3906 **மாணிக்கு** - தருமி என்னும் மறையவனுக்கு; மறையவர்க்கு

3907 **மாணேயத்தவர்** - மாட்சிமைக்குரிய அன்புடையவர்

3908 **மாதலம்** - பூமண்டலம்

3909 **மாதவர்** - பெருந்தவத்தினர்.

3910 **மாதவரோ** - பெரிய தவப்பெரியவரோ,பெண்ணை உடையவரோ

3911 **மாதாகம்** - மிகுந்த எதிர்பார்ப்பு

3912 **மாது மயிலாய் பூசித்தல்** - உமாதேவியானவள் மயிலு ருவாய் பூசை பண்ணியது.

3913 **மாதேவி** - உமாதேவி.

3914 **மாநடனம்** - மேலானகூத்து.

3915 **மாநன்றே** - மிகவும் நல்லதே

3916 **மாநிருதர்** - நிருதி திக்கில் வாழும் அரக்கர்

3917 **மாநிலம்** - பூமாநிலம்

3918 **மாபலமே** - மகாபலமே.

3919 **மாபாதகன்** - கொலைப்பாதகன்

3920 **மாமட்டுஅலர்** - தேன்நிறைந்த மலர்

3921 **மாமணிநீத்த** - கருவிழி இழந்த

3922 **மாமத்தினால்** - பெரிய மத்து என்னும் கருவியினால்

3923 **மாமறை** - பெருமைக்குரிய வேதங்கள்

3924 **மாமனாகி வழக்குரைத்து** - தாயத்தார், செட்டிப்பிள்ளை சொத்தை அபகரிக்காமல் சிவன் மாமனாகி வந்து வழக்குத் தீர்த்தது

3925 **மாமாத்திரையின் வருத்தனம்** - ஒலிக்கும் மாத்திரைக் கூடுதல்.

3926 **மாமாயை** - மகாமாயை; பஞ்ச மலங்களுள் முடிவானது; உயிர் வளர்ச்சிக்கு உதவியாயும் தடையாயும் இருப்பது.

3927 **மாமுடிக்கும்** - திருமகள் தருகின்ற.

3928 **மாய்த்து** - கெடுத்து.

3929 **மாயப்பெயர்** - மாயவன் என்னும் பெரும் பெயர்

3930 **மாயப்பொடி** - சொக்குப்பொடி.

3931 **மாயற்கும்** - திருமாலுக்கும்

3932 **மாயா காரியம்** - மாயையினால் உண்டாகிய பிரபஞ்சம்.

3933 **மாயா சித்திகள்** - மாயை சித்திகள்.

3934 **மாயா விகாரம்** - மாயை தோற்றுவிக்கும் உலக காட்சிகள்

3935 **மாயை** - மலங்கலில் ஒன்று

3936 **மாயை ஒடிய** - மாயைவலிவு அற்றுப்போக

3937 **மாயைக்கரு நான்கும்** - நான்குவகை யோனிகள்

3938 **மாயைகள்** - பஞ்சமலங்கள்

3939 **மால்அசைத்த** - பெருமை பொருந்திய.

3940 **மால்அறம்** - திருமாலின் தன்மையை

3941 **மால்ஏந்தி** - காமம் அடைந்து

3942 **மால்குடிவைத்த** - மயக்கம் சூழ்ந்த

3943 **மால்கொள் அவதாரங்கள் பத்து** - திருமால் எடுத்த மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், ராமன், பலராமன், கிருஷ்ணன்,கல்கி எனும் பத்துத் தோற்றங்கள்.

3944 **மால்தலை அலங்கற்பதம்** - திருமாலின் முடியின் மீது பொருந்தும் மலரடி.

3945 **மால்நடம்** - பெருமை பொருந்திய நடனம்.

3946 **மால்விடை இவர்ந்திடும்** - திருமாலாகிய காளையின் மீது ஊர்ந்திடும்.

3947 **மால்விடையாய்** - மால்விடையையுடையவனே.

3948 **மால்வைக்கும்** - மயங்கவைக்கும்

3949 **மாலாகி** - ஆர்வமுற்று

3950 **மாலிடும்** - மயக்கத்தைச் செய்கின்ற.

3951 **மாலும் அறிவரிதாம் பதம்** - விஷ்ணுவும் அறியமுடியாத தாகிய பதம்.

3952 **மாலுழக்க** - மயக்கத்தில் கலங்கிட

3953 **மாலேகொளும்** - மயக்கம் அடையும்

3954 **மாலை** - மயக்கத்தை; மயக்கம், காதல் நோயை

3955 **மாலை முடிமேல்** - மாலை முடியும் இரவில்

3956 **மாலைக்கண்** - காமியக்கண்

3957 **மாலையிட** - மணமாலை சூடிய

3958 **மாவனத்து** - பெரிய காட்டில்

3959 **மாவாய்** - கொடியே

3960 **மாவியப்பு** - பெரிய ஆச்சரிய

3961 **மாழாந்து** - திகைத்து

3962 **மாழையைப்போல்** - பொன்னைப்போல

3963 **மாற்கடவுள்** - மகா விஷ்ணு.

3964 **மாற்கருவின்** - பெரிய பிறவியினிடத்து.

3965 **மாற்றமும்** - சொல்லும் பதில்

3966 **மாற்றலர்கள்** - பகைவர்கள்.

3967 **மாற்றாஇயல்** - யாராலும் மாற்றிவிட முடியாத அருள்நிலை

3968 **மாற்றார்** - பகைவர், கவர்ச்சிமிகும் மாலை

3969 **மாற்று ஒளிரும்** - மாற்றில்லா பொன்போல் ஒளிரும், உயர்ந்த மாற்றுடன் ஒளிரும்

3970 **மாற்றுறு** - நீக்கித்தரும்

3971 **மாறா** - இளமை மாறாத

3972 **மாறிட** - இற்றுப்போக

3973 **மாறிநடமாடல்** - வலக்கால் உயர்த்தி ஆடல்புரியும் நடம்.

3974 **மாறில்** - குற்றமற்ற.

3975 **மாறுண்டு** - மாறுபட்டு.

3976 **மாறுமுகத்தார்** - இடமாறி இன்புறுவர்

3977 **மான்** - அசுத்த மாயாசக்தி; ஆதிமூலப்பகுதி, ஆதிபுரி மானாகிய விலங்கு; இடக்கையில் ஏந்திய படை; பிரகிருதிமாயை; மூலப்பிரகிருதி

3978 **மான்இதழி** - மான் போலும் மென்மைவாய்ந்த இதழ்கள்

3979 **மான் குளம்பின்நீர்** - மான்குளம்பின் அடியில் நிற்கும் நீர்.

3980 **மான்அன்றி** - மோகம் கெடுத்ததும் அல்லாமல்

3981 **மான்ஆள** - உமையவள் விரும்ப

3982 **மான்ஒருகை** - மானை ஒரு கையில்.

3983 **மான்செய்** - மயக்கம் உண்டாகின்ற

3984 **மானதுவாய்** - மகத்துவமதாய்.

3985 **மான்நடம்** - இறைவி உமையவள்திருநடனம்

3986 **மான்போல்** - மானைப்போல்

3987 **மானம்** - தன்மானம்

3988 **மான்முடிப்பதம்** - திருமாலின்சிரமீது அணிசெய்யும் திருவடி.

3989 **மான்வளர்த்தோய்** - மானை வளர்த்திட்டாய்

3990 **மான்ற** - மயக்கம் செய்கின்ற.

3991 **மான்றாம்** - மயங்குகின்ற

3992 **மானேர்விழி** - மானின்கண்

மி

3993 **மிகத்தான் பெரிது** - மிகவும் உண்டாகும்.

3994 **மிகவே** - மிகவும்

3995 **மிகுவாசம்** - மிகுந்த எழுச்சி உள்ள

3996 **மிசை** - மீது

3997 **மிடறு** - கழுத்து

3998 **மிருகம்** - யானை,பிடி

3999 **மின்** - ஒளி; மின்னல் கொடி.

4000 **மின்இடை** - மின்னலைப்போல் ஒளிரும் இடுப்பு

4001 **மின்வசமோ** - மின்னலைப்போல் மறையும் தன்மையோ

4002 **மின்னரசே** - ஒளிரும் மாதரசியே

4003 **மின்னார் அழகிய பெண்கள்** - பெண்களுடைய

4004 **மின்னிடை** - மின்னல் போன்ற இடுப்பு

4005 **மின்னே** - பெண்ணே

4006 **மின்னோர்** - மின்னலைப்போன்ற

மீ

4007 **மீதலத்தோர்கள்** - விண்ணுலகத்தவர்

4008 **மீதானத்து** - மேல்நிலையிடத்து

4009 **மீதோங்கு** - மேல் விளங்கும்

4010 **மீயச்சூர்** - திருமீயச்சூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய.

4011 **மீள** - திரும்பத்திரும்ப

மு

4012 **முக்கட்டு** - மூன்று கட்டு (தலைப் பாகை, அங்கவத்திரம், இடைஆடை).

4013 **முக்கண்** - மூன்று ஞான விழிகள்; மூன்று விழிகள்

4014 **முக்கண் ஐய** - முக்கண்களை உடைய தலைவ

4015 **முக்கண்ண(ன்)** - முக்கண்ணன்.

4016 **முக்கணித்த** - உழல்கின்ற

4017 **முக்கனிநறவே** - முக்கனியின் தேன்பிழிவே

4018 **முக்காற்பேறு** - முக்காற்பயன்.

4019 **முக்கீச்சுரம் (உறையூர்)** - பஞ்சவர்ணர் - காந்திமதி. கரிகாற்சோழனின் யானையைக் கோழி எதிர்த்து நின்ற தலம். திருச்சியின் மேற்கில் உள்ளது உறையூர்

4020 **முக்குற்றத்தை முனிதல்** - மூன்று குற்றத்தை வெறுத்தல்.

4021 **முகங்கள்** - வழிமுறைகள்

4022 **முக்த மௌனம்** - முக்திப் பேரமைதி.

4023 **முகத்தோர்க்கு** - பிள்ளையார்க்கு

4024 **முக்திநெறி** - மோட்சம் அடைவதற்கான முன்சாதன நிலை.

4025 **முகம்** - பதும முகம்,தாமரை முகம்

4026 **முகமும் பனிமால் ஏந்தி** - திருமுகம்,இன்பத்தை ஏந்தி

4027 **முகர்ந்திருந்தும்** - மோந்திருந்தும்.

4028 **முகவா** - முகங்களை உடையவனே

4029 **முகிலும்** - கருமேகம்

4030 **முகுந்தன்** - திருமால்

4031 **முகை** - மொட்டு

4032 **முச்சகமும்** - சொர்க்க,மத்திய,பாதாளமென்னும் மூன்று உலகங்களும்.

4033 **முச்சுடர்** - சந்திர, சூரிய, அக்னி.

4034 **முசுக்கலையை துரை மகனாக்குதல்** - கொடிய ஆண் குரங்கை செல்வப் பெருக்குள்ள ராஜகுமாரனாகச் செய்தாயே.

4035 **முட்டு** - தடை; தாமரை அரும்பு.

4036 **முட்டுறும்** - முட்டு உண்ட காயமும்.

4037 **முட்டை** - எருமுட்டை, வராட்டி

4038 **முடிகுவது** - முடிவது

4039 **முடித்தோர்** - பற்று நீக்கியவர்கள்

4040 **முடியிட்டு** - முடிபோட்டு.

4041 **முடியில்** - தலையில் முடிந்துகொண்டால்

4042 **முடிவே** - அருள் பயனே

4043 **முடை** - நாற்ற முடைய; புலால் நாற்றம்.

4044 **முடைநாற** - முடைநாற்றம் வீச

4045 **முடைவாய்க்கு** - நாற்ற முடையவாய்க்கு,பொய்பேசும் வாய்க்கு

4046 **முண்டகத்தோன்** - தாமரை மீது வாழும் பிரமன்

4047 **முத்தர்** - சீர்காழியில் விளங்கும் முத்தியைத் தருபவர்

4048 **முத்தர்கள்** - ஜீவன் முத்தர்கள்

4049 **முத்தா** - முத்த இன்பம் தருபவனே

4050 **முத்தாந்தத்தின்** - சித்தாந்தம், நாதாந்தம், யோகாந்தங் களின்

4051 **முத்தி வித்தே** - முத்திக்குக் காரணமாயிருப்பவனே.

4052 **முத்து சிவிகையின்மேல்** - முத்துப் பல்லக்கின்மேல்

4053 **முத்தேவர்** - திரிமூர்த்திகள்

4054 **முதல் ஏற்றவிடம்** - நீக்கிய இடம்

4055 **முதல்நீத்து** - பெதும்பையில் முதலில் உள்ள எழுத்தை நீக்கிய தும்பை

4056 **முதல்வர்** - இறைவர்

4057 **முதற்கண்** - நெற்றிக்கண்.

4058 **முதிராக்கரு** - முதிராத கருநிலை.

4059 **முந்து அனந்த** - அளவற்ற முதன்மை வாய்ந்த

4060 **முந்தை** - பழைமை

4061 **முந்நிறம்** -பசுமை, நீலம், செம்மை

4062 **முந்நீர்** - கடல்

4063 **முந்நீர்தனைய** - கடல்நீர் போலும்

4064 **முந்நூல்** - முப்புரிநூல்

4065 **முப்படகம்** - மூன்று மறைக்க (மான், மோகினி, விந்து எனும் மூவகைத் திரை).

4066 **முப்பாழ் கடந்த முழுப்பாழ்** - மூலப்பிரகிருதி (அசுத்த மாயை).

4067 **முப்புரம்** - திரிபுரம்.

4068 **மும் மதமால் வெற்பு** - மும்மதத்தைப் பொழியும் யானை.

4069 **மும்மதம்** - ஆண்யானைக்கு உண்டாகும் கன்னமதம், கபோஜமதம், பீஜமதம்

4070 **மும்மாதவர்** - உமை, கங்கை, தலைவி

4071 **முயக்கம்** - தொடர்பு

4072 **முயங்கா** - தழுவிக்கொள்ளா

4073 **முயலகன்** - நடராஜப் பெருமான் ஏறி நடித்து மிதிக்கும் அரக்கன்.

4074 **முரண்** - தப்பு வழி.

4075 **முல்லை** - முகை; அரும்பு.

4076 **முலைப்பால் அருந்தும்** - முலைப்பால் உண்ணும்.

4077 **முற்கண்ட** - முன்கணக்குக் கொண்ட

4078 **முற்பகர்** - தாருகவன முனிவர்

4079 **முற்றேமம்** - பெரிய இந்திரியக்காவல்.

4080 **முறிகொண்டு** - அழியும்படி

4081 **முறுவல்** - பல் (புன்சிரிப்பு).

4082 **முறை** - நீதி பரிபாலனம்

4083 **முறைக்கு** - இரத்தலுக்கு

4084 **முன்செய்** - முற்பிறவியில் செய்த

4085 **முன் பருவம்** - பெதும்பைப் பருவம்

4086 **முன்ஈன்ற** - முன்பு பெற்ற

4087 **முன்கொடு** - முன்பு செல்ல

4088 **முன்தானை** - புடவையின் முகப்பு

4089 **முன்நகை** - புன்முறுவல் செய்

4090 **முன்நால்வருக்கு** - தென்முகக்கடவுள் அடியார் நால்வருக்கும்

4091 **முன்மணம்** - சுந்தரமூர்த்தி சுவாமிகள் செய்து கொண்ட முதல்திருமணம்

4092 **முன்னம்** - எண்ணக் குறிப்பிலிருந்து; எண்ணும்.

4093 **முன்னரசும் காழிமிழலையரும் கண்டு தொழ காசளித்தல்** - முற்காலத்தில் திருநாவுக்கரசரும், சீர்காழியில் அவதரித்த பாலகராகிய திருஞான சம்பந்தரும் கண்டுவணங்க.

4094 **முன்னவனே** - முதல்வனே

4095 **முன்னாள்** - முற்காலத்தில்

4096 **முன்னில்** - எண்ணிப்பார்த்தால்

4097 **முனிந்தவர்** - நீங்கியவர்.

மூ

4098 **மூடம்** - மூடத்தனம்.

4099 **மூதாண்ட** - பழமையதாகிய

4100 **மூப்பு** - வயோதிகம்

4101 **மூலஆணவம்** - மூல ஆங்காரம் (பிரகிருதி).

4102 **மூவர்கள்** - சம்பந்தர்,அப்பர்,சுந்தரர்.

4103 **மூவுரு** - அரன்,அரி,அயன்

4104 **மூளாது** - பூசாமல்

4105 **மூன்றா** - ஆணவம்,கன்மம்,மாயை

4106 **மூன்று** - காமம்,வெகுளி,மயக்கம்.

4107 **மூன்றுடன் எழுமத்தர்** - பதுமத்தர்; இன்பமலர்ச்சி உடையவர்

மெ

4108 **மெய்** - உடம்பு.

4109 **மெய்அகத்தே** - உள்ளத்தில் உண்மையாக

4110 **மெய்கொடுத்த** - உடலைக் கொடுத்த

4111 **மெய்ச்சத்துவமே** - உண்மை இரக்கமே, உள்ளத் தூய்மையே

4112 **மெய்ஞ்ஞானம்** - மெய்ஞ்ஞானத்தில் மேன்மையுற்றவனே

4113 **மெய்தேவர்க்கெல்லாம் முன்னானோனே** - தேவர்களுள் நிலையான மெய்த்தேவர்கள் என்று புகழ்ந்து உரைக்கப்பட்ட தேவர்களுக்கு எல்லாம் முன்னவன்

4114 **மெய்ந்நீர்** - மெய்ம்மை உடைய சீலர்

4115 **மெய்நீக்கி** - ன் என்ற எழுத்தை நீக்கி

4116 **மெய்நெறியோர்** - சன்மார்க்கிகள்

4117 **மெய்ப்படவே** - மெலிவைவெல்ல.

4118 **மெய்ப்புலம் அளிக்கும்** - மெய்இன்பம் ஈயும்

4119 **மெய்ப்போதம்** - மெய்ஞ்ஞானம்

4120 **மெய்ப்போதவடிவு** - மெய்ஞானவடிவம்

4121 **மெய்பொடித்தல்** - மயிர் கூர்ந்து எரிதல்.

4122 **மெய்யறிவாம் வீட்டில்** - மெய்உணர்வாகிய மோட்சத்தில்

4123 **மெய்யாமேல்** - உண்மையானால்

4124 **மெய்யிடை** - உடலினில்

4125 **மெய்யுணர்ந்து** - உண்மைதெரிந்து

4126 **மெய்வணத்தோர்** - மெய்யுணர்ச்சி உள்ளவர்கள்.

4127 **மெய்விட்டிடா** - உண்மை நிலையைச் சிறிதும் விட்டு விடாத

4128 **மெய்விடலும்** - சரீரத்தை விட்டு நீங்கும்போது.

4129 **மெல்இயல்** - மென்மை இயல்புடைய பெண்

4130 **மெல்ல** - மெதுவாக, மென்மையாக

4131 **மெல்லியல்** - மென்மை வாய்ந்தபெண்

4132 **மெல்லினத்தின்** - ங, ஞ, ண, ந, ம, ன என்ற வரிசையின்

4133 **மெலிவது இன்றே** - துன்பப்படுதல்இலன்

4134 **மென்பூ** - மெல்லும்

4135 **மென்றுஈயும்** - மென்று தருகின்ற.

மே

4136 **மேகசாலம்** - மேகக் கூட்டம்.

4137 **மேகநிறத்தோன்** - திருமால்

4138 **மேகம்** - ஒரு நோய்.

4139 **மேட்டுக்கு** - வயிற்றுக்கு

4140 **மேடு** - வயிறு

4141 **மேயினரை** - வந்தவரை.

4142 **மேல் ஒன்றின்று** - பொருந்தியதில்லை

4143 **மேல்சுழுத்தி** - உயர்நிலை உறக்கம்

4144 **மேல்தாளை** - மேலே விளங்கும் திருவடியை

4145 **மேலிருத்தும்** - மேலே வைக்கின்ற

4146 **மேலுக்கு** - வெளிக்கு

4147 **மேலை ஒன்றிரண்டு** - சகப்பாழ்,ஜீவப்பாழ்,பரப்பாழ்

4148 **மேவா** - பொருந்தாத

4149 **மேவி** - விரும்பி

4150 **மேவின்** - சேர்ந்தால்

4151 **மேவினோர்க்கு** - அடைந்தவர்க்கு

4152 **மேவுதல்** - பொருந்துதல்; மூழ்குதல், பொருந்துதல், புணர்தல்

4153 **மேவும்** - செல்லும்; வாழும்

4154 **மேவுற்ற** - பொருந்திய

4155 **மேற்சுமந்த** - பனைஏட்டில் எழுதிய

மை

4156 **மை** - கருமை

4157 **மைக்காடுடுத்த** - மைபூசிய

4158 **மைக்கார்** - கரிய மேகம்

4159 **மைகுவித்த** - மைபூசிய

4160 **மைந்தர்** - மக்கள்

4161 **மைப்போது அனைய** - கரியமலர் போன்ற

4162 **மையல்** - மயக்கம்

4163 **மையலினேன்** - மயக்கத்தை உடையவன்

4164 **மையலெனும்** - மோகம் என்கின்ற

4165 **மையாளும்** - அழகிய கண்மை பூசிய

4166 **மைவிட்டிடா** - கருமை அகலாத; மைப்பூசுதலை விடாத

மொ

4167 **மொட்டு** - தாமரை அரும்பு.

4168 **மொட்டு அரும்பு** - மலரக்கூடிய மொக்கு

4169 **மொத்துண்ணு** - மோதி அலைக்க

4170 **மொய்** - செறிவு.

4171 **மொய்அசுரர்** - அரக்கர் சூழ்ந்த

4172 **மொழி** - வாயிதழ்இன்பம்,இன்பக்கிளவி

4173 **மொழியாய்** - சொல்லினை உடையவளே

மோ

4174 **மோகதாகம்** - காதல் வேட்கை

4175 **மோகம்** - ஆசை

4176 **மோகமே** - விருப்பமானவனே

4177 **மோகினி** - அசுத்த மாயை; சுத்தாசுத்தமாயை

4178 **மோன வெளி** - மவுனவெளி.

4179 **மோனமே** - மவுன மெய்ப்பொருளே

4180 **மோனர்** - மோன நிலையை யுடையவர்.

மௌ

4181 **மௌன இயல்கதி** - இயல்பான மௌன நிலை

4182 **மௌன வியோமம்** - மௌன வெளியதாகி

யா

4183 **யாண்டை** - எங்கு

4184 **யாதொன்றும்** - எவ்வுயிரையும்.

4185 **யாம் இருந்தது** - யாமும் அந்நீர்மை உடையோம்

4186 **யார்மாட்டு** - யாரிடத்தில்.

4187 **யூகத்தில்** - அறிவில்

யோ

4188 **யோக வினோதன்** - யோகநிட்டை உடையவன் (தட்சணா மூர்த்தி).

4189 **யோகம்** - ஒருமையுணர்வு

4190 **யோகியர்கள் ஏத்துதல்** - யோகியர்கள் துதிக்க.

4191 **யோகீசுவரர்** - யோகிகள்

4192 **யோகுஆளுதல்** - யோகத்தை ஆளவும்.

வ

4193 **வகிர்ந்தே** - பிரிவுபட்டு

4194 **வகுத்து** - காட்டி

4195 **வசமோ** - ஆசையின் பக்கமோ

4196 **வசித்துவம்** - வசப்படுத்தும் பொருளே.

4197 **வசிவது** - தங்குவது.

4198 **வஞ்சமாக்கூடல் வரையாதவர்** - மனவஞ்சனையை உண்டாக்குகிற பிணக்கத்தைக் கொள்ளாதவர்கள்.

4199 **வடகுரங்காடுதுறை** - சடைமுடிநாதர் - சடாமகுடநாயகி. வாலிக்கு மீண்டும் வால் வரச் செய்து செருக்கு நீக்கிய திருத்தலம். தியாகராய ஆராதனைத் திருவையாற்றி லிருந்து கிழக்கே 6 கி.மீ. (ஆடுதுறைபெருமாள் கோயில்)

4200 **வடதிசை சைலம் எனும் ஒரு வில்லவன்** - கயிலை மலையை வில்லாக்கியவன்.

4201 **வடதிருமுல்லைவாயில்** - மாசிலாமணீசுவரர் - கொடியிடை நாயகி. தொண்டநாட்டுப் பட்டத்து யானை காட்டிலே கண்டு வந்த ஈசன். சென்னை ஆவடியிலிருந்து 4 கி.மீ.

4202 **வடவிலையான்** - ஆலிலையைத் துயிலிடமாகக் கொண்ட திருமால்.

4203 **வடவைத்தீ** - வடமுகாக்கினி; கடலை காக்கும் நெருப்பு.

4204 **வடவைத்தீயால்** - வடமுகாக்கினி என்னும் ஊழித்தீயால்

4205 **வடி** - வடித்து எடுத்த

4206 **வடிவு** - உருவம்.

4207 **வடுகூர்** - வடுகேசர் - வடுவகிர்கண்ணி. சிவாம்ச வைரவர் சிவத்தைத் தொழுத நவாம்ச மகத்துவத் தவத்தலம். 'ஆண்டார் கோயில்'என வழங்கும் ஊர். புதுச்சேரிக்கு மேற்கில் 18 கி.மீ..

4208 **வண்கை** - கொடை ஈயும் கரம்.

4209 **வண்கொண்டுஆர்** - தேனீக்கள் நிறைந்து மொய்க்கும்

4210 **வண்டுஆரும்** - வண்டுகள் ஒலிக்கின்ற.

4211 **வண்ணம்** - உருவம்; வகை

4212 **வண்தாரார்** - வளமான மாலை சூடியவர்.

4213 **வண்பொருளும்** - இணையற்ற அர்த்தம்

4214 **வண்மை** - உதாரகுணம்.

4215 **வண்மைப்பதம்** - கருணைத் திருவடி.

4216 **வண்மைபெறு** - அருள் வரம் பெற்ற.

4217 **வதி** - வசிக்கும்

4218 **வதிவந்தசெய்கை** - ஜீவகாருண்ய செயல்

4219 **வதிவோரும்** - வாழ்வோரும்.

4220 **வதைசெய்திட** - கொலை புரிய

4221 **வதைத்து** - கொன்று

4222 **வந்தி** -மதுரை பிட்டு வாணிச்சி என்னும் கிழவி

4223 **வந்திக்கு மண் சுமத்தல்** - செம்மனச் செல்வி என்னும் பிட்டு வாணிச்சியாகிய மலடிக்கு ஒரு கூலியாளாகி பரிசுத்தமாகிய திருமுடியின் மீது மண்ணையும் சுமந்தாயே.

4224 **வந்திலை** - வரவில்லை

4225 **வம்புல்** - புதுமைப் பொலிவால்

4226 **வயப்படுமோ** - வசப்படுமோ

4227 **வயம் நீங்கி** - தன்மையை ஒழித்து.

4228 **வயிற்று எரிக்கு** - வயிற்றுப்பசிக்கு

4229 **வரகுணனாத தென்னவன்** - வரகுணன் என்கிற பாண்டிய னிடத்து (வரகுண பாண்டியன்).

4230 **வரத ஒண்கை** - அழகிய காக்கும் கை.

4231 **வரம்** - ஆசிர்வாதம் அளிப்பது.

4232 **வரனே** - மேன்மையுடையவனே

4233 **வருத்தி நின்றேன்** - உன்னிடம் எதிர்பார்த்திருந்தேன்

4234 **வரும்பேர்** - அருட்புகழ், அருட்பேர் பெற்ற

4235 **வருமே** - வந்திடுமே

4236 **வருவல்லி** - மலரடி வைக்கவரும் உமையே

4237 **வருள்** - நீர் சுமக்கின்ற

4238 **வரை** - இமயமலை

4239 **வரோதயானந்தம்** - ஆசிர்வதித்து ஆனந்தம் தோன்றுவதற்கு இடமானது.

4240 **வல்** - சூதாடும் கருவி

4241 **வலக்காரர்** - வலியவர்.

4242 **வலதுஅழித்தல்** - வலி அழித்தல்.

4243 **வலம்** - வெற்றியுடன் சுழலும்

4244 **வல்லாண்மை** - வன்செயல்திறம்

4245 **வல்லார்** - வல்லவர்

4246 **வல்லியம்** - புலி.

4247 **வல்வேலவார்** - கவர்ந்து நறுமணம் வீசும்

4248 **வல்வேலை நஞ்சைக் களத்து வைத்த நாத(ன்)** - பாற்கடலிற் பிறந்த விடத்தைக் கண்டத்தில் அமைத்துக் கொண்ட இறைவன்.

4249 **வலித்தாய்** - பலாத்காரமாய்.

4250 **வலிவலம்** - மனத்துணைநாதர் - மாழையுண்கண்ணி. அகழியும், மாமதிலும் ஆதவ தீர்த்தமொடு திகழுமிது வினைதீர்ப்பது. திருவாரூருக்குத் தென்கிழக்கே 16 கி.மீ

4251 **வலையான்** - மலையத்துவச பாண்டியன்

4252 **வழக்கோ** - ஏதும் வம்பு வழக்கு ஆகுமோ

4253 **வழுத்தார்** - வாழ்த்தமாட்டார்

4254 **வழுவா** - மாறிடாத

4255 **வளங்கோவை நாடுந் திலகம் நயப்புலவர்** - வளமாகிய கோவையை யாவரும் விரும்புகின்ற திலகம்போற்சிறந்த நன்மையுடைய அறிவுடையோர்கள்.

4256 **வளம்திரும்பா** - அருள்வளம் குறையாத

4257 **வள்ளல்** - சிவபெருமான்; பரோபகாரி.

4258 **வளி** - காற்று.

4259 **வளைக்கின்ற** - கவர்கின்ற

4260 **வறந்து** - வற்றிப்போய்

4261 **வற்றச்செய்** - காய்ந்து வற்றிப்போகச் செய்த

4262 **வன்கண்** - வன்மை நிலை; இரக்கம் இல்லாத் தன்மை

4263 **வன்சுவை** - தீநாற்றம்; கெட்ட சுவையும் வெடி நாற்றமும்.

4264 **வன்தொண்டர்** - சுந்தரமூர்த்தி சுவாமிகள்

4265 **வன்பு** - வன்மை (கடினத்தன்மை).

4266 **வன்பு அடையாது** - குற்றம் இல்லாமல்

4267 **வன்புஅட்ட** - தீமைஇலாத

4268 **வன்புஅரிதாம்** - வன்மைஇல்லாத

4269 **வன்பே** - எதிர்ப்பே, விரோதமே

4270 **வனம்** - காடு

4271 **வனம் கடந்தோன்** - திருமால்

4272 **வன்மலக்கோளர் ஐவர்** - கொடிய மயக்கத்தை உண்டாக்கும் ஆணவம், கன்மம், மாயை, திரோதனம் மகாமாயை என்னும் ஐவர்

4273 **வன்மிடற்றே** - வலியகழுத்தே

4274 **வன்மிடி நீக்கி** - கொடிய வறுமையைப் போக்கி

4275 **வன்னிவெப்பம்** - அக்கினியின் உஷ்ணம்.

4276 **வன்னேர் (வல்நேர்)** - சூதாடுகாயை ஒத்த

4277 **வனைதல்** - செய்தல்.

வா

4278 **வாகீசருக்குக் கட்டுச்சோறு எடுத்தல்** - திருநாவுக்கரசருக்கு உண்டாகிய பசியைப்பார்த்து கட்டமுது எடுத்து (பொதிசோறு கொண்டு வந்து).

4279 **வாகோர்தம்** - நன்னெறி உடையவர்தம்

4280 **வாசகத்தால்** - நல்லுரையால்

4281 **வாசகத்தின்** - சொற்களின்.

4282 **வாஞ்சித்தனருலகர்** - விரும்பினர்.

4283 **வாட்டாரைக் கொண்டார்** - வாள்போலும் கண்களை யுடைய மகளிர்.

4284 **வாடல்அற** - வாட்டம் நீங்க.

4285 **வாண்முகம்** - ஒளிமுகம்

4286 **வாணாள்** - நீண்ட நல்ல ஆயுள்; வாழ்நாள் (ஆயுள்).

4287 **வாணி** - கலைமகள்; சரசுவதி

4288 **வாதமுறு** - வாதமிடும்

4289 **வாதவூரர்** - மாணிக்கவாசகர்.

4290 **வாதனாதீதம்** - வாதனைக்கு எட்டாதது.

4291 **வாதனை** - வாதிக்கும் துன்பம்

4292 **வாதித்திடுவோர்** - தர்க்கவாதம் செய்திடுவோர்.

4293 **வாமத்தில்** - இடப்பாகத்தில்

4294 **வாமம்** - இடது பக்கம்

4295 **வாமம்படர்** - இடப்பாகத்தில் சூழ்ந்த

4296 **வாமமயிலே** - இடது பாகம் பொருந்திய உமையே

4297 **வாமமும்** - இடப்பாகமும்

4298 **வாய்அவித்தை** - பொருந்திய அஞ்ஞானம்.

4299 **வாய்க்கிட** - வாயில் போட்டுக்கொள்ள.

4300 **வாய்க்குற்றம்** - சொற்குற்றம்

4301 **வாய்ந்து** - பொருந்தி.

4302 **வாய்ப்புலகம்** - மண்ணுலகம்

4303 **வாய்மலரால்** - தோத்திரத்தால்.

4304 **வாய்மை** - சொல்; உண்மை.

4305 **வாயல்** - வழி.

4306 **வாய்வாதம்** - வாய்ப்பேச்சு

4307 **வாயில் அள்ளியிடும் தீமை** - வாயில் வாரி போட்டுக் கொள்கிற தீமைகள்.

4308 **வார்சடை** - நீண்ட சடை

4309 **வார்த்தை சொல** - பேசிப்பார்க்க

4310 **வாரம்வைத்தான்** - அன்பு பூண்டான்

4311 **வாரிசங்கள்** - தாமரைகள்

4312 **வாரியலை** - கடலின் அலை.

4313 **வாழ்சிவம்** - வாழ்விற்கு ஏதுவான.

4314 **வாழ்த்தாமல் மறந்ததுண்டு** - துதியாமல் மறந்ததுண்டு.

4315 **வாழ்வு** - செல்வம்.

4316 **வாழியுற்ற** - வாழ்வைப் பொருந்திய.

4317 **வாள்** - ஒளி.

4318 **வாள்பட்ட** - வானத்திலிருந்து ஓடிவரும்

4319 **வாளா** - சும்மா.

4320 **வாளா இருக்கின்றாய்** - பேசாமலிருக்கின்றாய்

4321 **வாளா இருப்பது** - சும்மா இருப்பது; மௌனமாக இருப்பது

4322 **வாளியைப் போன்று** - அம்பினைப் போல

4323 **வாளுடையாய்** - ஒளிபொருந்திய ஞான வாளை ஏந்தியவனே

4324 **வாளொளிப்புத்தூர்** - மாணிக்கவண்ணர் - பூங்குழலி. பாண்டவர் மீண்டும் அரசுபெற வேண்டிய பேரருள் தந்த தலம். வைதீஸ்வரன் கோயிலிலிருந்து மேற்கே 10 கி.மி. (திருவாணப்புத்தூர்)

4325 **வான்** - ஆகாயம்.

4326 **வான் முகக்கண்** - ஞானக்கண்

4327 **வான்ஏர்** - விண்ணளவு, அழகுடன் நீண்ட

4328 **வான்துதிக்கும் பதி** - சதாசிவக்கடவுள்

4329 **வானநிறத்தோன்** - நீல நிறமுடைய திருமால்

4330 **வானப் பேராற்றை** - பெரிய ஆகாய கங்கையையும்.

4331 **வான்பட்ட கண்ணியர்** - ஒளிபொருந்திய கண்களை யுடைய மகளிர்

4332 **வான்புங்கவரும்** - வானத்துத் தேவர்களும்

4333 **வான்பொருள்** - உயரிய மெய்ப்பொருள்

4334 **வானம்** - கடவுளின் கோயில்; வானுலகம்

4335 **வான்மாறினும்** - வானம் மழை பெய்யத் தவறினாலும்

4336 **வானவாசிகள்** - விண்ணில் வாழ்பவர்கள்.

4337 **வானாதி தத்துவங்கள்** - ஆகாயம் முதலாய தத்துவங்கள்

4338 **வானோர்** - தேவர்கள்.

வி

4339 **விக்கல் வருங்கால் விடாய்தீர்த்தல்** - விக்கல் வருகின்ற மரண காலத்தில் விடாய்ஒழித்து. (தாகத்தை ஒழித்து)

4340 **விகற்பம்** - நினைவின் வேறுபாடு; வேற்றுமை

4341 **விகாசனம்** - அருட்பிரகாசமுடையது.

4342 **விகாரம்** - அவலநிலை; வேறுபாடு

4343 **விகோடனம்** - மிகும் நன்மையது.

4344 **விச்சை** - ஞானம்.

4345 **விசாரத்தினால்** - தாக்கத்தினால்

4346 **விசுவம்** - எல்லாமுடையது; எல்லாமாய் பெருகியது.

4347 **விஞ்சையர்** - பதினெட்டுத் தேவ கூட்டத்துள் ஒருவர்.

4348 **விஞ்ஞானகலர்** - இரு மலம் நீத்தோர்.

4349 **விட்ட நீக்கமும்** - விட்டு விட்டு நின்று அலையும்

4350 **விட்டதற்கு** - விடுவதற்கு.

4351 **விடநாகப்பூண்** - விஷ நாகாபரணம்

4352 **விடப்பிச்சு** - விஷமாகிய இழிபொருள்

4353 **விடமிலை** - விஷத்தைத் தரித்த

4354 **விடயமாலுக்கு** - பெண், பொன், மண் விஷய மயக்கத்திற்கு

4355 **விடாய்** - விடமாட்டாய்

4356 **விடுகின்றேன்** - வீணாகச் செலவிடுகின்றேன்

4357 **விடேல்** - கைவிடாதே

4358 **விடை** - காளை; காளை வாகனம்

4359 **விடை ஆங்குந் தினை** - இடபத்தை அவ்விடத்தில் ஏறி நடத்தினை.

4360 **விடைஎன்று** - எருது ஊர்தி என்று

4361 **விடைகேட்டல்** - அனுமதி கேட்டல்.

4362 **விடையாய்** - முறையீடு; வேண்டுகோள்

4363 **விடையோய்** - காளை வாகனரே

4364 **விடைவாய்** - விடைவாய்அப்பர் - உடையம்மை. ஞானசம்பந்தர் பாடியது. 1917ல் கண்டறிந்த புதிய தலம். கொரடாச்சேரியை அடுத்துள்ள திருக்கோயில்.

4365 **விண் மருவினோனை விடம் நீக்க நல்லருள் செய்தல்** - சுவர்க்கத்தை அடைந்தவனாகிய செட்டிப்பிள்ளையை பாம்பு
4366 கடித்த விஷத்தை ஒழிக்க நன்மையாகிய அருளைச் செய்த.

4367 **விண்டிலை** - சொன்னாய்இல்லை.

4368 **விண்டு** - திருமால்; மூங்கில்.

4369 **விண்டு உறும் கைவீடு** - மூங்கிலால் செய்யப்பட்ட கைகள்
4370 அமைந்த வீடு.

4371 **விண்டுஅகலா** - விட்டு நீங்காத.

4372 **விண்ணப்பம்** - முறையீடு

4373 **விண்ணார்** - விண்ணரசுடையவர்

4374 **விண்பூத்த** - ஆகாயத்தில் பூத்த (நிலவு)

4375 **வித்தக** - திறமையான

4376 **வித்தகமே** - மெய்ஞ்ஞானமே

4377 **வித்தகர்** - ஞானியர்.

4378 **வித்தகன்** - சாதுர்யமுடையவனே; முதல்வன்

4379 **வித்தம்** - திரவியம்.

4380 **வித்தம்இலா** - திறமைஇல்லாத; அறிவு இல்லாத

4381 **வித்தியாதரர்** - தேவவகுப்பினர்.

4382 **வித்து** - காரணம்.

4383 **விதிக்கும் பதிக்கும்** - நான்முகக் கடவுளுக்கும்

4384 **விதிர்ப்புறுதல்** - நடுங்குதல்.

4385 **விதிர்விதிர்த்தல்** - நடுநடுங்குதல்.

4386 **விபுலம்** - பெருமையுடையது.

4387 **விம்பாகாரம்** - உருவத் தோற்றங்களையும் (அ) ஒளி வுருவத் தோற்றங்களும் உண்டாகச் செய்கின்ற நிலை.

4388 **விம்மிதமாக்கினும்** - கட்டிப்போட்டாலும்

4389 **விமலம்** - மலமற்றது; மலநாசமுடையது.

4390 **வியன்அருள்** - பரந்த கருணை

4391 **வியன்கரும்பு** - செங்கரும்பு

4392 **வியனிலத்தே** - அகன்ற மாநிலத்தே

4393 **வியாக்கிரமத்தோல்** - புலித்தோல்.

4394 **விரகு** - உபாயம்.

4395 **விரதப் பெரும்பாழி** - பெரிய விரதச் சிறப்புள்ள.

4396 **விரற்பால்** - விரலின் கீழ்

4397 **விரிசுடர்** - பேரொளி.

4398 **விரித்து விளக்கி** - விளக்கமாகச் சொல்லி

4399 **விரிதல்** - உலகில் அலைதல்

4400 **விரிநீர்** - கடல்.

4401 **விருத்தம்** - முதுமை.

4402 **விருத்தர்** - கிழவர்.

4403 **விரைமலர்** - மணக்கின்றமலர்

4404 **வில்இயல்பூண்** - ஒளி பொருந்திய அணிகலன்.

4405 **விலங்கிழி** - விலங்கினும் இழிவுடைய

4406 **விலங்கு** - மிருகம்.

4407 **வில்லடிக்கும் கல்லடிக்கும் களித்தல்** - வில்லாலடித்த அடிக்கு மனமகிழ்ந்ததும் அல்லாமல் சாக்கிய நாயனாரது கல்லடிக்கும் மனமகிழ்ந்தனையே.

4408 **வில்லைப்பொன்னா** - இமயமலையை வில்லாக்கி

4409 **விலைப்பட்ட** - தாழ்வடைந்த

4410 **விவிதம்** - பல்வகை.

4411 **விழாச் செயினும் அவ்விடந்தான் ஆறாயிரங்காதம்** - திருவிழாவைச் செய்தாலும் அந்த இடமானது ஆறாயிரங் காத தூரமாய்இருக்கின்றது.

4412 **விழிப் பாலன்** - கண்ணுதல் விஷயமாய்.

4413 **விழிமணியே** - நெற்றிக் கண் கொண்ட இரத்தினமே

4414 **விழைதல்** - விரும்புதல்.

4415 **விளநகர்** - துறைகாட்டிநாதர் - வேயுறுதோளி. காவிரிப் பிரளயத்தில் பக்தருக்குக் கரைகாட்ட வேடனாய்வந்த ஈசன். மாயூரத்தின் கிழக்குத் திசையிலே 7 கி.மீ.

4416 **விளமர்** - பதஞ்சலிமனோகரர் - மதுரபாஷிணி. பதஞ்சலி முனிவரும் வியாக்ரபாதரும் பூரணப் பரமனைப் பூசனை புரிந்த ஊர். திருவாரூருக்கு 3 கிமீ. மேற்கே ஓடம் போக்கி நதிக்கரையில்.

4417 **விளர்ப்பு** - நெருப்பு.

4418 **விள்ளா** - கண்டுசொல்ல முடியாத

4419 **விளிந்தார்போலும்** - நீங்கினார் போலும்.

4420 **விற்குடி வீரட்டம்** - திருவிற்குடியின் வீரட்டத்தில்.

4421 **விறற்காலகாலன்** - இயமனை வென்ற ஆற்றல் உடையவன்.

4422 **வினைஒப்பு** - நல்வினை தீவினை ஒத்தநிலை.

4423 **வினைகள்** - நல்வினை; தீவினை.

4424 **வினையால்** - தீவினை சூழ்வதால்

4425 **வினையேன் (வள்ளல்) வினை தவிர்த்தல்** - வினை யேனது துயரத்தை ஒழித்தருளின.

4426 **வினோதசகளம்** - மகத்துவ உருவம்

வீ

4427 **வீசங் கொடுத்து எட்டு வீசம் எனல்** - ஒரு வீசத்தைக் கொடுத்து எட்டு வீசமென்று கூறும்.

4428 **வீட்டகம் போந்து** - வீட்டிற்குள் புகுந்து

4429 **வீட்டார்** - பேரின்ப முடையவர்

4430 **வீட்டுத்தலைவன்** - பேரின்ப வீட்டிற்குத் தலைவன்

4431 **வீடல்** - உயிர் விடுதல்.

4432 **வீடா** - குன்றாத

4433 **வீண்டாடு** - வீழ்ந்து அழிந்த

4434 **வீணவத்தில்** - வீண்காரியங்களில்

4435 **வீயாத** - அழியாத

4436 **வீயும்** - இறந்த உடலைச் சுடும்

4437 **வீரட்டம் (கொறுக்கை)** - திருக்கொறுக்கை வீரட்டம் என்னும் திருப்பதியில்.

4438 **வீரத்தை** - எமனை உதைத்து அருளியதை

4439 **வீரதாண்டவம்** - மாமாயையாகிய காளியை வென்ற நடனம்.

4440 **வீழ்ந்து** - விழுந்து

4441 **வீழ்நீர்** - மழைநீர்

4442 **வீழ்முகத்தர்** - விரும்பப்பட்ட முகத்தை உடையவர்.

4443 **வீழ்விக்கும்** - கீழ்மைப்படுத்தும்

4444 **வீழ்வு** - விருப்பம்.

4445 **வீற்றவன்** - வீறு உடையவன்

4446 **வீற்றாயினும்** - கூடி ஆராய்ந்தாலும்

4447 **வீற்றார்** - மேன்மை தங்கிய

4448 **வீற்றுருதேர்** - பெருமை பொருந்திய தேர்.

4449 **வீறுஆலகாலம்** - வேகம் தரும் ஆலகால விஷம்.

4450 **வீறுகின்ற** - மிகுகின்ற.

4451 **வீறுடைந்து** - மனஉறுதி குறைந்து

4452 **வீறுடையாய்** - அருள் வல்லவனே

4453 **வீறும்** - தோற்றமும்

வெ

4454 **வெஃகினை** - விரும்பினை.

4455 **வெங்கூளி** - கொடிய பிசாசு.

4456 **வெகுளி** - சினம்.

4457 **வெங்கோடை** - கடுமையான வெப்ப காலம்

4458 **வெச்சென்ற** - தீயது என்ற; வெப்பமான.

4459 **வெஞ்சமாக்கூடல்** - விகிர்தநாதர் - பண்ணேர் மொழியாள். பிள்ளைகளை அடகுவைத்து சுந்தரர்க்குப் பொன் கொடுத்த ஈசன் தலம். கருவூருக்குத் தென்மேற்கே 16 கி.மீ.

4460 **வெட்டி** - அன்பர்களைத் துன்புறுத்தி

4461 **வெண்காப்பிட்டு** - திருநீற்றுப்பூச்சிட்டு

4462 **வெண்ணி** - வெண்ணிக்கரும்பர் - அழகிய நாயகி. கட்டுக் கரும்பின் வடிவிலே காட்சி தந்தருளும் லிங்க மூலவர். நீடா மங்கலத்தின் மேற்கே 8 கி.மீ.

4463 **வெண்ணிறமெய்யாள்** - சரசுவதி

4464 **வெண்ணீர்** - பால்.

4465 **வெண்மை** - அறியாமை; இளமை.

4466 **வெந்தன சதை** - இழிந்த சதையை

4467 **வெம்சஞ்சலம்** - தீய சலனமாகிய அலைவு

4468 **வெம்பனையாய்** - பயனற்ற பனை மரமாய்

4469 **வெம்பாலை** - கொடிய பாலை

4470 **வெம்புலை** - தீமை தரும் மாமிசம் உண்பதை

4471 **வெம்புற்று** - உடம்பு.

4472 **வெம்பெருமானுக்கு** - தன்னை அழிக்க தாருக வனம் வந்தமானுக்கு

4473 **வெம்மாயை** - நீக்க இயலாத திரோதான மகாமாயை.

4474 **வெம்மால் மடந்தையர்** - கொடிய மயக்கத்தை உண்டாக்கு கின்ற மகளிர்.

4475 **வெம்மானுக்கு** - கொலை புரியும் மானுக்கு

4476 **வெம்மை புரிவான்** - தண்டிப்பான்.

4477 **வெய்ய நமன்நாடு** - கொடிய எமலோகம்.

4478 **வெருட்சி** - மிரளும்

4479 **வெருவற்க** - அஞ்சற்க

4480 **வெருவேல்** - அச்சப்படேல்

4481 **வெவ்வழி** - விரைந்து செல்லக்கூடிய நீர்வழி

4482 **வெவ்வினை** - கொடிய பாவம்.

4483 **வெள்எலும்பு** - சாம்பலாகிய எலும்பு

4484 **வெள்ஏற்றவனே** - எருதில் ஏறியவனே

4485 **வெள்நகை** - வெள்ளிய சிரிப்பு.

4486 **வெள்ளடை** - திருக்கருகாவூர் வெள்ளடை என்னும் திருப்பதியிலெழுந்தருளின.

4487 **வெள்ளம்** - கங்கை

4488 **வெள்ளமுதம்** - தேவாமிர்தம்

4489 **வெள்ளி வெற்பு** - கயிலை மலை

4490 **வெள்ளிருக்கின்றவர்** - வெளியே உள்ளவர்கள்

4491 **வெள்ளென்ற** - உருகாத கடினத் தன்மை உடைய

4492 **வெளி** - ஆகாயம்.

4493 **வெளிக்குள்வெளி** - பரமாகாச வெளி,சிதாகாசவெளி.

4494 **வெற்பவனே** - மலைஉடையவனே

4495 **வெற்பு** - மலை.

4496 **வெற்புடையாய்** - குன்றுதோறாடல் புரிபவனே

4497 **வெற்பே** - பொன்மலையே, அருள்மலையே

4498 **வெற்றுஅம்பல்** - வீண் பழிச்சொல்

4499 **வெறும்பூ** - வெறுமையான பூமி.

4500 **வென்றி** - வெற்றி.

4501 **வென்னடை** - வெல்லுகின்ற நடை.

வே

4502 **வேசறிக்கை** - துன்பம்.

4503 **வேட்டவை** - விரும்பியவை.

4504 **வேட்டுக்கொண்டு** - விருப்பம்கொண்டு

4505 **வேடம்** - வேஷம்.

4506 **வேண்டியநான்** - வேண்டப்பட்டவனாகியநான்

4507 **வேணி** - சடை; சடைமுடி

4508 **வேணிக்கமே வைத்த** - கங்கையை முடியில் தரித்த

4509 **வேத சமரசமே** - வேதத்தின் சமரச நிலையே.

4510 **வேத சாரமே** - வேதச் சாறே.

4511 **வேத நுட்பமே** - வேதத்தின் நுட்பமாகிய பொருளே;

4512 **வேதண்டன்** - கயிலைப்பதி.

4513 **வேத்துடையார்** - வேறுயாரும்

4514 **வேதன்** - பிரமன்

4515 **வேதன(ம்)** - அறிவுடையது.

4516 **வேதாந்த உண்மையே** - வேதமுடிவின் உண்மையே.

4517 **வேதாந்தம்** - உபநிடதம்.

4518 **வேதாந்தவித்து** - வேதமுடிவின் காரணம்.

4519 **வேதாந்தாந்தம்** - வேத அனுபவ முடிவுக்கும் முடிவானது.

4520 **வேம்பிணத்தின்** - சுடுகின்ற பிரேதத்தின்

4521 **வேய்** - மூங்கில்.

4522 **வேய்க்கு** - மூங்கிலுக்கு

4523 **வேய்தல்** - பூணுதல்.

4524 **வேர்க்கின்ற** - சூடுமிகுந்த

4525 **வேழத்தின் எச்சம்** - யானையின் மலம்

4526 **வேள்வாகனம்** - மன்மதன் வாகனம் (கிளி).

4527 **வேள்வி** - உபகாரம்.

4528 **வேள்வி செய்தல்** - யாகம் செய்கின்ற.

4529 **வேள்விக்குடி** - கல்யாண சுந்தரர் - நறுமண நாயகி. கைமேல் பலன் தரும் கல்யாண பிராத்தனைத் திருத்தலம். தஞ்சை குற்றாலத்திலிருந்து வட கிழக்கே 5 கி.மீ.

4530 **வேளானோன் காகளம்** - மன்மதனது ஊதுகொம்பு. (குயில்).

4531 **வேளை** - மன்மதனைப் போன்ற அழகினை.

4532 **வேற்று** - வேறு வகையில்

4533 **வேற்றுரைத்தேன்இல்லை** - மாறுபட்டுச் சொன்னேன் இல்லை

வை

4534 **வைகன் மாடக்கோயில்** - வைகல்நாதர் - இளங்கோதை. பறவை விலங்கு மானுடரோடு தேவரும் வணங்கிய திருத்தலம். ஆடுதுறையிலிருந்து 7 கி.மீ.

4535 **வைகும்கொலோ** - நெஞ்சில் வாழ்ந்திடுமோ

4536 **வைத்தேனேல்** - வைப்பவன் ஆகில்

4537 **வைதிக** - வைதிகக்குதிரை

4538 **வைப்பதில்தான்** - நடந்து கொள்வதில்தான்

4539 **வைப்பாகும் பதம்** - மூலதனமாகும் பதம்.

4540 **வைப்பு** - புதையல்.

4541 **வையத்து** - உலகத்தின்

4542 **வையினும்** - ஏசினாலும்

4543 **வைவமே என்னும்** - வைதிடுவோம் என்று சொல்லும்.

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

திருவருட்பா அகராதி

இரண்டாம் திருமுறை

பக்கம் எண் : 85 - 123

பாடல் எண் : 4544 - 6975

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

அ

4544 **அக்கண்நுதல்** - நெற்றிக்கண் உடைய சிவன்
4545 **அக்கணம்** - எமதூதர்கள்
4546 **அக்கமாமணி** - உருத்திராக்க மாலை
4547 **அகத்தின்பால்** - உயிரினிடத்தில்
4548 **அகம் குழையேன்** - உள்ளம் உருகேன்
4549 **அகம்மெலிய** - உள்ளம் நலிய
4550 **அகரம்** - வலிமை இல்லாமை
4551 **அகல இருந்தனையே** - தூரத்தே இருந்தனையே
4552 **அங்கும்** - மறுமையிலும்
4553 **அங்கையில் புண்** - உள்ளங்கையில் புண்
4554 **அச்சு இல்லை** - உயிர் வாழும் தூய உடலை
4555 **அச்சுதற்கு** - திருமாலுக்கு
4556 **அசதியாட** - குறை சொல்ல
4557 **அஞ்சநடை** - அம்ச நடை; அன்ன நடை
4558 **அஞ்சனம்** - மை
4559 **அஞ்சியல்** - ஐம்புல மயக்கம்
4560 **அஞ்சுடையாய்** - ஐந்துமுகம் உடையவரே
4561 **அஞர்எலாம்** - துன்பம் எல்லாம்
4562 **அஞராம்** - துன்பமாகும்
4563 **அட முடியாது** - அழிக்க இயலாது
4564 **அட்டமூர்த்தியாகிய** - ஐம்பூதமும் இருசுடர், ஆன்மாவுமாகிய
4565 **அடல் ஏறு** - வலிமை வாய்ந்த காளை
4566 **அடவுண்மாசு** - அடர்ந்த மனமாயை
4567 **அடித்துணை** - இருதிருவடிகள்
4568 **அடிமலரும்** - திருவடிக் கமலங்களும்
4569 **அடிமைச் சாதனம்** - அடிமைச் சாசனம்
4570 **அடியார் மாலையின்** - அன்பர்களின் பாமாலை பூண்டவன்
4571 **அடுத்தும்** - ஊட்டும்
4572 **அடுவேன்** - அழித்திடுவேன்
4573 **அடைகுவித்து** - சேரும்படிச் செய்து
4574 **அடைய நின்று** - நெருங்கி நின்று
4575 **அடைவே** - பெரும் பேறே
4576 **அண்கொள** - நெருக்கமுடைய
4577 **அணங்கவர்** - வருத்தும் தெய்வத்தை ஒத்தவர்
4578 **அண்டர் ஆதியோர்** - அண்டங்களில் வாழ்பவர்
4579 **அண்ண** - நெருங்க
4580 **அண்ணலே** - சான்றோனே
4581 **அண்மையதாய்** - நெருக்கமுள்ளதாய்
4582 **அண்மையே** - அருகிலே
4583 **அண்மையொடு** - நண்பாகிய
4584 **அணி அம்பலம்** - அழகு மன்றம்
4585 **அணிகொள்** - இரக்கமுடைய
4586 **அணியன்** - அணுகி அடைபவன்
4587 **அணிவிடையாய்** - அழகு காளை வாகனனே
4588 **அணுக்கத்தொண்டர்** - அகத்தொண்டர் (அருகிருந்து குற்றேவல் புரிபவர்)
4589 **அணை** - படுக்கை
4590 **அணைக்கின்ற** - நெருங்குகின்ற
4591 **அணையிலாது** - அணை கடந்த
4592 **அத்தனை** - தந்தையை
4593 **அத்தா** - தந்தையே
4594 **அதுசாலும்** - அதுவே போதும்
4595 **அதுவண்ணம்** - அப்படிச் செய்யும் தன்மை
4596 **அந்தகன்** - எமன்
4597 **அந்தணர் இலம்** - தயை உடையார் குடியிருப்பு
4598 **அந்தநாள்** - முத்தியடையும் நாளில்
4599 **அந்தரம்** - உள்வெளி
4600 **அந்திவான நிறத்து** - சிவந்த வான நிறமுடைய
4601 **அநந்தர்** - அச்சு; அச்சானவர்; கருத்தா
4602 **அநீதமோ** - அநீதியோ
4603 **அப்பரிசினர்** - அத்தன்மையர்
4604 **அபயம்** - அடைக்கலம்
4605 **அபரநிலையினர்** - சாத்திர ஞானிகள்
4606 **அம்பலம்** - புதுமை பழக்கத்தினால் சேர்கின்ற வலிவு
4607 **அம்பியை** - புணையை; ஓடத்தினை
4608 **அம்பினை** - திருமாலாம் காளையை
4609 **அம்புயன்** - பிரமன்
4610 **அம்புவி** - அழகிய நிலம்
4611 **அம்பொற்சேவடி** - அழகிய பொன்மையான சிவந்த திருவடி
4612 **அம்மனை** - அம்மையை

4613 **அம்மான்** - தலைவன்; மாமன் ஆனவன்
4614 **அம்மை** - மறுமை; முற்பிறப்பிலும்
4615 **அமரிடை** - போர் அடுத்து
4616 **அமல நித்தியமே** - மலமற்ற நிலைத்த பொருளே
4617 **அமல நெறி** - மாயை விலகும் மார்க்கம்
4618 **அமலை** - மலம் நீங்கியவன்
4619 **அமுங்க** - வருந்திட
4620 **அமுங்குகின்ற** - வருந்துகின்ற
4621 **அமுத இளநகை** - அமுதம் தரும் புன்சிரிப்பு
4622 **அமையும்** - போதும்
4623 **அமைவு** - அடக்கம்
4624 **அமைவேன்** - சென்று அடைவேன்
4625 **அயர்ந்திலேன்** - பாடி நெகிழ்ந்திலேன்
4626 **அயன்** - பிரமன்
4627 **அர** - அரனே
4628 **அரக்குஎன** - மெழுகுஎன
4629 **அரங்கம்** - மேடை
4630 **அரட்ட வேடரை** - வீண் பேச்சினரை
4631 **அரண் என** - பாதுகாவல் என
4632 **அரணமாகும்** - பாதுகாப்பு ஆகும்
4633 **அரந்தையோடு** - மன வருத்தத்தோடு
4634 **அரவப்படம்** - பாம்பின் படமாகும்
4635 **அரவனையேன்** - பாம்பினை ஒத்தவன்
4636 **அரவார்** - பாம்பினால் ஆய
4637 **அரிட்டை ஓதுதும்** - துன்பத்தைக் கூறுவோம்
4638 **அருட்கலை** - அருள் ஒளி
4639 **அருட்கலைகிளர்** - அருள் ஒளி வீசும்
4640 **அருட்டி(தி)றம்** - அருள் வல்லபம்
4641 **அருணையில்** - திருவண்ணாமலையில்
4642 **அருத்தியின்** - அன்புடன்
4643 **அரும்பின்னை** - இலக்குமியை
4644 **அரும்பெறல்** - பெறுவதற்கு அரிய
4645 **அருமால்** - உலகமயக்கம்
4646 **அருமை செய்து** - பாராட்டச் செய்து
4647 **அருள்வான்** - திருவருள் புரிய என்றே
4648 **அரையன்** - அரசன்
4649 **அலங்குகின்ற** - ஓங்குகின்ற
4650 **அலதுஆணை** - அல்லாமல் வேறு கடமை இல்லை
4651 **அல்பாய்** - இரவின் நிறம் உடைய
4652 **அல்லல்** - தொல்லை
4653 **அல்லல் ஓதியர்** - இருள் போலும் கூந்தலை உடையவர்
4654 **அல்லல் ஓதுதும்** - துன்பத்தினைச் சொல்லுவோம்
4655 **அல்லல்கடல்** - துன்பக்கடல்
4656 **அல்லாயம்** - கருநிறமுடைய நஞ்சு
4657 **அல்லார்** - இருளை நிறைந்த
4658 **அல்லிர்சொல்** - இல்லையோ
4659 **அல்லின்** - இரவு இருளினும்
4660 **அல்லும் எல்லும்** - இரவும் பகலும்
4661 **அல்லை** - இரவினை; இருட்டை
4662 **அல்வைத்த** - இருளையுடைய
4663 **அலைகொள்** - கடலில் தோன்றிய
4664 **அலைப்பது** - அலையடிப்பது
4665 **அலையே கருதும்** - எண்ணிப் போற்றும்
4666 **அலைவளைக்கும்** - அலைகள் எழும்
4667 **அவத்திழிய** - கீழ்மையில் கிடக்க
4668 **அவநேயம்** - இழிவான விருப்பம்
4669 **அவமானம்** - இழிவு
4670 **அவமே** - வீணாக
4671 **அவலத்தழுங்கல்** - இழிநிலைக்கு வருந்துதல்
4672 **அவலம் இங்கு** - இழிவு இங்கு
4673 **அவ்வண்ணம்** - அத்தகையதாகி
4674 **அவ்வழி** - அருள் வழி
4675 **அவ்வியம்** - வஞ்சகம்
4676 **அவ்வியர்** - குறைபாடாகியவர்
4677 **அவாவுற** - விரும்பிட
4678 **அழல் அயில் கரத்து** - தீஉமிழும் வேல் பிடித்த கை
4679 **அழற்கணை** - தீ உமிழும் அம்பு
4680 **அழற்கு இரைத்த** - தீயில் இட்ட
4681 **அழற்றிய** - விரிந்த
4682 **அழுந்தி** - மூழ்கி
4683 **அளகத்தார்** - கூந்தலினார்
4684 **அளகம்** - கூந்தல்

4685 **அளற்றிடை** - சேற்றிடையில்

4686 **அளற்றில்** - சேற்றில்

4687 **அளி** - கருணை, வண்டுகள்

4688 **அளிக்கும் தன்மை** - கொடுக்கும் தன்மை

4689 **அளிகொள்** - இரக்கமுடைய

4690 **அளிநறை கொள் இதழி** - தேனீக்கள் சேகரித்திட்ட தேன் நிறைந்த கொன்றை

4691 **அளியே பெருக** - இரக்கம் மிகுந்திட; உருக்கம் பெருகிட

4692 **அளியோய்** - இரக்கம் உள்ளவனே

4693 **அற அறிந்தனம்** - முழுதும் தெரிந்தோம்

4694 **அறக்கடையாய்** - தருமத்தில் இழிந்தவராய்

4695 **அறத்தாய்** - தருமவல்லி

4696 **அற்ப அளவு** - சிறுபொழுது

4697 **அற்ப அற்றைக்கூலி** - கொஞ்சமாக அன்று தரும் கூலி

4698 **அற்பனேன்** - கீழ்மையானவன்

4699 **அற்புடைய** - அன்புடைய

4700 **அறம் அருள் புரிந்தவனே** - தரும உபதேசம் செய்தவனே

4701 **அற்றம்** - அச்சம்; சோர்வு

4702 **அற்றுநோக்கிய** - நல்லுணர்வுகளின்று முழுதும் விலகும் படியான

4703 **அறியாவண்ணம்** - அழிவில்லாத வகையில்

4704 **அறியாவிடில்** - இரங்கா விடில்

4705 **அறுமுக** - ஆறுமுகங்களை உடைய

4706 **அறைகுவதென்னே** - சொல்லுவதால் என்ன பயன்

4707 **அறைந்து போற்றுதும்** - சொல்லிப் புகழுவோம்

4708 **அறையும்** - பேசும்

4709 **அறைவது** - சொல்வது

4710 **அனக நடந்தது** - ஆன்மாவில் நடம் புரிவது; புண்ணிய நலம் உடையது

4711 **அனந்தம்** - கணக்கற்ற

4712 **அன்றார்ந்த** - அன்றுவந்த

4713 **அன்னம்** - சோறு

4714 **அன்னார்** - அத்தகையவர்

4715 **அன்னே** - தாயே

4716 **அனித்தம் இலா** - அழிவடையாத

ஆ

4717 **ஆஆஎன்று** - அடடா என்று

4718 **ஆக(ம)மும்** - சித்தாந்த நூல்களும்

4719 **ஆக்கை** - உடம்பு

4720 **ஆகாயம்** - பெருவெளி

4721 **ஆங்காரப் பேரினை** - அகங்காரம் என்னும் பெயரினை

4722 **ஆசகலும்** - குற்றம் நீங்கும்படி

4723 **ஆசும்** - குற்றம் குறையும்

4724 **ஆசுவரே** - பெரிய சுவரே

4725 **ஆடற்கு** - தடுமாற்றம் அடைவதற்கு

4726 **ஆண்டு ஆறுமூன்றாண்டில்** - ஒன்பதாம் ஆண்டில்

4727 **ஆண்டுகொண்ட** - ஆட்கொண்ட; அடிமையாக்கிய

4728 **ஆண்டை** - எசமான்

4729 **ஆண்தகையை** - ஆடவரில் சிறந்தவனை

4730 **ஆதித்தர்** - சூரியர்

4731 **ஆது சொல்லுதும்** - நிலைமை கூறுவோம்

4732 **ஆய்க்கும்** - தாய்க்கும்

4733 **ஆய்த்தகலை** - ஆய கலைகள்

4734 **ஆய்தல்** - ஆராய்தல்

4735 **ஆயிரங்கள் முகில்** - ஆயிரம் கரிய மேகங்கள்

4736 **ஆர்அழல்** - நிறைந்த நெருப்பு

4737 **ஆர்க்கும்** - ஒலிக்கும் ; ஆரவாரிக்கும்

4738 **ஆரணமும்** - வேதாந்த நூல்களும்

4739 **ஆர்த்தார்** - ஆரவாரிக்கின்றார்

4740 **ஆர்த்து** - ஒப்புவித்து

4741 **ஆர்ந்திடுமோ** - கிடைக்குமோ

4742 **ஆர்ந்து** - பொருந்தி

4743 **ஆராஅணங்குற** - தீரா அச்சம் மேலிட

4744 **ஆரூர்** - திருவாரூர்

4745 **ஆல்** - ஆலமரம்

4746 **ஆல் அடுத்த** - கல் ஆல மரத்தின் கீழ் அமர்ந்த

4747 **ஆலக்கோயிலில்** - திருக்கோயிலில்

4748 **ஆலக்கோயிலுள்** - திருக்கச்சூரில்

4749 **ஆலகாலம்** - பாற்கடலின் நஞ்சு

4750 **ஆலம்** - நஞ்சு

4751 **ஆலம் சொல்லுதும்** - துயரினைச் சொல்லுவோம்

4752 **ஆலவினையால்** - தீவினையால்

4753 **ஆலி அன்னதாம்** - ஆலம்கட்டி மழை போன்றதாகும்

4754 **ஆலின்** - ஆல மரத்தின்

4755 **ஆவா** - ஆஆ என

4756 **ஆழி ஒத்து** - சக்கரத்தைப் போன்று

4757 **ஆள்பதம்** - ஆளும் தன்மை உடைய திருவடி

4758 **ஆள்வையே** - ஆண்டு அருள்வாயாக

4759 **ஆளாவேன்** - தொண்டனாவேன்

4760 **ஆற்ற** - தீராத

4761 **ஆற்றுக்கே** - கங்கைக்கு

4762 **ஆறுமேவிய வேணி** - கங்கை விளங்கிய சடை

4763 **ஆனிவர்ந்து** - காளை மீது

4764 **ஆனேறி** - காளைமீது ஊர்ந்து ; ஊர்ந்து

இ

4765 **இகலிடா** - நீங்காத

4766 **இகந்தேன்** - நீங்கினேன்

4767 **இகல் இடையை** - இடையில் உள்ள கு, கு, கு என்னும் எழுத்தினை இரட்டையாக்கி அதாவது (ஆறு) அறுகுவாக்கி அந்த அறுகம்புல் கொண்டு

4768 **இகல் உடையேற்கு** - போராட்டமுடைய எனக்கு

4769 **இங்கில் உழப்பில்** - உலகியலில்

4770 **இங்கும்** - இம்மையிலும்

4771 **இசைக** - பொருந்துக

4772 **இசைக்கின்றார்** - பேசுகின்றார்

4773 **இட்டம்** - விருப்பம்

4774 **இட்டவகை** - விதிவழி

4775 **இட்டு உண்பர்** - கொடுத்து உண்பவர்

4776 **இடத்தாய்** - இடப்பக்கம் சேர்ந்தாய்

4777 **இடம்** - சூழ்ச்சியே

4778 **இடமும்** - இடப்பக்கமும்

4779 **இடர்** - துன்பம்

4780 **இடரின்** - துன்பத்தின்

4781 **இடும்பிள்ளை** - பெரிய பிள்ளை (மரம் போன்றவர்)

4782 **இடுமைநெறி** - ஞானவழி; அஞ்ஞானவழி

4783 **இடை** - இடுப்பு

4784 **இடையாத** - அவியாத

4785 **இடையுறு** - இடுப்பின் நடுவில்

4786 **இணைத்தாள்** - இரண்டாகிய திருவடி

4787 **இணைத்துணை** - அடிகள் துணை என்று

4788 **இணையில்** - ஈடில்லாத

4789 **இதம்** - புத்தி

4790 **இதம் சொல்லி** - நயமாகப் பேசி

4791 **இதழித்தார்** - இதழ்களை உடைய மலர் மாலை

4792 **இதழிப்புயம்** - மாலை தரித்த தோள்

4793 **இதழிமாலையும்** - கொன்றை மாலையும்

4794 **இந்த நாள்** - இப்பிறப்பிலேயே

4795 **இந்தார்** - பிறை சூடிய

4796 **இந்து ஓர்தரு** - நிலவு விளங்குகின்ற

4797 **இந்து சேகரன்** - இளநிலா சூடியவனே

4798 **இப்பரிசானால்** - இத்தன்மை உடையதானால்

4799 **இம்பர்** - மண்ணுலகினர்; இவ்வுலகினர்

4800 **இமையான்** - மலையரசன்

4801 **இயம்பல்** - சொல்லியருளுதல்

4802 **இயம்பிடாது** - பேசாது

4803 **இயம்பிய** - சொல்லிய

4804 **இயம்பினேன்** - சொன்னேன்

4805 **இயம்புகவே** - சொல்லுகவே

4806 **இரக்கமே** - உயிர்களின் துன்பம் கண்டு வருந்தினால்

4807 **இரக்கின்றோர்களுக்கு** - யாசிப்பவர்க்கு

4808 **இரங்காது** - இரக்கமின்றி

4809 **இரந்தளித்த** - பிச்சையேற்றுத் தந்த

4810 **இரந்திடும் அவனே** - பிச்சை எடுத்த இறைவனே

4811 **இரந்து** - அவதியுடைய

4812 **இரப்பவர்க்கு** - யாசிப்பவருக்கு

4813 **இரிந்திட** - நீங்கிட

4814 **இருங்கழுவில்** - கரிய கழுமரத்தில்

4815 **இருந்தவத்தோர்** - பெரிய தவம் செய்தவர்

4816 **இருநிலம் அகன்று** - இருளைத் தரும் தத்துவங்களினின்று விலகி

4817 **இரும்பென** - இரும்பு போன்ற

4818 **இருமைக்கும்** - இம்மை மறுமைக்கும்

4819 **இருமையினும்** - இம்மை மறுமையிலும்

4820 **இருவண்ணம்** - இத்தகைய; இரண்டு வகையான

4821 **இருவருக்கரிய** - பிரமன் விஷ்ணுவும் காண அரிய

4822 **இருவாதனை** - சகப் பழக்க வாதனை

4823 **இருள் நடையில்** - இழிந்த வார்த்தையில்

4824 **இருள்பவம்** - இருண்ட பிறப்பு

4825 **இருளுடையார்** - இருண்ட கல் மனம் போன்றவர்

4826 **இருளே** - இழிவினையே

4827 **இருளைக் காய்க்கும்** - அக இருளை நீக்கும்

4828 **இரை எனல்** - தீனி என்பது

4829 **இரைக்கும்** - ஒலி செய்யும்

4830 **இலகம் பரத்தே** - விளங்கும் சிதாகாசத்தில்

4831 **இலகு** - விளங்குகின்ற

4832 **இலங்கள் தோறும்** - வீடுகள் தோறும்

4833 **இல்மேவி** - உலகியலில் அழுந்தி

4834 **இல்லியர்** - ஓட்டைகள் நிறைந்த

4835 **இல்லைவேட்ட** - உடலினை விரும்பி

4836 **இல்லொழுக்கிய** - உலகியலில்; குடும்ப நிலையில்

4837 **இல்வைப்புடையேன்** - உலகியல் போகம் உடையவன்

4838 **இலனே** - இல்லையே

4839 **இவண்** - இங்கே

4840 **இவரும்** - ஏறுகின்ற

4841 **இவ்வகை செய்திட** - முன் வினைப்பயன் அமைய

4842 **இவ்வண்ணம்** - இத்தகையது

4843 **இவ்வழி** - உலக நடையில்

4844 **இழிகிலேம்** - இழிந்த இறப்புமில்லை; இறங்கவுமில்லை

4845 **இழிச்சினை** - தாழ்வுப் படுகை

4846 **இழிதகையேன்** - தாழ்பவன்

4847 **இழுது** - சாறு அற்ற சக்கை

4848 **இழை பொறுத்த** - அணிகலன்கள் சூடிய

4849 **இளகிலா** - உருகி நெகிழாத

4850 **இறுத்த** - பல்லினை உடைத்த

4851 **இறையும்** - சிறுபொழுதும்; கணப் பொழுதும்; நின் வழியில் சிறிதளவும்

4852 **இறையேனும்** - சிறிதேனும்

4853 **இன்பறு** - துன்பமுடைய

4854 **இன்மயம்** - மனித நேயம்

4855 **இன்று ஆக** - இன்னமும் கூட

4856 **இனாது என** - தீமையானது என

4857 **இனை உடையான்** - பொருந்தக் கூடியமையால்

ஈ

4858 **ஈகும் அகன்றேன்** - ஈதலைவிட்டு நீங்கினேன்

4859 **ஈகுவதும்** - பகிர்ந்து தருதல் எதுவும்

4860 **ஈங்கு** - இவ்விடத்தே

4861 **ஈட்டுகின்றதற்கு** - சம்பாதிப்பதற்கு

4862 **ஈடு** - மனத்துன்பம்

4863 **ஈடு ஆரும்** - இணையான முடிவாகும்

4864 **ஈண்டாமை** - இங்கு ஆமை

4865 **ஈண்டு ஆறு** - இங்கு வளர்க என

4866 **ஈத்து** - ஈர்த்து; இழந்து; கொடுத்து

4867 **ஈதியேல்** - கொடுப்பாயானால்

4868 **ஈயில் இழியேன்** - ஈயினும் இழிந்தேன்

4869 **ஈர்க்க** - இழுக்க

4870 **ஈர்க்கின்றாய்** - இழுக்கின்றாய்

4871 **ஈர்க்குவன்** - இழுத்திடுவான்

4872 **ஈர்த்த** - கிள்ளிய

4873 **ஈர்த்த நெஞ்சினர்** - தீமையால் இழுக்கும் மணமுடை யாள்

4874 **ஈர்த்து** - இழுத்து

4875 **ஈறில்** - அளவில்லாத

4876 **ஈறு** - இழிந்த நிலை

4877 **ஈறு அறியா** - அடியை அறியாத

4878 **ஈனம் தக்காது** - இழிவு அமையாமல்

4879 **ஈன்று கொண்ட** - பெற்றெடுத்த

உ

4880 **உக்க அக்கணம்** - பிறந்த அந்த நேரத்திலேயே

4881 **உக்கு மாறினும்** - விழுந்து மாறினாலும்

4882 **உகுப்பார்** - சிந்துவார்

4883 **உஞ்சப்படும்** - மேம்படும் நிலையில்

4884 **உஞ்சவர்கள்** - உயர்ந்தவர்கள்; மேம்பட்டவர்கள்

4885 **உட்கதவம் கொளும்** - உள்ளே ஒன்றுபடும்; உயரும் கதவுடைய

4886 **உட்குழைவான்** - அகம் நெகிழ்வான்

4887 **உட்டிகழ்ந்த** - உள்ளே ஓங்கும்
4888 **உட்பொங்கி** - உள்ளே (பூரித்து) ததும்பி
4889 **உடைமை** - செல்வம்
4890 **உடையோர்** - உரியவர்
4891 **உண் முக(ம்)** - அகமுகம்
4892 **உண்என்றால்** - நினைப்பாய் என்றால்
4893 **உண்டு இலை** - உண்டு என்றோ இல்லை என்றோ
4894 **உண்டுகொல்** - இருக்கின்றார்களோ
4895 **உண்ண** - நினைக்கும் படியான
4896 **உண்ணிரம்ப** - முற்றிலும் நிறைந்து
4897 **உண்ணிலாகிய** - உள்ளத்தில் விளங்கிய
4898 **உண்ணுகிற்பீரேல்** - நினைப்பீரானால்
4899 **உண்ணும்** - இசைவாய்ப் பொருந்தும்
4900 **உண்ணையாய்** - உள்ளத்தில் வருத்தமடையாய்
4901 **உணர்விலேன்** - தெய்வ பக்தி இல்லாதவன்
4902 **உணர்வு வருவித்து** - அருள் ஒளி உணர்வு தந்து
4903 **உததிபோல்** - கடல்போல்
4904 **உதவுதியோ** - உதவுவாயோ
4905 **உந்தமட்டில்** - கடந்திட மட்டும்
4906 **உந்திவந்தவன்** - பிரமன்
4907 **உந்தும்** - வெளியே
4908 **உந்தை** - தந்தை
4909 **உப்பிலிக்கு** - உப்பில்லாத உணவிற்கு
4910 **உம்பர்** - முன்னாள்; வானவர்; விண்ணுலகினர்
4911 **உம்பர்நாயகர்** - தேவர்க்குத் தலைவர்
4912 **உமையாள் உவந்த** - உமையவள் விரும்பிய
4913 **உய்க்கவே** - சேர்ந்திடுக என்று
4914 **உய்கிலேன்** - மேம்பட மாட்டேன்
4915 **உய்குவாய்** - வாழ்ந்திடுவாய்
4916 **உயங்கும்** - திகைக்கும்
4917 **உய்திறம்** - மேம்படும் வலிமை
4918 **உய்மையே** - உய்வு பெற
4919 **உய்ய** - மேம்பட
4920 **உய்யர்க்கும்** - மேம்பட விரும்புபவர்க்கும்
4921 **உய்யுமாறு** - நாம்மேம்பட
4922 **உய்வதேதர** - மேம்பட விரும்புகின்றதைத் தர
4923 **உய்வளிக்கும்** - வாழ்வளிக்கும்
4924 **உயிர்க்கு இதம்** - உயிர்களுக்கு நன்மை
4925 **உயிர்நாதர்** - உயிர்த்துணைவன்
4926 **உரக்க** - சப்தம் போட்டு
4927 **உரக்கின்றோர்** - அன்பு செய்பவர்
4928 **உரப்படும்** - வலிமையைச் சேர்க்கும் தவ வலிமையுடைய
4929 **உரம்** - அருள் நிலை
4930 **உரமுறும்** - வலிமை தரும்
4931 **உரவோய்** - திறல் உடையவனே
4932 **உரிபுனை** - தோலை உடுத்திய
4933 **உருக்கொடு** - வடிவு கொண்டு
4934 **உருகும்** - வெகுளும்
4935 **உரைபடாமல்** - மாற்று உரைக்கப்படாமல்
4936 **உரைமறுத்து** - பேச்சை மறுத்து
4937 **உலகப் பந்திலே** - உலகியல் புன்மையில்
4938 **உலவா வளியாய்** - அழியாத சுழற் காற்றால்
4939 **உலவு** - உலவும் யானை
4940 **உலவும்** - விளங்கும்
4941 **உலை வளைக்கா** - உலையில் வடிக்காத
4942 **உலைந்தே** - அலைந்தே
4943 **உலைந்தேன்** - வருந்தினேன்
4944 **உலைய** - நிலைகுலைய
4945 **உலோபமாம்** - கருமித் தனமாம்
4946 **உவக்கும்** - விரும்பி செய்யும்
4947 **உவப்பவே** - மகிழ்ச்சியே
4948 **உவர்ச்சலம்** - சிறுநீர்
4949 **உவரி** - உப்புக்கடல்
4950 **உவ்வண்ணன்** - திருமால்
4951 **உழக்கினும்** - உழுதாலும்
4952 **உழல்** - சுழலும்
4953 **உழல்வை** - சுழற்சியை
4954 **உழை புரிந்து** - அணுகச் செய்து
4955 **உள் இருகும்** - உள்ள உயர்ச்சியும்
4956 **உள் ஏற்றல்** - உள்ளத்தால் துதித்தல்
4957 **உள் நலிகுவன்** - உள்ளே வாடிவருந்துபவன்
4958 **உள்கிடாது** - எண்ணாமல்

4959 **உள்கு** - கருதி; எண்ணி

4960 **உள்குகின்றேன்** - எண்ணுகின்றேன்

4961 **உள்நையேன்** - உள்ளம் உருகிலேன்

4962 **உளவை** - இரகசியம்

4963 **உள்ளலேன்** - நினைக்கிலேன்

4964 **உள்ளற்கு** - எண்ணுதற்கு; கருதுதற்கு

4965 **உள்ளுகின்றோர்** - நினைக்கின்றவர்

4966 **உள்ளும்** - கருதுகின்ற

4967 **உள்ளொடு** - கருதுக என்று

4968 **உறநினைவு** - பொருந்தும் எண்ணம்

4969 **உற்பவத்தை** - பிறப்பினை

4970 **உற்ற விடத்தில்** - துன்ப காலங்களில்

4971 **உறுக்கி** - தூக்கிச் சென்று

4972 **உறுகண்** - துன்பம்

4973 **உறுந்தவர்** - பெரிய தவமுடையவர்

4974 **உறுபொருள்** - சிறந்த அர்த்தம்

4975 **உறுபோதும்** - பொருந்தும் பொழுது

4976 **உறும்பிணியால்** - சேர்ந்த நோயால்

4977 **உறுமோ** - பொருந்துமோ

4978 **உறுவேதனை** - பெருந்துன்பம்

4979 **உறுவேம் என்ன** - நிலை பெறுவோம் என

4980 **உறைந்து** - கூட இருந்து

4981 **உறைமணக்கும்** - மழை நீர்மணம் வீசும்

4982 **உன்தாட்கு** - உனது திருவடிக்கு

4983 **உன்பாலதே** - உன்னுடையதே

4984 **உன்றாள்** - உனது திருவடி

4985 **உன்னாரும்** - எண்ணாதவரும்

4986 **உன்னி** - கருதி

4987 **உன்னிடாது** - நினைத்திடாமல்

4988 **உன்னிலை** - நினைக்கமாட்டாய்

4989 **உன்னுதல்** - எண்ணுதல்

4990 **உன்னுதி** - எண்ணுக

4991 **உன்னும் நிலைக்கு** - எண்ணும் தகுதிக்கு

4992 **உன்னேல்** - நினைக்காதே

ஊ

4993 **ஊட்டுவித்து** - பயனை உண்டாக்கி

4994 **ஊடினாலும்** - மாறுபட்டுச் சின மடைந்தாலும்

4995 **ஊடுகின்றோர்** - மாறுபடுகின்றோர்

4996 **ஊடை நீக்கும்** - சினமழிக்கும்

4997 **ஊண் ஊதியம்** - சோறு உண்பதாகிய ஆதாயம்

4998 **ஊண் என நின்ற** - புறமுக நாட்டமுடன் வாழும்

4999 **ஊண் நினைந்து** - உணவை எண்ணி

5000 **ஊணத்துணர்ந்த** - சடைச்சி மரம் போன்று; மிக உண்ணும் விருப்பம் போல

5001 **ஊணாதியாம்** - உணவு முதலியவற்றில் விருப்பம் உடைய

5002 **ஊத்தைத்துருத்தி** - இழிந்த வயிறு

5003 **ஊமன்** - ஊமையன்

5004 **ஊற்றவே** - பெருகிடவே

5005 **ஊன் செய்த** - மாமிசத்தில் செய்யப்பட்ட

5006 **ஊன் முக(ம்)** - புறமுகம்

5007 **ஊன்றார்** - புறமுக எண்ண மில்லாதார்

5008 **ஊன்று கொண்டருளும்** - ஊன்றி நின்று அருளும்

எ

5009 **எக்கரிடை** - மணலில் புதையும்

5010 **எங்ஙனம்** - எவ்வளவு

5011 **எச்சிலை** - உண்ட இலை

5012 **எஞ்சல் இலவாய்** - மிகுதியும்; குறைவில்லாமல்

5013 **எஞ்சலின்றி** - குறைவில்லாமல்

5014 **எஞ்சவேண்டிய** - விட வேண்டிய

5015 **எஞ்சா** - விட்டுவிடாத

5016 **எஞ்சுவது** - விடுவதில்லாதது; மிஞ்சி உள்ளது

5017 **எட்டுணையும்** - எள்முக்கு அளவும்

5018 **எட்டுணையேனும்** - எள் அளவாவது

5019 **எண் குணப்பொருப்பே** - எட்டு குணங்கள் உடைய தெய்வ மலையே

5020 **எண்குணத்தான்** - தன் வயத்தனாதல்; தூய உடம் பினனாதல்; இயற்கை உணர்வினனாதல்; முற்றும் உணர்தல்; இயல்பாகவே பாசங்களின்று நீங்குதல்; பேரருளுடைமை; முடிவில் ஆற்றல் உடைமை; வரம்பில் இன்பமுடைமை ஆகிய எட்டுக் குணங்கள் உடையவன்.

5021 **எண்டர** - எண்ணிட

5022 **எண்டோள்** - எட்டுக்கைகள்; எட்டுத் தோள்கள்

5023 **எண்ணலை** - எண்ணாதே

5024 **எண்ணறாத** - எண்ணுதற்கு அரிய

5025 **எண்ணுடையாரிடை** - நினைவை எண்ணி வாழ்கின்றவரின்

5026 **எண்பெறா** - அளவு படாத

5027 **எண்மை** - கீழ்மை; தாழ்வு; எளிமை

5028 **எண்மையன்** - தாழ்வுடையேன்

5029 **எண்மையின்** - எளிமையால்

5030 **எதிஎலாம்** - அடக்கமாகிய எல்லாம்

5031 **எதிர்என்று** - எதிரில் சென்று

5032 **எந்தக் கடைத்தலை** - எவரது வாசலில்

5033 **எந்தமை** - எம் தம்மை ; எங்களை

5034 **எப்பாலவர்க்கு** - எங்கும் உள்ளவர்க்கும்

5035 **எம்மான்** - எமது தலைவன்

5036 **எம்மானை** - எமது தலைவனை

5037 **எம்மை கேட்கினும்** - எவ்வுலக இன்பம் கேட்டாலும்

5038 **எம்மையில்** - எந்தப் பிறவியில்

5039 **எய்க்கின்றேன்** - குறைபடுகின்றேன்

5040 **எய்திடா** - அறிந்து கொள்ள முடியாத

5041 **எய்ப்பினில் வைப்பே** - முதுமைக்காகத் தேடி வைத்த செல்வமே

5042 **எய்ப்பு ஒழிய** - தளர்வு நீங்க

5043 **எய்ப்புடன்** - தளர்ச்சியோடு

5044 **எய்யா** - கைவிடாத

5045 **எய்யாத** - வீணாகாத

5046 **எயில்** - மதில்

5047 **எயில் அழற்றி** - திரிபுரத்தை எரித்து

5048 **எல்லை** - அளவு

5049 **எவ்வண்ணம்** - எத்தகையதோ; எவ்வகை

5050 **எவ்வண்ணமும்** - எப்படியாகும் நிலையும்

5051 **எவ்வம்** - துன்பம்

5052 **எவர்க்கும் மேலானான்** - எல்லாக் கடவுளுக்கும் முதன்மையான கடவுள்

5053 **எழுமையும்** - ஏழ்ஏழ் பிறப்பிலும்

5054 **எள்வினை** - பழி பேசும் தீவினை

5055 **எள்ளத்திலே** - இழிவதிலே

5056 **எள்ளல்** - இகழ்ச்சி

5057 **எள்ளல் உற** - இழிவு பொருந்த

5058 **எற்கு** - எனக்கு

5059 **எற்றினுக்கு** - எதற்காக

5060 **எற்றினுக்கோ** - எதற்காக

5061 **எற்றுக்கு** - எதற்கு

5062 **எற்றுவது** - தள்ளுவது

5063 **என்அளவு** - என்னிடத்தில்

5064 **என்இடரை** - என் துன்பத்தினை

5065 **என்இது** - என்ன இது

5066 **என்உறவேது இனி** - இனி என்ன சொந்தமுளது

5067 **என்கொல்** - எதற்காக

5068 **என்செய்குதும்** - என்ன செய்வோம்

5069 **என்சொலேன்** - என்ன சொல்ல மாட்டேன்

5070 **என்புகாத்து** - எலும்பினைக் காவல் செய்து

5071 **என்மயம்** - எனது நிலை

5072 **என்றின்** - கதிரவன் என்று

5073 **என்று கொல்** - என்றோ

5074 **என்றும்மால் வீழ்ந்தேன்** - எப்போதும் துன்பத்தில் அகப் பட்டேன்

5075 **என்னமேல்** - இதற்கு மேல்

5076 **என்னை** - எத்தகைய

5077 **என்னைகாண்** - எப்படிப்பட்டதோ

5078 **என்னோ** - எப்படியோ

ஏ

5079 **ஏக** - ஒருவனே

5080 **ஏகாத** - போகாத

5081 **ஏட** - ஏண்டா; அடா; ஏடா

5082 **ஏடகம்** - ஓலைச் சுவடியில்

5083 **ஏடுவார் இதழிக்கண்ணி** - மேன்மை நிறைந்த இதழ்களையுடைய மாலை

5084 **ஏண்கொள்** - அருள் வலிவுக்குரிய

5085 **ஏணப்பரி** - வலிவுடைய குதிரைப்படை

5086 **ஏணியே தர** - அழியாத நிலையை அமைக்க

5087 **ஏத்தா** - இழிவுடையேன்; புகழாத இழுக்குடையேன்

5088 **ஏத்திடேன்** - புகழ்ந்திடேன்

5089 **ஏத்தினோம்** - துதித்தோம்

5090 **ஏத்தும் வண்ணம்** - புகழும் படியான மேன்மை

5091 **ஏத்தெடுப்ப** - புகழ்ந்து பேச

5092 **ஏதப்படாதது** - பாதிப்பமையாதது

5093 **ஏதம் ஆட** - துன்பம் நீங்க

5094 **ஏதம் நீத்து** - துன்பம் அகற்றி

5095 **ஏதிலார் என்று** - அயலார் போல

5096 **ஏதுசெய்** - காரணமாக்குகின்ற

5097 **ஏமக்கொடுங் கூற்றினும்** - உயிரைத் தூக்கி ஈர்க்கும் எமனை விட

5098 **ஏமம்** - பாதுகாவல்

5099 **ஏமவல்லி** - சிவகாமவல்லி

5100 **ஏய்தடை** - பொருந்திய தடை

5101 **ஏய்தவ** - சென்றடைதல்

5102 **ஏய்ந்து** - பொருந்தி

5103 **ஏயர்கோனுக்கு** - சுந்தரமூர்த்தியின் தோழர் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு

5104 **ஏயும்** - இவ்வுலக வாழ்வில் ஈடுபடும்; பொருந்தும்

5105 **ஏர்** - உயர்ச்சி

5106 **ஏர்கொண்டு** - எழுச்சிப்பெற்று

5107 **ஏர்பெறும்** - அழகு பொருந்திய

5108 **ஏர்மதிக்கும்** - அழகுடையதாகும்

5109 **ஏல** - பொருந்தும்படியான

5110 **ஏலத்தார் குழலாள்** - இயற்கை மணம் வீசும் நீண்ட முடியுடைய உமையவள்

5111 **ஏலமணிக்குழலாள்** - மணம் வீசும் கூந்தலை உடையாள்

5112 **ஏலவார் குழலாள்** - உமையவள்

5113 **ஏலா** - பொருந்தாத

5114 **ஏலும்** - பொருந்தும்

5115 **ஏழ்பவம்** - ஏழு பிறவி

5116 **ஏழுலகில்** - பூ; புவ; சுவ; மகா; சன; தவ; சத்திய லோகங்கள்

5117 **ஏற்சிறக்கும்** - அழகு நல்கும்

5118 **ஏன்எனாது** - ஏன் என்று கேளாது இருப்பது

5119 **ஏனமாய்** - பன்றியாய்

5120 **ஏன்று கொண்டானை** - ஏற்றுக் கொண்டவனை

5121 **ஏன்று கொண்டு** - ஏற்றுக் கொண்டு

5122 **ஏன்று கொள்வது** - ஏற்றுக் கொள்வது

5123 **ஏன்று கொள்ளே** - ஏற்றுக் கொள்வாய்

5124 **ஏன்றுகொள்** - ஏற்றுக் கொள்

ஐ

5125 **ஐதட்டிகும்** - கோழையாய்த் தடைபடும்

5126 **ஐந்தொழில்** - படைத்தல்; காத்தல்; அழித்தல்; மறைத்தல் அருளல்

5127 **ஐயம்** - பிச்சை ; சந்தேகம்

5128 **ஐயாநநம்** - ஐந்து திருமுகம்

5129 **ஐவர்** - நான்முகன்; திருமால் உருத்திரன்; மகேசுவரன் சதாசிவன்

5130 **ஐவாய்** - ஐந்து தலை

ஒ

5131 **ஒக்க நெஞ்சமே** - பொருந்திய மனமே

5132 **ஒட்டறை** - பாவம் சுமப்பவரை

5133 **ஒட்டுபடாதது** - தொடர முடியாதது

5134 **ஒடிய** - ஒழிய

5135 **ஒடிவில்** - தாழ்வடையாத

5136 **ஒடுக்கி** - மனம் அடக்கி

5137 **ஒண்ணாது** - தகாது

5138 **ஒண்ணுதலாள்** - ஒளி வீசும் நெற்றியினாள்

5139 **ஒண்தலத்து** - திருத்தலத்தில்

5140 **ஒண்பொழில்** - ஒளிரும் சோலை

5141 **ஒண்முகத்தே** - ஒளி முகத்தில்

5142 **ஒண்மை** - அருள் ஒளி மேன்மையதாகிய ; மேன்மை

5143 **ஒணா** - இயலாத

5144 **ஒதி** - ஒதிய மரம்

5145 **ஒப்பாரி** - ஒப்புமை

5146 **ஒரு வண்ணம்** - ஒரு நிலைப்படுதல்

5147 **ஒருஉளத்தின்** - கற்புடைய மனத்தினின்று

5148 **ஒருசூறும்** - ஓரளவும்

5149 **ஒருங்குருள** -சேர்ந்து உருளும்படியாக

5150 **ஒருங்கே** - ஒன்று கூடி

5151 **ஒருதிறம் உடையோர்** - ஒருநிலையுடன் வாழ்பவர்

5152 **ஒருபால்** - ஒருபக்கம்

5153 **ஒருபோது** - ஒருவேளைமட்டும்
5154 **ஒருமை ஈயும்** - பேரின்பம் ஈயும்
5155 **ஒருமை நெறியாய்** - இரக்கநிலையில்
5156 **ஒருமைப் பயனை** - பேரின்பப் பயனை
5157 **ஒருமையுற** - இரக்க நெறியின் வழி செல்ல
5158 **ஒருவானை** - ஒன்றான
5159 **ஒல்லை** - முடி உயர்ந்த ; விரைந்து
5160 **ஒல்லைப்படுகின்ற** - விரைகின்ற
5161 **ஒல்லையர்தம்** - எதிரிகளுடைய
5162 **ஒல்லையே** - விரைவாக
5163 **ஒழிந்தோர்** - இடுகாட்டில் அகன்றார்
5164 **ஒழியாத உவகையே** - குறையாத இன்பமே
5165 **ஒழியாது** - தள்ளிவிடாமல்
5166 **ஒள்ளிமீர்** - அருள் ஒளி உடையவரே
5167 **ஒளிக்கும் தன்மை** - மறைக்கும் தன்மை
5168 **ஒளிப்பித்ததனால்** - அருள் விளக்கம் மறையச் செய்ததனால்
5169 **ஒற்றியூரனை** - திருஒற்றியூர் இறைவனை
5170 **ஒன்பதாகிய** - பிரமன் முதல் பரநாதம் வரையிலான ஒன்பது உருவங்கள்; நவநிலைகள்
5171 **ஒன்றி** - ஒருமுக நினைவாய்
5172 **ஒன்றிட்ட** - கிட்டிய
5173 **ஒன்றியது இன்று** - நிலைக்கவில்லை
5174 **ஒன்று உடையாய்** - ஒன்றினைப் பெற்றவனே
5175 **ஒன்று உறுமேல்** - ஒன்று என் மீது விழுந்தால்
5176 **ஒன்றுநெறி** - அடையும் வழி
5177 **ஒன்றும்** - பொருந்திடும்
5178 **ஒன்றுவ** - ஒடுங்குவது

ஓ

5179 **ஓகை** - மகிழ்ச்சி ; உவகை
5180 **ஓகை நாட்டிய** - இன்பத்தில் நிலைபெற்ற
5181 **ஓட்டகல** - தலைவிதி நீங்கிட
5182 **ஓதப்படாதது** - சொல்ல முடியாதது
5183 **ஓதம்** - கடல் அலை
5184 **ஓதம் ஓது ஒலி** - கடல் எழுப்பும் சத்தம்
5185 **ஓதலறிவித்து** - எதனை எப்படிப் படித்தல் வேண்டும் என்பதனைத் தெரிந்து
5186 **ஓது செய்வது** - உபதேசிப்பது ; முறையிடுவது
5187 **ஓதை** - ஓதம்
5188 **ஓதைக்கடல்** - காற்றில் ஆரவாரம் எழுகின்ற கடல்
5189 **ஓர்த்த** - தெளிவு மிக்க
5190 **ஓர்த்து** - ஆழ எண்ணி
5191 **ஓர்ந்திலன்** - சிந்திக்கவில்லை
5192 **ஓர்ந்திலை** - உணரவில்லை
5193 **ஓர்ந்து** - தெளிவுடன் சூழ்ந்து
5194 **ஓர்மொழியை** - அருள் மொழி ஒன்றினை
5195 **ஓராதார்க்கு** - தெளியாதவர்க்கு
5196 **ஓராயோ** - எண்ணிடாயோ
5197 **ஓராவளத்து** - அடைய முடியாத வளமுடையது
5198 **ஓலம் அற** - கூச்சல் நீங்க
5199 **ஓலமிட்டு** - உரத்துச் சொல்லி
5200 **ஓலவெவ்விடம்** - ஆரவாரமுடைய கொடிய நஞ்சு
5201 **ஓலை** - இயமன் ஓலை
5202 **ஓலை காட்டுமுன்** - சாவு ஓலை வரும் முன்பு
5203 **ஓவில்** - இடையீடு இல்லாமல்; ஒழிவில்லாத; அளவில்லாத
5204 **ஓவிலாது** - ஓய்வு ஒழிவு இன்றி
5205 **ஓவுறாது** - இடையறாது

க

5206 **கனகஅம்பலநாத** - பொன்னம்பல இறைவனே
5207 **கச்சூர்** - திருக்கச்சூரில்
5208 **கசிந்திலது** - நெகிழ்ந்திடவில்லை
5209 **கசியும்** - வீழும்
5210 **கஞ்சத்தவன்** - நான்முகன்
5211 **கஞ்சமலர்** - தாமரைமலர்
5212 **கஞ்சமுளான்** - தாமரையில் வாழும் நான்முகன்
5213 **கஞ்சன்** - கருமி; பிரமன்
5214 **கடகரட** - மதம் பொழியும் சுவடு
5215 **கடகளிறு** - மதம் கொண்ட யானை

5216 **கட்டுரியீர்** - தோலுடுத்தவரே

5217 **கட்டை** - உடலினை

5218 **கடம்** - குடம்; யானை

5219 **கடம்பொழி ஓங்கல்** - மதம் பொழிகின்ற யானை

5220 **கடமருத்தும்** - மதம் பொழியும்

5221 **கடல்வண்ணன்** - நீலநிற திருமால்

5222 **கடனன்றே** - நினைக்கும் கடமை இல்லை

5223 **கடா** - எருமைக்கடா

5224 **கடியதாதலில்** - கடினமாகின்றது

5225 **கடியன்** - நீக்கத்தக்கவன்

5226 **கடுக்கமுடியா** - தாங்க முடியாத

5227 **கடுத்ததும்பும்** - நஞ்சுததும்பும்

5228 **கடைக்கண்** - சிறிதே அருளும் கண்பார்வை

5229 **கடைக்கருத்தே** - இழிந்த எண்ணமே

5230 **கடைவாய்ப்பற்றி** - தெருவாசலைப் பிடித்துக்கொண்டு

5231 **கடைவைத்து** - கடைப்பிடித்து

5232 **கண்ஆர்ந்து** - கண் நிறைந்த

5233 **கணக்கது** - காரணம் எது

5234 **கணக்கறிந்தும்** - நிலையறிந்தும்

5235 **கணங்கள்** - தேவர் கூட்டங்கள்

5236 **கண்டம்** - கழுத்து

5237 **கண்டிகை** - உருத்திராக்க மாலை

5238 **கண்ணி** - வலை

5239 **கண்ணிலே** - எண்ணுதலையே

5240 **கண்ணுதல்** - நெற்றிக்கண்

5241 **கண்பூத்த** - பெருமை மிக்க

5242 **கண்மணிக்கும்** - உருத்திராக்கம்

5243 **கணமும்** - நொடி நேரமும்

5244 **கண்மை** - நல்ல பார்வை

5245 **கணித்தலை** - அளவிடுதலை

5246 **கணைஎன** - பாணம் என

5247 **கணையால்** - கண் விழிகளால்

5248 **கதி** - அருள் வாழ்வு

5249 **கதி மருந்து** - மேன்மையாகிய மருந்து

5250 **கதிகாட்டினர்** - முத்தி தந்தவர்

5251 **கதியில் ஏற** - வீடுபேறு; நல்வழி

5252 **கந்த நாள் மலர்** - புதுமண மலர்

5253 **கந்த வண்ணமாம்** - மணக்கும் தன்மையுடைய

5254 **கந்தமிகு** - மணம் நிறைந்த

5255 **கந்தமும்** - மணமும்

5256 **கந்தவாதனை** - ஐம்புல அலைவினை

5257 **கம்பமுற்றிடுவாள்** - உடல் சிலிர்ப்பாள்

5258 **கமரிடை** - நெருப்பினில்

5259 **கமருக்கு** - நெருப்புத் தீய்க்கும்படிக்கு

5260 **கமல குஞ்சிதப்பாதனே** - தாமரை போலும் தூக்கிய திருவடியை உடையவனே

5261 **கமனம்** - வானில் நடக்கும் திறன்

5262 **கமைப்பின்** - வானின் நடத்தல் பொறுமையாகி

5263 **கமைவின்** - அழகுடன்

5264 **கயமுக அமுதும்** - யானை முகக் கடவுளும்

5265 **கயன்று** - கசந்து

5266 **கரக்கின்றோர்களை** - செல்வத்தை மறைத்து ஈயாதவர்களை

5267 **கரணவாதனை** - மன அலைவு

5268 **கரந்தை** - திருநீற்றுப் பச்சிலை

5269 **கரப்பவர்க்கு** - பொருளை ஈயாது ஒளிப்பவருக்கு

5270 **கரிசற** - குற்றமகல

5271 **கரிசுற** - குற்றமாக

5272 **கரியமாவாகி** - பன்றியான

5273 **கரியவன்** - திருமால்

5274 **கரியுரி** - யானைத்தோல்

5275 **கரியே** - யானையே

5276 **கரியோன்** - திருமால்

5277 **கருங்காமம்** - கொடிய காமம்

5278 **கருணை அங்கணபோத** - அருள் நெறியை அடியவர்க்கு உபதேசிப்பவனே

5279 **கருநெறி** - பிறவிக்கு ஏதுவான வழி

5280 **கருப்பு** - பஞ்சம்

5281 **கரும் கணம்** - எமதூதர்

5282 **கரும் பைந்நாகணை** - கரிய நச்சுப்பையை உடைய பாம்பின் படுக்கை உடையவனை

5283 **கரும் பொன்னே** - இரும்பே

5284 **கருமால்** - அறியாத மயக்கம்

5285 **கருமையணி** - விஷம் உண்ட சுவடு

5286 **கருமையில் பொலியும்** - கருநிறமாகி விளங்கும்

5287 **கருவண்ணம்அற** - பிறவிக்குக் காரணமாகியவை நீங்க

5288 **கருவாள்** - கூரிய கத்தி

5289 **கருவிழியார்** - கரிய விழியுடைய மகளிர்

5290 **கருவுளக்கடையேன்** - இழிந்ததாய மனக் கருத்து உடையேன்

5291 **கலசவான்** - குடம்போல் ஒளிரும்

5292 **கல்நவில் தனம்** - கல் எனத்தகும் மார்பகம்

5293 **கலமிலாது** - நல்குணமில்லாமல்

5294 **கல்லால்** - கல் ஆல மரத்தின் கீழ்

5295 **கல்லாலின்** - கல் ஆல மரம். அதன் கீழே தட்சணாமூர்த்தி அமர்ந்து உபதேசிப்பார்

5296 **கல்லிகந்த** - கல்லினும் கடிய

5297 **கல்லிதாய** - கல் போன்றதான

5298 **கல்லையும்** - சுந்தரருக்குத் திருமுதுகுன்றில் செங்கல்லையும்

5299 **கலவி** - சேர்க்கை

5300 **கல்வைப்புடைய** - கல்லினைப்போல்

5301 **கலன்** - படகு

5302 **கலாவி என** - மயில் போல்

5303 **கலிய நெஞ்சினேன்** - துன்புடை மனத்தினேன்

5304 **கலைபயின்று** - கல்வி நூல் பயின்று

5305 **கலைமாதை** - சரசுவதியை

5306 **கவசம்** - பாதுகாப்புச் சட்டை

5307 **கவராத** - சூழாத

5308 **கவ்வை** - ஆரவாரம்

5309 **கவளஈற்று** - கருமையுடைய

5310 **கவளம்** - சோற்றுத்திரள்

5311 **கழல்** - திருவடி

5312 **கழல்தலையேல்** - திருவடிகளைச் சிரத்தின் மீது

5313 **கழல்தொழ** - திருவடியை வணங்க

5314 **கழலினை** - திருவடிகளை

5315 **கழலை** - திருவடியை

5316 **கழற்கு அடிமைஎன** - திருவடிக்கு அடிமை என்று

5317 **கழறினன்** - சொன்னேன்

5318 **கழறுவது** - சொல்வது

5319 **கழிந்த எச்சிலை** - கக்கிய எச்சிலை

5320 **கழிய** - செல்ல

5321 **கழிவகை** - மிகுந்துள்ளதாகிய

5322 **கழுது** - பேய்

5323 **கள்** - தேன்

5324 **கள்விரையார்** - தேன் மணம் பொருந்திய

5325 **கள்ளநெறி** - சூதான மார்க்கத்தை

5326 **களங்கினர்** - நீலம் ஒளிரும்

5327 **களங்குறைத்து** - மாயை இருள் நீக்கிய

5328 **களநாட்டினோயே** - கழுத்தில் நஞ்சு வைத்துக் கொண்டாயே

5329 **களபம்** - மணம்

5330 **களம் உண்ணி** - விஷம் அருந்தியதை எண்ணி

5331 **களம்கொள்** - குறைகள் நிறைந்த

5332 **களவு** - இரகசியம்

5333 **களிபேதன்** - பிரமன்

5334 **களிய** - உலக இன்பமுடைய ; புன்மை இன்பமாகும்

5335 **களியேன்** - இழிந்த இன்பத்தில் தோய்பவன்

5336 **களிற்றுரி** - யானைத்தோல்

5337 **களைகண்** - ஆதரவு

5338 **களையும்** - நீக்கும்

5339 **கறங்காய்** - காற்றாடியாய்

5340 **கறங்கு** - காற்றாடி

5341 **கற்பகத்தரு** - கற்பகவிருட்சம்

5342 **கற்பகமே** - தேவதருவே

5343 **கறை** - நீலகண்டம்; நஞ்சு

5344 **கறைமணிமிடறு** - நீலகண்டம்

5345 **கறைமிடற்றானை** - நீலகண்டத்தானை

5346 **கறைமிடற்றீர்** - நீலகண்டரே

5347 **கனஅமுதும்** - மேன்மையான முருகக் கடவுளும்

5348 **கனகமலை** - பொன்மலை

5349 **கன்ம நெஞ்சமே** - கல்போன்ற மனமே

5350 **கன்மநெஞ்சகம்** - விதிவழி செல்லும் மனம்

5351 **கன்மயமோ** - கல்லினது தன்மையோ

5352 **கன்றின்** - பசுங்கன்றினைப் போல்

5353 **கன்றும்** - குறுகிய; ஒன்றுபடும்

5354 **கன்றுறும்** - மனம் நைந்து குழையும்

5355 **கன்னல் என்றால்** - கரும்பு என்றால்

5356 **கன்னிகரும்** - கல்லினைப் போன்ற

5357 **கனாகனம்** - மிகும் மேன்மை

5358 **கனிகர்** - கல்போன்றவர்

5359 **கனிதனை** - பழந்தனை

5360 **கனிந்தாய்** - முடிவினை நினைத்தாய்

5361 **கனிமருவும்** - இன்பம் ஆகும்

கா

5362 **காகர்** - ஒளிசிறந்த

5363 **காடற எறிந்தாங்கு** - காடு அழியும்படி அவ்விடத்தே வெட்டி

5364 **காதல் அறிவித்து** - அன்பினைத் தெரிவித்து

5365 **காமாந்தகாரம்** - காமநோய்

5366 **காய்ப்பது** - அழிப்பது

5367 **காயம்** - உடல்

5368 **காயினும்** - கோபப்பட்டாலும்

5369 **கார்பூத்த** - கருமை மலரும்

5370 **கார்மதிக்கும்** - மழை பொழியும்

5371 **காரிட்டு** - வெறுப்பு கொண்டு

5372 **காரில்** - கரிய மேகத்தின்

5373 **கால்கொள் அன்பர்** - திருவடியை எண்ணும் அடியவர்

5374 **கால்பதம்** - திருவடி

5375 **காலமும் கடந்தவர்** - முக்காலமும் உணர்ந்து வாழ்பவர்

5376 **கால்வாங்கிய** - புறமுகத்தில் செல்லாமல்

5377 **காலன் நாண் அவிழ்க்கும்** - எமனின் பாசக் கயிற்றினை அறுக்கும்

5378 **காலில் போந்து** - அடியை அடைந்து

5379 **காலின் ஈற்று** - மலர்க்காம்பின் இறுதி

5380 **காலொடு** - காற்றுடன்

5381 **காவம்** - அழகிய சோலை

5382 **காவல் அமுது** - தேவாமிர்தம்

5383 **காவல் நகரம்** - பாதுகாவல் உடைய பட்டினம்

5384 **காவின் மன்னன்** - இந்திரன்

5385 **காழி** - சீர்காழி

5386 **காள கண்டம்** - கரிய கழுத்துடையவனே

5387 **கான்செறிந்து** - காட்டில் நெருங்கி

5388 **கான்முகம்** - காட்டில் உலவும்

5389 **கானல் நீர்** - பாலைவனத்தில் தெரியும் பொய் நீர்த் தோற்றம்

5390 **கானவேட்டுருவாம்** - கான வேடர் உருவமான

5391 **கானில்** - காட்டினில்

கி

5392 **கிள்ளை** - கிளி

5393 **கிளைத்தவன்** - வான் வழி பிறந்தவன்

கு

5394 **குண்டரை** - பாவம் செய்வதில் வலியவரை

5395 **குண்டு நீர்** - கடல் நீர் சூழ்ந்த

5396 **குணத்தருஆவேன்** - நல்ல மரமாவேன்

5397 **குணிக்கரிய** - அளவிட முடியாத

5398 **குணித்தாரின்றி** - குறிப்பிட்டவரில்லாமல்

5399 **குமைக்கும்** - அழிக்கும்

5400 **குருட்டு ஊமன்** - குருடாகிய ஊமையன்

5401 **குருத்தகு** - மேலான ஒளி நிறமுடைய

5402 **குருமொழியாக** - குரு உபதேசமாக

5403 **குலவினை** - மகிழ்ந்தனை

5404 **குலவு** - அளவளாவுகின்ற நட்பு

5405 **குலவும்** - விளங்கும்

5406 **குலை முறுக்குகின்றேன்** - குலை நடுங்கச் செய்கின்றேன்

5407 **குலைகொண்ட** - பெருநிதிபெற்ற

5408 **குலைய நீக்கியும்** - அழியச் செய்தும்

5409 **குவளை மலர்** - செங்கழுநீர்மலர்

5410 **குழல்** - கூந்தல்

5411 **குழலி** - உமையவள்

5412 **குழலியர்** - பெண்கள்

5413 **குழலினார்** - பெண்கள்

5414 **குழுவினம்** - கூட்டத்தாலும்

5415 **குளங்கினர்** - நெற்றிக்கண் விளங்கும்

5416 **குளம் கொளும்** - நெற்றியில் நிலைபடும்

5417 **குற்றேவல்** - திருவடிச் சேவை

5418 **குறியாதரித்து** - திருப்பாதத்தைப் போற்றினால்

5419 **குறுகிடத்தை** - சிறிய இடத்தினை

5420 **குறும்பர்** - ஐம்புலவேடர்

5421 **குறை இரந்து** - குறைகளைச் சொல்லி

5422 **குறைக்கு** - நல்விதிப் பயன் இல்லாத குறைக்கு

5423 **குன்றவில்லியை** - கைலை மலையை வில்லாகச் செய்த இறைவனை

5424 **குனிந்து** - தாழ்த்தி

கூ

5425 **கூசிடாது** - நாணாமல்

5426 **கூடல்நேர்** - மதுரைக்குச் சமமான

5427 **கூடற்கு** - மதுரைக்கு

5428 **கூடும்படி** - திருவடியில் சேரும்படி

5429 **கூர்க்கும் நெட்டிலை** - கூர்மை உடைய நீண்ட இலை

5430 **கூற்று ஆவி** - எமனுடைய உயிர்

5431 **கூனம்** - கூனனும்

கே

5432 **கேண்மதி** - கேட்பாயாக

5433 **கேதம்** - துன்பம்

5434 **கேவலம்** - மறப்பு

5435 **கேள்வனை** - நாயகனை

5436 **கேள்வியிலா** - குறைகேட்டு முறை செய்யாத

கை

5437 **கைக்கும்** - கசக்கும்

5438 **கைகண்டாய்** - திறமையுடையாய்

5439 **கைதட்டி** - ஏளனம் செய்து

5440 **கைதவமே** - இழிநிலையே

5441 **கைதவர்** - பாவிகள்

5442 **கைதவனேன்** - தவமில்லாதவன்; இழிவுடையேன்

5443 **கைப்ப** - கசந்திட

5444 **கைப்படிய** - நல் ஒழுக்கம்

5445 **கைப்படை** - சக்கராயுதம்

5446 **கையறவு** - துன்பம் அடைந்தே

5447 **கையறவு சார்கின்றது** - துன்பம் தருகின்றது; அலைவுப் பெற்று உலகியலைச் சார்கின்றது

5448 **கையனேன்** - துணையற்றவனேன்

5449 **கையாத** - குறைவு படாத

5450 **கையோர்** - ஒருகையில்

கொ

5451 **கொங்குடைய** - தேன் மலர்ச்சடையாய்

5452 **கொச்சை** - இழிவுடைய

5453 **கொட்டமுற்றதோர்** - குறைகள் பொருந்தி

5454 **கொண்டல்** - மேகம்

5455 **கொத்தனைத்தாம்** - கூட்டமாக

5456 **கொத்து** - தொகுதி

5457 **கொம்பரை** - எட்டிக் கிளையை ஒத்தவரை

5458 **கொய்யாத** - பறித்திடாத

5459 **கொழிப்பான்** - பொழிவான்

5460 **கொழுதுநேர்** - தளிர்போன்ற

5461 **கொளுவிய** - எரித்த

5462 **கொன்செய்கை** - வீண்செயல்

கோ

5463 **கோட்டமற்று** - குறையில்லாமல்

5464 **கோட்டரை** - குற்றம் புரிபவரை

5465 **கோட்டிய** - வளைத்த

5466 **கோட்டினை** - கிளையை

5467 **கோட்டு மேருவை** - உயர்ந்த சிகரமுடைய மேருமலையை

5468 **கோடாத** - வளையாத

5469 **கோடாமல்** - வருந்தாமல்

5470 **கோண்கொள்** - பொய்யுடைய

5471 **கோண்பதர்** - பொய்யுடைய நெற்பதர்

5472 **கோணரை** - பொய் பேசுபவரை; கோணத்துடையவரே

5473 **கோத்திடும்** - புனைந்திடும்

5474 **கோதரை** - குற்றம் உடையவரை

5475 **கோதறுதவத்தால்** - குற்றமற்ற தவநிலையில்

5476 **கோதிலாத** - குற்றம் இல்லாத

5477 **கோது** - குற்றம்

5478 **கோதுசெய்** - குற்றம் புரிகின்ற

5479 **கோதுமுற்றும்** - குற்றம் யாவும்

5480 **கோதை** - உமையவள்

5481 **கோபம்** - சினம்

5482 **கோபம் பேசி** - சினம் அடைந்து

5483 **கோமலர்த்தாள்** - உயர்ந்த மலர் போன்ற உன் திருவடி

5484 **கோமளத்தினை** - மாணிக்கவகையில் ஒன்றினை

5485 **கோலமாகி** - பன்றியாகி

5486 **கோலன்** - அழகன்

5487 **கோலும்** - திரண்டு உண்டான; கட்டிய

5488 **கோவம்** - சினம்

5489 **கோவரை** - சினமுடையவரை

5490 **கோளனேன்** - பொய் கூறுபவன்

5491 **கோளை** - பொய்யை

5492 **கோன்மறந்த** - அரசன் மடிந்துவிட்ட

ச

5493 **சகசமலம்** - ஆணவ மலம்

5494 **சகலகேவலம்** - நினைப்பு மறப்பு

5495 **சகலம்** - நினைப்பு

5496 **சங்கர சம்பு நமஓம்** - தானே சுகம் தரும் இறைவனே

5497 **சங்கரனே** - சுகம் தருபவன்

5498 **சங்குடையான்** - புனித மடையாதவன்

5499 **சசி** - சந்திரன்

5500 **சஞ்சிதம்** - பழவினை; அனுபவிக்க வேண்டிய தீவினை

5501 **சஞ்சிதன்** - பிரமன்

5502 **சடாமகுடம்** - சடைமுடி

5503 **சடில** - சடையுடையாய்

5504 **சடையாலே** - இழிவால்

5505 **சண்ட** - வலியத்தாக்கும்; கொடிய

5506 **சண்ட மாருதத்தால்** - புயல் காற்றினால்

5507 **சத்திக்கும்** - ஓசை உண்டாக்கும்

5508 **சதாநிலயம்** - நிலைபெற்ற பீடம்

5509 **சதானந்த நாயக** - நித்தியானந்த தலைவனே

5510 **சந்ததம்** - எப்போதும்

5511 **சந்தமுறும்** - அழகு ஒளிரும்

5512 **சந்திக்கும்** - எழுந்தருளும், நேர்படுதல்

5513 **சந்துரைத்த** - சமாதானம் செய்திட்ட

5514 **சந்நிதியின் முன்னே** - கடவுள் சமூகத்தின் முன்பாக

5515 **சம்பு** - சுயம்பு; தான் தோன்றி; தானே தோன்றியவன்

5516 **சம்புவை** - தானே முளைத்தவன்

5517 **சமரிடை** - போர்புரியும் போது

5518 **சமைவர்** - விரும்புவர்

5519 **சயிரம் பெற்ற** - இமவான் பெற்றெடுத்த

5520 **சரக்குப் பை** - தேகமாகிய பை

5521 **சரண் இன்றியே** - திருவடிக்கண் அடைக்கலமாகுதல் இல்லாமல்

5522 **சரதத்தால்** - உறுதியால்

5523 **சர்ப்ப அணியாய்** - பாம்பு ஆபரணனே

5524 **சராசரம்** - அசையும் அசையா உயிர்க்கூட்டம்

5525 **சலஞ்சான்றது** - அலைபடுகின்றது

5526 **சலத்தே** - அடங்காத கோபத்தின்பால்

5527 **சலதி** - கடல்

5528 **சலம்** - வஞ்சனை

5529 **சலம் செய்கின்ற** - வெறுத்தல் செய்கின்ற

5530 **சலியாதார்** - வெறுக்காதவர்

5531 **சழக்கு** - தீமை

5532 **சற்குணவர்** - மேலவர்கள்

சா

5533 **சாக்கியர்** - சாக்கிய நாயனார்

5534 **சாகரம்** - கடல்

5535 **சாகை** - இறப்பு

5536 **சாத்திய** - அர்ச்சித்த

5537 **சாதுமுற்றும்** - நிறைவான சாந்தமுடைய

5538 **சாந்தவினோதரே** - அமைதி பூண்டவரே

5539 **சாமத்தின்** - சாமம் என்னும் வேதத்தின்

5540 **சார்கிலேன்** - எண்ணுகிலேன்

5541 **சார்துணையா** - மேகத்தின் ஆதரவினை

5542 **சார்பு** - உடன் இருத்தல்

5543 **சார்வால்** - சேர்க்கையால்

5544 **சாராவரும் சார்பில்** - தொடர்பில்லாதத் தொடர்பு

5545 **சால** - மிகவும்; அத்தகையவன் ஆனாலும்

5546 **சாலத்தால்** - மயக்கத்தால்

5547 **சாளிகை** - பணம் வைக்கும் பெட்டி

5548 **சாற்ற வைத்தனை** - துதிக்கும்படி செய்தாய்

5549 **சாற்றிடாய்** - கூறுவாயாக

5550 **சாற்று மாறு அரிய** - புகழ்வதற்கு அருமையான

5551 **சாற்றும்** - பேசுகின்ற

5552 **சான்ற மேலவர்** - உயர்ந்த பெரியவர்

5553 **சான்றவனே** - மேலோனே

5554 **சான்று கொள்வாய்** - நம்புவாயாக

5555 **சான்று கொளும்** - எடுத்துக்காட்டு ஆகும்

சி

5556 **சிக்கென** - உறுதியாக

5557 **சிக்கென்று** - வலுவாக

5558 **சிகாமணியே** - முடிமணியே

5559 **சிட்டருள்** - தெய்வப் பெரியோருள்

5560 **சிதடரை** - பித்தரை

5561 **சித்தத்துள்** - தீர்மானத்துக்கு மாறா நிலை

5562 **சித்தமனை தீபகமாம்** - சித்தமாகிய வீட்டின் விளக்காகும்

5563 **சிதம்** - சித்தம்; மெய்யறிவு

5564 **சிதம்பரை** - சிதம்பரவல்லி; சிவகாமவல்லி

5565 **சிதல் இலா** - துன்பமில்லா

5566 **சிந்தாமணி** - தெய்வமணி

5567 **சிந்து** - முச்சீர் அடி கொண்ட பாடல்

5568 **சிந்தை ஏதம்** - மனதின் குற்றம்

5569 **சிமிழ்ப்பால்** - செயலால்

5570 **சிரமுறும்** - முடிவில் விளங்கும்

5571 **சிலமிலாஞ்சனம் ஆதிய** - விளா; ஏலம் முதலிய

5572 **சிலை** - வில்

5573 **சிலை நீரும்** - ஒழுகும் சிறுநீரும்

5574 **சிலை விலாக் கொளும்** - கைலைமலையை வில்லாகக் கொண்டருளும்

5575 **சிலையில்** - வில்லினில் பொருந்திய

5576 **சிலையோய்** - வில்லை உடையவனே

5577 **சிவதருமத்தின்** - பசி நீக்கலும்; கொலை நீக்கலும் உடைய

5578 **சிவபதம்** - சிவனார் பேறு

5579 **சிவயோகம்** - அன்புடன் கூடியிருக்கும்

5580 **சிவயோகியர்** - அலையறியா கடல் போன்ற மனம் அடங்கியவர்

5581 **சிவாயநம** - சிவ பஞ்சாட்சரம்

5582 **சிவையே** - உமையே

5583 **சிற்ககனம்** - ஞானாகாரம்

5584 **சிற்கரம்** - ஞான நிறைவு

5585 **சிற்சித்தமும்** - அறிவு வடிவான சித்தமும்

5586 **சிற்சபையில்** - சிதம்பரத்தில்

5587 **சிற்பரமாகியே** - ஞானக் கடவுளாகிய

5588 **சிற்றூழை** - இழிந்த விதிப்பயனை

5589 **சிறு மனத்தால்** - இழிந்த மனநிலையால்

5590 **சிறுக்கினும்** - கீழ்ப்படுத்தினாலும்

5591 **சிறுதெய்வநெறி** - கிராம தேவதை வழி

5592 **சிறுவனுக்கா(க)** - உபமன்யுவுக்காக

5593 **சிறைதவிர்த்து** - தளை நீக்கி

5594 **சிறைப்பட** - வயிற்றுச் சிறையில் அகப்பட

5595 **சின்மயம்** - ஞானமயம்

5596 **சின்மயன்** - மெய்யறிவே நிறைந்தானை

5597 **சின்னாள்** - சிலகாலம்

சீ

5598 **சீத்தமணி** - புனித ஒளி வீசும் மணி

5599 **சீதவார் பொழில்** - குளிர்ந்து நீண்ட சோலைகள்

5600 **சீதவான்பிறை** - குளிர்ந்த பால் நிலவு

5601 **சீதளம்** - குளிர்ந்தது

5602 **சீர்** - செல்வம்

5603 **சீரணிக்கும்** - மேன்மை தந்திடும்

5604 **சீராயணம்** - சீரிய பாடல்

5605 **சீரிட்டிடாய் எனில்** - செல்வத்தை ஈந்திடாய் என்றால்

5606 **சீருற்றேன்** - மேன்மை பெற்றேன்

5607 **சீற்றரை** - கோபம் உடையவரை

சு

5608 **சுகாதீதம்** - இன்பத்திற்கப்பால்

5609 **சுகோதயம்** - இன்பத்தின் தோற்றம்

5610 **சுடர்காணிய** - ஒளியைப் பார்க்க

5611 **சுடரே** - கதிரவனே

5612 **சுணங்க நாயரை** - நாய் போல் குரைப்பவரை

5613 **சுணங்கன்** - நாயேன்

5614 **சுணங்கனேன்** - நாயை ஒத்தவன்

5615 **சுண்ணவெண்** - வெண்பொடியான

5616 **சுதனமங்கையர்** - பெரும் பாக்கியம் உடைய பெண்கள்

5617 **சுந்தர** - அழகுடைய

5618 **சுந்தரத்தை** - அழகுதனை

5619 **சுமத்துவல்** - பழி சுமத்துவேன்

5620 **சுயம்பு** - தானே தோன்றியவர்

5621 **சுலவு** - கிளையுடைய

5622 **சுற்றிஐயோ** - ஐயகோ உடுத்தி

சூ

5623 **சூகரம்** - பன்றி

5624 **சூதம்** - மாமரம்; பவழ மல்லிகை

5625 **சூது மொழியோ** - வஞ்சக மொழியோ

5626 **சூதே** - சேர்தலின் வேட்கையே

5627 **சூரிட்ட நடை** - அச்ச மிகுந்த உலகியல்

5628 **சூலி** - உமையவள்

5629 **சூழ்ந்திடீர்** - சேர்த்திடீர்

5630 **சூறை** - புயல் காற்று

5631 **சூறை கொண்டு** - பெருங்காற்றுடன்

5632 **சூறையுறும்** - பெருங்காற்றில் அகப்பட்ட

செ

5633 **செக்கர்** - சிவந்த

5634 **செக்கரை** - செக்கினை ஒத்தவரை

5635 **செகதலத்தோர்** - உலகவர்

5636 **செகத்தவரே** - உலகத்தவரே

5637 **செங்கான்** - சூரியன்

5638 **செச்சை** - சிவந்த; சிவந்த மேனி

5639 **செஞ்சடில்** - சிவந்த சடையை உடையாய்

5640 **செஞ்சாலி** - ஒருவகை உயர்ந்த நெல்

5641 **செஞ்சொல்** - மெய்ம்மொழி

5642 **செடிகள்** - பிறவித் துன்பங்கள்; துன்பத் துயரங்கள்

5643 **செடியர்** - தீயவர்; போலிகள்

5644 **செடியனேன்** - குறைகளை உடையேன்

5645 **செதுக்குகில்லேன்** - சீவிச் செதுக்குதல் செய்திடேன்

5646 **செந்தாமரையோன்** - பிரமன்; நான்முகன்

5647 **செந்நிலைக்கும்** - நற்பண்பிற்கும்

5648 **செம்பலத்தை** - அருள் வலிவினை

5649 **செம்பாகமும்** - ஒரு பாதியும்

5650 **செம்மாந்த** - இறுமாப்புடைய

5651 **செய்யும் அவரன்றே** - செய்யக் கூடியவருக்கு

5652 **செய்யேல்** - மேற்கொண்டு செய்ய வேண்டியது

5653 **செய்விளக்கு** - செயல் விளக்கமுடைய

5654 **செயிர்த்திடில்** - வெறுத்திடில்

5655 **செல்அவாவிய** - மேகத்திசை எட்டும்

5656 **செல்இடிக்கும்** - மேகம் இடிஇடிக்கும்

5657 **செல்உலாம்** - மேகக் கூட்டங்கள் சூழ்ந்திடும்

5658 **செல்லல்** - உயிர்த்துன்பம்; துன்பம்

5659 **செல்லாம்** - மேகம் ஆகும்

5660 **செவ்வண்ணம்** - மின்னலாகிச் சிவந்து மிளிர்தல்

5661 **செவ்வழி** - சீரிய மார்க்கத்தில்

5662 **செவ்வேணி** - செஞ்சடை

5663 **செழுது** - செழித்த

5664 **செற்றம்** - சினம்

5665 **செற்றமற்று** - பகையற்று

5666 **செறி** - அடர்ந்து; தழைத்து

5667 **செறிய** - வளம் நிறைந்திட

5668 **செறியாத** - அடங்காத

5669 **செறிவு** - அடக்கம்

5670 **செறிவே** - உறுதியையே

5671 **சென்னநகர்** - சென்னைப் பட்டினம்

5672 **சென்னெறி** - நல்வழி

சே

5673 **சேட்டித்து ஈர்க்கும்** - காரியப்படுத்தி அழிக்கும்

5674 **சேட்டியாயினும்** - நீ செயற்படுத்தா விட்டாலும்

5675 **சேடத்தின்** - மீதமுள்ளவை

5676 **சேடம்** - மீதி அனுபவிக்க வேண்டி விதி

5677 **சேணகம்** - உயர்ந்த மலையை

5678 **சேணாடர்** - தேவர்கள்

5679 **சேணுற** - பேரின்பம் பொருந்திட

5680 **சேமம் என்பதாம்** - பாதுகாவல் என்று கூறப்படும்

5681 **சேமனை** - பாதுகாவல் ஆவானை

5682 **சேய** - ஓங்கிய

5683 **சேய்க்கருள்** - மகனுக்கு உதவும்

5684 **சேய்தடை** - பிள்ளைகள் தடை

5685 **சேயனும்** - அந்நியன்

5686 **சேயும்** - குழந்தையும்கூட

5687 **சேயேன்** - பிள்ளைதனை

5688 **சேர்க்கும் களத்தான்** - நஞ்சுண்ட கருங்கழுத்து உடையவன்

5689 **சேல்கொள்** - சேல்மீன்கள் வாழும்

5690 **சேல்விடு** - சேல்மீன் ஒத்த

5691 **சேலின்** - சேல்மீன்

5692 **சேலை** - ஆடை

5693 **சேவடிக்கு** - பெரிய திருவடிக்கு

5694 **சேவடியை** - திருவடிகளை

5695 **சேவித்து** - வணங்கி

5696 **சேவின் மேல்** - காளையின் மீது

சை

5697 **சைலம்** - மலை

சொ

5698 **சொல் அணைய** - துதிக்க விரும்புகின்ற

5699 **சொற்றவனே** - சொன்னவன் அரக்கனே

5700 **சொற்றிடல்** - சொல்லுதல்

சோ

5701 **சோகவாரி** - துன்பக்கடல்

5702 **சோம்புடை** - சோம்பலினை உடைய

5703 **சோரி** - குருதி; இரத்தம்

ஞா

5704 **ஞாலக்கிடங்கரினை** - உலகினர் வீழும் குழியை

5705 **ஞாலம்** - உலகியல்; உலகம்

5706 **ஞான்று கொள்வேன்** - தூக்குமாட்டிக் கொள்வேன்

த

5707 **தகவுக்கு** - பெருந்தன்மைக்கு

5708 **தகைகொள்** - மேன்மைபெற்ற

5709 **தகையாதும்** - பரிசு ஒன்றும்

5710 **தங்கள் நா** - தங்களின் நாக்கு

5711 **தஞ்சனை** - அடைக்கலம் தருபவனை

5712 **தடங்கடலே** - பெரிய கடலே

5713 **தட்டிலா** - தடையில்லாத

5714 **தட்டிலாத** - மலத்தடையில்லாத

5715 **தடமுடியாய்** - தூய்மை சூழ்ந்த முடியாய்

5716 **தடாதபடி** - தடுக்காதவாறு

5717 **தண்டலை** - சோலை

5718 **தண்ணருள்** - குளிர்ந்த அருளை

5719 **தண்ணளி** - குளிர்ந்த கருணை

5720 **தண்ணளைய** - வளம் கொழிக்கும்

5721 **தண்ணார் அளியது** - குளிர்ந்த இரக்கம் பூண்டது

5722 **தண்ணார் நீபத்தார்** - குளிர்ந்த மலருடைய கடப்பமாலை சூடிய முருகன்

5723 **தண்ணிழல்** - குளிர்ந்த நிழல் பாதங்கள்

5724 **தண்ணினார்** - அருள் வழங்குவோர்

5725 **தண்தலத்தினும்** - குறைந்த பீடத்திலும்

5726 **தத்தி** - தடுமாறி

5727 **தத்து மத்திடை** - சுழல்கின்ற மத்தின் நடுவில்

5728 **தப்பாது** - உறுதியாக

5729 **தப்பிடாது** - தவறுதல் இருக்காது

5730 **தம்பமாய்** - ஒளித்தூணாய்

5731 **தம்பலம்** - தன்வலிவு

5732 **தமரிடை** - அடியவர்கள் நடுவில்

5733 **தமருண்டு** - சுற்றமுண்டு

5734 **தமரே** - உறவினரே

5735 **தமனியப்பெரும்** - பெரிய பொன் மலையாகிய

5736 **தமிஅடியேன்** - தனித்த அடியேன்

5737 **தமியனேன்** - தனியாகியனே

5738 **தரவெள்விடை** - அறத்தின் வடிவாகிய காளை வாகனம்

5739 **தரிப்பாய்** - நிறுத்தச் செய்வாய்

5740 **தருக்கு** - செருக்கு

5741 **தருமவிடையரே** - தருமத் தயவுடைய காளை வாகனரே

5742 **தருவமை** - கற்பக விருட்சம் அமைந்த

5743 **தருவாய்** - மரமாய்

5744 **தரைபடர்ந்து** - தட்டையாகப் பூமியில் விளங்கி

5745 **தரைபடா** - நிலமும் சகிக்காத

5746 **தலை நிலா** - இடத்தில் வந்து நில்லாதே

5747 **தலைக்கலத்தவனே** - கையில் தலை ஓடு ஏந்தியவனே

5748 **தலைபயின்ற** - முதன்மையான
5749 **தவர்** - தவமுடையவர்கள்
5750 **தவள(ம்)** - முத்து
5751 **தவளமலர்** - வெண்தாமரைமலர்
5752 **தழல் நிறம்** - நெருப்பின் நிறம்
5753 **தழிக்கொடும்** - பள்ளத்தில்; தழுவிக் கொள்ளும்
5754 **தழும்புஏற** - வடு உண்டாக
5755 **தளர்ச்சி கண்டே** - வருத்தம் பார்த்து
5756 **தளைத்த வன்துயர்** - கட்டிய வலிய துன்பம்
5757 **தளைந்து** - ஆணவத்தில் கட்டுண்டு
5758 **தற்பரம்** - தானாகிய கடவுளே
5759 **தறிய** - வீணாக
5760 **தன்உணர்வேன்** - இழிதற்குரிய உணர்ச்சி உடையேன்
5761 **தனமலைக்கு** - முலையாகிய மலைக்கு
5762 **தன்மையன்றி** - தகுதியில்லாமல்
5763 **தன்மையில்லவர்** - தீயவர்
5764 **தனிய** - ஒப்பற்றவனே
5765 **தனு எடுத்த** - வில்லினைக் கொண்ட
5766 **தனையர்** - பிள்ளைகள்

தா

5767 **தாட்கலால்** - திருவடிக்கல்லாமல்
5768 **தாட்டலம்** - திருவடி
5769 **தாட்டுணை** - இனையடிகளை
5770 **தாடலம் (தாள்+தலம்)** - திருவடிப்பேறு
5771 **தாண்டவனே** - கூத்து இயற்றுபவனே
5772 **தாண்மலர்** - திருவடிமலர்
5773 **தாணினைந்திலை** - திருவடியைச் சிந்திக்கவில்லை
5774 **தாணு** - தானே தோன்றியவன்
5775 **தாணுவாம்** - தானே உருவானவர்
5776 **தாதாதா** - மூன்று தா
5777 **தாதாதாதாதாதாதா** - ஏழு தா
5778 **தாது** - அருள் வல்லபம்
5779 **தாது செய்** - ஐம்பூதத்தால் ஆன
5780 **தாதை** - தந்தை
5781 **தாதையே** - தந்தையே
5782 **தாமக்கடிபூ** - புதுமலர் மாலை
5783 **தாமதப்பாவி** - ஜீவ இம்சையாளன்
5784 **தாமரையான்** - நான்முகன்
5785 **தாமனை** - மாலை அணிந்தவனே
5786 **தாரமே** - மனைவியே
5787 **தாரிட்ட** - மாலையணிந்த
5788 **தாவில்** - எட்டி மடிக்க இயலாத
5789 **தாழ்த்தினான்** - காலம் கடத்தினான்
5790 **தாழ்ந்து** - மூழ்கி
5791 **தாழ்பிறவி** - இழிந்த எண்ணங்களாகிய பிறவியில்
5792 **தாழலர்தம்** - தன்பால் தாழாதவர்தம்
5793 **தாழை** - முள் மடல்; தேங்காய்
5794 **தாள்** - திருவடி
5795 **தாள் மேவுவோர்** - திருவடியைச் சேர்வோர்
5796 **தாள்துணை** - இருதிருவடிகள்; கடவுள் திருவடிகள்
5797 **தானந்தத் தாணை** - மௌன முடிபின் முடிபினை

தி

5798 **திங்கள்** - நிலவு
5799 **திசைமுகனும்** - பிரமனும்
5800 **திசையெது** - திசைஏது
5801 **திடபாகர்** - வள்ளல்
5802 **திடமுடியாய்** - மகுடம் பொருந்திய தலையினால்
5803 **திடமே** - உறுதியாக
5804 **திடர்மலை** - மணல்மேடு
5805 **திண்கொள்** - உள்ள உறுதி
5806 **திண்ணப்பர்** - கண்ணப்பர்
5807 **திண்ணம்** - உறுதி தந்திடும்
5808 **திண்புயம்** - வலிமை பொருந்திய தோள்
5809 **திண்பெறா நிற்க** - வலிமையின்றி நிற்கக் கூடிய
5810 **திண்பெற** - அருள் வலிமை பெற்று
5811 **திணியர்** - வலிவு மிகுந்த
5812 **தியக்க** - வருந்த
5813 **தியக்கத்தினால்** - மயக்கத்தினால்
5814 **தியக்கமுற** - திகைப்படைய
5815 **தியக்கமுற்று** - திகைப்படைந்து

5816 **தியங்குகின்ற** - மயங்குகின்ற

5817 **தியங்குகின்றனை** - திகைக்கின்றேன்

5818 **தியங்குகின்றேன்** - மயக்கமடைந்தேன்

5819 **தியங்குதல்** - திகைப்பாய்ச் செய்தல்

5820 **திரக்கண்** - நிலையான ஞானக்கண்

5821 **திரட்டே** - திரட்சியே

5822 **திரப்பரும்** - வலிமை வாய்ந்த

5823 **திரமன்றில்** - அம்பலத்தில்

5824 **திரு அலகிடுவோம்** - ஆலயத்தைத் தூய்மை செய்வோம்

5825 **திருக்கடைக் காப்பு அதனால்** - இறுதிப் பாசுரத்தால்

5826 **திருக்கண்** - தனது கண்மலரை; கருணைக் கண்கள்

5827 **திருக்கூட்டம்** - அடியவர் கூட்டம்

5828 **திருகலைப்பெறும்** - மாறுபாடுடைய

5829 **திருச்சந்நிதி** - திருக்கோயில் சமுகம்

5830 **திருத்தளி** - திருக்கோயில்

5831 **திருநாளைப் போவான்** - நந்தனார்

5832 **திருநெறி மெய்த்தமிழ் மறையாம்** - தேவாரப் பதிகம்

5833 **திருப்பில்** - திருப்பத்தால்

5834 **திருப்புயாசல மன்னர்** - (மருப்பின் கொம்புடைய) மலையன்ன தோள்கள் உடைய மன்னர்

5835 **திருமடந்தையர்** - இலக்குமி அம்மை

5836 **திருவண்ணா** - அழகு ஒளிரும்

5837 **திருவருட்டான்** - திருவருள்தான்

5838 **திருவருணாபுரி** - திருவண்ணாமலை

5839 **திருவின்நாயகர்** - இலக்குமியின் கணவர்

5840 **திரைபடா** - அலைகள் எழாத

5841 **திலகம்** - முதன்மை

5842 **திலகவாள் நுதலாள்** - திலகம் அணிந்த ஒளிவீசும் நெற்றியை உடையவள்

5843 **திலகவாணுதலர்க்கு** - குங்குமம் தரித்துள்ள பெண்டிர்க்கு

5844 **திவலை** - துளி

5845 **திவலையே** - துளி என்றாலும்

5846 **திறல்** - வலிமை

5847 **திறலும்** - வலிமையும்

தீ

5848 **தீங்கட்டி** - சர்க்கரைக்கட்டி

5849 **தீட்டும் அன்பருக்கு** - உயர்ந்த அன்பருக்கு

5850 **தீண்டாது** - விரும்பாது

5851 **தீய்க்கும்** - எரிகின்றது செய்யும்

5852 **தீர்த்தர்** - புனிதர்

5853 **தீர்த்தல்** - இழுத்தல்

5854 **தீர்த்தா** - புனிதனே

5855 **தீரத்துறந்து** - முழுவதும் விடுவித்து

து

5856 **துங்க** - தூய்மையாகிய

5857 **துங்கமுற** - தெளிவுபெற

5858 **துச்சன்** - இழிவுடைய

5859 **துச்சிலை** - உடலாகிய குடிசையை

5860 **துச்சை** - இழிவுடைய

5861 **துடிகொள்** - உடுக்கை உருவம் உடைய

5862 **துடுக்கு** - கொட்டம்

5863 **துண்டமாக்கேன்** - துண்டாக வெட்டிலேன்

5864 **துணிந்திலையேல்** - எண்ணாவிடில்

5865 **துணிவு அதுவே** - உறுதி அதுவேயாகும்

5866 **துணை** - இரண்டாகிய

5867 **துணைபோகம்** - திருவடிஇன்பம்

5868 **துத்தியார் பணியீர்** - படமுடைய பாம்பு அணிபவரே

5869 **துதிய ஓங்கிய** - புகழ் ஓங்கிய

5870 **துப்பு இடா எனக்கு** - உறுதியைப் பின்பற்றா எனக்கு

5871 **துப்பு நேர் இதழி** - பவளம் போன்ற மாலை

5872 **துப்புரவு ஒழிந்தோர்** - ஐம்புல ஈடுபாட்டினை அகன்றவர்

5873 **தும்பி மாமுகன்** - யானை முகனை

5874 **துய்ப்பனவும்** - உண்ணும் உணவுகளும்

5875 **துய்ய** - தூய்மையான

5876 **துய்யரே** - புனிதரே

5877 **துய்யனும்** - தூயவன்

5878 **துரங்கம்** - குதிரை; கர்வபங்கமடைந்த நிலவு

5879 **துரிசு** - குற்றம் (முனைப்பு)

5880 **துரிய நிலை** - சாக்கிராதீதம்

5881 **துரியதாய்** - அப்பாற்பட்டதாய்

5882 **துரியநடு** - விழிப்பின்மேல்நிலை; அறிதுயிலின் இடை

5883 **துருமவானமுது** - கற்பக நாட்டின் அமுதம்

5884 **துவசத்தினிரே** - கொடியினை உடையவரே

5885 **துவர்வார்** - செம்மை நிறைந்த

5886 **துவ்வாத** - உண்ணாமலும்

5887 **துளங்கும்** - விளங்கும்

5888 **துள்ளறுத்தவனே** - பகைமையை அழித்தவனே

5889 **துளிக்கும்** - கண்ணீர் அரும்பும்

5890 **துளும்ப** - வழிய

5891 **துறை இடும்** - நீராடும் வழியுடைய

5892 **துன்பல்லால்** - துன்பமே அல்லாமல்

5893 **துன்றி** - நெருங்கி

5894 **துன்றிய** - நிறைவு ; நெருங்கி

5895 **துன்று** - இணைந்த; சேர்ந்த ; நிறைந்த

5896 **துன்னவரும்** - பழகிட; எழுகின்ற

5897 **துன்னிய** - தைத்துள்ள

5898 **துன்னினை** - நெருங்கிச் சேர்ந்தனை

5899 **துன்னும்** - அடையும்; நெருங்கி

5900 **துனிந்த நிலை** - வெறுப்பு நிலை

5901 **துனியனே** - துன்பமுடையவனே

தூ

5902 **தூக்கும்** - உயர்த்திய

5903 **தூங்கும்** - பள்ளி கொள்ளும்

5904 **தூசுஇல்** - ஆடை எனக் கூறத்தகாத

5905 **தூணத்தவர்** - தூண்கள் தாங்கும் தளம்

5906 **தூதுவர்** - எமதூதுவர்கள்

5907 **தூமொழி** - மெய்ம்மொழி

5908 **தூயிலாது** - தூய்மை இல்லாமல்

5909 **தூரியதாய்** - அப்பாற்பட்டதாய்

தெ

5910 **தெக்கணம்** - தென்திசையில் வாழும் இயமன் கூட்டம்

5911 **தெண்** - பக்குவம்

5912 **தெண்ணிலா** - தெளிந்த ஒளிதரும் சந்திரனை

5913 **தெய்வத்தருவே** - கற்பகவிருட்சமே

5914 **தெய்வநேயம்** - தெய்வத்திரு

5915 **தெரிப்பாயே** - தெரிவிப்பாயே

5916 **தெரிப்பார்** - சொல்லுபவர்

5917 **தெரிவுடையார்** - தெளிவு பெற்றோர்

5918 **தெருட்பெருமலை** - பக்குவம் பெற்ற அருட்பெருமலையே

5919 **தெருள்** - தெளிவு

5920 **தெருள் வண்ணம்** - அருள் பரிபாகம்

5921 **தெருள்நெறி** - பக்குவ நிலை

5922 **தெருளுதல்** - பக்குவமடைதல்

5923 **தெவ்வண்ணம்** - பகைமையான

5924 **தெள்ளக்கடலான்** - வளம் கொழிக்கும் கடல்

5925 **தெள்ளமுதம்** - அருளமுதம்

5926 **தெள்ளுவார்** - தெளிவு நிறைந்து தருபவர்

5927 **தெளியேன்** - நின்னையின்றித் தெளிவு பெறேன்

5928 **தெற்றி** - திண்ணை

5929 **தென்பால்** - தெற்கு நோக்கி

5930 **தென்னார் பெருமான்** - தென்பாண்டி மதுரை சோம சுந்தரக் கடவுள்

5931 **தென்னிசைப்பொழில்** - வண்டுகள் தமிழ் இசை பாடும் சோலைகள்

தே

5932 **தேங்குலாவு** - இனிமை நிறைந்த

5933 **தேசுலாவிய** - ஒளி விளங்குகின்ற

5934 **தேசுறு** - ஒளி பொருந்திய

5935 **தேட்டுக்கு** - ஆசைக்கு

5936 **தேம்புக்கு** - தேன் ஒழுகும்

5937 **தேர்தியாயில்** - எண்ணுவாய் எனில்

5938 **தேரும்** - எண்ணம்

5939 **தேவியல்** - தெய்வத்தன்மை

5940 **தேறல்** - தேன்

5941 **தேற்ற வைத்தனை** - தெளியும்படி செய்தாய்

5942 **தேற்றிய** - தெரிந்திட முடியாத

5943 **தேறா** - பயன்பெறாத

5944 **தேறா உளத்தேன்** - தெளிவடையாத மனத்தேன்

5945 **தேறுகின்றேன்** - ஆறுதலடைகின்றேன்

5946 **தேறுநெஞ்சினர்** - தெளிந்த மன முடையவர்

5947 **தேன்தார்** - புதுமலர் மாலை

தொ

5948 **தொடக்கது** - துன்பமது

5949 **தொடக்கிலை** - பற்றுதல் இல்லை

5950 **தொடுக்க முடியாத** - தாங்க முடியாத

5951 **தொடை அணிந்த** - மாலை சூடிய

5952 **தொத்து வேண்டும்** - அடிமையாக விரும்பும்

5953 **தொத்துகின்றது** - பற்றிக் கொள்கின்றது

5954 **தொல்லை** - பழமை பக்தி

5955 **தொல்லை ஓம்** - பழம்பெரும் ஓங்காரம்

5956 **தொல்லையேன்** - பழமையான அடியவன்

5957 **தொழுக்கன் என்னை** - அடிமையாகிய என்னை

5958 **தொழும்பர்** - அடியவர்கள்

5959 **தொழும்பன்** - அடியவன்

5960 **தொழும்பு** - தொண்டு; அடிமையாக; அடியவர் கூட்டம்

5961 **தொழும்பு தொடங்கு** - தொண்டு செய்யத் தொடங்கு

5962 **தொன்மைதன்னை** - பழம்பொருளை

5963 **தொன்றும்** - பழமையாய்ப் பொருந்திய

5964 **தொன்றுமொழிந்த** - முன்பு சொல்ல நேரிட்ட

5965 **தொன்னகர்** - பழைய நகரம்

தோ

5966 **தோகையர்** - பெண்கள்

5967 **தோணிபுரம்** - சீர்காழி

5968 **தோய்தடை** - உயிருடன் கலந்த மலஇருள்

5969 **தோழன் என** - நண்பனாக

5970 **தோன்றலார்** - தலைவராகிய கடவுள்

ந

5971 **நக்கன்** - பிச்சன்; சிவன்

5972 **நகத்து அடர்ந்தவனே** - விரல் நகத்தால் அழித்தவன்

5973 **நகப்படை** - உழுகின்ற ஏர் கருவி

5974 **நங்கரம்** - நமது கையிடை

5975 **நச்சர்** - விருப்பமுடையவரை

5976 **நச்சிய** - விரும்பிய

5977 **நச்சுகின்றவன்** - விரும்புகின்றவன்

5978 **நச்சை** - நஞ்சினை

5979 **நச்சென்ற** - நன்மை செய்யாத

5980 **நசிக்கும்** - அழியும்

5981 **நசை அறுக்கும்** - இச்சை ஒழிக்கும்

5982 **நசையரை** - விருப்பம் உடையவரை

5983 **நசையிலா** - விருப்பமின்றி

5984 **நசையுறும்** - விரும்பப்படும்

5985 **நசைவைத்து** - விருப்பம் வைத்து

5986 **நட்டம்** - இழப்பு

5987 **நட்டரை** - நஷ்டம் செய்பவரை

5988 **நட்டனை** - நட்டு வைத்தாய்

5989 **நட்டார்** - உலக மக்கள்

5990 **நடவுமால்** - ஊர்தியாகிய திருமால்

5991 **நடுக்கிலார்** - உறுதியுடையவர்

5992 **நடைமனை** - நடக்கும் வீடாகிய உடலை

5993 **நடையடுத்தவர்** - பயணம் செய்பவர்

5994 **நடையாய** - உலகப்பற்றுடைய

5995 **நண்உயிர்ப்பு** - பொருந்திய மூச்சு

5996 **நண்ண** - அமைய

5997 **நண்ணரும்** - அடியவர் அனுபவிப்பதற்கு அருமையான

5998 **நண்ணா நிலையது** - முடியா நிலை உடையது

5999 **நண்ணுதல்** - ஆசையில் அழுந்துதல்

6000 **நண்ணும்** - பொருந்திய

6001 **நண்ணுவார்** - கூற்றை அடையும் வழி அறிந்தார்

6002 **நண்புறாப்பவம்** - நல்வினைக்கு எதிராகிய பிறவி

6003 **நண்மை** - அருகில் உள்ள

6004 **நண்மையிலேன்** - அறிவு ஒழுக்கமில்லேன்

6005 **நணுகுமோ** - எது வருமோ

6006 **நந்த ஒண்பனை** - நெருங்கிய சிறந்த பனைமரம்

6007 **நம்பனே** - விருப்பம் உடையவனே

6008 **நம்பி** - சுந்தரமூர்த்தி

6009 **நம்புதி** - நம்புவாயாக

6010 **நமன்தமர்** - எமதூதர்

6011 **நமனார்** - எமனார்

6012 **நயப்பது** - விரும்புதல்

6013 **நயவேற்கு** - விரும்பாதவனுக்கு

6014 **நயனறியார்** - நலனை அறியாதவர்
6015 **நரகிடை** - நரகத்தில்
6016 **நரந்தமார்** - நறுமணம் நிறைந்து வீசும்
6017 **நல்குரவோர்** - வறுமையாளர்
6018 **நலம்தான்** - நன்மைதான்
6019 **நல்லிசை** - உயர்ந்த புகழ்
6020 **நல்லை** - நல்லதாகிய
6021 **நல்வினை** - நல்லவிதி
6022 **நலியப்படும்** - சுருங்கி நெருக்கும்
6023 **நலியல்** - மெலிவு அடையேல்
6024 **நலியும்** - துன்பமுறும்
6025 **நலிவை** - தளர்வினை
6026 **நவநேயமாகி** - ஒன்பது நிலைகளாய்
6027 **நவவாயில்** - ஒன்பது வாசல்
6028 **நவில்வாய்** - கூறுவாய்
6029 **நவில்வார்** - சொல்வார்
6030 **நவிலினும்** - சொன்னாலும்
6031 **நவிற்றுகின்றேன்** - சொல்கின்றேன்
6032 **நவின்றிடாயோ** - புகழ்வாயோ
6033 **நவின்று** - சொல்லி
6034 **நவைஉடை** - குற்றமுடைய
6035 **நவைபொருத்து** - குற்றம் பொறுத்து
6036 **நவையை** - குற்றமுடைய
6037 **நள் உணர்வேன்** - இருளான உணர்ச்சி உடையோன்
6038 **நள்ளல்** - நட்பு
6039 **நள்ளும்** - செறிந்த
6040 **நற்கலை** - நல்ல நூல்கள்
6041 **நற்பாங்கு அருள்வாய்** - நல்ல பக்குவம் தந்தருள்வாய்
6042 **நறவே** - தேனே
6043 **நறவை** - தேன்
6044 **நற்றவர்** - நல்ல தன்மையவர்
6045 **நற்றவனை** - நட்புடையவனே
6046 **நறை** - தேன்
6047 **நன்நிடுவர்** - நல்லமெய்ஞ்ஞானிகள்
6048 **நன்நிறை** - நல்லுறுதியும்
6049 **நன்றா** - மிக நன்றாக
6050 **நன்றாநெறி** - நன்மை வழி
6051 **நன்றி** - நன்மை
6052 **நன்னர்நெஞ்சம்** - நல்லமனம்
6053 **நன்னார்** - நன்மையுடையார்

நா

6054 **நாகநாட்டதின்** - தேவருலகத்தினுடைய
6055 **நாகமணி** - நாகரத்தினங்கள்
6056 **நாகமாட** - பாம்புகள் அசைய
6057 **நாகரை** - அழிப்பவரை
6058 **நாடரிதாம்** - அடைதல் இயலாது
6059 **நாடி** - அடைந்து
6060 **நாடு** - தேடு
6061 **நாடும்** - விரும்பும்
6062 **நாண்இல்** - வெட்கமின்றி
6063 **நாணும்** - வெட்கமும்
6064 **நாணுறும்** - வெட்கப்படும்
6065 **நாதநெறி** - பரநாதமாகிய சிவத்துவம்
6066 **நாதன் தன்நாமம்** - இறைவனின் திருப்பெயர்
6067 **நாமக்கலவை** - பெயர் பெற்ற நிலை
6068 **நாமங்களே** - திருப்பெயர்களே
6069 **நாமம்** - திருப்பெயர்
6070 **நாமரை** - விரோதம் செய்வதில் பெயர் பெற்றவர்
6071 **நாரம் ஆர்மதி** - மணம் பொருந்திய நிலவு
6072 **நாள் மலர்த்தாள்** - புதுமலரை ஒத்தத் திருவடி
6073 **நான்காண்** - யானேதான்
6074 **நான்குவதனனும்** - நான்முகக் கடவுளும்
6075 **நான்ற** - இழிந்த
6076 **நான்று கொண்டிலர்** - தூக்கில் தொங்க விரும்பிலர்

நி

6077 **நிகழ்த்துவது** - சொல்ல வேண்டியது
6078 **நிகேதனம்** - விளங்கும் இடம்
6079 **நிசி** - இருள் ; இரவு
6080 **நிட்கள** - உருவமற்ற
6081 **நிட்களம்** - உருவமற்றது

6082 **நித்த** - அழியாதவனே
6083 **நித்தம்** - தினமும்
6084 **நித்தமுற்ற** - அழியாநிலைபெற்ற
6085 **நித்திலக்குவை** - முத்தின் கூட்டம்
6086 **நிதனநெஞ்சகர்க்கு** - ஏழ்மை மனத்தார்க்கு
6087 **நிதிக்கோண்** - குபேரன்
6088 **நிந்தை** - இழிவு
6089 **நிமலக் கஞ்சம்** - குறைவற்ற தாமரை
6090 **நியமம்** - கோயிலை
6091 **நியமமும்** - வரன்முறையும்
6092 **நிர்த்தமும்** - கூத்தும்
6093 **நிராசையால்** - பற்றில்லாமையாகிய
6094 **நிராதரம்** - ஆதாரமற்றது
6095 **நிலைபயின்ற** - நிலைபேறு வாய்ந்த
6096 **நிலையறியேன்** - உறுதியில்லாதவனே
6097 **நிழல்** - திருவடி இன்பம்; திருவடி நிழல்
6098 **நிற்க** - பொறுத்திருக்க
6099 **நிறைதரும்** - முழுமை இன்பம் தரும்
6100 **நிறையும்** - ஆடவர் குணங்களில் ஒன்று
6101 **நிறைவனே** - திருப்தி அடைவேன்
6102 **நின்தெளிந்தேன்** - நின்னைத் தெரிந்தும்
6103 **நின்மலக்கண்** - மலம் நீங்கிய விடத்து
6104 **நின்று ஆட்டுகின்றனை** - நின்று ஆட்சி கொள்கின்றாய்

நீ

6105 **நீக்கம் உற்றிடா** - விலகுதல் இல்லாத
6106 **நீகடை என்றிடில்** - கடையவன் நீ என்றால்
6107 **நீச நெஞ்சர்** - இழிவுடைய எண்ணமுடையோன்
6108 **நீசனேன்** - இழிவுடையேன்
6109 **நீடக்கற்றார்** - மிகவும் கற்றவர்கள்
6110 **நீண்டவனே முதலியரும்** - திருமால் முதலியவரும்
6111 **நீணிலத்தே (நீள்+நிலத்தே)** - அகண்ட பூமியில்
6112 **நீதமோ** - நீதியோ
6113 **நீதனை** - நீதியாளனை
6114 **நீதா** - நீதியை உடையவனே
6115 **நீர்ப்பொறி** - நீர்க்குமிழி
6116 **நீர்விழிதர** - விழியில் கண்ணீர் சிந்த
6117 **நீல்** - நீல நிறம்
6118 **நீலகளம்** - கரிய நஞ்சு உண்ட கழுத்தில்
6119 **நீலம்** - நஞ்சு
6120 **நீலம் இட்ட** - மைபூசிய
6121 **நீலமணிகண்ட** - அழகிய கழுத்து
6122 **நீலன் எனை** - நஞ்சத்தினேனை
6123 **நீலனும்** - கொடியவனும்
6124 **நீலனேன்** - நஞ்சு போன்றவன்
6125 **நீளனம்** - உயரிய அன்னமாகிய நான்முகன்
6126 **நீற்றானை** - திருநீறு அணிந்தவனை
6127 **நீறுஎனும்** - திருநீறு என்கிற

நு

6128 **நுகர்வினை** - அனுபவத்தை
6129 **நுண்ணிடை** - உடலில் மெல்லிய இடுப்பு
6130 **நுண்மைதனை** - உள்ளத்து உணர்வில் அறிவாய் விளங்குவதை
6131 **நுதலது** - நெற்றியில் உள்ளது
6132 **நும்மிசை** - உம்மீது

நெ

6133 **நெகிழவிட்டார்** - விட்டுவிட்டார்
6134 **நெஞ்சரால்** - துன்மார்க்கரால்
6135 **நெட்டரை** - நீண்டு வளர்ந்தவரை
6136 **நெட்டுடல்** - நீண்ட தேகம்
6137 **நெடுங்கடை** - பெரிய வாசல்
6138 **நெற்றிகங்காளர்** - தலை ஓடு ஏந்தியவர்

நே

6139 **நேசமின்றி** - அன்பில்லாமல்
6140 **நேடி** - நேயம் பாராட்டி
6141 **நேடில்** - ஆராய்ந்தால்
6142 **நேமி** - சக்கரம்
6143 **நேயருண்டு** - அன்பருண்டு
6144 **நேர்** - தருவாயாக
6145 **நேர்காட்டி** - ஆணைப்படி இயங்கச் செய்து

6146 **நேர்கொள்வாய்** - சமமாகக் கொள்பவனே

நை

6147 **நைஅகத்தேன்** - மெலிகின்ற உள்ளத்தினேன்

6148 **நையல்** - துன்ப அலைவு

6149 **நையுற** - அழுந்தும்படி

6150 **நைவதற்கு** - துன்புறுவதற்கு

நொ

6151 **நொய்யவனேன்** - துன்பமுடையவன்

நோ

6152 **நோக்குடைமலையாள்** - கருணை நோக்குடைய உமையம்மை

6153 **நோதல்நேரும்** - துன்புறல் ஆகும்

6154 **நோயால் நிகழவைத்தல்** - பிறவி நோயால் அலைக் கழித்தல்

ப

6155 **பகடு** - காளை

6156 **பகர்ந்திட்டேனே** - சொல்லி விட்டேன்

6157 **பங்கமுற்று** - இழிவடைந்து

6158 **பங்கயபதத்தார்** - தாமரைப் பாதத்தினார்

6159 **பங்கயமேல்** - திருவடிமீது

6160 **பச்சிலை** - அர்ச்சனைத்தழை

6161 **பச்சை நிறத்தவள்** - உமையவள்

6162 **பச்சைப் பசுங்கொடி** - உமாதேவி; உமையவள்

6163 **பசுபதியை** - உயிர்க்குத் தலைவனை

6164 **பசுபாசம்** - உயிரின்தளை

6165 **பசையில்** - அன்பில்லாத

6166 **பசையிலாத** - ஈரமில்லாத

6167 **படம் பக்கநாதர்** - திருவொற்றியூர் இறைவன்

6168 **படர் உழக்கின்றேன்** - துன்புறுகின்றேன்

6169 **படர்கொளும்** - துன்பம் தொடரும் கொடிய

6170 **படிஅநேகம்** - கீழ் நவநிலைகள் மேல்நவநிலைகள்

6171 **படிக்காசு** - பஞ்சம் தீரப்பெற்ற பொற்காசு

6172 **படிக்குளே** - உலகத்தினில்

6173 **படிக்குறும்** - அலைமோதும்

6174 **படிகொள் நடையிடை** - உலகியல் வழியில்

6175 **படிமிசை** - நிலத்தின் மீது; உலகிடை

6176 **படியார்** - உலகத்து மக்கள்

6177 **படியில்** - உலகினில்

6178 **படியே** - மண்ணின்வகை

6179 **படிவமாகும்** - உருவமாகும்

6180 **படிற்றரை** - வஞ்சகரை

6181 **படிற்று நெஞ்சம்** - வஞ்சகமனம்

6182 **படிற்றுருவகனேன்** - வஞ்சமே வடிவுடையேன்

6183 **படிறேன்** - வஞ்சகனேன்

6184 **படைமை** - அடுக்கு; திரள்; நிரை

6185 **பண்ணவனும்** - நான்முகனும்

6186 **பண்ணிலாவிய** - இசை பொருந்திய

6187 **பண்ணும்** - உண்டாக்கும்

6188 **பண்ணேயும்** - பாடல் இசையில் பொருந்தும்

6189 **பணம்கொள்** - பாம்பின் படமுடைய

6190 **பணிஅணி** - பாம்பாரணம் பூண்ட

6191 **பணை** - பண்ணை; வயல், சோலை

6192 **பதகனேன்** - பாதகமுடையேன்

6193 **பதடரை** - வீணரை

6194 **பதிஎலாம்** - நவநிலைகள் யாவும்

6195 **பதிஒளிர்** - நாராயணர் ஆட்சி செய்யும்

6196 **பதியும்** - அலைபயின்ற இடமும்

6197 **பதிவுறப்புனைவோர்** - பொருத்த பாடுகின்றவர்

6198 **பதுமங்கள்** - தாமரைகள்

6199 **பந்த வண்ணம்** - பிறத்தல் உடைய

6200 **பந்தநாள் வலை** - தீவினைப் பிறப்பை

6201 **பந்தமட்டின் ஆம்** - பற்றுதலினால் சூழப் பெற்ற

6202 **பந்திக்கும்** - தடை செய்யும்

6203 **பம்புசீர்** - சிறந்த புகழ்

6204 **பம்புசீர் அருள்** - மேலான கருணை

6205 **பயனிலியாய்** - பயனற்றவனாய்

6206 **பரக்க** - மிகவும்

6207 **பரகதி** - சிவப்பேறு

6208 **பரசிவமே** - பராசக்தியினும் மேலான கடவுளே

6209 **பரசுயம்பு** - தானே உண்டான மேலாம் கடவுள்

6210 **பரதேசி** - பிச்சைக்காரன்

6211 **பரந்திரவும்** - அகன்ற இரவும்

6212 **பரநாதம்** - இறைவன் திருவடி விளங்கும் இடம்

6213 **பரநாதமிசை** - கீழ்நிலை முடிபாகிய பரநாததானத்திற்கு மேல்

6214 **பரநாதமுடி** - கீழ் நவநிலையின் முடிவு

6215 **பரநிலை** - அனுபவ நிலை

6216 **பரப்பிரமமே** - வேதமுடிப்பொருளே

6217 **பரம்** - பாதுகாப்பது உன் கடமை; கடமை

6218 **பரம்பர சிதம்பரம்** - கடவுள் திருவடியாம் பரம்பர நிலையாகி விளங்கும் தில்லை

6219 **பரம்பரனே** - பரசிவமே

6220 **பரம்பரை** - பரம்பரவல்லி; சுத்த பரம்பரனின் சத்தி; பராசத்தி

6221 **பரமராசியம்** - மேலான அருள் ஆட்சியுடையது; திருவருள் புரியுமிடம்

6222 **பரமுறும்** - மேன்மை பொருந்தும்

6223 **பரமேட்டியே** - மேலான சிவசத்தியே

6224 **பரவி** - பாராட்டி

6225 **பராக்கிரமித்து** - வலிவு உடையவராகி

6226 **பராமுகம்** - பாராமுகம்

6227 **பராய் முருடு** - வன்மை மிக்க மரம்

6228 **பரிகள் நடத்திடுகின்ற** - குதிரைகளைச் செலுத்துகின்ற

6229 **பரிகிலீர்** - நீங்கி விடாதீர்

6230 **பரிசதே** - தன்மையதாகும்

6231 **பரிசிழந்த** - தகுதியில்லாத

6232 **பரிசுடையாள்** - தன்மை உடையாள்

6233 **பரிசொழிந்து** - தன்மை நீங்கி

6234 **பரிதிபுரி** - வைத்தீசுவரன் கோயில்

6235 **பரிந்து** - தயவுடன்; விரும்பி

6236 **பரிந்து வந்து** - இரக்கத்துடன் எழுந்தருளி

6237 **பரிந்துழல்வது** - இரங்கி; அலைபடுவது

6238 **பரிபவம்** - துன்பம்

6239 **பரிமிசை** - குதிரைமீது

6240 **பரியாசை** - பரிகாசம்; ஏளனம்

6241 **பரியான்** - இரங்காதவன்

6242 **பரியுமனத்தால்** - கசிந்து உருகும் மனத்தினால்

6243 **பரிவிலாமலே** - அக்கறை இல்லாமல்

6244 **பரிவுறுகின்றாய்** - சுகம் அடைகின்றாய்

6245 **பரிவுறுகின்றேன்** - துன்புறுகின்றேன்

6246 **பரையே** - சிவசத்தியே

6247 **பலகால்** - பலமுறை

6248 **பல்லாற்றானும்** - பலவகையாலும்

6249 **பலித்த** - நன்மை உண்டாக்கும்

6250 **பவத்தில்** - பிறவிக் குழியில்

6251 **பவப்பிணியினர்** - பிறவித் துன்பம் அடைவோர்

6252 **பவப்பெருங்கடல்** - பிறவிப் பெருங்கடல்

6253 **பவம் அகல ஓட்டி** - பிறவி நோயை நீக்கி

6254 **பவம் அடை** - பிறவித் துன்பம் அடைந்து

6255 **பவம் போக்கிட** - பிறவி நீக்கிட

6256 **பவமான** - பிறவியான

6257 **பவமுடையேன்** - பிறப்பினை உடையேன்

6258 **பவரோகம்** - பிறவிப்பிணி

6259 **பவள இதழ்** - சிவந்த உதடு

6260 **பழிச்சல்** - புகழ்தல்

6261 **பழிவினைப்பன்** - உயிர் விடுவேன்

6262 **பழுதுசொல்லுதும்** - குறையைச் சொல்லுவோம்

6263 **பற்றும்** - அன்பு மேலோங்கும்

6264 **பறியாப்பிணியேன்** - நீங்காப் பிறப்புடையேன்

6265 **பறைய** - சொல் மாலையானே

6266 **பனகம்** - பாம்பு

6267 **பன்னும்** - போற்றுகின்ற

6268 **பன்னுவார்க்கு** - புகழ்ந்து பாடுவார்க்கு

பா

6269 **பாங்காகும்** - அன்பர் துதியை மகிழும்

6270 **பாடலர் தொடை** - பாடலாகிய மாலை

6271 **பாணற்கு** - அருள் யாழ் வாசிப்பவர்க்கு

6272 **பாதகத்தேற்கு** - பாதகனுக்கு

6273 **பாதபங்கயம்** - திருவடித் தாமரை

6274 **பாம்பின்புற்று** - பெண்குறி

6275 **பார் நடை** - உலகியல்

6276 **பார்ப்பில்** - பாம்பினைப் போல்

6277 **பாரிடை** - நிலத்தின் மீது

6278 **பாரும்** - இழிந்த

6279 **பால்உடுத்த** - இடையில் சுற்றிய

6280 **பாலியாய்** - தராவிடில்

6281 **பாலை** - மணல் நிலம்; இடுகாடே இடமாக

6282 **பாவகர்** - பாவிக்கும் தகைமை உடையவர்

6283 **பாவம் மேவும்** - பாவம் பொருந்திய

6284 **பாவரை** - பாவமே புரிபவரை

6285 **பாவித்து** - பாவனை செய்து

6286 **பாற்றி** - உயிரினை நீக்கி

பி

6287 **பிச்சிஎனில்** - பித்துப் பிடித்தவள் எனில்

6288 **பிச்சேற்றி** - பைத்தியமாக்கி

6289 **பிஞ்ஞகன்** - சிவன்

6290 **பிணக்கறியான்** - பேதப்படுதலை அறியாதவன்

6291 **பிணக்கினுக்கு** - சண்டைக்கு

6292 **பிணி** - பிறவி நோய்

6293 **பித்தளைக்கும்** - களிம்புடைய பித்தளை உலோகத்திற்கும்

6294 **பிரசமலர்மகள்** - தாமரைமலர் மீது வீற்றிருக்கும் திருமகள்

6295 **பிராணநாதன்** - உயர்ந்த தலைவன்

6296 **பிரித்தாய்** - திருவடி இன்பம் பெறாமல் நீக்கினாய்

6297 **பிரியேன்** - பிரிய மாட்டேன்

6298 **பிலம்சேர்வார்** - நரகமடைவார்

6299 **பிள்ளைவரப்பாடும்** - வாயிலிருந்து மகனை உயிர் வருவிக்கப் பாடியருளிய; அவினாசியில் முதலையால் இறந்த குழந்தை உயிர் பெற்று வரப் பாடிய

6300 **பிறங்கு ஒளி** - பிரகாசிக்கும் ஒளி

6301 **பிறங்கும்** - விளங்கும்

6302 **பிறழ்தல்** - மாறுபடுதல்

6303 **பின்எறியேன்** - அனுபவ ஞானம் தெரியாதவன்

6304 **பின்றா** - பின்னடையாத

பீ

6305 **பீழை** - தவறு

பு

6306 **புகல் அளிப்பதும்** - அடைக்கலம் தருவதும்

6307 **புகல் அறியேன்** - சொல்ல அறியேன்

6308 **புகல்பவை** - கூறுகின்றவைகள்

6309 **புகலிடம்** - அடைக்கலமாகும் இடம்

6310 **புகலிலை** - அடைக்கலமில்லை

6311 **புகலும்** - கூறுகின்ற

6312 **புகுவித்தனை** - சொல்லும்படிச் செய்தாயே

6313 **புங்கவனை** - புனிதனை

6314 **புடையடுத்தவர்** - உடன் வந்தவர்

6315 **புண்முகத்தில்** - புண்ணாகிய இடத்தில்

6316 **புணர்ந்த** - சேர்ந்த

6317 **புணர்ப்பதனால்** - சேர்க்கையினால்

6318 **புணர்ப்பை** - சேர்க்கை

6319 **புணரி** - கடல்

6320 **புணை என** - தெப்பம் என்று

6321 **புணையை** - தெப்பக் கட்டையை

6322 **புத்தரும் தமிழ்** - புதிய அதிசயங்கள் நிறைந்த தமிழ்மொழி

6323 **புத்திரரும்** - திருஞான சம்பந்தரும்

6324 **புத்தை நீக்கிய** - நரக வாழ்வினை நீக்கிய

6325 **புதுமை** - வியப்பு

6326 **புதுமையன்றே** - வியப்பல்லவா

6327 **புதுமையாம்** - இது அதிசயம்

6328 **புதை** - புதையல்

6329 **புதைப்பாரும்** - பூமியில் மறைத்து வைப்பாரும்

6330 **புயத்தின் தளங்கினர்** - வடிவழகுடைய தோள்கள் போல்

6331 **புயம்புடைய** - தோளில் அணிய

6332 **புரக்க** - பாதுகாக்க

6333 **புரந்த** - பாதுகாத்த

6334 **புரந்தரனும்** - இந்திரனும்

6335 **புரம் எரித்த** - திரிபுரங்களை எரியச் செய்த

6336 **புரம் சுரன்** - முப்புரம் எரித்தவன்

6337 **புரம்எய்யும்** - முப்புரம் வீழும் படிச் செய்யும்

6338 **புரம்பொடிபட** - திரிபுரம் சாம்பலாக

6339 **புரிசடை** - பின்னிய சடை

6340 **புரிந்தகை** - துதிக்கை உடைய

6341 **புரியாது** - செய்யாது

6342 **புரியிடல்** - செல்வாயானால்

6343 **புரைகொண்ட** - குற்றமே உடைய

6344 **புரைசேரும்** - குற்றம் உண்டாகும்

6345 **புரையுற்ற** - குற்றமுள்ள

6346 **புலக்காடு** - ஐம்புலனாகிய கானகம்

6347 **புலத்தே** - ஐம்புலக் கவர்ச்சி

6348 **புலமே** - நிலமே

6349 **புல்லர்** - கீழானவர்

6350 **புல்லவன்** - இழிவுடையோன்

6351 **புல்லிதாய** - இழிந்ததாகிய

6352 **புல்லுகின்றீர்** - அருட்புகழ் பொருந்துகின்றீர்

6353 **புலவர்ஏறு** - புலவர்களில் சிறந்தவர்

6354 **புல்வாய்** - மான்

6355 **புலன் இழந்தேன்** - அறிவழிந்தேன்

6356 **புலி போத்துஎன** - ஆண்புலிபோல

6357 **புலியூர்** - பெரும்பற்றப் புலியூர்; புலிக்கால் முனிவர் பூசித்த ஊர் (சிதம்பரம்)

6358 **புலைகொண்ட** - மாமிசம் உண்ட

6359 **புலையினர்** - மாமிசம் உண்போர்

6360 **புலைவேறு உவக்கும்** - இழிந்த மலம் விரும்பும்

6361 **புவனத்தில்** - உலகில்

6362 **புவனபோகம்** - உலக மயக்கம்

6363 **புவிஇடந்து** - பூமியைத் தோண்டி

6364 **புழுக்க நெஞ்சினேன்** - புன்மை மனத்தினேன்

6365 **புழை** - துவாரம் உடைய

6366 **புழைக்கை** - துளையுடைய துதிக்கை

6367 **புழையிலே** - துளையிலே

6368 **புள்விலங்கு** - அன்னமும் பன்றியும் ஆகிய

6369 **புறங்கொள்** - இடுகாட்டில்

6370 **புறத்தில் கிடத்தி** - வெளியே தள்ளி

6371 **புறத்தொண்டர்** - சரியை கிரியை செய்யும் அடியவர்

6372 **புறம்பு** - வெளியில்

6373 **புறம்பொழித்தால்** - வெளியே தள்ளிவிட்டால்

6374 **புறம்பொழிய** - வெளிப்பட்டு ஒழுக

6375 **புன்கண்** - துன்பத்தினது

6376 **புன்கண்அற்று** - துன்பமற்று

6377 **புன்கணும்** - துன்பமும்

6378 **புன்செய்விளைவு** - இழிந்த பயிர் விளைவுடைய

6379 **புன்மை மங்கையர்** - பொது மகளிர்

6380 **புனல்போல்** - தண்ணீர் போல்

6381 **புன்னை** - புன்னைமலர்

6382 **புனிதவாரிதியே** - தூய அருட்கடலாம் கடவுளே

6383 **புனிதை** - சிவகாமவல்லி

6384 **புனை பதத்தார்** - சூடிய திருவடியை உடையவர்

6385 **புனையின் ஆல் அமர்ந்தீர்** - அழகிய ஆல மரத்தின் கீழ் அமர்ந்தவரே

பூ

6386 **பூங்கொடி இடையை** - மென்கொடிபோல் உடைய உமையம்மையை

6387 **பூண்பது பணியாய்** - அணிவது பாம்பு ஆபரணமாக

6388 **பூதநெறி** - ஐம்பூதங்களாகிய ஆன்ம தத்துவங்கள்

6389 **பூமாந்தும்** - மலரின் தேனை உண்ணும்

6390 **பூருவத்தினார்** - ஆதியிலும்; முதுமையிலும்

6391 **பூருவம்** - பூர்வ ஞானத்திற்கு உரிய

6392 **பூவாழ்பவனும்** - நான்முகனும்

6393 **பூவையர்தம்** - மகளிருடைய

பெ

6394 **பெண்மை மனம்** - பேதலிக்கின்ற என் மனம்

6395 **பெத்த மாற்றிட** - பிறவி நீங்கும்படி

6396 **பெத்தமும்** - பிறவி நிலைகளும்

6397 **பெய்ய** - நல்லவை தர

6398 **பெயலின்றி** - மழையில்லாமல்

6399 **பெய்விடம்** - மிகவும் சொரியும் நஞ்சு

6400 **பெரிதார** - மிகவும் அணிபெற

6399 **பெரிது உயர** - மிகவும் மேம்பட

6400 **பெரிய சிவநெறி** - சுத்த சிவநெறி

6401 **பெரும்கணம்** - பேய்கள்; தேவர் கூட்டம்

6402 **பெருமால்** - மிகுந்த அறியாமை; பெரிய மயக்கம்

6403 **பெற்றமதுஏறும்** - காளை மீது ஊர்ந்து வரும்

6404 **பெற்றமீது** - காளை மீது

6405 **பெற்றி** - மேன்மை

பே

6406 **பேதப்படாதது** - வேறுபடாதது

6407 **பேதமாயதோர்** - வேறுபாடு உள்ளதான

6408 **பேதவாதமும்** - வேறுபட்டது எனக் கூறும் பேச்சும்

6409 **பேதை** - அறிவமையாத; அறிவில்லாத

6410 **பேதையர்** - பெண்கள்

6411 **பேர்** - புகழும்

6412 **பேராயிரத்தது** - பெயராத அநேக ஆசிர்வாதமுடையது

6413 **பேறணிந்து** - பாக்கியமடைந்து

6414 **பேற்றுக்கு** - நன்மைக்கு; உயர்வுக்கு

பை

6415 **பைஏல்** - நச்சுப்பை உடைய

6416 **பைச்சூர்** - அச்சமூட்டும் நச்சுப்பை

6417 **பைவிடம்** - பையில் நஞ்சு

பொ

6418 **பொங்கரா** - விடம் ஓங்கும் பாம்பு

6419 **பொத்தேர்** - பெண்குறி விருப்பத்தால்

6420 **பொது** - பொன்னம்பலம்

6421 **பொய்க்கூரை** - பொய்உடல்

6422 **பொய்த்த** - பொய்யான

6423 **பொய்யவனேன்** - பொய்யுடையேன்

6424 **பொய்யிலார்க்கும்** - தருமி என்ற மறையவனுக்கும்

6425 **பொருந்தவைக்கினும்** - சேர்த்து வைத்தாலும்

6426 **பொருப்பதுவே** - மலைதானே

6427 **பொருப்பின்** - யானையின்

6428 **பொருப்பு** - மலை

6429 **பொருவில்** - இணையில்லாத

6430 **பொருவும்** - ஒத்த

6431 **பொருளோர் இடத்தே** - செல்வந்தர் இடத்தே

6432 **பொல்லாக் கூரைதனை** - இழிந்த உடலினை

6433 **பொல்லார்** - பகைவர்

6434 **பொலா அணங்கே** - பொல்லாத துன்பமே

6435 **பொலிந்தோனே** - சூடியவனே

6436 **பொலிவேன்** - மகிழ்வேன்

6437 **பொழியாபுயலே அனையார்** - மழை பொழியாமேகம் போன்றவர்

6438 **பொழில்செறி** - சோலை சூழ்ந்த

6439 **பொள்ளற் குடத்தில்** - ஓட்டைப் பானையில்

6440 **பொற்குன்றமே** - பொன் மலையீர்

6441 **பொற்பதுதவரும்** - மேன்மையில் விலகும்

6442 **பொற்பவை** - பொன் போலும் சபை

6443 **பொற்றை நேர்** - மலையைப் போன்ற

6444 **பொற்றொடி** - பொன் ஆபரணம் அணிந்த மகள்

6445 **பொறியார்** - ஐம்புல விரும்பமுடையவர்

6446 **பொறை** - பொறுமை

6447 **பொறைபட** - வயிறுமுட்ட

6448 **பொன் அளிக்கும்** - நன்மை ஈயும்

6449 **பொன் ஆண்டான்** - இலக்குமியைச் சேர்ந்தவன்

6450 **பொன் சின்னம்** - பொன்னால் ஆகிய ஊது கருவி

6451 **பொன் நாயகனும்** - இலக்குமியின் கணவனும்

6452 **பொன்மான் நம்பினை** - பொன்மான் போலும் நம் விருப்பினை

6453 **பொன்முனம்** - பெண்ணின் முன்பு

6454 **பொன்மேடு** - இமய மலை

6455 **பொன்மைச் சடையீர்** - பொன் போன்ற சடையினரே

6456 **பொன்வண்ண** - பொன் போலும் அழகு கொள்ளும்

6457 **பொன்றில்** - அழிவுறாத

6458 **பொன்றுதல்** - இழத்தல்

6459 **பொன்னே அனையர்** - பொன்னைப் போன்ற அடியவர்களிடம்

6460 **பொன்னை உள்ளவனும்** - இலக்குமியை உடைய திருமாலும்

6461 **பொன்னை உற்றவன்** - மகா விஷ்ணு

போ

6462 **போக்கறு** - வேறில்லாத

6463 **போக்குதிரோ** - தள்ளுவீரோ

6464 **போகபோக்கியம்** - பேரானந்தப் பெருவளம்

6465 **போகமும்** - பேரின்ப நிலையும்

6466 **போகமே** - இன்பமே

6467 **போத** - நுழைய

6468 **போத ஆனந்த** - அறிவானந்த

6469 **போத நெறியாளர்** - மெய்யறிவின் வழிச் செல்வோர்

6470 **போதம்** - அறிவு

6471 **போதமே** - மெய்யறிவே

6472 **போதானந்த வாரி** - ஞானானந்தக் கடல்

6473 **போது** - காலம்

6474 **போதுநெறி** - செல்லும்வழி

6475 **போதுவனே** - போவேன்

6476 **போதுறா** - போதாது

6477 **போதை** - பொழுதினை

6478 **போந்து** - வந்தடைந்து

6479 **போல என்று உறையா** - இது போன்றது எனக் கூற முடியாத

6480 **போழ்ந்தவேல்** - பிளந்த வேலாயுதம்

6481 **போற்றலார்** - பகைவர்; போற்றத்தகாதவர்

ம

6482 **மகவான்** - நான்முகன் மகன் இந்திரன்

6483 **மஞ்சனம்** - அபிஷேகதீர்த்தம்

6484 **மஞ்சு** - மேகம்

6485 **மட்டலர்** - தேன்பொழியும்

6486 **மட்டிலங்கும்** - தேன் மணம் வீசும்

6487 **மட்டின்** - அவதியுடைய

6488 **மட்டுப்படாதது** - அளவுபடுத்த முடியாதது

6489 **மடம்செறி** - அறியாமை நிறைந்த

6490 **மடவார்** - பெண்கள்

6491 **மடவியர்** - மகளிர்

6492 **மடவியர்க்கு** - மகளிருக்கு

6493 **மடிகொள்** - சோம்பலுடைய

6494 **மடிய கிற்றிலையே** - இறக்கவில்லையே

6495 **மடுக்கம்** - நிறைவுடன்

6496 **மடுக்கவேண்டி** - அனுபவிக்க விரும்பி

6497 **மடுக்கும்** - நிறைய

6498 **மண்இடந்தும்** - பூமியை அகழ்ந்தும்

6499 **மண்முகத்தில்** - உலகவிருப்பினில்

6500 **மணிகொள்கண்ட** - நீலநிறமுடைய கழுத்தனே

6501 **மத்தரை** - அறிவிலரை

6502 **மத்தனை** - பைத்தியத்தை

6503 **மத்தகக்கரி** - தலையையுடைய யானை

6504 **மதம்** - செருக்கு

6505 **மதமலை** - மதம் பொழியும் யானை

6506 **மதலையை** - உபமன்னியு குழந்தையை

6507 **மதவேழ்ச் சின உரியார்** - மதம் பொருந்திய யானையின் தோலை அணிந்தவர்

6508 **மதன இன்தமிழ்** - தேன் போலும் இனிய தமிழ்

6509 **மதிமுகத்தியர்** - சந்திரன் போன்ற முகமுடைய மகளிர்

6510 **மதுரித்து** - தித்தித்து

6511 **மதுவில்** - தேனில்

6512 **மந்திரவெற்பு** - கைலைமலை

6513 **மயர்கின்றேன்** - மயங்குகின்றேன்

6514 **மயல்** - மயக்கம்

6515 **மயல்அற** - மயக்கம் அழிய

6516 **மர்க்கடவர்** - குரங்குகளே

6517 **மரு** - மணம்

6518 **மருகல்** - அருகில்

6519 **மருட்சி** - மயக்கம்

6520 **மருட்டரை** - மருளவைப்பரை

6521 **மருதரு** - மணம் பொருந்திய

6522 **மருதா** - தில்லை வேந்தன்

6523 **மருதிடை** - திருவிடை மருதூரில்

6524 **மருப்பு** - தந்தம்

6525 **மருவாத** - கலந்திடாத

6526 **மருவாததே** - அணைத்துக் கொள்ளாததே

6527 **மருவியநாதன்** - சேர்ந்த தலைவன்

6528 **மருவில்** - சேர்ந்தால்

6529 **மருவின்** - மணம் நிறைந்த

6530 **மருவும்** - விளங்கும்; சேரும்

6531 **மருவுமாகருணை** - பேரருள் சூழ்ந்த

6532 **மருள்** - மதம்

6533 **மருள் ஆர்** - மயக்கம் உடைய

6534 **மருள் வண்ணம்** - இருள்நிறம்

6535 **மருளறல்** - மயக்கம் நீங்கல்

6536 **மருளார்ந்து** - மயக்கம் நிறைந்த

6537 **மருளுடையானல்லன்** - மயக்க முடையவன் இல்லை

6538 **மலக்கட்டு** - மலத்தடையாவும்

6536 **மலக்குடில்** - மலம் சூழ்ந்த உடம்பு

6537 **மலங்குகின்ற** - விலகுகின்ற

6538 **மலங்கும் மால் உடல்** - மாயை அலைவுடைய தேகம்

6539 **மலத்தனேனையும்** - மாயா மலத்தில் அழுந்தியவனையும்

6540 **மலத்தின்** - பாச பந்தத்தின்

6541 **மலநிறைக் குவையை** - மலம் நிறைந்த பணக்குவியலை

6542 **மலப்பகையால்** - மும்மல எதிர்ப்புகளால்

6543 **மலப்பிலம்** - மலமாகிய அரங்கம்

6544 **மலம்** - மாயை ஆதியன

6545 **மலம் சூழ்** - அழுக்கு நிறைந்த

6546 **மலர்க்குழல்** - மலர்சூடிய கூந்தல்

6547 **மலர்மேல் இறையும்** - நான்முகன்

6548 **மலரவன்** - பிரமன்

6549 **மல்லல்** - போராட்டமுடைய; ஆராவாரம்; செறிவு

6550 **மல்லலும்** - புரிதலும்

6551 **மல்லிகந்த** - போரினும் கொடிய

6552 **மல்லிடுகின்றேன்** - மல்லுக்கு நிற்கின்றேன்

6553 **மலவிரா** - மும்மலமாகிய இருள் இரவு

6554 **மலனேன்** - மும்மலத்தால் சூழ்ந்தவன்

6555 **மலையாள்** - உமையம்மை

6556 **மழவிடை** - இளைய காளை

6557 **மழவிடையவனே** - இளைய காளையில் வருபவனே

6558 **மழு** - பரசு என்னும் சிவன் ஆயுதம்

6559 **மழுப்படை** - கோடரி ஆயுதம்

6560 **மழைபுரிந்திடும்** - கொடை தரும்

6561 **மறத்தொழிலே** - இம்சைச் செயலே

6562 **மறப்பை** - மறதி

6563 **மறம்கொள்** - வலிமை உடைய

6564 **மறலி** - எமன்

6565 **மறவர்குடி** - கொடுமை செய்யும் குடும்பம்

6566 **மறவிக் கையரை** - ஒழுக்கம் இல்லாதவரை

6567 **மற்றிசைப்பது** - வேண்டிக்கொள்வது

6568 **மறி** - குறைவு; குறுக்கீடு ; மான்

6569 **மறித்தது** - மீளவும்; மீண்டும்

6570 **மறைக்காட்டில்** - திருமறைக் காடு என்னும் தலத்தில்

6571 **மனக்க** - மனத்தால்

6572 **மனத்துரவோர்** - மன உறுதி உடையவர்

6573 **மனமாயைக்காடு** - மனமாகிய காட்டினை

6574 **மன்வண்ணம்** - உறுதியாகியபடி

6575 **மனவாசி** - மனம் என்னும் குதிரை

6576 **மன்றமரால்** - உலகியலார்

6577 **மன்னமுதம்** - அழியாத அமுதம்

6578 **மன்னவைத்திட** - நிலைபெறச் செய்திட

6579 **மன்னளவில்** - அருளரசு நிலையில்

6580 **மன்னிய** - நிலைபெற்ற

6581 **மன்னும் சதம்** - அழியாத முத்தி நிறைவு

6582 **மன்னுயிர்க்கு** - நிலை பெற்ற உயிர்கட்கு

6583 **மனையினால்** - உலக வாழ்வினால்

மா

6584 **மாஉரியாய்** - யானைத்தோல் உடையவரே

6585 **மாஉரியீர்** - யானைத்தோலைப் போர்த்திடுவீர்

6586 **மாகநதி** - ஆகாய கங்கை

6587 **மாசுவரே** - பெரிய சுவர்போல

6588 **மாட்டாமை** - இயலாமை

6589 **மாடுடையார்** - திருமால் எனும் காளை ஊர்பவர்

6590 **மாணப்பரிவால்** - மாண்புமிக்க இரக்கத்தால்

6591 **மாணாத** - மாண்பில்லாத

6592 **மாணிக்கவண்ண** - மாணிக்கப் பசுமை பொருந்திய

6593 **மாணுற** - மாட்சிமை பெற

6594 **மாதவன்** - திருமால்; பிரமன்

6595 **மாதவி** - குருக்கத்திக் கொடி

6596 **மாதுயர்** - பெருந்துன்பம்

6597 **மாமணிக்கலன்கள்** - உயர்ந்த அணிகலன்கள்

6598 **மாமயல்** - பெருமாயை

6599 **மாயத்தளர்ச்சி** - மாயைக்கலப்பு

6600 **மாயினும்** - இறந்தாலும்

6601 **மால் அரிஏற்றின்** - அச்சம் ஊட்டும் ஆண் சிங்கத்தின் முன்னே

6602 **மால் எடுத்து** - மலையை எடுத்த

6603 **மால் நண்ணுகின்றதும்** - மயங்கி நெருங்குவதும்

6604 **மால்அடுத்து** - பக்தி கொண்டு

6605 **மால்கொண்ட** - மயக்கம் நிறைந்த

6606 **மால்நிறக் காலன்** - இருள் நிறம் கொண்ட இயமன்

6607 **மால்வாங்கு** - மயக்கம் நீங்கி

6608 **மால்விடை** - பெரிய எருதாகிய இடபம்

6609 **மால்விடையாய்** - திருமால் என்னும் காளை வாகனம் உடையவனே

6610 **மாலற்ற** - பக்தி நிறைந்த

6611 **மாலாய்** - பக்தியாய்

6612 **மாலின் ஈற்று** - மாயையின் ஆதிக்க முடிவான

6613 **மாலின் உச்சி** - திருமாலின் தலை

6614 **மாவலனே** - சிறந்த வலிமை உடையோனே

6615 **மாழ்கி மாழ்கி** - மயங்கி மயங்கி

6616 **மாழ்கிலேன்** - மூழ்கிட மாட்டேன்

6617 **மாழ்குகின்றேன்** - வருந்துகின்றேன்

6618 **மாழ்குவது** - துன்பப்படுவது

6619 **மாழாந்து மாழாந்து** - மயங்கி மயங்கி

6620 **மாழை** - பொன், அழகு, உயர்ந்த பழம் போல் விளங்கும்

6621 **மாழைஏர்** - நிறைந்த அழகு

6622 **மாளா** - அழியாத

6623 **மாற்றுதி** - விட்டுவிடுக

6624 **மாறா** - மாற்ற முடியாத

6625 **மாறுபூத்த** - மாறுபாடுகளை உடைய

6626 **மான் கரத்தோய்** - மானை ஒருகையில் ஏந்தியவனே

6627 **மான் கொள்வான்** - மயங்கும் படியாக

6628 **மான் செயும் நெடுங்கண்** - மான் தந்த நெடிய விழி ; மயக்கும் கண்

6629 **மான் தரிக்கரம்** - சிறந்த மானைத் தாங்கிய கை

6630 **மான்கொளும்** - மயக்கம் அமையும்

6631 **மான்முகம்** - மயங்கு நிலை; மாயை ஈடுபாடு

மி

6632 **மிக்குறல்** - மேம்பட

6633 **மிகுதுணை** - இரண்டாகி உயர்ந்த

6634 **மிகை அறியேன்** - திறமை அறிவேன்

6635 **மிகைகள் எல்லாம்** - குற்றங்கள் யாவும்

6636 **மிச்சை** - எஞ்சிய வினையை ; பொய், அறியாமை

6637 **மிசை** - மீது

6638 **மிடற்றின்** - கழுத்தினை உடையான்

6639 **மிடற்று** - கழுத்துடைய

6640 **மிடறு** - கழுத்து

6641 **மிடி ஒருபால்** - துன்பம் ஒரு பக்கம்

6642 **மிடி கொண்(ள்)பேர்** - ஏழ்மை உடையவர்

6643 **மிடியனேன்** - ஏழை; கருமித்தனம் உடையவன்

6644 **மிடியேனே** - பக்தி இல்லா வறியவனே

6645 **மிண்டரை** - துதியாத வன்நெஞ்சரை

6646 **மித்தை** - அற்புதம்; அதிசயம்

6647 **மிழற்றும்** - ஓசையிடும்

6648 **மின்** - மின்னல்

6649 **மின்இணை** - ஒளி பொருந்திய

6650 **மின்னல் என்னும் ஆலிடை மடவியர்** - ஒளி பொருந்திய ஆலம் இலை போன்ற இடையை உடைய மகளிர்

6651 **மின்னாரும்** - பெண்களும்

6652 **மின்னை நிகரும்** - மின்னல் போல் விளங்கும்

மீ

6653 **மீகாமர்** - படகோட்டி

மு

6654 **முக்கண்** - மூன்று கண்களை உடையவனே

6655 **முக்கணி** - முக்கண் உடையவரே

6656 **முகத்தியர்க்கும்** - மகளிர்க்கும்

6657 **முகமறியார்** - முகத்தைத் தெரியாதவர்

6658 **முகமறியார் போல்** - முன்பின் அறியாதவர் போல

6659 **முகில் நிறத்தாய்** - உமையம்மை

6660 **முடிப்பிக்க** - முடித்துக் கொள்ள

6661 **முடிபுலைமுறியேன்** - முற்றிலும் கீழான கொடியனேன்

6662 **முடுகிச் செய்யும்** - விரைந்து செய்யும்

6663 **முடைநாற்றம்** - துர் நாற்றம்

6664 **முத்திபத்தி** - மன உருக்கம்

6665 **முத்தியும்** - ஆன்மானுபவப் படிநிலையும்

6666 **முதலற எறிந்து** - வேருடன் சரியச் செய்து

6667 **முதலாய்** - முதற்பொருளாய்

6668 **முதிர் தீம்பால்** - சுண்டி இனிக்கும் பால்

6669 **முந்து ஓகை** - முன்னிடும் மகிழ்ச்சி

6670 **முந்தை** - முன்பு பொருந்திய

6671 **மும்மலம்** - ஆணவம்; கன்மம்; மாயை என்னும் இருள் நிலைகள்

6672 **மும்மை ஆகிய** - படைத்தல்; காத்தல்; அழித்தல் என்னும் மூன்று தொழிலைப் புரிபவராகிய

6673 **முயக்கால்** - கூட்டத்தால்

6674 **முயன்று** - முயற்சி செய்து

6675 **முரிக்கரும்பு** - முற்றிய கரும்பு

6676 **முருட்டு** - மாறுபடும்

6677 **முருட்டுக் குறும்பரை** - கரடு முரடானக் குறும்பு செய்பவரை

6678 **முருந்தனைய** - இறகின் அடிப்பகுதி போன்ற

6679 **முலைத்தலை உழக்கும்** - மார்பின் மீது தாவும்

6680 **முள்உறுத்தல்** - முள் தைத்தது

6681 **முளரிதாட்கு** - தாமரை மலரடிக்கு

6682 **முற்படும்** - முந்துகின்ற

6683 **முறியரை** - அடிமைகளை

6684 **முறியா** - அடிமையாளே

6685 **முறியாது** - வேறுபடாது

6686 **முன்கண்** - முற்பட்டு

6687 **முனம்** - முன்பு

6688 **முனமே** - முன்னோர்

6689 **முன்றில்** - வாயில்

6690 **முன்னரே கடந்தனர்** - அதற்கு முன்பே துறந்தவர்

6691 **முன்னறியேன்** - சாத்திர ஞானம் அறியேன்

6692 **முன்னாம்** - முன் உள்ள எழுத்துகளால் ஆகிய சிவபதவி

6693 **முன்னியதே** - எண்ணியதை

6694 **முன்னினில்** - நினைத்திடில்

6695 **முன்னுகண்டாய்** - எண்ணுவாயாக

6696 **முன்னுதியே** - எண்ணுவாயாக

6697 **முன்னுறா வகை** - நினையாத வகையில்

6698 **முனிந்ததேயோ** - கோபமுற்றாயோ

மூ

6699 **மூடம் எனும்** - அறியாமை என்னும்

6700 **மூப்பு** - வயோதிகம்

6701 **மூவர்தம் பாடல்** - அப்பர்; சுந்தரர்; சம்பந்தர் தேவாரம்

6702 **மூவாத** - முதிர்ந்து விழாத

6703 **மூவுலகு** - அசுத்த தத்துவ உலகங்கள்; அசுத்தா சுத்தத்

6704 தத்துவ உலகங்கள்; சுத்தத் தத்துவ உலகங்கள்

6705 **மூன்று விளக்கு** - சந்திர சூரிய அக்னி ஒளிகள்

மெ

6706 **மெய்கழற்கு** - அடியவர்கள் சூழும் கழலணிந்த திருவடிக்கு

6707 **மெய்ப்போதம்** - சத்திய ஞானம்

6708 **மெய்விரிப்பார்** - உண்மைப் பொருளை உணர்த்து பவர்க்கு

மே

6709 **மேருவினை** - இமய மலையை

6710 **மேலுறும்கொல்** - வந்து சேருமோ

6711 **மேலை நாள்** - முன்னாளில்

6712 **மேலையே** - நாளைக்கு

6713 **மேவ** - பொருந்திய

6714 **மேவல்** - அடைதல்

6715 **மேவா** - விரும்பாத

6716 **மேவார்** - பொருந்தாதவர்

6717 **மேவிய** - பொருந்திய

மை

6718 **மையல்** - மயக்கம்

6719 **மையல் மனத்தினால்** - மயக்க மனத்தினால்

6720 **மைவடித்து** - குற்றத்தை வடித்துத் திரட்டி

6721 **மைவிரிப்பாய்** - இருளினை ஏற்பாய்

மோ

6722 **மோகம்** - விண்ணுலகம்

6723 **மோகவாரி** - மயக்க சமுத்திரம்

6724 **மோனந்தத்தார்** - மௌன முடிவில் நின்றவர்கள்

யா

6725 **யாண்டும்** - எப்பொழுதும்

வ

6726 **வசப்படுத்துகில்லேன்** - வசப்படுத்திக் கொள்ளவில்லை

6727 **வசி எடுக்குமுன்** - சாவிற்கான இழுப்பு வருவதற்குமுன்

6728 **வசிக்கும்** - ஒன்று திரண்ட

6729 **வசையிலார்க்கு** - குற்றம் குறை இல்லாதவர்க்கு

6730 **வடவனம்** - திருஆலங்காடு; ஆலங்காட்டில்

6731 **வடுக்கணார்** - மாவடுப் போன்ற கண்களை உடைய மகளிர்

6732 **வடுகன்** - பைரவன்

6733 **வண்கண்ணன்** - கல்நெஞ்சினன்

6734 **வண்கை** - கொடை

6735 **வண்கையர்** - வளமாகக் கொடை உதவும் தன்மையர்

6736 **வண்கையீர்** - வழங்கும் வள்ளலே

6737 **வண்கையை** - வள்ளல் தன்மையை

6738 **வண்ணப்பல் மாமலர்** - சிறந்த அழகுடைய பல்வகைப் பூக்கள்

6739 **வண்ணா** - நிறமுடையவனே

6740 **வணம்கொள்** - வண்ணமுடைய

6741 **வண்மை** - கொடைத்தன்மை

6742 **வண்மைகேட்டு** - கொடையினைத் தெரிந்து

6743 **வண்மையே** - அருள்வளம் உடையவனே

6744 **வதனம்** - முகம்

6745 **வதனமும்** - திருமுகமும்

6746 **வதிகின்ற** - வாழ்கின்ற

6747 **வதியும்** - வாழும்; தோன்றிய

6748 **வந்திக்கும்** - வழிபடும்

6749 **வம்பல** - புதுமை அல்ல

6750 **வம்பு** - சச்சரவு

6751 **வம்பு அவிழ்** - புதுமை பூக்கும்

6752 **வயத்தே** - மயமாக

6753 **வயமளிக்குவன்** - அருள் வலிமை சேர்ப்பவன்

6754 **வரத்தாண்டவனே** - அருள் கூத்தனே

6755 **வரதர்** - கொடையாளர்; உபகாரி

6756 **வரதனை** - உபகாரியை

6757 **வரப்படும்** - ஆசீர்வாதம் நல்கும்

6758 **வரமன்றலினார்** - மாலை சூடிய மகளிர்

6759 **வரிப்பார்** - நெருங்குவார்

6760 **வருந்தனையேல்** - துன்புறாதே

6761 **வரைக்கு** - மலைக்கு

6762 **வரைபடாது** - அளவிட முடியாமல்

6763 **வரையா** - அளவிடாது

6764 **வலது பேசுகின்றாய்** - குறைத்துக் கூறுகின்றாய்; பெருமையைப் பேசுகின்றாய்

6765 **வல்ல** - வலிமையுடையவனே

6766 **வல்லருக்கும்** - சூரருக்கும்

6767 **வல்லார்** - சூதாடு கருவி

6768 **வல்லிகேசன்** - திருவலிதாயத்தில் உள்ள தெய்வம்

6769 **வல்லை** - வலிமை; உறுதி; வல்லபம்; வலியதாகிய; வலியவன்

6770 **வல்லோர்** - சூதாடுபவர்

6771 **வல்வினை** - தீவினை; நல்வினை

6772 **வல்வினையேன்** - தீவினையேன்

6773 **வலிக்கின்றது** - இழுக்கின்றது

6774 **வலிகெட்டு** - வலிமை தளர்ந்து

6775 **வழக்கலவே** - வழக்கம் இல்லை

6776 **வழிவழிஅடியேன்** - பாரம்பரிய அடியவன்

6777 **வழுத்துகிலேன்** - வாழ்த்திடவில்லை

6778 **வழும்பும்** - தசையும்; நிணநீரும்

6779 **வழுவினை** - பெரிய குற்றத்தினை

6780 **வள்உருகும்** - வலிமை நெகிழும்

6781 **வளங்கிளர்** - வளமை ஒளிரும்

6782 **வள்ளியீர்** - வள்ளல்என

6783 **வள்ளியேன்** - வள்ளல்கள்

6784 **வள்ளியோன்** - வள்ளலே

6785 **வளி** - காற்று

6786 **வளிக்குள்** - காற்றிடை

6787 **வளியின்** - காற்றைவிட

6788 **வளை** - வளைந்த, சங்கு, வளையல்

6789 **வளைத்திடும்** - வல்வினை வளைக்கும்

6790 **வறப்பிலன்** - வறியவனல்லன்

6791 **வறிப்பிலா** - தரித்திரமில்லாத

6792 **வன்கண்** - வஞ்சம்

6793 **வன்குரைத்தல்** - வளமையாகிய நற்பண்பினைக் கூறுதல்

6794 **வன்செய்உரையில்** - வலிந்து கூறும் சொல்லால்

6795 **வன்தொண்டர்க்காய்** - சுந்தரருக்காக

6796 **வன்நாமம்** - பிற தெய்வங்களின் வலிய பெயரை

6797 **வன்பரிடத்தில்** - தீயோரிடத்தில்

6798 **வன்பவம்** - தீய பிறப்பு ; கொடிய பிறப்பு; வலிய பிறப்பு

6799 **வன்பவம்** - வலிய பிறப்பினை

6800 **வன்பு** - தீமை; குற்றம்

6801 **வன்பெறா** - வன்மை குணம் இல்லாத

6802 **வன்மான் அம்கரத்து ஏந்து** - வலிய மானைக் கையில் ஏந்திய

6803 **வன்மை விரதன்** - வலிய நோன்புடையவன்

6804 **வன்மைகள்** - கொடுமைகள்; துன்பங்கள்

6805 **வன்மையதே** - வலிமை இதுவாகும்

6806 **வன்னி** - நெருப்புத் தீ

6807 **வன்னிமலர்** - வன்னி மரத்தின் மலர்

வா

6808 **வாக்கரசு** - திருநாவுக்கரசு

6809 **வாகை** - அருள் வெற்றி ; வெற்றி

6810 **வாங்கிய கால்** - அருளும் திருவடிகள்

6811 **வாசி** - குதிரை

6812 **வாஞ்சித்த** - விரும்பிய

6813 **வாடக்கற்றாய்** - தளர்ச்சியடைய தெரிந்து கொண்டாய்

6814 **வாட்கண்** - கூரிய விழி

6815 **வாணர்** - வல்லவர்

6816 **வாணா** - வாழ்பவனே

6817 **வாதம் ஏறிய** - விதண்டா வாதத்தில் அழுந்திய

6818 **வாதியம்புறும்** - விவாதமிடும்

6819 **வாதியா நிற்கும்** - வருத்தமுறச் செய்யும்

6820 **வாதிலாது** - விவாதமின்றி வாதில் தோன்றும்; வாய்வாதத்தால் உண்டாகும்

6821 **வாதை** - வாதமாகிய துன்பம்; வாதனை

6822 **வாம மாதராள்** - இடப்பாக அன்னை

6823 **வாமத்து** - இடப்பாகத்து

6824 **வாமனர்** - விஷ்ணு

6825 **வாமுறும்** - நன்மை பொருந்தும்

6826 **வாய்ந்து** - சேர்ந்து

6827 **வாயார்** - வன்மை பேசுபவர்

6828 **வாயில்தனை** - வாசலினை

6829 **வாயிலிடை** - வாசல் நடுவில்

6830 **வார்** - கச்சு

6831 **வார் நடையார்** - வன்முறையாளர்

6832 **வார்கழல்** - காப்பணிந்த பாதம்

6833 **வாரம்** - உரிமை; நிலைபேறு

6834 **வாரமுளார்** - உரிமை உடையார்

6835 **வாரி** - கடல்

6836 **வாரிக்கொண்டு** - அனுபவித்துக் கொண்டு

6837 **வாரிதியை** - கடலை

6838 **வாரியின்** - கடலின்

6839 **வால்கொடி** - ஒளிரும் கொடியில்

6840 **வாவி** - நீர்நிலை

6841 **வாழ்கவே** - வாழ்ந்து போகட்டும்

6842 **வாள்தனக்கு உறழும்** - கூரிய பார்வையுடைமை

6843 **வான் செய்த நாத** - மேன்மை கொண்டு பாடிய தலைவனே

6844 **வான்துயர்** - மிகுதுன்பம்

வி

6845 **விக்குள்** - விக்கல்

6846 **விச்சை** - பெருமை

6847 **விசயமகள்** - உருத்திரை; உருத்திர சக்தி

6848 **விசிக்கும்** - இழுத்துக் கட்டிய

6849 **விஞ்ச வேண்டிய** - மேம்படவும்

6850 **விஞ்சனமாகி** - அன்னப் பறவை வடிவமாக

6851 **விஞ்சுடையாய்** - மேலோனே

6852 **விஞ்சையன்** - வித்தையில் வல்லவன்

6853 **விஞ்ஞான மழைசெய்** - மெய்ஞ்ஞான மழை பொழியும்

6854 **விடங்கன்** - தியாகேசன்

6855 **விட்ட சிலை** - விடுத்த அம்பு

6856 **விட்ட வேட்கையர்** - பற்று இல்லாதவர்

6857 **விடய செருக்கில்** - மூவாசை முனைப்பில்

6858 **விடய வாதனை -** மண்; பொன்; பெண்மையின் வேதனைகள்

6859 **விடய வாதனையால்** - பெண் பொன் மண் இச்சையால்

6860 **விடயநடை** - மூவகை இச்சை வழி

6861 **விடயம்** - பெண் மண் பொன் இச்சை

6862 **விடுகின்றன** - கழிந்து மறைகின்றன

6863 **விடை** - காளை

6864 **விடைக்கொடி** - இடபக்கொடி

6865 **விடைகொள்** - இடப வடிவத்தை ஊர்தியாக உடைய

6866 **விடைதரவில்லை** - அனுப்பிடுவாயில்லை

6867 **விடைமேல்** - காளை வாகனத்தில்

6868 **விடைய வாழ்வுடையேன்** - பெண்; மண்; பொன்; போக வாழ்வினை உடையேன்

6869 **விடையமே** - பெண்; பொன்; மண் ஆசையே

6870 **விண்டவன்** - தள்ளியவன்; புகழ்பவன்

6871 **விண்டனன்** - கை விட்டனன்

6872 **விண்டு** - திருமால்

6873 **விண்படைத்த** - தெய்வங்கள் எல்லாம் உண்டாக்கிய

6874 **வித்தகம்** - ஆற்றல்

6875 **வித்தாரம்** - பெருமையாக

6876 **வித்தியம்** - மூலமானது

6877 **விதி எலாம்** - நன்னெறிகள் எலாம்

6878 **விதிஎன** - கொள்ள வேண்டியதுஎன

6879 **விதிப்பேன்** - பின்பற்றுவேன்

6880 **விதிமுதற்கு இறையே** - நான்முகனுக்குக் கடவுளே

6881 **விம்மா** - விம்மி

6882 **விமல** - மாயை நீங்கியவனே

6883 **விமலை** - மருமகள்; மாயை நீங்கியவள்

6884 **வியன் அமுதே** - மேலான அமுதமே

6885 **வியன் நெறி** - உயர்ந்த மார்க்கம்

6886 **வியாக்கிரம** - புலியினது

6887 **விரகிலா** - தந்திரமில்லாத

6888 **விரகு** - சரியான உபாயம்

6889 **விரதம்** - ஜீவகாருண்ய விரதம்

6890 **விரவிநின்ற** - கலந்து நின்ற

6891 **விரவுகின்றனன்** - கலந்திடச் செய்கின்றான்

6892 **விராட்டுருவம்** - பரப்பிரம வடிவம்

6893 **விரிப்பாள்** - பேசுவாள்

6894 **விருத்தம்** - வீணே

6895 **விருந்து** - விருந்தாளி

6896 **விருப்பாதி வல்விலங்கு** - கோபம் காமம் மோகம்; மதம் எனும் கொடிய மிருகம்

6897 **விரைத்தாள்** - மணமலரடி

6898 **விரைமலர்** - மணமுள்ள மலர்; மணமுள்ள மலரை உடைய

6899 **விரைய** - வளைத்து எய்யும்

6900 **விலக்குஎன** - தள்ள வேண்டியது என

6901 **விலக்கெலாம்** - தீநெறிகள் எலாம்

6902 **வில்நுதல்** - வில்லினை ஒத்த நெற்றி

6903 **வில்லாம்படி** - வில்லது வளையும்படி

6904 **வில்வளைத் தெரிந்தோய்** - வில்லை வளைத்து எரிந்தவனே

6905 **விழலரை** - வீணரை

6906 **விளைத்திட்ட** - உண்டாக்கிய

6907 **விளைவில்** - பயன் கொடுத்திடும் நிலை

6908 **விற்பனர்** - திறமை

6909 **வினை கள்ளப் பகை** - வினைகளாகிய மறைமுக எதிரி

6910 **வினை தூள் படவே** - தீவினை பொடிப் பொடியாக

6911 **வினைப்பயன் ஊட்ட** - தீவினைப் பயனை அடைவிக்க

6912 **வினைப்புலவேடர்** - தீவினையில் ஈடுபடுத்தும் ஐம்புல வேடுவர்

6913 **வினைமலர்** - மணமுள்ள மலர்

வீ

6914 **வீட்டார்** - வீடுபேறு பெற்றவர்கள்

6915 **வீட்டி** - அழித்து

6916 **வீணா** - வீணனே

6917 **வீழ்கதி** - இழிந்த நிலை

6918 **வீழ்கலை** - விழுந்திடாதே

6919 **வீழாகஞான்ற** - விழுது போல் நீண்ட

வெ

6920 **வெங்கராவாய்** - கொடிய முதலையின் வாயினின்று

6921 **வெங்கொளித்தேள்** - கொடிய நஞ்சுடைய தேள்

6922 **வெண்காடு** - திருவெண்காடு எனும் தலம்

6923 **வெண்ணகை** - முல்லையன்ன புன்சிரிப்பு

6924 **வெண்தலை** - வெண்மையாகிய தலைமாலை

6925 **வெண்மை** - அறிவில்லாமை

6926 **வெண்மையேன்** - எளியவன்

6927 **வெந்நஞ்சு** - வெப்ப மிகுந்த விஷம்

6928 **வெப்பார்** - துன்பம் நிறையும்

6929 **வெப்பார் உளத்தினர்** - துன்மார்க்க மனத்தினர்

6930 **வெப்பில் சூழ்ந்து** - இழிவில் அழுந்தி

6931 **வெம்பாய** - தீயதாய

6932 **வெம்புலம்** - பயனற்ற வலிவு

6933 **வெம்புறேல்** - வருந்தாதே

6934 **வெய்து அட்டி** - சூடாக இன்றி

6935 **வெய்துயிர்ப்பான்** - பெருமூச்சு விடுவான்

6936 **வெய்யவினையின்** - தீவினையின்

6937 **வெய்யன்** - கொடியவன்

6938 **வெயில் மஞ்சள் நிறம்** - சிறிது நேரமே உள்ள வெயிலினது மஞ்சள் வண்ணம்

6939 **வெருட்சியே தரும்** - அச்சத்தையே தருகின்ற

6940 **வெருவா** - அஞ்சி

6941 **வெருவி** - அச்சமுற்று

6942 **வெருவுறுகின்றேன்** - அஞ்சுகின்றேன்

6943 **வெருள் அளித்திடா** - அச்சம் தந்திடாத

6944 **வெவ்வினை** - தீவினை

6945 **வெள் உணர்வேன்** - இழிந்த உணர்வினை உடையேன்

6946 **வெள்ளம் மருவும்** - கங்கை சூழ்ந்த

6947 **வெள்ளி வெற்பினும்** - கைலை மலையினும்

6948 **வெற்பனேன்** - வீணானவன்

6949 **வெற்பு** - மலை

6950 **வெறியார்** - கொலை பாதகமுடைய

6951 **வெறியேம்** - பித்தன்என

6952 **வெறியேன்** - பேதையேன்; பித்தன்

6953 **வென்றி** - வெற்றி தரும்

வே

6954 **வேட்டு** - விரும்பு

6955 **வேண்டாமை** - இம்மை மறுமை இன்பம் விரும்பாமை

6956 **வேணி** - சடை; சடைமுடி; சடையன்

6957 **வேணியன்** - சடைமுடி சிவன்; சடையன்

6958 **வேதார்த்தனே** - வேதப் பொருளே

6959 **வேம்படி** - வேகும்படி; மாறுபாடு

6960 **வேர்ப்பார்** - பொறுப்பார்

6961 **வேலை** - கடல்

6962 **வேள்வி** - அன்பர் பாடுத் துதிநிலை

6963 **வேளனம்** - இளமை அழகுடைய அன்னம்

6964 **வேளை** - மன்மதனை

6965 **வேறலேன்** - வேறுபட்டவன் அல்லேன்

6966 **வேற்றரை** - மாறுபட்டவரை

6967 **வேற்றுத்தேவர்** - பிற தெய்வங்கள்

வை

6968 **வைகேனோ** - வாழேனோ

6969 **வைகிய** - வாழ்கின்ற

6970 **வைதிகங்கள்** - ஆகம வேத மரபுகள்

6971 **வைப்பதனை** - மூலதனம்

6972 **வைய நின்று** - உலகில் நின்று

6973 **வைய மொன்றும்** - பூமியில் பொருந்திய

6974 **வையேன்** - வைதிடுவேன்

6975 **வைவம்** - ஏசுவோம்

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

திருவருட்பா அகராதி

மூன்றாம் திருமுறை

பக்கம் எண் : 123 - 137

பாடல் எண் : 6976 - 7637

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

அ

6976 **அங்கண்** - அழகிய கண்

6977 **அங்கள்** - இனிய தேன்

6978 **அஞ்சைக்களத்தார்** - திருவஞ்சைக்களம் என்னும் இடத்தில் வாழ்பவர்

6979 **அடிற்பூ** - காமன் எய்த கொடிய ஐந்து அம்புகள்.

6980 **அடையா மகிழ்வினோடும்** - பிறர்பெற்றுக் கொள்ள முடியாத இன்பத்தோடும்

6981 **அணங்கே** - பெண்ணே

6982 **அண்டர்** - அண்டங்களில் வாழ்பவர்

6983 **அணைகுவாரோ** - வருவாரோ

6984 **அணையா** - வரவில்லை

6985 **அணையாரோ** - வாராதிருப்பாரோ

6986 **அணைவீர்** - தழுவிக்கொள்வீர்

6987 **அதிகை** - திருவதிகை

6988 **அந்தார்** - அழகிய மாலை

6989 **அந்தி நிறத்தார்** - சிவந்த நிறமுடையவர்

6990 **அமைத்தில** - பொருந்தவில்லை

6991 **அயனும் அளவா** - நான்முகனும் கண்டறியாத

6992 **அரம் மன்னிய** - கூர்மை உடைய

6993 **அரவ அடியார்** - பாம்பாபரணம் அணிந்த திருவடியை உடையவர்

6994 **அரவின்** - பாம்பின்

6995 **அரவு** - பாம்பு

6996 **அரிஅழலை** - தீப்பிழம்பை

6997 **அருணைப்பதியார்** - திருவண்ணாமலை தலத்தில் வாழ்பவர்

6998 **அரும்தாழ்வகல** - அரிய குறை நீங்க

6999 **அரை** - இடுப்பு

7000 **அல்** - இருட்டு

7001 **அல் ஆர்** - இருள் நிறைந்த

7002 **அலங்கல்** - திருமாலை

7003 **அலர்** - பழி

7004 **அலர்கொடியாய்** - மலரும் கொடி போன்ற பெண்ணே

7005 **அல்லால்** - இருளால்

7006 **அவம்** - துன்பம்

7007 **அளகம்** - கூந்தல்

7008 **அளி** - தேனீக்கள்

7009 **அளித்து** - பெற்றெடுத்து

7010 **அளிதேன்** - உயர்ந்த தேனீயின் தேன்

7011 **அளியார்** - இரக்கமுள்ளவர்

7012 **அனத்துப் படிவம்** - அன்னப் பறவை வடிவம்

7013 **அனந்தர்** - அளவற்றவர்கள்

ஆ

7014 **ஆக்கமில்லார்** - வளர்ச்சி இல்லாதவர்

7015 **ஆகம்பயில்வாள்** - இடப்பக்கம் விளங்குவாள்

7016 **ஆண்டகையார்** - ஆடவருள் சிறந்தவர்

7017 **ஆண்டை** - முதலாளி

7018 **ஆமாத்தூர்** - திருவாமாத்தூர் என்னும் ஊர்

7019 **ஆயும்படிவம்** - போற்றும் வடிவம்

7020 **ஆர்கலி ஒலி** - துன்பம் நிறைந்த சப்தம்

7021 **ஆர்த்து** - ஆரவாரித்து

7022 **ஆர்வாழ்சடை** - கங்கை விளங்கும் முடியை உடையவர்

7023 **ஆலகாலம்** - உலகையே அழிக்கும் விஷம்

7024 **ஆலங்காட்டார்** - திருவாலங்காட்டில் இருப்பவர்

7025 **ஆலமாக்களம்** - ஆலகால விஷம் உண்ட கழுத்து

7026 **ஆலில் தெளிய** - ஆலமரத்தின் கீழ் தெளிவு கூற

7027 **ஆவா (ஆ ஆ)** - ஆகா

7028 **ஆழி விடையார்** - திருமாலைக் காளை ஊர்தியாக உடையவர்

7029 **ஆன்கொள்விடங்கர்** - காளை மீது ஊரும் சிவன்.

இ

7030 **இச்சை** - விருப்ப வடிவம்

7031 **இசையார்** - உடன்படாதவர்

7032 **இசையால்** - விருப்பத்தால்

7033 **இட்டுப் புணர்ந்து** - கூடிச் சேர்ந்து

7034 **இடந்தானும்** - பூமியை அகழ்ந்தவனும்

7035 **இடந்தும்** - அகழ்ந்தும்

7036 **இடை** - இடுப்பு

7037 **இடைதான் ஐயம்** - இடுப்பு இருக்கிறதோ என்ற சந்தேகம்

7038 **இடையா ஐயம்** - குறையாத சந்தேகம்

7039 **இடையாமயல் கொண்டு** - பின்னடையாத காதல் கொண்டு

7040 **இந்தத் தருணத்து இனையாது** - இப்போது முடியாது

7041 **இரங்கல் மாலை** - வருந்திக் கூறும் பதிகம்

7042 **இரப்பார்** - யாசிப்பார்

7043 **இரவிப்பல்லை இறுத்தவ** - கதிரவன் பல்லை உடைத்தவர்

7044 **இருக்கமயல்** - தீராக் காதல்

7045 **இருந்தார்** - அமர்ந்தார்

7046 **இருள் நச்சிய** - கருமை நிறம் உடைய

7047 **இருள்மாண்** - இருட்டு நிறைந்த

7048 **இலதேல்** - இல்லையேல்

7049 **இலமே செரிந்தார்** - வீட்டில் தங்க வைத்தார்கள்

7050 **இல்லை** - வீட்டினை

7051 **இழியா மகிழ்வினொடும்** - குறையாத இன்பத்தோடும்

7052 **இறுவாமால்** - குறையாத காதல்

7053 **இறையார்** - இறைவர்

7054 **இன்பக்கிளவி** - இன்பம் தரும் சொல்

ஈ

7055 **ஈடில்மயல்** - ஒப்பில்லாத காதல்

7056 **ஈடு** - இணை

7057 **ஈர்க்க** - பிடித்து இழுக்க

7058 **ஈர்க்கும்** - தென்னை ஓலைக்குச்சியும்

7059 **ஈறங்காடு** - சுடுகாடு

உ

7060 **உடனாஓடினாலும்** - கூட ஓடிச்சென்றாலும்

7061 **உடுத்தார்** - ஏந்தினார்

7062 **உடையாது ஓடினாலும்** - தளர்வின்றி ஓடிச் சென்றாலும்

7063 **உணங்கு தலை** - காய்ந்த மண்டை ஓடு

7064 **உண்மை சொலி** - உண்மையைச் சொல்லி

7065 **உந்தா ஆலிக்கும்** - எழும்பி ஆரவாரிக்கும்

7066 **உந்திய** - எரிந்த

7067 **உந்தும் மறுத்து** - மேல் வீசும் காற்று

7068 **உம்பர்** - விண்ணவர்கள்

7069 **உயத்தமதி** - சிறந்த புத்தியால்

7070 **உரப்பார்** - இறுகிய நிலம்

7071 **உரம் மன்னிய** - வலிமை பொருந்திய

7072 **உருக்கா ஓடினாலும்** - ஆடையின்றி ஓடிப்பிடிக்கச் சென்றாலும்

7073 **உலக நிகழ்வை** - உலக நடைமுறை

7074 **உலம்** - மலை

7075 **உலவாது** - பின்னடையாமல்

7076 **உலோபம்** - உலோபிதனம்

7077 **உவர்தாம்** - சோதிடத்தின் குறைகள்

7078 **உவர்விடத்தை** - கசக்கும் விஷத்தை

7079 **உழை** - பக்கம்

7080 **உள்ளார்** - பகைவர்

7081 **உள்ளி உருகும்** - நினைந்து நெகிழும்

7082 **உற்றிலம்** - வந்து சேர்ந்திலர்

7083 **உற்று அங்கு வந்தோன்** - பொருந்தி வந்தவர்

7084 **உறையாது ஓடினாலும்** - பேசாமல் ஓடினாலும்

7085 **உன்வசமோ** - உன்னால் இயலுமோ

ஊ

7086 **ஊர்ஒற்றி அலர்க்கு** - ஒற்றியூர் சொந்தமாக இல்லாதவர்க்கு

7087 **ஊழ்வை அறுப்பார்** - தீவினையை நீக்குவார்

7088 **ஊழை அழிப்பார்** - தீவினையை நீக்குவார்

7089 **ஊனம்** - துன்பம்

எ

7090 **எண்ணக்குலையார்** - எண்ண முடியாதவர்

7091 **எண்பார்மயல்** - எளிய காதல்; எண்ணிய காதல்

7092 **எத்தர்** - தந்திரம் உடையவர்; ஏமாற்றுபவர்

7093 **எத்திப் பறிப்பார்** - ஏமாற்றி வாங்கிக் கொள்பவர்

7094 **எதுபெறுவாய்** - என்ன பெறுவாய்

7095 **எய்தற்கு** - சேர்வதற்கு

7096 **எழில் வேட்டு** - அழகை விரும்பி

7097 **எற்றென்று** - என்ன வென்று

7098 **எள்ளில் மயல்** - இகழ்ச்சி சொல்லாத காதல்

7099 **என்னார்** - என்னைப் போன்ற

ஏ

7100 **ஏகமயல்** - மிகுந்த காதல்

7101 **ஏசாநிற்க** - வைது நிற்க

7102 **ஏசுழத்த** - ஏய்ச்சும் பேச்சும் சூழ்ந்த

7103 **ஏட்டில் அடங்கா** - எழுதிப் பார்க்க முடியாத

7104 **ஏடார்** - மலர் இதழ்கள்

7105 **ஏணவிழியாய்** - அழகு விழியை உடையவளே

7106 **ஏதம் மணக்கும்** - குறைகள் நிறைந்த

7107 **ஏதுக்கு** - எதற்காக

7108 **ஏம முலையாய்** - அழகு சேர்ந்த மார்பகம்

7109 **ஏமப் புகை** - வேள்விப் புகை

7110 **ஏய்** - என்னடி

7111 **ஏயமொழியாள்** - கூடிப் பேசாள்

7112 **ஏயும் பெருமை** - பொருந்தும் பெருமை

7113 **ஏர்** - அழகு

7114 **ஏலக்குழல்** - மணம் பொருந்திய கூந்தல்

7115 **ஏலமயல்** - அன்புக் காதல்

7116 **ஏலாள்** - ஏற்க மாட்டாள்

7117 **ஏறாமட்டும்** - குதித்தல்

ஐ

7118 **ஐங்கணை** - ஐந்து வகை அம்பு

ஒ

7119 **ஒக்க ஓடினாலும்** - கூட ஓடிச் சென்றாலும்

7120 **ஒக்கஅறிந்தீர்** - யாவும் தெரிந்தவரே

7121 **ஒண்பதத்தார்** - சிறந்த திருப்பாதங்களை உடையவர்

7122 **ஒண்தணிகை** - சிறந்த தணிகாசலம்

7123 **ஒரு மகனை** - சிறுத்தொண்டரது மகனான சீராளனை

7124 **ஒரு வேடன்** - கண்ணப்பன்

7125 **ஒருநதி** - கங்கை

7126 **ஒருபோதும்** - எந்த நேரத்திலும்

7127 **ஒருமை அளிப்பார்** - பேரின்பம் தருவார்

7128 **ஒருமை உடையார்** - ஒரே எண்ணம் உடையவர்

7129 **ஒல்லை அடைந்து** - விரைவாகச் சென்று

7130 **ஒல்லை** - விரைவாக

7131 **ஒல்லை ஓடினாலும்** - விரைந்து ஓடினாலும்

7132 **ஒழியாது ஓடினாலும்** - நில்லாமல் ஓடிச் சென்றாலும்

7133 **ஒளித்து ஒன்று உறையீர்** - மறைத்து ஏதும் சொல்லாதீர்

7134 **ஒற்றி நாட்டார்** - திருவொற்றியூர் தேவர்

7135 **ஒற்றியிரும்** - அகன்று நில்லும்

7136 **ஒற்றிவாணர்** - திருவொற்றியில் வாழும் அண்ணல்

7137 **ஒற்றிவிகிர்தர்** - திருவொற்றியூர் சிவபெருமான்

7138 **ஒற்றினர்** - வந்து சேர்ந்தவர்

7139 **ஒற்றை மணி** - தீட்டிய ரத்தினம்

ஓ

7140 **ஓட்டில் இரந்து** - தலை ஓட்டில் பிச்சை எடுத்து

7141 **ஓடாது ஓடினாலும்** - உடலாலும் மனதாலும் ஓடிச் சென்றாலும்

7142 **ஓடு** - தலைஓடு

7143 **ஓணம் உடையான்** - திருவோணத்தில் பிறந்த மகாவிஷ்ணு

7144 **ஓதம்** - ஈரம்

7145 **ஓதமலி ஒற்றியூர்** - கடல் அலைகள் ஒலிக்கும் திருவொற்றியூர்

7146 **ஓர்த்து மதிப்பீர்** - உணர்ந்து மதிப்பிடுகின்றவரே

7147 **ஓவாக்களிப்போடு** - மிகுந்த களிப்போடு

7148 **ஓவாநிலையார்** - எழுதிய ஓவியம்போல் விளங்குபவர்

க

7149 **கங்குல்** - இரவு

7150 **கச்சை உடை** - கோவணமாகிய ஆடை

7151 **கஞ்சம்** - கஞ்சத்தன்மை

7152 **கஞ்சன்** - நான்முகன்

7153 **கட்டு அவிழ்ந்த** - முடிச்சு கலைந்த ; முடிகலைந்த

7154 **கடிசேர்** - மணம் சூழ்ந்த

7155 **கடிசேர்ந்து** - விரைந்து வந்து

7156 **கடிமலர்** - புதுப்பூ; புதுமலர்

7157 **கடிமாமனைக்கு** - உரிய சிறந்த வீட்டிற்கு

7158 **கடிய அயர்ந்தேன்** - பழி சொல்ல தளர்ச்சி அடைந்தேன்

7159 **கடுக்காதலித்தார்** - விஷம் உண்ண விரும்பியவர்

7160 **கடுகி** - விரைந்து

7161 **கடையார் அளியார்** - இழிந்தவர் கொடுத்து உதவார்

7162 **கடையில்** - கடலைக் கடைந்தபோது

7163 **கண்டு** - கற்கண்டு

7164 **கண்டேமால்** - பார்த்தோம்

7165 **கண்ணன்** - திருமால்

7166 **கண்ணன் நெற்றி** - அழற்கண் உடைய திருநுதல்

7167 **கண்ணியின்** - மாலையை உடையவர்

7168 **கணை** - அம்பு

7169 **கந்தக்குழல்** - மணக்கும் கூந்தல்

7170 **கபாலி** - மண்டை ஓட்டில் பிச்சை எடுப்பவர்

7171 **கமலம்** - தாமரை

7172 **கமலை அனையாய்** - திருமகள் போன்றவளே

7173 **கரந்தார்** - மறைந்தார்

7174 **கரந்து** - மறைந்து

7175 **கரப்பார்** - மறைப்பார்

7176 **கருதுமவரை** - போற்றும் அன்பர்களை

7177 **கருமம் அறிந்த** - இனி நடக்கும் செயல்களைத் தெரிந்த

7178 **கருவாழ்வு அகற்றும்** - தீவினை வாழ்வை நீக்கும்

7179 **கல் எறிந்தோன்** - சாக்கிய நாயனார்

7180 **கல்ஆல்** - ஆல மரவகைகளில் ஒன்று

7181 **கலக விழியாய்** - மன அலைவை உண்டாக்கும் கண்ணை உடையவளே

7182 **கல்லாம் முலையாய்** - கல் உறுதி கொண்ட மார்பினை உடையவளே

7183 **கல்லால்** - கல் போல

7184 **கல்லை** - கயிலை மலையை

7185 **கல்லை உருக்கி** - மனக் கல்லை நெகிழச் செய்து

7186 **கலவேனோ** - புணருவேனோ

7187 **கலனாக** - அணிகலனாக

7188 **கலுழ்ந்தேன்** - கண்ணீர் வடிய வருந்தினேன்

7189 **கலை** - ஆடை

7190 **கலை அவிழ்ந்தார்** - ஆடைகள் இழந்தார்

7191 **கலை கவர்ந்த** - ஆடையை நெகிழ்த்த

7192 **கழி** - உப்பங்கழி

7193 **கழுமலத்தோன்** - சீர்காழி சம்பந்தர்

7194 **கள்ளி நெருங்கு** - கள்ளிக்காடுகள் சூழ்ந்து

7195 **கள்ளிஎன** - திருடி என்று

7196 **களிசெய்தார்** - எரியச் செய்தார்

7197 **கற்றிண் முலையாய்** - கல்போல் உறுதியான மார்பினை உடையவளே

7198 **கற்றைச் சடை** - ஒன்று திரண்ட சடைமுடி

7199 **கனகவரை** - பொன்மலை

7200 **கனசிலையார்** - மலையை வில்லாக உடையவர்

7201 **கன்றுண் கரத்தாய்** - வளையல் அணிந்த கைகளை உடையவளே

7202 **கன்னல் மொழியாய்** - கரும்புச் சாறு போல் தித்திக்கும் சொல்லைப் பெற்றவளே.

7203 **கன்னியழித்தார்** - கன்னிப் பருவத்துக் கற்பினைக் குலைத்தவர்

கா

7204 **காதல் திரை** - காமக் கடல்

7205 **காதம் மணக்கும்** - பத்துக்கல் தூரம் வாசம் வீசும்

7206 **காது நடந்த கண் மடவாள்** - காது அளவும் நீண்ட கண் உடைய பாவை

7207 **காதே மகிழ்வார்** - சாந்தமே விரும்புபவர்

7208 **காதேர் குழையாய்** - காதில் சிறக்கும் குண்டலம் உடையவனே

7209 **காமப் பறவை** - அன்றில் பறவை

7210 **காமம் அருந்தார்** - மாலை தந்து மயக்கம் ஊட்டுபவர்

7211 **காலம் நிரம்பிட** - அதிக நேரம்

7212 **காவனம்** - சோலைக்காடு

7213 **காழ்கொள் முலையாய்** - உறுதி மிகும் மார்பினை உடையவளே

7214 **காழிக்கவுணியார்** - சீர்காழியில் அவதரித்த திருஞான சம்பந்தர்

7215 **கான் கொள் குழலாய்** - மணம் வீசும் கூந்தலை உடையவளே

7216 **கானார் அலங்கல்** - காடு அனைய கூந்தல் ; காடாகிய அடர் கூந்தல்

கி

7217 **கிளைத்தார்** - தோன்றியவர்

கீ

7218 **கீள்உடையார்** - கோவணம் அணிந்தவர்

கு

7219 **குகைசேர்** - இருண்ட குகையில் நிறைந்த

7220 **குணவா** - நற்குணம் உடையவர்

7222 **குணியா எழில்** - சிதறாத அழகு

7223 **குதலை** - குழந்தை மொழி

7224 **குரவ(ம்) மணக்கும்** - குரா என்னும் மரம் பூத்துக் கமழும்

7225 **குருகு உண் கரத்தாய்** - அன்னம் வழங்கும் கைகளை உடையவளே

7226 **குழல்** - துவாரம்; துளை; தலை முடி

7227 **குழை ஒன்றிய** - குண்டலங்கள் விளங்கிய

7228 **குறமடவாய்** - குறத்திப் பெண்ணே

7229 **குறிக்கோள்ஆர்** - குறிக்கோள் உடைய

7230 **குறிதான் செப்புவையே** - ஆருடம் சொல்லுவாயே

7231 **குறும்பை** - தென்னம் இளம் காய்

7232 **குன்றில்துயர்** - மலை போன்ற துன்பம்

7233 **குன்று** - மலை

கூ

7234 **கூசாது** - வெட்கப் படாது

7235 **கூடல் உடை வழுதி மருகர்** - மதுரை மலையத்துவச பாண்டியனின் மருமகன்

7236 **கூர்க்கும்** - கூரியதான

7237 **கூறை** - ஆடை

கே

7238 **கேள்வர்** - கணவர்

கை

7239 **கைதவர்** - தவமில்லாதவர்

7240 **கையாவார்** - பிரிவுத் துன்பத்தார்

கொ

7241 **கொங்கை** - மார்பகம்

7242 **கொண்டல்** - மேகம்

7243 **கொய்தற்கு** - பறித்துச் சூடுவதற்கு

7244 **கொல்பை** - விடம் நிறைந்த பை

7245 **கொற்றம் உடையார்** - அருட்செங்கோல் ஏந்தியவர்

7246 **கொன்னார்** - கொலை புரியும் கூர்மையுடைய

7247 **கொன்னோடு ஒத்த** - வேலுடன் ஒப்புமையான

கோ

7248 **கோட்டு மணிப்பூண்** - உயர்ந்த நகைகள் அணிந்த

7249 **கோடா ஒல்கும்** - கொடிபோல் தளரும் ; வளைந்து தளரும்

7250 **கோடுஆர்** - மலை போன்ற

7251 **கோதர்** - குற்றமுடையவர்

7252 **கோதாய்** - கூந்தல் உடையவளே

7253 **கோதுகண்** - இணைந்த கண்

7254 **கோலம்** - அழகு

7255 **கோலும் மகளிர்** - அளக்கின்ற பெண்கள்

7256 **கோவம்** - கோபம்

7257 **கோன்** - அரசன்

ச

7258 **சகியே** - தோழியே

7259 **சதுரர்** - சமர்த்தர்

7260 **சந்தத் தடந்தோள்** - மணக்கும் திருத்தோள்

7261 **சந்தார்** - சந்தன மரங்கள் நிறைந்த

7262 **சரிந்தன** - அவிழ்ந்தன

7263 **சலம் சாதித்தார்** - வஞ்சனையைச் செய்பவர்

7264 **சலமகள்** - கங்கை

7265 **சல்லாப இயன்மொழி** - இன்பம் மிக்க உரையாடல்

7266 **சலந்தரன்** - சலந்தரா சுரன்

7267 **சலிய** - சலிப்படைய

சா

7268 **சால** - மிகவும்

சி

7269 **சித்த மங்கை** - மன்மதன் கைவரிசை

7270 **சிந்தாதுயரம்** - விலகாத துன்பம்

7271 **சிந்து உற்பவத்தாய்** - பிறவியை நீக்கும் தன்மையனே

7272 **சிரம் தார்** - தலைகளையே மாலையாக

7273 **சிவிகை** - முத்துப் பல்லக்கு

7274 **சிற்ப மணிமேடை** - அழகு விளங்கும் மேடை

சினக்கின்றேன் - துன்பப் படுகின்றேன்

சீ

7275 **சீதப்புனல்** - குளிர்ந்த நீர்

7276 **சீர்த்தேன்** - உயர்ந்த தேன்

7277 **சீலம்** - மேன்மை

7278 **சீவக் குணம்** - சிறந்த குணம்

சு

7279 **சுகங்காள்** - கிளிகளே

செ

7280 **செங்கண் பணியார்** - பாம்பு ஆபரணம் உடையவர்

7281 **செங்காடு** - திருச்செங்காடு

7282 **செண்டுஆர்** - பூச்செண்டு போன்ற

7283 **செரித்து** - அணிந்து

7284 **செல்வந்து உறழும்** - மேகம் வந்து சூழும்

7285 **செவ்வணத்தார்** - சிவந்த நிறம் உடையவர்

7286 **செவிலிகூறல்** - வளர்ப்புத்தாய் சொல்லுதல்

சே

7287 **சேண்காத்து** - தேவர் உலகைப் பாதுகாத்து

7288 **சேண்நின்று** - உயர்ந்த நிலையில் இருந்து

7289 **சேமக்குயிலே** - பாதுகாப்புடைய குயில் பறவையே

7290 **சேமப்புலவர்** - அறிவு நிறைந்த புலவர்

7291 **சேமம்** - பாதுகாவல்

7292 **சேமேல்** - காளைமீது

7293 **சேய்** - எருது; திருமுருகன்

7294 **சேல் காதலிக்கும்** - மீன்கள் விரும்பும்

7295 **சேலார்தடம்** - கயல் மீன் நிறைந்த நீர்நிலை

7296 **சேலில் தெளிகண்** - கயல் மீனைவிட சிறப்பான கண்

சோ

7297 **சோமன்** - நிலவு

7298 **சோறுமிரப்பார்** - சோறு பிச்சை எடுப்பார்

ஞா

7299 **ஞாலத்தார்** - உலகத்தவர்

7300 **ஞானம்** - இசைப்பாட்டு

த

7301 **தக்க விதி** - படைப்பாற்றல் உடைய நான்முகன்

7302 **தகைசேர்** - மாண்பு நிறைந்த

7303 **தடங்கொள் மார்பு** - அகன்ற மார்பு

7304 **தட்டில் பொருந்தார்** - ஓரிடத்தில் நில்லாதவர்

7305 **தடம்** - நீர் நிலை

7306 **தண்டம் கழற்கு** - திருவடிக்கு வணக்கம்

7307 **தண்ணளியன்** - கருணை புரிபவர்

7308 **தண்தோய் பொழில்** - குளிர்மை நிறைந்த சோலை

7309 **தண்பார்** - தன்னைப் பார்க்கவும் அருள்செய்க என்பவர்

7310 **தம்பிரான்** - தலைவன்

7311 **தமலம் அகன்ற** - குறைகள் நீங்கிய

7312 **தரிப்பார்** - வைப்பார்

7313 **தரியார்** - பகைவர்

7314 **தரும விடையார்** - காருண்ய வடிவான வாகனம் உடையவர்

7315 **தருமன்** - இயமன்

7316 **தரையில் கீரி** - தரையில் அடித்து

7317 **தலைவி கழற்று எதிர் மறித்தல்** - காதல் தலைவி செவிலி பேச்சுக்கு மறுப்பு சொல்லுதல்

7318 **தவர்தாம்** - தவமுனிவர்

7319 **தவள நிறம்** - பவழம் போல சிவந்த நிறம்

7320 **தழல் ஆக்க** - எரியூட்ட

7321 **தழல் உருவார்** - அனல் வடிவினர்

7322 **தளித்தார் சோலை** - தழைத்து நிறைந்த சோலை

தா

7323 **தாமம்** - மலர் மாலை

7324 **தாயும் தமரும்** - அன்னையும் உறவினரும்

7325 **தார்த்தேன்** - வடியும் தேன்

7326 **தார்வாழ் புயம்** - மாலை அணிந்த தோள்

7327 **தாழ்வை மறுப்பார்** - இழிவினை நீக்குவார்

7328 **தாழாது** - குறையாது

7329 **தாள் உடையர்** - திருவடிகள் உடையவர்

7330 **தாளை உடையார்** - படையை உடையவர்

7331 **தானை** - ஆடை

தி

7332 **திங்கள் முகம்** - நிலவு போன்ற முகம்

7333 **திடன் நான் மறையார்** - உறுதி கூறும் நால் வேதம் உடையவர்

7334 **திணிகொள்** - வலிமை பெற்ற; உறுதியான

7335 **தியங்கும்** - மயங்கும்

7336 **திரம் மறுகிலேன்** - வலிமை பெறுகிலேன்

7337 **திரன்** - வலிவு

7338 **திரிந்தார்** - தேடிக் கிடைக்காமல் திகைத்தவர்

7339 **திருஒற்றி நியமம்** - திருஒற்றியூர் ஆலயம்

7340 **திருப்புலியூர்** - தில்லைச் சிதம்பரம்

7341 **திருமகன்** - மன்மதனை ; காமனை

7342 **திரையாரோதை** - கடல் அலைகளால் உண்டாகிய ஈரம்

7343 **திலகம் அனையார்** - நெற்றித் திலகம் போல்

7344 **திவளும் இழையாய்** - கவரும் அணிகலன் அணிந்தவளே

தீ

7345 **தீமதியம்** - துன்பம் தரும் நிலவு

7346 **தீனம்** - இழிவு

து

7347 **துகில்** - ஆடை

7348 **துகிலைத் திருத்தும் முனும்** - துணியால் மார்பை மூடும் முன்பு

7349 **துடி** - உடுக்கை

7350 **துத்தி** - பாம்பு

7351 **துய்யார்** - புனிதர்

7352 **துன்னி நின்றார்** - அருகில் இருந்து விளங்குகின்றார்

7353 **துன்னி மலைவாழ்** - சேர்ந்து மலையில் வாழும்

7354 **துன்னும்** - இருந்து வாழும்

7355 **துன்னும் இறையார் தொண்டருக்கு** - நெருங்கிய நட்பு கொண்ட சுந்தரருக்கு

7356 **துன்னும் துவர்வாய்** - நெருங்கிய சிவந்த இதழ்கள்

தூ

7357 **தூலமகன்** - ஓங்கிய காமன்

தெ

7358 **தெட்டில் பொலியும்** - ஆர்வத்தில் மலர்ச்சி உறும்

7359 **தெண்கடல்** - தெளிந்த கடல்

7360 **தெய்வமருந்தார்** - தேவாமிர்தம் போன்றவர்

7361 **தெரிந்து** - வீசி எறிந்து

7362 **தெருளர்** - அருள் பக்குவம் உடையவர்

7363 **தெளித்து நதியை** - தெளிந்த கங்கையை

7364 **தெற்றி** - திண்ணை

7365 **தெற்றி மணிக்கால் விளங்கு தில்லை** - மணி மாலைகள் விளங்குகின்ற திண்ணைகளை உடைய தில்லை நகர்

7366 **தென்சொல்** - தெளிந்த சொல்

7367 **தென்னார்** - தென்னை மரங்கள் நிறைந்த

7368 **தொன்னகரார்** - பழைய நகரத்தினர்

தே

7369 **தேக்கு அம்குழலாய்** - அழகு தங்கிய கூந்தலை உடையவளே

7370 **தேசார்** - ஒளி நிறைந்த

7371 **தேசு** - ஒளி

7372 **தேமேல்** - சிறந்த தேன் உடைய

7373 **தேற்றுகினும்** - ஆறுதல் சொன்னாலும்

7374 **தேறாள்** - ஆறுதல் அடையாள்

தொ

7375 **தொண்டன்** - சுந்தரமூர்த்தி

7376 **தொலையா** - நீங்காத

7377 **தொன்மையினார்** - வழக்கமுள்ளவர்

தோ

7378 **தோடார்** - காதணிகள்

7379 **தோடு** - அணிகலன்; காதணி

7380 **தோளாமணி** - துளைக்காத மணி

ந

7381 **நக்கன்** - சிவபெருமான்

7382 **நக்கர்** - அம்மணர்

7383 **நசையா நடிக்கும்** - விரும்பி ஆளுகின்ற

7384 **நட்டம்** - நடனம்; கூத்து

7385 **நண்ணாமுன்னம்** - அணுகுமுன்பு

7386 **நண்ணார்** - வந்து சேரவில்லை

7387 **நந்தா மகிழ்வு** - குறையாத மகிழ்ச்சி

7388 **நந்தி பரியார்** - காளை வாகனர்

7389 **நமது விடையமெலாம்** - நம்முடைய மனம் புத்தி சித்தம் அகங்காரம் யாவற்றையும்; ஆசை யாவற்றையும்

7390 **நமலம் அறுப்பார்** - துன்பம் நீக்குவார்; சாவினைத் தவிர்ப்பார்

7391 **நரா ஆர்க்கும்** - தேன் வடியும்

7392 **நலஆதரவில்** - நன்மையோடு ஆதரித்து

7393 **நலத்தில்** - வலத்தில்; வெற்றியில்

7394 **நல்தூசு** - நல்ல ஆடை

7395 **நவிற்றாயோ** - சொல்லாயோ

7396 **நளிர்பூ** - குளிர்ந்த மலர்

7397 **நன்றா** - நன்றாக

நா

7398 **நாக அணியார்** - பாம்பாபரணம் பூண்டவர்

7399 **நாண் கவர்ந்த** - நாணத்தைப் பறித்துக் கொடு

7400 **நாதர்** - நடராயர்

7401 **நாமம்** - பெயர்

7402 **நால்வர்க்கு** - சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் நான்கு பேருக்கு

7403 **நாலாரணம்** - நான்கு வேதங்கள்

நி

7404 **நிகரானீர்** - ஒப்பு ஆவீர்

7405 **நிந்தித்து** - குறை சொல்லி

7406 **நிருத்தம்** - நட்டம்; நடம்

7407 **நிலம் சாதிக்கும்** - நிலவுலகம் போற்றும்

7408 **நிறை கவர்ந்து** - கற்பினைப் பறித்துக் கொண்டு

7409 **நிறைந்து ஆர்கங்கை** - நிரம்பி வழிந்து ஓடும் கங்கை நதி

நீ

7410 **நீடாசையினால்** - ஆழ்ந்த விருப்பத்தால்

7411 **நீத்து உற்றாள்** - விலக்கி நின்றாள்

7412 **நீர்க்கும்** - கங்கைக்கும்

7413 **நீலக்களத்தார்** - விடம் பொருந்திய கழுத்தினை உடையவர்

7414 **நீள்ஆலம் இருந்தாரா** - உயர்ந்து ஓங்கிய ஆலமரத்தின் கீழ் அமர்ந்தாரா.

நு

7515 **நுந்தா விளக்கு** - அணையா திருவிளக்கு

நெ

7416 **நெய்தல் பணை** - நெய்தல் நிலம்; கடல் சூழ் நிலம்

7417 **நொ (நொடிக்கும்)** - நகைத்துப் பேசும்

நோ

7418 **நோவ** - வருத்தமடைய

ப

7419 **பக்கம் மருவும்** - தெரு ஓரத்தில் நிற்கும்

7420 **படஅரவை** - படமெடுக்கும் பாம்பு

7421 **படநாகு அணியர்** - படமுடைய பாம்பினை அணிகலனாக அணிந்தவர்

7422 **படுக்கா மதிப்பில்** - குறையாத பெருமையோடு

7423 **படைக்கும் கமலப் பண்ணவன்** - நான்முகத் தேவன்

7424 **படையால் கவர்ந்து** - மழு மற்றும் சூலாயுதத்தால் பறித்துக் கொண்டு

7425 **பண்டமறியேன்** - பயன் அறியவில்லை

7426 **பண்டரங்கர்** - பண்டரங்கம் என்னும் ஒருவகை கூத்து ஆடுபவர் (பாண்டரங்கம் எனவும் கூறுவர்)

7427 **பண்ணார் மொழியாள்** - இசைபோலும் சொல் பேசுபவர்

7428 **பணி** - பாம்பு (ஆபரணம்)

7429 **பணை** - வயல்

7430 **பதப்பூ** - திருவடி மலர்கள்

7431 **பந்துஆர்** - பந்து ஏந்திய

7232 **பரவப் படுவர்** - வாழ்த்தப் படுவர்

7433 **பரிசு** - தனிமை; கொடை

7434 **பரிவில்** - அன்பில்

7435 **பரிவோடு** - இரக்கமுடன்

7436 **பருகேன்** - கள் அருந்தேன்

7437 **பல ஆதரவால்** - பலநிலைகளின் சேர்க்கையால்

7438 **பலிக்கு** - பிச்சை எடுப்பதற்கு

7439 **பலிக்கு உற்றார்** - பிச்சைச் சோறு எடுக்க வந்தவர்

7440 **பலித்தார்** - பிச்சை எடுக்கும்

7441 **பவம்** - பிறப்பு

7442 **பவுரி** - கூத்து; ஒருவகை நடனம்

7443 **பழிக்கஞ்சா** - பஞ்ச பாதகங்களுக்கு அச்சம் கொள்ளாத; இம்சைக்கு அஞ்சாத

7444 **பழியா எழிலின்** - குறை சொல்லாத அழகோடு

7445 **பள்ளிஅறை** - கணவன் மனைவியுடன் இரவில் கலக்கும் அறை

7446 **பறை ஆதரிக்க** - உமையவள் போற்ற

பா

7447 **பாசுபதர்** - சிவபெருமான்

7448 **பாடார்வலராம்** - பாடும் பாடலுக்கு விருப்பம் உடையவர்

7449 **பாண்டியன்** - சிவன்

7450 **பாயல்** - படுக்கை

7451 **பாயாவிரைவில்** - விரைவாகப் பாய்ந்து

7452 **பாயில்** - படுக்கும் பாய்தனில்

7453 **பார்க்கும்** - உலகினர்க்கும்

7454 **பார்மிசை** - பூமி மீது

7455 **பாவ நாசர்** - பழிபாவங்களை அழிப்பவர்

7456 **பாவனமும்** - பாற் சோறும்

7457 **பாவார் குதலை** - பாகு போன்ற குதலை மொழி

7458 **பாவார்தாம்** - பாவிகள்

7459 **பாழை அகற்ற** - குறையை நீக்கிக் கொள்ள

பி

7460 **பிச்சி** - பித்துப் பிடித்தவள்

7461 **பிச்சை** - கூந்தல் அணிகலன்

7462 **பிடிக்கும்** - கைப்பிடி அளவுக்கும்

7463 **பிடிசேர்நடை** - பெண்யானைபோல் நடை

7464 **பித்தடைய** - பைத்தியமாக

7465 **பிரிந்தன** - அவிழ்ந்தன

7466 **பிறங்க** - விளங்க

7467 **பிறங்குகின்றார்** - விளங்க நிற்பவர்

7468 **பின்னை** - மேற் கொண்டு

பீ

7469 **பீடார்** - பெருமையுடைய

பு

7470 **புகல்வார்** - பேசுவார்

7471 **புகுதா** - நுழைய முடியாத

7472 **புங்கர்கள்** - தூயவர்கள்

7473 **புடை** - இடப்பக்கம்

7474 **புணர்ச்சிக்கு ஏது** - கூடுதற்குக் காரணம்

7475 **புணராவிரகு** - தலைவனுடன் சேராத காமத்துயரம்

7476 **புயத்தை** - தோள்களை

7477 **புயம்** - தோள்

7478 **புரப்பார்** - பாதுகாப்பார்

7479 **புரம் எரித்தார்** - திரிபுரங்கள் தகனம் செய்தார்

7480 **புரிசடை** - பின்னிய தலைமுடி

7481 **புரிநூல் உத்தமரே** - பூணூல் அணிந்த வேதியரே

7482 **புல்லார்** - அணைந்திடார்

7483 **புளகம்** - மயிர்க்கூச்சு

7484 **புறங்கொள் அடுகாடு** - ஊருக்கு வெளியே உள்ள சுடுகாடு

7485 **புற்றின் அரவு** - புற்றில் வாழும் பாம்பு

7486 **புன்னை இதழி** - புன்னை மலர்

7487 **புனைநூல் இடையர்** - அழகிய நூல் போல் மெல்லிய இடையுடைய உமை

பூ

7488 **பூங்கா** - பூஞ்சோலை

7489 **பூண்** - அணிகலன்

7490 **பூணாஅணி** - நகை அணிந்த

7491 **பூவை** - பெண்கள்

பெ

7492 **பெய்ய முகத்தாய்** - சிவந்த முகம் உடையவளே

7493 **பெற்றம்** - பசுவின் இனம்

7494 **பெற்றி அறியா** - பெருமை அறியாத

பே

7495 **பேணி** - ஆதரித்து

7496 **பேதே மருவார்** - குற்றமே செய்யாதவர்

பை

7497 **பைத்த அரவம்** - விஷப்பையை உடைய பாம்பு

பொ

7498 **பொருது முடிப்பார்** - வெற்றி கொள்வார்

7499 **பொல்லார்** - பகைவர்

7500 **பொழில்** - சோலை

7501 **பொற்றைப் பெருவில்** - மலையாகிய பெரிய வில்லாயுதம்

7502 **பொன்நாண்** - பொன்தாலி; மங்கள மாங்கல்யம்

7503 **பொன்மை சிலை** - இமைய மலையாகிய வில்

7504 **பொன்னார்** - தோழிப் பெண்கள்

போ

7505 **போகி** - இந்திரன்

7506 **போதம் மணக்கும்** - ஞானம் விளங்கும்

7507 **போதிற்று** - அவிழ்ந்து போய் விட்டது

7508 **போது** - பொழுது

7509 **போதுகிலேன்** - போகவில்லை

ம

7510 **மஞ்சம்** - மலர்ப் படுக்கை

7511 **மட்டில் பொலியும்** - தேன் ஆகிச் சிறக்கும்

7512 **மட்டுக்கு அடங்கா** - அளவுக்கு உட்படாத

7513 **மடன் நாமகன்று** - அறியாமையை விலக்கி

7514 **மடையார்வாளை** - வயலில் மடையில் துள்ளும் மீன்

7515 **மணப்பொருத்தம்** - திருமணப் பொருத்தம்

7516 **மத்தம்** - ஊமத்த மலர்

7517 **மதன்வலி** - காமனது ஆற்றல்

7518 **மதனன்** - காமன்

7519 **மதனை** - மன்மதனை; காமனை

7520 **மதிக்கும்** - நிலவிற்கும்

7521 **மதியம்** - நிலவு

7522 **மதில் அழித்தார்** - திரிபுரங்களின் கோட்டையை அழித்தார்

7523 **மதுமத்தர்** - பித்தர்

7524 **மந்தாகினி** - கங்கை

7525 **மயல்** - மயக்கம்

7526 **மரித்தும்** - மீண்டும்

7527 **மருங்குல்** - இடுப்பு

7528 **மருதி உறைவார்** - திருவிடை மருதூரில் வாழ்பவர்

7529 **மருப்பார்** - கொம்புடைய; குன்றிலுள்ள

7530 **மருவ** - தழுவிப் புணர

7531 **மருவார்** - பகைவர்

7532 **மருவி** - தழுவி

7533 **மருவில்** - புணர்தல்; குறைவில்லாது

7534 **மருவும்** - பொருந்தும்

7535 **மலம் சாதிக்கும்** - ஆணவ கன்ம மாயை வாழ்வில் அழுந்தும்

7536 **மல்லல்வயல்** - வளம் சூழ்ந்த வயல்

7537 **மலவீக்கம்** - ஆணவ மறைப்பு மலத்தின் வலிவு

7538 **மலிநீர்** - நிறைந்த நீர்

7539 **மழு** - கோடாரி ஆயுதம்

7540 **மழுவிடை** - இளம் எருது

7541 **மழை** - குளிர்ச்சி

7542 **மறையின் தலை** - வேதமுடிவு

7543 **மன் என்று** - மகாதேவன் என்று; மாமன் மகன் என்று

7544 **மன்னும் கரங்கள்** - பொருந்திய கைகள்

மா

7545 **மா** - யானை

7546 **மாகம் பயிலும்** - குயில்கள் கூவும்

7547 **மாசற்று இலங்கும்** - குற்றம் இல்லாமல் விளங்கும்

7548 **மாடு** - செல்வம்; காளை

7549 **மாணவலியச் சென்று** - விரும்பி நாமே சென்று

7550 **மாணவீதி** - சிறந்த தெருவில்

7551 **மாணி** - மறையவன்

7552 **மாயா நலத்தில்** - குறையாத மகிழ்வினால்

7553 **மால்காதலிக்கும்** - திருமால் துதிக்கும்

7554 **மால்தேற்றுற** - மயக்கம் தெளிவடைய

7555 **மாலேறு** - திருமாலாகிய காளை ஊர்தி

7556 **மாவிரதர்** - சமயத் துறவி

7557 **மாழைமணி** - உயர்ந்த ரத்தினம்

7558 **மாழைமலை** - உயர்ந்து சிறந்த கயிலை மலை

7559 **மாளாநிலையர்** - சாகா மாண்பு உடையவர்

7560 **மாறன்** - காமன்

மி

7561 **மிகுகழிகாதல்** - தணிக்க முடியாத காதல்

7562 **மிடறு** - கழுத்து

7563 **மின்னார்** - மகளிர்

மு

7564 **முட்ட இலங்கும்** - பருத்துத் தோன்றும்

7565 **முலைமதம்** - மார்பகத்தின் வேகம்

7566 **முன்னாக** - முன்பாக

7567 **முனிந்து** - சினந்து

மே

7568 **மேலைவினையை** - எதிர்காலத்தில் வரும் தீவினையை

7569 **மேவி** - பொருந்தி

மை

7570 **மைத்தமிடற்றார்** - கரிய நிறக் கழுத்துடையர்

7571 **மையல்** - காம நோய்

மோ

7572 **மோகதாகம்** - காம மயக்கம்

யா

7573 **யாழை மலைக்கும்** - யாழிசையைத் தோற்கடிக்கும்

7574 **யான் அணைதற்கு** - யான் புணருவதற்கு

வ

7575 **வசந்தம்** - தென்றல் காற்று

7576 **வசனம்** - பேச்சு

7577 **வடிக்கும்** - வடித்து எடுத்த

7578 **வடியல் அறியா** - குறைவு இல்லாத

7579 **வடுக்கண்** - மாவடுப் போன்ற கண்

7580 **வண்கை** - கொடை

7581 **வண்கையினார்** - கொடை தருபவர்

7582 **வண்டு ஒலிக்கும்** - தேனீக்கள் ஒலிக்கும்

7583 **வண்ணம்** - கொடைத் தன்மை

7584 **வதனம்** - முகம்

7585 **வதிவார்** - வாழ்வார்

7586 **வந்ததில்** - வரவில்லை

7587 **வரவு தாழ்ப்பாரோ** - வருவதற்குக் காலம் கடத்துவரோ

7588 **வரித்து** - தேர்வு செய்து

7589 **வருதி** - வருக

7590 **வருந்தேல்** - வருந்தாதே

7591 **வலகை குவித்து** - கைகளைத் தட்டிக் கொண்டு

7592 **வலம் சாதிக்கும்** - உறுதி கொண்ட

7593 **வல்லார்** - சூது ஆடும் காய்போல்

7594 **வல்லார் விசயன்** - வலிமை பெற்ற அருச்சுனன்

7595 **வழி பார்த்திருந்தேன்** - எதிர்பார்த்து இருந்தேன்

7596 **வழுத்தார்** - புகழாத எதிரிகள்

7597 **வழுத்தும்** - போற்றி வணங்கும்

7598 **வள்ளிக்கு உவந்தோன்** - வள்ளி நாயகியை விரும்பிய முருகன்

7599 **வன்னகள்** - வளையல்கள்

7600 **வன்னி இதழி** - நெருப்பை ஒத்த இதழ்களை உடைய கொன்றை மலர்

7601 **வன்னி என ஓர் வடிவு** - பிழம்பு போலும் உருவம்

வா

7602 **வாணர அமரர்** - தேவர்

7603 **வாணார்** - வானில் நிறைந்த

7604 **வாது நடம்** - பொன்னம்பல நடம்

7605 **வாமத்தில் பச்சை இடுவார்** - இடப்பாகத்தில் உமையை வைத்தவர்

7606 **வாமப் பாவை** - இடப்பாகத்து உமை

7607 **வார்** - மார்புக் கச்சு

7608 **வான மகளிர்** - தேவ மகளிர்

7609 **வான் முகத்தோய்** - ஒளி முகம் உடையவளே

7610 **வான்மதி** - சிறந்த பிறை நிலவு

7611 **வான்முகம்** - ஒளி முகம்

வி

7612 **விசையற்கு** - அருச்சுனருக்கு

7613 **விடங்கப் பெருமாள்** - ஒற்றியூரில் விளங்கும் இறைவன்

7614 **விடங்கர்** - அழகுடையவர்

7615 **விடத்தை உண்டு புரியும் கருமையினார்** - நஞ்சை அருந்தி தேவர்களைக் காத்தருளும் தயவுடையார்

7616 **விடுப்பாரோ** - தள்ளிவிடுவாரோ

7617 **விண்தங்கு** - விண்ணில் தங்கிய

7618 **விண்பார்புகழும்** - விண்ணுலகம் மண்ணுலகம் போற்றுகின்ற

7619 **விமலை இடத்தார்** - உமையை இடப்பக்கம் கொண்டவர்

7620 **விருக்கா மகிழ்வில்** - விட்டு விடாத இன்ப நினைவில்

7621 **விருத்தி** - வளர்ச்சி

7622 **வில்வம்** - வில்வ மரம்

7623 **விழைந்தனையே** - விரும்பினாய்

7624 **விள்ளற்குள்ளே** - சொல்வதற்கு முன்னே

7625 **விற்கண்ட நுதல்** - வில்லை வளைத்தது போன்ற அழகிய கண்

வீ

7626 **வீசாநின்றேன்** - சுழல நின்றிருந்தேன்

7627 **வீட்டுநெறி** - மோட்ச வழி

7628 **வீறு அடங்க** - ஆற்றல் நீங்க

வெ

7629 **வெண்காடு** - திருவெண்காடு

7630 **வெள்ளச் சடையார்** - கங்கை தரித்த முடியுடையவர்

7631 **வெளிக்கு இழுப்பார்** - சந்திக்கு இழுப்பார்

7632 **வெற்பு** - மலை

வே

7633 **வேட்களம்** - தில்லைச் சிதம்பரத்தை அடுத்த திருவேட்களம்

7634 **வேணி** - சடைமுடி

7635 **வேலை** - கடலை

7636 **வேள்** - மன்மதன்

வை

7637 **வையம்** - உலகம்

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

திருவருட்பா அகராதி

நான்காம் திருமுறை

பக்கம் எண் : 141 - 162

பாடல் எண் : 7638 - 8921

சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ சிவசிவ - சிவயசிவ

அ

7638 **அக்கோ** - அச்சோ என்னும் வியப்புக்குறிப்பு.

7639 **அகங்கரைந்து** - உயிர் உருகி.

7640 **அகங்கவிய** - பூடகமாக (அ) கடினமாக மறைபொருள் அமையப் பாடுதல்.

7641 **அகநெக்குருகி** - உயிர் கசிந்துருகி.

7642 **அகப்போது** - உள்ளமாகிய தாமரை.

7643 **அகமதிக்க** - உள்ளம் மகிழ (அ) உயிர் பூரிக்க.

7644 **அகம்பாவம்** - தற்செருக்கு.

7645 **அகமானது** - உயிர் அனுபவமானது.

7646 **அங்கமது (அங்கம்+அது)** - எரிந்த எலும்புகளை.

7647 **அங்கனையாய்** - பூம்பாவை என்னும் பெண்மணியாய்.

7648 **அச்சோ** - அடடா.

7649 **அடிஎனல்** - இறைவன் திருவடிநிலை என்று சொல்லுதல்.

7650 **அடித்தொண்டு** - திருப்பாதச் சேவை.

7651 **அடிநாளில்** - தொடக்க நாட்களில்.

7652 **அடிமை பணித்தான்** - அடிமையாக்கி அருளினான்.

7653 **அடியார் கழகம்** - அணுக்கத்தொண்டர் குழு.

7654 **அடையாளம்** - அறிகுறி.

7655 **அணிக்கதவு** - அழகான கதவு.

7656 **அணிமையிடத்து** - திருவடியின் அண்மையிடத்து.

7657 **அணுகஒண்ணா** - நெருங்க இயலாத.

7658 **அணுத்துணை** - சிறிய அணு அளவேனும்.

7659 **அணுநிலை** - சிற்றணுத் தன்மை.

7660 **அத்தகவின்** - அன்புடன் கூடி.

7661 **அத்தா** - தந்தையே.

7662 **அத்துவிதம்** - இரண்டற்ற; இருள் நிலையற்ற.

7663 **அதன் முடிவில்** - மனம் கரைந்து நிற்கும் எல்லையில்.

7664 **அதன்வாய்** - முதலையின் வாயிலிருந்து.

7665 **அதிகை** - திருவதிகை வீரட்டானம் எனும் தலம்.

7666 **அதிசயம்** - விந்தை.

7667 **அதுஅதுஆக்குவது** - அருளும் சிவமும் ஆக்குவது.

7668 **அதுகாட்டி** - மறுமை இன்பம் தெரிவித்து.

7669 **அதுவண்ணம்** - அருள் வண்ணம்.

7670 **அந்தணர்** - உயிர்நேயமுடைய உத்தமர்.

7671 **அந்தோ** - அடடா.

7672 **அப்பன்** - திருநாவுக்கரசர்.

7673 **அப்பாடு (அப்பு+ஆடு)** - வான் கங்கை (அ) ஆகாச கங்கை விளங்கும்.

7674 **அப்பூதிஅடிகள்** - நாயன்மார்களில் ஒருவர்; திருநாவுக்கரசரை தெய்வமாகக் கொண்டவர்.

7675 **அபயபதம்** - அடைக்கலம் ஆகும் திருவடிகள்

7676 **அபரநாதவெளி** - பரநாதம் தோன்றுவதற்கான மேல்வெளி.

7677 **அபரவிந்துவெளி** - சுத்த மாயாவெளி.

7678 **அமணஇருள்** - ஆன்மா தளையினின்று விடுபடுதலே கடவுள்பேறு என்னும் அறியாமை.

7679 **அம்பர்** - வானுலகவாசிகள்.

7680 **அம்பரை** - ஞானானந்தம் உடையவள்.

7681 **அம்மான்** - பெம்மான்; பெருந்தலைவன்.

7682 **அம்மை** - அவ்வுலகம்.

7683 **அம்மையின்** - சென்ற முன் பிறவியில்.

7684 **அமுதம்** - ஞானப்பால்.

7685 **அயல்கூடுவது** - அகநிலையில் ஒன்றுபடாது புறத்தில் ஒன்றுபடுவது.

7686 **அயன்** - நான்முகன்.

7687 **அரவு** - நாகப்பாம்பு.

7688 **அரற்றி** - புலம்பி.

7689 **அருங்கரணம்** - மனம் முதலிய கருங்கல் ஒத்த கருவிகள்.

7690 **அருட்சிவம்** - சுத்த சிவம்.

7691 **அருட்டாய் (அருள்+தாய்)** - அருள் உரிமைச் சக்தி.

7692 **அருட்பருவம்** - அருள் அனுபவம் பெறும் நிலை.

7693 **அருட்பான்மை** - திருவருள் தன்மை.

7694 **அரும்பெருஞ்சீர்** - அருட்பெருந்தன்மை.

7695 **அரும்பொருள்** - மெய்ப்பொருள்.

7696 **அருவமும் அவ்வளவாய்** - விந்து; நாதம்; பரவிந்து; பரநாதம் என்னும் நிலைகளாய்.

7697 **அருவினைகள்** - தீவினைகள்.

7698 **அருள் அனுபவம்** - மெய்ஞ்ஞான வாழ்வில் உயிர் அனுபவத்திற்கு அடுத்து கிடைக்கும் அருட்பேறு.

7699 **அருள் ஆற்றல்** - ஆன்மநேயம் கொண்டது.

7700 **அருள் தலம்** - கருணை வழங்கும் சிவத்தலம்.

7701 **அருள் மணத்தில்** - திருப்பெருமணநல்லூரில் நடந்த சம்பந்தர் திருமணத்தில்.

7702 **அருள்தலைமை** - பேரருள் தன்மை.

7703 **அருள்நடம்** - ஆனந்த நடனத்துக்கு மேற்பட்டது (எல்லா உயிரையும் கடவுள் ஆக்கப் புரியும் பேரின்பத் திருநடம்).

7704 **அருள்நெறியில்** - கருணை வழியில்.

7705 **அருள்மனை** - கருணை வாழ்வு (அ) அருளாகிய இல்லம்.

7706 **அருளிச்செய்யும்** - கருணை புரியும்.

7707 **அருளியல்** - அருள் உலக இயல்பு.

7708 **அருளுருவாய்** - பெருந்தயவின் வடிவனாய்.

7709 **அலகில்அருள்** - அளவிட முடியாத பேரருள்.

7710 **அலகோடி (அலகு+ஓடி)** - பலவாகி விரிந்த மன நினைப்புடன்.

7711 **அலர்ந்த** - மலர்ந்த.

7712 **அலர்ந்த திருநீறு** - விளைந்த திருநீறு.

7713 **அலை கடந்த கடல்** - அலைகள் இல்லாத ஆழ்கடல்; மாயை அலைவற்ற அருள்நிலை.

7714 **அலைநஞ்சு** - கடல் நஞ்சு.

7715 **அவநிலை** - இழிந்த நிலை.

7716 **அவ்வண்ணம்** - பெருஞ்ஜோதி வண்ணம்.

7717 **அவிழ்ந்து** - தத்துவக்கட்டு நெகிழ்ந்து.

7718 **அள்ளிரவு** - இரவைக் குறிக்கும் 'அல்' எனும் சொல் எதுகை நோக்கி 'அள்' எனத் திரிந்தது.

7719 **அளித்தருளி** - படைத்தருளி.

7720 **அளித்தாய்** - அருள்செய்தாய்.

7721 **அளிவண்ணம்** - இரங்கும்படி.

7722 **அறங்கரைந்த** - சத்திய தருமம் புகட்டுகின்ற.

7723 **அறங்கனிந்த** - தருமம் பழுத்த.

7724 **அற்பனை** - கீழானவனை.

7725 **அற்றவர்** - பற்று அற்றவர்.

7726 **அறிதல்** - கடினம் அன்று.

7727 **அறிதுயில்** - நனவில் சுழுத்தி நிகழ்த்துபவர்.

7728 **அறிவுகுறிக்கொள்ளாது** - அறிவினைக் குறித்து மதிப்பீடு செய்யாமல்.

7729 **அறுத்தவர்** - வென்று ஒளிர்பவர்.

7730 **அனந்தமுறை** - கணக்கற்ற தடவை.

7731 **அன்பு ஆட்டுக்கு** - நெகிழ்ந்து உருகுவதற்கு.

7732 **அன்புடையார்** - உயிர்நேய உணர்வுடையவர்.

7733 **அன்புருவம்** - அழுத கண்ணீர் மாறாமை; ஆகாரத்தில் இச்சை செல்லா நிலைமை.

7734 **அன்றளித்தாம்** - முன்பு கொடுத்தோம்.

7735 **அன்னோ** - அன்னையே.

7736 **அனுக்கிரகம்** - அருள்.

7737 **அனுபவத்துக்கு** - உயிரனுபவம்; அருளனுபவம் சிவானுபவத்துக்கு.

7738 **அனுபவம்** - பேரின்பப் பேறு; மணிவாசகப் பெருந்தகை பெற்றிட்ட திருவடியின்பம்.

ஆ

7739 **ஆகமநெறி** - நான் அது எனும் அனுபவம் தரும்நெறி; பதி பசு பாசம் விளக்கும் சித்தாந்த நூல் வழி.

7740 **ஆகமம்** - சிவாகமநூல் (அ) சித்தாந்தம்; நீ அது ஆனாய் எனும் சித்தாந்தக் காரிய நூல்.

7741 **ஆங்காரம்** - அகங்காரம்.

7742 **ஆசு** - குற்றம்; குறை.

7743 **ஆட்கொள்ளல்** - கடவுளால் ஆட்கொள்ளப்படுதல்

7744 **ஆடுதல்** - தடுமாறுதல்.

7745 **ஆண்டருள்** - ஆட்கொண்டுஅருள்.

7746 **ஆத்தாள்** - தாய்.

7747 **ஆதி** - முதலானவன்.

7748 **ஆமசத்தன் (ஆம்+அசத்தன்)** - மெய்யறிவு ஆற்றல் இல்லாதவன்.

7749 **ஆமாறு** - இருள் விளங்கும் படியான.

7750 **ஆரணம்** - மறை அல்லது வேதங்கள்; அது நீ ஆனாய் எனும் வேத காரண நிலை.

7751 **ஆரியர்** - வேத விற்பனர்.

7752 **ஆரூரன்** - சுந்தரருக்கு வழங்கும் பிறிதொரு பெயர்.

7753 **ஆல(ம்) நிலை** - விஷம் தங்கிய.

7754 **ஆலநிழல்** - ஆலமரத்தின் நிழலில்.

7755 **ஆவா (ஆஆ)** - ஆகா; வியப்பு.

7756 **ஆழ நினைத்திடில்** - ஊன்றி எண்ணுதல்.

7757 **ஆழியில்** - தத்துவ கலப்பின்றி இயல்பாய் இருந்த நிலையில்.

7758 **ஆள்** - ஆட்கொள்.

7759 **ஆளா** - அடிமையாகி.

7760 **ஆளுடைய சற்குரு** - என்னை ஆண்டிட்ட ஞானதேசிகன்.

7761 **ஆளுடையாய்** - உயிர்களைக் காத்து ஆளும் கடவுளே.

7762 **ஆற்றில்** - மணிமுத்தாநதி.

7763 **ஆறாறு (தத்துவம்)** - முப்பத்தாறு தத்துவங்கள்.

7764 **ஆறும்வகை** - தீரும்வழி.

7765 **ஆனந்த சிற்சபை** - சிவானந்தம் ஈயும் சிற்றம்பலம்.

7766 **ஆனந்த வடிவம்** - இன்புருவம்.

7767 **ஆனந்தவல்லி** - சிவகாமவல்லி மற்றும் ஞானானந்த வல்லி.

7768 **ஆன்மசுத்தி** - சுத்த ஆன்ம நிலைப்பாடு.

7769 **ஆன்றஎனை** - மேம்பட்ட கடவுள் தன்னை.

இ

7770 **இகபரம்** - இம்மை மறுமை இன்பம்.

7771 **இங்ஙனம்** - இப்படியாக.

7772 **இச்சைபுரிதல்** - மனம் விரும்பி நடத்தல்.

7773 **இசைத்தருளல்** - கூறியருளல்.

7774 **இசைத்தல்** - தெரிவித்தல்.

7775 **இசைந்தது** - பொருந்தியது.

7776 **இசைப்பயன்** - பண்ணின் இன்பப் பயன்.

7777 **இடங்கர்** - முதலை.

7778 **இடுங்கடுக** - ஆலகாலவிடம் அருந்தியவனே.

7779 **இடும்பாட்டுக் கரணம்** - துன்ப அலைவில் அழுத்தும் மனநிலைகள்.

7780 **இடை** - ஒரு பாதி உடலில்; இடுப்பில்; இடையில்

7781 **இடைப்படுநாள்** - இடையில் சில நாட்களிலும்

7782 **இடையின்** - நிகழ்வின் நடுவில்.

7783 **இணைந்தவிழி** - இருவிழிகள்.

7784 **இத் தோடம்** - இவ்வுலக பாவம்.

7785 **இத்துணை** - இத்தகையதான.

7786 **இதயம்** - ஆன்ம அறிவாகிய உள்ளத்தில்.

7787 **இதழி** - கொன்றை மாலை.

7788 **இதுகாட்டி** - இம்மை இன்பத் தகைமை தெரிவித்து.

7789 **இதுதனை** - அருட்பெரும்பொருளை.

7790 **இந்தியம் (இந்திரியம்)** - ஐம்பொறிகள்.

7791 **இந்துஓங்கும்** - பிறைநிலவு ஓங்கும்.

7792 **இந்துநிலை** - மதிமண்டல நிலை.

7793 **இம்பர்** - இவ்வுலகத்தவர்.

7794 **இம்மை** - இவ்வுலகம்.

7795 **இயங்காத** - பகல்போல் தெரிந்து நடக்க இயலாத.

7796 **இயம்புதல்** - மேம்படுத்திக் கூறுதல்.

7797 **இயம்புதி** - கூறிஅருளுக.

7798 **இயல்புறா** - சொல்லி முடியாத.

7799 **இயற்கை** - பற்றின்மையாகிய இயல்பு.

7800 **இயற்றிய** - செலுத்திய.

7801 **இரண்டு** - ஏகனாகிய கடவுளும்; அருட்சக்தியும்.

7802 **இரவுநிறத்தவர்** - அகமும் புறமும் அறியாமை நிறைந்தவர்.

7803 **இரிந்திட** - விலகிட.

7804 **இருக்கும்படி** - இருக்கும் தன்மை.

7805 **இருத்தி** - அமர்த்தி; விளங்கச் செய்து.

7806 **இருந்தவண்ணம்** - இருந்த தன்மை.

7807 **இருந்தவாறு** - உள்ளது உள்ளபடி.

7808 **இருநிதியத் திருமகளிர்** - திருமகளும் கலைமகளும்.

7809 **இருமை** - இம்மை மறுமை நிலை.

7810 **இருவர்பெரியர்** - பதஞ்சலியும் வியாக்கிரபாதரும்.

7811 **இருவினைஒப்பு** - தீவினையும் நல்வினையும் ஒத்தநிலை.

7812 **இருவென்ற தனிஅகவல்** - மணிவாசகர் அருளிய திருவண்டப் பகுதியில் ஈற்றடிகள்.(தன்னையும் இறைவன்தன் பக்கத்தில் இருக்க அருளியது).

7813 **இருள்வழங்கும்** - அறியாமையில் செலுத்தும்.

7814 **இருளில்** - அறியாமை என்னும் இருட்டில்.

7815 **இருளுடைய சிலை** - கனமுடைய கருங்கல்.

7816 **இருளுதிக்கும்** - இருள்சூழும்.

7817 **இலக்கியம்** - பாடலாலும் உரைநடையாலும் எழுதப்பெற்ற நூல்.

7818 **இலகல்** - இலங்கும்; வாழ்ந்திடும்.

7819 **இலகிய** - விளங்கிய.

7820 **இலகுதல்** - திகழ்தல்.

7821 **இலைக்குளம்** - அவினாசியில் ஆற்றில் உள்ள ஒரு மடு.

7822 **இவர்ந்து** - ஊர்ந்து.

7823 **இவ்வகை ஒன்றே** - இந்தவழி ஒன்று மட்டுமே.

7824 **இவ்வண்ணம்** - இவ்வாறு.

7825 **இழிவினுக்கு** - பாவம் அனுபவிக்கும் கீழ்மை உணர்வு.

7826 **இழைத்தல்** - பொருந்தி நடத்தல் (அ) பதிய நடத்தல்.

7827 **இளநகை** - புன்சிரிப்பு.

7828 **இளி** - நெற்றியிலிருந்து பிறக்கும் இசை.

7829 **இற்பு** - இயல்பு; கடினம் (யகரம் இடைக் குறையாயிற்று. லகரம் எதுகை நோக்கி மறைந்து 'ல்' 'ற்' ஆயிற்று.)

7830 **இற்றிதுஎனல்** - இது இத்தகையது என்றல்.

7831 **இற்றென** - இருக்கும் தன்மை; இத்தகையது என்று.

7832 **இறைவி** - சிவகாமவல்லி.

7833 **இன்பக் குதலைமொழி** - இன்பம் தரும் மழலைச் சொல்.

7834 **இன்பத் தனிநடம்** - பேரின்பம் வழங்கும் ஒப்பற்ற சமரச நடம்.

7835 **இன்பு ஆட்டு** - ஆனந்தத் திருநடனம்.

7836 **இன்புருவம்** - திருவடி இன்ப வடிவம்.

7837 **இன்புறுவது** - பேரின்பம் தருவது.

7838 **இன்றலைவின்** - இன்று நடந்த அலைவினால்.

7839 **இன்றார** - இன்று கால்ஆர.

7840 **இன்றை** - இத்தினத்தில்.

7841 **இன்ன** - இப்படிப்பட்ட தென்று.

7842 **இன்னல்** - பிறவிஅல்லல்.

7843 **இன்னேயும் இருப்ப** - இன்னமும் எதிர்பார்த்து இருக்க.

7844 **இனித்த நடம்** - ஆனந்தத் திருநடம்.

ஈ

7845 **ஈங்கு** - இவ்விடத்தில்.

7846 **ஈங்குஆர** - இங்கே கால்ஆர.

7847 **ஈது** - இத்தகையது.

7848 **ஈன்றவள்** - தாய்.

உ

7849 **உச்ச மலரடிகள்** - வேதாந்தத்திற்கு அந்தமான மேலாம் திருவடிகள்.

7850 **உச்சி (வேதம்)** - வேதாந்தம்.

7851 **உச்சிமேவிய** - முடிவில் விளங்கிய.

7852 **உட்புறம்** - அகப்புறம்.

7853 **உடையவள்** - உமையவள்.

7854 **உடையவனே** - பரசிவனே.

7855 **உடையாளையும்** - உமையவளையும்.

7856 **உடையான்** - ஆருயிர்களை உடையவன்.

7857 **உண(ல்)** - உண்ணல் .

7858 **உண்மைப்பதி** - மெய்மைத் தெய்வம்.

7859 **உணர்ச்சியுற** - உணரும் படியாய்.

7860 **உணர்ந்து** - உயிரோடு இறைவன் உறைகின்றதை மகிழ்ந்து.

7861 **உணர்வரிதாம்** - அறிவரிதாம்.

7862 **உதித்து** - தோன்றி.

7863 **உந்துஇரவில்** - நள்ளிரவில்.

7864 **உபநிடதம்** - வேதசாரநூல்; வேதத்தின் ஞானகாண்ட நூல்; ஜீவசாக்கிரம் முதலாகச் சிவதுரிய நிலை ஈறாக விளக்கும் நூல்; மறைகளுக்கும் மேம்பட்ட நூல்.

7865 **உபயநிலை** - இரு நிலைகள் அல்லது இரண்டு நிலைகள்.

7866 **உபயவடிவு** - இடம் வலமாகிய திருவடிகள்.

7867 **உம்பர்** - வான் உலகத்தவர்.

7868 **உம்மை** - முற்பிறப்பு.

7869 **உய்க** - மேலோங்கி விளங்குக.

7870 **உய்ய** - மேம்பாடு அடைய.

7871 **உய்யும் வகை** - மேம்படு நிலை.

7872 **உயர்தனி கவுணிய மணியே** - ஒப்பற்ற மேலான கவுணியர் எனும் குலவிளக்கே.

7873 **உய்வகை** - மேம்படும் வழி.

7874 **உயிர் உவட்டாமல்** - ஆன்மப்பண்பு தெவிட்டாமல்.

7875 **உயிர்க்கின்பந்தரு நடனம்** - ஆனந்த நடனம்.

7876 **உயிர்க்குயிரும்** - உயிர்க்குயிராகிய இறை உணர்வும்.

7877 **உயிர்தழைப்ப** - உயிர்வரும்படி அருளிச் செய்து.

7878 **உயிரனுபவம்** - மெய்ஞ்ஞான வாழ்வில் முதலில் கிடைக்கும் அருட்பேறு.

7879 **உரம்பெற** - வீடுபெற.

7880 **உரயோகர்** - அருள் வல்லபம் பெற்ற சிவயோகியர்.

7881 **உரவிடை (உரவு+இடை)** - அருள் ஆற்றல்.

7882 **உரவு** - மலர்ந்த நோக்குடைய ஆளுமை.

7883 **உரவுஇடை (உறவிடை)** - எதுகை நோக்கி உறவு என்னும் சொல் இடையின 'ர'கரமானது.

7884 **உரி** - தோல்.

7885 **உரிமை** - ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் செயற்பாடுகள்.

7886 **உருஅண்டம்** - பல உலகங்களோடு கூடிய பிரம்ம அண்டம்.

7887 **உருஅருஒன்று** - சதாசிவம் என்னும் ஒரு அருவநிலை.

7888 **உருகல்** - கசிந்துருகல்.

7889 **உருகி** - ஆன்ம நெகிழ்ச்சியுற்று.

7890 **உருத்திரை** - மலைமகள்.

7891 **உருவம் ஒரு நான்கு** - நான்முகன்; திருமால்; உருத்திரன்; மகேசுவரன் என்னும் நான்கு தெய்வ நிலைகள்.

7892 **உலக நடை** - உலக இயற்கை.

7893 **உலகவிடயம்** - மண்; பெண்; பொன் ஆசை

7894 **உலகியல்** - மண்ணுலக இயல்பு.

7895 **உலகு** - அருள் உலகினர் (அருளாளர்)

7896 **உலகோடி (உலகு+ஓடி)** - மூவுலகங்களிலும் தேடி.

7897 **உலர்ந்த மரம்** - பட்டமரம்.

7898 **உவட்டாத** - தெவிட்டாத; கசக்காத.

7899 **உவந்திலர்** - இன்புறுதல் இலர்.

7900 **உவந்து** - உள்ளம் மகிழ்ந்து.

7901 **உவப்புறல்** - மகிழ்ந்திடல்.

7902 **உழல்கின்ற** - துன்புறுகின்ற.

7903 **உழல்வேன்** - துன்பப்படுவேன்.

7904 **உழலுதல்** - தடுமாறுகின்ற.

7905 **உழவாரப்படை** - கல் முள் புல் நீக்கும் கருவி.

7906 **உழை** - விடியற்காலையில் பாடும் பாட்டு.

7907 **உள்ஆய்மையுறும்** - தன்னை உணர்ந்து பார்க்கும் மெய்ஞ்ஞானப் பொருத்த நிலை.

7908 **உள்ளமுதம்** - உள்ளத்தில் திகழும் அமுதம்.

7909 **உள்ளிரவி** - உள்ளத்தில் தோன்றும் கதிரவனாய்.

7910 **உள்ளுருகுந் தருணம்** - கருத்து மலரும் இடம்.

7911 **உள்ளுற** - அகத்தே பொருந்த.

7912 **உளத்தில் அடைத்தே** - உள்ளத்தில் ஒரு பொருளாகக் கருதி.

7913 **உளம் கொளுதல்** - எண்ணிப் பார்த்தல்.

7914 **உளம் படிக்கும்** - உள்ளமும் உணர்ந்து பயிலும்.

7915 **உளவறியேன்** - இரகசியம்; உபாயம் அறிகிலேன்.

7916 **உளவு** - சூது (சூழ்ச்சி); காருண்ய நிலை.

7917 **உற்ற வண்ணம்** - பொருந்திய தன்மை.

7918 **உற்றிடல்** - பொருந்திடல்.

7919 **உற்றிடை** - நடுவில் பொருந்தி.

7920 **உற்றிலா** - பொருந்திடாத.

7921 **உற்று** - பொருந்தி.

7922 **உற அளித்தனை** - பொருந்தும்படி செய்தாய்.

7923 **உறஅழைத்து** - வரும்படி பாடல் செய்து.

7924 **உறப்படுவோர்** - அடிமை; மகமை; தோழமை; சன்மார்க்க சீலமுடைமை என்னும் நான்கு வகை மெய்யன்பர்கள்.

7925 **உறா** - சமம்ஆகாது.

7926 **உறுகணக்கு** - பொருந்தும் மதிப்பீட்டு அளவு.

7927 **உறுகருணை** - தனிப்பெருங்கருணை.

7928 **உறுத்த** - வருத்தமுறச் செய்ய.

7929 **உறுதுணை** - பெருந்துணை.

7930 **உறுபெருங்கருணை** - தனிப்பெருங் கருணை.

7931 **உறும்** - பொருந்தும்.

7932 **உறுவித்தல்** - அடைவித்தல்.

7933 **உறைக** - வாழ்ந்திடுக.

7934 **உறைதி** - வாழ்ந்தருள்க.

7935 **உறைவது** - வாழ்ந்து அருள்வது.

7936 **உனக்குள்** - உனது ஆன்ம எல்லைக்குள்.

7937 **உன்மனி** - முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட ஒளிநிலை.(உடலிலே உள்ள ஒரு யோகஸ்தானம்).

7938 **உன்னி** - எண்ணி.

7939 **உன்னி விழித்திருப்ப** - நினைந்து நினைவுடன் இருக்க.

7940 **உன்னுதல்** - எண்ணுதல்.

ஊ

7941 **ஊடி** - மாறுபட்டு நீண்ட.

7942 **ஊர்ஊரும்** - ஊர்கள் யாவும்.

7943 **ஊரணவி** - வாழும் ஊரினை அடைந்து.

7944 **ஊர்ப்பாட்டுக்கு** - மற்றையவர் பாடல்களுக்கு.

7945 **ஊழில்** - யுக அளவினை விட.

7946 **ஊற்றுவித்தல்** - உருவாக்கித் தருதல்.

7947 **ஊறு புகன்றேன்** - குற்றம் கூறினேன்.

7948 **ஊன்** - குறைபாடு; பொறிபுலன்கள்.

7949 **ஊனந்தங்கிய** - இழிவுடைய.

7950 **ஊன்படிக்கும்** - உடல் உணர்வு ஒன்றுபடும்.

7951 **ஊனமிலாது** - இழிவில்லாது.

எ

7952 **எங்ஙனம்** - எவ்வாறு.

7953 **எச்சோடும்** - எத்தகை விதிவிலக்கும்.

7954 **எஞ்சல்** - குறைவிலாத

7955 **எஞ்சாத** - குறையாத.

7956 **எடுப்பது** - நீக்குவது.

7957 **எண் சுமந்த சேவகன்** - பலவும் எண்ணிப் பாராட்டப்பெறும் சேவகன்.

7958 **எண்ஓங்கு** - கீழான எண்ணங்கள் ஓங்கும்.

7959 **எண்ணியவா** - நினைத்தபடி.

7960 **எண்பகர்** - எண்ணுவதற்கு மிகுதியான.

7961 **எதிர்வணங்கி** - முன்பாக வணங்கி.

7962 **எந்துரை** - எமது தலைவன்.

7963 **எந்தோ** - எத்தகைய பாவம்.

7964 **எப்பாலும்** - எல்லா வகையான குற்றத்திலும்.

7965 **எப்பாவி** - கொடிய பாவம் புரிந்தவன்.

7966 **எம்மாயம்** - மும்மலமும் நிறைந்த நெஞ்சம்.

7967 **எம்மான்** - எமது தலைவன்.

7968 **எம்மை** - இம்மை; மறுமை.

7969 **எய்யா** - (எறிய) உய்ந்திட இயலாத.

7970 **எல்போது** - பகற் பொழுது.

7971 **எலாம் எய்தும்** - யாவும் கைகூடும்.

7972 **எவ்வகை நிலையும்** - எத்தகைய ஆற்றலும்.

7973 **எவ்வகையும்** - எப்படியும்.

7974 **எவ்வண்ணம்** - எத்தகைய.

7975 **எள்ளல் அறல்** - இழிவு நீங்கல்.

7976 **எள்ளிரவு** - பயனற்ற இருள்.

7977 **எற்றதும்பு (எல்+ததும்பு)** - ஒளி உமிழ்கின்ற.

7978 **எற்று** - எத்தையது.

7979 **எற்றே (எற்றோ)** - எத்தகையதோ.

7980 **என் இசைப்பேன்** - என்னென்று வியந்திடுவேன்.

7981 **என் தரம்பெற** - என் தகுதிக்குப் பொருந்தும்படி.

7982 **என் பாட்டுக்கு இசைப்பினும்** - என் மனம்போனபடி பாடினாலும்.

7983 **என்(ல்)னிறைந்த** - ஆன்ம விளக்கம் தரும் ஒரு பொருள்.

7984 **என்பு** - எலும்பு.

7985 **என்புகல்வேன்** - எவ்வாறு பாடிப் போற்றுவேன்; என் சொல்வேன்.

7986 **என்புடை** - என் பக்கத்தில்.

7987 **என்புருவு** - எலும்பாகிப் போகின்றவரை.

7988 **என்பொருட்டால்** - எனக்காக.

7989 **என்பொருட்டு** - எனக்காக.

7990 **என்னில்** - என்னால்.

7991 **என்னுருவம்** - ஆன்மானுபவம்.

7992 **என்னே (என்னோ)** - எத்தகையதோ.

7993 **என்னை** - என் உயிர் உணர்வை; எதற்கும்.

7994 **என்னை என்னிடத்தே** - ஆன்மாவாகிய எனது உயிரை எனக்கே உரிமையாக.

7995 **என்னையும்** - இராமலிங்கராகிய தன்னையும்.

ஏ

7996 **ஏகவெளி** - பராபர யோகவெளிக்கு அப்பால் இருக்கும் வெளி.

7997 **ஏகாந்தம்** - தனித்து இருத்தல்.

7998 **ஏணாதன்** - இறுமாப்பு உடையவன்.

7999 **ஏத்த** - வாழ்த்த.

8000 **ஏதம்** - துன்பம்.

8001 **ஏதம் எளியேன்** - துன்பமுடைய ஏழையேன்.

8002 **ஏமசத்தர்** - ஏமசித்தி விளைவிப்போர்.

8003 **ஏமம்** - கற்பின் பாதுகாவல்; வலிமை.

8004 **ஏமாக்க** - ஏமாற்றம் அடைய.

8005 **ஏய்ந்திட** - பொருந்திட.

8006 **ஏர்** - அழகு.

8007 **ஏரணவி** - (அருள்) அழகு பொருந்த.

8008 **ஏரார்** - அருள் அழகுடைய.

8009 **ஏழிசையாய்** - குரல்; துத்தம்; கைக்கிளை; உழை; இளி; விளரி; தாரம் என்னும் தமிழிசை வகைகள் ஏழு.

8010 **ஏள் (ஏல்)** - வலிமை; (லகரம் எதுகை நோக்கி ளகரமாகத் திரிந்தது) குறைகள் கூறத் தகுந்த வெப்பம் மிகுந்த மலை.

8011 **ஏற்றவும்** - மேல் அனுபவம் பெறவும்.

8012 **ஏற்றில்** - இடப வாகனம்.

8013 **ஏறி** - கடந்து மேலோங்கி (வென்று).

8014 **ஏன்றருளும்** - பொருந்தி அருளுகின்ற.

ஐ

8015 **ஐந்தொழிலும்** - படைத்தல் முதல் ஐவகை ஆற்றலும்.

8016 **ஐயடிகள் காடவர்கோன்** - அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர்.

8017 **ஐயம்** - சந்தேகம்.

8018 **ஐயறிவு** - மேன்மை பொருந்திய அறிவு.

8019 **ஐவகை இந்திரியம்** - மெய், வாய், கண், நாசி, செவி என்னும் ஐவகைப் பொறிகள்.

8020 **ஐவகைய கடவுளர்** - ஐந்தொழில் கடவுளர்கள்.

8021 **ஐவகையாய்** - அருள் ஐந்தொழிலில் நடம்புரிகின்றவராய்.

8022 **ஐவர்களுக்கு** - பஞ்சகிருத்திய தலைவர்களுக்கு (கர்த்தர்களுக்கு).

ஒ

8023 **ஒக்க** - தனக்கு நிகராக.

8024 **ஒக்கக் கலந்தது** - ஒன்றாகியது (அ) சமமாகக் கலந்தது.

8025 **ஒடுங்கும்** - மறையும்.

8026 **ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய்** - அப்பர் அருளிய பூம்புகலூர் (திருப்புகலூர்) தேவாரப் பாடல் ஒன்றின் அடி.

8027 **ஒத்து** - பொருந்தி.

8028 **ஒதியனையேன்** - ஒதியமரம் போன்றவன்.

8029 **ஒப்பில்** - இணையற்ற.

8030 **ஒப்பில்லாத** - இணையில்லாத.

8031 **ஒப்பிலை** - இணையில்லாதது.(ஒப்பு இல்லை).

8032 **ஒரு பகற்பொழுது** - ஒரு காலைப் பொழுது.

8033 **ஒரு மாமேல்** - ஒரு (வேத) குதிரை மீது.

8034 **ஒரு மொழியே** - ஒரே ஒரு வார்த்தையே.

8035 **ஒருகால்** - ஒரு முறையேனும்.

8036 **ஒருகால் படல்** - ஒரு தடவை தத்துவம் யாவும் நீங்கின அளவில்

8037 **ஒருங்குஅறிய** - சேர்ந்து அறியும்படி.

8038 **ஒருங்கேன்** - உள்ளம் ஒன்றுபட பழகாதவன்.

8039 **ஒருதனி** - தத்துவ சம்பந்தமில்லாத நிலை.

8040 **ஒருபால்** - இடப்பாகம்.

8041 **ஒருபுறம்** - ஒருபக்கம்; இடப்பாகம்.

8042 **ஒருமை** - பேரின்ப நிலை.

8043 **ஒருவி** - விலக்கி.

8044 **ஒல்லும் வகை** - இயன்ற அளவு.

8045 **ஒளிநடம்** - திருசிற்றம்பல நடம்.

8046 **ஒளிவண்ணம்** - அருள் ஒளித்தன்மை.

8047 **ஒன்று** - ஏகனாகிய கடவுள் ஒன்று.

8048 **ஒன்று திருமேனி (சித்தி)** - பொருந்தி விளங்கும் ஒளியுடல்.

8049 **ஒன்றுவித்து** - இரண்டறக் கலந்து.

ஓ

8050 **ஓகோ** - ஐயோ என்று.

8051 **ஓத** - பாடிப்பணிய.

8052 **ஓதமுடியாது** - சொல்லி முடியாது.

8053 **ஓதானத்தவர்** - வேள்வி புரிகின்றவர்.

8054 **ஓதி** - மெய்ஞ்ஞான வடிவன்; கடவுள் வேதம் விளம்பியவன்.

8055 **ஓர்கிலேன்** - எண்ணிலேன்.

8056 **ஓர்புதியன்** - ஒரு புதியவன்.

8057 **ஓவாமல்** - விடாமல்.

க

8058 **கங்குல்** - இரவு.

8059 **கடிது** - விரைந்து.

8060 **கடுமாலை** - கருமை நிறைந்த ஆலகால விடம்.

8061 **கடைக்கண் மலர்ந்தருளல்** - அருள்நோக்கம் அளித்தருளல்.

8062 **கடைக்கணித்து** - அருள்நோக்கு அளித்து.

8063 **கடைப்புறுத்தும்** - வாயிற்படியின் வெளியிலும்.

8064 **கடையனையுங் குறிக்கொண்டு** - அடையாளங் கண்டு ஆட்கொண்டு.

8065 **கண்ணில்** - அருள் நோக்கில்.

8066 **கண்ணுதல்** - நெற்றிக்கண் உடைய சிவன்.நெற்றிக்கண் உடைய இறைவனே.

8067 **கதலி** - கற்பூரம் மணக்கும் வாழை.

8068 **கதி** - மோட்சப் பேறு.

8069 **கம்பம்** - தூண்.

8070 **கம்மடியார்** - வீட்டு இன்பத்தை நாடும் அடியார்.

8071 **கயங்காத** - என்றும் வாடாத.

8072 **கரடு** - முரட்டு மரம்.

8073 **கரணங்கள்** - உட்கருவிகள்.(மனம்; சித்தம்; புத்தி; அகங்காரம்).

8074 **கரணமு(ற்)று** - எண்ணி மகிழும்படியாக.

8075 **கரணவெளி** - மனம் முதலிய அந்தக்கரணங்கள் இயங்கும் உயிர்வெளியில் கீழ்ப்படி.

8076 **கரவிடைநெஞ்சம்** - அறியாமை சூழுமோ என எண்ணுகின்ற நெஞ்சம்.

8077 **கரிஇரவில்** - அடர்ந்த இருள் இரவில்.

8078 **கரிசு** - துன்பம்; குறைபாடு; பாவம்; பழிச்சொல்; பழிச்செயல்.

8079 **கருதக் கருதுவாயே** - சிந்தித்து வணங்க அருள்புரிவாயாக.

8080 **கருத்து** - உள்ளத்தின் மேம்பட்ட உயிர் உணர்வு நிலை.

9176 **உருத்திரு** - சினந்திடு

9177 **உருத்தீர்த்து** - உடலிலிருந்து பிரிந்து

9178 **உருவில்லா** - அருவமாகிய

9179 **உரையில்** - பேசிடாமை

9180 **உலக நடை** - உலகப் போக்கு

9181 **உலகம் அடங்கல்** - உலகம் முழுவதும்

9182 **உலகமயல்** - உலகியல் மயக்கம்

9183 **உலகவாதை** - உலக வேதனை

9184 **உலகியற்கை** - உலக இயல்பு

9185 **உலை** - கொல்லன் கூடம்

9186 **உவர்ப்பும்** - வெறுப்பும்

9187 **உழலுதல்** - துன்புறுதல்

9188 **உழலுவன்** - துன்புறுவான்

9189 **உழலுற்ற** - வீண் உழைப்புடைய

9190 **உள்இகலும்** - உள்ளே வலிந்து விளங்கும்

9191 **உள்என்றும்** - அகநிலை என்னும் ஆன்மானுபவம்

9192 **உளவு** - அடையும் எளிய நெறி

9193 **உள்ளகத்தில்** - உள்ளத்தில் உள்ள

9194 **உள்ளத்தலம்** - உள்ளமாகிய நல்லிடம்

9195 **உற்பவம்** - முன்பு எடுத்த பிறவிகள்

9196 **உற்றதே** - பொருந்தியதே

9197 **உறுகண்** - துன்பம்

9198 **உறுதொழில்** - பெரிய அலுவல்

9199 **உறையுள்** - வசிக்கும் இடம்

9200 **உறைவானே** - வாழ்வானே

9201 **உன்னிலேன்** - சிந்திக்க இல்லேன்

9202 **உன்னுதல்** - எண்ணுதல்

9203 **உன்னும்** - கருதிப் போற்றும்

ஊ

9024 **ஊடு** - இடையில்

9205 **ஊத்தை** - வாய் நாற்றம்

9206 **ஊர்வன** - ஊர்ந்து செல்லும் உயிர்கள்

9207 **ஊழ்** - தீவினை; நல்வினை

9208 **ஊழ்வாழ்வும்** - உலவும் அரச போகமும்

9209 **ஊறிலா** - இடையூறு இல்லாத

9210 **ஊன்கடையில்** - இறைச்சிக் கடையில்

9211 **ஊனமில்** - அங்கம் குறையாத

9212 **ஊன்வார்க்கும்** - தசை நிறைந்து விளங்கும்

9213 **ஊனே** - உடலே

எ

9214 **எகினப்புள்ளே** - அன்னப்பறவையே

9215 **எஞ்சலிலா** - குறைபடுதல் இல்லாத

9216 **எஞ்சுதல்** - தளர்ந்து வருந்துதல்

9217 **எஞ்சேல்** - வீணாகக் கழித்தல் இல்லா

9218 **எட்டி** - தீராக் கசப்புடைய எட்டிப்பழம்

9219 **எட்டொணா** - நெருங்குவதற்கு இயலாத

9220 **எடுத்து ஏற்றல்** - எடுத்துக் கொள்ளுதல்

9221 **எண்அளாவிய** - எண்ணிக்கை மிகுந்த

9222 **எண்குணம்** - தன் வயத்தனாகுதல் முதலிய எட்டுச் சிவ குணங்கள் : 1. தன்வயத்தனாதல், 2. தூய உடம்பினனாதல், 3. இயற்கை உணர்வினனாதல், 6. முற்றும் உணர்தல், 5. இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், 6. பேரருளுடைமை, 7. முடிவிலாற்றலுடைமை, 8. வரம்பிலின்பமுடைமை

9223 **எண்ணப்படும்** - புகழப்படும்

9224 **எண்ணரிய** - நினைப்பதற்கு இயலாத

9225 **எண்ணார்** - பகைவர்; அசுரர்

9226 **எண்ணாவோ** - எண்ணிடுவாய்

9227 **எண்ணுறும்** - போற்றப்படும்

9228 **எண்ணுறேல்** - நினையேல்; நினையாது இருத்தல்

9229 **எணிக்கருதல்** - எண்ணுவதற்குக் கடினமாதல்

9230 **எதிர்** - நேர்எதிராக

9231 **எதிர்மறைதான்** - எதிர்ச் சொல்லைதான்

9232 **எதிரும்மேல்தவமும்** - மோகமும் தவமும்

9233 **எந்தப்பரிசும்** - எந்தத் தன்மையும்

9234 **எந்தாய்** - என் தந்தையே

9235 **எந்தை** - என் தந்தை

9236 **எப்பாலரும்** - எத்திசையில் உள்ளவருக்கும்

9237 **எம்மான்** - எமது தலைவன்

9238 **எய்த்தேன்** - துன்பப்பட்டேன்

9239 **எய்திட** - சூழும்படியாக

9240 **எய்துதல்** - பொருந்துதல்

9241 **எய்துதி** - அடைவாய்

9242 **எய்ய** - எஞ்சி நின்ற; தளர்ச்சியடையாமல்

9243 **எய்யாது** - குறையாது

9244 **எவையும்** - எவ்வகை இன்பமும்

9245 **எறியாது** - நீக்கிவிடாமல்; விலகிவிடாமல்

9246 **எறிவிலா** - தள்ளுதல் இல்லாத

9247 **என்கண்** - என் உள்ளத்தினின்று

9248 **என்செய்வான்** - என்ன செய்திட

9249 **எனதுவசம்** - எனக்குக் கட்டுபட்டு நிற்றல்

9250 **என்பால்** - என்னிடம்

9251 **என்பு** - எலும்பு

9252 **என்பு இணைத்தார்** - எலும்புகளால் தொடுக்கப்பட்ட மாலை

9253 **என்பை** - எலும்பை

9254 **என்றாரொடு** - என்பதை யாருடன்

9255 **என்று கொல்** - எந்த நாளில்

9256 **என்றோடு** - கதிரவனோடு

9257 **என்றோடு இகல்** - சூரியனுடன் போட்டியிடும்

9258 **என்னருளால்** - எனது திருவருளால்

9259 **என்னாமோ** - என்ன ஆகுமோ

9260 **என்னிலையை** - எனது அருள் அனுபவத்தை; எனது சிவானுபவத்தை

9261 **என்னைத்தந்தார்** - ஆன்மானுபவத்தை எனக்கு அளித்தார்

9262 **எனைப்புகுத்தி** - என்னையும் சேர்த்து

9263 **எனையாள்** - எனை ஆளும்

ஏ

9264 **ஏக்கற்று இருக்கும்** - ஏங்கி இருக்கும்; வழியற்று இருக்கும்

9265 **ஏகமே** - ஒருவனே

9266 **ஏசுமொழி** - இழிவு உள்ள சொற்கள்

9267 **ஏடு** - தாமரை இதழ்

9268 **ஏணனே** - அருள் வலிமை உடையவனே; அருள் அழகு உடையவனே

9269 **ஏணிலே** - வலிமையில்

9270 **ஏத்தாப்பிறவி இழிவு** - புகழாப் பிறப்பின் இழிவு

9271 **ஏத்தி நின்று** - புகழ்ந்து சொல்லி

9272 **ஏத்துங்கடி** - புகழ்ந்து கூறுங்கடி

9273 **ஏத்துதல்** - பூசித்தல்

9274 **ஏத்தேன்** - புகழ்ந்து பாடேன்

9275 **ஏதம்** - குற்றம்; துன்பம்; அல்லல்

9276 **ஏந்தல்** - ஆண்களுள் சிறந்தவன்

9277 **ஏந்திழையவர்** - ஒளியுடைய அணிகலன் சூடிய மகளிர்

9278 **ஏந்துதல்** - பொருந்துதல்

9279 **ஏமம்** - பாதுகாவல்

9280 **ஏய்த்தேன்** - வீணாக அழிந்தேன்

9281 **ஏய்ப்பாலை** - வேனில் மிகும் பாலை நிலம்

9282 **ஏர்** - அழகு

9283 **ஏரகம்** - சுவாமிமலை

9284 **ஏர்தரும்** - அழகினை வழங்கும்

9285 **ஏலும்** - ஏற்றிடும்

9286 **ஏவல்** - பணியாள்

9287 **ஏவற்கு** - கட்டளைக்கு

9288 **ஏழ்** - தாவரம் முதல் மனிதன் ஈறாக உள்ள ஏழ் பிறப்புகள் 1. தாவரம், 2. ஊர்வன, . நீர்வாழ்வன, 3. பறப்ன, 4. நடப்பன, 5. நரகர், 6. மனிதர், 7. தேவர்

9289 **ஏழைமார்** - பொதுமகளிர்

9290 **ஏற** - உண்டாக

9291 **ஏற்றம்** - அருள் தோற்றம்; அருள் வலிமை

9292 **ஏற்றிடல்** - கொளுத்துதல்

9293 **ஏறுதல்** - தாங்குதல்

9294 **ஏறுமுகம்** - வளரும் நிலை

9295 **ஏன்று** - ஏற்று

ஐ

9296 **ஐங்கர** - ஐந்து கைகளை உடையவினாயக

9297 **ஐங்கரனே** - கணபதியே

9298 **ஐந்தாம் பூதனை** - ஞானவெளியில் திகழ்பவனை

9299 **ஐம்பகுதி** - ஐந்து பூதப்பிரிவு

9300 **ஐம்முகனார்** - ஐந்து முகங்கள் கொண்ட சிவபெருமான்; அழகிய முகம் கொண்ட சிவபெருமான்

9301 **ஐயகோ** - ஐயோ

ஒ

9302 **ஒடுக்கம்** - அடக்கும்

9303 **ஒடுங்கலன்** - மன அடக்கம் இன்றி வாழ்கின்றவன்

9304 **ஒண்ணுதல்** - ஒளி பொருந்திய நெற்றி

9305 **ஒண்ணுமோ** - எண்ணுமோ

9306 **ஒண்பதி** - அமராவதி என்னும் இந்திரன் தலைநகர்

9307 **ஒண்பளிதம்** - உயர்ந்த கற்பூரம்

9308 **ஒதி** - ஒதிய மரம்

9309 **ஒப்பிலான்** - உவமையில்லாதவன்

9310 **ஒருங்குறு** - ஆழ்ந்து போதல்

9311 **ஒருநேயம்** - ஓர் அன்பு கொளும் இடம்

9312 **ஒருபால்** - வலப்பக்கம்; இடப்பக்கம்

9313 **ஒருமருங்கால்** - ஒரு பக்கத்தால்

9314 **ஒருமருங்கு** - ஒரே காலத்தில்

9315 **ஒருமான் தன் பெண்** - காட்டுமான் ஈன்ற வள்ளிநாயகி

9316 **ஒருமை** - பேதமில்லாத சமன்பாடு

9317 **ஒருவருதல்** - ஒப்புமை இல்லாது போதல்

9345 **ஒருவனா** - ஒருவனாக
9346 **ஒருவாசியில்** - மீளா அன்பில்; மாறா உளத்தில்
9347 **ஒருவும்** - விலகும்
9348 **ஒல்லும் வகை** - இயன்ற வழிகளிலெல்லாம்
9349 **ஒல்லை** - உடனடியாக
9350 **ஒழிவாய்** - பொழிவதாகிய
9351 **ஒளிகொள்** - விளக்கம் பெற
9352 **ஒன்றார்** - பகைவர்
9353 **ஒன்றிரண்டாம்** - இரண்டாகிய
9354 **ஒன்றிரண்டு** - திருமுருகனும் திருவருளும்
9355 **ஒன்று எடுத்து** - பிறவியாகிய ஒன்றைப் பெற்று
9356 **ஒன்றோடிரண்டு** - மூன்று

ஓ

9357 **ஓங்கற்றோள்** - மலை போன்ற தோள்
9358 **ஓங்குசுடரே** - விளங்கும் முருகனே
9359 **ஓதிய** - மெய்ஞ்ஞான உபதேசம் செய்த
9360 **ஓதுறு வழக்கு** - சொல்லும் வழக்கு
9361 **ஓமலர் அடிகேள்** - மலர்போலும் திருவடிகளை உடையவரே
9362 **ஓர்உறவாய்** - நெருங்கிய சுற்றமாக
9363 **ஓர்கால்** - தூக்கிய திருவடி
9364 **ஓர்தரும்** - கருதும்
9365 **ஓர்நாடு** - ஓர் மோட்ச வீடு
9366 **ஓர்புடையார்** - ஒரு பக்கம் உடையவர்
9367 **ஓவிலாது** - ஓய்வு இல்லாது

க

9368 **கஞ்சமலர்** - தாமரைமலர்
9369 **கஞ்சன்** - உந்தித் தாமரையில் தோன்றிய நான்முகன்
9370 **கடந்து** - நீந்தி
9371 **கடப்பந்தார்** - கடப்பமாலை
9372 **கடம்** - கடந்து
9373 **கடம்பு அணியும்** - கடப்ப மாலை சூடும்
9374 **கடமாய்** - பயனற்ற குடமாய்
9375 **கடலை** - திருச்சீரலைவாய் கடல்
9376 **கடன்** - தொழில்
9377 **கடி** - விலக்கு
9378 **கடிகொள் கோதையர்** - மணம் மிக்க மலரைச் சூடிய மகளிர்
9379 **கடிதரு** - புதிதாகிய
9380 **கடிமலர்** - மணம் நிறைந்த புதுமலர்
9381 **கடியாக்கதியே** - தள்ள முடியாத சிவகதியே
9382 **கடியார்** - புது மணம் நிறைந்த
9383 **கடு** - கசக்கும்
9384 **கடுஞ்சுரம்** - கொடிய பாலை நிலம்
9385 **கடுவிழி** - விஷப் பார்வை
9386 **கடைக்கணித்து** - கடைக்கண் அருளிய
9387 **கடைநோக்கால்** - கடைக்கண் பார்வையால்
9388 **கண்கள் ஆர** - கண்கள் பார்த்து நிறைவு பெற
9389 **கண்ணி** - மாலை
9390 **கண்ணிமதி** - பிறை நிலவு; இளம் பிறை மலர்
9391 **கண்ணினர்** - சிவபெருமான்
9392 **கண்ணுதல்** - நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான்
9393 **கண்ணேறு** - திருஷ்டி
9394 **கணநாதன்** - தேவர் கூட்டத் தலைவன்
9395 **கணப்பெருந்தலைவர்** - தேவ கூட்டங்களின் பெரிய தலைவர்
9396 **கணிக்கரும்** - அளவிடற்கு அரிய
9397 **கதி** - பேறு; பாக்கியம்; நல்வாழ்வு; தெய்வ வாழ்க்கை
9398 **கதித்த பித்தளை** - சிறந்த பித்தளை உலோகம்
9399 **கதிர்வேலன்** - ஒளி பொருந்திய வேலினை ஏந்தியவன்
9400 **கந்தமிகும்** - தெய்வ மணம் கமழும்
9401 **கந்தர் சரணப்பத்து** - கந்தனின் திருவடியில் அடைக்கலம் ஆகின்ற பத்துப் பாடல்கள்
9402 **கபடமாய்** - சூது ஆகி
9403 **கபடமோ** - சூது தானோ
9404 **கப்புற்ற** - கம்பு ஆகிய கிளையில் உள்ள
9405 **கபிலன்** - கணபதி அருள் ஓர் புலவன்
9406 **கமலம்** - தாமரை மலர்
9407 **கயமுகன்** - யானை முகன்
9408 **கரகம்** - கும்பம்
9409 **கரங்கொள்சிரம்** - உச்சிமேல் கூப்பிய கை
9410 **கரடம்** - மதநீர்; எலி
9411 **கரம்** - கை
9412 **கர்மவடிவோ** - தீவினையின் உருவமோ

9413 **கரவு** - வஞ்சனை

9414 **கரி** - யானைப்படை

9415 **கரிசு** - துன்பம்

9416 **கரு** - வினையின்மூலம்

9417 **கருங்க** - கருமை பொருந்திய விஷம்

9418 **கருங்காக்கை** - அண்டங்காக்கை

9419 **கருணாலயன்** - அருள் என்னும் ஆலயத்தில் விளங்குபவன்

9420 **கருணைவாரி** - அருட்கடல்

9421 **கருநெடுங்கடலை** - பிறவிப் பெருங்கடலை

9422 **கருமருந்து** - பிறவி நோயை நீக்கும் அருள் மருந்து

9423 **கருமாமலம்** - ஆன்மாவை மறைக்கும் ஆணவ மலம்

9424 **கரையில்** - சொல்லப் புகும் நேரத்தில்

9425 **கலக்கம்** - துன்ப அலைகள்

9426 **கல்நின்று** - கல்போல் இருந்து

9427 **கலநீர்** - ஒருகல நீர்; ஒரு கல அளவாகிய கண்ணீர்

9428 **கல்லால்** - தட்சணாமூர்த்தி அமர்ந்திருக்கும் ஒரு வகை ஆலமரம்

9429 **கல்லி** - அகழ்ந்து

9430 **கலபம்** - தோகை

9431 **கலாபமயில்** - தோகை மயில்

9432 **கலி** - துன்பம்

9433 **கலை** - ஆடை

9434 **கலை ஊடின** - ஆடைகள் தளர்ந்தன; ஆடைகள் சரிந்தன

9435 **கலை நீங்கின** - ஆடைகள் விலகின

9436 **கவசம்** - பாதுகாப்பு

9437 **கழல்கள்** - தண்டையணிந்த திருவடிகள்

9438 **கழல்வழி** - திருவடிநெறி

9439 **கழலுற்ற** - தாள் மலர் சேர்ந்த

9440 **கழறுகின்றேன்** - துதிக்கின்றேன்

9441 **கழன்றது** - அவிழ்ந்தது

9442 **கழுநீரும்** - அரிசி கழுவிய நீரும்

9443 **கழை** - கரும்பு

9444 **களக்கு** - குற்றச்செயல்

9445 **களங்காட்டி** - கரிய நிறக் கழுத்தினைக் காட்டி

9446 **கள்ளம்** - திருட்டுக் குணம்

9447 **களித்தனை** - செருக்கும் மகிழ்ச்சியும் அடைந்தனை

9448 **களியொன்று** - பேரின்பப் பேறு ஒன்று

9449 **களைகணே** - இடையூறு அகற்றுபவனே

9450 **களைகண்ணே** - துன்பத்தில் கை கொடுப்பவனே

9451 **களைந்தருள்** - நீக்கியருள்

9452 **கற்பகம்** - அருள் ஈயும் திருமுருகன்

9453 **கற்பனை** - பொய்த் தோற்றம்

9454 **கறிக்கும்** - கடித்துச் சுவைக்கும்; கரண்டும்

9455 **கறிமடித்த** - மாமிச விருப்பம் உடைய

9456 **கனந்தியே** - அருட்செல்வமே

9457 **கனநீறு** - அருள் திறமுடைய விபூதி

9458 **கன்ம உடல்** - பிரார்த்த கன்மத்தை அனுபவிக்கும் தேகம்

9459 **கன்னேர்புயன்** - மலை ஒத்த தோளை உடையவன்

9460 **கஜானனன்** - யானை முகத்தான்

கா

9461 **காங்கேயன்** - திருத்தணி முருகன்

9462 **காதம்** - பத்து மைல் தூரம்

9463 **காந்தள்** - காந்தள் என்னும் மலர்

9464 **காமர்** - காதல்

9465 **காய்** - துன்பம்

9466 **காய்கனிய** - காய்க்காமல் கனிந்த

9467 **காய்கொண்டு** - சினம் கொண்டு

9468 **காயம்** - உடல்

9469 **கார்** - கருமை; மழை

9470 **கார்வளர்** - முகில்கள் ஓங்கும்

9471 **காரைமுட்டி** - மேகத்திற்கு அப்பால்

9472 **கால்** - வண்டிச் சக்கரத்தின் ஆரம்

9473 **கால் ஊன்றி** - உறுதியாக நிலைத்து

9474 **கால் கொளும்** - திருவடிகள் வைத்திடு; அமர்ந்து அருளும்

9475 **காலவடிவு** - எமனின் உருவம்

9476 **காலன்** - எமன்

9477 **காலாயுதத்தோரே** - எமனை வெல்பவரே

9478 **காவி** - நீலம்

9479 **காவேர்தருவே** - சோலையில் ஓங்கிய தெய்வ மரமே; கற்பகத் தருவே

9480 - காட்டு வழி

9481 **கானல்** - பொய்த் தோற்றம்; பேய்த்தேர் என்னும் கானல் நீர்

9482 **கானிடை** - காற்றின் இடையில்

கி

9483 **கிருமி** - புழு

9484 **கிளிஞ்சல்** - நத்தை ஓடு

9485 **கிளை** - சுற்றம்

9486 **கிளைத்தல்** - வளர்தல்; ஓங்கிடல்

9487 **கிளைத்து அழுங்கும்** - தோன்றி வருந்தும்

கு

9488 **குகேசன்** - திருமுருகன்

9489 **குஞ்சரமே** - யானை முகனே

9490 **குடம்பை** - பறவைக் கூடு

9491 **குடிமுழுதும் ஆண்டிடல்** - எம்குலத்தை அடிமை கொளல்

9492 **குணித்தல்** - மதித்திடல்

9493 **குதலை** - மதலை மொழி; இளம் பருவ மொழி

9494 **கும்பமுனி** - அகத்திய முனிவர்

9495 **குமரகுரு** - திருமுருகன்

9496 **குமுதம்** - அல்லி மலர்

9497 **குருமாலைப்பொருள்** - துரிய நிலையில் விளங்கிய ஓங்காரம்

9498 **குருவுரு** - சற்குரு வடிவம்

9499 **குலாலன்** - குயவன்

9500 **குவளைக் குடலை** - நீலமலர் நிறைந்த பூக்கூடை

9501 **குவிதல்** - திரண்டு நிற்றல்

9502 **குழகன்** - விரைவில் இறங்கி அருள்பவன்

9503 **குழல் தூங்கின** - வேய்குழல் ஊதி அயர்ந்தன; கூந்தல் அவிழ்ந்தன

9504 **குழைக்கரும்பு** - மென் கரும்பு

9505 **குழைதல்** - தழுவுதல்

9506 **குறமான்** - வள்ளி நாயகி

9507 **குற்றேவல்** - பணி விடைகள்

9508 **குறியாது** - கவன மில்லாது

கூ

9509 **கூழை** - கூந்தல்

கே

9510 **கேதம்** - துன்பம்

9511 **கேழ்** - உரிமை

கை

9512 **கைத்தலம்** - அருட்கரம்

9513 **கைத்து** - கசந்து

9514 **கையனேன்** - உலகத் துன்ப அலைவு உடையவன்; கைவிடப் பட்டவன்; சிறியவன்; கைம்மையேன்

கொ

9515 **கொங்கை** - மார்பகம்

9516 **கொடிய வாட்கணார்** - தீய வாள் போலும் கண்ணை உடையவர்

9517 **கொடுங்கை** - வளைந்த கொடுமையான கை

9518 **கொடுங்கோள்** - கொடிய வஞ்சகம்

9519 **கொந்தார் குழல்** - மலர்க் கொத்துகள் சூடிய கூந்தல்

9520 **கொல் நிலை** - தீமைகளைக் கொல்லும் இயல்பு

9521 **கொலைமுகம்** - உயிர்களைக் கொல்லும் வழி

9522 **கொழிதரல்** - வழிந்து ஓடுதல்

9523 **கொள்ளே** - கொள்வாய்

9524 **கொற்றவேல்** - வெற்றிவேல்

9525 **கொன்** - அச்சம்

9526 **கொன்பெனும்** - அச்சம் உடைய

கோ

9527 **கோ** - அரும்தலைவன்

9528 **கோடு** - மலை; உச்சி; கிளை

9529 **கோடு ஏந்தும்** - கொம்பினைத் தாங்கும்

9530 **கோதிலா** - குறைவில்லாத

9531 **கோது** - குற்றம்

9532 **கோதைக்கே** - தலைவிக்கே; மலர்ப்பெண்ணுக்கே

9533 **கோதையர்** - மகளிர்

9534 **கோவே** - அருள் அரசே

9535 **கோள்** - வஞ்சனை

9536 **கோனே** - அரசனே

ச

9537 **சகடம்** - வண்டிச் சக்கரம்

9538 **சகம்** - உலகம்

9539 **சகம் ஆறுடையார்** - நிலத்தில் பாயும் ஆகாய கங்கையை முடியில் தரித்தவர்

9540 **சகல கேவலம்** - நினைப்பும் மறப்பும்

9541 **சங்கரி** - உமை

9542 **சங்கை** - சந்தேகம்; ஐயப்பாடு

9543 **சச்சிலே** - சத்திலே; உண்மையிலே

9544 **சஞ்சரித்தல்** - நடந்திடல்

9545 **சஞ்சலாகாரம்** - மனச்சஞ்சலம்

9546 **சட்டித் தருளும்** - வென்று அனுக்கிரகிக்கும்

9547 **சட்டை** - தோல்

9548 **சடம்** - அறிவற்ற பொருள்

9549 **சடமாகிய** - உயிரில்லாத பொருளாகிய

9550 **சடமான** - அறிவில்லாத பொருளான

9551 **சடைக்கனி** - செஞ்சடையுடைய சிவம் எனும் பழம்

9552 **சண்முகம்** - ஆறுமுகம்

9553 **சதகோடி** - நூறு கோடி

9554 **சத்த உலகம்** - பொருள் விருப்பமுடைய உலகம்

9555 **சத்தத்தீவு** - சப்தத்தீவு; எழுவகைத் தீவுகள்

9556 **சத்திக்கும்** - ஓசை எழுகின்ற

9557 **சத்துவ ஞானம்** - ஜீவகாருண்ய அறிவு

9558 **சத்துவம்** - ஜீவகாருண்யம்

9559 **சதுர்வேதம்** - நான்கு வேதங்கள்

9560 **சதுரன்** - திறமையுடையோன்

9561 **சந்தமிகும்** - நறுமண இசை ஓங்கும்

9562 **சந்தாரம்** - சந்தன மரங்கள்

9563 **சந்தேன்** - சந்தன மலரின் தேன்

9564 **சம்பந்தர்** - திருஞான சம்பந்தர்

9565 **சம்பு** - சுயம்பு; சுயஞ்சோதி; தானே தோன்றியவன்

9566 **சமராபுரி** - போரூர்

9567 **சரணம்** - அடைக்கலம்

9568 **சரணாம் புயன்** - திருவடிக் கமலங்களை உடையவன்; தாமரைத் திருவடிகளை உடையவன்

9569 **சராசர** - இயங்கும் உயிர்க்கும் இயங்கா உயிர்க்கும் தலைவ

9570 **சழக்கு** - உலகியல் பொய்மை

9571 **சற்றாகி** - சிறிதாகி

9571 **சற்றை** - வீண் வாத நிலை

9572 **சன்மார்க்கம்** - ஜீவகாருண்யம்

9573 **சனனம்** - பிறவி

9574 **சனைப்போர்** - பிறவியாகிய பெரிய யுத்தத்தோடு

சா

9575 **சாகரமாம்** - பிறவிக் கடலாம்

9576 **சாதிப்பர்** - விடாப்பிடியாய் முடிவு கூறுபவர்

9577 **சாந்தப்பதம்** - மௌன நிலை

9578 **சாம்பிரமம்** - மாளும் மனிதர் கூட்டம்

9579 **சாமி** - தெய்வம்

9580 **சார்ந்தவர்** - ஏழை எளியவர்

9581 **சார்வது** - தொடர்வது

9582 **சால் கொளும்** - பூசை மேம்படும்; விழாச் சுபம் உடைய

9583 **சாலம்** - மயக்கம்

9584 **சாலும் குணம்** - பொருந்தும் குணம்

சி

9585 **சிகம்எலாம்** - அருட்குணங்கள் யாவும்

9586 **சிகரி** - மலை; உயரிய மலை

9587 **சிகரி சூழ்** - மலைகள் சூழ்ந்த; மலைகள் நிறைந்த

9588 **சிங்கமாமுகம்** - சிங்கமுகாசுரன்

9589 **சித்திபுத்திகள்** - விநாயகர் மனைவியர்

9590 **சிந்திட** - அற்றுப் போக

9591 **சிம்புள்** - மாவீரன்; எட்டுக் கால்களை உடைய சரவப்பறவை

9592 **சிருட்டித்தல்** - படைத்தல்

9593 **சிவக்கனி** - திருமுருகன்

9594 **சிவஞானம்** - கடவுள் அறிவு

9595 **சிவஞானம் அருத்தும்** - இறைப்பேரறிவை ஊட்டும்

9596 **சிவயோகம்** - ஞானத்தில் யோகம்

9597 **சிவனார்மகன்** - சிவன் திருமகனாம் முருகன்

9598 **சிவை** - உமை

9599 **சிற்பர சற்குரு** - மெய்ஞ்ஞான குருநாதர்

9600 **சிற்பர யோகம்** - அருள் அனுபவ ஒருமை

9601 **சிற்பரகுக** - முருகனைக் குறிக்கும் மந்திரத் தொடர்

9602 **சிற்பரம்** - மெய்ஞ்ஞானத் தெய்வம்

9603 **சிற்றறிவு** - புல்லறிவு

9633 **சிறுகாலை** - இளம் பருவத்தில்

9634 **சிறுமை** - தாழ்ச்சி

9635 **சிறை** - தேவர்கள் அசுரர்கள் மூலம் வைக்கப்பட்ட சிறை

9636 **சின்மயம்** - ஞான வடிவம்

9637 **சின்னம்** - வெற்றியைக் குறிக்க இசைக்கும் கருவி (ஊது கருவி), அடையாளம், திருச்சின்னம்

9638 **சின்னம் அளித்து** - அருள் அடையாளங்களை வழங்கி; திருச்சின்னம் என்னும் இசைக்கருவி எடுத்து ஊதும் பெருமை தந்து

சீ

9639 **சீத** - குளிர்ச்சியுடைய

9640 **சீர்த்தி** - தெய்வப்புகழ்; சீர்த்தியாகும் புகழ்

9641 **சீலத்தவர்** - நல்லொழுக்கம் உள்ளவர்கள்

9642 **சீலன்** - மேலானவன்

9643 **சீறாத** - எமன் சினந்து வராத

9644 **சீறாத வாழ்விடை** - காம வெகுளி மயக்கங்கள் தாக்காத அருள் வாழ்வினில்

9645 **சீறுமுகம்** - சினந்த தன்மை

சு

9646 **சுகுணம்** - நற்குணம்; சுபகுணம்

9647 **சுகோதயம்** - இன்பத்திற்கு இடம் ஆனவன்

9648 **சுத்த சின்மயம்** - புனித மெய்ஞ்ஞானத் தன்மை

9649 **சுத்த பாவனை** - புனித நிலை வழிபாடு

9650 **சுரர்** - தேவர்கள்

9651 **சுவர்ணம்** - பொற் காசுகள்

9652 **சுழற்கறங்கு** - சுழலும் காற்றாடி

9653 **சுழி** - நீர்ச்சுழி; நீர்ச்சுழற்சி

சூ

9654 **சூது - தாயம்** ஆடும் ஒரு கருவி

9655 **சூர்** - எமன்

9656 **சூர்க்கிளை** - அசுரக் கூட்டம்

9657 **சூரசங்கரன்** - பத்மாசுரனை வென்ற தீரன்

9658 **சூரமா** - சூரபத்மன்

9659 **சூரமாவை** - பதுமாசுரனை

9660 **சூர்முதலை** - சூரபத்மனாகிய மாமரத்தை

9661 **சூரன்** - பத்மாசூரன்

செ

9662 **செக்கர்பொருவும்** - சிவந்த நிறம் போன்ற

9663 **செங்கல்வராயர்** - திருத்தணிகை முருகர்

9664 **செங்கனி** - சிவந்த பழம்

9665 **செங்குவளை** - செங்குவளை என்னும் நீர்ப்பூ

9666 **செஞ்சுடர்** - உதய சூரியன்

9667 **செந்தில்** - திருச்செந்தூர்

9668 **செம்பொன் நாடு** - இந்திர லோகம்

9669 **செய்குன்று** - உண்டாக்கிக் கொண்ட மலை

9670 **செய்கை** - படைத்தல் தொழில்

9671 **செய்யமேனி** - சிவந்த திருமேனி

9672 **செய்யாள்** - திருமகள்; இலக்குமி

9673 **செயிரே** - துன்பமே; சினமே

9674 **செருக்கு** - முனைப்பு

9675 **செல்வ சீர்த்தி மாலை** - அருளைப் புகழும் பாமாலை

9676 **செல்வனும்** - நான்முகனும்

9677 **செல்வி** - இலக்குமி

9678 **செலுத்தவே** - நடத்திடவே

9679 **செவ்விய** - சிறந்த

9680 **செவியறிவுறுத்தல்** - கேள்வி ஞானத்தால் அறிவுரை கூறுதல்

9681 **செழிப்பட** - நல்ஒழுக்க வளர்ச்சி உடைய

9682 **செழுந்தாது** - பொன்பொடி

9683 **செறித்து** - வென்று அடக்கி

9684 **செறியாவே** - பொருந்தாது

9685 **செறிவு** - மனஒருமைப்பாடு; மன அடக்கம்

9686 **செறு மோகம்** - சச்சரவு கொடுக்கும் மோகம்

9687 **சென்னி** - தலை

9688 **சென்னியர்** - தலைமீது

சே

9689 **சேட் செல்ஆர்வரை** - உயர்ந்த மேகங்கள் படியும் தணிகை மலை

9690 **சேணவன்** - இந்திரன்; விண்ணுலக வேந்தன்

9691 **சேணும்** - மேலுலகம்

9692 **சேதளம்** - அசைகின்ற

9693 **சேமம்** - பாதுகாவல்

9693 **சேய்ப்பட்ட** - எட்ட இயலாத

9694 **சேவகன்** - அடியார்க்கு அடியவன்

9695 **சேவடி** - சிறந்த பாதம்

9696 **சேவடிக்கண்** - தெய்வத் திருவடியினிடத்து

9697 **சேவடிக்கீழ்க் குடியாக** - திருவடியில் வாழும் அடிமையாக

9698 **சேவலம்** - அழகிய சேவல்

9699 **சேனும் புவியும்** - மண்ணும் விண்ணும்

சை

9700 **சையம்** - வையம்; உலகம்; வெற்றி

சொ

9701 **சொப்பனம்** - கனவு

9702 **சொற்பா** - சொல் மாலையாம் திருப்பாடல்

சோ

9703 **சோர்வு** - துன்பம்; தளர்ச்சி

ஞா

9704 **ஞாலத்துயர்** - உலகத் துன்பம்

9705 **ஞாலம்** - உலகம்

9706 **ஞானவாரி** - ஞானக்கடல்

த

9707 **தகர்** - ஆட்டுக்கடாய்

9708 **தகையனேன்** - தன்மை உடையவன்

9709 **தசும்பு** - நிணநீர்

9710 **தஞ்சம்** - அடைக்கலம்

9711 **தட்டிலார்** - அன்பு குறைவில்லார்; குறைகள் இல்லாதவர்

9712 **தடம்** - நன்னீர் நிலைகள்

9713 **தடமலை** - ஓங்கிப் பருத்த மலை; பெரிய மலை

9714 **தடவண்புயனே** - வளமை சார்ந்த பெரிய அகன்ற தோள் உடையவனே

9715 **தடி** - முகில் கூட்டம்

9716 **தடிந்த** - அழித்திட்ட

9717 **தடிவாய்** - அழிப்பாய்

9718 **தடைப்படுதல்** - அருளாமல் இருத்தல்

9719 **தண்கிளர் சாரல்** - குளிர்ச்சி பொருந்திய மலைப்பக்கம்

9720 **தண்டை** - குழந்தைகளின் காலணி; கொலுசு; கழல் ஒலிக்கும் காப்பு

9721 **தண்ணளி** - குளிர்ந்த பேரருள்

9722 **தண்ணன்** - கருணை உடையவன்

9723 **தண்ணனை** - குளிர்ந்த அருள் கொண்டவனை

9724 **தண்தேன்** - குளிர்ச்சியைத் தரும் தேன்

9725 **தண்தேனே** - குளிர்மை ஊட்டும் தேனே

9726 **தணப்பு** - பிரிவு

9727 **தணப்பு அற** - பிறவியாம் வெம்மை நீங்க

9728 **தண்வாவி** - குளிர்ந்த பொய்கை

9729 **தணிகை** - ஆசிர்வதிக்கும் திருக்கரம்

9730 **தணிகைத் தடத்து** - திருத்தணிகை என்னும் இடத்தில்

9731 **தணிகைவாய்** - திருத்தணி இடத்தில்

9732 **தத்தை** - கிளி

9733 **ததி** - உணவு

9734 **ததிதி** - மங்கல ஓசையுடன் ஆடும் ஆட்டம்

9735 **தமர்** - சுற்றம்

9736 **தமரே** - அருள் உறவே

9737 **தமியேற்கு** - தனிப்பட்ட எனக்கு

9738 **தயங்கு** - விட்டிடு

9739 **தயங்குதல்** - விளங்குதல்

9740 **தரம்** - அருள் நிலை; அன்பு மேம்பாடு

9741 **தரம்கிளர்** - பண்புடைய

9742 **தரமருவு** - மேன்மை பொருந்தும்

9743 **தரிசன வேட்கை** - காண விழைதல்

9744 **தரு** - மரம்

9745 **தருக்கள்** - மரங்கள்

9746 **தருகாதலித்தோன்** - கற்பக விருட்சத்தை விரும்பியவன்; கற்பகத் தருவை விரும்பிய இந்திரன்

9747 **தருமக்கடல்** - ஜீவகாருண்ய சமுத்திரம்

9748 **தருமவான்** - அறக்கடவுள்

9749 **தலத்தால்** - சீரிடத்தில்

9750 **தவிர்தல்** - நீங்குதல்

9751 **தவிரும்** - நீங்கிப் போகும்

9752 **தழற்கண்** - அனல் போன்ற ஞானக்கண்

9753 **தழும்பு** - காய்ப்பு

9754 **தழைவுற்ற** - அன்பின் வலிவு ஏற்ற

9755 **தளர்வு** - தளர்ச்சி

9756 **தளிர்பட** - வளம் சூழ்ந்த

9757 **தற்பகம்** - மன்மத சயன இடம்

9758 **தன்தகைய** - தனக்குத் தானே நிகராகிய

9759 **தன்பிற்படும்** - நன்மை பழகாது பின்படுதல்

9760 **தன்பின்படும்** - தான் தோல்வி அடையும்

9761 **தனம்நீடு** - செல்வம் ஓங்கும்

9762 **தனமிசை** - முலை மீது

9763 **தனயர்** - பிள்ளைகள்

9764 **தன்னேர் தணிகை** - தான் தனக்கு நிகரான திருத்தணிகை

9765 **தன்னைப் பொரும்** - தன்னை ஒத்த; தனக்குச் சமமான

9766 **தன்னைப் பொருவும்** - பரம்பொருளை ஒக்கும்

9767 **தனிக்கதி** - உயர்ந்த வீடுபேறு

9768 **தனித்திருத் தொடை** -தனித்து புனையப் பெற்ற திருப் பாடல்கள்

9769 **தனிமா முதலே** - தனிப்பெரும் பொருளே

தா

9770 **தாணு** - தானே தோன்றிய மெய்ப்பொருள்; தானே தோன்றியவன்

9771 **தாதன வண்ணம்** - பொன்னிறம்

9772 **தாதனை** - அருள் தந்தையை

9773 **தாதாதாதாதாதாதா** - ஏழுதா; அதாவது தலையில் எழுதாத

9774 **தாதை** - தந்தை

9775 **தாம்பரமம்** - தெய்வ நிலையில் தாம் தெய்வம்

9776 **தாம்பிரிவில்** - உபகார உணர்வில் வேறுபடாத

9777 **தாம்பு** - எரிந்த வைக்கோல் கயிறு

9778 **தாமம்** - மலர்மாலைகள்

9779 **தாய் ஒன்று** - உபகார உணர்வில் கூடி நிற்கும்

9780 **தாய்கொண்ட** - உபகாரச் சிந்தையுடைய

9781 **தார்** - மாலை; பாமாலையும் பூமாலையும்

9782 **தாரனை** - மாலை சூடியவனை

9783 **தாருகப்பதகன்** - தாருகாசுரன் என்னும் பாதகன்

9784 **தாருகன்** - தாருகாசூரன்

9785 **தாவலம்** - வெற்றி சூழ்ந்த

9786 **தாவுதல்** - விரும்புதல்

9787 **தாழ்வனோ** - தாழ்ந்து நிற்பனோ

9788 **தாழ்வுறா** - குறைபடாத

9789 **தாள்** - திருவடி

9790 **தாள்புகழ்** - திருவடிப் புகழ்ச்சி

9791 **தாளரே** - திருவடியுடையவரே

9792 **தான் கொண்ட** - அன்பினைப் பழகுகின்ற

9793 **தானத்தறுகண்** - வலிமை தோன்றுவதான

9794 **தானம்** - உபகாரச் செயல் கொண்ட

9795 **தானம் தந்திடுவீர்** - தருமம் செய்திடுவீர்

தி

9796 **திகழ்வேன்பால்** - விளங்கும் என்னிடத்து

9797 **திகிரி** - சக்கரம்

9798 **திகிரிக் கொண்ட** - சக்கராயுதத்தைக் கவர்ந்த தாருகாசூரன்

9799 **திசைபெற** - நாற்றிசையினரும் போற்ற

9800 **திடமும்** - அருள் வலிமையும்

9801 **திண்** - அருள் வல்லபமுடைய

9802 **திண்கொண்ட** - வலிமையுடைய

9803 **திண்ணப்பன்** - கண்ணப்பன் என்னும் அடியாரது இளமைப் பெயர்

9804 **திண்ணிய** - கருங்கல் போல் வலிமையுடைய

9805 **திணிதோள்** - திரண்டதோள்; வலிந்த தோள்

9806 **திதி** - காத்தல்

9807 **திதிதி** - முத்தி

9808 **திதியும் புவி** - சம்பத்து நிறைந்த நிலம்

9809 **தியங்குகின்றேனே** - திகைத்து மயங்குபவனை

9810 **தியங்குதல்** - மயங்குதல்

9811 **திரண்டார்** - கட்டிய மாலை போல்

9812 **திரம்** - தெய்வ வலிமை

9813 **திரம் அல** - நிலைபேறு உடையதல்ல

9814 **திரு** - இலட்சுமி கடாட்சம்; அருட்செல்வம்

9815 **திருஅன்னார்** - திருமகளை ஒத்தவர்கள்

9816 **திருஅனையர்** - பெண்டிர்

9817 **திருத்தணிநகத்தில்** - தணிகைமலையில்

9818 **திருத்தாட்கு** - திருவடிகளுக்கு

9819 **திருப்பள்ளித்தாமம் தாங்கல்** - திருப்பள்ளி எழுச்சிக்கு மாலை சூடல்

9820 **திருமருங்கு** - தெய்வத் திருவாயில்

9821 **திருமுண்டை** - திருநீற்றுக் கவசம்

9789 **திருவருள் பேற்று விழைவு** - திருவருளைப் பெற விரும்புதல்

9790 **திருவருள் விலாசப் பத்து** - திருவருள் விளங்கிய பதிகம்

9791 **திருவாய் முத்து** - இன்ப முத்தம்; வாய் முத்தம்

9792 **திரைவாய்** - மாயை எனும் அலை சூழும்

9793 **திலகம்** - குங்குமம்

9794 **திவசம்** - நாள்

9795 **திவலை யொழிக்கும்** - விதிப் பயனை ஒழிக்கும்

9796 **திறம்** - கருணை வல்லபம்; வலிமை பெற்ற வாழ்வு

9797 **திறல்** - தெய்வ வலிமை

9798 **திறல்பெற** - வலிமையுடைய

9799 **திறலோன்** - அருள் ஆற்றல் உடையோன்

9800 **திறனருளி** - பொருளும் அருளும் தெரிவித்து

9801 **தினைத்தல்** - மூழ்கி மகிழ்தல்

தீ

9802 **தீக்கந்தம்** - மதுவாடை

9803 **தீஞ்சொல்** - இனியசொல்

9804 **தீர்வேனேல்** - செய்யாது போனால்; விலகிடுவேன் ஆனால்

து

9805 **துகள்** - ஆகாமியம் சஞ்சிதம் கன்மம் எனும் வினைக் கூறுகள்

9806 **துகளால்** - பொடியால்

9807 **துங்க வாரணத்தோன்** - ஐராவத வெள்ளை யானையை உடையவன்; புனித ஐராவத யானையின் அதிபதியாகிய இந்திரன்

9808 **துட்டநாய்** - தீயநாய்

9809 **துடி** - உடுக்கை

9810 **துடிஇடை** - உடுக்கை போலும் இடுப்பு

9811 **துணவுதல்** - விரைதல்; மலர்தல்

9812 **துணவுதவு** - அமைந்து பெருகிடும்

9813 **துணிகண்டே முறித்திடுமால்** - அறுந்து போய் ஒழிந்திடும்; செயலற்றுப் போகும்படிச் செய்யும்

9814 **துணைப் பொற்றாள்** - பொன்போலும் இரு திருவடிகள்

9815 **துணைமலர்** - இரண்டு மலர்த் திருவடி

9816 **துணைமுலையாள்** - இருமுலைகள் உடையவள்

9817 **துதி** - பாராட்டு; தோத்திரம்

9818 **தும்பை** - வெண்மையாகிய தும்பைப் பூ

9819 **துய்மணி** - புனிதமாய தெய்வமணி

9820 **துய்ய** - புனித; தூய

9821 **துயர் இயற்ற** - துன்பத்தைத் தந்திட

9822 **துயர் விண்டேன்** - துன்பம் நீங்கினேன்

9823 **துயில்** - மரணம்

9824 **துயில் விண்டேன்** - தூக்கம் ஒழித்தேன்; துக்கம் நீங்கினேன்

9825 **துரிசறு** - குறை நீங்கிய; இருள் நீங்கிய

9826 **துரியனை** - மெய் அறிதுயில் உடையவனை

9827 **துரியம்** - நனவுக்கு அப்பாற்பட்ட ஒருமை நிலை; துருத்தி காற்றைச் செலுத்தும் கருவி

9828 **துளக்கிலார்** - மன அடக்கமில்லாதவர்

9829 **துளக்கிலார்க்கு** - வஞ்சனை அற்றவருக்கு

9830 **துன்புறா** - துன்பம் அடையாத

9831 **துன்னல்** - அடைதல்

9832 **துன்னும்** - அடியவர் நெருங்கிடும்; நெருங்கும்

9833 **துனி** - துன்பம்

தூ

9834 **தூணநேர்புயம்** - தூணைப்போல் வலிமை உடைய தோள்

9835 **தூணிநேர்புயன்** - வைரத் தூணை ஒத்த தோள்

9836 **தூவடிவேல்** - புனித மெய்ஞ்ஞான வேல்

9837 **தூறிலா** - புதர்கள் இல்லாத

தெ

9838 **தெண்டன் இடுதல்** - வீழ்ந்து வணங்குதல்; சாஷ்டாங்க நமஸ்காரம்

9839 **தெண்டனி** - தெளிவு பொருந்திய

9840 **தெய்வத் திலகம்** - தையல் நாயகி

9841 **தெய்வமணி** - உமையவள்

9842 **தெரிய ஓங்கிய** - தெரியும்படி விளங்கிய

9843 **தெருட்கும்** - அருள் பக்குவம் செய்யும்; பக்குவம் உண்டாக்கும்

9844 **தெருளுறும்** - அருள்பாங்கில் பொருந்தும்

9845 **தெருளே** - திருவருள் தெளிவே

9846 **தெள்** - தெளிவு

9847 **தெள்தனிநீலம்** - குளிர்மையுள்ள கருங்குவளை மலர்

9848 **தெறிக்கும்** - இறைந்து கிடக்கும்

9849 **தெறுவோய்** - வெல்பவனே

தே

9850 **தே** - தெய்வமே

9851 **தேங்குதல்** - தாங்குதல்

9852 **தேசிகன்** - சற்குரு

9853 **தேர்தல்** - நம்புதல்

9854 **தேரை** - தேரினில்

9855 **தேரை எட்டுறும்** - தேரைத் தாண்டிச் செல்லும்

9856 **தேவமன்னன்** - இந்திரன்

9857 **தேவர் முதல் உலகங்கள்** - விண்ணுலகங்கள் ஏழு

9858 **தேவாசிரியம்** - தேவர்கள் வணங்கும் சற்குரு பீடம்; ஞானபீடம்

9859 **தேறல்** - தேன்

9860 **தேற்றி** - அனுபவம் அடையும்படிச் செய்து

9861 **தேறா** - உருப்படாத

9862 **தேறாத நிலை** - தேர்ச்சி அடைய முடியாத அக அனுபவ நிலை; அனுபவத்தறியாத அருள் அனுபவம்

9863 **தேறும்** - தெளிவு உண்டாகும்

9864 **தேறுமுகம்** - ஆறுதலை வழங்கும் திருமுகம்

தை

9865 **தையன்மிர்** - பெண் மகளிர்

தொ

9866 **தொடை** - மாலை

9867 **தொடையார்** - கடப்ப மாலைச் சூடியவர்

9868 **தொண்டணவீர்** - தெய்வத்தொண்டு விடாது செய்பவர்களே

9869 **தொய்யல் அழிக்கும்** - முலை அலங்காரத்தை நீக்கும்

9870 **தொல்லைவினை** - பழையவினை

9871 **தொழும் வண்ணம்** - பணிந்து வணங்கும்படி

தோ

9872 **தோடேந்தும்** - இதழ்கள் சிறக்கும்

9873 **தோயமாம்** - சூழ்ந்து பற்றும்

9874 **தோயமாம் பெரும்பிணி** - பிறவிப் பெருங்கடல்

9875 **தோயுமோ** - நனைக்குமோ

9876 **தோற்றம்** - தோன்றுதல்; தோன்றும்

9877 **தோன்றல்** - ஆடவருள் சிறந்தவன்; தெய்வத்துள் சிறந்தவர்

ந

9878 **நகுவான்** - உலகோர் சிரிக்கும்படி

9879 **நங்கட்கு** - நமக்கு

9880 **நச்சிலே** - தீய நோக்கம்

9881 **நச்சு** - நஞ்சு; விஷம்

9882 **நச்சுறு மரம்** - நஞ்சு பொருந்திய மரம்

9883 **நசைதரும்** - விருப்பத்தை உண்டாக்கும்

9884 **நஞ்சு** - தீமை

9885 **நடம்** - நாடகம்; நடனம்

9886 **நடலை** - வஞ்சனை

9887 **நடவும்** - இயங்குகின்ற

9888 **நடுவன்** - எமன்

9889 **நடுவாகிய** - தயவுடைய

9890 **நடையில்** - போக்கினில்

9891 **நண்ணற்கு** - அடைவதற்கு

9892 **நண்ணாததோர் அடி** - மகாவிஷ்ணுவால் காண முடியாத திருவடி

9893 **நண்ணி** - அடைந்து

9894 **நணியே** - அணுகியே

9895 **நந்தா** - அழியாதவனே

9896 **நந்தாஎழில்** - அழியாத அழகு

9897 **நந்தார்** - அழிவில்லாதவர்

9898 **நம்பனார்** - சிவபெருமான்; பரசிவக் கடவுள்

9899 **நம்பி** - நம்பியாண்டார் நம்பி

9900 **நமனும்** - எமனும்

9901 **நயம்** - நன்மை

9902 **நல்கும்** - உண்டாக்கித் தரும்

9903 **நலத்தை வேட்டு** - அழகை விரும்பி

9904 **நவம்** - அருள்; புதுமை

9905 **நவம்பெறும்நிலை** - பிரமன் முதல் பரநாதம் வரை உள்ள ஒன்பது தெய்வ நிலைகள்: 1. பிரமன், 2. மால், 3. உருத்திரன், 4. மகேசுவரன், 5. சதாசிவன், 6. விந்து, 7. நாதம், 8. பரவிந்து, 9. பரநாதம்

9906 **நவில்கின்றவாகி** - சொல்லுகின்றபடியாகி

9907 **நவின்றிடும்** - கூறுகின்ற

9908 **நவை** - துன்பம்; குற்றம்

9909 **நவையுடைய** - குற்றம் உடைய

9910 **நளின** - அழகிய

9911 **நற்கிரியை** - தெய்வ சாதனமாகிய நற்செயல்

9912 **நற்பாம்பு** - பதஞ்சலி முனிவர்

9913 **நற்புலத்தினை** - நல்லறிவினை

9914 **நற்பூண்** - நல்ல அணிகலன்

9915 **நறவுக்கே** - வழியும் தேனுக்கே

9916 **நறவே** - அருள்தேனே

நா

9917 **நா அலங்காரம் அற** - நாவினுக்கு அழகானவை விலக

9918 **நா உண்டவர்** - தமிழ்நலம் சார்ந்தவர்

9919 **நாஉண்ட** - அருட்புகழுடைய

9920 **நாட்டாதே** - நிலைநிறுத்தாதே

9921 **நாடாமை** - செல்லாமை; எதிர்பாராமை; விரும்பாமை

9922 **நாடினர்** - விரும்பி நெருங்கினர்

9923 **நாடுதல்** - விரும்புதல்

9924 **நாடொணாமை** - அடைய இயலாமை

9925 **நாண் காத்து** - தாலிபாக்கிய மளித்து

9926 **நாண் வீழ்ந்தது** - கரும்பு போன்ற சொல்லின் பொலிவு அழிந்தது

9927 **நாத** - தலைவ

9928 **நாதத்தொலியே** - தச நாதங்களின் ஓசையே

9929 **நாதம் நாடிய அந்தத்தில்** - பரநாதத்தில்

9930 **நாதமும்** - நவ நிலையில் ஏழாவது அனுபவ நிலையையும்

9931 **நாம்பிரமம்** - நாமே வேத முழுப்பொருள்

9932 **நாயகமே** - தலைவனே

9933 **நாரையூர்** - திருநாரையூர்

9934 **நால்வாய்** - தொங்கும்வாய்

9935 **நாலுதல்** - தொங்குதல்

9936 **நாவீழ்ந்தது** - மலரின் வனப்பு தாழ்ந்தது; பக்கமாக விழுந்தது

9937 **நாள் எண்ணி வருந்தல்** - வீண் நாள் கழிவதற்கு வருந்துதல்

9938 **நாள்தொறும்** - தினந்தோறும்

9939 **நாள்மலர்** - தாமரை மலர்; அன்று மலர்ந்த மலர்

9940 **நான்முகன் மகவான்** - இந்திரன்; பிரமன் என்னும் பெரியோன்

நி

9941 **நிகர்** - ஒத்த

9942 **நிகர்த்தி** - போன்ற

9943 **நிதியந்தருதல்** - அருட் செல்வச் சிறப்பை உண்டாக்குதல்

9944 **நியமத்திடை** - தெரு சந்திப்பிடையில்

9945 **நியமம்** - நாற்சந்தி

9946 **நிர்அகங்காரம்** - அகங்காரம் இல்லாத

9947 **நிராசை** - பற்று இல்லாமை

9948 **நிருத்தன்** - ஆடலரசன்; நடராஜன்

9949 **நிலை** - கற்பு; தெய்வ நிலை

9950 **நிலைமுகம்** - அருள் நிலையாகிய முன் இடம்

9951 **நிலையமாய்** - அருள் விளங்கும் இடமாகி

9952 **நிறை** - கற்பு; பரிபூரண பண்பு

9953 **நின்நிலை** - திருவருள் நிலை

9954 **நின்பால்** - நின்முன்பு

9955 **நின்றடங்கின்** - ஆணவம் காமியம் மாயை நீங்குமானால்

9956 **நின்னிலை** - ஆன்மாவின் தன்மையை

9957 **நினைதியோ** - எண்ணுவாயோ

நீ

9958 - முருகனாகிய நீயே

9959 **நீசன்** - இழிந்தவன்

9960 **நீட்டித்து** - காலந்தாழ்ந்து

9961 **நீர்த்தாரை** - சிறுநீர்வழி

9962 **நீர்மொள்ள** - தண்ணீர் கொள்ள

9963 **நீர்வேய்ந்த** - ஆகாய கங்கையைத் தாங்கிய

9964 **நீராடி** - உடல் முழுவதும் திருநீறு பூசி

9965 **நீலம்** - நீலோற்பவம் என்னும் கருங்குவளை மலர்

9966 **நீவீழ்ந்திட** - நெஞ்சமாகிய நீ மயங்கிட

9967 **நீளிலை** - நீண்ட இலை போன்ற வடிவேல்; ஞானவேல்

9968 **நீற்றினை** - திருநீற்றினை; விபூதியை

9969 **நீறு** - திருநீறு

நு

9970 **நுண்ணிடை** - மெல்லிய இடுப்பு

9971 **நுதல்** - நெற்றி

9972 **நுவல்** - சொல்லுக

நெ

9973 **நெகிழாத** - விலகாத

9974 **நெஞ்சவலங்கூறுல்** - மனத்தின் இழிவை எடுத்துச் சொல்லல்

9975 **நெட்டிலை** - நீண்ட இலை

9976 **நெடுமருப்பு** - நீண்ட தந்தம்

9977 **நெடுவேலர் வதியும்** - ஞானவேல் ஏந்திய முருகர் வாழும்

நே

9978 **நேயம்** - கடவுளன்பு

9979 **நேயரே** - அன்பு பொருந்தியவரே

9980 **நேர்** - நிகழ்த்தும்

நை

9981 **நையாத ஆயுள்** - குறையாத வாழ்நாள்

ப

9982 **பகட்டான்** - எருமைக் கடாவில் வரும் இயமன்

9983 **பங்கயம்** - தாமரை

9984 **பங்கயன்** - நான்முகன்; பிரமன்

9985 **பசு** - உயிர்

9986 **பசுகரணம்** - மும்மலத்தின் அலைவுபடும் மனம் முதலிய கருவிகள்

9987 **பசுங்கொடி** - வள்ளி நாயகி

9988 **பசையறு** - அன்பில்லாத

9989 **பஞ்ச பாதம்** - மது அருந்துதல், பொய் கூறுதல், கொலை செய்தல், களவு செய்தல், புலால் உண்ணல் ஆகிய ஐந்து பாதகங்கள்

9990 **பட்டிமாடு** - கட்டுக்கடங்காத காளை

9991 **படியார்** - நிலத்தைச் சூழ்ந்துள்ள

9992 **படிற்று மங்கையர்** - வஞ்சக மகளிர்

9993 **படிறு** - கொடுமை

9994 **படுகாடு** - பட்டுப்போன பாலைவனக் காடு

9995 **படைத்தவன்** - நான்முகன்

9996 **பண்** - இசை

9997 **பண் அளாவிய** - இன்னிசை நிறைந்த

9998 **பண்குணம்** - பாடும் தன்மை

9999 **பண்ணவனை** - துதிக்கப் பெறுகின்றவனை

10000 **பண்ணார் மொழி** - இசைபோலும் இனிய சொற்கள்

10001 **பண்ணேர்மறை** - நற்கீதம் பொருந்திய வேதம்

10002 **பண்பு அட்ட** - தன்மை இல்லாத

10003 **பணிதிறஞ் சாலாமை** - பணி செய்ய இயலாமை

10004 **பணிமயில்** - பாம்பினை வாயில் தாங்கிய மயில்; தோகை மயில்

10005 **பணைமுலை** - பருத்த மார்பகம்

10006 **பதி** - வாழும் ஊர்; கடவுள்; உலகம்

10007 **பதிநீறு** - சிவமாம் விபூதி

10008 **பதிபூசை** - தெய்வ வழிபாடு

10009 **பதியில்** - பூ உலகத்தில்

10010 **பதியும்** - வாழும் நல்லிடம்

10011 **பதியோகி நிலைமை** - கடவுளைத் தியானிக்கும் ஒருமை நிலை

10012 **பதிவளர்** - சிவபேறு ஓங்கும்

10013 **பந்தம்** - பற்றுதல்

10014 **பயின்றனர்** - பழகினர்

10015 **பர தற்பர போகம்** - தான் ஆன்மா என்னும் அனுபவத்தில் விளங்கும் இன்ப நிலை

10016 **பரகர்** - பாரகம் செய்பவர்

10017 **பரங்கிரி** - திருப்பரங்குன்றம்

10018 **பரசிவம்** - பராசக்தியின் தலைவன்

10019 **பரஞ்சுடர்** - அருட்சுடர்; மேலான பிரகாசம்

10020 **பரதத்துவம்** - சிவதத்துவத்திற்கு மேற்பட்டத் தத்துவங்கள்; தெய்வீகத் தத்துவங்கள்

10021 **பரதேவன்** - மேலான கடவுள்

10022 **பரப்பிரமமே** - மேலாம் தெய்வமே

10023 **பரம்** - மறுமை இன்பம்

10024 **பரம்பரம்** - துரிய வெளி

10025 **பரம்பரமே** - துரியத் தலத்திறைவனே

10026 **பரமன்** - சிவபிரான்

10027 **பரமனை** - சிவபெருமானை

10028 **பரவ** - போற்றி வணங்க

10029 **பரவிலேன்** - போற்றித் துதித்திலேன்

10030 **பரவும்** - துதிக்கும்

10031 **பரவுறும்** - புகழ்ந்து வணங்கும்

10032 **பரனை** - மேலாம் தெய்வத்தை

10033 **பராபரம்** - பரம்பரனுக்குத் தலைவன்

10034 **பராபரன்** - பரசிவப் பெரும்பொருள்

10035 **பரி** - குதிரைப்படை

10036 **பரிசால்** - தன்மையால்

10037 **பரிசு** - தகைமை

10038 **பரிசு என்** - காரணம் என்ன

10039 **பரிதல்** - அழுந்துதல்

10040 **பரிதிபுரம்** - சூரியனும் வணங்கிய வைத்தீஸ்வரன் கோயில்

10041 **பரிமேல்** - குதிரையின் மீது

10042 **பரியேன்** - செய்திலேன்

10043 **பரிவேன்** - விலக்கிடுவேன்

10044 **பருவரல்** - துன்பச்சூழல்

10045 **பரை** - பராசத்தி; உமாதேவி

10046 **பரையின்** - பரசிவத்தின் சக்தி

10047 **பலி** - பிச்சை

10048 **பவசங்கடம்** - பிறவித் துன்பம்

10049 **பவபந்தம்** - பிறவித்தளை

10050 **பவம்** - வளி; காற்று

10051 **பவமே** - இழி பிறவி நிலைகள்; பிறவியை

10052 **பவள வெற்பு** - பவளம் போல் மேனி உடைய சிவ பெருமான்

10053 **பவனிச் செருக்கு** - தெய்வத் திருஉலாவின் அழகு

10054 **பழுக்கும்** - முதிரும்; பழுத்திடும்

10055 **பழுதை** - பழங்கயிற்றை

10056 **பள்ளம்** - தீவினையாகிய பெருங்குழி

10057 **பற்று** - உறுதியான பிடிப்பு

10058 **பன்னிரு படை** - பன்னிரண்டு ஆயுதங்கள்

10059 **பனிப்பு** - உயிரின் நடுக்கம்; மலை அலைவு

10060 **பனிரெண்டு** - பன்னிரண்டு

10061 **பனை** - பனைமரம்

பா

10062 **பாஉண்டது** - தேன் பாகினை விட

10063 **பாங்கிலார்** - பண்பு இல்லாதவர்

10064 **பாச** - மாயை சூழ்ந்த உயிர்

10065 **பாசத்துடலம்** - எமன் பாசக் கயிற்றால் கட்டிய தேகம்

10066 **பாசம்** - உயிர்களைக் கட்டி இழுக்கும் பாசக் கயிறு

10067 **பாசமற்ற** - மலம் நீங்கிய

10068 **பாடேந்தும்** - அறிவில் சிறந்து விளங்கும்

10069 **பாண்டம்** - பானை

10070 **பாதத்தியானம்** - திருவடிச் சிந்தனை

10071 **பாதளம்** - பாதாள உலகம்

10072 **பாதாளமும்** - கீழ் உலகமும்

10073 **பாய்பட்ட** - வீணாகப் பாயும்

10074 **பார்** - நிலம்; நிலவுலகம்

10075 **பால்** - ஒரு பக்கம்; இடப் பாகம் உடையவள்; ஒருபக்கம் புகழ்ந்து வணங்கும்

10076 **பாலன்** - திருமுருகன்

10077 **பாலிப்பாய்** - அருள் புரிவாய்

10078 **பாவுண்டது** - இன்னிசைப் பாடலைக் கேட்டபடி

10079 **பாழுக்கு** - வீணாகிய வாழ்வுக்கு

பி

10080 **பிச்சிலே** - மதி மயக்கத்திலே

10081 **பிச்சிலை** - உலகியல் அறியாமையில்

10082 **பிடி** - பெண் யானை

10083 **பிணி** - நோய்; பிறவிப் பிணி

10084 **பிணிக்கோர் காலனை** - பிறவி நோய்க்குக் கூற்றுவனை

10085 **பிணித்தல்** - புதைத்தல்

10086 **பிணையல்** - பின்னல்

10087 **பித்தப் பெருமான்** - சிவபெருமான்

10088 **பித்தன்** - சிவபெருமான்

10089 **பிரணவாகாரன்** - ஓங்கார வடிவினன்

10090 **பிரமஞானம்** - தெய்வ அறிவு; ஆன்ம அறிவு

10091 **பிரமநீதி** - வேதப்பயன்

10092 **பிரமை** - மயக்கம்

10093 **பிரியம்மேய** - காமம் மிகுந்த

10094 **பின்பட்டு** - திகைப்புற்று

10095 **பின்போந்திடுதி** - என் பின்னர் வந்திடுவாயாக

பீ

10096 **பீடேந்தும்** - அருட்பெருமை விளங்கும்

பு

10097 **புகலிடம்** - அடைக்கலம் ஆகும் இடம்

10098 **புகலுதல்** - எடுத்துச் சொல்லுதல்

10099 **புடை விளங்க** - இரு பக்கமும் ஓங்க

10100 **புடைத்து** - உடல்மேல் விழுந்து

10101 **புண்ணிய நீற்று மான்மியம்** - திருநீறு அணிவதின் மகிமை

10102 **புண்ணியச் செயல்** - ஜீவகாருண்யச் செயற்பாடு

10103 **புண்ணியர்** - சிவபெருமான்

10104 **புண்பட்ட** - கீழ்மையுடைய

10105 **புயங்கொண்டவன்** - தோளில் தாங்கியவன்

10106 **புயம்** - தோள்கள்

10107 **புயன்** - தோள்கள் உடையவன்

10108 **புரத்தியிலை** - பாதுகாக்கவில்லை

10109 **புரப்பது போல்** - பாதுகாத்திடல் போல்

10110 **புரம்** - முப்புரம் ; திரிசிரபுரம்

10111 **புரைகடல்** - உப்புச் சுவை நிறைந்த கடல்

10112 **புல்லர்** - கீழானவை; தாழ்ந்தவர்

10113 **புல்லுமணி** - சிறியமணி

10114 **புலைஒருவா** - புலாலை விலக்காத

10115 **புலைய மனம்** - கீழாகும் எண்ணம்

10116 **புவனம்** - உலகம்

10117 **புவியும்** - மண்ணுலகமும்

10118 **புள்** - பறவை

10119 **புள்அலம்புதல்** - பறவைகள் பறந்து கூச்சலிடுதல்

10120 **புளகக் கொங்கை** - பூரித்த மார்பகம்

10121 **புளகம்** - மெய் சிலிர்ப்பு

10122 **புள்ளிருக்கு வேளூர்** - சடாயு, வேதம், முருகன் ஆகியோர் வழிபட்ட வைத்தீஸ்வரன் கோயில்

10123 **புறங்காட்டில்** - சுடு காட்டில்

10124 **புறம்பு** - புறத்தில்

10125 **புனம்** - தினைப்புனம்

10126 **புன்மலம்** - இழிந்த மலம்

10127 **புன்மை** - கீழ்மை

10128 **புனலே** - நீரே

10129 **புன்னெறி** - தீயவழி

10130 **புன்னை** - புன்னை மலர்கள்

10131 **புனைதல்** - தரித்தல்

10132 **புனைந்த** - சூட்டிய

பூ

10133 **பூங்குழல்** - மலர் சூடிய கூந்தல்

10134 **பூவுண்ட** - மலர்கள் சூடிய

பெ

10135 **பெட்போ** - தெய்வத் தன்மையோ

10136 **பெண் அளாவிய** - இடது பக்கம் உமையைத் தழுவிய

10137 **பெண்குணம்** - மன உணர்வின் வழிச் செல்லும் பெண் தன்மை

10138 **பெம்மான்** - பெருமையுடையவன்

10139 **பெய்சிறையில்** - அடைபட்ட சிறையில்

10140 **பெருந்தகை** - சிவபெருமான்

10141 **பெருநிலைய** - உயர்நிலைப் பேறுடைய

10142 **பெருநெறி** - சுத்த சன்மார்க்கத் திருநெறி

10143 **பெரும் பிணி** - பிறவி நோய்

10144 **பெருமனம்** - தீமை பெருகும் நெஞ்சம்

10145 **பெருமால்** - பெரும் அறியாமை

10146 **பெருவேர்** - ஆணிவேர்

10147 **பெற்றம்** - காளை

பே

10148 **பேதை** - பெண் மகள்

10149 **பேதைநெஞ்சே** - அறியாமை சூழ்ந்த மனமே

10150 **பேதையர்** - பொது மகளிர்

10151 **பேர் உருத்திரம்** - உருத்திரர்க்கு உருத்திரராகிய

10152 **பேருரு** - பெரிய வடிவம்

10153 **பேற்றை** - பாக்கியத்தை

பை

10154 **பைம்பொழில்** - பசிய சோலை

10155 **பையபாம்பு** - நச்சுப்பையை உடைய நாகப் பாம்பு

பொ

10156 **பொதிதரும்** - பாவச் சுமையை உண்டாக்கும்

10157 **பொதிந்த** - அழுந்திய

10158 **பொதிந்த பொன்** - இருந்தருளும் திருமுருகன்

10159 **பொதியும்** - விளங்கும்

10160 **பொய்யஞடான** - பொய்மை மிகுந்த மண்ஞடு போன்ற

10161 **பொருந்துதல்** - கூடுதல்

10162 **பொருப்பனை** - மலை மீது விளங்குபவனை

10163 **பொருப்பு** - மலை

10164 **பொருவுருதல்** - போன்று இருத்தல்; ஒப்புமை பெற்றிருத்தல்

10165 **பொருளுடைய மறையோன்** - மெய்ப் பொருள் விளங்கிய வேத விற்பன்னன்

10166 **பொலிசடையார்** - விளங்கும் முடியை உடையவர்

10167 **பொழி இதழி** - பொழிகின்ற மலர்

10168 **பொழிற்படும் தணிகை** - சோலைகள் தழைத்த திருத்தணிகை

10169 **பொற்கொடி** - தெய்வயானை

10170 **பொற்பு** - பண்பாடு

10171 **பொற்புலம்** - போற்றும் மெய்அறிவு

10172 **பொற்புலமே** - தங்க வயலே

10173 **பொற்றார் புயம்** - பொன் மாலை ஆடிய தோள்

10174 **பொற்றோள்** - பொன் தோள்

10175 **பொறிவாய்** - ஐம்பொறிகளின் இன்பம்

10176 **பொன்** - திருமகள்

10177 **பொன் அரையான்** - இந்திரன்

10178 **பொன் தகைய** - பொன்னைப் போன்ற

10179 **பொன் தார் புயம்** - அழகுமலர் மாலை அணிந்த தோள்கள்

10180 **பொன் நாண்** - மங்கலநாண்

10181 **பொன்னாடு** - தேவர் உலகம்

10182 **பொன்னை** - திருமகளை

போ

10183 **போகங்கடந்த** - உலக இன்பம் விரும்பாத

10184 **போகத்திறனே** - மெய்ஞ்ஞான வலியுடையவனே

10185 **போகம்** - காம இன்பம்

10186 **போகம்** - சுகபோகம்

10187 **போகமே** - பாக்கியமே

10188 **போத வாழ்வு** - மெய்ஞ்ஞான வாழ்வு

10189 **போதம்** - மெய்ஞ்ஞானம்

10190 **போதம் நிறுத்தும்** - மெய்ஞ்ஞானம் விளங்கும்

10191 **போதல்** - மறப்பு நிலை

10192 **போதல் ஒழிந்து** - போய் வருதலை விட்டு

10193 **போதனை** - மெய்ஞ்ஞான வடிவினனை

10194 **போதானந்தம்** - மெய்ஞ்ஞான இன்பம்

10195 **போதில்** - உந்தியில்; கொப்புளில்; தாமரை மலரில்; உந்திக் கமலத்தில்

10196 **போது கொண்டவன்** - தாமரை மலர் மீது விளங்கும் நான்முகன்

10197 **போதை** - பொழுதினை

10198 **போந்தது** - வந்து அடைந்தது

10199 **போந்திடில்** - வருமாலை

10200 **போந்து** - அடைந்து

10201 **போய்ப்பட்ட** - தேய்ந்து அழிந்த

10202 **போருகத் தகரினை** - போரிடவல்ல ஆட்டுக் கடாயை

10203 **போழுதல்** - பிளந்திடல்

ம

10204 **மக** - குழந்தை

10205 **மகவு** - பிள்ளை

10206 **மகள்** - வள்ளி

10207 **மகிழ்ந** - கணவனே

10208 **மஞ்சனம்** - அபிடேக தீர்த்தம்

10209 **மஞ்சு** - மேகம்; கருமேகம் போன்ற இருள்

10210 **மட்டறாப் பொழில்** - மலர்த்தேன் குன்றாத சோலை

10211 **மட்டித்து** - மேலும் கீழுமாகத் துன்பத்தால் குழம்பி

10212 **மட்டு** - தேன்

10213 **மடமாதர்** - இளமகளிர்

10214 **மடவார்** - பெண் மகளிர்

10215 **மடைபடுதல்** - நிறைதல்

10216 **மணமலர்** - நெஞ்சத் தாமரை

10217 **மணம்வேட்ட** - திருமணம் செய்திட விரும்பிய

10218 **மணிக்குழை** - அழகான குண்டலங்கள்; அழகான கூந்தல்

10219 **மணிகண்ட நாயகன்** - அழகு நீலக் கழுத்தினைக் கொண்ட சிவபெருமான்

10220 **மணிப்பூண்** - அழகுடைய அணிகலன்கள்

10221 **மணிமிடறு** - நீலகண்டம்

10222 **மத்தம்** - பித்து; உன்மத்தம்; பேய்க்குணம்

10223 **மத்தர்** - அறிவு அலைவு உடையோர்

10224 **மதம்** - காம வெகுளி மயக்கங்கள் முதலியவை

10225 **மதர்த்தல்** - வளத்துடன் விளங்குதல்

10226 **மதி** - புத்தி; நல்லறிவு

10227 **மதி போய் வீழ்ந்தது** - அறிவு மயங்கித் தாழ்ந்தது

10228 **மதியில்** - புத்தி கூர்மையற்ற

10229 **மதியின் தழல்** - நிலவின் காய்ச்சல்

10230 **மந்த உலகினில்** - சோம்பல் மிகுந்த பூமியில்

10231 **மந்த உலகு** - மெத்தனம் மிகுந்த உலகம்

10232 **மந்தா நிலம்** - மந்தாகினி எனும் கங்கை ஆறு ஓடும் நிலம்

10233 **மந்தாரம்** - மாலையில் மலரும் ஒரு சோலை மலர்; செம்பரத்தம் பூ; முள் முருக்கம் பூ;

10234 **மயக்கு** - பெண் மயக்கம்

10235 **மயல்** - பெண் மயக்கம்; மயக்கம்

10236 **மயல் உழந்தேன்** - மயக்கம் அடைந்தேன்

10237 **மயின்மிசை** - மயிலின் மீது

10238 **மரு** - மணம்

10239 **மருக** - மருமகனே

10240 **மருங்கில்** - வீதியில்; பக்கமாக

10241 **மருங்கு** - பக்கம்

10242 **மருட்டும்** - மயக்கும்

10243 **மருந்து** - அமுதம்; திருமுருகன்

10244 **மருவுதல்** - பொருந்துதல்; தழுவுதல்

10245 **மருள்** - அறியாமை

10246 **மருள்வார்க்கு** - உலக மயக்கம் உடையவர்க்கு

10247 **மல்காத** - மிகுதிபெறாத

10248 **மல்கும்** - பெருகும்

10249 **மலத்தின் அலைந்து** - மும்மலத்தினால் துன்பப்பட்டு

10250 **மலர்க்குழலாள்** - பூச்சூடிய குழலையுடைய மகளிர்

10251 **மலிகரணம்** - குறையாத மனம் முதலியவற்றின் செயல் பாடுகள்

10252 **மலிதல்** - நிறைதல்

10253 **மலை** - கைலைமலை; அருள்மலையாம் சிவபெருமான்

10254 **மலைக்கும்** - பிரமிக்க வைக்கும்

10255 **மலைந்து** - அலைந்து

10256 **மலையமுனிவன்** - அகத்தியன்

10257 **மலையாள்** - இமயவான் மகள் உமையாள்

10258 **மலையுரி** - மலைபோலும் மதயானை

10259 **மழக்கை** - கோடரி

10260 **மழைக்கொண்டலே** - மழைபொழியும் மேகமே

10261 **மறக்கருணை** - தண்டித்துத் திருத்தும் அன்புடைமை

10262 **மறிக்கும்** - நல்வாழ்வினை மயக்கும்; நல்லறிவைத் தடுக்கும்

10263 **மறிபிடித்த** - பைத்தியம் பிடித்த

10264 **மறிவிலா** - தடை படாத

10265 **மன்** - நிலைபெற்ற

10266 **மன்பதை** - உலகமக்கள்

10267 **மனமுருகி** - மனம் வருந்தி; மனம் அலைவுபட்டு

10268 **மன்னாது** - நிலைபெற்று நிற்காமல்

10269 **மன்னுடை** - நிலைபேறுடைய

10270 **மன்னுதல்** - நிலைபெறுதல்; அழுந்தல்

10271 **மன்னும்** - நிலையான அருள் வழங்கும்

10272 **மன்னே** - அருள் அரசனே

10273 **மனை** - மனைவி

மா

10274 **மா** - விலங்கு

10275 **மாச்சரியம்** - பொறாமை

10276 **மாட்டினும்** - கனவினும் கூட

10277 **மாணித்த** - மாண்புடைய

10278 **மாதர்க்குள்ளுருகும்** - பெண்களின் கூட்டத்திற்கு ஏங்கி உருகும்

10279 **மாதனமும்** - பெரிய அருட்செல்வமும்; பெரிய மார்பகமும்

10280 **மாமதலாய்** - அருள் குமரனே

10281 **மாமான்** - தெய்வமான்

10282 **மாமுகில்** - கரிய மேகம்

10283 **மாமுதல்** - மாமரமாய் நின்ற சூரபத்மன்

10284 **மாயவேடம்** - பொய்த்தோற்றம்

10285 **மாயன்** - திருமால்

10286 **மாயாநொடிப்பு** - மாயையின் விளையாட்டு; மாயைக் கூத்து

10287 **மாயும்** - அழியும்

10288 **மாயை** - உலக மயக்கம்

10289 **மாயையில்** - உலக மயக்கத்தினிடையில்

10290 **மாரனை** - மன்மதனை

10291 **மால்** - பெண்மயக்கம்

10292 **மால்கொளும்** - அன்பு கொள்ளும்; மயக்கம் உடைய

10293 **மாலுந்தி** - காம வெகுளி மயக்கத்தை நீந்தி

10294 **மாவடி** - காஞ்சி நகரில் உள்ள மாமர விருட்சத்தின் அடி

10295 **மாவடி அமர்ந்த** - காஞ்சியில் மாமரநிழலில் இருந்தருளிய

10296 **மாவீழ்ந்திடும்** - ஒளி குன்றும்

10297 **மாவீழ்ந்திடும் விடையார்** - அழகு தவழும் காளையில் ஊர்பவர்

10298 **மாவுருவை** - சூரபத்மனாகிய மாமரத்தை

10299 **மாவேழம்** - மதம் பொருந்திய ஆண்யானை

10300 **மாழ்க** - துன்பம் அழுந்த

10301 **மாழை** - பொன்

10302 **மாழை மேனியன்** - தூய பொன் நிற வடிவினன் ஆகிய சிவன்; நீலமேனியன் ஆகிய திருமால்

10303 **மாற்றும்** - போக்கும்

10304 **மாறாப்பிணி** - தீராத நோய்

10305 **மாறில்** - வேறுபாடில்லாத

10306 **மாறிலாதவர்** - மன வேறுபாடு அடையாதவர்

10307 **மான்** - மான் என்னும் காட்டு விலங்கு

10308 **மான் கண்ட கை** - மானைத் தாங்கிய திருக்கரம்

10309 **மானலில்** - முறைபட இல்லாமல்

10310 **மான்வழி** - மானின் வயிற்றில் உதித்த

10311 **மானிடம்** - ஆறறிவாகிய மனிதப் பிறப்பு

10312 **மானுதல்** - மாண்புறுதல்

மி

10313 **மிசைதல்** - உண்ணுதல்

10314 **மிடி** - வறுமை

10315 **மிளிர்தரும்** - ஒளிரும்

10316 **மின்** - மின்னல்

10317 **மின்திரண்டன்ன** - மின்னல் திரண்டதை ஒத்த

10318 **மின்னிருவர்** - மின்னல் போல் ஒளிரும் தெய்வயானை வள்ளி ஆகியோர்

10319 **மின்னை** - மின்னலை

10320 **மின்னைப்பொருவும்** - மின்னல் போன்று தோன்றி அழியும்

மீ

10321 **மீதாம்** - மேலே

10322 **மீன்கண்டேன்** - கயல் மீனைக் கண்டது போன்ற; கயல் மீனின் தன்மையைப் போன்ற

மு

10323 **முக்கண் கரும்பு** - முக்கண்களை உடைய சிவபெருமான்

10324 **முக்கண் பேறுமுகம்** - மூன்று கண்களைப் பெற்ற அருள் திருமுகம்

10325 **முகம்ஆறு** - ஆறுமுகங்கள்

10326 **முகம்ஏதிலை** - அருள் முகம் ஏதும் இல்லை; கருணை முகம் இல்லை

10327 **முகில் துணை** - மேகம் போன்ற

10328 **முடி** - மகுடம்

10329 **முடிகொடுத்த** - இழந்த மகுடத்தை மீண்டும் பெற்றுக் கொடுத்த

10330 **முடிமணி** - தலையில் சூடும் தலைமாமணி; மாணிக்கத் திருமுடி

10331 **முடியாது** - அழியாமல்

10332 **முடியாமுதலே** - அழிவற்ற பொருளே

10333 **முடியாமுதன்மை** - அழியாப் பெருந்தன்மை

10334 **முத்திக்கு** - ஆன்ம அனுபவத்திற்கு

10335 **முதிர்நீறு** - அருள் வலிமை பொருந்திய விபூதி

10336 **முதிர்வேனில்** - கோடைக்காலம்

10337 **முதுமறையே** - பழைய வேதமே

10338 **முந்நூலார்** - முப்புரி நூல் அணிந்தவர்

10339 **முப்போகம்** - இம்மை மறுமை பேரின்பம்

10340 **முயங்கி** - அணைந்து; தழுவி

10341 **முரளியம்கணர்** - தாமரைக்கண் உடைய திருமால்

10342 **முரன்றது** - இசைத்தது

10343 **முலைமுகடு** - முலையாகிய மலை

10344 **முளரி** - தாமரை

10345 **முற்கலன்** - முனிவர் ஒருவர்

10346 **முறி** - வெட்டிய துண்டம்

10347 **முறி கொள்கி** - மெய்ஞ்ஞானத்தைத் தடுக்கும்; அறிவை அழித்திடும்

10348 **முறைபோகி** - திருத்தணிக்கு அமைந்த ஒரு பெயர்

10349 **முறையிட்ட பத்து** - வேண்டுகோள் பாடல்கள் பத்து

10350 **முன்பட்ட குட்டில்** - முன்பு திருமுருகன் கொடுத்த தண்டனையாகிய குட்டு

10351 **முன்னவன்** - முதல்வனாம் சிவன்

10352 **முன்னி** - எண்ணி

10353 **முன்னிலை** - உலகியல் மயக்கம்

10354 **முன்னைப் பொருட்டு** - பழமை பொருட்டு

10355 **முன்னைப் பொருள்** - பழம் பொருள்

10356 **முனிந்திடாது** - வெறுத்திடாமல்

மூ

10357 **மூடம்** - அறியாமை

10358 **மூதானந்தவாரி** - பேரானந்தக் கடல்

10359 **மூவர்** - மும்மூர்த்திகள்

10360 **மூவரும்** - மும்மூர்த்திகளும்

10361 **மூவிருகாலே** - ஆறு கால்களை உடைய தேனீயே

10362 **மூவேதனை** - நரக வேதனை; ஜனன வேதனை; பசி வேதனை

மெ

10363 **மெய்கண்டநாதன்** - ஓர் அடியவர்

10364 **மெய்ந்நிலை** - அருள் நெறி

10365 **மெய்ய** - புனித

10366 **மெலியாவிதம்** - மெலிந்து போகாதபடி

10367 **மென்தோள்** - மெல்லிய தோள்கள்

மே

10368 **மேதினி** - பூஉலகம்

10369 **மேரு** - கைலைமலை

10370 **மேலவர்** - உயர்ந்தவர்

10371 **மேலவன்** - தெய்வம்; சிறந்தவன்

10372 **மேலையோர்கள்** - வானத்தவர்கள்

10373 **மேவ** - தழுவ

10374 **மேவார்** - பொருந்தாதார்

10375 **மேவியது** - மோகம் சூழ்ந்தது

10376 **மேவுதல்** - பொருந்துதல்

10377 **மேவுந்தார்** - சூடிய மாலை

மை

10378 **மையல்** - அறியாமை; காதல் மயக்கம்

மொ

10379 **மொந்தை** - கலயம்

10380 **மொழி** - பாராட்டு

மோ

10381 **மோனம்** - அமைதிப் பேறு

யோ

10382 **யோகமே** - ஒன்றுபடுபவனே

வ

10383 **வச்சிரத்தூண்** - வைரத்தூண்

10384 **வசைபெற** - இழிவு அடைய

10385 **வடி** - வேல்

10386 **வடியா** - சொல்ல முடியாத

10387 **வடு** - அடையாளம்

10388 **வண்டணிகேசர் - வண்தணிகேசர்**, அருள் ஈயும் தணிகைப் பெருமான்

10389 **வண்ணமும்** - எல்லா நன்மையும்

10390 **வண்ணனை** - தன்மையுடையவனை

10391 **வண்ணாவோ** - நிறமுடையவனே

10391 **வண்புலம்** - வளமை நிறைந்த மலை நிலம்

10393 **வணம்** - வண்ணம்; பொன் நிறம்

10394 **வண்மை** - வலிமை

10395 **வத்திரம்** - ஆடை

10395 **வத்துவே** - மெய்ப்பொருளே; கடவுளே

10396 **வதனங்கள்** - முகங்கள்

10397 **வதிதரும்** - உயிர்கள் வாழும்

10398 **வதிதரும் நெஞ்சினேன்** - வசிக்கும் மனத்தினேன்

10399 **வம்பு** - புதுமணம்

10400 **வம்புஅறா** - தேன் குறையாத

10401 **வயம்** - வழிமுறை

10402 **வயன்** - வளம்

10403 **வரத்தை** - நன்மை நிறைந்தவனை

10404 **வரதன்** - அருள் தருகின்றவன்; சிவன்; பரசிவன்

10405 **வரதா** - அருள்பேறு உடையவனே

10406 **வரம்** - நன்மை; ஆசிர்வாத நன்னிலைத் திருவருள்; பாக்கியம்

10407 **வரவுபோக்கு** - சகலகேவலம்; நினைப்பு மறப்பு

10408 **வருபயன்** - எதிர்காலத்தில் வரக்கூடிய பலாபலன்

10409 **வரும்ஆறே** - வரும்வழி அதுவே

10410 **வருமாலை உடையவர்** - மயக்கத்தினை உடையவர்

10411 **வருவித்து** - பிறப்பிக்கச் செய்து

10412 **வரை** - மலை

10413 **வலத்தால்** - ஆற்றலால்

10414 **வலம்** - வெற்றி; மிகுதி

10415 **வலம்தர** - அருள் வல்லபம் தருகின்ற

10416 **வல்லி** - வள்ளி நாயகி

10417 **வழிபடும்** - தெய்வத் திருநெறியில் பழகும்

10418 **வழுத்தல்** - வாழ்த்துதல்

10419 **வள்அயில்** - வலிமை வாய்ந்த வேல்

10420 **வளம்செறி** - வளம் தழைத்த

10421 **வளமருவும்** - அருள் வளம் சூழும்

10422 **வளிநிறை** - வாயு நிறைந்த

10423 **வளியே** - காற்றே

10424 **வளை** - கைவளையல்

10425 **வளைத்திடுதல்** - சுற்றிப் படர்தல்

10426 **வளைப்பேன்என** - உயிரைத் தருக என

10427 **வன்கண்** - பாதக உள்ளம்

10428 **வன்குலம்** - அசுரர்குலம்

10429 **வனங்கொடி** - காட்டுக்கொடி

10430 **வன்தசைஅறும்** - தசை இல்லாத

10431 **வன்நெறியேன்** - தீயவழி நடப்பவன்

10432 **வன்பதை** - கொடிய துன்பம்

10433 **வன்பில்** - கடிய மனத்தில்

10434 **வன்பு** - தீமை

10435 **வன்பெருநெருப்பு** - அணைக்க முடியாமல் பற்றி எரியும் பெரும் தீப்பிழம்பு

10436 **வன்மனத்தவன்** - வன்நெஞ்சினன்

10437 **வனிதையர்** - பெண்மகளிர்

வா

10438 **வாகை** - வெற்றி; அருள் வெற்றி

10439 **வாகை பெருமாலை** - அருள் வெற்றியுடைய திருமாலை

10440 **வாங்குவில்** - வளைந்த வில்

10441 **வாசி** - சுழி முனை சுவாசம்

10442 **வாட்கணார்** - வாளைப் போன்ற கண்களை உடையவர்

10443 **வாட்செல்லர்** - அருள் நெறியற்ற; கண்ணோட்டம் அற்ற

10444 **வாய் கொண்டு** - வாயினால் கூறுதலைக் கொண்டு

10445 **வார்** - கச்சு

10446 **வாரணமே** - யானை வடிவமே

10447 **வார்தல்** - பெருகுதல்

10448 **வாரார்** - கச்சினால் கட்டப்பெற்ற

10449 **வாரி** - கடல்

10450 **வாரிரண்டாம்** - இரண்டு கச்சாக

10451 **வாரை** - கச்சினை

10452 **வாவி** - நீர்த்தடாகம்

10453 **வாளாஉறழ்** - வாளைப் போன்ற; வீணாக அலைதல்

10454 **வாளாதிரிகின்றேன்** - வீணாக அலைகின்றேன்

10455 **வாளாரும் கண்ணியர்** - வாள் போலும் ஒளிர்ந்து ஈர்ப்பு உடைய கண்கள்

10456 **வான் அணிதல்** - விண்ணினைத் தாங்குதல்

10457 **வான் குதிரை** - உயர்ந்த ஏழு குதிரைகளை

10458 **வான் பிறந்தார்** - தேவாதி தேவர்கள்

10459 **வான் வழி** - ஆகாய மார்க்கம்

10460 **வான்நிகர்** - வானம் போல் கருமையான

10461 **வானம்** - தேவருலகம்

10462 **வானவர்தம் மகள்** - இந்திரன் மகள் தெய்வயானை

10463 **வானாடர்** - தேவ உலகத்தினர்

10464 **வானிட்ட ஒருவிலோ** - வானத்தில் தோன்றும் வானவில்லோ

10465 **வானுலகு** - தேவ உலகு

வி

10466 **விகடம்** - அழகு

10467 **விகற்பம்** - வித்தியாச எண்ணம்

10468 **விகாரம்** - வேறுபாட்டு எண்ணம்

10469 **விசிக்கில்** - இழுத்துச் சென்றால்

10470 **விஞ்ச** - மேம்பட

10471 **விஞ்சிய** - மேற்பட்ட

10472 **விடம்** - நஞ்சு

10473 **விடமயக்கு** - நஞ்சுபோல் அறிவை மயக்குகிற

10474 **விடமாய்** - நஞ்சாய்

10475 **விடலை** - அருள் நம்பி; அருள் வாலிபன்

10476 **விடும் புனல்** - ஓடும் நீர்

10477 **விடுமாட்டில்** - பொதி மாடு; கோயில் காளை

10478 **விடை** - எருது

10479 **விண்டல்** - மூங்கில்

10480 **விண்டு** - திருமால்; புகழ்பேசி

10481 **விண்ணோர் கோமான்** - தேவேந்திரன்

10482 **விண்ணோர்தம்நாடு** - அமராவதி

10483 **வித்தக** - அருள் வல்லபம் உடையவனே

10484 **வித்தகம்** - அருள் ஆற்றல்

10485 **வித்தகர்** - பக்தர்

10486 **வித்தகன்** - அருள் ஆற்றல் உடையவன்

10487 **வித்தை** - கல்வி

10488 **விதியும்** - பிரமதேவனும்

10489 **விபுல** - அருள் அறிஞனே; நுண்ணறிவு உடையேனே

10490 **விம்முறுதல்** - பருத்து விம்முதல்

10491 **விமல சொரூபன்** - மாயாதீத வடிவினன்

10492 **வியன்** - உயரிய

10493 **வியன்கரும்பே** - அருள் கரும்பே

10494 **வியன்திரு** - பரந்த நல்அருள்

10495 **விரதம்** - நோன்பு

10496 **விரை** - மணம்

10497 **விரைவாய்ந்து** - மணம் வாய்ந்த

10498 **வில்வக்குடலை** - வில்வ இலை நிறைந்த பூக்கூடை

10499 **விழல்** - பயனற்ற விழல் என்னும் தாவரம்

10500 **விழியார்** - பெண்டிர் கூட்டம்

10501 **விளக்குறழ்** - விளக்கு ஒளி போன்ற

10502 **விளம்பரும் பொருள்** - அறிந்து சொல்ல முடியாத பொருள்

10503 **விளம்பிய** - சொல்லிய; அருளிய

10504 **விறல்** - வெற்றி

10505 **வினைப்பகுதி** - அசுத்த மாயையால் விளையும் தீவினை

10506 **வினைபோகம்** - தீவினைப் பயன்

10507 **வினையைத்தள்ள** - வினையை நீக்க

10508 **வினோதர்** - அலங்கார வடிவினர்

வீ

10509 **வீட்டை** - மோட்சத்தை

10510 **வீண்வெறி** - வீணாகும் ஆசை

10511 **வீழ்வது** - அகப்படுவது

10512 **வீறாப்பு** - வீரத்திரம்

10513 **வீறும்** - தோற்றமும்

10514 **வீறுமுகம்** - அருள் வெற்றி ஓங்கும் திருமுகம்

வெ

10515 **வெஞ்சகம்** - கொடிய மனம்; பயனற்ற உலகம்

10516 **வெஞ்சுரம்** - வெம்மை சூழ்ந்த பாலைவனம்

10517 **வெண்பளிதம்** - வெண்மையாகிய கற்பூரம்

10518 **வெந்நாகு** - தீய நாகம்

10519 **வெப்பு** - கொடுமை

10520 **வெப்புற்ற** - அனல் பொருந்திய

10521 **வெம்பும் உயிர்** - பெரிய துன்பப்படும் உயிர்

10522 **வெய்ய நெஞ்சினர்** - காமம் வெகுளி மயக்கம் உடைய மனத்தவர்

10523 **வெயிலிட்ட மஞ்சளோ** - மாலைமஞ்சள் வெயிலோ

10524 **வெருவும்** - அஞ்சத் தகுந்த

10525 **வெவ்விலங்கு** - கொடிய விலங்கு

10526 **வெள்விடை** - வெண்மை நிறமுடைய காளை

10527 **வெள்ளம்** - கங்கை

10528 **வெளி** - பரவெளி; அருள்வெளி

10529 **வெளிமயக்கு** - ஆகாயம் போல் இல்லாத நிலை

10530 **வெளிமயல்** - இழி உலகத்தின் மயக்கம்

10531 **வெளியின் விளைவே** - மெய்ஞ்ஞான வெளியின் பயனே

10532 **வெற்பரசே** - திருத்தணிகை முருகனே

10533 **வெற்றார்புரம்** - வீண் செயல் புரியும் பகைவரின் திரிபுரம்

10534 **வெள்வளைகாள்** - சங்கு வளையல்கள் அணிந்த பெண்ணே

வே

10535 **வேங்கை** - புலி; புலிக்கால் முனிவர்

10536 **வேண்டி** - விரும்பி

10537 **வேணி** - சடை

10538 **வேதனை** - நான்முகனை

10539 **வேதியனே** - பாசத்தை நீக்கிய மெய்ஞ்ஞானியே

10540 **வேய்** - மூங்கில்

10541 **வேய்ந்து** - அணைந்து

10542 **வேய்மணிகளை** - மூங்கிலில் விளையும் முத்துக்களை

10543 **வேருக** - வேரருந்து விழ

10544 **வேல்கொளும்** - ஞான வேலை ஏற்றிருக்கும்

10545 **வேல்திறல்** - கூர்மை ஆற்றல்

10546 **வேலை** - கடல்

10547 **வேளிலே** - முருகனிலே; மன்மதனிலே

10548 **வேளை** - இறக்கும் தருணம்

10549 **வேறாக்குதல்** - இழக்கச் செய்தல்

வை

10550 **வைப்பின் அணியரே** - அருள் முதலீட்டினையுடைய அழகரே

10551 **வைவளர்** - கூர்மையான வேல் போல் நீண்ட

விண்ணப்பக் கலிவெண்பா கோயில்
தேவாரத் திருத்தலங்கள் பதிக கோயில்கள்

1. தில்லை (சிதம்பரம்)

இறைவன் : அம்பலக்கூத்தன், அம்வாவாணர், நடராசர், திருச்சிற்றம்பலமுடையார்
இறைவி : சிவகாமி, சிவகாமசுந்தரி
தலமரம் : தில்லை,ஆல்
தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்
பாடல் : மூவர்
நாடு : சோழநாடு (வடகரை)

வரிசை எண் : 55
தொலைபேசி : 04144 227171, 230251
அலைபேசி : 9443986996
முகவரி : அருள்மிகு . நடராசர் திருக்கோயில், சிதம்பரம் அஞ்சல், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் 608 001.

திருவருட்பா பாடல் விண்ணப்பக் கலிவெண்பா எண் 1 பாடல் எண் 2

சொற்பெறுமெய்ஞ் ஞானச் சுயஞ்சோதி யாந்**தில்லைச்**
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே
நற்சிவையந் தாயின் னுலகனைந்துந் தாங்கும் திருப்புலியூர்க்
கோயி லமார்ந்தகுணக் குன்றமே

தேவார திருத்தலம் வரிசை எண். 117 - தில்லை, கோயில் (சிதம்பரம்) - பாடல்கள்

சம்பந்தர் – 1 ஆம் திருமுறை – பதிகம் 80 பண் : குறிஞ்சி – இராகம் : எதுகுல காம்போதி

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே

சம்பந்தர் – 3 ஆம் திருமுறை – பதிகம் 1 பண் : காந்தாரப்பஞ்சமம் – இராகம் : பூபாளம்

ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத **சிற்றம்பலம்**
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும்
பல்சடைப் பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் கருங்க எம தொல்வினையே

திருநாவுக்கரசர் – 5 ஆம் திருமுறை – பதிகம் 1 திருக்குறுந்தொகை – இராகம் : மாயமாளவகௌளை

அன்னம் பாலிக்கும் **தில்லைச்** சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்கும் ஆறுகண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

சுந்தரர் – 7 ஆம் திருமுறை – பதிகம் 90 – பாடல் 1 பண் : குறிஞ்சி – இராகம் : அரிகாம்போதி

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மன்னே நீ வாழுநாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச் **சிற்றம்பலத்து** எம்பெருமானைப் பெற்றாமன்றே

ஐம்பூதலங்கள்

நீர் தல எண் 61 (திருஆனைக்கா),
வாயு தல எண் 254 (திருக்காளத்தி)
அக்கினி தல எண் 235 (திருஅண்ணாமலை)
மண் தல எண் 236 (திருக்கச்சி ஏகம்பம் காஞ்சிபுரம்)
ஆகாயம் தல எண் 1 (தில்லை சிதம்பரம்)

பஞ்சசபைகள்

பொற்சபை சிதம்பரம் தல எண் 1
வெள்ளிசபை மதுரை தல எண் 194
ரத்தினசபை திருவலங்காடு தல எண் 250
தாமிரசபை திருநெல்வேலி தல எண் 205
சித்திர சபை குற்றாலம் – தல எண் 206

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

3. வேட்களம்(திருவேட்களம்)

இறைவன்	:	பாசுபதேஸ்வரர், பாசுபதநாதர்	அலைபேசி	:	9842008291, 9843388552
இறைவி	:	சற்குணம்பாள், நல்லநாயகி	முகவரி	:	அருள்மிகு . பாசுபதேஸ்வரர் திருக்கோயில்
தலமரம்	:	மூங்கில்			திருவேட்களம், அண்ணாமலைநகர்
தீர்த்தம்	:	திருக்குளம்			அஞ்சல்,
பாடல்	:	சம்பந்தர், அப்பர்			சிதம்பரம், சிதம்பரம் வட்டம், கடலூர்
நாடு	:	சோழநாடு (வடகரை)			மாவட்டம் 608 002.
வரிசை எண்	:	56	தலச்சிறப்பு	:	அருச்சுவைக்குப் பாசுபதம் அருளியதலம்

திருவருட்பா பாடல் எண் 2

மாயமிகும் வாட்களமுற் றாங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்
வேட்களமுற் றோங்கும் விழுப்பொருளே

270 - திருவேட்களம்

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை — பதிகம் 39 பாடல் 1
பண் : தக்கராகம் — இராகம் : காம்போதி

அந்தமும் ஆதியுமாகிய அண்ணலார் அழலங்கை அமர்ந்திலங்க
மந்தமுழவம் இயம்ப மலைமகள் காண நின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலை கங்கை தண்மதியம் அயலே ததும்ப
வெந்த வெண்ணீறு மெய்பூசும் வேட்கள நன்னகராரே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை — பதிகம் 42 பாடல் 1
திருக்குறுந்தொகை — இராகம் : நாதநாமக்கிரியா

நன்று நாள்தொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர் திருவேட்களத்துள் உறை
துன்று பொற்சடையானைத் தொழுமினே

கட்டப்பட்டுக் கவலையில் வீழாதே
பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம் நீர்
சிட்டனார் திருவேட்களம் கைதொழப்
பட்ட வல்வினை ஆயின பாறுமே - 6

நட்டமாடிய நம்பனை நாள்தொறும்
இட்டத்தால் இனிதாக நினைமினோ
வட்டவார் முலையாள் உமை பங்கனார்
சிட்டனார் திருவேட்களம் தன்னையே - 8

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

4.நெல்வாயில் (திருநெல்வாயில் அரத்துறை) (திருவரத்துறை, திருவட்டுறை)

இறைவன் : உச்சிநாதேஸ்வரர், உச்சிநாதசுவாமி
இறைவி : கனகாம்பிகை
தலமரம் : நெல்லி
தீர்த்தம் : குளம் (கிருபா சமுத்திரம்)
பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (வடகரை) வரிசை எண் : 57
அலைபேசி : 9842624580
முகவரி : அருள்மிகு உச்சிநாதசுவாமி திருக்கோயில், சிவபுரி & அஞ்சல், (வழி) அண்ணாமலை நகர், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் 608 002
தலச்சிறப்பு : கன்வ மகரிஷி வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 3

வாழ்க்கைமனை
நல்வாய லெங்கு நவமணிக்குன்றோங்குதிரு
நெல்வாய னின்றொளிரு நீளொளியே

174 - திருநெல்வாயில் (சிவபுரி)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 26 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

புடையினார் புள்ளி கால் பொருந்திய
மடையினார் மணி நீர் **நெல்வாயிலார்**
நடையினால் விரல் கோவணம் நயந்த
உடையினார் எமதுச்சியாரே

காரினார் கொன்றைக் கண்ணியார் மல்கு
பேரினார் பிறையோடு இலங்கிய
நீரினார் **நெல்வாயிலார்** தொழும்
ஏரினார் எமதுச்சியாரே - 6

பற்றினான் அரக்கன் கயிலையை
ஒற்றினார் ஒருகால் விரலுற
நெற்றியார **நெல்வாயிலார்** தொழும்
பெற்றியார் எமதுச்சியாரே - 8

நெண்பயங்கு **நெல்வாயில்** ஈசனைச்
சண்பை ஞானசம்பந்தன் சொல்லிவை
பண்பயன் கொளப் பாட வல்லவர்
விண்பயன் கொளும் வேட்கையாளரே - 11

5. கழிப்பாலை (திருக்கழிப்பாலை)

இறைவன் : பால்வண்ணநாதேஸ்வரர்
இறைவி : வேதநாயகி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : கொள்ளிடம் தீர்த்தம்
பாடல் : மூவர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 58
தொலைபேசி : 04364 -235462 அலைபேசி : 9842624580
முகவரி : அருள்மிகு. பால்வண்ணநாதேஸ்வரர் திருக்கோயில், திருக்கழிபாலை, சிவபுரி அஞ்சல் (வழி) அண்ணாமலை நகர், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம், 608 002

திருவருட்பா பாடல் எண் 4

செல்வாய்த்
தெழிப்பாலை வேலைத் திரையொலிபோ லார்க்குங்
கழிப்பாலை யின்பக் களிப்பே

78 - திருக்கழிப்பாலை

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 21 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

புனலாடிய புன்சடையாய் அரணம்
அனலாக விழித்தவனே அழகார்
கனலாடலினாய் **கழிப்பாலை** உளாய்
உனவார் கழல் கைதொழுது உள்குதுமே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 40 பாடல் 7
குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

ஐயனே அழகே அனலேந்திய
கையனே கறைசேர் தருகண்டனே
மையுலாம் பொழில்சூழ் **கழிப்பாலை** எம்
ஐயனே விதியே அருள் என்னுமே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 23 பாடல் 2
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

எங்கேனும் இருந்து உன்னடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்து என்னோடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை அறுத்திட்டு எனையாளும்
கங்கா நாயகனே **கழிப்பாலை** மேயானே

6.நல்லூர் (திருநல்லூர்ப்பெருமணம்) (ஆச்சாள்புரம்)

இறைவன் : சிவலோகத் தியாகேசர், பெருமணமுடைய மகாதேவர்,
இறைவி : வெண்ணீற்று உமைநங்கை,சுவேத விபூதி நாயகி, விபூதி கல்யாணி
தலமரம் : மாமரம்
தீர்த்தம் : பஞ்சாட்ச தீர்த்தம் மற்றும் பத்து தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 59
தொலைபேசி : 04364 - 277800,278272 அலைபேசி : 9688893953
முகவரி : அருள்மிகு. சிவலோகத் தியாகேசர் திருக்கோயில்,ஆச்சாள்புரம் & அஞ்சல், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 101
தலச் சிறப்பு : திருஞான சம்பந்தர் முத்தி தலம் சம்பந்தர் தன் திருமணத்தன்று வந்திருந்த அடியார்களுடனும் மனைவி தோத்திரப் பூர்ணாம்பிகையுடன் சிவ ஜோதியில் கலந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 5

விழிப்பாலன்
கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக்கச் சோதிதரு **நல்லூர்ப் பெருமணம்** வாழ் நன்னிலையே

157 - திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாள்புரம்)

பாடல்கள்
சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 125 பாடல் 1
பண் : அந்தாளிகுறிஞ்சி இராகம் : சாமா

கல்லுரர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லுரர்ப் பெருமணம் பாட்டு மெய்யாய்த் தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே

அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு **நல்லூர்ப் பெருமணம்** மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவார் அல்லர் தொண்டு செய்வாரே - 3

தங்கிருந்தீர் அன்று தாளால் அரக்கனை
உக்கிருந்து ஒல்க உயர்வரைக் கீழிட்டு
நக்கிருந்தீர் இன்று **நல்லூர்ப் பெருமணம்**
புக்கிருந்தீர் எமைப் போக்கருளீரே - 8

நறும்பொழில் காழியுள் ஞானசம்பந்தன்
பெரும்பத **நல்லூர்ப் பெருமண**த்தானை
உறும் பொருளால் சொன்ன ஒண்தமிழ் வல்லார்க்கு
அறும் பழிபாவம் அவலம் இலரே - 11

7.மயேந்திரப்பள்ளி (திருமயேந்திரப்பள்ளி)

இறைவன் : திருமேனியழகர், சோமசுந்தரர்
இறைவி : வடிவாம்பாள். வடிவாம்பிகை
தலமரம் : கண்டமரம்.தாழை
தீர்த்தம் : மயேந்திர தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 60
தொலைபேசி : 04364 -292309 அலைபேசி : 9751100938
முகவரி : அருள்மிகு. திருமேனியழகர் திருக்கோயில் மகேந்திரப்பள்ளி & அஞ்சல், வழி ஆச்சாள்புரம், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 101
தலச் சிறப்பு : மகேந்திரன், இந்திரன் வழிபட்டது, பங்குனியில் ஒரு வாரம் சூரிய ஒளி இறைவன் மீது படுகிறது.

திருவருட்பா பாடல் எண் 6

சொல்லுந்
தயேந்திர ருள்ளத் தடம்போ விலங்கும்
மயேந்திரப் பள்ளியின்ப வாழ்வே

225 - திருமயேந்திரப்பள்ளி (மகேந்திரப்பள்ளி)

பாடல்கள்
சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 31 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயிலெய்த **மயேந்திரப் பள்ளி**யுள்
அரவரை அழகனை அடியினை பணிமினே

சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்த எம் இறையவன்
மந்திர மறைவளர் **மயேந்திரப் பள்ளி**யுள்
அந்தமில் அழகனை அடிபணிந்து உய்மினே - 6

சிரம் ஒருபதும் உடைச் செருவலி அரக்கனைக்
கரம் இருபதும் இறக்கனவரை அடர்த்தவன்
மரவமர் பூம்பொழில் **மயேந்திரப் பள்ளி**யுள்
அரவமர் சடையனை அடிபணிந்து உய்ம்மினே - 8

வம்புலாம் பொழிலணி **மயேந்திரப் பள்ளி**யுள்
நம்பனார் கழலடி ஞானசம்பந்தன் சொல்
நம்பரம் இதுவென நாவினால் நவில்பவர்
உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவரே - 11

8. வாயில் (தென்திருமுல்லைவாயில்)
(திருமுல்லைவாசல்)

இறைவன் : யூதிகாபரமேஸ்வரர்,முல்லைவனநாதர், முல்லைவனேஸ்வரர்
இறைவி : சத்யானந்த சௌந்தரி, கோதையம்மை
தலமரம் : முல்லை
தீர்த்தம் : சக்கர தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 61 அலைபேசி : 9486339538, 9486524626
முகவரி : அருள்மிகு. முல்லைவனநாதர் திருக்கோயில், திருமுல்லைவாசல் & அஞ்சல், (வழி) சீர்காழி, சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 113
தலச் சிறப்பு : கடற்கரையோரக் கோயில், சோழமன்னனின் குதிரையின் கால்களை முல்லைக்கொடி சுற்றிக்கொண்டது அதனை மன்னன் வெட்டிய போது இரத்தம் வெளிப்பட அங்கே இறைவன் திருமேனி கண்டான் அவன் அவ் இலிங்கத்தை எடுத்துப் பிரதிட்டை செய்தான். சுவாமியின் திருமேனியில் வெட்டு தழும்புகள் உள்ளன.

திருவருட்பா பாடல் எண் 7

கயேந்திரனைக்
காயலுறா தன்றுவந்து காத்தோன் புகழ்**முல்லை**
வாயிலி னோங்கு மணிவிளக்கே

150 - தென்திருமுல்லைவாயில் (திருமுல்லைவாசல்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 88 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

துளிமண்டி உண்டு நிறவந்த கண்டன் நடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி உம்பர் உலகம் கடந்த உமை பங்கன் எங்கள் அரனூர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த கமலங்கள் தங்கு மதுவில்
தெளிமண்டி உண்டு சிறைவண்டு பாடு **திருமுல்லைவாயில்** இதுவே

ஊனேறு வேலின் உருவேறு கண்ணி ஒளியேறு கொண்ட ஒருவன்
ஆனேற தேறி அழகேறு நீறன் அரவேறு பூணும் அரனூர்
மானேறு கொல்லை மயிலேறி வந்து குயிலேறு சோலை மருவித்
தேனேறு மாவின் வளமேறி ஆடு **திருமுல்லைவாயில்** இதுவே - 6

அணிகொண்ட கோதையவள் நன்றும் ஏத்த அருள் செய்த எந்தை மருவார்
திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி **திருமுல்லைவாயில்** இதன்மேல்
தணிகொண்ட சிந்தை அவர் காழிஞான மிகுசம்பந்தன் ஒண்தமிழ்களின்
அணிகொண்ட பத்தும் இசைபாடு பத்தர் அகல்வானம் ஆள்வார் மிகவே - 11

9.கலிக்காமூர் (திருகலிக்காமூர்)
(அன்னப்பன் பேட்டை)

இறைவன் : சுந்தரேஸ்வரர்
இறைவி : சுந்தராம்பாள்,அழகம்மை
தீர்த்தம் : சந்திர தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 62
அலைபேசி : 9360577673, 9787929799
முகவரி : அருள்மிகு. சுந்தரேஸ்வர் திருக்கோயில், அன்னப்பன்பேட்டை, தென்னாம்பட்டினம் அஞ்சல், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 106
தலச் சிறப்பு : பராசர முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 8

மேய
பலிக்காவூர் தோறும் பதஞ்சேப்பச் சென்று
கலிக்காமூர் மேவுங் கரும்பே

77 - திருக்கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 105 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

மடல்வரையின் மதுவிம்மு சோலை வயல்சூழ்ந்து அழகாரும்
கடல்வரை ஓதம் கலந்து முத்தம் சொரியும் **கலிக்காமூர்**
உடல்வரை இன்னுயிர் வாழ்க்கையாய ஒருவன் கழலேத்த
இடர் தொடரா வினையான சிந்தும் இறைவன் அருளாமே

துறைவளர் கேதகை மீது வாசம் தூவான் மலிதென்றல்
கறைவளரும் கடலோதம் என்றும் கலிக்கும் **கலிக்காமூர்**
மறைவளரும் பொருள் ஆயினானை மனத்தால் நினைந்தேத்த
நிறைவளரும் புகழ் எய்தும் வாதை நினையா வினைபோமே - 6

ஆழியுள் நஞ்சமுதார உண்டு அன்று அமரர்க்கு அமுதுண்ண
ஊழிதொறும் உளரா அளித்தான் உலகத்துயர்கின்ற
காழியுள் ஞானசம்பந்தன் சொன்ன தமிழால் **கலிக்காமூர்**
வாழி எம்மானை வணங்கியேத்த மருவா பிணிதானே - 11

10. சாய்க்காடு (திருச்சாய்க்காடு)

(சாயாவனம்)

இறைவன் : சாயாவனேஸ்வரர், இரத்தினச்சாயாவனேஸ்வரர்
இறைவி : கோஷாம்பாள்,குயிலினும் நன்மொழியம்மை
தலமரம் : பைஞ்சாய்
தீர்த்தம் : காவிரி தீர்த்தம், ஐராவத தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்,அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 63
தொலைபேசி : 04364 -260151 அலைபேசி : 9443107069
முகவரி : அருள்மிகு. சாயாவனேஸ்வரர் திருக்கோயில்
சாயாவனம், காவிரிப்பூம்பட்டினம் அஞ்சல்,
சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 105
தலச் சிறப்பு : இயற்பகை நாயனார் தம் மனைவியை இறைவனுடன் வழி அனுப்பி வைக்க இந்த தலம் வந்தார்

திருவருட்பா பாடல் எண் 9

வலிக்காலில்
பாய்க்காடு கின்றவொரு பச்சை முகில்பரவுஞ்
சாய்க்காடு மேவுந் தடங்கடலே

125 - திருச்சாய்க்காடு (சாயாவனம்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 41 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலும்
கண்புகார் பிணியறியார் கற்றாரும் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார் **சாய்க்காட்டெம்** தலைவன் தாள் சார்ந்தாரே

நீநாளும் நன்நெஞ்சே நினைகண்டாய் ஆரறிவார்
சாநாளும் வாழ்நாளும் **சாய்க்காட்டு** எம்பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே - 3

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 65 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழு மார்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்று என்று மெய்கொள்வான் வந்த காலன்
பாடுதான் செலலும் அஞ்சிப் பாதமே சரணம் என்னச்
சாடினார் காலன் மாளச் **சாய்க்காடு** மேவினாரே

11. பல்லவனீச்சரம் (திருப்பல்லவனீச்சுரம்)

(காவிரிபூம்பட்டினம், பூம்புகார்)

இறைவன் : பல்லவனேஸ்வரர்
இறைவி : சௌந்தரநாயகி
தலமரம் : மல்லிகை,புன்னை
தீர்த்தம் : காவிரி தீர்த்தம், ஜான்னவி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 64
தொலைபேசி : 04364 -260594 அலைபேசி : 9443719193,9944665998
முகவரி : அருள்மிகு. பல்லவனேஸ்வரர் திருக்கோயில்,
காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார் அஞ்சல்,
சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 105
தலச் சிறப்பு : இயற்பகை நாயனார் மற்றும், பட்டனத்தார் அவதாரத் தலம், பல்லவ மன்னன் வழிபட்டதலம், சிலப்பதிகாரம் தொடங்கிய தலம்

திருவருட்பா பாடல் எண் 10

வாய்க்கமையச்
சொல்லவ னீச்சரங்கு தோயவும்ப ராம்பெருமைப்
பல்லவ னீச்சரத்தெம் பாவனமே

186 - திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 65 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

அடையார்தம் புரங்கள் மூன்றும் ஆரழலில் அழுந்த
விடையார் மேனியராய்ச் சீறும் வித்தகர் மேய விடம்
கடையார் மாட நீடியெங்கும் கங்குல் புறந்தடவப்
படையார் புரிசைப் பட்டினம் சேர் **பல்லவனீச்சரமே**

குழலினோசை வீணை மொந்தை கொட்ட முழவதிரக்
கழலினோசை ஆர்க்க ஆடும் கடவுள் இருந்த இடம்
சுழியிலாரும் கடலில் ஓதம் தெண்திரை மொண்டு எறியப்
பழியிலார்கள் பயில் புகாரில் **பல்லவனீச்சரமே** - 6

தேரரக்கன் மால்வரையைத் தெற்றியெடுக்க அவன்
தாரரக்கும் திண்முடிகள் ஊன்றிய சங்கரனூர்
காரரக்கும் கடல்கிளர்ந்த காலமெலாம் உணரப்
பாரரக்கம் பயில் புகாரில் **பல்லவனீச்சரமே** - 8

பத்தர் ஏத்தும் பட்டினத்துப் **பல்லவனீச்சரத்து** எம்
அத்தன் தன்னை அணிகொள் காழி ஞானசம்பந்தன் சொல்
சித்தம் சேரச் செப்புமாந்தர் தீவினை நோயிலராய்
ஒத்தமைந்த உம்பர் வானில் உயர்வினோடு ஓங்குவரே - 11

12. வெண்காட்டின் (திருவெண்காடு)

இறைவன் : சுவேதாரண்யேஸ்ரர், வெண்காட்டுநாதர்
இறைவி : பிரமவித்யாம்பிகை
தலமரம் : வடஆல்
தீர்த்தம் : முக்குளம் (அக்கினி,சூரிய, சந்திர தீர்த்தங்கள்)
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 65
தொலைபேசி : 04364 -256424 அலைபேசி : 9943527792
முகவரி : அருள்மிகு. சுவேதாரண்யேவரர் திருக்கோயில்,
திருவெண்காடு &அஞ்சல் , சீர்காழி வட்டம்,
நாகை மாவட்டம் 609 114
தலச் சிறப்பு : மெய்கண்டார் அவதாரத்திற்கு வித்திட்ட தலம்,
பிள்ளைப் பேற்றை அளிக்கவல்லதலம், புதன் சந்நித
இங்கு விசேடம்

திருவருட்பா பாடல் எண் 11

நல்லவர்கள்
கண்காட்டு நெற்றிக் கடவுளே யென்றுதொழ
வெண்காட்டின் மேவுகின்ற மெய்ப்பொருளே

265 - திருவெண்காடு

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 48 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 49 பாடல் 3
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழலாதே
வானோக்கும் வழியாவது நின்மினோ
தானோக்கும் தன்னடியவர் நாவினில்
தேனோக்கும் **திருவெண்காடு** அடை நெஞ்சே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 6 பாடல் 5
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

குடமெடுத்து நீரும் பூவும் கொண்டு தொண்டர் ஏவல் செய்ய
நடமெடுத்து ஒன்றாடிப்பாடி நல்குவீர் நீர் புல்கும் வண்ணம்
வடமெடுத்த கொங்கை மாதோர் பாகமாக வார்கடல்வாய்
விடம் மிடற்றில் வைத்ததென்னே வேலைசூழ் **வெண்காடனீரே**

13.சீர்காட்டுப்பள்ளி (கீழைத்திருக்காட்டுப் பள்ளி) (ஆரண்யேஸ்வரர் கோயில்)

இறைவன் : ஆரண்யசுந்தரேஸ்வரர்
இறைவி : அகிலாண்டநாயகி
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 66 அலைபேசி : 9442347433,9443985770
முகவரி : அருள்மிகு. ஆரண்யசுந்தரேஸ்வரர்
திருக்கோயில், கீழைத் திருக்காட்டுப்பள்ளி
திருவெண்காடு அஞ்சல், சீர்காழி வட்டம்,
நாகை மாவட்டம் 609 114
தலச் சிறப்பு : இந்திரன், நண்டு பூசித்ததலம்

திருவருட்பா பாடல் எண் 12

தண்காட்டிக்
கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள்சூழ்
சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே

91 - கீழைத் திருக்காட்டுப்பள்ளி (ஆரண்யேஸ்வரர் கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 5 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

செய்யருகே புனல்பாய ஓங்கிச் செங்கயல்
பாயச் சிலமலர்த்தேன்
கையருகே கனி வாழை ஈன்று கானலெல்லாம்
கமழ் **காட்டுப்பள்ளிப்**
பையருகே அழல்வாய் அவைவாய்ப்
பாம்பணையான் பணைத்தோளி பாகம்
மெய்யருகே உடையானை உள்கி விண்டவர்
ஏறுவர் மேலுலகே

தளையவிழ் தண்ணிற நீலநெய்தல் தாமரை
செங்கழுநீரும் எல்லாம்
களையவிழும் குழலார் கடியக்
காதலிக்கப்படும் **காட்டுப்பள்ளித்**
துளை பயிலும் குழல் யாழ் முரலத்
துன்னிய இன்னிசையால் துதைந்த
அளைபயில் பாம்பரையார்த்த செல்வர்க்கு
ஆட்செய அல்லல் அறுக்கலாமே - 6

பொன்னியல் தாமலை நீல நெய்தல் போதுகளால்
பொலிவெய்து பொய்கைக்
கன்னியர் தாங்குடை **காட்டுப்பள்ளிக்**
காதலனைக் கடல் காழியர்கோன்
துன்னிய இன்னிசையால் துதைந்து
சொல்லிய ஞானசம்பந்தன் நல்ல
தன்னிசையால் சொன்ன மாலை பத்தும்
தாங்க வல்லார் புகழ் தாங்குவாரே - 11

14.குருகாவூர் (திருக்குருகாவூர்) (திருக்கடாவூர்)

இறைவன் : சுவேதரிஷபேஸ்வரர், வெள்ளடைநாதர், வெள்ளடையீஸ்வரர்
இறைவி : நீலோத்பல விசாலாட்சி, காவியங்கண்ணி
தீர்த்தம் : பால்கிணறு தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், சுந்தரர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 67 அலைபேசி : 9245612705 , 9965426748
முகவரி : அருள்மிகு வெள்ளடையீஸ்வரர் திருக்கோயில், திருக்கடாவூர், வடகால் அஞ்சல், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 115
தலச் சிறப்பு : சுந்தரருக்கு இறைவன் நீரும் உணவும் அளித்துப் பசியைப் போக்கிய தலம்

திருவருட்பா பாடல் எண் 13

பார்காட்
டுருகாவூ ரெல்லா மொளிநயக்க வோங்குங்
குருகாவூர் வெள்ளடையெங் கோவே

98 - திருக்குருகாவூர் (திருக்கடாவூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 124 பாடல் 1
பண் : அந்தாளிக்குறிஞ்சி இராகம் : சாமா

சுண்ணவெண் நீறணிமார்பில் தோல் புனைந்து
எண்ணரும் பல்கணம் ஏத்த நின்று ஆடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞகனாரே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 29 பாடல் 3
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக்கு உழல்வானே
காடுநல் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருள் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே - 6

15.சீர்காழி (சீகாழி) (சீர்காழி)

இறைவன் : பிரமபுரீஸ்வரர், தோணியப்பர், சட்டைநாதர்
இறைவி : பெரியநாயகி, திருநிலைநாயகி
தலமரம் : பாரிசாதம்
தீர்த்தம் : பிரமதீர்த்தம் மற்றும் 21 தீர்த்தங்கள்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 68 தொலைபேசி : 04364 -270235
முகவரி : அருள்மிகு. பிரமபுரீஸ்வரர் திருக்கோயில், சீர்காழி & அஞ்சல், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 110
தலச் சிறப்பு : திருஞான சம்பந்தர் அம்பால் கொடுத்த பாலடிசிலை அருந்திய தலம் சீர்காழிக்கு : பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, சீர்காழி, சொச்சைவயம், கழுமலம் எனப் பன்னிரு பெயர்கள்

திருவருட்பா பாடல் எண் 14

அருகாத
கார் காழி னெஞ்சக் கவுணியர்க்குப் போதமருள்
சீர்காழி ஞானத் திரவியமே

131 - சீகாழி (சீர்காழி)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 1 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : கம்பீர நாட்டை

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூயவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்னறே

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 113 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று உகந்தது கந்தனையே பிரமபுரத்தை உகந்தனையே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 45 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

மாதியன்று மனைக்கிரு என்றக்கால்
நீதிதான் சொல் நீயெனக்கு ஆரெனும்
சோதியார் தரு தோணிபுரவர்க்குத்
தாதி ஆவன் நான் என்னும் என் தையலே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 58 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்த எம்தலைவனை மலையின்
மாதினை மதித்து அங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த எம்மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக்
காதில் வெண் குழையனை கடல் கொளமிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே

16. கோலக்கா (திருகோலக்கா)

இறைவன் : சப்தபுரீஸ்வரர், தாளேஸ்வரர், திருத்தாளமுடையார்
இறைவி : தொனிப்ரதம்பாள், ஓசைகொடுத்த நாயகி
தலமரம் : கொன்றை தீர்த்தம் : ஆனந்த தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், சுந்தரர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 69 அலைபேசி : 9843011264 , 9865885780
முகவரி : அருள்மிகு. சப்தபுரீஸ்வரர் திருக்கோயில், திருக்கோலக்கா, சீர்காழி அஞ்சல், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம், 609 110
தலச் சிறப்பு : திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் தந்த தலம் இந்த கோயிலில் தாய் ஒருத்தி பேசாதிருந்த தன் குழந்தை பேச ஆரம்பித்தவுடன், தான் பிரார்த்தித்துக் கொண்டவாறு அம்பாளுக்கு பொற்றாளம் வழங்கினார்.

திருவருட்பா பாடல் எண் 15

ஓர்காழிப்
பாலற்கா வன்று பசும்பொற்றா ளங்கொடுத்த
கோலக்கா மேவுங் கொடையாளா

118 - திருக்கோலக்கா

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 23 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் **கோலக் காவு**ளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சும் கீழ்
உடையும் கொண்ட உருவம் என் கொலோ

நலங்கொள் காழி ஞானசம்பந்தன்
குலங்கொள் **கோலக் கா**வுளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே - 11

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 62 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

புற்றில் வாளரவு ஆர்த்த பிரானை
பூத நாதனைப் பாதமே தொழுவார்
பற்றுவான் துணையெனக்கு எளி வந்த
பாவ நாசனை மேவரியானை
முற்றலார் திரிபுரம் ஒரு மூன்றும்
பொன்ற வென்றிமால் வரை அரிஅம்பாக்
கொற்ற வில் அங்கை ஏந்திய கோனைக்
கோலக் காவினில் கண்டுகொண்டேனே

17. புள்ளிருக்கும் வேளூர் (புள்ளிருக்குவேளூர்) (வைத்தீஸ்வரன் கோயில்)

இறைவன் : வைத்தியநாதர்
இறைவி : தையல் நாயகி
தலமரம் : வேம்பு
தீர்த்தம் : சித்தாமிர்த தீர்த்தம்
பாடல் : அப்பர், சம்பந்தர்.
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 70
தொலைபேசி : 04364 - 279423 அலைபேசி : 9843544292
முகவரி : அருள்மிகு. வைத்தியநாதர் திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில் & அஞ்சல், சீர்காழி வட்டம், நாகை மாவட்டம் 609 117
தலச் சிறப்பு : ஜடாயு, வேதம், முருகன் வழிபட்ட ஊராதலின் புள்ளிருக்கு வேளூர் என்றானது முருகன் வேல் வாங்கிய தலம் செவ்வாய் தலம் இறைவன் வைத்தியநாதரோடு இணைந்து உயிர்களுக்கு மருத்துவம் பார்க்கும் தலம்

திருவருட்பா பாடல் எண் 16

கோலக்கா
உள்ளிருக்கும் புள்ளிருக்கு மோதும் புகழ்வாய்ந்த
புள்ளிருக்கும் வேளூர்ப் புரிசடையாய்

207 - புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 43 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர் மதியம்
உள்ளார்ந்த சடைமுடி எம்பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயு என்பார் தாமிருவர்
புள்ளானார்க்கு அரையன் இடம் **புள்ளிருக்குவேளூரே**

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 79 பாடல் 8
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள உள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளினார் பணி **புள்ளிருக்குவேளூர்**
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 54 பாடல் 8
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை மந்திரமும்
தந்திரமும் மருந்துமாகித்
தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னைத் திரிபுரங்கள்
தீயெழத் திண்சிலை கைக்கொண்ட
போரானைப் **புள்ளிருக்கு வேளூரானைப்**
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே

18. கண்ணார் (திருக்கண்ணார் கோயில்)

(குறுமாணக்குடி)

இறைவன் : கண்ணாயிரமுடையார், கண்ணாயிரநாதர், சஹஸ்ரநேத்ரேஸ்வரர்
இறைவி : முருகுவளர்கோதை, சுகந்தகுந்தளாம்பிகை
தலமரம் : சரக்கொன்றை தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 71 அலைபேசி : 9245736552 , 9442258085
முகவரி : அருள்மிகு. கண்ணாயிரமுடையார் திருக்கோயில், குறுமாணக்குடி , கொண்டத்தூர் அஞ்சல், தரங்கம்பாடி வட்டம், நாகை மாவட்டம் 609 117
தலச் சிறப்பு : இந்திரன் சாபம் நீங்கிய தலம். திருமணப் பிரார்த்தனைத் தலம்

திருவருட்பா பாடல் எண் 17

கள்ளிருக்கும்
காவின் மருவுங் கனமுந் திசைமணக்கும்
கோவின் மருவுகண்ணார் கோயிலாய்

69 - திருக்கண்ணார்கோயில் (குறுமாணக்குடி)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 101 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி

தண்ணார் திங்கள் பொங்கரவம் தாழ் புனல்சூடிப்
பெண் ஆணாய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவோர்கட்கு இடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே

விண்ணவருக்காய் வேலையுள் நஞ்சம் விருப்பாக
உண்ணவனைத் தேவர்க்கு அமுது ஈந்து எவ்வுலகிற்கும்
கண்ணவனைக் **கண்ணார்** திகழ் கோயில் கனிதன்னை
நண்ண வல்லோர்கட்கு இல்லை நமன்பால் நடலையே - 6

பெருக்கெண்ணாத பேதை அரக்கன் வரைக்கீழால்
நெருக்குண்ணாத்தன் நீள்கழல் நெஞ்சில் நினைந்தேத்த
முருக்குண்ணாதோர் மொய்கதிர் வாள்தேர் முன்னீந்த
திருக்கண்ணார் என்பார் சிவலோகம் சேர்வாரே - 8

காமரு **கண்ணார்**கோயில் உளானைக் கடல்சூழ்ந்த
பூமரு சோலைப் பொன்னியல் மாடப் புகலிக்கோன்
நாமரு தொன்மைத் தன்மையுள் ஞானசம்பந்தன்
பாமரு பாடல் பத்தும் வல்லார் மேல் பழிபோமே - 11

19. கடைமுடி (திருக்கடைமுடி) (கீழையூர்)

இறைவன் : கடைமுடிநாதர், அந்திசம்ரட்சணீஸ்வரர்
இறைவி : அபிராமி
தலமரம் : கிளுவை
தீர்த்தம் : கருணா தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 72 அலைபேசி : 9095120653, 9442779580, 9345660711
முகவரி : அருள்மிகு. கடைமுடிநாதர் திருக்கோயில், கீழையூர் & அஞ்சல், தரங்கம்பாடி வட்டம், நாகை மாவட்டம், 609 304
தலச் சிறப்பு : பிரமன் மற்றும் கண்வர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 18

மாவின்
இடைமுடியின் றீங்கனியென் றெல்லின் முசுத்தாவும்
கடைமுடியின் மேவுங் கருத்தா

67 - திருக்கடைமுடி (கீழையூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 111 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

அருத்தனை அறவனை அமுதனை நீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை அல்லது இங்குலகம் ஏத்தும்
கருத்தவன் வளநகர் **கடைமுடி**யே

படவரவு ஏரல்குல் பல்வளைக்கை
மடவரலாளை ஓர் பாகம் வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள்தன் வளநகர் **கடைமுடி**யே - 6

நோதல்செய்து அரக்கனை நோக்கழியச்
சாதல்செய்து அவனடி சரண் எனலும்
ஆதரவருள் செய்த அடிகளவர்
காதல்செய் வளநகர் **கடைமுடி**யே - 8

பொன் திகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை **கடைமுடிச்** சிவனடியை
நன்றுணர் ஞானசம்பந்தன் சொன்ன
இன்தமிழ் இவைசொல இன்பமாமே - 11

20. நின்றியூர் (திருநின்றியூர்)

இறைவன் : மகாலட்சுமீசர், லட்சுமிபுரீஸ்வரர்
இறைவி : லோகநாயகி
தலமரம் : விளா தீர்த்தம் : இலட்சுமி தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 73 தொலைபேசி : 04364 - 279423
அலைபேசி : 9486141430
முகவரி : அருள்மிகு. மகாலட்சுமீசர் திருக்கோயில்,
திருநின்றியூர் & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம்,
நாகை மாவட்டம் 609 118
தலச் சிறப்பு : பரசுராமர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 19

கொடைமுடியா
நன்றியு ரென்றிந்த ஞாலமெலாம் வாழ்த்துகின்ற
நின்றியூர் மேவு நிலைமையனே

168 - திருநின்றியூர்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 18 பாடல் 2
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

அச்சம் இலர் பாவம் இலர் கேடும் இலர் அடியார்
நிச்சம் உறு நோயும் இலர் தாமும் **நின்றியூரில்**
நச்சம் மிடர் உடையார் நறும்கொன்றை நயந்தாளும்
பச்சம் உடை அடிகள் திருப்பாதம் பணிவாரே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 23 பாடல் 4
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் மல்கி அயலெலாம்
நிறையும் பூம்பொழில் தூழ் **திருநின்றியூர்**
உறையும் ஈசனை உள்கும் என்னுள்ளமே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 19 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

அற்றவனார் அடியார் தமக்கு ஆயிழை பங்கினராம்
பற்றவனார் எம்பராபரர் என்று பலர் விரும்பும்
கொற்றவனார் குறுகாதவர் ஊர் நெடு வெஞ்சரத்தால்
செற்றவனார்க்கு இடமாவது நம் **திருநின்றியூ**ரே

21. திருப்புன்கூர் (திருப்புன்கூர்)

இறைவன் : சிவலோகநாதர்
இறைவி : சொக்கநாயகி , சௌந்தரநாயகி
தலமரம் : புங்கன்
தீர்த்தம் : கணபதி தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 74 அலைபேசி : 9486717634
முகவரி : அருள்மிகு. சிவலோகநாதர் திருக்கோயில்,
திருப்புன்கூர் & அஞ்சல், சீர்காழி வட்டம்,
நாகை மாவட்டம் 609 112
தலச் சிறப்பு : திருநாளைப் போவாருக்காக (நந்தனார்) நந்தி விலகிய தலம் ஏயர்கோன் கலிக்காமரும், சுந்தரரும் தரிசித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 20

ஒன்றிக்
கருப்புன்கூ ருள்ளக் கயவர் நயவாத்
திருப்புன்கூர் மேவுஞ் சிவனே

210 - திருப்புன்கூர்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 27 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

முந்திநின்ற வினைகள் அவை போகச்
சிந்தி நெஞ்சே சிவனார் **திருப்புன்கூர்**
அந்தமில்லா அடிகள் அவர் போலும்
கந்தமல்கு கமழ்புன் சடையாரே

மாடமல்கு மதில்தூழ் காழிமன்
சேடர் செல்வர் உறையும் **திருப்புன்கூர்**
நாடவல்ல ஞானசம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே - 11

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 55 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க்கு உந்தன் வன்மை கண்டு அடியேன்
எந்தை நீயெனை நமன் தமர் நலியில்
இவன் மற்று என்னடியான் என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் **திருப்புன்கூர்** உளானே

22. நீடூர் (திருநீடூர்)

இறைவன் : அருள்சோமநாதேஸ்வரர்
இறைவி : ஆதித்ய அபயப்ரதாம்பிகை, வேதநாயகி, வேயுறு தோளியம்மை
தலமரம் : மகிழம் பாடல் : சுந்தரர், அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 75 அலைபேசி : 9943668084
முகவரி : அருள்மிகு. அருள்சோமநாதேஸ்வரர் திருக்கோயில், நீடூர் & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 203
தலச் சிறப்பு : முனையடுவார் நாயனார் தொண்டு செய்து முத்திபெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 21

உருப்பொலிந்தே
ஈடுரி லாதுயர்ந்த ஏதுவினா லோங்குதிரு
நீடு ரிலங்கு நிழற்றருவே

169 - திருநீடூர்

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 56 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

ஊர்வதோர் விடையொன்று உடையானை ஒள்நுதல் தனிக் கண்ணுதலானைக்
காரதார் கறை மா மிடற்றானைக் கருதலார் புரம் மூன்றெரித்தானை
நீரில் வாளை வரால் குதிகொள்ளும் நிறை புனல் கழனிச் செல்வ **நீடூர்ப்**
பாருளார் பரவித்தொழ நின்ற பரமனைப் பணியா விடலாமே

காடிலாடிய கண்ணுதலானைக் காலனைக் கடிந்திட்ட பிரானை
பாடியாடும் பரிசே புரிந்தானைப் பற்றினோடு சுற்றம் ஒழிப்பானைத்
தேடி மாலயன் காண்பரியானைச் சித்தமும் தெளிவார்க்கு எளியானைக்
கோடி தேவர்கள் கும்பிடு **நீடூர்க்** கூத்தனைப் பணியா விடலாமே - 6

பேரோர் ஆயிரமும் உடையானைப் பேசினால் பெரிதும் இனியானை
நீரூர் வார்சடை நின்மலன் தன்னை **நீடூர்** நின்ற உகந்திட்ட பிரானை
ஆரூரன் ஆடி காண்பதற்கு அன்பாய் ஆதரித்து அழைத்திட்ட இம்மாலை
பாரூரும் பரவித் தொழ வல்லார் பத்தராய் முத்தி தாம் பெறுவாரே - 11

23.திருஅன்னியூர் (பொன்னூர்)

இறைவன் : ஆபத்சகாயேஸ்வரர், அக்னீஸ்வரர், பாண்டவதேஸ்வரர், இரதீஸ்வரர்
இறைவி : பிருகந்நாயகி, பெரியநாயகி
தலமரம் : எலுமிச்சை தீர்த்தம் : வருணன், அக்னி
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (வடகரை)
வரிசை எண் : 76 அலைபேசி : 9786766995
முகவரி : அருள்மிகு. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், பொன்னூர், பாண்டூர் அஞ்சல், (வழி) நீடூர், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் - 609 203.
தலச் சிறப்பு : அக்னி வழிபட்டதால் வன்னியூர்.வன்னி என்றால் (நெருப்பு).லிகு சாரண்யம், பாஸ்கர சேத்திரம், பானு சேத்திரம் என்ற பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு. வருணன், அக்கினி, சூரியன், பாண்டவர் வழிபட்டுள்ளனர். ஐப்பசியில் அன்னாபிடேகம்.

திருவருட்பா பாடல் எண் 22

பீடுகொண்டு
மன்னியூ ரெல்லாம் வணங்க வளங்கொண்ட
வன்னியூர் மேவு மதிபதியே

17-திருஅன்னியூர்(பொன்னூர்)

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 96 பாடல் 1, 11
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

மன்னியூர் இறை சென்னியார் பிறை
அன்னியூர் அமர் மன்னு சோதியே 1
பூந்தராய்ப் பந்தன் ஆயந்த பாடலால்
வேந்தன் **அன்னியூர்** சேர்ந்து வாழ்மினே 11

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 8 பாடல் 1
குறுந்தொகை இராகம் :மாயாமாளவகௌளை

பாறலைத்த படுவெண் தலையினன்
நீறலைத்த செம்மேனியன் நேரிழை
கூறலைத்த மெய் கோளரவாட்டிய
ஆறலைத்த சடை **அன்னியூர**னே

காலை போய்ப் பலிதேர்வர் கண்ணார் நெற்றி
மேலை வானவர் வந்து விரும்பிய
சோலை சூழ்புறங்காடு அரங்காகவே
ஆலின் கீழறத்தார் **அன்னியூர**ரே - 8

வஞ்சரக்கன் கரமும் சிரத்தொடும்
அஞ்சும் அஞ்சுமோர் ஆறும் நான்குமிறப்
பஞ்சின் மெல்விரலால் அடர்த்தாயிழை
அஞ்சல் அஞ்சல் என்றார் **அன்னியூர**ரே - 10

24. வேழ்விக்குடி (திருவேள்விக்குடி)

இறைவன் : கௌதகேஸ்வரர், மணவாளேஸ்வரர், கல்யாணசுந்தரேஸ்வரர்
இறைவி : பரிமளசுகந்தநாயகி, கௌதகேசி, நறுஞ்சாந்து நாயகி
தீர்த்தம் : கௌதகாபந்தன தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், சுந்தரர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 77 தொலைபேசி : 04364 - 235462
அலைபேசி : 9942239089
முகவரி : அருள்மிகு. கல்யாணசுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருவேள்விக்குடி, குத்தாலம் அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 801
தலச் சிறப்பு : முதல் பராந்தகச் சோழன் காலத்தில் கட்டப்பட்ட கலம் திருமணப் பிரார்த்தனைத் தலம்

திருவருட்பா பாடல் எண் 23

மன்னர்சுக
வாழ்விக் குடிகளடி மண்பூச லாலென்னும்
வேழ்விக் குடியமர்ந்த வித்தகனே

273 - திருவேள்விக்குடி

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 18 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லைச்
சேர்ப்பது காட்டகத்து ஊரினுமாகச் சிந்திக்கினல்லால்
காப்பது **வேள்விக்குடி** தண்துருத்தி எங்கோனரை மேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாமிவர்க்கு ஆட்படோமே

ஊட்டிக்கொண்டு உண்பதோர் ஊணிலர் ஊரிடு பிச்சை அல்லால்
பூட்டிக்கொண்டு ஏற்றினை ஏறுவர் ஏறியோர் பூதம் தம்பால்
பாட்டிக்கொண்டு உண்பவர் பாழிதொறும் பலபாம்பு பற்றி
ஆட்டிக்கொண்டு உண்பது அறிந்தோமேல் நாமிவர்க்கு ஆட்படோமே- 5

உம்பரான் ஊழியான் ஆழியான் ஒங்கி மலர்உறைவான்
தம்பரம் அல்லவர் சிந்திப்பவர் தடுமாற்று அறுப்பார்
எம்பரம் அல்லவர் என்நெஞ்சத்துள்ளும் இருப்பதாகி
அம்பரம் ஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே - 8

கூடலர் மன்னன் குல நாவலூர்கோன் நலத் தமிழைப்
பாடவல்ல பரமன் அடியார்க்கு அடிமை வழுவா
நாடவல்ல தொண்டன் ஆரூரன் ஆட்படுமாறு சொல்லிப்
பாடவல்லார் பரலோகத்து இருப்பது பண்டம் அன்றே - 10

25. ணெதிர்கொள்பாடி (எதிர்கொள்பாடி)

(மேலைத்திருமணஞ்சேரி)

இறைவன் : ஐராவதேஸ்வரர், மதயானேஸ்வரர்
இறைவி : சுகந்தகுந்தாளாம்பிகை, மலர்க்குழல்மாது
பாடல் : சுந்தரர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 78 அலைபேசி : 9442902785, 8012160621, 9600208708
முகவரி : அருள்மிகு. ஐராவதேஸ்வரர் திருக்கோயில், மேலைத் திருமணஞ்சேரி, திருமணஞ்சேரி அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 813
தலச் சிறப்பு : வேள்விக்குடியில் திருமணம் செய்து கொண்டு வந்த ஒரு அடியவனை இறைவன் எதிர்கொண்டு அவனுடைய அம்மானைப் போல் வரவேற்ற தலம். ஐராவதம் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 24

சூழ்வுற்றோர்
விண்ணெதிர்கொண் டிந்திரன்போன் மேவிநெடு நாள்வாழப்
பண்**ணெதிர்கொள் பாடிப்** பரம்பொருளே

46 - எதிர்கொள்பாடி (மேலைத்திருமணஞ்சேரி)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 7 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

மத்தயானை ஏறிமன்னர் சூழ வருவீர்காள்
செத்தபோதில் ஆருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் **எதிர்கொள்பாடி** என்பதடைவோமே

பொய்யர் கண்டீர் வாழ்க்கையாளர் பொத்தடைப்பான் பொருட்டால்
மையல் கொண்டீர் எம்மோடாடி நீரும் மனத்தீரே
நைய வேண்டா இம்மையேத்த அம்மை நமக்கருளும்
ஐயர் கோயில் **எதிர்கொள்பாடி** என்பதடைவோமே - 6

இன்பமுண்டேல் துன்பமுண்டு ஏழை மனை வாழ்க்கை
முன்பு சொன்னால் மோழைமையான் முட்டை மனத்தீரே
அன்பர் அல்லால் அணிகொள் கொன்றை அடிகள் அடிசேரார்
என்பர் கோயில் **எதிர்கொள்பாடி** என்பதடைவோமே - 8

முத்து நீற்றுப் பவள மேனிச் செஞ்சடையான் உறையும்
பத்தர் பந்தத்து **எதிர்கொள்பாடிப்** பரமனையே பணியச்
சித்தம் வைத்த தொண்டர் தொண்டன் சடையனவன் சிறுவன்
பத்தன் ஊரன் பாடல் வல்லார் பாதம் பணிவாரே - 11

26. மணஞ்சேரி (திருமணஞ்சேரி)

(கீழைத் திருமணஞ்சேரி)

இறைவன் : உத்வாகநாதசுவாமி, அருள்வள்ளல்நாதசுவாமி, கல்யாணசுந்தரேஸ்வரர்
இறைவி : கோகிலாம்பாள்
தீர்த்தம் : சப்தசாகர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 79 தொலைபேசி : 04364 - 235002
முகவரி : அருள்மிகு. அருள்வள்ளல்நாதசுவாமி திருக்கோயில், திருமணஞ்சேரி & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம், 609 813
தலச் சிறப்பு : மன்மதன் ஆமை வழிபட்டதலம் இராகு சந்நிதி விசேடம் திருமண தடையுள்ளவர்கள், புத்திர தடையுள்ளவர்கள் பிரார்த்தனை தலம்

திருவருட்பா பாடல் எண் 25

நண்ணும்
வணஞ்சே ரிறைவன் மகிழ்ந்து வணங்கும்
மணஞ்சேரி நீங்கா மகிழ்வே

222 - திருமணஞ்சேரி (கீழைத் திருமணஞ்சேரி)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 16 பாடல் 2
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

விதியானை விண்ணவர் தாம் தொழுது ஏத்திய
நெதியானை நீள்சடை மேல் நிகழ்வித்த வான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த **மணஞ்சேரிப்**
பதியானைப் பாடவல்லார் வினை பாறுமே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 87 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ் திருவார் **மணஞ்சேரி** எம்
வட்டவார் சடையார் வண்ணம் வாழ்த்துமே

துன்ன வாடையர் தூமழுவாளினர்
பின்னு செஞ்சடை மேல்பிறை வைத்தவர்
மன்னு வார்பொழில் சூழ் **மணஞ்சேரி** எம்
மன்னனார் கழலே தொழ வாய்க்குமே - 8

கடுத்த மேனி அரக்கன் கயிலையை
எடுத்தவன் நெடு நீள்முடி பத்திறப்
படுத்தலும் **மணஞ்சேரி** அருளெனக்
கொடுத்தனன் கொற்ற வாளொடு நாமமே - 10

27. கொறுக்கை (திருக்குறுக்கை) (கொருக்கை)

இறைவன் : வீரட்டேஸ்வரர்
இறைவி : ஞானாம்பிகை
தலமரம் : கடுக்கா
தீர்த்தம் : சூல தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 80 அலைபேசி : 9443527044
முகவரி : அருள்மிகு. வீரட்டேஸ்வரர் திருக்கோயில், கொருக்கை, நீடூர் அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 203
தலச் சிறப்பு : மன்மதனை எரித்த தலம். மாசி மகத்தன்று காம தகனவிழா இங்கு மண் எந்த இடத்தில் எடுத்தாலும் விபூதியாக உள்ளது.

திருவருட்பா பாடல் எண் 26

மணஞ்சேர்ந்து
வாரட்ட கொங்கை மலையா ளொடுங் **கொறுக்கை**
வீரட்ட மேவும் வியனிறைவே

100 - திருக்குறுக்கை (கொருக்கை)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 49 பாடல் 2
திருநேரிசை இராகம் : நவரோஸ்

நீற்றினை நிறையப்பூசி நித்தலும் நியமம் செய்து
ஆற்று நீர் பூரித்தாட்டும் அந்தணனாரைக் கொல்வான்
சாற்று நாள் அற்றதென்று தருமராசற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலும் **குறுக்கை வீரட்டனாரே**

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்தபோதே கோச்செங்கணானுமாகக்
கலந்த நீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் **குறுக்கை வீரட்டனாரே** - 4

காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர் இறைச்சி பாரம்
தோற்பெரும் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெரும் கண்கள் செய்ய குருதி நீரொழுகத் தன் கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் **குறுக்கை வீரட்டனாரே** - 7

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 50 பாடல் 2
திருநேரிசை இராகம் : நவரோஸ்

நெடியமால் பிரமனோடு நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியுங் காணா அருச்சுனற் கம்பும் வில்லும்
துடியிடை வேடராகித் தூயமந்திரங்கள் சொல்லிக்
கொடிநெடும் தேர்கொடுத்தார் **குறுக்கை வீரட்டனாரே**

28. கருப்பறிய லூாரசே (திருக்கருப்பறியலூர்)
(தலைஞாயிறு, மேலைக்காழி)

இறைவன் : குற்றம் பொறுத்தநாதர், அபராதஷமேஸ்வரர்
இறைவி : விசித்ரபாலாம்பிகா, கோல்வளைநாயகி
தலமரம் : கொகுடிமுல்லை
தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், சுந்தரர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 81 அலைபேசி : 9443190169
முகவரி : அருள்மிகு. குற்றம் பொறுத்தநாதர் திருக்கோயில்,
தலைஞாயிறு & அஞ்சல், (வழி) இளந்தோப்பு
மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 201
தலச் சிறப்பு : இந்திரன் செய்த குற்றத்தைப் பொறுத்த நாதர்

திருவருட்பா பாடல் எண் 27

ஓரட்ட
திக்குங் கதிநாட்டிச் சீர்கொள்திருத் தொண்டருளம்
ஒக்குங் **கருப்பறிய லூாரசே**

73 - திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு, மேலைக்காழி)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 31 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலகம் ஏற்றக்
கற்றவனிருப்பது **கருப்பறியலூரே**

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 30 பாடல் 5
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

பொடியேறு திருமேனிப் பெருமானைப்
பொங்கரவக் கச்சையானைக்
கடிநாறு பூம்பொய்கைக் கயல்வாளை
குதிகொள்ளும் **கருப்பறியலூர்க்**
கொடியேறி வண்டினமும் தண்தேனும்
பண்செய்யும் கொகுடிக் கோயில்
அடியேறு கழலானை நினைந்தபோது
அவர் நமக்கினியவாறே

கலைமலிந்த தென்புலவர் கற்றோர் தம்
இடர்தீர்க்கும் **கருப்பறியலூர்க்**
குலைமலிந்த கோட்டெங்கும் மட்டொழுகும்
பூஞ்சோலைக் கொகுடிக் கோயில்
இலைமலிந்த மழுவானை மனத்தினால்
அன்பு செய்து இன்பமெய்தி
மலைமலிந்த தோள் ஊரன் வனப்பகை
அப்பன் உரைத்த வண் தமிழ்களே - 11

29. குரக்குக்கா (திருக்குரக்குக்கா)
(திருக்குரக்காவல்)

இறைவன் : குந்தளேஸ்வரர்
இறைவி : குந்தளாம்பிகை
தலமரம் : வில்வம் தீர்த்தம் : கணபதி தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 82 அலைபேசி : 7708820533
முகவரி : அருள்மிகு. குந்தளேஸ்வரர் திருக்கோயில்,
திருக்குரக்காவல், இளந்தோப்பு அஞ்சல்,
மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 201
தலச் சிறப்பு : அனுமன் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 28

மிக்கதிரு
மாவளருஞ் செந்தா மரைவளருஞ் செய்**குரக்குக்**
காவளரு மின்பக் கனசுகமே

96 - திருக்குரக்குக்கா (திருக்குரக்காவல்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 75 பாடல் 1
குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

மரக்கொக்காம் என வாய் விட்டலறி நீர்
சரக்குக் காவித் திரிந்து அயராது கால்
பரக்கும் காவிரி நீர் அலைக்கும் கரைக்
குரக்குக்கா அடையக் கெடும் குற்றமே

விட்டு வெள்ளம் விரிந்து எழு காவிரி
இட்ட நீர் வயல் எங்கும் பரந்திடக்
கொட்டமா முழவோங்கு **குரக்குக்கா**
இட்டமாய் இருப்பார்க்கு இடர் இல்லையே - 5

உருகி ஊன்குழைந்து ஏத்தி எழுமின்நீர்
கரிய கண்டன் கழலடி தன்னையே
குரவனஞ் செழுங்கோயில் **குரக்குக்கா**
இரவும் எல்லியும் ஏத்தித் தொழுமினே - 9

இரக்கமின்றி மலை எடுத்தான் முடி
உரத்தை ஒல்க அடர்த்தான் உறைவிடம்
குரக்கினம் குதிகொள்ளும் **குரக்குக்கா**
வரத்தனைப் பெற வானுலகு ஆள்வரே - 10

30. வாழ்கொளிபுத்தூர் (வாளொளிப்புத்தூர்) (திருவாளப்புத்தூர், வாழ்கொளிப்புத்தூர்)

இறைவன் : மாணிக்கவண்ணர், இரத்தினபுரீஸ்வரர்
இறைவி : பிரமகுந்தளாம்பாள், வண்டமர்பூங்குழலி
தலமரம் : வாகை தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், சுந்தரர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 83 அலைபேசி : 9842538954, 9976782952
முகவரி : அருள்மிகு. மாணிக்கவண்ணர் திருக்கோயில், திருவாளப்புத்தூர் அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 205
தலச் சிறப்பு : அருச்சுனனுடைய வாளை இறைவன் ஒளித்துப் பின்தந்த தலம் அதனால் வாளொளிப்புத்தூர் என்றானது.

திருவருட்பா பாடல் எண் 29

தாவுமயல்
காழ்கொ ளிருமனத்துக் காரிருணீத் தோர்மருவும்
வாழ்கொளி புத்தூர் மணிச்சுடரே

254 - வாளொளிப்புத்தூர் (திருவாளப்புத்தூர், வாழ்கொளிப்புத்தூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 40 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

பொடியுடை மார்பினர் போர்விடை ஏறிப் பூதகணம் புடைசூழக்
கொடியுடை ஊர்திரிந்து ஐயம்கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடும் கண்ணு உமைபாகம் ஆயவன்
வாழ்கொளிபுத்தூர்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றானடி காண்போம்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 94 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

சாகை ஆயிரம் உடையார் சாமமும் ஓதுவது உடையார்
ஈகையார் கடை நோக்கி இரப்பதும் பலபல உடையார்
தோகை மாமயிலனைய துடியிடை பாகமுமுடையார்
வாகை நுண்துளி வீசும் **வாழ்கொளிபுத்தூர்** உளாரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 57 பாடல் 3
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

வெந்த நீறு மெய் பூசவல்லானை வேத மால்விடை ஏறவல்லானை
அந்தம் ஆதி அறிதற்கு அறியானை ஆறலைத்த சடையானை அம்மானைச்
சிந்தை என் தடுமாற்று அறுப்பானைத் தேவதேவன் என்சொல் முனியாதே
வந்து என் உள்ளம் புகும் **வாழ்கொளிபுத்தூர்** மாணிக்கத்தை மறந்து
என் நினைக்கேனே

31. மண்ணிப் படிக்கரை (பழமண்ணிப்படிக்கரை) (இலுப்பைப்பட்டு)

இறைவன் : நீலகண்டேஸ்வரர் , முத்தீஸ்வரர், மகதீஸ்வரர், படிக்கரைநாதர்
இறைவி : அமிர்தகரவல்லி, மங்களநாயகி
தலமரம் : இலுப்பை
தீர்த்தம் : பிரம தீர்த்தம், அமிர்த தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 84 அலைபேசி : 9245619738, 9976217869
முகவரி : அருள்மிகு. நீலகண்டேஸ்வரர் திருக்கோயில், இலுப்பைப்பட்டு, மணல்மேடு அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 202
தலச் சிறப்பு : பாண்டவர்கள் வழிபட்டு பூசித்த தலம் ஐந்து இலிங்கங்கள் உள்ளன. இலுப்பை மரம் நிறைந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 30

தாழ்வகற்ற
நண்ணிப் படிக்கரையர் நாடோறும் வாழ்த்துகின்ற
மண்ணிப் படிக்கரைவாழ் மங்கலமே

187 - பழமண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 22 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

முன்னவன் எங்கள் பிரான் முதல் காண்பரிதாய பிரான்
சென்னியில் எங்கள் பிரான் திருநீலமிடற்று எம்பிரான்
மன்னிய எங்கள் பிரான் மறைநான்கும் கல்லால் நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான் **பழமண்ணிப் படிக்கரை**யே

உங்கைகளால் கூப்பி உகந்தேத்தித் தொழுமின் தொண்டீர்
மங்கையோர் கூறுடையான் வானோர் முதலாய பிரான்
அங்கையில் வெண்மழுவன் அலையார் கதிர் மூவிலைய
பங்கய பாதனிடம் **பழமண்ணிப் படிக்கரை**யே - 5

திரிவன மும்மதிலும் எரித்தான் இமையோர் பெருமான்
அரியவன் அட்டப்புட்பம் அவைகொண்டு அடிபோற்றி நல்ல
கரியவன் நான்முகனும் அடியும்முடி காண்பரிய
பரியவன் பாசுபதன் **பழமண்ணிப் படிக்கரை**யே - 8

பல்லுயிர் வாழும் தெண்ணீர்ப் **பழமண்ணிப் படிக்கரை**யை
அல்லி அந்தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ்
சொல்லுதல் கேட்டல் வல்லார் அவர்க்கும் தமர்க்கும் கிளைக்கும்
எல்லியும் நண்பகலும் இடர் கூருதல் இல்லையன்றே - 10

32. ஓமாம்புலியூர்

இறைவன் : பிரணவ வியாக்ரபுரீஸ்வரர், துயர்தீர்த்தநாதர், பிரணவபுரீஸ்வரர்
இறைவி : புஷ்பலதாம்பிகை, பூங்கொடிநாயகி
தலமரம் : வதரி (இலந்தை)
தீர்த்தம் : கொள்ளிட தீர்த்தம், கௌரி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 85
தொலைபேசி : 04144 - 264845 அலைபேசி : 9942634949
முகவரி : அருள்மிகு. துயர்தீர்த்தநாதர் திருக்கோவில், ஓமாம்புலியூர் அஞ்சல், ஆயங்குடி, காட்டுமன்னார்குடி வட்டம், கடலூர் மாவட்டம் 608 306
தலச் சிறப்பு : வியாக்ரபாத முனிவர் வழிபட்ட தலம். இறைவன் உமாதேவிக்கு பிரணவ மந்திரம் உபதேசித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 31

விண்ணினிடை
வாமாம் புலியூர் மலர்ச்சோலை சூழ்ந்திலங்கும்
ஓமாம் புலியூர்வாழ் உத்தமமே

54 - ஓமாம்புலியூர்

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 122 பாடல் 1
பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

பூங்கொடி மடவாள் உமையொரு பாகம்
புரிதரு சடைமுடி அடிகள்
வீங்கிருள் நட்டமாடும் எம்விகிர்தர்
விருப்பொடும் உறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலில் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழார் **ஓமமாம்புலியூர்**
உடையவர் வடதளி அதுவே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 88 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

ஆராரும் மூவிலை வேல் அங்கையானை
அலைகடல் நஞ்சயின்றானை அமரரேத்தும்
ஏராரும் மதிபொதியும் சடையினானை
எழுபிறப்பும் எனை ஆளாவுடையான் தன்னை
ஊராரும் படநாகம் ஆட்டுவானை
உயர் புகழ்சேர் தரும் **ஓமாம்புலியூர்** மன்னும்
சீராரும் வடதளி எம் செல்வன் தன்னைச்
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே

33. திருக்கானாட்டுமுள்ளூர் (கானாட்டுமுள்ளூர்) (கானாட்டம்புலியூர்)

இறைவன் : பதஞ்சலிநாதர்
இறைவி : கானார்குழலி, அம்புஜாட்சி, கோல்வளைக்கையாள்
தலமரம் : வெள்ளெருக்கு
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 86 அலைபேசி : 9345778863
முகவரி : அருள்மிகு. பதஞ்சலிநாதர் திருக்கோயில், கானாட்டம்புலியூர், முட்டம் அஞ்சல், (வழி) ஆயங்குடி, காட்டுமன்னார்குடி வட்டம், கடலூர் மாவட்டம் 608 306
தலச் சிறப்பு : விக்கிரம சோழன் காலத்திய கல்வெட்டுக்கள் உள்ளன. மிகவும் பழமையான கோவில்

திருவருட்பா பாடல் எண் 32

நேமார்ந்த
வானாட்டு முள்ளூர் மருவுகின்றோர் போற்றுதிருக்
கானாட்டு முள்ளூர்க் கலைக்கடலே

87 - கானாட்டுமுள்ளூர் (கானாட்டம்புலியூர்)

பாடல்கள்

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 40 பாடல் 1
பண் : கொல்லிக்கௌவானம் இராகம் : நவரோஸ்

வள்வாய மதிமிளிரும் வளர்சடையினானை
மறையவனை வாய்மொழியை வானவர் தம் கோனைப்
புள்வாயைக் கீண்டு உலகம் விழுங்கி உமிழ்ந்தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினானை
முள்வாய மடல் தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கரும்குவளை கண்வளரும் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே

விடையரவக் கொடியேந்தும் விண்ணவர்தம் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுதலானும்
அடியிணையும் திருமுடியும் காண அரிதாய
சங்கரனைத் தத்துவனைத் தையல் மடவார்கள்
உடையவிழக் குழலவிழக் கோதை குடைந்தாடக்
குங்குமங்கள் உந்திவரும் கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள் விடுவார் குவளை களைவாரும் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே - 6

திரையினார் கடல் சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண் மதியினானைக்
கரையினார் புனல் தழுவு கொள்ளிடத்தின் கரைமேல்
கானாட்டு முள்ளூரில் கண்டு கழல் தொழுது
உரையினார் மதயானை நாவல் ஆரூரன்
உரிமையால் உரை செய்த ஒண்தமிழ்கள் வல்லார்
வரையினார் வகை ஞாலம் ஆண்டவர்க்கும் தாம்போய்
வானவர்க்கும் தலைவராய் நிற்பர் அவர்தாமே - 11

34. நாரையூர் (திருநாரையூர்)

இறைவன் : சௌந்தரநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி
தலமரம் : புன்னாகம்
தீர்த்தம் : காருண்ய தீர்த்தம்,
பாடல் : சம்பந்தர் , அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 87 அலைபேசி : 9442571039, 9443906219
முகவரி : அருள்மிகு. சௌந்தரநாதர் திருக்கோயில்,
திருநாரையூர் & அஞ்சல், (வழி) லால்பேட்டை,
காட்டுமன்னார்கோயில் வட்டம்,
கடலூர் மாவட்டம் 608 303
தலச் சிறப்பு : நாரை வழிபட்ட தலம். நம்பியாண்டார் நம்பி அவதாரத் தலம் நெஞ்சறிவுறுத்தல் பாடல் : நாரையே முத்தியின்பம் அடைந்ததென்றால்

திருவருட்பா பாடல் எண் 33

மேனாட்டும்
தேரையூர்ச் செங்கதிர்போற் செம்மணிக ணின்றிலங்கும்
நாரையூர் மேவு நடுநிலையே

நெஞ்சறிவுறுத்தல் பாடல் எண் 260

வஞ்சமற
நாரையே முத்தியின்பம் நாடியேதென்றால் மற்றை
யாரையே நாடாதார் என்றுரைப்பேன்

165 - திருநாரையூர்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 86 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

உரையினில் வந்த பாவம் உணர்நோய்கள் உம்ம
செயல் தீங்கு குற்றம் உலகில்
வரையினிலாமை செய்த அவை தீரும் வண்ணம்
மிகவேத்தி நித்தம் நினைமின்
வரைசிலையாக அன்று மதில் மூன்றெரித்து
வளர் கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 55 பாடல் 3
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

வேடு தங்கிய வேடமும் வெண்தலை
ஓடு தங்கிய உண்பலி கொள்கையும்
நாடு தங்கிய **நாரையூரான்** நடம்
ஆடு பைங்கழல் அம்ம அழகிதே

கடுக்கை அஞ்சடையன் கயிலைம்மலை
எடுத்த வாளரக்கன் தலை ஈரைஞ்சும்
நடுக்கம் வந்திற **நாரையூரான்** விரல்
அடுத்த தன்மையும் அம்ம அழகிதே - 10

35. கடம்பூர் (திருக்கடம்பூர்) (மேலைக்கடம்பூர்)

இறைவன் : அமிர்தகடேஸ்வரர்
இறைவி : வித்யுஜோதிநாயகி, சோதிமின்னம்மை
தலமரம் : கடம்பு தீர்த்தம் : சக்தி தீர்த்தம்
பாடல் : அப்பர், சம்பந்தர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 88 அலைபேசி : 9345656982, 9842676797, 9715639212
முகவரி : அருள்மிகு. அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்,
மேலக்கடம்பூர் & அஞ்சல் , (வழி) ரெட்டியூர்
காட்டுமன்னார்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம் - 608 304
தலச் சிறப்பு : அப்பர் சுவாமிகளின் பாடல்பெற்ற தலம் கடம்பு தலமரமாதலின் கடம்பூர் என்பர்.

திருவருட்பா பாடல் எண் 34

பாரில்
உடம்பூர் பவத்தை யொழித்தருளும் மேன்மைக்
கடம்பூர்வாழ் என்னிரண்டு கண்ணே

62 - திருக்கடம்பூர் (மேலைக்கடம்பூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 68 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

வானமர் திங்களும் நீரும் மருவிய வார்சடையானைத்
தேனமர் கொன்றையினானைத் தேவர் தொழுப்படுவானைக்
கானமரும் பிணை புல்கிக் கலைபயிலும் **கடம்பூரில்**
தானமர் கொள்கையினானைத் தாள் தொழ வீடெளிதாமே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 19 பாடல் 9
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் **கடம்பைத்** திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 20 பாடல் 3
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

இல்லக் கோலமும் இந்த இளமையும்
அல்லற் கோலம் அறுத்து உயவல்லீரே
ஒல்லைச் சென்றடையும் **கடம்பூர்** நகர்ச்
செல்வக் கோயில் திருக்கரக்கோயிலே

உற்றாராய் உறவாகி உயிர்க்கெலாம்
பெற்றாராய பிரானார் உறைவிடம்
முற்றார் மும்மதில் எய்த முதல்வனார்
கற்றார் சேர் **கடம்பூர்** கரக்கோயிலே - 8

36. பந்தணநல்லூர் (பந்தணைநல்லூர்) (பந்தநல்லூர்)

இறைவன் : பசுபதீஸ்வரர்
இறைவி : வேணுபுஜாம்பிகை, காம்பனதோளியம்மை
தலமரம் : சரக்கொன்றை தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடல் : அப்பர், சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 89 அலைபேசி : 9865778045
முகவரி : அருள்மிகு. பசுபதீஸ்வரர் திருக்கோயில்,
பந்தநல்லூர் & அஞ்சல், கும்பகோணம் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 609 807
தலச் சிறப்பு : அம்பாள் பசு வடிவில் வழிபட்ட தலம் அம்பிகை ஆடிய
பந்து வந்து அணைந்த தலம் ஆதலின் பந்தணை
நல்லூர், காம்பீலி அரசன் மகன் பார்வை பெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 35

தடம்பொழிலில்
கொந்தணவுங் கார்க்குழலார் கோலமயிற் போலுலவும்
பந்தண நல்லூர்ப் பசுபதியே

180 - பந்தணைநல்லூர் (பந்தணை நல்லூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 121 பாடல் 1
பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை இவை சொல்லி உலகு எழுந்தேத்தக்
கடறினார் ஆவர் காற்றுளார் ஆவர் காதலித்து உறைதரு கோயில்
கொடிறனார் யாதும் குறைவிலார் தாம்போய்க் கோவணம் கொண்டு கூத்தாடும்
படிறனார் போலும் **பந்தணை நல்லூர்** நின்ற எம் பசுபதியாரே

ஒண்பொனார் அனைய அண்ணல் வாழ்க எனவும் உமையவள் கணவன் வாழ்க
எனவும் அன்பினார் பிரியார் அல்லு நண்பகலும் அடியவர் அடியிணை தொழவே
நண்பினார் எல்லாம் நல்லவர் என்றேத்த வல்லவர் தீயர் என்றேத்தும்
பண்பினார் போலும் **பந்தணை நல்லூர்** நின்ற எம் பசுபதியாரே - 6

கல்லிசை பூணக் கலையொழி ஓவாக் கழுமல முதுபதி தன்னில்
நல்லிசையாளன் புல்லிசை கேளா நற்றமிழ் ஞானசம்பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை ஏந்தி மேவிய **பந்தணை நல்லூர்**
சொல்லிய பாடல் பத்தும் வல்லவர் மேல் தொல்வினை தூழகிலாவே - 11

37. கஞ்சனூர் (கஞ்சனூர்)

இறைவன் : அக்னீஸ்வரர்
இறைவி : கற்பகாம்பிகை
தலமரம் : பலாசு
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம், பராசுரர் தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 90
தொலைபேசி : 0435 - 2473737 அலைபேசி : 9843285689
முகவரி : அருள்மிகு. அக்கினீஸ்வரர் திருக்கோயில்,
கஞ்சனூர் & அஞ்சல், (வழி) துகிலி,
திருவிடைமருதூர் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 609 804
தலச் சிறப்பு : மானக்கஞ்சாறர் அவதாரத்தலம், கலிக்கா
மருக்குத் திருமணம் நிகழ்ந்த தலம், கம்சன்
சாபம் நீங்கிய தலம்

திருவருட்பா பாடல் எண் 36

கந்தமலர்
அஞ்சனூர் செய்ததவத் தாலப் பெயர்கொண்ட
கஞ்சனூர் வாழுமென்றன் கண்மணியே

60 - கஞ்சனூர்

பாடல்கள்

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 90 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

மூவிலை நற்சூலம் வலன் ஏந்தினானை
மூன்று சுடர்க் கண்ணானை மூர்த்தி தன்னை
நாவலனை நரைவிடை ஒன்று ஏறுவானை
நால்வேதம் ஆறங்கம் ஆயினானை
ஆவினில் ஐந்துகந்தானை அமரர் கோவை
அயன் திருமால் ஆனானை அனலோன் போற்றும்
காவலனைக் **கஞ்சனூர்** ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே

மடலாழித் தாமரை ஆயிரத்திலொன்று
மலர்க்கண் இடந்து இடுதலுமே மலிவான் கோலச்
சுடராழி நெடுமாலுக்கு அருள் செய்தானைத்
தும்பி உரி போர்த்தானைத் தோழன் விட்ட
அடலாழித் தேருடைய இலங்கைக் கோனை
அருவரைக் கீழ் அடர்த்தானை அருளார் கருணைக்
கடலானைக் **கஞ்சனூர்** ஆண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந்தேனே - 10

38. கோடிக்கா (திருக்கோடிகா) (திருக்கோடிகாவல்)

இறைவன் : கோடீஸ்வரர், கோடிகாநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி, வடிவாம்பிகை
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 91
அலைபேசி : 9486670043
முகவரி : அருள்மிகு. கோடீஸ்வரர் திருக்கோயில்,
திருக்கோடிகாவல் & அஞ்சல், (வழி) நரசிங்கன்பேட்டை,
திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம் 609 802
தலச் சிறப்பு : கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன் மாதேவி
இக்கோயிலக் கற்கோயிலாகக் கட்டினார்

திருவருட்பா பாடல் எண் 37

அஞ்சுகங்கள்
நாடிக்கா வுள்ளே நமச்சிவா யம்புகலும்
கோடிக்கா மேவுங் குளிர்மதியே

115 - திருக்கோடிகா (திருக்கோடிகாவல்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 99 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

இன்று நன்று நாளை நன்று என்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றை துன்று சென்னியான் **கோடிகாவு** சேர்மினே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 51 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

நெற்றிமேல் கண்ணினானே நீறுமெய் பூசினானே
கற்றைப் புன்சடையினானே கடல்விடம் பருகினானே
செற்றவர் புரங்கள் மூன்றும் செவ்வழல் செலுத்தினானே
குற்றமில் குணத்தினானே **கோடிகாவு**டைய கோவே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 8 பாடல் 2
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

வண்டாடு பூங்குழலாள் பாகன் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் கண்டாய்
பண்டாடு பழவினை நோய் தீர்ப்பான் கண்டாய்
பரலோக நெறிகாட்டும் பரமன் கண்டாய்
செண்டாடி அவுணர் புரம் செற்றான் கண்டாய்
திருவாரூர்த் திருமூலட்டானன் கண்டாய்
கொண்டாடும் அடியவர் தம் மனத்தான் கண்டாய்
கோடிகா அமர்ந்துறையும் குழகன் தானே

39. திருமங்கலக்குடி (திருமங்கலக்குடி)

இறைவன் : பிராணவரதேஸ்வரர்
இறைவி : மங்களநாயகி
தலமரம் : வெள்ளெருக்கு தீர்த்தம் : காவிரி
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 92
முகவரி : அருள்மிகு. பிராணவரதேஸ்வரர் திருக்கோயில்,
திருமங்கலக்குடி அஞ்சல், திருவிடைமருதூர் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 612 102
தலச் சிறப்பு : பிரமன், திருமால், சூரியன் வழிபட்ட தலம் .மாங்கல்ய பலம்
தரும் அம்பாள்

திருவருட்பா பாடல் எண் 38

ஓடிக்
கருமங்க லக்குடியிற் காண்டுமென வோதும்
திருமங்க லக்குடியில் தேனே

221 - திருமங்கலக்குடி

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 10 பாடல் 4
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

பறையினோடு ஒலி பாடலும் ஆடலும் பாரிடம்
மறையினோடு இயல் மல்கிடுவார் **மங்கலக்குடிக்**
குறைவிலா நிறைவே குணமில் குணமே என்று
முறையினால் வணங்கும் அவர் முன்னெறி காண்பரே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 73 பாடல் 3
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

மங்கலக்குடி ஈசனை மாகாளி
வெங்கதிர்ச் செல்வன் விண்ணொடு மண்ணும் நேர்
சங்கு சக்கரதாரி சதுர்முகன்
அங்கு அகத்தியனும் அர்ச்சித்தார் அன்றே

வண்டுசேர் பொழில் சூழ் **மங்கலக்குடி**
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயகனுக்கு அருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே - 8

மங்கலக்குடியான் கயிலைம்மலை
அங்கு அலைத்து எடுக்குற்ற அரக்கர்கோன்
தன் கரத்தொடு தாள் தலை தோள் தகர்ந்து
அங்கு அழுது உய்ந்தனன் தானன்றே - 10

40. பனந்தாள் (திருப்பனந்தாள்)

இறைவன் : செஞ்சடையப்பர், தாலவனேஸ்வரர்,
ஜடாதரர், அருணஜடேஸ்வரர்
இறைவி : பெரியநாயகி, பிருகந்நாயகி, தாலவனேஸ்வரி
தலமரம் : பனை
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம், ஐராவத தீர்த்தம், தாடகை தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 93 தொலைபேசி : 0435 – 2456422, 2456047
அலைபேசி : 9443116322, 9965852734
முகவரி : அருள்மிகு. தாலவனேஸ்வரர் திருக்கோயில்,
திருப்பனந்தாள் அஞ்சல், கும்பகோணம் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 612 504
தலச் சிறப்பு : சாய்ந்த திருமேனியை மன்னன் யானை, குதிரைகளைக் கொண்டு நிமிர்த்த முடியாத நிலையில், குங்கிலியக் கலய நாயனார் தம் கழுத்தில் கயிற்றை கட்டி கொண்டு இழுத்து சிவலிங்கத்தை நிமிர்த்தினார்.

திருவருட்பா பாடல் எண் 39

தரும
மனந்தாண் மலரை மருவுவிப்போர் வாழும்
பனந்தாளிற் பாலுகந்த பாகே

193 - திருப்பனந்தாள்

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 62 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் **திருத்தாடகை ஈச்சரமே**

விடையுயர் வெல் கொடியான் அடிவிண்ணொடு மண்ணுமெல்லாம்
புடைபட ஆடவல்லான் மிகு பூதமார் பல்படையான்
தொடை நவில் கொன்றையொடு வன்னி துன்னெருக்கும் அணிந்த
சடையவன் ஊர் பனந்தாள் **திருத்தாடகை ஈச்சரமே** - 6

தண்வயல் சூழ்பனந்தாள் **திருத்தாடகை ஈச்சர**த்துக்
கண்ணயலே பிறையானவன் தன்னை முன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழால் மிகு ஞானசம்பந்தன் நல்ல
பண்ணியல் பாடல் வல்லார் அவர்தம் வினை பற்றறுமே - 11

41. திருவாய்ப்பாடி (திருஆப்பாடி) (திருவாய்ப்பாடி)

இறைவன் : பால்உகந்தநாதர், பாலுகந்தீஸ்வரர்
இறைவி : பிருகந்நாயகி, பெரியநாயகி
தலமரம் : ஆத்தி தீர்த்தம் : தீர குண்டம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 94 அலைபேசி : 9442167104
முகவரி : அருள்மிகு. பாலுகந்தநாதர் திருக்கோயில்,
திருவாய்ப்பாடி, திருப்பனந்தாள் அஞ்சல்,
திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 504
தலச் சிறப்பு : சண்டேஸ்வரர் வழிபட்டு முத்தி அடைந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 40

தினந்தாளிற்
சூழ்திருவாய்ப் பாடியங்கு சூழ்கினுமா மென்றுலகர்
வாழ்**திருவாய்ப் பாடி**இன்ப வாரிதியே

21 - திருஆப்பாடி (திருவாய்ப்பாடி)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 48 பாடல் 1
பண் : திருநேரிசை இராகம் : நவரோஸ்

கடலகம் ஏழினோடும் புவனமும் கலந்த விண்ணும்
உடலகத்து உயிரும் பாரும் ஒள்ளழலாகி நின்று
தடமலர்க் கந்தமாலை தண்மதி பகலுமாகி
மடலவிழ் கொன்றை சூடி மன்னும் **ஆப்பாடி**யாரே

சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகி
வந்த நன்பயனுமாகி வாள்நுதல் பாகமாகி
மந்தமாம் பொழில்கள் சூழ்ந்த மண்ணித்தென் கரைமேல் மன்னி
அந்தமோடு அளவிலாத அடிகள் **ஆப்பாடி**யாரே - 5

மயக்கமாய்த் தெளிவுமாகி மால்வரை வளியுமாகித்
தியக்கமாய் ஒருக்கமாகிச் சிந்தையுள் ஒன்றிநின்று
இயக்கமாய் இறுதியாகி எண்டிசைக்கு இறைவராகி
அயக்கமாய் அடக்கமாய ஐவர் **ஆப்பாடி**யாரே - 8

திண்திறல் அரக்கனோடிச் சீகயிலாயந்தன்னை
எண்திறல் இலனுமாகி எடுத்தலும் ஏழையஞ்ச
விண்டிறல் நெரியவூன்றி மிகக் கடுத்தலறி வீழப்
பண்திறள் கேட்டுகந்த பரமர் **ஆப்பாடி**யாரே - 10

42. சேய்ஞ்ஞலூர் (சேய்ஞலூர்) (சேங்கனூர்)

இறைவன் : சத்யகிரீஸ்வரர், சத்யகிரிநாதர்
இறைவி : சகிதேவியம்மை
தீர்த்தம் : மண்ணி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 95 அலைபேசி : 9345982373 , 9489035556
முகவரி : அருள்மிகு. சத்யகிரீஸ்வரர் திருக்கோயில்,
சேங்கனூர் , திருப்பனந்தாள் அஞ்சல்,
திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 504
தலச் சிறப்பு : சண்டேஸ்வர நாயனார் அவதாரத் தலம், முருகன் சர்வ சங்காரப் படையை இறைவனிடம் பெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 41

ஏழ்புவிக்குள்
வாய்ஞ்ஞலூ ரீதே மருவவென வானவர்சேர்
சேய்ஞ்ஞலூர் இன்பச் செழுங்கனியே

135 - சேய்ஞலூர் (சேங்கனூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 48 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் **சேய்ஞலூர்** மேயவனே

காடடைந்த ஏனமொன்றின் காரணமாகி வந்து
வேடடைந்த வேடனாகி விசயனோடு எய்ததென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்கணாற்கு அருள்செய்
சேடடைந்த செல்வர் வாழும் **சேய்ஞலூர்** மேயவனே - 6

சேயடைந்த **சேய்ஞலூரில்** செல்வன் சீர்பரவித்
தோயடைந்த தண்வயல் சூழ் தோணிபுரத் தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைத்து பாடவல்லார் வானுலகம் ஆள்பவரே - 11

43. சீர்த்தேவன் (திருந்துதேவன்குடி) (நண்டாங்கோயில்)

இறைவன் : கற்கடகேஸ்வரர்
இறைவி : அருமருந்தம்மை, அபூர்வநாயகி
தீர்த்தம் : நவபாஷாண தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 96 அலைபேசி : 9994015871
முகவரி : அருள்மிகு. கற்கடகேஸ்வரர் திருக்கோயில்,
திருந்துதேவன்குடி , திருவிசலூர் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 105
தலச் சிறப்பு : நண்டு பூசித்த தலம். கற்கடம் என்றால் நண்டு

திருவருட்பா பாடல் எண் 42

வாஞ்சையுறும்
சீவன் குடியுறவிச் சீர்நகரொன் றேயெனுஞ்**சீர்த்**
தேவன் குடிமகிழ்ந்த தெள்ளமுதே

143 - திருந்துதேவன்குடி (நண்டாங்கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 25 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்துதேவன் குடித் தேவர் தேவெய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே

பங்கமென்னப் படர் பழிகள் என்னப் படா
புங்கமென்னப் படர் புகழ்கள் என்னப்படும்
திங்கள் தோயும் பொழில் தீண்டு **தேவன் குடி**
அங்கம் ஆறும் சொன்ன அடிகள் வேடங்களே - 6

உலக முட்குந்திறல் உடை அரக்கன் வலி
விலகு பூதக்கணம் வெருட்டும் வேடத்தின
திலகமாரும் பொழில் சூழ்ந்த **தேவன் குடி**
அலர் தயங்கும் முடி அடிகள் வேடங்களே - 11

சேடர் **தேவன் குடித்** தேவர் தேவன்தனை
மாடம் ஓங்கும் பொழில் மல்கு தண்காழியான்
நாடவல்ல தமிழ் ஞானசம்பந்தன்
பாடல் பத்து வல்லார்க்கு இல்லையாம் பாவமே - 11

44. வியலூர் (திருவியலூர்) (திருவிசலூர், திருவிசநல்லூர்)

இறைவன் : யோகானந்தீஸ்வரர் , புராதனேஸ்வரர்
இறைவி : சாந்தநாயகி, சௌந்தரநாயகி
தீர்த்தம் : சடாயு தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 97 அலைபேசி : 9444747142
முகவரி : அருள்மிகு. யோகானந்தீஸ்வரர் திருக்கோயில், திருவிசலூர் & அஞ்சல், (வழி) வேப்பத்தூர், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 105
தலச் சிறப்பு : சடாயு வழிபட்ட தலம். சாத்திர நூலான திருவுந்தியார் பாடிய திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் அவதாரத் தலம்

திருவருட்பா பாடல் எண் 43

ஓவின்
மயலூர் மனம் போல் வயலிற் கயலூர்
வியலூர் சிவானந்த வெற்பே

258 - திருவியலூர் (திருவிசலூர், திருவிசநல்லூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 13 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

குரவம் கமழ் நறுமென் குழல்அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி பட வென்று அதன் உரிவை உடலணிவோன்
அரவும் அலை புனலும் இளமதியும் நகுதலையும்
விரவும் சடை அடிகட்கு இடம் விரிநிர் **வியலூரே**

வசைவில் கொடு வருவேடுவன் அவனாய் நிலையறிவான்
திசையுற்றவர் காணச்செரு மலைவான் நிலையவனை
அசையப் பொருது அசையாவணம் அவனுக்கு உயர் படைகள்
விசையற்கு அருள் செய்தான் இடம் விரிநீர் **வியலூரே** - 6

விளங்கும் பிறை சடைமேல் உடை விகிர்தன் **வியலூரைத்**
தளங்கொண்டதொர் புகலித் தகு தமிழ் ஞானசம்பந்தன்
துளங்கில் தமிழ் பரவித் தொழும் அடியார் அவரென்றும்
விளங்கும் புகழ் அதனோடு உயர் விண்ணும் உடையாரே - 11



45. கொட்டையூர் (கொட்டையூர்)

இறைவன் : கோடீஸ்வரர்
இறைவி : கந்துககிரீடாம்பாள், பந்தாடுநாயகி
தலமரம் : கொட்டைச் செடி (ஆமணக்கு)
தீர்த்தம் : அமுத தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 98
தொலைபேசி : 0435 - 2454421, 2450595 அலைபேசி : 9486670043
முகவரி : அருள்மிகு. கோடீஸ்வரர் திருக்கோயில், கொட்டையூர் , மேலக்காவேரி அஞ்சல் , கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 002
தலச் சிறப்பு : ஆமணக்குச் கொட்டைச் செடியின் கீழ் இலிங்கம் வெளிப்பட்டு அருளியமையால் கொட்டையூர் என்றானது. சோழ மன்னனுக்கும் ஏரண்ட முனிவருக்கும் கோடிலிங்கமாகக் காட்சி தந்தார். அதனால் கோடீஸ்வரர். இத்தலத்தில் புண்ணியம் செய்தாலும் பாவம் செய்தாலும் அது கோடியாகப் பெருகும் என்பது ஐதீகம்.

திருவருட்பா பாடல் எண் 44

அயலாம்பன்
மட்டையூர் வண்டினங்கள் வாய்ந்து விருந்துகொளும்
கொட்டையூ ருட்கிளருங் கோமளமே

105 - கொட்டையூர்

பாடல்கள்

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 73 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

கருமணிபோல் கண்டத்து அழகன் கண்டாய்
கல்லால் நிழற்கீழ் இருந்தான் கண்டாய்
பருமணி மாநாகம் பூண்டான் கண்டாய்
பவளக் குன்றன்ன பரமன் கண்டாய்
வருமணிநீர்ப் பொன்னி வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் வரதன் கண்டாய்
குருமணிபோல் அழகமரும் **கொட்டையூரில்**
கோடீச்சரத்து உறையும் கோமான் தானே

விண்டார் புரமூன்றும் எரித்தான் கண்டாய்
விலங்கலில் வல்அரக்கனுடல் அடர்த்தான் கண்டாய்
தண்தாமரையானும் மாலும் தேடத்
தழற்பிழம்பாய் நீண்ட கழலான் கண்டாய்
வண்டார் பூஞ்சோலை வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோடு அங்கம்
கொண்டாடு வேதியர் வாழ் **கொட்டையூரில்**
கோடீச்சரத்து உறையும் கோமான் தானே - 10



46. இன்னம்பர் (இன்னம்பர்) (இன்னம்பூர்)

இறைவன் : எழுத்தறிநாதர், தான்தோன்றீஸ்வரர்
இறைவி : சுகுந்தகுந்தளாம்பிகை, நித்யகல்யாணி
தலமரம் : பலா, சண்பகம் தீர்த்தம் : ஐராவதம் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 99 அலைபேசி : 9655864958
முகவரி : அருள்மிகு. எழுத்தறிநாதேஸ்வரர் திருக்கோயில், இன்னம்பர் & அஞ்சல் , (வழி) திருப்புறம்பியம், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 303
தலச் சிறப்பு : அகத்தியர் மற்றும் ஐராவதம் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 45

இட்டமுடன்
என்னம்ப ரென்னம்ப ரென்றன்மால் வாதுகொள
இன்னம்பர் மேவிநின்ற என்னுறவே

42 - இன்னம்பர் (இன்னம்பூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 95 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

எண்டிசைக்கும் புகழ் **இன்னம்பர்** மேவிய
வண்டிசைக்கும் சடையீரே
வண்டிசைக்கும் சடையீர் உமை வாழ்த்துவார்
தொண்டிசைக்கும் தொழிலோரே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 21 பாடல் 8
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

தொழுது தூமலர்த் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு **இன்னம்பர்** ஈசனே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 89 பாடல் 9
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

கருவுற்ற காலத்தே என்னை ஆண்டு
கழற்போது தந்தளித்த கள்வர்போலும்
செருவிற் புரமூன்றும் அட்டர்போலும்
தேவர்க்கும் தேவராம் செல்வர் போலும்
மருவிப்பிரியாத மைந்தர் போலும்
மலரடிகள் நாடி வணங்கலுற்ற
இருவர்க்கு ஒருவராய் நின்றார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே

47. புறம்பியம் (திருப்புறம்பயம்) (திருபிறம்பியம்)

இறைவன் : சாட்சிநாதேஸ்வரர், சாட்சீஸ்வரர், புன்னைவனநாதர்
இறைவி : கரும்பன்ன சொல்லி, இட்சுவாணி
தலமரம் : புன்னை தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 100 அலைபேசி : 9486490042, 9952528459, 9444626632
முகவரி : அருள்மிகு. சாட்சிநாதேஸ்வரர் திருக்கோயில், திருப்பிறம்பியம் & அஞ்சல் , கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 303
தலச் சிறப்பு : பிரலியத்திற்குப் புறம்பாக இருந்ததால் புறம்பயம் எனப்பட்டது. செட்டிப் பெண்ணுக்கு இறைவன் சாட்சி சொன்னதால் சாட்சிநாதர் என்று பெயர் பெற்றது.

திருவருட்பா பாடல் எண் 46

முன்னம்பு
மாற்கும் புறம்பியலா வாய்மையருள் செய்யவுளம்
ஏற்கும் **புறம்பியம்**வாழ் என்னுயிரே

208 - திருப்புறம்பயம் (திருபிறம்பியம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 30 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

மறம்பய மலைந்தவர் மதில் பரிசு அறுத்தனை
நிறம் பசுமை செம்மையொடு இசைந்தனது நீர்மை
திறம்பயன் உறும்பொருள் தெரிந்து உணரும் நால்வர்க்கு
அறம்பயன் உரைத்தனை **புறம்பயம்** அமர்ந்தோய்

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 13 பாடல் 3
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

ஆகாத நஞ்சுண்ட அந்திவண்ணர்
ஐந்தலைய மாசுணம் கொண்டு அம்பொன் தோள்மேல்
ஏகாசமா விட்டு ஓடொன்று ஏந்தி வந்து
இடுதிருவே பலியென்றார்க்கு இல்லே புக்கேன்
பாகு ஏதும் கொள்ளார் பலியும் கொள்ளார்
பாவியேன் கண்ணுள்ளே பற்றி நோக்கிப்
போகாத வேடத்தர் பூதம் சூழப்
புறம்பயம் நம்மூரென்று போயினாரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 35 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

அங்கமோதியோர் ஆறைமேற்றளி நின்றும் போந்தும் வந்து இன்னம்பர்த்
தங்கினோமையும் இன்னதென்றிலர் ஈசனார் எழு நெஞ்சமே
கங்குல் ஏமங்கள் கொண்டு தேவர்கள் ஏத்தி வானவர் தாம்தொழும்
பொங்கு மால்விடை ஏறிசெல்வப் **புறம்பயம்** தொழப் போதுமே

48. விசையமங்கை (திருவிசயமங்கை)

(திருவிஜயமங்கை)

இறைவன் : விஜயநாதர்
இறைவி : மங்களாம்பிகை, மங்கைநாயகி
தீர்த்தம் : அருச்சுன தீர்த்தம் பாடல் : அப்பர், சம்பந்தர்.
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 101
தொலைபேசி : 0435 - 2000679
அலைபேசி : 98436066985, 9444030158, 9443586453
முகவரி : அருள்மிகு. விஜயநாதேஸ்வரர் திருக்கோயில், திருவிஜயமங்கை, புள்ளம் பூதங்குடிஅஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 301
தலச் சிறப்பு : அருச்சுனன் (விசயன்) வழிபட்ட தலமாதலின் விசயமங்கை எனப்பட்டது.

திருவருட்பா பாடல் எண் 47

மாற்கருவின்
கண்விசைய மங்கைக் கனிபோற் பெறத்தொண்டர்
எண்**விசைய மங்கை**யில் வாழ் என்குருவே

256 - திருவிசயமங்கை (திருவிஜயமங்கை)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 17 பாடல் 1
பண் : காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

மருவமர் குழலுமை பங்கர் வார்சடை
அரவமர் கொள்கையெம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி **விசயமங்கை**யே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 71 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

குசையும் அங்கையில் கோசமும் கொண்ட அவ்
வசையின் மங்கல வாசகர் வாழ்த்தவே
இசைய மங்கையும் தானும் ஒன்றாயினான்
விசைய மங்கையுள் வேதியன் காண்மினே

இலங்கை வேந்தன் இருபது தோள் இற
விலங்கல் சேர் விரலான் **விசயமங்கை**
வலம் செய்வார்களும் வாழ்த்திசைப்பார்களும்
நலம் செய்வாரவர் நன்னெறி நாடியே - 10

49. வைகாவூர் (திருவைகாவூர்)

இறைவன் : வில்வவனேஸ்வரர், வில்வவனநாதர்
இறைவி : சர்வஜனரட்சகி, வளைக்கைநாயகி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : எம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 102
அலைபேசி : 9843606985, 9444030158, 9443586453, 9655261510
முகவரி : அருள்மிகு. வில்வவனேஸ்வரர் திருக்கோயில், திருவைகாவூர் & அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 304
தலச் சிறப்பு : சிவராத்திரி நாளில் வேடன் புலிக்கு பயந்து வில்வ மரத்தின் மேல் ஏறி இரவெல்லாம் தூங்காமல் இருப்பதற்காக வில்வ இலையைப் பறித்து போட்ட வண்ணம் இருந்தான். அதனால் இறைவன் அருள் புரிந்து எமனிடம் இருந்து காப்பாற்ற நந்தி இங்கு திரும்பி இருக்கிறார்

திருவருட்பா பாடல் எண் 48

மண்ணுலகில்
வைகாவூர் நம்பொருட்டான் வைகியதென் றன்பர்தொழும்
வைகாவூர் மேவியவென் வாழ்முதலே

பாடல் எண் 380

மல்லலுறும்
வில்வக் கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலை
யைச் செல்வந் துரைமகனாய் ஆக்கினையே

276 - திருவைகாவூர்

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 71 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

கோழை மிடறாக கவிகோளும் இலவாக இசை கூடும்வகையால்
ஏழை அடியார் அவர்கள் யாவைசொன சொல் மகிழும் ஈசனிடமாம்
தாழை இளநீர் முதியகாய் கமுகின் வீழ நிரை தாறு சிதறி
வாழை உதிர் வீழ் கனிகள் ஊறி வயல் சேறு செயும் **வைகாவிலே**

நஞ்சமுது செய்த மணிகண்டன் நமையாளுடைய ஞானமுதல்வன்
செஞ்சடையிடைப் புனல் கரந்த சிவலோகன் அமர்கின்ற இடமாம்
அஞ்சுடரோடு ஆறுபதம் ஏழினிசை எண்ணரிய வண்ணம் உளவாய்
மைஞ்சரோடு மாதர்பலரும் தொழுது சேரம் வயல் **வைகாவிலே** - 6

முற்றும் நமை ஆளுடைய முக்கண் முதல்வன் திரு**வைகாலில்** அதனைச்
செய்ய மலினார் சிரபுரத் தலைவன் ஞானசம்பந்தன் உரை செய்
உற்ற தமிழ்மாலை ஈரைந்தும் இவை வல்லவர் உருத்திரர் எனப்
பெற்று அமரலோகம் மிக வாழ்வர் பிரியார் அவர் பெரும் புகழொடே - 11

50. குரங்காட்டின் (வடகுரங்காடுதுறை)

(ஆடுதுறைபெருமாள் கோயில்)

இறைவன் : தயாநிதீஸ்வரர், குலைவணங்கீசர், வாலிநாதர், சிட்டிலிங்கநாதர்
இறைவி : ஜடாமகுடேஸ்வரி, அழகுசடை முடியம்மை,
தலமரம் : தென்னை தீர்த்தம் : காவிரி
பாடல் : சம்பந்தர். நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 103 அலைபேசி : 9787742454.
முகவரி : அருள்மிகு. தயாநிதீஸ்வரர் திருக்கோயில், ஆடுதுறைபெருமாள் கோயில் , (வழி) கணபதி அக்ரஹாரம் ,உள்ளிக்கடை அஞ்சல், பாபநாசம் வட்டம், தஞ்சை மாவட்டம் 614 202
தலச் சிறப்பு : வாலி வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 49

உய்யும்வகைக்
காத்தும் படைத்துங் கலைத்துநிற்போர் நாடோறும்
ஏத்துங் **குரங்காட்டின்** என்னட்பே

242 - வடகுரங்காடுதுறை (ஆடுதுறைபெருமாள் கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 91 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்மு பாதிரிகளே விரவி எங்கும்
ஓங்குமா காவிரி வடகரை அடை **குரங்காடுதுறை**
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளார் இடமென விரும்பினாரே

கோலமா மலரோடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார் திருந்து மாங்கனிகள் உந்தி
ஆலுமா காவிரி வடகரை அடை **குரங்காடுதுறை**
நீலமா மணிமிடற்று அடிகளை நினைய வல்வினைகள் வீடே - 6

நீலமா மணிநிறத்து அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்
ஏலமோடு இலை இலவங்கமே இஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை அடை **குரங்காடுதுறையே** - 8

தாழிளம் காவிரி வடகரை அடை **குரங்காடுதுறைப்**
போழிளம் மதிபொதி புரிதரு சடைமுடி புண்ணியனைக்
காழியான் அருமுறை ஞானசம்பந்தன கருதுபாடல்
கோழையா அழைப்பினும் கூடுவார் நீடுவான் உலகினூடே - 11

51. பழனம் (திருப்பழனம்)

இறைவன் : ஆபத்சகாயர்
இறைவி : பெரியநாயகி
தலமரம் : வாழை
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம், குபேர தீர்த்தம்.
பாடல் : சம்பந்தர், அப்பர்.
நாடு : சோழநாடு (வடகரை) வரிசை எண் : 104
தொலைபேசி : 04362 - 326668 அலைபேசி : 9790207773, 9486467597
முகவரி : அருள்மிகு. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், திருப்பழனம் அஞ்சல், (வழி) திருவையாறு, தஞ்சை மாவட்டம் 613 204
தலச் சிறப்பு : சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று

திருவருட்பா பாடல் எண் 50

மாத்தழைத்த
வண்பழனத் தின்குவிவெண் வாயிற்றேன் வாக்கியிட
உண்**பழனத்** தென்றன் உயிர்க்குயிரே

188 - திருப்பழனம்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 67 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலியவருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா எனநின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் **பழன**நகராரே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 12 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் **பழன**த்தான்
முன்மாலை நகுதிங்கள் முகில் விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன் என் புதுநலம் உண்டிகழ்வானோ

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 35 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

அருவனாய் அத்தி ஈருரி போர்த்துமை
உருவனாய் ஒற்றியூர் பதியாகிலும்
பருவரால் வயல் சூழ்ந்த **பழன**த்தான்
திருவினார் திருவேண்டும் இத்தேவர்க்கே

52. திருவையாற்றின் (திருஐயாறு) திருவையாறு

இறைவன் : பஞ்சநாதேஸ்வரர், ஐயாற்றீஸ்வரர்
இறைவி : தர்மசம்வர்த்தினி, அறம்வளர்த்தநாயகி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : சூரிய தீர்த்தம், காவிரி தீர்த்தம்.
பாடல் : மூவர். நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 105 தொலைபேசி : 0436 - 2260332
முகவரி : அருள்மிகு. பஞ்சநாதேஸ்வரர் திருக்கோயில், திருவையாறு அஞ்சல், தஞ்சை மாவட்டம் 613 204
தலச் சிறப்பு : அப்பர் பெருமான் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த தலம் சப்த தானத் தலங்களுள் ஒன்று, சுந்தரனும், சேரமானும் வந்த போது காவிரி ஒதுங்கி வழிவிட்டது. அப்பருக்கு காட்சி கொடுத்த தென்கயிலை கோயில்.

திருவருட்பா பாடல் எண் 51

பண்பகன்ற
வெய்யாற்றி னின்றவரை மெய்யாற்றி னேற்றுதிரு
வையாற்றின் மேவியஎன் னாதரவே

50 - திருஐயாறு (திருவையாறு)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 130 பாடல் 1
பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்பரி

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்று
அருள் செய்வான் அமரும் கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் **திருவையாறே**

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 3 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் **ஐயாறடை**கின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 77 பாடல் 1
பண் : காந்தார பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

பரவும் பரிசொன்று அறியேன் நான்
பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினைய மாட்டேன் நான்
கரவில் அருவி கமுகுண்ணத்
தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவம் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறுடைய அடிகளோ



53. நெய்தானம் (திருநெய்த்தானம்) (தில்லைஸ்தானம்)

இறைவன் : நெய்யாடியப்பர், கிருதபுரீஸ்வரர்
இறைவி : பாலாம்பிகை, இளமங்கையம்மை
தலமரம் : வில்வம் தீர்த்தம் : காவேரி
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 106 தொலைபேசி : 04362 - 260553
முகவரி : அருள்மிகு. நெய்யாடியப்பர் திருக்கோயில், தில்லைஸ்தானம் & அஞ்சல், திருவையாறு வட்டம், தஞ்சை மாவட்டம் 613 203
தலச் சிறப்பு : சப்த தானங்களுள் ஒன்று. பல்லவர்கள் திருப்பணி செய்துள்ளனர்

திருவருட்பா பாடல் எண் 52

பொய்யாற்றி
மெய்த்தான நின்றோர் வெளித்தான மேவுதிரு
நெய்த்தானத் துள்ளமர்ந்த நித்தியமே

172 - திருநெய்த்தானம் (தில்லைஸ்தானம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 15 பாடல் 2
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

பறையும் பழி பாவம் படு துயரம் பல தீரும்
பிறையும் புனல் அரவம்படு சடையெம் பெருமானூர்
அறையும் புனல் வருகாவிரி அலைசேர் வடகரை மேல்
நிறையும் புனை மடவார் பயில் **நெய்த்தானம்** எனீரே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 89 பாடல் 1
திருவிருத்தம் இராகம் : பைரவி

பாரிடம் சாடிய பல்லுயிர் வான் அமரர்கருளிக்
காரடைந்த கடல்வாய் உமிழ் நஞ்சமுதாக உண்டான்
ஊரடைந்த இவ்வுலகில் பலி கொள்வது நாமறியோம்
நீரடைந்த கரை நின்ற **நெய்த்தான**த்து இருந்தவனே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 41 பாடல் 4
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

மின்னேரிடை பங்கன் நீயே என்றும்
வெண்கயிலை மேவினாய் நீயே என்றும்
பொன்னேர் சடைமுடியாய் நீயே என்றும்
பூத கணநாதன் நீயே என்றும்
எண்ணா விரதத்தாய் நீயே என்றும்
ஏகம்பத்து என்னீசன் நீயே என்றும்
தென்னூர்ப் பதியுளாய் நீயே என்றும்
நின்ற **நெய்த் தானா** என் நெஞ்சுளாயே



54. பெரும்புலியூர் (பெரும்புலியூர்)

இறைவன் : வியாக்ரபுரீஸ்வரர்
இறைவி : சௌந்தரநாயகி
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 107 அலைபேசி : 9443447826, 9442729856
முகவரி : அருள்மிகு. வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில், பெரும்புலியூர், திருநெய்த்தானம் அஞ்சல், (வழி) திருவையாறு, திருவையாறு வட்டம், தஞ்சை மாவட்டம் 613 203
தலச் சிறப்பு : வியாக்ரபாத முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 53

மைத்த
கரும்புலியூர்க் காளையொடுங் கண்ணோட்டங் கொள்ளும்
பெரும்புலியூர் வாழ்கருணைப் பேறே

216 - பெரும்புலியூர்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 67 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

மண்ணுமோர் பாகமுடையார் மாலுமோர் பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார் வேதமுடைய விமலர்
கண்ணுமோர் பாகமுடையார் கங்கை சடையில் கரந்தார்
பெண்ணுமோர் பாகமுடையார் **பெரும்புலியூர்** பிரியாரே

கற்றது உறப் பணிசெய்து காண்டும் என்பாரவர் தங்கள்
முற்றிது அறிதும் என்பார்கள் முதலியர் வேதபுராணர்
மற்றிது அறிதும் என்பார்கள் மனத்திடையார் பணிசெய்யப்
பெற்றி பெரிதும் உகப்பார் **பெரும்புலியூர்** பிரியாரே - 6

உறவியும் இன்புறு சீறும் ஓங்குதல் வீடெளிதாகித்
துறவியும் கூட்டமும் காட்டித் துன்பமும் இன்பமும் தோற்றி
மறவியென் சிந்தனை மாற்றி வாழவல்லார் தமக்கென்றும்
பிறவி அறுக்கும் பிரானார் **பெரும்புலியூர் பிரி**யாரே - 8

பிறை வளரும் முடிச்சென்னிப் **பெரும்புலியூர்ப்** பெருமானை
நறை வளரும் பொழில் காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
மறை வளரும் தமிழ் மாலை வல்லவர் தம்துயர் நீங்கி
நிறை வளர் நெஞ்சினராகி நீடுலகத்து இருப்பாரே - 11

55. மழபாடி (திருமழபாடி)

இறைவன் : வைத்தியநாதர், மழுவாடீஸ்வரர், வைரத்தூண் நாதர், வச்சிரதம்பேஸ்வரர்
இறைவி : சுந்தராம்பிகை, அழகம்மை, பாலாம்பிகை
தலமரம் : பனை
தீர்த்தம் : இலட்சுமி தீர்த்தம், கொள்ளிடம் தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 108 அலைபேசி : 9443623014, 9843360716, 9786205278
முகவரி : அருள்மிகு. வச்சிரதம்பேஸ்வரர் திருக்கோயில், திருமழபாடி & அஞ்சல், அரியலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் 621 851
தலச் சிறப்பு : மழவர்கள் ஆண்ட மழவர்பாடி பிற்காலத்தில் மழபாடி என்றானது.

திருவருட்பா பாடல் எண் 54

விரும்பிநிதம்
பொன்னுங் கவுத்துவமும் பூண்டோன் புகழ்ந்தருளை
மன்னு **மழபாடி** வச்சிரமே

227 - திருமழபாடி

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 9 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

களையும் வல்வினை அஞ்சல் நெஞ்சே கருதார்புரம்
உளையும் பூசல் செய்தான் உயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சுரம் வாங்கி எய்தான் மதுத்தும்பி வண்டு
அளையும் கொன்றை அம்தார் **மழபாடி**யுள் அண்ணலே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 39 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

நீரேறு மேனி உடையான் கண்டாய்
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைந்தான் கண்டாய்
கூறாக உமைபாகம் கொண்டான் கண்டாய்
கொடிய விடம் உண்டு இருண்ட கண்டன் கண்டாய்
ஏரேறி எங்கும் திரிவான் கண்டாய்
ஏழுலகும் ஏழ்மலையும் ஆனான் கண்டாய்
மாறானார் தம் அரணம் அட்டான் கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் தானே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 24 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே **மழபாடி**யுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

56. பழுவூர் (திருப்பழுவூர்) (கீழப்பழுவூர்)

இறைவன் : வடமூலேஸ்வரர், யோகவனேஸ்வரர், ஆலந்துறையார்
இறைவி : அருந்தவநாயகி
தலமரம் : ஆல் தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 109 அலைபேசி : 9786163399, 9943882368
முகவரி : அருள்மிகு. வடமூலேஸ்வரர் திருக்கோயில், கீழப்பழுவூர் & அஞ்சல், அரியலூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் 621 707
தலச் சிறப்பு : பழு என்றால் ஆல். ஆல் தலமரம், அம்பிகை, பரசுராமர் வழிபட்ட தலம். முதலாம் பராந்தகச் சோழன் திருப்பணி செய்துள்ளான்

திருவருட்பா பாடல் எண் 55

துன்னுகின்ற
நாய்க்குங் கடையேன் நவைதீர நற்கருணை
வாய்க்கும் **பழுவூர்** மரகதமே

189 - திருப்பழுவூர் (கீழப்பழுவூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 34 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

முத்தன்மிகு மூவிலை நல்வேலன் விரிநூலன்
அத்தன் எமை ஆளுடைய அண்ணல் இடமென்பர்
மைத்தழை பெரும் பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர் பயில்கின்ற **பழுவூரே**

சாதல் புரிவார் சுடலை தன்னில் நடமாடும்
நாதன் நமை ஆளுடைய நம்பன் இடமென்பர்
வேதமொழி சொல்லி மறையாளர் இறைவன் தன்
பாதம் அவை ஏத்த நிகழ்கின்ற **பழுவூரே - 5**

உரக்கடல் விடத்தினை மிடற்றில் உறவைத்தவன்
அரக்கனை அடர்த்தருளும் அப்பனிடம் என்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி உண்டு
பரக்குறு புனல்செய்வினை ஆடு**பழுவூரே - 8**

அந்தணர்கள் ஆனமலையாளர் அவரேத்தும்
பந்தமலிகின்ற **பழுவூர்** அரசனை ஆரச்
சந்தமிகு ஞானம் உணர் பந்தன் உரை பேணி
வந்தவண்ணம் ஏத்தும் அவர் வானம் உடையாரே - 11

57. கானூர் (திருக்கானூர்)

இறைவன் : செம்மேனிநாதர், கரும்பேஸ்வரர்
இறைவி : சிவலோகநாயகி
தீர்த்தம் : கொள்ளிடம் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 110 அலைபேசி : 9345009344
முகவரி : அருள்மிகு. திருக்கானூர் திருக்கோயில், விஷ்ணம்பேட்டை & அஞ்சல், (வழி) திருக்காட்டுப்பள்ளி, தஞ்சை மாவட்டம் 613 105
தலச் சிறப்பு : கொள்ளிடக் கரையில் உள்ளது. வெள்ளத்தில் மூழ்கிருந்து பல ஆண்டுகள் கழித்து மீட்கப்பட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 56

தேய்க்களங்கில்
வானூர் மதிபோன் மணியாற் குமுதமலர்
கானூ ருயர்தங்கக் கட்டியே

88 - திருக்கானூர்

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 73 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிடம் ஓவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையது கொண்டார்
கமழும் சோலைக் **கானூர்** மேய பவளவண்ணரே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 76 பாடல் 2
குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

பெண்டிர் மக்கள் பெருந்துணை நல்நிதி
உண்டு இன்றே என்று கவன்மின் ஏழைகாள்
கண்டு கொள்மின் நீர் **கானூர்** முளையினைப்
புண்டரீகப் பொதும்பில் ஒதுங்கியே

தாயத்தார் தமர் நல்நிதி என்னும் இம்
மாயத்தே கிடந்திட்டு மயங்கிடேல்
காயத்தே உளன் **கானூர்** முளையினை
வாயத்தால் வணங்கீர் வினை மாயவே - 3

கல்வி ஞானக் கலைப்பொருள் ஆயவன்
செல்வம் மல்கு **திருக்கானூர்** ஈசனை
எல்லியும் பகலும் மிசை வானவா
சொல்லிடீர் நும் துயரங்கள் தீரவே - 6

58. மகிழ் ஆலந்துறை (அன்பிலாலந்துறை)

(அன்பில்)

இறைவன் : சத்தியவாகீஸ்வரர், பிரமபுரீஸ்வரர், ஆலந்துறையார்
இறைவி : சௌந்தரநாயகி
தலமரம் : ஆல் தீர்த்தம் : சந்திரன்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 111 அலைபேசி : 9443648417
முகவரி : அருள்மிகு. சத்தியவாகீஸ்வரர் திருக்கோயில், அன்பில் & அஞ்சல், திருச்சி மாவட்டம் 621 702
தலச் சிறப்பு : வாகீசர் பெருமான், பிரமன் வழிபட்ட தலம், பராந்தகச் சோழன் காலத்திய கோயில்

திருவருட்பா பாடல் எண் 57

நானூறு
கோலந் துறை கொண்ட கோவையருள் கோவைமகிழ்
ஆலந் துறை யின் அணிமுத்தே

16 - அன்பிலாந்துரை (அன்பில்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 33 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

கணை நீடெரி மாலரவம் வரை வில்லா
இனையா எயில் மூன்றும் எரித்த இறைவர்
பிணை மாமயிலும் குயில்சேர் மட அன்னம்
அணையும் பொழில் **அன்பில் ஆலந்துறை**யாரே

அரவார் புனல் **அன்பில் ஆலந்துறை** தன்மேல்
கரவாதவர் காழியுள் ஞானசம்பந்தன்
பரவார் தமிழ் பத்திசை பாடவல்லார் போய்
விரவாகுவர் வானிடை வீடெளிதாமே - 11

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 80 பாடல் 1
குறுந்தொகை இராகம் : நவரோஸ்

வானம் சேர் மதிசூடிய மைந்தனை
நீ நெஞ்சே கெடுவாய் நினைகிற்கிலை
ஆனஞ்சாடியை **அன்பில் ஆலந்துறைக்**
கோன் எம்செல்வனைக் கூறிடகிற்றியே

இலங்கை வேந்தன் இருபது தோளிற்று
மலங்க மாமலை மேல் விரல் வைத்தவன்
அலங்கல் எம்பிரான் **அன்பில் ஆலந்துறை**
வலம்கொள்வாரை வானோர் வலம்கொள்வரே - 10

59. மாந்துறை (திருமாந்துறை)

இறைவன் : ஆம்ரவனேஸ்வரர், சுத்தரத்னேஸ்வரர், மிருகண்டீஸ்வரர், ஆதிரத்னேஸ்வரர்
இறைவி : அழகம்மை, பாலாம்பிகை
தலமரம் : மா மரம் தீர்த்தம் : காயத்ரி ஆறு
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 112 அலைபேசி : 9942740062, 9486640260
முகவரி : அருள்மிகு. ஆம்ரவனேஸ்வரர் திருக்கோயில், மாந்துறை & அஞ்சல், (வழி) ஆங்கரை, லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் 621 703
தலச் சிறப்பு : தாயை இழந்த ஒரு மகனுக்காகத் தாயாக வந்து உதவிய இறைவன் மிருகண்டு முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 58

நீலங்கொள்
தேந்துறையி லன்னமகிழ் சேக்கை பலநிலவு
மாந்துறைவாழ் மாணிக்க மாமலையே

231 - திருமாந்துறை

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 110 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

செம்பொனார் தருவேங்கையும் ஞாழலும் செருந்தி செண்பகம் ஆனைக் கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை குருந்தலர் பரந்து உந்தி
அம்பொன் நேர்வரு காவிரி வடகரை **மாந்துறை** உறைகின்ற எம்பிரான் இமையோர் தொழு பைங்கழலேத்துதல் செய்வோமே

பெருகு சந்தனம் காரகில் பீலியும் பெருமரம் நிமிர்ந்து உந்திப்
பொருது காவிரி வடகரை **மாந்துறைப்** புனிதன் எம்பெருமானைப்
பரிவினால் இருந்து இரவியும் மதியமும் பார்மன்னர் பணிந்தேத்த
மருதவானவர் வழிபடு மலரடி வணங்குதல் செய்வோமே - 6

வரை வளம் கவர் காவிரி வடகரை **மாந்துறை** உறைவானைச்
சிரபுரம் பதியுடையவன் கவுணியன் செழுமறை நிறைநாவன்
அரவெனும் பணிவல்லவன் ஞானசம்பந்தன் அன்புறுமாலை
பரவிடும் தொழில் வல்லவர் அல்லலும் பாவம் இலர்தாமே - 11

60. பாற்றுறை (திருப்பாற்றுறை)

(திருப்பாலத்துறை)

இறைவன் : ஆதிமூலேஸ்வரர், ஆதிமூலநாதர்
இறைவி : மோகநாயகி, மேகலாம்பிகை, நித்யகல்யாணி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : கொள்ளிடம் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 113 தொலைபேசி : 0431 - 2060455
முகவரி : அருள்மிகு. ஆதிமூலநாதர் திருக்கோயில்,
திருப்பாற்றுறை & அஞ்சல், (வழி) திருவானைக்கா,
திருச்சி வட்டம், திருச்சி மாவட்டம் 620 005
தலச் சிறப்பு : மார்கண்டேயர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 59

ஏந்தறிவாம்
நூற்றுறையில் நின்றவர்கள் நோக்கிமகிழ் வெய்துதிருப்
பாற்றுறையில் நின்ற பரஞ்சுடரே

202 - திருப்பாற்றுறை (திருப்பாலத்துறை)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 56 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய **பாற்றுறை**
ஆரார் ஆதி முதல்வரே

போது பொன் திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்து என் நலம் கொண்டார்
பாதம் தொண்டர் பரவிய **பாற்றுறை**
வேதம் ஓதும் விகிர்தரே - 6

வெவ்வ மேனியராய் வெள்ளை நீற்றினர்
எவ்வம் செய்தென் எழில் கொண்டார்
பவ்வ நஞ்சடை கண்டர் எம் **பாற்றுறை**
மவ்வல் சூடிய மைந்தரே - 8

பத்தர் மன்னிய **பாற்றுறை** மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞானசம்பந்தனது இன்தமிழ்
பத்தும் பாடிப் பரவுமே - 11

61. ஆனைக்கா (திருஆனைக்கா)

(திருவானைக்கா)

இறைவன் : ஜம்புகேஸ்வரர், ஜம்புநாதர்,
வெண்ணாவலீசர்
இறைவி : அகிலாண்டேஸ்வரி
தலமரம் : வெண்ணாவல்
தீர்த்தம் : காவிரி பாடல் : மூவர்
நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 114 தொலைபேசி : 0431 - 2230257
முகவரி : அருள்மிகு. ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்,
திருவானைக்கா & அஞ்சல், திருச்சி வட்டம்,
திருச்சி மாவட்டம் 620 005
தலச்சிறப்பு : வெள்ளை யானையும், சிலந்தியும் வழிபட்ட தலம் ஆனை வழிபட்டதால் ஆனைக்கா என்றானது. இச்சிலந்தியே மறுபிறவியில் (கோச்செங்கட்சோழனாகப்) பிறந்து 92 சிவன் கோயில் கட்டியது. சுவாமியின் திருவடியில் எப்பொழுதும் நீர் ஊறிக்கொண்ட இருக்கும் நெஞ்சறிவுறுத்தல் பாடல் எண்

திருவருட்பா பாடல் எண் 60

நாற்றிசையுந்
தேனைக்கா வுண்மலர்கள் தேங்கடலென் றாக்குவிக்கும்
ஆனைக்கா மேவியமர் அற்புதமே

பாடல் எண் 382

கோளகல
வாய்சங்கு நூலிழைத்த வாய்சிலம்பு
தன்னைஉயர் கோச்செங்கட் சோழனைக் கட்டினையே

31 - திருஆனைக்கா (திருவானைக்கா)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 53 பாடல் 1
பண் : கௌசிகம் இராகம் : பைரவி

வானைக் காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடை
தேனைக் காவில் இன்மொழித் தேவி பாகமாயினான்
ஆனைக் காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக் காவல் வேண்டுவார்க்கு ஏதும் ஏதமில்லையே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 31 பாடல் 6
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல் வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன்று இன்றியே தன்னடைந்தார்க் கெலாம்
அடைய நின்றிடும் **ஆனைக்கா** அண்ணலே

ஓத மாகடல் சூழ் இலங்கைக்கு இறை
கீதம் கின்னரம் பாடக் கெழுவினான்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்து அங்கோர்
ஆதியாயிடும் **ஆனைக்கா** அண்ணலே - 10

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 75 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத்து இறையும் தொன்மையும் நன்மையுமாய
அறையும் பூம்புனல் **ஆனைக்கா**வுடை ஆதியை நாளும்
இறைவன் என்று அடி சோர்வார் எம்மையும் ஆளுடையாரே

ஐம்பூதலங்கள்

நீர் - 61 (திருஆனைக்கா)
வாயு - 254 (திருக்காளத்தி)
அக்கினி - 235 (திருஅண்ணாமலை)
மண் - 236 (திருக்கச்சி ஏகம்பம் காஞ்சிபுரம்)
ஆகாயம் - 1 (தில்லை சிதம்பரம்)

62. பைஞ்ஞீலி (திருப்பைஞ்ஞீலி)

இறைவன் : நீலகண்டேஸ்வரர், ஞீலிவனநாதர்,
கதலிவனநாதர், ஆரண்யவிடங்கர்
இறைவி : விசாலாட்சி
தலமரம் : ஞீலி வாழை தீர்த்தம் : அப்பர் தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 115 அலைபேசி : 9790107474
முகவரி : அருள்மிகு. நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்,
திருப்பைஞ்ஞீலி & அஞ்சல், திருச்சி வட்டம்,
திருச்சி மாவட்டம் 621 005
தலச் சிறப்பு : அந்தணர் வடிவில் இறைவன் வந்து அப்பருக்குப்
பொதிசோறளித்த தலம் : பல்லவர்கால அமைப்பு

திருவருட்பா பாடல் எண் 61

மானைப்போல்
மைஞ்ஞீல வாட்கண் மலராண் மருவுதிருப்
பைஞ்ஞீலி மேவும் பரம்பரமே

220 - திருப்பைஞ்சீலி

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 14 பாடல் 1
பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடம் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடம் சடைவிடை ஊர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில் **பைஞ்ஞீலியே**

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 41 பாடல் 2
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்தராய்த் திரிவார் வினை தீர்ப்பரால்
பத்தர் தாம்தொழுது ஏத்தும் **பைஞ்ஞீலி** எம்
அத்தனைத் தொழ வல்லவர் நல்லவரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 36 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

காருலாவிய நஞ்சையுண்டு இருள் கண்டர் வெண்தலை ஓடுகொண்டு
ஊரெலாம் திரிந்து என்செய்வீர் பலி ஓரிடத்திலே கொள்ளும் நீர்
பாரெலாம் பணிந்து உம்மையே பரவிப் பணியும் **பைஞ்ஞீலியீர்**
ஆரமாவது நாகமோ சொலும் ஆரணீய விடங்கரே

63. பாச்சிலாச்சிராமம் (திருப்பாச்சிலாச்சிராமம்)

(திருவாசி)

இறைவன் : மாற்றறிவரதர், சமீவனேஸ்வரர், பிரமபுரீஸ்வரர்
இறைவி : பாலாம்பிகை, பாலசௌந்தரி
தலமரம் : வன்னி
தீர்த்தம் : சிலம்பாறு தீர்த்தம், (பங்குனி - அமலை ஆறு)
பாடல் : சம்பந்தர், சுந்தரர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 116 அலைபேசி : 9245257239, 9443692138, 9865664870
முகவரி : அருள்மிகு. மாற்றறிவரதர் திருக்கோயில்,
திருவாசி & அஞ்சல், (வழி) பிச்சாண்டார் கோயில்,
திருச்சி மாவட்டம் 621 216
தலச் சிறப்பு : சுந்தரர் பொன் பெற்ற தலம். கொல்லி மழவளின்
புதல்வியின் முயலகண் என்ற நோயை சம்பந்தர் பதிகம்
பாடி தீர்த்த தலம். முயலகன் என்பது ஒருவகை வலிப்பு
நோய். சுந்தர பாண்டியன், கிருஷ்ண தேவராயர், முதலாம்
குலோத்துங்கன் திருப்பணிகள்

திருவருட்பா பாடல் எண் 62

எஞ்ஞான்றும்
ஏச்சிரா மங்கலத்தோ டின்பந் தரும்**பாச்சி**
லாச்சிரா மஞ்சேர் அருள்நிலையே

195 - திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 44 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

துணிவளர் திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாம் செய்து **பாச்சிலாச்சிராமத்து** உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க **ஆச்சிராம**த்துறைகின்ற
புகைமலி மாலை புனைந்தழகாய புனிதர்கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை ஏத்தச் சாரகிலா வினைதானே - 11

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 14 பாடல் 2
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே அமையும் என்றிருந்தேன்
என்னையும் ஒருவன் உளன் என்று கருதி
இறையிறை திருவருள் காட்டார்
அன்னமாம் பொய்கை சூழ்தரு **பாச்சி**
லாச்சிராமத்துறை அடிகள்
பின்னையே அடியார்க்கு அருள் செய்வதாகில்
இவரலாது இல்லையோ பிரானார்

64. ஈங்கோய்மலை (திருஈங்கோய்மலை)

(திருவிங்கநாதமலை)

இறைவன் : மரகதாசலேஸ்வரர், மரகதநாதர்
இறைவி : மரகதவல்லி
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 117 அலைபேசி : 9443950031, 9443192145
முகவரி : அருள்மிகு. மரகதாசலேஸ்வரர் திருக்கோயில், திருவிங்கநாதமலை, (வழி) மணமேடு, தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம் 621 209
தலச் சிறப்பு : அகத்தியர் ஈ வடிவில் இறைவனை வழிபட்ட தலம். சிவராத்திரி அன்று இறைவன் மீது சூரிய ஒளி படுகிறது. காலையில் கடம்பந்துறை, மதியம் வாட்போக்கி, மாலையில் ஈங்கோய் தரிசிக்க என்பர். கோயிலின் அடிவாரத்தில் போக முனிவரின் கோயில் உள்ளது. இம்மூன்று தலத்தையும் ஒரே நாளில் தரிசிக்க வேண்டும் என்பர்

திருவருட்பா பாடல் எண் 63

நீச்சறியா
தாங்கோய் மலைப்பிறவி யார்கலிக்கோர் வார்கலமாம்
ஈங்கோய் மலைவாழ் இலஞ்சியமே

43 - திருஈங்கோய்மலை (திருவிங்கநாதமலை)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 70 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

வானத்துயர் தண்மதி தோய் சடைமேல் மத்தமலர் சூடித்
தேனொத்தன மென்மொழி மான்விழியாள் தேவிபாகமாகக்
கானத்து இரவில் எரிகொண்டாடும் கடவுள் உலகேத்த
ஏனத்திரள் வந்து இழியும் சாரல் **ஈங்கோய்மலை**யாரே

தொந்தசுடலைப் பொடிநீறணிவார் நுதல்சேர் கண்ணினார்
கந்தமலர்கள் பலவும் நிலவு கமழ் புன்சடை தாழப்
பந்தண் விரலாள் பாகமாகப் படுகாட்டெரியாடும்
எந்தம் அடிகள் கடிகொள் சாரல் **ஈங்கோய்மலை**யாரே - 5

நீறார் அகலமுடையார் நிரையார் கொன்றை அரவோடும்
ஆறார் சடையார் அயில் வெங்கணையால் அவுணர் புரமூன்றும்
சீறா எரிசெய் தேவர்பெருமான் செங்கண் அடல் வெள்ளை
ஏறார் கொடியார் உமையாளோடும் **ஈங்கோய்மலை**யாரே - 6

விழவார் ஒலியும் முழவும் ஓவா வேணுபுரம் தன்னுள்
அழலார் வண்ணத்து அடிகளருள் சேர் அணிகொள் சம்பந்தன்
எழிலார் சுனையும் பொழிலும் புடைதழ் **ஈங்கோய்மலை**மீசன்
கழல்சேர் பாடல் பத்தும் வல்லார் கவலை களைவாரே - 11



65. வாட்போக்கி (திருவாட்போக்கி)

(ஐயர்மலை, இரத்தினகிரி, சிவாயமலை)

இறைவன் : இரத்தினகிரீஸ்வரர், அரதனாசலேஸ்வரர், மாணிக்க ஈசர், முடித்தழும்பர்
இறைவி : கரும்பார்குழலி
பாடல் : அப்பர்
நாடு : சோழநாடு (தென்கரை) வரிசை எண் : 118
தொலைபேசி : 04323 - 245522, 245359 அலைபேசி : 9486044334
முகவரி : அருள்மிகு. இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில், ஐயர்மலை (வாட்போக்கி) ,சிவாயம் அஞ்சல், (வழி) வைகநல்லூர், திருச்சி மாவட்டம் 639 124
தலச் சிறப்பு : ஆதிசேடன் வழிபட்டது. நண்பகலில் வழிபடுவது மரபு. இங்கே காகங்கள் பறப்பதில்லை. அகத்தியர் இங்கு வந்து வழிபட்டார். திருப்புகழில் அருணகிரிநாதர் ஒப்பிலா மாமணிக் கிரிவாசர் என்று இத்தலத்தை குறிப்பிடுகிறார்.

திருவருட்பா பாடல் எண் 64

ஓங்காது
நாட்போக்கி நிற்கு நவையுடையார் நாடரிதாம்
வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே

252 - திருவாட்போக்கி (ஐயர்மலை, இரத்தினகிரி, சிவாயமலை)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 86 பாடல் 2
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

விடுத்த தூதுவர்வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்
அடுத்த கின்னரம் கேட்கும் **வாட்போக்கி**யை
எடுத்தும் ஏத்தியும் இன்புறுமின்களே

கூற்றம் வந்து குமைத்திடும் போதினால்
தேற்றம் வந்து தெளிவுறலாகுமே
ஆற்றவும் அருள் செய்யும் **வாட்போக்கி**பால்
ஏற்றுமின் விளக்கை இருள் நீங்கவே - 4

நாடிவந்து நமன்தமர் நல்லிருள்
கூடிவந்து குமைப்பதன் முன்னமே
ஆடல் பாடல் உகந்த **வாட்போக்கி**யை
வாடி ஏத்த நம் வாட்டம் தவிருமே - 8

இரக்கம் முன்னறியாது எழு தூதுவர்
பரக்கழித்து அவர் பற்றுதல் முன்னமே
அரக்கனுக்கு அருள் செய்த **வாட்போக்கி**யார்
கரப்பதும் கரப்பார் அவர் தங்கட்கே - 10



66. கடம்பந்துறை (கடம்பர் கோயில், குளித்தலை)

இறைவன் : கடம்பவனேஸ்வரர், கடம்பவனநாதர்
இறைவி : பாலகுஜாம்பாள், முற்றிலாமுலையாள்
தலமரம் : கடம்பு
தீர்த்தம் : காவிரி தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 119 தொலைபேசி : 04323 - 225228
முகவரி : அருள்மிகு. கடம்பவனேஸ்வரர் திருக்கோயில், குளித்தலை & அஞ்சல், கரூர் மாவட்டம் 639 104
தலச் சிறப்பு : கண்வ முனிவருக்கு இறைவன் அருள் பாலித்த தலம் சப்த கன்னியர்களின் சாப விமோசன தலம்

திருவருட்பா பாடல் எண் 65

கோட்போக்கி
நில்லுங் கடம்ப நெறிபோ லெனப்பூவை
சொல்லுங **கடம்பந் துறைநிறைவே**

61 - கடம்பந்துறை (கடம்பர் கோயில், குளித்தலை)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 18 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

முற்றிலா முலையாள் இவளாகிலும்
அற்றம் தீர்க்கும் அறிவிலளாகிலும்
கற்றைச் செஞ்சடையான் **கடம்பந்துறைப்**
பெற்றம் ஊர்தியென்றாள் எங்கள் பேதையே

பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை
வண்ண நன்மலரான் பல தேவரும்
கண்ணனும் அறியான் **கடம்பந்துறை**
நண்ண நம்வினை ஆயின நாசமே - 4

மறைகொண்ட அம்மனத்தானை மனத்துள்ளே
நிறைகொண்ட நெஞ்சினுள் உறவைம்மினோ
கறைகண்டன் உறையும் **கடம்பந்துறை**
சிறை கொண்ட அவ்வினை தீர்த்தொழுமினே - 5

நூலால் நன்றா நினைமின்கள் நோய்கெடப்
பால் ஆனைந்து உடனாடும் பரமனார்
காலால் ஊன்று உகந்தான் **கடம்பந்துறை**
மேலால் நாம் செய்த வல்வினை வீடுமே - 10

67. பராய்த் துறை (திருப்பராய்த்துறை)

(திருவரத்துறை, திருவட்டுறை)

இறைவன் : தாருகாவனேஸ்வரர், பராய்த்துறைநாதர்
இறைவி : ஹேமவர்ணாம்பாள், பசும்பொன்மயிலாம்பாள்
தலமரம் : பராய் தீர்த்தம் : காவிரி நதி
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 120 அலைபேசி : 9940843571
முகவரி : அருள்மிகு. தாருகாவனேஸ்வரர் திருக்கோயில், திருப்பராய்த்துறை & அஞ்சல், கரூர் மாவட்டம் 639 115
தலச் சிறப்பு : பராய் ஒருவகை மரக்காட்டில் இறைவன் இருப்பதால் பராய்துறை என்பர் முதல் பராந்தகச் சோழன் காலத்திய கோயில்

திருவருட்பா பாடல் எண் 66

மல்லலொடு
வாழும் பராய்த்துறைவான் மன்னவரு மன்னவருஞ்
சூழும் **பராய்த்துறை**வாழ் தோன்றலே

183 - திருப்பராய்த்துறை (திருவரத்துறை, திருவட்டுறை)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 135 பாடல் 1
பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்பரி

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர் **பராய்த்துறை**
ஆறு சேர் சடை அண்ணலே

செல்வ மல்கிய செல்வர் **பராய்த்துறைச்**
செல்வர் மேல் சிதையாதன
செல்வன் ஞானசம்பந்தன செந்தமிழ்
செல்வமாம் இவை செப்பவே - 11

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 30 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

கரப்பார் காலமடைந்தவர் தம்வினை
சுருக்குமாறு வல்லார் கங்கை செஞ்சடைப்
பரப்பு நீர்வரு காவிரித் தென் கரைத்
திருப்பராய்த்துறை மேவிய செல்வரே

68. கற்குடி (கற்குடி) (உய்யக்கொண்டான் மலை)

இறைவன் : உஜ்ஜீவநாதசுவாமி, உச்சிநாதர், முக்தீசர்
இறைவி : அஞ்சனாட்சி, பாலாம்பிகை, மைவிழியம்மை
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : குடமுருட்டி, ஞானவாலி, எண்கோண தீர்த்தங்கள்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 121 அலைபேசி : 9442628044, 9443150332, 9443650493
முகவரி : அருள்மிகு. உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில், உய்யக்கொண்டான் திருமலை & அஞ்சல், (வழி) சோமரசம் பேட்டை, திருச்சி மாவட்டம் 620 102
தலச் சிறப்பு : நந்திவர்ம பல்லவ மன்னனால் அமைக்கப்பட்ட கோயில் மார்க்கண்டேயரைக் காப்பாற்ற இறைவன் உறுதியளித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 67

கூழும்பல்
நற்குடியு மோங்கி நலம்பெருகு மேன்மைதிருக்
கற்குடியிற் சந்தான கற்பகமே

82 - கற்குடி (உய்யக்கொண்டான் மலை)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமறை பதிகம் 43 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

வடம்திகழ் மென்முலையாளைப் பாகமதாக மதித்துத்
தடம்திரை சேர்புனல் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடம்திகழ் முப்புரி நூலர் துன்பமோடு இன்பமதெல்லாம்
கடந்தவர் காதலில் வாழும் **கற்குடி** மாமலையாரே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 60 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

மூத்தவனை வானவர்க்கு மூவா மேனி
முதலவனைத் திருவரையில் மூர்க்கப் பாம்பு ஒன்று
ஆர்த்தவனை அக்கரவம் ஆரமாக
அணிந்தவனைப் பணிந்தடியார் அடைந்த அன்போடு
ஏத்தவனை இறுவரையில் தேனை ஏனோர்க்கு
இன்னமுதம் அளித்தவனை இடரையெல்லாம்
காத்தவனைக் **கற்குடி**யில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 27 பாடல் 4
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே
மையார் கண்ணிபங்கா மதயானை உரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்**கற்குடி** மன்னிநின்ற
ஐயா எம்பெருமான் அடியேனையும் அஞ்சலென்னே

69. மூக்கீச் சுரம் (மூக்கிச்சுரம்) (உறையூர், திருச்சி)

இறைவன் : பஞ்சவர்ணேஸ்வரர்
இறைவி : காந்திமதி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : சிவ தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 122 தொலைபேசி : 0431 - 2768546
அலைபேசி : 9443919091
முகவரி : அருள்மிகு. பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில், உறையூர் & அஞ்சல், திருச்சி 620 003
தலச் சிறப்பு : சோழ மன்னர்களின் தலைநகரமாக இருந்தது. புகழ் சோழ நாயனார் ஆண்ட பதி.

திருவருட்பா பாடல் எண் 68

சிற்சுகத்தார்
பிற்சநந மில்லாப் பெருமை தருமுறையூர்ச்
சற்சனர்சேர் **மூக்கிச் சரத்**தணியே

235 - மூக்கீச்சுரம் (உறையூர், திருச்சி)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 120 பாடல் 1
பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

சாந்தம் வெண்ணீறெனப் பூசி வெள்ளம் சடை வைத்தவர்
காந்தளாரும் விரலேழையோடு ஆடிய காரணம்
ஆய்ந்து கொண்டு ஆங்கு அறிய நிறைந்தார் அவர் ஆர்கொலோ
வேந்தன் **மூக்கீச்சர**த்து அடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே

வெந்த நீறு மெய்யில் பூசுவர் ஆடுவர் வீங்கிருள்
வந்தெனார் அவ்வளை கொள்வதும் இங்கொரு மாயமாம்
அந்தண் மாமானதன் நேரியன் செம்பியன் ஆக்கிய
எந்தை **மூக்கீச்சர**த்தடிகள் செய்கின்றதோர் ஏதமே - 6

மல்லையார் மும்முடி மன்னர் **மூக்கீச்சர**த்தடிகளைச்
செல்வராக நினையும்படி சேர்த்திய செந்தமிழ்
நல்லராய் வாழ்பவர் காழியுள் ஞானசம்பந்தன்
சொல்ல வல்லாரவர் வானுலகாளவும் வல்லரே - 11

70. சிராப்பள்ளி (திரிசிராப்பள்ளி) (திருச்சி)

இறைவன் : மாத்ருபூதேஸ்வரர், தாயுமானேஸ்வரர், தாயுமானவர்
இறைவி : மட்டுவார்குழலி, சுகந்தகுந்தளாம்பிகை
தீர்த்தம் : காவிரி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 123 தொலைபேசி : 0431 - 2704621, 2710484
முகவரி : அருள்மிகு. தாயுமானவர் திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சி, திருச்சி மாவட்டம் 620 002
தலச் சிறப்பு : மகப்பேறு காலத்தில் ஒரு பெண்ணுக்கு இறைவன் அவளுடைய தாய் உருவத்தில் வந்து உதவி செய்ததால் தாயுமானவர் எனப்பட்டார் மூன்று சிரசங்களையுடைய (திரிசிரம்) அசுரன் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 69

மற்செய்
அராப்பள்ளி மேவு மவனின்று வாழ்த்தும்
சிராப்பள்ளி ஞானத் தெளிவே

127 - திரிசிராப்பள்ளி (திருச்சி)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 98 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் **சிராப்பள்ளிக்**
குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே

தேனையம்பாடும் **சிராப்பள்ளி**யானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கேறும் கழுமலவூரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகுபாடல் இவை வல்லார்
வானசம்பந்தத்து அவரோடு மன்னி வாழ்வாரே - 11

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 85 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

மட்டுவார் குழலாளொடு மால்விடை
இட்டமா உகந்து ஏறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க்கு இன்னருளே செயும்
சிட்டர் போலும் **சிராப்பள்ளிச்** செல்வரே

தாயுமாய் எனக்கே தலை கண்ணுமாய்
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை
தேயநாதன் **சிராப்பள்ளி** மேவிய
நாயனார் என நம்வினை நாசமே - 4 to 10

71. எறும்பியூர் (திருஎறும்பியூர்) (திருவெறும்பூர்)

இறைவன் : பிப்பிலிகேஸ்வரர், எறும்பீஸ்வரர், மதுவனேஸ்வரர்
இறைவி : சௌந்திரநாயகி, மதுவனேஸ்வரி, நறுங்குழல்நாயகி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 124 அலைபேசி : 9842957568
முகவரி : அருள்மிகு. எறும்பீஸ்வரர் திருக்கோயில், திருவெறும்பூர் & அஞ்சல், திருச்சி 620 013
தலச் சிறப்பு : திருமால், பிரமன் வழிபட்டதலம் இந்திரனும் தேவர்களும் எறும்பு வடிவம் கொண்டு இறைவனை வழிபட்டனர்

திருவருட்பா பாடல் எண் 70

இராப்பள்ளி
நின்றெழன்மெய் யன்றெனவே நேர்ந்துலகு வாழ்த்துகின்ற
நன்**றெறும்பி யூரி**லங்கு நன்னெறியே

48 - திருஎறும்பியூர் (திருவெறும்பூர்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 74 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

விரும்பி ஊறு விடேல் மட நெஞ்சமே
கரும்பின் ஊறல் கண்டாய் கலந்தார்க்கு அவன்
இரும்பின் ஊறல் அறாததோர் வெண்தலை
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே

நிறுங்கொள் மால்வரை ஊன்றி எடுத்தலும்
நறுங்குழல் மடவாள் நடுக்கெய்திட
மறங்கொள் வாளரக்கன் வலி வாட்டினான்
எறும்பியூர் மலை எம்மிறை காண்மினே - 10

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 91 பாடல் 1
பண் : திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

பன்னிய செந்தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்நிறைந்த கலைகளாய
தன்னையும் தன் திறத்தறியாப் பொறியிலேனைத்
தன் திறமும் அறிவித்து நெறியும் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை ஆளாக்கொண்ட
தென் **எறும்பியூர்** மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே

பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

72. நெடுங்களம் (திருநெடுங்களம்)

இறைவன் : நித்யசுந்தரேஸ்வரர், நெடுங்களநாதர்,
இறைவி : மங்களநாயகி, ஒப்பிலாநாயகி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : அகத்திய தீர்த்தம், சுந்தர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 125 தொலைபேசி : 0431 - 2520126
அலைபேசி : 9443745009, 9842028774
முகவரி : அருள்மிகு. நெடுங்களநாதர் திருக்கோயில்,
திருநெடுங்களம் & அஞ்சல், திருச்சி வட்டம்,
திருச்சி மாவட்டம் 620 015
தலச் சிறப்பு : சோழர்கால கல்உரல் ஒன்று உள்ளது. விசாகத்தில்
பெருவிழா

திருவருட்பா பாடல் எண் 71

துன்றுகயற்
கண்ணார் நெடுங்களத்தைக் கட்டழித்த மெய்த்தவர்தஞ்
தண்ணார் **நெடுங்களமெய்**த் தாரகமே

171 - திருநெடுங்களம்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 52 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்சகனே என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர் களையாய் **நெடுங்களம்** மேயவனே

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வவ்வேல் என்று அடர் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் **நெடுங்களம்** மேயவனே - 3

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து கருத்தனாகிக்
கங்கையாளைக் கமழ்சடைமேல் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர் களையாய் **நெடுங்களம்** மேயவனே - 6

நீடவல்ல வார் சடையான் மேய **நெடுங்கள**த்தைச்
சேடர் வாழுமா மறுகில் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே - 11

73. மேலைதிருக்காட்டுப்பள்ளி (மேலைத் திருக்காட்டுப்பள்ளி) (திருக்காட்டுப்பள்ளி)

இறைவன் : அக்கினீஸ்வரர், தீயாடியப்பர்
இறைவி : சௌந்தரநாயகி, அழகம்மை
தலமரம் : வன்னி, வில்வம்
தீர்த்தம் : அக்கினி, காவிரி தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 126 அலைபேசி : 9442347433
முகவரி : அருள்மிகு. அக்கினீஸ்வரர் திருக்கோயில்,
திருக்காட்டுப்பள்ளி & அஞ்சல்,தஞ்சை மாவட்டம் 613 104
தலச் சிறப்பு : திருமால், பிரமன், அக்கினி வழிபட்டது. நவக்கிரகங்கள்
எல்லாம் சூரியனைப் பார்த்தவாறு உள்ளன.
சோழமன்னன் திருப்பணி

திருவருட்பா பாடல் எண் 72

எண்ணார்
தருக்காட்டுப் பள்ளித் தகைகொண்டோர் சூழ்ந்
திருக்காட்டுப் பள்ளியில்வாழ் தேவே - மருக்காட்டு

239 - மேலைத் திருக்காட்டுப்பள்ளி (திருக்காட்டுப்பள்ளி)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 29 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

வாருமன்னும் முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன்னும் பலி உண்பதும் வெண்தலை
காருமன்னும் பொழில் சூழ்ந்த **காட்டுப்பள்ளி**
நீருமன்னும் சடை நிமலர்தம் நீர்மையே

வேதனார் வெண்மழு ஏந்தினார் அங்கம் முன்
ஓதினார் உமையொரு கூறனார் ஒண்குழைக்
காதினார் கடிபொழில் சூழ்ந்த **காட்டுப்பள்ளி**
நாதனார் திருவடி நாளும் நின்றேத்துமே - 6

சிலைதனால் முப்புரம் செற்றவன் சீரினார்
மலைதனால் வல்லரக்கன் வலி வாட்டினான்
கலைதனார் புறவணி மல்கு **காட்டுப்பள்ளி**
தலைதனால் வணங்கிடத் தவமது ஆகுமே - 8

பொருபுனல் புடையணி புறவ நன்னகர் மன்னன்
அருமறை அவை வல்ல அணிகொள் சம்பந்தன் சொல்
கருமணி மிடற்றினன் கருது **காட்டுப்பள்ளி**
பரவிய தமிழ் சொல்லப் பறையும் மெய்ப்பாவமே - 11

74. ஆலம்பொழிற் (திருஆலம்பொழில்) (திருவாலம்பொழில்)

இறைவன் : ஆத்மநாதேஸ்வரர்
இறைவி : ஞானாம்பிகை
தலமரம் : ஆல் பாடல் : அப்பர்
நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 127 தொலைபேசி : 04365 - 284573
அலைபேசி : 9245419919
முகவரி : அருள்மிகு. ஆத்மநாதேஸ்வரர் திருக்கோயில், திருவாலம்பொழில் அஞ்சல், (வழி) திருக்கண்டியூர், திருவையாறு வட்டம், தஞ்சை மாவட்டம் 613 103
தலச் சிறப்பு : காசிபர் மற்றும் அஷ்டவசுக்கன் வழிபட்ட தலம். சிவராத்திரி விசேடம்

திருவருட்பா பாடல் எண் 73

மருக்காட்டு
நீலம் பொழிற்குள் நிறைதடங்கட் கேர்காட்டும்
ஆலம் பொழிற்சிவயோ கப்பயனே

27 - திருஆலம்பொழில் (திருவாலம்பொழில்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 86 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

கருவாகிக் கண்ணுதலாய் நின்றான் தன்னைக்
கமலத்தோன் தலையரிந்த காபாலியை
உருவார்ந்த மலைமகளோர் பாகத்தானை
உணர்வெலாம் ஆனானை ஓசையாகி
வருவானை வலஞ்சுழியெம் பெருமான் தன்னை
மறைக்காடும் ஆவடுதண் துறையும் மேய
திருவானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே

கையிலுண்டு உழல்வாரும் சாக்கியரும் கல்லாத
வன்மூடர்க்கு அல்லாதானைப்
பொய்யிலாதவர்க்கு என்றும் பொய்யிலானைப்
பூண்நாகம் நாணாகப் பொருப்பு வில்லாக்
கையினார் அம்பெரி கால் ஈர்க்குக் கோலாக்
கடும் தவத்தோர் நெடும்புரங்கள் கனல்வாய் வீழ்த்த
செய்யினார் தென்பரம்பைக் குடியின் மேயத்
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே - 9

75. பூந்துருத்தி (திருப்பூந்துருத்தி) (திருப்பந்துருத்தி)

இறைவன் : புஷ்பவனேஸ்வரர், ஆதிபுராணர், பொய்யிலியர்
இறைவி : செளந்தர நாயகி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 128 அலைபேசி : 9486671417, 9486576529
முகவரி : அருள்மிகு. புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில், திருப்பந்துருத்தி & அஞ்சல், (வழி) கண்டியூர், திருவையாறு வட்டம், தஞ்சை மாவட்டம் 613 103
தலச் சிறப்பு : சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. பூந்துருத்தி காடகநம்பியின் அவதாரத் தலம். சம்பந்தருக்கு இறைவன் காட்சி கொடுக்க நந்தி விலகியுள்ளது. சம்பந்தரின் பல்லக்கை அப்பர் சுமந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 74

சீலநிறை
வாந்துருத்தி கொண்டுள் ளனலெழுப்பு வோர்புகழும்
பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே

212 - திருப்பூந்துருத்தி (திருப்பந்துருத்தி)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 88 பாடல் 1
திருவிருத்தம் இராகம் : சங்கராபரணம்

மாலினை மாலுற நின்றான் மலைமகள் தன்னுடைய
பாலனைப் பான்மதி சூடியைப் பண்புணரார் மதின்மேல்
போலனைப் போர்விடை ஏறியைப் **பூந்துருத்தி** மகிழும்
ஆலனை ஆதிபுராணனை நானடி போற்றுவதே

திருநாவுக்கரசர் 3 ஆம் திருமுறை பதிகம் 32 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

கொடிகொள் செல்வ விழாக் குணலை அறாக்
கடிகொள் பூம்பொழில் கச்சியேகம்பனார்
பொடிகள் பூசிய **பூந்துருத்தி** நகர்
அடிகள் சேவடிக் கீழ்நாம் இருப்பதே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 43 பாடல் 3
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

எனக்கென்றும் இனியானை எம்மான் தன்னை
எழிலாரும் ஏகம்பம் மேயான் தன்னை
மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னைத்
தனக்கென்றும் அடியேனை ஆளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் **பூந்துருத்திக்** கண்டேன் நானே

76. கண்டியூர் (திருக்கண்டியூர்)

இறைவன் : பிரமசிரக் கண்டீஸ்வரர், வீரட்டேஸ்வரர்
இறைவி : மங்கள நாயகி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : நந்தி, தட்சன், பிரமன், குடமுருட்டி தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 129 தொலைபேசி : 04362 - 261100
அலைபேசி : 9865302750
முகவரி : அருள்மிகு. பிரமசிரக் கண்டீஸ்வரர் திருக்கோயில், திருக்கண்டியூர் அஞ்சல், (வழி) திருவையாறு, தஞ்சை மாவட்டம் 613 202
தலச் சிறப்பு : அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. பிரமன் சிரத்தை இறைவன் கொய்த தலம். மாசி மாதம் 13,14,15 தேதிகளில் மாலை 5.45 முதல் 6.10 வரை சுவாமியின் மேல் சூரிய ஒளி விழுகிறது.

திருவருட்பா பாடல் எண் 75

காந்துருவத்
தண்டியூர் போற்றுந் தகைகாசிக் கட்செய்து
கண்டியூர் வாழுங் களைகண்ணே

68 - திருக்கண்டியூர்

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 38 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

வினவினேன் அறியாமையில் உரை
செய்மினீர் அருள் வேண்டுவீர்
கனவிலார் புனல் காவிரிக்
கரைமேய **கண்டியூர்** வீரட்டன்
தனம் முனே தனக்கு இன்மையோ
தமர் ஆயினார் அண்டம் ஆளத்தான்
வன்னில் வாழ்க்கை கொண்டு ஆடிப்பாடி
இவ்வையம் மாப்பலி தேர்ந்ததே

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 93 பாடல் 1
திருவிருத்தம் இராகம் : சங்கராபரணம்

வானவர் தானவர் வைகல் மலர் கொணர்ந்திட்டு இறைஞ்சி
தானவர் மால் பிரமன் அறியாத தகைமையினான்
ஆனவன் ஆதி புராணன் அன்றோடிய பன்றி எய்த
கானவனைக் **கண்டியூர்** அண்ட வாணர் தொழுகின்றதே

மண்டி மலையை எடுத்து மத்தாக்கி அவ்வாசுகியைத்
தண்டி அமரர் கடைந்த கடல்விடம் கண்டருளி
உண்ட பிரான் நஞ்சொளித்த பிரான் அஞ்சியோடி நண்ணக்
கண்ட பிரான் அல்லனோ **கண்டியூர்** அண்ட வானவனே - 10

பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி

77. சோற்றுத் துறை (திருச்சோற்றுத்துறை)

இறைவன் : ஓதனவனேஸ்வரர், தொலையாச்செல்வர், சோற்றுத்துறைநாதர்
இறைவி : அன்னபூரணி, ஒப்பிலாம்பிகை
தீர்த்தம் : காவிரி தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 130 தொலைபேசி : 04362 - 262814
அலைபேசி : 9486282658, 9443561731, 9943884377
முகவரி : அருள்மிகு. சோற்றுத்துறைநாதர் திருக்கோயில், திருச்சோற்றுத்துறை & அஞ்சல், (வழி) கண்டியூர் திருவையாறு வட்டம், தஞ்சை மாவட்டம் 613 202
தலச் சிறப்பு : சப்த தானங்களுள் ஒன்று. அடியார்களின் பசியை இறைவன் சோறளித்துப் போக்கிய தலம் எனவே சோற்றுத்துறை என்பர். ஆதித்த சோழன் திருப்பணிகள் செய்துள்ளார்

திருவருட்பா பாடல் எண் 76

கொண்டியல்பின்
வேற்றுத் துறையுள் விரவா தவர்புகழும்
சோற்றுத் துறையுட் சுகவளமே

138 - திருச்சோற்றுத்துறை

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 28 பாடல் 2
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

பாலும் நெய்யும் தயிரும் பயின்றாடித்
தோலும் நூலும் துதைந்த வரைமார்பர்
மாலும் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலும் **சோற்றுத்துறை** சென்றடைவோமே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 33 பாடல் 3
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

ஒட்டி நின்ற உடலுறு நோய்வினை
கட்டி நின்ற கழிந்தவை போயறத்
தொட்டு நின்றும் அச்**சோற்றுத்துறை**யர்க்கே
பட்டியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே

பெற்ற மேறிலென் பேய்படை ஆகிலென்
புற்றில் ஆடலரவே அது பூணிலென்
சுற்றி நீயென்றும் **சோற்றுத்துறை**யர்க்கே
பற்றி நீபணி செய் மடநெஞ்சமே - 8

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 94 பாடல் 1
பண் : கௌசிகம் இராகம் : பைரவி

அழல்நீர் ஒழுகி அனைய சடையும்
உழை ஈருரியும் உடையான் இடமாம்
கழை நீர்முத்தும் கனகக் குவையும்
சுழல் நீர்ப்பொன்னிச் **சோற்றுத்துறை**யே

78. வேதிக்குடி (திருவேதிகுடி)

இறைவன் : வேதபுரீஸ்வரர், வாழைமடுநாதர்
இறைவி : மங்கையர்க்கரசி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : வேத தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 131 அலைபேசி : 9345104187
முகவரி : அருள்மிகு. வேதபுரீஸ்வரர் திருக்கோயில்,
திருவேதிகுடி, கண்டியூர் அஞ்சல்,
திருவையாறு வட்டம், தஞ்சை மாவட்டம் 613 202
தலச் சிறப்பு : பிரமன் (வேதி) பூசித்த தலம். அதனால் வேதிகுடி
சோழர் காலக் கோயில், சப்த தானங்களுள் ஒன்று

திருவருட்பா பாடல் எண் 77

ஆற்றலிலாத்
தீதிக் குடியென்று செப்பப் படார்மருவும்
வேதிக் குடி யின்ப வெள்ளமே

272 - திருவேதிகுடி

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 78 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

நீறுவரியாடு அரவொடு ஆமை மன என்பு நிரை பூண்பர் இடபம்
ஏறுவரி யாவரும் இறைஞ்சு கழல் ஆதியர் இருந்த இடமாம்
தாறு விரி பூகம்மலி வாழை விரை நாற விணைவாளை மடுவில்
வேறு பிரியாது விளையாட வளம் ஆரும் வயல் **வேதிகுடியே**

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 90 பாடல் 6
திருவிருத்தம் இராகம் : பைரவி

எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் தாமொழியப்
பண்ணின் இசை மொழி பாடிய வானவர் தாம் பணிவார்
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான் **திருவேதிகுடி**
நண்ண அரிய அமுதினை நாமடைந்து ஆடுதுமே

வருத்தனை வாளரக்கன் முடிதோளொடு பத்திறுத்த
பொருத்தனைப் பொய்யா அருளனைப் பூதப் படையுடைய
திருத்தனைத் தேவர் பிரான் **திருவேதிகுடியுடைய**
அருத்தனை ஆரா அமுதினை நாமடைந்து ஆடுதுமே - 10

79. தென்குடித்திட்டை (தென்குடித்திட்டை) (திட்டை)

இறைவன் : வசிஷ்டேஸ்வரர், பசுபதிநாதர், தேனுபுரீஸ்வரர்,
நாகேஸ்வரர்
இறைவி : உலகநாயகி, மங்களாம்பிகை, சுகுந்தகுந்தாளாம்பிகை
தலமரம் : சண்பகம் தீர்த்தம் : சூல தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 132 அலைபேசி : 9443445864, 9443586453
முகவரி : அருள்மிகு. வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில், திட்டை,
பசுபதிகோயில் அஞ்சல், நாகை மாவட்டம் 614 206
தலச் சிறப்பு : வெண்ணாறு, வெட்டாறு இவைகளின் இடையில் திட்டு
அமைந்திருப்பதால் திட்டை என்பர் சுவாமியின்
விமானத்துள் சந்திர காந்தக் கற்கள் இருப்பதனால்
அவை சந்திரனிடமிருந்து குளிர்ச்சியை இறைவன் மீது
விழச் செய்கிறது. திருமால், வசிட்டர், பைரவர்,
பிரமன், காமதேனு வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 78

கோதியலும்
வன்குடித் திட்டை மருவார் மருவுதிருத்
தென்குடித் திட்டைச் சிவபதமே

151 - தென்குடித்திட்டை (திட்டை)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 35 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

முன்னை நான்மறையவை முறைமுறை குறையொடும்
தன்ன தாள் தொழுதெழ நின்றவன் தன்னிடம்
மன்னு மாகாவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல் **தென் குடித்திட்டையே**

ஊறினார் ஒசையுள் ஒன்றினார் ஒன்றி மால்
கூறினார் அமர்தரும் குமரவேல் தாதையூர்
ஆறினார் பொய்யகத்தை உணர்வெய்தி மெய்
தேறினார் வழிபடும் **தென் குடித்திட்டையே** - 6

தேனலார் சோலை சூழ் **தென் குடித்திட்டையைக்**
கானலார் கடிபொழில் சூழ்தரும் காழியுள்
ஞானமார் ஞானசம்பந்தன செந்தமிழ்
பானலார் மொழிவலார்க்கு இல்லையாம் பாவமே - 11

80. புள்ளமங்கை (திருப்புள்ளமங்கை)

(பசுபதி கோயில்)

இறைவன் : பிரமபுரீஸ்வரர், ஆலந்துறைநாதர், பசுபதீஸ்வரர், பசுபதிநாதர்
இறைவி : அல்லியங்கோதை, சௌந்தரநாயகி
தீர்த்தம் : திருக்குளம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (தென்கரை) வரிசை எண் : 133
அலைபேசி : 9443362563, 9367768244, 9791482102
முகவரி : அருள்மிகு. பசுபதீஸ்வரர் திருக்கோயில், பசுபதி கோயில் & அஞ்சல், தஞ்சை மாவட்டம் 614 206
தலச் சிறப்பு : சோபுரத்தில் எப்போதும் கழுகுகள் உள்ளன. அதனால் புள்ள மங்கை என்று பெயர். புள் என்றால் கழுகு

திருவருட்பா பாடல் எண் 79

நன்குடைய
உள்ளமங்கை மார்மே லுறுத்தா தவர்புகழும்
புள்ளமங்கை வாழ்பரம போகமே

206 - திருப்புள்ளமங்கை (பசுபதி கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 16 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

பாலுந்துறு திரளாயின பரமன் பிரமன் தான்
போலும் திறலவர் வாழ்தரு பொழில்சூழ் **புளமங்கைக்**
காலன் திறலறச் சாடிய கடவுள் இடம் கருதில்
ஆலந்துறை தொழுவார் தமை அடையா வினைதானே

மன்னானவன் உலகிற்கொரு மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன் பொழில் சூழ் **புளமங்கை**
என்னானவன் இசையானவன் இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையும் இடம் ஆலந்துறையதுவே - 6

இலங்கை மனன் முடிதோளிற எழிலார் திருவிரலால்
விலங்கல் இடையர்த்தானிடம் வேதம் பயின்றேத்திப்
புலன்கள் தமை வென்றார் புகழவர் வாழ் **புளமங்கை**
அலங்கல் மலி சடையானிடம் ஆலந்துறையதுவே - 8

பொந்தின்னிடைத் தேனூறிய பொழில் சூழ் **புளமங்கை**
அந்தண்புனல் வருகாவிரி ஆலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ் காழியுள் கலை ஞானசம்பந்தன்
சந்தம்மலி பாடல் சொலியாடத் தவம் ஆமே - 11

81. சக்கரப்பள்ளி (சக்கரப்பள்ளி) (ஐயம்பேட்டை)

இறைவன் : சக்கரவாகேஸ்வரர்
இறைவி : தேவநாயகி
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 134 அலைபேசி : 9345439743
முகவரி : அருள்மிகு. சக்கரவாகேஸ்வரர் திருக்கோயில், ஐயம் பேட்டை அஞ்சல், தஞ்சை மாவட்டம் 614 201
தலச் சிறப்பு : திருமால் வழிபட்டு சக்கராயுதம் பெற்ற தலம். சக்கர வாளப் பறவை வழிபட்ட தலம். மூன்றாம் குலோத்துங்கசோழன் கல்வெட்டுகள் உள்ளன.

திருவருட்பா பாடல் எண் 80

கள்ளமிலஞ்
சக்கரப் பள்ளிதனிற் றாம்பயின்ற மைந்தர்கள்தூழ்
சக்கரப் பள்ளிதனில் தண்ணளியே

122 - சக்கரப்பள்ளி (ஐயம்பேட்டை)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 27 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் **சக்கரப்பள்ளியே**

பாங்கினால் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார் உமையொரு கூறொடும் ஒலிபுனல்
தாங்கினார் உறைவிடம் **சக்கரப்பள்ளியே** - 6

முதிரிலா வெண்பிறை சூடினார் முன்னநாள்
எதிரிலா முப்புரம் எரிசெய்தார் வரைதனால்
அதிரிலா வல்லரக்கன் வலி வாட்டிய
சதிரினார் வளநகர் **சக்கரப்பள்ளியே** - 8

தண்வயல் புடையணி **சக்கரப் பள்ளி**யெம்
கண்ணுதல் அவனடிக் கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம்பந்தன் சொல்
பண்ணிய இவை சொலப் பறையும் மெய்ப்பாவமே - 11

82. கருகாவூர் (திருக்கருகாவூர்)

இறைவன் : முல்லைவனநாதர், கர்ப்பபுரீஸ்வரர், மாதவிவனேஸ்வரர்
இறைவி : கர்ப்பரட்சாம்பிகை, கருக்காத்தநாயகி
தலமரம் : முல்லை
தீர்த்தம் : ஷீரகுண்டதீர்த்தம், பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழநாடு (தென்கரை) வரிசை எண் : 135
தொலைபேசி : 04374 - 273423, 273502 அலைபேசி : 9655573806
முகவரி : அருள்மிகு. கர்ப்பபுரீஸ்வரர் திருக்கோயில், திருக்கருக்காவூர் அஞ்சல், பாபநாசம் வட்டம், தஞ்சை மாவட்டம் 614 302
தலச் சிறப்பு : ஊர்த்துவ மகிரிஷியின் சாபத்தால் நித்துவர் மனைவி வேதிகைக்கு ஏற்பட்ட கருச்சிதைவை இறைவன் காத்ததால் கருகாவூர் எனப் பெயர் பெற்றது.

திருவருட்பா பாடல் எண் 81

மிக்க
அருகாவூர் தூற்றே அழுகுபெற வோங்கும்
கருகாவூர் இன்பக் கதியே

72 - திருக்கருகாவூர்

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 46 பாடல் 1
பண் : கௌசிகம் இராகம் : பைரவி

முத்திலங்கு முறுவல் உமை அஞ்சவே
மத்தயானை மறுக அவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்த கடவுள் **கருகாவூர்** எம்
அத்தர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 15 பாடல் 1
தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

குருகாம் வயிரமாம் கூறுநாளாம்
கொள்ளும் கிழமையாம் கோளேதானாம்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டில் பண்ணாம்
ஒருகால் உமையாள் ஓர் பாகனுமாம்
உள்நின்ற நாவிற்கு உரையாடியாம்
கருவாய் உலகிற்கு முன்னே தோன்றும்
கண்ணாம் **கருகாவூர்** எந்தைதானே

ஒறுத்தானாம் ஒண்ணார் புரங்கள் மூன்றும்
ஒள்ளழலை மாட்டி உடனே வைத்து
இறுத்தானாம் எண்ணான் முடிகள் பத்தும்
இசைந்தானாம் இன்னிசைகள் கேட்டானாகும்
அறுத்தானாம் அஞ்சும் அடக்கி அங்கே
ஆகாய மந்திரமும் ஆனானாகும்
கறுத்தானாம் காலனைக் காலால் வீழக்
கண்ணாம் **கருகாவூர்** எந்தைதானே - 11

83. பாலைத்துறை (திருப்பாலைத்துறை)

இறைவன் : பாலைவனேஸ்வரர், பாலைவனநாதர்
இறைவி : தவளவெண்ணகையாள், தவளாம்பிகை
தலமரம் : பாலை
தீர்த்தம் : வசிட்டர், இந்திர, எம தீர்த்தங்கள்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 136 அலைபேசி : 9443524410
முகவரி : அருள்மிகு. பாலைவனேஸ்வரர் திருக்கோயில், திருப்பாலைத்துறை, பாபநாசம் அஞ்சல், பாபநாசம் வட்டம், தஞ்சை மாவட்டம் 614 205
தலச் சிறப்பு : மூவர் முதலிகளில் நடுவிருப்பவர் அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் நடுவிலிருப்பது அப்பர். அப்பர் தேவாரத்தில் நடுவிலிருப்பது 5 ஆம் திருமுறை ஐந்தாம் திருமுறையில் நடுவிலிருப்பது 51 ஆவது பதிகம். 51 ஆவது பதிகத்தில் நடுவிலிருப்பது 5 ஆவது பாடல். 5 ஆவது பாடலில் நடுவிலிருப்பது 2 ஆவது பாடலின் மையப்பகுதி. அந்த மையப்பகுதியில் நடுவிலிருப்பது சிவாய

திருவருட்பா பாடல் எண் 82

முருகார்ந்த
சோலைத் துறையிற் சுகஞ்சிவநூல் வாசிக்கும்
பாலைத் துறையிற் பரிமளமே

201 - திருப்பாலைத்துறை

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 51 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

நீல மாமணி கண்டத்தர் நீள்சடைக்
கோல மாமதி கங்கையும் கூட்டினார்
தூல மான்மழு ஏந்திச் சுடர்முடிப்
பால் நெய் ஆடுவர் **பாலைத் துறை**யரே

மூவரில் நடுவர் அப்பர் / அப்பரின் திருமுறைகளில் நடுவானது ஐந்தாம் திருமுறை / அதில் நடுவான பதிகம் 51 ஆவது பதிகம் அதில் நடுவான பாடல் 6 ஆவது பாடல் / அதில் நடுவான வரி இரண்டாவது வரி / அதன் நடுவில் வரும் சொல் **சிவாய** (உயிருக்கு {ய} அருகில் சிவன் நடுநாயகமாக எப்போதும் இருப்பான் என்பதை உணர்த்தும் முகத்தான் இயல்பாகவே வந்தமைந்த சொல்.

சிவாய

விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும்
மண்ணினார் மறவாது **சிவாய** என்று
எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்
பண்ணினார் அவர் **பாலைத் துறை**யரே - 6

84. நல்லூர் (திருநல்லூர்)

இறைவன் : பஞ்சவர்ணேஸ்வரர், பெரியாண்டேஸ்வரர், கல்யாணசுந்தரேஸ்வரர்
இறைவி : கிரிசுந்தரி, பர்வதசுந்தரி, கல்யாணசுந்தரி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : சப்தசாகர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 137 தொலைபேசி : 04374 - 312857
அலைபேசி : 9363141676, 9488110697, 9942439209, 9443668306
முகவரி : அருள்மிகு. பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில், (வழி) சுந்தரப்பெருமாள் கோயில், வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம் 614 208
தலச் சிறப்பு : கர்ணன் தாயார் குந்தி சாபம் நீங்கிய இடம், இத்தலத்தில் நீராடினால் 7 கடல்களிலும் நீராடிய பலன் உண்டு

திருவருட்பா பாடல் எண் 83

சீலத்தர்
சொல்லூ ரடியப்பர் தூயமுடி மேல்வைத்த
நல்லூ ரமர்ந்தநடு நாயகமே

156 - திருநல்லூர்

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 86 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

கொட்டும் பறை சீரால் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடு **நல்லூர்**ப் பெருமானை
முட்டின்று இருபோது முனியாது எழுந்து அன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 97 பாடல் 5
திருவிருத்தம் இராகம் : சங்கராபரணம்

வெண்மதிசூடி விளங்க நின்றானை விண்ணோர்கள் தொழ
நண்இலயத்தொடு பாடல் அறாத **நல்லூ**ரகத்தே
திண் இலயம் கொண்டு நின்றான் திரிபுரம் மூன்றெரித்தான்
கண்ணுளும் நெஞ்சத்தகத்தும் உள கழல் சேவடியே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 14 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர் வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத்து ஏறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திரவடி என் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானான் நல்லவாறே

85. ஆவூர் பசுபதீச்சுரம் (ஆவூர்ப்பசுபதீச்சரம்) (ஆவூர்)

இறைவன் : பசுபதீஸ்வரர், அஸ்வத்தநாதர், ஆவுருடையார்
இறைவி : மங்களாம்பிகை, பங்கஜவல்லி
தலமரம் : அரசு
தீர்த்தம் : பிரம்மம், காமதேனு
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 138 அலைபேசி : 9486303484, 9444861548
முகவரி : அருள்மிகு. பசுபதீஸ்வரர் திருக்கோயில், ஆவூர் & அஞ்சல், (வழி) கும்பகோணம், வலங்கைமான் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 701
தலச் சிறப்பு : கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில் ஆவூர் சோழ மன்னர்களின் கோட்டையாக விளங்கியது. காமதேனு, சப்தரிஷிகள், இந்திரன், சூரியன், வசிட்டர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 84

மல்லார்ந்த
மாவூ ரிரவியின்பொன் வையமள வுஞ்சிகரி
ஆவூரி லுற்றவெங்கள் ஆண்டகையே

30 - ஆவூர்ப்பசுபதீச்சுரம் (ஆவூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 8 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடுவார்தம் மனத்தார் திங்கள்
கண்ணியர் என்றென்று காதலாளர் கைதொழுது ஏத்த இருந்த ஊராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி விரை கமழ்சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல் அறாத **ஆவூர்ப் பசுபதியீச்சுரம்** பாடுநாவே

நீறுடையார் நெடுமால் வணங்கு நிமிர்சடையார் நினைவார் தமுள்ளம்
கூறுடையார் உடை கோவணத்தார் குவலயமேத்த இருந்தவூராம்
தாறுடை வாழையிற் கூழைமந்தி தகுகனியுண்டு மிண்டிட்டினத்தைப்
பாறிடப் பாய்ந்து பயிலும் **ஆவூர்ப் பசுபதியீச்சுரம்** பாடுநாவே

எண்திசையாரும் வணங்கி ஏத்தும் எம்பெருமானை எழில்கொள்ஆவூர்ப்
பண்டுரியார் சிலர் தொண்டர் போற்றும் பசுபதியீச்சுரத்து ஆதிதன் மேல்
கண்டல்கள் மிண்டிய கானல் காழிக் கவுணியன் ஞானசம்பந்தன் சொன்ன
கொண்டு இனிதாவிசை பாடி ஆடிக் கூடும் அவர் உடையார்கள் வானே

86. சத்தி முற்றம் (திருச்சத்திமுற்றம்)

(சத்திமுத்தம்)

இறைவன் : சிவக்கொழுந்தீசர்
இறைவி : பெரியநாயகி
தீர்த்தம் : தூல தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 139 அலைபேசி : 9443678575, 9443564221
முகவரி : அருள்மிகு. சிவக்கொழுந்தீசர் திருக்கோயில், திருச்சத்திமுற்றம், பட்டீஸ்வரம் அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 614 201
தலச் சிறப்பு : திருநல்லூருக்கு வருமாறு கூறி அப்பர் சுவாமிகளே இறைவன் ஆட்கொண்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 85

ஓவாது
சித்திமுற்ற யோகஞ் செழும்பொழிலிற் பூவைசெயும்
சத்திமுற்ற மேவுஞ் சதாசிவமே

123 - திருச்சத்திமுற்றம் (சத்திமுத்தம்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 96 பாடல் 1
திருவிருத்தம் இராகம் : சங்கராபரணம்

கோவாய் முடுகி அடுதிறல் கூற்றம் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவடு என்மேல் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடும் கண்டாய் முழங்கும் தழற்கைத்
தேவா **திருச்சத்திமுற்றத்து** உறையும் சிவக்கொழுந்தே

கருவுற்று இருந்து உன் கழலே நினைந்தேன் கருப்புவியில்
தெருவில் புகுந்தேன் திகைத்து அடியேனைத் திகைப்பொழிவி
உருவில் திகழும் உமையாள் கணவா விடில் கெடுவேன்
திருவில் பொலி **சத்திமுற்றத்து** உறையும் சிவக்கொழுந்தே - 5

பொறித்தேர் அரக்கன் பொருப்பெடுப்புற்றவன் பொன்முடி தோள்
இற தாள் ஒருவிரல் ஊன்றிட்டு அலற இரங்கி ஒள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன் செய் குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய் **திருச்சத்திமுற்றத்து** உறையும் சிவக்கொழுந்தே-10

87. பட்டீச்சரம் (பட்டீச்சரம்)

இறைவன் : பட்டீச்சுரர், தேனுபுரீஸ்வரர்
இறைவி : ஞானாம்பிகை, பல்வளைநாயகி
தலமரம் : வன்னி
தீர்த்தம் : ஞான தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (தென்கரை) வரிசை எண் : 140
தொலைபேசி : 0435 - 2416976
முகவரி : அருள்மிகு. பட்டீஸ்வரர் திருக்கோயில், பட்டீச்சுரம் அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 703
தலச் சிறப்பு : இறைவன் சம்பந்தருக்கு முத்துப்பந்தர் அருளிய தலம் காமதேனுவின் மகள் பட்டி பூசித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 86

பத்தியுற்றோர்
முட்டீச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டீச் சரத்தெம் பராபரமே

179 - பட்டீச்சரம்

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 73 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

பாடல்மறை கூடல்மதி பல்வளையோர் பாகமதில் மூன்றோர் கணையால்
கூடஎரி ஊட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்பழைசையுள்
மாடமழ பாடியுறை **பட்டீச்சரம்** மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே

மறையினொலி கீதமொடு பாடுவன பூதமடி மருவிவிரவார்
பறையினொலி பெருகநிகழ் நட்டம் அமர் **பட்டீச்சுரம்** மேயபனிகூர்
பிறையினொடு மருவியதொர் சடையினிடை ஏற்றபுனல் தோற்றநிலையாம்
இறைவனடி முறைமுறையின் ஏத்துமவர் தீத்தொழில்கள் இல்லர் மிகவே-6

மந்தமலி சோலைமழ பாடிநகர் நீடுபழை யாறை அதனுள்
பந்தமுயர் வீடுநல **பட்டீச்சர** மேயபடர் புன்சடையனை
அந்தண்மறை யோர் இனிது வாழ்புகலி ஞானசம்பந்தன் அணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர்வினை நிற்பதிலவே - 11

88. வடதளி பழையாறை (பழையாறை வடதளி)

இறைவன் : தர்மபுரீஸ்வரர், சோமேசர்
இறைவி : விமலநாயகி, சோமகலாம்பிகை
தலமரம் : நெல்லி தீர்த்தம் : சோம தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 141 அலைபேசி : 9894569543
முகவரி : அருள்மிகு. சோமேசர் திருக்கோயில், பழையாறை, பட்டீஸ்வரம் அஞ்சல்,கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 703
தலச் சிறப்பு : அப்பர் சுவாமிகள் உண்ணவிரதம் இருந்த தலம் மங்கையர்க்கரசியார், அமர்நீதியார் அவதாரம் செய்த தலம் சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. 88- பாங்குபெற ஆர்ந்த வடவிலையான் அன்னத்தான் போற்றி நிதம் சார்ந்த வடதளிவாழ் தற்பரமே

திருவருட்பா பாடல் எண் 87

துட்டமயல்
தீங்குவிழை யார் தமைவான் சென்றமரச் செய்விக்க
ஓங்கு**பழை யாறை**யிலென் னுள்ளுவப்பே

பாடல் எண் 88

பாங்குபெற
ஆர்ந்த வடவிலையான் அன்னத்தான் போற்றிநிதம்
சார்ந்த வடதளி வாழ் தற்பரமே

190 - பழையாறை வடதளி

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 58 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

தலையெலாம் பறிக்கும் சமண் கையருள்
நிலையினால் மறைத்தால் மறைக்கொண்ணுமே
அலையினார் பொழில் **ஆறை வடதளி**
நிலையினான் அடியே நினைந்துய்ம்மினே

ஒள்ளரிக் கணார் முன் அமண் நின்றுணும்
கள்ளரைக் கடிந்த கருப்பூறலை
அள்ளலம் புனல் **ஆறை வடதளி**
வள்ளலைப் புகழத் துயர் வாடுமே - 5

ஓதினத் தெழுத்து அஞ்சுணராச் சமண்
வேதினைப் படுத்தானை வெங்கூற்றுதை
பாதனைப் **பழையாறை வடதளி**
நாதனைத் தொழ நம்வினை நாசமே - 8

செருத்தனைச் செயும் சேணரக்கன் உடல்
எருத்திற விரலால் இறை ஊன்றிய
அருத்தனைப் **பழையாறை வடதளித்**
திருத்தனைத் தொழுவார் வினை தேயுமே - 10

89. வலஞ்சுழி (திருவலஞ்சுழி)

இறைவன் : கபர்த்தீஸ்வரர், செஞ்சடைநாதர், கற்பகநாதேஸ்வரர், வலஞ்சுழிநாதர்
இறைவி : பெரியநாயகி, பிருகந்நாயகி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : காவிரி, அரசலாறு, ஐடா தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 142 தொலைபேசி : 0435 – 2454421, 2454026
முகவரி : அருள்மிகு. வலஞ்சுழிநாதர் திருக்கோயில், வலஞ்சுழி, சுவாமிமலை அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 302
தலச் சிறப்பு : காவிரி வலமாக சுழித்து செல்லுமிடம் ஏராண்ட முனிவர், ஆதிசேவுன் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 89

சேர்ந்த
மலஞ்சுழி கின்ற மனத்தர்க் கரிதாம்
வலஞ்சுழி வாழ்பொன் மலையே

245 - திருவலஞ்சுழி

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 106 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு **வலஞ்சுழி** வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 106 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

பள்ளமதாய படர்சடை மேல் பயிலும் திரைக்கங்கை
வெள்ளமதார விரும்பி நின்ற விகிர்தன் விடையேறும்
வள்ளல் **வலஞ்சுழி** வாணனென்னு மருவி நினைந்தேத்தி
உள்ளம் உருக உணருமின்கள் உறுநோய் அடையாவே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 66 பாடல் 3
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

இளைய காலம் எம்மானை அடைகிலாத்
துளையிலாச் செவித் தொண்டர்காள் நும்முடல்
வளையும் காலம் **வலஞ்சுழி** ஈசனைக்
களைகணாகக் கருதி நீர் உய்ம்மினே

90. கும்பகோணத்தில் (குடமூக்கு) (கும்பகோணம்)

இறைவன் : கும்பேஸ்வரர், அமுதேஸ்வரர், குழகர்
இறைவி : மங்களாம்பிகை
தலமரம் : வன்னி
தீர்த்தம் : ஆதி விநாயகர் தீர்த்தம்
பாடல் : அப்பர், சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 143 தொலைபேசி : 0435 - 2420276
முகவரி : அருள்மிகு. கும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம் & அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 001
தலச் சிறப்பு : 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமக உற்சவம் நடக்கின்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 90

நிலஞ்சுழியா
தோணத்தில் வந்தோ னுடன்றுதித்து வாழ்**கும்ப**
கோணத்தில் தெய்வக் குலக்கொழுந்தே

94 - குடமூக்கு (கும்பகோணம்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 59 பாடல் 7
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந்தான் எழில் வையமுய்யச்
சிலைமலி வெங்கணையால் சிதைத்தான் புரமூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம் வீழ் **குடமூக்கிடமா**
இலைமலி சூலம்ஏந்தி இருந்தான் அவன் எம் இறையே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 22 பாடல் 1
குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

பூவணத்தவன் புண்ணியன் நண்ணியங்கு
ஆவணத்துடையான் அடியார்களைத்
தீவணத் திருநீறு மெய் பூசியோர்
கோவணத்துடையான் **குடமூக்கி**லே

அன்று தான் அரக்கன் கயிலாயத்தைச்
சென்று தான் எடுக்க உமை அஞ்சலும்
நன்று தான் நக்கு நல்விரல் ஊன்றிப்பின்
கொன்று கீதம் கேட்டான் **குடமூக்கி**லே - 10

91. குடமுக்கிற் கீழ்கோட்டம் (குடந்தைக் கீழ்க்கோட்டம்) (நாகேஸ்வரர் கோயில்)

இறைவன் : நாகேஸ்வரர், நாகநாதர்
இறைவி : பிருகந்நாயகி, பெரியநாயகி
பாடல் : அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 144 தொலைபேசி : 0435 - 2402433
முகவரி : அருள்மிகு. நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம் & அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 001
தலச் சிறப்பு : குடத்தில் வில்வம் இலிங்கமான தலம்

திருவருட்பா பாடல் எண் 91

மாணுற்றோர்
காழ்க்கோட்ட நீங்கக் கருதுங் **குடமூக்கிற்**
கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே

93 - குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேஸ்வரர் கோயில்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 75 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

சொல் மலிந்த மறை நான்கு ஆறங்கமாகிச்
சொற்பொருளும் கடந்த சுடர்ச்சோதி போலும்
கல் மலிந்த கயிலைமலை வாணர் போலும்
கடல் நஞ்சம் உண்டு இருண்ட கண்டர் போலும்
மல் மலிந்த மணிவரைத் திண் தோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கொல் மலிந்த மூவிலை வேல் குழகர் போலும்
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே

முடிக்கொண்ட வளர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளை ஞாயிறு அன்ன மலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணி முறுவல் செவ்வாயும் அழகாய்த் தோன்றத்
துடிகொண்ட அடை மடவாள் பாகம் கொண்டு
சுடர்ச்சோதிக் கடிச்செம்பொன் மலைபோல் இந்நாள்
குடிகொண்டு என் மனத்தகத்தே புகுந்தார் போலும்
குடந்தைக் கீழ்க் கோட்டத்து எம் கூத்தனாரே - 6

செறிகொண்ட சிந்தைதனுள் தெளிந்து தேறித்
தித்திக்கும் சிவபுவனத்து அமுதம் போலும்
நெறிகொண்ட குழலியுமை பாகமாக
நிறைந்தமரர் கணம் வணங்க நின்றார் போலும்
மறிகொண்ட கரதலத்து எம் மைந்தர் போலும்
மதில் இலங்கைக் கோன் மலங்க வரைக் கீழிட்டுக்
குறிகொண்ட இன்னிசை கேட்டு உகந்தார் போலும்
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே - 11

92. குடந்தை காரோணம்(குடந்தைக்காரோணம்)

(சோமேசர் கோயில்)

இறைவன் : சோமேசர், சிக்கேசர், சோமநாதர்
இறைவி : சோமசுந்தரி, தேனார்மொழியாள்
தீர்த்தம் : சோம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 145 தொலைபேசி : 0435 - 2430349
முகவரி : அருள்மிகு. சோமேசர் திருக்கோயில்,
கும்பகோணம் & அஞ்சல்,கும்பகோணம் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 612 001
தலச் சிறப்பு : சந்திரன், இராமன் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 92

வாழ்க்கோட்டத்

தேரோண மட்டுந் திகழ்**குடந்தை** மட்டுமன்றிக்

காரோண மட்டுங் கமழ்மலரே

92 - குடந்தைக்காரோணம் (சோமேசர் கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 72 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

வாரார் கொங்கை மாதோர் பாகமாக வார்சடை
நீரார் கங்கை திங்கள் சூடிநெற்றி ஒற்றைக்கண்
கூரார் மழுவொன்று ஏந்தி அந்தண் குழகன் குடமூக்கில்
காரார் கண்டத்து எண்தோள் எந்தை **காரோணத்தாரே**

மூப்பூர் நலிய நெதியார் விதியாய் முன்னே அனல்வாளி
கோப்பார் பார்த்தன் நிலை கண்டு அருளும் குழகர் குடமூக்கில்
தீர்ப்பார் உடலில் அடுநோய் அவலம் வினைகள் நலியாமைக்
காப்பார் காலன் அடையாவண்ணம் **காரோணத்தாரே** - 6

கருவார் பொழில் சூழ்ந்து அழகார் செல்வக் **காரோணத்தாரைத்**
திருவார் செல்வ மல்கு சண்பைத் திகழும் சம்பந்தன்
உருவார் செஞ்சொல்மாலை இவைபத்து உரைப்பார் உலகத்துக்
கருவார் இடும்பைப் பிறப்பது அறுத்துக் கவலை கழிவாரே - 11

93. திருநாகீச்சுரம் (திருநாகேச்சுரம்)

(திருநாகேஸ்வரம்)

இறைவன் : நாகேஸ்வரர், நாகநாதர்,
சண்பகாரண்யேஸ்வரர்
இறைவி : கிரிகுஜாம்பிகை, குன்றாமாமுலையம்மை
தலமரம் : சண்பகம் தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 146
தொலைபேசி : 0435 - 2463354 அலைபேசி : 9443489839
முகவரி : அருள்மிகு. நாகேஸ்வரர் திருக்கோயில்,
திருநாகேஸ்வரம் & அஞ்சல், கும்பகோணம்,
கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 204
தலச் சிறப்பு : சேக்கிழார் திருப்பணி செய்த தலம். சேக்கிழார் பிறந்த ஊரான குன்றத்தூரில் இத்தலத்தைப் போலவே குன்றத்தூரில் ஒரு கோயிலை கட்டினார்.

திருவருட்பா பாடல் எண் 93

சீரோங்கும்

யோகீச் சுரர்நின் றுவந்து வணங்குதிரு

நாகீச் சுரமோங்கு நங்கனிவே

162 - திருநாகேச்சுரம் (திருநாகேஸ்வரம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 119 பாடல் 1
பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

தழைகொள் சந்தும் அகிலும் மயில்பீலியும் சாதியின்
பழமும் உந்திப் புனல்பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவில் வானோர் தொழ நல்கு சீர்மல்கு **நாகேச்சர**த்து
அழகர் பாதம் தொழுதேத்த வல்லார்க்கு அழகாகுமே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 52 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

நல்லர் நல்லதோர் நாகம் கொண்டாட்டுவர்
வல்லர் வல்வினை தீர்க்கும் மருந்துகள்
பல்லில் ஓடுகையேந்திப் பலிதிரி
செல்வர் போல் **திருநாகேச்சர**வரே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 66 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

தாயவனை வானோர்க்கும் ஏனோர்க்கும்
தலையனை மலையவனை உலகமெல்லாம்
ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை
அழலவனை நிழலவனை அறிய வொண்ணா
மாயவனை மறையவனை மறையோர் தங்கள்
மந்திரனைத் தந்திரனை வளரா நின்ற
தீயவனைத் **திருநாகேச்சர**த்துளானைச்
சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே

94. இடைமருதிற் (திருஇடைமருதூர்)

(திருவிடைமருதூர்)

இறைவன் : மகாலிங்கேஸ்வரர், மருதவாணர், மருதவனேஸ்வரர்
இறைவி : பிருகத்சுந்தரகுஜாம்பிகை,பெருநலமுலையம்மை
தலமரம் : மருது தீர்த்தம் : காவிரி, காருண்ய அமிர்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 147
தொலைபேசி : 0435 - 2460660 அலைபேசி : 9444523890
முகவரி : அருள்மிகு. மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில், திருவிடைமருதூர் & அஞ்சல், திருவிடைமருதூர் வட்டம்,தஞ்சை மாவட்டம் 612 104
தலச் சிறப்பு : கிழக்கு வாசல் : பட்டினத்தார் சந்நிதியும் மேற்கு வாசல் : பத்ரகிரியார் சந்நிதி வரகுண பாண்டியறுக்கு பிரமகத்தி தோவும் நீங்கிய தலம்

திருவருட்பா பாடல் எண் 94

ஓகையுளம்
தேக்கும் வரகுணனாந் தென்னவன்கண் சூழ்பழியைப்
போக்கும் **இடைமருதிற்** பூரணமே

34 - திருஇடைமருதூர் (திருவிடைமருதூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 110 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொடு இறவுமானான்
அருந்தவ முனிவரொடு ஆல்நிழற்கீழ்
இருந்தவன் வளநகர் **இடைமருதே**

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 14 பாடல் 4
குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மையே பிறவித்துயர் நீத்திடும்
எம்மை ஆளும் **இடைமருதன்** கழல்
செம்மையே தொழுவார் வினை சிந்துமே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 60 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

குற்றம் தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடையாரொடு மயங்கிக்
கற்றிலேன் கலைகள் பல ஞானம்
கடியவாயின கொடுமைகள் செய்தேன்
பற்றலாவதோர் பற்றுமற்றில்லேன்
பாவியேன் பல பாவங்கள் செய்தேன்
எற்றுளேன் எனக்கு உய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே



95. தென்குரங்காடுதுறை(தென்குரங்காடுதுறை)

(ஆடுதுறை)

இறைவன் : ஆபத்சகாயேஸ்வரர்
இறைவி : பவளக்கொடியம்மை
பாடல் : அப்பர், சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 148
அலைபேசி : 9443463119, 9442425809
முகவரி : அருள்மிகு. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், ஆடுதுறை & அஞ்சல், திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 101
தலச் சிறப்பு : சுக்ரீவன் வழிபட்ட தலம். கண்டராதித்தி சோழன் மனைவி செம்பியன் மாதேவி கட்டிய கற்றளி உள்ளது.

திருவருட்பா பாடல் எண் 95

நீக்கமிலா
நன்குரங் காணு நடையோ ரடைகின்ற
தென்குரங் காடுதுறைச் செம்மலே

152 - தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 35 பாடல் 1 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

பரவக் கெடும் வல்வினை பாரிடம் சூழ
இரவில் புறங்காட்டிடை நின்று எரியாடி
அரவச் சடை அந்தணன் மேய அழகார்
குரவப் பொழில் சூழ் **குரங்காடுதுறையே**

திருநாவுக்கரசர் 2 ஆம் திருமுறை பதிகம் 63 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

இரங்கா வன்மனத்தார்கள் இயங்கும் முப்
புரங்காவல் அழியப்பொடி ஆக்கினான்
தரங்காடும் தடநீர்ப் பொன்னித் தென்கரைக்
குரங்காடுதுறைக் கோலக் கபாலியே

கடுத்த தேர் அரக்கன் கயிலைம் மலை
எடுத்த தோள்தலை இற்று அலற அவ்விரல்
அடுத்தாலும் அவன் இன்னிசை கேட்டருள்
கொடுத்தவன் **குரங்காடுதுறை**யனே - 11



96. நீலக்குடி (திருநீலக்குடி) (தென்னலக்குடி)

இறைவன் : மானேக்ஞ நாதசுவாமி, நீலகண்டேஸ்வரர், வில்வாரண்யேஸ்வரர்
இறைவி : அநுபமஸ்தினி, பக்தாபீஷ்டதாயினி
தலமரம் : பஞ்சவில்வம்
தீர்த்தம் : தேவி, பரத்வாஜர், மார்க்கண்டேய, பிரம்ம, ஷீரகுண்ட தீர்த்தங்கள்
பாடல் : அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 149
தொலைபேசி : 0435 - 2460660 அலைபேசி : 9442861634
முகவரி : அருள்மிகு. மானோக்ஞ நாதசுவாமி திருக்கோயில், திருநீலக்குடி & அஞ்சல், (வழி) கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 108
தலச் சிறப்பு : பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்ட இறைவன் உறையும் பதி நீலக்குடி எவ்வளவு எண்ணெய் ஊற்றினாலும் அவ்வளவும் பாணத்துக்குள்ளேயே அடங்கி விடும். மார்க்கண்டேயருக்கு அருள் புரிந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 96

புன்குரம்பை
ஏலக் குடிபுகுந்த எம்மனோர்க் குண்மைதரு
நீலக் குடியிலங்கு நிட்களமே

170 - திருநீலக்குடி (தென்னலக்குடி)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 72 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

வைத்த மாடும் மனைவியும் மக்கள் நீர்
செத்தபோது செறியார் பிறிவதே
நித்த **நீலக்குடி** அரனை நினை
சித்தமாகில் சிவகதி சேர்திரே

கல்லினோடு எனைப்பூட்டி அமண் கையர்
ஒல்லை நீர்புக நூக்க என் வாக்கினால்
நெல்லு நீள்வயல் **நீலக்குடி** அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே - 7

அழகியோம் இளையோம் எனும் ஆசையால்
ஒழுகி ஆவியுடல் விடு முன்னமே
நிழலதார் பொழில் **நீலக்குடி** அரன்
கழல்கொள் சேவடி கைதொழுது உய்ம்மினே - 8

தருக்கி வெற்பது தாக்கிய வீங்குதோள்
அரக்கனார் உடல் ஆங்கோர் விரலினால்
நெரித்து **நீலக்குடி** அரன் பின்னையும்
இரக்கமாய் அருள் செய்தனன் என்பரே - 10

97. வைகண்மாட்கோயிற் (வைகல் மாடக்கோயில்)

இறைவன் : சண்பகாரண்யேஸ்வரர், வைகல்நாதர்
இறைவி : சாகாகோமளவல்லி, வைகலாம்பிகை, கொம்பியல் கோதை
தலமரம் : சண்பகம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 150 அலைபேசி : 9994873649, 9003469859
முகவரி : அருள்மிகு. வைகல்நாதர் திருக்கோயில், வைகல்,மேலையூர் அஞ்சல், (வழி) ஆடுதுறை, தஞ்சை மாவட்டம் 612 101
தலச் சிறப்பு : இலட்சுமி வழிபட்டது - மூலவர் சுயம்பு

திருவருட்பா பாடல் எண் 97

ஞாலத்து
நீடக்கோர் நாளும் நினைந்தேத் திடும்வைகன்
மாடக்கோ யிற்குண் மதுரமே

275 - வைகல் மாடக்கோயில்

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 18 பாடல் 1
பண் : காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

துளமதி உடைமறி தோன்று கையினர்
இளமதி அணிசடை எந்தையார் இடம்
உளமதி உடையவர் **வைகலோ**ங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே

நிறைபுனல் பிறையொடு நிலவு நீள்சடை
இறையவர் உறைவிடம் இலங்கு மூவெரி
மறையொடு வளர்வுசெய் வாணர் **வைகலில்**
திறையுடை நிறைசெல்வன் செய்த கோயிலே - 6

மலையன இருபது தோளினான் வலி
தொலைவு செய்தருள் செய்த சோதியாரிடம்
மலர்மலி பொழிலணி **வைகல்** வாழ்வார்கள்
வலம்வரு மலையன மாடக் கோயிலே - 8

மைந்தன் திடம் **வைகல் மாடக் கோயிலைச்**
சந்தமர் பொழிலணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை
சிந்தை செய்பவர் சிவலோகம் சேர்வரே - 11

99. நல்ல மகிழ் (நல்லம்) (திருநல்லம்)

(கோனேரிராஜபுரம்)

இறைவன் : உமாமகேஸ்வரர், பூமிநாதர் , பூமீஸ்வரர்
இறைவி : தேக சௌந்தரி, அங்கவளநாயகி
தலமரம் : அரசு தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 151 அலைபேசி : 9486510515
முகவரி : அருள்மிகு. பூமீஸ்வரர் திருக்கோயில்,
கோனேரிராஜபுரம் & அஞ்சல்,
தஞ்சை மாவட்டம் 612 201
தலச் சிறப்பு : செம்பியன் மாதேவி திருப்பணி செய்த கோயில்
குந்தவை (இராசராசன் தமக்கை) பல
நன்கொடைகள் அளித்துள்ளான்

திருவருட்பா பாடல் எண் 98

பாடச்சீர்
வல்ல தமிழ்புலவர் மன்னி வயங்குதிரு
நல்லமகிழ் இன்ப நவடிவவே

155 - திருநல்லம் (கோனேரிராஜபுரம்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 85 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

கல்லால் நிழல்மேய கரைசேர் கண்டா என்று
எல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த
வில்லால் அரண் மூன்றும் வெந்து விழவெய்த
நல்லான் நமையாள்வான் **நல்லம்** நகரானே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 43 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

கொல்லத்தான் நமனார் தமர் வந்தக்கால்
இல்லத்தார் செய்யல் ஆவது என் ஏழைகாள்
நல்லத்தான் நமையாளுடையான் கழல்
சொல்லத்தான் வல்லீரேல் துயர் தீருமே

பொக்கம் பேசி பொழுது கழியாதே
துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல் வண்ணன்
நக்கன் சேர் **நல்லம்** நண்ணுதல் நன்மையே - 2

100. கோழம்பம் (திருக்கோழம்பம்) (திருக்குழம்பியம்)

இறைவன் : கோகிலேஸ்வரர், கோழம்பநாதர்
இறைவி : சௌந்தரநாயகி
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 152 தொலைபேசி : 04364 - 232055
அலைபேசி : 9367728984
முகவரி : அருள்மிகு. கோகிலேஸ்வரர் திருக்கோயில்,
திருக்குழம்பியம், எஸ்.புதூர் அஞ்சல்,
திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 205
தலச் சிறப்பு : பசுவின் கால்குளம்பு இடறியபோது வெளிப்பட்ட
பெருமான் அம்பாள் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 99

இல்லமயல்
ஆழம்பங் கென்ன வறிந்தோர் செறிந்தேத்தும்
கோழம்பம் வாழ்கருணைக் கொண்டலே

120 - திருக்கோழம்பம் (திருக்குழம்பியம்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 13 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

நீற்றானை நீள்சடை மேல் நிறைவுள்ளதோர்
ஆற்றானை அழகமர் மென்முலையாளை ஓர்
கூற்றானை குளிர்பொழில் **கோழம்பம்** மேவிய
ஏற்றானை ஏத்துமின் நும் இடர் ஏகவே

தண்புனல் ஓங்கு தண் தராய் மாநகர்
நண்புடை ஞானசம்பந்தன் நம்பான் உறை
விண்பொழில் **கோழம்பம்** மேவிய பத்திவை
பண்கொளப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே - 11

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 64 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

வேழம்பத்து ஐவர் வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழம் பற்றி வீழ்வார் பல ஆதர்கள்
கோழம்பத்துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே

துட்டனாகி மலையெடுத்து அ:தின் கீழ்ப்
பட்டு வீழ்ந்து படர்ந்து உய்யப் போயினான்
கொட்டம் நாறிய **கோழம்பத்து** ஈசன் என்று
இட்ட கீதம் இசைத்த அரக்கனே - 11

101. வடுதுறை (திருஆவடுதுறை)

(திருவாவடுதுறை)

இறைவன் : மாசிலாமணீஸ்வரர், கோமுக்தீஸ்வரர்
இறைவி : ஒப்பிலாமுலையம்மை, அதுல்யகுஜாம்பிகை
தலமரம் : படர்அரசு
தீர்த்தம் : கோமுக்தி, பத்மம், கைவல்யம்
பாடல் : மூவர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 153
தொலைபேசி : 04364 – 232055 அலைபேசி : 9443900408
முகவரி : அருள்மிகு. மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்,
திருவாவடுதுறை & அஞ்சல்,
(வழி) நரசிங்கன்பேட்டை, நாகை மாவட்டம் 609 803
தலச் சிறப்பு : இறைவி பசு வடிவில் வழிபட்ட தலம். திருமூலர்
திருமந்திரம் அருளி முக்தி பெற்ற தலம்
சம்பந்தர் தந்தை வேள்விக்காக இறைவனிடம்
பொற்கிழி பெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 100

வீழும்பொய்
தீரா வடுவுடையார் சேர்தற் கருந்தெய்வச்
சீரா **வடுதுறை**யெஞ் செல்வமே

29 - திருஆவடுதுறை (திருவாவடுதுறை)

பாடல்கள்

சம்பந்தர் 5ஆம் திருமுறை பதிகம் 4 பாடல் 1
பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளும் ஆறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் **ஆவடுதுறை** அரனே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 47 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

திருவே என் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதிமிக்க
உருவே என்னுறவே என் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தினுள்ளே நின்ற
கருவே என் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியோடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோய் அடையா வண்ணம்
ஆவடு தண்துறை உறையும் அமரர் ஏறே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 70 பாடல் 6
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

குறைவிலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக் காதுடையானே
உறவிலேன் உனையன்றி மற்றடியேன்
ஒரு பிழை பொறுத்தால் இழிவுண்டே
சிறை வண்டார் பொழில் சூழ் திருவாரூர்ச்
செம்பொனே **திருவாவடுதுறை**யுள்
அறவனே எனை அஞ்சலென்று அருளாய்
ஆரெனக்கு உறவு அமரர்கள் ஏறே



102. துருத்தி (திருத்துருத்தி) (குத்தாலம்)

இறைவன் : சொன்னவாறு அறிவார், உக்தவேதீஸ்வரர்
இறைவி : அமிர்தமுகிழாம்பிகை, பரிமளசுகந்தநாயகி,
அரும்பன்ன வனமுலையாள்
தலமரம் : உத்தாலம்
தீர்த்தம் : காவிரி தீர்த்தம், சுந்தர தீர்த்தம், வடகுளம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 154 அலைபேசி : 9487883800
முகவரி : அருள்மிகு. உக்தவேதீஸ்வரர் திருக்கோயில்,
குத்தாலம் & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம்,
நாகை மாவட்டம் 609 801
தலச் சிறப்பு : சுந்தரர்க்கு உடற்பிணி நீங்கிய தலம். உத்தால மரம்(ஆத்தி)
இங்கு தல மரமாதலின் உத்தாலம் என்பது மருவி
குத்தாலம் என்றானது.

திருவருட்பா பாடல் எண் 101

பேராக்
கருத்திருத்தி யேத்துங் கருத்தர்க் கருள்செய்
திருத்துருத்தி இன்பச் செழிப்பே

146 - திருத்துருத்தி (குத்தாலம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 98 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

வரைத்தலைப் பசும்பொனொடு அருங்கலங்கள் உந்திவந்து
திரைத்தலைச் சுமந்து கொண்டு எறிந்திலங்கு காவிரி
கரைத்தலைத் **துருத்தி** புக்கிருப்பதே கருத்தினாய்
உரைத்தலைப் பொலிந்து எனக்குணர்த்துமாறு வல்லமே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 42 பாடல் 1
பண்: கொல்லி இராகம் : நவரோஸ்

பொருந்திய குரம்பை தன்னைப் பொருளெனக் கருதவேண்டா
இருத்தி எப்போதும் நெஞ்சுள் இறைவனை ஏத்துமின்கள்
ஒருத்தியைப் பாகம் வைத்து அங்கு ஒருத்தியைச் சடையுள் வைத்த
துருத்தியம் சுடரினானைத் தொண்டனேன் கண்டவாறே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 18 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

மூப்பதுமில்லை பிறப்பதுமில்லை இறப்பதில்லைச்
சேர்ப்பது காட்டகத்து ஊரினுமாகச் சிந்திக்கினல்லால்
காப்பது வேள்விக்குடி தண்**துருத்தி** எம்கோன் அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே



103. அழுந்தூர் (திருவழுந்தூர்) (தேரழுந்தூர்)

இறைவன் : வேதபுரீஸ்வரர், அத்தியாபகேசர்
இறைவி : சௌந்தரநாயகி
தலமரம் : சந்தனம் தீர்த்தம் : வேதாமிர்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 155 தொலைபேசி : 04364 - 237650
அலைபேசி : 9842153947, 9486457103
முகவரி : அருள்மிகு. வேதபுரீஸ்வரர் கோயில்,
தேரழுந்தூர் & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம்,
நாகை மாவட்டம் 609 808
தலச் சிறப்பு : கம்பர் பிறந்த ஊர். அகத்தியர் இங்கு வழிபாடு செய்து கொண்டிருந்த போது வான்வெளியில் சென்று கொண்டிருந்த மன்னன் ஒருவனுடைய தேர் இங்கு அமுந்திய காரணத்தால் தேரழுந்தூர் என்றானது

திருவருட்பா பாடல் எண் 102

வருத்துமயல்
நாளு மெழுந்தூர் நவையறுக்கு மன்பருள்ளம்
நீளும் **அழுந்தூர்** நிறைதடமே

14 - திருவழுந்தூர் (தேரழுந்தூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 20 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

தொழுமாறு வல்லார் துயர்தீர நினைந்து
எழுமாறு வல்லார் இசைபாட விம்மி
அழுமாறு வல்லார் **அழுந்தை** மறையோர்
வழிபாடு செய்மா மடம் மன்னினையே

நறவார் தலையின் நயவா உலகில்
பிறவா தவனே பிணி இல்லவனே
அறையார் கழலாய் **அழுந்தை** மறையோர்
மறவாது எழ மாமடம் மன்னினையே - 6

மணிநீள் முடியான் மலையை அரக்கன்
தணியாது எடுத்தான் உடலந் நெரித்த
அணியார் விரலாய் **அழுந்தை** மறையோர்
பணிமா மடமன்னி இருந்தனையே - 9

அருஞானம் வல்லார் **அழுந்தை** மறையோர்
பெருஞானம் உடைப்பெருமான் அவனைத்
திருஞான சம்பந்தன செந்தமிழ்கள்
உருஞானம் உண்டாம் உணர்ந்தார் தமக்கே - 11

104. மாயூரம் (மயிலாடுதுறை)

இறைவன் : மயூரநாதர்
இறைவி : அபயாம்பிகை
தலமரம் : மா, வன்னி
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம், காவிரி மற்றும் ரிஷப தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 156
தொலைபேசி : 04364 - 223779 அலைபேசி : 9345149412
முகவரி : அருள்மிகு. மயூரநாதசுவாமி திருக்கோயில்,
மயிலாடுதுறை & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம்,
நாகை மாவட்டம் 609 001
தலச் சிறப்பு : அம்பாள் மயில் வடிவில் வழிபட்ட தலம். பிரமன், அகத்தியர், இந்திரன் வழிபட்ட தலம். தூலஸ்நானம் இங்கு விசேடம்

திருவருட்பா பாடல் எண் 103

வேளிமையோர்
வாயூரத் தேமா மலர் சொரிந்து வாழ்த்துகின்ற
மாயூரத் தன்பர் மனோரதமே

223 - மயிலாடுதுறை

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 38 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

கரவின்றி நன் மாமலர் கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரம் ஒன்றிய செஞ்சடையான் வாழ்
வரமா **மயிலாடுதுறை**யே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 39 பாடல் 2
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

சித்தம் தேறும் செறிவளை சிக்கெனும்
பச்சை தீரும் என் பைங்கொடி பால்மதி
வைத்த **மாமயிலாடுதுறை** அரன்
கொத்தினில் பொலி கொன்றை கொடுக்கிலே

அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக்கும் கருத்தொன்றிலோம்
வண்டு சேர் **மயிலாடுதுறை** அரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே - 3

பருத்த தோளும் முடியும் பொடிபட
இருத்தினான் அவன் இன்னிசை கேட்டலும்
வரத்தினான் **மயிலாடுதுறை** தொழும்
கரத்தினார் வினைக் கட்டறும் காண்மினே - 11

105. விளநகர் (திருவிளநகர்)

இறைவன் : துறைகாட்டும் வள்ளல், உசிரவனேஸ்வரர்
இறைவி : வேயுறுதோளி
தீர்த்தம் : மெய்ஞான தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 157
முகவரி : அருள்மிகு. உசிரவனேஸ்வரர் திருக்கோயில்,
திருவிளநகர், (வழி) மன்னம்பந்தல்,
மயிலாடுதுறை வட்டம்,நாகை மாவட்டம் 609 305
தலச் சிறப்பு : திருஞானசம்பந்தர் ஆற்று வெள்ளம் கண்டு. கடக்க முடியாமல் வருந்தி துறை காட்டுவோர் எவரேனும் உளரோ என நினைத்த போது இறைவேடனாக வந்து அழைத்து சென்றான்

திருவருட்பா பாடல் எண் 104

தேயா
வளநகரென் றெவ்வுலகும் வாழ்த்தப் படுஞ்சீர்
விளநகர்வா ழெங்கண் விருந்தே

259 - திருவிளநகர்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 78 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

ஒளிரிளம்பிறை சென்னிமேல் உடையர் கோவண ஆடையர்
குளிரிளம் மழை தவழ்பொழில் கோல நீர்மல்கு காவிரி
நளிரிளம் புனல் வார்துறை நங்கை கங்கையை நண்ணினார்
மிளிரிளம் பொறியரவினார் மேயது **விளநகர**தே

தேவரும் அமரர்களும் திசைகள் மேலுள தெய்வமும்
யாவரும் அறியாததோர் அமைதியால் தழலுருவினார்
மூவரும் இவரென்னவும் முதல்வரும் இவரென்னவும்
மேவரும் பொருளாயினார் மேயது **விளநகர**தே - 6

படர்தரும் சடைமுடியினார் பைங்கழலடி பரவுவார்
அடர்தரும் பிணிகெடுகென அருளுவார் அரவு அரையினார்
விடர்தரும் மணி மிடறினார் மின்னு பொன் புரிநூலினார்
மிடர்தரும் படை மழுவினார் மேயது **விளநகர**தே - 8

மென்சிறை வண்டு யாழ்முரல் **விளநகர்**த் துறை மேவிய
நன்பிறை நுதலண்ணலைச் சண்பை ஞானசம்பந்தன் சீர்
இன்புறும் தமிழால் சொன்ன ஏத்துவார் வினை நீங்கிப்போய்த்
துன்புறும் துயரம் இலாத் தூநெறி பெறுவார்களே - 11

106. பறியலூர் (திருப்பறியலூர்) (கீழப்பரசலூர்)

இறைவன் : வீரட்டேஸ்வரர், தட்சபுரீஸ்வரர்
இறைவி : இளங்கொம்பனையாள்
தலமரம் : வில்வம், பலா
தீர்த்தம் : உத்தரவேதி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 158 அலைபேசி : 9943862486
முகவரி : அருள்மிகு. வீரட்டேஸ்வரர் திருக்கோயில்,
கீழப்பரசலூர், பரசலூர் அஞ்சல்,
(வழி) செம்பொன்னார் கோயில், தரங்கம்பாடி வட்டம்,
நாகை மாவட்டம் 609 309
தலச் சிறப்பு : தக்கன் சம் ஹரித்த தலம். தக்கன் வழிபட்ட தலம்.

திருவருட்பா பாடல் எண் 105

இளமைச்
செறியலூர் கூந்தல் திருவனையா ராடும்
பறியலூர் வாழ்மெய்ப் பரமே

192 - திருப்பறியலூர் (கீழப்பரசலூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 134 பாடல் 1
பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்பரி

கருத்தன் கடவுள் கனலேந்தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்தம் உடையார் **திருப்பறியலூரில்**
விருத்தன் எனத்தகும் வீரட்டத்தானே

அரவுற்ற நாணா அனலம்பதாகச்
செருவுற்றவர் புரம் தீயெழச் செற்றான்
தெருவில் கொடிதூழ் **திருப்பறியலூரில்**
வெருவுற்றவர் தொழும் வீரட்டத்தானே - 6

வளைக்கும் எயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதான் இருந்து ஏழையன்னம்
திளைக்கும் படுகர்த் **திருப்பறியலூரில்**
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டந்தானே - 8

நறு நீருகும் காழி ஞானசம்பந்தன்
வெறிநீர்த் **திருப்பறியல்** வீரட்டத்தானைப்
பொறி நீடரவன் புனை பாடல் வல்லார்க்கு
அறுநீடு அவலம் அறும் பிறப்புத்தானே - 11

107. செம்பொன்பள்ளி (திருச்செம்பொன்பள்ளி) (செம்பொனார் கோயில்)

இறைவன் : சொர்ணபுரீஸ்வரர், தேவப்பிரியர், செம்பொன்பள்ளியார்
இறைவி : மருவார்குழலி, புஷ்பாளகி, தாட்சாயணி, சுகுந்தகுந்தளாம்பிகை, சுகந்தவனநாயகி
தலமரம் : வன்னி, வில்வம்
தீர்த்தம் : காவிரி தீர்த்தம், சூரிய தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்,அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 159 அலைபேசி : 9943797974
முகவரி : அருள்மிகு. சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில், செம்பொனார்கோயில் & அஞ்சல், தரங்கம்பாடி வட்டம், நாகை மாவட்டம் 609 309
தலச் சிறப்பு : அகத்தியர் வழிபட்ட தலம், தாட்சாயிணிக்கு இறைவர் அருள் புரிந்த தலம், கோச்செங்கட் சோழன் திருப்பணி நவக்கிரகப் பரிகாரத் தலம்

திருவருட்பா பாடல் எண் 106

நெறிகொண்டே
அன்பள்ளி யோங்க மறிவுடையோர் வாழ்த்துஞ்செம்
பொன்பள்ளி வாழ்ஞான போதமே

134 - திருச்செம்பொன்பள்ளி (செம்பொனார்கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 25 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் **செம்பொன்பள்ளி** மேவிய
கருவார் கண்டத்து ஈசன் கழல்களை
மருவாதவர் மேல் மன்னும் பாவமே

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 29 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

தந்தையும் தாயுமாகி தானவன் ஞானமூர்த்தி
முந்திய தேவர் கூடி முறைமுறை இருக்குச் சொல்லி
எந்தை நீ சரணம் என்று அங்கு இமையவர் பரவியேத்தச்
சிந்தையுள் சிவமதானார் திருச்**செம்பொன் பள்ளி**யாரே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 36 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

கான் அறாத கடிபொழில் வண்டினம்
தேன் அறாத திருச்**செம்பொன்பள்ளி**யான்
ஊன் அறாததோர் வெண்டலையில் பலி
தான் அறாததோர் கொள்கையன் காண்மினே

108. திருநன்னிப்பள்ளி (திருநனிபள்ளி) (புஞ்சை)

இறைவன் : நற்றுணையப்பர்
இறைவி : பர்வதபுத்திரி
தீர்த்தம் : சொர்ண தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 160 அலைபேசி : 9443906587
முகவரி : அருள்மிகு. நற்றுணையப்பர் திருக்கோயில், புஞ்சை, கிடாரங்கொண்டான் அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 304
தலச் சிறப்பு : சம்பந்தரின் அன்னை பகவதி அம்மையார் அவதார தலம் பாலையாக இருந்த இத்தலத்தை பதிகம் பாடி நெய்தல் நிலமாக மாற்றினார் சம்பந்தர்

திருவருட்பா பாடல் எண் 107

இன்புள்ளித்
தெள்ளியார் போற்றித் திகழுந் **திருநன்னிப்**
பள்ளியார்ந் தோங்கும் பரசிவமே

161 - திருநனிபள்ளி (புஞ்சை)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 84 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

காரைகள் கூகை முல்லை களவாகை ஈகைபடர்
தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாடமர்ந்த சிவன்
மேய சோலை நகர்தான்
தேரைகள் ஆரை சாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல்வாரி வயல்மேதி வைகும்
நனிபள்ளி போலும் நமர்காள்

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 70 பாடல் 5
திருநேரிசை இராகம் : நவரோஸ்

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்து ஓதின் நாளும் அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கில்லா அமணர் தந்த
நஞ்சமுது ஆக்குவித்தார் **நனிபள்ளி** அடிகளாரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 97 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

ஆதியன் ஆதிரையன் அயன் மால் அறிதற்கரிய
சோதியன் சொற்பொருளாய்ச் சுருங்காமறை நான்கினையும்
ஓதியன் உம்பர்தம் கோன் உலகத்தினுள் எவ்வுயிர்க்கும்
நாதியன் நம்பெருமான் நண்ணுமூர் **நனிபள்ளி**யதே

109. வலம்புரத்தும் (திருவலம்புரம்)

(மேலப்பெரும்பள்ளம்)

இறைவன் : வலம்புரநாதர்
இறைவி : வடுவகிர்க்கண்ணி
தலமரம் : பனை
தீர்த்தம் : பிரம்மன் இலட்சுமி தீர்த்தங்கள்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 161 அலைபேசி : 8110805059,9442860605
முகவரி : அருள்மிகு. வலம்புரநாதர் திருக்கோயில், மேலப்பெரும்பள்ளம், மேலையூர் அஞ்சல், தரங்கம்பாடி வட்டம், நாகை மாவட்டம் 609 107
தலச் சிறப்பு : திருமால் வழிபட்டு வலம்புரிச் சங்கைப் பெற்ற தலம். பட்டினத்தார் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 108

எள்ளுறுநோய்
ஏய வலம்புரத்தை யெண்ணாம லெண்ணுகின்றோர்
மேய **வலம்புர**த்து மேதகவே

246 - திருவலம்புரம் (மேலப்பெரும்பள்ளம்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 103 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

கொடியுடை மும்மதில் ஊடுருவக் குனி வெஞ்சிலை தாங்கி
இடிபட எய்த அமரர் பிரானடியார் இசைந்தேத்தத்
துடியிடையாளை ஓர் பாகமாகத் துதைந்தார் இடம் போலும்
வடிவுடை மேதி வயல் படியும் **வலம்புர** நன்னகரே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 55 பாடல் 6
திருநேரிசை இராகம் : நவரோஸ்

நினைக்கின்றேன் நெஞ்சு தன்னால் நீண்டபுன் சடையினானே
அனைத்துடன் கொண்டு வந்து அங்கு அன்பினால் அமைய ஆட்டிப்
புனைக்கின்றேன் பொய்மை தன்னை மெய்ம்மையைப்
புணரமாட்டேன்
எனக்கு நான் செய்வதென்னே இனி **வலம்புர**வனீரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 72 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

எனக்கினித் தினைத்தனைப் புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினியவன் தமர்க்கு இனியவன் எழுமையும்
மனக்கினியவன் தனது இடம் **வலம்புர**மே

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்

110. தலைச்சங்காடு (திருத்தலைச்சங்காடு)

இறைவன் : சங்காரண்யேஸ்வரர், சங்கவனேஸ்வரர், சங்கருணாதேஸ்வரர்
இறைவி : செளந்தரநாயகி
தலமரம் : புரசு தீர்த்தம் : சங்கு தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 162 அலைபேசி : 9443401060
முகவரி : அருள்மிகு. சங்காரண்யேஸ்வரர் திருக்கோயில், தலைச்சங்காடு, ஆக்கூர் அஞ்சல், (வழி) மயிலாடுதுறை, தரங்கம்பாடி வட்டம், நாகை மாவட்டம் 609 301
தலச் சிறப்பு : மாடக்கோயில், திருமால் வழிபட்டு பாஞ்ச சன்னிய சங்கைப் பெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 109

தூயகொடி
அங்காடு கோபுரம்வா னாற்றாடு கின்ற**தலைச்**
சங்காடு மேவுஞ் சயம்புவே

141 - திருத்தலைச்சங்காடு

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 55 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

நலச்சங்க வெண்குழையும் தோடும் பெய்தோர் நால்வேதம்
சொலச்சங்கை இல்லாதீர் சுடுகாடல்லால் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள் சோலைக் குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே

நில நீரொடு ஆகாசம் அனல் காலாகி நின்றைந்து
புல தீர்மை புறங்கண்டார் பொக்கம் செய்யார் போற்றோவார்
சல நீதர் அல்லாதார் தக்கோர் வாழும் **தலைச்சங்கை**
நல தீர கோயிலே கோயிலாக நயந்தீரே - 6

திரையார்ந்த மாகடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை
வரையார்ந்த தோளடர விரலால் ஊன்று மாண்பினீர்
அரையார்ந்த மேகலையீர் அந்தணாளர் **தலைச்சங்கை**
நிரையார்ந்த கோயிலே கோயிலாக நினைந்தீரே - 8

நளிதரும் புனல் காழி நல்ல ஞானசம்பந்தன்
குளிரும் **தலைச்சங்கை** ஓங்கு கோயில் மேயானை
ஒளிரும் பிறையானை உரைத்த பாடல் இவை வல்லார்
மிளிரும் திரை சூழ்ந்த வையத்தார்க்கு மேலாரே - 11

111. திருவாக்கூர் (ஆக்கூர்)

இறைவன் : தான்தோன்றீஸ்வரர், சுயம்புநாதர்
இறைவி : கடகநேத்ரி, வாள்நெடுங்கண்ணி
தலமரம் : சரக்கொன்றை
தீர்த்தம் : குமுதம் பாடல் : சம்பந்தர்,அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 163 தொலைபேசி : 04364 - 280005
அலைபேசி : 9865809768, 9786635500, 7502222850
முகவரி : அருள்மிகு. தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், ஆக்கூர் & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 301
தலச் சிறப்பு : கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில் சிறப்புலி நாயனார் அவதார தலம்

திருவருட்பா பாடல் எண் 110

பொங்குமிருட்
கூறுதிரு வாக்கூர் கொடுப்பனபோற் சூழ்ந்துமதில்
வீறுதிரு வாக்கூர் விளக்கமே

18 - ஆக்கூர்

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 42 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

அக்கிருந்த ஆரமும் ஆடரவும் ஆமையும்
தொக்கிருந்த மார்பினான் தோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே

ஆடல் அமர்ந்தானை ஆக்கூரில் தான்தோன்றி
மாடம் அமர்ந்தானை மாடம்சேர் தண்காழி
நாடற்கரிய சீர் ஞானசம்பந்தன் சொல்
பாடல் இவை வல்லார்க்கு இல்லையாம் பாவமே - 11

திருநாவுக்கசர் 6 ஆம் திருமுறை பதிகம் 21 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

முடித்தாமரை அணிந்த மூர்த்திபோலும்
மூவுலகும் தாமாகி நின்றார்போலும்
கடித்தாமரை ஏய்த்த கண்ணார்போலும்
கல்லலகு பாணி பயின்றார் போலும்
கொடித்தாமரைக் காடே நாடும் தொண்டர்
குற்றேவல் தாம் மகிழ்ந்த குழகர்போலும்
அடித்தாமரை மலர்மேல் வைத்தார்போலும்
ஆக்கூரில் தான்தோன்றி அப்பனாரே

112. தென்கடையூர் (திருக்கடவூர்) (திருக்கடையூர்)

இறைவன் : அமிர்தகடேஸ்வரர், அமிர்தலிங்கேஸ்வரர்
இறைவி : அபிராமி
தலமரம் : வில்வம், ஜாதி (பிஞ்சிலம்)
தீர்த்தம் : அமிர்த தீர்த்தம், சிவகங்கை தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 164 தொலைபேசி : 04364 - 287429, 287595
முகவரி : அருள்மிகு. அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடையூர் & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 311
தலச் சிறப்பு : பிரமனுக்கு உபதேசம் செய்த தலம், குங்கிலியக் கலய நாயனார் காரிநாயனார் தொண்டு செய்து முத்தி அடைந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 111

மாறகற்றி
நன்கடையூர் பற்பலவு நன்றிமற வாதேத்தும்
தென்கடையூர் ஆனந்தத் தேறலே

63 - திருக்கடவூர் (திருக்கடையூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 8 பாடல் 1
பண் : காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

சடையுடையானும் நெய்யாடலானும் சரிகோவண
உடையுடையானும் மையார்ந்த ஒண் கண்ணுமை கேள்வனும்
கடையுடை நன்னெடு மாடமோங்கும் கடவூர்தனுள்
விடையுடை அண்ணலும் வீரட்டானத்து அரனல்லனே

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 31 பாடல் 4
திருநேரிசை இராகம் : நவரோஸ்

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 28 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

பொடியார் மேனியனே புரிநூலொருபால் பொருந்த
வடியார் மூவிலை வேல் வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்னமுதே எனக்கார் துணை நீயலதே

113. கடவூர் (திருக்கடவூர் மயானம்)

(திருமெய்ஞானம்)

இறைவன் : பிரமபுரீஸ்வரர்
இறைவி : மலர்க்குழல் மின்னம்மை, அம்மலக்குஜநாயகி
தீர்த்தம் : காசி தீர்த்தம் பாடல் : மூவர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 165
தொலைபேசி : 04364 – 287222 அலைபேசி : 9442012133
முகவரி : அருள்மிகு. பிரமபுரீஸ்வரர் திருக்கோயில், திருக்கடையூர் மயானம், திருக்கடையூர் & அஞ்சல், மயிலாடுதுறை வட்டம், நாகை மாவட்டம் 609 311
தலச் சிறப்பு : சிவபெருமான் பிரமனை அழித்து மீண்டும் உயிர்பெறச் செய்து அவருக்குப் படைப்புத் தொழிலை அருளிய தலம்

திருவருட்பா பாடல் எண் 112

வன்மையிலாச்
சொற்கடவி மேலோர் துதித்தலொழி யாதோங்கு
நற்**கடவூர்** வீரட்ட நாயகனே

64 - திருக்கடவூர் மயானம் (திருமெய்ஞானம்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 80 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார் எறியும் முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார் **கடவூர் மயானம்** அமர்ந்தார்
பெரிய விடை மேல் வருவார் அவரெம் பெருமானடிகளே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 38 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

குழைகொள் காதினர் கோவண ஆடையார்
உழையர் தாம் **கடவூரின் மயான**த்தார்
பழைய தம் அடியார் செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமானடிகளே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 53 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைதூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் **கடவூர் மயான**த்து பெரிய பெருமானடிகளே

114. வேட்டக்குடி (வேட்டக்குடி)

இறைவன் : சுந்தரேஸ்வரர், திருமேனியழகர்
இறைவி : சௌந்தரநாயகி, சாந்தநாயகி
தலமரம் : புன்னை
தீர்த்தம் : தேவ தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 166
முகவரி : அருள்மிகு. சுந்தரேஸ்வரர் திருக்கோயில், திருவேட்டக்குடி,வரிச்சிக்குடி அஞ்சல், (வழி) கோட்டுச்சேரி, காரைக்கால் வட்டம், புதுவை மாநிலம் 609 610
தலச் சிறப்பு : இறைவன் வேடுவனாய் வந்து அருச்சுனனுக்கு அருளிய தலம்

திருவருட்பா பாடல் எண் 113

வற்கடத்தும்
வாட்டக் குடிசற்றும் வாய்ப்பதே யில்லையெனும்
வேட்டக் குடிமேவு மேலவனே

271 - வேட்டக்குடி

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 66 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கனை கழல்கள்
தொண்டிரைத்துப் தொழுதிறைஞ்சத் துளங்கொளி நீர்ச்சுடர்ப்பவளம்
தெண்டிரைக் கள் கொணர்ந்து எறியும் **திருவேட்டக் குடி**யாரே

நாவாய பிறைச் சென்னி நலம்திகழும் இலங்கு இப்பி
கோவாத நித்திலங்கள் கொணர்ந்து எறியும் குளிர்கானல்
ஏவாரும் வெஞ்சிலையால் எயில்மூன்றும் எரிசெய்த
தேவாதி தேவனார் **திருவேட்டக் குடி**யாரே - 6

துறையுலவு கடலோதம் சுரிசங்கம் இடறிப்போய்
நறையுலவும் பொழில்புன்னை நன்னீழற்கீழ் அமரும்
இறைபயிலும் இராவணன் தன் தலைபத்தும் இருபதுதோள்
திறலழிய அடர்த்தாரும் **திருவேட்டக் குடி**யாரே - 8

தெண்டிரை சேர் வயலுடுத்த **திருவேட்டக்குடி**யாரைத்
தண்டலை சூழ் கலிக்காழித் தமிழ் ஞானசம்பந்தன்
ஒண்தமிழ் நூலிவை பத்தும் உணர்ந்தேத்த வல்லார் போய்
உண்டு உடுப்பில் வானவரோடு உயர்வானத்து இருப்பாரே - 11

115. தெளிச்சேரி (திருத்தெளிச்சேரி)

(கோயில்பத்து)

இறைவன் : பார்வதீஸ்வரர், சமீவனேஸ்வரர்
இறைவி : பார்வதியம்மை, சத்தியம்மை, சுயம்வர தபஸ்வினி
தலமரம் : வில்வம், வன்னி
தீர்த்தம் : சூரிய புஷ்கரணி, குகத்தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 167 அலைபேசி : 9786635559, 9994345452
முகவரி : அருள்மிகு. பார்வதீஸ்வரர் திருக்கோயில், கோயில்பத்து, காரைக்கால் & அஞ்சல், புதுவை 609 602
தலச் சிறப்பு : பிரமன் வழிபட்ட தலம், புத்த நந்தியின் மேல் இடிவிழச்செய்த தலம் தவம் செய்வதற்கு உகந்த இடம்

திருவருட்பா பாடல் எண் 114

நாட்டமுற்ற
வாக்குந் தெளிச்சேரி மாதவத்தர்க் கின்பநலம்
ஆக்குந் **தெளிச்சேரி** அங்கணனே

149 - திருத்தெளிச்சேரி (கோயில் பத்து)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 5 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

பூவலர்ந்தன கொண்டு முப்போதும் உம்பொற்கழல்
தேவர் வந்து வணங்கும் மிகு **தெளிச்சேரி**யீர்
மேவரும் தொழிலாளொடு கேழல் பின் வேடனாம்
பாவகம் கொடு நின்றது போலு நும் பான்மையே

தவளவெண்பிறை தோய்தரு தாழ்பொழில் சூழநல்
திவள மாமணி மாடம் திகழ் **தெளிச்சேரி**யீர்
குவளை போல்கண்ணி துண்ணென வந்து குறுகிய
கவள மால்கரி எங்ஙனம் நீர் கையின் காய்ந்ததே - 6

கொத்திரைத்த மலர்க்குழலாள் குயில் கோலம்சேர்
சித்திரக்கொடி மாளிகை சூழ் **தெளிச்சேரி**யீர்
வித்தகப்படை வல்ல அரக்கன் விறல் தலை
பத்திரட்டிக் கரம் நெரித்திட்டதும் பாதமே - 8

திக்குலாம் பொழில்சூழ் **தெளிச்சேரி** எம் செல்வனை
மிக்க காழியுள் ஞானசம்பந்தன் விளம்பிய
தக்க பாடல்கள் பத்தும் வல்லார்கள் தடமுடித்
தொக்க வானவர் சூழ இருப்பவர் சொல்லிலே - 11

116. தருமபுரம் (தருமபுரம்)

இறைவன் : தருமபுரீஸ்வரர், யாழ்முரிநாதர்
இறைவி : மதுர மின்னம்மை, தேனமிர்தவல்லி
தலமரம் : வாழை
தீர்த்தம் : தரும தீர்த்தம், பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 168 அலைபேசி : 9940755484
முகவரி : அருள்மிகு. யாழ்முரிநாதர் திருக்கோயில், காரைக்கால் & அஞ்சல், (வழி) தருமபுரம், புதுவை 609 602
தலச் சிறப்பு : திருஞானசம்பந்தர் பாடலுக்கு திருநீலகண்ட யாழ்பாணர் யாழில் இசை அமைக்க முடியாமல் போனதால் யாழைமுறித்த தலம் அந்த பதிகத்திற்கு யாழ்மூரி என்றே பெயர். எமன் வழிபட்ட தலமாதலின் தருமபுரம் என்றானது.

திருவருட்பா பாடல் எண் 115

நீக்கும்
கரும புரத்திற் கலவா தருள்செய்
தரும புரஞ்செய் தவமே

140 - தருமபுரம்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 136 பாடல் 1
பண் : யாழ்மூரி இராகம் : அடானா

மாதர் மடப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடை உடை மலைமகள் துணையென மகிழ்வர்
பூத இனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடை நெடு முடியதோர் புனலர்
வேதமோடு ஏழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்திரை
இரை நுரை கரை பொருது விம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கும் மலர்ச் சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் **தருமபுரம்** பதியே

கூழையும் கோதை குலாயவள் தம்பிணை புல்கமல்கு
மென் முலைப் பொறிகொள் பொற்கொடியிடைத் துவர்வாய்
மாழை ஒண்கண் மடவாளை ஓர்பாகம் மகிழ்ந்தவர்
வலம் மலி படைவிடை கொடியொடும் மழுவாள்
யாழையும் எள்கிட ஏழிசை வண்டு முரன்று இனம்
துவன்றி மென்சிறகறை உறந் நறவ் விரியும் நல்
தாழையும் ஞாழலும் நீடிய கானலின் அள்ளல்
இசை புள்ளினம் துயில் பயில் **தருமபுரம்** பதியே - 6

117. நள்ளாறு (திருநள்ளாறு)

இறைவன் : தர்ப்பாரண்யேஸ்வரர், திருநள்ளாற்றீஸ்வரர்
இறைவி : பிராணாம்பிகை, பிராணேஸ்வரி,போகமார்த்த பூண்முலையாள்
தலமரம் : தர்ப்பை
தீர்த்தம் : நள தீர்த்தம் பாடல் : மூவர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 169
தொலைபேசி : 04368 – 236504 அலைபேசி : 9442236504
முகவரி : அருள்மிகு. தர்ப்பாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருநள்ளாறு & அஞ்சல், (வழி) மயிலாடுதுறை, காரைக்கால் 609 607
தலச் சிறப்பு : சனி பகவான் இங்கு விசேடம். சப்த விடங்கத் தலம் சம்பந்தரின் பச்சைப் பதிகமான போகமார்ந்த பூண் முலையான் என்ற பதிகம் இத்தலத்திற்கு உரியது.

திருவருட்பா பாடல் எண் 116

இருமையினும்
எள்ளாற்றின் மேவாத ஏற்புடையோர் தூந்திறைஞ்சு
நள்ளாற்றின் மேவியஎன் நற்றுணையே

158 - திருநள்ளாறு

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 49 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி ஆகமார்த்த
தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது **நள்ளாறே**

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 68 பாடல் 1
பண் : குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

உள்ளாறாததோர் புண்டரிகத் திரள்
தெள்ளாறாச் சிவசோதித் திரளினைக்
கள்ளாறாத பொற்கொன்றை கமழ்சடை
நள்ளாறா என நம்வினை நாசமே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 68 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

செம்பொன் மேனி வெண்ணீறணிவானைக்
கரிய கண்டனை மாலயன் காணாச்
சம்புவைத் தழல் அங்கையினானைச்
சாமவேதனைத் தன்னொப்பிலானைக்
கும்ப மாகரியின் உரியானைக்
கோவின் மேல்வரும் கோவினை எங்கள்
நம்பனை **நள்ளாற**னை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே

118. கோட்டாறு (கோட்டாறு) (கொட்டாரம்)

இறைவன் : ஐராவதீஸ்வரர்
இறைவி : சுகுந்தகுந்தளாம்பிகை, வண்டமர் பூங்குழலி
தலமரம் : பாரிஜாதம்
தீர்த்தம் : வாஞ்சியாறு, சூரிய தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 170 அலைபேசி : 8903888174, 7502212319
முகவரி : அருள்மிகு. ஐராவதீஸ்வரர் திருக்கோயில், கொட்டாரம் & அஞ்சல், திருவாரூர் மாவட்டம் 609 603
தலச் சிறப்பு : ஐராவதம் (வெள்ளையானை) வழிபட்டதலம். சுபர்முனிவர் தேனிவடிவில் இறைவனை வழிபட்டார்

திருவருட்பா பாடல் எண் 117

தெள்ளாற்றின்
நீட்டாறு கொண்டரம்பை நின்று கவின்காட்டும்
கோட்டாறு மேவுங் குளிர்துறையே

112 - கோட்டாறு (கொட்டாரம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 52 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

கருந்தடங்கணின் மாதரார் இசை
செய்யக் காரதிர்கின்ற பூம்பொழில்
குருந்த மாதவியின் விரைமல்கு **கோட்டாற்றில்**
இருந்த எம்பெருமானை உள்கி
இணையடி தொழுதேத்து மாந்தர்கள்
வருந்துமாறு அறியார் நெறிசேர்வர் வானூடே

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 12 பாடல் 1
பண் : காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

வேதியன் விண்ணவரேத்த நின்றான் விளங்கும் மறை
ஓதிய ஒண்பொருளாகி நின்றான் ஒளியார் கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்த அழகார் **திருக்கோட்டாற்றுள்**
ஆதியையே நினைந்து ஏத்தவல்லார்க்கு அல்லல் இல்லையே

கொடியுயர் மால்விடை ஊர்தியினான் **திருக்கோட்டாற்றுள்**
அடிகழலார்க்க நின்றாடவல்ல அருளாளனைக்
கடிகமழும் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் சொல்
படியிவை பாடி நின்றாடவல்லார்க்கு இல்லை பாவமே - 11

119. திருவம்பர் (அம்பர் பெருந்திருக்கோயில்)

(அம்பர், அம்பல்)

இறைவன் : பிரம்மபுரீஸ்வரர்
இறைவி : சுகுந்தகுந்தளாம்பிகை, பூங்குழலம்மை
தலமரம் : புன்னை
தீர்த்தம் : பிரம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 171 அலைபேசி : 9788518300
முகவரி : அருள்மிகு. பிரமபுரீஸ்வரர் திருக்கோயில்,
அம்பல் & அஞ்சல், (வழி) பூந்தோட்டம்,
நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 503
தலச் சிறப்பு : மாடக்கோயில் இக்கோயில் கோச்செங்கட்
சோழமன்னனின் கடைசித் திருப்பணி
சோமாசிமாற நாயனார் வாழ்ந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 118

கூட்டாக
கருவம்பர் தம்மைக் கலவாத மேன்மைத்
திருவம்பர் ஞானத் திரட்டே

7 - அம்பர் பெருந்திருக்கோயில் (அம்பர், அம்பல்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 10 பாடல் 1
பண் : காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

எரிதர அனல் கையிலேந்தி எல்லியில்
நரிதிரி கானிடை நட்டமாடுவர்
அரிசிலம் பொருபுனல் **அம்பர்**மாநகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே

கழல்வளர் காலினர் சுடர்கை மல்கவோர்
சுழல்வளர் குளிர்புனல் சூடியாடுவர்
அழல்வார் மறையவர் **அம்பர்ப்** பைம்பொழில்
நிழல்வளர் நெடுநகர் இடமது என்பரே - 6

வழிதலை பறிதலை அவர்கள் கட்டிய
மொழிதலைப் பயன்என மொழியல் வம்மினோ
அழிதலை பொருபுனல் **அம்பர்** மாநகர்
உழிதலை ஒழிந்துளர் உமையும் தாமுமே - 10

அழகரை அடிகளை **அம்பர்** மேவிய
நிழல்திகழ் சடைமுடி நீலகண்டரை
உமிழ்திரை உலகினில் ஒதுவீர் கொள்மின்
தமிழ்கெழு விரகினன் தமிழ்செய் மாலையே - 11

120. மாகாளம் (அம்பர் மாகாளம்)(கோயில் திருமாளம்)

இறைவன் : மாகாளேஸ்வரர், காளகண்டேஸ்வரர்
இறைவி : பட்சயாம்பிகை
தலமரம் : கருங்காலி தீர்த்தம் : மாகாள தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 172 அலைபேசி : 9486601401, 9442766818
முகவரி : அருள்மிகு. மாகாளேஸ்வரர் திருக்கோயில்,
கோயில் திருமாளம், பூந்தோட்டம் அஞ்சல்,
நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 503
தலச் சிறப்பு : அம்பன், அம்பாசூரன் என்னும் அசுரர்களை காளிவதம்
செய்து அந்தப் பாவம் தீர இவ் இறைவரைப் பூசித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 119

ஒருவந்தர்
மாகாளங் கொள்ள மதனைத் துரத்துகின்ற
மாகாளத் தன்பர் மனோலயமே

8 - அம்பர் மாகாளம் (கோயில் திருமாளம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 85 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

அடையார் புரமூன்றும் அனல்வாய் விழ எய்து
மடையார் புனல் **அம்பர்மாகாளம்** மேய
விடையார் கொடி எந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழல் ஏத்தச் சாரா வினைதானே

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 103 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

புல்கு பொன்னிறம் புரிசடை நெடுமுடிப் போழிளம் மதிசூடிப்
பில்கு தேனுடை நறுமலர்க் கொன்றையும் பிணையல் செய்தவர் மேய
மல்கு தண்துறை அரிசிலின் வடகரை வருபுனல் **மாகாளம்**
அல்லு நண்பகலும் தொழும் அடியவர்க்கு அருவினை அடையாவே

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 93 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

படியுளார் விடையினர் பாய்புலித் தோலினர் பாவநாசர்
பொடிகொள் மாமேனியர் பூதமார் படையினர் பூணநூலர்
கடிகொள் மாமலரிடும் அடியினர் பிடிநடை மங்கையோடும்
அடிகளார் அருள்புரிந்த இருப்பிடம் **அம்பர் மாகாள**ந்தானே

செம்பொன் மாமணி கொழித்து எழுதிரை வருபுனல் அரிசில் சூழ்ந்த
அம்பர் மாகாளமே கோயிலா அணங்கினோடு இருந்த கோனைக்
கம்பினார் நெடுமதில் காழியுள் ஞானசம்பந்தன் சொன்ன
நம்பிநாள் மொழிபவர்க்கு இல்லையாம் வினை நலம்பெறுவர் தாமே - 11

121. மீயச்சூர் (திருமீயச்சூர்)

இறைவன் : மேகநாதர், முயற்சிநாதர்
இறைவி : சௌந்தரநாயகி, இலலிதாம்பாள்
தலமரம் : வில்வம் தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 173
தொலைபேசி : 04366 - 239170 அலைபேசி : 9444836526, 9444698841
முகவரி : அருள்மிகு. மேகநாதர் திருக்கோயில்,
திருமீயச்சூர் அஞ்சல், (வழி) பேரளம்,
நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 405
தலச் சிறப்பு : சூரியன் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 120

யோகாளக்
காயச்சூர் விட்டுக் கதிசேர வேட்டவர்சூழ்
மீயச்சூர் தண்ணென்னும் வெண்ணெருப்பே

233 - திருமீயச்சூர்

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 62 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

காயச்செவ்விக் காமன் காய்ந்து கங்கையைப்
பாயப் படர் புன்சடையில் பதித்த பரமேட்டி
மாயச் சூரன்று அறுத்த மைந்தன் தாதை தன்
மீயச்சூரே தொழுது வினையை விட்டுமே

குளிரும் சடைகொள் முடிமேல் கோலமார் கொன்றை
ஒளிரும் பிறை ஒன்று உடையான் ஒருவன் கைகோடி
நளிரும் மணிசூழ் மாலை நட்டம் நவில் நம்பன்
மிளிரும் அரவம் உடையான் **மீயச்சூரா**னே - 6

வேடமுடைய பெருமான் உறையும் **மீயச்சூர்**
நாடும் புகழார் புகழி ஞானசம்பந்தன்
பாடலாய தமிழ் ஈரைந்து மொழிந்து உள்கி
ஆடும் அடியார் அகல் வானுலகம் அடைவாரே - 11

122. இளங்கோயில் (திருமீயச்சூர் இளங்கோயில்)

இறைவன் : சகலபுவனேஸ்வரர்
இறைவி : மேகலாம்பிகை
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : சூரிய தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 174
தொலைபேசி : 04366 - 239170 அலைபேசி : 9444836526, 9444698841
முகவரி : அருள்மிகு. மேகநாதர் திருக்கோயில்,
திருமீயச்சூர் அஞ்சல், (வழி) பேரளம், நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் 609 405
தலச் சிறப்பு : காளி வழிபட்ட தலம் இதனை இளங்கோயில் என்பர்

திருவருட்பா பாடல் எண் 121

மாயக்
களங்கோவில் நெஞ்சக் கயவர் மருவா
இளங்கோயின் ஞான இனிப்பே

234 - திருமீயச்சூர் இளங்கோயில்

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 11 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

தோற்றம் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர் புன்சடை அரற்கு
ஏற்றம் கோயில் கண்டீர் **இளம்கோயிலே**

வெவ்வ வண்ணத்து நாகம் வெருவவே
கவ்வ வண்ணக் கனல் விரித்தாடுவர்
செவ்வ வண்ணம் திகழ் திருமீயச்சூர்
எவ்வ வண்ணம் பிரான் **இளம் கோயிலே** - 5

கடுக்கண்டன் கயிலாய மலைதனை
எடுக்கலுற்ற இராவணன் ஈடற
விடுக்கண் இன்றி வெகுண்டன் மீயச்சூர்
இடுக்கண் தீர்க்க நின்றார் **இளம் கோயிலே** - 10

123. திலதைப்பதி (திலதைப்பதி) (சிதலைப்பதி)

இறைவன் : முத்தீஸ்வரர், மந்தாரவனேஸ்வரர்
இறைவி : சுவர்ணவல்லி, பொற்கொடிநாயகி
தலமரம் : மந்தாரை
தீர்த்தம் : சந்திர தீர்த்தம், அரிசிலாறு
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 175 அலைபேசி : 9442714055
முகவரி : அருள்மிகு. முத்தீஸ்வரர் திருக்கோயில்,
திலதைப்பதி, பூந்தோட்டம் அஞ்சல்,
நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 503
தலச் சிறப்பு : இராம, இலட்சுமணர்கள் தசரதனுக்கும்
சடாயுவுக்கும் எள் தர்ப்பணம் செய்த இடம். பிதுர்
தர்ப்பணம் இங்கு செய்கின்றனர்

திருவருட்பா பாடல் எண் 122

வளங்கோவை
நாடுந் திலத நயப்புலவர் நாடோறும்
பாடுந் **திலதைப் பதிநிதியே**

144 - திலதைப்பதி (சிதலைப்பதி)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 118 பாடல் 1
பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

பொடிகள் பூசிப் பல தொண்டர் கூடிப் புலர்காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்ற அவ்வழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார் **திலதைப்பதி**
அடிகொள் சோலையம் மலர் மணம் கமழும் மதிமுத்தமே

விண்ணர் வேதம் விரித்தோத வல்லார் ஒருபாகமும்
பெண்ணர் எண்ணார் எயில் செற்றுகந்த பெருமானிடம்
தெண்ணிலாவின் ஒளி தீண்டு சோலைத் **திலதைப்பதி**
மண்ணுலார் வந்தருள் பேண நின்றம் மதிமுத்தமே - 6

கடுத்து வந்த கனல்மேனியினான் கருவரைதனை
எடுத்தவன்தன் முடிதோள் அடத்தார்க்கு இடமாவது
புடைக்கொள் பூகத்திளம்பாளை புல்கும் மதுப்பாயவாய்
மடுத்துமந்தி உகளும் **திலதைம்** மதிமுத்தமே - 8

மந்தமாரும் பொழில் சூழ்**திலதை**ம் மதிமுத்தர்மேல்
கந்தமாரும் கடல்காழி உள்ளான் தமிழ் ஞானசம்
பந்தன் மாலை பழிதீர நின்றேத்த வல்லார்கள் போய்ச்
சிந்தை செய்வார் சிவன் சேவடி சேர்வது திண்ணமே - 11



124. பாம்புரங் (திருப்பாம்புரம்) (திருப்பாம்புரம்)

இறைவன் : பாம்புரேஸ்வரர், சேஷபுரீஸ்வரர், பாம்பீசர்,
பாம்புரநாதர்
இறைவி : பிரம்மராம்பிகை, வண்டார்குழலி
தலமரம் : வன்னி தீர்த்தம் : ஆதிசேஷ தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 176 தொலைபேசி : 0435 - 2449578
அலைபேசி : 9486279221, 9443047302, 9443943665
முகவரி : அருள்மிகு. பாம்புரேஸ்வரர் திருக்கோயில்,
திருப்பாம்புரம், சுரைக்காயூர் அஞ்சல்,
(வழி) பாலையூர், குடவாசல் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் 612 203
தலச் சிறப்பு : நாகராஜன் வழிபட்ட தலம்.இராகு கேது தலம்
இத்தலத்தில் பாம்பு கடித்து இறப்பவர்கள் இல்லை.

திருவருட்பா பாடல் எண் 123

ஆடுமயில்
காம்புரங்கொள் தோளியர்பொற் காவிற் பயில்கின்ற
பாம்புரங்கொள் உண்மைப் பரம்பொருளே

200 - திருப்பாம்புரம் (திருப்பாம்புரம்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 41 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

சீரணிதிகழ் திருமார்பில் வெண்ணூலர் திரிபுரம் எரிசெய்த செல்வர்
வாரணி வனமுலை மங்கையோர் பங்கர் மான்மறி ஏந்திய மைந்தர்
காரணி மணிதிகழ் மிடறுடை அண்ணல் கண்ணுதல் விண்ணவரேத்தும்
பாரணி திகழ்தரு நான்மறையாளர் **பாம்புர** நன்னகராரே

ஓதி நன்குணர்வார்க்கு உணர்வுடை ஒருவர் ஒளிதிகழ் உருவம் சேர் ஒருவர்
மாதினை இடமா வைத்த எம் வள்ளல் மான்மறி ஏந்திய மைந்தர்
ஆதிநீயருள் என்று அமரர்கள் பணிய அலைகடல் கடைய அன்றெழுந்த
பாதி வெண்பிறை சடை வைத்த எம்பரமர் **பாம்புர** நன்னகராரே - 6

விடைத்த வல்லரக்கன் வெற்பினை எடுக்க மெல்லிய திருவிரலூன்றி
அடர்த்தவன் தனக்கு அன்றருள்செய்த அடிகள் அனலது ஆடும் எம்அண்ணல்
மடக்கொடி அவர்கள் வருபுனலாட வந்திழி அரசிலின் கரைமேல்
படப்பையில் கொணர்ந்து பருமணி சிதறும் **பாம்புர** நன்னகராரே - 8

பார்மலிந்தோங்கிப் பருமதில் சூழ்ந்த **பாம்புர** நன்னகராரைக்
கார்மலிந்தழகார் கழனிசூழ் மாடக் கழுமல முதுபதிக் கவுணி
நார்மலிந்தோங்கு நான்மறை ஞானசம்பந்தன் செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்தழகார் செல்வமது ஓங்கிச் சிவனடி நண்ணுவார் தாமே - 11



125. சிறுகுடி (சிறுகுடி)

இறைவன் : சூட்சுமபுரீஸ்வரர், மங்களநாதர், சிறுகுடியீசர்
இறைவி : மங்களநாயகி, மங்களாம்பிகை
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : மங்கள தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 177 தொலைபேசி : 04366 - 291646
அலைபேசி : 9585160660
முகவரி : அருள்மிகு. சூட்சுமபுரீஸ்வரர் திருக்கோயில், திருச்சிறுகுடி, சரபோஜிராஜபுரம் அஞ்சல், (வழி) பூந்தோட்டம், குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 503
தலச் சிறப்பு : செவ்வாய் தோஷம் நீங்க பிரார்த்தனை செய்யும் தலம். அம்பிகை கைப்பிடி அளவு மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்ட தலம். செவ்வாய் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 124

ஆம்புவனம்
துன்னும் பெருங்குடிகள் தூந்துவலஞ் செய்துவகை
மன்னுஞ் **சிறுகுடி**யான் மார்த்தமே

130 - சிறுகுடி

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 97 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

திடமலி மதிலணி **சிறுகுடி** மேவிய
படமலி அரவுடையீரே
படமலி அரவுடையீர் உமைப் பணிபவர்
அடைவதும் அமருலகு அதுவே

செங்கயல் புனலணி **சிறுகுடி** மேவிய
மங்கையை இடமுடையீரே
மங்கையை இடமுடையீர் உமை வாழ்த்துவார்
சங்கைஅது இலர்நலர் தவமே - 6

திசையவர் தொழுதெழு **சிறுகுடி** மேவிய
தசமுகன் உரநெரித் தீரே
தசமுகன் உரநெரித்தீர் உமைச் சார்பவர்
வசையறும் அதுவழி பாடே - 8

தேனமர் பொழிலணி **சிறுகுடி** மேவிய
மானமர் கரமுடையீரே
மானமர் கரமுடையீர் உமை வாழ்த்திய
ஞானசம் பந்தன தமிழே - 11



126. வீழிமிழலை (திருவீழிமிழலை)

இறைவன் : நேத்திரார்ப்பணேஸ்வரர், விழியழகர், விழியழகீசர்
இறைவி : சுந்தரகுஜாம்பிகை, அழகுமுலையம்மை
தலமரம் : வீழிச்செடி தீர்த்தம் : விஷ்ணு தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 178
தொலைபேசி : 04366 - 273050 அலைபேசி : 9443924825
முகவரி : அருள்மிகு. நேத்திரார்ப்பணேஸ்வர் திருக்கோயில், திருவிழிமிழலை &அஞ்சல், தஞ்சை மாவட்டம் 609 505
தலச் சிறப்பு : சம்பந்தருக்கும், அப்பருக்கும் படிக்காசு அளித்த தலம். 84100 ஆயிரம் யோனி பேதம் பற்றிய சம்பந்தர் பாடல்

திருவருட்பா பாடல் எண் 125

முன்னரகும்
காழி மிழலையருங் கண்டுதொழக் காசளித்த
வீழி மிழலை விராட்டுருவே

263 - திருவீழிமிழலை

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 132 பாடல் 4
பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்பரி

உரைசேரும் **எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்**
நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரும் முகில் முழவ மயில்கள் பல நடமாட வண்டு பாட
சிரைசேர் பொன் இதழிதர மென்காந்தன் கையேற்கும் **மிழலை**யாமே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 51 பாடல் 5
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

புடை தூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர் சிற்றம்பலத்தே நடமாடுவார்
உடை தூழ்ந்த புலித்தோலர் கலிக்கச்சி
மேற்றளியுளார் குளிர்சோலை ஏகம்பத்தார்
கடை தூழ்ந்து பலிதேரும் கங்காளனார்
கழுமலத்தார் செழுமலத்தார்க் குழலியோடும்
விடை தூழ்ந்த வெல்கொடியார் மல்கு செல்வ
வீழி மிழலையே மேவினாரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 88 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

நம்பினார்க்கு அருள் செய்யும் அந்தணர் நான்மறைக்கு இடமாய வேள்வியுள்
செம்பொன் நேர்மடவார் அணிபெற்ற **திருமிழலை**
உம்பரார் தொழுதேத்த மாமலையாளொடும் உடனே உறைவிடம்
அம்பொன் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே



127. வன்னியூர் (அன்னியூர்) திருவன்னியூர்

இறைவன் : அக்கினிபுரீஸ்வரர், அக்கினீஸ்வரர்
இறைவி : கௌரி
தலமரம் : வன்னி
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 179 தொலைபேசி : 0435 -2449578
முகவரி : அருள்மிகு அக்கினீஸ்வரர் திருக்கோயில்,
அன்னியூர் & அஞ்சல், (வழி) கோனேரிராஜபுரம்,
குடவாசல் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 201
தலச் சிறப்பு : அக்கினி வழிபட்டதால் வன்னியூர் என்றானது
வன்னி என்றால் நெருப்பு(அனல்) இரத்த கொதிப்பு
உள்ளவர்களுக்கு இங்குள்ள தீர்த்தத்தில்
நீராடினால் நோய் நீங்கும்.

திருவருட்பா பாடல் எண் 126

ஊழிதொறும்
மன்னியூர் மால்விடையாய் வானவா வென்றுதொழ
வன்னியூர் வாழு மணிகண்டா

250 - வன்னியூர் (அன்னியூர்)

பாடல்கள்
திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 28 பாடல் 3
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானம் காட்டுவர் தம்மடைந்தார்க்கெலாம்
தானம் காட்டித் தன் தாளடைந்தார்கட்கு
வானம் காட்டுவர் போல் **வன்னியூர**ரே

இம்மை அம்மை என இரண்டும் இவை
மெய்ம்மை தானறியாது விளம்புவர்
மெய்ம்மையால் நினைவார்கள் தம் வல்வினை
வம்மின் தீர்ப்பர் கண்டீர் **வன்னியூர**ரே - 4

குணங்கொள் தோளெட்டு மூர்த்தி இணையடி
இணங்குவார்கட்கு இனியனுமாய் நின்றான்
வணங்கி மாமலர் கொண்டவர் வைகலும்
வணங்குவார் மனத்தார் **வன்னியூர**ரே - 7

நலங்கொள் பாகனை நன்று முனிந்திடா
விலங்கல் கோத்து எடுத்தானது மிக்கிட
இலங்கை மன்னன் இருபது தோளினை
மலங்க ஊன்றி வைத்தார் **வன்னியூர**ரே - 10

128. கருவிலி (கருவிலிக்கொட்டிட்டை) (கருவேலி)

இறைவன் : சற்குணநாதேஸ்வரர்
இறைவி : சர்வாங்கநாயகி
தீர்த்தம் : எம தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 180 அலைபேசி : 9842280998, 9442932942
முகவரி : அருள்மிகு சற்குணநாதேஸ்வரர் திருக்கோயில்,
சுருவேலி, கூந்தலூர் அஞ்சல், (வழி) எரவாஞ்சேரி
தஞ்சை மாவட்டம் 605 501
தலச் சிறப்பு : உருத்திர கணத்தர் வழிபட்டதலம்

திருவருட்பா பாடல் எண் 127

இந்நிமிடம்
சிந்துங் கருவலியின் திண்மையென்று தேர்ந்தவர்கள்
முத்துங் **கருவிலி**வாழ் முக்கண்ணா

74 - கருவிலிக்கொட்டிட்டை (கருவேலி)

பாடல்கள்
திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 69 பாடல் 1
குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

மட்டிட்ட குழலார் கழலில் வலைப்
பட்டிட்டு மயங்கிப் பரியாது நீர்
கட்டிட்ட வினை போகக் **கருவிலிக்**
கொட்டிட்டை உறைவான் கழல் கூடுமே

உய்யுமாறு இது கேண்மின் உலகத்தீர்
பைகொள் பாம்பரையான் படையார் மழுக்
கையினான் உறைகின்ற **கருவிலிக்**
கொய்கொள் பூம்பொழில் கொட்டிட்டை சேர்மினே - 5

நம்புவீர் இதுகேண்மின்கள் நாடொறும்
எம்பிரான் என்றிமையவர் ஏத்துமே
கம்பனார் உறைகின்ற **கருவிலிக்**
கொம்பனார் பயில் கொட்டிட்டை சேர்மினே - 9

பாருளீர் இது கேண்மின் பருவரை
பேருமாறு எடுத்தானை அடர்த்தவன்
கார்கொள் நீர்வயல் சூழ்தண் **கருவிலிக்**
கூர்கொள் வேலினன் கொட்டிட்டை சேர்மினே - 10

129. பேணு பெருந்துறை (திருப்பந்துறை)

இறைவன் : சிவானந்தேஸ்வரர், பிரணவேஸ்வரர்
இறைவி : மங்களாம்பிகை, மலையரசி
தலமரம் : வன்னி தீர்த்தம் : மங்கள தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 181
தொலைபேசி : 0435 - 2448138 அலைபேசி : 9443650826
முகவரி : அருள்மிகு. சிவானந்தேஸ்வரர் திருக்கோயில்
திருப்பந்துறை, நாச்சியார்கோயில் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம், தஞ்சை மாட்டம் 612 602
தலச் சிறப்பு : பிரமன், அம்பாள், முருகன் வழிபட்ட தலம்,
கரிகாற் சோழனால் கற்றளியாக மாற்றப்பட்டது.

திருவருட்பா பாடல் எண் 128

மந்தணத்தைக்
காணு மருந்துறையிக் காமர்தல மென்றெவரும்
பேணு பெருந்துறையிற் பெம்மானே
218 - பேணுபெருந்துறை (திருப்பந்துரை)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 42 பாடல் 2
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

மூவருமாகி இருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப் பல்கணம் நின்று பணியச்
சாவமதாகிய மால்வரை கொண்டு தண்மதில் மூன்றும் எரித்த
தேவர்கள் தேவர் எம்பெருமனார் தீதில் பெருந்துறையாரே

எண்ணார் தங்கள் மும்மதில் வேவ ஏவலம் காட்டிய எந்தை
விண்ணோர் சாரத் தன்னருள் செய்த வித்தகர் வேதமுதல்வர்
பண்ணார் பாடல் அறாத பசுபதியீசனோர் பாகம்
பெண் ஆணாய வார்சடை அண்ணல் பேணு பெருந்துறையாரே - 6

பொன்னங்கானல் வெண்திரை சூழ்ந்த பொருகடல்வேலி இலங்கை
மன்னன் ஒல்க மால்வரையூன்றி மாமுரணாகமும் தோளும்
முன்னவை வாட்டிப் பின்னருள்செய்த மூவிலைவேலுடை மூர்த்தி
அன்னம் கன்னிப் பேடையொடு ஆடி அணவு பெருந்துறையாரே - 8

கடையார் மாட நன்கெழு வீதிக் கழுமலவூன் கலந்து
நடையார் இன்சொல் ஞானசம்பந்தன் நல்ல பெருந்துறை மேய
படையார் சூலம் வல்லவன் பாதம் பரவிய பத்திவை வல்லார்
உடையராகி உள்ளமும் ஒன்றி உலகினில் மன்னுவர் தாமே - 1

130. நறையூர் (திருநறையூர்ச்சித்தீச்சரம்) (திருநறையூர்)

இறைவன் : சித்தநாதேஸ்வரர், சித்தநாதர்,
வேதேஸ்வரர், நரேஸ்வரர்
இறைவி : செளந்தரநாயகி, அழகம்மை
தலமரம் : பவளமல்லிகை தீர்த்தம் : சூல தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், சுந்தரர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 182
தொலைபேசி : 0435 - 2467343 அலைபேசி : 9944379140
முகவரி : அருள்மிகு. சித்தநாதேஸ்வரர் திருக்கோயில்,
திருநறையூர், நாச்சியார்கோயில் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 102
தலச் சிறப்பு : பிரமன் வழிபட்டது, சோழர்காலத் திருப்பணி

திருவருட்பா பாடல் எண் 129

ஏணுடன்கா
ரீட்டும் பெருநறையா றென்ன வயலோடி
நாட்டும் பெருநறையூர் நம்பனே
159 - திருநறையூர்ச்சித்தீச்சரம் (திருநறையூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 29 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

ஊருலாவு பலி கொண்டு உலகேத்த
நீருலாவு நிமிர்புன்சடை அண்ணல்
சீருலாவு மறையோர் நறையூரில்
சேரும் சித்தீச்சரம் சென்றடை நெஞ்சே

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 87 பாடல் 1
பண் : பியந்தைக் காந்தாரம் இராகம் : நவரோஸ்

நேரியனாகும் அல்லன் ஒருபாலும் மேனி அரியான் முனாய ஒளியான்
நீரியல் காலுமாகி நிறைவானுமாகி உறுதியும் ஆய நிமலன்
ஊரியல்பிச்சை பேணி உலகங்கள் ஏத்த நல்க உண்டு பண்டு சுடலை
நாரியோர் பாகமாக நடமாடவல்ல நறையூரின் நம்பன் அவனே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 93 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவும் உடையான் இடமாம்
வாரும் அருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச்சரமே

131. அரிசிற்கரைப்புத்தூர் (அரிசிற்கரைப்புத்தூர்) (அழகாபுத்தூர்)

இறைவன் : சொர்ணபுரீஸ்வரர், படிக்காசளித்தநாதர்
இறைவி : சௌந்தரநாயகி, அழகாம்பிகை
தலமரம் : வில்வம் தீர்த்தம் : கோயில் எதிரில்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 183 தொலைபேசி : 0435 - 2466939
அலைபேசி : 9943178294, 9442447032
முகவரி : அருள்மிகு. சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்,
அழகார்புத்தூர் - கிருஷ்ணாபுரம்
(வழி) சாக்கோட்டை, கும்பகோணம் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 612 401
தலச் சிறப்பு : கோச்செங்கட்சோழன் திருப்பணி செய்த தலம்
புகழ்த்துணை நாயனார் முத்தி தலம்

திருவருட்பா பாடல் எண் 130

காட்டும்
பரிசிற் கரைப்புற்றோர் பாங்குபெற வோங்கும்
அரிசிற் கரைப்புத்தூ ராளே

11 - அரிசிற்கரைப்புத்தூர் (அழகாபுத்தூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 63 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

மின்னும் சடைமேல் இளவெண்திங்கள் விளங்கவே
துன்னும் கடல் நஞ்சிருள் தோய்கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலார் **அரிசில்** அலைகொண்டு
பொன்னும் மணியும் பொரு தென்கரைமேல் புத்தூரே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 61 பாடல் 1
குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

முத்தூரும் புனல் மொய் **அரிசிற்கரைப்**
புத்தூரன் அடிபோற்றி என்பாரெலாம்
பொய்த்தூரும் புலனைந்தொடு புல்கிய
மைத்தூரும் வினை மாற்றவும் வல்லரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 2 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

மலைக்கும் மகள் அஞ்ச மதகரியை
உரித்தீர் எரித்தீர் வரு முப்புரங்கள்
சிலைக்கும் கொலைச் சேஉகந்து ஏற்றொழியீர்
சில்பலிக்கு இல்கள்தோறும் செலவொழியீர்
கலைக்கொம்பும் கரிமருப்பும் இடறிக்
கலவம் மயில்பீலியும் காரகிலும்
அலைக்கும் புனல்சேர் **அரிசில்** தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே

132. சிவபுரத்தி (சிவபுரம்)

இறைவன் : சிவகுருநாதசுவாமி, சிவபுரீஸ்வரர், சிவபுரநாதர்
இறைவி : ஆர்யாம்பாள், சிங்காரவல்லி, பெரியநாயகி
தலமரம் : சண்பகம் தீர்த்தம் : சந்திர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 184 அலைபேசி : 9865306840, 9898460984
முகவரி : அருள்மிகு. சிவகுருநாதசுவாமி திருக்கோயில்
சிவபுரம், சாக்கோட்டை அஞ்சல்,
கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 401
தலச் சிறப்பு : வெள்ளைப்பன்றி வடிவில் திருமால் பூசித்த தலம்.
பட்டினத்தார் தமக்கை இவ்வூரில் வாழ்ந்தார்.

திருவருட்பா பாடல் எண் 131

தரிசனத்தெக்
காலுஞ் சிவபுரத்தைக் காதலித்தோர் தங்கள்துதி
ஏலுஞ் **சிவபுரத்தி** லெம்மானே

128 - சிவபுரம்

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 21 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

புவம்வளி கனல்புனல் புவிகலை உரைமறை திரிகுணம் அமர் நெறி
திவம்மலி தருசுரர் முதலியார் திகழ்தரும் உயிரவை அவைதம
பவம்மலி தொழிலது நினைவொடு பதுமநல் மலரது மருவிய
சிவனது **சிவபுரம்** நினைபவர் செழுநிலன் இனில்நிலை பெறுவரே

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 122 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இன்குரல் இசைகெழும் யாழ்முரலத்
தன்கரம் மருவிய சதுரன் நகர்
பொன்கரை பொருபழம் காவிரியின்
தென்கரை மருவிய **சிவபுர**மே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 87 பாடல் 4-10
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

வானவன் காண் வானவர்க்கும் மேலானான் காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண் ஆனைந்தும் ஆடினான் காண்
ஐயன் காண் கையில் அனலேந்தி ஆடும்
கானவன் காண் கானவனுக்கு அருள்செய்தான் காண்
கருதுவார் இதயத்துக் கமலத்தூறும்
தேனவன் காண் சென்றடையாச் செல்வன்தான் காண்
சிவனவன் காண் **சிவபுர**த்தெம் செல்வன் தானே

133. கலையநல்லூர் (திருக்கலய நல்லூர்)
(சாக்கோட்டை)

இறைவன் : அமிர்தகலசநாதர், அமிர்தகலேஸ்வரர்
இறைவி : அமிர்தவல்லி
தலமரம் : வன்னி தீர்த்தம் : நால்வேத தீர்த்தம்
பாடல் : சுந்தரர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 185 அலைபேசி : 9788202923, 9698460984, 9865306840
முகவரி : அருள்மிகு. அமிர்தகலேஸ்வரர் திருக்கோயில்
சாக்கோட்டை & அஞ்சல், கும்பகோணம் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 612 401
தலச் சிறப்பு : ஊழிக்காலத்தில் உயிர்களை அடக்கிய கலயம் தங்கிய ஊர் என்றதால் கலய நல்லூர் மூன்றாம் குலோத்துங்க சோழன், தஞ்சை மன்னர்கள் திருப்பணி செய்துள்ளனர்.

திருவருட்பா பாடல் எண் 132

மாலுங்கொள்
வெப்புங் கலையநல்லோர் மென்மதுரச் சொன்மாலை
செப்புங் **கலையநல்லூர்ச்** சின்மயனே

76 - திருக்கலயநல்லூர் (சாக்கோட்டை)

பாடல்கள்

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 16 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

குரும்பை முலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு
குறிப்பினொடு சென்று அவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும் வரம் கொடுத்து அவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவிய ஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ் அயலின்
கரும்பருகே கரும்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் **கலயநல்லூர்** காணே

தண்புனலும் வெண்மதியும் தாங்கிய செஞ்சடையுன்
தாமரையோன் தலைகலனாக் காமர முன்பாடி
உண்பலிக் கொண்டுழல் பரமன் உறையும் ஊர் நிறைநீர்
ஒழுகு புனல் அரசிலியின் தென் **கலயநல்லூர்** அதனை
நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன் நாவில் நயந்துரை செய்
பண்பயிலும் பத்துமிவை பத்திசெய்து நித்தம்
பாடவல்லார் அல்லலொடு பாவமிலர் தாமே - 11

134. கருக்குடி (கருக்குடி) (மருதாந்தநல்லூர்)

இறைவன் : கருக்குடிநாதர், பிரம்மபுரீஸ்வரர், சற்குணலிங்கேஸ்வரர்
இறைவி : அத்வைதநாயகி, கல்யாணநாயகி, சர்வாலங்காரநாயகி
தீர்த்தம் : எம தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 186
அலைபேசி : 9943523852
முகவரி : அருள்மிகு. சற்குணலிங்கேஸ்வரர் திருக்கோயில், மருதாந்தநல்லூர் & அஞ்சல், (வழி) திப்பிராஜபுரம் கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 402
தலச் சிறப்பு : மிகச் சிறிய மூர்த்தம், மணல் இலிங்கம், பீடம் கல்லினால் ஆனது.

திருவருட்பா பாடல் எண் 133

செப்பமுடன்
ஓங்குந் திருத்தொண்டர் உள்குளிர நல்லருளால்
தாங்குங் **கருக்குடிவாழ்** சங்கரனே

71 - கருக்குடி (மருதாந்தநல்லூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 21 பாடல் 1
பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்கு வந்து எய்து நின்மலன்
கனைகடல் வையகம் தொழு **கருக்குடி**
அனலெரி ஆடும் எம்மடிகள் காண்மினே

இன்புடையார் இசை வீணை பூண் அரா
என்புடையார் எழில் மேனி மேலெரி
முன்புடையார் முதலேத்தும் அன்பருக்கு
அன்புடையார் **கருக்குடி** எம் அண்ணலே - 6

எறிகடல் புடைதழு இலங்கை மன்னனை
முறிபட வரையிடை அடர்த்த மூர்த்தியார்
கறைபடு பொழில் மதிதவழ் **கருக்குடி**
அறிவொடு தொழுமவர் ஆள்வர் நன்மையே - 8

கானலில் விரைமலர் விம்மு காழியான்
வானவன் **கருக்குடி** மைந்தன் தன்னொளி
ஆன மெய் ஞானசம்பந்தன் சொல்லிய
ஊனமில் மொழி வலார்க்கு உயரும் இன்பமே - 11

135. வாஞ்சியம் (ஸ்ரீ வாஞ்சியம்)(திருவாஞ்சியம்)

இறைவன் : வாஞ்சிநாதேஸ்வரர், வாஞ்சிலிங்கேஸ்வரர்
இறைவி : மங்களநாயகி, வாழவந்தநாயகி
தலமரம் : சந்தனம்
தீர்த்தம் : எம தீர்த்தம், குப்த தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 187 அலைபேசி : 9486044334, 9442403926
முகவரி : அருள்மிகு. வாஞ்சிநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீவாஞ்சியம் & அஞ்சல், நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் 610 110
தலச் சிறப்பு : எமன் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 134

ஆங்ககனந்
தாஞ் சியத்தை வேங்கைத் தலையாற் றடுக்கின்ற
வாஞ்சியத்தின் மேவு மறையோனே

251 - ஸ்ரீவாஞ்சியம் (திருவாஞ்சியம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 7 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

வன்னிகொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன்னியன்ற சடையில் பொலிவித்த புராணனார்
தென்ன என்று வரிவண்டு இசைசெய் **திருவாஞ்சியம்**
என்னை ஆளுடையான் இடமாக உகந்ததே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 67 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

படையும் பூதமும் பாம்பும் புல்வாய் அதள்
உடையும் தாங்கிய உத்தமனார்க்கிடம்
புடை நிலாவிய பூம்பொழில் **வாஞ்சியம்**
அடைய வல்லவர்க்கு அல்லல் ஒன்றில்லையே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 76 பாடல் 6
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

கரந்தை கூவிள மாலை கடிமலர்க் கொன்றையும் சூடிப்
பரந்த பாரிடம் சூழ வருவர் நம் பரமர் தம்பரிசால்
திருந்து மாடங்கள் நீடு திகழ் **திருவாஞ்சிய**த்துறையும்
மருந்தனார் அடியாரை வல்வினை நலியவொட்டாரே

நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

136. நன்னிலம் (நன்னிலம்)

இறைவன் : மதுவனேஸ்வரர், பிரகாசநாதர்,
தேவாரண்யேஸ்வரர்
இறைவி : மதுவனேஸ்வரி, தேவகாந்தார நாயகி
தலமரம் : வில்வம், கோங்கு, வேங்கை, மாதவி
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம், சூல தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 188 அலைபேசி : 9443038854, 9442682346, 9943209771
முகவரி : அருள்மிகு. மதுவனேஸ்வரர் திருக்கோயில்,
நன்னிலம் & அஞ்சல், நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் 610 105
தலச் சிறப்பு : மாடக்கோயில், தேவர்கள் தேனீக்கள் வடிவத்தில்
இறைவனை வழிபட்ட தலம், அகத்தியர், பிரமன்
வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 135

ஆஞ்சியிலா
திந்நிலத்தும் வானாதி யெந்திலத்து மோங்குபெரு
நன்னிலத்து வாழ்ஞான நாடகனே

160 - நன்னிலம்

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 98 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

தண்ணியல் வெம்மையினான் தலையில் கடைதோறும் பலி
பண்ணியல் மென்மொழியார் இடங்கொண்டு உழல் பண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர் முறையால் அடி போற்றிசைப்ப
நண்ணிய **நன்னிலத்து** பெருங்கோயில் நயந்தவனே

வெண்பொடி மேனியினான் கருநீல மணிமிடற்றான்
பெண்படி செஞ்சடையான் பிரமன் சிரம் பீடழித்தான்
பண்புடை நான்மறையோர் பயின்றேத்திப் பல்கால் வணங்கும்
நண்புடை **நன்னிலத்துப்** பெருங்கோயில் நயந்தவனே - 6

கோடுயர் வெங்களிற்றுத் திகழ் கோச்செங்கணான் செய்கோயில்
நாடிய **நன்னிலத்துப்** பெருங்கோயில் நயந்தவனைச்
சேடியல் சிங்கி தந்தை சடையன் திருவாரூரன்
பாடிய பத்தும் வல்லார் புகுவார் பரலோகத்துளே -11

137. கொண்டீச்சுரம் (கொண்டீச்சுரம்)

(திருக்கண்டீஸ்வரம்)

இறைவன் : பசுபதீஸ்வரர்
இறைவி : சாந்த நாயகி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : வீரபுஷ்கரணி தீர்த்தம்
பாடல் : அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 189 அலைபேசி : 9443038854
முகவரி : அருள்மிகு. பசுபதீஸ்வரர் திருக்கோயில்,
திருக்கண்டீஸ்வரம்,
தூத்துக்குடி அஞ்சல், (வழி) சன்னாநல்லூர்,
நன்னிலம். திருவாரூர் மாவட்டம் 609 504
தலச் சிறப்பு : காமதேனுவாக வந்த உமாதேவி வழிபட்ட தலம்.
பசுவின் கொம்பு பட்ட வடு சுவாமிமேல் உள்ளது.

திருவருட்பா பாடல் எண் 136

மன்னுமலர்
வண்டீச் சுரம்பாடி வார்மதுவுண் டுள்களிக்குங்
கொண்டீச் சுரத்தமர்ந்த கோமானே

108 - கொண்டீச்சரம் (திருக்கண்டீஸ்வரம்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 67 பாடல் 9
திருநேரிசை இராகம் : நவரோஸ்

பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார் தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் **திருக்கொண்டீச்சர**த் துளானே

விரைதரு கருமேன் கூந்தல் விளங்கிழை வேலொண் கண்ணாள்
வெருவர இலங்கைக் கோமான் விலங்கலை எடுத்த ஞான்று
பருவரை அனைய தோளும் முடிகளும் பாறி வீழத்
திருவிரல் ஊன்றினானே **திருக்கொண்டீச்சர**த் துளானே - 10

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 70 பாடல் 5
குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

கேளுமின் இளமையது கேடு வந்து
ஈளையோடு இருமல் அது எய்தன்முன்
கோளரா அணி **கொண்டீச்சர**வனை
நாளும் ஏத்தித் தொழுமின் நன்காகுமே

வெம்பும் நோயும் இடரும் வெறுமையும்
துன்பமும் துயரும் எனும் சூழ்வினை
கொம்பனார் பயில் **கொண்டீச்சர**வனை
எம்பிரான் என வல்லவர்க்கு இல்லையே - 6



138. பனையூர் (திருப்பனையூர்)

இறைவன் : அழகியநாதர், சௌந்தரேஸ்வரர்,
தாலவனேஸ்வரர்
இறைவி : பெரிய நாயகி, பிருகந் நாயகி
தலமரம் : பனை தீர்த்தம் : பராசுரர் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், சுந்தரர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 190 அலைபேசி : 9965981574, 9942281758
முகவரி : அருள்மிகு. சௌந்தரேஸ்வரர் திருக்கோயில்,
பனையூர், சன்னாநல்லூர் அஞ்சல், நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் 609 504
தலச் சிறப்பு : கரிகாற்சோழன் வளர்ந்த ஊர். பராசுரமுனிவர்
வழிபட்டதலம் சுந்தரர்க்கு ஊரின் புறத்தே இறைவன்
நடன காட்சி

திருவருட்பா பாடல் எண் 137

கண்டீச
நண்பனையூ ரன்புகழும் நம்பவென உம்பர்தொழத்
தண்**பனையூர்** மேவுஞ் சடாதரனே

194 - திருப்பனையூர்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 37 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

அரவச் சடைமேல் மதிமத்தம்
விரவிப் பொலிகின்றவன் ஊராம்
நிரவிப் பல தொண்டர்கள் நாளும்
பரவிப் பொலியும் **பனையூரே**

பாரார் விடையான் **பனையூர்** மேல்
சீரார் தமிழ்ஞான சம்பந்தன்
ஆராத் தொன்மாலைகள் பத்தும்
ஊரூர் நினைவார் உயர்வாரே - 11

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 87 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

மாடமாளிகை கோபுரத்தொடு மண்டபம் வளரும் வளர்பொழில்
பாடல் வண்டறையும் பழனத் **திருப்பனையூர்த்**
தோடு பெய்தொரு காதினில் குழைதூங்கத் தொண்டர்கள் துள்ளிப் பாட நின்று
ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே



139. விற்குடி (திருவிற்குடி)

இறைவன் : வீரட்டானேஸ்வரர்
இறைவி : ஏலவார் குழலி, பரிமள நாயகி
தலமரம் : துளசி
தீர்த்தம் : சக்கர தீர்த்தம், சங்கு தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 191 அலைபேசி : 9443921146, 8870887717
முகவரி : அருள்மிகு. வீரட்டானேஸ்வரர் திருக்கோயில், திருவிற்குடி & அஞ்சல்.(வழி) கங்களாஞ்சேரி, நாகப்பட்டினம் வட்டம்,நாகை மாவட்டம் 610 101
தலச் சிறப்பு : அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று.சலந்தரனை அழித்த தலம்.அவன் மனைவி பிருந்தையை திருமால் துளசியாக ஏற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 138

பண்புடனே
எற்குடியா னங்கொண் டிருக்க மகிழ்ந்தளித்த
விற்குடியின் வீரட்ட மேயவனே

261 - திருவிற்குடி

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 108 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

வடிகொள் மேனியர் வானமா மதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையம் சடையினர் கொடியினர் உடைபுலி அதளார்ப்பர்
விடையதேறும் எம்மான் அமர்ந்து இனிது உறை **விற்குடி** வீரட்டம்
அடியராகி நின்றேத்த வல்லார்தமை அருவினை அடையாவே

பெண்ணோர் கூறினர் பெருமையர் சிறுமறிக் கையினர் மெய்யார்ந்த
அண்ணல் அன்புசெய்வார் அவர்க்கு எளியவர் அரியவர் அல்லார்க்கு
விண்ணிலார் பொழில் மல்கிய மலர்விரி **விற்குடி** வீரட்டம்
எண்ணிலாவிய சிந்தையினார் தமக்கு இடர்கள் வந்தடையாவே - 6

இடங்கொள் மாகடல் இலங்கையர் கோன்தனை இகலழி தரவூன்று
திடங்கொள் மால்வரையான் உரையார்தரு பொருளினன் இருளார்ந்த
விடங்கொள் மாமிடறு உடையவன் உறைபதி **விற்குடி** வீரட்டம்
தொடங்குமாறு இசைபாடி நின்றார் தமைத்துன்ப நோய் அடையாதுவே-8

விலங்கலே சிலை இடமென உடையவன் **விற்குடி** வீரட்டத்து
இலங்கு சோதியை எம்பெருமான் தனை எழில்திகழ் கழல் பேணி
நலங்கொள் வாழ்பொழில் காழியுள் ஞானசம்பந்தன் நற்றமிழ்மாலை
வலங்கொடே இசை மொழியுமின் மொழிந்தக்கால் மற்றது வரம் ஆமே-11

140. புகலூர் (திருப்புகலூர்)

இறைவன் : அக்கினிபுரீஸ்வரர், சரண்யபுரீஸ்வரர், கோணப்பிரான்
இறைவி : சூளிகாம்பாள், கருந்தார் குழலி
தலமரம் : புன்னை தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 192 அலைபேசி : 9443113025
முகவரி : அருள்மிகு. அக்கினிபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்புகலூர் & அஞ்சல், (வழி) திருக்கண்ணபுரம், நாகப்பட்டினம் வட்டம், நாகை மாவட்டம் 609 704
தலச் சிறப்பு : திருநாவுக்கரசு சுவாமிகள் முக்தி அடைந்த தலம் முருக நாயனார் அவதாரத் தலம்

திருவருட்பா பாடல் எண் 139

சொற்கொடிய
வன்புகலா நெஞ்சின் மருவும் ஒருதகைமைத்
தென்**புகலூர்** வாழ்மகா தேவனே

203 - திருப்புகலூர்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 115 பாடல் 2
பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

வாழ்ந்தநாளும் இனி வாழும் நாளும் இவை அறிதிரேல்

வீழ்ந்த நாள் எம்பெருமானை ஏத்தா விதியில்லீர்காள்
போழ்ந்த திங்கள் புரிசடையினான் தன் **புகலூரை**யே
சூழ்ந்த உள்ளம் உடையீர்கள் உங்கள் துயர் தீருமே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 105 பாடல் 1
திருவிருத்தம் இராகம் : சங்கராபரணம்

தன்னைச் சரண் என்று தாளடைந்தேன் தன் அடியடையப்
புன்னைப் பொழில் **புகலூர**ண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினைக் கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கலொட்டான் சிவலோகத்து இருத்திடுமே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 99 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

141. வர்த்தமாநேச்சுரம் (திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்)

இறைவன் : வர்த்தமானர்
இறைவி : மனோன்மணி
தலமரம் : புன்னை தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 193 அலைபேசி : 9443112025
முகவரி : அருள்மிகு. அக்கினிபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்புகலூர் & அஞ்சல், (வழி) திருக்கண்ணபுரம், நாகப்பட்டினம் வட்டம், நாகை மாவட்டம் 609 704
தலச் சிறப்பு : மூலவர் எதிரில் முருக நாயனார் திருமேனி உள்ளது. இவர் பூத்தொண்டு புரிந்து இத்தலத்தில் முக்தி அடைந்தார்

திருவருட்பா பாடல் எண் 140

இன்பமறை
அர்த்தமா நீக்கரிய வாதார மாகின்ற
வர்த்தமா நேச்சரத்து வாய்ந்தவனே

204 - திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 92 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

பட்டம் பால்நிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்ளிருள் ஆடு நாதனார் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையோடு ஆடும் பூம்புகலூர்த் தொண்டர் போற்றி
வட்டம் சூழ்ந்தடி பரவும் **வர்த்தமானீச் சரத்தாரே**

தளிர் இளம்கொடி வளரத் தண்கயம் இரிய வண்டேறிக்
கிளர் இளம்முழை நுழையக் கிழிதரு பொழில் புகலூரில்
உளரிளம் சுனை மலரும் ஒளிதரு சடைமுடி அதன்மேல்
வளரிளம் பிறை உடையார் **வர்த்தமானீச் சரத்தாரே** - 6

சாம வேதமோர் கீதமோதியத் தசமுகன் பரவும்
நாம தேயமது உடையார் நன்குணர்ந்து அடிகள் என்றேத்தக்
காம வேதனை வேவக் கனலெரி கொளுவிய கண்ணார்
வாம தேவர்தண் புகலூர் **வர்த்தமானீச் சரத்தாரே** - 8

பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழில் புகலூரில்
மங்குல் மாமதி தவழும் **வர்த்தமானீச் சரத்தாரைத்**
தங்கு சீர்திகழ் ஞானசம்பந்தன் தண்டமிழ் பத்தும்
எங்கும் ஏத்த வல்லார்கள் எய்துவர் இமையவர் உலகே - 11

142. இராமனதீச்சுரம் (திருக்கண்ணபுரம்)

இறைவன் : இராமனதீஸ்வரர்
இறைவி : சூளிகாம்பாள், சரிவார்குழலி
தலமரம் : சண்பகம் தீர்த்தம் : இராம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 194 அலைபேசி : 9443113025
முகவரி : அருள்மிகு. இராமனதீஸ்வரர் திருக்கோயில், திருக்கண்ணபுரம் & அஞ்சல் , நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 704
தலச் சிறப்பு : இராவணனைக் கொன்ற பாவம் தீர இராமன் சிவனை வழிபட்ட தலம் (இராமனது ஈச்சரம்) முதலில் இராமனை நந்தி தேவர் தடுத்த போது அம்பாள் இராமனை அனுமதிக்குமாறு கூறினால்

திருவருட்பா பாடல் எண் 141

மித்தையுற்ற
காமனதீ சங்கெடவே கண்பார்த் தருள்செய்த
ராமனதீ சம்பெறுநி ராமயனே

37 - இராமனதீச்சுரம் (திருக்கண்ணபுரம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 115 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளும் அவன்கோபப்
பொங்கு அரவாடலோன் புவனியோங்க
எங்கும் மன் **இராமனதீச்சரமே**

தாழ்ந்த குழல் சடைமுடி அதன்மேல்
தோய்ந்த இளம்பிறை துளங்கு சென்னிப்
பாய்ந்த கங்கையொடு படஅரவம்
ஏய்ந்தவன் **இராமனதீச்சரமே** - 5

சரிகுழல் இலங்கிய தையல் காணும்
பெரியவன் காளிதன் பெரிய கூத்தை
அரியவன் ஆடலோன் அங்கை ஏந்தும்
எரியவன் **இராமனதீச்சரமே** - 6

தறிபோலாம் சமணர் சாக்கியர் சொல்கொளேல்
அறிவோரால் நாமம் அறிந்து உரைமின்
மறி கையோன் தன்முடி மணியார் கங்கை
எறிபவன் **இராமனதீர்ச்சரமே** - 10

143. பயற்றூர் (திருப்பயற்றூர்) (திருப்பயத்தங்குடி)

இறைவன் : முக்தபுரீஸ்வரர், திருப்பயற்றுநாதர்
இறைவி : நேத்ராம்பிகை, காவியங்கண்ணி
தலமரம் : சிலந்தி தீர்த்தம் : கருணா தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 195 தொலைபேசி : 04366 - 272423
அலைபேசி : 9865844677 , 9626476428
முகவரி : அருள்மிகு. முக்தபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்பயத்தங்குடி & அஞ்சல், (வழி) கங்களாஞ்சேரி நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 701
தலச் சிறப்பு : பைரவ மகரிஷி வழிபட்ட தலம், வணிகன் ஒருவனின் வேண்டுகோளுக்கிணங்க இறைவன் மிளகுப் பொதிகளைப் பயற்றுப் பொதிகளாக மாற்றிய தலம்

திருவருட்பா பாடல் எண் 142

தோமுண்
மயற்றூர் பறித்த மனத்தில் விளைந்த
பயற்றூர் திசையம் பரனே

181 - திருப்பயற்றூர் (திருப்பயத்தங்குடி)

பாடல்கள்
திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 32 பாடல் 1
திருநேரிசை இராகம் நவரோஸ்

உரித்திட்டார் ஆனையின் தோல் உதிரவாறு ஒழுகியோட
விரித்திட்டார் உமையாள் அஞ்சி விரல் விதிர்த்து அலக்கண் நோக்கித்
தரித்திட்டார் சிறிது போது தரிக்கிலராகித் தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்றத் **திருப்பயற்றூர**னாரே

ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகித்
தீயறா நிருதி வாயுத் திப்பிய சாந்தனாகிப்
பேயறாக் காட்டில் ஆடும் பிஞ்ஞகன் எந்தைபெம்மான்
தீயறாக் கையர் போலும் **திருப்பயற்றூர**னாரே - 6

தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணியுள்ளார்க்கு
எந்தையும் என்ன நின்ற ஏழுலகு உடனுமாகி
எந்தையெம் பிரானே என்றென்று உள்குவார் உள்ளத்தென்றும்
சிந்தையும் சிவமும் ஆவார் **திருப்பயற்றூர**னாரே - 8

மூர்த்திதன் மலையின் மீது போகாதா முனிந்து நோக்கிப்
பார்த்துத் தான் பூமி மேலாற் பாய்ந்துடன் மலையைப் பற்றி
ஆர்த்திட்டான் முடிகள் பத்தும் அடர்த்து நல் அரிவை அஞ்சத்
தேத்தெத்தா என்னக் கேட்டார் **திருப்பயற்றூர**னாரே - 10

144. செங்காட்டங்குடி (திருச்செங்காட்டங்குடி)

(திருச்செங்காட்டங்குடி)

இறைவன் : உத்திராபதீஸ்வரர், ஆத்திவனநாதர், மந்திரபுரீஸ்வரர், பிரமபுரீஸ்வரர்
இறைவி : சூளிகாம்பாள் தலமரம் : ஆத்தி
தீர்த்தம் : சத்திய, சூரிய, சந்திர, அக்கினி தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 196 அலைபேசி : 9443113025
முகவரி : அருள்மிகு. உத்திராபதீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்காட்டங்குடி, திருக்கண்ணபுரம் அஞ்சல், நாகை மாவட்டம் 609 704
தலச் சிறப்பு : சிறு தொண்ட நாயனாரிடம் பிள்ளைகறி கேட்ட தலம். சிறு தொண்டர் நாயனர் முத்தி அடைந்த தலம். விநாயகர் கயமுகாசூரனை வதம் செய்தபோது செங்காடாக மாறியதால் செங்காட்டங்குடி

திருவருட்பா பாடல் எண் 143

இயற்றுஞ்சீர்
ஆச்சிரமே வுஞ்**செங்காட் டங்குடி**யி னங்கணப
தீச்சரம்வா ழுஞ்சந்த்ர சேகரனே

133 - திருச்செங்காட்டங்குடி (திருச்செங்காட்டங்குடி)

பாடல்கள்
சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 61 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையும் செங்காட்டங்குடி யதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச்சரத்தானே

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 63 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டம் தவிர்த்தென்னை தவிராநோய் தந்தானே
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 84 பாடல் 4
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

கந்தமலர்க் கொன்றை அணிசடையான் தன்னைக்
கதிர்விடு மாமணி பிறங்கு கனகச்சோதிச்
சந்தமலர்த் தெரிவை ஒரு பாகத்தானைச்
சராசர நற்றாயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத்து ஆளாக்கிப் பணிகொண்டு ஆங்கே
பன்னிய நூல் தமிழ்மாலை பாடுவித்து என்
சிந்தை மயக்கறுத்த திருஅருளினானைச்
செங்காட்டங்குடி அதனில் கண்டேன நானே

145. மருகல் (திருமருகல்)

இறைவன் : மாணிக்கவண்ணர், இரத்தினகிரீஸ்வரர்
இறைவி : வண்டுவார்குழலி, ஆமோதாளநாயகி
தலமரம் : மருகல் (ஒரு வகை வாழை)
தீர்த்தம் : இலட்சுமி மற்றும் மாணிக்க தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 197 அலைபேசி : 9786192196
முகவரி : அருள்மிகு. இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில், திருமருகல் & அஞ்சல், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 702
தலச் சிறப்பு : பாம்பு கடித்து இறந்த செட்டி மகனை சம்பந்தர் பதிகம் பாடி திருஞானசம்பந்தர் பாம்பு கடித்தவனை எழுப்பி தலம். செட்டி மகனுக்கும் செட்டிப் பெண்ணுக்கும் இங்குள்ள வன்னி மரத்தடியில் தான் சம்பந்தர் திருமணம் நிகழ்த்தினார். செட்டி மகன் உறங்கிய மடம் பக்கத்திலுள்ளது.

திருவருட்பா பாடல் எண் 144

ஏச்சகல
விண்மருவி னோனை விடநீக்க நல்லருள்செய்
வண்**மருகல்** மாணிக்க வண்ணனே

226 - திருமருகல்

பாடல்கள்
சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 18 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

சடையாய் எனுமால் சரண் நீஎனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் **மருகல்**
உடையாய் தருமோ இவள் உள்மெலிவே

சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் **மருகல்**
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே - 2

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 88 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே

ஆதி மாமலை அன்றெடுத்தான் இற்றுச்
சோதி என்றலும் தொல்லருள் செய்திடும்
ஆதியான் **மருகல்** பெருமான் திறம்
ஓதி வாழ்பவர் உம்பர்க்கும் உம்பரே - 10

146. சாத்தமங்கை (திருச்சாத்தமங்கை) (சீயாத்தமங்கை)

இறைவன் : அயவந்தீஸ்வரர், பிரமபுரீஸ்வரர்
இறைவி : உபய புஷ்பவிலோசனி, இருமலர்க்கண்ணம்மை
தலமரம் : கொன்றை தீர்த்தம் : சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 198 அலைபேசி : 9842471582
முகவரி : அருள்மிகு. அயவந்தீஸ்வரர் திருக்கோயில், சீயாத்தமங்கை & அஞ்சல், நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம் 609 702
தலச் சிறப்பு : பிரமன் வழிபட்ட தலம். திருநீலநக்க நாயனாரின் அவதார தலம்

திருவருட்பா பாடல் எண் 145

திண்மைகொண்ட
மாத்தமங்கை யுள்ளம் மருவிப் பிரியாத
சாத்தமங்கைக் கங்கைச் சடாமுடியோய்

124 - திருச்சாத்தமங்கை (சீயாத்தமங்கை)

பாடல்கள்
சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 58 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

திருமலர்க் கொன்றைமாலை திளைக்கும் மதி சென்னிவைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோடு உடனாவதும் ஏற்பதொன்றே
பெருமலர்ச் சோலை மேகம் உரிஞ்சும் பெரும் **சாத்தமங்கை**
அருமலர் ஆதிமூர்த்தீ அயவந்தி அமர்ந்தவனே

வேதமாய் வேள்வியாகி விளங்கும் பொருள் வீடதாகிச்
சோதியாய் மங்கைபாகம் நிலைதான் சொல்லலாவதொன்றே
சாதியால் மிக்கசீரால் தகுவார் தொழும் **சாத்தமங்கை**
ஆதியாய் நின்றபெம்மான் அயவந்தி அமர்ந்தவனே - 6

மறையினார் மல்கு காழித் தமிழ் ஞானசம்பந்தன் மன்னும்
நிறையினார் நீலநக்கன் நெடுமாநகர் என்று தொண்டர்
அறையும் ஊர் **சாத்தமங்கை** அயவந்திமேல் ஆய்ந்த பத்தும்
முறைமையினால் ஏத்த வல்லார் இமையோரிலும் முந்துவரே - 11

147. நாகைக்காரோணம்நாகைக்காரோணம்)

(நாகப்பட்டினம்)

இறைவன் : காயரோகணேஸ்வரர், ஆதிபுராணர்
இறைவி : நீலாயதாட்சி
தலமரம் : மாமரம்
தீர்த்தம் : புண்டரீக தீர்த்தம், வேத தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 199 தொலைபேசி : 04365 - 242844
அலைபேசி : 9894501319 , 9366672737
முகவரி : அருள்மிகு. காயரோகணேஸ்வரர் திருக்கோயில், நாகப்பட்டினம் & அஞ்சல், நாகப்பட்டினம் வட்டம், நாகை மாவட்டம் 611 001
தலச் சிறப்பு : அதிபத்த நாயனார் அவதாரத் தலம். சப்த விடங்கத்தலம். நாகர்கள் வாழ்ந்ததால் நாகபட்டினம் என்பர்.

திருவருட்பா பாடல் எண் 146

தூத்தகைய
பாகைக்கா ரென்னும் பணிமொழியார் வாழ்த்தோவா
நாகைக்கா ரோண நயந்தோனே

163 - நாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 84 பாடல் 1
பண்: குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையும் சடைமேலோர் நகுவெண்தலை சூடி
வினையில் அடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையும் கடல் **நாகைக் காரோண**த்தானே

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 71 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்து அழுந்தி வேதனைக்கு இடமாகாதே
கனையும் மாகடல் சூழ் நாகை மன்னு **காரோண**த்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 46 பாடல் 1
பண் : கொல்லிக்கௌவாணம் இராகம் : நவரோஸ்

பத்தூர் புக்கிரந்து உண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கி மிளிர் மணி வயிரக்கோவை
அவை பூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல் **நாகைக் காரோணம்** மேவியிருந்தீரே



148. சிக்கல் (சிக்கல்)

இறைவன் : நவநீதேஸ்வரர், வெண்ணைய்நாதர், வெண்ணைய்ப்பிரான்
இறைவி : சத்தியதாட்சி, வேல்நெடுங்கண்ணி
தலமரம் : குடமல்லிகை
தீர்த்தம் : வீரபுஷ்கரணி தீர்த்தம், கயா தீர்த்தம், இலட்சுமி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 200 தொலைபேசி : 04365 - 245350, 245452
அலைபேசி : 8608229929
முகவரி : அருள்மிகு. நவநீதேஸ்வரர் திருக்கோயில்,சிக்கல் & அஞ்சல், (வழி) நாகப்பட்டினம், நாகை மாவட்டம் 611 108
தலச் சிறப்பு : வசிட்ட முனிவர் வெண்ணெய்யினால் இலிங்கம் செய்து அதனை எடுக்க முற்பட்ட போது சிக்கிக் கொண்டமையால் சிக்கல் எனப்பெயர் பெற்றது.

திருவருட்பா பாடல் எண் 147

ஓகையற
விக்கல் வருங்கால் விடாய்தீர்த் துலகிடைநீ
சிக்கலெனுஞ் **சிக்கல்** திறலோனே

126 - சிக்கல்

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 8 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

வானுலாவும் மதி வந்துலாவும் மதில் மாளிகை
தேனுலாவும் மலர்ச் சோலைமல்கும் திகழ் **சிக்கலு**ள்
வேனல் வேளை விழித்திட்ட வெண்ணெய்ப் பெருமானடி
ஞானமாக நினைவார் வினையாயின நையுமே

வண்டிரைத்தும் மதுவிம்மிய மாமலர்ப் பொய்கைதூழ்
தெண்டிரைக்கொள் புனல் வந்து ஒழுகும் வயல் **சிக்கலு**ள்
விண்டிரைத்து அம்மலரால் திகழ் வெண்ணெய்ப் பெருமானடி
கண்டிரைத்து மனமே மதியாய் கதியாகவே - 6

மாலினோடு அருமாமறை வல்ல முனிவனும்
கோலினார் குறுகச் சிவன் சேவடி கோலியும்
சீலந்தாம் அறியார் திகழ் **சிக்கல்** வெண்ணெய்ப்பிரான்
பாலும் பன்மலர் தூவப் பறையு நம்பாவமே - 9

கந்தமார் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் நல்
செந்தண் பூம்பொழில் **சிக்கல்** வெண்ணெய்ப் பெருமானடிச்
சந்தமாச் சொன்ன செந்தமிழ் வல்லவர் வானிடை
வெந்த நீறணியும் பெருமானடி மேவரே - 11



சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

149. வேளூர் (கீழ்வேளூர்) (கீவளூர்)

இறைவன் : கேடிலியப்பர், அட்சயலிங்கேஸ்வரர்
இறைவி : சுந்தரகுஜாம்பிகை , வனமுலைநாயகி
தலமரம் : இலந்தை தீர்த்தம் : சரவண தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 201 அலைபேசி : 9688622818
முகவரி : அருள்மிகு. கேடிலியப்பர் திருக்கோயில்,
கீவளூர் & அஞ்சல், நாகப்பட்டினம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம் 611 104
தலச் சிறப்பு : அகத்தியருக்கு காட்சி கொடுத்த தலம்

திருவருட்பா பாடல் எண் 148

மிக்கமினார்
வாளூர் தடங்கண் வயல்காட்டி யோங்குங்கீழ்
வேளூரிற் செங்கண் விடையோனே

90 - கீழ்வேளூர் (கீவளூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 105 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

மின்னுலாவிய சடையினர் விடையினர் மிளிர்தரும் அரவோடும்
பன்னுலாவிய மறையொலி நாவினர் கறையணி கண்டத்தர்
பொன்னுலாவிய கொன்றையம் தாரினர் புகழ்மிகு **கீழ்வேளூர்**
உன்னுலாவிய சிந்தையர் மேல்வினை ஓடிட வீடாமே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 67 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

ஆளான அடியவர்கட்கு அன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானை தன்னொப்பார் இல்லாதானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப்பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையிலார்த்த
கீளானைக் **கீழ்வேளூர்** ஆளும் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே

முறிப்பான பேசி மலை எடுத்தான் தானும்
முதுகு இற முன் கைந்நரம்பை எடுத்து பாடப்
பறிப்பான் கைச் சிற்றரிவாள் நீட்டினானைப்
பாவியேன் நெஞ்சகத்தே பாதப்போது
பொறித்தானைப் புரமூன்றும் எரிசெய்தானைப்
பொய்யர்களைப் பொய்செய்து போது போக்கிக்
கிறிப்பானைக் **கீழ்வேளூர்** ஆளும் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே - 10

150. தேவூர் (தேவூர்)

இறைவன் : தேவபுரீஸ்வரர், கதலிவனேஸ்வதரர், தேவகுநாதர்
இறைவி : மதுரபாஷிணி , தேன்மொழியம்மை
தலமரம் : வெள்வாழை தீர்த்தம் : தேவ தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 202 அலைபேசி : 9486278810
முகவரி : அருள்மிகு. தேவபுரீஸ்வரர் திருக்கோயில்,தேவூர் &அஞ்சல்,
கீவளூர் வட்டம், நாகை மாவட்டம் 611 109
தலச் சிறப்பு : தேவர்கள் வழிபட்ட ஊர் எனவே தேவூர்

திருவருட்பா பாடல் எண் 149

நீளுவகைப்
பாவு ரிசையிற் பயன்சுவையிற் பாங்குடைய
தேவூர் வளர்தேவ தேவனே

153 - தேவூர்

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 82 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

பண்ணிலாவிய மொழியுமை பங்கன் எம்பெருமான்
விண்ணில் வானவர் கோன் விமலன் விடையூர்தி
தெண்ணிலா மதி தவழ்தரு மாளிகைத் **தேவூர்**
அண்ணல் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்றிலமே

அல்லல் இன்றி விண்ணாள்வர்கள் காழியர்க்கு அதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம்பந்தன்
எல்லை இல்புகழ் மல்கிய எழில்வளர் **தேவூர்த்**
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும் வல்லாரே - 11

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 74 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பத்துவராளி

காடுபயில் வீடுமுடை ஓடுகலன் மூடுமுடை ஆடை புலித்தோல்
தேடுபலி ஊணதுடை வேடமிகு வேதியர் திருந்து பதிதான்
நாடகம் அதாடமஞ்ஞை பாடவரி கோடல் கைமறிப்ப நலமார்
சேடுமிகு பேடையன மூடிமகிழ் மாடமிடை **தேவூர**துவே

151. பள்ளி முக்கூடன் (திருப்பள்ளியின் முக்கூடல்) (திருப்பள்ளியின் முக்கூடல், குருவி இராமேஸ்வரம்)

இறைவன் : முக்கோணநாதர், திரிநேத்ரசுவாமி, முக்கூடல்நாதர்
இறைவி : அஞ்சனாட்சி, மைம்மேவுகண்ணி
தீர்த்தம் : முக்கூடல் தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை) வரிசை எண் : 203
அலைபேசி : 9865844677, 8428607448
முகவரி : அருள்மிகு. முக்கோணநாதர் திருக்கோயில், திருப்பள்ளி முக்கூடல்,கேக்கரை அஞ்சல், (வழி) திருவாரூர், திருவாரூர் வட்டம் திருவாரூர் மாவட்டம் 610 002
தலச் சிறப்பு : ஜடாயு இங்கு முக்கூடல் தீர்த்தத்தை உண்டாக்கி அதில் மூழ்கி இறைவனைப் பூசித்தார். இதில் மூழ்கினால் கங்கையிலும் இராமேஸ்வர தீர்த்தத்திலும் மூழ்கிய பலன் கிடைக்கும். இந்த தீர்த்தத்திற்கு ஷோடச சேது என்ற பெயர்.

திருவருட்பா பாடல் எண் 150

பூவினிடை
இக்கூடன் மைந்த வினிக்கூட லென்றுபள்ளி
முக்கூடன் மேவியமர் முன்னவனே

191 - திருப்பள்ளியின் முக்கூடல் (திருப்பள்ளி முக்கூடல், குருவி இராமேஸ்வரம்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 69 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

ஆராத இன்னமுதை அம்மான் தன்னை
அயனொடு மாலறியாத ஆதியானைத்
தாராரும் மலர்க்கொன்றைச் சடையான் தன்னைச்
சங்கரனைத் தன்னொப்பார் இல்லாதானை
நீரானைக் காற்றானைத் தீயானானை
நீள் விசும்பாய் ஆழ்கடல்கள் ஏழும் சூழ்ந்த
பாரானைப் பள்ளியின் முக்கூடலானைப்
பயிலாதே பாழே நான் உழன்றவாறே

அடைந்தார்தம் பாவங்கள் அல்லல் நோய்கள்
அருவினைகள் நல்குரவு செல்லா வண்ணம்
கடிந்தானைக் கார்முகில் போல் கண்டத்தானைக்
கடும் சினத்தோன் தன்னுடலை நேமியாலே
தடிந்தானைத் தன்னொப்பார் இல்லாதானைத்
தத்துவனை உத்தமனை நினைவார் நெஞ்சில்
படிந்தானைப் பள்ளியின் முக்கூடலானைப்
பயிலாதே பாழே நான் உழன்றவாறே - 5

152. ஆரூர் (திருஆரூர்) (திருவாரூர்)

இறைவன் : வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார், தியாகராஜர்
இறைவி : கமலாம்பிகை, அல்லியங்கோதை, நீலோத்பலாம்பாள்
தலமரம் : பாதிரி தீர்த்தம் : கமலாலயம், சங்கு, கயா, வாணி
பாடல் : மூவர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 204 தொலைபேசி : 04366 - 242343
முகவரி : அருள்மிகு. தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் & அஞ்சல், திருவாரூர் மாவட்டம் 610 001
தலச் சிறப்பு : பிறக்க முத்தி தரும் தலம். பஞ்ச பூததலங்களுள் மண் (பிருத்வி) தலம். மனுநீதிச் சோழன் ஆண்ட தலம். விறன்மிண்டர், கழற் சிங்கர், செருத்துணையார், தண்டியடிகள், நமிநந்தியடிகள் ஆகிய நாயன்மார்கள் வாழ்ந்த பதி. மனுநீதிசோழ புராணம் இராமலிங்க சுவாமிகள் - 1854 ஜீன் ஆனி மாதம் ஆனந்த வருடம் வெளியிட்டுள்ளார்.

திருவருட்பா பாடல் எண் 151

தக்கநெடுந்
தேரூ ரணிவீதிச் சீரூர் மணிமாட
ஆரூரி லெங்கள் அருமருந்தே

23 - திருஆரூர் (திருவாரூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 79 பாடல் 4
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

நீதியால் வாழ்கிலை நாள்செல்லா நின்றன நித்த நோய்கள்
வாதியா ஆதலால் நாளுநாளின்பமே மருவினாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணனும் ஏத்தும் முக்கண்
ஆதி ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 25 பாடல் 7
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னைத் மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 95 பாடல் 1
பண் : செந்துருத்தி இராகம் : மத்யமாவதி

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே

ஆரூர் அமர்ந்த அரசே போற்றி

153. ஆரூரஅரனெறி (திருவாரூர் அரநெறி)

(திருவாரூர்)

இறைவன் : அசலேஸ்வரர்
இறைவி : வண்டார்குழலி, புவனேஸ்வரி
தலமரம் : பாதிரி தீர்த்தம் : கமலாலயம்
பாடல் : அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 205 தொலைபேசி : 04366 - 242343
முகவரி : அருள்மிகு. தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் & அஞ்சல்,திருவாரூர் மாவட்டம் 610 001
தலச் சிறப்பு : நமிநந்தியடிகள் திருக்குளத்து நீரால் விளக்கெரித்த தலம். இக்கோயிலின் நிழல் கிழக்குத் திசையின்றி வேறு திசையில் விழாது.

திருவருட்பா பாடல் எண் 152

நீரூர்ந்த
காரூர் பொழிலுங் கனியீந் திளைப்பகற்றும்
ஆரூ ரரனெறிவே ளாண்மையே

24 - திருவாரூர் அரநெறி (திருவாரூர்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 17 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : மாயாமாளவகௌளை

எத்தீப் புகினும் எமக்கொரு தீதில்லை
தெத்தேயென முரன்று எம்முள் உழிதர்வர்
முத்தீ அனையதொர் மூவிலை வேல்பிடித்து
அத்தீநிறத்தார் **அரநெறி**யாரே

பொருள் மன்னனைப் பற்றிப் புட்பகம் கொண்ட
மருள் மன்னனை எற்றி வாளுடன் ஈந்து
கருள் மன்னு கண்டம் கறுக்க நஞ்சுண்ட
அருள் மன்னர் ஆரூர் **அரநெறி**யாரே - 11

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 33 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

பொருங்கை மதகரி உரிவைப் போர்வையானைப்
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானைக்
கரும்புதரு கட்டியை இன்னமிர்தைத் தேனைக்
காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை
இருங்கனக மதிலாரூர் மூலட்டானத்து
எழுந்தருளி இருந்தானை இமையோர் ஏத்தும்
அருந்தவனை **அரநெறி**யில் அப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினை நோய் அறுத்தவாறே



154. மாரூர்பரவை உண்மண்டலி

(பரவையுண் மண்டளி) (திருவாரூர்)

இறைவன் : தூவாய்நாதர்
இறைவி : பஞ்சின் மெல்லடியாள்
பாடல் : சுந்தரர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 206 தொலைபேசி : 04366 - 242343
முகவரி : அருள்மிகு. தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் & அஞ்சல், திருவாரூர் மாவட்டம் 610 001
தலச் சிறப்பு : துர்வாச முனிவர் பூசித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 153

ஏரார்ந்த
மண்மண் டலிகர் மருவுமா **ரூர்ப்பரவை**
உண்மண் டலி எம் உடைமையே

25 - பரவையுண் மண்டளி (திருவாரூர்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 96 பாடல்1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

தூவாயா தொண்டு செய்வார் படுதுக்கங்கள்
காவாயா கண்டுகொண்டார் ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்கு
ஆவா என் **பரவையுண்மண்டளி** அம்மானே

பஞ்சேரும் மெல்லடியாளை ஓர்பாகமாய்
நஞ்சேரும் நன்மணிகண்டம் உடையானே
நெஞ்சேர நின்னையே உள்கி நினைவாரை
அஞ்சேல் என் **பரவையுண்மண்டளி** அம்மானே - 5

செடியேன்நான் செய்வினை நல்லன செய்யாத
கடியேன்நான் கண்டதே கண்டதே காமுறும்
கொடியேன்நான் கூறுமாறு உன்பணி கூறாத
அடியேன்நான் பரவையுண் மண்டளி அம்மானே - 9

கரந்தையும் வன்னியும் மத்தமும் கூவிளம்
பரந்த சீர்ப் **பரவையுண்மண்டளி** அம்மானை
நிரம்பிய ஊரன் உரைத்தன பத்திவை
விரும்புவார் மேலையார் மேலையார் மேலாரே - 10



155. விளமர் (திருவிளமர்) (விளமல்)

இறைவன் : பதஞ்சலி மனோகரர்
இறைவி : மதுரபாஷிணி
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 207 அலைபேசி : 9894781778, 9489479896
முகவரி : அருள்மிகு. பதஞ்சலி மனோகரர் திருக்கோயில், விளமல் & அஞ்சல், (வழி) திருவாரூர், திருவாரூர் மாவட்டம் 610 002
தலச் சிறப்பு : பதஞ்சலி முனிவர் வழிபட்ட தலம்\

திருவருட்பா பாடல் எண் 154

திண்மைக்
களமர் மகிழக் கடைசியர் பாடும்
விளமர் கொளுமெம் விருப்பே

260 - திருவிளமர் (விளமல்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 88 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

மத்தக மணிபெற மலர்வதொர் மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதொர் அரவினர் ஒளிகிளர்
அத்தக வடிதொழ அருள்பெறு கண்ணொடும் உமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில் வளநகர் **விளமரே**

மனைகள்தொறு இடுபலியது கொள்வர் மதிபொதி சடையினர்
கனைகடல் அடுவிடம் அமுதுசெய் கறையணி மிடறினர்
முனைகெட வருமதில் எரிசெய்த அவர்கழல் பரவுவார்
வினை கெட அருள்புரி தொழிலினர் செழுநகர் **விளமரே** - 6

தொண்டசைவுற வருதுயர் உறுகாலனை மாள்வுற
அண்டல்செய்து இருவரை வெருவுற ஆரழல் ஆயினார்
கொண்டல் செய்தரு திருமிடறினர் இடமெனில் அளியினம்
விண்டிசை உறுமலர் நறுமது விரிபொழில் **விளமரே** - 9

வெந்தவெண் பொடியணி அடிகளை **விளமரு**ள் விகிர்தரைச்
சிந்தையுள் இடைபெற உரை செய்த தமிழிவை செழுவிய
அந்தணர் புகலியுள் அழகமர் அருமறை ஞானசம்
பந்தன மொழியிவை உரைசெயும் அவர்வினை பறையுமே - 11



156. கரவீரஞ்சேர் (கரவீரம்) (கரையபுரம்)

இறைவன் : கரவீரேஸ்வரர்
இறைவி : பிரத்யட்சமின்னம்மை
தலமரம் : அலரி தீர்த்தம் : அனவரத தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 208 அலைபேசி : 986560448, 9787853460
முகவரி : அருள்மிகு. கரவீரேஸ்வரர் திருக்கோயில்,கரையபுரம், மணக்கால் ஐயம்பேட்டை அஞ்சல், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம் 610 004
தலச் சிறப்பு : கௌதம புத்தர் பூசித்த தலம், பொன் அலரி மலருக்கு கரவீரம் என்று பெயர்

திருவருட்பா பாடல் எண் 155

வளமை
எருக்கரவீ ரஞ்சே ரெழில்வேணி கொண்டு
திருக்கரவீ ரஞ்சேர் சிறப்பே

70 - கரவீரம் (கரையபுரம்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 58 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி

அரியுநம் வினை உள்ளன ஆசற
வரிகொள் மாமணி போல் கண்டம்
கரியவன் திகழும் **கரவீர**த்தெம்
பெரியவன் கழல் பேணவே

நிழலினார் மதி சூடிய நீள்சடை
அழலினார் அனலேந்திய
கழலினார் உறையும் **கரவீர**த்தைத்
தொழ வல்லார்க்கு இல்லை துக்கமே - 6

புனல் இலங்கையர் கோன் முடிபத்திறச்
சினவல் ஆண்மை செகுத்தவன்
கனலவன் உறைகின்ற **கரவீரம்**
எனவல்லார்க்கு இடரில்லையே - 8

வீடிலான் விளங்கும் **கரவீர**த்தெம்
சேடன் மேல் கசிவால் தமிழ்
நாடுஞான சம்பந்தன் சொல்லிவை
பாடுவார்க்கு இல்லை பாவமே - 11



157. பெருவேளூர் (பெருவேளூர்)

மணக்கால் ஐயம்பேட்டை)

இறைவன் : அபிமுக்தீஸ்வரர், பிரியாஈஸ்வரர்
இறைவி : அபின்னாம்பிகை, ஏலவார்குழலி
தலமரம் : வன்னி தீர்த்தம் : சரவணப்பொய்கை
பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 209 அலைபேசி : 9944249941, 9943860196
முகவரி : அருள்மிகு. அபிமுக்தீஸ்வரர் திருக்கோயில்,
மணக்கால் ஐயம்பேட்டை & அஞ்சல்,
(வழி) திருவாரூர், குடவாசல் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் 610 104
தலச் சிறப்பு : முருகர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 156

உருக்க
வருவேளூர் மாவெல்லா மாவேறுஞ் சோலைப்
பெருவேளூர் இன்பப் பெருக்கே

217 - பெருவேளூர் (மணக்கால் ஐயம்பேட்டை)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 64 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

அண்ணாவும் கழுக்குன்றும் ஆயமலையவை வாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த அருள் செய்வார்
கண்ணாவார் உலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ணாணாம் பெருமானார் **பெருவேளூர்** பிரியாரே

பைப்பொன் சீர் மணிவாரிப் பலவும்சேர் கனியுந்தி
அம்பொன் செய் மடவரலார் அணிமல்கு **பெருவேளூர்**
நம்பன்தன் கழல்பரவி நவில்கின்ற மறைஞான
சம்பந்தன் தமிழ் வல்லார்க்கு அருவினை நோய் சாராவே - 11

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 60 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

மறையணி நாவினானை மறப்பிலார் மனத்துளானைக்
கறைபணி கண்டன் தன்னைக் கனலெரி ஆடினானைப்
பிறையணி சடையினானைப் **பெருவேளூர்** பேணினானை
நரையணி மலர்கள் துவி நடொரும் வணங்குவேனே

பொருகடல் இலங்கை மன்னன் உடல் கெடப் பொருத்தி நல்ல
கருகிய கண்டத்தானைக் கதிர் இளம் கொழுந்து சூடும்
பெருகிய சடையினானைப் **பெருவேளூர்** பேணினான
உருகிய அடியர் ஏத்தும் உள்ளத்தால் உள்குவேனே - 10

158. தலையாலங்காடு (தலையாலங்காடு)

இறைவன் : நடனேஸ்வரர், ஆடவல்லநாதர்
இறைவி : உமாதேவி
பாடல் : அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 210 அலைபேசி : 9443500235
முகவரி : அருள்மிகு. நடனேஸ்வரர் திருக்கோயில்,
தலையாலங்காடு, செம்பங்குடி அஞ்சல்,
குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம் 612 603
தலச் சிறப்பு : கபில முனிவர் வழிபட்ட தலம். வெண்குஷ்டம் நீங்கும் தலம்

திருவருட்பா பாடல் எண் 157

கருமை
மிலையாலங் காட்டு மிடற்றாயென் றேத்தும்
தலையாலங் காட்டுத் தகவே

142 - தலையாலங்காடு

பாடல்கள்

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 79 பாடல் 4
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

சிவனாகித் திசைமுகனாய்த் திருமாலாகிச்
செழுஞ்சுடராய்த் தீயாகி நீருமாகிப்
புவனாகிப் புவனங்கள் அனைத்துமாகிப்
பொன்னாகி மணியாகி முத்துமாகிப்
பவனாகிப் பவனங்கள் அனைத்துமாகிப்
பகுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற
தவனாய **தலையாலங்காடன்** தன்னைச்
சாராதே சாலநாள் போக்கினேனே

கரும்பிருந்த கட்டிதனைக் கனியைத் தேனைக்
கன்றாப்பின் நடுதறியைக் காறையானை
இரும்பமர்ந்த மூவிலைவேல் ஏந்தினானை
என்னானைத் தென்னானைக் காவான் தன்னைச்
சுரும்பமரும் மலர்க்கொன்றை சூடினானைத்
தூயானைத் தாயாகி உலகுக் கெல்லாம்
தரும் பொருளைத் **தலையாலங்காடன்** தன்னைச்
சாராதே சாலநாள் போக்கினேனே - 8

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

159. குடவாயில் (குடவாயில்) (குடவாசல்)

இறைவன் : கோணேஸ்வரர்
இறைவி : பெரியநாயகி
தலமரம் : வாழை தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 211 அலைபேசி : 9443959839
முகவரி : அருள்மிகு. கோணேஸ்வரர் திருக்கோயில்,
குடவாசல் & அஞ்சல், குடவாசல் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் 612 601
தலச் சிறப்பு : கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்
படைப்பு காலத்தில் குடத்தில் தங்கிய உயிர்களை
மீண்டும் வெளிப்படுத்திய போது மூன்றாக
உடைந்து அடிப்பாகம் கும்பகோணம் என்றும்,
நடுப்பாகம் கலய நல்லூர் என்றும், முகப்பு மேல்
பாகம் குடவாயில் என்று ஆனது.

திருவருட்பா பாடல் எண் 158

நிலைகொள்
தடவாயில் வெண்மணிகள் சங்கங்க ளீனும்
குடவாயில் அன்பர் குறிப்பே

95 - குடவாயில் (குடவாசல்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 22 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

திகழும் திருமாலொடு நான்முகனும்
புகழும் பெருமானடியார் புகல
மகிழும் பெருமான் **குடவாயில்** மன்னி
நிகழும் பெரும் கோயில் நிலாயவனே

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 58 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

கலைவாழும் அங்கையீர் கொங்கையாரும் கரும்கூந்தல்
அலைவாழும் செஞ்சடையில் அரவும் பிறையும் அமர்வித்தீர்
குலைவாழை கமுகம் பொன் பவளம் பழுக்கும் **குடவாயில்**
நிலைவாழும் கோயிலே கோயிலாக நின்றீரே

தூசார்ந்த சாக்கியரும் தூய்மையில்லாச் சமணரும்
ஏசார்ந்த புன்மொழி நீத்தொழில்கொள் மாடக்**குடவாயில்**
ஆசாரம் செய்மறையோர் அளவிற்குன்றாது அடிபோற்றத்
தேசார்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே - 10

நளிர் பூந்திரை மல்கு காழி ஞானசம்பந்தன்
குளிர் பூங்**குடவாயில்** கோயில் மேய கோமானை
ஒளிர் பூந்தமிழ்மாலை உரைத்த பாடல் இவை வல்லார்
தளர்வான தாம் ஒழியத் தகுசீர் வானத்து இருப்பாரே - 11

160.சேறை (திருச்சேறை) (திருச்சேறை)

இறைவன் : சாரபரமேஸ்வரர், செந்நெறியப்பர்
இறைவி : ஞானவல்லி
தலமரம் : மாவிலங்கை தீர்த்தம் : மார்கண்டேய தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 212 தொலைபேசி : 0435 - 2468001
அலைபேசி : 9443737759, 9442637759
முகவரி : அருள்மிகு. செந்நெறியப்பர் திருக்கோயில்,
திருச்சேறை & அஞ்சல் , கும்பகோணம் வட்டம்,
தஞ்சை மாவட்டம் 612 605
தலச் சிறப்பு : மார்க்கண்டேயர் வழிபட்டதலம், கடன்தொல்லை
உள்ளோர் வழிபடும் ருணவிமோசன லிங்கேஸ்வரர்
இங்குள்ளார்

திருவருட்பா பாடல் எண் 159

மடவாட்கோர்
கூறை யுவந்தளித்த கோவேயென் றன்பர்தொழச்
சேறை யுவந்திருந்த சிற்பரமே

136 - திருச்சேறை (திருச்சேறை)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 86 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

முறியுறு நிறமல்கு முகில்முலை மலைமகள் வெருவ முன்
வெறியுறு மதகரி அதள்பட உரிசெய்த விறலினர்
நறியுறும் இதழியின் மலரொடு நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி அடிகள்தம் வளநகர் **சேறையே**

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 73 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

பெருந்திரு இமவான் பெற்ற பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய மாமணம் புணர்ந்து மன்னும்
அருந்திரு மேனி தன்பால் அங்கொரு பாகமாகத்
திருந்திட வைத்தார் **சேறைச்** செந்நெறிச் செல்வனாரே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 77 பாடல் 2
குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெலார் வயல் **சேறையுள்** செந்நெறி
மன்னு சோதி நம்பால் வந்து வைகவே

161. நாலூர் (நாலூர்மாயனம்)

இறைவன் : ஞானபரமேஸ்வரர்
இறைவி : ஞானாம்பிகை
தலமரம் : வில்வம் தீர்த்தம் : ஞான தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 213 அலைபேசி : 9443959839, 9486767962, 7502056284
முகவரி : அருள்மிகு. ஞானபரமேஸ்வரர் திருக்கோயில்,
நாலூர்மாயனம், திருச்சேறை அஞ்சல்,
குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம் 612 605
தலச் சிறப்பு : மாடக்கோயில் முதலாம் ஆதித்த சோழன்
திருப்பணி

திருவருட்பா பாடல் எண் 160

வேறுபாடப்
பாலூர் நிலவிற் பணிலங்கள் தண்கதிர்செய்
நாலூரில் அன்பர்பெறு நன்னயமே

166 - நாலூர்மயானம்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 46 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

பாலூரு மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூரும் செஞ்சடையான் வெண்ணுல் சேர் மார்பினான்
நாலூர் மயானத்து நம்பான் தன் அடி நினைந்து மாலூரும்
சிந்தையர்பால் வந்து ஊரா மறுபிறப்பே

கண்ணார் நுதலான் கனலாடிடமாகப்
பண்ணார் மறைபாடி ஆடும் பரஞ்சோதி
நண்ணார் புரம் எய்தான் **நாலூர் மயான**த்தை
நண்ணாதவரெலாம் நண்ணார் நன்னெறியே - 6

ஞாலம் புகழ்காழி ஞானசம்பந்தன் தான்
நாலு மறையோது **நாலூர் மயான**த்தைச்
சீலம் புகழால் சிறந்தேத்த வல்லார்க்கு
ஏலும் புகழ்வானத்து இன்பாயிருப்பாரே - 11

162. கடுவாய்க்கரை(கடுவாய்க்கரைப்புத்தூர்)(ஆண்டார் கோயில்)

இறைவன் : சொர்ணபுரீஸ்வரர்
இறைவி : சொர்ணாம்பிகை, சிவாம்பிகை
தலமரம் : வன்னி தீர்த்தம் : திரிசூல கங்கை தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 214 தொலைபேசி : 04374 – 265130
அலைபேசி : 9677350150
முகவரி : அருள்மிகு. சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்,
ஆண்டார் கோயில் & அஞ்சல், வலங்கைமான்,
திருவாரூர் மாவட்டம் 612 804
தலச் சிறப்பு : காசிப முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 161

மேலூரும்
நோய்க்கரையுட் செய்யாத நோன்மையோர் தூற்றக**கடு**
வாய்க்கரையுண் மேவுகின்ற வண்மையே

66 - கடுவாய்க்கரைப்புத்தூர் (ஆண்டார் கோயில்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 62 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

ஒருத்தனை மூவுலகொடு தேவர்க்கும்
அருத்தனை அடியேன் மனத்துள்ளமர்
கருத்தனைக் **கடுவாய்ப்** புனலாடிய
திருத்தனைப் புத்தூர்ச் சென்று கண்டுய்ந்தெனே

குண்டு பட்ட குற்றந் தவிர்த்தென்னை ஆட்
கொண்டு நற்றிறங் காட்டிய கூத்தனைக்
கண்டனைக் **கடுவாய்க்** கரைத் தென்புத்தூர்
அண்டனைக் கண்டு அருவினை அற்றெனே - 5

மாசார் பாச மயக்கறுவித்து எனுள்
நேசமாகிய நித்த மணாளனைப்
பூச நீர்க் **கடுவாய்க்** கரைத் தென்புத்தூர்
ஈசனே என இன்பது ஆயிற்றே - 8

அரக்கன் ஆற்றல் அழித்தவன் பாடல் கேட்டு
இரக்கமாகி அருள்புரி ஈசனைத்
திரைக்கொள் நீர்க் **கடுவாய்க்**கரைத் தென்புத்தூர்
இருக்கு நாதனைக் காணப்பெற்று உய்ந்தெனே - 10

163.இரும்பூகா(இரும்பூளை) (ஆலங்குடி)

163.இரும்பூகா(இரும்பூளை) (ஆலங்குடி)

இறைவன் : காசி ஆரண்யேஸ்வரர், ஆபத்சகாயேஸ்வரர்
இறைவி : ஏலவார்குழலி
தலமரம் : பூளை தீர்த்தம் : அமிர்தபுஷ்கரணி
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 215 அலைபேசி : 9444523890
முகவரி : அருள்மிகு. ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், ஆலங்குடி & அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம் 612 801

தலச் சிறப்பு : விஸ்வாமித்தரர் வழிபட்ட தலம். ஆலங்கால விடத்தை இறைவன் உண்டு தேவர்களை காத்த தலம். ஆலங்குடியான் என்றே பெயர்.

திருவருட்பா பாடல் எண் 162

வாய்த்த
பெரும்பூகத் தெங்கிற் பிறங்க வளங்கொள்ளும்
இரும்பூளை மேவி யிருந்தோய்

39 - இரும்பூளை (ஆலங்குடி)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 36 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

சீரார் கழலே தொழுவீர் இது செப்பீர்
வாரார் முலை மங்கையொடும் உடனாகி
ஏரார் **இரும்பூளை**யிடம் கொண்ட ஈசன்
காரார் கடல் நஞ்சமுதுண்ட கருத்தே

சுற்றார்ந்து அடியே தொழுவீர் இதுசொல்லீர்
நற்றாழ் குழல் நங்கையொடும் உடனாகி
எற்றே **இரும்பூளை** இடம் கொண்ட ஈசன்
புற்றாடு அரவோடு என்பு பூண்ட பொருளே - 5

துயராயின நீங்கித் தொழும் தொண்டர் சொல்லீர்
கயலார் கருங்கண்ணியொடும் உடனாகி
இயல்பாய் **இரும்பூளை** இடம் கொண்டஈசன்
முயல்வார் இருவர்க்கு எரியாகிய மொய்ம்பே - 8

எந்தை **இரும்பூளை**யிடம் கொண்ட ஈசன்
சந்தம் பயில் சண்பையுள் ஞானசம்பந்தன்
செந்தண் தமிழ் செப்பிய பத்திவை வல்லார்
பந்தம் அறுத்து ஓங்குவர் பான்மையினாலே - 11

164.அரதைப்பெரும்பாழி (அரித்வாரமங்கலம்)

164.அரதைப்பெரும்பாழி(அரித்வாரமங்கலம்)

இறைவன் : பாதாளேஸ்வரர், பாதாளவரதர்
இறைவி : அலங்காரவல்லி
தலமரம் : வன்னி தீர்த்தம் : பிரம்மம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 216 அலைபேசி : 9442175441
முகவரி : அருள்மிகு. பாதாளேஸ்வரர் திருக்கோயில், அரித்வாரமங்கலம் & அஞ்சல், வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம் 612 802

தலச் சிறப்பு : திருமால் பன்றி வடிவம் கொண்டு இறைவன் முன்பு துவாரம் (பள்ளம்) பறித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது. இப்பள்ளத்தை இன்றும் சுவாமி சன்னிதியின் முன்காணலாம்.

திருவருட்பா பாடல் எண் 163

விரும்பும்
விரதப் பெரும்பாழி விண்ணவர்க ளேத்தும்
அரதைப் பெரும்பாழி ஆர்ந்தோய்

10 - அரதைப்பெரும்பாழி (அரித்வாரமங்கலம்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 30 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

பைத்த பாம்போடு அரைக்கோவணம் பாய்புலி
மொய்த்த பேய்கள் முழக்கம் முதுகாட்டிடை
நித்தமாக நடமாடி வெண்ணீறணி
பித்தர் கோயில் **அரதைப் பெரும்பாழியே**

புற்றரவம் புலித்தோல் அரைக்கோவணம்
தற்றிரவில் நடமாடுவர் தாழ்தரு
சுற்றமர் பாரிடம் தொல்கொடியின் மிசைப்
பெற்றர் கோயில் **அரதைப் பெரும்பாழியே** - 6

நாணிலாத சமண் சாக்கியர் நாள்தொறும்
ஏணிலாதம் மொழி அவ்வெழில் ஆயவர்
சேணுலா மும்மதில் தீயெழச் செற்றவர்
பேணு கோயில் **அரதைப் பெரும்பாழியே** - 10

நீரினார் புன்சடை நிமலனுக்கு இடமெனப்
பாரினார் பரவு **அரதைப் பெரும்பாழி**யைச்
சீரினார் காழியுள் ஞானசம்பந்தன் செய்
ஏரினார் தமிழ் வல்லார்க்கு இல்லையாம் பாவமே - 11

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

165.அவளிவணல்லூர்(அவளிவணல்லூர்)

இறைவன் : சாட்சிநாதர்
இறைவி : சௌந்தரநாயகி, சௌந்தரவல்லி
தலமரம் : பாதிரி தீர்த்தம் : சந்திரன்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 217 தொலைபேசி : 04374 - 316911
முகவரி : அருள்மிகு. சாட்சிநாதர் திருக்கோயில்,
அவளிவணல்லூர்,அரித்வாரமங்கலம் & அஞ்சல்
கும்பகோணம் வட்டம்,தஞ்சை மாவட்டம் 612 802
தலச் சிறப்பு : ஆதிசைவ அந்தணர் மகளின் அம்மை நோய் காரணமாக முகத் தோற்றம் மாறியிருந்த தன் மனைவியை "இவள் என் மனைவியல்ல" என்ற சொன்னான். அந்தணர் இறைவனிடம் முறையிட "அவள் இவள் என்று உணர்த்தினான்.

திருவருட்பா பாடல் எண் 164

சரதத்தால்
ஏதும் அவணிவணென் றெண்ணா தவரிறைஞ்சி
ஓதும் **அவளிவணல் லூருடையோய்**

12 - அவளிவணல்லூர்

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 82 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

கொம்பிரிய வண்டுலவு கொன்றை புரிநூலொடு குலாவித்
தம்பரிசினொடு சுடுநீறு தடவந்து இடபமேறிக்
கம்பரிய செம்பொன் நெடுமாடமதில் கல்வரைவிலாக
அம்பெரிய எய்தபெருமான் உறைவது **அவளிவணல்லூரே**

ஆன மொழியான திறலோர் பரவும் **அவளிவணல்லூர்** மேல்
போன மொழி நல்மொழிகள் ஆயபுகழ் தோணிபுரஊரன்
ஞானமொழி மாலை நல நாடு புகழ் ஞானசம்பந்தன்
தேனமொழி மாலை புகழ்வார் துயர்கள் தீயது இலர்தாமே - 11

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 59 பாடல் 1
திருநேரிசை இராகம் : நரோஸ்

தோற்றினான் எயிறு கவ்வித் தொழிலுடை அரக்கன் தன்னைத்
தேற்றுவான் சென்று சொல்லச் சிக்கெனத் தவிருமென்று
வீற்றினை உடையவனாகி வெடுவெடுத்து எடுத்தவன்தன்
ஆற்றலை அழிக்க வல்லார் **அவளிவணல்லூராரே**

ஊக்கினான் மலையை ஓடி உணர்விலா அரக்கன் தன்னைத்
தாக்கினான் விரலினாலே தலைபத்தும் தகரவூன்றி
நோக்கினான் அஞ்சத் தன்னை நோன்பிற ஊன்று சொல்லி
ஆக்கினார் அமுதமாக **அவளிவணல்லூராரே** - 10

166.பரிதிநியமம் (பரிதிநியமம்) (பருத்தியப்பர் கோயில்)

இறைவன் : பாஸ்கரேஸ்வரர், பரிதியப்பர்
இறைவி : மங்களாம்பிகை, மங்களநாயகி
தலமரம் : அரசு தீர்த்தம் : சூரிய, சந்திர தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 218
முகவரி : அருள்மிகு. பரிதியப்பர் திருக்கோயில்,
பரித்தியப்பர் கோயில், மேலவுளூர் அஞ்சல்
தஞ்சை மாவட்டம் 614 904
தலச் சிறப்பு : பராய் என்னும் ஒருவகை மரக்காட்டில் இறைவன் இருப்பதால் பராய்துறை என்பர். முதல் பராந்தகச் சோழன் காலத்திய கோயில்

திருவருட்பா பாடல் எண் 165

கோதகன்ற
நீட்டுங் கருதி நியமத்தோர்க் கின்னருளை
நீட்டும் **பரிதி நியமத்தோ**ய்

184 - பரிதிநியமம் (பருத்தியப்பர் கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 104 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

விண்கொண்ட தூமதி சூடிநீடு விரி புன்சடைதாழப்
பெண்கொண்ட மார்பில் வெண்ணீறு பூசிப் பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலோடு ஏர்கவர்ந்த கள்வர்க்கு இடம் போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும் **பரிதி நியமமே**

வெங்கடும் காட்டகத்து ஆடல் பேணி விரிபுன் சடைதாழத்
திங்கள் திருமுடி மேல் விளங்கத் திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாயல் எழில் கவர்ந்த சைவர்க்கு இடம் போலும்
பைங்கொடி முல்லை படர் புறவில் **பரிதிநியமமே** - 6

வையரவம் விரி காந்தள் விம்மு **பரிதிநியமத்துத்**
தையலொர் பாகம் அமர்ந்தவனைத் தமிழ்ஞானசம்பந்தன்
பொய்யிலி மாலை புனைந்த பத்தும் பரவிப் புகழ்ந்தேத்த
ஐயுறவில்லை பிறப்பறுத்தல் அவலம் அடையாவே - 11

167.பூவனூர்(பூவனூர்)

167.பூவனூர்(பூவனூர்)

இறைவன் : புஷ்பவனநாதர், சதுரங்கவல்லநாதர்
இறைவி : கற்பகவல்லி, இராஜராஜேஸ்வரி
தலமரம் : பலா
தீர்த்தம் : வீரபுஷ்கரணி, கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தங்கள்
பாடல் : அப்பர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 220 அலைபேசி : 9865328 52, 9442399273
முகவரி : அருள்மிகு. புஷ்பவனநாதர் திருக்கோயில்,
பூவனூர் & அஞ்சல், திருவாரூர் மாவட்டம் 612 803
தலச் சிறப்பு : இறைவன் அம்பாளைச் சதுரங்க ஆட்டத்தில் வென்று மணம் செய்த தலம். அதனால் சதுரங்க வல்லப நாதர் எனப்பெயர் சுகப்பிரம்மரிஷி வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 166

காட்டியநந்
தேவனூ ரென்று திசைமுகன்மால் வாழ்த்துகின்ற
பூவனூர் மேவும் புகழுடையோய்

214 - பூவனூர்

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 65 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

பூவனூர் புனிதன் தன் திருநாமம் தான்
நாவில் நூறு நூறாயிரம் நண்ணினார்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினும் செல்வர்கள் ஆவரே

அனுசயப்பட்டு அதுஇது என்னாதே
கனி மனத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனிதனைப் **பூவனூர**னைப் போற்றுவார்
மனிதரில் தலையான மனிதரே - 6

பூவனூர் தண் புறம்பயம் பூம்பொழில்
நாவலூர் நள்ளாறொடு நன்னிலம்
கோவலூர் குடவாயில் கொடுமுடி
மூவலூரும் முக்கண்ணனூர் காண்மினே - 8

மைக்கடுத்த நிறத்த அரக்கன் வரை
புக்கெடுத்தலும் **பூவனூர**ன் அடி
மிக்கடுத்த விரல் சிறிது ஊன்றலும்
பக்கடுத்த பின் பாடி உய்ந்தான் அன்றே - 11

168.பாதாளேச்சுரம்(பாதாளேச்சுரம்)(பாமணி)

168.பாதாளேச்சுரம்(பாதாளேச்சுரம்)(பாமணி)

இறைவன் : சர்ப்பபுரீஸ்வரர், நாகநாதர்
இறைவி : அமிர்தநாயகி
தலமரம் : மாமரம் தீர்த்தம் : நாக தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 221 அலைபேசி : 9360685073, 9788544971
முகவரி : அருள்மிகு. சர்ப்பபுரீஸ்வரர் திருக்கோயில்,
பாமணி & அஞ்சல், (வழி) மன்னார்குடி,
மன்னார்குடி வட்டம்,திருவாரூர் மாவட்டம் 614 014
தலச் சிறப்பு : பாதாளத்திலிருந்து ஆதிசேஷன் (தனஞ்சயர்) வெளிப்பட்டு வழிபட்ட தலம். எனவே பாதாளேச்சுரம் எனப்பெயர் பெற்றது.

திருவருட்பா பாடல் எண் 167

பூவுலகாம்
ஈங்கும்பா தாளமுத லெவ்வுலகு மெஞ்ஞான்றுந்
தாங்கும்**பா தாளச் சரத்த**மர்ந்தோய்

198 - பாதாளேச்சுரம் (பாமணி)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 108 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும் மதி மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான் புனல்சூடிப் பொற்பமரும்
அன்னம் அன நடையாள் ஒருபாகத்து அமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினான் உறை கோயில் **பாதாளே**

கண்ணமர் நெற்றியினான் கமழ்கொன்றைச் சடைதன் மேல் நின்றும்
விண்ணியல் மாமதியும் உடன் வைத்தவன் விரும்பும்
பெண்ணமர் மேனியினான் பெரும் காடரங்காக ஆடும்
பண்ணியல் பாடலினான் உறை கோயில் **பாதாளே** - 6

மல்கிய நூண்ணிடையாள் உமைநங்கை மறுக அன்றுகையால்
தொல்லை மலையெடுத்த அரக்கன்தலை தோள் நெரித்தான்
கொல்லை விடையுகந்தான் குளிர்திங்கள் சடைக்கணிந்தோன்
பல்லிசை பாடலினான் உறைகோயில் **பாதாளே** - 8

பன்மலர் வைகுபொழில் புடைதூழ்ந்த **பாதாளை**ச் சேரப்
பொன்னியன் மாடமல்கு புகலிந் நகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும் வல்லார் எழில் வானத்திருப்பாரே - 11

169.களர்(திருக்களர்)

169.களர்(திருக்களர்)

இறைவன் : பாரிஜாதவனேஸ்வரர், களர்முளைநாதர்
இறைவி : அமுதவல்லி, இளங்கொம்பன்னாள், அழகேஸ்வரி
தலமரம் : பாரிஜாதம் தீர்த்தம் : துர்வாசர் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 222 அலைபேசி : 9843058499
முகவரி : அருள்மிகு.பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோயில், திருக்களர் & அஞ்சல், திருவாரூர் மாவட்டம் 614 720
தலச் சிறப்பு : களரி என்றால் அரங்கம். துர்வாசருக்கு பிரம தாண்டவ தரிசனம் தந்தமையால் களரி எனப்பட்டு களர் என்று ஆகியது.

திருவருட்பா பாடல் எண் 168

ஓங்குபுத்தி
மான்களரி லோட்டி மகிழ்வோ டிருந்தேத்தும்
வான்களரில் வாழு மறைமுடிபே

81 - திருக்களர்

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 51 பாடல் 1
பண் : சிகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

நீருளார் கயல் வாவி சூழ்பொழில்
நீண்ட மாவயல் ஈண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழா மல்கு திருக்களருள்
ஊருளார் இடு பிச்சை பேணும்
ஒருவனே ஒளிர் செஞ்சடை மதி
ஆர நின்றவனே அடைந்தார்க்கு அருளாயே

கோல மயிலாலக் கொண்டல்கள்
சேர் பொழில் குலவும் வயலிடைச்
சேலிளம் கயலார் புனல் சூழ்ந்த திருக்களருள்
நீல மேவிய கண்டனே நிமிர்
புன்சடைப் பெருமான் எனப்பொலி
ஆலநீழல் உளாய் அடைந்தார்க்கு அருளாயே - 6

இந்து வந்தெழும் மாடவீதி
எழில் கொள் காழி நகர்க் கவுணியன்
செந்து நேர்மொழியார் அவர்சேரும் திருக்களருள்
அந்தி அன்னதொர் மேனியானை
அமரர்தம் பெருமானை ஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும் பாடத் தவமாமே - 11



170.சிற்றேமம் (திருச்சிற்றேமம்)(சித்தாய்மூர்)

170.சிற்றேமம் (திருச்சிற்றேமம்)(சித்தாய்மூர்)

இறைவன் : ஸ்வர்ணதாபனேஸ்வரர், பொன்வைத்தநாதர்
இறைவி : அகிலாண்டேஸ்வரி
தலமரம் : ஆத்தி தீர்த்தம் : சுவர்ணபுஷ்கரணி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழ நாடு (தென்கரை)
வரிசை எண் : 223 அலைபேசி : 9442767565
முகவரி : அருள்மிகு. ஸ்வர்ணதாபனேஸ்வரர் திருக்கோயில், சித்தாய்மூர் & அஞ்சல், பொன்னிரை திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம் 610 203
தலச் சிறப்பு : வணிகர் ஒருவர் மனைவியை ஊர்மக்கள் தவராக பேசிய போது அவர் குற்றமற்றவள் என்பதை நிருபித்து இறைவன் நந்தியை பின்போகச் செய்தும். அத்தி மரத்தை இடம் பெயரச் செய்தும், கோயில் கதவை தானாக திறக்கச் செய்தும் அற்புதங்கள் நிகழ்த்தினார் இந்த கோயிலில் தேன்கூடு ஒன்று உள்ளது.

திருவருட்பா பாடல் எண் 169

மேன்மைதரும்
முற்றேமம் வாய்ந்த முனிவர் தினம்பரவும்
சிற்றேமம் வாய்ந்த செழுங்கதிரே

129 - திருச்சிற்றேமம் (சித்தாய்மூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 42 பாடல் 1
பண் : கொல்லிக்கௌவாணம் இராகம் : நவரோஸ்

நிறை வெண்திங்கள் வாள்முக மாதர் பாட நீள்சடைக்
குறை வெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
சிறை வண்டியாழ் செய் பைம்பொழில் பழனம்சூழ் சிற்றேமத்தான்
இறைவனென்றே உலகெலாம் ஏத்த நின்ற பெருமானே

பனி வெண்திங்கள் வாள்முக மாதர் பாடச் சூழ்சடைப்
குனி வெண்திங்கள் சூடியோர் ஆடல் மேய கொள்கையான்
தனி வெள்விடையன் புள்ளினத் தாமம் சூழ் சிற்றேமத்தான்
முனிவு மூப்பு நீக்கிய முக்கண் மூர்த்தி அல்லனே - 6

சூழ்ந்த திங்கள் வாண்முக மாதர்பாடச் சூழ்சடைப்
போழ்ந்த திங்கள் சூடியோர் ஆடல் மேயபுண்ணியன்
தாழ்ந்த வயல் சிற்றேமத்தான் தடவரையைத்தன் தாளினால்
ஆழ்ந்த அரக்கன் ஒல்க அன்றடர்த்த அண்ணல் அல்லனே - 8

கல்லில் ஓதமல்கு தண்கானல் சூழ்ந்த காழியான்
நல்லவாய இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்
செல்வனூர் சிற்றேமத்தைப் பாடல் சீரார் நாவினால்
வல்லராகி வாழ்த்துவார் அல்லலின்றி வாழ்வரே - 11



171.முசாத்தானம்(திருவுசாத்தானம்)

இறைவன் : மந்திரபுரீஸ்வரர்
இறைவி : பிருகந்நாயகி, பெரியநாயகி
தலமரம் : மா
தீர்த்தம் : அநுமன், மார்கண்டேயர், கௌதமர் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (தென்கரை) வரிசை எண் : 224
தொலைபேசி : 04369 - 262014 அலைபேசி : 9942039494
முகவரி : அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் திருக்கோயில், கோவிலூர், முத்துப்பேட்டை & அஞ்சல், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் 614 704
தலச் சிறப்பு : சேது அணை கட்ட இராமர் இங்கு மந்திர உபதேசம் பெற்ற தலம். சுக்கிரீவன் அனுமன், வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 170

கற்றவர்கள்
எங்குமுசாத் தான மிருங்கழக மன்றமுதல்
தங்குமுசாத் தானத் தனிமுதலே

44 - திருவுசாத்தானம் (கோயிலூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 33 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

நீரிடைத் துயின்றவன் தம்பி நீள்சாம்புவான்
போருடைச் சுக்கிரீவன் அநுமான் தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்த எம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத்தானமே

மறிதரு கரத்தினான் மால்விடை ஏறியான்
குறிதரு கோல நற்குணத்தினார் அடிதொழ
நெறிதரு வேதியர் நித்தலும் நியமம் செய்
செறிதரு பொழிலணி திருவுசாத்தானமே - 4 to 6

மடவரல் பங்கினன் மலைதனை மதியாது
சடசட எடுத்தவன் தலைபத்தும் நெரிதர
அடர்தர ஊன்றி அங்கே அவர்க்கருள் செய்தான்
திடமென உறைவிடம் திருவுசாத்தானமே - 8

வரை திரிந்து இழியுநீர் வளவயல் புகலிமன்
திரை திரிந்து எறிகடல் திருவுசாத்தானரை
உரை தெரிந்து உணரும் சம்பந்தன் ஒண்தமிழ் வல்லார்
நரை திரை இன்றியே நன்னெறி சேர்வரே - 11

172.இடும்பாவனம்(இடும்பாவனம்)

இறைவன் : கல்யாணேஸ்வரர், சற்குணேஸ்வரர், சற்குணநாதர், இடும்பாவனேஸ்வரர்
இறைவி : மங்களவல்லி, மங்களநாயகி, கல்யாணேஸ்வரி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : பிரம்மம், அகத்தியர், எமன்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 225 தொலைபேசி : 04369 - 240200
முகவரி : அருள்மிகு சற்குணேஸ்வரர் திருக்கோயில், இடும்பாவனம் & அஞ்சல், திருவாரூர் மாவட்டம் 614 735
தலச் சிறப்பு : இடும்பன் வழிபட்ட தலம், அகத்தியர், பிரமன், எமன் இராமர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 171

பொங்குபவ
வல்லலிடும் பாவநத்த மட்டொளிசெய் கின்றதிரு
மல்லலிடும் பாவனத்து மாட்சிமையே

32 - இடும்பாவனம்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமறை பதிகம்17 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

மனமார்தரு மடவாரொடு மகிழ் மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திரள் உந்திச்
சினமார்தரு திறள்வாள் எயிற்றரக்கன் மிகுகுன்றில்
இனமாதவர் இறைவர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே

நெறி நீர்மையர் நீள்வானவர் நினையும் நினைவாகி
அறி நீர்மையில் எய்தும் அவர்க்கறியும் அறிவருளிக்
குறி நீர்மையர் குணமார்தரு மணமார்தரு குன்றில்
எறி நீர்வயல் புடைசூழ்தரும் இடும்பாவனம் இதுவே - 6

தேரார்தரு திகழ்வாள் எயிற்றரக்கன் சிவன் மலையை
ஓராது எடுத்து ஆர்த்தான் முடியொரு ப:தவை நெரித்துக்
கூரார்தரு கொலைவாளொடு குணநாமமும் கொடுத்த
ஏரார்தரும் இறைவர்க்கிடம் இடும்பாவனம் இதுவே - 8

கொடியார் நெடுமாடக் குன்றளூரின் கரைக் கோல
இடியார் கடல் அடிவீழ்தரும் இடும்பாவனத்து இறையை
அடிஆயும் அந்தணர் காழியுள் அணிஞான சம்பந்தன்
படியால் சொன்ன பாடல் சொலப் பறையும் வினைதானே - 11

173.கடிக்குளம்(கடிக்குளம்) (கற்பகநாதர் குளம்)

இறைவன் : கற்பகநாதர், கற்பகேஸ்வரர்
இறைவி : சௌந்தர நாயகி, பாலசௌந்தரி
தலமரம் : பலா தீர்த்தம் : விநாயகர் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 226 தொலைபேசி : 04369 - 240187
அலைபேசி : 9788048653
முகவரி : அருள்மிகு கற்பகநாதசுவாமி திருக்கோயில்,
கற்பகநாதர்குளம் & அஞ்சல், குன்னலூர்,
திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 614 703
தலச் சிறப்பு : இங்கு ஔவையாருக்கு தனிக்கோயில் துளசா இராஜனால் கட்டப்பட்டது. முருகன் ஔவையாரிடம் சுட்டப்பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா என்று கேட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 172

தொல்லைப்
படிக்குள் நோவாத பண்புடையோர் வாழ்த்தும்
கடிக்குளத் தன்பர் களிப்பே

65 - கடிக்குளம் (கற்பகநாதர் குளம்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 104 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

பொடிகொள் மேனி வெண்ணூலினர்
தோலினர் புலியுரி அதளாடை
கொடிகொள் ஏற்றினர் மணிகிணின்
எனவரு குரைகழல் சிலம்பார்க்க
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு
கடிக்குளத்து உறையும் கற்பகத்தைத் தம்
முடிகள் சாய்த்து அடிவீழ்தரும்
அடியரை முன்வினை மூடாவே

தனமலி புகழ்தயங்கு பூந்தராயவர்
மன்னன் நற்சம்பந்தன்
மனமலி புகழ் வண்டமிழ் மாலைகள்
மாலதாய் மகிழ்வோடும்
கனமலி கடலோதம் வந்துலவிய
கடிக்குளத்து அமர்வானை
இனமலிந்து இசை பாட வல்லார்கள்
போய் இறைவனோடு உறைவாரே - 11

174.தண்டலைக்குள் நீணெறி (தண்டலைநீள்நெறி) (தண்டலைச்சேரி)

இறைவன் : ஸ்திரபுத்தீஸ்வரர், நீள்நெறிநாதர்
இறைவி : ஞானாம்பிகை தலமரம் : குருந்தை
தீர்த்தம் : ஓமக தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 227 அலைபேசி : 9865844677
முகவரி : அருள்மிகு நீள்நெறிநாதர் திருக்கோயில்,
தண்டலைச்சேரி, வேளூர் அஞ்சல்,
(வழி) திருத்துறைப்பூண்டி, திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 614 715
தலச் சிறப்பு : அரிவட்டாய நாயனார் முக்தி தலம்

திருவருட்பா பாடல் எண் 173

கடிக்குளத்தின்
வண்டலைக்கத் தேனலரின் வளர்ந்தோர் தடமாக்கும்
தண்டலைக்குள் நீணெறிச்சிந் தாமணியே

139 - தண்டலைநீள்நெறி (தண்டலைச்சேரி)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 50 பாடல் 1
பண் : கௌசிகம் இராகம் : பைரவி

விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடையார்க்கு இடம்
கரும்பும் செந்நெலும் காய்சமுகின் வளம்
நெருங்கும் **தண்டலை நீள்நெறி** காண்மினே

தவந்த என்பும் தவளக் பொடியுமே
உவந்த மேனியினான் உறையும்மிடம்
சிவந்த பொன்னும் செழும் தரளங்களும்
நிவந்த **தண்டலை நீள்நெறி** காண்மினே - 4 to 7

இலங்கை வேந்தன் இருபது தோளிற
விலங்கலில் அடர்த்தான் விரும்பும்மிடம்
சலங்கொள் இப்பி தரளமும் சங்கமும்
நிலங்கொள் **தண்டலை நீள்நெறி** காண்மினே - 8

நீற்றர் **தண்டலை நீள்நெறி** நாதனைத்
தோற்று மேன்மையர் தோணிபுரத்து இறை
சாற்று ஞானசம்பந்தன் தமிழ்வல்லார்
மாற்றில் செல்வர் மறப்பர் பிறப்பையே - 11

175.கோட்டூர் (கோட்டூர்)

இறைவன் : கொழுந்தீஸ்வரர், சமீவனேஸ்வரர்
இறைவி : மதுரபாஷிணி, தேனார்மொழியாள், தேனாம்பாள்
தலமரம் : வன்னி
தீர்த்தம் : அமுத கூபம் மற்றும் 9 தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 228 அலைபேசி : 9786151763
முகவரி : அருள்மிகு கொழுந்தீஸ்வரர் திருக்கோயில்,
கோட்டூர் & அஞ்சல், (வழி) மன்னார்குடி,
மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம் - 614 708

திருவருட்பா பாடல் எண் 174

கொண்டலென
மன்கோட்டூர் சோலை வளர்கோட்டூர் தண்பழனத்
தென்**கோட்டூர்** தேவ சிகாமணியே

113 - கோட்டூர்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 109 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : கேதாரகௌளை

நீலமார் தரு கண்டனே நெற்றியோர்
கண்ணனே ஒற்றைவிடைச்
சூலமார் தரு கையனே துன்று பைம்பொழில்கள்
சூழ்ந்து அழகாய
கோல மாமலர் மணங்கமழ் **கோட்டூர்**
நற்கொழுந்தே என்று எழுவார்கள்
சால நீள்தலம் அதனிடைப் புகழ்மிகத்
தாங்குபவர் பாங்காலே

துன்றுவார் சடைத் தூமதி மத்தமும்
துன்னெருக்கார் வன்னி
பொன்றினார் தலைக் கலனொடு பரிகலம்
புலியுரி உடையாடை
கொன்றை பொன்னென மலர்தரு **கோட்டூர்**
நற்கொழுந்தே என்று எழுவாரை
என்றும் ஏத்துவார்க்கு இடரிலை கேடிலை
ஏதம் வந்தடையாவே - 6

பந்துலா விரல் பவளவாய்த் தேன்மொழிப்
பாவையோடு உருவாரும்
கொந்துலா மலர் விரிபொழில் **கோட்டூர்**
நற்கொழுந்தினைச் செழும் பவளம்
வந்துலாவிய காழியுள் ஞானசம்பந்தன்
வாய்ந்து உரை செய்த
சந்துலாம் தமிழ் மாலைகள் வல்லவர்
தாங்குவர் புகழாலே - 11



176.வெண்டுறை(திருவெண்டுறை) (வண்டுதுறை)

இறைவன் : மதுவனேஸ்வரர், பிரமரேஸ்வரர்,
பிரமபுரீஸ்வரர், வெண்டுறைநாதர்
இறைவி : சத்யதாட்சி, பிரகதாம்பாள், வேல்நெடுங்கண்ணி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 229
முகவரி : அருள்மிகு மதுவனேஸ்வரர் திருக்கோயில், வண்டுதுறை &
அஞ்சல், ஆதிச்சபுரம் மன்னார்குடி வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 614 717
தலச் சிறப்பு : பிருங்கி முனிவர் வண்டு உருவில் வழிபட்ட தலம்
வித்யாதரர், பிரமன், திருமால் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 175

தென்கூட்டிப்
போய்வண் டுறைதடமும் பூம்பொழிலுஞ் சூழ்ந்தம
ராய்**வெண் டுறை**மாசி லாமணியே

266 - திருவெண்டுறை (வண்டுதுறை)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 61 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

ஆதியன் ஆதிரையன் அனலாடிய ஆரழகன்
பாதியோர் மாதினோடும் பயிலும் பரமாபரமன்
போதியலும் முடிமேல் புனலோடு அரவம் புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்பும் இடம் **வெண்டுறை**யே

ஊழிகளாய் உலகாய் ஒருவர்க்கும் உணர்வரியான்
போழிள வெண்மதியும் புனலும் மணி புன்சடையான்
யாழின் மொழி உமையாள் வெருவ அவ்வெழில் வெண்மருப்பின்
வேழம் உரித்தபிரான் விரும்பும் இடம் **வெண்டுறை**யே - 6

கரம் இருபத்தினாலும் கடுவன் சினமாய் எடுத்த
சிரம் ஒருபத்தும் உடை அரக்கன் வலிசெற்று உகந்தான்
பரவ வல்லார் வினைகள் அறுப்பான் ஒருபாகமும் பெண்
விரவிய வேடத்தினான் விரும்பும் இடம் **வெண்டுறை**யே - 8

திண்ணமரும் புரிசைத் **திருவெண்டுறை** மேயவனைத்
தண்ணமரும் பொழில்சூழ் தரு சண்பையர் தந் தலைவன்
எண்ணமர் பல்கலையால் இசை ஞானசம்பந்தன் சொன்ன
பண்ணமர் பாடவல்லார் வினையாயின பற்றறுமே - 11



177.கொள்ளம் பூதூர்)(கொள்ளம் பூதூர்) (திருக்களம்புதூர்)

இறைவன் : வில்வாரண்யேஸ்வரர், வில்வநாதர்
இறைவி : சௌந்தரநாயகி, அழகுநாச்சியார்
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம், அகத்தியர் தீர்த்தம், முள்ளியாறு
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 230 அலைபேசி : 9442185480
முகவரி : அருள்மிகு வில்வாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருக்களம்பூர், திருவாரூர் மாவட்டம் - 622 414
தலச் சிறப்பு : சம்பந்தர் பதிகம் பாடி ஓடம்போக்கி ஆற்றை அடியார்களுடன் படகோட்டி இல்லாத படகில் கடந்தார் ஐப்பசி அம்மாவாசையன்று இந்தத் திருவிழா ஓடத் திருவிழாவாக நடக்கின்றது.

திருவருட்பா பாடல் எண் 176

தோய்வுண்ட
கள்ளம்பூ தாதிநிலை கண்டுணர்வு கொண்டவர்தூழ்
கொள்ளம்பூ தூர்வான் குலமணியே

109 - கொள்ளம்பூதூர் (திருக்களம்புதூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 6 பாடல் 1
பண் : காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

கொட்டமே கமழும் **கொள்ளம்பூதூர்**
நட்டமாடிய நம்பனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே

ஓடம் வந்தணையும் **கொள்ளம்பூதூர்**
ஆடல் பேணிய அடிகளை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே - 6

குரக்கினம் பயிலும் **கொள்ளம்பூதூர்**
அரக்கனைச் செற்ற ஆதியை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்கு மாறருள் நம்பனே - 8

கொன்றை சேர் சடையான் **கொள்ளம்பூதூர்**
நன்று காழியுள் ஞானசம்பந்தன்
இன்று சொன் மாலை கொண்டு ஏத்த வல்லார்போய்
என்றும் வானவரோடு இருப்பாரே - 11

178.பேரெயில்(பேரெயில்) (ஓகைப்பேரையூர், வங்காரப் பேரையூர்)

இறைவன் : ஜகதீஸ்வரர்
இறைவி : ஜகந்நாயகி தலமரம் : நாரத்தை
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம் பாடல் : அப்பர்
நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 231 அலைபேசி : 9443135129
முகவரி : அருள்மிகு ஜகதீஸ்வரர் திருக்கோயில், ஓகைப்பேரையூர், வடபாதிமங்கலம் அஞ்சல், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம் - 610 206

திருவருட்பா பாடல் எண் 177

வெள்ளிடைவான்
வாம்பே ரெயிற்சூழ்ந்த மாண்பாற் றிருநாமம்
ஆம்பே ரெயிலொப்பி லாமணியே

219 - பேரெயில் (ஓகைப்பேரையூர், வங்காரப்பேரையூர்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 16 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்
கறை கொள் கண்டம் உடைய கபாலியார்
துறையும் போகுவர் தூயவெண்ணீற்றினர்
பிறையும் சூடுவர் **பேரெயிலாளரே**

திருக்குவார் குழல் செல்வன சேவடி
இருக்குவாய் மொழியால் தனையேத்துவார்
சுருக்குவார் துயர் தோற்றங்களால் அறப்
பெருக்குவார் அவர் **பேரெயிலாளரே** - 6

உழைத்தும் துள்ளியும் உள்ளத்துள்ளே உரு
இழைத்தும் எந்தை பிரான் என்று இராப்பகல்
அழைக்கும் அன்பினராய அடியவர்
பிழைப்பு நீக்குவர் **பேரெயிலாளரே** - 8

மதத்த வாளரக்கன் மணிப்புட்பகம்
சிதைக்கவே திருமாமலைக் கீழ்ப்புக்குப்
பதைத்து அங்கு ஆர்த்தெடுத்தான் பத்து நீள்முடி
பிதக்க ஊன்றிய **பேரெயிலாளரே** - 11

179. கொள்ளிக்காடு(திருக்கொள்ளிக்காடு)

179. கொள்ளிக்காடு(திருக்கொள்ளிக்காடு) (கள்ளிக்காடு)

இறைவன் : அக்கினீஸ்வரர்
இறைவி : மிருதுபாதநாயகி, பஞ்சின்மெல்லடியம்மை
தலமரம் : வன்னி தீர்த்தம் : குளம் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 232 அலைபேசி : 9585382152
முகவரி : அருள்மிகு அக்கினீஸ்வரர் திருக்கோயில், திருக்கொள்ளிக்காடு, கீராலத்தூர் அஞ்சல், (வழி)நெல்லிக்காவல், திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் - 610 205

திருவருட்பா பாடல் எண் 178

தாம்பேரா
வீட்டிலன்ப ரானந்தம் மேவச் செயுங்**கொள்ளிக்**
காட்டி லமர்ந்தஎன்கண் காட்சியே

110 - திருக்கொள்ளிக்காடு (கள்ளிக்காடு)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 16 பாடல் 1
பண்: காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

நிணம்படு சுடலையின் நீறு பூசி நின்று
இணங்குவர் பேய்களோடு இடுவர் மாநடம்
உணங்கல் வெண்தலைதனில் உண்பராயினும்
குணம் பெரிதுடையர் நம் **கொள்ளிக்காடரே**

பஞ்சுதோய் மெல்லடிப் பாவையாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்தடை
குஞ்சரம் உரித்தனர் **கொள்ளிக்காடரே** - 6

எடுத்தனன் கயிலையை இயல் வலியினால்
அடர்த்தனர் திருவிரலால் அலறிடப்
படுத்தனர் என்றவன் பாடல் பாடலும்
கொடுத்தனர் கொற்றவாள் **கொள்ளிக்காடரே** - 8

நற்றவர் காழியுள் ஞானசம்பந்தன்
குற்றமில் பெரும்புகழ் **கொள்ளிக்காடரைச்**
சொற்றமிழ் இன்னிசை மாலை சோர்வின்றிக்
கற்றவர் கழலடி காண வல்லரே - 11

180.தேங்கூர் (திருத்தெங்கூர்) (திருத்தங்கூர்)

180.தேங்கூர் (திருத்தெங்கூர்) (திருத்தங்கூர்)

இறைவன் : இரஜதகிரீஸ்வரர், வெள்ளிமலைநாதர்
இறைவி : பிருகந்நாயகி, பெரியநாயகி
தலமரம் : தென்னை தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 233 அலைபேசி : 9442348042
முகவரி : அருள்மிகு இரஜதகிரீஸ்வரர் திருக்கோயில், திருத்தங்கூர், திருநெல்லிக்காவல் அஞ்சல்,திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம் - 607 205
தலச் சிறப்பு : ஊழிக்காலத்தில் கடல் பொங்கி வந்த போதும் கூட இத்தலத்தில் தெளிந்த நீர் தேங்கி நின்றதால் தேங்கூர் என்றாகியது.

திருவருட்பா பாடல் எண் 179

நீட்டுமொளி
ஆங்கூ ரிலைவே லவனா தியர்தழத்
தேங்கூரில் வாழ்தேவ சிங்கமே

148 - திருத்தெங்கூர் (திருத்தங்கூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 93 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கடல் நஞ்சையுண்டவர் கருதலர் புரங்கள்
இரைசெய்து ஆரழலூட்டி இடுபலிக்கு எழில்சேர்
விரைசெய் பூம்பொழில் **தெங்கூர்** வெள்ளியங் குன்று அமர்ந்தாரே

தொல்லை வல்வினை தீர்ப்பார் சுடலை வெண்பொடியணி சுவண்டர்
எல்லி சூடி நின்றாடும் இறையவர் இமையவர் ஏத்தச்
சில்லை மால்விடை ஏறித் திரிபுரம் தீயெழச் செற்ற
வில்லினார் திருத்**தெங்கூர்** வெள்ளியங் குன்று அமர்ந்தரே - 6

எண்ணிலா விறலரக்கன் எழில்திகழ் மால்வரை எடுக்க
கண்ணெலாம் பொடிந்து அலறக் கால்விரல் ஊன்றிய கருத்தர்
தண்ணுலாம் புனல் கண்ணி தயங்கிய சடைமுடிச் சதுரர்
விண்ணுலாம் பொழில் **தெங்கூர்** வெள்ளியங் குன்றமர்ந்தாரே - 8

வெந்த நீற்றினர் **தெங்கூர்** வெள்ளியங் குன்றமர்ந்தாரைக்
கந்தமார் பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்
சந்தமாயின பாடல் தண்டமிழ் பத்தும் வல்லார் மேல்
பந்தமாயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே - 11

181.நெல்லிக்கா(திருநெல்லிக்கா) (நெல்லிக்காவல்)

இறைவன் : ஆம்லகேஸ்வரர், நெல்லிவனநாதர், நெல்லிநாதேஸ்வரர்
இறைவி : ஆம்லகேஸ்வரி, மங்களநாயகி
தலமரம் : நெல்லி
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம், சூரிய தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 234 தொலைபேசி : 04369 - 237624
அலைபேசி : 9788152928
முகவரி : அருள்மிகு நெல்லிவனேஸ்வரர் திருக்கோயில், திருநெல்லிக்காவல் & அஞ்சல், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம் - 610 205
தலச் சிறப்பு : துர்வாசரின் கோபத்தை இறைவன் நீக்கிய தலம்

திருவருட்பா பாடல் எண் 180

ஓங்குமலை
வல்லிக்கா தார மணிப்புயவென் றன்பர்தொழ
நெல்லிக்கா வாழ்மெய்ந் நியமமே

173 - திருநெல்லிக்கா (நெல்லிக்காவல்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 19 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

அறத்தால் உயிர் காவல் அமர்ந்தருளி
மறத்தால் மதில் மூன்றுடன் மாண்பு அழித்த
திறத்தால் தெரிவெய்திய தீ வெண்திங்கள்
நிறத்தான் **நெல்லிக்கா**வுள் நிலாயவனே

வெறியார் மலர் கொன்றையந்தார் விரும்பி
மறியார் மலை மங்கை மகிழ்ந்தவன் தான்
குறியால் குறிகொண்டவர் போய்க் குறுகும்
நெறியான் **நெல்லிக்கா**வுள் நிலாயவனே - 6

மறைத்தான் பிணிமாதொரு பாகந்தன்னை
மிறைத்தான் வரையால் அரக்கன் மிகையைக்
குறைத்தான் சடைமேல் குளிர்கோல் வளையை
நிறைத்தான் **நெல்லிக்கா**வுள் நிலாயவனே - 8

புகரேதும் இலாத புத்தேள் உலகின்
நிகரா **நெல்லிக்கா**வுள் நிலாயவனை
நகரா நலஞானசம்பந்தன் சொன்ன
பகர்வாரவர் பாவமிலாதவரே - 11



182. நாட்டியத்தான் குடி(திருநாட்டியத்தான்குடி)

இறைவன் : மாணிக்கவண்ணர், இரத்தினபுரீஸ்வரர், கரிநாலேஸ்வரர், நாட்டியத்து நம்பி
இறைவி : மங்களாம்பிகை
தலமரம் : மாவிலங்கை தீர்த்தம் : சூரிய தீர்த்தம், கரி தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 235 அலைபேசி : 9443806496
முகவரி : அருள்மிகு மாணிக்கவண்ணர் திருக்கோயில், திருநாட்டியத்தான்குடி & அஞ்சல், (வழி) மாவூர், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம் - 610 202
தலச் சிறப்பு : கோட்புலி நாயனாரின் அவதாரத் தலம். இவருடைய புதல்விகள் சிங்கடி, வனப்பகை இருவரையும் சுந்தரர் தம் புதல்விகளாக ஏற்றுக்கொள்வார்.

திருவருட்பா பாடல் எண் 181

எல்அலற்கண்
சேட்டியத் தானே தெரிந்துகரர் வந்தேத்து
நாட்டியத் தான்குடிவாழ் நல்லினமே

164 - திருநாட்டியத்தான்குடி

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 15 பாடல் 3
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

அஞ்சாதே உமக்காட் செய வல்லேன் யாதினுக்கு ஆசை படுகேன்
பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை பங்கா பரமேட்டி
மஞ்சேர் வெண்மதி செஞ்சடை வைத்த மணியே மாணிக்க வண்ணா
நஞ்சேர் கண்டா வெண்தலை ஏந்தீ **நாட்டியத்தான்குடி** நம்பீ

ஐவாய் அரவினை மதியுடன் வைத்த அழகா அமரர்கள் தலைவா
எய்வான் வைத்ததோர் இலக்கினைஅணைதர நினைந்தேனுள்ளம் உள்ளவும்
உய்வான் எண்ணி வந்துன் அடியடைந்தேன் உகவீராகிலும் உகப்பன்
நைவான் அன்று உமக்காட்பட்டது அடியேன் **நாட்டியத்தான்குடி** நம்பீ - 7

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் **நாட்டியத்தான்குடி** நம்பியை நாளும் மறவாச்
சேடார் பூங்குழல் சிங்கடி அப்பன் திருவாரூரன் உரைத்த
பாடிராகிலும் பாடுமின் தொண்டீர் பாடநும் பாவம் பற்றறுமே - 10



183. காறாயின் (திருக்காறாயில்)

183. காறாயின் (திருக்காறாயில்) (திருக்காரவாசல்)

இறைவன் : கண்ணாயிரநாதர், கண்ணாயிரமுடையார்
இறைவி : கைலாசநாயகி
தலமரம் : பலா தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 236 அலைபேசி : 9442421063
முகவரி : அருள்மிகு கண்ணாயிரமுடையார் திருக்கோயில்,
காறைவாசல் & அஞ்சல், திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 610 202
தலச் சிறப்பு : இங்கு இறைவன் பதஞ்சலிக்கு ஏழு வகைத் தாண்டவர்களைக் காட்டினான் என்பது வரலாறு. பெண்ணொருத்திக்குக் கண்ணொளி தந்த காரணத்தால் இவ் இறைவருக்கு கண்ணியிர நாதர் என்ற பெயர்.

திருவருட்பா பாடல் எண் 182

நாட்டுமொரு
நூறாயி லன்பர்தமை நோக்கி யருள்செய்திருக்
காறாயின் மேலோர் கடைப்பிடியே

85 - திருக்காறாயில் (திருக்காரவாசல்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 15 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

நீரானே நீள்சடை மேலொர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேல் அயன் தான்தொழும்
சீரானே சீர் திகழும் **திருக்காறாயில்**
ஊரானே என்பவர் ஊனமிலாதாரே

ஆற்றானே ஆறணி செஞ்சடை ஆடரவு
ஏற்றானே ஏழுலகம் இமையோர்களும்
போற்றானே பொழில் திகழும் **திருக்காறாயில்**
நீற்றானே என்பவர் மேல் வினை நில்லாவே - 6

செடியாரும் புன்சமண் சீவரத் தார்களும்
படியாரும் பாவிகள் பேச்சுப் பயனில்லை
கடியாரும் பூம்பொழில் சூழ்**திருக்காறாயில்**
குடியாரும் கொள்கையினார்க்கு இல்லை குற்றமே - 10

ஏய்ந்த சீரெழில் திகழும் **திருக்காறாயில்**
ஆய்ந்த சீரானடி ஏத்தி அருள் பெற்ற
பாய்ந்த நீர்க்காழியுள் ஞானசம்பந்தன் சொல்
வாய்ந்தவாறு ஏத்துவார் வானுலகு ஆள்வாரே - 11

184.கன்றாப்பூர்(கன்றாப்பூர்)

184.கன்றாப்பூர்(கன்றாப்பூர்)(கோயில் கண்ணாப்பூர்)

இறைவன் : வஸ்தம்பபுரீஸ்வரர், நடுதறியப்பர், நடுதறிநாதர்
இறைவி : ஸ்ரீவல்லிநாயகி, மாதுமையம்மை
தலமரம் : கல்பனை தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 237 அலைபேசி : 9443195111, 9442459978
முகவரி : அருள்மிகு நடுதறியப்பர் திருக்கோயில்,
கோயில் கண்ணாப்பூர் & அஞ்சல்,
(வழி) வலிவலம், திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 610 207
தலச் சிறப்பு : சிவ வழிபாட்டை எதிர்ந்த கணவனுக்குத் தெரியாமல் கன்று கட்டும் ஆப்பினையே சிவமாக வணங்கி வந்தாள் அதையும் அவன் வெட்ட முயன்றபோது அதனிடத்து இறைவன் தோன்றி அருள் புரிந்தார்.

திருவருட்பா பாடல் எண் 183

வீறாகும்
இன்றாப்பூர் வந்தொட் டிருந்ததிவ்வூ ரென்னவுயர்
கன்றாப்பூர் பஞ்சாக் கரப்பொருளே

83 - கன்றாப்பூர் (கோயில் கண்ணாப்பூர்)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 61 பாடல் 3
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

எவரேனும் தாமாக இலாடத்திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறம் நினைந்து அங்கு உவந்து நோக்கி
இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி
இரண்டாட்டாது ஒழிந்து ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே

விருத்தனே வேலை விடமுண்ட கண்டா
விரிசடை மேல் வெண்திங்கள் விளங்கச் சூடும்
ஒருத்தனே உமை கணவா உலகமூர்த்தீ
நுந்தாத ஒண்சுடரே அடியார் தங்கள்
பொருத்தனே என்றென்று புலம்பி நாளும் புலனைந்தும்
அகத்தடக்கிப் புலம்பி நோக்கிக்
கருத்தினால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே - 5

குனித்த சிலையால் புரமூன்று எரித்தாய் என்றும்
கூற்றுதைத்த குரைகழல் சேவடியாய் என்றும்
தனஞ்சயற்குப் பாசுபதம் ஈந்தாய் என்றும்
தசக்கிரீவன் மலையெடுக்க விரலால் ஊன்றி
முனிந்தவன் தன் சிரம்பத்தும் தாளும் தோளும்
முரண் அழித்திட்டருள் கொடுத்த மூர்த்தி என்றும்
கனிந்து மிகத் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே - 10

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

185.வலிவலம்(திருவலிவலம்)

185.வலிவலம்(திருவலிவலம்)

இறைவன் : இருதயகமலநாதேஸ்வரர், மனத்துணைநாதர்
இறைவி : வாளையங்கண்ணி, அங்கயற்கண்ணி
தலமரம் : புன்னை தீர்த்தம் : சங்கர தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 238
முகவரி : அருள்மிகு இருதயகமலநாதேஸ்வரர் திருக்கோயில், வலிவலம் & அஞ்சல், திருக்குவளை வட்டம், திருவாரூர் மாவட்டம் - 610 207
தலச் சிறப்பு : கரிக்குருவி வழிபட்ட தலம், மாடக்கோயில் வலியன் என்ற குருவி வழிபட்டதால் வலிவலம் எனப் பெயர் பெற்றது.

திருவருட்பா பாடல் எண் 184

துன்றாசை
வெய்ய வலிவலத்தை வீட்டியன்பர்க் கின்னருள்செய்
துய்ய **வலிவலத்துச்** சொன்முடிபே

248 - திருவலிவலம்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 50 பாடல் 4
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து
செய்யராணார் சிந்தையானே தேவர் குலக்கொழுந்தே
நைவன் நாயேன் உன்றன் நாமம் நாளும் நவிற்றுகின்றேன்
வையம் முன்னே வந்து நல்காய் **வலிவலம்** மேயவனே

தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயும் நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்
ஆயமாய காயம் தன்னுள் ஐவர் நின்று ஒன்றலொட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன் **வலிவலம்** மேயவனே - 7

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 48 பாடல் 6
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

நிலையவன் காண் தோற்றவன் காண் நிறையானான் காண்
நீரவன் காண் பாரவன் காண் ஊர் மூன்றெய்த
சிலையவன் காண் செய்யவாய்க் கரியகூந்தல்
தேன்மொழியை ஒரு பாகம் சேர்த்தினான் காண்
கலையவன் காண் காற்றவன் காண் காலன் வீழக்
கறுத்தவன் காண் கயிலாயம் என்னும் தெய்வ
மலையவன் காண் வானவர்கள் வணங்கியேத்தும்
வலிவலத்தான் காண் அவன் என் மனத்துளானே

186. கைச்சினம்(கைச்சினம்)(கச்சனம்)

186. கைச்சினம்(கைச்சினம்)(கச்சனம்)

இறைவன் : கைச்சினேஸ்வரர், கரச்சினேஸ்வரர்
இறைவி : சுவேதவளை நாயகி, வெள்வளைநாயகி
தலமரம் : கோங்கு, இலவு
தீர்த்தம் : வச்சிரம், இந்திரன், அகத்தியர் தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 239 அலைபேசி : 9486533293
முகவரி : அருள்மிகு கைச்சினேஸ்வரர் திருக்கோயில், கச்சனம் & அஞ்சல், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம் - 610 201
தலச் சிறப்பு : இந்திரன் மணலால் இலிங்கம் தாபித்து அதை எடுத்து வைத்த போது அவன் கை சின்னம் அடையாளம் அதில் பதிந்தது. அதனால் கைச்சினம் என்றானது.

திருவருட்பா பாடல் எண் 185

நையுமன
மைச்சினத்தை விட்டோர் மனத்திற் சுவைகொடுத்துக்
கச்சினத்தி னுட்கரையாக் கற்கண்டே

104 - கைச்சினம் (கச்சனம்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 45 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

தையலோர் கூறுடையான் தண்மதிசேர் செஞ்சடையான்
மையுலாம் மணிமிடற்றான் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலாம் மூவிலை வேலேந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை கோயில் **கைச்சினமே**

தேய்ந்து மலிவெண் பிறையான் செய்ய திருமேனியினான்
வாய்ந்திலங்கு வெண்ணீற்றான் மாதினையோர் கூறுடையான்
சாய்ந்தமரர் வேண்டத் தடங்கடல் நஞ்சுண்ட நங்கைக்
காய்ந்த பிரான் மேவியுறை கோயில் **கைச்சினமே** - 5

போதுலவு கொன்றை புனைந்தான் திருமுடிமேல்
மாதுமையாள் அஞ்ச மலையெடுத்த வாளரக்கன்
நீதியினால் ஏத்த நிகழ்வித்து நின்றாடும்
காதலினான் மேவியுறை கோயில் **கைச்சினமே** - 8

தண்வயல் சூழ் காழித் தமிழ் ஞானசம்பந்தன்
கண்ணுதலான் மேவியுறை கோயில் **கைச்சின**த்தைப்
பண்ணிசையால் ஏத்திப் பயின்ற இவை வல்லார்
விண்ணவராய் ஓங்கி வியனுலகம் ஆள்வாரே . 11

187.கோளிலி(திருக்கோளிலி) (திருக்குவளை)

187.கோளிலி(திருக்கோளிலி) (திருக்குவளை)

இறைவன் : பிரம்மபுரீஸ்வரர், கோளிலிநாதர்
இறைவி : வண்டமர் பூங்குழலி
தலமரம் : தேற்றா மரம் தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : மூவர்
நாடு : சோழநாடு (தென்கரை) வரிசை எண் : 240
தொலைபேசி : 04366 - 245412 அலைபேசி : 9786244876
முகவரி : அருள்மிகு கோளிலிநாதர் திருக்கோயில்,
திருக்குவளை & அஞ்சல், திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 610 204
தலச் சிறப்பு : இறைவன் தந்த நெல் மலையை எடுத்த செல்ல
ஆள் அனுப்புமாறு சுந்தரர் இறைவனிடம்
வேண்டிய தலம். பிரமன், அகத்தியர் வழிபட்ட
தலம்

திருவருட்பா பாடல் எண் 186

நெற்சுமக்க
ஆளிலையென் றாரூர னார்துதிக்கத் தந்தருளும்
கோளிலியின் அன்பர்குலங் கொள்ளுவப்பே

பாடல் எண் 251

சொற்கோட்டை யாயினும் கட்டுவார் நின்னைதுனிந்தடுத்தேன்
அற்கோட்டை நெஞ்சுடை யேனுத்திரங்கிலை நெற்கோட்டை
ஈந்தவன் நீயல்லையோ முக்கன் நின்மலனே.

121- திருக்கோளிலி (திருக்குவளை)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 62 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன் நாமம்
கேளாய் நம் கிளை கிளைக்கும் கேடுபடா திறம் அருளி
கோளாய நீக்கும் அவன் **கோளிலி** எம்பெருமானே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 57 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

முன்னமே நினையாது ஒழிந்தேன் உனை
இன்னம் நான் உன் சேவடி ஏத்திலேன்
செந்நெலார் வயல் சூழ்திருக் **கோளிலி**
மன்னனே அடியேனை மறவலே

அரக்கனாய இலங்கையர் மன்னனை
நெருக்கி அம்முடி பத்து இறுத்தான் அவற்கு
இரக்கம் ஆகியவன் திருக்**கோளிலி**
அருத்தியாய் அடியே தொழுது உய்ம்மினே - 10

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 20 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

நீள நினைந்து அடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடமவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே

188.வாய்மூர்க்கம் (திருவாய்மூர்)

188.வாய்மூர்க்கம்(திருவாய்மூர்)

இறைவன் : வாய்மூர்நாதர்
இறைவி : பாலின் நன்மொழியாள், ஸீரோப வசனி
தலமரம் : பலா தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடல் : அப்பர், சம்பந்தர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 241 அலைபேசி : 9786244876
முகவரி : அருள்மிகு வாய்மூர்நாதர் திருக்கோயில், திருவாய்மூர்
& அஞ்சல், (வழி) திருக்குவளை, திருவாரூர் வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 610 204
தலச் சிறப்பு : அப்பர் சுவாமிகள் வாய்மூரில் இருப்போம் தொடர்ந்து
வா என இறைவன் அழைத்து அவருக்கு
நடனகாட்சியை நல்கிய தலம்.

திருவருட்பா பாடல் எண் 187

நீளுலகம்
காய்மூர்க்க ரேனுங் கருதிற் கதிகொடுக்கும்
வாய்மூர்க் கமைந்த மறைக்கொழுந்தே

253 - திருவாய்மூர்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 111 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

தளரிள வளரென உமைபாடத் தாளம் இடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியரவு அரையார்த்து ஆடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க்கு அருள் நல்கி வெண்ணீறணிந்ததோர் சென்னியின் மேல்
வளரிள மதியமொடு இவராணீர் **வாய்மூர்** அடிகள் வருவாரே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 50 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

எங்கே என்னை இருந்திடம் தேடிக்கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் **திருவாய்மூர்ச்** செல்வனார்
அங்கே வாவென்று போனார் அது என்கொலோ

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உள்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் **திருவாய்மூர்ப்**
பிறைகொள் செஞ்சடையார் இவர் பித்தரே - 8

189.ஈடின் மறைக்காடு (திருமறைக்காடு)

189.ஈடின் மறைக்காடு (திருமறைக்காடு) (வேதாரண்யம்)

இறைவன் : மறைக்காட்டீஸ்வரர், வேதாரண்யேஸ்வரர், வேதாரண்யநாதர்
இறைவி : வீணாவாதவிதூஷிணி, யாழைப்பழித்த மொழியம்மை
தலமரம் : வன்னி தீர்த்தம் : வேத தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 242 அலைபேசி : 954369250238
முகவரி : அருள்மிகு வேதாரண்யநாதர் திருக்கோயில், வேதாரண்யம் & அஞ்சல், வேதாரண்யம் வட்டம், நாகை மாவட்டம் - 614 810
தலச் சிறப்பு : இராமர் வழிபட்ட தலம், விளக்கைத் தூண்டி எலி மாவலியாகப் பிறக்க இறைவன் அருள் புரிந்த தலம். வேதங்களால் அடைக்கப்பட்ட கதவினை அப்பர் சுவாமிகள் திறக்கவும், சம்பந்தர் பெருமான் மூடிடவும் பாடிய(பதி) தலம் பரஞ்சோதி முனிவர், தாயுமானவர் அவதரித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 188

நேயமுணத்
தேடெலியை மூவுலகுந் தேர்ந்துதொழச் செய்தருளும்
ஈடின்**மறைக் காட்டி**லென்றன் எய்ப்பில்வைப்பே

எலி, மகாபாலி சக்கரவர்த்தி அருட்பாடல்

செல்லகளன் நீடுகின்ற நெய்யருத்த நேரெலியை மூவுலகும்
ஆளுகின்ற மன்னவனாய் ஆக்கினையே - 381 பாடல் எண்
போதவும் நெய்
அங்கோர் எலிதான் அருந்த அகஸ்தூண்டவதைச்
செங்கோலன் ஆக்கியவச் கீர்த்திதனை - இங்கோதச் -பாடல் 245,246
சந்ததம் நீ கேட்டுவன் தான் நினையாய் அன்படையப்
புந்தியுள்ளோர்ம் தீதொன்றும் போதாதோ.

228 - திருமறைக்காடு (வேதாரண்யம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 37 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் **மறைக்காட்டு**றை மைந்தா
இதுநன்கு இறைவைத்து அருள் செய்க எனக்குன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 10 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

பண்ணின் நேர்மொழியாள் உமை பங்கரோ
மண்ணினார் வலம் செய் **மறைக்காட**ரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 71 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

யாழைப் பழித்தன்ன மொழிமங்கை ஒருபங்கன்
பேழைச் சடைமுடி மேல் பிறை வைத்தானிடம் பேணில்
தாழைப் பொழிலூடே சென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக் குரங்குண்ணும் **மறைக்காடே**



190.அகத்தியான்பள்ளி (அகத்தியான் பள்ளி)

190.அகத்தியான்பள்ளி(அகத்தியான் பள்ளி) (அகஸ்தியம்பள்ளி)

இறைவன் : அகத்தீஸ்வரர்
இறைவி : மங்கைநாயகி, பாகம்பிரியாள்
தலமரம் : வன்னி
தீர்த்தம் : அகத்தியர் தீர்த்தம் (திருக்குளம்) அக்னி தீர்த்தம் (கடல்), எம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்
நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 243 தொலைபேசி : 04369 - 250012
முகவரி : அருள்மிகு அகஸ்தியர் கோயில்,சேது ராஸ்தா சாலை, அகஸ்தியம்பள்ளி & அஞ்சல், (வழி) வேதாரண்யம், வேதாரண்யம் வட்டம், நாகை மாவட்டம் - 614 810
தலச் சிறப்பு : இறைவனின் திருமணக்கோலம் காண அகத்தியர் தவம் செய்த தலம். இத்தலத்தில் வழிபடுவோர்கள் வினைகள் தீரும் என்கிறார் சம்பந்தர்

திருவருட்பா பாடல் எண் 189

நாடுமெனை
நின்ன**கத்தி யான்பள்ளி** நேர்ந்தேனென் றாட்கொண்ட
தென்ன**கத்தி யான்பள்ளி**ச் செம்பொன்னே

1 - அகத்தியான்பள்ளி (அகஸ்தியம்பள்ளி)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 76 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

வாடிய வெண்டலை மாலைசூடி வயங்கிருள்
நீடுயர் கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
ஆடிய எம்பெருமான் **அகத்தியான் பள்ளி**யைப்
பாடிய சிந்தையினார்கட்கு இல்லையாம் பாவமே

தெரிந்ததுவும் கணையொன்று முப்புரம் சென்றுடன்
எரிந்ததுவும் முன்னெழிலார் மலர் அறைவான் தலை
அரிந்ததுவும் பொழில்சூழ் **அகத்தியான் பள்ளி**யான்
புரிந்ததுவும் உமையாள் ஓர் பாகம் புனைதலே - 6

சிரமும் நல் மதமத்தமும் திகழ் கொன்றையும்
அரவும் மல்கும் சடையான் **அகத்தியான் பள்ளி**யைப்
பிரமனோடு திருமாலும் தேடிய பெற்றிமை
பரவ வல்லார் அவர்தங்கள் மேல்வினை பாறுமே - 9

ஞாலம் மல்கும் தமிழ்ஞானசம்பந்தன் மாமயில்
ஆலும்சோலை புடைசூழ் **அகத்தியான் பள்ளி**யுள்
சூலம் நல்ல படையானடி தொழுதேத்திய
மாலை வல்லார் அவர்தங்கள் மேல்வினை மாயுமே - 11



191. கோடி(திருக்கோடி)(கோடிக்கரை, குழகர் கோயில்)

இறைவன் : அமுதகடேஸ்வரர், குழகேஸ்வரர்
இறைவி : அஞ்சனாட்சி, மைத்தடங்கண்ணி
தலமரம் : குராமரம்
தீர்த்தம் : அக்னி தீர்த்தம் (கடல்), அமுத கிணறு
பாடல் : சுந்தரர் நாடு : சோழநாடு (தென்கரை)
வரிசை எண் : 244 அலைபேசி : 9486044942
முகவரி : அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், கோடியக்காடு & அஞ்சல், வேதாரண்யம் வட்டம், நாகை மாவட்டம் - 614 821
தலச் சிறப்பு : குழக முனிவர் வழிபட்ட தலம். சுவாமி இங்கு தனித்திருப்பது கண்டு சுந்தரர் மிதமனம் வருந்தி பாடியுள்ளார்.

திருவருட்பா பாடல் எண் 190

தொன்னெறியோர்
நாடிக் குழக நலமருளென் றேத்துகின்ற
கோடிக் குழகர்ருட் கோலமே

114 - திருக்கோடி (கோடிக்கரை, குழகர் கோயில்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 32 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

கடிதாய்க் காற்று வந்து எற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன **கோடிக்**குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே

மையார் தடங்கண்ணி பங்கா கங்கையாளும்
மெய்யாகத்து இருந்தனள் வேறிடமில்லை
கையார்வளைக் காடுகளோடும் உடனாய்க்
கொய்யார் பொழில் **கோடி**யே கோயில் கொண்டாயே - 5

பறையும் குழலும் ஒலிபாடல் இயம்ப
அறையும் கழலார்க்க நின்றாடும் அமுதே
குறையாப் பொழில்சூழ் தரு**கோடிக்** குழகா
இறைவா தனியே இருந்தாய் எம்பிரானே - 7

பாரூர் மலிதூழ் மறைக்காடதன் தென்பால்
ஏரார் பொழில் சூழ்தரு **கோடிக்**குழகை
ஆரூரன் உரைத்தன பத்திவை வல்லார்
சீரார் சிவலோகத்து இருப்பவர் தாமே - 10



192.திருக்கோணமலை(திரிகோணமலை)

இறைவன் : கோணேஸ்வரர்
இறைவி : மாதுமையாள்
பாடல் : சம்பந்தர் நாடு : ஈழநாடு (இலங்கை)
வரிசை எண் : 273 தொலைபேசி : +94 263267588
அலைபேசி : 0094 779670057 (ஆலயச் செயலாளர்)
முகவரி : அருள்மிகு கோணேஸ்வரர் திருக்கோயில், திருக்கோணமலை, இலங்கை 31000
தலச் சிறப்பு : 3300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமையானது பெரிய துறைமுகம், சோழமன்னர்கள் பலர் திருப்பணி செய்துள்ளார்கள். சிவராத்திரி விசேடம், ஆடி அமாவாசை சிறப்பு

திருவருட்பா பாடல் எண் 191

நீடுலகில்
நாட்டும் புகழீழ நாட்டிற் பவ்விருளை
வாட்டுந **திருக்கோண மாமலை**யாய்

116 - திருக்கோணமலை (திரிகோணமலை)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 123 பாடல் 1
பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

நிரைகுழல் அரவம் சிலம்பொலி அலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகில் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோண மாமலை அமர்ந்தாரே

பரிந்து நல் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல் வரும் கூற்றைத்
திரிந்திடாவண்ணம் உதைத்து அவர்க்கு அருளும்
செம்மையால் நம்மை ஆளுடையார்
விரிந்து உயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண் செருத்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்
கோண மாமலை அமர்ந்தாரே - 6

குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோண மாமலை அமர்ந்தாரைக்
கற்று உணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்ற செந்தமிழார் **மாலை** ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே - 11



193.திருக்கேதீச்சரம்

193.திருக்கேதீச்சரம்

இறைவன் : திருக்கேதீஸ்வரர்
இறைவி : கௌரியம்பாள்
தலமரம் : வன்னி தீர்த்தம் : பாலாவி தீர்த்தம்
பாடல் : சுந்தரர், சம்பந்தர்
நாடு : ஈழநாடு (இலங்கை) வரிசை எண் : 274
தொலைபேசி : 023 2050800 அலைபேசி : +94 232050800
முகவரி : அருள்மிகு கேதீஸ்வரர் திருக்கோயில்,
மாந்தை, தலைமன்னார், இலங்கை
தலச் சிறப்பு : கேது பூசித்த தலம். மாதோட்டம் துறைமுகமாக விளங்கியது.

திருவருட்பா பாடல் எண் 192

வேட்டுலகின்
மூதீச் சரமென்று முன்னோர் வணங்குதிருக்
கேதீச் சரத்திற் கிளர்கின்றோய்

103 - திருக்கேதீச்சரம்

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 107 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

விருதுகுன்ற மாமேருவில் நாண் அரவா அனல் எரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றி நின்று உறைபதி எந்நாளும்
கருதுகின்றவூர் கனை கடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற **கேதீச்சரம்** கைதொழக் கடுவினை அடையாவே

மாடெலாம் மண முரசெனக் கடலினது ஒலி கவர் மாதோட்டத்து
ஆடல் ஏறுடை அண்ணல் **கேதீச்சர**த்து அடிகளை அணிகாழி
நாடுளார்க்கு இறை ஞானசம்பந்தன் சொல் நவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்காள் பரகதி பெறலாமே - 11

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 80 பாடல் 5
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

அங்கத்துறு நோய்கள் அடியார் மேல் ஒழித்தருளி
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் தழ்ந்த **திருக்கேதீச்சர**த்தானே



194.ஆலவாய்(திருஆலவாய்) (மதுரை)

194.ஆலவாய்(திருஆலவாய்) (மதுரை)

இறைவன் : சோமசுந்தரர், சொக்கநாதர், ஆலவாய் அண்ணல், சொக்கேசர்
இறைவி : மீனாட்சி, அங்கயற்கண்ணி
தலமரம் : கடம்பு தீர்த்தம் : பொற்றாமரை
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 245 தொலைபேசி : 0452-2344360, 272222, 2349868
முகவரி : அருள்மிகு மீனாட்சிஅம்மன் திருக்கோயில்,
மதுரை,மதுரை மாவட்டம் – 625 001
தலச் சிறப்பு : 64 திருவிளையாடல்கள் அரங்கேறிய தலம், தமிழ்ச்சங்கம் இருந்த தலம், குலச் சிறையாரும் சைவத்தைக் காத்த தலம். வரகுண பாண்டயறுக்காக இறைவன் கால் மாறி ஆடிய தலம் பாண்டிய மன்னனின் சிவப்பு நோயை சம்பந்தர் தீர்தருளிய தலம் சம்பந்தர் அலை, புனல் வாதங்களை நிகழ்த்திய தலப் பஞ்ச சபையில் **வெள்ளி சபை,** மூர்த்தி நாயனார் தொண்டு புரிந்த தலம். அவர் சந்தனம் அரைத்துக் கொடுத்த சந்தனம் அரைக்கும்பல் இன்றும் இங்கு காணலாம்.

திருவருட்பா பாடல் எண் 193

ஓதுகின்றோர்
பாலவாய் நிற்கும் பரையோடு வாழ்மதுரை
ஆலவாய்ச் சொக்கழகா னந்தமே

28 - திருஆலவாய் (மதுரை)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 66 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் **திருஆலவாயான்** திருநீறே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 62 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

வேதியா வேதகீதா விண்ணவர் அண்ணா என்றென்று
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கி நின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியம்சூடும்
ஆதியே **ஆலவாயில்** அப்பனே அருள் செயாயே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 19 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிரும் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகி மாநாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண் முறுவல் உமையோடாடித்
திளைத்தானைத் தென்கூடல் **திருஆலவாய்ச்**
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே

பஞ்சசபைகள்

பொற்சபை - சிதம்பரம் - தல எண் 1
வெள்ளிசபை - மதுரை - தல எண் 194
ரத்தினசபை - திருவலங்காடு - தல எண் 250
தாமிரசபை - திருநெல்வேலி - தல எண் 205
சித்திர சபை - குற்றாலம் - தல எண் 206



195.ஆப்பனூர்(திருஆப்பனூர்) (ஆப்புடையார்கோயில்)

இறைவன் : இடபுரேகர், அன்னவினோதன், ஆப்புடையார்
இறைவி : குரவங்கமழ் குழலி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : வைகை தீர்த்தம், இடப தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 246
தொலைபேசி : 0452 - 2530173 அலைபேசி : 9443676174
முகவரி : அருள்மிகு ஆப்புடையார் திருக்கோயில்,
ஆப்புடையார்கோயில் & அஞ்சல், மதுரை - 625 002
தலச் சிறப்பு : சோழாந்தகன் என்னும் அரசன் பொருட்டு இறைவன் ஒரு ஆப்பினிடத்தில் இருந்து வெளிப்பட்ட தலம். அர்ச்சகர் ஒருவர் உலையில் இட்ட வைகை மணலை இறைவன் சோறாக ஆக்குவித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 194

சீலர் தமைக்
காப்பனூ ரில்லாக் கருணையா லென்றுபுகும்
ஆப்பனூர் மேவுசதா னந்தமே

20 - திருஆப்பனூர் (ஆப்புடையார்கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 88 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி

முற்றும் சடைமேல் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் பட அரவமது கொண்டு அரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் **திருஆப்பனூரா**னைப்
பற்றும் மனமுடையார் வினை பற்றறுப்பாரே

ஓடும் திரிபுரங்கள் உடனே உலந்தவியக்
காடது இடமாகக் கனல் கொண்டு நின்று இரவில்
ஆடும் தொழிலானை அணி **ஆப்பனூரா**னைப்
பாடும் மனமுடையார் வினை பற்றறுப்பாரே - 6

கருக்கு மணிமிடறன் கதநாகக் கச்சையினான்
உருக்கும் அடியவரை ஒளிவெண் பிறைசூடி
அரக்கன் திறலழித்தான் அணி**ஆப்பனூரா**னைப்
பருக்கு மனமுடையார் வினை பற்றறுப்பாரே - 8

அந்தன் புனல் வைகை அணி **ஆப்பனூர்** மேய
சந்த மலர்க்கொன்றை சடைமேல் உடையானை
நந்தி அடிபரவும் நல ஞானசம்பந்தன்
சந்தன் இவை வல்லார் தடுமாற்று அறுப்பாரே - 11



196.பரங்குன்றம் (திருப்பரங்குன்றம்)
(திருப்பரங்குன்றம்)

இறைவன் : பரங்கிரிநாதர்
இறைவி : ஆவுடைநாயகி
தீர்த்தம் : சரவணப்பொய்கை, இலட்சுமி, பிரம்ம தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், சுந்தரர்
நாடு : பாண்டியநாடு வரிசை எண் : 247
தொலைபேசி : 0452 - 2484359 அலைபேசி : 9865370393
முகவரி : அருள்மிகு பரங்கிரிநாதர் திருக்கோயில்,
திருப்பரங்குன்றம் & அஞ்சல், மதுரை,
மதுரை மாவட்டம் - 625 005

திருவருட்பா பாடல் எண் 195

மாப்புலவர்
ஞானபரங் குன்றமென நண்ணிமகிழ் கூர்ந்தேத்த
வான**பரங் குன்ற**லின்பா னந்தமே

182 - திருப்பரங்குன்றம் (திருப்பரங்குன்றம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 100 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : எதுகுலகாம்போதி

நீடலர் சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலன் அந்திச் சுடர் எரியேந்திச் சுடுகானில்
ஆடலன் அஞ்சொல் அணியிழையாளை ஒரு பாகம்
பாடலன் மேய நன்னகர் போலும் **பரங்குன்றே**

கடை நெடுமாடக் கடியரண் மூன்றும் கனல் மூழ்கத்
தொடை நவில்கின்ற வில்லினன் அந்திச் சுடுகானில்
புடை நவில் பூதம் பாட நின்றாடும் பொருதூலப்
படை நவில்வான் தன் நன்னகர் போலும் **பரங்குன்றே** - 6

மைத்தகுமேனி வாளரக்கன்தன் மகுடங்கள்
பத்தின திண்தோள் இருபதும் செற்றான் **பரங்குன்றைச்**
சித்தமது ஒன்றிச் செய்கழலுன்னிச் சிவனென்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே - 8

தடமலி பொய்கைச் சண்பை மன் ஞானசம்பந்தன்
படமலி நாகம் அரைக்கசைத்தான் தன் **பரங்குன்றைத்**
தொடைமலி பாடல் பத்தும் வல்லார் தம் துயர் போகி
விடமலி கண்டன் அருள் பெறுந்தன்மை மிக்கோரே - 11



197.ஏடகம் (திருஏடகம்) (திருவேடகம்)

197.ஏடகம் (திருஏடகம்) (திருவேடகம்)

இறைவன் : ஏடகநாதேஸ்வரர்
இறைவி : சுகந்த குந்தாளாம்பிகை, ஏலவார்குழலி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்
நாடு : பாண்டியநாடு வரிசை எண் : 248
முகவரி : அருள்மிகு ஏடகநாதேஸ்வரர் திருக்கோயில்,
திருவேடகம் & அஞ்சல்,மதுரை மாவட்டம் 624 234
தலச் சிறப்பு : சம்பந்தர் இட்ட ஏட்டினை சமணர்கள் விதித்த புனல் வாதத்தின்போது வைகையில் இட அது நீரோட்டத்தை எதிர்த்து கரையேறிய இடம்

திருவருட்பா பாடல் எண் 196

வானவர்கோன்
தேமே டகத்தனொடு சீதரனும் வாழ்த்துஞ்சீ
ராமே **டகத்தறிவா** னந்தமே

49 - திருஏடகம் (திருவேடகம்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 32 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமலர் அவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் **ஏடகத்து** ஒருவனே

கொடிநெடு மாளிகை கோபுரம் குளிர்மதி
வடிவுற அமைதர மருவிய **ஏடகத்து**
அடிகளை அடிபணிந்து அரற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள் போய் இல்லையதாகுமே - 2

பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய **ஏடகத்து**
ஐயனை அடிபணிந்து அரற்றுமின் அடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளிதாகுமே - 6,7

கோடு சந்தனம் அகில் கொண்டிழி வைகை நீர்
ஏடு சென்றணை தரும் **ஏடகத்** தொருவனை
நாடு தென்புகலியுள் ஞானசம்பந்தன
பாடல் பத்திவை வல்லார்க்கு இல்லையாம் பாவமே - 11

198. கொடுங்குன்றம் (பிரான்மலை)

198. கொடுங்குன்றம் (கொடுங்குன்றம்) (பிரான்மலை)

இறைவன் : கொடுங்குன்றநாதர், கடோரகிரீஸ்வரர்
இறைவி : குயிலமுதநாயகி, அமிர்தேஸ்வரி
தலமரம் : உறங்காப்புளி, பெயரில்லா மரம்
தீர்த்தம் : தேனாழி தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : பாண்டியநாடு வரிசை எண் : 249
அலைபேசி : 9443191300
முகவரி : அருள்மிகு உமாமகேஸ்வரர் திருக்கோயில்,
பிரான்மலை & அஞ்சல், சிவகங்கை மாவட்டம் - 630 502

திருவருட்பா பாடல் எண் 197

பூமீதில்
நற்றவருங் கற்ற நவசித்த ரும்வாழ்த்தி
உற்ற**கொடுங் குன்றத்**தெம் ஊதியமே

107 - கொடுங்குன்றம் (பிரான்மலை)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 14 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

வானில் பொலிவெய்தும் மழைமேகம் கிழித்தோடிக்
கூனல் பிறை சேரும் குளிர்சாரல் **கொடுங்குன்றம்**
ஆனில்பொலி ஐந்தும் அமர்ந்தாடி உலகேத்தத்
தேனில் பொலி மொழியாளொடு மேயான் திருநகரே

மேகத்து இடிகுரல் வந்து எழவெருவி வரையிழியும்
கூகைக்குலம் ஓடித்திரி சாரல் **கொடுங்குன்றம்**
நாகத்தோடும் இளவெண்பிறை சூடும்நல மங்கை
பாகத்தவன் இமையோர் தொழ மேவும் பழநகரே - 5

அறையும்மரி குரலோசையை அஞ்சியடு மானை
குறையும் மனமாகிம்முழை வைகும் **கொடுங்குன்றம்**
மறையும் அவை உடையான் என நெடியான் என இவர்கள்
இறையும்மறி ஒண்ணாதவன் மேய அவ்வெழில் நகரே - 9

கூனல் பிறை சடைமேல் மிக உடையான் **கொடுங்குன்றம்**
கானல் கழுமல மாநகர்த் தலைவன் நலகவுணி
ஞானத்துயர் சம்பந்தன் நலங்கொள் தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர்தீர்ந்து உலகேத்தும் எழிலோரே - 11

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

199. புத்தூர்(திருப்புத்தூர்)

இறைவன் : ஸ்ரீதளீஸ்வரர், திருத்தளிநாதர்
இறைவி : சிவகாமி
தலமரம் : சரக்கொன்றை தீர்த்தம் : ஸ்ரீதளி தீர்த்தம்
பாடல் : அப்பர், சம்பந்தர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 250 அலைபேசி : 9367148201, 9842656647, 9442047593
முகவரி : அருள்மிகு திருத்தளிநாதர் திருக்கோயில்,
திருப்புத்தூர் & அஞ்சல், சிவகங்கை மாவட்டம் - 623 211
தலச் சிறப்பு : இலட்சுமி வழிபட்ட தலம் : இங்கு இசை தூண்கள் உள்ளன

திருவருட்பா பாடல் எண் 198

முற்றுகதி
இத்தூர மன்றி யினித்தூர மில்லையெனப்
புத்தூர் வருமடியார் பூரிப்பே

205 - திருப்புத்தூர்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 26 பாடல் 2
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

வேனல் விம்மு வெறியார் பொழில் சோலைத்
தேனும் வண்டும் திளைக்கும் **திருப்புத்தூர்**
ஊனமின்றி உறைவாரவர் போலும்
ஏன முள்ளும் எயிறும் புனைவாரே

நல்ல கேள்வி ஞானசம்பந்தன்
செல்வர் சேடர் உறையும் **திருப்புத்தூர்ச்**
சொல்லல் பாடல் வல்லார்தமக்கு என்றும்
அல்லல் தீரும் அவலம் அடையாவே - 11

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 76 பாடல் 5
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

கருமருவு வல்வினை நோய் அகற்றினான் காண்
காமருபூம் கச்சியேகம்பத்தான் காண்
பெருமருவு பேருலகில் பிணிகள் தீர்க்கும்
பெரும்பற்றத் தண்புலியூர் மன்றாடி காண்
தருமருவு கொடைத் தடக்கை அளகைக் கோன் தன்
சங்காதி ஆரூரில் தனியானை காண்
திருமருவு பொழில் புடைசூழ் **திருப்புத்தூரில்**
திருத்தளியான் காண் அவன் என் சிந்தையானே

200. ராமீசம் (இராமேஸ்வரம்)

இறைவன் : இராமநாதசுவாமி, இராமலிங்கேஸ்வரர்
இறைவி : பர்வத வர்த்தினி, மலைவளர்காதலி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : 22 தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 252 தொலைபேசி : 04573 - 221223
அலைபேசி : 9443685075
முகவரி : அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்,
இராமேஸ்வரம் & அஞ்சல் - 623 526
தலச் சிறப்பு : இராவணனைக் கொன்ற பாவம் தீர இங்கு இராமர் மணல் இலிங்கம் தாபித்து வழிபட்டார். கோவிலுக்குள் 22 தீர்த்தங்களும் வெளியே 22 தீர்த்தங்களும் உள்ளன.

திருவருட்பா பாடல் எண் 199

சித்தாய்ந்து
நாமீச ராகும் நலந்தருமென் றும்பர்தொழும்
ராமீசம் வாழ்சீவ ரத்தினமே

38 - இராமேஸ்வரம்

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 10 பாடல் 1
பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

அலைவளர் தண்மதியோடு அயலே அடக்கி உமை
முலைவளர் பாகம் முயங்கவல்ல முதல்வன் முனி
இலைவளர் தாழைகள் விம்மு கானல் **இராமேச்சுரம்**
தலைவளர் கோல நல்மாலையன் தானிருந்து ஆட்சியே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 61 பாடல் 7
திருநேரிசை இராகம் : நவரோஸ்

வாக்கினால் இன்பு உரைத்து வாழ்கிலார் தம்மையெல்லாம்
போக்கினால் புடைத்து அவர்கள் உயிர்தனை உண்டு மால்தான்
தேக்குநீர் செய்த கோயில் திருவி**ராமேச்சுர**த்தை
நோக்கினால் வணங்குவார்க்கு நோய்வினை நுணுகுமன்றே

கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம்
வீடவே சக்கரத்தால் எறிந்து பின் அன்புகொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவி**ராமேச்சுர**த்தை
நாடி வாழ் நெஞ்சமே நீ நன்னெறி ஆகுமன்றே - 9

201.திருவாடனை(திருஆடானை)

201.திருவாடனை(திருஆடானை)

இறைவன் : ஆதிரத்தினேஸ்வரர், அஜகஜேஸ்வரர்
இறைவி : சினேகவல்லி, அன்பாயிரவல்லி
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : வருண தீர்த்தம், அகத்தியர் தீர்த்தம், சூரிய தீர்த்தம், மார்கண்டேய தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 253 தொலைபேசி : 04561 - 254533
முகவரி : அருள்மிகு அஜகஜேஸ்வரர் திருக்கோயில், திருவாடானை & அஞ்சல், திருவாடானை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் - 623 407
தலச் சிறப்பு : வருணன் மகள் வாருணி துர்வாச முனிவரைப் பழித்தமையால் ஆன உடலும், ஆட்டுதலையுமாய் இருந்த இறைவன் வழிபட்டதாக வரலாறு ஆடு+ஆனை= ஆடானை என்றானது.

திருவருட்பா பாடல் எண் 200

பூமிது
நீடானை சூழும் நிலமன்னர் வாழ்த்துதிரு
வாடானை மேவுகரு ணாகரமே

19 - திருஆடானை

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 112 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

மாதோர் கூறுகந்து ஏறதேறிய
ஆதியானுறை **ஆடானை**
போதினால் புனைந்து ஏத்துவார்தமை
வாதியா வினை மாயுமே

வானிளம் மதி மல்கு வார்சடை
ஆனஞ்சு ஆடலன் **ஆடானை**
தேன் அணிமலர் சேர்த்த முன்செய்த
ஊனம் உள்ள ஒழியுமே - 8

மறைவலாரொடு வானவர்தொழுது
அறையுந் தண்புனல் **ஆடானை**
உறையும் ஈசனை ஏத்தத் தீவினை
பறையு நல்வினை பற்றுமே - 9

வீடினார் மலி வெங்கடத்து நின்று
ஆடலான் உறை **ஆடானை**
நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ்
பாட நோய் பிணி பாறுமே - 11

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு

202.கானப்பேர் (திருக்கானப்பேர்) (காளையார்கோயில்)

202.கானப்பேர் (திருக்கானப்பேர்) (காளையார்கோயில்)

இறைவன் : காளீஸ்வரர், சோமசர், சுந்தரேசர்
இறைவி : சொர்ணவல்லி, சௌந்தரநாயகி, மீனாட்சி
தீர்த்தம் : கஜபுஷ்கரணி, காலி, விஷ்ணு, கௌரி தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், சுந்தரர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 254 தொலைபேசி : 04575 - 232516
முகவரி : அருள்மிகு காளீஸ்வரர் திருக்கோயில், காளையார் கோயில் & அஞ்சல், சிவகங்கை மாவட்டம் - 623 551

திருவருட்பா பாடல் எண் 201

சேடான
வானப்பே ராற்றை மதியை முடிதூடுங்
கானப்பேர் ஆனந்தக் காளையே

86 - திருக்கானப்பேர் (காளையார்கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 26 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

பிடியெலாம் பின்செலப் பெரும் கைமாமலர் தழீஇ
விடியலே தடமுழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழில் **கானப் பேர**ண்ணல் நின்
அடியலால் அடை சரணுடையரோ அடியரே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 84 பாடல் 1
பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

தொண்டர் அடித்தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென் முலையாள் பாகமும் ஆகிவரும்
புண்டரிகப் பரிசாம் மேனியும் வானவர்கள்
பூசலிடக் கடல் நஞ்சுண்ட கருத்தமரும்
கொண்டல் எனத் திகழும் கண்டமும் எண்தோளும்
கோல நறுஞ்சடை மேல் வண்ணமும் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவது என்று கொலோ அடியேன்
கார்வயல் தழ் **கானப்பேரு**றை காளையையே

கன்னலை இன்னமுதைக் கார்வயல் தழ்**கானப்**
பேருறை காளையை ஒண் சீருறை தண்தமிழால்
உன்னி மனத்தயரா உள்ளுருகிப் பரவும்
ஒண்பொழில் நாவலர் கோனாகிய ஆருரன்
பன்னம் இசைக் கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசையும் புகழ
மன்னியிருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே - 10

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

203. பூவணம்(திருப்பூவணம்)

203. பூவணம்(திருப்பூவணம்)

இறைவன் : புஷ்பவனேஸ்வரர், பூவணநாதர்
இறைவி : சௌந்தரநாயகி, மின்னனையாள்
தலமரம் : பலா
பாடல் : மூவர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 255 அலைபேசி : 9443501761
முகவரி : அருள்மிகு பூவணநாதர் திருக்கோயில்,
திருப்பூவணம் & அஞ்சல், (வழி) கண்டியூர்,
இராமநாதபுரம் மாவட்டம் - 623 611
தலச் சிறப்பு : பொன்னனையாள் என்பவள் சிவனடியார்க்கு உபசரித்து அதனால் இறைவன் மகிழ்ந்து அவளுக்கு இரசவாதம் செய்து பொன் கொடுத்தார். அதில் அவள் சிவலிங்கம் அமைத்து அதன் அழகில் மயங்கி முத்தமிட்டாள் அந்த அடையாளம் இன்றும் திருமேனியில் காணலாம்

திருவருட்பா பாடல் எண் 202

மோனருளே
பூவணமும் பூமணமும் போலவ மர்ந்ததிருப்
பூவணத்தில் ஆனந்தப் பொக்கிஷமே

213 - திருப்பூவணம்

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 64 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

அறையார் புனலும் மாமலரும் ஆட அரவார் சடைமேல்
குறையார் மதியம் சூடி மாதோர் கூறுடையான் இடமாம்
முறையார் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும்
திறையார் ஒளிசேர் செம்மை ஓங்கும் தென் **திருப்பூவணமே**

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 20 பாடல் 1
பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

மாதமர் மேனியனாகி வண்டொடு
போதமர் பொழிலணி **பூவண**த்துறை
வேதனை விரவலர் அரணம் மூன்றெய்த
நாதனை அடிதொழ நன்மை ஆகுமே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 18 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

வடிவேறு சூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடை மேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண்குழை தோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில் திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் **பூவண**த்தெம் புனிதனார்க்கே

204. திருச்சுழியல் (திருச்சுழி)

204. திருச்சுழியல் (திருச்சுழி)

இறைவன் : திருமேனிநாதர், சுழிகேசர், தனுநாதர், மணக்கோலநாதர், புவனேஸ்வரர்
இறைவி : துணைமாலையம்மை, சகாயவல்லி, சொர்ணமாலை, மாணிக்கமாலை
தலமரம் : அரசு, புன்னை
தீர்த்தம் : பாவகரி தீர்த்தம் (கௌண்டின்ய ஆறு), சூல தீர்த்தம், கோடி தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 256
முகவரி : அருள்மிகு திருமேனிநாதர் திருக்கோயில், திருச்சுழி & அஞ்சல், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம் - 626 129
தலச் சிறப்பு : பிரளயத்தைச் சுழித்துப் பூமிக்குள் இறைவன் செலுத்தியதால் திருச்சுழியல் எனப்பட்டது. அருச்சுனன் வழிபட்ட தலம் இரமண மகரிஷி அபதாரம் செய்த தலம்

திருவருட்பா பாடல் எண் 203

தீவணத்தில்
கண்சுழிய லென்று கருணையளித் தென்னுளஞ்சேர்
தண்சுழியல் வாழ்சீவ சாக்ஷியே

132 - திருச்சுழியல் (திருச்சுழி)

பாடல்கள்

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 82 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

ஊனாய் உயிர்புகலாய் அகலிடமாய் முகில்பொழியும்
வானாய் வரும்மதியாய் விதிவருவானிடம் பொழிலின்
தேனாதரித்து இசை வண்டினம் மிழற்றும் **திருச்சுழியல்**
நானாவிதம் நினைவார்தமை நலியார் நமன் தமரே

உற்றான் நமக்கு உயரும் மதிச்சடையான் புலனைந்தும்
செற்றார் திருமேனிப் பெருமானூர் **திருச்சுழியல்**
பெற்றான் இனிதுறையத் திறம்பாமைத் திருநாமம்
கற்றார் அவர் கதியுட்செல்வர் ஏத்தும் அதுகடனே - 5

பூவேந்திய பீடத்தவன் தானும் அடலரியும்
கோவேந்திய வினயத்தொடு குறுகப் புகலறியார்
சேவேந்திய கொடியானவன் உறையும் **திருச்சுழியல்**
மாவேந்திய கரத்தான் எமசிரத்தான் தனதடியே - 8

நீரூர்தரு நிமலன் திருமலையார்க்கு அயலருகே
தேரூர் தரும் அரக்கன் சிரம் நெரித்தான் **திருச்சுழியல்**
பேரூர் என உறைவான் அடிப்பெயர் நாவலர் கோமான்
ஆரூரன் தமிழ் மாலை பத்தறிவார் துயரிலரே - 10

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

205.குற்றாலம் (குற்றலாம்)

இறைவன் : குற்றாலநாதர், குறும்பலாஈசர், திரிகூடாசலபதி, திரிகூடாசலேஸ்வரர்
இறைவி : குழல்வாய்மொழியம்மை, வேணுவாக்குவாஹினி
தலமரம் : குறும்பலா தீர்த்தம் : வடஅருவி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 257
தொலைபேசி : 04633 - 283138 அலைபேசி : 9488374077
முகவரி : அருள்மிகு குற்றாலநாதர் திருக்கோயில், குற்றாலம் & அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம் – 627 802

தலச் சிறப்பு : பஞ்ச சபையில் இது **சித்திர சபை**

திருவருட்பா பாடல் எண் 204

பண்செழிப்பக்
கற்றாலங் குண்மைக் கதிதருமென் றற்றவர்தூழ்
குற்றாலத் தன்பர் குதுகலிப்பே

99 - குற்றாலம்

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 99 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : எதுகுலகாம்போதி

வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ்செய் **குற்றாலம்**
அம்பால் நெய்யோடு ஆடல் அமர்ந்தான் அலர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 71 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

திருந்த மதிதூடித் தெண்ணீர் சடைக்கரந்து தேவிபாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தால் காடுறைதல் புரிந்த செல்வர்
இருந்த இடம் வினவில் ஏலம்கமழ் சோலையின வண்டு யாழ் செய்
குருந்த மணநாறும் குன்றிடம் தூழ் தண் சாரல் **குறும்பலாவே**

கொம்பார் பூஞ்சோலைப் **குறும்பலா** மேவிய கொல்லேற்றண்ணல்
நம்பானடி பரவும் நான்மறையான் ஞானசம்பந்தன் சொன்ன
இன்பாய பாடல் இவைபத்தும் வல்லார் விரும்பின் கேட்பார்
தம்பால தீவினைகள் போயகலும் நல்வினைகள் தளரா அன்றே - 11

பஞ்சசபைகள்

பொற்சபை - சிதம்பரம் - தல எண் 1
வெள்ளிசபை - மதுரை - தல எண் 194
ரத்தினசபை - திருவலங்காடு - தல எண் 250
தாமிரசபை - திருநெல்வேலி - தல எண் 205
சித்திர சபை - குற்றாலம் - தல எண் 206

206.நெல்வேலி(திருநெல்வேலி)(திருநெல்வேலி)

இறைவன் : வேணுவனேஸ்வரர், வேய்முத்தநாதர், நெல்லையப்பர், நெல்வேலிநாதர், சாலிவாடீசர்
இறைவி : காந்திமதியம்மை, வடிவுடையம்மை
தலமரம் : மூங்கில்
தீர்த்தம் : பொற்றாமரைக்குளம், கருமாரி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : பாண்டியநாடு
வரிசை எண் : 258 தொலைபேசி : 0462 - 2339910
முகவரி : அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி - 627 001

தலச் சிறப்பு : பஞ்ச சபைகளுள் இது **தாமிர சபை**

திருவருட்பா பாடல் எண் 205

பொற்றாம
நல்வேலி தூழ்ந்து நயன்பெறுமொண் செஞ்சாலி
நெல்வேலி உண்மை நிலயமே

177 - திருநெல்வேலி (திருநெல்வேலி)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 92 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

மருந்தவை மந்திரம் மறுமை நன்னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தை செய் நன்னெஞ்சமே
பொருந்து தண்புறவினில் கொன்றை சொரிதரத் துன்றுபைம்பூஞ்
செருந்தி செம்பொன் மலர் **திருநெல்வேலி** உறை செல்வர்தாமே

வெடிதரு தலையினர் வேனல் வெள்ளேற்றினர் விரிசடையர்
பொடியணி மார்பினர் புலியதள் ஆடையர் பொங்கரவர்
வடிவுடை மங்கையோர் பங்கினர் மாதரை மையல் செய்வார்
செடிபடு பொழிலணி **திருநெல்வேலி** உறை செல்வர்தாமே - 6

பெருந்தண் மாமலர் மிசை அயனவன் அனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் **திருநெல்வேலி** உறை செல்வர் தம்மைப்
பொருந்த நீர்த் தடமல்கு புகலியுள் ஞானசம்பந்தன் சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியாடக் கெடும் அருவினையே - 11

பஞ்சசபைகள்

பொற்சபை - சிதம்பரம் - தல எண் 1
வெள்ளிசபை - மதுரை - தல எண் 194
ரத்தினசபை - திருவலங்காடு - தல எண் 250
தாமிரசபை - திருநெல்வேலி - தல எண் 205
சித்திர சபை - குற்றாலம் - தல எண் 206

207.அஞ்சைக்களஞ் (திருஅஞ்சைக்களம்)

207.அஞ்சைக்களஞ்(திருஅஞ்சைக்களம்) (ஸ்ரீவாஞ்சிக்குளம்)

இறைவன் : மகாதேவர், அஞ்சைக்களத்தீஸ்வரர்
இறைவி : உமையம்மை
தலமரம் : சரக்கொன்றை தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : சேரநாடு
வரிசை எண் : 266 தொலைபேசி : 0487-2331124, 0480-28120612
முகவரி : அருள்மிகு மகாதேவ சுவாமி திருக்கோயில், ஸ்ரீவாஞ்சிக்குளம் & அஞ்சல், (வழி) கொடுங்காளூர், திருச்சூர் மாவட்டம், கேரளா - 680 664
தலச் சிறப்பு : சுந்தர மூர்த்தி நாயனாரின் முத்தி தலம் சேரமான் பெருமான் நாயனாரின் அவதாரத்தலம் வெள்ளை யானையின் மேலமர்ந்து கயிலாயம் சென்றதாக வரலாறு கேரளா மலை நாட்டில் இருக்கும் ஒரே தேவாரத் தலம். அருட்பா எண் : 2071

திருவருட்பா பாடல் எண் 206

வல்வேலை
நஞ்சைக் களத்துவைத்த நாதவெனத் தொண்டர்தொழ
அஞ்சைக் களஞ்சேர் அருவுருவே

3 - திருஅஞ்சைக்களம் (ஸ்ரீவாஞ்சிக்குளம்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 4 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

தலைக்குத் தலைமாலை அணிந்ததென்னே
சடைமேல் கங்கை வெள்ளம் தரித்ததென்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டு அசைத்ததென்னே
அதன்மேல் கதநாகம் கச்சார்த்த தென்னே
மலைக்கு நிகரொப்பன வன்திரைகள்
வலித்து ஏற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அலைக்கும் கடல் அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் **அஞ்சைக்களத்து** அப்பனே

எம்தம் அடிகள் இமையோர் பெருமான்
எனக்கு என்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண் கடல் அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் **அஞ்சைக்களத்து** அப்பனை
மந்தம் முழவும் குழலும் இயம்பும்
வளர் நாவலர்கோன் நம்பிஊரன் சொன்ன
சந்தம் மிகு தண்தமிழ் மாலைகள் கொண்டு
அடிவிழ வல்லார் தடுமாற்று இலரே - 10

208.அவினாசி (அவினாசி) (திருப்புக்கொளியூர்)

208.அவினாசி (அவினாசி) (திருப்புக்கொளியூர்)

இறைவன் : அவினாசிநாதர், பெருங்கேடிலியப்பர், அவினாசிலிங்கேஸ்வரர்
இறைவி : கருணாம்பிகை, பெருங்கருணைநாயகி
தலமரம் : பாதிரி தீர்த்தம் : காசிக் கங்கை (குளம்)
பாடல் : சுந்தரர் நாடு : கொங்குநாடு
வரிசை எண் : 259 தொலைபேசி : 04296 - 273113
அலைபேசி : 9443139503
முகவரி : அருள்மிகு அவினாசிலிங்கேஸ்வரர் திருக்கோயில், அவினாசி & அஞ்சல், அவினாசி வட்டம், கோவை மாவட்டம் - 641 654
தலச் சிறப்பு : முதலை உண்ட பாலகனைப் பல ஆண்டுகள் கழித்து பதிகம் பாடி அச்சிறுவனை முதலை வாயிலிருந்து மீட்ட தலம். இந்த வரலாறு கோயிலுக்குள் கொடி மரத்தின் கீழ் செதுக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு 1கி.மீ தொலைவில் அந்த முதலை இருந்த ஏரி உள்ளது. திருவருட்பா பாடல் 2668

திருவருட்பா பாடல் எண் 207

நெஞ்சடக்கி
ஆன்று நிறைந்தோர்க் கருளளிக்கும் புக்கொளியூர்த்
தோன்று**மவி நாசிச்** சுயம்புவே

13 - அவினாசி (திருப்புப்கொளியூர்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 92 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்
புற்றாடரவா புக்கொளியூர் **அவினாசி**யே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே

உரைப்பார் உரை உகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் **அவினாசி**யே
கரைக்கான் முதலையைப் பிள்ளைத் தரச்சொல்லு காலனையே - 4

நீரேற ஏறு நிமிர்புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளியூர் **அவினாசி**யைக்
காரேறு கண்டனைத் தொண்டன் ஆரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல்லார்க்கு இல்லை துன்பமே - 10

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

209. முருகன் பூண்டி (திருமுருகன்பூண்டி)

இறைவன் : முருகநாதேஸ்வரர், முருகநாதசுவாமி
இறைவி : ஆலிங்கபூஷணஸ்தனாம்பிகை, ஆவுடைநாயகி, மங்களாம்பிகை, முயங்குபூண்முலையம்மை
தலமரம் : வில்வம்
தீர்த்தம் : பிரமதீர்த்தம், ஞானதீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : கொங்குநாடு (சேர நாடு)
வரிசை எண் : 260 அலைபேசி : 94437 61520, 90032 89179
முகவரி : அருள்மிகு முருகநாதேஸ்வரர் திருக்கோயில், திருமுருகன்பூண்டி & அஞ்சல், அவிநாசி வட்டம், கோவை மாவட்டம் - 641 652
தலச் சிறப்பு : சுந்தரர் சென்றபோது பூதகணங்கள் அனுப்பி இறைவன் பறித்துக்கொண்டார். சுந்தரர் இங்கு பதிகம்பாடி அவற்றை மீட்டார் என்பது வரலாறு.

திருவருட்பா பாடல் எண் 208

சான்றவர்கள்
தம்முருகன் பூணுட் டலம்போல வாழ்கின்ற
எம்**முருகன் பூண்டி** இருநிதியே

238 - திருமுருகன்பூண்டி

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 49 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறை கொண்டு ஆறலைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ் **முருகன்பூண்டி** மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே

பசுக்களே கொன்று தின்று பாவிகள் பாவம் ஒன்றறியார்
உசிர்க்கொலை பல நேர்ந்து நாடொறும் கூறை கொள்ளுமிடம்
முசுக்கள் போல் பல வேடர் வாழ் **முருகன்பூண்டி** மாநகர்வாய்
இசுக்கழியப் பயிக்கம் கொண்டு நீர் எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே - 5

முந்தி வானவர் தாம் தொழும் **முருகன்பூண்டி** மாநகர்வாய்ப்
பந்தணை விரல் பாவைதன்னை ஓர்பாகம் வைத்தவனைச்
சிந்தையில் சிவதொண்டன் ஊரன் உரைத்தன பத்தும் கொண்டு
எந்தம் அடிகளை ஏத்துவார் இடரொன்றும் தாம் இலரே - 10

210.கொடிமாடச்செங்குன்றூர்

(கொடிமாடச்செங்குன்றூர்)(திருச்செங்கோடு)

இறைவன் : அர்த்தநாரீஸ்வரர்
இறைவி : பாகம்பிரியாள் தலமரம் : இலுப்பை
தீர்த்தம் : சங்கு தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : கொங்குநாடு (சேர நாடு)
வரிசை எண் : 262 தொலைபேசி : 04288 - 255925
அலைபேசி : 9362023163, 9362022900, 9364229181
முகவரி : அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் - 637 211
தலச் சிறப்பு : சம்பந்த பெருமானுக்கு இங்கு வரும்போது சுரம் வந்தது அப்போது அவ்வினைக்கு இவ்வினையாம் என்ற பதிகம் பாட சுரம் நீங்கியது.

திருவருட்பா பாடல் எண் 209

செம்மையுடன்
அங்குன்றா தோங்கு மணிகொள் **கொடிமாடச்**
செங்குன்றூர் வாழுஞ்சஞ் சீவியே

106 - கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 107 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

வெந்த வெண்ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பில் நல்ல
பந்தணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்தழ் **கொடிமாடச் செங்குன்றூர்** நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே

பொன்திகழ் ஆமையொடு புரிநூல் திகழ்மார்பில் நல்ல
பன்றியின் கொம்பணிந்து பணைத் தோளியோர் பாகமாகக்
குன்றன மாளிகைதழ் **கொடிமாடச் செங்குன்றூர்** வானில்
மின் திகழ் செஞ்சடையான் கழலேத்தல் மெய்ப்பொருளே - 5

நீடலர் கொன்றையொடு நிமிர்புன் சடைதாழ வெள்ளை
வாடலுடை தலையிற் பலிகொள்ளும் வாழ்க்கையனாய்க்
கோடல் வளம்புறவிற் **கொடிமாடச் செங்குன்றூர்** நின்ற
சேடன தாள்தொழுவார் வினையாய தேயுமே - 7

அலைமலி தண்புனல் சூழ்ந்து அழகார் புகலிந் நகர்பேணும்
தலை மகனாகி நின்ற தமிழ் ஞானசம்பந்தன்
கொலை மலி மூவிலையான் **கொடிமாடச் செங்குன்றூர்** ஏத்தும்
நலமலி பாடல் வல்லார் வினையான நாசமே - 11

211.வெஞ்சமாக்கூடல் (வெஞ்சமாக்கூடல்) (வெஞ்சமாங்கூடலூர்)

இறைவன் : கல்யாணவிகிர்தேஸ்வரர், விகிர்தநாதேஸ்வரர்
இறைவி : மதுரபாஷிணி, பண்ணேர்மொழியம்மை, விகிர்தநாயகி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : குடகனாறு தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : கொங்குநாடு
வரிசை எண் : 263 தொலைபேசி : 04324 - 262010
அலைபேசி : 9943527792
முகவரி : அருள்மிகு விகிர்தநாதேஸ்வரர் திருக்கோயில், வெஞ்சமாங்கூடலூர் & அஞ்சல், (வழி) மூலப்பட்டி, அரவக்குறிச்சி வட்டம், கரூர் மாவட்டம் - 639 109

திருவருட்பா பாடல் எண் 210

தங்குமன
வஞ்சமாக் கூடல் வரையா தவர்சூழும்
வெஞ்சமாக் கூடல் விரிசுடரே

264 - வெஞ்சமாக்கூடல் (வெஞ்சமாங்கூடலூர்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 42 பாடல் 1
பண் : கொல்லிக்கௌவானம் இராகம் : நவரோஸ்

எறிக்கும் கதிர்வேய் உதிர் முத்தமொடு
ஏலம் இலவங்கம் தக்கோலம் இஞ்சி
செறிக்கும் புனலுள் பெய்துகொண்டு மண்டித்
திளைத்து எற்று சிற்றாறு அதன் கீழ்க்கரை மேல்
முறிக்கும் தழைமா முடப்புன்னை ஞாழல்
குருக்கத்திகள் மேல் குயில் கூசல் அறா
வெறிக்கும் கலைமா **வெஞ்சமாக்கூடல்**
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே

துளை வெண்குழையும் சுருள் வெண்தோடும்
தூங்கும் காதில் துளங்கும்படியாய்
களையே கமழும் மலர்க் கொன்றையினாய்
கலந்தார்க்கு அருள் செய்திடும் கற்பகமே
பிளை வெண்பிறையாய் பிறங்கும் சடையாய்
பிறவாதவனே பெறுதற்கரியாய்
வெளை மால் விடையாய் **வெஞ்சமாக்கூடல்**
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே - 5

212.நணா(திருநணா) (பவானி)

இறைவன் : சண்முகநாதேஸ்வரர், சங்கமேஸ்வரர்
இறைவி : வேதாம்பிகை தலமரம் : இலந்தை
தீர்த்தம் : பவானி தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : கொங்குநாடு (சேர நாடு) வரிசை எண் : 261
தொலைபேசி : 04256 - 230192 அலைபேசி : 9843248588
முகவரி : அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி, ஈரோடு மாவட்டம் - 638 301

திருவருட்பா பாடல் எண் 211

துஞ்சலெனும்
இன்ன லகற்ற இலங்குபவா னிக்கடல்
என்னு **நணா**வினிடை இன்னிசையே

154 - திருநணா (பவானி)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 72 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

பந்தார் விரல் மடவாள் பாகமா நாகம் பூண்டு ஏறதேறி
அந்தார் அரவணிந்த அம்மானிடம் போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழலில் வண்டுபாடச்
செந்தேன் தெளி ஒளிரத் தேமாங்கனி உதிர்க்கும் **திருநணா**வே

வில்லார் வரையாக மாநாக நாணாக வேடம் கொண்டு
புல்லார் புரமூன்று எரித்தார்க்கு இடம்போலும் புலியுமானும்
அல்லாத சாதிகளும் அங்கழல் மேல் கைகூப்ப அடியார்கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல அருள் புரியும் **திருநணா**வே - 6

பல் வித்தகத்தால் திரைசூழ் கடல்காழி கவுணி சீரார்
நல் வித்தகத்தால் இனிதுணரும் ஞானசம்பந்தன் எண்ணும்
சொல் வித்தகத்தால் இறைவன் **திருநணா** ஏத்துபாடல்
வல் வித்தகத்தான் மொழிவார் பழியிலர் இம்மண்ணின் மேலே - 11

213. பாண்டிக்கொடுமுடி
(திருப்பாண்டிக்கொடுமுடி) (கொடுமுடி)

இறைவன் : மகுடேஸ்வரர், கொடுமுடிநாதர்
இறைவி : மதுரபாஷிணி, திரிபுசுந்தரி, பண்மொழிநாயகி, வடிவுடைநாயகி
தலமரம் : வன்னி
தீர்த்தம் : தேவ தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், காவிரி
பாடல் : மூவர் நாடு : கொங்கு நாடு
வரிசை எண் : 264 தொலைபேசி : 04204 - 222375
முகவரி : அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில், கொடுமுடி, ஈரோடு மாவட்டம் - 638 151
தலச் சிறப்பு : இமயமலையின் சிகரம் ஒன்று ஐந்து சிகரங்களாகச் சிதறியது. அவை சிறப்பு திருவண்ணாமலை, மரகதம் ஈங்கோய் மலை, மாணிக்கம், திருவாட்போக்கியமாகவும், நீலம் பொதிகையாகவும், வைரம் கொடுமுடியாகவும் ஆயின என்பர்.

திருவருட்பா பாடல் எண் 212

துன்னியருள்
வேண்டிக் கொடுமுடியா மேன்மைபெறு மாதவர்சூழ்
பாண்டிக் கொடுமுடியிற் பண்மயமே

197 - திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 69 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரேஸ்

பெண்ணமர் மேனியினாரும் பிறைபுல்கு செஞ்சடையாரும்
கண்ணமர் நெற்றியினாரும் காதமரும் குழையாரும்
எண்ணமரும் குணத்தாரும் இமையவர் ஏத்த நின்றாரும்
பண்ணமர் பாடலினாரும் **பாண்டிக்கொடுமுடி**யாரே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 81 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

சிட்டனைச் சிவனைச் செழும் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழமலர்
பட்டனைத் திருப**பாண்டிக் கொடுமுடி**
நட்டனைத் தொழ நம்வினை நாசமே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 48 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

மற்றுப்பற்று எனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்கறையூரில் **பாண்டிக்கொடுமுடி**
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே



214. கருவூர்(கருவூர்) (கரூர்)

இறைவன் : பசுபதீஸ்வரர், பசுபதிநாதர்
இறைவி : கிருபாநாயகி, சௌந்தர்யநாயகி
தலமரம் : வஞ்சி மரம்
தீர்த்தம் : ஆம்பிரவதி தீர்த்தம், (அமராவதி)
பாடல் : சம்பந்தர் நாடு : கொங்குநாடு (சேரநாடு)
வரிசை எண் : 265 தொலைபேசி : 04324 - 262010
அலைபேசி : 9994012627
முகவரி : அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில், கரூர், கரூர் மாவட்டம் - 639 001
தலச் சிறப்பு : புகழ்ச்சோழர் ஆண்ட பதி எறிபத்த நாயனார், கருவூர்த்தேவர் அவதாரத்தலம்

திருவருட்பா பாடல் எண் 213

தீண்டரிய
வெங்கருவூர் வஞ்ச வினைதீர்த் தவர்சூழ்ந்த
நங்**கருவூர்**ச் செய்யு நவரசமே

75 - கருவூர் (கரூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 28 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

தொண்டெலாமலர் தூவியேத்த நஞ்சு
உண்டல் ஆருயிராய தன்மையர்
கண்டனார் **கருவூ**ருள் ஆனிலை
அண்டனார் அருள் ஈயும் அன்பரே

தேவர் திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர் மும்மதில் எய்த வில்லியர்
காவலர் **கருவூ**ருள் ஆனிலை
மூவர் ஆகிய மொய்ம்பர் அல்லரே - 6

புத்தர் புன்சமணாதர் பொய்யுரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டுமெய்ப்
பத்தர் சேர்**கருவூ**ருள் ஆனிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே - 10

கந்தமார் பொழில் காழி ஞானசம்
பந்தன் சேர் **கருவூ**ருள் ஆனிலை
எந்தையைச் சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தையில் துயராய தீர்வரே - 11



215. வரத்துறை (திருநெல்வாயில் அரத்துறை)

215. வரத்துறை (திருநெல்வாயில் அரத்துறை)
(திருவரத்துறை, திருவட்டுறை)

இறைவன் : ஆனந்தீஸ்வரர், அரத்துறைநாதர், தீர்த்தபுரீஸ்வரர்
இறைவி : ஆனந்தநாயகி, திரிபுரசுந்தரி,அரத்துறைநாயகி
தலமரம் : ஆல் தீர்த்தம் : நிவா நதி
பாடல் : மூவர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 33 அலைபேசி : 04143-246303, 04143-246303
முகவரி : அருள்மிகு அரத்துறைநாதர் திருக்கோயில்,
திருவட்டுறை & அஞ்சல், திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம் - 606 111
தலச் சிறப்பு : வால்மீகி முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 214,215

தங்களற்றின்
தீங்கார் பிறதெய்வத் தீங்குழியில் வீழ்ந்தவரைத்
தாங்கா **வரத்துறை**யில் தாணுவே

175 - திருநெல்வாயில் அரத்துறை (திருவரத்துறை, திருவட்டுறை)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 90 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்று கை கூடுவதன்றால்
கந்தமா மலருத்தி கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை **நெல்வாயில் அரத்துறை** அடிகள்தம் அருளே

உரவு நீர்சடைக் கரந்த ஒருவன் என்று உள்குளிர்ந்து ஏத்திப்
பரவி நைபவர்க்கு அல்லால் பரிந்து கை கூடுவதன்றால்
குரவ நீடுயர் சோலைக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அரவம் ஆரும் **நெல்வாயில் அரத்துறை** அடிகள்தம் அருளே - 6

கறையினார் பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த **அரத்துறை** அடிகள்தம் அருளை
முறைமையால் சொன்ன பாடல் மொழியும் மாந்தர்தம் வினையோய்ப்
பறையும் ஐயுறவில்லைப் பாட்டிவை பத்தும் வல்லார்க்கே - 11



216. பெண்ணாகடம்(பெண்ணாடம்)

216.பெண்ணாகடம்(பெண்ணாடம்)

இறைவன் : சுடர்க்கொழுந்தீசர், பிரளயகாலேஸ்வரர்
இறைவி : ஆமோதனம்மாள், கடந்தைநாயகி, அழகிய காதலி
தலமரம் : சண்பகம்
தீர்த்தம் : சுயிலை, பார்வதி, இந்திரன், முக்குளதீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : நடுநாடு
வரிசை எண் : 34 தொலை பேசி : 04143 - 222788
அலைபேசி : 9842564768
முகவரி : அருள்மிகு. பிரளயகாலேஸ்வரர் திருக்கோயில்,
பெண்ணாடம் & அஞ்சல், திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம் 606 105
தலச் சிறப்பு : (பெண்) தேவ கன்னியரும் (ஆ) காமதேனுவும், (கடம்) யானையும் வழிபட்ட தலம் பெண்ணாகடம், பெண், ஆ, கடம், தூங்கானைமாடம், கடந்தை வேறு பெயர்கள். அப்பர் சுவாமிகள் தம் தோளில் சூலம் மற்றும் இடபக்குறிகள் பொறிக்குமாறு இறைவனை வேண்டிய தலம். தன் பணியாள் சிவனடியாராக வந்த போது அவருக்கு நீர் வார்க்கத் தயங்கிய மனைவியின் கையை வெட்டிய கலிக்கம்ப நாயனார் முத்தி தலம்

திருவருட்பா பாடல் எண் 216

பூங்குழலார்
வீங்கானை மாடஞ்சேர் விண்ணென் றகல்கடந்தைத்
தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே

215 - பெண்ணாகடம் (பெண்ணாடம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 59 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

ஓடுங்கும் பிணிபிறவி கேடு என்றிவை உடைத்தாய வாழ்க்கை ஓழியத் தவம்
அடங்கும் இடம் கருதி நின்றீர் எல்லாம் அடிகள் அடிநிழற்கீழ் ஆளாம் வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவி எங்கும் கெழுமனைகள் தோறும் மறையின் ஒலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில் சேர் **தூங்கானை** மாடம் தொழுமின்களே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 109 பாடல் 1
திருவிருத்தம் இராகம் : சங்கராபரணம்

பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சை உண்டேல் இரும் கூற்று அகல
மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேல் பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் **தூங்கானை** மாடச் சுடர்க் கொழுந்தே

கடவும் திகிரி கடவாது ஒழியக் கயிலை உற்றான்
படவும் திருவிரல் ஒன்று வைத்தாய் பனிமால் வரைபோல்
இடபம் பொறித்து என்னை ஏன்று கொள்ளாய் இருஞ்சோலை திங்கள்
தடவும் கடந்தையுள் **தூங்கானை** மாடத்து எம் தத்துவனே - 10



217. கூடலைஆற்றூர் (திருக்கூடலையாற்றூர்)

இறைவன் : நர்த்தனவல்வலபேஸ்வரர், நெறிகாட்டுநாதர்,
இறைவி : பராசக்தி,ஞானசக்தி
தலமரம் : கல்லால் தீர்த்தம் : வெள்ளாறு, மணிமுத்தாறு தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 35 அலைபேசி : 9942249938
முகவரி : அருள்மிகு நர்த்தனவல்வலபேஸ்வரர் திருக்கோயில்,
திருக்கூடலையாற்றூர், கவாலக்குடி & அஞ்சல்,
காட்டுமன்னார்கோயில் வட்டம்,கடலூர் மாவட்டம் - 608 702

திருவருட்பா பாடல் எண் 217

நீங்காது
நீடலை யாற்றூர் நிழன்மணிக்குன் றோங்குதிருக்
கூடலை யாற்றூர்க் குணநிதியே

101 - திருக்கூடலையாற்றூர்

பாடல்கள்

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 85 பாடல் 1
பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலையாற்றூரில்
அடிகள் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே

வேதியர் விண்ணவரும் மண்ணவரும் தொழநல்
சோதியது உருவாகிச் சுரிகுழல் உமையோடும்
கோதிய வண்டறையும் கூடலையாற்றூரில்
ஆதியிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே - 5

மறைமுதல் வானவரும் மாலயன் இந்திரனும்
பிறைநுதல் மங்கையொடும் பேய்க்கணமும் சூழக்
குறள்படை அதனோடும் கூடலையாற்றூரில்
அறவன் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே - 8

கூடலையாற்றூரில் கொடியிடை அவளோடும்
ஆடலுகந்தானை அதிசயம் இதுவென்று
நாடிய இன் தமிழால் நாவல ஊரன்சொல்
பாடல்கள் பத்தும் வல்லார் தம்வினை பற்றறுமே - 10



218. கெருக்கத் தம்புலியூர்(பெரும்புலியூர்)

இறைவன் : வியாக்ரபுரீஸ்வரர்
இறைவி : சௌந்தரநாயகி
பாடல் : சம்பந்தர் நாடு : சோழநாடு (வடகரை)
வரிசை எண் : 107 அலைபேசி : 9443447826, 9442729856
முகவரி : அருள்மிகு. வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில்,
பெரும்புலியூர், திருநெய்த்தானம் அஞ்சல்,
(வழி) திருவையாறு , திருவையாறு வட்டம்,
தஞ்சை மாவட்டம் 613 203
தலச் சிறப்பு : வியாக்ரபாத முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 218

நாடியவான்
அம்புலியூர் சோலை யணிவயல்க ளோங்கெருக்கத்
தம்புலியூர் வேத சமரசமே
நவக்கிரக சந்நிதியில் எல்லாகிரகங்
களும் தூரியனைப் பார்த்தவாறு அமைந்து
ள்ளது, கருவறை பத்ம பீடத்தின் மீது
அமைந்துள்ளது.

216 - பெரும்புலியூர்

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 67 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

மண்ணுமோர் பாகமுடையார் மாலுமோர் பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார் வேதமுடைய விமலர்
கண்ணுமோர் பாகமுடையார் கங்கை சடையில் கரந்தார்
பெண்ணுமோர் பாகமுடையார் பெரும்புலியூர் பிரியாரே

கற்றது உறப் பணிசெய்து காண்டும் என்பாரவர் தங்கள்
முற்றிது அறிதும் என்பார்கள் முதலியர் வேதபுராணர்
மற்றிது அறிதும் என்பார்கள் மனத்திடையார் பணிசெய்யப்
பெற்றி பெரிதும் உகப்பார் பெரும்புலியூர் பிரியாரே - 6

உறவியும் இன்புறு சீறும் ஓங்குதல் வீடெளிதாகித்
துறவியும் கூட்டமும் காட்டித் துன்பமும் இன்பமும் தோற்றி
மறவியென் சிந்தனை மாற்றி வாழவல்லார் தமக்கென்றும்
பிறவி அறுக்கும் பிரானார் பெரும்புலியூர் பிரியாரே - 8

பிறை வளரும் முடிச்சென்னிப் பெரும்புலியூர்ப் பெருமானை
நறை வளரும் பொழில் காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
மறை வளரும் தமிழ் மாலை வல்லவர் தம்துயர் நீங்கி
நிறை வளர் நெஞ்சினராகி நீடுலகத்து இருப்பாரே - 11



219. தினையூர் (திருத்துறையூர்) (திருத்தளூர்)

இறைவன் : சிஷ்டகுருநாதேஸ்வரர், பசுபதீஸ்வரர்
இறைவி : சிவலோகநாயகி, பூங்கோதைநாயகி
தலமரம் : கொன்றை தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 47 தொலைபேசி : 04142 - 248498
அலைபேசி : 9444807393
முகவரி : அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில்,
திருத்துறையூர் & அஞ்சல், பண்ருட்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் 607 205
தலச் சிறப்பு : அருணந்தி சிவாசாரியார் அவதரித்து வாழ்ந்த தலம்
சுந்தரர் தவநெறி வேண்டிப் பெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 219

நம்புவிடை
ஆங்குந் தினையூர்ந் தருளாயென் றன்பர்தொழு
தோங்குந் **தினையூர்** உமாபதியே

147 - திருத்துறையூர் (திருத்தளூர்)

பாடல்கள்

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 13 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

மலையார் அருவித்திரள் மாமணியுந்திக்
குலையாரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
கலையார் அல்குல் கன்னியர் ஆடும் **துறையூர்த்**
தலைவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே

மட்டார் மலர்க் கொன்றையும் வன்னியும் சாடி
மொட்டாரக் கொணர்ந்தெற்றி ஓர் பெண்ணை வடபால்
கொட்டு ஆட்டொடு பாட்டொலி ஓவாத் **துறையூர்ச்**
சிட்டா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே - 6

கொய்யா மலர்க் கோங்கொடு வேங்கையும் சாடிச்
செய்யாரக் கொணர்ந்து எற்றியோர் பெண்ணையும் வடபால்
மையார்தடங் கண்ணியர் ஆடும் **துறையூர்**
ஐயா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே - 8

செய்யார் கமல மலர் நாவலூர் மன்னன்
கையால் தொழுது ஏத்தப்படும் **துறையூர்** மேல்
பொய்யாத் தமிழ் ஊரன் உரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறிதானே - 11



220.சோபுரத்தின் (திருச்சோபுரம்) (தியாகவல்லி)

இறைவன் : மங்களபுரீஸ்வரர், திருச்சோபுரநாதர்
இறைவி : தியாகவல்லியம்மை, சத்யதாட்சி,
வேல்நெடுங்கண்ணி
தலமரம் : கொன்றை தீர்த்தம் : குளம்
பாடல் : சம்பந்தர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 38 அலைபேசி : 9843670518, 9442585845
முகவரி : அருள்மிகு மங்களபுரீஸ்வரர் திருக்கோயில்,
திருச்சோபுரம், தியாகவல்லி & அஞ்சல்,
கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம் - 608 801

திருவருட்பா பாடல் எண் 220

தீங்குறுமொன்
னார்புரத்தை வெண்ணகைத்தீ யாலழித்தா யென்றுதொழச்
சோபுரத்தின் வாழ்ஞான தீவகமே

137 - திருச்சோபுரம் (தியாகவல்லி)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 51 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

வெங்கணானை ஈருரிவை போர்த்து விளங்கு மொழி
மங்கை பாகம் வைத்துகந்த மாண்பது என்னைகொலாம்
கங்கையோடு திங்கள்சூடிக் கடிகமழும் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் **சோபுரம்** மேயவனே

தீயராய வல்லரக்கர் செந்தழலுள் அழுந்தச்
சாயவெய்து வானவரைத் தாங்கியது என்னைகொலாம்
பாயும் வெள்ளை ஏற்றையேறிப் பாய்புலித்தோல் உடுத்த
தூயவெள்ளை நீற்றினானே **சோபுரம்** மேயவனே - 3

கொல் நவின்ற மூவிலை வேல் கூர்மழுவாள் படையன்
பொன்னை வென்ற கொன்றைமாலை சூடும் பொற்பு என்னைகொலாம்
அன்னமன்ன மெல்நடையாள் பாகம் அமர்ந்து அரைசேர்
துன்னவண்ண ஆடையினாய் **சோபுரம்** மேயவனே - 6

சோலைமிக்க தண்வயல்சூழ் சோபுரம் மேயவனைச்
சீலமிக்க தொல்புகழார் சிரபுரக்கோன் நலத்தால்
ஞாலமிக்க தண்டமிழால் ஞானசம்பந்தன் சொன்ன
கோலமிக்க மாலைவல்லார் கூடுவர் வானுலகே - 11



221. அதிகை (திருவதிகை)

இறைவன் : வீரட்டேஸ்வரர், வீரட்டநாதர், அதிகைநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி
தலமரம் : சரக்கொன்றை தீர்த்தம் : கெடில நகதி
பாடல் : மூவர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 39 அலைபேசி : 94423780111, 9841962089, 9443988779
முகவரி : அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில், திருவதிகை, பண்ருட்டி அஞ்சல், கடலூர் மாவட்டம் - 607 106
தலச் சிறப்பு : திலகவதியார் பூத்தொண்டு புரிந்த தலம்(திருநாவுக்கரசர் அக்கா)திருநாவுக்கரசர் சுவாமிகளை இறைவன் சூலை நோய் கொடுத்து நீக்கிய தலம், கூற்றாயினவாறு எனத் தொடங்கும் தமது முதல் பதிகம் தொடங்கிதும் இந்த தலம் சம்பந்தர் இறைவன் திருநடனத்தை கண்டது இத்தலம் சுந்தரர்க்கு திருவடி தீட்சை தந்ததும் இத்தலம் .

அருட்பா எண் : 2664

திருவருட்பா பாடல் எண் 221

வார்கெடிலச்
சென்னதிகை யோங்கித் திலதவதி யார்பரவும்
மன்னதிகை வீரட்ட மாதவமே

5 - திருவதிகை

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 46 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

குண்டைக் குறட்பூதம் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலான் ஆடும் வீரட்டானத்தே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 1 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமை
பல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 38 பாடல் 1
பண் : கொல்லிக்கௌவாணம் இராகம் : நவரோஸ்

தம்மானை அறியாத சாதியார் உளரே சடைமேற்கொள்
பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்து
அம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல் வைத்திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே

222.நாவலூர்(திருநாவலூர்)

இறைவன் : பக்தஜனேஸ்வரர், திருநாவலேஸ்வரர்
இறைவி : மனோன்மணி, சுந்தரநாயகி, சுந்தராம்பிகை
தலமரம் : நாவல் தீர்த்தம் : கோமுகி தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 40 அலைபேசி : 9443382945, 9486150804
முகவரி : அருள்மிகு பக்தஜனேஸ்வரர் திருக்கோயில், திருநாவலூர் & அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 607 204
தலச் சிறப்பு : சுந்தரரின் அவதாரத் தலம், சுக்கிரன் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 222

பன்னரிதாம்
ஆவலூ ரெங்களுடை ஆரூர னாரூராம்
நாவலூர் ஞானியருண் ஞாபகமே

167 - திருநாவலூர்

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 17 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

கோவலன் நான்முகன் வானவர் கோனும் குற்றேவல் செய்ய
மேவலர் முப்புரம் தீயெழுவித்தவன் ஓரம்பினால்
ஏவலனார் வெண்ணெய்நல்லூரில் வைத்தென்னை ஆளும் கொண்ட
நாவலனார்க்கிடமாவது நம் திருநாவலூரே

தன்மையினால் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாட்சபை முன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத் தந்து என்னைப் போகம் புணர்த்த
நன்மையினார்க்கு இடமாவது நம் திருநாவலூரே - 2

நாதனுக்கு ஊர் நமக்கு ஊர் நரசிங்க முனையரையன்
ஆதரித்து ஈசனுக்கு ஆட்செyமூர் அணி நாவலூர் என்று
ஓதநல் தக்கவன் தொண்டன் ஆரூரன் உரைத்த தமிழ்
காதலித்தும் கற்றும் கேட்பவர் தம்வினை கட்டறுமே - 11

223. முதுகுன்றம் (திருமுதுகுன்றம்) (விருத்தாசலம்)

இறைவன் : விருத்தகிரீஸ்வரர், பழமலைநாதர்
இறைவி : பெரியநாயகி, விருத்தாம்பிகை, பாலாம்பிகை
தலமரம் : வன்னி
தீர்த்தம் : மணிமுத்தாறு, அக்கினி, குபேர, சக்கர தீர்த்தங்கள்
பாடல் : மூவர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 41 அலைபேசி : 9942426331
முகவரி : அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில்,
விருத்தாசலம் & அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் - 606 001
தலச் சிறப்பு : சுந்தரர் இறைவனிடத்தில் தாம்பெற்ற பொன்னை இங்குள்ள
மணிமுத்தாற்றில் இட்டுப் பின் திருவாரூர்
கமலாலயத்திருகுளத்தில் எடுத்தார் என்பது வரலாறு. அருட்பா

பாடல் எண் : 2667

திருவருட்பா பாடல் எண் 223

தேவகமாம்
மன்ற மமர்ந்த வளம்போற் றிகழ்ந்தமுது
குன்ற மமர்ந்தஅருட் கொள்கையே

237 - திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 34 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

வண்ண மாமலர்கொடு வானவர் வழிபட
அண்ணலார் ஆயிழையாளொடும் அமர்விடம்
விண்ணின் மாமழை பொழிந்து இழிய வெள்ளருவி சேர்
திண்ணிலார் புறவணி முதுகுன்றமே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 68 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

கருமணியைக் கனகத்தின் குன்றொப்பானைக்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் தன்னைக்
குருமணியைக் கோளரவம் ஆட்டுவானைக்
கொல்வேங்கை அதளானைக் கோவணவன் தன்னை
அருமணியை அடைந்தவர்கட்கு அமுதொப்பானை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
திருமணியைத் திருமுதுகுன்று உடையான் தன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 25 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் எரித்தீர் முதுகுன்றம் அமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவை இவள் தன்முகப்பே
என்செய்தவாறு அடிகேள் அடியேன் இட்டளம் கெடவே

224. திருநெல்வெண்ணெய் (நெய்வெணை)

இறைவன் : சொர்ணகடேஸ்வரர், வெண்ணெயப்பர்,
நெல்வெண்ணெய்நாதர்
இறைவி : பிருகந்நாயகி, நீலமலர்க்கண்ணி
தலமரம் : புன்னை தீர்த்தம் : பெண்ணை நதி
பாடல் : சம்பந்தர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 42 அலைபேசி : 9486282952
முகவரி : அருள்மிகு சொர்ணகடேஸ்வரர் திருக்கோயில்,
நெய்வெணை, கூவாடு அஞ்சல், (வழி) எறையூர்,
உளுந்தூர் பேட்டை வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் -607 201
தலச் சிறப்பு : சனகாதி முனிவர்கள் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 224

அன்றகத்தின்
நல்வெண்ணெ யுண்டொளித்த நாரணன்வந் தேத்துகின்ற
நெல்வெண்ணெய் மேவுசிவ நிட்டையே

176 - திருநெல்வெண்ணெய் (நெய்வெணை)

பாடல்கள்

சுந்தரர் 3ஆம் திருமுறை பதிகம் 96 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

நல்வெணெய் விழுது பெய்தாடுநிர் நாள்தொறும்
நெல்வெணெய் மேவிய நீரே
நெல்வெணெய் மேவிய நீருமை நாள்தொறும்
சொல்வணம் இடுவது சொல்லே

நெற்றியோர் கண்ணுடை நெல்வெணெய் மேவிய
பெற்றிகொள் பிறை நுதலீரே
பெற்றிகொள் பிறை நுதலீருமைப் பேணுதல்
கற்றறிவோர்கள் தம் கடனே - 6

நிலமல்கு தொல்புகழ் நெல்வெணெய் ஈசனை
நலமல்கு ஞானசம்பந்தன்
நலமல்கு ஞானசம்பந்தன் செந்தமிழ்
சொல மல்குவார் துயரிலரே - 11

225. கோவலூர் (திருக்கோவலூர்) (திருக்கோயிலூர்)

இறைவன் : வீரட்டேஸ்வரர்,
இறைவி : பிருகந்நாயகி, பெரியநாயகி, சிவானந்தவல்லி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : தென்பெண்ணை
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 43 அலைபேசி : 9486280030, 9842623020, 9842310031
முகவரி : அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்,
திருக்கோயிலூர் & அஞ்சல், திருக்கோயிலூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 605 757
தலச் சிறப்பு : மெய்ப்பொருள் நாயனார் ஆண்ட பதி.இராஜராஜ சோழன் பிறந்த தலம். ஔவையாரை துதிக்கையால் தூக்கிக் கயிலையில் சேர்ந்த தலம்

திருவருட்பா பாடல் எண் 225

சொல்வண்ணம்
நாவலர் போற்றி நலம்பெறவே யோங்குதிருக்
கோவலூர் வீரட்டங் கொள்பரிசே

119 - திருக்கோவலூர் (திருக்கோயிலூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 100 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

படைகொள் கூற்றம் வந்து மெய்ப் பாசம் விட்டபோதின் கண்
இடைகொள்வார் எமக்கிலை எழுக போது நெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதை குழகன் **கோவலூர்**தனுள்
விடையதேறும் கொடியினான் வீரட்டானம் சேர்துமே

கழியொடு உலவு கானல்சூழ் காழி ஞானசம்பந்தன்
பழிகள் தீரச்சொன்ன சொல் பாவநாசம் ஆதலால்
அழிவிலீர் கொண்டேத்துமின் அந்தண் **கோவலூர்**தனுள்
விழிகொள் பூதப் படையினான் வீரட்டானம் சேர்துமே - 11

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 69 பாடல் 1
திருநேரிசை இராகம்: நவரோஸ்

செத்தையேன் சிதம்பநாயேன் செடியனேன் அழுக்குப் பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகலிடம் அறிய மாட்டேன்
எத்தை நான் பற்றி நிற்கேன் இருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வதென்னே **கோவல் வீரட்டனீரே**

விரிகடல் இலங்கைக் கோனை வியன் கயிலாயத்தின் கீழ்
இருபது தோளும் பத்துச் சிரங்களும் நெரிய ஊன்றிப்
பரவிய பாடல் கேட்டுப் படை கொடுத்து அருளிச் செய்தார்
குரவொடு கோங்கு சூழ்ந்த **கோவல் வீரட்டனாரே** - 10

226. அறையணிநல்லூர் (அறையணிநல்லூர்) (அரகண்டநல்லூர்)

இறைவன் : அதுல்யநாதேஸ்வரர், ஒப்பிலாமணீஸ்வரர், அறையணிநாதர்
இறைவி : சௌந்தர்யகனகாம்பிகை, அருள்நாயகி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : பெண்ணையாறு
பாடல் : சம்பந்தர் நாடு : நடுநாடு
வரிசை எண் : 44 அலைபேசி : 9965144849
முகவரி : அருள்மிகு அதுல்யநாதேஸ்வரர் திருக்கோயில், அரகண்டநல்லூர் & அஞ்சல், திருக்கோயிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் 605 752
தலச் சிறப்பு : பாண்டவர்கள் வழிபட்ட தலம், பீமன் உண்டாக்கிய குலம். இரமண மகரிஷியை திருவண்ணாமலைக்கு வருமாறு அம்பாள் உத்தரவிட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 226

ஆவலர்மா
தேவா இறைவா சிவனே யெனுமுழக்கம்
ஓவா **அறையணிநல் லூரு**யர்வே

15 - அறையணிநல்லூர் (அரகண்டநல்லூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 77 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

பீடினாற் பெரியோர்களும் பேதமைகெடத் தீதிலா
வீடினால் உயர்ந்தார்களும் விடிலார் இளவெண்மதி
சூடினார் மறைபாடினார் சுடலை நீறணிந்தார் அழல்
ஆடினார் **அறையணிநல்லூர்** அங்கையால் தொழுவார்களே

விரையினார் கொன்றை சூடியும் வேகநாகமும் வீக்கிய
அரையினார் **அறையணிநல்லூர்** அண்ணலார் அழகாயதோர்
நரையினார் விடையூர்தியார் நக்கனார் நறும்போதுசேர்
உரையினால் உயர்ந்தார்களும் உரையினால் உயர்ந்தார்களே - 6

வெய்ய நோயிலர் தீதிலர் வெறியராய்ப் பிறர் பின்செலார்
செய்வதே அலங்காரமாம் இவைஇவை தேறி இன்புறில்
ஐயமேற்று உனும் தொழிலராம் அண்ணலார் **அறையணிநல்லூர்ச்**
சைவனாரவர் சார்வலால் யாதும் சார்விலோம் நாங்களே - 9

கழியுலாம் கடல்கானல் சூழ் கழுமலம் அமர்தொல்பதிப்
பழியிலா மறைஞானசம்பந்தன் நல்லதோர் பண்பினார்
மொழியினால் **அறையணிநல்லூரர்** முக்கண் மூர்த்திகள் தாள்தொழுங்
கெழுவினர் அவர் தம்மொடும் கேடில்வாழ் பதிபெறுவரே - 11

227.இடையாற்றின் (இடையாறு) (எடையார்)

இறைவன் : மருதீஸ்வரர், இடையாற்றீசர்
இறைவி : ஞானாம்பிகை, சிற்றிடைநாயகி
தலமரம் : மருதமரம் தீர்த்தம் : பெண்ணையாறு
பாடல் : சுந்தரர் நாடு : நடுநாடு
வரிசை எண் : 45 அலைபேசி : 9442423919, 9884777078
முகவரி : அருள்மிகு மருதீஸ்வரர் திருக்கோயில்,
T.எடையார் & அஞ்சல் (வழி) பெரியசெவலை,
திருக்கோயிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் 607 209
தலச் சிறப்பு : சுகர் முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 227

தாவாக்
கடையாற்றி னன்பர்தமைக் கல்லாற்றி னீக்கும்
இடையாற்றின் வாழ்நல் இயல்பே

35 - இடையாறு (எடையார்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 31 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

முந்தையூர் முதுகுன்றம் குரங்கணில் முட்டம்
சிந்தையூர் நன்று சென்று அடைவான் திருவாரூர்
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமான் **இடையாறு** இடைமருதே

நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்றம் அமர்ந்த
பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப்புலியூர்
மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி வாய்த்த
இறையனூர் எய்தமான் **இடையாறு** இடைமருதே - 5

திங்களூர் திருவாதிரையான் பட்டினமூர்
நங்களூர் நறையூர் நனிநாலிசை நாலூர்
தங்களூர் தமிழான் என்று பாவிக்கவல்ல
எங்களூர் எய்தமான் **இடையாறு** இடைமருதே - 6

ஊறுவாயினன் நாடிய வன்தொண்டன் ஊரன்
தேறுவார் சிந்தை தேறும் இடம் செங்கண் வெள்ளேறு
ஏறுவார் எய்தமான் **இடையாறு** இடைமருதைக்
கூறுவார் வினை எவ்விட மெய் குளிர்வாரே - 10



228. வெண்ணெய் நல்லூர் (திருவெண்ணெய் நல்லூர்)

இறைவன் : கிருபாபுரீஸ்வரர், வேணுபுரீஸ்வரர்,
அருட்டுறைநாதர்,தடுத்தாட்கொண்டநாதர்
இறைவி : மங்களாம்பிகை, வேற்கண்ணியம்மை
தலமரம் : மூங்கில் தீர்த்தம் : தண்ட தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 46 அலைபேசி : 9994270882, 9442422197, 9345660711
முகவரி : அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயில்,
திருவெண்ணெய்நல்லூர் & அஞ்சல்
திருக்கோயிலூர் வட்டம்,விழுப்புரம் மாவட்டம் 607 203
தலச் சிறப்பு : மெய்க்கண்டார் வாழ்ந்த தலம். இவரின் சமாதிக்
கோயில் வடக்கு தெருவில் உள்ளது. சுந்தரர் வாழ்வில்
ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய தலம் இறைவன்
வலிய வழக்கிட்டு அவரை ஆட்கொண்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 228

இடையாது
சொல்லூரன் றன்னைத் தொழும்புகொளுஞ் சீர்**வெண்ணெய்**
நல்லூ ரருட்டுறையின் நற்பயனே

268 - திருவெண்ணெய்நல்லூர்

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 1 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் **வெண்ணெய் நல்லூர்** அருள்துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே

ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய்
வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்
தேனார் பெண்ணைத் தென்பால் **வெண்ணெய் நல்லூர்** அருள்துறையுள்
ஆனாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே - 7

காரூர் புனலெய்திக் கரை கல்லித் திரைக் கையால்
பாரூர் புகழெய்தித் திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர் பெண்ணைத் தென்பால் **வெண்ணை நல்லூர்** அருள்துறையுள்
ஆரூரன் எம்பெருமாற்கு ஆளல்லேன் எனலாமே - 10



சிவசிவ சிவயநம நமசிவய அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

229. துறையூர் (திருத்துறையூர்) (திருத்தளூர்)

இறைவன் : சிஷ்டகுருநாதேஸ்வரர், பசுபதீஸ்வரர்
இறைவி : சிவலோகநாயகி, பூங்கோதைநாயகி
தலமரம் : கொன்றை
தீர்த்தம் : சூரிய தீர்த்தம் பாடல் : சுந்தரர்
நாடு : நடு நாடு வரிசை எண் : 47
தொலைபேசி : 04142 – 248498 அலைபேசி : 9444807393
முகவரி : அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில்,
திருத்துறையூர் & அஞ்சல், பண்ருட்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் 607 205

திருவருட்பா பாடல் எண் 229

மல்லார்ந்து
மாசுந் துறையூர் மகிபன்முதல் மூவருஞ்சீர்
பேசுந் **துறையூர்ப்** பிறைசூடி

147 - திருத்துறையூர் (திருத்தளூர்)

பாடல்கள்

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 13 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

மலையார் அருவித்திரள் மாமணியுந்திக்
குலையாரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
கலையார் அல்குல் கன்னியர் ஆடும் **துறையூர்த்**
தலைவா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே

மட்டார் மலர்க் கொன்றையும் வன்னியும் சாடி
மொட்டாரக் கொணர்ந்தெற்றி ஓர் பெண்ணை வடபால்
கொட்டு ஆட்டொடு பாட்டொலி ஓவாத் **துறையூர்ச்**
சிட்டா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே - 6

கொய்யா மலர்க் கோங்கொடு வேங்கையும் சாடிச்
செய்யாரக் கொணர்ந்து எற்றியோர் பெண்ணையும் வடபால்
மையார்தடங் கண்ணியர் ஆடும் **துறையூர்**
ஐயா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே - 8

செய்யார் கமல மலர் நாவலூர் மன்னன்
கையால் தொழுது ஏத்தப்படும் **துறையூர்** மேல்
பொய்யாத் தமிழ் ஊரன் உரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறிதானே - 11



230. வடுகூர் (வடுகூர்) (திருவாண்டார் கோயில்)

இறைவன் : வடுகீஸ்வரர், வடுகநாதர், வடுகூர்நாதர்
இறைவி : திரிபுரசுந்தரி, வடுவகிர்க்கண்ணி
தலமரம் : வன்னி தீர்த்தம் : வாமதேவ தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 48 அலைபேசி : 9994190417, 9344668180
முகவரி : அருள்மிகு வடுகீஸ்வரர் திருக்கோயில்,
திருவாண்டார் கோயில் & அஞ்சல்,(வழி) கண்டமங்கலம்,
புதுவை 605 102

திருவருட்பா பாடல் எண் 230

நேசமுற
வேற்றா வடுகூ ரிதயத்தி னார்க்கென்றுந்
தோற்றா **வடுகூர்ச்** சுயஞ்சுடரே

243 - வடுகூர் (திருவாண்டார் கோயில்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 87 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

சுடுகூர் எரிமாலை அணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாள் ஒன்றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமம் கவலை பிணி இல்லார்
வடுகூர் புனல் சூழ்ந்த **வடுகூர்** அடிகளே

தளரும் கொடியன்னாள் தன்னோடு உடனாகிக்
கிளரும் அரவு ஆரத்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண்டு இசைபாட
ஒளிரும் **வடுகூரில்** ஆடும் அடிகளே - 6

பிறையும் நெடுநீரும் பிரியா முடியினார்
மறையும் பலபாடி மயானத் துறைவாரும்
பறையும் அதிர்குழலும் போலப் பல வண்டாங்கு
அறையும் **வடுகூரில்** ஆடும் அடிகளே - 8

படிநோன்பவை ஆவர் பழியில் புகழான
கடிநாண் நிகழ் சோலை கமழும் **வடுகூரைப்**
படியான சிந்தைமொழியார் சம்பந்தன்
அடிஞானம் வல்லார் அடி சேர்வார்களே - 11



231. மாணிக்குழி (திருமாணிக்குழி)

இறைவன் : வாமனபுரீஸ்வரர், உதவிநாயகர், மாணிக்கவரதர்
இறைவி : அம்புஜாட்சி, உதவிநாயகி, மாணிக்கவல்லி
தலமரம் : கொன்றை
தீர்த்தம் : சுவேத தீர்த்தம், கெடில தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : நடு நாடு வரிசை எண் : 49
தொலைபேசி : 04142 - 224328 அலைபேசி : 9942094516, 9362638728
முகவரி : அருள்மிகு வாமனபுரீஸ்வரர் திருக்கோயில், திருமாணிகுழி & அஞ்சல், (வழி) திருவகீந்திபுரம், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம் 607 401
தலச் சிறப்பு : மாவலியை அழித்த பாவம் தீர திருமால் வழிபட்டதலம். அத்ரிஎன்கின்ற வடநாட்டு வணிகனுக்கு திருடர்களிடமிருந்து காத்தமையால் உதவி புரிந்தால் இத்தலம் : இறைவர் உதவி நாயகர், இறைவி உதவி நாயகி

திருவருட்பா பாடல் எண் 231

ஆற்றமயல்
காணிக் குழிவீழ் கடையர்க்குக் காண்பரிய
மாணிக் குழிவாழ் மகத்துவமே

230 - திருமாணிகுழி

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 77 பாடல் 2
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

சோதிமிகு நீறது மெய்பூசி ஒருதோலுடை புனைந்து தெருவே
மாதர் மனைதோறும் இசைபாடி வசிபேசும் அரனார் மகிழ்விடம்
தாதுமலி தாமரை மணம் கமழ வண்டுமுரல் தண்பழனம் மிக்கு
ஓதமலி வேலைபுடை சூழுலகில் நீடு உதவி **மாணிகுழி**யே

மந்தமலர் கொண்டு வழிபாடு செயும் மாணி உயிர் வவ்வ மனமாய்
வந்தவொரு காலனுயிர் மாள உதைசெய்த மணிகண்டன் இடமாம்
சந்தினொடு காரகில் சுமந்து தட மாமலர்கள் கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்து வயல் பாயும் மணமார் உதவி **மாணிகுழி**யே - 6

உந்திவரு தண்கெடிலம் ஓடுபுனல் தூழ் உதவி **மாணிகுழி** மேல்
அந்திமதி சூடிய எம்மானை அடி சேரும் அணிகாழி நகரான்
சந்தம் நிறை தண்தமிழ் தெரிந்து உணரும் ஞானசம்பந்தனது சொல்
முந்தி இசைசெய்து மொழிவார்கள் உடையார்கள் நெடுவான நிலனே - 11



232. பாதிரிப்புலியூர் (திருப்பாதிரிப்புலியூர்) திருப்பாப்புலியூர், கடலூர்)

இறைவன் : பாடலேஸ்வரர், தோன்றாத்துணை நாதர், சிவக்கொழுந்தீசர், கரையேற்றும்பிரான்
இறைவி : பெரியநாயகி, பிருகந்நாயகி, தோகையம்மை, அருந்தவநாயகி
தலமரம் : பாடலம் (பாதிரி)
தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம் (கடல்) சிவகரம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 50 தொலைபேசி : 04142 - 236728
முகவரி : அருள்மிகு பாடலேஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர் & அஞ்சல், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம் 607 002
தலச் சிறப்பு : அகத்தியர், வியாக்ரபாதர் வழிபட்ட தலம், திருநாவுக்கரசு சுவாமிகளைச் சமணர்கள் கல்லோடு பிணைத்துக் கடலில் இட்ட போது அவர் இங்குதான் கரை ஏறி தலம் ஈன்றாளுமாய் என்ற பதிகம்

பாடப்பெற்ற தலம் **அருட்பா எண் : 2657**

திருவருட்பா பாடல் எண் 232

மாணுற்ற
பூப்பா திரிகொன்றை புன்னைமுதற் சூழ்ந்திலங்கும்
ஏர்ப்**பா திரிப்புலியூர்** ஏந்தலே

199 - திருப்பாதிரிப்புலியூர் (திருப்பாப்புலியூர், கடலூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 121 பாடல் 1
பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

முன்னம் நின்ற முடக்கால் முயற்கு அருள் செய்து நீள்
புன்னை நின்று கமழ் **பாதிரிப்புலியூர்** உளான்
தன்னை நின்று வணங்கும் தனைத் தவமில்லிகள்
பின்னை நின்ற பிணி யாக்கையைப் பெறுவார்களே

மதியம் மொய்த்த கதிர்போல் ஒளிம் மணல் கானல்வாய்ப்
புதிய முத்தம் திகழ் **பாதிரிப்புலியூர்** எனும்
பதியில் வைக்கப்படும் எந்தை தம் பழம் தொண்டர்கள்
குதியும் கொள்வர் விதியும் செய்வர் குழகாகவே - 6

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 94 பாடல் 1
பண் : திருவித்தம் இராகம் : சங்கராபரணம்

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்**பாதிரிப்புலியூர்**த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ **பாதிரிப்புலியூர்** அரனே - 6



233. முண்டீச்சுரம் (திருமுண்டீச்சுரம்) (கிராமம்)

இறைவன் : சிவலோகநாதர், முடீஸ்வரர், முண்டீசர்
இறைவி : சௌந்தர்யநாயகி, கானார்குழலி, செல்வநாயகி,செல்வாம்பிகை
தலமரம் : வன்னி தீர்த்தம் : முண்டக தீர்த்தம்
பாடல் : அப்பர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 51 அலைபேசி : 9894625154
முகவரி : அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில்,கிராமம் & அஞ்சல், (வழி) உளுந்தூர்பேட்டை,உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம் 607 203

திருவருட்பா பாடல் எண் 233

சீர்பொலியப்
பண்டீச் சுரனிப் பதியே விழைந்ததெனும்
முண்டீச் சுரத்தின் முழுமுதலே

236 - திருமுண்டீச்சரம்

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 85 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

ஆர்த்தான்காண் அழல்நாகம் அரைக்கு நாணா
அடியவர்கட்கு அன்பன் காண் ஆனைத் தோலைப்
போர்த்தான் காண் புரிசடைமேல் புனலேற்றான் காண்
புறம்காட்டில் ஆடல் புரிந்தான்தான் காண்
காத்தான் காண் உலகேழும் கலங்காவண்ணம்
கனை கடல்வாய் நஞ்சதனைக் கண்டத்துள்ளே
சேர்த்தான் காண் **திருமுண்டீச்சர**த்து மேய
சிவலோகன் காண் அவன் என் சிந்தையானே

அறுத்தவன் காண் அடியவர்கள் அல்லல் எல்லாம்
அறம் பொருளாய் நின்றவன் காண் அனங்கன் ஆகம்
அறுத்தவன் காண் மலைதன்னை மதியாது ஓடி
மலைமகள் தன் மனம் நடுங்க வானோர் அஞ்சக்
கறுத்தவனாய்க் கயிலாயம் எடுத்தோன் கையும்
கதிர் முடியும் கண்ணும் பிதுங்கி ஓடச்
செறுத்தவன் காண் **திருமுண்டீச்சர**த்து மேய
சிவலோகன் காண் அவன் என் சிந்தையானே - 10



234. சீர்பணங்காடு (புறவார் பனங்காட்டூர்) (பனையபுரம்)

இறைவன் : பனங்காட்டீஸ்வரர்
இறைவி : சத்யாம்பிகை, புறவம்மை
தலமரம் : பனை தீர்த்தம் : பத்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 52 அலைபேசி : 9444897861
முகவரி : அருள்மிகு பனங்காட்டீஸ்வரர் திருக்கோயில், பனையபுரம் & அஞ்சல் (வழி) முண்டியம்பாக்கம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் 605 603

திருவருட்பா பாடல் எண் 234

பெண்தகையார்
ஏர்ப்பனங்காட் டூரென் றிருநிலத்தோர் வாழ்த்துகின்ற
சீர்ப**பனங்காட் டூர்**மகிழ்நி கேஷபமே

209 - புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 53 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

விண்ணமர்ந்தன மும்மதில்களை
வீழ வெங்கணையால் எய்தாய்விரி
பண்ணமர்ந்து ஒலிசேர் **புறவார் பனங்காட்டூர்**ப்
பெண்ணமர்ந்தொரு பாகமாகிய
பிஞ்சகா பிறை சேர் நுதலிடைக்
கண்ணமர்ந்தவனே கலந்தார்க்கு அருளாயே

நீரினார் வரை கோலி மால்கடல்
நீடிய பொழில் சூழ்ந்து வைகலும்
பாரினார் பிரியாப் **புறவார் பனங்காட்டூர்க்**
காரினார் மலர்க் கொன்றை தாங்கு
கடவுள் என்று கைகூப்பி நாள்தொறும்
சீரினால் வணங்கும் திறத்தார்க்கு அருளாயே - 6

மையினார் மணிபோல் மிடற்றனை
மாசில் வெண்பொடிப் பூசு மார்பனைப்
பைய தேன்பொழில் சூழ் **புறவார் பனங்காட்டூர்**
ஐயனைப் புகழான காழியுள்
ஆய்ந்த நான்மறை ஞானசம்பந்தன்
செய்யுள் பாடவல்லார் சிவலோகம் சேர்வாரே - 11



235. ஆமத்தூர் (திருவாமாத்தூர்) (திருஆமாத்தூர்)

இறைவன் : அபிராமேஸ்வரர், அழகியநாதர்
இறைவி : முத்தாம்பிகை, அழகியநாயகி
தலமரம் : வன்னி தீர்த்தம் : ஆம்பலப்பொய்கை
பாடல் : மூவர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 53 அலைபேசி : 9843066252, 9842022544
முகவரி : அருள்மிகு அபிராமேஸ்வரர் திருக்கோயில்,
திருவாமாத்தூர் & அஞ்சல், விழுப்புரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் 605 602
தலச் சிறப்பு : நந்தி, காமதேனு தவமிருந்து தம் கொம்புகளைப் பெற்ற தலம் தண்டபாணி சுவாமிகள் சமாதி இங்குள்ளது.

திருவருட்பா பாடல் எண் 235

சூர்ப்புடைத்த
தாமாத்தூர் வீழத் தடிந்தோன் கணேசனொடும்
ஆமாத்தூர் வாழ்மெய் அருட்பிழம்பே

22 - திருவாமாத்தூர் (திருஆமாத்தூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 44 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

துன்னம் பெய் கோவணமும் தோலும் உடையாடை
பின்னம் சடைமேலோர் பிள்ளை மதிசூடி
அன்னம்சேர் தண்கானல் **ஆமாத்தூர்** அம்மான்தன்
பொன்னம் கழல் பரவாப் பொக்கமும் பொக்கமே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 44 பாடல் 1
பண் : குறுந்தொகை இராகம் :
மாயாமாளவகௌளை

மாமாத்து ஆகிய மாலயன் மால்கொடு
தாமாத் தேடியும் காண்கிலர் தாள்முடி
ஆமாத்தூர் அரனே அருளாய் என்றென்று
ஏமாப்பு எய்திக் கண்டோர் இறையானையே

பித்தனைப் பெருந்தேவர் தொழப்படும்
அத்தனை அணி **ஆமாத்தூர்** மேவிய
முத்தினைஅடியேனுள் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே - 6

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 45 பாடல் 1
பண் : கொல்லிக்கௌவாணம் இராகம் : நவரோஸ்

காண்டனன் காண்டனன் காரிகையாள் தன் கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் **ஆமாத்தூர்** எம் அடிகட்கு ஆட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித்து அல்லாதவர்கட்கே

236. திருஅண்ணாமலை (திருஅண்ணாமலை) (திருவண்ணாமலை)

இறைவன் : அருணாசலேஸ்வரர், அண்ணாமலையார்
இறைவி : அபீதகுஜாம்பாள், உண்ணாமுலை
தலமரம் : மகிழம் தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : நடு நாடு
வரிசை எண் : 54 தொலைபேசி : 04175 - 252438
அலைபேசி : 9443542859
முகவரி : அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில்,
திருவண்ணாமலை & அஞ்சல்,
திருவண்ணாமலை மாவட்டம் 606 601
தலச் சிறப்பு : நினைக்க முத்தி தரும் தலம், இரமண மகிரிஷி சேஷாத்திரி மகிரிஷி, அருணகிரிநாதர், அருள் பெற்ற தலம்.
பஞ்சபூதங்களுள் **அக்கினித் தலம்**

திருவருட்பா பாடல் எண் 236

யாமேத்தும்
உண்ணா முலையாள் உமையோடு மேவுதிரு
அண்ணா மலைவாழ் அருட்சுடரே

4 - திருஅண்ணாமலை (திருவண்ணாமலை)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 10 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே

திருநாவுக்கரசர் 4 ஆம் திருமுறை பதிகம் 63 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

ஓதிமாமலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர்கோவே அணி **அண்ணாமலை**யுளானே
நீதியால் நின்னையல்லால் நினையுமா நினைவிலேனே

திருநாவுக்கரசர் 5 ஆம் திருமுறை பதிகம் 5 பாடல் 5
குறுந்தொகை இராகம் : மாயாமாளவகௌளை

தேடிச்சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப்பாடி **அண்ணாமலை** கைதொழ
ஓடிப்போம் நமது உள்ள வினைகளே

வானனைம் மதிசூடிய மைந்தனைத்
தேனனைத் **திருவண்ணாமலை**யனை
ஏனனை இகழ்ந்தார் புரமூன்றெய்த
ஆனனை அடியேன் மறந்துய்வனோ - 2

ஐம்பூதலங்கள்

நீர் - 61 (திருஆனைக்கா)
வாயு - 254 (திருக்காளத்தி)
அக்கினி - 235 (திருஅண்ணாமலை)
மண் - 236 (திருக்கச்சி ஏகம்பம் காஞ்சிபுரம்)
ஆகாயம் - 1 (தில்லை சிதம்பரம்)

237. ஏகம்பம் (திருக்கச்சி ஏகம்பம்) (ஏகம்பம்)

இறைவன் : ஏகாம்பரேஸ்வரர், ஏகாம்பரநாதர்
இறைவி : ஏலவார்குழலி, காமாட்சி
தலமரம் : மா மரம் தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 1 தொலைபேசி : 044-27222084
முகவரி : அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில்,
காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் 631 502
தலச் சிறப்பு : சாக்கிய நாயனார், திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர் கோன், கழற்சிங்க நாயனார் வாழ்ந்த பதி.
சுந்தரர்க்கு இடது கண் பார்வையை வழங்கிய தலம்.

திருவருட்பா பாடல் எண் 237

கண்ணார்ந்த
நாகம்ப ராந்தொண்ட நாட்டி லுயர்காஞ்சி
ஏகம்ப மேவும்பே ரின்பமே

56 - திருக்கச்சி ஏகம்பம் (ஏகம்பம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 133 பாடல் 1
பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்பரி

வெந்த வெண்பொடிப் பூசுமார்பின் விரிநூல் ஒருபால் பொருந்தக்
கந்த மல்கு குழலியோடும் கடிபொழில் கச்சிதன்னுள்
அந்தமில் குணத்தாரவர் போற்ற அணங்கினொடு ஆடல்புரி
எந்தை மேவிய **ஏகம்பம்** தொழுதேத்த இடம் கெடுமே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 65 பாடல் 9
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

முந்தைகாண் மூவரினும் முதலானான் காண்
மூவிலைமேல் மூர்த்தி காண் முருகவேட்குத்
தந்தை காண் தண் கடமா முகத்தினார்க்குத்
தாதை காண் தாழ்ந்தடியே வணங்குவார்க்குச்
சிந்தை காண் சிந்தாத சித்தத்தார்க்குச்
சிவனவன் காண் செங்கண்மால் விடையொன்று ஏறும்
எந்தை காண் எழிலாரும் பொழிலார் **கச்சி**
ஏகம்பன் காண் அவன் என் எண்ணத்தானே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 61 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் **கம்பன்** எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே

ஐம்பூதலங்கள்

நீர் - 61 (திருஆனைக்கா)
வாயு - 254 (திருக்காளத்தி)
அக்கினி - 235 (திருஅண்ணாமலை)
மண் - 236 (திருக்கச்சி ஏகம்பம் காஞ்சிபுரம்)
ஆகாயம் - 1 (தில்லை சிதம்பரம்)



238. மேற்றளி (திருக்கச்சி மேற்றளி) (திருமேற்றளி)

இறைவன் : திருமேற்றளீஸ்வரர், திருமேற்றளிநாதர்
இறைவி : திருமேற்றளிநாயகி
பாடல் : அப்பர், சுந்தரர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 2 அலைபேசி : 9865355572, 9994585006
முகவரி : அருள்மிகு திருமேற்றளீஸ்வரர் திருக்கோயில்,
திருமேற்றளித் தெரு, பிள்ளையார்பாளையம்,
காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் 631 501

திருவருட்பா பாடல் எண் 238

ஆகுந்தென்
காற்றளிவண் பூமணத்தைக் காட்டும் பொழிற்**கச்சி**
மேற்றளிவாழ் ஆனந்த வீட்டுறவே

58 - திருக்கச்சி மேற்றளி (திருமேற்றளி)

பாடல்கள்

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 43 பாடல் 8
திருநேரிசை இராகம் : நவரோஸ்

செல்வியைப் பாகம் கொண்டார் சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு மாமலர் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர் தன்னுள்ளால்
எல்லியை விளங்க நின்றார் இலங்கு **மேற்றளி**யனாரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 21 பாடல் 1
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற
சிந்தாய் எந்தைபிரான் **திருமேற்றளி** உறையும்
எந்தாய் உன்னையல்லால் இனியேத்த மாட்டேனே

கையார் நெஞ்சிலை நாணதன்மேல் சரங்கோத்தே
எய்தாய் மும்மதிலும் எரியுண்ண எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் **திருமேற்றளி** உறையும்
ஐயா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே - 7

பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூரும் புறவில் **திருமேற்றளிச்** சிவனை
ஆரூரன் அடியான் அடித்தொண்டன் ஆரூரன் சொன்ன
சீரூர் பாடல் வல்லார் சிவலோகம் சேர்வாரே - 10



239. சீரோண காந்தன்றளி (ஓணகாந்தன்தளி)

இறைவன் : ஓணேஸ்வரர், காந்தேஸ்வரர்
பாடல் : சுந்தரர்
நாடு : தொண்டை நாடு வரிசை எண் : 3
அலைபேசி : 9894443108
முகவரி : அருள்மிகு ஓணகாந்தன் திருக்கோயில், பஞ்சுப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் - 631 502
தலச் சிறப்பு : வாண சுரனுடைய சேனாதிபதிகளான ஓணன், காந்தன் வழிபட்ட தலம். சுந்தரர் பதிகம்பாடி புளிய மரத்துக்காய்களாகப் பொற்காய்களாய் பெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 239

நாற்றமலர்ப்

பூந்தண டளிவிரித்துப புக்கிசைக்குஞ் **சீரோண**
காந்தன் றளிஅருட்ப்ர காசமே

52 - ஓணகாந்தன்தளி

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 5 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்றார்
கையில் ஒன்றும் காணமில்லைக் கழலடி தொழுது உய்யினல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி ஆழ்குழிப்பட்டு அழுந்துவேனுக்கு
உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர் **ஓணகாந்தன் தளி**யுளீரே

வாரிரும் குழல் வாள்நெடுங்கண் மலைமகள் மதுவிம்முகொன்றைத்
தாரிரும் தடமார்பு நீங்காத் தையலாள் உலகுய்ய வைத்த
காரிரும் பொழில் கச்சிமூதூர்க் காமக்கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்னே **ஓணகாந்தன் தளி**யுளீரே - 6

ஓவணமேல் எருதொன்று ஏறும் **ஓணகாந்தன் தளி**யுளார்தாம்
ஆவணம் செய்து ஆளும்கொண்டு அரைதுகிலோடு பட்டு வீக்கிக்
கோவண மேற்கொண்ட வேடம் கோவையாக ஆரூரன் சொன்ன
பாவணத் தமிழ் பத்தும் வல்லார் பறையும் தாம் செய்த பாவம்தானே - 10



240. தவனேக தங்காபதம் (கச்சி அநேகதங்காவதம்)

இறைவன் : அநேகதங்காவதேஸ்வரர்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 4 தொலைபேசி : 044-27222084
முகவரி : அருள்மிகு அநேகதங்காவதேஸ்வரர் திருக்கோயில், பிள்ளையார்பாளையம், (கைலாசநாதர் கோயில் அருகில்) காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் - 631 501

திருவருட்பா பாடல் எண் 240

சேர்ந்தவர்க்கே

இங்கா பதஞ்சற்று மில்லா **தவனேக**
தங்கா பதஞ்சேர் தயாநிதியே

55 - கச்சி அநேகதங்காவதம்

பாடல்கள்

சம்பந்தர் 7ஆம் திருமுறை பதிகம் 10 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

தேன்நெய் புரிந்துழல் செஞ்சடை எம்பெருமான திடம்
திகழ் ஐங்கணையக்
கோனை எரித்தெரியாடி இடம் குலவான திடம்
குறையாம் மறையாம்
மானை இடத்ததோர் கையனிடம் மதமாறு
படப் பொழியும் மலைபோல்
யானை உரித்த பிரானதிடம் கலிக்
கச்சி அனேக தங்காவதமே

வீடுபெறப் பல ஊழிகள் நின்று
நினைக்கும் இடம் வினை தீரும் இடம்
பீடு பெறப் பெரியோர திடம் கொண்டு
மேவினர் தங்களைக் காக்கும் இடம்
பாடும் இடத்து அடியான் புகழ் ஊரன்
உரைத்த இம்மாலைகள் பத்தும் வல்லார்
கூடும் இடம் சிவலோகன் இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே - 10



241. கச்சிநெறிக்காரை (கச்சிநெறிக் காரைக்காடு) (திருக்காலிமேடு)

இறைவன் : சத்தியவிரதேஸ்வரர், சத்தியநாதேஸ்வரர்
இறைவி : பிரம்மராம்பிகை
தீர்த்தம் : இந்திர தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : தொண்டை நாடு வரிசை எண் : 5
அலைபேசி : 9843832997
முகவரி : அருள்மிகு சத்தியநாதேஸ்வரர் திருக்கோயில், திருக்காலிமேடு, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் - 631 501

திருவருட்பா பாடல் எண் 241

மங்காது

மெச்சி நெறிக்கார்வ மேவிறின்றோர் சூழ்ந்த்திருக்
கச்சி நெறிக்காரைக் காட்டிறையே

57 - கச்சிநெறிக் காரைக்காடு (திருக்காலிமேடு)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 65 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

வாரணவு முலைமங்கை பங்கினராய் அங்கையினில்
போரணவு மழுவொன்றங்கு ஏந்தி வெண்பொடியணிவர்
காரணவு மணிமாடம் கடை நவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை **நெறிக்காரைக் காட்டாரே**

பன்மலர்கள் கொண்டடிக்கீழ் வானோர்கள் பணிந்திறைஞ்ச
நன்மையிலா வல்லவுணர் நகர்மூன்றும் ஒரு நொடியில்
வின்மலையின் நாண் கொளுவி வெங்கணையால் எய்தழித்த
நின்மலனார் கலிக்**கச்சி நெறிக்காரைக் காட்டாரே** - 6

கண்ணாரும் கலிக்**கச்சி நெறிக்காரைக் காட்டு**றையும்
பெண்ணாரும் திருமேனிப் பெருமானது அடிவாழ்த்தித்
தண்ணாரும் பொழில் காழித் தமிழ்ஞான சம்பந்தன்
பண்ணாரும் தமிழ்வல்லார் பரலோகத்து இருப்பாரே - 11



242. குரங்குணி முட்டம் (குரங்கணில்முட்டம்)

இறைவன் : வாலீஸ்வரர், கொய்யாமலைநாதர்
இறைவி : இறையார் வளையம்மை
தலமரம் : இலந்தை தீர்த்தம் : காக்கைத் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 6 அலைபேசி : 9944725284, 9943295467
முகவரி : அருள்மிகு வாலீஸ்வரர் திருக்கோயில், குரங்கணில் முட்டம், தூசி அஞ்சல், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் - 631 703
தலச் சிறப்பு : வாலி, இந்திரன், எமன், மூவரும் முறையே குரங்கு, அணில், காகம் வடிவில் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 242

முச்சகமும்

ஆயுங் **குரங்கணின்முட் டப்**பெயர்கொண் டோங்குபுகழ்
ஏயுந் தலம்வா ழியன்மொழியே

பாடல் எண் 380

வில்வக்

கிளையுதிர்த்த வெய்ய முசுக்கலையைச் செல்வத் துறைமகனாகச் செய்தனையே

97 - குரங்கணில்முட்டம்

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 31 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

விழுநீர் மழு வாட்படை அண்ணல் விளங்கும்
கழுநீர் குவளைம்மலரக் கயல் பாயும்
கொழுநீர் வயல் சூழ்ந்த **குரங்கணில் முட்டம்**
தொழு நீர்மையர் தீதுறு துன்பம் இலரே

பலவும் பயனுள்ளன பற்றும் ஒழிந்தோம்
கலவம் மயில் காமுறு பேடையொடு ஆடிக்
குலவும் பொழில் சூழ்ந்த **குரங்கணில் முட்டம்**
நிலவும் பெருமானடி நித்தல் நினைந்தே - 6

மையார்நிற மேனியரக்கர் தம்கோனை
உய்யாவகையால் அடர்த்தின்னருள் செய்த
கொய்யார்மலர் சூடி **குரங்கணில் முட்டம்**
கையால் தொழுவார் வினை காண்டலரிதே - 8

கல்லார் மதில் காழியுள் ஞானசம்பந்தன்
கொல்லார் மழுவேந்தி **குரங்கணில் முட்டம்**
சொல்லார் தமிழ் மாலை செவிக்கினிதாக
வல்லார்க்கு எளிதாம் பிறவாவகை வீடே - 11



243. திருமாகறலில் (திருமாகறல்)

இறைவன் : திருமாகறலீஸ்வரர், உடும்பீசர், அடைக்கலம்காத்த நாதர்
இறைவி : திரிபுவனநாயகி, புவனநாயகி
தலமரம் : எலுமிச்சை தீர்த்தம் : அக்கினி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 7
அலைபேசி : 9443596619
முகவரி : அருள்மிகு மாகறலீஸ்வரர் திருக்கோயில்,மாகறல் & அஞ்சல், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் - 631 603
தலச் சிறப்பு : இராஜேந்திர சோழனுக்கு பொன் உடும்பாகத் புற்றில் ஒளித்துப் பின் இலிங்கமாக வெளிப்பட்ட தலம். எலும்பு சம்பந்தமான நோய்களைக் குணமாக்கும் அற்புத தலம்.

திருவருட்பா பாடல் எண் 243

தோயுமன

யோகறலி லாத்தவத்தோ ருன்ன விளங்குதிரு
மாகறலில் அன்பரபி மானமே

229 - திருமாகறல்

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 72 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல் விளையாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடுபொழில் **மாகறல்** உளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கை வளர் திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே

மன்னு மறையோர்களோடு பல்படிம மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகையால் இனிது இறைஞ்சி இமையோரில் எழு **மாகறலு**ளான்
மின்னை விரி புன்சடையின் மேல் மலர்கள் கங்கையொடு திங்கள் எனவே
உன்னும் அவர் தொல்வினைகள் ஒல்கவுயர் வானுலகம் ஏறல் எளிதே-6

பாடல் 11

கடைகொள் நெடுமாடம் மிக ஓங்கு கமழ் வீதிமலி காழியவர் கோன்
அடையும் வகையால் பரவி அரனை அடிகூடும் சம்பந்தன் உரையால்
மடைகொள் புனலோடு வயல் கூடு பொழில் **மாகறல்** உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணர்வார் அவர்கள் தொல்வினைகள் ஒல்கும்
உடனே

244. திருஒத்தூர் (திருவோத்தூர்) (செய்யாறு, திருவத்திபுரம்)

இறைவன் : வேதபுரீஸ்வரர், வேதநாதர்
இறைவி : பாலகுஜாம்பிகை, இளமுலைநாயகி
தலமரம் : பனை
தீர்த்தம் : சூரிய தீர்த்தம், காவிரி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 8 தொலைபேசி : 04182-224387
அலைபேசி : 9443345793, 9688612660
முகவரி : அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் - 604 407

திருவருட்பா பாடல் எண் 243

ஓகையிலா

வீத்தூர மாவோட மெய்த்தவர்கள் சூழ்ந்த்திரு
ஒத்தூரில் வேதாந்த உண்மையே

53 - திருவோத்தூர் (செய்யாறு, திருவத்திபுரம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 54 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி

பூத்தேர்ந்தாயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தாதாரில்லை எண்ணுங்கால்
ஒத்தூர் மேய ஒளிமழு வாள் அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம் மக்களீர் என்று
உட்காதார் உளரோ **திருவோத்தூர்**
நக்கீரே அருள் நல்குமே - 6

தாதார் கொன்றை தயங்கு முடியிடை
நாதா என்று நலம் புகழ்ந்து
ஓதாதார் உளரோ **திருவோத்தூர்**
ஆதீரே அருள் நல்குமே - 7

குரும்பை ஆண்பனை ஈன்குலை **ஒத்தூர்**
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவோர் வினை வீடே - 11

சிவசிவ சிவயநம நமசிவய சிவயசிவ சிவசிவ – அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவசிவ சிவயநம நமசிவய சிவயநம் சிவசிவ

245. வன்பார்த்தான் பணங்காட்டூர் (வன்பார்த்தான் பனங்காட்டூர்) (திருப்பனங்காடு)

இறைவன் : (1) தாலபுரீஸ்வரர் (அகத்தியர் வழிபட்டது)
(2) கிருபாநாதேஸ்வரர் (புலத்தியர் வழிபட்டது)
இறைவி : (1) அமிர்தவல்லி (2) கிருபாநாயகி
தலமரம் : பனை தீர்த்தம் : சடாகங்கை தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 9
தொலைபேசி : 044-24312807 அலைபேசி : 9843568742
முகவரி : அருள்மிகு தாலபுரீஸ்வரர் திருக்கோயில்,
திருப்பனங்காடு & அஞ்சல், (வழி) வெம்பாக்கம்,
செய்யாறு வட்டம்,திருவண்ணாமலை மாவட்டம் - 604 410
தலச் சிறப்பு : அகத்தியர், கள்வமுனிவர் வழிபட்டதலம். இருசுவாமிகள், இரு அம்பாள்கள், இரு கொடி மரங்கள், இரண்டு பனைமரங்கள் கோயிலுக்கு அருகில் சுந்தரர்வந்த போது அவருக்காக உண்டாக்கிய தீர்த்தம் உள்ளது.

திருவருட்பா பாடல் எண் 244

பூத்தவிசின்

ஆர்த்தான் பனகத் தவனிந் திரன்புகழ்**வன்**

பார்த்தான் பனங்காட்டூர் பாக்கியமே

249 - வன்பார்த்தான் பனங்காட்டூர் (திருப்பனங்காடு)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 86 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில் அன்புடையானை யாவர்க்கும் அறியொண்ணா
மடையில் வாளைகள் பாயும் **வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்**
சடையில் கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே

உரமென்னும் பொருளானை உருகில் உள்ளுறைவானைச்
சிரமென்னும் கலனானைச் செங்கண்மால் விடையானை
வரம்முன்னும் அருள்செய்வான் **வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்**
பரமன் எங்கள் பிரானைப் பரவாதார் பரவு என்னே - 5

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப்
பஞ்சிச் சீறடியாளைப் பாகம் வைத்து உகந்தானை
மஞ்சுற்ற மணிமாட **வன்பார்த்தான் பனங்காட்டூர்**
நெஞ்சத்து எங்கள் பிரானை நினையாதார் நினைவென்னே - 8

பாரூரும் **பனங்காட்டூர்ப்** பவளத்தின் படியானைச்
சீரூரும் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த
ஆரூரன் அடித்தொண்டன் அடியன்சொல் அடிநாய்சொல்
ஊரூரன் உரைசெய்வார் உயர்வானத்து உயர்வாரே - 10

246. வல்லமகிழ் (திருவல்லம்) (திருவலம்)

இறைவன் : வில்வநாதீஸ்வரர், வல்லநாதர்
இறைவி : தனுமத்யாம்பாள், வல்லாம்பிகை
தலமரம் : வில்வம் தீர்த்தம் : கௌரி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 10 அலைபேசி : 9894922166, 9245448956
முகவரி : அருள்மிகு வில்வநாதீஸ்வரர் திருக்கோயில்,
திருவலம் & அஞ்சல், (வழி) இராணிப்பேட்டை,
திருவலம் வட்டம், வேலூர் மாவட்டம் - 632 515

திருவருட்பா பாடல் எண் 246

பார்த்துலகில்

இல்ல மெனச்சென் றிரவா தவர்வாழும்

வல்லமகி ழன்பர் வசித்துவமே

244 - திருவல்லம் (திருவலம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 113 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் உறைவிடம் **திருவல்ல**மே

பதைத்தெழு காலனைப் பாதமென்றால்
உதைத்தெழு மாமுனிக்கு உண்மை நின்று
விதிர்த்தெழு தக்கன் தன் வேள்வியன்று
சிதைத்தவன் உறைவிடம் **திருவல்ல**மே - 6

இகழ்ந்தரு வரையினை எடுக்கலுற்றாங்கு
அகழ்ந்த வல்லரக்கனை அடர்த்தபாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச்செய்தே
திகழ்ந்தவன் உறைவிடம் **திருவல்ல**மே - 8

சுற்றவர் **திருவல்லம்** கண்டு சென்று
நற்றமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவர் ஈசன் பொற்பாதங்களே - 11

247. மாற்பேற்றி (திருமாற்பேறு) (திருமால்பூர்)

இறைவன் : மணிகண்டேஸ்வரர், தயாநிதீஸ்வரர் வாட்டம் தவிர்த்தார், மால்வணங்கீசர்
இறைவி : அஞ்சனாட்சி, கருணாம்பிகை
தலமரம் : வில்வம் தீர்த்தம் : சக்கர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 11 அலைபேசி : 9965367272, 9345449339, 9444386442
முகவரி : அருள்மிகு மணிகண்டேஸ்வரர் திருக்கோயில், திருமால்பூர் & அஞ்சல், அரக்கோணம் வட்டம், வேலூர் மாவட்டம் 631 053

திருவருட்பா பாடல் எண் 247

சொல்லரிக்குக்
காற்பேறு கச்சியின்முக் காற்பே றிவணென்னும்
மாற்பேற்றி னன்பர் மனோபலமே

232 - திருமாற்பேறு (திருமால்பூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 114 பாடல் 6
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

பெண்ணின் நல்லாளை ஓர்பாகம் வைத்துக்
கண்ணினால் காமனைக் காய்ந்தவன் தன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்கும் நல் **மாற்பேறே**

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 60 பாடல் 1
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

ஏதும் ஒன்றும் அறிவிலராயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் **மாற்பேறரே**

உந்திச் சென்று மலையை எடுத்தவன்
சந்து தோளொடு தாளிற ஊன்றினான்
மந்தி பாய்பொழில் தூழ **மாற்பேறென**
அந்த மில்லதோர் இன்பம் அணுகுமே - 10

248.திருஊறல் (தக்கோலம்)

இறைவன் : ஜலநாதேஸ்வரர், உமாபதீசர்
இறைவி : கிரிராஜகன்னிகை, மோகனவல்லி
தீர்த்தம் : நந்தி தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : தொண்டை நாடு வரிசை எண் : 12
அலைபேசி : 9361822427,9994786919
முகவரி : அருள்மிகு ஜலநாதேஸ்வரர் திருக்கோயில், தக்கோலம் & அஞ்சல், அரக்கோணம் வட்டம், வேலூர் மாவட்டம் 631 151
தலச் சிறப்பு : தக்கன் ஓலம் இட்டதலம்(தக்கோலம்) தக்கன் தலையை கொய்த இடம்

திருவருட்பா பாடல் எண் 248

ஏற்புடைவாய்
ஊற லடியா ருறத்தொழுது மேவுதிரு
ஊற லழியா உவகையே

45 - திருஊறல் (தக்கோலம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 106 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

மாறில் அவுணர் அரணம் அவைமாயவோர் வெங்கணையாலன்று
நீறெழ எய்த எங்கள் நிமலனிடம் வினவில்
தேறல் இரும்பொழிலும் திகழ் செங்கயல்பாய் வயலும் தழ்ந்த
ஊறல் அமர்ந்தபிரான் ஒலியார் கழல் உள்குதுமே

எண்டிசையோர் மகிழ எழில்மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழ அளித்தான் அவன் தாழுமிடம் வினவில்
கொண்டல்கள் தங்குபொழில் குளிர்பொய்கைகள் தழ்ந்து நஞ்சை
உண்டபிரான் அமரும் **திருவூறலை** உள்குதுமே - 5-7

கறுத்த மனத்தினொடும் கடுங்காலன் வந்தெய்தலும் கலங்கி
மறுக்குறு மாணிக்கருள மகிழ்ந்தான் இடம் வினவில்
செறுத்தெழு வாளரக்கன் சிரந்தோளும் எய்யும் நெரிய அன்று
ஒறுத்தருள் செய்தபிரான் **திருவூறலை** உள்குதுமே - 8

கோடல் இரும்புறவில் கொடிமாடக் கொச்சையர்மன் மெச்ச
ஓடு புனல் சடைமேல் கரந்தான் **திருவூறல்**
நாடலரும் புகழான் மிகு ஞானசம்பந்தன் சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும் வல்லார் பரலோகத்திருப்பாரே - 11

சிவசிவ சிவயநம நமசிவய – அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி – சிவயநம நமசிவய சிவசிவ

249. மிலம்பயங்கோட்டூர் (இலம்பையங்கோட்டூர்) (எலுமியன்கோட்டூர்)

இறைவன் : அரம்பேஸ்வரர், சந்திரசேகரர்
இறைவி : கனககுஜாம்பிகை, கோடேந்துமுலையம்மை
தலமரம் : மல்லிகை தீர்த்தம் : மல்லிகை
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 13 அலைபேசி : 9444885714, 9600043000
முகவரி : அருள்மிகு அரம்பேஸ்வரர் திருக்கோயில், இலம்பையங்கோட்டூர், கப்பாங்கோட்டூர் அஞ்சல் (வழி) எடையார்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் 631 553
தலச் சிறப்பு : சம்பந்தருக்கு இறைவன் பாலனாகவும், முதியவராகவும், பசு வடிவிலும் வந்து வழிகாட்டிய தலம், அரம்பை வழிபட்ட தலம் அரம்பையங் கோட்டூர் என்பதே பிற்காலத்தில் இலம்பையங் கோட்டூர் என்றானது.

திருவருட்பா பாடல் எண் 249

மாறுபடு
தீது மிலம்பயங்கோட் டிரென் றடியார்புகழ்
ஓது மிலம்பயங்கோட் டூர்நலமே

41 - இலம்பையங்கோட்டூர் (எலுமியன்கோட்டூர்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 76 பாடல் 3
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம்
பண்டு வெங்கூற்றுதைத்து அடியவர்க்கருளும்
காலனாம் எனதுரை தனதுரையாகக்
கனலெரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீலமா மலர்ச்சுனை வண்டு பண்செய்ய
நீர்மலர்க் குவளைகள் தாதுவிண்டோங்கும்
ஏலநாறும் பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என்னெழில் கொள்வதியல்பே

கந்தனை மலிகளை கடலொலி ஓதம்
கானலம் கழிவளர் கழுமலமென்னும்
நந்தியார் உறைபதி நான்மறை நாவன்
நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தன்
எந்தையார் வளநகர் இலம்பையங்கோட்டூர்
இசையொடு கூடிய பத்தும் வல்லர்போய்
வெந்துயர் கெடுவிட விண்ணவரோடும்
வீடு பெற்று இம்மையின் வீடு எளிதாமே - 11

250. திருவேற்கோலம் (திருவிற்கோலம்) (கூவம்)

இறைவன் : திரிபுராந்தகேஸ்வரர், திருவிற்கோலநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி, திரிபுராந்தகி
தீர்த்தம் : அக்கினி தீர்த்தம் பாடல் : சம்பந்தர்
நாடு : தொண்டை நாடு வரிசை எண் : 14
அலைபேசி : 9444607369, 9443253325, 9444808886
முகவரி : அருள்மிகு திரிபுராந்தகேஸ்வரர் திருக்கோயில், கூவம், கடம்பத்தூர் அஞ்சல், (வழி) திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம் 631 203
தலச் சிறப்பு : இறைவன் மேரு மலையை வில்லாகப் பிடித்த கோலம் தான் திரு வில் கோலம். திருக்குளத்தில் நீராடி வழிபட்டால் புத்திரப்பேறு கிடைக்கும். அதகம் வெள்ளம் வரக்கூடிய சூழல் இருந்தால் சுவாமியின் மேல் வெண்மை படரும். போர் நிகழ்வதாயின் செம்மை படரும் என்பது செய்தி

திருவருட்பா பாடல் எண் 250

தீதுடைய
பொற்கோலமா மெயிற்குப் போர்க்கோலம் கொண்டதிரு
விற்கோலம் மேவுபர மேட்டிமையே

262 - திருவிற்கோலம் (கூவம்)

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 23 பாடல் 1
பண் : காந்தாரப்பஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவி வானவர் தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடம் திருவிற்கோலமே

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழில் கூகம் மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற்கோலமே - 6

விரித்தவன் அருமறை விரிசடை வெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசற
எரித்தவன் இலங்கையர் கோன் இடர்படச்
சிரித்தவன் உறைவிடம் திருவிற்கோலமே - 8

கோடல் வெண்பிறையனைக் கூகம் மேவிய
சேடன செழுமதில் திருவிற்கோலத்தை
நாடவல்ல தமிழ் ஞானசம்பந்தன
பாடல் வல்லார்களுக்கு இல்லை பாவமே - 11

251. ஆலங்காடு (திருஆலங்காடு) (திருவாலங்காடு)

இறைவன் : வடஆரண்யேஸ்வரர், தேவர்சிங்கப்பெருமான், ஆலங்காட்டு அப்பர்
இறைவி : பிரம்மராளகாம்பாள், வண்டார்குழலி
தலமரம் : பலா, ஆல் தீர்த்தம் : சென்றாடுமுக்தி
பாடல் : மூவர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 15
தொலைபேசி : 044-27872443 அலைபேசி : 9444039290
முகவரி : அருள்மிகு வடஆரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு & அஞ்சல், (வழி) அரக்கோணம், திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் 632 210
தலச் சிறப்பு : காரைக்கால் அம்மையார் நடந்து வந்து இத்தலத்தில் இறைவனின் நடனகாட்சி கண்ட தலம் பஞ்ச சபையுள் இரத்தின சபை

திருவருட்பா பாடல் எண் 251

சொற்போரில்
ஓலங்காட் டும்பழைய னூர்நீலி வாதடக்கும்
ஆலங்காட் டிற்தழ் அருண்மயமே

26 - திருஆலங்காடு (திருவாலங்காடு)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 45 பாடல் 1
பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும் முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகை கேட்டு
அஞ்சும் பழயனூர் **ஆலங்காட்டு** எம் அடிகளே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 68 பாடல் 1
திருநேரிசை இராகம் : நவரோஸ்

வெள்ளநீர்ச் சடையர் போலும் விரும்புவார்க்கு எளியர் போலும்
உள்ளுளே உருகி நின்றங்கு உகப்பவர்க்கு அன்பர் போலும்
கள்ளமே வினைகளெல்லாம் கரிசறுத்திடுவர் போலும்
அள்ளலம் பழனை மேய **ஆலங்காட்டு** அடிகளாரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 52 பாடல் 1
பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறம்காட்டும் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழையனூர் மேய
அத்தா **ஆலங்காடா** உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே

தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி

பஞ்சசபைகள்

பொற்சபை - சிதம்பரம் - தல எண் 1
வெள்ளிசபை - மதுரை - தல எண் 194
ரத்தினசபை - திருவலங்காடு - தல எண் 250
தாமிரசபை - திருநெல்வேலி - தல எண் 205
சித்திர சபை - குற்றாலம் - தல எண் 206

252. திருப்பாதூர் (திருப்பாதூர்) (திருப்பாச்சூர்)

இறைவன் : பாதூர்நாதர், வாசீஸ்வரர், பசுபதீஸ்வரர்
இறைவி : பசுபதிநாயகி, மோகனாம்பாள், தம்காதலி, பணைமுலைநாச்சியார்
தலமரம் : மூங்கில்
தீர்த்தம் : சோம தீர்த்தம், மங்கள தீர்த்தம்
பாடல் : சம்பந்தர், அப்பர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 16 அலைபேசி : 9894486890
முகவரி : அருள்மிகு வாசீஸ்வரர் திருக்கோயில், திருப்பாச்சூர், கடம்பத்தூர் & அஞ்சல், (வழி) திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம் 621 203
தலச் சிறப்பு : கரிகாலன் சோழன், அம்பிகை வழிபட்ட தலம், பசுபால் சொரிந்த இடத்தில் சிவலிங்கம் ஒன்றை வேடர்கள் மூலம் கண்ட கரிகாலன் கட்டிய கோயில்

திருவருட்பா பாடல் எண் 252

ஞாலம்சேர்
மாதூர் அகற்றும் மதியுடையோர் சூழ்ந்ததிருப்
பாதூரில் உண்மைப் பரத்துவமே

196 - திருப்பாதூர் (திருப்பாச்சூர்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 60 பாடல் 1
பண் : காந்தாரம் இராகம் : நவரோஸ்

சிந்தை இடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்து என் மனத்துள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வார் ஊர் போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த **பாதூரே**

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 25 பாடல் 2
திருக்குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

மடந்தை பாகம் மகிழ்ந்த மணாளனார்
தொடர்ந்த வல்வினை போக்கிடும் சோதியார்
கடந்த காலனைக் கால்கொடு பாய்ந்தவர்
படர்ந்த நாகத்தர் **பாதூர்** அடிகளே

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 83 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலைசூழ்
ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி ஏழுலகும்
தொழுதேத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக் காதலித்து
அங்கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் **பாதூர்** மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்தவாறே

253. வெண்பாக்கம் (திருவெண்பாக்கம்) (பூண்டி)

இறைவன் : ஊன்றீஸ்வரர், ஆதாரதண்டேஸ்வரர்
இறைவி : மின்னொளியம்மை, கௌரி
தலமரம் : இலந்தை தீர்த்தம் : கயிலாய தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 17 தொலைபேசி : 044-27639725
அலைபேசி : 9245886900, 9943209387
முகவரி : அருள்மிகு ஊன்றீஸ்வரர் திருக்கோயில், பூண்டி அஞ்சல், (வழி) திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம் 602 023

தலச் சிறப்பு : திருவொற்றியூரில் கண்பார்வை இழந்த சுந்தரர் இங்கு வந்த போது அம்பாள் மின்னலைப் போல் ஒளிகாட்டி மறைந்தாள் கண்பார்வை வேண்டிக் கோபத்துடன் பாடிய சுந்தரருக்கு இறைவன் ஊன்றுகோல் அளிக்கிறார்.

திருவருட்பா பாடல் எண் 253

தேசூரன்
கண்பார்க்க வேண்டுமெனக் கண்டுன்று கோற்கொடுத்த
வெண்பாக்கத் தன்பர்பெறும் வீறாப்பே

269 - திருவெண்பாக்கம் (பூண்டி)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 89 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

பிழையுளன பொறுத்திடுவர் என்று அடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயில் உளாயோ என்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர் என்றானே

கண்ணுதலால் காமனையும் காய்ந்த திறல் கங்கை மலர்
தெண்ணிலவு செஞ்சடைமேல் தீமலர்ந்த கொன்றையினான்
கண்மணியை மறைப்பித்தாய் இங்கிருந்தாயோ என்ன
ஒண்ணுதலி பெருமனார் உளோம் போகீர் என்றானே - 6

ஏராரும் பொழில் நிலவு **வெண்பாக்கம்** இடம்கொண்ட
காராரும் மிடற்றானைக் காதலித்திட்டு அன்பினொடும்
சீராரும் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த
ஆரூரன் தமிழ் வல்லார்க்கு அடையா வல்வினை தானே - 11



254. கள்ளிற் (திருக்கள்ளில்) (திருக்கண்டலம்)

இறைவன் : சிவானந்தேஸ்வரர்
இறைவி : ஆனந்தவல்லி தீர்த்தம் : நந்தி தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 18
தொலைபேசி : 044-27629144 அலைபேசி : 9941222814
முகவரி : அருள்மிகு சிவானந்தேஸ்வரர் திருக்கோயில், திருக்கண்டலம் & அஞ்சல், (வழி) வெங்கல், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம் 601 103

திருவருட்பா பாடல் எண் 254

பண்பார்க்கு
நள்ளிப் பதியே நலந்தருமென் றன்பர்புகுங்
கள்ளிற் பதிநங் கடப்பாடே

80 - திருக்கள்ளில் (திருக்கண்டலம்)

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 119 பாடல் 1
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

முள்ளின் மேல் முதுகூகை முரலும் சோலை
வெள்ளின் மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளில் மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒருதலையே

நலனாய பலிகொள்கை நம்பான் நல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய தலையோட்டான் **கள்ளில்** மேயான்
மலனாய தீர்த்து எய்தும் மாதவத்தோர்க்கே - 6

ஆச்சியப் பேய்களோடு அமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல வேணுமின்கள்
மாச்செய்த வளவயல் மல்கு **கள்ளில்**
தீச்செய்த சடையண்ணல் திருந்தடியே - 10

திகை நான்கும் புகழ் காழிச் செல்வமல்கு
பகல்போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முகைமேவு முதிர்சடையான் **கள்ளில்** ஏத்தப்
புகழோடும் பேரின்பம் புகுதும் அன்றே - 11



255. திருக்காளத்தி (திருக்காளத்தி) (ஸ்ரீகாளஹஸ்தி)

இறைவன் : ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர், காளத்திநாதர், குடுமித்தேவர்
இறைவி : ஞானப்பிரசன்னாம்பிகை, ஞானப்பூங்கோதை
தலமரம் : மகிழம்
தீர்த்தம் : சுவர்ணமுகி, பொன்முகலி தீர்த்தங்கள்
பாடல் : மூவர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 19 தொலைபேசி : 08578-222240
அலைபேசி : 9848220173
முகவரி : அருள்மிகு ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் திருக்கோயில், காளத்தி & அஞ்சல், சித்தூர் மாவட்டம் – 517 644 ஆந்திர மாநிலம்

தலச் சிறப்பு : பஞ்சபூத தலங்களுள் இது **வாயுத் தலம்.** கண்ணப்ப நாயனார் முத்தி தலம். அருச்சுனன், சிலந்தி, பாம்பு, யானை வழிபட்ட தலம்.

நெஞ்சறிவுறுத்தல் : 256,257 பக் 46 பாடல் எண் :
போற்றுகின்ற ஆடும் கரியும்
அணிலும் குரங்குமன்பு தேடுஞ் சிலம்பியொடு
சிற்றெறும்பும் - நீடுகின்ற பாம்பும் சிவார்ச்சனை தான்
பண்ணியதென் றால் பூசை ஒம்புவதற் கியார்தா னுவ
வாதார்.

திருவருட்பா பாடல் எண் 255

எள்ளலுறுங்
கோளத்தி நீக்குங் குணத்தோர்க் கருள்செய்**திருக்**
காளத்தி ஞானக் களஞ்சியமே

84 - திருக்காளத்தி (ஸ்ரீகாளஹஸ்தி)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 36 பாடல் 1
பண் : கொல்லி இராகம் : நவரோஸ்

சந்தமார் அகிலொடும் சாதி தேக்கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் **காளத்தி**
எந்தையார் இணையடி என் மனத்துள்ளவே

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 8 பாடல் 5
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே படும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்து அப்பாலான் இப்பால் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து உச்சியுள்ளான்
காளத்தியான் அவன் என் கண்ணுளானே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 26 பாடல் 2
பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

இமையோர் நாயகனே இறைவா என்னிடர்த் துணையே
சுமையார் கருணையினாய் கருமாமுகில் போல் மிடற்றாய்
உமையோர் கூறுடையாய் உருவே **திருக்காளத்தி**யுள்
அமைவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே

ஐம்பூதலங்கள்

நீர் - 61 (திருஆனைக்கா)
வாயு - 254 (திருக்காளத்தி)
அக்கினி - 235 (திருஅண்ணாமலை)
மண் - 236 (திருக்கச்சி ஏகம்பம் காஞ்சிபுரம்)
ஆகாயம் - 1 (தில்லை சிதம்பரம்)

256. ஒற்றியூர் (திருஒற்றியூர்) (திருவொற்றியூர்)

இறைவன் : ஆதிபுரீஸ்வரர், புற்றிடங்கொண்டநாதர், எழுத்தறியும்நாதர், படம்பக்கநாதர், தியாகேசர்
இறைவி : திரிபுரசுந்தரி, வடிவுடையம்மை, வடிவுடைமாணிக்கம்
தலமரம் : மகிழம் தீர்த்தம் : பிரம்ம தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 20 அலைபேசி : 9444479057, 9962089290
முகவரி : அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை – 600 019

தலச் சிறப்பு : பாடல் எண் : 256,257, 258, திருவருட்பா : 2ம் திருமுறை, 20 எழுத்தறியும் பெருமான்மாலை, படம்பக்க நாதர், 1ம் திருமுறை, வடிவுடை மாணிக்கமாலை. சுந்தரர் சங்கிலியாரை மணந்த தலம். பட்டினத்தார் முத்தி தலம், இராமலிங்க சுவாமிகள், ஈர்த்த தலம்

திருவருட்பா பாடல் எண் 256,257,258,259

ஆள்அத்தா
வெற்றியு ரென்ன வினையேன் வினைதவிர்த்த
ஒற்றியூர் மேவியஎன் உள்ளன்பே

51 - திருஒற்றியூர் (திருவொற்றியூர்)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 57 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

விடையவன் விண்ணும் மண்ணும் தொழ நின்றவன் வெண்மழுவாள்
படையவன் பாய்புலித்தோல் உடைகோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்கவெண்தோடு
உடையவன் ஊனமில்லி உறையும் இடம் **ஒற்றியூ**ரே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 46 பாடல் 2
திருநேரிசை இராகம் : நவரோஸ்

மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகடல் ஓடும்போது
மனனெனும் பாறை தாக்கி மறியும்போது அறியவொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் **ஒற்றியூர்** உடையகோவே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் : 54 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

அழுக்கு மெய்கொடு உன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான் படப் பாலதொன்றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பனாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால்
மற்று நான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என் கனுக்கு ஒரு மருந்துரையாய்
ஒற்றியூரெனும் ஊருறைவானே

257. திருவலிதாயம் (திருவலிதாயம்) (பாடி-சென்னை)

இறைவன் : வல்லீஸ்வரர், வலிதாயநாதர்
இறைவி : ஜகதாம்பாள், தாயம்மை
தலமரம் : பாதிரி தீர்த்தம் : பரத்வாஜர் தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 21 தொலைபேசி : 044-26540706
முகவரி : அருள்மிகு வல்லீஸ்வரர் திருக்கோயில்,பாடி, சென்னை - 600 050
தலச் சிறப்பு : சிவ பெருமானுக்கு கந்தையை சுற்றிவைத்ததை எண்ணி வருந்தி அருட்பிரகாச வள்ளலார் மனம் நொந்து பாடிய தலம் திருவருட்பா :பாடல் எண் : 848, 848. தற்போது இந்த தலம் பொன்னாலும் மணியாலும அலங்கரித்து சிறப்பாக வழிபாடுக்குள்ளது. வலியான் என்ற கருங்குருவி வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 260

ஊற்றுறுமெய்

அன்புமிகுந் தொண்டர்குழு வாயும்**வலி தாயத்தில்**
இன்பமிகு ஞான இலக்கணமே

247 - திருவலிதாயம் (பாடி - சென்னை)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 3 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

பத்தரோடு பலரும் பொலியம் மலரங்கைப் புனல்தூவி
ஒத்தசொல்லி உலகத்தவர் தாம் தொழுதேத்த உயர்சென்னி
மத்தம் வைத்த பெருமான் பிரியாது உறைகின்ற **வலிதாயம்**
சித்தம் வைத்த அடியாரவர்மேல் அடையா மற்று இடர்நோயே

ஊனியன்ற தலையில் பலிகொண்டு உலகத்துள்ளவர் ஏத்த
காணியன்ற கரியின் உரிபோர்த்து உழல் கள்வன் சடைதன்மேல்
வானியன்ற பிறை வைத்த எம் ஆதி மகிழும் **வலிதாயம்**
தேனியன்ற நறுமாமலர் கொண்டு நின்றேத்தத் தெளிவாமே - 6

வண்டு வைகும் மணம்மல்கிய சோலை வளரும் **வலிதாய**த்து
அண்டவாணன் அடியுள்குதலால் அருள்மாலைத் தமிழாகக்
கண்டல்வைகு கடல் காழியுள் ஞானசம்பந்தன் தமிழ்பத்தும்
கொண்டு வைகி இசைபாட வல்லார் குளிர் வானத்து உயர்வாரே - 11



258. திருமுல்லைவாயிற் (வடதிருமுல்லை வாயில்) (திருமுல்லைவாயில்)

இறைவன் : மாசிலாமணிஸ்வரர், பாசுபதேஸ்வரர், நிர்மலமணீஸ்வரர்
இறைவி : கொடியிடைநாயகி, லதாமத்யாம்பாள், கொடியிடையம்மை
தலமரம் : முல்லை தீர்த்தம் : கல்யாண தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 22 அலைபேசி : 7871495806
முகவரி : அருள்மிகு மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில், திருமுல்லைவாயில் & அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் 600 062
தலச் சிறப்பு : திருவருட்பா பாடல் எண் : 835, 839

திருவருட்பா பாடல் எண் 261

துன்பமற
எல்லைவாயற் குண்மட்டும் ஏகில்வினை யேகுமெனும்
முல்லைவாயிற் குள்வைத்த முத்திவித்தே

241 - வடதிருமுல்லைவாயில் (திருமுல்லைவாயில்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 69 பாடல் 1
பண் : தக்கேசி இராகம் : காம்போதி

திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள் என்று எண்ணி
ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை தழ் **திருமுல்லை**
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே

விரைதரு மலர்மேல் அயனொடு மாலும்
வெருவிட நீண்ட எம்மானைத்
திரைதரு புனல்சூழ் **திருமுல்லைவாயில்**
செல்வனை நாவல் ஆரூரன்
உரைதரு மாலை ஓரைஞ்சினோடஞ்சும்
உள்குளிர்ந்து ஏத்த வல்லார்கள்
நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி
நண்ணுவர் விண்ணவர்க்கு அரசே - 11



259. திருவேற்காடு (திருவேற்காடு)

இறைவன் : வேதபுரீஸ்வரர், வேற்காட்டுநாதர்
இறைவி : பாலாம்பிகை, வேற்கண்ணி
தலமரம் : வெள்வேலம் தீர்த்தம் : வேலாயுத தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 23 தொலைபேசி : 044-26800430, 26800487, 26272430, 26272487
முகவரி : அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவேற்காடு & அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் 600 077
தலச் சிறப்பு : மூர்க்க நாயனார் முத்தி தலம். நான்கு வேதங்களும் வேல மரங்களாய் நின்று வழிவிட்ட மையால் வேற்காடு என்பர்.

திருவருட்பா பாடல் எண் 262

மல்லல்பெறு
வேற்காட்ட ரேத்துதிரு **வேற்காட்டின்** மேவியமுன்
நூற்காட் டுயர்வேத நுட்பமே

274 - திருவேற்காடு

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 57 பாடல் 1
பண் : பழந்தக்கராகம் இராகம் : சுத்தசாவேரி

ஒள்ளித் துள்ளக் கதிக்காம் இவனொளி
வெள்ளியான் உறை **வேற்காடு**
உள்ளியார் உயர்ந்தார் இவ்வுலகினில்
தெள்ளியாரவர் தேவரே

தோலினால் உடை மேவவல்லான் சுடர்
வேலினால் உறை **வேற்காடு**
நூலினால் பணிந்தேத்திட வல்லவர்
மாலினார் வினை மாயுமே - 6

மூரல் வெண்மதி சூடு முடியுடை
வீரன் மேவிய **வேற்காடு**
வாரமாய் வழிபாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே - 8

விண்டமாம் பொழில் சூழ்திரு **வேற்காடு**
கண்டு நம்பன் கழல் பேணிச்
சண்பை ஞானசம்பந்தன் செந்தமிழ்
கொண்டு பாட குணமாமே - 11

260. மயிலை (திருமயிலை) (மயிலாப்பூர், சென்னை)

இறைவன் : கபாலீஸ்வரர்
இறைவி : கற்பகாம்பாள்
தலமரம் : புன்னை தீர்த்தம் : திருக்குளம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 24 தொலைபேசி : 044-24641670, 24611356
முகவரி : அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர் சென்னை மாவட்டம் 600 004
தலச் சிறப்பு : சம்பந்தர் எலும்பைப் பூம்பாவை பெண்ணாக்கிய தலம். திருவள்ளுவர் பிறந்த பதி

திருவருட்பா பாடல் எண் 263

பாற்காட்டும்
ஆர்த்திபெற்ற மாதுமயி லாய்ப்பூசித் தார்**மயிலைக்**
கீர்த்திபெற்ற நல்வேத கீதமே

224 - திருமயிலை (மயிலாப்பூர், சென்னை)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 47 பாடல் 1
பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

மட்டிட்ட புன்னையம் கானல் மட**மயிலைக்**
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மா**மயிலைக்**
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசு ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய் - 5

மலிவிழா வீதி மடநல்லார் மா**மயிலைக்**
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் - 7

கானமர் சோலைக் **கபாலீச்சரம்** அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழால்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வலார்
வானசம்பந்தத்து அவரோடும் வாழ்வாரே - 11

261. திருவான்மியூர் (திருவான்மியூர்) (சென்னை)

இறைவன் : மருந்தீசர், ஔஷதீஸ்வரர், பால்வண்ணநாதர், வேதபுரீஸ்வரர்
இறைவி : திரிபுரசுந்தரி, சொக்கநாயகி, சுந்தரநாயகி
தலமரம் : வன்னி தீர்த்தம் : திருக்குளம்
பாடல் : அப்பர், சம்பந்தர்
நாடு : தொண்டை நாடு வரிசை எண் : 25
தொலைபேசி : 044-24410477, 24422688
முகவரி : அருள்மிகு மருந்தீசர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை 600 041
தலச் சிறப்பு : வான்மீகி முனிவருக்கு நடனக் காட்சி நல்கிய தலம். காமதேனு பால் சொரிந்து வழிபட்ட தலம். அகத்தியருக்கு மூலிகைகளைப் பற்றி உபதேசித்த தலம்

திருவருட்பா பாடல் எண் 264

கார்த்திரண்டு

வாவுகின்ற சோலை வளர்**வான்மி யூர்த்**தலத்தில்
மேவுகின்ற ஞான விதரணமே

255 - திருவான்மியூர் (சென்னை)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 4 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

கரையுலாம் கடலில் பொலி சங்கம் வெள் இப்பி வன்
திரையுலாம் கழி மீன் உகளும் **திருவான்மியூர்**
உரையுலாம் பொருளாய் உலகு ஆளுடையீர் சொல்லீர்
வரையுலாம் மடமாது உடனாகிய மாண்பதே

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 55 பாடல் 1
பண் : கௌசிகம் இராகம் : பைரவி

விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கை ஓர் பங்குடையாய்
திரையார் தெண்கடல் சூழ் **திருவான்மியூர்** உறையும்
அரையா உன்னையல்லால் அடையாது எனது ஆதரவே

திருநாவுக்கரசர் 5ஆம் திருமுறை பதிகம் 82 பாடல் 9
குறுந்தொகை இராகம் : நாதநாமக்கிரியா

ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலம் செயில்
வாட்டம் தீர்த்திடும் **வான்மியூர்** ஈசனே



262. கச்சூர் (திருக்கச்சூர்)

இறைவன் : மருந்தீசர் (மலைக்கோயில்), விருந்திட்டநாதர், கச்சபேஸ்வரர் (கீழ்க்கோயில்)
இறைவி : அந்தகநிவாரணி, இருள்நீக்கித்தாயார், (மலைக்கோயில்) அஞ்சனாட்சியம்மை (கீழ்க்கோயில்)
தலமரம் : ஆல் தீர்த்தம் : கூர்ம தீர்த்தம்
பாடல் : சுந்தரர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 26 அலைபேசி : 9381186389
முகவரி : அருள்மிகு மருந்தீசர் திருக்கோயில், திருக்கச்சூர் & அஞ்சல், (வழி) சிங்கப்பெருமாள் கோயில், காஞ்சிபுரம் 603 204
தலச் சிறப்பு : பசியுடன் வந்த சுந்தரருக்கு இறைவன் பிச்சை ஏற்று உணவளித்த தலம். முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்திய கோயில். அருட்பா பாடல் எண் : 240 பக்கம்: 110 2ஆம் திருமுறை

திருவருட்பா பாடல் எண் 265

தூவிமயில்

ஆடும் பொழிற்**கச்சூ** ராலக்கோ யிற்குளன்பர்
நீடுங் கனதூய நேயமே

59 - திருக்கச்சூர்

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 41 பாடல் 1
பண் : கொல்லிக்கௌவாணம் இராகம் : நவரோஸ்

முதுவாயோரி கதற முதுகாட்டு
எரி கொண்டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீசூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவே ஆமாறிதுவோ **கச்சூர்**
ஆலக்கோயில் அம்மானே

அன்னம் மன்னும் வயல்சூழ் **கச்சூர்**
ஆலக்கோயில் அம்மானை
உன்னம் முன்னு மனத்து ஆரூரன்
ஆரூரன் பேர் முடிவைத்த
மன்னு புலவன் வயல் நாவலர்கோன்
செஞ்சொல் நாவன் வன்தொண்டன்
பன்னு தமிழ்நூல் மாலை வல்லார்
அவர் என் தலைமேல் பயில்வாரே - 10



263. இடைச்சுரம் (திருஇடைச்சுரம்) (திருவடிசூலம்)

இறைவன் : ஞானபுரீஸ்வரர், இடைச்சுரநாதர்
இறைவி : கோபரத்னாம்பிகை, இமயமடக்கொடி
தலமரம் : வில்வம் தீர்த்தம் : அக்னி (குளம்)
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 27 அலைபேசி : 9444523890, 9444948937
முகவரி : அருள்மிகு ஞானபுரீஸ்வரர் திருக்கோயில், திருவடிசூலம், (வழி) செம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 108
தலச் சிறப்பு : கௌதமரிஷியும், சறைகுமாரரும் வழிபட்ட தலம் அம்பாள் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 266

ஈடில்லை

என்னுந் திருத்தொண்ட ரேத்து **மிடைச்சுரத்தின்**
மன்னுஞ் சிவானந்த வண்ணமே

33 - திருஇடைச்சுரம் (திருவடிசூலம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 78பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

வரிவளர் அவிரொளி அரவரை தாழ
வார்சடை முடிமிசை வளர்மதி சூடிக்
கரிவளர் தருகழல் கால்வலன் ஏந்திக்
கனலெரி ஆடுவர் காடரங்காக
விரிவளர் தருபொழில் இளமயில் ஆல
வெண்நிறத்து அருவிகள் திண்ணென வீழும்
எரிவளர் இனமணி புனமணி சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே

மடைச்சுரம் மறிவன வாளையும் கயலும்
மருவிய வயல்தனில் வருபுனல் காழிச்
சடைச்சுரத்து உறைவது ஓர்பிறை உடையண்ணல்
சரிதைகள் பரவி நின்று உருகு சம்பந்தன்
புடைச் சுரத்து அருவரைப் பூக்கமழ் சாரல்
புணர் மடநடையவர் புகையிடை ஆர்ந்த
இடைச்சுரம் ஏத்திய இசையொடு பாடல்
இவை சொல வல்லவர் பிணியிலர் தாமே - 11

264. திருக்கழுக்குன்றம் (திருக்கழுக்குன்றம்)

இறைவன் : வேதகிரீஸ்வரர் (மலைக்கோயில்) பக்தவத்சலேஸ்வரர் (தாழக்கோயில்)
இறைவி : சொக்கநாயகி (மலைக்கோயில்) திரிபுரசுந்தரி (தாழக்கோயில்)
தலமரம் : வாழை தீர்த்தம் : சங்கு தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 28 தொலைபேசி : 044-27447139, 27447393
அலைபேசி : 9894507959, 9443247394, 9442811149
முகவரி : அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில், திருக்கழுக்குன்றம் & அஞ்சல், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 109
தலச் சிறப்பு : வேதமே மலையாக உள்ளது. மார்கண்டேயர் வழிபட்ட தலம். கோவிலுக்கு அருகில் பட்சி தீர்த்தம். இதில் நீராடி மலையை வலம் வந்ததால் நோய்கள் தீர்வது கண்கூடு.

திருவருட்பா பாடல் எண் 267

நன்னெறியோர்

துன்னநெறிக் கோர்துணையாந் தூய**கழுக் குன்றினி**டை
முன்னுமறி வானந்த மூர்த்தமே

79 - திருக்கழுக்குன்றம்

பாடல்கள்

சம்பந்தர் 1 ஆம் திருமுறை பதிகம் 103 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : எதுகுலகாம்போதி

தோடுடையான் ஒரு காதில் தூய குழைதாழ
ஏடுடையான் தலை கலனாக இரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருள் ஏம நடமாடும்
காடுடையான் காதல் செய் சோயில் **கழுக்குன்றே**

திருநாவுக்கரசர் 6 ஆம் திருமுறை பதிகம் 92 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

மூவிலைவேல் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்காடு உடையானை முதலானானை
ஆவினில் ஐந்துகந்தானை அமரர் கோனை
ஆலாலம் உண்டுகந்த ஐயன் தன்னைப்
பூவினில் மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் **கழுக்குன்றம்** அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 81 பாடல் 3
பண் : நட்டபாடை இராகம் : கம்பீரநாட்டை

நீளநின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும் எட்டும் உடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையும் தண் **கழுக்குன்றமே**

நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

265. அச்சிறுபக்கம் (அச்சிறுபாக்கம்)(அச்சரப்பாக்கம்)

இறைவன் : ஆட்சீஸ்வரர், முல்லைக்கானமுடையார், பார்க்கபுரீஸ்வரர், ஸ்திரவாசபுரீஸ்வரர்
இறைவி : இளங்கிளியம்மை, சுந்தரநாயகி, பாலசுகாம்பிகை, அதிசுந்தரமின்னாள்
தலமரம் : சரக்கொன்றை
தீர்த்தம் : சங்கு தீர்த்தம், சிம்ம தீர்த்தம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 29 அலைபேசி : 9842309534, 8610707963
முகவரி : அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயில், அச்சிறுபாக்கம் & அஞ்சல் - 603 301, மதுராந்தகம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்
தலச் சிறப்பு : அச்சு+இறு+பாக்கம் = அச்சிறுபாக்கம். திரிபுராதிகளை எரிக்கச் சென்ற இறைவன், விநாயகரை வணங்காது சென்றதனால், அவரது தேர் அச்சு முறிந்த இடம் கௌதமர், கண்வர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 268

துன்னுபொழில்

அம்மதுரத் தேன்பொழியும் **அச்சிறுபாக்** கத்துலகர்
தம்மதநீக் குஞ்ஞான சம்மதமே

2 - அச்சிறுபாக்கம் (அச்சரப்பாக்கம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 77 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : எதுகுலகாம்போதி

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப்
பொருகடல் பவளமொடு அழல்நிறம் புரையக்
குன்றிரண்டன்ன தோளுடைய கலங்
குலாய வெண்ணூலொடு கொழும் பொடியணிவர்
மின்திரண்டன்ன நுண்ணிடையரிவை
மெல்லியலாளை ஓர் பாகமாப்பேணி
அன்றிரண்டுருவம் ஆயவெம்மடிகள்
அச்சிறுபாக்கமது ஆட்சிகொண்டாரே

மைச்செறி குவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையில் புதுமலர்கிழியப்
பச்சிறவு எறிவயல் வெறிகமழ் காழிப்
பதியவர் அதிபதி கவுணியர் பெருமான்
கைச்சிறுமறியவன் கழல் அலால் பேணாக்
கருத்துடை ஞானசம்பந்தன தமிழ்கொண்டு
அச்சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும்
அன்புடை அடியவர் அருவினை இலரே - 11

266. திருவக்கரை (திருவக்கரை)

இறைவன் : சந்திரசேகரேஸ்வரர், சந்திரமௌலீஸ்வரர்
இறைவி : அமிர்தேஸ்வரி, வடிவாம்பிகை
தலமரம் : வில்வம் தீர்த்தம் : கந்திர, சூரிய தீர்த்தங்கள்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 30 அலைபேசி : 94435 36652
முகவரி : அருள்மிகு சந்திரசேகரேஸ்வரர் திருக்கோயில், திருவக்கரை & அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் 604 304
தலச் சிறப்பு : வக்கிரன் வழிபட்ட தலம், வக்கரைக் காளி இங்கு சிறப்பு

திருவருட்பா பாடல் எண் 269

எம்மதமும்

சார்ந்தால் வினைநீக்கித் தாங்குதிரு **வக்கரை**யுள்
நேர்ந்தார் உபநிடத நிச்சயமே

240 - திருவக்கரை

பாடல்கள்

சம்பந்தர் 3ஆம் திருமுறை பதிகம் 60 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

கறையணி மாமிடற்றான் கரி காடரங்கா உடையான்
பிறையணி கொன்றையினான் ஒரு பாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவன் தன் தலையில் பலி கொள்பவன் **வக்கரை**யில்
உறைபவன் எங்கள் பிரான் ஒலியார் கழல் உள்குதுமே

கார்மலி கொன்றையொடும் கதிர் மத்தமும் வாளரவும்
நீர்மலியும் சடைமேல் நிரம்பா மதி சூடிநல்ல
வார்மலி மென்முலையாளொடும் **வக்கரை** மேவியவன்
பார்மலி வெண்தலையில் பலிகொண்டு உழல் பான்மையனே - 6

தண்புனலும் அரவும் சடைமேல் உடையான் பிறைதோய்
வண்பொழில் சூழ்ந்த அழகார் இறைவன் உறை **வக்கரை**யைச்
சண்பையர் தந்தலைவன் தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
பண்புனை பாடல் வல்லார் அவர்தம் வினை பற்றறுமே - 11

267. அரசிலியூர் (திருஅரசிலி) (ஒழுந்தியாப்பட்டு)

இறைவன் : அரசிலிநாதர், அரசிலீஸ்வரர்
இறைவி : பெரியநாயகி, அழகிய நாயகி
தலமரம் : அரசு தீர்த்தம் : வாமதேவம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 31 அலைபேசி : 9994476960, 9080330203
முகவரி : அருள்மிகு அரசிலீஸ்வரர் திருக்கோயில்,
ஒழுந்தியாப்பட்டு & அஞ்சல் (வழி) வானூர்,
வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605 109
தலச் சிறப்பு : சாளுவ மன்னனால் கட்டப்பட்ட கோயில். வாமதேவ முனிவர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 270

தேர்ந்தவர்கள்

தத்த மதுமதியாற் சாரும் **அரசிலியூர்**
உத்தமமெய்ஞ் ஞான ஒழுக்கமே

9 - திருஅரசிலி (ஒழுந்தியாப்பட்டு)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 95 பாடல் 1
பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோஸ்

பாடல் வண்டறை கொன்றை பால்மதி பாய்புனற்கங்கை
கோடல் கூவிளமாலை மத்தமும் செஞ்சடைக்குலாவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியும் தோள்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக்கு இடம் **அரசிலியே**

பரிய மாசுணம் கயிறா பருப்பதமதற்கு மத்தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணிய வானவர் கடையக்
கரிய நஞ்சது தோன்றக் கலங்கிய அவர்தமைக் கண்டு
அரிய ஆரமுது ஆக்கும் அடிகளுக்கு இடம் **அரசிலியே** - 6,7

குருளை எய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளை கையில் உண்பவரும் தேரரும் சொல்லிய தேறல்
பொருளைப் பொய்யிலி மெய்எம் நாதனைப் பொன்னடிவணங்கும்
அருளை ஆர்தர நல்கும் அடிகளுக்கு இடம் **அரசிலியே** - 10

அல்லி நீள்வயல் சூழ்ந்த **அரசிலி** அடிகளைக் காழி
நல்ல ஞானசம்பந்தன் நற்றமிழ் பத்திவை நாளும்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்தமரர் தொழுதேத்த
வல்ல வானுலகு எய்தி வைகலும் மகிழ்ந்திருப்பாரே - 11

268. இரும்பை மாகளம் (திருஇரும்பைமாகாளம்) (இரும்பை)

இறைவன் : மாகாளேஸ்வரர், மாகாளநாதர்
இறைவி : மதுரசுந்தரநாயகி, குயில்மொழியம்மை
தலமரம் : புன்னை தீர்த்தம் : மாகாளம்
பாடல் : சம்பந்தர் நாடு : தொண்டை நாடு
வரிசை எண் : 32 அலைபேசி : 9443465502, 9843526601
முகவரி : அருள்மிகு மாகாளேஸ்வரர் திருக்கோயில்,
இரும்பை & அஞ்சல்,(வழி) ஆரோவில்
வானூர் வட்டம், கடலூர் மாவட்டம் - 605 010
தலச் சிறப்பு : குலோத்துங்கச் சோழன் காலத்தில் வாழ்ந்த கடுவெளிச் சித்தர் ஒருவர் பாடிய பாடல்களால் திருமேனி வெடிக்கவும் பின்பு கூடவும் செய்தது என்பர். மாகாளர் வழிபட்ட தலம்

திருவருட்பா பாடல் எண் 271

பத்தியுள்ளோர்

எண்ணும் புகழ்கொள் **இரும்பைமா காளத்து**
நண்ணுஞ் சிவயோக நாட்டமே

40 - திருஇரும்பைமாகாளம் (இரும்பை)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 117 பாடல் 1
பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

மண்டு கங்கை சடையில் கரந்தும் மதிசூடிமான்
கொண்ட கையால் புரமூன்று எரித்த குழகன்னிடம்
எண்டிசையும் புகழ்போய் விளங்கும் **இரும்பை**தனுள்
வண்டு கீதம் முரல்பொழில் கலாய் நின்ற மாகாளமே

குறைவதாய குளிர்திங்கள் சூடிக் குனித்தான் வினை
பறைவதாக்கும் பரமன் பகவன் பரந்தசடை
இறைவன் எங்கள் பெருமானிடம்போல் **இரும்பை**தனுள்
மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே - 6

நட்டத்தொடு நரியாடு கானத்து எரியாடுவான்
அட்டமூர்த்தி அழல்போல் உருவன் அழகாகவே
இட்டமாக இருக்கும் இடம்போல் **இரும்பை**தனுள்
வட்டம் சூழ்ந்து பணிவார் பிணிதீர்க்கும் மாகாளமே - 8

எந்தை பெம்மானிடம் எழில்கொள் சோலை **இரும்பை**தனுள்
மந்தமாய பொழில் சூழ்ந்து அழகாரும் மாகளாத்தில்
அந்தம் இல்லா அனலாடுவானை அணி ஞானசம்
பந்தன் சொன்ன தமிழ் பாடவல்லார் பழி போகுமே - 11

269. கோகரணம் (திருக்கோகரணம்) (கோகர்ணா)

இறைவன் : மகாபலேஸ்வரர், ஆத்மலிங்கேஸ்வரர், பிராணலிங்கேஸ்வரர்
இறைவி : கோகர்ணேஸ்வரி, தாம்ரகௌரி
தீர்த்தம் : கோடி தீர்த்தம் பாடல் : சம்பந்தர், அப்பர்
நாடு : துளுவ நாடு (கன்னட நாடு) வரிசை எண் : 267
தொலைபேசி : 08386 - 257167, 256167 அலைபேசி : 9482331354
முகவரி : அருள்மிகு மகாபலேஸ்வரர் திருக்கோயில், திருக்கோகர்ணம் & அஞ்சல், கர்நாடகா - 576 234
தலச் சிறப்பு : கயிலையிலிருந்து இராவணன் தான் கொண்டு வந்த இலிங்கத்தை இங்கே(கோகரணம்) கீழே வைத்தபின் மீண்டும் எடுக்க முடியாமல் இங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டான். அந்த இலிங்கமே மகாபலேஸ்வரர்

திருவருட்பா பாடல் எண் 272

மண்ணகத்துள்

கோபலத்திற் காண்பரிய **கோகரணங்** கோயில்கொண்ட
மாபலத்து மாபலமா மாபலமே

111 - திருக்கோகரணம் (கோகர்ணா)

பாடல்கள்

சம்பந்தர் 3 ஆம் திருமுறை பதிகம் 79 பாடல் 1
பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

என்றும் அரியான் அயலவர்க்கு இயல்
இசைப் பொருள்களாகி எனதுள்
நன்றும் ஒளியான் ஒளிசிறந்த பொன்முடிக்
கடவுள் நண்ணுமிடமாம்
ஒன்றிய மனத்தடியர் கூடி இமையோர்
பரவு நீடு அரவமார்
குன்றுகள் நெருங்கி விரி தண்டலை
மிடைந்து வளர் **கோகரணமே**

திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை பதிகம் 49 பாடல் 1
திருத்தாண்டகம் இராகம் : அரிகாம்போதி

சந்திரனும் தண்புனலும் சந்தித்தான் காண்
தாழ்சடையான் காண் சார்ந்தார்க்கு அமுதானான் காண்
அந்தரத்தில் அசுரர் புரம் மூன்றும் அட்டான் காண்
அவ்வுருவில் அவ்வுருவம் ஆயினான் காண்
பந்தரத்து நான்மறைகள் பாடினான் காண்
பலபலவும் பாணி பயில்கின்றான் காண்
மந்திரத்து மறைப்பொருளும் ஆயினான் காண்
மாகடல் தழ் **கோகரணம்** மன்னினானே

270. பருப்பதம் (திருப்பருப்பதம்) (ஸ்ரீசைலம்)

இறைவன் : மல்லிகார்ச்சுனர், ஸ்ரீசைலநாதர், சிபர்ப்பதநாதர்
இறைவி : பிரமராம்பிகை
தலமரம் : மருதம், திரிபலா தீர்த்தம் : பாலாழி தீர்த்தம்
பாடல் : மூவர் நாடு : வட நாடு (ஆந்திரா)
வரிசை எண் : 268 அலைபேசி : 8333901351
முகவரி : அருள்மிகு மல்லிகார்ச்சுனேஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீசைலம், கர்னூல் மாவட்டம் 518 100, ஆந்திர மாநிலம்
தலச் சிறப்பு : நந்தி தேவரே இங்கு மலையாக உள்ளார் என்பது வரலாறு.சிலாத முனிவர் வழிபட்டதால் ஸ்ரீசைலம் என்பர்.

திருவருட்பா பாடல் எண் 273,274

தாபமிலாப்

பாகியற்சொன் மங்கையொடும் பாங்கார் **பருப்பதத்தில்**
யோகியர்க ளேத்திடவாழ் ஒப்புரவே - போகிமுதல்
பாடியுற்ற **நீலப் பருப்பதத்தில்** நல்லோர்கள்
தேடிவைத்த தெய்வத் திலகமே - நீடுபவம்
தங்கா **தவனேக தங்கா பதஞ்**சேர்ந்த
நங்கா தலான நயப்புணர்வே

185 - திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 118 பாடல் 7
பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

புடைபுல்கு படர் கமலம் புகையொடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை திருமுடி மிசையேற
விடைபுல்கு கொடியேந்தி வெந்த வெண்ணீறணிவான்
படைபுல்கு மழுவாளன் **பருப்பதம்** பரவுதுமே

திருநாவுக்கரசர் 4ஆம் திருமுறை பதிகம் 58 பாடல் 3
திருநேரிசை இராகம் : நவரோஸ்

கரவிலா மனத்தராகிக் கைதொழுவார்கட்கு என்றும்
இரவு நின்று எரியாடி இன்னருள் செய்யும் எந்தை
மருவலார் புரங்கள் மூன்று மாட்டிய வகையராகிப்
பரவுவார்க்கு அருள்கள் செய்து **பருப்பதம்** நோக்கினாரே

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 79 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

மானும் மரையினமும் மயிலினமும் கலந்து எங்கும்
தாமே மிக மேய்ந்து தடம்சுனை நீர்களைப் பருகிப்
பூமாமரம் உரிஞ்சிப் பொழிலூடே சென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல் துயில் **சீபர்ப்பத** மலையே

நற்றுணையாவது நமச்சிவாயவே

271.இந்திரநீலப்பருப்பதம் (நீல்கண்ட்)

இறைவன் : நீலாசலநாதர்
இறைவி : நீலாம்பிகை
தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
பாடல் : சம்பந்தர்
நாடு : வடநாடு
வரிசை எண் : 269
தலச் சிறப்பு : இந்திரன் வழிபட்டதலம், காளத்தியிலிருந்து சம்பந்தர் இத்தலத்தை பாடியுள்ளார். பத்ரிநாத் கோயிலுக்கு பக்கத்தில் அதிகாலை 4 மணிக்கு பார்த்தால் இந்த மலை நீலநிறமாக காட்சியளிக்கும். 5 மணிக்குப் பொன்னிறமாகவும், அதற்கப்புறம் வெள்ளி நிறத்தினும் காட்சியளிக்கும், தற்போது இதனை நீள்கண்ட என்று அங்குள்ளவர்கள் அழைக்கின்றனர்.

திருவருட்பா பாடல் எண் 275

போகிமுதல்

பாடியுற்ற **நீலப் பருப்பதத்தில்** நல்லோர்கள்
தேடிவைத்த தெய்வத் திலகமே

36–இந்திரநீலப்பருப்பதம் (நீல்கண்ட்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 27 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்து
இலகு மான் மழுவு ஏந்தும் அங்கையன்
நிலவும் **இந்திரநீலப் பர்ப்பதத்து**
உலவினானடி உள்க நல்குமே

மருவுமான் மடமாதொர் பாகமாய்ப்
பரவுவார் வினை தீர்த்த பண்பினான்
இரவன் **இந்திரநீலப் பர்ப்பதத்து**
அருவி தூடிடும் அடிகள் வண்ணமே - 5

வெண்ணிலா மதிதூடும் வேணியன்
எண்ணிலார் மதில் எய்த வில்லினன்
அண்ணல் **இந்திரநீலப் பர்ப்பதத்து**
உண்ணிலா வுறும் ஒருவன் நல்லனே - 6

கந்தமார் பொழில் தூழ்ந்த காழியான்
இந்திரன் தொழு **நீலப் பர்ப்பதத்து**
அந்தம் இல்லியை ஏத்தும் ஞானசம்
பந்தன் பாடல் கொண்டு ஓதி வாழ்மினே - 11



272. அநேகதங்காவதம் (கௌரிகுண்டம்)

இறைவன் : அருள்மன்னேஸ்வரர்
இறைவி : மனோன்மணி
பாடல் : சம்பந்தர் நாடு : வட நாடு
வரிசை எண் : 270
முகவரி : Sri Manneswar Temple, Gowrikund, Uththargant, 246 471
தலச் சிறப்பு : அம்பிகை தவம் செய்த தலம். இங்குள்ளவர்கள் இக்கோயிலைக் கௌரி குண்ட் என்று அழைக்கிறார்கள். இங்கு இயற்கையில் உருவாகும் வெந்நீர் ஊற்று உள்ளது.

திருவருட்பா பாடல் எண் 275

நீடுபவம்

தங்கா **தவனேக தங்கா** பதஞ்சேர்ந்த
நங்கா தலான நயப்புணர்வே

6-அநேகதங்காவதம் (கௌரிகுண்டம்)

பாடல்கள்

சம்பந்தர் 2ஆம் திருமுறை பதிகம் 5 பாடல் 1
பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

நீடல் மேவு நிமிர்புன்சடை மேலோர் நிலாமுளை
சூடுல் மேவு மறையின் முறையாலோர் சுலாவழல்
ஆடல் மேவுமவர் மேய **அனேகதங்காவதம்**
பாடல் மேவு மனத்தார் வினை பற்றறுப்பார்களே

தேனையேறு நறுமாமலர் கொண்டு அடிசேர்த்துவீர்
ஆனையேறு அணிசாரல் **அனேகதங்காவதம்**
வானையேறு நெறிசென்று உணரும்தனை வல்லிரேல்
ஆனையேறு முடியான் அருள்செய்வதும் வானையே - 6

மாபதம் அறியாதவர் சாவகர் சாக்கியர்
ஏபதம் பட நின்று இறுமாந்து உழல்வார்கள்தாம்
ஆபதம் அறிவீர் உளீராகில் **அனேகதங்**
காபதம் அமர்ந்தான் கழல்சேர்தல் கருமமே - 10

தொல்லை ஊழிப் பெயர் தோன்றிய தோணிபுரத்து இறை
நல்ல கேள்வித் தமிழ் ஞானசம்பந்தன் நல்லார்கள்முன்
அல்லல் தீர உரைசெய்த **அனேகதங்காவதம்**
சொல்ல நல்ல அடையும் அடையா சுடுதுன்பமே - 11



273.திருக்கேதாரம் (திருக்கேதாரம்)

இறைவன் : கேதாரேஸ்வரர்
இறைவி : கேதாரகௌரி
பாடல் : சுந்தரர், சம்பந்தர் நாடு : வட நாடு
வரிசை எண் : 271 தொலைபேசி : 01389 - 222083
அலைபேசி : 70786 58080
முகவரி : Shri Badarinath Kedarnath Temple, Committee (Ukhimatt/ Kedarnath) Post Ukhimatt, District Rudraprayag, Uttarakhand – 246445
தலச் சிறப்பு : சோதிர்லிங்கத் தலம், சுந்தரரும், சம்பந்தரும் காளத்தியிலிருந்துதே இத்தலத்தை பாடியுள்ளனர்.

திருவருட்பா பாடல் எண் 276

சிங்காது

தண்ணிறைந்து நின்றவர்தாஞ் சார்**திருக்கே தாரத்திற்**
பண்ணிறைந்த கீதப் பனுவலே

102 - திருக்கேதாரம்

பாடல்கள்

சம்பந்தர் 2 ஆம் திருமுறை பதிகம் 114 பாடல் 1
பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

தொண்டர் அஞ்சு களிரும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடமென்பரால்
வண்டுபாட மயிலால மான் கன்று துள்ள வரிக்
கெண்டை பாயச் சுனைநீல மொட்டலரும் **கேதாரமே**

வாய்ந்த செந்நெல் விளைகழனி மல்கும் வயல் காழியான்
ஏய்ந்த நீர்க்கோட்டு இமையோர் உறைகின்ற **கேதார**த்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள் பத்தும் மிசை வல்லவர்
வேந்தராகி உலகாண்டு வீடுகதி பெறுவரே - 11

சுந்தரர் 7 ஆம் திருமுறை பதிகம் 78 பாடல் 1
பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாது அறம் செய்மின் தடம் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் **திருக்கேதார**மெனீரே

நாவின்மிசை அரையன்னொடு தமிழ்ஞானசம்பந்தன்
யாவர் சிவனடியார்களுக்கு அடியான் அடித்தொண்டன்
தேவன் **திருக்கேதார**த்தை ஊரன் உரை செய்த
பா இன் தமிழ் வல்லார் பரலோகத்து இருப்பாரே - 10



274. நொடித்தான்மலை (திருக்கயிலாயம்)

இறைவன் : பொன்னார்மேனியன்
இறைவி : பார்வதி தேவி
தீர்த்தம் : கௌரிகுண்டம் பாடல் : மூவர்
நாடு : வட நாடு (சீனா) வரிசை எண் : 272
தலச் சிறப்பு : இங்கு மலையே சிவம் அதிகாலை 4 மணிக்கு பொன்னார் மேனியனாக காட்சி தருகிறார்.

திருவருட்பா பாடல் எண் 277

எண்ணிறைந்த

சான்றோர் வணங்கு**நொடித் தான்மலை**யில் வாழ்கின்ற
தேன்றாய் அமுதச் செழுஞ்சுவையே - வான்தோய்ந்த
இந்திரரும் நாரணரும் எண்ணில் பிரமர்களும்
வந்திறைஞ்சும் **வெள்ளி மலையா**னே - தந்திடுநல்
தாய்க்குங் கிடையாத தண்ணருள்கொண் டன்பருளம்
வாய்க்குங் **கயிலை** மலையானே

178 - நொடித்தான்மலை (திருக்கயிலாயம்)

பாடல்கள்

சுந்தரர் 7ஆம் திருமுறை பதிகம் 100 பாடல் 1
பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

தானெனை முன் படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை அருள் புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் **நொடித்தான் மலை** உத்தமனே

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் **நொடித்தான் மலை** உத்தமனே-5

ஊழிதொறு ஊழிமுற்றும் உயர் பொன்**நொடித்தான் மலை**யைச்
சூழிசையின் கரும்பின் சுவை நாவல ஊரன் சொன்ன
ஏழிசையின் தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடல் அரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே - 10



275.திருஎருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரப்பட்டினம்)

இறைவன் : நீலகண்டேஸ்வரர், சுவேதார்க்கவனேஸ்வரர்
இறைவி : அபீதகுஜநாயகி, நீலமலர்க்கண்ணி, நீலோற்பலாம்பாள்
தலமரம் : வெள்ளெருக்கு தீர்த்தம் : நீலோற்பலம்
பாடல் : சம்பந்தர் நாடு : நடுநாடு
வரிசை எண் : 36 அலைபேசி : 9976179524, 9360637784
முகவரி : அருள்மிகு. நீலகண்டேஸ்வரர் திருக்கோயில், இராஜேந்திரப்பட்டினம் & அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம் 608 703
தலச் சிறப்பு : திருநீலகண்ட நாயனாரின் அவதாரத் தலம், உருத்திர சன்மர் வழிபட்டுப் பேச்சு வரப்பெற்ற தலம்

திருவருட்பா பாடல் எண் 217

நாடியவான்

அம்புலியூர் சோலை யணிவயல்க ளோங்கெருக்கத்
தம்புலியூர் வேத சமரசமே

47- திருஎருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரப்பட்டிணம்)

பாடல்கள்

சம்பந்தர் 1ஆம் திருமுறை பதிகம் 89 பாடல் 1
பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனா இடுகங்கைச்
சடையான் எருக்கத்தம்புலியூர்த் தகுகோயில்
விடையான் அடியேத்த மேவா வினைதானே

நகுவெண் தலையேந்தி நானாவிதம் பாடிப்
புகுவொன் அயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவான் எருக்கத்தம்புலியூர்த் தகைந்து அங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே - 6

ஏரார் எருக்கத்தம்புலியூர் உறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா அருந்தமிழ் மாலை இவை வல்லார்
பாரார் அவரேத்தப் பதிவான் உறைவாரே - 11

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

அருட்பா பதிப்பகத்தின் வெளியீடுகள்



விலை - ரூ.250



விலை - ரூ.600



விலை - ரூ.800



விலை - ரூ.15



விலை - ரூ.15



விலை - ரூ.25



விலை - ரூ.15



திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய
சுத்தசன்மார்க்கம் ஆல்பம்

101 போட்டோ அடங்கிய ஆல்பம் 17.5" x 25.5"

விலை - ரூ.2,500





விலை - ரூ.225

அருட்பா பதிப்பகம் ஞான சபை மற்றும் கருங்குழியிலும் கிடைக்கும்

Email : arutpa@arutpaonline.com Web :www.arutpaonline.com,www.thiruvarutpa.com,www.arutpaoldedition.com

அருட்பா பதிப்பகம் சென்னை

அருட்பா பதிப்பகத்தின் வெளியீடுகள்



USB SD CARD

ஆடியோ & வீடியோ

DVD Audio ₹ 120 **DVD Video ₹ 180**
USB ₹ 400 **USB Video ₹ 400**

இசையமைத்துப் பாடியவர் பிரபாகர்



















விலை - ரூ.75



விலை - ரூ.15



விலை - ரூ.35

அருட்பா பதிப்பகம் ஞான சபை மற்றும் கருங்குழியிலும் கிடைக்கும்

Email : arutpa@arutpaonline.com Web :www.arutpaonline.com,www.thiruvarutpa.com,www.arutpaoldedition.com

அருட்பா பதிப்பகத்தின் வெளியீடுகள்



1முதல் 6திருமுறை - ரூ.1,000



முதல் 5 திருமுறை - ரூ.200



6 ஆம் திருமுறை - ரூ.200



உரைநடைப்பகுதி



கீர்த்தனைபகுதி - ரூ.30



அருட்பெருஞ்ஜோதி அகவல் - ரூ.50



திருஅருட்பா 1008 - ரூ.50



விலை - ரூ.25



மகா மந்திரம் - ரூ.20

அருட்பா பதிப்பகம் ஞான சபை மற்றும் கருங்குழியிலும் கிடைக்கும்

Email : arutpa@arutpaonline.com Web :www.arutpaonline.com,www.thiruvarutpa.com,www.arutpaoldedition.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை



சத்திய ஞானசபை 1872

அருட்பா
பதிப்பகம்
சென்னை